THE

# VIVEKA CHINTAMANI,

## A MONTHLY TAMIL MAGAZINE AND REVIEW,

Devoted to the Diffusion of Truth & Knowledge.

God is Love: Knowledge is Power.

**VOL. XI.**

MAY 1902—APRIL 1903.

# விவேகசிந்தாமணி.

அறிவைப்பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்."—குறள்.

11-ம் புத்தகம்.

(1902-ம் ௵ மே ௴ முதல் 1903-ம் ௵ ஏப்ரல் ௴ வரை.)

PUBLISHED BY

C. V. SWAMINATHA AIYAR,

*Secretary, Diffusion of Knowledge Agency, Triplicane,*

Madras.

1902-1903.

[All Rights Reserved.]

# INDEX TO CONTENTS.

## VOL. XI.


PAGE.

Ananda Mission *To face page* ... ... ... 193
An Ancient Appeal—In the Supreme Court of the King of kings ... ... .. ... 194
Ancient Appeal, Judgment on the—, ... ... 222
Arudra Darisanam—Special Dedication—*to face* ... 193
Ancient History of Egypt, A view of the— ... 134
ttisoody, Some remarks on - ... ... 85
ag of Gold—, The— ... ... ... ... 231
ankim Chandra Chattergi ... .. ... 116
haratasaram ... ... ... ... ... 143
ooks and Study, On—... ... ... ... 72
Call of the 20th century to Awakened India"—"Ring out the *False, Ring in the True*" the Review ... ... ... ... ... 330
ool ... ... ... ... ... ... 140
oming Coronation, The— ... 34
——— Procession, The— ... ... ... 40
oronation, Ancient Insignia that will be used at the—, ... ... ... ... ... 43
oronation, Postponed- ... ... ... 66
oronation of the King-Emperor ... ... 98
oronation Song ... ... ... ... 99
oronation Durbar at Delhi, The—
1. The Invocation ... ... ... ... 293
2. The Growth of British Empire ... ... 294
3. The Indian Empire ... ... ... 296
4. H. I. M. Edward VII—a Character Sketch ... 298
5. The Object of the Delhi Durbar ... ... 300
6. The Durbar Hall &c. at Delhi ... ... 301
7. The Arrival of the Princes, Chiefs &c. ... 303
8. The State Entry ... .. ... ... 305
9. The Durbar ... ... ... ... 306
10. Celebration throughout the Empire... ... 321
11. Benediction ... ... ... ... 323
Curious ways of killing Monsters, Some— ... 26

CHILDREN'S PAGE:—

An Anecdote of Solomen ... ... ... 31
"Help to others" ... ... ... ... 95
Bad habits better weaved before they are formed. 127
Using the Eyes ... ... ... ... 159
A Humorous Anecdote ... ... ... 276
Don't be too Sure ... ... ... ... 367
nte's account of the Heaven and the Hell ... 118
hi Coronation songs ... ... ... ... 257

nunciation, Rebirth and Love applied
... :—
i. Renunciation ... ... ... 227
Re-birth ... ... ... ... 309
iii. Love, Abide in— ... ... ... 341
Domestic Life of the Ancient Aryans, A view of the— ... .. ... ... ... 67
Durbar at Delhi, Imperial— .. ... ... 254
Figure Puzzles, Save- .. ... ... ...
Firuzshah the Beneficient, ... ... ... 7.
Fine Arts in Madras ... ... ... ... 338
"Folksongs of Truth and Wisdom, Indian—":—
"Mystic song of the Mendicant Ascetic" ... 201
"The Penitent Prodigal and the Blessed Virgin" 268
Freedom, Stanzas on— ... .. ... 93
God's Plan of the Universe ... ... ... 206
Gospel of the Holy Mother, as presented by Her to Her Blessed Child and Son ... ... 285, 315, 346
Happiness Lower and Higher ... ... ... 249
Harischandra, the Immaculate King of Ayodia, ... 52
Health of Body ... ... .. ... 251
Health, Canon Kingsley on— ... ... 337
Honest Jacob, ... ... .. ... ... 335
Ideal of Life, The Hindu—, What is it? ... ... 281
"Indian Progress"—Review ... ... ... 291
Inner Voice and Its Manifestation—the Secret of Fable and Fiction, ... ... ... ... 259
Interesting Facts, Some—, All about High Life ... 63
Interesting Notes, Some—, ... ... ... 28
Jelly Fish, Adventures with a—, ... ... 79
Judgment on the Ancient Appeal ... ... 222
Kindergarten Principle, The— ... ... ... 354
Mahasivaratri—What does it mean? ... ... 324
Mangapatnam Railway Disaster,... ... ... 130
Maharajah of Mysore, Installation of the—, ... 101
My Father in Heaven, In Memoriam ... ... 204
New Life, The— ... ... ... .. 247
Philatelly or Stamp Collection ... ... ... 5
Physical Exercise ... ... ... 122, 156
Prayer, A Universal form of— ... ... .. 319
Primary Education, An Improved Method of—, .. 162
Prince of Wales, Our New—, H. R. H. The Duke of Cornwall and York... ... ... .. 48
Raju Sastriar, The late— ... ... ... 329
Ramanujachariar Sri—, The Founder of the Visishtadwaita Philosophy ... ... ... 131
Ramakrishna Mission, ... ... ... ... 327
Ramayana, The—, An Appreciation, ... ... 59
Readings at Home: A glimpse into the Future: Mudrarakshasam ... ... ... ... 2
Realisation of Truth ... ... .. ...
Redeemed by Love ... ... ... ...
Reviews and Notices of Books ... ...
Riddling Verses, Some ...




INDEX TO CONTENTS.




PAGE

Salvation by Spiritual discernment, .. ... 218
"Salvation for All"—A Review ... ... ... 263
Satguru—Worship ... ... ... 327
Scenery of the Cauvery, ... ... 81, 104
Selections: On Gambling ... ... ... 58
Self-Made Men: i. Humphrey Davy. ... 184, 225

SHORT STORIES.

1. Devadatta, the Prodigal. ... ... .. 20
2. "All's well that ends well" ... ... 110
3. Lakshmi and Saneeswara ... ... ... 150
4. Savitri ... ... ... ... 173
5. Visalakshi ... ... ... .. 226

Siva Siddhanta, A Brief outline of— ... ... 74
Shakespeare's Othello. ... ... ... 153, 179, 243

PAGE.

Southwood Smith, Dr.—Pioneer of Sanitary Reform ... ... ... ... ... ... 102
Southwood-Hill, Caroline—, In Memoriam ... 257
Sugunasundaram ... ... 60, 181, 234, 355
The Taj Mahal at Agra... ... ... ... 47
Tanjore Tamil Sangam ... ... ... ... 183
Teaching, Some points bearing on— ... ... 166
Tobacco and Potato Plants ... ... ... 365
Toru Dutt ... ... ... ... ... 117
Truth according to St. John ... ... ... 205
Truth—A Story ... ... ... ... 333
Universal form of Prayer, A— ... ... 319
Victoria, Life of Queen—, A Kummi Song .. 8
Vivekananda, The Late Swami ... .. ... 66
Wit and Humour of Tamil Poets... ... ... 22

| | பக்கம். |
|---|---|
| ஆுது ... ... ... ... | ... 58 |
| செத்துப்பிழை ... ... ... | ... 309 |
| சைவஸித்தாந்தம்... ... ... | ... 74 |
| ஞானப்பாட்டு, மாயாண்டிச்சித்தன்—:— | ... |
| "ஆண்டிப்பாட்டு" ... ... | ... 202 |
| "ஆனந்தத்தேவடியாள்": காமகள் காப்பு | ... 268 |
| டில்லி பட்டாபிஷேக தர்பார்சிறப்பு :— | |
| 1. விநாயகர் வணக்கம் ... ... | ... 293 |
| 2. பிரிட்டிஷ் மஹாராஜ்யத்தின் பெருக்கம் | ... 294 |
| 3. இந்தியா மகாராஜ்யம்... ... | ... 296 |
| 4. சக்ரவர்த்திரவர்களின் குணுதிசயங்கள் | ... 298 |
| 5. டில்லிதர்ப்பாரின் உத்தேசம் ... | ... 300 |
| 6. தர்பார் மண்டபாதிச் சிறப்பு ... | ... 301 |
| 7. அரசர்கள் பிரபுக்கள் முதலானேர் வருதல் | .. 303 |
| 8. பட்டணப்பிரவேசம் ... ... | ... 305 |
| 9. தர்ப்பார் சிறப்பு ... ... | .. 306 |
| 10. நகரங்கள்தோறும் நடந்த சிறப்பு | ... 321 |
| 11. வாழி ... ... ... | ... 323 |
| டில்லிராஜ தர்ப்பார் ... ... | ... 254 |
| டில்லிபட்டாபிஷேக சிறப்பு கவிகள் ... | ... 257 |
| ...ஞ்லைசத் தமிழ்ச்சங்கம் ... ... | ... 183 |
| ...ஜ்மஹால் ... ... ... | ... 47 |
| ...பால் முத்திரை சேர்த்தல் ... | ... 5 |
| ...நு சொந்தமுயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள்: | |
| ஹம்பரிடேவி ... ... | 184, 225 |
| ...ங்காரணயமுள்ளபை ... ... | ... 231 |
| ...ருதத் ... ... ... | ... 117 |
| ...ாங்கிவிழித்த, இந்தியாவுக்குத்தூது ... | ... 330 |
| ...தவதத்தன் கதை ... ... | ... 20 |
| ...தகப்பயிற்சி ... ... ... | 122, 157 |
| ...ராஜதர்பார் ... ...to *face* ... | 193 |
| ...ர் சொல்லும் நவபவக்கதைகள் .. | ... 259 |
| ...ரும்முடிவில் எல்லாம் நன்றே" ... | ... 110 |
| ...கரி ... ... ... | ... 140 |
| ...ந்திரு ... ... ... | ... 341 |
| பங்கிம் சந்தர் சட்டர்ஜி ... ... | ... 116 |
| பட்டாபிஷேகச்சிறப்பு ... ... | ... 34 |
| பட்டாபிஷேகம் .. ... ... | ... 66 |
| பவனிச்சிறப்பு-அஷ்டமங்கலச்சிறப்பு .. | ... 40 |
| பாரதசாரம் ... ... ... | ... 143 |
| பார்வைக்குவந்த புத்தகங்கள், நமது ... | 91, 360 |
| பிரார்த்தனைப்பத்து ... ... | ... 319 |
| பிறந்தநாளும், திருவாதிரையும் ... | ... 247 |
| பிருஸ்ஷா என்னும் பேருபகாரி ... | ... 76 |
| பிரதம வித்யாபோதனுமுறை-ஒரு மேலானவழி | ... 162 |
| புகையிலை உருளைக்கிழங்கு ... ... | ... 305 |
| புத்தகங்களும் படிப்பும் ... ... | ... 72 |
| புதியயுவராஜரின் சரித்திரம், நமது ... | ... 48 |
| "பொய்மைத்தள்ளி மெய்மையைத்தழுவு" | ... 330 |
| போதனுமுறையைப்பற்றிய சில விஷயங்கள் | ... 167 |
| மங்கபட்டணம் ரயில்விபத்து ... | ... 130 |
| மஹாசிவராத்திரி அதன் நோக்கமென்ன | ... 324 |
| மஹாமஹோபாத்தியாய, இராமசாஸ்திரிகள் | 329 |
| மைசூர்மஹாராஜா ... ... | ... 101 |
| லக்ஷ்மியும் சனீசுவரபகவானும் ... | ... 150 |
| விக்டோரியா மஹாராணியார் கும்மி ... | ... 6 |
| விசாலாக்ஷி ... ... ... | ... 228 |
| விசேஷங்கள்-பெரியமனுஷரைப்பற்றி | ... 63 |
| "விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு" | |
| i. விட்டுப்பிடி ... ... | ... 277 |
| ii. செத்துப்பிழை ... ... | ... 309 |
| iii. நேசித்திரு ... ... | ... 341 |
| விநோதமான தொகைகள், சில ... | ... 20 |
| விநோதப்பாடல்கள், சில ... ... | .. 94 |
| விநோதக்குறிப்புகள், சில ... ... | ... 28 |
| ஷேக்ஸ்பியர் நாடகம்-ஒதெல்லோ, ... | 153, 179, 243 |
| ஜல்லிஜோன்ஸ் நீரிட்ட அவஸ்தைகள் ... | ... 79 |
| ஜகத்சிஷ்டி ... ... ... | ... 206 |
| ஸௌத்ஹூட்ஸ்மித், டாக்டர் ... | ... 102 |
| ஸௌத்ஹூட்-ஹில், கரொலைன் ... | ... 257 |



லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணு.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 11.] 1902ளு மேமீ. [இலக்கம் 1.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.
Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION *7s. 6d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.
SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.
ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

...scriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

...scriptions cannot be closed in the middle of a ...me, though regular subscribers may elect to pay subscriptions in half-yearly instalments. *All ...; for discontinuance are to be given in the ...ing of the new year, i. e., in April or May; for ...ise one should have to pay for the whole of the volume.* Outstanding subscriptions are often ... V. P. P. to prevent accumulation of

...nouds...

நம்மவர்களுக்கு தபால் முத்திரை ...
(Stamp-collection) என்ற விஷய...
சில வருஷங்களாகத்தான் தெரியவரும்.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணு. பழைய பிரதி 8 அணு.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணு. பழைய பிரதி 6 அணு.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினுல் வருஷசந்தாவில் 8 அணுவும், 6 மாசசந்தாவில் 4 அணுவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினுல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் ... தம் உடனே கவனிக்கப்படுவதன்றி ... கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் ...மையே.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

SECOND SERIES.

MUDRA RAKSHASA OR CHANAKYASUTRAM

A ROMANCE OF THE MEDIEVAL TIMES.

3RD DAY.

இல்லப்படிப்பு-வருங்கால திருஷ்டி.

## முத்திராராக்ஷசம் என்னும் சாணக்கிய சூத்திரம்.

3-ம் நாள் படிப்பு.

மூன்றாநாட் பகலில் ருக்மணியம்மாளும் பெண்களும்வந்து வழக்கம்போலக் கதையைப் படித்துக் கேட்க ஆரம்பித்தார்கள். சிவகாமி பின்வருமாறு படிக்கத்தொடங்கினாள்.

இவ்வாறு சந்திரகுப்தனோடு சக்கியம் செய்து சென்ற சாணக்கியன் தன்னிருப்பிடத்தையடைந்து அங்கு தன்னுடைய சஹாயியாகிய இந்திரசர்மாவென்னும் அந்தணனைக்கண்டு நந்தராஜாக்களால் தான் அடைந்த அவமானத்தையும் தான்செய்த கோரமான பிரதிக்ஞையையும் எல்லாவற்றையும் எடுத்துக்கூறினான். இவ்விந்திரசர்மாவென்பவன் ஜோதிடவித்தையிலும் மந்திரவாதத்திலும் தனக்கிணையில்லாத மகாவல்லவன். அவனோடு நந்தகுலத்தை நாசஞ்செய்து தான்செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றுதற்குரிய காரியங்களை ஆலோசித்து நிச்சயித்தனன். அவ்விந்திரசர்மாவும் உடன்பட்டுத் தன் உருவைமாற்றி மேலெங்கும் விபூதிதரித்து ருத்திராக்ஷமாலையணிந்து கையில் மயிற்பீலிபிடித்து ஒரு பௌத்த முனிவனைப்போல வேடம்பூண்டனன். முனிவேடம்கொண்ட இந்திரசர்மா உலகப்பற்றொழிந்து உயிர்க்குலங்களை உஜ்ஜீவிப்பிக்கவந்தவன்போல நடித்து அநேகநாத் கிந்தராஜ்யத்தில் சஞ்சரித்துக்

இங்கு மந்திரி முதல்வனாகிய ராக்ஷசன் அரசர்களுக்கும் அந்தணனுக்கும் நடந்த கலகங்களையும் அவன் கொடுமையாகச்செய்த சபதங்களையும் கேள்வியுற்று யாது தீங்குவிளையுமோவென்று பயந்து அதனைத்தடுக்கும் உபாயம் யாதென்று சிந்திக்கலாயினான். அரசர்களைக் குறித்துச் சாணக்கியன் யாதாயினும் ஆபிசாரங்கள் செய்வானென்றும் அவற்றில் வல்லவர்களைக்கொண்டு நீக்கவேண்டுமென்றும் எண்ணினானேயன்றிச் சாணக்கியன் வேறுவகையால் அரசர்க்குத் தீங்குவிளைக்கக்கூடும் என்னும் எண்ணம் அவனுள்ளத்தில் நடந்ததேயில்லை. அப்போது அத்தேசத்தில் ஒரு சிறந்த மந்திரவாதிவந்திருப்பதாயும் அவன் அநேகருக்குத் தன் மந்திரவன்மையினாலே சத்துருபாதைகளை நீக்குகின்றானென்றும் ராக்ஷசன் கேள்வியுற்று அவனைத் தன்னிடத்தில் வரவழைத்து 'நீ யாவன் எந்தக்காரியங்களில் வல்லவன்' என்று கேட்டனன். அம்மந்திரவாதி இந்திரசர்மாவேயாவன். அவன் ராக்ஷசனைநோக்கி, "ஓ மந்திரித்தலைவனே, யானோர் யோகி; மந்திரவாதத்திலும் சோதிடவித்தையிலும் வல்லவன்; என் பெயர் ஜீவசித்தி; எனக்குப் பொருள்களில் இச்சையில்லை. பொருளாசையை முன்னமே ஒழித்துவிட்டேன். பசிக்கு இவ்வளவு உணவு அளிப்பாயென்னின் அதுவே போதுமானது. உன்னிச்சைப்படி வேண்டும் காரியங்களைச் செய்வேன்" என்றனன். அதுகேட்டு மந்திராபெருமான், கேடுவருமுன்னே மதிகெட்டுவருமென்பதற்கேற்ப அவன் வார்த்தைகளில் நம்பிப், பிராமணர்களும் பௌத்தர்களும் இடைவிடாமல் வனை பொருவர் பகைத்து விரோதங்செவராதலின் இச்சாணக்கியன் செய்ப ஆபிசாரதிக் தீங்குகளை இக்ஷமணை கொண்டு நீக்கலாகும் என்று கரு...



சொல்லி அவற்றிற்குத்தக்க பரிஹாரங்கள் செய்யவேண்டுமென்று கூறினான். அப்போது அக்ஷமணகமுனிவன், மந்திரியைநோக்கி, ஓமதியில்வல்ல மந்திரரேறே, உன் மனத்திற்கொண்ட தாப பீதிகள்யாவும் தவிர்ந்திடுக. பிராமணர்களை ஒரு பொருளாகமதிக்கற்பாலதோ. அவர்களைப்போலத் துர்ப்பலர்கள் உலகில் இல்லை. அவர்களைப்போலப் பயங்கொள்ளிகளும் இல்லை. அவர்களுக்குத் தோள்வலியா, படைத்துணையா யாதுள்ளது? சத்திரத்தில் இரண்டுவேளையும் விலாப்புடைக்கச் சம்பிரமமாகச் சாப்பிடத்தான் யோக்கியர்கள். அவர்களில் ஆரேனும் நூற்றிலொருவர் ஆபிசாரம் முதலிய சிலவித்தைகள் கற்றிருப்பினும், அவற்றைத்தடுக்க நானிருக்கின்றேன். அதர்வணவேதத்தில் என்னை வெல்லவல்லவர் ஒருவரும் இல்லை. நீ இனி இவ்விஷயத்துக் கொண்ட மனக்கவலைகளை விட்டொழிவாயாக" என்றனன். இராக்ஷசனும் அவன் மாயவார்த்தைகளால் மோசம்போய் அவனை நம்பி அவனுக்கு வேண்டிய சிறப்புகளைச்செய்து தன்னிடத்தே வைத்துக்கொண்டனன். சாணக்கியனுக்கு இவ்வாறு பகைவர்மத்தியில் அவர்கள் மர்மங்களை பறிந்து தெரிவிப்பதற்கும் அவர்களை வஞ்சித்துத் தீவழியிற்செலுத்துதற்கும் ஒருவன் ஏற்பட்டான்.

இந்த இந்திரசர்மாவானவன் அரசர்களுக்குத் தன்னிடத்தில் மதிப்பும் நம்பிக்கையும் [illegible]மும் உண்டாகுமாறு சில சர்ப்பனைகளைச் செய்தனன். ஒருநாம் அரசர்களுக்கு அபாரமான சுரநோய் உண்டுபண்ணிப் பின் அது சாணக்கியன் ஆபிசாரத்தால் உண்டானதென்றுகூறித் தன் மயிற்பீலியினால் தடவி மந்திரித்து நீக்கினான். அரசர்கள் அதனாற் சந்தோஷித்து அவனிடத்தில் முன்னினும் அதிக நம்பிக்கையும் விசுவாசமும் உடையவராய் அந்தணர்களை மேன்மேலும் பகைத்து அவ்விந்திரசர்மாவின் துர்ப்போதனையால் பிராமணர்களுக்குச் செய்யற்பாலவாகிய ஆராதனைகளையும் வரிசைகளையும் செய்யாதொழிந்தனர். எவருடைய விரோதமும் குரோதமும் இருப்பினும் அந்தணர்களுடைய விரோதத்துக்குப் பாத்திரமாகலாமோ?

பின்பு அரசர்களுக்குப் பைத்தியம்பிடிக்கச்செய்து அதனைச் சாணக்கியன் ஆபிசாரத்தால் விளைந்ததாகச்சாதித்துத் தன் மந்திரசக்தியினாலே நீக்குதல்போல நீக்கினான். அப்பேருபகாரத்தால் அரசர்கள் மனமகிழ்ந்து அவனுக்கு அளவற்ற விலைமதித்தற்கரிய இரத்தினங்களும் பொன்னும் பொருளும் வெகுமதிசெய்ய, அவன் அவற்றைச் சிறிதும் பொருள்செய்யாமல் ஓடும் பொன்னும் ஒன்றென்று மதிக்கும் ஒப்பற்ற மகா யோகிதானென்று உணர்த்தக் கருதியவன்போல அம்மணிகளையும் பொன்னையும் வாரிவாரிக் கண்டோர் கொள்ளும்படி எறிந்துவிட்டனன். அச்செய்கையைக்கண்டு அரசரும் அமைச்சரும் ஆச்சரியமுற்று, 'ஆ! ஆ! இவன் பொன்னாசை நீத்த மகாயோகியே' என்று கருதி, அன்றுமுதல் முன்னிலும் பன்மடங்கு அவனைக் கௌரவப்படுத்திவந்தனர். அதன்பின் அவ்விந்திரசர்மா அரசரைநோக்கி 'இச்சந்திரகுப்தன் இங்கிருப்பது உங்களுக்குக் கெடுதியாகுமாதலின் அவனை இராஜ்யத்தினின்று ஓட்டிவிடவேண்டுமென்றனன். அரசரும் அவ்வாறே செய்தார்கள். ஆதலின் சந்திரகுப்தனுக்கு அரசருடைய நிர்ப்பந்தமில்லாமல் சுயேச்சையாகச் சாணக்கியனோடு கலந்து காரியங்களை முடித்துக்கொள்ளுதற் கேதுவாயிற்று. இந்திரசர்மா உடனே இரகசியமாகச் சந்திரகுப்தனைப் பின்தொடர்ந்து புஷ்பபுரத்துக்கு நாற்பத்தைந்து காதத்தில் உள்ள வர்த்தமானபுரமென்னும் ஊரில் அவனை இருக்கும்படித்திட்டஞ்செய்து ஒருவரும் அறியாமல் பாடலீபுரத்தில் தன்னிருக்கைக்கு மீண்டனன். பின்னும் இந்திரசர்மா அரசனைநோக்கி, "இன்று சோதிட லக்ஷணங்களால் தெரியவருகின்றது. இத்தேயத்துக்குப் புறம்பேயுள்ள ஒரு கானகத்தில் ஓர் வேடராஜனும் பிராமணனும்

உங்களுக்கு மாறாகச் சில குத்திரப்பிரயோகங்கள் செய்கின்றார்கள். ஆதலின் அதனை எவ்வாறுண்டோ அவ்வாறு விலக்கிக்கொள்ளுங்கள்" என்றனன். அதைக்கேட்டு அரசர்கள் கோபங்கொண்டு அவ்வேடராஜாவுக்கு அதுகாறும் கொடுத்துவந்த ஜீவிதங்களை நிறுத்திவிட்டார்கள். அதனால் அவ்வேடராஜன் கோபங்கொண்டு அரசருக்குப் பகைவனாயினான். அரசர்களுக்கு விரோதியாவார் எல்லாரையும் தன்பக்ஷத்தில் சேர்க்கச்சமயம்பார்த்திருந்த சந்திரகுப்தன் அவ்வேடராஜனுக்குத் தன் பிதிர்தனத்திலிருந்து ஜீவிதங்கொடுத்துத் தனக்கு நேசனாக்கினான்.

தாத்தா.—ஏது சாணக்கியன் சந்திவிக்கிரகப்பிரயோகம் வெகு திறமாகச்செய்கின்றானே. பஞ்சதந்திரத்தில் போதித்திருக்கும் சந்திவிக்ரகம் முதலிய உபாயங்களுக்கு அந்நூலிற் கூறினது பக்ஷிமிருகங்களைச்சுட்டின கற்பனையான திருஷ்டாந்தங்களென்றும், சாணக்கிய சூத்திரத்தில் கூறுவது பிரத்தியக்ஷாநுபவமான சரித்திரவிஷயமான மேற்கோளாகவும் தோற்றுகின்றதே. என்ன ருக்மணி உன் அபிப்பிராயமென்ன?

ருக்மணி.—இக்கதை நான் முதல் முதல்படிக்கின்றமையால் அவ்விஷயங்களைப்பற்றி உறுதியாக ஒன்றும் சொல்லமாட்டேன். ஆயினும் சந்திவிக்கிரகம் என்பது அரசர்க்காயினும் யாவர்க்காயினும் நீதியான தருமமன்று. நம்பிக்கைத்துரோகமென்பது கொடியதோர் பாவமாகும். அதனை இக்காலத்தரசர்கள் ஆசரியார்களென்றெண்ணுகிறேன். இப்பஞ்சதந்திரத்தில் போதித்துள்ள ஐந்து தந்திரங்களில் மித்திரபேதமும் சந்திவிக்கிரகமும் நீதிமார்க்கங்களாக ஒப்பத்தக்கவையல்ல. இப்பஞ்சதந்திரத்தை நம்மவர்கள் சிறந்த நூலாகக்கொள்ளினும் மேனாட்டார்கிய 'மக்கியவல்லி' யென்பவன் செய்துள்ள, 'இராஜதர்மம்' என்னும் நூலோடு ஒப்பிட்டு இதிற் போதித்த மார்க்கங்கள் கொள்ளப்படா என்று தள்ளுவார்கள்.

தா.—ஆனால் அவர்களுக்குள்ளே இவ்வகையான மார்க்கங்களும் உபாயங்களும் உபயோகிப்பதேயில்லையோ?

ருக்.—அச்சங்கதி என்னால் சொல்லமுடியாது. உண்மை எப்படியோ? நெருங்கிப்பழகினவர்களுக்குத்தானே தெரியும். ஆயினும் இவ்வழிகளை ராஜர்களுக்குரிய தர்மங்களாகவும் நீதிகளாகவும் போதித்தது ஒப்பத்தக்கதன்றே.

சிவகாமி.—ராக்ஷசன் மகா கெட்டிக்காரனென்று மதிக்கப்பட்டிருந்தானே. அவனால் ஒன்றும் ஆகவில்லை.

சுப்பு.—நன்றாய்ச் சொன்னாய் சிவகாமி. அவன்தானே இந்திரசர்மாவைக் கூட்டிக்கொண்டுவந்து வைத்துக்கொண்டது. முதல் முதல் மோசம் போனவனே அவனானபோது அவன் மற்றவர்கள் மோசம் போகாமல் என்னவாறு தடுப்பான்.

ருக்.—ஆயினும் ராக்ஷசனை அவ்வளவு எளிமையாக மதிக்கக்கூடாது. அவன் அரசர்களிடத்தில் அந்தரங்கமான விசுவாசமுள்ளவனாய் அவர்களுக்குண்டாகும் இடையூறுகளை மனப்பூர்வமாக நீக்கக்கருதினானேயன்றி வேறன்று. சமர்த்தனுக்கும் அபத்தம்வரும் என்றபடி இந்திரசர்மாவின் புணர்ப்பை அறியாமல் மோசம்போனான்.

தா.—இந்திரசர்மா அடுத்துக்கெடுத்ததேயன்றி காட்டாளராஜனை அரசர்களுக்கு விரோதமாக்கி மித்திரபேதமும் செய்கின்றானே. இவன் சாணக்கியனிலும் பொல்லாதவனாயிருக்கிறான்.

சிவ.—இவ்விந்திரசர்மா மகா நீசனாயிருக்



தந்தையையும் தமயன்மாரையும் அரசர்கள் கொடூரமாகக் குகையில் அடைத்துக்கொன்ற கொடுமையால் அவர்கள் மேல் ஆக்குரோசமும் வங்கையும் உண்டாதற்கு நியாயமுண்டு. அவ்வாறே சாணக்கியனுக்கும் உண்டு. இவ்விந்திரசர்மாவுக்கு அரசர்கள் என்ன கெடுதி செய்தார்கள்? ஏனிப்படிச்செய்கின்றான் கெட்டுப்போவான்? இவனுக்கு இது அடுக்குமா?

தாயார்.—அப்படிச் சொல்லக்கூடாது. அவன் தனக்கரசர்கள் ஒரு கெடுதியும் செய்யாவிடினும் தன் நண்பனும் சகபாடியுமான சாணக்கியனுக்குற்ற மானக்கேடும் சிறுமையும் தனக்கேவந்தது போல எண்ணக்கூடுமன்றோ? சாணக்கியனுக்கு அவன் உயிர்த்தோழனென்பதையும் அவனால் பிரேரேபிக்கப்பட்டவனென்பதையும் முற்றும் மறந்துவிடப்படாது.

தா.—ஆகவே அரசர்களுக்கு ஒருவர்போய் இருவர்போய் மூவருடைய பகை பலமாய்விட்டதே. சந்திரகுப்தன் மிகத் தந்திரசாலிதான். அரசர்களுக்குப் பகையைமூட்டி அவர்களுக்குப் பகையானோர்களைத் தனக்கு உறவு செய்துகொள்ளுகின்றானல்லவா?

ருக்.—போதும் இத்துடன் நிறுத்துவோம். இன்றைக்குக் கொஞ்சம் காரியமிருக்கின்றது. நாளைப்பார்த்துக்கொள்வோம்.

## தபால்முத்திரை சேர்த்தல்.

(PHILATELY.)

நம்மவர்களுக்கு தபால் முத்திரை சேர்த்தல் (Stamp-collection) என்ற விஷயமானது சில வருஷங்களாகத்தான் தெரியவரும். ஆனால் ஐரோப்பிய பிரதேசங்களில் ஒவ்வொரு சிறுவர் சிறுமிகளிடத்திலும் தபால் முத்திரைகளடங்கிய புஸ்தகம் (Stamp-album) வெகுகாலமாய்க் காணலாம். அவர்கள் தபால் முத்திரை சேர்க்கிறதினாலாகிய பிரயோஜனமும் இன்பமுமறிவும் முற்றுமுணர்ந்திருக்கிறார்கள். நம்மவர்களோ தபால் முத்திரைசேர்த்தல் விளையாட்டுப்பிள்ளை செய்கையென்றும் வீண்காலப்போக்கென்னும் வெகு லகுவாய் தங்களபிப்பிராயத்தை வெளியிடுவதுந் தவிர முயற்சிசெய்வோரை இகழ்ச்சியாயும் பேசுகிறார்கள். ஆனால் சிலர் வருகிற தபால்முத்திரைகளையும் கூடுகளையும் கழிவு காகிதம்போடுங் கூடையிலெரியும் வழக்கத்தை விட்டு உடனுக்குடனெடுத்துப் பத்திரமாய்ச் சேர்ந்து தபால் முத்திரை சேர்க்கும் சிறுவர் சிறுமிகளுக்கு கொடுத்து அவர்கள் முயற்சியை விர்த்திபண்ணுகிறார்கள். இவர்கள் பெருந்தன்மை புகழத்தக்கதே. இவ்விதமாய் உதவிபுரிவர்கள் நம்மவர்களிற் சிலரே.

அதிகப்பிரயோஜனமுள்ளதாயும் மிக்க இன்பத்தைத் தருகின்றதுமான இப்படிப்பை இந்தியாமுழுது மற்பமாய்க் கவனித்தல் நிறம்பவும் விசனிக்கத்தக்கதே. நம்தேய மிவ்வேலைக்கேற்றவிடமாயிருந்தும் நம்மவர்களிலதிக சொற்பந்தானிப்பயிற்சியில் முயற்சிக்கிறார்களென்றால் நமக்கே குறையாயிருக்கிறதல்லவா. இவ்விந்தியாவிலுள்ள சுதேச இராஜ்யங்களிலொன்றிரண்டு தவிர அநேகமாயெல்லாம் தங்கள் நாடுகளுக்கு தனித்தனியே தபால் முத்திரை யேற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே நமது சொந்த தேயத்திலே சிறுவர் சிறுமிகளுக்கு ஏராளமான அநேகவித தினுசு முத்திரைகள் லெகுவாய் சிரமமில்லாமல் கிடைக்கும். ஆனால் பிறதேச சிறுவர் சிறுமிகளுக்கோ அதிகச் சிரமப்பட்டாலொழிய சுதேச இராஜாங்கத்து முத்திரைகள் கிடைக்கா. இவ்வநுகூலத்தை உபயோகப்படுத்தாதிருத்தல் நமது அறியாமையே.

இஃது மேன்மைபெற்ற பயிற்சியில் முயற்சி செய்பவர்களுக்கு துவக்கத்தி லநேக இடையூறுகளுண்டாயினும் விடாமுயற்சியுடன் இதைக் கைவிடாது பயிற்சி பண்ணுவதே மேன்மை. "அருமையுடைத்தென்றசாவாமை வேண்டும் பெருமை முயற்சிதரும்" என்றதாலும் முடியாதென்று விட்டுவிடாமல் முற்சிபண்ண வேண்டும்.

தபால் முத்திரை சேர்ப்பதிலும் தேசவாரி பிரிப்பதிலும் அததுக்குறிய விடங்களிலொட்டுவதிலு மெவ்வளவு காலம்பிடிக்கிறதென்று சிலர் சொல்லுவது சகஜமேனும் அதைச்செவியில் வாங்காது "ஊக்கமது கைவிடேல்" லென்ற படி அவ்வேலையி லதிமுயற்சியுள்ளவர்களாயிருந்தால்மாத்திர மதில் தேர்ச்சி பெறலாம். இது வீண்காலப்போக்கென்று சொல்லுகிறவர்களுக்கு கைவேலை தவிர மானதவேலையுமிதிலிருக்கிறதென்று தெரியாதுபோலும்

இவ்விதமான இடையூறுகள் இம்முயற்சி செய்பவர்களை தடை செய்யுமேயல்லாது அதி உபயோகமான இந்தவேலைக்கு ஊக்கத்தைக் கொடாது. ஒருவன் தன் ஓய்வுநேரங்களை சரியானபடி உபயோகப்படுத்த விரும்பினால் இவ்வேலையைத் தவிர வேறொன்றும் பயன் தருவனவாயில்லை. சூதாட்டமுதலிய துர்விளையாட்டுகள் யாவும் கெடுதிவிளைக்குமல்லாது நன்மை கிஞ்சிற்றேனு முண்டாக்காது. கொடிய பயிற்சிகளும் துர்விளையாட்டுகளும் நிறைந்த நம்தேயத்திலே இவ்வித நற்பயிற்சி உலாவப்பெற்றால் அத்துர்ப் பயிற்சியாவுந் தொலைந்து தேசமுழுதும் நல்லொழுக்கமே ஒழுகப்பெற விடமிருக்குமல்லவா அப்பொழுது தேசம் மேன்மேன்மையடையாது.

பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு இக்காரியத்தில் சித்திபெறுதற்கு அநேக அநுகூலங்களிருக்கின்றன. பற்பல விடங்களிலிருந்து வந்து வாசிக்கிற பிள்ளைகளுடன் சிநேகமாகிறார்கள். அவர்கள் ஆங்காங்குள்ள தங்கள் பெற்றோர்களுக்கெழுதியாவது நண்பர்களுக்கெழுதியாவது தபால் முத்திரை வரவழைத்துக்கொடுக்கிறார்கள். வீட்டிலிருக்கும் பெண்களுக்கோ கல்வியிற்றேர்ந்த தங்கள் சகோதரர் மூலமாயும் தாங்கள் கல்விகற்ற பாடசாலைத் தலைவியின் மூலமாயும் தங்களுக்கு சிநேகிதர்களிருப்பினவர்கள் மூலமாயும் தபால் முத்திரை பெறுகிறார்கள். சிநேகிதரிடத்திலாவது, அயலாரிடத்திலாவது நூதனமாய்ப் பார்க்கவந்தவரிடத்திலாவதுசில முத்திரைகள் கேட்டவினால் காலம் வீணாய்விடுமென்று சொல்வது அசம்பாவிதமானகாரியம். இவ்வேலையில் செலவழிக்கும் நேரமெல்லாம் நற்கிருதியில் செலவிட்டதற் கொப்பேயன்றி வேறல்ல.

இவ்வேலை சரித்திரப்பாடத்துக்கும் பூகோளசாஸ்திரப்பாடத்திற்கும் முக்கிய ஏதுப்பொருளாயிருக்கிறது. தபால் முத்திரை சேர்த்தலென்றாலே பூகோளசாஸ்திரமும் சரித்திரமுமொருவிதமாய் படித்தலென்றே பொருள் கொள்ளலாம். ஏனெனில் பூகோள சாஸ்திரப் படிப்பை எளிதில் படிக்கச் செய்வதுந் தவிர ஒருபொழுதும் மறவாதபடி மனதில் ஸ்திரமாய்விடுகிறது. பூகோளசாஸ்திரத்திலுள்ள அபரிமிதமான விநோதப்பெயர்களை ஒருவன் ஞாபகப்படுத்த வென்றால் அருமையான காரியமே. முத்திரை சேர்க்கிறவர்களோ தாங்களே தயார் செய்யும் புஸ்தகத்திலிருந்து வாசிக்கிறார்கள். ஆகவேதான் லகுவாயறிகிறார்கள். சரித்திரப்படிப்பையும் அநேகவிதமாய் விர்த்தி பண்ணுகிறது. ஸ்டாம்பு சேர்க்கிறவர்கள் இந்திய சுதேச இராஜ்ய முத்திரைகளைப்பார்த்தும் சுதேச இராஜாங்கத்தார்கள் தனித்தனியே ஏன் முத்திரை யேற்படுத்தியிருக்கிறார்களென்று யோஜிக்கிறார்கள். சுதேச இராஜ்யங்களின் சுவாதீனந்தானிதற்குக் காரணமென்றுணர்கிறார்கள். ஸ்டாம்பிலிருக்கும் படத்திலிருந்து அதிபதி யின்னாரென அறியலாம். எவ்விதமான இராஜாங்கமென்றும் ஜனங்கள் நடவடிக்கை முதலியவைகளையு மறியலாம். தாபால் முத்திரையில் போட்டிருக்கும் கிரயத்திலிருந்து அத்தேசத்தில் வழங்



கும் நாணயமறியலாம். மேலும் தேசக்கொடியும் தன் சின்னமும் சில சமயங்களிலறியக்கூடும். தேசத்து நாகரிகவிர்த்தியும் அறிவதற்கிடமிருக்கிறது. உதாரணமாய் கன்னடா (Canada) தேசத்தில் காலஞ்சென்ற மாட்சிமைதங்கிய மகாராணியவர்கள் (Jubilee) ஜூபிலி மகோற்சவத்தின் ஞாபகார்த்தமாய் வேறுஸ்டாம்புக ளேற்படுத்தினார்கள் இம்மாதிரி மகாராணியவர்கள் வேறு சில நாடுகளிலும் வேறு முத்திரைகளேற்பட்டன. இப்படிப்பினை யாவும் வேறெவ்விதத்தில் இலகுவாயறியலாம்? இன்னுமோர் முக்கிய பிரயோஜனமுளது. அஃதை இங்கு கூறவிடல் நியாயமன்று. தபால் முத்திரை சேர்க்கும் யாவரிடத்திலும் பொறுமை, நேர்மை, நிதானம் என்னும் சிறந்த குணங்கள் தப்பாமல் பார்க்கலாம். இக்குணங்கள் யாவும் நம்பெண்களுக்குமுரித்தன்றோ.

சற்று இடங்கொடுப்பீராயின் சேர்த்த தபால் முத்திரைகளைப் பத்திரமாய் வைக்கும் விதத்தை இங்கு கூறுவோம். தபால் முத்திரை ஒட்டுவதற்குத் தயாராகும் புஸ்தகங்கள் (Album) விலைக்குவாங்காவிடினும் சுத்தமான வெள்ளைக்கடுதாசியடங்கியபுஸ்தகம் போதும். ஒவ்வொருதேயத்திற்கும் குறைந்தது இரண்டு பக்கங்கள் விடவேண்டும ஒவ்வொருபக்கத் தலைப்பில் தேசத்தின் நாமத்தை வரைதல் நலம். பக்கங்களில் கட்டங்களமைத்து அமைத்துள்ள வீடுகளில் முத்திரைகளை உண்டாயக்கிரமப்படி ஒட்டவேண்டும். ஒட்டும்பொழுது தான் பொறுமையும் சுத்தமுமத்தியாவசியமான கருவிகளாயிருக்கவேண்டும். ஒட்டுதற்கு சுத்தமான கோந்து தயாராக்கிக்கொள்வதவசியம். சுத்தமில்லாமற்போனால் ஸ்டாம்பை புஸ்தகத்தைவிட்டுப் பிரிக்கையில் காகிதத்தில்அடையாளந்தங்கிவிடும். தவிரவும் அந்தக்காகிதம் அசுத்தமாய்விடுகிறது ஒட்டுவதில் கவனிக்கவேண்டிய விஷயமின்னொன்றுளது. ஸ்டாம்பைப் பூராய் ஒட்டிவிட்டால் மாற்ற [illegible]யில் பிரித்தல் வருத்தமாகும். ஆகவே விரும்புங் காலத்தில் இலகுவாய்ப் பிரிப்பதற்கனேக உபாயங்களிருக்கின்றன. முக்கியமாய் வழக்கத்திலிருப்பது சிறு துண்டுக் காகிதங்களில் சுத்தமான கோந்தைத் தடவி அவற்றை கதவுகீல்கள்போல் மடித்துவைத்துக்கொள்ளவேண்டும். பிறகு ஒரு பாதியை ஸ்டாம்பின் முதுகிலொட்டி மறுபாதியை கட்டத்திலொட்டவேண்டும். ஒவ்வொரு ஸ்டாம்பு மிம்மாதிரியே ஒட்டவேண்டும். இப்படிச்செய்வதால் வேண்டுங்காலத்தில் லகுவாய்ப் பிரித்து தண்ணீரெழுத்த ((Water-mark) முதலிய அடையாளங்கள் பார்க்கலாம். தவிரவும் புஸ்தகத்திலிருந்து பிரித்தபோது மடையாளம் விடாது. இவ்விதமாய் சிரமத்துடன் தபால் முத்திரைசேர்த்தலில் எவ்வளவுபொறுமையிருக்கவேண்டும் பாருங்கள். சுத்தமாயிருக்கவேண்டிய பழக்கங்களும் தபால் முத்திரை சேர்க்கிறவர்களிடத்தில் பிடிபடுகிறது. இவ்விதமான நற்குணங்கள் ஸ்டாம்பு சேர்க்க ஆரம்பித்த துவக்கத்திலே, உண்டாகி வரவர வளர்ந்து நமது வாழ்நாட்களில் அக்குணங்களால் மேன்மையடையுங்கால் சந்தோஷமடைவோமல்லவா.

நமது புஸ்தகம் (Album) அசுத்தமாயிருந்தாலாவது அல்லது ஸ்டாம்புகள் ஒழுங்கீனமாயிருக்கிறதென்றாலாவது ஒரு தேசத்திலுண்டாய ஸ்டாம்பை இன்னொருதேசத்தில் யாரு ஒட்டியிருந்தாலாவது அப்புஸ்தகத்தை யாவருக்கும் காட்டுவதற்கு நாணமடைவோம். தவிரவும் நமது முயற்சியும் தளர்ச்சியடைய நேரிடாலும் நேரிடும்.

சொற்பக்காலத்திற்குள் தபால் முத்திரை சேர்த்தல் தொழில்ப்பாடமாயவிட்டது. [illegible]லாந்திலோ அப்படிப்பை விர்த்திபண்ணும் பொருட்டு அநேகசபை[illegible]களேற்பட்டிருக்கின்றன. அச்சபைகளின் [illegible]க்கியஸ்தர்கள் [illegible] ஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் [illegible]ளுமே. அவர்கள் ஸ்டாம்புவிஷயமாய் உழைப்புக் கணக்கிலடங்காது ஸ்டா

சரித்திரத்தையும் அவைகளின் மஹாத்துவத்தையும்பற்றி அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கிறார்கள். ஸ்டாம்புவிஷயமாய்க்கூறும் பத்திரிகைகளு மநேக உலாவுகின்றன. ஸ்டாம்பில் வியாபாரஞ் செய்கிறவர்களில் சிலர் தப்புஸ்டாம்புகளேற்படுத்தி விலையாக்கிறபடியினாலே ஸ்டாம்பில் கொஞ்சமேனும் சந்தேகம்பிறந்தாலுடனே இச்சபையோர்களுக்கு எழுதி அதனுண்மையை எளிதிலறியலாம். தப்புஸ்டாம்பு, உண்மையான ஸ்டாம்பென்றறிய அவர்களுக்கு அதிகத்திறமையுண்டு. அதன் விலைதாரணைகளும் மதிப்பார்கள். இப்பேர்ப்பட்ட சபைகள் வடபாகத்திலொன்றிரண்டு தவிர நம்தேயத்தி லேனுண்டாகவில்லை? தபால்முத்திரை சேர்ப்பதில் அசாக்கிரயாதையாயிருக்கிறார்களென்றே காரணங்கூறல் வேண்டும். நம் இராஜதானியில் அச்சபை ஒன்று கூடயிருக்கிறதாய்த் தெரியவில்லை. ஏதாவதிருப்பின் நண்பர்கள் தயவுகூர்ந்து நமக்கு எழுதினால் அவர்களுக்கு மிக்க நன்றியுள்ளவனாவோம்.

இவ்வாறு பிரயோஜனமுள்ள வேலையை யாவரும் கைக்கொளல் அதியாவசியகமே. நமது பெண்களும் நம்மைப்போல முயற்சி செய்வார்களாயின் அவர்களுக்கு அநுகூலமும் தேசத்திற்கு மேன்மையுமுண்டு. இம்முயற்சியை எவ்விதமாய்ப்பாரவச்செய்யலாமென்றால், ஆல்பம் புஸ்தகமிருக்கிறவர்கள் எல்லாரிடத்துங்காட்டி அவைகளை இங்கிதமானவார்த்தைகளினால் தெளியச்செய்தும் கூடுமானால் சில ஸ்டாம்புகள் வெகுமதியாகவுங்கொடுத்துத் தூண்டித் தொடங்கச்செய்தலே ஸ்டாம்புக் கலெக்ட்டர்கள் செய்யும் தர்மமாகும். இப்படி இவர்களிதுவிஷயமாய் உபந்நியாசஞ்செய்வாராயின் நமது இந்திய சிறுவர் சிறுமிகளு மிவைதையுணர்ந்து முயற்சி செய்வார்கள். பிறகு Philately சபைகளுண்டாவதற் கிடமுண்டாய்விடும். தேசம் நாகரிகமடைவதற்கும் ஐயமிராது.

M. P. S. இராமலிங்கமுதலியார்.
மேலப்பண்ணை, ஆழ்வார்குறிச்சி,
திருநெல்வேலி ஜில்லா.

P. S.

தபால் முத்திரைசேர்க்க விரும்புகிறவர்கள் இச்சஞ்சிகைபத்திராதிபர் மூலமாயாவது நேரேயாவது தெரிவித்தாலவர்களுக்கு என்னாலியன்ற உதவிசெய்யத் தயாராயிருக்கிறேன்.

LIFE OF VICTORIA.

## விக்டோரியாமகாராணியார் கும்மி.

### காப்பு.

மாட்சிமைதங்கும் மகாராணியவர்
மாண்புறும் நல்ல சரித்திரத்தைக்
காட்சி மிகும் கும்மிப்பாடலிற் கூறிடக்
காரணன் சீரடி காப்பாமே.

நன்மையில் மிக்கார் நலத்திற் பெரியவர்
நாடும்புகழ்கொள் விக்டோரியாவின்
சொன்மலிகாதையைக் கும்மியில் பாடிடத்
தும்பிமுகனிருதாள் துணையே.



### அவையடக்கம்.

சொல்லுமிந்நூலின் சுவையறிவாரிதில்
தோஷங்களுண்டெனத் தள்ளுவரோ
மெல்லும் பழத்தினுக்கோடுமுட் கொட்டையும்
மேவும் இயல்பை அறிகிலரோ.

குற்றத்தைத்தள்ளிக் குணத்தையுட் கொள்வது
கூறிய மேலவர் கொள்கையன்றோ
பெற்றிதரும் அன்பினாலே யுரைத்ததைப்
பெட்புடன் மேலவர் கொள்வரன்றே.

### நூல்.

### நாட்டுச்சிறப்பு.

1. இங்கிலந்தென்றொரு நன்னாடு அது
இப்புவிக்கெல்லாம் தலை நாடு
பங்கமில்லாதவளநாடு அது
பாக்கியத்தாழ்வில் பெருநாடே.

2. மண்ணின்வளமும் மலையின்வளங்களும்
மாநதியாதிவளங்களும் சீர்
நண்ணும் கடலின் வளங்களும் மிக்கது
ஞாலத்தே இணையில்லதுவே.

3. காரிரும்போடு நிலக்கரியும் அங்கு
காணும் மனிதர் முயற்சியினால்
பேருறும்பொன்னிலும் நன்மணிதன்னிலும்
மீறும் செல்வம் அளித்திடுமே.

4. கோதுமையாதிபல்தான்யவகைகளும்
கூறும்பல கனியின்வகையும்
ஓதும் நெய்பால்தயிராதிவளங்களும்
உற்ற கடல்போலப் பெற்றிடுமே.

5. கைத்தொழிலென்பதும் வர்த்தகமென்பதும்
காட்டுமிந்நாட்டுக்குக் கண்டுமிஞ்சி
மற்றவர்கட்கிவர் தந்திடினல்லது
மாநிலத்தில் வேறுதானிலையே.

6. செய்யநீராவியின் ஸாதகத்தால் வலி
சேரும்பலவகை யந்திரத்தைப்
பையவியக்கி யிந்நாட்டவர்செய்தொழிற்
பான்மையையாவர் பகருவரே.

7. கண்ணனந்நாளொரு காரிகைமானத்தைக்
காத்தனன் என்பரித்தேசமதோ
எண்ணுமுலகில் எல்லாருடைமானமும்
ஏற்ற உடைதந்து காத்திடுமே.

8. உற்ற துறைமுகம் தோறும் அடைந்திடும்
உன்னதக்கப்பலின் பாய்மரங்கள்
முற்றுமோர்காடெனத்தோன்ற நிறைந்தங்கு
முன்னும் பெருமையை யென்னசொல்வேன்.

9. ஆதுலர்க்கன்னம் இடும் அறச்சாலையும்
ஆரறிவைத்தரும் [illegible]ருடைய
ஏதமில் கல்வியின் சாலையும் ஊர்தொறும்
எண்ணிலவாகச் சிறந்திடுமே.

10. ஆன்ற அறிவும் அரிய குணங்களும்
ஆண்மையும் வாய்மையும் அன்பருளும்
சான்றவர்வாழும் அந்நாட்டின் பெருமையைச்
சாற்றவல்லா ரெவர்தாரணிக்கே.

நகரச்சிறப்பு.

11. மிக்கவித் தேசத்தின் தொக்க தலைநகர்
மேதினிபோற்றும் இலண்டன் என்பார்
கல்க்கத்தா நாலைந்தங்கொக்கச் சமைந்திடில்
காணுமதிற்பாதி யாகுமன்றே.

12. வாணிபத்தால் வரும்செல்வமும் வீர
வலிமையினால்வரும் செல்வங்களும்
பூணும் எத்தேசத்தும் பெற்றுக்குவித்திடும்
பொக்கிஷம்போலுமே அப்பதியே.

குலச்சிறப்பு.

13. அன்னதொர்மாநகர் தன்னிலிருந்தங்
கனிபணியா யரசாண்டுவந்த

ந.



மன்னவர் தங்குலமேன்மையைச் சொல்லுதல்
வாக்பதிக்கும் அரிதாகுமன்றே.

தாய்தந்தையர்வரலாறு.

14. துங்கமதாம்புகழ் தங்கியுயருமத்
தொல்லரசர்குலத் தெள்கடலில்
பொங்கி யுதித்த மதியெனத்தோன்றினர்
பூர்வ மோர் மன்னவர் ஜார்ஜெனவே.

15. ஜார்ஜெனும் வேந்தர்தமக்குப் புதல்வராத்
தாமுதித்தாரவர் கென்டுப் பிரபு
ராஜகுமாரர் எவரினும் நற் குணம்
நற் செயல் மிக்கவர் மற்றவரே.

16. கென்டுப்பிரபுவவர் வாழ்க்கைத்துணையாகக்
கேடில் குணத் தொரு மாணிழையை
நன்றுவிவாகம் புரியக்கருதியே
நாடியுள்ளன்பொடும் தேடினரே.

17. ஜர்மனி தேசத்தில் வண்மைசிறந்திடும்
ஸாக்ஸிகோபர்க்கசின் மகளாம்
நன்மைமிகுந்த விக்டோரியாவென்னுமோர்
நங்கையை நன்மணம் செய்தனரே.

18. நங்கையும் தாமும் நற்றேனு மொண்பாலும்
நலந்தரச் சேரக்கலந்தது போல்
தங்கிய அன்பொடு மங்களமாகவே
தாழ்ச்சியில்லாமலே வாழ்ந்தனரே.

பிறத்தல்.

19. வாழ்ந்திடும் நாளையில் மாணிழையாள் தன்
வயிற்றினில் மாநிலம் செய்தவங்கள்
சூழ்ந்துதிரண்டே உதித்ததுபோலவே
தோன்றினள் ஓர்பெண்மகவுமன்றே.

20. மெய்யுயிர்போலே விரும்பியே வாழ்க்கையில்
மெல்லியலாள்வயிற் றோர்குழந்தை
பொய்யறுசிந்தையர் புண்ணியம்போலவே
பூவுலகோங்கிடத் தோன்றினளே.

21. மாசில்வலம்புரிச் சங்கின்வயிற்றினில்
மன்னியுதித்ததோர் நன்மணிபோல்
பாசிழையாள் வயிற்றுசறவோர்மகள்
பார்மகிழவந்து தோன்றினளே.

**பேரிடப்பெறுதல்.**

22. வாய்ந்தமகள் தனக்காய்ந்து நல்வேளையில்
ஏய்ந்த விக்டோரியா என்றொருபேர்
தேக்தொடைத்தாதையும் தாயுமிட்டார்தாமுன்
செய்தவம் முற்றிய தென்றுவந்தே.

**வளர்த்துச் சீராட்டப்பெறுதல்.**

23. விக்டோரியா வென்று பேருமிட்டுப்பெரு
மேன்மையும் அன்பும் மிகுந்தவளை
எத்திசைபுப்புகழ் மேலிடப்போற்றியே
ஏதமில்லானந்தம் கொண்டனரே.

24. எம்மிரு கண்மணி எம்முயிரே எமக்
கெய்தும் கவலை தவிர்க்கவந்த
அம்மையேயென்று சீராட்டிமகிழ்ந்தனர்
ஐயரும் தாயரும் அன்புடனே.

25. சிந்தையுவந்து தம்மார்பிலும் தோளிலும்
சேர்த்தணைத்துள்ளம் உவந்து பெறும்
தந்தையின் காதலை எந்தவகையாலே
சாற்றுவேன் நானின்று சால்புடனே.

26. எங்கள்குலக்கொடி பாருமென்பார் இவள்
எத்திசையும் கட்டி ஆளவந்த
நங்கையிவள் தன்னைப்பாருமென்றன்புடன்
யாவர்க்கும் காட்டி மகிழ்குவரே.

**தந்தையார் இறந்துபோதல்.**

27. மங்கையை நாளொரு மேனியும்போதொரு
வண்ணமுமாகவளர்க்கையிலே
தங்குபோன்புடைத்தாதை பாகதி
சார்ந்தனரே விதி தன்வசத்தே.

28. இராமனைப்பெற்ற தசரதன் தன்மகன்
ஏற்றங்கள் காணப்பெறு...



கோமகள்தன் பெருமாமையைத் தாதை
குறித்துமகிழ்ந்திடப் பெற்றிலரே.

**தாயாரால் வளர்க்கப்படுதல்.**

29. தாயுள்ளபிள்ளை தளர்வடையாதெனும்
தன்மைவிளங்கிட நன்மைதரும்
நேயமுடனே நற்றாயர் வளர்த்திட
நேர்குறை உற்றிலள் தார்குழலே.

30. நற்பரியேறி நடத்தியும் தேனிமிர்
நாண்மலர்ச் சோலையுலாவிவந்தும்
அற்புதமாகக்கடற்கரையில்விளை
யாடியும் உள்ளம் களித்தனளே.

31. உள்ளம் களித்தே உறவினர்பக்கலும்
உற்ற நற்றாயிடத்தும் உவந்து
கள்ளம் கபடமில்லாமல் வளர்ந்தனள்
கண்டவர் நெஞ்சம் களித்திடவே.

**கல்விகற்றல்.**

32. புத்தியில்வல்லபல் போதகர்கற்பிக்கப்
போந்தகலைகளெல்லாம் தெரிந்து
சித்தமுவந்து செழுமதிபோலத்
திகழ்ந்தனளே யந்தச் சீர்மகளே.

33. ஆதிநல்வேதமும் காதையும் நீதியும்
ஆனதோர்கானமும் ஞானமும் நீள்
போதமுறவேபயின்று தெரிந்தனள்
புண்ணியள் கண்ணியம் நண்ணிடவே.

34. அன்பும் இரக்கமும் ஆதாவும் எளி
யாரிடத்தே தயையும் கொடையும்
இன்புசெய்நேயமும் வன்பறுவாய்மையும்
யாவும் நிறைவுற மேவினளே.

**முடிசூடல்.**

35. இப்படிப் பொற்கொடி யொப்பவளர்கையில்
ஏதமில்லாண்டு மூவாறு செல்ல

ஒப்பிலுரிமை பெறத்தகும் ஈட்டினை
ஒண்டொடியுற்றனள் அன்றவளே.

36. உற்றுமகிழ்ந்தங் குறைந்திடுங்காலையில்
ஓதுறும் தம்பெரும்தாதையர்பார்
பற்றலரஞ்சவேபாலித்துப்பின்பு
பரகதிதன்னை அடைந்தனரே.

37. தம்பெருந்தாதையாம் மன்பரமேவனும்
தாமரசாட்சிக்குரியவராய்
பொன்பிறங்கும் முடிசூட்டிடப் பெற்றனர்
பூவுலகம் களிபூண்டிடவே.

38. நாலாந்திசையுள்ள ராஜர்பிரபுக்களும்
நாடிவந்தேயடி சூடிநிற்கக்
கோலாகல r மகுடாபிஷேகம் செய்
கொள்கையைப்பெற்றனர் மெல்லியலே.

அரசாட்சி.

39. கோலும் கொடியும் படையும் மற்றங்கமும்
கொண்டுலகெங்கும் கெடிசெலுத்தி
மேலுமில்லை கீழுமில்லை இவர்போல
வேந்தெனக்கீர்த்தி மிகுத்தனரே.

40. எங்களைப்பாலிக்க வந்த இளங்கொடி
எந்துயர்தீர்த்திடவந்த கிளி
இங்கிவராட்சியிலேதும் குறைவில்லை
என்று களித்தனஞால மெல்லாம்.

41. என்றும் கதிரவன் சென்றிருளாமல்
இலங்கும் பெரும்புவி யெத்திசையும்
துன்றும் கெடிசெல காட்டி நன்காண்டதோர்
தோற்றத்தை என்னென்று சொல்லுவதே.

42. தன்னுயிர்போலவே மன்னுயிர்யாவையும்
தங்குமன்போடு புரந்தவர்க்கோர்
இன்னல்வரினது தன்னையடைந்ததா
எண்ணியதன்மையை என்னசொல்வேன்.

43. பெற்றுவளர்த்திடும் தாய்போலவேயிந்தப்
பேருலகுள்ளகுடிகளைத்தம்



வற்றலில்லாக்கடல் போலும் பேரன்பினால்
வாழ்வித்தசிரினையாது சொல்வேன்.

44. நல்ல நுள் கூர்ந்துலகாண்ட பெருமைசேர்
ராணியின் ஆட்சியிலே உலகம்
எல்லையில்லாமல் அடைந்தபயன்களை
எண்ணிடப்போகுமோ மண்ணிடையே.

45. வர்த்தகம் கைத்தொழில் மன்னும் உழுதொழில்
வர்த்தனை யானதை மற்றுரைக்கின்
வித்திலுண்டாகி விண்ணோங்கிடுமாலினும்
மிக்கவளர்ந்தன மற்றவையே.

46. செல்வமும் தேசமும்கல்வியும் சீர்மிகச்
செய்யும் நன்னாகரிகங்களுமே
பல்வகையாகப் பரவிமிகுந்ததைப்
பார்க்கின் அவைக்குமொரெல்லையுண்டோ.

47. அற்புதமாகிய தந்தியும் ரெயில்களும்
ஆனபலபல யந்திரமும்
விற்பனமாகநாம் காண்பனயாவையும்
மிக்கநம்ராணி காலத்திலன்றோ.

திருமணம் செய்தல்.

48. ஆரமணி முடிசூடியுலகினை
ஆண்டுவருகின்ற நாளையிலே
சேரும் மணம் செய்பருவம் சிறந்திடச்
சிந்தித்துத் தாயாரும் பந்துக்களும்.

49. அம்மான்மகனை யடிமுதலாகவே
அன்புடன் தம்முடனேபழகும்
நன்மைமிகுந்த குமாரனை நங்கையுள்
நாடிடக்கண்டு கொண்டாடினரே.

50. ஆல்பர்ட்டெனும் பெயரான அம்மைந்தரை
அன்னைமுதலோரகம் களிக்கச்
சேல்புரைகண்ணனி திருமணம்செய்திடத்
தேசமெல்லாம் களிகூர்ந்தனவே.

மணமகனோடு சுகித்திருத்தல்.

51. பேருயர்மாகிலத் தோர்கள்புகழ்ந்திடப்
பெட்புடன்மாலையிட்டற்புடனே

ஒருயிரீருடல் போலக்கலந்துள்ளம்
ஒத்திருந்தாரன்று மற்றவரே.

52. இந்திரனுடையி ராணியைப் போலவும்
எவ்வகைப் போகமும் கைவரவான்
சந்திரனுடுறு ரோகணிபோலவும்
சார்ந்து மகிழ்ந்தன ராங்கவரே.

53. காதலிருவர் கருத்திசைந்தே யென்றும்
ஆதரவாப்பட்ட தின்பமென
ஓதியசொல்லுக் குணர்த்து முதாரணம்
உற்றிவ ரென்றிடப் பெற்றனரே.

54. ஒன்றை யொன்று நீங்கா அன்றில்கள்போலவே
ஓதும் அரசியும் நாயகரும்
நன்றுகலந்து மகிழ்ந்தவர்நன்மையை
நாடியுரைத்திடலாவது வோ.

55. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையவர்
பான்மொழிக்கேற்ற பர்த்தாவவரே
இத்திறம் வேறினியில்லை யிப்பூவினில்
என்று கொண்டாட விருந்தனரே.

மக்களைப்பெறுதல்.

56. சிந்தைமகிழ்ந்து மணமகனுடைவர்
சீருடன்வாழ்ந்திடும் நாளையிலே
முந்து புரிந்த் தவப்பயன்போலவே
முற்றிழை மக்களைப்பெற்றனரே.

57. நன்னியகாதலரோடு மகிழ்ந்து தம்
ராஜ்யபாரத்தை நடத்திடும்நாள்
எண்ணிய எண்ணம் பலித்ததுபோலவே
ஏற்ற நன்மக்களைப் பெற்றனரே.

58. பிள்ளைகள் நால்வரும் பெண்களோரைவரும்
பேசும் நவமணிபோல் பவராய்க்
கள்ளமில்லா மக்களொன்பது பேர்களைக்
கற்பரசாமவர் பெற்றனரே.

59. காசிருந்தென்ன பணமிருந்தாவதென்
காட்டிய செல்வம் பலவிருந்தென்



நேசநன்மக்களில்லாத இல்வாழ்க்கையில்
நேரும் சுகமங்குபாதுள்ளதே.

60. மக்களைப்பெற்றவர் பாக்யமே பாக்கியம்
மக்களும் செல்வமும் பெற்றிருந்தால்
புக்ககுறை யொன்றவர்க்குள்ளதோ இந்தப்
பூவலயத்தினிற் பேசிலன்றே.

## மக்களின் விவரம்.

இராஜபெருமாட்டி.

61. ஓதும்புகழ் மகாராணியவர்பெற்ற
ஒன்பது மக்களில் முன்பிறந்தோன்
தீதறுஜர்மனி சக்கரவர்த்தியின்
செல்வனுக்குவாழ்க்கைப்பட்டனளே.

வேல்ஸ்இளவரசர்.

62. மைந்தரில் முந்திப்பிறந்தவர்தாம் நம்மை
மாண்புறப்பாலிக்கும் ஆண்டகையாய்
அந்தமுடனே எழாவதெட்வேர்டெனும்
அங்கிலராஜ மாசிங்கமன்றே.

ஆலிஸ்பெருமாட்டி.

63. மற்றொருபெண் ஹெஸ்ஸி தேசத்தையாண்டிடும்
மன்னரை அன்பொடு மாலையிட்டுக்
குற்றமில் மக்களைப் பெற்று மகிழ்வொடு
கூடியிருந்தனர் பீடுடனே.

எடின்பரோபிரபு.

64. ராணியவரிரண்டாவது மைந்தர்
எடின்பரோ மன்னவரென்பவர்காண்
மானுறும் ருஷ்டதேசாபதி மங்கையை
வாய்ந்து மணம்புரிந்தாரிவரே.

ஹெலினு—லூயிஸ்பெருமாட்டிகள்.

65. ஹெலினு வென்பவரோடு லூயிஸ்ஸெனும்
இன்னவர் பெண்கள் இருவருமே

நல்லநிலையினில் வாழ்க்கையடைந்தனர்
நானிலந்தன்னில் மகிழ்ந்தனரே.

கன்னாட்பிரபு.

66. மூன்றாம் குமாரர்கன்னாட் பிரபுவானவர்
முந்திய சேனைக்கு நாயகராய்
தோன்றியிருந்தார் பம்பாய் நகரத்திலே
தூயவர் நன்மையினுயவரே.

ஆல்பனிபிரபு.

67. நான்காவது சுதர் ஆல்பனியன்னவர்
நற்குணமயானவையும் பெற்றவர்காண்
பாங்காயிவர் பலநாளுக்குமுன்னே
பரகதிசேர்ந்து மருவினரே.

பியட்ரிஸ் பெருமாட்டி.

68. கடைசியான புதல்வி பியட்டிரிஸ்
கன்னிகை பாட்டன் பர்க்மன்னே யன்பால்
தொடையல்சூடிச் சுகித்திருந்துபின்பு
துக்கமடைந்தனர் மிக்கவன்றே.

இராஜமாளிகைகள்.

69. லண்டன் நகரில் அரண்மனை யொன்றதை
சிந்தையில் பக்கிங்ஹாம் என்று சொல்வார்
மண்டல மன்னர் வழிவழி வாழ்ந்தது
மற்றதில் மேவுவர் பெற்றியோடே.

70. அந்நகர்க்குச் சிறிதப்புறத்தே விண்ட்ஸர்
என்னும் அணிநகரொன்றுளது
மன்னவர்க்கங் கோரரண் மனையுள்ளது
மற்றதிலும் சென்றுவாழ்குவரே.

71. இந்தவிரண்டும் புராதனமாக
இசைந்தவை மற்றிவற்றோடிரண்டு
புந்திமகிழ்ந்து பின்னும் கட்டுவித்தனர்
பூலோக சொர்க்கம் அவையென்னவே.

72. ஆழ்கடல் மத்தியிலே யோரரண்மனை
ஆனந்தமாகவே ஆக்குவித்துத்



தாழ்குழல்தாமும் கணவரும் மக்களும்
சந்தோஷமாவங்கிருந்தனரே.

73. குன்றின் மூகட்டினில் இன்னொருமாளிகை
கூட்டமும் நாட்டமும் விட்டிருக்க
நன்று செய்வித்தங்கு சென்றதிலும் சில
நாள்கள் இருந்திடுவாரவரே.

74. மக்களோடும் மணவாளரோடும்பல
வற்சரம் வாழ்ந்திருந்தார் மகிழ்வால்
தொக்கபல் செல்வமும் சூழவிருந்தவின்
சொல்லும் குறைவிலர் மற்றவரே.

புருடரை இழத்தல்.

75. மங்களமாகவே வாழ்ந்திடும் நாளையில்
மண்ணினில் வாழ்க்கை யெல்லாம் கிளைக்கின்
தங்கிய நீரிலெழுத்ததைப்போலவே
தான்கெடு மென்பதும் தோன்றியதே.

76. அன்புமிகுந்த நற்றுயரைக்காதல்
அமைந்திடுகுந்தூய கணவரையும்
துன்புறத்தோகை யிழக்கலுற்றாரும்
துயர்தனைச் சொல்லமுடிவதுவோ.

77 ஆவியைநீங்கும் உடலெனவும் பெற்ற
அற்றமில் செல்வங்கள் முற்றிழந்து
மேவிய ஓர்மகன்போலவும் ஆயினர்
மெல்லியல் அன்றைக்குச் சொல்விடினே.

78. மக்களிடத்திலும் மன்னுயிர் மீதிலும்
வைத்த வொராசையால் சற்றுமனம்
துக்கமங்காறினர் நாளடைவாலவர்
தூயதம் போதிவாலுமன்றே.

பிற்காலம்.

79. ராணியவர் நெடுங்காலம் இஞ்ஞாலத்தில்
நல்லவர் யாரினும் வல்லவரென்
றாணைசெலுத்தி யிருந்தனர் அன்போடும்
ஆரவர் மேன்மையைக் கூறுவரே.

மரணம்.

80. ஆறுபத்தோடொரு நான்குவருடங்கள்
ஆர்கலிசூழ்புவி ஆண்டிருந்து
கூறும்முடியைத் திருமகார்க்கீந்திக்
குவலயம் விட்டவர் போயினரே.

81. அன்னையிழந்த குழந்தைகள் போலவே
அம்புவியாவும் வருந்தலுற
நன்னலமான அரசிபாகதி
நண்ணினரேபுகழ் மன்னினரே.

வாழி.

82. ராணியவர்கள் குலம்வாழி நம்தம்
ராஜசக்கரவர்த்தியாய் விளங்கும்
பாணுளும் ஏழாவதெட்வேர்டவர்வாழி
மன்னுயிர்யாவையும் வாழியவே.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

---

## A Short Story.

## Devadetta—The tale of a Prodigal.

## தேவதத்தன் கதை.

தென்தேசத்திலே வீரமகேந்திரபுரத்திலே யாகசேனன் என்றொரு தனவான் இருந்தான். அவன் இறந்துபோகும்போது தன் ஏக புத்திரனாகிய தேவதத்தனுக்கு நூறு வேலி விளைநிலங்களும், கெட்டி மச்சுவீடும், ஐந்து லக்ஷம் ரூபாய் உரொக்கமும் வைத்துவிட்டுப் போனதன்றி அவனுக்கு அநேக புத்திமதிகளையும் சொல்லிப்போனான். கட்டிக்கொடுத்த பணமும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் எத்தனை நாள் நிற்கும்? இவனுக்குச் சொல்லிய புத்திகள் அவ்வளவும் 'கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று' என்று கவியரசு உவமித்துக் கூறியவாறே ஒரு செவியுட் புகுமுன்னே மறுசெவிவழியாய் ஓடிப்போய்விட்டன. இத் [illegible]வதத்தன் நெடுநாளாக வருந்தித் தேடி வைத்த தன் தந்தையின் பணம் தன்கைக்கு வந்தவுடனே 'நாறல்வாயன் தேடினானை கர்ப்பூரவாயன் அழிக்கிறான்' என்றபடி அப்பணங்களை ஓட்டாங்குச்சுப்போலச் செலவழிக்க ஆரம்பித்தான். தினம்தோறும் வீட்டில் விருந்தும், சதிரும் ஆடலும் பாடலுமாகத் தன்போலும் இளைஞர்களாகிய விடபுருடர்களைக் கூட்டிவைத்துத் தூர்த்தச்செலவு செய்ததேயன்றி, சூதுமுதலிய தீவழிகளிலும் கணக்கில்லாமற் செலவுசெய்து தனக்குத் தன் தகப்பன் வைத்துப்போன உரொக்கமெல்லாம் ஒன்றிரண்டு வருஷங்களில் போக்கிக்கொண்டான். 'வளவனாயினும் அளவறிந்தழித்துண்' என்பதைக் கடைப்பிடியாமல் வாரிவாரிச் செலவுசெய்ததனால் தன் கடல்போலும் செல்வங்களையிழந்து 'தேடாதழிக்கிற் பாடாய் முடியும்' என்றபடிப் பின்பு செலவுக்குப் பணமில்லாமையால் வருந்துவானாயினான். ஆயினும் மூடருக்குப் புத்திவருவதுண்டோ. புத்திசாலிகள் பிறர்க்கு வரும் கேட்டைக்கண்டு தாம் கெடுதியிலிருந்து விலகிற்பார்கள். மூடர்களோ பட்டாலும் தெரியாமல் புத்திமயங்கி வருந்துவார்கள்.



பின்பு பணத்துக்கு வழியில்லாமையால் கடன்வாங்கத் தலைப்பட்டு அதுவும் போதாமல் தன் ஆஸ்திகளையும் விற்கத் தலைப்பட்டான். அவ்வாஸ்திகளைத் தன் தகப்பனிடத்தில் காரியஸ்தனாய்த் தனக்கும் காரியங்கள் பார்த்துவந்த நாகநாதன் என்பவனுக்கே விற்கக்கருதி அவனோடு தன் எண்ணங்களை வெளியிட்டான். அந்நாகநாதன் என்பவன் வெகு வஞ்சகமுள்ளவன். இவன் இந்நிலபலங்களையெல்லாம் கொக்குப்போல இலக்குப் பார்த்துத் தட்டிக்கொள்ளவேணும் என்று எண்ணியிருந்ததனாலே சமயம் வாய்த்தது என்று சந்தோஷித்துத் தேவதத்தனைநோக்கி "ஐயா உமக்கு நிலங்களின் குணகுணங்கள் உயர்வுதாழ்வுகள் ஒன்றும் தெரியாது. பிறரிடத்தில் விற்கப்போனால் பாதி விலைகூட உமக்குவாராது. நான் உம்முடைய அன்னமும் நீரும் உண்டிருப்பதனாலே உமக்குத் துரோகம் செய்யமாட்டேன்' என்று கபடநாடகங்கள் பலவும்நடித்துக் கடைசியில் அவ்வளவையும் மூன்றிலொருபங்குக்கும் குறைவாக விலைகொடுத்து வாங்கிக்கொண்டனன். தேவதத்தனோ எப்படியாவது தன்செலவுக்குப் பணம் அகப்பட்டதேயென்று மகிழ்ச்சிகொண்டு லாபநஷ்டங்களை ஆராயாதவனாய் அவ்வளவு ஆஸ்தியையும் பஞ்சத்துக்குப் பிள்ளை விற்றல்போல அவனுக்கு விற்று ஒப்படைத்துவிட்டான். மக்களின் அருமை பெறாவர்க்கே தெரிதல்போலப் பணத்தின் அருமை கஷ்டப்பட்டுத் தேடுகிறவர்களுக்கல்லவோ தெரியும்? ஈக்கள் தேன் கூட்டுவதுபோல எவ்வளவு சிரமப்பட்டு எத்தனைநாள் தூக்கமில்லாமல், எத்தனை குடிகளைக்கெடுத்துச் சேர்த்தானோ அவன் தந்தை அவ்வளவையும் அரைநாழியில் தோற்றுவிட்டான்.

ஆயினும் அவனுக்கு அந்தப்பணம் எத்தனை நாளைக்குக்காணும்? மலைவிழுங்கி மகாதேவனுக்குக் கதவொரு அப்பளாயாம் என்பதுபோல அப்பணத்தைச் சூது முதலிய தூர்த்தச்செலவுகளில் அதிசீக்கிரத்தில் இழந்துவிட்டான். பின்பு என்னசெய்வது? எதைவிற்பது? வெள்ளமுள்ளமட்டும்தானே மீன் துள்ளும்? பின்பு செலவுக்குப் பணமில்லாமல் வருத்தமுற்று முன்போலக் கடன்வாங்குதற்கு வகையில்லாமல் வருந்துவானாயினான். ஆஸ்தியை நம்பித்தானே கடன் கொடுப்பார்கள். ஆஸ்தியில்லாதவனை யாவர் சீந்துவார்கள். பின்பு தான் பலதடவைகளிலும் பெரும்பொருள்களையுதவிச் சிநேகம்பண்ணியிருந்த தன் சிநேகிதர்களை அடுத்துத் தனக்கு வறுமைவந்த இக்காலத்தில் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அவர்களுக்கென்ன பயித்தியமா இவனுக்குப் பணம்கொடுத்து உறவாடுவதற்கு? 'வாங்கச் சிநேகிதர்வந்து குவிவார்கள். கொடுக்கச் சிநேகிதர் ஒருவருமில்லை' ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாக்கு போக்குகளைச்சொல்லிக் கழித்துவிட்டார்கள். 'ஆபத்திலே தெரியும் அருமைச்சிநேகிதன்' ஆபத்தில் உதவுவதன்றோ சிநேகம்? ஆபத்தில் தட்டிக்கழிக்கிறவர் சிநேகம் என்ன பிரயோசனம்?

அப்போது தேவதத்தன் மனம்வருந்தி ஒன்றும்செய்ய அறியாதவனாய்த் தியங்கியிருக்கையில் தனக்குத் தகப்பன் சொல்லிவிட்டுப் போன மலைப்பக்கத்தில் உள்ள பாழ்வீடொன்று ஞாபகத்துக்கு வந்தது. ஆற்றோடே போகிறவனுக்கு அருகங்கட்டையும் ஆதாரம் என்பதுபோல அங்கு தன் தகப்பன் யாதேனும் பணப்புதையல் வைத்திருப்பானென்னும் எண்ணத்தால் அங்குசென்று பார்த்ததும் அங்கு என்ன இருந்தது? பல்லுக்குத்தக் குச்சிகூடவில்லை. அன்றியும் கூடத்தில் உத்தரத்திலிருந்து மணிக்கயிறொன்று சுருக்குப்போட்டுத்தொங்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் தேவதத்தன் "ஓகோ இதுவா நம் தகப்பன் நமக்குக் கடைசியாகக் காட்டியவழி! உள்ளதுதான், மானமிழந்து வாழ்வதிலும் பிராணனைவிடுவதே நலம்,

அருமையான செல்வங்களையெல்லாம் இழந்து வறுமைப்பட்ட எனக்கு இதுவே யோக்கியமானவழி" யென்று நினைத்து அச்சுருக்கைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு உத்திரத்திலேறிப் பொருக்கென்று குதித்தான். குதித்ததும் தனக்கு யாதும் அபாயம் உண்டாகாமல் கயிறு நழுவி விழக்கண்டதுமன்றி அக்கயிற்றின் நுனியில் ஒரு திறவுகோலும் சீட்டும் கட்டியிருக்கக்கண்டான். அச்சீட்டையெடுத்துப் படித்துப்பார்க்கையில் 'உனக்கு இனிமேலாயினும் பிழைப்பாயாயின் இதன் கீழேயுள்ள நிலவறையில் வேண்டிய பொன் வைத்திருக்கிறேன். இச்சாவியால் திறந்து எடுத்துக்கொள்.' என்று எழுதியிருந்தது. அது கண்டு அவன் மிக்க ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து "'பட்டால் தெரியும் பார்ப்பானுக்குச் சுட்டால் தெரியும் நட்டானுக்கு'. எனக்கு இனிமேல் புத்திவந்தது. என் கெட்ட சகவாசங்களைவிட்டு நல்வழியில் நடப்பேன்." என்று நிச்சயித்துக்கொண்டு அவ்வறையைத் திறந்து பார்க்கையில் அங்குதான் தோற்ற ஆஸ்திகளை மீட்டுக்கொள்ளுவதற்குப் போதுமான பணம் இருக்கக்கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

பின்பு அப்பொருளை எடுத்துக்கொண்டு ஏழை வேஷத்தோடே தன் வீடு வாசல் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்ட காரியஸ்தன் வீட்டுக்கு வந்துசேர்ந்தான். அங்கு அவன் புதுப்பணம் படைத்த பெருமையினாலே தலைதெரியாதவனாய் தன் சிநேகிதர்கள் பலரோடும் விருந்துண்டு அட்டஹாசம் பண்ணிக்கொண்டிருந்தான். தேவதத்தன் அவனையடுத்து 'என் ஆஸ்தியெல்லாம் அநியாயமாய்க் கட்டிக்கொண்டாயே. எனக்கிப்போது வறுமை வந்தகாலத்தில் ஏதாவது பொருளுதவிசெய்யலாகாதா?" என்று கேட்டபோது அவன் மனைவி அவனைப் பலவாறு ஏசிப்பேசி எரிச்சற்பட்டாள். அப்போது அந்த வஞ்சகனாகிய காரியஸ்தன் அங்கிருந்தவர்களைப் பார்த்து "ஐயா இவன் தன் ஆஸ்தியை இலவசமாகக்கொடுத்தானா? நானுக்கொண்டு இவனுக்கு இவன் தந்தையால் நானடைந்த நன்றியையுணர்ந்து இவ்வளவு பணம் கொடுத்தேன்; பிறவிடத்தில் விற்றால் இவனுக்கு நான் கொடுத்ததில் பாதி கூடக்கிடையாது. இவன் இவ்வளவுருஷ்டிசெய்யக் காரணமென்ன? இப்போது வேண்டுமானால் நான் கொடுத்த தொகையில் பாதி கொடுத்தாலும் போதும் விட்டுவிடுகிறேன்" என்றான். அப்போது தேவதத்தன் அங்கிருந்தவர்களை நோக்கி "ஐயா, நீங்கள் எல்லாரும் சாக்ஷி. இவன் சொல்லுவது உண்மைதானா? இவன் நஷ்டப்பட்டது உண்மையானால் ஆஸ்தியைச்சொன்னபடி விட்டுவிடுவானா?" என்றான். காரியஸ்தன் இவன் யோகக்ஷேமங்களை நன்றாய் அறிந்தவனாதலாலே ஆஸ்தியை மீட்பதற்கு இவனிடத்தில் சொத்தேது. வீண்மிரட்டு மிரட்டுகிறானென்று நினைத்து, 'அப்படியே, எனக்கு நாக்கு ஒன்றேயன்றி இரண்டில்லை. என்பணத்தைக் கொடுத்துவிடும்பக்ஷத்தில் இந்த க்ஷணமே விட்டுவிடுகிறேன் இதற்கிரண்டில்லை' என்று கையறைந்துகொடுத்தான். உடனே தேவதத்தன் அங்கிருந்தவர் எல்லாருங்கண்டு ஆச்சரியங்கொள்ளப் போர்வையில் இருந்து இரண்டு பெரிய பணப்பைகளையெடுத்துக் கலகலவென்று சொரிந்து தொகையை எண்ணிவிட்டுத் தன் ஆஸ்திகளை மீட்டுக்கொண்டு பின்பு துரோகசிந்தையுள்ள அந்தக்காரியஸ்தனை ஊர்வழி நில்லாமல் ஓட்டிவிட்டுச் சுகமாகவாழ்ந்திருந்தான். ஓடம் வண்டியில் ஏறும், வண்டி ஓடத்தில் ஏறும் என்று சொல்லும் உலகவழக்கம் உண்மையாயிற்று. அறிவில்லாமையினாலே இழந்த ஆஸ்தியை அதிர்ஷ்டவசத்தினாலே திரும்பப்பெற்றான்.

THE WIT AND HUMOUR OF POETS.

## கவிகளின் விசித்திரவிற்பன சமத்காரங்கள்.

(370-வது பக்கத் தொடர்ச்சி).

சிற்சில புலவர்கள் தம் வறுமையைக் குறிப்பித்து இவ்வாறே வெகு விசித்திரமாகப் பாடி



யிருக்கின்றனர். அவற்றிற் சிலவற்றையும் அடியில் குறிப்பிடுவாம்.

இராமகவிராயரென்னும் ஒருவர் தாம் சென்னைபுரியில்வந்து அடைந்த சிறுமையைப் பெருமையாகப் புகழ்ந்து கூறுகின்றனர். அதாவது,

8 "சென்னைபுரி வந்து சிவனாய் னோன்சல்ல
அன்னமது காணு தவனுகி—மன்னுசிரங்
கைக்கொண்டலைச்சோமன் கட்டிச் சடை
முறுக்கி
மெய்க்கொண்ட நீறணிந்து மே."

சென்னைபுரிக்குவந்து சேர்ந்ததன்பின், ஆதரிப்பாரின்மையால் நான் அன்னங்காணாதவனுகினேன் (சிவன் அன்னத்தாற்றேடிக் காணப்படாதவராயினர்.) நான் சிரங்கைக் கொண்டேன் (சிவனே பிரமாவின் சிரத்தைக் கையில் ஏந்திக்கொண்டனர்.) நான் அரையில்மட்டுமே சோமன்கட்டப்பெற்றேன். மலே போட்டுக்கொள்ள உத்தரீயத்துக்கு கையில்லாதவனுயினேன். (சிவன் அர்ந்த சந்திரனைச் சடாமகுடத்தில் தரித்தனர்.) ன் தலைமயிர் எண்ணெய்ப்பசை காணுமைன், ஒன்றோடொன்று பிணைந்து சடையாய்ப் பாகப்பெற்றேன். (சிவனும் சடாமுடியைத் ரித்திருக்கின்றனர்.) நான் உடம்பெங்கும் ண்ணெய் தேய்க்காமையின் நீறுபூக்கப் பற்றேன். (சிவனும் உடம்பெங்கும் திருநீற றத் தரித்திருக்கின்றனர்.) ஆகவே இக்காரங்களால் நான் பரமசிவனுக் கொப்பாயினன் என்று தருக்கிக் கூறியதுபோலும் றினர்.

இவ்விராம கவிராயர் சரிதமும் மற்றவர் தம்போலத்தான்; நமக்கு விவரமாகத் ரிந்ததில்லை. இவர் பொன்னேரித் திருவாய்ப் டிப் புராணம் என்னும் பிரபந்தத்தை ற்றினர். இப்பொன்னேரி என்பது சென் க்குவடக்கே 20 - மைல் தூரத்தில் ஈஸ்டு ஸ்டு (கிழக்குக் கடலோரம்) ரயில்வேயில் ளது. இவர் பாடிய இன்னொருபாட்டும் வேடிக்கையாயிருத்தலின் இங்கு காண்கின்றோம்.

9. "கார்படைத்த காதலந்தான் துரை திருவேங்கடமளித்த கன்று மெங்கும்,
பேர்படைத்த ஆனந்த ரங்கமகிபாலா நின்
பிரம்பூர் நாட்டில்,
நேரிழைக்கு வழியேழு மூலையாறு காதைந்
து நெற்றிநான்கு,
பாரிடத்திலிப்புதுமை கண்டுவந்தேன் இதன்
பயனைப் பகர்ந்திடாயே."

இப்பாடலில் "நேரிழைக்கு வழியேழு மூலையாறு காதைந்து நெற்றிநான்கு" என்பதற்குப் பொருள் இவ்வாறு கொள்ளல்வேண்டும்: நேரிழையாவது—கன்னி. கன்னியாராசிக்கு ஏழாம் ராசி மீனம்; ஆறும் ராசி கும்பம்; ஐந்தாம் ராசி மகரம்; நான்காம் ராசி தநுசு. ஆதலின் இவர் குறித்த பெண்ணுக்குச் சேல் போன்ற விழிகளும், கும்பம்போன்ற தனங்களும், மகரக்குழைபணிந்த செவிகளும் வில்லைபொத்த நெற்றியும் உள்ளன என்பதுபொருள்.

மதுரகவிராயரென்னும் இன்னொருபுலவரும் இக்கருத்தையேவைத்து, இதே பிரபுவின் மீதே,

"துங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
இங்கோர் புதுமை யியம்பக்கேள்—பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுதலைந்துகுழை யாறுமுலை
மாயவழி யேழா மதி."

என்று பாடியிருக்கின்றனர். இவ்விரண்டும் ஒரே கருத்தாய் ஒரே பிரபுவின்மீது பாடப்பட்டிருப்பதற்குக்காரணம், ஒருவேளை, இவ்விருவரில் ஒருவர் இக்கருத்தைவைத்துப்பாட மற்றவரை அந்தப்பிரபு பரிக்ஷிக்கவேண்டிப் பாடும்படிக் கேட்டுக்கொண்டதாயிருப்பினும் ஆம்.

சொக்கநாதப்புலவர் என்னும் இன்னொரு புலவர், தமது வறுமைநிலையைப்பற்றிச் சமத்காரமாகப் பின்வருமாறு கூறுகின்றனர்:—

10. "இந்திரன்கலையா மென்மருங்கிருந்தான்
அக்கினி உதரம்விட்டகலான்,
எமனெனைக் கருதானரனெனக்கருதி
நிருதிவந்தென்னை யென்செய்வான்,"

அந்தமாம்வருணன் இருகண்விட்டகலான்
அகத்தினில் மக்களும் யானும்
அநிலமதாகும் அமுதினைக்கொள்வோம்
ஆரெதி ரெமக்குளா ருலகில்
சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராஜனை வணங்கித்
தலைசெயுமெம்மை நிலைசெய் சற்கீர்த்திச்
சாளுவ கோப்பையனுதவும்
மந்தரப் புயத்தான் வளப்புறுபெயரான்
மகிழ்வொடு விலையிலாவன்னேன்
வாக்கினாற் குபேரனுக்கி ணைவனே
மாசிலீசான பூபதியே.”

இப்பாடலில் இந்திரன் முதலான திக்கு
பாலகர் எண்மரின் பெயரும் வரும்படித்
தொகுத்தனர். இதன்பொருள், இந்திரனே
ஸ்திரரூபமாக என் அரையில்வந்திருந்தனர்.
அதாவது யான் கட்டியவஸ்திரம் இந்திரன்
கண்கள்போல சகஸ்ரகந்தல்), இயமனே என்
ன அரனென்றெண்ணி என்னைக்கிட்ட நினைத்
தற்கும் அஞ்சுவான். (அரனெனக் கருதியது
முன்னே இராமகவிராயர் “சென்னைபுரிவந்து
வணுயினேன்” னென்றபடியாயினுமாகும்.)
ருதிவந்து என்னை என்ன செய்யக்கூடும்?
நிருதி அரக்கனுதலின் நரமாம்சம்புசித்தல்
அரக்கற்கியற்கையாயினும் என்னுடம்பில் த
சையே இல்லையாதலின்என்னைஅவன் செய்யற்
பாலதொன்றுமில்லை என்றபடி.) வருணனே
என்னிரண்டு கண்களையும்விட்டு நீங்கான். (எப்
பாதும் வறுமை முதலிய காரணங்களால்
கண்ணீர்விட்டழுது கொண்டேயிருத்தலின்
இவ்வாறுகூறினர்.) வீட்டிலுள்ள என்மக்களும்
யானும் வாயுபட்சணம்செய்து காலம்தள்ளு
வாம். (உண்ணுதற்கொன்றுமில்லாமல்
பட்டினிகிடக்கவேண்டிவருதலின் அவ்வாறு
கூறினர்.) ஆதலால் எங்களுக்குச் சமானம்
உலகில் வேறே யாவர் இருக்கின்றனர்? (இல்
லர் என்றபடி) எப்போதும் இந்தப் பெறுமை
யைப்பெற்றுத் தரித்திரராஜாவை சேவித்து
அத்தன்மைபெற்றுவருகின்ற என்னை இக்கன
ான் வாக்கு மாத்திரத்தினாலே குபேரன்
(அதாவது ஒன்றும்கொடாத

தத்தல ...

உலோபிகளாயினும் காட்டைக்கூட்டுகிறேன்
மலையைக்கட்டுகிறேன் பொன்னைத்தருகிறேன்
பொருளைத்தருகிறேனென்று கூச்சமில்லாமல்
தாராளமாய்ச் சொல்லுவது சிலருடைய
வழக்கம். அவ்வழக்கத்தைக்கொண்டவன்
இப்பிரபு என்றபடி.) ஆதலின் இவனே ஈசான
னுக்குச் சமானமான பூபதியென்றபடி.
(ஈசானன்போல வாக்கினால் மாத்திரம் பெருந்
தகையான காரியங்களைச் செய்யவல்லவன்
என்றபடி.)

இவ்வாறு பாடும் பாடல்களில் சில கடவுளர்
களைச் சுட்டியும் வசைபோலத் துதியாய் நிற்
கும். ஆசுகவிச்சிங்கமாகிய காளமேகப் புலவர்
இவ்வாறு பாடுவதில் நிரம்பச் சமர்த்தர்.
இதற்குத் திருஷ்டாந்தமாக இரண்டொன்றை
எடுத்துக் காட்டுவோம். ஒருகால் முருகக்
கடவுள் திருவிழாக் கொண்டு வீதியில் எழுந்
தருளி வருதல் கண்டு,

11. “அப்பனிரந் துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கென்ன பெருமை யிது”

என்று நிந்தித்தல் போலக் கூறினர். இன்
னொரு சமயத்தில் தியாகராஜப் பெருமான்
வீதியில் எழுந்தருளி வருகையில்,

12. “ஆடும் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடு சமுசாரம் மேலிட்டுக்—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவரிரண் டாச்சே
இருக்குமூர் ஒற்றியாச் சே”

என்றனர். இன்னம் இவைபோன்ற பாடல்
கள் பலவுள. நிற்க, இராமச்சந்திரக் கவிராய
ரென்னும் ஒருவித்துவான் பாடியுள்ள இவ்வித
மான விநோதப் பாட்டொன்றை இங்கு எடுத்
துக்காட்டுவோம். அது பின்வருமாறு:—

13. “வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற்புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்
ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சென்றேனப்பா





கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும்வேடன்
கொடுங்காலா லுதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரிலொருவன் வில்லா லடித்த புண்ணும்
பாரென்றேகாட்டினென் பரமன் தானே.”

அதாவது, கொடாத லோபிகளிடத்தே
அவர்களது வஞ்சகச்சொல்லை நம்பி பன்முறை
நடந்து திரிந்ததனு லுண்டாகிய காலிற் புண்
ணும், அவ்வஞ்சகர்களுடைய வாயில்கள்
தோறும் புகுந்து புறப்படுங்காலந்தே நிலையில்
மோதியடித்த தலையிற் புண்ணும், அவர்கள்
மேல் இதமாகப் பாடும்படி அழகிய சொற்களை
நினைந்து நினைந்து பொறுக்குதனு லுண்டாகிய
நெஞ்சிற்புண்ணும், ஆகிய இப்புண்களெல்லாம்
இனிப்பரமனைப் பாடித்துதித்து அவரருளால்
தீர்ந்து சுகம்பெறலா மென்றெண்ணிச் சங்கர
னிடத்துச் சென்றக்கால் அவர், என்புண்களைத்
தீர்த்துக் கொண்டல்லவா உன் புண்களைத்
தீர்க்க வேண்டும். உன் புண்களிலும் என்
புண்கள் வன்புண்கள், அனேகமு மாகும்.
பாண்டியன் பிரம்படியாற் பட்டபுண் இதோ
முதுகு நிமிரப்படவில்லை; கண்ணப்ப நாயனார்
காலால் நெற்றியில் உதைத்த புண் இதோ
நெற்றி யெல்லாம் வீங்கிப் போய் விட்டது;
பாண்டவர்களில ஒருவனுகிய அருச்சுனன்
என்மேல் கோபித்து வில்லாலோங்கி யடித்த
புண்ணிதோ மார்பின்மேல் இன்னமும் பச்சை
யாயுள்ளது பார்த்துக்கொள் என்று சாக்குச்
சொல்லிப் போக்கிவிட்டார். நானினி என்
செய்வேன். யாவரை நாடி இப்புண்கள் தீரு
வேன் என்றபடி.

இவ்விராமச்சந்திரக் கவிராயர் தொண்டை
மண்டலத்திலுள்ள இராசநல்லூரிலே பிறந்தவ
ராயினும், சென்னைமா புரியைத் தமக்கு உறை
விடமாக்கி அங்கேயுள்ள வித்வ சிரோமணிக
ளால் மெத்தப் பாராட்டி மெய்ச்சப்பட்டவர்.
நாடகப் புலமையிற் சிறந்தவர். சகுந்தலை
விலாசம் என்றோர் நாடகம் செய்துள்ளார்.
அன்றிப் பாரத கதையின் ஒரு கூறுகிய இடும்
பவதத்தைப்பாடி பாரத விலாசம் என்று பெய
ரிட்டனர். இவர் சென்னை அரசாட்சி உத்
யோகஸ்தரும் தமிழ் பாஷையில் நிபுணரு
மாகிய எல்லிஸ் துரை (Mr. Ellis)யின் அர
சாட்சியைவியந்து சிலபாடல்கள் செய்தார்.
இவர் மேலேகூறிய பாடலன்றி இன்னம் விசித்
திரமான அநேக பாடல்களைப் பாடியிருக்கின்
றனர். அவற்றுள் இரண்டொன்றை இன்ன
மும் எடுத்துக் காட்டுவோம். இவர் தஞ்சை
நகரில் குருவப்பபூபன் என்னும் ஒரு பிரபு
தமக்குச் செய்த வரிசையைக் கொண்டாடிப்
பின் வருமாறு பாடுகின்றனர்.

14. “எதிலே வறியார்க்கும் இனி ... புலவருக்கும்
இரங்கி யந்தப்
போதிலே தனம்கொடுக்கும் தஞ்சை ...
குருவப்பூப னெற்குச்
சோதிலே நிடந்துபூலும் பலரிடத்திற்
சென்று ... கூறு ருவண்ணைய்
காதிலே ஒட்டிட்டுத் தாடையின் மோதக்
கடுக்கன் தானிட்டானே.”

எளியவர்களுக்கும் இனிய கவிப்புலவர்க
ளுக்கும் அவர் தம்மையடுத்துக் கேட்ட தட்ச
ணமே தனத்தைக் கொடுத்துதவும் தாதாவா
கிய தஞ்சைநகரில் மேவிய குருவப்பபூபனென்
னும் பிரபுவானவர் கெட்ட நடக்கையை
யுடைய ஈனர்கள் பலரையும் அடுத்து அவர்
களைப் புகழ்ந்து பாடா வண்ணம், அவர்களை
ஒருவேளை பாடின் அதற்குத் தண்டித்தல்
போலத் தாடையில் மோதி யடிக்கும்படிக்,
காதில் ஒட்டிட்டுக் கடுக்கனும் இட்டனர்.
என்று சமத்காரமாகப் பாடினர்.

15. “வஞ்சகத்தி லொன்றுனைத் துதிக்கை மகத்
திரண்டானை வணங்காருள்ளே
அஞ்சணை மூன்றுனை மறைபொருள்
நால்வாயானை யத்தனுகிக்
அஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி
யாறுனைத் தூவளெழானைச்
செஞ்சொன் மறைக் கெட்டானைப்
பங்கிரி வாழ்கற்பகத்தைச் சிந்தை செய்
வாம்.”

இப்பாடலில் ஒன்று முதல் எட்டு வரையில்
உள்ள எண்கள் தொடர்ந்து வரும்படித் தொ
டுத்தனர்.

வஞ்சகம் என்பது சிறிதும் இல்லாதவரை, திரண்ட துதிக்கையை யுடையவரை, தம்மை வணங்காத தீயவர்களது வன்னெஞ்சத்தே தமது அழகிய திருவடிகளை யூன்றுதவரை, வேதங்களைப் பொழிகின்ற தொங்குகின்ற வாயுடையவரை, அசுரர்களுக்கு அஞ்சாதவரை, திருமுடியில் கங்காநதியைத் தரித்தவரை, குற்றமற்றவரை, வேதங்களாலும் அறியப்படாதவரை, திருப்பரங்கிரி என்னு க்ஷேத்திரத்தில் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் கற்பகம்போல அடியார்க்கு அளிப்பவராகிய விநாயகக் கடவுளைத் தியானிப்போம் என்றபடி. யானை முகத்தை யுடையாதலின் நால் என்றார். துஞ்சவுணர்-தூக்கம் சோம்பல் முதலிய துர்க்குணங்களை யுடைய அவுணர் என்றும். அல்லது; தம்மாற்றலுக் காற்றாது தம்மைப் படையால் உயிர் துறந்தவர் என்றும் ஆம்.

இவ்வாறே காளமேகப் புலவரும் முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்னும் பின்னபேதங்கள் வரும்படித் தொடுத்திருக்கின்றனர். அப்பாடல் பின்வருமாறு:—

16. "முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்காலரைக் கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது."

இதன் பொருளாவது, தடியூன்றிப் பிருங்கி ரிஷிபோல் மூன்றுகாலால் நடவாததற்குமுன், மயிர் நரையாததற்கு முன், யமனைக் கண்டு உயிர்நடுங்காததற்குமுன், விக்கலெழு இருமாததற்குமுன், பெரியமசான பூமிக்குப் போகாததற்குமுன், கச்சிப்பதியில் ஒரு மாமரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கின்றவரை இளமைப் பருவமுள்ள இப்பொழுதே ஸ்துதி செய் என்றபடி,

17. "வீமனுக்கு மைந்தனார் வேதனுக்கும்
வேதனுக்கு மைந்தனா ரீசனுக்கும்,
காமனுக்கு மைந்தனார் வீமன் றம்பி
கந்தனுக்கு மாமனா ராமன் றானே,
மாமனுக்கு முன் தமயன் தந்தை காலன்
மையகத்தி விம்முறைமை வழங்கலாலே
ராமனுக்குச் சீதைதங்கையாக வேண்டும்
ராவணனுக்குத் தகப்பன் ராமன் றானே."

இப்பாட்டில் வீமன் என்பதற்குக் கருடனுக்கு இறைவனாகிய திருமாலென்றும், (வீ=பறவை, கருடன்; மன்=இறைவன்) வேதனுக்கு என்பதற்கு மூங்கிலுக்கு என்றும், (வே=மூங்கில் திருநெல்வேலியில் சிவன் மூங்கிலில் தோன்றினரென்பது புராணம்.) காமன் என்பதற்குக் கற்பகத்துக்குத் தலைவனாகிய இந்திரனென்றும், மாமன் என்பதற்குக் குதிரைக் கிறைவனாகிய நகுலன் என்றும், இராமன் என்பதற்கு இரவுக்கரசனாகிய சந்திரனென்றும், இராவணன் என்பதற்கு இருள நிறமுடைய மன்மதன் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். வீமன் தம்பி என்றது அருச்சுனனை; மாமனுக்கு முன் தமயனென்றது தருமனை. சந்திரனும் இலக்குமியும் திருப்பாற்கடலிற் பிறந்தவர்களாதலின் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாகக் கருதப்படுவர். மன்மதன் திருமாலுக்கு மைந்தனாதலின் அத்திருமாலின் அவதாரமாகிய ராமனையும் தந்தையாகக் கூறினர்.

இன்னம் இவ் வித்துவான்களின் சமத்காரங்களையும் யுக்திகளையும் விளக்குவதற்கு எவ்வளவோ பாடல்களுள்ளன. அவற்றை இன்னொரு சமயத்தில் சமயம் வாய்க்கின் விவரிப்போம்.

---

## SOME CURIOUS WAYS OF KILLING MONSTERS.

## கொடிய பிராணிகளைப் பிடித்துக் கொல்லும் சில விநோதமான வழிகள்.

---

1. ஆப்பிரிக்கா தேசத்தவர் முதலைகளைக் கொல்வதற்குப் பின்வரும் உபாயத்தைச் செய்வார்கள். கற்சுண்ணாம்பை வேண்டிய அளவு எடுத்து அதை ஒரு மீன் வயிற்றிலோ



நாய் வயிற்றிலோ வைத்துத் தைத்து ஆறுகளில் முதலைகள் மிகுதியாகச் சஞ்சரிக்கும் இடங்களில் ஒரு கயிற்றிற் கட்டி நீரோட்டத்தில் அடித்துக்கொண்டு போகாமல் மிதக்கவிடுவார்கள். சிறிதுநேரத்துக்கெல்லாம் இரைதேடித்திரியும் முதலைராஜன் ஓடிவந்து ஆவலோடு கவ்வி விழுங்கும். வயிற்றிற்சென்று ஜீரணமானதும் உள்ளிருக்கும் சுண்ணாம்பு நெருப்புப் பற்றினதுபோல் குடலிற் பற்றிக் கொளுத்த ஆரம்பிக்கும். அப்பொழுது முதலை தாபம் தணியும்படி ஏராளமாக நீரைக் குடிக்கும். இதனால் தாபமும் எரிச்சலும் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றினதுபோல் முன்னிலும் பன்மடங்கதிகரிக்கும். அவ்வெரிச்சல் பொறுக்கமுடியாமல் ஓடி உழன்று அவஸ்தைப்பட்டு சிறிதுநேரத்துக்கெல்லாம் பிராணனைவிடும்.

2. மலேயா தேசத்தார் சுறாமீனென்னுங் கொடிய கடல்மீனை இதுபோலவே கொல்லுவார்கள். இவர்கள் சுண்ணாம்பைவைத்துப் பொதிவதற்குப் பதிலாக நான்கடி நீளமும் ஒரு அங்குலம் அகலமும் உள்ள பச்சை மூங்கிற் சிம்பை இருதலையும் கத்திமுனைபோல் கூர்மையாகச்செதுக்கி ஓலைச்சுருள்போலச் சுருட்டி முதலில் ஒரு மீன்தோலில் வைத்துத் தைத்து பின்பு ஒரு நாயின் குடலுள் செலுத்திச் சமுத்திரத்தில் எறிந்துவிடுவார்கள். அச்சூதை அறியாத சுறாமீன் நமக்கு வாய்க்கினிய நல்ல உணவு அகப்பட்டதென்று கருதி அதை ஆவலோடு கவ்வித் தன் பிலம்போன்ற வாயிலிட்டு விழுங்கிவிடும். இரண்டு மூன்று நாளைக்கெல்லாம் நாயுடலும் மீன் தோலும் வயிற்றில் ஜீரணமானவுடன் அம்மூங்கிற் சிம்பு அதிவேகமாகச் சுருள் விரிந்து அதன் வயிற்றில் இருபுறமும் குத்திக்கொண்டு உபத்திரம்பண்ணிக் கடைசியில் அம்மீனைக் கொன்றுவிடும். இந்தச் சொற்பக் கருவியினாலே இக்கொடிய மீன்களை வருஷாவருஷம் ஆயிரக்கணக்காகக் கொன்றுவிடுவார்கள்.

3. வங்காளத்தில் வேடர்கள் புலியைப் பிடித்துக் கொல்வதற்கு ஒரு நல்ல யுக்திசெய்வதுண்டு. காட்டில் புலிகள் சஞ்சரிக்குமிடத்தில் ஒரு மாமிசத்துண்டத்தை ஒரு மரக்கிளையிலிருந்து பூமிக்குமேல் பத்துப் பன்னிரண்டு அடி உயரத்தில் தொங்கும்படி கட்டிவைத்துப் பின்பு அதின் கீழ் ஆலிலைபோல் அகன்ற இலைகளில் பட்சிகளைப்பிடிக்க உபயோகிக்கும் பிசினைத்தடவி தரைநெடுகப் பரத்திவைப்பார்கள். புலி அங்கு திரிகையில் அவ்விறைச்சியின் மணத்தைத்தெரிந்து ஆவலோடு ஓடிவந்து அதை எட்டிப் பிடிக்கத்தாவும். என்ன தாவினாற்றான் என்ன அதற்கு எட்ட முடியாத உயரத்தில் கட்டி இருத்தலாலே அதைப் பற்ற முடியாது. இதற்குள்ளே இதன் உள்ளங்கால்களெல்லாம் இந்தப் பிசின் தடவின இலைகள் ஒட்டிக்கொள்ளக் கண்டு ஏதோவென்றுகலங்கி அதை நீக்கிக்கொள்ளுவதற்காக முகத்தால் தேய்த்துக்கொள்ள அவ்விலைகள் காலைவிட்டு முகத்தில் ஒட்டிக்கொள்ளும். இதனால் முன்னிலும் புலி திகிற்பட்டு அவ்விலைகளை நீக்கிக்கொள்ள ஆத்திரப்பட்டுக் கீழும் மேலுமாகப் புரண்டு தத்தளிக்க இலைகள் மேன்மேலும் உடலெங்கும் கனமாய் ஒட்டிக்கொள்வதன்றிக் கண்ணிலும் வாயிலும் மூக்கிலும் கொடிய பிசின் புகுந்து வாதை செய்யத்தலைப்படும். இதனால் புலி ஒன்றுந் தோன்றாமல் கலங்கிச் சோர்ந்திருக்க அத்தருணத்தில் பதுங்கிநிற்கும் வேடர்கள் அதை நெருங்கிச் சுலபத்தில் கொன்றுவிடுவார்கள். புலியை உயிரோடு பிடிக்கவேண்டியிருந்தால் இவர்கள் செய்யும் உபாயம் வேறொன்றுண்டு. புலிக்கூடொன்றைச் சில சாதுரியமான ஏற்பாடுகளால் மாட்டுப்பட்டிபோல தோன்றச் செய்து காட்டில் புலிகள்வரும் மார்க்கத்தில் வைத்திருப்பார்கள். புலி அதைக்கண்டதும் ஓடிவந்து உள்ளே நமக்கு இரையாகும் நல்ல பசுவொன்று உள்ளதென்று எண்ணி அதனுள் ஆவலோடு புகுந்துவிடும். உட்புகுந்ததோ இல்லையோ மாட்டுப்பட்டியாகத் தோற்றினது —

புலிக்கூடாய் மாறிவிடும். உடனே அங்கு பதுங்கி இருந்து பார்த்திருக்கும் வேடர்கள் மூங்கிற் சிம்புகளையும் பிரம்புகளையும் வளைத்து மேலே கயிற்றுப்பாயிட்டுத் தைத்த பன்னிரண்டடி நீளமும் பதினெட்டு அங்குலம் உள்ளகலமும் உள்ள குழாய்போன்ற கூட்டை அதற்குட் செலுத்திக் கூட்டின் வாயை அடைத்துவிடுவார்கள். புலி இருட்டில் ஒன்றுந்தெரியாமல் பதிபயங்கி இருந்து சூரியோதயமானதும் வாயிலின் புறமாக வெளிச்சந் தோன்றக்கண்டு தப்பி ஓடுவதற்கு முன்னேறிப் பாய்ந்து அந்த வட்டக்குழாயில் அகப்பட்டுக்கொள்ளும். கொடிக்குள்ளே அதன் இருதலையும் சுருக்கிட்டு அப்புலியை அதனுள் மாட்டிக் கட்டிக்கொண்டுபோய்விடுவார்கள். இக்காரியங்கள் செய்வதற்கு எவ்வளவோ சாகஸமும் தைரியமும் வேண்டும்.

4. அமெரிகாதேசத்து இந்திய ஜாதியார் நரி கரடி ஓநாய் முதலிய ஜந்துக்களைப் பிடிப்பதற்கு எலிப்பொறிபோன்ற ஒரு யந்திரத்தை உபயோகப்படுத்துவார்கள். இவற்றில் இம்மிருகங்களின் கால்கள் அகப்பட்டுக்கொண்டு பிடிபட்டுப்போம். நரிகள் இரண்டு கால்களும் மாட்டிக்கொண்டால் தப்பிப்போக வழியில்லாமல் நிச்சயம் பிடிபடும். ஒரு கால்மட்டும் மாட்டிக்கொண்டால் அக்காலை அடியுறக் கத்திரித்துத் துண்டித்துக்கொண்டு ஓடிப்போய்விடும். ஓநாய்கள் வெகு தந்திரமாய்ப் பொறியில்வைத்த இரையைமட்டும் தின்றுவிட்டு அகப்பட்டுக்கொள்ளாமல் தட்டிவிட்டு ஓடிப்போய்விடும். ஆதலால் இவற்றைப் பிடிப்பதற்கு இரண்டு பொறி ஜோடாக வைப்பது வழக்கம். ஒரு பொறியில்வைத்த இரையைத் தின்னும்போது மற்றப்பொறியில் ஒருவேளை காலைவைத்து மாட்டிக்கொள்ளக்கூடும். ஓநாய்களைக் கொல்லுவது மிகவும் கஷ்டம். அது தன்னை விடுவித்துக்கொள்ளும்படித் தன்னால் ஆனவரையில் இழுத்துப்பறித்துக்கொண்டு நிற்கும். வேடன் தன்னை நெருங்கினதும் அதிவேகமாய் அவன்மேற்பாயும் அதற்குத்தப்பிக்கொண்டு வெகு லாகவமாய் வேடன் அதனை வெட்டிமாய்த்துவிடுவான்.

SOME INTERESTING NOTES.

## சில விநோதக்குறிப்புகள்.

1. உலகிலுள்ள ஏழு வேதங்களாவன— (1) மகமதியர்களின் கொரான், (2) புத்தர்களின் திரிபிடகம், (3) சீனர்களின் பஞ்சராஜாகிகள். (4) பார்ஸிகளின் ஸெந்த் அவஸ்தா, (5) ஸ்காண்டிநேவியர்களின் எத்தங்கள், (6) கிறிஸ்தவர்களின் பைபிள், (7) இந்துக்களின் வேதங்கள்.

2. உலகிலுள்ள ஏழு அற்புதங்களாவன.

1. இஜிப்டு தேசத்திலுள்ள பிரமித் என்னும் கட்டிடங்கள். (2) பாபிலோன் நகரின் தொங்கும் தோட்டங்கள். (3) எதன்ஸ் நகரில் உள்ள ஜூபிதர் தேவாலயம். (4) எபீசஸ் நகரில் உள்ள தையானுதேவதையின் ஆலயம். (5) மௌஸோலியம் என்னும் ஓர் சமாதி. (6) அலெக்ஸான்ட்ரியா நகரில் உள்ள பாரோஸ் என்னும் தீபஸ்தம்பம். (7) ரோட்ஸ்தீவில் உள்ள கலோஸஸ் என்னும் பூதவிக்கிரகம். இவற்றுள் பிரமித் தவிர மற்றவைகள் அநேகமாய் அழிந்துபோயின.

இன்னொரு சாரார் பின்வருபவற்றையும் அற்புதங்களாகச் சொல்வார்கள். (1) சீனதேசத்தின் பெருமதில். (2) பீசாநகரத்தின் சாய்ந்த கோபுரம். (3) மாஸ்கோநகரின் மணி. (4) ஆக்ராநகரில் உள்ள தாஜ்மஹால். (5) அமெரிகாவில் உள்ள நியாகாரா நதிவீழ்ச்சி. (6) ஐர்லாந்திலுள்ள அற்புதகற்கம்பங்கள்.

3 ஒருடன் நிறைகொண்ட சமுத்திர ஜலத்தில் 14-கிரெயின் நிறைகொண்ட பொன் இருக்குமாம்.

4. துருக்கிதேசத்து சுல்தான் தமது போஜனசம்பந்தமாக நாளொன்றுக்கு ஆயிரம் பவுன் செலவு செய்கிறாராம்.



5. தென் ஆப்பிரிக்காவில் ஒருவர் பொற்கனிகளில் குரங்குகளை வைத்து வேலைவாங்கி வருகிறார். இவரிடத்தில் 24-குரங்குகள் இருக்கின்றன. இவை 7-ஆள் வேலைசெய்கின்றன. அநேக சமயங்களில் மனிதர்களாலாகாத சில வேலைகளைச்செய்ய இவை உதவியாயிருக்கும். மனிதர் பார்வைக்குத் தென்படாத சிறு உலோகத்துண்டங்களைப் பொறுக்கிச்சேர்க்கும். இவைகள் ஒன்றோடொன்று சண்டையிடாமல் மனிதர்களைப்போலவே இணங்கி வாழ்ந்திருக்கும். இவை உண்டல் உறங்கல் முதலிய சுபாவங்களில் மனிதரைப்போலவே ஒரு நியமம் வைத்துக்கொண்டு அந்நியமப்படிச் செய்துவரும். இவைகள் வேலைசெய்யும்போது எவ்வளவோ ஜாக்கிரதையாக ஒவ்வொரு வேலையும் செய்வதைப்பார்த்தால் வெகு வேடிக்கையாயிருக்கும். இவை கனிகளைப்பெருக்கிக் குப்பைகளை அகற்றிச் சுத்தமாக்கி அவ்விடத்தில் உபயோகிக்கும் வாகனங்களைத் தொடர்ந்துசென்று அவற்றில் நின்று கழுவிவிழுகின்றவற்றைப் பொறுக்கிப்போடும்.

6. கல்கத்தா நகரில் ஸ்திரீகளுக்காக பெதூன் காலேஜ் என்று மேல்தரப்பாடசாலையொன்று ஏற்பட்டுள்ளது. இதில் பெண்கள் பி. ஏ. எப். ஏ., மெட்ரிகுலேஷன், என்னும் யூனிவர்ஸிட்டிப் பரிசைஷகளில் அநேகர் வருஷந்தோறும் தேறிவருகிறார்கள். இதில் தேறிவரும் பெண்களில் பெரும்பாலாரும் அங்கங்கே பற்பல விடங்களில் உபாத்தினிகளாக நியமனப்படுகிறார்கள்.

7. திருவனந்தபுரத்தில் பெண்களுக்காக 'மஹாராஜாவின் காலேஜ்' என்று ஒரு பாடசாலை ஏற்பட்டுள்ளது. இதில் அரிச்சுவடி முதல் மேலே யூனிவர்சிடி எப். ஏ. பரிசை வரையில் கற்பிக்கப்பட்டுவருகின்றது. மேல் கிளாசுகளில் படிக்கும் பெண்களின் தொகை மிகச் சொற்பமானது. இங்கு பெண்களுக்குச் சம்பளம் இல்லை. தர்மமாகவே கற்பிக்கப்பட்டுவருகிறார்கள். இப்போது இதில் 200 பெண்களுக்குமேல் படித்துவருகிறார்கள். இதில் இந்துக்கள், சுதேசக் கிரிஸ்தவர்கள், யூரோப்பியர்களேயன்றி மகமதியப் பெண்கள் இல்லவேயில்லை. பிராமணப் பெண்களும் விசேஷமாயில்லை.

8. சர்க்கரையால் தேகத்தைப்போஷிக்கும் சத்து நிரம்பவுள்ளதாக டாக்டர் ஹாரலி என்பவர் பரிக்ஷித்துச் சொல்லுகிறார். ஒன்றும் உட்கொள்ளாமல் பட்டினியிருந்த ஒரு தினத்தில் சர்க்கரையை உட்கொண்டபோது தமக்கு வேலைசெய்ய முக்கால்மடங்கு தென்பு ஏறினதாகச் சொல்லுகிறார். தினந்தோறும் ஆகாரபதார்த்தங்களோடு எட்டே முக்கால் அவுன்ஸ் சர்க்கரை உட்கொள்ளுவதனால் தமக்கு 100-க்கு 36-பங்கு தென்பு கூடுவதாகச் சொல்லுகின்றார்.

9. அதிகக்காபியை அடிக்கடி உபயோகிப்பதனால் மிகவும் கெடுதியுண்டாகும் என்று சொல்லுகிறார்கள். அதனால் மனச்சோர்வும், தூக்கமில்லாமையும், பொறுக்கமுடியாத தலைவலியும் உண்டாகுமாம். தேகபலங் குறைந்து உடல் நடுக்கமுண்டாகுமாம். இருதயம் அதிகமாக அடித்துக்கொண்டு கனமாகத் தோற்றுமாம். ஜீரணசக்தியும் குறைந்துபோகுமாம். இவ்வளவும் போதாமல் மிதமிஞ்சிச் சாப்பிடும் காப்பியினால் கண்பார்வைக்குக் குறைவுண்டாகி பார்வை முற்றிலும் கெட்டுப்போகுமாம்.

SOME FIGURE PUZZLES.

AND STRANGE ARITHMETICAL PROBLEMS.

## சில விநோதமான தொகைகள்.

(1)

$$15873 \times 7 = 111111$$
$$31746 \times 7 = 222222$$
$$47619 \times 7 = 333333$$
$$63492 \times 7 = 444444$$
$$79365 \times 7 = 555555$$
$$95238 \times 7 = 666666$$
$$126984 \times 7 = 888888$$
$$142857 \times 7 = 999999.$$

$111111 \times 7 = 777,777.$ (இது பிரத்தியக்ஷமே) மேலே காட்டிய தொகைகளில் முதல்தொகை விசித்திரமானதேயன்றி மற்றவை அவ்வளவு விசித்திரமல்ல. இடதுபக்கத்தில் எவ்வளவுதாம் ஏற்றுகிறோமோ அதற்குத்தக்கபடி வலதுபக்கத்திலும் பெருக்கியெண் ஏறுகிறது. முதல் வகுப்பு ஒன்றென்னும் இலக்கம் (figure) பெருகிவருதலின் மற்ற எண்களும் அவ்வாறே இரண்டு

முதலிய இலக்கங்கள் தனித்தனியே முழுதும் பொருந்திவிலலாயிற்று. ஆயினும் ஆகித்துப்பாராமல் முதலிற் பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகவே தோன்றும்.

(2)

$$1\times9+2=11$$
$$12\times9+3=111$$
$$123\times9+4=1111$$
$$1234\times9+5=11111$$
$$12345\times9+6=111111$$
$$123456\times9+7=1111111$$
$$1234567\times9+8=11111111$$
$$12345678\times9+9=111111111.$$

(3)

$$1\times8+1=9$$
$$12\times8+2=98$$
$$123\times8+3=987$$
$$1234\times8+4=9876$$
$$12345\times8+5=98765$$
$$123456\times8+6=987654$$
$$1234567\times8+7=9876543$$
$$12345678\times8+8=98765432$$
$$123456789\times8+9=987654321.$$

(4) ஒரே யிலக்கங்களாய்த்தொடர்ந்து நின்ற இரண்டு எண்களைப்பெருக்கிவந்த தொகையை அவ்விரண்டிலக்கங்களையும் பெருக்கிவந்த தொகையால் வகுக்கவரும். அது 1234...முதலியவரிசைக் கிரமமாகவிருக்கும். (2-ம்)

$$\frac{8888888\times4444444}{32}=1234567654321.$$

எவ்வளவு இலக்கங்களை அடுக்கிவைத்துப்பெருக்குகின்றோமோ அவ்வளவு ஏறிப் பின்பு முறையே இறங்கும். மேலேகாட்டிய உதாரணத்தில் ஒவ்வோரெண்ணிலும் எவ்வேழிலக்கம் தொடர்ந்து நிற்றலின் ஏழுவரையில் உயர்ந்து பின்பு அம்முறையே இழிகின்றது. இக்கணக்குகளில் ஒன்பது இலக்கங்களுக்கு மேற்பட அடுக்கிபெருக்கலாகாது. ஆதலின்,

$$\frac{999999999\times888888888}{72}=12345678987654321.$$

(5) 9-ஆலும் 11-ஆலும் முறையே மிச்சமின்றி விபாகிக்கப்படும் எண்களைப் பெருக்கச் சலபவழி. உதாரணமாக $54\times55=2970$. இங்கு 54-ல் 6 ஒன்பது 55-ல் 5 பதினொன்றும் இருக்கின்றன. ஆதலின் 6-யும் 5-யும் பெருக்கி ஒன்றைத்தள்ள $(6\times5-1=29)$ 29 கிடைக்கின்றது. இது நூற்றுஸ்தானத்தில் உள்ள சங்கியைகளாகும். பத்தாவது ஸ்தான சங்கியையும் முதல் ஸ்தான சங்கியையும் 99-ல் இருந்து 29-கழிக்கவரும் $(99-29=70)$ இன்னொருதாரணம்: $36\times77=(4\times7-1)=27$ நூறுகளும் $(99-27)=72$-ம் ஆகும் அதாவது 2772 ஆகும்.

(6) ஒரெண்ணை 5-ஆல் பெருக்கவேண்டுமானால் அவ்வெண்ணுக்கிறுதியில் ஒரு பூஜ்யம் சேர்த்து அதனை 2-ஆல் விபாகிக்கவரும்.

(2-ம்) $127\times5=1270\div2=635$.

இவ்வாறே ஒரெண்ணை 25-ஆல் பெருக்கவேண்டுமானால் அவ்வெண்ணுக்கு இரண்டு பூஜ்யம் சேர்த்து 4-ஆல் வகுக்கவரும்.

இவ்வாறே 125-ல் பெருக்குவதற்கு மூன்று பூஜ்யம் சேர்த்து எட்டால் பெருக்கவேண்டும்.

(7) ஒரெண்ணை 11-ஆல் பெருக்கக், கூட்டலைக்கொண்டே சலபத்தில் முடிக்கலாம். உதாரணமாக 67583-றை 11-ஆல் பெருக்க, ஒவ்வொரு சங்கியைக்கும் சங்கியைக்கூட்டி முறையே எழுதிக்கொண்டுபோகவேண்டியது. ஆகவே பூஜ்யமும் மூன்றும் மூன்று. இந்த மூன்றை ஒன்றாவது ஸ்தானத்தில் எழுதுக; மூன்றும் எட்டும் பதினொன்று; ஒன்றைப் பத்தாவது ஸ்தானத்தில் எழுதி, ஒரு பதின் ஒன்றை அடுத்த பெருக்கிவரும் அவுடன் கூட்டிக்கொள்க; இவ்வாறே முழுதும்செய்க.

67,583
743,413

(8) ஒன்பதால் பெருக்குவதற்கு தொகையுடன் ஒரு பூஜ்யம் சேர்த்து வலப்புறத்திலிருந்து முறையே பின்னின்ற எண்களை ஒவ்வொன்றாகக் கழித்துக்கொண்டுபோகவேண்டியது.

67,533
608,247

(9) இக்கணக்கு மிக வேடிக்கையாயிருக்கும் 12 பவுனுக்குக்கீழ் ஒரு தொகையை எடுத்துக்கொள்க. £10-18-11. என்று வைத்துக்கொள்வோம். இதனைத் தலைகீழாக எழுதுக. £11-18-10 ஆகும். பெரிய தொகையிலிருந்து சிறிய தொகையைக்கழிக்குக. 19-ஷி 11-ஆகும். இதை மறுபடித்திருப்பி எழுதிக்கொள்க. £11-19-ஷி, இது இரண்டையும் கூட்டுக. £12-18-11. என்னும் முதல்தொகையேவரும். இது £12-க் கீழ்ப்பட்ட எந்தத்தொகைக்கும் பொருந்தும். $\frac{1}{2}$ பெனி முதலான பின்னங்களைச் சேர்க்கப்படாது.

(10) நூறுயிரம் கோடியாவது என்ன? இதனை வாயால் இலகுவாய்ச் சொல்லிவிட்டோம். எழுதுவதும் இரண்டுவார்த்தைதான். ஆனால் எண்ணிச்சொல்லமுடியுமா? புருஷாயிசுபோதாது. ஒரு மினிட்டுக்கு 200 எண்ணினாலும் இத்தொகையை எண்ணிமுடித்தற்கு 9512-வருஷம் 34-நாள் 5-மணி 20-மினிட்டுவேண்டும். எண்ணுகிறவனுக்கு ஆகாரம் தூக்கம் முதலான காரியங்களுக்கு நாளொன்றுக்கு 12-மணிநேரம் விடும்பக்ஷத்தில் இத்தொகையை எண்ணிமுடித்தற்கு 19024-வருஷம் 63-நாள் 10-மணி 40-மினிட்டு வேண்டும். இராவணேசுரன் மாதிரி ஆயுளைப்பெற்றவர்க்கல்லவோ இக்காரியம் சாத்தியமாகும்.



(11) ஏதாவது ஒரு சங்கியையை எடுத்துக்கொள்ளுக. உதாரணமாக 7823-எடுத்துக்கொள்வோம். இதை தலைகீழா யெழுதுக. 3287-ஆகும். பெரிய தொகையிலிருந்து சிறியதைக்கழிக்குக. 4536-வரும். இந்த மிச்சத்தில் ஏதாவது இலக்கத்தை அடித்துவிட்டால் மற்றவற்றைக்கூட்டிவந்த தொகையால் அது இன்னதென்று சொல்லிவிடலாம். இதில் கண்கட்டு வித்தையொன்றும் இல்லை. அதற்கு உபாயம் கூட்டிவந்த தொகைக்கு மேலே அடுத்தபடியான 9-ஆல் வகுக்கக்கூடிய தொகையிலிருந்து அதைக் கூட்டிவந்த தொகையைக் கழித்தால் அடித்துவிட்ட தொகைகிடைக்கும். மேலேகாட்டிய தொகையில் 3-அடித்துவிடுவோம். மற்றத்தொகைகளின் மொத்தம் 15. ஆதலால் அடித்ததொகை. $18-15=3$. 5-அடித்தால் கூட்டிவந்ததொகை 13. ஆதலால் அடித்ததொகை $18-13=5$. இவ்வாறே மற்றவைகளும் கூட்டிவந்ததொகை 18,27,36 முதலாயினவானால் அடித்த தொகை ஒன்றிலோ பூஜ்யம் ஆகவேண்டும்; அல்லது 9 ஆகவேண்டும். இந்தக் கணக்கில் எவ்வளவு பெரிய சங்கியை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். இவ்வளவுதான்கூடும் என்கிறவரையறை இல்லை.

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### சிறுவர்க்கானபக்கம்

சாலோமோனையும் சேபியர் இராணியையும் பற்றி இதற்குமுன் ஒரு கதை சொல்லியிருக்கின்றேனல்லவா. இப்புத்திமானுடைய புத்திநுட்பத்தை விவரிக்க இன்னொரு கதையுண்டு. அதையும் உங்களுக்குச் சொல்லுவேன் கேளுங்கள்.

இந்தச் சேபியராணி அரசன் புத்திசாதுர்யத்தைக் கேள்விப்பட்டு அதைப் பரிசோதித்தறியும்படித் தன் நாட்டில் உள்ள சிற்ப வல்லவர்களை வரவழைத்து, அவர்களால் பூமாலையினின்றும் எவ்வாற்றானும் பிரித்தறியாதபடி பொய்ம்மாலை யொன்றுகட்டித் தரும்படி ஆக்ஞாபித்தனள். அவர்களும் தங்களுடைய திறமையெல்லாம் பிரயோகித்துக் காகிதம் கெட்டி முதலிய கருவிகளால் வெகு அலங்காரமான மாலையைச்செய்து அரசியின் கையிற்கொடுத்தனர். அவள் பின்பு நிஜநிஜப் பூவாலே கட்டுவித்த இன்னொருமாலையையும் பெற்று இரண்டையும் இரண்டு பொற்றட்டில் வைத்து எடுப்பித்துக்கொண்டு மந்திரி பிரதானிகள் முதலானோர்சூழ ஆஸ்தானத்தில் வீற்றிருந்த அரசன் முன்னிலையிற் சென்று, அரசனைநோக்கி—ஓ ராஜ சிங்கமே ஒப்புயர்வில்லா விவேகசாலியே, நானென் பேரிதப் புத்தியினால் நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கவெண்ணியதுபோல உமது புத்திவிசேஷத்தைப் பரிக்ஷிக்கவெண்ணியதற் கென்னை மன்னிக்கவேண்டும். ஆயினும் இச்சோதனைக்குத் தயவுசெய்து உட்படுவீராயின் உமது பெருமை யெனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்—என்றனள். அரசனும் அங்ஙனமே ஆகுக—என்றான். சர்வாதீதர்களாகிய அற்புதத்தி யுடையார்போல மகா மேதாவிகளாயிருப்பவர்கள் செருக்கடையமாட்டார்களன்றோ? நிறைகுடம் நிறைந்திருக்கும் குறைகுடம் கூத்தாடும் என்று உலகச்சொல்லும் வழங்குமல்லவா?

இராணியும், அவ்விரண்டு பொற்றட்டுகளையும் அரசனுக்கு முன்னே சிறிது தூரத்தில் வைத்து அவற்றுள் இன்னது பொய்மாலையென்றும் இன்னது பூமாலை யென்றும் கண்டுபிடித்துச் சொல்லவேண்டுமென்றனள். அவையிரண்டும் சிற்பியின் வல்லமையாலே எவ்வளவும் பிரித்தறியக்கூடாதபடி ஒன்று

போலவே இருக்கக்கண்டு, சபையோர்களெல்லாம் சிற்பியின் கைத்திறத்தை வியந்து—அரசன் அகப்பட்டுக்கொண்டான். இப்பரிக்ஷைக்கு வகைசொல்லவழியில்லை—என்றெண்ணினார்கள். அரசனும் சற்றுத்தியங்கி—நாமெல்வளவோ புத்திசாலியென்று பெயர்பெற்று அருமையான கேள்விகளுக்கும் சோதனைகளுக்கும் தப்பியிருக்க இந்தச் சொற்பக்கேள்விக்கு வகைசொல்லமாட்டாமல் ஒரு பெண்பிள்ளைக்குத் தோற்கலாமோ? ஆருக்கும் மாட்டாதவன் பெண்டுக்கு மாட்டுவன் என்று வசனமும் ஏற்பட்டிருக்க அதற்குமாறாக எவருக்கும் வகைசொல்லிச் செயித்துக்கொண்ட நாம் இப்போது ஒரு பெண்ணுக்கு வகைசொல்லமாட்டாமல் பங்கப்படலாமோ?—என்று மானம் போராட வருந்தினான்.

அப்போது நல்லவேளையாய் அங்கு சுவருக்கப்புறத்தே ஒரு வண்டு ரீங்காரஞ்செய்யும் தொனியைக்கேட்டு, உடனே அரசன் உள்ளத்தே ஒரு யுக்தி தோன்றி மனமகிழ்ந்து முகமலர்ந்து, அச்சுவரில் உள்ள ஜன்னற் கதவை விரியத் திறந்துவிடும்படி ஆக்ஞாபித்தான். வண்டுக்குப் பூமணம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் தெரிந்துவிடுமல்லவா? அதற்கு மூக்குத்தான் எவ்வளவு நீளமோ அறியோம்! காததூரத்தில் இருந்தாலும் கண்டுபிடித்துவிடுகின்றதே! மனிதன் எவ்வளவு சிறந்தவனுகத் தன்னை எண்ணினபோதிலும் சிற்சில பிராணிகளுக்கு இயற்கையாயமைந்துள்ள யுக்தி புத்தியும் சாமர்த்தியமும் நமக்கில்லையென்பது நிச்சயம். யானையின் பலமும், சிங்கத்தின் வீரமும், குதிரையின் வேகமும், குரங்கின் லாகவமும் இல்லாமற்போனால் போகிறது. சில பூச்சி புழுக்களுக்குள்ள சாமர்த்தியமுமில்லை. ஞானபானுவாகிய ஔவையார் இதைச்சுட்டியே,

"வான்குருவியின் கூடு வல்லரக்கு தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமை சொல்வேண்டாங்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது." [காண்

என்று சொல்லியிருக்கிறார். ஆதலின் நாம் நமது அறிவின் பெருமையை வியந்து கருவமடைதல் குற்றமேயாகும். நிற்க, அவ்வண்டு அரசன் கருதியவாறே பறந்துவந்து அங்கு சென்று இங்கு சென்று கடைசியில் அம்மலர் மாலையில் வந்துட்கார்ந்தது. அரசனுக்கு இப்போது அதுதான் மலர்மாலையென்று நிச்சயமாகத் தெரிந்தபோதிலும் 'ஏகசாக்ஷியம் நகர்த்தவ்யம்' என்று கூறியிருப்பதனாலே அவ்வொரு வண்டின் செய்கையை நம்பாதவனாய் இன்னஞ் சிறிதுநேரமும் பார்ப்போமென்றிருக்க அதற்குள்ளே ஒன்றின் பின்னொன்றாய் அநேக வண்டுகள்வந்து அப்பூமாலையைக் கொல்லென்று மொய்த்துக்கொண்டன. 'தேன் விரும்பியடையும் வண்டுகள் போலே' யென்று உபமானமாகவும் சொல்லுவார்களே. இது இப்படியாக மற்றமாலை வைத்தபடியேயிருந்தது. ஒரு வண்டாயினும் முகந்து கூடப் பார்க்கவில்லை. ஏன் பார்க்கும்? பைத்தியமா அவற்றிற்கு? குணமும் மணமும் பெற்றுக் குளிர்ந்த மனமும் மலர்ந்த முகமுமாய்க் கொடுப்பவர்களைத்தானே இரப்பவர்கள் அடைவார்கள். வறுமையும் உலோபமும் உடையார்களை யாவர் அடைவார்கள்? பின்பு பூமாலையின்னதென்றும் பொய்மாலை யின்னதென்றும் ஒருவர் சொல்லவும் வேண்டுமோ. கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமோ. சேபியர் இராணியும் தான பண்ணின தந்திரம் பலியாமல் வெட்கமுற்றுப்போயினாள்.

ஆதலின் ஊகமும் யுக்தியும் உள்ளவர்கள் எவ்வகைப் பரிக்ஷைக்கும் தப்பித்கொள்வார்கள். அவை இல்லாதவர்களுக்கு எவ்வளவு கற்றுக்கொடுத்தும் பயனில்லை.

## TO OUR SUBSCRIBERS.

Those of our Subscribers who have not mitted their subscriptions for the last and rrent Volumes of the Viveka Chintamani requ d to do so without further delay.

K. A NCY,
Tripl ne.

## நமது சந்தாதாரர்களுக்கு.

இந்த வருஷத்துக்குரிய சந்தாவை ஏற்கனவே யனுப்பாதவர்கள் போன வருஷத்துப் பாக்கியிருந்தால் அதையும் சேர்த்து காலதாமதமின்றி யனுப்பிவிடவேணுமாய்க் கோருகிறோம்.

அ. ப. ஏஜன்ஸி,
திருவல்லிக்கேணி.

ன காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விபரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 11.] 1902௵ ஜூன்மீ. [இலக்கம் 2.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, S ool and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION *7s. 6d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s*. 6*d*. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and re vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு:**—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசான காகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்றுவாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

# I. பட்டாபிஷேகச் சிறப்பு.

**சந்தவிருத்தம்.**

AN INVITATION TO ALL LOYAL SUBJECTS TO ATTEND THE CORONATION OF HIS MAJESTY THE KING EMPEROR, EDWARD VII.

நமது மாட்சிமைதங்கிய ராஜசக்கிரவர்த்தியாகிய ஏழாம் எட்வேர்ட் அவர்களின் மகுடாபிஷேகமஹோத்ஸவத்துக்கு அழைத்தல்.

(ராஜசக்கிரவர்த்திக்கு வருகிற ஜூன்மூ 26௳ மகுடாபிஷேகம் நடக்கப்போகிறது.)

## சந்தவிருத்தம்.

1. முன்னவர்க் கியன்றமேலை முதுபுலத் தவர்க்குநீள்
தென்னவர்க்கு வடபுலத் திருந்த செல்வம் ஆளுநர்க்
கென்னவர்க்கும் இறைமை வாய்ந் திலங்குமாறு நமதுசீர்
மன்னவர்க்கு மௌலிசூடும் மகிமைகாண வம்மினோ.

1. கல்வி செல்வங்களாலும் அறிவொழுக்கங்களாலும் முதன்மைபெற்றவர்களாகிய மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கென்னும் இப்பூமண்டலத்தின் நாற்றிசையிலுள்ள பற்பல தேசத்தாருக்கும் அரசராகப் பொருந்தி விளங்கும்படி நமது ராஜசக்கிரவர்த்தியவர்களுக்கு மகுடாபிஷேகம் செய்யும் மகோத்ஸவத்தைக் காணும்படி அவரது குடிகளாகிய நீங்கள் எல்லோரும் வரக்கடவீர்கள்.

குறிப்பு:—மற்றத்திசைகளைக் கூறியதால் கீட்டிசையும் வருவித்துக்கொள்ளலாயிற்று. 'என்னர்' என்பதனுள் அடங்கிற்றென்னினும் ஆகும். மேற்குத்திசை தற்காலத்தே மற்றத்திசைகளினும் சிறந்திருத்தல் பற்றி முதலில்வைத்துக் கூறப்பட்டது. அதுபோலவே நமக்குக் கீழ்த்திசை பிரசித்திபில்லாமல் இருப்பதனால் வருவித்துக்கொள்ளும்படி கூறாமலே விடப்பட்டது. மகுடாபிஷேகத்தினாலன்றே அரசுரிமை வாராவிடினும், மற்றவகையாற் பெற்ற அரசுரிமையை விளக்குதற்கு அஃது சங்கேதமாய் ஏற்பட்டுள்ளது.

2. மாசில்எட்டு வேர்டெனச்சொல் மன்னவர்க்கு மௌலியைக்
கூசிமிக்க கலியிருட் குலங்கலங்கி யோடவே
தேசுமிக்க சுடரினங்கு சென்னிமேசா வேய்ந்திடும்
பேசுமிக்க விழவுகாண வமமினோ பிறங்கவே.

2. எட்வேர்டென்னும் இயற்பெயர் கொண்ட நமது குற்றமற்ற சக்கிரவர்த்திக்கு, வறுமை கேடு முதலான இருட்கூட்டங்கள் முன்னிற்க அஞ்சியோடும்படித் தோன்றிய சூரியனைப்போல விளங்குமாறு, கிரீடத்தைத்திருமுடியில் சூட்டும் பெருமைமிக்க மகோற்சவத்தைக் காணும்படி வாருங்கள்.

குறிப்பு:—மௌலியானது ஒளியினாலே சூரியனை நிகர்ப்பதாயினும், அச்சூரியனைப் போலப் புறவிருளைமட்டும் நீக்காமல் இருள்போல உயிர்களைவருத்துகின்ற வறுமை கேடு முதலியவற்றையும் நீக்கும் பெருமையுள்ளது என்பது தோன்றல்காண்க. கலியிருளை நீக்குவது அரசரின் செங்கோலாயினும் முடியின்மேலேற்றிச் சொல்லப்பட்டது. கூசிக்கலங்கி—ஒருபொருட்கிளவி. மிகப்பயந்து என்றபொருள். 'சுடர்' என்றது பொதுமொழியாதலின் அதனைச் சூரியனுக்கு உரியதாக்கும்படித் தேசுமிக்க என்னும் அடைகொடுத்துக்கூறப்பட்டது. 'அங்கு'—என்றது அம்மகுடாபிஷேகம் செய்யும் தானத்தே என்றும். பிறங்கவே-ஆடையாபரணங்கள் அணிந்து குதூகலத்துடன் என்றும். இவ்விரண்டு பாடலாலும் இறைமைவாய்தலும், கலிதீர்த்தலும் பட்டாபிஷேகத்துக்குப் பயனென்பது கூறப்பட்டது. இறைமைவாய்தல் அரசருக்கும் கலிதீர்தல் குடிகளுக்கும் முறையே பயனாயின. குடிகள் இறைமையை ஏற்றுக்கொள்ளலும் அரசர் கலியைத்தீர்த்தலும் இருதிறத்தாருக்கும் கடன் என்பதும் ஆயிற்று.



3. மதியின்மிக்க மந்திரத்து வல்லர்சூழ ஒருபுறம்
துதியின்மிக்க தந்திரத்து வல்லர்சூழ ஓர்புறம்
நிதியின்மிக்க அதிபரோடு நிருபர்சூழ ஓர்புறம்
பதியின்மிக்க வளநகர்ச்செய் பரிசுகாண வருமினோ.

3. புத்தியில் உயர்ந்த அமைச்சர்கள் பலரும் ஒருபுறத்து நெருங்கிச் சூழவும், மகாசூரர்களென்று புகழ்பெற்ற சேனைத்தலைவர் பலரும் மற்றொருபுறத்துச்சார்ந்து நிற்கவும், செல்வத்திற்சிறந்த பிரபுக்களும் குறுநிலமன்னர்களும் மற்றொருபுறத்தில் வணங்கிநிற்கவும், இவ்வாறு, நகரங்களுட் சிறந்ததாகிய இலண்டன்பட்டணத்தில் சக்கிரவர்த்திக்குச் செய்கின்ற மகுடாபிஷேக மகோற்சவத்தைக் காண வாருங்கள்.

குறிப்பு:—வரும்பொருளுரைக்கும் விவேகசாலிகளாதலின் 'மதியின்மிக்க' எனப்பட்டது மந்திரம்=சூழ்ச்சி, ஆலோசனை. அதிபரென்றது மற்ற உத்யோகஸ்தர்களைக்குறிப்பினும் ஆம். அரசன்கீழ் அதிகாரத்தைச்செலுத்தலாலே அதிபராயினர். நிருபர்-சக்கரவர்த்திக்குத் திறையளக்கும் ராஜாக்கள். இதரதேச மன்னர் என்னினுமாம். லண்டன் நகர் உலகில் இணையில்லாத முதல் நகரென்பது யாவர்க்கும் தெரிந்ததே. இப்பாடலால் அங்கு அரசரைச்சூழ்ந்து குழுமியிருப்பவர்களைக் கூறப்பட்டது.

4. தாயெனச் சிறந்தவேந்து தன்னைவிட்டு விட்புலம்
போயதா லிஞாலநங்கை பொருவில்கண் ணிழந்திலள்
மேயமைந்தர் நன்மையா லெனச்சிறக்க மேதினி
ஆயமௌலி சூடுகின்ற அழகுகாண வம்மினோ.

4. "இப்பூமகளானவள் தாய்போலத் தன்னைக் காத்துவந்த விக்டோரியா மகாராணியார் தன்னைவிட்டு நீங்கி விண்ணுலகத்தை அடைந்ததனாலே தன்னைக்காப்பாரின்றி வருந்தினாளில்லை. அவரினும் எண்மடங்கான நற்குணங்களையுடைய அவரது புத்திரர் அதனைக்காத்து நிற்றலாலே அதற்கோர் குறைவுமில்லை." யென்று கண்டோர்கூறும்படிச் சிறப்படைய, அக்காத்தற்றொழிலை மேற்கொள்ளுதற்குரியதாய மகுடாபிஷேகத்தைச் செய்கின்ற உற்சவவிசேடங்களைக்காணும்படி வாருங்கள்.

குறிப்பு:—தாயானவள் இளங்குழந்தையை அதன் மேல் ஓர் தூசுபடவும் பொறாது அன்பாகப்பாதுகாத்தல் போலப் பாதுகாத்த பரமதயாளுவாகிய அரசி என்று முன்னிருந்த அரசியின் பெருமைகூறப்பட்டது. அரசரைப்புவிக்குக்கண்ணாகச் சொல்லுதல் மரபு. கண்ணாற்காணுதல்போல அரசரின் செங்கோல் முறைமையினாலே குடிகள் புண்ணியபாவங்களைத் தெரிந்து தீவினையை நீக்கி நல்வினையைச்செய்தலினாலே அவ்வரசர்புவிக்குக் கண்ணென்று கூறப்படுவர். அன்றியும், 'சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்' என்றபடி, எல்லாவுறுப்பினும் கண்கள் சிறந்திருத்தல்போல, உலகில் எல்லாவுயிருக்கும் அரசன்மேன்மையுற்றிருத்தலினாலும் கண்ணெனப்படுவன் என்னினுமாம். மேய-அவருக்குப்பின் ஆளவந்து பொருந்திய, நன்மை யென்றது அறிவு, கருணை, உண்மை, நீதி, பொறுமை, ஆண்மை முதலான எண்ணிறந்த நற்குணங்களையும் உணர்த்தும். என-கண்டோர் சொல்ல; மேதினி சிறத்தலைக்கண்டவர்பலரும் சொல்ல சிறக்க-சிறக்குமாறு-காரியத்தையுணர்த்தியது; மௌலிசூடுதலின் காரியமாகியபயன்புவி சிறத்தலாகும். ஆய-சூட்டுதற்குரிய; நவமணிகளாலிழைத்துச் செய்யப்பட்ட என்னினுமாகும். அழகு-சிறப்பு, மேன்மை. இப்பாடலால் இவர்க்குமுன்னிருந்தவர் பெருமையும் இவரதுபெருமையும் இரண்டும் கூறப்பட்டன.

5. அங்கண்மா விசும்புபோர்வை ஆடைநீளும் ஆர்கலி,
திங்கள்நேர் முகம்சிறந்த பாதகண்ட மாயபார்
நங்கையை மணந்துகொள்ளும் நமதுமன்னர் வதுவையைப்,
பொங்கமோடு காண, வின்று போதும், அன்பின் வம்மினே.

5. அழகிய இடத்தையுடைய அகன்றவிண்தலத்தைப் போர்வையாகவும், நீண்டசமுத்திரத்தை ஆடையாகவும், சிறந்த பாதகண்டத்தையே தனக்குநேர் சந்திரன்போன்ற முகமாகவும்கொண்ட பூமடந்தையை நமது மன்னர் மனைவிபோல ஸ்வீகரிக்கும் பட்டாபிஷேகமகோத்சவத்தைக் களிப்புடன்காண நாம் போவோம்வாருங்கள்.

குறிப்பு :—ஆடை அரையில் உடுப்பது; போர்வை மெய்யெலாம் மூடிமறைப்பது. ஆடைமீதும் போர்வை போர்க்கப்படும். ஆகாயம் எங்கும் பூமிமீது கவிந்து மூடிக்கொண்டிருத்தலின் போர்வையாகக் கூறப்பட்டது. கடலை நிலமகளுக்கு ஆடையாகக்கூறுதல் மரபு; ஆடைபோல நிலத்தைச்சூழ்ந்திருத்தலின். முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பாகச்சொல்லும் மரபே; சந்திரன்போலக்குளிர்ந்து விளக்க முற்றுக் கண்டோருக்கு மகிழ்ச்சியைத்தருதலின். பாதகண்டத்தை முகமாகச்சொன்னது அதன் உயர்வுபற்றியே. எல்லாத்தேசங்களிலும் இப்பாதகண்டம் உயர்ந்ததென்று நாமேயன்றிப் பிறரும் ஒப்புகின்றனர். பிறநாடுகளுக்கு வளமையும் பெருமையும் இப்போதுண்டாயின. இப்பாதகண்டத்துக்குப் பன்னூற்றாண்டுகளாயுள்ளன. அரசர் புவியைச்வீகரித்தலை வதுவையாகச்சொல்லல் பெரியோர் வழக்கு.

6. நேரிழைக்குள் மணியெனச் சிறந்தநங்கை நிரைமணிச்
சீரிழைத்த தவிசினேக்க வுற்றுறச் சிறந்திடப்
பாரிழைத்த நல்லறம் பலித்தநற் பயன்கொள
ஏரிழைத்த மவுலிசூடு மெழில்கள்காண வம்மினே.

6. உத்தமகுணங்களையுடைய நங்கைமார்களுளெல்லாம் சிரோரத்னம்போலச்சிறந்த தேவியார் அநேக மணிகளை ஒழுங்குபட வைத்துச்சிறப்பாக இழைக்கப்பட்ட ரத்நசிங்காதனத்தே தம்மோடு சமானமாக வீற்றிருக்க, இவ்வுலகத்தார் பலரும் செய்தபுண்ணியங்களின் நற்பயன்களை அவர் அடையும்காலம் வந்ததனால்அவற்றை அரசாதுசெங்கோல்வழியாலே கொள்ளும்படிக்கு அரசர்க்கு மகுடாபிஷேகம்செய்யும் மகோற்சவத்தைக்கண்டு களிக்கவாருங்கள்.

குறிப்பு :—அரசர் உத்தமகுணமுடையாராயினும் அவருக்கு உயிர்த்துணையாய் அவரது உள்ளத்தைத் தன் வழிப்படுத்தி உரிய ஆலோசனைகளைச் சொல்லும் மனைவி நற்குணமில்லாளாயின் அரசர் குணமும் கோலும்கெட்டுக்குடிகளுக்குக் கெடுதியுண்டாகக் கூடுமாதலின் மனைவி உத்தமகுணங்களைப்பெற்றிருத்தல் முக்கியமானது. அரசர்க்குரிய கௌரவங்கள் யாவும் அரசிக்கும் உரியது. அரசர்பட்டாபிஷேகம் செய்யப்பெற்றுச் செங்கோலைக்கைக்கொண்டு செலுத்தலாலே குடிகளுக்கு அநேக நன்மைகள் உண்டாதலின் அவர்கள் செய்த புண்ணியபலன்களைக் கொள்ளுதற்கு அப்பட்டாபிஷேகம் காரணமாயிற்று. இப்பாடலாலும் குடிகள் பெறும்பயன் கூறப்பட்டது.

7. சூரியர்கள் பற்பலகோடி தொகுதல்போல சுடர்மணிப்
பேரியல் கலன்கள்செய் பிறங்கலோடு பெட்புற
ஆரியர் துரேனியர் துருக்கர்பார்சி ஆதியர்
நாரியர்களோடுசெல்வர் நாமுமேக வம்மினே.

7. அநேககோடி சூரியர்கள் தாம் ஒருவழித்திரண்டு செல்கின்றார்களோ என்று கருதும்படி ஜ்வாஜ்வல்யமாகப்பிரகாசிக்கின்ற இரத்தினாபரணங்களை யணிந்து மிக்க ஆவலோடு ஆரியர், துரேனியர், துருக்கர், பார்சிகர் முதலான நம்தேயத்துள்ளபற்பல சாதியாரும் அவரவர் மனைவிமக்களோடும் பந்துமித்திரர்களோடும், அரசர்மகுடாபிஷேக மகோத்சவத்தைக் காணப்போகா நிற்பர் ஆதலின்யாமும் ஏகவாருங்கள்.



குறிப்பு :—செல்வர்கள் கோடிக்கணக்காய் எண்ணிறந்தோர் ஆதலினும் அவராணியும் அணிகளும் எண்ணிறந்தவையாதலினும் பலகோடி சூரியர்களை உவமையாகக் கூறப்பட்டது. இது வீறுகோளணியாகும். பெருமையைக்காட்டலேயன்றி வேறில்லை. ஆரியர் என்றதனால் ஐரோப்பியர், பர்மர், சீனர் முதலானோரையும்கொள்க. நாம் என்றதுமேற் கூறியபல்வகைச் சாதியாரினும் தமிழர்களாகியவர்களைக்குறித்தது. வங்காளர், மராடர், தெலுங்கர் முதலான ஏனைநாட்டவர்கள் செல்லாநின்றனர் ஆதலின் நாமும் செல்வோம்வாருங்கள் என்றபடி. மற்றவர்களுக்கு யாம் எவ்வாற்றானும் இராஜபத்தியில் குறையாதவர்களாதலின் அவர்களேகநாம் ஏகாது பின் தங்குதல் முறைமையல்ல வென்று கூறியதாம்.

8. ஆசையெட்டினுள்ளமன்னர் அங்குவந்து குழுமுவார்
தேசுமிக்க வேதவே தியர்களங்கு சேர்வரால்
காசுமிக்க வணிகர்கங்கை குலினரோடு கனுலுவார்
நேசமிக்கு யாமுமந்த விழவுகாண நேர்துமே.

8. எட்டுத்திசையிலும் உள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய நால்வகைவருணத்தாரும் அரசர்க்குப்பட்டாபிஷேகம் செய்யுமிடத்தே சென்று கூடுவார்கள். ஆதலின் நாமும் செல்வோமென்றபடி.

குறிப்பு :—நாம் என்றதற்கு மேற்பாட்டிற்போலவே இங்கும் தமிழர்களைச் சுட்டிப்பொருள் கொள்க. மன்னர்களை முதலிற்கூறினது அவரது செல்வமிகுதியையும் உண்மையிலே அவர்கள் அங்கு பெருந்தொகையாகச் செல்லுதலையும் பற்றி யென்றறிக. வேதியர்களிற் சிலரும் செல்லல் உண்மையாகும். காசு-செல்வம்; கங்கைகுலினர்=கங்காகுலத்தவராகிய வேளாளர். மேற்பாட்டில் பற்பல வம்சபேதமும் தேசபேதமும் கூறப்பட்டன. இப்பாட்டில் பற்பலவருணபேதம் கூறப்பட்டன.

9. தூரியங்கள் காளநாக சுரவிதங்கள் சுடர்மணிப்
பேரியங்கள் கடல்கிளர்ந்த பெருமுழக்கி னதிர்தரத்
தாரியங்கு வரைசெய்மார்பின் மன்னவர் தமக்குநீள்
சீரியங்கு முடிபுனைந்து செய்தல்காண வம்மினே.

9. முரசு முதலிய பதினெண்வகை வாத்தியங்களும் கடலெழுந்து சத்தித்தல்போல முழங்க அரசர்க்குச் சூட்டும் மகுடாபிஷேகத்தைக் காணவாருங்கள்.

குறிப்பு :—இயங்களுள் அத்தேசத்துக்குரிய 'ஆர்கன்', 'பியானோ' முதலான அநேகவாத்திய பேதங்களும் அடங்கும். வரைசெய்-'செய்' ஒப்புப்பொருளில்வந்தது. நீள்சீரியங்குமுடி-நெடுங்காலமாகத் தலைமுறை தலைமுறையாய் அநேகவெற்றி மன்னர்களால் அணியப்பட்டுவந்ததன்றியும் ராஜ்யத்தின் பெருமையினாலும், வளமையினாலும், அரசரின் வலியினாலும், செங்கோல் முறையினாலும், பேர்போனது. செய்தல்-பட்டாபிஷேகம் முதலியசடங்குகளைச் செய்தல். இப்பாடலில் அங்கு ஒலிக்கும் வாத்தியகோஷங்கள் சிறப்பிக்கப்பட்டன.

10. பேசுமன்னர் முடிசிறக்க வாழ்வுநீள்க பெற்றியும்
தேசும்நாளும் மிகுகவென்று செம்மைமிக்கமுனிவரர்
ஆசிபல் வியம்பிமௌலி சூடுகின்றஅழகினை
நேசமோ டணைந்துகாண நெஞ்சுவந்து நேர்மினே.

10. "மன்னவர் முடி சிறப்படையக் கடவது; வாளுள் அதிகரிக்கக்கடவது; பெருமையும் புகழு நாளுளும் ஓங்கக்கடவன" என்று முனிவரர்கள் அநேக ஆசீர்வசனங்களைக்கூறி மகுடம் சூட்டுகின்ற அ கோலத்தைக்கண்டு களிக்கும்படி ஆசையோடு விரைந்து செல்லுங்கள்.

குறிப்பு:—முடியென்றது இங்கே அரசாட்சியைச் சுட்டியது. ஆட்சிக்குச் சிறப்பு இராஜ்யம் விஸ்த ரணப்படுதலும், பிரஜைகள் சுகமடைதலுமாம். வாழ்வுநீளல்-நெடுங்காலம்சிர்க்காயிஸ்ஸாய் வாழ்ந்திருத்தல் தேசு என்பது புகழைக்குறித்தது. அப்புகழ் பெற்றியின் பயனுகும். செம்மைமிக்க முனிவரர்-நல்லெ ழுக்கமும் ஞானமும் உடையாராய் ஈசனுக்கு மெய்த்தொண்டுபூண்ட பெரியோர்கள். அவர்கள் வாய மொழி பொய்யாது பயனுடைத்தாவது. இம்முனிவரர் ஒருசமயத்துக்கே உரியரென்றெண்ணவேண்டாம் ஒவ்வொருசமையத்துக்கும் உரியராவர். சூடுகின்ற-பிறவினைப்பொருளில் வந்தது. இப்பாட்டில் மகுட பிஷேககாலத்தில் அரசருக்கு முனிவர்கள் கூறும் ஆசிமொழிகள் கூறப்பட்டன.

11. தமிழரோர் புறத்துநின்று தண்ணரு சொரிந்தபோல்
இமிழ்கடற்க ணமுதமென்ன இனிதொர்பாற் றெலுங்கரோ
டமிதமான சுவையொடேனை யவர்களோடுபாடுறும்
நமதுமன்னர் சோபனங்கள் செவிமடுக்க நடமினே.

11. தமிழ்மொழியாளர் ஒருபுறத்தே அரசரைச்சூழ்ந்து நின்று, தேன்மாரி பொழிந்தது போலவும் இனிய அமுதத்தைச் செவிவழியே வார்த்ததுபோலவும், சொல்லும் பொருளும் சுவைமிகுந்த பாடல் ளால், மற்றுப்புறங்களிற் சூழ்ந்து நின்ற தெலுங்கர் கருணடர் முதலான தேசஸ்தர்களோடு, அபரிமித மான ஆனந்தமுண்டாக அரசர்சோபனங்களை அக்காலத்தே பாடுவோர்களாதலின் அப்பாடல்களைக் கேட டுக்களிக்கும்படி அங்குநீங்கள் செல்லுங்கள்.

குறிப்பு:—ஓர்புறம் என்றது அரசர் முன்னிலையில் அடுத்து நின்று என்றதாம். தேனும் அமுது நாவுக்கினிமைதரல்போல இப்பாடல்கள் செவிக்கினிமைதரலால் இவற்றிற்குவமையாயின. மற்றத்தெலு கர் முதலியோர் பாடல்கள் இசைமாத்திரையாய்க் காதுக்குமாத்திரமே இனிமைதருதல் போலன்றி, தமிழ்ப்பாடல் நமக்கு இசையாலும் சொல்லாலும் பொருளாலும் செவிக்கும் கருத்துக்கும் ஒருங்கே இன் மூட்டுதலால் அத்தமிழ்ப்பாடல்கள் மிகுதியாகச் சிறப்பிக்கப்பட்டன. சோபனம்—வாழ்த்து. இப்பாட லால் பல தேயத்தாரும்கூறும் வாழ்த்துக் கூறப்பட்டது.

12. இங்கிலந்தின் மன்னர்வெல்க இந்துமா ஜனங்கள்சேர்
துங்கநாடு நணிபுரந்த தோன்றல்வெல்க வெல்கநீள்
சங்குலாவு கடலின் அஸ்தி ரேலிமன்னர் தாமெனப்
பொங்குமோதை நஞ்சொல்கொண்டு பூரிசெய்ய வம்மினே.

12. இங்கிலந்தின் அரசராகிய நம்பெருமான் வெற்றியடைவாராக. இந்துதேசத்தின் சக்கரவர்த் யாகிய பெருமான் வெற்றியடைவாராக. அஸ்திரேலியாவுக்கு மன்னராகிய பெருமான் வெற்றியடை வாராக என்று அரசர்க்கு வெற்றிகூறும் வாயுரைகளின் ஓசையை நம்முரையாலும் நிறைந்தோங்கச்செய் வாருங்கள்.

குறிப்பு:—அரசர்க்குரிய நாடுகள் அனைத்தினும் இந்துநாடு சிறப்புற்றதென்பது தோன்றத்துங்கநா என்னப்பட்டது. துங்கம் - உயர்ச்சி. நீதியும் அருளும்சிறக்க ஆளுதலின் நணிபுரந்த என்னப்பட்டது ஔஸ்திரேலியா தீவாதலின் சங்குலாவுகடலின் என்று சிறப்பிக்கப்பட்டது. பூரிசெய்தல் - மேன்மேலு ஓங்கச்செய்தல். இப்பாடலால் அரசர்க்குவெற்றி பலராலும் வேண்டப்படுதல் கூறப்பட்டது.



13. கரியமேனி யவர்கள்மேய கருதும்ஆப் பிரிக்கெனும்
விரியுநாடு பொதுமைதீர வென்றவீரன் வெல்கநீள்
அரியசெந் நிறத்தர்வா ழமேரிகாவின் அரசர்தாம்
பெரிதுவெல்க வென்றுபேசும் உரைபெருக்க வருமினே.

13. கருநிறத்தையுடைய மனிதர்கள் வாழும் ஆப்பிரிக்காவின் விஸ்தீரணமான நாடுகளைத் தமக்கே யுரியவாகவென்று கொண்டபராக்கிரமமுடையாராகிய அரசர்மேலும் வெற்றியையடையக்கடவர். செந் நிறத்தவர்வாழ்கின்ற விசாலமாகி அடைதற்கரிதாகிய அமெரிகா தேசத்துக்கரசராகிய வேந்தர் ஜயமடை யக்கடவர் என்று எடுத்துக்கூறும் வாழ்த்துரையை உமது வாய்மொழியாலும் மேன்மேலும் ஓங்கச்செய்ய வாருங்கள்.

குறிப்பு:—விரியும்நாடு - என்றது அக்கண்டத்தின் தென்நாடுகளை. அதாவது டிரான்ஸ்வால் ஆரஞ்சு என்னும் போவர்ஜாதியாருடைய நாடுகளை. இதுவும் மேற்பாட்டின் பொருளதே.

14. ஆலயங்க ளரியவீதியமருகின்ற இல்லம்நீள்
நூலியங்கு கழகமாதியழகுசெய்து நுவலுமெண்
பாலியங்கு பல்லியத்தி னுதம்விண் படர்ந்திட
மேலியங்கு விழவுகொள்ளல்காணவங்குவிரைமினே.

14. கோயில்களையும் வீதிகளையும் இல்லிடங்களையும் கலாசாலைகளையும் இன்னம் இவைபோன்ற ற்பல இடங்களையும் அலங்கரித்து எட்டுத்திசையிலும் இயங்குகின்ற வாத்தியகோஷங்கள் ஆகாயத்தைச் சார்ந்திட ஓங்கும்படிக்கொண்டாடும் உற்சவத்தைக்காணும்பொருட்டு விரைந்துவாருங்கள்.

குறிப்பு:—ஆதியென்றதனால் சாவடிகள் சத்திரங்கள் நாடகசாலைகள் கீதசாலைகள் ஆலோசனைச் சபைகள் எல்லாம் கொள்க. ஒவ்வோரிடத்திலும் தனித்தனியேயும் கீதவாத்திய விநோதங்களோடு உர்ச வம் கொண்டாடுதலின் பல்லியங்கள் எண்பாலும் இயங்குவனவாயின. மேலியங்குவிழவு - மேன்மையாகிய உற்சவம்.

15. ஆதுலர்க்கு மறுசுவைத்த அன்னமார வுதவியே
ஏதிலர்க்கு மினிபதூசொ டணியிறப்ப நல்கியே
போதலர்க்கு மொளிவிளங்கு பரிதிபோற் பொலிந்திட
மோதமிக்கு மௌலிவேய் முதன்மைகாண வம்மினே.

15. ஆதுலர் முதலானோர்க்கும் ஷட்ரஸோபேதமான பலவகை உணவுகளைக்கொடுத்து ஏழைகளுக் கும் ஆடையாபரணங்களை இனமாகக்கொடுத்து, மிக்ககளிப்போடு அரசருக்குப்பட்டாபிஷேகத்தைச்செய் கின்ற சிறப்பைக்காணவாருங்கள்.

குறிப்பு:—பந்துமித்திரர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கும் விருந்தும் பரிசும்கொடுத்து என்பதைக் காட்ட ஆதுலர்க்கும் ஏதிலர்க்கும் என்று உம்மைகூட்டப்பட்டது, போதலர்க்கும் பரிதியென்றதனால் காலை ஞாயிறென்றுயிற்று உட்களிப்பாலே முகம்பொலிந்திடல் இயற்கை. இவ்விரண்டு பாடல்களாலும் சுரமாக்கள் தனித்தனியே அரசர்பட்டாபிஷேகத்துக்காகச்செய்த சிறப்புக்கூறப்பட்டது.

மேல்வரும் பாடல்களுக்கும் உரையெழுதில் மிக விரியுமாதலின் எழுதாமல் விடுத்தனம். கல்விமா ன் குற்றங்களைத்தள்ளிக் குணங்களைக்கிரகிப்பாரென்பதும் நிச்சயம்.

16. ஆயிரத்தி னொடுதொடர்தொ ளாயிரத் திரண்டதாம்
மேயவற் சரத்துஜூன் மதிக்கண்மேவு மிருபதோ
டேயவாறில் வியாழனோ டிலங்குகின்ற சதயநாள்
மாயனேய மகுடம்வேயும் வண்மைகாண வம்மினோ.

## II. பவனிச்சிறப்பு.

### சந்தவிருத்தம் வேறு.

17. மானவிக்ரம தீரராகிய வள்ளலார்முடி கொள்ளுரு
மீனமுற்றதொர் வேலையின்வரு வெற்றிவாம்பரி வெள்ளமும்
ஊனையுற்றொளிர் வாள்பிறங்கிய போரின்மள்ளரி னுதியும்
ஏனையுற்றபல் அங்கமோடுசெல் பவனிகாணுற எழுமினோ.

18. உச்சயிச்சிர வம்தனைப்பொரு வுற்றவெண்பரி யெட்டுமுன்
இச்சையாலெழி லாவினைத்தபொ னிரதமீதுற வேந்தலார்
முச்சகம்பெறு மணியழுத்திய முடிபுனைந்தொரு தேவியோ
டச்சமின்று மகிழ்ந்துபோதரு பவனிகாணுற வடைமினோ.

19. கண்வழுக்குறு கதிர்செய்வண்முடி சூடிநம்மொரு காவலர்
பெண்வழுக்கலில் தேவியாரொடு பெற்றிசேரிர தத்தின்மேல்
எண்வழுக்கலி லிந்திராணியொ டிந்திரற்கிணை யென்னவே
விண்வழுக்குறு மாடவீதிசெல் பவனிகாணுற விரைமினோ.

20. வெற்றிவண்முர சுற்றபேரி தடாரிமல்லரி வேணுவாய்
பற்றுசின்னமொர் காளமாதிய பல்லியங்கள் கறங்கவெ
பெற்றவன்முடி யோடுஞாயி றிரண்டிணைந்து பிறங்கல்போல்
கற்றைவண்மணி யாடவீதிசெல் பவனிகாணுற வம்மினோ.

21. எழுஞாலமு மீங்கலாதில யென்னவேகுழு மிப்பெரும்
பூழியாலுயர் விண்ணடைத்திடு பொன்செய்வீதியில் மிக்குளோர்
வாழிமன்னவர் வாழிமங்கையர் வாழியன்னர்தொல் குலமெனப்
பாழியாசிகள் கூறவேந்துசெல் பவனிகாணுற வம்மினோ.

22 நீளரத்தன மாடமீது நெருங்குகின்றபல் வாயினும்
சாளரத்தினு முன்றிலின்கணு நின்றுதுன்றிய தையலார்
காளமுற்றிய கண்ணிமைக்கலர் கண்டுகண்டு களிக்கவே
வாளழுத்திய முடியணிந்துசெல் பவனிகாணுற வம்மினோ.



### வேறு.

23. புயல்கொள் வரையின் மிசையி னருவி புரள்வ தெனவே யிருபுறம்
பொருவில் கவரி தவழ வொழிசெய் புதிய மதிய நிகரவே
உயரு முடியின் மிசையொர் தவள மணிசெய் குடைய தொளிரவே
உபய புறமும் வரிசை பெறுவர் துதிக ளுலவில் பகரவே
கயலி னுலவு கரிய வழிகள் கருது மளியின் வளையைநேர்
கவினு றுபய புயமு மிலகு தொடையில் விழுபு கதுலவே
பயிலும அரவ முடியின் மணிகள் பதியு மகுட மிளிரவே
பகரு மறுகி லரசர் வருகு பவனி மகிழ வருகவே.

24. பகைகொ ளறுகு பசுவொ டினிதொர் துறையி லமுது பருகவே
பசிய கிளியு மவண முநனி பழகி யினிதி னமரவே
குகையி லரியொ டரிய கரிகள் குலவி மகிழ்வி னுறையவே
குனிசெய் மயிலி னடன வழகி னிதய மரவு குளிரவே
நகைசெய் மலரின் வதன மலர நயமொ டரிய வனசரர்
நறையு மமுது முணவு தருபு நடைகொள் வணிகர் மகிழவே
வகையி னுபச ரணைசெய் தொழுக மறுவி லரசு புரிபவர்
மகுட முடியொ டுலவு பவனி மகிழ வருக வருகவே.

### வேறு.

25. தாழைக் குலையின் கனிசிதறித் தாங்காக் கமுகின் தலையொடித்துத்
தண்டே மாவின் கனியுதிர்த்துத் தளரா வருக்கைக் கனிபோழ்ந்து
வாழைக் குலைக ளறமாய்க்கும் வளநா டொன்றோ பலவாளும்
மன்னர் மன்னர் முடிபுனைந்து மணியார் கொடிஞ்சி நெடுந்தேர்மேல்
மாட நெருங்கு மணிமறுகில் வருமோர் பவனி யெழில்காண்பான்
மாழைக் கரிய மறியுண்கண் மகளிர் மலர்ந்த கொம்பர்போல்
வாடு மிடைதள் ளாடவுடன் மருவ மைந்த ருடன்போத
பேழைக் கலன்கள் ஒளிமீறப் பெட்பின் வருக வருகவே
பெம்மான் கோற்கீழ்க் குடிகாளீர் பெட்பின் வருக வருகவே.

26. அறந்தா ளான்கு நெடுந்தாளால் அமைந்து நடந்து மகிழ்சிறப்ப
அரிய மறையின் நெறியோங்க ஆவோ டந்த ணரும்வாழ
மறந்தாழ்ந் தடிதேய்ந் தறமாய மருவார் குலங்கள் நலந்தேய
மாண்பார் கலைகள் நெடிதோங்க வயவே ளாண்மை வணிகங்கள்
சிறந்தார்ந் தெழுந்து நலமோங்கச் செய்கைத் தொழில்கள் செழிப்பேறத்
தேயம் செழிக்க மும்மாரி திங்கள் தோறும் மிகப்பொழியப்
பறந்தாங் கொளிக்க மிடிநோய்போர் பயமின் றுலகம் பயனெய்தப்

## III. அஷ்டமங்கலச்சிறப்பு.

சந்தம் வேறு.

சாமரம்.

27. பூமரங்கள் பொலிந்தெனப் பொன்றுருவெழில் துன்றுவீர்
காமரங்களி வண்டுசெய் கண்ணிவேய்குழன் மங்கையீர்
தோமரங்குந மன்னவர் தூயமாமுடி சூடுநாள்
சாமரங்க ளிரட்டநீர் சதிரினோடுற வம்மினோ.

நிறை குடம்.

28. கறைகிடந்தொளி ரமுதநேர் கரியவாள்விழி மருவுவீர்
பிறைகிடந்தொளிர் நறுநுதற் பெய்வளைக்கையின் மங்கையீர்
முறைகடந்தறி யாதகோ முடிபுனைந்திடு மற்றைநாள்
நிறைகுடங்க ளெடுக்கநேர் நெஞ்சுவந்துற வம்மினோ.

கண்ணாடி.

29. நாடுநன்சிறை மாமயில் நாணியோடுறு சாயலீர்
பாடிவண்டடை தாழ்குழற் பாவைநேர்தரு மங்கையீர்
பீடுதுன்று பெருந்தகை பெட்பின்வண்முடி சூடுநாள்
ஆடிநேர வெடுக்கநீர் அன்பினோடவண் வம்மினோ.

தோட்டி.

30. பங்கசங்கள் மலர்ந்தெனும் பண்புகொள்முக பாணியீர்
துங்கசங்க நலத்தைவெல் தூயமென்கள மங்கையீர்
பொங்குசங்க முழங்கமன் பொன்செய்மாமுடி சூடுநாள்
அங்குசங்க ளெடுக்கநீர் அன்பினோடுற வம்மினோ.

முரசு.

31. சரசுகையி லெடுத்தவன் தண்மலர்க்குவ மந்தரும்
விரசுகையொடு வதனமார் வேலைவெல்விழி மங்கையீர்
பாசுமெய்ப்புகழ் மன்னவர் பண்பினால்முடி சூடுநாள்
முரசுகையி லெடுக்கநீர் முன்னுமுட்கொடு வம்மினோ.

விளக்கு.

32. மையில்வெண்முழு மாமதி மன்னுவாண்முக மின்னலேய்
ஐயநுண்ணிடை மங்கையீ ரன்பகத்தினி லூறவே



பொய்யில் நம்மிறை பொன்முடி பொலியவேயுறு மற்றைநாள்
செய்யதீப மெடுத்திடச் சிந்தைகொண்டுற வம்மினோ.

கொடி.

33. துடிபிடித்திடு மிடையினீர் சுதைபிடித்தமென் மொழியினீர்
பிடிபிடித்திடு நடையினீர் பிறைபிடித்திடு நுதலினீர்
படிபிடித்திடு மன்னவர் பகருமாமுடி சூடுநாள்
கொடிபிடித்திட அன்பினாற் குழுமியங்குற வம்மினோ.

இணைக்கயல்.

34. பணைக்கியல்தரு பசியமென் பண்புகொண்டமை தோளினீர்
பிணைக்கியல்பெரு விழியைவெல் பெற்றிகொள்மட மங்கையீர்
குணக்கியல்கடல் போலுமன் குலவுமாமுடி சூடுநாள்
இணைக்கியல்கா மேந்தநீர் இன்பினோடுற வம்மினோ.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## ANCIENT INSIGNIA WHICH WILL BE USED AT THE CORONATION.

## சில ராஜாங்கங்கள்.

நமது மாட்சிமைதங்கிய ராஜசக்கிரவர்த்தியவர்களுக்கு இந்த ஜூன்மீ 26உ மகுடாபிஷேக மஹோத்சவம் நடக்கப்போகிறபடியால், அச்சமயத்தில் உபயோகப்படுத்தும் சில ராஜாங்கங்களைப்பற்றி விவரிக்கின் நம் பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு இரஞ்சனையாயிருக்குமென்று கருதிச் சிறிது விவரிக்கின்றோம். இவ்வங்கங்களுள் முக்கியமானவை மூன்று. அவை சிங்காசனம், கிரீடம், இராஜதண்டம் என்பன. இவற்றை முறையே விவரிப்போம்.

சிங்காசனம்.

அரசருக்கு முடிகவிக்கும் காலத்தில் உபயோகிக்கும் சிங்காசனம் மிக விசித்திரமானது. இதனுள்ளே விசேஷமான சிலையொன்று வைத்துப் பொதியப்பட்டுள்ளது. அச்சிலையின்மீதே பின்வரும் பாட்டொன்று வெட்டப்பட்டுள்ளது:—

" விதிப்பயன் விளைவது மெய்ம்மை யாகுமேல்
கதிப்பொடு 'காத்திலந் தவர்கள்' காண்பரால்,
துதிப்படும் சிலையிது துன்னு மாண்டெலாம்
மதிப்புறும் அரியணை மன்னர்க் காங்கரோ?

அதாவது.— விதியின் நியமனப்படியே உலகில் காரியங்கள் நடப்பது உண்மையென்று நம்பக்கூடுமாயின், இவ்வற்புதமாகிய சிலை எங்கெங்கே வைத்துத் தாபிக்கப்படுகின்றதோ அவ்விடங்களிலெல்லாம் அரசர்களுக்கு மகுடாபிஷேகம் செய்தற்குரிய சிங்காசனமாய் இது சிறப்படையும் என்னும் இவ்விதி நியமனத்தை ஸ்காத்லாந்து ஜனங்கள் பிரத்தியக்ஷமாகக் காண்பார்கள்—என்றபடி. இனி இச்சிலை யாதோ? இது இங்கு வருதற்குக் காரணம் என்னவோ? என்னும் விஷயங்களைக் கூறுவோம். இச்சிலை ஒரு பழைய செம்பாறைக் கல். கர்ண பரம்பரையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறபடி இது ஐர்லாந்து தேசத்தில் முதலில் கண்டெடுக்கப்பட்டு, அங்கு நின்று ஸ்காத்லாந்துக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கு 834-ம்வருடம் இப்பிராந்தியத்தில் டன்ஸ்டப்நேஜ் (Dunstaffnage) என்னும் அரசர்க

ளுக்குரியதாகிய ஓர் கோட்டையில், கெந்நத் (Kenneth) என்னும் ஸ்காத்லாந்து ராஜா வால் மறுபடியும் கண்டு பிடிக்கப்பட்டது.

அவ்வரசர் அச்சிலை அற்புதமான அநேக மகிமைகளை யுடையதென்று கேள்வியுற்று, அதனை மரத்தாற் செய்வித்த ஒரு ஆசனத் துள் வைத்துப் பொதிந்து ஸ்கோன் என்னும் நகரிலுள்ள ஒரு மடாலயத்திற் கொண்டு போய்ச் சேர்பித்தனர். அங்கு இது 450 வருடகாலமிருந்து ஸ்காத்லாந்து தேசத்து ராஜாக்கள் அனைவர்க்கும் முடிசூட்டுதற்குரிய ஆசனமாய்ச் சிறந்திருந்தது. பின்பு பதின்மூன் றாம் நூற்றாண்டின் இறுதியில் அவ்விராஜியத் தைச் செயித்துக் கைவசப்படுத்திக்கொண்ட இங்கிலீஷ் அரசராகிய முதலாம் எட்வேர்ட் (Edward I) என்பவருக்கு ஸ்வாதீனமாகி, இவரால் அவ்வாசனம் லண்டன் நகருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கப்பட்டு, அங்கு வெஸ்ட்மின்ஸ்டர் (Westminister) என்னும் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதலாக இவ்வாசனம் இங்கிலாந்து அரசர்க ளுக்கெல்லாம் முடிசூட்டும்போது உபயோகிக் கும் சிங்காசனமாகச் சிறந்துள்ளது. ஐர்லாந் தியர்களுக்குள் நெடுநாளாக உள்ள ஒரு ஐதி கப்படி அரசாட்சியை இழவாமல் அடைந்து வருவதற்கு இச்சிலையை அவசியம் அரசர்கள் பெற்றிருக்கவேண்டுமாம். அதாவது இச்சி லையை விதிவசத்தால் இழக்கவருமாயின் அர சர்க்கு அரசாட்சியும் போய்விடுமென்பது கருத்து. 'கெந்நத்' என்னும் மேலே கூறிய அரசரும் இவ்வதந்தியைப் பூரணமாக நம்பி யிருந்ததாகத் தெரிகின்றது. ஏனெனில், மேலே எடுத்துக்காட்டிய இச்சிலையில் வெட் டப்பட்ட கவி அவ்வரசராலேயே லாடின் பாஷையில் அச்சிலையின்மீது வெட்டுவிக்கப் பட்டது.

இந்த ராஜவாசனம் இப்போது மேலே பொற்சரிகையிட்ட பட்டு வஸ்திரத்தால் மூடி மறைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளதாயினும், உள்ளிருக்கும் மரப்பணி முதலாம் எட்வோ டால் அவர் அதனை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து சேர்த்தபோது செய்வித்த படியே இன்று முள்ளதென்று கருதப்படுகின் றது.

## கிரீடம்.

இராஜகிரீடம் செம்பொன்னால் வலயம்போல வட்டமாகச் செய்யப்பட்டு விளிம்பில் முத்து களாலும் இரத்தினங்களாலும் இழைக்கப் பட்டு ராஜசின்னமாகிய 'லிலி' என்னும் ஒரு வகையான புஷ்பாகிருதியான சித்திரவேலை களாலும், சிலுவைகளாலும் முத்துக்கோவை களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இக்கிரீ டம் ஆதிகாலத்தில் ஏற்பட்டது போலன்று இப்போதுள்ளது. பற்பல சமயங்களிலும் பல பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆதிகா லத்திய இங்கிலீஷ் அரசர்கள் (Anglo Saxon Kings) இவ்விதமான அலங்காரங்கள் இன்றி முத்துக்கோவைமாத்திரம் வைத்திழைத்து முன்புறத்தில் பிறைவடிவம் அமைத்த ஒரு வகைக்கிரீடத்தைத் தரித்திருந்ததாகத் தெரி கின்றது. பின்பு நாளடைவில் பற்பல மாற் றங்களும் அலங்காரங்களும்செய்து சேர்க்கப் பட்டன.

## இராஜதண்டம்.

இது அரசர்களுக்கு கிரீடத்திலும் புராதன மான ஒரு அங்கமாகும். அநேக நூற்றாண்டு களாக இங்கிலீஷ் ராஜாக்கள் தமது மகுடாபி ஷேககாலத்தில் வலது கையில், தலையில் சிலுவை வடிவமைந்த ஒரு தண்டமும், இடது கையில், தலையில் ஒரு கோளமும் அதன்மேல் புறாவடிவமும் அமைத்த மற்றொரு தண்ட மும், ஆக இரண்டு தண்டங்கள் அளிக்கப் பெறுதல் வழக்கமென்று பழைய சாசனங் களைப்பார்க்கத் தெரியவருகின்றது. இந்தச் சிலுவை, புறா, வென்னும் இரண்டு சங்கேதங் களும் அரசர்களுக்குக் கிறிஸ்தவ மதத்தில் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துதற்கு அறிகுறியாக அமைக்கப்பட்டவை என்பார் கள்.



# DASANGAM—

## A Poem in praise of the Insignia of His Majesty the King-Emperor, Edward VII.

## தசாங்கம்.

[இஃது அரசர்க்குரிய நாடு, நகர், ஆறு, மலை, வாகனம், படை, முரசு, மாலை, கொடி, செங்கோல் என்னும் பத்துறுப்புகளையும் சிறப்பித்துக்கூறுவது. பின்வரும் பாடல்கள் நமது மாக்ஷிமை தங்கிய ராஜசக்கிரவர்த்தியாகிய எட்வேர்ட் அரசரைப்பற்றிக் கூறுவன.]

---

நேரிசை வெண்பா.

### 1. பெயர்.

ஏரார் இளங்கிளியே எம்மை இருங்குடைக்கீழ்ச்
சீராக ஆள்வார்பேர் செப்பிடுவாய்—காரையிரு
செங்கரத்தால் வென்ற சிறப்புடைய எட்வேர்டென்
றங்கமுடன் கூறுவரே ஆங்கு.

### 2. நாடு.

சொற்கிளியே நம்மைத் துகளறவே பாலிப்பார்
மற்கொள்வள நாடென் வழங்கிடுவாய்—விற்குலவும்
செங்கதிரோன் என்றென்றும் சென்று மறையாத
துங்கவள நாடதுகாண் சூழ்ந்து.

### 3. நகர்.

பச்சைப் பசுங்கிளியே பண்பாக வேநம்மை
நச்சிப் புரப்பாரூர் நல்கிடுவாய்—முச்சகமும்
தன்னேரி லா இலண்டன் தானென்பர் வானோரும்
எந்நேர மும்துதிப்ப தேய்ந்து.

### 4. ஆறு.

சொல்வளங்கொள் தூய சுகமே நமைப்புரப்பார்
நல்வளஞ்செய் யாறு நவின்றிடுவாய்—பல்வளனும்
தேங்கவருள் தண்புனலாற் றெண்டிரையி னுப்பகற்றும்
பாங்குடைய கங்கையெனப் பார்.

### 5. மலை.

அஞ்சுகமே எம்மைமிக அன்பாக ஆதரிப்பார்
மஞ்சு தவழ்கின்ற வரையுரையாய்—விஞ்சுகின்ற
நீளருவி மாறா நெடுஞ்சிகரம் வானுருவும்
கோளகல் இ மாசலமாம் கொள்.

6. கரி.

பங்கப் படாக்கிளியே பாரிலுயர் பார்த்திபர்தம்
துங்கக் கரியதனைச் சொற்றிடுவாய்—பொங்கமரில்
நீள்கரத்தால் வீசியெதிர் நேரலரைத் தோள்சாய்க்கும்
கோளுடைய தென்ப குறி.

7. பரி.

ஆய்பசிய மென்சிறகா ரஞ்சுகமே நம்மரசின்
பாய்பரியின் சீரைப் பகர்ந்திடுவாய்—காய்சமரில்
கோளாரும் கூடார்தம் கொற்றம் பறித்தல்லால்
மீளாது காணதனை மிக்கு.

8. படை.

சேந்தவாய்ச் செஞ்சொற் சிறுகிளியே நம்மாசர்
ஏந்தும்வாள் தன்னை யியம்பிடுவாய்—போந்த
பகையிருளை நீக்கியொரு பாற்கரன்போ லெங்கும்
நகையொளியைச் செய்திடுமே நன்கு.

9. முரசு.

பற்றலரைச் செற்றுநகைப் பாலிக்கும் பார்த்திபர்தம்
வெற்றிமுர சின்சீர் விளம்பிடுவாய்—மற்றதுதான்
வஞ்சமுறு மாற்றார்தம் மாண்பில்லா வன்மைதிகழ்
நெஞ்சதிரத் தானதிரும் நின்று.

10. மாலை.

செய்பவள வாய்க்கிள்ளாய் சீரா வெவைப்புரப்பார்
வம்பவிழும் மாலை வழுத்திடுவாய்—தும்பை
வயமாலை தேன்பிலிற்றும் வண்முடியும் மார்பும்
செயமாலை வாடா தெளி.

11. கொடி.

அஞ்சொல் லருங்கிளியே அன்பாரும் நம்மரசர்
விஞ்சுகொடி தன்னை விளம்பிடுவாய்—நெஞ்சத்துத்
தீரமுறு வெற்றிமலி சிங்கக் கொடிசிறக்கும்
பேருலக மெங்கும் பெயர்ந்து.

12. குடை.

நற்றமார் தத்தாய் நலமா நமைப்புரப்பார்
கொற்றக் கொடைதன்னைக் கூறிடுவாய்—மற்றதுதான்



ஞாலமதிற் பாதி நறுநிழலி னுள்ளாகக்
கோலமதி போலொளிரும் கொண்டு.

13. செங்கோல்.

பணனார் பசுங்கிளியே பண்பார்நம் பார்த்திபர்தம்
எண்ணாரும் செங்கோல் இசைத்திடுவாய்—தண்ணாரும்
வெண்மதியும் செங்கதிரும் மேவுகதி மாறுகினும்
என்முறையும் கோடாதே யிங்கு.

முற்றும்.

எஸ். முத்து அய்யர், பி. ஏ.

---

THE TAJ MAHAL AT AGRA.

## தாஜ் மஹால்.

ஆக்ரா நகரத்தில் யமுனா நதிக்கரையில் ஓர் அழகிய சோலையின் நடுவில் 'தாஜ்மஹால்' என்றொரு சமாதிமண்டபம் இருக்கின்றது. இது உலகத்தில் உள்ள அதிசுந்தரமான மண்டபங்கள் எல்லாவற்றிலும் அழகானது. இது டில்லி சக்கிரவர்த்தியாயிருந்த ஷாஜிஹான் என்பவனால் தன் மனைவியாகிய மம்தஸ் மஹால் என்பவளுக்குக் கட்டப்பட்ட கோரி மண்டபம். மம்தஸ்மஹால் என்னும் பெயரே தாஜ்மஹால் என்று திரிந்தது.

இந்த மம்தஸ்மஹால் என்பவள் லோகப் பிரசித்தியடைந்த நூர்ஜஹானுக்குச் சகோதரனாகிய அஸொப்கான் என்பவன் புத்திரி. இவள் அந்நூர்ஜஹானைப்போலே அவ்வளவு அழகிற்சிறந்தவள் அல்லாவிடினும் மற்றொருவருக்கும் அழகிற்குறைந்தவளல்ல. அக்காலத்தில் அரசர்கள் அநேக மனைவியர்களை விவாகம்செய்துகொள்ளுதல் வழக்கமாயிருக்க, ஷாஜிஹான் இவளையன்றி வேறொருவரையும் மனத்தாலும் கருதாமல் ஏகபாரியாவிரதனாகவிருந்ததே இவள் அழகின் பெருமையையும் குணங்களின் அருமையையும் தெரிவிக்கப் போதுமானது. ஷாஜிஹான் தான் சக்கிரவர்த்தியாய் வருதற்கு முன்னமே இம்மடந்தையை விவாகம்செய்து, தான் சிங்காசனம் ஏறினபின்பு இன்னொருதரம் அவ்விவாகத்தைச் சிறப்பித்தான். இதுவும் இவன் அவளிடத்து வைத்திருந்த பெருங்காதலையும் அவளது பெருமையையும் உணர்த்தும். இவள் கணவனிடத்தில் மிகுந்த பிரீதியுள்ளவளாய் அவனோடு பதினான்கு வருஷகாலம் சுகித்திருந்து அவனுக்கு நான்கு பிள்ளைகளையும் இரண்டு பெண்களையும் பெற்றாள். இவள் நூர்ஜஹானைப்போலத் துரைத்தன காரியங்களில் உட்புகுந்துழலாமல், குடித்தனவிஷயங்களில் தன் புருஷனுக்கு உற்ற துணையாயிருந்து, தன்னுடைய தயாளகுணத்தாலும் நன்மையாலும் எல்லாருக்கும் இனியவள் என்று பேரெடுத்து, அனைவராலும் மெய்ச்சப் பட்டு வந்தாள்.

இந்நங்கை 1629-ம் வருஷத்தில் மரணமடைந்தாள். தான் இனிமேல் ஜீவிக்கப் போகிறதில்லையென்று கண்டு தன் புருஷனை அருகே அழைத்து அவனைநோக்கி, "என் பிராணநாயகரே, நான் உம்மைவிட்டுப் போகும்காலம் வந்துவிட்டது. என் பிராணன் போகுமுன் நான் தங்களைக்கேட்டுப்பெற விரும்பும் வரம் இரண்டுள்ளது. ஒன்று, தாங்கள் எனக்குப் பிற்காலம் இரண்டாம்தாரம் விவாகம் செய்துகொள்ளாமல் இருப்பது, மற்றொன்று, என் பெயர் அழியாமல் என்றென்

னும் நிலைநிற்கும்படி என் பெயராலே ஒரு அழ
கிய கோரியைக்கட்டுவித்து அதில் என்னை
அடக்கஞ்செய்வது. இவ்விரண்டு வரங்களை
யும் எனக்குக்கொடுத்தருளவேண்டும்” என்
றான். ஷாஜிஹானும் அவ்வாறே வாக்களித்து
அவ்விரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றி
னன். “ஆன்மாவுக்குத் தலைவன் ஈச்வரன்
ஒருவனே போலவும், சூரியனுக்குத் துணைவன்
சந்திரன் ஒருவனேபோலவும், ஷாஜிஹானுக்
குப் பிராணநாயகி மம்தஜ்மஹால் ஒருவளே”
என்று புனர்விவாகம் செய்யாமல் ஒழிந்திருந்
தான்.

அவன் தனக்குத் துயரம் சிறிது ஆறினபி
ன்பு, தான் தன்மனைவிக்குக் கொடுத்த வாக்
குப்படியே சமாதியைக் கட்டுவிக்க ஆரம்
பித்து முன்னொருகாலத்தில் இல்லாததும் இப்
பாதகண்டத்தில் உள்ள கட்டிடங்கள் எல்லா
வற்றிலும் அழகுமிகுந்ததுமான ஒரு அத்தியற்
புதமான கோரிமண்டபத்தைக் கட்டுவித்
தான். இது அதிமனோகரமாகச் சித்திரிக்கப்
பட்ட வெண்சலவைக்கற்களால் நிருமிக்கப்
பட்டு, ரத்நகஜிதமான புஷ்பங்களால் அலங்க
ரிக்கப்பட்ட சுவர்களையும் உடையது. இது
கட்டப்பட்டு எவ்வளவோகாலமாகியும் எள்ளள
வேனும் அழகும் ஒளியும் குலையாமல் நேற்
றுத்தான் கட்டப்பட்டது போல மனோரஞ்சித
மாகக்காணப்படுகின்றது. இதைக்கட்டுதற்கு
இருபதினாயிரம் ஜனங்கள் பதினேழுவருஷம்
இடைவிடாமல் வேலைசெய்தார்களென்றும்,
இதை முடிப்பதற்கு மூன்று கோடி ரூபாய்
செலவாயிற்றென்றும் சொல்லுகிறார்கள்.
இச்சமாதிமண்டபத்தில் தானே ஷாஜிஹானும்
பின்பு அடக்கம் செய்யப்பட்டான். இவ்விரு
வர் சமாதியின் மேல் எப்போதும் தீபம்போட்
டுப் புஷ்பமாலைகளும் சாத்தப்பட்டுவருகின்
றன.

இது இத்தேசத்திலுள்ள கட்டிடங்களெல்லா
வற்றிலும் மிக அழகாயிருத்தலினாலே இத்தே
சத்துக்கு விநோதார்த்தமாகவோ வேறுகாரிய
மாகவோ வந்துபோகும் தேசாந்தரிகள் எவர்
களும் இதனைப்பாராமற் போகார்கள். இதைச்
“சலவைக்கல்லால் அமைத்த கனாக்காட்சி”
யென்று இதன் அழகைப் புகழ்ந்து கூறுவார்
கள். அதாவது இதைப்போலும் மண்டப
மொன்று சொற்பனத்திற் கண்டாற் காண
லாமே யன்றிப் பிரத்தியக்ஷத்தில் காண
முடியாதென்பது இதன்பொருள். ஒருதரம்
காணிற் பின்னென்றும் மறவாத முக்கியமான
பொருள்களில் இதுவும் ஒன்று. இதை உலகி
லுள்ள மண்டபங்கள் எல்லாவற்றிலும் சிறந்த
தென்று பற்பல அருமையான காட்சிகளைக்
கண்டவர்களும் சொல்லுகிறார்கள். இது அத்
யற்புதமான மகாசக்தியையுடையவரால் கரு
திப்பாவிக்கப்பட்டு இரத்தினவேலைகளில் வல்ல
சிற்பிகளால் செய்து முடிக்கப்பட்டதென்றும்
இதன் பெருமையை வியப்பார்கள். அன்றி
யும் இது இந்தியாவின் சிரோரத்நமென்றும்
கொண்டாடப்படும். இதற்கிணையானது இப்
பூமண்டலத்தில் இல்லை.

## OUR NEW PRINCE OF WALES.

### His Royal Highness, the Duke of Cornwall and York.

### நமது புதிய யுவராஜாவின் சரித்திரம்

ஜார்ஜ் அல்பர்ட் என்னும் இயற்கை நாமம்
கொண்ட இவர் 1865-ம் வருஷம் ஜூன்மாதம் 3-ம்
தேதியில் லண்டன் நகரில் மார்ல்பரோ
ஹௌஸ் என்னும் அரண்மனையில் ஜனித்தார்.
இவர் பால்யத்திலேயே பரிதாபமாகக் காலம்
சென்ற இவரது தமையனாகிய கிளாரன்ஸ்
பிரபு வென்னும் இராஜகுமாரருக்கு ஒன்றரை
வயதுக்கு இளையவர் இவர் தம் பாலியத்தில்
தமது தமயனைப்போலவே படிப்பு முதலிய
விஷயங்களில் சற்றும் பேதமின்றிப் பயிற்றப்
பட்டு அவருக்குத்தோழனாகக் கலந்து நேசித்து
வந்தனர். அதிபால்யத்திலேயே மாலுமி



வேலையிற்பயிற்றப்பட்டுக் கப்பலில் போக்கு
வரவு செய்வதில் இயற்கையான விருப்பமு
டையவராயினர். தமது பன்னிரண்டாவது
வயதில் ‘பிரிட்டானியா’ என்னும் படைக்கப்
பலில் வேலை பயிலப் பிரவேசித்து இரண்டுவ
ருஷம் அங்கிருந்து அதிகமுயற்சியோடு கற்க
வேண்டிய விஷயங்களை யெல்லாம் ஐயந்திரி
பறக் கற்றுக்கொண்டனர். அக்காலத்தே இவ
ருக்கும் அங்கே வேலை பயில வந்திருந்த மற்
றவர்களுக்கும் எவ்வளவேனும் வித்தியாசம்
காட்டப்படவில்லை. படுக்கைக்கு மாத்திரம்
இவருக்கும் இவர் தமயனுக்கும் தனித்தனியே
ஒரு அறை கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வி
ரண்டு வருஷகாலமும் தினந்தோறும் காலை
ஆறரைமணிமுதல் மாலை ஒன்பதரைமணிவ
ரையிலும், உழைத்து வேலை செய்வதும்
உரிய மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்
தலும் ஆரோக்கியமான தேகமுயற்சிகளை
யெடுத்துக்கொள்ளலுமாகக் காலம் சென்றது.

பின்பு கிரமப்படியே கப்பற்படையில் உத்தி
யோகத்திற் பிரவேசித்து இரண்டுவருஷகாலம்
பூமியைச்சுற்றி யாத்திரைசெய்து வந்தனர்.
அந்த யாத்திரை அவருக்கு மிகவும் பிரயோச
னப்பட்டது. சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள
பிரிட்டிஷ் ராஜ்யங்கள் அநேகங்களைக்கண்டு
ஜனங்களின் குணகுணங்களையும் பிரத்தியக்ஷ
மாகத் தெரிந்துகொண்டனர். இதன் பின்
இராஜகுமாரர் ‘கேடா’ என்னும் இன்னொரு
மரக்கலத்திற் பிரவேசித்து வட அமெரிக்கா
கண்டத்தில் வேலைபார்த்துவந்தனர். அதன்
பின் வேறு மூன்று மரக்கலங்களிலும் வேலை
பார்த்துப் பழகித் தாம் கொடுக்கவேண்டிய
பரிக்ஷையில் வெகுமேன்மையாகத் தேறினர்.

அரசகுமாரருக்குப் பரிக்ஷை தேறுவதற்
கும் வேலையுயர்வதற்கும் என்ன அட்டி. வெகு
சுலபமாக ஆகுமென்று சிலர் எண்ணக்கூடும்.
அப்படியெண்ணுதல் சரியன்று. இராஜகுமார
ராயினும் யாவராயினும் சரி தக்கபடி வேலைக்
குத் தகுதியில்லாதபக்ஷத்தில் வேலை உயரமாட்
டாது. தாழ்ந்தவேலைகளிலேயே தானிருக்க
வேண்டும்.

1890-ம் வருஷத்தில் இளவரசர் மேற்கிந்தியா
தீவுகளில் ஒரு போர்ப்படவுக்குத் தலைவராக
நியமிக்கப்பட்டு அதில் உள்ள உத்யோகஸ்தர்
களும் படைவீரர்களும் தம்மை நேசித்துத்
தம் மேவலில் திறம்பாமல் நிற்கும்படிச் செய்து
கொண்டனர். இதன்பின்பு சம்பவித்த ஒரு
காரியத்தினாலே இவரது நிலைமைமுற்றும் மாற
வேண்டியதாயிற்று. 1891-ம் வருஷம் தமக்கும்
தமயனுருக்கும் கொடிய சுரமடித்து அச்சுரத்
தில் தம் தமயனார் இறந்துபோனதினால் தாமே
தம் தந்தையாருக்குப்பின் இராஜபட்டத்துக்கு
உரியவராகி அந்நிலைமைக்கடுத்த அநேககட
மைகளையும் பொறுப்புக்களையும் மேற்கொள்
வாராயினர். 1892-ம் வருஷத்தில் யார்க்குப்
பிரபு என்னும் பழய பட்டமொன்று புதுப்பிக்
கப்பட்டு இராஜகுமாரருக்கு அளிக்கப்பட்டது.
இக்காரணங்களால் இராஜகுமாரர் தமது
மாலுமி உத்யோகத்தை விட்டுவிடலாயினர்.
அதனை விட்டுப்பிரிதற்கு இஷ்டமில்லையாயி
னும் அவசியம் விட்டுப் பிரியவேண்டிவந்தது.

பின்பு அவ்வருஷத்திலேயே மேயென்னும்
ராஜ கன்னிகையை மணம்புரிந்தனர். அக்
காலத்தில் ஜனங்கள் காட்டிய ராஜபக்தியும்
குதூகலமும் சொல்லவேண்டுவதில்லை. அத்
தினத்தை உற்சவதினமாகக் கொண்டாடும்
படிப் பறையறைந்து அறிவிக்காவிடினும் ஜனங்
கள் ஸ்வயமாகவே மகோத்சவம் கொண்டாடி
னார்கள். விவாகமானபின்பு சந்திரிங்காமென்
னும் தமது பிதாவின் கிராமத்துள்ள ஒரு பவ
னத்தில் மனைவியும் தாமுமாகவசித்து வந்த
னர். இங்கு இவருக்கு முதல் புத்திரர் பிறந்த
போது இவ்வரண்மனையில் இடம் போதாமல்
போனமையால் கட்டிடங்கள் சிறிது சேர்த்து
விசாலமாக்கப்பட்டது. இப்போதிவ் வரண்
மனை வேண்டியபடி விசாலமாயிருப்பினும் இவ
ருடைய உயர் நிலைமைக்குப் போதுமானது
தன்று ஆயினும் அதனைவிட்டுப் பிரிய இஷ்ட

மில்லாதவராய் அங்ஙனமே இருந்து வரு கின்றார். மனைவியுடன்கூடியிருந்து அடையும் இன்பங்களை இராசகுமாரரினும் அனுபவிக்கக் கூடியவர் ஒருவருமில்லை யென்று சொல்லலாம். தாம் தமது பிரியமாகிய மனைவியுடனேகூடி மகிழ்ந்து வாழ்தலினும் உயர்ந்த சுகம் உலகில் இல்லை. "நான் விரு வாரென்றேன் தலையும் இனியதோர் த மனைக்கண்ணுறுவது" என்னும் "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற் கேட்டலின்பம் செவிக்கு" என்னும் ஈரடியும் தெரிந்த திருவள்ளுவநாயனார் இன்பவாழ்க் கைத்தலைச் சிறப்பித்திருக்கின்றார் அல்லவா? மனை வியின் எவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்தபோதி லும் எவ்வளவு காரியங்களின் மத்தியிலிருந்த போதிலும் இக்காலத்தாம் அவ்வளவும் மறந்து போவன்றோ? இந்தவரம் அரசர்க்கதாயினும் எளிதிற்கிடைக்கக்கூடியதன்று. இளவரசர் இப்பாக்கியத்தையும் இக்காலத்தையும் பெற்றி ருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது. இராஜ குமாரர் தம் குழந்தைகளை மிகுந்த அருமை யாக மதிப்பவர். அவர்களோடு ஒருபொழுதாகி லும் பிரிந்திருப்பது அவருக்கு பிடிக்கவில்லை. பலசபைகளில் அவர் பெற்றுக்கொள்ளும் படியான இலகுவான வார்த்தைகளின் படிப்ப விதமான கருத்துக்களையும் அவர்களுக்குத் தெரிவிப் பவர். ஏழந்தபிள்ளைகளுமரும் இவரை அடிக்கடி கேட்கும் கேள்விகளுக்கு முடிவில்லை. அக்கேள்விகளுக்கெல்லாம் தாம் தக்க அவசியமுள்ள மறுமொழி சொல்லத் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவருடைய கருத்தாம். சில வேளைகளில் அவைகளுக்குத் தகுந்த மறு மொழி சொல்லத் தெரியாமல் இளவரசர் விழிப்பதும் உண்டு.

இளவரசர் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பு இனிமையாகவும் போதிக்கும் வழியாகிய கின் டர்கார்டன் போதனை முறையில் நல்லதாய் பிக்கைகொண்டவர். இந்த மார்க்கத்தை இராஜ குழந்தைகளுக்கு அப்பியாசத்தில் தாமே உபயோகப்படுத்திப் பிள்ளைகள் தமைந்து செல்லும் கப்பல்கள் கட மார்க்கமாகப் பயங்கரமாகப் போகலும் உயிருள்ளவை போன்ற பற்பல ஜந்துக்களின் உருவங்களால் நிறைக்கப்பட்ட வருணத் தாள்களால் அலங்கரிக்கச் செய்திருக்கின்றார். இதுவுமன்றி அம்மிருகங்களின் பெயர்களை அக்கு ழந்தைகள் சுலபத்தில் கற்றுக்கொண்ட பின் அவற்றின் குணம் செயல்களைப்பற்றிப் பெற் றோர்களோ அல்லது செவிலிமார்களோ வேடிக்கையாக அநேகவிஷயங்களைப் போதிப் பார்கள்.

இளவரசருக்குப் பிள்ளைகளிடத்தில் வெகு [illegible] அவர்களைப்பற்றி [illegible] யெடுத்துக்கொள்வார். அவர்களுக்காகப் பொம்மை முதலிய விளையாட்டுக்கருவிகளைத் தாமே கடைக்குச்சென்று வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பார். காலைவேளைகளில் வெயிலில் இத மாய் இருக்கும்போது பிள்ளைகள் குதிரைமே லேறிச் சவாரி செய்துவர வாயினும் வண்டியிலேறி உலாத்திவரவாயினும் அவர்க ளைத் தாமே [illegible] பந்தோபஸ்தோடு அனுப்புவார். எட்வர்ட் என்னும் குழந்தை குதிரையேற்றத்தில் தம் தந்தையார் தன்னை வயதிருக்கும்போது எவ்வளவு பயமின்றிச் சவார் [illegible] காட்டி வந்தாரோ அவ்வளவு தாமும் சாமர்த்தியம் காட்டுவார்.

இளவரசருக்கு விருப்பமானகாரியம் இரண் டொன்றுண்டு. அவற்றில் ஒன்று விவசாயம் இவ்விஷயத்தில் இவர் தம்தந்தையாரையு மட்டணுமையும் கொண்டிருக்கிறார். சாந் ரிங்காம் அரண்மனை தமது சுவாதீனத்தில் வந்தவுடனே அதற்குச்சமீபத்தில் சிறிது நில த்தைவாங்கி உழுதுபயிர்செய்ய ஆரம்பித் உயர்ந்த ஜாதியான மாடுகன்றுகளையும் சே ர்த்துத் தமக்கு இஷ்டமான ஓர் தொழிலையே பற்றிக்கொண்டதே யல்லாமல், யதா ராஜ ததாப்பிரஜா என்றபடி தம்மைக்கண்டு மற் வர்களும் இவ்விவசாயத்தொழிலிலும் மா கன்றுகளை வளர்ப்பதிலும் விசேஷவிருப்ப



கொள்ளவும் ஏதுவாக்கினர். இது தவிர இவ ருக்கு இஷ்டமாகிய இன்னொருகாரியம் முத்தி ரைகளைச்சேகரிப்பது.* இறந்துபோனதும் இப்போது வழக்கத்தில் உள்ளதுமான அநேக அருமையான முத்திரைகள் இவரிடத்தில் இருக்கின்றன. இவற்றை இவர் பற்பலதேசங் களிலிருந்தும் தமது பிள்ளைப்பருவம் முதலாக முயன்று சம்பாதித்து வைத்திருக்கின்றார். இவர் தாம்செய்ய மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியமும் அரைகுறையாகாமல் பூர்த்தியாகச் செய்து முடிப்பவரென்பதற்குச் சாக்ஷியாக இவ்விஷயத்தைப்பற்றின வேலை முழுதும் இவர் தம்கையாலேயே சொந்தமாகச் செய்திருக்கும் சங்கதியை எடுத்துச்சொல்லலாகும். முத்தி ரைகளைத்தாமே சேகரித்து அவற்றைப் புத்த கங்களில் தாமே பொட்டி அவற்றைப்பற்றின விவரங்கள் யாவும் விசதமாய் விசாரித்துத் தெரிந்துகொண்டிருக்கின்றனர். இன்னொரு விஷயம் இவருக்குப் பிரியமானது குதிரை யேறிச் சவாரி செய்தலும் கால் நடையாக நடந்துலாவுதலுமாம். சந்தரிங்காமில் இருக் கும்பொழுது காரியத்தொந்தரவால் மனங் கொள்ளளவு இசையாவிடினும் போதுமான சௌகரியங்கள் உண்டு.

இவர் இலண்டன் நகரில் வந்திருக்கும் பொழுது பூர்வம் விக்டோரியா மகாராணிய வர்களது 'பெரியதாயார்' வசித்துவந்ததாகிய 'மார்க்குஹௌஸ்' என்னும் அரண்மனையில் தங்கியிருப்பது வழக்கம். இவரோடு அடுத் துப்பழகினவர்கள் அனைவர்க்கும் இவர் இங்கி லீஷ் ஜாதியாருக் குரிய சிறந்த மேலான குணங்களையுடையவர் என்பது நன்குதெரிய வரும். இவர் கபடமற்றவரும், உதாரகுண முடையவரும், சோம்பில்லாதவரும், முறை வழுவாதவரும்! வேடிக்கைப்பேச்சில் இச்சை யுள்ளவரும், தயாளகுணமுள்ளவரும், தம்மை அடுப்பவர்களைத் தம் நெறியில் செலுத்தவல்ல வரும் ஆவார். இவர் ■னுமியாய் இருந்த காலத்தில் அநேகருக்குத் தமது தைரியத்தினு லும் நேர் நடக்கையினுலும் மனந்தளர்ச்சி நீக்கி உதவிசெய்திருக்கின்றனர். இவர் கடற் படையில் சேர்ந்து உத்தியோகம் செய்து வந்தகாலத்தில் தமக்கிட்ட வேலையைத் தட்டி விடாமல் முயன்று செய்தவரென்று மற்ற உத் தியோகஸ்தர்களெல்லாரும் இன்றும் மெய்ச் சிசொல்வார்கள். அக்காலத்தில் ஆரோ நவாபு ஒருவர் அரசியின் பேரப்பிள்ளை கப்ப லில் வேலையாயிருப்பதைக் கண்டுபோக வேண்டுமென்று வந்திருந்ததாகவும், அவ்வி டத்தில் தம்மை இன்னாரென்று உருவம் தெரி யாதபடி கரியும் புழுதியும் மூடியிருக்கக்கண்டு அவர் அடையாளம் கண்டுபிடிக்கமாட்டாமல் திகைத்துப்போனரென்றும் இளவரசர் தாமே வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பார். அப் போது இவர் நிலக்கரி எடுக்கும் ஆட்களைச் செலுத்திக்கொண்டிருந்ததனுல் தாமே கரியை வாரி எடுத்தவர்போல உடம்பெல்லாம் புழுதி யும் கரியும் படிந்திருந்ததனுல வந்த நவாபுக்கு அடையாளம் தெரியாமல் போனது ஆச்சரிய மல்ல.

இவர் மானுமிகளால் நேசிக்கப்பட்டதுபோ லவே இங்கிலீஷ் ஜனங்களில் ஒவ்வொருவரா லும் விரும்பி நேசிக்கப்படுகின்றனர். இவர் சபைகளில் நின்று பேசும்போது கணீரென்று தெளிவாகவும், தைரியமாகவும், மனசில் உள் ளதைக் கபடமில்லாமல் வெளியிட்டுச் சபை யோர்கேட்டு ஆனந்திக்கும்படிப் பேசுவார். இவர் பேச்சைக்கேட்கும்போது இவர் நன்று கப் படித்தவரென்றும் லோகவியவகாரங்க ளில் நிரம்பப் பிரக்ஞையுள்ளவரென்றும் புலப் படும். இவருக்கு வேல்ஸ் இளவரசென்னும் தம் பிதாவின்பட்டம் இப்பொழுது அளிக்கப் பட்டிருக்கிறது. இவர் சமீபகாலத்திலே அங்கி லேய மகாராஜ்யத்தைச்சுற்றிப் பிரயாணம் செய்து திரும்பி வந்துளார்.

* Philately or Stamp Collecting.

## Harischandra—the Immaculate King of Ayodhya. (A character sketch.)

## அரிச்சந்திர மஹாராஜாவின் குணாதி சயங்கள்.

ஒவ்வொரு தேசத்தாருக்கும் ஒவ்வொரு மதத்தாருக்கும், அவர்களால் எவ்வளவு அடையக்கூடாதபடி உயர்ந்திருப்பினும், உண்மை, நீதி, வண்மை, பொருமை, வீரம் முதலான தர்மங்களுக்கு மேற்கோளாக ஒன்று ஏற்பட்டிருத்தல் அவசியமாகும், மற்றத் தேசத்தார்கள் வேறு என்னென்ன தர்மங்களுக்கு என்னென்ன மேற்கோள்களைப் பெற்றிருப்பினும் இந்துக்களாகிய நாம் அரிச்சந்திரனென்னும் இம்மகா புருஷனிடத்துப்பெற்றிருத்தல்போலச் சத்தியத்துக்கு மேற்கோளாக இவ்வளவு உத்கிருஷ்டமான தொன்றைப் பெற்றிலர் என்பது நிச்சயம். நமக்குட்டானேயும் தருமபுத்திரர் தசரதர் முதலான அநேகர்கள் சத்தியத்திற் சிறந்தவர்களாகக் கூறப்படினும், அவர்களும் இவ்வரிச்சந்திரனுக்கு நிகராகார்கள் என்பது நிச்சயம்.

அரிச்சந்திர மகராஜாவின் கதையை நம் தேயத்தில் ஆபாலவிருத்தம் அறியாதவர் ஒருவருமில்லை. வாசனைத் திரவியங்களின் மணமும் பெருமையும் அவற்றைச் சதைத்தும், இடித்தும், நறுக்கியும், பிழிந்தும், அறைத்தும், புகைத்தும், வெளிப்படுத்தப் படுதல்போல, அரிச்சந்திர மஹாராஜாவின் வண்மை, வாய்மை, பொறுமை, அறநெறியின் வழுவாமை முதலிய உயர்ந்த குணங்களெல்லாம் விசுவாமித்திரமுனிவன் கொடுமையினாலன்றி எவ்வாறு வெளிப்படக்கூடும்? வசிஷ்டமுனிவன் இந்திர சபையில்,

"பாருக்கொருவன் பரதார சகோதரன் வெம்
போருக்கொருவன் புகழுக்குமறைப் பொருட்கும்
நேருக்கும் வீடா மனுநூனெறிக்கும் பொறைக்கும்
ஆருக்குமிக்கா னரிச்சந்திரனுக மென்பான்."

"அரிச்சந்திர மஹாராஜாவுக்குச் சமானம் உலகில் வேறுண்டோ? பரதார சகோதரனாய், போரில் ஒப்பற்ற வீரனாய், கீர்த்தியிலும், வேதங்களின் உண்மைப்பொருளை உணர்தலிலும், நேர்வழி நடத்தலிலும், அழிவில்லாத மநுதர்ம சாஸ்திரத்திற் கூறிய சன்மார்க்கத்திற் செல்லுதலிலும், பொறுமையிலும் எல்லாருக்கும் உயர்ந்தவனாய், அரிச்சந்திரனைப்போலே ஒருவன் உண்டோ?" என்று அவனது குணங்களைச் சிறப்பித்துக் கூறியபோது, கௌசிக முனிவர் தமக்கு அவ்வரசனோடு யாதும் பகையும் வெறுப்பும் இயற்கையில் இல்லையாயினும் அவ்வசிஷ்டமுனிவன் மேலுள்ள ஆக்குரோசத்தால், அம்முனிவனை நோக்கி,

"வெய்யன் பதகன் பரதாரவிருப்பன் வீணன்
பொய்யன் னிறையும் பொறையுஞ்சிறிதும்மில்புல்ல
கையன் கபடன் கயவன்றனை நல்லனென்றிவ் [ன்
வையன்றிரு முன்னுரைத்தாயி தென்னுக வென்
றான்."

"அந்தோ! உனக்கேன் இவ்வளவு இடும்பு? மகா கொடியவனும், பாதகங்களைச் செய்பவனும், பரதாரதனும், பொய்யனும், நிறையும் பொறுமையும் சிறிதுமில்லாதவனும், அற்ப குணங்களையுடையவனும், வஞ்சகனும், கபடமுள்ளவனும், கீழ்மகனுமாகிய இவனை மகா உத்கிருஷ்ட குணங்களையுடைய யோக்கியனென்றிவ் விந்திரசபையில் சொன்னாயே. இது உனக்கு அடுக்குமா?" என்றனன் இதனால் இருவர்க்கும் விவாதம் மேற்பட்டு, 'எருதும் எருதும் சண்டையிட இளங்கன்றின் கால் முறிந்ததாம்' என்னும் உலக வழக்கத்துக்கேற்ப, ஒருபாவமும் அறியாத அரிச்சந்திரனுக்கு நினைத்தற்கரிய கொடுந்துயர்களை அனுபவிக்கவேண்டி வந்தது. இவ்வாறு வசிஷ்டனோடு கலகித்துக் கொடிய பிரதிஜ்ஞைகளைச் செய்துகொண்ட விசுவாமித்திரன், மனிதர்க்குத் தனமூலமே சமஸ்த கஷ்டங்களும் உண்டாதலை நன்குணர்ந்தவனாதலாலே, அரிச்சந்திரனை அடுத்து நினைத்தற்கரிய பெரும்பொருளை யாகார்த்தமாக வேண்டுமென்று யாசகம் கேட்க, இடையெழுவள்ளலில் ஒருவனாகிய அரிச்சந்திரன் இல்லையென்று மறுப்பானோ?



கேட்டபடியே உகந்து கொடுத்தனன். மேருமலையைக் கொண்டுவந்து நிறுத்தினாலும் போகாத அவ்வளவு பெருநிதியை அரசன் எவ்வாறு கொடுக்க வல்லனாயினனோ? இவ்வளவு அளவற்ற நிதியைப் பெறவேண்டுமாயின் இராஜ்யம் எவ்வளவோ சுபிக்ஷமாகிச் சண்டை சச்சரவுகள் இன்றிச் சுகப்பட்டிருந்தாலொழிய முடியாது இதனாலே அரசனது செங்கோல் முறைமையும் நன்மையும் தெரிந்து கொள்ளற்பாலது. இப்பொருளை அரசனிடத்தே வைத்துச்சென்ற விசுவாமித்திரனுக்கு அரசனைத் தன்வசப்படுத்த முதல் முதல் ஓர் அவகாசம் கிடைத்தது.

'சண்டைக்கெது பிடி பாடிபிடி' யென்பதுபோல வலிவுச்சண்டைக்குப் புறப்பட்ட விசுவாமித்திரன் ஒரு தந்திரம் பலியாமையால் 'இனி இவனைக் கெடுத்த ருபாயம் இதுவே' யென்று கருதி, அநேக வனவிலங்குகளைவிட்டு சுவர்க்க துல்யமான நாட்டை அழிக்கும்படிச் செய்தனன். அரசன் கோபத்தைக் கிளப்ப என்னென்னவழியுண்டோ அவ்வளவும் செய்தனன்.

அரசன் சிற்சிலகாலங்களில் முனிவன் கோபத்துக்குத் தாழ்ந்து போதலையாராயின், "ஆ ஆ! இவ்வளவும் கோபத்தை வென்ற குணநிதி உலகத்தில் இருப்பார்களோ?" என்று வியக்கவேண்டிவரும். முனிவன் பெண்கள் அரசனைத் தகாதவார்த்தைகள் சொல்லி இகழ்ந்ததனாலே அவன் அவர்களைத் தண்டித்துத் துரத்திவிட அதை அறிந்த விசுவாமித்திரன்,

ரகலத்திடு மெழிற்குசை விதிர்ப்புறவிணிக்கழல் வருந்தப்
வுபொற்றடமலர்ச்சடை விரிந்தகல் பெரும்படியினலைச்
ர்ம்கப்பரிதவித் தபயமிட்டலறிடச் சுவணவெற்பாற்
மெரித்திடவரும் புனித ஞெத்தணிமலர்ப்பொய்கைபுக்கான்."

ன் கையிற்கொண்ட தருப்பையும் நடுங்க ம், இரண்டு கால்களும் கோவவும், சடைவிரி கோலமாய்ச் செல்லுகின்ற பெரிய தன்னுருவத்தைக் காணுதலால் தேவர்களும் மிக அஞ்சி வருந்தி அபயம் வேண்டிக்கதறவும், திரிபுரசங்காரம் செய்யச் செல்லும் சிவபிரான்போலக் கோபாவேசம் கொண்டவனாய் பொய்கைக்கரையில் அரசனை அடைந்தபோது, அரசன் மிகவும் இனிய வசனங்களைச் சொல்லிக் கால்களைப் பிடித்துக்கொள்ளவும், அக்கொடிய முனிவன் கோபம்தணியாமல் மேன்மேலும் பொங்கி அரசனை முடிதெறித்து வீழும்படிச் சிரத்தில் உதைத்தான். ஆகா! அப்போது அரசன் சற்றேனும் மனம் கொதித்தானோ? இல்லை முனிவனது மலர்க்கழல் உதைத்த வேகத்தால் கன்றிவருந்துமோ என்று பரிதபித்து அப்பாதத்தைத் தன் செங்கரங்களால் வருடி வருத்தத்தை நீக்கலுற்றான். ஒருவன் அந்தணனென்றும் மற்றவன் க்ஷத்திரியன் என்றும் பெயர்பெற்றார்களே; குணவிசேஷத்தால் எவ்வளவு மாறுபாடுடையார்! ஒருவன் கோபமே உருவெடுத்தது போலவும் மற்றவன் சாந்தமே உருவெடுத்தது போலவும் அன்றோ தோன்றுகின்றனர்? அந்தணனாகிய முனிவனுக்கு நிரபராதியான அரசன்மேல் இவ்வளவு கடுங்கோபம் உண்டாதற்குக் காரணம் யாதோ? தான் தயையில்லாமல் வனவிலங்குகளைவிட்டு அரசன் ராஜ்யத்தை அழித்ததும், பன்றியை யேவி அரசன் சேனைகளை மடித்ததும், பெண்களென்னும் சண்டாளிகளை விட்டு அரசனை நிந்திக்கச்செய்ததும் முறைமையாகும்! அரசன் அவற்றிற்கு மாறுசெய்து குடிகளைக் காத்ததும் தன் பெருமையைக் காத்ததும் பொறுத்தற்கரிய குற்றங்களாயின! இது என்ன ஆச்சரியம்! இங்கு அரசனுடைய சாந்தகுணத்தை வியப்பதோ? அல்லது முனிவனுடைய அகங்காரத்தையும் ஆற்றலையும் வியப்பதோ? ஆயினும், முனிவனது தபோபலத்துக்கும் சாபத்துக்கும் பயந்து அச்சத்தால் அரசன் அவனை எதிர்க்காமல் தழுவிக்கட்டிச் சமாதானப்படுத்தினனென் றெண்ணத்தகுமோ? தகாது. ஏனெனில் முனிவன் எவ்வளவு

அதட்டி உருட்டி வெருட்டி மிரட்டிப் 'பிடிசாபம்' என்று தன் சக்தியை யாவுஞ்சக்கியமும் காட்டினபோதிலும், அரசன் அதர்மமான காரியத்தைச் செய்தற்குச் சிறிதும் உடன்பட்டானில்லை. தான் பெற்றுக்கொண்ட செல்வங்கள் அனைத்தையும், அரசையும் திரும்ப அளிப்பதாகச் சொல்லித், தன் புத்திரிகளை விவாகம் செய்துகொள்ள வேண்டியபோது, அரசன் அச்சொல்லுக்கிணங்காமல் எவ்வளவு உறுதிபெற்று பேசுகின்றான்? முனிவனுக்கு அஞ்சினவனாகவோ தோன்றுவான்? அவன் கொடுமைகளைத் திரணமாக மதித்தவன்போலல்லவோ தோன்றுவான்.

அரசன் முனிவனுக்கு நாடு நகர் முதலான செல்வங்கள் எல்லாவற்றையும் ஒப்பித்துவிட்டு அவன்பால் விடைகொண்டு புறப்படுங்காலத்தில் முனிவனை நோக்கித் தன் மந்திரிமார்களைக் கோபியாது பாதுகாக்கும்படிக் கேட்டுக்கொண்டவிவரம் எவ்வளவு இனிமையானது.

"கையினுற் பிடித் தமைச்சனைக்காட்டி மந்திரிமார்கள்
மையினுக்கினைமறுக்கினு மற்றுமோர்குற்றஞ்
செய்யினும் பொறுத்தருள் செய்வாய்செல்கதியளித்த
ஐயனேயுனதடைக்கல மிவனென்றுரைத்தான்."

இப்படியன்றோ அரசனும் அமைச்சரும் ஒருவரையொருவர் நேசித்திருத்தல்வேண்டும். இவ்வாறு தம்மை நேசித்தலாலே அரசனுக்கு இடையூறு வந்தகாலத்தில்,

"அற்றகுளத்தில் அருநீர்ப்பறவைபோல்
உற்றுழித்தீர்வாருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போலவே
ஒட்டியுறுவார் உறவு."

என்றதற்கேற்பச் சத்தியகீர்த்தியாகிய உத்தமமந்திரி அரசன் என்ன சொல்லியும் கேளாமல் அவனை நிழல்போலத் தொடர்ந்துசென்று அவனுக்குவந்த இடுக்கண்களையெல்லாம் தானும் அவனோடொக்க மனமகிழ்ந்து அநுபவித்துவந்ததும் ஆச்சரியமாமோ? அரசன் நாட்டைவிட்டுப் போனபோது மனைவியாகிய சந்திரமதியும் மைந்தனாகிய லோகிதாசனும் பின்னிற்பார்களோ? உடன்தொடர்ந்து செல்வாராயினர். இன்னாருக்கு இன்னாரென்று முன்னமே முடிந்திருக்குமென்றும், கல்யாணங்கள் கடவுளின் கருத்தின்படி முடிவன என்றும் நம்மவர்கள் தாமேயன்றி மேற்றிசையோர்களும் இக்கொள்கையைக் கொண்டிருப்பினும், இதன் உண்மையை அரிச்சந்திரன் சந்திரமதியென்னும் இருவர்பாலும் அன்றோ கண்கூடாகக்காணப்பெற்றோம்? அரிச்சந்திரனால் அணிதற்குரிய மங்கலசூத்திரம் சந்திரமதியின் கழுத்தில் பிறந்தபொழுதே தெய்வச்செயலால் முடியப்பட்டிருந்தது. அதைப் பின்பு அவன் அவள்கழுத்திற் கண்டுகொண்டானேயன்றிப் புதிதாக மனைவியென்று அணிந்தானில்லையே. ஆகலின் இவர் இருவருக்கும் உண்டாகிய காதலையும் கற்பின் உறுதியையும் பெருமையையும் எடுத்துரைக்கலாவதோ? சந்திரமதி காட்டுத்தீயைக் கற்புத்தீயால் அவித்தசெய்கை கேவலம் கற்பனையும் கட்டுக்கதையுமாகக் கருதலாவதோ? ஒருபோதும் ஆகாது. நிற்க, அரசனும், சந்திரமதியும், குழந்தை லோகிதாசனும் வழியில் விசுவாமித்திரன் தனது மாயையினாலும் கொடுமையினாலும் கற்பித்துவிடுத்த நினைத்தற்கரிய ஹிம்சைகளாலும், இயற்கையாகவே வழியிற் குறுக்கிட்ட நீரும் நிழலுமற்ற பாலைவனத்தின் கொடுமையாலும், தாருக்காரனாகிய தயையில்லாத நக்ஷத்திரய்யன்செய்த குரூரங்களாலும் அடைந்த அவஸ்தைகளையும் துன்பங்களையும் இங்கு விவரிக்கத்தேவையில்லை. கடைசியில் ஒருவாறு காசியாநகரத்தை அடைந்தார்கள். ஆயினும் முனிவனுக்குக் கொடுக்கவேண்டிய கனவிலும் கேட்டில்லாத பெரும்பொருளை எவ்வாறு சம்பாதிப்பது? இப்போதன்றோ சந்திரமதியின் அன்பும் குணமும் அருமையும் பெருமையும் காணப்படுகின்றன? அரசன் ஒன்றும் தோன்றாமல் குழம்பிக்கொண்டிருக்கையில், அவள் அரசனைத்தேற்றித் தன்னை



விற்று முனிவன் கடனைத்தீர்த்துச் சத்தியந்தைக்காக்கும்படிப் போதித்து, அவன் அதற்குடன்படானாயினும் தக்ககாரணங்களைச் சொல்லி உடன்படுத்தினள். தெய்வாதீனத்தால் சந்திரமதியை வாங்குதற்கு, மகாகடினசித்தமும் கொடுரகுணமுமுடையோனாயினும் ஓர் அந்தணன் கிடைத்தனன். அவன் மனைவியோ அவனிலும் பன்மடங்கு கொடியவள். ஆயினும் என்ன? அரசன் பொருளைப்பெற்றுக் கடனைத்தீர்த்துச் சத்தியத்தைக் காக்க வல்லனாயினன். இவ்வாறு முனிவன் கடனைத்தீர்த்தபின்னும் அரிச்சந்திரனுக்கு பாதை ஒழிந்ததில்லை. நக்ஷத்திரய்யன் என்னும் தாருக்காரன் தான் ஓடியாடி அவர்களோடு உழன்றுபட்ட சிரமங்களுக்குப் பரிகாரமாகப் பெரும்பொருளைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கத் தருமமே ஜயமென்றும் சத்தியமே துணையென்றும் நம்பியிருந்த சாந்தரூபியாகிய அரசன் தன்னையும் ஓர் புலையனுக்கு அடிமையாகவிற்று அப்பொருளைக் கொடுத்தொழித்தனன்.

சந்திரமதி தன் உயிரினும் சிறந்த மணகமன் பொருட்டும் சத்தியத்தைக் காக்கவேண்டியும் அனுபவித்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அளவும் உண்டோ? அக்கினி தேவனே உருவுகொண்டுவந்த அதிக்குரூரனாகிய அந்தணனுக்குத் தானும் தன் மகனும் அடிமையாகிப்பட்ட துன்பங்களை இந்தச் சகமெல்லாம் இன்றைக்கும் நாடகங்களில் ஆடிப்பாடி அழுது ஆற்றி அறிவிக்கக் காணுமன்றோ? அவள் அங்கு நெற்றிவியர்வை நிலத்திற் சொட்டக் கடினமான புன்தொழில்களைச் செய்து காலம் போக்கினதும் போதாமல், ஐயோ! 'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோல விதியின் கொடுமையோ விசுவாமித்திரன் மாயையோ தன் அருமை மகனையும் இழக்கவந்ததே! கோடித்துக்கம் குழந்தை முகத்தாலாறும் என்றபடி தன் செல்வன் முகத்தைக்கண்டு தன் துயரமெல்லாம் மறந்திருந்த அவளுக்குண்டான துரதிர்ஷ்டத்தை என்னென்று சொல்லுவது? இத்தனையும் போதாதென்று அர்த்தராத்திரி வேளையில் தன் மகனைத் தானே ஒன்றியாகக் கொடிய காட்டிற்சென்று உழன்று தேடிச் சேமம் செய்யவும் வேண்டிவந்ததே. அதுவும் போதாமல் தன் மணமகன் மணிமுடிசூடிச் செங்கோல்பிடித்து அமைச்சரும் அரசரும் சூழ இரத்தினசிங்காசனத்திருந்து அரசு செலுத்திய வைபவத்தைக்கண்ட கண்களால் இப்போது பறையனுக்கடிமையாய்ச் சுடலையில் இருந்து பிணங்கள் காத்திருத்தலைப்பார்க்கவும் ஆயிற்றே. அவ்வளவும் போதாவோ? ஆ! விதியின் கொடுமைதான் என்ன! அரசன் மதலையைக்கொன்றதாகக் கொலைக்குற்றமும் சாட்டப்பட்டுத் தன் உயிர்த்தலைவன் கையிலே தண்டம் பெறும்படியும் நேர்ந்ததே. அரசனுக்காயினும் சந்திரமதிக்காயினும் விதியினாலேனும், விசுவாமித்திரனாலேனும், வேறு எவர்களாலேனும் இழைக்கக்கூடிய கேடும் துயரும் அதன்மேல் யாதுள்ளது? அச்சமயத்தே விசுவாமித்திர முனிவன் இதுதான் தருணமென்றெண்ணி அரசனை அடுத்து "ஓ வேந்த, ஒரு பொய் சொன்னாயாயின் உன் துன்பங்கள் யாவையும் ஒருங்கே நீக்கி உன்னை முன்னினும் பன்மடங்கு உயர் நிலையில் நிறுத்துவேன்" என்ன அதற்கு மறுமொழியாக அரசன் அவனைநோக்கிக் கூறியவார்த்தைகள் எவ்வளவு அதிசயிக்கத்தக்கவை!

"சேய்மையண்மையினுயிர்க் கொருதுணையெனச் சிறந்த
வாய்மையாலகம்தூய்மையாம்மற்றிலம்புறத்தைத்
தூய்மை செய்வதும் நீரலாற் சொல்லின் வேறுளதோ
நோய்மைசெய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி."

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனமினி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலே மென்றான்
மதியிழந்து தன்வாயிழந்தருந்தவன் மறைந்தான்."

முனிவன் வெட்கமுற்று நீங்கவும் திரிமூர்த்திகளும் தோன்றி முனிவனை இகழ்ந்து அரச-

ளைப்புகழ்ந்து, மகனையுயிர்ப்பித்து மங்கையையும் சிறப்பித்து, வேண்டும் வரங்களையும் கொடுத்து அவர்களை முன்பதவியில் இருத்திப் போனார்கள். இதுவே அரிச்சந்திரன் வரலாறு. நாம் எவ்விதமாற்றங்களை யடையினும், பாஷையை இழக்கினும், ஆசாரங்களைத் துறக்கினும், மதத்தையே கைவிடநேரினும் இவ்வரசன் பெயரையும் சரித்திரத்தையும் இழக்கலாவதோ? அன்று, அன்று ஒருநாளும் இழக்கலாவதன்று. என்றென்றைக்கும் பிரியாமல் இப்பெயரும் சரிதமும் நம்முடன் கூடவே தொடர்ந்துநிற்கும்.

முற்றும்.

THE RAMAYANA.

## இராமாயணத்தின் மகிமை.

காசிநகரத்தில் பிரசுரிக்கப்படும் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் பத்திரிகை (The Central Hindu College Magazine) யில், ஒருவர் இராமாயணத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

இந்த இதிஹாசத்தைமுதன் முதற் பாடின போது, அதன் இனிமையைக் கேட்டுப் பிரமதேவர் தாமும் பரமானந்தத்தை யடைந்தார். தேவர்களும், கணங்களும், பக்ஷிகள், சர்ப்பங்கள் முதலான சகலப்பிராணிகளும், மனிதரும் முனிவர்களும் இதனைக் கேட்டபோது, "ஆ! ஆ! எவ்வளவு மனோஹரமான காவியம் இது! இதனை நாங்கள் எப்போதும் தெவிட்டாது மகிழ்ந்து கேட்போமன்றோ? ஆ! எவ்வளவு இனிமையானது! உலகவியற்கைக்கெவ்வளவு ஒத்துக் கூறப்பட்டுள்ளது! இந்த மஹா சரித்திரம் இந்நூலின்கண் நமக்கெவ்வளவு தெளிவாக விளங்குகின்றது! இச்சரிதை எம் கண்முன்னே நிகழ்வதுபோலக் காண்கின்றதன்றோ?" என்று பலவாறு துதித்துக்கொண்டாடினார்கள்.

"இப்புத்தகத்தை ஆதியோடந்தமாகப்படிக்கப் பெற்றவர்கள் பாக்கியமே பாக்கியம். இதில் பாதியேனும் படித்தவர்களும் பாக்கியசாலிகளே. இது பிராமணர்களுக்கு ஞானமும், க்ஷத்திரியர்களுக்குச் சௌரியமும், வைசியர்களுக்குச் செல்வமும் கொடுக்கும். இதனைச் சண்டாளன் ஒருவன் கேட்பானாயின் அவன் குணமும் உத்கிருஷ்டமாகும். இராமாயணத்தைப் படிப்பவர்கள் சகல பாவத்தினின்றும் நீங்கி விசுத்தராவார்கள்."

கடைசியிற்சொன்ன இந்த வார்த்தையைக் கேவலம் பிரமைகொண்டு கூறிய கற்பனையென்று கருதக்கூடாது. இப்பெரிய காவியவெள்ளமானது நமது தீராப்பாவங்களையெல்லாம் கழுவி நீக்கி நிர்மலமாக்குகின்றது. நெடுநாளாகச் சுமந்த கொடுமலங்களையெல்லாம் இது கழுவி நம்மை விசுத்தமாக்குகின்றது. எவனொருவனுக்கு மனம் கசியாமல் வறண்டிருக்கின்றதோ அவனிந்த இராமாயணாமிர்தத்தைப் பருகக்கடவன். எவனொருவன் தன்னருமைச் சுற்றங்களையிழந்து சோகத்தில் மூழ்கியிருக்கின்றானோ, அவன் இதில் நின்றும் இனிய ஆறுதலும் சுகமும் அடையக் கடவான். எவனொருவன் மிகவும் உழைத்துக் களைத்து மெலிந்திருக்கின்றானோ, அவன் இவ்வமுதத்தில் பெருமுறடா யொருமுறடு பானம்பண்ணி இளமையும் ஆயுளும் பெறுவானாக.

மனிதன் எப்போதும் ஓடியுழைத்துக்கொண்டேயிருத்தல் முடியாதல்லவா? ஒவ்வொரு வருஷமும் அவன் வேலை யோய்ந்து மூச்சு வாங்கி, என்றென்றைக்கும் மாறாத தண்மையும் இனிமையுமுடையவைகளாய்ச் சுரந்து பெருகும் பெரிய ஊற்றுகளில் பருகி, தாகநிவர்த்திசெய்து இளைப்பை ஆற்றிக்கொள்ளல் வேண்டுமன்றோ? ஆயினும், இவ்வூறுகள் ஆரியர்களுக்குப் பிறப்பிடமாகிய இவ்விந்து தேசத்தில் அல்லாது வேறெங்கு நாம் பெறக்கூடியவை? ஒருபுறத்தில் சிந்துவும் கங்கையும், மறுபுறத்தில் சுவர்க்க நதிகளுக்குத் துல்யமாகப் பாவிக்கப்பட்ட பாரசீகநதிகளும் தோன்றிப்



பிரவாஹிக்கின்ற பரிசுத்தமான பர்வதங்களில் அல்லாமல் வேறெங்கே அகப்படும்?

மேற்றிசையில் ஒவ்வொன்றும் குறுகிக் குன்றியுளது. கிரீஸ் தேசமோ அங்கே எனக்கு மூச்சுவிடத்தானும் முடியாதபடி அவ்வளவு சிறிதாயுள்ளது. யூதேயா தேசத்திலோ தாகத்தால் தவிக்கும்படி அவ்வளவு வறண்டுள்ளது. கிழக்கு முகமாய் நின்று ஆசியா கண்டத்தின் உன்னதப்பிரதேசத்தை நோக்கினாலோ, அங்கு ஒருமஹாப் பிரபந்தத்தைக் காண்கின்றேன். அது சூரிய ஜோதியினாலே விளங்குகின்ற இந்து சமுத்திரம்போல விஸ்தீரணமானது. தெய்வகானம்போல் முற்றும் இனியதாய் எள்ளளவேனும் ஒருஸ்வரத்துக்கொருஸ்வரம் மாறுபடாததாயுள்ளது.

அதிலெங்கும் இனிமையான அமைதி பாவியிருக்கின்றது. அதில் வருணிக்கப்படும் யுத்தங்களுக்கிடையே கூட அளவிடக் கூடாத இனிமை யொன்று காண்கின்றோம். சர்வஜீவனிடத்தும் சமானமாகப் பரவியிருக்கும் எல்லையற்ற சோதரவாற்சல்யத்தை அங்குக் காண்கின்றோம். அந்நூலில், அடியும் கரையுமில்லாதாழ்ந்தகன்ற சமுத்திரம்போல இரக்கமும் கருணையும் நிரம்பியிருக்கவும் காண்கின்றோம். நான் விரும்பித்தேடிய நன்மையைத் தரும் புஸ்தகத்தை இங்குதான் கண்டேன். ஓ மஹத்தான காவியமே! ஓக்ஷீராப்தியே! நான் உன்னிடைக்குதித்து மூழ்கியிருக்கவும் பெறுவேனோ?

இக்காவியம் இப்போது தான் சிலநாளைக்கு முன்னே முழுதும் இங்கிலீஷில் மொழிபெயர்க்கப்பட்டது. இது இதுகாறும், மற்றவற்றோடு சம்பந்தமில்லாது தனியே பிரிந்து நிற்கும் ஒரு பாகத்தாலாவது, இதன் கருத்துக்கு முற்றும் மாறாயுள்ளதும் இதனுள் புதிதாகப் புகுத்தப்பட்டதுமான ஒரு விருத்தாந்தத்தாலாவது, மதிக்கப்பட்டுவந்தது. இப்போது இது முற்றும் மொழிபெயர்க்கப்பட்டுத் தன் பூரணமான மகிமையோடும் உண்மையோ[illegible] இதனைக் கடைசியாகச் சேர்த்துத் திரட்டியவர் யாவராயினும் ஆகுக! இது இந்தியாவில் உண்டான நூலேயென்றும், நெடுங்காலத்தின் வினையென்றும், எளிதில் விளங்கும். இந்த மகா காவியத்தை இந்துக்கள் பற்பல பாடலாலும், வாய்மொழியாலும், இரண்டாயிரம் வருஷகாலத்துடே செய்து முடித்திருக்கலாம். அதற்குப்பின் இரண்டாயிரம் வருடகாலமாக அவரது உற்சவங்களிலும் உவக்கும் சமயங்களிலும் ஜனங்களுக்குப் பிரியமாகிய நாடகங்களில் இதன் கதைகள் விவரித்து ஆடப்பட்டிருக்கின்றன.

இதைக் கேவலம் ஒருகாவியமாக மாத்திரமே மதிக்கக்கூடாது. அநேக மதசம்பந்தமான இதிஹாசங்களோடு, இயற்கைப் பொருள்களையும், கற்பனைப்பொருள்களையும், அழகிய தலக்காட்சிகளையும், புல் பூண்டு முதலிய தாபரவர்க்கங்களையும், பிராணிகளையும், வசந்தாதி இருது பேதங்களில் இனிமையாகத் தோற்றும் மாற்றங்களையும், விவரிக்கின்ற ஒரு பெரிய மதக்கிரந்தம் என்று மதித்தல்வேண்டும். இத்தன்மையான இப்புத்தகத்தை 'இலியத்' என்னும் கிரேக்க காவியத்தை மதித்தல்போலவும் மதிக்கக்கூடாது. நூற்பெருமை சிறுமைகளை ஆராய்ந்து மதிக்கவல்ல அறிவிற்சிறந்த பண்டிதர்களாயுலகில் தோன்றிய அனைவரினும் சிறந்தோர்களாகிய கிரேக்கவியாக்கியாதாக்களாலே அப்புத்தகம் திருத்திக் குறைபாடுகள் நீக்கப்பெற்றதுபோல இது பெற்றதில்லை. யாதொரு மாற்றமுமின்றி முதலில் தோன்றியபடியே நமக்கிக் காவியம் வந்துள்ளது. இதில் பற்பலவிடங்களிலும் ஓரே விஷயத்தைத் திரும்பத் திரும்பப் பலகாற் கூறியிருத்தலாலும், இதன் சிலவர்ணனைகள் பலதடவை ஒன்றுபோலவே வருதலினாலும் இந்த உண்மை காணப்படும். இவ்வுண்மையை, இன்னும், இதனோடு பற்பல காலங்களில் சேர்க்கப்பட்ட சேர்மானங்களாலும் அறியலாகும். இந்நூலில் இந்துதேசத்தின் பாலிய காலத்தைச்சார்ந்த அநேகபழமையான விருத்தாந்தங்களையும் தற்காலத்தைச்சார்ந்த நவீனவிருத்

தாந்தங்களையும் காண்பதேயன்றி, இதன் சில பாகங்களில், இதாவியர் பாஷையோ இது என்று ஆசங்கிக்கு மாறு அவ்வளவு மனோகரமான இசைநயத்தையும் காண்கின்றோம்.

மேற்குத்திசையாருடைய காவிய நூல்களைப்போல அவ்வளவு சாதுர்யமாக இதன் விஷயங்கள் ஒழுங்குபடுத்தி வரிசையாக அடுக்கப்படவில்லை. இக்காரியத்தில் ஒருவரும் எற்படவில்லை. இதன் விருத்தாந்தங்கள் வெவ்வேறாகப் பிரிந்திருப்பினும், இதன் பற்பல வருணனைகளாலும் இராகங்களாலும் இதற்கு ஒரு விதமான ஒற்றுமை உண்டாதல்பற்றி அதுவே போதுமென்றிருந்துவிட்டனர். இம்மகா காவியம் இதனுள் வருணிக்கப்பட்ட மலைகளையும் வனங்களையுமேபோலும். ஓங்கிவளர்ந்த மகா விருக்ஷங்களுக்கடியில், அனேக சிறிய விருக்ஷங்களும் அளவற்ற செடிகொடிகளும் வளர்ந்துதழைந்து, அம்மகா விருக்ஷங்களால் யாதும் ஊறடையா திருப்பதே யன்றி அம்மரங்களால் மேலிருந்து தம்மலர்களை மாரிபோலப் பொழியப்பெறுவதும் இயற்கையேயன்றோ? அம்மரமும் செடியும் கொடிகளும் எவ்வளவு களகளவென்று களையும் எழிலும் பெற்றிருப்பன! அவற்றின் மேலிடத்தில் ஜாதியிலும் நிறத்திலும் நூற்றுக் கணக்காக வேறுபட்ட எண்ணிறந்த பக்ஷிகள் பறந்து களிப்பன. குரங்குகள் கிளைக்குக் கிளை தாவி யூசலாடுவன. அடியில் மான்பேடுகள் இனியபார்வையோடு சஞ்சரிப்பன. இக்காட்சி முற்றிலும் ஒழுங்கற்ற பெருங்குழப்பமாகுமோ? ஒருபோதும் ஆகாதல்லவா? வேற்றுமைகளெல்லாம் ஒத்தொருமித்து மகாமனோகரமான அழகைப் பெறுமன்றோ? மாலைக்காலத்தில் சூரியன், தனது விரிந்தஜோதியை கங்கையுட் புகுந்து தணித்துக்கொள்ளும் தருணத்தில், மற்ற ஒலிகளெல்லாம் அடங்கி அமரிக்கையாயிருக்கையில் வனத்தின் ஓரங்களில் இந்த ஜீவகளை முற்றும் காணப்படுமன்றோ? இந்தப்பக்ஷி மிருகங்களின் ஒலிகள் பலவாறாகப் பேதப்படினும் இனிய மாலை வெளிச்சத்தில் ஒன்றுபட்டுறழ்ந்து தோன்றுமன்றோ? அக்காலத்தே பிராணிகள்யாவும் ஒன்றையொன்று நேசித்து ஒருமித்துப் பாடிக்கலந்து களிக்குமன்றோ? அப்போது அப்பற்பலவாய தொனிகள் அனைத்துக்கும் பொதுவான ஓரிசை வெளிப்படுமன்றோ? அதுவே இராமாயணம் என்பது.

## SELECTIONS.

### III. On Gambling.

### சூது.

நள வெண்பா.

1. அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தம்செய்யும் பொய்ச்நதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து.

2. உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.



நைடதம்.

3. ஏலநற் றருமமெய் சிதைக்கும் தெண்டிரை
வேலைமுற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும்
மாலுறுத் திடும்கவ றாடல் மன்னகேள்
தோலிழுக் கரசர்தம் கொள்கைத் தென்பவே.

4. கள்ளுணா விருப்புதல் கழகம் சேர்தல்மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல் ஒன்னலர்க்
கொள்ளரும் ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறி வழுக்கு மென்பவே.

5. ஐயநீ ஆடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கிசைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கின்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்.

6. எள்ளுக சூதினை இகலி வென்றதூவும்
கள்ளமேற் கொடுவலை கரந்து வேட்டுவர்
உள்ளுற வைத்திடும் உணவை ஓர்கிலா
புள்ளின மருந்தின போலும் என்பவே.

வில்லிபுத்தூரார் பாரதம்.

7. அடியும் ஆண்மையும் வலிமையும் சேனையும் அழகும் வென்றியும்தத்தம்
குடியும் மானமும் செல்வமும் பெருமையும் குலமும் இன்பமும்தேசும்
படியும் மாமறை யொழுக்கமும் புகழும்முன் பயின்ற கல்வியும்சேர
மடியு மால்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம்வையார்.

8. குழக ராய்இள மடந்தையர்க் குருகுவோர் குறிப்பிலா மையின்நாளும்
பழகு வார்மிகச் சிந்தைநோய் தாங்களே படுக்குமா றுணராமல்
அழகு போறி வாகவே கொண்டவர் அறத்தொழில் புரியாமல்
கழக மாடவும் பெறுவரோ இதனினும் கள்ளுண வினிதன்றே.

வேறு.

9. மேதகத்தெரி ஞானநூற் புலவரும் வேதநூ லறிந்தோரும்
பாதகத்திலொன் றென்னவே முன்னமே பலபடப் பழித்திட்டார்
தீதகப்படு புன்றொழில் இளைஞரிற் சிந்தனை சிறிதின்றித்
தோதகத்துடன் என்னையோ சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்.

வேறு.

10. மீதெடுத்த வஞ்சராகி வெகுளிசெய்தல் பிறர்பெரும்
கோதெடுத் துரைத்தல்கண்டு கொண்டயிர்த்தல் கொடியவெம்
சூதெடுத்து விழைதல்உற்ற சூள்பிழைத்தல் இன்னவே
தீதெடுத்த நாவின்முன்பு தீயவென்று செப்பினர்.

திருக்குறள்.

11. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்.

12. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

13. பொருள் கொடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கொடுத்
தல்ல லுழப்பிக்கும் சூது.

14. உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

கொன்றைவேந்தன்.

15. சூதும் வாதும் வேதனை செய்யும்.

ஆத்தி சூடி.

16. சூது விரும்பேல்.

---

## சுகுணசுந்தரம்.

### IV.

அவ்வமயத்தில் பிரிவாற்றாமையால் வருந்துகின்ற சுலோசனை தன் விரகத்துன்பத்தை சுந்தரனுக்கறிவுறுத்தி அழைத்துவருவான் ஏவ, பிலத்துட்புக்க ஓர் தூதுவனைப்போல் சூரியன் மேற்றிசைக்கடலில் வீழ்ந்து அஸ்தமனமாயினான். அம்மாலைக்காலத்தில் விருஷபங்களும் பசுக்களும் கழுத்திலணிந்த மணிகள் கணகணவென் றொலிக்க தெருக்களின்வழியாய்ச்சென்று தம் வீடுகளடைந்தன. பறவைகள் இரைகொண்டு குஞ்சுகளைப் போஷிக்க சோலைகளையும் மரப்பொந்துகளையும் அடைந்து கூடுகளிற் புகுந்தன. சிறுவர்களும் சிறுமிகளும் விளையாடுதலொழிந்து மாளிகைகளிற் புகுந்தார்கள். கைத்தொழில் செய்வோர்கள் வேலைகளை நிறுத்தினார்கள். வீடுகள் தெருக்கள் கோபுரங்கள் முதலியவைகளில் தீபங்கள் பிரகாசித்தன. அவ்விளக்குகள் ஆகாயமென்னும் கண்ணாடியில் பிரதிபிம்பித்தாற்போல நக்ஷத்திரங்கள் தோன்றின. சண்பகாவெறி வளர்த்த அக்கினியின் சுவாலைகள் ஆகாயத்திற் பரவினாற்போல் செவ்வானந்தோன்றியது. பொய்கைகளிலுள்ள தாமரை மலர்கள் சுலோசனையின் காமநோய் தணிக்கப்படாமையால் வாட்டமுற்ற தோழிகள் முகத்தை யொத்தன. அல்லிகளுங்குவளைகளும் கிண்கிணிவாயினவாய் மலர்ந்தன. அவைகள் தாயாரையிழந்த குழந்தைகளைப் பாலூட்டிவளர்க்கும் கைத்தாயரைப்போல கமலத்



திலிருந்துவந்த வண்டுகளுக்கு மதுவைக்கொடுத்துக் கொண்டிருந்தன. மல்லிகை முல்லை பன்னீர் பாதிரி மகிழமுதலிய பூக்களின் வாசனைகள் எங்கும்பரவின. சுந்தரன் சுலோசனையோடு மஞ்சனமாடுதற்கு நீர் நிரப்பிய வெள்ளிக்குடத்தைப்போல் வெள்ளியகிரணக்கற்றைகளுடன் சந்திரன் கீழ்த்திசைக் கடலிற் றோன்றினான்.

அப்பொழுது மனோரமை தன் புதல்வியினிடம் வர தன் அன்னையைக்கண்ட சுலோசனை சுந்தரனைத் தான் மணம்புரிவதில் தந்தையின் கருத்தெதுவோவென்று தெரிந்துகொள்ள விருக்கையில் தன் பெண்ணின் மனக்குறிப்பை யறிந்த அரசி தன் புதல்வியை நோக்கி, "அடி என் கண்ணாட்டி! ஏன் நீ யின்றுந் தெளிந்தாயில்லை, நீ கொண்ட நாயகன் நாளை யுதயத்தில் வந்துன்னைக் கைக்கொள்வான், சிந்தையுறற்க, நின் தந்தையின்று நிகழ்ந்தயாவற்றையுங்கேட்டு மனங்களித்து சுந்தரனை மருமகனாகப் பெறுவதில் யாதுங் குற்றங்கூறாது தனதுள்ளக் களிப்பை வெளியிட்டதற் கடையாளமாக மாயாபுரிக்குத் தூதுவிடுத்து நாளை யுதயத்தில் மாயாபுரி அரசனும், சக்கிரவர்த்தியும் உனது நாயகன் தந்தையுமான சுசீல மகாராஜனை உனது திருமணத்திற்கு அழைத்துவரும்படி திட்டஞ்செய்திருக்கின்றார். நீ அஞ்சற்க" என்று தேற்றிச்சென்றாள்.

மனோரமை சென்றபின் சுலோசனை தோழிகளைப்பார்த்து, "பாங்கிகாள்! என் வருத்தத்தைப் போக்க முயல்கின்ற நீங்கள் என்னை நிலாமணிமுற்றத்திற்சேர்மின்கள்," என, தாதிகள் நிலாமணி முற்றத்தில் இரத்தினங்கள் பதித்து பொன்னாலியன்ற பவளக்கால்களையுடைய மஞ்சத்தின்மேல், மயிர் பஞ்சு அன்னத்தின் தூவிகளாற்செய்த மெத்தைகளை யொன்றன்மேலொன்றாயடுக்கி அதன்மேல் காம்பாய்ந்த மெல்லிய பூக்களையும் தளிர்களையும் பரப்பி பனி நீரைத்தெளித்து சுலோசனையைக் கைலாகுகொடுத்து அழைத்துவந்து அதன்மீது சேர்த்தார்கள். சயனத்தில் பரப்பிய இளந்தளிர்களும் மலர்களும் சுலோசனையின் விரகாக்கினியால் வாடிக் கரிந்துபோயின. சுலோசனை தோழிகளைப் பார்த்து, "என்னை நிலாமணிமுற்றத்தில் சேர்மின்கள், என்றதற்கு, மன்மதபாணத்தின்மேற் கிடத்தினீர்களே! உங்களுக்கென்மேலுள்ள அன்புடைமையினாலோ இது செய்தது!" என்று சொல்லிக்கொண்டே மூர்ச்சையாயினாள். அதனைக்கண்ட தோழிகளும் தாதியர்களும் மனநொந்து நந்தலைவி உயிர் துறந்தனளோ வென ஐயுற்று நிற்ப,

'எண்ணியெண்ணி யிறங்குவதென்னுயிர்ப்
புண்ணிகழ்ந்த துயிர்துறந்தாளவள்
வண்ணமென்றுவர் வாய்துடிக்கின்றது
கண்ணிமைத்தனகாணு மென்பார்சிலர்.

'நினைந்து நினைந்து வருந்துவானேன், உள்ளிருந்து சுவாசம் வெளிப்படுகின்றது. அழகிய பவளம் போன்ற உதடுகள் துடிக்கின்றன, கண்கள் இமைக்கின்றன பாருங்கள்' என்றார் சிலர்; சிலர், 'மையணிந்த விசாலமான கண்களிலொழுகு நீரைத் துடையுங்கள், தழுவியிருக்கின்ற உத்தரியத்தால் மார்பைமூடுங்கள், மலர்களோடு அவிழ்ந்துகிடக்கின்ற கூந்தலை முடிமின்' என்று சொல்லி வாழைக்குருத்துகளை பனி நீரிற்றோய்த்து மெல்ல விசிறினார்கள். அப்போது சிறிது மூர்ச்சைதெளிந்த சுலோசனை பிதற்றலானாள்.

'சிலைவயினெழுந்த செழுந்தியிற் செக்கர்தோன்றுமற்றது தா
னவியாவண்ண நின்றாதுந்துருத்தி யென்னவலைதென்றல்
கவியாநின்ற விருண்மாலைக்காலக்கருமானுருக்குதலாற்
றவியாநின்ற வுயிர்ப்பாவி சாவாதிருந்ததைகயென்றே.

கசியென்றென்று போற்காட்டித்தாக்கச்சாணைபிடித்தொ விரும்
வசியாயிருந்த தென்னளவுமற்றென்செய்கேன் மணாறுந் தேன்
கசியாநின்றமலர்க்கணையைக் கருப்புச்சிலையிற்சுருப்புநாண்
விசியாவெய்து துனைக்கின்றான் வேனில்வேறும்வெகுண்டந் தேன்'

'செவ்வானமானது கொல்லன் உலை மூக்கிலிருந்தெழுகின்ற செழுமையுள்ள நெருப்பைப்போல தோன்றுகின்றது, சஞ்சரிக்கின்ற தென்றலானது அந்நெருப்புத் தணியாதபடி துருத்தியைப்போல ஊதுகின்றது. உலகத்தை மூடிக்கொண்டிருக்கின்ற இருளையுடைய மாலைக்காலமாகிய கொல்லனானவன் என்னை யுருகப்பண்ணுதலால் தவித்துக்

கொண்டிருக்கின்ற பாவி உயிரானது இன்னும் மேன் போகாமலிருக்கின்றது. பிறவெல்லாம் சந்திரனென்னும் ஒரு பொருளாக நினைக்க, அது வனக்குமட்டும் சாணையில்தீட்டி விளங்குகின்ற வெட்டுதற்குரிய வாள்போலுமிருக்கின்றது. இதற்கு யாதுசெய்வேன். கரும்புவில்லில் வண்டு நாரியைப்பூட்டி வாசனையுந்தேனுமுடைய புஷ்பபாணங்களை பிரயோகம்பண்ணி வஸந்தகாலத்திற்குரிய மன்மதனென்பவன் கோபித் தென்னுடலத்தை துளைக்கின்றான். ஐயோ,

‘அன்றிற்பறவை யரற்றுறுகுரலும்
விடையிட்டற்றணியுமிளிர் மணித்துழனியுங்
கதிர்நிக்கிலமெறி கடன்முழக்கமுமென்
செவித்தொளைபுகுந்து திசைப்புறச்செறியுமால்
கருவிழிகாணீர் காதலன்போயின
னென்று நீர் வாரவிரங்குவதென்னைகொல்
சந்திரவதன முந்தாமரைக்கண்களு
மந்தாரமாலைபோல்வளர் பெருந்தோளுமொரு
மற்றதனிருபாலுற்றிழியருவியி
னலங்குமுத்தார்ந் துலங்குறுமெழிலு
நாண்மீனென்ன நகுமணிக்குழையும்
அழுதகன்மொழி புகல்குமுதவாய்ச்சிறுநகைத்
தோற்றமுங்காட்டித் தோன்றுகின்றனிதோ
சுந்தரப்பெருமான் தோன்றுகின்றனிதோ
காதற்கொழுநனைக்காண்மின்காண்மின்.

“என்காதலனாகிய நின்னைப் பிரிந்த நிமிஷமுதல் என்மன மிருப்புக் கொள்ளாது தவிக்கின்றதே; என்பஞ்சபூதங்களையும கொள்ளைகொண்ட கள்வனல்லவோ நீ; ஏ! சுந்தரனே! நின்தோற்றம் என் கண்களை விட்டகன்றதில்லையே; நின் இன்பமும் அன்பு மென்ன வென்று சொல்லுவேன்; இனிநின்னைக்கண்டு களிப்பது எப்பவோ வென்றேங்காநிற்கின்றேன்; நின்னைக்கண்டு மதிமயங்கி என்தோழியர்களின் முன்னிலையில் இருகத் தழுவிக்கொண்டிருக்கையிலேயே இப்பொழுது என்வாயில் வந்தவாறு பாடியபாடலின் கடைசி அடியில் “உன்னையணைவதெக்காலமோ” என்றேனே, இவ்வாக்கு சபலித்ததால் என்னை இத்துன்பத்திற் காளாக்கினையோ, பிராணேசா! பரமசிவனிடத்து நின்சேஷ்டை பலியாது உருவிலியானையே, மன்மதனே!

“சடிலமென்று பைந்தார்க்குழல் பின்னல்கார்
மிடறு தோன்றல் விடமென்று நாணமே
புடல் விளர்ப்பு வெண்ணீறென்று நுவிலோ
பாடா வதென்னை யனானானலன் பாண்டியால்.”

மலர் மாலையணிந்திருக்கின்ற கூந்தலை பின்னல் போடப்பட்டிருக்கின்றதே யொழிய சடையல்ல; கழுத்தில் கஸ்தூரிபூசப்பட்டிருப்பதே யொழிய நீலகண்டமல்ல; தேகமியல்பாகவே வெண்மையாகவிருப்பதே யொழிய விபூதிபூசப்பட்டதல்ல; நான் சிவனல்ல, இன்னும் நன்றாகப்பரிசோதித்துப்பார், ஏ! அனங்கனே! என் போர்செய்கின்றனை; நான் சிவனாயிருப்பின் முன்னழிந்துபோன உடலின் சேஷமாக விருக்கின்ற உயிரும் தீய்ந்துபோக மாட்டாயா? கொடியவனாகின்றாயே, நாளையுதயத்திலிவளை நெருங்கிவருத்துதல் கூடாதென்றோ இன்று அந்திப்பொழுது வாராததற்கு முந்தியே என்னையணுகுகின்றாய்.

சுந்தரரூபனே வந்தருள்செய்குவாய்
இந்தவஞ்சனைபுரிந்தேகுதல் நீதியோ

மந்தமாருதஞ் சீறிவர்தென்னைப்பாயுதே
சந்திரகிரணமுந் தழலெனக்காயுதே

உனக்கிசை கொழுநனென்றுன் மாலைசூட்டினும்
எனக்கிசை கணவனேலேன் வரத்தாமதம்

மனதுங்கன்னு மென்மேல் வைத்துச்செல்கின்றே
னென்றாய்

வைத்தசாலெனையிவ்வாறு வாடச்செய்வாயோ நன்றாய்

மாங்குயிலின் குரல்வந்திருகாதினில்
இங்குசெய்வேலெனச் செருகுதிப்போதினில்

ஐந்துகணைகளென்பாரா யிரமாயிரம்
சிந்துமன் மதனாலே சிவனும்போகுதே

இனிராணுயிர் விடும்வேளையிவ்வேளையே
இனியாயினும் வந்து காத்தருள் செய்வையே.

ஏ! சுந்தரனே! இன்றுகாலையில் நின்னைப்பிரிந்தது முதல் மாலைப்பொழுதெல்லாம் மலையாய் வளர்ந்ததே! இவ்விரவோ கழியாது ஒவ்வொரு விநாடியும் ஓர் யுகமாகத்தோற்றுகின்றதே. இளங்காற்று வீசுகின்றதே, அது நெருப்புத்தணல் வீசி எரிந்தால் போலவா இருக்கவேண்டும்; நெருப்புங்காற்றுஞ் சேர்ந்தாற்போல் மகாபாவி சந்திரனுமா சேரவேண்டும்.



“பணைந்தாழுரவண்டு மிழ்மதியே யமிழ்திறேனாடும் பலதேவ
கணைந்தாம வெருவு விடத்தொடும் வந்த தனலன்றே கணவர்புய
மணைந்தா ருள்ளங்குளிப் பெற தண்ணொன்கதிர்கள் வழங்குவதுந்
தணந்தாருள்ள மிகவெதும்பத்தழல் போலுருக்குந் தன்மையாமே.”

தாழ்ந்த படத்தினை யுடைய இராகு வென்னும் பாம்பினால் விழுங்கி கக்கப் படுகின்ற சந்திரனே! நீ பல தேவர்களும் விரும்பத்தகுந்த அமிர்தத்துடனும் இவர்கள் பயந்து ஓடுதற்குரிய விஷத்தினோடும்திருப்பாற் கடலிற் பிறந்ததினால் நாயகர்களோடு கூடியிருக்கின்ற பெண்களுக்கு குளிர்ச்சியைத் தருகின்றசுபாவமும் நாயகர்களைப் பிரிந்திருக்கின்ற ஸ்திரீகளுக்கு உஷ்ணகிரணத்தை வீசும் சுபாவமும் உடைத்தாயிருக்கின்றாய். உன்னை மாதத்தில் ஒரேநாள் பூர்ணகலையுடன் இருக்கச்செய்த கர்வமன்றோ என்னைவாட்டுகின்றாய், இவ்வுப்பரிகையைச் சுற்றிலும் படர்ந்திருக்கும் முல்லை மல்லிகைமுதலான நறுமலர்களின் மணம் வீசியும் பயன் தந்திலதே. ஜனங்களுக்கனுகூலமாயிருக்கும் எல்லாம் எனக்கு பிரதிகூலமாயிருக்கின்றனவே. ஐயோ, சுந்தரனே! நீ மந்திரமென்னிடமிருப்பாயேல் இக்கொடுமையில்லது மனங்களிக்கலாகுமே! மாரன் கண்டஞ்சுவானே. பிலமெங்குளதோ, எவ்வாறு அதற்குள் நுழைந்து செல்லுவையோ; ஏ! பரதேவதையே! என் நாதனை ஓர் விபத்துமணுகாது காத்து, நாளையுதயத்திலிங்கு கொண்டுவிடவேண்டுகின்றேன், உனது கிருபையன்றோ எனது எண்ணப்படி அவனைக்காணச்செய்தது மற்றைய காரியங்களையும் நீயல்லவோ முடித்து என்னை ரக்ஷிக்கவேண்டும். உன்னையே தஞ்சமென நம்பியிருக்கின்றேன்” என்று பலவிதமாய்ப் புலம்பியுமுழுதும் உறக்கமில்லாமல் தன் பஞ்சணையில் புரண்டும் துடித்துக் கொண்டிருந்தாள்.

டி. எஸ். சுப்பிரமணையியர்.

---

SOME INTERESTING FACT.

ALL ABOUT HIGH LIFE.

## விசேஷங்கள்—பெரியமனுஷ்யரைப்பற்றினவை.

1\. உலகத்தில் உள்ள அரசர்கள் எல்லாருள்ளும் உருஷிய சக்கிரவர்த்தியாகிய ‘ஸார்’ என்பவரை மிக்க பணக்காரர் என்று சொல்லுகிறார்கள். அவருக்கு சொந்தத்தில் அநேக பூஸ்திதிகளும் விளைநிலங்களும் காடுகளும் இருக்கின்றன. அவருக்குக் குடித்தனச்செலவுகளுக்காக ராஜாங்கத்தில் ஏற்பட்டிருக்கும் தொகை எட்டு லக்ஷம் பவுன். நமது சக்கரவர்த்தியாகிய எட்வேர்ட் அரசருக்கு இது நிமித்தியமாகக் கொடுக்கப்படும் பொருள் மூன்று லக்ஷத்தெண்பத்தையாயிரம் பவுன்.

2\. உரோமன் காதலிக் மதாதிபராகிய ‘போப்’ என்பவருக்கு நாளொன்றுக்கு இருபது இருபத்தீராயிரம் கடிதங்களும் சமாசார பத்திரிகைகளும் வருமாம். இவ்வளவையும் உடைத்துப்பார்க்க அவருக்குத் தேசகாலம் எங்கே? சில முக்கியமான கடிதங்களைத்தவிர மற்றவைகளெல்லாம் அதற்காக ஏற்படுத்தப்பட்ட முப்பத்தைந்து காரியதரிசிகளால் பார்வையிட்டு முடிவு பண்ணப்படுமாம்.

நமது அரசராகிய எட்வேர்டு அரசருக்கும் நாளொன்றுக்கு ஆயிரம் கடிதங்களும் இரண்டாயிரம் மூவாயிரம் சமாசாரபத்திரிகைகளும் வருமாம். உருஷியசக்கிரவர்த்திக்கு 650-கடிதங்களும், இத்தாலி ராஜாவுக்கு 500-கடிதங்களும், ஹாலந்து மஹாராணியாகிய ‘வில்ஹெல்மினா’ என்பவருக்கு 100, 150-கடிதங்களும் தினம் பிரதிவருமாம். கடைசியில்

சொன்னவர் தம் கடிதங்கள் யாவையும் தாமே யுடைத்துச் சங்கதிகள் தெரிந்துகொள் வாராம்.

3. 'போப்' என்பவர் மகா சூக்ஷ்மமாகக் காலக்ஷேபம் செய்பவராம். இவர் தமக்கு நாளொன்றுக்கு 8-அணு விருந்தால் தம் செலவுகளுக்குப் போதும் என்று அடிக்கடி சொல்லிக்கொள்வாராம். இவர் மிகவும் வயோதிகர். இப்போது இவருக்கு வயது 91-ஆகிறது. இவரைவிட இதற்குமுன் இந்தஸ்தானத்தில் இருந்தவர்களில் சிலர் வயதுசென்றவர்களாயிருந்தார்களென்று சொல்லப்படினும் அது அவ்வளவு நம்புதற்கிடமில்லாமையால் இவரே எல்லோரினும் வயதுசென்றவர் என்று கொள்ளவேண்டும்.

4. இத்தாலிதேசத்து ராணி ஐரோப்பா கண்டத்தில் உள்ள இராஜவம்சத்தார் எல்லாரினும் மிக்க படிப்புள்ளவராம் இவருக்கு இங்கிலீஷ், பிரஞ்சு, ஜர்மன், ஸ்பானிஷ் என்னும் நால்வகைத் தேசாந்தரபாஷைகள் நன்றாகப் படிக்கவும் எழுதவும் தெரிந்திருப்பதன்றி கிரீக்க, ரோமகாவியங்களில் விசேஷமான பாண்டித்தியமும் உண்டாம்.

5. ஸ்வீடன்தேசத்து ராஜாவை ஐரோப்பிய அரசர்கள் எல்லாரினும் உயரத்திலும் வடிவத்திலும் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். இவர் தம் குடிகளிடத்தில் மிக்க நேசமுள்ளவராய் யாரேனும் தம்மைத் தரிசிக்க வந்தால் அவர்களைப் பிரீதியோடும் எற்று அவர்கள் மனக்குழப்பம் தீரும்படி வெகு ஆதரவாய்ப் பேசுவாராம்.

6. கிரீஸ்தேச ராஜாவுக்கு ராஜ்யகாரியங்களில் சென்றது போக ஒழிந்தவேளைகளெல்லாம் படிப்பதுதான் வேலையாம். தினம்தோறும் இராத்திரி பத்துமணிக்குச் சிறிது சாப்பிட்டுவிட்டு புஸ்தகமும் கையுமாய்ப் படிக்கவுட்கார்ந்து பன்னிரண்டுமணி வரையில் படித்துக்கொண்டிருந்து பின்பு சயனித்துக் கொள்வாராம். அவர் படித்துக்கொண்டிருக்குங்காலத்தில் பாரா இருப்பவன் எந்த கிமித்தமாகவும் அவரைத் தொந்தரவுசெய்யக் கூடாதாம்.

7. துருக்கிதேசத்து சுல்தான் தமக்குப வந்தமான கொடியமரணம் நேருமென்று நம்பியிருக்கிறாராம். ஆதலால் தாமெங்கு சென்றாலும் தம்மைக் காத்துக்கொள்ள ஒரு சிறு சேனையைக் கூட்டிக்கொண்டல்லாமல் போவதில்லையாம். இவர் தம் காலத்தில் பாதி ராஜ்யகாரியங்களிலும் பாதி பிரார்த்தனைகளிலு போக்குகின்றாராம்.

8. மனிதர்களுக்கு 40-வயதுக்கு மேலு 60-வயதுக்குள்ளும் மனோபலம் பூர்த்தியயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

9. அமெரிகா தேசத்தில் நியூயார்க் என்னும் பட்டணத்தில் ஒரு கட்டிடம் 30-நிலையுள்ளதாம். இது உலகத்திலுள்ள எல்லா கட்டடங்களிலும் உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது, லண்டன் பட்டணத்தில் உள்ள மிகவுயர்ந்த கட்டிடம் 13-நிலைதானுள்ளதாம்.

10. அமெரிகாதேசத்தில் ஒரு நாடகம் ஆடும் பெண்ணுக்கு வயது 30-இருக்குமாம் இவள் வருஷம் ஒன்றுக்கு 60,000 பவுன் நாடகமாடிச் சம்பாதிக்கிறாளாம்!

---

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணு.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான
மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.

புத்தகம் 11.] 1902ளு ஜுலைமீ. [இலக்கம் 3.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s*. 6*d*. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s*. 6*d*. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e, in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 8 அணு.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 6 அணு.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணுவும், 6 மாச சந்தாவில் 4 அணுவும் தள்ளிக்கொடுக்கப்படும்

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்,

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## பட்டாபிஷேகம்.

சென்ற ஜூன்மீ 26வயன்று நடந்தேற நிச்சயிக்கப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் முடிந்து சித்தமாயிருக்கையில் நமது அரசருக்குப் பிராணாபாயமான நோய்கண்டு அவர் பிழைப்பது அரிதாகப்போனமையால் பட்டாபிஷேக சடங்குகள் முன் குறிப்பிட்டபடி நடக்கமுடியாமல் தடைப்பட்டுப்போய் விட்டன. பட்டாபிஷேகத்துக்குக் குறித்த தேதிக்குச் சிலநாள் முன்னதாகவே மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு தேகத்தில் கட்டிகள் புறப்பட்டு, சத்திரம் வைத்து ஆற்ற வேண்டிய அவசியம் நேரிட்டது. இதனால் பட்டாபிஷேகம் குறித்ததினத்தில் நடக்கத் தவறிப்போய்விட்டது. இதற்கு ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் ஏராளமான செலவு செய்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். அவ்வேற்பாடுகளெல்லாம் தலைகவிழ்ந்து போனதினால் அதிகநஷ்டத்துக்கிடமாயிற்று. ஆனாலும் தெய்வானுகூலத்தால் நமது எட்வர்ட் அரசர் அவர்கள் தேகம் வரவர சௌக்கியப்பட்டு இந்தமீ 16வ வாக்கில் 'கௌஸ்' என்னுமிடத்துக்கு தேக சௌக்கியார்த்தம் போயிருக்கிறார். சீக்கிரத்தில் அவர் தேகதிடன்பெற்று முற்றும் சுகப்பட்டுப்போவாரென்று நம்பக்கூடியதாயிருக்கிறபடியால் வருகிற ஆகஸ்டுமீ 9வ சனிக்கிழமை யன்று தடைப்பட்டுநின்ற பட்டாபிஷேக சடங்கு நடத்தப்படுமென்று சொல்லிக்கொள்கிறார்கள். எல்லாம் ஈசன் செயலன்றி வேறொன்றில்லை.

## காலஞ்சென்ற விவேகாநந்தஸ்வாமி.

'அகண்ட சச்சிதானந்த பரபிரம்மஸ்வரூபியாய்விளங்கிய ஸ்ரீமத் பரமஹம்ஸரான ஸ்ரீராமகிருஷ்ண தேவரவர்களின் சிஷ்யர்களில் பிரதமைபெற்ற ஸ்ரீ விவேகாநந்தஸ்வாமிகள் கலகத்தாவுக் கருகிலுள்ள இராமகிஷ்ண மடத்தில் நாளதுமீ 4வ காலஞ்சென்ற சங்கதியைக் கேட்டு மிக விசனிக்கிறோம். இவர் பி. ஏ. பட்டம்பெற்று புத்திசாதுர்யராய் விளங்கிய கல்கத்தா வாஸிபர்களில் ஒருவர். ஸ்ரீமத் இராமகிஷ்ண பரமஹம்ஸருடைய திருவருட் கடாக்ஷத்தினால் இகபரநீங்கி பரசுகத்தை நாடியுழைத்து வந்தார். இவர் அமெரிகாவுக்குச் சென்றபின் அங்கே கூடிய மதப்பார்லிமெந்து சபையார் இவர் பிரசங்கத்தை மெச்சிக்கொண்டாடவும், மற்ற அமெரிக்கர்கள் இவர் வாக் பிறப்பாய்வந்த வேதாந்த வுண்மைகளைக்கேட்டு ஆநந்தித்து இவரை வழிபட்டு நடக்கவும், இத்தேசத்தார் அவரைப் பிரமாதமாகக் கொண்டாடத் தலைப்பட்டார்கள். அதற்குமுன் இவரைச் சிந்தாமலிருந்த ஹிந்துக்கள் இப்பொழுது ஆயிரம், லக்ஷம்கணக்காய்க் கூடி இவரைக்கொண்டாடத் தலைப்பட்டார்கள். இவ்வளவு கொண்டாட்டத்திற்கும் பெருமைக்கும் அவர் பாத்திரரேயாயினும், நம்மவர்கள்மட்டும் அவர் பெருமைக்கேற்றவர்களாக நடந்துகொள்ளவில்லை. ஜனப்ரீதியை நாடி யுழைப்பதால் அவர்கொண்ட அதிமேலான கொள்கைகளுக்குக் குறைவு வருவதையுன்னி யவர் பகிரங்கமாய்ப் பிரசங்கம் செய்வதைவிட்டுவிடும்படி நேரிட்டது. ஆனாலும் அவர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உழைத்ததினால் சேர்ந்த சிஷ்யர்களின் உதவியைக்கொண்டு ராமகிஷ்ணமிஷன் என்று ஸத்தியத்தைப் பரவச்செய்து உண்மைக் குழைக்கும் பரோபகார சபையொன்றை யேற்படுத்தி அதன் காரியங்களை மேற்பார்வைசெய்து வந்தார். இவருடைய முயற்சியால் மேற்றேசத்தார் வேதாந்தத்தில் பற்றுவைத்து ஹிந்துக்களை மதிக்கத்தலைப்பட்டார்கள். இப்படிப்பட்ட சித்தசுத்தியும் அத்வைத ஞானமும் ஆத்ம தரிசனமும் பெற்ற மஹான் வெகுபாடுபட்டுழைத்துவரக் கிடைப்பது மிகவும் அபூர்வமே. அப்படி அபூர்வமாய்க் கிடைத்த பாக்கியத்தை நம் பரதக்கண்ட மிழக்க நேரிது அதற்கு ஓர் பெரு நஷ்டமே. இவர் உதாரணத்தைப் பின்பற்றி நம்மிலனேகர் உழைத்துவருவார்களாயின் இவர் உழைத்த உழைப்பு வீண்போகாது பலித்ததாகும். இவர் இம்மண்ணுலகை விட்டு மறைந்தகாலத்தில் இவருக்கு வயது 39-க்குமேலில்லை. அதிக உழைப்பால் ஹிருதயத்தைப்பற்றிய வியாதி தோன்றி அதனால் தேகம்விழுந்து போனதாகத் தெரியவருகிறது.



## A VIEW OF THE DOMESTIC LIFE OF THE ANCIENT ARYANS DURING THE EPIC PERIOD.

## மகாகாவியங்கள் ஏற்பட்டகாலத்தில் ஆரியர் அனுசரித்துவந்த இல் வாழ்க்கை நிலை.

வேதமுண்டான காலத்து ஆரியரின் இல்லற வாழ்க்கை இத்தன்மையதென முன்னிரு சஞ்சிகையில் * ஒருவாறு எடுத்துக் கூறப்பட்டது. மஹா காவியங்களாகிய ஸ்ரீமத் இராமாயணம், மஹாபாரதம் ஏற்பட்ட காலத்தில் ஆரியர் அனுசரித்து வந்த நடை, உடை பாவனைகளைப் பற்றி யோசிக்குங்கால் அவைகள் முற்காலத்தவைகளுக்கு முற்றிலும் மாறுபாடாக விருந்தன. சாதி வேற்றுமை யுண்டாய் அந்தந்த வகுப்பார் நடந்துகொள்ளவேண்டிய நன்னெறிகளை விவரித்துரைக்க பல ஏட்டுப் பிரதிகள் வரையலாயின. ஜனங்கள் இவைகளிற் சொல்லியவாறு வழி பிசகாமல் தத்தம் கருமங்களை மேற்கொண்டு உல்லாசமாய் காலங்கடத்தி [illegible]ல்வி, நாகரிகம் மேலிட்டு உயர்ந்தோங் [illegible] எல்லாப்பட்டணங்களிலும் கூடகோபுரம், மதில் சூழ்ந்த அரண்மனைகள், விசித்திரமான கட்டடங்கள், தர்பார் மண்டபங்கள், சத்திரம் சாவடிகள், நிர்மாணஞ் செய்யப்பட்டு பார்ப்போர் வியந்துகளிக்கும் வண்ணம் தேஜோமயமாய் விளங்கிற்று. அரசன் கொலு மண்டபத்திற்குச் செல்லுமுன்னர் நித்திய கருமங்களை நீதி நூற்களிற் சொல்லியவாறு செய்து முடித்துக்கொண்டு பிராமணர்கள் ஆசிகூற அவர்களது மங்களாட்சதைகளைச்சிரமேற் பிரகாசிக்கச் செய்துகொண்டு சிங்காசனத்தை வலம்வந்து அதில் வீற்றிருப்பான். அரண்மனைச் சேவகத்தில் தக்க படிப்பும், அனுபவமமைந்துள்ளவர்களை யன்றி ஏனையோரை ஏற்றுக்கொள்ளக்கூடாதென கண்டிப்பான சட்டமிருந்தது. ஒவ்வொரு அரசனும் தன் நாட்டில் கல்வி பரவச்செய்து வந்ததும் தவிர அன்னிய பிரதேசங்களினின்றும் கவிஞர்களையும், மகா பண்டித சிகாமணிகளையும், வரவழைத்துப் பொருள் உதவிபுரிந்து மேன்மை பாராட்டியும் வருவான். தனது நாட்டில் செங்கோல் நடந்தேறி வருமாறு, மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்குச் சென்று தன் ஆட்கள் சரியாக தத்தம் தொழிலைச்செய்து குடிகளைப் பாதுகாத்து வருகிறார்களாவெனத் தெரிந்துகொள்வான்.

பயிரிடும் குடிகள் யாதொரு குறைவின்றி தம் புலங்களுக்கும், கழனிகளுக்கும் காலாகாலங்களில் வாய்க்கால், ஏரி, குளமுதலியவைகளினின்று தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு சுகமாக வேளாண்மைத் தொழிலை இடையூறின்றி நடத்திவரவேண்டி அதிகாரிகளை நியமனஞ்செய்து தன் அனுமதியின்மேல் அவற்றின் மூலமாய்வரும் வழக்குகளை தீர்த்துக்கொடுக்கும்படி திட்டஞ்செய் திருந்தான். பண்டைய ஸமஸ்தானங்களில் முக்கியமான [illegible] பாஞ்சாலம், விதேகம், காசி, இவைகளில் அரசாண்ட மன்னரெல்லாம் கல்வித்திறமையும், சாஸ்திரப் பயிற்சியுமுள்ள பிராமணர்களை அமைச்சர்களாகக் கொண்டு யாகங்களை இயற்றியும், வித்தையைப் பரவச்செய்ய கல்விச் சங்கங்களை ஆங்காங்கு சமைத்தும் நீதி செலுத்தி வந்தனர். பலவகையான பிராம்மணங்கள், உபநிடதங்கள் இந்த காலத்தில்தான் உண்டாயிற்றெனப் புலப்படுகின்றன. சுற்றுப்பக்கங்களிலும், அன்னிய பிரதேசங்களிலும் உள்ள

* *Vide*—Issues for September and October 1901.

புலவர்களும், பண்டிதர்களும், தங்கள் இடம்பெயர்ந்து மேலே குறித்த ஸமஸ்தானங்கட்கு சீடர்களோடு புறப்பட்டுவந்து ஒவ்வோரரசன் முன்னிலையிற் கூடியிருக்கும் பேரவையின்கண் நித்ய கருமங்கள், மனநிலைமை, மரித்தபின் ஆத்மாவின் கதி, தெய்வங்களின் தன்மை, பிதுர் தேவதைகள், எங்கும் நிராமணியாய் விளங்கும் பரப்பிரம்மம் இவைகளைப்பற்றி பலவித சித்தாந்தங்களைத் தர்க்கித்து வந்தார்கள். பகிரங்கமாய் பெரிய பட்டணங்களிலுள்ள கல்விச் சாலைகளிலன்றி, பிராம்மணர் தங்கள் இல்லங்களில் தங்களைத் தேடிவரும் மாணாக்கர்கட்கு வித்யாப்பியாசம் செய்விப்பதுண்டு. பாஞ்சாலக் கலாசாலையில் குருகுல வாசஞ்செய்ய ஸ்வேதகேது என்பவர் நாடிப்போனதாக ஒரு உபநிடதம் கூறுகின்றது. ஒவ்வொரு கலா சாலையிலும் தத்துவத்திலும், சாஸ்திரங்களிலும் ஐயந்திரிபற கற்றுணர்ந்த 21-பிராம்மணவித்வான்கள் ஆசாரியராய் இருக்கவேண்டுமென்றும், அல்லது அவுபாசன, அக்னிஹோத்ரம், வேதாத்யயனம் நன்குணர்ந்து அப்பியசித்த சில அந்தணர்கள் இருந்தால் போதுமென்றும் பராசரமுனிபுங்கவர் சொல்லியிருக்கின்றனர்.

மேற்சொன்ன கலாசாலைகளில் வித்யார்த்திகள் குருகுலவாசஞ்செய்து மெய்வருந்தி கல்வி பயின்று தங்கள் ஆசாரியர்களுக்கு செலுத்தவேண்டிய காணிக்கைகளை சமர்ப்பித்துவிட்டு விடைபெற்று பெற்றோரிடம் போய்ச்சேருவார்கள். சில பெரியோர்கள் தங்கள் சீடர்களோடு காடுகளிற்சென்று ஆச்ரமங்களைச் செய்துகொண்டு யாதொரு கவலையின்றி சற்கால க்ஷேபஞ்செய்து உலகத்தார் உய்யும்பொருட்டு பலவித பிரபந்தங்களை உண்டுபண்ணினார்கள். முற்காலத்தில் கல்விதான் அறிவுக்குக் காரணமென்றும், அவ்வறிவே முக்திக்குச் சாதனமென்றும் அறிந்துகொண்டவர்கள் இந்துக்களேயன்றி வேறெந்த ஜாதியாருமல்லவென விசிதமாகின்றது. குருகுல வாசஞ்செய்து பெற்றோரையடைந்த பாலர்கள் மணம்புரிந்து கிரகஸ்தகருமம் கைக்கொண்டு அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய பலவித கருமங்களுள் முக்கியமாய் அக்னிஹோத்ரம், நித்யகருமங்கள், அதிதிபூஜை இவை முதலானவைகளை அனுசரித்துவந்தார்கள். தைத்தாரண்யக உபநிடதத்திலுள்ள மதாசாரக்கொள்கைகளிற் சிலவற்றை அடியில் வருமாறு கூறுவோம்.

“ஒரு கிரகஸ்தன் உண்மையே பேசவேண்டும். கருமங்களை வேதவிதிப்படிச் செய்யவேண்டும். இம்மை, மறுமைப்பயனை விளக்கத்தக்கவைகளையே ஆராயவேண்டும். கற்றுத்தேர்ந்தோரைத்தேடி அவரோடிணங்கவேண்டும். சாஸ்திரங்களை அடிக்கடி தக்கவர்களைக்கொண்டு பொருள்கேட்டு மனனஞ்செய்தல் வேண்டும். பெற்றோரையும், ஆசாரியர்களையும், தெய்வம்போல் மதித்து விஸ்வாசிக்கவேண்டும். பிதுர்தேவதைகளையும், தெய்வங்களையும் பூஜிக்கவேண்டும். பாசற்ற மார்க்கத்தையே கைப்பற்றி என்றும் புண்ணிய கருமங்களையே செய்ய முயலவேண்டும்.” ஜனங்கள் யாதொரு குறைவின்றி கவலையற்று தெய்வபக்திசெய்து வாழ்நாட் கழித்துவந்தனர். ஒருகாலத்தில் அஸ்வமேதம் செய்வித்த ஓர் வேதியன் பின்வருமாறு தெய்வங்களை வேண்டிக்கொண்டதாக யஜுர்வேதம் கூறுகின்றது. “வேதப்பிராம்மணுள் மெய்ஞ்ஞானமடைந்து துறவறம் பூண்டு பேரின்பக்கடலிலாழ்ந்து முக்தி எய்தல்வேண்டும். க்ஷத்திரியர்கள் தங்கள் குலாசாரமாகிய போர்த்தொழில் பயின்று பகைவர்களை வென்று கீர்த்தியடையவேண்டும். பசுமாடுகள் புலங்களில் நன்றாய்மேய்ந்து ஏராளமான பால் தரல்வேண்டும். குதிரைகள் நன்றாய் தேய்த்துக்கழுவப்பட்டு பாகனுக்குள்ளடங்கி வேகமாய்ப்போதல்வேண்டும். பெண்பாலார் கற்புநிலைமையை மேற்கொண்டு கணவர்கள் சொற்படி ஒழுகல்வேண்டும். வருணபகவான் திருப்திபடைந்து சரியான காலங்களில் மழை



பொழிந்து வெள்ளாமைக்கிடையூறுவாராமல் பாதுகாத்தல்வேண்டும்.”

* * *

* * *

எவனிடத்தில் பொன், வெள்ளி ஆபரணங்கள், இரதகஜதுரகங்கள், பசுக்கள், கோவேறு கழுதைகள், பணிவிடை ஆட்கள், பூஸ்திதி, விசேஷமாய் இருக்கின்றனவோ அவனைத்தான் மிக்க தனவானென சாந்தோக்ய முதலான உபநிடதங்கள் கூறுகின்றன. யாகமுடிவு காலத்தில் பொன்னைத்தவிர வெள்ளி நாணயமுங்கூட தக்ஷிணையாக பிராம்மணர்களுக்கு கொடுக்கக்கூடாதென விதி ஏற்பட்டிருந்தது. ஏனெனில் ஒரு காலத்தில் தேவதைகள் அக்னிபகவானிடத்தில் சில சொத்துக்களை ஒப்புவித்திருந்ததாகவும் அவைகளை அவரிடமிருந்து திரும்பக்கேட்டபோது அவர் கண்ணீர்விட்டு அழுததாகவும் அந்த கண்ணீரெல்லாம் வெள்ளிமயமாய் போயிற்றென்றும் அதனால் வெள்ளி நாணயத்தை தக்ஷிணையாய் கொடுத்தால் அந்த மனையில் என்றும் துக்க மேலிட்டிருக்குமென்றும் பிராம்மணங்களில் வெளியாகின்றன. இவற்றால் வைதீகர்களின் பேராசை இத்தன்மையதென நன்குவிளங்குகின்றது. முன்பு இந்த வைதீகர்களிடம் செல்வம் அபரிமிதமாய் இருந்தது. எவ்வாறெனில் [illegible]த்ரிமஹரிஷியின் புதல்வர் ஒருவர் யாக[illegible]ியபோது பதினாயிரம் யானைகளையும், [illegible]ணிகளுடன் பதினாயிரம் தாதிமார்களையும் [illegible]னஞ்செய்ததாக ஆத்ரேயபிராம்மணத்தில் சி[illegible]பித்துச் சொல்லியிருக்கின்றது. முன்போலவே மாம்சத்தையும், தானியங்களையும் புசித்துவந்தார்கள். அரிசி, வாற்கோதுமை, எள்ளு, காராமணி, பருப்பு, தினை முதலியவைகளைப்பற்றியும் இவைகளைக்கொண்டு செய்த பலவித பணிகாரங்களைப் பற்றியும், அந்தந்த தெய்வங்களுக்கு யாகசமயத்தில் பலியிட வேண்டிய மிருகங்களைப் பற்றியும், யஜுர்வேதம் முறையிடுகின்றது. ஒருவனுக்கு விவேகமும், பூரண ஆயுசுமுள்ள ஒரு பெண் பிறக்கவேண்டுமானால் தானும் தன் இல்லக்கிழத்தியும் வெண்ணெய்சேர்த்துப் பிசைந்த திலோதனம் (எள்ளுஞ்சாதம்) புசிக்கவேண்டுமென்றும், பிரபலமான பாண்டித்யம், வெகு கீர்த்தி பேசுந்திறமை, பூரண ஆயுசு, இவைகள் நிறைந்த ஒரு சத்புதல்வனை பெறவேண்டின் வெண்ணெயும், எருத்திறைச்சியும் கலந்து பாகஞ்செய்த அன்னத்தை உட்கொள்ளவேண்டுமென்றும் பிருஹதாரண்யகத்தில் இருக்கின்றது. இதனால் அஸ்திநாபுரம் அயோத்தி முதலிய பூர்வீக இராஜாங்கங்கட்குட்பட்ட ஜனங்களின் ஆசாரம் இவ்வாறென விளங்குகின்றது. அரசர்களின் அரண்மனைகள் பட்டணங்களின் மத்தியபாகத்தில் நடுநாயகமாகத் துலங்கின. அவைகளிற் கோடையிடியிடித்தாற்போல் பேசும் திறமையுள்ள நாவலர்களும், போர்க்களத்தில் முனைவைத்த கால் பின்வாங்காப் போர் வீரர்களும், மகாயோகிகளும், கற்றுணர்ந்த ஆசாரியர்களும், தினமும் ஒருங்கக்கூடி அரசனுக்குப் பலவாறு தம்மால் இயல் உதவிபுரிந்து வந்தார்கள். ஜனங்கள் விசேஷதினங்களில் இராஜசமுகத்திற்கு தக்க மரியாதை சின்னங்களுடன்போய் அவனைத் தெய்வமாக மனத்திலுன்னி தங்களுக்குறும் கவலைகளை ஆற்றக்கருதி நேரில் விண்ணப்பஞ்செய்வதுண்டு. இராஜவிசுவாஸமே சகலவித புருஷார்த்தங்களுக்கும் காரணமென ஓர்ந்து அதையே ஒரு விருதாகக்கொண்டிருந்தார்கள். கிரகஸ்தர்கள் தங்கள் இல்லங்களில் ஔபாசன, அக்னிஹோத்ரங்களைச்செய்தும், அதிதிபூஜை, அத்யயனம், யாகங்கள் முதலியவைகளைச்செய்தும், அரசன் ஆணைக்குட்பட்டும் வாழ்ந்தனர். ஒவ்வொரு த்விஜனும் இளமையிலேயே கல்வி கற்க குருகுலவாசஞ்செய்து பிறகுத் தன் நகருக்குத்திரும்பிப்போய் பிதாக்களிட மனோதம் நிறைவேற்ற மணம்புரிந்து கிரகஸ்ததருமம் கைக்கொள்வான். த்விஜர்களுக்குள் யாதொரு வேற்றுமையின்றி விவாகங்கள் நடந்துவந்தன.

நாகரிகம் விருத்தியடையவே ஜனங்கள் பற்பல தொழில்களைக் கற்று அதில் பயிற்சியடைந்து தங்கள் சந்ததிகளுக்கும் அவற்றையே பரம்பரையாய் அனுசரிக்கக் கற்றுக்கொடுத்தும் வந்தார்கள்.

ஜாதிபேதமேயின்றி ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள். பயிரிடும் குடிகள் நகரத்தைச் சுற்றிலும் தங்கள் கன்றுகாலியுடனும் உழுதற்கு வேண்டிய பற்பல உபகரணங்களோடும் வாசஞ்செய்துவந்தார்கள். மகா யோகிகளும், பண்டிதர்களும், தனிமையாய் இருந்துகொண்டு கிரந்த காலக்ஷேபஞ்செய்து கல்விக் களஞ்சியத்தைப் பெருக்கி விருத்திசெய்யுமாறு நகரத்திற்கு அருகாமையிலுள்ள காடுகளிற்சென்று மெய்வருத்தம் சிறிதும் பாராமல் உழைத்துவந்தார்கள்.

இனி, ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி சற்றுகவனிப்போம். அவர்கள் ஆடவர்களிடம் கலந்திருக்கக்கூடாதென்ற வழக்கம் நம் முன்னோர்களுக்குத் தெரியாது. வேதமுண்டான காலத்திலேயே அவர்கள் மிக்க மரியாதையும், கௌரவமும்பொருந்தி கல்விபயின்று, யாகங்களைச்செய்தும் இராஜாங்கவிஷயங்களைக் கேட்டறிந்தும் விசேஷபயிற்சியடைந்திருந்தார்கள். தற்காலத்தில் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் அவ்வளவு பகிரங்கமாய் வெளிப்பட்டு ஆண்பாலாரோடு கலந்திராதபோதிலும் மற்றப்படி வேண்டிய அளவு சேர்ந்திருந்தார்கள். மகமதிய அரசாக்ஷி இந்தியாவிற்கு வரவே அவர்கள் ஆசாரத்தைச் சிறிது அனுசரிக்கத் தொடங்கி இந்துக்கள் தங்கள் பெண்டுகளையும் எறக்குறைய அந்தரங்கவாசிகளாகச் செய்தார்கள். ஆனால் மஹாராஷ்ட்ர இராஜ்யங்களில் இந்த வழக்கம் கிடையாது. ஏனெனில் அங்கே மகமதியர் அரசாண்டகாலம் சொற்பந்தானெனத் தெரிகின்றது. இதை உணராத சில அன்னியர் மகம்மதியரின் ஆசாரத்தை இந்துக்களுக்கு ஒருவாறு உவமை கூறிவருகிறார்கள். இதை நாம் கேட்டுப் பரிதபிக்கத்தக்கதேயன்றி கவனிக்கத்தக்கதில்ல ஏனெனில் அக்காலத்திய பெண்பாலார் நி மையை யோசிக்குங்கால் முற்றும் வியக்க தக்கதாகவே யிருந்தது. மகாபண்டித சிக மணியாகிய 'யாக்யவல்கிய' மஹரிஷி தா இல்லறம் சிறிது நடாத்திய பின்னர் துறவற எய்தற்பொருட்டு காடுகளிற்சென்று தவம் ரிய அவாக்கொண்டு தன் இல்லக்கிழத் 'மைத்ரேயி' தேவியுடன் அறிவிக்க, புண்ணி யமும், கற்பும், ஒருமிக்க உருக்கொண்ட அ மாது தனக்கு சில தத்வங்களைப் போதித் ருளவேண்டுமென்று தண்டனிட்டு வேண் னள். அப்போது அவர்களுக்குள் நடந்த சம் பாஷணையை இங்கு ஒருவாறு கூறுவோம்.

"மைத்ரேயி."—நாதா! இப்பூவுலகின்கண் உள்ள சகல சம்பத்துக்களையும் யான் அடையப்பெற்றேனாயினும் அவற்றால் எனக்கு 'நித்யத்வம்' கிடைக்குமா?

"யாக்யவல்கியர்."—கிடைக்காது. ஏனெனில் உன் ஜீவனும், செம்பொற்குவியல் வைத் திருப்போர் ஜீவனும் ஒன்றே. நீ கேட்ட பதவி ஐஸ்வரியத்தைக்கொண்டு அடை வது அசாத்தியம்.

மை.—நித்யத்வம் பெறா எப்பேற்றையும் யான் வேண்டேன். அதை அடையுமாறு என் கருணைவள்ளலே திருவாய் மலர்ந் தருளி அடியாளை யாட்கொள்ளல் வேண் டும்.

யாக்ய.—பிரியே! உன் வார்த்தைகளைக் கேட் கக்கேட்க எனக்கு ஆனந்த மேலிட்டு மெய் புளகாங்கிதமடைகின்றது. நீ இச் சித்த பரமரகஸ்ய நித்யத்வத்தை போதிக்கின்றேன். ஐம்புலன்களையு அடக்கி மனதை ஒரே நிலையில் நிறுத்தி கொண்டு உற்றுக்கேட்பாயாக.

*  *  *

*  *  *



பிறகு உபநிடதங்களின் சாரத்தைப்புகட்டி ஞானக்கண் உதயமாமாறு சர்வ சாட்சியாய் விளங்கும் ஆத்மஸ்வரூபம் தமர், தாரம், மகவு, தனம் இவற்றின் கண்ணும், அண்டாண்ட பிண்டகளிடத்தும், ஜோதிமயமாய் விளங்குகிறதென பிரகதாரண்ணியக உபநிடத சாரத்தை எடுத்துத் தன் தர்ம பத்னிக்கு உபதேசித்தருளினார். இது நிற்க. ஒரு காலத்தில் விதேஹதேயத்து வேந்தன் ஜனக மஹாராஜன் அஸ்வமேதயாகம் செய்யத் தொடங்கியகாலத்தில் குருநாட்டினின்றும், பாஞ்சால முதலிய பிரதேசங்களினின்றும் அளவிறந்த வேதப்பிராம்மணர்கள் தங்கள் சீடர்களோடு யாகசாலை வந்தடைந்தனர். யாகம் வெகு ஆடம்பரத்துடன் முடிவுபெற்று அரசன் வந்து அந்தணருக்குத் தக்க பரசளித்தான். அவன் ஒரு பெரிய தானஞ்செய்யக் கருதி ஆயிரம் பசுக்களுக்கு கொம்பு ஒவ்வொன்றிற்கும் பத்துப் பொன்கட்டி முடித்து, எவருக்கு சாஸ்திரங்களில் பூரணபாண்டித்யமுண்டோ அவர் இப்பசுக்களை அங்கீகரிக்கலாமென யாகசாலையில் அவ்வேந்தன் எழுந்தியம்பினான். அவ்வைதியர்குழாத்தில் யாவரேனும் முன்வருவோரின்றி சித்திரத்திலெழுதிய பாவைபோல் அசைவற்று ஒருவரை ஒருவர் உற்றுப்பார்த்துக்கொண்டு விழித்த கண் விழித்தபடியே எங்கித்திகைத்தனர். பின்பு குலகுருவாகிய 'யாக்யவல்கியர்' தன் சீஷனாகிய அவ்வேதனைப்பார்த்து பசுக்கூட்டங்களை ஓட்டிவிடும்படி சொன்னார். அச்சபையில் வந்திருந்த ஆஸ்வலாயினர், ஜாத்கர்வ ஆர்த்தபாகர், கஹோலக வுஷீடிகேயர், உத்தாலக ஆருணியர், இன்னும் இவர் போன்ற மகாபண்டித சிரோன்மணிகள் கண்களிற் றீபறக்கக் கோபாவேசங்கொண்டு யாக்யவல்கியரை வாதுக்கழைத்து தங்களால் இயன்றளவு பற்பல கேள்விகளைக் கேட்கவே அவர் அவைகட்குச் சிறிதும் மனஞ்சலியாது ஒவ்வொன்றிற்கும் சாஸ்திர சம்பந்தமான விடை பகர்ந்தனர். பின்பு சபையானது சிறிதுநேரம் அசைவற்று பேசுவோர் இன்றி அமைதியாயிருந்தது. இவ்வாறிருக்க "கார்கிவாசக்னவி" என்ற ஒரு ஸ்திரீ பண்டிதசிகாமணி மிக்கவணக்கத்துடன் சபையிலெழுந்து யாக்யவல்கியரை வாதுக்கழைத்து பலவிதமாய் தர்க்கம்பண்ணி பிறகு தோற்றுப்போனதாக தெரிகின்றது. இதனால் பெண்பாலாரும் விசேஷக் கல்விப்பயிற்சி பெற்று அதிக உயர்ந்த நிலையிலிருந்து தக்க மரியாதைக் குரியவர்களானதாகத் தோற்றுகின்றது. அக்காலத்தில் வேறே அன்னிய ஜாதியார் இருந்தார்களேனும் இந்து ஸ்திரீகள்தான் நாகரிகமும், சீர்திருத்தமும் அடைந்திருந்தார்களென்பதற் கையமில்லை. பதிசேவையே பிரதானமென எண்ணி தங்கள் கணவர்கள் சொற்றவறாது நடந்துவந்ததும் தவிர பலவித லௌகீக, வைதீக, கருமங்களிலும் தலையிட்டு உதவிபுரிந்தும், இல்லறத்தைச் சிறப்புடன் நடாத்திவந்தனர். மேல் விவகரித்த "மைத்ரேயி," 'கார்கி,' என்ற ஸ்திரீ பண்டிதர்களைப்போல 'தத்வ' விசாரம் செய்யக்கூடிய அவ்வளவு கல்வி பயிலாவிடினும், பொதுவாய் விஷயங்களை ஆராயும்படியும், இன்னடிசிற்குரிய பாகசாஸ்திரத்தையும் பெண்டுகள் ஆவலுடன் கற்றுவந்தனர். அவர்கள் உல்லாசமாய் யாதொரு நிர்ப்பந்தமின்றி பகிரங்கமான பல சபைகட்கும், வினோத காக்ஷி மண்டபங்களுக்கும், போய்வந்தது மல்லாமல் யாகங்களைச்செய்தும், பிதுர் சொத்துக்களை ஆடவர்கள்போல் பெற்றும் அதிக மேன்மையாகவே ஜீவித்துவந்தனர். வெகுகாலத்திற்குப்பிறகு ஐரோப்பிய நாட்டாருள்மிக்கநாகரிகமடைந்த கிரேக்கர், உரோமஜாதியாரிலும் இத்தகைய பெண் கல்விகிடையாதென சரித்திரங்களால் வெளியாகின்றன. ஆதிகாலம் தொடங்கி அனுஷ்டித்து வந்த வழக்கப்படியே பால்ய விவாகம் இப்போதும் நடத்தப்படாமல் பக்குவமடைந்த மடந்தையர்களுக்கே கல்யாணம் நடந்துவந்தன. புனர்விவாகம் துவஜர்களுக்குள் யாதொரு வித்தியாசமின்றி நடந்துவந்தது. முன்னமே பத்து புனர்விவாகம் நிகழ்ந்த ஒரு ஸ்திரீயை ஒரு 'பிராம்மணன் அங்கீகரித்

தால் அவன் தான் அவளது நாயகனென்று அதர்வணவேதம் கூறுகின்றது. ஒருவன் பல பெண்களைக் கல்யாணஞ்செய்து கொள்ளலாமென்றிருந்த போதிலும் அவ்வாறு அரசர்களும், தனவான்களும் தான் செய்துகொள்ளலாமென விதி இருந்தது. மஹா அலக்சாண்டர், செல்யூகஸ்,' டாலமி முதலான ஐரோப்பியரிடத்திலும் இவ்வழக்கம் இருந்ததாக எண்ண இடமுண்டு. ஒருவன் பல ஸ்திரிகளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாமே யொழிய அவ்வாறு ஒரு ஸ்திரி பல புருஷர்களைக் கல்யாணஞ் செய்துக்கொள்ளக் கூடாதென்றும், மூன்று, நான்கு தலைமுறைவரை நெருங்கினபந்துக்களோடு சம்பந்தம் கலக்கக்கூடாதென்றும் இன்னும் இவைபோன்ற விஷயங்கள் சில பிராமணங்கள் கூறுகின்றன. பெண்களுக்கு கற்பு அணிகலந்தான் முக்கியமென்றும் அவற்றால்தான் அவர்களுக்கு நற்கதி உண்டென்றும் வற்புறுத்திச்சொல்ல ஒரு பிராமணத்தில் அடியில் வருமாறு கூறியிருக்கின்றது.

"ஒரு மனைமகள் தான்செய்த குற்றத்தை மறைக்காமல் தன் பிராண நாயகனிடத்தில் சொல்லிவிட்டால் பாபம் அவளைவிட்டு விலகிப் போகிறது. குற்றத்தை மறைத்து பதிதுரோகஞ் செய்தால் அவளும், அவளைச்சார்ந்தபந்து மித்திரர்களும் அதோகதியாய் நரகலோக உபத்திரவங்களுக்கு ஆளாவார்கள்."

எ. தே. சிவராமையர்.

---

## On Books and Study.

## புத்தகங்களும் படிப்பும்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளி தின்
ஆராய்ந்த மைவுடைய கற்பவே நீர்பிரித்துப்
பாலுண் குருகிற் றெரிந்து."

நாலடியாரிற் சொல்லிய இப்புத்தி, நூல்கள் எவ்வளவோ நுணுக்கமாகவும் ஸ்வல்பமாகவும் இருந்த சைன முனிவர்காலத்தே, வேண்டப்படுமாயின், அச்சியந்திரமும் ஆவியந்திரங்களும் நிறைந்துப் புத்தகங்கள் மலிந்து கணக்கில்லாமல் வருடந்தோறும் தோன்றிக் குவிகின்ற இக்காலத்தில் முன்னையினும் எவ்வளவோ அத்தியாவசியமாகும். இவ்விஷயமாகக் கார்லைல் என்னும் அங்கிலேய கல்விமானொருவர் சொல்லுகின்ற இரண்டொரு விஷயங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

இம்மகா பண்டிதரை ஆரோ ஒரு வித்தியார்த்தி இவ்விஷயமாகத் தனக்குப் புத்தியளிக்கும்படிக் கேட்டுக்கொள்ள அதற்கு விடையாகக் கூறுகின்றனர். இவர் கூறுவது இங்கிலீஷ் பாஷையைக் குறித்ததாயினும் மற்றப்பாஷைகளுக்கும் ஒக்கும்.

நீ படிக்கவேண்டிய புஸ்தகங்கள் இன்னவையென்றும் தள்ளவேண்டியவை இன்னவையென்றும் பெயர் குறித்துச் சொல்லுதல் பிரயாசமாயினும் ஒன்றுமட்டு கூறத்தக்கது. ஏதாவது ஒரு புஸ்தகத்தைக் கைவிடாமல் முனைந்து படித்துக்கொண்டேயிருத்தல் நல்லது. உனக்குப் படிப்பில் அக்கரையுள்ள பக்ஷத்தில் எந்த நல்லபுஸ்தகத்தில் இருந்தாயினும் உனக்குத் தெரியாத விஷயங்கள் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாம். "உனக்கு எந்தப் புத்தகத்தில் உண்மையான ஆசையும் விருப்பமும் இருக்கின்றதோ அதை எடுத்துப் படி" என்று ஒரு பண்டிதர் சொல்லுகிறார். அதுவும் நல்ல உபதேசமே. ஒன்றைப்படிக்கவேண்டுமென்று உனக்கதிலுள்ள ஆசையும், துறையுமே அப்படிப்பினால் நீ நல்ல [illegible] பாசனத்தை யடையக் கூடுமென்பதற்கு [illegible] பாதுகையான சூசகமாகும். 'நம்பிக்கைச [illegible] மாற்செய்யவல்ல காரியங்களிலேயே [illegible]னும்' என்றோர் வசனமுண்டு. இது முற்[illegible]ம் உண்மையானதே. இவ்வசனத்தால் நமக்கு எவ்வகைக் காரியத்திலும் ஊக்கம் உண்டாகும். படிப்பு விஷயத்திலும் இது நாம் செய்யும் முயற்சிகள் சபலமாதற்கு நம்மைத் தூண்டுவ



தாகும்.' எந்தெந்தப் பொருள்கள் உனக்கு அழகாயும் ஆச்சரியமாயும் தோன்றுகின்றனவோ அவை யனைத்தினும் அழகும் ஆச்சரியமுமான தொன்றைத் தெரிந்தெடுத்து, அப்பொருள் இன்னதென்று நீ முயன்று நாடினால் சீக்கிரம் கண்டுகொள்ளக்கூடும். ஏனோ தானோ வென்று அரைமனதாகச் செய்யும் காரியங்களில் பயனேயில்லை. உறுதியோடும் விடா முயற்சியோடும் நீ ஆராய்வாயாயின் உனக்குப் பிரியமான படிப்பு இன்னதென்று கண்டு நன்மை யடையக்கூடும். உன்மனம் எதில் இயற்கையாகக் கனிகின்றதோ அதுவே உன் புத்திக்கும் சுபாவத்துக்கும் ஏற்றபடிப்பாகும். ஆதலின் அவ்வியற்கையான இச்சையைத் தள்ளக்கூடாது. அதன் வழியிலேயே செல்லவேண்டும். ஆனாலொன்று. ஆசை இரண்டு விதம். ஒன்று பொய்யாசை மற்றொன்று மெய்யாசை. பொய்யாசையைவிட்டு மெய்யாசையைத் தொடரவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக வைத்தியர்கள் பசி விஷயமாகச் சொல்வதை எடுத்துக் காட்டலாம். நமக்குப் பசி யிருவகையுண்டு, ஒன்று மெய்ப்பசி, மற்றொன்று பொய்ப்பசி. பொய்ப்பசியாவது நம்மை நமது உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத பண்டம் பணியாரங்களை வாயாசைப்பட்டுத்தின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளச் செய்வது. மெய்ப்பசியாவது நம்முடம்புக்கு ஒத்துவந்து பலமும் புஷ்டியும் கொடுக்கும் காரசாரமான பதார்த்தங்களிலுள்ள இச்சை. இம்மெய்ப்பசி, பண்டு பணியாரம் பாயசம் முதலான ஆரோக்கியகரமல்லாதவற்றைப் புசிப்பவர்களுக்குக் கூட உணவாயினும், பொய்ப்பசிபோல் மேலெழுந்து நிலாமல் அடியுற அமைந்திருக்கும். ஒரு புஸ்தகத்தையும் உறுதியாகப்பற்றி ஆதியோடந்தமாக நிதானித்துப் படியாமல், இதிற் சிறிது அதிற் சிறிது என்று பார்த்துப் பார்த்து விட்டுவிடுகின்ற பேதைகள் இப்பொய்ப்பசிக்காரர்போல அப்படிப்பால் யாதொருபயனும் அடையார்கள். அதனால் அவர்க்குத் தீங்கே யுண்டாகும். ஆதலின் பொய்யிச்சை யின்னது மெய்யிச்சை யின்னதென்று தெரிந்துகொண்டு அதற்குமேல் மேலே சொன்னபடி உனக்கிச்சையான நூல்களைப் படிக்கலாகும்.

இன்னொரு விஷயம்கூட உனக்குச் சொல்லுகிறேன். ஒவ்வொரு புஸ்தகமும் ஊகித்துப் பார்ப்போமாயின் முன்னோர்களுடைய சரித்திரமாகவே யிருக்கும். அதாவது, அவர்கள் செய்ததென்ன எண்ணினதென்ன என்பவற்றைக் காட்டும். எல்லாப் புஸ்தகங்களின் சாராம்சமும் அதுதான். இக்காரணத்தாலே சரித்திரமென்று பிரத்தியேகமாய்க் குறிப்பிட்டுச் சொல்லப்படும் புஸ்தகங்களை எல்லாப் படிப்புக்கும் அடிப்படையாகச் சொல்லலாம். ஒவ்வொருவனும் பூர்வீக சரித்திரங்களையும் அவற்றிலும் முக்கியமாகத் தன் சுதேசத்தவர்களின் பூர்வீக சரித்திரத்தையும் முதல் முதல் படிப்பது அவசியம். அதொன்றைமட்டும் ஒருவன் படிக்கப் புகுவானாயின் அதிலிருந்து வேறெவ்வளவோ சங்கதிகளும் படிப்புகளும் கிளையோடிப் பிரிந்து தோன்றக் காண்பான். அப்படிப்பு ஒரு பெரிய இராஜமார்க்கம் போலாம். அங்கு நின்று பார்த்தால் சுற்றுமுற்றுமுள்ள ஊர்கள் பலவும் கண்ணுக்குத் தோன்றும். அவ்வழியே பிரயாணம் செய்துகொண்டு மார்க்கத்தில் எங்கே வேண்டுமோ அங்கே இச்சைப்படித் தங்கலாகும்.

நீ யுன்படிப்பில் பிசகில் விழுந்து ஒன்றிடக்க ஒன்றைத் திரிபாகக் கொள்ளவரினும் அதனால் அதைரியமடையாதே. அவ்விதப் பிசகுகள் படிப்பிலேயன்றி வேறே எந்தக் காரியத்திலும் எப்படிப்பட்டவருக்கும் ஒன்றிரண்டேயன்றி வெகுவாக வரக்கூடும். நாம் கொண்டது பிழையான கொள்கையென்று தெரிந்து கொள்ளுவதில் எவ்வளவோ நன்மையிருக்கின்றது. பிழைகளை நீக்கிச் சரியாகக் கிரகிக்கவேண்டுமென்னும் உண்மையான ஆசையோடு பாடுபட்டால் அப்பிழைகள் தாமே நம்மைவிட்டு நீங்கிப்போம். ஒவ்வொரு

வனும் தன்னைத் திருத்துவதற்குச் செய்யவேண்டிய முதற்காரியம் இதுதான். தட்டித்தடுமாறித்தான் நாமொன்றில் தேறவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தம் நமது நடக்கையேயாகும். நாம் நடக்கும்போது எத்தனைதரம் சாய்ந்து நிமிர்ந்து சமாளித்துக்கொள்கிறோம்.

முடிவில் இன்னொரு விஷயம். ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டியவிஷயங்கள் எல்லாவற்றையும் புஸ்தகங்களைப்படித்து அவற்றின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. உனக்கு ஏற்பட்டிருக்கும் வேலையில் உனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் காரியங்களை மனப்பூர்வமாக வஞ்சனையில்லாமல் செய்துமுடிக்கத் தெரிந்துகொள். உனக்கு நியமிக்கப்பட்டவிடத்தில் நின்று, போர்வீரன் தனக்கிட்டவேலையை நியமித்த விடத்தை விட்டுப் பெயராமல் நின்று தவறாமல் செய்து முடித்தல்போல நீயும் செய்துமுடி. ஒவ்வொரு நிலைமையிலும் நினைத்தபடிக் காரியங்கள் நிறைவேறாமையினாலே எவ்வளவோ மனசுக்கு வியாகுலமும் வருத்தமும் உண்டாவது சுபாவமே. ஆதலின் உன்னிலைமையில் அவ்வித வருத்தங்களுண்டாமாயின் வெளியில் சொல்லாமல் அவற்றை விழுங்கி யுள்ளடக்கிக்கொள். அந்நிலைமையில் உனக்கிட்ட வேலைகளை யாவத்சக்கியமும் செய்து முடிக்கப் பாராமல் மனம்சோர்ந்து விட்டுவிடாதே. ஒருவன் படிப்பைவிடக் காரியத்தினாலேயே சாமர்த்தியமும் தேர்ச்சியும் அடைகிறான். படிப்பும் காரியமும் ஆகிய இரண்டையும் எவனொருவன் சேரக்கலந்து கொள்ளுகிறானோ அவனே அபிவிர்த்தியடையக் கூடியவன். எவர்கள் தற்கால நிலையில் செய்யக் கடமைப்பட்டிருப்பவர்களை ஊக்கத்தோடும் புத்தியோடும் செய்து இன்னம் மேலான காரியங்களையும் செய்ய ஒருப்படுகிறார்களோ அவர்களே பெருமையை அடையக்கூடியவர்.

## A Brief Outline of Sivasidhanta.

## சைவ சித்தாந்தம்.

“தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.”

என்று ஞானபானுவாகிய ஔவையார் கூறியிருப்பது இச்சித்தாந்த மதத்தாருக்குச் சம்மதமே. இப்பாடலை இவர் தமக்குப் பிரமாணமாகக்கூட எடுத்தாளுவர். ஆதலால் முனிமொழியாகிய வியாச சூத்திரத்திற் சொல்லிய உண்மை சைவசித்தாந்தமே என்று கொள்ளத் தக்கது. அவ்வியாச சூத்திரத்திற்குப் பற்பலர் அவரவர் கொள்கைப்படி பற்பலவாறு பொருள்கொண்டு வியாக்கியானம் செய்திருக்கின்றனர். இவற்றில் சைவ சித்தாந்தத்துக்குரிய வியாக்கியானம் செய்திருப்பவர் நீலகண்ட சிவாசாரியார் என்பவர். இவர் மதம் சுத்தாத்வைதமே யன்றிச் சிலர் கூறுவது போல விசிஷ்டாத்வைதமன்று என்று சிவஞான சித்தியார் சுவபக்கத்துக்கு விரிந்ததோர் உரை எழுதியுள்ள ஞானப்பிரகாசர் வற்புறுத்திக் கூறுகின்றார். ஆயினும் இச்சுத்தாத்வைதம் மாயா வாதியாகிய ஸ்ரீ சங்கராசாரியார் கொண்டு ஸ்தாபிக்கும் சுத்தாத்துவைதத்திலிருந்து சிறிது மாறுபடும்.

சைவ சித்தாந்தப்படி உலகத்தில் பதார்த்தம் மூன்று. அவையாவன பதி, பசு, பாசம். இம்மூன்றும் உண்மையே, நித்தியமே. பதியானவன் ஏகனாய் அநாதி மலமுத்தனாய் சர்வசுதந்திரனாய், சர்வ பரிபூரணனாய், சர்வக்ஞனாய், சாவத் கர்த்திருத்துவ முடையவனாயிருப்பவன். பதியாகிய சிவனுக்குத் தொழில்கள் ஐந்து. அவையாவன, சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம். இவன் இத்தொழில்களைச் செய்வது கேவலம் விநோதார்த்தமேயன்று, பசுக்களாகிய ஆன்மாக்களை உச்சீவிக்கும்பொருட்டுக் கருணையினாலே



புரிவன் என்பர். இவற்றுள் சிருஷ்டியாவது ஆணவமலத்திலே அநாதியே அழுந்தித் தனது இச்சா ஞானக்கிரியைகளை முற்றும் இழந்து செயலற்றுக் கிடக்கும் ஆன்மாவை மாயா காரியமாகிய தநுகரணங்களைக் கொடுத்தலினாலே ஒரு புறம் அம்மல மறைப்பை நீக்கிக் கிஞ்சிக்ஞத்துவமும் கிஞ்சித் கர்த்திருத்துவமும் உண்டுபண்ணுதல். திதியாவது, அவ்வான்மாக்களுக்குப் புவன போகங்களைக் கொடுத்து இருவினைப் பயன்களை உண்பித்துக் கழித்து மலபரிபாகம் வருவித்தல். சங்காரமாவது ஜீர்ணமாகிச் சக்தி குன்றிப்போகும் மாயைக்கு மீளவும் சக்தியுண்டாக்கும் பொருட்டும், இருவினைகளில் அடிபட்டு வருந்திய ஆன்மாவுக்குச் சிறிது இளைப்பு நீக்கும்பொருட்டும் முன் அருளிய தநுகரண புவன போகங்களை அழித்து நீக்குதல். ஆதலின் இச்சங்காரமும் மற்றத் தொழில்களைப்போல இரக்கத்தால் செய்யும் காரியமேயாகும். திரோபவமாவது கன்மபலங்களை உண்பித்துக் கழிப்பிக்கும் பொருட்டு உண்மையில் துக்க ரூபமாகி அசுத்தமாகிய சம்சாரத்தில் சுகமுள்ளது போலக்காட்டி ருசிப்பித்துப் பற்றச்செய்தல். அநுக்கிரகமாவது, ஆன்மாவுக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்த காலத்தில் குருவடிவு கொண்டெழுந் தருளிவந்தேனும் வேறு வகையாலேனும் ஞானோபதேசம் செய்து பாச முத்தியும் சிவத்துவாபிவியத்தியும் உண்டுபண்ணுதல்.

பசுக்கள் அநாதி மலபத்தராய் பிரயாகலர், விக்ஞானகலர், சகலர் என்ற மூன்று வகையானவர்களாய் இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களை யனுபவித்து பதியின் அநுக்கிரகத்தினாலே பாசம் நீங்கி முத்தராகப் பெறுவார்கள். ஆன்மாவானது இயற்கையில் சிவனை ஒக்குமாயினும் பாசத்தின் செயற்கையால் தன் உயர்ந்த குணங்களையும் சக்திகளையும் இழந்து இழிவடைந்திருக்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக மஹா ராஜ்யாதிபத்தியத்தை அடைதற் கருகனாகிய ராஜபுத்திரன் ஒருவன் தன் உயிர்ப்பிறப்பையும் பெருமையையும் முற்றிலும் மறந்து கைவிட்டுக் காட்டில் வாழும் வனசரர்களோடு சேர்ந்து அவர்களோ டொருவனாய் ஒன்றுபட்டு வசித்திருப்பதுபோல இயற்கையிலே பதியை ஒத்திருக்கின்ற ஆன்மா அநாதி மலசம்பந்தத்தினாலே தன் அறிவை யிழந்து ஐம்புல வேடர் சூழலிற்பட்டுத் தனக்குத் துணைவனாகிய சிவனையும் அறியாது துயருறு மென்பர். இவ்வான்மாவானது மலரகிதமாய் நின்மலமாயிருக்கும் முத்தியவஸ்தையில் சிவனை ஒத்து சிவனோடு தான் இருமணிபோலவும் இருசுடர் போலவும் சமானமாக விருக்குமாயினும் வஸ்துவினால் பேதமே. தன் ஸ்வரூப மிழந்து சிவஸ்வரூபத்தில் இறந்து ஒன்றுப்பட்டுத் தானென்னும் நிலைமை நீங்கிப்போமென்ற லொவ்வாது என்பர்.

பாசமாவது ஆணவம், மாயை, கன்மம் என்றுமூவகைப்படும். ஆணவமானது ஏகமான ஒரேவஸ்துவாயினும் அவரவர்க்கு வெவ்வேறாயிருந்து அவரவர்களை மறைத்து முறையிற் பரிபக்குவம்வர நீங்கும். அநந்த சமார்த்தியமுடையதாய் சகசநித்தியமாய் ஆன்மாவினது சர்வக்ஞத்துவ சர்வத் கர்த்திருத்துவரூப சிவத்துவத்தை மறைத்திருந்து செம்பிற் களிம்புபோல ஆன்மாவோடு பொருந்தி நின்று அறியாமையைப் பண்ணும். கன்மமானது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்று மூன்று பகுப்பினதாய் ஆன்மாவைப் பிரவாகாநாதியாகப்பற்றி நிற்கும். சஞ்சிதமாவது நெடுநாளாகச் செய்துவந்த கன்மங்கள் சேர்ந்து மூட்டையாகிக் கிடப்பது. பிராரத்துவமாவது அச்சஞ்சிதத்தின் பயனைக் கொடுத்தற் கேதுவாய்ப் பக்குவப்பட்டிருப்பது. ஆகாமியமாவது பிராரத்துவத்தின் பயனை அனுபவிக்கும் தற்காலத்தில் செய்யப்படுவது. சரீரமும் கன்மமும் ஒன்றுக்கொன்று மரமும வித்தும் போலத் தொடர்ந்திருக்கும். மாயையாவது பிரபஞ்சத்துக்கு உபாதான காரணமாய் ஆன்மாவுக்குத் தனுகரண புவனபோகங்

களை யுண்டுபண்ணுவதாய் ஆன்மாவுக்குக் கிஞ்சிக்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவத்தைக் கொடுத்துக் கன்ம பலங்களை யுண்பித்து மலபரிபாகம் வருவிக்கச் சாதகமாயிருப்பது. எப்படி வண்ணான் அழுக்கடைந்த வஸ்திரங்களை உவர்மண் முதலிய அழுக்குப் பொருள்களைக் கூட்டி வேகவைத்துத் தோய்த்து நீக்குவானோ அதுபோலவும், வழிபோக்கர்கள் காலில்தைத்த முள்ளை இன்னொரு முள்ளால் எடுத்தெறிவார்களோ அதுபோலவும் பதியானவன் மாயாமலத்துவாரத்தினாலே கன்மமலங்களை நீக்குவன் என்பர்.

ஒருவன் ஞானத்தாலன்றி வேறெவ்வகையாலும் முத்தியையடைய வொண்ணாது. ஞானமாவது, பசுபதிபாச விவேகம்பண்ணி சிவனைத் தரிசிப்பது. இஞ்ஞானத்தைக் குருவுபதேசத்தால் மாத்திரமே பெறக்கூடியது. பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணியங்களாலே இருவினை யொப்பு வந்த காலத்தில் சிவனது சத்திநிபாதம் உண்டாக அதனால் அவனருளைப்பெற்று அவனால் உபதேசிக்கப் பெறுவது. இஞ்ஞானோபதேசத்தால் மாத்திரமே பரமுத்தியைப் பெறலாகும். மற்றச் சரியை கிரியாயோகங்களினாலும் வேறு தெய்வாராதனங்களாலும் அடைவது பதமுத்திகளேயாகும் என்பர்.

## FIRUZ SHAH—THE BENEFICENT.

## பிருஸ் ஷா வென்னும் பேருபகாரி.

இத்தேயத்தில் முற்காலத்தில் ஆண்டுவந்த மகமதீய அரசர்களுக்கும் தற்காலத்தில் ஆண்டுவருகிற அங்கிலேய துரைத்தனத்தாருக்கும் பற்பல விஷயங்களிலும் உள்ள பற்பல பேதங்களினும், ஒன்று அதி முக்கியமானது. அம்மகம்மதிய அரசர்கள குடிகளிடத்தில் வாங்கியவர்களைத் தத்தம் சுகத்துக்கும் மனோபீஷ்டத்துக்கும், சிலபோது தமது மனக்குறுக்குக்கும் தக்கபடி அரண்மனைகள் ஆஸ்தானங்கள் பள்ளிகள் கோபுரங்கள் கோரிகள் ஸ்தம்பங்கள் உத்யானங்கள் உபவனங்கள் முதலான கட்டிடங்களிலும் வெட்டி வேலைகளிலும் செலவுசெய்தார்களே யன்றி ஜனோபகாரமான சாலைகள் பாலங்கள் கால்வாய்கள் கல்விச் சாலைகள் முதலானவைகளிற் செலவுசெய்தார்களில்லை. ஆயினும் முற்றிலுமே ஒருவரும் செய்ததில்லை யென்று கூறக்கூடாது. ஒருவர் இருவர் அருமருந்துபோலச் சிற்சில உபயோகமான காரியங்களைச் சிறக்கச்செய்திருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர் இருவர். அவ்விருவரினும் முந்தினவரும் சிறந்தவரும் பிருஸ் ஷா என்னும் சக்கிரவர்த்தி. 'இவர், வீரம் கல்வி முதலான அநேக நற்குணங்களைப் பெற்றிருந்தும் அநேகம் கொடுமையும் புத்தியீனமுமான பித்துத்தொழில்களைச் செய்து ஜனங்களை எமனைக்கண்ட உயிர்போல நடுங்கச்செய்துவந்த மகா கொடியோனாகிய மகமத் பின் டோக்ளாக் என்னும் வன்கண்ணனுக்குப்பின் சிங்காசனம் ஏறி அரசுபுரிந்தவர். அவன் காலத்திற் குடிகளுக்குண்டாகிய துன்பங்களாகிய வல்லிருளை நீக்கி இன்பமென்னும் இளவெயில் காயத் தோற்றினதோர் புண்ணிய சூரியன் என்னும்படித் தோன்றினவர். ஜனோபகாரமான அநேக சற்காரியங்களைச் செய்து கீர்த்திபெற்றவர். போரும்புடைப்புமே தொழிலாகக்கொண்டு எவ்வகைச் சாகசங்களுக்கும் அஞ்சாத வீரர்களாகிய அப்கானியர் வம்சத்தில் ஜனித்தவராயினும் இவ்வரசர் யுத்தஞ்செய்து வெற்றிகொள்வதில் இஷ்டப்பட்டதில்லை. சாந்தமும் சமாதானமுமே மேலாக எண்ணினவர். தண்டெடுத்துச் சென்று இதரதேசங்களைக் கவர்ந்துகொள்ளவேண்டுமென்னும் ஆசை இவருக்குக் கொஞ்சமேனும் இல்லை. ஆசைக்கு அளவில்லை யென்பதும், கோரின பொருள்களைப் பெறப்பெற ஆசை மேலிடுமேயன்றி ஒருபோதும் திருப்தியுண்டாகாதென்றும் இவர் நன்றாயறிந்தவர் ஆதலின் வீணாகத் துராசைகளில் மனசைப்போக்



கித் துயர்ப்படாமல் தாம் பிரபுத்துவம் செய்துவந்த 37-வருஷகாலமும், தேசத்திலோரிடத்தும் காலங்கள் உண்டாகாமல் காத்துப் பலவிதமான கைத்தொழில்களை விருத்திபண்ணுவதினும் பரபலவான சாஸ்திரச் சங்கங்களைக் கூட்டிவைப்பதிலும், வியவசாயத் தொழில் மேன்மேலும் விருத்தியடைதற்கு வேண்டியகாரியங்களைச் செய்விப்பதிலும், தன் பூர்வீகர்கள் எப்போதும் இடைவிடாமல் யுத்தமும் கலகமும்செய்து இடுக்கண் விளைத்ததனால் ஜனங்கள் இழந்துபோன சுகங்களை மறுபடியும் அவர்கள் முன்னிலும் அதிகமாகப் பெறச்செய்யும் வகைகளைத் தேடுவதிலுமே நோக்கமாக இருந்தனர்.

மேன்மை பொருந்திய இச்சக்ரவர்த்தி தமது பிரஜைகளின் சுகாபிவிருத்தியின் பொருட்டு, அவர்களுக்குபயோகமாகக் கட்டுவித்த கோயில்களையும் வைத்து வளர்ப்பித்த தோட்டங்களையும், மானியங்கள் கொடுத்து ஸ்தாபித்த பாடசாலைகளையும், இயற்றுவித்த சத்திரங்களையும் சாவடிகளையும், வைத்திய சாலைகளையும் கோரிகளையும், குளங்களையும், 50-கால்வாய்கள், 100-பாலங்கள், 150-கூபங்கள், ஆகிய சற்காரியங்களைப்பற்றி ஒவ்வொரு சரித்திரக்காரரும் மிகவும் பிரீதியோடு என்றும் புகழும்படியான நாசமில்லாத பெருங்கீர்த்தியைப் பெற்றனர்.

மகா விவேகியாகிய இச்சக்ரவர்த்திசெய்த சத்காரியங்கள் அவரோடு நசித்துப்போகவில்லை. எமுனாநதிக்கும் சாகாரநதிக்கும் மத்தியில், அவ்விருநதிகளையும் ஒன்றோடொன்று சேர்த்து வெட்டுவித்த கால்வாயும், ஹிஸ்ஸார், பிருசபாத் என்னும் இடங்களில் கட்டுவித்த அதிரமணீயமான ஏழு பெரிய பாலங்களும், முற்றிலும் எரிந்து பாழாகிப் பாலைவனங்களான சர்ஹிந்து, ஹதியானாவென்னும் இடங்கள் நன்றாகச் செலம் பாய்ந்து செழித்து விளையும்படி வெட்டுவித்த மிகப்பெரியவான கால்வாய்களும், இவர் ஆளுகையின் சிறப்பை எல்லாருக்கும் தெரிவிக்கும் நிரந்தரசாக்ஷிகளாகக் காணப்படுகின்றன. அக்காலத்தில் இவர் செய்வித்த ஜனோபகார காரியங்களுக்குச் சாக்ஷியாக அவற்றால் மிகச் செழிப்படைந்த பூமியும், குடிகள் மிகப்பெற்ற தேசமும் தவிர வேறொன்று வேண்டுமோ? இவருக்குப் பின்வந்த அரசர்களும் இவரைப் போலவே ஆண்டிருப்பாராயின் இப்போது இவ்விந்துதேசம் எவ்வளவு நல்ல நிலைமையை அடைந்திருக்கும்!

முற்காலத்தில் சொற்பமாக ஒருபோகமே பயிர்செய்துவந்த பல்லாயிரம் ஏகரா நிலங்கள் இவர் காலத்தில் இருபோகமும் அபரிமிதமாக விளைவனவாயின. அவ்விதமான நல்ல விளைவுகளாயினும் நல்ல துரைத்தனமாயினும் இல்லாத பல தேசங்களிலிருந்தும் இலக்ஷோபலக்ஷம் ஜனங்கள் பொன்விளையும் நாடான இத்தேயத்தில் நாளுநாளும் மிகுதியாகவந்து குடியேறினார்கள். இவர் வெட்டுவித்த பெரிய கால்வாய்களின் இரண்டு பக்கங்களிலும் கிராமங்கள் வரிசையாக ஏற்பட்டன. வயல் வெளிகளில் ஆடு மாடுகள் அளவில்லாமல் நெருங்கி மேய்வனவாயின. இம்மன்னர்தாம் வெட்டுவித்தகால்வாய்களால் செழிப்படைந்த நிலங்களில் விளைந்த விளைபொருள்களில் பத்தில் ஒருபங்கு மாத்திரமே நீர் வரியாக வாங்கிக்கொண்டனர். இப்பொருளையும்கூட தேசோபகாரமான காரியங்களுக்கே உபயோகப்படுத்தினார். துருக்கர்கள் புதிதாக ஐரோப்பாகண்டத்தில் பிரவேசித்த அக்காலத்தில் இந்தேயத்தில் ஏகச்சத்திராதிபதியாய் அரசுபுரிந்துவந்த இவ்வரசர் மற்ற இராஜாக்களெல்லாம் தம் வழியைப்பிடித்து நடக்கும்படி ஜனோபகாரத்தின் மகிமையும் நன்மையான செங்கோலின் முறைமையும் இப்படிப்பட்டவையென்று தாம் அவலம்பித்துக்காட்டினார்.

இவர் இறந்துபோகும்போது இவருக்குவயது தொண்ணூறு. இவர் மேலே விவரித்த

நற்காரியங்களைச் செய்ததேயன்றி டில்லி நகருக்குச் சமீபத்தில் பிருஸ்பாத் என்று தம்பேரால் புதியதோர் நகரும் கட்டுவித்தனர். அன்றியும் அநேக குற்றங்களுக்குக் கொலைத்தண்டனையை மாற்றி வேறு இலகுவான தண்டனைகள் ஏற்படுத்தினார். வரிகளை வசூல் செய்யும் உத்யோகஸ்தர்கள் அக்கிரமமாக ஜனங்களை நெருக்கிக் கடும்வரிகொள்ளாமல் வரிகளை இவ்வளவென்று வரையறுத்து நிர்ணயித்தனர். கைகால்களைக் குறைத்து அங்கஹீனஞ்செய்வதைச் சில குற்றங்களுக்குரிய தண்டனையாக மகம்மதீயசட்டங்கள் விதித்த போதினும், அத்தண்டங்கள் மிக்க கொடியவாதலின் அவற்றைக் கூடாதென்று விலக்கினார். இவரது ஜனோபகாரமான பூபரிபாலத்தின் மகிமை நெடுந்தூரம் பரவி அக்காலத்தே மகம்மதீய சக்ரவர்த்தியாய் துருக்கி தேசத்தில் ஆண்டுவந்த காலிப் என்பவர் இவருக்கு பெருமையாக ஆடைகளையும் உபசார கடிதங்களையும் அனுப்பி இவரது பெருமையையும் நன்மையையும் உவந்துகொண்டனர்.

இவர் தமது ஆளுகையைப்பற்றித் தாமே எழுதிவைத்த சில சாசனங்கள் இருக்கின்றன. அவற்றில் பின்வருவது நாமெல்லோரும் படிக்கத்தக்கது.

சொற்பக்காரியங்களுக்காக மகம்மதீயர்களின் இரத்தத்தைச் சிந்துதலும், அற்பக்குற்றங்களுக்காகக் கை கால்களைக் குறைத்து, கடூரமாக ஒறுத்துக், காதை மூக்கை அறுத்து, கண்ணைக்கெடுத்து, உயிரோடிருப்பவர்களைப் பெரும் குண்டுக்கற்களை யுருட்டி எலும்புகளை முறித்துப்பொடித்து, உடலை நெருப்பாற் கொளுத்திச், சிலுவையிலறைந்துகொன்று, நகக்கண்களைப்பெயர்த்து, உயிரோடு தோலையுரித்து, சாட்டைகளாலடித்துக் கண்டதுண்டமாக உடலை நறுக்கிச் சித்திரவதைசெய்து தண்டித்தல் முற்காலத்தில் வழக்கமாயிருந்தது. தமது பேரருளாலே என்னை அரசனுக்க உளம்புரிந்த கடவுள் இக்கொடிய வழக்கங்களை மாற்றி நன்மையைச் செய்யவேண்டுமென்னும் ஆசையையும் எண்ணத்தையும் எனக்குக் கொடுத்திருக்கின்றார். அன்றியும், தினந்தோறும் ஆலயங்களில் எனக்கும் என் ராஜவம்சத்தாருக்கும் நன்மை யுண்டாகச் செய்யும் பிரார்த்தனைகளில், இனிமேல் எனக்குமுன் இந்த டில்லி ராஜ்யத்தை ஆண்டுவந்த அரசர்கள் பெயரையும், அவ்விதமாகக் கடவுளுக்கு அவர்மேலுள்ள கோபத்தை ஒருவாறு தணிவித்து அவரது கருணைக்குப் பாத்திராக்கக் கருதிசேர்த்துப் பிரார்த்திக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறேன். சில்லரை வியாபாரிகளால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவரப்படும் சில வெறுப்பான வரிகளையும், சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக இடையர்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய அநுமதிப்பத்திரங்களையும், பூ விற்பவர், மீன் விற்பவர், பருத்தி ஆய்பவர், சமையற்காரர், இவர்களுக்கிடப்பட்ட வரிகளையும், சில்லரைக்கடைக்காரர்கள், மது விற்பவர், இவர்களுக்கிடப்பட்ட தீர்வைகளையும், இனிமேல் தள்ளிவிடும்படி இதனால் உத்திரவுசெய்கின்றேன். இவ்விதமான வரிகளை, வசூல்செய்வோர் இஷ்டத்தைப் பொறுத்தவாகவிட்டு அதனால் ஜனங்களுக்கு அநேக நிர்ப்பந்தங்களை யுண்டாக்கி வசூல் செய்வதைப்பார்க்கிலும், அவற்றை முற்றிலும் இழத்தலே நலமாகும். அன்றியும் இனிமேல் சட்டபுஸ்தகங்களில் விபக்தமாகக் கண்டவரிகளை யன்றி மற்றொரு வகையான வரிகளும் வாங்கப்படமாட்டா. உயுத்தத்தில் அபகரிக்கப்பட்ட பொருள்களில் ஐந்திலொரு பாகம் போர்ச்சேவகர்க்கென்றும், மற்ற நான்குபாகமும் துரைத்தனத்தாருக்கென்றும், ஒரு ஏற்பாடு நெடுநாளாய் வழங்கிவருகிறது இனிமேல் அப்பொருள்களில் நான்குபாகம் சேவகர்களுக்கும், ஒரு பாகம் மாத்திரமே அரசனுக்கென்றும், நான் உத்திரவுசெய்கின்றேன். பின்வரும் குற்றங்களைச் செய்பவர்களை இராஜ்யத்தில் இருந்து தூரத்தும்படிச்



செய்வேன். அவர் யாவரென்னில் தெய்வத்தை ஒப்புக்கொள்ளாத நாஸ்திகர்கள், துர்மார்க்கங்களைப் பழக்கிவைப்பவர், கைக்கூலி வாங்கும் உத்தியோகஸ்தர்கள், கைக்கூலி கொடுப்பவர்கள் என்பவர்களாம். எனது பிரஜைகள் என்னைக்கண்டு பழகும்படி டாம்பீகமான பட்டுடைகளையும் ஆபரணங்களையும் தரிப்பதில்லையென்று தீர்மானித்தேன். வழிப்போக்கர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சத்திரங்கள், மசூதிகள், கிணறுகள், தடாகங்கள், வாய்க்கால்கள், கால்வாய்கள், வைத்தியசாலைகள், தர்மசத்திரங்கள், பாடசாலைகள் முதலாக ஜனோபகாரமாக என் முன்னோர்களால் செய்விக்கப்பட்ட ஒவ்வொரு கட்டிடத்தையும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கக்கருதி அவற்றின் செலவுகளுக்கும் வரிகளிலிருந்து ஒரு வீதம் ஏற்படுத்தியிருக்கின்றேன். அன்றியும் எனக்குமுன் அரசுபுரிந்த மகமது டோக்ளாக்கென்பவரின் அக்கிரமத்தண்டனைகளால் இறந்துபோனவர்களின் பந்துக்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள் கொடுத்து அவ்வரசனை முற்றிலும் மன்னிக்கும்படிச்செய்து, அவர்கள் அவ்வாறு செய்ததைத் தக்க சாக்ஷிகளோடு பத்திரங்களில் எழுதுவித்து அவற்றையெல்லாம் எனக்குக் கிடைத்தவரையில் சேர்த்து ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி அவ்வரசன் கல்லறைக்குள்ளே புதைத்துவைக்கும்படிக் கட்டளையிட்டேன். என்னுடைய இராஜ்யத்தில் உள்ள கல்விமான்கள் புண்ணியவான்களாகிய பெரியோர்களையெல்லாம் சென்றுகண்டு அவர் அனுக்கிரகத்தைப்பெற்று அவர்களைக் காப்பாற்றிவருகின்றேன். என் இராணுவவீரர்களில் எவரேனும் வயோதிகத்தாலாவது காயங்களாலாவது வேலைசெய்வதற்கு அருகமில்லாதவரானபோது, ஜீவபரியந்தம் அவர்களுக்கு முழுச்சம்பளமும் உபகாரார்த்தமாகக் கொடுக்கும்படித் திட்டம்செய்திருக்கிறேன். என்னைக் கொல்லுதற்கு இருமுறை பிரயத்தனப்பட்டார்கள் ஆயினும் பலிக்கவில்லை.

## Adventures with a Jelly Fish.

## ஜல்லிமீனால் நேரிட்ட அவஸ்தைகள்.

உலகத்தில் அற்புதமான பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றுள் ஜல்லிமீன் என்பதொன்று. இதைப்பற்றி ஒருவர் பின்வருமாறு எழுதுகின்றனர்.

ஒருநாட் காலையில் நான் கடற்றுறையில் இறங்கி நீந்திக்களித்துக்கொண்டிருந்தேன். அப்போது சிறிதுதூரத்தில் மணற்றிட்டுப் போல் ஒரு பொருள் தோன்றியது. அலைகள் ஓங்கி அடித்துக்கொண்டிருந்தமையால் அப்பொருள் அலையில் முழுகி யெழுந்து தோன்றுவதும் மறைவதுமாகவிருந்தது.

இக்கரை எனக்கு நன்றாகத் தெரியுமாதலின் அவ்விடத்து மணற்றிட்டு இருக்கக் காரணமில்லையே என்று கருதி அப்புதுமையான பொருளை நோக்கி நீந்திச்சென்று அதற்குப் பத்துப் பன்னிரண்டு கஜதூரத்திற் சென்றதும் அது ஏதோ ஒரு பிராணி என்று தெரிந்துகொண்டேன். அதை யடுத்து நோக்க வெனக்கு இஷ்டமில்லாமையால் கப்பலினின்றுத் தவறிக் கடலில் வீழ்ந்த ஏதோ ஒரு பிராணியின் உடலம் என்று நினைத்து அது விட்டு விலகினேன். அதை நான் அடுக்கும்போது என்னிடதுகால் விரல்களில் ஏதோ சுறுரென்றது. எனக்கு ஏற்கனவே காலில் வெடிப்புக் கண்டிருந்தமையால் நீந்தும்போது வலியுண்டாகுமாதலின் ஊசி குத்துதல் போலும் அவ்வெடிப்பின் வலியென்று எண்ணினேன். ஆதலால் அதை அதிகமாய்க் கவனிக்கவில்லை. ஆயினும், சிறிது நேரத்துக்கெல்லாம் அவ்வலி வரவா அதிகமாகி காஞ்சொறித்தினவுபோலத் தோன்றியது. உடனே சங்கதி இன்னதென்று மனத்திற்பட்டது. கரைக்குக் கூடியசீக்கிரத்தில் திரும்பினேன். அப்படித் திரும்புகையில் என் வலதுகையை

ஜலத்துக்குமேலே தூக்க அதில் முப்பது நாற்பது மெல்லிய தெளிவான நூல்கள் தொங்கிக்கொண்டிருக்கக் கண்டேன். அன்றியும் அந்நூல்கள் ஒரு மீனின் கால்களென்றும் அம்மீன் நாற்பது ஐம்பது அடிக்கு அப்புறத்தே இருந்தபோதிலும் அதன் தொடர்ச்சி விடவில்லை என்றும் தெரிந்துகொண்டேன். நான் கரையைச் சாருமுன்னே வலி பொறுக்க முடியாமல்போயிற்று. குளிர்ந்த ஜலத்தை விட்டு நீங்குதலும் அவ்வலி இன்னும் பாதை மிகுர்தது. எங்கெங்கே அந்நூல்கள் என்னுடம்பில் ஒட்டிக்கொண்டிருந்தனவோ அவ்விடங்களில் எல்லாம் சிவந்தவோடு கிழித்தது போலத் தோற்றியது. வலி பழுக்கக் காய்ச்சிய ஊசியொன்றை மெல்ல நரம்புகளூடே ஏற்றினாற்போ[illegible]இருந்தது. உடை மேலே எவ்வளவாவது ட[illegible]னும் பொறுக்க முடியாமல் இருந்தது. என்னிருப்பிடத்தைச் சேர்தற்கு இரண்டுமைல் தூரம் நான் நடக்கவேண்டியிருந்ததனால் நான் அதற்குள்ளாக அடைந்த அவஸ்தைகளைச் சொல்லவேண்டியதில்லை. நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். இவ்வலி இவ்வளவு கடினமாயிருப்பினும், அக்கொடிய ஆயுதங்களால் உண்டான மற்ற அவஸ்தைகளை நோக்க அது ஆயிரத்தில் ஒரு பங்குகூட இராது. சுவாசமும் நெஞ்சின் அடிப்பும் இரத்தத்தின் ஓட்டமும இரண்டும் நின்றுவிட்டன. இடையிடையே, மார்பின்வழியாய் சுரீர்சுரீரென்று ஒரு குத்தல் மார்பினூடே துப்பாக்கி ரவையொன்று பாய்ந்ததுபோலத் தோன்றும். பின்பு மார்பின் அடிப்பு ஒரு கணமும் ஒருயுகமென்று தோன்றும்படி சிறிது நேரம் நின்று பின்பு மார்பைப் பிளந்துகொண்டு வெளியே வருவதுபோல ஆறு ஏழு தாண்டல் ஒரேமுட்டாகத் தாண்டும். சுவாசகோசம் செயலற்றுச் சுவாசம் உட்செல்லாமல் நின்றுவிடும்: பின்பு சுருக்கென்னு மவ்வலி மார்பினூடே பாயும். இவ்விதமாகவே மாறி மாறி உண்டாகும். எனக்கு இரண்டு வருஷம் போல தோன்றியது. என்னிருப்பிடம் சேருமுன் வீடுசேர்ந்ததும் தயிலமொன்று வைத்திருந்த குப்பியை எடுக்க இவ்விதமான அசந்தர்ப்பங்களில் நேரிடுவதுபோல அதில் பொட்டளவேனும் தைலமில்லை. அதனால் இன்னொரு குப்பி தயிலம் தருவிக்கும்வரையில் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிற்று. தயிலம் உடம்பிற் பட்டதும் கடுப்புச் சற்று நின்றது. ஆயினும் எதிரிருந்த கண்ணாடியில் அகஸ்மாத்தாய் என் முகத்தை நான் பார்க்க நேரிட்டபொழுது அது எனக்கு ஜாடை தெரியவேயில்லை. முற்றிலும் வெளுத்துச் சுருங்கிப்போய் வேர்வை முத்துமுத்தாய் நிரம்பியிருந்தது. நான் வலி நீங்கி எப்போதும்போல் நடப்பதற்கு நாலைந்துநாட் சென்றது. மூன்றரை மாதம் வரையில் அந்தச் சுருக்கு வலி மார்பில் நாலில் இரண்டில் தோற்றும் ஆயினும் இவ்வளவோடு போயிற்றே அதுவே பெரிது. அவ்விஷக் கால்களின் அவஸ்தை இவ்வளவு கடுமையாயிருப்பினும் அவைகள் தாக்கிய இடங்கள் கொஞ்சங்கொஞ்சமாய் இரண்டுமூன்று இடங்களே தவிர அதிகமில்லை. ஒரு காலில் முழங்காலுக்குச் சற்று மேலும் வலதுகையின் பெரும்பாகமும் முகத்தில் நாலைந்துவரைகளும்தான். இன்னம் உடம்பு நெடுகத் தாக்கியிருக்குமாயின் என்னால் கரைக்குவந்து சேரக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. இப்படிப் பட்டு அறிந்ததை நான் மறக்கமாட்டேனென்று உங்களுக்கே தெரிந்துகொள்ளலாம். அதுமுதலாக நான் எப்பொழுதாவது ஜலத்தில் இறங்கினால் என்னை இவ்வளவு அவஸ்தைப்படுத்திய இம்மீன் மீசையுந் தாடியுமாய் எங்கு நிற்குமோவென்று வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துவிட்டுத்தானிறங்குவேன்.

---



## The Scenery of the Cauvery.

## காவேரி நதியின் அழகிய காட்சி.

### I

காவேரி நதியைப்பார்க்கிலும் பரிசுத்தமான நதி இவ்விந்துதேசத்தில் வேறில்லை. மலைநாடாகிய குடகுதேசத்தில் இதன் உற்பத்திஸ்தானத்திலிருந்து தீபகற்பத்தைக் கடந்து நெடுந்தூரம்சென்று, எண்ணிறந்த கிளைகளாகப் பிரிந்து, திரிச்சிராப்பள்ளி தஞ்சாவூர் என்னும் ஜில்லாக்களைச் செழிப்பித்து, வரையாது வழங்கி வறுமையடைந்த வள்ளியோர்போல ஒடுங்கிச்சுருங்கி வங்காளக்கடலில் சங்கமமாகும்வரையிலும் ஓரிடம் ஒழியாமல் இதன் மகிமை கொண்டாடப்படும்.

இந்தக்குடகு நாடானது மைசூர் ராஜ்யத்துக்கு மேற்புறத்தில் மலைகளின் மத்தியில் உள்ள ஒரு சிறு தேசம். இதில் பிரமகிரியென்று உயர்ந்தமலையொன்று இருக்கின்றது. இம்மலை சமுத்திரமட்டத்துக்கு 5000- அடி மேலுயர்ந்திருக்கின்றது. இம்மலையின்மேல் நவம்பர் மாதத்தில் காலைவேளையில் மப்புமந்தாரம் இல்லாதபோது நின்று நோக்கினால் நாற்புறமும் காணப்படும் காட்சி வெகு மனோகரமாயிருக்கும். கண்ணுக்கெட்டியவரையிலும் புல்லும் மரமும் அடர்ந்துவளர்ந்த காடுகள் நெருங்கிய குன்றுகள் அநேகம் காணப்படும். இக்குன்றுகள் சிற்சில விடங்களில் அலைகள்போல மட்டமாக உயர்ந்தும் சிலவிடங்களில் கூரிய கொடுமுடிகளாக ஓங்கியும் இருக்கும். மேற்புறத்தில் நெடுந்தூரத்துக்கப்பால் கரு நீலம் பாய்ந்த இந்து மகாசமுத்திரம் ஒளிபொருந்திய வளைந்த அநேக ஆறுகள் பாயும் அகன்ற பிரதேசத்துக்கப்புறம் கண்ணுக்குத் தோன்றும்.

மேலேகூறிய பிரமகிரியின் உச்சியில் தலைக்காவேரி யென்னும் ஓரிடத்தில் காவேரி நதி முதல் ஓர் சிற்றருவியாக உற்பத்தியாகின்றது. அங்கு இது இருண்ட குகையினின்றாயினும் உறைந்தபனிக்குவையினின்றாயினும் உற்பத்தியாகிறதில்லை. பசியமலைப்பக்கத்தில் நின்றுண்டாகி, அடியில் ஒரு கற்றொட்டியில் வீழ்ந்து, அங்கு நின்று மூன்றடியாழமும் முப்பதடி சமசதுரமுமான ஓர் தடாகத்திற் பாய்கின்றது. இக்கற்றொட்டிக்கு மேலே ஒரு சிறிய கோயில் உள்ளது. இங்கு நின்று ஒரு வாய்க்கால் வழியே நீர் வெளியே செல்லுகின்றது. இதுதான் இந்நதியின் உற்பத்தி.

வருஷம்தோறும் அக்டோபர் மாதத்தில் இந்த மகா பரிசுத்தமாகிய ஸ்தலத்தில் ஒரு உற்சவம் நடத்தப்படும். அவ்வுற்சவத்துக்கு எண்ணிறந்த ஜனங்கள்வந்து கூடுவார்கள். குடகு தேசத்தில், ஒவ்வொரு வீட்டாரிலும் ஒன்றிரண்டுபேருக்குக் குறையாமல் வருவதன்றி, மைசூர் கன்னடம் மலையாளம் முதலிய தேசங்களிலிருந்தும் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் வருவார்கள். இவர்கள் சிங்காரமான உடைகள் தரித்து கும்பல் கும்பலாய்ப் பற்பல பாதைகளூடே மலைச்சார்புகளில் ஏறிச் செல்வதைக்காண வெகு விசித்திரமாயிருக்கும். பாட்டும் ராகமும் எங்கு பார்த்தாலும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். இது உற்சவங்கொண்டு உவக்கும் காலமாதலால் இக்காலத்தில் மழைகள் நீங்கித் தாழ்வரைகளில் நெற்பயிர்கள் விளைந்து கதிர்முற்றிக், காடுகளும் குன்றுகளும் செழித்துத்தளிர்த்து பச்சென்று காந்தியோடு விளங்கிக்கொண்டிருக்கும்.

இக்குடகு நாட்டார் மிக்க தைரியமும் சுறுசுறுப்புமுள்ள ஜனங்கள். பார்வைக்கு உயர்ந்து அழகாயிருப்பார்கள். பெண்கள் அநேகமாகச் செகப்பாயும் அழகாயும் ஓங்கிவளர்ந்து மிருப்பார்கள். இவர்கள் தம் நாட்டை வெகு ஆவலோடு நேசித்து உலகிலுள்ள மற்றெத்தேயத்திலும் அதைச் சிறந்ததாகச் சிலாகித்துக் கொள்வார்கள்.

இவர்கள் எப்போதும் பாடிக்கொண்டேயிருப்பவர்கள். இவர்களுக்குள்ளே ஒவ்வொரு பிரகிருதத்துக்கும் ஒவ்வொரு பாட்டு ஏற்பட்டிருக்கும். அப்பாடல்களில் அநேகம் பின்வருமாறு ஆரம்பிக்கும்.

“ பெயர்மலி சம்புப்பெருந்தீவதனில்
செயன் மலிவளனுறுதிருவளர் நாடுகள்
பற்பலவுள்ள அற்புதமானவை ;
அன்னவற்றெல்லாம் துன்னியவரைகளில்
பொன்மலைபோலவும், நன்மலர் பூத்துப்
பொதுளியகாவிடைமதுமலிசண்பகப்
புதுமலர் போலவும், பொலிந்திடுமாங்கே,
முத்தநன்மாலிகை முழுவனப்பதனை
ஒத்திடும் குடகெனு மொண்ணாடதுவே ;
ஆயவந் நாட்டில் அமர்ந்தனை நண்ப
நேய மோடுவாழ்குக நெடிதே.”

இந்த உற்பத்தி ஸ்தானத்திலிருந்து காவேரியாறு குடகு நாட்டூடே முப்பது மைல்தூரம் இருகரையிலும் ஓங்கிவளர்ந்த பொழில்களின் வழியே வளைந்துசென்று அநேக உபநதிகளைப் பெற்று மைசூர் நாட்டின் எல்லையை அடையு முன் ஓர் பெரிய ஆறாகப் பெருகுகின்றது. ஸ்ரீரங்கபட்டணத்தை அடையும் காலையில் அது அகன்று பரந்த பெருநதியாகப் பிரவாகித்து அத்தீவைச்சூழ்ந்து கற்களும் பாறைகளும் செறிந்த அடித்தரையூடே கிழித்துச்செல்லுகின்றது.

இச் ஸ்ரீரங்கபட்டணத்தீவில் உள்ள கோட்டை இந்து சரித்திரத்தில் அங்கிலேயர் வெற்றிகளில் மிகவும் பேர்போனது. இது சிறிதும் ஒழுங்கில்லாமல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதில்கள் மிகவுயர்ந்திருப்பினும் பார்வைக்கு அந்தமும் தோற்றமும் இல்லாமலிருக்கும். அக்காலத்தில் அங்கிலேயர் இடித்துப்புகுந்த அபாயமான மதிற்சந்து, அநேகம் போர்வீரர்கள் சமர்புரிந் துயிர்துறந்த அன்றைப்போலவே இன்றும் உள்ளது. உள்மதிலில் திப்பு சுல்தான் அன்று கடும்புலிபோல வீராவேசங்கொண்டு போர்செய்து மடிந்து பிணக்குவியலில் புதைந்துகிடந்ததாகிய குறுகிய திட்டிவாசல் இன்றும் அப்படியேயிருக்கின்றது. அவனை அன்று கொன்றவன் இன்னானென்று ஒருவரும் அறியார்கள். அவன் குரூரனும் தயையில்லாதவனும் வஞ்சகனுமானாலும் கடைசியில் அரசனைப்போலவும் வீரனைப்போலவும் போர்செய்து மரணமடைந்தான். இக்கோட்டைக்கு ஒன்றரை மைல்தூரத்தில் ஏகாந்தமான ஒரு தோட்டமிருக்கின்றது. இத்தோட்டத்தில் இருபுறமும் ஓங்கிவளர்ந்த மரங்களுக்கிடையே ஓர் பாதை செல்லுகின்றது. அப்பாதைவழியாகச் சென்றால் பளபளவென்று கண்ணைப் பறிக்கின்ற வெண்ணிறமான கோபுரங்களும் ஸ்தூபிகளுமாகச் சித்திரித்துச் சிங்காரிக்கப்பட்ட எண்கோணகிருதியான ஒரு உயர்ந்த சமாதி மண்டபம் காணப்படும். இதைச் சுற்றிலும் வழவழவென்று இழைத்த கருஞ்சலவைக்கற் கம்பங்கள் நிறுத்திய தாழ்வாரம் ஒன்றும் உள்ளது. இம்மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் அழுத்தமான கருங்காலிமரத்தாற் செய்யப்பட்டுத் தந்தமிழைத்த ஓங்கியுயர்ந்த இரட்டைக்கதவுகளும் கண்ணாடிபோலப் பளபளவென்று பிரகாசிக்கின்ற கருஞ்சலவைக்கற்களால் அமைக்கப்பட்ட வாயில்களும் உள்ளன. இவ்வாயில்களில் ஒன்றினூடே உள்ளேநோக்கின் அம்மண்டபத்தின் மத்தியில் ஒன்றின் பக்கத்திலொன்றாய் மூன்று கோரிகள் காணப்படும். இவற்றுள் ஹைதராலியும் அவன் மனைவியும் அவன் மகனாகிய திப்பு சுல்தானும் கிடந்து உறங்குகின்றனர். திப்புவின் சமாதி பூக்கள்போட்ட விலையுயர்ந்த பட்டினாலும் மற்றவையிரண்டும் பொற்சரிகையிட்ட செகப்புப்பட்டாலும் மூடப்பட்டுள்ளன.

இங்கிருந்து சுமார் நாற்பது மைல் அளவும் காவேரி நதி நன்றாகப் பயிர்செய்யப்பட்டுக் குளங்களும் நகர்களும், கிராமங்களும் அங்கங்கே அமையப்பெற்ற சமநிலங்களினூடே பாய்ந்து, கடைசியி [illegible] டிக்கும் கோடை வெயிலால் [illegible] ளநிலங்களாகிய கருநாடகத்துக்கும் நடுவில் உள்ள மலைப் பிரதேசத்தை யடைகின்றது. இங்கு இந்நதி கால் மயில் அகலமுள்ளதாய் இரண்டு கிளைகளாகப்பிரிந்து சிவசமுத்திரம் என்னும் தீவைச்சுற்றி யோடுகின்றது. இத்தீவில் ஒரு நகரமும் புராதனமான பிரசித்திபெற்ற கோயிலும் இருக்கின்றன.



இங்கு ஆறு அதிவேகமாய்ப்பாய்தலினாலும் ஆற்றின் அடித்தரை மேடும் பள்ளமுமாயிருத்தலினாலும் அதைத் தாண்டி இத்தீவைப்பகைவர்கள் அடுப்பது பிரயாசமாகும். இதன் தலைப்பக்கத்தில் இந்நதியின் இரண்டு கிளைகளையும் கடந்து செல்ல வெகு விசித்திரமானவையும் இந்துக்கள் கைப்பாடென்று எளிதில் தெரிந்துகொள்ளத் தக்கவையுமான பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நதியின் அடித்தரையில் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும் பாறைகளின்மீது சதுரமான அடிகள்வைத்த உருண்ட கம்பங்கள் இணையிணையாக நிறுத்தப்பட்டு அவற்றின் மேல் குறுக்காக உத்திரங்கள் பாய்ச்சி அவ்வுத்திரங்கள்மேல் பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இணையிணையாக நிறுத்தப்பட்ட கம்பங்கள் ஐந்நூறு சோடுகளுக்கு மேலேயுள்ளன. அஸ்திபாரம் பலமாயிருத்தல் இன்றியமையாதாதலாலும், பாறைகள் தொடர்ந்து நில்லாமல் பிரிந்து நிற்றலினாலும் எங்கெங்கே அடிப்பலம் கொடுக்குமோ அவ்வழியாக இப்பாலம் கோணி நெளிந்து போயிருக்கின்றது. இப்பாலத்தைச் சிற்பநூலார் கண்டு திருப்தியடையமாட்டார்களாயினும் மற்றவர்களுக்கு இதன் வளைவும் வடிவும் வெகு நேர்த்தியாயிருக்கும். இப்பாலத்தின்மீது இருபுறமும் நுழைகள் அமைத்த கைபிடிச்சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் மீது வண்டிகள் அபாயமின்றிச் செல்லக்கூடும். பாம்பு நெளிதல்போலக் கோணிச்செல்லும் இப்பாலத்தில் இந்துக்களுக்கு விசித்திரமாகத் தோற்றுவது ஒன்றும் இல்லை, நதி வளைந்து செல்லும்போது அதன்மேற் செல்லும் பாலமும் ஏன் வளைந்திருக்கக்கூடாது என்பார்கள்.

இப்பாலத்துக்கு ஒருமைல் கீழாகக் காவேரி நதி மேட்டில் நின்று பள்ளத்தில் விழுகின்றது. இங்குதான் பள்ள நிலங்களை அடைதற்கு இந்நதி முதல் முதல் கீழ்நோக்கி அடியெடுத்து வைக்கின்றது. இத்தீவின் இருபக்கத்திலும் இந்நதியின் இரண்டு கிளைகளிலும் ஒவ்வொரு வீழ்ச்சியிருக்கின்றது. வடகிளையிலுள்ள வீழ்ச்சிதான் மிகவும் பயங்கரமானது. இத்தீவு ஒருவரையும் அண்டவொட்டாமல் துரத்தியடித்து அதைக் காத்துக்கொண்டிருக்கும் ஒரு பூதத்தின் சாபத்தை யடைந்திருக்கிறதென்றும் இங்கு அநேகம் கோரமான கொலைகள் நடந்திருக்கின்றனவென்றும் சொல்லுவதற்கேற்ப இக்காட்சி பார்ப்பவர்களுக்கு மிக்க பயங்கரமாயிருக்கும்.

இங்கு நின்று ஐம்பதுமைல் வரையில் ஊளையிடும் காடென்று உண்மையில் சொல்லத்தக்கதும், மலைகளின் அழகு சிறிதும் இல்லாமல் வறண்டு வற்றிக் கல்லும் கறடுமாய் விஷஜ்வரத்துக்கு இருப்பிடமாயுள்ளதுமான முட்செடிகள் படர்ந்த காடுகளால் மூடப்பட்ட பயங்கரமான மலைப் பிரதேசத்தூடே இந்நதி கிழக்கு நோக்கிச்செல்லுகின்றது. இப்பிரதேசத்தில் ஆழ்ந்த குழிகளில் அங்கங்கே சிறிது ஜலம் காணப்பட்டு அவ்விடங்களில் புல்லும் புதரும் உயர்ந்து நெருங்கிவளர்ந்திருக்கும். இந்தகோரமான பிரதேசம் பாலைவனம்போலத் தீய்ந்து மறிந்து கிடப்பினும் இங்கு பெருங்காடுகளிலும் அதிகமாக விலங்குகள் நெருங்கியிருக்கும். பலவகையான மானினங்கள் நிச்சத்தமான புதர்களுக்கிடையே அலைந்துதிரியும். இவற்றிற்குச்சமீபமாகவே பயங்கரமான அழகைப் பிடித்து அமைத்ததுபோல உருவமைந்த சிறுத்தைப்புலிகளும் வேங்கைப்புலிகளும் பதுங்கியிருக்கும்.

இந்த அபாயமும் பயங்கரமுமான பிரதேசத்தின் வழியே, இருபுறமும் கரைகள் இரு

நூறு முந்நூறடி செங்குத்தாக உயர்ந்திருக்க ஒரு குறுகிய பள்ளத்தாக்கினிடையே இந்நதி செல்லுகின்றது. இங்கு இருபுறமும் நெடுந் தூரத்துக்கு மனிதர்கள் சஞ்சரிக்கும் பாதைகளாவது கிராமங்களாவது இல்லாமையினாலே இந்நதியின் இப்பாகத்தை ஜனங்கள் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது. பூமி காடுகரம்புகள் நீங்கி வெட்டவெளியாகத் தோன்றுகின்ற இடங்களில் மனிதசஞ்சாரமும் வீடுகளும் காணப்படும். தென்பக்கத்தில் காடுகள் மறைந்து விளைநிலங்கள் காணப்படுகின்றதனால் அங்கு குதிரைகளையும் எருது மாடுகளையும் மாத்திரமே கொண்டுசெல்லக்கூடிய ஒரு குறும்பாதை போகின்றது. இது மலைநாட்டுக்கும் கீழ்நாடுகளுக்கும் இன்றைக்கும் போக்குவரவு செய்தற்கு முக்கியமான வழியாயிருக்கின்றது.

முன்னொருகாலத்தில் ஒருவாறு ஜனசமிர்த்தியுள்ளதும் உழுது பயிரிடப்பட்டதுமாயிருந்த பிரதேசத்தின் வழியே இந்நதியைத் தொடர்ந்து இருபதுமைல்தூரம் செல்லின் காவேரிபுரம் கணவாய்க்கு வந்து சேரலாம். இது ஒருகாலத்தில் இந்தமலைப்பிரதேசத்துக்கும் கீழ் நாடுகளுக்கும் இடையில் உள்ள இரண்டு மூன்றுவழிகளில் ஒன்றாய்ப் பிரசித்திபெற்றிருந்தது. இந்தமலைக்கணவாயின் ஆரம்பத்தில் முன்னேயிருந்த கிராமத்தின் சேஷமாக இப்போதுள்ளது ஒரு பெரியகோயில் ஒன்றுதான். இதன் கற்கம்பங்கள் நிறுத்திய விசாலமாகிய புறந்திண்ணை இப்போதும் பிரயாணிகளுக்குத் தங்கும் சாவடியாக உபயோகப்படுகின்றது.

நம்வழியைத் தொடர்ந்து முன்னேக்கிச் செல்லின் கணவாய்க்கு வந்து சேருவோம். இக்கணவாய் செங்குத்தாகி மாய்செயுயற்றுப் பயங்கரமான குன்றுகளுக்கு மத்தியில் பதினெட்டுமைல்தூரம் படிப்படியாக இறங்கிக் கடைசியில் காவேரியில் வந்து முடிகின்றது. இதன் ஓரமாக ஒரு சிறு அருவி ஓடுகின்றது. மேற்கூறிய பாதை இவ்வருவியைத் தொடர்ந்து சென்று இவ்வருவியின் அடித்தளத்தை ஒன்பதுதரத்துக்குக் குறையாமல் கடக்கின்றது.

இங்கு ஒரு மேட்டு நிலத்தில் நின்று பார்த்தால் இம்மகாநதி இருகரைகளிலும் மரங்கள் நெருங்கிப் பசுமையாகிய பள்ளத்தாக்கின் வழியாகத் தெற்குமுகமாகத் தகதகவென்று ஒளிவீசிக்கொண்டுவருவதைக் காணலாகும். இப்பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மலைத்தொடர்கள் சுவரெடுத்தது போல நிற்கின்றன. மேல்புறத்தில் காவேரிபுரம் கணவாய் இத்தொடர்களுக்கு மத்தியில் பரவியிருக்கின்றது.

இவ்விடத்தில் இந்நதிதான் நெடுந் தூரம் திரிந்துவந்த மலைநாடுகளைக்கடைசியாக விட்டு நீங்கித் தென் முகமாகத்திரும்பி நாற்பதுமைல் தூரம் ஒரேபார்வையாக இருபுறமும் வெள்ளம் கரைபுரள அகன்று ஓடுகின்றது. ஆயினும் இதன் இருபுறமுமுள்ள பிரதேசங்கள் இன்னம் விளைவின்றிக் கல்லும் கறடுமாயே உள்ளன. இதன்கரைகளும் நீரேறப்பாய வொண்ணுதபடி உயர்ந்திருக்கின்றன. இங்கு இந்நதியினிடையே மரங்கள் நெருங்கிவளர்ந்த மூன்று நான்கு தீவுகள் இருக்கின்றன. ஜூன், ஜூலை, ஆகஸ்டுமாதங்களில் நதியில் பிரவாகம் பூரணமாகி இத்தீவுகளைச்சுற்றி ஜலம் அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் எண்ணிறந்த நீர்ப்பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற்கு இங்குவந்து சேரும். மரங்கள் எல்லாம் இப்பறவைகளின் கூடுகளால் நிறைந்துபோகும். பலவகையான கொக்குகளும் நாரைகளும் தமது அகன்ற சிறகுகளை விரித்துக்கொண்டு இடைவிடாமல் வட்டமிட்டுக்கொண்டிருக்கவாயினும், அல்லது மரங்களின் உச்சியில் வரிசைவரிசையாக விசித்திரமாக உட்கார்ந்திருக்கவாயினும் நூற்றுக்கணக்காகக்காணப்படும்.

இங்கு நின்று இந்நதி மேனேக்கிச்சென்று பவானியென்னும் ஊருக்கருகில் நீலகிரி மலையிலிருந்து வருகின்றதும் பவானியென்னும்

நூறு முந்நூறடி செங்குத்தாக உயர்ந்திருக்க ஒரு குறுகிய பள்ளத்தாக்கினிடையே இந்நதி செல்லுகின்றது. இங்கு இருபுறமும் நெடுந்தூரத்துக்கு மனிதர்கள் சஞ்சரிக்கும் பாதைகளாவது கிராமங்களாவது இல்லாமையினாலே இந்நதியின் இப்பாகத்தை ஜனங்கள் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது. பூமி காடுகரம்புகள் நீங்கி வெட்டவெளியாகத் தோன்றுகின்ற இடங்களில் மனிதசஞ்சாரமும் வீடுகளும் காணப்படும். தென்பக்கத்தில் காடுகள் மறைந்து விளைநிலங்கள் காணப்படுகின்றதனால் அங்கு குதிரைகளையும் எருது மாடுகளையும் மாத்திரமே கொண்டுசெல்லக்கூடிய ஒரு குறும்பாதை போகின்றது. இது மலைநாட்டுக்கும் கீழ்நாடுகளுக்கும் இன்றைக்கும் போக்குவரவு செய்தற்கு முக்கியமான வழியாயிருக்கின்றது.

முன்னொருகாலத்தில் ஒருவாறு ஜனசமிர்த்தியுள்ளதும் உழுது பயிரிடப்பட்டதுமாயிருந்த பிரதேசத்தின் வழியே இந்நதியைத் தொடர்ந்து இருபதுமைல்தூரம் செல்லின் காவேரிபுரம் கணவாய்க்கு வந்து சேரலாம். இது ஒருகாலத்தில் இந்தமலைப்பிரதேசத்துக்கும் கீழ்நாடுகளுக்கும் இடையில் உள்ள இரண்டு மூன்றுவழிகளில் ஒன்றாய்ப் பிரசித்திபெற்றிருந்தது. இந்தமலைக்கணவாயின் ஆரம்பத்தில் முன்னேயிருந்த கிராமத்தின் சேஷமாக இப்போதுள்ளது ஒரு பெரியகோயில் ஒன்றுதான். இதன் கற்கம்பங்கள் திருத்திய விசாலமாகிய புறந்திண்ணை இப்போதும் பிரயாணிகளுக்குத் தங்கும் சாவடியாக உபயோகப்படுகின்றது.

நம்வழியைத் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லின் கணவாய்க்கு வந்து சேருவோம். இக்கணவாய் செங்குத்தாகி மரஞ்செடியற்றுப் பயங்கரமான குன்றுகளுக்கு மத்தியில் பதினெட்டுமைல்தூரம் படிப்படியாக இரங்கிக் கடைசியில் காவேரியில் வந்து முடிகின்றது. இதன் ஓரமாக ஒரு சிறு அருவி ஓடுகின்றது. மேற்கூறிய பாதை இவ்வருவியைத் தொடர்ந்து சென்று இவ்வருவியின் அடித்தரையை ஐம்பதுதரத்துக்குக் குறையாமல் கடக்கின்றது.

இங்கு ஒரு மேட்டு நிலத்தில் நின்று பார்த்தால் இம்மகாநதி இருகரைகளிலும் மரங்கள் நெருங்கிப் பசுமையாகிய பள்ளத்தாக்கின் வழியாகத் தெற்கு முகமாகத் தகதகவென்று ஒளிவீசிக்கொண்டுவருவதைக் காணலாகும். இப்பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மலைத்தொடர்கள் சுவரெடுத்தது போல நிற்கின்றன. மேல்புறத்தில் காவேரிபுரம் கணவாய் இத்தொடர்களுக்கு மத்தியில் பரவியிருக்கின்றது.

இவ்விடத்தில் இந்நதிதான் நெடுந்தூரம் திரிந்துவந்த மலைநாடுகளைக்கடைசியாக விட்டு நீங்கித் தென் முகமாகத்திரும்பி நாற்பதுமைல் தூரம் ஒரேபார்வையாக இருபுறமும் வெள்ளம் கரைபுரள அகன்று ஓடுகின்றது. ஆயினும் இதன் இருபுறமுமுள்ள பிரதேசங்கள் இன்னம் விளைவின்றிக் கல்லும் கரடுமாயே உள்ளன. இதன் கரைகளும் நீரேறப்பாய வொண்ணாதபடி உயர்ந்திருக்கின்றன. இங்கு இந்நதியினிடையே மரங்கள் நெருங்கிவளர்ந்த மூன்று நான்கு தீவுகள் இருக்கின்றன. ஜூன், ஜூலை, ஆகஸ்டுமாதங்களில் நதியில் பிரவாகம் பூரணமாகி இத்தீவுகளைச்சுற்றி ஜலம் அதிவேகமாக் ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் எண்ணிறந்த நீர்ப்பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற்கு இங்குவந்து சேரும். மரங்கள் எல்லாம் இப்பறவைகளின் கூடுகளால் நிறைந்துபோகும். பலவகையான கொக்குகளும் நாரைகளும் தமது அகன்ற சிறகுகளை விரித்துக்கொண்டு இடைவிடாமல் வட்டமிட்டுக்கொண்டிருக்கவாயினும், அல்லது மரங்களின் உச்சியில் வரிசைவரிசையாக விசித்திரமாக உட்கார்ந்திருக்கவாயினும் நூற்றுக்கணக்காகக்காணப்படும்.

இங்கு நின்று இந்நதி மேனோக்கிச்சென்று பவானி யென்னும் ஊருக்கருகில் நீலகிரி மலையிலிருந்து வருகின்றதும் பவானியென்னும்



அவ்வூரின் பெயரையே கொண்டதுமான பெரிய உபநதி யொன்றைப் பெறுகின்றது. இவ்விரண்டு நதியின் சங்கமத்துக்கு நடுவே ஒரு பட்டணம் இருக்கின்றது. இங்கு சங்கமத்துக்குச் சற்று மேலாக அநேகம் கண்களுள்ள இரண்டு பெரிய பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குச் சிறிது தூரத்துக்கப்பால் ஈரோடண்டையில் இந்நதிமேல் இருப்புப்பாதைப் பாலமொன்று செல்லுகின்றது. இங்கு ஒரு பெரிய ரெயில் ஸ்டேஷனும் அநேக வேலைகளும், கட்டிடங்களும் இந்துக்களுடைய தூங்கர்றனத்துக்கு எதிரிடையாக ஐரோப்பியாது பெருமுயற்சியானது இன்னதென்று விளங்கச் செய்வதுபோல அடியும் இடியும் ஓசையும் பூசலுமாகக் காணப்படும். போகப்போகப் பிரவாகம்பொங்கி அகலமும் பெருகிக்கொண்டு ஐம்பது மைல்தூரம் முன்னோக்கி விரைந்து புரண்டோடுகின்றது. கிழக்கு நோக்கிச் செல்லச்செல்ல இருபுறமும் சுபிக்ஷமான விளைவயல்களும் தோப்புகளுமாய்வெகு அலங்காரமாயிருக்கும். கருவூரைச் சாரும்போது இந்நதி ஒருமைல் அகலமுள்ளதாய், ஆனைகள் சஞ்சரிக்கும் ஆனைமலைகளிலிருந்தும் வருகின்ற அமராவதி யென்னும் உபநதியைப் பெறுகின்றது. இவ்விரண்டு நதிகளின் சங்கமத்துக்கு மத்தியிலுள்ள பிரதேசம் ஆற்றின் அடித்தரையினின்று அடித்தொதுக்கப்பட்ட மணற்குன்றுகளால் மூடப்பட்டுள்ளது. இந்த அலைபோலெழுந்த மணற்குன்றுகள் அடிக்கடி இடம்பெயர்ந்து தென்மேற்குக் காற்றடிக்கும்போது முன்னோக்கிச் சென்றும் வடகிழக்குக் காற்றடிக்கையில் பின்னிடைந்தும் இருக்கும். இவை அநேக வயல்களையும் வேலிகளையும் மூடியதுமல்லாமல் ஒரு காலத்தில் ஒரு கோயிலையும் உட்புதைத்துவிட்டன. இக்கோயிலின் மேற்கூரையின் ஒரு பாகமும் கோபுரமும் மாத்திரமே இப்போது இம்மேடுகளுக்குமேல் தெரிகின்றன. பனைகளும் தெங்குகளும் பாதிக்குமேல் புதைந்துபோயிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

## Some Remarks on Athisoody.

## ஆத்திசூடியைப் பற்றி.

இந்நூலை ஔவையார் எழுதிய நோக்கத்தையும் இதன் அருமைபெருமைகளையும்பற்றி, இதற்கு விரிந்ததோருரையெழுதி இதன் நுட்பங்களைக் கற்றறிந்த புலவர்களேயன்றி மற்றவர்களும் எளிதில் உணர்ந்து கொள்ளும்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிய உரையாசிரியராகிய சாமிநாதய்யர் தமது நூன்முகத்திலே பின்வருமாறு விவரிக்கின்றனர்.—"சுருங்கியதும் சொற்சுவை பொருட்சுவை யுடையதுமான இச்சிறு பிரபந்தம் பொதுவாய்த் தமிழ்நாட்டாருக்கும்; அவருள்ளும் விசேஷமாய்ச் சிறுவருக்கும் எழுதியதாகக் காணப்படுகிறது. உலகத்தில் நடந்துவரும் பலகொடிய செயல்களைப் புத்தி பூர்வமாய் ஆராய்ந்து, மானிடர் அவைகளில் அகப்பட்டு உழலாதபடி அவர்களிடம் கருணைகொண்டு அன்னவர்களை உய்யச்செய்யக் கல்வியே மேலான கருவியென்றும், அக்கல்வியைச் "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்றபடி இளம் பருவத்திலேயே அவர்களுக்குக் கற்பித்து முளையிலேயே அக்கொடிய வினைகளைக் களைந்தெறிந்துவிடின் பின் கோடரி கொண்டு வெட்ட இடமிராது என்றும், பச்சை மூங்கிலை எப்படியும் வளைக்கலாமென்றும் நினைத்து இளைஞருக்குத் தக்க நூலாகும்படி நீதிசாஸ்திரக் கரும்பை ஆட்டிச் சாறுபிழிந்து அதைக்காய்ச்சி இளைஞர் வெகு சுலபமாயும் ஆவலோடும் உட்கொள்ளும் பொருட்டுக் கற்கண்டுக் கட்டியாகத் திரட்டிக்

கொடுத்த ஔவையாருக்கு நம் தேசத்தார் செய்யக்கூடிய கைம்மாறு யாதுளது? மிகத் தாழ்ந்த குலத்தினர் ஒழிந்த மற்றெவரும் அநேகமாய்த் தங்கள் பிள்ளைகளை எழுதப் படிக்கவும் சொற்பக் கணக்குப் பார்க்கவும் அறிந்து கொள்ளும் வரையிலாவது பள்ளியிற் படிக்க வைப்பது வழக்கம். அச்சொற்பக் காலத்துக்குள் பிள்ளைகள் இச்சிறு நூலைக் கற்று முடிப்பது வருத்தமாயிராது. பள்ளியிற் சொற்ப காலம் படித்தபிறகு பிள்ளைகளில் அநேகர் பற்பல தொழில்களில் ஏற்பட்டு விடுகிறபடியால் அவர்கள் இச்சிறு நூலைத்தவிர வேறு எந்த நீதியையும் கற்பது அரிது. இதில் சாஸ்திர அசம்பந்தமும் உலக அநுபவமுமான பல நீதிகள் அடங்கியிருப்பதால் அச்சிறுவர்கள் வேறு நீதிகள் கல்லாவிடினும் குற்றமில்லை. இவ்வரிநூலைப் பிள்ளைகள் மறவாவண்ணம் ஔவையார் செய்திருக்கும் உபாயத்தை நோக்கின் பாலசிக்ஷைக்குத் தகுந்த குரு அவரே எனல் வேண்டும்.

“முதலெழுத்து முப்பதுமே சிறுவர்களுக்கு முதல் முதல் கற்பிக்கப்படும் எழுத்துக்கள். முதலில் கற்பிக்கப்படும் காரணத்தால் சிறுவர் இவைகளை ஒருநாளும் மறவார்களென்பது திண்ணம். அவ்வெழுத்துக்களையே முதலில் வைத்து வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.”

* * *

“இஃது எழுத்தின் முறையாய்ச் சொல்லப்பட்டிருப்பது மன்றி அறம், பொருள், இன்பம், வீடு என்ற சதுர்வித புருஷார்த்த முறையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இதனை

‘அறஞ்செய விரும்பு.’
‘பொருடனைப் போற்றிவாழ்.’
‘மெல்லியா டோள்சேர்.’
‘வீடுபெற நில்.’

என்ற வாக்கியங்களா லறிக.”

* * *

“தாய் தன் பிள்ளைக்குப் புத்திகூறியவிதம் நீதிகள் ஒருமையேயவிற கூறப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சில விதிவாக்கியங்கள், சில விலக்கு வாக்கியங்கள். ‘அறஞ்செய விரும்பு’, ‘தானமது விரும்பு’, ‘வித்தை விரும்பு’, இம்மூன்று வாக்கியங்களில் மாத்திரம் ‘விரும்பு’ என்ற பதப்பிரயோகம் செய்யக்காரணம் என்னை? ஒருவர் இவைகளைச் செய்யச் சக்தியற்றவராயினும் விரும்புவதொன்றே தக்கபலனையளிக்கும் என்பது நூல் துணிபாதலால் ‘கொள்ளை விரும்பேல்’, ‘சூது விரும்பேல்’, ‘மீதூண் விரும்பேல்’, என்ற மூன்று வாக்கியங்களிலும் ‘விரும்பேல்’ என்ற பிரயோகத்தால் இவைகளை ஒருவர் மனத்தினாலும் நினைக்க வொண்ணாது என்பது பெறப்படும்.

“‘நன்றி மறவேல்’, ‘அறனை மறவேல்’, ‘சீர்மை மறவேல்’, ‘தொன்மை மறவேல்’, என்ற இந்நான்கு வாக்கியங்களில் ‘மறவேல்’ என்ற பிரயோகத்தால் இவைகள் எவராலும் எக்காலத்தும் மறக்கத் தகாதவை என்றும். ‘கடிவது மற’ என்ற ஒரே வாக்கியத்தில் மாத்திரம் ‘மற’ என்ற பிரயோகத்தைக் காண்க. ‘சனி நீராடு’, ‘தையல் சொற்கேளேல்’, ‘மைவிழியார் மனையகல்’, ‘மெல்லியாடோள்சேர்’, முதலிய வாக்கியங்களால், ‘ஆத்திசூடி’ ஆணை முன்னிலையாகக் (ஆண்மகனை முன்னிட்டுக் கூறுவது) கூறப்பட்ட நூலென்பது புலப்படும்.” என்று இவ்வுரையாசிரியர் இதன்பெருமையை எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

இவர் இவ்வளவு விரிவாகக் கூறியிருப்பினும் ஆராய்ந்து படிப்பவர்களுக்கு இதனைப்படிக்குந்தோறும் இன்னம் இதன் அழகுகள் புதிது புதிதாகத் தோன்றுதலும் உண்மை. செழித்து விளைந்த நெல் வயல்களில் அரிவாளும் கையுமாய் இறங்கிக்கொய்து ஏராளமாய்க் கொள்பவர்களுக்கேயன்றி அவர்கள் அறுத்துக்கொண்டபின் சிதறின அறிகளைப் பொறுக்கிச் சேர்க்கும் அரிப்பொறுக்கிகளுக்குங்கூட ஒருசுமைக்



கதிர்க் கற்றை கிடைத்தல்போல வழிநூல் சார்புநூல் உரைமுதலியவற்றை இதன் சம்பந்தமாகச் செய்திருக்கும் பண்டிதர்களுக்கேயன்றி என்போலும் எளிய மதியை யுடையவர்க்கும் ஒன்றிரண்டு இதன் பெருமையும் அழகும் தோற்றுதலும் உண்மை. ஆதலின் எனக்குத் தோற்றிய சிற்சில விஷயங்களையும் இங்கு காணலாமென் றெண்ணுகிறேன்.

ஔவையார் கூறியிருக்கும் அநேக விஷயங்களில், ஈகை, கல்வி, இனியவை கூறல், நட்பு, ஒப்புறவறிதல், சரீரசுகம் பேணல் முதலியவற்றைப்பற்றி ஒவ்வொருசொற் போதாமல், பற்பல சொற்களில், பலவிடங்களில் அடிக்கடி வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். ஆதலின் இவை அதிமுக்கியமான விஷயங்களென்பது புலப்படும். ஈகையைப்பற்றி,

1. அறஞ்செய விரும்பு.
2. இயல்வது கரவேல்.
3. ஈவது விலக்கேல்.
4. தானமது விரும்பு.
5. அறனை மறவேல்.
6. ஐயமிட்டுண்.

என்னும் சொற்களாலும், கல்வியைப் பற்றி,

1. ஓதுவ தொழியேல்.
2. இளமையிற்கல்.
3. நூற்பலகல்.
4. வித்தை விரும்பு.
5. பேதைமை யகற்று.
6. கேள்விமுயல்.

என்னும்சொற்களாலும், இனியவை கூறலை,

1. ஞயம்படவுரை.
2. கடிவதுமற.
3. சுளிக்கச் சொல்லேல்.
4. பழிப்பன பகரேல்.
5. வெட்டெனப் பேசேல்.

என்னும் உரைகளாலும், நட்பை,

1. இணக்கமறிந்திணங்கு.
2. கூடிப்பிரியேல்.
3. சான்றோரினத்திரு.
4. சேரிடமறிந்துசேர்.
5. தொன்மை மறவேல்.
6. பெரியாரைத் துணைக்கொள்.
7. பையலோ டிணங்கேல்.
8. பாம்பொடு பழகேல்.
9. ஒன்னாரைச் சேரேல்.

என்னும் நீதிகளாலும், ஒப்புரவறிதலை,

1. ஒப்புரவொழுகு.
2. இயல்பலாதன செயேல்.
3. தேசத்தோ டொத்துவாழ்.
4. நாடொப்பனசெய்.
5. ஊருடன் கூடிவாழ்.
6. அழகலா தனசெயேல்.

என்னும்வாக்கியங்களாலும், சரீரசுகம்பேணலை,

1. சனிநீராடு.
2. இலவம் பஞ்சிற்றுயில்.
3. அனந்தலாடேல்.
4. நுண்மை நுகரேல்.
5. நோய்க்கிடங் கொடேல்.
6 துன்பத்துக் கிடங்கொடேல்.
7. நைவன நணுகேல்.
8. மீதூண் விரும்பேல்.
9. வைகறைத் துயிலெழு.
10. மைவிழியார் மனையகல்.

என்னும் பல முதுமொழிகளாலும், தெய்வ பக்தியையும் மறுமைப் பேற்றையும்,

1. திருமாலுக் கடிமைசெய்.
2. தெய்வ மிகழேல்.
3. மோகத்தை முனி.
4. வீடுபெற நில்.
5. வேண்டி வினைசெயேல்.

என்னும் வாசகங்களாலும், வேளாண்மையை,

1. பருவத்தே பயிர்செய்.
2. நெற்பயிர்விளை.
3. பூமிதிருத்தியுண்.

என்னும் சொற்களாலும், பிறர் பொருள் கவர்தலை,

1. மண்பறித் துண்ணேல்.
2. கொள்ளை விரும்பேல்.

என்னும் உரைகளாலும் வற்புறுத்தி யிருக்கின்றனர். 'ஈதலறம்' என்று ஔவையாரே மற்றோரிடத்துக் கூறியிருக்கிற படி ஈகையே அறமாதலாலும், அவ்வறமானது மற்றப்பொருள் முதலிய மூன்றிற்கும் முதன்மையாகக் கொள்ளப்படுதலாலும் ஈகையை அவ்வளவு சிறப்பித்தார். கல்வியின் அருமையும் பெருமையும் யானிங்கு வெகுவாக எடுத்து விரிக்க வேண்டுவதில்லை. கல்வியில் ஞானமும், ஞானத்தால் இம்மை மறுமைப் பயன்களும் உண்டாமன்றோ? இனியவை கூறலால் எவர்க்கும் நல்லோமென்று பெயர்ப்பட்டு யாரையும் வசியப்படுத்தச் சாதகமாதலின் அஃது இல்லறத்துள்ளார் யாவர்க்கும் இன்றியமையாதது. இனிச் சகவாசத்தாலே நமக்கு நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு முதலிய பயன்கள் அனைத்தும் உண்டாகத் தக்கது. சத்சகவாசத்தினால் உண்டாம் நன்மையைப்பற்றி ஞானபாநுவாகிய ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் தாம் உபதேசித்தருளிய 'முமுக்ஷுதாரகம்' என்னும் நூலில்,

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன் முக்தி.!"

"மேலோருறவா லறும்வே றுறவே;
மாலேயறு மவ்வுறவின் மையினால்;
தோலா நிலையாம் மயம் சோர்கையினால்;
மேலா நிலையால் வரும் வீடதுவே."

என்று கூறியிருக்கின ரன்றோ? ஆதலின் அதன் சிறப்பு நன்கு வெளிப்படும். ஒப்புரவறிதலின் மேன்மையைப்பற்றி நம்மவர்களையன்றி மேற்றிசையாரும் ஒப்புவரன்றோ? "நீ ரோமபுரியில் இருக்கும்போது [illegible]ர்கள் செய்வது போலவே செய்." என் இங்கிலீஷ் பழமொழியால் [illegible]து விளங் மற்றவற்றின் பிரதானியமும் எளிதில் உணரத்தக்கது. சரீர சுகமில்லாதவன் யாதொரு காரியத்தையும் செய்து முடிக்கவல்லவனாகான். தெய்வ பக்தியில்லாதவனுக்கு இவ்வுலக முழுதும் பெற்றிருப்பினும் பயனின்றன்றோ?

இனி இந்நூல் இளைஞருக் கென்றே எழுதப்பட்டதென்பது அதன் அகாராதி அக்ஷரக்கிரமத்தில் தொடுத்திருக்கும் முறைமையினாலும், சொற்களின் சுலபப் பிரயோகத்தினாலும் புலப்படுதலன்றி,

1. 'அறவே மாட்டேல்.'
2. அநந்தலாடேல்.
3 இளமையிற்கல்.
4. நீர்விளையாடேல்.
5. கோதாட்டொழி.
6. வைகறைத் துயிலெழு.

என்னும் நீதிகள் அப்பிள்ளைகளுக்கே உரியனவாகக் கூறியிருத்தலாலும் காணப்படும். முதியோர்களுக்கு இவ்வகையான உபதேசங்கள் வேண்டியதில்லை.

இவ்வரிய நூலில் குறிப்பிடப்படாத ஐஹிகாமுஷ்மிகங்களுக்குச் சாதகமான விஷயங்களை ஒன்றையும் காணோம். இதில் கூறிய விஷயங்கள் எத்திறத்தாருக்கும் ஒக்குமாயினும்,

1. ஓதுவதொழியேல்.
2. சேர்பட வொழுகு.
3. மோகத்தை முனி.
4. வீடுபெறநில்.

முதலியவைகள் வேதாந்தத்தையே ளென்று பார்த்து நல்லொழுக்கத்தில் போகத்வயல்களில் [illegible] ளும் [illegible] குரிய [illegible]ாய்து ஏராளமாயக் கொள்[illegible] களாகவும், அவர்கள் அறுத்துக்கொண்[illegible]

1. ஊர்களைப் பொறுக்கிச் சேர்க்[illegible]
2. கொளிநக்கும்கூட ஒருசுமைக்[illegible]
3. தூக்கிவ
4. பெரியாவ



5. போர்த்தொழில் புரியேல்.
6. மாற்றானுக் கிடங்கொடேல்.

முதலியவைகளில் க்ஷத்திரியர்க்குரிய விசேஷதர்மங்களாகவும்,

1. அஃகஞ் சுருக்கேல்.
2. பொருடனைப் போற்றிவாழ்.

என்பன வைசிய தர்மகங்களாகவும், வேளாண்மையைப்பற்றிச் சொல்லியவை சூத்திரரைச் சுட்டியும் கூறியவாகக் கொள்ளலாம்.

இனிப் புறச்சமயத்தாருக்குரிய விதிவிலக்குகளும் இதில் உள்ளவோ என்று ஆராயின் யூதர்களுக்கும், கிரிஸ்தவர்களுக்கும் பொதுவாய் தேவனாலேயே கொடுக்கப்பட்ட மகாசிலாக்கியமான கட்டளைகளாகக் கருதப்படும் பத்துக் கட்டளைகளும் இந்நூலில் காணப்படுகின்றன. 'பொய்த் தெய்வங்களை வணங்காதே' என்னும் முதற்கட்டளை 'திருமாலுக்கடிமை செய்' என்னும் கட்டளையாற் பெறப்படும். 'திருமால்' என்றது வேதப்பிரதிபாதிதனாகிய முதற்கடவுள் என்று பொருள்படும். 'கடவுளை அலக்ஷியம் செய்து அவமதித்து வெறுத்தல் கூடாது' என்னும் இரண்டாம் மூன்றும் கட்டளைகள் "தெய்வ மிகழேல்" என்னும் கட்டளையாற் பெறப்படும். வாரத்தில் ஒரு நாளேனும் உலக விஷயங்களை விடுத்து மனசைத் தெய்வத் தியானத்தில் நிறுத்தவேண்டுமென்னும் நான்காம் கட்டளை 'சனிநீராடு' என்னும் விதியினுட் காணலாகும். நீராடுதல் தெய்வ பூஜைக்கு இன்றியமையாததாதலின் [illegible]க்கியத்துக்குச் சனிவார விரதத்தை அநுஷ்டி என்று பொருள் படுத்திக்கொள்ளுதலும் ஆகும். சூத்திரர்களிலும் அநேகருக்கு இச்சனிவார விரதம் உண்மையை ஆராயுங்கள். வைஷ்ணவர்களுக்கு இச்சனிவாரம் சிறந்ததென்பது தெரிந்த விஷயமே. சைவர்களுக்கும் இது சிறந்ததென்பது சனிப்பிரதோஷத்தை முதன்மையாகக் கொள்ளுதலாலே விளங்கும். இச்சனிவாரமே யூதர்களுக்குள் இன்றைக்கும் விரததினமாய் அநுஷ்டிக்கப்பட்டுவர கிரிஸ்தவர்கள் ஆதிவாரத்தை தியானத்துக் குரிய விரததினமாகக் கொண்டதன் காரணம் விளங்கவில்லை. இத்தேவ கட்டளையைக் கவனித்து ஆராயுங்கால் சனிவாரமே விரததினமாக ஏற்படுகின்றது. 'ஆறு தினமும்வேலைசெய்து ஏழாம் தினத்தில் வேலையொழிந்து நோன்பு கொள்ளுங்கள்' என்று கூறியிருத்தலின் ஆதிவாரத்தை முதற்றினமாகக் கொள்ளுதல் யாவர்க்கும் ஒக்குமாதலால் ஏழாம்தினமாகிய சனிவாரமே விரததினமாகின்றது. நிற்க, "உன் மாதா பிதாக்களைக் கனம் பண்ணு" என்னும் ஐந்தாவது கட்டளை "தந்தை தாய்ப்பேண்" என்னும் கட்டளையாற் பெறப்படும். 'உயிர்க்கொலை செய்யாதே' என்னும் ஆறாவது கட்டளை 'காப்பது விரதம்' என்னும் ஜீவகாருண்யத்தை விதிக்கும் கட்டளையுள் அடங்கியது. இக்கட்டளைக்கு ஒருயிரையும் கொல்லுதல் கூடாது. அதிலும் வாயில்லாத எளிய ஜீவ ஜந்துக்களை உணவின் பொருட்டுக் கொல்லுதல் கொடிதாகும் என்பது ஔவையார் தாமே பின்பு கூறியிருக்கும் 'நோன்பென்பது கொன்று தின்னாமை', என்னும் வசனத்தாலும் புலப்படுமன்றோ. ஆயினும் இதற்குக் கிரிஸ்தவர்களும், யூதர்களும் மக்கட்கொலை ஒன்றை மாத்திரம் விலக்கியதாகக் கொண்டது புதுமையே! எங்ஙனமாயினும் இக்கட்டளை 'காப்பது விரதம்' என்னும் ஔவையார் விதியினுள் அடங்கும். ஏழாவது கட்டளையாகிய பிறர்மனை நயவாமை 'மெல்லியாள் தோள்சேர்' என்னும் விதியுள்ளடங்கும். எட்டாவது கட்டளையாகிய களவுமறுத்தலை 'கொள்ளை விரும்பேல்' என்னும் வசனத்தாலும், ஒன்பதாவது 'பொய்ச்சாக்ஷி கூறாதே' என்பதைக் 'கண்டொன்று சொல்லேல்' என்பதனாலும், பத்தாவது கட்டளையாகிய பிறர் பொருளுக்கு ஆசைப்படாமையை 'சூதுவிரும்பேல்' என்னும் சொல்லாலும் வற்புறுத்தினர். பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டுத் தானே சூதாடுவது. ஆதலின் கிரிஸ்தவ வேதத்தின் அதி முக்கியமாகிய கட்டளைகள் பத்தும் இக்

நூலில் அடங்கியதைக்காண்க. இரண்டாவது கட்டளை விக்கிரஹாராதனத்தை விலக்கியதாகக் கொள்ளுதலினும் தெய்வ நிந்தனையை விலக்கினதாகக் கொள்ளற்பாலது. தம்மையொழித்துப் பிறதெய்வங்களுக்கு விக்கிரஹங்களை யேற்படுத்தி வணங்கல் தமக்கு அரிஷ்டமாகுமென்று கூறினதாகும். இதுவே பொருள் என்பது 'என்னை வெறுப்பவர்களைத் தண்டிப்பே'னென்று அதே கட்டளையில் சொல்லியிருத்தலாலும் கடவுளை நேசித்து அவரை உத்தேசித்து விரும்பிச் செய்யும் விக்கிரஹாராதனம் அவருக்கு வெறுப்பாகச் சடனில்லையாதலினாலும் பெறப்படும். ஆதலின் இக்கட்டளையையும் அடுத்த கட்டளையையும் ஒன்றாகக்கொண்டு தெய்வ நிந்தனையை மாத்திரம் விலக்கியது என்று கொள்ளற்பாலது.

இவ்வாறே "காப்பது விரதம்" என்றதனாலும் ஜயினமதக் கொள்கையும், "போகத்தை முனி" என்றதனால் பௌத்தமதக் கொள்கையும், "வீடுபெற நில்," என்றதனால் சமஸ்தமதக் கொள்கைகளும் அடங்கின என்றுங் கொள்ளலாகும்.

இனி 'சக்கர நெறிநில்,' என்று சொன்ன வாக்கியத்தால் குடிகள் அரசர்க்குக் கீழ்ப்படிதல் கடனென்றும்; 'புகழ்ந்தாரைப் போற்றி வாழ்,' என்றதனால் அரசன் தன்னைப் புகழ்ந்து நேசித்துத் தன் கோற்கீழ்வாழுங் குடிகளைப் பரிபாலித்தல் வேண்டுமென்றும், அவ்விருதிறத்தாரது பரஸ்பர தர்மங்களைப் போதித்ததாகவுங் கொள்ளலாம்.

இன்னம் இந்நூல்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்."

என்றும்,

"நிழலருமை வெய்யிலிலே நின்றறிமி னீசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லிரிடத்தே யறிமின் போய்."

என்றும்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்."

என்னும் தாம் வியந்துள்ள திருக்குறளின் பொருள் அந்நூல் விரிவாயுங் கடினமாயும் இருத்தலின் இளைஞர்க்கும் இளைஞர் போன்ற கல்விப்பெருக்கில்லா தழுதியவர்க்கும், அதிற்கூறிய பொருள்களை எளிதில் உணர்த்தும்படி தொகுத்துக் கூறியது என்பதும் இதற்கும் அதற்கும் உள்ள ஒற்றுமையாலே புலப்படும். குறளின் அதிகாரங்களின் பெயர்களை நோக்கின் சில ஆத்திசூடி வாக்கியங்களின் பகுதிகளாகவும் சில இவ்வாக்கியங்களின் பொழிப்பாகவும் இருக்கின்றன. 'பெரியாரைத் துணைக்கொடல்,' 'இரவச்சம், இனியவை கூறல், தெரிந்துசெயல் வகை, முதலியவற்றை முறையே, பெரியாரைத் துணைக்கொள், ஏற்பதிகழ்ச்சி, ஞயம்படவுரை, தூக்கி வினைசெய் முதலிய ஆத்திசூடி வாக்கியங்களை ஒட்டிக்காண்க. சிற்சில இடங்களில் ஒருபாவின் பொருள் முழுதும் ஒருசொல்லில் அடக்கிக் கூறியிருக்கின்றனர். இதற்குத் திருஷ்டாந்தம் "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்ப வாழுமுயிற்கு" என்பதனை 'எண்ணெழுத் திகழேல்', என்னுஞ் சொல்லால் தொகுத்துக் கூறியது காண்க. ஆதலின் வள்ளுவர் கடினமாக விரித்துக் கூறியவற்றுள் முக்கியமா[ன] நீதிகளைத் தொகுத்து அதிசுலபமாக யா[வ]ர்க்கும் பயன்படும்படி கூறியிருக்கின்றனர் [எ]ன்பது விளங்கும். அன்றியும் வள்ளுவர் ஆயிரத்து முந்நூற்று முப்பதுபாக்கள் கூறியும் அறம், பொருள், இன்பம், என்னும் மூவகைப் புருஷார்த்தங்களையேயன்றி அவற்றிற்கு மேலாகிய மோக்ஷத்தை சொல்லவில்லை என்றும்,— ஔவையார் அதனையும் இந்நூலிற் கூறியிருத்தலினாலே அவரிலும் இவர் புத்



நுட்பமுள்ளவரென்றும் கூறுவர். சரீரசுகம் பேணுதலை வள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் கூறியிருப்பினும் அதில் உணவொன்றையே விரித்துச் சொல்லியிருத்தல் அன்றி மற்று அச்சுகத்துக்கு இன்றியமையாதவையாகிய நித்திரை, அப்பியங்கனம் முதலியவற்றைச் சொல்லவில்லை. ஔவையாரோ அவற்றையும் சொல்லியிருக்கின்றனர். இன்னம் இதுபோலவே இந்நூலை யாராய்ந்தோறும் இதன் அருமையும் பெருமையும் நுட்பமும் சிறப்பும் விளங்கும்.

எஸ். முத்து ஐயர்.

## நமது பார்வைக்குவந்த புத்தகங்கள்.

### சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்.

இதனை இயற்றினார் பிரபல வித்துவானாக விளங்கிய அந்தகக் கவிவீரராகவ முதலியார்.

"எடாயிரங்கோடி யெழுதாது தன்மனத்
தெழுதிப்படித்த விரகன் இமசேதுபரியந்த
மெதிரிலாக் கவி."

என்று புகழப்பெற்ற இவர் இன்றைக்குச் சுமார் 240-வருஷங்களுக்கு முன்பிறந்தவர் எனவும், சைவமரபினரெனவும் தொண்டைமண்டல வேளாளரெனவும் இன்னும் பற்பல வரலாறுகள் இந்நூற்றொடக்கத்தில் இதன் பதிப்பாசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ, கல்குளம் குப்புசாமி முதலியார் அவர்கள் பி. ஏ. எழுதியவற்றாலறிகின்றோம். இந்த வரலாற்றில் ஆசிரியர் காலமும், அவர் சரித்திரப்பகுதிகளும் நன்குவிவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் இதனாசிரியர் பேருக்கும் பெருமைக்கும் ஏற்றதாகவே புலவர்கள் மிக இனியதென்று பாராட்டத்தக்கதாகச் சிறந்து விளங்குகின்றது. இது சாமான்யமானவர்களுக்கும் பயன்படக்கூடியதாக அவ்வப்பக்கத்திலும் செய்யுள்களில் வரும் அரும்பதப் பிரயோகங்களைப் பதிப்பாசிரியர் சுருக்கமாக விளக்கியிருக்கின்றார். இது படிப்போருக்கு மிகவும் உபயோகமானதே. இந்நூலை ஏடு எழுதுவோர் ஆங்காங்கே புகுதவிட்ட வழுக்களைத் [திருத்தி], கவுரை, நூலாசிரியர் வரலாறு, அனுபந்தமாதியவற்றோடு நன்குபதிப்பித்து லகுக்குபகரித்தது ம-ா-ா-ஸ்ரீ, குப்புசாமி முதலியாருக்குப் பெரும் புகழ்ச்சியே. இத்தகைய நன் முயற்சிகளே மேலும் மேலும் செய்யுமாறு இறைவன் அவருக்கு ஊக்கமளிப்பாராக.

### மரகதவல்லி.

மரகதவல்லி யென்பது அனந்தபூர் கலெக்டராபீசு குமஸ்தா ம-ா-ா-ஸ்ரீ, P. C. கோவிந்தசாமி ராஜாவவர்களால் எழுதப்பட்ட ஒரு செந்தமிழ்க் கதை. இதில் கதாசிரியர் உலகநடவடிக்கையிலும் ஆங்கில நூற்பயிற்சியிலும் தேர்ந்தவரெனத் தெளிவாகக்காட்டிக்கொள்ளுகிறார். சுந்தரம்பிள்ளையும் இலட்சுமியும், மரகதவல்லியும் இவ்வுலகில் அடிக்கடி காணப்படும் மானிடரே. தெய்வசிகாமணிபிள்ளையும், நாம் கிரமமாக யோசித்தால், சாதாரணமாக இவ்வுலகில் காணப்படும் மானிடராகவே தோற்றுவார். மரகதவல்லி தன் விளையாட்டுத்தனத்தையும், தன்னயங்கருதலையும், அகங்காரத்தையும் விட்டு தெய்வசிகாமணி பிள்ளைக்கேற்ற மனைவியாய்த் திரும்பினதும் அதற்குக்காரணங்களும் கதாசிரியரால் மிக நன்றாய் விளக்கப்பட்டுள்ளன. இன்னும், ஆங்காங்கு ஆசிரியர் மானிடர் வருணனையும் காலவருணனை முதலியனவும் மிகவும் சிலாகிக்கத்தக்க விதமாய் எழுதியுள்ளார். இவைகளில் அவர் நம் பழையவழிகளைவிட்டு ஆங்கிலவழியைத் தழுவி உலகத்தில் நாம் பார்க்குமவைகளை உள்ளபடியே வருணித்துள்ளார். மேலும், அவர் இக்கதையால் கடவுளைத்தொழுவார் கைவிடப்படார் என்பதும், செல்வம் அதிகரிப்பதாலேயே ஒருவன் தன்னையும் தான் உலகத்தார்க்கு செய்யவேண்டிய கடமைகளையும் மறந்துவிடக்கூடாதென்பதும் அப்படிச்செய்வதால் வருந் தீமைகளும், நற்குணத்தால் வந்திடும் நன்மைகளும், கெட்டவர்களை, நல்வழிப்படுத்தற்கு வறுமையும் நற் சகவாசமுமே முக்கிய வுதவிகளாகு மென்றும் தெளிவாகக் காட்டி யுள்ளார். புத்தகம் 84-பக்கமே யிருப்பினும் இவ்விஷயங்களை யெல்லாம் ஒருங்கேசேர்த்து நம்மவர்க்குதவிய ம-ா-ா-ஸ்ரீ, ராஜாவவர்கள் தாம் தமிழுலகம் கடமைப்பட்டிருப்பதாகக் கூறிடும் ஆசிரியர்களோடு சேர்த்தெண்ணத் தக்கவரென்று தனது மற்ற நூல்களாலும் காட்டிக்கொள்வாரென் றெதிர்பார்க்கிறோம். அவர் எண்ணியபடி தமிழ்நடை நம்பெண்களும் வாசித்து எளிதில் அர்த்தம் கொள்ளும்படியே இருத்தலின் பெண்கள்படிக்கத்தக்க புத்தகங்களை வெளியிடுவதாகிய அவர் எண்ணம் அவர் நூல்களால் முற்றுப்பெறுமென்பதில் ஐயமில்லை.

புத்தகம் பொதுவாகப் புகழத்தக்கதாகவேயிருப்பினும், இப்புத்தகமும் ஜீவரத்னம் முதற் பாகத்

துள்ள சுந்தரவல்லி யென்னும் கதையும் சிலபெயர்களிலும் கடைசி 5, 6 பக்கங்களிலும் தவிற மற்றெல்லாவிடத்தும் சொல்பொருள் எல்லாவற்றிலும் ஒற்றுமையுடையனவாகவே யிருக்கின்றன. நம் கதாசிரியரும் ஜீவரத்னம் கதாசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ திருமயிலை ராமலிங்கமுதலியாரவர்களும் நண்பர்களென்பது நம் கதாசிரியரது முகவுரையால் தெரிகிறது. அப்படி யிருந்தும் யார் இக்கதைக்கு முதலாசிரியர் என்று இருவரிலொருவரேனும் சொல்லாமலிருப்பதைப்பார்த்தால் கொஞ்சம் சந்தேகத்திற்கு இடமுண்டாகிறது. நான் யாவர் முதலாசிரியர் என்பதை யறிய மிகமுயன்றும் ஒன்றும் தேறும் ஆற்றல் பெறவில்லை. நம்மாசிரியர் தம்முகவுரையில் 4-வருஷத்திற்குமுன் சென்னையிலுலாவிய ஓர் பத்திரிகையில் இக்கதையை வெளியிட்டதாகச் சொல்லுகிறார். ஆனால் அவர் எப்பத்திரிகையில் வெளியிட்டாரென்று நமக்குச் சொல்லுவதில்லை. ஜீவரத்னவாசியர் 1901-ம்வருஷத்தில் 2-ம் பதிப்பு ஒன்று வெளிப்படுத்தியிருக்கிறார். முதல் பதிப்பு எப்போ என்று அவர் சொல்வதில்லை. ஆகையால் நாம் இக்கதைக்கு முதலாசிரியர் இவரென அறியும் வழியின்றாயிற்று. இப்போதாவது நமதாசிரியர் இந்த விஷயத்தை வெளிப்படுத்தி நம் சந்தேகத்தைப் போக்குவாரென் றெண்ணுகிறோம்.

## வித்யாரண்ய நகரம்.

இது ம-ா-ா-ஸ்ரீ, கு. ரா. ஸ்ரீநிவாசய்யங்காரால் எழுதப்பட்ட ஓர் தமிழ்க்கதை. இந்நூலாசிரியர் தான் ப்ரிதுலை யென்னும் நூலுக்கும் ஆசிரியர். இவர் இன்னும்சில எழுதிக்கொண்டிருப்பதாகவும் எழுதப்போவதாகவும் தெரிகிறது. இவர் தான் நமக்குத்தெரிந்தவரை முதல் முதல் சரித்திரக்கதைகளை யெழுதவாரம்பித்தவர் இவர் முன்னொருகாலத்தில் தென்னிந்தியா முழுவதையும் ஆண்ட விஜயநகரத்தைப் பற்றி யெழுதிவருகிறார். வித்யாரண்ய நகரம்தான் விஜயநகரம். கதை நன்றாகவேயிருக்கிறது. ஆனால் ஆங்காங்கு பல சொற்பிழைகளும் இலக்கணப் பிழைகளும் உள்ளன. இனி யெழுதும் புத்தகங்களில் இத்தகைய பிழைகளை நீக்குவாரென் றெண்ணுகிறோம். மொத்தத்தில் நாம் இவ்வாசிரியருக்கு சரித்திரக்கதையை ஆரம்பித்ததற்காகக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## திருவள்ளுவர்.

இது ம-ா-ா-ஸ்ரீ, T. செல்வகேசவராயமுதலியாரவர்கள் M. A. பிரசிடென்சி காலேஜ் தமிழ்ச் சங்கத்தாருக்கு முன் சென்ற வருஷத்தில் செய்த வியாசம். இது அப்போது நன்றாயிருப்பதாக வியாசம் கேட்ட எல்லோராலும் வியக்கபட்டதால் மற்றோருக்கும் பயன்படும்படி அச்சிடப்பட்டிருக்கிறது. வியாசத்தின் தமிழ்நடை நிரம்பத் தெளிவாயும் மெச்சத்தக்கதாயும் இருக்கிறது. 'அவர் சான்றாண்மை'யைப் புத்தகத்து முக்கியபாகமாகக் காட்டியதும் நாடு குடி இவைகளைப்பற்றிப் பரிமேலழகர் கூறுவதும் அதிகாரமுறையும் ஆக்ஷேபிக்கத்தக்கதெனக்கூறுவதும் ஒப்புகொள்ளத் தக்கதே. 'திருவள்ளுவர்' போன்றவியாசங்கள் தமிழில் இல்லையாயினும் அவை யவசியமென்பது ஆங்கிலம்பயின்ற எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ, சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் B. A. பிரசிடென்சி காலேஜ் தமிழ்ச் சங்கத்தின் முன் செய்த 'கம்பன்' என்ற உபந்நியாசமும், இம்மாதிரி அச்சிடபடுமேல் அதுவும், அதிகப்பயனுள்ளதாகுமென்று நினைக்கிறோம். மொத்தத்தில் நம்முன்னிருக்கும் முதலியார் வியாசமாகிய திருவள்ளுவர், பல்லோராலும் போற்றப்படும் திருக்குறளுக்கோர் திறவுகோல் போல எல்லோருக்கும் பயன்படும் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

## "இந்தியாவின் மூன்று பெரிய வித்தியா விஷயமான குறைகள்."

இது ஆங்கிலத்தில் மர்டக் என்பவரால் எழுதப்பட்டது அவர் நம் பள்ளிக்கூடங்களில் கைத்தொழில் விஷயமான படிப்பும், நீதிமார்க்கத்தைப் போதிக்கும் படிப்பும், எல்லா மதத்தினருக்கும் பொதுவாயுள்ள பாகத்தைப் பற்றிய படிப்பும் இல்லையென்றும் அவை அவசிய மென்றும் கூறுகிறார். அவர் இதோடு நிற்காது அப்படிப்புகளை நம்பள்ளிக்கூடப்படாங்களில் சேர்க்க வழியும் சொல்லுகிறார். உயர்தர வித்தியா விஷயத்தைப்பற்றி யோசனை நடக்கும் இக்காலத்து இப்புத்தகம் வெளிவந்தது நல்லதென்றே சொல்லலாம்.



## Stanzas on Freedom.

## சுதந்திரம்.

(உண்மைச் சுதந்திரம் இன்னதெனல்.)

1. சவுரியமும் சுதந்திரமும் உறப்பெற்ற பெருந்தகையோர் தனிக்குலத்தில்
பவுருஷமாய்ப் பிறந்தேமென் றுவப்பெய்தும் மானிடர்காள், பாரின் மீதே
எவனிடையா யினுமொருவன் அடிமையுயிர்ப் பொறைசுமந்தே யிருப்பானென்னின்,
நவிலுமுங்கள் சுதந்திரமும் சௌரியமும் உண்மையென நயந்தற் பாற்றோ?

(சுதந்த்ரத்துக் குரியவர் இன்னரெனல்.)

2. நும்போலு மொருமகற்கு நோய் செய்யும் நெடுந்தளைதான் நுமது தாளில்
துன்பூறப் பூண்டதெனத் துயர்கொள்ளீராமாயின், சொல்லின் நும்போல்
மென்பாரி விழிதகைசே ரடிமையெவர் பிறருண்டே கூறினுங்கண்?
அ[illegible]ர வடைந்துறுநுஞ் சுதந்திரத்துக் குமக்குரிமை யாதுண்டாங்கே?

(இன்னது சுதந்திரமன்றெனல்.)

3. உன[illegible]ம நிலைச் சுதந்திரம்தான் உள்ளுவக்கும் நமக்கேயாங் குற்ற தான
திண்[illegible]யுறும் தளையதனைச் சிதைத்தெறிந்து செபிரகன்றங் கிருத்த லாமோ?
தண்மையறுந் துவக்கதுபோல் மனநெகிழ்ச்சி யறந்தவிர்ந்து, தவறி லாது
வண்மையுறப் பிறர்க்கிழைக்கும் கடனுண்டென் பதைமறந்து மருவ லாமோ?

(இன்னதே சுதந்திரம் ஆமெனல்.)

4. ஆகாயா லொருநாளும். அனையதொரு சுதந்திரம்தான், அன்பு கூர்ந்து
வாகான சோதரர்போன்ம் மக்களூறும் தொடக்கதனை வாங்கி நாமும்
போகாது தரித்தவர்க்குச் சுதந்திரத்தைப் புணர்த்திடற்குப் புந்தி நேர்ந்து,
சேகாரும் மனத்தாலும் கரத்தாலும் உரியவற்றைச் செய்த லாமே.

(அடிமையாவார் இன்னரெனல்.)

5. மெலிந்தார்க்கும், சிறுமையினில் வீழ்ந்தார்க்கும், வருமுறுகண் விலக்க வேண்டிப்
பொலிந்தார்த்துப் பிரியாதா ரவர்காணும் பூவுலகி லடிமை யாவார்.
வலிந்தார்கள் பலர்க்கஞ்சி வனப்புளதென் றறிந்ததனை மருவி நாளும்
நலிந்தாரகள் சிலருடனே நண்ணுதார் தாமவரும் அடிமை தாமே.

(இதுவுமது.)

6. பல்லோர்செய் நிந்தனையும், பழிமொழியும், வெறுப்பதுவும், பாரவஞ்சிச்,
சொல்லாரும் சிந்தையுறச் சூழ்ந்துகொளற் குரியதொரு துலங்கு முண்மை
கல்லாது மனமெலிந்து கைவிடுக்கும் பேதையரும், காணினம்மா!
எல்லாரு மிகழ்ந்து வெறுத் திடற்குரிய அடிமைகளா மியம்பின் மாதோ.

S. M.

## Some Riddling Verses.
## சில விநோதப் பாடல்கள்.

பின்வரும்பாடல்கள் படிப்பதற்கு விநோதமாயும் பொருளறிதல் சிரம்பக்கஷ்டமாயும் இருத்தலினால் அவற்றின் பொருளைத் தெரிந்தவர்கள் இப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவிப்பார்களென்று கருதி பத்திராதிபர் அநுமதியோடு அவற்றை எடுத்து எழுதுகின்றேன்.

1. மாமதுமரத்திலேறி மாமனைத் தோளில்வைத்து
மாமது மரத்தைக்கண்டு மாத்தினான் மாத்தைக்குத்தி
மாமது வழியேசென்று வளமனைக் கேகும்போது
மாமது கண்டமாதர் மாமுடன்மாமெடுத்தார்.

2. மாடுதின்பான் பார்ப்பான் மறைபோதுவான் குயவன்
கூடிமிக பண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கானெண்ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடைவைதப்பும் பறை.

3. ஆயனுக்குக் கண் மூன்று பாதி சிவனுக்கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம்—நேயமுடன்
சங்கரற்குச் சங்காழி தான்மாலுக்காலமாம்
மங்கையிடத்தாற் காகுமண்.

4. வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தாலாவதென்ன
இங்கார்சுமந்திருப்பா ரிச்சரக்கை—மங்காத
சீரகத்தைத்தந்தீரேற் றேடேன் பெருங்காயம
ஏரகத்துச் செட டியாரே.

5. புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார்வாழ்களியேம்
கள்ளிருக்கும் கள்ளைப்புண்டும் சோர்விலேம—உள்ளபடி
சொல்லவாவாலி துரோபதியை மூக்கரிந்த
தல்லவா மாபாரதம்.

6. வட்டமதிபோலிருக்கும் வன்னிக்கொடி தாவும்
கொட்டுவார்கையினின்று கூத்தாடும்—சுட்டால்
அரகரா என்னுமே அம்பலசோமாசி
ஒரு நாள்விட்டேனீதுரை.

7. பூநக்கியாறுகால் புள்ளினத்துக்கொன்பதுகால்
ஆனைக்குக்கால்பதி னேழாகுமே—மானேங்கள்
முண்டகத்தின்மீதே முழுநீலம்பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லைகாண்.

8. சென்னிமலைவேலவர்க்குச் சேர்ந்தகொம் பிரண்டுண்டு
கன்னிகுற வள்ளிக்குக்காலி ல்லை—முன்னமே



ஆட்டுக்குக் கொம்பில்லை யானைக்குக்காலில்லை
பாட்டுக்குளாராய்ந்து பார்.

9. கொன்றைமலர் தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்று குழலூதினா னீள்சடையோன்—பொன்றிகழும்
அக்கணிந்தான் மாயனரவணையிற் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழுஞ்சிவன்.

10. வாணியன் பாடிட வண்ணான் சுமக்கவடுகன் செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்றொழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக்கருமான் றுகிறனைக் கொண்டணிந்த
வேணிய னவன்றட்டான் புறப்பட்ட வேடிக்கையே.

11. தாதிதூதோதீது தத்தை தூதோதாது
தூதிதூதொத்தித்தூததே—தாதொத்த
துத்திதத்தாதே துதித்துத்தேத்தொத்தீது
துத்தித்ததோதித்திதி.

12. புலியைக்கொடுத்துப் பசுவாங்கியோர் புலிப்பூங்குழலாள்
புலியைப்பசு தின்னவிட்டுப்புலியைத் திறைதகற்றிப்
புலியையரைத்துப் பலகாரஞ் செய்து பொருந்து முகப்
புலியைக்களிப்புடன் சாறுவைத்தாடன் புருஷனுக்கே.

13. பண்புளருக்கோர் பறவைபாபத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக்கண்டக்கானுற்காலி—திண்புவியை
ஆள்வார்மதுரை யழகிய சொக்கர்க்கரவம்
நீள்வாகன நன்னிலம்.

செய்யுள்நேசன்.

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### "Help to others"
### 'பரோபகாரம்.''
(*From Sanskrit.*)

1. மரங்கள் காய்க்கத்தொடங்கவே (கனிகளின் கனத்தால்) தழைகின்றன. மேகங்கள், புதுநீர் கொண்டதும், (பெய்ய) வெகுதூரம் திரிகின்றன; நல்லோர், சம்பத்து சேரவே, (அனைவரும் அணுகும்பொருட்டு) கர்வமற்றிருப்பார்கள். இது, பரோபகாரிகளுடைய சுபாவமே.

2. செவிக்கழகு சாஸ்திரங்களின் கேள்வியே யல்லாது, குண்டலங்களல்ல. கைகளுக்கு அழகு கொடையே யல்லாது கங்கணங்கள் அல்ல. அருளுடையாரின் உடம்பிற்கழகு பிறர்க்குதவியே யல்லாது சந்தனப் பூச்சல்ல.

3. சூரியன் தாமரையையும், சந்திரன் ஆம்பலையும் மலரச்செய்கிறான். ஒருவர் யாசிக்காமலே, மேகங்கள் மழை பொழிகின்றன. நல்லோர்கள் (அவ்வாறே, ஒருவர் யாசிக்கும்வரையில் காத்திராமல்) ஸ்வயமாகவே, பிறர் நன்மைக்காக கிருஷிசெய்வார்கள்.

4. தம் காரியத்தையும் விட்டுவிட்டு, பிறர் நன்மையைத் தேடுவோர் பெரியோர். சுயநன்மைக்கு இடையூறின்றி பிறர் நன்மைக்கு உழைப்போர் சாதாரண ஜனங்கள். தம் காரியம்(நிறைவேறும்பொருட்டு)பிறர்காரியத்தைக் கெடுப்போர் மனித (வேஷம்பூண்ட) ராக்ஷஸர்களாவர். தமக்கு யாதொரு லாபமுமில்லாமல் பிறர் நன்மையைக் கெடுப்போரை என்ன என்று சொல்வதோ அறியோம்.

5. உண்மையான நண்பன், தீயசெயலிலிருந்து மீட்டி நற்செய்கைகளை ஏவுவான். மறைக்கவேண்டியதை மறைத்து, குணங்களை வெளிப்படுத்துவான். ஆபத்தில் கைவிடான்; சமயத்தில் கொடுத்து (உதவுவான்) இவைகளே உண்மையான நட்பின் லட்சணம் என்பார் பெரியோர்.

6. பால், தன்னை அடைந்த ஜலத்திற்கு தன் குணங்கள் யாவற்றையும் அளிக்கிறதல்லவா? (அப்பேர்ப்பட்ட) பால், தபிக்கும்போது பார்த்து, அந்த ஜலமானது, அக்கினி பிரவேசம் செய்கிறது. (ஆவியாய்விடுகிறது) மித்திரனுடைய (ஜலத்தினுடைய) ஆபத்தைக் கண்டு, பால், தானும், அக்கினியில் புகுவதற்கு தயாராய் (எழும்புகிறது). பிறகு ஜலம தன்னோடு சேரவே சாந்தியடைகிறது. இப்பேர்ப்பட்டதல்லவோ நல்லோர் சிநேகம்.

(7) (சமுத்திரத்தில்) ஓர் பக்கத்தில் நாராயணன் பள்ளிகொண்டிருக்கிறார். ஓர் பக்கத்தில், அவர்சத்துருக்களான (ராவணன் முதலியோர்) இருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில், (சமுத்திர ராஜனை)ச் சரணமடைந்த மலைக்கூட்டங்கள் இருக்கின்றன. மற்றொரு இடத்தில், வடவாக்கினியும், பிரளய காலத்து மேகங்களும் குடிகொண்டிருக்கின்றன. ஆகா! (மலைகளையும் வடவாக்கினியையும் தாங்குகின்ற) இந்த சமுத்திர மகாராஜன் உடலின் பரிமாணமும் வலிமையும் (எவ்வளவு இருக்கவேண்டும்).

(8) இருவரே ஜன்மமெடுத்தவர்கள்: உலகம் யாவத்தையும் தன் முதுகில் சுமந்த ஆமை ஒன்று. கிருகங்களையும் நட்சத்திர மண்டலங்களையும், தம்தம் வழியில் நடத்தி வரும் துருவ நட்சத்திரம் ஒன்று; மேலுலகிலும் கீழ் உலகிலும் இந்த இரண்டைத் தவிர மற்ற ஜீவராசிகள் பழங்களுக்குள் இருக்கும் இரக்கையுள்ள பூச்சிகளைப்போல், ஜன்மம் எடுத்தும் வியர்த்தமானவைகளே.

(9) ஆசையை அறு; பொறுமையை அடை. கர்வத்தைக் கொல்லு. பாபத்தில் பிரீதி வைக்காதே. உண்மை பேசு. சன்மார்க்கத்தில் நட. அறிவுடையோரைத் தேடு. பெரியோர்களைப் பூஜைசெய். சத்துருவினிடத்திலும் பிரியமாயிரு. வணக்கமாய் இரு. கீர்த்தியைக் காப்பாற்று. கஷ்டப்பட்டவரிடம் கருணையைக்காட்டு. இவை நல்லோர்களின் ஒழுக்கமாம்.

(10) மனதிலும், வாக்கிலும், உடம்பிலும் (செய்கையிலும்) புண்யமாகிற அமிருதத்தால் நிறைந்து, மூவ்வுலகத்தையும், தங்கள் உபகாரத்தால் சந்தோஷித்து, பிறர்குணம் கடுகளவேனும், மலையாய்ப் புகழ்ந்து, உள்ளத்தில் களிக்கின்ற பெரியோர்கள் சிலர் உளர்.

எ. ஸ்ரீனிவாச-

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவிவிவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.

புத்தகம் 11.] 1902வது ஆகஸ்டுமீ. [இலக்கம் 4.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s.* 6*d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount of the annual rate, and 4 As. off the half-yearly rate. Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறுமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசததிலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## Coronation of the King-Emperor.

## நமது சக்ரவர்த்தியின் மகுடாபிஷேகம்.

ஆகஸ்டுமீ 9உ சனிக்கிழமையன்று ஆங்கிலேய அரசரும் நமது சக்ரவர்த்தியுமாகிய ஏழாம் எட்வர்ட் அவர்களுக்கும் அவருடைய தர்மபத்தினியாகிய அலக்ஸாண்டரா மஹாராணி யவர்களுக்கும் லண்டனிலுள்ள "வெஸ்ட்மினிஸ்டர் அப்பே" என்னும் தேவாலயத்தில் பூர்வீக சம்பிரதாயப்படி தெய்வானுக்ரகவிசேஷங்களோடு மகுடாபிஷேகம் செய்து முடிசூட்டும் சடங்கு வெகு சிறப்பாய் நடந்தேறியது. இச்சடங்கு சென்ற ஜூன்மீ 26உ நடப்பதாய் ஏற்படுத்தப்பட்டு அதற்கு இரண்டு நாள் முந்தி மாக்ஷிமைதங்கிய அரசருக்கு சரீரத்தில் ரணநோய் கண்டு பிராணபாயத்துக் கேதுவான சஸ்திரசிகிச்சைசெய்து சௌஸ்தம் செய்யவேண்டியதாக நேரிட்டதால் உலகெல்லாம் வருந்த அச்சடங்கு தள்ளிவைத்துக்கொள்ளப்பட்டது. சந்தோஷங்கொண்டாட விருந்தவர்களெல்லாம் மனம் திடுக்கிட்டு மண்டலாதிபதிக்கு இவ்வித விபத்து நேர்ந்ததையுற்றுப் பதைபதைத்து ஸர்வேசுவரனைத்தொழுது தோத்திரஞ்செய்து அரசன் உயிரைக்காப்பாற்றித் தங்களை ஈடேற்றவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். செல்வச்செருக்கில் ஆழ்ந்துகிடந்த அனைவரும் திடீரென்று நேர்ந்த இவ்விபத்தினால் மனுஷனுடைய முயற்சி ஈசுவரானுக்ரகமின்றி ஒன்றும் பிரயோஜனப்படாதென்று நன்குணரநேரிட்டது. ஈசுவர கிருபையினால் மிகவும் அபாயகரமாகவிருந்த நோயினின்றும் அரசன் டாக்டர்கள் எதிர்பார்க்காதவண்ணம் வெகு சீக்கிரத்தில் சௌஸ்தமடைந்து முன்போல் திடகாத்திரம் பெற்றதும் மிகவும் அதிசயக்கத்தக்கதே. இதனால் எல்லாரும் ஈசுவர கிருபையை முக்கியமாய்ப் பாராட்டவும் அதற்கு உள்படவும் கற்றுக்கொண்டார்கள்.

மகுடாபிஷேகசடங்கு சும்மா டாம்பீகத்துக்கு நடப்பதல்ல. அது மிகவும் முக்கியமான மதச்சடங்கு. தெய்வத்துக்கு முன்பாக தெய்வ சேவகனுகவிருந்து தெய்வாக்கினைக்குள்பட்டு தெய்வானுக்ரகத்தால் தனக்குக் கிடைத்த அரசபீடத்திலிருந்து பிரஜைகளை அன்போடு ஆதரித்துப் போற்றிக் காப்பாற்றுவதாகப் பிரதிக்ஞைசெய்து கொடுத்து தெய்வகுருவின் கையினால் மகுடாபிஷேகம் செய்யப்பெற்று முடிசூட்டப்பெறுவதே முக்கிய சடங்காம். இந்தச் சடங்கை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆடம்பரங்கள் மற்றவைகளெல்லாம். அதுவும் பிரிடிஷ் இராச்சியத்தில் பூர்வ வழக்கப்படி அரசனைப் பிரஜைகளுக் களித்து அக்காலத்தில் அவர்கள் அவனை அரசனாக அங்கீகரித்து அவருக்குப் பணிந்து ராஜவிசுவாசத்தோடு நடந்துகொள்வதாக உடசாரம்செய்து பணிவது வழக்கம். இச்சடங்குகளைக் கண்ணுற்றுக் களிப்புற தேசதேசாந்தரங்களிலிருந்தும் சிற்றரசர்களும், அரசப்பிரதிநிதிகளும், மந்திரி, பிரதானி, சேனாதிபதி முதலிய பலவகையோரும், ஜனப்பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இவர்களில் சிலர் ஜூன் மாசத்தில் நடப்பதாகவிருந்த சடங்கு தடைப்பட்டதும் மேல் நடப்பதும் தெரியாது காத்திருக்கவும் சாத்தியப்படாது திரும்பிவிட்டார்கள். இப்படித்திரும்பின சிலர் போகமற்றவர்கள் அங்கே தங்கியிருந்தோ அல்லது சுற்றியுள்ள ஐரோப்பிய தேசங்களிலோ சுற்றுப்பிரயாணம்செய்து காலம் கழித்துவர ஒருமாசகாலத்திற்குள் ஆகஸ்டு மாசம் 9உ மகுடாபிஷேகசடங்கு நடக்குமென்கிற சந்தோஷச் செய்தியைக் கேட்டு மனமுவந்து அச்சடங்கைக் கண்ணுறக் கண்டு களிகூர்ந்து வந்தார்கள். நம் இராஜதானியிலிருந்து இந்நகருக்குப் பிரதிநிதியாகச் சென்ற ராஜா ஸர் சவலை இராமஸ்வாமி முதலியார் அவர்கள் அவசரவேலையார்த்தும் உடனே திரும்பிவிட்டார்கள். இவ்விராஜதானிக்குப் பிரதிநிதியாகச்சென்ற பொபிலி ராஜா அவர்கள் ஆகஸ்டுமீ 9உ நடந்த மகு



டாபிஷேக மஹோத்ஸவத்துக்கு லண்டனிலி
ந்து அக்காக்ஷியைக் கண்குளிரக்கண்டு
ரும்பிவந்திருக்கிறார். இவரைப்போல் மற்
ப்பிரதிநிதிகளும் திரும்பிவந்திருக்கிறார்கள்.
ம் மகுடாபிஷேக மஹோத்ஸவத்துக்காக
ந்தியாவிலிருந்து சென்ற சிற்றரசர்களும்,
ராஜாக்களும், ஜனப்பிரதிநிதிகளும், ராணுவச்
சவகர்களும் அவர்கள் இங்கிலாந்திலிருக்க
வண்டி நேரிட்ட 6-வாரகாலத்தில் ஆங்கி
லய மகாஜனங்களோடும் பிரபுக்களோடும்
ழகி அவர்கள் மாதிரியை யறிந்துகொள்ள
ல்லசமயம் வாய்க்கப்பெற்றார்கள். இவர்கள்
ங்கிலேய நாட்டுக்கு அரசரின் அதிதிகளாக
ந்திருப்பதை யுத்தேசித்தும், இந்தியாதேசத்
ன் பிரதிநிதிகளாக விருப்பதைக் கருதியும்
ரபுக்கள் ராஜவம்சத்தார் முதல் சாமான்ய
னங்களாக எல்லவரும் இவர்களையழைத்து
ருந்திட்டுக் கொண்டாடி யுபசரித்தனர்கள்.
ந்தியர்கள் ஆங்கிலேயரின் அன்பாதரவான
பசாரத்தில் ஈடுபட்டு அவர்கள் மேந்தன்
மையைக் கண்டு புகழ்ந்ததுபோல் ஆங்கிலே
ரும் இந்தியர்களின் இராஜவிசுவாசத்தையும்
பெருமை நேர்மையையும் இராணுவவீரர்களின் கம்பீரம் மேன்மையையும் கண்டு மனமுவந்து மிகமகிழ்ந்து கொண்டாடலானார்கள். இப்படி இருவகையாரும் அளவளாவி ஒன்றுபட்டுறவாட நேரிட்டதால் இரு தேசத்துக்குமுள்ள ஒற்றுமையும் உறவும் இவர்கள் மூலியமாக முன்னிலும் பன்மடங்கு அதிகமாக வளர்ந்து இரு தேசத்தாரையும் மிகவும் உறுதியான ஐக்கியப்பாட்டில் கட்டுப்படச் செய்ததென்று ஆங்கிலேயரும் இந்தியரும் ஒருமனப்பட்டு உள்ளதுரைத்துச் சாக்ஷிப்பகர்ந்திருக்கிறார்கள். நம்மையாளும் சக்ரவர்த்தியாகிய அதிமாக்ஷிமைதங்கிய எட்வர்ட் அரசரும் அவரது தர்மபத்தினியாகிய அலெக்ஸாண்ட்ரா மகாராணியும் புத்திர பௌத்திர மித்திராதிகளோடு நீடூழி வாழ்ந்து ஈசுவரானுக்ரகத்தால் அவர்களுடைய பரிபாலனத்துக்குள்பட்ட பிரஜைகளைக் கண்ணை இமைகாப்பதுபோல் காப்பாற்றி அவர்களுக்கு எல்லாக்ஷேமமு முண்டாக நெடுங்காலம் அரசு செலுத்தி ஆண்டுவர ஸர்வேசன் அருள்புரிவாரென்று ஹிருதயபூர்வகமாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

## Coronation Song.

### Song of Benediction.

### சக்ரவர்த்தியின் மகுடாபிஷேகம்.

### வாழ்த்துகவி.

காப்பு.—

ஆழு வலைகடல்சூ ழாங்கிலமா மன்னனுக்கென்
வாழ்நிலை நிற்ப வருந்துணையா—வாழ்வரு
மின்னாக மேந்துமுகின் மேனியான் பாரேத்தும்
பன்னாகப் பாயான் பதம்.

1. அங்கோண மாதரங்க வாடையணி நீடுலகி
லெங்கோனு மேழாவ தேட்வேர்டின்—செங்கோலுஞ்
சிங்கக் கொடியுஞ் செயமுரச முந்திசைநான்
கெங்குமிளிர்ந் தோங்கவொலித் தே.

2. தென்மார்க் காசனது பேர்மரபி லங்கவரு
நன்மா துலகிலொன்ற நாமமுளாள்—பன்மாதர்
போற்றவெழில் பூத்திடுமப் பூங்கொடியோ டெங்கரசை
யேற்றிடுமன் னன்வாழி யே.

3. அண்டா திருளெனவே யாங்கிலமா ராச்சியத்திற்
கொண்டாட மன்னன் குடியோம்பி—விண்டாங்குந்
தாரகைசூழ் சந்திரன்போற் றண்ணளிப ரப்பிவா
பேரிசையெங் கும்பெருக வே.

4. மாசுபுகாச் செம்மனத்தர் மன்னனெனும் நேசவிசு
வாசமொடு மாந்தர் மனமகிழ்க—வாசமலர்
தூவித் தினகரனைத் தோத்தரித்துச் சீர்வசந்த
மேவுபுவி மாதென்ன வே.

5. பஞ்சமொடு பல்பிணியும் பல்லுயிர்க ளொல்லையினிற்
றுஞ்சவரு கொள்ளைத் தொடுநோயும்—வெஞ்சமரும்
பானு வொளிமுன் பனிபோற் சிதைந்திடுக
வானம் வழங்குகவ ளம்.

6. ஆங்கிலமெங் கும்பரவி யான்றோர் கவிப்புனல்பாய்ந்
தோங்குகட லென்ன வொலித்திடுக—பாங்குறுநற்
சாத்திரவா ராய்ச்சி தழைத்திடுக தாரணிமுன்
பார்த்தறியா விந்தை பயந்து.

7. இந்து மகமதிய ரேனையராஞ் சாதியரும்
பந்தமுறு நேசத்தின் பாங்கறிக—சந்ததமு
மாவியுட லும்போ லமைந்திடுக வப்புவியிற்
றாவிலா சுங்குடியுந் தாம்.

8. காலமிட மோர்ந்த கலைஞராய் நல்லமைச்சர்
கோலமுடன் கூடிக் குறிதவறா—மானுமிபோ
லாட்சியெனும் நாவா யருந்திறத்தோ டுந்திவருங்
காட்சியினைக் காண்பாம் களித்து.

9. தாய்போற் பலநலமுந் தந்தைபோ னற்குணமுந்
தூயதிரு மாதருளுந் துன்னவே—மாயிருடா
னங்கோடச் செய்தெழுமோ ராதித்தன் போல்வானை
யெங்கோனை ஞாயெட்வேர் டிங்கு.



*10. வெற்றி வடிவெடுத்த விக்டோரி யாவரசி
நற்றாய் தனைப்போ னலம்பெருகிப்—பற்றலரை
வென்று மிகவும் விமரிசையாப் பாலிப்பா
னென்றெமது வாழி யெழுமே.

வாழி.—

வாழி பசுபதிதன் மக்கண்மனை யொக்கலொடு
வாழிபிரின் ஸாவேல்ஸாம் வள்ளலுந்தான்—வாழியே
யாதித்த னென்று மகலாதெங் கோன்புரக்கும்
நீதித் தனிக்குடைநீ ழல்.

எஸ். வி. சுந்தரராஜ ஐயர், பி. ஏ. எல். டி.

## மைசூர் மஹாராஜா.

மேன்மைதங்கிய மைசூர் மஹாராஜா அவர்களுக்கு வயது வந்து ஆகஸ்டுமீ 8உ வெள்ளிக்கிழமையன்று இராஜப்பிரதிநிதியவர்களால் பட்டங்கட்டப்பெற்று சிம்மாஸனமேறி ஸ்வயமாக ராஜ்ஜியபாரம் செய்யத்தொடங்கினார். இதுவரையில் ரிஜெண்டாயிருந்து ராஜ்ஜியபாரம்செய்து வந்த மஹாராஜாவின் தாயாராகிய மஹாராணியவர்கள் ராஜ்ஜியகாரியங்களை மஹாராஜாவின் இளமைப்பருவத்தில் மேற்பார்வை செய்துவந்த சிறப்பையும் மேன்மையையும் மெச்சிப்பேசி இராஜப்பிரதிநிதி லார்ட் கர்ஸன் அவர்கள், அவருடைய மேலானதிறமையையும் அவர் இராஜ்ஜியத்துக்குச் செய்த உதவியையும் நன்கு மதித்து அவருடைய ஆயுள்பரியந்தத்துக்கு அவர் எங்குசென்றாலும் அவருக்கு 13-மரியாதைக்குண்டுகள் போடும்படியான கௌரதையளிக்க மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களுக்குச் சிபார்சுசெய்து அவருடைய சம்மதியின் பேரில் அப்படியே நடக்க ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவித்தார். மஹாராஜாவுக்கு உதவியாக ஒரு கௌன்ஸில் ஏற்படுத்தி அதற்கு திவானும் இன்னம் இரண்டு கௌன்சிலர்களும் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மூவரும் பற்பல இலாகாக்களை அவர்களுக்குள் பகுத்துக்கொடுக்கப்பட்டதையொட்டி அந்தந்த இலாகாவிஷயங்களை மேற்பார்வைசெய்து நடத்தி வருவதோடு அந்தந்த இலாகா சம்பந்தமாய் கௌன்ஸிலின் ஆலோசனைக்குக் கொண்டுவரவேண்டிய விஷயங்களை முறைப்படி ஆலோசனைக்குக் கொண்டுவந்து கடைசியில் மஹாராஜா அவர்களின் தீர்மானத்துக்கு அனுப்பவேண்டியவைகளை அனுப்பிவைக்கவும், அவர் உத்தரவை நிறைவேற்றவும் வேண்டிய ஏற்பாடுசெய்வார்கள். திவான் ம-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் கிஷ்ணமூர்த்திராவ் அவர்கள், ப்ராஸிடெண்டு; ம-ா-ா-ஸ்ரீ வி. பி. மாதவராவ் அவர்கள், முதல் கௌன்ஸிலர், ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் இரண்டாவது கௌன்ஸிலர். மஹாராஜா அவர்கள் துரைத்தன விஷயங்களில் நன்றாகப் பயிற்சி பெற்றுளார். இவருக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்ட மிஸ்டர் ப்ரேஸர் அவர்கள் இவரை நன்றாகப் பழக்குவதற்கு வேண்டிய முயற்சியெல்லாம் எடுத்துக்கொண்டு இவருடைய மேலானபதவிக்குத் தக்கபடி இவருடைய கல்வியும் பயிற்சியும் இனிதமையும்படி வெகு பாடுபட்டு உழைத்துவந்தார். அவருடைய முயற்சி வீண்போகவில்லை யென

பது மஹாராஜா அவர்கள் பட்டத்துக்குவந்த காலத்தில் இராஜப்பிரதிநிதியவர்கள் பட்டங்கட்டிப் பேசியதற்குப் பிரதியுத்தரமாகச் செய்த பிரசங்கத்திலடங்கிய மேலான எண்ணங்களாலும், முதல் முதல் அவர் கௌன்ஸில் மீட்டிங்கில் கௌன்ஸிலர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப்பற்றிச் சொல்லிய உத்தமவார்த்தைகளாலும், மற்றப்படி அவர் துரைத்தன விஷயங்களில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையினாலும், துரைத்தன சிப்பந்திகள் வேலைபார்த்துவருவதைச் சரிபார்த்துவருவதில் காட்டும் மேலான ஊக்கத்தாலும் நன்குவிளங்குகின்றன. இவர் நீடூழி வாழ்ந்த பிரக்கியாதி பெற்ற இவர் பிதாவைக் காட்டிலும மேலான கீர்த்திபெற்று இவர் ஆளுகைக்குள்பட்ட பிரஜைகளுக்கு எவ்வித க்ஷேமமுமுண்டாகி யவர்கள் ஓங்கிவளர நெடுங்காலம் அரசு செலுத்திவருமபடி ஈசன் அருள்புரிவாரென்று பிரார்த்திக்கின்றோம்.

DR. SOUTHWOOD SMITH.

PIONEER OF SANITARY REFORM.

## சௌத்வூட் ஸ்மித்—சுகாதார முறை முதலாசிரியர்.

சுகாதாரமுறையின் அவசியத்தைப்பற்றி இப்போது ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் தெரியுமாதலால் அதைப்பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் 60-வருஷங்களுக்குமுன் சுகாதாரமுறையின் அவசியத்தைப்பற்றித் தெரிந்தவர்கள் வெகுபேர்கள் இல்லை. இதைக்கேட்க அநேகர் ஆச்சரியப்படலாம். இவ்வுலகில் புதுவிஷயங்கள் ஸ்தாபிக்கப்படுமுன் அவற்றின் ஆசிரியர்கள்படும் கஷ்டங்களை சரித்திரவாயிலாக அறிந்தவர்கள் அப்படி ஆச்சரியப்படார்கள். இப்போது இவ்வுலகில் நாகரிகர் என்று சொல்லத்தக்கவரில் பெரும்பான்மையோருடைய மதாசிரியராகிய இயேசுகிறிஸ்து பட்டபாடு எல்லாருக்கும் தெரியுமே. இம்மாதிரியேதான் மற்ற புது விஷயங்கள் ஸ்தாபிக்க முயன்றவர்களின் கதியும். அதாவது முதலில் கஷ்டமும் பின் தங்கள் விஷயங்கள் ஸ்தாபிக்கப்பட்டபின் சுகமுமாம். சுகாதாரமுறை விஷயம் இதற்கு மாறானவிஷயமுடையதல்ல.

சுகாதாரமுறையின் அவசியத்தை முதலில் கண்டுபிடித்து அதை வழக்கத்துக்குக்கொண்டுவரமுயன்றவர் சௌத்வூட் ஸ்மித் என்னப்பட்டவர். இவர் 1788-ம்௵த்தில் பிறந்தவர். அவர் கால்வினிஸ்டிக் கிறிஸ்தவ குருவாதற்கு முதலில் படித்தார். ஆனால் அவருக்கு கால்வனிஸ்டிக் கிறிஸ்தவமதக் கொள்கைகளில் சில தவறெனத்தோன்ற அவற்றை ஆக்ஷேபித்தார். உடனே அவரை அவர் படித்த பள்ளிக்கூடத்திலிருந்து துரத்திவிட்டார்கள். தாய் தகப்பன்மாரும் அவரைத் தங்கள் வீட்டில் புகவொண்ணாதென்று தடுத்துவிட்டார்கள். அவர் படித்திருந்தபொழுது அவரை நேசித்திருந்த மிஸ் அன்ரீட் என்னும் மாது அவரை சிலநாட்களுக்குள் மணந்தாள். ஆயினும் 1812-ல் அம்மாது 2-குழந்தைகளைவிட்டு இறந்தனள். மிஸ்டர் ஸ்மித் தன் குழந்தைகளைத் தன் பெண்சாதியின் ஜனங்களிடம் விட்டுவிட்டு வைத்தியம் படிப்பதற்காக எடின்பர்க் நகரம் சென்றனர். அங்கே அநேக கனவான்களுடையவும் புத்திமான்களுடையவும் சிநேகத்தைப் பெற்றனர். அவர் திரும்பிவந்து 'யோவில்' என்ற இடத்தில் வைத்தியம்செய்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தார். அங்கே மிஸ் மேரி கிரிஸ்டி என்னும் மாதை மணந்தார். மணமுடிந்த கொஞ்சநாளில் (1820) அவர் லண்டன் பட்டணம்சென்று டிரினிடி ஸ்கொயர் என்ற இடத்தில் தங்கினர்.

அங்கே வைத்தியம் செய்துகொண்டிருந்த அவருக்கு வியாதிகளை சொஸ்தப்படுத்துவது மாத்திரமன்றி வரவொட்டாது தடுக்கவும் கூடும் என்றுபட்டது. இவ்விஷயத்தை முதல்



முதலில் "வெஸ்ட்மினிஸ்டர் ரிவியூ" என்னும் பத்திரிகையில் 1825-ம்௵த்தில் பிரசுரம் செய்தார். இவ்விஷயமானது பின்னால் அவர் சுரத்தைப்பற்றியெழுதின கிரந்தத்தில் மிகத் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. அப்போது லண்டனில் டைபாயிட் என்று சொல்லப்படும் விஷசுரம் அதிகம். அது ஒட்டுவாரொட்டி நோயென்றும் தடுக்க முடியாதென்றும் ஜனங்கள் எண்ணியிருந்தார்கள். இவர் அது அப்படியல்லவென்றும் நல்ல காற்றும், கிரமமான வெளிச்சமும் இருந்து ஜனங்கள் அதிகக்கும்பலாகக்கூடி வசியாமலிருப்பதோடு அவர்கள் குடியிருக்கும் இடங்களருகில் ஜலதாரை சுத்தமாயும் வீடு ஓதமின்றியும் இருந்தால் சுரம்வராதென்று காட்டினார். மேலும் 'டைபாயிட்' சுரம் ஒட்டுவாரொட்டியாயினும் நல்ல காற்று இருந்தால் அதனால் கெடுதல் ஒன்றும் உண்டாகமாட்டாது என்று காட்டினார். இவர் என்னசொல்லியும் ஒருவரும் இவர் சொல்லை அப்போது தழுவிக்கொள்ளவில்லை.

வைத்தியர்கள் பிணங்களை அறுத்து பரிசோதனைபார்த்தல் அவசியமாதலால் அதற்குப் பிணங்கள் கிடைக்காதபோது பிணவிற்பனைக்கென்றேற்பட்டுள்ளவர்கள் ஏழைகளை வழியில் தடுத்துக்கொன்றுவிற்றுவந்தார்கள். இதைத் தடுப்பதற்காக பலவழிகள் யோசிக்கப்பட்டன. அவைகளில் ஆஸ்பத்திரியில் இறந்துபோனவர்களில் திக்கற்றவர்களின் பிணங்கள் வைத்தியம் படிக்கும் மாணாக்கர்கள் உபயோகத்திற்கென்று ஏற்படுத்தப்பட்ட விஷயம் மிஸ்டர் ஸ்மித் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டதுதான். அவருடைய பெரு முயற்சியாலே அது அங்கீகரிக்கப்பட்டு வழக்கத்துக்குவந்தது.

அக்காலத்தில் சுரங்கங்களிலும் யந்திரசாலைகளிலும் சிறு பையன்களையும் பெண்களையும் அவர்கள் செய்யமுடியாதவேலைகளைச் செய்யும்படி செய்துவந்ததால் அவர்கள் வெகு சீக்கிரம் இறந்துவந்ததுமன்றி அப்படி இறவாதபொழுது பலமற்றவர்களாய்க் கஷ்டப்பட்டுவந்தார்கள். அவர்களுக்கு இறப்பதுதான் சௌக்கியத்திற்கு முதற்படியென்பது எண்ணம். இவர்கள் விஷயத்திலும் மிஸ்டர் ஸ்மித் வெகு பிரயாசைப்பட்டு உழைத்துவந்தார். கடைசியில் 10-வயதுக்குக்கீழ்பட்ட பையன்களும் பெண்களும் வேலைசெய்யக்கூடாதென்று சட்டம் ஏற்பட்டது. கொஞ்சநாட்களுக்குப்பின் 10-வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைப்பற்றியும் பெண்களைப்பற்றியும் சட்டம் ஏற்பட்டது. ஆகையால் இவ்விஷயத்திற்கும் மிஸ்டர் ஸ்மித்தை முதலாசிரியராகச் சொல்லலாம்.

அவர் அடிக்கடி பல இடங்களிலும் போய் ஜனங்களின் நிலைமையைப்பார்த்ததில் சுகாதார முறையின் அவசியத்தில் அவருக்கு இருந்த பற்று அதிகப்பட்டது. பல தடவைகளிலும் அதைப்பற்றி யெழுதினார். 1838-ம்௵ முதல் 1848-ம்௵ வரை இதற்காக அவர்பட்ட கஷ்டம் நிரம்ப சாஸ்தி. பார்லிமெண்டு மெம்பராகிய மிஸ்டர் ஸ்லேனீ என்பவர் இவர் கட்சியைச்சேர்ந்தார். 'லார்டு நார்மன்பீ' என்பவர் இவ்விஷயத்தைப்பற்றி பல சட்டங்களை பார்லிமெண்டு சபையில் பிரேரேபித்தார். ஒன்றும் பயன்படவில்லை. இவைகளால் பிரயோசனமில்லையென்று கண்டு அவர் 1844-ல் பட்டணங்களின் சுகாதாரச் சபையொன்று ஸ்தாபித்தார். இதில் பல பெரிய மனிதர்கள் சேர்ந்திருந்தார்கள். அதுவும் அப்போது பிரயோசனமின்றாக, அவர் ஒரு பத்திரம்வரைந்து அதில் ஏழைகளுக்கு அவசியமான சுகாதாரங்களையும் அவற்றால் விளையக்கூடிய பயனையும்தெளிவாகக்காட்டி அதை ஏழைகளுக்கு அனுப்பி அவர்களை ஒரு பெரிய மகஜர் தயார்செய்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்பும்படி கேட்டார். 1847-ம்௵த்தில் கவர்ன்மெண்டாரே ஒரு சபை நியமித்து சுகாதார விஷயமாக விசாரணைசெய்யும்படி செய்தார்கள். அச்சபையில் மிஸ்டர் ஸ்மித்தும் ஒரு மெம்பர். கடைசியாக 1848-ல் பொதுஜன சுகாதாரச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

மேலும் அச்சட்டத்தை நிறைவேற்ற ஒரு சபை நியமிக்கப்பட்டது. அதிலும் மிஸ்டர் ஸ்மித் ஒரு மெம்பரானார். ஆனால் 1854-ல் இச்சபை கலைக்கப்பட்டது. ஆயினும் மிஸ்டர் ஸ்மித் கஷ்டப்பட்ட சுகாதார விஷயம் இங்கிலாண்டு தேசத்தில் வேரூன்றிவிட்டது. கவர்ன்மெண்டாரும் இவ்விஷயமாகப் பெருந்தொகையான பணம் செலவுசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதுமாத்திரமே மிஸ்டர் ஸ்மித்துக்கு நிரம்பிய சந்தோஷத்தை விளைத்தது.

இதுவரை சாதாரண அந்தஸ்தில் இருந்தவர்கள் வியாதிவந்தகாலத்து லண்டனில் அதிகக் கஷ்டப்பட்டார்கள். அவர்களிருந்த ஓட்டல்களில் போதுமான சௌகரியங்களிருக்கவில்லை. இதற்காக ஒரு ஆஸ்பத்திரிகட்ட மிக முயன்றார். கடைசியாக "ஸானட்டோரியம்" என்னும் ஒரு சுகாலயம் கட்டப்பட்டது. இதற்கு ஜனங்களெல்லாம் பணம் தர்மமாகக் கொடுத்தார்கள். அவர்களில் முதன்மையானவர் நம் சக்ரவர்த்தியின் தகப்பனாகிய பிரின்ஸ் ஆல்பர்ட் என்பவரே.

இம்மாதிரியாகப் பல நற்காரியங்களில் பிரவேசித்திருக்கும் மிஸ்டர் ஸ்மித் தவர்கள் தம் வைத்திய வேலையைக் கைசோரவிடவில்லை. அதோடுகூட தம்மதக்கொள்கையை அப்போதப்போது பிரசங்கித்துக்கொண்டே வந்தார்.

1857-ம் ௵த்தில் அவர் இட்டலிதேசத்துக்குச் சென்றார். அங்கே தன் குமாரத்தியாகிய எமிலியென்பவர் இருந்த ப்ளாரன்ஸ் நகரில் 1861-ம் ௵ டிசம்பர்மீ 10உ இறந்தார்.

இவர் என்னவேலையிலிருந்தபோதிலும் தன் மக்களாவது அவர்கள் குழந்தைகளாவது வரின் இனியசொற் கூறி இருத்தி விளையாடுவார். இவரிடத்தில் விசேஷமாகவிருந்த குணங்கள் இரண்டு—எவ்வேலையைக் கைக்கொண்டாலும் அதில் தன் புத்தி முழுதையும் செலுத்தி அதைத் தீரவிசாரித்துச் செய்தலும் அப்படிச்செய்திருக்கும்போது தன்னை முழு[illegible]கும் வெளியே மறைத்துவிடாது வேறு விஷயங்களையும் கைக்கொள்ளுதலுமாம். மேலும் அவரைப்போல விஷயங்களை ஆரம்பித்து ஸ்தாபிக்க முயல்பவர்களுக்கு முக்கியமாய் வேண்டியது பொறுமை. அது அவரிடத்துக் குடிகொண்டிருந்தது. ஒரு விஷயத்தை அறிந்து அதை ஸ்தாபிக்கமுயல்பவன் அதன் உண்மையைவிசாரித்தல் மாத்திரம் போதாது. அதை மற்றவர்களை விசாரித்தறிந்து நம்பும்படி செய்யவும் வேண்டும். இதையும் அவர் செய்தார். இக்கடைசிவிஷயத்தை நம்மவர்கள் கிரமமா[க] யோசிக்கவேண்டும். நம்மவர்களில் புதுவிஷயங்களை ஸ்தாபிக்கமுயல்பவர்கள் மற்ற ஜனங்களும் தங்கள் கொள்கைகளை அங்கீகரிக்கும்படி செய்யவேண்டுமென்னும் விஷயத்தை மறந்து விடுகிறார்கள். அதனால் நேரிடும் தீங்குகள் பல. கடைசியாக மிஸ்டர் ஸ்மித் அவர்கள் செய்திருக்கும் விஷயங்களைப்பார்த்தால் நாம் அவரை, பௌத்தர்கள் புத்தரைச்சொல்லியிருப்பது போல, 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்' என்றே சொல்லலாம்.

## THE SCENERY OF THE CAVERY.

## காவேரி நதியின் அழகிய காட்சி.

II.

இந்தப் பேராற்றைத்தொடர்ந்து முப்பது மைல் மேல்நோக்கிச்செல்ல திரிச்சிராப்பள்ளி மலையின் சிகரம் தோன்றும். இதற்கு ஆறு மைல் மேற்கே ஸ்ரீரங்கமென்னும் விசுத்தமாகிய தீவினால் இந்நதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. இக்கிளைகளில் ஒவ்வொன்றும் அரை மைல் அகலமுள்ளதாய் இத்தீவின் இருபுறமும் ஓடுகின்றது. தென்கிளை தன் பெயரையே தரித்திருக்க வடகிளை கொள்ளிடம் என்னும் புதுப்பெயரைக் கொள்ளுகின்றது. இக்கொள்ளிடம் இங்கு இத்தீவின் முனையிலிருந்து மறு கரைவரையில் மேலைக் கல்லணையென்று பெயரிடப்பட்ட ஒரு கல்லணையாற்



கடிவாளம் பூட்டியதுபோலத் தடுக்கப்பட்டுள்ளது. இக்கல்லணையாவது, எண்ணூறு கெஜ நீளமும் ஏழடியுயரமுமாகிக் கொள்ளிடத்தின் அடித்தரைமீது குறுக்காகக் கட்டப்பட்ட ஒரு கற்சுவராகும். இதனால் காவேரியின் ஜலமானது தஞ்சாவூர் ஜில்லாவின் செழிப்பான விளைநிலங்களுக்கு நீர் ஏறிப்பாயும்படி உயர்த்தப்படுகின்றது. இவ்வாற்றின் கிளைகள் அநந்தம் கால்வாய்களாகப் பிரிந்து இந்நாடு முழுதும் பரவுகின்றன. இந்த அத்தியந்த ஜனோபகாரமானவேலை 1836-ம் ௵ ஸர். ஆர்தர் காட்டன் (Sir. Arthur Cotton) என்பவரால் மூன்று லக்ஷம் ரூபாய் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்டது.

ஸ்ரீரங்க மென்னும் இந்த அழகிய தீவானது 12-மைல் நீளமும் ஒரு மைல் அகலமுமாகி எங்கும் தோட்டங்களும் பழமரங்களின் தோப்புகளும் உழுது பயிர்செய்த செழிப்பான வயல்களுமாயுள்ளது. இதன் மத்தியில் சப்தப்பிராகாரங்களையுடைய ஸ்ரீரங்கம் என்னும் விசாலமான கோயில் இருக்கின்றது. இங்கு சதுரமாகிய ஏழு மதில்கள் ஒன்றினுள் ஒன்றாய்ச் சுற்றியிருக்கும். இம்மதில்கள் 25-அடி உயரமும் நான்கடிக் கனமுமாகி ஒவ்வொரு பக்கத்திலும் வெளிமதில் ஒரு மைல்தூரம் பரவியிருக்கின்றது. இம்மதில்களுக்கிடையே நூற்றுப்பன்னிரண்டு கஜம் விசாலமுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் நடுவில் வெகு வேலைப்பாடுபெற்ற கல்லிற் சித்திரிக்கப்பட்ட கோபுரங்களையுடைய உயர்ந்த வாயில்களும் இருக்கின்றன. வெளிமதிலின் வடக்கு வாயிற் கோபுரம் முற்றிலும் கட்டப்படவில்லை. முதல் நிலைமாத்திரமே கட்டி முடிந்திருக்கின்றது. இதுமாத்திரம் முழுதும் கட்டப்பட்டிருக்குமாயின் இத்தேசத்திலுள்ள கோபுரங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாயிருக்கும். இதன் கால்கள் முப்பத்துமூன்றடி நீளமும் ஆறடிச் சதுரமுமாகி ஒரே கல்லினால் சமைக்கப்பட்டிருக்கின்றது. அளவிறந்த செல்வத்தைப்பெற்ற இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கடவுள் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதாரம். இவர் எல்லாவற்றிற்கும் உள்மதிற்குள்ளே ஒரு சிறிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்றனர். வெளிப்பிராகாரங்களில் கோயில் அர்ச்சகர்களும், ஸ்தல தரிசனம் செய்யவந்தவர்களும் வசிக்கின்ற அநேக வீடுகளும் அவர்களுக்குபயோகமாக ஏற்பட்ட கடைகளுமாயிருக்கும். இக்கோயிலின் பொக்கிஷத்திலுள்ள எண்ணிறந்த உயர்ந்த நகைகளையும் அவற்றிற் பதித்த அற்புதமான காந்தியை வீசுகின்ற வச்சிர வைடூரிய கோமேதக மரகத புஷ்பராகாதி அளவிறந்த அருமையான இரத்தினங்களையும் விவரிக்க இங்குஇடமில்லை. இங்குள்ள விக்கிரகத்துக்குச்சாத்தும் அளவிறந்த இரத்தினங்கள் பதித்துத் தக தக வென்று ஜாஜ்வல்யமாய் ஜொலிப்பதான பொற்கவசமும், அரசனையும் விலைக்குவாங்கும் அரிய இரத்தினஹாரங்களும், லக்ஷோபலக்ஷம் விலையுயர்ந்த முத்துக்கோத்துத் தைத்த வஸ்திரங்களும் கொடைகளும் பத்தரைமாற்றுத் தங்கத்தாற்செய்த ஏராளமான நீர்க்குடங்களும் அண்டாக்களும் இங்கு உள்ளன. இவை அநேக கற்கம்பங்கள் நிறுத்தப்பட்ட உன்னதமான ஒரு மண்டபத்தில் பார்க்கவந்தவர்களுக்கு வைத்துக் காட்டப்படும். இம்மண்டபத்தின் முன்பக்கத்தில் சித்திர வேலை செய்யப்பெற்ற எட்டு ஸ்தம்பங்கள் உள்ளன. ஒவ்வொரு ஸ்தம்பத்திலும் ஒரு மனிதன் குதிரைமேலேறிச் சவாரிசெய்வது போலவும், அக்குதிரைக்குப் பின்பு அதன் முதுகில் ஒரு புலி விழுந்து பாய்வதுபோலவும் அப்புலியை இரண்டு காலாள்கள் அடர்ப்பதுபோலவும் ஒரே கல்லில் உயிரளவுள்ளவாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு ஒவ்வொன்றிலும் முப்பத்திரண்டு உயர்ந்த கண்வாய்கள் உள்ள இரண்டு நீண்ட பாலங்கள் இத்தீவை இருபுறமும் ஆறுகளுக்கு அப்புறத்துள்ள கரைகளோடு இணைக்கின்றன. இப்பாலங்களின்மேல் ராஜபாட்டை திருச்சிராப்பள்ளியை நோக்கிச்செல்லுகின்றது.

இந்தப்பெயர்போன புராதனபட்டணத்தின் நடுவே பிரசித்திபெற்ற மலைக்கோட்டையொன்றுள்ளது. இம்மலை மேருமலையின் சிகரங்களில் ஒன்றென்றும் தேவர்களால் இங்கு சேர்க்கப்பட்டதென்றும் இந்துக்கள் சொல்லுவார்கள். பன்றியின் முதுகுபோல உருவமைந்த இத் தனிப்பாறையானது ஒரு முனையில் மிகவுயர்ந்து ஆற்றுமட்டத்துக்கு 350 அடி யோங்கிய கொடு முடியாகி உச்சியில் ஒரு சிறிய தேவாலயத்தையுடையது. அதன் அடிவாரங்களில் வீடுகளும் மருந்தறைகளும் நான்குபக்கமும் அதனைச் சூழ்ந்து இருக்கின்றன. இதற்குச் சற்றுமேலே ஒரு விநோதமான தெருவு இதைச்சுற்றி யோடுகின்றது. கொடுமுடியின் கீழே அதற்குப் பாதி உயரத்தில் கோட்டைபோன்ற ஒரு பெரிய கோவில் இருக்கின்றது. அகன்ற கற்படிகள், இருபுறமும் சுவர்களும் மேலே மண்டபமும் ஆகிக் கோயிலுக்குட் செலுத்துகின்றது. மலையின் உச்சிக்குப்போவதற்கு அம்மலையைச்சுற்றிப் படிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இம்மலையின் உச்சியில் இருந்துபார்த்தால், அதியற்புதமான அழகிய காட்சி கண்ணுக்கு நெடுந்தூரம் தெரியும். இதையடுத்துக் கீழே, நீண்ட நேரான வீதிகளையுடைய பட்டணமும், கர்நாடக நவாபுகளின் இடிந்துபோகின்ற அரண்மனையும், கோவில்களும், பள்ளிகளும் அவற்றின் சிகரங்களும் தோன்றும். வெளியோரங்களில் ஐரோப்பிய சேனைத்தானத்தைச்சேர்ந்த அநேகம் வெண்மையான கட்டிடங்களும் பங்களாக்களும் தோன்றும்.

இந்தப்புராதனமான மலையைச்சுற்றி ஆயிரம் வருஷகாலமாக அநேக யுத்தங்களும் முற்றுகைகளும் நடந்திருக்கின்றன. இதைப் பெறும்பொருட்டு முதன்முதல் தென்தேயத்தில் பழமையான இந்து இராஜவமிசங்களின் இராஜாக்கள் சண்டையிட்டனர். பின்பு மகமதியரும், மாராஷ்டிரரும், பிரெஞ்சுக்காரரும், கடைசியாக இங்கிலீஷ்காரரும் வந்தார்கள். இக்கோட்டையினிடத்து நடந்தது போல இத்தனை யுத்தங்களும் முற்றுகைகளும் தனிநயமான வீரச்செய்கைகளும் ஜயாபஜயங்களும் வேறு ஒரு கோட்டையிலும் நடந்திரா. இங்கு என்னும் கிளைவ் இங்கிலீஷ் சேனாநாயகர் நாலுமடங்கு அதிகரித்த படைகளையும் இலக்ஷியப்பண்ணாது பொருது வெற்றி கொள்ளுந் திறமையும் ஆளும் வன்மையும் முதன் முதல் இவ்விடத்தே தமக்குத் தோன்றக்கண்டனர். இந் நகருக்கு வெளியேயுள்ள பொன்மலை, பிரெஞ்சுமலை, எறும்பீச்சுரம் என்னும் இடங்களில் லாரன்ஸ் என்னும் இன்னொரு இங்கிலீஷ் தளகர்த்தர் பிரெஞ்சுக்காரரோடு அதிபயங்கரமாக அநேக போர்கள் செய்தவற்றை இன்னும் அவ்விடங்கள் எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீரங்கத்திலிருந்து கொள்ளிடம் அதன் வழியே 60-மைல் தூரம் வரையில் யாதும் மாறுபாடில்லாமல் சென்று சிதம்பரம் என்னும் பெரிய தேவாலயத்திற்குச் சிறிதுதூரத்திலுள்ள * பறங்கிப்பேட்டைக்குச் சமீபமாகச் சமுத்திர சங்கமமாகின்றது. இந்த உன்னதமாகிய சிதம்பரக்கோயில் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியகரமாய் இருக்கும். இதன் சுவர்கள் 40-அடி நீளமும் ஐந்தடி கனமும் உள்ள ஏகாண்டமான கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கற்கள் 100-மைல்தூரத்திலிருந்துகொண்டு வரப்பட்டிருக்கவேண்டும். இவ்வாலயம் இப்போது சைவசமயத்தாரதாயினும் இது உண்மையில், அறியப்படாத கடவுளுக்கே பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளே இரகசியம் என்று கதவுகளாவது ஜன்னல்களாவது இல்லாத ஒரு அறை இருக்கின்றது. இவ்வறையில் நாமரூபங்கள் இல்லாத பராபரன் நிவசித்திருப்பதாக நம்புகிறார்கள். இதற்குள்ளே போய்ப் பார்த்தவர்கள் ஒருவரும் இல்லையாயினும் இதற்குள்ளே போவதற்கு ஒரு இரகசியமான வழியுண்டென்றும் அவ்வழி கோவில் தீக்ஷிதர்களில் ஒருவருக்கே தெரிந்திருக்குமென்றும் அவர் தமது மரணகாலத்தில் தமக்குப் பின்வருபவனுக்கு அந்த இரகசியத்தை வெளியிடுவாரென்றும் சொல்லுகிறார்கள்.

* Porto-Novo.



ஸ்ரீரங்கத்தீவின் கிழக்குக்கோடியில் கொள்ளிடமும் காவிரியும் அநேகமாய் ஒன்றோடொன்று கிட்டத்தட்டச் சேருகின்றன. அவற்றைச்சேராமல் ஒரு பெரிய சுவர்போல் காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட பெரிய கல்லணை ஒன்று உள்ளது. மிகுந்த ப்ரவாக சமயங்களில் அளவுக்குமிஞ்சின ஜலம் பள்ளதரையில் ஓடுகின்ற கொள்ளிடத்தில் பாயும். இது வெகு பழமையானவேலை. முற்காலத்தில் இந்துக்களுக்குள்ளே பெறப்பட்டிருந்த கல்வியையும் சாமர்த்தியத்தையும் தெரிவித்து இதனால் உத்தேசிக்கப்பட்ட காரியம் முற்றும் நிறைவேற்றுகின்றது. டெல்டா நிலங்களுக்கு நீரேறிப் பாய எவ்வளவு உயரம்வேண்டுமோ, அவ்வளவு உயரம்மட்டும் வைத்து அதிக சலத்தை கழித்துவிடுகின்றது. இது நெளிந்து பாம்புபோல் செல்லுவதால் இதன்மேல் உள்ள பாலமும் நெளிந்து செல்லுகின்றது. பார்வைக்கு சிவசமுத்திரம் பாலம்போலவே இதுவும் விசித்திரமாகத்தோற்றும். தென்தேசத்துக்குப் பூம்பொழில் போன்ற தஞ்சை நாட்டுக்கு இது தான் ஆரம்பம். இந்த சலத்தினால் வருஷந்தோறும் ஏழு இலட்சம் ஏகரா நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பெரிய கல்லணையிலிருந்து காவேரி அநேகம் பெரிய கிளைகளாகிச் சாகுபடிக்கு உபயோகமாகப் பிரிந்து செல்கின்றது. அவற்றில் ஒவ்வொன்றும் ஒரு பெரிய நதிக்குச் சமானமாகும். இக்கிளைகள் வேறு அநேகம் சிறு கிளைகளாகப் பிரிந்து அவற்றினின்றும் அநேகம் கிளைகள் பிரிந்து தேசமெங்கும் நதிகளும் கால்வாய்களுமாய்ப் பின்னிக்கொண்டிருக்கும். இந்நதி மேலுள்ள பட்டணங்களில் முக்கியமான இன்னொருபட்டணம் கும்பகோணம். இங்கு இந்நதி கூடிய வரையில் அகலம் உள்ளதாய் உருவத்தில் சுருங்காமலே இருக்கின்றது. இந்நகரின் ஜனத்தொகை 50,000. இது தென்னிந்தியாவில் உள்ள புண்ணியஸ்தலங்களில் ஒன்றாகப் பாவிக்கப்படுகின்றது. இங்கு சர்க்கார்வேலையிலிருந்து பென்ஷன்பெற்றுக்கொண்ட அநேகம் சுதேச உத்தியோகஸ்தர்கள் வாசம் செய்கிறார்கள். ஜனங்கள் வெவ்வேறு தேசத்துக்குத் தக்கபடி தமது அபிருசிகளில் வேறுபடுதற்கு இது நல்ல திருஷ்டாந்தமாகும். ஒரு தேசத்தாருக்கு எது மிகவும் இஷ்டமானதோ அது மற்றொருதேசத்தாருக்கு ஸஹ்யமாயிருத்தற்கும் இதுவே திருஷ்டாந்தமாகும். இந்துக்கள் மலைநாடுகளையும் அவ்விடத்தின் சீதோஷ்ணஸ்திதிகளையும் வெறுக்கிறார்கள். ஐரோப்பியர்களோ அப்பிரதேசங்களுக்கு விரும்பிச்செல்கிறார்கள். இக்கும்பகோணப் பட்டணமானது உக்கிரமான வெயிலும் நான்கு பக்கத்திலும் முடிவில்லாத நன்செய் வயல்களும் தோப்புகளுமாய் எவ்வளவு இந்துக்கள் விரும்புகிறார்களோ அவ்வளவு ஐரோப்பியர்களுக்கு வெறுப்பாயிருக்கும். இங்கு அரிசி முதலிய பதார்த்தங்கள் மலிவாக இருப்பதனாலும் வெயில் கோடைக்கும் மாரிக்கும் அதிக பேதப்படாமல் ஒரேசீராக இருத்தலாலும், உடல்களைக் குன்றேறி இறங்கவேண்டுவதில்லையாதலாலும் பத்துப் பன்னிரண்டு தேவாலயங்களும் ஸ்நானபானங்களுக்குயோக்கியமான புண்ணிய நதியும் இருத்தலாலும் இது அவர்களுக்கு அவ்வளவு இனிமையாய் இருக்கின்றது. கும்பகோணத்திற்கு இரண்டு மூன்றுமைல் கிழக்கே இந்நதி தன் பெருங்கிளைகளில் கடைசியான தொன்றைப்பெற்று, அதன் பின்பு ஒரு அற்பமாகிய சிற்றாறுபோற் குறுகிப்போகின்றது. மனிதன் தன் முடிவுகாலத்தில் எப்படிக் குழந்தைத்தன்மையை மறுபடியும் அடைகின்றானோ அதுபோலவே இதுவும் குறுகி மெலிந்துபோயிருக்கின்றது. உலகத்திலுள்ள நதிகளில் இதுபோலத் தன் ஜலத்தை ஒருதுளிகூட வீண்போக்காமல் மனிதருக்கு உபயோகமாக்கும் ஆறு விசேஷமாய் வேறு இல்லையென்றே சொல்லவேண்டும். பலகிளைகளாகப் பிரிந்து நீரெல்லாம் இழந்து சொற்ப

ஜலத்துடன் சிலுசிலு என்று பாய்கின்ற மணற்றரையின்மீது நாணல் நிறைந்த தீவுகளூடே சுற்றிச் சுற்றிச்செல்லும் வழிப்போக்கன்போலச் செல்லும் இதன்கதியை நாம் தொடர்ந்து செல்லுதல் அவசியமில்லை. கடைசியில் ஆசைப்பட்டு அடையவந்த அலைகளினோசையைக் காதால் கேட்கப்பெற்றும் பிரகாசமானதும் அமரிக்கையானதும் நக்ஷத்திரங்கள் எழுந்து கீழ்த்திசையில் ஒளிவிட்டுத்தோன்றப் பெறுவதும், ஆன ஜலநிதியைத் தனக்கு முன்னே விரிந்து தோன்றவும் காணப்பெற்று மணமகனைத் தேடியடையும் காதலியைப் போலக்களிப்புற்றுக் கலக்கின்றது.

இதன் கீழ்த் திருநயம்கிருஷ்ணபாரதிகள் என்னும் செங்காப்புலவர் இயற்றியருளிய திருவையாற்றுக்கப்பலில் இருந்து, காவேரிச் சிறப்பென்னும் பாடலை எடுத்து வரைகின்றோம். இப்பாடலில் காவேரியுற்பத்தியானது முதல் சங்கமமாகும் வரையில் உள்ள முக்கியமான ஸ்தலங்கள் வரிசையாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

## காவிரித் திருநதிச்சிறப்பு.

### கப்பல்பாட்டு.

அப்புயன்மால் தேடரிய—திருவை
யாற்றில் நிதம் அறம்வளர்த்தாள்
அம்பிகைதன் அருளாலே—பெருக்கம்
அணிந்துவரும் காவேரி.

### முடுகு.

1\. அப்பாம் தொடுசையமலையில் நிலை பெற்று
அகத்திய மஹாமுனி கடத்தினில் உதித்து
அண்டர் புகழும் பிரமகுண்டமதில் வந்து
அறியொணுப்பாதாள நெறியினை அடைந்து,

2\. திண்புவியிலே நாயகாதபுரம் கூடி
திருவேணி சென்று ருத்திரர் அடியை நாடி
ஸ்ரீரங்கபட்டணத் திருபால் நிகழ்ந்து
ஸ்ரீகண்ட நரசிங்கபுரமதில் இணைந்து,

3\. வம்பு பெருகும்யானைக்குந்திமலை துன்னி
மாதேவபுரம் சிவசமுத்திரம் மன்னி
மாநிலத் துயரும் பவானியை அடுத்து
வாஞ்சையுடனீரோடொடுநீங்ரலூர உற்று,

4\. முன்புகொடு முடி வந்து வேலூரைச் சேர்ந்து
மோகனூர் கண்டு நெறியூருகில் சார்ந்து
யோநிவருகின்ற அமராவதியைத் தேக்கி
முக்கூடல் மாயனூர அயிலூரைத் தாக்கி,



5\. செம்பொன் வளரும் கிருஷ்ணராஜ புரமண்டி
திருவேங்கிமலை கடம்பர்கோவில் தண்டி
சிறுகுமணி முசிரிபாலத் துறையில் வாய்த்து
செய்பகுண சேக்ரமங்தண நல்லூர் பார்த்து,

6\. பண்பு பெருகும் திருச்சத்துறை மருங்கி
பார்புகழும் திருவாசி மாதலம் நெருங்கி
பரவுமிசை திருவரங்கேசரை வணங்கி
பகரும் உறையூர் திரிசிரபுரம் இணங்கி,

7\. அன்பு பெருகுங் கஜாரண்ணியம் மதித்து
அகிலாண்டவல்லி நாயகனடி துதித்து
அருகுறும் தோகூர் கல்லணையிற் பொருந்தி
அன்ன முதவும் கோயிலடியிற் றிருந்தி,

8\. தென்புடனே ஐராவதேஸ்வரம் மேவி
திருக்காட்டுப்பள்ளி சாத்தப்பிள்ளையார் கோவில்
செப்பு மகாராஜபுரம் கடுவெளியிற் சென்று
தேச மகிழும் திரு நெய்த்தானமதில் நின்று,

9\. அன்புடன் திருவை யாற்றப்பனைக் கண்டு
அறம் வளர்த் தாளுத்திரவு பெற்றுக் கொண்டு
அரிய கணபதி யக்ரகாரமதில் ஊக்கி
ஆடுதுறை நோக்கிக் கபிஸ்தலம் விளக்கி,

10\. தண் பெருகு மரவிந்தபுரமேவி தியாக
சமுத்ர முமையாபுரம் நெருங்கி நலமாக
சாமி மலை முருகனையிறைஞ்சியுள் மகிழ்ந்து
தரணிபுகழ் திருவலஞ் சுழியிற் புகுந்து,

11\. கும்ப கோணம் கஞ்ச னூர்திரிபு வனமும்
கூடியிடைமருதூரில் வாசஞ்செய் தினமும்
குலவு மகராஜபுரம் திருக் கோடி காவில்
குத்தாலம் வல்லிபம் கொரநாடு தாவி,

12\. சம்பூரணமாக மாயூரத்தில் நண்ணி
ஜகதீசனைப் பணிந்து தியானம் பண்ணி
தன் பேர் விளங்கும் நகரத்தில் மகிழ்ந்துள்ளம்
சங்க முகம் வந்து கடல் கூடியது வெள்ளம்.

ஏலேலோ.

## ALL'S WELL THAT ENDS WELL.

# நன்றாய் முடியின் எல்லாம் நன்றே.

சீராவியந்திரம் "இஷ்-ஷ்-ஷ்" என்று சர்ச்சிக்கவும், சக்கரங்கள் தண்டவாளத்தின்மேல் தேய்ந்து "கிருக்-கிருக்" என்று சப்திக்கவும், தென் இந்தியாவின் முக்கியபட்டணங்களில் ஒன்றில் மாலை சுமார் ஐந்தரை மணிவேளையில் ஒரு புகைவண்டி நின்றது. உடனே ஏறுவோரும், இறங்குவோரும் குழப்பமாய் கிடக்க, ஒரு மூன்றாவது வகுப்பினறையிலிருந்து, ஒரு யௌவன புருஷன் கீழே இறங்கினான்.

அவனுக்கு வயது சுமார் இருபத்திமூன்று இருக்கலாம். அவனுடைய உயர்ந்த வடிவையும் அகன்ற மார்பினையும் விசாலமான நெற்றியையும் நுனியில் வளைந்த மூக்கையும் உற்றுப் பார்க்குங்கால் திடமும் ஆண்மையும் நிறைந்த செல்வனென்றே அவனைக் கூறவேண்டும். ஆனால் அவனுடைய ஒட்டின கன்னங்களும் ஒளியற்று ஆழ்ந்திருந்த கண்களும் அவன் தீராத்துயரத்துக்கும் இடைவிடாத தீர்க்காலோசனைக்கும் இரையானவனென்றும் நிரூபித்தன. அவன் நடையையும் யாவரையும் மகிழச்செய்யும் பாவனங்களையும் * யோசித்துப் பார்க்கும்பொழுது அவன் தன் துயரங்களை வென்று தனக்கொரு பெயரையும் உண்டாக்கிக்கொள்ளக்கூடிய திறமையையு மடைந்திருந்தானென்பது புலப்பட்டது. மேலும் அவனுடைய முழங்கைகளிற் கிழிந்த சட்டையும், அழுக்குப்படிந்த உள்ளங்கியும், வலை போன்ற சிமையங்கவஸ்திரங்களும், அவன் தரித்திர சாகரத்தில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தானென்று வெளிப்படுத்தின.

வண்டியை விட்டிறங்கினதும் தன் பிரயாணச் சீட்டைக்கொடுத்துவிட்டு வெளியேவந்து நின்று "நடந்து போகிறதா, வண்டியில் போகிறதா" என்று ஆலோசிக்கும்பொழுது ஒரு மாட்டு வண்டிவந்து நின்றது. அதிலிருந்து இரண்டுபேரிறங்கினார்கள். அப்பொழுதுதான் சாந்திமுகூர்த்தம் செய்துக் கொண்ட தம்பதிகள்போல் காணப்பட்டார்கள். அவர்களிலகமுடையாள் வெட்கத்தினால் தன் கணவனருகில் போகாமலும், பயத்தினால் அவனைவிட்டுப் பிரிந்து போகாமலும் புன்சிரிப்புடன் தன் புருஷனைத் தொடர்ந்து வண்டியேறச் சென்றதைப் பார்த்து "ஆஹா இவர்கள் ஒருவருடனொருவர்

* Graceful demeanour.

கஷ்டநிஷ்டூரியங்களைச் சொல்லிக்கொண்டு ஆறுதலுந் தேறுதலு மடைந்து இனிமேலனுபவிக்கப் போகிற ஒப்பற்ற சுகத்தை நாமென்றைக்கு அடையப்போகிறோம்" என்கிற தன் பரிதாபமான எண்ணத்தைப் பெருமூச்சினால் தெரிவித்துத் தன்வழி நடக்க ஆரம்பித்தான்.

புகைவண்டி உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களுமிருக்கும் கட்டடங்களையும் குடிசைகளையும் கடந்து சென்ற பிற்பாடு இடையிலிருக்கும் ஒரு திறந்தவெளியில் வந்துசேர்ந்தான். அப்பொழுது மேற்கே நிமிர்ந்து கவனித்துப்பார்த்தான். சிவந்த தினகரன் மலையின் வாயில் விழுந்து அஸ்தமானமாயிருந்தபோதிலும் அவனுடைய கிரணங்கள் ஸ்தம்பம் ஸ்தம்பங்களாக மேலே பாவி வியாபித்து கூட்டமாகக்கூடி ஒன்றன்மே லொன்றாக அடுக்குண்டிருந்த மேகங்களை ஊடுருவிச்சென்றன. அச்சூரிய கிரணங்களால் பற்பல வேறு மிகவும் பிரகாசமான வர்ணங்களை யடைந்து உருவற்றிருந்த மேகங்கள் கட்டுக்கதைகளில் கூறிய விசித்திர ஆடையாபரணங்களை யணிந்த முனிகளும், பூதங்களும் செய்திடும் போர்க்களம்போல் தோன்றின.

இதைப்பார்த்து ஆச்சரிய மடைந்து பாதையின் இருபக்கங்களிலும் அவன் நோக்கவே அங்கே வித்தியாதனம் நிறைந்த பெரியோர்களைப்போல் தலை குனிந்து நிற்கும் முதிர்ந்து நன்றாகக் கருவுடைய கதிர்களை யேந்திய நெற்பயிர் கண்களுக்கெட்டிய தூரம் செழிப்பால் சிறந்த வயல்களில் தள்ளாடிக் கொண்டிருந்தது. இடையிடையே நுண்ணிய நறுமணம் நிறைந்த தென்றல் இப்பயிர்மேல் வீசி சிற்றலைகளை யுண்டாக்கிற்று. இவ்வழகை யனுபவித்து மறுபடியும் ஆகாசத்தை யண்ணாந்து பார்த்தான்.

அங்கு முன் னொன்றன்மீதொன்றாய் படிந்திருந்த மேகங்கள், காற்றினால் பாவி சிறு பின்னங்களாய், மிகவும் ஒழுங்காகவும் வரிசையாகவும் அமைந்திருந்தன. பார்க்க ஒரு மகாசமுத்திரத்தில் சிறு தீவுகள் சேர்ந்திருந்தாற்போல் விளங்கின. நிமிஷத்திற்கு நிமிஷம் உண்டாகும் இவ்வேறுபாடுகளை உயிர் வாழ்க்கையிலுண்டாகும் மேடு பள்ளங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து மிகவும் தத்துவமான எண்ணங்கள் மனதில் நிறைந்ததனால் பாதி மெய்மறந்து நடந்துக்கொண்டிருக்கையில், தண்ணீர் சிறுவாய்க்கால்களில் பாறைகற்களின்மேல் முறுமுறுத்துக் கொண்டுசெல்லும் ஓசை காதிலின்பமாகச் சென்றது. மேலும் பறவைகள் செய்யும் "கலகல" ஓசை



யும், அவனை ஆலோசனையிலிருந்து தவிர்த்து, சுற்றுப்பக்கங்களுக்கு அவனைக்கொணர்ந்தது. மறுபடியும் வானம் எவ்வாறு இருக்கதென்று திரும்பிப்பார்க்கவும் தீவுகள்போலிருந்த மேகங்கள் நன்றாகக்கூடி நீண்டிருந்தன. அஸ்தமித்த சூரியனொளியால் தணல்போல் பிரகாசித்தன. இறந்தபின் நமது ஆவிகள் கடக்கவேண்டுமென்று புராணிகர் கூறும் "வைதரணி" என்கிற அக்கினி நதியைப்போல அந்நீண்டமேகம் விளங்கிற்று. இவற்றையெல்லாம் பார்த்து காலவலிகூடத்தெரியாமல் ஊரினெல்லைக்கு வந்துசேர்ந்தான். அங்கோ பாதையின் ஓரத்தில் ஒற்றைக்கிளையையுடைய "சவுக்கு" மரம் இலைகளையிழந்து நின்றுக்கொண்டிருந்தது. அக்கிளையின்மேல் ஒரு பறவை "கிக்கு கிக்கு" என்று கூப்பிட்டு உட்கார்ந்திருக்க மற்றொரு பறவை பறந்து வந்து அதனருகில் சற்றுநேரம் உட்கார்ந்து தானுங்கூவிற்று. பிறகு இரண்டு மொருங்காகப் பறந்து மறைந்தன.

"ஆயோ! வண்டியைவிட்டிறங்கினதும் சுகமனுபவிக்கச்செல்லும் தம்பதிகளைக் கண்டேன். இப்பொழுதோ சந்தோஷமடைந்த இரண்டு பட்சிகளைப் பார்த்தேன். வாழ்வின் துன்பங்கள் இவற்றைச் சற்றேனும் வருத்துவதில்லை. தம்முடைய சொந்த நிலைமைகளில் சுகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. என் கதி யென்னவோ? இறைவனுக்கே வெளிச்சம்." என்று நினைத்து, கடைவீதியின் வழியாய்ச் சென்று, தான் போகவேண்டிய பெரிய மாடவீட்டு வாசலில்வந்து நின்றான். சுமார் ஆறரை மணியிருக்கலாம். ஒரு சிறந்த கண்ணாடிக்கூண்டில் மண்ணெண்ணெய் * விளக்கு பிரகாசித்துக்கொண்டிருந்தது. வாசலில் சாயுந்திண்ணையில் தாடியும் மீசையும் நன்றாக நீண்ட துலக்கனொருவன், தன் முழந்தாட்களை முழங்கால்களின் மேலிட்டு கைகளைத் தன் வழுக்குத்தலையில் சார்த்திக்கொண்டு கண்ணை மூடியவனும் திறந்தவனுமாய்க் குந்திக்கொண்டிருந்தான். பக்கத்தில் உருமாலும் "சப்-ஜெட்ஜ்" என்று வரையப்பட்டுள்ள வில்லை மாட்டிய மார்ப்பட்டை "தாடாவும்" ஒன்றன்மேலொன்றாயிருந்தன. ஊரிலிருந்து வந்தவன் உள்ளேபோக ஆரம்பித்ததும் "யார் சாமி அது! உள்ளே போகக்கூடாது!! வா இப்படி" என்று அதட்டினான்.

"இவனிடத்தில் என்னுடைய பூர்வோத்திரமெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறதா? உள்ளே

* Kerosine Oil.

சென்றால் தானாக நம்மை யறிந்துகொள்ளுகிறார்கள் போய்விடுகிறதே நலம்" என்று தீர்மானித்து 'தட-தட' வென்று நடையைத்தொடங்கினான்.

தன் வார்த்தைகளை மீறிநடந்ததும், துலுக்கன் கோபித்து "யார் சாமி, அறிவுகெட்ட பாப்பானாய் இருக்கே, உள்ளே போகக்கூடாதென்றேன் போறாயா! இதோ பார்—" என்று வேட்டை நாயைப் போல் சீறிக்கொண்டு, கையைப்பிடித்து வெளியே இழுத்து விடுபவன்போல் அருகே வந்தான்.

அப்பொழுதுதான் இன்னது செய்வதென்று தெரியாமல் பிரமை பிடித்தவன்போல் தியங்கிக்கொண்டிருக்க, அதிர்ஷ்டவசமாய், நன்றாய்த் தேய்த்த குடத்தில் தீர்த்தத்துடன் கட்டையும் குட்டையுமாய் கறுப்பு நிறமாய் ஒரு பரிசாரகன் படிகளேறி வீட்டில் பிரவேசித்தான். நமதய்யரைப்பார்த்து, "வாங்கோ மாப்பிள்ளை, எப்பொழுது வந்தீர்கள்" என்று வினவி, யுத்தம் செய்பவன்போல் நின்றுக் கொண்டிருந்த துலக்கனைப்பார்த்து "சாயபு! இவரை யாரென்று எண்ணிக்கொண்டாய், இவர் தான் நமது எஜமான் மாப்பிள்ளை" என்று சொல்லி விட்டு உள்ளே சென்றான்.

அதுவரையில் புலியைப்போல எக்கழுத்தத்துடன் நின்ற துலுக்கன், பூனையைப்போல் தாழ்ந்து, "மஹாராஜ், தெரியாமல் சொல்லிவிட்டேன், மன்னிக்கவேணும், மன்னிக்கவேணும் எஜமானருக்குத் தெரிந்தால் வேலைபோய்விடும். கோபித்துக்கொள்ளக்கூடாது மஹாராஜ்!" என்று காலைத் தொட்டுத் தொட்டு சலாம்செய்ய ஆரம்பித்தான்.

"சாயபு! இது உன் தப்பிதமல்ல, காலத்தின் மகிமைகளில் இதுவுமொன்று" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்போய், கூடத்தில் போட்டிருந்த நாற்காலிகளொன்றிலுட்கார்ந்து, தனக்கு அன்றையதினம் சம்பவித்ததையெல்லாம் மனதில் சுழற்றிக்கொண்டிருந்தான். இவ்வாறு பத்து நிமிஷங்கள் கழிந்ததும், மெத்தையின் மீதிருந்து, கையில் "மெழுகுவர்த்தி தீபமேந்தி, தன் மாமியார் வருவதைக்கண்டான். அழகும் கர்வமுமொருங்கே குடிகொண்ட அந்த அம்மாள், தன்னகைகளும் புடைவையும் நன்றாகப் பார்க்கப்படும் பொருட்டு, சற்றுதூரம் நடந்து பிறகு திடீரென்று நின்று, விளக்கைத் தாழ்த்தி, சக்கரவர்த்தினி ஒருத்தி கேவலம் தன் பிரஜையைப் பார்ப்பதுபோல், நமதய்யரை உற்றுப்பார்த்து, மிகவும் கம்பீரமான தொனியுடன்

“வையணும்” என்று நான்கு எழுத்துக்களை உச்சாரணம் செய்துவிட்டு, “தோரணி” நடையுடன் இரண்டாங்கட்டில் மறைந்தாள்.

“ஆஹா! இவள் தானிப்படி எதிர்க்கொண்டு அழைத்தாள். இவளுடைய மகள் எப்படியோ? நடக்க நடக்கத் தானே தெரிகின்றது” என்று வெகு விசித்திர சிந்தையுள்ளவரா யிருக்கையில், முன் கூறப்பட்ட பரிசாரகம் இரண்டாங்கட்டிலிருந்து பிரவேசித்துவந்து “என்! நாழியாய்ச்சே, கைகாலலம்பி சந்திபண்ணி சாப்பிட எழுந்திருக்கிறதுதானே? எஜமான் வேலையாய்ப் பட்டணம் போயிருக்கிறார்; நாளைக்கு வந்துவிடுவார்; நீங்கள் யாருக்கும் காக்க வேண்டியதில்லை” என்று சொல்லிவிட்டுப் போனான். பிறகு நமதய்யர் அரைமணி நேரத்தில் சாப்பிட்டுவந்து, கூடத்தின் மற்றொரு பாகத்திலிருந்த மேஜையின்பாலுட்கார்ந்து அதன்மேலிருந்த “செண்டு ஜார்ஜ்” கோட்டையின் பத்திரிகையை கையிலெடுத்து, “காலியான வேலைகளுக்கு ஆட்கள் தேவை” என்றிருக்கிற பக்கத்தைத் திருப்பிப் பார்த்து அதில் தன்னைப்போல் பி. ஏ. பரிட்சை தேறினவர்களை 15-ரூபாய்க்கும், 10-ரூபாய்க்கும் விண்ணப்பங்களனுப்பும்படி கேட்டுக்கொள்வதைப் பார்த்து வியசனத்துடன் வியந்து, கலைகளில் தேர்ச்சி பெறுவதனாலுண்டாகும் நிஷ்பலனையுங் கருதி, மிகவும் துன்பமான நினைவுகளுக்கிடமானார். ஆனால் பிரயாணத்தினால், களைப்புண்டதினால், தன் யோசனைகளுக்கு நடுவில் நித்திரையு மவரைக் கைக்கொள்ள ஆரம்பித்தது. இச்சமயத்தில் அவருடைய மாமியார் சற்றேனும் பிரியமாவது சந்தோஷமாவதில்லாத அதே கம்பீரத்துடன் “மீனாட்சி மேலே காத்துக்கொண்டிருக்கிறாள்! போகலாம்” என்று கட்டளையிட்டுத் தூங்கச்சென்றாள். நமது அய்யரும் திடுக்கிட்டெழுந்து இருட்டு மூடின படிகளின் வழியாக மெத்தைக்கு ஏறிச்சென்று பித்தளைப்பிடிபோட்டிருந்த இரட்டை கைக் கதவுகளைத் திறந்து தன் மனைவியிருக்கு மறையினுள் புகுந்தார். இது வரையில் கடினமான தரையில் நடந்துவந்த பாதங்கள் அவ்வறையில் “வெல்வெட்” போன்ற இரத்தின கம்பளத்தின்மேல் மிகவும் இன்பகரமாய் படிந்தன. அவர் அவ்விடத்தில் கண்ட காட்சியோ கண்ணைக்கவரத்தக்கதாயிருந்தது.

விட்டத்தின் வளையத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த விலையுயர்ந்த ஒரு பெரும் ‘வலிவிளக்கு’,* தன் ஒப்பற்ற பிரகாசத்தை அவ்வறையிலிருந்த ஒவ்வொரு சிறு வஸ்துவின்மேலும் வீசி, அதன் சிறப்பை நன்றாக எடுத்துக்காட்டிற்று. நான்கு சுவர்களிலும் நன்றாய் அமைந்திருந்த, ‘இரவிவர்மா’ எழுதிய ஆனந்தமான படங்கள், அவ்வறையை கந்தருவலோகமோ † என்று நினைக்கும்படி மனதை மயக்கத்தக்க ஒரு திவ்விய அலங்காரத்தை விளைவித்தன. நான்கு மூலைகளிலும் விசித்திரமான மேஜைகளின்மேல் அமைந்திருந்த, பட்டால் செய்த புஷ்பச்செடிகளும், சிற்றுண்டிகளும், பாலும் வைத்திருந்த மேஜையும், இருபக்கங்களிலும் இரண்டு மெழுகு தீபங்களையுடையதாய் மற்றனேக தமிழ்ப்புஸ்தகங்களும், எழுதுவதற்கு வேண்டிய கருவிகளும் வைக்கப்பட்ட மற்றொரு அழகான மேஜையும், பார்க்கப்பார்க்கக் கண்களுக்குச் சிறந்த விருந்தாயின. ஒரு சிறு பூங்கொடியைப்போல் அமைத்து வைத்திருந்த ஊதுவத்திகள், மெய்மறக்கும்படி அவ்வறையை நன்மணத்தால் நிறப்பின. மேலும் மற்றொரு சுவரின் பால் “டிக், டிக்,” என்று சப்தித்துக்கொண்டிருந்த கடிகாரமானது ஒவ்வொரு அரை மணிக்கும் ஒவ்வொரு சிறந்த ஆங்கிலேயகானத்தைச்செய்துகாதுகளைக்களிப்பித்தன.

இச்சிறந்த வஸ்துக்களின் அழகையெல்லாம் சின்னப்படுத்தி, தனக்கொப்பானவள் இனி யிவ்வுலகிலில்லை யென்று விளங்கியவள் நமதய்யர் மனைவியே. பால்போல்வெளுத்து, அன்னஞ்சிறகைப்போல் மிருதுவாயிருந்த பட்டு அமளி பரப்பியிருந்த வில்விசைவைத்தமைக்கப்பட்ட ஒரு கட்டிலில், ‡ தலையைக்கையால் தாங்கி ஒரு சார்பாக மகாராணி ஒருத்தி பொழுதுபோக்குக்காகப் படுப்பதுபோல் படுத்திருந்தாள். சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகர்த்தா தன் திறமையை வெளியாக்கும் பொருட்டு வரைந்த படங்களில் மிகவும் மேன்மையுள்ளவளாய் விளங்கத்தகுந்த சிறப்பினளாயிருந்தாள். விண்மீன்களைப்போல் பிரகாசித்துச்சுழன்று தாமரையிதழ்க்களைப்போன்ற கண்களும், மகிமைதங்கிய ஒரு சிற்பி சிற்றுளியால் தகர்த்தான்போன்ற மூக்கும், தென்றலில் அசையும் இளம் இலைகளைப்போல் துடித்து அடிக்கடி பற்களின் முறுவலைப் பகிரங்கப்படுத்தின. சிவந்த சிறிய உதடுகளும், மற்று ஆரோக்கியமும் அழகும் பாய்ந்துக்கொண்டிருந்த ஒவ்வொரு அங்கமும் சகலத்தையும் வெறுத்த துறவியின் தவசுடன் போராடி வெல்லத்தகுந்தாயிருந்தன. மேலும்

* Power Light. † Fairy-Land. ‡ Spring cot.



அவள் சரிகைகமலங்கள் நூற்கப்பட்ட ஒரு காசிப் புடவையை அணிந்திருந்தாள். அக்கமலங்களினும், கருமணல் போன்ற கூந்தலினும் நடுவில் பிரகாசித்த முகத்தை, அலங்கார சாஸ்திரத்துடன் சொல்லத் துணிந்தால் மேகங்கள் நட்சத்திரங்கள் இவைகட்கு நடுவில் பிரகாசிக்கும் பூரணசந்திரனுக்கு ஒருவாறு ஒப்பிடலாம்.

நமதய்யரைக்கண்டதும், படுத்திருந்தவள் நிதானமாக “உஸ். ஸ். ஸ்.” என்று சப்தித்து எழுந்து, “இந்தப்பக்கம் எட்டிப்பார்க்க மாகாணுபாவருக்கு இவ்வளவு நாளாயிற்றுக்கும்! பாவம் தலைபோகிற வேலை யங்கே” என்று கேட்டாள். இவ்வார்த்தைகள் ஒரு சிறிய வெள்ளி மணியின் நாதத்தைப் போல் காதில் ஒலித்தன. “இவ்வழகும், குணமும், செல்வமும் வாய்ந்தவள் நமது மனைவியன்றோ” என்கிற சந்தோஷம் தன் நிலைமையை யெல்லாம் மறக்கும்படி தன் மனதில் மேன்மேல் எழ நமதய்யர் மரத்தில் நன்றாய்ப் பழுத்த கனியை உண்ணச் செல்லும் வாலிபன் போல் ஓடி அவளருகே உட்காரப் பிரயத்தனப்பட்டார்; அவர் பாதிவழி சென்றதும் மனைவியானவள் பார்த்தவர்கள் பயப்படும்படி முகத்தைச் சிடுசிடுத்துக்கொண்டாள்; ஆவலுடன் சென்ற வாலிபன் பாதிவழியில் ஒரு பாம்பைக் கண்டால் எவ்வாறு திடுக்கிடுவானோ அவ்வாறு ஸ்தம்பமாய் நின்றான்.

“ஐயோ இந்த ஊருக்கு வந்தும் இக்கந்தைகளைத் தானா உடுக்கவேண்டும், எங்களண்ணா கொடுத்த சரிகை அங்கவஸ்திரங்களெல்லாம் எங்கே போயின? (சற்றுநேரங்கழித்து) எங்கேபோகிறதாவது? அக்கிழவி வயற்றுப்பாட்டுக்காக விற்றுத்தின்றிருப்பாள்” என்று கடுகடுப்புடன் சொன்னாள்.

நமதய்யரப்பொழுது தான் உடுத்திருந்த வேஷ்டியைப் பார்த்துக்கொண்டார். தான் கச்சேரியில் எழுதுகிறபொழுது பேனாவை உதறுகின்றதனால் விழுந்த “மைப்புள்ளிகள்” * ஏராளமாய் எங்கும் நிறைந்திருந்தன; மனதில் குதித்தெழுந்த கோபத்தை (தான் வந்தகாரியம் பூர்த்தியாகவேண்டியதால்) அடக்கிக்கொண்டு மேஜையினருகிலிருந்த நாற்காலியினுட்கார்ந்து “கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த புத்தியும் எத்தனை நாளைக்கு; நாமே சம்பாதித்துச் செய்துக்கொண்டது தான் நமக்கு நீடித்துவரும்.————அது கிடக்கட்டும்; நீ உன்விளையாட்டை எல்லாம் விட்டுவிட்டு இதைச் சற்றுகேள். என்தாயார் படுக்கையும் தானுமாக படுத்துக்கொண்டிருக்கிறாள்” என்று சொல்லி இச்சமாசாரத்தால் அவள் முகத்திலுண்டாகும் மாறுபாடுகளைக் கவனித்தார்.

“ஆத்துமிஷம் கழிந்தபிற்பாடு “உடம்பு என்னமோ?” என்று தனக்கும் மாமியாருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாதவள்போல் மகா இளக்கத்துடன் வினவினாள்.

“பித்தக்காய்ச்சலாம்: எழுந்து நடக்கிறதே மிகவும் துர்லபம்; அன்னாகாரம் என்கிறது சற்றேனும் கிடையாது. உன்னைப்பார்க்கவேண்டுமென்று அவள் ஆசைப்பட்டது இவ்வளவவ்வளவு அல்ல” என்று கல்நெஞ்சமும் இளகும்படி சமாசாரத்தை வெளியிடலாயினான். நமதய்யர் சொன்னதைக் கேட்டும் கேட்காததுபோல் நடித்து “அதற்கென்ன இப்பொழுது” என்று மிகவும் அசாரத்துடன் கேட்டாள்.

“அவளோ [illegible]மாட்டாத கிழவி இங்கே வருவது மிகவும் அசாத்தியம். பிழைக்கிறளோ! சாகிறளோ! தெரியவில்லை. நீ யவ்விடத்தில் வந்து அவளுடைய கடைசி காலத்தது ஆசையை திருப்தி செய்துவிட்டு வந்துவிடேன்” என்று தன் தாயாரை நினைக்க மனதில் அடங்காத்துயரமெழ மொழிந்தான்.

“என்ன சொன்னீர்கள்? நான் உங்கள் ஊருக்கு வருகிறதா? நன்றாயிருக்கு, அவ்விடத்தில் வந்து காலையிலெழுந்து சாணித்தண்ணீர் இறைத்துக்கொண்டும், புழுக்கல் அரிசி சமைத்த வெங்கலப் பானையையும், சொட்டுரசம் வைத்த கற்சட்டியையும் தேய்த்துக்கொண்டிருக்கவேண்டுமா? அதற்கா இந்தக்கைகள் உதவவேண்டும்” என்று சொல்லிக்கொண்டு எழுந்துவந்து தன் இரண்டு கரங்களையும் நமதய்யர் முன் நீட்டினாள். அவர் அவற்றை பிடித்துப்பார்த்து மௌனமாய் நசுக்கினார். புதிதாய் மலர்ந்த உரோஜா புஷ்பங்கள்போல் சிவந்து நூற்றெடுத்த பட்டைப்போல் மிருதுவாயிருந்தன.

“எவ்வளவு நன்றாய்த்தான் கைகளிருந்தபோதிலும் வேலை செய்யப்படாதென்று எங்கே சொல்லியிருக்கின்றது. அதோ மேஜையின்மேல் எத்தனை நவீன கதைகள் * வைத்திருக்கின்றாயே அதிலிருக்கிறவர்களெல்லாம் பிறர் சுகத்திற்காக எவ்வளவு

* Ink spots.

* Novels.

தங்கள் சுயபுத்தியை மறந்திருக்கிறார்கள். எங்கள் குடும்பம் ஏழ்மைத்தனத்திலிருந்தபோதிலும் சமயத்தையறிந்து நடக்கவேண்டாமா?" என்று புத்தி சொல்லத் தொடங்கினான்.

பின்பு சொன்னதற்கு ஏற்றும் செவிகொடாமல் "ஆமாம்! கதைக்குக் காலுண்டா என்பவோ அதில் சொல்லியிருக்காம் எனக்குப் புராணங்கூற வருகிறீர்கள். இன்றைக்கெல்லாம் நீங்கள் சம்பாதிப்பது மாதம் பதினைந்து ரூபாய். உங்களம்மாளுக்குப் பலகாரம் செய்யவேபோதாது. அதுகிடக்கட்டும் நீங்கள் ஒரு வருஷம் சம்பாதிப்பதை யெல்லாம் செலவிடாமல் சேர்த்தாலும் இதுமாதிரி ஒரு புடவை வாங்கமுடியுமா?" என்று தானுடுத்திய புடவையின் முந்தானியை விளக்கின் பால் விரித்தாள். அதில் கொடிகளாகவும் மாங்காய்களாகவும் பின்னியிருந்த சரிகை 'தக தக' வென்று பிரகாசித்து நமதய்யர் கண்களை கூசச்செய்தது.

இவள் செயல்களைப்பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து நமதய்யர், "மீனா உன்னைப்போன்ற சிறுமிகள் எத்தனைபேர் திருப்தியுடனும் சுகத்துடனும் வாழ்கின்றார்கள், அவர்களெல்லாம் இப்புடவையா உடுத்திருக்கிறார்கள். இதெல்லாம்விட்டு நான் சொன்னதை யோசி" என்று தன் காரியத்தை ஞாபகமூட்டினார்.

"என்னத்தை யோசிக்கிறது. இந்த பூமியில் என்னத்திற்கு பிறந்திருக்கோம்? இன்பமனுபவிப்பதற்கல்லவோ? இக்காலத்தில் செல்வந்தான் இன்பம். நீங்கள் இவ்வேலையிலிருந்துகொண்டு வாழ்நாளெல்லாம் சம்பாதித்தாலும், இந்த நகைகளைப் பண்ணமுடியுமா?" என்று தன் கைகளிலணிந்த காப்பு கொலுசுகளையும் காசிமாலை முதலிய கண்ட ஆபரணங்களையும் தொட்டாள். மேலும் தான் செய்யும் நடிப்பை பூர்த்தியாக்கத் தன் முகத்தை சற்றே அசைத்தாள். அப்பொழுது அவள் 'தோடுகளில்' பதித்த முக்கோணங்களாகச் செதுக்கின வயிரங்களில் வானவில்லின் வர்ணங்களையுடைய மங்களுஞ் சிறுதீபங்கள் அங்குமிங்குமாகப் பிரகாசித்தன.

"இவளிந்த வித்தைகளை யெங்கு கற்றாளோ" என்று பயமும் அச்சமுமடைந்த நமதய்யர்:

"மீனா இப்புடவைகளிலும் நகைகளிலும் என்ன இருக்கின்றது? எல்லாம் வீண். இனிக் கொஞ்சக் காலம் போனால் நீயே இவற்றையெல்லாம் வெறுப்பாய். சாகும்வரை நம்மிருவரையும் ஒன்றாகப் பிணித்து, நமது இல்வாழ்க்கையை நடக்க சர்வ சக்தியுடையதும் நிறைந்த மங்கலமாயிருப்பது அன்பே. செல்வமாகத்தான் அவ்வன்பைக் கைவிடாதே. வேண்டாம்" என்று, சமயத்தை எள்ளளவேனும் நன்றாய் ஆராயாது தன் மனைவிக்கு நற்போதனை செய்தார். செல்வாக்கில் வளர்ந்து செல்வச்செருக்கு குடிகொண்ட அவளுக்கு இவ்வார்த்தைகளின் நியாயம் சற்றேனும் புலப்படவில்லை.

"நீங்கள் என்ன சொன்னாலுஞ்சரி, என்னால் அவ்விடம்வந்து கஷ்டப்படமுடியாது. நீங்களும் இவ்வூரைவிட்டுப் போகக்கூடாது" என்று ஒரு நியாயாதிபதி தீர்ப்புசொன்னதைப்போல் சொன்னாள்.

"உனக்கு அவ்வளவு கர்வமா? உங்கள் தகப்பனருக்கு அடிமையென்று என்னை நினைத்தாயா? சோம்பர் என்னுடம்பில் சேர உங்களுடைய பசுமாட்டையும் குதிரையையும்போல் உட்கார்ந்திருக்கின்றேனா? நாமாக உழைத்துச் சம்பாதித்த பொருளின் மகிமையை நீ ஒருநாளும் அறியாய். நாளைய தினம் போகின்றேன். இனி இந்தத் திசையில் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன்" என்று இரக்கமும் பச்சாதாபமுமற்று சிடுசிடுத்து மறுமொழி சொன்னார்.

ஆண்மக்களை மயக்கும் சகல ஆயுதங்களும் தப்பவே கடைசி ஆயுதமான கண்ணீரைவிட்டு அழத் தொடங்கினாள். அக்கண்ணீர் துளிக்குப்பின் துளியாக முத்துக்களைப்போல் ததும்புவதை மற்றொரு சமயத்தில் நமதய்யர் பார்த்திருந்தால் இரக்கங்கொண்டு உடனேசென்று தழுவி முத்தமிட்டு அக்கண்ணீரைத் துடைத்திருப்பார். ஆனால் இப்பொழுது தன் தாயாரையும் தன்னையும் நிந்தித்து எள்ளளவேனும் தன் வேண்டுகோளைக் கேட்கவில்லையென்ற கோபம் மனதில் குடிகொண்டதினால், தலைகுனிந்து தனியே நின்றார். மீனாட்சி, கொழுக்கொம்பைச் சுற்றியிருந்த பூங்கொடி, பனிநீரை * ச்சிலிர்த்து அவிழ்ந்துவிழுவதைப்போல் அமளியின்மேல் கண்ணீர்விட்டுக்கொண்டே விழுந்து விம்மி விம்மி யழுதுக்கொண்டே தூங்கிவிட்டாள்.

நமதய்யரும் காலை மூன்றுமணி வரையில் தலைமேல் கைவைத்துக்கொண்டு ஆலோசனை செய்துக்கொண்டிருந்தார். தன் மனைவி வியசனமற்று

* Dew.



தூங்குவதையும் அதே அறையில்தான் மிகவும் துன்ப சிந்தையுடன் வருந்துவதையும் நினைக்க நினைக்க, கடவுளின் செயல்களில் மிகவும் வியப்பு அவருக்கு உண்டாயிற்று. கடைசியாக ஒன்றுந் தோன்றாதவராய், மேஜையின் மேலிருந்த ஒரு காகிதத்தில் நான்கு ஐந்து வரிகள் எழுதிவிட்டு கதவைத் திறந்து கீழே இறங்கி, வெளியில் சென்றார்.

மறுநாள் காலையில் "ஸப்-ஜட்ஜ்" வீடு மிகவும் குழப்பமும் ஆரவாரமும் நிறைந்திருந்தது. மீனாட்சி தன் கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு அழுதுக்கொண்டிருந்தாள். அவள் தாயார் "எண்டி அம்மா, அழுகின்றாய்" தலையெழுத்துக்கென்ன செய்யலாம், கலியாணம் செய்யும்பொழுதே எனக்குத் தெரியும். பாழுங்கிணற்றில் தள்ளவேண்டாம், தள்ளவேண்டாம் என்று சொன்னால் உங்களப்பா கேட்டால்தானே?" என்று தேற்றிக்கொண்டிருந்தாள். இச்சமயத்தில் ஊருக்குப் போயிருந்த 'எஜமான்' வந்து சேர்ந்தார்.

"என்னடி மீனா, அழுகின்றாய்" என்று கேட்டார்.

"என்னடி யாவது என்ன! உங்கள் பீ. ஏ. பியாஸ் பண்ண மாப்பிள்ளைசெய்த கோலத்தைப் பாருங்கள். மீனா அவருடைய குடிசைக்கு, அந்த கிழவிக்கு சமைச்சிபோட வரமாட்டேன் என்றாளாம். அதற்காக அவளைப் பிடித்தடித்து இந்தக் கடிதத்தையும் எழுதிவைத்துவிட்டு, யாருடனும் சொல்லாமல் ஊருக்குப்போய்விட்டார்." என்று சொல்லி மீனாட்சியின் கையிலிருந்த கடிதத்தைக்காட்டினாள்.

"என் அருமையான மீனாட்சி,

"நீ பேசின வார்த்தைகளெல்லாம் மிகவும் நியாயமாய்த்தோன்றின. அவைகளால் நானுனக்குத் தகுந்த கணவனல்லவென்று தெரிந்துக்கொண்டேன். மேலும் இவ்விடமிருந்தால் என் தாயாரை மறக்கவேண்டிவரும். நான் உனக்குத் தகுந்த அகமுடையானென்று, உனக்குத் தோன்றுகிறதை நான் அறியும்பொழுது மறுபடியும் வருகின்றேன்.

உன் அன்பிலாழ்ந்த,
தியாகராஜன்."

என்று அதிலெழுதியிருந்தது.

"சீ என்னடி மீனா, இந்த அற்பத்திற்கா அழுகிறது நன்றாயிருக்கு, கழுதை கெட்டால் குட்டிச்சுவர்தானே" என்று ஆறுதல் சொன்னார்.

"கழுதையோ, இன்னுங் கழுதையோ" என்று மங்களம் பாடினாள் அவர் மனைவி.

* * *
* * *
* * *

இச் சமாசாரங்கள் நடந்து மூன்றுவருஷங்களாயின. இதனிடையில், மீனாட்சி பிழைக்கிறாளோ சாகிறாளோ என்று சந்தேகிக்கும்படி பெருங் காயலாவில் கிடந்தாள். அவள் பிழைத்தது மறுபிறப்பு என்று சொல்லலாம். அவ்வாறு காயலாவில் வருந்தும்பொழுதே, அவளுடைய எண்ணங்களும், நினைவுகளும், பூரணமாக மாறிப்போய்விட்டன. அப்பொழுது உலகத்தில் பிறப்பது விலையுயர்ந்த நகைகளையும், ஆடைகளையும், அணிந்துகொள்வதற்கல்லவா" என்று எண்ணும் வீணுரைகொண்ட சிறுமி அவள். "இவ்வுலகத்தின் பேரின்பமாகிய அன்பைக் கைக்கொண்டு இகபரங்களுக்குநன்மையடையும்படி உய்வதே இல்வாழ்க்கைக்குச் சிறப்பு" என்று நினைக்கும் ஒரு அறிவு முதிர்ந்த பெண்மணியானாள். தன்னுயிர்த் தோழனை தான் அவமதித்ததை யெண்ணி யெண்ணித் தானே தன்னை நிந்தித்துக் கொண்டாள்; திட்டியுங்கொண்டாள். அவரைக் காணவேண்டுமென்று மனமுருகினாள். மேலும், தன் தாய்த் தந்தையர் தன்னை புண்மையாக வெறுக்காமல்போனாலும் முன்னவ்வளவு அன்புடனும் செல்வாக்குடனும் நடத்தவில்லையென்று தெரிந்து, அவர்களுடன் அதிகமாகப் பேசுவதையும் விட்டாள். தன் காதலன் அன்றிரவு எழுதிய கடிதத்தை பல முறைகளும் படித்து ஆனந்தித்து அதில் வரைந்திருந்த "உன் அன்பிலாழ்ந்த, தியாகராஜன்" என்பதை யாருமறியாமல் முத்தமிட்டுக்கொண்டாள். தன் கணவன் இருக்குமிடம் தெரியும்பொருட்டு, அவ்வூரிலிருந்த தன் தோழிகளுக்கு கடிதங்களெழுதினாள். தன் மாமியார் இறந்துபோனாள் என்கிற சமாசாரம் தெரிந்ததே ஒழிய மற்றவரிருக்குமிடம் தெரியவில்லை. சர்வமறிந்த தெய்வத்தின்பால் நம்பிக்கைவைத்து, தன் கணவனிருக்குமிடம் தெரிகிறதற்காக, கோயிலுக்குப்போய் நெய்தீபங்களையும் ஏற்றிக்கொண்டுவந்தாள்.

மீனாட்சி இவ்வாறு கணவன் தியானத்திலிருக்கும்பொழுது "மைசூர்" முத்திரைபோட்ட ஒருகடிதம் தன் தந்தைக்கு வந்துசேர்ந்தது. அதைப் பிரித்துப்பார்க்கும்பொழுது தியாகராஜன் கடிதமாகவே இருந்தது. மீனாட்சியடைந்த சந்தோஷத்திற்கள

வில்லை. நான் மைசூரில் பதினைந்து ரூபாய் வேலையை விரும்பினதாகவும் அப்பொழுதாவது தன் மனைவியை யனுப்ப அவர்களுக்கிஷ்டமா? என்றுகேட்டிருந்தான். தாய்தந்தையர்கட்கு இஷ்டமில்லாமற்போனதேனும், மீனாட்சியின் தொந்தரவு சகிக்கமுடியாமல் சம்மதமென்றெழுதவே தியாகராஜனும் வந்து தன் மனைவியை மாத்திரம் அழைத்துச் சென்றான்.

அவர்கள் மைசூரிலிறங்கிய வீடு மிகவும் சிறியதான போதிலும், மீனாட்சி தன் கணவனின் நிலைமையை யறிந்து, யாவரும் மகிழும்படி இல்லறம் நடத்திவந்தாள். முன் அவள் அடைந்திருந்த கர்வத்தையும் பிறகு தனக்கு கீழ்ப்படிந்து தன்னைத் திருப்தி செய்யச் செய்த அவளுடைய செயல்களையும் தியாகராஜன் கண்டு அன்றிரவு மகா கம்பீரமாய் வார்த்தையாடின மீனாட்சியோ? என்றையுற்றான். தன் தாழ்மையையும், எழ்மையையும் குறித்து சொற்பமு முறையிடாமல் வீட்டிற்குரிய ஒவ்வொரு காரியத்தையும் சுத்தமாகவும் சிறப்பாகவும் மீனாட்சி செய்ததை பல முறைகளிலும் பரிசோதித்து முன்னிலும் பதின்மடங்கதிகமான அன்புடன் அவளோடு தியாகராஜன் நேசித்தான். இவ்வாறு ஒரு மாதம் செல்ல ஒரு நாள் தியாகராஜன் "தன் சிநேகிதன் கட்டிய ஒரு அழகான வீட்டைத் தன் மனைவிக்குக் காண்பிக்கும்பொருட்டு அவளைத் தன்னுடன் அழைத்துச்சென்றான். அவ்வீடு இராஜவீதியிலிருந்தமையாலும் அழகுடன் சேர்ந்த அடக்கத்தாலும் நன்றாக விளங்கிற்று. அவ்வீட்டிலவர்கள் புகவே ஒவ்வொரு வேலைக்காரனும் இவர்களுக்கு மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். ஒன்றும் தெரியாமல் பிரமித்து "இது யார் வீடு" என்று மீனாட்சி கேட்டாள். தியாகராஜன் அவளை மெத்தையின் மேலழைத்துச்சென்று நன்றாயலங்கரித்த ஒரு அறையில் நுழைந்தான். அங்கே வேறு அநேக படங்கள் இடையில் ஒரு படம் திரைமூடப்பட்டுள்ளதாய் கவனிப்பைக் கவர்ந்தது.

"அப்படத்திலுள்ளவர்களே இவ்வீட்டின் சொந்தக்காரர்கள்" என்றான்.

சரேலென்று ஓடி மீனாட்சி திரையை ஒதுக்கிப் பார்த்தாள். அதில் தன் தாயாரினுடம்பு அசௌக்கியமென்று தியாகராஜன் தன்னை அழைக்கவந்தநாளில் தான் கட்டிலின்மேல் படுத்திருந்ததும் அவன் "மைப்புள்ளிகள்" நிறைந்த வேஷ்டியைக்கட்டி பக்கத்தில் நின்றதும் மிகவும் நன்றாக வரையப்பட்டிருந்தன. மீனாட்சி வெட்கமும் வியசனமுமடைந்து [illegible] கண்ணீர் பெருக்கினாள்.

"அன்றையதினம் நீ பேதமை நிறைந்த ஒரு சிறுமியாயிருந்தாய். உன்னை மன்னிக்க பிறகு எனக்கு அநேக சமயங்கள் வாய்த்தன" என்று அவளைத் தழுவி முத்தமிட்டான்.

* * * * *

தியாகராஜன் ஐசுவரியம் பெற்றது ஒரு அற்புதமல்ல. அவன் தன் வேலையிலிருந்துக் கொண்டே எம். ஏ. பரீட்சை தேறி பின்பு மைசூர் திவானுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவே, அவர் இவனுடைய கல்வித் தேர்ச்சியையும், நன்னடத்தையையும் தானறிந்துப் பரீட்சித்து, ஆச்சரியமடைந்து மைசூர்க் கவர்மெண்டில் இருநூறு ரூபாய் வேலையைக் கொடுத்தருளியிருந்தார்.

L. S.

## பாங்கிம் சந்த்ர சட்டர்ஜி.*

பங்காளி பாஷைக்கதாசிரியர்களில் முதன்மையானவர் இவர். 1838-ம் ஆண்டில் பிறந்தவர். பலவருஷங்களாக டிப்டி கலெக்டராயிருந்து பென்ஷன் பெற்ற ஜேடப் சந்த்ர சட்டர்ஜியின் புதல்வர். முதலில் ஹுக்ளி காலேஜிலும் பின் கல்கத்தா பிரசிடென்சி காலேஜிலும் படித்தவர். இந்தியாவிலேயே இவர்தான் முதல்முதல் B. A., பரீக்ஷையில் தேறினவர். இவர் ஆரம்பத்தில் பிரபாகர் என்னும் பத்திரிகைக்காக தீனபந்துமித்ரர் என்பவரோடு சேர்ந்து வேலைசெய்துவந்தார். அவர் B. A., பாஸ் பண்ணின சில நாளைக்கெல்லாம் டிப்டி கலெக்டராக நியமிக்கப்பட்டார். அதன்பின் பல இடங்களுக்கும் மாற்றப்பட்டார். ஆயினும் அவருக்கு புலவரென்னும் பெயர்பெற மிக ஆவல் இருந்தது. 1864-ல் அவருடைய துர்கேசநந்தினி யென்னும் சரித்திரக்கதை வெளிவந்தது. ஆசிரியருடைய கல்வித் திறமையும் ஆங்கில அபிப்பிராயங்களைக் கிரகிக்கும் சாமர்த்தியமும் நன்கு விளங்கிற்று. இது தான் பங்காளிவசனகாவியங்களின் ஆரம்பம். அக்காலத்தில் அவரை அவருடைய பகைஞர்களும் நல்ல புத்தகங்கள் எழுதத் தெரியாதவர்களும் தூஷிக்க ஆரம்பித்தார்கள். ஆயினும் அவருடைய புத்தகம் இப்போது அதிகமாக பங்காளத்தில் படிக்கப்படுவதே அதன் மேன்மைக்குஞ் சான்றாகும். 1854-ம்௵ முதல் 1864-ம்௵ வரை பத்து வருஷங்கள் தாம் பங்காளி பாஷையின் விக்ரமார்க்க காலமெனச்சொல்லலாம். வித்யசாகர், ராம்நாராயன்தர்க்கரத்னர், தீனபந்துமித்ரர், மா[illegible]தத்தர், பாங்கிம் சந்த்ரர் முதலிய எல்லாரும் இவ்வருஷங்களில் தான் எழுதினது. பாங்கிம் சந்த்ரர் கொஞ்சகாலத்துக் கப்புறம் கபாலகுண்டலா, மிருணாலினி என்னும் கிரந்தங்களை எழுதி வெளிப்படுத்தினார். 1872-ம்௵த்தில் அவர் ஒரு உயர்தர பங்காளி பத்திரிகையை ஆரம்பிக்கக்கருதி பங்கதர்சன் என்னும் பத்திரிகைக்கு தானே ஆசிரியராக ஏற்பட்டார். இதோடு நில்லாது அவர் தன் பத்திரிகையில் நம் ஜனங்களின் மாதிரியைக்காட்ட ஒருகதை ஆரம்பித்தார். இதன் பெயர் [illegible]சபிரிக்கா, இக்காலத்தில் ஈஸ்வரசந்த்ரகுப்தா இறந்துபோனபடியால் பாங்கிம் சந்த்ரர் பங்காள ஆசிரியர்களுக்குள் முதன்மையடைந்தார். இந்துஸ்தானத்தை அவர் 20-௵ அனுபவித்தார். இதன் பின் அவர் பல காவியங்களை ஒன்றன்பின்னொன்றாக வெளிப்படுத்தினார். தேவிசாதுராணி, ஆனந்தமாதா, கிருஷ்ணகாந்தாஉயில், முதலியன இவர் கிரந்தங்களில் சிலவாம். பங்காளத்தில் அவரைப் புகழ்ந்து அவர் புத்தகங்களைப் படிக்காதவர்களொருவருமில்லை. அவர் தன் கடைசிகாலத்தில் மதசம்பந்தமாகப் புத்தகங்கள் எழுத ஆரம்பித்தார். கிருஷ்ணனையும் ஆயர்மாதரையும் பற்றிச் சொல்லப்படும் கதைகளுக்கு பழய சம்ஸ்கிருதத்தில் ஆதாரமொன்றுமில்லையென்று நிரூபித்தனர். பின்பு வேதங்களில் தன்னறிவை யூன்றினர். 1894-ல் தன் தேசத்தாரெல்லாம் துக்கத்தில் மூழ்க உயிர்துறந்தனர்.

T. A. R.

* இச்சரித்திரம் 'இந்தியன் மேகஸின் அண்ட் ரிவியூ' வில் சோமேஷ [illegible] எழுதினதிலிருந்து எழுதப்பட்டது.



## தாருதத்.

மார்ச்சுமாசத்திய 'இந்திய மேன்மகளிர்க்கானபத்திரிகை'யில் பேர்போன ஆங்கில கவியாகிய தாருதத்தின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. இச்சரித்திரம் பத்திராசிரியராலேயே எழுதப்பட்டு, நம்நாட்டுப் பெண்கள் மேல்நாட்டுப்பெண்களைப்போல கவித்திறமை முதலியன அடையாமைக்குக் காரணம் அவர்களுடைய குற்றமல்லவென்றும் அவர்களுடைய நிலைமையேயதற்குக்காரணம் என்றும் அந்நிலைமையைத் தவிர்த்து வெளிவந்த காலத்து நம் பெண்களும் அயல் நாட்டுப் பெண்களைப்போலும் பெருமையடையும் ஆற்றல் உள்ளவர்களேயாமென்றும் கூறுவதற்கு அத்தாக்ஷியாகக் காட்டப்பட்டுள்ளது. நம் பத்திராசிரியராகிய மிஸ்ஸிஸ் கமலா சத்தியநாதன் அவர்களும் இதற்கு ஒரு அத்தாக்ஷியாம்.

தாருதத் மாது 1856-ம்௵ மார்ச்சுமீ 4உ பிறந்தவர். அவருடைய தகப்பனார் உயர்ந்த வகுப்பைச்சேர்ந்த பங்காள கிறிஸ்தவராகிய பாபூகோவின் சந்தர்தத். அவருக்கு நம் கவியையும் அவருடைய 18-மாதங்களுக்கு பெரிய ஆருதத் என்னும் சகோதரியையும் தவிர வேறு குழந்தையில்லை. ஆரம்பமுதற்கொண்டு தாருதத் நம் நாட்டுப்புராண கதைகளில் அதிக பற்றுவைத்திருந்தார். 1869-ம்௵த்தில் அவருடைய தகப்பனார் அவரையும் அவர் சகோதரியையும் ஆங்கிலமும் பிரெஞ்சும் கற்பிக்கும்பொருட்டு ஐரோப்பாவுக்குக் கூட்டிச்சென்றார். 1873-ம்௵த்தில் பிரான்சு, இட்டலி, இங்கிலாந்து, முதலிய தேசங்களுக்குச் சென்றிருந்த பின், பங்காளத்துக்குத் திரும்பினார்கள். முதலில் தாருதத் இரண்டு பிரெஞ்சு வியாசகர்த்தர்களைப்பற்றி வியாசம்

எழுதினர். ஆருதத் எழுதும் படங்களுடன் ஒரு கதை எழுதி வெளிப்படுத்தவேண்டுமென்று தாருதத்தும் அவர் சகோதரியும் யோசித்திருந்தார். ஆனால் இச்சமயத்தில் ஆருதத் இறந்தார். இச்சமயத்தில் தாருதத்துக்கு உண்டான மனச்சலிப்பையும் துக்கத்தையும் பற்றி நாம் எழுத முடியாது. அவரும் அவர் சகோதரியும் ஆரம்பமுதல் கூடவளர்ந்து இடையறாமல் சேர்ந்திருந்தவர்கள். 1876-ம் வருஷத்தில் 'பிரெஞ்சு வயல்களில் அறுத்த கதிர்கள்' என்று ஒரு புத்தகம் பிரசுரித்தனர். இப்புத்தகம் பிரான்சு தேசத்திலும் ஆங்கிலதேசத்திலும் அநேகரால் வாசிக்கப்பட்டது. 1877-ம் வருஷம் மேமீ 30உ அவர் இறந்தனர். இவர் கல்வித்திறமை ஆங்கிலப்புலமையில் தேர்ந்த எட்மண்ட் காஸ் என்பவராலேயே புகழப்பட்டிருக்கிறது. அவர் இதுவரையில் பேர் பெற்றிருக்கிற ஆங்கிலக்கவிகள் ஒருவரும் இவ்வளவு சிறுவயதில் (அவருக்கு இறக்கும்பொழுது வயது 21) இறந்துபோனதில்லையென்றும் அவருக்கு வந்த பேரெல்லாம் இறந்தபின்னேயென்றும் சொல்லுகிறார். மேலும் வீட்டுக்காரியங்களைப்பார்ப்பதில் இம்மாதும் அவர் சகோதரியும் கைதேர்ந்தவர்களென்றும் பெண்கள் செய்யவேண்டிய வீட்டுவேலைகளையெல்லாம் அவர்கள் கிரமமாகச் செய்து வந்தார்களென்றும் அவர்களுடைய தந்தை சொல்லுகிறார். அவர்கள் சங்கீதத்திலும் கைதேர்ந்தவர்கள். அவர் எழுதியவைகளில் 'சாவித்திரி', 'லக்ஷ்மன்', 'சவுக்குமாம்' முதலியவை மிகவும் நன்றாயிருக்கின்றன.

இச்சரித்திரத்தோடு கூட தாரு, ஆரு இவர்களுடைய உருவப்படமொன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

T. A. R.

---

## DANTE'S ACCOUNT OF THE HEAVEN AND THE HELL.

## சுவர்க்க நரகவியற்கை—ஓர் புலவரின் கொள்கை.

சுவர்க்க நரகங்களைப்பற்றி ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு மதத்தாரும் ஒவ்வொரு கொள்கையைக் கொண்டிருப்பினும் சில விஷயங்கள் அனைத்துக்கும் பொதுவானது. புண்ணியம்செய்தவர்கள் சுவர்க்கத்துக்குப் போவதென்பதும் பாவம் செய்தவர்கள் நரகத்துக்குப் போவதென்பதும் யாவர்க்கும் சமானமான கொள்கையே. அன்றியும் சுவர்க்கமென்பது சுகானுபவங்களுக்கிருப்பிடமென்றும் நரகமென்பது சிக்ஷிக்கப்படும் இடமாதலால் துன்பங்களுக்கு இருப்பிடமானதென்றும் கருதுதலும் யாவர்க்கும் இயல்பே. ஆயினும் புண்ணியங்கள் எல்லாவற்றினும் சிறந்தது கடவுளை யறிந்து நேசித்துப் பூசித்தலாகுமாதலின் ஒவ்வொரு மதத்தாரும் அவரவர்க்குரிய கடவுளைப் பூசித்தவர்களையே பத்திமான்களாகவும் கடவுளின் திருவருளுக்குப் பாத்திரராகவும் சுவர்க்கபோகங்களுக் குரியவராகவும் ஏனையோர்கள் எவ்வளவு தருமங்களைச்செய்து நல்லொழுக்கத்தில் நின்றபோதிலும் அவர்களை நரகத்துக்குரியராகவும் கருதுதலும் இயல்பே. அன்றியும் புண்ணியபாவங்களும் பலவிதமாக மாறுபடும். ஒரு மதத்தாருக்குப் பாவமாவது மற்றொரு மதத்தாருக்குப் பாவமாகாது. உயிர்க்கொலை பாவமென்பது பிராமண ஜயின புத்த மதத்தாரின் கொள்கையாம். அக்கொள்கை மற்ற மதத்தாருக்கில்லை. இவ்வாறு சிற்சில பேதங்கள் இருப்பினும் இக்கொள்கைகளில் வேற்றுமைப்பாகத்தினும் ஒற்றுமைப்பாகமே விசேஷமாகப் புலப்படும். நமது இந்து மதத்தில் கருடபுராணாதி நூல்களில் சுவர்க்க நரகங்களைப் பற்றி விவரித்திருப்பது பலருக்கும் தெரிந்த



விஷயமே.' நரகங்கள் ரௌரவம் முதலாக ஏழுவகைப்படுமென்றும், இன்னின்ன பாவங்களைச்செய்தவர் இன்னின்ன நரகங்களில் வீழ்த்தப்படுவார்களென்றும் வெகு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விஷயமாகக் கிரிஸ்தவமதத்தின் ஒருபாலாரது கொள்கைகளை உணர்த்துவதாகிய சில சங்கதிகளை 'டான்டே' என்னும் இத்தாலிய மகா கவி பாடிய 'தெய்வக்கூத்து' என்னும் நாலினின்று சிறிது விவரிக்கின் நம் பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு விரசமாகத் தோன்றுதென்றுகருதி இங்கு விவரிக்கின்றோம்.

இப்புலவர் இந்நரகலோகத்தைத் தெய்வானுக்கிரகத்தால் தாம் நேரே சென்று பிரத்தியக்ஷமாகப் பார்த்துவந்ததாகச் சொல்லுகின்றனர். இந்நரகலோகம் பூமிக்குள்ளே அதாவது பாதாளத்தில் உள்ளது. வடிவத்தில் விரியகன்று வரவர உட்குறுகிக் கடைசியில் ஒரு முனையில் முடியும் ஓர் வட்டப்பாத்திரம் போல் உள்ளது. இதனுள் ஒன்பது நிலைகள் ஒன்றின்கீழொன்றாய் ஏற்பட்டிருக்கும். ஒவ்வொரு அந்தஸ்திலும் பாவிகள் அவரவர் பாவத்துக்குத் தக்கபடி போடப்படுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலேயுள்ள முதல் நரகத்துக்கு 'லிம்போ' என்று பெயர். இங்கு, கிரிஸ்தவமதத்துக் குரியபடி ஞானஸ்நானம் என்னும் சடங்கைச்செய்யப் பெறாதவர்களாய் வேறே ஒரு பாவமும் செய்யாதவர்களாகிய சிசுக்கள் போன்றவரும் வீழ்த்தப்படுவார்கள். அன்றியும் புறமதத்தாரால் புண்ணியவான்களாகவும் சிஷ்டர்களாகவும் கொள்ளப்பட்டவர்களுக்கும் இதுவே இடமாகும். இங்கு பூர்வீக கிரேக்க ரோமர்களுக்குள்ளே பிரசித்திபெற்ற அநேக புலவர்களையும் தத்துவஞானிகளையும் போர்வீரர்களையும் சிறந்த நங்கைமார்களையும் புலவர் தாம் கண்டதாகக் கூறுகின்றனர்.

இரண்டாவது நரகிற்புகுந்ததும் துவாரத்தில் 'மைனு' என்னும் தர்மராஜாவிற்றிருப்பார். இவர் வருபவர்கள் ஒவ்வொருவரையும் விசாரணைசெய்து அவரவர் பாவங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு சிக்ஷைகளை விதிப்பார். இந்நரகத்தில், காமப்பேய்பிடித்துத் தலைசுற்றி அறிவழிந்து முறைபிறழ்ந்து நிறைதவிர்ந்து வியபிசாரங்களைச்செய்கின்ற துர்மார்க்கிகள் வீழ்த்தப்படுவார்கள். இங்கு இவர்கள்படும் அவஸ்தையைப்பார்க்கவொண்ணாது. கொடிய புயல்போலடிக்கும் சண்டமாருதத்தில் அடிபட்டு இங்குமங்கும் மேலும் கீழுமாக அலைப்புண்டு வருந்துவார்கள். இவர்களுக்குக் கணப்போதாவது சிரமந்தீர, ஓரிடத்தில் இருப்போமென்னும் ஆசைகிடையாது. வேறே ஆறுதலும் துக்கவிமோசனமும் இல்லை. ஆகாயத்தில் க்ராக்ராவென்று கத்தித்திரியும் கொக்கினங்கள்போல இவர்கள் சதா அரற்றி அழுது கூவிக்கொடுமைகூறிச் சூறைக்காற்றில் அடிபட்ட சருகுபோல இச்சண்டமாருதத்தால் அலைப்புறுவார்கள். இங்கு சரித்திரங்களில் விவரிக்கப்பட்ட அநேக துச்சாரிகளைக் கண்டதாகக் கூறுகிறார்.

மூன்றும் நரகம் வெகு கோரமானது. இங்குவீழ்த்தப்படுவார்கள் யாவர்? பேருண்டிக்காரர்களாம்! இது என்னகோரம்! "அளவறிந்துண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபேரிரையான்கண்நோய்" என்று வள்ளுவர் சொல்லியபடி மிதமிஞ்சிப் போசனம்செய்வார்களுக்கு அதனால் நோயுழன்று இவ்வுலகில் வருந்துதல் போதாதோ? மறுமையிலும் கொடிய நரகிலிட்டு வருத்தவேண்டுமோ? இது அவ்வளவு கொடிய பாவமாக யாவர் கருதுவார்கள்? ஆயினும் இப்புலவர் கொள்கைப்படி இது பிறன்மனை நயத்தலினும் பெரியபாவமாயுள்ளது. இப்பாவம் செய்தவர்கள் இங்கு சேற்றுக்குழியிற்கிடந்து ஆலங்கட்டியும், பனியும் கக்கலும் கலசலுமான மழைநீரும் சதா கொட்டிக்கொண்டிருப்ப அவற்றில் அடிபட்டு வருந்துவார்கள். மூன்று தலையுடைய கோரமான கொடிய வேட்டை நாயொன்று குரைத்து உறுமி இவர்களைக்கடித்துச் சதை

யைக்கிழிக்கும். ஐயோ! என்னவாதனை இவர்களுக்கு !

நான்காவது நரகில் அதிவிரயம்செய்து பொருளையிழக்கும் புத்திகெட்டவர்களும், பேராசைபிடித்துப் பொருள் தேடிவைக்கும் பாவிகளும் வீழ்த்தப்படுவார்கள். இதுவும் எமக்கு வியப்பாகவேயிருக்கின்றது, அதிவிரயம் லோகாசாரத்துக்குத்தீயதென்று மதிக்கப்படுமாயினும் பொருளாசையை ஒழித்தலே புண்ணியமும் அறிவுமாகக்கருதும் நம்மவர்கள் இதனைக் கொடியபாவமாக எண்ணமாட்டார்கள். ஒருவேளை அதிவிரயத்தைத் தீவழியிற்செய்யும் அபரிமிதச்செலவென்று கொள்ளினும் ஆகும். இதுதான் பாவமாக இதற்கெதிரிடையான பொருளாசையும் பாவமாம். 'அதிசர்வத்ரவர்ஜயேத்' என்றபடி அதிகமாகத் தீவழியில் மிதமிஞ்சிச் செலவுசெய்தலும், பொருளை சதமென்று பேராசை கொண்டு தீவழியாற்றேடி நல்வழியிற் செலவுசெய்யாதுபேணுதலும் இரண்டு கெடுதியாமென்பது இதனாற் பெறப்படும். நிற்க, இந்நரகுக்குத் துவாரபாலகன் 'புளூடஸ்' என்னும் நிதிக்கிழவன் ஆவன். இந்நரகில் அடையும் தண்டனை வெகு விசித்திரமானது. புரட்டுதற்கரிய பெரும்பாறைக்கற்களைப் புரட்டித் தம்மார்பால் தாக்கி அவையொன்றோடொன்று தேய்ந்துரைந்து சமமாகும்படி உருட்டுவது இவர்களுக்குத் தண்டனை.

ஐந்தாவது நரகில், கோபமும் கொதிப்பும் கொண்டு சண்டையிட்டுச் சச்சரவுப்படுவார்கள் வீழ்த்தப்படுவார்கள். இவர்கள் இங்கு நரகக்கும்பியில் புதைந்து ஒருவரையொருவர் நகத்தாற் பிறாண்டிக் கிழித்துப் பல்லாற் பிடுங்கிக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு இத்தண்டனை மிகப் பொருத்தமானதே.

ஆறுவது நரகில் 'திஸ்' என்று ஒரு நகரமுள்ளது. இதன் மதிள்களும் கோபுரங்களும் இரும்பினாற் செய்யப்பட்டு, உள்ளே இடைவிடாமல் நெருப்பொன்று எரிந்துகொண்டேயிருக்கும். இந்நகருக்குள்ளே பல்லாயிரம் சமாதிகளுள்ளன. அச்சமாதிகளில் சமயத்துரோகிகளும் சமயப்பிரஷ்டர்களும் சதா எரிகின்ற நெருப்பில் வெந்துதவித்துக்கொண்டிருப்பார்கள்.

ஏழாவது நரகில் அயலவர்க்கிடையூறு செய்யும் பாவிகள் இடப்படுவார்கள், இங்கு இவர்கள் அருவெறுப்பான இரத்தப்பிரவாகத்தில் மூழ்கிவருந்தித் தப்பிக் கரைசேரவருவாராயின் கரைநெடுகே அம்பும் கையுமாய்க் காத்து நிற்கும் காவலாளர்களால் எய்து தடுக்கப்படுவார்கள். கொரேமாகப் போர்புரிந்து வெற்றிகொண்ட வீரர்களும், கொடுங்கோல் மன்னரும், தேசங்களைச் சூறையிட்டழித்தவர்களும், இவர்களையன்றிக் கொலைபுரிந்தவர்களும், கடற்கொள்ளையிட்டவர்களும் அடித்துவழிப்பறிக்கும் நீசரும் இந்நரகிலேயே போடப்படுவார்கள். இந்நரகத்தின் மற்றோரிடத்தில் தற்கொலைபுரிந்தவர்களும் தங்கள் பொருளையாவது வேறு கடவுளால் அருளப்பட்ட நன்மைகளையாவது துர்விநியோகம்செய்து போக்கிக்கொள்பவர்களும் புகுத்தப்பட்டு வருந்துவார்கள். இந்நரகின் இன்னொருபாகத்தில் தெய்வநிந்தனைசெய்து தேவனைப்பகைத்துப் பழிகொண்ட பாதகர்கள் வீழ்த்தப்பட்டு வருந்துவார்கள். இவர்கள் இங்கு ஒரு பாலைவனத்தில் அக்கினிகணங்கள் சதா குப்பல் குப்பலாய் வீழ்ந்துகொண்டிருக்க அவற்றிற்கிடையே சிலர் மல்லாந்துகிடந்தும், சிலர் குந்தியிருந்தும் சிலர் இடைவிடாமல் நடந்துகொண்டுமிருப்பார்கள்.

எட்டாவது நரகம் பத்துப்பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவகையான பாவிகள் வீழ்த்தப்பட்டிருப்பார்கள். இவற்றில் வருந்துவோர்கள் இப்பிறப்பில் வஞ்சகம், மோசம், சதி, சர்ப்பனை, சாமித்துரோகம் முதலான பலபாவங்களைப்புரிந்தவராவார்கள். இந்நரகின் ஒன்பதாவது பாகத்தில்,



கோள் குறளைகளைச் சொல்லி மித்திரபேதம் செய்பவர்களும் அவதூறுகள் சொல்லித்திரிவார்களும், மதநெறிவிலகச் செய்வார்களும் தமது அங்கங்கள் வெட்டுண்டு சிதைந்து வேறுகிவருந்துவார்கள். இந்நரகில் மகம்மது, ஆலி முதலானோர்களைப் புலவர் கண்டதாகக் கூறுகின்றனர். இதன் பத்தாவது பாகத்தில் இரஸவாதிகளும், பொய்ப்பத்திரம் செய்பவர்களும், திருட்டுநாணயம் அடிப்பவர்களும் வீழ்த்தப்பட்டுப் பலவிதமான அருவெறுப்பான கொடிய வியாதிகளால் வீங்கித் தூங்கி மெலிந்துவருந்துவார்கள்.

எல்லாவற்றிற்கும் கீழேயிருப்பது ஒன்பதாவது நரகம். இது நான்கு அறைகளாகத்தடுக்கப்பட்டிருக்கும். இதில் பற்பலவிதமான ராஜத்துரோகிகள் வீழ்த்தப்படுவார்கள். இவர்களுக்குத் தண்டனை உறைபனியால் நிறைந்திருக்கும் ஒரு ஏரியில் மூழ்கி விறைத்துவருந்துதலாம். இவ்வுறைபனியென்பதைச் சாமானியமாயெண்ணவேண்டாம். அக்கினியிலும் கொடியது. தேள்பிடுங்கினாற்போலே பிடுங்கிவருத்தும். அவ்வளவுதானோ! அன்று. இதில் வீழ்ந்திருப்பவர் ஒருவரையொருவர் பகைத்துக் கடித்துத் தசையைக் கௌவித்தின்று பசி நீங்காமல் வருந்துவார்கள். இங்கு கிடந்தவஸ்தைப்படுபவர்களில் ஒருவன் விருத்தாந்தத்தைக் கவி எடுத்துக்கூறுகின்றார். இவன் பெயர் 'யூகொலினோ.' இவன் இத்தாலிதேசத்தில் பிசா நகரத்தில் வசித்திருந்த ஒருபிரபு. இவன் அந்நகரில் தலைமை அடையலாமென்னும் எண்ணத்தால் தன் பக்ஷத்தாரைவிட்டு வஞ்சனையாகப் பகைவர் பக்ஷத்தைச்சேரவுத்தேசிக்க அவ்வஞ்சனைவெளிப்பட்டுச் சிறிது காலம் தேசத்திலிருந்து துரத்தப்பட்டிருந்து பின்பு தன் உரிமைகளைப்போராடிப் பெற்றுக்கொண்டான். பின்னும் இவன், தன் நகரத்தாருக்கு விரோதமாகச் சர்ப்பனைசெய்து துரோகம் பண்ணினதனால், அந்நகரத்தார் பலரும் ஒன்றுகூடி இவனையும் இவன் புத்திரபௌத்திரர்களையும் பிடித்துச் சிறையில் இட்டுப்பூட்டிப் பட்டினிபோட்டுக் கொன்றுவிட்டார்கள். இப்படிக்கோரமாகக் கொன்றவர்களில் முதன்மையாக நின்றவன் 'ருக்கிரி' என்னும் மடாதிபதி. ஆதலால் இவன் இந்நரகில் அந்த 'ருக்கிரி' யென்னும் துர்க்கிரியை செய்தவனை மூளையைப்பிடுங்கித் தின்று பசிதீர்த்துக்கொள்வானாயினன்.

இவ்வொன்பதாவது நரகத்தின் அடியில் இந்நரகலோகங்களுக்கு அதிபதியாக 'லூஸிபர்' என்னும் பிசாசாதிபன் இருப்பான். இவன் உருவமும் உடம்பும் மிகவும் பெரிதானது. இவன்மார்பளவும் பனியுள் நின்று, மூன்றுதலைகளையுடையவனாய் ஒவ்வொரு வாயிலேயும் ஒருபாவியைக் கவ்விக்கொண்டிருப்பான். இவன் இடுப்பு பூமியின்மத்தியில் இருக்கும்,

இந்நரகங்களொன்பதும் பூகோளத்தின் ஒரு புறத்தில் இருப்பன, மறுபுறத்தில் 'பர்கேடரி' (Purgatory) என்று இன்னொருவகையான நரகங்கள் இருக்கின்றன, இந்நரகம் முன்னையது போல அவ்வளவு கொடியதல்ல. பாவங்களைச் செய்தபோதிலும் பின்பு புத்திவந்து பச்சாத்தாபப்படுபவர்கள் தங்கள் பாவங்களைக் கழித்துக்கொள்ளும் இடமாகும் இது. முன்னரகில் வீழ்ந்தவர்களுக்கு அதிலிருந்து விடுபட்டுப் பிழைப்போமென்னும் ஆசை எவ்வளவும் இல்லை. இங்கிருப்பவர்களுக்கோ சிறிது காலம் கஷ்டங்களை அநுபவித்தபோதிலும் பின்பு பாவங்களில் நீங்கி விசுத்தராகி நற்கதியையடையலாமென்னும் எண்ணமுண்டு. இவ்வெண்ணத்தால் இவர்களுக்குக் கஷ்டம் அவ்வளவு கொடுமையாகத்தோன்றாது. இந்நரகமும் ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டு ஒரு உன்னதமாகிய மலையைச்சுற்றிப் படிப்படியாய் உயர்ந்திருக்கும். முதல் நரகில் கர்விகளாய்த் தம்மையே யெவரினும் மேலாகமதிப்பவர்கள் பாரமான கற்களை உடல்குனியத் தூக்கிச்சென்று வருந்துவார்கள். இரண்டாம் நரகில் அசூயைக்காரர்கள் அடைக்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் சாக்குத்துணியை

உடுத்திருப்பார்கள். இவர்கள் கண்கள் கம்பியினால் குத்தித் தைக்கப்பட்டிருக்கும். மூன்றாம் நரகில் கோபிஷ்டராயிருப்பவர் விம்மிச் சூழ்ந்த புகைப்படலத்துக்குள்ளே மூச்சுமுட்டி வருந்துவார்கள். நான்காம் நரகில் தெய்வ பத்தியும் நல்லொழுக்கமும் இல்லாதவர்கள் அடைக்கப்பட்டிருப்பார்கள். ஐந்தாம் நரகில் பேராசைக்காரர்களும். ஆறாவதில் பெருந்தீனிக்காரர்களும் அடைபட்டு வருந்துவார்கள் ஏழாம் நரகில் காமாதுரர்கள் கொடு நெருப்பில் மூழ்கி விசுத்தியடைவார்கள்.

இவ்வாறு நரகலோகங்களைப் படிப்படியாகச் சொல்லிமுடித்தபின் புலவர் சுவர்க்க இயல்களையும் அவ்வாறே படிப்படியாக எடுத்துக் கூறுகின்றனர். முதல் சுவர்க்கம் பூலோகத்திலேயேயுள்ளது. இது ஆதி மனிதனைக் கடவுள் அவன் பாவம்செய்து பதிதனாகுமுன் வைத்து வாழ்வித்தவிடம். இது தவிர வேறு பத்துவகைச் சுவர்க்கங்கள் உள்ளன. இவற்றில் முதலெட்டும் முறையே சந்திரன், புதன், சுக்கிரன், சூரியன், அங்காரகன், பிரஹஸ்பதி, சனி, நக்ஷத்திரங்கள் என்பவற்றில் உள்ளன. ஒன்பதாவது சுவர்க்கத்தில் தேவதூதர்கள் இருப்பார்கள். பத்தாவதுதான் எல்லாவற்றினும் உயர்ந்தது. இதற்கு எம்பிரியன் (Empyrean) என்று பெயர். இதுதான் எப்பொருட்கும் இறைவராகிய கடவுள் சிங்காதனத்தின்மேல் வீற்றிருப்பது. முத்தியை யடைந்தவர்கள் இங்கு என்றென்றும் அழியா நிலையில் ஒருவரையொருவர் பிரியாமல் கூடிக்கலந்து சுகித்திருப்பார்கள்.

சந்திரமண்டலத்துள்ள சுவர்க்கத்தில் உலகப்பற்றை விட்டுப் பத்திமார்க்கத்தில் நிற்கச் சங்கற்பித்துக்கொண்டவர்கள் பின்பு யாதேனும் ஒரு நிர்ப்பந்தத்தால் அச்சங்கற்பம் நிறைவேறாமற்போக வந்தவர்கள் வாழ்வார்கள். புதமண்டலத்தில் அநேகம் புண்ணியங்களைச் செய்தார்களாயினும் அவற்றை ஈசுவரார்ப்பணமாகச் செய்யாமல் புகழ்ச்சியை விரும்பிச்செய்தவர்கள் இருப்பார்கள். சுக்கிரமண்டலத்தில் முதலில் தமது நேசத்தை உலகப்பொருள்களிற் செலுத்தியிருந்து பின்பு அதனைக்கடவுளிடத்துச் செலுத்தினவர்கள் வாழ்வார்கள். நான்காவதாகிய சூரியமண்டலத்தில் சமயநூல்களில் வல்ல பத்திமான்களாகிய வித்துவான்கள் வாழ்வார்கள். அங்காரக மண்டலத்தில் மதத்துக்காகப் போர்செய்து பிராணனைக் கொடுத்தவர்கள் இருப்பார்கள். ஆறாவது சுவர்க்கத்தில் நீதியில்வழுவாத நியாயாதிபதிகளும், ஏழாவதில் தவவேடம் பூண்டு தனிமையிலிருந்து பகவத்யானத்தில் காலம்செலுத்தும் முனிவர்களும், எட்டாவதில் மதாசாரியர்களும் வாழ்ந்திருப்பார்கள்.

ஆகவே நரகங்களில் பதினாறுவகைக்களும் சுவர்க்கங்களில் பதினோருவகைக்களும் உள்ளன. இவற்றில் நரகங்கள் எல்லாம் பூமிக்குட் பாதாளத்திலும், சுவர்க்கங்கள் பூமிக்குமேல் ஆகாயத்திலும் உள்ளன, பூமிக்குள்ளே போகப்போக நரகங்களின் கோரமும் மிகுந்து தோன்றும். பூமத்தியில் உள்ளது எல்லாவற்றினும் கொடிய நரகம். அவ்வாறே வானிடத்திலும் போகப்போகச் சிறந்த சுவர்க்கங்கள் காணப்படும். எல்லாவற்றினும் உயர்ந்து கடவுளுக்கு வாசஸ்தானமாயிருப்பது அனைத்தையும் கடந்து நெடுந்தூரத்துள்ளது.

## தேகாப்பியாசம். *

தேகப்பயிற்சி என்னும் விஷயத்தைப்பற்றி நான் சொல்லும்படியாக ஏவப்பட்டு, அதைப்பற்றி எழுதலானேன். உபாத்திமார்கள் சேர்ந்த சங்கத்திற்கு, இவ்விஷயம் முக்கியமானதே. ஏனென்றால் பெரிய கல்விமான்களால் படிப்பு நான்கு விதமாய் வகுக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன (i) புத்தியை விருத்திசெய்யும் படிப்பு, (ii) நல் நடத்தைகளை விருத்திசெய்யும் படிப்பு, (iii) ஈச்வரபக்தியை விருத்திசெய்யும் படிப்பு, (iv) தேகப்பயிற்சிப் படிப்பு, இந்த நாலுவித வகுப்புக்களில் முதல் மூன்றும் மூளைவிருத்தி சம்பந்தமுள்ளது. ஆனபடியால், அவைகளை ஒன்றாகவே பாவிக்கலாம். அப்படிச்செய்தால், படிப்பு இரண்டு விதமாகப் பிரிக்கப்படலாம். முதலாவது மூளைவிருத்தியாகப் படிப்பு. இரண்டாவது சரீரம் விருத்தியாகப் படிப்பு.

நாம் செம்மையாக யோஜித்தால் இவ்விரண்டுவிதப் பிரிவுகளுக்கும், நிரம்பவும் சம்பந்தம் இருக்கிறதென்பது, புலப்படும். ஈச்வர சிருஷ்டியில், 'இருக்கிறது' என்பதாக எது சொல்லப்படுகிறதோ அதுகளுக்கெல்லாம், ஒரு ஆதாரமிருந்தே தீரவேண்டும், என்பது ஒரு தத்துவம். வீடு என்றால் அது நிற்க அஸ்திவாரமும், மரம் என்றால் அது வளர வேரும், கதவு என்றால் அது நகரக் கீலும் இருக்கின்றது. அவைகளின் சம்பந்தம்போலவே, மூளைவிருத்திப் படிப்புக்கும் சரீரவிருத்திப் படிப்புக்கும் சம்பந்தமிருக்கிறது. மூளைவிருத்தியாக, சரீரவிருத்தி, சரீரதிடம், சரீர ஸுகம், இவைகள் மிகவும் இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. ஆகவே, உபாத்திமார்கள் தங்கள் பையன்களின் படிப்பைப்போல, அவர்களின் சரீரப்பயிற்சியையும் விருத்திசெய்ய வழிதேடவேண்டியது, என்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

மேலும், சரீரப்பயிற்சி அல்லது வேலைசெய்தல், சிருஷ்டியின் இயற்கை. உலகத்தில், 'இருக்கிறது' என்பதாக நாம் சொல்லும் ஒவ்வொரு வஸ்துவின் செய்கையும், வேலைசெய்வதாகவே இருக்கிறது. 'ஜீவனோடிருக்கிறது' என்னும்பதத்திற்கே, வேலைசெய்துகொண்டிருக்கிறது என்று தாத்பரியம். சுடுகாடுபோனால்தான், முழு ஓய்ச்சல் என்பது உண்டாகும். ஆகையால் நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும், எப்போதும் வேலைசெய்துகொண்டே யிருக்கின்றன. ஆகையால் நாம் செய்துகொள்ளவேண்டியது எல்லாம், உடம்பின் ஒவ்வொரு பாகத்துவேலையும், மற்ற பாகங்களின் வேலைக்கு அனுகூலமாயும் உதவியாயுமிருக்கும்படி, நமது புத்திசாலித்தனத்தால் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதே. அப்படிச் செய்துகொள்ளுவதினால்தான், நாம் சுஹிகளாயும் பலமுள்ளவர்களாயும் ஆகலாம். தேகத்தின் பல உறுப்புக்களும் வளர்ச்சியைப் பெறும். ஆகையால் உபாத்திமார்கள் தங்கள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளை, மூளைவேலையில் சமர்த்தர்களாகப்பண்ணும் நிமித்தம், அவர்கள் நல்ல காற்றில் தினம் இரண்டு மணிநேரமாவது விளையாடுகிறார்களாவென்று பார்க்கவேண்டும். விளையாட்டுகள் உடம்புக்கு அபாயத்தை விளைவிக்கும்படியானவைகளாக இருக்கக்கூடாது. தேகப்பயிற்சியின் விசேஷமறியப்பட்டுள்ள இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடங்களில், ஜிம்னாஷியம், ட்ரில், டென்னிஸ், க்ரிக்கெட்டு, புட்பால், கொல்ப், முதலிய விளையாட்டுக்கள் விருத்திசெய்யப்படுகின்றன. பச்சக்குதிரைதாண்டல், கிட்டிப்புள், பிள்ளையார்பந்து, குதிரைப்பந்து, கும்மி, கோலாட்டம், கண்ணாமூச்சி, பலி, சில்லு, பாண்டி, அடலாப்புடலா, நீந்தல், முதலிய விளையாட்டுகள் நம்மதேசத்தவை: இவ்வித சுதேசவிளையாட்டுகள், இங்கிலீஷ் விளையாட்டுகளைப்போல, செலவுள்ளவைகளல்ல. அபாயகரமன்னியிலும், சந்தோஷத்தை விருத்திபண்ணும் தன்மையுள்ளனவாயுமிருக்கின்றன. ஆகையா லிவ்வித, நம்முடைய புராதனவிளையாட்டுக்களையும், நம்முடைய கிராமாந்திர ஏழை உபாத்திமார்கள், அவரவர்கள் பள்ளிப்பையன்களுக்குள், விருத்திபண்ணவேண்டும். சதுரங்கம், சீட்டாட்டம், முதலிய விளையாட்டுகளுக்கு மூளையின் உதவி தேவையாயிருக்கிறது. அவைகள் பிரயோஜனமற்றவைகளாயுமிருக்கின்றன. நம்மவர்களால், நிஷித்தமாக வெண்ணப்பட்டு, சூதாட்டமென்று அழைக்கப்படுகின்றன. நளன், தர்மன் போன்றவர்கள், அவைகளின் அப்பியாசத்தால் அடைந்த கஷ்டங்களை, அறியாதாராருமில்லை. படிக்கும் மாணாக்கர்களுக்கு அவைகளால் மூளை ஜாஸ்தியாக பெலஹீனப்படுகிறது; ஆகையால் அவைகளை விளையாடக்கூடாது.

தேகப்பயிற்சி, படிப்பின் விருத்திக்கு அத்யாவசியகம் என்று சொன்னேன். அதுமாத்திரமல்ல. தேகப்பயிற்சியினால்தான், நாம் சுகியாயும் பெலத்தோடு கூடினவர்களாயும், ஆயுள்விருத்தியுள்ளவர்களாயுமிருக்கலாம். நாம் உட்கொள்ளும் அன்னபானாதிகள், விடும் மூச்சு, அயர்ந்தூக்கம், செய்யும் ஸ்னானம், இவைகளுக்குப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற விதிகளை அனுஸரித்து, ஒருவன் தேகப்பயிற்சியைப் பிரதிதினமும் அப்பியாஸிப்பானாகில், அப்போதுதான் அவனுக்கு தேகப்பயிற்சியின் பலன்கள் ஸித்திக்கும். ஆகையால் இவைகள் சரீரப்பயிற்சியின் உபகரணங்களென்று சொல்லப்படுகின்றன. இந்த உபகரணங்களின் விதிகளைக் கவனியாது, ஒருவன் சரீரப்பயிற்சியைமாத்திரம், எவ்வளவு நன்றாகப் பிரதிதினமும், அப்பியாஸித்தபோதிலும், அவன் யாதொரு பலனை

* Read before the Teachers' Association, Tittagudi, by Mr. V. S. Viswanatha Iyer, B. A., Sub-Registrar of Tittagudy.

யுமடையமாட்டான். ஆகையால் சரீரப்பயிற்சிக்கு
ஸாதனமாயுள்ள உபகரணங்களின் விதிகள், நம்
மால் முக்கியமாய் கவனிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்
படவேண்டியவைகள். அவைகளை இவடத்தில்,
சுருக்கமாய் கூறுவோம்.

முதலாவது, நாமுண்ணும் உணவும், அருந்தும்
ஜலமும்:—வாய்முதல் அபானத் துவாரம்வரையிலுள்
ள வயிறு குடல்போன்ற ஜீர்ணசக்தி யந்திரங்களினு
ல், நாமுட்கொள்ளும் போஜனபானாதிகள், ரக்தத்து
க்கு வேண்டிய வஸ்துக்களாக மாற்றப்பட்டு, அவை
கள் . ரக்தத்தில் கலக்கின்றனவென்றும், ரக்த
மானது உடம்பின் சகல அவயவங்களுக்கும் வியாபித்
துக்கொண் டோடிக்கொண்டிருக்கின்றன வென்
றும், உடம்பின் சகல அவயவங்களும் அவற்றின்
வளர்ச்சிக்கு வேண்டிய வஸ்துக்களை ரக்தத்தி
லிருந்து எடுத்துக்கொள்ளுகின்றனவென்றும், அப்
படி உடம்பின் பல உறுப்புகளும் ரக்தத்தினுல் தங்
களுக்குக் கொண்டுவரப்பட்ட சரக்குகளால் அமை
யப்பெற்று வளர்ச்சிபெறும்போது, அவ்வவயவங்க
ளின் பிரயோஜனமற்ற, நாத்தமுள்ள, பழயவஸ்துக்
கள், ரக்தத்தில் தள்ளப்பட்டு, நாம் வெளிவிடும்
கரிமலவாயு, வேர்வை,மூத்திராதி, மூலமாக வெளிப்
படுகின்றனவென்றும், (Physiology) ஜீவசாஸ்திரத்
தால் நமக்குத்தெரியவரும். ஆகவே, நாம் சரீரப்ப
யிற்சியால் புஷ்டியடைந்து பலமுள்ளவர்களாயிரு
க்க, நாம் ஜீர்ணிக்கும் விதமாக புசிக்கவேண்டும். அவ
ஸர மன்னியில், ஆறஅமர, நம்முடைய போஜனாதி
களை, நாம் மென்று புசிக்கவேண்டும். வியாகூலமும்,
மனக்கவலையும், யாதொன்றுமில்லாமல், ஈச்
வரனையே, தியானம்செய்துகொண்டு, சந்துஷ்டி
யாக நாம் புசிக்கவேண்டும். அப்படியிருக்க, நம்
மில் பலவித வேலைத்தொந்திரவுகளையுடைய அநே
கர், பாய்ச்சலில் குதிரை ஓடும் வேகமாய் போஜனு
திகளை லபக்கென்று வயிற்றில் கொட்டிக்
கொள்ளுகிருர்கள். இன்னுஞ்சிலர், சமாசாரப் பத்தி
ரிகைகள் படித்துக்கொண்டு சாப்பிடுகிருர்கள். வேறு
சிலர் போஜனமானவுடனே, மூளைக்குக் கடினமான
வேலையைக் கொடுக்கிருர்கள். அப்படிச்செய்வதி
னுல் கெடுதல்கள் உண்டாகின்றன. ஏககால
த்தில், மூளைக்கும் ஜீர்ணகாரியந்திர மாகிய
வயிற்றுக்கும் வேலை கொடுக்கப்பட்டு, அதினுல்
ரக்தம் இரண்டு இடங்களிலும் பிரிந்து பரவி
யிருக்கும்படி நேரிட்டு, இரண்டு காரியங்களும்
தடைப்பட்டு, ஒருகாரியமும் சரியாகச் செய்யப்
படாமல் போகிறது. இங்கிலாந்து தேசத்துச்
சான்ஸலராயிருந்த, "தர்லோபிரபு" போஜன
காலத்தில் ரமணீயமான சம்பாஷணையும், கொஞ்
சம் பாடலும் வேண்டியது என்கிருர். தற்கால
சாஸ்திர நிபுணர்கள் (Scientists), போஜனகாலத்
திற்கு முன்பு கொஞ்சம் நடந்துவிட்டுப் பிறகு
போஜனஞ்செய்வது உடம்புக்கு நல்லதென்கிருர்
கள். தனியாகச் சாப்பிடுவதைவிட, பலபேராகச்
சாப்பிடுவது நலம் என்றும் சொல்லுகிருர்கள்.
நமக்குள்ளும் பெரியோர்களின் அனுஷ்டானங்க
ளும், அப்படியே இருக்கின்றன. காலை போஜனத்
துக்குமுந்தி நதி முதலிய தீர்த்தங்களுக்கு நடந்து
போய் ஸ்னானம்செய்வதும், இரவு போஜனத்துக்கு
முன் கோவிலுக்கு நடந்துபோய் ஸ்வாமிதெரிசன
தேவதாப்பிரார்த்தனை செய்வதும், வீட்டிலுள்ள
எல்லாருஞ்சேர்ந்து உட்கார்ந்து புசிப்பதும், போஜ
னகாலத்தில் ஸ்லோகம் சொல்லுதல்போன்ற ரம
ணீயமான செய்கைகளும் ஈச்வரார்ப்பணமாகப்
புசிப்பதும், மனச்சந்துஷ்டியோடு ஆரஅமர உண்ப
தும், போஜனகாலத்திற்குப்பின் கொஞ்சநேரம்
தாம்பூலம் மென்று, ஆயாஸம் தீர்ப்பதும், நம்மில்
சாஸ்திரக்ஞர்களின் செய்கைகள். நாம் எல்
லோரும் அம்மாதிரியே செய்ய முயலவேண்டும்.

போஜன சம்பந்தவிஷயமாய், நமக்குள், மிகவும்
கெடுதியான ஒரு கெட்டவழக்கம் படிந்திருக்கிறது.
அதாவது வயிறு நிறைய அளவு கடந்து உண்பது.
பிராம்மண சாஸ்திரிகள், கல்யாண சிரார்த்தாதி
களில், பூராவாக மிதமிஞ்சி உண்ணுமப்பியாசத்
தால் அந்திகாலங்களில் பலவித அஜீர்ண வியாதி
களுக்குள்ளாகி வருந்துகிருர்கள். ஒரு சாஸ்திரி
பிராம்மணார்த்தத்தில் பூராவாகப் புசித்துவிட்டு,
தன் வீட்டுக்குவந்து ஏப்பம் விடக்கூடமுடியாமல்,
கஷ்டப்பட்டு புரண்டுகொண்டிருக்க, அதைக்
கண்டு அவன் மனைவி, "ஓ, பிராம்மணா, பிராம்ம
ணார்த்தம், பூராவாகப்போலிருக்கிறதே. ஐயோ;
என்ன கஷ்டப்படுகிறீரே. கொஞ்சம் விரலையாவது
வாயில் விட்டுக்கொண்டு வாயிலெடுக்க முயலலா
காதா? கொஞ்சம் சாந்தமாகுமே" என்று சொல்ல,
பிராம்மணன், "அடி, போடி பைத்தியக்காரி, ஒரு
விரல்கொள்ள இடமிருந்தால், இரண்டு வடை
முறித்துப்போட்டிருக்கமாட்டேனு" என்று பதில்
சொன்னதாக ஒரு கதை உண்டு. கணவனை
இழந்த நம் மாதர்கள், ஒருதரம்தான் போஜனம்
செய்யலாம் என்கிற அபிப்பிராயம் அனுஷ்டான
மாயிருப்பதினுல், அநேகம் பாட்டிமார்கள் பகலில்
நேரங்கழித்து, சாப்பிட உட்கார்ந்து வெகு கஷ்டத்



தோடு முக்கால்படி அரிசி சாதம் சாப்பிட்டு
அதினுல் பல அஜீர்ண வியாதிகள் வருவித்துக்
கொண்டு கஷ்டப்படுகிருர்கள். சாஸ்திரிகளும், பாட்
டிமார்களும், ஓடியாடி வேலைசெய்யும் பிரகிருதியுள்
ளவர்களாயிருந்தும், ஒரே தடவையில் மிதமிஞ்
சிப் புசிப்பதினுல் வியாதிக்குள்ளாகிருர்கள். ஆகை
யால் ஜீர்ண அளவுகடவாமல் நாம் புசிக்கவேண்டும்.
சரியான காலத்திலும் புசிக்கவேண்டும். காலை
யிலும் . இரவிலும் புசிப்பதோடுகூட, இடையிலும்
ஏதாவது கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொள்ள
வேண்டும்.

பானத்துக்கு சுத்த ஜலமும் பாலுமே மிகவுத்தம
மென்றும், பலவிதச் சாராயங்களும், டீயும், காப்பி
யும், அவசியமில்லாதவைகள் என்றும், முக்கிய
மாய் 'குடி' கூடாது என்றும், இக்கொள்கைகள் தற்
காலத்தில் ஊர்ஜிதமாகத்தொடங்கி, பரவஆரம்பித்
திருக்கின்றன. ஆகையால் சுத்த ஜலத்திற்குச்
சமானங்கிடையாது. அதுவே நம்முடைய முக்கிய
பானமாயிருக்கவேண்டும்.

சரீரப்பயிற்சியின் இரண்டாவது உபகரணம் நாம்
சுவாஸிக்குங்காற்று. உடம்பின் பலவித அவயவங்
களும், தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான பலவித
வஸ்துக்களை, ரக்தத்திலிருந்து எடுத்துக்கொள்ளு
கின்றனவென்றும், தங்களுக்குப் பிரயோஜனமில்
லாத வஸ்துக்களை ரக்தத்தில் தள்ளிவிடுகின்றன
வென்றும், ஏற்கனவே சொன்னேனல்லவா. இப்
படித் தள்ளுண்ட வஸ்துக்கள் தேகத்தைவிட்டு
வெளியே, மூத்திராதி வேர்வை ரூபமாயும், கரிமல
வாயு ரூபமாயும் தள்ளப்படுகின்றன. நாமுட்கொள்
ளும் பிராணவாயு, சுவாஸக் குழாய்களின் மூலமாய்
உள்ளிற்சென்று, அங்கு சுவாஸக் குழாய்களுக்
கிடையே ஓடிக்கொண்டிருக்கும் ரக்தத்தில்கலந்து,
ரக்தத்தோடு எல்லா அவயவங்களுக்கும் பரவிக்
கொண்டிருக்கிறது. பல அவயவங்களுக்கும் தங்க
ளுக்கு வேண்டாத வஸ்துக்களை இரத்தத்தில் தள்
ளும்போது, அப்பேர்ப்பட்ட தள்ளுண்ட நாற்ற
முள்ள, பிரயோஜனமற்ற வஸ்துக்களை வெளிப்படு
த்தி சுத்தப்படுத்த நாம் உட்கொள்ளும் பிராணதா
வாயு உபயோகமுள்ளதாயிருக்கிறது. அவயவங்க
ளால் ரக்தத்தில் தள்ளப்படும் கிஷத்தங்கள், (solid)
கட்டியான வஸ்துக்கள். அவைகளை நேரில், வெளி
யில்தள்ளமுடியாது. அவைகள், வெளியில் தள்ளப்
படவேண்டியதோ மஹா ஆவசியம். அதற்கு யுக்தி,
ஈச்வரன் என்ன செய்திருக்கிருர் என்ருல், அவைக

ளிருக்குமிடத்துக்கெல்லாம் பிராணவாயுவை, மூச்சு
மூலமாய் ரக்தத்தில் கலந்து ஓடும்படியாகப்
பண்ணி, அப்பிராணவாயுவும் மேலே குறிக்கப்
பட்ட துர்நாற்ற (solid) கட்டி வஸ்துக்களும் ஒன்று
சேர்ந்து காற்று ரூபமான கரிமலவாயுவாகிவிடும்
படி அமைத்திருக்கிருர். நமக்கு விஷமான அக்
கரிமலவாயு ரக்தத்தில் கலந்து, ரக்தம் ஸ்வாஸக்
குழாய்களுக்கு நடுவே ஓடும்போது, அக்கரிமலவாயு
வும்கூட வருகிறது. ஸ்வாஸக்குழாய்களின் நடுவே,
ரக்தம் ஓடும்படியாக அமைக்கப்பட்டிருக்கிற
விநோதத்தினுல், நம்முடைய பிராணவாயு, வெளியி
லிருந்து ரக்தத்துக்குப் போய்க்கொண்டும், ரக்த்
தத்தில் கலந்துவரும் கரிமலவாயு வெளியில்வந்து
கொண்டுமிருக்கின்றன. பிராணவாயு ரக்த்தத்தில்
கலக்க நாம் மூச்சு உள்ளேகொள்கிருேம். கரிமல
வாயு ரக்தத்தைவிட்டு வெளியே தள்ளப்பட நாம்
மூச்சு வெளியே விடுகிருேம். நாம் வெளிவிடும்
கரிமலவாயு, பிராணஹானியை யுண்டாக்கும் கொடு
மையுள்ளது. உதாரணமாக, பாழுங்கிணற்றிலும்,
மூடிய களஞ்சியத்திலும், வெகு நாளாகத் திறக்
கப்படாத உள்ளிலும், கரிமலவாயு நிறையவிருக்கும்.
அப்படிப்பட்ட இடங்களில், முதலில் நல்ல காற்
றின் சம்பந்தத்தையுண்டாக்கிப் பிறகுதான் நாம்
நடமாடவேண்டும். கரிமலவாயு இருக்குமிடத்தில்,
விளக்கை ஏற்றிவைத்தால், அதுஅணைந்துபோவதை
நாம் பார்க்கலாம். ஆகையால், அவ்வளவு விஷத்
தன்மையுள்ள கரிமலவாயுவை நாம் வெளிவிட்ட
வுடனே, அது காற்றில் நெடுகப்பரவிவிடவேண்டும்.
மறுபடி நாம் காற்றை உள்ளிழுக்கும்போது, கரிமல
வாயு உள்ளே போகாமல் பிராணவாயுவேதான்
உள்ளே போகவேண்டும். ஆகையால் நாம் படிக்
கும் அறையும், படுக்கும் உள்ளும், நாம் வசிக்கும்
வீடும் மிகவும் காற்ருேட்டமுள்ளவைகளாய் இருக்க
வேண்டும். நல்ல காற்று ஓட்டமுள்ள இடங்களி
லேயே, நம்முடைய எவ்வித வேலைகளையும், நாம்
செய்ய அப்பியஸித்துவிட்டால், மனிதரை வருத்
தும் வியாதிகளில் பெரும்பான்மை நம்மை
அணுகா. ஆகையால் உபாத்திமார்கள் நல்ல காற்
ருேட்டமான கட்டிடங்களில், தங்கள் பிள்ளைகள்
படிக்கவும், விளையாடவும் செய்யவேண்டும்.

நாம் கவனிக்கவேண்டிய தேகப்பயிற்சியின்
மூன்ருவது உபகரணம் தூக்கம். தேகப்பயிற்சியால்
சோர்ந்துபோகும் சரீர உறுப்புகளும், படிப்பு யோச
னைகளால் அசைதி பெறும் மூளையும், அவைகளுக்கு
வேண்டிய அளவு அமைதியை பிரதிதினமும் பெற

வேண்டும். ஆகையால் தூங்கும் வேளையில் நாம் விசாரமற்றுத் தூங்கவேண்டும். ஆயுள் விருத்திக்கும் இது மிகவும் அவசியமானது. கெட்ட எண்ணம், மனவிசாரம், அதிக துக்கம், அதிக சந்தோஷம் இவைகளால் பாதிக்கப்படும் தன்மை பொருந்திய மனிதனுக்கு, தூங்குகையில்கூட மூளை வேலை செய்துகொண்டிருக்கும். ஆகையால், நாம் தூங்கப்போகும்போது ஒரு எண்ணமும் நம்மை பாதிக்காமல் கடவுளையே தியானம் செய்துகொண்டு தூங்கவாரம்பிக்கவேண்டும். அதினால், மூளை சம்பந்தமான கனவுமுதலிய வேலையற்று, நாம் தூங்குவோம். தினம் 5 - அல்லது 6-மணிக்குக்குறையாமலும், 7 - அல்லது 8-மணிக்குமேற் படாமலும் தூங்கவேண்டும். பகலில் தூங்கவேகூடாது. ஔவையார், இரவில் சாமத்துக்குப் பிறகு படுத்து இரண்டு சாமகாலம் தூங்கவேண்டுமென்கிறார். மேற்கத்தியார்களில், இரவின் முன்பாகத்தில் ரொம்பநேரம் விழித்து, படிப்பு முதலிய மூளைவேலையைச் செய்துவிட்டு, காலையில் ரொம்பநேரம்வரையில் தூங்கும் பழக்கம் நல்லது என்கிற அபிப்பிராயமிருக்கிறதாகப் புலப்படுகிறது. அது பிசகான அபிப்பிராயம். சீக்கிரம்படுத்து, உதயத்துக்குமுன் சீக்கிரம் எழுந்திருக்கும் ஒருவன் சுகியாயும், தனிகனாகவும், புத்திசாலியாகவுமாவான் என்பது தான் ஒப்புக்கொள்ளத்தக்கது. நம்முடைய புராணாதிகளுமப்படியே முறையிடுகின்றன. ரகுவம்சத்தில், காளிதாஸர், "பிராதக்காலத்தில் தினம் எழுந்திருப்பவனுடைய புத்தி எவ்வளவு தெளிவாயிருக்குமோ அப்படிப்போல" என்று உபமானம் கூறியிருக்கிறார். வேத பாராயணர்கள் அதிகாலையில்தான், ஸாமவேதகானம் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால் இரவில் முன்பாகத் தூக்கமும், பிராதக்கால விழிப்புமே சிரேஷ்டம்.

சரீராப்பியாஸத்திற்கு ஸாதகமான நான்காவது உபகரணம், ஸ்நானம். நாகரிகம்மேலிட்ட இக்காலத்தில், "டர்க்கிஷ்பாத்"* போன்ற அநேகவிதமான நூதன, ஆச்சரிய, பணச்செலவான ஸ்நானங்கள், தேகத்தை ஆரோக்கியம்செய்யக், கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நமது சரீரத்தின் தோலின் மேல் கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த அநேகமாயிரம் துவாரங்கள் அமைந்திருக்கின்றன. சரீராவயவங்களினால் தங்களுக்குத் தேவை[illegible]மல் ரக்தத்தில் தள்ளப்படும் வஸ்துக்களில், மலவாயு மூத்திராதிகளாக வெளியில் கழிக்கப்[illegible]வைகள்போக, பாக்கி யிருக்கும் விஷநீர், [illegible]ஷம் முதலியதுகள், வேர்வை ரூபமாய் இ[illegible] துவாரங்களின் வழியாய், வெளியில் கழிக்கப்[illegible]கின்றன. ஆகவே இத்துவாரங்களடைபடா[illegible] ஸ்நானத்தினால் சுத்தமாய் வைக்கப்படவேண்டும் என்று, நமக்குச் செம்மையாய் விசதமாகின்[illegible] போஜனத்துக்குப்பிந்தி ஸ்நானம்கூடாது என்ப[illegible] குளிர்ந்த ஓடும் ஜலம் திடதேகஸ்தர்களுக்கு[illegible]லது என்பதும், ஸ்னானம்பண்ண பிராதக்கால[illegible] சிரேஷ்டமென்பதும், எல்லாரும் அறிந்தவைகளே. நீந்துவது, சரீராப்பியாசத்தின் ஒரு பாகமாகி, சரீரத்தின் சகல அவயவங்களுக்கும், உறுதியையுண்டாக்குவதினால், நீந்தி ஸ்நானம் செய்கிறதானது சரீராப்பியாசப்பயிற்சிக்கு ஒரு உபகரணமாக மாத்திரமன்றி, சரீரப்பயிற்சியின் ஒரு பிரிவாகவே ஆகிறது. ஸ்நானத்தினால் உடம்புக்கு உண்டாகும் பரிசுத்தத்தை, திருவள்ளுவர் குறளில், "புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்று சொல்லி இருக்கிறார். ஸ்நானத்தின் மஹிமை இதர ஜாதிகளைவிட நம்மவர்களால், செவ்வையாகத் தெரிந்துகொள்ளப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டுவருவதால் அதைப்பற்றி நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை.

இவ்விதம் மேலே கூறப்பட்ட அன்னபானாதி, தூக்கம், ஸ்வாஸம், ஸ்நானாதிகளின் விதிகளை அதிக்கிரமிக்காமல் சரீரப்பயிற்சியை ஒருவன் அப்பியஸிப்பானாயின் அதினால் அவனுக்குவரும் நன்மைகளுக்கும் அளவுமுண்டோ? இகலோக வாழ்க்கையால், நித்தியானந்த மயத்தை ஸாதித்துக்கொள்ளும்படியாக நாமடைந்திருக்கும் இச்சரீரத்தின் யாந்திரமானது நாமெவ்வளவு அதினுறுப்புகளை அலட்டுகிறோமோ, அவ்வளவும் அவைகளுக்கு நன்மையக்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. நாம் வேலை செய்கையில் உடம்பும் அதினுறுப்புகளும் நன்றாயசைந்து அலட்டப்படுகின்றன. அதினால், அவைகளுக்குள்ளே ஓடும் ரக்தக்குழாய்கள் அழுத்தப்பட்டு, ரக்தம் வேகமாய் உடம்பி னவயவங்கள் முடிய ஓடிப் பரவுகிறது. அதினால் ரக்தாசய இருதயம் விரைவாய் அடித்துக்கொண்டு ஜாஸ்தி வேலையை சீக்கிரம் செய்கிறது. வேலைசெய்யுமிடம் நல்ல காற்றுள்ள விடமாயிருந்தால், ஸ்வாஸாசயமும், விரைவாய் பிராணவாயுவை ரக்தத்தில் செலுத்தி,

* நீராவி நிறைந்த காற்றடைக்கமான அறையில் சற்று [illegible] அதனால் உண்டாகும் வியர்வையினால் இரக்[illegible]



ரக்தத்திலுள்ள கரிமலவாயுவை வெளியில் விடுகிறது. அதினால் ரக்தம் சீக்கிரமாய் சுத்திசெய்யப்பட்டு தேகத்தினவயவங்களுக்குப் பரவுவதினால், அவயவங்களெல்லாம் செவ்வையாய் ஊட்டங்கொடுக்கப்படுகின்றன. ஆகவே நல்லகாற்றில் வேலை செய்வதினால் சகல உறுப்புகளும் உறுதியையும், உற்சாகத்தையு மடைகின்றன. வயிறு குடல் முதலிய இரைப்பைகள், உண்ணுமுணவைச் செவ்வையாக ஜீர்ணித்து, ரக்தத்தில் கலக்கும்படிச் செய்கின்றன. ஆகையால் வேலைசெய்யுந்தொழிலாளிக்கு எப்போதும் நல்லபசியுண்டாகிக்கொண்டிருக்கிறது. வீட்டிலடைபட்டிருக்கும் வேலைசெய்யாச்சோம்பேறியோ, ஜீர்ண சக்தியற்று, சோற்றிலாசையின்றி, அதினால் ரக்தம் கல்மஷமாகி, அதினால் அவயவங்கள் கெட்டுப்போய், தூக்கமின்றி, அநேகவியாதிகளுக்குள்ளாகிறான். வெளியில் வேலைசெய்யும் உழைப்பாளியோ, பசிதாகாக்னியால் சந்தோஷத்தோடு புசித்து, சுத்தரக்தமுடையவனாய், சகல உறுப்புகளும் பலம்பெற்று, அயர்ந்ததூக்கத்தோடு [illegible]ருந்தி, நித்திய சுகியாயிருக்கிறான். ஆகை[illegible] சுகமானது பணத்தாலுண்டாவதும் ஏழ்மைத்[illegible]த்தால் அடையப்படாததுமல்ல. உண்மையில் [illegible] உழைப்பாளிகளே, பொதுவாகத் திடதேக, சுகி[illegible]ாயிருக்கிறார்கள். மேலும், எந்த உறுப்புகள் அசைந்து வேலைசெய்து பயிற்சிசெய்கின்றனவோ அவைகள் தான் புஷ்டியடைகின்றன. ஸதா பேனாப் பிடித்தெழுதும் உத்தியோகஸ்தனின் கைபோலில்லாமல், ஸதாவேலைசெய்யும் கருமானின் கைகள் மிகவும் பருத்து பலமுள்ளவைகளாயிருக்கின்றன. ஸதா முடங்கிக்கிடக்கும் தையற்காரனுடைய கால்கள்போலிராமல், எப்போதும் நடமாடிக்கொண்டிருக்கும் தபால் சேவகனுடைய கால்கள் பலத்து உறுதிப்பட்டிருக்கின்றன. நீந்துதல், ஜிம்னாஷியம் செய்தல், முதலிய பயிற்சிகளை அப்பியஸிப்பவர்களின் மார்பு விசாலித்தும், கல்விசாஸ்திரக்யானிகளுடைய நெற்றி தலை அகன்று நீண்டும், கூலிமூட்டை சுமப்பவர்களின் முதுகு பலத்துமிருக்கின்றன. இவைகளினால், எவ்விதத்தொழிலில் இருப்பவர்களும், தங்களுடைய சகல அவயவங்களும் அசைந்தாடி உறுதிப்படும்படியான ஏதாவதொரு பயிற்சியை, தினந்தோறும், கொஞ்சநேரமாவது பயிலவேண்டுமென்று சந்தேகமற நமக்குப்புலப்படுகின்றது. இவைகளையெல்லாம் தெரிந்தே, மூளைவிசால சாஸ்திராதிகளில் ப்ரவர்த்தித்திருந்த நம்முடைய பிராம்மண முன்னோர்கள், பிரதி வைதீகனும், பிரதிகாலையிலும் அநேகமான சூரியநமஸ்காரம் செய்யவேண்டுமென்றும், பிரதி மாலையிலும் கோவிலுக்குப்போய் முதலில் குட்டிக்கொண்டே முடியுமானவரையில் தோப்பிக்கரணம் போட்டுக்கொண்டு பிள்ளையாரை வணங்கி, பிறகு கூத்தாடி, நிர்த்தனம் செய்துகொண்டு நடராஜரைஸேவித்து, பிறகு நல்ல காற்றோட்டமும் புஷ்பச் சோலைகளுமமைந்த கோவில் பிரதக்ஷிண ஸ்தானத்திலிருக்கும், தக்ஷிணாமூர்த்தி ஸன்னதியில் இளைப்பாறி ஜெபம்செய்து, மறுபடி முடிந்தவரையில் கோவிலை பிரதக்ஷிணம் பண்ணி, பிறகு வீட்டுக்குப்போகவேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். வேதாந்த விஷயத்தை அப்பியஸிக்கும் சாஸ்திரக்ஞர்களுக்கு, இப்பேர்ப்பட்ட விதிகள், எவ்வளவு ஜாக்கிருதையோடும் முன்யோஜனையோடும் ஏற்பட்டிருக்கின்றன பாருங்கள். படிக்கும் மாணாக்கர்கள் குளம் நதிகளில் நீந்திவிளையாடி புராதீன விளையாட்டுக்களை விருத்திசெய்வதும், பலவிதத்தொழில்களிலமர்ந்த பெரியோர்கள், மேலே சொல்லப்பட்ட விதிப்படி கோவிலுக்குப்போவதும் சரீரப் பயிற்சியை மிகவும் விருத்திபண்ணும். ஆனால் அவைகளின் பிரயோஜனம் நமக்கு விளங்காமல், அவைகள் இக்காலத்திற்கேற்ற கோலமல்லவென்று நம்மால் திரஸ்கரிக்கப்பட்டுவருகின்றன. அவை பிசகானவை. தற்கால உபாத்திமார்கள், தங்கள் பையன்களுக்கு "டிரில்" "ஓட்டம்" முதலிய விளையாட்டுகளை, நல்ல காற்றுள்ள விடங்களில் பழக்கிவைக்கவேண்டும். 'டிரில்' 'ஓட்டம்' முதலியவை, மிகவும் சிலாகிக்கத்தக்க தேகப்பயிற்சிகள். இவைகளால் சரீரத்தின் சகல உறுப்புகளும் அததின் இடங்களில் சரியாயமைந்து உறுதிப்பட்டு உருவழகும் உடம்பழகும் நமக்குண்டாகும். ஆனால், பலவித வேலைகளிலமர்ந்திருப்பவர்களும், வயதான பெரியவர்களும் அவைகளை அனுஷ்டிக்கமுடியாது. அப்படி முடியாத சகலரும், ஓடுவதற்கடுத்தபடி மேலான தேகப்பயிற்சியாகிய நடத்தலை கைக்கொள்ளவேண்டும். தினம் பிரதி காலை மாலைகளில் சக்தியானுஸாரம் நடைச்சவாரி போகவேண்டியது அவசியம்.

(இன்னும்வரும்.)

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### கெட்ட பழக்கங்களை முளையிலே பிடுங்கிவிடவேண்டும்.

கெட்ட பழக்கங்களும், நாட்டங்களும் எத்தனையோ சுலுவாய் மனிதனுடைய உள்ளத்தில் நுழைந்து வேரூன்றின பின்னர் அம்மனிதனுக்கு நல்லுணர்வு பிறந்து அவற்றை வேரோடு பிடுங்கி நல்லெண்ணங்களை நாட்ட

அளவிறந்த அவாக்கொண்டவனுயிருப்பினும் சாதாரணமாய் அது கூடாத காரியமாகவே போவது அனுபவ சித்தியால் யாவரும் அறிந்த விஷயமே.

முன்னொரு காலத்தில் வசந்தபுரமென்னும் ஊரில் ஏழைத் தையற்காரனொருவன் கடை வீதியில் ஓர் வீட்டில் சிற்றறையொன்றை குடிக்கூலிக்கு அமர்த்தி அதிலிருந்து தையல் தைத்து வரும் ஊழியத்தால் கவலையின்றி காலக்ஷேபஞ்செய்து வந்தான். இவ்வாறிருக்கையில் ஓர்நாள் அவ்வூர் அரண்மனை யானைகளிலொன்று பாகனைமீறி தெருத்தெருவாய் அலைந்துதிரிந்து கடைசியில் நமது தையற்காரனிருந்த கடைவீதிவழியே உலாவ ஆரம்பித்தது. ஒவ்வோர் கடையிலும் திறந்திருந்த பலகணியின் வழியாய் தன் துதிக்கையை நீட்டிப்பார்க்கவே கடைக்காரர் உடனே அதை அடித்துத் துரத்திப் பலகணியின் வாயிலைச் சாத்தினார்கள். இவ்வாறு துரத்தப்பட்ட யானையோ சற்றும் மனஞ்சலியாமல் அவ்வீதியிலேயே நடமாடிக் கொண்டிருந்து, நமது தையற்காரனுடைய சிற்றறைக்கதவு திறந்திருப்பதைக் கண்டு வெளியில் நின்று வழக்கம்போல தன் துதிக்கையை உள்ளே நீட்டினது. தையற்காரன் வேலையில் கருத்தாயிருந்ததனுலோ வேறென்ன முகாந்தரத்தாலோ அதை சற்றும் கவனிக்கவில்லை. ஆகவே யானை சற்று தைரியங்கொண்டு ஓர் அடிமுன் வைத்து முறம்போல விரிந்தகன்ற தன்னிரு காதுகளையும் அசைத்து, முகத்தைமுற்றிலும் உள்ளேவிட்டு தன் சிறு கண்களால் சிற்றறையை சுற்றுமுற்றும் பார்த்து ஆராய்ச்சிசெய்தது. தையற்காரன் இந்த தடவை யானையைக் கண்டாலும அது தனக்கோர் தீங்கும் விளைக்காது, சற்றுநேரத்துக்குள் தன்வழியே போய்விடுமென்றெண்ணி சும்மாவிருந்தான். இதைக்கண்ட அம்மிருகம் அதிக தைரியம் படைத்து முதலில் ஒருகாலும், பின் மற்றொருகாலும், பின்னர் தன்னுடலமும், தன் பின்னங்கால்களும் வாலுமாக தன் அவயவத்தை ஒவ்வொன்றாய் வெகு சுலபமாக உட்செலுத்தி அறைக்குள் சந்தோஷத்துடன் நுழைந்துவிட்டது. அதுவரையில் அசட்டையாயிருந்த தையற்காரன் இப்போது அம்மிருகத்தை வெளியில் துரத்த எத்தனித்தான். மூர்க்ககுணமுள்ள அந்தப்பிராணி ஏழைமனிதனுக்குக் கிஞ்சித்தும் பயப்படாமல் அவனையெதிர்க்கத் தலைப்பட்டது. தையற்காரனுடைய அறை வெகு நெருக்கமாயிருந்தபடியாலும், யானை மதங்கொண்டதாகத் தோன்றினபடியாலும் அதையெதிர்த்து வெல்ல தன்னால் ஆகாதென்று கண்டு தையற்காரன் தன் கடையைவிட்டு தப்பிப் பிழைத்தோடும்படி நேரிட்டது—என்று ஒரு கதையுண்டு.

இவ்வண்ணமே அநேக துர்ப்பழக்கங்கள் சிறுவரிடத்தில் சுலபமாய் போய்ச்சேர்ந்து வேரூன்றி, பின்னர் அவர்களை வெகுவாய் பிடிக்கின்றன. பிறகு அவர்கள் இவற்றாலுண்டாகும் திரவிய நஷ்டத்தையோ, தேக அசௌக்கியத்தையோர், மானக்குறைவையோ நன்குணர்ந்து, தங்களை யிறுக்கக் கட்டியிருக்கும் தளைகளாகிய துர்ப்பழக்கங்களை அறுத்தெறியவெண்ணி என்னமுயற்சி செய்தும் பலிக்காமல் தாங்கள் முதலில் விளையாட்டுப்போலிடங்கொடுத்த வினைகளுக்கு அடிமைகளாகி மடிகிறார்கள். தையற்காரனைப்போல் விவேகமற்றவரிவரே. இப்போது புகைசுருட்டு உபயோகிக்கும் பெரியவர்களில் எத்தனையோ பெயர் சிறுவயதில் சிநேகிதர் இப்படி குடிக்கிறார்களே நாமும குடிப்பதால் மோசமென்னவென்று தொடங்கிய பழக்கமதுவென்று ஒப்புக்கொள்வார்கள். இத்தன்மையாகவே கட்குடித்தல், சூதாடல், கொள்ளைவிருப்பல் ஆகிய வெவ்வேறு விஷப்பழக்கங்கள் இளவயதிலே இலகுவாய் வந்தடைந்து வருத்துவனவாதலின் துர்ச்செய்கையென்று கண்டவுடன் தையற்காரனைப்போலிராமல், மற்றக் கடைக்காரரைக் கண்டுபாவித்து, அவற்றைவிட்டகன்று, உங்களுள்ளத்தின் கதவை மூடிக சாத்துவீராயின் என்றும் சுகமடைவீர்.

R. P. K.

* * *

OFFICE OF THE REGISTRAR... REGISTERED 12 NOV.1902 MADRAS

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணா.
பழையபிரதி, 6 „

சந்தாவிலை விவரம்;
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு „ 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான

மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 11.] 1902வரு செப்டெம்பர்மீ. [இலக்கம் 5.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year.
Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*; though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறுமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்றுவாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## மங்கபட்டணம் ரயில் விபத்து.

சென்னை வடமேற்கு இருப்புப்பாதையில் கடப்பைக்கப்பாலுள்ள மங்கபட்டணம் ரயில் ஸ்டேஷனுக்கு கொஞ்சதூரம் அப்பாலுள்ள ஓடையின்மேல் கட்டியிருந்த வாராவதியானது வெள்ளத்தினால் அடித்துக்கொண்டு போகப்பட்டதால் செப்டெம்பர்மீ 11உ இராத்திரி சென்னையைவிட்டுப்புறப்பட்ட பம்பாய்மெயில் 12உ வெள்ளிக்கிழமை விடியற்காலம் 3½-மணிக்கு அதிலுள்ள ஜனங்களோடும் பிரவாகம் அதிகரித்து ஓடிக்கொண்டிருந்த அந்த ஓடையில் விழுந்து இரண்டுவண்டிகள் தவிர மற்ற வண்டிகளெல்லாம் நொறுங்குண்டும் அவ்வண்டித்தொடரில் இருந்த 150-200 ஜனங்களில் 65-பேர்கள் தவிர மற்றவர்கள் குஞ்சு குழந்தைகளோடு உயிர்ச்சேதமடைந்தும் மாண்டார்கள். இந்தப்பெரு விபத்தினால் ஜனங்கள் எங்குபார்த்தாலும் துக்கத்தில் மூழ்கிவருந்துகிறார்கள். ஆண்போகப் பெண் பிழைத்தவர்களும், பெண்போக ஆண் பிழைத்தவர்களும் குஞ்சுகுழந்தைகளோடு சிலர் எட்டுப்பத்துப் பேர் கொண்ட குடும்ப முழுவதும் நசிய மாண்டவர்களுமாக இந்த ரயில்விபத்தினாலுண்டான சேதத்தை நினைக்கவும் மனம் நடுங்குகின்றது. அந்த ஓடையில் பெருவெள்ளம் நேர்ந்தபொழுது 6, 7-அடி ஜலத்துக்குமேல் ஓடினதில்லையாம். அன்று இராத்திரிபெய்த பெருமழையால் பக்கத்திலுள்ள குன்றுகளிலிருந்து ஓடிவழிந்த சிற்றருவிகளெல்லாம் ஒன்றுகூடி வெள்ளப்பெருக்கை யதிகமாய்ச் செய்ததன்றி மேலேயுள்ள சில ஏரிகளும் மழைவெள்ளத்தில் உடைத்துக்கொண்டதனால் 3-ஆள் புருஷன் ஆழமுள்ள வெள்ளம் ஓடிற்றும். மரங்களெல்லாம் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகப்பட்டன. கால்நடைகள் மந்தையோடு அடித்துக்கொண்டு போகப்பட்டன. அன்றி ராத்திரி 1-மணிக்கு பம்பாய் பக்கத்திலிருந்து [illegible] வந்த ரயில்வண்டித்தொடர் ஒன்று [illegible] அப்பாலத்தின் வழியாக மங்கபட்டணம் வந்துசேர்ந்தது. 3-மணி 20-நிமிஷத்துக்கு மங்கபட்டணம் வந்த பம்பாய் மெயில் வண்டித்தொடர் 3-25-க்கு அப்பாலத்தண்டைவந்தது. அடுத்த நிமிஷம் அப்பாலத்தின் மீது ஓட எஞ்சின்வண்டியோடு எல்லாவண்டிகளும் ஒன்றின் பின்னொன்றாக ஒருக்ஷணப் பொழுதில் 3-ஆள் புருஷன் ஆழமுள்ள வெள்ளத்தில் விழுந்து அதிலிருந்த ஜனங்களை எமன் வாய்க்கிரையாக்கின. பிந்தி அப்பாலத்தைப் பார்த்ததில் ரயில் அப்பாலத்தின் மீது செல்லு முன்னையே வாராவதி வெள்ளத்தினால் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கவேண்டுமென்று தெரியவந்ததாக கவர்ன்மெண்டு கன்ஸல்டிங் இஞ்சினீர் கவர்ன்மெண்டுக்குச் செய்திருக்கும் பிரதம ரிபோர்ட்டில் கண்டிருக்கிறார். அந்தப்பாலத்தடியில் இராத்திரி காவல் காக்க ஒரு ஆள் இருப்பது வழக்கமாம். அந்தக் காவலாளை செப்டெம்பர்மீ 1உயோடு ரயில்வே கம்பெனியார் எடுத்துவிட்டார்களாம். எடுத்ததற்குக் காரணம் செலவைக் குறைக்கவேண்டுமென்கிற எண்ணமாம். கம்பெனியார் இப்படி அரட்டுச்செட்டுச் செய்ததால் இந்தப்பெருவிபத்து நேர்ந்ததென்றும் இன்னும் அவர்கள் பலவிஷயங்களில் அஜாக்கிரதையாயிருந் திருக்கிறார்களென்றும் சொல்லி ஜனவதந்தி உலாவுவதால் இதனுண்மையைக் கண்டறிய கவர்ன்மெண்டார் ஒரு கமீஷன் ஏற்படுத்தி விசாரிக்கச் செய்யவேண்டுமென்று பத்திரிகைகள் முறையிடுகின்றன. இரயில்வேகம்பெனியார் தங்கள்பேரில் குற்றமொன்றுமில்லையென்றும் இது அகஸ்மாத்தாக நேர்ந்த விபத்து என்றும் சொல்லிச் சாதிக்கிறார்கள். இந்த விபத்தில் அநேகம் ஜனங்கள் (75-க்கு மேல் கணக்கிடப்பட்டிருக்கின்றனர். இவர்களன்றி இன்னம் எத்தனைபேர் மாண்டார்களோ தெரிய வகையில்லை.) திடீரென்று மாண்டதன்றி அநேக லக்ஷரூபாய் பெறுமான சரக்கு கட்டுகளும் வெள்ளத்தில் வீழ்ந்து சேதமாயிருத்தலால் ஏனோதானோ வென்று கம்பெனியார் சொல்வதைக் கேட்டுத் திருப்தியடைதிருப்பது சர்க்காருக்கழகல்ல வென்று ஜனங்கள் முறையிட்டு வருகிறார்கள். இந்திய பத்திரிகைகள் எல்லாம் இம்முறையீட்டையாதரித்தும் ஆங்கிலேய பத்திரிகைகள் சில அலக்ஷியம் செய்தும் எழுதிவருகின்றன. கவர்ன்மெண்டு கன்ஸல்டிங் இஞ்சினியர் இன்னம் இதைப்பற்றின முடிவான ரிபோர்ட் டனுப்பவில்லையால் அது வரும்வரையில் கவர்ன்மெண்டார் அதை யெதிர்ப்பார்த்துக்கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடாது இருக்கிறார்கள். விபத்து நேர்ந்த விஷயத்தில் அதனால் பாதிக்கப்பட்டவர்களோடு கவர்ன்மெண்டார் மிக அனுதாபப்படுவதாக மட்டும் தெரிவித்திருக்கிறார்கள். ரயில் வேகம்பெனியார் இப்படிப்பட்ட விபத்துகள் நேரிடாவண்ணம் ஸர்வஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பது அவசியமே, இந்த விபத்து நேர்ந்த விஷயத்தில் அவர்கள் அப்படியிருந்தார்களா இல்லையா வென்பது தான் தீர்மானிக்கவேண்டிய விஷயம். இதை ஆக்ஷேபத்துக்கிடமில்லாதபடி தீரவிசாரித்துத் தீர்மானிப்பது எல்லாருக்கும் நலம். இதைக் கவர்ன்மெண்டார் நன்றாக மனதில் வைப்பார்களென்று நம்புகிறோம்.



### Sree Ramanuja Chariar—the Founder of the Visishtadwita Philosophy.

## ஸ்ரீ இராமானுஜர் சரித்திரம்.

விசிஷ்டாத்வைத மதாசாரியாராகிய ஸ்ரீ இராமானுஜாசாரியாரை ஆதிசேஷனுடைய அவதாரமாகச் சொல்லுவார்கள். இவர் செங்கற்பட்டு ஜில்லாவில் சென்னைமாபுரிக்கு இருபத்தாறு மைல் மேற்கேயுள்ள ஸ்ரீ பெரும்பூதூரில் அந்தணர் வம்சத்தில் கலியப்தம் 4118-க்குச்சரியான பிங்களவருஷம் சித்திரை மாசம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஜனித்தனர். அதாவது கிறிஸ்து சகம் 1017-ம் ஆண்டுக்குச்சரியாகின்றது. இவர் எஜுர்வேத ஆபஸ்தம்ப சூத்திர ஹாரிதலை கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் பிதாவின்பெயர் கேசவசோமயாஜி. மாதாவின் பெயர் காந்திமதி தேவி. இவர் அவதரித்ததற்குக் காரணம் வேதாந்தத்தின் உண்மைப்பொருளை யுணர்த்தும் பொருட்டென்பர். இவருக்கு உபநயனம் ஆனதும் தமது கிரகத்தில் தானே 15-வயது வரையிலும் கற்பிக்கப்பட்டு; பிதா இறந்து போனபின் ஸ்ரீபெரும்பூதூரை விட்டுக் காஞ்சீபுரத்துக்குச் சென்றனர். இவர் பதினைந்து வயதுக்குள்ளாகவே தம் பிதாவிடத்தில் வேத வேதாங்கங்களைக் கற்றுத்தேறினர் ஆதலின், அந்நகரில் கல்வி கேள்விகளில் பேர்போன யாதவப்பிரகாசரென்னும் ஒரு சன்னியாசியினிடத்தில் மீமாம்ஸ சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்வாராயினர்.

இந்த யாதவப்பிரகாசர் முதலில் ஸ்ரீமத் சங்கராசாரியாரின் கொள்கைகளைக் கொண்டிருந்து பின்பு விசிஷ்டாத்வைதக் கொள்கைகளுக்கு மாறினவர். இவர் கொள்கைகள் ஸ்ரீமத் சங்கராசாரியாரின் சிடர்களால் அங்கீகரிக்கப்படமாட்டா. இவர் சங்கரர் எழுதிய பாஷ்யத்தை விட்டுப் பிரமசூத்திரத்துக்குப் புதியதோர் பாஷியம் எழுதினர்.

இராமானுஜாசாரியார் தமக்குக் குருவாகிய இவரது கொள்கைகளை அனுசரிக்கவில்லை. இவருக்கும் முன்னோர்களாகிய போதாயனர், பிரமநந்தி, நாதமுனிவர், யாமுனாசாரியார் என்பவர்கள் போதித்திருக்கும் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தையே அனுசரித்தனர். தமது போதகராகிய யாதவப்பிரகாசரது கொள்கைகளை இவர் அவலம்பியாமைக்குக் காரணம் வேதாகமங்களுக்கும் ஆசாரியர்களது முன்னூல்களுக்கும் அவை விரோதமாயிருத்தல் பற்றியே.

இராமானுஜர் யாதவப்பிரகாசரோடு விவாதித்து அவர் கொள்கைகளைக் கண்டித்து அவரோடு ஒற்றுமைப்பட முடியாமையால் அவரைவிட்டுப்பிரிந்து ஸ்ரீரங்கத்திலே யாமுனை

சாரியா ரென்னும் வைஷ்ணவ யதிகள் ஒருவர் போதாயனர் முதலான முன்னோர் கொள்கைகளுக் கேற்பப் போதித்துவருவதைக் கேள்வியுற்று அங்குச்சென்றனர். ஆயினும் இவர் உத்தேசம் நிறைவேறுமல் இவர் ஸ்ரீரங்கத்துக்குப் போய்ச்சேருமுன் அந்தயாமுனாசாரியார் இவ்வுலகைவிட்டுப் பரமபதத்துக் கெழுந்தருளி விட்டனர். ஆதலால் அவ்யாமுனாசாரியாரின் சீடர்களிற் சிறந்தவராகிய பெரிய நம்பிகள் என்னும் மஹா பூரணாச்சாரியாரைத் தமக்குக் குரவனாகக்கொண்டு அவரால் செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம் என்னும் ஊரிலே வைஷ்ணவ சித்தாந்தங்களை ஓதித்தெளிந்தனர். பின்பு இருவரும் காஞ்சிபுரத்துக்குச்செல்ல அங்கு அக்குரவராலேயே விசிஷ்டாத்வைத மதக்கொள்கைகளைப் போதாயனர் முதலான முன்னையோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பொருந்தப் போதிக்கப்பெற்றனர்.

இராமாநுஜர் தமது 18-வது வயதில் விவாகம் செய்துகொண்டபோதிலும் சீக்கிரத்தில் கிரஹஸ்தாசிரமத்தைக் கைவிட்டுக் காஞ்சி நகரில் சந்நியாசம் பெற்றுக்கொண்டனர். அங்குச் சிலகாலம் அநேக சீடர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்து பின்பு அவ்விடத்தைவிட்டுத் திருப்பதிக்குச் சென்றனர். மேலைத்திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசர் கோயிலில் வேதாந்த விஷயமாக அநேக உபந்நியாசங்களைச் செய்து, சைவ விசிஷ்டாத்துவைதிகள் ஆக்ஷேபித்தபோதிலும் ஸ்ரீ வேங்கடேச ஆராதனத்தை ஒப்புக்கொண்டனர். பின்பு தென்னிந்தியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களெல்லாவற்றையும் தரிசித்து வெகு ஜனங்களுக்கு மத விஷயமான உபந்நியாசங்களைச் செய்து வந்து அநேகருக்கு ஞானோபதேசம் செய்தனர். பின்னர், சிலகாலம் ஸ்ரீரங்கத்தில் வசித்துவருகையில் அங்கு அரசனாயிருந்த சோழராஜனோடு விவாதப்பட்டு அவனால் தாம் மதோபதேசங்கள் செய்யத் தடைப்பட்டமையால், தமதுசீடர்களோடு ஸ்ரீரங்கத்தைவிட்டு மைசூர்இராச்சியத்துக்கு எழுந்தருளினர். அங்கு துவாரசமுத்திரமென்னும் இராஜதானியில்பல்லவராஜன் என்னும் ஒரு அரசன் சோழராஜனுக்கு உட்படாமல் சுதந்திரமாய் ஆண்டுகொண்டிருந்தான். அவன் ஜைனமதத்தைச் சேர்ந்தவன். இராமாநுஜர் அநேக ஜைன குரவர்களோடு வாதம்செய்து அவர்களைத் தோற்கடித்தனர். அதனால் அவ்வரசன் இராமாநுஜ மதக்கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவனாகி, வைஷ்ணவ மதத்தை அவலம்பித்து, விஷ்ணுவர்த்தனன் என்னும் பெயரைப்பெற்றான். அங்கு இராமாநுஜர் குன்றின்மேல்திருநாராயணபுரம் என்னும் நகரத்தைத் ஸ்தாபித்து, ஓர் ஆலயத்தையும் கட்டுவித்து அக்கோயிலில் ஸ்ரீ நாராயண விக்கிரகத்தைப் பிரதிஷ்டித்தார். அரசனுடைய உதவியினால் அநேக வைஷ்ணவர்களுக்கு அங்கு வந்து குடியேறும்படியான அநுகூலங்களை ஏற்படுத்தினர். இராமாநுஜர் இங்கு 12-வருஷம் இருந்து பின்பு தமக்கு விரோதியாகிய சோழராஜன் இறந்துபோன சமாசாரம் தெரிந்து மறுபடியும் ஸ்ரீரங்கம் சென்று அங்கு பெரிய கோயிலின் ஆராதனத்தை ஒப்புக்கொண்டனர். பின்பு தமது சீடர்களோடு திருப்பதி, அகோபலம், மகாராஷ்டிரதேசம் இவற்றின் வழியே, போகுமிடமெல்லாம் தமது மதத்தைப் பிரசுரித்துக்கொண்டு, வட இந்தியாவுக்குச் சென்றார். அவர் கூர்ச்சரத்தில் தத்திரேய க்ஷேத்திரத்தையும் துவாரகை பிரயாகை காசி மதுரை ஹரித்துவாரம் என்னும் இடங்களையும் சென்று தரிசித்து ஹரித்துவாரத்திலிருந்து பத்ரிகாசிரமத்துக்கும் அங்கு நின்று காச்மீர தேசத்தில் ஸ்ரீநகருக்கும் எழுந்தருளினர். ஸ்ரீநகரில் சாரதாபீடம் என்னும் பெரிய புஸ்தகசாலையை யுடைய ஓர் சிறந்த கலைச்சங்கத்தைப் போய்ப் பார்வையிட்டுத் தாம் இயற்றிய நூல்களில் சில பிரதிகளைக் கொடுக்க அவை அங்குள்ள பண்டிதர்களால் வெகுவாக விவாதித்துப் பின்பு ஒப்புக்கொள்ளப்பட்டன.



சரஸ்வதிதேவி அவருக்குப் பிரத்தியட்சமாகி வேதாந்த சாஸ்திரத்தில் அனேக கடினமான விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்டு அவர் கூறிய விடைகளால் சந்துஷ்டியடைந்து அவருக்கு ஸ்ரீ பாஷ்யகார ரென்னும் பேரையும் ஹயக்கிரீவ மூர்த்தியையும் அருளிப் போயினர். இவ்விக்கிரஹம் மைசூரில் ஸ்ரீ பரகால மடத்தில் இன்னும் பூசிக்கப்பட்டு வருகிறது. பின்பு இராமாநுஜர் குருக்ஷேத்திரத்தின் வழியே அயோத்திக்குச்சென்று அங்கு நின்று கெயைக்குப்போய் அங்கு நின்று பங்காளத்துக்குப்போய் அதன் தெற்கிலுள்ள சுந்தர வனமென்னும் கபிலாசிரமத்தைத் தரிசிக்கும்படிச் சென்றனர். பின்பு அங்கு நின்று ஜகந்நாதத்துக்குப்போய் அங்கு நின்று கீழ்க்கரையிலுள்ள அனேக புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு கடைசியில் ஸ்ரீரங்கத்துக்குத் திரும்பி வந்தனர். இவர் இந்தேசத்தைச் சுற்றி இரண்டு முறை பிரயாணம் செய்து தமதுமதக்கொள்கைகளைப் பிரசுரித்து அனேகரைத் தமக்கு சீடர்களாக்கிக்கொண்டனர். இரண்டாவது முறை வட இந்தியாவுக்குச் சென்று வந்தபின் இவர் ஸ்ரீரங்கத்தில் நிலையாய் இருந்து அங்கு மோக்ஷத்தை படைந்தனர்.

இவர் இயற்றிய நூல்கள் ஏழு. அவையாவன:—

(1) பாதராயணரது பிரமசூத்திரத்துக்குப் பெரியதோ ருரையாகிய ஸ்ரீபாஷ்யம் என்பது. இந்நூலில் சங்கரர் முதலிய மற்றவர் மதங்களைக் கண்டித்திருக்கின்றனர். (2) வேதாந்த தீபம். (3) வேதாந்த சாரம். (4) வேதாந்த சங்கிரஹம். (5) கீதாபாஷ்யம். (6) கத்யத்திரயம் என்னும் நாராயணரைப்பற்றிய துதி. (7) நித்தியக் கிரந்தம் இவ்வேழு நூல்களில் மேலே கூறிய புத்தக சங்கத்தாருக்குக் கொடுத்தது ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த சங்கிரம், கீதா பாஷ்யம் என்னும் மூன்றுமாம்.

இவருக்கு சிஷ்யர்கள் அனேகர். ஒரு காலத்தில் ஸ்ரீரங்கத்தில் போதித்துக் கொண்டிருந்த காலையில் இவரது உபந்நியாசங்களைக் கேட்டுக்கொண்டிருந்த சிஷ்யர்களில் எழுநூறுபேர் சந்நியாசிகளும் 1200-பேர் கிரஹஸ்தர்களும் 500-பேர் பெண் துறவிகளும் அன்றிப், பைராகிகளும் சாத்தானிகள் என்று சொல்லப்படும் அனேக சூத்திர வைஷ்ணவர்களும் இருந்தார்கள்! தமது மதத்தைப் போதிப்பதற்கு ஆசாரிய புருஷர் அல்லது பீடாதிபதிகளாகத் தம் சீடர்களில் மிகவும் படித்தவர்களாகிய 74-பேரை நியமித்தார். இவர்கள் யாவரும் விவாகமானவர்கள். இவர்களது சந்ததியார்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள்ளே ஆசாரியர்களாய் இருக்கின்றார்கள். இராமாநுஜாசாரியருக்கு நெடுங்காலம் முன்னமே எலி, தட்டளை, மாடபூஷி, செட்லு, என்னும் நான்கு குடும்பத்தார்களும் ஆசாரிய புருஷர்களாக இருந்தார்கள் ஆதலால் அவர்களையும் புதிதாக நியமித்த இந்த 74-பேருடன் சேர்க்கவேண்டியதாயிற்று.

இராமாநுஜர் 120-வருஷம் ஜீவித்திருந்தார். இவர் கிறிஸ்து சகம் 1137-ஆம் வருஷத்தில் பரமபதத்துக் கெழுந்தருளினர். இவர் ஸ்ரீரங்கத்தில் மோக்ஷமடைந்தனர். இவரது சரீரம் ஸ்ரீ இரங்கநாதஸ்வாமியின் கோயிலில் ஓர் புறத்து அடக்கம் செய்யப்பட்டு அங்கு இவரது விக்கிரஹத்தை இன்றும் பூஜித்து வருகிறார்கள்.

இராமாநுஜாசாரியாரின் சீடர்களின் விவரம்.

1. வேதாந்த தேசிகர்—இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவர்.

2. பிள்ளை லோகாசாரியர்—இவரும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஸ்ரீரங்கத்தில் இருந்தவர்.

3. மணவாள மகாமுனி—இவர் 14-வது நூற்றாண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் இருந்தவர். இவர்களில் வேதாந்த தேசிகர் என்பவர் வடகலைக்கும் மற்றவர் இருவரும் தென்கலைக்கும் தலைமையானவர்கள்.

இராமாநுஜாசாரியரின் சீடர்கள் இந்த இரு
திறத்தாராகப் பிரிந்துபோயினர். வடகலை
யார் வேதம் சாஸ்திரம் ஸ்ரீ பாஷ்யம் என்னும்
நூல்களுக்கு அதிக மகிமை வைக்கிறூர்கள்.
தென்கலையார் நாலாயிரம் திருப்பாக்கள்
அடங்கிய திவ்விய பிரபந்த மென்னும் தமிழ்ப்
புத்தகங்களுக்கும், பகவத் விஷயமென்று
சொல்லப்படும் அவற்றின் வியாக்கியா
னங்களுக்கும், சமஸ்கிருத நூல்களை விட
விசேஷ மகிமை செலுத்துகின்றூர்கள். இத
ஞல் வடகலையார் திவ்வியப் பிரபந்தத்தை
ஒப்புக்கொள்வதில்லை என்றும், தென்கலையார்
சமஸ்கிருத வேதங்களைத் திரஸ்கரிக்கிறூர்க
ளென்றும் கொஞ்சமும் எண்ணக்கூடாது.
இவ்விருவகையாருடைய பேர்களுக்கும்
பெயர்ப்பொருள் கூறியதேயன்றி வேறில்லை.

திவ்வியப் பிரபந்தமாவது, ஆழ்வார்கள் என்
னும் விஷ்ணு பக்தர்களால் செய்யப்பட்ட
தோத்திரப்பாக்கள். இவ்வாழ்வார்களில் பிரா
மணர்களும் இதர ஜாதிகளும் உண்டு. இவர்
கள் இராமாநுஜர் காலத்துக்கு முந்தினவர்.
இவர்கள் விக்கிரஹங்களைத் தென்னிந்தியா
வில் விஷ்ணுவாலயங்களில் வைத்து வணங்கி
வருகிறூர்கள். இவ்வாழ்வார்களில் முதன்மை
யானவர் சடகோபர் என்பவர். இவருக்கு நம்
மாழ்வாரென்று இன்னொருபேரும் உண்டு.
இவர் ஒரு பெரிய யோகி. தாமிரவருணிதீரத்
தில், ஆழ்வார்திருநகரியில் வசித்திருந்தவர்.
இவருடைய முக்கியமான பிரபந்தம் திவ்வி
யப்பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டு ஆயிரம் பாக்
கள் அடங்கியதாகிய திருவாய்மொழி. இது
தென்கலை வடகலை ஆகிய எல்லா வைஷ்ண
வர்களாலும் வெகு மகிமையாகக் கொண்
டாப்படுகிறது. இதில் வேதாந்தத்தில் உள்ள
சாரமான அனேக கொள்கைகளும் நாராயண
ரைச் சுட்டிய அனேக தோத்திரப் பாக்களும்
அடங்கி யிருக்கின்றன.

## A View of the Ancient history of Egypt.

## எகிப்துதேசத்தின் பூர்வீக சரித்திர சங்கிரகம்.

முற்காலத்தில் எகிப்து தேசம் நமது ஆசி
யாகண்டத்தின் ஒரு பகுதியாக விருந்தமையா
லும், அதன் அரசாட்சி, சங்கங்கள், நடை,
உடைபாவனைகள் எல்லாம் ஒருவாறு கீழ்
நாட்டாரை ஒத்திருந்தமையாலும், அதன் பூர்
வசரித்திரம் இன்னதென சற்று கவனிப்
போம். இத்தேசம் ஆப்பிரிக்காவிலுள்ள
நீலநதி பாயப்பெற்று நீர்வளம், நிலவளம்
உடைய ஓர் படுகையைப்போன்றது. வடக்
கில் மத்திய தரைக்கடலும், தெற்கே பில்லித்
தீவும், யானைத்தீவுகளும், அதன் எல்லைகளாம்.
இவ்விரண்டு தீவுகளில் பூனையும், யானைகளும்
இருந்ததால் இப்பெயர்வாய்ந்ததெனக் கொள்
ளலாம். முன்னோர்கள் இந்நகரத்திற்கு க்ஷேமி
நகர் என பெயரிட்டிருக்கிறூர்கள். கிறிஸ்தவர்
ப்ராசீன வேதபுஸ்தகத்தில் மிஸ்ரமபுரி (Miz-
raim) என்று இதற்கு ஒரு நாமமுண்டு. நீல
நதி ஒன்றே இத்தேசத்து ஜனங்களுக்கு முக்
கிய ஆதாரமாயுள்ளது. பிரதி வருடமும் இந்
நதி பெருக்கெடுத்து வருவதைப்பற்றி குடிகள்
தங்கள் இல்லங்களை உயர்த்திக் கட்டிக்கொண்
டார்கள். மழை யில்லாக்காலங்களில் ஆற்று
வெள்ளத்தின் மிகுதியை பள்ளத்தாக்குகளி
லும், ஏரி, குளங்களிலும் தேக்கிக்கொள்வ
தால் தண்ணீர்க் குறைவே கிடையாது. ஆன
துபற்றி வெகு காலத்திற்குப்பிறகு இதைக்
கைப்பற்றிக்கொண்ட உரோமஜாதியார் இதை
தானியக்களஞ்சிய மெனக் கொண்டாடினூர்
கள். ஆற்றின் பெருக்கால் அனேக புலங்கள்
மூடப்பட்டுப்போம். அப்போது தண்ணீரை
வாய்க்காலின் வழியாய் விட்டுக்கொண்டு மேடு
டுப்பிரதேசங்களை சாகுபடி செய்துகொண்
டார்கள். அந்நிய தேசங்களாகிய ஆபிசீனியா,
இதோபியா, மலைசெரிந்தவைகளாதலாலும்,
பிரசண்ட குளிர்காற்றுவந்து மோதுவதாலும்



ற்றின் வெள்ளத்திற்குக் காரணமாகும்.
தைப்போல நீர்வளமுள்ள நாடு உலகிலெங்
மில்லை. இதைக்கொண்டே ஜனங்கள்
சுருக்குற்று கவலையின்றி காலங்கழித்தனர்.
ந்த பிரவாகத்திற்குப் பயந்தே அருகாமையி
ள்ள மலைகளினின்று வெட்டி எடுக்கப்பட்ட
நுங்கற்பாறைகளால் கட்டப்பட்ட கட்டடங்
ளில் வசித்தார்கள். இத்தேசத்தின் பெரு
மையையும், ஜனங்களின் ஊக்கத்தையும்
யந்து அன்னிய நாட்டாராகிய கிரேக்கர் கி.
ு. ஐந்தாம் நூற்றூண்டின் இறுதியில் வந்தி
ல வருடங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.
ஞல் ஜனங்களின் தன்மையும், நடை, உடை
ாவனையும், வேறெந்த நாட்டாரோடும் சம்பந்
ப்படாமல் அற்புதமான வைகளாய் இருந்
ன. ஏனெனில் தங்கள் நாடுதான் தாய்
கர் என்றும், தாங்கள்தான் இம்மாநிலத்து
மூலபுருஷரெனவும் எண்ணங்கொண்டிருந்
தார்கள். அவர்கள் பாஷையினின்றும் கற்கம்
ங்களிலுள்ளவைகளினின்றும் இன்ன வகுப்
ுஜனங்களெனச் சிறிது புலப்படுகிறது.
எகிப்து தேசத்திலுள்ள கிருஸ்தவர்கள் தற்
காலத்தில் பேசிக்கொண்டிருக்கும் காபதீக
பாஷையானது தங்கள் முன்னோர்களின் தேவ
பாஷையாக விருந்ததாகச் சொல்லிக்கொள்ளு
கிறூர்கள். சமஸ்கிருத பாஷையை இந்துக்க
ளும், லத்தீன்பாஷையை உரோமஜாதியாரும்
எவ்வாறு மதிக்கின்றூரோ அவ்வாறே முற்
காலத்தில் ஏகிப்தர்கள் காபதீக பாஷையை
மதித்திருந்தார்கள். இந்த பாஷையைக்
கொண்டு 'செமிடிக்' *வம்சத்தைச்சேர்ந்தவர்க
ளெனச் சொல்ல சற்று இடமுண்டேனும், இங்
தியர், ஐரோப்பா வம்சத்தாரென சொல்ல
இடமில்லை. அவர்கள் தங்களைப்பற்றி கற்
சிலைகளிலும், பிரேதங்களை சுகந்தமிட்டு காப்
பாற்றப்பட்டுவந்த கற்பேழைகளின் மீதும்
எழுதிவைத்திருக்கும் சங்கதிகளை ஆராயுங்
கால் பற்பல ஜாதியார் கலந்த ஒரு மிஸ்ரமவ
குப்பாரெனத் தோற்றுகின்றது. இந்தக் கார
ணத்தாலேயே அவர்கள் தேயத்திற்கு மிஸ்ரம
புரி என்று வந்திருக்கலாம். அவர்கள் உயர்கு
லத்தோர், இழிகுலத்தோர் என இருவகை
யாய்ப் பிரிந்திருந்தார்கள். பார்வைக்கு சுந்தர
மாயும் கல்விப்பயிற்சியடைந்து விவேகம் பூர
ணமாயுள்ளவர்கள் மேலான வகுப்புக்குரியவர்
களென்றும், அந்நிய தேசத்தாரோடு சம்பந்
தஞ்செய்துகொண்டு பொலிவிழந்து சிறிது அவ
லக்ஷணமாக கருமேனியுடையவர்கள் இழிகு
லத்தாரெனவும் விளங்குகின்றது. இவர்கள்
ஆசாரம், நடை, உடை பாவனைகள் எல்லாம்
ஒருவாறு நமது பூர்வீக இந்தியாவின் ஆரியர்க
ளின் ஆசாரத்தை ஒத்திருத்தலின் இவர்களு
டைய செல்வாக்கு வெகுதூரம் பரவி இருக்க
வேண்டுமென்றே தோற்றுகின்றது. மேலும்
இத்தேசத்தார் முகச்சாயல் ஆசியரின் முகச்
சாயலை ஒத்திருந்தது. எகிப்து தேசத்தின்
உத்தரபாகம் இதியோபியா வென்றும், தட்ச
ணபாகம் மேருவென்றும் வழங்கிவந்தன.
இங்கே குருக்களென்ற மேற்சாதிதான் அர
சாண்டு இதை ஓர் திலகம்போல் துலங்கும்
படி செய்தனர். அரசனை தாங்களே தெரிந்
தெடுத்துக்கொண்டு நீதி தவருது ஆண்டுவரு
கிறூனென்று பார்த்துவந்ததும் தவிர கொடுங்
கோன்மை செய்யத்தலைப்பட்டால் அவன்
தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் வகையை
யும் தேடி இருந்தனர். இது ஓர் பெரிய வாணி
பஞ்செய்யு மிடமாயுமிருந்தது. அரேபியா,
இந்தியா முதலிய அன்னிய தேசங்களுக்கு
தங்கள் சரக்குகளை படகிலாவது, ஒட்டகங்க
ளின்மீதாவது ஏற்றிக்கொண்டுபோய் வியாபா
ரஞ்செய்து வந்தார்கள். இதனுல் இந்தியா
ஜனங்கள் போக்கு வரவுசெய்து தங்கள் ஆசா
ரங்களையும் ஒருவாறு கற்பித்திருக்கலாமென
ஊகிக்கலாம். சிலர் இத்யோபியாவினின்
தான் இத்தேசம் நாகரிகமடைந்ததென
சொல்லுகிறூர்கள். இந்தியாவைப்போல தே
எகிப்துதேசத்தைப்பற்றி ஒரு சுதேசியாவது
எழுதவில்லை. என்றாலும் கிரேக்கர் எழு
வைத்திருக்கும் சரித்திரங்களாலும் கிருஸ்

* Semitic Race.

வர் ப்ராசீன வேதபுஸ்தகத்தாலும், சிற்பிகள் தங்கள் முழுவல்லமையுங்காட்டி கட்டியிருக்கும் சித்திரகற்சிலைகள், கல்லறைகள் இவைகளில் செதுக்கியிருக்கும் ஒருவித சங்கேத தேவபாஷையாலும் எகிப்தியரின் வரலாறு சிறிது புலப்படுகின்றது. பிரான்ஸ் தேசத்து பிரசித்திபெற்ற மன்னவனான நெபோலியன் படையெடுத்து இந்த அற்புதங்களைக் கண்ணுற்று வெளியிட்டபிறகு தான் ஏனையோர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு சங்கதிகளை நன்றாய் ஆராய்ந்தறியவேண்டுமென்கிற ஊக்கங்கொண்டார்கள். நீலநதி பாயும் தீர வாசமாகிய திபேயா பூர்வ இராஜதானி. இதில் பிரயாணிகள் கண்ணைக்கவர்ந்து விழித்தகண் விழித்தபடிபார்த்து பிரமித்து நிற்கும்வண்ணம் அளவற்ற கல்மண்டபங்கள், ஸ்தூபிகள், விசித்திரமான வேலைப்பாடமைந்த சுகந்தமிட்டு அடக்கஞ்செய்திருக்கும் பிரேதகல்லறைகள் நிறைந்திருந்தன. கொஞ்ச மையில் தூரத்தில் கர்ணாகேச, இலக்க்ஷேசர (Karnak and Luxor) என்று பெயர்படைத்த இரண்டு கோவில்கள் கருங்கற்பாறைகளால் கட்டப்பட்டிருக்கின்றன. இவைபோன்ற கோவில்கள் உலகில் எங்குமில்லை. கர்ணாகேசகோவில் மண்டபத்தில் இருபக்கத்திலும் அதி உன்னதமான கற்சிலைகள் கைதேர்ந்த சிற்பிகளும், கொத்துவேலைக்காரரும் பார்த்து இதுவும் மனிதரால்தான் அமைக்கப்பட்டதோ வென ஐயுறும்படி இருந்தன. நூற்றுக்கணக்கான கற்றூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றின் மையத்தில அமைந்துள்ள பன்னிரண்டு தூண்கள் ஒவ்வொன்றும் 6 பேர் சேர்ந்து கட்டித்தழுவினாலும் தழுவமுடியாத சுற்றளவுள்ளதும், இரண்டு பனைமரம் உயரமுள்ளதும் அவற்றின் ஒவ்வொன்றின் உச்சியில் ஏறக்குறைய நூறுபேர் ஏறி நிற்க இடமிருந்ததென்றால் அதன் பரிமாணத்தை நீங்களே கவனித்துக்கொள்ளுங்கள். நீல நதியின் மேற்குக் கரையில் "விக்ரஹபிரதேசம்" என்ற ஒரு சிங்கார இடமுண்டு. இதில் முன்னால் வைத்திருக்கும் இரண்டு சிலைகள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய இரண்டு பனைமரம் உயரமுள்ளது. இதில் ஒன்று அருணோதயமானதும் ஒரு இனிமையான பேரிரைச்சல் முன்பு போட்டுக்கொண்டிருந்ததாம். இந்த கோவில்களிலேயே இராஜாக்களின் கொலுமண்டபங்களுமிருந்தன. தேபிஸ் இராஜதானி முதற்கொண்டு ஐந்து மையில்தூரம் பூமியைச் சுரங்கமிட்டுக்கட்டிய கல்லறைகள் பல உள. இவற்றால் அக்காலத்தவரின் சரித்திரம், இல்லறவாழ்க்கை, ஜீவனோபாயங்கள், மரணாந்தரம் ஒருவன் படும் அவஸ்தைகள், எல்லாம் வெளியாகின்றன. இவ்வெழுத்துக்களைப் பார்த்தால் இன்றுதான் எழுதியதோ வென அவ்வளவு சுத்தமாயிருக்கின்றன. கிரேக்கர் எழுதிவைத்திருக்கும் சில நூல்களும் இச்சுரங்கங்களில் கிடைத்தன. தனவான்களுக்கும் ஏழைகளுக்கும் யாதொரு வேற்றுமையின்றி கல்லறைகள் சமைக்கப்பட்டன. இவை எல்லாம் கி. மு. ஆயிர வருடங்களுக்குமுன்பே சமைக்கப்பட்டனவென்றால் இவர்கள் சிற்பவேலையில் பயிற்சியடைந்தகாலம் இதற்கு முன்னரே இருந்திருக்கவேண்டுமென ஊகிக்கலாம். இவைகள் ஏற்பட்ட காலம் அறியவேண்டுமென அன்னியதேயத்து வித்வான்கள் பலவாறு முயன்றபோதிலும் முன்பு சாத்தியப்படாமல்போயிற்று. சென்ற நூற்றாண்டில் சங்கேத தேவபாஷையை மொழிபெயர்க்கும் வகையை கண்டுபிடித்தார்கள். பிராஞ்சுக்காரரோ செட்டாநகரத்தில் கண்டு எடுத்த ஒரு கற்சிலையில் மூன்று பாஷைகளில் சிலவற்றை எழுதக்கண்டார்கள். அந்த கற்சிலை லந்தன்மா நகரத்து விநோதக்காட்சி மண்டபத்தில் இன்னு மிருக்கின்றது. Dr. Young என்ற ஒரு சிறந்த பண்டிதர் இதில் எழுதியதை வாசித்தறிந்து கி. மு. 200 வருடங்களுக்குமுன்பு அது எழுதியதென்றும், அதன் சங்கேதபாஷை சில அறிகுறிகளாலும், ஒலி வேற்றுமையாலுந்தான் உணரத்தக்கதென்றும் சொல்லியிருக்கிறார். இந்த ஆதாரத்தைக்



கொண்டே பிரான்சுதேசத்துப் புலவர் 'சம்போலியன்' என்பவர் இவற்றை செவ்வையாய் வாசித்து பொருள் உணரும் வழியைக்கண்டுபிடித்தார். பரிசோதித்துப் பார்த்தளவில் இக்கற்சிலைகளைக் கட்டின அரசர்களின் வரலாறும், பாவலர்கள் இவர்களைப்பற்றிப் புகழ்ந்து பாடிய பாக்களுமேயல்லாமல் சமயநூலாவது, சாஸ்திரங்களாவது, சரித்திரமாவது அவற்றில் எழுதக்காணோம். என்றாலும் இவற்றால் அரசாண்ட மன்னர்களின் பெயரும், காலமும், வெற்றிகளும் நன்கு விளங்குகின்றன. பூர்வத்தில் எகிப்து தேசத்தில் நமது தேசத்தைப்போலவே வர்ணாச்ரம தர்மங்கள் ஏற்பட்டு பிரபலமாயிருந்தன. சரித்திரக்காரர்களில் Strabo என்பவர் இவர்களை ஆசாரியர், பொருநர் என்றும், Diodorus என்பவர் யாதவர், வைசியர், சிற்பிகள் என்றும், Herodotus என்பவர் யர்தவர், பண்டிதர், வைசியர், மாலுமிகள், வராகபாலர் (பன்றி ஓட்டர்கள்) என்ற 5 ஜாதியாராகவும் பிரித்திருந்தபோதிலும் ஆசாரியர், பொருநர் தான் மேலான வகுப்பாரெனச் சொல்லுகிறார்கள். ஆகவே இந்தியாவின் வருணபேதத்தை நன்றாய் ஒத்திருக்கிறதெனத் தெளிவாகின்றது. மேற்சொன்ன மேல்வகுப்பார்தான் சிம்மாசனாதிபர்களாயிருந்தனர். பொருநரில் எவனாவது அரசனாக நேமிக்கப்பட்டால் அவனை ஆசாரிய கருமங்களைச் செய்ய யோக்யனாக்க ஓர்வித சடங்கை ஏற்படுத்தியிருந்தார்கள். அரசன் அதிகாரத்திற்கு எல்லை இல்லை. சனங்கள் அவனை தெய்வமாகக்கருதி மேன்மை பாராட்டினார்கள். அரசனும் அனுச்ரிக்கவேண்டிய பலவித நிர்ப்பந்தங்களுக்குள் முக்கியமாய் அவன் இன்ன காலக்ஷேபந்தான் செய்யவேண்டுமென்றும், இன்னதுதான் புசிக்கவேண்டுமென்றும் விதி கண்டிப்பாய் இருந்தது. ஆசாரியர்கள் மந்திரிகளாக இருந்துகொண்டு கொடுங்கோன்மை இயற்றாமல் அரசாளச்செய்துவந்தனர். இதனால் மேல்வகுப்பாருள் சிற்சில சமயங்களில் மனஸ்தாபங்கள் உண்டாயிற்று. ஆசாரியர்களுக்குள் ஏற்றத்தாழ்வு உண்டு. பெரிய தேவஸ்தானாதிபர்களுக்கு சில்லரை தேவஸ்தானாதிபர்களைக் காட்டிலும் மரியாதை அதிகம். படித்தவர்கள் இவர்களாதலின் பற்பல தொழிலைச்செய்து வந்தார்கள். ஆதலின் சர்க்கார் உத்யோகஸ்தர், வக்கீல்கள், வித்வான்கள், வைத்தியர்கள், சிற்பிகள், முதலானவர்களாயிருந்து வேலைபார்த்தவரும் இவர்களே. இவர்கள் மிதமாய் புசிக்கவும், குடிக்கவும் வேண்டுமென்றும் ஒரேதாரத்தைத்தான் மணம்புரியவேண்டுமென்றும் விதி உண்டு. இதனால் ஏனையோர்கள் பல பெண்களை விவாகஞ்செய்துகொண்டதாகத் தெரிகின்றது. மேல்வகுப்பாருக்கு மானியங்கள் விடப்பட்டதுமல்லாமல் சர்க்கார் செலவிலேயே அன்னபானாதிகள் நடந்தேறிவந்தன. சுமார் 4,10,000 பேர் அடங்கிய காப்புச் சேனையில் உள்ள பல பொருநர்களுக்கும் மானியங்கள் ஏற்பட்டிருந்தன. போர்த்தொழிலை விசேஷமாய்ப் பயின்று அதில் மிக்க வல்லவராயிருந்தனர். அன்னியதேசத்தாரோடு சண்டைசெய்து தங்கள் தேசத்தைப் பலமுறை பாதுகாத்த அரசர்களின் வெற்றியைக்குறித்து புகழ்ந்திருக்கிறார்கள். பெண்பாலாரும் அரசுபுரிந்து கீர்த்தியடைந்திருந்தனர். முற்றுகைப்போட்டு ஒரு பட்டணத்தை பிடிப்பதில் இவர்கள் செய்யும் சாகசங்கள் மிக விநோதமெனத் தெரிகின்றது. முக்கியமாய் குருக்கள் என்ற ஜாதிதான் அரசுபுரிந்துவந்தனர். முன்பு எகிப்து கடவுளாலும், பிறகு தேவதைகளாலும் அதற்குப் பிறகுதான் மனிதர்களால் அரசாளப்பட்டதென எண்ணங்கொண்டிருந்தார்கள். மரணதண்டனையானது கொலைசெய்தவர்கள், பொய்ச் சத்தியம் பண்ணினவர், புரட்டுச் செய்தவர்கள், அக்கிரமமான வாணிபஞ்செய்தவர்கள், ஆகிய இவர்கள்மேல் விதிக்கப்பட்டிருந்தது. பயங்காளிகளையும், யுத்தத்தில் முதுகுகாட்டி ஓடினவர்களையும் மிகவும் அவமதித்து இகழ்ந்தார்கள். அந்நியதேசத்தார் இங்கேவந்து வியாபாரம்

செய்தார்களே ஒழிய தாங்கள் வெளியூர்களுக்குப் போகவில்லை. தீபேயாநகரத்தில் சின தேசத்துப் பாத்திரங்கள் இருந்ததற்கு அந்த பாஷையிலேயே எழுதின கற்கம்பங்கள் சில உள. பிரதேசத்தாரைச் சிறிதும் மதிக்காமற் போனதற்குக் காரணம் அவர்களுடைய விசித்திரமான நடவடிக்கைகளும், கோட்பாடுகளும், பலவித நிர்ப்பந்தங்களுமென ஊகிக்கலாம். வேளாண்மை, ஆடு மாடு மேய்த்தல், அம்பும் வில்லுமாய் வேட்டையாடுதல், மீன் பறவை முதலியவைகளைப்பிடித்தல், தச்சுவேலை, சிற்பவேலை, தட்டாரவேலை, நெசவு தொழில், சித்திரமெழுதல், இன்னும் இவைபோன்ற பலவித தொழில்களைச் செய்ததாக கற்கம்பங்களில் வெகு விசித்திரமாய் காட்டப்பட்டிருக்கின்றனவே ஒழிய வேறேதாவது பழைய கிரந்தங்கள் உண்டோவென்று சந்தேகிக்க இடம் காணோம். நீல நதிக்கரையில் நாணலைப் போன்ற ஓர் வகைச்செடி அபரிமிதமாய் வளர்ந்திருந்தன. அதன் கிழங்கை விறகாகவும், இலைகளை காகிதங்களாகவும் உபயோகித்தார்கள். இரசாயனசாஸ்திரம் சிறிதளவு தெரிந்திருந்தது. இவற்றை எல்லாம் பார்க்குமளவில் நாகரிகத்தில் சிறந்தவர் எனக் கொள்ளல்வேண்டும். தர்பார் மண்டபங்களில் அனைவரும் தங்கள் பெண்பாலாரோடு சேர்ந்து, நாட்டியப் பெண்களை நடனமாடச்செய்தும், வித்வான்களை வரவழைத்து பாட்டுக்கச்சேரி வைத்தும், உல்லாசமாய்க் காலங்கழிப்பதும் உண்டு, மதுபானம்செய்யும் வழக்கமும் இவர்களிடம் இருந்தது. மனிதரின் ஆயுள் சொற்பமென்றும், ஆதலால் உலக இன்பங்களை ஒருவன் அநுபவிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தும் பொருட்டு ஒரு பிணத்தின் தலையை கூடியிருக்கும் அதிதிகளுக்குக் காண்பிப்பது வழக்கம். கடவுள் ஆராதனையின்றி ஒரு காரியமும்செய்யத் தொடங்குகிறதில்லை. அவர்கள் பிருதுவியை வணங்கினார்கள். மிருகஜாதிகளில் மிகவும் உபயோகமுள்ளவைகளைத்தான் தெய்வமாக பாவித்துப் போற்றிவந்தார்கள். அமரேசன் என்ற இந்துக்கள் தெய்வம்போல 'அமன்' என்ற ஒரு தெய்வத்தை நம் பிதாமகனைப்போன்ற பிதா வென்ற தெய்வத்தையும் வணங்கினார்கள். எருது, நாய், பூனை, வல்லூறு இவற்றை எகிப்திலும், தீபேயா நகரத்தில் ஆட்டையும், மெந்திய நகரத்தில் வெள்ளாட்டையும், இலகுபோலியில் ஓநாயையும், இலையாண்டோ போலியில் சிங்கத்தையும், அத்ரிபேசாவில் சுண்டெலியையும் வணங்கிவந்தார்கள். யாராவது இவற்றைத் தெரிந்து கொன்றால் மரணதண்டனைக் காளாவார்கள். தற்செயலாய் இவைகளைக்கொன்றால் ஒரு பெரிய அபராதம்கொடுத்துத் தப்பலாம். ஒரு பட்டணத்தில் வணங்கிவரும் மிருகங்களை வேறொரு பட்டணத்தில் வசிப்போர் மதிக்காமலும் இருப்பார்கள். இதனால் கலகங்களும் உண்டாவது உண்டு. உரோம, கிரேக்க ஜாதியார் அரசாண்டகாலத்திலும் ஜனங்கள் இந்த வழக்கத்தை விடாமல் இருந்ததினால் அவர்கள் இதை கேலிக்கிடமாக வைத்திருந்தார்கள். ஒரு வீட்டில் ஒரு பூனை இறந்துபோனால் அதில் உள்ளவர்களெல்லாம் தங்கள் புருவங்களை சிரைத்துக்கொள்ளவேண்டுமென்றும், ஒரு நாய் செத்துப்போனால் ஆடவர்கள் சர்வாங்கக்ஷவரம் செய்துகொள்ளவேண்டுமென்றும் கண்டிப்பான ஏற்பாடு இருந்தது. இதைக் கேட்க யார்தான் நகையார்கள். மேலும் இச்சவங்களை வாசனைப்பெட்டிகளில்வைத்து மனிதர்களைப்போலவே கல்லறைகளில் வைப்பதுண்டு. மிருகங்களில் நந்திகேஸ்வரனைப் போன்ற ஒருவகை இடபத்தை (எருது) ஆராதித்தார்கள். இவ்வெருது கருப்பாயும், நெற்றியில் முக்கோணவடிவுள்ள வெள்ளைப் புள்ளியுடையதாயும், கழுத்து கழுகுப்போலவும், இருந்தால்தான் பூஜைக்கருகமென்றும், அதை வளர்த்துவரும் பூசாரிக்கு ஆருடஞ்சொல்லும் சக்தி தானாகவே அமையுமென்றும் நம்பியிருந்தனர். இந்த எருதை 25-வருடங்களுக்குமேல் வைக்கிறதில்லை. அதற்குள் இறந்துபோனால் அவ்வூராரெல்லாம் [illegible]



கோலங்கொண்டு மயானம் குறுகி உத்தரக்கிரியைகளை வெகு ஆடம்பரத்துடன் நடத்தி வந்தார்கள். மேற்சொன்ன அடையாளங்களமைந்த வேறொரு எருது கிடைக்கிறவரையில் ஒப்பாரியிட்டு தினமும் அழுவார்கள். அது அகப்பட்டதும் அடக்கமுடியா ஆனந்தங்கொள்வார்கள். செத்த எருதின் ஆவி இதனுள் பிரவேசிக்கிறதாக நம்பினார்கள். இதனால் மறுஜன்மம் உண்டென்று தோற்றுகின்றது. ஒருவன் மரித்தபிறகு அவனுக்கு அந்த மானிட ஜன்மமே வரவேண்டுமானால் மூவாயிரம் வருடம் தரை, கடல், ஆகாயம், இவற்றில் வசிக்கும் பலவித ஜீவராசிகளுள் பிறந்துழலவேண்டுமென்று, ஒரு கிரேக்க சரித்திரக்காரர் சொல்லியிருக்கிறார். யமபுரம் போல அவர்கட்கும் யமந்தி (Amenthi) என்ற ஓர் பட்டணமும் அங்கே குற்றத்திற்குத் தக்கவாறு தண்டனை விதிக்கப்படுகிறதென்றும் நம்பிக்கையுண்டு. ஒரு கற்சிலையில் யமன் ஒரு கையில் திராசுத்தட்டுகளை ஏந்தி தீர்ப்புச் சொல்லுகிறதாகக் காட்டியிருக்கிறது. ஒருவன் இறந்துபோனாலும் அவனை பிரதிவாதியாகச் சேர்த்து பிராதுசெய்யலாம். இறந்துபோனவன் ஒரு குற்றவாளியாக ஏற்பட்டால் அவனுக்கு யாதொரு உத்தரக்கிரியைகளை நடத்தக்கூடாதென்றும் இவ்வளவுகாலம் அச்சவத்தை புதைக்கக்கூடாதென்றும், விதி இருந்தது. இதனால் அரசர்கள் கொடுங்கோன்மை புரியாமல் செவ்வையாய் அரசாண்டதற்கு ஒரு காரணமாகும். இத்தேயத்தவர்கள் கல்லறைசமைப்பதில் தங்கள் அந்தஸ்துக்கு மீறியே செலவுசெய்தார்கள். இதற்கு இடையூறு ஏதேனும் நேர்ந்தால் அதை ஒரு கெட்ட சகுனமாக எண்ணி பரிதவிப்பார்கள். பிணத்தை ஆடையாபரணங்களால் அலங்கரித்து ஒரு பெட்டிக்குள்வைத்து அதன்மேல் தங்கள் தேவபாஷையில் சிலவற்றை அதைப் பற்றி சிறப்பித்து எழுதுவதுண்டு. இவ்வாறு செய்தால்தான் ஆன்மா மரிக்கிறதில்லையென நம்பினார்கள். இந்துக்களுக்கு சாரதா என்ற தெய்வம் படிப்புக்கு எவ்வாறோ அவ்வாறே இவர்களுக்கு 'தாத்' என்ற தெய்வம் வழங்கிற்று. இந்த தெய்வம் கணிதம், க்ஷேத்திர கணிதம் (Geometry) வான சாஸ்திரம், லிபி சாஸ்திரம், இவற்றைக் கற்பித்துப்போனதாக எண்ணினார்கள். ஆற்றின்வெள்ளத்தால் மண் மேடிட்டு புலங்களின் எல்லை அறிவது வருத்தம். அதனால் க்ஷேத்திர கணிதம், வானசாஸ்திரம் இவ்விரண்டையும் கற்கவேண்டியது அவசியமாயிருந்தது. எந்த வித்தையையும் அபிவிர்த்திசெய்யாமல் பூர்வ ஸ்திதியிலேயே வைத்துக் காப்பாற்றினார்கள். தங்கள் வைத்திய நூலில் சொல்லியிராத ஏதாவதொரு விஷயத்தை ஒருவன் பிறதேயத்தாரிடம் பயின்று அதை ஒரு நோயாளிக்கு உபயோகித்து அதனால் அவன் இறந்துபோனால் வைத்தியனையும் மரணதண்டனைக்கு ஆளாக்கினார்கள். லிபி சாஸ்திரத்தை இவர்கள்தான் முதலில் கண்டுபிடித்தார்கள். ஏனெனில் பூர்வீக ஹிப்ரு, பினீஷியன், பாஷைகளின் எழுத்துக்கள் இந்த ஆதாரத்தைக்கொண்டே கண்டுபிடிக்கப்பட்டன. பிரசங்கம், செய்யுட்பாடம் என்பதே அவர்கள் அறியார்கள். சங்கீதவித்தையில் சிறிதுதான் தேர்ச்சியடைந்திருந்தார்கள். தம்பூர், வீணை, மிருதங்கம், கைத்தாளம், முதலியவற்றை உபயோகித்தார்கள். ஆனால் பிறநாட்டார் எக்காலத்தும் பார்த்து வியந்து பிரமிக்கும் வண்ணம் சிற்பவேலையிலும் சித்திரவேலையிலும், வெகு நிபுணராயிருந்தனரென்பது அவர்கள் கட்டிய அதி உன்னதமும், பிரம்மாண்டமுமான கற்சிலைகள், கற்கோபுரங்களைக்கொண்டே தெரிகின்றது. சிபீசக்ரவர்த்தி சுமார் 450-அடி உயரமும், அடிவாரத்தண்டை 716-அடி அகலமுமுள்ள ஒரு கோபுரத்தைக்கட்டி முடித்தார். இவ்வித உயரமான கட்டடங்கள் ஐரோப்பாவில் இருந்தபோதிலும் இத்தன்மையான பிரம்மாண்டபரிமாணத்தையுடையவைகள் கிடையா. இவற்றில் பதித்துவைத்திருந்த பல வர்ணக்கற்களை அராபியர் பேர்த்துக்கொண்டு போய்விட்ட

தால் அதில் உள்ள சித்திரங்களும் அழிந்து போயிருக்கின்றன. இந்த கோபுரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமாதியிருக்க ஐரோப்பியர் கண்டதால் இவைகள் எல்லாம் முன்பு கல்லறைகளாகத்தான் இருந்திருக்கவேண்டுமெனச் சொல்லுகிறார்கள். இக்கட்டடங்களில் அமைக்கப்பட்ட மனித உருவங்களைக்காட்டிலும் மிருக உருவங்கள் மிகவும் நேர்த்தியாகவிருந்தன. தெய்வச் சிலைகளெல்லாம் மானிட சரீரமுடையதும் மிருகங்களின் முகமுடையதாகவும் இருந்தன. முக்கியமாய் செம்மறிக்கடா, வல்லூறு, எருது, இவைகளின் முகத்தைத்தான் தெய்வத்திற்கு அமைத்திருந்தார்கள். பெரிய விக்ரஹங்களுக்கு சிங்கத்தின் உடம்பும், மனிதரின் தலையுமிருந்தன. Herodotus, Diodorus என்ற கிரேக்க சரித்திர வித்வான்கள் தங்கள் தேசத்தைவிட்டு எகிப்து சரித்திரம் எழுத இங்கே சில வருடங்கள் இருந்து ஆசாரியர் மூலமாய் சங்கதிகள் தெரிந்து எழுதியிருந்தபோதிலும் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லவில்லையெனத் தெரிகின்றது. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தேசத்தை அரசாண்ட "டாலமி பிலடல்பஸ்" என்பவன் 'ஹெலியோபோலிஸில்' வசித்த "மானதி" என்ற ஒரு எகிப்து ஆசாரியப்புலவரை கிரேக்பாஷையில் ஒரு சரித்திரம் எழுதும்படி வேண்டிக்கொள்ளவே அவர் அதிக சிரத்தையுடன் எழுதாமற்போனபோதிலும், கற்கம்பங்களில் தேவபாஷையில் உள்ளவைகளை ஒப்பிட்டு பார்த்தளவில் இரண்டும் ஒத்திருந்தமையால் உண்மையெனவே கொள்ளல்வேண்டும். இவர் இந்த எகிப்து தேசம் கி. மு. 3892-ல் மனு (Menes) என்பவனால் நிர்மாணஞ் செய்யப்பட்டதெனச் சொல்லியிருக்கிறார். இதில் முறையே பூர்வீக ராஜாக்கள், பாரசீகர், கிரேக்கர், உரோமஜாதியார் அரசாண்டார்கள். இதில் ஆண்ட சுதேச ராஜாக்களில் சிலரைப்பற்றி எழுதுவோம். '[illegible]' என்ற [illegible] அரசன் ஆசியா [illegible] படையெடுத்து அவற்றைக் கைவசப்படுத்திக்கொண்டான். "[illegible] சன்" என்ற அரசன் காலத்தில் அர[illegible] இந்த நாட்டை கைவசப்படுத்தி, ஜன[illegible] அடிமைகளாக்கி கோவில்களையும், பட்ட[illegible] களையும், எரித்துவிட்டுப்போனார்கள். கி. [illegible] 712-ல் அரசாண்ட சேதாஸ் என்பவன் கா[illegible] தில் Sennacrib (சென்னகிரிப்) என்ற [illegible] யாதேசத்து பிரசித்திபெற்ற போர்வீரன் [illegible] வன் படையெடுத்துவந்ததாயும், அ[illegible] எதிர்க்கத் தன் சேனை உதவி செய்யாத[illegible] சேதாஸ் இரவில் தான் கண்ட கனவின்[illegible] வர்த்தகர்கள், தொழிலாளிகள், இன்னு[illegible] சாதாரண ஜனங்களைக்கொண்டு ஒரு சே[illegible] யைச்சேர்த்தான், ஆனால் தெய்வானுகூ[illegible] தால் எதிரியின் அம்பு, வில், கேடயங்கள் [illegible] லானவைகளை நடுசாமத்தில் சுண்டெலி[illegible] கூட்டமாய்வந்து தங்கள் பற்களால் கெடு[illegible] விட்டுப்போனதால் 'சென்னகிரிப்' சே[illegible] இருந்த இடம்தெரியாமல் மறுநாட் காலை[illegible] சிதறிப்போயின. மேற்சொன்ன சுதேசராஜ[illegible] கள் ஆண்டபின் எகிப்து தேசம் பார்சிக[illegible] லும், கிரேக்காலும், உரோமஜாதியாரா[illegible] ஆளப்பட்டு வெகு நாகரிகமடைந்து [illegible] காலத்தில் உலகத்திற்கே ஒரு நடுநாயகம[illegible] விளங்கிற்று.

எ. கே. சிவராமய்யர்.

## COAL.

## நிலக்கரி.

நிலக்கரி யென்பது அடுப்புக்கரி போ[illegible] ஒருவிதமான கரியேயாகும். ஆயினும் இ[illegible] அடுப்புக்கரிபோலன்றிச் சிறிது இதர [illegible] தங்களோடு கலந்திருக்கும். செ[illegible] துக்கு முன்னே பூமிக்குள்ளேயாதோ கார[illegible] தினால் புதைந்துபோன மரங்களும் செ[illegible] களுமே இப்போது நிலக்கரியாகக் காண[illegible] கின்றன. இது பூமிக்குள் மிகவும் படை படை[illegible] யாக ஒன்றன்மேலொன்றாய் அமைந்திருக்[illegible]



நிலக்கரி, மரங்களும் செடிகளும் புதைந்துபட்டுப்போய் உண்டானதே யென்பதற்கு அநேக நியாயங்கள் இருக்கின்றன. நாம் நிலக்கரிக்கனிகளுக்குள்ளே போய்ப்பார்த்தால் அங்கு சுரங்கங்களின் பக்கங்களிலும் மேற்பாகத்தும் இலைகள் செடிகள் முதலியவற்றின் சுவடுகளை நன்றாகக்காணலாம். அன்றியும் ஒரு துணுக்கு நிலக்கரியை யெடுத்துச் சுரண்டிப்பார்ப்பினும் அதிலும்கூட இச்சுவடுகள் காணப்படும்.

நிலக்கரியிற் சேர்ந்திருக்கும் பொருள்களில் முக்கியமானது. கார்பன் என்னும் கரிப்பதார்த்தமே. இது தவிர ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், நைட்ரஜன் என்னும் மூவகையான வாயு பதார்த்தங்களும் சில உலோக பாதார்த்தங்களும் கலந்திருக்கும்.

நிலக்கரியில் கார்பனென்னும் கரிப்பதார்த்தம் கலந்திருப்பதைக்காட்ட ஒரு துணுக்கு நிலக்கரியையெடுத்து வாய்திறந்த ஒரு பாத்திரத்திலிட்டுக் கொளுத்திவிட்டுப் பின்பு அதில் சுண்ணாம்புத் தண்ணீரை விட்டால் அச்சுண்ணாம்புநீர் உடனே பால் நிறமாக மாறும். இதனால் அதில் கார்போனிக் ஆஸிட் என்னும் கரிகலந்த வாயு உண்டாயிற்றென்று புலப்படும். இவ்வாயு கார்பன் என்னும் கரிப்பதார்த்தமும் ஆக்ஸிஜன் என்னும் வாயுப்பதார்த்தமும் கலந்து உண்டாவதாகும்.

நிலக்கரியிற் பற்பல பேதங்களுண்டு. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. ஒன்று மிகவும் கடினமானது. மற்றொன்று மிகவும் மேன்மையானது. இந்தக் கெட்டிக்கரிக்கு அந்த்ரசைட் (Anthracite) என்று பெயர். இது இரும்புபோலக் கருப்புவருணமாய்க் கொஞ்சம் உலோகஜாதியின் பிரகாசமும் உள்ளது. இதில் நெருப்பு இலகுவில் பிடிக்காது. எரியும்போது ஜ்வாலையும் சொற்பமாகவே யுண்டாகும். புகையுமேயாட்டாது. இதில் 100-ல் 90 பாகம் கரிப்பதார்த்தமேயாம். வாயுவஸ்துக்கள் விசேஷமாகவில்லை. இக்கரி நீராவியந்திரங்களை முடுக்குவதற்கும் உலோகங்களை யுருக்குவதற்கும் அதிக காங்கை வேண்டிவருதலினால் அக்காரியங்களுக்கு விசேஷமாக உபயோகிக்கப்படும்.

மிருதுவான வகைக்கு கீல்கரி (Bituminous Coal) என்று பெயர். இதில் கரிப்பதார்த்தம் நூற்றில் எழுபத்தொன்பது பாகம்தானுள்ளது. அது திறந்த வெளியான இடங்களில்கூட முழுதும் எரிந்துபோகாது. இது நிலக்கரிவாயு (Coal gas) உண்டுபண்ணுவதற்கு விசேஷமாக உபயோகிக்கப்படும்.

நிலக்கரியைக் காற்றோட்டமான திறந்த விடங்களில் எரித்தால் அதிற் சேர்ந்திருக்கும் பொருள்கள் அநேகமாக ஆகாயவாயுவிலுள்ள ஆக்ஸிஜனோடு கலந்துபோம். சிற்சில பொருள்கள்தான் அப்படிக் கலவாமற் சேஷித்துச் சாம்பலாய்த்தங்கும். இச்சாம்பலில் உப்பும் மண்ணும் கலந்திருக்கும்.

நிலக்கரியை வாய்மூடின பாத்திரத்திலிட்டெரித்தால் அதன் பாகங்கள் ஒன்றைவிட்டொன்று பிரிந்துகலந்து நிலக்கரிவாயு (Coal gas) முதலிய பதார்த்தங்களாகும். இந்நிலக்கரி மிகவும் உபயோகமானது. நிலக்கரியைப் பொடித்து கெட்டியான இரும்புக்கொப்பரைகளில் போட்டுச் சந்தில்லாமல் மூடி அவற்றின் கீழெரியிட்டு அக்கொப்பரைகளினின்றும் குழாய்களூடே இவ்வாயுவைச் சேர்ப்பார்கள். இவ்வாயுவில் அநேக வாயுபேதங்கள் சேர்ந்திருக்கும். அவற்றுள் சில ஒளியும் சில உஷ்ணமும் கொடுக்கும். இவ்வாயுவுக்குச் சுத்தமாயிருக்கும்போது நிறம் நெடியில்லாமையால் கண்ணுக்குத் தோன்றாது. வாசனையும் சிறிது இருக்கும். இது மிகவும் இலேசானது. ஆகாயவாயுவைவிட [illegible] இலேசானது. ஆதலால் இது பலூன் (Balloon) என்னும் ஆகாயகமனம் செய்யும்வாகனத்துக்கு உபயோகிக்கப்படும். நெருப்பைக் கண்டால் புஸ்ஸென்று பற்றிக்கொள்ளும். இது எண்ணெய் போலொளிதந்தெரியுமாதலால் இதை

இப்போது அநேக பட்டணங்களில் வீதிகள் கூட்டங்கள் முதலிய இடங்களுக்கு விளக்குப் போட உபயோகிக்கிறார்கள். நிலக்கரியில் உள்ள கார்பன் ஹைட்ரஜன் என்னும் வஸ்துக்கள் இந்தக்கரி வாயுவிலும் உண்டு.

நிலக்கரிச் சுரங்கங்களில் முற்காலங்களில் அடிக்கடி நெருப்புப்பற்றி வெடித்து அநேக சேதங்கள் உண்டாவதுண்டு. இதற்குக் காரணமென்னெனில் இச்சுரங்கங்களின் வெடிப்புகளிலிருந்து சதுப்புவாயு என்று ஒருவிதமான வாயு விஸ்தாரமாக உண்டாகும். இதன் பத்துமடங்குகொண்ட ஆகாயவாயுவோடாயினும் இருமடங்குகொண்ட ஆக்ஸிஜன் என்னும் பிராண வாயுவோடாயினும் சேருமாயின் துப்பாக்கி மருந்துபோல வெடிக்கும் சுபாவத்தைப்பெறும். அச்சுரங்கங்களில் வேலைசெய்யும் வேலையாட்கள் உபயோகிக்கும் விளக்குத்தீயால் நெருப்புப்பற்றிப் பயங்கரமாகவெடித்து அநேகருக்கு மரணத்துக்குக் காரணமாகும். இவ்விதமான கொடிய அபாயங்கள் பின்பு டேவி (Davy) என்பவர் நிருமித்த ஒருவகைச்சூக்ஷ்ம தீபத்தினால் நிவிர்த்திசெய்யப்பட்டன. இத்தீபம் சாதாரணமான எண்ணெய்விட்டெரிக்கும் விளக்கேயாம். ஆயினும் காற்றுத்திறப்பாய்விடப்படாமல் நுண்ணிய கம்பிகளால் வஸ்திரம்போலச் செய்த ஒருவகைக் கம்பிவஸ்திரத்தைக் குழாயாகச்செய்து அக்குழாய்க்குள்ளே வைத்து மூடப்பட்டிருக்கும். இக்கம்பிக்குழாய் விளக்கின் ஜ்வாலையை வெளிவிடாமல் தனக்குள் அடக்கிக்கொள்ளும் சுபாவமுடையது. அதனால் இத்தீபச்சுவாலையால் நெருப்புப் பிடிக்க வழியில்லை. தீபமும் கம்பிச் சந்துகளூடே வெளிச்சம் கொடுத்துப் பிரகாசிக்கும். இது சொற்பயுக்தியானாலும் இதனால் எவ்வளவோ ஜனங்கள் கொடிய ஆபத்தினின்று காக்கப்படுகிறார்கள்.

இங்கிலாந்தின் பெருஞ் செல்வத்துக்குக் காரணமாயிருப்பவைகளுள் நிலக்கரியும் ஒன்று. இது அத்தேயத்தில் அபரிமிதமாக எடுக்கப்பட்டு அத்தேயத்தாரால் சொந்தக்காரியங்களுக்கு உபயோகப்படு கொள்ளப்படுவதன்றிப் பிறதேசங்களு விஸ்தாரமாக ஏற்றுமதி செய்யப்படுகி ஐரோப்பா கண்டத்தில் உபயோகிக்கப் நிலக்கரியில் முக்கால்வாசியும் இங்கில விருந்தே போகிறது. இது அங்கு மே கூறியபடி நீராவி யந்திரங்களை முடுக்குவதற் செம்பு முதலிய உலோகங்களை உருக் தற்கும் மாத்திரமேயன்றி மற்றச் சமை முதலிய நித்தியவிர்த்தி கிருகக்கிருத்தி களும் நாம் இங்கு விறகு உபயோகப்படு வதுபோல உபயோகிக்கப்படும். யந்தி முதலானவைகளில் அநேகம் நிலக்கரியில் மற்போனால் பிரயோசனம் அற்றுப் போ பிரபஞ்சத்திலுள்ள பிரதானமான நிலக் கனிகளில் இரண்டு இங்கிலாந்திலிருக்கின் அக்கனிகள் சமுத்திரத்தின்கீழ் நெடுந் பூமிக்குள் வெட்டப்பட்டிருக்கின்றன. சுரங்கங்களின் மேலுள்ள சமுத்திரத் பெரிய கப்பல்கள் பாய்விரித்து ஓடும். இ யாவிலும் நிலக்கரி பற்பல விடங்களில் வெ யெடுக்கப்படுகின்றது. பங்காளத்தில் 'ர கஞ்சிலும்' 'பண்டல்கண்டிலும்,' மத்திய ணங்களிலும், நிஜாம் இராஜ்யத்திலும், ஸாமிலும் வேறிடங்களிலும் இது விசேஷம காணப்படுகிறது. சில வருஷங்களு முன்னே நம் தேயத்தில் இருப்புப்பா புகைவண்டிகளுக்கும், கைத்தொழில் செ இடங்களில் எந்திரங்களுக்கும் வேண் நிலக்கரி இங்கிலாந்திலிருந்தாயினும், ஔ ரேலியா, ஜப்பான் முதலான தேசங்களி தாயினும் தருவித்துக்கொள்ள வேண்டி யிருந்தது. இப்போது பங்காளம், முதலிய கனிகளிலிருந்து வருஷம் ஒன் (35,37,000) 35-லக்ஷத்து 37-ஆயிரம் நிறையுள்ள நிலக்கரி வெட்டி யெடுக்கப் றது. இக்கரி இத்தேயத்தில் வேண்டிய வருக்கும் போதுவதேயன்றி அயல்தே ளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.



முழுவதிலும் ஒரு வருஷத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி 50-கோடிப்பாரமாகு மென்று மதிக்கிறார்கள் இங்கிலாந்தில் மாத்திரம் ஏறக்குறைய முப்பதுகோடி யெடுக்கப்படுகின்றது

## பாரத சாரம்.*

வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்னும் பெரியநூற் பிரிவுகளில் பாரத மென்ற இதிகாசம் உலகத்திலுள்ள அரிய பெரிய கிரந்தங்களுள் தலைமை பெற்றதாகும். "பாரதః பஞ்சமோ வேதః" என்று இதை வேதத்தோடுசேர்த்து ஐந்தாவது வேதமென வழங்குதலால் இதன் பெருமை நன்குவிளங்கும்.

ஒருவனைப்பார்த்து "நீ வாய்மையே வழங்கல்வேண்டும்," என்று சொல்வதைவிட அரிச்சந்திரனைப்போல் சத்தியத்தில் நின்றவர்களைப் பற்றியும், அதனால் அவர்களுக்கு வந்த நற்கதியைக்குறித்தும் வற்புறுத்துகிற கதையைச் சொல்லியும்; "நீ பொய் சொல்லலாகாது" என்று சொல்வதைவிட தருமராஜனைப்போல் ஒரு பொய் சொன்னதினால் நேர்ந்த தீமையைக்குறித்து வற்புறுத்துகிற கதையைச் சொல்லியும் போதிப்பதானது சிரேஷ்டமானதென வுணர்ந்த நமது கவி சிரேஷ்டராகிய வியாசர் மானிடஜன்ம மெடுத்தவர்களுக்கு இன்றியமையாத மகா பாரதத்தை எழுதினார். இது நாம் எப்படி நடத்தல்வேண்டுமென்பதை நன்றா யெடுத்துக்காட்டி நீதியைப் போதிக்கும் குருவைப்போன்றுளது. குழந்தை, புதல்வன், புதல்வி, தம்பி, தமயன், தாய், தகப்பன் என்னும் நிலைமையிற் செய்யவேண்டுவனவற்றை கம்பீரமாயும் மனோகரமாயு மெடுத்துக் கூறுகின்றன. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தாரும், இவருட் சேராத பஞ்சமர்களும் நாடோறும் நடந்துகொண்டுவரவேண்டிய மார்க்கங்களும் இதில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இப்படியே மாதா பிதாக்களிடத்திலும், குருவினிடத்திலும், ஈசுவரரிடத்திலும் காட்டவேண்டிய பக்தி, சகோதரரிடத்தில் அன்பு, பதிவிரதா தருமம், பெரியோர்களிடத்தில் மரியாதை, விருந்தோம்பல், செய் நன்றியறிதல், செங்கோன்முறைமை, முதலிய பல சிறந்த நீதிகளை நன்கு புலப்படுத்துகின்றது. நன்னடக்கைக் குறிப விதிகளைமாத்திரம் எடுத்தெழுதியிருப்பின் அதனுண்மை அவ்வளவு நன்றாய் விளங்குவதரிது. அதைப்பார்ப்பவரிற் பலர்,

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்."

என்னுந் தேவர் குறளை எண்ணி, "சொல்லுவது சுலபம், நடத்தல் கஷ்டமென," அந்நூல் விஷயத்தில் அவர் வாக்கையே பிரயோகிப்பார்போலாவாரேயன்றி அவ்வாறு நடக்க முயலார். அந்தந்த விதிகளைத் தம் வாழ்நாளில் மேற்கொண்டு நடந்துகாட்டியவர்களின் சரித்திரங்களையு முரைத்து நீதிகளையும் எடுத்துக்காட்டினால் அவர்கள் அவ்விதிகளை முன்னிலும் நன்கு கிரகிப்பது மன்றி நடக்கவும் முயல்வார்கள். ஒருவனுக்கு ஜயாபஜயமும், சுகதுக்கமும், செல்வமும் வறுமையும், அவனது நடத்தையால் வருவன. பிரஹ்லாதன் தன் நன்னடக்கையின் பலனாக ஒரு காலத்தில் திரிலோக சாம்பிராச்சியத்தையு மடைந்திருந்தான். அப்பொழுது இந்திரன் ஒரு வேதிய வேடங்கொண்டு அவனிடஞ் சென்று, சீடனாக அநேக நாளிருந்து அவனுக்கு அதிக பிரீதிவருமாறு ஒழுகிக்கொண்டு வருகையில் பிரஹ்லாதனுக்கு சீடனிடத்தில் அதிக விஸ்வாசம் பிறக்கவே அவனையழைத்து "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், நான் தருகிறேன்," என இந்திரன் "உன் நன்னடக்கையை யான் விரும்புகிறேன்" என்றான். பிரஹ்லாதன் என் செய்வானினி! தன்னுடைய பிரதானமான

* Bharata Saram or the Essence of the Mahabahrata in Tamil; Part 1 - 10 as, Part 11 - 9 as. Thompson & Co. Madras.

இக்குணத்தைத் தானஞ்செய்துவிடுவதனால் யாது விளையுமோ என்னு மச்சமுடையவனு யிருந்தபோதிலும், தான் வாக்களித்துவிட்ட படியால் வேறொன்றுஞ் செய்வதற்கியலாது தடையின்றிக் "கொடுத்தேன்" என்றான். நிகழ்ந்ததைக்குறித்து பிரஹ்லாதன் மனக்கவலையுற்று யோசித்துக்கொண்டிருக்கு மளவில் அவனது தேகத்தினின்றும் ஒரு ஜோதி அருநிழலுருவத்தோடு வெளிப்போந்தது. அதைப் பார்த்து பிரஹ்லாதன் நீ யாரென்ன, அஜ்ஜோதியானது "நான் உன் நன்னடைக்கையின் சாராம்சம், நீ என்னை எறிந்துவிட்டாயாதலின் உன்னைவிட்டுப் பிரிந்தேகுகின்றேன். என்றன் சிடனாகிய அந்தப்பிராமணனிடத்து வாசஞ்செய்யப்போகின்றேன்" என்றது. அதன்பின் வேறொரு ரூபம் முன்மாதிரியாகவே வெளித்தோன்றியது. அதை நீ யாரென வினவியபோது அது, "நான் தான் நேர்மை என்னும் பெயர் பெற்றவன், எப்பொழுதும் நன்னடக்கையோடு குடிகொண்டிருப்பவன். அஃதுன்னை விட்டேகவே யானும் புறப்படவேண்டியிருக்கிறது" என்று சொல்லிப்போய்விட்டது. இம்மாதிரியாகவே அவனிடம் குடிகொண்டிருந்த வாய்மை, பொறுமை, வீரம், முதலிய சகல குணங்களும் ஒன்றின்பின் னொன்றாகச் சென்றுவிட்டன. ஐசுவரியம் அவனைவிட்டுப் பிரியும்பொழுது அவனை நோக்கி "ஓ பிரஹ்லாதா! உன் நன்னடக்கையினால் மூன்றுலகினையும் உட்படுத்தி யாண்டனை. அதனை யறிந்து தேவர்களுக் கரசனாகிய ஆயிரக்கண்ணன் பிராமணவேடம் பூண்டு சிடனாய் உன் பிரீதியைச் சம்பாதித்து உன் குணத்தைக் கவர்ந்தான். சிறந்த அறிவும் ஆண்மையும் பொருந்தின பிரஹ்லாதனே! எனக்கும் மற்றவைகளுக்கும் மூலாதாரம் நல்லொழுக்கமாகிய நடையேயன்றி வேறில்லை" எனக்கூறி அக்குணமும் சென்றது. இப்படியே மகாபாரதம் அநேக சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவனும் தான் அறிந்து நடக்கவேண்டிய நான்

வித நடக்கைகளைக்குறித்தும் கூறு[illegible] பகுத்தறிவும் சேர்ந்து ஆறறிவுடைய [illegible] னுக்கு, கடவுள், மனிதன் பிரபஞ்சம் [illegible] ளினுடைய சொரூப முதலிய குணங்[illegible] ஒன்றற் கொன்றுள்ள சம்பந்தத்தையு[illegible] துச்சொல்லி அவற்றை ஒரொழுங்குப[illegible] கூறும் தத்துவநூலை யாராய்வது க[illegible] யாகும். மகா பாரதமும், எல்லாவற்[illegible] மொரு முதல்வன் உண்டென்றும் அ[illegible] தான் ஈசுவரன், பரப்பிரமம் முதலிய[illegible] ரிட்டு வழங்குகிறார்களென்றும், சூரிய[illegible] தாம் தினந்தோறும் செய்துவரும் வேலை[illegible] செய்விப்பவனும் அவன்தானென்றும், பூண்டு, செடி, மரம், கொடி, பறவை, மி[illegible] ஊர்வன, நீர்வாழ்வன முதலிய பலவ[illegible] பிராணிகள், தேவர்கள், மனிதர்கள் இ[illegible] ளின் உயிருக்குயிராயிருப்பவனும் அ[illegible] தானென்றும்,

"புல்லாகிப் பூவாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களா[illegible]
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அரின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும்"

பிறந்திளைத்த உயிருக்குயிராயினான் எ[illegible] இறைவனில்லாத விடமொன்று மில்லையெ[illegible] றும், அவனெங்கு மிருக்கிறானெனவே [illegible] லாவற்றிலு மிருப்பது ஒருயிரே, என்றும், [illegible] வுயிர்தான் கடவுள் என்றும் கூறும் தத்[illegible] நூலாயிருக்கிறது. இதனால், நமக்கு எ[illegible] ஜந்துக்களிடத்தும் அன்பும் ஆர்வமும் அ[illegible] மிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகி[illegible] எல்லா உயிர்களிடத்தும் ஒரு பொது உ[illegible] பொருந்தியிருப்பதனால் பிறவுயிருக்கு [illegible] விதத் துன்பஞ்செய்தாலும் நாம் [illegible] துன்பஞ்செய்துகொண்டது போலாகின்[illegible] ஆதலால் தான் மன்னுயிரையுந் தன்னுயி[illegible] போற் பாதுகாத்தல் வேண்டுமென்[illegible] இதற்கு உசிதான் அல்லது சிபிச்சக்கர[illegible] தியே சான்றாகும்.



பிரபஞ்ச முழுவதும் தன் ஸ்வரூபத்தை யடையவேண்டுமென்பது ஈசுவரனுடைய இச்சை. அவ்வீஸ்வரனே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று சொல்லப்பட்ட திரிமூர்த்தி ஸ்வரூபமாயுள்ளவன். அவ்விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே மற்ற தேவதைகள் பாடுபடுவார்களேயன்றி தத்தம் சுயநன்மையைக் கருதியன்று. தேவதைகள், மனிதர்கள்போம் வழியிற் கஷ்டங்களையும் துன்பங்களையும்செய்து பரீக்ஷிப்பார்கள். இவைகளுக் கெல்லாம் பயப்படாமற் தைரியமுடையவர்களாய் அதிக பலமும் நல்லறிவும் பெற்று நேரியவழிக்கு மானிடர்களைக்கொண்டு வரவேண்டுமென்பது அவர்களெண்ணமேயன்றி மற்றப்படியன்று. மனிதர்களும் மற்றுமுள்ள ஜந்துக்களும் தாமிருக்கும் தேகம் தமக்கு இனியிருக்கத்தகாத நிலைமையை அடைகிறபோது அவ்வுடலைவிட்டு நீங்குகிறார்கள். இதைத்தான் மரணமென்றும் சாவு என்றும் சொல்லுகிறோம். இவ்வுடலம் விழுந்தபிறகு அதிலிருந்த ஆத்மா தான்செய்த இருவினைக் கேற்ப முன்னிருந்த தேகத்தினும் சிறந்ததோர் தேகத்தையாவது இழிந்ததோர் உடலையாவது தனக்கிருப்பிடமாகக் கொள்ளுகிறது. நாம் தரிக்கும் அங்கி நாம் வளர வளர நமக்கு அளவு சரிப்படாது கிழிந்துபோவதுபோல நமதுடம்பும் சிறப்பில் வளரும் அல்லது தேயும் ஆத்மாவுக்கு சரிப்படாது போம்பொழுது அழிந்துபோகின்றது. இக்கருத்தை யுட்கொண்டன்றோ

"பாளையாந்தன்மை செத்தும் பாலனாந்தன்மை
செத்துங்
காளையாம் பருவஞ்செத்துங் காமுறு மிளமை
செத்து
மீளவின் மொய்ம்பு செத்து மேல்வருமூப்புமாகி
நாளு நாஞ்சாகின்றமா னமக்கு நாமழாததென்
னோ!"

என்று குண்டல கேசினியாருங் கூறுவாராயினார். ஒரு பெரிய ரிஷியினிடமிருந்து நந்தினி என்னும் காமதேனுவைக்களவாடிய அஷ்டவசுக்களும், ரிஷியினுடைய சாபத்தால் பூமியில் பிறக்கவேண்டி நேரிட்டதைக்கருதி, ஜாந்நவி என்னும் கங்கையினிடம் வந்து, தங்களைக் குழந்தைகளாகப் பெற்று தயா என்பவனைத் தவிர மற்றவர்களை உடனே எறிந்துவிட வேண்டுமென்று கேட்டார்களென்பதினால், மானிடயாக்கையிலிருப்பது அவர்கட்கு சிறையிலிருப்பதுபோலத் தோன்றியதினாலன்றோ? இவ்வுலகிலுள்ள நாம் ஒரு குழந்தை பிறக்கும்போது அதிக ஆநந்தக்களிப்பிலாழ்ந்து ஒருவன் இறக்கும்பொழுது சற்றேனும் யோசியாது அறிவீனத்தினால் அழுவதையே நம் தொழிலாக்கொள்ளுகிறோம். இஃது நமது சிநேகிதனை சிறையிலடைக்கும்பொழுது உற்சாகத்துடன் விருந்துண்டு அவனைச் சிறையினின்று விடுக்கும்பொழுது வருத்தத்துடன் அழுவதையொக்கும். எப்படி அஷ்டவசுக்களையும் கங்கையானவள் மானிட தேகமாகிய கூண்டினின்றும் விடுதலை செய்தனளோ, அதுபோலவே மரணக்கடவுளாகிய யமன் ஆத்மாவை உடலிலிருந்து விடுதலைசெய்கிறார். மரணத்திற்கு அதிபதியான கூற்றுவனைக் கொடியவனென்றெண்ணாது நமக்கு நன்மை நாடுபவனாக எண்ணல்வேண்டும். ஏனெனின், இருந்த உடலிலேயே அழுகச்செய்து ஆத்மாவை உபத்திரவஞ்செய்யாது தக்க காலத்தில் ஆத்மா சிறப்பில் விருத்தியாகும்படி விடைகொடுப்பதினாலென்றறிக.

"தீங்கு வந்தடையுமாறு நன்மைதான் சேரு
மாறுந்
தாங்கள் செய்வினையினாலே தத்தமக் காயவல்
லா
லாங்கவை பிறரால் வாரா வமுதஞ்சிரண்டி
னுக்கு
மோங்கிய சுவையின் பேத முதலினார் சிலரு
முண்டோ?"

என்றபடி நல்லவர்களும் தீயவர்களும் தங்கள் வினையைத் தாங்களே யாக்கிக்கொள்ளுகிறார்கள். நல்லவர்களுக்கு தேவதைகளுடைய உதவியும், தீயவர்களுக்கு அவர்களுடைய விரோதமும் நேருகிறது. ஒருவரைத் தாழ்த்

தியும் ஒருவரை யுயர்த்தியும் வைக்கவேண்டு மென்ற எண்ணமோ கடவுளுக்கில்லை. மனிதர்கள் தங்களுடைய வினைப்படி வரவேண்டிய இடத்திற்கு தேவதைகள் அவர்களை செலுத்தவே, அவர்கள் அதற்குத் தக்கபடி ஜன்மமெடுக்கிறார்கள். ஒருவன் தன் முற்பிறப்பில் தனக்கிருந்த நல்லெண்ணம் நற்செய்கை இவற்றுக்குத் தக்கவாறு இந்த ஜன்மத்தில் தக்கவிடத்தில் தக்க குணரூபலாவண்யத்தோடு பிறக்கிறான். தீய எண்ணமும் தீச்செயலுமுடையவன் அதற்குத்தக்கபடி பிறக்கிறான். ஒருவன் தேகமும் அவன் பிறந்திருக்கும் வர்ணாசிரமும், பூர்வகர்மத்திற்குத் தக்கபடிதானிருக்கும். நிஷதர்களுடைய அரசன் புத்திரனான ஏகலைவன் குருபக்தியினால் சகல அஸ்திர சஸ்திர வித்தைகளைக்கற்றும், ஏகலைவ்ய னென்று பெயர்பெற்றும், குருவிசுவாசம், ஊக்கம், விடாமுயற்சி முதலியவைகளில் சிறப்புற்றும், தனக்குரியன வல்லாதனவற்றை தன் கையைக்கொண்டு முயற்சிசெய்தமையால் தன் வலக்கைப் பெருவிரலை குருவுக்கு காணிக்கையாகக் கொடுக்கும்படி நேரிட்டது. இதுவும பூர்வகர்ம தோஷமேயன்றி வேறல்ல.

இப்படி பூர்வகர்ம விசேஷத்திற்குத்தக்கபடியே பாரத யுத்தத்தின்பொருட்டு சுவர்க்கத்தில் தேவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து யோசனைசெய்து தேவேந்திர பதவியிலிருந்த சிலரை, பூமியில்போய்ப்பிறந்து காரியத்தை முடித்து, மறுபடியும் சுவர்க்கம் வந்துசேரும்படி உத்திரவிட்டார்கள். இப்படியேவந்து தோன்றியவர்கள்தான் பஞ்சபாண்டவர்களென விதிதமாகிறது. இவர்களுக்குதவியாக மகா விஷ்ணுவும் கிருஷ்ணாவதாரம் செய்ததாகத் தெரியவருகிறது. தம்முடைய ஆதிசேஷனையும் உடன்கொண்டுவந்தார். பலராமர்தான் ஆதிசேஷாம்சம்.

உலகம் தான் போகவேண்டிய நன்மார்க்கத்தினின்று தவறி துன்மார்க்கத்திலே அதிகமாய்ப் பிரவேசித்துப் பாவங்களும் தீமைகளும் அதிகரித்து பூமி தாங்காத நிலைமைக்குவ... விடுந்தருணத்தில், தீமையை யொழித்... நன்மையை நிலைநாட்டும் வண்ணம் சர்வே... வரனே பூத வுருவங்கொண்டு இங்கு பிற... துண்டென்பது வேதத்தில் ஒப்புக்கொள்... பட்டவிஷயம். இப்பிறப்பிற்குத்தான் அ... தாரம் என்று பெயர்.

துஷ்யந்த மகாராஜாவுக்கு சாகுந்தலையின்... மாகப்பிறந்த பரதனுடைய வமிசத்தாரை... குறித்துச் சொல்லும் சரித்திரமாகையா... பாரதமென்று பெயர். சந்திரகுலதிலகனு... சவ்வருணன் சூரியன் மகளாகிய தபதி... நினைந்து வருந்துவதையறிந்த வியாழபகவா... சூரியனிடம்பேசி தபதியை சவ்வருணனுக்... மணஞ்செய்வித்தார். குருவருளாற் கூடி... மணத்திற்பிறந்த மகனுக்கு 'குரு' என்... பெயரிட்டார்கள். அவனுடைய நாடு குரு... நாடு இவன் சன்னியாச ஆசிரமத்தை அதி... மாய் வகித்து ஜப தப முதலியவற்றை நிறை... வேற்றிய இடத்திற்கு குருக்ஷேத்திர மென்... பெயர். பாரதசாரத்தில் அங்கங்கே காட்... பட்ட சிற்சில சாரமான சங்கதிகளை எடுத்... கூறுவோம்.

அஷ்டவசுக்களில் ஒருவராகிய தயா என்... வர் பீஷ்மராகப்பிறந்து தன் பிதா சந்தா... வின் கருத்தை நிறைவேற்ற எண்ணங்கொ... டவராய், தன்னை யேற்றுக்கொள்ளும்ப... நின்ற இல்லறவாழ்க்கையையும், சிம்மாச... த்தையும் துறந்து சத்தியவதி என்ற பரிம்... தியை தன் தகப்பன் முன் கொண்டுவ... விடவே, தகப்பன் ஆச்சரியமும் ஆனந்... மடைந்து பிள்ளையைப்பார்த்து,

"தந்தையர்க்குதவு முதவியினெனக்குச்
சதமடங்குதவினை, யுனக்கு
மைந்தருக்குதவு முதவியிற்சிறிது
மாதவஞ் செய்திலே னுரவச்,
சிந்தையிற்றுறக்கம் வேண்டுமென்றென்...
செல்லு மன்றல்ல துன்னியிர் மேன்
முந்து றக்காலன் வரப்பொரு ளென்...
முடிவிலா வொருவர மொழிந்தான்"

தியும் ஒருவனை யுயர்த்தியும் வைக்கவேண்டுமென்ற எண்ணமோ கடவுளுக்கில்லை. மனிதர்கள் தங்களுடைய வினைப்படி வரவேண்டிய இடத்திற்கு தேவதைகள் அவர்களை செலுத்தவே, அவர்கள் அதற்குத் தக்கபடி ஜன்மமெடுக்கிறார்கள். ஒருவன் தன் முற்பிறப்பில் தனக்கிருந்த நல்லெண்ணம் நற்செய்கை இவற்றுக்குத் தக்கவாறு இந்த ஜன்மத்தில் தக்கவிடத்தில் தக்க குணரூபலாவண்யத்தோடு பிறக்கிறான். தீய எண்ணமும் தீச்செயலுமுடையவன் அதற்குத்தக்கபடி பிறக்கிறான். ஒருவன் தேகமும் அவன் பிறந்திருக்கும் வர்ணாசிரமும், பூர்வகர்மத்திற்குத் தக்கபடிதானிருக்கும். நிஷதர்களுடைய அரசன் புத்திரனான ஏகலைவன் குருபக்தியினால் சகல அஸ்திர சஸ்திர வித்தைகளைக்கற்றும், ஏகலவ்யனென்று பெயர்பெற்றும், குருவிசுவாசம், ஊக்கம், விடாமுயற்சி முதலியவைகளில் சிறப்புற்றும், தனக்குரியன வல்லாதனவற்றை தன் கையைக்கொண்டு முயற்சிசெய்தமையால் தன் வலக்கைப் பெருவிரலை குருவுக்கு காணிக்கையாகக் கொடுக்கும்படி நேரிட்டது. இதுவும பூர்வகர்ம தோஷமேயன்றி வேறல்ல.

இப்படி பூர்வகர்ம விசேஷத்திற்குத்தக்கபடியே பாரத யுத்தத்தின் பொருட்டு சுவர்க்கத்தில் தேவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து யோசனை செய்து தேவேந்திர பதவியிலிருந்த சிலரை, பூமியில்போய்ப்பிறந்து காரியத்தை முடித்து, மறுபடியும் சுவர்க்கம் வந்துசேரும்படி உத்திரவிட்டார்கள். இப்படியேவந்து தோன்றியவர்கள்தான் பஞ்சபாண்டவர்களென விதிதமாகிறது. இவர்களுக்குதவியாக மகா விஷ்ணுவும் கிருஷ்ணாவதாரம் செய்ததாகத் தெரியவருகிறது. தம்முடைய ஆதிசேஷனையும் உடன்கொண்டுவந்தார். பலராமர்தான் ஆதிசேஷாம்சம்.

உலகம் தான் போகவேண்டிய நன்மார்க்கத்தினின்று தவறி துன்மார்க்கத்திலே அதிகமாய்ப் பிரவேசித்துப் பாவங்களும் தீமைகளும் அதிகரித்து பூமி தாங்காத நிலைமைக்குவந்துவிடுந்தருணத்தில், தீமையை யொழித்து நன்மையை நிலைநாட்டும் வண்ணம் சர்வேசுவரனே பூத வுருவங்கொண்டு இங்கு பிறப்பானென்பது வேதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவிஷயம். இப்பிறப்பிற்குத்தான் அவதாரம் என்று பெயர்.

துஷ்யந்த மகாராஜாவுக்கு சாகுந்தலையின் மாகப்பிறந்த பரதனுடைய வமிசத்தாரைக் குறித்துச் சொல்லும் சரித்திரமாகையால் பாரதமென்று பெயர். சந்திரகுலதிலகனும் சவ்வருணன் சூரியன் மகளாகிய தபதியை நினைந்து வருந்துவதையறிந்த வியாழபகவான் சூரியனிடம்பேசி தபதியை சவ்வருணனுக்கு மணஞ்செய்வித்தார். குருவருளாற் [illegible] மணத்திற்பிறந்த மகனுக்கு 'குரு' என்று பெயரிட்டார்கள். அவனுடைய நாடு [illegible] நாடு இவன் சன்னியாச ஆசிரமத்தை அடைந்தாய் வசித்து ஜப தப முதலியவற்றை மேற்கொண்ட இடத்திற்கு குருக்ஷேத்திர மென்று பெயர். பாரதசாரத்தில் அங்கங்கே காட்டப்பட்ட சிற்சில சாரமான சங்கதிகளை எடுத்துக் கூறுவோம்.

அஷ்டவசுக்களில் ஒருவராகிய தயா என்பவர் பீஷ்மராகப்பிறந்து தன் பிதா சந்தனுவின் கருத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டவராய், தன்னை யேற்றுக்கொள்ளும்படி நின்ற இல்லறவாழ்க்கையையும், சிம்மாசனத்தையும் துறந்து சத்தியவதி என்ற பரிமளகந்தியை தன் தகப்பன் முன் கொண்டுவந்துவிடவே, தகப்பன் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்து பிள்ளையைப்பார்த்து,

> "தந்தையர்க்குதவு முதவியினெனக்குச்
> சதமடங்குதவினை, யுனக்கு
> மைந்தருக்குதவு முதவியிற்சிறிது
> மாதவஞ் செய்திலே னுதவச்,
> சிந்தையிற்றுறக்கம் வேண்டுமென்றெண்ணிச்
> செல்லு மன்றல்ல துன்னியிர் மேன்
> முந்து றக்காலன் வரப்பொரு ளென்றே
> முடிவிலா வொருவர மொழிந்தான்."



'ஓ! குழந்தாய்! நீ விரும்பினாலொழிய மரணம் உன்னை அணுகாதொழிக. பாவசிந்தையென்பது சிறிதேனுமில்லாத சற்புத்திரனே! உன்னுடைய உத்தரவின்பேரில் தான் யமன் உன்னை யணுகுவான்" என்று ஆசிர்வதித்தான்.

அங்ஙனம் தன்னருமைப் புதல்வனை ஆசிர்வதித்து நின்றதும்,

> "அம்புவியரசன் மாமனு மரச
> னடி பணிந் தவயவத்தழகா
> லும்பரும் வியக்கு மிளியை முன்னிருத்தி
> யொடுங்கினன் வாய் புதைத்துரைத்தா
> னெம் பெருமானீ கேட்டருளனக்கே
> யிசைந்த மெய்த் தவம்புரியிலனை
> வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி
> விலைஞர்மா மகளெனக்கருதேல்."

என்று விலைஞர் தலைவன் புகன்றான்.

2\. சத்தியவதி பீஷ்மரைப்பார்த்து, விதந்துவாயிருக்கும் அம்பிகை அம்பாலிகை என்னு மிருவரையும் மணந்து புத்திரபாக்கியம் பெற்று சந்தானு வம்சம் இடையறுவனம் காப்பாற்றும்படி வேண்ட, அவர் தமது சிற்றன்னையை நோக்கி "அம்மா, தாங்கள் சொல்வது சரிதான். தர்மசாஸ்திரத்திற்கும் ஒத்ததுதான். ஆயினும், பிரமசரியத்தையே நான் எப்பொழுதும் விரதமாகக்கொண்டு ஒழுகுவேனென்று கூறிய சபதம் உங்களுக்குத் தெரிந்ததுதானே. திரிலோகசாம்பிராஜ்ஜியம் வருவதானாலும், அல்லது அதினும் சிறந்தபதவி கிடைக்கிறதாயிருந்தாலும், அவற்றையொரு பொருளாக மதித்து என் சபதத்திற்கு விரோதமாய் நடக்க எண்ணுவேனோ? ஒருக்கால் மண் தன் மணத்தை மாற்றினும் மாற்றும்; ஜலம் தன் குளிர்ச்சியை நீக்கினும் நீக்கும்; ஒளி தன் உருக்காட்டுமியல்பினை ஒழிக்கினும் ஒழிக்கும்; வளி தன் பரிசம் மறைக்கினும் மறைக்கும்; அக்னி தன் சூட்டை யகற்றினு மகற்றும்; ஞாயிறு தன்னொளி யிழக்கினு மிழக்கும்; திங்கள் தன் தண்கதிர்விலக்கினும் விலக்கும்; விருத்திரனை வென்றோன் தன்து ஆண்மையை இழக்கினும் இழக்கலாகும்; தர்மதேவதை நடுவு நிலைமைகுன்றி ஒரு புடைசாரினும் சாரும். யானோ சொன்னசொற் பிறழேன், தாயே! என்னை மன்னிப்பீராக" என்றான்.

3\. துரோணரிடத்தில் வில்வித்தை கற்ற மாணவர்களின் அறங்கேற்றுநாளில் கர்ணனை துரியோதனன் அங்கதேசாதிபதியாக்கிய சமயத்தில், அக்கன்றிக்கறிகுறியாய் "நம்முடைய நட்பு நமன் ஒருவன் தவிர மற்றெவராலும் மற்றெதனாலும் பிரிக்கமுடியாதொழிக" என்று கர்ணன் சபதம் செய்தான்.

4\. பாஞ்சால தேசத்து அரசனாகிய துருபதனை துரோணருடைய உத்திரவுப்படி அர்ச்சுனன் தேர்க்காலில கட்டிக்கொண்டு வந்துவிட, துரோணர் அவனைப்பார்த்து, "அரசனல்லாதவன் எப்படி அரசனுக்குச் சிநேகனெனக் கூறிக்கொண்டு வரலாம்!" என்று என்னை இகழ்ந்தாயில்லையோ? நம்மிருவருடைய பாலிய சிநேகம் என்றைக்கும் நிலைபெற்றிருக்க வேண்டாமா? மேலும் நாம் வாசிக்கும்போதே எனக்குப் பாதி ராஜ்ஜியம் கொடுப்பதாக மனமகிழ்வுடன் வாக்குதத்தம் செய்தாயில்லையோ? பிறகு என்னுடன் பேசுவதற்கு நாணினையன்றோ? ஓ! க்ஷத்திரியாதிமமே! இப்பொழுது உன் உயிருக்கு பயம் வேண்டாம். அஃது உன் பகைவனாகிய என் கையிற்றானிருக்கின்றது. இப்பொழுதாவது முன்னிருந்த சிநேகிதத்தை நினைத்து அதை மறுபடி விருத்திசெய்துகொள்ள எண்ணமுண்டோ உனக்கு? உன்னுயிருக்கு ஹானி வராது பயம்வேண்டாம். பிராமணர்க்குரிய முக்கியகுணம் மற்றவர் குற்றங்களை க்ஷமித்து அவரைக்காத்தலே. நீ இப்பொழுது தோற்றுப்போனதினால் உன்னுடைய ராஜ்ஜியம் முழுவதும் என்னுடையதே. எனக்குவந்த குரு தக்ஷிணை இது. யான் விரும்பின் முழுவதையும் உனக்குத்திருப்பிக்கொடுத்துவிடலாம்.

ஆயினும் உன் சொல்லே உனக்குக்கூற்றாய் நிற்கின்றது. ஆயினும் நான் பாதி இராஜ்ஜியத் தை வைத்துக்கொள்ளுகிறேன்.

“ அன்றெனக்கு நீ யிசைந்தவவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யானுவந்து தருகுவன்
குன்றெனக்கு விந்திலங்கு கொற்றவாகு வீரனே
யுன்றனக்குவேண்டுமென்னவுயிரும்வாழ்வுமுதவினு
ன்.”

உனக்குப்பாதி கொடுக்கிறேன். வளப்பம் பொருந்தியதும் பாகிரதியின் தென்புற முள்ளதுமான தேசத்திற்கு நீ அரசனாயிரு; அதற்கு வடக்கேயுள்ள இராஜ்ஜியமெல்லாம் என்னுடையதாக விருக்கட்டும். நான் பேருக்கு மாத்திரம் அரசனாயிருந்தாற்போதும் உன் சிநேகிதம் தான் வேண்டும் உன்னுடைய விருப்பம் யாது? என்றனர். துருபதன் உயிர் நின்றதே போதுமெனத் திரும்பினான்.

5. துருபதன் தன்னூர் சேர்ந்து, தன்னை தேர்வண்டிக்காலில் கட்டிக்கொண்டுபோன விஜயன் கழுத்தைக்கட்ட ஒரு கன்னிகையையும் தன்னை அவமானப்படுத்திய துரோணர் கழுத்தை வெட்ட ஒரு வீரனையுமடைய புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வித்தான். துரோணரை பதினெந்தாநாட் பாரதயுத்தத்திற்பூர்த்தி செய்தவனான திஷ்டத்துய்மனையும், அசுரர் குலமழியச் சீதை தோன்றியவாறு அரசர் குல முடியத்தான் தோன்றித் தன் குழலும் அவர் தம்குலமும் ஒருங்கே முடித்தவளாகிய திரௌபதையையும் அடைந்தான்.

6. திரௌபதையின் சுயம்வரத்தில் அர்ச்சுனன் வில்லை எடுத்து சிரமமில்லாமலே நாணேற்றி பாணமும் தொடுத்து மச்சயந்திரம் அற்றுவிழுமாறு விடுத்தனன். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. நாற்புறமும் வாத்தியகோஷமுழங்கியது.

“பூமழை சொரிந்தார் விண்ணோர்
பொன்மழை பொழிந்தமேகம்
பாமரு கடல்களெல்லாம்
பன்மணி தூவியார்த்த
கோமுனிகணங்களெல்லாங்
கூறினார் கொற்ற
நாமவேல் விழிப்பாஞ்சாலி
நல்வரந்தாளென்று,”

என்று சிறப்பித்தது வெகு கம்பீரமாயிருக்கிறது.

7. இந்திரப்பிரஸ்தத்தில் மயனால் அற்புத மாளிகை கட்டப்பட்ட பிறகு அவ்விடத்திற்கு வந்த நாரதர் தருமரை நோக்கி அநேகம் கேள்விகள் கேட்டாரென்று ஆரம்பித்து, தர்ம சாஸ்திரப்பிரகாரம் அரசன் பிரஜைகளுக்கெல்லாம் அதிபதி; அவன் விஷ்ணுவின் அம்சமென்று சொல்லப்படுவன். அவனுடைய கடமைகளோ எண்ணிறந்தன. அவன் நல்லவனாயிருந்தால் குடிகளும் க்ஷேமமடைவார்கள். மாந்தர் செய்வது மன்னனைச்சேரும். அப்பா, தர்மா! உன் காலத்தைத்தினந்தோறும் தர்மார்த்த காம மோக்ஷ சம்பாத்தியத்திற் கழித்துக்கொண்டு வருகிறாயா? உன்னிடம் துன்மந்திரி களில் லாத நற்குணம், நற்புத்திவாய்ந்த மந்திரிகளை வைத்திருக்கின்றாயா? உன்னுடைய சைனியங்களுக்கு மாதந்தோறும் சம்பளம் சரியாய் சேர்ந்துக்கொண்டு வருகிறதா? உனக்காக பற்பல யுத்தங்களில் உயிரைத்தந்த இராணுவ வீரர்களின் சம்சாரங்களை ஆதரித்து வருகின்றாயா? யுத்தத்தில் வென்ற மாற்றலரை இரக்ஷித்து வருகின்றாயா? எல்லாரும் உன்னை எளிதில் வந்து பார்த்தல் கூடுமா? குடிகள் உன்னைத் தங்கள் தந்தைபோற் பாவித்து உன்னையணுகும்படி வைத்திருக்கின்றாயா? உன் வரும்படியில் எவ்வளவு கூறு செலவு செய்கின்றாய்? வேளாளர்களெல்லாம் சுகமாயிருக்கின்றார்களா? மழையில்லாமற்போனால் உன் நாடு வளங்குறைந்து போமாகையால், பற்பல விடங்களிலும் ஏரிகளும் குளங்களும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றனையா? விவசாயிகளுக்கு வேண்டிய வித்து முதலியவைகளை சேகரித்துத்தந்து வருகின்றனையா? சுயநலம் பாராட்டியேனும், அகங்காரத்திலேனும் அநீதி நடந்துகொண்டுவருகிறதா? உன் மந்திரிகள் இலஞ்சம் வாங்காதிருக்கின்றார்களா? எவ ரும் அநியாயமாய்ப் போடப்படாதிருக்கி



றாயா? குருடர்களையும், மூடவர்களையும், ஊமைகளையும், அங்கவீனர்களையும், சிநேகிதமற்றவர்களையும், சன்னியாசிகளையும், தகப்பன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோற் காப்பாற்றி வருகின்றனையா? அரசே! தூக்கம், சோம்பல், பயம், கோபம், தாமசம், அதைரியம் என்பனவாய் அறுவகை தோஷங்களையும் அகற்றினையா? என்று வினவினரென்றும், தருமர் அவரை வணங்கி இனி இவற்றில் அதிக கவனம்வைப்பதாகச்சொன்னார் என்றும் எழுதியிருப்பது வெகு நன்றாயிருக்கிறது.

8. கடவுளால் கொடுக்கப்பட்ட பொறிகளைந்தினுள் தலை நின்றதாகிய வாய், அவனை யும் அவனருள்வழிப்பட்ட சான்றோரையும் புகழ்ந்து துதித்தற்கே யமைந்ததாயிருக்க, அதனையுணராது அநேகர் மதிமயங்குதல் என்னே! என்று கூறியதன்றி,

“ யாகாவாராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு” என்றும்,

“ ஆக்கப்படுக்கு மருந்தளை வாய்ப் பெய்விக்கும்
போக்கப்படுக்கும் புலை நரகத்துய்ப்பிக்கும்
சாக்கப்படுவணவு மிந்திரிய மைந்தினு
நாக்கல்ல தில்லை நனி வெல்லுமாறே,”

என்றும் ‘வளையாபதி’யிலிருந்து எடுத்துக் காட்டியிருப்பது வெகு சமயோசிதமாயிருக்கிறது.

**சூதைப்பற்றி எடுத்துக்காட்டப்பட்ட பாடல்கள்.**

1. உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்
மைத்
திருவழிக்கு மானஞ்சிதைக்கு—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

2. அறத்தை வேர்கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மற
த்தையே
பூண்டு விரோதஞ் செய்யும் பொய்ச்சூதை
மிக்கோர்க
ண்டுவரோ வென்றாற்றெரிந்து.

3. ஐயநீ யாடுதற்கமைந்த சூது மற்
றெய்து நல் குரவினுக்கியைந்த தூதுவெம்
பொய்யினுக்கருந்துணை புன்மைக்கீன்றதாய்
மெய்யினுக்குறுபகை யென்பர் மேலையோர்.

4. எள்ளுக சூதினை யிகலி வென்றதூஉங்
கள்ள மேற் கொடுவலை கரந்து வெட்டுவ
குள்ளுற வமைத்திடு முணவை யோர்கிலாப்
புள்ளின மருந்தின போலு மென்பனவே.

**சத்தியந் தவறாலாகாது என்பதைப்பற்றி எடுத்துக்காட்டிய பாடல்.**

5. வேலைகரையிழந்தால் வேத நெறி பிறழ்ந்தான்
ஞான முழுது நடுவிழந்தாற்—சீல
மொழிவரோ செம்மை யுரை திறம்டாச்செய்
கை
யழிவரோ செங்கோலவர்.

9. பாண்டவர்கள் சூதினால் சகலத்தையும் தோற்று வனம் சென்ற மாதிரியைப்பற்றி திருதராஷ்டிரன் விதுரரைக்கேட்க, அதற்கவர் அரசனை நோக்கி, ஐயா! தருமனோ எப்பொழுதும் அன்பும் அருளுமுள்ளவன். அத்தகையனுக்கு இப்பொழுதிருக்குங் கோபாக்கினியால் விழிக்கெதிர் நின்ற பொருள்கள் அழிவுறுமெனப்பயந்து தன் முகத்தை மூடிக்கொண்டார். பீமனோ தன் விரோதிகளை தன் புயபலத்தைக்கொண்டு எப்பொழுது அழித்து பழிக்குப்பழி வாங்கலாமென்று தன் புயத்தைப்பார்த்துக்கொண்டே சென்றான். அர்ச்சுனன் தான் யுத்தகாலத்தில் பொழியப்போகிற சரமாரிக்கறிகுறியாய் மணலை வாரி வீசிக்கொண்டு சென்றான். சகாதேவன் கஷ்டம் வருங்காலத்து இன்னாரெனப்பிறர் தன்னை யறியாதவாறு முகத்தில் மண்ணையிட்டுக்கொண்டு போனான். நகுலன் அன்பினால் எவருடைய இதயத்தையுங் கொள்ளைகொள்ளும் தன் தேக முழுவதும் மண்பூசிக்கொண்டு சென்றான். துரோபதை தன் விரோதிகளின் மனைவியர், சில்லாண்டு சென்ற பின்னர், அதேவழியில் அவர்தம் புருஷருக்கழவேண்டி வருமே என்பதை எண்ணினவளாய் தன் கூந்தலினால் முகத்தை மறைத்துக்கொண்டு சென்றனள். தௌம்யர், பிரேதத்துடன் செல்லும் புரோ

கிதர் உச்சரிக்கவேண்டிய சாமவேதத்தை யுச்சரித்துக்கொண்டு போனாரென்பதாகக் கூறியதாக முடித்ததும் வெகு அழகாயிமைந் திருக்கிறது.

இப்படியே, மிஸ்ஸிஸ் அனிபெசான்ட் அம்மாள் ஆங்கிலத்திலெழுதிய பாரதசாரங்களை மொழிபெயர்த்து, சமயோஜிதமானவைகளை சேர்த்து, கோர்வையாய் எழுதியிருப்பது கல்குளம் ம-ா-ா-ஸ்ரீ, குப்புசாமிமுதலியார் பி.ஏ. அவர்களுடைய சாமர்த்தியத்தையும், புத்தி நுட்பத்தையும் நன்கு விளக்குகிறது. இத்தகைய புஸ்தகங்களை நமது வித்தியாபி விருத்தி இலாகாதாரர்கள் கவனிப்பது அவசியமென்பதுடன், இதை ஷண்மதஸ்தர்களும் ஆவலுடன் படிக்கத்தகுந்ததென்று கூறிமுடிப்பாம்.

டி. சி. வெங்கடரமணையர்.

SHORT STORY FOR YOUNG READERS.

LAKSHMI AND SANEESVARA.

## லக்ஷ்மியும் சனிபகவானும்.

சிறுவர்க்கான ஒரு கதை.

ஒரு காலத்தில் லட்சுமிக்கும் சனீஸ்வர பகவானுக்கும் தங்களில் யார் சாமர்த்தியசாலி என்பதைப்பற்றி விவாதம் நடந்தது. லட்சுமியோ தான் செல்வத்துக்கெல்லாம் அதிகாரியாயும், சந்தோஷத்திற்கெல்லாம் காரணபூதயாயுமிருப்பதால் தானே சாமர்த்தியசாலியென்றாள். சனீஸ்வரனோ ஒருவனை தலையெடுக்கவொட்டாது தவிக்கச்செய்வதாலும், அவன் பட்டபாட்டைக் கண்டு பயந்து பயபக்தியுடன் தன்னையே துதிக்கப்படுதலாலும் தனக்குமிஞ்சியவன் கிடையாதென்றும் ஆதலால் தானே சமர்த்தனெனவும் வாதித்தான். இவர்களிப்படி "தென்றல் முற்றிப் பெருங்காற்றானது" போல் பலமான சண்டை பிடித்துக்கொண்டிருந்தமையால் இவர்களுக்குமத்தி [illegible] சமாதானப்படுத்த ஒருவரும் துணியவில்லை. முடிவில் இருவரும் தங்களுக்குத்தெரிந்த "சற்குணங்களையே அணிகலனாகப்பூண்ட நரேந்திரன்" என்னும் அரசனிடம் செல்வதாக ஒப்புக்கொண்டு அவிடமேகினார்கள். ஜயபுரி அரசனான நரேந்திரன் இவர்களைக்கண்டு ஆசார உபசாரம் செய்து நின்றான். அப்போது இருவரும் தங்கள் விவாதத்தை விஸ்தரிக்க, அரசன் யோசித்து "நல்லது நாளைவாருங்கள் உங்களுக்குப் பதிலளிக்கிறேன்" என்றான். இருவரும் தந்தமிருப்பிடமேகினார்கள்..

மறுநாள் நரேந்திரன் கொலுக்கூடத்தில் ஒரு தங்க சிம்ஹாஸனமும் வெள்ளி சிம்ஹாஸனமொன்றும்போடப்பட்டு தகதாயமாய் ஜொலித்துக்கொண்டிருந்தது. அப்போது இவ்விரு தேவதைகளும் அங்குபிரசப்தமாக அரசன் வந்தனைவழிபாடுசெய்து உட்காரும்படி சிம்ஹாஸனமிருக்குமிடத்தை கையால் சுட்டிக்காட்டினான். அப்போது பெருந்தன்மையான முகமும், புன்சிரிப்பு தவழ்ந்த உதடோடும்கூடிய லட்சிமியானவள் தன் அந்தஸ்துக்குத் தக்கவண்ணம் பொற்சிம்மாசனத்தில் எழில்பெற பொலிவுற்று விளங்கினாள். சனீஸ்
வரனோ வெள்ளி சிம்மாசனத்தில் உட்கார்ந்து
"அரசனே! இதில் இப்போது யார் திறமை
சாலி! செப்புவாய்" என அரசனை நோக்
வினவினான். அரசன் இருகரங்களையும்
சிரமேற் கூப்பி "நான் சொல்வதைக்கேட்
கோபித்துக்கொள்ளாமல் மன்னிக்கும்படி
கோருகிறேன். வெள்ளி சிம்மாசனமான
பொற்சிம்மாசனத்தைக்காட்டிலும், தாழ்ந்த
என்பது தங்களுக்கே தெரியும். மேலும் இதி
இன்னார் தாழ்ந்தவர் என்று நான் சொல்ல
மலே தாங்களே தெரிந்துக்கொள்ளலாம்" எ
றான். இதைக் கேட்டவுடனே சனீஸ்வரப
வான் கண்களில் தீப்பொறி பறக்க உற்
நோக்கி, "அரசனே! என்னை யாரென்
நினைத்தாய்? சப்தலோகங்களும் நடுநடுங்
நடுங்கும்படி செய்யவல்ல என்னை ஒரு அற்
அரசன் நீ! சொல்லப்போய்விட்டதா? ந



[illegible] சாமர்த்தியத்தை தம் பார்த்து
ன்றுடி நீமே தெரிந்துக்கொள்ளும்படியாக
ந்தம குணத்தைக் காட்டுகிறேன்" என
னறந்தான். லட்சுமியு மெழுந்து "அரசனே!
தைரியப்படாதே? நான் உன்னைக் கை
டேன். அவன் அட்டகாசங்களெல்லாம்
காஞ்ச காலத்துக்குத்தான். இதற்காக உன்
த்துக்கு சஞ்சலத்தையும் வருவித்து
ந்தம் குணத்தையும் கைவிடாதே" என
ட்சுமியும் அந்தர்த்தானமாகினாள்.

* * * * *

கலியின் கொடுமையே கொடுமை! சிறிது
நாட்களுக்குள்ளாக நரேந்திரன் நாட்டில்
பஞ்சம் அதிகரித்தது. ஜலம் நிர்ஜலமாய்ப்
போய்விட்டது. கொள்ளை நோயும், திருட்டும்,
நம்பமுடியாமல் உண்டாகி எண்ணிறந்த ஜனங்கள்
மாண்டார்கள். பசியினால் வருந்தி அநேகர்
இறந்தார்கள். ஓர் வேற்றரசன்வந்து நாட்டைக்
கைப்பற்றிக்கொண்டான். இது செய்தியறிந்த
நரேந்திரன் என்னும் அரசனும் அவன் மனைவி
சுகுணாவும் இருந்த கொஞ்ச நஞ்ச சொத்துக்
களையும் மூட்டை கட்டிக்கொண்டு மத்தியான
வெயிலில் கால்கடுக்கப் புறப்பட்டார்கள்.
ஐயோ! சுகுணா அந்தப்புறத்தில் பத்தடி
எடுத்தடி வைத்திராளே! ஆகா! அவள்
மிருதுவான பாதங்கள் என்னமாய்நோகுமோ!
நாட்டையு மிழந்து கல்லுமுள்ளும் செறிந்த
காட்டில் தன் மனைவியும் தானும் கால்கடுக்க
நடந்து செல்லவும் கடவுள் அமைத்தாரே?
என்று அரசன் அங்கலாய்த்துக்கொண்டு கண்
ணீர் ஆறுகப்பெருக செய்வதின்னதெனவறி
யாது ஓர் ஆற்றினிடமாகப் போந்தனர்.
அங்கே ஒரு படகில் ஒரு கிழவன் உட்கார்ந்
திருந்தான். அக்கரைக்குச்செல்ல ஆற்றைக்
கடந்துபோகவேண்டிநேர்ந்தமையால் அரசன்
படகோட்டியை நோக்கி "அப்பா! நாங்க
ளிருவரும் அக்கரைக்குச் செல்லவேண்டிய
வர்கள். ஆதலால் அக்கரையில் எங்களை
சேர்ப்பிப்பாயானால் உனக்கு நாங்கள் வைத்
திருக்கிற நகைகளில் நல்லதாய்ப் பார்த்து மிகுந்த விலையுள்ள நகையொன்றைக் கொடுக்கிறோம் என்றான். அதைக்கேட்ட படகோட்டி "ஓ! ஓ! அதுகூடாது. என்னுடைய படகு ஒரு ஆள்தான் கொள்ளும். ஆதலால் முதலில் உம்முடைய மூட்டையைக் கொடும். அதை அக்கரைசேர்த்து பின்பு உங்களையும் சேர்ப்பிக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட அரசனும் சம்மதித்து "மூட்டையை நீட்ட", மூட்டையையும் காணோம், படகோட்டியையும் காணோம், ஆற்றையும் காணோம், ஒன்றும் காணவில்லை. "ஆகா! இதுவும் அக்கலியின் கூத்தல்லவா? என அரசன்வருந்தி பின்னும் சில தூரம் நடக்கமாளாதுதத்தளித்துத்தவிக்கும் தன்மனையாளையு மழைத்துக்கொண்டேகினான். இவர்களோ இரண்டு நாட்களாய் சாப்பிட்டவர்களல்லர்; பசியோ பிராணன்போகிறது? என்னசெய்வார்கள்? அங்கிருந்த மீன் பிடிப்போரிடம் அரசன் சென்று கெஞ்சாதவண்ணம் கெஞ்சி ஒரு மீன்வாங்கி சமைக்கத் தன் மனைவியிடம் கொடுக்க பாங்கிகளால் சமைக்கப்பெற்று சுகமாகசாப்பிட்டுக் காலம்கழித்த இராஜபுத்திரி சமைக்கவழி தெரியாது தியங்கினும் கூடியமட்டில் மனதைத் தைரியம்பண்ணிக்கொண்டு அங்கே கிடந்த மட்டை சருகு, முதலானவைகளைச் சேகரித்து மூட்டம்போட்டுப் பார்க்க மீனெல்லாம் கரியாகவிருந்தது. அதைக் கண்டு வருந்தி ஆற்றிற்குச்சென்று அதைக்கழுவலாமென்று போனால் ஆற்றுக்குள் மீன் ஒரே குதியாய்க் குதித்துச்சென்றது. இதைக் கண்டு சுகுணா மனமாற்றாது கோவென்றலறினாள். அரசன் ஓடிவந்து உள்ளதையறிந்து வருந்தி "இனி இவ்விடம் இருக்கலாகாது" என்று பயணப்பட்டு ஒரு குக்கிராமத்துக்கு வந்துசேர்ந்தனர். அங்கே பிழைப்பு நடக்கவேண்டி அரசன் கட்டைவெட்டி ஜீவனம் செய்ய நேர்ந்தது. ஒவ்வொரு நாள் கட்டைவெட்டியபின்பு ஆயாசம்தீர மரத்தடியினில் குந்தி தனக்குச்சம்பவித்த இடுக்கண்களையெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணுவான்.

இப்படியாக சிலகாலம் செல்ல, ஓர் நாட் காலமே வழக்கம்போல் கட்டை வெட்ட நரேந்திரன் அடவிக்குச்செல்ல, சுகுணை மட்டும் வீட்டினிலிருந்தாள். இப்படியிருக்க அன்று காலமே ஒரு கப்பல் வந்து இக்கிராமத்தருகில் வரவும் என்னமுயற்சி பண்ணியும் செல்லாமல் நின்றது. இதைக்கண்டு அக்கப்பல்வர்த்தகன் மனமடிவெய்தியிருக்க, ஒரு பிராமணன் ஜோசியன் போலும் வர்த்தகனிடம் வந்து "அப்பனே! சுகுணை என்னோர் பெண் இக்கிராமத்தில் வசிக்கிறாள், அவள் வந்து உன் கப்பலைத்தொட்டால் இது நகரும்" என்றான். உடனே வர்த்தகன் அக்கிராமத்துக்குள்ளோடி அவ்வீட்டின் கதவைத் தட்டி சுகுணை வெளிவரவும் நடந்ததைச் சொல்லி கிருபைகூறும்படி கெஞ்சினான். "தன்புருஷன் வீட்டிலில்லாத சமயத்தில் போவது கூடாது" என்று நினைத்து முடியாதென்றாள். கடைசியாக அக்கம் பக்கத்தார் கேட்டுக்கொள்வதிலும், தன்னோடொத்த பெண்கள் வருந்தி பிரார்த்திப்பதாலும், உயிரைக்காக்க வேண்டுமென்ற ஓர் ஜீவகாருண்ணியத்தினாலும் துணிந்து போய்க் கப்பலில் பாதி ஏறினவுடனே கப்பல் வாயுவேகமனோவேகமாய்க் கரை கண்ணுக்கெட்டாத் தூரத்துக்கிப்பால் வந்துவிட்டது. என்னசெய்வள் சுகுணை? தன்னைத்தானே நோகிறாள், வர்த்தகனைக் கண்டபடி திட்டுகிறாள், தன் புருஷனைப் பற்றி வருந்துகிறாள். இன்னசெய்வது என்று தெரியாது தியங்குகிறாள். வர்த்தகனோ அவள் தான் கப்பலிலிருக்கும்வரை அபாயமில்லை யென்றும் அவள் நல்லலட்சணமாயிருப்பதால் ஊருக்குச்சென்றதும் கல்யாணம் செய்துகொள்ளலாமென்று, மனப்பால் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். நிற்க. நரேந்திரன் சங்கதியைக்கொஞ்சம் கவனிப்போம். நரேந்திரன் வீட்டிற்குச்சாயங்காலம் வந்தான். தன் அருமை மனைவியைக்காணோம். அவன் மனம் பட்டபாட்டை என்னென்போம்? ஆ! "மனையாளில்லா வீடு மயானமென்பார்களே? அது சரியாகப்போயிற்றே என்று அங்கிருந்தவர்களை விசாரித்து சமுத்திரக்கரை சேர்ந்து பார்க்க இவன் கண்ணுக்கு ஒன்றும் தென்படவில்லை. "ஐயோ! தெய்வமே! இன்னுமா சோதனை?" என்றேங்கிச்செய்வதியாதென வறியாது ஒருகோத்தில் இராஜவீதி வழியாய்ச் செல்ல அங்கே ஒரு கொட்டகையில் ஏகக்கூட்டமாயிருந்தது. பெரிய அரசர்களும், கீர்த்திமான்களும் ஸ்தானதிபதிகளும் நிரம்பிய கும்பாயிருந்தது. அவர்களோடு இவனும் சேர்ந்து நின்றுகொண்டிருந்தான். அப்போது அவ்வூராரும் அரசன் குமரி குணமணி தன்கையில் மாலையையெடுத்துக்கொண்டு யாரையும் ஏறிட்டுப் பாராது இவனண்டை வந்து இவன் கழுத்தில் மாலையைப்போட்டாள். உடனே விவாஹம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டு நரேந்திரனுக்கு முடிசூட்டும் வைபவமும் ஒருங்கே நடந்து தம்பதி க்ஷேமதாய் வாழ்ந்துகொண்டிருக்கையில் "சுகுணையை தேடும்பொருட்டு முன்னமேயே திட்டம்செய்தனுப்பப்பட்ட சேவகர்கள் அவ்வர்த்தகனையும் சுகுணையையும், அரசன் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தினர். சுகுணை தன் நாயகனைக்கண்டதும் புளகாங்கிதம்கொண்டு அரசன் பக்கலில் அடைந்தாள். அரசன் வர்த்தகனுக்குத் தக்க சிட்சை விதித்துத் தன் மனைவி விரதமிருப்பதாகப் பொய்புகன்று தன் மானம் காத்துக்கொண்டதையும் கேள்வியுற்று, தன் மாமனாரிடம் சகல சங்கதிகளையும் செப்பி அவரது அருளையும் பெற்று, கொஞ்சக்காலத்திற்குள்ளாக படையெடுத்து மீளவும் தனது முந்தின நாட்டையும் வசப்படுத்திக்கொண்டு சுகமே வாழ்ந்தனன். அஷ்ட லட்சுமிகளும் அவ்வூரிலேயே வாசஞ் செய்துக்கொண்டிருந்தார்கள்.

இக்கதையால் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவெனில்,

"குடை நிழலமர்ந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்."

என்றபடி மகாமண்டலேசுவரனுயினும் அவனும் தன்னு கர்ட்டையுமிழந்து [illegible] யடைவானென்றும்,

"அறத்திடு பிச்சை கூவியிரப்போரிருந்து
அரசாளினுமாளுவர்."

என்றவாறு ஒரு எளியபிச்சைக்காரனுயினும் திடீரென்று நன்னிலைக்கு வந்து பெருங்கோலோச்சுவானென்றும் ஆதலின் மனிதனுக்கு சுகம், துக்கம், இரண்டும், சம்பவித்தலால் இதற்காக வருந்தாது எந்நாளும் நித்யானந்தத்தோடு நற்குணங்களைப் பூண்டு பக்திமார்க்கத்திலொழுகி முத்தியடைவோமாக. என்ப[illegible] சுபம்.

K. S. வைத்தியநாதயியர்.

---

ஷேக்ஸ்பியர் நாடகம்.

# ஒதெல்லோ.

---

க. அங்கம்.

க. களம்.

இடம்: வெனிஸ் பட்டணத்திலொருதெரு.

பிரவேசம்: ராஜரீகன், இயாகோ.

ராஜ.—உரையினி வேண்டா, உவர்ப்பு மிக்கதாக்
காணுகின்றனன்; கணக்கிலென் னிதியம்
பூட்டுடை யவனிற் புரையறக் கொண்ட
இயாகோ, நீயிதை யினிதுணர்ந் திருப்பாய்.

இயாகோ.—என்னுரை தெரிந்திலை; எப்பொழுதேனுங்
கடந்தவிவ் விஷயங் கனவிலே யாகக்
கண்டிருப் பேனேற் கடிந்திடல் செய்மோ.

ராஜ.—உன்னுடை வெறுப்பிற் கொருபொருளவனைக்
கொண்டனை யொன்று கூறினை யன்றோ.

இயாகோ.—இன்றெனின் முனிதி. இந்நகருடையா
ரோரொரு மூவ ருவன்பிரதி நிதியா
வெனைச்செய் விக்க வெண்ணிநேர் சென்று
தாழ்ந்தவற் கேட்டனர் சத்திய மாக
வென்னையா னுணர்வே, னிழிந்ததோர் பதவிக்
கியானுரியேனலேன், அவனோ வென்னி
லிச்சைசெல் வழியே யியற்றுவோ னாதலின்
மற்றவர்க் குவப்பாய் வளர்ந்ததோர் வார்த்தையிற்
போர்ச்சிறப் புரைவயி னூட்கிடப் புகன்று
முடிவிலெலச் சான்றோர் கருத்தின் முரண்பட
'வன்மையே ஏனக்கினென் னுத்தியோ கத்தனை
முன்னரே யாய்ந்துதேர்ந்தன' னெனமொழிந்தான்
மற்றவன் யாவன்! வாய்மையிற் சொல்லுகேன்
மைக்கேல் காஷியோ எனும் பெயர் வாய்த்தவன்,
கணிதநூல் பெரிதுங் கைவந்துள்ளவன்,
வாணிப மலிந்து மாண்பெயர் நிறுவிய
ப்ளாரென்ஸ் என்னும் பட்டினத் தொருவன்,
வனப்புடை மனைவியால் வறிதே தொலைந்தவன்,
களத்திடை வியூகங் கணித்தறி யாதவன்.
தனியிழை மடவார் தங்களிற் பெரிதும்
பால்வரு சேனைப் பகுப்புண ராதவன்,
தன்னைப் போலத் தலைமேம் பாட்டினி
னல்லெழி லமாத்தியர் நானலந் திகழ
நுவன்றமை விளக்கிடு நூல்களிற் சொல்லிய
வமர்த்துறை யல்லது மற்றதொன் றறியான்
செய்கையிற் றீர்ந்த பிதற்றுரை யளவே
யவற்குள போர்த்தொழின் மாண்பெலா மாவது
அவனோ வையா, ஆய்கரப் பெற்றனன்.
நானோ வென்னில்— ரோட்ஸ் எனு நகரினும்
சைபிரஸ் என்னுந் தனிநகர்த் தீவினுங்
கிறிஸ்தவர் தம்மோ டல்லவர் கெழுமிய
வேனைத் தலத்தினு மிருஞ்சமராற்றிய
வாற்றலை யன்னோன் கண்கள்கண் டிருந்துங்
கணக்கன் கீழாக் கடமைசெய் தொழுகுவேன்;
கணக்க னாகுவா னன்னவன் காலப்
பெரும்பய னலவன் பிரதிநிதி யாயினன்;
யானோ, ஈசனே காண்கவிவ் வேற்றுமை!
மூவர்வேந் தியர்கொடி முடித்தலை சுமப்பவன்.

ராஜ.—ஈசன் சாட்சியா, வித்தகை வாழ்க்கையிற்
றூக்கிடை யவனைத் தொடுத்துயிர் மாய்த்திடும்
பாதகர் வாழ்க்கையை நன்றெனப் பற்றுவேன்.

இயா.—வெறுத்துரை யாடலென். வீரருமற்றிலையால்;
தொழுதூண் வாழ்க்கைக்கு விதித்ததித் துணையே
புனைவுரை யகத்துப் பொங்கிய வன்பிவை
யொன்ற னுயர்வுக் கேதுவா கின்றன;
வொன்றற் கிரண்டு பின்னர்மூன் றுறுமெனுங்
பழையவோர் முறைமையிற் பார்க்கப் படுவதில்;
இப்போ தாயினு மெண்ணிநீ தெளிக;
மூவர்பா லன்பின் மூற்றுறற் கைய
உத்தியோக முறையாற் கட்டுண்டுளனோ.

ராஜ.—அப்படி யாயி னவற்றொடர்ந் தேகேன்.

இயாகோ.—ஐயநீ பொறுக்க; அவற்கியான் செய்வல

செய்வா னவன்றன் பின்புறச் செல்லுவன்;
யாமனை வோரு மிறைவரா மாறிலை,
அதுபோ லிறைவ ராவா ரெவரும்
பிறரா லுண்மையிற் றொடரப் பெறலிலை.
ஆயினும், உண்மையி னமைந்து கீழ்ப் பணியு
மிழிந்ததன் றொடர்பினி லின்பமுற் றமைந்து
கழுதையே மானக் காலங் கழித்துச்
சோற்றுக் காகத் தொழுதுவாழ் சேவகர்
பற்பலர் தம்மை நீயும் பார்க்கலகம்;
அன்னோர் நான்செல வகற்றவும் படுவரால்.
கெடுக வத்தகை யுண்மைக் கிங்கரர்!
சிலருளரே யனைச் சேவக ரன்னோர்
குருவினுஞ் செயலினு முண்மைபோன் றொழுகுவ
ராயினு மகமெலாந் தம்வயி னமைத்துப்
பார்வைமாத் திரத்திற் பணிசில விறைவற்
காற்றுதல் புரிந்தவின் றுங்கவர் தம்பா
னன்னிலை யடைந்து நாலு நிறைந்தபின்
றாமே யிறைவராய்த் தங்கட னாற்றுவர்;
இவர்காண் சிறிது சத்தியி னிறைந்தவ
ரத்தகை யொருவரி லாகுவன் யானும்
ஐயகேள் ராஜரீசனென் பவனீ
யென்பதிங்கெத் துணை யுண்மையோ வத்துணை
மூவர்வேர் தியானென மொழிவதுண் டாயின்
இயாகோ யானல னென்பது மெய்யே
அவனைத் தொடர்ந்துசெ லற்ணின்யா னெனையே
தொடர்ந்து செல் கின்றனன்; சுரர்பதி யறிவான்,
அன்புங் கடமையு மாவதி னன்றியான்
வெளிப்பட வங்ஙனந் தோற்றினும் வேறுள
காரிய முற்றுங் கருத்தினை யுடையேன்;
வெளிப்படையாக விளங்கிடு மென்செய
லென்றனதுள்ளத் தியலையுஞ் செயலையுங்
காண்போ ரறிவுறுங் காட்சித் தாமெனி
னன்றையப் பொழுதே யனைவருங் கவரவென்
னகக்கருத் தெல்லா மாக்கையிற் காட்டுவன்:
இந்த வென்னிலை யென்னிலை யன்று.

ராஜ.—சப்பைவாய்க் கென்ன தசைவந் தடிப்ப
இத்தகை வெற்றி யெய்துதற் கம்மா!

இயா.—கொடியிடை தந்தையைக் கூப்பிட்டெ
முப்பிடு:—
அன்னவன் பின்செல், அவனினி தருந்து
மரும்பெற லமுதி லாலங் கலந்துவை,
தெருத்தொறு மவன்சீர் தூற்றித் தெழித்திடு;
[illegible] தமரைக் கொடுஞ்சின மூட்டுவி;
[illegible] பொன்று டெனினும்
சல்லியர் தமையவன் றனுப்புண் படவிடு;
அன்னவன் சுகமே சுகமே யாயினுந்
தன்மையிற் றிரிந்து தவிர்ந்துபா ழாகப்
பின்னவன் சுகத்திற் பேதுறத் தகையசெய்.

ராஜ.—ஈதோ வவள்பிதா வில்லம்மிருப்பது;
உரத்துக் கூவுவன்.

இயாகோ.—உரத்துக் கூப்பிடு;
(கங்குற் போதாற் கைவழு வதனால்)
மன்பதை நெருங்கிய மாணக ரதனிற்
றீப்பிடித் தெரியும் வேளைபோற் றீரமாய்க்
கூச்சலிட் டவனைக் கூப்பிட் டெழுப்பு.

ராஜ.—கூ! கூ! ப்ரபான்ஷியோ! கூ கூ!

இயாகோ.— எழுந்திராய்
கள்வரோ! கள்வரோ! கண்ணைத் திறந்துன்
மனையைப் பாருன் மகளைப் பார்த்திடு
செழுநிதி தொலைந்தது: திருடரோ! திருடரோ!

**ப்ரபான்ஷியோ மேல் வீட்டில்.**

ப்ரபான்:—என்ன பயங்கரம்! இப்படி யழைப்ப
தேன்?
ஆங்கே யாது வந் தடுத்தது?

ராஜ.— கோவே.
உன்வீட்டவரெலா முள்ளே யுளரோ?

இயாகோ.—கதவு பூட்டியபடி காண்கின்றனவோ?

ப்ரபான்.—என், நீ ரிங்ஙனம் வினவுதற் கேதுவெ
ன்?

இயாகோ.—களவிடப் பட்டனை; [illegible]
வுடையைத் தரி; யுன் னுள்ளம் [illegible]
இழந்தனை ஐயா பாதியுன் னின்னுயிர்; [illegible]
இன்னே, யுடனே, யிப்பொழுதே,—
யெழு;
குறட்டைவிட்டுறங்குகிக் கொடியவர் மாக்களை
மணிநா வோசையான் மடிதுயி லெழுப்பிடு;
இன்றெனி னப்பேய் பாட்டனீ யென்னச்
செய்தே விடுமால்: சொல்வது செய்வாய்,
எழுவா யெழுவா யின்னே யெழுவாய்.

ப்ரபான்.—என்னே யறிவுநீ ரிழந்தனிர் போலும்

ராஜ.—நெடுந்தகா யென்குர லீயுணர் கின்றை
யோ

ப்ரபான்.—இனிதுணர் கின்றிலன்; யாவனீ யூவ
ய்

ராஜ.—என்பெயர் ராஜரீகனென் றியம்புவர்.

ப்ரபான்.—தீவர வாருக; சேயிழை பொருட்டு
யென்வீட் டியர்புடை யேறவேண் டாவென
செப்பிய வுண்மைநீ செவியுறற் றிருந்தும்.



(கங்குலா [illegible]
இன்னே வெறியின் [illegible]
யானந்த மாயவென் [illegible]
பொருவிலா [illegible]

ராஜ.—ஐய, ஐய, ஐய;— என்கொடு

ப்ரபான். [illegible]
விறலும் பதவியும் [illegible] றணிதி.
கிழைத்திட [illegible] பொற்குணத் திறைவ.

ராஜ.—பொருத்தருள் [illegible] றெனக்குநீ கழறு
வை.

ப்ரபான்.—என்னே! களவென்
[illegible] யில்லமுந்
ஈது வெனிஸ்: என்னுடைய [illegible] லன்று.
தனியே [illegible] னென்னவீங் குன்பாற்

ராஜ.—[illegible] வந்தனன் பிரபுவே.
பெருந்தகாய், [illegible] வேண்டினரென் றதுகுறித்

இயா.—[illegible] துக் கடவுளடி பேணு மாந்த
ராயோரி [illegible] வன். நினக்குதவி செயக்கருதி
யடைந்தோ மாகத்
[illegible] ரெனநினைத்தாய்; குதிரையொடு நின்மக
ளைச் சேரக் காண்பாய்.

நீயோருங் குதிரைகளாயுறவினர்கள் கனைத்திடவு
நேர்வா. யன்றே.

ப்ரபான்.—என்னே நீயோ ரிரும் பெருங் கயவன்.

இயாகோ.—ஐய, யானொருவ னறிந்தன சிலசொல
வந்தன னேவென் நின்னொரு மகளு
மூவருங்—

ப்ரபான்.—நீயொரு மூன்னவன் றுரோகி.

இயா.—தாங்களோ,—கொற்றவ னவையம ரொரு
வர்.

ப்ரபான்.—நீயிதற் குத்தர வாதி. நின்னை
ராஜரீகயான் னன்கறிந் திடுவன்.

ராஜ.—ஏதா யினுமதற் கியான்விடை யிறுப்பல்;
ஆயினும், அடிபணிந் தறைவதொன் றுளது,
வனப்பே வடிவெனு நின்னொரு மடமகள்
நாடெலா மலையுமோர் நாய்வாழ் வாழ்க்கையின்
மூவர்கள் [illegible] முயங்கிடும் படியாய்
நிச்சத்த மாவலின் நீண்டு நிசியினின்
மிக்கினி யிழிந்தவோர் மெய்கா வலனெனும்
மம்பியி னாதியத் தாருயிர் பிழைத்திடு
மவுனொடும் போயதற்கு (அடியேன் பாதியும்
மவுனொடும் போயதற்கு (அடியேன் பாதியும்
நின்மனி யாமென நினைப்பது போல்)
அருள்வழிப் பட்டநின் னனுமதி யுளதோ?
நின்னனு மதிப்படி நிகழ்ந்ததா மிதுகிற்
குணர்ந்ததா மென்னி னுன்றனக் கியாங்கள்
துணிவுந் துன்புந் துறைதந்துள பிழைகளைச்
செய்தன மாவேம்; தெரிந்திலை யென்னினின்
பிழைபடு நிந்தையைப் பெற்றன மியாமென
வென்றன தொழுக்கமே யெனையறி வுறுத்தும்;
வரிசையின் வந்த மதியினிற் றப்பி
பின்னனை நின்ற னெறிற்குணப் பெருமைக்
கினிவர விளையாட் டயர்கின் றனனெனத்
துணிந்திடல் செய்யேல்: சுதையெனு நின்கண்
யனுமதி யவட்குநீ யளித்திலை யென்னின்,
மீளவும் விளம்புவன், மேம்பட் டுயர்ந்தனன்
றாற்றறு செலு மரும்பெற லழகு
நுண்ணிய மதியு நுகரரு செல்வமு
மங்கு மிங்குமா யலைந்துநாள் கழிக்கு
மன்னிய னொருவனு லவமே யழிவுற
வெஞ்செல வுற்றனள், வெட்டெனத் தெளிதி
அன்னவ ளந்தப் புரத்திலோ வகத்தோ
விருப்பது மெய்யெனி னிவ்வித நின்னைப்
பழிக்குட் படுத்திய பாவியெற் குரிய
செங்கோ னீதியைச் செலுத்துதல் செய்மோ

ப்ரபான்.—விளக்கைக் கொளுத்துமின். ஐயகோ
விதியே
இங்கொரு திரியை யெடுத்துக் கொடுமின்;
என்றம ரியாரையு மின்னே கூவுமின்;
வினையால் விளைந்தவிவ் விபரீத சம்பவம்
கண்டவென் கனவுபோற் காரிய மாயது;
கனவிடை நிச்சயங் கண்டது முகலா
வென்னையெப் பரிசோ வின்னல்செய் கின்றது.
விளக்கைக் கொளுத்துமின்! எங்கே விளக்கு?
[மறைதல்.]

இயா.—போய்வரு கின்றனன் போதலும் வேண்
டுமால்
(இருந்தாற், சாட்சியென் றேற்பட நேர்தல்போல்)
மூவர்க் கனிஷ்டமாய்க் கரியாய் முன்வரு
மதுகூடாதா, லன்றியு மென்னிலைக்
கேற்றது மன்றுற காரண மென்னெனில்,
(ஈதவன் றனக்கோ ரிழிதரு மன்னினும்)
அரசவன் றன்னை நலம்பெற வகற்று
தென்பதை யறிவேன்; (இன்னமும் நிகழ்தரும்)
சைபிரஸ் தீவிடைச் சமர்குறித் திவனே
யாய்ந்தநல் லேதுவி னனுப்பப் பட்டுளன்;
உயிரெலாம் வழங்கினு மிவன்றிற லொருவனைத்
தந்தொழின் முற்றுவான் றும்பெற லரிதே:
மேல்வரு மேதுவால், மெய்யவக் கொடியனை
நரகவே [illegible]
மிற்றைநாள் வாழ்வி னிலையினை நோக்கி

யங்கொடி யன்பாற் காட்டுத லவசியம்;—
அவையெலா முண்மையி லங்கொடி யன்பால்,
அன்னவன் றவுரு தகப்படக் கருதின்
றாக்தங் கலந்து துருவலுற் றூர்களைச்
சகதரிக் கழைத்துவா; நானவன் றன்னோடு
மவ்விடத் திருப்பேன்—ஆதலின், விடைகொடு.

[மறைதல்.]

**பிரவேசம்.—கிழே ப்ரபான்ஷீயோவும், தீவர்த்தியுடன் சில வேலைக்காரர்களும்.**

**ப்ரபான்.**—இதுவாம் கொடுவினை: ஏகின ளென்மகள்!
ஆற்றொணக் கொடிய துன்பமே யல்லதென்
ஞகா வேளையி லாவதொன் றுளதோ :—
காரிகை மடந்தையை யெவணீ கண்டனை?—
கெடுசுழி; நங்காய்!—என்னோ கிளத்தினை?
மூவரோ டென்ற ?—பிதாவென மொழிய
யாரோ விரும்புவர்!—அவடா னென்னநீ
யெப்படி யறிந்தாய்?—எண்ணு தெல்லா
மெணியிரும் தேனை யேமாற் றினளே!—
என்னோ வன்னவ ளுன்னோ டியம்பினள்?—
இன்னுஞ் சில்திரி யென்கைக் கொடுமின்;
உறவினர் யாரையு முறக்கம்விட் டெழுப்புமின்;
கடிமணம் நிகழ்ந்ததோ, யாவதுன் கருத்து?

**ராஜ.**—உண்மையாய், மணந்தன ரென்பதென் னுள்ளம்.

**ப்ரபான்.**—ஈச!—வெளியே எப்படி யேகினள்?—
அருங்குல மதுவே!—அன்புடைத் தந்தைகாள்,
நும்முடை மகளிர்தஞ் செய்வகை நோக்கி
யன்றோர் தங்க ளகங்கலை தன்னையு
ஒருபுடி நினையீ ருற்றவீங் கிதனல்.
இயற்கையி னமைந்த விளைஞர்தங் குணத்தையும்
பேதையர் குணத்தையும் பேதுறச் செய்யு
மாயப் பெரும்பொடி வசியமுண் டல்லவோ?
இத்தகைச் சில்பொரு ளுள்ளன வென்பதை
ராஜரீகநீ படித்தறிந் திலையோ?

**ராஜ.**—ஆம். ஆம். ஐயா, படித்ததுண் டறிவேன்.

**ப்ரபான்.**—தம்பியைக் கூப்பிடு —தாழ்வுவா ராமே
தையலை நினக்குத் தாரா தொழிந்தனன்—
சிலபே ரிவ்வழி, யவ்வழிச் சிலபேர்;—
எவ்வழி யாங்கள் மூவரோ டவளைக்
காணலா மவ்வழி காட்டநீ யுணர்வையோ?

**ராஜ.**—நின்னரு ளுண்டேல் நேடிக் காண்குவன்.
புறங்கா வலரா லென்னுடன் போதுக,

**ப்ரபான்.**—வுனக்கென் வந்தனம், உடன்கொடு போதுக,
அகந்தொறு மழைப்பன் யென்னுய ராணையைச்
சிலபல மனையிற் செலுத்துதல் கூடும்;—
திண்படைட் டாங்குமின்; சிறப்புயர் வீரரை
வம்மெனச் சொன்மின்—வழிக்கொடு செல்லுக;
ஐயயா னறிவனின் னரியமெய் வருத்தமே.

[யாவரும் மறைதல்.]

**முதற்கள முற்றிற்று.**

**பி. ஆர். கிஷ்ணமாசாரி.**

## தேகாப்பியாசம்.*

தேகப்பயிற்சியின் முக்கிய மிப்படியிருக்க, நமது
தேசத்தில் அநேககனவான்கள், வீட்டிற்குள்ளேயே
அடைபட்டு நல்ல காற்றற்று உடம்பை மெலிய
வஸ்துவைப்போல் காப்பாற்றிவருகிறார்கள். ஐயோ,
இவர்களுக்குச் சரீரசுகம் எவ்வண்ணம் கிடைக்கும்.
தஞ்சாவூர் சமஸ்தானம், நமது ராஜாக்களால் அரசு
புரியப்பட்ட காலத்தில், அதை ஆண்ட ஒரு அரசன்
காற்றோட்டமில்லாத தனது அரண்மனையில்
முடங்கி, யாதொரு செய்லுமற்று, சிற்றின்ப வெள்
ளத்தில் மூழ்கியிருந்த காரணத்தால் வியாதியால்
பீடிக்கப்பட்டு ஆகாரமின்றி உற்சாகமற்று இவ்
வாழ்வை வெறுத்து வருந்த, அரண்மனையின் கீர்த்தி
பெற்றவைத்தியர்கள் எவ்வளவோ விலையுயர்ந்த
நூதன ஒளஷதங்களைக்கொடுத்தும், அரசன் குணம்
காணுதவனுகி, வைத்தியர்களையும் மருந்துகளையும்
வெறுத்து; துக்கஸாகரத்தில் மூழ்கினவனாயிருந்
தான். அரசனின் வியாதிக்குக்காரணம் தெரிந்து
கொண்ட, ப்ரஹசரணப்பிராம்மண னொருவன்
யோகிவேஷம்தரித்து, அரசனிடம் சென்று அவர்
வியாதியின் மூலம் தனக்குச் செவ்வையாய்ப் புலப்
பட்டிருக்கிறதாகவும் கூடிய சீக்கிரத்தில் அரசனை
தான் சொஸ்தம்பண்ணுவது திண்ணமென்றும்
உறுதிசொல்ல, யோகியாகக்காணப்பட்டபடியால்
அவரிடத்தில் அபாரசக்தியிருக்குமென்று நம்பி அர
சன் தன்னை அப்பிராம்மண யோகியிடத்தில் ஒப்பு
வித்துக்கொண்டான். அவ்யோகி, அரசன் தினம்
காலையில் அரண்மனைப்ராகார ராஜவீதி நான்கை
யும் கால் நடையாய் பிரதக்ஷிணம்செய்து வரவேண்டு
மென்றும், பிறகு தெய்வத்தன்மை பொருந்திய தன்
மருந்தை, பிறர்பார்க்காதபடி அரசனுக்கு அவனு
டைய கண்களைக்கட்டிவிட்டு, தானே கொடுக்க

* Read before the Teachers' Association, Tittagudi, by Mr. V. S. Viswanatha Iyer, B. A., Sub-Registrar of Tittagudi.



வேண்டுமென்றும் கண்டிப்பாய்ச்சொல்ல, யோகி
யானபடியால் மருதளிக்கப்புயர்தும் தன் வியாதி
யின் கொடுமையினாலும், அரசன் ஒப்புக்கொள்ளும்
படி நேரிட்டது. ஒரு நாளும் நடந்தறியாத
அரசன், ரமணீயமான பிராதக்காலத்தில் மலர்ந்த
பற்பல புஷ்பங்களின் வாஸனையோடு கூடிய ராஜப்
ராகாரங்களை பெருமூச்சுவாங்க, தேகம்வியர்க்க,
மஹாப்பிரயாஸத்தோடு பிரதக்ஷிணம் செய்துவர
வும், யோகி அவ்வரசனைக் கொஞ்சமிளைப்பாறச்
செய்து, பிறகு அவர் கண்களைக்கட்டிவிட்டு அவர்
வாயில் பசுவர்தயிர்வார்த்து நன்றாய்ப் பிசைந்த
மூளைமூளையான பழயது சாதத்தை வதக்கின சுண்
டக்காய் வறுத்த கோடழிளகாய் ஊறுகாயோடு,
கொஞ்சம் ஊட்டவும், அரசன் "ஓய், யோகீஸ்வ
ரனே, இம்மருந்து தேவாமிர்தம்போலிருக்கிறதே.
இது என்ன அற்புதமருந்து" என்றுகேட்டான்.
அதற்கு யோகி, ஒருமண்டலம் (44-நாள்) அரசன்
அவ்விதம் நடந்து அம்மருந்தைச் சாப்பிட்டால்,
அவன் முழுதும்குணமாகிவிடுவன் என்றும், பிறகு
அம்மருந்து இன்னதென்று அவருக்கு அறி
விக்கப்படும் என்றும் சொன்னர். அரசனும் சரி
யென்று உடட்படவே, யோகியானவர் அரசன்
நடக்கும் தூரத்தை நாளுக்கு நாள் கொஞ்சங்கொஞ்
சமாய் அதிகரிக்கவும், அத்தோடுகூட அவர் ஊட்டும்
பழயதும் அரசனல் ஜாஸ்தி யிழுக்கப்பட்டு, சில
தினங்களுக்குள்ளேயே அரசன் போஜனதிகளை
பிரியத்தோடும் ஆவலோடு முண்ணவாரம்பித்து,
அயர்ந்த தூக்கமுடைந்து, தேகம் திடப்பட்டு, வியா
திஸ்தலத்துக்கேகி ராஜ்யபாரத்தை வஹிக்க ஆரம்
பித்துவிட்டான். பிறகு தன்வியாதிக்கு மருந்தும்
மூலமும் இன்னதென்று அரசன் தெரிந்து மஹா
ஆச்சிரியமுடையவராய், யோகிக்கு வெகுவாகப் பரி
சளித்துப் பிறகு சரீரப்பயிற்சியின் முக்கியத்தைக்
குறித்துத் தன் பிரஜைகளுக்கு விதிகளை ஏற்படுத்
தினாராம்.

இவ்விதமாக சரீரப்பயிற்சியின் அத்யாவசிகத்தை
வற்புறுத்திய நான் இனி சரீரப்பயிற்சியின் (His-
tory) சரித்திரத்தை ஆதிகாலம் தொடங்கி ஆராயப்
போகின்றேன். ஆதிகாலத்தில் போர்வீரர்கள் சரீ
ராப்பியாஸத்தில் மிகவும் தேற்சிபெற்று, யானை,
யாளி, புலி, ஸிம்ஹம் இவைகளின் பலமுற்றவர்
களாய், அவைகளோடெதிர்த்துச் சண்டைசெய்
தும், சண்டைகளில் கனத்த ஆயுதங்களை உப
யோகித்தும்வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள்
மிகவும் மதிக்கப்பட்டு, அரசர்களாகக்கொண்டாடப்
பட்டு யாவராலும் கப்பங்கட்டப்பட்டார்கள்.
ஹோமர் காவ்யத்தில் சொல்லப்படும் ஹெர்க்கியூலி
ஸும், பைபலில் சொல்லப்படும் ஸாம்ஸனும் பார
தத்தில்வரும் பீமனும், மிகவுமுயர்வாகவும் பயத்
தோடும் கொண்டாடப்பட்டார்கள். அவர்களைப்
போல யுத்தத்தில் பலமுள்ளவர்களே அரசர்களாக
நன்குமதிக்கப்படவேண்டுமென்றும், மிக்க பலம்
பொருந்திய போர் வீரர்கள் பலர் ராஜ்யத்தைக்
காக்க வேற்படவேண்டும் என்றும், ராஜ்யத்தில்
அவர்களுக்கே உயர்வான உன்னத பதமும் மரியா
தையும் என்றும், அனுஷ்டானம் உண்டாயிற்று.
ஸ்பார்ட்டா தேசத்தில் ஒவ்வொரு பிரபுவும் தேகப்
பயிற்சியின் படிப்பை வெகு பிரயாஸத்தோடும்
ஜாக்கிருதையோடும் பயின்றுவந்தான். தன்
ராஜ்யத்துக்காக யுத்தத்தில் பெரிய காரியத்தை
ஸாதித்தவனே அரசனுகத் தெரிந்தெடுக்கப்பட்
டான். யுத்தத்தில் முதுகுகாட்டித் திரும்பிய
ஸ்பார்ட்டன், பெற்றோர்களால் திரஸ்கரிக்கப்பட்டு
பத்தினியினல் அவமதிக்கப்பட்டு ராஜ்யத்தினல்
வெளியில் துறத்திவிடப்பட்டான் நமதுதேசத்தி
லும் போர்வீரர்கள் யுத்தத்தில் மாண்டால் வீர
ஸொர்க்கமென்றும், பின்வாங்கினல் நரகமென்றும்
விதி ஏற்பட்டது. பிறகு, நாகரிகம் விருத்தியாகவே
மனிதர்களில் சிலர் மூளைவிசாலிக்கும் யுக்தி, புத்தி,
விஷயப் பிரவர்த்திகளில் தங்கள் கவனத்தைச்
செலுத்த வாரம்பித்தார்கள். அப்பேர்ப்பட்டவர்
கள் நமது தேசத்தில் பிராம்மணர்கள் என்று நாம
தேயம் பெற்றார்கள். நமதுதேசப் படைவீரர்க
ளாகிய க்ஷத்திரியர்கள், யுத்தத்திற் தேர்ச்சிபெற்ற
தங்களின் தடித்தன வீரத்தைப் பார்க்கிலும் சாஸ்
திரநிபுணர்கள் கல்வி, புத்தி, யுக்திகளே மேலான
தென்று எண்ணவாரம்பித்து கல்விமான்களாகிய
பிராம்மணர்களை மரியாதைபண்ணி, அவர்களினிஷ்
டப்படி ராஜ்யமாளத் தலைப்பட்டார்கள். அதை
அனுகூலமாகக்கொண்டு முதலில் சன்மார்க்கர்களா
யிருந்த பிராம்மணர்கள், தாங்கள் உயர்ந்தோரென
இருக்கும் வண்ணம், ராஜ்ய விருத்திக்கு ஒவ்வாத
தான அநேகசெய்கைகள், கொஞ்சங் கொஞ்சமாக
நாளாவட்டத்தில் நமது தேசத்தவர்களால் அனுஷ்
டிக்கப்பட்டுவர காரணபூதர்களானர்கள். ஆன
தால், நமது தேசத்தில் சரீரப்பயிற்சியின் பலன்
நசித்து, போர்வீரர்கள் குறைந்து, நாமும் சரியான
தர்மங்களில் நிற்காமல் நமது தேசம் இப்பாழ
டைந்த ஸ்திதிக்குவந்திருக்கிறது.

ஐரோப்பா கண்டத்திலோ, அப்படியல்ல. ரோம்
ராஜ்யம் க்ஷீணித்து, அநேகதேசங்களாகப் பிரிந்த

போதிலும், சரீரப்பயிற்சியின் [illegible]ன்மையும் போர் வீரத்தன்மூமே ராஜாங்கத்தில் உன்னதமாய்ப்பிரகாசித்தது. படித்தவர்கள் மாந்திரீகர்களெனச்சந்தேகிக்கப்பட்டு, பேய், பிசாசுகளோடு சம்பந்தமுடையவர்கள்போல திரஸ்கரிக்கப்பட்டு, ராஜதண்டனைக்குள்ளானார்கள். வைதிகமார்களாகிய "போப்" "பிஷப்புக்களு"க்கு, அவர்கள் தங்களையடக்கியாளும்படியாக, ஐரோப்பிய அரசர்கள் முழுவதும் இடங்கொடுக்கவில்லை. சரீரப்பயிற்சியினனுகூலங்களை நன்குமதித்து, வாலிபர்கள் போர்வீரராகவே விருத்தியடைந்தார்கள். "மிடில் ஏஜெஸ்", என்று சொல்லப்படும் நடுநூற்றாண்டுகளில் கூட, ஐரோப்பாவில் இரண்டு பிரபுக்களுக்குள் சச்சரவு நேரிட்டால், அவர்கள் இரண்டுபேரும் 'Duel' சண்டையை (த்வந்துவயுத்தத்தை) அதின் விதிப்படி செய்கிறது என்றும், ஜெயித்தவரின்பக்கத்தில் நியாயமிருக்கிறது என்றும் அனுஷ்டானம் அப்பியஸிக்கப்பட்டு வந்தது. இக்காலத்திலும், ஐரோப்பா, அமெரிக்காகண்டங்களில் மூளைவிசாலப்படிப்பே உயர்த்தியாக ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலுங் கூட, சரீரப்பயிற்சியின்படிப்பு கேவலமாக நன்குமதிக்கப்படவில்லை. ஜர்மெனிய தேசத்துப்பிரதிவாலியனும், போர்வீரனுகப் பழக்கப்பட்டு, பலவந்தம்நேரிடும்போது, தனது தேசத்துக்காகச் சண்டைசெய்யும்படியான பக்குவத்தில் வைக்கப்பட்டிருக்கிறான். ஐரோப்பாவின் இதர தேசங்களிலும், அரசாங்கத்தார்கள் கல்விப்படிப்போடு கூட ராணுவப்படிப்பின் தேர்ச்சிக்கும் விதிகள் ஏற்படுத்தி, அதைவிருத்திசெய்துவருகிறார்கள். ஆகையால் இழிவடைந்த நம் தேசத்துச்சிறுவர்களும், வாலிபர்களும் சரீரப்பயிற்சியை மிகவும்அப்பியஸித்து, பட்டாளச்சிப்பாய்களாகவும், இராணுவ உத்தியோகஸ்தர்களாகவும் ஆகப் பிரயத்தனிக்கவேண்டும். அதற்கு நாம் அர்ஹர்களாக கவர்ன்மெண்டாருடைய நம்பிக்கையை நமது நன்னடக்கைகளினாலும், சன்மார்க்கங்களினாலும், விடாமுயற்சிகளினாலும் பெறவேண்டும்.

கடைசியாக இதை நான் முடிக்குமுன் இன்னுமொருவிஷயத்தைப்பற்றி வற்புறுத்துகிறேன். அதென்னவென்றால், ஐரோப்பிய கண்டத்தார் சரீரப்பயிற்சியின் பலனினால் மாத்திரம், மற்றதேசத்தவர்களை அடக்கியாளுகிறார்கள் என்கிற வெண்ணம் தப்பு. ஏனென்றால், ஒருவனுக்குச் சரீரப்பயிற்சியும், அதினால் தேகதிடமும், தைரியமும் எவ்வளவு இருந்தபோதிலும் அவன் மனம் நல்வழிப்பட்டு அவனை [illegible]படி நடந்து, நிற்காவிடில், அவன் பிறரால் அப்பிவே ஆளப்படுவான் என்பது நிண்ணம். உதாரணமாக, பல பெலத்திவர்களும், திடஸ்தர்களான சிப்பாய்களும், சேர்ந்த ஒரு இடத்தில், ஒரு சிப்பாய் ஏதாவதொன்றைத் திருடிவிட்டானானால் அதையறிய அவ்விடத்தில் எல்லோரையும் அரிசியைமெல்லச்சொன்னால், திருடனசிப்பாயின் வாயில் எச்சலூறாமல் அவன்மாத்திரம் அரிசியை மெல்ல சக்தியுள்ளவனாயிருக்கமாட்டான். அச்சிப்பாய் எவ்வளவு திடஸ்தனாயும், தைரியஸ்தனாயுமிருந்தபோதிலும், "திருடிவிட்டோம், திருவேறு பிசகு," என்கிற வெண்ணம் மனதில்குடிகொண்டிருக்கிறபடியால், மனப்பீதியால் வாயில் ஜலமூறுகிறதில்லை. அதினால் அவன் கண்டுபிடிக்கப்பட்டு தெண்டனைக்குள்ளாவான். ஆகையால் சிருஷ்டியில் உயர்ந்த பிராணியாகிய மானிடனுக்குள் சிறந்தது அவனின் மனது (Mind). அதையடைந்த மனிதன், அதை விசாலிப்பாய் உபயோகப்படுத்தி விருத்திபண்ணுவதினால், தன்வேலையைச்செய்ய யானையை அடக்கவும், ஸர்க்கஸில் குதிரையை நாட்டியமாய்ச் செய்யவும், ஸிம்ஹத்தோடு விளையாடவும், தண்ணீருக்குள்ளாலே 'ஸப் மாரின் போட்டால்' பிரயாணிக்கவும், ஆகாயத்தில் 'பாலூனில்' சஞ்சரிக்கவும், கம்பியில்லாத்தந்தியில் பேசவும், திராணியுள்ளவனாக ஆகிறான். சரீரப்பயிற்சியும், சரீரதிடமும் எவ்வளவு இருக்கினும், மனம் விகாரமடைந்தால் அம்மனிதன் பிரயோஜனமடையான். சரீரப்பயிற்சியின் திடத்தால், நிர்விகல்பமனதோடு கூடி விகாரமற்று மிகச்செல்வமாய் வளர்ந்த ஒரு வாலிபன், தன் வீட்டண்டை போய்க்கொண்டிருந்த ஒரு யானை ஒரு குழந்தையை துதிக்கையால் எடுத்தெறியவாரம்பிக்க, அவ்யானைத் துதிக்கையைப்பிடித்திழுத்து அக்குழந்தையைத் தப்புவித்தானும். அன்று ராத்திரி அவன் தாயார் அவனை நோக்கி, "அப்பா பிள்ளையே, உனக்குக்கல்யாணமாகி, என் நாட்டுப் பெண்ணும், அகத்துக்கு வந்துவிட்டாளே. இன்னும் நீ வீட்டில் கொஞ்சங் கூட கவலை யெடுத்துக் கொள்ளாமலிருக்கிறாயே. இதுதுபோன உன் தகப்பனார் சம்பாதித்துவைத்த ஆஸ்தியெல்லாம் செலவாகிவிட்டதே. இனி, நாளைச்சாப்பாட்டிற்கு உப்புமுதல் சகலமும் வந்தாலே ஆகவேணும். இனியென்னசெய்வாயோ?" என்று குற்றங்குறைதான் அதுவரையில் எதையும் [illegible] போல கவனிக்காமலிருந்தது பிசகென்று அவ்வாலிபன் உணரவும், அவன்மனம் [illegible]டது. மறுநாள் அவன் வீட்டுவாசல்வழியாக [illegible]



[illegible] அவன் [illegible] மனைவிகளைச் [illegible] கூடவே ஓடினதும், [illegible] அவ்வரலிபுவீரன் அடைந்த [illegible]. அது வலுதே. இன்னொரு தேசசரித்திரத்தில், ஒருவீரன் [illegible]பிடிக்கப்பட்டு, இரும்பு[illegible] ஒரு [illegible]டைக்கப்பட்டிருந்தான். அவனுடைய சத்துருக்கள், அவன் தங்களைச் சரணுகதிய[illegible] தாகவும், தங்களைச் [illegible]சொல்லி ஒப்புக்கொண்டதாகவும், அவன் [illegible] பலவந்தம்பண்ணும் நிமித்தம், அவனைப் [illegible] அவனுடைய ஒரே குழந்தையை [illegible] அவன் கண்முன்னாலேயே சித்திரவதைசெய்ய வாரம்பித்தார்கள். அவ்[illegible] காரியத்தைத் தடைசெய்யும்படி அவ்வீர [illegible]க்குக் கோபாவேசம் பொங்கி, அவன் [illegible]த்தில் அவனுக்கிருந்த உண்மையான அன்பினாலும், அச்சத்துருக்களின் கீழ்மையான தொழிலில் அவனுக்குண்டான உண்மையான சுவாதந்திரிய ரோஷத்தாலும், அவனின் நாலுபங்கு பெலத்தோடுகூட முறிக்கமுடியாத சிறையின் இரும்புக்கம்பிகளை, முறித்துவிட்டு அவ்வீரன் வெளி[illegible] குதித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. [illegible] சரீரப்பயிற்சியிற் பூரணமாய்ப் பயின்று தேறின ஒருவனுக்கு ஒரு காரியம் அவன் மனவில் சரியானது என்றுபட்டால் மாத்திரந்தான், அவனுக்கு அக்காரியத்தைச் செய்வதில் மிகுந்த சுறுசுறுப்பும், ஊக்கமும் விடாமுயற்சியுமுண்டாகி, அவன் அக்காரியத்தில் ஜெயம்பெறுகிறான். இக்காரணப்பற்றித்தான் Middle Ages இல் Duel யுத்தம் (த்வந்தயுத்தம்) அனுஷ்டிக்கப்பட்ட காலத்தில், நியாயமுள்ள பக்கத்தாரே விசேஷமாய் வெற்றி பெற்றுவந்தார்கள். இவைகளினால் சரீரப்பயிற்சியினனுஷ்டானம் ஒருவனைச் சுறுசுறுப்புள்ளவனாகப் பண்ணியபோதிலும், அவன் செய்யுங்காரியம் சற்காரியமென்று அவன் மனதில் பட்டால்தான் அவனதை ஊர்ஜிதத்தோடும், நம்பிக்கையோடும், ஆவலோடுஞ்செய்து அதில் தடையில்லா ஜெயத்தைப் பெறுகிறான் என்கிற உண்மையை நாமெல்லோரும் செவ்வையாய் மனதில் உணரவேண்டும். ஆகையால், சகோதரர்களே நாம் தற்காலம் கீழ்விழுந்திருக்கும் நிலைமையிலிருந்து நாம் உன்னதபதவியைப் பெற, நாம் சரீரப்பயிற்சியில் முயன்று ராணுவ வீரர்களாக ஆவது மாத்திரம் போதாது. மூளை விசாலத்தாலும், புத்தியாராய்ச்சியினாலும், மனதில் எவைகள் நமக்கும் ராஜ்யவிருத்திக்கும் அனுகூலமான சற்காரியங்கள் என்று உணரப்படுகின்றனவோ அவைகளை யெல்லாம், நாம் ஊர்ஜிதமும் திடமுமான மனதாய்க் கைக்கொண்டு, அவைகளின் விஷயத்தில் நம்மையாளும் கவர்ன்மெண்டாரின் நம்பிக்கையையும், ஒத்தாசையையும், பெற்று நமக்கியல்பாயுள்ள ராஜ்யவிசுவாஸ முடையவர்களாய் எப்போது மிருந்துகொண்டு, சரீரப்பயிற்சியிற்பயின்று, அதில் தேற்சிபெற்று நல்ல மனதோடும், சுறுசுறுப்போடும், விடாமுயற்சியோடும், சற்காரியங்களில் பிரவேசித்து சரீரப்பயிற்சியின் பலனைப்பெற்று லெட்சுமி கடாக்ஷம்பெறப் பாக்கியம்பெற்றவர்களாய் நம் தேசத்தை உன்னத பதவிக்குக் கொண்டுவருவோமாக.

வி. எஸ். விசுவநாத ஐயர், பீ., ஏ.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## Using the Eyes.

## உற்றுப்பார்த்தலினு லடையும் பயன்.

[illegible]களுக்குள்ளே காணும் வேற்றுமைக ளுக்குக் காரணம் அவர்கள் பொருள்களை [illegible] நோக்குதலும் நோக்காமையுமே யாகும். [illegible] உற்றுப்பார்க்கும் வழக்கமில்லாதவனைப்பற்றி, [illegible] நெருங்கிய காட்டுவழியே [illegible] ஒரு கட்டைகூடக் [illegible] என்று உருவியர்களுக் [illegible] ஒரு பழமொழி யுண்டு. அதேபோ [illegible] பெரிவானாலும் இவ்விஷ[illegible] புத்திமானுக்குக் கண்கள் [illegible] முகத்தில் இருக்கும், புத்திகெட்டவனே இருட்டில் நடப்பவன்போல ஒன்றையும் உற்று நோக்கான், என்கின்றனர்.

ஜான்ஸனென்னும் அங்கிலேய பண்டிதர் ஒருபொழுது நெடுந்தூரம் பிறதேசங்களுக்குச் சென்று சஞ்சரித்துவந்த ஒருவரை நோக்கி, "ஐயா, சிலர் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குப்போகும் வழியில்தானே மற்றவர்கள் கண்டம் சுற்றிவந்து தெரிந்துகொள்வதிலும் அதிக விஷயங்களைத் தெரிந்துகொள்வார்கள் என்று சொன்னாராம். கண்[illegible] பார்ப்பது. கண்ணைப்போலவே மனமுமன்றோ பார்க்கவேண்டியது.

கலிலியோ என்னும் வான சாஸ்திரியைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். இவர் தம்பி

ணியந்திர மென்னும் தூரதிருஷ்டிக் கண்ணுடியை நூதனமாக அமைத்துப் பிரசித்திபெற்றவர். அன்றியும் 'பெண்ட்யூலம்' என்னும் கடிகார உறுப்பின் பிரயோசனத்தை முதல் முதல் கண்டுபிடித்துக் கடிகாரங்களுக்கு உபயோகப்படுத்தினவரும் இவரே. அநேகர் மேலே நின்று தொங்கக்கட்டிவிட்ட பாரமொன்று முன்னும் பின்னுமாகத் தாளம் போடுதல்போல ஊசலாடுவதைக் கண்டிருப்பார்கள். ஆயினும் இவர்தான் முதலில் அதன் பிரயோசனத்தைத் தெரிந்துகொண்டவர். இவரது வாசஸ்தானமாகிய பீஸா நகரத்தில் ஒருபொழுது தேவாலயத்தில் தீபம்போடுகிறவன் முகட்டினின்று தொங்கிய ஒரு விளக்கில் நிறைய எண்ணெய்விட்டபின் அதை முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருக்கவிட்டான். கலிலியோவுக்கு வயது 18. இவர் அதைப்பார்த்ததும் குறிப்பாகக் கவனித்துக் காலத்தை அளந்து நிர்ணயித்தற்குறிய தொரு கருவியை அமைப்பதற்கு அது சாதகமாகுமென்று கருதினர். ஆயினும் 50-வருஷம் சென்றது. அதைப்பற்றிப் படித்துச் சிந்தித்துக் கடைசியில் பெண்ட்யூலம என்னும் கடிகார உறுப்பைக் கண்டுபிடித்து அக்கருவியை முடிப்பதற்கு.

ஸர் சாமுவல் ப்ரௌன் என்னும் கணித பண்டிதரொருவர் ஸ்காத்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் மத்தியில் உள்ள ட்வீட் நதிக்கருகே வாசம்செய்துகொண்டிருக்கையில் அந்நதிமேல் அதிகப் பணச்செலவில்லாமல் சுலபமாக ஒரு பாலம் கட்டுவிக்கும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்கவேண்டி அதுவிஷயமாக ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அப்போது ஒருநாட் காலையில் பனிமூடிக்கொண்டிருக்கையில் தோட்டத்தில் சென்று உலாத்திவருகையில் சிறிய சிலந்திக் கூடொன்று வழியில் குறுக்கே தொங்கிக்கொண்டிருக்கக் கண்டார். அதைப்பார்த்ததும் அதைப்போலவே இருப்புக்கயிறு அல்லது சங்கிலிகளால் ஒரு பாலம் கட்டி முடிக்கலாமென்னும் எண்ணம் உடனே அவருக்குத்தோற்றியது. அவ்வாறே தொங்கும் பாலத்தைப் புதிதாகக் கண்டுபிடித்து நிருமித்தார்.

ஜேம்ஸ் வாட் என்னும் சிற்பவல்லவர் ஒரு ...யந்திரங்களைக் கண்டுபிடித்துச் செவ்...யேர்பெற்றவர். இவரை ஸ்காத்லாந்துதேசத்தில் க்ளைட் நதிக்கடியில் மேடுபள்ளமாயிருக்கும் அடித்தரை வழியாய்க் குழாய்வைத்து ஜலம் கொண்டுபோக வழியென்னவென்று கேட்டபோது, அது விஷயமாக ஆலோசித்துக்கொண்டிருக்கையில் ஒரு நண்டின் ஓட்டைக்கண்டு அதைக்கவனித்து நோக்கி அதேமாதிரியாக வைத்துக்கொண்டு ஒரு இருப்புக்குழாயை இயற்றுவித்து அக்காரியத்தை நிறைவேற்றினர்.

ஸர் இஸம்பார்ட் ப்ரூனல் என்பவர் இன்னொரு பேர்போன வாஸ்துசாஸ்திரி. இவர் தேம்ஸ் நதிக்கீழே ரயில்வண்டிகள் செல்லச் சுரங்கவழி யமைத்தற்கு, அவ்விஷயமான ரகசியங்களைக் கப்பல் வண்டுகளின் செய்கையை ஆராய்ந்து தெரிந்துகொண்டார். இக்கப்பல் வண்டானது மரத்தைத் துளைக்கையில் முதலில் ஒருபுறத்திருந்தும் பின்பு மறுபுறத்திருந்தும் தன்னுடைய வயிரம்போன்ற கொம்புகளாற் குடைந்து முழுதும் துளைத்தபின்பு முகட்டிலும் பக்கங்களிலும் ஒருவிதமான பளபளப்பான எண்ணெயாற் பூசுவதைக்கண்டு அவ்வாறே தாமும் பெருமிதமாகச்செய்து தாம் மேறகொண்ட சிற்பவேலையை முடிக்கலாயினர்.

கொலம்பஸ் என்பவர் பேர்போனமாலுமியொருவர். இவர் அமெரிகா கண்டத்தை முதல் முதல் கண்டுபிடித்தவர். இவர் யாத்திரைசெய்கையில் இவரது பரிசனர்கள் நெடுநாளாயும் கரைகாணமையினாலே அதைரியப்பட்டு ஊருக்கத் திரும்பிவிடவேண்டுமென்று கலகித்தபோது ஒரு நீர்க்கொடியைக்கண்டு அச்சொற்பவிஷயத்தால் அவர்களுக்குத் தைரியம் உண்டுபண்ணி அக்கலகத்தை அடக்கலாயினர்.

வர்த்தகமோ, சிற்பமோ, சாஸ்திரமோ எந்த வேலை எந்தப்படிப்பானலும் சரி, ஒவ்வொன்றிலும் நுட்பமான விஷயங்களை அசட்டைசெய்யாமல் கவனிப்பதனாலே தேர்ச்சியும் ஜயமும் அடைதற்குக் காரணமாகும். நாம் குறிப்பிட்டுத் தெரிந்துகொள்ளும் விஷயங்களில் அநேகம் முதலிய லெகு அற்பமாத் தோற்றினும் கடைசியில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்திலும் மிக்க பயன்படுவதாகும்.

—Smiles.

சன காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அண.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2

KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
விவேகசிந்தாமணி
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

...e Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.

...த்தகம் 11.] 1902ஆு அக்டோபர்மீ. [இலக்கம் 6.

## ...rms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading ...ooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

...GLISH & FOREIGN SUBSCRIPTION 7*s.* 6*d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

...IGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of ...e term, (*i. e.*, in May of each year) 8 As. discount, ... the annual rate, and 4 As. off the half-yearly rate.

...bscriptions entered to begin with only April or May of each year. ...rolled Subscribers may not withdraw except at the end of the year.

☞To regular annual subscribers 2 months' grace allowed for the prepayment of subscription, and in ...e case of regular half-yearly subscribers 3 weeks' ...ne, within which all subscriptions should be paid ... entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a ...*olume*, though regular subscribers may elect to pay ...heir subscriptions in half-yearly instalments. *All ...otices for discontinuance are to be given in the ...eginning of the new year, i. e., in April or May; for ...therwise one should have to pay for the whole of the ...urrent volume.* Outstanding subscriptions are often ...ealised by V. P. P. to prevent accumulation of ...rrears.

In all business correspondence, Subscribers are re...ested to quote their register number found on the ...rapper, as it would ensure prompt attention and ...e vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—*அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது.* ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அண. பழைய பிரதி 8 அண.

லேசானகாகிதப்பதிப்பு:—*சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.*

*வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.*
*தனிப்பிரதி 5½ அண. பழைய பிரதி 6 அண.*

வருஷாரம்பத்திலே (*அதாவது மேமாசத்தில்*) *தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணவும், 6 மாச சந்தாவில் 4 அணவும் தள்ளிக்கொடுக்கப்படும்.*

*ஏப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.*

☞ *வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.*

*பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.*

*கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதமும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.*

## An Improved Method of Primary Education.

# பிரதம வித்தியா போதனமுறை.

---

### ஓர் மேலான வழி.

சிறுவர்களுக்கு வித்யாபோதம் செய்வது மிகவும் முக்கியமான விஷயம். குழந்தைகளின் துல்லியமான மனதில் இளமைப் பருவத்தில் என்ன எண்ணங்கள் உண்டாகச் செய்கிறோமோ அவைகளே முதிர்ந்து பின்காலத்தில் அததற்குரிய பயனைத்தருகின்றன. அன்றியும் குழந்தைகள் தேகமும் மனதும் குசவன்கை மண்போல், நாம் எப்படி வனைகிறோமோ அப்படியெல்லாம் இணங்கி வரும் தன்மையது. ஆகையால் குழந்தைகளைப் பெற்றோர்களும், சிறுவர்களுக்கு வித்தியாபோதம் செய்யும் பிரதம பாடசாலை யுபாத்தியாயர்களும் குழந்தைகளினுடைய ஸ்வபாவம் இன்னதென்று உணர்ந்து மனோ தத்துவங்களின் ஞானவிசேஷத்தால் அவர்களை இயற்கை வழியில் விர்த்திக்குக் கொண்டுவர முயலவேண்டியவர்களாயிருக்கிறார்கள். நம்மவரில் பெற்றோர்கள் பெரும்பாலும் பிள்ளை வளர்க்கும் மாதிரி யுணராதவர்களாக விருக்கிறார்கள். அதுவும் பாலிய விவாகம் விசேஷமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் 12, 13-வயதுச் சிறுமிகளெல்லாம் தாய்மார்களாகிறார்கள். இதனால் அவர்களின் தேகமனோ வளர்ச்சிக்கு இடையூறு நேரிடுவதோடு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் திடனற்றவைகளாக விருக்கின்றன. இக்குறையை நிவர்த்திக்க இளம் வயதில் சாந்திக் கல்யாணம் செய்வதைத் தள்ளி வைத்துக்கொள்ளவேண்டும். இந்தச் சீர்திருத்தம் அதியாவசியகமானதாக விருந்தும் அப்பியாசமும் அனுஷ்டானமும் இதற்கு மாறாகவே யுண்டாகி விர்த்தியாய்க் கொண்டு வருகிறது.—இது நிற்க. இந்நாட்டிலுள்ள பிரதம வித்தியா பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களோ சொற்ப வித்தை கற்றவராகவும் குழந்தைகளின் தேகமனோதத்துவங்களை சாஸ்திர ரீதியாகப் படித்துணராதவர்களாகவு மிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்துக்கு இவர்களிலும் மேலான வித்தையும், பயிர்ச்சிப் பழக்கங்களு முள்ளவர்கள் உபாத்தியாயர்களாகக் கிடைப்பது துர்லபம். ஆயினும் இது விஷயத்தில் ஒருவித மேலான எண்ணத்தை வைத்துக்கொண்டு அவ்வெண்ணம் நிறைவேறுகிற வரையில் அதற்கு அநுகூலமாக முயர்சி செய்து உழைத்து வரவேண்டிய தவசியமாயிருக்கிறதால் சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜில் உபாத்தியாயர்கள் சங்கத்து முன் பிரதம வித்தியாபோதனையை இன்னும் மேலான விதமாக நடத்தி வரவேண்டியதைப் பற்றி அமெரிக்காவிலிருந்து வந்து இச்சென்னையில் கர்னல் ஆல்காட் ஸ்தாபித்த பஞ்சமர் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்யும் முயற்சியி லுழைத்துவரும் மிஸ்ஸஸ் அவுட் ரயிட் என்னும் துரைசானி செய்த ஓர் பிரசங்கத்தி லடங்கிய மேலான கருத்துகளை ஒருவாறு இங்கு எடுத்துக்கூறி வெளியிடத் தீர்மானித்தோம். அந்த சபையில் சென்னை வித்யா இலாகாத் தலைவர் கனம் மிஸ்டர் ஜி. எச். ஸ்டுவர்ட் அவர்கள் அக்கிராசனாதிபதியாக விருந்து பிரசங்கியார் செப்பிய விஷயங்களை ஆமோதித்து அவருடைய கருத்திற்கலந்தவராக விருப்பதாய்க் காட்டியதால் அவைகளை எல்லாரும், முக்கியமாய் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், கவனிப்பது நலம்.

மிஸ்ஸஸ் அவுட் ரயிட் துரைசானி செய்த மேலான பிரசங்கத்தின் சாராம்சம் இது.—'எடியுகேஷன்' என்கிற இங்கிலீஷ் வார்த்தைக்கு ஆதியில் பத அர்த்தம் (to draw out) 'உள்ளதை வெளிக்குக் கொண்டுவருவது' என்றிருந்தது. அங்கிலேய பாஷையில் எத்தனையோ வார்த்தைகள் காலதேச வர்த்தமானங்களி லுண்டான மாறுபாடுகளுக் கிணங்கி அவைகளின் மூல அர்த்தங்கள் மறைந்து அவைகளுக்கு நேர் விரோதமான அர்த்தங்களை யுடையனவா யிருக்கின்றன வென்பது



சொல்லியல் கற்றோர் அனைவருக்கும் பிரத்தியக்ஷம். அப்படியே இந்தப்பதமும் ஆதியிலிருந்த அருத்தத்தை யிழந்து அதற்கு நேர் விரோதமாக (to pour in) 'வெளியிலுள்ளதை உட் புகட்டுவது' என்கிற அருத்தம் கொண்டதாய்விட்டது. இதை நன்றாய் விளக்குவோம். 'வித்தை பயில்வது' என்பதற்கும் 'புத்தி புகட்டுவது' என்பதற்குமுள்ள வித்தியாசத்தை ஊகித்துப் பாருங்கள். வித்தை பயிற்றுவதாவது செடி வளர்ப்பது போல் அது வளருவதற்கு ஆஸ்பதமான சாதனசாதகங்கள் அதற்குக் கிட்டும்படியான முயற்சி செய்து அது தானாக வளருவதைப் பார்த்திருப்பதாம். செடி கொடிகள் வெயில், தண்ணீர், பூமி, ஆகாயம் இவைகளிலிருந்து தாமாகச் சேர்த்துக்கொள்ளும் தாதுக்கள் தத்துவங்களன்றி நாமாக அதனுட் புகட்டுவது ஏதாகிலுமுண்டா! அப்படிப் புகட்டினால் அவை சேதமடைவதன்றி அதனால் விர்த்தியாவதுண்டா? இல்லை. இது பிரத்தியக்ஷமாயிருந்தும் குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விப்பதிலும் நாம் இந்த உண்மையை மறந்து அவர்கள் தாமாக முயற்சித்துக் கிரகித்துக் கொள்வதற்கு வேண்டிய ஹிதங்கள் மட்டும் புரியாது அவர்கள் மனதில் நாம் கற்ற கல்விகளைப் புகட்டப் பார்க்கிறோம். இதன் பயன் பொட்டைப்பாடமும் நெட்டுருவும், மனோசக்திக் குறைவும், புத்திமந்தமுமாக முடிவதே. இப்படிக் குழந்தைகளுக்கு நாம் செய்யும் தீங்கு அளவற்றது. மேற்குத் தேசங்களில் அதாவது ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் நடைபெற்று வரும் வித்தியாபோதனமுறை மேலானதாகப் பாவித்து கண்மூடித்தனமாய் அதையே அனுஷ்டிப்பது இத்தேசத்தில் இப்பொழுது வழக்கமாய்க் கொண்டுவருகிறது. இந்தக் குருட்டு வழக்கம் கூடாதென்றும் நாம் உள்ளதை யுள்ளபடி நம் கண்ணால் பார்த்து ஆராய்ந்து நல்லவற்றை மேற்கொண்டு கெட்டவற்றைத் தள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார். உலகத்தில் மேன்மை பெற்று விளங்கிய மேலோர் 'ரிஸல்ட் ஸ்கூல்களில்' பரிசுபெற்ற பிள்ளைகளன்று. அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் பாடுபட்டு தாயினிடத்துப் பாலுண்டு வளரும் குழந்தைபோல் பிரகிருதியினிடத்து நேரில் பழகிப் பயின்று அதனுண்மைகளை அதிக கஷ்டப்பட்டு தேர்ந்துணர்ந்து முன்னுக்குவந்தவர்களேயாம். உதாரணம் வேண்டுவோர் ஹம்ப்ரீ டேவி யென்பவரின் சரித்திரம் மற்றோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் படித்துச் சிந்திப்பார்களாக. ரிஸல்ட் கிராண்டு ரூல்களை யனுசரித்து எல்லாக் குழந்தைகளுக்கு ஒரே விதமாகச் சொல்லிக்கொடுப்பது சுத்தப் பிரயோசனமற்றதும் தீங்கு விளைப்பதுமான ஏற்பாடு. 30-40 குழந்தைகளை ஒருமிக்க வைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரேவித கஞ்சி போட்டு வளர்க்க முயன்றால் முடியுமா? அந்தந்தக் குழந்தையின் தேகஸ்வபாவமறிந்து அததற்கு இயைந்த ஆகாரமூட்டி வளர்த்தாலன்றி குழந்தைகள் முன்னுக்குவாரா. தேக தத்துவங்கள் எப்படியோ, அப்படியே தான் மனோ தத்துவங்களும், ஒவ்வொரு குழந்தையின் மனோபாவமறிந்து அதற்கேற்ற வண்ணம் அவர்கள் மனது முயன்று விர்த்தியடையும் வழியைத் தேடவேண்டும். இதற்கு ஒவ்வொரு குழந்தையையும் நன்றாக அறிந்துகொள்ள ஆசானுக்கு புத்தி நுட்பமும் அமைந்திருக்கவேண்டும். வித்தையின் பயனை யுணர ஓரேவழி யுண்டு. ஜீவனைப் பரிசுத்தனாக்கி மேன்தகையானாகச் செய்வது எதுவோ அதுவே உண்மையான வித்தையாகும். மற்றதெல்லாம் அவித்தையே யாகும். விஷய ஞானம ஆத்மஞானம் பெறுவதற்கு ஒரு வழியேயன்றி அதுவே முடிவான நோக்கமன்று. மேற்றேசங்களில் பல நூற்றாண்டுகளாக வழங்கிவரும் வித்யாபோதன முறையினாலடைந்த லாபமென்ன? லக்ஷம் கோடிக்கணக்கான பிராஜைகள் எழுத்தறிவுபெற்றும் உயிர் வாழ்க்கைக்கு உபயோகமற்றவர்களாய் ஜீ

யின்றித் தவிக்கிறார்கள். இவர்களை யென்ன
விதத்தில் ஈடேறச் செய்யலாமென்கிற வழி
யறியாமல் நாகரிக சிரேஷ்டர்களான மேற்குத்
தேசத்தார் திகைத்துக் கலங்கி நிற்கிறார்கள்.
இந்தியாவிலும் பி. ஏ. க்கள் மலிந்து போய்
சீந்துவாரற்றுக் கிடக்கிறார்கள். இப்படிப்பட்ட
வித்தையினால் பயனென்ன ?

சிகாகோ யூனிவர்ஸிடி ஜனசமூக தத்துவங்
களைப் போதிக்கும் ஆசிரியர் அவருடைய
மாணாக்கர்களைக் கூட்டிக்கொண்டு இல்லினாய்
மாகாணத்து சர்க்கார் ஜெயிலைப் பார்க்கப்
போனார். அங்கே சிறையிருந்த மனிதர்கள்
பெரும்பாலும் 'படித்தவர்' என்று சொல்லும்
வகுப்பினைச் சேர்ந்தவர்களாகவே யிருந்தார்
கள். சிலர் யூனிவர்ஸிடி பட்டம் பெற்றவர்
களாகவும், சிலர் 'பாங்கர்களாகவும்,' தாகு
வியாபாரிகள், லாயர்கள், மதக்குரவர்கள்
முதலான வகுப்புகளைச் சேர்ந்தவர்களாக
வும், மற்றும் சிலர் இராஜ்ஜியத்தில்
பேரும் புகழும் பெற்றும் உயர்ந்த ஸ்திதியில்
இருந்தவர்களாகவு மிருந்தார்கள். கற்றுத்
தேர்ந்தோர் இப்படிக் கசடர்களாகிக் குற்ற
வாளிகளாய்ச் சிறையி லடைக்கப்பட்டிருப்
பார்களாயின் இதனால் நாம் அறியத்தக்க
தென்ன ? இவர்கள் கற்றுத்தேறிய கல்வி
முறையில் ஏதோ பெருங்குற்ற மிருக்கிறது,
என்பது ஒன்றே. இல்லாவிட்டால் இத்தனை
பேர்கள் ஊர்த்துவமுகமாக (மேனோக்கி)ப்
போகமுயன்று இப்படி அதோகதியான
(கீழான) நிலைக்கு வருவானேன். இதிலுள்ள
குற்றமென்னவென்று சற்று விசாரிப்போம்.

மனுஷன் ஆத்மா, காணம், கருவியென்று
மூவகைத் தத்துவங்கள் சேர்ந்தமைக்கப்பட்ட
ஜீவனாயிருக்கிறானென்பது பிரத்தியக்ஷம்.
இவைகளைத் தலைகீழாகத் திருப்பிச்சொல்லின்
தேக, மனோ தத்துவங்களும் ஆத்ம தத்துவ
மும் சேர்ந்தமைக்கப்பட்டவனாகச் சொல்ல
லாம். இப்படிப்பட்ட திரிவித சேர்க்கையா
லுண்டான மனுஷனை அவனது தாழ்ந்த தத்
துவங்களை மட்டும் விர்த்திசெய்து உயர்ந்த
தத்துவத்தை அலக்ஷியமாய் விட்டுவிடுவதால்
விளையும் வில்லங்கம் இதுவென்று ஊகித்துப்
பார்க்கும் விவேகிகளுக்கு நன்றாகத் தோன்
றும். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விருப்
பது ஆத்மா. கருவிகரண விர்த்தி ரூபமான
வித்தை யெல்லாம் ஆத்மவிர்த்திக்கு ஆஸ்பத
மாக விருக்கவேண்டுமேயன்றி, ஆத்ம நாசத்
துக்கு ஹேதுவான கருவிகரணப் பயிற்சிகள்
(இதில் எல்லாக் கலைகளும் அடங்கும்) எவ்
விதத்திலும் கடைசியில் கெடுதியே விளைக்கு
மன்றி என்னமாய் நன்மை விளைக்கும். இப்
படிப்பட்ட வித்யாமுறையை நம்பி ஜனசமூக
க்ஷேமத்தை நாடுவது அழிந்துபோன அஸ்தி
வாரத்தை வைத்துக்கொண்டு அதன்மேல்
வீடுகட்டுவதை யொக்குமன்றி வேறில்லை.
மனுஷனுடைய நடத்தைக்குக் காரணமா
யிருக்கிற விதிவிலக்குகளெல்லாம், இப்பொழு
துள்ள படிப்புமுறைப்படி, அவனுக்கு வெளியி
லிருந்து ஆதாரம் பெறுகின்றன. என் திரு
டக்கூடாது ? சர்க்கார் பிடித்துத் தொந்
தரவுசெய்து ஜெயிலில் போட்டுவிடுவார்கள்.
ஏன் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கக்கூடாது ?
ஜனசமூகத்தார்க்குத் தெரிந்தால் தொந்தரவு
விளையும். இப்படியே ஒவ்வொன்றுக்கும்
ஆதாரம் வெளியிலிருந்து வருகிறது. இது
தத்துவ விரோதமானதால் இந்த அதிகாரம்
முற்றும் செல்லவில்லை. நம் இந்துக்களுக்குள்
இப்பொழுது இந்த வழக்கம் ஜாஸ்தியாய் வரு
கிறது. எந்தக் குற்றமானாலும் இரகசியமாகச்
செய்தால் தோஷமில்லை யென்கிற பாவம் அதி
கரித்துவருவதோடு, கண்டுபிடிக்கப்படாதபடி
வெகு தந்திரமாய் பஞ்சமாபாதகங்களையும்
செய்து தப்பித்துக்கொள்கிறவன் மிகச்சாமர்த்
தியவானாகக் கொண்டாடி மதிக்கப்படுகிறான்.
இதனால் ஹிந்து ஜனசமூகம் அடியில் அழுகிப்
போய் நாறும் துர்நாற்றம் அதையூன்றிப்பார்த்
துணரவல்லார்க்கு சகிக்கக்கூடாத வண்ண
மாக விருக்கிறது. மற்றவர்கள் அழுகல் தெப்
பத்தை நம்பி ஆற்றைக்கடக்கத் துணிந்தவன்



துணிவாக மேனுக்கு ஏதோ தெரிந்தும் தெரி
யாமலும் ஒரு வேஷம்போட்டுக் காலத்தைக்
கழித்து வருகிறார்கள். நெருப்புக் கோழி
ஆபத்து நெருங்கியகாலத்து தலையை மணலில்
மூடிக்கொண்டு அதினின்றும் தப்பிக்கொண்ட
தாக மனப்பால் குடிக்குமாறு, இவர்களும்
ஹிந்து ஜனசமூகம் ஆயிரங் காலமாக அழிய
வில்லை யென்று சொல்லி, இவர்கள் எப்படி
நடந்துகொண்டபோதிலும் அது அழியாது
போல் எண்ணி எல்லாவித இடும்புகளும் செய்
துவருகிறார்கள். இவ்விடும்புகள் செய்யும்
கொடும்பாவிகள் தம்தலைக்கு வரும் தண்டனை
யை யோர்ந்திலர். ஆனால் அவர்கள்பேரில் குற்
றம் சொல்வதி லென்னபயன், காலம் கெட்டு
விட்டது, முறையும் மாறிவிட்டது ; இது நிற்க.
வித்யாபிவிர்த்தியின் நோக்கம் குணத்தை
விர்த்திசெய்வதே முதல் நோக்காய்க்கொண்டி
ருக்கவேண்டும். கருவிகரணங்களின் விர்த்தி
யால் குணமும் சீலமும் விர்த்தியாகப்பார்க்க
வேண்டும். குணம் ஆத்மவிர்த்தியால் உண்
டாவதாயிருப்பதால், கருவிகரணங்களைக்
கொண்டு ஆத்மவிர்த்தியை நாடியுழைக்க
வேண்டுமேயன்றி, ஆத்மநஷ்டத்துக்கேதுவாக
கருவிகரணங்களை விர்த்திசெய்வது கூடாது.
இதனால் தனவிர்த்திக்கனுகூலமான வித்தை
யெல்லாம் கூடாதென்று சொன்னதாக,
அர்த்தம் செய்துக்கொள்ளக்கூடாது. ஜீவன்
தன் ஸ்வபாவத்தை யறிந்து அனுபவிப்
பதோடு தனவிர்த்தியும் செய்பக்கூடிய வித
மாய் வித்தியாப்பியாசம் செய்யப்பெறின் அப்
பொழுது எல்லாம் ஒத்துவரும். அப்படி வித்
யாப்பியாசம் செய்ய ஒவ்வொரு ஜீவனுடைய
வாசனா விசேஷங்களை (இயல்பாயமைந்துள்ள
மனோசக்திகள் முதலியவை) யறிந்து அவ
னவன் விசேஷ நிலைக்குத்தக்கப்படி, உள்ள
மைந்துள்ள அவ்விசேஷசக்திகளை வெளிக்
கொண்டுவரவேண்டிய சாதனசாதகங்களைச்
செய்து அவனை விர்த்திக்குக்கொண்டுவர
வேண்டும். ஒவ்வொருவனும் அவனுக்கியல்
பாயமைந்துள்ள சக்திகளைக்கொண்டு எத்தொ
ழில் பயில்வதில் அவனுக்குச்சாமர்த்தியமுண்
டென்றுணர்ந்து அதில் அவன் சாமர்த்திய
வானாகும்படி அவன் மனதை விர்த்திசெய்வ
தோடு கண்கள் கைகளையும் நன்றாகப்பழக்கி
வரவேண்டும். இது பலவகை அனுபவத்தால்
மட்டுமே தெரியவருமாதலால், எல்லாருக்கும்
ஒரேவிதப் படிப்பாகவின்றி, பலவகையிலும்
படிப்புசாதனங்கள் ஏற்படவேண்டும். எந்தத்
தொழிலில் அல்லது கலையில் அவனவனுக்கு
அதிக விருப்பமிருக்கிறதென்பதை ஒரு தரம்
நன்றாகத்தெரிந்துவிட்டால் அப்புறம் அவன்
அத்துறையிலிறங்கி அதில் விசேஷ வித்தை
பயின்று வரலாம். அதுவரையில் அவனுக்கு
எல்லாவிதத்திலும் அனுபவமுதிர ஆஸ்பதங்க
ளிருக்கவேண்டும். புஸ்தகப்படிப்பினால் மட்
டும் ஆவது ஒன்றுமில்லை. பிரகிருதிஸ்வபா
வத்தை நேரில் பழகிப்பார்த்து கையாடியு
ணர்ந்தறியவேண்டும். அப்படி அறியும் அறிவே
நிலைத்திருக்கும். அதற்கு புஸ்தகங்களை ஒத்
தாசையாக உபயோகிக்கலாமே யன்றி பிரகி
ருதிக்கு பதிலாக புஸ்தகங்களைக்கொண்டு
ஞானம் பெற முயல்வது விபரீதமாகமுடியும்.
பிரகிருதிமுகமாய் அறியும் அறிவு ஆத்மசக்தி
யை விர்த்திசெய்கிறது. புஸ்தகப்படிப்பு ஆத்
மாவைத் தொடாமல் கருவிகரணங்களை மட்
டும் விர்த்திசெய்கிறது. வேலைக்காரன் புத்தி
சாலியாயிருந்தால் "வல்லவனுக்குப்புல்லுமா
யுதமாம்" என்றபடி அவன் கருவிகளின்
குறையையும் நிவர்த்திசெய்துக்கொண்டு தன்
காரியத்தை முடித்துவிடுவான். வேலைக்கார
னைப் பயிற்சியின்று மூட்டாளாகப்போகவிட்டு
கருவிகளையெல்லாம் மேன்மேலும் விர்த்தி
செய்துகொண்டுபோனால் அதை உபயோகிப்
பது எப்படி? மூடனான வேலைக்காரன் உயர்ந்த
கருவிகளை யுபயோகிப்பதில் அவைகளைத்
துர்விநியோகப்படுத்தி காரியத்தையும் கருவி
யையும் கெடுப்பதோடு தனக்கும் கேடு விளை
வித்துக்கொள்வான் என்பதிற் சந்தேகமுண்
டோ? அதுபோலவே ஆத்மவிர்த்தியோடு கரு
விகரணங்களையும் விர்த்திசெய்தால் இகபர

மிரண்டுக்கும் மேலான சாதகமாகும். அப்படிக்கின்றி இப்பொழுதைப்போல் ஆத்மாவை அலக்ஷியம் செய்து விட்டு விட்டு கருவிகரணங்களை மட்டும் விர்த்திசெய்துவந்தால், 'இல்லிருய்' மாகாணத்து ஜெயிலில் கண்ட காக்ஷிதான் கைகூடும். ஜீவன் துர்விஷயத்தில் பிரவேசித்து ஜனசமூக க்ஷேமத்துக் ச் சத்துருவாய் தன் கருவிகரணங்களையும் கெடுத்துக் கொண்டு தானும் கெட்டுப்போவான். இந்த உண்மையை வற்புறுத்துமாறு ஏசுகிறிஸ்துவானவர் "உலகெல்லாம் கிடைக்கப்பெற்று உன் ஆத்மாவை யிழந்துவிட்டால் நீயுறும் பயனென்" என்று உண்மையாய்க் கேட்டார். அவர் இக்கேள்வி கேட்டு 1902-ம் வருஷங்களாகியும் அவரை ஜகத்ரக்ஷகரென்று கொண்டாடும் மேற்குத்தேசத்தாரும் அதனுண்மையை உள்ளபடி யின்னும் ஓர்ந்திலர்.

---

SOME POINTS BEARING ON TEACHING.

## போதன முறையைப்பற்றிய சில விஷயங்கள்.

---

"கல்விகசடரக்கல்
கற்றபின் கனிவொடும்கற்பி."

என்றார் Dean Colet (டீன் கோலட்) என்றபண்டிதர்.*

ஒரு ஆசரியர் மாணுக்கருக்குக் கற்பிக்க முக்கியமாய் இரண்டுவகை உளதென புலப்படுகிறது. 1 வாய்மொழியாய்க் கற்பித்தல், 2. புஸ்தகம் முதலிய உபகரணங்களைக் கொண்டு போதித்தல். 2-ம் முறையின்படி புஸ்தகங்கள் முதலிய உபகரணங்களைக் கொண்டு போதித்தாலும் உபாத்தியாயர் தான் வீட்டில் ஒவ்வொருபாடத்தையும் ஆராய்ந்துணர்ந்து கேள்விகள், பொருள்படக்கூறல், விவரித்தல், உதாரணங்களைக்கொண்டு நிரூபித்தல் என்ற இவ்விதச்செயல்கள் அவரிடத்தில் விளங்குவதால் இந்த பார்க்கமும் முதன் முறையைச் சார்ந்தே இருக்கின்றது. மாணுக்கர் கைகளிற் புஸ்தகத்தைக் கொடாமல் தான் ஒரு விஷயத்தை எடுத்துக் கற்பித்தால் அது அவர்கள் மனதிற் பசுமரத்தில் அறைந்த ஆணிபோற் பதிந்து நிற்கும் என்பது ஐயந்திரிபறஉணரலாய். இவ்வழியைத்தான் நம்முன்னோர்கள் அனுசரித்து வந்தார்கள். தற்காலத்திலும் பிராமணர்கள் வேத இருக்குகளை மனப்பாடஞ்செய்ய ஒரு குருவை நாடிச் சென்று அவர் முகபாடமாய் சொல்லிக் கொண்டுபோக தாங்கள் மறுபடியும் அவர் சொன்னதைத் திருப்பித் திருப்பி மனனஞ் செய்து வருகிறார்கள். அக்காலத்தில் அச்சுயந்திரமாவது, புஸ்தகங்களாவது இல்லாத குறைவைப்பற்றி இந்த வழியை அனுசரித்திருந்தபோதிலும் சங்கதிகளை நன்ருய் ஆராய்ந்திருந்தார்கள். பாலர் வகுப்புப் பிள்ளைகள் ஏதேனும் ஒரு விஷயத்தை உணரும் சக்தி அதிக வருத்தமாதலால் அவர்கட்கும், உயர்தரப் பிள்ளைகள் பொருள்பாடம் (Object Lessons), சகள சாஸ்திரபாடம் (Physicial Science), இவைகளைக் கற்கவேண்டிய தாதலால் அவர்கட்கும் மேற்குறித்த முதன் முறை இன்றியமைந்ததாய் இருக்கின்றது. இம்முறையை முன்பு மதராஸ் கல்வி நிரூபண சட்டத்தில் (Madras Standing Orders) ஆங்கில இலக்கணத்தையும் பூகோளத்தையும், முதல் வகுப்பில் சூட்சுமமாய் ஆரம்பிக்க வேண்டுமென்றும், 2-ம் வகுப்பில் சிறிது விவரமாய் போதிக்க வேண்டுமென்றும் கண்டிருந்தது. என்றாலும் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு பாடத்திலும் இம்முறை அவசியமாய்

* இவர் ஆதியில் செய்ண்ட்பால்ஸ் (St Paul's) பாடசாலையை ஸ்தாபித்து அனேக அரிய பெரிய நூல்களைச் செய்துள்ளார். இந்த கலாசாலையில் ஆசரியராயிருந்த "அலக்சாண்டர் ஜில்" (Alexander Gill) என்பவரிடம் ஆங்கிலமஹா பண்டித கவிரத்ன சிகாமணியாகிய மில்டன்' (Milton) என்பவர் சிறிதுகாலம் சீடராய் இருந்து கல்விகேள்விகளில் வல்லவரானர்.



இருத்தல் வேண்டும். கணித நூலைக்கற்க பல புஸ்தகங்கள் தெளிவாயும் விவரமாயும் எழுதப்பட்டிருந்த போதிலும் உபாத்தியாயர் அவற்றை விளக்கிக் காட்டின பிறகுதான் செவ்வையாய் புலப்படும் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலவாசக புஸ்தகம், செய்யுட்பாடம், பூகோளம், சரித்திரம், சாஸ்திரபாடம், இவைகட்கு புஸ்தகங்கள் ஏற்பட்டதின் நோக்கம் யாதெனில் ஒவ்வொரு பாடத்திலும் குறிப்பிட்ட காலத்திற்கு இத்தனை அளவுதான் நடக்க வேண்டு மென்பதே. ஆனால் இவைகளில் மாணுக்கர்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் இன்னதென்றும், அவன் சிற்றறிவுக் கெட்டாவைகளை பல நிதாசனங்களைக் கொண்டு நிரூபித்தும், புஸ்தகங்களில் மறை பொருளாய்க் கூறியதை வெளிப்படையாகக் காட்டியும் வருவதால் இம் முதன் முறையையே அனுசரிக்கிறார் என்பது விசித்தமாய் விளங்கும். ஆனால் அவர் வீட்டில் முந்தியே தான் கற்பிக்க வேண்டியவைகளை நன்ருய் ஓர்ந்துணர்ந்து ஆயத்தமாய்ப் போனலன்றி சிறிதேனும் பயன்படா. "மஹா பண்டிதனும் தான் முந்தி ஐயமறக் கற்றறிந்தே பிறகு கற்பிக்க முயலவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் பாடங்களை முந்தியே தான் சொல்ல வேண்டிய அம்சங்களை சிரத்தையுடன் கவனித்துப் பள்ளிக்குச் செல்லுகின்றானே அவ்வளவுக் கவ்வளவு அவனது போதனசக்தி அதிகரித்து பிள்ளைகள் நலமடைவார்கள். கிரந்த கர்த்தர்கள், வக்கீல்கள், உபந்யாசஞ்செய்வோன், முதலிய பேருக்கு எவ்வளவு திறமை இருந்த போதிலும், ஜனங்களின் மனதை கைவசப்படுத்த எவ்வளவோ பாடுபட்டு உழைக்கின்றார்கள். இப்படி யிருக்க பக்குவமற்ற மனதையுடைய கேவலம் பாலர் களைத் தேர்ச்சி யடையும்படி செய்ய ஒரு ஆசிரியர் எவ்வளவு பாடுபடவேண்டும்!" என்று ஜில் (Mr Gill) என்பவர் கூறியுளர். மேலும் இவ்விஷயத்தைக் குறித்தே 'Huxley' [ஹக்ஸ்லி] என்ற சிறந்த பண்டிதர் ஒருவர் "பாலர்களைப்போதிக்க அற்பப் படிப்பு போதுமென்று அனேகர் எண்ணுகிறார்கள். உலகத்தில்செய்து வரும் மிகப்பெரிய தப்பிதங்களுள் இதுவும் ஒன்றே என்று கொள்ளல் வேண்டும். ஒருவன் போதிக்க வேண்டிய பாகத்தைநன்ருய்த்தெரிந்து கொண்டு தன் முழுகவனத்தையும் அதில் செலுத்த வேண்டும். பற்பல உதாரணங்களைக் கொண்டு கற்பிக்க முடியாவிடினும் தான எடுத்துக்கொண்ட பாகத்தை யாவது கூடிய வரையில் செவ்வையாய்ப்போதிக்க அதற்குச் சார்ந்த விஷயங்களை பலமுறை யோசித்து உப்பில் ஊருகாய் ஊருவதுபோல மனதில் எப்போதும் சிந்தித்தல் வேண்டும்." என்று வற்புரித்துக் கூறியுளர். ஓர் ஆசரியர் பள்ளிக்குச்செல்லு முன்னர் தான் கற்றுக் கொடுக்க வேண்டிய பாகத்தை ஓ ந கைக்குறிப்பு புஸ்தகத்தில் (Teaching notes) அடியிற்கண்ட கோடுகள் வரைந்து ஒவ்வொரு தலைப்பிலும் கண்ட வண்ணம் எழுதி வைத்துக்கொண்டே போதிக்கத் தொடங்கவேண்டும்.

| விஷயம். | விஷயப்பெருக்கம். | விதம். |
|---|---|---|
| | | |

தான் கற்றுக்கொடுக்க வேண்டிய பாடத்தின் முக்கிய அம்சங்களைத் தெரிந்தெடுத்து கறுப்புப் பலகையில் (Black board) வரிசையாய் எழுதி அடங்கக்கூடிய அளவு முதல் தலைப்பிலும், கறுப்புப் பலகையில் வரைந்துள்ள ஒவ்வொரு அம்சத்தையும் பல உதாரணங்கள், பொருள்கள், இன்னும் வேறே எவ்வகையாலும் விளக்கும் விவரத்தை, இரண்டாம் தலைப்பிலும், முதல் இரண்டு தலைப்புகளில் உள்ளவைகளை எவ்வாறு, பிள்ளைகளுக்குப்போதித்து அவர்கள் மனதிற்பதியச் செய்வது என்றதை மூன்றும் தலைப்பிலும் காட்டவேண்டும். கருவிகளைக் கொண்டு சோதனை காட்டும் ப

களுகிய சடசாஸ்திரம் (Physics), இரசாயன சாஸ்திரம் (Chemistry) கற்பிக்கப்புகில் அவைகளை பயமின்றி கையாடவும், சிறிதும் பிள்ளைகள் புன்னிலையிற் தப்பிப் போகாமல் செய்து காட்ட வருத்த மெய்துழலவேண்டும். கற்றுக் கொடுக்கத் துவக்கின பாடத்தின் அளவு தவிர அதிகமாய் தன் கைக்குறிப்பில் இல்லாதவைகளைப் போதிப்பது கூடாது. அதிகமாய்ப் போதிக்க முயன்று சிறிதும் விளங்காமற்செய்வதைக் காட்டிலும் சிற்றளவாயினும் ஐயமற உணர்த்தல் வேண்டும். பாடங்களுக்கு இன்றியமையா விஷயங்களையே ஆராய்ந்து அனுவசியமாய் வேண்டாதவைகளை விலக்கல் வேண்டும். பாடம் நடத்துவதில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய முறையாதெனின் :— 1. பிரதமபரிசீலனம்(Preliminary Examination) 2. புதியபாடம், 3. நடந்த பாடத்தில் கடைசியில் சில கேள்விகள். முதல் இலக்கமிட்டது பழையபாடத்தின் சம்பந்தத்தை 2-ம் இலக்கமிட்ட புதியபாடத்தோடுசம்பந்தப்பட்டதெனறுவிளக்கவும். 3-ம் இலக்கமிட்டது பிள்ளைகள் அபிவிருத்தியடைந்து சொல்லிக் கொடுத்தவைகளை நன்குய் கவனத்தில் வைக்கும்பொருட்டு திருப்பித் திருப்பிக் கேள்விகளைக்கொண்டு நிதானிக்கவும் முக்கிய காரணமாய் இருத்தல்பற்றி மேற்சொன்ன மூன்று விஷயங்களும் சிறந்தவை யெனவே கொள்ளத் தக்கதாயிருக்கின்றன. ஆனால் 1-3ல் கண்ட விஷயங்களை புதியபாடம் நிறைவேற வேண்டுமென்று குறிப்பிட்ட காலத்திற்கு நான்கில் ஒரு பாகத்திற்குள்ளே முடித்து விடவேண்டும். இனி புஸ்தகங்களின்றி போதிக்கு மு றயில் உள்ள குறைகள் சிலவற்றை கவனிப்போம். இந்தியாவில் விசேடமாய் எங்கும் புஸ்தகங்களைக் கொண்டே போதித்து வருகின்றார்கள். ஏனெனில் புஸ்தக மில்லாமற் சொல்லிக் கொடுக்க வேண்டுமானால் ஒரு ஆசரியர் அதிக நுண்ணறிவு உடையவராகவும், பல புஸ்தகங்களைப் படித்து ஆராய்ந்து தெளிந்தவராகவும், வேலையில் விசேஷப்பற்று உடையவராகவும், போதனைசக்தி அதிகமாய்ப் பெற்றவராகவும், இருக்கவேண்டியது அவசியமாதலின் இவ்வழியைக் கைசோர விட்டுவிடுகிறார்கள். மேலும் பிள்ளைகள் தங்கள்உபாத்தியாயர் எவற்றையும் சொல்லிக் கொடுக்கிறார் என்றதை உணர்ந்து கொண்டு புஸ்தகமில்லாக் குறைவுபற்றி எள்ளளவேனும் வீட்டில் புஸ்தகமென்றதையே தொடாமல் வருகிறார்கள். தாங்களே மெய் வருந்தி கற்க வேண்டு மென்கிற எண்ணத்தையே துறந்து விடுவதுமன்றி ஆசரியர் பால் முற்றிலும்சார்ந்தவர்களாகி அபிவிருத்தியைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். புஸ்தகத்தைக் கொண்டு பாடத்தை நடத்தினால் இவ்வித சங்கடங்கள் உண்டாகா. எவ்வாறெனில் புஸ்தகமாயிருந்தால் பாடம் குறிக்கப்பட்டுப்போகவே பிள்ளைகள் வீட்டில் படித்துக்கொண்டு அரும் பதங்களுக்கு அகராதி முதலியவைகளைக்கொண்டு பொருள் உணர்ந்து ஆயத்தமாக வரவேண்டியிருக்கின்றது. மேலும் "இதுவே எண்ணதிட்டமாய் வற்புறுத்திக் கூறவும், மனதிற்பதியும்படி சொல்லி மறக்காமலிருக்கும்படி செய்யவும் உபயோகப்படுகின்றது. போதனசக்தி மிகுதியும் அமையப்பெற்ற சிலர், இவ்வகைப் படிப்பை அதிக கேவலமாய் எண்ணித் தாழ்த்திவருகிறார்கள். ஆனால் சாதாரணமான வர்களும், போதனைசக்தியற்று அவிவேகமும் சோம்பலும் நிறைந்துள்ள ஆசரியர்கள் இந்த புஸ்தகப்படிப்பை அளவுக்கு மிஞ்சியே மேன்மைபடுத்தி வருகிறார்கள்" என்று Dr. Fitch (டாக்டர்பிட்ச்) என்பவர் கூறியுளர். போதிப்பதில் பொதுவாய் அனுசரிக்கும்வகை இரண்டு. அவையாவன:

1. பிரசங்கம்: இது விசேஷம் பயிற்சியடைந்த சீடர்களுக்குத்தான் உரித்தானது.

2. பிரஸ்நோத்ரம்: இது விசேஷம... சாதாரண வகுப்புகளிற் படிக்கும் மா... களுக்கு உரித்தானது. வித்யாபு... வேறு அனேக விஷயங்களில் ஒருவர் ...

[illegible] போவதும் உண்டு. [illegible] என்பவர் சொல்லுகிறதாவது: "[illegible] கேள்விக்குப்பதில் இல்லாமற் போனால் பிள்ளைகளுக்கு ஒன்றும் தெரியவில்லையென்று நினைத்துவிடாதே. கேட்ட கேள்வியை மறுபடியும் கவனித்துப்பார்த்து அதை நன்றாய் விளங்கக் கூடியதாகவும், சுளுவான முறையிலும் திருப்பிக் கேட்டால் எதிர்பார்த்த விடை தடையின்றி வரக்கூடும். ஆனதால் இது கேள்விகேட்கும் திறமையை ஒத்ததாயிருக்கின்றது." ஒரு ஆசரியர் பிள்ளைகள் தாங்களே சொல்லக்கூடிய உத்தரங்களைதான் சொல்லக்கூடாது. "இதைப்பற்றி (Fitch) என்பவர் மறுபடியும் கூறுகிறதாவது." "உன் கேள்விக்கு நீயே விடை சொல்லாதே. இது மிகவும் கெடுவானது. பிள்ளைகளிடமிருந்தே எதிர்பார்க்கவேண்டும், அப்போதுதான் அவர்களுடைய அறிவும், விவேகமும், விர்த்தி யடைந்து தேர்ச்சியடையும். உன் கேள்விக்கு பதில் அவர்களாலேயே சொல்ல முடியுமென்பதை தெரிவிக்கவேண்டும்." மறுமொழி சொல்லவேண்டுமென்று ஆவல் கொண்ட பிள்ளைகளை மாத்திரம் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கக்கூடாது. விடை சொல்லத் தெரிந்தபோதிலும் சில பிள்ளைகள் சோம்பேறித் தன்மையினாலேயோ அல்லது வேறெந்த காரணத்தினாலேயோ சும்மா இருந்துவிடுகிறார்கள். இவர்களைப் பலமுறை நிறுத்திவைத்து கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தால் இந்த கெட்ட வழக்கம் விலகிப்போம். முதலில் தவறிப்போன பிள்ளைகளை சரியான விடைகளைப் பல [illegible]றை சொல்லச்சொல்லி ஆசரியர் கேட்கவே[illegible]டும். ஒரு மாணாக்கன் ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்லத் தவறினால் அடுத்தடுத்து வேறுபல கேள்விகளைக் கேட்டு தவறிப்போன முதல் கேள்விக்குபதில் வரவழைக்கவேண்டும். வகுப்பிற் குறைபையனாக இருந்தால் தான் இவ்வாறு செய்யமுடியும். [illegible] உள்ள சொற்களின் அமைப் [illegible] விடை சொல்ல [illegible] என்று சரியான விடைகளைத் [illegible] தப்பிதமான விடைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவற்றைக் கொண்டு இன்னவிதமாய் பிள்ளைகள் தப்பிதம் [illegible]றார்களென்றும், அவற்றை இன்ன விதமாய் திருப்பி போதிக்கவேண்டுமென்றும் அறிய உபயோகப்படுகிறது." என்று 'கர்ரி' என்பவர் கூறுகின்றார். பிள்ளைகள் ஏககாலத்தில் ஒன்றாகக் கூடி மறுமொழிசொல்ல இடம் கொடுக்கக் கூடாது. ஒருவனைத்தான் விடையளிக்கச் சொல்ல வேண்டும். ஆசரியர் வகுப்பைப் பார்த்து பொதுவாய் கேள்விகேட்டு பிறகு ஒரு பையனை குறிப்பிடவேண்டும். ஆனால் சில சமயங்களில் சரியான விடைகளை மனதிற் பதியும்படி செய்ய எல்லாரையும் ஒரே காலத்தில் பலமுறை சொல்லும்படி செய்யலாம். இது அருகாமையில் உள்ள வகுப்புகளுக்கு நிர்ப்பந்தமின்றி மிதமான சத்தத்தோடு தகுந்த விலாசமான கட்டடங்கள் இருந்தால் தான் இவ்வாறு செய்வது நலம். பிள்ளைகள் வாய் மொழியான கேள்விகளுக்கு அளிக்கும் விடைகளில் ஞாபகத்தைக் கொண்டு சொல்லுகிற வைகளுக்கு சொற்பகாலத்தையும், ஆழ்ந்து யோசனை செய்து சொல்லுகிறவைகளுக்கு நீடித்த காலத்தையும் கொடுக்கவேண்டும். இப்படி செய்து வந்தால்தான் தக்க உத்தரங்களைப் பெறலாம். கேட்டகேள்விக்கு உத்தரம் சரியாய் இருத்தல் வேண்டும். வார்த்தைகளைக் கொண்டு சொல்லுகிறவைகளுக்கு வாக்கியங்களைக் கொண்டு சொல்வதும், வாக்கியங்களைக் கொண்டு சொல்லுகிறவைகளுக்கு வார்த்தைகளைக் கொண்டு சொல்வதும் கூடாது."

"கேட்ட கேள்வியைத் தவிர வேறொன்றையும் கவனியாமலிருக்கும்படி செய்வதுதான் போதனாசக்தியின் இலட்சணம்" என்று 'திரிங்' (Thring) என்பவர் சொல்லுகிறார். பிள்ளைகள் ஒருவருக்கொருவர் கேள்வி கேட்டுக்கொள்வது நலமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். எவ்வாறெனில் கடைசி பையன்

தனக்கு மேலேயுள்ள எவனையாவது குறிப்பிட்டு ஒரு கேள்விகேட்டு அந்த கேள்விக்கு அவன் உத்தரம் சொல்லத்தவறினால்தான் சொல்லிவிட்டு இடம் மாற்றிக்கொள்ளுகிறான். இதேப்பிரகாரம் வகுப்பிலுள்ள ஒவ்வொரு பையனும் நேரம் உள்ளவரையில் கேட்டுக்கொண்டிருக்கும்படி செய்யலாம். யாரைக் கேள்வி கேட்கிறதென்று மயங்கிக்கொண்டு சும்மா நிற்கின்றானே அவன் தான் மேலே போகும்படியான சமயத்தை இழந்துபோகிறதும் தவிர உள்ள இடத்தினின்று கீழே போகும்படியும் நேரிடும். கேட்கத்தகாத கேள்விகளைக் கேட்கும்படி விடக்கூடாது. இலக்கணம், பூகோளம், சரித்திரம் இவைதான் இவ்விதமான கேள்விகளுக்கு மிகவும் ஏற்றவைகளாய் இருக்கின்றன. வாரம் ஒரு முறை பழைய பாடங்களில் பரிட்சைசெய்து மாணாக்கர்கள் செய்யும் பிழைகளை கவனித்துத் திருத்தினாலன்றி தன் போதனையின்பயன் நன்கு விளங்காதென ஒரு ஆசிரியர் என்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அப்போதைக்கப்போது பரிட்சை செய்வதின் பயனும், வீட்டு அப்பியாசங்கள் கொடுக்கும் பயனும் விசேடமென யாவரும் உணரத்தக்கதாதலின் இங்கே சுருக்கமாய் ஒருவாறு கூறுவோம். வாய்மொழியான கேள்விகள் பாடங்களிற் சிரத்தையும், ஒன்றை யோசனைசெய்து சொல்லும் சக்தியையும் விளைவிக்க உபயோகமுள்ளதேனும் அவைகள் அரைகுறையாயும், தொடர்ச்சியின்றியும் இருக்கின்றன. ஆசிரியரிடமிருந்தும், தன் தோழர்களிடமிருந்தும், ஒரு மாணாக்கன் இவ்விதகேள்விகளுக்கு விடைசொல்ல உதவி பெறுவதினால் எழுத்துப் பரிட்சை வைக்கவேண்டுமென்பதும் அவசியமென்று புலப்படும். இந்தப் பரிட்சையில் புஸ்தக முதலான வேறே எவ்வித உதவியின்றி காகிதங்களில் எழுதிக்கொடுக்கிறபடியால் கற்பித்தவைகளை நன்றாய் அறிந்தானோ இல்லையோ வென தெரிந்துகொள்ள சாதனமாயிருக்கின்றது. மேலும் இவற்றால் பிள்ளைகளின் அறிவு, விடை பகரும் விதம், நேர், யுக்தி, ஞாபகம், முயற்சி, விஷயங்களை ஆராய்ந்து எடுத்துசொல்லும் திறமை, இவைகளெல்லாம் வெளியாகின்றன. "எழுத்துப் பரிட்சையானது முயற்சி, அடக்கம், முதலியவைகளைத் தவிர சன்மார்க்கங்களை அறியும்படி செய்கிறதில்லை. மனோபாவத்தையும், வேலையிற் சிரத்தை எவ்வளவுதூரம் இருக்கிறதென்பதையும் உணர்த்துகிறதில்லை. மேலும் ஜீவனோபாயம், ஜீவகாருண்ணியம், மூத்தோரை மதித்தல், மற்றவர்களை யடுத்து வேலைசெய்தல், மெய் வணங்குதல், ஆகிய இவ்வித சிறந்த குணங்களை இந்த பரிட்சையினால் அறிய முடியாது. எப்பேர்ப்பட்ட எழுத்துப் பரிட்சையினும் மாணாக்கரின் பூரணகுணங்களை அறிய முடியாதாதலால் வேறே தகுந்த வழிகளைக்கொண்டே அறிய வேண்டும்." என்று 'பிட்ச்' என்பவர் சொல்லுகிறார்.

இனி பரிட்சை வினாக்கள் இத்தன்மையாய் இருக்கவேண்டுமென்று கவனிப்போம்.

1. வினாக்களின்பொருள் செவ்வையாய் விளங்கவேண்டும். 2. மாணாக்கர்கள் வயதுக்கும், சக்திக்கும் தக்கவாறு இருக்கவேண்டும். 3. குறிப்பிட்ட காலத்தில் மாணாக்கனால் எழுதி முடியக்கூடியதாய் இருக்கவேண்டும். 4. ஏறக்குறைய வினாக்கள் யாவற்றையும் ஒவ்வொரு பையனும் புத்தி செலுத்தி எழுதமுயலும்படி இருக்கவேண்டும். யுக்தியுள்ள பிள்ளைகள் மாத்திரம் எழுதக்கூடிய சிற்சில வினாக்களும் இருத்தல் வேண்டும். "நீ கேட்கிற கேள்விகள் பரீட்சையின் பொருட்டேயன்றி வேறே வித்யாபிவிருத்திக்கும் ஏதுவாக இருக்கின்றது. உன் கேள்விகளை அவர்கள் அவகாசமாய் திருப்பித் திருப்பிப்பார்த்து நீ கற்பிக்கவேண்டுமென்றிருந்த விஷயங்களை நன்றாய் ஆராயும்படி செய்கின்றன. முன்னமே பிள்ளைகள் கற்றறிந்ததை நீ கேட்டிருந்தபோதிலும் எந்தெந்த விஷயங்கள் அவர்கள் மனதிற் பதிய வேண்டுமென்று எண்ணுகிறாயோ அவைகளை [illegible] அவர்கள் உன் கேள்வி மூலமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள்." என்று 'Fitch' என்பவர் கூறுகின்றார். இனி வீட்டு அப்பியாசத்தின் உபயோகத்தைப்பற்றி யோசிப்போம். மாணாக்கர்கள் தினந்தோறும் குறிக்கப்பட்ட பாடங்களையும், வேறே அப்பியாசங்களையும், தங்கள் இல்லங்களில் மெய்வருந்திப் பயின்று வருவார்களாயின் விசேஷ நலமடைவார் என்பதில் ஐயமில்லை. பள்ளிக்கூடம் கலைந்தபின்பு ஆகாரம், தூக்கம், விளையாட்டு, இன்னும் அவசியமாய் செய்யவேண்டிய வேலைகள் இவைகள் எல்லாம்போக இன்னும் அதிக நேரம் இருக்குமாதலால் அதை இந்த வீட்டு அப்பியாசத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும். ஆசரியர் முன்னிலையின்றி வீட்டில் தானாகவே கற்றுவருவதைப்பற்றி அவனுடைய நன்னடக்கையையும், யோக்கியதையையும் வெளிப்படுத்துகின்றது. தானே உழைத்து வருந்த மெய்தி விஷயங்களை அறிந்துகொள்வதினால் விருத்தியடையக் காரணமாகின்றது. பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் தன்னை எப்போது கேள்வி கேட்பார் என்று மிக்க ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்க ஊக்கத்தையும் உண்டாக்குகின்றது. வீட்டு அப்பியாசம் திருத்த முடியாதளவு அவ்வளவு அதிகமாய் கொடுக்கக்கூடாது.

"சொற்பமாவது செய்து வருவானென்று அதிக அளவுகொடுப்பது கெட்டது. ஒவ்வொரு பையனும் செய்துமுடிக்கக்கூடிய அளவை நன்றாய் ஆராய்ந்து குறிக்கவேண்டும். அப்பியாசத்தை யார் கொண்டுவரவில்லை என்ற விசாரமே இருக்கக்கூடாது. வகுப்பின் திறத்திற்கு மிஞ்சி கொடுத்தால் ஒருவரும் செய்ய முயலாமலே வந்துவிடுவார்களாதலால் அவ்வாறு செய்வது கெட்ட வழக்கம்" என்று "பெயின்" (Bain) என்பவர் கூறுகிறார். ஓர் ஆசரியர் தான் கொடுத்த அப்பியாசங்களை திருத்திக் கொடுக்காவிட்டால் அவை சிறிதும் பயன்படாது. வகுப்பில் பிள்ளைகள் ஏராளமாயிருந்தாலும் மெய்வருந்தம் பாராமல் உழைத்து வருவாராயின் மாணாக்கர்கள் அதிக பயிற்சியடைந்து கற்றுக் கொடுத்தவைகளை மறவாமல் நலமடைவார்கள். ஆசரியரும் சிறிது கற்றவளவிலேயே போதுமென்றிராமல் மேன்மேலும் கற்க வேண்டும். இது மிக்க இன்றியமையாததென உணர்த்தும் பொருட்டு "திருவள்ளுவர்"

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு." என்றார்.

எ. சே. சிவராமையர்.



SAVITRI.

## சாவித்திரி.

கடலாடை சூழ்ந்த வித்தாரிணியின்கண் நீர்வளம், நிலவளம், பயிர்வளம், குடிவளமெனும் பற்பல வளங்களும் பொலிவுற்று விளங்காநிற்பதும், மலையரண், காட்டரண், மதிலரண், நீரரணாகிய நால்வகை யரண்களுஞ் சூழ்ந்து பூமிதேவியின் முகத்திலகமோ, திருமகளுறையுஞ் செந்தாமரை யாடமோ, கலைமகளிலங்கும் கமலவெண்பீடமோ, என்றேக்கங் கொள்ளத்தக்க யாவராலும் புகழப்பெறும் மத்திராடெனுமோர் நாடுளது. அதனை அசுவபதியெனுமோரரசன் செங்கோலோச்சி வருவானாயினன். அவ்வரசன் தினதயாளனும், விதுசையருக் கனுகூலனும், வாய்மையினுந் தூய்மையிலும் சிரேஷ்டனாகக் கருதப்பெற்றிருந்தமையின் குடிபடைகள் யாவரும், அவன்மீது அளவிறந்த பிரேமையுடையோராயிருந்தனர். இங்ஙனம் ஒன்றுமொன்று குறைவின்றி யாவும் நிறைவுற்றிருந்தும், மகப்பேறொன்றின்றி மனமடிவெய்த வைத்தது. ஆகவே தனக்கு மக்கட்பேறுண்டாக வெகுகாலம் ஈசுவரனைப் பூசித்து வருவானாயினன். ஈற்றிலே கருணையங்கடவுளின் திருவருளின் செயலால் ஓர் பெண்மகவு உற்பத்தியாயினள். அரசன் உவகைபூத்து உள்ளம் களித்து,

மஹோற்சவம் கொண்டாடி அக்குமரிக்கு சாவித்திரி யெனும் நாமகரணம் சூட்டினன்.

சாவித்திரி எனும் அப்பெண்மணியும் அழகிலும், விவேகத்திலும், நற்குண நன்னடக்கைகளிலும் தேர்ச்சிபெற்றுக் கன்னிமைப்பருவம் அடைந்தனள். தன் தோழிகளோடு அரசன் உத்யானங்களிற் சென்று பூக்கொய்வதும், மெய்வருந்தக் கைசலிக்க, குறு வியர்வை முத்துப்போன்று முகத்தினி னிலங்க, சேடியரோடு அம்மானை, பந்து, கழங்கு, ஊசல், முதலிய ஆடுதலும், பக்கத்திராநின்ற ஆசிரமங்களுக்குச் சென்று அவண் உள்ள தபோதனர்களைக்கண்டு வணங்குதலும், அவர்கள் உபதேசிக்கும் நன்மொழிகளைச் சிரமேற்பூண்டு தெய்வ வழிபாட்டினுற் றன் காலத்தைக் கழித்து வருவாளாயினள்.

இப்படி வளர்ந்துவரும் தம் குமரிக்கு மணப்பருவமெய்தியும், இன்னும் பரிணய முடியா திருப்பதைப்பற்றி 'கையறு கவலைகூற்ற உள்நின்ற மானைத் தன்னை உமிழ்ந்தெரி யுயிர்ப்பது' போன்று விசனசாகரத்தில் ஆழ்ந்திருந்தனர். தம் குமரியின் குணத்துக்குத் தகுந்த மணவாளன் வாய்க்கவேண்டுமெனக் கோரித் தெய்வத்தின்மீது பாரத்தைப் போட்டுத் தங்கள் வாழ்நாளைக்கழித்து வருவார்களாயினர். சாவித்திரிக்கும் தன் தாய்தந்தையர் படும் துன்பம் தெரிந்திருந்தும் தான் அறிந்திருந்த அரசகுமாரர்களில் தனக்குச்சரியான நாயகனின்மையால் கன்னிமையே பூண்டு ஒழுக நேர்ந்தது.

ஆயினும் தெய்வச்செயலைக் கண்டார் யார்? பெற்றோருடைய எண்ணம் வீண்போகாது அவரது விருப்பம் நிறைவேறச் சமயம் கிட்டிற்று. என்னாளும்போல் சாவித்திரி எனும் பெண்மணி ஓர்நாள் கல்விபயிலுவான் கருதி இருடிகளின் ஆசிரமம் சென்றகாலையில், அவண் ஓர் வாலிபன் அந்தரர் துதிசெய் சுந்தர முகமும், பெருந்தன்மையான பார்வையும், அகன்ற மார்பும், நீண்டுயர்ந்த தோட்களும், பரந்த [illegible] மேலு[illegible]ந்த குணங்களும் எழில் பெற விளங்கும் வதனச்சாயலுமுடைய ஓர் இளவல் அங்கே நின்றிருக்கக் கண்டனள். கண்டதே கால்கள் பின்வாங்கி நடக்கவொட்டாது தள்ளாடின. எங்கு நோக்கினும், அவள் மனத்தின்கண் அவனது தாமரைத் தளம்போன்ற கண்களும், இனிமை பயக்கும் வதனமுமே தென்பட்டன. இவ்வாருக இவள் அவனது வதனத்தைப் பார்த்த வண்ணமேயிருக்க, அவனது கண்களும் இவளைப்பார்க்க நேர்ந்தது.

"கண்ணொடுகண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்னபயனுமில"

என்றவாறு அவனது கண்களும், அவளது கண்களும் ஒருகணப்போழ்தில் தம்மில் உறவாடின. சாவித்திரி அவ்விடத்தைவிட்டு அகன்றும் அவன் வதனச்சாயலின் எழில் நீங்காது வருந்தியது. அவ்வாலிபனும் அவளது கார்முகிலொப்பக் கறுத்திருக்கும் கருங்குழலும், வேலொக்கு விழியும், வில்லொக்கு புருவமும், பல்லொக்கு முத்தும், பவளத்தையொத்த இதழும், பொருந்திய சந்திரனையொத்த முகத்தில் தன் நாட்டத்தை வைத்து மெய்ம்மறந்தான். இவ்வாருக நிகழும் சத்தியவான் எனப் பெயரோடுபோந்த அவ்விளவல் தனது இருப்பிடம் சென்றனன். சாவித்திரிக்கோ பாடமே ஒப்புவிக்கத் தடை நேரிட்டது. முகமோ விசனத்தால் கூம்பியிருந்தது. இதனை யுணர்ந்ததே இருடி ஆ! சாவித்திரி, இஃதென்ன இன்றிவ்வாறு பாடம் ஒப்புவிக்காதிருக்கின்றனை? உன் மனத்தின்கண் யாது துயரம் நேர்ந்தது கூறுதிர்? எனத் திடப்படுத்திக் கேட்க சாவித்திரி தன் காதலன் அவனேயென தன்னுள் தீர்மானித்து தனக்கு நேர்ந்த வரலாற்றைக் கூறினள். இருஷி உடனே "அடி அணங்கே! அவன் பேர் சத்தியவான். அவன் தந்தை தியுமற்சேனரென்பார். ஓர்கால் சாலவதேசத்தை ஆண்டிருந்தனர். தனது பகைவர்களால் தோற்[illegible] [illegible] பகைவர்கள் [illegible]



[illegible]க்கொண்டவே இவ்வனம்போந்து துறவுநிலை அநுட்டிப்பான் வந்தெய்தினர். அவரது மைந்தன் இச்சத்தியவான்" எனச் சொல்லினர். இச்சங்கதியை யறிந்ததே சாவித்திரியின் சந்தோஷம் செப்பத்தரமன்று. விரைவிற் றன் னன்னையாரிடமும், தந்தையாரிடமும், தனக்கு நாயகன் வாய்க்க நேர்ந்தமையைப்பற்றியும், இருடியால் அவனது வரலாறு தெரிந்த விதத்தையும், சொல்லிக் களிப்பெய்தினள். இதைக் கேட்டதே அரசன் "குமாரியே! நமக்கு மித்திர சிரேஷ்டரான நாரதரை வினவவேண்டும். அவர் திரிகால ஞானியாதல்பற்றி அவர் கூறின் அதுவே பொருந்தும்" எனச் சொல்லினர்.

நாரத ரிஷிசிரேஷ்டர் வரவே, அவருக்கு வேண்டிய மரியாதைசெய்து தனக்கிருக்கும் எண்ணத்தின் முடிவைத் தெரிவித்தான். நாரதர் இதைக் கேட்டதே தலையைத் தொங்கவிட்டு "ஆ! மகளே!! என்ன ஒரு தப்பான எண்ணத்தைக் கொண்டனை? அவன்மீதிருக்கும் பற்றை ஒழித்துவிடுமின் இனியாராவது உனக்கிஷ்டமான வேறு நாயகன் இருப்பனேல் வரிக்கலாம்?" என விசனமுகத்துடன் மொழிந்தார். சாவித்திரி உடனே கைகூப்பி எனதையனே!" காதலென்பது சாமான்யமன்று. நாம் அதற்கு அடிமை. காதலிலேதல்வாழ்வு மின்று காதலே இவ்வுலக வாழ்க்கை இன்பம் பயப்பதுவும். அப்படியிருக்க நான் ஒருவர்பால் காதல் கொண்டுவிட்டேன். அக்காதலை மாற்ற முடியுமா? காதலானது நாம் சொன்னபடி நடக்கவியலாதது. அதற்கு நாம் அடிமைகள். இக்காதலை உண்டுபண்ணிவிட்ட கடவுளை நொந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஓராடவன்மீது காதல்கொண்டதை மாற்றும்படி சொன்னீரே? அது கற்புடைப் பெண்டிர்க்கழகாமோ? ஏதோ சிறியளாகிய எனது வார்த்தைகளில் குற்றங் குறைகளிருப்பினும் க்ஷமித்து என் மனோரதத்தை யீடேற்ற வேணுமென்று நாரதர்காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். நாரதரும் ஆச்சரிய வசத்தராகி அரசனை நோக்கி மன்னவ! அவ்வாலிபனது நற்குண நன்னடக்கை, விற்பனவிவேகங்களைப் பற்றி ஒன்றும் விசாரிக்க வெண்டியதில்லை. குணமே ஒருருவெடுத்துதித்தவன். ஆயினும் விதிவலியையோஜிக்குங்கால் அவனுக்கு இன்னும் பன்னிரண்டு மாத ஆயுளே உள்ளன; இதனால் உமது பெண்ணுக்குயாதுசுகம்சம்பவிக்கப் போகின்றது! கடைசியில் விசன சாகரத்திலழுந்திக்கிடக்க வேண்டி வருமாகையால்தான் எனக்கு வாதனையாயிருக்கிறது" எனத்திருவாய் மலர்ந்தருளினர். அதற்கு சாவித்திரி" என் முழுமுதற்கடவுளே! தாங்கள் செப்பிய மொழி நன்றன்று. எப்பொழுது என் மனமானது ஒருவர்பாற்சென்றுவிட்டதோ அப்பொழுதே அவருக்கு நான் கடமைப் பட்டவளானேன். சுகமோ துக்கமோ எல்லாம் அநுபவிக்கவேண்டியதுதான். கற்புடைப் பெண்டிர்க்குக் கொழுநனை தெய்வமலாற் பிறிதொரு தெய்வமுளதோ?" என வணங்கிக்கூற, "மகளே! உன் இஷ்டப்படியே நிறைவேறுவதாக. நீ உன் கணவனோடு சுகமாய் காலங்கழிக்க கடவுள் அநுக்கிரகிப்பாராக" என வியந்[illegible] நாரதர் மொழிமாற்றம் தந்தனர். அரசனும் நாரதர் உரைத்ததைக் கேட்டு "என் குமாரத்தியும் தான் விரும்பிய கணவனையே கடிமணம் புரிந்து வாழ்வாளாக" என ஆசிர்வதித்தான். பிறகு அரசனும், குடிபடையானவரும் புடைசூழ விவாஹ மஹோற்சவத்தை நிறைவேற்ற தியுமற்சேனரெனும் அரசன் வசிக்கும் பன்னகசாலையிற் சேர்ந்தனர். சாலவதேசத்தரசனுயிருந்தவரிடம் தம் குமரியின் விவாகநிர்ணயத்தைப்பற்றிப் பேசியபோழ்து அவ்வரசன் மிகுந்த ஆனந்தங்கொண்டு அவருக்கு வேண்டிய மரியாதைபுரிந்து ஆதனத்திருத்தி "மன்னவ! என் குமாரனுக்குக் கொடுப்பதைப்பற்றி எனக்கு சந்தோஷமே! ஆயின் ஒண்டொடிகரமும், முண்டகமுகமும், வண்டார் குழலும், தண்டை சேர் அடியுங்கொண்ட உமது குமாரத்தி இவண் தனது அந்தஸ்துக்குச் சரியின்றி மர ஆடையைத் தரித்து இங்கே கிடைக்கும்

காய் கனிகளைப்புசித்து வாழ்தல் தகுதியோ? செல்வவான் வீடாயினும் அவளுக்கிஷ்டமான உணவையுண்டுகளிப்பெய்திவாழலாமன்றோ? எனவே அசுவபதி எனும் மன்னன்" ஐய! "ஆறிடுமேடு மடுவும் போலாஞ்" செல்வத்தை யான் கருதுபவனல்லன். தூயகுணமும், பரிசுத்தமனமும், தெய்வவழிபாடுமுடையானுக்கே கொடுத்தல் வேண்டுமென்பதென் கோரிக்கை. அதற்குத் தகுதியாயுள்ளவன் தம்புதல்வன் ஒன்றே. ஆதலால் என் மனோரதத்தை ஈடேற்றி வைக்கவேண்டுமென, அரசனும் இணங்கினன். சாவித்திரியைக் காண்பான் கருதி அரசன் பக்கலில் நின்ற சத்தியவானும் மிக்க களிப்பெய்தினன். உடனே அவ்விடமே விவாஹம் மிக்க விமரிசையாய் நடத்தப்பட்டு சாவித்திரியைக் கணவன் வீட்டில் விட்டுவிட்டு மத்திரதேயத் தரசனும் மற்ற பரிவாரங்களும் தம் நாடடைந்தார்கள்.

சாவித்திரி குடித்தன முறையில் தேர்ந்தவளானள். கண்ணொளிமழுங்கிய தன்மாமனுருக்கு உபசரணைகளில் யாதும் குறைவின்றி நடத்தினள். தன் மாமியின் மனதின்பிரகாரம் அவள் மனம் கோணாமல் இன்புறநடந்து மெச்சும்படியான வாழ்க்கை செய்தாள். தன் கணவனுடன் உரையாடி, நகையாடி, இன்னடிசில்பரிமாறி கனிந்தமொழிகளால் களிப்புறநடந்து தன் கணவனின்மீது கண்ணுங்கருத்துமாய்ப் போஷிப்பவளாயினள். ஏழை எளியவர்களைக் கண்டால் அவர்களுக்குத் தாயாய் நின்று உதவுவாள். இவ்விதமான நற்குணங்களை மேற்பூண்டு கொண்டொழுகின நல்லொழுக்கமானது யாவரும் அவள்மீது மாறாத பிரீதியை விர்த்திசெய்தது. ஆயினும் இவ்வளவு குடித்தனவாழ்க்கையில் மேம்பட்டவளாயினும், தன் கணவனுக்கு நேரப்போகும் துர்க்கதியைப்பற்றி அடிக்கடி நினைவுவரும் போழ்தில் அவள் முகமண்டலமானது மலர்ந்த ரோஜா கூம்பினதுபோன்றிருக்கும். தன் கணவனிருப்பது கொஞ்சக்காலமென்றும், தன்னு[illegible] சீக்கிரத்தில் தன்னைப்பிரிந்து உயிர் துறப்பானென்றும் எண்ணும் [illegible] போதெல்லாம் முத்தினைய கண்ணீர் [illegible]வெனப் பளிங்குக் கண்ணாடி போன்ற தன் கன்னங்களின் வழியாய்த் தாரை, தாரையாய்க் கீழ்விழும். உடனே மனதைத் தேற்றித் திடப்படுத்தித் தனது காதலனது முகத்தை நோக்கி விசனம் துறப்பாள். உடனே தனது மாமியார் அழைப்பதாகத் தென்படின் உடனே வெழுந்துபோய்க் காரியாதிகளைச் செய்து அவர்கள் மனம் களிகூற நடப்பாள். தன் கணவன் வர சிறிது தாமதித்தால் தலைவாயலில் வந்து நோக்கிக் கணவனைக் காணுவிடத்து "வாசவார்குழன்மீள மறுகுறுமூசலாடும் வகையுள மொக்குமே" என்றவாறு மணம் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய அப்பெண்மணி வெளிவருவதும் உட்புகுவதுமான ஊஞ்சலாடும் தன்மையை யொத்த அவள் மனமானது தத்தளிக்கும். தன் கணவன் சிறிது சுகவீனமாயிருந்தால் அதனிமித்தம் ஆயிரந்தெய்வங்களைக் கைகூப்பி வணங்கித் தொழுவாள். இவ்விதமாகக் கவலையினூற் தெய்வபக்தி மேற்பூண்டு நாட்களைக் கழித்தாள். இவ்வாறு அநேக நாட்கள் கழிய, அவன் விதி முடிவதற்கு மூன்று நாட்களே மீதியிருந்தன. அப்போது சாவித்ரி பசிதாக முதலியவற்றைத் துறந்து சித்த வைராக்கியத்தோடு கடவுளைப் பஜித்து வந்தாள். கடைசிநாள் மாலைநேரம் தன் அன்பன் காய்கனி சேர்த்து விறகொடிந்து வரச்செல்ல ஆரம்பித்தான். உடனே சாவித்திரிக்கு உண்டான மனக்கிலேசம் இத்தன்மையனவென்று யாரால் உரைக்க முடியும். அவள் பத்மம் போன்ற வதனம் வாடிக்குறுகிற்று. கண்களில் முத்துப்போன்று ஜலம் துளிர்த்தது. உடனே தன்மாமன், மாமி எவ்வளவு மன்றாடி இருக்கும்படி உபசரித்தும், பிரார்த்தித்து மிகுந்த கஷ்டத்துடன் விடைபெற்றுத் தன் கணவனைத் தொடர்பவளாயினள்.

சத்தியவான் தன்மனைவி தன்னைத் தொடர்ந்து வருதலை நோக்கி சிறிது [illegible]



அவளது வேண்டுகோளுக்கிரங்கி அழைத்துச் செல்பவனாயினன். தன் நாயகிக்கு அக்கானகத்திலுள்ள விருட்சவர்க்கங்களின் அழகையும் தன்மையையும்பற்றிக் கூறுவான். புஷ்பச்செடிகளின் ரமணீயமான நேர்த்தியைக் கண்டு வர்ணிப்பான். பெருங்குன்றுகளினின்று "தப்பினேன் பிழைத்தேன்" என்றவாறு குதித்துப் பாறைகளில் மொத்துண்டு சல, சலவென காகத்தினிறக்கையைப்போன்று ஓடிவரும் சுனைநீரைக் காண்பித்துக் களிகூறுவான். "குன்றிடைப்பிறந்த தென்றற்காற்று" மரங்களின்மீது மோத அவை சல, சலவெனக் காற்றில் சப்தித்தலைக்கேட்டு 'நாயகன் நாயகிகளின் ஸரஸஸல்லாபங்க'ளென்பான். பெரிய நதியின் கரையோரங்களிலிராநின்ற, நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ, முதலியவைகளை வருணனை செய்வான். இவ்விதமாக இவன் பட்சி இனங்களைப்பற்றியும், விருட்சவகைகளைப்பற்றியும், நீரின் குணங்களையும், அவற்றின் தன்மைகளையும் வர்ணித்துக் கொண்டு உற்சாகமாய்ச்செல்ல சாவித்திரியோ ஒன்றையுங் கவனித்திலள். அவள் மனத்தின்கண் தாங்கக்கூடாத துக்கம் குடிகொண்டது. முகம் கூம்பினது. கண்கள் சோர்ந்தன. தேகம் தத்தளித்தது நடைகொடுக்கவில்லை, கண்களில் நீர் பெருகினது, கணவனின் வருணனைகளையும், அவனது புத்திகோசரத்தையும் கேட்கக்கேட்க துக்கம்பெருகிற்று. ஒன்றும்பேசாது மௌனமாய் அவனது முகத்தையும், காலடியையும் நோக்கியவண்ணமே நடந்தாள். இருவரும் ஓர் காட்டை யடைந்த பின்னர், சத்தியவான் கூடையில் காய்கனிகளை நிரப்பிவிட்டு, மற்றோர்மரத்தின் கிளையை வெட்டுகையில் அவன் கட்டாரி கைதவறிக் கீழே வீழ்ந்தது. அவன் கண்கள் இருண்டன, நடை தள்ளாடினது, உடனே தட்டுத்தடுமாறிக்கொண்டே "என்கண்ணே! காதலியே!! என்னால் பொறுக்கமுடியாத எரிச்சலும், தலைநோயும், உபாதியும், உண்டாகின்றனவே! சிறிது உட்காருகிறாயோ? உன்மடியின்மீது சிறிது கண்வளர்கின்றேன்" எனச் சொல்லி வெடவெடவென்று நடுங்கிக்கொண்டே தனது காதலியின் மடியின்மீது படுத்தான். உடனே இருகைகளாலும் சாவித்திரி தனது நாயகனை அரவணைத்துத் தலையைத் தொங்கவிட்டு "எனது ஐயனை யாது வருத்துகிறது?" என்றனள். சிறிது நேரம் கழித்து சத்தியவான் கவிழ்ந்தபடியே பெண்ணே! என் உபத்திரவம் கொஞ்சமன்று நான் இனி பிழைக்கமாட்டேன். சீக்கிரம் விடைகொடுப்பாய் என் அன்பைக் சொள்ளைக்கொண்ட ஆருயிரே" எனச் சொல்லி வாய்மூடுமுன்னரே கண்கள் மேனோக்கி மூடின தேகம் ஜில்லிட்டுக் கால்கள் வாழைத்தண்டைப்போன்று குளிர்ந்தது. அப்போது சாவித்திரி யாதும் தோன்றாமல் கண்களை எறிட்டுப் பார்த்தாள்.

அப்போது கன்னங் கறேரென்று கருத்துப் பெருத்த உருவமும், தலையில் முடியும், கையில் பாசமும், காலதண்டமும் கொண்ட ஒருருவம் அவள கண்களுக் கெதிர்ப்பட்டது. அதனைக் கண்டதே சாவித்திரி "ஐய! நீவிர்யார்? என்ன வேலையாகஇவிடம் வந்தீர்" எனவினவலுற்றாள். அதற்கு அவ்வுருவம் "பெண்ணே! யான்தான் இயமன் எனப்படுவோன். எனதுபேர் யமதர்மராஜன். உன்கணவனின் ஆயுள் இன்றையோடு முடிவுற்றமையால் கொண்டுசெல்லவும், அவன் மிக்க தூயனும் பரிசுத்த குணமுடையோனுமாதல்பற்றி அவனரிய உயிரைக் கொடுபோகயானே இவ்விடம் வர நேர்ந்தது." எனக் கூறித் தனது கோணலானதண்டத்தினுனியில் அவனுயிரைப்பற்றிக்கொண்டு செல்லப் புறப்பட்டான். சாவித்திரி கண்கலங்கி, கலக்கமேற்பூண்டு, அவனைப் பின்தொடர்பவளாயினள். சிறிது தூரம் சென்று அந்தகன் பின்னோக்க சாவித்திரி நடக்கக் கால்நோகும்படியான கல்லு முள்ளும் நிறைந்தகாட்டில் விரைந்து ஓடோடியும் வருவதையறிந்து நின்று "பெண்ணே! இஃதென்ன உன் பேதமை? நின் கணவனிருப்பிடத்துக்குச் சென்று அவனுக்

குச் செய்யவேண்டிய சடங்குகளை முடிப்பிப்பாய். வீணில் உன்பாதம் கொப்புளிக்க ஏன் அலைகின்றாய்?" எனக் கூறலுற்றனன். அக்கால் சாவித்திரி தலைபைத்தாழ்த்தி வணங்கி "என் ஐய! இஃதுமக்கடுக்குமோ? ஏழையேன் படுந்துயரம் காண்கிலையோ? கண்டும் கேட்டும் இரங்காதிருக்கின்றனையே? உன் மனம் இரும்பினுங் கடியதோ? என் உயிரையன்றோ பற்றிக்கொண்டு போகிறாய்? என் உயிரே செல்லுங்கால் யான் வருவதடாதோ? என் கணவனை மீட்கமாட்டாயா? இயமதர்மராஜனென பெரும்புகழ் படைத்தவன் நீ அல்லனோ? உன்னால் ஆகாத சாத்தியகாரியமுளதோ?" எனக் கண்ணுங் கண்ணீருமாய்க் கதறுவதைக் கேட்ட காலாந்தகன் அவள் வசனித்த மொழிகளால் மிக்க களிப்பெய்தி "அடி அணங்கே! விதிதனைமாற்ற, உன்னாலாமோ? மஹா திரிமூர்த்திகளும், தபஸ்விகளும், விதிவலியை வெல்லமுடியாது வருந்தாநிற்ப நீ இன்னனைய மொழிகளை நவின்றது நன்று நன்று சீக்கிரம் ஏதாவது உனக்கிஷ்டமானஓர் வரத்தைப்பெற்று சடுதியில் செல்மின்"என, உரைக்க, சாவித்திரி அப்படியாயின் நயன ஒளிகெட்ட என் மாமனாருக்கு கண் பார்வை தெரியவும் அருள் புரிவதோடு அவரது இராச்சியம் மறுபடி கிடைக்கச் செய்யவும்" எனவே, இயமன் 'அவ்விதமே அருளினேன்; செல்வாய். யான் சீக்கிரம் செல்லவேண்டும்" எனச் செல்ல, சாவித்திரியும் பின்தொடர, காலன் திரும்பி நோக்கி "ஐயோ! இஃதென்னகோரம்! ஏ பெண்பாவாய்! நினக்குவரமளித்துச் செல்லப்பணித்தும், ஏன் பின்தொடருகின்றாய்" "எனக்கேட்க அம்மாதர் சிரோன்மணியும் "அப்பனே சரணம்! ஐயனேசரணம்!! "எனப்போற்றி "என் கணவனுயிரையே கொண்டு போகும்போழ்து மற்றவையாவும் எனக்குத் தேவையில்லை" எனக் கூறினள். அதற்கு இயமன் "அடி பெண்பாவாய்! நீ அந்த ஒரு வரத்தைத் தவிர மற்றியாது கேட்பினும் யான் தடை சொல்லேன்" என அப்படியாயின் "எனது மாமனுக்கு இன்னும் நூறு புத்திரர்கள் பிறக்கக் கடவதாக" வென "அவ்விதமே அருளினேன்" எனக் கூறிக் காலன் வெகு விரைவாகச் செல்ல, சாவித்திரியும் துரிதத்துடன் தொடர்ந்தாள்.

சாவித்திரி தன்னோடு கூடவே விடாது வெகு தூரம்வரை தன்னைமறந்து வருதலையுணர்ந்து "பெண்ணே! இனிவருதல் உனக்குத் தகுதியன்று. இத்தோடு போமின். எனக்கும் நேரமில்லை" என அப்பெண்மணியும் "என் கணவன் பிராணனை விட்டுவிடு உன்னை யான் தொந்தரவு செய்யவில்லை. நீ எவ்வளவோ உத்தம குணவானாயிற்றே. மற்ற எந்த தெய்வங்களைக் காட்டினும், உன்னையல்லவோ மிகுதியும் போற்றுகின்றனர். உன் ஆரியகுணத்தை யல்லவோ புகழ்கின்றனர். இப்பேர்ப்பட்ட பெரும் புகழ்படைத்த பிரதாபனை நினக்கு இது ஒரு பொருட்டா? என் வேண்டுகோளை நிவர்த்திப்பது சிரமமா எனப் போற்றித் துதிக்கவே காலன் "அந்த மிகு சுந்தரியே உன் வார்த்தைகள் என்னை மெழுகாக்குகின்றன. ஆயினும் பெண்ணே! இதுதான் கடைசியான முறை ஒரே வரம் மாத்திரம் பெற்றுத் திரும்புக" எனக்கூற, அப்படியாயின் "எனக்கு நூறு புத்திரர்கள் உண்டாக ஆசீர்வதி" என, அப்படியே "தீர்க்க சுமங்கலியாய் நூறு புத்திரர் உற்பத்தியாகி சுகமாய் வாழ்க" என்றான். உடனே சாவித்திரி அவனைக் கொண்டாடிய வண்ணமே என் குலக்கொழுந்தே"மறுபடிஎங்கு செல்கின்றாய் நூறுபுத்திரர்களை அருளிய நீ என் கணவனுயிரைக் கொண்டுசெல்லலாமோ? என்கணவனின்றி யானெவ்வாறு புத்திரர்களைப்பெற்று ஜீவிப்பது" என, காலாந்தகன் தான் வாக்குக் கொடுத்துவிட்டதை நினைந்து அவள் கணவனின் உயிரை மீட்டும் திருப்பி அவனது இதயத்தில் விடுத்துச் சென்றனன். உடனே தன்



கணவன் எழலும், அவனோடு நடந்த வர்த்தமானங்களையெல்லாம் கூறி தானும் தன் கணவனும் வீடுநோக்கித் திரும்பினார்கள்.

ஆசிரமத்தில் தியுமற்சேனவரசரும், மந்திரிமாரும் மற்றுமுள்ள பரிவாரங்களும், சூழ்ந்திருந்தனர். சாலவதேசத்தை ஆண்டிருந்த பகைவனும் தன் நாட்டை மறுபடி தியுமற்சேனருக்கு அளித்தனன். கண்ணொளி கிடைக்கப்பெற்று, நாட்டையுமடைந்து, தன் குமாரனின் வரவை எதிர்நோக்கியிருக்கும் அரசனின் பக்கலில் அம்மன்னனது மனைவியும் வீற்றிருந்தனள். சாவித்திரியும் சத்தியவானும் ஆசிரமத்துட்புக்கி அவ்விடமிருந்த அரசனின் பாதத்திலும், இராணியின் பாதத்திலும் நமஸ்கரித்தனர். அரசன் நடந்த வர்த்தமானங்களை விளம்ப, சத்தியவானும் சாவித்திரியின் குணாதிசயங்களைப் புகழ்ந்தனன். பின்பு எல்லோரும் மிக்க களிப்பெய்தி, நாட்டை யடைந்து மிகுந்த கோலாகலத்துடன் ஜெயபேரிகை முழங்க, புத்திர பௌத்திராதிகளைப்பெற்று, சுகமாய் ஐம்பத்தாறு தேசத்திலும் மன்னு புகழ்பெற வாழ்ந்து வந்தார்கள்.

இதுவரை இக்கதையைத் தொடர்ந்துவந்த சகோதரிகளே! நீவிர் உங்கள் கணவன்மாரோடு காமனும் ரதியும்போன்று கோளரிபேட்டை போன்று, தமக்குவமைதாமாய்த்தனியிரு சுடர்போற்றோன்றத் தரணிமீதில் அன்பு மேற்பூண்டு "காதலிருவர் கருத்தொக்க ஆதரவுப்பட்டதே இன்பம்" என்ற நீதியை நினைந்து கணவனே தெய்வமாகவும், அவனது சொல்லையே வேதவாக்கியமாகவும் மேற்கொண்டு தெய்வபத்தியிற்சிறந்து முத்தியடைந்து வாழ்வீர்களாக. சுபம்

ஓம் தச்சத்.

கே. எஸ். வைத்தினதய்யர்.

ஷேக்ஸ்பியர் நாடகம்.

## ஒதெல்லோ.

உ. அங்கம்.

உ. களம்.

இடம்: வெனிஸ் நகரத்தில் மற்றொருதெரு.

பிரவேசம்: ஒதெல்லோ, இயாகோ, பந்தமேந்திய சில பரிஜனங்கள்.

**இயாகோ.**—வாணிபப் போரிடைப் பல்லுயிர் வாங்கின
னென்னினு மென்மன மெண்ணியோர் கொடுங்கொலை
புரிதரா திருத்தலைப் பொருளெனக் கொண்டது :
சிலசில வேளையிற் சேவகஞ் செய்வதற்
கியற்கையி லென்வயிற் றீக்குண மிலதால் :
ஐந்தாறு தடவையா யவனையிவ் விலாவிற்
குத்திக் கொல்லயா னெண்ணங் கொண்டனன்.

**ஒதெல்லோ.**—அதுவே நல்லது.

**இயா.**— அப்படி யல்ல
அன்னவன் றங்க ளரும்புகழ்க் கிழிவுறச்
சினம்வரு மிழிவுரை பிதற்றுதல் செய்தனன் ;
அடக்கமென் றிசைக்குமவ் வமரர்தந்திருக்குண
மென்னிட மொருசிறி திருப்பதைக் கொண்டு
வலியொடும் பொறுத்து மன்னியா நின்றனன்.
ஈதிருக் கட்டும், இறைஞ்சிக் கேட்கிறேன்,
மணவினை நீவிர் வலிபெறச் செய்திரோ ?
இதுநீ தெருந்திரு மெல்லவ ராலு
மன்புபூண் டிருக்குமப்பெருஞ் செல்வவான்
றன்றிறல் வலிமையாற் றாணிகா வலனி
லோரிரு மடங்கு செல்வாக் குடையவன்.
கலந்தநீ ரிருவருங் கலங்குறப் பிரிப்பன் ;
அல்லது மனுநூ லதன்முழு வலிசெலற்
கிடந்தருந் தடையு மின்னலு மெவையோ
வவையெலா நின்மே லவனனி சுமத்துவன்.

**ஒதெல்.**—தீயன வன்னவன் புரிதரல் செயட்டும் :
செங்கோ லவற்கியான் செய்துள நன்மைகள்
முறையிடு மவன்வாய் மூடிடச் செய்யும்.
(தற்புக ழதுவுமோர் தகைமையென் றுணருநாள்
வெளிப்படக் கிளத்துவன்) வேந்தர்தங் குலத்தி
லென்னுயிர் வாழ்க்கையைப் பெற்றன னென்பது
கோமக னின்னுங் குறிக்கொளா விஷயம் ;

அருந்தவ முடைமையா லரிதினிற் பெற்ற
தருக்கொடு புகழ்ந்திடத் தக்கவிப் பேற்றினுக்
கென்னியற் பெருமைக ளினைதாழ்க்திடுபவோ?
தேசமோ கினியெனு மெல்லியற் செல்வியை
யகங்கூர் காதலி னன்புகொண் டிலனேல்
நம்புநீ இயாகோ கரைதிரை யகற்றும்
பாற்கட லமுதமே பருகக் கிடைப்பினுங்
கட்டிலு ளடங்கிய கடிமனை வாழ்விலென்
னில்லிலாச் சுயேச்சையைப் புகுத்திட மாட்டேன்.
பார்பார்! ஆங்கதோ பந்தம் வருவதென்?

**இயா.**—ஈங்கிவர் வருபவர் துயினீத் தெழுந்த
தந்தையு மவன்றன் றமர்களு மாவார்;
தாங்கள்சற் றுள்ளே தங்குதல் நல்லது.

**ஒதேல்.**—ஒளிமறை வென்ன? உற்றுகோக் கட்டும்.
என்னுய ரங்கமு மென்னுயர் சிறப்புமென்
னின்மல மாகிய நிறைகுண வாழ்க்கையுந்
துப்புற வென்றனைத் தோற்றுவித் திடுமால்.
ஆங்கவர் தாமோ?

**இயா.**— அரியின்மே லானை,
ஆங்கவ ரென்றியா னப்படி நினைக்கிலன்.

**பிரவேசம் காஷியோ, பந்தத்தோடு சில உத்தியோகஸ்தர்கள்.**

**ஒதேல்.**—இறையவன் பணிஞரு மென்பிரதி நிதியும்.—
நல்விரவாகுக; நண்பர்காள்! வந்ததென்?

**காஷியோ.**—தலைவநிற் கிறையவன் மங்களஞ் சாற்றினன்;
மேலுநம் மன்னவன் மிகநனி விரைவினி
லிக்கணந் துன்வர வெதிர்பார்க் கின்றனன்.

**ஒதேல்.**—செய்தியென்? யாதுநீ சிந்திக் கின்றனை?

**காஷ்.**—யானுனு மானித் தெண்ணுதல் போல
வெதுவோ சைபிரஸ் இருந்துவந் திருக்கலாம்:
மிகவும் நெருக்கடி யாயதோர் விஷயம்.
நாவாய் நடுங்கின ரிந்தவிந் நடுவிரா
வடிக்கடி யொருவரா யாரிரு தூதரை
விரைவினிற் றனித்தனி மேன்மேல் விடுத்தனர்;
துயில்கண் டெழுந்த சூழ்ச்சித் துணைவரர்
பற்பலர் முன்னமே பார்த்திபன் பாலினர்.
பொருக்கென நினையும் போதுற வழைத்தனர்;
நின்னைநின் னில்லிடை நேடிப் பெறுமையின்
தருவுதல் செய்யுந ரொருமுத் தொகுதியைப்
புறத்தினுந் தேடிடப் போக்கின ரவையோர்.

**ஒதேல்.**—நீயெனைக் கண்டது நலமாய் நேர்ந்தது.
மற்றிவண் மனையிலோர் வார்த்தைநான் சொல்லிவிட்
டுன்னுடன் போதுவன். [மறைதல்,

**காஷ்.**— உயர்ந்ததோர் கொடியோய்.
என்னவ னீங்கே புரிவது?

**இயா.**— இன்றிரவிற்
பூவுயர் கலனென் றவனிடைப் புகுந்தது
முறையினவ் வணிகலன் பெரும்பயன் முற்றுமேல்
பல்லாண்டாகவே யான்மையிற் கொள்ளுவன்.

**காஷ்.**—கருத்துள் விண்டிலன்.

**இயா.**— கடிமண முடித்தனன்.

**காஷ்.**—தாழ்குழ லவரெவர்?

**பிரவேசம். மறுபடியும் ஒதேல்லோ.**

சத்தியங் கண்மணி,—

**இயா.**—தலைவநாம் போவதா?

**ஒதேல்.**— சரியினிப் போகலாம்.

**காஷ்.**—நின்றனைத் தேடிக் காணுத னிமித்தம்
மற்றொரு படையிதோ வாரா நின்றது.

**இயா.**—அவன்பிர பான்ஷியோ.—அறிந்திரும் தலைவநீர்
குறுகுவ னவன்றன் கொடியதோர் சூழ்ச்சியின்.

**பிரவேசம்.—பிரபான்ஷியோ, ராஜரிகன், பந்தத்தோடு சில உத்தியோகஸ்தர்கள்.**

**ஒதேல்.**—யாரடா! நில்லவண்!

**ராஜ.**— ஐய, மற்றிவன்றான்
மூவரென் றுரைப்பவன்.

**பிர.**— மூண்டவற் பற்றுமின்
வலியநற் றிருடனல்!

**இயா.**— வருக ஐயநீ
ராஜரீகமற் றுன்றனக் கியானுளன்.

**ஒதேல்.**—ஒள்ளிய நும்வாள் உறையிடை நிறுத்துமின்
இன்றேற் பனித்துளி யிருங்கறை படுக்கும்.
மூரிவெம் படையினு னுவதின் மூப்பினுல்
ஐயநீ யதிகமும் ஆணையைச் செலுத்தலாம்.



**பிரப.**—ஏ கொடுங் கள்வநீ யென்மட மகளைநீ
யெங்கே யொளித்தனை? இசைகெடக் கெடுவாய்,
அவளை நீ மயக்கினை யாகுதல் வேண்டும்.
மாயா வலையுளம் மான்றனளம் படாவிடின்
மென்மையும் வனப்புங் களிப்பொடு மேயவென்
னொருசிறு கன்னிகை யோங்கிய செல்வத்
தாரெழின் மிகுத்தவென் னருங்குலக் குமரரை
மணமிகு மாலையைச் சூட்டிட மறுத்தவள்
போற்றிப் புனைந்ததன் புகழ்மிகு குரவர்தங்
காவல்விட் டுனைப்போன் றொருகரிக் கட்டைபால்
—இன்புற்ற கன்றிப் பயமிக வெய்துறற்
கோடின ளொன்றுமோ கலர்மொழிக் குள்வரக்
கனவிலே யாயினுங் கருதலுற் றிருப்பளோ
அறிவுடைப் பொருளெலா மாய்ந்துசொற் றிடுக.
தீயதி னமைந்த மாயத் தெறுபொடி
துவரிதழ் மாட்டுநீ தூவினை யென்பதும்
காவலை மிகவுங் கைவர வெழுப்புந்
தாதுப் பொருளினே தாவரப் பொருளினே
மெல்லிய விளமையை வீட்டினை யென்பதும்
வெள்ளிடை மலைபோல் விளங்குகின் றிலவோ
தொடுகட லுலகமே தூக்கிச் சொல்லுக:—
மன்றம தேறியிவ் வழக்கினைப் பூட்டுவன்.
அறிவினுக் கொத்ததாய்த் தெளிவா யமைந்தது.
ஆதலி னின்னையான் அனுமதி யற்றவும்
விலக்கத் தக்கவு மாகிய வித்தையிற்
பயில்பவன், உலகினைப் பாழ்படச் செய்பவன்,
என்னுமோ ரேதுவிற் றடைசெய் திட்டனன்.—
பற்றுமின் றடையிடை படுப்பனே லன்னவன்
ஒழிவினுந் தாழ்ந்தடி பணிவுற வுறுத்துமின்.

**ஒதே.**—கைவலி ரடக்குமின்! எனைச்சார காளையர்
நீவிரும் பிறரும்: நெடுஞ்சமர் புரிதலே
யென்னுடை முறையெனிற் றூண்டுநரின்றியே
நானதைச் சாலவு நன்குணர் திருப்பன்.—
இந்தநின் பழியினுக் கெதிர்மொழி யிறுக்க
எவ்விடஞ் செல்லநீ இச்சியா நின்றனை?

**பிர.**—சிறையிட மதற்கு; ச்செல்முறை நீதியில்.
மனுநூல் நின்றனை மறுமொழி வழங்க
வருத்துந் தக்கவக் காலம் வரும்வரை.

**ஒதேல்.**—பணிவனேல் வருவதென்? அரசினைப் பற்றிய
சிற்சில வவசரச் செய்குறித் தென்றனைத்
தன்வயிற் போதுமா வீங்கென் சார்பினிற்
றூதுவர்ப் போக்கிய தொடுகழன் மன்னவ
னுங்கதின் மனமகிழ் வெவ்வா றயர் தரும்?

**உத்தியோ.**—மலிபுகழ் மாட்சியோய், மாற்றமற் றுண்மையே
புரவலன் மந்திரம் புக்கனன் வரவெனத்
தம்மையு மழைத்தனர். சாற்றுவன் றிண்ணம்.

**பிர.**—எப்படி? மகிபதி யிவ்விராப் போதினிற்
சூழ்ச்சியினுழ்ந்தனன்?—தூர்த்தனைக் கொண்டுவா:
என்னதுந் தாமதத் தியற்றுவ தொன்றல:
அரசனு மங்கவன் அரசியன் முறையினி
னடத்துந ரென்னிகர் நண்பர்க ளெவரும்
இத்துயர் தம்மவென் றெண்ணலிற் றவிரார்;
ஏனெனின், இத்தகை யிடர்தருஞ் செய்கைகள்
வழிவழி நடைபெற மார்க்கமுண்டாய்விடின்
ஆவண வடியரு மறிவிலா நரகரும்
மன்னவர் நமக்கென வருவது சரதமே.

**பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.**

முற்றிற்று.

---

## சுகுணசுந்தரம்.

---

V

இங்கிவ்வாறு இருக்க, மாயாபுரியிலோ, விஜயனால் சுகுணசுந்தரர்களுடைய ஜயபிரதாபமான விருத்தாந்தங்களைக் கேட்டபின், இவ்விளைஞர்களைப்பற்றி யாதொன்றுந் தெரியாததால் அரசனுமரசியும் கனவருத்தமுற்று, "நம்மிளஞ்செல்வமாகிய சுந்தரனைக்காணாது மனம் வருந்துகின்றதே; சுகுணனுங் கூடச் சென்றிருத்தலாலன்றோ நம்மனம் ஒருவாறு தனித்திருக்கின்றது. இவ்விருவருஞ்சேர்ந்தே இவனின்னும் வராதிருக்கக் காரணமென்னே! யாதொரு பரிவாரமு மில்லாது தனித்தெங்கு வருந்துகின்றார்களோ, நம் செல்வன் பிறந்தது நம்மரிய தவப்பயனே யன்றோ! ஹேமாபுரியைச் செங்கோல் நடாத்தும் சாருதத்தன் தன் பெண்ணின் திருமணத்திற்கு சுவயம்வரம் நாட்டிய பத்திரிகை கிடைத்திருக்கின்றதே; நம்புதல்வனிங்ஙனமிராந்தால் அங்கண மரசகுமாரர் பலருள் இவனுமொருவனுய்ச் செல்ல

லாகுமே, ஒருவேளை அச்சுந்தரியுமிவனுக்கேயன்றோ மாலையிடலாகும், நம்கண்களுங்கண்டு களிக்கும். மணக்கோலமானதும் இந்த இராஜ்யபாரத்தை வகிக்குமாறு மகுடாபிஷேகஞ்செய்ய நினைத்தோமே; ஏ! கண்காள்! நீவிர் பாவஞ் செய்தீர்கள்; ஏ கைகாள்! நீவீர் எம் கண்மணியான புத்திரனைக் கட்டியணையாது என்ன கொடுமை புரிந்தீர்களோ! ஏ! நாசிகாள்! நீவிர் அவனை உச்சிமோராது என்ன தீங்கிழைத்தீர்களோ! ஏ! செவிகாள்!

“மக்கள் மெய்தீண்டல் உடற்கின்ப மற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு.”

என்றபடி, அரியமைந்தர்களின் வார்த்தைகளைக்கேட்டு சந்தேஷிக்கப் பிராப்தமில்லாதவர்களானீர்களே!” என்று பலவாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஆங்கு சுமந்திரர் தோன்றினர். சுமந்திரர் மகாஞாதாவும், சாதுவும், சர்வநியந்தாவும், தங்களுக்கு முந்திய பூர்வகாலத்து விருத்த மந்திரியும், காலமறிந்து நடக்குந் திறமைவாய்ந்த மகானுமானதினால் சக்கிரவர்த்தியான சுசீல மகாராஜன் தன்தேவியும் நற்குணமுள்ளவளுமான சாருமதியுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்கையிலேயே தங்கள் விசனத்தை தீர்க்கும் பொருட்டு வந்தாற்போலிருந்தது.

இந்த விருத்தரைக் கண்டதும் சுசீலனும் சாருமதியும் எழுந்து மரியாதை செய்து அவருக்கோர் மனோகரமான பொற்பீடமளித்து உட்காருவித்து, இராக்கினி பக்கலில் நிற்க அரசன் ஓர் ஆசனத்திலமர்ந்தான். விருத்தரான பெரியவர் இவர்கள் முகவாட்டத்தைக் கண்ணுற்று அதற்குக் காரணம் தானே சில குறிப்பினாலறிந்து, “மகாராஜாவே! உமது குமாரனும், வீரனுமிளங்காளையுமான சுந்தரனும், குணசீலனும், யூகியுமான சுகுணனும், தம்பதிகளாய் கூடிய சீக்கிரத்தில் இவண் வருவார்கள் எனபதில் ஐயமில்லை. நீவிர் மனந்தேறி வேதனையின்றி சுகித்திருப்பீர்களாக” என்னுந்தருவாயில், அரசனுக்கு முக்கிய நண்பனான விஜயன் இவண் வந்து ஓர் பத்திரிகையை மகாராஜனிடந்தந்து வணங்கி நின்றான். அது திருமணப் பத்திரிகையாக விருக்கக் கண்டு சுமந்திரர் கையிற்கொடுக்க, அவருமதைப்பிரித்து ஹேமாபுரி அரசன் சாருதத்தன் எழுதியிருக்கிறானெனத் தெரிந்து விஜயனிடமே கொடுத்து வாசிக்கும்படி ஆக்கியாபிக்கவே, அவனும் அடியில் வருமாறு வாசித்து முடித்தான்.

“இப்பூமண்டலத்தை ஓர் குடைக்கீழ் ஆள்பவரும் சக்கிரவர்த்தியுமான சுசீலபூபதிக்கு ஹேமகூடத்தை யணித்தாயுள்ள ஹேமாபுரியைச் செங்கோல் புரிகின்ற சாருதத்தன் மிகவும் வணக்கமாய் செய்துகொள்ளும் விண்ணப்பம்:—

“எனது குமாரத்தியும் சுகுணையுமான சுலோசனா தேவியைத் தங்கள் புத்திரரத்தினமும், இளவரசரும், சுந்தரவடிவமைந்தவருமான சுந்தரபூபதிக்குக் கன்னியாதானஞ் செய்வித்துக் கொடுப்பதாய் சித்சக்தி சுவரூபியான பார்வதியின் அனுமதிப்படி நிச்சயித்திருப்பதால் இத்திருமணப்பத்திரிகையை சமுகம் விடுக்கலானேன். சுவயம்வரநாட்டி மங்கையின் மனப்படி மாலையிட்டு மணவாளனுக்கு மணம்புரிவிக்க வெண்ணிவிடுத்த பத்திரிகையும், சமுகத்திற் கிடைத்திருக்கலாம். ஆனால் கடவுளினருளினாலேதென்று அன்று காலையில் தான் ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது. ஆதலாலிப்பத்திரிகையை சடுதியில் தாமதியாது ஓர் தூதுவனிடம் விடுக்கலாயிற்று. மற்றயதேயத்தரசர்களெல்லாம் வந்துவிட்டார்கள். தாங்களுமிங்கனமெழுந்தருளி வதூவரர்களாகிய தங்கள் சுகுமாரருக்கும் மருமகளாகிய சுலோசனைக்கும் பாணிக்கிரஹணம் முதலிய சடங்குகளை நிறைவேற்றி ஆசீர்வதிக்குமாறு வேண்டிக்கொள்ளாநின்றேன்.”

இப்படிக்கு,
தங்களன்புள்ள
“சாருதத்தன்.”



விஜயனிவ்வாறு வாசிக்கக்கேட்ட அரசன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சுமந்திரர் சொன்னவாறு பலிக்கும்போலுமென வியந்து அமைச்சனைப்பார்த்து மதிவள்ளலே! சாருதத்தன் வணக்கத்தைப்பாருங்கள். நாமங்கு இதேமுகூர்த்தத்தில் பிரயாணப்பட நல்ல வேகமான இரண்டு பரிமாக்கள்பூட்டிய இரதத்தை திட்டஞ்செய்யுங்கள், நாமிருவருந் தேவியருடன் இரதத்தில் ஏறிச்செல்லுவாம். விஜயனாயுதபாணியாக நமதுவேகமான “பஞ்சகல்யாணி” என்று நாமங்கொண்ட குதிரையில் நம்மைப் பின்தொடர்ந்து வரக்கடவன்; முன்னும் பின்னுமாக நான்கு போர்வீரர்கள் வரக்கடவர்கள்; ஹேமாபுரி தூதன் எல்லாருக்கு முன்னோகி சங்கதி தெரிவிக்கக்கடவன்” என்றாஞ்ஞாபித்து, “அத்தூதனுக்கு வஸ்திராபரணாதிகளை வெகுமானமாய்க்கொடுத்து அனுப்புவீர்களாக” வென உத்திரவு செய்தான்.

சுமந்திரர் அரசனை நோக்கி “பூபதே! நமது சுந்தரன் கல்லியாணத்திற்கு நாமிருவரும் போகவேண்டிய தவசியந்தான். நாம் வருமளவும் இந்நகரத்தைப் பாதுகாக்கும் வண்ணம விஜயனுக்கனுமதிகொடுத்தால் நலமாயிருக்குமென்று நினைக்கின்றேன்” என, விஜயன், “நாமெல்லோரும் நகரத்திலில்லாமற் போய்விடுவோமாகில் இராஜகாரியங்களிற் குறைவுண்டாகு மல்லவா? சுமந்திரர் உத்திரவுப்படி அனுமதி கொடுத்தால் நகரத்தைக் காத்துக்கொண்டிருக்கின்றேன் என்று வந்தனத்தோடு விண்ணப்பம்செய்ய அவ்வாறே அரசன் உத்தரவளிக்க, அவன் இராச்சியத்தைப் பாதுகாத்துக்கொண்டிருந்தான்.

பிறகு அரசனுடைய இரத்ன மயமான இரதம் அதிவேகமான இரண்டு புரவிகளைப்பூட்டி அரண்மனைவாயிலில் வந்துநின்றது. அரசனும் சுமந்திரரும் தங்கள் மனைவிகளுடன் தேரிலேறிக்கொண்டு,

“சுற்றத்தார் சுற்றப்படவொழுகல்செல்வம்
பெற்றத்தாற் பெற்றபயன்”

என்றபடி பந்து ஜனங்கள் அவரவர்கட்குரிய வாகனம் பல்லக்கு முதலியவைகளுடன் பின்னே வர, முன்னேபாகனை இரதத்தை அதிவேகமாய் நடத்த ஆஞ்ஞாபித்து குதிரை வீரர்களுடன் ஹேமாபுரி நோக்கிப் புறப்பட்டார்கள்.

டி. எஸ். சுப்பராமையர்.

## தஞ்சைத் தமிழ்ச் சங்கம்.

இச்சங்கம் சென்ற வருஷம் அக்டோபர்௴ 21௳ விஜயதசமியன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் வருஷக் கொண்டாட்டம், அக்டோபர்௴ 12௳ ஞாயிற்றுக்கிழமை மிகவும் விமரிசையாக நடந்தது. தமிழ் வித்துவான் ஸ்ரீ-ல-ஸ்ரீ அடைக்கல சுவாமியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள். அப்போது சங்கத்தாருள் ஒருவரான ம-ா-ா-ஸ்ரீ தி. இராஜமையங்கார் அவர்கள் “ஸர் ஹம்பிரிடேவி” என்னும் ஓர் இரசாயன சாஸ்திரியின் சரிதையைப் படித்தார். இச்சரிதை ஆங்கிலேய பாஷையிலிருந்தும் மொழிபெயர்க்கப்பட்டது.

இச்சங்கத்தின் கொள்கைகள்:—1. நவீனநூல்களைப் படிப்பதுடன் புராதனமான அரிய தமிழ் நூல்களைப் படிப்பது. 2. தமிழ்ப் பாஷையின் அபிவிருத்தியை யுத்தேசித்து வசன நடையை உண்டு செய்வதும் விருத்தி செய்வதும் எளிய இனிய தமிழ் நடையில் அநேக உலக நீதிகளையும் சன்மார்க்கங்களையும் நமது மதாசாரங்களையும் புகட்டும்படி கதைரூபமாய்ச் செய்வித்து அச்சிட்டு வெளிப்படுத்துவது. 3. ஆங்கிலேய பாஷையில் வழங்கும் ‘நாவல்’ என்னும் விநோத சரித்திரங்கள் போலவும் நாடகங்கள்போலவும் தமிழில் உண்டு செய்வது. 4. இதர பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்தல். 5. உரையில்லாத நூல்களுக்கு உரையிட்டு வெளியிடுதல்.

### விசேஷமீட்டிங்கு.

அக்டோபர்௴ 16௳ வியாழக்கிழமை 6-மணிக்குத் தஞ்சைத் தமிழ்ச் சங்கம் பேசும் பாஷைகளைப்பற்றி யுனிவர்சிட்டி கமிஷன்தாரர்கள் விதித்த ஏற்பாடுகளை ஆலோசனை செய்யக்கூடிற்று. ம-ா-ா-ஸ்ரீ

சூரியநாராயணய்யரவர்கள் B. A. அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தார். யுனிவர்சிட்டி கமிஷன்தாரர்களின் அறிக்கைப்பத்திரத்தில் பேசும்பாஷைகளைப் பற்றியும், புராதனமான சிறந்தபாஷைகளுக்குப்பதிலாக பேசப்படும் பாஷைகளை உபயோகிக்கக்கூடாதென்பதைப்பற்றியும் கூறுகின்ற 89, 94, 95, 96 ஆகிய இந்த பாராக்கள் மொழிபெயர்க்கப்பட்டுப் படிக்கப்பட்டன.

காலேஜ் படிப்பினின்றும் தமிழ்ப்பாஷையை விலக்கிவிடக்கூடாதென்பதற்கு பல காரணங்கள் சங்கத்தார்களால் எடுத்துகூறப்பட்டன. முக்கியமான காரணங்கள் பின்வருமாறு :—

(1) கமிஷன்தாரர்கள் கூறுவதுபோல தமிழ்ப்பாஷை ஸம்ஸ்கிருதத்தின் பிராகிருதமல்ல. தமிழ் பிரத்தியேகமாகப் பிறந்து வளர்ந்த ஓர் பாஷை. ஸம்ஸ்கிருதவார்த்தைகள் இப்பாஷையில் கலந்துள்ளனவென்பதுண்மையே, இதைக்கொண்டு தமிழ் ஸம்ஸ்கிருதத்தினின்று பிறந்ததென்பது பிழை. வட இந்தியாவில் ஸம்ஸ்கிருதத்தைப்படிப்பதால் பிராகிருதங்கள் விருத்தியடையலாம். ஆயினும் தென்னிந்தியாவில் தமிழ்ப்பாஷை விருத்தியடையாமலிருப்பதுவே, இது பிரத்தியேகமானபாஷை யென்பதற்குச் சான்றாகும்.

(2) தமிழ்ப்பாஷையும் ஓர் புராதனமான சிறந்தபாஷை. மனோபாவங்களை விருத்திசெய்விக்குஞ் சக்தியதனிடத்துமுளது.

(3) ஹைஸ்கூல்களில் தமிழைக்கற்பித்து காலேஜ்களில் ஸம்ஸ்கிருதத்தை இரண்டாவது பாஷையாக வைத்தால் அநேக இடையூறுகள் உண்டாகின்றன. மாணாக்கர்கள் தமிழை ஹைஸ்கூல்களில் செவ்வையாய்ப் படிக்கமாட்டார்கள். ஏனென்றால் இவர்கள் காலேஜ் வகுப்புகளில் ஸம்ஸ்கிருதம்படிக்கவேண்டியிருக்கிறது. அதற்காகவே ஹைஸ்கூல்களில் தமிழை அசட்டை செய்து ஸம்ஸ்கிருதத்தையே படிப்பார்கள். மேலும் ஹைஸ்கூல்களில் தமிழ் ஸம்ஸ்கிருதம் இரண்டு பாஷைகளையும் படிக்கும்படி நேரிடும். காலேஜி மாணாக்கர்கள் நான்குவருஷகாலம் இதரபாஷைகளைப் படிக்கவேண்டியிருப்பதால் ஹைஸ்கூலில் தாம் கற்றுணர்ந்த சொற்பத் தமிழையும் மறந்துவிடுவார்கள். மேலே இவர்கள் எம். ஏ. பரீக்ஷைக்குத் தமிழை எடுத்துப்படிப்பார்கள் என்பது இல்லவே இல்லை.

(4) பிராமணர்கள் எல்லோருக்கும் ஸம்ஸ்கிருதத்தை எடுத்துப்படிப்பது அநுகூலமாகவிருந்தபோதிலும் பிராமணர்களல்லாத தமிழர்களுக்கெல்லாம் பிரதிகூலமாகவே முடியும். தென்னிந்தியாவில் இவ்விதமான தமிழர்கள் கணக்கிறந்தோர். இவர்களுக்கெல்லாம் உயர்ந்த படிப்பு இல்லாமற் போகும். 1854-ம்வருஷத்தில் கவர்ன்மெண்டார் பிறப்பித்த ஸர்வஜனங்களுக்கும் கல்வியைப்புகட்டி எல்லாபாஷைகளையும் விருத்திசெய்யவேண்டுமென்ற சட்டத்திற்கு இது நேர்விரோதமாகும்.

(5) கமிஷன்தாரர்கள் தமிழ் பாஷையின் தன்மையையும் சிறப்பையும் ஆராய்ந்தறியாது இவ்வாறு செய்திருக்கின்றார்களென்பதற்கு ஐயமில்லை.

(6) பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்கள் முதிர்ந்த வயது வருவதன்முன் பிரவேச பரீக்ஷையிற் றேர்ந்து, மேற்படிப்புப் படிக்க வகையற்று, தொழில் மேற்கொள்ளவும் முடியாது அலைவார்கள். இங்கிலாந்து முதலான மேல்நாடுகளில் பலவிதமான தொழிலை கற்பிக்கும் கலாசாலைகளும் கைத்தொழில் சாலைகளும் பல உள்ளன.

(7) ஒவ்வொரு ஜாதியாருக்கும் அவ்வவர் பாஷையே ஜீவனுக்கு சமானமாகும்.

மேற்கூறிய காரணங்களை அனுசரித்தே அக்கிராசனாதிபதியவர்களும் ஸவிஸ்தாரமாக எடுத்துப் பேசினார்.

பிறகு சங்கத்தார் எல்லோரும் ஒரே மனதாய்ப் பின்வரும் தீர்மானத்தைச் செய்தார்கள் :—

"யுனிவர்சிட்டி கமிஷனர்களுடைய சிபார்சுகளுக்கு விரோதமாக சென்னை மஹா ஜனங்கள் ஆக்ஷேபனையாக எடுத்துக்கூறி வெளியிட்ட தீர்மானங்களோடு ஒருமனப்பட்டிருக்கின்றோம் என்ற செய்தியை ம-ா ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யரவர்களுக்கு தந்தி மூலமாகத் தெரிவிப்பது."

SELF-MADE MEN.—1. HUMPREY DAVEY.

தமது சொந்தமுயற்சியால் முன்வந்தவர்கள்.

## ஹம்பிரி டேவி. *

ஹம்பிரிடேவி என்பான் ஆயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டாம் ஆண்டில், பென்சான்ஸ் என்னும் நகரத்திலே பிறந்தவன்.

*இஃது தஞ்சைத்தமிழ்ச்சங்கத்தின்முன் வாசிக்கப்பட்டது.



இவன் பிதா மரவேலைக்காரன். அந்நகரவாசிகள் வீடுகடோறும் இவனால் செய்யப்பட்ட மரவேலைகளை இப்போதும் பார்க்கலாம். ட்ரூரோ என்னும் நகரத்திலே ஓர் வித்தியாலயத்திலே பூர்வ கிரந்தங்களுக் குரிய படிப்பின் மூலாதாரங்களை ஹம்பிரி படித்தான். பிறகு அவன் தகப்பன் அவனைத் தன்னுள்ளூரிலேயே ஔஷதம் விற்ற ஓர் ரண வைத்தியனிடத்தில் வேலை கற்றுக்கொள்ளும்படி வைத்தான். ஆனாலும் டேவி அவ்வேலையை அறிந்துகொள்வதற்குப்பதிலாக, ஊரெல்லாம் அலைந்து திரிந்து காலத்தைப் போக்கினான். அல்லதுதனது உபாத்தியாயர் உபரிமடத்திலே தத்வ பரீட்சைகள் செய்ய வாரம்பித்தான். இத்தத்துவ விசாரணையாலே ஓர்சமயம் உபாத்தியாயர் வீடெல்லாம் தீக்கொளும்போலிருந்தபடியினாலே, அவ்வயித்தியனுக்கும் டேவிக்கும் சண்டை வந்து, டேவி தனது உபாத்தியாரை விட்டுப் பிரிவதென்று தீர்மானித்தான்.

பதினான்குவயதுக்குச் சற்றுமுதிர்ந்தபோது டேவி, பென்சான்ஸ் நகரத்திலேயே மற்றோரிரண வைத்தியனுக்கு மாணாக்கனாக வந்தான். ஆயினும் டேவிக்கு வைத்தியத்தொழிலில் ஒரு ஆசையை உண்டாக்க எவ்வாறு முதல் எஜமானன் தவறிவிட்டானோ, அவ்விதமே இவ்வெஜமானனும் தவறிப்போகும்படி நேரிட்டது. ஏனெனில் இத்தத்துவ விசாரகன் பிறகு தான் எச்சாத்திரங்களிலே நிபுணன் என்று பெயர் பெற்றானோ அச்சாத்திரங்களைப் பிறருதவியின்றித் தானே ஊன்றிப்படிக்க வாரம்பித்தான். படிப்புவிஷயத்தில் தான் தானே விதித்துக்கொண்ட ஓர் ஏற்பாட்டின்படியே சென்று, வயது பதினெட்டாகுமுன்னே தத்துவ விசாரணை, இரசாயனம்-இச்சாத்திரங்களின் மூலாதாரங்களை ஐயந்திரிபறக்கற்று, தாபரசாஸ்திரம், இரேககணிதம், அங்காதிவியூகசாஸ்திரம், இவைகளிலே சற்று விற்பன்ன மடைந்தான். இக்காலத்தில் அவன் படித்த விஷயங்களுள் மானதசாஸ்திரமுங்கலந்தது. அவன் குறிப்புப் புத்தகம் ஒன்று இன்னமுமிருக்கின்றது. அதன் முதலேட்டிலே அவன் மாணாக்கனான தேதிவரையப்பட்டுள்ளது. இக்குறிப்பிலே தனது படிப்பிற்கென்று தன்னாலேயே எழுதப்பட்டுள்ள ஓர் விஷய சூசிப்பத்திரம் இருக்கின்றது. அதைப் பின் வரைகின்றோம் :—

"1. மதவிசாரணை :—தர்மசாத்திரம் அல்லது வேதசுருதி பாகங்களாலும் பிரகிருதத்தாலும் நாம் அறிந்துகொள்ளக்கூடிய நீதிகள்".

"2. பூகோள சாஸ்திரம்".

"3. எனது தொழில் :— i. தாபரசாஸ்திரம் ; ii. ஔஷதகரணசாஸ்திரம் ; iii. பிணியிலக்கணம் ; iv. அங்காதிவியூகசாஸ்திரம் ; v. இரணவைத்தியம் ; vi. இரசாயனம்".

"4. தர்க்கம்".

"5. பாஷை முதலியன".

மற்றெல்லாச் சாத்திரங்களிலும் இரசாயனமொன்றே அவன் மனதிற் கிணங்கியது. மிகுந்த உற்சாகத்துடன் அவன் உழைத்ததெல்லாம் இரசாயனத்திற்கே. தத்துவவிசாரணைமேற்கொண்டு புகுந்த இவ்வாதிகாலங்களிலே கூட இரசாயனத்தில் தான் உழைப்பதற்கே கீர்த்திகிடைக்கவேண்டுமென்றெண்ணி எதிர்பார்த்தான். "புதிதான உலோகங்களைத் தேடிச்சென்று அம்மலைகள் மீது எவ்வளவு தரம் அலைந்து திரிந்திருக்கின்றேன்! அக்குன்றுகளின் மீது ஏறிக்களைப் படைந்தபோது எவ்வளவு காலம் ஆங்கண் வீற்றிருந்து 'கீர்த்திபெறுவமா? பெறேமா?' என்று நினைத்திருந்திருக்கின்றேன்!" என்று வெகுகாலத்திற்குப் பிறகு இவன் எழுதியிருக்கின்றான். அவன் புத்திக்கு அச்சார்பைக் கொடுக்க அத்தேசத்தின் அதிசயமான இயற்கையமைப்பொன்றேபோதும். தரையின் கீழே மறைந்துகிடந்த உலோகத்தொகுதி, அற்புத வழிவைத்தரும் விசாரணைகள் பல கோடிகளுக்கு இடமாகியது. சமுத்திரக்கரை

களோ, முடியாத விசாரணைக்கிடமாக, கற்பாறைகள் பலவேறு விதமாய் அடுக்கப்பட்டுக்கிடந்தன. சமுத்திரத்தாற் கரையே கொழித்துத்தள்ளப்பட்ட பல பொருள்கள், பிரகிருதியை வினவி யோசிக்கும் அவன் மனதிற்கு ஓயாது விசாரணை செய்ய இடந்தந்தன. ஜலக்கோரையின் சலாசயத்திலிருந்து குமிழியிட்டு வந்த வாயுவின் தன்மையை அறிய அவன் முதல் முதல் தானே பரீட்சைசெய்தானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் அவனுக்குப் பௌதிக பரீக்ஷணக் கருவிகளில்லை. தனது யுக்தியாலே, எவ்வளவு கருவிகள் சேகரித்துக்கொள்ளலாமோ அவ்வளவு சேர்த்துக்கொண்டான். தன் எஜமானன் உபயோகப்படுத்திய கிண்ணங்கள் வர்ணக் கலசங்கள், சமயலறையிலே வழங்கின பானைகள் சட்டிகள், தனது கையிலே கிடைத்த மற்றப் பாண்டங்களெல்லாம் பௌதிகவிசாரணைக்கு உபயோகிக்கப்பட்டன : அவனது யுக்தி சாமர்த்தியத்தாலே அவ்வாறு கருவிகளாகும்படி செய்யப்பட்டன. ஓர் சமயம் அவனுக்கு ஓர் வெகுமதி கிடைக்கவும் அது தனது அதிட்ட வசத்தாலே என்று நினைத்தான். ஓர் பிரஞ்சுக்கப்பல் கரைமீது மோதி உடைந்துபோய் விட்டது. அதிலிருந்து காப்பாற்றப்பட்ட ஓர் இரணவைத்தியன், டேவி தனக்கு மிகுந்த உதவிகள் செய்தானென்று கண்டு தன்னிடத்திருந்த வைத்தியக் கருவிகளைப் பெட்டியோடு அவனுக்குக்கொடுத்தான். மிகுந்த ஆவலுடன் கருவிகளைப் பரிசோதித்து, தனது தத்துவ விசாரணைகளில் இக்கருவிகளாலாகும் பயன் பலவுளவென மதிக்கத்தக்கனவென்று கண்டான். அக்கருவிகளில் முக்கியமானதொன்று, ஒரு நொடிப்பொழுதில், கூடியவரையில் செவ்வையாய் வேலைசெய்யும் ஓர் வாயுவாங்கியாய் மாற்றப்பட்டது. ஆயினும் டேவி அக்கருவிகளின் உண்மையான உபயோகங்களை அறிந்தானோ? (உபரிமடத்திற்கு தான் கொண்டுபோன தன் எஜமானன் வர்ணக்கலசங்களின் உபயோகங்களை எவ்வாறு அறியானோ அவ்வாறு) அறிந்திலனோ? இது நிற்க. முதல் முதல் இவன் பௌதிக சாஸ்திரத்திலே விசாரணைசெய்ய வாரம்பித்தபோது கருவிகளுக்கு தனது யுக்தியாலும் சாமர்த்தியத்தாலும் இவ்விதமாய் தியக்க முற்றதும், குறைகளை அவஸ்தைப்பட்டு நீக்கிக்கொள்ளவேண்டியிருந்ததும், பிறகு அவன் பௌதிக பரீக்ஷகன் என்று ஜயம்பெற்றதற்குக் காரணமாயின. "தொழிற் புகுந்த அப்போதே, பிறகு அவன் உபயோகித்த கருவிகளை அடையப்பெற்றிருந்தானேயாகில், கையாட்டத்தில் அவன் பெற்ற அதிசயகரமான இலாகவமென்ன, சாதனங்களைக் கற்பிக்கும் சக்தியென்ன, சாஸ்திரங்களின் நடவாவழிகடோறும் தத்துவ விசாரகன் தைரியமாய்ப் புகுந்தடிக்கும்போது அங்கங்கே கிளம்பும் ஆயிரந்தடைகளையும் வென்று பரிகரிக்கக்கூடிய ஆயுதங்களை சிருட்டிக்கும் சாமர்த்தியமென்ன—இவைகளை இவன் ஒருநாளும் அடைந்திரானென்று சொல்லலாம். இவ்விஷயத்தில் டேவி இணையற்று நிற்கின்றான். இவனுக்கு முன்னவதாரம் என்று சொல்லக்கூடிய தத்துவ விசாரகன் ஸ்கீல் என்பவனைப்போலவே, இவனும் மேலே கூறியவண்ணம் மனிதசகாயமில்லாது இயற்கையமைப்பிற்கு எதிராய் நின்று வினவியதாலே தான் முன்வந்தான் என்பதற்கு ஐயமில்லை. 'அவசியம் வேண்டுமென்ற வாசையே சிருட்டிக்கு மாதா' என்ற முதுமொழிக்கு வேறோர் வியக்தமான திருஷ்டாந்தம் வேண்டுமோ?".

மேலெடுத்துக் கூறியவண்ணமே, டேவி இரசாயன வித்தை கற்கப்புகுந்தபோது, உபாத்தியாயரு மில்லை. வழிகாட்டுவோனு மில்லை. தனக்கு உதவியாகப்பெற்ற கருவிகளோ வென்றால், மிகவும் அற்பமானவைகள். மாறுபாடுகளைச் சரிவரக்காட்டும் தன்மையன வல்ல. ஆயினும் பாலியமாயிருக்கும்போதே இவனுக்கு ஜேம்ஸ் வாட் என்ற கீர்த்திபெற்ற தத்துவவாதியின் குமாரனை கிருகரி வாட் என்பவருடைய சிநேகம் கிடைக்கும்படியான அதிஷ்டவசமிருந்தது. கிரிகரி வாட் என்பவர்



தனது தேகசவுக்கியார்த்தம் பென்சான்ஸ் நகரம் வந்து டேவி வீட்டில் வசிக்க விறங்கினார். அவருக்கு டேவியின் தாயை நன்றாய்த் தெரியும். அங்கே வசிக்கவாரம்பித்த கொஞ்சகாலத்திற்குள் அவர் டேவியின் சாமர்த்தியத்தைக் கண்டுகொண்டார். அவர்களுக்குள் சம்பாஷணையும் சிநேகமும் மிகுந்தன. வாட் என்பவரின் சாஸ்திரவித்வத்துவம் நமது பாலிய இரசாயன சாஸ்திரியின் படிப்பிற்கு ஓர் ஒழுங்கான மார்க்கத்தைக்காட்டியது. மேலும், அரசராற் பாலிக்கப்பெற்ற சாஸ்திர சங்கத்திற்கு பிற்காலம் தலைமைத்துவம்பெற்ற டேவிஸ் ஜில்பர்ட் என்பவருக்கும் தெய்வகதியாய் இவன் தெரிவிக்கப்பட்டான்.

எப்படியென்றால், ஓர் நாள் பையன் வீட்டு வாசற்கதவிலே சாய்ந்துகொண்டு நின்றான். அப்போது ஜில்பர்ட், அநேகதோழர்கள் பின்தொடர, அவ்வழியே சென்றார். ஒருவர், பௌதிக சாஸ்திரத்திற்கு மிகவும் ஆசைகொண்ட சிறுவன் டேவி இவனே என்று சுட்டிக்காட்டினார். உடனே ஜில்பர்ட் திரும்பிப்பார்த்து சிறுவனுடன் சம்பாஷணையிற் புகுந்தார். புகுந்தவர் ஓர் நொடிப்பொழுதில் சிறிய தலையில் பெரும்பண்டமுளதென்று கண்டு, சாமானியமல்லாத பேறும் சக்தியுமுள்ளானென்று தெளிந்து, தன்னுடைய புத்தகங்களின் உபயோகத்தையும் அவன் மேற்படிப்பிற்கு வேண்டிய மற்றெல்லா உதவிகளையும் கொடுத்துதவ மனமிரங்கினார். இதற்குச் சில காலம் பின்னிட்டு ஜில்பர்ட்டும் வாட்டும் கீர்த்திபெற்ற பெட்டோஸ் என்பவரிடத்தில் நமது டேவியைச் சேர்ப்பித்தார்கள்.

பெட்டோஸ் என்னும் வாதி, பலவகைப்பட்ட வாயுக்களின் பிணிகளைப்போக்கும் சக்தியை அறிந்துகொள்ள வென்று பிரிஸ்டல் நகரத்திலே வாயுசாஸ்திர வித்தியாசாலையொன்று ஸ்தாபித்திருந்தார். இப்போது பத்தொன்பது வயது நிறைந்த டேவி வைத்தியனாலை முழுவதும் ஒழுங்காய் கற்றுவர எடின்பர்க் நகரத்துக்கு போவதென்று சிலநாளாய் யோஜனை செய்துகொண்டிருந்தான். ஆயினும் அவனது சாமர்த்தியத்தின் பலவகை ருசுக்களாலும் முக்கியமாய் சூடு ஒளி இத்தத்துவங்களைப்பற்றிப் புதிதான ஓர் மதத்தை வெளியிட்டுக் காட்டி அவன் எழுதிய வியாசத்தாலும் மிகுந்த வாச்சரியத்தை யடைந்து, பெட்டோஸ் அவனை அப்புதிய வித்தியாசாலைக்கு மேல்விசாரணைக் கர்த்தனாக நியமித்தபோது, அவன் அந்த வேலையை ஒப்புக்கொண்டான். இனிமேல் நாமதேயமற்றிருக்குந் தன்மை நீங்கி நால்வரும் எடுத்துக்கூற தன் மனதிற்கிசைந்த மார்க்கத்திலே பிரவேசித்துவிட்டான் நமது சிறிய தத்துவவிசாரி. இனி இவனுக்குக் கஷ்ட நிஷ்டூரமில்லை என்று சொல்லலாம். ஆனால் ஒன்று திண்ணம். பொல்லா வறுமையிற்பட்டு அநாமதேயமாக விருந்த அஞ்ஞான்றேதான், இவனுக்கு பலமுள்ள ஆதரிப்போர் கடைக்கணிப்பையும் அவர்களால் தனக்கு செய்யப்பட்ட பதவிக்குப் பொருத்தத்தையும் கொடுத்த சம்பத்தெல்லாம் சேர்ந்தது. தனது தாதைவீட்டு வாசற்படியிலே நின்றுகொண்டிருந்தபோது ஜில்பர்ட் இவனைக் கவனித்தது தெய்வவசத்தாலான ஓர் அதிட்டமென்றே வைப்போம்! ஆயினும் இவன் தனது சுயமுயற்சியாலே சாஸ்திரார்த்த வித்தையிலே இவ்வளவு பாண்டித்திய மடையாமலிருந்தானேயாகில், ஜில்பர்ட் சம்பாஷித்து மனமிரங்கும்படி நேருமோ? வாய்த்த வித்தருணத்தாலே அகீர்த்தியென்று மிருட்டினின்று சூரியனைப்போல் வெளிவந்தான், "முன்னரே ஒருவன் தனது மனோபாவத்தை விருத்திசெய்ய முயன்றிடானாகில், தருணமென்பது தருணமாகுமோ?"—என்று ஓர் சரித்திரக்காரர் எழுதியிருக்கின்றார்.

பிரிஸ்டல் வித்தியாசாலையிலே டேவியாலும், அவனது மேற் பார்வையிலிருந்த மற்றவர்களாலும், நடத்தப்பட்ட தத்துவ விசாரணைகளால் பலமுக்கியமான விஷயங்கள் வெளியாயின. வெளிவந்த இரசாயன சமாசாரங்

களை யெல்லாம் ஒன்று சேரத் திரட்டி, அப்போதுதான் இருபத்தொன்று வயது நிரம்பிய டேவி, "வெடியுப்புடன் கலந்த பிராண வாயுவைப்பற்றியும் அவ்வாயுவைச் சுவாசம் வாங்கி விடுதலைப்பற்றியும் கூறுகின்ற பௌதிக தத்துவ விசாரணைகள்," என்று நாமமிட்டு ஓர் புத்தகத்தை வெளியிட்டான். இவ்வியாசத்திலே, சாதாரணமாய் 'நகைமூட்டு மாவி' * என்று சொல்லப்பட்ட இவ்வெடியுப்பு மிசிரவாயு உட்கொள்ளப்பட்டால் அத்தியாச்சரியமாய் வெறிமூட்டிச் சிரிக்கவைக்கும் என்ற வோர் தத்துவம் வெளியிடலாயிற்று. வெளிவந்த வச்சமாசாரம் பௌதிக சாஸ்திரிகள் பகுதிகடோறுஞ் சென்றலைந்து ஆச்சரியமென்னும் உணர்ச்சி அலைகளைப்பரவச் செய்து, ஓர் நொடிப்பொழுதில், "டேவி என்பான் ஒருவன் மிகவும்புத்திசாலி, தத்துவவிசாரகன்," என்றிறைந்து நாடெங்கும் கோஷித்தது. ஆகவே, சிலநாளில் டேவி அப்போதுதான் புதிதாய்த் தாபித்து அரசராற் பாலிக்கப்பட்ட வித்தியாசாலையில் பௌதிக சாஸ்திரியாக நியமிக்கப்பட்டான்

போதனை மார்க்கத்தில் பிரவேசித்து உபந்நியாசம் செய்ய வாரம்பித்தபோது, இவனுக்கு வயது இருபத்திரண்டுகூட வாகவில்லை. ஆயினும் இவனுக்கு இத்தொழிலிற் கிடைத்த வெற்றியைப்போல் அரியது வேறொன்றில்லை. அவன் பிரசிங்கித்த சாலையில் தினந்தோறும் இராஜதானியிலுள்ள குலமிக்கோரும் புத்திமான்களும் மற்றெல்லோரும் ஈண்டினர். பிறருக்கு அறிவிக்கவேண்டிய விஷயங்களை எல்லாம் விசித்திரகரமாயும் பிறர் மனதைக் கவரும்படியாயும் எடுத்துக் கூறிய படியால், அச்சபையின்கண் உள்ளோர் எல்லாம் மூச்செறிதலற்ற சிலாபிம்பங்கள் போல் கவனத்துடன் அசைவற்றிருந்தனர். இதற்குப்பின் ஓர் வருஷத்தில் கிருஷி வித்தியாசாலைக்கு பௌதிக போதனாசாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அங்கே தனது புதிய உத்தியோகநிலையில் பத்து அத்தியயனகாலங்களில் பிரசங்கித்து மிகுந்த கீர்த்தி பெற்றான். இந்தப் பிரசங்கங்கள் எல்லாம், 1313-ம் வருஷத்திலே கிருஷி வித்தியாசாலைக் கர்த்தர்களின் வேண்டுகோளின்படி ஒன்று சேர்த்து வெளியிடப்பட்டன.

1806-ம் வருஷத்திலே சாஸ்திர சங்கத்தார் முன்னே ஓர் பிரசங்கம் செய்யும்படி நேர்ந்தது. இவ்விதமாய் அவன் மேற்படி சங்கத்தார் முன்னிலையிலேயே, அடுத்தடுத்து அநேகவருஷங்கள் உபந்நியாசங்கள் செய்தான். அவனாற் கண்டுகொள்ளப்பட்ட அநேக அற்புதமான பௌதிக விஷயங்களெல்லாம் இந்த உபந்நியாசங்களிலே வெளியிடப்பட்டன. 1812-ம் வருஷத்திலே இராஜப் பிரதிநிதியாயிருந்த இளவரசரிடத்திலிருந்து 'நைட்டு' என்னும் பட்டப்பெயரைப் பெற்றான். இவ்விளவரசரிடத்திலிருந்து முதல் முதல் பட்டம் பெற்றது இவனே. இரண்டுநாள் கழித்தபிறகு கொஞ்சம் ஐசுவரியமுள்ள ஓர் குலமகளை விவாகஞ்செய்து கொண்டான். 'சர் ஹம்பிரி டேவியின் சேஷங்கள்' என்று பெயரிடப்பட்டு சில வருஷங்களுக்கு முன்னே அவன் தம்பியால் வெளியிடப்பட்ட ஓர் புத்தகத்திலும், அப்பிராதிருநேசமுள்ள கையாலேயே 1839-ம் வருஷத்தில் வெளிவந்த மேற்படியார் சரித்திரத்திலும், டேவியின் குணாதிசயங்களை நாம் சவிஸ்தாரமாய்க் கண்டுகொள்ளலாம். இப்புத்தகங்களிலே அவனது பந்து மித்திரர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் எடுத்து வரையப்பட்டுள்ளன. தன்னால் பாலிக்கப்படவேண்டியவனை தனது இளையசகோதரனிடத்தே தாதையைப்போலன்புமிகுந்த பிராதிருநேசத்தைக் காட்டினான். தனது சிறிய சகோதரிகளிடத்தே மிகவும் பிரியத்துடன் நன்னயத்தோடு தாழ்ந்து அவர்கள் வயதே கொண்ட சிறுமியர்கள் எழுதுவதுபோலக் கடிதங்கள் வரைந்துளான். தனக்குப்பிறகு பாரியாய் வந்த விவேகமுள்ள அப்பிரீஸ் என்பவளுக்குக் காதலன் பாவமாக எழுதிய கடிதங்கள் மிகுந்த

* Laughing gas.



பிரியத்தைக் காட்டுவதோடு ஒழுக்கத்தையும் கம்பீரத்துவத்தையும் வெளியிட்டன. ஆயினு மிக்கடிதங்களிலே ஓர் அதிசயம்! காதலன் காதலிக்கு எழுதுங் கடிதங்கள் ஆசை யொன்றை வெளியிட்டுப் பலவித வுணர்ச்சிகளையும் மனோவிகாரங்களையும் தெரிவிக்குமே யல்லாது இவ்வாறுண்டோ! கேளீர்! இக்கடிதங்களின் விஷயங்கள் வித்தியா சம்பந்தமுள்ள சிறு சம்பாஷணைகள், பூகோள சாஸ்திரம் மானத சாஸ்திரம் முதலான சாஸ்திரங்களைப் பற்றிய வார்த்தைகள்!

இதுநிற்க. 1813-ம் வருஷத்திலே, இவன் பிரஞ்சு சாஸ்திர வித்யாசாலைக்கு இலிகித மூலமாய்ச் சம்பாஷிக்கும் ஓர் மெம்பராக நியமிக்கப்பட்டான். 1818-ம் வருஷத்தில் "பாரனெட்டு" (Baronet) என்னும் பிரபுப் பட்டத்தை யடையப்பெற்றான். 1820-ம் வருஷம், கீர்த்திபெற்ற வாட் என்பவரிறந்துவிடவும், பாரிஸ் நகரத்திலே இருக்கின்ற சாஸ்திரார்த்த இராஜகலாசாலைக்கு அயற்றேசத்துத் தோழனாக 'அஸ்ஸோஸியேட்' என்று நாமம் வகித்தான். இங்கிலாந்திலோ இராஜவித்தியாசாலைக்குக் கொஞ்ச காலமாகக் காரியதரிசியாகவிருந்து, பிறகு 1820-ம் வருஷத்திலே சர் ஜோஸப் பேங்ஸ் என்பவர் இறந்துவிடவும், தேசத்திலுள்ளாரெல்லாம் ஒருமிக்க ஓரே வார்த்தையாய் வேண்டிக்கொண்டதின்மேல், மேற்படி வித்யாசாலைக்குத் தலைமைத்துவம் பெற்றான். இவ்வுத்தியோகத்தை 1827-ம் வருஷம் தனது உடம்பு அசௌகரியத்தாலே வேலையையெல்லாம் விட்டுப்போகும்படி நேர்ந்தவாயில் வகுத்திருந்தான். தலைமைத்துவத்தை இவன்விடவும் இவனது தோழரும் முதல் முதல் ஆதரித்தோருமான டேவீஸ் ஜில்பார்ட்டு என்பவர் பின்வந்து, உத்தியோகத்தை வகித்தார். என்ன வாச்சரியம்! டேவியின் வீட்டு வாசற்படியிலே முப்பது வருஷங்களுக்கு முன்னே இவர்கள் சந்தித்தபோது, ஒருவர் பின் ஒருவராக இவ்விதமாக ஆதரித்த பெரியோன் பின்னாகவும் ஆதரிக்கப்பட்ட சிறியோன் முன்னாகவும் இங்கிலாந்து தேசத்திற்கெல்லாம் ஓர் சிகைமணிபோல் விளங்கும் இச்சாஸ்திரார்த்த வித்தியாசாலைக்குத் தலைமைத்துவம் பெறுவரென்று யாரேனும் நினைத்துளரோ? நினைப்பதற்குங் காரணமுளதோ?

இவ்விராஜ வித்தியாசாலையினர் முன்னாக டேவி 1801-ம் வருஷத்திலே முதல் முதல் வியாசம் படித்தான். இவ்வியாசத்திலே மின்சாரத்தின் வல்லமையைப்பற்றி இப்போது சரியென்று சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறதும் அப்போது புதியதுமான வோர் மதத்தை முதன் முதல் வெளியிட்டான். முன்னொரு காலத்தில் இத்தாலி தேசத்தில் கால்வானி என்னும் ஓர் பண்டிதன் மின்சாரமென்னும் சக்தியை ஒருவாறு கண்டிருந்தான். மிருகங்களின் தசைநாரின் பக்கத்திலே இரண்டு பிரத்தியேகமான உலோகங்கள் ஒன்றோடொன்று பொருந்தும்படி கொண்டுவரப்பட்டால் அப்போது மின்சாரம் உண்டாவதென்று கண்டு அச்சக்திக்குத் தேகத்திலிருந்தூறும் மின்சாரமென்றும் பெயரிட்டான். அத்தேசத்திலேயே பிறகு வால்ட்டர் என்பவனும் அவ்விதமாயே அபிப்பிராயப்பட்டதாகத் தெரியவருகிறது. இம்மதம் பிழையென்று கூறுவதே டேவியின் விஷயம். இப்பிழையைக்காட்ட டேவி என்பான், அவ்விதமாய் மின்சாரம் பிறக்க அவ்விருவிலோகங்களும் சில விரசாயன மாறுபாடுகளை யடைகின்றனவென்றும், மின்சாரம் தசைநாரிலிருந்து பிறக்கவில்லையென்றும் பலவிதமான யுக்திவாதங்களாலும் பௌதிக விசாரணைகளாலும் காட்டினான். ஏன் இரண்டு பிரத்தேயகமான உலோகங்கள்? ஓரே உலோகத்தின் இரண்டு பாளங்கள் போதும்! இவ்விரண்டு பாளங்களுக்குமிடையே தசைநாரென்ன? மற்றேதேனும் இரசம்போதும்? இவ்விரசத்தின் செய்கையாலே அவ்விருபாளங்களினிடத்து இரசாயன மாறுபாடுகள் ஏற்பட்டாற்போதும். அப்போது மின்சாரம் பிறக்கின்றது என்று எடுத்துக் கூறினான்.

மேலும் 1806-ம் வருஷத்திலே "பேக்கிரியன்" என்று அடைமொழிபெற்ற விப்பிரசங்கங்களிலே இவ்விஷயத்தைப்பற்றி பல விசாரணைகள் செய்துகாட்டி தனது மதத்தைத் தாபிக்கலானான். இம்மின்சார சக்தியை உள்ளேபுகச் செலுத்துவதால் பல விரசாயனப் பண்டங்கள் தம்மையாகச் செய்த மூல வஸ்துக்களான தாதுக்களாய்ப் பிரிக்கப் படலாமென்றும், பல மூலதாதுக்கள் ஒன்று சேர்ந்து இரசாயனப் பண்டங்களை ஆக்கலாமென்றுங்காட்டி சாஸ்திர வித்தையில் ஊக்கமுள்ளாரெல்லாரையும் இறும்பூதுறச்செய்து தனது மதத்தைத்தாபித்தான். இவ்விசாரணைகளிலிருந்து பிறந்த முடிவு என்னவெனின் தாதுக்களொன்றோடொன்று இயையவிரும்புஞ் சக்தியான இரசாயன விணக்கம் என்னும் சக்தியும் மின்சாரமென்னுஞ் சக்தியும் அநேகமாய் ஒன்றே என்பதாம். ஆச்சரியம் ! இங்ஙனே சிருட்டிக்கப்பெற்றது ஓர் புதிய சாஸ்திரம். அஃது ஆம்பரிய பௌதிகமென்பது. இச்சாத்திரந்தான் இரசாயன மாறுபாடுகளுண்டாகும்போதெல்லாம் மின்சாரத்தின் தொழிலுளதென்று கூறும். இது நிற்க. இத்தகையதான ஓர் புது மதத்தை உள்ளடக்கி நின்ற இவ்வியாசங்கள் எல்லாம் பிரஞ்சு கலாசாலைக்குச் சென்றது. சென்று நமது டேவிக்கு ஓர் முடியைச் சூட்டியது ! கலாசாலையார் அதன் முதல் சம்மானத்தை டேவிக்குக்கொடுப்பதென்று தீர்மானித்தனர். கேளீர் ! இதில் ஓர் அதியாச்சரியம் ! இவ்விதமாய் அக்கலாசாலை டேவியைச் சம்மானிக்கக் கருதியது அக்கலாசாலைக்கு அழியாத கீர்த்தியை யுண்டாக்கியது. அப்போது இங்கிலாந்தும் பிரான்சும் உருவிய கத்தியோடு நின்றன. ஒன்றிற்கொன்று பொறாமையும் கறுப்பும் மிகுதி. அப்போது அவ்விரண்டு இராஜ்ஜியங்களுக்கும் நடந்துவந்த யுத்தத்தால் உண்டான குரோதத்தையும் தீராவழக்கையும் பாராட்டாது இவ்விதமாய் பிரஞ்சுக்காரர் டேவியின் புத்தி நுட்பத்தைப்புகழ்ந்து தத்துவ விசாரணைகளை எடுத்துக்கொண்டாடினார்கள்.

1807-ம் வருஷத்தில் நடந்த "பேக்ஷரியன்" பிரசங்கங்கள், முன்சென்ற வருஷத்தைப்போலவே, விரும்பத்தக்கனவும் 'அறிவைக் கொடுக்கத்தக்கனவும் ஆகப்பொருந்தின. "காரங்கள்" என்று பெயர் பூண்டனவாய் சில பண்டங்கள் இரசாயன வித்தையிலே சொல்லப்படுகின்றன. இவைகளில் சாம்பருப்பும், லவணசாரமும் முக்கியமானவை. இச்சரக்குகளைத் தாதுக்களாகப் பிரிக்கவேண்டுமென்று இரசாயன சாஸ்திரிகள் பலர் அநேக காலங்களில் தமது யுக்தியாலும் புத்தியாலும் முயன்று பார்த்தும் சரிப்படவில்லை. காரத்தின் குணங்களோடு கூடினதாய் தாதுக்களாய்ப் பிரிக்கப்பட்டு விட்டதுமான பண்டம் நவச்சாரவாயுவென்பதொன்றே. ஆயினு மிக்காரம் ஆவிரூபமுள்ளதாகையாலே, இதற்கு நவச்சாரவாயு என்று பெயர். இவ்வாயுக் காரத்தை எளிதாகப் பிரித்து, இரசவாதிகள் இக்காரம் ஜலவாயு உப்புவாயு ஆகிய தாதுக்களாலே இயன்ற ஓர் பிண்டமென்று கண்டார்கள். இ[illegible]லே கெட்டிக்காரங்களுக்கெல்லாம் ஒருக்கால் உப்புவாயுவே பிரதானமூலமாகுமோ என்றவோர் ஐயம் பலர் மனதிலே நின்றுலாவியது. இவ்வையத்தைத் தீர்ப்பான் புகுந்து, டேவி மிகுந்த நம்பிக்கையோடு தனது மின்சார சக்திக்குப் பண்டங்களைத் தாதுக்களாகப் பிரிக்கும் சக்தி மிகுதியுளதாகையாலே, சில தத்துவ விசாரணைகளைச் செய்ய வாரம்பித்தான். இவன் செய்த தத்துவ விசாரணைகள் இன்னவின்ன வென்று எடுத்துக்காட்டில், பௌதிக பரீக்ஷைகள் செய்யப்புகும் பெரியோருக்கு மிகவும் விருப்பமுளதாமாகையால் இங்கே சற்று விரித்துக் கூறுவாம்.

ஏதேனுமொரு பண்டத்திலே மின்சாரத்தைப் புகட்டினால், அச்சக்தியாலே அப்பண்டம் தாதுக்களாகப் பிரியும். அநேகமாய் எல்லாப் பண்டங்களிடத்திலேயும் பிராண



வாயு விருக்கின்றபடியாலே, மின்சாரத்தால் மாறுபாடுகளுற்ற விப்பண்டத்திலும் பிராணவாயு உளதென்று வைப்போம். பிராணவாயு உண்டானால் எப்போதும் அது மின்சார வெந்திரத்தின் ஆண் சக்திக்கம்பிவழியேதான் வருகிறதென்றும், ஜலவாயுமுதலான தீக்கொளக்கூடிய தாதுக்களுளதாமாகில் அது பெண் சக்திக்கம்பிவழியேதான் வருமென்றும் முன்னரே இவன் கண்டிருந்தான். இவ்வறிவை ஆதாரமாகக்கொண்டு, ஓர்கெட்டிக்காரத்தைத் தனது விசாரணைகளுக்கு உள்ளாக்கினான். காரத்தைத் தண்ணியிற் கரைத்து, அக்காரங்கள் கலந்த நீரில் மின்சாரசக்திகளைப் புகட்டினான். மின்சாரம் காரத்தின் வழி செல்லாது ஜலத்தை மாத்திரம் பிரித்து, வழக்கம்போலவே, பிராணவாயுவை ஆண் சக்திக்கம்பிவழியே செலுத்தி ஜலவாயுவைப் பெண் சக்திக்கம்பிவழியே வெளிப்படுத்தியது. ஆயினும் டேவி மனந்தளர்வானோ ? தண்ணியில் கரைக்காது வெறுங்காரத்திலேயே சக்தியைப் பிரவர்த்திப்பது என்று தீர்மானித்தான். அதற்கு, உஷ்ணப்பட்டு இளகி நிற்கும் தன்மையிலே கொஞ்சம் சாம்பருப்பை வைத்தான். அப்படி வைப்பது எளிதோ ? அப்படி வைக்கவொட்டாது வந்த விடையூறுகளையெல்லாம் பல யுக்திகளாலே மாற்றிக்கொண்டு மிகுந்த கவனத்தோடு, அவ்விளகும் சாம்பருபபின் வழியே மின்சாரத்தைப் போக்கினான். உடனே சாம்பருப்பு தன்னிருதாதுக்களாகப் பிரிய வாரம்பித்தது. ஆண் சக்திக்கம்பிவழியே பிராணவாயுப் புரப்பட்டது. மற்றொரு சாருள்ள பெண் சக்திக்கம்பிவழியே ஒன்றும் வாராது, அதன் பக்கத்திலே மாத்திரம் உருண்டை உருண்டையாக சில உலோகத்துகள் உண்டாயின. வெகுநாள் வரையிலும் பல இராசயன சாஸ்திரிகளும் அறிய முடியாதபடி நின்ற விஷயம் இப்போது வெளியாகியது. காரங்களின் மூலாதாரப்பொருள் ஜலவாயுவல்ல ! ஏதேனும் ஒரு உலோகமே ! சாம்பருப்பின் மூலாதாரப் பொருளாய்த் தான் பெற்ற உலோகம் என்ன உலோகம் என்று காண்பதே டேவிக்கு அடுத்தபடி கவலையாகிறது. அவ்வாறு உண்டான உலோகத்துகள் வாயுசம்பந்தப்பட்டவுடனே மறுபடியும் பிராணவாயுவுடன் கலந்து யதாப்பிரகாரம் காரமாகத் தலைப்பட்டது. அவ்வுலோகத்திற்குப்பிராணவாயுவுக்கு மிருந்த பொருத்தத்தாலே முதன்முதலில் அவ்வுலோகமென்ன வுலோகமென்று காணுவதே பெரும் பிரயாசை யாகியது. பிராண வாயுவுடன் மிசிரமாவதற்கு முன் பரீக்ஷித்தாலல்லவோ என்ன வுலோகமென்று காணலாம். டேவி இதற்கென்ன செய்வதென்று யோசித்தான். உலோகத்தைக் கண்ணுலுற்றுப்பார்க்கவேண்டும். உலோகமும் பிராண வாயுவுடன் கலக்காதிருக்கவேண்டும். இதற்கு ஓர் யுக்தி செய்தான். இரச ரூபமான ஓர் உலோகம் நிலக்கீலமென்று பெயர் கொண்டு உருகிய மெழுகுபோ லிருக்கின்றது. அதைக் கொண்டுவந்து பெண்சக்திக் கம்பியின் பக்கத்தே உண்டான உலோகத்தின்மீது கொஞ்சம் வார்த்தான். உடனே நிலக்கீலம் உலோகவுருளைகளை மூடிக்கொண்டு பிராணவாயுவின் சம்யோகத்தைத் தடுத்தது. ஆயினும் நிலக்கீலம் பளிங்குபோன் றிருந்தபடியாலே, தான் மூடிக்கொண்டிருந்த உலோகத்தை நன்றாய் புலப்படும்படி காட்டியது. அவ்வுலோகமே சாம்பருப்புச் சாரமென்று காணப்பட்டது.

இதுபோக, நமது தத்துவ விசாரகன் மற்றோர் பெரும் விசாரணையிற் புகுந்தான். அதன் பயன் இவ்வளவவ்வளவென்று சொல்லப்போதாது. இப்போது "இரக்ஷணை விளக்கு" என்று சொல்லுந் தீபம் இவனாலேதான் செய்யப்பட்டது. நிலக்கரிக் கனிகளிலே, அநேக விடங்களிலே எளிதில் தீக்கொள்ளக்கூடிய ஒருவகை யாவி யுண்டாகின்றது. அந்நிலக்கரிவாயு தீப்பிடிக்கும்போது பயங்கரமாய் வெ

டிக்கின்றது. இதைப்பற்றி நமது டேவி யோசித்துப் பார்த்து பல வரிசைப் பட்ட பரீக்ஷைகள் செய்தான். இரசாயன சாஸ்திரிகள் சொல்லும் ஜலவாயுவையே முக்கியமான தாதுவாகக்கொண்ட விவ்வபாயகரமான ஆவி, கொஞ்சம் கரியமலவாயு உப்புவாயுக்களோடு சேர்ந்துவிட்டதானால், அவ்வளவு பயங்கரமாய் வெடிப்பதில்லை யென்றும், வெடிக்கும் குணமே மட்டுப்படுகிற தென்றும் கண்டான். அப்படியே வெடித்திட்டாலும், வெடித்திட்ட வாவி ஓர் அங்குலத்தின் எழிலொன்று பிரமாணம் கொண்ட துவாரங்கள் வழியே செல்லாதென்றும் கண்டான். தான் அறிந்து கொண்ட விவ்விரு தத்துவங்களை யாதாரமாகக்கொண்டு மேலும் பலவகையாய் நினைத்து நமக்கு இரக்ஷணை விளக்கைத் தந்தான். இவ்விரக்ஷணை விளக்கின் அமைப்பு பின்வருமாறு. கீழே எண்ணெய்வார்க்கப்பெற்ற ஓர் பித்தளைப்பாத்திரத்தின் வாயினின்றும் முறுக்கிய திரி நின்றெறியும் அச்சுடரை யுட்கொண்டு குடைந்துவிட்ட தம்பத்தைப்போல் வட்டமாய்ச் சுற்றிக்கொண்டு சல்லடைக் கண்கள் போல் நுண்ணிய துவாரங்களைக் கொண்டவொரு லோகத்தகடு பித்தளைப்பாத்திரத்தின் மேல் பொருத்தப்பட்டு நிற்கும். இவ்வுருண்ட சல்லடைக்கண்ணுலோகத் தகட்டினுச்சியில் ஓர் புகைபோக்கி தவிர மற்றெல்லாம் மூடப்பட்டிருக்கும். தகட்டின் சல்லடைக்கண்கள் வழியே காற்று உட்புகும் ஆயினும் உள்ளெரியும் சுடரோ அக்கண்கள்வழியே வெளியே ரவேசிக்கமுடியாது. ஆதலால் உள்ளேசுடர் ுணைந்து போகாது நின்றெரியும். வெளியிந்து உள்ளே பிரவேசித்த நிலக்கரிவாயு கூடள்ளே விளக்கெரிவதாலுண்டாகும் கரிமலாயுவுடனும் உப்புவாயுவுடனும் கலந்து வெடிக்காது அதிகமாய்ப் பிரகாசித்து விளங்கும் தகட்டினுள்ளெல்லா மென்றாலும் ஓரே பசுமையான வெளிச்சமாய்ப் பிரகாசிக்கட்டும். அதனாற் றீங்கென்னை? சுரங்கத்தின்கண் வேலைசெய்வோர்களுக்கு அதிக வெளிச்சமுண்டாகுமே யன்றி, அவ்வாறு உளளே யுண்டான வெளிச்சம் வெளியே பிரவேசித்து நிலக்கரிவாயுவுடன் கலந்து வெடித்து ஜனங்களுக்குத் தீங்கைச் செய்யுமோ? கனிவெட்டுவோருக்கு அதிக வெளிச்சமே யுண்டாவதால் அது பழம் நழுவிப் பாலிலே விழுந்ததுபோலாயிற்று! இவ்வாச்சரியமான காவல் விளக்கைக் கொண்டு கனிவெட்டுவோர் பயமின்றிச் சுரங்கத்தின் உள்ளூடு சென்று வேலைசெய்வர். முன்னால் எவ்விடங்களில் உயிர்ச்சேதங்கூடவுண்டாகுமோ அவ்விடங்களில் சற்றேனும் பீதியில்லாமல் மிகுந்து பிரகாசிக்கின்ற விளக்கோடு கனி வெட்டுவோர் திரிகின்றனர். சுரங்கங்களில் முன்னால் ஜனங்கள் கணக்கிறந்து படிந்தனர். இரக்ஷணை விளக்கு எவ்வளவு எளிய ஜனங்களை இப்போது காக்கின்றது? கனிகளின் உள்ளிடங்கள்கூட இப்போது வெட்டப்படுகின்றன. இவ்விளக்கின் உதவி யில்லையேல், கனிகள் அவ்வளவு தூரம் வெட்டப்பட மாட்டா. மேலும பலபல வெடுத்துக் கூறுவதென்னை? 1817-ம் வருஷத்திலே, நிலக்கரிக் கனிகள் அதிகமாய் வளரும் வடமாகாணங்களி லுள்ளார் சர் ஹம்பிரி டேவியை தங்கள் அதிதியாக வழைத்து ஓர் பெரும் விருந்து செய்தனர். இரண்டாயிரம் பொன் விலைகொண்ட தாலத்திலே உண்டிகள் வைத்து, தாங்கள் செய்த விளக்கின் மகிமையைக் கண்டு ஆனந்திக்கும் எம்மோர் ஞாபகச்சின்னமாகுக இஃதென்று நீட்டி, கைப்பற்றியருளவேண்டுமென்று வேண்டினர்.

(இன்னும் வரும்.)

டி. இராஜம் ஐயங்கார் பி. ஏ.

---

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணு.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 11.] 1902ளு நவம்பர், டிசம்பர். [இலக்கம் 7-8.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As. : Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE : YEARLY RS. 4 ; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS. ; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers *may not* withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 8 அணு.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 6 அணு.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணுவும், 6-மாச சந்தாவில் 4 அணுவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## IN THE SUPREME COURT OF THE KING OF KINGS.

An Ancient Appeal on the Original Suit for the Recovery of the Father's Estate.

பராபரன்கோர்ட்டில்

# ஓர் புராதனவழக்கு.

## பிதிரார்ஜ்ஜித சொத்துக்குப் பாத்தியம்.

---

திட்டகுடி லோகல்பண்டு ஸ்கூல் ஹெட் மாஸ்டர் நடராஜபிள்ளை
நமக்குப் பின்வருமாறு எழுதுகிறார் :—

" ஐயா,—சிகழும் நவம்பர்மீ கூடிய திட்டக்குடி உபாத்திமார்கள் சங்கத்து மீட்டிங்கு, வெகு விமரிசையாக நடந்தேறியது. திட்டக்குடி டெப்டி தாசில்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர், ரெவினியூ இன்ஸ்பெக்டர், ஸால்ட் ஸப் இன்ஸ்பெக்டர், யூனியன் சேர்மென்,—மேற்படியார்கள் ஆபீசின் கிளார்க்குகள், திட்டக்குடியின் இன்னுமநேகமான இதர கனவான்கள் வந்திருந்தார்கள். திட்டக்குடி ஸப் ரிஜிஸ்திரார் ம-ா-ா-ஸ்ரீ, வி. எஸ். விஸ்வநாதய்யர், பி. ஏ., சேர்மென் ஆக இருந்து மீட்டிங்கை நடத்தினார். அதில், ஊர் கிராம முனிஸீபினால் ஒரு பிரியாது படிக்கப்பட்டது. மீட்டிங் சேர்மென் சொன்னபடி, அதை விவேகசிந்தாமணியில், பிரசுரம்செய்யும்படியாக, இத்துடன் எழுதி அனுப்பி இருக்கிறேன். விவேகசிந்தாமணியைப் படிப்பவர்களில், யாராவது மஹான்கள், அந்தப் பிரியாதை அங்கீகரித்து, அதைப் பிரசுரமூலியமாய், விசாரிக்கத் தொடங்கி, ஜெட்ஜ்மெண்டு கொடுக்கவேணுமாய், ஷை மீட்டிங்கை நடத்திய சேர்மெனால் கேட்டுக் கொள்ளப்படுகிறது."

### பிரியாது.

சகல உலகங்களுக்கும், ஞாயாதிபதி கர்த்தர்களாகிய, தர்மதுரை அவர்கள் சமூகத்திற்கு :—

காயாபுரியைச் சேர்ந்த, சிரமங்கலம் தாலூகா, மண்டல மாகாணத்தைச் சேர்ந்த கருவூரிலிருக்கும், பரமானந்தய்யர் குமாரன், சுக்கில ஜாதி, ஸத்தியமதம், ஒரே வயதுள்ள ஆத்மநாதன் ... ... ... வாதி.

ஷை மண்டல மாகாணத்தைச் சேர்ந்த, கோஸமாபுரத்திலிருக்கும் காமினாதன் 1, மூல வெங்கண ஆங்காரச் சேருகாரன் 2, ஆதம்பட்டு பிச்சியாப்பிள்ளை 3, கவலப்பட்டு ஸந்தேகமுதலியார் 4, நாவல்ப்பட்டு அரிசிவபெருமாபிள்ளை 5, கண்ணனூர் பார்வமுதலியார் 6, செவியத்தூர் கேழ்விராயப்பிள்ளை 7, மூக்கானந்தய்யர் 8, பக்கபாக்கம் ஸ்பரிசயாப்பிள்ளை 9 ... பிரதிவாதிகள்.

மேற்படி வாதி எழுதிக்கொண்ட பிரியாது, என்னவென்றால், எனது பூர்வீக அனுபோகமான ஸ்வயம்பிரகாசக் கணவாயி-ஞானச்செய்-தழைநிலம்காணி 1. இந்த ஒரு காணி நிலமும், எனது பார்வைத் தாழ்வினால், அக்ஞானகுளமென்று தரிசு ஆகக்கிடந்தது. அதை நான் முக்தி-விவசாயம் செய்யவேணுமென்று முயற்சிசெய்த காலத்தில், மேல்கண்ட (9) ஒன்பது பேர்களும், ஒருவன் பின்னாக ஒருவன் கூட்டம் கூடிக்கொண்டு வந்து, எனது விவேக ஏரை ஓட்டவொட்டாமல் தடுத்து, மனக் கொழுவை முறித்து, புத்திக் கலப்பையை ஒடித்து, சித்த



மேழியைப் பிளந்து, என்னையும் இன்னாரினியார் என்று தோணவொட்டாமல், அவிவேகத் தடியால் அடித்தார்கள். அதற்கு சாக்ஷிகள் சதுர்விவேகநகர் கல்வியாப்பிள்ளை 1, சாதகத்தூர் தத்துவ முதலியார் 2, ஓமாந்தூர் ப்ரணவமூர்த்தியாப்பிள்ளை 3, உச்சிவிவேகந்தாள்வீட்டு ஸோமசுந்தரம்பிள்ளை 4, உள்ளம்பாக்கம் ஸ்பர்ஸியாப்பிள்ளை 5, இந்த ஐந்து பேர்வழிகளையும் வரவழைத்து விசாரணைசெய்து, எனது பூர்வீக அனுபோகமான ஸ்வயம்பிரகாச-க்கணவாயி-ஞானச்செய்-தழைநிலம் காணி 1.—இந்த ஒரு காணி நிலமும் எனக்குக் கிடைக்கும்படி மன்றாடிப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | | |
|---|---|---|
| அந்த வருஷம் | } | வாதி வக்கீல் :—நாதகர்த்தன். |
| வந்தமாஸம் - இந்தத்தேதி. | } | பிரதிவாதி வக்கீல் :—தத்து - பித்து. |

---

[இப்பிரியாதை நாம் மேறபோட்டுக் கொண்டு விசாரிப்பது சாத்தியமின்மையால் இதை இவ்விவேகசிந்தாமணி யேற்படுவதற்குக் காரணபூதமாயிருந்த மாயாண்டிவச மனுப்பிவிட்டோம். அவர் அந்தத் தம்தோழர் கிராமாண்டியிடமிருந்து வந்ததாக அங்கீகரித்து நமக்கு அவசரமாயனுப்பிய விஷயங்களை அப்படியே கீழே பிரசுரிக்கிறோம். ஷை பிரியாதுக்கு கட்டவேண்டிய கட்டணத்துக்காக வாதி தன் உடல் பொருளாவி மூன்றையும் ஒருங்கே தத்தம் செய்யவேண்டுமாம். இப்பிரியாது கிரமப்படியில்லையென்று 'பத்தாந் திருமுறை'ப்படி அதை யொழுங்கு படுத்திப் 'பிரார்த்தனை' கூட்டி 'குருசேவை' யென்னும் கோர்ட்டு முத்திரைபதித்து 'அனுபவ உறுதி' என்னும் மேல் தீர்ப்புப் பெற்று 'ஆநந்தவாழ்த்து' என்னும் நிறைவேற்றும்படியும் கட்டி வந்த பத்திரத்தை அந்தனருளால் அப்படியே பிரசுரிக்கிறோம். மற்ற விவரம் பின் வருவனவால் தெரியவரும்-வி-சி-ப-ர்.]

அந்த வருஷம் வந்தமாசம் இந்தத்தேதியில் பிரியாது கொடுத்த வாதியாகிய நம்சொந்த ஆத்மநாதனுக்கு சிதம்பரவாசி சச்சிதாநந்தப்பிள்ளை கொடுத்த பாரோலை :—

" ஆனந்தத்தாயாரை அறிவாயே யாமானால்
இப்பாரோலை கொண்டு அவளைப் பணிந்திடு நீ
நீ பரதேசியாகிப் பக்தியுடன் பணிந்தை யானால்
உன் பக்திக்குத் தக்கபடி படியளிப்பாள் நிச்சயம்போ !"

உள்ளடக்கம்—1 - திருமுகம்.

---

### ஓம். சத்குருவே நம:

ஆனந்தத்தாயாரே ஆண்டிகளுக் கடைக்கலமே
அருமையா யுன்வயிற்றில் அவதரித்த குழந்தையவன்
சச்சிதாநந்தம் சரணம் சரணமம்மா.

" நீ விண்டதெதுவானாலும் வெட்டவெளியானாலும்
" குடியிருந்த வீடதனைப் பாழதனா யாக்காதே
" பிச்சைக்குப்பைக்காரன் எச்சில்தின்னி யென்றிராமல்
" எல்லாரையுங் கவனித்து எவரெவர்க்கு முரியதை யீய்."—
என்றுசொல்லி நீயெனக்கு எடுத்துரைத்த வார்த்தையது
சிறிதும் தவறாமல் சிறுபிழையும் செய்யாமல்
ஆதாவாயுன் வார்த்தைப்படி யழிவுறாமல் நான்நடந்தேன்.

இப்படி நானிருந்து நடந்துவருங் காலையிலே
உன்னுபதேசந் தான்பலித்து உச்சத்திருக்கையிலே
அனுபவமுங்கைகூடி யாநந்தித்திருக்கையிலே,
திட்டக்குடியனும் தீதிலாருள்வசனும்
நடராஜா பிள்ளையாம் நாட்டிலுள்ள வித்தகனும்
சபை யொன்று கூட்டுவித்து சதிராயதைநடத்தி
விசுவநாத ஐயரவர் விமரிசையாய்த் தலையிருக்க
ஊரிலுள்ள உத்தமர்கள் உத்தியோகர் பலபேர்கள்
பள்ளியிற் படிக்கும் பாலர் பலபேர்களுக்கு
வித்தையது போதிக்கும் வேதியர் குழாநடுவில்
கூட்டமது கூடிக் குலாவி மகிழ்ந்திருக்க
ஊருக்கதிகாரி ஊனர்க்கடியனவன்
'பிரியாது' ஒன்றெழுதிவந்து படித்தான் சபைமுன்னே :
அற்புதப்பிரியாததனை அடியிலே வரைந்துள்ளேன் :
பராபரன் தீர்ப்பதனை பாரித்துப் பெறவேண்டும்.—
என்றுசொல்லி யென்னப்பன் நடராஜன் பிள்ளையவன்
பாரோலை யெழுதிவிட்டுப் பரிந்து நின்றான் என்முன்னே.
சபாநாயகர் உத்தரவால் சதிராயவன் எழுதிவிட்டான்.
எழுதிவிட்ட ஓலைதனை ஏந்திநான் படிக்குமுன்னே
உன்கருணையாலே உளவறிந்து பதில் வரைந்தேன்.
பராபரன் செய்தீர்ப்பைப் பாரிலுள்ளோரறியவெண்ணி
என்னென்னமாய மியற்றுவையோ நானறியேன்
என்னென்ன செய்கினுநீ ஏதேதியற்றிடினும்
உன்பிள்ளை யுன்னடிமை யுனக்கோ ரர்ப்பணம்காண்.
மாயாண்டிப்பிள்ளைக்கு மாதாவா முன்றனக்கு
ஏழைபரதேசிகளை இரக்ஷித்தல் கடனன்றோ !
ஆத்மநாதனும் ஆடவன் பிரியாது தனை
ஆணவமலம்போக்கி ஆதரவாய்ச்சீர்திருத்தி
ஆக்ஷேபவிக்ஷேபங்களை அன்புடனே நீக்கிவைத்து
ஸ்வரூபதெரிசனந்தந்து ஸ்வானுபவமளிக்க
மாயாண்டிப் பிள்ளையிடம் மாற்றிவிட்டேன் அம்மணிநான்.
மாற்றிவிட்ட செய்திதனை மர்மமாய்த் தெரிவித்தேன்
மர்மமாய்த் தெரிவித்தபின் மறுமாற்றமுண்டோ சொல்.—"ஓம் தத்ஸத்."

---

திருஆதித்தாய்மொழி.— "குழந்தை சா- மா-க்கு ஸதாநந்தம் உண்டாகுக. காயிதம் பார்த்தேன். நீயே ஆனந்தரூபி. நீயேசத்தியரூபி. நீயேசக்திரூபி. நீயேசிவரூபி. அரூபிநீயே. விரூபிநீயே. எல்லாம் உனைத்தவிர ஒன்றுமில்லை. உன் சங்கல்பத்தால் ஜகம் உண்டானது. உன் சங்கல்பத்தால் ஜகம்அழிந்தது. தைரியங்கொள். சஞ்சலத்தை விடு. ஆனந்தமாயிரு. ப்ரக்ஞானமடை.—தாய்-பொருளானந்தம்." " தத்துவமஸி



உ

ஓம்.

# ஸ்வானுபவம்—ஆத்மானந்தப்பூர்த்தி.

---

சிவதெரிசனம்.

" சிந்தையதென்னச்சிவனென்னவேறில்லை
சிந்தையினுள்ளேசிவனும்வெளிப்படுஞ்
சிந்தைதெளியத்தெளியவல்லார்கட்குச்
சிந்தையினுள்ளேசிவனிருந்தானே."

சிவசொருபதரிசனம்.

" துரியவதீதஞ்சொல்லுறும்பாழாம்
அரியதுரியமதீதம்புரியில்
விரியுங்குவியும்விள்ளாமிளிருந்தன்
னுருவுந்திரியுமுரைப்படிதெவ்வாறே."

மோனசமாதி.

" தானுமழிந்துதனமுமழிந்துநீ
டூனுமழிந்துவுயிருமழிந்துடன்
வானுமழிந்துமனமுமழிந்துபின்
நானுமழிந்தமைநானறியேனே."

" ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்பராபரம்
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்சிவகதி
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேனுணர்வினை
ஒன்றிநின்றேபலவூழிகண்டேனே."

வரைமாட்சி.

" தான்வரைவற்றபினுரைவரைவது
தானவனானபினுரைநினைவது
காமனைவென்றகண்ணுரையுகப்பது
தூமொழிவாசகஞ்சொல்லுமினீரே."

உரைமாட்சி.

" உரையற்றதொன்றையுரைசெய்யுமூமர்காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ
திரையற்றநீர்போல்சிந்தைதெளிவார்க்குப்
புரையற்றிருந்தான்புரிசடையோனே."

### மனமாட்சி.

"மனமாயைமாயையிம்மாயைமயக்க
மனமாயைதானாயுமற்றொன்றுமில்லை
பினைமாய்வதில்லைபிதற்றவும்வேண்டாந்
தனையாய்ந்திருப்பதுதத்துவந்தானே."

### முத்தி.

"மனம்விரிந்துகுவிந்ததுமாதவம்
மனம்விரிந்துகுவிந்ததுவாய்வு
மனம்விரிந்துகுவிந்ததுமன்னுயிர்
மனம்விரிந்துரைமாண்டதுமுத்தியே."

### அணைந்தோர்தன்மை.

"ஒழிந்தேன்பிறவியுறவென்னும்பாசங்
கழிந்தேன்கடவுளுநானுமொன்றனே
னழிந்தாங்கினிவருமார்க்கமுமேவண்டேன்
செழுஞ்சார்புடையசிவனைக்கண்டேனே."

"ஆராலுமென்னையமட்டவொண்ணாதினிச்
சீரார்பிரான்வந்தென்சிந்தைபுகுந்தனன்
சீராடியங்கேதிரிவதல்லாதினி
யார்பாடுஞ்சாராவறிவறிந்தேனே."

"ஒன்றுகண்டீருலகுக்கொருதெய்வமு
மொன்றுகண்டீருலகுக்குயிராவது
நன்றுகண்டீரினிநமசிவாயப்பழந்
தின்றுகண்டேற்கிதுதித்தித்தவாறே."

"பணிந்துநின்றேன்பரமாதிபதியைத்
துணிந்துநின்றேனினிமற்றொன்றும்வேண்டே
னணிந்துநின்றேனுடலாதிப்பிரானைத்
தணிந்துநின்றேன்சிவன்தன்மைகண்டேனே."

### தோத்திரம்.

"மாயனைநாடிமனநெடுந்தேரேறிப்
போயினநாடறியாதேபுலம்புவர்
தேயமுநாடுந்திரிந்தெங்கள்செல்வனை
காயமின்னாட்டிடைக்கண்டுகொண்டேனே."



"புகுந்துநின்றானெங்கள்புண்ணியமூர்த்தி
புகுந்துநின்றானெங்கள்போதறிவாளன்
புகுந்துநின்றானடியார்தங்கணெஞ்சம்
புகுந்துநின்றானையேபோற்றுகின்றேனே."

"உணர்வுமவனேயுயிருமவனே
புணர்வுமவனேபுலனுமவனே
யிணருமவன்தன்னையெண்ணலுமாகான்
றுணரின்மலர்க்கந்தந்துன்னிநின்றானே."—திருமந்திரம்.

### பிரார்த்தனை.

"அதுவென்று லெதுவென வொன் றடுக்குஞ் சங்கை
யாதலினா லதுவெனவு மறவேவிட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனகனாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரொன்றும்
'பதியாத நிலை'யெனவு மென்னையாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூர் இந்தக்
கதியின்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன்."—தாயுமானவர்.

### குருசேவை.

தந்தேன் தடை யறுத்தேன்
வெந்தேன் வினையறுத்தேன்
கொன்றேன் கொலையறுத்தேன்
குருசேவை செய்திட்டேனே.

### அனுபவ உறுதி.

பெற்றேன் பெற்றேன் பெறலரும் பேறுபெற்றேன்
உற்றேன் உற்றேன் உம்பர்உறு உவகையுற்றேன்
அற்றேன் அற்றேன் அகமெனும் பாவமற்றேன்
பற்றேன் பற்றேன் பவமவ மினிப்பற்றேனே.

நின்றேன் நின்றேன் நிருவிகற்ப நிலையில்நின்றேன்
கொன்றேன் கொன்றேன் குரங்கெனு மனதைக்கொன்றேன்
வென்றேன் வென்றேன் வெறிதரு மயலைவென்றேன்
ஒன்றேன் ஒன்றேன் ஒருமைநிலை குலைவொன்றேனே.

ஆநந்தவாழ்த்து.

போற்றி போற்றி ஜயஜய போற்றி
போற்றி போற்றி பரம்பொருள் போற்றி
போற்றி போற்றி சத்தியம் போற்றி
போற்றிபோற்றி சத்குரு பாதம்போற்றி.

"முத்தனைமுதற்சோதியை முக்கணப்பனை முதல்வித்தனைச்
சித்தனைச்சிவலோகனைத் திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினோ !
சித்தம்ஆர்தரும்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே."

"என்பேஉருகநின்னருள் அளித்துன் னிணைமலர் அடிகாட்டி
முன்பேஎன்னை ஆண்டுகொண்ட முனிவா ! முனிவர் முழுமுதலே !
இன்பே அருளிஎனை உருக்கி உயிருண்கின்ற எம்மானே !
நண்பே அருளாய் என்னுயிர் நாதா! நின்னருள்நாணுமே."—திருவாசகம்.

ஓம் தத்ஸத்.
ப்ரம்மார்ப்பணமஸ்து.

பின்னுரை.

"காட்டுக்குறியுங்கடந்தவர்காரணை
மேட்டின்புறத்திலெழுதிவைத்தென்பயன்
கூட்டுங்குருநாதங்கூட்டிடினல்லாது
வாட்டின்கழுத்திலதர்கிடந்தற்றே."

"தற்பரமல்லசதாசிவன்றானல்ல
நிட்களமல்லசகளநிலையல்ல
அற்புதயாகியனுபோகக்காமம்போற்
கற்பனையின்றிக்கலந்துநின்றானே."

"முகத்திற்கண்கொண்டுகாண்கின்றமூடர்காள்
அகத்திற்கண்கொண்டுகாண்பதேயானந்தம்
மகட்குத்தாய்தன்மணாளனோடாடிய
சுகத்தைச்சொல்லென்றாற்சொல்லுமாறெங்ஙனே."

"அருள்பெற்றவர்சொல்லவாரீர்மனிதர்
பொருள்பெற்றசிந்தைப்புவனபதியார்
மருளுற்றசிந்தையைமாற்றியருமைப்
பொருளுற்றசேவடிபோற்றுவனானே." —திருமந்திரம்.

சாத்விகசிரோமணி-மாயாண்டிப்பிள்ளை.

ஓம் தத்ஸத்.
சுபமஸ்து.



INDIAN FOLK SONGS OF SPIRITUAL TRUTH & WISDOM.

"THE MYSTIC SONG OF THE MENDICANT ASCETIC."

ஓம்,ஸ்ரீபிக்ஷாடன மூர்த்திநேம.

மார்கழிமாசம் காலையில்பாடும் ஆண்டிப்பாட்டு.

## மாயாண்டிச்சித்தன் ஞானப்பாட்டு.

களம்.—தவவேடர் அகத்துமுகடு.
நட்டர்.—மோகினி - பிக்ஷாடனர்.
இராகம்.—ஆனந்த பைரவி. சாப்புதாளம்.
நாதம்.—கண் - கண்ண - கணகண்ண.

1. ஆண்டி யாவது ஆண்டி
[1]ஆணவம் போக்குவ னாண்டி
[2]அருள் தருபவ னாண்டி
[3]மருளும் போக்குவ னாண்டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

2. ஆண்டி யாவது ஆண்டி
[4]ஆடு மேய்ப்பவ னாண்டி
[5]விட்டால் பிடிப்பவ னாண்டி
[6]வீடு மளிப்பவ னாண்டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

3. ஆண்டி யாவது ஆண்டி
[7]மாண்டு மடிந்தா லாண்டி ;
மாண்டு விழுந்தால் தோண்டி[8]
மாயவ னாமவ னாண்டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

4. மயாவ னாமவ னாண்டி
மாக்ஷிமை பெற்றனை வேண்டி

1. அகச்செருக்கு. மும்மலத்தில் ஒன்று. மற்றவை (1) மாயை (2) காமியம்.
2. கிருபை.
3. மயக்கம் - அறியாமையினஞ்சல்.
4. ஆடு=பசு=மன்னுயிர். "கோபாலன்".
5. பற்றுவிட்டால். f, "பற்றற்றார் பற்றுகப்பற்றி நிற்பனவன்."
6. முத்தி - மோக்ஷம்.
7. அகங்காரமமகாரங்கள் மாண்டுமடிந்தால்.
8. தோண்டி=ஹிருதயம் - உட்பற்று - விஷயவாசனை.

[9]மாயை மயக்கந் தாண்டி
[10]மனதையுஞ் சுட்டேன் காண்'டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

5. [11]ஒட்டின விட்டிடி லாண்டி
புளியோடுபோ லிருப்பனே யாண்டி ;
[12]கட்டின விட்டிடி லாண்டி
[13]யதைக்காட்டிக் கொடுப்பனே யாண்டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

6. ஆண்டி யாமவ னாண்டி
ஆட்கொண் டானென்னை வேண்டி
ஆருக்கு மடங்கேனன் சண்டி[14]
அருவுரு வாஞ்சக சண்டி.[15]
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

7. மாயமாய் வந்தானே யாண்டி
காயம் புகுந்தானே காண்'டி
சண்டி சகசண்ட்'யைத் தோண்டி[16]
[17]மண்டி யெரித்தானே யாண்டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ண.

8. மண்டி யெரித் தீயில்-மன்மதனை யெரித்தாண்டி,
சண்டி யகங் காரம்-சாகவே யழித் தாண்டி,
ஒண்டி யொளித் தருவா-யொதுங்கியே யிருந் தாண்டி
அண்டி யணைத் தென்னை-அலங்கோலம் செய் தான்'டி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ணக்-கண்-கண்ண-கணகண்ண.

9. பிரபஞ்சம் சத்தியம்போல் தோற்றும் பொய்த்தோற்றம்.

10. மனோவிர்த்தியை யொழித்து விஷயவாசனைகள் நீங்கி அசைவற்றிருத்தலே மனதைச் [...] டெரித்தலாம். விஷயவாசனையிருந்தால் இந்த தேகம் விழுந்தாலும் மனம் வேகாது. "நான் செத்தா[...] என் நெஞ்சு வேகாது" என்று உலக வழக்கத்தில் சொல்லும் உண்மையிதுவே.

11. பாவனைரூபமாக ஆத்மாவை யொட்டியுள்ள உலகவாசனைகள்.

12. ஆத்மாவைப் பிறவிக்கடலிலாழ்த்திக் கட்டிய கர்மபந்தங்கள்.

13. அதை=ப்ரம்மத்தை - சத்சித்தை - உண்மையை-அழியாததைவற்று நிற்பதை.

14. "நான்" என்னும் சிவ அகங்காரம் : அதை வெல்வது மஹா கஷ்டம். என்ன அடித்தா[...] அடக்கினலும் போகாதபிடிவாதப்பேய். அது வெகு முரடு.

15. மஹத் அகங்காரம் - இந்த சகமெல்லாம் நான் ; இதைப்படைத்துக்காத்து ஆள்பவன் ந[...] என்று கண்ணுக்குக் காணாத உருவாய்நிற்கும் ; இதை ஈசுவரன் என்று சிலர்கள் தொழுவார்கள். மு[...] களை இது பாதிக்காதாயினும் பெத்தர்களைப் பாதிக்கும் சக்தி இதற்கு மெத்தவு முண்டு.

16. தோண்டி=வேரோடு கிண்டியெடுத்து - வாசனையோடுநீக்கி.

17. காட்டுத்தீபோலெல்லாவற்றையும் தகனம் செய்யும்படி உத்கிர்ஷ்டகாந்தியோ டெரியு[...] மண்டியெரி நெருப்பாம்.



9. அழ அழ என்னை-யகலாது கட்டி னான்'டி
கட்டின கட்ட திலே-கட்டவிழச் செய் தான்'டி
சண்டித் தனம் செய்தே-சாகஸம் செய் தாண்டி
கூடிக் கலந்தே யென்-குலமழியச் செய் தான்'டி
நாதம்.—கண்-கண்ண-கணகண்ணக்-கண்-கண்ண-கணகண்ண.

10. குலமு மில்லை யினிக்-கோத்திரமு மில்லையேடி,
ஊனில்லை உறவு மில்லை-ஒன்று மில்லை யெனக்கேடி ;
மலமில்லா வூரி லுண்டு-மாயை யில்லா வீட்டுமாடி,
[18]சலனமில்லாச் சயனத் தங்கு-சயனித் திருப் பேனடி.
நாதம்.—கண்-கண்ண-கணகண்ணக்-கண்-கண்ண-கணகண்ண.

### பேரிரைச்சலிட்டுப் பிக்ஷையிரத்தல்.

அம்மா ஆ !-பிட்சையா அண்டி-உயிர்போஒகுது !
அம்பா ! ஊனமில்லாஉணர்வு-ஒருகொடிதாயேன் !
உயிர்ப்பிச்சையம்மா ! ஊனுணர்வுவேண்டேன், தாயே !!
ஆண்டிப்பிச்சையம்மா ! அம்மணமா'க்கொடுக்கணும், தாயே !!

நாதம்.—கண்-கணர் !-கணகண்ணர்-கணகண்ணக்-
கண் !-கணகண்ணக்-கணகணர் !
கணகண்ணக்-கண்ணக்கண்ண-கணர் !!
கணகண்ணக்-கண்ணக்கண்ண-கணர் !!

### ஆகாசத்தில் அசரீரிவாக்கு.

"மோகினி ராகம் பாடத்
[19]திரிபுடி தாளம் போடத்
தவவேட ராட்ட பாட்டம்
தாணியி லொடுங் கிற்றையே."

மார்கழிமாசத் திருவாதிரையும் - வாலாயிற்றையே
கார்குழலாள்மோகினியும் காரணப்பே - யாண்டியுமே கரைந்தவுமாநின்று
பாரிலுள்ள பக்தர்கள் பரிபக்குவர் - பலருமுய்யப் பாக்கருணைமிகுதியாலே
திரிபுரமெரித்த தேஜோமயானந்தனாய்த் - தாள்கொடுத்தாள்வன், தரிசிக்கவாரீர், வாரீரே."

ஓம். ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

18. சலனமில்லாச் சயனம் - சர்ப்பசயனமேயாம். அசைவற்றிருக்கும் ஆதிமுதலின் சமாதிநிலை.

19. ஞாதருஞானஞேயம் - பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் வஸ்து இம்மூன்றிற்கும் 'திரிபுடி' யென்றுபேர். ஆசாபாச விஷயங்களெல்லா மிதிலடங்கும்.

IN MEMORIAM:

MY FATHER IN HEAVEN.

## எந்தை-முத்தி.

யாக்கை நிலையாமை.

"ஊரெலாங்கூடி யொலிக்கவழுதிட்டுப்
பேரினைநீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங்காட்டிடை கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே."—திருமூலர்.

"வளத்திடை முற்றத்தோர் மாநிலமுற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன்வனைந்தான்
குடமுடைந்தாலவை யோடென்றுவைப்பர்
உடலுடைந்தாலிறைப்போதும்வையாரே."—திருமூலர்.

பெறற்பேறு.

எந்தையவ னென்னப்பன் என்காய மீன்றவன்றான்
கந்தையது கழித்ததன்ன சுனகாயம் நீங்கிச்சென்றான்*
சிந்தைவெந்தே யெய்தின"நான்"† சிவனடியே சேரவைத்தேன்
எந்தையவ னென்னீசன் எனையுமங்கே யிருதியென்றான்.

இருதியென்றான் வாழ்தியென்றான் இருவினையுமறுத்துவிட்டான்
சுருதிமுடிவை யறிதியென்றான் சுகமதுவு மிதுவேயென்றான்
கருதியதை யுரைசெய்யக் கருத்தழிந்தே னென்செய்வேன்
வருதியென்று னிருத்திவிட்டான் வகையறியா திருந்துவிட்டேன்.

—ஸ்வாமிநாதன்.

அன்பதுவாதல்.

"கண்டேன்கமழ்தரு கொன்றையினானடி
கண்டேன்கரியுரியான்றன் கழலிணை
கண்டேன்கமல மலருறைவானடி
கண்டேன்கழலதெ னன்பினுள்யானே."—திருமந்திரம்.

"ஈசனடியுமிராப்பகலுந்தன்னைப்
பாசத்துள்வைத்துப் பரிசுசெய்வார்களை
தேசுற்றறிந்து செயலற்றிருந்திடி
லீசன்வந்தெம்மிடையீட்டி நின்றானே."—திருமந்திரம்.

ஓம்தத்ஸத்.

* சுபகிருது௵ அற்பிசி௴ 27உக்கு 1902-ம௵ நவம்பர்௴ 12உ.

† "நான்" = ஜீவ அகங்காரம் = ஜீவன்.



# Truth according to St. John.

## As perceived by a Son of God in the Vedic Land of Ind.

"God is Spirit and they that worship Him must worship in spirit and truth"—John IV · 24.

"The one only way of worshipping Him in this manner is by isolating yourself from the limitations of thought & sense perception. By this isolation you become *atone with* God—you, a cleansed spirit are allowed, to be *in union with* God. Then indeed are you said to *know* God spiritually as Eternal Be-ing."—St. Paul.

"Jesus gave up his life that he might gather together in one the children of God that were scattered abroad." John—XI-52.

"Verily, verily, I say unto you, except a corn of wheat fall into the ground and die, it abideth alone, but if it die, it bringeth forth much fruit."—Christ.

"And I, If I be lifted from the earth, will draw all *men* unto me."—ib.

"While ye have light, believe in the light, that ye may be the children of light."—ib.

"O Father, Lord of heaven and earth, Thou hast hid these things (mysteries of the Kingdom of Heaven) from the (worldly) wise and prudent and hast revealed them unto babes."—Mathew XI-25.

"All things are delivered unto me of my Father: and no man knoweth the Son, but the Father; neither knoweth any man the Father, save the Son, and he to whomsoever the Son will reveal Him.—" Matt. XI—27.

"Come unto me, all ye that labour and are heavy laden, and I will give you Rest."—Matt. XI-28.

"Take my yoke upon you and learn of me; for I am meek and lowly in heart: and ye shall find rest unto your souls. For my yoke is easy and my burden is light."—Matt. XI-29-30.

"These things I have spoken unto you that in me ye might have peace. In the world ye shall have tribulation, but be of good cheer: I have overcome the world." John—XVI-33.

"Father, the hour is come, glorify thy Son, that thy Son also may glorify thee: as thou hast given him power over all flesh, that he should give eternal life to as many as thou hast given him."—John XVII-1-2.

"I certify you, brethren, that the Gospel which is preached by me is *not after man*; for I neither received it of man, neither was I taught it by man."—St. Paul.

### * "ஏகம் சத்தியம் ப்ரஹ்ம".

"ஆனசமயமதுவிதுநன்றெனு
மாயமனிதர்மயக்கமதுவொழி
கானங்கடந்தகடவுளைநாடுமின்
ஊனங்கடந்தவுருவதுவாமே."

"அகன்றார்வழிமுதலாதிப்பிரானு
மிவன்றானெனநின்றெளியனுமல்லன்
சிவனருள்பலபலசீவனுமாகும்
நயன்றான்வரும்வழிநாமறியோமே."

"கரந்துங்கரந்திலன்கண்ணுக்குந்தோன்றான்
பரந்தசடையன்பசும்பொன்னிறத்தன்
அருந்தவர்க்கல்லாலணுகலுமாகான்
விரைந்துதொழப்படும்வெண்மதியானே."

"தவம்வேண்டுஞானந்தலைப்படவேண்டில்
தவம்வேண்டாஞானசமாதிகைகூடில்
தவம்வேண்டாமச்சகசமார்க்கத்தோர்க்குத்
தவம்வேண்டாமாற்றந்தனையறியாரே."

"சாத்திரமோதுஞ்சதுர்களைவிட்டுநீர்
மாத்திரைப்போதுமறித்துள்ளேநோக்குமின்
பார்த்தவிப்பார்வைபசுமரத்தாணிபோல்
ஆர்த்தபிறவியகலவிட்டோடுமே."

"ஒடுங்குநிலைபெற்றவுத்தமருள்ளம்
நடுங்குவதில்லைநமனுமங்கில்லை
யிடும்பையுமில்லையிராப்பகலங்கில்லை
படும்பயனில்லைபற்றுவிட்டார்க்கே."

"இதயத்துநாட்டத்துமென்றன்சிரத்தும்
பதிவித்தபாதம்பராபரநந்தி
கதிவைத்தவாறுமெய்காட்டியவாறும்
விதிவைத்தவாறும்விளம்பவொண்ணாதே."

"வைத்தேனடிக்கண்மனத்தினுள்ளேநான்
பொய்த்தேயெரியும்புலன்வழிபோகாம
லெய்த்தேனுழலுமிருவினைமாற்றிட்டு
மெய்த்தேனறிந்தேனவ்வேதத்தினந்தமே."

—திருமந்திரம்.

* இது சுருதிவாக்கியம், "அது ஒன்றே; என்று மழியாதது; ஸர்வ வியாபகமானது அல்லது எங்கும் பரவியுள்ளது" என்பது இதன் பொருள்.

## God's Plan of the Universe.

### The Eternal Law of Evolution, Involution and Salvation.

(As Perceived in Realisation thro' Atma-Yoga.)

## ஜகத் - சிஷ்டி.

### உற்பத்தி லய ரக்ஷணமுறை.

யோகமார்க்கம்.

---

### i. உற்பத்தி-லயம். Evolution and Involution.

---

John I. * 1—5.

1. In the beginning was the Word, and the Word was with God, and the Word was God.

1. ஆதி—God or First Cause.

ஆதியிலுள்ளானனாதியொன்றே
ஆதியனாதியுமவனேயாவன்
அனாதியாமவனாதியதாக
ஆதியிற்பிறந்தது நாதந்தானே.

2. நாதம்—Word or Logos.

2. The same was in the beginning with God.

நாதமுநாதாந்தமுமொன்றே
ஆதியில்நாதம் அனாதியிலொடுக்கம்
ஆதியனாதிபோல் நாதமனாதி
ஆதியுநாதமும் அனாதிதானே.

3. மாயை—Maya or Darkness.

அனாதியானது மாயையும்காணீர்:
ஆதியுநாதமும் மாயையிற்கூடிட
ஆனதனைத்தும் ஆயதுஅதனால் ;
ஆயதனைத்துமாக்கிய அவனும் மாயவனாகமாறிநின்றானே.

3. All things were made by him; and without him was not any thing made that was made.

4. ஜகஉற்பத்தி—Evolution of the world.

மாறிநின்ற மாயவன்தானே
காரணகாரிய உபாதனமானான்
மாயையென்பது மருளும்தெருளும்
தெளிந்தார்க்கிலதாம் தெளியார்க்குளதாம்.

5. மாயாவியல்—Nature of Maya.

உளதாமதுவு முள்ளத்து தானே
உள்ளத்துணர்வை மறைத்திடுமதுவும்
மறைவழிப்பட்டு மனந்தெளிந்தக்கால்
இருந்தவிடந் தெரியாதெடுத்திடுமோட்டமே.

* For a full exposition of the Truth contained in these passages *vide* Paranañda's commentary in full. A few extracts bearing on John I. 1. 2 are given in pp. 213 & 214.



6. ஆள்பவன்—Saviour.

4. In him was life; and the life was the light of men.

ஓட்டமெடுக்கும் உண்மையுணர்ந்தார்க்கது
வாட்டமிகச்செய்யும் உண்மையுணரார்க்கது
வாட்டமும்ஆட்டமும் வாய்வுமனமாகும்
ஆட்டியும்காட்டியும் ஆள்பவனெந்தையே.

7. உள்ளத்தன்—Immanent.

எந்தையவன்தானும்என்னுள்ளேயிருந்தான்
என்னுளிருந்தானை நானுமறிந்திலன்
அறிந்திடாக்காரணமாய்ந்து பார்த்திட
பார்வையைத்தடுத்ததுமாயையென்றுணர்ந்தேன்.

8. அவித்தை—Ignorance or Mixed light.

உணர்ந்த உள்ளத்தில் ஒளிவிட்டு நின்றானை
உணராதொளித்தது உள்நின்றமாயை
உணர உணர ஒளிந்தது மாயையும்
உணராதொளித்த அம்மாயை அவித்தையே.

9. அதனியல்—Same dissected.

அவித்தையாலே யறிகிலேன் எந்தையை
அவித்தையதுவும் அறிவறியாமையே
அவித்தையை யாய்ந்திடினது விரண்டாகும்
அவித்தையாய்நிற்பதாவரணவிக்ஷேபந்தானே.

10. விக்ஷேபம்—Sensation.

விக்ஷேபமென்பது விஷயசுகவிர்த்தியாம்
விக்ஷேபமென்பது உடலுண்மையென்றிடும்
விக்ஷேபந்தானே யுள்ளுணர் வொளிக்கும்
விக்ஷேபத்தாலே வீடுபெறாதலைவனே.

11. ஆவரணம்—Illusion.

அலைவன் நான் என்பதறிந்துள்ளபோதும்
அலைவன் நான் அப்போதாத்மாவென்றிருந்தும்
அலைவனுக்காத்மாவைக்காட்டியொளித்திடும்
அலைவனுள்ளமர்ந்ததாம் ஆவரணந்தானே.

5. And the light shineth in darkness;

12. அதன்தொழில்—How it acts.

ஆவரணம்தானேயனைத்துமென்றுரைக்கும்
ஆவரணந்தானே ஆத்மாவையொளிக்கும்
ஆவரணந்தானே அறிவையுள்ளொடுக்கும்
ஆவரணம் தானேதனைக்காணாதழச்செயும்.

13. உவமானம்—Illustration.

அழச்செய்ததாவரண மாதிமனிதனை
விழச்செய்த ஆதியவள் விக்ஷேபந்தானே
அழகியவள் விஷயசுக ஆசையினாலே
விழச்செய்தாள் ஆடவனை ஆனந்தமழிந்தே.

and the darkness comprehended it not.

14. உவமேயம்—Application.

அழிந்தேயவன்போனான் ஆத்மாவையறியாமல்
அழிந்தேயவன்வீழ்ந்தான் அரிவைசொற்கேட்டு
அழிந்தவன்ஆவரணம் அழித்தவள்விக்ஷேபம்
அழிந்த ஆடவனோடழகியும் சேர்ந்தது அவித்தையாமே.

15. சீவன்—Natural Man.

அவித்தையினுள்ளே ஆத்மன்ஒளித்துளான்
அவித்தையினாலே ஆத்மனை உணர்கிலார்
அவித்தையினுள்விளங்குள்ளொளிதன்னை
அவித்தையிருளால் அறிகிலன்சீவன்.

∴

## ii. இரக்ஷணமுறை—PLAN OF SALVATION.

16. அருளுதயம்—Merciful Thought.

அறிகிலாச்சீவனை அருளொடுகாத்திட
அறிவிலாதுலகம் அழியாதருள்செய
அறிவிலாஊனர்கள் அறிவறிந்துய்ய
அறிவில்அருளா யவனுதித்தானே.

6. There was a man sent from God, whose name *was* John.*

17. அருளுஞன்—Feeling of Mercy.

உதித்தானவனெந்தை ஊனர்தமுடலில்
உதித்தானவனென் றுணர்ந்திலருலகில்
உதித்தானவன் தன்னையுணர்த்துமாறுலகில்
உதித்தான் குரவர்குலதிலகனாய்த்தானே.

18. அழுக்காறுநீக்கம்—Cleansing the Heart.

தானேயுதித்தாண்டான் தனிமையிலவனைக்
கானேபுகுந்து கடுந்தவஞ்செய்தானை
ஊனேபுகுந்து உள்மலம்போக்கி
வானேபுகுந்திடும் வன்மையீன்றானே.

* John the Baptist was the son of the priest Zacharias (Luke-i-12-13) John retired to the desert early in life and practised severe austerity till he was "sent," (John i-6,) to announce the advent of the Teacher (Spirit of Grace and Truth) in the sacred form of Christ Jesus. (John i-14.)



7. The same came for a witness to bear witness of the Light, that all *men* through him might believe.

19. அருட்பிரசாதம்—Grace of Faith

ஈன்றானவற்கருள் பத்திமைகண்டு
ஈன்றானவற்கே உள்ளொளிக்கண்ணும்
ஈன்றானவற் கவனுளவறிபோதம்
ஈன்றான்வரவெதிர் நோக்கிநின்றற்கே.

8. He was not that Light, but *was sent* to bear witness of that Light.

20. அருள்விளக்கு—Grace of Hope.

நின்றானவனுள்ளத்து நிர்மலசுத்தனுப்
*வென்றான் தனுள்ளத்து விளங்குமருட்சோதி
நின்றானையுள்ளத்துணர்ந்திலனாயினும்
வென்றானவன்வரவை விளித்துநின்றானே.

9. *That* was the true Light, which lighteth every man that cometh into the world.

21. அருட்சோதி—Light of Grace.

விளித்துநின்றானவன் விண்ணருட்சோதியை
ஒளித்துநின்றானவன் உலகுளசீவனில்

10. He was in the world, and the world was made by him, and the world *knew* him not.

ஒளித்துநின்றேயவன் உலகுருவாக்கினான்
ஒளித்துநின்றானை உணர்ந்திலதுலகமே.

11. He came unto his own, and his own received him not.

22. அருளுணர்வு—Perception of Grace.

உணர்ந்திலதுலகம் உள்ளறிவாய்நின்றவனை

12. But as many as received him, to them gave he power to become the sons of God, *even* to them that believe on his name;

உணர்ந்தனர்பலர்க்கு மறிவுருவாய்நின்றான்
உணர்ந்தனர்பாலராம் பக்தர்களவனை
உணர்ந்தனர்யாவரும் அருட்குழவியானாரே.

23. அருட்குழவி—Re-birth: Sanctification of Spirit.

13. Which were born not of blood, nor of the will of the flesh, nor of the will of man, but of God.

அருட்குழவிபிறக்கும் அதிசயமுணர்த்திடுமால்
அருட்குழவிபிறவாது அன்னையவளுதரத்தில்
அருட்குழவிபிறவாது அருளிலாருள்வசத்தில்
அருட்குழவிபிறக்கும் அத்தனருள்வைத்தாலே.

24. அவதாரம்—Manifestation.

14. And the Word was made flesh, and dwelt among us, [and we beheld his glory, the glory as of the *only begotten* [this ought to be (lit.) *alone become*. See Sri Parananda's commentary thereon in his Eastern Exposition of St. John by the Light Gnana Yoga.] of the Father, full of grace and truth.

அத்தனருள்வைத்தால் ஆகாததுண்டோசொல்
அத்தனருளால் அவதரித்தசக்தியவள்
அத்தனருளானு னவதாரமாகின்றாள்.
அத்தனருளாலவதாரமானானும் † அருளுணர்ச்சோதியா
விளங்கிகின்றானே.

* அகப்பற்று புறப்பற்றுகளாயுள்ளசகத்தை வென்றான். நிவிர்த்திமார்க்கன் as opposed to பிரவிர்த்திமார்க்கன்.
† 'ஆனாளும்' என்றும் பாடமாம். அவன், அவள், அது மூன்றும் வித்தியாசமின்றி உபயோகிக்கப்பெறும்.

15. John bare witness of him, and cried, saying, "This was of whom I spoke, He that cometh after me is preferred before me; for he was before me."

16. And of his fulness have all we received, and grace *for* (*upon-vide*-Parananda) grace.

17. For the Law was given by Moses, *but* grace and truth came by Jesus Christ.

18. No man hath seen God at any time; the *only begotten*† (read *alone-become*) Son which is in the bosom of the Father, he hath *declared* (*led the way to*-Parananda) *him.*

25. அருட்செல்வன்—The Endowed Soul or * True Man.

விளங்கின்றானை விளக்கினான் ஊனர்க்கு
களங்கமில்லாநெஞ்சத்தன் கருணைபெற்றமகிமையினால்
இளங்குமரன்இவனே என்னீசன்புதல்வன்காண்
விளங்குமருட்சோதியிவன்பின்வந்தேமுன்செல்வான்.

26. அவனியல்—His nature.

முன்செல்வானருட்செல்வன் முழுமுதலைச்சேர்ந்திடவே
பின்பற்றிச்செல்வார்க்குப் பரங்கருணைசாதிப்பன்
அன்புநிறைந்தென்புருகில் அத்தனையுங்காட்டிடுவன்
அன்பனவன் ஆருயிர்க்காதலன் பூரணனருட்புண்ணியனே.

27. அவன் தொழில்—His Powers or Deeds.

புண்ணியன் புனிதன் புவனபதியின்சேய்
எண்ணிலருளறிவின் றகப்பற்றொழித்திடுநேசன்
உண்ணின்றுறைந்து உலகறியா மாயனைக்
கண்ணின்று பொழியுங் கருணையாற்காட்டிடுவன்.

28. அவன் மாட்சி—His Greatness.

காட்டுவன்மாயனைக்கனவுநனவழிந்துகாணவல்லார்க்கே
காட்டுவனத்தனையுடல்பொருளாவியுமொருங்குகொண் டாங்கே
காட்டுவனுளவாய் ஊனழிந்துள்ளத் தொன்றிடும் வழியே
ஊட்டுவனருளமுதஉருவழிந்தருவாயமர்குழவிகட்கே.

29. குருவரன்—Boon of Teacher.

அருவாயமரிலவன்குருவாய்வருவன்
கருமாமுகில்போல்கருணையும்பொழிவன்
அருவாய் நின்றுருக்காட்டியு மழைப்பன்
உருக்காட்டியுருவழித்தனையாண்டுகொள்வானே.

30. அருள்வரன்—Boon of Grace or Salvation by Spiritual Guidance.

ஆண்டுகொள்வானவன் ஆண்டியாய்வந்தனை
ஆண்டுகொண்டே,பரும் வரன்களையீவன்
மாண்டுமடிந்தார் மாநிலத்திருந்தும்
மாண்டு பிறவாத மாட்சிபெற்றாரே.

∴

† The proper translation of the term *mono-genis* (Gr.) is not 'only begotten' but 'alone-become.' In this *monogenic* or '*alone-become*' state, the spirit is boundless and supremely blissful or peaceful, and is then said to be of the image or likeness of God (Heb. i. 3.)—*Sri Parananda.*

* Called Christ. In India we call them *Saints*: Holy Men in whom God is manifest; and *Jnanis*, Or Those who know the Truth.



## iii. அடைந்தார்பெருமை—The Greatness of the Saved.

31. அருள்மாட்சி—The Saving Power of Grace.

John viii. 32-52.

பெற்றாரேயவர் பெறலரும் பேறு
உற்றாரேயவர் ஊனர்க்கிலாப்பதம்
அற்றாரேயவர் அகமெனும் பாவம்
பற்றாரேயவர் பவமவம் என்றும்.

32. அத்தனியல்—Nature of God or Truth.

Matt xi. 25-27.

என்றுமுணராரென்னத்தனையூனர்கள்
என்றுமுணரார் அவனருட்சோதியை
என்றுமுணருமீசன் தன்செல்வனை
வென்றுநின்றாலவன் வலியவந்தாள்வனே.

33. அவன் கருணை—His Mercy.

ib. 28.

வலியவந்தாள்வன் வலுவிலழைத்திட்டான்
வலியிழந்துலகில் வாட்டமுறுயிர்களை,
வலிமிகுதுன்பஞ்சுமந்துளம்வாடியஏழைகாள்
வலியிழந்துழன்றீர்வான்சுகமெய்துவிர்வம்மின்வம்மி
னென்றே.

34. இரங்கியழைத்தல்—Call to Rest.

ib. 29.

வம்மின்வம்மின்வழியதுகாட்டுவன்
விம்மி விம்மி விசித்தழவேண்டாம்
நம்மில் உம்மில் நயந்தரு போதகன்
வம்மின்வம்மின் என்றழைக்கிறான்கேண்மினே.

35. எளியனரியன்—Easy and Rare to attain.

ib. 30.

அழைக்கிறான்கேண்மின் ஆருயிர்த்தோழன்
பிழையெலாம் பொறுத்துப் பேரருளீவன்
ஏழைகட்கெளியன் ஏதிலார்க்கரியன்
மழைபொழி கருணையன் மன்னர்க்குமன்னனே.

36. தோழன்-மாதா—Both Friend and Mother.

ib. 15.

மன்னர்க்குமன்னனும்மாயன்புதல்வன்
மன்னுயிர்க்கண் தண்கருணைமிகுதியாலவதரித்தான்
இன்னுயிர்க்குத்தோழன்மன்னுயிர்க்குமாதா
உன்னுயிர்க்குள்நின்றொளிக்குமுண்மையனே.

37. உண்மையன்-ஒருவன்—Truth Universal.

Matt xi. 16-19. உண்மையன் ஒருவன் உலகுக்கெலாமுதல்வன்
உண்மையிலா ஊனர் உள்மர்ம முணர்கிலார்
உண்மையிலூனர்களூன்விட்டுள்நோக்குவரேல்
உண்மையன் ஒளிவிட்டுஉள்நின்றிலங்குவனே.

38. அவன் தொழில்—Characteristics or Graces of the Spirit.

ib. 20-24. இலங்குவனுள்நின்று ஏங்கினோர்க்கருளீவன்
மலங்குவிந்திறுமாந்தால்மறைந்திடுவன்காணன்
கலங்குநெஞ்சத்தினராய்க்கருணைக்கழுதிட்டால்
இலங்குமருட்சோதியெழில்குருவாய்வந்தாள்வன்.

39. அருள், அறிவு—Love, Light.

John iv. 13-15. ஆள்வன்குருவாய்வந்துஆங்காரம்போக்குவிப்பன்
மாள்வனவெல்லாம்மயக்கமறக்காட்டுவிப்பன்
தாள்தந்தருளீவன்தாகவிடாய்தீர்த்துவைப்பன்
ஆளாவானைக்காட்டி மாளாவரமளிப்பன்.

40. ஆனந்தம்—And Bliss.

ib. 21-25. அளிப்பன் அருட்பேறு அழிப்பனவன்பற்றையெல்லாம்
விளிப்பன்ஒளிப்பன்விண்ணுருவாய்நிற்பன்
களிப்பளித்துக்கரைந்துறைவன்குறிகாட்டியழைத்திடுவ
ஒளிகாட்டிவெளிகாட்டியுணர்த்திடுவனுண்மைதன்னை.

41. "தத்துவமஸி"-தன்னுணர்வு—"Thou art That."

ib. 39-42. உண்மையுணர்த்திடுவன்உள்ளொளிவிளங்கவைப்பன்
உண்மைபுணர்ந்தாராயின்உள்மலமும்போக்கிவைப்பன்
உண்மையுணர்ந்த உணர்வுருவுநீயென்பன்
உண்மையுணர்ந்தஉளவறிவுநீயானால் உண்மையுநீயும்
ஒன்றாகிநின்றிடுவாய்.

42. "அஹம்ப்ரஹ்மாஸ்மி"-அனுபவம்—I am-also That.

ib. iv. 26. நின்றிடுவாய்ஒன்றென்று நிச்சயமாயென்மைந்த
ஒன்றிடுவாய்ஒன்றென்னு முணர்ச்சியுள்வனுக்க
ஒன்றிநின்றுணர்ந்த உணர்ச்சியுமொழிந்திடுமால்
ஒன்றேநீயாகியுலகெலாம்பரந்திடுவாய்.

43. அதீதநிலை-அனுக்கிரஹசக்தி—*Beyond is Power to Bless.*

ib. v. 30. பரந்துநின்றுய்வது பரானந்தமாகும்
சுரந்துநிற்குமண்கருணையுன்னுள்ளத்தெப்போதும்
பரந்துநின்றநேசனோடு பாசமற்றுக்கலந்துநின்றால்
இரந்துநிற்குமன்னுயிரை யீடேற்றவல்லனவாய்.



44. பரோபகாரம்—Gospel of Work.

John vi. 26-27. ஈடேற்றவல்லனெழில்குருவாயினல்லால்
ஈடேற்றலரிதப்பாவக்கமுற்றமாந்தர்களை
நாடேற்றுவாழும்நாற்றிசையன்னரினும்
பாடேற்றுப்பாருளதுன்பந்துடைத்தற்பெரிதையே.

45. அருள்வலி—The Power of the Holy Spirit.

ib. 31. 51-63. பெரிதுபெரிதுபுவனம்பெரிது
அதிலும்பெரிததையாள்பவன்பெருமை
அவனிலும்பெரியர்அத்தனருள்பெற்றோர்
அவரினும்பெரியர்அருள்புரியவல்லாரே.

46. போற்றி—Adoration.

ib. vii 16-18, 34. அருள்புரியவல்லார்திருவடிபோற்றி
அருள்மாமுகிலாம்அவனடிபோற்றி
அருள்புரிநாயகிதிரிபுரைபோற்றி
அருளுணர்ச்சோதியாஆட்கொளத்தேவடிபோற்றியே.

ஓம் தத்ஸத்.

ப்ரம்மார்ப்பணமஸ்து.

The following extracts are from that excellent and invaluable Store-house of spiritual experience collected together and concentracted on *St. John by Sri Parananda :—

John. 1. In the beginning was the Word and the Word was with God, and the Word was God.

[*Vide* His Eastern Exposition of St. John, being an interpretation thereof by the Light of Gnana Yoga.]

1. "In the beginning." This phrase implies a previous state, the state which never had a beginning, when there stood God only, without a visible (or knowable) second. This is the state of absoluteness or non-differentiation, for in that state, there is nothing from which to distinguish God. Differentiation began when *from* God appeared the "Word." The moment the Word appeared, it became possible to distinguish it from God. Thus the word *beginning* refers not only to the state of non-differentiation, but also to the point at which differentiation occurred, and St. John uses "beginning" in both these senses. In ver. 1 he says, "In the *beginning* was the Word;" in Ver. 2, "the Word was in the *beginning* with God."

"*The Word.*" The Greek word used by St. John for the "the Word" is *Logos* which was translated in the Latin vulgate as *Verbum* and in English by *Word*, which is identically the same as the Sanskrit *Vak* (நாதம்) used by the sages of India to denote that most spiritual, and as yet inaudible, Voice or Sound which, preparatory to evolution, arose in the Being of God not as a note or succession of notes, but as an overspreading power which may be called THE POWER THAT MAKES ITSELF HEARD, because sentient and non-sentient beings alike, when evolved, "hear" It, or are regulated by It. This All-pervading Power of Direction is the great *Informer of the Universe*, the Power that *forms or shapes* every entity, mental or material, and everything in that entity according to its needs. It is the power that vibrates in all things for purposes of regulation; conscious beings feel Its direction, others unconsciously obey it.

2. The word is the Bodiless and Still Voice of God that speaks in or directs the spirits of men (John v. 38) and indeed of all flesh (Numb. xvi. 22).

Hence it is the *Teacher of the Universe.* As in all things, so in man, It stands *within* and *without* him. So long man remains attached to the false shows of the world, he will not be able to realise Its Presence within him. B when he loses interest in the pleasures of the world and craves for Light, a man sanctified in Spirit, a Christ in ma will appear and teach him how to discern the True from the False. The Power that teaches *through* such a personali is none else but the Word or Voice of God which stands without or outside the man who is taught. The *Teach without man* teaches of the nature of the *being* of *God* and His Power, and the methods necessary for the soul t know God. Thus it is that the Teacher outside man teaches of the God *within man*, so that the soul when duly taugh may enter into Spiritual Fellowship with Him and attain Eternal Life.

The "Word" should not be confounded with the Sanctified Spirit of man (John X 36) called Christ. Christ is th Risen Spirit in man (1 Cor. xv. 45, 46), and it is through such a holy medium that the true light (The Voice or Word which emanates from God, called the Holy Spirit of God) flows, and can flow, to suitable learners

" Men versed in the ancient literature of the Ancient Greeks and Hebrews have made *Logos* a theme of great speculation for nearly eighteen centuries." But the truth is, says Sri Parananda, " *Logos* is not a creature of literature at all. *It is a matter of deep spiritual experience.* It is a stern reality attested by the sanctified spirits of men who have attained Christhood, such as Jesus, John and Paul."

Concerning the Holy Trinity, Sri Parananda says, " Boundless and peaceful Being is GOD AT REST. But when He moves, vibrates, or " breathes " for purposes of salvation, he is said to be GOD IN POWER OR MOTION, and is called the HOLY SPIRIT (from Lat. *Spiro*, I breathe). It is this HOLY BREATH OR SPIRIT OF GOD that caused the Heavens and the Earth to appear, endowed lives with bodies, and at last illumined men, in the fulness of time, so as to make them discern what is true and what is false. Thus did he become the *Teacher of Truth* of His own Mercy, in order to save man from the consequences of worldliness. In regard to this function of Illumination or Enlightenment through pure love, God is called the *Spirit of Truth and Grace.*

*John was the favourite disciple of Jesus, who, having renounced the pleasures of the world and betaken himself to the austere practices of godliness, saw as the noonday sun the Holy Spirit functioning within him as Teacher. This great truth, hidden from carnal-minded men until their worldliness is sufficiently depleted, was communicated to John by Jesus *as a fundamental experience of Saints* (John i. 11)—as an experience realisable by all who have been developed enough to attain Christhood (Matt. v. 48 ; Eph. iv.-13). John understood this truth in its proper sense, namely—that the Holy Spirit is not Christ. Then John himself passed from the stage of disciple to that of Master for we have his assurance that—after hearing the doctrine that God is Light (1 John i. 5), that the spirit of man may obtain Christhood (John i. 12, Eph. iv. x 13) and the perfection of God (Math. v. 48), and that God manifests Himsel in man in due time—he " saw" (1 John i. 3 ) God as Light within him, and attained Life Eternal (Ib. 2) or Christhoo (John xvii. 3).

Having " beheld " the glory of the Holy Spirit in him, John was able to unify his own personal experience wit the teachings of his great Master, and the declarations of the Old Testament, and to record in his story of th Gospel the Mystery of the Holy Spirit, called **Logos**, functioning in " the spirit of all flesh " (Numb. xvi. 22); in ma as Conscience and the Light of Reason, and at a later stage, as Teacher of Truth and Grace ; in animals, as Instinc and in matter, as the physical forces of growth, decay, and change.

Those who have been blessed with Godly experience know the real genesiss of the much debated Johannine "doc trine" of the **Logos**. It is not John's doctrine, nor yet is it Jesus' doctrine, for Jesus has truly declared, " My doctrir is not mine, but His that sent me" (John vii. 16). It is the Lord's doctrine which is *found to be true* by every or who has attained Christhood. (Ib vii. 17). Then we have the testimony of St. Paul, another Master anointed of th Lord. In his Epistle to the Galatians he narrates how he, a Jew, being exceedingly jealous of the traditions of h fathers (Ver. 14), was engaged in persecuting the followers of Jesus (ver. 13), and how one day, several years after tl crucifixion of Jesus it pleased God to reveal to him "His Son in me" (ver. 16), and how thenceforth he began to prea the Gospel to the Gentiles. " I certify you, brethren," said he, " that the Gospel which is preached by me *is not aft man* ; for I neither received it of man, neither was I taught it by man (ver. 11 --12), neither went I up to Jerusale to them who were apostles before me; but I went unto Arabia and returned again into Damascus."



உ

ஓம். ஸ்ரீ.

REDEEMED BY LOVE—(LOGOS)

# காதற்செல்வி.

## காதலிற்கனிந்துய்யல் – அன்பிலாடியமர்தல்.

பக்திமார்க்கம்.

"காதல்நினைவேகாதலிற் கனிவாம்."

தோத்திரம்—PRAISE.

தருமாம்பிகையாம்தாயவள்போற்றி
திருவையாற்றுறைத்திருவடிபோற்றி
திருவாரூருறைத்தேவடிபோற்றி
கருத்துறைநாயகியின்னுயிர்போற்றியே.

போற்றிபோற்றியவள் பேரன்பு போற்றி
போற்றியெனையாண்டருட் திருவடி போற்றி
தேற்றியாற்றித்தேனுறைசுவைபோல்யோகமுறையோதியசேவடிபோற்றி
போற்றியேதானுயோகமுறைநாதமுடிவெய்தியபாதமும்.

## காதலிற்கனிவு.

காதற்செல்வம் - அன்படிமை—Rich in Love—Love's Triump.

1. அன்பேஅமுதேஅருட்தேனே ஆரணங்கே
இன்பேயளித்தென்னிதயத்திருந்தாயே
உன்பேரழியாதுலகத்திடை நிறுத்தி
என்பேயுருக்கியெனையாட்கொண்டருளினையே.

காதலொருமை - அகத்தன்பு—Abide in Love.

2. அருளினையேயின்பாசம்ஆக்கமுடளித்தனையே
உருவாயூனுடலாயுயிருமாயிருந்தெனக்கே;
கருவாயிருந்தகாரிகைபானுலுமொருநொடியும்பிரியாதே
உருவாயுமருவாயுமொன்றினையேயென்னகத்தே.

காதல்நினைவு-அன்பில்சித்தி--Miraculous Power of Love.

3. என்னகத்தேயிருந்தருளியின்னமுது மூட்டிவைத்து
உன்னகத்தேயெனையழைத்தானம்வருமென்றுசொல்லி
மன்னகத்தேயெனைவைத்துமாயமாய் மூடிக்கொண்டு
பொன்னகத்தேபோதியே புன்புலாலொழித்துவிட்டு.

காதலிற்களைதல்-ஸ்தூலசூக்ஷ்மநீக்கம்—Saving Power of Love.

4. ஒழித்துவிட்டுப்போம்போது அழைத்தையேஆர்வமுடன்
கழித்துவிடப்போகிறேன் காயமதையிப்போகான்
அழித்துடல்நானெவ்வுலகம்எங்கெங்கேபோயிடினும்
ஒழித்துவிடே னுன்சிந்தைஉன்னன்பைமறவேனென்றாய்.

* காதலிற்கரைதல்-ஸப்தலோகமுந்தாண்டல் —Its transcending the seven mental states.

5. உன்னன்பைமறவேனென்றாயுலகேழுந்தாண்டிடினும்
என்னன்பையறிந்தவுனக்கேதுநானியற்றிடுவேன்
என்னன்ப, என் கண்ணே, கண்மணியே, ஆருயிரே !
பொன்னகம்போமென்றனக்குப்போகவர மீயென்றாய்.

காதலிற்போதம்-ஆர்வநிறைவு—Fulfilment of Love.

6. போகவரமீயென்றாய் பொற்பாதம்சேர்வேனென்றாய்
யோகசமாதியிலும்போதநிலையனுபோகத்திலும்
ஏகமாய்உயிர்நிலையறிந்துள்ளமுடையுமட்டும்
ஏகமாயெனையறிந்துன்னகத்திருத்துவை யிவ்வரமீவையென்றாய்.

பிரிவாற்றாமை-அத்துவிதபாவமுணர்த்தல்—Feeling of Non-Separateness.

7. ஈவையென்றாயீந்தேனீந்தேனென்றேன் எனைமறந்தேன்
பாவைநீ படுந்துயரம் பொறுக்கலாது ஓஓவென்றாய்
சாவையொரு பொருட்டாயெண்ணிலை நீயானாலும்
ஆவைப்போல்கதறினையே ஆடவன்பிரிவாற்றாமே.

பிரியாப்பிரிவு-அத்துவிதஞாஞேயம்—Perception of Unity in diversity.

8. பிரிவாற்றுதலரினை நீ பேதையுருவெடுத்ததினால்
பிரியாப்பரிவினால் அகத்தோன்றேயாயினம்நாம்
பிரியாப்பிரிவும்பேரானந்தமுமிருக்கையிலே
பிரியாய்! அழுவையோ நீ பித்தற்றுணிகழிந்ததென்றே !

அன்பிலாட்டம்-அனுபவோதயம்—First experience of the Principle of Unity in Love.

9. கழிந்ததுகந்தையென்று அழுவையோ கட்டழகி
இழிந்தவர்சொல்லுமிவ்வார்த்தையுனக்கேனென்றேன் :
அழிந்தழியாதுள்ளதெது-ஆனந்தசொரூபமெது
இழிந்தழிவார்க்கெட்டாத இன்பசுகமளிப்பதெது—

* "உருக்காட்டியுருவழைத்து உருவருவாயுருவழித்தல்" ஸ்வானுபவத்தில்பிரத்தியக்ஷமாம்.



அன்பில்வாட்டம்-அனுபவசாகஸம்—Experimental Stage.

10. எது நித்தியமென்றுஎடுத்துரையோதுமுன்னே—
"எதுசத்தியமோ அதுநா"மென்றோதினையே
"எதுசலனமற்றதெதுவகண்டானந்த மதுநா"மென்றே
மதுசூதனனைநம்பிமாயவன்பதம்தேடினையே.

அன்பிற்சோர்வு-அனுபவத்திரங்கல்—Impatient or Longing to reach the End.

11. தேடினள்அன்பளென்றுதேர்ப்பாகனவன் தானும்
ஓடியேவந்துன்ற னுண்மையுணர்ந்து கொண்டு
போடியென்றேவிவிட்ட பூவையவள்வந்தழைக்க
மாடிவீடுகிடைத்ததென்றுமாநிலத்தைவிட்டாயே.

அன்பிற்றேறல்-அனுபவஉணர்வு—Determining Stage.

12. மாநிலத்தைவிட்டு மாயனடி சேருமுன்னே
ஊனிலவதரித்தவுன்னுயிர்போகுமுன்னே
மாநிலத்தெனைவிட்டு நீ மாக்ஷிபெற்றுப்போமுன்னே
ஊனிலூன்படவூறென்றழிந்திட வான்முத்தளித்துவகையறியாதேகினையே

அன்பிலொன்றல்-காதலிற்கனிவு-'பக்தி'—Fruition of Love : Redemption. or 'Be-ing in Love.'

13. ஏகினையேயானாலுமெனைமறந்தையிலையொருபோதும்
ஏகினவுனையானும்எக்கணமுமறந்தேனில்லை
ஆகினவூனுமூனுமொன்றுபட்டழிந்துட்கருவானதுபோல்
ஏகினவுன்கருவுமென்கருவுமொன்றுபட்டழிந்துள்ளதுவாயிற்றே.

அன்பிலமர்தல்-சாந்தம்—Perfection in Love—The Peace that passeth all understanding.

14 உள்ளதுவாயிற்றானும்கழிந்ததினி
யுள்ளத்துணர்வி னூனுணர்வு மொடுங்கியது
பள்ளத்துநீர்தங்கும் பான்மை போலுளவீச
னுள்ளத்துனையெனையுமொருங்கயர்த்திக்கொண்டானே.

அர்ப்பணம்-என்காதலிக்கு—Dedication : To Logos-My Love.

15. என்காதலியே கண்மணியே கார்முகிலே காமுகர்க்கரிகாருணியே
உன்காதலிலே யீடுபட்டுக் கடைத்தேறின னடிநானே
என்காதல்நிலை அறிந்தேநீ காதலியாய் வந்தாண்டாய்
உன்காதலருள் அமுதுண்டேன் காதல்வெள்ளம்கரைகடந்தே.

ஓம்தத்ஸத்.

உ

ஓம்.

ஸ்ரீ அகண்டானந்தசத்குருவேநம :

SALVATION BY SPIRITUAL DISCERNMENT.

# அகண்டானந்தம்.

## அறிவிலாய்ந்தமர்தல்.

"அபேததரிசனம் ஞானம்."

ஞானமார்க்கம்.

---

*பேரன்பு*—Love Infinite.

1. அன்பே யானந்தம் அருளுமோ ரானந்தம்
இன்பே யானந்தம் இன்னுயி ரானந்தமென்பர் ;
என்பே யுருக்கியின்னுயி ருண்ணன்பன்றி வேறுளதோ
என்பே யுருக்கியன்பா லெனையாண்ட ஆனந்தநாயகியே.

*அகண்டானந்தம்*—Bliss Infinite or That Changeless and Motionless Being Called Godhead.

2. ஆனந்த நாயகியே யாரமுதே யருட்சுவையே
ஆனந்த மொருநிலையதீத மொருநிலை யதன்மேல்
ஆனந்த மொழியவே யசைவற்று நிற்குநிலையில்
ஆனந்தசுகாதீதசொப்பிரகாசமேயலோவகண்டானந்தமடிதாயே.

*பேரருள்வரன்*—Invocation to Grace Infinite.

3. தாயே தனிமுதலே தானேதானானவளே தயாவே
நாயே னுன்னடிபணிந்து நாட்டிலுள்ளார்க் கருளீய
வாயேன் வாராயேல் வன்மையிலேன் மாய்வேன்
நாயேன் நயந்துரையேன் நாத்தழும்பனுன்னன்ப னருளன் ஆனந்தனே.

*சுத்தமாயை*—Chaos or Cosmic Stuff.

4. ஆனந்த நாயகியே யாதிமுதற்சத்தியே யருட்டேனே
ஆனந்த மயமென்பா ரதுவுமொரு கோசமே
ஆனந்த மஞ்ஞானம தாதியிற்காரிருட் சுத்தம்
ஆனந்த இருளிலொளித்த ததுவருட் சோதியே.

*சகஉற்பத்தி*—Cosmos or Evolution of the Universe.

5. சோதியே சுடரே சொல்லிறந்த மதியே
ஆதியனாதியே யசைவற்ற முழுமுதலே
ஆதியிற் பாதியா யவதரித்த தருளாலே
ஆதியும் பாதியுமிருளுங் கலந்தாய தண்டபகிரண்டங்களே,



*அண்டபிண்டம்*—Macrocosm and Microcosm.

6. அண்டபகி ரண்டங்களு மாயதவ னருளாலே
அண்டத்திற் பிண்டம்போல் பிண்டத்தி லண்டமாம்
அண்டமும் பிண்டமு மாயவதரித்த காரணனை
அண்டபிண்டமா யறிவர் பகிர்-அகமுகப்பார்வையாலே.

*பகிர்-அகமுகப்பார்வை*—Experimentation-Objective and Subjective.

7. பார்வை யிரண்டுண்டு: பகிர்-அகமுக மென்பர் ;
பார்வை பகிர்முகம் பரந்தவுலகா ராய்ந்தால் ;
பார்வை யகமுகமுள்ளுணர்வை யோர்ந்துணரில் ;
பார்வை யிரண்டுமொன்றுவ துணரார்பரிதவித்துழல்வாரே.

*விருதாவார்த்தை*—Vain Protests.

8. பரிதவித்துழல்கின்றார் பாரிலுள்ள சீவர்கள்காண்
பரிந்துபலபேசுவர் பாரைச்சீர்திருத்தென்பர்
அரிதறிந்துணரவோ ஆர்வமுமில்லை யென்பர்
அரிதரிது கொடுமையிது ! அநியாயமிது வென்பாரே !

*அகம்பாவக்கூத்து*—Vanity Fair.

9. என்பாரே யவர் எல்லாமறிந்தவர்போல்
வன்பேச்சுப்பேசுவர் வான்மேற் பழிபோட்
டுன்பேச்சுக் கேளேனுண்மையு முணரவல்லேன்
என்பேச்சுக்கேட்டே நீ யிவ்வுலகையிரக்ஷி யென்பார்.

*அகச்செருக்கு*—*Vanitas Vanitatum.*

10. இரக்ஷியென்பார்கக்ஷிபேசிக்காலமும்போக்கிடுவர்
இரக்ஷிப்பானுளனொருவன் உனக்கேன்கவலையென்றால்
இரக்ஷிப்பா னிரக்ஷித்தால் இத்தனைபேரிரப்பானே'ன்பர்
இரக்ஷிப்பானைநோவரிரந்திறப்பான்குற்றமோராரே.

*அசிரத்தை*—Want of Faith.

11. ஓராரே யுண்மையில் உள்ளதொரு காரணத்தை
தாராரே தம்முயிரைத் தரணியுள்ள சீவர்கட்கு
ஓராதுணரா தொருநிலையாய் நில்லாதூனர்
சாராதுபார்த்துணரச்சார்பின்றித் தவிக்கிறாரே.

*அதர்மம்*—Stifling of Conscience.

12. தவிக்கிறாரே யவர் தன்னுணர்வின்றியே
அவிக்கிறாரே யவர் அகவிளக் கொளிதனை
தவிக்கிறாரே யவர் தரணியிற் பிறந்துமையே
கவிழ்க்கிறாரே யவர் காயமா மோடந்தன்னை.

பிரபஞ்சநாடகம்—The World-A Drama.

13. ஓடமாமுடலிதுவென்று உண்மையிலோராமே
வேடமாமிப் பிறவியுலகுமோர் நடர்க்களமாம்
வேடம்போட்டாட வந்தநாடகன் சிவன்தானே
ஆடவன் ஆங்காரி ஓட்டுவன் ஓங்காரி.

ஓங்காரி—The Ruling Principle of Life.

14. ஓங்காரி யவள்தானே ஆங்காரியாயினள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றெடுத்தாள்
ஆங்காரிய மெல்லாம் ஐவர்தந் தொழிலாம்
ஆங்கார மழிந்தாலது ஓங்கார மாமே.

ஓங்காரம்—The Principle explained as Evolution, Involution and Absorption.

15. ஓங்காரமாவது விரியுங் குவியும்
அகாரம் விரியும் உகாரம் குவியும்
மகாரமொடுங்கும் மோனமுமாகும்
அகாரஉகார மகாரமாய் நிற்பது ஓமதுவாமே.

ஓம்—Application of the Principle.

16. ஓம்எனச் சொல்வது பிரணவமந்திரம்
ஓம்எனக் கொள்வது பிரணவப்பொருளையே
ஓம்எனக் காட்டுமுறை விர்த்திக்ஷபலயம்
ஓம்எனக் குறிப்பர்காட்டுக்குறிக _ந்தகாரணன் தன்னையே.

காரணகாரணன்—The Triple Nature of the Principle or First Cause. *

17. காரணகாரணன் காரியமிலானவன்
காரணகாரிய உபாதனமாமவன்
காரணகாரிய மிரண்டிலு முள்ளவன்
காரணகாரியமிரண்டையுநீக்கக்காரணன்தானே யொளிவிட்டுநிற்பனே.

உபாதனம்; மாயை—The Material Cause: Chaos or Darkness.

18. ஒளிவிட்டுநிற்பானில் ஒளித்திடும்மாயை
ஒளித்தஅம்மாயையே உபாதனமாகும்
ஒளித்தஅம்மாயையின் மகிமையைக்கூறிடில்
ஒளிக்கும்மறைக்குமது ஒன்றிற்பிரியில்.†

கனகசபை; ப்ரஹ்மாண்டம்—The Cosmic Egg—The Laboratory where the First Principle works.

19. ஒன்றிலதுமாயையொட்டாததிலொடுங்குந்தானும்
‡ ஒன்றிற்பிரியிலது ஒளித்திடும்பொன்னிறக்கருவாய்
மன்றிலாடும்மாயாவற்கது நடித்திடுகளமாம்
மன்றிலாடுமாயவன்நடித்திட மாநிலமனைத்துமாயதுநன்றே.

* As (1) Motive, (2) Instrumental, & (3) Material cause in One.

† ஒன்றில்-அகண்டமாகில்; பிரியில்-இரண்டன்றிப்பிரியில்.

‡ ஒன்றிற்பிரியில்-அத்துவிதமாகப்பிரியில்.



கூத்துக்காட்சி—The Miraculous working of the First Principle: Its first perception by the released soul an unspeakable Joy and Wonder.

20. நன்றிதுஆட்டம் நன்றிதுகூத்து நன்றுநன்றிதுநடனம்
அங்குமிங்குமெங்குங்கண்டிலே னிதுவொருவதிசயங்காண்மினோ
ஒன்றினின்றன் றுணர்வழிந்துள்ளொளி யானபின்
அங்குமிங்குமெங்குமிதுவலால் மற்றொருஅதிசயங்காண்கிலேனே.

எங்குமதுவே—It is Universal and All-pervading.

21. காண்கிலேனதிசயங்காணூயும்வேறிலை துன்பமுந்துக்கமு மின்பசுகமெலாம்
ஆண்பெண்அதுவென அவதரித்தாடுவனவெல்லாம் அவன்திருவருட்கூத்தாம்
ஆண்பெண்அனைத்தையும் ஆக்கியழித்துக் காப்பதவன்தொழில்
மாண்பெறுதகையனும் மாயவன்கருணையையுணர்ந்துமுணர்கிலாருளரே.

உலகறியா—Beyond the ken of the worldly-minded.

22. ஊனரேயாமவர் உளக்கண்ணொளியிலாத் தன்மையினர்
கூனரேயாமவர் கூன்விட்டுவானுக்கு உகையறியாவன்மையினர்
கூனரும்கூனரும் குனிந்தபடிவானைக்கக் கூடினதொக்குமே
ஊனருமூனருமொன்றுபட்டு லகறியாமாயனைக் காண்டிடுமென்னலும்.

தேசிகன்தேவை—A Sanctified Spiritual Teacher-Essential.

23. காண்டிடுமென்பார்காயத்தைதவதைத்திடுவருள்மர்மமுணராதே
ஆண்டியாய்வேடம்போட் டலைந்திடுவார் அகந்தூயாதே
ஆண்டிடுந்தேசிகனடிபணிந்தருட்கண்பெற்றாரேல்
ஆண்டியாய்மாண்டுபிறவாதவரம்பெற்றுய்வாரே.

உய்வழி—Means of Salvation.

24 உய்யாரேயவருள்ளன்புண்மையில் வையாரேல்
உய்யாரேயவருள்ளுணர்தேசிகன்உளக்கண்ணளியானேல்
உய்யாரேயவருள்மலம்நீக்கியுள்ளத்தமாரேல்
உய்யாரேயவருள்ளத்தமர்ந்துள்ளுணர்ச்சோதியைஓராரேல்.

ஆராய்ச்சிமுறை—Aids to Success.

25. ஓராரேயவருடல்பொருளாவியி னுசையொழியாதே
ஓராரேயவருணுணர்வொழியா திருவினையறுத்திடு மர்மம்
ஓரரேயவர்சத்தியாசத்திய நிலையறிசாதனமின்றி
ஓராரேயவருணுணர்வற்ற வுத்தமசித்தர்தம்வாசனையின்றியே

அனுபவசித்தி—Realisation.

26. இன்றியேபோகுமவர்க்ககத்திலுள்ள துன்பமெல்லாம்
ஒன்றியேதானமர்ந்ததன்மையினற் சகசநிலைசித்திபெற்றால்
நன்றியேசெய்வார்நாடெலாம்காத்துக் கார்முகிலொப்பார்
ஒன்றியேயுள்ளத்தருவாயிருந்தவருலகையுமாட்டிவைப்பாரே.

அர்ப்பணம்—Dedication—To Ripe Souls thirsting for Realisation.

27. தில்லைவாழந்தணர்தம்தேசிகனும்தாசன்பார்த்து
எல்லையிலா வானந்தநடம்பார்ப்பான் பாரினின்று
தில்லைவரும்பக்தர்கள் பரிபக்குவர்பலருமுய்யப் பரிவுகூர்ந்து
எல்லையிலாக்கருணைநிறைசிவகாமியம்மை ஏதமறவழங்குகவென்றேவினளே.

ஓம்தத்ஸத்.

சுபமஸ்து.

## ஓம் நமோநம:

"அபிவாதயே பார்க்கவ வீதஹவ்ய ஸாவேதஸ த்ரிகுணேத்ர ப்ரவராந்வித-அவதூதகோத்ர: ஆபஸ்தம்ப-சூத்ர: சதுர்வேதஸத்புருஷ: ஸத்தியாநந்த: சாந்தசர்மாநாமாஹமஸ்மிபோ."

காயேநவாசாமநஸேந்திரியைர்வா புத்தியாத்மநாவா ப்ரக்ருதே: ஸ்வபாவாத், கரோமி யத்யத்ஸகலம்பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி.—சிவசிவ-சிவசிவசிவ-.

"அஹமஸ்மி பரச்சாஸ்மி ப்ரஹ்மாஸ்மி ப்ரபவோஸ்மியஹம். ஸர்வலோககுருச்சாஸ்மி சர்வலோகோஸ்மி ஸோஸ்மியஹம். அஹமேவாஸ்மி ஸித்தோஸ்மி சுத்தோஸ்மி பரமோஸ்மியஹம். அஹமஸ்மி ஸதாஸோஸ்மி நித்யோஸ்மி விமலோஸ்மியஹம். விஜ்ஞானோஸ்மி விசேஷோஸ்மி ஸோமோஸ்மி ஸகலோஸ்மியஹம் . . . ஸர்வதாஸமரூபோஸ்மி சாந்தோஸ்மி புருஷோத்தம: ஏவம்ஸ்வாநுபவோயஸ்ய ஸோஹமஸ்மிநஸம்சய: ய:ச்ருணோதி ஸக்ருத்வாபி ப்ரஹ்மைவபவதிஸ்வயம்." மைத்திரேயோபநிஷத்-3-வது அத்தியாயம்.

---

## பராபரன் கோர்ட்டில் தாக்கலான புராதன வழக்குக்கு தீர்ப்பு.

சாத்விக்கிரோமணி - மாயாண்டிப் பிள்ளை நமக்குப் பின்வருமாறுஎழுதுகிறார்:—

அந்தஹு வந்தமீ இந்தத்தேதியில் ஆத்மநாதன் கொடுத்த பிரியாது பராபரன் கோர்ட்டில் விசாரணையாகி முடிவானதாக என் தயாரிடமிருந்து கடிதம் வந்துளது. அதில் தீர்ப்பு சுருக்கமாயெழுதப்பட்டிருக்கிறது. அதில் கண்டபடி விடவேண்டியவைகளை விட்டுக்கொடுக்க வேண்டியவைகளைக் கொடுத்தால் நிறைவேற்றுமனு அங்கிகரிக்கப்படும். இம்மி குறைந்தாலும் பிசகினாலும் அனுபவபாத்தியம் கிட்டாது. இதை உலகறிய உங்கள் பத்திரிகையில் பிரசுரித்து வாதி ஆத்மநாதனுக்கும் அவனைப்போலொத்தவர்களுக்கும் தெரிவிக்கக்கேட்டுக் கொள்கிறேன். திருவாதியிலுறையுமென் தாய் பின்வருமாறு எழுதியிருக்கிறாள்:—

"குழந்தை சா - மா - க்கு நித்யானந்தமுண்டாகுக. உன் கடிதமும் பேபரும் பார்த்தேன். பிரியாதுக்குத் தீர்ப்பு சுருக்கமா யெழுதப்பட்டிருக்கிறது:—

### பராபரன் கோர்ட்டில்

**பாரிஜட்ஜ் அகண்டானந்தலெக்ஷியதேசிகன் முன்னிலையில்.**

**தீர்ப்பின் சுருக்கம்:**—"வாதி ஓர் நிலையாய் உரைப்பதாலும் வாதியின் சாக்ஷிகள் ஒரேசொல்லாயுரைப்பதாலும் ஞானபூமியானது வாதியுடையதென்றே தீர்மானிக்கப்படுகிறது. ஆகிலும் வாதியின் காணி வாதியால் வெகுநாளாகப் கவனிக்கப்படாமலும், தனதல்லாததான உடல்பொருளாவியைத்தனதாகப் பாவித்து அதனிடத்தில் நிதானம் வைத்திருந்ததால் அக்ஞான குளமான தரிசு பிரதிவாதிகளால் அனுபவிக்கப்பட்டுவந்து விட்டது. அனுபவபாத்தியதைக்காக, வாதியால் இதுவரை சேகரிக்கப்பட்ட புண்ணியபாப சங்கல்பாதிகளை அறவேகொடுத்தால் பிரதிவாதி யொவ்வொருவனும் இருந்தவிடந் தெரியாமல் போவான். தனதல்லாததான உடல் பொருளாவியையும் நியாதிபதியாகிய ஸர்க்காருக்கு ஒப்பித்துவிடவேண்டுமென்று வாதிபக்ஷம் தீர்ப்பு.

இந்தஹு இந்தமீ இந்தத்தேதி,
திரு ஆதியில் பிரணவ முத்திரை
போட்டுக்கொடுக்கபபட்டது.

(ஒப்பம்) அகண்டானந்த லெக்ஷியதேசிகன்,
ஓம். பராபரன்கோர்ட்டு பாரிஜட்ஜ்.



## தமது சொந்தமுயற்சியால் முன் வந்தவர்கள்.

(192-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்பெரிய தத்துவ சாஸ்திரியால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் அரிய தத்துவங்களை பல்லாம் எடுத்துக் கூறவிடமில்லை. 1827-ம் ருஷத்திலே அவன் தேகசவுக்கியம் மிகவுங் கவலமாய்ப்போயிற்று. தனது வேலைகளை ப்லாம் விட்டு விட்டு தேகசௌக்கியத்தை டுவதவசியம் என்று நிச்சயித்தான். ஆகவே ராஜசாஸ்திர சங்கத்தின் தலைமைத்துத்தை விட்டுவிட்டான். உடனே தீவை ட்டு கண்டத்திற்குச் சென்றான். இங்கிலாந் வில்லாத காலத்திற்கூட இவன் இரசாயன சாரணைகள் செய்துகொண்டேயிருந்தான். னது விசாரணைகளின் முடிவுகளை இலிகித மாய் இராஜசாஸ்திர சங்கத்திற்கு அப் ாதைக்கப்போது தெரிவித்துக்கொண்டே ந்தான். சரீரத்தில் பல மின்மையும் பிணிக ம் அதிகரித்துக்கொண்டிருக்கையிலே கூட வன் சும்மாயிராது பற்ற விஷயங்களைப்பற் ச் செவ்விய மதுரமான நடையில் சிலகிரந்தங் ர் எழுதினான். அக்கிரந்தங்களிலொன்று சால்மோனியா" என்பது. பறவைமீன்க ப் பிடிப்பதைப் பற்றிய விஷயம். இப்புத் கம் 1828-ம் வருஷத்திலே வெளியாகியது. ச்சிறிய புத்தகம் பிரகிருதியிற் சில அருமை ான விஷயங்களை யெடுத்து உண்மையாக ம் வனப்பாகவும் வர்ணிக்கின்றது. ஆக்கி ான் குணங்களான மனதிணக்கத்தினையும் ந்தியையும் உள்ளூறக்காட்டுவது. மிகவுஞ் சுறுப்புள்ள அவன் மனது அவன் சாகும் யந்தம் எப்போதும்போலவே களைப்படை த உற்சாகத்துடனே உழைத்தது போலும். மற்கூறிய கிரந்தம் தவிர, இக்காலத்திலே வன் எழுதிய தான மற்றோர் நூல் உளது. ற்கு "ஓர் தத்துவவிசாரியின் இறுதி நாட் ," என்று பெயர். இப்புத்தகம் இவன் ந்த பிறகு வெளியாகியது. சர் ஹம்பிரி டேவி என்பான் 1829-ம் வருஷத்திலே மேமீ 30உ யிலே ஜினீவா' நகரத்திலே தேகவியோகமடைந்தான். இறந்துபோக ஜினீவா நகரத்திற்கு வந்தனன் போலும்; முதல் நாள் தான் அந்நகரத்திற்குவந்து சேர்ந்தான். சயனகிரகத்திற்குப் போகவும் ஜன்னிபிறந்தது. விடியற்காலத்தில் ஆவி குடிலை விட்டது.

சர் ஹம்பிரி டேவியின் சமயக்கோட்பாட்டைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஆயினும் அவனாலியற்றப்பட்ட சன்மார்க்க நூல்களிலொன்றில் பின் வரும் பொருள்வன்மையுள்ள ஓர் வாக்கியமுளது. "மற்றொருவரிடத்து ஏதேனுமோர் மனக்குணத்தையாகினும், புத்தியையாயினும், வன்மையையாயினும், மனோரதத்தையாயினும் பார்த்துப் பொறாமை கொள்கின்றிலன். ஆயினும் எனக்கு மிகவும் திருப்திகரமாயும் உபயோகமுள்ளதாயு மிருக்குமொன்றைத் தேடப்புகுந்தால் மற்றெல்லாச் சம்பத்தைக்காட்டினும் ஓர் உறுதியான சமயக்கோட்பாட்டையே தேர்ந்துகொள்வேன்" என்று இவன் எழுதியிருக்கின்றான்.

டேவி என்பான் எத்தொழில் பேற்கொண்டிருந்தாலும் ஆனந்தித்திருத்தலே சுகமெனக் கருதினான். 'ஆவன்' நதிக்கரையிலேயுள்ள பாழடைந்த 'பியஸ்டம்' என்னுமிடத்திலே இருந்தாலும், ஸ்காட்லாண்டின் உயர்ந்த பூமியென்னும் பாகத்திலே மலையருவிகள் பாய்ந்தோடும் ஆழ்ந்த பள்ளதாக்குகளிலே அலைந்து திரிந்திட்டாலும், தாய் முகத்தைக்கண்டு உற்சாகமடையும் குழவியைப்போல், பிரகிருதியின் முகத்தைக்கண்டு ஆனந்தபுளகாங்கிதனாய் தேகசவுக்கியம் பெறுவான். கம்பீரமாய் மகத்தான வின்பத்தைத் தரும் பிரகிருதியின் தோற்றமெல்லாம் அவனுடைய மனதை அகன்று பாவச்செய்தன.

அருந்தமிழில் வல்ல புலவீர்காள்! நீவிரெல்லோரும் இது காறும் சொற்பிழை மல்கிய எனது வியாசத்தை தமதிளங்குமரன் மழலைச் சொற்களைக்கேட்டு ஆனந்திக்கும் தந்தைகளைப்

போல, பொறுமையுடன் கேட்டிருந்தீர்கள். ஒருவனுக்கு மிகுந்த ஊக்கமுளதாகில் தனக்கு வந்த வறுமையையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் போக்கிக்கொண்டு அழியாக்கீர்த்தியையும் பெறலாமென்று சொல்லவந்த யான் இவ்வாறு ஓர் கதையைப்பிதற்றினன்.

டேவியின் சரித்திரக்காரர் முடிவாக ஒன்று சொல்லுகிறார். அதை எடுத்துக்கூறி எனது வியாசத்தை முடிக்கின்றேன். "ஒருவன் ஏதேனும் ஒரு மனோ விருத்திக்கு தனது மனதையும் இருதயத்தையும் அர்ப்பணமாகச் செய்துவிடுவானாகில், அம்மனோ விருத்தியிலே அபூர்வமான கீர்த்தியைப் பெறுதற்கு ஓர் நீண்ட வாணாள்வேண்டுவதில்லை என்று எடுத்துக்காட்ட, டேவியின் சரித்திரத்தைப் பார்க்கிலும் வேறோர் வியக்தமான திருஷ்டாந்தம் வேண்டுமோ? இப்பெரியோன் உண்மையாகவே மனோவிருத்தி என்னும் அரங்க பூமியிலே பிரவேசித்து ஓர் நொடிப்பொழுதில் கீர்த்திபெற்றான். கீர்த்தி பெற்றானென்றால், மேலே எடுத்துக்கூறியவண்ணமே அது சொக்கட்டான் பாச்சிகை பத்தும் பன்னிரண்டுமாய் விழுந்ததல்ல! பாலியம்முதல் கீர்த்தி பெற்ற வந்நாள்வரையும் தான் பட்ட பிரயாசையாலும், மனோபாவங்களை பழக்கத்தால் வளரவைத்ததாலும், விடாமுயற்சியாலுமே என்றறிதல் தகும். பாலிய காலத்திலே தான் மேற்கொண்ட படிப்பைத் தனக்குச் சொல்லிக்கொடுப்பாரொருவருமில்லையேனும், மேன்மேலும் விருத்தி யடையும்படி அவனுக்கு உற்சாகத்தை மூட்டித் தைரியப்படுத்துவோர் ஒருவருமில்லையென்றாலும், இவன் இருபத்தொன்று வயதாகுமுன்னரே அக்காலத்தே கீர்த்திபெற்ற இரசாயன சாஸ்திரிகளினிடையே புகும்பேறு பெற்றான். இரசாயன சாஸ்திரியாயிருந்து அத்தனை விசாரணைகள்செய்த காலம், அத்தனை மதுகரமான கிரந்தங்கள் செய்த காலம், அத்தனை மதிக்கத்தக்க தத்துவங்களை வெளியிட்டகாலம், அத்தனைக் கீர்த்திபெற்ற காலம், முப்பது வருடங்களடங்கிய வோர் சிறிய காலமே யல்லாது வேறுண்டோ? அவனிறந்தபோது அவனுக்கு வயது ஐயம்பத்தொன்று பூர்த்தியாகவில்லை. மேலும் டேவி தத்துவ விசாரகன் மாத்திர மல்ல. பொதுவாய் அவன் பெற்றபேரெல்லாம் பலவகைப்பட்டன. முக்கியமான ஐரோப்பிய பாஷைகளெல்லாம் அவனுக்குத் தெரியும். தனது சொந்த பாஷையிலோ தத்துவ சாஸ்திரப் புத்தகங்களிலே சாதாரணமாய்க் காண முடியாத வோர் சொல்வன்மையுடன் எழுதுவான். அவனுடைய கிரந்தங்களெல்லாம் ஆக்கியோன் படித்தவனென்றும், அலங்காரக் காவியங்களை விரும்பியவனென்றும் யுக்திசாலியென்றும், கைதேர்ந்த தத்துவவிசாரி யென்றும் நன்றாய்ப் புலப்படுத்தின. மனோலோகத்திலே பெருங் கீர்த்திபெற்ற மற்றவர்களைப் போலவே இவனும் தன் மனதிற்கினிய மார்க்கத்திலே பிரவேசித்து, அதிலே மிகுந்த பராக்கிரமத்தோடு விடா முயற்சிசெய்து முன்வந்தான். ஆயினும் தீவிரபுத்தியின் மற்ற வேறுபாடுகளையும் மிகவும் மதித்தான்."

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

டி. இராஜம் ஐயங்கார் பி.எ., எல்.டி.

## SHORT STORY.

## விசாலாட்சி.

என்னடீ! நேரமாயிற்று? வயிற்றுப்பசி கப, கபவென்கிறது. நேற்று அங்கே விருந்து யோக்ளாவில் கொஞ்சம் ஜாஸ்தியாய்த் தின்றுவிட்டதில் வயிற்றுக்குள் "இராம இராவணயுத்தம்" செய்தது. மருந்தும் தின்றேன். இராத்திரியும் சாப்பிடாமல் படுத்துக்கொண்டு விட்டேன். இப்போதோ பசி அகாதமாயிருக்கிறது. ஜல்தியாய் சமையலாகட்டும்" என்றார் கிருஷ்ணய்யர். அதற்கு அவர்மனைவி,



"ஆச்சு! ஆச்சு! எல்லா சமையலுந்தான் ஆய்விட்டதே? உங்களுக்குப் பூஜைவேறே லட்சணம். இரண்டுகாசு கையிலேறினால் அன்று "ஸ்ரீமந்நாராயணன் பெட்டியைக் கொண்டுவந்துவை" யென அன்று அபிஷேகம், அர்ச்சனை, வெகுமும்முரமாய்ச் செய்கிறது. ஒரு பைசாவுக்கும் வழியின்றிக் கைவறண்டால் "அந்த இழவுபெட்டியைப்போடு. தண்ணீரைத்தொலைக்கலாம்" என்பதும் தெரியாதோ? இப்படி சுவாமியை வஞ்சித்துத் தானே இப்படியாச்சு? எல்லாம் அபிஷேகம் பண்ணித்தொலைத்தால் கொட்டிக்கொள்ளலாம். இது தான்கண்டது. நிம்மதியா யாவது பிழைக்கிறோமா? அதுதானுமில்லை. என்னமோ என்தலையிலெழுத்து இப்படியாயிற்று" எனச்சிறிது மனவருத்தத்துடன் பேசினாள். அதற்கு அவர்,

"ஏண்டி? அதற்கென்னபண்ணுகிறது? நம்மகஷ்டம் நாமனுபவிக்கவேண்டியதுதான். வௌவால் வீட்டுக்கு வௌவால்போனால் நீயொருபக்கம் நானொருபக்கம் என்பது போல்தான். அப்படியாவது சொத்து யதேஷ்டமாய் என் அப்பன் வைத்துப்போயிருந்தால் நீபெரிய இடத்துப் பெண்ணாயிருப்பதற்கும் உன் அந்தஸ்துக்கும் பெருமையா யிருக்கும்?

"ஆ! இந்தப் பேச்சுத்தான்கண்டது. உங்களைக்கட்டிக்கொண்டு நான் வாழ்ந்த சுகம் போதும். ஜன்மத்துக்கும் போதுமம்மா! எத்தனையோ பேர் எவ்வளவோ வாசனையாய்ப்பிழைக்கிறார்கள். ஒரு நாளாவது நல்ல நகை யென்பது கண்டேனா? நல்லசேலையுடுத்தியிருப்பேனா? பக்கத்தாத்து குஞ்சம்மாளுக்கெவ்வளவோ நகை! கணக்குண்டா! காதில் வைரக்கம்மல்களும், கையில் தங்கக்கொலுசும், காப்பும், மூக்கில் வைரப்புல்லாக்கும் இடையில் பனாரிஸ்பட்டும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமே? மஹாலட்சுமியாட்டமா! நானும்நாலு பெண்களைப்போல் தான் நல்லபதவிக்குவரவேணுமென்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேன். "பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறவேணும்" என்றாற்போல உங்களைக்கட்டிக் கொண்டு நன்றாய் அனுபவிக்கிறேன்—என்று கோபதாபத்துடன் மொழிந்தாள். அப்பருக்குப்பசி யதிகமாயிருந்ததாலும், தான் மறுபடி ஏதாவது பேசினால் இன்றைக்கு அன்னத்துக்கு சுன்னமாய்விடுமென்றும் தெரிந்து, யாதும் பேசாது மௌனம் சாதித்து ஜல்தியில் பூஜையைமுடித்து சாப்பிட உட்கார்ந்து "கோபு" எங்கே என்றார். அதற்கு அவர் மனைவி "எல்லாம் அவன் அப்புறம்வந்துதொலைவன். நீங்கள் முன்னாடிசாப்பிட்டுக் காரியமிருந்தால் பாருங்கள். எனக்கில்லாத உருக்கம் தான் உங்களுக்குவந்ததாக்கும்" என, அய்யர் சரி! சரி!! எனவெழுந்து சென்றார். இவர் வெளியே சென்றதும், அவர்மனைவி வாசல்பக்கமிருந்த உள் நடையில் உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் செக்கச்செவேரென்றிருந்தது. ஒருவேளை சாப்பிடாத தோஷத்தாலோ அல்லது கோபத்தாலோ அப்படியிருந்தன. அவள் இடதுகையால் நாடியைத்தாங்கிக்கொண்டு வலதுகையால்கீழே மண்ணைக்கிள்ளிக்கொண்டு ஆழ்ந்த யோஜனையில் இருப்பவளாகத்தென்பட்டது. அவள் அடிக்கடி தாழ்த்தியிருந்த தனது தலையை ஏறிட்டு வாசல் கதவைஉற்று உற்றுப்பார்ப்பதனால் ஏதோ ஒன்றைப்பற்றிச் சிந்தித்து ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் தெற்றென விளங்கிற்று.

சற்றுநேரத்திற்கெல்லாம் கதவைத்தட்டுகிற சப்தம்கேட்டு "யாரது"! என்றாள். "ஏனம்மா! நான்தான்." என்றோரினியகுரல் அவள்காதுக்கெட்டிற்று. அவள் உடனே கொதித்தெழுந்து "கட்டேலேபோவான்! பட்டினிபோட்டு எல்லாரையும் கொல்லவாபார்க்கிறாய்? உனக்கு ஒரு சாங்காலம்வரவில்லையே! எத்தனையோ பேர் பொடுக்பொடுக்கென்று போய்விடுகிறார்களே! உனக்கு ஒரு எமன்வரவில்லையே"

என இன்னனையகடு மொழிகளைப்புகன்று ஆக்ரோஷத்துடன் பற்களை நெறநெறவென்றுகடித்துக்கொண்டு கதவைத்திறந்தாள். பையன் உட்புகுந்ததும்கொடுத்தாள் இரண்டரை பையன் கன்னத்தில். பையன் பசியின் கொடுமையாலும், அடிபட்ட அதிர்ச்சியாலும், ஒன்றுந்தோற்றாது நிலத்தின்மீது வீழ்ந்தான் அப்படியே அவனைத் தரதரவென்றிழுத்துவந்து தயிர்கடையும் மத்தால் கால்வீங்கவடித்து "உட்கார் பிண்டத்துக்கு? பேச்சு மூச்சக்காட்டினையோ விழுந்தது உதை" என்று கூரோமாய் மொழிந்து இலைபோட்டு அன்னம் பரிமாறி உண்ணச்சொல்லித் தான் எதிர்குந்தி "தின்கிறதைப்பார் ரணபாதகன். காமாட்டிப் பயிவா" என, பையன் கண்ணும் கண்ணீருமாய் "ஏனம்மா! சாப்பிடுகிறபோதுகூட வைகிறாய்?" என உருக்கத்துடன் கேட்டான். எப்பேர்ப்பட்ட கன்னெஞ்சையும் இளகச்செய்யும் அவன்மொழி அவளுக்கு நாராசம் போன்றிருந்தது. அப்படியே ஒரு குட்டும் குட்டினாள். இதற்குள் தன் புருஷன் கதவைத் தட்டுகிற சப்தம்கேட்டு எழுந்துபோய்க் கதவைத்திறக்க அய்யர் உள்ளேவந்தார். இதற்குள் பையன் கண்களைத்துடைத்துக் கொண்டான். அய்யர் "ஏனடி இவனழுகிறான்! அடித்தாயா என்ன?" என்றார். அதற்கு அவர் மனைவி,

"ஆமாமா! யாரோ அடித்தார்கள். குறஅழுகை அழுகச்சொல்லுங்கோ! சோறு சாப்பிடுகிறதேயில்லை. தாங்கள் இதைப்பற்றி பெண்ணை ஒன்றுங்கேட்கவேண்டாம். எனக்கு அவன்பேரில் காற்றடிக்கக்கூட சகிக்கமாட்டேன். எனக்கிருக்கிற பக்ஷம்பராமரிப் மாதிரி அவன் தாயாருக்குக்கூட இராது. "ஏண்டா நீ என்கட்டிக்கரும்போ இல்லையோடா?" என்று அவனை ஜாடையாய் முறைத்துப்பார்த்துக்கேட்டாள். நாம் ஏதாவது தப்புந்தாறுமாய்ச்சொன்னால் பிரகாரம் சாதிப்பதில் ஆக்ஷேபமிராது" எனப் பையன் நடுங்கி "ஆமா" என்றான். அய்யர்: "அவள் பார்த்தையா! எவ்வளவு பிரியமாயிருக்கிறான். அவள் சொல்லைமீறி நடக்காதே?" என உபதேசம்பண்ணிவிட்டு பொடிச்சிட்டிகையையெடுத்து உறிஞ்சிவிட்டு நடையில் ஆயாசத்தால் குறட்டைவிடலானார். கோபாலன் சாப்பிட்டெழுந்து நடையில்வந்து தனக்கு தகப்பனார் போதித்ததையும், தன் மாற்றாந்தாய் தனக்கு இதுகாலும்செய்வான் வேண்டிய இடுக்கண்களை ஆராய்ந்தெடுத்தும், அதற்குத்தான் தெய்வச்செயலாய்த் தப்புவிக்க நேர்ந்ததையும் எண்ணிஎண்ணி மனம்புண்ணாகி இன்னும் சிலநாளிங்கிருந்தால் நாம் உயிரோடு மீளமாட்டோம்; எங்கேயாவது— கடவுள் விட்டவழிவிடட்டும்.-போய்விடுவதே சரி" என, மனமானது தாமரையிலைத் தண்ணீர்போல் தத்தளிக்க, செய்வதியாதெனவறியானாய் தன்னிரண்டு வேஷ்டிகளையுமெடுத்துக்கொண்டு வெளிப்புறப்பட்டுவிட்டான்.

* * *

அப்போது அவனுக்கு சுமார் 18, 20-பிராயமிருக்கலாம். "எவ்வளவு கஷ்டம் வரினும் அனுபவித்துச் சுகப்படுவோம்" என்று தோற்றும்படியான வசீகரமானமுகமும், விசாலித்த கண்களும், எடுத்தமூக்கும் நீண்டுயர்ந்தகன்ற தோட்களும், சிவந்தமேனியும், தைரியலட்சுமியும், தனலட்சுமியும் இருப்பிடமாகக்கொண்டு விளங்காநிற்கும் அவன் ஆற்றலும், அதிரூபமும், கண்டோர்மனம் கவரவும் இளகவும்செய்யக்கூடியனதாகவிருந்தது. இன்னனைய சிறப்புற்ற இவ்விளவல் மதுரைமாநகரம் சேர்ந்தனன்.

* * *

அக்காலத்தில் மகமதியர்கள் படையெடுத்துவந்து ஜனங்களைப்பலவாறு இம்சைசெய்துவந்தார்கள். அவர்களைத்துரத்திவிட்டுவரும்படி விஜயநகரத்தில் ஆண்டிருந்த இராயர் தனதுபடைத்தலைவனை யனுப்பியதாகவும், அப்படியே அவன் துரத்திவிட்டு அந்நாட்டை ஆண்டுவந்ததாகவும் பின்பு பாண்டியவம்சத்தைச் சேர்ந்த சிலர் இராயருடைய உதவி மீது ஆண்



டிருந்தனரென்றும், சிலகலகங்கள் விளையவும், நாகம்மநாயக்கரை விஜயநகரத்து இராஜா அனுப்பியதாகவும், அவர்கலகத்தையடக்கித் தானே ஆண்டிருந்ததாகவும், பின்புபாண்டியன் போய்விஜயநகர இராஜாவிடம் விண்ணப்பித்துக்கொள்ள, அவருடைய மகனைவிசுவநாதநாயக்கரையும், அரியநாயகமுதலியாரையும் அனுப்பியதாகவும், விசுவநாதநாயக்கர் தான் இப்பிரதேசத்தில் இராஜாங்கத்தை ஸ்தாபித்தவரென்றும், இவருக்குப்பின் அநேக நாயக்கமார்கள் ஆண்டிருந்தனரென்றும் அவர்களுளெல்லாம் சிறந்தவர்திருமலைநாயக்கரென்போரென்றும், சரித்திரமூலங்களால் தெரிகிறது. அக்கால் அரசாண்டிருந்த ஒருவர் தற்செயலாய் வீதிவழியே பவனிவருகையில் நம்கதாநாயகன்மீது ஓர்வித அன்பும், ஆர்வமும், ஜெனித்தபடியால் மிகுபிரேமையோடு அபிமானித்துவந்தார். சிலகலகங்கள் விளையவே அக்கால் திருச்சினாப்பள்ளியிலாண்டிருந்த சொக்கநாத நாயக்கரிடம் தகுந்த சிபார்சுடன் அவனை அனுப்பினார். இனி நமது கதை ஆரம்பமாகின்றது.

* *

திருச்சினாப்பள்ளியையடைந்தான் கோபாலன். அப்போது மாலைநேரம்.

"புதைத்தகாரிருட்படமொழித்தித் துணைப்போது
முதித்தகீழ்த்திசைமகட்புணர்ந்தாயெனவூடிக்
கொதித்துமேற்றிசையணங்கலத்தகப்பதங்கொடுமே
லுதைத்ததாலெனச்சிவந்ததுவெய்யவனுடலம்"

என்றபடி, மறைத்தகாரிருளாகியபோர்வையைகளைந்து உதித்த நீ கிழக்குத்திக்காகியமாதைக்கூடினையென மேற்குத்திக்காகிய மாதானவள் பிணங்கி செம்பஞ்சூட்டப்பெற்ற தனது அடிகளைக்கொண்டு உதைத்த தொப்ப சூரியனது உடலமானது சிவந்து தோற்றியது. பொன்னிறமான வெயில் எறித்தது. குன்றினிடத்திருந்தோடிவாராநின்ற அருவிகளின் நீரானது பொன்னீர்காய்ச்சி ஊற்றப்பெற்றாற் போல, பளபளத்துக்கொண்டிருந்தது. நிர்மலமான ஆகாயத்தினிடத்து சிறிது ரோஜாவர்ணம் படர்ந்து அழகாயிருந்தது. சிறிதுநேரம்கழிந்தபின் சிறுகிரணங்களானவை ஒளிவிட்டுப்பிரகாசித்துக் கொண்டிருந்தன. இளந்தென்றல் வீசியது. கோபாலன் மாலைநேரத்தின் அழகின் தன்மையையும், கடவுளின் திருவிளையாட்டின் செயல்களையும் எண்ணியெண்ணி ஆனந்தித்து திருச்சிராச்சென்று அவன் ஓர் வீட்டினில் தங்கி மறுநாள் அரசன் கொலுக்கூடத்தை நாடிச்சென்றான். அரசன் மிகுந்த உருக்கத்துடன் யோகக்ஷேமாதிகளைக்குறித்து விசாரித்துச் சின்னாள் வைத்திருந்து தனக்குட்பட்டிருந்த ஓர் நாட்டுக்கு அரசனாகநியமித்து முன்னிருந்த அரசன்புகார் உண்டானமையால் நீக்கப்பட்டிருக்கிறானெனவும் தெரிவித்துச் செல்லுமாறு கட்டளையிடுவித்தலால் அவ்விதமே அவன்செல்ல, அவ்வரசன் "தனக்கு விரோதியாய் வந்துவிட்டானே" என்றகங்கரித்துச் சிறைப்படுத்தி படாதபாடு படுத்திக் கொண்டிருந்தான்.

இங்கே இங்ஙனம் நிகழுழி, திருச்சினாப்பள்ளியிலோர் நாள் அரசன் மந்திரியை ஓர் யுத்தத்தின் பொருட்டு அனுப்பிவிட்டதால் தான் மட்டும் தனித்து உடைவாளணிந்து நகர்சோதனைக்குப்புறப்பட்டு வருகையில் ஓர் பெரிய தெருவின் ஓர்வீட்டினில் ஓர்ஸ்திரீ தன்கையில் வீணையையேந்தி,

காண்பதிவ்வுலகம்ஜீவகாருண்யக்கடவுடனால்
ஊண்டசைநரம்போடஸ்திஒன்றுசேர்த்ததிலுண்டாக்கி
ஆண்பெண்ணென்றமைத்தசூக்ஷமவ்வுயிரறிவிற்கண்டு
வீண்பொழுதினைப்போக்காமல்வீணையைவாசிநெஞ்சே.

கருத்துணர்ஞானனந்தக்கரணம்பொற்றருவின்காக்ஷி
திருத்தகுசோலைநீழல்சேருநீகனியின்தேனை
யருத்திநல்லருள்புகட்டும்ஆஸ்பதமானபக்தி
விருத்தியாமிதுவேஞானம்வீணையைவாசிநெஞ்சே.

நாரதனனுமன் வாணிநல்ல தும்புருமற்றோர்கள்
காரணக்கலையாளிகருணையைப்பெறமுயன்ற
சீரணிமார்க்கமீதுதெய்வமால்ஆசையீது
வீரசாதகம்விடாமல்வீணையையாசிநேஞ்சே.

என்றவாறு சிறந்த வீணையைக் கரத்திலேந்தி தாயுமானவர் பாடலிலுள்ள பராபரக்கண்ணிகளை குழல்யாழ், முதலியவைகளைத் தோற்கச் செயவல்ல மிருதுவான தன் குரலால் பாடுவதைக்கேட்ட அரசன் பிரமித்து ஆச்சரியமெய்தி கேட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் அப்பெண்மணி வீணை வாசிப்பதை நிறுத்தி "ஐயோ! நாதா! எவ்விடம் சென்றீரோ? இத்தனை நாளும் என்னைவிட்டுப் பிரிவீரே? என்னைப்பிரியவும் உமது மனமிடங்கொடுத்ததோ? ஆ! இந்த ஊருக்குத் தாங்கள் வந்திருந்து அரசரிடம் சென்றதாகவும், அவர் ஏதோ உம்மைத் தகுந்த உத்தியோகத்திலமர்த்தி வெளியூருக் கனுப்பியதாகவும் கேள்வியுற்றேனே தவிர தங்களை நேரிற் காணும் பாக்கியத்தை யடையவில்லையே? தங்களுக்கு யான் இவ்வளவுதூரம் என்ன அபசாரம் பண்ணினேன்? யானிவ்வாறு பிரிவுற்று வருந்தலும் ஏ! ஜெகதீசா? உனக்கும் ஏற்குமோ?" எனத் திடீரென்று கீழ் விழுந்துவிட்டாள். அரசன் தான் காலமே அனுப்பியவன் தான் இவளது கணவனாயிருத்தல் கூடுமென்றும், தன்னிடம் விவாகமான விஷயத்தைப்பற்றி அவன் உரையாமையைப் பற்றியும், தான் அதிகாரப் பத்திரம் அனுப்ப மறந்துபோனதைப்பற்றியும், அவன் சிறைப் பட்டிருப்பதாக வதந்தியானமையைக் குறித்தும் தற்சமயம் சேனாதிபதியாய் அனுப்ப ஒருவருமில்லாததைப்பற்றியும் வருந்திக்கொண்டிருந்தான். இது இங்ஙனம் நிற்க.

* * *

ஓர்நாட் காலமே திருச்சி நாட்டுக்குட்பட்ட ஓர் சிற்றிராஜ்ஜியத்தின்கண் ஒருவன் கட்டப்பட்ட கயிறுடன் கொலைசெய்யப்பட்ட அவ்வரசன் முன்னிலையில்நிறுத்தப்பட்டிருந்தான். அவன் கண்களிலிருந்து நீர் மாலைமாலையாய் வடிந்துகொண்டிருந்தது. அவ்வரசன் எப்பொழுது ஆக்கினை செய்வானோவென இரு கொலையாளிகள் இருபக்கத்திலும் ஏந்திய வாளுடன்நின்று கொண்டிருந்தனர். அப்போது குதிரைகளின் காலடி சப்தமும், சேனாவீரரின் ஆரவாரிப்பும், கேட்டது. அரசன் திகைத்து உற்றுநோக்கியிருப்ப, குதிரைப் படைகளோடும், காலாட்படைகளோடும் ஓர் சேனாதிபதி அவ்வரசன் முன்வந்து "ஏ! அரசே! நின்பாலனுப்பிய சிற்றரசன் எங்கே?" என, அரசன்நடுங்கி முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தினன். அவர்கள் யாவரையும் அழைத்துக்கொண்டு அச்சேனாதிபதி புதிதாயனுப்பப் பட்ட சிற்றரசனோடுவந்து திருச்சி அரண்மனி புக்கனர். அரசன் கொலைசெய்ய வெத்தனித்த சிற்றரசனை தக்க சிட்சை விதித்து நம் கதா நாயகனை அவன் அரசுரிமையைக் கைக்கொள்ள அனுமதித்தான். இதற்குள் சேனாதிபதி தங்கள் மனைவியை அறவேமறந்துவிடலாமோ? என "ஐயோ! அவள் இங்குள்ளாளெனத் தெரியவில்லையே? என்ன செய்வேன்?" என, சேனாதிபதி "அவள் தங்கள் முன்னிலையிலேயே உள்ள" எனக்கூறித் தன் மேலுடையைக் கழற்றவும் ஆஹா! என்ன சொல்வாம்! அழகும் குணமும் பொருந்திய தன் மனைவி விசாலாட்சியே இவ்வாறு சேனாதிபதியாயுருவெடுத்துத் தன்னைக்காத்தானென்பதையும் தெரிந்த கோபாலன் தன் மனையாளைக்கட்டிக்கொண்டு ஆனந்தகண்ணீர் சோரவிட்டு மறுபடியும் அந்நாடேகி தன் சிறிய தாயார் இறந்துபோனமையால் தந்தையாரை அழைத்துவந்து சுகமே வாழ்ந்தனன். சுபம்.

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.

K. S. வைத்தியநாதய்யர்.



THE BAG OF GOLD.

## தங்கநாணயமுள்ளபை.

### I

சில வருஷங்களுக்கு முன்னே பிராங்கார்ட் என்னும் பெயர்கொண்டவனும் இன்னும் ஒருவனும் ஆகிய இரண்டு அன்னியர்கள் இருந்தார்கள். பிராங்கார்ட் என்பவன் தான் சந்தித்த ஒவ்வொருமனிதனையும் நம்புவதற்கு மிகவும் தயாராயிருந்தான். ஆனால் மற்றவனாகிய வில்லியினுடைய யோக்கியதையானது மிகவும் நல்லகுணம் என்பதை தான் முற்றிலும்மறந்துவிடும்படியாக பணத்தின்பேரில் அவ்வளவு நன்றாய் ஆசைகொண்டான்.

ஒரு நாள் பிராங்கார்ட் என்பவன் வில்லி என்பவனுடைய வீட்டுக்குவந்து அவனிடத்தில் சொன்னதாவது அன்னியனாகிய வில்லியே மிகவும் வியாதியாயிருக்கிற மாமாவைப் பார்க்கிறதற்காக நான் பிரயாணப்படுகிற சமயத்தில் இருக்கிறேன். என்னிடத்தில் நூறு ராத்தல் தங்கம் இருக்கிறது. அதைவைத்து விட்டுப்போக விரும்புகிறேன். அதற்கு நான் என்னசெய்யட்டும் என்றுகேட்டான்.

வில்லி என்பவனுடைய கண்கள் பிரகாசிக்கத்தொடங்கின. என்னுடைய நோட்டுக்களையும் பணத்தையும் வைக்கிறதற்கு என்னிடத்தில் பலமான இரும்புப்பெட்டி ஒன்று இருக்கிறது. தீ அதற்கு யாதொரு தீங்கையும் செய்யாது. கள்ளர்கள் அதைத்திறக்கமுடியாது. நான் அந்தத் திறவுகோலை பெண்ஜாதிக்கும் எனக்கும் மாத்திரம் தெரிகிற இடத்தில்வைத்திருக்கிறேன். உன்னுடைய தங்கத்தை என்னுடைய பெட்டியில் வைப்பதைப் பார்க்கிலும் அதிக நல்ல இடம் கிடையாதென்று நான் நினைக்கிறேன் என்று சொன்னான்.

சிலவாரங்களுக்கு மாத்திரம் நான் இங்கு இல்லாமல் இருப்பேன் என்று பிராங்கார்ட் சொல்லி, நீ தங்கத்தை பத்திரமாய் வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டதற்கு நான் உமக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன் என்று அந்தப்பையைகாட்டி அதிலுள்ளவைகளை மேசையின்மேல் கொட்டினான்.

வில்லி அவன் பெண்ஜாதி முன்பாக அப்பணத்தை எண்ணி அதைமறுபடியும் பைக்குள் போட்டு அதனுடைய வாயைக்கட்டி தன்னுடைய பெயரையும் தொகையையும் காட்டி எழுதப்பட்ட சீட்டை கவனிக்கும்படிசெய்தான். பிறகு அவன் அப்பையை வில்லியினிடத்தில்கொடுத்து அவனுக்கும் அவன் பெண்ஜாதிக்கும் வந்தனம் அளித்தான்.

அந்தப்பணத்துக்கு நம்மிடத்திலிருந்து ரசீது வாங்காமல் அவன் போயிருக்கிறானே எவ்வளவு அஜாக்கிறதையுள்ளவனென்று அவன் பெண்ஜாதி சொன்னாள். புருஷன் மறுமொழி சொன்னதாவது தடை அன்னியில் அவர் நம்முடைய கண்ணியத்தை நம்புகிறார். நாம அதை மறக்கக்கூடாது, வில்லி என்பவன் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணத் தொடங்கவில்லை. பிராங்கார்ட் மறுபடி வீட்டுக்குத் திரும்பிவருகிறதற்கு முன் கிட்டத்தட்ட ஒரு வருஷம் சென்றுவிட்டது. அவன் திரும்பிவந்த பத்தானாள் அன்னியர்களைக்கூப்பிட்டு தங்கமுள்ள அச்சிறிய பையை அவர்களிடத்தில் கேட்பதாகச்சொன்னான்.

வில்லி அவன் பெண்ஜாதியைப்பார்த்தான். பெண்ஜாதி அவனைப்பார்த்தாள். ஒவ்வொருவரும் மற்றவன்பேசுவதற்காக காத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றிற்று. உடனே வில்லி என்பவன் மறுமொழி சொன்னதாவது: "பிராங்கார்ட்டே நீர் ஞாபகதப்பாயிருக்கவேண்டும். நீர் எங்களிடத்தில் தங்கம்நிறைந்த பையை ஒப்புவிப்பதாக பேசினது வாஸ்தவந்தான். ஆனால் நாங்கள் அதை உம்மிடத்தில் திரும்பக்கொடுத்துவிட்டோம். ஏனென்றால் நாங்கள் அது திருடுப்போவதனால் உண்டாகும் அபாயத்தை அடைய எங்களுக்கு இஷ்டம் இல்லை,"

நீயும் அப்படியே சொல்லுகிறாயா என்று ஒரு ஸ்திரீயைப்பார்த்துக் கேட்டான். 'ஆம்' என்று கேட்டவுடன் அவள் மறுமொழிசொன்னாள். என்புருஷன் பொய்சொல்வானென்று நினைக்கிறாயா அந்தப்பையை வைத்துக்கொள்கிறதற்கு கூலிவாங்கிக்கொள்ளாமலும் நாங்கள் அதை ஒருகாலமும் ஒப்புக்கொண்டிருக்கமாட்டோம் என்றாள்.

நல்லது அன்னியர்களே, பணத்துக்கு நான் உங்களிடமிருந்து ரசீது ஒப்புக்கொள்ளாத நிமித்தம் அதை இழந்துவிடவேண்டுமென்று நான் நினைக்கிறேன். அவ்விதமாய் கிடைத்த பணம் உங்களுக்கு அதிக நன்மையைப்பயக்காது என்றுநீங்கள் அறிவீர்கள். இன்று இராத்திரி யார் நல்ல நித்திரைசெய்வதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? நீங்களோ நானோ?

பிறகு தொப்பியை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுப்போனான். எஜமானியாகிய வில்லி என்பவன் அப்பொழுது தன் புருஷனிடத்தில் சொன்னதாவது: "அவனை மறுபடியும் கூப்பிட்டு நாம் சொன்னதெல்லாம் பரிகாசமென்று அவனிடத்தில் சொல்லுங்கள். நாதா அவன் சொல்வது சரிதானே." "அந்தப்பணம் நமக்கு ஒரு இழிவாக இருக்கும். ஒருக்கால் கெடுதி செய்ய முடியாது. அது பளபளப்பான தங்கம்" என்று வில்லி என்பவன் சொன்னான். "தவிரவும் நம்மைப்பார்க்கிலும் பிராங்கார்ட் ரொம்பவும் பணக்காரன். அவன் அதை இழந்தாலும பாதகமில்லை."

II

பிராங்கார்ட் நியாயாதிபதியினிடத்தில் போய் அவரிடத்தில் சங்கதியைச்சொன்னான். நீ பணத்துக்கு ரசீது வாங்கிவிட்டாயா என்று கேட்டார். இல்லை: அன்னியனாகிய வில்லி என்பவன் சூரியனைப்போல கண்ணியமுள்ளவனென்று எண்ணினேன். அக்காலத்தில் அவனுடைய பெண்ஜாதி பக்கத்தில் நின்றுகொண்டு நான் அவனிடத்தில் தங்கத்தைக் கொடுக்கும்போது பார்த்துக்கொண்டிருந்தாள் என்று பிராங்கார்ட் மறுமொழிசொன்னான். நல்லது பிராங்கார்ட்டே அந்த அறைக்குள் போய் காத்திரு அதற்குள் நான் வில்லிக்கு ஆள் அனுப்பி கேள்விகேட்கிறேன். பிராங்கார்ட அப்படியே செய்தான். நியாயாதிபதியானவர் தன்னுடைய ஆபீசிற்குதாமதமன்னியில் வில்லி என்பவனைவரும்படி கேட்கிறதற்கு ஒரு உத்தியோகஸ்தரை அனுப்பினார்.

வில்லிவந்துசேர்ந்தவுடன் நியாயாதிபதி அவனிடத்தில் சொன்னதாவது கொஞ்சகாலத்திற்குமுன்னமே தங்கத்தில் பெருந்தொகையான பணத்தை உன்னுடைய சிநேகிதனுக்காக பத்திரமாய்வைத்துக்கொள்கிறதற்கு ஒப்புக்கொண்டதாகவும் நீ இப்பொழுது அதை அவனிடத்தில் திருப்பக்கொடுக்க மறுதளிக்கிறதாகவும் நான் கேள்விப்படுகிறேன். நீ என்னசொல்லுகிறாய் என்றார். வில்லி மறுமொழிசொன்னதாவது நான் அதை மறுதளிக்கிறேன்.

நல்லது அப்படியானால் நீ குற்றம் இல்லாதவன் என்று நினைத்துக்கொள்வோம். ஆனால் எனக்கு தெரிவிக்கும்பொருட்டு நான் உனக்கு இப்பொழுது சொல்லப்போகிற காயிதத்தை உன்பெண்ஜாதிக்கு எழுது என்று நியாயாதிபதி சொன்னார். அந்த நடபடிக்கைக்கு அவளும் சாக்ஷியாயிருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது இதுவும் கூட உண்மையானால் லெகுவாய் ருசுப்படுத்தக்கூடும். ஐயா இந்த வார்த்தையை இப்பொழுது எழுதும்.

ஆனால் அந்த தீர்மானத்திற்கு நன்றாய் திருப்தி அடையாத வில்லி என்பவன் சொன்னதாவது: "நான் வீட்டுக்குப்போய் என் பெண்ஜாதியை என் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரக்கூடாது. அப்படிச்செய்தால் அல்லவோ அவள் சொல்லவேண்டிய திருக்கிறதை அறிந்துகொள்கிறதற்கு நேரானவழியாக இருக்கும்." "என் சொந்த வழியைத்



தெரிந்தெடுக்க எனக்கு சம்மதிகொடு இதோ பேனா, மைக்கூடு, காகிதம் இருக்கின்றன. எழுது" என்று நியாயாதிபதி சொன்னார்.

வில்லி என்பவன் தனக்கு ஓடுகிறதற்கு இஷ்டமிருந்தாற்போல் கதவின் பக்கமாகப்பார்த்தான். ஆனால் உத்தியோகஸ்தர்கள் அருகே இருந்தமையால் அந்த உபாயத்தை எண்ணவில்லை. அவன் பிறகு ஒருபேனாவை எடுத்துக்கொண்டு நியாயாதியதி சொல்லுகையில் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை எழுதினான்.

"என்னுடைய உயிர்க்காதலியே.

பிராங்கார்ட்டுக்குச்சொந்தமான தங்கப்பையைகொண்டு வருகிறவனிடத்தில் கொடு. நான் அதை அவனுக்கு கொடுக்கிறதாக இருக்கிறேன்.

உன்னுடைய அன்பான
வில்லி."

நியாயாதிபதி அந்தக் கடிதத்தில் இந்தவார்த்தைகளைத் தவிர வேறொன்றையும் எழுதி இருக்கவில்லையா என்று அறிகிறதற்காக அக்கடிதத்தை கவனமாய் சோதித்தார். வில்லி என்பவன் தன்னுடைய பெண்ஜாதிக்கு சங்கதியை விபரித்துசொல்லுகிறதற்கு சரியான காலத்தில் தான் வீடுபோய்ச்சேரலாமென்ற நம்பிக்கையோடு போகிறதற்கு எழுந்திருந்தான். ஆனால் நியாயாதிபதி உரத்த கம்பீரமான சப்தத்தோடு கூப்பிட்டுச்சொன்னதாவது: கீழே உட்காரு என்னுடைய தூதன் திரும்பிவருகிறவரை காத்திரு.

வெளிக்குவருமென்று எண்ணத்தினால் நடுநடுங்கி வில்லி என்பவன் ஒரு நாற்காலிக்குள் அமிழ்ந்துபோயினான். உத்தியோகஸ்தர்களில் ஒருவன் அக்கடிதத்தை நியாயாதிபதியினிடத்தில் பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அரைமணிநேரத்திற்குள் அந்த உத்தியோகஸ்தன் பையுடன் திரும்பிவந்தான். அவன் அதை நியாயாதிபதியினிடத்தில் கொடுத்தான். அவர் அதிலிருந்தரிட்டை வாசித்து பணத்தை எண்ணிபார்த்ததில் அதில் சரியே 100-பவுண்டு தான் இருந்ததென்று அறிந்தார்.

கெட்ட வில்லி என்பவன் அவருடைய காலில் விழுந்து தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு தன்னை மன்னிக்கும்படி நியாயாதிபதியை கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். நியாயாதிபதி கதவைத்திறந்து பிராங்கார்ட்டை சுட்டிக்காட்டி நீ மன்னிப்புக்கேட்க வேண்டிய மனுஷன் இதோ இருக்கிறான் என்று வில்லி இடத்தில் சொன்னான்.

நியாயாதிபதியே, அவனுடைய சொந்த மனச்சாட்சியே அவனை போதுமானபடி தண்டிக்கும் என்று பிராங்கார்ட் சொன்னான். அவ்வளவு இழிவான செய்கையைச் செய்யக்கூடிய மனிதர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அற்பமான மனச்சாட்சியை கல் ஆக்குவதில் அநேகமாய் ஜெயம் அடைந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு நிச்சய மில்லை. ஆனால் இந்த மனுஷனுக்கு விரோதமான தோற்றத்தை நீ மறுதளிப்பாயாகில் நான் அவனை விட்டுவிடவேண்டும்.

நான் மறுதளிக்கவே செய்கிறேன். ஏனென்றால் அவன் சீர்திருந்திவிடுவானென்று எனக்கு நம்பிக்கைதான் என்று பிராங்கார்ட் சொன்னான். அப்பொழுது நியாயாதிபதி மறுமொழி சொன்னதாவது கொடுத்த பணத்துக்கு ரசீது வாங்கிக்கொள்ளாமல் யோக்கியதையோ அயோக்கியதையோ உள்ள ஒருமனுஷனை பிராங்கார்ட் ஆகிய நீ நம்பினதற்காக கண்டிக்கப்படபாத்திரனாயிருப்பதைத் தவிர எனக்கு வேறொன்றும் அதிகமாய் சொல்லவேண்டியதில்லை என்று நியாயாதிபதி சொன்னார். இப்பேர்ப்பட்டவார்த்தைகளைப் பேசிவிட்டு நியாயாதிபதி இவர்களைப் போகும்படி சொல்லிவிட்டார்.

எம். பி. எம். இராமலிங்கம்.

## சுகுண சுந்தரம்.

### VI.

சுகுணசுந்தரர்களிருவரும் தத்தம் குதிரை ஏறி கிருபாகடாக்ஷருடைய ஆசிரமநாடிச் சென்றதாகச் சொன்னோமல்லவா? அவ்விரு விளஞ்சிறுவர்களும் அனேக காடு மலை வனாந்திரங்கள், காட்டாறுகள், சிறு குன்றுகள், பள்ளத்தாக்குகள் இவற்றையெல்லாங் கடந்து ஓர் கொடிய கானகத்தில் புக்கி அதிவேகமாய்ச் செல்லுங்கால், அங்கோர் பயங்கரமான சிங்கமானது ஓர் மதித்த யானையின் மத்தகத்தைப்பிளந்து ரத்தபானம்பண்ணி மகா உக்கிரமாய் இவர்களை நெருங்கி கோபாவேசங்கொண்டு பாய வருகையில், சுந்தரன் தன் சக்தியைப் பிரயோகித்தான். அது முகத்தைப் பிளந்துகொண்டு ஊடுருவிச்சென்றதினால், சிங்கம் வீரிட்டுக்கொண்டு கீழேவிழுந்து மடிந்தது. அது வீரிட்ட சப்தத்தினால் ஹேமகூடமே கிடு கிடென நடுக்கமுற்றது. என்றாலு மிவர்கள் கொஞ்சமேனு மஞ்சாமல் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே பார்ப்போர்கள் கண்களைப் பறித்துக்கொண்டுபோகும்படியாய் அவ்வுடலினின்று பளிச்சென்று ஒரு சோதி கிளம்பிற்று; இவர்களிதென்ன ஆச்சரியமாயிருக்கிறதென்று, திடுக்கிட்டு உயர அண்ணாந்துபார்க்க அது ஒரு திவ்விய தேஜோமயமான புருஷனாக மாறிற்று. அப்புருஷனை தேவபுருஷனென்றே சொல்லலாம்; அவன் இவர்களைப்பார்த்து, "ஏ, சுந்தரர்காள்! நீங்கள் செய்த உபகாரத்தை என்னவென்று சொல்லுவேன், அதற்கு ஏதுவு மீடல்ல, யானுங்களுக்குச் செய்யுங் கைம்மாறுதானென்றோ, யான் பூர்வத்தில் ஓர் கின்னரன், இரத்தினகேது என்னும் பெயருடையவன்; மகா கர்விஷ்டன்; யாவருக்கு மஞ்சாதவன்; ஒருநாள் அதிக சுந்தரியும் யுவதியுமான, என் மனைவி சித்திராங்கியுடன் உல்லாஸமாய் மதியயங்கி, காமப்பெருக்கால் மதங்கொண்டு மாலினி என்று சொல்லப்பட்ட அழகிய நதியில் ஜலக்ரீடை செய்தும், அதன் கரையில் ஓரிளஞ் சோலையில் பலவித லீலைகளைப் புரிந்துகொண்டு மிருக்கையில், ஓர் தாபஸர் உதயகாலத்தில் நீராடித் தன் காலைக் கடன்களை முடிக்க அங்குவர, நாங்கள் அவரை மதியாது விநோதமாயிருந்ததை நோக்கி, தான் நீராடி சந்தியாவந்தனாதிகள் புரிய இடையூறாகவிருந்ததினால் கோபங்கொண்டு, "துஷ்டா! நீ கொஞ்சமேனு மச்சமில்லாது என்னை யலக்ஷியமாய் நினைத்து, சிற்றின்பக் கடலிலாழ்ந்து எனது ஆசிரமமென்று மறியாமல், இவ்வலங்கோலம் புரிந்தமையால், கொடிய சிங்கமாக, காடுகள்தோறும் அறிவழிந்து பற்பல ஜந்துக்களை வதைபண்ணிக்கொண்டு திரியக்கடவாய்," என்று என்னையும், என் மனைவியைப் பார்த்து, அடி "நாணமில்லாதவளே! உனக்கு புருஷ சுகமில்லாது காராக்கிரஹப் பிரவேசமாகக்கடவாய்" என்றும் சபித்தார்.

"எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகுவார்."

என்றபடி, நாங்கள் சாபகிரஸ்தர்களாகி, பயந்து நடுங்கி, அவர் பாதம் பணிந்து, மன்னித்துக் காப்பாற்றவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவர் கொஞ்சந் தயைபுரிந்து, அடா மதிகெட்டவனே! முதலில் வருங்கெடுதலை நினையாது, ஆணவத்தினால் மதங்கொண்டு ஓர் காரியஞ்செய்து பிறகு அதற்குப் பரிகாரந் தேடுவோனுமுளனோ! நின் மனைவி பேதமையுடையளாய் உன் வழிபட்டு நடந்தவளானதால் ஒருவாறு கோபந்தணிந்தேன்; கடவுளருளினால் உற்பவிக்கும் சுந்தரன் சக்தியாயுதம் உன் மத்தகத்தில் பட்டமாத்திரத்தில், நீ பழய படி கின்னரனாக மாறக்கடவாய், அவ்வேந்தனே யுன் மனைவியையும் சிறையினின்று மீட்பான்; என்று சாபவிமோசனங்கூறி, தன் அனுஷ்டானங்களைப் புரியுமாறு சென்றனர். உடனே நான் சிங்கமாகமாறி பல விலங்குகளை...



செய்துவந்தேன், இன்று புண்ணியமூர்த்திகளாகிய உங்களைக்கண்டு, என் சாபநீங்கி பழய உருவமைந்தேன்: என் மனைவியைப் பற்றி யொன்றுந்தெரியவில்லை. அவளைத் தாமே விடுவித்து என்னிடஞ் சேர்ப்பிவிக்க பிரார்த்திக்கிறேன்," என, சுந்தரன், அவனைப் பார்த்து, "ஏ, கின்னர! உன் விருத்தாந்தமோ மிகவும் அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றது, யானோ இப்போது மித்திரகாரியமாய்ச் செல்லுகிறேன், இங்கோ உன் மனைவியை மீட்கவேண்டுகின்றனை;" என்று சுகுணனை நோக்கி, "மித்திர! நமக்கு வருவதெல்லாம் தர்மசங்கட வியாபாரமாக விருக்கின்றதே, இவன் மனைவியோ இன்னவிடத்தில் காராக்கிரகத்தில் இன்னாதீனத்தில் இருக்கின்றனள் என்று தெரியவில்லை; சம்பகாவதியின் கோரிக்கையைத் தாவீடேற்றச் செல்வதா? சுலோசனைக்கு வாக்குறுதி செய்தபடி ஹேமாபுரிக்குத்தான் நாளை யுதயத்திற்குள் போவதா? சித்திராங்கியைத்தேடி மீட்பதா? இந்த மூன்று காரியங்களில் சித்திராங்கியின் நிலைமை நம்மாலறியக்கூடாததாக விருக்கின்றமையால், சம்பகாவதி மரணத்தை யடையாததற்குமுன் சென்று அவள் கோரிக்கையை முடித்ததின் பிறகு, சித்திராங்கியின் விஷயத்தைப்பற்றி யோசிக்கலாம்," என்று சொல்லி, கின்னரனைப்பார்த்து, "நீ அஞ்சற்க, உன் மனைவியை எங்கிருந்தாலும் மூன்று தினத்தில் உன்னிடம்மீட்டுத் தருகிறேன், நீ சுகமேயேகுக," வென்று விடையளிக்க, அவனும், "தர்மமூர்த்திகாள்! நீங்கள் நினைத்தமாத்திரத்தில் நான் வந்து என்னாற்கூடிய உதவி புரிகின்றேன்," என்றேகினான்.

பின்பு இவர்கள் அக்கானகத்திலனேக சோலைகளும், மலையருவிகளும், அவ்வருவிகளின் கரைகளில், ஆங்காங்குதோன்றும் பெரியோர்களின் பர்ணசாலைகளுமாக விருக்கக் கண்டு களித்தும் வேகமாய்ச் செல்லுகையில், ஓர் குளிர்ந்த சிறு சோலையைக்கண்டு, அதில் நுழைந்து பார்க்கையில் அது பெரியோர்கள் வசிக்கு மாசிரமமெனத் தெரிந்து, தங்கள் குதிரைகளை விட்டிழிந்து, மிகுந்த வணக்கத்துடன் பயந்து உட்செல்ல, அங்கு தோன்றிய ஓர் மலையருவியின் நன்னீரை யருந்தி, வந்தகளையாற்றிக்கொண்டிருக்கும்போது, ஓர் வாலிபனைக்கண்டு, "இது யாருடைய ஆசிரமமென, அவன் 'கிருபா கடாக்ஷர்' என்னும் க்யாதரான மகா முனிவரது" என்று மறுமொழியுரைக்க, அவரைக்கண்டு சேவிக்கவெண்ணி, யேகவே, அவ்வாலிபன்முன் சென்று, தனது குருவாகிய அம்மகாத்மாவைப் பார்த்து, யாரோ இருவர் சுகுணசுந்தரர்களாய் இவாள் வந்திருக்கிறார்கள். தங்களைத் தரிசித்து கிருதார்த்தர்களாக விரும்பி, இதோ கெம்பீரமான பார்வையுடன் வருகின்றார்கள்" என, அவர் அச்சிறுவனை நோக்கி, "சத்குணா! அவர்கள் கடவுளருள் பெற்றவர்கள், சீக்கிர மிங்ஙனம் கூட்டிவா," என்று உத்தரஞ்சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அவர்களிருவரும் வந்து, முனிவரது பாதங்களில் பக்தி விசுவாசத்துடன் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டார்கள். முனிவர் "ஜயவிஜயீபவ, ஜயவிஜயீபவ" என்று இருவரையும் வாழ்த்தினார்.

அப்போது முனிசிரேஷ்டர் இக்கட்டழகர்களுடைய வரலாற்றை சூக்ஷ்மமாயறிந்து, "ஏ, குமாரர்காள்! நீங்களிருவரும் பிலத்தின் வழியே அச்சமறச் சென்று, சம்பகாவதியை உங்களில் சுகுணனுக்கு இல்லாளாக்கிக்கொண்டு திரும்பிவரக் கடவீர்கள், உங்களுக்கு மங்களமே யாகுக," என்றாசீர்வதித்து, துஷ்டநிக்கிரகார்த்தமாக சில விசேஷமான திவ்யாஸ்திரங்களையு மீந்து, அதனைப் பிரயோகிக்குமாறு மந்திரோபதேசமுஞ் செய்து அனுப்பினார்.

அம்முனிவரது உத்தரவின்படி செய்யக் கருதி, தங்கள் குதிரைகளிருக்குமிடஞ் சென்று, அவைகளை அம்முனி சிரேஷ்டரால் பரிபாலிக்கப்படுகிற பசுக்கள் முதலிய மிருகங்களுடன் மேய்ந்துகொண்டிருக்கும்படி விட்டு,

அச்சோலையில் ஓர் சந்தனமர மிருக்கக்கண்டு அதனிடஞ்சென்று, அங்கு தோன்றிய பிலத்தில் நுழையப் போகும்போது, திடீரென ஓர் இராக்கதன் இவர்கள்முன் தோன்றி, பயப்படும்படி கர்ஜித்தான். இவன் கர்ஜனையைக் கேட்டு, நூற்றுக்கணக்கான அனேக இராக்கதர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பார்க்க பயங்கரமான ரூபத்துடனிருந்தார்கள். சுந்தரனுஞ் சுகுணனும் கொஞ்சங்கூட கலங்காது மிக்க ஊக்கங்கொண்டு, யானைக் கூட்டங்களிலிரண்டு சிங்கக் குட்டிகள் புகுந்ததுபோல இராக்ஷதக் கூட்டத்தில் பிரவேசித்து, இராஜதனயன் சக்தியைப் பிரயோகித்தும், அமைச்சன் புதல்வன் தன் வாளினால் வீசியும், அவர்களெல்லோரையும் வதைத்தார்கள். ஆனால் ஒருவன் மாத்திரம் தப்பி அதிஉக்கிரவேசங் கொண்டு அங்குள்ள பெரிய பெரிய விருக்ஷங்களைப் பிடுங்கி இக்குமாரர்களை அடிக்க வந்தான். இவனுடன் நெடுநேரம் போர்புரிய நமக்கு அவகாசமில்லை, சம்பகாவதியைக் காண்பதற்குள் இன்னு மெவ்வித இடையூறுகள் வருமோ தெரியவில்லை, "சுகுணா! பார், இவ்விந்திராஸ்திரத்தை விடுத்து இவனை மாய்க்கிறேன்," என்றவ்வஸ்திரத்தை அபிமந்திரித்துப் பிரயோகஞ் செய்தான். அவ்வஸ்திரமானது அவன் சிரத்தைக்கொய்து உடலைக் கீழே வீழ்த்திவிட்டது. அவன் மாண்டதும் இன்னும் யாவரேனும் வருவார்களோவென்று பார்த்துக் காணாமல் பிலத்துட் பிரவேசித்தார்கள்.

பிலத்தின்மைப்பு மிகவும் விநோதமாயிருந்தது; அதின் பூமிமட்டத்தில் சலவைக்கற்கள் பரவியும், மழமழவென்று நற்சாந்து பூசிபற்பல சித்திரவேலைகள் செய்யப்பட்டு மிருந்தது. அல்லாமலும் நவரத்தினங்களிழைத்த அற்புதமான படிக்கட்டுகளுமிருந்தன. அவைகள் சூரியப்பிரகாசம்போல் போக்குவரத்து செய்பவர்கட்கு வெளிச்சமுடையனவாக விருந்தன. ஏறக்குறைய நூறுபடிகளிருக்கும், அவைகளின் வழியாயிரங்கிக் கொஞ்சதூரஞ் செல்லுகையில் அங்கோர் தடாகமிருந்தது. அத்தடாகத்தினமைப்பு பார்ப்போர்கள் வியக்கத்தக்கதாயிருந்தது. அசுரத்தச்சனான மயன் நிர்மாணமாயிருக்கலாமென நினைத்தார்கள். அக்குளத்தைத்தாண்டிச் செல்ல ஓர் ஆலயத்தைக் கண்டார்கள். அவ்வாலயத்தைச் சுற்றி சிற்சில பூஞ்செடிகளும் இரண்டொரு மரங்களும் வன்னிமரங்களும் பலாமரங்களுமிருந்தன. அக்கோயிலின் கோபுர வாயிலில்தான் சம்பகாவதி அகோரமாய் தீவளர்த்துத் தவஞ்செய்துகொண்டிருக்கிறாள். அதற்கு முன்புறம் ஓர் விநோதமானசோலையும் அதற்கப்புறம் மணிஸ்தம்பங்களுடன் ஆகாயமளாவிய ஏழடுக்கு உப்பரிகைகளுடன்கூடிய ஓர் பெரிய விசாலமான மாளிகையுமிருந்தது. அதன்வரலாற்றைப் பின்னர் கூறுவாம்.

அப்பொழுது சுகுணசுந்தரர்கள் அங்குள்ள விநோதங்களைக் கண்ணுற்று ஆகாயமளாவிய அக்னிசுவாலைகளுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அக்னிகுண்டத்திற் கெதிரில் சம்பகாவதியானவள் கடுந்தவஞ் செய்யுங் கோலத்தைக் கண்ணுற்று, மகாவியப்படைந்து சுந்தரனானவன் சுகுணனைப்பார்த்து, "என்னதவம், என்னகோலம், இவ்விளமைப் பருவத்தில், வீணில் இவளிவ்வண்ணம் தன் தேகமெலிந்துபோம்படி பற்றற்று நிஷ்டையிலிருக்கக்காரணம் என்னோ?" என, சுகுணன், அவனைப்பார்த்து, ஏ, மித்திர! அவளிவ்வண்ணம் தவவேடம் பூண்டிருப்பினும் அதுவு மதன வின்பத்துக்குரிய அழகையேதந்து கொண்டிருக்கின்றது.

"இனத்தியல்பாமறிவென்பதுண்மையே
மனத்துயர் செயுமயல் மாற்று நீறுதான்
அனிச்ச மெல்லடியினார் நுதலடுத்தலும்
பனித்துடல்வெதும்புமால் படுத்தலாலென்பார்."

என்ற வண்ணமிருக்கிறது. அவள் கழுத்திலிருக்கும் மாலையானது என் கழுத்திலணியப்பட்டிருக்கிற மாலையை ஒத்துகாணப்படுதலால் பொற்சுருளில் சொல்லப்பட்டிருக்கிற சம்பகாவதி இவள்தான் என்று நமக்கு உணர்த்துகின்றது." என, சுந்தரன், "மித்திரசிரேஷ்ட! நாம் அப்பெண்ணரசியின் சமீபத்திற்குப் போய் அவள் வரலாற்றையும் மனக் குறிப்பையும் உணர்ந்தபின்னர் வந்த காரியத்தை முடிவு செய்வோம்." என்றுசொல்ல, இருவரும் சம்பகாவதியின் சமீபத்திற்சென்று, சுந்தரன் சம்பகாவதியைநோக்கி, ஓ, மாது சிரோமணி! நீ சௌந்தரியமுள்ள இராஜகன்னிகையைப் போல் காண்கின்றனையே, இவ்வரிய தவத்தைச் செய்யக்கருதியதென்னை! இதன் விவரத்தையும் உனது வரலாற்றையும் கேட்கவேண்டுமென்றும் விருப்பமுற்றவர்களாக விருக்கின்றோம்; உன் தவத்திற் கிடையூறுவருவதாய் நினையாமல் கொஞ்சந் தயவுசெய்து தெரிவிக்குமாறு கேட்கலாயினோம்." என, சம்பகாவதி, சுந்தரனைப்பார்த்து. "புண்ணிய புருஷர்களே! என்னுடைய ஊழ்வலியால் யாம் துஷ்டனாகிய துர்முகன் என்னும் அரக்கனால் நானு மின்னுஞ் சில பெண்மணிகளும் சிறைபிடிக்கப்பட்டு துன்புறுகின்றோம். அவ்வரக்கனால் எனக்கு பதிவிரதாபங்கம் நேரிடுவதற்குமுன் எனது உயிரை இந்தக் காளிகாதேவிக்கு திருப்திசெய்யுமாறு இவ்வகோரதவத்தைச் செய்கின்றேன்; அடுத்த நிமிஷத்தில் தேவியின் பாதபத்மங்களை நானடையப்போகின்றமையால், எனது விருத்தாந்தங்களைச் சொல்வதற்கு அவகாசமுமில்லை. சொல்வதினால் பிரயோசனமுமில்லை; நீங்களிருவரும் யௌவன புருஷர்களாயும் இராஜ குமாரர்களைப்போலவும் காணப்படுகிறீர்கள்; உங்களுக்கு சைன்னிய முதலிய உபபலங்களில்லாமல் தாய் தந்தையர் பாரியை முதலானவர்களைவிட்டு இந்த பிலத்திற்குள் எவ்வண்ணம் வந்தீர்கள்? இதனை யோசிக்குமிடத்து, உங்களைப் பலசாலிகளென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆயினு மிவ்வரக்கன் கோபிஷ்டனும், அதிக பலசாலியுமாயிருப்பதால், உங்களைக் காரணமில்லாமலே கொல்லுவதற் கெத்தனிப்பான், அதிலு மெங்கள் சமீபத்தில்வந்து, நீங்கள் வார்த்தையாடிக்கொண்டிருப்பதைக் கண்டால் அவ்வரக்கனா லுங்களுக்கும் என்னைப்போல் அடுத்த நிமிஷத்தில் மரணமுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை; ஆகையால், இந்தப் பிலத்தைவிட்டுப் போய்விடுநலமென்று நினைக்கிறேன்" என்றாள்.

இதனைக் கேட்ட சுந்தரனும் சுகுணனும் தங்களுக்குள், 'இம்மாது சிரோமணி, தங்கள் பராக்கிரம முதலியவற்றைத் தெரிந்துகொள்ளாமையால் சாதாரணமான மனிதர்களென்று கருதி இவ்வாறு கூறினாள்' என்று புன்சிரிப்புடன் சம்பகாவதி முதலிய கன்னிகைகள் அடையும் துன்பத்திற்காக மனதிரங்கினவர்களாய் சம்பகாவதியைப் பார்த்து மீண்டும் சுந்தரன் சொல்லுவானாயினான். "சித்திரப் பிரதிமைபோன்று விளங்கும் பெண்ணரசியே! உனக்கு மெங்களுக்கும் மரணம் சம்பவிக்கப் போகிறதென்று அஞ்சுவதைப் பரிகரிக்கக் கடவாய்; தேவியினனுக்கிரகத்தால் உன்னைக் காக்கும்பொருட்டு இந்தப் பிலத்திற்குள் நாங்களிருவரும் வந்தனம்; அன்றியும், எங்களை சாமானியர்களாக நினைக்கவேண்டாம், நாங்கள் ருத்ரமூர்த்தியின் அனுக்கிரகத்தால், நினது கண்களைப்போல் பிரகாசிக்கின்ற வேல்வாள் என்னுமாயுதங்களைப் பெற்றிருக்கின்றோம். அன்றியும், கிருபாகடாக்ஷ மகாமுனிவரது அஸ்திரங்களையும் பெற்றிருக்கின்றோம். இந்த திவ்வியாஸ்திர சஸ்திரங்களினால் அஷ்டதிக்குகளுஞ் சென்று பகைத்த அரசர்களைவென்று அவர்களிடம் கப்பம் பெற்றுவருகின்றோம். ஹேமாபுரியின் அரசனது உத்தியானவனத்தில் நாங்களிருக்கும்போது, எனது தோழனாகிய சுகுணன் கழுத்தில் ஓர் மாலையும் எனது கரத்தில் பொற்சுருளுள்ள ஓர் செண்டும் தெய்வீகமாய் வந்து விழுந்தன. அச் செண்டிலுள்ள பொற்சுருளைப் பிரித்துப் பார்க்குங்கால், இந்த பிலமிருக்குமிடமும், அக்னிகுண்டத்தின் முன்னிலையில் நீ தவம் பண்ணிக்கொண்டிருப்பதும், உன் கழுத்திலும் சுகுணன் கழுத்தி

லுள்ளதைப்போல ஓர் மாலைபோடப்பட்டிருக்
கிறதென்றும், அவ்வடையாளத்தால் உன்னை
சுகுணனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமென்
றும், மூன்றிரவிற்குள் உன்னிடம் ஓர் புருஷன்
வந்து காவாவிடில் அக்னியில் வீழ்ந்திறந்து
விடுவதாய் விரதங்கொண்டிருக்கிறாயென்றும்,
உடனே நீ சென்று அக்கன்னிகையை சுகுண
னுக்கு மணம்புரிவிப்பாயாகவென்றும், எழுதப்
பட்டிருந்தது. அதனிமித்தந்தான் நாங்க
ளிவ்வாறடைந்தோம்'' என்றான்.

இவைகளைக் கேட்ட சம்பகாவதி அதிசய
முடையவளாய், சுந்தரன் சொல்லியபடி தன்
கழுத்தில் மாலை எவ்வாறு வந்ததோ, நாம்
தபசில் மனதைச் செலுத்திக்கொண்டிருந்
தமையால் அறிந்திலம், இதனை உய்த்துண
ருங்கால் அரச குமாரன் நமதெண்ணத்தைச்
சொல்லியதினாலும், நமது மாலைபோல் சுகு
ணன் கழுத்தில் மாலை யிருப்பதாயும் சொல்
லிய வசனங்களால் தேவியனுக்கிரகத்தால்
நமக்கு பிரிய நாயகனாக வந்த புருஷன் இந்த
சுந்தரரூப முள்ளவனே என்றறிந்து சந்தோ
ஷத்தோடு சுந்தரனைப்பார்த்து, "இங்கிருக்கு
மாளிகையில் வசிக்கும் பரமதுஷ்டனான துர்
முகன் என்னுமிராக்கதனை வதைபுரிந்து என்
னைப்போன்ற வனேகம் பெண்மணிகளை விடு
விப்பீரேல் நீங்கள் புண்ணிய மூர்த்திகளே
யாகுவீர்கள். அப்பெண்மணிகளிற்சிலர் என்
வேண்டுகோளுக் கிணங்கி அவ்விராக்கதனா
லிங்கு விடப்பட்டிருக்கின்றனர்'' என்றாள்.

உடனே சுந்தரன், சம்பகாவதியை நோக்கி,
இவ்வரக்கன் காணுவதற்குமுன் எங்களை பிலத்
திற்கு வெளியே ஓடிப்போகும்படி சொல்லி
னையே, அவ்வரக்கனோடு யாங்கள் செய்யப்
போகும் யுத்த வேடிக்கையைச் சற்றுநேரம்
தைரியத்துடன் பார்த்துக்கொண்டிருவென்று
சொல்லிவிட்டு, கிருபாகடாக்ஷிடமிருந்து
பெற்ற அஸ்திரங்களுள் ஓர் திவ்யாஸ்திரத்தை
எடுத்து சந்தானஞ்செய்து, பிலத்தையெல்லா
மழித்து துவம்சஞ்செய்தான். பிலமிருந்தவிடக்
தெரியாமற் போகவே, இவர்களிருந்த பூமி
மட்டத்திற்கு சந்தனமரஞ்சோலை முதலியவை
கள் ஏதோ நூறடி உயரமான ஓர் மேடாகத்
தோன்றிற்று. அவன் பின்னும் வேறொரு
அஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்ய, அது
விரைந்து இவனிருக்குமிடஞ்சென்று பயங்கர
மானசப்தத்துடன், உன்னைக் கொல்லுவதற்
குரிய ஓர் யுத்தவீரன் வந்திருக்கின்றான். அவ
னோடு போர்புரியவல்லையேல் சீக்கிரம் யுத்த
கோலத்தோடு வெளியில்வரக்கடவாய்; என்று
சொல்லி, அவனை யிடித்துத்தள்ளிவிட்டு, சுந்
தரன் அம்பாறாத்தூணியில் வந்து புகுந்தது.

"இன்றோடு மூன்றுநாள்முடிந்தது, நாளையுத
யத்தில் சம்பகாவதியைஸ்வீகரிக்கலாமென
நினைத்து காமவெறிகொண்டு தன் மாளிகையி
லிருந்த துர்முகன், 'இதென்ன வன்னியாயம்,
ஒரு நாளுமில்லாமலின்று நம்மை வலுவில்
சண்டைக்கிழுப்பதுபோல் ஓர் அஸ்திரமானது
இப்பாடு படுத்திப் போகின்றதே,' என்னும் அதி
சய முங்கோபமுந் தன் மனதைமாறி மாறிக்
கவரும்படிக்கு உப்பரிகையில் எறிப்பார்க்கை
யில், சுந்தரன் சுகுணன் இவர்கள் சம்பகாவதி
யுடன் வார்த்தை யாடிக் கொண்டிருப்பதும்,
மற்றசுந்தரிகள் பக்கலில் நின்றுகொண்டிருப்ப
தும் பார்த்து,

"கடும்பகலில் எதிலான் பாற்கண்ட இல்லினும்"

என்றபடி வயிறு எரிந்தவனாய் தனக்குள்
"ஓகோ! மோசம் வந்தது. நம்மாளிகையோ
ஓர் புரம் பிலமாகவும் மற்ற மூன்று பக்கமும்
பெரிய அகிழ்களுடன் கற்கோட்டைகளாக
கட்டப்பட்டிருக்கின்றது, பிலத்தின் வாயிலில்
அதிபலசாலிகளான நூறு இராக்கதரைக்காவல்
வைத்திருக்கிறோமே, அவர்களை இச்சிறுவர்கள்
எவ்வாறுவென்றார்களோ! சரி, நாமினித்தாமதஞ்
செய்யாமல் வெள்ளரிப்பிஞ்சுகளை மூறித்துப்
போடுவதுபோல் இவர்களைப்பலகாரஞ்செய்து
விட்டு வருவோம்'' என்றலக்ஷயமாயெண்ணி
கர்ஜனை செய்துக்கொண்டு மாளிகையைவிட்டு
இவர்களிடம் திடுதிடெனவந்து, "ஏ, பஞ்சை



கள்! பதர்கள்! என்ன செய்கின்றீர்கள்! நீங்
கள் அற்பஆயுளைக் கொண்டவர்களானதினால்
இன்றுஎன்கையில்வலியவந்துகிடைத்தீர்கள்;''
என்று ஓடிவந்து சுந்தரனை ஓங்கி ஓர் அறை
யும், சுகுணனை ஓர் அறையுமறைந்து ஆர்ப்பரிக்
கையில், சுந்தரன் கொஞ்சமு மனந்தளராமல்
தன் சக்திகொண்டமட்டும் சக்தியாயுதத்தினால்
ஓங்கி மண்டையிலடித்தான். ரௌத்திராகா
ரமான பரமசிவ மூர்த்தியினது சக்தியானதி
னால் அவ்வரக்கனை ஒரே யடியில் கீழே வீழ்த்
தியது. உடனே அவன் யமபுரஞ்சேரவே
யவனுக்குப் பலமாயிருந்த அனேக இராக்கதர்
கள் இவர்களுடன் போருக்கு வந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் சுந்தரன் பல அஸ்
திரங்களைத் தொடுத்து கால்வினாடியில் எல்
லோரையும் யமபுரஞ் சேர்த்தான். பின்னு
மனேகர் எங்கோ இருந்து கும்பல் கும்பலாய்
வரவே, சுகுணன் தன்வாளினால் ஒருவனாகவே
கும்புக்குள் நுழைந்து வீராவேசத்துடன் எல்
லோரையும் அலக்ஷியமாய் வாழைத்தாறுகளை
வெட்டி எறிவதுபோலவே சீவி எறிந்தான்.

துர்முகன் முதலிய எல்லா அரக்கர்களு
மிறந்து போனதைக்கண்ட அமரர்கள் நமக்கு
இன்றோடு இந்த மகா பாபிகளால் உண்டான
துக்க நிவாரணம் ஆயிற்றென்னும் சந்தோஷ
சாகரத்தில் மூழ்கினவர்களாய் சுந்தரன் சுகு
ணன் இவர்களை ஆசீர்வதித்து புட்பமாரி
பொழிந்தார்கள்.

இவ்வாறு ஜயப்பிரதாபர்களான சுகுணனும்
சுந்தரனும் இன்னும் பகைவர்களாகிய அரக்கர்
கள் உளராயின் யுத்தத்திற்கு வரலாம் என்று
ஆரவாரித்துக் கொண்டு நான்கு திக்குகளிலும்
திரும்பிப் பார்த்துக் உக்கிராகாரத்துடன் சிங்
கக் குட்டிகளைப்போல் கெர்வித்து நின்றார்கள்.
அப்பொழுது இது சமாசாரத்தைக் கேள்வி
யுற்ற இராக்கதஸ்திரிகளும் அரக்கர்களும் பய
ந்து சுந்தரனிடம் வந்து சரணாகதியாய் வீழ்ந்
தார்கள். அவர்களைப்பார்த்து சுந்தரன் பயப்
படாதீர்களென்று அபயங்கூறி நீங்கள் உங்கள்
ஸ்வயேச்சையின்படி வசித்துக்கொண்டிரு[...]
கள், உங்களுக்கு எம்மால் யாதொருதீங்கு[...]
உண்டாகாதென்று சொல்லி யனுப்பிவிட்[...]
நாம் வந்த காரியமுடிந்ததென்னுங் களிப்புட[...]
இருக்கும்பொழுது, துர்முகனால் சிறைபிடிக்க[...]
பட்ட சம்பகாவதியும் அவளுடனிருந்தமற்று[...]
சிலபெண்களும் சுகுணசுந்தரர்களைச் சூழ்ந்[...]
கொண்டு, ஓ பரம புருஷர்காள்! ஒன்றுக்கு[...]
பற்றாத ஏழைகளாகிய எங்கள்மீது கிருப[...]
நோக்கம் வைத்து எங்களுபத்திரவத்தை நீக்[...]
எங்களை ஆனந்த பரவசர்களாகச்செய்த ந[...]
றியை எங்கள் மரணபரியந்தம் மறக்கத்தக[...]
தன்றென்று வந்தனங் கூறினார்கள்.

அம்மங்கையர்கள் வந்தனத்தோடு கூற[...]
இனிய மொழிகளைக்கேட்ட சுந்தரன்,

"சந்திரனுக்குடலூனந் தனதனுக்கோகண்[...]
னந் தருவிநீபு[...]
இந்திரற்கோபகக்குறியாம் யமனுக்கோபுழுக்[...]
லாமிரவீன்[...]
மைந்தனுக்கோர்கான்முடமா மவனசனுக்கோத[...]
குறையாய் வாழ்வார[...]
லிந்தமண்ணில் பந்தமுள்ளமானிடரை விதி[...]
டுமோ ஆலவாய்ப்பதியுள்ளானே[...]

என்று ஆன்றோர்கள் கூறியிருப்பதா[...]
ஏதோ கொஞ்சகாலம் உங்களுக்கு கஷ்[...]
மனுபவிக்கும்படி விதியிருந்தபடியால் அத[...]
யனுபவித்து ஒழித்துவிட்டீர்கள்; ஆகையா[...]
இனி, உங்களுக்கு சுகத்தை யடைவதற்குரி[...]
காலம் வந்தமையால் துர்முகனென்னும் அ[...]
கன் எங்களால் மடிந்து சிறையினின்றும் வி[...]
தலைபெற்றீர்கள்,'' என்று சொல்லியபின் சு[...]
ணனது உள்ளக்குறிப்பை யுணர்ந்த சுந்தர[...]
சண்பகாவதியின் விருத்தாந்தத்தைக் கேட்[...]
லுற்றான், "நங்காய்! உன் பிராணநாயகனு[...]
என்னன்பின்மிக்க நேசனுமான சுகுணசீல[...]
உனது சரித்திரத்தைக்கேட்க விரும்புகி[...]
றான், ஆதலின் அதனைப்பற்றி சிறிது கூ[...]
மாறு வேண்டுகின்றேன்,'' என "ஆரிய! ய[...]
னையாற்றங்கரையில் இரத்தினபுரி என்றொ[...]
பட்டணமிருக்கிறது; அதில் காமபாலன் எ[...]

றொரு அரசன் அரசாளுகிறான்; அவனுக்கு நான் ஓரே பெண்; என்னை சண்பகாவதி என்று சொல்லுவார்கள். நான் என்மாளிகையின் மேல்மாடியில் என் தோழியர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கு நாட்களுள் ஓர் நாள் தூங்கிப்போய்விட்டேன். நான் விழித்து எழுந்தபோது, இதோ தெரிகிறதே அந்த விசித்திரமான மாளிகையில் உள்ள ஓர் திவ்வியமான மஞ்சத்தில் மிருதுவான விலையுயர்ந்த மெத்தையிலிருக்கக் கண்டேன், திடுக்கிட்டு பிரமித்து சுவப்னமோ வென்றிருக்கையில், இப்பொழுது மடிந்தானே இவ்விராக்கதன் என் பக்கலில்வந்து தன்னை மணம்புரியும்படி பலவாறு வேண்டினன்; நான் மனமொவ்வாது அவனுக்குகந்தவள்போல் வார்த்தை பேசி மூன்றுநாட் தவணைகேட்டுக்கொண்டு இங்கு வந்து இக்காளியினிடம் மூன்று தினத்திற்குள் இவ்வரக்கனைக்கொன்று எனக்கிசைந்த ஓரிளையோன் என்னைக் காவாவிடில் இத்தீயில் வீழ்ந்திறப்பல் என, முறையிட்டு இத்தீயை வளர்த்தி நிஷ்டையிலிருந்தேன்; இன்றோடு மூன்றுநாள் முடிவாகின்றமையால், காளிகாதேவி உங்களைக்கொண்டு காக்கப்பெற்றேன்" என்றாள்.

உடனே சுந்தரனும் சுகுணனும் சம்பகாவதி முதலிய பெண்களுடன் காளிகாதேவியின் கோவிலுக்குட்புகுந்து, தேவியை பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்துஸ்தோத்திரம் பண்ணிய பின் சுந்தரன், அம்பிகையின் சன்னிதானத்தில் சுகுணனையும் சம்பகாவதியும் வீற்றிருக்கச் செய்து ஹேமாபுரி உத்தியான வனத்தில் தனக்கும் சுலோசனைக்கும் விவாகம்நடந்தது போல் ஒருவருக் கொருவர் மாலை மாற்றிக் கொள்ள பாணிக்கிரஹணஞ் செய்வித்தான்.

அப்பொழுது தேவியினருளால், ஆகாயத்தில் 'உங்களுக்கு மங்களமுண்டாகுக,' என்று அசரீரிவாக்கெழுந்தது. தேவர்கள் புட்பவருஷம் பொழிந்தார்கள். அங்குள்ள கன்னிகைகள் மங்களவாழ்த்து வாழ்த்தினார்கள்.

இவ்வாறு பாணிக்கிரகண முடிந்த பின்னர் சுந்தரன்முதலிய யாவரும் தேவியை வலஞ்செய்து வந்தனை புரிந்து விடை பெற்றுக் கோயிலினின்றும் வெளியில் வந்து தூர்முகன் அரண்மனையின் காட்சியைக்காண்பதற்கு அவ்வரண்மனையின் பக்கல் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது சுந்தரன் சுகுணனோடு "மித்திர! நவமணிகளாலும் சுவர்ணத்தாலும் இளஞ்சூரியனைப்போல ஒளி வீசும்படி கட்டப்பட்டிருக்கின்ற உன்னதமான கோபுரங்களும், அதன் கீழ்பாகத்தில் வைரத்தினால் செய்யப்பட்டு சந்திரனைப்போல் நிலவைப் பொழிகின்ற கதவுகளையுடைய நுழைவாயிலும், இருக்கின்றன, பார்;" என சுகுணன், "நண்ப! ஆம் அவைகளைக் கண்ணுறின் சூரிய மண்டலம் சந்திர மண்டலம் என்னுமிரண்டையும் பறித்துக் கொண்டுவந்து தூர்முகனென்னு மரக்கன் கோபுரமாகவு நுழைவாயிலாகவும மைத்தனனோ வென்று ஐயுறும்படி விளங்குகின்றன," என்றான். அதுகேட்ட சுந்தரன், "தோழ! நான்குபுரத்திலு முயர்ந்திருக்கின்ற மதில்கள் முத்துகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றன," என, சுகுணன், ஆம், அவைகள் சந்திர மண்டலத்தைச் சூழ்ந்திருக்கின்ற நக்ஷத்திர மண்டலம் போல் விட்டு விட்டு ஒளிவீசுகின்றன" என்றான்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு கன்னிகைகளுடன் அரண்மனைக்குட்புகுந்து ஆங்குள்ள சிறப்புகளைக்கண்டு அதிசயித்த உள்ளத்தையுடைய சுந்தரன், சுகுணனை நோக்கி, "என்ன அற்புதம்! ஒரு பக்கத்தில் வரிசை வரிசையாய் ஒவ்வொரு ஜாதி மணிகளால் அமைக்கப்பட்டுள்ள ஸ்தம்பங்களும், அதைச் சுற்றிலும் பலவித வண்ணமுடைய இரத்னத் தூண்களும், நிறுத்திக் கட்டப்பட்டிருக்கு மண்டபங்களைப்பார்," என்றும், சுகுணன் "மகாராஜனே! அவைகளின் வரிசைகள் நோக்கு மிடத்து பிராமணர்முதல் சூத்திரர் இறுதியாக உள்ள வர்ணத்தார்கள் வசிக்கின்ற தெருக்களும், அவைகளைச் சூழ்ந்து விளங்கு



ன்ற பரத்தையர்கள் மாளிகை நிரம்பிய வீதிகள் போன்றிருக்கின்றன," என்றான்; பிறகு சுந்தரன் "அதோதெரிகின்ற வாயிலின் வழியாய் உள்ளே பிரவேசித்துப்பார்க்கலாம் வா" வென்று, எல்லாருமவ் வழியாய் உள்ளே நுழைந்தார்கள்.

அவ்விடத்தில் புஷ்பச்செடிகளாலும், கண்ணாடிபோலும் நீரினால் நிறைப்பப்பட்டுப் பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற படித்துறைகளையுடைய பாவிகளாலும், அவைகளைச் சூழச் சந்திர காந்தக்கல்லினாலமைக்கப் பட்டிருக்கிற மண்டபங்களும், அம்மண்டபங்களிற் றனித் தனியாய் சப்ரகூடமஞ் சங்களும், அவைகளின்மேல் பட்டினாலலங்கரிக்கப்பட்ட விதானங்களோடு பஞ்சணை மெத்தைகளுடன் புஷ்பாலங்காரத்தோடு பார்ப்பவர்களை சயனத்திற்கு அழைப்பனபோல் போடப்பட்டிருக்கின்றன. அம்மண்டபத்தின் மேல்புறத்தில் பலவித சித்திரவேலைப்பாடுள்ள அறுபத்திநான்கு லீலைகளையும்புரிகின்ற பாவனையாய் பிரதிமைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றின் சுவர்கள் ஒருவர் உள்ளே நுழைந்தால் அனேகம்பேர்கள் கூட்டங்கூட்டமாய்வந்தாற்போல் காட்டும்படி பளிங்குக் கற்களால் செய்யப்பட்டிருக்கின்றன. கீழுள்ள தளவரிசைகள் நீலமணிகளால் அமைக்கப்பட்டு அலைவீசாது அசைவற்றிருக்கின்ற கருங் கடலினழகைக் காட்டுகின்றன. இவ்விதமான அளவிடற்கரிய விநோதங்களைப் பார்த்துக்கொண்டு அப்புறம் போகையில், ஆங்கு ஓர் அந்தப்புறம் போன்ற விசாலமான கன்னியாமாடம் மிருதுபாஷிணிகளான பெண்கள் பேசிக்கொண்டிருக்கின்ற குரலுடன் காணப்பட்டது. அதனருகில் போய்ப்பார்க்கையில், கபாடபந்தனம் பண்ணப்பட்டிருந்ததைக்கண்டு சுந்தரன் சண்பகாவதி முதலிய பெண்களைப்பார்த்து, "இவ்வரண்மனையில் யாவர் வசிக்கின்றார்கள்? பெண்கள் வசிக்குமிடம்போல் காண்கின்றதே," என, சண்பகாவதி, மகாப்பிரபுவே! தூர்முகனால் என்போல் சிறைபிடிக்கப்பட்ட பெண்மணிகள் இருக்கிறார்கள். "என்று முன்னமே தெருவித்துக்கொண்டேன், அவர்களை இவ்வரண்மனையில் அடைக்கப்பட்டிருக்கின்றது" என்றாள். அதுகேட்ட சுந்தரன், 'அப்படியா' வென்று அம்மங்கையர்கள் வருத்தத்திற்கு இரங்கிக் கண்ணீர்விட்டு' பெண்ணென்றால் பேயுமிரங்கும்' எனப்பழமொழியிருக்கின்றதே; தூர்முகன் காமக்கடலில் மூழ்கினபடியால் அதனைக் கருதிலன்போலும்;' என, எண்ணி ஓர் அஸ்திரத்தைக்கொண்டு கதவைத்திறக்கும்படி செய்தான். அதனைக்கண்டு உள்ளிருந்த மடந்தையர்கள் தூர்முகன் வந்துவிட்டனனோ என்னும் பயத்தினால் நடுக்கமுற்றவர்களாய் பெண்மான் கூட்டம்போல் மருண்டு பார்த்துக் கொண்டிருக்கையில், சண்பகாவதி முதலிய மகளிர்கள் முன்பே யம்மாடத்திற்குள்புகுத, சுகுணசுந்தரர்கள் அவர்களின் பின்னே உள்ளே நுழைந்தார்கள்.

இவ்வதிசயத்தை மருண்டு பார்த்துக் கொண்டிருந்த மாதுசிரோமணிகள் 'சண்பகாவதி முதலிய பெண்கள் நம்முடன் சிறையில் வைக்கப்பட்டவர்கள், அவர்கள் பின் வருகின்ற இரண்டு பரமபுருஷர்கள் நமது தேயத்தவர்களைப்போல் காண்கிறார்களே!' என்றதையுற்று நிற்கையில், சண்பகாவதி எல்லா வனிதையர்களுங்கேட்கும்படிசொல்லுவாளாயினாள். "ஏ, தோழிகாள்! நான் காளி கோயிலில் தேவியை நோக்கி அகோரதவம்பண்ணினமையால், அவ்வம்பிகை என் தவத்திற்கிரங்கி இவ்வரச குமாரர்களை இப்பிலத் துவாரத்தின் வழியாய் இவண் வரும்படிச் செய்ய, தூர்முகனைக் கொன்றுவிட்டு நம்மைச் சிறைமீட்குமாறு இக்கன்னியா மாடத்திற்கு வந்திருக்கின்றார்கள்; பயப்படாதீர்கள்;" என்றாள். அதைக்கேட்ட மங்கையர்கள், "தூர்முகனுமிறந்தனனோ!" என்றதிசயித்தவர்களாய் சண்பகாவதியை நோக்கி 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால வழியோடி புல்லுக்கு மங்கே பொசியுமாம்' என்றபடி நின்னால் யாங்கள் உய்ந்தனம்" எனக் குதூஹலித்தார்கள். இத

னைக்கண்ட சுகுணசுந்தரர்கள், அப்பெண்களின் கூட்டத்து நடுவில் நிற்குங்காட்சியானது பிடியானைகளின்மத்தியில் நிற்கின்ற மத்த கஜங்களைப்போல் தோன்றினார்கள். அப்போது சுந்தரன், சுகுணனைப்பார்த்து, 'இக்கன்னிகைகளுக்குள்ளிவர்கள் அழகிற் சிறந்தவர்களென்றும், சிறவாதவர்களென்றும், நம்மாலறியக்கூடவில்லை. ஒவ்வொருவர்களும் மனோரம்மியமான ஒவ்வொருதெய்வ கன்னிகளைப் போல்,

'இக்குழுமகளிருள்யார் வனப்பினும்
மிக்கவளெனத்தமை வினவினர்க்கெதிர்
முக்கனிக்குட்சுவை முதிர்ச்சிபெற்றுள
தெக்கனியதனை நீரியம்புவீரென்றார்'.

என்றவண்ணம், இப்புண்ணியவதிகள் பேசளந்தரியவதிகளாய்த் தோன்றுகின்றார்கள்,' என்ற இராஜகுமாரன் தன்தோழனுடன் பின்னுஞ்சொல்வானாயினன். 'அமைச்ச! நாமிவண் வந்து வெகுநேரமாயிற்று, இன்னுமஸ்தமிக்க கொஞ்சகாலம் தானிருக்கின்றது, அதற்குள் கிருபாகடாக்ஷ முனிவர் ஆசிரமம்போய்ச் சேரவேண்டியிருப்பதால், இம்மங்கையர்களைத் தங்கள் தங்களிடம் போய்ச்சேரும்படி செய்துவிட்டுப் புறப்படுவோம், வா வென, இருவரும் கன்னியாமாடத்தின் வாயிலில் இரண்டு பக்கத்தில் நின்றுக்கொண்டு, சம்பகாவதியை உள்ளிருக்கின்ற ஒவ்வொரு பெண்களையும் வரவழைக்கும்படி செய்து அவரவர்கள் வரலாறுகளைக்கேட்டு அவரவர்களிடம் போய்ச் சேரும்படி கண்களை மூடிக்கொள்ளச்செய்து, கிருபாகடாக்ஷமகாமுனிவர் உபதேசத்தருளிய மந்திர பலத்தினால் அனுப்பினார்கள்.

இவ்வாறு சிலபெண்கள் போயினபின்னர், முன்னமே கூறிய இரத்ன கேதுவென்னும் கின்னரனது மனைவியாகிய சித்திராங்கி வந்தாள். அவள் விருத்தாந்தத்தையுங் கேட்டு அவளைச் சமீபத்தில் நிறுத்திக்கொண்டு மற்றுமிருக்கின்ற பெண்களெல்லாரையும் ஏககாலத்தில கண்களை மூடச்செய்து அவரவர்களிடம் போய்ச் சேரும்படி செய்து அனுப்பினார்கள். இவ்வாறு எல்லாப் பெண்களும் விழித்துப் பார்க்கும்போது தங்கள் பட்டணங்களிலுள்ள அரண்மனைகளில் இருக்கக்கண்டு சந்தோஷத்துடன் சுகுணசுந்தரர்களை இஷ்ட தெய்வம் போலத் துதித்துக் கொண்டாடினார்கள்.

பின்பு சுந்தரன் சித்திராங்கியின் நாயகனான இரத்னகேதுவை வரும்படி எண்ணினான். அதனை யுணர்ந்தகின்னரன் உடனே அவண் வந்துசேர்ந்தான். அவனைக்கண்டசித்ராங்கி தன்னாயகனையடைந்த சந்தோஷத்தை உடையளாயிருந்தும், 'நமது பர்த்தா நம்மை யரக்கன் கிரகித்தமையால் கற்பழிந்தனளென்று கருதுவான் கொல்லோ! என்னு மையமுற், நாணமுமுடையளாய்த் தலைவணங்கி நின்றாள்,

அப்போது சுந்தரன் கின்னரனைப்பார்த்து. "ஏ, கின்னர! உன் மனைவியை கூட்டிவைக்கும்படி என்னை முன்னங் கேட்டுக் கொண்டனை யல்லவா? உன்மனைவி யிவள்தானா கவனித்துப்பார்" என்றான். கின்னரன், 'ஆம்' என, சுந்தரன் பின்னுங்கின்னரனோடு சொல்லுகிறான், "கின்னர! துர்முகனென்னு மரக்கனால் சிறைபிடிக்கப்பட்ட அநந்தம் பெண்களை இப்போதுதான் அவரவர்கள நகரம் போக விடுத்தேம்; இச்சம்பகாவதியு மவர்களுள் ஒருத்தியாய் சிறைபிடிக்கப்பட்டிருந்தாள்; இவளை என் மந்திரியாகிய இச்சுகுணனுக்கு விவாகம் பண்ணுவித்தேன; மங்கையாகளெல்லாம்

"தூயவராகிய வாரியர்தாமுஞ் சுடர்ச்செம்பொ
சேயிழையாரும் வலிந்துறிலின்பு செயாரென்று'

தானுமவர்களும் ஏகிபாவமான இன்பநுகர் சிச் சமயம் பார்த்துக்கொண்டிருந்த அவ்வாச கனால்

வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலறிது"

என்றிருத்தலால்' ஸ்வீகரிக்கப் படாமல் கற் புடையவர்களாய் தவம் புரிந்துக் கொண்டிருந்தார்கள். ஆதலால் உன்மனைவியு மவ்வண்ணமே இருந்தவள். இவளைக் கைகொண் எம்முடன் கிருபாகடாக்ஷமுனிவர் ஆசிரமத்திற்கு வருவாயாக," வென்று சொல்லி ஐவருமம்மகா முனிவர் ஆசிரமம் வந்து சேர்ந்தார்கள்.

டி. எஸ். சுப்பராமையர்.



ஷேக்ஸ்பியர் நாடகம்.

## ஒதெல்லோ.

உ. அங்கம்.

ந. களம்:

இடம்: வென்னிஸில் அரசன்
மந்திராலோசனைச் சபை.

**அரசனும் அமைச்சர்களும் ஆசனத்திருக்க உத்தியோகஸ்தர்கள் சூழ நிற்றல்.**

**அரசன்.**—நம்புதல் வரும்படி நவின்றவிவ் வாசகந்
தொன்றினுக் கொன்று தொடர்புகொண்டிலதால்,
**முதன்மந்திரி.**—உண்மையி லவைக ளொவ்வாத னவே:
ஆற்றேழ் கலனென நுவலுமென் நிருபம்.
**அர.**—என்னுடைக் கடிதமோரீ ரருபதே
**இரண்டாமந்திரி.**—ஈரைம் பானென்னு மென்னுடை முடங்கல்:
(பலவாய் வேற்றுமை பயந்திடும் பாலவா
மூகத் தறிதரு மீங்கிவை யொத்ததோர்
விடயந் தனிற்)றொகை யொன்றுறு விடினும்,
துருக்கர்தங் கப்பற் றொகுதியொன் றங்கே
சைபிரஸ் என்னுமத் தனிநகர்க் கேகுவான்
பாய்தரித் தனவெனப் பலம்பெற நாட்டும்.
**அர.**—ஆய்தரி னங்ஙன மாகவுங் கூடும்.
மூரண்பட வரைந்தவிம் மொழிகளி னத்துணை
கவலா தொழிவுறக் காரணங் காண்கிலன்.
முக்கிய மாகிய முடிவுரை யதனையான்
றுண்படு மனத்தொடு மொப்பித் துணிந்தனன்.
**மாலுமி.**—ஐயகோ வேந்தே! ஐயகோ வேந்தே!
[திரைக்குள்.

பிரவேசம்: மாலுமி.

**உத்தியோகஸ்தர்.**—போர்க்கலத் திருந்தொரு தூதுவன் போந்தனன்.
**அர.**—செய்தியென் செப்பு?
துருக்கர்தஞ் சேனைகள்
**மா.**—ரோட்ஸ்எனு நகர்மேற்படையெடா நின்றன;
ஆகலின் அடியே னரசனுக் கிதுசொல
அஞ்சலர் பெருமா னணைமேற் கொண்டனன்.
**அர.**—இதற்குநீர் காரண மென்னவென் றியம்புவீர்?
**முதன்.**—எங்கிது கொற்றவ வொல்லுமா றில்லை;
ஆய்வுழி நிலைபே றற்றதா யழியும்;
ஆங்கது நந்தமைக் கவர்படு மறிவான்
மயக்கினுட் படுக்கிய வகுத்தபொய்த் தோற்றம்.
சைபிரஸ் என்னுமத் தனிப்பெரு மாநகர்
துருக்கர்க் கவசிய மாவதுசூழ்ந்துமேல்
மீளவு மதுவே ரோட்ஸினு மேலாய்
விருப்பொடு மாங்கவர் வேண்டுவ தென்பதும்,
ரோட்ஸெனும் மாநகர் உடையதா மவ்வலி
தன்வயிற் குறைந்து சமர்பொரத் தக்கவக்
காப்புடை யரண்களைக் கைக்கொண் டிராமையால்
அச்செய லெளியசிற் றமரினின் வாய்ப்பதும்,
ஆய்ந்துமற் றிதனையா மகத்திடைக் கருதினால்
சிறிதும் பயனிலாத் தீயதோர் செய்கையின்
முயற்சி கொண் டியற்றுவான் பயன்றரு முயற்சியை
யசட்டையின் விடுத்துமுற் படவவர்க் காவதைப்
பிற்படச் செய்துமென் றிகந்திடப் பெருநவுஞ்
சமர்த்திலா ரவரெனச் சூழ்வதுந் தக்கதோ.
**அர.**—ஐயுற விலையவர் ரோட்ஸுக் கல்லர்காண்.
**உத்தி.**—இன்னுமோர் செய்தி யீங்கிதோ வந்தது.

பிரவேசம்: ஒருதூதன்.

**தூதன்.**—துருக்கர்க ளாகுவார் தொழுகழன் மன்னவ,
நேரே ரோட்ஸெனு நெடுநகர்க் கேகி
யவ்வயிற் பின்செலுங் கலனோ டொன்றினர்.
**முதன்மந்திரி.**—அங்ஙன மதுவே ஐயயா னினைத்தனன்:—
நீயினைத் திடுமபோ லெத்தனை நெடுங்கலம்?
**தூதன்.**—வங்கமோர் முப்பது: மற்றவை யின்னே
ஸைபிரஸை நோக்கிய தங்களுட் கருத்தெலாங்
கையுறுங் கனியெனப் புலப்படுங் காட்சியிற்
றிரும்பவு மவ்வழிச் செல்லுத லமைந்தன.
உண்மையும் வீரமு முயரிய நுந்தம்
மந்தனான் என்னும் மாட்சியின் வல்லவன்
றிறம்புதன் கடமையிற் செய்தவிண்ணப்பம்
இறையேற் றருள்செய நுந்தமை யிறைஞ்சினன்.
**அர.**—அஃதேல் நிச்சயம் ஸைப்பிரஸுக் காகவே.
மார்க்கஸ் லூகிசோ நகர்வயின் இலனோ?
**முதன்.**—இங்ஙனம், ப்ளாரன்ஸ் எனுநக ரிடத்தினன்.
**அர.**—கையுட னவற்கோர் கடிதம் போக்குதும்.
**முதன்.**—அங்கிதோ வந்தன ரெறுழ்வலி மூவரும்
ப்ரபான்ஷியோ வென்னுமப் பட்டினத் தலைவரும்.

பிரவேசம்: { **ப்ரபான்ஷியோ, ஒதெல்லோ, இயாகோ, ராஜீகன், உத்தியோகஸ்தர்கள்.**

**அர.**—ஒதேல்லோ வெனப்புக ழொப்பிலாவீர
பொதுப்படத் தெவ்வெனப் புகலுமத் துருக்கர்மேல்
நின்னையாம் நேரே விடுத்திட நேர்ந்தனம்.—
நின்னையான் பார்த்திலன், நெடுந்தகாய், வருக
[ப்ரபான்ஷியோவைப் பார்த்து]
இற்றைநா ளிரவிலுன் சூழ்ச்சியி னுதவியை
யாமெலாம் வெகுவா யெதிர்பார்த் திருந்தனம்.

**ப்ரபான்.**—யானுமங் ஙனமே : இனியநற் புரவல,
மன்னித் தருளுக ; மன்னுமென் நிலைமையாற்,
காரிய மற்றிதைக் கருதிய தன்மையா
னன்றியான் சேக்கைவிட் டருந்துயி லெழுந்தது ;
பொதுப்பட யாரையும் பொருந்திய கவலையோ
வென்னின்மற் றவைதா மென்வயிற் பற்றில ;
பின்னையெற் குரியதோர் பீடழி பெருந்துயர்
ஒவெனு மதுபோ லுட்கொளுங் குணத்ததாய்
வேறுள துயரொலாந் தன்வயின் விழுங்கித்
தானழி வுறுமற் றனிப்பட விருக்குமால்.

**அரசன்.**—என்னோ புகுந்தது?

**ப்ரபான்.**— என்பெரு மடமகள் !
என்கண் ! என்னுயிர் ! என்குல விளக்கே !

**மந்திரி.**—மரித்தனள் ?

**ப்ரபான்** ஆம், என் றனக்கு ; மற்றவள்
சிக்கினள் மயக்கினுள், திருடப்பட்டனள்,
மாசுமே நிறைந்தனள் ; மலைவளர் மாக்களால்
வந்தமந் திரத்தினோ ! மருந்துதா மெவையோ !
குறைவாய்க் குருடாய்க் கூர்மதி யின்மையா
யிராதநல் லியற்கை யித்துணை மூடமாய்
மந்திரத் திலாமலே பிழைக்கவும் வல்லதோ.

**அரசன்.**—நிறைகுணப் பண்பையு நேரிழை மயி
லையு
நீங்கநின் றனையையு நின்னையுங் கெடுத்த
இக்கொடுஞ் செயலின னியாவனே யாயினும்
[ஜேம்ஸ்எனு மிறையவன் செய்துள விதற்கு]
மிகக்கொடுந் தண்டனை விதிக்குமந் நூலினை
யுன்மனப் படியே யுறுத்தும் பொருள்தரப்
படிவிஷ மெனும்படி நீயே படித்திடு ;
அருமருந் தன்னநம் புதல்வனே யாயினு
நீசொலுங் கொடுஞ்செய னிகழ்த்தினு னயின்
றண்டனை யிதற்கவன் றப்புதல்வேண்டா.

**ப்ரபான்.**—பணிவுடன் வணங்குவன் பருணிதர்
தலைவ!
ஈங்கே யுள்ளனன், இந்தவிம் மூவர்தான் ;
சிறந்தநின் கட்டளை யரசியற் செய்கைகட்
கீங்கவன் றனைக்கொணர்ந் திட்டது போலும்.

**எல்லோரும்.**—மிகவா யிரக்கியாம் விசனிக் கின்
றனம்.

**அரசன்.**—இதற்குநின் றிறப்பினி லென்சொல
மாட்டுவை? [ஒதெல்லோவை நோக்கி]

**ப்ரபான்.**—இதுவே யன்றிமற் றியம்பவொன்
றில்லை.

**ஒதேல்லோ.**—வலியினுற் சூழ்ச்சியான் மாண்
புடை யண்ணல்காள்,
நனிபெருந் தகைமையி னல்லவென் றலைவரீர்,—
மூப்பின னிவன்றன் மொய்குழன் மகளையான்
எடுத்துவந் தனனீ திறப்பவும் வாய்மை ;
வாய்மையே யவளையான் மணந்திடல் செய்ததும்;
என்பெரும் பிழையினிற் றலையா யதுதா
னிவ்வளவினதே, இதற்குமே லில்லை.
சொன்னயப் பேறிலேன் ; துடுக்கெனப்பேசுவேன்;
சென்றன வொன்பான் றிங்கண்முன் வரையிலு
மிந்தவென் புயங்க ளேழெனும் வயதுதொட்
டமர்க்கள மதனினே விளையாட் டயர்ந்தன ;
சிறுபெரும் போரிற் செய்திற மல்லதிம்
மன்பதை நெருங்கிய மாண்பே ருலகினைப்
பற்றிய வொன்றுமே பகர்ந்திட வறியேன் ;
ஆகலி னடியே னென்றிற மறைவதி
லெனக்குள வேதுவை யினிதுசெய் வேனலன்.
ஆயினு நமதுபே ரமைதியை முன்னிட்
டப்பழுக் கிலாதவென் னன்புசெல் வழியெலாங்
காட்டுமோர் கதையினைக் கட்டுரை செய்குவன் :
(எதினுற் பழியின னியானு யினனம்)
மருந்தோ மாயமோ மந்திர வித்தையோ
யாதினோ விவன்மக ளன்பையென் றிட்டனன்.

**ப்ரபான்.**—என்றுமே துணிவிலா வெழின்மிகு
கன்னிகை;
கொம்பென நுடங்கினி நாணமே கூரும்
மென்மையுஞ் சாந்தமு மேயமெய்ப் பாட்டினள்:
இத்தகை மடமா னியற்கையை மீறிப்
பருவமு நோக்காள், ஊரையும் பாராள்,
கருதா ளிசையையும், யாவையுங் கடந்து
பார்க்கவும் பயந்ததோர் படிவமார் பொருண்மேற்
காதலின் வீழக் கருதவும் படுமோ!
இயற்கைக் கமைந்தவவ் விதியெலா மிகந்து
பூரணப் பொருளும் புரைசெய் புகுமெனச்
சொல்லுத லெத்தனை மதியிலாச் சூழ்ச்சி!
இப்படி நிகழ்வதற் கேதுநீ ணரகிற்
புகப்பெறு வஞ்சகப் புன்மொழி லவற்றினைத்
தெரிதலிற் புந்தியைச் செலுத்தித் தெளிகுவிர்
மீளவு மிதனுல் வேர்விழ நாட்டுவன்
குருதியைத் திருத்திடுங் கூட்டுப் பொருளினோ
வருபய னிதுதரு மாயத் துளியினோ
கொடியிடைக் குயிலையிக் கோலங் கொண்டனன்.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.




[God is Love : Knowledge is Power':]
அன்பேயவன் : அறிவேசக்தி :]
சத்தியமேஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 11.] 1903௵ ஜனவரிமீ. [இலக்கம் 9.

"The New Life."

# "பிறந்தநாளும் திருவாதிரையும்."

ஒருவர் தப்புவதற்கரிதான ஒரு சங்கடத்தில் அல்லது ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு செத்துப்பிழைத்ததாகச் சொல்லும்படி அவ்வளவு அரிதாய் அதினின்றும் மீட்சிப்பெற்றுத் தேறினல் அப்பொழுது அவரைப்பார்த்த "நீ பிறந்தநாளும் திருவாதிரையும் இன்றைக்குத்தான் உனக்கு" என்று அவரைச்சேர்ந்தவர்கள் முகமன் சொல்லித்தேற்றுவது உலகவழக்கம். இது ஆத்மார்த்தமான அனுபவ உண்மையை யுலகவழக்கிலுபயோகித்து வரவர அதிலுள்ள ஆத்மார்த்தமுணராது மறந்து சாமான்ய ஜனங்களுபயோகித்துவரும் பழமொழிகளில் ஒன்றும். "பிறந்தநாள்" என்று இங்கு குறிப்பது "ஆன்மதரிசன" முண்டாய், "புனர்ஜனனம்" என்றும் "தன்மயத்துவம்" என்றும் சொல்லும் பிரத்தியகாத்ம வுணர்ச்சி பிறந்த காலத்தையன்றி வேறல்ல. திருவாதிரை நக்ஷத்திரத்தில் பகவான் பக்தர்களுக்குத் தரிசனமளிக்கிறாரென்பது ஐதிகமாதலால், இந்த ஸ்வாத்மதரிசன வுணர்ச்சி யெப்பொழுது உண்டானாலும் அது அந்தச்சீவன் "புனர்ஜனன" மெடுத்த (அதாவது "ஊனொழிந்து உண்மைபஜன") நாளாம். அந்த நாளே அவனுக்குத் திருவாதிரைநாளுமாம். துவிஜர்கள் (இருபிறப்பாளர்) பூணூல் அணிந்து ப்ரஹ்மசாரி யாச்சிரமம் புகுவதின் அநுத்தமும் இதுவேயாம். இந்த அருத்தப்படி சென்ற ஆருத்ரா தரிசனம் இந்த விவேகசிந்தாமணிக்குப் "பிறந்த நாளும் திருவாதிரையும்" ஆயிற்று என்று சொல்வோம். சென்ற 18-மாசகாலமாகப் பத்திரிகை அவ்வளவு ஒழுங்காக வெளிவராமல் கண்டவர், கிடைத்தவர் உதவியைக்கொண்டு வெளியாகிப், பின் சாவோமா பிழைப்போமா என்னும் ஸ்திதி

யில் மூன்று நாலு மாசமாகப் பேச்சு மூச்சில்லாமலொடுங்கிக்கிடந்து, கடையில் அருத்ராதரிசனத்தன்று, நடராஜா அருளால், செத்துப்பிழைத்ததுபோல் உருமாறி உள்ளமுமாறி வெளிவந்தது. விவேகசிந்தாமணி என்னும் பேர் அதற்கு உண்மையில் பொருந்தும்படி. நித்யாநித்ய வஸ்து விவேகமுணர்ந்து சந்நிவார்ந்ததாய் நடராஜா எல்லையே தலைமேற் கொண்டு நடப்பதாய் ஸ்தபக்கொடி பறக்க எம்பிராட்டியாம் ஸ்ரீ லோகமாதா தாமே திருக்கர பதாரமாகித் தம் திருவருட்குழவிகளாம் பக்த ஜனங்களுக்கு உண்மையறிவாம் ஞானப்பால் போட்டி, மனப்பால்குடிக்கு மந்திக்க குழந்தைகளெல்லாம் உள்மலம் நீங்கி உய்யுமாறு, வெளிவந்தாற்போலாயிற்று. அவன் இகபரமிரண்டிமேகமாயமையு நேர்மையால், ஐக்யத்தையே லட்சுலோகமூடுருவின் ஜாதிடபக்கும் ஆதாரமாகக்கொண்டு, சன்மார்க்கத்தையே - பூலோகத்தில் முளைத்துப் புண்ணியமாமிலைகள்விட்டுத் தழைந்துச் செழித்து, ஐக்யமென்னும் கொழுக்கொம்பையாதாரவாகக்கொண்டு அதைச்சுற்றிப்படர்ந்து பரலோகமட்டுஞ் சென்று விரக்திப்பூ பூத்து, வைராக்கியப்பிஞ்சு விட்டு, அது நிஷ்காம்யகருமமாங்காயாகிப் பருத்துப், பரிபக்குவமாம் பக்தியாலது மூத்திப்பழமீன்று, மோக்ஷசாம்ராஜ்ஜியமாம் தெவிட்டாத்தேன் கட்டியளிக்கும் ஆனந்தக்கொடியைச் சீவர்கள் ஹிருதயமாம் நிலத்தில் நட்டுக், கருணாசமுத்திரத்திலிருந்துண்டான கார்மேகம்போலுமவள் தன்கருணை மழை பொழிந்துள்ளங்குளிரச்செய்து, உண்மைப் பயிர் செய்யவந்தாள்போலும்;— அஞ்ஞத்தை யழிக்க நோன்பு பூண்டு, அஞ்ஞான இருள் போக்கவென்றே யவதாரமானாளென்னும் பாவனை விளங்கப், பின்புறத்தில் ஞான சூரியனுதயமாய்த் துலங்க, அகம்பாவ அவதாரமான துரியோதனனைத் தொலைப்பான் சபதங்கூறித் தலைவிரிகோலமான த்ரௌபதா தேவியைப்போலும் மகுடமுடிகூந்தலவிழ்ந்து தொங்கக், குழந்தையுமடியுமாய், அண்டத்திலிருந்து மதம்கப்பால் விளங்கு நெற்றிக்கண்ணொளியை நேர்சாந்துப் பொட்டாலொளித்து.

“ எழுதாப்பொத்தகத்தேட்டின் பொருளைத்

“ தெருளாதகன்னி தெளிந்திருந்தோத”

வென்று திருமூல நாயனார் சொல்லிய வாக்குப் பொய்யாது பாதுகாக்கவந்தாள்போலும்;—என்னைப் பெற்றுவளர்த்துப் பேருலகை யூட்டிவைத்து, அருமருந்துங் கொடுத்து ஆளாக்கிவிட்டவளாம் ஆனந்தத்தாயவள் அவதாரமாகி வந்தாள். வந்தவள் உருவத்தை வரைந்துள்ள படத்திற்காண்க. பூதகணங்கள் பிடித்த திரைவிரித்து நிற்கப், பாரிலுள்ள சீவர்கள் பக்தர்கள் உய்கவென்று பராசக்தி யவள்தானும் பணித்தென்னை யெழுதவிட்டாள். **சொல்லாமற் சொன்ன அவள் சொல்லைச்*** சொல்லாக்கியே நான் எழுதாமலெழுதியேட்டிடிற் பதிப்பியென்றேன் ஊருக்குழைப்பானுத்தமனவன்தானு மிதைச் சற்குருசேவையாச் சார்புடனேற்றுப் பிரசுரித்தான். உங்களுக்கா வுண்மையுணர விரும்பினீரேல், என்னன்னையருள் வேண்டி இருதயத்தைச் சுத்திசெய்து, கள்ளங்கபடு கனவிலும் நினையாது, உள்ளன்புவைத்து உளபொருளின்று உடல் ஆவிதன்னை உத்தமப்பொருளா வெண்ணி, பத்திக்கு வித்தாம் பரமனுக்கர்ப்பணமா ஊருக்குழைப்பதே உத்தம விரதமாக்கொண்டு, சத்தியந்தவறாது சாந்தமாயிருந்து,

“மலராதமாட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாதவண்டு மணமுண்டவாறே”

யென்.

* c. f. திருமூலர்,—“உரையற்ற தொன்றையுரைத்தா னெனக்கு,”



திருமூலர் “சூந்யசம்பாஷணை”யிற் சொல்லியபடி, குருவாக்கினுட்பொருளைக் கனவு நனவழிந்து கருத்திருத்துச் சற்சிஷனைப்போல், பக்தி சிரத்தையோடு வாசித்து உண்மையுணர்ந்து உள்ளத்தோர்ந்து, பக்குவமெய்திப் பராங்கருணை மிகுதியால், குருபரன் பெற்றுக் குணம்பல போக்கிப், பரசுகம் விரும்பிப் பரமனையுந் தேடலாம். தேடியலைந்துணர்ந்து தெவிட்டாத்தேன் கட்டியுண்டால், ஆடிப்பாடி ஆனந்தத்தில் மூழ்கித், தேவித்தெளிந்து தேன்மொழிபகர்ந்து, சுகதுக்கமெட்டாச் சாந்தமு மெய்திடலாம். சொன்னேன், சொன்னேன், உண்மையைச் சொன்னேன், “ அன்னை சொல் மிக்க மந்திரமில்லை:” அவளினும் பெரியா ராருமேயில்லை.

“ அளியொத்தபெண்பிள்ளை யானந்தசுந்தரி
புளியுறுபுன்பழம்போ லுள்ளநோக்கித்
தெளியுறுசித்துச்சிவகதிகாட்டி
பொளியுறவைத்தென்னை யுய்யவுண்டாளே.”

“ உண்டில்லையென்றது ருச்செயநின்றது
வண்டில்லைமன்றினுள்மன்னிநிறைந்தது
கண்டிலர்காரணகாரணிதம்மொடு
மண்டலமூன்றுறமன்னிநின்றாளே.”

“ நின்றாளவன்றன் னுடலுமுயிருமாய்ச்
சென்றாளசிவகதி சேரும்பராசக்தி
ஒன்றாகவென்னுட் புகுந்துணர்வாகியே
நின்றாளாஞ் சடைநேர்நங்கை யாளே.”

“ ஏடங்கைநங்கையிறையெங்கள் முக்கண்ணி
வேடம்படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடுந்திருமுறை பார்ப்பனிபாதங்கள்
சூடுமென்சென்னிவாய்த்தோத்திரஞ்சொல்லுமே.”—திருமந்திரம்.

ஓம் தத்ஸத்.

சத்குருவேநம:

“ அபிவாதயே...ஸத்யாநந்த: சாந்த சர்மாகாமாஹமஸ்மிபோ.”

HAPPINESS—LOWER AND HIGHER.

## இகபரசுகம்.

“இகமும் பரமுமிரண்டென்றேங்கிமயங்குவார்
இகபரவுண்மையையோர்ந்து முணர்கிலாதுனர் ;
இகசுகமெண்ணிலிருளொளிமின்மினிபோன்றதே ;
பரசுகம்பேரொளியிருளிலாக்கடுவெளிதன்னிலே.”

சுகம் ஒன்றே. அதை இகசுகம், பரசுகம் என்று இரண்டாய் வகுத்துக் கூறுவர். இதனால் இகம்வேறு,பரம்வேறு; ஆகஇரண்டுண்டென்று சாதாரணஜனங்கள் அறியாமையால் எண்ணி மயங்குவர். உண்மையில் அப்படி யொன்றுமில்லை. இகம் - தாழ்ந்தது ; பரம் - மேலானது. இகசுகம் - தாழ்ந்தசுகம்; பரசுகம் - மேலான சுகம். இகசுகம் இருளில்ஒளிக்குமின்மினிப் பூச்சியின் வெளிச்சம்போல் தோன்றிமறையும் சுபாவமானது. பரசுகம் இருளில்லாத சுத்த வெளியில் ஜகத்சோதியாய் கோடிசூரியோதயமானாற்போல் அழியாது விளங்கும்சொப்பிரகாசமான வெளிச்சமாம். ஒன்று மாறுதலையே சுபாவமாகவுடையது. மற்றொன்று மாறுமையே சுபாவமாகவுடையது. இவ்விரண்டும் அளவில் வித்தியாசப்படுமேயன்றி தன்மையில் வித்தியாசப்படாது. உண்மையிலுள்ள வித்தியாசம் இதுவேயாம். எல்லா மதாசாரியர்களும் மதகுரவர்களும் உண்மையிற் செப்பியதுமிதையேயாம். சாமான்ய ஜனங்களுக்கு உண்மையை உள்ளபடி சொன்னால் கிரகிக்குஞ்சக்தி அவர்களுக்குப் போதாதென்று இவ்வுண்மையைக் கற்பனாசக்தியால் மேலோர் கதை புராணங்களாகக் கற்பித்துப் போதித்துளர். இக்கதை புராணங்களைக் கற்பித்தோர் எண்ணம் மேலானதாகவேயிருந்தாலும் காலதேசவித்தியாச வேறுபாடுகளால் ஒருநிலையிலுள்ளார்க்கென்று செய்யப்பட்ட கற்பனா கிரந்தங்களை வேறு நிலையிலுள்ளார் உண்மையுணராமலும், காரணகாரிய விசேஷமுணராமலும் அர்த்தம் செய்ய முயன்று தப்பர்த்தம் செய்து அனர்த்தம் விளைத்துவருகிறார்கள். உண்மையுணர்ந்த

பெரியோர்போதனையின்றி ஜனங்களும் "குருடனும் குருடனும் சேர்ந்து குருட்டாட்டமாடிக் குழியில் விழுந்தது" போலும், நரிவாலைக் கொண்டு சமுத்திர ஆழம்பார்ப்பது போலும், சிற்றறிவால் பேரறிவாளரியற்றிய பெருங்கிரந்தங்களைக் குருமுகமாவின்றித் தான்றோன்றிச் சித்தராய் அர்த்தஞ்செய்துகொண்டு சாரமெல்லாம் போகவிட்டுச் சக்கையைக் காக்கும் கசடர்போல் தங்களுடைய சௌகரியத்துக்குத் தக்கபடி நடந்துகொண்டு, சத்தியமின்றிச் சன்மார்க்கமின்றிச் சாத்திரம் சாத்திரமென்று ஓலைச்சுவடிகளைக் கட்டிக்கொண்டழுது அவற்றின்மேல் பெரும்பழி போட்டுத் தாங்களும் கெட்டுத் தங்களை வழிபடும்ஜனங்களையும் கெட்டுப்போகச்செய்கிறார்கள். நம்மையாளும் ஆங்கிலேயர்களும் நமது நடத்தையைக் கொண்டு நமது சாஸ்திரத்தைமதித்து நாம் கெட்டதற்கெல்லாம் நமது சாஸ்திரமே காரணமென்று நினைத்து "உன் ஊத்தைவாயை மூடு, என் உளருவாயைத் திறக்கிறேன்" னென்று நமது சாஸ்திரங்களையுள்ளபடியுணர வல்லமையின்றி அவைகளுக்குக் கண்டபடி யர்த்தஞ்செய்து கண்டனஞ் செய்துவருகிறார்கள். பள்ளிக்கூடங்களிலிப்பொழுது ஆத்மக்ஷேமார்த்தமான வித்தையேதும் பயிற்றுவிப்பது அசாத்தியமென்று சர்க்கார் ஆத்மவித்தையை அறவேயொழித்துவிட்டார்கள். கிறிஸ்துமத பாதிரிகள் உண்மையில் பாடுபட்டுழைத்துவரினும் சொந்த மதாபிமானத்தினாற்பேதபுத்தி பாராட்டியுழைத்துவருவதால் அவர்கள் பிரயத்தனங்கள் ஆத்மவித்யாபோதனவிஷயத்தில் பரமதஸ்தர்களுக்கு அவர்கள் சொந்த மதப்பறை நீக்குவதொன்றேயொழிய வேறுபயன் விளைப்பதில்லை. இங்கிலீஷ்படிப்பு ஏற்பட்டு 50 வருஷகாலமாய்விட்டது. ஒருதலைமுறையிரண்டு தலைமுறையாகி, மூன்றாந் தலைமுறைச் சிறுவர்கள் இப்பொழுது பள்ளியிற் பயின்றுவருகிறார்கள். இவர்கள் பெற்றோர் ஆத்மவித்யாவாசனையின்றியே படித்துத்தேறின உலகஞானிகளாயிருக்க, இவர்களுக்குப் பள்ளியிலும் இல்லத்திலும் ஆத்மவுணர்ச்சிக்கே வழியின்றி வளர்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு முன்னால்படித்துத்தேறினவர்கள், உத்தியோகலாப விசேஷத்தாலுண்டான மேன்மையில் செருக்கடைந்து மமதைகொண்டிருப்பவர்கள் போக, மற்றவர்கள் உலகத்தில் அடிபட்டு, சம்சாரத்தில் வரும் சுகதுக்கங்களைத் தாங்கமாட்டாது ஈசனையும் நம்பமாட்டாது சுழற்காற்றிலகப்பட்ட செத்தைபோல் மனநொந்து வருந்தி மாலுமியில்லா மரக்கலம்போல் தவித்துத் தத்தளித்து வருகிறார்கள். இதனால் தேசத்துக்கு விளையும்பெருங்கெடுதியை, ஊகித்துள் நோக்கும் சக்தியும் வருங்காலதிர்ஷ்டியுமுள்ள பெரியோர் பலர் உணர்ந்து எச்சரிக்கலானார்கள். எச்சரித்தும் அவர்கள் வார்த்தை யேறவில்லை. நாமுமிதைப்பற்றி இரண்டுவருஷகாலமாய் வற்புறுத்திக்கூறிப் பெரியோர் பலர்க்குக் கடிதமெழுதியும் சென்றபிப்ரவரி மாசம்வெளியான "மதிராஸ் ரிவியூ" என்னும் மேலோர் படிக்கும் பத்திரிகையில் வியாசமூலமாய் வற்புறுத்திக் கூறியும் வந்தோம். அதே அபிப்பிராயத்தைப் பகிரங்கமாய் வெளியிட்டு வற்புறுத்திய நம்மவரான கனம் திவான் பஹதூர் ஸ்ரீநிவாசராகவையங்காருடனும் இன்னும் சிலருடனும் சம்பாஷித்ததில் ஆத்மவித்தை யவசியமென்பதை முற்று மொப்புக்கொண்டு அதைப்பள்ளியிற் போதிக்கும் விதந்தான் புலப்படவில்லை யென்று சொல்லியர். உண்மையுணர்வும் ஸ்வானுபவமுமுள்ள ஒருவர் சர்வசமயசம்மதமாக ஆத்மவித்யா போதஞ்செய்வது சாத்தியமென்று சொல்லியும் அவர்கள் அதில் அவ்வளவாக சிரத்தை யெடுத்துக் கொள்ளவில்லை. டாக்டர் டங்கன், ஜஸ்டிஸ் இன்ஸ் இவர்களோடும் இன்னுமித்தேசத்தார் க்ஷேமத்தில் சிரத்தைகொண்ட ஸத்தியசந்தர்களான சில ஆங்கிலேயர்களோடும் இதுவிஷயமாய் நாம் ஒருவருஷகாலமாகக் கடிதப்போக்குவரத்து மூலமாய் மனங்கலந்துணர்ந்ததில் உண்மையுணர்வு அவசியமென்றேயெல்லாரும் ஒப்புக்கொண்டார்கள். சைதாப்



பேட்டை டீச்சர்ஸ் காலேஜில் வித்யா இலாகாத்தலைவர் கனம் மிஸ்டர் ஸ்டூவர்ட் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, அமெரிக்காவிலிருந்து வந்து இங்கு வித்யாவிஷயத்தி லுழைக்கும் துரைசானியொருவர் செய்த பிரசங்கத்தில் ஆத்மவுணர்ச்சியில்லாத காரணத்தால் ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் வழங்கிவரும் வித்யாபோதனமுறை ஜனங்களைச் சன்மார்க்கத்தில் திருப்பி நிறுத்தப் பிரயோஜனமற்றதாயிருக்கிறதென்றதை அவர் ஆமோதித்தவாராகக் காட்டினமையாலும், எம்மதத்தாருக்கும் ஆத்மாவொன்றேயாதலாலும், ஆத்மவித்தையெல்லாருக்கு மவசியமாகையாலும், அதைப்பற்றிப் போதிக்கவேண்டுமென்கிற ஆவல் நமக்குண்டாயிற்று. அதற்காகவேண்டிய பரிபக்குவமும் யோக்கியதையும் வந்தவுடன் பத்திரிகை முதலான எல்லா ஜோலிகளையும்விட்டு நிம்மதியாகவிருந்து நினைத்தவிடஞ் சென்று இந்த வொரு சற்சேவைக்காக நமக்கு எஞ்சியுள்ளவாழ்நாளை அர்ப்பணஞ்செய்து வெளிக்கிளம்ப உத்தேசித்திருந்தகாலத்தில் நடராஜாவருளால் அவர் இப்பத்திரிகை மூலமாகவே இச்சற்காரியத்தை நடத்த ஏவியதுபோலும் திட்டகுடி உபாத்தியாயர் சங்கத்துக் காரியதரிசி யனுப்பியகடிதத்தில் அதேவிஷயத்தைப் பற்றியற்புதமான பிரியாதுஒன்று எழுதிவிட்டு அதைப் பிரசுரமூலமாய் விளக்கவும் கோரப்பட்டிருந்தது. ஈசனருளிருந்தவாறிப்படியாக்குமென் றோர்ந்திருக்கையில் அதற்குவேண்டிய பெரியோர் சாதகமும் அனுக்கிரகமும் கிடைக்கலாயிற்று. மற்றவையிங்கு வெளியிட இது சமயமன்று. பரத்தை நாயகத்திலுழைத்து இகசுக அனுபவத்தால் பரசுகமேன்மையை யூகித்துணர்ந்து உய்யும் வழிதேடுவதே இம்மானிடஜன்மமெடுத்ததற்குப் பலனென்பது ஸர்வமதசம்மதமான சித்தாந்தமாகையாலும் ஹிந்துக்களுக்குள்ளும் ஆங்கிலேயர்களுக்குள்ளும் நாம் ஆப்தர்களாய் மதிக்குமேலோர்பலர் நம்மைக் கேட்டுக்கொண்டபடியாலும் உலகெலாம்படைத்த உண்மையனும் முழுமுதற்கடவுள் திருவருளைச் சிந்தையில் வைத்து சத்தியவிரதம்பூண்டு சத்தியமே ஜெயமென்னும் பூர்ணநம்பிக்கையால் உண்மைக்குழைப்பதே யுயிர்நோன்பாகக்கொண்டோம். உண்மையில் உலகக்ஷேமத்துக் குழைப்பார் யாவரேயாயினும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுழைக்கும் வரையில் அவர்களெல்லாரும் பக்தர்களே. அடியார்க்கடியனான ஈசன் அவர்களிடத்துக்கருணைசுரந்து கடாக்ஷிக்காது விடானென்பது நமது அனுபவசித்தாந்தம். ஆகையால் இற்றைக்குப் பதினொரு வருஷங்களுக்குமுன் ஆரம்பித்தவேலையை இன்றுமுதல் உண்மையுணர்வோடு உத்தமசித்தர்தம் பொற்பாதந் தொழுது திடசித்தத்தோடு நடாத்திவருவோம். அப்பொழுது அரைகுறையறிவோடு நமக்கு வழிகாட்டியாய்க்கொண்ட உத்தம மேற்கோளின் உண்மையை யுள்ளபடி யின்றுணர்ந்து கொண்டோம்.

இனிமேலும் அதன் வழிப்பட்டே நடந்துகொள்வோமென்று சொல்லாமற் சொல்லியபடி அதைக்கீழே வரைகிறோம்.

அறிவுடையா ரெல்லாமுடையார் அறிவிலார்
என்னுடையரேனு மிலர்—திருக்குறள்.

இதைவாசிப்போர் மனதில் வைக்கத்தக்கதாய் திருவள்ளுவதேவர் சத்தியவாக்குகளில் இன்னொன்றையும் இது முதல் மற்றொருமேற்கோளாகவெடுத்தாள்வோம்,

கற்கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக—திருக்குறள்.

ஸத்யமேஜயம்.

## Health—i. Of Body.

## சுகாதாரமுறை.

### 1. தேகசுகம்.

சுகாதாரம் என்றால் சுகத்துக்கு ஆதாரமாயுள்ளது. அப்படி யாதாரமாயுள்ளதெதுவோ அதை யுள்ளபடி போற்றும்முறை சுகாதாரமுறையாம். சுகத்தை ஆதரிக்கும் முறையெனினும் பொருந்தும். சாதாரணமாய்த் தேக

போஷணையும் தேக சுகமும் இகசுகபோகத்துக்கே உரியதாகக் கொள்வது சகஜம். நம்முள் வழங்கிவரும் அனேக தப்பெண்ணங்களில் இது ஒன்று. தத்துவநிலை யோராமையால் வந்த பெருங்கேடுகளில் இது மிகவும் முக்கியமானது. இதனால் ஜனங்கள் இகசுகம் பரசுகம் இரண்டையு மிழந்து கெட்டுப்போகிறார்கள். ஜகத்-சிஷ்டியில் கடவுள்படைத்த எல்லாவற்றிலும் மானிட தேகம் மிகவும் மாக்ஷிபெற்ற அற்புதசிருஷ்டி. இதில் எல்லாவினோதங்களு மடங்கும். இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட புதுமைகள் இனிக் கண்டுபிடிக்கப்படப்போகிற புதுமைகளெல்லாம் அடங்கிய அற்புதபொக்கிஷம். கடவுள் சிருஷ்டித்த ஈரேழுலகங்களையும் இதற்குள் காணலாகும். உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விநோத விநோதமான தத்துவங்கள், அத்தத்துவங்க ளமைந்த அற்புதக் கருவிகள், எல்லாம் இம்மானிட தேகத்தில் மறைபொருளாக அடங்கியிருக்கின்றன. மனிதனது காரணங் கருவிகளைவிட அற்புதமான கருவி அமைக்கப்பட்டதுமில்லை இனி அமைக்கப்படப் போகிறதுமில்லை. ஊனெலும்பு நரம்புகளாலான இத்தேகம் ஓர் விலையிலா மாணிக்கம்; கல்விக் களஞ்சியம்; காதலுக் கிருப்பிடம்; கருணாசமுத்திரம்; செல்வச்சிறுமலை; செம்பொன் சுரங்கம்; அழகுக்குறைவிடம். இவ்வளவோ! சாக்ஷாத் கடவுளுக்கிருப்பிடம்! உற்பத்தி-லயமுறையில் உழன்றலுத்த ஆத்மா ஆறியமர்ந்து அத்தனைச் சேர்ந்தானந்திக்கும் திருக்கோயில். இப்படிப்பட்ட அரும்பொருளைப்பெற்ற மானிடப்பிறப்பைச் சிலாகித்துக் கூறாத ஞானிகளில்லை, சித்தர்களில்லை, முத்தர்களில்லை, வித்வான்களில்லை, வீணர்களுமில்லை. முதலிடை கடையோராகிய மூவர்க்கும் இது ஓர் பெறலருஞ்சாதனம். இதைப்பெற்றதனாலடையும் பயனைச் சொல்லிமுடியாது. அப்படிப்பட்ட அருமையான அற்புதசாதனத்தை முறையறிந்து போற்றாது மூடர்களாய் வீணே துன்பங்களுக்காளாய் வருந்தி வாணாளை வீணாக்குவதுமன்றி கருணைக்கடலான ஈசனையும் வீணே நொந்து கொள்கிறார்கள். "குதிரை தூக்கிப் போட்டதுமன்றி குழியுமொன்று கூடப்பறித்ததாம்." என்றபடி, ஈசுவரன் தன்னையே அறிவதற்குப் பெருஞ்சாதனமாயளித்த பெறற்கருஞ்சாதனமாம் உடலை பேணு முறையறிந்து பேணாது கெட்டதுபோதாதென்று ஈசுவரநிந்தை செய்து ஆத்மாவையு மிழித்துக் கொள்கிறார்கள். ஆங்கிலேயர் சரீர சுதந்திரியென்று நம்மவர் அவர்களை ஒருவிதத்தி லிழுக்காகப் பேசுவதுண்டு. அது எப்படியிருக்கிறதென்றால் இருகண்ணும் கெட்டவன் ஒற்றைக் கண்ணனைப்பழிப்பது போலாம். நம்மில் பூர்வம் வெகுகாலமிருந்து காயசித்திபெற்று ஞானசித்தியும்பெற்று பத்தாந் திருமுறையாம் திருமந்திரமோதிய திருமூல நாயனார் சொல்வதை கேளுங்கள்:—

"உடம்பாரழியி லுயிராரழிவர்
திடம்படமெய்ஞ்ஞானஞ்சேரவுமாட்டார்
உடம்பைவளர்க்குமுபாயமறிந்தே
உடம்பைவளர்த்தே னுயிர்வளர்த்தேனே."

உடம்பினை யிழுக்கென்றுநினைத்து அலக்ஷியம் செய்வது அக்ஞானாந்தகாரச் செய்கையிலென்றே யென்பதிற் சந்தேகமில்லை. திருமூலரே யப்படி நினைத்துப் பிந்தி ஞானியான பின் அப்பிசகைக் கண்டுகொண்டாரென்றால் மற்றவர்க்குக் கேட்பானேன். பெரியோர்கள் எப்போதும் உலகுக்கு வழிகாட்டிகளாகையால் அவர்கள் கருணை மிகுதியால் தம் பிழைகளையும் எடுத்துச்சொல்லி உலகுய்ய ஆதரிப்பார்கள். அவருடைய மேன்மை நமது ஔவையார் கூறியுள்ள பின்வரும் வாக்கால் விளங்கும். அதாவது:—

"தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும்
மூவர்தமிழும்* முனிமொழியும் † கோவை
திருவாசகமுந்திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென் றுணர்."

* அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய தேவாரங்கள்.
† வியாசபகவானியற்றிய ப்ரம்மசூத்திரம் என்னும் வேதாந்தப்பொருட்தொகை.



வியாசபகவான் திருவள்ளுவதேவர் சைவசமயாசாரிய சிரேஷ்டர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களுக்கிணையானவரும் இவர்களுரைத்த பொருளையே உலகுய்வான் திருமந்திரமாக வோதிய மகானுமாகிய அவர் சொல்வதைக் கேளுங்கள், கேட்டு உங்களிடத்துள்ள அப்பிழையைத் திருத்திக்கொள்ளுங்கள்:—

"உடம்பினைமுன்னமிழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள்கண்டேன்
உடம்புளேயுத்தமன்கோவில்கொண்டானென்
றுடம்பினையானிருந்தோம்புகின்றேனே."

ஆகையால் ஞானிகளாகட்டும் அஞ்ஞானிகளாகட்டும் உடம்பைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. உடம்பைப் பேணு முறையறிந்து போற்றினால், உடம்பினைச் சுகமாயோம்புவதற்கு வேண்டிய சிரமம் வெகுசிறிதே. உடம்புக்கு முறைபிசகாக நடந்துகொண்டு, நாம் இடையூறு செய்யாம லிருப்பதொன்றே பெருங்காரியம். நமக்கு வரும் நோய்களில் பெரும்பான்மையும் ஈசுவரன் நமக்கு அபரிமிதமாய்க் கொடுத்துள்ளவைகளைக் குறைவின்றி நாம் உபயோகிக்காமையால் வருவனவே. இதற்காக எல்லாத்தேசங்களிலும் மேலோர் தம்முடல் பொருளாவியையும் கொடுத்துழைத்து வந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இன்றைக்கு 50-வருஷங்களுக்கு முன்னால் டாக்டர் ஸௌத்வூட் ஸ்மித் என்பவர் இதுவிஷயத்தில் பிரவேசித்துழைத்ததைப்பற்றிநாம் விவேகசிந்தாமணியில் எற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அவரோடுழைத்தவர்கள் இன்னு மெத்தனையோபேர்களில் ஸர். இ. சாட்விக் என்பவர் ஒருவர். இவர்க ளிருவரும் வைத்தியத் தொழிலி லமர்ந்தவர்கள். கானன் கிங்ஸ்லி என்னும் கிறிஸ்துமத குருவரும், பேர்போன கிரந்த கர்த்தாவுமானவர் இற்றைக்கு 30-வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் இந்தச் சுகாதார விஷயமாக எத்தனையோ பிரசங்கங்கள் செய்தும் கிரந்தங்களியற்றியும் சங்கங்க ளேற்படுத்தியும் வெகுபாடுபட்டுழைத்தார். அவர்களைப்போல் இங்குமிது விஷயமாய் உழைத்துவரவேண்டுமென்பதே நமது கருத்து. இக்கருத்தைக்கொண்டே சில வருஷங்களுக்குமுன் சுகாதாரவிஷயமாயுழைக்கப் பிரத்தியேகமாக ஏற்பாடுசெய்து அடிப்போட்டபடி சிறிதுழைத்தும் வந்தோம். நாம் இதுவிஷயமாய்க் காஞ்சீபுரத்துக்குப் போனபோது அரக்கோணம் ஸ்டேஷனில் ஷை சுகாதார விஷயமா யேற்படுத்திய கமிட்டியில் ஒருமெம்பராகிய மிஸ்டர் இ. டப்ளியூ. லீ யென்னும் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தரைக் கண்டுகலந்துபேசினதில் அவர் இச்சீர்திருத்தங்களெல்லாவற்றிற்கும் மதச்சீர்திருத்தம் ஆதாரமாக விருக்கவேண்டுமென்று சொன்னார். அதை யூகித் துண்மையென்று ஒப்புக்கொண்டும் அதில் உழைக்க நமக்கு அப்பொழுது அருகம் போதாமையைப்பற்றிச் சும்மாவிருந்தோம். இதுவிஷயமாய்ப் பிந்தி யுழைந்து வந்ததில் நேர்ந்த சம்பவங்களைக்கொண்டே அவர் சொல்லியதி னுண்மையை நாம் பின்னும் உள்ளாராய்ந்து சிந்திக்கும்படி நேரிட்டது. அதற்குள் ஈசனருளால் நாம் யமன் வாய்ப்பட்டுத் தப்பநேரிட்டது. அப்பொழுது நமது பேரும் கீர்த்தியும் உற்றார் உறவினரும் உபயோக மற்றவராயினர். நமது ஜன்மம் விருதாவாகப் போயிற்றேயென்று மிக வருந்தலானோம். இதையுணர்ந்ததுதான் தாமதம், உடனே பகவான் நம்முள்ளத்தை யுணர்ந்து நமக்கேற்ற குருவையுங் கொணர்ந்துவிட்டார். பின்னர் நம்மைப் பலபல பாடும் படுத்திப் பரிசோதனையும் மிகச்செய்தார். ஆனால் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் வாக்குப் பொய்யாகாமல் கடைசியில் நம்மைக் கடைத்தேற்றியருளி, நாம் பட்டபாடுகளெல்லாம் நம்மைச் சீர்திருத்தச்செய்த தந்திரங்களென்கிற உணர்வும் உண்டாக்கி, தந்நய சுகந்திலும் தற்பமியிலுள்ள நித்யானந்தத்தைநிதர்சனமாகக் காட்டினார். இப்பொழுது அதையெல்லாம் பற்றிச் சொல்லச் சமயமில்லை. இதுவிஷயமாக ஏற்கனவே பாடுபட்டுழைத்து வந்த டாக்டர் கிங், மிஸ்ஸஸ் பாரண்டர், மிஸ்

மானிங் முதலான மேலோர் நன்முயற்சியைக் கண்டு சந்தோஷித்து நம்மைத் தைரியமூட்டியும் இடையில் சிலகாலம் எல்லாவேலையையும் அறவே விட்டிருக்க நேரிட்டது. இப்பொழுது நாம் 18-மாசமாய் வேலைதுறந்து மறுபடியும் வேலை துவங்கும் காலத்தில் மிஸ்ஸஸ் பரான்டர் இதுவிஷயத்தை முற்றும் தம் பொறுப்பாக மேலெடுத்துப் போட்டுக்கொண்டுழைத்து மிகவும் சிலாக்கியமான விதமாகச் சுகாதார முறையறிவைப் பரவச்செய்யப்பாடுபட்டு வருவதைப்பற்றிச் சந்தோஷித்து அதை வெளிப்படுத்தவே யிது வெழுதலானோம். அந்த அம்மணி சுகாதார விஷயமாய்ப் பேச்சு முறையில் வெகுசுலபமாக வுணர்ந்து கொள்ளும்படி அதுசம்பந்தமான வுண்மைகளை யிங்கிலீஷில் வெகுசிரமம் வகித்து இலகுநடையில் எழுதியிருப்பதோடு அதைத் தமிழ்ப்படுத்தி ஹிந்து மாதர்கள் கூட்டத்தின் முன்பு படிக்கவும் ஏற்பாடுசெய்து வருகிறார். இந்த ஜனவரிமாசம் வெளியான "இந்தியன் லேடீஸ் மாகஸின்" என்னும் இங்கிலீஷ்ப்பிரசுரமாகும் இந்தியமாதர் பத்திரிகையில் இந்த அம்மாள் "இல்லத்திற்சுகம்பேணுமுறை" யென்னும் தலைப்பின்கீழ் ஸ்திரீகளுக்கு மிகவும் முக்கியமான இவ்விஷயத்தைப்பற்றித் தாமெழுதியிருப்பதை அடுத்தமாசம் முதற்கொண்டு வெளியிட்டுவரத் தீர்மானித்திருப்பதாகச் சொல்லி முன்னுரைகூறி ஒருகடித மெழுதியிருக்கிறார். அதில் இங்கிலாந்தில் கானன் **கிங்ஸ்லி** முதலானவர்கள் செய்முயற்சியால் சுகாதாரவிஷயமாய் மாதர்கள் சங்கமொன்றேற்பட்டுப் பல வருஷங்களாக வுழைத்து வரும் விவரத்தையும் அதனாலுண்டான நன்மைகளையும் சொல்லி இந்திய மாதர்கள் க்ஷேமத்தை நாடி அவர்கள் இங்குழைத்துவரக் கருதியிருப்பதையும் வெளியிடுகிறார். அந்த உத்தமி நமது பெண்குழந்தைகள், பெண்பாலர் முன்னுக்குவரவென்று அவர் க்ஷேமத்தை நாடிச், சென்ற 25-30-வருஷங்களாக வெகு பாடுபட்டுழைத்து வருகிறார். இப்பவும் அவரைப்போல் நமது க்ஷேமத்துக் குழைக்கிறவர்கள் ஆங்கிலேயர்களிலும் நம்மவர்களிலும் வெகு அபூர்வமே. ஆங்கிலேயர் இப்படிப் பரோபகார சிந்தை மேலிட்டவர்களாக விருப்பதால் தான் அவர்கள் நம்மிலும் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். நாம் அவர்களிடத்துள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கிரகித்து நம்மிடத்துள்ள குற்றங்களைந்து குணங்களை யவருக்குக் காட்டி வருவோமாயின் இருவரும் இந்தியாவில் தெய்வச்செயலாக ஒன்றுகூட நேரிட்டதாலுண்டான முழுப்பயனையும் அடைந்து சத்தியமாய் உண்மையிலும் உலகத்திலும் பெருமை பெற்று வாழ்வோம். மேற்படி பத்திரிகையில் அந்த அம்மாளுடைய படமொன்று வெகு அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்க மிகச் சந்தோஷிக்கிறோம்.

## டில்லிராஜதர்பார்.

"டில்லிக்கு ராஜன் ராஜாதிராஜன்" என்பது பூர்வந்தொட்டு வெகுகாலமாக வழங்கி வருகிறது. இன்றைக்கு 3500 அல்லது 4000 வருஷங்களுக்குமுன் பாண்டவர்களிற் பிரதமையான யுதிஷ்டரமஹாராஜாவுக்கு முடிசூட்ட விசுவகன்மா நூதனமாக அந்நகரை யமுனாநதி தீரத்தில் ஸ்தாபித்ததுமுதல் நாளதுவரையில் அந்த சம்பிரதாயம் நடந்துகொண்டுவருகிறது. பாண்டவர்கள் திக்குவிஜயம்செய்து 56-தேசத்து மன்னர்களையும் ஜயித்து இராஜசூயயாகம்செய்து சக்ரவர்த்தியாக முடிசூட்டப்பெற்றதுமுதல் அது இந்தியா முழுமைக்கும் தலைநகராக விருந்துவருகிறது. 11-ம் நூற்றாண்டில் ப்ரிதிவிராஜா டில்லிராஜனாயிருந்து கடைசி ஹிந்துசக்ரவர்த்தியாகயாண்டான். அப்புறம் படையெடுத்துவந்த பல அந்நிய இராஜவம்சத்தாரும் டில்லியையே தலைநகராகக்கொண்டாண்டு வந்தார்கள். இங்கிலீஷ்காரர்கள் அதிகாரம் பலக்கவிட்டுத் தான் அது துரைத்தனஸ்தானமாக வில்லாது தன் பதவியிழந்தது. இழந்



தாலுமென்ன அதன் பெருமைக்குக் குறைவில்லை. பதிவிரதா பத்தினியைப் புறக்கணித்த ராஜன் பட்டாபிஷேகத்தின்போது அவளை வேண்டியடைந்து அவள் மனமகிழச்செய்து அவளோடொத்திருந்ததுபோல், ஆங்கிலேயரும் மற்றக்காலங்களில் அதைச் சாதாரணநகராகவே நடத்திவந்தாலும் மகுடாபிஷேககாலத்தில் அந்நகர்க்கே சென்று தங்கள் பட்டங்களையும் பெருமையையும் ஜனங்களுக்கு வெளிப்படுத்துவாராய் வருகிறார்கள். இன்றைக்கு 25 வருஷங்களுக்கு முன்பு மாக்ஷிமைதங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள் லார்ட் லிட்டன் இராஜப்பிரதிநிதியாயிருக்கையில் இந்தியா முழுமைக்கும் சக்ரவர்த்தினியாகப் பட்டஞ்சூட்டிப் பயிரங்கஞ்செய்யப்பெற்றாள். இப்பொழுது அவருடைய ஜேஷ்ட புத்திரராகிய எட்வர்ட் அரசர் அவருக்குப்பின் சிம்மாசனத்துக்குவர அவர் இந்தியாமுழுமைக்கும் சக்ரவர்த்தியாக இந்தவருஷம் முதல் தேதியில் வெகுகோலாகல விசேஷ ஆடம்பரங்களோடுகூடிய பெரிய ராஜதர்பாரில் பயிரங்கம் செய்யப்பட்டார். டில்லியின் பூர்வமகிமைக்கு இப்பொழுது எவ்வளவோ அத்தாக்ஷிகளிருக்கின்றன. அவைகளையெல்லாம்பற்றிச் சொல்லில் விரியும். ஆனால் அவை யெல்லாவற்றிலும் அற்புதமானது என்னவென்றால் யுதிஷ்டிராராஜனுக்கு விசுவகன்மா ஒரு நொடியில் மாயமாய் இயற்றிய இந்திரப்பிரஸ்தம் என்னும் எழில்நகர் போல் இந்த இராஜதர்பார் கூடுவதற்காக லார்ட் கர்ஸன் அவருடைய புத்திவன்மையாலும் அதிவிசேஷ சாமர்த்தியத்தாலும் "மந்திரப்பிரஸ்தம்" என்று சொல்லத்தக்கதாய் அதிலும் அதிசயமென்று கண்டோர் திகைக்கும்படியான பெரிய நகரொன்றைப் பாழாய்க்கிடந்தமைதானத்தில் ஒரு நொடியி லெழும்பும்படிச்செய்ததுமிகவும் அதிசயமே. இந்திரப்பிரஸ்தத்தில் நீர் நிலம் இன்னதென்று வித்தியாசம் தெரியாமல் துரியோதனன் தடுமாறினான். இங்கே நூதனமாய்ச் சுமார் 15 மைல் தூரத்துக்குக் கூடாரமயமாயெழுந்து விளங்கிய குபேரன் பட்டணம்போன்ற அம்மாயநகரில் வந்தஇடம் போனவிடம் தெரியாது எல்லாம் கூடாரமயமாயிருக்கத் தியங்கினவர் எத்தனையோபேர்கள். சிற்றரசர்களில் மட்டும் 100 பேர்கள் வந்திருந்தார்கள். இவர்களன்றி இந்தியாவிலுள்ள துரைத்தனாதிகாரிகள் பற்பல தேசங்கள் மாகாணங்களிலிருந்தும் தங்கள் பரிவாரங்களோடு வந்திருந்தார்கள். ஆங்கிலேயரிலும் இந்தியர்களிலும் உத்தியோகத்திற் பெரியவர்களும் ஜனப்பிரதிநிதிகளில் முதன்மையானவர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்தார்கள். பிரிடிஷ் இராஜ்ஜியத்தினின்றும் அதைச்சேர்ந்த குடியேற்ற நாடுகளினின்றும் பிரதிநிதிகள் பலபேர் வந்திருந்தார்கள். பார்லிமெந்து சபை மெம்பர்களி லநேகர் இக்காக்ஷி காணவென்று பிரத்தியேகமாக வந்திருந்தார்கள். அந்நியதேச இராஜாங்கங்களின் பிரதிநிதிகளும் மிகுதியாக வந்திருந்தார்கள். இராணுவ வீரர்கள் இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்திருந்தார்கள். அக்காக்ஷியைக் காணக்கொடுத்துவைத்தவர்கள் அதை யுதிஷ்டிரர் அஸ்வமேதயாகஞ் செய்வதற்காக டில்லியிருந்த கோலத்தை மஹாபாரதத்தில் வர்ணிக்கக் கேட்டிருப்பதைக் கனவாக வெண்ணி, அதை நனவிற்கண்டதுபோல் எண்ணி மயங்குகிறார்கள். அவ்வளவு அபூர்வமானகாக்ஷி! அவ்வளவு பெருமை! அவ்வளவு ஒழுங்கும் ஏற்பாடும்! 6 கோடிப் பிரஜைகளையாளும் 100-சிற்றரசர்கள் அவ்விராஜதர்பாருக்கு வந்திருந்தார்கள். அங்கு கூடியிருந்த இராணுவங்களோ இந்தியாவிலுள்ள 2-லக்ஷம் 30-ஆயிரம் போர்வீரர்களில் பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள். உத்தியோகஸ்தர்கள், மகாஜனங்கள், பரதேசமன்னர், பாராளவல்லோர் இவர்களெல்லாருக்கும் பிரதிநிதிகளாயுள்ளோர் அங்கு கூடியிருந்தார்கள். இந்தியா முழுமையும் ஒருகுடைக்கீழான தற்கத்தாக்ஷி இந்த மஹா பெரிய தர்பார் காக்ஷியைப்போல் வேறு எங்கும் எப்போதும்

கண்டதில்லை. இந்தியாவை இப்படி ஒரு குடைக்கீழ் கொண்டுவந்ததன்றி அதையெல்லாம் ஒன்றுபடுத்திக் கலகம் கல்லலில்லாமலும், சத்தியம் சன்மார்க்கம் இவைக்குட்பட்டும் ஆண்டுவருவது மிகவும் அரிதரிது. அரிதிலும் அரிய இவ்வபூர்வ அதியாச்சரியமான காக்ஷியால் அவ்வரியகாரியம் பிரத்தியக்ஷத்தில் நிறைவேறிவருவது நிதரிசனமாயிற்று. இன்னும் மேலான பெருமை இந்தியாவை யாள்வோருக்கென்ன விருக்கிறது. பலவேறுபட்ட ஜாதிகளை ஒருமைக்குட்படுத்தி அவர்களை ஒரு சாதியாராக ஒற்றுமைபாராட்டச்செய்து தேசத்திலுண்டாகும் க்ஷாமங்களை நிவர்த்தித்துவிட்டால் அது அவர்களுக்கு இதிலும் அரிதான பெருங்கிதாப்பாகும். இதுவும் நாளடைவில் நிறைவேறிவருத்தக்கதேயன்றி வீண் மனோராஜ்ஜியமல்லவென்று இராஜப்பிரதிநிதி லார்ட் கர்ஸன் சொன்னார். அந்தனை சபைமுன் அதிபாடம்பரத்தோடு மாக்ஷிமை தங்கிய எட்வர்ட் அரசர் இந்தியா சக்கிரவர்த்தியாகத் தமது இந்தியா பிரஜைகளுக்கு விடுத்த மாண்பெறு கடிதத்தைப் படித்தபின், இந்தியாவின் பெருமையைப்பற்றி வியந்துகூறி பிரிடிஷ் தேசத்தார் உள்ளுணர்வு மகிமையாலும் அவர்களுடைய நல்லெண்ணப்போக்கினாலும் இந்தியா இன்னும் எவ்வளவோ மேலான நிலைமைக்குவருமென்பதிற் சந்தேகமில்லையெனச் சாங்கோபாங்கமாய்ப் பிரசங்கித்துப்பேசினார். நமது சக்ரவர்த்தியவர்கள் தாம் சென்ற ஆகஸ்டுமீ லண்டனில் மகுடாபிஷேகம் செய்யப்பெற்று முடிசூட்டிக் கொண்டபொழுது அவருடைய இந்திய பிரஜைகளிலும் சிற்றரசர்களிலும் சிலரே யங்கு வருவது சாத்தியமாயிருந்தமையால் எல்லாச் சிற்றரசர்களும், உத்தியோகஸ்தர்களும், மஹாஜனங்களும் தாம் பட்டத்துக்குவந்த சந்தோஷச்செய்தியைக் கேட்டுக் களிக்குமாறு தமது இராஜப்பிரதிநிதியவர்களை ஒரு பெரிய தர்பார் கூட்டிப் பயிரங்கப்படுத்தச் சொன்னதாகவும், அதற்குத் தாம் நேரவேவரமனங்கொண்டவராயினும் இராஜ்ஜியவேலை நெருக்கத்தாலும் இந்தியாவின் தூரப்பிரயாண விசேஷத்தாலும் அதுசாத்தியமில்லாமற்போனதைப் பற்றி விசனித்து, தமக்குப்பதிலாகத் தம்முடைய ஜேஷ்ட புத்திரரும் வருவது குடும்பவிஷயத்தைப்பற்றி சாத்தியமாயில்லையால், தம் சொந்த சகோதரரைத் தமது இராஜகுடும்பத்துக்குப் பிரதிநிதியாக இங்கு வந்தருள அனுப்பியிருக்கிறதாகவும் இத்தேசத்தையும் இத்தேசத்தாரையும் அவர் தம் தர்மபத்தினியோடும் நேரில் கண்ணாரப்பார்த்தவராகையால் இத்தேசத்தாரிடத்தில் அவர்களுக்கு அந்தியந்தப் பிரியமென்றும், இத்தேசத்தாருடைய க்ஷேமத்தைநாடித் தம் தாயார் சென்ற வழியில் தாமுமசென்று வெகுகருத்தாயிருக்கச் சித்தங்கொண்டிருக்கிறாரென்றும் எழுதியுளார். இந்தியா ஆங்கிலேயராளுகையில் இவ்வளவு முன்னுக்குவந்தது அவர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெகு பெருமையென்றும் இன்னும் அவர்கள் ஆளுகையிலேயேயிருந்து இந்தியா மென்மேலு மொற்றுமையடைந்து செழித்தோங்கி முன்னுக்குவருமென்பதிற் றடையில்லையென்றும் சொல்லி வெகு அற்புதமாகப் பிரசங்கித்து சக்ரவர்த்தியும் அவர் ஆக்ஷியும் நீடூழிவாழ வாழ்த்துகூறி முடித்தார்.

பிறகு சிற்றரசர்கள், பிரபுக்கள், உத்தியோகஸ்தர்கள் மஹாஜனங்களெல்லாரும் சக்கரவர்த்திக்காக அவரைப் பணியப்பெற்று மேன்மைதங்கிய கன்னாட் பிரபுவும் அவர் பத்தினியும் கூடவர ராஜகோலத்தோடு தர்பாரை விட்டுச் சென்றனர். டில்லிக்குவந்த ஊர்கோலக்காக்ஷி கண்கொள்ளாக்காக்ஷியென்று கண்டோர் வியந்துகூறி வர்ணித்தெழுதியிருக்கிறார்கள். ராஜகோலமும் இராஜாங்க விருதுகளும் கஜதுரகபதாதிசேனைகளும் வெகு சம்பிரமான காக்ஷியளித்ததாகக் கூறுகிறார்கள். சக்ரவர்த்தி பட்டத்துக்குவந்தது பயிரங்கப்படுத்தப்பட்டதும் 101 வெடிகள் தீர்த்து எல்லாரும் மும்முறை சந்தோஷங்கூறிக் குதூஹலப்பட்டுக் காட்டினார்கள். பிறகு அந்தவார



முழுமையும் அநேக விருந்து வேடிக்கைகளும் தமாஷாக்களும் நடந்தன. 1857-ம் வருஷத்தில் டில்லியில் நடந்த சிப்பாய்கள் கலகத்தின்பொழுது அங்கே சண்டைப்பட்ட வீரர்களில் உயிர்த்திருந்த பழைய வீரர்கள் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் தர்பார்முன் வந்தபொழுது அது மிகவும் மனதையுருக்கும் காக்ஷியாயிருந்ததாம். இருந்திருக்குமென்பதிற் சந்தேகமில்லை. அப்பொழுது பிரிட்டிஷ் அதிகாரம் இருக்குமோ போய்விடுமோ வென்றிருந்தகாலையில் தங்களுயிரைத் திரணமாக எண்ணி இராஜாங்கத்தைக் காப்பாற்றினவர்கள் இப்பொழுது அதேயிடத்தில் இக்காக்ஷியைக் காண்டல் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உருக்கமாயிருக்குமென்பதற்குக் கேட்பானேன்.

---

## Delhi Coronation Songs.

## * பட்டாபிஷேகச்சிறப்புக்கவிகள்.

1. கலைமகளுமலர்மகளுங் கலந்துறைதலரிதெனவே கற்றோர்சொற்றார்
மலர்மகளினருளிலர் பாற்கலைமகளு மடைதலரிதெனவிஞ்ஞான்றே
யலைகடலாடையைப்போர்த்தவனி பெரும்பாகமதையாளும்வீரர்
பலரறியத் தெள்ளிதினிற்கலாசாலைப் பயிற்சியினாற்காட்டினரே.

2. அத்தகையவீரர்களை யாண்டவதிபதிய வராமசி தானுங்
கைத்தலத்துநெல்லிநிகர்மனமுடை விக்டோரியா வெனப்பேர்பெற்றோ
ரொத்தலமும்புகழார்ந்ததன்மையரா யேற்றமொடுமவனிகாத்து
நித்தனருளடைந் துலகவாழ்க்கைவெறுத்தகாதிவலப்பாகம்பெற்றார்.

3. அவர்மூத்ததிரு மகனாம்மை சென்றவழிதவறு தொழுகுவேமென்
றவனிதனிற் றனக்கடங்கு மாகாணங்களுக்கெல்லாநிருபமோட்டி
சிலம்புத்தமகமதியமற்றுமுளபன்மதத்தி னுட்புகாது
நவநிலையாமாறு தக்கட்செய்யாது நடப்பமெனவாக்களித்தார்.

4. அன்னபெருஞ் சீர்த்திதிருமகன்மாசர் தனிக்கோனடத்தமாநிலத்தோ
ரென்னதவஞ்செய்தன ரென்றூர்ப்பரிக்கச்செயும்வண்ணமன்னோர்தாமும்
பின்னொருங்குஞ்சரத்தைமுன் மணியோசைகாட்டும்பெற்றிபோல
வன்னையெனத்துரையளிக்கட் ‘டிரான்சுவால்’ சமாதானஞ்செய்திட்டாரே.

5. சீர்பெருகுடில்லிதனிற்சிறந்தனுஜன் வீற்றிருப்பச்சீர்மையோடுங்
கார்பொருதமுழக்கத்திற்கலந்தரசர் ஜயஜயவென்றார்கலித்தே
யோபெருகுமன்னர்க்கு மன்னரெனவெல்லாருமல்கியேத்தப்
பார்புகழு மவர்பாலென் பண்பறிந்த வகைபகர்ந்தேன்மொழிதானே.

6. புவிபுரக்கும்பூபதிகள்புகழ்ந்துரைக்கும்புண்ணியராமெட்வார்ட்வாழ்க
வவனையடைந்துறு நிழல்போலவர்க்கின்பமளித்தொழுகுமலெக்சந்த்ராவாங்
தவநிலையோர்தவிர்த்துபிறர்தாம்போற்றுமாசி புகழ்மன்னிவாழ்க
வவமாகாதரசாக்ஞைகாத்தளிக்குமந்தணராமாம் டில்வாழ்க.

ம. வே. சிவசுப்பிரமணிஐய்யர்.

* திருக்காட்டுப்பள்ளி உபாத்தியாயர் சங்கத்தின்முன் படிக்கப்பட்டது.

---

In Loving Reverent Memory of
**Caroline Southwood Hill,**
Daughter of Dr. Southwood Smith,
Born March 21st 1809, Died December 31st 1902.
"The Lord is my strength and my song"
"Her children rise up and call her blessed."

## காரொலைன் ஸௌத்வுட் ஹில்.

சுகாதாரவிஷயமாக இன்றைக்கு 80 வருஷங்களுக்குமுன் னிங்கிலாந்திலுழைக்கவாரம்பித்து ஒண்டியாய்நின்று உண்மைக்குழைத்து உலகுடன்போராடி ஸத்தியத்தைநிலைநிறுத்திச் சுகத்தைப்பரவச்செய்த டாக்டர் ஸௌத்வுட் ஸ்மித் என்பவர் பூவுலகைவிட்டுப் பேருலகமடைந்து 42 வருஷகாலங்களாகின்றன. அவரை

நாம் பார்த்திலராயினும் (ஏன்! அவர் இறந்தபோது நாம் பிறந்தேயில்லையே!) அவர்பேர் சொன்னால் நமக்கு ஏதோநம்சொந்தத்தந்தையை நினைப்பதுபோலிருக்கிறது. ஏனெனில் இவ்வுலகில் ஜீவன்கள் ஒன்றுங்கொன்று சம்பந்தப்பட்டிருப்பது இரத்தபந்தத்தினால்மட்டுமல்ல. இரத்தபந்தத்தைவிட ஆத்மபந்தம் நீடூழி நிலைத்திருக்கத்தக்கது. உண்மைக்குழைப்பார் யாவருநமக்குறவினரே போலும் நம் சிந்தையைக்கவர்ந்து நமதுள்ளத்துறைவிடந்தேடுகிறார்கள். ஸ்தயத்தில் உண்மைப்பந்துக்களும் அவர்களேயாவாரல்லவோ. * சுகாதாரவிஷயமாயுழைத்து உடம்பயர்ந்து மௌட்டியத்தன்மைவாய்ந்த நம்மவரோடுபோராடல் பெருந்துன்பமென்று மனதும்நொந்து சோர்வுற்றிருந்த காலத்தில், நமக்கு உற்றவிடத்துதவியாக ஆதரவுகூறி உற்சாகப்படுத்திவந்த மிஸ்ஸஸ்ப்ராண்டர் துரைசாணி "உலகுக்குழைப்பாரெல்லாரனுபவமுமப்படியே" ஆதலால் அதைரியப்படவேண்டாமென்று டாக்டர்ஸௌத்வூட்ஸ்மித் அவர்களுடைய உதாரணத்தைக்காட்டி அவருடையசரித்திரம் அப்பொழுதுதான் அவருடைய பெண்வயிற்றுப்பேர்த்தியால் (Mrs. Lewis) எழுதிப்பிரசுரிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். உடனே மிஸ்மானிங் அவர்களுக்கு அப்புத்தகமொன்று வாங்கியனுப்ப எழுத, அதைக்கேள்விப்பட்ட அம்மாது சிரோன்மணி தம்பாட்டனாருழைத்துவந்த சுகாதார விஷயத்திலூக்கங்கொண்டுழைப்பவரெல்லாம்அவருக்குண்மையில் வேண்டியவரேயாவரென்று அவர்ஞாபகார்த்தமாக நமக்கு அவர்சரித்திரப்பிரதியொன்றனுப்பினார். அதை வாசிக்கவும் நமது துக்கந்துயரமெல்லாம் இருந்தவிடந்தெரியாதோடிவிட்டது. ஏனென்றால், அப்பொழுதுதான் உண்மைக்குழைப்பதில்வரும், இக்கட்டுகளும் துன்பங்களும் ஸ்வாபவமாக எங்குமுள்ளவைகளேயென்றும் அவைகளோடெதிர்த்து நின்று போராடிப் பொறுமைகாட்டி வெல்பவர்களே தீரர்களாவார்களென்றும் அப்படிப்பட்டதீரர்களே சத்தியத்தின் ஜயக்கொடிபறக்க அதை நிலைநாட்ட வல்லவராவார்களென்றும் இதற்குமுன் நாமெப்பொழுதுமுணராதபடியுணர்ந்தோம். அதுமுதல் நமக்கு வருந்துன்பங்களெல்லாம் நம்மை அவ்வப்பொழுது களைக்கச்செய்தனவாயினும் அவற்றோடு எதிர்த்துநின்று போராட ஊக்கமும் தைரியமும் நமக்குண்டாயிற்று. அவருக்கு பால்யவயதில் முதல்மனைவியையிழக்கும் துக்கம் நேரிட்டு, பின்னர்வயோதிககாலத்தில் இரண்டாந்தாரத்தையுமிழக்கநேரிட்டது. இத்துக்கங்கள் துன்பங்களெல்லாம் அவருக்கு அவ்வப்பொழுது தாங்கமுடியாமலிருந்து அவைகளின் பெரும்பளுவின்கீழ் அவரைநசுக்கிவிடும்போலிருந்தும், அவர்தமது தைரியத்தினாலும் விடாமுயற்சியினாலும் உண்மைக்குழைக்கிறோமென்கிற உள்ளுணர்வினாலெழும்பிய மனோசக்தியினாலும் அத்துன்பங்களினின்றும் ஸ்புடம்போட்ட தங்கம்போல்,வரவரயாத்தேறிவெளிப்பட்டனர். அப்படிப்பட்டவர் மடியிலிருந்து சீராடிவளர்ந்து சிறப்பெய்திய அவர்போத்தி அவர்ஞாபகத்தையெவ்வளவு அன்பும் பெருமையுமாகப்பாராட்டிவருகிறாரோ ஆத்மார்த்தமாக அவ்வளவு அன்பும் பெருமையுமாக, அவர்சரித்திரத்தை வாசித்ததுமுதல் நாமும் பாராட்டிவந்துளோம். ஆகையால் அவருடைய அருமைச்சமாரத்தியும் அவருடைய சரித்திரமெழுதிய துரைமகளின் அன்பானதாயாருமாகிய மிஸ்ஸஸ்காரொலைன் ஸௌத்வூட்ஹில் முதிர்வயதில் தம் புத்திர பௌத்திரர்கள் சூழவிருக்கக் காயங்கழித்துப் பரலோகமெய்திய சங்கதியைக்கேட்க அவருடைய ஆத்மா"கானங்கடந்தகடவுளை"யே "உறுதியான ஊன்றுகோலாகவும், நாதசுகநல்கும் நல்விசனாகவும்" நம்பிச்சென்றதனால் அவன் பாதாரவிந்தமடைந்து அழியாச்சுகமெய்தி யானந்தித்திருக்க ஆத்மபூர்வகமாய் ஸர்வேஸ்வரனைப்பிரார்த்திக்காதிருக்க நம்மால்முடியவில்லை. ஆகையால் அப்பிரார்த்தனையோடு அவருடைய அருமைப்

* "c. f. They that do do My Father's will, they are my Mother and Sister and Brother."



புத்திரிக்கும் மற்றவர்களுக்கும் நமது ஆறுதலையும் கூறவிரும்புகிறோம்.

"வம்மின்வம்மின் வழியதுகாட்டுவன்
விம்மிவிம்மி விசித்தழவேண்டாம்
நம்மில்உம்மில் நயந்தருபோதகன்
வம்மின்வம்மினென் றழைக்கிறான்கேண்மினே."

ஜகத்-சிஷ்டி-பா-34.

"இலங்குவனுள்நின்று ஏங்கினோர்க்கருளீவன்
மலங்குவிந்திருமாந்தால் மறைந்திடுவன்காணென்
கலங்குநெஞ்சத்தினராய்க் கருணைக்கழுதிட்டால்
இலங்குமருட்சோதி யெழில்குருவாய்வந்தாள்வன்."

ஜகத்-சிஷ்டி-பா-38.

## The Inner Voice and its Manifestations — The Secret of Fables & Fiction.

## நடேசன் சொல்லும் நவபவக்* கதைகள்.

"நடேச, நடேசானந்தநடேச!
அநாதரக்ஷக, ஆபத்பாந்தவ!
இன்னுயிர்த்தோழ, இன்பருள்நாத!
சின்மயாநந்த, சிவகாமிநேச!
குருமூர்த்தசுந்தர, குஞ்சிதபாத!
சடைவிரிகோல, சாம்பவிநாத!
அம்பிகைபங்க, அன்பர்க்கன்ப!
என்பேயுருக, அன்பருள்நாத!
அன்பேயளித்தெனை யாட்கொள்ளீச!
அபயம், அபயம்! ஆண்டவ அபயம்!
தாண்டவ அபயம்! தனிமுதல் அபயம்!
தயாநிதி அபயம்! தாயுமே அபயம்!
ஜயஜய அபயம்! அபயம் ஜயஜய!" என்றும்

பலவுமாய் அல்லும் பகலும் அறுபதுநாழிகையும், மோனத்திருந்து மனத்துளேயெண்ணித், தொழுதலே மணியமாய்த் தொண்டுபுரிந்து, நடுப்பகல்தன்னில் நானவனாகி, அறிதுயிலமர்ந்தானந்தித்திருக்கையில், 'துரியப்பரி'யது துள்ளிக்குதிக்கத், தூக்கம்விட்டு நாட்டமேற்கொண்டு, சயனத்தெழுந்து சாக்கிரத்திருந்தோம்.

அப்பொழுது ஒரு வாலிபன் புத்தகமும் கையுமாய் நின்று வணங்கித் தான்கொண்டுவந்த புஸ்தகங்களை நம்கையிற்கொடுத்தனன். அதை வாங்கிப்பார்க்க அதில் "திக்கற்ற இரு குழந்தைகள்" என்ற பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருந்தது. இரு குழந்தைகளாகப் போவானேன்! கோடானுகோடி குழந்தைகள் இப்பூவுலகில் தாங்கள் வந்தவழி போனவழி தெரியாது, இனிப்போகும்வழியும் தெரியாது, திக்கற்றுத் திசைதெரியாது மயங்கி, துக்கசாகரத்தில் வீழ்ந்து, பேதபுத்தியாலிருவினையென்னும் அலைகளால் இப்படியும் அப்படியும் மொத்துண்டு, வாடிவெதும்பித், தாய்முகமறியா ஏழைகளாகவும், அப்பனையுணரா அநாதைகளாகவும், ஓய்வொழிவின்றிப் பிறந்திறந்து வருந்துவதே தொழிலாய்த் திரிகிறார்களே! பிறந்துபிறந்திளைத்தேன்யானும், பெற்றுப் பெற்றிளைத்தாள் என்தாயும், இனிப்பிறவி வேண்டா எனக்குமோர் வழியிலையோ நாதா! என்று ஓர் பட்டினத்துப்பிள்ளை பரிதவித்தழுதகுரல் இன்னமும் அண்டசராசரங்களுமொலிக்கக் கேட்கின்றதுவே! இவ்வொலியைக்கேட்டிரக்ஷிக்குமவற்கு இவ்விரு குழந்தைகள்தானா பாரமாகப் போயிற்று. இப்பிரபஞ்சத்தில் ஈசனையறியாச்சீவர்களே அநாதைகளும் திக்கற்றவர்களுமன்றி இக்காயமீன்றதாயுந்தந்தையுமில்லாதவர்கள் அநாதைகளாகார். கல்லினுட்டேரைக்கும் கருவினுட்சிசுவுக்கும் அமுதுபடியளிக்குமீசனிருக்க யார் யாரை ரக்ஷிப்பது! யார் யாரைக்காப்பது! உலகமுண்மையுணராது எல்லாம் "நான், நான்" என்றும் "எனது, எனது" என்றுஞ்சொல்லி வீண்மனோராஜ்யம் செய்து துன்பப்படுவதொன்றன்றி வேறொன்றுமில்லை. ஒன்றுமில்லையென்றால், திண்ணை தூங்கிகளாகச் சோம்பித்திரியலாமென்றெண்ணமா, என்ன? அவனவன்பாடு அவனவனுக்குத் தலைமேற்சுமையாகவிருக்கத் திண்ணைதூங்குவது எப்

* நவபவ=(உலகார்த்தம்) புதிய எண்ணங்களடங்கிய, (பரமார்த்தம்) ஒன்பது பாவனைகளடங்கிய, அதாவது பிரபஞ்சவினோதமான - பிரபஞ்சமுழுமையும் தத்துவமாய்ப் பார்க்கில் திரிகரணங்கள் அறுவிகாரங்களிவற்றில் அடங்கிவிடும்.

படி? கருமந்தொலையவேண்டாமா? பாசந்திரவேண்டாமா? பந்தமொழியவேண்டாமா? சணப்பன்வீட்டுக்கோழி தானுவிலங்குபோட்டுக்கொண்டபின் சும்மாவிழுந்துகிடப்போமென்று கிடக்குமா! தானுகமாட்டிக்கொண்டவிலங்கிலிருந்தும் விடுபட அது என்னபாடுபடுகிறது பாருங்கள்! அதற்குள்ளபுத்திகூட நமக்கு வேண்டாமா? இந்த ஜன்மம் என்னமாகவந்தது? நாம் இங்கு என்வந்தோம்? எங்கிருந்து வந்தோம்? இனிப்போம்வழியென்ன? நாமுயிர்த்திருந்து செய்வதென்ன? என்று ஆலோசித்தால் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்வதைத்தவிர உலகத்தைத்தான் தாங்கிவிடுவதாக நினைப்பது சுத்தப்பிசகென்று ஊகித்தாராய்வாருக்குத்தானே புலப்படும். கோபுரந்தாங்கிமாதிரி, குடித்தனபாரம், இராஜ்ஜியபாரம், என்று பலபல பாரங்களைச் சுமப்பதெல்லாம் சுமப்பவன் பிழைப்பதற்கேயன்றி வேறொன்றுமில்லை. களைத்திளைத்துக் கருமமொழிந்தார் தலைப்பாரத்தை வாங்கிக்கொள்ளச் சுமைதாங்கியாய் ஒருவன் எங்குமிருக்கிறான். சோம்பேரிகள் அச்சுமைதாங்கியிற்போய்ப் படுத்துக்கொண்டால் குப்புறவிழுந்து அங்கபங்கமாவது நிச்சயம். ஆகையால் செய்கடனைச்செய்து கருமந்தீர்த்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு ஓய்வொழிவு தூங்கினும் விழிப்பினும் ஒரு நிமிஷமும் கிடையாது. சும்மா சோம்பித்திரிகிறவர்கள் பட்டினிகிடந்து சாகவேண்டியதொழிய வேறு விதியில்லை. "அவனன்றியோரணுவுமசையாது" என்பது வாஸ்தவமே. ஒப்பாரிவார்த்தையல்ல. ஆனால் அவன் விதித்த விதியுண்டே, அது ஒரு மயிரிழையும் பிசகாது. எள்ளு விதைத்தாற் கொள்ளு முளைப்பது எங்காவதுண்டா? அவனவன் விதைத்தவினைகளின் பயனை அவனவன் அறுத்து அனுபவித்தேதீரவேண்டும். "அழுதாலும்பிள்ளை யவளேபெறவேண்டும்." அதுபோல, நீ செத்தாலும் உன்வினையுன்னையே தொடர்ந்துவரும். உண்மையுணர்ந்தவர்க்கன்றி மற்றவர்க்குக் கதிமோக்ஷமில்லை. இது நிச்சயம். இது வுண்மையாகில் கதிமோக்ஷத்துக்கு வழிதான் என்னவோ? என்று கேட்டால், "செய்கடன்திருந்தச்செய்." "உள்ளாசையையொழி." ஆசையொழிப்பது சாத்தியமில்லையேல், "அதையனுபவித்துத்தீர்."

ஆசை யனுபவிக்கத்துணிந்தபின் சுக துக்கத்துக்குப் பயப்படாதே. "துன்பமும் துக்கமும் இன்பசுகநிழலாம்." வெயிலில் போகத்துணிந்து நிழல் கூடவருகிறதென்று பயந்தால் முடியுமா? உழைப்பது உன்கடன். உழைப்பின் பயனுய்வருவது சுகமோ துக்கமோ, அதையனுபவிப்பதும் உன்கடனே. அனுபவத்தையாராய்ந்து சிந்தித்தால் உண்மை தனக்குத்தானே சிறுகச்சிறுகத்தோன்றி வெளிப்படும். "இவ்வுலகம் ஓர் நடர்க்களம்." அதை ஆட்டிவைக்கும் சூத்திரதாரி நடராஜா. சூத்திரக்காரன் இட்டபாகத்தை நன்றாகநாம் ஆடிவிட்டால் நமக்குச்சம்மானம் கிடைப்பது நிச்சயம். அப்படிக்கின்றி 'எனக்த இந்தபாகம் வேண்டாம் அந்தபாகம் கொடு' என்று சண்டைபோட்டால், வயிற்றுக்குமகப்படாமல் வருந்துவது நிச்சயம். இந்த உலகமாகிய அரங்கத்தில் சீவர்களாகிய நாடகர்கள் நடிக்கும் வேநாடகத்தைக்காணும் காட்சி வல்லபம்பெற்றூர்க்கு வேறு என்னவேண்டும்! எல்லாக்கதைகளும் கலைகளும் இப்பெரிய பிரபஞ்சநாடகத்தின் ஒருசிறு பாகமாம்.

"நாவல்" என்னும் இங்கிலீஷ் வார்த்தைக்கு உண்மையானபடி பத அர்த்தம் செய்கில் "நவபவம்" அதாவது "நூதன எண்ணம்" என்பது பொருந்தும். ஆனால் தத்துவார்த்தமாகப் பார்த்தால், இவ்வுலகில் "புதுமை" யென்பதேயில்லை. இத்தொல்லுலகில் எல்லாம் பழமையானதே. நாம் தூங்கித்தூங்கி விழித்து முதலிற்கண்டதைப் புதுமையென்று பாராட்டுகிறோம். உண்மையில் புதுமையென்பதேயில்லை. இதை இங்கிலீஷிலும் நன்றாகச்சொல்லியிருக்கிறார்கள்: "There is nothing new under the Sun."



அதாவது, சூரியன்சாயைபடு மிவ்வுலகில் புதுமையானது ஒன்றுமில்லை. அப்படியானால் உண்மைதானென்னவெனிலோ: இப்பிரபஞ்ச காரியங்களனைத்தும் ஆதியந்தமில்லாத ஓர் "நவபவக்கதை"யாம். இக்கதை பல கப்புக்கிளைகள் கொண்டதாகையால் அதை விளக்க "நவபவக்கதைகள்" என்று பன்மையிற்சொல்வோம். நவபவமாவது யாது? பவம் என்பது பாவம் என்பதின் விகாரம். பாவம் என்பது நினைப்பு அல்லது எண்ணத்தைக்குறிக்கும் சம்ஸ்கிருதவார்த்தை. நவபவம் என்றால் ஒன்பது பாவங்கள் என்று அருத்தம் செய்யலாகும். நவபவக்கதை என்றால் ஒன்பது பாவனைகளிலடங்கிய கதையென்றருத்தம்பெறும். ஒன்பது பாவங்களாவன: திரிகரணம் அறுவிகாரம் ஆகிய ஒன்பதும் சேர்ந்தவை. திரிகரணங்களாவன: மனோவாக்குச்காயர். அறுவிகாரங்களாவன: 1. பிறத்தல், 2. இருத்தல், 3. வளர்தல், 4. திரிதல், 5. குறுகுதல், 6. நசித்தல் ஆகிய ஆறுமாம். (வராகோபநிஷத் முதலத்தியாயம் பார்க்க). இவையன்றி தேகத்தைச்சார்ந்தனவாயுள்ள உடல் விகாரங்கள் ஆறுண்டு. அவை: தோல், உதிரம், மாம்சம், கொழுப்பு, ஊன், எலும்பு இவைகளாம். இவையொன்றுபட்டு அமையில் அழகும்வனப்பும் பொருந்திய தேகமாம். பிரியில் பெரிய விகாரமாம். இவற்றைத் தேகத்தின் ஆறு கோசங்கள் அல்லது போர்வைகளாகச் சொல்வார்கள். இப்படியே மனதைச்சார்ந்தவையாக ஆறுகுணவிகாரங்களுண்டு. அவை: காமக், குரோத, லோப, மோக, மத, மாச்சரியம் ஆகிய இவைகளாறுமாம். இவைகளை ஆறு சத்துருக்களாக, அதாவது உட்பகையினராகச் சொல்வர் (வராகோபநிஷத், 1, 2-வது அத்தியாயம் பார்க்க). முதலிற்சொன்ன அறு விகாரங்களுக்கும் ஆதாரஸ்தானமாயிருப்பது திரிகரணங்களாகிய, மனது, வாக்கு, தேகம். இம்மூன்றையும் ஒன்றாக்கி ஸ்தூல, சூக்ஷ்ம, காரண தேகங்கள் என்றும் சொல்வர் சிலர். எப்படிச்சொல்லினும்சரி, இவ்வொன்பதுக்கும் புறம்பாய் பிரபஞ்சத்தில் நடப்பது ஒன்றுமில்லை. இந்த ஒன்பதையும் ஞானதிர்ஷ்டியால் பார்க்கிலோ இவை பாவனாரூபமான சங்கற்ப விகற்பத்தாலுண்டானவைகளே யன்றி வேறல்லவென்று வெள்ளிடைமலைபோல் விளங்கும். ஆகையால் இப்பிரபஞ்ச வியவகாரங்களனைத்துமே இந்த 9-பாவனாரூபங்களைக்கொண்டு கடவுள் ஆட்டுவிக்கும் ஓர் நாடகமாம். இந்த நாடகக்கூத்தைச் சொல்வது கதை. ஆகையால் நவபவக்கதைகள் என்னும் பெயர் பரமார்த்தமாகவும் உலகார்த்தமாகவும் இவ்வுலக வியவகாரங்களைப் பற்றிச்சொல்லும் கதைகளுக்குப் பொருந்தியிருக்கிறது.

'நாவல்' என்று இங்கிலீஷில் வழங்கும் கதைகள் முற்றும் கற்பனைக்கதைகள் என்று சொல்வார்கள். கற்பனைக்கதைகளாவது என்ன? தேனீயானது ரீங்காரம் செய்துகொண்டு பல புஷ்பங்களிலுமுள்ள மதுவைச் சுவையுணர்ந்துண்டு எஞ்சியதைக் கூண்டு கட்டியதிற் சொரிந்து சேர்க்கிறது. புதுமலர்களிலுள்ள தேன்சுவை யுணரமாட்டா நகரமாக்கள் தேன்கூண்டிலுள்ள தேன்சுவையுணர்ந்து காட்டில் வசிக்கும் குறவர்க்குக் காசுகொடுத்து அதை வாங்கிப்பருகுவர். அக்குறவர்களோ தேனீக்கள் அருப்பாடு பெரும்பாடுபட்டுக் கூட்டிவைத்ததேனைக் கொள்ளைகொண்டு தினைமாவோடு கலந்துண்டு மிகுந்ததை வேண்டினோர்க்கீவர். உலகத்தில் தத்தம் கடமையைக் குறைவின்றிச்செய்து ஊழ்வினையையனுபவிக்கும் சீவர்கள் தேனீக்களாம். இருவினைகளும் மலர்களாம். வினைப்பயன் மதுவுக்கொப்பாம். இம்மதுவைக் கொள்ளைகொள்பவன் எசனும் குறவனும். சீவர்கள் கருமவாசனையாலிழுக்கப்பட்டு, கரும பலன்களாம் தேனை அனுபவமூலமாகக் கூட்டிவைக்க, வித்யாசிரேஷ்டர்களாம் குறச்சிறுவர்கள் அனுபவகஷ்டமில்லாது தங்கள் புத்திவிவேகத்தால் அவ்வனுபவங்களைத் தங்களதாக்

கிக்கொண்டு வேண்டுமட்டுமுண்டு களித்து, எஞ்சியிருந்ததை நாகரிகமனதிராம் நகரமாக்களுக்கு கற்பனுக்ரந்தயாம் பாத்திரத்தில் விட்டுத் தங்களிஷ்டம்போல் அளந்து கொடுப்பர். தானே யுழைத்துத் தன்வினை தீர்த்துக்கொண்டு ஸ்வானுபவம் தேடவிருப்பமில்லாத இகபோகச் செல்வர்கள் அதை வாங்கி வாசித்து விலைமாதர் சுகம் நுகர்வான்போல் ஆனந்திப்பர். மேற்றிசை நாகரிகம் வரவரப் பலத்துவரும் இத்தேசத்தில் தமிழபிவிர்த்தி செய்ய விரும்புவோர், இங்கிலாந்தில் 'நாவல்கள்' அபரிமிதமாய்த் தோன்றிவருவதால், அதுபோல் இங்கும் அவ்விதக் கதைகளையுண்டுபண்ணி ஜனங்களுக்காசைகாட்டி வாசிக்கச்செய்யவேண்டியிருக்கிறது. இவ்வித ஆசைகாட்டுவது குழந்தைகள் நாவில் தேனைத் தடவி மருந்தைக்கொடுப்பதுபோலும் நல்ல எண்ணத்தோடு முதலில் ஆரம்பிக்கப்பட்டதாலும், தேன்ருசிகண்ட குழந்தை பிறகு அபரிமிதமாய் மிட்டாய்களைத்தின்று தேகம் கெட்டுப்போவதுபோல், வரவர ஜனங்கள் இக்கதைகளையே படித்தானந்திக்கக் கற்றுக்கொள்வதில் ஸ்வயசிந்தனையிழந்து ஊகையும் புத்தியும் குறைந்து ஆண்தேனீக்களைப்போல் சோம்பற்புத்தியுள்ளவர்களாகிறார்களென்பது ஆங்கிலேயரில் மேலோராயுள்ளோர் தற்காலஞ்செய்யும் பெருங்குறை முறையாகவிருக்கிறது. தற்காலம் இத்தமிழ்நாட்டில் புத்தகப்படிப்பே சுத்த சூன்யமாயிருக்க அவ்விதக்கெடுதிவருமென்று அஞ்ச இப்பொழுது அவசியமில்லை. கொஞ்சநெஞ்சம் படிப்பாசையுள்ளவர்கள் காமக்குரோதங்களை விர்த்தி செய்யும் அற்ப அதர்ம நூல்களைப் படித்துக் கெட்டுப்போகாமல் உலகஞானமும் கடவுள் பக்தியும் பயக்கும் சத்கிரந்தங்களையுண்டு பண்ணி அவர்களுக்களிப்பது கற்றோர்தம் கடமையாம். இவ்விதக்கடனை யொருவாறு நாம் செய்து கழிக்கவேண்டுமென்றே இற்றைக்குப் பதினொரு வருஷங்கள்முன் இவ் விவேகசிந்தாமணியை வெளியிடலானோம். அப்பொழுது ஏகமாய்த் தன்னந்தனியேநின்ற விவேகசிந்தாமணி இப்பொழுது பல பத்திரிகைகளுக்கிடையே நடுநாயகமாக விளங்குகிறது. அப்பொழுது நாம் ஒண்டியாய் ஓரியாயுழைத்து வந்ததுறையில் இப்பொழுது பலரிறங்கிப் பலவாறுதவுழைத்துவரக் காணும்காட்சிபெற்று மகிழ்கிறோம். தலையெடுத்துத்தேறிய மகனைக்கண்டு தந்தை களிப்பதுபோல நாம் ஆண்டியாய்நின்று யாதொரு பக்கபலமுமின்றித் துவக்கிய சற்காரியம் பலத்துப்பெருகிப் பிரவிர்த்தியடைந்துவருவதைப் பார்க்க நமக்கு உள்ளன்பூரி உவகையுண்டாகிறது. சற்காரியத்திலுழைத்து வருந்தாதார் இதென்ன வீண் பிதற்றலென்பார். "பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையருமை;" அதுபோல் ஒரு சற்காரியத்தில் திரிகரணசுத்தியா யுழைத்தவருக்கே தெரியும் அக்காரியம் சித்திபெறுங்காலுண்டாகும் உவகை. அது தம்மாற்றுனகவேண்டுமென்பதில்லை. அதற்குழைக்கிறவரெல்லாரும் அவருக்குத்தமரேயாவர். பள்ளியிற் படித்துத் தேறின பிள்ளையாயினும், அவர் பெற்றோர்க்குப் பிள்ளையேயன்றி மற்றவர்க்குப் பிள்ளையாகான். ஆகையால் இத்துறையில் நமது நண்பர் பண்டித நடேச சாஸ்திரியார் ஊக்கமுடனிறங்கி யுழைக்கத்தலைப்பட்டுக் கோலாகலபுருஷனுக்குக் கங்கணங்கட்டிக்கொண்டு உருவும் திருவும் விளங்க, இறகோதியகையும், திலகம் விளங்கு நெற்றியும், தீரம் விளங்கு பார்வையும், நீலமபாய்ந்த வண்ணமுமாய்வந்து நிற்கப்பார்த்து நாம் அடங்கா மகிழ்ச்சியெய்தினோம். நம் தலைப்பாரமும் பளுக்குறைந்ததாக வெண்ணலானோம். நமக்குச் செய்கடனின்னுமேகமாயுள தாயினும் செக்கிற்கட்டிய மாடுபோல் ஒருவழியிலே சுற்றிச் சுற்றி உயிருள்ளவரையிலுழைத்துவராமல், ஈசன் நம்மைக் கருணைக்கண்பார்த்துக் கைதூக்கிவிட்டதோடு நாம் உழைத்துவந்ததோர் சற்காரியமிருக்குறுமற்செய்த மாண்பையும்கண்டு அவன் திருவருட்கூத்தின் திறமையைச் சிந்திக்கலானோம். ஆகையாற்றான்



எதுவும் நம்மாலாவதில்லை: அவனூட்டிவைத்தபடி நாம் நமது பாகத்தைப் பங்கமற ஆடித்தீர்த்தால், ஆட்டங்கலையாது நடத்த அவனுக்குத்தெரியுமென்று சொன்னோர். ஆடியலுத்து அவனோடுகலந்து இப்பிரபஞ்சநாடகத்திலீடுபட்டுழலாது, தாமரையிலையிற் றோய்ந்த தண்ணீர்போல் உலகிலிருந்துமதில் ஒட்டாது நின்று, கூத்துப்பார்ப்பது எவ்வளவு ஆனந்தம் பாருங்கள். இப்படி இராப்பகலற்றவிடத்து எக்கந்தூக்கமின்றி அறிதுயிலமர்ந்தும், அசைவற்றுடியும். இப்பிரபஞ்சக் கூத்தைக்கண்டு களிக்கும் காக்ஷியல்லவோ "திருக்கூத்துக் காட்சி." இப்படி யனுபவிக்குமானந்தமல்லவோ பேரானந்தமென்று பெரியோர் கூறியுள்ளார். இவ்வானந்தத்தை யெல்லோரும் இங்கே யனுபவிக்கலாம். இதற்கு வழிவகை அவரவர் கைவசத்திலேயிருக்கிறது. உபயோகித்துய்யத்தெரியாத தோஷமே, "உள்பர்மீதெனுளவு தெரியாமல் உய்யுவகையிழந்துழல்கிறோமடி தோழி!" என்றிரங்கினமையுங் காண்க.

"தானேயுழைந்துத் *தானவனானற்கு வானவர்
கோன்குழைத் தூழியஞ் செய்வனே."—

குருமொழி.

பண்டித நடேச சாஸ்திரியார் இதுவரையில் வெளியிட்டிருக்கும் கதைகள்: (1) தீனதயாளு (2-ம் பதிப்பு), (2) கோமளங்குமரியானது, (3) திக்கற்ற இரு குழந்தைகள், (அவர்படத்துடன்); (4) மதிகெட்டமனைவி இப்பொழுது அச்சிலிருக்கிறது.

## "அனைவருக்கும் மோக்ஷசாம்பிராஜ்யம்."

சின்னாள் முன்நாம் இந்நகரிலே சுற்றிவருகையிற் பலவிடங்களிலும் சுவர்களில் பெரிய எழுத்தில் அச்சிட்ட படமொன்று நம்கண்ணைக்கவராலாயிற்று, அதில் அவ்வளவு ஆகர்ஷணசக்தியுள்ளதென்னென வுற்று நோக்குகையில் "அனைவர்க்கும் மோக்ஷசாம்பிராஜ்ஜியம்" என்னுமெழுத்துகள் ஒரு நொடிப்பொழுது நம்முள்ளத்தைக் கவர்ந்தன. ஆ! ஹா! மோக்ஷசாம்பிராஜ்ஜியமும் விலைக்ககப்படுவதாய் விளம்பரப்படுத்தியிருக்கிறதே! இது வுண்மையாயின் எத்தனைபேர்பணங்கொடுத்துவாங்கிப்பெறும்பேறு பெற்றுய்வார்கள்! உடல் பொருளாவியையும் ஒருங்கே தத்தம்செய்து குருவினையண்டிக் குணம்பலபெற்றும் அருள் பெறலரிதாயலைபவரெண்ணிலர். அமெரிக்கரில் கோமகார்கள் எத்தனையோபேரிருக்கிறார்கள்: அவர்கள் ஒரு இராஜ்ஜியமுழுமையும் விலைக்குவாங்கி அதை யொருமூலையில் ஒதுக்கியமாய்ப்போட்டு வைக்குந்திறமையாளர். சந்திராதித்தர்களையும் விலைக்குவாங்குவது சாத்தியமாயின், பகலவனையும் வெண்மதியையும் வாங்கி, சிவனைப்போல் தங்கள் சிரத்தில் முகத்தில் அநாகரிகமாய்த் தரிக்காது, தங்கள்மாளிகையில் ஒளிவிளக்காகவமைத்து ஆனந்திப்பரென்று ஒருவர்தாம் அனுபவரீதியாய்க்கண்டதை யோர் பத்திரிகையில் வெளியிட்டிருக்கப் பார்த்தது உடனே ஞாபகத்துவர, இச்சரக்கையப்படியே மொத்தமாய் அமெரிக்காவுக்குக் கப்பலேற்றினால் அமெரிக்காவிலுள்ள கோடிக்கணக்கான திரவியங்களெல்லாம் ஏழையிந்தியாவுக்கு அதேகப்பல்களில்திரும்பிவந்துவிடும்; இந்தியாவைப்பிடித்த க்ஷாமம் உடனேவிட்டு, முன்போல் இன்னுமொரு ஆயிரவருஷங்களுக்காவதுபொன்காய்க்குமரமிப்பாரதகண்டத்தில் நன்றாகப்பயிராகிவரும் என்று பலவாறு மனப்பால் குடித்தோம். இதையெல்லாம் எழுதப்பிடித்த நாழிகையில் ஆயிரத்திலொருபங்கு அளவில் இவ்வெண்ணங்கள் மின்னல் தோன்றிமறைவதுபோல் நம்மனதில் தோன்றிமறைந்தன. அடுத்த நிமிஷம் இதுவே அங்கியதேசச்சரக்காய் இங்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம்; நம் நண்பர்களான "இரக்ஷண்யசேனையார்" செய்த விளம்பரமாயிருக்கலாமென்று

* c. f. திருமூலர்.—
"அவனுமவனு மவனையறியார்
அவனையறியி லறிவானுமில்லை
அவனுமவனு மவனையறியில்
அவனுமவனு மவனியானுமே."

நினைத்து அவர்கள் புத்திசாதுர்யத்தையும் போர்புரியும் வல்லமையையும்வியந்து சும்மாவிருந்தோம். பின்னொருமுறை அதையெண்ணிப்படித்தபொழுது இது ஸ்ரீகிஷ்ணசைதன்யஸ்வாமிகள் சரித்திர விளம்பரமென்று கண்டோம். இவர் சரித்திரம் வங்காளபாஷையிலிருந்ததை கல்கத்தாவில் பிரசுரமாகும் அமிர்தபஜார் பத்திரிகையின் ஆசிரியர் "கௌராங்கமஹாப்பிரபு" வென்று நாமஞ்சூட்டி இங்கிலீஷில் விஸ்தாரமாக வெழுதி அவருடைய வழியையநுசரித்தால் அனைவருக்கும் மோக்ஷசாம்பிராஜ்ஜியம் கிட்டும் என்பது பொருள்பட அதற்கு "Salvation for All" என்னும் வார்த்தைகளை உட்பொருள் விளக்குமோர் மறுபெயராகக் கொடுத்திருந்தாரென்பதுநாமறிந்த விஷயமாதலின், அதன் மொழிபெயர்ப்பு இந்நகர்ச்சுவாதீனிலிருந்து நம்மை இவ்வளவு எண்ணங்களுமெண்ணச்செய்ததென்று மனக்குரங்கின் சேஷ்டையைக்கண்டு சிரித்துச் சும்மாவிருந்தோம். பின்னுமிரண்டொருநாட்கழித்து அப்புத்தகம் அவ்வளவு அற்புதமாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறதே அதன் உண்மை எப்படியோ வென்று காணவிருப்புற்றவராய்ச் சிந்தித்திருக்கையில் திடீரென்று நமது நண்பர் பி. விஜயரத்னம்பிள்ளை பென்ஷன்ட் எக்ஸிக்யூடிவ் இஞ்ஜினீயர் ம-ா-ா-ஸ்ரீ என். இரத்தினசபாபதிபிள்ளையவர்களுடன் நமது ஆச்ரமத்திலற்புதமாய்த்தோன்றி நம்மை விளிக்கலானார். ஊனுக்குணவூட்ட விருந்தநாம் அதையொழித்து இவர்கள்வந்த அதிசயத்தையுள்ளோர்ந்து அவர்களோடும் அளவளாவியிருந்தோம். அப்பொழுது அவர்கள் நாம் நகர்ப்புறச்சுவர்களிற் கண்டு பலவாச்சிந்தித்த அம்மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தையே நமக்குவழங்கவந்தவர்களென்றறிந்து மிகவும் சந்தோஷப்பட்டோம். அதை வாங்கினோம்; அங்குமிங்கும் பார்த்தோம்; ஸ்ரீசைதன்னியர் திருவுருவக்காட்சிப்படத்தையுங் கண்டோம்! களித்தோம்; உளம்பூரித்தோம்; அவர்கள் செய்தொழிலை மெச்சினோம்; சிரத்தையைக்கண்டு வியந்தோம்; பக்தியைக்கண்டு பூரித்தோம்; இயற்றியவர் சக்தியைச் சாலவும் புகழ்ந்தோம். அவர்கள் சென்றபின் அதைத்தொடுபிடியாய்த்தொட்டுவாசித்தோம். இதுவுமோர் வினைதீர்க்கும் விளையாடலேயென்றுகண்டோம்; வியந்தோம்; பக்திரசம்பொங்கிய விடத்தில் மூழ்கிப் பரவசமானோம். சோகரசமிகுந்தவிடத்தில் மூழ்கிச்சோர்வுற்றழுதோம். இது எம்பெருமான் திருவிளையாடலேயென்று கண்டோம். எழுதினவர்களும் தம்மைமறந்திறைவன் வசப்பட்டு அவன் ஆட்டியபடியே ஆடிய பொம்மைகளோவென்று ஏதிலாமொழியாலே சலுமானோம். பின்னும் பலவாறுபிதற்றி என்பயன்! கரும்பு தின்னவன் தின்னதை நினைக்க நினைக்கவாயில சலமூற நாவாராது பேசுவான். வெயிலில் வெதும்பி நாவரட்சிகண்டவனுக்கு அவன்பேச்சுப் பிதற்றலாகாது வேறென்னாகும்! கிழேபார்த்தால் சக்கையுமிழ்ந்து கிடக்கக்காண்கிறான். வாயில் பார்த்தால் ஒன்றுமில்லை சலமூறுகிறது தானாக. தன் நாவரட்சி தனக்கல்லவோதெரியும். ஆகையால் அவனிடத்தில் சென்று பன்னிப்பன்னியும் பலவாறு பேசினால், அவனுக்கு சன்னிதோஷம்பிறந்தாலும் பிறக்குமேயன்றி அவன் நாவரட்சி சிறிதும்மாறாது. ஆதலால் இதைப்பற்றி அப்படியிப்படி யெழுதுவதைவிட ஒருதுண்டம் நறுக்கித் தின்னுபாரப்பாவென்றுகொடுத்தால் அவனுக்கு ருசியுந்தெரியும்: நாவரட்சியுங் குறையும். வரட்சிதீரவாங்கித்தின்ன ஆசையும் பிறக்கும். ஆகையாலதைப்பற்றி ஒன்றுமெழுதாது முதலில் அதைப்பற்றிய விளம்பரத்தைமட்டும் வெளியிடலானோம். அதைப்பார்த்தும் சுவைக்க நாவூறாத நம்மனோர் சிலர்க்கு ஒரு சிறுதுண்டமில்லை, ஒருதுளி ரசம் இங்குமங்கும் படத்தெளித்துக்காட்டுவோம். அப்பொழுதும் சுவையறியாச்சூன்னியர்க்குப் பின்னொருதுண்டமோ துணுக்கோ கொடுத்துப்பார்ப்போம். பின்னும் சுவையறியார் ப்பே[illegible]மையிலாரேயென்று பகவானைத் தொழுது "அப்பப்பா! உன்வேலைசெய்ய என்னாலேயாகாது!"



"பிட்டுக்குமண்சுமந்துபிரம்படிபட்டநீ,
மட்டுக்குமிஞ்சிமனங்கல்லாச்சமையலுற்றால்,
எட்டுக்குமுள்ளேயிருந்தவரையாட்டுவித்து,
அட்டிண்டுவாழ்வார்க்கதிதியாவந்தாளாயோ!"

என்றழுது சும்மாவிருந்து விடுவோம். இது நிற்க. கௌரங்கராவது ஸ்ரீ கிருஷ்ணசைதன்யராவது யாரென்றுசற்று விசாரிப்போம்.

"அத்திமரத்திலே தொத்திய கனிபோலே சகலாண்டசராசரங்களும் யாரிடம் இடையறுதிருக்கின்றனவோ, எவரைப்பற்றி ஆணென்றும் பெண்ணென்றும் அலியென்றும், ரூபியென்று அரூபியென்றும், குணியென்றும் நிர்க்குணியென்றும், வரையறுத்துச் சொல்லமுடியாது" கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்னுமேதக்க "ரகசியம்" அமைந்திருக்கின்றதோ (நண்பரே அவர் யாரென அறிவீரோ, அறிந்தீரோ, அல்லது அறியத்தான் விரும்பினீரோ?) "அத்தகைய பரம்பொருளின் காரியமாயுண்டான பிரபஞ்சத்தில்" நாம் வசிக்குமிப் பரதகண்டமாகிய இந்தியாவின் ஈசானியபாகத்திலிருக்கிறது வங்காளதேசம். அத்தேசத்தி லோடுகிறது தீர்த்தமகிமையிற் சிறந்த பகிரதியென்னும் சிரேஷ்டநதி. அந்நதிக்கரையிலுள்ளது "நவத்வீபம்" (Nadea) என்னும் சிறந்த நகரம். அந்நகர்ச்சிறப்பை இன்றைக்கு 400-வருஷங்களுக்குமுன்னர் இக்கதாநாயகரிருந்தகாலத்தில் இருந்தபடியுணரவிரும்புவீரேல் நம் கிரந்தாசிரியர் சொல்வதை நன்றாய்க் கேளுங்கள். "கற்கைநன்றே, கற்கைநன்றே, பிச்சைபுகினும் கற்கைநன்றே." (யூனிவர்ஸிடி கமிஷன் சபையார் ரிபோர்ட்டிலிருந்து இம்மேற்கோள் எடுத்தாளப்பட்டதாக எவரும் மயங்கவேண்டாம். அவர் கொள்கையையனுசரித்தால் "பிச்சைபுகிலோகற்கைதீதே" யென்று கடைசிப்பாகத்தை மட்டுந் திருத்திக்கொள்ளவேண்டும். இது ஒரு பாட்டிசொல். அம்மையார் மொழியில் ஆதாரவுள்ள நம்முன்னோர் இதை ஸத்யவாக்காகவும் அருள்மொழியாகவும் கொண்டு நடந்துவந்தார்கள். இது நிற்க.) மேற்சொன்ன பழமொழி உண்மையில் அந்நகரத்தில் பிரத்தியக்ஷபூர்வமாய்க் காட்டப்பட்டிருந்ததாம். "மகம்மதிய ஆளுகை தலைதுளிர்த்திருப்பினும், நம் சம்ஸ்கிருத பாஷாபிவிர்த்திக்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிப்பதிலும், அவ்வகையான சாஸ்திரங்களைப் புதிதுபுதிதா யுண்டாக்குவதிலும் அத்தேசத்தில் வசித்துக்கொண்டிருந்த நம் ஹிந்து சகோதரர்களுக்கு" (ஆரிய சகோதரர்களென்று சொன்னால் திராவிடபாஷைகளைத் தொலைத்துவிடுவதற்கு ஒருகருவியாய் யூனிவர்ஸிடி கமிஷன் சபையார் கையில் சிக்கிய "சம்ஸ்கிருதத்தை"க் கண்டு நடுங்கும்நம்திராவிடசகோதரர்களுக்குக் கேட்க இதமாயிருக்கலாம். ஆனால் இப்புஸ்தகம் யூனிவர்ஸிடிகமிஷன் ரிப்போர்ட்டு வெளியாவதற்கு முன்னமேயே யெழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது எம்துணிபு.) எப்படியோ, அங்கு அப்பொழுதிருந்த நம்சகோதரர்களுக்குச் "சிறிதும் ஊக்கம் குறைந்திருக்கவில்லை"யென்கிறார். (அவர் சந்ததியார்கள் இப்பொழுது இங்கிலீஷ்பாஷாமோகத்தில் குலீன் பிராமணன் தான் குமாரனாயிருந்தபொழுது கட்டிக்கொண்டு சுகித்த முதல்தாரத்தை அவள்கிழவியாய்விட்ட இப்பொழுது எத்தனையோ இளங்கன்னிகள் தனக்குப் பெண்டாயிருக்கப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள்போலும். பின்னிருந்து ஒருவிஷமன் "இப்பொழுதோ?" என்றோத இதுவரையலானோம்.) காலமாறுதலால் விளைந்ததையோராது நம் சரித்திரத்தைக் கவனிக்க: அக்காலத்தில் "கல்விகற்கவிரும்புவோரும், வேறிடங்களிற் படித்து பண்டிதப்பட்டம்பெற விரும்புவோரும், தினந்தினம் ஆயிரங்கணக்காக நவத்விபத்திற்குப் போய்க்கொண்டிருப்பார்கள். குழந்தை முதலாகிக் கிழவர் பரியந்தம் உள்ள ஒவ்வொருவர் வாக்கிலும் கல்வியைப்பற்றிய விஷயங்களே விளங்கிவந்தன. கல்வியபிவிர்த்தியால் அஞ்ஞானமாகிற அந்தகாரம்நீங்கியிருந்ததால், பணத்தைப்பிணமெனமதித்து, கல்வியுடைத்தாயிருத்தலையே பெருந்திரவியமாக அவ்வூர்ச் சனங்கள் பாவித்துவந்தார்கள்." தாயும் தாரமும் நேசரும்

யாவரும் தத்தமன்புக்கிருப்பிடமானவரிடத்தில் கல்விச்செல்வத்தையே மிக வேண்டினதன்றி "அவ்வூரிலுள்ள பண்டிதர்களனேகருஞ் சாஸ்திரஞானர் கைகூடியதால், இது நித்யம் (அதாவது, என்று மழிவில்லாதிருப்பது) இது அநித்யம் (அதாவது, எப்படியாயினும் அழியக்கூடியது) என்று பகுத்தறிகிற ஞானமாகிய "நித்யாநித்யவஸ்துவிவேகம்" உண்டாகி, இகசுகங்களைத்திரணமாய்மதித்து பரந்தாமனொருவனே என்றுமுள்ளோனவன் என்றுணர்ந்து துறவறம்பூண்டு தவஞ்செய்துகொண்டுவந்தார்கள்.

இப்படி மாட்சிபெற்ற அந்நகரில் பெரும் பண்டிதராயிருந்த ஜகந்நாதமிஸ்ரருக்கும் சசிதேவியம்மாளுக்கும் 10-வது குழந்தையாகப் பிறந்த சிசுவில் அவதாரமானவர் ஸ்ரீகிருஷ்ணசைதன்யஸ்வாமிகள். 1486-வரு பங்குனிமாதம் பௌர்ணமிதிதியில் பூர்ணகலைகளோடுங் கூடியிருந்த சந்திரனுக்கு ஒப்பாக இவரும் பூர்வஜன்மவாசனையால் கலாக்கியானங்கள் பூர்ணமாயுண்டாயிருக்கப் பிறந்தார். இவர்தாயாருக்கு முதலிற்பிறந்த எட்டுப்பெண்குழந்தைகளும் பிறந்தவுடன்மறித்து 9-வது பிறந்த விஸ்வரூபன் ஒருவன்மட்டுமிருக்க இவர் இரண்டாவது உயிரோடுபிறந்த குழந்தையாதலால் இவர் ஜாதககர்மம் மிகவைபவமாகக் கொண்டாடப்பட்டது. அனேக சுபசோபன சின்னங்களுமுண்டாக எல்லாரும் பிள்ளைபிரதாபனவனென்று மகிழ்ந்தார்கள். நமக்குள் குழந்தை பிறந்தால் அக்குழவியின் வரவை யெதிர்பார்த்திருந்த ஒவ்வொருவரும் ஒரு அருமைப் பெயரிடுவது வழக்கமல்லவா! அவ்வழக்கப்படியே தாயார் தன்குழந்தை நிம்பமரத்தடியிலுள்ள ஒரு குடிசையில் (பிரசவத்துக்காகத் தனிக்குடில்போடுவது அவ்வூர் வழக்கம்) பிறந்தமையில் "நிமை" என்றுபேரிடத், தகப்பனர் பண்டிதராதலால் "விஸ்வம்பர:" என்றுபெயரிட்டார். உபநயனகாலத்தில் இரண்டும்போக "கௌரங்க:" என்றுபேரிட்டார்கள்; இவர் "வெண்பொன்னிறமுடைய தேகமுடையவ" ராகவிருந்ததால் அதே அருத்தமுள்ள கௌரங்கர் என்னும்பேர் இவருக்குப்பொருந்தியே யிருந்தது. பின்னர் இவர் ப்ரஹ்மஞானியாய், சந்நியாசம் பூண்டு எல்லாருள்ளத்திலும் ஸ்ரீகிருஷ்ணப்ரேமையுண்டுபண்ணுவதே தான் ஜன்மமெடுத்ததற்குப் பலனாகக் கருதி நடந்து வந்தமையால் இவர்கருத்துக்கும் நடத்தைக்குமேற்க "மாணிடர்மனதில் ஸ்ரீகிருஷ்ணன்மீது பக்தியை யெழுப்புபவர்" என்று பொருள்படும் "ஸ்ரீகிருஷ்ணசைதன்யர்" என்னும்பேர் பூண்டுவிளங்கலானர் ஜன்மசாபல்யமான மோக்ஷசாம்ராஜ்யத்தை யடைந்தவர்கள் நாமரூபாதிகளுக்கப்புறப்பட்டவர்களானதால் அவர்கள் உலகவாழ்க்கையிலுழன்று வந்தகாலத்துப்பூண்டபேரை அப்பொய்வாழ்க்கையோடு தள்ளி தமது உண்மையான ஸத்யநிலைமைக்கும் உட்கருத்துக்கும் தக்கபடிபேர்பூண்டு அப்பேரினல் தங்கள் உள்நோக்கொன்றேவிளங்கத் தாமெவ்விதப் பற்றுமற்றவராய் விளங்குவர். உபநயனகாலத்திலும், ஸந்நியாசகாலத்திலும் நூதனமாய்ப்பேர் கொடுப்பதின் உள்மர்மமிதுவே. ஸ்வாமிவிவேகானந்தர், ஸந்நியாசம் பூண்டபின் சிலகாலம் சச்சிதானந்தர்என்னும் பேரால்விளங்கினர். உலகுளஜீவன்கள் நித்யாநித்ய வஸ்துவிவேகமின்றி யழிந்துபோவதையுன்னி அவர்களுக்கு விவேகமுண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணம் அவர் உள்ளத்துதிக்கவும் அப்பேரை யொழித்து விவேகானந்தர் என்னும்பேர்பூண்டு அதற்காக ஹிம சலசிகரங்கள் முதல் கன்யாகுமரி முனைவ யிலுள்ள சித்தர்கள்முத்தர்களை யெல்லா தேடிப்பண்பெய்தினவராய் உலகிலுள்ள பெ தர்களெல்லாம் கண்கொண்டுய்ய இவ்வுலகுகேயொரு விவேகசூரியனாக விளங்கி அவர் கருமமொழிந்ததும் பலைவாயில்விழும் சூரியனைப்போல் நித்யசமாதியில்வீழ்ந்தொடுங்கினர். இப்படியே கௌரங்கர் என்னும்பேர் புனைந்த ஆத்மாவதாரம் இன்றைக்கு 400வருஷங்களுக்குமுன் பக்திமார்க்கத்தை யுணர்த்தத் திருவுளம்பற்றி அதற்காகவே யவதரித்தாரென்ன கண்ணும்கருத்தும் உயிரும்உடலும் அது ஒன்றிற்கே அர்ப்பணமாயுழைத்து ஜனங்களிடத்து கிருஷ்ணப்ரேமையுண்டாய்ப்பரவும்படிசெய்து, அவதார புருஷரெனப் பிரக்கியாதிபெற்றுப் பரந்தாமனேடைக்கியமானர். நம்மிலுண்மையறியாவூனர்கள் துறவறமென்றால் பெண்டாட்டிபிள்ளை பொறுப்புகளையெல்லாம் விட்டு இரந்துகுடித்து வயிறுவளர்த்துக் காலந்தள்ளுவதென்று தப்பாய் எண்ணங்கொண்டு தடுமாறுகிறார்கள். உண்மையான துறவிகள் இரப்பது உயிர்ப்பிச்சையன்றி ஊன்பிச்சையன்று. ஊனுளவுயிரைப்பிடிப்பான் அடிசிலமுதுண்டு அன்புகாட்டி என்பையுமுருக்கிப் பக்குவமெய்திய ஜீவன்களைப்பரிபக்குவராக்கி உய்யச்செய்வார்கள். ஆதலால் அவர்களை "உயிருண்ணி" யென்பார்கள். அவர்கள் முற்றும் அகம்பாவமற்று, பகவத்சங்கற்பத்தை நிறைவேற்றுவதே கடனும் தொழிலுமாய், திரிகையிலேற்றப்பட்ட குயவன்கைமண்போல, பகவானுடைய திருவடிதாங்கிய சென்னியராய்ப், பராசக்தியாகிய சக்கரம் சுழன்றுவர, ஆக்கியுமழித்தும் காக்கும் அவன் லீலாவினோதத்தில் முற்றுமீடுபட்டவராய் அவனன்றித்தாமில்லாராய் அவன் லீலாவினோதங்களைக் காண்பதே யானந்தமாய் அமர்ந்துள்ளாராவர். ஆகையாலவர்கள் ஜீவசரித்திரத்தை பகவத்லீலையாகவே செப்புவர். ஸ்ரீகௌரங்கர் சரித்திரத்தையும் அப்படியேசெப்பியுளார்முதல்நூல், வழிநூலாசிரியர்கள். அவருடைய லீலாவினோதங்களொன்று அவர்திருவுருவக்காட்சிப் படமாகத் தீட்டப்பட்டிருப்பதால் அதைமட்டும் இங்கு மேற்சொல்லிய கருத்துக்கிணங்கியுள்ள அனேக அற்புதலீலைகளில் ஒன்றாகவெடுத்து விளங்கவைப்போம்.

சார்வபௌமர் என்னும் ஒருமஹாவித்வான் கல்விச்செருக்கால் உண்மையோராது உள்ளன்பில்லாது கெட்டுப்போவதைக்கண்டு அவன் உள்ளமுணர்ந்து அவ்வித்வானை ஈடேற்றக்கருதி ஸ்ரீசைதன்யர் அவர் போதனைக்குட்பட்டவர்போல் சிஷ்யபாவங்காட்டி, அவர் ஒரு ஸ்லோகத்துக்கு 9-அருத்தம் சொன்னபின் அவரைப்பார்த்து, அவர்திறத்தினை வியந்துபேசி, "ஆனல் நீர் சொல்லிய உரைகள் ஓர் பாஷாவல்லவன் உரைக்கத்தக்கவையே தவிர ஞானிகள் அல்லது பக்திமான்கள் சொல்வனவல்ல. அக்கவிபாடிய வாசிரியர் வேறுவகையுரை கருதியே அவ்வாறு பாடியிருக்கவேண்டும். அவற்றினை யென்னல் விவரிக்கமுடியுமோ பார்க்கலாம்" என்றுசொல்லி, அவர்சொல்லிய 9-உரைகளையும் சிறிதும் கவனிக்காதுவிட்டு, பிரேமை, பக்தி, ஞானம் இவைகளை யொட்டியே, மேன்மேலும் ஒன்றின்பின் ஒன்றாக ஒன்றிரண்டல்ல, பதினெட்டு உரைசெப்பியர். பண்டிதர் பிரமித்துப் பித்தேறித் தம்முன்னிருந்து பேசுவது உருவோ அருவோ வென்று திகைத்தார். அப்பொழுது அவர்மனக்கண்முன்னே ஓரற்புதக்காட்சியைக்கண்டு அடியற்றமரம்போல் புத்திமாண்டு பொத்தெனத் தரையில் வீழ்ந்தனர். எனெனில், இந்நிரந்தாசிரியரே சொல்வதைக் கேண்மின்: "ஏனெனில், ஆங்கு ஸ்வாமிகள் மறைந்துவிட்டனர். அவர்க்குப்பதிலாக எம்பெருமான் அறுகரங்களுடன் விளங்கித்தம் அரியகாக்ஷி தந்தனர். இருகரங்களில் வில்லும் அம்புந் தாங்கித்தாம் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனர்த்தமாய் சக்ரவர்த்தித்திருமகனாய் (அதாவது இராமாவதாரமாய்)த் தோன்றிய உண்மையும், மற்றிருகரங்களில் தீங்குழல்தாங்கி, அன்புருங்கோலமும் அருட்பெருந்தகைமையும் கருணையஞ்சோதியும் இனியதீஞ்சொற்களும் வாய்ந்து, ஸ்ரீகிருஷ்ணனாய் வாய்ந்த வாய்மையும், மற்றுமிருகரங்களிலும் தண்டுகமண்டலங்கள் தாங்கித் தாம் சீவராசிகளிடம் அன்பையிரக்க கௌரங்கஸ்வாமியாயவதரித்த மாண்பினையும் சங்கையிற்படிக்கதம் பக்தனுக்கு ஒருங்கே விளக்கினர்." இதுவே அருள்மாட்சி; "மனமாட்சி" யென்பாருமுளர். உண்மையிலிதுவொரு மாயாலீலை. அனுக்ரகார்த்த மீசனிவ்வாறியற்றுவது* ஸ்வானுபவத்திற் பிரத்தியக்ஷமாம்.

* c. f, குருவரன்—Boon of Teacher. (See next page.)

மனமாட்சி.

"மனமாயைமாயையிம்மாயைமயக்க
மனமாயைதான்மாயுமற்றென்றுமில்லை
பினையாய்வதில்லைபிதற்றவும்வேண்டாம்
தனையாய்ந்திருப்பது தத்துவந்தானே."

—திருமூலர்.

* குருவரன் - Boon of Teacher.

"அருவாயமரிவன் குருவாய்வருவன்
கருமாமுகில்போல் கருணையும்பொழிவன்
அருவாய்நின்றுருக்காட்டியுமழைப்பன்
உருக்காட்டியுருவழித்துனையாண்டுகொள்வானே."

ஜகத்-சிஷ்டி-பா-29.

---

INDIAN FOLK SONGS OF TRUTH AND WISDOM.

THE PRODIGAL REDEEMED.

OR

"THE PENITENT PRODIGAL AND THE BLESSED VIRGIN."

(A SPIRITUAL SONG.)

## மாயாண்டிச்சித்தன் ஞானப்பாட்டு.

# "ஆனந்தத்தேவடியாள்" என்னு நாமகள் நாப்பு.

[அகண்ட பரிபூரண சச்சிதானந்த சத்குரு மூர்த்தமான ஒரு பெரியவர், அதிதீவிர ஆத்மசத்தியான பரிபக்குவனான சற்சீஷனைப் பார்த்து "அப்பா, ஞானிகள் விசிறியைப்போலும், வீணையைப்போலும், தேவடியாளைப்போலும்" என,—அதாவது, அவர்கள் தம்மிடம் வரும் பக்தர்கள் உள்ளத்துணர்வை விர்த்தி செய்ய வல்லாரேயன்றி, உள்ளத்துணர்ச்சியில்லாவிடத்து அவர் அனுக்கிரகம் ஏதும்பலியாது, என்றபடி— அச்சற்சீஷன் உடனே தன் குருவாக்கை தேவடியாளாகவும் தன்னை அத்தேவடியாள் சுகம்தேடிச்சென்ற துருதுருத்த புருஷனாகவும்வைத்து பாவித்து உலகவழக்குக்கொப்ப ஆத்மார்த்தமாகத் தனது உள்ளனுபவத்தைப் பாடலாயினான். அப்பாட்டை யப்படியே கீழே பிரசுரிக்கிறோம். தூர்த்தர்களும் துன்மார்க்கத்திலேசென்று படாதபாடும் பட்டலுத்தபின் விவேகமுதித்துக்கடைத்தேறலாகுமென்னும் சித்தாந்தத்தை யுறுதிப்படுத்தினதுபோலும் இது இவ்வாறெழுதப்பட்டது அருணகிரிநாதர் சரித்திரம் இதற்கு மிகச்சான்றாம். ஜுடியாவில், யூதர்களை யீடேற்றச் சற்குருவாயவதரித்த யேசுநாதரும் இதை 'தத்தாரிப் பிள்ளை கதை' (the Parable of the Prodigal Son) யினால் உண்மையெனக்காட்டி யுபதேசித்திருக்கிறார். வார்த்தைகளுக்கு விகாரார்த்தம் செய்யாமல் ஊன்றிநின்றூகித்து உண்மையான ஆத்மார்த்தம்செய்து கொண்டு பார்க்கவும். அப்பொழுது இதிலடங்கிய மேலானவுண்மை வெள்ளிடைமலைபோல் ஒளிவிட்டிலங்கும்.]

### நாமகள் நாப்பு.

அம்பரத் தேயாடும் அருமைச்சோ தரரேகேண்மின்
இம்பரத்தே யான்பட்ட அனுபவத்தைச் சொல்லிடுவேன் :—

1. குருவாக்கே குருமூர்த்தம் : நாமகள்—The Word as Teacher or Guru : *Saraswati.*

கோயி லாவது கோயி லது
கோமள ஈசுவ ரன்கோ யில்
கோபுர வாசல் வீதி யிலே



குடியிருக் கிறாள் ஒருதேவ் அடியாள் ; (1)

2. குருவார்த்தைக் காசைப்படல்—Seeking the Guru.

தேவடி யாளவ ளாச்சே யென்று
தேடி யலைந் தவளைக் கண்டேனடி
கட்டுக் காவல் பல கடந்தேன் (2)
காத் திருந்த தாதி வந்தாள் : (3)

3. குருதெரிசனம்—Seeing the Guru.

தாதியைநா னறிவே னடி
யவள்தேவி யிடம்போக விட்டா ளடி (4)
பார்த்தேன் தேவடியா ளையவள்
நான்பார்த்த வள்தான் என்றி ருந்தேன் ; (5)

---

(1) *Cf.* திருமூலர்.—"உள்ளம்பெருங்கோயிலூனுடம்பாலயம்
வள்ளற்பிரானார்க்குவாய்கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச்சீவன்சிவலிங்கம்
கள்ளப்புலனைந்துங்காளாமணிவிளக்கே."

கோமளம்-கமலம்—இங்கு ஹிருதயகமலமாம்.

கோபுரவாசல்வீதியிலே=நாவிலே.

குடியிருக்கிறாள் ஒரு தேவடியாள்—வாக்கு. - நாமகள் வசிக்கிறாள் : "குருவினுடைய நாவில் வசிக்கும் வாக்கே குருமூர்த்தமாகத் தொழுதேன்" என்பது இந்நான்கடிகளின் கருப்பொருள்.

தேவ்அடியாள்=The Godhead's Own, *i. e.*, The Holy Spirit manifesting through the Sanctified Spirit of the Saint in the form of holy words that fall from His mouth—also called the "Holy Virgin," *i. e.*, Holiness or Word personified which is *Saraswati.*

(2) கட்டுக்காவல்பல—சத்தியவழிக்குப் போகத்தடையாகவிருக்கும் காமமோகாதிபந்தங்களும் விஷயசுகபோகாதி காவல்களும்.

(3) காத்திருந்த தாதி=ஞானிகளுக்குப் புலனறிவூழியஞ்செய்யும் *c.f.* above "கள்ளப்புலனைந்துங் காளாமணிவிளக்காம்." அவர்கள் ஐம்புலன்களையும் வென்றுவிட்டதனால் அவை அவர்களுக்குப்படிந்து ஊழியஞ்செய்கின்றன. நாம் வெல்லமாட்டாமையால் நம்மை அவை சிறைப்படுத்துகின்றன. *c.f.* "தன்னைத்தானெஞ்சங் கரியாகத் தானடங்கின்பின்னைத் தானெய்தாப் பயனில்லை - தன்னைக் குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல்கசெய்யிற் பிடிபடுக்கப்பட்டகளிறு."

(4) தேவி—உள்ளறிவு அல்லது பேரறிவு—உண்மையுணர்வு. இதற்குச் 'சிற்றறிவு' தாதியாம்.

(5) சீஷன் குருவைப்பார்த்து 'நம்மைப்போல்தான் அவரும்' என்று முதலில் மயங்குகிறான். புலனறிவால் பேரறிவை ஆராய்ந்து, நரி தன்வாலால் சமுத்திரத்தை யாழம்பார்த்ததுபோல் வரையற்றதொன்றை இவ்வளவுதான் என்று மடமையால் வரையறுத்துச் சிந்திக்கிறான்.

4. உலகவெறுப்பு அவித்தையைவிட்டோடல்—Trying to cut the bonds of Ignorance or Delusive Pleasures.

பார்த்தவளை யானுலுமவ ளின்பசுகமுன் தேடவில்லை (6)
தேடாமலே யிருந்தவனுன் தேடிவந்தே னவள்சுகத்தை ;
கட்டினவள் (7) கட்டறுத்துத் தேவடியாள் வீடுவந்தேன்
வந்தவென்னைத் தேவடியாள் வகையாக உபசரித்தாள் : (8)

5. குருபரீக்ஷை—Searchings of Heart.

அவளுபசரித்த வார்த்தைகளால் உளமகிழ்ந்தேன் நானுமப்போ
உளமகிழ்ந்து வார்த்தையாடி உளவுமர்மம் (8a) உணர்ந்துகொண்டேன்
உணர்ந்தவளோ டுல்லாசமா யிருந்தேனுன் சிலகாலம் ;
உல்லாசமாய்ப் பேசிவிட்டால் ருசித்திடுமோ இன்பசுகம் ! (9)

6. குருவாக்கில் சிரத்தை—Faith in the words of the Guru.

பேசினதும்போ தாதென்றவளைக் கிட்டியேநான் நெருங்கிவிட்டேன்
நெருங்கிவிட்ட பின்பேநான் சமயம்பார்த்து இருந்தேனடி ;
அந்தரங்க மாகநான் அவளிடத்து மனதுவைத்து
தன்னந்தனியே தனித்திருந்த வேளையிலே-ஆத்திரப்பட்டுநான் அங்கசேஷ்டை
செய்துவிட்டேன்: (10)

7. குருபக்தி—Love of Guru : Impatience and its Check.

மடியைப்பிடித் திழுத்தேன்மா ராப்பைக்கழட் டென்றேன்
அவளென்றன் கையைப் பிடித்துக்கொண்டு கன்னத்திலே தானறைந்தாள்; (10a)
கன்னத்திலே யறைந்த அறை கண்கலங்கச் செய்ததென்னை
கண்கள்கலங் கவுமேபெண்ணைக் கையால்வாய் பொத்தென்றாள். (11)

---

(6) விஷயசுகவிரக்தி தோன்றியதால் பரசுகத்தில் நாட்டம்வைத்திருப்பதைக் காட்டுகிறான்.

(7) கட்டினவள்—அவித்தையே. கட்டு - ஸம்ஸாரபந்தம் அல்லது கர்மபந்தம். அவித்தையும் கர்மபந்தமும் ஏதோ தனக்கந்நியமானதாகவெண்ணி அவைகளைவிட்டு ஓடிப்போகலாமென்று வெறுப்புற்றுத் துறந்து குருவைத்தேடி யடைகிறான்.

(8) உபசரித்தலாவது —அன்பாதரவாய் விசாரித்து வந்தவன் நிலையைக் குரு நிதானித்தறிந்துகொள்கிறார்.

(8a) உளவுமர்மம்—தத்துவபோத இரகசியம்.

(9) உண்மையாகவே விஷயசுகவிரக்தியுண்டானவனாதலால் குருவோடு வார்த்தையாடி ஒருவாறு உண்மையுணர்ந்தக்கேட்டு மேன்மேலும் அதைக் கேட்டனுபவிக்க அவாக்கொள்கிறான்.

(10) குருபக்தியுண்டாகி பிரமானந்தம் தனக்குக்கிடைக்குமென்று குருசொன்ன ஆதரவுவாக்குமட்டில் அதிமோகமுண்டாகி, அதுமோகத்தால் புளகாங்கிதனாய்க் கூத்தாடிக்குதித்துத் தன் அக்ஞான இருளைப்போக்குவிக்க மன்றாடுகிறான். அங்கசேஷ்டை - அமர்வின்மை. மாராப்பு - ஹிருதயவிளக்கை மூடியுள்ள இருட்திரை - அக்ஞானம். அவித்தை.

(10a) கையைப்பிடித்துக்கொண்டு-கர்மவிசேஷத்தாலுண்டான பிரவிர்த்திவாசனையை யடக்கி அதாவது மனதைச் சாந்தப்படுத்தி; கன்னத்திலேயறைந்தாள் - புத்தியைக் கண்டித்துத் திருத்தினாள் - என்றபடி. கண்கலங்க - அறிவுமயங்க அதாவது போதையுண்டாகச் செய்து.

(11) போதையுண்டானதுகண்டு குரு பக்குவமறிந்துபதேசிக்கத் தொடங்குகிறார்.



8. உபதேசாரம்பம்—Beginning to Teach.

கையாலே வாய்பொத்திக் கனவுநனவ ழிந்திருந்தேன் (12)
அப்படிநா னிருக்கையிலே யவள்செய்த வுபதேசங்கேள் :—

9. பக்குவசிஷன்-உண்மைத்துறவுணர்த்தல்—The Ripe Soul and True Renunciation.

" கட்டினபெண் டவளிருக்கக் கட்டறுத்தே நீவந்தாய் (13)
" கட்டறுந்த தாயினுமவளைக் கூடியேநீ சுகித்திருப்பாய்: (14)
" சுகித்திருக்கும் வேளையிலே சுகநீர்வ டிகையிலே (15)
" நீயென்று மவளென்றும் நினைப்பது தானழிந்து
" நீயேய வளாகி அவளேதா னீயாகி
" நீயுமவ ளுமற்றுக் கனவுந னவுமற்று
" சிற்றின்ப சுகமதுதான் சித்திக்கும் வேளையிலே (16)
" ஆனந்தத் தேவடியாள் அனுபவத்தைத் தேடினையேல் (17)
" பேரின்ப சுகநுகர்வாய்-ஆனந்தமும் வந்துவிடும் :

10. அபக்குவன்-பற்றொழிக்கும்வழியுணர்த்தல்—The Unripe Soul—How to be Cleansed.

" சிற்றின்ப சுகமதுவே பெரிது பெரிதென்று
" பேய் பிடித்து வந்தை யானால்,—(18)
" கன்னத்தி லறைந்திடுவேன் காலாலு தைத்திடுவேன் (19)

---

(12) குருபக்திமேலிட்ட சிஷன் குருவுக்கடங்கி உபதேசாருதனாய் நிஷ்டையில் நிற்கிறான்.

(13) அவித்தை யழியாதிருக்க அதைவிட்டு நீ தப்பியோடலாமென்று வந்தாய்.

(14) அவித்தை வலையிலகப்படாமற் றப்பினுயானாலும் அது அழியும்வரையில் உனக்குக் கதியில்லையென்று போதிக்கிறார்.

(15) சுகநீர் வடிகையிலே—இன்பரசமனுபவித்து அதிலீடுபட்டுப் பரவசனாயிருக்கையிலே.

(16) சிற்றின்பத்தை வெறுப்பால்விட்டோடிக்கினுல் பற்றுவிடாதானதால், அதை முற்ற மனுபவித்து அது அநித்திய சுகமென்றறிந்து அவ்வின்பசுகாநுபவகாலத்திலும் 'ஐயோ, இது அடுத்த நிமிஷம் மறைந்துபோய் நம்மைத் துக்கத்திலழுத்துமே, இதை நம்பி நாம் எத்தனைநாள் மோசம் போனோம்! இனி மோசம் போவதில்லை'யென்று உறுதிமேற்கொண்டு அநுபவசித்தி காலத்தில் அதை விரும்பாது அழியாப் பேரின்பத்தை நினைத்து வருந்துவதே உண்மையான விரக்தியென்று போதிக்கிறார். அத்துவிதபாவமும் சர்ப்பிக்கிறார்.

(17) 'பேரின்பசுகத்தை நாடிவருந்தினையேல்' என்றபடி. 'அநுபவ'மாவது - ஸ்வானுபவமே.

(18) 'சிற்றின்பத்திலாசைவிடாது, அதை நித்திப்பது கஷ்டமாயிருந்தாலும், குருவையடுத்துபதேசம் பெற்றால் அதை இலகுவாகத் தேடிக்கொள்ளலாமென்கிற யுக்திசெய்து விஷயசுக ஆசை விடாமலே வந்தையானால்' என்றபடி.

(19) இதுமுதல் ஏழடிகளில் அபக்குவ சிஷன் நிலையுணர்த்துகிறார். கன்னத்திலறைதல் - புத்தியைச் செருப்பாலடித்தல். காலாலுதைத்தல் - அநுக்கிரகசக்திப்பிரயோகம். c.f. திருமூலர்.—

"உடல்பொருளாவியுலகத்தார்கொண்டு
படர்வினைபற்றறப்பார்த்துகைவைத்து
நொடியினடிவைத்துநண்ணுணர்வாக்கி
கடியப்பிறப்பறக்காட்டினனந்தியே."

" வெட்டவெளியிலுன்னை வெட்டித்துண்ட மிட்டிடுவேன்.
" நீயார்நா னென்று நெருப்பிலிட்டுத் தகித்திடுவேன் (19a)
" என்னிடத்தில் வந்தவுன்னை (19b) விட்டுவிடேன் உயிரோடே
" சிற்றின்பந் தேடிவந்த சின்னஞ்சி றுபயல்நீ (20)
" பேரின்ப மாமந்த ஆனந்தத் தேவடியாள்
" ஆரென்று எண்ணிவந்தாய் அறிந்துணர்வா யுனக்குள்ளே.

11. சத்குருஸ்வபாவம்—The True Teacher: His characteristics.

" நான்காசுப ணம்வாங்கேன் காணிக்கையு மேற்றுக்கொள்ளேன் (20a)
" அன்பான வார்த்தைகளே யின்பந்தரும் வெற்றிலைகாண்
" மன்மதனைச் சுட்டெரித்த சாம்பலே வாசனைகாண்
" அகங்காரமம காரமதை யறைத்துச்சந்தனப் பூச்சிடுவேன்
" புத்தியெனும் பூவைக்கொய்து பூமாலை சூட்டிடுவேன்
" ஊனவுடல் அழித்துனக்குச் சாந்துப்பொட்டு இட்டிடுவேன்
" உன்னறிவதனைப் புகையில்காட்டியுன் கண்ணுக்குமை யிட்டிடுவேன்
" உன்பஞ்சேந்திரியங் களையழித்துப் பாதக்குறடு தந்திடுவேன்
" உன்னுயிரைமட்டும் அடைக்கலமா என்னிடத்து வைத்திருப்பேன்.

12. விவேகமூட்டிப் பக்குவமெய்திவாவென் றனுப்பல்—Let True Discrimination do its work.

" இத்தனைகோ லங்களும்நான் கோர்வையாகச் செய்துவிட்டேன்
" கோலங் கலையாமல் கோணல்வழி போகாமல்
" நேத்திரமது கலங்காமல் நேரவே வழிநடந்து
" அறுத்துவிட்ட பெண்டாட்டியைத் தேடிக்கொண்டு போடா"வென்று (21)

13. மந்தசிஷன்-ஆத்திரம்-அருவருப்பு—Dull and Impatient yet Earnest.

தூரத்திவிட்டா ளையாவென்னைத் துன்பார்க்கியவள் தேவடியாள்:
ஆனந்தத்தேவ் அடியாளைத் தேடிக்கொண்டு போனநான்
திரும்பியே வந்தேனையா திருக்கோலங் கொண்டேநான்
இத்தனைகோ லங்கள்செய்து மின்பமுற்று மளிக்கவில்லை: (22)

14. தீவிரமெய்தல்-உள்ளத்தோர்ந்துணர்தல்—The Quickening of the Spirit.

அறுத்துவிட்ட பெண்டவளை யழைத்தேநான் சுகித்திருந்தால்

(19a) 'பேதபுத்தியைப் போக்கி அபேததர்சனமளிப்பேன்' என்றபடி.
(19b) உன்னை - அகங்காரமழியாச் சீவனை.
(20) 'நீ அற்பசீவன்' - என்றபடி.
(20a) இதுமுதல் ஒன்பதடிகளில் சத்குருசுபாவமுணர்த்துகிறார்.
(21) பக்குவாபக்குவ நிலையுணர்த்தி பக்குவனுகிவா வென்று ஆசீர்வதித்தனுப்புகிறார்.
(22) சிஷன் மந்த நிலையிலிருந்து ஆத்திரப்பட்டருவருக்கிறான்.



நான்தேடிப் போனஅவள் நித்யசுகந் தருவேனென்றாள்:
இத்தனைகோ லங்கொண்டு மேமாந்தினிப் போவேனோ! (23)

ஓர் பழங்கதை யுவமானம்.

" சுவற்றெறிந்த நிரையை வழித்துப்போ டடியென்று (24)
சொன்னதோடே நிற்காமல் சுரணைகெட்ட மூளியென்றான்:
சுரணைகெட்ட மூளியென்றே சூக்ஷ்மமாய்ச் சொன்னசொல்லை
ஸ்தூலந்த டித்தஅவள் சூக்ஷ்மமா யறியாமல்
நீயடித்த சுரணையெனக் கின்னமுமே யாறவில்லை
சுரணைகெட்ட மூளியென்று சொன்னாயே யென்கணவா!
உன்னைப்போல் மூர்க்கனைநா னுலகத்திற் கண்டதில்லை
என்றுசொல்லி யவள்தானும் ஏக்கங்கொண் டழுதாள்காண்."

அவளைப்போ லழுதாளடி யறுத்துவிட்ட பெண்ணவளும்:
அகங்காரங் கொழுத்திருக்க அவள்கட்டை யறுத்துவிட்டேன்: (25)

15. துறவுண்மையுணர்ந்து அகங்காரம் நீக்கல்—True Renunciation—Selfishness drops off.

அறுத்துவிட்ட அகங்காரம் அழிந்தேநான் வந்தபோதும்
முன்னைப்போ லில்லையென்றாள் முனிந்துகொள்ள வில்லையென்றாள் (26)
முனிந்துகொள்ளாக் காரணத்தா லன்புமுனக் கிலையென்றாள்
அன்பில்லை யென்றுசொல்லி அழுதாளவள் பிரமைபிடித்து;

16. அவித்தியாவாசனையோடு போராடல்—Fighting the old Foe—Ignorance that rises up in the shape of long buried convictions.

பிடித்ததுவே பேயவளை பிரம்மராக்ஷஸ் அதுவம்மா (27)
குளிக்கவுமே போயொருவன் சேற்றைப்பூசி வந்தாற்போல்

(23) பின்னுமோர்ந்து தேறி தீவிர நிலைபெறுகிறான்.
(24) ஒரு நிலையுணர்த்த உவமானமாகச் சொல்லப்படும் ஒரு பழமொழிக்கதை.
(25) 'கோபத்திற்றுறவு' தப்பென்று தானே யுணர்ந்துகொள்கிறான்.
(26) அவித்தையை மானிடரெல்லாருமே பெண்டாட்டியாகக் கட்டிக்கொண்டழுகிறோம். அவித்தையொன்று வித்தையொன்று என்று இரண்டில்லை. அவித்தை வாசனையோடழிந்தாலது வித்தை - வித்தைகெட்டால் அவித்தை. கதைபுராணங்களில் உருவகப்படுத்திக்கூற இலகுவாகும்பொருட்டு இதை யிரண்டாகவைத்துச் சொல்வதுண்டு; உண்மையிலாராய்ந்தால் ஏககாலத்தில் இரண்டுமிருப்பது அசாத்தியம். அவித்தை அதோகதிபயக்கும்; வித்தை ஊர்த்துவ கதிகாட்டும்.
(27) பிரம்மத்தைக்காண வொட்டாமல் தடுப்பது பிரம்மராக்ஷஸ். பேய்-c. f. திருமூலர்.—

" குறிக்கின்றதேகமுந்தேகியுங்கூடி
நெறிக்கும்பிராணனிலைபெற்றசீவன்
பறிக்கின்றகாயத்தைப்பற்றியநேர்மை
பிறக்கவறியாதார்பேயுடனொப்பரே."

ஆனந்தத்தேவ் அடியாளை அனுபவிக்கப் போனவனுன்
பேய்பிடித்த பெண்ணவளை யனுபவிக்க வேண்டிவந்தேன் :

17. குருவுபதேசபலத்தால் அவ்வாசனையையழிக்க யத்தனித்தல்—Trying to efface old convictions by the light of Truth taught by the grace of Guru.

பேயோட்ட வந்ததம்மா பெண்ணவளை யனுபவிக்க : (28)
ஆனந்தத் தேவடியாள் அலங்காரம் செய்துவிட்டாள் :
கோலமது பலமாச்சுது பூசாரிநான் என்றுசொன்னேன் :
பூசாரிவே ஷமுந்தானே பொருந்தித்தப்பா னென்றசுவே !

18. உபதேசமனனத்தால் விவேகோதயமாதல்—Meditation of Guru's words leading to Spiritual Discernment.

உடுக்கை யெடுத்தே அடித்தேன்நான் கிடுகிடென்று
கிடுகிடென்ற டித்திடவப் பேய்மிகவும் பயந்ததம்மா
பிரமராக்ஷஸ் அதுவம்மா பேர்சொல்ல லரிதாயிற்று
அரிதேதா னாலும் அறிந்துகொண்டேன் அதன்பேரை !

19. நிதித்யாசத்தினால் (விவேகபலமெய்தி) வனதுவுணர்ந்தொழித்தல்—Constant and uninterrupted meditation of Truth leading to the giving up of the Flesh which 'profiteth nothing.'

உடுக்கோசை யதனாலே யுணர்ந்துகொண்டே னதன்பேரை (29)
உணர்ந்துகொண்டேன் போதனை உளவுநிலையும் கண்டுகொண்டேன்
கண்டுகொண்ட பின்னர்நான், கட்டழகி தேவடியாள்
உடலழித்து இட்டுவிட்ட, உயர்சாந்துப் பொட்டுள்நின்றேன். (30)

20. ஆத்மஅநாத்மவிவேகத்தால் அவித்யா வாசனையையழிக்க யத்தனித்தல்—Trying to destroy old convictions of Ignorance by constant exercise of spiritual discernment.

பொட்டினுள்ளே யிருந்துகொண்டேன் போதித்தேன் அப்பேய்க்கு
பேயதற்குப் போதித்தாற் போதனைதா னேறுமோ !
அறிவைச்சுட்டு அரிவையவ ளிட்டுவிட்ட மையதுதான்
இட்டமை யிட்டபடி யிருந்ததடி யென்றன்கண்ணில் ;

(28) பேயோட்டவந்த தம்மா பெண்ணவளையனுபவிக்க-c. f. திருமூலர், (சத்திநிபாதம்):—
"இருட்டறைமூலையிலிருந்தகுமரி
குருட்டுக்கிழவனைக்கூடற்குறித்துக்
குருட்டினைநீக்கிக்குணம்பாலகாட்டி
மருட்டியவனைமணம்புரிந்தாளே."

(29) 'உடுக்கோசை' - உள்ளத்துணர்வு - the inner voice - ஆகாசவாக்கு - அசரீரவாக்கு - என்றும் சொல்வர். 'உளவுநிலை' - உண்மைநிலை - தத்துவநிலை.

(30) இதனால் 'துரியநிலை' யைச்சுட்டிக்காட்டியபடியென்றுணர்க.



21. இந்திரிய நிக்ரகத்தால் அவித்யா வாசனையையடக்கல்—Subduing the old convictions of sense perception by control of the senses.

மையிட்ட கண்களாலே மருட்டிவி ழித்துவிட்டேன் (31)
விழித்தவி ழிகண்டு மருண்டதம்மா அந்தப்பேய் (32)
பஞ்சேந்திரியங் களால்செய்த பாதக்கு ரடெடுத்தேன்
குரடெடுத்தேன் கையதனி லடித்துவிட்டேன் குடெடுக்க.—

22. அடங்கிவந்த அவித்யா வாசனையை விவேகத்தடியாலடித்தழித்தல்—Effacing them altogether by the strong light of Discernment.

அடித்தஅடி பொறுக்காமல் ஓடிவிட்டதப் பிரமராக்ஷஸ்
பிரமராக்ஷஸ் விட்டிடவும் படிந்துவந்தாள் பெண்ணவளும்;
படிந்துவந்தே யவளுந்தான் தஞ்சமைய தஞ்சமென்றாள் :
தஞ்சமென்று சொன்னாளைத் தடியெடுத்து அடித்துவிட்டேன் :

23. அவித்யா வாசனையை யறவொழித்து வித்யாசம்பன்னனாதல்—True Victory and Knowledge.

அடித்துவிட்ட அடியிலவள் சுழன்றுகீழ் விழுந்துவிட்டாள்
அடித்தஅடி தடித்ததம்மா தடித்ததழும்பு மாறிற்றம்மா
தழும்பதுவும் மாறுமுன்னவள் தடித்தஸ்தூலம் கரைந்ததம்மா
தடிஸ்தூலம் கரைந்துருகச் சுரணைவந்தது சூக்ஷ்மத்துக்கு : (33)

24. வித்தைமுமுக்ஷுவுக்கு அனுகூலியானதுகண்டு அதிதீவிரனாதல்—Keeping to the Straight Path and making Quick Progress.

"சுரணைகெட்ட மூளி" யென்றால் சூக்ஷ்மத்தா லறிந்துகொள்வாள்
சூக்ஷ்மத்துக்குச் சுரணைவர சுகமுணரும் பெண்ணாள்
சுகமுணரு முணர்ச்சிவந்தது உளங்களித்தினிக் கலந்திடுவள் (34)
கலந்திடுங் காலமது கிட்டியது காணிப்போ.

(31) துரியாதீதத்திலேறிப்பார்த்தேன் - என்றபடி, c. f. திருமூலர்.—"துரிய அதீதம் சொல்லறும் பாழாம்."

(32) 'விழிகண்டு' - ழி - நீட்டல்விகாரம். அந்தப்பேய் - அவித்யாவாசனைகளாகிற பிரம்மராக்ஷஸ் பேய்.

(33) தடித்துப்போன ஸ்தூலபாவனைகளாகிற அவித்தியாவாசனைகள் அறவேயொழியவும் 'அவித்தை' யழிந்து 'வித்தை' யாகத்தோன்றினள். c. f. திருமூலர் (மந்திரம்).—
"மருட்டிப்புணர்ந்துமயக்கமுநீக்கி
வெருட்டிவினையறுத்தின்பம்விளைத்துக்
குருட்டினைநீக்கிக்குணம்பலகாட்டி
யருட்டிகழ்ஞானமதுபுரிந்தானே."

(34) இது 'தீவிரம்' உணர்த்தியபடியென்றுணர்க. c. f. திருமூலர்.—
"பிறப்பையறுக்கும்பெருந்தவநல்கு
மறப்பையறுக்கும்வழிபடவைக்குங்
குறப்பெண்குவிமுலைகோமளவல்லி
சிறப்பொடுபூசனைசெய்யநின்றார்க்கே."

25, அதிதீவரத்திருந்து ஆத்மத்தியானமெய்தி ஆனந்தானுபவசித்தனாயமர்ந்திருத்தல்—
In view of the Goal : Elated but Calm : Spiritual Ecstacy.

கலந்திடுங் காலம்வந்தால் கலந்துசுக மனுபவிப்பேன் (35)
சுகமனுபவித் தின்பநுகர் என்பழிந்த காலத்திலே
ஆனந்தத்தேவ் அடியாள் அனுபவமும் கிட்டிவிடும்
கிட்டிவிட்ட ததுவானால் கிடைத்ததது வே பேரின்பம். (36)

ஓம். ஸ்ரீ கிர்ஷ்ணார்ப்பணமஸ்து.

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### வேடிக்கைக்கதை.

ஒரு சத்திரத்தில் பிராமண போஜனம் நடந்தது. அப்போது அனேக பிராமணர்கள் கச்சைகளை வீசிக்கொண்டும் வயிற்றைக் காயப் போட்டுக்கொண்டும் வந்ததை அவர்களில் ஒரு அப்பவடை சாஸ்திரி வந்திருந்தார். "யாரடா சோற்றின் மறைவிலே யென்றால் நான் தான் நோயாளி பத்தியம்பண்ணுகிறேன்" என்றவனையும் ஜெயிக்க வல்லவர். பிராமண போஜனம் நடந்தது. சாஸ்திரிகள் விலாப்புடைக்கச் சாப்பிட்டுவிட்டு "உண்டகளைப்பு தொண்டருக்குமுண்டு" என்பதுபோல உண்ட சிரமந்தீரவும், தான் பூசனிப் பழம்போன்ற இளந்தொந்தியை எங்கேயாவது கிடத்த வேணுமென்கிற எண்ணத்தினாலேயும், தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து சத்திரத்து வெளித் திண்ணையில் நின்றபடியே விழுந்து தன் கையால்தடவிப்பார்த்தார். அப்போது அங்கே ஓர் பெரிய எருமைக்கன்று படுத்திருந்தது. அதன் வயிற்றைத் தடவிப்பார்த்து விட்டுத் தனக்கு முந்தியே யாரோ முதல் பந்தியில் சாப்பிட்டவனென்றெண்ணி "என்னங்காணும் சாஸ்திரிகளே? முதல் பந்தியோ சாப்பிடு" என்றார் அப்போது சத்திரத்து வெளியிலிருந்தோரெல்லாரும் வயிறு கிழியச் சிரித்தார்கள்.

S. K. வைத்தியநாதய்யர்.

(35) இது 'தீவிரதரம்' உணர்த்தியவாறாகும். c.f. திருமூலர்.—

"இருவினைநேரொப்பவின்னருட்சத்தி
குருவெனவந்துகுணம்பலநீக்கித்
தருமெனுஞானத்தாற்றன்செயலற்றாற்
றிரிமலந்தீர்ந்துசிவனவனாமே."

(36) c. f. திருமூலர்.—

"நாவுக்குநாயகினன்மணிபூணாரம்
பூவுக்குநாயகிபொன்முடியாடையாம்
பாவுக்குநாயகிபாலொத்தவண்ணத்தா
ளாவுக்குநாயகியங்கமர்ந்தாளே."

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.



அன்பேயவன் : அறிவேசக்தி ; ஓம்தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : AUM.

ஸத்யமே ஜயம்—*Satyameva Jayati.*

புத்தகம் 11.] 1903ஞ பிப்ரவரிமீ. [இலக்கம் 10.

THE DOCTRINE OF "RENUNCIATION, RE-BIRTH, AND LOVE."

## *"விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு."

### "விட்டுப்பிடி."

இம்மூன்று கட்டுரைகளில் இகம்பரமிரண்டிலும் ஜயசீலராய் சுகித்திருப்பதற்கு வேண்டிய உண்மையெல்லாம் அடங்கியிருக்கிறது. உலகவழக்கத்தில் ஒருகாரியத்தைப் பிடிவாதமாகக் கடைப்பிடித்துக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்புவோர் அசாத்தியமான இடையூறு நேரிட்டபொழுது, விட்டுக்கொடுப்பதுபோல் விட்டுக்கொடுத்துப் பின்னர் தங்கள் கருத்தையே பிடியாகக்கொண்டு பிடித்துக் காரியத்தைச் சாதித்துக்கொள்வார்கள். உலக ஞானிகள் இதை உலகத்தில் ஜயமடைவதற்கு ஒரு பெரிய சூழ்ச்சியாக நினைத்து எதையும் "விட்டுப்பிடித்தால் பிடிபடாமற் போகாது" என்று சொல்லி, சுருக்கமாய் "விட்டுப்பிடி" யென்று உபதேசம் செய்வார்கள். இதனுண்மையை முற்றுமுணராமையால் இதை யொரு பெரிய தந்திரமாக நினைக்கிறார்கள். இதில் மந்திரமுமில்லை தந்திரமுமில்லை. இயற்கை விதியின் உண்மையும் ஸ்வபாவமுமிது. இவ்வுலகம் வீணைகானம்போல் ஒற்றுமையும் இனிமையுமான கீதநாதம் பயக்கும் ஓர் அற்புதக்கருவியாம். அக்கருவியின் அமைப்பும் சமைப்புமறிந்து அதை நாம் கையாண்டால் சம்மிஷ்டம்போல் அதை யுபயோகிக்கலாம்; இன்பரசம், சோகரஸம், துக்கரஸம், ஆனந்தரசம் முதலான பற்பலரசங்களில் எதுவேண்டுமோ அது பயக்கும்படி அதை யாளலாம். ஆனால் வீணையை மீட்டி வாசிப்பவன் அதிலீடுபட்டுத் தன் குரலும் விரலும் ஏகரஸமாய் ஒன்றுபட்டமையும்படி பாடவேண்டும். இல்லாவிட்டால் அபசுரம் உண்டாகும். அதுபோல, இவ்வுலகின் அமைப்பையும் சமைப்பையும் தத்துவாராய்ச்சியாலுணர்ந்து உண்மையை யறிந்து, உண்மையே

* In Renunciation is the secret of Success ; in Death, Life ; and in Love, Peace.

யாகி உள்ளபடியுழைத்தால் மனிதனால் ஆகாதகாரிய மொன்றுமில்லை. மனிதனுள் கடவுள்
ஒடுக்கம். ஆகையால் கடவுளுக்குள்ள சக்தியெல்லாம் மனிதனுக்குள் ளொடுக்கமா யடங்கி
யிருக்கிறது. இதை வெளியிட நாம் கடவுளின் உண்மையையுணர்ந்து உள்ளபடியுழைத்தால்
ஸர்வசக்தியையும் வெளியிட்டுக் காட்டலாம் : உபயோகிக்கவும் உபயோகிக்கலாம்.

ஆகாசத்தில் மின்னலைக்கண்டபொழுது, மின்னல் மின்னினால் இடிவிழும்; வெளியிற்போ
னால் மேலே மின்னல் பாய்ந்து உடல் கருகி வெந்துபோம், அல்லது மின்னல்பட்டு உடல்
மாண்டுபோம் என்றுபட்டும் உணர்ந்தார்கள். பெரிய வீடுகளிலும், அரண்மனைகளிலும், கோவில்
களிலும் மின்னலிடி விழுந்து,ஒருக்ஷணத்தில் அக்கட்டடங்களெல்லாம் தவிடுபொடியாய்வந்தன.
பெந்தாமின் ப்ராங்க்லின் என்பவர் ஆகாசத்தில் காற்றாடிப்பட்டம்விட்டுக்கொண்டிருக்கும்பொழுது
மேகத்திலிருந்து மின்னல் அதன்வழியே யிழிந்ததைக்கண்டு ஆகாசத்திலுள்ள மின்னலை நமக்கு
அபாயம் செய்யாதபடி இழிந்துத் தரையில் விடலாமென்று கண்டு பிடித்தார். உடனே பெரிய
கட்டடங்களின் உச்சியில் மின்னல்பிடிக்கும் கருவிகள் செய்துவைத்து அதிலிருந்தும் கம்பி
யொன்று தரையில் பாயும்படிச்செய்து, முன் கட்டடத்தைநாசம்செய்த மின்னல், ஒருவருக்கும்
ஒரு தீங்கும் செய்யாது அம்மின்னற்பிடிகம்பிவழியாக ஊடுருவிச்சென்று தரையில் பாய்ந்தி
அது வந்தவழி போனவழி தெரியாதிருக்கும்படிச் செய்தார்கள். பின்னும் மின்னலினியற்கையை
யும் அதன் குணத்தையு முணர்ந்துகொண்டபின் அதை விளக்கொளிதரவும் வண்டியிழுக்கவும்
ஒத்தாசையாக வுழைக்கும்படிச் செய்துகொண்டார்கள். முன் மனுஷனை ஹதம்செய்துவந்த
மின்சாரம் இப்பொழுது அவனுக்கு ஆடு மாடு குதிரைபோல் ஊழியம்செய்து வண்டியிழுத்
தும், தந்திசமாசாரம் கொண்டுபோயும், விளக்கொளியீன்றும், பலவிதமாகப் பணிவிடை செய்
கிறது. இவையெல்லாம் உண்மையுணர்ந்துகொண் டுழைத்ததினால் வந்த பேறுகள். இப்படியே
ஒவ்வொன்றும் உண்மையுணர்ந்துகொண் டுழைத்தால் நமக்கு ஊழியஞ்செய்யக் காத்துக்கொண்
டிருக்கும்; உண்மையுணராமலோ உணர்ந்தோ ஏறுமாறாக வுழைத்தாலோ, நம்மை ஹதம்
செய்துவிடும்.

இயற்கையிலுள்ள இந்த சக்திகளையே நம் முன்னோர் வேதாளக்கதைகளாகவும்,
பூதக்கதைகளாகவும் வர்ணித்தெழுதினார்கள். இக்காலத்தில் ஜ்யூல்ஸ் வேர்ன் (Jules Verne) என்
பவர் தத்துவாராய்ச்சியாலுணர்ந்த வுண்மைகளையெல்லாம் அற்புதமாக வமைத்து அதிசய
மான கற்பனைக்கதைகள் எழுதியிருக்கிறார். "சந்திரனைச்சுற்றிப் பிரயாணம்" என்றும் பலவித
மாகவும் பேரிட்டு, பூத, பௌதிக, வானசாஸ்திரவுண்மைகளை வேடிக்கைக்கதைகளாக எழுதி
யிருக்கிறார். அப்படியே நம் முன்னோர்கள், வேதாளக்கதையென்றும், விக்கிரமாதித்தன்கதை
யென்றும், பதுமைக்கதையென்றும், கிளிக்கதையென்றும் மனோதத்துவங்களைப் பலவிதமாக
உருவகப்படுத்தி அதியற்புதமான கதைக ளெழுதியுள்ளார். அவைகளின் உண்மையை யுணர
மாட்டாமல் இக்காலத்தார் அவைகளைக் காலம்போக்குவதற்காகச் சோம்பேரிகள் உபயோகிக்
கும் வீண்கதைகளாக மதித்துவருகிறார்கள். மனுஷன் ஆத்மவுணர்ச்சி யற்றுப்போகப்போக
எல்லாம் அவனுக்கு விருதாகாலக்ஷேபக்கதைகளாயின. அவனுடைய காலமும் ஜன்மமும் ஆத்
மவுணர்ச்சி யற்றபோதே அவனுக்கு விருதாவாகப்போனமையால், "தன்னுள் ளிருப்பதையே
மனுஷன் வெளியிற்காண்கிறான்" என்னும் தத்துவ இயற்கைப்படி, அவன் வயிற்றுப்பிழைப்புச்
சம்பந்தமற்ற எல்லாவற்றையும் விருதா காலக்ஷேபார்த்தம் ஏற்பட்டதாக வெண்ணுகிறான். இத



னால் பழைய வேதாளக்கதைகளையெல்லாம் பள்ளியிற் பாடம்வைக்கவேண்டுமென்று சொல்ல
வில்லை. அவைகள் அக்காலத்துக்கு ஏற்றதாக வெழுதப்பட்டதுபோல், இக்காலத்துக்கேற்றபடி
தற்காலத்துப் பிரசித்திபெற்ற சாஸ்திரவுண்மைகளை ஜனங்களுக்குக் கதைகளாகவெழுதிப் போ
திக்கவேண்டுமென்பதே நம் கருத்து.

இனிப் பாசுகத்தைநாடிப் பார்ப்போமானால் அங்கும் "விட்டுப்பிடி" என்பது
உண்மையே. அந்த சந்தர்ப்பத்தில் அதற் கருத்தமென்னவென்றால், "இகப்பற்றுகளை
யெல்லாம் விட்டு, பரனையே பிடியாகப் பற்றிப்பிடி" என்பதாம். அப்படிப்பிடித்தால்
"பற்றற்றார் பற்றாகப் பற்றிநிற்குமவன்" பரங்கருணைமிகுதியால் உன்னை யீடேற்றிக் காப்பாற்றி
மோக்ஷவீடளித்து, மண்ணிலிருந்தும் மாளாவரனளித்துத் தனக்குச் சொந்தப்புத்திரனாக அங்
கீகரிப்பான். புத் என்னும் நரகத்தில் விழாமற் காப்பவன் புத்திரன். ஸர்வேசனுடைய அம்ச
மாய் உன்னில் மனச்சாக்ஷியாகவும் அகவிளக்காகவும் விளங்கும் ஆத்மாவை பிறவிக்கடலினின்
றீடேற்றிவைத்து மோக்ஷசாம்பிராஜ்ஜியம்பெற்ற மனிதனும் நீ கடவுளுக்குப் புத்திரனாவா யென்
பது என் ஒவ்வாது. எவ்வாறேனும் ஒவ்வும் என்பதே உண்மை. நமது இருஷிகள் சொல்வதும்,
சதுர்வேதங்களும் முறையிடுவதும், கிஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததும், கிறிஸ்து அவர்
சிஷ்யர்களுக்கும் யூதர்களுக்கு முபதேசித்ததும் இதுவே. இதுவே ஸந்நியாசமாம். இதுவே துற
வாம். இதுவே ஆண்டியாவதுமாம். "எல்லாவற்றையும் அறவே விட்டு என்வழிப்பட்டுவா" என்று
கிறிஸ்து அவருடைய சிஷ்யர்களுக் குபதேசத்ததினுள்ளர்த்தமும் இதுவே. எல்லாவற்றையும்
விட்டு என்னையே சரணாகதியாக அடைந்தவனை நான் காப்பாற்றுகிறேனென்று ஸ்ரீகிருஷ்ண
பகவான் சொன்னதும் இதுவே. இந்த அருத்தப்படி நடப்பதை விட்டு வெளிவேஷம்போடு
வதினால் பிரயோசனமில்லை. "மந்திரத்தில் மாங்காய்விழாது" என்பது உலகானுபவத்தில் எப்ப
டியுண்மையோ, அப்படியே "வேஷத்தினால் வீணெய்தல் முடியாது". "அகன்றார்வழி
முதலாதிப்பிரானும்" என்ற திருமூலநாயனாரும்,

"ஆடம்பரங்கொண்டு அடிசிலுண்பான்பயன்
வேடங்கள்கொண்டு வெருட்டிடும்பேதைகாள்
ஆடியும்பாடியு மழுதுமரற்றியுந்
தேடியுங்காணீர் சிவனவன்றாள்களே" என்றார்.

கடவுளைத் தொழுவேனென்று கோயிலுக்கும் குளத்திற்கும் போய் தீர்த்தங்களாடி ஸ்தல
ங்கள்பல சென்றலைந்து, ஆடிப்பாடி யலமாந்துதிரப்பதெல்லாம் ஆசைவிடுவதற்காகவன்றி வேறில்
லை. உண்மையான கடவுளை யுள்ளபடி வழிபடவேண்டின் ஆசையறவேண்டும். ஆசைவிட்டார்
நெஞ்சிலுள்ளான் ஈசனெஞ்ஞான்றும். கிறிஸ்துவும் இப்படியே போதித்தார். கடவுள் ஸத்ய
ஸ்வரூபியென்றும், ஆத்மஸ்வரூபியென்றும் அவரை யுண்மையிலர்ச்சிப்போர் ஆத்மார்த்தமாக
வும் ஸத்யமாகவுமிருந்து உள்ளத்தமர்ந்துள்ளவரை யுள்ளபடியுணர்ந் தர்ச்சிக்கவேண்டுமென்று
யேசுநாதர் கிணற்றண்டை தண்ணீர் மொள்ளவந்த 'ஸமரிடன்' ஸ்திரீக்குப் பக்குவமறிந்துப
தேசித்தார். அவள் ஐந்துகணவரைக்கொண்டு அத்தனைபேரையுந் துறந்து அன்பிலே யீடுபட்
டவளிச்சைப்படி அவளுக் கிசைந்தநாயகனைக் கூடியிருப்பவளெனத் தெரிந்தும், அவள்தானே
சொல்லியும், அவள் உண்மையும் அன்பும் நிறைந்தவளென்று கண்டு, அவள் வாய்மைக்குகந்து
அகந்தூய்மையானதுபற்றிப் பக்குவமெய்தினளென்றுணர்ந்து அவளுக்குத் தாமே வலுவில்
ஆத்மோபதேசஞ் செய்தார். நமது திருமூலநாயனாரும் இதையே வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

“வாசியுமூசியும் பேசிவகையினாற்
பேசியிருந்து பிதற்றிப்பயனில்லை
ஆசையுமன்பு* மறுமினறுத்தபின்
ஈசனிருந்த விடமெளிதாமே.”

“மாடத்துளானலன் மண்டபத்தானலன்
கூடத்துளானலன் கோயிலுள்ளானலன்
வேடத்துளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சின்
மூடத்துளேநின்று முத்திதந்தானே.”

“ஆசையறுமின்க ளாசையறுமின்கள்
ஈசனோடாயினு மாசையறுமின்கள்
ஆசைபடப்படவாய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே.”

ஆசையோடு தோன்றுமிச்சை மனோபவமாம்.- ஆசையற்றபின் தோன்றுமிச்சைபவோபவம்; (Individual will, Divine Will) என்பார் இதையே.

ஆசையுதிக்கவே பேதபுத்தியுண்டாயிற்று. நலம் தீது, சுகம் துக்கம், இன்பம் துன்பம், தேவர் ராக்ஷஸர், பாபம் புண்ணியம் என்று இரட்டை இரட்டையாகத் தோன்றும் நேரெதிர் அனுபவங்களெல்லாம் பேதபுத்தியா லுண்டானவையன்றி வேறல்ல. இதையே ஸம்ஸார விருக்ஷமென்பார். ‘நலந்தீதுணர்த்துமரம்’ (Tree of knowledge of good and evil) என்று உவமித்துச்சொல்வதும் இதையே. ஆசையுண்டாகப் பேதபுத்தி யுண்டாயிற்று: பேதபுத்தியுண்டாக எதையும் நேரெதிராக இரண்டுபடுத்திப் பார்க்கலாயினோம். இப்பேதபுத்தியினாலேயே உலகத்திலுள்ள இன்பதுன்பங்களை யனுபவிக்கிறோம். இவ்வனுபவம் முதிரவிடவே இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டது. நம்முடைய பேதபுத்தியால் இவ்வுலக முண்டாயிற்று. அனுபவித்தலுத்துப் பேதபுத்தியற்றால் அபேததர்சனம் உண்டாகும். “அபேததர்சனம் ஞானம்” என்பது சுருதி வாக்காதலால், அந்த அபேததர்சனமே ஸத்யஞானமாம். இந்த அபேததர்சனமுண்டாவது பேதபுத்தியற்றவிடத்திலே. பேதபுத்தியே ஆசையினாலுண்டாயிற்று. பேதபுத்தியை வேரோடு களையவேண்டுமானால் ஆசையறவேண்டும். மேலான முத்திசித்திப்பதற்கு ஜீவேசுவரபேதமு மறவேண்டுமாதலால், “ஈசனோடாயினு மாசையறுமின்” † என்றார். இது அதிதீவிர பரிபக்குவர்க்குச் சொன்னது. உலக ஆசையை அறுக்காலாகாது ஈசனாசையை யறுத்துவிடுகிறேனென்றால், அவனுக்கு நரகந்தான் பிராப்தி. பெறற்கரிய மானிடஜன்மம்பெற்றும் அதன்பயனைப் பெற்றுய்யாது, மனிதனுக்கும் கீழ்ப்பட்டவர்களாக வுற்பவித்துழலவேண்டும். ஆகையால் “விட்டுப்பிடி” யென்பது எல்லாவிதத்திலும் உண்மையான ஓர் உத்தம கட்டுரை. ஆகையால் பிறப்புமுதலிறப்புவரையில் எல்லாவற்றிலும் “விட்டுப்பிடி” என்னுங் கட்டுரையைக் கருத்தில்பதித்து நடவுங்கள். இதைப்போலவே மற்ற இரண்டுகட்டுரைகளும். இம்முறை இதைவாசித்துணர்ந்து சிரணிக்கவிட்டு, அடுத்தமுறைகளில் மற்றவற்றை யெடுத்துக்கொண்டு முறையே விளங்கவைப்போம்.

ஓம் தத்ஸத். சத்குருவேநம:

“அபிவாதயே...ஸத்யாநந்த: சாந்தசர்மா நாமாஹமஸ்மிபோ.”

* ‘அன்பு’ என்றது இங்கே ‘பற்றுவிடா அன்பை’ அதாவது ‘அபிமானத்தை’ யென்றுணர்க.

† “He that has seen me has seen my Father” என்றார் ஏசுநாதரும்.



## The Hindu Ideal of Life—What is it?

## “கதிமோக்ஷம்” என்றால் என்ன?

ஒருவன் முன்பின் தெரியாமலும் போகும் வரும்வழி தெரியாமலும், நடுக்காட்டில் வழிதப்பிப்போன பிரயாணிபோல், ஒரு சங்கடத்திலகப்பட்டுக் கொண்டு தப்பும்வழி தெரியாமல் மீட்சியின்றித் தவித்தால் அப்பொழுது “ஐயோ! இவனுக்குக்கதிமோக்ஷமில்லையா? தவிக்கிறானே!” யென்று சொல்வது உலக வழக்கம். இதிலடங்கிய கருத்தென்ன? அதனுண்மையென்ன? என்று சற்று விசாரிப்போம். ‘கதி’ என்றால் போக்கு. ‘மோக்ஷம்’ என்றால் விடுதி. ‘கதிமோக்ஷம்’ என்றால் ‘போக்குவிடுதி’ யென்பது பத அருத்தம். இச்சங்கடத்தினின்றும் இவனுக்குப் போக்கு (அதாவது வழி) இல்லையா? மோக்ஷம் (அதாவது விடுதி, தப்பித்துக்கொள்ளல், இளைப்பாறுதலுமாம்) இல்லையா? என்பது மேற்கூறிய உலக வசனத்துக்கருத்தம். இதன்பொருத்தம் பிரத்தியக்ஷம். இப்பொழுது “கதிமோக்ஷம்” என்னும் வார்த்தையி லடங்கியுள்ள உண்மையான உட்கருத்து என்னவென்று விசாரிப்போம். கதிமோக்ஷம்-போக்குவிடுதி. ஒரு சங்கடத்திலிருந்து தப்புவதற்கான வழியும், அதிற்பட்ட கஷ்டந்தீர இளைப்பாறுவதற்கான விடுதியும் அதாவது தங்கு மிடமுமாகும். ஒரு வழிப்போக்கன் காட்டில் சிக்கிக்கொண்டால் அவனுக்கு வழியும் தெரியவேண்டும்; அவ்வழியை நடந்துகடக்க இடையிடையே சற்றிருந்து இளைப்பாற விடுதி (சாவடி)களும் வேண்டும். இந்த இரண்டுமிருந்தால் அவனுக்குப் பயமில்லை. எவ்வளவு தூரமான வழியாக விருந்தாலும் மெள்ள மெள்ள நடந்து போய்விடலாமென்று தைரியங் கொள்வான். இவை யிரண்டு சாதனங்களோடு இன்னொன்றும் முக்கியமாக வேண்டும் அவன் கவலைதீர வேண்டுமானால். அது என்னவெனில் அந்த வழியின் முடிவில் அவன் சேரவேண்டிய இடமும் தெரியவேண்டும். இம்மூன்றுந் தெரிந்திருந்தால் அவனுக்கு வழியில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும், எண்ணம், நம்பிக்கை, தைரியம் (Hope, Faith, and Courage) என்னும் இம்மூன்று மனோதத்துவங்களின் உதவியால் அவன் ஊக்கமேற்கொண்டுழைத்து காரியசித்தி யடைவான். இதிற் சந்தேகமில்லை. இந்த வழிப்போக்கனுக்குச் சொல்லிய உதாரணத்தை உற்றுநோக்கி உள்ளத்தி லாராய்ந்து பார்த்தால் நாம்செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் இம்மூன்று அம்சங்களும் (அதாவது வழி, விடுதி, முடிவு) பொருந்திய அறிவு அல்லது உணர்வு இன்றியமையாதிருக்க வேண்டுமென்பது புலப்படும்.

அகலம், நீளம், உயரம் இம்மூன்றும் சேர்ந்ததே கனம் ஆவதுபோலும், கனமான ஒருவஸ்துவின் பேரைச் சொன்னால் அதற்கு நீளம், அகலம், உயரம் என்கிற மூன்றளவும் தானே பொருந்தியிருப்பது எப்படி பிரத்தியக்ஷமாய் ஒருவித முயற்சியுமின்றி நம்மனதிற் படுகிறதோ அப்படியே ‘வழி, விடுதி, முடிவு,’ என்கிற மூன்றம்சங்களும் சேர்ந்த உணர்வு ஒன்று ஒவ்வொரு முக்கியமான விஷயத்தையும்பற்றி மனதிற் குடிகொண்டிருக்கிறது. கல்லிற் சிலைவெட்டுவோன் எப்படி தான் எந்த உருவத்தைப்போல் சிலைவெட்டக் கருதுகிறானோ அந்த உருவத்தின் பிரதிமை அல்லது படத்தைத் தன் கண் முன் வைத்துக்கொண்டு அடிக்கடி அதைப் பார்த்து உருவற்று முண்டமாய்க் கிடக்கும் கல்லை உருவா யமைக்கிறானோ, அந்தமாதிரி நம்மனதிற் குடிகொண்டிருக்கும் இந்த “உணர்வு”க்குத் தக்கபடி நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறோம். மனிதனுருவத்தை வெளிச்சத்தி னுதவியால் சச்சரூபமாகப் படம்பிடிப்பது எவ்வளவு எளிதோ, அதுபோல நம் உள்ளத்தினுள்ளே சித்தாகவிளங்கும் ஒளியைக்கொண்டு ஒவ்வொன்றையும் பற்றிக் கருத்தில் ஒரு உருவமைத்துக் கொள்கிறோம். இதற்கு “மனக்கோட்டை கட்டுகிறது” என்று சாதாரண ஜனங்கள் சொல்வார்கள். பாவனை

அல்லது பாவம் அல்லது எண்ணம் என்று கற்ருேர் சொல்வார்கள். இது பல எண்ணங்களை ஒன்ருக அமைத்து குற்றங் குறையின்றி உருவாக்கப்பட்ட உயர்ந்த எண்ணமாதலால்இதை உன்னதபாவம், உயரெண்ணம், அல்லது சாதாரணமாய் பாவம், எண்ணம் என்றும் சொல்வார்கள். மனிதனைப்பற்றி உன்னெண்ணமென்னவென்ருல், 'மனிதன்' என்கிற நாமம் உன்காதில்விழுந்து உள்ளத்திற் போய்ச்சேர்ந்தவுடன் உன் மனக்கண் முன்தோற்றும் உருவமென்ன? அவ்வுருவத்தின் இலக்ஷணங்களென்ன? இப்படி அமைந்த உருவத்தின் இலக்ஷணங்களெல்லாம் சேர்ந்தமைந்தது அதைப்பற்றி உனக்குள்ள உயரெண்ணமாம். உயரெண்ணமானது குற்றங் குறையற்றதால், இதை முற்றுணர்வு அல்லது 'முழு எண்ணம்' என்று சொல்வோம். இதை பாவனுரூபம் அல்லது சிந்தனுரூபம் என்று சொல்லின் இன்னும் நன்ருக அமையும். வேதாந்த சித்தாந்தங்களில் உபயோகிக்கும் பதமுமிதுவே. "பாவனுரூபம்" எண்ணத்தினுல் மனதில் உருச்செய்யப்பட்டு நின்றது. எண்ணத்தினுல் உருச்செய்ய முடியாததை இந்திரியங்களால் உணரமுடியாது. இந்த பாவனுரூபத்தை மாதிரியாக வைத்துக்கொண்டு அதற்கொப்பக் கூடிய வரையில நாம் நடந்துகொள்கிருேம். உலகத்திலுண்டான வஸ்துக்களெல்லாம் முதலில் பாவனுரூபமாக விருந்து பிறகு அது காரியத்திலமைந்து இந்திரியங்களா லுணரும் பொருள்களாக அமைந்தன.

இதற்கு உதாரணமாக ஒருகுயவன் வேலை செய்வதைப் பார்ப்போம். திரிகையில் மண்ணேற்றி அதைச் சுழற்றிவிட்டு அவன், பிண்டமாயிருக்கும் மண்ணில் கையை வைத்துக்கொண்டிருக்கிருன். திரிகை சுழல்கிறது. அவன்கை ஆடவில்லை. ஆனுல் பிண்டமாயிருந்த மண் கலசமாக உருக்கொள்கிறது. இந்த உரு அவன் மனத்திலிருந்தது. அவன்மனத்தில் பாவனுரூபமா யிருந்த கலசத்தை திரிகையினுதவியால் மண்ணி லுருவாக்குகிருன். இந்தக்கலச முண்டானதற்குங் காரணமென்ன? குயவன் மனத்தில் "இந்தமாதிரியொரு கலசம் செய்வேன்" என்று நினைத்து அந்த உருவத்தை பாவனுரூபமாக அவன்மனத்தில் அமைத்துக்கொண்டு அதை மண்ணில் உருவாக்குவதற்கு வேண்டிய சாதன சாதகங்களைத் தேடி பாவனுரூபமான கலசத்தை மண்ரூபமான கலசமாக்கினுன். மண் என்னும் பேர் கலசம் என்னும் பேரில் மறைந்து போய்விட்டது. இரண்டு நிமிஷமுன் மண்ணுயிருந்தது இப்பொழுது கலசமாக ஆய்விட்டது. அதாவது பிண்டமாயிருந்த மண் கலசரூபமான மண்ணுயிற்று. இப்படியாக வுண்டான கலசத்துக்கு முன்மாதிரி யெங்கேயிருந்தது? குயவன் மனத்திலிருந்தது. அதை நம்மால் பார்க்க முடியவில்லை. ஆனுல் அந்த பாவனுரூபமே மண்ரூபமானதும், அது நம் கண்ணுக்குத் தெரியலாயிற்று. கையால் தொடுவதற்காயிற்று. இப்பொழுது மண்ணைத்தள்ளி ரூபத்தைமட்டுமெடுத்துக்கொண்டு பார்த்தால் குயவன் மனத்தில் பாவனுரூபமாக விருந்த கலசம் "காரணரூபம்" என்றும், அவன் திரிகையி னுதவியால் மண்ணில்செய்த மண்ரூபமான கலசம் "காரியரூபம்" என்றும் காண்கிருேம். இப்படிப்பார்த்தால் காரண, காரியம் என னுமிரண்டில் காரணம் பாவனுரூபமாக விருந்து, அந்த பாவனுரூபம் குடிகொண்டிருந்த மனிதனுடைய இச்சையினுல்சாதகசாதனங்கள் கூடிக் காரியம் உண்டாயிற்று என்று அறிகிருேம். சித் வெளியில் எண்ணங்களுண்டாவதால், கலசத்துக்கு மண் எப்படியோ அப்படி பாவனுரூபத்துக்கு 'சித்தாகாசம்' சாதனப்பொருளாம். திரிகை எப்படி மட்கலசத்துக்கு வேண்டிய சாதகமாயிற்ருே, அப்படி நினைக்கும் சக்தியாகிய சித்சக்தி (மனேசக்தி) பாவனுரூபமமையச்சாதகமாயிற்று. மட்கலசத்துக்குக் குயவன்எப்படி கர்த்தாவானுனே அப்படி உள்ளுணர்வு (ஆத்மா) பாவனுரூபத்துக்குக் கர்த்தாவாகினுன். இப்படி மூவகையாக அமையப்பெற்ற பாவனுரூபங்கள் பஞ்சேந்திரியங்களைச் சாதகமாகவும் பஞ்சபூதங்களைச் சாதனமாகவும் கொண்டு பிரபஞ்சத்தில் (மட்கலசம் போன்ற) தோற்றப்படும் பொருள்களாகச் சமைக்கப்படுகின்றன. இப்படி பாவனுரூபமாகவுள்ள எண்ணங்கள் இங்கிலீஷில் 'Ideal' என்று சொல்லப்படும். 'Idea' என்ருல் எண்ணம். 'Ideal' எண்ணங்களைக்கொண்டு மனதிற்பழுதறக்கட்டிய உருவம். 'Ideal' என்னும்பதத்தின் பொருளைச் சரிபாகத்தமிழில் சொல்லவேண்டுமானுல் "பழுதற்ற பாவனுரூபம்" என்று சொல்வது பொருந்தும். இதே கருத்தையே சுருக்கமாக "மனேபாவம்" என்றும் மனதின்றி பாவனையில்லையால் அதையும்விட்டு "பாவம்" என்றும் சொல்வார்கள்.

இப்பொழுது இந்தபாவத்துக்கு முதலில்வழிப்போக்கனுதாரணத்தைக் காட்டிச் சொன்ன மூன்றம்சங்களும் பொருந்தியிருக்கிறதா பார்ப்போம். "வழி, விடுதி, முடிவு" என்கிற மூன்றம்சங்களும் மனேதத்துவமாகப்பார்க்கப்புகில், "போக்கு, இருப்பு, இலக்ஷியம்." "போக்கு" என்பதில் வழிவகை உபாயங்களெல்லாம் அடங்கும். "இருப்பு" என்பதில் இலக்ஷணங்களெல்லாம் அடங்கும். "இலக்ஷியம்" நோக்கம் வைத்த பொருளைக்குறிக்கும். ஆகையால் இம்மூன்றும், இலக்ஷணம், இலக்ஷியம் என்னுமிவற்றை இரண்டந்தங்களாகவும், இவ்விரண்டையும் ஒன்ருகச்சேர்ப்பது மார்க்கமாகவும் அமையப்பெறும். இப்படியாக ஒவ்வொரு காரியத்துக்கும் பாவனுரூபமான எண்ணம் அல்லது பாவம் ஒன்றுண்டு. அந்தபாவத்துக்குத்தக்கபடியிருக்கும் அவனவன்நடத்தையும் காரியமும். ஆகையால் இளமைப்பருவத்தில் இவ்விதபாவனுரூபங்கள் அமையுமுன் குழந்தைகள், சிறுவர்கள் மனதில் மேலான எண்ணங்கள், பாவங்களுண்டாகும்படிச் செய்துவிட்டால், பின்பு அவர்கள் பெரியவர்களாய் வாழ்க்கை யாரம்பிக்கும்பொழுது, அவர்கள்மனதிற்படிந்துள்ளபாவங்களுக்கு (Ideals) தக்கபடிநடந்துகொள்வார்கள். ஆகையாற்ருன்நம் ஔவையாரர், "இளமையிற்கல்" என்ருர். முதிர்ந்துபோனுல், மனது திரிகையிலேற்றப்பட்ட மண்போலின்றி, கட்டியுமுட்டியும் கரடுமுரடுமாய் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி கோணல்மாணலான உருக்கொண்டு கட்டிப்பட்டுப் போய்விடும். சாலையில்கிடந்து மிதிபட்டுக் கட்டிப்பட்டமண்ணும், வெயிலிற்கிடந்து வெடித்துப் பாறையானமண்ணும் எப்படித் திரிகையிலேற்றி வனையவாவோ அப்படி உலகத்திலுழன்றடிபட்டமனம் மேலான எண்ணங்கள் அமையப்பெற்ற பாவனுரூபங்களுக்கு இடங்கொடாதுபோகும். இதில் ஒன்று சொல்ல மறந்தோம். மனதிலுள்ள பாவனுரூபங்களெல்லாம் காரியத்திலுமப்படியே அமையப்பெறுவது கஷ்டம். இதற்குப் பழக்கம் அவசியம். குயவன் அவன் மனத்திலுள்ள கலசத்தைத் திரிகைமுன்னுட்கார்ந்து மட்கலசமாக இலகுவில் வனைந்துவிடுவனுயினும், அதேகலசத்தின்ரூபத்தை மனதிற் பதித்துக்கொண்டு நாம் திரிகையின் முன்னுட்கார்ந்து மட்கலசம் செய்ய யத்தனித்தோமாயின், அது நம்மனத்திலுள்ள ரூபத்துக்குப் பொருந்தாது கோணலாகப் போவதைக் காண்போம். அழித்தழித்துச் செய்து பழகினுல் கடைசியில் அது சாத்தியமாகும். ஆகையால் மனதில் பாவனுரூபமாக விருப்பதற்கும், காரியத்தில் அதை யொட்டி நாம் செய்யுங் காரியங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. வித்தியாசமிருந்தாலும் செய்து செய்து தவறிப்போய் மறுபடியும் செய்ய யத்தனித்துக் கடைசியில் கைதேர்ந்தவர்களாவோம். மனதிலுள்ள பாவனையை மாற்றிவிட்டால், பின்பு முயற்சிக்குக் காரணமின்றிப் போகிறது. ஆகையால் எதைப்பற்றியும் நாம் கொள்ளும் மனேபாவங்கள் பழுதற்றதாகவிருக்கவேண்டும்.

மூதறிவுண்டாகும் வரையில் பழுதன்றி நினைப்பது அசாத்தியமாதலால் அந்தந்த நிலைக்குத்தக்கபடி அப்பொழுதுள்ள அறிவுக்குச் சாத்தியமானபடி மேலான எண்ணங்களையே மனத்திற்கொண்டு, பாவனுரூபமான அவைகளை நாம் எப்போதும் மனதின் கண்

வைத்து சிந்தித்து வரல்வேண்டும். அறிவு முதிரமுதிர, நமது பாவங்களும் மாறிவரும். 10-வயதுப் பையனுக்குப் பழுதற்ற உத்தம பாவமாக அமையும் எண்ணம், 20-வயதான வாலிபனுக்கு விளையாட்டாகப்படும். 10-வயதுப் பையனை 20-வயது வாலிபனைப்போது அப்பொழுது பிரமாதமாகப்பட்டது இப்பொழுது விளையாட்டாகப்படுவதை யறிவான். அறிந்தாலென்? எப்பொழுதும் தன் நெஞ்சறிந்தவரையில் பழுதற்ற சிந்தையே வரவரப் பெருகிக், கடைசியில் பெற்றபேறளிக்கும் ஒப்புயர்வற்ற உண்மையான உத்தம பாவமாகும். அப்படிப்பட்ட உத்தமபாவம் எல்லாருக்கும் ஒன்றே. அதாவது (i) "நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்?" என்னும் கேள்விகளி லடங்கும். வரந்துப்போக்காகிய இரண்டும் 'வழி' யென்று உவமானமாக வெடுத்துக் காட்டியதிலடங்கும். இதுவே கதி யென்று சொல்வதாம். நாம் வந்த வழி போகும்வழி தெரிந்துகொண்டபின் (ii) நம் "இருப்பு" என்ன? என்னும் கேள்விக்குப்பதில் தேடுவதில் விசாரம் பிறக்கும். நம் இருப்பாவது? நாம் சீவன். நமது நிலையென்ன நாமேன் சுழற்காற்றிற்பட்ட துரும்புபோல சுகதுக்கம் என்றும் பிறப்பிறப்பு, நினைப்புமறப்பு என்றும் ஓயாது சுழன்றுவரும் சுழியலகப்பட்டு சுழலுகிறோம். இதிலிருந்து "விடுதி" யில்லையா? என்கிற எண்ணம் உதிக்கும். "உண்டு" என்னும் திடம் பிறந்தால் "மோக்ஷம் உண்டு" என்கிற நிச்சயம் பிறக்கிறது. மோக்ஷம் உண்டென்கிற திடன்கொண்டு அதற்குப் போகும்மார்க்கமுமுணர்ந்த பின்னும், (iii) "அங்கு போயென்னசெய்கிறது?" என்கிற கேள்விபிறந்துவாதிக்கும். அங்குபோனால் அப்புறம் திரும்புவதில்லை: அதுவே நித்யம், அதுவே ஸத்யம். சுத்தமும் உத்தமுமானதும் அதுவே. அதற்கு ஒருகுறைவுமில்லை. பழுதுமில்லை. முழுதும் பழுதற்ற பரம்பொருள் அதுவே. சச்சிதானந்த ஸ்வரூபமாய், ஆதியந்தமற்றதாய், அடிநடு முடியெனும் பின்னமற்றதாய்,

"அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே" என்றார்

உறுதிவார்த்தையினால் முடிவும் ஏற்பட்டுவிட்டால், அப்புறம் அந்த பாவத்தையே சிந்தித்து, நாமெதுசெய்யினும் அதிலே கண்ணும் கருத்துமாகியுழைக்கலாம். நாம் உயிர்பெற்றதி னுண்மையுணர்ந்துவிட்டோம். உணர்ந்தவுடனேயே கதிமோக்ஷம் பிறந்துவிட்டது. நாம் உயிர்பெற்று இவ்வுலகிலவதரித்ததற்குக் காரணம் நமது பூர்வசங்கற்பமே. அதாவது பூர்வத்தில் நாம் மனதிற்கொண்ட பாவனுரூபமான கர்மவாசனையாம். இங்கு ஏன் வந்தோம்? அக்கர்மவாசனையை யனுபவிக்க வந்தோம். அதாவது முன்செய்து அரைகுறையாக விட்டவேலையை முடிக்கவந்தோம். இனி இதற்கு முடிவுதான் உண்டோ? எனில்: "உண்டு." சங்கற்பித்துக் கொண்டவேலையைச்செய்து முடித்து கருமம் தொலைந்தால் அப்புறம் ஓய்வும் ஒழிவும் ஆறுதலும் ஆனந்தமுந்தான். இதுவேமுக்தியெய்தல், இதுவே சீவர்களாம் நமக்குக் கதிமோக்ஷம். இதுவே யெல்லாமதக்குரவர்களும் போதித்துளது. இதுவே தர்மசாஸ்திரங்களும் வேதமும் முறையிடுவது. ஹிந்துக்கள் உண்பதும், உடுப்பதும், மணப்பதும், வாழ்வதும், பிறப்புமுதல் இறப்புவரையில், தொட்டில்முதல் சுடுகாடு வரையில் அவர்கள் செய்யுங்கருமங்கள், சடங்குகள், ஓதும் சாஸ்திரங்கள், வேதங்கள் எல்லாம் இது ஒன்றையே முடிவாகவைத்து இதுவே நோக்கமாகக் கொண்டெழுதப்பட்டன. அவர்களுக்குள் ஏற்பட்ட ஜாதிக் கட்டுப்பாடு, மதக் கட்டுப்பாடுகளெல்லாம், இந்த வழியில் அவர்களைப் பழக்குவதற்காக வேற்பட்ட பள்ளிக்கூடங்களும், பாடங்களுமேயன்றி வேறல்ல. இந்நோக்கத்தை விட்டுப் பார்த்தால் எல்லாம் சிக்கல்முக்கலாகத் தோற்றும். இதிலிருந்துபார்த்தால் எல்லா மொழுங்காகத் தெரியும். மேற்றிசையில் பேர்போன உத்தமர்களும் இதனுண்மையை ஒருவாறு கண்டு கைப்பற்ற அபூர்வமாய் யத்தனித்து வருகிறார்கள். எமர்ஸன் (Emerson) என்பவர் "Hitch your wagon to a star: உன் வாழ்க்கையாம் சகடத்தை விண்ணொளிவான்மீனிற் பூட்டுக" (அதாவது, விண்ணளாவப்பார்) என்றார். யோகத்தில் "தாரகவொளி" யென்பதினுண்மையை இவர் இப்படிச் செப்பியதாகும்.

---

உ

ஓம்

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, 00.*

**(With the First Dawn of the 20th Century.)**

# *ஆனந்தத்தாய்மொழி.

"அன்னைசொன்மிக்கமந்திரமில்லை."

## அவள் தன் † திருவருட்குழவிக்கோதிய மந்திரம்.‡

அருட்குழவியுற்பவம்: ஆனித்திருமஞ்சனம்—The Day of the Cleansing of the Spirit.

"இழுக்கென்றிருந்தேனீசன்றன்கோயிலேதமிலேன்
கழுக்குன்றிலேவந்தெவியழைத்தேன்குறையோரா
திழுக்காவென்றனையிழுத்தேகித்திருக்குடந்தையிலே
யழுக்காறழ்திருமஞ்சனீராடிப்பழுக்கவைத்தவன்வெருட்டினனே."

## முதலாவது: பாலப்பருவம்—வித்தைப்படலம்.

1. மழலைச்சொல்.—First Experience of Grace.

அம்மாளெனக்கொரு மாம்பழமீன்றாள்
அதற்குத்தோலுமில்லை நாருமில்லை
கட்டியுமில்லை கொட்டையுமில்லை
தின்னத்தின்ன ருசிக்குமென்றாள்
தெவிட்டாத்தேன்கட்டியென்றாள்;

---

* அறிவார்பராசக்தியானந்தமென்பார்
அறிவார் அறிவுருவாமவளென்பார்
அறிவார்கருமமவளிச்சையென்பார்
அறிவார்பரனுமவளிடந்தானே—திருமந்திரம்.

1. மழலைச்சொல்—c. f. திருமூலர்.—
"காலினிலூறுங் கரும்பினிற்கட்டியும்
பாலினுள்நெய்யும் பழத்துளிரசமும்
பூவினுள்நாற்றமும் போலுளனெம்மிறை.'

* c. f.—The Holy Trinity consisting of (1) God, (2) The Power and Wisdom of God, otherwise described as
Holy Spirit and (3) Christ or the Sanctified Spirit. "St. Paul corroborates *by his own spiritual experience*, gained i
pendently of any man, the doctrine of Jesus and John that *Logos* or the Holy Spirit of God is the Great Teache
the Universe who makes Himself ***manifest*** in those who have attained Christhood. (An Eastern Exposition o
John by Sri. Parananda.) God and the Spirit of God are neither male nor female. They are neuter and shoul
spoken of as "It." Nevertheless as the Holy Spirit produced the world and delivered the "Son" from his capt
to Darkness (Eph. iv. 8, Rom. viii 21) or caused him to be reborn (John iii. 6. 8) it is usual with the Sages of I
to speak of the Holy Spirit as fecund or feminine. God is our Father. The Holy Spirit is our Mother. The tv
one form the Godhead (Acts xvii. 29; Rom. I. 20; Col. ii. 9)—Parananda's Exposition

† திருவருட்குழவி—The Blessed Child.
"அருட்குழவிபிறக்குமதிசயமுணர்த்திடுமால்
அருட்குழவிபிறவாதன்னையவளுதரத்தில்
அருட்குழவிபிறவாதருளிலாருள்வசத்தில்
அருட்குழவிபிறக்குமத்தனருள்வைத்தாலே."

‡ மந்திரமாவது மாமருந்தாவதுந்
தந்திரமாவதுந் தானங்களாவதுஞ்
சுந்திரமாவதுந் தூய்நெறியாவதும்
எந்தைபிரான்தனிணையடிதானே—திருமந்தி

‡ c. f. "Tradition says that the Original Veda consisted of the Mantrah or Chhandamsi, which the ancient
"saw." The term Mantra comes from root *man*, to "think" and Chhanda or Chhandas means "the all perv
"Will." The Universe, it is said, comes into existence through the meditative thought (tapah) or Will of the Sup
its laws were seen by the ancient Seers and translated by them into appropriate sounds—the expression of th
creative Word." - Preamble to the Upanishads by Mead and Chattopadhyaya. See also John i. 1—4. and Par
da's commentary thereon.

அதைப்பத்தியினால்வாங்கிப் புத்தியினாலாராய்ந்தேன் ;
தின்னேன்தெவிட்டவில்லை தேன்மயக்கந்தீரவில்லை.

2. வித்தைவிளையாட்டு—மாயாலீலை: Illustration of Maya or Darkness inherent in the soul.

[1]நானில்லாவேளையிலே நஞ்சுண்டானருளாலே
அகஸ்யக்காரன்வந்து அனைவரையுமகிழ்வித்தானவனகடவிகடங்களாலே.
ஜட்காவண்டிக்காரன்போல் ஜாலங்கள்பலசெய்தான்
'ஆத்தாளே' 'அக்காளே' யென்றான் அடியென்றான் பிடியென்றான்
அத்தனைக்குமென்னப்பன் அகமகிழ்ந்து வீற்றிருந்தான்
[2]கேட்டும்கேளாதகாரணத்தால்.

அவன்வானத்தைப்பார்த்திட்டான்
மயிர்க்குச்செடுக்ககின்றான்
மூஞ்சியைச்சுளுக்கிக்கொண்டான்
மூதேவிபோலானான் ;

ஏனென்றுகேட்டார்க்கவன் சொன்னதைநானென்னசொல்வேன் !

வானுக்குக்காலிலதால்
வானிழிந்துவிழுந்தக்கால்
என்செய்வேனென்றஏங்கிப்புலம்பலுற்றான்.

அவன் புலம்பினதைப்பார்த்துப் பலரும்நகைத்தார்கள்.

3. விளையாட்டில்வித்தை—மாயையுணர்த்தல்: Its application and Teaching.

நகைத்த உதாரணத்தை நன்கெடுத்துப்போதித்தாள் :
*மாயையென்பதின்னதென்றுமயக்கமறச்செப்புகின்றாள் ;
உள்ளபடிவிசாரித்தால் உளதெல்லாம்போமென்றாள் ;
[3]நீயுமில்லைநானுமில்லை நபனுந்தானில்லையென்றாள் ;

1. "நானில்லாவேளை"— c. f.
"துரியகனவாம்இதமுரைபோதந்
துரியக்கனவாமகமுணர்போதந்
துரியச்சுழுத்திவியோமந்துரியன்
துரியம்பரமெனத்தோன்றிடுந்தானே."

2. "கேட்டுங்கேளாத"— c. f.
நனவினனவுபுலனில்வழக்க
நனவிற்கனவுநினைத்தன்மறத்த
னனவிற்சுழுனையுண்ணுடலிலாமை
நனவிற்றுரியமதீதத்துரந்திடே.

3. "நீயுமில்லை நானுமில்லை"— c. f.
"நானென்ன நீயென வேறில்லை நண்ணுத
லூனென்னவுனுயிரென்னவுடனின்று
வானெனவானவர் நின்றுமனிதர்க
டேனெனவின்பந்திளைக்கின்றவாறே."

* Darkness—the material cause of the Universe. In the Individual it exists as Avidya or Ignorance.



*ஒன்றுமில்லையென்றாள்—வெட்டவெளியென்றாள் ; †
அகண்டாகாரமென்றாள், ஆனந்தஸ்வரூபமென்றாள் ;‡
என்றுமழியாதென்றாள் எங்கெங்குமுளதென்றாள் ;
§எதுமுணராமல் நான் ஏங்கித்தயங்கினேனே.[4]

4. அறியாக்குழந்தை—அவித்யாவாசனை: "Vagaries of Darkness" or Nature's Veils.

என்னம்மாள் சந்தோஷம் என்றுசொல்வாள்
எனக்குச்சங்கடங்கள் வந்து மூண்டுகொள்ளும் ;
ஆனந்தம் என்று சொல்வாள் ஆத்திரங்கள்வந்துவிடும் ;
"எங்குமுளதென்றாயே என்னிடத்தில்காணேனே :
"உன்னிடத்துள்ளானந்தம் என்னிடத்தேனில்லை ?" யென்றேன்.
"என்னிடத்துள்ளபடி உன்னிடத்துமிருக்க" தென்றாள்.

தேடித்தேடியலுத்தேன்[5]
பாடிப்பாடியழுதேன்
எனக்குச்சித்தந்தெளியவில்லை
என்சின்னத்தனம்மாறவில்லை.

4. "எதுமுணராமல் நானேங்கித்தயங்கினேனே"—
"அருட்கண்ணில்லாதார்க்கரும்பொருள்தோன்றா
அருட்கண்ணுளோர்க்கெதிர்தோன்றுமரனே
யிருட்கண்ணினோர்க்கங்கிரவியுந்தோன்றாத்
தெருட்கண்ணினோர்க்கெங்குஞ்சிவொளியாமே.

5. தேடித்தேடியலுத்தேன் etc.—c. f.
"காண்டற்கரியன்கருத்திலனந்தியுந்
தீண்டற்குஞ்சார்தறஞ்சேயனுத்தோன்றிடும்
வேண்டிக்கிடந்துவிளக்கொளியானெஞ்ச
மீண்டிக்கிடந்தங்கிருளறுமாறே."

* Refers to the unreality (changeable and fleeting nature) of the objective world or sense perceptions.

† c. f. "God is light and in Him *is* no Darknesss at all" (1. John 1·5.)

‡ Refers to the Unity of Godhead and His Grace or the Holy Spirit.

§ c. f. *John* I-4-5. The Light shineth in Darkness and the Darkness comprehended it not." Jiva—the bound or corrupt Soul of man is the ignorantly differentiating sense of the worldly man, being opposite to the unifying sense of the Spiritual man, which is not misled by forms and appearances.

The Darkness referred to above is not the objective darkness which falls on earth after sunset but subjective or mental obscuration called இருள், மறம் in Tamil and அவித்தை, அஞ்ஞானம் in Sanskrit. The darkness without us, though it hides everything, is itself visible to our eyes. But the Darkness within us, the Darkness which inheres in the Soul, is invisible to the Soul, and yet effectively obscures its vision or understanding even in daylight; so that the soul either understands not or misunderstands. Darkness, then, is that which causes the soul not to understand aright.

Owing to the spoiling of the soul by Darkness, Darkness has been called "*Corruption*" in the Old Testament, (Ps. xvi-10) and the New (Gal. vi-8.) This corruption, filth or pollution called in Sanskrit *Malam* or *Asuttam*, (மலம், அசுத்தம்) shows itself as *Carnal mindedness* or domination of Worldliness or evil in the mind. "They that are after the *flesh* do mind the things of the flesh; but they that are after the *Spirit*, the things of the Spirit. For to be *carnally* minded is death, but to be *spiritually* is Life and Peace; because the carnal mind is enmity against God" (Rom. viii 5-7) "A friend of the world is the enemy of God" (Jas. iv. 4) "The World (*i. e.*, the man with the worldly spirit) lieth in darkness" (1 John v. 19.) *Worldliness* is Darkness and *Godliness* is Light. "Men Loved darkness rather than light, because their deeds were evil; for every one that doeth evil hateth the light (John iii. 19-20). Evil is Darkness. Falsity is Darkness. (See next page §).

5. சிந்தைகலங்கல் — The Struggle against Darkness or the War of the Flesh against the Spirit.

இப்படியிருந்து ஏங்கித்தயங்குகையில்
"என்னிடத்துள்ளபடி யுன்னிடத்துமேயிருக்கு
"எல்லாரிடத்து மிருக்கேற்றத் தாழ்ச்சியற்றே[6]
"எங்குநிறைந்தபொருள் எப்போதுமுள்ளது"
என்றன்தாய்பலகாலும் பகர்ந்திட்டமொழிகள்வந்து
[7]என்சிந்தையைக்கவர்ந்துகொண்டு சின்னாபின்னம்செய்ததுகாண்.
அப்போதென்சிந்தைகலங்கிச் சிதைவுறும்போலிருந்ததய்யா.

6. எல்லாரிடத்துமிருக்கேற்றத்தாழ்ச்சியற்றே.—c. f.

"தானேவெளியெனவெங்குநிறைந்தவள்
தானேபரமவெளியதுவானவள்
தானேசகலமுமாகியழிந்தவள்
தானேயனைத்துளவண்டசகலமே."

7. சிந்தைகலங்கிச் சிதைவுறும்போலிருந்ததம்மா.—c. f.

"அண்டத்தினுள்ளேயளப்பரிதானவள்
பிண்டத்தினுள்ளேபெருவெளிகண்டவள்
குண்டத்தினுள்ளேகுணம்பலகாணிலும்
கண்டத்தினின்றகலப்பறியார்களே."

(*Contd.*)§ The foregoing references show that by **Darkness** is meant that which obscures the Spirit, namely—igno-
rance, worldliness, carnality, evil or falsity. These *are all* synonymous terms. The possession *of the* soul by Darkness
before the *world* was created, is known as the **Captivity** (Eph. IV-8) or **Bondage** (Rom. viii-21) of *the soul.*
When this Darkness is *purged* from the soul (1 Cor. v-7) by the Grace of the Lord, even as water may be cleansed
of its mud, the soul is said *to be* "free" (John viii-32) or to "*overcome*" Darkness (John xvi-33) or lead capti-
vity captive" (Eph. iv-8.)

The vagaries of Darkness are referred to by Saints as the "doings of *the old man*" (Col. iii-9), the ways
of *the son of perdition* (John xvii-12) or the cravings (Gal. V-16) of the *flesh*. *Out of* this craving commonly known
as the **Sense of want**, were developed different manifestations of it, such as greed, hate, strife, jealousy, into-
lerance, *envy, lust*, uncleanliness, vainglory, &c., as *explained* by St. Paul (Gal. v. 19-26), and as will be more
fully explained later on.

Originally, before evolution began, the soul, without body or limb, was under the dominion of Darkness
in an *utterly* stupid and avid state. Through pity for the soul, which knew *not itself* or the Darkness which
held it captive, the Holy Spirit of God evolved, out of the very corruption called Darkness, this Universe, and
vested the Soul with instruments of knowledge and *action*, in order that it might awake from its stupefying
slumber and seek the *Light* (Eccles. I-13).

"Awake thou that Sleepest," saith *the Lord*, "and arise from the dead" (Eph. a. 14; Isa. LX-1,2).

The Soul, endowed with a body and an environment, awoke from its gloom of indefinable craving, and
saw through its senses something after its *own* worldly nature. Joyfully it went forth into the world, seeking
objects of gratification for each of its *senses* of sight, smell, hearing, taste, and touch. When fruition or fatigue
came, the Soul slid back from wakefulness *to the* gloom of sleep, its pristine condition, and woke again for "the
travail *which God* hath given to the sons of men to be exercised in it" (Eccles. iii-10). It believes during all the
days of the flesh (*Heb.* v-7)—during all the time *that it is* gratifying its senses and leading a life of self-indulgence:
—that it is walking in light—aye, in the noonday sun; *but* "*the* fool walketh in darkness" (*Eccles. ii-14*), *for he*
mistakes *the* flesh-begotten world, which is a thing of darkness and a "vanity of vanities" (*Eccles. xii-8*), for
Light and Truth.

The principal manifestations of Darkness or Evil or Ignorance in man, as explained by the Sages of India,
are:—(1). *Moha*, or the foolish proclivity to pursue objects of *sense* not knowing, or even understanding when told,
that the true welfare of the *soul demands* a daily practice of Self-*denial*. (2). *Mada*, or persistence in sensuous
pursuits, as if there was no higher object of search in life—feeling "I know what I am about, and what *is good*
for me." (3). *Raga*, or tendency to feed fat *sensual* desires. (4). *Vishada*, or dejection *of mind* when the Sense-
object attained, or to be attained, is lost. (5). *Chosa*, or the wasting of the body *by the* occurrence of thoughts of
separation from beloved objects of sense. (6). *Vaichitriya*, or thoughts of differentiation (Hate, self-assertion, &c.,)
such as *he* ruined me, *I* helped him, &c. (7). *Harsha*, or Self-Complacency, *i. e.*, satisfaction with oneself and
with one's own doings and *worldly* surroundings, however unclean *or* unlawful. (8). Sleep and Stupor. (9).
Obstinacy. (10). *Mistake* and doubt. (11). Selfishness. (12). Pride or Vainglory &c.

"**The Darkness comprehended it not**. The nature of Darkness is here explained in a word.
Darkness knows not the Light. "Father, forgive them" *said* Jesus, when he was being crucified, "for they
*know not* what they do" (Luke xxiii-34).

The Soul can know, but Darkness cannot know. That which cannot know *(a-Vidya, a-Jnana)* and that
which obstructs knowledge, leading the knower *astray*, is Darkness.



6. அன்னையைநோவல்—Beyond the grasp of Intellect: Cure of Intellectual Pride, or Humility.

அந்தச்சமயத்திலன்னைதனை நொந்துகொண்டேன்;
சின்னஞ்சிறியேன்சிறுமதியே னென்றுசொன்னேன்;
நீயுச்சத்திருப்பதனாலுபதேச மதேறவில்லையென்றேன்;
தாழப்படியிறங்கித் தக்கபடியுபதேசியென்றேன்.
தாழவேதானிறங்கித் தரைமட்டம்வந்தக்கால்
ஊனப்பசல்களுக்கு உறமேறிப்போமென்றாள்; *
மேலவேதானிருந்து வேணமட்டும்கைகொடுப்பேன்
கீழவேநீயிருந்து தாவிப்பிடியென்றாள். †

7. தத்தித்தடுமாறல்—Tumble and Fall.

தத்தித் தத்தியெழுந்தேன்
தள்ளாடிநான்விழுந்தேன்;
எம்பியெம்பிக்குதித்தேன்
ஏமாந்துகீழ்விழுந்தேன்.

8. அழுதுதொழுதல்—Becoming a Child: The Attitude of Prayer or Receptivity.

காலயர்ந்துநின்றேன் கைகுவித்துத்தொழுதேன்;
கன்னெஞ்சனென்தாயார் கண்கலங்கக்காணேன்.
[8]என்னம்மாசெய்வேனென் றேங்கியழுதேன்நான்:
ஓ! வென்றுசொல்லி யுரத்தழுதேன் நானப்போ.

9. ஆதரவுகூறல்—Consolation: Rising of Hope.

அன்பாங்காய்கனிகாட்டியழுதவாய்மூடென்றாள்:
வாய்மூடியகமகிழ்ந்தேன்
கனியெங்கேயெனக்கேட்டேன்:
ஆனந்தத்தோட்டமது அழகாய்ச்சமைத்திருக்கேன்
உள்ளேநுழைந்துன்னிஷ்டம்போல்தின்னென்றாள்.

10. வீணுதவிகோறல்—Diffidence Discouraged.

பறித்துக்கொடு என்று சொல்லிப்பாசாங்கு செய்தேன்நான்;
அரிந்துகொடு என்றுசொல்லி யழுதழுது பார்த்தேன்நான்;
கூடவந்துநில்லென்று கும்பிட்டுக்கேட்டுக்கொண்டேன்;
[9]ஒன்றிற்குமிணங்கவில்லை யொருவழியும் பலிக்கவில்லை;
எங்கம்மாள்மனமாற்ற என்னாலேயாகவில்லை.

* Refuses to lower the Ideal, as it will be ministering to weakness

† I will hold the Ideal of Perfection aloft and give help: you aim at it and endeavour to realize it.

8. என்னம்மாசெய்வேனென்றேங்கியழுதேனன்.—c. f.

'உச்சியுங்காலையுமாலையுமீசனை
நச்சுமின்னச்சிநமவென்றுநாமத்தை
விச்சுமின்விச்சிவிரிசுடர்மூன்றினு
நச்சுமின்பேர்நந்திநாயகனாகுமே."

9. "ஒன்றிற்கு மிணங்கவில்லை யொருவழியும் பலிக்கவில்லை".—c. f.

"தானூறுகோடி கடிகமழ்சந்தனம்
வானூறமாமலரிட்டு வணங்கினும்
ஊனினைநீக்கி யுணர்பவர்க்கல்லது
தேனமர்பூங்கழல் சேரவொண்ணாதே."

11. தேறித்துணிதல்—நிஷ்டை—Self-Help and Self-Control or Concentration.

வேறுவிதியின்றிவேகமாய் நானுழைந்தேன்
ஆனந்தத்தோட்டத்தை யதிசயமாய் நான்பார்த்தேன்
பார்த்துமயங்கிப் பனுவலற்று நானிருந்தேன்.

12. துணிந்தேற்குத் தெளிவுகூறல்—Clearing the Way to the Self-Centered.

பார்த்துநான்மயங்கினதில் பிரமாதமொன்றுமில்லையென்றாள் ;
[10]அற்பமில்லையென்றுஅதை யலக்ஷியமாய்த்தானுரைத்தாள் ;
சின்னப்பழமென்றுசொல்லிச் சிக்கனமாய்ப்பேச்சறுத்தாள் ;
பேரானபேர்களெல்லாம் பெருமிதமாக்கொண்டாடும்
நிஷ்டைக்கனியதுவை நிந்தித்துத்தள்ளிவிட்டாள்.
[11]பழமானபழமாகும் பேரின்பக்கனியிருக்க பாவட்டாங்காயதையோ பரித்துவந்தா
கைப்பழத்தைவிட்டெறிந்தேன் கனிக்கழுதேன்மறுபடியும். [யென்றுரைத்தாள்.

13. திடவார்த்தை—தாய்மொழி—The Awakening of Faith : The Inner Voice

அப்போதென்தாயார் அறிவுடையாளவள்தானும்
அய்யோவென்றழுதேனுக் கருமையுடன்சொன்னதைக்கேள் ;
"பேரின்பமரத்தடிக்குப் போகும்வழிகண்டுவிட்டாய் [12]
"முற்றும்வழியறிந்து முழுவழியும்நீநடந்தால்
"ஆனந்தத்தோட்டமதில் அருமையாய்வளர்ந்துவரும்
"பேரின்பக்கனிதின்பாய் பரிபக்குவகாலத்தே"ன்றாள்.

14. திண்டாடாது காத்தல்—The Guiding Spirit.

பாவட்டாங்கனியைநான் பறித்துவந்தகாலையிலே,
அதையின்பக்கனியென்றே இருதயத்தில்நினைத்திருந்தேன் ;
கையிலுள்ளகனியதனைக் கடாத்திவிடச்சொல்லாவிட்டால்,
இன்பக்கனியென்று இறுமாந்துதின்னிருப்பேன் ;
தின்னிருந்தேனானால் திண்டாட்டம் வந்திருக்கும் ;
திண்டாட்டம்வாராமல் திடனுடே இரக்ஷித்தாள் :
இரக்ஷித்ததாயாரைத்தண்டனிட்டு நான்துதித்தேன் ; [13]
தண்டனிட்டுத்துதித்துத்திடமுடனே யிருந்தேன்காண்.

(இன்னும் வரும்.)

---

0. அற்பமில்லையென்று அதை யலக்ஷியமாய்த்தானுரைத்தாள்.—c. f.
"மறப்புற்றுவில்வழிமன்னிநின்றாலுஞ்
சிறப்பொடுபூநீர் திருந்தமுன்னேந்தி
மறப்பின்றியுன்னைவழிபடும்வண்ண
மறப்பெறவேண்டுமமரர்பிரானே."

2. "பேரின்பமரத்தடிக்குப் போகும்வழிகண்டுவிட்டாய்"
தேர்ந்தறியாமையின்சென்றனகாலங்கள்
பேர்ந்தறிவானெங்கள்பிஞ்ஞகனெம்மிறை
யார்ந்தறிவேதுணையாமெனச்
சார்ந்தறிவான்பெருந்தன்மைவல்லானே."

11. "பழமானபழமாகும் பேரின்பக்கனியிருக்கப் பாவட்டாங்காயதையோ பரித்துவந்தாய்."—c. f.
"புண்ணியஞ்செய்வார்க்குப்பூவுண்டுநீருண்டு
வண்ணலதுகண்டருள்புரியாநிற்கும்
எண்ணிலிபாவிகளெம்மிறையீசனை
நண்ணறியாமனமுழுவுகின்றாரே."

13. இரக்ஷித்ததாயாரைத் தண்டனிட்டுநான்துதித்தேன்.
"புறமேதிரிந்தேனைப்பொற்கழல்சூட்டி
திறமேபுகுந்தென்னைநின்மலனாக்கி
யறமேபுகுந்தெனக்காரமுதீந்த
திறமேதென்றெண்ணித்திகைத்திருந்தேனே."



## "Indian Progress."

## "இந்தியன் ப்ரொக்ரெஸ்."

### இந்தியர் கடைத்தேறுவ தெப்படி ?

"இந்தியர் விர்த்தி"யைக் கோறினதும் அதே பொருள் விளங்குவதுமான "இந்தியன் ப்ரொக்ரெஸ்" என்னும் பேரால் ஒரு புதிய இங்கிலீஷ் பத்திரிகை தோன்றியிருக்கிறது. இதன் கருத்து இந்திய ஜனசமூகத்தின் க்ஷேமாபிவிர்த்தியைநாடி யுழைப்பதாகத் தெரியவருகிறது. "இந்துஜன சமூகத்தின் உள்நோக்கம்" என்னும் தலைப்பெயரின்கீழ் இப்பத்திராசிரியர் எழுதியிருக்கும் விஷயத்திலிருந்து, இப்பத்திரிகை இந்தசந்தர்ப்பத்தில் காலத்துக்கேற்றதாய் வெளிவந்தது மிகவும் சிலாக்கியமாகக் கொண்டாடத்தக்கதாயிருக்கிறது. இப்பொழுது மேற்றிசை நாகரிகம் மேலிட்டுவருவதினால் இந்தியர்களும், இந்தியாவைப்பற்றி சிரத்தையெடுத்துக்கொள்பவர்களும் இந்தியர்களின் ஜாதிமத ஏற்பாட்டின் உள்நோக்கை மறந்து, ஒருநோக்கங்கொண்டேற்பட்ட ஸ்தாபனங்களை இதரநோக்கங்கொண்டுழைப்போர் உள்ளெண்ணங்களால் மதித்து மயக்குற்று, ஜாதிமத ஏற்பாடுகளையும் முறைப்படி சீர்திருத்தத் தெரியாது தடுமாறுகிறார்கள். இந்தியாவில் நமது ரிஷிகள் ஏற்படுத்தியுள்ள விதிவழிகளெல்லாம் மனுஷன் மோக்ஷசாம்பிராஜ்ஜியமெய்தப் பிறந்தவன் என்னும் நோக்கத்தைக்கொண்டேற்பட்டுள்ளன. இதை மேற்றிசையில் கிறிஸ்து ஒருவர் உண்மையாகவுணர்ந்து போதித்தாராயினும், அவரதுண்மையை அங்குதோன்றியுள்ள தற்கால வித்வான்களும் தத்துவ சாஸ்திரிகளும் முற்றுமுணராது, மனிதன் வந்தவிடம் போகுமிடம் தெரியக்கூடியதல்லவென்றும், இங்குள்ளமட்டும் உலகே சதமென்று ஊன்சுகந்தேடி, உலகிலுள்ள ஜனங்களை இகபோகப்பொருள்கள் மிகுதியால் சந்தோஷிப்பதே நோக்கமாக வெண்ணியுழைத்துவருகிறார்கள். இது தத்துவ சாஸ்திரிகள் எண்ணமாயினும், காரியத்தில் முற்றும் சாத்தியமானதில்லையென்று அனுபவத்தினால் தெரியவருகிறது. நமது ஞானிகளும் இருஷிகளுமோ, மனுஷன் உடம்பு ஒரு போர்வைபோலும், போக பாக்கியங்களுக்காக வுண்டான ஒரு கருவியன்றி வேறல்லவென்றும், உடல் ஸ்தூலதேகமாவதுபோல், மனது ஒருசூக்ஷ்மதேகமென்றும்; ஊனவுடலழிந்தும், உள்ளம் அக்ஞான இருளைவிட்டுப் பிரியாத (கேவல ாகாத) வரையில் சீவனுக்குக் கதிமோக்ஷமில்லையென்றும்; இவ்வுலகம் ஆத்மாவின் அனுபவத்துக்காக ஏற்பட்டதென்றும்; எல்லா அனுபவங்களின் நோக்கமும் இகசுகம் நிலையாமையை யுணர்ந்து நித்ய சுகம்தேடத் தீரமளிப்பதன்றி வேறில்லை யென்றுமுணர்ந்து இந்நோக்கமொன்றையேகொண்டு ஜாதி, மதம், குடும்பம், கலியாணம், கருமம் முதலான எல்லாமேற்படுத்திபிருக்கின்றனர். இந்தவுண்மையை மேற்றிசை மேலோராகிய உலகஞானிகளும் அவர் சிஷர்களாகிய இந்தியர்களும் ஓராமல், நமது ஜனஸ்தாபனங்களின் உட்போக்கும் அதையுண்மையாகச் சீர்திருத்து முறையு முணரமாட்டாது தடுமாறுகிறார்கள். இப்பத்திராசிரியர் மனிதனுக்குஆத்மாவே முக்கியம், நித்யமுமாம் என்னுமுண்மையை யேற்றுக்கொண்டு ஆத்மார்த்தமாக எல்லா ஸ்தாபனங்களினுண்மையையும் உள்ளேற்பாடுகளையுமுணர்ந்து ஆத்மானுகூலமாகவே சீர்திருத்தங்கள் செய்ய வுழைக்கவேண்டுமென்று நோன்பு பூண்டு இப்பத்திரிகையை வெளியிட்டிருப்பதாகச் சொல்லுகிறார். இதுவரையில் அவர் எண்ணத்துக்கும் கருத்துக்கும் குறைசொல்வதற்கொன்றுமில்லை. அவருடைய தீர்மானம் மிக உச்சிதமானதே. அதினின்று அவர் இப்பொழுது கொண்டுள்ள நோக்கந் தவறாதுழைக்க ஈசனவருக்கருள்புரிவாராகப் பிரார்த்திக்கிறோம்.

தேகமனோபாவங்களையே எல்லாமாக வெண்ணாமல் ஆத்மபாவமே சத்தியமானதும் மற்றவை யதற்கிசைந்து வரும்படி நமது ஜாதிமத ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் ; ஆகையால் இக்காலத்து, இங்கிலீஷ்படித்து எல்லாமுணர்ந்தவர்போல் நமது முன்னோர்கள் நோக்கத்தை யுணரச் சக்தியின்றி அவர்களை இழிவாகப் பேசுவதற்குமட்டும் இரவல்ஞானம்பெற்றுள்ள வாலிபர்கள் ஹிந்து ஜனசமூகத்துக்குச்சிரேஷ்டர்களாயிருந்துவழிகாட்ட ஆசைப்படுவது நிறைவேறாதென்றும்; நமது ஜனங்கள் வேதசாஸ்திரங்கள் கற்ற பண்டிதர்கள், குருமார்கள் இவர்களையே வழிபடுவார்களென்றும்; இந்நவீனஞானிகளின் வழிப்படமாட்டார்களென்றும் சொல்லுகிறார். இதுவும் உண்மையே. ஆகையால் ஜனங்களைச் சீர்திருத்தவேண்டுமானால் இப்பண்டிதர்கள் குருமார்களைப் பிடித்து இவர்கள் மூலமாகவே ஜனங்களை வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்கிறார். ஆனால் இவர்களோ (Unenlightened) ஞானப்பிரகாசம் அற்றவர்கள் என்கிறார். ஞானப்பிரகாசமற்ற பண்டிதரையும் குருமாரையும் இருள்போக்கி ஞானவெளியில்கொண்டுபோய் விட்

டால் அவர்களைக்கொண்டு எல்லாச் சீர்திருத்தங் களும் செய்துவிடலாமென்கிருர். இது மிகவும் நல் லயோசனைதான்! ஆனல் இதை நிறைவேற்றுவதில் தான் சங்கடம் நேரிடுகிறது. எலிகளெல்லாம் கூடி யாலோசனைசெய்து பூனையின்கழுத்தில் மணியொன் றைக்கட்டிவிட்டால் அதன்வாயிலகப்பட்டுச் சாகா மல் அவர்களெல்லாருமே தப்பித்துக்கொள்ளலா மென்று குதூஹலத்தோடு தீர்மானித்ததுபோலு மிருக்கிறது. பூனைக்கு யார் மணிசட்டுகிறது? என்கிற கேள்விபிறந்ததும் அந்த எலிகளெல்லாம் சந்தோஷ மிழந்து சங்கடப்பட்டதுபோல் இவர் தீர்மானத்தை மெச்சின நாம் இவர் உபாயத்தை நிறைவேற்றுவ தெப்படியென்று நினைக்கும்பொழுது இது எட்டுச் சுரைக்காயென்று நினைத்து வருந்தவேண்டியதாக விருக்கிறது. நாமிப்படி யெழுதுவதை யேதோ கல் விசாமர்த்தியமாகச் சொல்வதாய் நம் நண்பர் நினைக் காமலிருக்கக் கேட்டுக்கொள்கிறோம். ஒன்றொன் ருக நூறு, கோடியாகிறதேயன்றி வேறல்ல. உல கில் அவனவன் தனியாகவுழைத்துச் சீர்திருந்துமள வுக்கு ஊரும் தேசமும் சீர்திருந்துமேயன்றி வேற ல்ல. நாமிது விஷயத்தில் முயற்சித்தடிபட்டவ ராதலால் இதிலுள்ள கஷ்டத்தையுணர்ந்து இது அசாத்தியமானதென்று சொல்கிறோம். பண்டிதர் களும் குருமார்களும் படித்த மேதாவிகளாயிருப்ப தோடு ஞானவொளியும் பெற்றவராளுல் அவரடி தொழுது நமது கஷ்டங்களை விண்ணப்பம்செய்து கொண்டால் மீளும்வழி தடையின்றிக் காட்டி ஆன உதவியும் செய்து நம்மை ஆசீர்வதிப்பார்கள். அவர்களே (Uneulightened) விவேகவெளிச்சமற்ற வர்களாயிருந்தால் அவர்களைச் சீர்திருத்துவதெப் படி? நமது அனுபவத்தைச் சொல்லப்போனல் ஆத்மார்த்தமான விஷயங்களில் உண்மையாக இப் பண்டிதர்களும் குருமார்களும் செய்வது பெரிய இடையூறன்றி வேறல்ல. ஆத்மக்ஷேமத்தை நாடி யக்ஞம், தானம் செய்தால், தேனொழுகப்பேசி தக்ஷி ணையும் தானமும் வாங்க வருவார்கள். அதிலும் அவர்களுக்கு அனுகூலமானபடி சாஸ்திரத்தைத் திருப்பிக்கொண்டு, செய்கிறவனுக்கிடையூறு நேரிட் டால் பிரயோசனமற்ற காரியங்களையும் பிரமாத மாக்கி, பிணத்தைச்சுற்றி நரி யூளையிடுவதுபோல் பணத்தைச்சுற்றி மனத்தால் சூழ்ந்துகொண்டு படா டோபம் செய்வார்கள். உண்மையுணர்ந்த உத்தம பண்டிதர்களும் குருமார்களுமோ இவர்கள் படா டோபத்தைக் கண்டு பயந்தோடுவார்கள். இவர்களை நம்பி நமது நண்பர் ஏதோ ஜனங்களுக்குப் பேரு தவி செய்துவிடலாமென்று எண்ணுவரேல் வேரழு கிப்பலமற்ற நாணற்புல்லைப்பிடித்துக்கொண்டு நதி யிலுழம்பார்க்க இறங்கின கதையாகமுடியும்.

உண்மையான சீர்திருத்தம் செய்ய, உண்மை யுணர்ந்த உத்தமசித்தர்களாம் மேலோர் வேண்டும். அவரைப் பண்டிதரெனினும் சரி, பாமரரெனினும் சரி. ஸ்ரீ சங்கராசாரியர், ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ சைதன் யர், கபீர் முதலானவர்களைப்போன்றவர்கள் வேண் டும். அவர்கள் தாமாக இத்தொல்லையில் அகப்பட் டுக்கொள்ளார்கள். நமது நண்பரைப்போன்ற உத் தமநோக்கமுள்ள விவேகிகள் அவரையடைந்து வழி பட்டழைக்கவேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்ஸரை யடுத்தேறி, அவர் பாதம் தம் சென்னி யில் சூட்டி ஸ்வாமி விவேகானந்தரும் அவருடைய சற் சீஷர்கள் உடன்சீஷர்களும் உழைப்பதை யோருதா ரணமாகக் கொண்டழைக்கவேண்டும். நமது ஜன சமூகம் அழுகிப்போய்க்கிடக்கிறது. இதிலிருந்துண் மை முளைக்கவேண்டுமாளுல் சத்குருவும் சற்சீஷர்க ளும் வேண்டும். (Unenlightened) இருள்மூடிய பண்டிதர்களும் குருமார்களும் வேண்டாம், வேண் டாம்; வேண்டவேவேண்டாம்! மேற்கேயுதித்த சீர்திருத்தக்காரர்களெல்லாரிலும் யேசுகிறிஸ்துவை விட மேலானர் யாருமில்லை. மேற்றிசையார் வழி பற்றிச்செல்ல விரும்பினிரேல், மேற்றிசையார் அடிபணியு மந்த யேசுவின் உதாரணத்தைக் கைப்பற்றுங்கள். அவரையறியவேண்டில் "கிறிஸ் தவர்" என்று பேர்புனைந்துகொண்டு "கிறிஸ்து தேவபுத்திரன், நாமெல்லாம் மனிதர்கள்: 'வலக் கன்னத்திலடித்தவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு' என்று அவர்சொன்னதெல்லாம் சாத்திய மில்லாத சுத்தவாக்கு:" என்று அவருடையமெய்வாக் கைப் பொய்வாக்காக்கிப் புன்சொற்கூறி தம் புல்லறி வையே மேலறிவாகக்கொண்டாடும் கசடர்மொழி யைக்கேளாதேயுங்கள். உண்மையறிந்த உத்தம புரு ஷர்களாம் ஸ்வானுபவச் செல்வர்கள் வாக்கைக் கொண்டும் அனுபவத்தைக்கொண்டும் அவருண்மை யையறிந்து அவர் நடத்தையை யுள்ளபடி யோர்ந்து நடவுங்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்ன செய்தார்? தனக்குஸ்வானுபவம் வந்தபின், கிறிஸ்து படத்தைப்பார்த்த அளவில் அவருக்குண்டான ஒரு தாபத்தால் அவர்போனவழி யென்னவென்று அந்த வழிசென்று எல்லாம் ஒரு முடிவுக்கே போகிறதென் றுணர்ந்தார். அப்படிப்பட்ட தீரர்கள் வேண்டும். அவர்களே நம்மைக் காக்கவல்லவர். அவர்களை வழிப் பட்டனுக்ரகம் பெற்றுரே நம் தேசக்ஷேமத்துக்



குழைக்கவல்லவர்கள். இங்கிலீஷ்படித்துவிட்டுவால் சட்டையும், கால்நிஜாரும், "பூட்ஸும்" போட் டுக்கொண்டு பிரிடிஷ் இராஜதந்திரிகள் பேசிய பேச்சுக்களை நெட்டுருப்பண்ணி இரவல் சரக்குக் கொண்டு இராஜ்ஜியகாரியங்களைப்பற்றிப் பேசு வோரால் நமது ஜனசமூகம் சீர்திருத்தப்படமாட் டாது. சட்டநிரூபணசபையிலிருந்துகொண்டு சட்ட நிர்ணயம் செய்யலாம்: ஆனல் ஜனங்கள் பாவனைக் கொத்துவராத சட்டத்தினுல் அவர்கள் சீர்திருந்து வதில்லை. "ஹிந்து விதவாவிவாகச்சட்டம்" என்ற யிற்றுப் பாருங்கள்! மலையாளவிவாகசட்டத்தின் பயன்தான் என்ன! ஜனசமூகவிஷயங்களில் ஜனங் கள், குழந்தைகளைப்போல், உதாரணத்தையேபின் பற்றி நடப்பார்கள். இங்கிலீஷ்வித்தை பரவினதி னல் பிராமணர்களுக்குள் மதுபானவிர்த்தியொன் றைத்தான் விசேஷமாகக் கண்டோம். இதற்கு நம் முன்னேர் சோமபானம் செய்தார்களென்பது ஒரு ஆதாரம்! வேதத்திலிருந்து இங்கிலீஷ் ஞானம் பெற்றபின் நாம் கண்டவுண்மையிதுதான்! குருட் டுப் பண்டிதர்களையும் அசற்குருவையும் நாம் நம்ப வேண்டாம். உண்மையையுணரவேண்டில் நாம் மனம் வாக்குக் காயமாம் திரிகரணசுத்தியாய் உண் மை கடைப்பிடித்து உள்ளன்புவைத்து மனச்சா க்ஷிக்கொப்பிதமாய் ஊருக்குழைப்பதே உயிர்நோ ன்பாக் கொள்ளக்கடவோம். அப்பொழுது நாமு மீடேறி நம் தேசத்தையும் சீர்திருத்த வல்லவரா வோம். பரோபகாரத்தினுண்மையும் மகிமையு மிதுவல்லோ:

"ஈடேற்றவல்ல எழில்குரு வாயினல்லால்
ஈடேற்றலரிதப்பா ஏக்கமுற்ற மாந்தர்களை
நாடேற்றுவாழும் நாற்றிசை மன்னரிலும்
பாடேற்றுப் பாருளதுன்பந் துடைத்தற்பெரி
[தையே."
ஜகத் சிஷ்டி—Gospel of work.

அசிரத்தையினல் நம்மவர்கள் அதர்மத்தில் வீழ் ந்து தலைகவிழ்ந்துபோகிறர்கள். என் தாயாம் தே வியும் குருவும் இவ்வுண்மையையே யெடுத்துச் சொல்லி இரங்கினமையுங் காண்க:—

"ஓராரே யுண்மையில் உள்ளதொரு காரணத்தைத்
தாராரே தம்முயிரைத் தரணியுள்ள சீவர்கட்கு:
ஓரா துணரா தொருவழியாய் நில்லாதூனர்
சாராது பார்த்துணரச் சார்பின்றித் தவிக்கிருரே"
—அசிரத்தை.

"தவிக்கிருரே யவர் தன்னுணர் வின்றியே
அவிக்கிருரே யவர் அகவிளக் கொளிதனை
தவிக்கிருரே யவர் தரணியிற் பிறந்துமையே
கவிழ்க்கிருரே யவர் காயமா மோடந்தன்னை"
—அதர்மம்.

உண்மையை நாமுள்ளதுள்ளபடி சொன் ஞேம். இதில் யாரையும் குற்றங்கூறவேண்டுமென் கிற எண்ணம் நமக்கில்லை. ஆகையால் யாரும் விகல் பத்தால் வித்தியாசம் பாராட்டத்தேவையில்லை. ஸத்யமேஜயம்.

ஓம்தத்ஸத்.

சத்குருவே நம:

"ஸத்யாநந்த: சாந்தசர்மாநாமா ஹமஸ்மிபோ."

---

௳

THE CORONATION DURBAR AT DELHI.

# டில்லியில் நடந்த பட்டாபிஷேக தர்பார்ச் சிறப்பு.

### கப்பல் பாட்டு.

### 1. விநாயகர் வணக்கம்.

பூவலயம் ஒருகுடைக்கீழ்—வைத்துப்
போற்றிவரும் எட்வேர்ட் ஆம்
காவலர்க்கு முடிசூட்டும்—சிறப்பைக்
கட்டுரைக்கும் தமிழினுக்கு;

(முடுகு.)

1. தேவரொடு முனிவர்கள் வணங்குமிரு பாதன்
தினகரர்களொருகோடி நிகரொளி வி னோதன்
செய்வினைகளுக்குவரும் இடையூ றியாவும்
சேதிக்கும் வாரிப்படைத் தலைமை ஆவன்.

2. மூவுலகமும் தன்னதிச்சையத னாலே
முத்தொழில்புரிந்து நலமா அருள் வன் மேலே
முக்கண்ணுருபரமனருள் பெற்றுமகிழ் பாலன்
முத்தியொரு நாலுமருள் பெற்றியுறு சீலன்.

3. பாவலர்கள் துதிபருவு பசர்கருணை யாளன்
பாவிப்பவர்தமது நெஞ்சில்மலர் தாளன்
பனிமதிக்குழவிநிகர் ஒருகொம்பன் எண்ணும்
பழமறையும் அறியாத பெருமையுறும் அண்ணல்.

4. காவில்மலி கற்பகக்கரமைந்து பெற்ற
கரிவதனன் அருள்வாரி இருமைக்கும் முற்றக்
காதலிப்பார்தமக் காதரவின் அணையும்
கணநாதன் பாதமலர் இனையருளும் துணையே—ஏலேலோ.

---

## 2. பிரிட்டிஷ் மஹாராஜ்யத்தின் பெருக்கம்.

பங்கமறப் பாம்பரையாய்—நமது
பார்த்திபர்க்குக் கிடைத்திருக்கும்
துங்கமஹாராச்சியத்தின்—பெருக்கம்
சொல்லுவதை முதற்கேளும்.

(முடுகு.)

1. இங்கிலந் தென்பததுபண்டுநின் றுள்ள
ஏற்றமிகும் அரசருக்காட சியாக் கொள்ள
இசையும்நாடாம் அதன் பெருமையைச் சொல்ல
என்றாலுமில்லை மற்றெவராலும் இல்லை
இப்புவிமடந்தையணி அற்புத மதாணி
எனவிளங்கதனையெவர் அறியார்கள் காணில்
இதனைநெடுநாளாக ஆண்டுவரும் நாளில்
எழில்பெருகு மாகதத்தீவென்னும் கோளில்.



2. கொங்குலவும் அயர்லாந்து தேசமதை வென்று
கொற்றமுறு ஹென்றி யெனும் கொடிமன்னன் அன்று
கூட்டினான் மற்றதன் பின்புவேல்ஸ் என்னும்
குன்றின்மிசை அருவியொலி மாறாமல் மன்னும்
குடதிசையில் மருவும் நாட்டையும் அடி வைத்தான்
கோடிவீரர்க்குள் ஒரு சிங்கத்தை ஒத்தான்
குணமேவும் எட்வர்டெனும் பெயர்கொள் மன்னன்
குவலயம் முழுதாளக் கொடிகட் டென்னன்.

3. சங்கையறவே பின்பு ஸ்காத்திலந் தோதும்
தனதுரிமையான தொல்லரச ரொடு போதத்
தனியான ப்ரிட்டிஷத்தீ வெலாம் ஒன்றாய்த்
தண்செய் ஒருகுடை நிழற்றங்கினது நன்றாய்
தாமான வர்த்தகம் கைத்தொழில்க ளாலே
தனதான்ய சம்பத்து வர்த்திக்க மேலே
தமரவாரிதியது கடந்து மேற் சென்று
சமர்செய்து பலவேந்தர்குலமெலாம் வென்று.

4. வங்கமலி அமெரிகாகண்ட மதை உற்று
மணிகள்மலி ஆப்பிரிக்கதனையும் பெற்று
வளமான தேசங்களெங் கெங்கும் தேடி
வாரிதியில் அஸ்த்ரேலியா வதனைக் கூடி
மகிமையுடனே நமது தேசத்தும் கிட்டி
மாலிமயமலை மீது கொடியோடக் கட்டி
வான்பரிதி மறையாத புவியெங்கு நாடி
மன்னியது ப்ரிட்டிஷ் மகாராஜ்யம் நீடி.

5. தங்குமது சிறியதோர் விரையினில் முளைத்துக்
தரமாவளர்ந்து பலகப்புகள் கிளைத்துத்
தழைகளொடு மேலெழுந்தாகாயம் முற்றும்
தழுவுமொரு கூடாரம் போலவளைதல் உற்றுச்
சாரும் நெடிதான பலதம்பங்கள் போலும்
தகைமேவும் விழுதுவிட்டுப்பாவும் ஆலம்
தருவுக்கு நிகராத லன்றிநாள் நாளும்
சாலவளர் மதியையும் நிகர்த்துவளம் நீளும்.

6. மங்குல்தவழ்கின்ற நெடுவரையினில் உதித்து
வழிதோறும் நெடியபல உபநதி கதித்து
மன்னுமிருகரை புரண்டநெறி நிரம்பும்
வடிவுடைய சந்தநில் மதயானைக் கொம்பும்

மருவி வன்மரங்களையும் வேரோடு      சாடி
மாநிலத்தைக் கிழித் தூடுருவி      நீடி
மறிதிரைகளோங்கு நீள்கடலோடு      சாரும்
வளமிகுந்த வொருபெரிய நதியினையும்      நேரும்—ஏலேலோ.

## 3. இந்தியா மஹாராஜ்யம்.

எண்ணரிய வளமிகுந்த—இந்த
இந்து மஹாராச்சியத்தின்
வண்ணமிகும் பெருமையினை—இங்கு
வழுத்திடுவேன் இனிக்கேளும்.

(முடுகு.)

1. பண்ணரியதானங்களில்      அன்னதானம்
பகருமித்திரியங்களிற் கண்கள்      மானப்
பரவைசூழ் புவியில்வளர் தேசங்கள்      தம்மில்
பண்புமிகு நமதிந்துதேசமதில்      விம்மும்

2. நண்ணரியபுகழ்பெற்ற பலராசர்      முந்தி
நலமாகவரசாண்டுகுடியோம்பி      வந்தார்
நவிலுமுயர் பவிசக்ர வர்த்தியொடு      சத்யம்
நழுவாவரிச்சந்த்ர மகாராஜன்      நித்யய

3. விண்ணவர்கள் புகழ்தசரதன் ராம      சந்த்ரன்
மிக்க நளனோடு புருகுற்சன் முசு      குந்தன்
மேவுமோர் புரூரவன் முதலா      அநேகம
வெற்றிவளர் சக்ரவர்த்திகள் இந்த      லோகம்

4. கண்ணிணைகள்போற் காத்துவந்தார்கள்      முன்பு
கருதுமிச்சக்ரவர்த்திகள் போகப்      பின்பு
கனமார் அசோகன் விக்கிரமார்க்கன்      ஆதி
கழறுபுகழுடைய பலராஜர்மிக      நீதி

5. விண்ணவர்கள் தாமும்மதிக்கநெடி      தான
மேவுமவர்போனபின் மகமதியர்      நீள
விறலாரும் அக்பர் ஒளரங்கசீப்      ராசர்
வெற்றியொடு மேன்மையாய் அஷ்டதிக்      கோசை

6. உண்ணவுயர்பெருமையோடாள அவர்      சால
உற்றபுகழ் கதிரவற்கெதிரில் மதி      போல
ஒளிமழுங்கிட இதனை ஆண்டார்பின்      மாண
உலகுபுகழ் விக்டோரியாமஹா      ராணி



7. மண்ணிலுயர் இவர்பெருமை சொல்ல எளி      தாமோ
மற்றுநாம் பெறுநன்மை அளவிடவும்      போமோ
வலியபகைவரின் வருகும் அச்சமது      விண்டோம்
வளமான தனதான்ய விளைவோங்க      கண்டோம்

8. புண்ணியம்மிகுந்துபலபாவங்கள்      மாய்ந்து
பொலியும் அவரவர் தமதுமதநெறியில்      வாய்ந்து
புனிதமுறுகல்வி நாகரிகங்கள்      உண்டாய்ப்
புவியெங்கணும் பரவிநீடமகிழ்      கொண்டோம்

9. தண்ணளியினொடுநீதி எங்கும்      தழைக்க
தர்மபரிபாலனஞ்செய்துயிர்      களிக்கச்
சதிராகப்பலகாலம் ஆண்டுபின்      வல்ல
தம்புதல்வர்கையிலொப்பித்துவான்      செல்ல

10. வண்ணமுறு நமது சக்ரவர்த்தி      யான
மறுவில்குணசீலர் எட்வேர்டென்னும்      மான
மன்னரவர் நீடூழி ஆள்கின்ற      காலம்
மாண்பின் அடையப்போகும் நலம்இன்னம்      கேளும்

11 அண்ணலுறு கிருதயுகம்போல் உளம்      மகிழ்ந்து
அறம் நான்கு தாளூன்றி இனிதா      நடந்து
அனைவர்க்கும் ஆயுள் ஐஸ்வரியங்கள்      ஓங்கி
அழகலாதனசெய்தல் உலகத்தில்      நீங்கி

12. ஒண்ணெறிய கலைஞானம் மறைஞானம்      நீடி
உலகத்தில் எங்கெங்கும் சுகமுண்டு      கூடி
ஒப்பரிய கலிநோய்கள் பகையாதி      மிக்க
ஒளிகண்டஇருள்போல ஓடியே      ஒளிக்கத்

13. திண்ணம்மிகு நன்மைபல உறலாதல்      ஆலே
செப்புமித்திருநாடு சொர்க்கமது      போலே
திருமருவலன்றி இத்தேசம் வலி      ஓங்கி
செப்பும்அரசர்க் கினியதானமாய்      ஆங்கு

14. தெண்ணிலவுகடல் சூழும் உலகெங்கும்      நீண்டு
தேசங்கள்பலவுக்கும் தலைமையது      பூண்டு
திகழ் பிரிடிஷ்ராஜர்முடியினில்      விளங்கும்
செய்யபல மணிகளுக்கும் நாயகம்போல்      துலங்கும்—ஏலேலோ.

## 4. சக்கிரவர்த்தியவர்களின் குணாதிசயங்கள்.

கடல்புடைசூழ் உலகமெலாம்—அன்பாற்
கண்ணணைபோல் அருமையுடன்
குடைநிழலிற் காத்துவரும்—நமது
கொற்றவர் தம்குணங்கேளும்.

(முடுகு.)

1. நெடியபுவனத்தினில் நான்கிலொரு பங்கு
நெடிதாகி இரவிமதி நிலையாத் தயங்கும்
நிகரிலா ஒருமஹாராஜ்யபதை ஆளும்
நிருபர் அவர் பெருமையை நிகழ்த்தின் அது நீளும்

2. படியில்வளர் அன்னைதந்தையருக்கு நல்லார்
பரவுமாதா பிதா பத்திக்கு வல்லார்
பண்பான தமது தாயார் மகிழச் சிந்தை
பகர்சொற்கிரண்டென்றும் பண்ணாத மைந்தர்

3. வடிவுடைய மக்கள் மனையாளிடத் தென்றும்
மாறுதநேயமுறு மாண்குணக் குன்றம்
மனமுறுசலிப்பிலா வண்ணம் அதனாலே
மலரும் அரவிந்த நேர்வதனம் எழில் சாலும்

4. குடிகளிடை எந்நாளும் கொள்ளும் அன்புடையார்
குலவியவர் வேண்டுகோளுக்கிணங்கு நடையார்
கூறுமொரு நேசருக்கிடரொன்று கூடில்
கூசுமொரு கண்போலவே பரிவு நீடும்

5. முடிவில் நயகுண லர் முதுகுரவர் செய்த
மூற்பட்ட நன்றியாற் கற்பவைகள் எய்த
முனியாது கற்றுத்தெளிந்தவளர் தீதில்
மூதறிஞர் எவ்வகையின் ஏதமும் இலாதார்

6. கொடுமை சிறிதில்லாத குணமுடைய வள்ளல்
குலவு கனடா இந்தியா முதலின் உள்ள
குவலயத்தெங்கணும் சென்றுசென் றங்கு
குணமாகக்குடிகளைக்கண்ணாரக் கண்டு

7. புடைமலியும் அநுபோகசாலியாம் மன்னர்
புரியும் ஆசாரவிவகாரவிற் பன்னர்
புனிதமறுசோம்பல் அறியார் என்றும் உற்ற
புகழ் வினைகள் ஓயாது செய்கின்ற பெற்றி



8. உடையரவர் நெடியமால் திருவினை மணந்த
ஒருதகைமை நிகரஎழில் குணநிறை மடந்தை
ஓதலக்சாந்த்ரா விராணிமனம் ஒத்த
ஒப்பிலுயர் தேவியாப்பெற்றபாக் யத்தர்

9. துடியிடையினிந்த்ராணி யோடு மகிழ்ந்தான்
சொர்க்கபோகங்களுறு தன்மையினில் முந்தும்
துகளரிய போகங்கள் பலவனுப விக்கும்
துணிவுடையர் தமதுபுகழ்பரவி எண்திக்கும்

10. புடவியிடை நிமிர்கின்ற பொருவரிய வேந்தர்
பொருள்மலியும் காட்சிகள் பலவாக மாந்தர்
பூணுமியல் கைத்தொழில் முதலா அனந்தம்
புவியெங்குமோங்கவே கூட்டிய சுதந்த்ரர்

11. ஒடியிலொருகல்வியும் தருமமும் ஓங்க
உற்றபன் முயற்சிசெய் துலகெங்கும் தாங்கும்
உயர்குணத்தவர் பிணியின் அயர்வார்க்கு நாளும்
உதவியாகிய வைத்ய சாலைபல கேளும்

12. மிடியிலடிபடுபவர்க் கன்னம் நல்லாடை
விசனமில்லாமலுறை விடமும்மிக நாடி
வெவ்வேறு தர்மபரிபாலனம் புரியும்
மிக்க அருளாளர்கொடை யாளர்புகழ் விரியும்

13. கடிகொள்மலர்புனையேக தார விரதத்தர்
காணுமொருபாதார சோதரர் நலத்தர்
காரிகையர் மேலானநிலையுறுதல் மெத்த
கனமென்று கருதுமுயர் குணமுள மனத்தர்

14. கெடுமதிசெயும் செருக்குடைமை யில்லாதார்
கிட்டுவார் கண்ணினுக் கொட்டும் ஒளி யாதார்
கிளரும் அருள்நோக்கமெவர் பாலும் வைத்திடுவார்
கேதம் கெடுத்துவளர் நீதம்அருள் புரிவார்

15. செடிசெயிழி சூதுவாதேதங்க ளோடு
தீயமதுபான முதலானவைகள் வீடச்
செய்து சன்மார்க்கத்தில் யாரையும் நிறுத்தும்
செயலுடையர் எளியவர்க்கிடையூ றறுத்துக்

16. கொடியுலவு தேவாலயத்திருப் பணிகள்
குன்றுதுசெய்துபரமன் றாளி ணிணையில்
கூடிவளர் பத்தி நலமெத்தவுள சாந்தர்
குவலயத்தில் தமக்கு நிகர் இல்லாத வேந்தர் - ஏலேலோ.

## 5. டில்லி தர்பாரின் உத்தேசம்.

திருமருவும் சக்கரவர்த்தி—அன்பால்
செய்திடுமோர் கட்டளைபால்
அருமையுடன் டில்லியிற்செய்—தர்பார்
அதன் விவரம் இனியுரைப்பேன்.

(முடுகு.)

1. அருமையுடனே அந்த மகுடா பிஷேகம்
அரசர்க்கிலண்டனகரத்தினில் அநேகம்
அளவற்ற கோஷங்களோடுமுன் செய்த
அற்புதம் காணுதபேர்களுஞ் செப்த

2. ஒருமையுடனே நமது தேசத்தும் என்று
ஓராயிரத்துத்தொளாயிரத்து மூன்று
உயர்வருடம் முதல்மாதம் முதல்தேதி அன்று
உத்துங்கமாகவே கொண்டாடு மென்று

3. பெருமையுறு சக்ரவர்த்தியின் ஆணை பெற்றும்
பேசுபுகழ் வைசராய் ஆனபிரபு உற்றுப்
பிழைதீர அங்கங்கு ஊர்தோறும் நன்கு
பெரிதான உற்சவம் கொண்டாடு மென்று

4. உரிமையுடனே உத்திரவுசெய்த தன்றி
ஒப்பில் இந்திய சக்ரவர்த்திகட் கென்றும்
உற்றதொரு தானமாம் டில்லிநகர் தன்னில்
உயர்வான தர்பாரை கூட்டமனம் முன்னி

5. இருமையுறு மண்டபம் முதலான செய்து
ஏற்றமுறு சக்ரவர்த்தியின் கோலின் எய்தும்
எழிலாரும் நிலமன்னர் முதலான யாரும்
இயலாகவே வந்து அடிசூடி நேரும்

6. வரமுறுக என்று முன்கற்பித்த வண்ணம்
மானிலத்துண்டான அரசர்பலர் எண்ணும்
மகிமையுறுசெல்வப் பிரபுக்களொடு மன்னும்
மாகாண நிருபர்முதலா உயர்வு துன்னும்

7. புரமலிய எல்லோரும் வந்துசபை பண்ணும்
புதுமை இனி வேறில்லையே இந்த மண்ணில்
புணையுமவர் அணியாடை முதலாகப் பூணும்
பொருவரியசெல்வம் இதுபோலும் இலைகாணுல



8. கரிபரி ரதங்கள் காலாள்களென்னும் நான்கு
கருதரிய படையோடும் அவரவர்கள் ஆங்கு
கடுகியேகூடுமோரொப்பரிய காட்சி
காணுதற்கோராயிரங்கண் வேணுமிதுசூட்சி—ஏலேலோ.

## 6. தர்பார்மண்டபம் முதலியவற்றின் சிறப்பு.

161184

போனடில்லியிலே—கூடும்
பெருமையுரும் தர்பாரின்
சீரானமண்டபமே—ஆதிச்
சிறப்பதனை இனிக்கேளும்.

(முடுகு.)

1. நாராயணன்வாழும் வைகுந்த நகரோ
நலமான தேவேந்த்ரபுரம் ஒதில் நிகரோ
நவையற்ற செல்வமலி அளகாபுரந் தான்
நாடியிங்கேவந்து குடிகொண்டதோ காண்

2. ஆராயின் இதனை எவர்சொல்வார்கள் என்ன
அனைவர்க்கும்அளவற்றஅற்புதம் துன்ன
ஆகாயமுற ஓங்குகும் மண்டபம் தன்னில்
ஆணிமுத்துப்பந்தல் மேற்கட்டி மின்ன

3. நேரானதம்பங்கள் ஒருநூறு செம்பொன்
நடுவரைதனைக்கடைந்ததுபோல் நிரம்ப
நிலவுவைரம் மரகதம்பதும ராகம்
நித்திலம் பவளமொடு நீலம்முதல் ஆகப்

4. பாராரும்விலைபெற்ற பலமணி பதித்துப்
பண்ணரிய சித்திரப்பதுமைகள் அமைத்துப்
பானு உதயம் போலும் கண்ணாடி கட்டி
பகரரிய பஞ்சவர்ணக்கொடிகள் கட்டி

5. ஏராளமான மணிவாயில்கள் வகுத்து
எண்ணரிய பலகணி சுருங்கைகள் தொகுத்து
ஈரமலி பூமலர்க்கொத்துகள் நிறைத்து
இணையில் மலர்மாலைபொன்னரிமாலை தைத்து

6. நீரான நிரைநிரைபடிக்கட் டமைத்து
நேர்வரிசை ஒன்றொன்றில் மறையா திசைத்து
நெடிதான சிற்பவித்தைத்திறமை கண்டு
நிலவுபுகழ் விசுவ வியப் புண்டு

7. தாராரும்முடியசைத்தானந்தம் கொள்ள
தாரணியில் இது இந்த்ர ஜாலமென உள்ள
சதிரான மின்சார தீபங்கள் இட்டு
தகைமேவு பகல்போல் இராஒளி நட்டு

8. சாராமல் பதினாயிரம்பேர் இருக்கச்
சாலமலி கூடத்தில் எங்கும் பெருக்க
தகதகென ஒளிர்கின்ற ரத்ன கம்பளமும்
சால்வை பீதாம்பரப் பட்டுகளின் வளமும்

9. ஏராகவே விரித்ததன்மீது தங்க
எழிலானமணியாசனம்பல இலங்க
இணையிலா ஆஸ்தானம் அழகாத் திருத்தி
ஏற்றமுறு சிற்பங்கள் எங்கும் பொருத்தி

10. சீரா இயற்றும் மண்டப மகிமை சொல்ல
சேடனைப்போலாயிரம் நாவும் இல்லை
திகழும்மதி வன்மையும் இல்லை அதனாலே
செப்பலாம் திறமில்லை இதுநிற்க இதுமேலே

11. ஓராயிரம் பெரிய துரைமக்க ளோடு
உற்றபலராஜப்பிரபுக்கள் கனம் நீடும்
உயர்வான உத்யோக நிலையிலுள பேர்கள்
ஒப்பரிய ராணுவ படைவீரன் மார்கள்

12. கூறுகவே தங்க எங்கும் சமைத்த
கூடாரத்தின் பெருமை யார்தாம் உரைத்தல்
குலவுகாச்மீரசால் வைகளால் அனந்தம்
குணதிசைக் கதிரவன் போல்வன அனந்தம்

13. போமால் வானளாவும் பிற அனந்தம்
பெரியமதிபோல் ஒளிபிறங்குவ அனந்தம்
பிழையிலாபொற்சரிகை இட்டவை அனந்தம்
பேசரிய சொற்பனக் காக்ஷியில் அனந்தம்

14. சோராத சிந்தையுறு வைசராய் யர்க்கும்
சொல்லும் நம் சக்ரவர்த்திக் கிளைஞ ருக்கும்
துணையான மாகாண அதிபர்கள் தமக்கும்
துன்னிவரு மன்னர் கனவான்கள் அனை வர்க்கும்

15. சோராமல் வெவ்வேறு தனியாய் அமைத்து
சிங்காரத் தோட்டங்கள் செயலாகச் சமைத்து
செப்பரிய பாதைகள் ஒழுங்காப் படுத்து
திரளான வெவ்வேறு விடுதிகள் முடித்து



16. தோரணை துரகதப் பந்திகள் நிரைத்துச்
செய்த வொரு நகரியின் பாங்கினை விரித்துச்
செப்பவென்றாலும் நம்மாயுள் போதாது
தேசுதரு கலைமகள் தனக்கும் ஒண்ணாது

17. வாராத மனிதப்பிறப்பினை அடைந்தும்
மருவரிய இருகண்கள் பெற்றுடன் இருந்தும்
மற்றிதன் பெருமையை பாராத மாந்தர்
வாழ்க்கையது கொண்டென்ன பயனென்பர் ஆய்ந்து

18. தீராத செல்வத்தை உடையதிந் நாடு
செயலான சாக்ஷிஇதுவே கண்டு கூடு
தெளிவாக வென்றதை காட்டவைத் துள்ள
திறமான செயலென்று பல்லோரும் கொள்ள

19. போராரும் மன்னவர்க்கெந்நாளும் இந்தப்
புகழ்மேவு தலையான நகராய் அமைந்த
புரம் ஈது செய்ததோர் பாக்யமே பாக்யம்
புவிமீது மற்றநகர் பெற்றதென்ன சிலாக்யம்

20. காராளர் வணிகரொடு கனமேவு ராசர்
கலையாவும் உணர்கின்ற மறையோர்கள் நேசம்
கருதியே வருகின்ற பிறதேச மன்னர்
கணக்கினிலடங்காமலே வந்து துன்ன—ஏலேலோ.

---

## 7. அரசர்கள் பிரபுக்கள் முதலானோர் வருதல்.

விசயமிகும் அரசர்பிரான்—ஆங்கு
வேண்டுமொரு தர்பார்க்குத்
திசை திசையாயிருந்துவரும்—வேந்தர்
திறமுதலாவினி யுரைப்பேன்.

(முடுகு.)

1. அசலமுழுதாளு மொரு மன்னர்க்கு நாடி
அம்புவிக்கணியான லண்டன் நகர் தேடி
அரிய பிரபுமக்கள் முதலானோர்கள் கூடி
அற்புதமதாகமணி மகுட முடி சூடிக்

2. கசியுமன்பொடு செய்த பட்டாபிஷேக
கல்யாணகோலாகலத்தை மகிழ் வாகக்

கருதியித்தேயத்தும் கொண்டாட டில்லி
கடிநகர்க்கெல்லோரும் வரவென்று சொல்லி

3. வசையிலுயர் வைசராய் திருமுகம் கண்டு
மருவிமச்சேது பரியங்தம் நிலை கொண்ட
மாநிலத்தரசரெல்லாரும் மகிழ் வுற்ற
வரிசையுடனே எழுந்தார்கள் சிதி பெற்று

4. இசைமருவு மைதர்பாத் தேசத்தை ஆளும்
ஏந்தலாம் நைஜாமெனும் தலைவன் கேளும்
ஏற்றமுறுகின்ற ஒருகைகொவார் என்னும்
இயலாகுமோர் பரோடாதேச மன்னன்

5. பசியகலமறையவர்க் கன்னதா ளங்கள்
பண்ணுமோர் திருவாங்கூர் மகராஜ துங்கன்
பரவுபுகழ் மைசூரில் அரசுபுரி பூபன்
பகரரிய காஸ்மீர நரபதி பிர தாபன்

6. நசைமருவுக் வாலியர் நவையில் மகாராஜன்
நானிலத்து யருமிந்தூரதிப தேஜன்
நலமிக்க கச்சிதேசாதிபதி ராவும்
நவிலுமொரு கோலபுர ராஜனும் கோவும்

7. புஜவலிமையால் மிக்க உதயபுர ராஜன்
பூபாலரத்நமாம் ஜயபுர இ ராஜன்
பொன்ருத புகழ்கொண்ட புதுக்கேட்டை மன்னன்
புதுமையறு கொச்சிதேசத்தையாள் தென்னன்

8. நிசவலிகொள் மார்வாடி தேசத்து வேந்தன்
நெடியமதில் சூழ்பரதபுரம் ஆளும் ஏந்தல்
நிலவுபுகழ் பாடியாலா தேச நிருபன்
நிகரில்மணிபுரம் ஆளும் நலமாரும் ஒருமன்

9. அசைவில்புகழ் பெற்றிடும் பிக்கனீர் ராசன்
அரியஜய சல்மியர் அல்வார் இராசர்
அழகான கோட்டாமன் தோளபுரம் ஆளி
அமையுமொரு டாங்கி ஜுக்கதிபனும் மீளி

10. தெசைமருவு போபால பீகமெனும் ராணி
தேடரிய ரத்தலம் ரீவமுதல் எணித்
திறலுடையமன்ன ரிவரல்லாமல் இன்னம்
செப்பவுள்ளார்கள் பலஜயசில மன்னர்



11. கசதுரக விரதமொடு காலாள்க ளென்னும்
கருதரிய நால்வகைச் சேனையொடு துன்னி
கடியுடைய டில்லிமா நகர்வந்து சேர்ந்தார்
கனமருவும்வைசராய் அருள்பெற்றுச் சார்ந்தார்—ஏலேலோ.

---

## 8. பட்டணப் பிரவேசம்.

அவனியில்வாழ் அரசர் எல்லாம்—இவ்வா
றங்குவந்து கூடினபின்
பவனிவரும் சிறப்பதனைச் சிறிது
பகர்ந்திடுவேன் இனிக்கேளும்.

(முடுகு.)

1. எவமிலா வாத்யங்கள் கடல்போல் முழங்க
இடிபோல அதிர்வெடிகள் எங்கும் தழங்க
எழிலான பரிமீது ஸோல்ஜர் பட் டாளம்
இலக அணியாக முன்செல்லக் கடிவாளம்

2. நவமாகச் செம்பொன்னிலைமைத் திட்ட
நலமான பரிமீது மெய்காக்கப் பட்ட
நவையிலாபாடி கார்டென்னுமுயர் வீரர்
நகைமீர அவர்பின்பு நலமாகச் சாரத்

3. திவளொளிசெய் ஐராவதம்போல் விளங்கும்
சேரமும்மத மொழுகு கரிமீ ணனங்கும்
தேவியோ டாவிபோல் நம்மைப் புரக்கும்
செற்றமறுசக்க ரவர்த்திக்கிருகண் ஒக்கும்

4. கவனமுறு வைசராயாம் கர்ஸ னென்னும்
கருதரிய பெருமையுறு பிரபு அங்கு துன்ன
கனமருவு சக்கிரவர்த்திக்கிளைஞர் ஆன
கன்னாட்டுப்பிரபுவவர்கள் தேவியொ தானம்

5. கவுளொழுகுமற்று மொருதந்தா வளத்தில்
கனமருவு கவினுடைய வேள்போல் இருக்கக்
கருதுமொரு பெருமையுறு ராஜாக்கள் எல்லாம்
கணமணியினணிசெய்த கரிமீதும் வல்லார்

6. நுவலுமணி கொண்டலக்ஷண மேறுகின்ற
நோக்கு நன்னடையுடைய பரிமீதும் நின்று
நூறுலக்ஷம் பொன்விலைபெற்ற அணி மின்ன
நூதனமதாகவே யொளிர்பரிதி என்ன

7. புவனபதி இவரென்று கண்டோர்கள் உள்ளில்
பூரித்திடும்பெரிய ஆனந்தம் கொள்ள
புங்கமொடு யாவரும் அணியாகச் செல்ல
பொற்புக அவர்கள்பின் உத்யோகம் வல்ல
8. குவலயம் புகழ்கின்ற அதிகாரர் எல்லாம்
குதிரைபல கட்டிய ரதமீது செல்ல
கூடிவரு கனவான்கள் குதிரை தேர் மீது
குணமாக அணியணியா மகிழ்வோடு போத
9. தவமுடைய எட்வேர்டு சக்ரவர்த் திக்குத்
தளராத நீடூழி ஆயுள் வர்த்திக்க
சாற்றுமவர் தேவியொடு தழைகுடும்பத் தார்
தற்பரன் கருணையால் அரியசுகம் உற்று
10. நவையிரிய வாழ்கவென எல்லோரும் கூற
நண்ணுமொரு கடல்போல் எழில்கொண்டு மீற
நலமான பட்டாபிஷேகம் கொள் கின்ற
ராஜராஜன் ராஜகம்பீரன் என்றும்
11. உவமையற இத்தேசம் இனிதாக ஆள
உயர்பரமன் அருள்புரிக என்னுமொழி நீள
உம்பர் நெடுவானின்று பூமாரி பெய்ய
ஓங்கு குடைமதிபோல் உதவுநிழல் செய்ய
12. கவலையற எல்லாரும் களிகொண்டு துள்ள
கர்ஸனவர் பெருமையைக் கொண்டாடி விள்ள
கண்ணுயிரம்வேண்டும் இந்தஎழில் காணக்
கண்டோர்கள் பாக்யமது பாக்யமென்று பூண—ஏலேலோ.

## 9. தர்பார்ச் சிறப்பு.

இந்தவிதம் வரும் அரசர்—முதலா
எல்லோரும் எழிலாக
அந்தமுடன் கூடுமொரு—தர்பார்
அருமையினை இனியுரைப்பேன்.

(முடுகு.)

1. பந்திபந்திகளாக அரசர்முதல் ஆனோர்
பாங்காக அவரவர்க்கிட்டதொரு தானம்
பரிவோடிருக்கவும் பல்லாயிரம் பேர்
பார்க்கவந்தவர்களும் பண்போடிருந் தார்
2. சந்தமலிமண்டபம் தன்னில்இவ் வாறு
சகலபுவநமும்வந்த தன்மையினில் மீறும்
தகையோடிருக்கவே வெளியினில் நெருங்கும்
சமரமலிவீரர்தம் அணியதனை அங்கு
3. சாற்றவல்லார்கள் எவர் அம்மஅது சேனார்
சமுத்ரமென்றாலும் அதுநேராது காணே
புந்திமகிழ் வெள்ளைப்பட்டாளங்கள் நூறு
புனைகின்ற சிப்பாய் பட்டாளங்கள் வேறு
போற்றுமொருகுதிரை வீரர்கள் ஒரு பாலே
புகழ்சேரும் காலாள்கள் அணியாய்ஓர் பாலே
4. விந்தையுறு துப்பாக்கி வீரர்ஒரு சாரார்
விறலாரும் வாள்கொண்ட வீரர்ஒரு சாரார்
மேதினியெலாம் நொடியில் வெல்லும்வலி கொண்டார்
விரிகடலின் வடவைபோல் உள்ளடங்கி நின்றார்
5. சிந்தைமகிழ் சேனாதிபதியின் உயர் ஆணை
சிரமேல் வகித்தனர்கள் பணிவோடு பூண
செப்பரிய அழகோடு மிவ்வாறு நீடும்
சேனைகளெலாமங்கு அணியாகக் கூட
6. முந்திரம் சக்ரவர்த்திக்கிளைஞ ரான
மோதமுறு கன்னாட்டு ப்ரபுஅவர்கள் மானம்
முற்றுதம் பரிவார மொடுவந்து மேவ
மூரிவண் கடல்போல மோதஒலி தாவ
7. தந்தவுயர் அக்ராசனத்தின்மிசை சாரத்
தக்கபடி செய்யு முபசாரங்கள் நேரச்
சாமந்தர் முதலான பரிசனங்கள் சூழத்
தந்நேரிலா உயர்வுதங்கி அர சாளும்
8. மந்தரம் நிகர்த்தபுய வைசரா என்னும்
மாட்சியுறு மதிபருக் கிருகண்கள் துன்னும்
வசையில் மகிபதி பாலசூரியனைப் போல
மன்னவையு ளோரெழுந்து பசரனை சால
9. நிந்தையற வந்துபின் அக்ராச னத்தில்
நிலவவே வீற்றிருந் தருளுற மனத்தில்
நெடியதொரு சபைகொண்டு பெருமகிழ்வு கொண்டு
நேருமுயர் வாசாலகத்தின் எழில் கண்டு
10. நந்தலில் பிரகஸ்பதி கொலோவிவர் அலாது
நாவாயிரம்பெற்ற சேடன்கொல் ஓதும்
நலம்ஈதின் இலையென்று சபையோர்கள் நேசம்
நண்ணவே இனிதாக வண்ணமொடு பேசி
11. கந்தமலி மகுடமணி சக்ரவர்த் திக்குக்
கட்டுமொரு பட்டாபிஷேகம் அறி வித்துக்
கனமான வரிசைபலர் பெறவங்கு நல்கிந்
கற்பகத் தருவென்னும் நலமோடு மல்கி
12. வந்துவந் தரசர்கள் எல்லோரும் சக்ர
வர்த்திக்கு மாநலம் கோரினர் களிக்க
வாஞ்சை வைத்திட்ட பொருள் பெற்றோரைப் போல
மருவியிருந்து தர்பார் நடத்தினர் மேலே—ஏலேலோ.

(இன்னும் வரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

காண்டாவேதும் ; உயிர் பிரிந்தால்,

## To Our Subscribers.

Most of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI. before the end of this month or receive the next number by V. P. P. for the arrears due.

**நமது சந்தாதாரர்களுக்கு.**

நமது சந்தாதாரர்களிலனேகர் இன்னும் 10-வது வாலியமுக்குரிய சந்தாவைச் செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவை யிம்மாதத்துக்குள் அனுப்பல் வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கியுள்ள சந்தாதொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

D. K. Agency.

11*th Feb.* 1903. அ. ப. ஏஜன்ஸி.

* "அனவருக்கு... ம்பாகஷ் சாம்ப்ரா ஹ்யம." கிட்டும் வழிகாட்டவந்த

## ஸ்ரீக்ருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்.

பங்காள தேசத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஸ்ரீகௌரங்கராய் அவதரித்து தானே பக்தனுயிருந்து பக்தன் அனுஷ்டிக்கவேண்டிய முறைமையையும் பகவானு யிருந்து அவனுடைய அருளையும் விளக்கிய அற்புத திவ்விய சரித்திரம்.

**மனதை உருக்கும் மாட்சி பெற்றது! மாநிலத்தில் வேறு சரித்திரம் கிடையாது!!**

இத்திவ்விய சரித்திரம் நம்மவர்களுக்கு இயைந்தவண்ணம் வெகு தெளிவான செந்தமிழ் வசனநடையில் அநேக அலங்காரங்களோடு சர்வ சமய சமரசமாய், ஆங்காங்கு கல்லும் கரைக்கும் கவிகள்வரப்பெற்று, **திரு. பக்தவஸ்லம் பிள்ளை, பி. ஏ., வே. வேங்கட ஸ்ரீநிவாஸப் பிள்ளை,** என்பவர்களால் இயற்றப்பட்டுள்ளது.

புஸ்தகம் விலை காலிகோ பவுண்டு 2-0-0. ஸ்டிப் பவுண்டு 1-8-0. கிழிதம் அடியிற்கண்டவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். பாயிரமின்றி சரித்திரம் மட்டும் ரூ. V. P. தபால்செலவுகள் பிரத்தியேகம்.

**அ. ப. ஏஜன்ஸிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.**

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s.* 6*d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு** :—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசான காகிதப்பதிப்பு** :—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம்தத்ஸத். [God is Love: Knowledge is Power: Om.

ஸத்யமே ஜயம்—Satyameva Jayati.

புத்தகம் 11.] 1903௵ மார்ச்சு௴. [இலக்கம் 11.

THE DOCTRINE OF "RENUNCIATION, RE-BIRTH, AND LOVE."

# "விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு."

## ii. "செத்துப்பிழை."

"செத்துப்பிழை." இதன்கருத்தை யுள்ளபடியுணரல்வேண்டும்; நுனிப்புல்மேயும் இளங்கன்றுபோல் மேல்வாரியாக மனதிற்பட்டதை நினைத்து அருத்தம் செய்துகொண்டுபோனால் அனர்த்தம் விளைவிக்கும். இந்த இரண்டுவார்த்தைகளிலும் மனிதனுக்கு உயிர்வாழ்க்கையில் நேரிடும் அதிமேலான இரண்டு அனுபவங்கள் அடங்கியிருக்கின்றன. அதாவது (i) சாதல், (ii) பிழைத்தல். செத்துப்போதல் - சரீரத்தை விட்டுப்போதல், சாதல். உயிரோடிருத்தல், பிழைத்தல். இதனாலேயே சரீரத்தில் ஏதோ ஒன்று அழிவற்றதாக விருக்கின்றது: அது சரீரமன்று: ஆனால் சரீரத்தில் வாசமாயிருக்கிறது—என்று ஊகிக்கத்தக்தாயிருக்கிறது. உயிரோடு கூடியிருத்தல் - வசித்தல், பிழைத்தல் என்று சொல்லப்படுகிறது. இங்கும் உயிரோடு என்னும் பதத்தினால் உயிருக்கு அந்நியமாக உயிரோடு சேர்ந்து இருக்கிற வஸ்து ஒன்றிருக்கிறதென்று ஊகிக்கத்தக்கதா யிருக்கிறது. இவ்விரண்டு வார்த்தைகளின் அருத்தத்தை ஆய்ந்தமட்டில் உடலுக்கும் உயிருக்கும் அந்நியமான அழியாதவஸ்து ஒன்றிருக்கிறதென்றும் அது உயிரோடுகூடி உடலில் வசித்தால் சாதாரணமாக நாம் சாத்தன், கூக்கன், இராமன் என்று சொல்லும் பேர்வாய்ந்த உருவாம் மனிதனாகிறதும், அறுவிகாரங்களுக்குள்பட்ட அவனைப் பலவாறாக ஜனங்கள் கொண்டாடுவதும்; உயிர் பிரிந்தால்,

"ஊரெலாங்கூடி ஒலிக்கவழுதிட்டுப்
பேரினைநீக்கிப் பிணமெனப்பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச்சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தார்களே"

என்றபடி
ஒரு தலைமுழுக்கோடு அவன் போனானென்று அவனைப்பற்றி நினைப்பதையும் விட்டொழிப்ப
தும் உலகவழக்கமாயிருக்கிறது. ஸ்தூலதேகமாம் உடலினுடையகதி இதுவானால், உடலைவிட
டுப்பிரிந்த உயிரின் கதியென்ன? கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் கடவுள்வந்து கடைசி
தினத்தில் இறந்தவனையெழுப்பி அவன் பாபபுண்ணியத்துக்குத் தக்கபடி அவனுக்குப் படியளி
பாரென்று நம்பி பிரேதத்தைத் தகனம் செய்யாது புதைத்து, இறந்தவன் பிரேதத்தைச் சமாதி
யில் வைத்திருக்கிறதாகச் சொல்கிறார்கள். ஹிந்துக்கள் அதைத் தகனம்செய்து மூன்றுகல
ன்றி 10-நாளும் "தாக, தாப, உபசமனார்த்தம்" "திலோதகம் தர்ப்பயாமி" யென்று அதற்கு
எள்ளுந்தண்ணீரும் விட்டுப் பிண்டமும் வைத்து, கடைசிநாள் கிரம்பப் பிண்டங்கொட்டிக் கல்
லெடுத்துக் காவேரியிலோ நதிகுளங்களிலோ கொண்டுபோய்ப்போட்டு யமத்வாரத்தை
யடைத்து அவனாத்மாவைக் "கரையேற்றுவதற்காகப்" பலசடங்குகள் செய்கிறார்கள். இதனால்
நாம் சாதாரணமாகச் "சாவு" என்று சொல்லும் விஷயம் நேர்ந்தபின்னும் உடலின்றி (பூதாகா
ரமாய்) ச்சீவன் ஒருநிலையிலிருக்கிற தென்பதும், அந்நிலையிலிருந்து கடவுள் வந்து விடுவிக்கிற
வரையில் அதற்கு கதிமோக்ஷமில்லையென்றும், அப்படி விடுவிக்கப்பட்டு கடவுளின் பாதாரவிந்
தத்தைச்சேருவதே (கடவுளோடு ஐக்கியமாவதே) மோக்ஷமென்றும் ஒருவித நம்பிக்கை யெல்
லாருள்ளத்திலும் பொதுவாய் வேரூன்றியிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

இப்பொழுது "செத்துப்பிழை" யென்றதனால் "சாகாமற் பிழைத்திருப்பது" ஒன்றுண்
டென்று ஊகிக்கத்தக்கதா யிருக்கிறதே அது என்னவென்று சிலர் கேட்கலாம். செத்துப்
பிழைத்தால் சாவில்லை, சாகாமற்பிழைத்திருப்பவனுக்குச் சாவுண்டு. இங்கே சாவு (மரணம்)
என்பதற்கு என்ன அர்த்தம்? ஆத்மா ஒன்று அழியாததாக வுண்டு என்பதை யேற்றுக்கொண்
டால், மரணம் என்பது ஒரு நிலைமாறுதலேயன்றி வேறல்ல. மனிதன் என்னும் சீவாத்மா
வுக்கு மூன்றுவித தேகங்களுண்டு. அவை ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்கள் என்பார்கள்.
இந்த உடல்தான் ஸ்தூலதேகம். இந்த உடலைப்போலவே யெல்லா அவயவங்களும் இந்திரி
யங்களும் அமையப்பெற்று கண்ணுக்கு விளங்காமல் நாம் ஸ்வப்னம் காணும்போது வேலை
செய்யும் தேகம் சூக்ஷ்மதேகமாம். இதை மனசு என்றும் சொல்வார்கள். இதிலும் சூக்ஷ்ம
மாய் நம் எண்ணத்துக்கெல்லாம் காரணமாயிருக்கும் (அந்தக்கரணம்) சிந்தா சக்தியுடைய
காரணதேகம் என்பார்கள். சூக்ஷ்ம காரணதேகங்கள் இரண்டையும் ஒன்றாகப்பாவித்து, சூக்ஷ்ம
தேகமென்றும், சித்தையென்றும் பொதுவாகச் சொல்வாருமுளர். இந்த மூன்று தேகங்களு
ஆத்மாவுக்கு உலகானுபவார்த்த மூண்டான கருவிகள். யுத்தத்துக்குப் போகிறவன் கவச
மணிந்துகொண்டு போவதுபோல், உலகவியவகாரங்களில் பிரவர்த்திக்க இச்சைகொண்ட
ஆத்மா இந்த மூன்றுதேகங்களையும் தனக்குக் கவசமாகவும் கருவியாகவும்கொண்டு உலகில்
அவதரித்தான். உலகானுபவமெல்லாம் இன்பதுன்பம், சுகதுக்கம், பிறப்பிறப்பு, பாபபுண்ணி
யம் எனப் பகுபட்டு நேரெதிராய் இரட்டைப்பட்டு நிற்கும். இதையனுபவிப்பதில் ஆத்மா
தன்னைமறந்து சகவாசதோஷத்தால் தன்னிலையில் நில்லாமல் மனசு புத்தி தேகம் இவைகளி



ன்னை ஆரோபித்துப்பார்க்கிறான். அது எப்படியென்றால் ஒரு இராஜகுமாரனான சிறுவன்
உலகானுபவம் அடையும்பொருட்டு ஸிம்மாசனாதிபதியாகிய அரசனைவிட்டுப்பிரிந்து வேலைக்கா
ரர்களோடு ஊர்சுற்றப் புறப்படுகிறான். புறப்பட்டவன் வெகுநாள் சுற்றித்திரிந்து சுகதுக்கங்
களையெல்லாம் வேலைக்காரர்களோடு சேர்ந்தனுபவித்துவந்ததால், தன்பிறப்புவளர்ப்பை மறந்து
அவர்களைப்போலவே தானுமென்று மயங்கி விடுகிறான். அப்பொழுது அவர்கள் தங்கள் நிலையி
லிருந்துபடும் சுகதுக்கங்களை யெல்லாம் தன்னைமறந்த மயக்கத்தால் தன்னதென்று தானும்
பாவித்து அவர்களோடு வருந்துகிறான். அவர்களுக்கு வருத்தம் பொறுக்கக் கூடாதபோதும்
வேறுவிதியின்றி வேலைசெய்துவருகிறார்கள். ஆனால் அரசிளங்குமரனோ எல்லா போகபாக்கி
யங்களும் தன்னளவாகவிருக்க அவைகளையெல்லாம் தானே முதலில் விரும்பாதுவிட்டு, உல
கத்திலடிபட்டு அனுபவம் தேடவேண்டுமென்று வந்தான். இவனுக்கு உலகத்தி லடிபட்டு
அனுபவந்தேடினது போதுமென்று எந்த நிமிஷத்தில்படுகிறதோ அந்த நிமிஷத்தில் இவன்
அரண்மனைக்குத் திரும்பிவிட்டால் இவன் தகப்பனுடையசந்நிதியில் வந்தமட்டில் அவன் இவனை
யறிந்து அங்கீகரிக்க, அத்தேசமுழுவதும் இவன் அரசன் பேரால் இட்டகட்டளையைச் செய்
யும். அப்படிக்கின்றி சகவாசதோஷத்தால், தான் ராசபுத்திரனென்பதை மறந்து, தன்வேலைக்
காரர்களாகத் தன்னோடுகூடவந்தவர்களுக்கு இடங்கொடுத்து அவர்கள் கைவலுக்கவிட்டுவந்தா
னானால், அவர்கள் இவன் பேரைச்சொல்லித் தின்னுகொழுத்து, இவனை அவர்களுடைய ஒத்
தாசைக்குவேண்டிய அளவுக்குமட்டிலே லக்ஷியஞ்செய்து மற்றப்படி அலக்ஷியமாய் நடத்தி,
இவன் இராஜசமுகத்திற்குத் திரும்பாதபடி வேண்டிய உபாயங்களும் தேடுவார்களல்லவா? அப்
படியே ஆத்மா உலகானுபவந் தேடியனுபவிக்க இச்சைகொண்டு சீவனாகஉற்பவித்தும், வெகு
கால வாசனாதோஷத்தால், தன்ஸ்வரூபத்தைமறந்து தன்னை யண்டிப்பிழைக்கிறவர்களோடு
தானும் ஒருவனாய் மயங்கித்தியங்குகிறான். அரசசின்னத்தோடுவந்தால் உலகானுபவம் சித்திக்கா
தென்று தன்னுருமறைத்து உலகானுபவத்துக்கு வேண்டிய உபகரணங்களோடு வெளிப்பட
ஆத்மா தானாக மறைத்துவைத்த ஸ்வரூபத்தைமறந்து வந்தவழியேதிரும்பத் தெரியாது திசை
தப்பி திக்பிரமைகொண்டு விழிக்கிறான். இப்படிவிழிக்கிற சீவன் உலகஞானியாம் மனிதன். இந்த
ஆத்மா தனது ஆதிநிலைக்குத் திரும்ப இதற்கு உபகரணங்களாக வமைந்த தேகங்களே இடை
யூறாகவிருத்தலால் "அவை நானல்ல; எனக்கு ஊழியம் செய்யவந்த உபகரணங்களை நானென்
றுமயங்கி அவைகளையெனக்குச் சமமாக்கிக்கொண்டது பிசகு." அவைகள் "நானல்ல"
என்று விட்டுவிடுவேன் என்னும் உறுதி உள்ளத்திற்பட உணர்வதுதான் அவைகளை "விட்டுவிடு
தல்" "துறவு" "ஸந்நியாசம்" "உலகையொழித்தல்" என்று பலவிதமாக தத்துவார்த்தத்தில்
சொல்வது. அப்படி விட்டவைகள் வெகுகாலப்பழக்கத்தால், (வேப்பெண்ணெய் வைத்திருந்த
பாண்டத்திலிருந்து அந்த எண்ணெயைக் கொட்டிவிட்டுத் தேய்த்தலம்பின பின்னும் வாசனை
யதை விட்டுப்போகாததுபோல்) ஒட்டின வாசனைவிடாது ஆத்மாவை யொட்டிநிற்கும். வேப்
பெண்ணெயில்லாவிட்டாலும், அதன்வாசனை யெப்படி அது வைத்திருந்த பாண்டத்தை
யொட்டிக்கொண்டு, கண்ணுக்குத் தெரியாமலும், கழுவியும் போகாமலு மிருக்கிறதோ,
அப்படிப்போல ஆத்மா, தேகேந்திரியங்கள் கரணங்களாகிய இவை "நானல்ல" வென்று
உணர்ந்து விட்டுவிட்டாலும், ஆத்மா அவைகளை "நானல்ல" வென்று விட்டுவிட்டதினால்
அவைகள் கொட்டம் அடங்கி ஒடுங்கிவிட்டாலும் (விஷய சுகானுபவம் விட்டுப்போனாலும்)

விஷயவாசனை விட்டுப்போகாது அதற்குப் பிந்தியும் கொஞ்சகாலம் நிற்கும். இந்த வாசனை யழியப் பாண்டத்தை நெருப்பிலிட்டு எரிப்பதுபோல், தேகேந்திரியங்கள் "நானல்ல," அசங்கேதனாய், அழியாதவனாய், ஆனந்தஸ்வரூபியாயுள்ள தெதுவோ "அதுவேநான்" என்று உள்ளத்திற்படவுணர்ந்த உணர்வாம் ஞானத்தீயால் அவைகளைத் தகித்து அறவொழிப்பது தகனமாம். இப்படி விஷயவாசனைகள் ஒழிவுபடும்பொழுது எற்கனவே ஒடுங்கியிருந்த இந்திரியங்களும் மற்றக் கருவி கரணங்களும் விஷயவிர்த்தியை நாடாது சூரியன்முகங்காணாத் தாமரைபோல் குவிந்து பிரிவினால் சோர்வுற்று ஓய்ந்து உட்கார்ந்துபோவதுண்டு. அப்பொழுது தேகேந்திரியங்கள் பிராணன்களெல்லாம் அடங்கி ஒடுங்கிப்போவதால் அவைகளெல்லாம் செத்ததுபோலவே ஆய்விடும். இப்படியிருந்து உலகப்பிரவிர்த்தியில் தங்கள் எஜமானனை ஆத்மாவுக்கு நாட்டமில்லையென்று கண்டுகொண்டபின் ஆத்மாபோன வழியிற் றிரும்பி அதை யடைக்கலம் புகும்பொழுது மறுபடியும் அவைகளுக்குச் சலனமுண்டாகி, சூரியனைக் கண்ட தாமரைபோல் அவைவிரிந்து மலர்ந்து விளங்கும். ஆனால் இப்படி க்ஷணநேரம் செத்துக் கிடந்து மறுபடியும் அவை யுயிர்பெற்றுப் பிழைத்ததனால் உண்டான மாறுபாடு சொல்லத்தறமல்ல. செத்துப்பிழைத்தால் அப்பாட்சியைச் செப்புதலாமோ! சொல்லுக்கெட்டாத ஒரு அனுபவத்தைச் சொல்லுவதெப்படி. இதை யனுபவத்தா லுணரவேண்டுமேயன்றி வாக்காலுரைப்பது சாத்தியமல்ல. அப்பொழுது எண்சாணுடம்பில் ஒரு அங்குஷ்டப் பிரமாணத்துக்குள்ளிருக்கும் ஹிருதயகமலத்தியில் இருந்த விடந்தெரியாது வாசஞ்செய்த ஆத்மா எங்கும் நிறைந்து ஏகவெளியாகி கரைதுறையற்றுக், காண்பான் காட்சியற்று, காணப்படும்வஸ்துவுமற்றுந், தானேதானாய் விளங்கும் தன்மையைச்சொல்வதெப்படி? சுட்டுவதுந்தான் எப்படி? இந்த உண்மையையே திருமூலநாயனார்,

"உரையற்றதொன்றையுரைசெய்யுமூமர்காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ?
திரையற்றநீர்போல்சிந்தைதெளிவார்க்குப்
புரையற்றிருந்தான்புரிசடையோனே" யென்றும்,

"தான்வரைவற்றபினாரைவரைவது
தானவனானபினாரைநினைவது
காமனைவென்றகணாரையுகப்பது
தூமொழிவாசகஞ்சொல்லுமினீரே" யென்றும்

செப்பியுள்ளார். இதுதான் சாகாப்பிழைப்பு. சாயுஜ்ஜியம். சீவபரமாத்ம ஐக்கியம். "I and My Father are one—எந்தையு நானுமொன்று" "என்னில் எந்தையும், எந்தையில் யானுமாயுளோம்—I am in my Father and My Father is in me" "அஹம்ப்ரஹ்மாஸ்மி" 'தத்துவமஸி,' "ப்ரக்ஞானம்ப்ரஹ்மம்" என்று பலபலவிதமாய்ச் சொல்வதெல்லாம் இதையே. மறுபிறப்பு (Re-birth or Resurrection or Regeneration), உலகைவென்றேன் (overcoming of the world), ஊனொழிந்தேன் (overcome the flesh, attain perfection,) மன்மதனை யெரித்தேன் (Burning of Cupid-or Desire) ஞானசூரியன் உதயமாயினான் (the awakening of the Spirit, coming of Christ, Rising of the Spirit,) தானேதானாதல் (alone-becoming) மரணவெல்லல், செத்துப்பிழைத்தல் (Victory over the Grave, conquering death) தூயனாதல், சாந்தமெய்தல் (Sanctification of Spirit) முத்தி, மோக்ஷம் (Salvation, freedom) என்று இன்னும்பலவாறாகக் கிறிஸ்து, ஸேன்ட்பால் முதலானவர்களும் நம்முள் முத்திபெற்ற இருஷிகளும் ஞானிகளும் சொல்லி யிருக்கிறார்கள். இவ்வளவு சொல்லியும் இந்த அனுபவத்தை யுள்ளதுள்ளபடி உண்மையி லனுபவித்தவர்களன்றி மற்றவர்கள் சிறிதுமுணரார். அனுபவித்த



வர்களும் சொல்லவறியார். இதனாலேயே கடவுளைக் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்னுமேதக்கவாக்கியம் வழக்கத்தில் வந்தது. இந்த ஒருக்ஷணத்தில் உண்டாகும் மாறுதலை, "செத்துப்பிழைத்தேன்" என்னுமிரண்டு வார்த்தைகளிலடங்கிய அனுபவத்தை எடுத்துரைப்பதெப்படி? உண்மையைச்சொல்லு, சொல்லு, என்றால் சொல்வது எப்படி? கடவுளைக்கண்டவர் யார், யார், என்றால் அவர் எங்கேயிருந்து வருவார்? உன்னுளேயிருப்பானை யுணரவல்லமையில்லாத உனக்கு அந்நியமான ஒருவன் எங்கிருந்து எப்படிக் காட்டுவான்? "உண்மையாவது யாது?" என்று கேட்டால் "உள்ளே பார்த்துணர் உண்மையை" என்றுதான் சொல்லலாம். வேறுசொல்வதற் கிடமில்லை. உன்னை நீயேயறியாமற்போனால் பிறன்வந்து காட்டியா உணரப்போகிறாய். திருமூலநாயனார் "செத்துப்பிழைத்த"லாம் இந்த அனுபவத்தைச் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்:—

"தானுமழிந்து தனமுமழிந்துநீ
டூனுமழிந்துவுயிருமழிந்துடன்
வானுமழிந்துமனமுமழிந்துபின்
நானுமழிந்தமைநானறியேனே."

"ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்பராபரம்
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்சிவகதி
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேனுணர்வினை
ஒன்றிநின்றேபலவூழி *கண்டேனே."

விஷயவாசனையை அகத்து நீக்கியிருத்தலே (being dead unto the world) செத்திருத்தலாம். "நான் செத்துச் சிவனேயென்றுகிடக்கிறேன்" என்று பெண்டீர் சொல்லும் பழமொழியின் உண்மையான ஆத்மார்த்தம் இதுவே. அப்படியென்றால், நான் உலகவாசனையை விட்டு (ஊர்ஜோலிக்குப்போகாமல்) சிவனைத் தியானம்செய்துக்கொண்டிருக்கிறேன் என்பதுகருத்து. அதாவது தான் "பரமசாது" என்று சொல்லிக்கொண்டபடியாகும்.

ஆத்மா உலகானுபவந்தேடும்பொருட்டு உலகில் அவதரிக்கலாயிற்று. உலகானுபவத்தைத் தேடும்வரையில் அது பிரவர்த்தி மார்க்கத்திலிருப்பதாகச் சொல்வார்கள் (in the worldly way). விஷயசுக அனுபவத்திலாசைதீர்ந்து அலுத்தால் அதுவந்தவழி திரும்பும். இதற்கு நிவர்த்திமார்க்கமென்று சொல்வார்கள். பாம்பு தோலுரிப்பதுபோல் உடல், உயிர், உலகிலுள்ள அபிமானம், எல்லாம் அப்போது தானாக விட்டுப்போம். இதுதான் இயல்பாக நேரிடுவது. ஆனால் பெரும்பாலாரும் வழிவகைதெரியாதுழல்கிறார்க ளாதலால், முன்சென்றவர்கள் பின் வருவார்க்கு வழிகாட்டிகளா இருக்கும்படி கடவுள் நிர்ணயித்திருக்கிறார். ஞானிகளாக விரும்புவோர் உலகப்பற்றுகளை யொழித்து மோக்ஷவழி தேடுதலால் அவர்கள் சுயநயப்பிரியர்களென்று சொல்கிறார்கள். சுயநயவாசனையிருந்தாலும் தத்துவஞானம் கிட்டாதாதலால், உண்மையான முமுக்ஷுக்கள் அப்படிப்பட்டவர்க ளாகமாட்டார்கள். ஜீவன்முக்தர்களுக்கு உலகுக்குழைப்பதன்றி வேறுவேலையில்லை. தான்மட்டும் தனியாக மோக்ஷவழி தேடுகிறானென்று குற்றங்கூறுவோர் உண்மை யறியாதவரே. தானறிந்த சக்திகொண்டல்லவோ பிறரைக் கரையேற்றல்வேண்டும். எல்லாரும் சேர்ந்தாப்போல் நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று எவனாவது இருகைகளிலும் இருவரைப் பிடித்துக்கொண்டு ஆற்றிலிறங்குவானா? இறங்கினா லவன்கதி யென்னாகுமென்று தெரியுமே. ஆகையால் செத்துப் பிழைத்தவர்களே சாகாவரம் பெற்றவர்க

*பலவூழி—Eternity.

ளாவர்கள்.* சாகப்பயப்பட்டால் சாவுவருவது நிச்சயம். சாகத்துணிந்து செத்துப்பிழைத்தால் நித்யவாழ்வு கிட்டுவது சத்தியம்.—"He that loveth his life shall lose it; and he that hateth his life in this world, shall keep it unto life eternal" என்றார் ஏசுகிறிஸ்துவும். உயிரிலாசைவைத்து இகவாழ்வை விரும்பினால் அது அழிவுள்ளதாகையால் அதையிழப்பது நிச்சயம்; இகத்தில் உயிர்வாழ்க்கை அநித்யார்த்தம் விரும்பத்தக்கதல்லவென்று கண்டு வெறுப்பவன், அதில் சாக்கிரதையாயிருந்து நித்யவாழ் வெய்துவன் என்றார். இங்கே சாக்கிரதையாக விருப்பதென்றால் இரவும்பகலும் நித்யவாழ்விலே நோக்கங்கொண்டிருத்தல். இகவாழ்க்கையை விரும்புகிறவர்கள் தூக்கம் வந்த காலத்து இருளில் விழுந்து தன்னை மறந்து தூங்குவர். இகத்தை வெறுத்துப் பரத்தையே நாடியுள்ளவர்கள், தூக்கத்திலும் சாக்கிரதையாயிருப்பார். முதலிற் சொல்லிய 'இருளில் தூக்கம்' சுழுப்தி யென்பார். இரண்டாவது சொல்லிய 'தூக்கத்தில் விழிப்பு' துரிய மென்பார். கடவுள் தரிசினம் எப்போ கிடைக்கும் கிடைக்குமென்று யோகநித்திரை செய்வார், அத்தரிசனம் கிட்டியகாலத்து அந்த நிலையினின்று மேலேறி அவரோடு கலந்திடுவர். அந்நிலைக்குத் துரியாதீதம் என்றுசொல்வர். துரியம்-'தூக்கத்தில் (உளக்கண்) விழிப்பு.' சாக்கிரம் - விழிப்பு. "கடவுளும் நானுமொன்றானேன்" என்னுமுணர்வே துரியாதீதமாம் - சாக்கிராதீதமென்றும் சொல்வர். இதுதான் சாயுஜ்ஜியம்.

"சாயுச்சியம் சாக்கிராதீதஞ்சாருதல்
சாயுச்சியம் உபசாந்தத்துத்தங்குதல்
சாயுச்சியஞ்சிவமாதல்முடிவிலாச்
சாயுச்சியமனத்தானந்தசத்தியே" யென்றதாலு முணர்க.

இதனால் துரியாதீதம் அல்லது சாக்கிராதீதம் சாருதல், உபசாந்தத்திருத்தல், சிவமாதல், என்று சொல்வதெல்லாம் சாயுஜ்ஜியம் ஒன்றையே குறித்தமையுணர்க. "முடிவிலாச் சாயுச்சியமனத்து"—கலந்துபிரியாது ஏகரசமாய்க் கடவுளோடு ஐக்கியப்பட்ட மனத்திலேயுள்ளது **ஆனந்தசத்தி** (Bliss eternal, or the Peace that passeth all understanding.) இந்த உண்மையையுள்ளபடி யோர்ந்துணரமாட்டாது சிவன் கெட்டவன், கிறிஸ்து நல்லவன், சிவன் துன்மார்க்கன், கிறிஸ்து சன்மார்க்கன் என்று பிதற்றிப் பேசுவோர் அறியாதார். அருவுக்கு உருவுமைத்துத்தத்தம் எண்ணங்களை அதிலாரோபிக்கச்செய்து "தந்தெய்வம் எந்தெய்வமென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும்" எல்லாவற்றிற்கும் சாக்ஷிமாத்திரமாய் நின்றதெதுவுண்டோ அதுவே சத்தியம், உண்மை, சிவம். சாந்தம், கடவுள், தெய்வம், ஸ்வரூபம், சச்சிதானந்தம், இன்னம் என்னபேரிட்டழைத்தாலும் சரியே. ஏனெனில் உண்மையில் அது நாமரூபமற்றது; நித்ய, நிர்மல, நிராமய, நிராலம்ப, சத்திய, சாசுவத, சாந்த, ஆனந்த, ஸ்வரூப, ஸ்வயம்பிரகாசமாய், ஸர்வக்ஞராய், ஸர்வவியாபியாகி, எங்கும் ஸம்பூரணமாய் நிறைந்துள்ள பரிபூரணவஸ்து அது ஒன்றே. ஓம்தத்சத். அய்யனே யென்றாலும் சரி, அன்னையே என்றாலும் சரி, கிர்ஷ்ணா, இராமா, கிறிஸ்து என்று வேறு என்னபேரிட்டழைத்துப்பிரார்த்தித்தாலும் சரி, உண்மையிலுள்ளதும், இரந்தார்க்கருளீவதும் அது ஒன்றே.

* c. f. "Verigy, verily, I say unto you, the hour is coming, and now is, when the dead shall hear the voice of the Son of God: and they that hear shall live." John V-25. Also ib. 24. "He that heareth my word......hath passed from death unto life." St. Paul said. "He that has died away is freed from sin"—(Rom. vi-7.)



"அவளன்புக்கோரளவில்லை
அருளுக்கோர்குறைவில்லை
அடுத்தாற்கெடுப்பதில்லை
அவமதித்தாற் றொடுவதில்லை
அன்பர்க்கன்பானமெய்யளவள் செய்யும்
அற்புதலீலைகளை யென்சொல்வேன் தோழி!"

"உள்ளத்துமுள்ளன்புறத்துள்ளனென்பவர்க்
குள்ளத்துமுள்ளன்புறத்துள்ளனெம்மிறை;
உள்ளத்துமில்லைபுறத்தில்லையென்பவர்க்
குள்ளத்துமில்லைபுறத்தில்லைதானே" யென்றார் திருமூலநாயனாரும்.

கிறிஸ்துவும் அநேக விடங்களில் இப்படியே சொல்லியிருக்கிறார். சமயக்கொள்கைகளால் மனப்பழக்க மேற்படுவதன்றி வேறு முத்திப்பயனில்லை. கற்றதை மறந்த பின்னே கடவுளைக்காண்பதும். "மதமாறும் ஆறாக அங்கையின் விலாழியாக்கி" என்றார் தாயுமானவரும். விலாழி யென்றால், உட்கொண்டுமிழ்நீர். அறுமதங்களையும் அனுசரித்து இவற்றால் பயனில்லையென்று நீக்குவதே அவற்றை "உமிழ்நீருக்கு" ஒப்பிட்டதற்கு அருத்தமாம். திருமூலநாயனார் சொல்வதையும் கேளுங்கள்:—

"ஆறுசமயமுங்கண்டவர்கண்டிலர்
ஆறுசமயப்பொருளும் பயனில்லை
தேறுமின்தேறித்தெளிந்தபின்
மாறுதலின்றி *மனைபுகலாமே."

ஓம் சத்குருவேநம:

"அபிவாதயே......ஸத்யானந்த: சாந்தசர்மநாமாஹமஸ்மிபோ."

உ

ஓம்

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, 00.*

**(With the First Dawn of the 20th Century.)**

# ஆனந்தத்தாய்மொழி.

"அன்னைசொன்மிக்கமந்திரமில்லை."

(290 - வது பக்கத்தொடர்ச்சி.)

15. உள்ளத்தமர்தல்—Making of Peace. † Inward Rest.

ஆனந்தத்தோட்டத்தில் பேரின்பக்கனிதேடி
அடியலைந்து அலுத்துக் களைத்திட்டேன்

*மனை - வீடு - மோக்ஷம்.
†In this state, thoughts run down to a calm.

14களைநீங்கநீராடிக் கல்லாலநீழல்தனில்
அலுப்பாறநானு மரைமணியுட்கார்ந்தேன்.

16. அன்புமுளைத்தல்—First Perception of the Principle of Love.

உட்கார்ந்தவேளையிலே உடல்மறைந்தநித்திரையிலே
ஆனந்தத்தோட்டமதில் ஒரு அருமுளையைக் கண்டுவிட்டேன்;
கண்டுவிட்டமுளையதுவைக் கண்கொட்டாதற்றுநோக்கி
களைப்பிளைப்பு நீங்கிக் கனவுநனவும் நீங்கி
15ஆறியமர்ந்து அறிவாலே பார்த்திருந்தேன்;
கோணல்முளையதுவும் கொம்புபோல்நீண்டதுகாண்
நீண்டமுளைபின்னர்க் கிளைவிட்டுப்பிரிந்ததுகாண்
பிரிந்தகிளைகளவை யிலைவிட்டுத்தழைத்தனவே
தழைகளதிகரிக்கத் தளிர்கள்மிகக்கிளம்பினவே
தளிர்கள்மிகத்துளிர்க்கக் கப்புக்கிளைகள்கண்டேன்
இத்தனையும்செழித்தோங்க ஏகாந்தமாய்வளர்ந்ததுவே!
சின்னச்செடியாச்சு: சிறப்பானமரமாச்சு:
காயில்லையென்றுசொல்லிக் கைபிசைந்துநானழுதேன்.

17. ஆறுதல் கூறல்—Encouraging words.

பூக்கும்பருவமென்றாள் பிஞ்சுவிடும்காலமென்றாள்
அல்லும்பகலும் அன்பானநீர்வார்த்து
ஆதரவுசெய்துஅருமையாய் வளர்த்துவந்தால்
இன்பக்கனியீன்று மிதுநிச்சயம்நிச்சயமென்றாள்.
அம்மாளுரைத்ததுவை அன்பாலேநம்பினேன்நான்
நம்பிரான்செய்ததுவைச் செயலற்றோர்மதிப்பர்களோ!

18. அன்புவளர்த்தல்—Growing in Love or Development of Love.†

அற்பன்நான்முதலில்அகங்கையால் நீர்வார்த்தேன்
பிச்சைநான்வார்த்த நீரைப்பிருதிவியவள் பருகிவிட்டாள்
பேரின்பமரத்திற்குப்பேருக்கே நீர்வார்த்தேன்;
அம்மாளதைக்கண்டு அஹமலர்ந்துசிரித்திட்டாள்;
சிரித்திட்டசிரிப்பென்னைச் சின்னபின்னம்செய்ததுகாண்.

* c. f. "My sheep hear my voice and I know them and they follow me: And I give unto them eternal life and they shall never perish......John X. 27. 28.

† *Of Neighbourly Love* into *Christly Love* which is Perfect Love.

14. களைநீங்கநீராடி—c. f.

"அத்தனவதீர்த்தமாடும்பரிசுகேள்
ஒத்தமெய்ஞானத்துயர்ந்தார்பதத்தைச்
சுத்தமதாகவிளக்கித்தெளிக்கவே
முத்தியாமென்றுநம்மூலன்மொழிந்ததே."

15. ஆறியமர்ந்துஅறிவாலேபார்த்திருந்தேன்.—

"மாத்திரையொன்றின்மன்னியமர்ந்துறை
யாத்தனுக்கீந்தவரும்பொருளானவை
மூர்த்திகண்மூவர்க்குமூவேழ்குரவர்க்குந்
தீர்த்தமதாமதுதேர்ந்துகொள்ளீரே."



தலையதனில் நீர்மொண்டு கண்ணதனால் வார்த்துவந்தேன்
ஓட்டைக்குடமென்று அம்மாளதை யுருட்டித் தள்ளிவிட்டாள்;
16பேரின்பமரமதுவோ நீரின்றி வாடுது காண்:
பாபிநான் நீர்வார்க்கப் பாண்டமின்றித் தவித்துநின்றேன்.
அம்மாகனியென்று அவளுடன் நான்சண்டைபோட்டேன்;
இல்லையென்று சொல்லியவள் சண்டித்தனம் செய்தாள்.

பழமெங்கேயென அழுதேன்;
நீரெங்கேயெனச்சிரித்தாள்.
"சொன்னபடிநீர்வார்ப்பேன்?
"உள்ளபடிபழந்தருவாய்"
என்றுசொல்லிநானுமேதான்
என்செய்தேன் அறிவீரோ:

17ஹிருதயமெனும் தோண்டிதனையெகிர்த்துப் பறித்தெடுத்தேன்
எடுத்துஅதனால் வேணமட்டும் நீர்வார்த்தேன் நானுமப்போ;
மூன்றுநாளிப்படியே முனைந்து நீர்வார்த்துவந்தேன்;
நாலாநாள்கைத்தோண்டி நழுவிவிழுந்துடைந்ததுகாண்.

19. அசுத்தம் நீங்கல்—Cleansing of the Spirit.

தோண்டியுடைந்ததுவும் துக்கம்பெரிதாயிற்று;
அம்மாளைப்பழம்கேட்டேன் அநியாயவழக்கெடுத்தாள்,
கைநீட்டிநானும் கனகஷ்டம் செய்நட்டேன்;
அத்தனைக்கும் அம்மாள் அசையாமல் தானிருந்தாள்.
தோண்டியுடைந்ததே என் செய்வேன் என்றழுதேன்;
தோண்டியுடைந்தபோதே தோற்பையுமழிந்தது காண்.

20. ஆராய்ச்சிசெய்தல்—Searching the Heart,

இப்படியழுகையிலே யென் 'கண்ணு' * ஓடிவந்தார்
அழாதேயழாதேயென்று அவர்சல்லடையை நீட்டவந்தார் †

* கண்ணைப்போலும் அருமையான ஒரு சற்சீஷர்என்றும், இதை யெழுதினவர்க்கு 'அண்ணு'வும் 'கண்ணு'வுமாமென்றும் கொள்க. c. f. "He that doeth my Father's will, he is my mother and sister and brother."

† மேற்குறித்தவர் அம்மாள்வார்த்தையைக் கிரகித்தும் கிரகிக்காதவர்போல் பேசிவந்ததாலும், விடாது ஆக்ஷேபங்கள்சொல்லி மனதைச் சலிக்கச்செய்வதில் பிரியமுள்ளவராயிருந்ததாலும், இவரை 'சல்லடை' 'சல்லடைக்கண்' என்னும் பரிநாமங்களா லழைப்பது விளையாட்டிலாரம்பித்துவழக்கமாய்விட்டது.

16. பேரின்பமரமதுவோ நீரின்றி வாடுது காண்.—

"ஆவிக்கமலத்தினப்புறத்தின்புற
மேவித்திரியும்விரிசடைநந்தியை
கூவிக்கருதிக்கொடுபோய்சிவத்திடை
தாவிக்குமந்திரந்தாமறியாரே."

17. ஹிருதயமெனும்தோண்டி......நீர்வார்த்தேன்.—

"உள்ளத்தினுள்ளேயுளபலதீர்த்தங்கள்
மெள்ளக்குடைந்துநின்றாடார்வினைகெடப்
பள்ளமுமேடும்பரந்துதிரிவரேற்
கள்ளமனமுடைக்கல்வியில்லாரே."

அம்மாளுமென்னையறியாக்குழந்தையென்று
சல்லடைக்கண்ணாலே நீர்வார்ப்பாயென்றுரைத்தாள்
சல்லடையைப் பிடுங்கிநான் சாட்டியெறிந்துவிட்டேன்.

21. அருப்பசியாலருளமுதுக்குச்சண்டையிடல்—Thirsting for Truth—* Fighting for Grace.

அம்மாளைமடிபிடித்து அழிவழக்கைச் சொல்லென்றேன் :
சொன்னபடி நடந்தையானால் சும்மாஇருந்திடுவேன் :
பேச்சுப்புரண்டையானால் பிராணனைவிட்டிடுவேன் [18]
என்று சொல்லியம்மாளையிழுத்தேன்மடிபிடித்து

22. பசிப்பிணிநீக்கப் பக்குவமறிதல்—Testing fitness to receive the Word which is the Bread of Life.

பிள்ளை விளையாட்டுப் போதுமென்று அவள்கண்டு
சின்னதும் பெரிதுமாய்ச்சோதனைகள் பலசெய்தாள் :
[19]உள்ளத்தையாராய்ந்தாள் உளமெங்கும் சோதித்தாள்
கண்டிப்பாய்வார்த்தை சொன்னாள் கையால்வாய் பொத்தென்றாள்
இத்தனையும் சொல்லி என்ன செய்தாள் என் தாயார் :

23. கருணைவெள்ளம்—ஞானஸ்நானம்—The flood of Grace—Baptism of Spirit.

[20]கருணையாம் சமுத்திரத்தைக் கண்ணாலே காட்டிவிட்டாள்
மண்வெட்டிகொண்டுமடைதிறந்துவிட்டுவிட்டாள்
கருணைசமுத்திரம்கரைபுரளத்ததும்புதுபார்
மடைவாய்கிழிய ஓடுதுபார்தண்கருணை
தண்கருணைவெள்ளமென்னைத் தலைமூழ்கச்செய்ததுகாண
கருணைஜலம்பட்டு அங்கமெல்லாம் குளிர்ந்ததுபார்
தாகம்தணிந்ததுபார்—தாகவிடாய்தீர்ந்ததுபார்.

அருட்பேறு—Boon of Grace.

கருணைஜலம்பாயப்பேரின்பமரம்பூத்ததுகாண்
பூத்ததுகாண்கருணையதால் பிஞ்சுவிடுமினியதுவாய்

* c. f. "And from the days of John the Baptist until now the Kingdom of heaven suffereth violence and *the violent take it by force*"—Christ.

18. பிராணனைவிட்டிடுவேன்—c f.

"அரித்தவுடலையைம்பூதத்தில்வைத்துப்
பொருத்தவைம்பூதஞ்சித்தாதியிற்போக்கு
தெரித்தமனாதிசத்தாதியிற்செல்லத்
தரித்ததுதாரணைதற்பரத்தோடே."

19. உள்ளத்தையாராய்ந்தாள் &c.—

"எண்ணாயிரத்தாண்டுயோகமிருக்கினும்
கண்ணாரமுதனைக்கண்டறிவாரில்லை
யுண்ணாடியுள்ளேயொளிபெறநோக்கிற்
கண்ணாடிபோலேகலந்திருந்தானே."

20. கருணையாம்சமுத்திரத்தைக் கண்ணாலேகாட்டிவிட்டாள்.—

"அருளாலமுதப்பெருங்கடலாட்டி
யருளாலடிபுனைந்தார்வமுந்தந்திட்
டருளானவானந்தத்தாரமுதூட்டி
யருளாலென்னந்தியகம்புகுந்தானே."



பிஞ்சுவிட்டால்காயாகும் காய்முத்திப்பழமாகும்
பேரின்பப்பழம்பழுத்தால் தானேயதுநழுவிவிழும்
நழுவிவிழும்பழமதனை நாமேந்தித்தின்னிடலாம்
தின்னத்தெவிட்டாது தேன்மயக்கம்வாராது
எப்போதுமின்பரச மன்பாகவாயிலூறும்.

25. அருளானந்தம்—Joy of Grace.

அன்பையறியீரோ அழிவற்றமாந்தர்களே
இன்பசுகமறியீரோ இல்லறக்கிழவர்களே
[21]நீங்களறிந்துமறியவில்லை யிருந்துமில்லையென்றிருக்கிர் ;
இல்லாதையிருக்கென்று இறுமாந்துநீரலைவீர் ;
இருப்பதையில்லையென்று ஏமாந்துஇரங்கிநிற்பீர் ;
உள்ளதையுள்ளபடியுளவறிந்துகண்டுகொண்டால்
உங்களிலும்மேலானோர் எங்குண்டுசொல்வீரே.

ஓம் தத்ஸத்.
அம்பரம் வாழ்க, ஆனந்தம் வாழ்க, அம்மாள் துணை.

A FORM OF UNIVERSAL PRAYER.

## * பிரார்த்தனைப்பத்து.

1. அன்பேயருளே அழியாமுதலே
இன்பேரசமே இசையுட்சுவையே
உன்பேரொளியை உள்ளாதுணரா
தென்பேயுருகா தேங்குவனையே !

2. ஐயனேயுன்றன் அருளிலாச்சீவன்
மெய்யனேயன்பன் மருளிலாழ்ந்துள்ளன்
வெய்யனேயுன்றன் வெண்மதிதண்ணருள்
பையனேனுள்ளம் பாயுமோவிண்ணவ !

3. விண்ணவனுமென்னண்ணலேபோற்றி
மண்ணவனுமென்னுண்ணின்றிலங்குவை
கண்ணதுகாக்குமிமைபோலென்றனை
விண்ணதுமேவமண்ணினிற்காப்பையே.

21. நீங்கள் அறிந்துமறியவில்லை.—

"அகம்புகுந்தானடியேற்கருளாலே
யகம்புகுந்துந்தெரியானருளில்லோர்க்
ககம்புகுந்தானந்தமாக்கிச்சிவமா
யகம்புகுந்தானந்தியானந்தியாமே."

* C, f. The Lord's Prayer and Sri Parananda's commentary thereon.

4. காப்பையேயென்றனைக்காரிருள்போக்கியே
காப்பையேயென்றனைக்காயமின்னாட்டிடை
காப்பையேநானெனும்பாவமழிந்திடக்
காப்பையேநீயெனைக்காதல்வைத்தருளினால்.

5. அருளினாலன்றியொராக்கமுமில்லையால்
மருளினால்நானெனச்செய்வதொன்றில்லை;
தெருளினாலுள்ளந்தெளிந்திடச்செய்யுமுன்
னருளினாலன்றியாவதொன்றில்லையே.

6. இல்லையேஅண்ணலே யேதுமுனையன்றியே
எல்லையில்விண்ணிலே யுன்றாள்கைபோலவே
தில்லையில்மண்ணிலே யுன்றாள்கைசெல்கவே
எல்லையில்கருணையாலெனையாண்டுகொள்கவே.

7. ஆண்டுகொள்வாயெனையாரமுதூட்டி நீ
காண்டுகொள்ஏழைநான்: காரணம்கேட்கிலோ
வேண்டுவனுன்னருள்வேறொன்றுமுள்கிலேன்
வேண்டுமென்றேங்கினேன்வேட்கைதீர்த்தாள்வையே.

8. ஆள்வையேமாதாவாயருளமுதூட்டிவைப்பாய்
வேள்வியிலேன்நாதா வெய்வினைதீர்த்திடுவாய்
மாள்வேன்மயக்கொழித்து மாயவலையறுத்திடுவாய்
கேள்வியிலேன்வேதாநான் கேடுறலுனக்காமோ!

9. உனக்காமோநாதா உலகெலாமாளீசா!
உனக்காகாதொன்றுமுளதோசொல்லீசா!
எனக்காமோவுன்றனுண்மையுணரவுள்ளீசா!
எனக்காவின்னருள்சாதித்தெனையாண்டருள்வல்லீசா!

10. ஈசாபோற்றி யென்னிறைவாபோற்றி!
மாசிலாமணியேமரகதவொளியேபோற்றி!
ஏசிலாமொழியாலிரந்தார்க்கருள்நேசாபோற்றி!
ஆசிகூர்! அண்ணலேவாசியென்றுன்றாள்பற்றினேன்போற்றி.

ஓம்தத்ஸத்.

---

சத்குருவணக்கம்.

அன்னையேகுருவே அருளொளிக்கண்ணே!
உன்னையேநம்பியானுள்ளொளிகண்டேன்;
என்னையேகருவாய்க்கண்ணுள்ளேவைத்து
முன்னையேயுருவாய்ப் பெற்றாய்போற்றி!
ஓம் நமோநம:

---



உ

THE CORONATION DURBAR AT DELHI.

# டில்லியில் நடந்த பட்டாபிஷேக தர்பார்ச் சிறப்பு.

## கப்பல் பாட்டு.

(307-வது பக்கத்தொடர்ச்சி.)

### 10. நகரங்கள்தோறும் செய்த சிறப்பு.

விந்தையுறும் மகுடாபிஷேக
விளம்பரத்தை மேற்கொண்டு
சிந்தையுவந் நகர்தோறும்—செய்த
சிறப்புதனை இனிச்சொல்வேன்.

(முடுகு.)

1. பந்தமுடன் அங்கங்கு சபைகள்பல கூடி
பகருமொரு பட்டாபிஷேகமதை நாடிப்
பண்ணுதற் குரியவகை ஆராய்ந்து கொண்டு
பண்பாக வுத்சவம் செய்தற்கு வேண்டும்

2. சிந்தையுறு திரவியம் நிறையவே சேர்த்து
நீணகரில் இல்லங்கள் பழுதறப் பார்த்து
நிலவுவெண் சுண்ணம்பு நலமா அடித்து
நிகரரிய சிங்காரமா அலங் கரித்து

3. விந்தையுறவே நெடியவீதியில் நிலைத்து
விண்ணளாவும் பெரியவெற்றியில் வளைத்து
மிக்கநம்மரசரவர் நீடூழி வாழ்க
மேலான அரசாணி நீடூழி வாழ்க

4 சந்ததமும் அவர்களைத் தற்பரன் காக்க
சத்ருபயமில்லாமல் அவர்நம்மைக் காக்க
தகைபெற்ற ராஜகுலம் முழுதும் சுகமாகச்
சந்திரசூரிய ருள்ளவரையில் நமை ஆள்க

5. இந்தமாநில மெலாம் செங்கோல் செலுத்தி
என்றென்றும் அழியாமல் நிலையாய் நிலைத்து
எழிலுறுக என்றுபல ஆசிமொழி தீட்டி.
ஏராளமாகத் துகிற்கொடிகள் நாட்டி.

6. பந்தல்பல அங்கங்கு அழகாகப் போட்டு
பண்ணரிய அணிகள்பல எங்கெங்கும் காட்டி

பரிவாக ஜனவரி முதல்தேதி அன்று
பட்டாபிஷேகம் கொண்டாடும் நாள் என்று

7. முந்தியே தெரிவித்தபடி வான்மழைக்கண்
மூனுமிடிபோலவே அதிர்வெடி முழக்கி
முனிவிலா தேழை பரதேசிகள் களிக்க
முப்பழத்தொடு பக்ஷ்யபோசனம் அளித்து

8. நந்தலற வேபுதிய வஸ்திரங்கள் தந்து
நலமாகப் பள்ளியிற் பிள்ளைகள் உவந்து
நகைகொண்டு விளையாடி வகைவகையாய்ப் பண்டு
நற்சுவைகொள் சீனிமிட்டாய்கள் பல உண்டு

9. சிந்தைமகிழ் கொள்ளவே அன்பொடு கொடுத்து
திருமருவும் அரசர் அரசாணி தம்படத் தைச்
செழுமலர்க ளாலழகு திகழ அணி செய்து
தேடரிய வாத்யகோஷங்களொடு நொய்து

10. புந்திமகிழ்கூரவே உயர்யானை மீது
பொலிவாகவேவைத்து இருபுறமும் ஓதும்
பூங் கைபிடித்தரிய சாமரை இரட்டி
பொற்புடனே ஆலவட்டங் கொடி திரட்டி

11. உந்துமகிழ்வோடு முயர்உத்தியோ கஸ்தர்
உற்றபல கரிபரிகள் தேர்கள்மிசை பெற்று
உத்திதன்கரை புரண்டதுபோல உள்ளம்
உவகைபெற நகரமுறை:மாந்தரின் வெள்ளம்

12. தந்தப் அணி ஆடைகள் தரித்து மகிழ்வோடு
சதிராகவேபின் தொடர்ந்துவர நீடி
சரசமாக்கொண்டினிது நகர்வலம் செய்து
சாற்றும்வழி யெங்கணும் பூமாரி பெய்து

13. வந்துபின்தர்பார் செய்மண்டபம் சார்ந்து
வரிசையொடிருந்தரசர்மகிமையது தேர்ந்து
மாண்பாகப் பட்டாபிஷேகமவர் கொண்ட
வண்மையை விளம்பரம் செய்து மகிழ்வுண்டு

14. கந்தமலர் மாலைதாம்பூல முதல் நன்கு
கருதிவந்தவர் யாரும் மகிழ்வுற வழங்கி
கற்றோர்சொல் கவிமாலை நற்சுவைகள் கொண்டு
கனிவுடனே பலவான விளையாடல் கண்டு



15. சுந்தரியதீபங்கள் மனைதோறும் மட்டில்
நூறுநூறாயிரம் ஒளிமேவ இட்டு
நுவலரிய வாணமத்தாப்பு வேடிக்கை
நூதனமாச் செய்துமிக மகிழ்ச்சி நீடிக்க—ஏலேலோ.

## 11. வாழி.

உலகமெங்கும் ஒருகுடைக்கீழ்—ஆளும்
உத்தமனார்தமக்கு அவர்
குலம்வருவோர் முதற்பலர்க்கும்—வாழி
கூறுவதை இனிக்கேளும்.

(முடுகு.)

1. நலமலியும் எட்வேர்ட் எனப்பெறு பிரசித்தி
நண்ணிநெறி பிசகாது செங்கோல் செலுத்தி
நானிலத்தைச் சார்வ பௌமராய் ஆளும்
நவிலரிய குணசீலர் நீடூழி வாழி

2. நிலவுமோர் அலக்சாந்திரா வென்னும் நீளும்
நிமலகுணவதி ராணியவர்கள் மிக வாழி
நேசமுறு மைந்தராம் பவராஜா வாழி
நிகழும் அவர்தேவியும் புதல்வரும் வாழி

3. இலகுமுயர் ராஜகுல மதனிடை உதித்தோர்
எல்லோரும் நலமாகப் பல்லாண்டும் வாழி
இங்கிலாந்தொடு மஹாபிரிட்டிஷ் இராஜ்யம்
இரவிமதி யுள்ளளவும் எழில்நீடி வாழி

4. அலகில்வளமுறும் இந்தியாதேசமீ வாழி
அருமையுடனாளதுரைத்தன மென்றும் வாழி
அமருமொரு வைசராயானபிரபு கர்ஸன்
அவர்கள்தம் குலமோடு நலமாக வாழி

5. பலநலமும் நாமடைய அரசர்கட்டளையால்
பாலிக்கும் உத்யோக அதிகாரர் வாழி
பண்புடனே செய்கின்ற நீதிமிக வாழி
பரிவாகச் செய்கின்ற தருமங்கள் வாழி.

6. குலவும் அறமதுநான்கு தானூன்றி வாழி
குடிகள்துயர் அறியாமல் இனிதாக வாழி

பரிவாக ஜனவரி முதல்தேதி அன்று
பட்டாபிஷேகம் கொண்டாடும் நாள் என்று

7. முந்தியே தெரிவித்தபடி வான்மழைக்கண்
மூனுமிடிபோலவே அதிர்வெடி முழக்கி
முனிவிலா தேழை பரதேசிகள் களிக்க
முப்பழத்தொடு பக்ஷயபோசனம் அளித்து

8. நந்தலற வேபுதிய வஸ்திரங்கள் தந்து
நலமாகப் பள்ளியிற் பிள்ளைகள் உவந்து
நகைகொண்டு விளையாடி வகைவகையாய்ப் பண்டு
நற்சுவைகொள் சீனிமிட்டாய்கள் பல உண்டு

9. சிந்தைமகிழ் கொள்ளவே அன்பொடு கொடுத்து
திருமருவும் அரசர் அரசாணி தம்படத் தைச்
செழுமலர்க ளாலழகு திகழ அணி செய்து
தேடரிய வாத்யகோஷங்களொடு தொய்து

10. புந்திமகிழ்கூரவே உயர்யானை மீது
பொலிவாகவேவைத்து இருபுறமும் ஓதும்
பூங் டைபிடித்தரிய சாமரை இரட்டி
பொற்புடனே ஆலவட்டங் கொடி திரட்டி

11. உந்துமகிழ்வோடு முயர்உத்தியோ கஸ்தர்
உற்றபல கரிபரிகள் தேர்கள்மிசை பெற்று
உத்திதன்கரை புரண்டதுபோல உள்ளம்
உவகைபெற நகரமுறை:மாந்தரின் வெள்ளம்

12. தந்தம் அணி ஆடைகள் தரித்து மகிழ்வோடு
சதிராகவேபின் தொடர்ந்துவர நீடி
சரசமாக்கொண்டினிது நகர்வலம் செய்து
சாற்றும்வழி யெங்கணும் பூமாரி பெய்து

13. வந்துபின்தர்பார் செய்மண்டபம் சார்ந்து
வரிசையொடிருந்|தரசர்மகிமையது தேர்ந்து
மாண்பாகப் பட்டாபிஷேகமவர் கொண்ட
வண்மையை விளம்பரம் செய்து மகிழ்வுண்டு

14. கந்தமலர் மாலைதாம்பூல முதல் நன்கு
கருதிவந்தவர் யாரும் மகிழ்வுற வழங்கி
கற்றோர்சொல் கவிமாலை நற்சுவைகள் கொண்டு
கனிவுடனே பலவான விளையாடல் கண்டு



15. நுந்தரியதீபங்கள் மனைதோறும் மட்டில்
நூறுநூறாயிரம் ஒளிமேவ இட்டு
நுவலரிய வாணமத்தாப்பு வேடி க்கை
நூதனமாச் செய்துமிக மகிழ்ச்சி நீடிக்க—ஏலேலோ.

---

## 11. வாழி.

---

உலகமெங்கும் ஒருகுடைக்கீழ்—ஆளும்
உத்தமனார்தமக்கு அவர்
குலம்வருவோர் முதற்பலர்க்கும்—வாழி
கூறுவதை இனிக்கேளும்.

(முடுகு.)

1. நலமலியும் எட்வேர்ட் எனப்பெறு பிரசித்தி
நண்ணிநெறி பிசகாது செங்கோல் செலுத்தி
நானிலத்தைச் சார்வ பௌமராய் ஆளும்
நவிலரிய குணசீலர் நீடூழி வாழி

2. நிலவுமோர் அலக்சாந்திரா வென்னும் நீளும்
நிமலகுணவதி ராணியவர்கள் மிக வாழி
நேசமுறு மைந்தராம் பவராஜா வாழி
நிகழும் அவர்தேவியும் புதல்வரும் வாழி

3. இலகுமுயர் ராஜகுல மதனிடை உதித்தோர்
எல்லோரும் நலமாகப்:பல்லாண்டும் வாழி
இங்கிலாந்தொடு மஹாபிரிட்டிஷ் இராஜ்யம்
இரவிமதி யுள்ளளவும் எழில்நீடி வாழி

4. அலகில்வளமுறும் இந்தியாதேசமீ வாழி
அருமையுட னாதுரைத்தன மென்றும் வாழி
அமருமொரு வைசராயானபிரபு கர்ஸன்
அவர்கள்தம் குலமோடு நலமாக வாழி

5. பலநலமும் நாமடைய அரசர்கட்டளை யால்
பாலிக்கும் உத்யோக அதிகாரர் வாழி
பண்புடனே செய்கின்ற நீதிமிக வாழி
பரிவாகச் செய்கின்ற தருமங்கள் வாழி.

6. குலவும் அறமதுநான்கு தானூன்றி வாழி
குடிகள்துயர் அறியாமல் இனிதாக வாழி

கூறுபல கலைவாழி மறைவாழி மறை யோர்
குலம்வாழி நலமாரும் நெறியாவும் வாழி.

7. தலைமையுறு சக்ரவர்த்தியி னடியில் நாளும்
தாழ்கின்ற பலதேச மன்னவர்கள் வாழி
சாற்றுமவர் கோல்வாழி கோற்கீழில் வாழ்வார்
தளராமல் நீடூழி திருவோடும் வாழி.

8. கலையுலிய நிலவுமொரு தமிழ்நாடு வாழி
கழறுதமிழ் மொழிவாழி கனமேவி யென்றும்
கடலுலகில் நெடுநாளும் நானூது மிந்தக்
கப்பலெனும் அரியதமிழ் ஒப்பறவே வாழி—ஏலேலோ.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

முற்றும்.

---

## MAHA SIVARATRI—WHAT DOES IT MEAN?

## மஹாசிவராத்திரி: அதன்நோக்கமென்ன?

மாசிமாசம் கிருஷ்ணபக்ஷச்சதுர்த்தசிக்கு சிவராத்திரியென்றுபெயர். அதாவது சிவனுக்குரிய இராத்திரி அல்லது சிவன் அடியார்க்கு அருள்புரியவரும் இராத்திரி. இது விஷயமாயுள்ள ஐதிகமென்னவென்றால், மஹாபாபியும் குரூரனுமான ஒரு வேடன் அன்று இராத்திரி தற்செயலாய் நேர்ந்த சங்கடங்களினிமித்தம் உயிராசைவிட்டு உள்ளத்தை நாடி இரவெல்லாம் விழித்திருந்து தன்பாபங்களை நினைந்து பரிதவித்து வருந்தி புலிவாய்ப்படாது பிழைப்பான் வில்வமரத்திலேறி அது வில்வமரமென்று தெரியாமலே அதன் இலையைப்பறித்துப் போட விடியற்காலம் அவனை விழுங்கக்காத்திருந்த வியாக்கிரம் மறைந்து சங்குநாதம் கேட்கச் சிவன் உமாசமேதராய்ப் பூதகணங்களோடு அவனுக்குத் தரிசனம் தந்தருளினார். ஆகையினால் நித்யபூஜையும் மாசத்துக்கொரு பூஜையும் கூடச்செய்ய இயலாதாரும் இத்தினத்தன்று உபவாசமிருந்து சிவனையர்ச்சித்து சிவத்தியானத்திலிருந்தால், முழுமூடனும் மஹாபாதகனுமான வேடனறியாது செய்த அருச்சனைக்குகந்து தரிசனமளித்த பரமதயாளுவாம் சிவபிரான் உள்ளமுணர அருச்சிக்கும் பக்தர்கள் பாபங்களை மன்னித்து அவர்கள்பக்திக்கு இரங்கிப் பக்குவமறிந்து பரமதரிசனமளிப்பாரென்பது சிவராத்திரி விரதமேற்படுத்தின மேலோர்கருத்து.

இக்கருத்தினுண்மையைச் சற்று உட்புகுந்து ஆராய்வோம். இதனுண்மையையுள்ளபடி ஞானக்கண்ணால் பார்த்தால் இதில் முக்கியமாய் உள்ளது: பிழையோர்ந்து பரிதவித்தலும், ஆபத்துவந்தவிடத்து அந்நியர்க்கு நாம் செய்த இடர்களைநினைத்து இரங்கலும், இரங்கிவருந்தி யீசன்மேல் பாரத்தைப் போட்டு அனாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! உன்பாதாரவிந்தமே சரணம்; உனையன்றி இப்பாபிக்குவேறு கதியில்லை; உன் கருணைமிகுதியினாலே யென்னை யிரக்ஷித்துக்காப்பை யென்று உன்னைநம்பினேனென்று, முற்றும் அவன்தலையில் பாரத்தைப்போட்டு ஈசன் நம்மை இரக்ஷிப்பானோ கைவிடுவானோ என்கிற சந்தேகம் சிறிதும் புகுவதற்கின்றி ஒரே உறுதியாக உண்மைகடைப்பிடித்து உள்ளத்தமர்வெய்தி, "என்நாதன் இதோவருவான், இன்றிரவேவந்து என்னைக்காப்பான். ஏழைக்கிரங்கி ஏழைமுகம் பார்த்து எனையாண்டருள்வா"னென்று தீர்க்கமாய் நம்பி, "என்நாதன் வருங்காலையில் நான் தூங்கிப்போனால் அவன் எங்கே வந்து பார்த்துவிட்டு வகையறியாது மறைந்து விடுவானோவென்று எண்ணி அவன்வரவை யெதிர்பார்த்து நான் விழித்திருப்பேன்: விழித்திருந்தேயான் எனையாள வருவான் வழிப்பட்டு மீள்வேன்" என்று உறக்கங்கொள்ளாது ஜாக்கிரதையாகக் காத்திருத்தலே உண்மையான உள்ளத்துப் பூஜையாம். இப்பூஜை செய்ய வறியார்க்கே வெளிப்பூஜைபாடம்பரங்களாம். அவ்வாடம்பரங்களும், சொப்பு,மரப்பாச்சி வைத்துவிளையாடிவீட்டுக்குடித்தனத்தன்மையுணரும் குழந்தைகள் விளையாட்டுப்போல் இவ்வுண்மையுணரவென்று ஏற்பட்டனவேயன்றி வேறல்ல. மனந்தூயாது, உள்ளங்கனியாது, ஊனொழியாது எம்பிரானைக்காணல் யார்க்கும் சாத்தியமிலையால் இவ்வுண்மையுணர்ந்த பெரியோர்கள், பரமார்த்த முணரவறியாப் பாமரஜனங்கள் நல்வழிப்பட்டு நயமெய்துவான், இக்கதையைச் செப்பி நயம்படு மொழியால் நன்முறை காட்டினரென்பதே சத்தியம். ஆனால் இது ஒரு கட்டுக்கதையாவென்று கேட்கிலோ? ஏன்! உண்மையாகவேயிருக்கலாம். இன்றைக்கும் நாளைக்கும் இதன் உண்மை உண்மையாகவேயிருக்கும். உண்மைக்கு ஒரு நாளும் அழிவில்லை. பூமத்ய ஸவர்க்கலோகங்களெல்லாம் அழிந்தாலும் உண்மை அழியாது. உண்மையை விளக்க உதாரணமாகச் சொல்லியகதை கண்சாட்சியாகக் கண்டதானாலென்ன? கற்பனாசக்தியால் உண்டானாலென்ன? இவ்வுலகமே சற்பனாசக்தியாலுண்டானதாயிருக்கும்போது இவ்வுலகத்தில் நடக்கும் சம்பவங்களாம் வியவஹாரங்களைக் கற்பனையென்று சொல்லிக்கழிப்பது எப்படியாகும்? நாம் கவனிக்கவேண்டியது அதிலடங்கிய உண்மையை. உவமானத்தைக்கொண்டு உவமேயத்தை யுணரவேண்டியது முறை. உவமேய முணர்ந்துவிட்டால், உவமானத்தின் உதவி அப்புறம் வேண்டுவதில்லை. அதுவரையில் உவமானத்தைத் தள்ளல் சாத்தியமில்லை. தள்ளினால் உண்மை யுணரத் தடையுண்டாகும். "நெல்லுமுளைப்ப தரிசியேயானாலும் விண்டுமிபோனால் முளையாதாம்." அதுபோல், உள்ளத்திலூன்றிக் கருத்தரிப்பது உவமானத்தின்கண்மறைந்துள்ள உண்மைக்குறைவிடமாம் உவமேயப் பொருளானாலும், உண்மை உதிக்கும் வரையில் அவற்றைப் பிரிக்கலாகாது. பிரித்தால் காரியம் கெட்டுப்போம். உண்மை உதித்துவிட்டால், மற்றவைதானே விட்டுப்போம். உற்றுநோக்கில் வித்து (அரிசி) மக்கி, உமிவிண்டு (ஊன் நீங்கி), உள்மடிந்தபின்னே (உள்ளம்கனிந்து விழுந்தபின்னே) முளையுண்டாகிப் பயிர் செழித்துவளரும். "ஓர் வித்து மண்ணில் விழுந்து மக்கிமடிந்தாலன்றி அது பலனளிப்பதில்லை; மக்கிமடிந்தாலோ அது ஒன்று பலவாக ஏராளமான பலனைக் கொடுக்கும்" என்றார் மேலோரும்.

"உள்ளங்கனிந்தாரை யுள்ளபடிபோற்றுவாயே
"உளங்கனிந்தேதான் வீழ்ந்தால்உவகையுடனேக் [இடுவாய்"

என்றார் பிறரும். இக்கதையின் உள்மர்மமின்னதென்று உண்மையுணர்ந்தார் உதவிகொண்டு பார்த்தால் இரவெல்லாம் கண்விழித்து வில்வமரத்திலுள்ளதழைகளை யெல்லாம் அவ்வேடன் பறித்துப் போட்டதினாலொன்றுமில்லை. இவை அவனுடைய உள் நிலையையுணர்த்தும் உச்சிதக்குறிகளாகக் கொள்ளவேண்டுமேயன்றி வேறல்ல. கிராதகனும் அவ்வேடன் புலியால் துரத்தப்பட்டு நடுக்காட்டில் வழிதப்பித் தன்னந்தனியனாய் இருட்டிற்குப் பயந்து எங்கும் ஓடமுடியாமல் கைக்கெட்டினதாய்க் கிட்ட விருந்த ஒரு மரத்தின்மேலேறினான். ஏறியும் வியாக்கிரம் அவனை விடாததுகண்டு தான் அதன்வாயினின்று தப்பவழியறியாது, அம்புமின்றி, வில்லுமொடிந்து வெறுங்கையனாய் நிற்கவே, தான் வழிப்போக்கர்களைத் தடுத்து வருத்தியபொழுது அவர்கள் உயிரும் மனமும் இப்படித்தானே துடித்திருக்குமென்று நினைத்தான். நினைக்கவும் அவன் செய்த கிராதகச் செய்கைகளெல்லாம் அவன் மனக்கண்முன்னே வரிசையாக அணிவகுத்துச் செல்லும் சேனாவீரர்கள்போல் செல்லத் தொடங்கின. அவைகளைப் பார்த்ததும் அவனுக்கு இந்தகதி நேரிட்டது அவன் வினைப்பயனே யென்றும், புலி தன்னைப் பூரித்தினாலும் தனக்கு அது தகுமென்றும் நினைத்தான். நினைத்து உயிராசைவிட்டு உள்ளத்தில் சமரஸப்பட்டானோ இல்லையோ, தான் பாபியேயானாலும் கருணைக்கடலாம் ஈசன் தன்னையும் கண் பார்த்து இரக்ஷிப்பாரென்கிற எண்ணமுதித்தது. எண்ணமுதிக்கவும் அது உள்ளத்தில் வேரூன்றி உச்சிதமாமோர் நம்பிக்கையாயிற்று. உள்ளத்தில் உண்மையாக நம்பவும் அவனுக்குத் தைரியமுண்டாயிற்று. கதிமோக்ஷம் தனக்கு முண்டு என்று காணவே இப்புலிவாய்ப்படாது இராப்பொழுதை எப்படியாவது சாக்கிரதையாகப் போக்குவோமென்று தீர்மானித்தான். தீர்மானிக்கவும் இயல்பாய்வந்த உடலசதியாலுண்டான தூக்கத்தை மாற்ற உபாயந்தேடினான். உபாயந்தேடவும், உள்ளபடி தன்னால் செய்வதொன்றில்லையால், ஈசனை நம்பி இவ்விலைகளைப் பறித்துப்போட்டுக்கொண்டு எப்பொழுது 'விடுதி' நேரிடுமென்று விழித்துக்கொண்டிருப்போமென்று நினைத்து அப்படியே செய்யத்தொடங்கினான். செய்யத்தொடங்கவும், அத்தொழிலில் தனக்குண்டான உயிர்பயத்தை மறந்தான்; கீழேநின்ற வியாக்கிரத்தையும் பிந்தி மறந்தான்; செய்தொழிலில் சிரத்தையுண்டாகத் தூக்கத்தையும் சிரமத்தையு மறந்தான்; தூக்கத்தை மற

ந்தபோதே தன்னையும் மறந்தானென்பது சொல்லாமே யமையும். தன்னை மறந்தபோதே "தன்னுள் நாடலையும்" மறந்தான். தானன்றித் தன்னினை வன்றி மனது ஏகாக்கிராந்தமாகி ஏவிவிட்ட சூத்திரப்பதுமைபோல், அவன் கைகள் மரத்தைப்பற்றிக்கொண்டு இலைகளைமட்டும் பறித்துப் போட்டுக்கொண்டிருந்தன. விடியற்காலத்தில் வெளிச்சமுண்டாகவே அதேநிலையிலிருந்து மேனோக்கிப் பார்த்தான். தன்னைமறந்தவனுக்குத் தன்னுணர்வு பிறக்கும் சின்னங்களைக் கண்டான். சங்குநாதம், பூதகணங்கள், சிவனுமை, இவர்களைக்காண்டல் ஸ்வாத்ம தரிசனமாம். தன்னுளே பார்த்துணரப் பழகாதவனுதலால், தன்னகங்கண்டது வெளியகத்தேப் பிரதிபலிக்கக் காணலுற்றான். இதுவரையில் சென்றவன் (இந்நிலை யடைந்தவன்) இவ்வுலகை வென்றவன். இதற்கு மேலுள்ள வழியை உலகுள ஊனர்க்கு உரைப்பது தட்டெனவிடுத்தார். இவனுடைய அந்தரங்கநிலையை உள்ளபடி யாராய்ந்து பார்த்தால் இவன் படிப்படியே ஏறிச் சிவனைத் தரிசித்தநிலை பின்வரும் திருமந்திரப்பாவில் திருத்தமாய்ச் சொல்லியிருப்பதால் விளங்கும்,

"நனவில் நனவுபுலனில்வழக்கம்
நனவிற் கனவுநினைத்தல்மறத்தல்
நனவிற்சுழுனையுண் ணுடலிலாமை
நனவிற்றுரியமதீதத் துரந்தியே."

விழித்தவன் விழித்தபடியிருந்தால் புலன்களினுலறிந்துணர்ந்து சஞ்சரிப்பான்; விழித்தவன் விழித்தபடி தான் நினைத்ததை மறந்தால் அது நனவிற் கனவாகும்; விழித்தவன் விழித்தபடி நினைத்தல் மறத்தலிரண்டுமொழிந்து தன்னுள்ளந்தானறியானுகில் அது "நனவிற்சுழுனை" அதாவது "விழிப்பில் தூக்கம்;" விழித்தவன் தன்னுள்ளந்தானறியாத் தூக்கம்விட்டுத் தன்னுணர்வு (உள்ளத்துணர்வு) யாப்பெறுவானுபின் அது நனவிற்றுரியமாம். (இந்த அவஸ்தையில்தான் ஆத்மா இருட்படலத்தால் மூடப்பெறாது விழித்திருப்பது. இதை 'யோக நித்ரை' யென்றும் 'அறிதுயில்' என்றும் 'Vigilance,' என்றும் பலர் பலவாருச் சொல்வார்கள்). இந்த நிலையிலிருந்து செய்யும் பிரார்த்தனைகள், பூஜைகள் உடனே பலனைத்தரும். இந்த நிலையிலிருந்து பகவானைப் பஜித்துத் தியானத்திலிருந்து மனோலயப்பட்டால் அது இதற்கும்மேலான நிலை. அதைத் **துரியாதீதம்** என்பார்கள். இந்தநிலையே ஸ்வாத்ம [illegible]ரிசனம், அல்லது சத்குரு தரிசனம், அல்லது சிவ[illegible]னம் அளிப்பதாகச் சொல்வார்கள். இதை **'கிறிஸ்துஉதய'** மென்றும் இன்னும் பலவாருகவும் ஏசுநாதரும் ஸ்வானுபவ சிரேஷ்டரான அவருடைய சற்சீஷர்களும் சொல்லியுளார்.

இதே கருத்தை யேசுகிறிஸ்துவானவர் "பத்துக் கன்னிகைகள் பரனைக்காணப் போனகதை" யால் விளக்கிக் காட்டியிருக்கிறார். பத்துக் கன்னிமார்கள் பரனைச்சேரப் பிரார்த்தித்து அவன் மாப்பிளைக்கோலங்கொண்டு வரப்போகிறானென்றுணர்ந்து அவன் வரவை யெதிர்பார்த்து அவனையுபசரித்து அவனால் ஆளப்பெறவேண்டு மென்று விளக்கும் கையுமாக விழித்துக்கொண்டு காத்திருந்தார்கள். இதில் ஐவர் முன்யோசனையோடு அவன் வருமுன் விளக்கிலெண்ணெ யெரிந்துபோனால் இருட்டில் நம் அன்பனைக் காணமுடியாதேயென்று கையில் எண்ணெயும் திரியும் அதிகமாய்க் கொண்டுபோனார்கள். மற்ற ஐவர்களும் அம்மூஸ்தீபு இன்றிச்சென்றார்கள். வெகுநேரம் காத்திருந்து அன்பன் வராமையால் விளக்கு வெளிச்சத்திலே தூங்கினார்கள். (இது துரியமாம்). பாதிராத்திரியில் பரமன் அதிரகசியமாய் வர முதற்சொன்ன பஞ்சகன்னிகளும் விழித்தெழுந்து (துரியாதீதமெய்தி) பரமனோடுகூடி மணவறை புகுந்தார்கள். மற்ற ஐந்துபேர்களும் நடுநிசிக்குச் சற்றுமுன்னே தங்கள் விளக்கொளி (அகவிளக்கு-யோக சக்தி) நின்றுபோக, தங்களோடு கூடவிருந்த கன்னிகைகளைக் கொஞ்சம் எண்ணெயும் திரியும் கடன் கேட்டார்கள். அவர்கள் தங்களிடத்திருக்கிறது தங்களுக்கே போதுமானதா யிருப்பதால், கடையில்போய் வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். கடைக்கு அவர்கள் எண்ணெய் திரி வாங்கப்போன சமயத்தில் பரமன் வரவும், மற்ற பஞ்ச கன்னிகளும் அவனோடு மணவறை புகுந்து கதவடைத்துத் தாளிட்டுக்கொண்டு விட்டார்கள். பின்சொன்ன பஞ்சகன்னிகள் கடையிலிருந்து வந்துபார்க்கத் தம்தோழிகள் பரமனோடும் உட்சென்றார்களென்று கண்டு "நாதா, நாதா, நாங்களும் உம்மையே அடையக் காத்திருந்தோம், சற்றுக்கதவைத் திறவும்" என்று கதவைத் தட்டினார்கள். அவர்கள் பிராணநாதனென்று பரிந்துசென்ற ஈசன் "உங்களை யானறியேன்" என்று பதிலுரைத்துப் போகச்சொல்லிவிட்டார். ஆகையால் "ஜாக்கிரத் - ஜாக்கிரத்:" என்று பரமவெட்டியான் பறையறைந்தபடி என்னுடனேப் போவருவாரோ வென்று அல்லும்பகலும் அதுவே நினைவாய் ஊனுணர்வொழித்து உள்ளுணர்வுக்கெதிர்பார்த்து அகவிளக்கையணைக்காது ஆத்மனையே சிந்தித்திருப்பாரே ஆனந்தமெய்துவார். மற்றவர்



ஏமாந்துபோவார். இப்படி யோகநித்ரையில் விழித்திருப்பது உள்ளிந்திரியங்கள் ஐந்துக்கு சாத்தியமாவதுபோல், வெளியிந்திரியங்களுக்கு சாத்தியமில்லையென்பதும் உண்மையாய் முன்சொன்ன கதை[illegible]ல் விளங்கும். அப்போது முன்சென்ற பஞ்சகன்னிகள் அந்தரிந்திரியங்களாகவும், பின்தங்கின பஞ்சகன்னிகள் பகிரிந்திரியங்களாகவும் பாவிக்கற்படும். *

"நந்திபெருமான்நடுவுள்வியோமத்து
வந்தெனகம்படிகோயிற்கொண்டான்கொள்ள
எந்தைவந்தானென்றெழுந்தேன் எழுதலும்
சிந்தையினுள்ளேசிவனிருந்தானே."

என்னும் பாட்டில் திருமூலநயனார் இக்கதையின் ஸ்வானுபவவுண்மையை விளக்கியிருப்பதை அனுபவசாலிகள் அறிந்துகொள்வார்கள். இதனுண்மையொன்றே: ஆத்மானுபவமும் அப்படியே: போதிக்குமுறையும் உள்ளுணர் சக்தியோடு பார்ப்பார்க்கு ஒன்றாகவேபடும். அதையறியாதவர்கள் வேறாகக்கருதுவார்கள்: வேறென்றெண்ணி ஒன்றுவிட்டொன்று பற்றி வீண்காலம் போக்காமலிருக்க, எவரும் அவரவர்மதமே சிறந்ததென்று பாராட்டப் போதித்துளார் பெரியோர். அதிலிருந்து விவேகமெய்தினால் போகப்போக உண்மையொன்றென்னு முணர்வால் ஸமரஸம் தானே பிறக்கும்.

ஓம் தத்ஸத்.

## சற்குருவாராதனை.

"திருவருள் ஞானம் சிறந்தருள் கொழிக்குங்
குருவடி வான குறைவிலா நிறைவே
நின்றவொன்றே நின்மல வடிவே
குன்றுப் பொருளே குணப்பெருங் கடலே
ஆதியு மந்தமு மானந்த மடமாஞ்
சோதியே சத்தே தொலைவிலா முதலே!"
சர[illegible]ம் சற்குரு சரணம்!
கரணங் கரு[illegible] ளனைத்துன் வயமா
யருள்தந் தாண்ட நின்தாள் சரணம்!
உருவா யருவாய்க் கருவாய்த் தோன்றி
யருளாய்த் தெருளாய்ப் பொருளாய் நின்று
குருவாய் வந்தெனைக் காத்தாய் சரணம்!

* (அந்தக்கரணமும் அதன் விர்த்தி பேதத்தாலுண்டான மனசு, புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய இவை அந்தரிந்திரியங்களெனப்படும். மற்ற ஞான, கன்மேந்திரியங்கள் பகிரிந்திரியங்களாம்.)

## The Ramakrishna Mission.
## ஸ்ரீராமகிருஷ்ண கைங்கரியம்.

பகவான் **ஸ்ரீ** இராமகிருஷ்ண பரமஹம்ஸ ரவர்களுடைய திருநக்ஷத்திரம் சென்னையில் ஐஸ்மெத்தையிலுள்ள இராமகிருஷ்ணமடத்தாராலும்இந்நகர வாசிகளாலும்நாளதுமீ 8உ ஞாயிற்றுக்கிழமையன்று அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த மாசம்பிறந்த ஒருவாரத்திற்குள் மூன்று இடங்களில் சத்குரு ஆராதனை நடக்கக்கண்டோம். ஒன்று திருவாதியிலும், மற்றொன்று திருவாமூரிலும், மூன்றாவதுஇச்சென்னையிலுமாக நடக்கலாயிற்று. இம்மூன்றிலும் இங்கிலீஷ்படித்து சட்டத்திலிலும் சாஸ்திரத்திலும், யூனிவர்ஸிடியில் வித்யாப்பட்டம் பெற்ற வித்வசிரோமணிகள் சற்சீஷர்களாக விளங்கக்கண்டோம். இதனால் இங்கிலீஷ்படிப்பின் மோகத்தில் ஆத்மக்ஷேமத்தை யலக்ஷியம்செய்து பிரபஞ்சவாழ்வையே பெரிதாகவெண்ணிய - புத்திமான்களான வாலிபர்கள், உலகில் அடிபட்டுப் பேரும் கீர்த்தியும் பிரதாபமும் பெற்றுவிளங்கியும், பிரபஞ்சவாழ்க்கையாலும் அதில்வரும் சுகங்களாலும் தங்கள் உள்ளத்துண்மையாயுள்ள ஆத்மதாபம் தணியாமை கண்டு, பிரபஞ்சத்தை ருசித்துப்பார்த்தும், பிரயோசனமற்றதெனவிட்டு, ஆத்மவித்தையைத்தேடியலைந்து, அவரவர்கள் பக்குவத்துக்குத் தக்கபடி சத்குருவரன் பெற்றுச் சற்சீஷர்களாகி, அவர்களிருந்தும் மறைந்தும் அவர்கள்போதித்த உண்மைமட்டும் உள்ளதுள்ளபடி மாறாதிருக்கக்கண்டு, தங்களைக் கருணையால் கடைக்கண்பார்த்துக் கடைத்தேறும்வழிகாட்டிய குருமூர்த்தமான பெரியோரை, அவர் பெருமையும் தங்கள் சிறுமையுமறிந்து, அவர்கள் சற்போதனையைச்சிந்தையில் வைத்து அவர்கள் திருவுருவத்தையும் உள்ளத்தமர்த்தி ஆத்மநிஷ்டர்களாயிருந்து அவர்கள் குருவைப்பூசித்துப் பணிந்துவருகிறார்களென்பது பிரத்தியட்சமாய்ப் படலாயிற்று. இப்படி உண்மையான சன்மார்க்க வழியில் நடந்துபக்திசிரத்தையோடு குருவடிபணிந்துவருங்குழாங்களில் நாம் கண்டவர்கள், சந்நியாசி ஆச்சிரமம் பூண்டவர்மட்டுமல்ல. அவ்வழியிற்சென்றசிறுபான்மையரே. மற்றப்படியுள்ளார் பெரும்பான்மையனரும், உலகிலிருந்துஉதரபோஷணார்த்தம் பற்பலதொழில்களிலமர்ந்துஉழைத்துவரும் உத்தமகிரகஸ்தர்களே. இவர்கள் உலகிலிருந்துகொண்டு உண்மையும் தேடப்பாடுபட்டுழைப்பது யாவராலும் மெச்சத்தக்கதே. முதலிற்சொன்ன இரண்டு சத்குரு ஆராத

னைகளைப்பற்றிச்சொல்ல இதுசமயமன்று. மூன்று
வது உலகப்பிரசித்தியானதுபற்றி அதுசம்பந்தமா
னவிவரங்களைப்பற்றிய ரிபோர்ட்டு நமக்கொன்று
கிடைத்ததிலிருந்து சிலவிஷயங்களை யிங்கெடுத்து
கூறுவ துசிதமாம்.

ஸ்ரீ இராமகிருஷ்ண கைங்கரியமாக ஏற்பட்ட
"மிஷன்" அம்மஹானுடைய சற்சீஷர்களிற் சிறந்
தவரான ஸ்வாமி விவேகாநந்தரால் 10 - வருஷங்க
ளுக்குமுன்னேற்படுத்தப்பட்டது. அவருக்குப் பின்
அது இப்பொழுது ஸ்ரீ ப்ரம்மானந்த ஸ்வாமிகளின்
மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த
மிஷனுக்குப் பிரதானஸ்தானம் கல்கத்தாவுக்கருகி
லுள்ள பேலூரிலிருக்கும் ஸ்ரீ இராமகிருஷ்ணமடம்.
இந்தியாவிற் பலபாகங்களிலும் இதற்குக்கிளைக
ளேற்பட்டு அங்கங்கே ஆத்மமோக்ஷமார்த்தம் அம்ம
டத்துச்சீஷர்கள்உண்மைக்குழைத்து வருகிறார்கள்.
ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்ஸர் ஜீவன்முக்தியெய்தி
யிருந்தகாலத்துப் போதித்த ஸாதனதர்மத்தை,
அவருடைய உதாரணத்தைக்கொண்டு விளக்கி, அம்
மேலானதர்மக்கொள்கைகளை உலகறியப் பரவச்
செய்து,மன்பதையிலுள்ள மானிடர் அத்தர்மங்களை
யனுசரித்து தர்மார்த்த காமமோக்ஷாதி புருஷார்த்
தங்களையெய்தி யானந்திக்க உதவிபுரியவேண்டுமெ
ன்பதே இவ்வுத்தம கைங்கிரியத்தி லமர்ந்துள்ளோர்
பெருநோக்கம். இதற்காக இவர்கள் பலவிடங்களி
லும் நூதனமாய் இக்கைங்கரிய ஸ்தாபனங்களேற்ப
டுத்தி, ஆத்மார்த்தமாகவும் உலகார்த்தமாகவும்
ஜனங்களுக்கு சற்போதனை செய்யத்தக்கவர்களைத்
தயாராக்கி, அவர்கள் மூலமாக ஜீவனோபாயத்துக்
காதாரமான வித்தைகள் தொழில்களை விர்த்திப
ண்ணி ஆத்மபோதமுஞ் செய்துவருகிறார்கள்.—
இந்த மடத்துச் சீஷர்களால் நடத்தப்பட்டுவரும்
அனேக தர்மகைங்கரியங்களில் மூர்ஷடாபாத்திலி
ருக்கும் அனாதைச் சிறுவர்கள் போஷணஸ்தாபன
மும் ஹரித்வாரத்துக்கு சமீபத்திலுள்ள சான்காலி
என்னுமிடத்தில் சாதுக்களுக்குதவியாக ஏற்பட்ட
தர்மவைத்திய சாலையும் பாடசாலையும், விசேஷமா
னவை. காசியில் ஏழைகளுக்குதவிசெய்யும் சபை
யொன்றேற்பட்டிவர்கள் மேற்பார்வையில் நடந்து
வருகிறது. பஞ்சத்தினாலும், ப்ளேகினாலும் துன்பப்
பட்டுத் தள்ளாடித்தடுமாறலுற்ற ஜனங்களுக்கு இம்
மடத்துச் சீஷர்கள்செய்தஉதவிசர்க்காருத்தியோக
ஸ்தர்களாலும் மெச்சிக் கொண்டாடப்பட்டிருக்கி

விவேகானந்த ஸ்வாமிகள் மேற்றிசையில் சிக்ஷை
கொடுத்து ஆட்கொண்டருளிய சீஷர்களில் "நிவே
திதா" என்னும் பேரால் விளங்கும் மிஸ்மார்கரெட்
நோபிள் என்னும் ஆங்கிலேயமாதுசிரோமணி, லண்
டனில் தான் நடத்திவந்த ஒரு பெரிய பாலிகாபாட
சாலையைவிட்டொழித்து, இந்திய மாதர்களுக்காக
உழைக்கக்கருதி கல்கத்தாவில் ஹிந்து மதக்கொள்
கைகளையும் பாவனைகளையுமனுசரித்துப் பெண்க
ளுக்கு வித்தியாப்பியாசம் செய்ய ஒரு பாலிகா பாட
சாலை நடத்திவருகிறார். இவர் சென்னைக்கு விஜய
மாய்வந்து பலவிடங்களிலும் பிர்ம்மசாரியதர்மத்
தைப்பற்றிப் பலவிதங்களில் பிரசங்கங்கள் செய்
தனர். அமெரிக்காவில், "சாந்தி ஆச்ரமம்" ஒன்று
ஏற்படுத்தி ஸ்வாமி துரியானந்தரால் நடத்தப்பட்டு
வருகிறது. நியூயார்க்நகரிலும், கலிபோர்னியாவிலும்
அமெரிக்காவில் இன்னும் பலவிடங்களிலும் வே
தாந்த வகுப்புகள் ஏற்பட்டு நடந்துவருகின்றன,
ஸ்வாமி அபேதானந்தர் என்னும் அமெரிக்கர் இது
விஷயத்தில் மிகட்பாடுபட்டுழைத்துவருகிறார். இச்
சென்னையில் ஸ்வாமி இராமகிருஷ்ணானந்தர் இந்
நகரின் பலபாகங்களிலும் சென்று காலையும்
மாலையும் வேதாந்தபாடஞ் சொல்லிவருகிறார். இப்
படி 10 பாடசாலைகளேற்பட்டு 400 மாணக்கர்
இவரிடத்தில், உபநிஷத் பகவத்கீதை, ஸ்ரீமத்பாக
வதம் இவைகளுக்கு அருத்தம் கேட்டுப்படித்து வரு
கிறார்கள். இவர் சென்றவருஷத்தில் இச்சென்னையி
லும் வெளியிடங்களிலும் சென்று பகிரங்கமாகச்
சுமார்60பிரசங்கங்கள்செய்துவந்தார். அதிபக்தசிரோ
மணியாகிய இவர் தம்அன்பிற்கன்பான குருதேவரின்
பிரீதியார்த்தம் குருசேவையாகச் செய்துவரும் இவ்
வுதவிக்குப்பிரதியாக நம்மவர் என்னசெய்யினும் அது
கைம்மாறாகாது. குருசேவையின் மகிமை அப்பேர்ப்
பட்டது. அவர்கள் ஊரார்பெருமைக்கும் புகழுக்கும்
உழைப்பவரல்லர். "தானுமழிந்து தனமுமழிந்து நீடு
னுமழிந்து உயிருமழிந்துடன் வானுமழிந்து மன
முமழிந்து பின், 'நானு' மழிந்த" நாதனும் குருப
ரன் குணம்பற்றி உழைப்பார்க்கு "வானகமும் வைய
கமும் மாற்றலரிது"என்பது மேலறிவோர் உணர்ந்த
உண்மையே. பலனைக்கருதியே பாவனை பலசெய்
துழைக்கும் பாமரர், நிஷ்காம்யகர்மத்தின் மேன்மை
யையும், கருணைகடாக்ஷத்தினுண்மையையு முணர்த
லரிதாம் இவர்கள் அறிதலரிதாயினும் அவர்களுழை
ப்பதுழைப்பே.

பெற்றார்பெருமை புத்திரனால் விளங்கும், உற்
றார்பெருமை உறவால்விளங்கும், எவ் ...



குரு பெருமை சற்சீஷனால் விளங்கும்.யேசுநாதரின்
மகிமையை விளங்கவைத்தவர்அவரையூனிலுணராத
ருள்பெற்றுய்ந்த பால் என்னும் பெருந்தகையார்.
அப்படிப் போல, ஸ்ரீ இராமகிருஷ்ணதேவரின் மகி
மையை அவரருள்மேற்கொண்டு உலகெலாம் விளங்
கவைத்தவர் அவருடையசற்சீஷர்களிற்சிறந்தவரான
ஸ்ரீ விவேகானந்தர். இவர் 12-வருஷகாலம் பாரெ
லாம்விளங்க வுழைத்து மலைவாயில் வீழ்ந்த சூரிய
னைப்போலும் நித்யசமாதியில் விழுந்து மறைந்ததை
யுன்னி இவருடைய ஞாபகார்த்தம் சென்னையில்
ஆனந்தமந்திரம் என்று ஒரு கட்டடமெழுப்பி
அதில் இவர்கருத்துக்கொண்டுழைத்த வேலையென்
றென்றுமழியாது நடந்துவர ஏர்பாடுசெய்யத் தீர்
மானித்துளார் இந்நகரவாசிகள். அவர்கள் எண்ணம்
கைகூடுவதாகப் பிரார்த்திக்கிறோம். சூரியன் மறைந்
தும் சந்திரன் மூலமாய் உலகத்துக் கொளிதருவது
போல, உண்மையானமேலோர் நாமரூபமற்றும்,
காமரூபிகளைக்கொண்டு உண்மைததைக்க உதவிபு
ரிந்துலகை யிரக்ஷித்துவருவார்களென்பது திண்
ணம்.

"இன்றியே போகுமவர்க் கிகத்திலுள்ள துன்ப
மெல்லாம்
ஒன்றியே தானமர்ந்த தன்மையினாற் சகசநிலை
சித்திபெற்றால்
நன்றியேசெய்வார் நாடெலாங் காத்துக்கார்மு
கிலோப்பார்
ஒன்றியேயுள்ளத் தருவாயிருந்தவருலகையுமா
ட்டிவைப்பாரே."

## ஸ்ரீசென்ற மஹாமஹோபாத்யாயர் ராஜுசாஸ்திரிகள்.

மன்னார்குடியில் வசித்துவந்த ப்ரம்மஸ்ரீ மஹாம
ஹோபாத்யாயர் இராஜுசாஸ்திரிகள் அவர்கள்
மார்ச்சுமீ 4உ இராத்திரி மன்னார்குடியில் அவரு
டைய கிரகத்தில் தேகவியோகமானாரென்று அறிகி
றோம். இவர் 1815-ம் வருஷத்தில் பிறந்தவர்.
ஆகவே இறந்தபொழுது இவருக்கு வயசு 88 இருக்
கலாம். இவர் பேர்போன அப்பய்ய தீக்ஷிதர் வம்ச
பரம்பரையில் 9-வது தலைமுறையாக உதித்தவர்.
சம்ஸ்கிருதத்தில் கற்றுக்கரைகண்ட வித்வான்.
இவர் 14-வயது வரையில் வீட்டிலிருந்து தன்பாட்ட

னாரிடம் வித்தை கற்றுக்கொண்டிருந்து பிறகு மன்னார்குடியில் அவருடைய
அம்மான் வீட்டிற்கு வந்து கோபாலாசார் என்னும்
வித்வசிரேஷ்டரிடத்தில் தர்க்கம், வியாகரணம்
இவைகளைக்கற்று முடித்தார். பிறகு ஹிந்து தத்துவ
சாஸ்திரங்களைப்படிக்கத்துவக்கி இரகுநாதசாஸ்திரி
யார், ஸ்ரீநாராயணானந்தஸ்வாமி இவர்களிடம் சிஷ்
யனாயிருந்துபடித்துவந்தார். அவருக்கு 22-வயதான
காலத்தில் அவர் வித்யாப்பியாசம் முடித்து விவாகம்
செய்துகொண்டு கிரகஸ்தாச்ரமம் வகித்தார். இவர்
அந்திகாலம்வரையில் கிரகஸ்தாச்ரமத்துக்குரிய நித்
யநைமித்யகடன்களை விடாதுஅனுஷ்டித்து வந்தார்.
இவர் பத்னி இவருக்கு முன் தேகவியோகமாய்விட்
டார். புத்திரபாக்கியமில்லாமல் ஸ்வீகாரமெடுத்துக்
கொண்டார். இவர் ஸ்வீகாரப்புத்திரனுடைய
பிள்ளையாகிய இவருடைய பௌத்திரன் இவரிடத்
தில் ஸம்ஸ்கிருதம் கற்றுத்தேறியமஹா புத்திசாலி
யென்று சொல்லப்படுகிறது. இவர் மன்னார்குடியி
லிருந்தகாலத்தில் பூர்ணசந்திரனைப்போல் கல்வியில்
தேர்ந்த மஹானாய் விளங்கியதன்றி, பூர்வீகரிஷிகள்
போல் சீஷர்களால் சூழப்பட்டு அவர்களுக்கு வித்
தைப்பாலூட்டி வளர்ப்பதில் தாய்போல் சிரத்தை
கொண்டவராய் அவர்களால் நேசிக்கப்பட்டு, பணத்
தைத் திரணமாய் நினைத்து, அதைச்சிறிதும் நாடா
ததமது பூரணகல்வியினாலுண்டான வித்யானந்தத்
தையும் ஆத்மானந்தத்தையும் அனுபவித்து அரோக
திடகாத்திரராய் சாந்தகுணசீலராய் நாட்டுக்கு நாய
கமாய் ஊருக்குதாரணமாய் பூர்வகாலத்து ப்ராம்ம
ணோத்தமர்கள் வாழ்ந்துவந்ததுக்கு இக்காலத்திலுள்
ளார்க்கொருமாதிரியாயிருந்து ஜனங்களாலும், சர்க்
காராலும் மதிக்கப்பட்டு கொம்பில்பழுத்தது காய்ந்
துவிழுந்ததுபோல், முதிர்வயதில் மூப்புமேலிட்டு
பூர்ணாயுசுக்கு ஒருமாமாங்கமேகுறையப் பரிபூர்ண
மாய்ப்பரகதியடைந்து சாயுச்சியமெய்தினார். 1887-
ம் வருஷத்தில் விக்டோரியா மஹாராணியார் ஆளு
கையின் 50-வது வருஷப்பூர்த்திக்கொண்டாட்டத்
தின்போது சென்னை கவர்ன்மெண்டார் இவருடை
யஅபூர்வபாண்டித்தியத்தை மதித்து இவருக்கு
மஹாமஹோபாத்யாயர் என்னும் கல்விப்பட்டமளி
த்தனர்.

"Call of the 20th Century to Awakened India."*

"Ring out the False, Ring in the True."

## "தூங்கிவிழுந்த இந்தியாவுக்குத் தூது."

"பொய்மையைத்தள்ளி மெய்மையைத்தழுவு."

இத்தலைப்பின்கீழ் இங்கிலீஷில் பிரசுரமான ஒரு
சிறு புஸ்தகம் சென்ற டிசம்பர்மாசம் முதல் நமது
மேஜைமேற் கிடக்கிறது. அதைநாம் பலமுறை பார்
வையிட்டும் பத்திரிகையில் பார்வையிட்டெழுதக்
கூசிச் சும்மாவைத்துவிட்டோம். ஆனாலும் அதை
நாம் அலக்ஷியம் செய்ததாக அதை நமக்கு அனுப்
பினவர் எண்ணக்கூடாதென்று இம்முறை அரை
குறையாக அதைத் தொட்டுக் கொஞ்சம் எழுதத்
தீர்மானித்தோம். ஏன் "அரைகுறையாக" எழு
தத்தீர்மானித்தோமென்றால், அதைத் தீரவாசித்து
தீர்க்கமாய் ஆராய்ந்தெழுவது அசாத்தியமாகவிருக்
கிறது. அதையெழுதினவர் அப்புத்தகத்துடன்
விடுத்திருக்கும் சிறு விண்ணப்பப் பத்திரத்தைப்
பார்த்த மாத்திரத்தில் மனம் உருகத்தக்கதாயிருக்
கிறது. அதிலே அவர்சொல்லும் புத்திமதிகளெல்
லாம் வெகுநன்றாகவே யிருக்கின்றன. தன்னைக்
குறிப்பிட்டு அவர் சொல்லும் கடைசிவார்த்தைகள்
கல்லானமனத்தையும் உருகச் செய்யும். அவருக்கு
இப்பொழுது 84-வது வயது நடக்கிறதாம். அதைச்
சொல்லி "மானுஷீகமாகப் பேசில் நான் சீக்கிரம்
இம்மண்ணுலகை விட்டுக் கண்காணுவுலகிற் கரைந்
திடக் காலமாய்விட்டது: ஆகையால் இது ஒவ்
வொரு இந்தியருக்கும் இவ்வுலகைத் துறக்கவிருக்
கும் எனது வாய்மொழியாக விருக்கட்டும்" என்
கிறார். இப்படிக்கல்லும்கரையும்படி அவர் சொல்
லும் வார்த்தையைக் கேட்டபின் யார்தான் அவர்
வாய்மொழியை அலக்ஷியமாய் மதிப்பர். இதுநிற்க.

இவருடைய நூலின் கருத்தெல்லாம் "பொய்
யைத்தள்ளி மெய்யைத்தழுவு" என்னும் சூத்திரை
யின் பிரதிபொலியேயன்றி வேறல்ல. கதோப
நிஷத்தில் அஞ்ஞான இருளில் தூங்கும் ஆத்மாவாம்
புருஷனைப்பார்த்து: "விழித்தெழு! எழுந்திரு! கதி
மோக்ஷம்கிடைத்துக்கடைத்தேறுமட்டும் நில்லாதே,
சன்மார்க்கவழியிற்செல்: நிவிர்த்திமார்க்கத்தைத்
தேடு." "முற்றும் வழியறிந்து முழுவழியும் நீ நட
ந்து" உத்தமோத்தமமாம் உண்மையை உணர்ந்துய்!
என்றுசொன்ன வாக்கியத்தை யெடுத்துபயோகித்
திருக்கிறார். இதுவெல்லாம்வாஸ்தவமே. உண்
மையானதே. ஆனால் இப்புத்தகத்தினுள் நுழைந்து
பார்த்தால் "பசுவின்தோல் போற்றிய புலி" யென்
றசாமான்ய ஜனங்கள் சொல்கிற பழமொழிக்
கொப்ப இவர் கிறிஸ்துமதத்தை ஸ்தாபிப்பதொன்
றே கருத்தாய்க்கொண்டு ஹிந்துமதத்திலுள்ள நம்
பிக்கையைப்போக்குவான் வழிதேடும் நோக்கு ஒன்
றைத்தவிர அம்மதத்திலுள்ள உண்மையை யுணரச்
சக்தியில்லாமலோ, சிந்தையில்லாமலோ, சிரத்தை
யற்றவராகக் காட்டுகிறார். இவர் ஹிந்துமதத்திலுள்
ளதாகச்சொல்லும் ஆபாசங்களெல்லாம் ஆபாசங்
களே. ஆனால் அவை உண்மையில் ஹிந்துமதத்தைச்
சேர்ந்தவையல்ல. ஆத்மார்த்தம் உணர உணர்வற்ற
பேதை ஜனங்கள் சூக்ஷ்மத்திற் சொன்னவற்றை
ஸ்தூலபாவனையிலர்த்தம்செய்துகொண்டு மயங்கி
த்தியங்கும் தப்புகளேயன்றி வேறல்ல. இப்படிப்
பட்டமயக்கங்களும் தப்புகள் தவறுகளும் கிறிஸ்து
மதத்தை யநுசரிப்பவருள்ளும் ஏராளமாகவழங்
கிவருகின்றன. ஹிந்துக்களில் அஞ்ஞானபண்டிதர்
கள் தத்துவார்த்தமான வாக்கியங்களை ஸ்தூலார்த்
தம்செய்து அனர்த்தம் விளைவித்து "குருடனும்
குருடனும் குருட்டாட்டமாடிக்குழியில் விழுந்தது
போல்" தாங்கள் குருட்டுவழியில் செல்வதன்றி தங்
களை நம்பியமூடஜனங்களையும் குருட்டுவழியில்விழுத்
துக்கெட்டுப்போகச் செய்கிறார்கள். இதற்கென்ன
செய்யலாம்! அஞ்ஞான இருளில் நடப்பவர்கள் தட்
டித்தடுமாறி இடறிவிழுவார்கள்தான். "பட்டப்பக
லில் நடப்போர் பழுதுறார்: இருளில் நடப்பவர்
இடையூறுபடுவரே" யென்று யேசுவும் சொல்லி
யிருக்கிறார். இவர் ஹிந்துமதத்தின் உண்மையை
யோ பொய்மையையோ எடுத்துரைப்பது இருக்கட்
டும். இவர் சொந்தமதத்தைப்பற்றிப்பேசப்போதா
வது உண்மையுணர்ந்து உள்ளதை யுள்ளபடியுரைக்
கிறாரென்று பார்த்தால் அதுவுமில்லை. 84-வயதா
கித்தமாயிருந்தும், இவர் யேசுகிறிஸ்து போதித்த
உண்மையை முற்றுமுணர்ந்தவராகக் காட்டாத
போது, இவர் வார்த்தையை நம்பி பிறந்தமதத்தை
யும் விட்டுப் புகுந்தமதத்திலுண்மைய யுணரமா-
ம், எ

* Being "An appeal to Educated Hindus, to give up injurious customs and religious errors, changing the Kaliyuga into the Satyayuga." By John Murdoch L.L.D. the Christian Literature Society for India, London and



தவிக்கும் ஜனங்கள் என்னகதியடைவார்கள்?
த்தவிடும்போய் அடுப்பு நெருப்புமணைந்த அம்
ர் கதை" யாகவல்லவோ முடியும். ஆகை
ஹிந்துக்களுக்குள் எவ்வளவோ குற்றங்களிருக்
ண்மையாயினும், அவர்கள் தேச மதாசாரங்
சீர்திருத்தப்படவேண்டிய ஊழல்கள் எத்
யோவிருப்பது சத்தியமாயினும், தம்மதப்
றன்றே பெரிதாக வெண்ணி வெளிவே
ளை நம்பி, உண்மை யெம்மதத்தி லுள்ளதாயி
அதை உள்ளபடி ஆராய்ந்து ஆத்மார்த்தமாக
கில் அது ஒன்றேயென்னுமுண்மையை உண
த்தியின்றி, கடவுள் உண்மையை யெல்லாம்
பாகமாய் எங்களிடமே ஒப்புவித்திருக்கிறார்,
ஸ்துவை நம்புங்கள் சிவனைத் தள்ளுங்கள் விஷ்
ணுவைவிட்டுவிடுங்கள் என்று புறச்சமயதூஷணஞ்
து தங்கள் சமயத்தையும் புறச்சமயமாகத்
ப்பதிலே கண்ணுங் கருத்துமுடைய இந்தப்
ரிமார்கள், ஆத்மானுணர்த்தியாக ஹிந்துக்களுக்
போதிக்கச்சிறிதும் அருகரில்லையென்பது திண்
ணமாய்ப்படுகிறது. "பொய்மையைத்தள்ளி மெய்மையைத்
தழுவு" என்று இவர் உபதேசித்ததை யேற்றுக்
கொண்டு யேசுநாதர் போதித்த உண்மையையுணர
ட்டாது "உலகிலுள்ள ஆபாசங்க ளெல்லாமுங்
களது: பரிசுத்தமெல்லாம் எங்களது" என்று இவர்
சொல்லும்பொய்யைத் தள்ளி, இப்புத்தகத்திலிவர்
காட்டிய அளவுக்கு கிறிஸ்துவினுண்மையை யுள்ள
படியுணர்ந்தவராகக் காட்டவில்லையென்று நமக்கு
உள்ளத்திற்பட்ட "மெய்யைத்தழுவி" உண்மையைப்
பேசினதற்காக இவர் நம்மேல் சினங்கொள்ளா
ரென்று யேசுநாதர் பேரால் இவரைக்கேட்டுக்
கொள்ளுகிறோம். இவர் ஹிந்துக்கள் கெட்டுப்போகி
றார்களேயென்று மனமிரங்கியதுபோலவே,கிறிஸ்து
மதத்தில் பிறந்துவளர்ந்து 84-வயதுவரை "ஸத்திய
மதத்தைப்பரவச் செய்வதிலுழைத்தும்" உண்மை
யில் சத்தியத்துக்குழைத்தவராம் யேசுநாதரின் உள்
மர்மமுணராது பிதற்றுகிறாரேயென்று இவருக்காக
மனமிரங்கித் தவிக்கலானோம். இதனால் பாதிரி
களையே நாம் தூஷித்ததாகவாவது வெறுத்ததாக
வாவது யாரும் நினைக்கவேண்டாம். அல்லது இச்
சிறுபுத்தகமெழுதிப்பிரசுரித்தவரிடத்தில் அய்யர்தம்
விருப்பும்மதிப்புமன்றி வேறு மனக்கிலேசமுள்ளதா
கவும் நினைக்கவேண்டாம். ஆனால் உண்மையையுள்
ளபடியே பேசவேண்டியகாலத்து ஒளிக்காது
மறைக்காது கறந்தபால்கறந்தபடி பேசுவது எப்போ
தும் நன்மைபயக்கத்தக்கதென்பது நம்முடைய
சித்தாந்தம். யேசுநாதர் யூதர்கள் விதிவழிகளைமீறி
யுண்மையுரைக்கவேண்டி நேர்ந்தபொழுதும், அப்
பொழுது யூதர்கள் தங்கள்தர்மசாஸ்திரங்களை
யொழிக்கவந்ததாக அவர்மேல்குறைகூறிய பொழு
தும், அவர் என்னசொன்னார்:—"உங்கள் தரு
மத்தையழிக்க வரவில்லை—குறையாயுள்ளவற்றை
நிறைவாக்கவந்தேன்"* என்று சொல்லி அவர்கள்
விதிகளையனுசரித்தே அவர் போதிக்கவந்த ஆத்மா
ர்த்தமான உண்மையைப்போதித்தார். அவர் ஸ்வா
னுபவச் செல்வரானபடியால் அப்படிச்செய்வது
அவருக்கு சாத்தியமாயிற்று. இக்காலத்தும் ஸ்வ
ானுபவச்செல்வர்கள் உண்மையை உள்ளபடி அது
எந்தமத அனுஷ்டானஆசாரங்களில் கலக்கப்பட்டி
ருப்பினும் பிரித்துணரும் சக்திவாய்ந்தவர்களாயி
ருக்கிறார்கள். "கிறிஸ்து இதோ இருக்கிறார்:
அதோ இருக்கிறார்: குகையிலிருக்கிறார்: மலை
யிலிருக்கிறார்: என்றுசொன்னால் நம்பாதேயுங்கள்."
"உங்கள் உள்ளத்திலே உதயமாகும் குறியைச்
சொல்லுகிறேன்: உணர்ந்தறியுங்கள்" என்று
அவர் சொல்லியிருக்க, ஸெண்ட்ஜான், ஸெண்ட்
பால் இவர்களும் அப்படியே கண்டு ஸ்வானுபவ
மெய்தியிருக்க, தங்கள் மதத்தையும் தீரவுணராது,
அந்நியர்மதத்தையும் உண்மையிலுணராது, நாடோ
டிகளாகத்திரியும் மூடமதிகள் வார்த்தைகளையும்,
வழக்கங்களையும் கேட்டு, காசும் பணமுமிருக்கிற
தென்று அச்சிலிட்டு, அதற்குச்சித்திரப் படமும்
செதுக்கிப்பதிப்பித்தால் உண்மையுணர்ந்தோர் கல்
லாதமூடர் வழிப்பட்ட கற்றறிமோழைகள் செயலைக்
கண்டு நகைக்காதென்செய்வர்! இச்சிறுபுஸ்தகத்
திற்குள் ஹிந்துமத சம்பந்தமாய் இவர் எழுதியிருக்
கும் இப்படிப்பட்ட ஆபாசஅனர்த்தங்களையெல்லாம்
எடுத்துக்காட்டி விளக்குவது இங்கே சாத்தியமில்லை.
சாத்தியமாயினும் இச்சிறுபுத்தகம் பிரசுரித்தவர்க்
கது பயனற்றதாகுமென்று இப்புஸ்தகத்தில் அவர்
மனம்போன போக்கை யாராய்ந்தார்க்குத் தானே
விளங்கும். ஆனாலும் நாம் வீணாக அவரைப்பற்றி
வன்மொழிபேசினோமென்று யாரும் நினைக்காதிருக்க
முதலில் நம் கண்ணிற்படும் ஒருசித்திரப்படத்தை
யெடுத்துக்கொண் டாராய்வோம். இது சப்தசமுத்
திரங்களை விளக்கும்படமாக வரையப்பட்டு, இது
ஹிந்துக்களின் பூகோளசாஸ்திரமென்று சொல்லிப்
பழிக்கிறார். இப்படியே பலவருஷங்களுக்குமுன்
திருநெல்வேலி ஜில்லாவில் ஒருபாதிரியார் நம்மிடம்
நேரிலும் செப்பியர். பின்னர் அவர் 'சிவனும் உமை

* "I came to fulfil and not to destroy."

யும்' என்று ஸர் எட்வின் ஆர்னல்ட் அணிலைப்பற்றி எழுதிய ஒரு அருமைக்கவிதையை கிண்டர்கார்டன் பாடமாக உபயோகிக்கலாமென்று ஒரு ஆங்கிலேய நண்பர் தமிழ்ப்படுத்தக்கோறினதின்மேல் அதைத் தமிழில் பிரசுரிக்க, சிவன் உமை யென்கிற பேரைக் கண்டமாத்திரத்தில் அவருக்கு ஆத்திரம் பிறந்து அப்பத்திரிகையைத்தான் கையாலுந் தொடக்கூடாதென்று தபாற்செலவுசெய்து நமக்குத் திருப்பியனுப்பினார். இப்படிப் பட்டவர்கள்தானே ஹிந்துக்களுக்கு உண்மையைப்போதித்து அவர்களுக்கு ஆத்மரக்ஷையளிக்கப் போகிறார்கள். ஆத்மார்த்தமான வுண்மையைக் கற்பனாசக்தியால் தத்துவபாவங்கொண்டு மேலோர் வருணித்ததை ஆத்மஞான முணாச்சக்தியில்லாத வித்வான்கள் கற்பனாலங்காரமென்றுணரமாட்டாமலும், தத்துவார்த்தமாகச் சொல்ல சக்தியற்றும் உளறினால் அதைக்கேட்டு உண்மையுணரமாட்டாது அந்நியர்களாம் இவர்களும்கூட வுளறிக்குளறினாலென்செய்கிறது! இந்த சப்தசமுத்திரங்களைக் குறித்துத் திருமூலநாயனார் சொல்லியிருப்பதைக்கேளுங்கள்:—

> "மனத்துறைமாகடலேழுங்கைநீர்தி
> தவத்திடையாளர்தஞ்சார்வத்துவந்தார்
> பவத்திடையாளரவர்பணிகேட்கின்
> முகத்திடைநந்தியைமுந்தலுமாமே."

இப்படியே ஒவ்வொன்றும் மனோநிலையையுணர்த்துவனவாம். அவற்றைஸ்தூலமாக அர்த்தம் பண்ணிக்கொண்டால் அனர்த்தமே விளையும். கற்பனையென்றால் பொய் என்கிறார்கள் மேலோர். அப்படியே இந்த உலகமும் பொய் என்றால் நீ பித்தனென்கிறார்கள். இகம்பரமிரண்டு மேககாலத்திலிருப்பதில்லையால் இகம் சத்திய மென்றார்க்குப், பரம் பொய்யாகவும், பரம் சத்தியமென்றார்க்கு இகம் பொய்யாகவும் படுவது சகஜம். அனுபவித்துணர வேண்டிய உண்மையை வாசாமகோசரமாய்ப்பேசிப் பயனென்ன? வாசாமகோசர விசேஷமொன்றைத் தவிர வேறொன்றுமில்லை. இப்படியே ஒவ்வொன்றுக்கு மருத்தமுண்டு. அவைகளையெல்லா மிங்கெடுத்து விளங்கவைப்பது சாத்தியமில்லை.

மதவுண்மையைப்பற்றிப் போதிக்குங் காலையிலும் உளருகிறார். Impersonal God, Personal God என்பதைப்பற்றி இரண்டையும் தான் தராசில் வைத்து நிறுத்து இடைபோட்டு மதிப்புப் போட்டு வந்தவர்போல் பேசுகிறார். நிர்க்குணாராதனை, சகுணாராதனை யென்னு மிரண்டில் சகுணோபாசனையிற் றேறினவர்கட்கே நிர்க்குணோபாசனை சாத்தியமாகும்: மற்றவர்களுக்கு அது சாத்தியமாகாதென்பது வேதாந்தவழியில் வெள்ளிடைமலைபோல் எங்கும் விளங்கக்கிடக்கு முண்மை. அதை யுணரமாட்டாமல் ஜனங்கள் தவித்தால் அது அவர்களுக்குக் கண்ணிலாத்தோஷமேயன்றி உண்மைக்கு ஒரு ——மில்லை. சூரியனொளி குருடனுக்குத் தெரியாவிட்டால், சூரியனில்லாமற் போய்விடுமா? அதேபோல, ஆத்மார்த்தமான விஷயங்களில்

> அருட்கண்ணில்லாதார்க்கரும்பொருள்தோன்றா
> அருட்கணுளோர்க்கெதிர்தோன்றுமரனே
> இருட்கண்ணினோர்க்கங்கிரவியுந்தோன்றாத்
> தெருட்கண்ணினோர்க்கெங்குஞ்சீரொளியாமே.

ஆத்ம அனாத்ம விவேகமில்லாமல் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண வித்தியாசமறியாமல், இவர் சடதத்துவங்களை ஆத்மதத்துவங்களோடு ஒப்பிட்டுத் தான் கால்தெரியாது தடுமாறுவதோடு, வாசிப்போரை அவர் பின்பற்றி மழுக்க வெகு சாமர்த்தியம் கொண்டிருக்கிறார். அவர் புஸ்தகத்தைப் படிக்கும்போது சுயமதப்பற்றும் பறமத தூஷண சிந்தையும் நிறைந்திருக்கிறது இவரென்னமறைத்தும் இடையிடையே நன்றாகத் தெரிகிறது. இந்தக்குணமுள்ளவர் பிறருக்குத்தஞ்செய்ய வழிகாட்டிநிற்கப் பாத்திரமில்லாதவர் என்பது அனுபவசித்தாந்தமா யேற்பட்ட உண்மை. இவ்வுண்மைக்கு மாறாய் நிற்கும் ஒரு ... யைத் தவிர மற்றப்படி இவர் கருத்தும் நோக்கமும் எல்லாராலும் கவனிக்கத்தக்கதே. யேசுகிறிஸ்து போதித்த உண்மையை ஒப்புக்கொள்வதில் யாருக்கும் பின்வாங்கினோமில்லை. ஆனால் "ஆமர்ந்து அறிவாலேபார்த்து" ணர்ந்தால், அவருடைய உண்மையும் அனுபவமும் இதரமதத்திலுள்ள உண்மையாளர் அனுபவத்துக்கு முண்மைக்கும் ஒத்திருக்கிறதேயன்றி வித்தியாசமில்லை. இது "அவர் சாக்ஷி இவர் சாக்ஷியினாலேற்பட்டதல்ல." ஒவ்வொருவரும் ஸ்வாத்ம, சாக்ஷாத்கார, ஸ்வானுபவத்தால் ஐயந்திரிபற உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரத்தக்கதாம். அப்படி யுணரச்சக்தியோ, வாய்மையோ, ஊக்கமோ, சிரத்தையோ, எதுவோ இல்லாக் குறையால் ஒருவருக்கு ஆற்றமற்போகுமேல், அவர் தம் ஊத்தை வாயைத்திறந்து உளறாமலிருப்பதே உலகுக்குச் செய்யும் பேருபகாரமாம். தானுணராப்பொருளைப் பிறர்க்குணர்த்த முன்வந்து பரோபகாரஞ்செய்கிறேனென்று பழிபாவத்துக்குள்ளாவதிலும், உண்மையை யுணர உள்ளபடி பாடுபட்டுழைப்பது மிகவும் மேலானகாரியமாம்.



Truth.

## உண்மை.

உண்மை உடைமையானது உண்மைபேசுகிற வழக்கந்தான். உண்மையைத்தவிர வேறொன்றுமிலலை. எப்பொழுதும் உண்மை பேசுகிறதற்கு தைரியமானது அடிக்கடிவேண்டியிருக்கிறது. பொய் சொல்லுதல் கோழைத்தனமானது.

உண்மையானது கத்தியையும் கேடயத்தையுந்தரித்த ஒரு போர்வீரனுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. கத்திதான் தைரியம், கேடயம் தான் புத்தி. யார் ஒருவன் உண்மையுள்ளவனாய் இருக்கவேணுமென்று விரும்புகிறானோ கத்தி கேடயம் இரண்டையும் சரியானபடி உபயோகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பின்வரப்பட்ட கதையானது உண்மைபேசுவதற்கு வேண்டியதைரியத்திற்கு ஒரு உதாரணமாயிருக்கிறது. சார்லிமேன் என்பவன் ஒருகாலத்தில் தெருவில் பந்து விளையாடிக்கொண்டிருந்தான். அது ஒரு ஜனனலில் பட்டு மருந்து விற்கிறவனுடைய கடையிலுள்ள பெரிய கண்ணாடிச் சட்டத்தை உடைத்துவிட்டது. சார்லி, "ஓடு ஓடு கதவு உடைத்ததுயார் என்று ஒருவரும் அறியமாட்டார்கள்" என்று சொன்னான் அவன்தோழன். ஆனால் சார்லி சொன்னதாவது, "இல்லை; நான் ஓடிப்போகமாட்டேன். நான் போய் உண்மையைச் சொல்லுவேன். அக்கடை எஜமானனிடத்தில் போய் தான் விளையாடிக்கொண்டிருந்த பந்தானது தன்னுடைய கையைவிட்டு நழுவிவிட்ட விதத்தையும் தான் பயமடைந்த விதத்தையும் தான் செய்ததீங்கினால் தான் அதிக விசனமடைந்ததையும் தன்னிடத்தில் பணம் இருக்கும்பக்ஷத்தில் தனக்குக் கொடுக்கிறதற்கு எவ்வளவுமனம் இருக்கிறதென்றும் ஆகிய பூரா உண்மையையும் சொன்னான். சார்லியினிடத்தில் பணம் இல்லை. ஆனால் அக்கண்ணாடிக்குக் கொடுக்கிறதற்குப் போதுமானபணம் சம்பாதிக்கிறவரையில் தான் உடனே கடையில் வேலைக்கு இருப்பதாக ஒப்புக்கொண்டான். அதை சம்பாதிக்கிறதற்கு அவனுக்கு வெகுகாலம் பிடித்தது. ஏனென்றால் அந்தக்கண்ணாடிச் சட்டமானது பெரிதாயும் விலை உயர்ந்ததாயும் இருந்தது. ஆனால் அது முடிந்தவுடன் அந்தக் கடைக்கு எஜமானன் அவன் வேலையைவிட்டுப்போவதைப்பற்றி அவன் கேட்கமுடியாமல் இருக்கும்படி அவ்வளவு அதிகமாக அந்தப் பையனுடைய நன்னம்பிக்கையும் நன்றி அறிதலையும்பற்றி மெச்சினான். சார்லி என்பவன் அவனுடைய குமஸ்தாவானான். ஒருநாள் அவன் அவனுடைய தாயாரிடத்தில் சொன்னதாவது: "நான் அந்த ஜன்னலை உடைத்த தினமானது எவ்வளவு அதிர்ஷ்டமான நாளாயிருந்தது." "இல்லை சார்லி நீ உண்மையைப் பேசபயப்படாமல் இருந்ததினமானது எவ்வளவு அதிர்ஷ்டமுள்ள தினமாயிருந்தது" என்றாள்.

ஒருகாலத்தில் டங்கன் என்னும் பெயர் கொண்ட ஒரு சிறுபையன் இருந்தான். பையன்கள் அவனை சத்தியவாக் டங்கன் (True Duncan) என்று கூப்பிடுவது வழக்கம். ஏனென்றால் அவன் ஒருபொழுதும் பொய்சொல்லமாட்டான். ஒருநாள் அவன் பள்ளிக்கூடத்தின் முற்றத்தில் ஒரு கோடரியைவைத்து விளையாடிக்கொண்டிருந்தான். அந்தக் கோடரியானது மழைகாலத்தில் பள்ளிக்கூடத்து அறையில் கணப்புப்போடுவதற்காக விறகு வெட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது.

டங்கன் என்பவன் ஒருதடியை வெட்டிக்கொண்டிருக்கையில் "டாபி" என்ற உபாத்தியாயருடைய பூனையானது டங்கன் என்பவன் வேலைசெய்துகொண்டிருந்த மரக்கட்டையின்மீதுவந்து குதித்தது. அவன் மரத்தை வெட்டுகிறதற்காக கோடரியை உயர்த்தினான் ஆனால் அது பூனையின்மேல்விழுந்து அ...

கொன்றுவிட்டது. என்னசெய்யவேணுமென்று அவனுக்குத்தெரியவில்லை. அது எஜமானனுடைய செல்வப்பூனை. அவர் பையன்களுக்கு அவர்களுடைய பாடங்களைக்கேட்டுக்கொண்டிருக்கையில் பக்கத்திலுள்ள மெத்தையின்மேல் உட்கார்வது வழக்கம்.

டங்கன் என்பவன் பேதைமையான "டாபியை" உற்றுப்பார்த்துங்கொண்டிருந்தான். அவனுடைய முகமானது சிவந்துவிட்டது. கண்களில் தண்ணீர்ததும்பிற்று. எல்லாப்பையன்களும் ஓடிக்கொண்டே வந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஏதோ சொல்ல வேண்டியதிருந்தது. "இப்பொழுது பையன்களே நம்மவர்களில் மற்றவர்களைப்போலவே, டங்கன் என்பவனைப் பொய்சொல்லும்படி செய்யக்கூடுமாவென்று நாம் பார்ப்போம்" என்று அவர்களில் ஒருவன் மற்றவர்களிடத்தில் முணுமுணுக்கிற சப்தமானது கேட்கப்பட்டது. டங்கனுடைய சிநேகிதனாயிருந்த "டாம் பிரவுன்" (Tom Brown) என்பவன் "அவன் பொய்சொல்லமாட்டான். அவன் பொய்சொல்லமாட்டான்" என்று சொன்னான். "டங்கன் என்பவன் தங்கத்தைப்போல அவ்வளவு கச்சமாய் இருப்பான் என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்."

ஜான் ஜோன்ஸ் (John Jones) என்பவன் முன்னேவந்து சொன்னதாவது "பையன்காள்! வாருங்கள், நாம் அந்தப்பூனையை ஒரு சந்துக்குள் எறிந்துவிடுவோம். கசாப்புக்காரனுடைய நாயானது அதைக் கொன்றுவிட்டதென்று நாம் உபாத்தியாயர் மிஸ்டர் கோல் (Mr. Cole) என்பவரிடத்தில் சொல்லக்கூடும். அந்தநாயானது அதை சென்றவாரத்தில் தன் பற்களினால் கிழித்தது உனக்குத்தெரியும்." அவர்களிற் சிலர் அதுதான் மிகவும் நல்லதென்றுநினைத்தார்கள். ஆனால் டங்கன் என்பவன் [illegible] முற்றிலும் கோபம்அடைந்தவனாய்த் தோன்றினதினால் அவனுடைய கண்கள் விம்மி [illegible]னுடைய முகமானது முன்னிலும் அதிக சிவப்பாய்விட்டது. இல்லைஇல்லை நான் பொய் சொல்வேன் என்று நினைக்கிறாயா, அது பொய்பொய் என்று சொன்னான். அவன் அந்தவார்த்தை உபயோகிக்கும் ஒவ்வொரு சமயங்களிலும் அவனுடைய சப்தமானது ஜாஸ்தியாய்விட்டது.

பிறகு அவன் அந்தவஸ்து [illegible] எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்து [illegible]றக்குள் கொண்டுபோனான். பையல் [illegible]ன நேரிடப்போகிறதோ என்பதைப் [illegible]ற்காகப் பின்தொடர்ந்தார்கள். உப[illegible]பர் அண்ணாந்துபார்த்துச் சொன்னதாவது இந்தப் பூனை கொல்லப்பட்டவிதம் என்ன? அப்பேர்ப்பட்டகெடுதி யார் செய்திருக்கக்கூடும்?

எல்லாரும் சிறிதுநேரம் மௌனமாய் இருந்தார்கள். டங்கன் என்பவன் பேசத்தொடங்கியபோது "மிஸ்டர் கோல் என்பவரே நான் மிகவும் விசனப்படுகிறேன். நான் அவ்வேழைப்பூனையைக் கொன்றேன். ஐயா, உண்மையாகவே நான் விசனப்படுகிறேன். நான் அதிக ஜாக்கிரதையுள்ளவனாய் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் நான் அந்தப் பூனையானது கட்டையில் தேய்த்துக்கொண்டிருப்பதை நான் கண்டேன். நான் சொல்லக்கூடாத அளவு விசனப்படுகிறேன்."

மிஸ்டர் கோல் என்பவர் மிகவும் கோபங்கொண்டு தன்னுடைய பிரம்பை எடுத்துக்கொண்டு டங்கன் என்பவனுக்கு பலமான உதைகொடுப்பதை நாம் பார்க்கலாம் என்று எல்லாரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அப்படிச்செய்கிறதற்கு பதிலாக அவர் இன்பமாய் புன்னகைசெய்து "டங்கனே நீ ஒரு தைரியமானபையன். மேலே இருக்கிற ஜன்னலில் இருந்து முற்றத்தில் நடந்த சங்கதி எல்லாவற்றையும் நான் கண்டும் கேட்டுமிருந்தேன். நான் என்னுடைய பள்ளிக்கூடத்தில் உண்மைக்கும் கண்ணியத்திற்கும் உறுதியான உன் உதாரணத்தைப்பார்க்கச் சந்தோஷப்படுகிறேன்," என்று சொன்[illegible]ர்.

[illegible] விளங்கக்க[illegible]



டங்கன் என்பவன் அவனுடைய உருமாலை எடுத்து தன்கண்ணைத் துடைத்தான். அப்பையன்கள் கொஞ்சநேரத்துக்கு மவுனமாய் இருக்கவில்லை. உண்மைபேசின டங்கன் என்பவனுக்கு மூன்றுதரம் சந்தோஷம் பாடுங்கள் என்று எல்லாரும் "ஜே, ஜய, ஜய" வென்று பள்ளிக்கூடம் எதிரொலிக்கும்படிச் செய்தார்கள்.

உபாத்தியாயர் சொன்னதாவது: "என்னுடைய பையன்காள்! எது சரியோ அதை நீங்கள் அறிந்து அதை நீங்கள் ஒப்புக்கொண்டதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். உங்களில் சிலர் அப்படிச் செய்திருக்கமாட்டீர்கள் என்று நான் பயப்படுகிறேன். ஒன்றுக்கும் பொய் சொல்லவேண்டியது அவசியமில்லையென்று இதனாலே அறிந்துகொள்ளுங்கள். டங்கன் என்பவன் உங்களுடைய கெட்ட புத்திமதிகளைக் கேட்டுக்கொண்டு என்னிடத்தில் பொய்சொல்ல வந்தான்என்று நினைத்துக்கொள்வோம். அது உடனே கண்டுபிடிக்கப்பட்டு சத்தியம் சொன்னதற்குக் கிடைத்த வெகுமானத்திற்கு பதிலாக பொய் சொல்லுதலாகிய வெட்கம்மாத்திரம் கிடைத்திருக்கும்" என்றார்.

எம். பி. எம். இராமலிங்கமுதலியார்.

HONEST JACOB.

## யோக்கியனான ஜேக்கோப்.

ஜேக்கோப் என்பவன் கூலிக்கு வேலைசெய்கிற ஒரு எளியமனிதன். பிரிட்ஸ் (Frits) என்பவன் ஒரு பையனாகிய அவன்மகன். ஆதாம் அப்பம் சுடுகிறவன். சீன் (Seen) என்பது அந்த ஏழைமனுஷனுடைய குடிசை பிரிட்ஸ் என்பவன் முதலில் வருகிறான்.

பிரிட்ஸ்.—அப்பா வீட்டுக்கு வரவேணுமென்று நான் எவ்வளவு பிரியப்படுகிறேன், எனக்கு அவ்வளவு பசியாயிருக்கிறது. ஆ! அவர் இதோ வருகிறார். ஜேக்கோப் என்பவன் ஒரு அப்பத்தைக் கொண்டுவருகிறான்.

ஜேக்கோப்.—சிறிய பிரிட்சே இதோ இருக்கிறேன்.

பிரிட்ஸ்.—நான் சந்தோஷப்படுகிறேன். அருமையான தாய் செத்ததுமுதல் இங்கு வெகு ஏகாந்தமாய் இருக்கிறது.

ஜேக்கோப்.—நீ மிகபசியாய் இருக்கின்றையோ? என்னுடைய எளியபையனே அது எனக்குத்தெரியும். வேலை கிடைக்கக்கூடிய காலத்தில் அது அப்படி இருக்கவில்லை. இப்பேர்ப்பட்ட கஷ்டகாலங்கள் சீக்கிரத்தில் கழிந்துவிடுமென்று நான் நினைக்கிறேன்.

பிரிட்ஸ்.—ஆ! எவ்வளவு நேர்த்தியான அப்பம் உம்மிடத்தில் இருக்கிறது.

ஜேக்கோப்.—அதுதான் கடைசிஅப்பம்.நமக்கு மற்றொரு அப்பம் எப்பொழுது கிடைக்குமென்று தெரியவில்லை. என்மகனே அப்பத்தைப்பிட்டு உடனே உன்னுடைய இராப்போஜனத்தைச்சாப்பிடு. ஏதாவது கொஞ்சம் லாபம் அன்னியில் நஷ்டம் இருக்கமாட்டாது. சமைக்கிறதற்கு நம்மிடத்தில் ஒன்றும் இல்லாமல் இருக்கும்போது சமைக்கிறதற்குக் காத்திருக்க அவசியமில்லை.

பிரிட்ஸ்.—ஏ அப்பா இது நியாயம் இல்லை.

ஜேக்கோப்.—என் மகனே ஏது நியாயமில்லை.

பிரிட்ஸ்.—நீ பெரிய துண்டை எனக்குக் கொடுத்தது.

ஜேக்கோப்.—முறையிட வேண்டியது ஏதாவது இருக்கிறதா; என்னுடைய பையனே வந்து அதைத்தின்னு.

பிரிட்ஸ்.—நீ வேலைக்காக நாள்முழுதும் தேடிக்கொண்டிருந்திருக்கிறபடியால் நீ ரொம்பவும்களைப்படைந்திருக்கவேண்டும். உமக்கு சாப்பிடுகிறதற்கு ஒன்றும் இல்லையென்று எனக்குத்தெரியும்.

ஜேக்கோப்.—ஆ! என் பிரிட்சே நான் எதாவது சாப்பிடுவதைப்பார்க்கிலும் நீ சாப்பிடுவதைபார்ப்பது எனக்கு நலமாயிருக்கும்.

பிரிட்ஸ்.—ஆனால் நீர் சாப்பிடாவிட்டால் நாளைக்கு வேலைதேடிப்போக உமக்கு எப்படி சக்தி இருக்கும். அதாவது வேலை இருந்தாலும் அதைச்செய்கிறதற்கு எப்படி சக்தி இருக்கும். ஆகையால் நீர் இதில் ஒருபாகத்தைப் புசிக்கவேண்டும். அப்பா! இதை மறுபடியும் பிள்ளும்.

ஜேக்கோப்.—நல்லது உன்பேரிலிருக்கப்பட்ட பிரியமானது எதாவது ஆகாரத்தைப் பார்க்கிலும் எனக்கு அதிக அருமையா யிருந்தபோதிலும் உன்னைச்சந்தோஷப்படுத்துகிறதற்கு நான் அதைப் பிள்ளுகிறேன்.

ஜேக்கோப்.—என்பவன் அப்பத்துண்டை உடைக்கவே அநேக பணத்துண்டுகள் வெளியேவந்தன.

பிரிட்ஸ்.—அந்த அப்பத்திலிருந்து வெளியே விழுந்தது என்ன? ஏஐயா! (தங்கம்)! தங்கம்!

ஜேக்கோப்.—அதைத்தொடாதே அந்தப் பணம் நம்முடையதல்ல.

பிரிட்ஸ்.—ஏ அப்பா! அப்படியானால் அது யாருடையது?

ஜேக்கோப்.—உண்மையாகவே அதுயாருடையதாய் இருக்கவேண்டுமென்று எனக்குத் தெரியாது. அது என்னுடையதல்லவென்பது மாத்திரம் எனக்குத்தெரியும். நாம் விசாரிக்கவேண்டும், ரொட்டிக்காரனிடத்தில் போய் அதைப்பற்றி அவனிடத்தில்கேள். என்மகனே விரைந்து ஓடு.

பிரிட்ஸ்.—ஆனால் ஐயா நான் ரொம்பவும் ... அப்பத்தை விலைகொடுத்துவாங்கவில்லையா.

ஜேக்கோப்.—நான் அப்பத்தை விலைகொடுத்து வாங்கினேன். ஆனால் அந்த தங்கத்தை ... வாங்கவில்லை. நான் உண்மை ... ஏழைதான். ஆனால் அயோக்கியதையாய் இருக்கவேண்டியதற்கு அது காரணமில்லை.

பிரிட்ஸ்.—அருமைப்பிதாவே நீர் சொல்கிறது சரிதானென்று எனக்குத்தெரியும், ரொட்டிக்காரனிடத்தில் சொல்வதற்கு நான் விரைந்துஓடுவேன்.

ஜேக்கோப்.—ஆ! என்னுடை பிரிட்சே இப்படி நீ பட்டினியாய் இருப்பதைப்பார்க்க எனக்கு வருத்தமாயிருக்கிறது, ஆனால் பொய் சொல்வதனாலும் அயோக்கியதையினாலும் நீ நல்லஸ்திதிக்குவருவதைப்பார்க்கிறதற்கு எனக்கு இன்னும் அதிக வருத்தமாயிருக்கும். நாம் கடவுளிடத்திலும் ஒருவரோடு ஒருவரும் விசுவாசமாகவே இருந்தால் கடவுள் நம்மை பாதுகாப்பார் என்பது நிச்சயந்தான்.

பிரிட்ஸ்.—ரொட்டிக்காரனாகிய ஆதாமும் மறுபடியும் வருகிறான்.

பிரிட்ஸ்.—ஐயா இதோ இருக்கிறார், நான் அப்பணத்தைப்பற்றி அவரிடத்தில்சொல்லி இருக்கிறேன்.

ஜேக்கோப்.—என் இஷ்டனே இங்கு ஏதோ பெரிய தப்பிதம் நடந்திருக்கிறது. இது உம்முடைய தங்கந்தானா.

பிரிட்ஸ்.—ஐயா, ரொட்டிக்காரரே, என்னுடைய தகப்பனார் மிகவும் ஏழை.

ஜேக்கோப்.—பிரிட்ஸ் மௌனமாய் இரு. நாம் திருடர்களும் அல்ல பிச்சைக்காரர்களும் அல்ல, அது உம்முடைய தங்கமானால் எடுத்துக்கொள்ளும்.

ஆதாம்.—ஆம் நான் அப்படியே அவனிடத்தில் சொன்னேன்.

ஜேக்கோப்.—யாரிடத்தில் சொன்னாய்? என்ன சொன்னாய்?

ஆதாம்.—திரிகை செய்கிறவனாகிய லூக் (Luke) என்கிற மாயாவிடத்தில் அன்னிய அயல் வீட்டுக்காரனாகிய ஜேக்கோப் என்பவன் பட்டணத்தில் மிகயோக்கியதை உள்ளவனென்று நான் அவனிடத்தில் சொன்னேன். அவர் சொன்னதாவது ஆதாமே அங்கே தான் நீ சொல்வது சரி. ஆம், ஆம், அது அப்படியே நிரூபமாகிறது.



ஜேக்கோப்.—நீ சொல்லுகிறது எனக்குப் புரியவில்லை.

ஆதாம்.—அந்த பணத்தைப்பற்றிய சங்கதி எல்லாவற்றையும் நான் சொல்வேன். ஒரு அன்னியன் நேற்றையத்தினம் அதை என்னிடத்தில் கொண்டுவந்து பட்டணத்தில் மிகவும் யோக்கியதையான ஏழை மனிதனுக்கு அதை கொடுக்கும்படி என்னிடத்தில் சொன்னான். நீ ஒரு அப்பத்திற்காக இன்று சாயங்காலம் வருவாயென்று எனக்குத்தெரியும். ஆகையினாலே நான் உனக்கு ஒரு அப்பம்சுட்டு தங்கத்தை போட்டிருந்தேன். அது உம்முடையதுதான், யாராவது ஒருவர் அதை அடைய பாத்திரனாயிருந்தால் அந்த பாத்திரமுள்ளவன் நீதானென்று உன்னுடைய யோக்கியதையினால் தெரிவித்திருக்கிறாய்.

ஜேக்கோப்.—ஆ! "என் மகனே" என்று பிரிட்சை ஆலிங்கனம் செய்துகொள்கிறான்.

ஆதாம்.—இன்னும் அதிகமாய்ச் சொன்னதாவது நீ நான் விரும்பும் யோக்கியனை மனிதனைக்கண்டு பிடித்தவுடன் என்னைத்தேடிவரும்படி அவனிடத்தில் சொன்னாயானால் நான் அவனுக்கு நல்ல வேலையும் சரியான கூலியும் கொடுப்பேன் என்று சொல்லி அவன் இந்தக்கடிதத்தை என்னிடத்தில் கொடுத்துவிட்டுப்போனான் இந்தா அவனுடையது அதில் என்ன இருக்கிறது.

ஜேக்கோப்.—அந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு "வேலையா கூலியா" அவைகள் தங்கத்தைப்பார்க்கிலும் சிறந்தவைகள். இஷ்டனாகிய ஆதமே உனக்கு வந்தனம் அளிக்கிறேன். பிரிட்ஸ் போவோம்வா. உடனே நாம் அந்த மனுஷனைக்கண்டுபிடிப்போம், வழியிலே நாம் ஆகாரத்தைச்சாப்பிட்டுக்கொள்ளலாம். நம்மை யோக்கியராய் வைத்துக்காத்த பரமண்டலத்திலிருக்கிற கடவுளுக்கு வந்தனம் அளிக்கிறேன், நமக்கு சீக்கிரத்தில் போதுமான ஆகாரம் கிடைக்கும்.

எம். பி. எம். இராமலிங்கமுதலியார்.

---

## Selections.

## Canon Kingsley on Health.

## சுகாதாரத்தைப்பற்றி.

கானன் கிங்ஸ்லி யென்னும் பிரபல போதகர் சுமார் 30 வருஷங்கட்குமுன் இங்கிலாந்தில் இவ்விஷயத்தைப்பற்றி யோரிடத்தில் பிரசங்கிக்கையில் பின்வருமாறு பேசியர்:—

"இருளடைந்த அறைகளில், ஒவ்வொருநாளும், ஒவ்வொரு வாரமும் அடைத்துக் கொண்டிருப்பதால், அக்காலமுழுவதும் விஷத்தைத்தின்று தேகத்தைக் கெடுத்துக் கொள்வதுபோல் உண்மையாகவே தங்கள் சௌக்கியத்தையும் மூளையின் சக்தியையும் கெடுத்துக்கொள்வதை, ஒளியையும், அதைப்பற்றிய விதிகளையும் கொஞ்சம் அறிந்துகொண்டால், ஸ்திரீகள் தாங்களே தெரிந்துகொள்வார்கள். அப்படியே உஷ்ணத்தை யொட்டிய சில விஷயங்களை யறிந்துகொள்வார்களானால், தாங்களும், தங்கள் குழந்தைகளும் மூடத்தனமானவிதமாய் உடுத்திக்கொள்வதால் விளையும் கெடுதியையும் அறியலாவார்கள். சீமாட்டிகளே, நான் உங்களை யொரு விஷயம் கேட்கிறேன். அதாவது, இந்த இங்கிலாந்து தேசத்தில், தடுக்கக்கூடியவையும், அநாவசியமுமான பல நோய்களால் வாடர்லு சண்டையில் மாண்டவர்களைவிட அதிகம் பேர் வருஷாவருஷம் இறந்து போகிறார்களே, அந்த சங்கதியுங்கட்குத் தெரியுமா வென்பதுதான் இவ்வாறு இறப்பவர்களில் பெரும்பாலர் குழந்தைகளாம். தங்கள் குழந்தைகளை யன்புடன் சீராட்டி, அருமைபாராட்டி, படிப்பித்து, வேண்டுமானால் அவர்களுடைய உயிருக்குப் பதில் தங்கள் உயிரையுந் தரச் சித்தமாய் நிற்கும் ஆசைத்தாய்மார்கள் தாங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்துகொண்டால் தவிர்க்கக்கூடிய நோய்களே இக்குழந்தைகளை வாட்டி, வருத்தி, உயிரையும் கொண்டுபோயின வென்பது உங்களுக்குத் தெரியுமோ? காற்று உலாவும் விஷயமாய் அறியவேண்டிய சில சாதாரண விதிகளையும் அறியாமையினாலும், அதுபோலவே பாடசாலைகளிலும் தேகதத்துவ சாஸ்திர விதிகளைப் பற்றிஅறியாமையினாலும் அல்லவோ எத்தனையோ நோய்கள் பிறக்கின்றன! இப்படியிருப்பதால் அக்குழந்தைகளைக் காப்பாற்றிவரும் தாய்கள், சகோதரிகள், மாமிகள், அத்தைகள், தாதிகள், சேடிகள் முதலியோர் ... லாரும் தேகசவுக்கியம் ஜீவன் இவற்றைப்

விதிகளைக் கொஞ்சமறிந்து, மனுஷ சவுக்கியம், மனுஷ உயிர் இவற்றை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துவர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளவும் வேண்டுமோ” என்பதாம்.

. . . . . . . .

காற்றுக்கும் சௌக்கியத்துக்கு முள்ள சம்பந்தத்தைப்பற்றிச் சொல்லுகையில், சுத்தமான காற்றோட்ட மிருக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றிச் சொல்லியபின் பின்வருமாறு சொல்கிறார் :—

“நான் இப்போது சொல்லப்போகும் ஒரு சங்கதி உங்களில் சிலருக்கு ஆச்சரியத்தை விளைக்கும் என்று எண்ணுகிறேன். அந்த விஷயத்தை நான் அறிந்துகொள்ளுகையில் எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. உங்கள் வீட்டினுள் நல்ல, சுத்தமான, காற்று வந்துலாவச்செய்யலாம். ஜனங்களையும் நல்ல காற்று வீசுமிடத்தில் இட்டுக்கொண்டும் போகலாம். ஆனால் அவர்களிற் சிலர் சரியாய் உஸ்வாசம் செய்யமாட்டார்கள். பலபேருடைய சுவாசாசயங்களில் காற்று சரியாய் வெளிவருவதுமில்லை, உட்செல்லுவது மில்லை என்று சொல்வது உண்மை. ஆகையால், அவர்கள் உடலில் பிராணதார வாயு சரியாகவும், போதுமான அளவுக்கும் பிரவேசிக்கிறதில்லை. அவர்கள் தேக சௌக்கியம் பொருந்தியிருப்பது மில்லை. சுவாசாசயம் சரியானவிதமாய் நிறையாவிட்டால், தேகசௌக்கியம் வாய்த்திருப்பது துர்லபந்தான் என்னவேண்டும்.

சுவாசாசயமானது காற்றால் சரியானபடி நிரம்பாததற்கு, அமைதியாய் ஒரேயிடத்தில் இருந்துவேலைசெய்தல், மௌனமாயிருத்தல்,ஐரோப்பிய ஸ்திரீகள் தங்கள் சட்டையின் கீழ் போடும் ஒருவித இடுப்பு இறுக்கு (stays) ஆகிய இம்மூன்றும் சாதாரணமான காரணங்கள் என்று கிங்ஸ்லிபோதகர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.” . . . . .

முதலாவது, அமைதியாயிருத்தல். இத்தேசத்தில், ஸ்திரீகளும், பெண்களும், (புருஷர்களும், பிள்ளைகளும் கூடத்தான் என்று நினைக்கிறேன்) தைத்தல், தாதிவேலை செய்தல், சமைத்தல், படித்தல், எழுதல் முதலிய போன்ற எவ்வித வேலையைச் செய்வதாயிருந்தாலும், வெகுநேரம் ஓரிடத்திலேயே உட்கார்ந்து அல்லது குனிந்துகொண்டு சாதாரணமாய் அசைவு என்பது இல்லாமல் இருந்துவிடுகிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அடிவிலாவெலும்புகள் தேகத்தில் அமுக்கப்பட்டு, சுவாசாசயம் சரியாய் உஸ்வாஸ நிஸ்வாஸம் செய்வதில்லை. [illegible]டியிருப்பதால் அவற்றின் அடிப்புறத்தில் கரியமலவாயு சேர்ந்துபோகின்றது. நாம் ஏதாவதொரு வேலை செய்கையில் வெகுநேரம் உட்கார்ந்து அல்லது குனிந்துகொண்டு இருந்தபின், எழுந்திருக்கையில் வெகு சுபாவமாய், மார்பை உயர்த்தி, உடலை நிமிர்த்தி, கொட்டாவி அல்லது பெருமூச்சு விடுகின்றோமல்லவா? இதெல்லா மென்னவென்றால், சுவாசாசயத்தில் சேர்ந்துபோன கரியமல வாயுவை வெளிப்படுத்தவும், பிராணதார வாயுவை உட்கொள்ளவும், நாம் நினைவுகொள்ளாமலே இயற்கையாய் நடந்தேறும் காரியங்களாம். ஆகையால், நாமும்; நம்முடைய பிள்ளைகளும், உடலையொடுக்கி, குனிந்துகொண்டு நிற்கும் காரியங்களில் அதிகமாய்ப்பிரவேசியாமல் இருக்கவேண்டும். ஏனெனில், அச்சமயங்களில் சுவாசாசயத்தில், சரியானவிதமாய்க் கெட்ட காற்று நீக்கப்படவும், நல்ல காற்று உட்புகவும், உஸ்வாச நிஸ்வாச காரியம் நன்றாய் நடப்பதில்லை. பள்ளிக்கூட உபாத்தியாயர்கள், தங்கள் மாணாக்கர் அதிகமாய்க் குனியாமல் நிமிர்ந்து உட்கார்ந்து எழுதக்கூடிய விதமாய் மேசைகள் போதுமான உயரமாயிருக்கவும், அவர்கள் எழுதாத சமயங்களில சாய்ந்துகொள்ளும்படி அவர்களுடைய பெஞ்சிகளுக்குப் பின் சாய்பலகை ஏற்பட்டிருக்கவும் பார்க்கவேண்டும். இல்லாவிட்டால், ஆண்பிள்ளைக்கும் பெண் பிள்ளைக்கும் குனியவேண்டியிருக்கும் ; அதனால் அவர்கள் சுவாச காரியத்திற்குத் தடையுண்டாகும்; அவர்கள் முதுகெலும்புக்குக் கெடுதியுண்டாகும், இரண்டாவது பிசகு, கட்டாயத்தினால் மௌனமாயிருத்தல்; தேகதத்துவத்தையொட்டிப் பேசுவதானால், சௌக்கிய நிலையிலுள்ள ஆண், பெண் பிள்ளைகளும், வாலிபர்களும் எவ்வளவுசந்தடிசெய்தாலும் இரைச்சல் இட்டாலும் நல்லதுதான் என்று சொல்லக்கூடும். சுவாசாசயத்தினின்று விரைவாய்க் காற்றைஅப்புறப்படுத்தியும் நிறைத்தும் வருவதால், கூச்சல் போடுவது, சிரிப்பது, பாடுவது, ஆகிய இக்காரியங்கள் ஒவ்வொன்றும் எத்தனைதரம் நடக்கிறதோ அத்தனைக்கும் நல்லதே. சிறு குழந்தைகள் அழுவதுகூட, அவற்றின் சௌக்கியத்திற்கு அநுகூலமான விஷயமேயாம்.

இத்தேச ஸ்த்ரீகளின் அலங்காரமான உடையில் இடுப்பையும், மார்பையும் இறுக்கும் கொடிய பழக்கம் சேராமலிருப்பது அதிர்ஷ்டந்தான். ஆனால், ஐரோப்பிய சரித்திரத்தில் இவ்வித இடுப்பிறுக்குகளைப்பற்றி முதல்முதல் சொல்லியிருப்பது, ஸைரீனியென்னுமிடத்து அத்தியக்ஷரொருவர் கடிதத்திலாம். அதில் அவர், கீழ்தேசத்தினின்றும் வந்த



வொரு அடிமைப் பெண்ணைப்பற்றி சிற்றிடையாள் என்று எழுதியிருக்கின்றார் என்பது கவனிக்கத்தக்க விஷயம். இத்தேச கோயில் முதலியவிடத்துச்சித்திரங்களிலும் அவ்வித இடைகளைக்காணலாம். ஆனால் தற்காலத்திய இந்திய ஸ்திரீகளில் அவ்விதத் துடியிடைகளையும் துவளுமிடைகளையும் காண்பதரிது, இடுப்பிறுக்குகளையும், இறுக்குக் கச்சைகளையும் விலக்கிவரும் பழக்கம், இந்நாட்டில் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்று கோறுவோம். அவ்வித இறுக்குகளும், கச்சைகளும், சுவாச காரியத்துக்கும், இரத்தம் உடலில் பரவுதற்கும், தடையாய் நின்று, மனிதஉடலிலுள்ள சில ஜீவாதார அங்கங்களுக்குக் கெடுதிவிளைக்கும், ஐரோப்பிய ஸ்திரீகளில்கூட பலர் இக்கெட்ட வழக்கத்தை தற்காலம் விட்டுவரத்தொடங்கி யிருக்கிறார்கள்.—Mrs. Brander in the *Indian Ladies' Magazine*.

## Fine Arts in Madras.

## சென்னை சித்திரத் தொழில்.

சென்னையில் வருஷாவருஷம் கூடும் சித்திரத்தொழிற்காட்சி, இந்த வருஷம் பிப்ரவரிமாசக் கடைசிவாரத்தில், ஸெனேட்மாளிகையில் வைத்துக் காட்டப்பட்டது. ஐரோப்பாவில் கூடும் இவ்விதக் காட்சிகளையும் இக்காட்சியையு மொப்பிட்டுப் பார்த்து அபிப்பிராயம் சொல்லத்தக்க ஒருவர், இரண்டிற்கும் வெகு வித்தியாசமிருக்கிறதென்றுசொல்லி, அதன்மேல் “திராவிடவர்த்தமானி”யில் பின்வருமுபதேசம் செய்கிறார் :—

“சிற்பவேலைக் காரர்களும், சித்திரப்படமெழுதுகிற வர்களும் கௌரவப்படுத்தத்தக்கவர்கள் அல்ல: சாதாரண வேலைக் காரர்கள் தான் என்று நாம் நினைக்கும் அளவும் விந்தையான வித்தையாகிய இச்சித்திரத் தொழிலுக்கு சரியான அபிவிர்த்தி கிடைப்பது மிக அருமையாகும். இம்மாதிரி வேலையையும்வேலைசெய்வோரையும்பற்றிஜனங்கள் எந்தத் தேசத்தில் தாழ்வான அபிப்பிராயம் கொள்ளுகிறார்களோ அத்தேசத்தில் அவ்வேலைக்காரர்கள் சாமானிய வேலைமாத்திரம் செய்வாரேயன்றி மிக நேர்த்தியான யாதொன்றையும் செய்ய சாத்தியமில்லாமற்போகும். ஆகையால், தென்னிந்தியாவிலுள்ள அவ்வித வேலைக்காரர்கள் தேசத்துக்குப் புகழைக் கொண்டுவரவேண்டு மானால் நாமே அவர்களைக் கனப்படுத்தி அவர்கள் தொழில் மேலானதென்று எண்ணி அவர்களை உற்சாகப் படுத்திவர வேண்டியது. ஐரோப்பாவிலே நன்றாய்ப் படித்தவர்களும் இத்தொழிலை ஆவலோடும் மிகச் சாமர்த்தியத்தோடும் செய்துவருவதினால் தங்களுக்கு லாபத்தை வருவித்துக் கொள்வதுடன் தேசத்துக்கும் கீர்த்தியை வருவிக்கிற வர்களாயிருக்கிறார்கள். மேலும் சித்திரவேலையில் பிரியமுள்ளவர்கள் அதனால் ஜீவிக்கவேண்டு மென்றிராமல் அதனை இன்பத் தொழிலாகக் கைப்பற்றுவார்கள்.”

இந்தச்சென்னைக் காட்சியில் காட்டப்பட்ட பல சித்திரவேலைப் படங்களும், நேர்த்தியான தையல் வேலைகளும் பல துரைமார்களாலும் துரைசானிகளாலும் ஜீவனார்த்தமாக வல்லாமல் இன்பத்தொழில்களாகச்செய்யப்பட்டு,காட்டப்பட்டனவென்றுசொல்லி, “சுதேச சித்திர வேலையில் பிரியங்கொண்ட அநேகர் வருஷம் வருஷம் இது விர்த்தியாகும்என்று அபிப்பிராயப் படுகிறார்கள். எப்படியாயினும் சித்திரப்படவேலையில் விர்த்திக்கு இடம் இன்னம் அதிகமாயிருக்கிறது. அது படிப்படியாய் உண்டாகுமென்று எண்ணுவதற்கும் இடமுண்டு.” என்கிறார்.

விவேகமின்றி முன்னோர்மாதிரியைப் பின்பற்றிக் குருட்டுத்தனமாய் அவர்கள்போனவழியிலே செல்லாமல் இயற்கையிலுள்ள பொருள்களைக் கண்ணாரக் கண்டு படம் பிடித்து உண்மையாயும், புத்திகூர்மையோடும் எழுதிவரும் மேதாவிகளில் இருவர் சகோதரர்கள் மிகவும் கீர்த்தியடைந்து மேல் நோக்கிவந்திருக்கிறார்கள். அவர்கள் யாரெனில்: ரவி வர்மா என்பவரும் அவர் தம்பியாகிய ராஜராஜ வர்மா என்பவருமே. இவ்விருவரில் மிகவும் பிரபலப்பட்டவராகிய ரவி வர்மா தாம் எழுதிய (ஸர் ஜியார்ஜ் மூர், கனம் ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார, கனம் ஸர் சுப்பிரமணிய ஐயர்) ஆகியஇவர்களுடைய படங்களில் (ஸர் வி பாஷ்யம் ஐயங்கார்) அவர்களுடைய உருவப்படம் மிகவும் ஜீவகளையுள்ளதாகச் சொல்லப்படுகிறது சித்திர வேலை செய்யும் ஒருவர் எழுதிய இவ்வித ரூப படங்களையே பார்ப்பதினால் தான் அவருக்கு அவர்வேலை செய்வதில் உண்மையுள்ள சாமர்த்தியம் உண்டோ என்று கண்டறியக்கூடும். ரவிவர்மா இத்தொழிலில் கைதேர்ந்தவரே. “அவர் திருவநந்தபுரத்துக்கு 24-மைல் தூரம் வடதிசையிலுள்ள கிலிமனூரிலே திருவாங்கூர் மகாராஜா வம்சத்துக்கு விவாக சம்பந்தமான் ஓர் குடும்பத்தில் பிறந்தார். தமது ஜீவகாலம் எல்லாம் ரவி வர்மா திருவாங்கூர் மகாராஜாவுக்கு மாத்திரமல்ல, இன்னும் பல ராஜாக்களுக்கும் கவர்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் மிகவும் பிரியமுள்ளவர். இந்த சிநேகம் அவருக்கும் அவர்களுக்கும் கனமுள்ளது. அக்காலத்தில் வேல்ஸ் பிரபுவாயிருந்த நமது சக்கரவர்த்திக்கு 1875௵ ரவிவர்மா எழுதின இரண்டு படங்களை திருவிதாங்கோடு மகாராஜா கொடுத்தார். இன்னும் அநேகவிதமாய் ரவி வர்மா யோக்கியமாய் நியாயமான கனத்தையும் கீர்த்தியையும் பெற்றிருக்கிறார். படிப்புள்ள நமது வாலிபர்களில் சிலர் சித்திரத்தொழில் கனமுள்ளதென்று எண்ணி, அதில் தேர்ந்து நல்ல ஜீவனம் பண்ணியும் கீர்த்தியடைந்து வருவார்களாக.”

## To Our Subscribers.

**Most of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI. before the end of this month or receive the next number by V. P, P. for the arrears due.**

**நமது சந்தாதாரர்களுக்கு.**

நமது சந்தாதாரர்களிலனேகர் இன்னும் 10-வது வாலியமுக்குரிய சந்தாவைச் செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவை யிம்மாதத்துக்குள் அனுப்பல் வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கியுள்ள சந்தாதொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

D. K. Agency.

11*th Feb*. 1903. அ. ப. ஏஜன்ஸி.

# "ANANDA MISSION"

**For the Propagation of Truth & Knowledge,**

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control & Self-Culture.**

*"Ekam Satyam Brahma."—Sruti Vâk.*

"Seek Truth wherever you can find it,"
"But Make your Choice and Stick to It"
till you reach the end.

"*Truth is Hard Finding!*" Yes, "*Uncompromising too whole*; Yet, Try! "*Awake, Arise and Stop not till you reach the Goal.*"—*Sruti.*

'And Ye shall Know the Truth and the Truth shall Make you Free."-Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion, caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligence, development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.
*Satyameva Jayati.*

Hail! Ananda Natesa!

*Sri Akandananda Satguruve Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s*. 6*d*. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s*. 6*d*. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and prevent vexations delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினுல் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படியின்றி மத்தியில் நிறுத்திஞல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.




அன்பேயவன்: அறிவேசக்தி; ஓம்தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Om.*

ஸத்யமே ஜயம்—*Satyameva Jayati.*

புத்தகம் 11.] 1903௵ ஏப்ரல்மீ. [இலக்கம் 12.

THE DOCTRINE OF "RENUNCIATION, RE-BIRTH, AND LOVE."

# "விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு."

### iii. "நேசித்திரு—ABIDE IN LOVE."

நேசித்திரு. அதாவது அன்பிலமர்ந்திரு. இந்த இரண்டுவார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மையையும் அதன் அருத்தத்தையுமறிந்து ஒழுகும் ஆற்றலுடையார் புருஷார்த்தம்நான்கும்பெற்றுப்பெருவாழ்வு வாழ்ந்துய்வர் என்பதிற் சந்தேகமில்லை. நேசம் அல்லது அன்பு என்றல் பசப்புவார்த்தைபேசி பல்லைக்காட்டி இளிக்கும் காமசேஷ்டையல்ல. "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ருர் திருவள்ளுவர். மனமொன்றுபட்டு லயித்த இடமே அன்புக்கு இருப்பிடமாம். மனிதன் இகபரசுகமெய்தச் செய்யவேண்டியதெல்லாம் "நேசித்திரு" என்னும் இருவார்த்தைகளில் அடங்கிவிடும். "காலமுண்டாகவே காதல்செய்துய்ம்மின்" என்ருர் மாணிக்கவாசகஸ்வாமிகள். "Abide in Love"-"அன்பிலமர்ந்திரு" என்ருர் யேசுகிறிஸ்துவும். மற்றப்படி யுலகிலுள்ள பக்தர்கள், முக்தர்கள், யோகிகள், ஞானிகள், மதக்குரவர்கள் எல்லாரும் போதித்த உண்மையின் கருத்து இதுவே. தன்னைத்தனைத் தன்னிலிழுத்துக்கொள்ளும் கவர்ச்சிவாய்ந்தது அன்பு அல்லது நேசம். இந்த ஆகர்ஷணசக்தி ஜகத்தில் எல்லாவஸ்துக்களிடத்திலும் அதநின் நிலைமைக்குத் தக்கபடி உருமாறி உண்மையில் வேற்றுமையின்றித்தோற்றும். ஜீவன்களில் சிரேஷ்டமாகத்தோற்றும் அன்பு தாயன்பு. ஆண்பெண்ணிருபாலும் ஒன்றை யொன்று கண்டுழிகவர்ச்சிக்குள்ளாகிக் காமத்தோற்றமாக விளங்குவதும் இவ்வன்பின் விகாரமே. தாய் தன்னுயிரைக்கொடுத்து மகவைப்பெறுகிருர்கள். அவசியம் நேர்ந்துழி தன்னுயிரை மாய்த்தும் அக்குழவியை இரக்ஷிப்பள். உள்ளமொன்று பட்ட காதலர் இருவர் உயிரொன்று உடலிரண்டாக வசிப்பர். ஈருயிர் ஒருயிரானது இவ்வன்பின்

வலிமையால் உண்மையான நேசர்களும் இப்படியே யாவர். உயிரொன்றுபட்டதே உண்மையில் நேசமாம். மற்றதெல்லாம் மாயமாம்: நேசவேஷம்போட்டுத் திரியும் போலிப்பொருளாம். அன்பின் சக்திக்கு அளவில்லை. அது எல்லாம் பொறுக்கும். பொறுத்துப் பட்சமாகவு மிருக்கும். தயாபூர்த்தியுள்ளது; பொறாமைகொள்ளாது. அடக்கமுடைத்து; தற்பெருமையும் புகழ்ச்சிவிருப்பும் அதனிடத்தில்லையாம். முறைகோடாக நடவாது: மரியாதை வடிவமாயுள்ளது. சுயநயம் நாடாது: தன்னைக்கொடுத்து தான் நேசித்தவரைக்காக்கும் சுபாவமுள்ளது. கோபதாபம்கொள்ளாது: சாந்தஸ்வரூபமானது. கபடமென்பது கனவிலும் நினையாது: 'கறந்தபால் கறந்தபடி' கலப்பற்றிருக்கும். உண்மைக் குணமுள்ளது: அக்கிரமத்திற்செல்லாது அசத்தியத்தை நாடாது; சத்தியத்திற் சந்தோஷிக்கும். அன்பையாய்ந்திடில் அது இவ்வகை இலக்ஷணங்களுடையதாய் விளங்குமென்று ஸெண்ட் பால் எடுத்துரைத்திருக்கிறார். பொறுமையே பூஷணமதற்கு; பட்சமே லக்ஷியம்; தயவே தனம்; அடக்கமே ஆபரணம்; உபசாரமே உருவம்; தானற்றதன்மையே வன்மை; கோபமின்மையே குணம்; மருளற்றதன்மையே மகுடம்; சத்தியமே சாதனம். அன்பை அக்கக்காய் எடுத்தாய்ந்தால் அது இத்தகைய நவமணிப்பூணாரமாக விளங்கும்.

உலகத்தில் எல்லாம் அழிந்தபின்னும் அன்பு அழியாது. பூர்ண அன்புக்கு ஒருநாளும் ஒரு குறைவும் கிடையாது. முப்பத்தியாறுதத்துவங்களும் கடந்த கடவுளே அன்புருவானவரென்பது விளங்க "அன்பில்விளைந்த ஆரமுதே" யென்றார் திருவாசகம்பாடிய மாணிக்கவாசகர். "மெய்ப்பதமறியா வீறிலியேற்கு விழுமியதளித்ததோர் அன்பே!" என்றும், "அன்பே!" என்றும் செப்பியுளார் அவரே. அப்படிப்பட்ட ஈசன் திருவடிசேர "கற்றாவின்மனம் போலக் கசிந்துருகவேண்டுவனே" யென்றார். கன்றையுடையதாய்ப் பசு தன் கன்றை நினைத்து மனம்கசிந்துருக மடியிற்பால் சுரந்தொழுகுவதுபோல வுன் திருவடிசேர உன்னை நினைந்து அன்பாலென்புருகி மனமுருகவேண்டுவனென்றார். இந்த அன்பையே உருவகப்படுத்திப் பலவிதமாகத் தொழுவர். ஸெண்ட் ஜான் "கடவுளே அன்பாயிருக்கிறா" ரென்றார். புத்தர் அன்பின் வன்மையைப்பற்றிப் புகழ்ந்துரைத்திருக்கிறார். "பகையைப்பகையால் வெல்லலாகாது. ஆனால் பகையை அன்பால்வெல்லலாம்" என்றார். நம் திருமூலநாயனாரும் அன்பே சிவமென்று அழகாகச் செப்பியிருக்கிறார்.

அன்பும்சிவமுமிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிந்திலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமயமர்ந்திருப்பாரே.

அன்பு குறுகில் அகம் (உள்ளம்) குறுகும். அன்பு பெருகில் அகம்பெருகும். அன்புபெருகிப் பரிபூரணமாக நிறைந்துழி அவர் "கடவுளும் நானுமொன்றானேன்" என்னும் வார்த்தையிற் கண்ட பெறற் கரும்பெறும் பேறுபெற்றுப் பெருவாழ்வுவாழ்வர். கிறிஸ்துவும் நமது ரிஷிகளும் ஆசிரியர்களும் போதித்ததெல்லாம் "தன்னைப்போல் பிறரைநேசி," யென்பதிலடங்கும். 'ஒருவரையொருவர் நேசியுங்கள்" என்னும் ஒருவாக்கியத்தில் எல்லாதர்மங்களும் அடங்கிவிட்டதாகச் செப்பியதுண்மையே. தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பவன், பொய், களவு, [illegible]சொல், துரோகம், தீமைமுதலிய இயற்றுதல் எப்படியாகும்? மன்னுயிரெல்லாம் தன்னுயி



ரானால் யாருக்குத்தீங்கு செய்வான். யார்யாரைக்கெடுக்கிறது. எல்லாந்தானானபோது எதிலார் எங்கிருந்துவருவார்! இந்த உபதேசத்தினுட்கருத்தை யறிந்து நடப்பது உலகவாஞ்சையுள்ளவர்களுக்கு இயலாதுதான். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு உலகத்தில் உண்மையான இன்பம் லபிப்பதும் துர்லபமே. உலகில் ஒருவன் பேரும் கீர்த்தியும் புகழும் பெறவேண்டுமாயின் இவைகளைத்தேடி இவற்றிற்குழைப்பவன் சொற்பகாலத்துக்குக் காசும் பணமும் பெற்றுவாழ்ந்தாலும் உண்மையானபேரும் கீர்த்தியும் அவனுக்கு ஒருபோதும் கிட்டுகிறதில்லை. அவன் செத்தால் அப்புறம் அவனை நினைப்பாருமில்லை. அவனுடைய வாழ்வு வீண்வாழ்வாகவே கழியும். ஆனால் தன்னைமறந்து பிறர்க்குதவிசெய்வதே கருமமாய், பரோபகார சிந்தையோடுழைப்பவர்கள் எல்லாராலும் கொண்டாடப்படுகிறார்கள். கடவுளாலும் கடாட்சிக்கப்படுகிறார்கள். உலகத்தில் நாம் சாதாரணமாகக்காணும் அன்பு தன்னயம் பாராட்டுவதாகவிருக்கிறது. இப்படித் தன்னயம் பாராட்டுமொருவன், தன்சுகத்தைநாடி விவாகம்செய்துகொண்டால், பிறகு தன்னைப்போல் தன் மனைவியை நினைத்து அவள் நேசத்தினால் தன்னகம் பூரிக்கப்பெறுகிறான். அவளுக்காகத் தான் கஷ்டப்படுகிறான். அவளை யின்புறச் செய்யத் தான் சந்தோஷமாகத் துன்புற்றுழைக்கிறான். இப்படி அனுகூலதாம்பத்தியம்செய்யு மிருவர்க்குப் புத்திரபாக்கியமுண்டானால் தன்னுயிரைக்கொடுத்தும் அவ்வுயிரைப்பெற்ற அத்தாய் அச்சிசுவைத் தன்னிலும், தன்னுயிரிலும், தன்னுயிருக்குயிராய கணவனிலும் மேலாகப்பாவித்து அதைத் தாலாட்டிச் சீராட்டுவதிலும் இரக்ஷிப்பதிலும் வளர்ப்பதிலும் அவள் சிந்தையையெல்லாம் செலவிடுகிறாள். இப்படித் தானாகவுதயமான தாயன்பின் சிறப்பையும் மேன்மையையுங் கண்டு தன்னயம் பாராட்டிப் புருஷனும் அதிமேலான இவ்வன்பின் அழகில் ஈடுபட்டு, தான் இரண்டாம் படியாக விருந்துகொண்டு அக்குழவியைக்கொண்டாடுவதில் ஒருவித அடங்கா ஆனந்தமடைகிறான். இது முன்னிவன் அனுபவித்த ஆனந்தங்களெல்லாவற்றிலும் மேலானதாகவிருக்க தன்னை மறந்து தனயனைக்கொண்டாடும் அன்பு காமநுகர்ச்சியிலும் மேலான இன்பமளிப்பதையுணர்ந்து அதைத் தக்கபடி மதிக்கிறான். இப்படி குடும்பம் பெருகப்பெருக இவன் பொறுப்பும் மதிப்பும் பெருகிப், பொறுமை, சாந்தம், தன்னயம்பாராட்டாமை, பிறநயம்பேணுதல், பிறர்பொருட்டுத் தன்னைக்கொடுத்து அதனால்வரும் இன்பநுகர்தல் ஆகிய மேலான குணங்கள் அமையப்பெறுகிறான். "அவன் குடும்பி, சமுசாரி" என்று சொல்வதினாலுள்ள சிறப்பும் மேன்மையு மிதுவே. மேற்சொன்ன நற்குணங்கள் அமையப்பெறாதவனுக்கு ஒரு குடும்பத்தை வைத்துக்கொண்டு சமாளிப்பது முடியாதகாரியம். இப்படித் தன் குடும்பத்தில் பட்ட அனுபவத்தைக்கொண்டு, அக்குடும்பம் பெருகப்பெருக அவன் அன்பும் பெருகுகிறது. தனது பெண்கள் பிள்ளைகளுக்கு விவாகமாகி வேறுகுடும்பங்கள் கிளைக்கவே அதற்குச்சரியாக இவன் அன்புங் கிளைவிட்டுப்பெருகுகிறது காணலாம் இப்படிக் குடும்பத்திலடிபட்டு அன்பு பெருகப்பெற்றவன் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் சமுசாரத்தில் அனுபவிக்கும் சுகம் மின்மினிப்பூச்சியின் ஒளியைப்போல தோன்றி மறைவதாயிருப்பதுணர்ந்து இந்த அற்பசுகத்துக்காகத் தன் வாழ்நாளையெல்லாம் கழித்தது கண்டு அழியாச்சுகம்வேண்டுமென்று ஆசையுறுகிறான். அப்பொழுது தான் அவன் உலகத்தின் சுபாவத்தையறிந்து கானற்சலம்போல் தோன்றிமறையும் இச்சகத்தில் உழன்றுழன்றலுத்தது போதுமென்றுணர்ந்து இதையன்றிச் சாசுவதமான இன்பமில்லையாவென்று எண்ணி ஏக்கமுறுகிறான். இப்பொழுது 'தான்|அவனுக்கு மேலான சுக

மாம் பரசுக இச்சை ஜனிக்கிறது. இச்சை ஜனிக்கவும் அவன் முமுக்ஷுவாகிறன். எண்ணினர்க்கெண்ணிலவண்ணமிருந்து அவரவர் மனோரதத்தை ஈடேற்று மீசன், இச்சமயத்தில் உலகப்பற்றுவிட்டுத் தபிக்கும் ஜீவனுக்கு உறுதுணையாக வந்துதவி உண்மை விவேகமுண்டாகச்செய்கிறார்.

இந்த அனுபவத்தையே "ஆனந்தத்தாய்மொழியில்" 'அன்புமுளைத்தல்' என்னும் தலைப்பின் கீழ், அழகாகச்சொல்லியிருக்கிறார். அங்கே 'கோணல்முளை' யென்றது தாய்முகமறியாக் குழவியின்பாலுள்ளடங்கியிராகின்ற அன்பைக்குறிக்கும் 'கொம்புபோல் நீண்டது' என்றது தன்னறிவுண்டான குழந்தையின் அன்பு (self-love) ஆகும். 'கிளைவிட்டுப்பிரிந்தது' விவாக காலத்திற்குப்பின் அனுகூலதாம்பத்தியத்திற் கண்ட அன்பாம். இல்லறத்தில் இல்வாழ்க்கை முறையில் இது பல்கிப்பெருகி விர்த்தியாகி உலகமுழுதும்பரவியபின்னும், இது அடங்காது மேலுலகையும் எட்டப்பார்ப்பது "காயில்லையென்றுசொல்லிக் கை பிசைந்தழுதனால்" குறிக்கப்படுகிறது. நேசமுள்ளவன் பாசமற்றவன். நேசமற்றுப்போனால் தன்னுயிரையும் தான் விரும்பான். தன்னுயிரையும் வெறுப்பார், தன்கையாலே மாள நினைப்பார். தன்னைத்தான் மறந்து உலகுக்குழைப்பதே உத்தமமாகக்கொண்டவர்கள் அன்பு பெருகி அகம்பெருகி தன்னைக்கொடுப்பதால் வரும் இன்பத்தைத் தானேயுணர்ந்து உண்மையாயுள்ள தனக்கு அழிவில்லையென்றுணர்ந்து பிறர் பொருட்டுத் தன்னுடலையும் உயிரையும் கொடுத்துதவுவர். இதைக்கொண்டே "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்றார் திருவள்ளுவ நாயனார். "அன்பொன்றுண்டானலோர்தான் பிழைக்கமாட்டார்" என்று சொன்ன சொல் இகபரமிரண்டுக்கும் பொருந்தும். கடவுளருள்பெறவேண்டின் அன்புவேண்டும். "நேயத்தேரோதி நிமலனருட்பெற்றால்" "ஆயத்தேரோதி அவனிவனுமே" என்றார் திருமூலரும். ஆகையால் நேசித்திரு என்னும் திருவார்த்தை உலகத்திலுள்ள ஆன்மாக்களெல்லாம் கடைத்தேறியுய்வதற்கோர் கலந்தெடுத்த மந்திரமாம்.

"மனம் ஒருவழிப்பட்டது மந்திரம்". ஆகையால் "நேசித்திரு" என்னும் வார்த்தையிலடங்கியபொருளை யுள்ளபடியுணர்ந்து மனத்திலிருத்தி அவ்வழியில் மனதைச் செலுத்துவார் அம்மந்திரோபதேசம் பெற்றவராவர். அன்பிலே மனதைச்செலுத்தி அன்பின்வழியே சென்று அன்பிலே லயித்து அன்புருவேயானோர் அளவிலா ஆனந்தமனுபவிக்கப்பெறும் அடியார் கூட்டத்தில் சேர்ந்தவராகி மேற்படி மந்திரசித்தியாம் முக்திபெற்ற ஜீவன்முக்தர்களாவார்கள். இவர்கள் வாழ்வேவாழ்வு. இவர்கள் சக்தியே சக்தி. இவர்கள் செய்யும் உபகாரமே உபகாரம். இவர்கள் உலகுக்குழைக்க அங்குமிங்குமோடித் திரியவேண்டியதில்லை. இவர்கள் தங்கள் பாவனா சக்தியால் பலவித சித்திமேற்கொண்டு பிரார்த்தியாவண்ணம் பலர்க்கு முதவிபுரிந்து உலகுய்யக்காப்பர். இப்படிப்பட்டவர்களில் ஒருவரே யேசுகிறிஸ்துவும். பூர்வத்தில் விளங்கிய ரிஷிபுங்கவர்களெல்லாம் இப்படிப்பட்டவர்களே. புத்தர், சங்கரர், இராமாநுஜர், ஸ்ரீகிஷ்ணசைதன்யர், ஸ்ரீஇராமகிஷ்ணதேவர், திருவிசநல்லூர் "ஐயாவாள்" என்னும் ஸ்ரீ வெங்கடேசுவர ஐயா அவர்கள், சதாசிவப்பிரம்மம், ஆவுடையாரம்மா, மாயவரத்தம்மா ஆகிய இவர்களெல்லாம் இவ்வழியிற்சென்று சித்தி முத்திபெற்றவர்களே. இந்தச்சக்தியும் முக்தியும் நமெல்லோருக்கும் கிடைக்கக்கூடியதே. அவரவர்கள் நிலைமைக்கும் காலத்துக்கும் தக்கபடி [illegible]வர்கள் பேர் உலகில் விளங்குகின்றது. கிறிஸ்துவைப்போலவும், சங்கரரைப்போலவும் மதஸ்தாபனம்செய்ய எல்லாருக்கும் சமயம் வாய்க்காதாயினும், அவர்களைப்போல ஸ்வானுபவம் பெற்று அழியா ஆனந்தமனுபவிக்க எல்லாராலுமாகும். இப்படி உண்மைகடைப்பிடித்து உள்ளபடி ஆத்மானுபவம் பெறும் ஒவ்வொருவரும் இவ்வுலகையே ஒருபடி யேறச்செய்யும் உத்தம புருஷர்களாகிறார்கள்.

இந்நிலை பூர்வத்திலுள்ள இருஷிகளுக்குக் கிட்டியதேயன்றி இக்காலத்தவர்களுக்குக்கிட்டாது என்பது வம்பர்கள் சொல்லும் வீம்புரை. அவர்கள் அனுசரித்தவழியும் அடைந்த உண்மையும் இப்பொழுது எங்கும் ஓடிப்போய் விடவில்லை. அவை மாறுபடவுமில்லை. நாம்தாம் நிரமின்றித் திடமின்றி, உண்மையின்றி ஊக்கமின்றி, நேசமின்றி ரோசமின்றி, அப்படிப்பட்ட உத்தமர் சந்நிதியிலுதித்தும் அவர்களதாற்றல் நமக்கில்லையென்று சொல்லிக்கொண்டு பேடிகளைப்போல் பிதற்றித்திரிகிறோம். அப்படிப்பட்ட பெரியோர்கள் இக்காலத்தும் எக்காலத்தும் எங்துமுளர், நம்மவர்கள் அவர்களை நேரிற்கண்டும் கேட்டும் அவர்கள் உண்மையைக் கிரகிக்கச் சக்தியற்றுக் கண்மூடிக்குருடர்களாய், பூனை தன் கண்ணை மூடினதும் உலகமெலாம் அஸ்தமித்துப்போனதாக நினைக்குமாறுபோல், மமதையால் நினைத்து மீட்சியின்றி மாண்டுபோகிறோம்—பெறற்கரிய மானிடஜென்மம்பெற்றும் அதன்பயனையனுபவிக்காது பாழில் இச்சன்மத்தைக்கழிப்பவர்கள் பாவிகளேயாவர். உண்மையுணர யோக்கியமில்லாவிட்டாலும், அரைப்படிப்பு ஆபத்துக்காஸ்பதம், கால்படிப்பு கழுத்துக்குக் கத்தியென்பது பொருந்த அரைவாய் கால்வாயாக உளருவோர் வார்த்தைகளைக்கேட்டு தப்பெண்ணங்கொண்டு கெட்டுப்போகிறார்கள். ஸ்வர்க்கமும் நரகமும் நாமே யுண்டுபண்ணிக்கொள்வதன்றி வேறல்ல. உண்மையறிந்துஉள்ளபடி பாடுபட்டுழைத்தால் இகபோகமும் பரசுகமும் பூவிலிருந்து பிஞ்சும், பிஞ்சிலிருந்து காயும், காயிலிருந்து பழமும் உண்டாகு மியற்கைபோல் படிப்படியே மேலேறி இவ்வுடலோடிருக்கையிலே எல்லாசுகமும் பெற்று உலகுக்கு ஓர் ஒளிவிளக்காயிருந்து கர்மந்தொலைந்ததும் காயத்தையொழித்துப் பரிபூரணமெய்திப் பரனையடைந்து நித்யவாழ்வெய்தலாம். இது விஷயமாய் நம்மனோரின் அறியாமையைவிட நம்மவர்கொண்டிருக்கும் தப்பெண்ணங்கள் அதிகத் தீங்கியற்றுபவையாயிருக்கின்றமையால், தேகமனோ தத்துவங்களை உள்ளதுள்ளபடி கீழ்த்திசை மேற்றிசையார் நிச்சயித்துணர்ந்த சாஸ்திர நிச்சயப்படி அனுபவத்தையொட்டி ஆராய்ந்துபோதித்து ஆத்மவுண்மையையுமுள்ளபடி அனுபவரீதியாய் சுருதியுக்திக்கேற்பவும் தத்துவசாஸ்திர உண்மைகளுக்கொப்பவும் சிறுகச்சிறுகச் சமயம் நேர்ந்துழியெடுத்துப் போதிப்பதே கடமையாகப் பூண்டுள்ளோம். எத்தேசத்திலும் எக்காலத்திலும் மாறாத உண்மையொன்றேயாதலால், அதை யாரார் எப்பொழுது எங்கெடுத்துப் போதித்திருந்தாலும் அப்போதனையில் பொதிந்துள்ள சத்தியம் எக்காலத்துக்கு மொன்றாய் ஏற்கத்தக்கதே.

ஆகையால் நாமரூபகாலதேசபேதங்களால், பிரமைகொண்டு, அபேதமானதைப் பேதபுத்தியால் பார்த்துத் தடுமாறுது உண்மை யெதுவோ சத்தியமெதுவோ அதுவே நாம் அடையத்தக்கதென் றுறுதியாக நம்பி, உண்மைகடைப்பிடித்து, உள்ளதையுள்ளபடி யாராய்ந்து, சத்தியமேகதி, சத்தியமேவிதி, சத்தியமே ஜயம் என்னும் உறுதிமேற்கொண்டு உள்ளதையுள்ளபடியெடுத்துரைப்போம். இதை வாசிப்போரும் இதேமனோபாவத்தோடிருந்து உண்மையை

யோர்ந்துணர்ந்து இகபர மிரண்டிற்கும் வித்தாம் நேச மேற்பூண்டு பாசம் விட்டுப், பழவினை யறுத்துப் பிரயோசன மடைந்து, தம்முளிருக்கு மானந்தத்தைத் தாமேகண்டனுபவிக்கத்தெரியாது உலகெலாமலைந்து உழன்றலுக்காது, உண்மைச்சுகமும் சந்தோஷமும் சம்பத்தும் அடையும் அற்புதவழியை அதிசயமாயுணர்ந்து அனுபவத்திற்கொண்டுவந்தானந்திப்பார்களென்று நம்புகிறோம்.

ஓம்தத்சத்.
சத்குருவேநம:

உ

ஓம்

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, 00.*

**(With the First Dawn of the 20th Century.)**

# *ஆனந்தத்தாய்மொழி.

"அன்னைசொன்மிக்கமந்திரமில்லை."

(319 - வது பக்கத்தொடர்ச்சி.)

## 2-வது. தளர்நடைப்பருவம்—தரிசனைப்படலம்.

"அத்தனருள்வேண்டிலகந்துயவேண்டும்
பித்தனவன்பேயனெனப்பிதற்றலுமாகும்
அத்தனருள்பெற்றுஆரமுதுண்டுவிட்டால்
பெத்தனுமுத்தனுய்ப்பிறப்பற்றுவாழலாமே."—தருமொழி.

1. * ஆனந்தப்பரதேசிக்காட்சி-குருமூர்த்தம்—The Vision of the Holy Spirit as Teacher.

ஓராமோரூரிலே ஒப்பற்றசாலையிலே
ஏகாந்தவீதியிலே யாருமற்றவீட்டதிலே
மூன்றுபடியேறுச்செல்லும் முதலானமாடியிலே
யாருமறியாமல் அம்பரமேகதியாக
வேலையற்றபரதேசி வீற்றிருக்கநான்கண்டேன்.

2. உருக்காட்டியுருவழித்தல்22—The Formless assuming form to Teach.

கண்டவளைக்காணவிருப்புற்றேன் வலுவிலவள்கிட்ட[illegible]பாகலுற்றேன்
கையைக்கையைக்காட்டிக் கலகமிகச்செய்துவிட்டேன்

* ஆனந்தப்பரதேசிக்காட்சி-குருமூர்த்தம். c. f.
திருவாயசித்தியுமுத்தியுஞ்சீர்மை
மருளாதருளுமயக்கறுவாய்மைப்
பொருளாயவேதாந்தப்போதமுமாத
லுருவாயருளாவிடிலோரவொண்ணுதே.

22. "உருக்காட்டியுருவழித்தல்." c. f.
* உருவன்றியேநின்றுருவம்புணர்க்கும்
கருவன்றியேநின்றுதான்கருவாகு
மருவன்றியேநின்றமாயப்பிரானைக்
குருவன்றியாவர்க்குங்கூடவொண்ணுதே.



வன்புதுன்புசெய்தேன் வீண்வாதம்பலசெய்தேன்
சும்மா இருந்த அவள் சிக்கனவேகைப்பிடித்து
என்னைமடக்கிக்கொண்டாள் எட்டியெட்டியவளுதைத்தாள்;
23அடித்தாளவள்கைப்பிடித்து என்னங்கமெல்லாம்நோவெடுக்க,
உதைத்தாளவள்கைப்பிடித்து என்னுள்ளமுடைந்திடவே;
உள்ளமுடைந்திடவு மெதிர்த்துக்கொண்டேன்நானவளை:
கைப்பிடித்து என்னை யடித்துஉதைத்தனையே
உள்ளமுடைந்ததுவே உடலுமழிந்ததுவே
இன்னமுமுன்கைப்பிடியில் எத்தனைநாள்சிக்கிநிற்பேன்
என்றுசொல்லியுறம்பேசிஅவளைமடிபிடித்திழுத்துவிட்டேன்;
மடிபிடித்துவழக்கதனைத் தீர்த்திடவேசண்டையிட்டேன்;
சண்டையிட்டகாலைநான் ஐயமுடனேவந்துவிட்டேன்;
வந்துவிட்டேனுனாலும்அவள்வலிமறவேனொருநாளும்.

3. போதசக்தி-குடிமயக்கம்—The Power of Grace.

பார்த்தால்பரதேசி பெருங்குடியளவளறிவாய்
அவள்குடிமயக்கமறியாமலகப்பட்டேனவள்கையில்;
மடியைப்பிடித்துநான் மாட்சிபெற்றுவருமுன்னே
24அந்தக்குடிமயக்கமென்னையுமேபிடித்ததுகாண்
மயக்கம்பிடித்தாலும மாயையதுநீங்கியது
நான்பிறந்தநாள்தொட்டுஎன்னைப்பீடித்தஇவ்வியாதி
நீங்கியதேபெரிதாச்சு இனிநித்தியசுகம் நான்பெறுவேன்.
நான் என்னென்னசொல்லிப் பிதற்றினேனுனாலும்
25குடிகாரனுனேனென்று குடித்தனத்தாரிகழ்ந்திடுவார்:
ஆனபடியாலே, "அதைத்தான் நீசொல்வானேன்
"உன்வாய்தான்நோவானேன்"
26என்றுரைத்தான் சொற்கேட்டு இருந்திடுவேன்சும்மாநான்.

அம்மானேதுணை: அம்பரமேகதி.

23. "அடித்தாளவள் கைப்பிடித்து:" c. f.
ஆசான்முன்னேதுயில்மாணவகரைத்
தேசாயதண்டாலெழுப்புஞ்செயல்போ
னேசாயவீசன்நீடாணவத்தரை
யேசாதமாயாடன்னுலேயெழுப்புமே.

24. "அந்தக்குடிமயக்கம்...நித்யசுகம்நான் பெறுவேன்". c. f.
"ஆருமறியாதவ்வண்டத்திருவுருப
பார்முதலாகப்பயிலுங்கடத்திலே
நீரினிற்பால்போலநிற்கின்றநேர்மையைச்
சோராமற்காணுஞ்சுகமறிந்தேனே."

25. "குடித்தனத்தாரிகழ்ந்திடுவார்". c. f.
பெற்றிருந்தாரையும்பேணார்கயவர்க
ளுற்றிருந்தாரையுலைவனசொல்லுவர்
கற்றிருந்தார்வழியுற்றிருந்தாரவர்
பெற்றிருந்தாரன்றியார்பெறும்பேறே.

26. "என்றுரைத்தான்சொற்கேட்டிருந்திடுவேன்சும்மாநான்." c. f.
அறிவாரமரர்தலைவனைநாடிச்
செறிவார்பெறுவர்சிவதத்துவத்தை
நெறிதான்மிகுமிகநின்றருள்செய்யும்
பெரியாருடன்கூடல்பேரின்பமாமே.

## 3-வது : வளர்ச்சிப்பருவம்—கிளர்ச்சிப்படலம்.

போதை - மயக்கம்27—Elevation of Spirit.

என்தாய்.

28அன்பிலேபிறந்து அன்பிலேவளர்ந்து
அன்புருவேயாகி ஆனந்தமயமானாளென்தாயார்.

அவளியல்.

அவளன்புக்கோரளவில்லை
அருளுக்கோர்குறைவில்லை
அடுத்தாற்கெடுப்பதில்லை
அவமதித்தாற்றொடுவதில்லை
"அன்பர்க்கன்பானமெய்யளவள்" செய்யும்
அற்புதலீலைகளையென்சொல்வேன்தோழி.

அவள்செயல்.

அகங்காரப்பேய்பிடித் தழுதுபுரண்டாக்கால்
அழுவதார்புரள்வதாரென் றலக்ஷியமாயிருந்திடுவள் ;
அன்புசெலத்தியே அடைக்கலமெனப்புகுந்தால்
உள்ளன்புகூர்ந்து உவங்களிக்கப்பேசிடுவள் ;
29அன்பொன்றுண்டானு லார்தான்பிழைக்கமாட்டார் !
உள்மர்மமீதெனுளவுதெரியாம லுய்யு'வகையிழந்துழல்கிறோமடிதோழி !

திருவருள்.

நேற்றுத்திருவருள்வாக்கைநான் நோக்காவிட்டேன்
பரம்பொருளதனைப் பராக்காய்விட்டான்
பெற்றேன்பிழைத்தேன்பரம்பொருளையினித்தானுமசட்டைசெய்வேனோநான்.

அன்பூண்.

அம்மாளுக்கங்கம்கொழுத்த தென்றான் என்'கண்ணு'
*நஞ்சுண்டகுழந்தையவன் தாயாரைத்தேடினதால்

* Refers to the "Child of Corruption or the Prodigal Son" returning home thirsting for Mother's Love and seeking her Embrace ; or The worldly spirit retracing its steps to become Godly spirit, the original state of Bliss from which it fell seeking worldly experience.

27. போதை - மயக்கம். c. f.

கர்லத்தேரேறிமனப்பாகன்கைகூட்ட
மாயத்தேரேறிமயங்குமவையுணர்
நேயத்தேரேறிநிமலனருட்பெற்று
லாயத்தேரேறியவனிவனுமே.

28. அன்பிலேபிறந்து அன்பிலேவளர்ந்து....c. f.

அருளிற்பிறந்திட்டருளில்வளர்ந்திட்
டருளிலழிந்திளைப்பாறிமறைந்திட்
டருளானவானந்தத்தாரமுதூட்டி
யருளாலென்னந்தியகம்புகுந்தானே.

29. அன்பொன்றுண்டானுலார்தான்பிழைக்கமாட்டார்—c. f.

புணர்ச்சியுளாயிழைமேலன்புபோல
வுணர்ச்சியுளாங்கேயொடுங்கவல்லார்க்குக்
குணர்ச்சியில்லார் துகுலாவியுலாவி
யணைத்ததணைத்தின்பமதுவிதுவாமே.

காயும்கறியும்கனிபலவும் தின்னுறுமிக்காயம்
பல்கிப்பெருகிப்பருத்திடல்தானதிசயமோ[30]
அருமையுடனவன்வார்க்குமன்பாமமிர்தத்தை
அகமகிழ்ந்தவள்பருகிடுங்கால்.‡

அனுச்ரகவிசேஷம்.

அம்மா உங்களுக்குப் பிள்ளைகுட்டியுண்டாகிப் பெருகுதேகுடும்பமது
பெட்டிபேழைவீடுவாசல் வேண்டாவோ இன்னமுந்தான்!

"சாட்டிவிட்டபம்பரம்"

சாட்டிவிட்டபம்பரம்போல் ஆடியடங்குமென்றாள்
தூங்கியாடும்பம்பரம்போல் சுழலுதேயென்தலைதான்
ஆட்டமடங்காதோ ஆடும்பம்பரமோயாதோ
ஓட்டமடங்காதோ ஓடும்பம்பரம்நில்லாதோ
நின்றால்நிலைதெரியும் நீண்மயக்கம் நின்றிடுமே.

" என்னைப்போல் சங்கோசி."

என்னைப்போல்சங்கோசி கண்டதுண்டோசொல்லிடுவீர் :
அம்மாளென்னண்ணுவுந்தானுமேயொன்றென்றுரைத்திட்டால்,
31நானுமப்படியே யென்று நவிலேன் வாய்திறந்து;
வாயால்கட்டினால்வழுவிடுவாள் கையால்கட்டினால்நழுவிடுவாள்
என்றெண்ணி யென்தாயை இருதயத்தே புல்லிடுவேன்
அன்பாமென் னழகு கைநீட்டி.

அன்பிலோடுக்கம்.

அன்பாங் கைநீட்டி யழுந்தநான் புல்லிடுங்கால்
32கண்கள் தான்மூடிவிடும் கனவுநனவழிந்துவிடும்
என்பு முருகிவிடும் என்னிருதயம் மாண்டுவிடும்
அம்மாளார்நானாரென்றறியாதுமறந்திடுவேன்
33அப்போதெனைக்கண்டா ருண்டோதானுரைத்திடுவீர்நானுணர.

‡ c. f. Jesus saying to His disciples. "I have meat to eat that ye know not of."—John iv. 32.

30. "அதிசயமோ...அகமகிழ்ந்தவள்பருகிடுங்கால்." c.f.

தண்டறுசிந்தைதபோதனர்தாமகிழ்ந்
துண்டதுமூன்றுபுவனமுமுண்டது
கொண்டதுமூன்றுபுவனமுங்கொண்டதென்
றெண்டிசைநந்தியெடுத் துரைத்தானே.

31. "நானுமப்படியேயென்றுநவிலேன்வாய்திறந்து." c.f

உற்றபிறப்புமுறுமலமானதும்
பற்றியமாயாப்படலமெனப்பண்ணி
யத்தனைநீயென்றடிவைத்தான்பேர்நந்தி
கற்றனவிட்டேன்கழல்பணிந்தேனே!

32. "கண்கள் தான்மூடிவிடும்கனவுநனவழிந்துவிடும்." c. f.

இந்துவும்பானுவுமிலங்குந்தலத்திடை
வந்தித்ததெல்லாமசுரர்க்குவாரியாம்
இந்துவும்பானுவுமிலங்காத்தலத்திடை
[illegible]நந்திக்குமாபூசையாமே.

33. "அப்போதெனைக்கண்டாருண்டோதானுரைத்திடுவீர்நானுணர." c. f.

உணர்ந்துடனேநிற்குமுள்ளொளியாகி
மணங்கமழ்பூங்குழல்மங்கையுந்தானும்
புணர்ந்துடனேநிற்கும்போதருங்காலைக்
கணிந்தெழுவார்க்குக்கதியளிப்பானே.

"அம்பாள்சொல்."

*அம்மாள்சொல்லிப்பொழுது அருத்தமெனக்காகுதையா
ஆனாலுமவள்வார்த்தை யதீதம்குறையவில்லை
34பேதையேன்மயக்கத்தில் பேரிரகசியமேறவில்லை
35ஆதியனாதியைநான் பார்க்கவும்பொருந்தவில்லை
அம்மாள்தான்கண்டேனென்றாள் அவளைநானாய்விட்டேன்
அவள்கண்டாலென் நான்கண்டாலென்!

அபேத பாவம்.

கண்டேன் கண்டதைக் கண்டபடி நானுரைத்தால்
காணாதைக் கட்டியழும் கண்கெட்ட குருடரெல்லாம்
பேயென்றும் பித்தென்றும் பரிகாசம் செய்கிறார்கள்;
பேயென்றா லென்ன பித்தென்றா லென்ன!
பரம்பொரு ளெல்லா மொன்றுதானே!

## 4-வது: வளமைப்பருவம்—தெளிவுப்படலம்.

### 1. மயக்கந்தெளிவு—Clearing of the Clouds.

மண்டை சிலிர்க்குதுகாண் குடிமயக்கம்குறையுதுகாண்
ஓட்டுமயக்கம் நீங்கி உள்மயக்க மாகுதுகாண்
சித்அம்பரவீதி சின்மயமாய்த் தெரியுது பார்
அன்புரச சாகரம்காண் அகண்டாகாரமும்காண்
ஆனந்தம்வந்து ஆடுதுபார் கண் முன்னே
சந்தோஷம்வந்து ஜகமெல்லாம் பரவுது பார்:
ஆனந்தமென்று சொன்னால் ஆத்திரங்கள் வந்தனவே
ஆரு மழைத்திடாமலதாடுதுபார் கண்முன்னே!
சந்தோஷமென்று சொன்னால் சங்கடங்கள் வந்தனவே
சகமெல்லா மிப்பொழுது சந்தோஷம் பரவியதே!
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம்சந்தோஷம்—சந்தோஷம் ஆனந்தம்.

### 2. ஆனந்தமேலீடு—Overflowing of the Spirit.

†அன்புருவே யின்பமடி இன்பமது மன்புருவே;
அன்பின் முளையதுவு மென்னுள்ளேயே யிருந்ததடி;
ஆகாத மாயைவந்து அதைவளரவிட வில்லையடி;
அன்பாம் முளையை அன்றுநான் கண்டபோதே
மாயைக்களை பிடுங்கி மித்தையென்று போட்டுவிட்டேன்:
அன்பாம் முளையதுவை யாசையுடன் நான்பார்த்தேன்;
அம்மா ளருளாலே அதை யாதரவாய் வளர்த்துவந்தேன்;
வளர்த்துவந்தே னுண்மையிலே வேணமட்டும் நீர்வார்த்து;
அன்புநீர் மட்டும்விட்டு அதைவளர்த்துநான் வந்திருந்தால்
எத்தனைநாள் செல்லுமோ இன்பக்கனி பழுக்க;
அம்மாள் தயவாலே ஆதிமுத லருளாலே
36கருணைவெள்ளம் மடைதிறந்து என்காரியத்தை முடித்ததடி;
காரியம் முடிந்ததடி யினிவேலையொன்று மில்லையடி
37வேலையொன்று மில்லையினி வெறும்மனே தானிருப்பேன்
வேதாந்தம் பேசவந்தால் ஆனந்தம் சொல்லிடுவேன்
ஆனந்தம் வேண்டுமென்றால் அடித்திடுவேன் உதைத்திடுவேன்
பேரின்பம் வேண்டுமென்றால் பிழிந்திடுவேன் கசக்கியுன்னை.

### 3. மமதைநீக்கம்—Cure of the Conceits "I & Mine."

மடிபிடித்தேன் ஐயமடைந்தேனென்று மமதைக்காற் றடித்ததடி
காற்றடிக்கப் பொறுக்காமல் கடுகவந்தா ளென்தாயார்
கன்னத்தி லறைந்திட்டாள் கைகாட்டிச் சைகைசெய்தாள்
அடித்த அடி உறைத்ததடி அன்பும் நிறைந்ததடி
மடிபிடித்தே னென்றுசொன்ன மமதையுமே நீங்கிற்றடி
38நீங்கியது மெனக்கப்போ நித்தியசுகம் பலித்ததடி
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்த மென்றுசொல்லு
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷ மென்றுசிரி.

### 4. உள்ளத்துணர்வு—The Inner Perception.

சிரிசிரி வேணமட்டும்; சிரிப்பாய்ச் சிரிச்சையே நீ;
சிரிப்பாய்ச் சிரிச்சு முடிப்பானை தூக்கினையே;

* c. f. "He that is of God heareth God's words"—John viii-47.
† c. f. "Beauty is truth, truth beauty—that is all.
Ye know on earth, and all ye need to know."—Keats.

34. "பேதையேன்மயக்கத்தில்பேரிரகசியமேறவில்லை." c.f.
தென்றறிந்திலனித்தனைகாலமு
தென்றறிந்தபினேதுமறிந்திலே
தென்றறியுமறிவையறிந்தபி
தென்றறியுமியல்புடையோரோ.

35. "ஆதியனாதியை...அவள்கண்டாலென்நான்கண்டாலென்." c. f.
தானேயறியும்வினைகளழிந்தபின்
நானேயறிகிலனந்தியறியுங்கொல்
ஊனேயுருகியுணர்வையுணர்ந்தபின்
தேனேயனையனந்தேவர்பிரானே.

28. அ...
அருளிற்பிறந்திட்டருளில்வளர்ந்திட்
டருளிலழிந்திளைப்பாறிமறைந்திட்
டருளானவானந்தத்தாரமுதூட்டி
...லென்னந்தியகம்புகுந்தானே.

...மாட்டார்—c. f.
புணர்ச்சியுளாயிழைமேலன்புபோல
வுணர்ச்சியுளாங்கேயொடுங்கவல்லார்
குணர்ச்சியில்லா துகுலாவியுலவி
யணைத்ததணைத்தின்பம துவ்...

37. "வேலையொன்றுமில்லைவெறும்மனேதானிருப்பேன்."
பெத்தமுமுத்தியும்பேணுந்துரியமுஞ்
சுத்த வதீதமுந் தோன்றாமற் றானும்
அத்த னருளென் றருளா லறிந்தபின்
சித்தமு மில்லை செயலில்லை தானே.

36. "கருணைவெள்ளம் . . . காரி... ...டித்ததடி."
திருவடிஞானம்சிவ...க்கு
திருவடிஞானம்சிவ... ...கருந்
திருவடிஞானம்... ...ட்டுந்
திருவடிஞானமேதிண்சித்திமுத்தியே.

38. "நீங்கியதுமெனக்கப்போநித்தியசுகம்பலித்ததடி." c. f.
பொன்னைமறைத்ததுபொன்னணிபூடணம்
பொன்னின்மறைந்ததுபொன்மணிபூடணம்
தன்னைமறைத்ததுதன்கரணங்களாம்
தன்னின்மறைந்ததுதன்கரணங்களே.

தூக்கினபானை தொப்பென் றுடைந்ததுவே ;
பானை யுடைந்ததென்று பாசாங்கா யழுதையே ;
அழுத அழுகையெங்கே ஆனந்தமேன் இப்போது !
ஆறியமர்ந்து ஆராய்ந்து பார்த்தாக்கால்
*அழுவதெல்லாம் பொய்யம்மா சிரிப்பதெல்லாம் மெய்யம்மா !
உள்ளதைச் சொன்னேன்நானுண்மையதையுரைத்திட்டேன்.

5. உய்யும்வழி—The Way to Salvation.

ஊகித் துளவறிந் துள்ளபடி தேடிநின்றால்
உண்மையதுதெரிந்திடுங்காண் ஊனப்பசல்களுக்கு
39உண்மை தெரிந்திட்டால் உய்த்திடலா மூனம்விட்டு
உய்த்திடும் வழிசொன்னேன் உணர்ந்துகொள்வீ ரிஷ்டம்போல் ;
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்.

6. ஆனந்தசமுத்திரம்—The Ocean of Bliss.

ஆனந்த சமுத்திரத்தில் அழுத்திவிட்டா ளென்தாயார்
அழுத்திவிட்ட நானின்னம் அடங்கி யிருக்கவில்லை
40துள்ளுறேன் குதிக்கிறேன் துஷ்டத்தனம் செய்கின்றேன் ;
ஆடியலுக்கட்டு மென்றவ ளானந்தமாய்ப் பார்த்திருக்காள் !
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் !
41ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேறில்லை !

AN EPISODE TO POINT OUT THE ATTITUDE OF TRUE BHAKTI. †

"சல்லடைக்கண் அண்ணு."
(உண்மைப்பக்தி யுணர்த்தியவாறு.)

ஆனந்தத்தாயாரே யன்பதுவே யாரமுதே
"சல்லடைக்கண் அண்ணு"வைச் சந்தித்தே னம்மாநான்
சேர்ந்தஒரு நிஷ்டையிலே நிலையறிந்த வேளையிலே,—
என்னண்ணு உங்களிடம் சேவகத்துக் கமர்ந்ததுதான்

* c. f. "All exhilaration is real, all depression unreal."
† c. f. "Faith is *obedience*, not *confidence*."—*G. Macdonald.*

39. "உண்மைதெரிந்திட்டாலுய்த்திடலாமூனம் விட்டு." c. f.
மரத்தைமறைத்ததுமாமதயானை
மரத்தின்மறைந்ததுமாமதயானை
பரத்தைமறைத்ததுபார்முதற்பூதம்
பரத்தின்மறைந்ததுபார்முதற்பூதமே.

40. "துள்ளுறேன் குதிக்கிறேன் துஷ்டத்தனம் செய்கின்றேன்," c. f.
துரியப்பரியிலிருந்தவச்சிவனைப்
பெரியவியாக்கிரத்துன்னேபுகவிட்டு
[illegible]யோடத்துரத்தியநாதர்க்
[illegible]ன்றேலமிட்டன்றே.

41. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேறில்லை. c. f.
பாலொடுதேனும்பழத்துளிரதமும்
வாலியபேரமுதாகுமதுரமும்
போதுந்துரியம்பொடிபடவுள்புகச்
சீலமயிர்க்காறுறுந்தேக்கிடுமே.

இராணியிட மவன்தானும் இராயஸனுய் விட்டதிலும்
மேலான பதவியென்று செப்பினு னென்றீரே—
செப்பின அண்ணுவைச் சித்சபைமுன் கண்டேன்நான் :
ஆனந்தத்தாயார் அவதார மாகுமுன்னே
அவதாரம் வேண்டாமென் றவளெழுதச் சொன்ன கடிதமதை
கனவு நனவற்றுக் கைச்சேஷ்டை மெய்ம்மறந்து
அன்பே யுருவாக அவதார மானுனை
*சரணம் சரணமென்று சும்மாவிருந் தெழுதிவிட்டால்42
அப்பொழுதே கிடைத்திருக்கு மானந்த மவனுக்கு;
இராணியவள் ராயஸனை இராமாவ தாரமென்று
அகங்காரத்தா லெண்ணி யவன்மமதை கொண்டானம்மா !
அந்தமட்டும் நில்லாமல் அவனிலும் பெரியனென்று
வாய்க் கொழுப்புப்பேசியவன் வகைமோசம் போனுனம்மா !
வாய்மதம் பேசியப்போ வரைந்திட்ட கடிதமதால்
அவன் வாய்க்கொழுப்பு இப்போது சீலையிலேவடியுதம்மா !
சீலையில் வடிந்தாலுமவன் சிவபதமே நாடியுள்ளான் :
கைக்துவரு மின்பத்தையவன் கைநழுவ விட்டதனுல்
"சல்லடைக்கண் அண்ணு" வாய்ச் சலிக்கிறுன் சலிப்பின்றி †
43சலிப்பின்றிச் சலிப்பதனுல் சவ்வாசு மணக்குதம்மா ‡
44ஒழுகவிட்ட காரணத்தால் ஓட்டைச்சல்லடமானுன் :

* c. f. "Works are no more than Animated Faith and Love."—*Longfellow.*
† "உள்ளஞ் சலிக்காமல் வாய்மதம்பேசிக் காலம் போக்குகிறுன்" என்றபடி.
‡ வாய்சலித்தாலும் உள்ளஞ்சலிக்காது ஒருவழிப்பட்டு நிற்றலால் அதன் பெருமை கூறப்பட்டது.

42. "சும்மாவிருந் தெழுதிவிட்டால்" அப்பொழுதே கிடைத்திருக்கு மானந்த மவனுக்கு. c. f.
செயலற்றிருக்கச்சிவானந்தமாகுஞ்
செயலற்றிருப்பார்சிவயோகந்தேடார்
செயலற்றிருப்பார்செகத்தோடுங்கூடார்
செயலற்றிருப்பார்க்கேசெய்தியுண்டாகுமே.

43. "சலிப்பின்றிச் சலிப்பதனுல் சவ்வாசு மணக்குதம்மா." c. f.
செல்லுமளவில்விடுமின்வெகுளியை
செல்லுமளவும்செலுத்துமின்சிந்தையை
அல்லும்பகலுமருளுடன் தூங்கிறுற்
கல்லும்பிளந்துகடுவெளியாமே.

44. ஒழுகவிட்ட காரணத்தாலோட்டைச் சல்லடமானுன். c. f.
தான்முன்னஞ்செய்தவிதிவழிதானல்லால்
வான்முன்னஞ்செய்தங்குவைத்ததோர்மாட்[சி]
கோன்முன்னஞ்சென்னிகுறிவழியேசென்று
நான்முன்னஞ்செய்ததேநன்னிலமானதே.

சல்லடமே யானாலும் சவ்வாசு மணக்குதல்லோ
[45]ஓட்டைச் சல்லடமென் றொழுகிவிடா துன்கருணை.

ஓம்தத்ஸத்.

---

அருட்கண்.

"மருளெனச் சொல்வர் அருளிலா மனதை
அருளெனப் படுவது மருளற்ற சிந்தை
சிந்தைய தாவதும் சித்விலா ஸம்மே
சித்தெனப் படுவ துள்ளுணர்ச் சோதி
உள்ளுணர் வாவது மூனுணர் வொழிந்ததே
ஊனுணர் வென்பதே யுலகறி ஞானமாம்
உலகமோ கானற்சலமாம் கடுவெளித் தோற்றம்
கடுவெளியாகித் தானுவிளங்குவர் கடவுளர் தானே."—திருமொழி.

ஓம்தத்ஸத்.

சத்குருவேநம:

---

THE KINDERGARTEN PRINCIPLE.

MRS. COURTRIGHT TO THE RESCUE.

## கிண்டர்கார்டன் போதனாமுறை.

அமெரிக்காவில் வித்யா போதனா முறையில் தேர்ந்து அத்துறையிலுழைத்து அனுபவம் பெற்ற மிஸ்ஸஸ் ஆல்மி கோர்ட்ரைட் என்னும் துரைசானி சென்னையில் தியசாபிகல் சங்கத்தை யொட்டி ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பிரதம வித்யாபோதனவிஷயமாக பக்திசிரத்தையோடுழைப்பவர். இவர் வித்யாவிஷயத்தில் தேகமனோவிர்த்தியை மட்டும் நாடியுழைக்காது முக்கியமாய் ஆத்மக்ஷேமத்தை நாடியுழைப்பதே உண்மையான முறையென்றுணர்ந்து அவ்வுண்மையைப் பலவிதத்திலும் பரவச்செய்ய வெகு பாடுபட்டுழைத்துவருகிறார். சென்ற அக்டோபர் மாசத்துச் சஞ்சிகையில் இவர் வித்யா இலாகாத்தலைவர் கனம் மிஸ்டர் ஸ்டுவேர்ட் அக்கிராசனாதிபதியாக விருக்க பிரதமவித்யாபோதனா முறையைப்பற்றிச் செய்த மேலான பிரசங்கத்தின் சாராம்சத்தை யெடுத்துப் பிரசுரித்தோம். அப்பொழுது கனம் மிஸ்டர் ஸ்டுவேர்ட் அவர்கள் அக்கிராசனத்திலிருந்து செய்த பிரசங்கத்தில் மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் செய்த உபந்நியாசத்தைப் புகழ்ந்து பேசினதன்றி இந்தியாவில் வித்யாஇலாகா உத்தியோகஸ்தர்களா யிருக்கிறவர்களில் அனேகருக்குள் "கிண்டர்கார்டன்" விஷயமாகத் தாறுமாறான அபிப்பிராயம் வழங்கிவருகிற தென்றும் அவருக்கு வந்த கடிதங்களில் கிண்டர்கார்டனைப் பற்றி யெழுதியிருந்ததைக்கொண்டு நிதானிக்குமளவில் பலர் கிண்டர்கார்டன் விளையாட்டுக்கருவிகளையே கிண்டர்கார்டன் போதனாமுறையா மயங்கி யிருக்கிறார்களென்று தெரியவருகிறதென்றும், அது விஷயமாக உண்மையான அறிவு பர வேண்டியிருக்கி ன்றும் சொன்னார். அவ

45. "ஓட்டைச்சல்லடமென்றொழுகிவிடாதுன் கருணை." c. f.

தத்துவமெங்குண்டுதத் துவனங்குண்டு
தத்துவமெங்கில்லைதத் துவனங்கில்லை
தத்துவஞானத்தின் றன்மையையறிந்தபின்
தத்துவனங்கேதலைப்படுந்தானே.



சொல்லியது உண்மையென்று நாமும் நமது அனுபவத்திலிருந்து சொல்லக்கூடும். கிண்டர்கார்டன் முறைப்படி போதிக்கிறோமென்று, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகளாக ஏற்பட்ட "Kindergarten gifts" சாமான்களை வாங்கி யுபயோகிப்பதையே பெரிதாக நினைக்கிறார்கள். விளையாட்டுகளிலும் ஹிந்துச் சிறுவர்களுக்குத் தெரியாததும் அவர்கள் வீட்டில் வழங்காததுமான விளையாட்டுகளைப்போதிக்கிறார்கள். இதனால் வீட்டிலுள்ள தாய் பாட்டி முதலானவர்களுக்கு குழந்தைகள் பள்ளியில்கற்கும் விஷயங்களில் சிரத்தையின்றிப்போகிறதென்று பாலிகா பாடசாலைகளில் இப்படிப்பட்ட அபூர்வமான நூதன விளையாட்டுகளைச்சிறுவர்க்குப் போதிப்பதைவிட, 'அம்மானை' முதலான பழமையான விளையாட்டுகளை பாலிகா பாடசாலைகளில் கிண்டர்கார்டன் முறைக்குச் சாதகமான விளையாட்டுகளாகப் போதிக்கவேண்டுமென்று மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானிக்குச்சொல்ல, அவரும் அதையங்கீகரித்து அவ்விளையாட்டை அவர் எழுதிய கிண்டர்கார்டன் புஸ்தகத்தில் சேர்த்துளார். கிண்டர்கார்டன் முறைக்கு அனுகூலமாக இந்தியாவில் வழங்கிவரும் பண்டை விளையாட்டுகள் பாட்டுகள் முதலானவைகள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளைச் சீர்திருத்தி ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவந்தால் எவ்வளவோ நலமாயிருக்கும். அன்றி, இந்தியாவில் பூர்வீகத்தில் நமது ரிஷிகள் அனுசரித்தமார்க்கங்கள் உண்மையை யோர்ந்துபார்க்கவல்லார்க்கு "கிண்டர்கார்டன்முறை"யைச் சேர்ந்தனவேயென்று நன்றாகப் புலப்படும்.

கிண்டர்கார்டன் முறையாவது யாது? தோட்டத்தில் செடிவளர்ப்பதுபோல் குழந்தைகளை அவரவர்களின் தேகமனோதத்துவங்களையும் போக்குகளையுமுணர்ந்து, அவர்களுள்ளொடுங்கியிருக்கும், ஆத்மா, ஞானம், ஒளி, பிரகாசம் (எந்தவார்த்தை யுபயோகிக்கினும் சரியே) வெளிப்பட்டு விளங்குவதற்கு வேண்டிய சாதகங்களைமட்டும் செய்து இயற்கை விதிப்படி யவர்களை வளரவிட்டுப் பார்த்திருப்பதேயாம். இதற்குப் போதனாசிரியர் குழந்தைகளின் தேகமனோ தத்துவங்களை யுள்ளபடியுணர்ந்தவர்களாக விருக்கவேண்டுவது அத்யாவசியம். இதற்காக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் (Nature study) பிரகிருதி தத்துவங்களையாராய்ந்துணர்தல், (child study) குழந்தைகளின்தேக மனோதத்துவங்களையாராய்ந்துணர்தல் என்று இருவகையானவுணர்ச்சி முக்கியமென்று கண்டு அதற்காக பூதபௌதிக சாஸ்திரங்களையும், தேகமனோதத்துவசாஸ்திரங்களையும் கசடறக்கற்றுத் தேறியவர்கள் அச்சாஸ்திரக்கொள்கைகளை யனுசரித்துக் குழந்தைகளின் குணகுணங்களை யறிந்துகொள்ளும்வகை போதித்து வருகிறார்கள். நமது இருஷிகளும் இப்படிப்பட்ட அறிவே விசேஷமென்று கண்டுணர்ந்து அவ்வறிவையே ஆதாரமாகக்கொண்டு சிறுவர்களுக்குத் தத்துவபோதம் செய்துவந்தார்கள். இக்காலத்து கிண்டர்கார்டன்முறை ஆசிரியர்களுக்கும் முன்காலத்திருந்த நமது இருஷிகளுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. அது என்னவெனில் இக்காலத்தவர்கள் எல்லா அறிவும் ஞானமும் தத்துவங்களும் பகிர்முகமாகநின்று விசாரிப்பதாலே கைகூடிவருமென்று (objective experimentation) பகிர்முகமாக நின்று வஸ்து விசாரணை செய்கிறார்கள். இப்படி விசாரணைசெய்து வெகுபாடுபட்டு ஒவ்வொருவர் ஆயுள்காலமுழுவதையும் செலவிட்டும், சில விஷயங்களில் பல தலைமுறைகளாகவுழைத்தும் கண்டுபிடித்த வுண்மைகளை அந்தரங்கமாக உபயோகிக்க முயல்கிறார்கள். நம்முன்னோர்கள் பகிர்முக விசாரணையிலும் மனதை அந்தர்முகமாகத் திருப்பி, மனதைக்கொண்டு மனதையாராயும் சுலபமான வழியையுணர்ந்து அதனால் எல்லாமனோதத்துவங்களையும் உள்ளபடியுணர்ந்து தம் முள்ளத்தில் கண்டவைகளே வெளியிலுமிருக்கக் காண்கிறார்கள். அதாவது மேற்றிசையார் அண்டமெல்லாம்தேடிக் கண்டதைக் பிண்டத்துட் காண முயலுகிறார்கள். நம்மவர்கள் பிண்டத்திற்கண்டதை அண்டத்திற் பார்க்கிறார்கள். பல நூற்றாண்டுகளாக மேற்றிசையார் உழைத்துழைத்தும் கபிலர் சாங்கிய சூத்திரத்திற் குறிப்பிட்டுள்ள மனோதத்துவங்களைவிட நூதனமாகக் கண்டவர்கள் ஒருவருமிலர். அவர் கண்டுபிடித்து வரைந்துள்ள உண்மைகளையும் உணரமாட்டாமல் சங்கடப்படுகிறார்கள். இப்படி விஷயங்களை பகிர்முகமாகநின்றாராய்வதில் ஒரு விசேஷம் உண்டு. அது என்னவெனில், உண்மையை உணர்ந்தவரையில் உல விஷயங்களிலுபயோகித்து அவ்வுண்மை யுணரா வர்களைவிட உலகத்தில் செல்வமும் சிறப்புமுற் வாழலாம். ஆனாலிது அற்பவாழ்வு என்றுணர்ந் வர்களுக்கு இதனால் பயன் என்ன? மேற்றிசையி உலகப்பிரசித்தியாகப் பேர்பெற்ற சாஸ்திரிக கண்டுபிடித்த அதியற்புதமான உண்மைகள் பி னும் சில வருஷங்களுக்கெல்லாம் சாதாரணமா

ாய்விடுகின்றன. சாஸ்திர ஆராய்ச்சி செய்வோ
ரில் முதன்மையானவர்கள் எழுதிய கிரந்தங்களும்
100 வருஷகாலத்தில் பழுதுற்றுப் பாழாய்போகின்
றன. அப்படியிருக்க சாசுவதமான உண்மையைக்
கண்டுபிடிக்கும்வரையில் எல்லாம் மாறிமாறியே
வரும். என்றைக்கும் எப்போதும் மாறாதவிதிகளைக்
கண்டுபிடித்துக் கிரகித்துவிட்டால் அப்புறம் அதை
யனுசரிப்பது எளிது. நாம் உண்மையை யுள்ள
படிகாணமல் அரைகுறைப்பார்வையோடு பார்க்கு
மட்டும் நாம் செய்யும் காரியங்களும் அரைகுறை
யாகவேதானிருக்கும். உண்மையை யுள்ளபடி
நிதரிசனமாகக்கண்டு சாக்ஷாத்கரித்துவிட்டால்
அப்புறம் சந்தேகமென்பதேயில்லை. ஆகையால்
ஆத்மவித்தை பரத்துக்குமட்டும் உபயோகமென்
றிலாமல், இகத்துக்கும் அதுவே சர்வசாதனமாம்.
இகமின்றிப் பரமொன்றில்லை. இகம் பரம் இரண்
டும் கீழ், மேல், என்னும் நிலையைக்குறிக்கும்பத
மன்றி வேறில்லை. மேலான எண்ணங்களைக் கிர
கிக்கமாட்டாதவர்கள் அவைகளை இன்னொரு ஜன்
மத்திலுணருவோமென்று தள்ளிவைப்பார்கள்.
அவர்களை எல்லாரும் பின்பற்றவேண்டிய அவசிய
மென்ன? மனுஷஜன்மமெடுத்தபின் எதுவும்முறை
யறிந்து முயற்சித்தால் முடியாதகாரியமில்லை. விதி
விதி யென்று சொல்வதெல்லாம், தான் முன்
செய்த காரியத்தைக் குறிக்கச்சொல்லும் வார்த்தை
யேயன்றி வேறல்ல. திருமூலர் வார்த்தைப்படி,

"தான்முன்னஞ்செய்தவிதிவழிதானல்லால்
வான்முன்னஞ்செய்தங்குவைத்ததோர்மாட்டில்லை."

ஆகையால், தான்செய்த காரியத்தை மாற்றத் தன்
னலாகாமற்போவானேன். ஒருவிதையை மண்
ணில் விதைத்துவிட்டு அதற்குத் தண்ணீரும்
வார்த்து அது முளைக்காமற்போகவேண்டுமென்றால்
போகுமா? இது முறையறியாது விரும்பும் விருப்
பம். விதை விதைத்தவன் முறையறிந்தவனாயின்
அது முளைக்காதிருக்க அதற்குத் தண்ணீர் வார்க்க
மாட்டான். அல்லது அது முளைப்பதற்கு ஆதாரமா
யுள்ள வேறு சாதக சாதனங்கள் என்னவுண்டோ
அதைச் செய்யாதொழித்து அதை முளைக்காமற்
செய்வான். மேற்சொன்ன மிஸ்ஸஸ் கோர்ட்
ரைட் துரைசானி கிண்டர்கார்டன் முறையை
ஆதியில் கண்டுபிடித்து வழக்கத்துக்குக் கொண்டு
வந்த ப்ரெடரிக் ப்ரோபெல் என்னும் ஜெர்மானிய
தேசத்தவரின் சரித்திரத்தை 'இந்தியன் ஜர்னல்
ஆவ் எடியுகேஷன்' என்னும் இங்கிலீஷ் மாதாந்
தப்பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அவ...

அவர் இம்முறையைக் கண்டுபிடித்தது...
டதின் விவரங்களெல்லாம் தெளிவாக...
தியிருக்கிறார். 1817-ம் வருஷத்தில் ...
மைத்துனி ஒருவர்விதந்துவானதின்...
மூன்று பிள்ளைகளுக்கும் வித்யாப்...
செய்விக்கக் கோரியதின்மேல் அவனுக்...
வேண்டி அக்குழந்தைகளுக்கு வித்யா...
செய்துவைக்க ஏற்றுக்கொண்டார். இ...
சிறுவர்களுடன் அவருடைய சகோதர...
ரும், இன்னொரு சிறுவரும் சேர்ந்து ஆ...
கள்தான் முதலிலிருந்தார்கள். பள்ளி...
வைத்துப் பிழைக்கவேண்டுமென்றுவது,
போதனாமுறையொன்று ஏற்கனவே மனதில்
அதை அனுபவத்திற்கொண்டுவரவேண்டு ...
வது இது ஏற்பட்டதல்ல. சிறுகச்சிறுகத் ...
வளர்ந்தது. 1817-ம் வருஷத்தில் முயற்சி ...
கத் தலைப்பட்டவர், 23 வருஷகாலமுழைத்து ...
மையைக் கண்டபின்னே "கிண்டர்கார்டன்" ...
கிறபேர் அதற்குக் கொடுக்கப்பட்டது (கிண்...
கார்டன் என்றால் குழந்தைகள் வளரும்தோட்...
என்று பொருள்படும்).

கிண்டர்கார்டன் முறையைக் கண்டுபிடித்து ...
பித்த இவரையறிய இவர் சரித்திரத்தைப் படி...
வேண்டியதில்லையென்கிறார். இவருடைய ஒவ்வொ...
எண்ணமும் இவர் கொண்டகொள்கையையும், இ...
வாழ்நாள் எந்த உண்மையை யுணர்வதற்காக அர்...
ணம்செய்யப்பட்டதோ அந்தஉண்மையையும் வி...
குவதாயிருந்ததென்கிறார். இவர்தாம்மிகவும் தெ...
பக்திவாய்ந்த மனதுடையவரென்றும் தத்துவவி...
ரணையில் விருப்பங்கொண்டவரென்றும் உணர்...
கொண்டார். எதிலும் கடவுளையும் சத்தியத்தை...
காணும் ஸ்வபாவமுடையவராயிருந்தார். அ...
டைய அன்பு முதிர்ந்து பழுத்ததாய், கிறிஸ்...
வின் பேரன்புபோலும் விளங்கி அவர் குணத்...
பிரகாசிக்கச்செய்தது. இவர் எழுதியுள்ள "Edu-
cation of Man" என்னும் பேரால் விளங்கும் ...
தியாபூரணம் என்று சொல்லத்தக்க புஸ்தகத்தை
படிக்க, இவர் கனவில் களித்துத்திரிபவரென்று ...
காரியமின்றி உற்சாகம்கொள்ளும் கயவரு...
வரென்றுவது படாது: ஆனால் உள்ளத்துள்ளா...
உள்ளபடியுணர்ந்து உண்மையாயுள்ளதை உ...
படி வெளிப்படுத்தவேண்டுமென்னும் கருத்து...
கொண்டு அது ஒன்றேநோக்காயுழைத்து...
ரென்று தெள்ளிதாகப் புலப்படுமென்கிறார்.



Connection" அதாவது "உள்ளமும் பொருளும்
ஒன்றுபட்டுக்கலக்கவேண்டும்" என்பதாமென்கிறார்.
இந்தமட்டும் சொன்னதிலிருந்து இவர் உண்மை
யில் ஒரு இருஷியேயென்றும், நமது இருஷிகள்
போனவழியே போனவரென்றும் புலப்படவில்லை
யா? "உள்ளத்திலுள்ளான்" என்றாலென்ன?
'ஆத்மா' என்றாலென்ன? "Inner Connection"
என்றாலென்ன 'மனோலயம்' என்றாலென்ன?
அனுபவத்தில் ஆராய்ந்துபார்த்தால் வித்தியாச
மொன்றுமில்லை. எந்த விஷயத்தில் மனதுலயப்
பட்டதோ அந்த விஷயத்தையே அது உண்மை
யாக கிரகிக்கும். அர்த்தத்தைக்கிரகிக்காமல், வார்த்
தைமட்டில் படித்து நானும் வித்யாயபட்டம் பெற்று
விட்டேனென்று பேசினால் பயனென்ன? வாயிலி
ருந்துவரும் வார்த்தையில் மனது கலக்கவில்லையே!
இப்படிப்பட்ட வித்வத் பட்டம்பெற்ற பி. ஏ. க்கள்
நம்மில் வெகுபேருளர். இது அவர்களுடைய குற்
றமல்ல. அவரைப்பழக்கின வித்யாபோதனாமுறை
யின் குற்றம். மேலான உண்மைகளை விளக்கக்க
ருதிச் சிலகதைகள் பிரசுரித்தால், இது பழங்கதை
யும் புராணமுமாயிருக்கிறதென்று சீறுகிறார் ஒரு
இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்: ஆங்கிலேய புத்தகங்களி
லுள்ள கிண்டர்கார்டன் கதைகளைப்பதிப்பித்தால்
இது வெறும் மொழிபெயர்ப்பு என்கிறார் இன்
னொரு உத்யோகஸ்தர். நாம் உண்மைக் கேடுபட்டு
உள்ளபடியுழைப்போமா, காசுக்காசைப்பட்டு இந்த
உத்யோகஸ்தர்கள் மனம்போனபடி யெல்லாம்
போய்ப் படுகுழியில் விழுவோமா? ப்ரோபெல் என்
னசெய்தாரென்று பார்ப்போம். மிஸ்ஸஸ் கோர்ட்
ரைட் எழுதியிருக்கும் விஷயத்தை மேலே வாசிக்க,
அவர் எவ்வளவோ கஷ்டங்களுக்கும் மாறுதல்க
ளுக்கும் உட்பட்டுழைத்தாரென்றும், அவை அவரி
னும் குறைந்த பக்திசிரத்தையுள்ளவரைத்தலைதடு
மாறச்செய்துவிடுமென்றும், ஆனால் அவர்மட்டும்
தான் பிடித்ததேபிடியாய் நின்றுழைத்து வந்தா
ரென்றும், கடைசியில் "சத்தியமே ஜயம்" என்
னும் விதிப்படி அவர் பிடித்தபிடியே ஜயமடைந்து
சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலும் கொண்டாடப்
பட்டதென்றும் தெரிகிறது. இந்த கிண்டர்கார்டன்
முறையை நம் தேசத்தாருடைய மனோபாவத்துக்
கும் சுபாவத்துக்கும் தக்கபடி உண்மையை யனுச
ரித்து உள்ளபடி வெளிப்படுத்தி யெழுதவேண்டு
மென்பது நாம் வெகுநாளாகக் கொண்டநோக்கம்.
"உள்ளத்துள்ளான்" உண்மை உள்ளபடி விளங்
காமையால் இதுகாறும் அரைகுறையாக வெழுதி
வந்தோம். இனி உண்மையையுள்ளபடி பூரண
மாயுணர்ந்து இக்காலத்தும் எக்காலத்தும் அழி
யாது உண்மையாக விளங்கும் தேகமனோதத்துவங்
கள் சம்பந்தமான கொள்கைகளை நமது பூர்வீக
ரிஷிகள் வெளிப்படுத்தியிருப்பதற்கும், இக்காலத்
தில் பேர்பெற்று விளங்கும் ப்ரோபெல், பெஸ்ட
லோஸீ, யிவர்கள் வெளிப்படுத்தியிருப்பதற்கும்
பொருந்த சாதாரணஜனங்களுக்கும் விளங்கும்படி
யெழுதிவர யத்தனிப்போம். கிண்டர்கார்டன்
முறையை நூதனமாயனுசரித்து இதன் கொள்கை
களை யுள்ளபடி யுணர்ந்தொழுகுவார் விஷயத்தில்
நமது வித்யா இலாகாத்தலைவர் அனுதாபசிந்தை
யுடையவராயிருப்பரென்பது திண்ணமென்று மிஸ்
ஸஸ் கோர்ட்ரைட், சென்ற மாசம் முத்தியாலுப்பே
ட்டையில் கூடிய பிரதமவித்யாபோதகர் சங்கத்
தில் மிஸ்டர் மார்ஸ்டன் அக்கிராசனாதிபதியாக வீற்
றிருக்க, தேறுதல் கூறினார். அதைக்கேட்டு நாமும்
சந்தோஷப்பட்டோம். ஆனால் இதில் நம்மவர்தாமாக
உழைத்துத் தேறவேண்டியதே யன்றி பிறரை நம்
பிப்பிழைப்பது அசாத்தியமென்னும் உண்மையை
எல்லா உபாத்தியாயர்களும் மனதில் வைக்கவேண்
டும்.

## சுகுணசுந்தரம்.

### VII.

அச்சமயத்தில் சூரியாஸ்தமய காலமாயிருந்த
மையால் மாலினிநதியில் சுந்தரன் முதலாயி
னோர் நீராடிமாலைக்கடனை முடித்துக்கொண்டு மா
முனிவரது ஆசிரமத்தை நோக்கிவருங்கால், சண்ப
காவதி தான் சுகுணசுந்தரர்களின் சரித்திராமிரு
தத்தைக் கேட்கவிருப்புற்றமையை சித்திராங்கியி
னிடம் தெரிவிக்க, அவள், சண்பகாவதியின் எண்
ணத்தை சுந்தரன்பால் உரைக்க, அவன் சுலோச
னையை உத்தியானவனத்தில் மணம்புரிந்தது வரை
யிலுள்ள தங்கள் வரலாற்றைச் சொல்லிக்கொண்டு
வர, முனிவரிடம் வந்துசேர்ந்து முனிவரைத்துதித்து
வணங்கினார்கள். அதனைக்கண்ட முனிவரர் அவர்
களை யாசீர்வதித்தருளினார். அம்முனிபுங்கவரை
நோக்கி தாங்கள் பிலப்பிரவேசமாய் ஆசிரமத்திற்கு
வந்ததுவரையிலுள்ள சங்கதிகளை சவிஸ்தாரமாய்ச்
சுந்தரன் சொல்லி, "ஹேமாபுரியில் சாருதத்தமகா
ராஜன் புத்திரி சுலோசனைக்கு நாளையுதையத்தில்
விவாகமாகவிருப்பது தேவருக்குத் தெரிந்த விஷய

மரகையால், எங்களுடன் அவண் எழுந்தருளி அவ்விவாஹத்தை நடத்திவைக்குமாறு வேண்டுகின்றேன்,” என, அம்முனிவர் உடன்பட்டமையால், மகிழ்ச்சிகொண்டு, இரத்தினகேதுவை நோக்கி, “யமுனாநதிக்கரையிலுள்ள இரத்தினபுரி என்னும் பட்டணத்திற்குச்சென்று சண்பகாவதியின் தந்தை தாயார் முதலினோர்க்கு அவள் துர்முகனிடமிருந்து விடுபட்டு கிருபாகடாக்ஷமுனிவ ராசிரமத்திற்கு வந்திருக்குஞ் சரித்தத்தை ஆதியந்தமாய்ச் சொல்லி, இம்மணவோலையை அவ்வரசனிடங்கொடுத்து நாளையுதயத்திற்குள் இவண் அழைத்துவரக்கடவாயாக” என்று கின்னரனை விடுத்தான்.

அப்பொழுது சத்குணன் கொண்டுவந்துபசரிக்கப்பட்ட கந்தமூலங்களையருந்திய சுந்தரன் முதலினோர் அவ்வாசிரமத்தில், ஒருபக்கத்தில் சண்பகாவதி நித்திராங்கியிருவரையும் சயனித்து நித்திரைசெய்யும்படி ஏவி, மற்றொருபக்கத்தில் சுந்தரன் சுகுணனிருவரும் துயிலும்படி சயனித்தார்கள்.

பின்னர் பகலெல்லாம் வழிநடையினாலும், யுத்தமுதலியன செய்தமையாலும் வருந்திய சுகுணன் அயர்ந்து நித்திரைபோய்விட்டான்.

அவ்வேளையில் சுந்தரன்மட்டும் “காலையரும்பி பகலெல்லாம் போதாயிருந்த காமமலர்மாலைமலர்ந்த” என்றபடி, சுலோசனாதேவி பிரிவாற்றாமையால் காமநோய் கனற்றலால் நித்திரையின்றி எழுந்து அங்குமிங்குமுலாவி அப்பூங்காவின் ஓர்பக்கலில் அருவிநீர்குதித்தோடுகின்ற ஆற்றங்கரையின் மெல்லிய மலர்களின் மணத்தைக் கவர்ந்துகொண்டு ஆற்றுநீரிற்படிந்து சிறுதிவிலைகளுடன் உலாவுகின்ற தென்றற்காற்றினையுடைய நறுமணற்பரப்பில் தன் விரகவெப்பத்தைத் தணிக்கக்கருதிச்சென்று அம்மணற்றிட்டில் உலாவியபோது, ஆகாயத்திற்றோன்றிய செவ்வானத்தை நோக்கி, தனக்குள் சொல்லிக்கொள்ளுவானாயினன்.

‘வெண்மையுங்கருமையுமேவுமிம்முகி
லம்மையோடப்பனுமமருங்காட்சியாஞ்
செம்மையாய் நடுவணிற்சிறிதுதோன்றுறு
மொண்முகில்கந்தனென் றுரைப்பத்தோன்றுமால்.’

“அதோ இரண்டுமேகங்கள் வெண்மையுங்கருமையுமாய் நடுவில் சிறிது செவ்வானத்துடன் தோன்றினவே; அவைகள் பார்வதியைத் தழுவிக்கொண்டிருக்கின்ற பரமேசுவரனையும் அவர்களிடத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற சுப்பிரமணியக்கடவுளையும் போன்றிருக்கின்றன; என் கண்மணிப்பாவைபோன்ற சுலோசனையை இவ்வாறு தழுவிக்கொண்டு நாம் சுகத்தை யனுபவிக்குநாள் என்றோ! என்றுநினைக்குத்துப்படுத்தும். புரண்டும், எழுந்திருந்தும் பலவிதமாய்க் காமநோய் மிக்குவளர்தலால் மதனைநோக்கிக்கூறுகின்றான். ஏ, அநங்க! என்காதலி தோழிகளுடன் விளையாடுகின்ற பூஞ்சோலையிலுள்ள சிவந்த இளந்தளிர்கள் நெருங்கிய மாமரச்செறிவு போன்ற செவ்வானத்தையும்,

‘அருவாய்நிறைந்த வவிர்மதிக்குப்போல
மருவுண்டோமாதர்முகத்து’

என்று எனது பிராணசகியின் முகமண்டலத்திற்கு நிகராகின்றிலை என்று தன்னையாளிகழ்ந்து கூறியதால் கோபமுற்றெழுந்த சந்திரனையும், மகரந்தப்பொடிகளாகிய நச்சுத்தூள்களை வாரியிறைக்கின்ற தென்றலையும், பூவம்புகளையு மற்றுமுள்ள உபாங்கங்களையுஞ் சேர்த்துக்கொண்டு என்னுடன் போர்செய்கின்றனையே! உனக்குயான் என்ன அபராதம் செய்தேன்? ஓகோ! நான் திக்விஜயஞ்செய்து கீர்த்திபெற்றேனென்றும், சுந்தரனென்று பெயர்பெற்றேனென்றும், பலருங்கண்டுகளிப்படையு முருவுமுடையேனென்றும், இரதியினுஞ்சிறந்த சுலோசனை யென்னையே தன்கைகளாறத்தழுவ இன்புற்றேனென்றும், நின்மனத்திற்கொண்ட பொறாமையால், யாருமிற்றனியிடத்தில் என்னைச் சூழ்ந்துகொண்டு போர்புரிகின்றனையே!

‘அழுக்காற்றினல்லவைசெய்யாரிழுக்காற்றி
னேதம்படுபாக்கறிந்து’

என, உத்தரவேதங்கூறுகின்றதே! என்னைப்பொறாமைகொண்டு வருத்துவதால் நினக்குப் பாவமேயன்றி வேறென்னவரப்போகின்றது! சிவபெருமானிடம் நீ கருவித்துப்போர் புரியச்சென்று நினது பெறுதற்கரிய யாக்கையை யிழந்ததை மறந்தனையோ? இன்னுமப்பெருமானுக்குத் தீங்கிழைத்தவர்களாகிய தேவர்களில் யாவர்கள் தண்டனையடையாமற்றப்பினார்கள்? தக்ஷயாகத்திற்குவந்த எல்லாத்தேவர்களுக்கும் வீரபத்திரமூர்த்தியால் கொடுக்கப்பட்ட பருமானங்கள் அவர்கள் தேகத்தில் இன்னும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றனவே! முடிவிலாற்றலையுடைய அக்கண்ணுதற்பிரானை யலக்ஷியஞ்செய்த நீ, என்னை இலேசாகநினைத்தது பெரிதல்ல; அன்னிலைவுக்குக்காரணம் உன்னறியாண்மையே; என்கையிலிருக்கின்ற சக்தியாயுதமு முருகக்கடவுளிடமிருக்கின்ற வேலாயுதமும் வேறல்ல; எனக்குமயில்வாகனப்பெருமானுக்கு மிவ்வாயுதங்களைத் ...



தருளினவர் கருணைக்கடவுளாகிய பரமசிவன். அவரருள்பெற்ற என்னை வெல்வது நினக்குசாத்தியமாகாது; நீ முன்னமே யவரால் சிக்ஷையடைந்தவனாகியிருப்பதால் ‘அலந்தாரையல்லநோய் செய்தற்றால்’ என்றபடி, உன்மீது இவ்வேற்படையையோச்சினால் அபகீர்த்தி வருமென்பதனாலும் நின்னேழைமையை நினைக்கும்போது எனக்குன்பேரில் பரிதாபமுண்டாவதாலும் பிரயோகிக்காமல் தாமதித்திருக்கின்றேன்” என்றிவ்வாறு பிதற்றிக்கொண்டிருக்கும்போதே,

“நெருங்குமலர் கருங்குழலுஞ் செவ்வாயும் வெண்
[ணகையு நிலவுதோடு
மிருங்கையல்போன்றொளிர் விழியும் எழிற்பூங்
[கையுஞ்
சுருங்குமருங்குலுங்கலையுங்கண்டமு மொண்முக
[மலருந்தோன்ற வந்து,”

மின்னல்கொடியொத்து விளங்கிய சுலோசனையின் உருவெளித்தோற்றத்தைக்கண்டு சுலோசனை தன்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டதாய் நினைத்து அவ்வுருவெளித் தோற்றத்துடன் மகிழ்ச்சியோடு பேசத்தொடங்கினான். “என்னுயிர்த்துணைவியாகிய பெண்ணணங்கே நின்னையான் பிரிந்ததுமுதல் இதுகாறும் கண்பெற்றிழந்த குருடனைப்போல் தவித்துக்கொண்டிருந்த என் சோகத்தை யாற்றாமல் அகலநிற்பது தருமமா?

“வண்டுவிழிமாதரசே கொண்டைநடையன்னமே!
பண்டுமலர்ச்சோலையிலே தண்டொடைகள் சூடினமே,

போய்வருகவென்னுனது பூங்குழறவாய்மலர்ந்து
நாவிரியுமென்குதலை நான்கேட்கச்சொல்லிலையே

வாய்திறந்துபேசிடிலுன் வாய்முத்தஞ்சிந்திடுமோ?
வேயனிகர்மென்றோழி மெல்லியலேபெண்ணணங்கே!

[ணையாய்
குற்றமென்னசெய்தனன்யான் கோமளப்பொற்கொம்ப
உற்றதுணைநின்னையல்லால் மற்றவரார்? பூங்குயிலே!

மாமயிலே! பெண்ணணங்கே! மனதிரங்கி வாராயேல்,
சாவதுதான் சத்தியமே சற்றுதலை செய்திடுவாய்;

[மணிவேன்
கூந்தல் பின்னிமலர்முடிப்பேன் கொங்கையிற்சந்தனந்
தூர்ந்துகலையுடுத்திடுவேன்பொட்டிநுதற்கணிந்திடுவேன்;

இழைபலவும் திருத்திடுவேன் இட்டபணிசெய்திடுவேன்;
விழைபொழுதே னென்றொருசொல் பேசிமடிமேலி
[ருப்பாய்.”

இவ்வாறு சுந்தரன் பரிதாபத்துடன் அவ்வுருவெளியைத் தன்னருகில் வரும்படியழைத்தும் அது வாராமையால், தானேவிரைந்தோடி தன்கைகளாரத் தழுவினான். அந்நிழலானது தன்கைக்ககப்படாமையால், ‘இதுவென்னமாயாரூபமோ!’ வென்று பிரமித்து நான்குபுரத்திலும் பார்த்தான். அப்பொழுது அவன் நோக்குந் திக்குகளிலெல்லாம் சுலோசனையின் உருவெளிகள்காணப்பட்டன. அவைகளைக்கண்டு ‘இந்தஜாலவித்தையை சுலோசனை எங்கனங்கற்றாளோ,’ வென்று பலதிக்குகளிலுஞ் சஞ்சரித்து அவளைப்பற்றும்படி திரிந்து, பின்னர் இஃது உருவெளியாமெனத் தனக்குள்மதித்து ஒருவாறுமனந்தெளிந்தான். அப்போது அருணோதயகாலமாயிற்று.

இதுநிற்க, காமபாலனிடஞ்சென்ற இரத்தினகேது சுந்தரன்கட்டளையைச் சிரமேற்கொண்டு அவன் தனக்குச்செய்த நன்றியை யடிக்கடி நினைந்து சந்தோஷத்தவனாய் ஆகாயமார்க்கத்தில்சென்று இரத்னபுரியையடைந்து அரசனுடைய சபையில் புகுந்து நின்றான். அப்போது சண்பகாவதியைத் தேடும்படியாக அனுப்பிய ஒற்றர்கள் பலரும் தெரிந்துவந்து சொல்லாமையால் சோகத்தோடு வருந்திக்கொண்டிருந்த காமபாலன், கின்னரனைப்பார்த்து ‘இவன் யாரோ’ தேவபுருஷனைக் காண்கிறான், இவன் முகஞ்சந்தோஷக்குறியைக் காட்டுவதால் நமக்கு நன்மையான சமாசாரஞ்சொல்ல வந்திருக்கின்றவன் போல்காண்கிறானென்று அவனை உற்றுப்பார்த்துக்கொண்டேயிருக்கும்போது, கின்னரன், ‘ஓ! ஓ! அரசசிகாமணியே! நின்னருமைப்புதல்வி கிருபாகடாக்ஷமுனிவரது ஆசிரமத்திலிருக்கின்றனள், நீ கவலையுறற்க;’ என்று சொல்லி லிகிதத்தை யவன் கையிற் கொடுத்தான்.

அப்பொழுது காமபாலன் தன்மகளிருக்கின்ற செய்தி காதில்விழவே, மிக்க சந்தோஷமுடையவனாய்க் காகிதத்தைக்கையிலேற்றுப்பிரித்து வாசிக்கும்படி சமீபத்திலிருந்த மந்திரியினிடம் கொடுத்தான். மந்திரி அடியில் வருமாறு வாசித்து முடித்தான்.

“மாயாபுரி இளவரசனான சுந்தரராஜன் யமுனையாற்றங்கரையிலுள்ள இரத்தினபுரிக் கதிபனாகிய காமபாலமகாராஜனுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிற நிருபம்யாதெனில்:—

“ஹேமாபுரி இராஜகுமாரியான சுலோசனாதேவிக்கு நாளையுதயம் சுவயம்வர நாட்டியிருப்பதாக ஏற்கனவே யவ்வரசனால் பத்திரிகை கிடைத்திருக்கலாமென நம்புகிறேன்; ஆனால் கடவுள் அருளியபடி, சுலோசனை என்னையே மணம்புரிய... யிருக்கின்றமையாலும், எனது அமைச்சனு...

னுமான சுகுணனை சம்பகாவதி துர்முகனது பிலத்துவாரத்தின் கண்ணுள்ள காளிகாதேவியின் வரம்பெற்றவண்ணம்—மணம்புரிய விரும்புகின்றமையாலும், இஷ்டமித்திர குடும்ப பரிவாரங்களுடன் ஹேமாபுரியில் வந்திருந்து அவ்வரசனுடன் இவ்விரு கன்னிகைகளையும் எங்களிருவருக்கும் பாணிக்கிரஹணமுடித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்; ஆதலால் கின்னரனுடன் புறப்பட்டு கிருபாகடாக்ஷமுனிவரது ஆசிரமத்திருக்கிற எங்களிடம் நாளையுதத்திற்குள் வந்துசேர வேண்டுகிறேன். சம்பகாவதி உங்களிடமிருந்து பிரிந்தது முதல் முனிவரது ஆசிரமம் வந்திருக்கிற வரையிலுள்ள சரித்திரத்தை கின்னரனால் சவிஸ்தாரமாய்த் தெரிந்துகொள்ளலாம்.”

இப்படிக்கு,

**சுந்தரராஜன்.**

திக்குவிஜயகாலத்தில் சுகுணசுந்தரர்களின்பராக்கிரமத்தையும், மகிமையையும், கண்டறிந்த காமபாலன், இப்பத்திரிகையைப் படிக்கக் கேட்டதும் ஆனந்தக்கண்ணீர் பொழிந்து மந்திரியைப்பார்த்து “என்ன ஆச்சரியம்! நம்மரும்புதல்வியைப்பற்றி ஒன்றுந்தெரியாமல் தியங்கினவர்களாய் மீளாத்துக்கத்தில் மூழ்கியிருக்கு நம்பேரில் ஈசனருள்புரிந்தார். மாயாபுரி அரசன் சுந்தரவள்ளல் எங்கே, நம்பெண்மணியெங்கே, நாளையுதயம் சுகுணனுக்கு அவளை மணம்புரிவிக்க வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. சுகுணனுமவளுக்குகந்த கணவனே காணு; மற்போன சண்பகத்தை யவர்கள் எங்கு கண்டிருப்பார்களோ” வென்று கின்னரனை நோக்கி, “சுகுண சுந்தரர்கள் சண்பகாவதியுடன் மாமுனிவருடைய ஆசிரமத்திற்கு வந்தவிதமென்ன?” வென்று அவர்கள் விருத்தாந்தத்தை விஸ்தரித் துரைக்குமாறு வேண்ட, அவன், சண்பகாவதி முதலியவர்களை துர்முகன் சிறைப்பிடித்து சுந்தரனால் சம்ஹரிக்கப்பட்டதையும், சுலோசனைக்குஞ் சுந்தரனுக்கும் நிகழ்ந்த வற்புத மணக்கோலத்தையும், அதேமாதிரி சண்பகாவதியையும் சுந்தரன் சுகுணனுக்கு மணம்புரிவித்ததையும், சிறைமீட்கப்பட்ட பெண்மணிகளுள் தன்மனைவி சித்திராங்கியு மொருத்தி என்பதையும், பிறகு எல்லாருமாய் கிருபாகடாக்ஷ மாமுனிவர் ஆசிரமம் வந்ததையும், சுவயம்வர முகூர்த்ததினமாகிய நாளையுதயம் ஹேமாபுரியில் எல்லா முடிமன்னர்கள் முன்னிலையில் சுலோசனா தேவியின்கையை சுந்தரன் பிடிக்கப்போவதையும், அதேகாலத்தில் அவன் தோழனும் சண்பகாவதியின் கையைபபிடிக்க வேண்டுமென்பதையும், இந்த விபவத்தை நீங்கள் கண்டுகளிப்படைய வேண்டுமென்றே யுங்களை யழைத்துவரும்படி சுந்தரராஜனால் பத்திரிகை கொடுத்தனுப்பப்பட்டு இவ்விடம் வரலாயினேன் என்றும் அக்காமபாலனிடஞ் சொல்லி முடித்தான்.

இதைக்கேட்ட அரசன் தன்தேவி, மந்திரி சகிதமாயி ரதமேறி இரத்தினகேதுவையு முடனிருக்கச் செய்து, தனது சைன்னியங்களுடன் இருடிபுங்கவரினாசிரமத்திற்கு புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.

இது நிற்க; அருணோதயமானதையுணர்ந்த சுந்தரன், “சுலோசனையின் உறுவெளித்தோற்றத்தினாலல்லவா இதுகாறும் விரகநோய் கொண்டு பிதற்றித்திரிந்தனம்” என தனக்குள் ஆச்சரியமுற்று சுகுணன் முதலினோர் துயிலுணருங் காலமாயிற்றென்று ஆசிரமத்தை நோக்கிவருகையில், நால்வகை சைன்னியங்களுமாரவாரிக்கும்படி வந்த காமபாலனுக்கு கின்னரன், ‘அதோ வருகிறவர்தான் சுந்தர மகாராஜன்,’ எனக்குறிப்பிக்க, இருவரும் இரதத்தை விட்டிறங்கி, இராஜகுமாரனிடம் வருங்கால், கின்னரன் உடன் வருவதால்; அவ்வரசன் ‘காமபாலன்தான்’ என்பதை யறிந்துகொண்ட சுந்தரன் அவ்வரசனை இனியமொழிகளாலுபசரிக்க அவ்விராஜன் சுந்தரனைத்தழுவி குசலப்பிரசனம் பண்ணினான்.

பின்னர் சுந்தரன் அனுமதியின்படி சைன்னியங்களை மாலினி நதிக்கரையிலேயே இறங்கும்படி செய்து தன் மனைவியுடன் இரத்தினகேதுவோடு சுந்தரனைப்பின் தொடர்ந்து வந்தான். இவ்வண்ணமெல்லாருமாய் ஆசிரமத்திற்கு வரும்பொழுது, வனவிலங்குகள், பட்சிகள், காமபாலனது சைன்னியங்கள் இவைகளின் கோஷத்தினால் விடிலையுணர்ந்த சுகுணன், சம்பகாவதி, சித்திராங்கி இவர்கள் நித்திரையினின்று எழுந்து பர்ணசாலையினுள்ளிருந்து, வெளியில்வந்தார்கள். அப்போது காமபாலனும் அவன் மனைவியும்

> ‘நாள்பலபிரிந்திருந்து நண்ணிய சிறுசதங்கை
> தாவிளமகவைக்கண்ட தாயெனதாழாதோடி,’

என்றபடி, சண்பகாவதியைக் கண்டவுடன் கோவென்றலறிக்கொண்டோடிப் பற்றிக்கொண்டு விம்மிவிம்மி யழுதார்கள். அத்தகைய தாய் தந்தையர்களை அறிந்த சண்பகமும் கோவென்றலறினள். அப்போது சூரியோதயமானமையால், மாலினி நதியாட்சென்ற கிருபாகடாக்ஷ மகாமுனிவர் ஆசிரமத்திற்குத்திரும்பி வருவதை காமபாலன் முதலினோர்க்கு சுந்தரன் உணர்த்தித்தேற்றினான். பின்னர் அம்முனிவர் சமீபத்தில் வரவே எல்லோருமவருக்கு நமஸ்கரித்தார்கள். அதனைக்கண்ட அம்முனிவர் புன்னகையோடு ஆசிகூறி ஆசிரமத்திற்குள் நுழைந்தார்.



அவ்வேளையிவ் வெகுதூரத்தில் சைன்னியங்களின் காற்புழுதிகள் ஆகாயத்தை மறைக்கவும், குதிரைகள் கனைக்கவும் சுசீலன் வருவதைக் கண்ணுற்ற சுந்தரன் முதலினோர் ‘யாரோ அரசர்கள் ஹேமாபுரியில் நடக்கப்போகிற் திருமணத்திற்கு வருகின்றார்கள்,’ என்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஆசிரமத்தினருகில் இரதம் வந்தவுடன்சுசீலன் சுமந்தரனை நோக்கி “இப்பூஞ்சோலையில் ஜனங்களின் ஆரவாரமும், அத்யயனம்பண்ணுகின்ற பார்ப்பனச்சிறுவர்களின் ஒலியும், பகையற்று ஒன்றுடனொன்று விளையாடுகின்ற புட்களும், மிருகங்களுந் தோன்றுகின்றமையால், ஓர் முனிவரது ஆசிரம்போன் றிருக்கின்றது. அதோ ஆற்றங்கரையில் சைனியங்களிறங்கியிருக்கின்றனவே! அவைகள் ஹேமாபுரியில் கலியாணத்திற்கு வந்திருக்கின்ற சைன்னியங்கள்போன்றிருத்தலால், ஹேமாபுரிபட்டணத்திற்குச் சமீபத்தில் நாம் வந்துவிட்டாற் போலுமிருக்கிறது; ஆகலின் நாம் நித்தியகர்மங்களை இந்நதியிலே தானே முடித்துக்கொண்டு, பின்னர் நகரத்தினுள் புகுவாம்” என்று பாகனை நோக்கி, இரதத்தை நிறுத்தும்படி கட்டளையிட அவன் இரதத்தை நிறுத்தினான்.

அவ்விரதத்தைக் கண்ட சுகுணசுந்தரர்கள் ‘இவண் வந்தவரசன் யாவன்’ என்றுய்த்து நோக்கும்பொழுது, தங்களுடைய தந்தைதாயார்களென்றறிந்து விரைந்து அவர்கள்முன் சென்றார்கள். சுசீலனும் சுமந்திரனும் அக்குமாரர்களைக் கண்ணுற்று தங்கள் மைந்தர்களாகக் காண்கின்றார்களென, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு மனைவிமார்களோடு இரதத்தினின்று மிறங்கினார்கள். உடனே அவ்விருமக்களும் தங்கள் தந்தை தாயார்களின் கால்களில் தண்டாகாரமாய் வீழ்ந்துவணங்கினார்கள். அதுகண்ட சுசீலன் முதலினோர் சுகுணசுந்தரர்களைக் கைகளாற்றூக்கி எடுத்து ஒருவர்பின்னொருவராக மாறிமாறித்தழுவி உச்சிமோந்து, களிப்பினால் கண்ணீர்பெருக்கி குளிப்பாட்டினார்கள்.

> கண்ணில்யாக்கையந்திங்களில்கதிருலுங்கருது
> மண்ணளமந்திரியிலரசாக்ஷியுமருளிற்
> றிண்ணெனெஞ்சமும்புலவரில்லவையுமொண்டிம்பால்
> வண்ணவாயிளமக்களில்வாழ்வுமொப்பாமால்.

என்று கூறியவாறு உயிர்துறந்த உடல்போல உங்களைப்பிரிந்து மூப்பினால் வருத்தத்துடன் இராஜ்யபாரத்தைவகித்துக்கொண்டிருந்த எங்களுக்கு உதவி புரியாதவர்களாய் எங்களைமறந்து இவ்வண்ணம் நீங்கள் திரிந்துகொண்டிருக்கலாமா? என்று சுசீலனும் மந்திரியும் அவர்களுடைய மேனியைத் தடவிக்கொடுத்து பிரலாபிக்குமளவில் சுகுணசுந்தரர்கள் “இன்னுமொருவாரத்திற்குள் நமது இராஜ்யம்வந்து சேருவதாய் உத்தேசித்திருந்தனம், அதற்குள் தாங்களே இவ்விடம் எழுந்தருளப்பெற்றோம்; ஆயினும் குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டுகின்றோம்.” என்று சொல்லிப் பின்னும் நகஸ்கரித்தார்கள்.

அப்போது அம்முதுகுரவர்கள் மிகுந்த பரிவுடன் ஆசீர்வதித்தார்கள். பின்னர் தாய்மார்களுடன் தங்கள் விஜயப்பிரதாப முதலியவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது காமபாலனும் இரத்னகேதுவும் அவடம்வந்து சக்ரவர்த்திக்கு தண்டம் சமர்பித்தார்கள். அவர்கள் கைகளைப்பற்றித் தழுவி பற்பல முகமன் கூறிய சுசீலபூபதிக்கு தங்கள் வரலாற்றையும் சுந்தரனால் தாங்களடைந்த நலத்தையும் சவிஸ்தாரமாய்ச் சொல்ல சுந்தரன் புகழைக் கேட்ட பெற்றோர்கள்,

> ‘ஈன்றபொழுதிற்பெரிதுவக்குந்தன்மைகளைச்
> சான்றோனெனக்கேட்டதாய்’

என்றவாறுமிகுந்த சந்தோஷக்கடலில்மூழ்கினார்கள்.

பின்னர் எல்லாரும் மாலினி நதியையடைந்து ஸ்நானமுதலிய நித்தியகர்மங்களை முடித்துக் கொண்டு முனிவரது பர்ணசாலைக்குவந்து, ஹேமாபுரிக்கெழுந்தருளவேணுமாய் எல்லாரும் வேண்டிக்கொண்டார்கள். உடனே முனிவர் அனுமதிபெற்றுக்கொண்ட சுசீலன் முதலினோர், அம்மகானுபாவரை ஓர் திவ்விய இரதத்தில் எழுந்தருளுவித்து தாங்களும் தத்தம் வாகனங்களில் ஏறி சைன்னியங்களுடன் ஹேமாபுரிக்குவந்தார்கள்.

இன்னும் வரும்.

**டி. எஸ். சுப்பராமையர்**

# நமதுபார்வைக்குவந்த புஸ்தகங்கள்.

1. **தென்னாட்டுச்சிரேட்டர்கள்:**—இச்சிறு புஸ்தகம் கே. வி. துரைசாமி அவர்களால் இயற்றப்பட்டது. இதில் இத்தென்னாட்டில் பிறந்து வளர்ந்து பலபல துறைகளிலிறங்கியுழைத்துத் தலைமைவாய்க்கப்பெற்றவராய்ப் பெருங்கீர்த்தியும் பொங்கப்பெரியோராய் வாழ்ந்து கழிந்த சிரேட்டர்களில் ஒன்பதின்மர் சரித்திரம் அவரவர்களின் உருவப்படங்களோடும் அழகாய் அச்சிட்டுப்பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நடை வாசிப்பதற்கினிமையாகவும் சுலபமாகவுமிருக்கிறது. இது தமிழ்நாட்டிலுள்ளோர் எல்லாராலும் வாங்கி வாசிக்கத்தக்கது. பெரியோர்களின் சரித்திரத்தைவாசிப்பதால் அவர்களின் சரித்திரவிசேஷத்தாலும் நடத்தையாலும் நாம் நமது நடத்தையைச் சீர்திருத்திக்கொள்ளவும் நமது அவாவை ஒழுங்குபடுத்திக்கொள்ள உயரெண்ணங்களைச் சிந்தையில் கொண்டுழைக்கத் தீர்மானிக்கவும் சாதகங்களேற்படும் இதில் அடங்கியிருக்கும் 9-சரித்திரங்களின் நாயகர்கள்பேர் முறையே (1) மஹாராஜா ஸர். இராமச்சந்தர உடையார், வி. எஸ். ஐ. (2) வி. வி. இரங்காசார்லு, (3) அ. ஆர். சபாபதி முதலியார், (4) மஹாராஜா ஸர். இராமவர்மா, ஜி. வி. எஸ். ஐ. (5) இராஜா ஸர் டி. மாதவராவ், (6) வி. வி. இரங்கநாதசாஸ்திரி, (7) ஸர். டி. முத்துசாமி ஐயர், (8) தண்டலம் கோபாலராவ், (9) சேலம் இராமசாமி முதலியார், இது "ஆனந்த அச்சுக்கூடத்தில்" அழகாகப்பதிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள படங்கள் எஸ். கே. லாடன் அவர்களால் வெகுநேர்த்தியாகச்செய்யப்பட்ட அச்சுப்பிரதிகளிலிருந்து அச்சிடப்பட்டுள்ளன. இதன் விலை அணா 12.

2. **ஷேக்ஸ்பியர் நாடகம்: ஒதெல்லோ :**—இது அ. மாதவையர் பி. ஏ. அவர்களால் முதல்நூலாசிரியர் சரித்திரம், விருத்தியுரை குறிப்புரைகளுடன் வசனநடையில் மொழிபெயர்க்கப்பட்டு ஸ்ரீனிவாசவரதாசாரி கம்பெனியால் பிரசுரிக்கப்பட்டது. இந்நூல் மொழிபெயர்த்தோர் இயற்றமிழ் இசைத்தமிழ் இரண்டிலும் நன்றாக எழுதும் சக்திவாய்ந்தவர். தனது வித்வத் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டுமென்றெழுதாது தான் மேற்கொண்டெழுதப்புகுந்த விஷயம் வாசிப்போருக்கு விளங்கும் வகையையே மேலாகக்கருதி சிரமத்தைப்பார்க்காமல் சிந்தைவைத்தெழுதும் சுபாவமுடையவர். இப்படிப்பட்டவர்கள் முயற்சியால் தான் அங்கிலேயர் கல்வியும் நாகரிகமும் நம்நாட்டுத்தமிழர்களுக்குள் பரவுதல்வேண்டும். தம் திறத்தைக்காட்டுவான் எழுதுவோர்கிரந்தங்களை விலையுள்ளதாயினும் அது சாதாரணமாகப்படித்துப் புத்தி விசாலம்பெற விரும்புவோர்க்கு அவ்வளவாகப் பிரயோசனப்படாது. படித்தவித்வான்களாயிருந்து வித்வத்சாமர்த்தியத்தைக் கண்டு புகழ வல்லமையுள்ளார்க்கேமற்றது இன்பம் பயக்கும். இப்புத்தகமுகட்டில் வில்லியம்ஷேக்ஸ்பியரின் உருவப்படமொன்று பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவருடைய கிரந்தங்களெல்லாம் இங்கிலீஷில் எழுதப்பட்டிருந்தாலும், எண்ணங்களெல்லாம் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானதும் காலதேசவித்யாசமின்றி மன்னுயிர்க்கே இலக்ஷணமாயுமுள்ளவைகளாக விருத்தலால், நமது காளிதாசமகாகவி நாடகங்கள்போல் இவருடையநாடகங்கள் எல்லாராலும் இன்புடன் வாசித்துப் பயன்பெறுதற்கேற்றவையாக விருக்கின்றன. ஆகையால் இவருடைய நாடகங்களில் விசேஷமான ஒன்றை முதல் நூல்கருத்துக்கு விரோதமின்றி குறிப்புரை விருத்தியுரையோடு சிரமத்தைப்பாராது சிலாக்கியமாய்த் தமிழில் செய்து அளித்தவர் முயற்சி தமிழுலகால் மிகவும் கொண்டாடற் பாலது.

3. **சிவாஜி-ரௌஷனாரா :**—இது இந்துதேச சரித்திரசம்பவங்களிலிருந் தெடுக்கப்பட்ட ஒரு அழகான கதை. இது வி. ஆர். ஸ்ரீனிவாசையங்கார் பி. ஏ. அவர்களால் இயற்றப்பட்டு, சென்னை பி. வைத்தியநாதய்யரால் பிரசுரிக்கப்பட்டது. மஹாராஷ்டிர வீரனாகிய சிவாஜி ஔரங்கசீபினால் தந்திரமாய் வரவழைத்து டில்லியில் சிறைப்படுத்தப்பட்ட பொழுது அம்மஹா வீரன் கூண்டிலடைத்த புலிபோல் மனம் வெம்பி வெதும்பிப் புண்பட்டும், சோர்வுறாமல், ஈசுவரியின் லீலாவினோதத்தி லீடுபட்டவனாய், அவனுடைய பக்திவலிமையினால், இதுவும் ஒரு நன்மை விளைவதற்காள்பதமாகவே நடந்திருக்கிறதென்று பூரணமாய் நம்பி, ஈசுவரி திருவுள்ளத்தை முன்னிட்டு தன்னபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளச் சூழ்ச்சியாலோசனை செய்துகொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் இவனறியாது இவனைப்பார்க்க நேரிட்ட ஔரங்கசீபின் செல்வப்புத்திரியாகிய ரௌஷனாரா இவன்மீது அடங்காக்காதல்கொண்டு ஸ்ரீஜன்மமெடுத்தும் இப்படிப்பட்ட சுத்த வீரனை யடையப்பெறாததன் ஜன்மம் வீண் [illegible]



யென்று தீர்மானித்து; எப்படியும் அந்த மஹா வீரனையே மணம்புரிவேன் இல்லையேல் அவனுக்குத் தொண்டுபுரிந்தேனும் என் காதல் நிறைவைக் காட்டி மகிழ்வேன்; என்று துணிந்து தீர்மானித்து அப்படியே அவள் உள்ளக்கருத்தைஅவனுக்குத்தெரிவிக்கவகைதேடினாள். ரௌஷனாரா தன் தகப்பனைப்போல் மதவிஷயத்தில் மூடவைராக்கியங்கொண்டவளாக வின்றி, உண்மையாகவே வித்யாமகிமைபெற்ற பக்தியின் வலியையுணர்ந்த பதிவிரதாசிரோன்மணியாதலால் அவள் சிவாஜியின் உள்ளத்தைக்கவர்ந்து இருவருக்குமுள்ள ஜாதிமதபேதத்தையும் கடந்து அவன் தன்னோடு மனங்கலந்துவக்கத் தக்க காதல்வன்மைகாட்டி அவனைக்கைவசப்படுத்திக்கொண்டாள். அவன் காதலைப் பெறவும் தன் காதலனைச்சிறைவைத்தபடி சிரஸாக்கினைசெய்யச் சமயம் எதிர்பார்த்திருந்த தன் தகப்பன் கையினின்றும் விடுவிக்கத்தீர்மானித்து, எண்ணித்துணிந்தகர்மத்தைக்குறைவன்றி நிறைவேற்றக் கங்கணங்கட்டினவளாய், சிவாஜி செய்ததந்திரத்திற்குடந்தையாயிருந்து அவனைப்பக்ஷிணக் கூடைக்குள் வைத்துத்தானே அவனைத் தனக்குத்தெய்வ கிருபையால் கிடைத்த அருமைப்பிரசாதமாகச் சுமந்து கோட்டைக்கு வெளியே சென்று அங்கு தயாராயிருந்த குதிரைகளின்மேல் தானும் அவனோடேறிக்கொண்டு இரவுக்கிரவே சவாரிசெய்து தப்பியோடயத்தினித்தாள். யத்தனித்தும் அது பலிக்காமல் வெகுதூரம் சென்றபின் இவர்களைத் தொடர்ந்து வந்த ஔரங்கசீபின் வேவுகாரர்களால் பிடித்து மீட்டு அவள் தந்தையிடங் கொண்டுபோகப்பட்டாள். சிவாஜிமட்டும் தப்பியோடிவிட்டான். தந்தையைக்கண்டபோது அவன் இவளைச்சிரசாக்கினைசெய்ய நினைத்தும் இவள் அது தனக்கு உத்தமமான தண்டனையாமென்றுசொல்லி தன் கருத்தைச்சிறிதும் மாற்றாது உறுதியாய் நின்றதினால், வன்னெஞ்சனாகிய ஔரங்கசீபும் அசையா நிலையிலிருந்த இவள் சித்தவுறுதியைக்கண்டு கலங்கி சீற்றமாறி ஏதும் செய்யத்தோற்றாது இவளை மன்னித்து பந்தோபஸ்திலிருத்திப் பார்த்துவந்தான். இப்படி செத்துப்பிழைத்ததற்கொப்பான சம்பவத்துக்காளாகியும் அம்மாதுசிரோமணி தன் மனதை மாற்றாமல், தன் காதலனை மறவாமல், அவனைப்போய்ச் சேரும்கருத்தொன்றே தன் சிந்தையைக்கவர, அதைநிறைவேற்ற வழிதேடிக்கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய சகோதரன் தக்ஷணத்துக்கு அனுப்பப்பட்டதை முன்னிட்டு அவனுக்குப் பெருந்திரவியம் கொடுத்து அவனுதவியால் தன் தந்தையறியாது தான் தக்ஷணம்சென்று சிவாஜியைத் தேடியடைந்தாள். உண்மையான அன்பின்வலி எப்படிப்பட்டதுபாருங்கள். உள்ளன்பின் சிரேஷ்டம் இக்கதையினால் வெகு நன்றாகவிளங்குகிறது:—இதன் விலை அணா - 10.

4: **எட்வாட் சக்ரவர்த்தி :**—இச்சரித்திரம் கோயமுத்தூர் வி. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களால் சுலபமான செந்தமிழ்நடையில் சிறப்பாகத தமிழில் எழுதப்பட்டு கிருஷ்ண டிஸ்திரிக்ட் ஜட்ஜியும் ஸிவில் ஸெர்வீஸைச்சேர்ந்த வருமான மிஸ்டர் வெ. வேணுகோபாலசெட்டி அவர்களால் இங்கிலீஷில் எழுதப்பட்ட முகவுரையுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நமது சக்ரவர்த்தியின் திவ்விய சரித்திரம், 17-பிரிவுகளில் வெகுநன்றாகச் சொல்லப்பட்டுள்ளது. இது கோயமுத்தூர் கலெக்டர் மிஸ்டர் ஸீ. எச். மௌள்ஸிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

5. **விதானமாலை:**—இது வடமொழி தென்மொழிச் சோதிடநூல்களில் மகாவல்லவரான கடிகைகாவலன் நாராயண சுவாமிகள் இயற்றியது. இதன் மூலமும் உரையும் யாழ்ப்பாணம் காரை இயற்றமிழாசிரியர் பிரம்மஸ்ரீ மு. கார்த்தாகேய ஐயரவர்களால் முன் பதித்த பிரதியைக்கொண்டு பரிசோதித்து, அவருடைய புத்திரருளொருவராகிய சிவசிதம்பர ஐயரால், மதிராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில் இரண்டாம் பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை ரூ - 1. இப்புத்தகம் சோதிட ஆராய்ச்சிசெய்வோருக்கு மிக உபயோகமாயிருக்கும். இது இந்தியாவுக்கு வெளியிலிருந்து நமக்கு வந்தது. அனுப்பினவர் விலாசம்தெரியவில்லை.

6. **ஸ்ரீமாமி கொலுவிருக்கை:—**

இது பண்டித நடேசசாஸ்திரியாரவர்கள் பிரசுரித்துவரும் பிரபலமான தமிழ்க்கதைகளில் ஒன்று. "தலையணை மந்திரோபதேசம்" என்னும் தலைப்பின்கீழ் வல்லாளகண்டியாமோர் மனைவி தன் புருஷனைப் படுத்திவைத்த பாடுகளையெல்லாம் வேடிக்கைக்கதையாகச் சொன்னதுபோல், நம் நாட்டில் மாமியார்பதவி பெறும்பாக்கியம்பெற்ற கொடும்புலிகளின் சுபாவத்தைவிளக்க வேண்டி அதை யற்புதாச்சரியமான கதைகளாகச்சொல்லக்கருதி "ஸ்ரீமாமிகொலுவிருக்கை" யென்று பெயரிட்டு, ஒவ்வொரு அத்தியாயத்தின் அடக்கமும் ஒரு கொலுவாகவைத்து வெகு

சமத்காரமாகச் சொல்லியிருக்கிருர். நமது சாஸ்திரியார் பால்யவயதுமுதற்கொண்டு கதாப்பிரியர். பாலயத்தில் கதைகேட்பதில் எவ்வளவு ஆசையுண்டோ, அவ்வளவு சக்தி கதை சொல்வதில் இப்பொழுது அவருக்குண்டாயிருக்கிறது. இவர் ஓர் பெரிய கதாப்பிரசங்கி. இங்கிலீஷ்படித்து பி. ஏ. பட்டம்பெற்று சர்க்கார் சேவகத்தில் நுழைந்து, சமுசாரம்பலத்து அதைவிட்டு நீங்கமாட்டாமல் மாட்டிக்கொண்டுவிட்டார். இல்லாவிட்டால் இவர் நம் நாட்டில் வெகுகீர்த்திபெற்ற ஒரு பாகவதராக விளங்கியிருப்பார். இருந்தாலுமென்ன! இப்பொழுது அவருடைய சுபாவசக்தியொன்றும் ஜனங்களுக்குபயோகப்படாது வீண்போகவில்லை. சிறகொடிந்த மாடப்புருபோல் இவர் சக்தி கவர்ன்மெண்டாபீஸிலிருந்து வெளிக்காட்டமுடியாமல் புழுங்கிய காலமுண்டு. இப்பொழுது அக்காலம் மாறிவிட்டது. சர்க்கார் சேவகத்தில் நுழைந்துவிட்டால் கவர்ன்மெண்டு யந்திரத்தில் ஒரு பாகமாயமர்ந்து அதிலுழைப்பதும் குடும்பத்தைத் தாங்குவதும் தவிர வேறு பொதுப்பிரயோசனமானகாரியத்துக் குபயோகமில்லையென்கிற பழி சர்க்கார்தலையில் விழாது நீங்கும்படி, அவர் சர்க்கார்சேவகத்திலிருந்தும் அச்சேவகத்துக்கு யாதொரு பங்கமுமின்றி தனக்குச் சுபாவமாயுள்ள சக்தி பொதுஜனப்பிரயோசனமாகத் தாராளமா யுபயோகிக்கக் கூடியவண்ணம் செய்த மகான் யாரோ அவர் ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் ஏககாலத்தில் ஒரு பெரு நன்மைசெய்தவராகிருர். அவர் பெருந்தன்மை நீடூழிவாழ்கவென்று பிரார்த்திக்கிறேம். இது நிற்க.

நமது சாஸ்திரியார் இப்புத்தகத்துக்கு எழுதியிருக்கும் முகவுரையில், இது "வெகு அபூர்வகிரந்தம்" என்றும், இதியற்றப்பட்டகாலம் நவாப் ஸாதத் அல்லாகான் காலம் என்றும், அது சுமார் 150-வருஷங்களுக்கு முன் னென்றும் சொல்லி, இந்த அபூர்வ கிரந்தம் 8,000 கொலு வடங்கினதாயிருந்து வெள்ளத்திற் காணுமற்போய், அப்புறமகப்பட்டு, 500 கொலுமட்டும் தேறி, அப்புறமும் காணுமற்போய் 100 மட்டும் தேறி, அதுவும் அபூர்வமாய் 12 கொலு மட்டும் அவருக்கு அருமையாக அகப்பட்டதாகவும்; அதை அவர் பழைய கிரந்தங்களைக் காக்கவேண்டுமென்கிற ஆசையினுல் வெகு சிரமப்பட்டு ஆராய்ந்து திருத்தி அச்சிட்டு வெளிப்படுத்தினதாகவும், காணுமற்போன ஏடுகளில் ஏதாவது பாலாற்றங்கரையில் மண்ணில், மணலில் புதைபட்டுக்கிடந்து மக்கி மடிந்து போகாமலகப்பட்டால் அதை அவருக்கு அனுப்புவோருக்கு தாராளமாகப் பொருளுதவி கொடுக்கச் சித்தமாயிருப்பதாகவும் எழுதியிருக்கிருர். இவர் கதைசொன்ன சிறப்பிலும் இம்முகவுரை யெழுதின இவர் சாமர்த்தியத்தைக்கண்டு நாம் நினைத்து நினைத்து வியப்புற்றேம். நாம் உண்மையை நமக்குத் தோன்றுகிறபடி வெளியிடுமுன், இவர் கொடுக்கச் சித்தமாயிருக்கும் பெரும் பரிசைப்பெற ஆசையுள்ளவர்கள் பாலாற்றங்கரையிலாகட்டும் வேறெந்த ஆற்றங்கரையிலாகட்டும் இருக்கட்டும், அவர்கள் உடனே மேல்வாசிப்பதையும் நிறுத்தி இப்புஸ்தகத்தை வாங்கி வாசிக்கவேண்டும். இப்புத்தகத்தை யனுப்ப உத்தரவு செய்தபின் நாம் இனிச்சொல்வதை வாசித்தால் பாதகமில்லை. ஏனெனில் உண்மையை உள்ளபடி ஆராய்ந்தால்தான் தெரியும்.

"பொய் சொன்னுலும் பொருந்தச்சொல்" என்பது "ஸ்ரீமாமி" கொலுவிருக்க ஆரம்பித்ததற்கு வெகுகாலம்முன்தொட்டுள்ள மூதுரை. இவ்வருமையான பழமொழியை சரஸ்வதிதானே யுண்டுபண்ணி "ஸீதாள ஏட்டில்" வரைந்துவைத்தால் அருமையான பூர்வகிரந்தங்களுக் கேற்படுங்கதி இதற்கு மேற்பட்டு மறைந்துபோமென்று ஸ்ரீ புருஷர்கள் நாக்கையே பனையேடாகக்கொண்டு அவள் திருக்கரத்தாலே யெழுதிவைத்தாள். ஆகையால் தான் இப்பழமொழியும் இதுபோன்ற இன்னுமனேக பழமொழிகளும் எந்த ஆற்றில் எவ்வளவு வெள்ளம்வந்தபோதிலும் அழிவுநேரிடாமல் இன்னும் சர்வசாதாரணமாக எங்கும் வழங்கிவருகின்றன. இது சரஸ்வதியுபாசகராகிய நமக்கு நமது அன்னையும் இஷ்டதேவதையுமாகிய அவள்தானே நேரில் பிரசன்னமாகிச்சொல்லிய அற்புதமான விஷயம். இந்த அற்புதத்தை மறைத்துவைத்தால் தோஷமென்று அம்பாள் அனுக்கிரகத்தால் இதை வெளியிட்டோம். இப்பொழுது நமக்கு இம்முகவுரையில் சொன்னவிஷயங்கள் சம்பந்தமாக ஒரு சமுசயமுதிக்கிறது. அது என்னவெனில், இந்த ஸ்ரீமாமிகொலுவிருக்கையின் விருத்தாந்தங்களும் நாம் வாசித்தமட்டில் அதியற்புதமாகவும், சில இடங்களில் மேல்வாசிக்கமுடியாதபடி மனதைக் கவர்ந்து விருப்புவெறுப்பாதி விகாரங்களால் பிரமிக்கச்செய்கிறபடியால் இதன் மகிமை அந்தணர்கள் அரும்பாடுபட்டு எழுதமுடியாமல் எழுதினதாகவின்றி, தெய்வீகமானதாகவேயிருந்து தேவதைகளால் எழுதப்பட்டதாக விருக்கலாமோவென்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது. அந்தணர்களானுலும் மானிடர்களே: தேவதைகள் சூக்ஷ்மதேகிகளும், சூக்ஷ்மசக்திவாய்ந்தவர்களுமாகையால் அவர்கள் இந்த சம்பவங்களை சித்தசாகரத்தில் அழியாமொழி ...ல், ஓயாதெழுதும் ஒழியா இறகுகொண்டு எழுதாமழுதிவைத்திருந்ததை நமது சாஸ்திரியார் உபாஸனையிருந்து தேவதாகடாக்ஷத்தால் அவ்வபூர்வமானதும் சாதாரணமனிதர்கள் கண்ணுக்குத் தோன்ருததுமான கிரந்தத்தை வாசிக்கும் வரன் பெற்று, நாம் வாசிக்கும் மொழியில் வரைந்து அச்சிட்டுள்ளாரென்று எண்ணுகிறேம், இதற்கு ஆதாரம் தமிழ்ப்பாஷையின் மூலத்தையாராயும் வன்மைவாய்ந்த மூதறிவாளர்க்குச்சொல்லவிளங்குமேயன்றி சாதாரண ஜனங்களுக்கு விளங்காது. ஆகையால் அதைவிடுத்து நமது சந்தேகத்தைமட்டும் வெளியிட்டோம். நமது சந்தேகம் உண்மையென்று ஏற்படும்பக்ஷத்தில் நமது சாஸ்திரியார் அவர் முகவுரையில் எழுதியவையெல்லாம் பொய்யென்றும் அவருடைய அபாரமான கதாப்பிரசங்க வன்மையாலும், "பொய்சொன்னுலும் பொருந்தச் சொல்" என்னும் மூதுரையை அனுசரித்து முன் பின் முரணுதபடி பொருத்தமாயெல்லாவற்றையும் வரைந்தமையாலும் அது அரிய தமிழ்க்கிரந்தங்களையாராய்ந்து வெளிப்படுத்தும்வன்மை வாய்ந்தோர்க்கும் சங்கப்புலவர்களுக்குங்கூட மெய்யாய்த்தோன்றும் சக்திவாய்ந்ததாயிற்று என்று தடையின்றியேற்படும். பூர்வகிரந்த ஆராய்ச்சியில் சிரத்தையுள்ளோர் இந்த முக்கியமான விஷயத்தை யாராய்ந்து உண்மையைக்கண்டுபிடித்து லோகோபகாரமாய் வெளிப்படுத்தவேண்டுமென்றே நாம் இவ்வளவு தூரம் வரைந்தது. பூர்வகிரந்த ஆராய்ச்சியில் சிரத்தையில்லாதாரும், தேவதா உபாசனைகளில் நம்பிக்கையில்லாதாரும் மனிதன் மூளைக்குமிஞ்சி அறிவாவது அறியும் சக்தியாவது இல்லையென்பாரும் இது சாஸ்திரியாரின் புத்திவன்மையாலும் உலகானுபவவிசேஷத்தாலும் அவர் மூளையிலிருந்து உண்டாயிற்றென்றும், உலகிலுள்ள மாமிகளிடத்திலுள்ள குணம், கொடுமை, குரூரம் எல்லாவற்றையும் ஒன்றுகத்திரட்டி ஒருத்திதலையில் வைத்துக்கட்டினுல் அது சிருஷ்டியில் வழக்கமாகக் காணக்கூடாத அருமைபற்றி "அற்புத" மெனச் சொல்பவரென்பதையுணர்ந்து, அவ்வற்புதமாமியின்கொலுவைப் படித்தவர்கள் அவளைக் காணவிரும்புவார்களாதலால், அவளை இக்காலத்தில் ...வத்தாலும் சிலதீரர்கள் கூடிக்கொண்டு அவளைத் தேடப்புறப்பட்டுவிடுவார்களென்றும், இப்பொழுது ஜீவித்திருக்கிறவர்கள் காலத்தில் அவளிருந்ததாகவைத்தாலும் இதனுண்மையை விசாரிக்கப் பூர்வீக ஆராய்ச்சிச்சங்கமொன்று பிரத்தியேகமாக ஏற்பட்டுவிடுமென்று முணர்ந்து, தான் போட்டமுடிச்சு அவிழ்க்கக்கூடாமலிருக்க 150 - வருஷங்களுக்குமுன் அவளிருந்ததாகச்சொல்லி, தூரத்துப்பார்வையில் எல்லாம் சரியாகத்தோன்றிவிடுமென்று வெகு திட்பநுட்பமாக யோசனை செய்து சாஸ்திரியார் இம்முகவுரை யெழுதினுரென்றும் சொல்லி அபிப்பிராயப்படுவார்கள். எது எப்படியோ உண்மையை அவரவர்களிஷ்டம்போல் புத்தகத்தைப்பார்த்தபின் ஆராய்ந்து அறிந்து கொள்பவர் புத்திமான்களாம். நமது பத்திரிகை மாதாந்த சஞ்சிகையாகவின்றி தினப்படிபிரசுரமாகும் பத்திரிகையாக விருக்கும்பக்ஷத்தில் இதனுண்மையைக்கண்டுபிடிக்கப் பிரயத்தனப்படுபவர்களுக்கெல்லாம் இப்பத்திரிகையிலிடங்கொடுக்கச் சித்தமாயிருப்போம். அப்படிக்கில்லாதபடியாலும், பூர்வீக ஆராய்ச்சிசெய்தல் நம் பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்றுக இல்லாமையாலும் அதிரசமான இந்த அபூர்வ ஆராய்ச்சி வேலையை அத்தொழிலிற் பழகிய விற்பன்னர்களுக்கும் பூர்வகிரந்த ஆராய்ச்சியில் சிரத்தையெடுத்துக்கொள்ளும் இதர பத்திரிகைகள் பத்திரிகாசிரியர்களுக்கும் விட்டுக்கொடுக்கக்கடமைப்பட்டவர்களாக விருக்கிறேம். ஒருக்கால் செந்தமிழ்ப் பத்திராசிரியர் உதவியால் அச்சங்கப்புலவர்கள் யாரேனும் இச்சந்தேகந்தீர அப்பத்திரிகையில் எழுதுவரேல் அதை வாசித்து சந்தேகந்தீர்த்துக்கொள்ள ஆவலாயிருப்போம்.

## TOBACCO AND POTATO PLANTS.

## புகையிலை, உருளைக்கிழங்கு செடிகள்.

எலிஸபத் மஹாராணியார் அரசாண்ட காலத்தில் முதல்தடவை ஸர்வால்ட்டர் ராலி என்பவரால் இங்கிலாந்துக்கு இரண்டு செடிகள் கொண்டுவரப்பட்டன. புகையிலைச்செடி, உருளைக்கிழங்கு என்ற இவை இரண்டும் இப்பொழுது மிகவும் உபயோகப்படுகிறது. ஸர்வால்ட்டர் புதிதான இடங்களைக் கண்டு

பிடிக்க அமெரிக்காவின் கடல்வழியாய் புறப்பட்டார். அவர் இந்த இரண்டுசெடிகளையும் திரும்பக்கொண்டுவந்தார். அவர் அமெரிக்காவில் இருந்தபொழுது இந்தியர்கள் (Indians) புகைகுடிப்பதைப் பார்த்திருந்தார். கொஞ்சகாலத்திற்குமுன் அந்தவழக்கத்தை அனுசரித்துக்கொண்டார். அவர் புகைகுடிப்பதில் பிரீதி உடையவராய்விட்டார். அடிக்கடி அந்தவழக்கத்தில் மூழ்கி இருந்தார். அவர் இங்கிலாந்துக்கு திரும்பிவந்தபொழுது ஒருநாள்நெருப்பு அண்டை உட்கார்ந்துகொண்டிருந்தார். புகைகுடிக்கும்பொழுது கதவுதிறந்துகிடந்தது. அவருடைய வேலைக்காரன் உள்ளேவந்தான். இப்பொழுது இந்தமனிதன் யாராவது புகைகுடிப்பதை இதற்குமுன் ஒருபொழுதும் பார்த்ததேயில்லை. புகையிலையைப்போல் அப்படிப்பட்டசெடி இருக்கிறதென்றும் தெரியாது. ஆகையினாலே அவன் தன் எஜமானனுடைய வாயிலில் இருந்து புகைவருகிறதைக் கண்டபொழுது அவர்எரிந்து விட்டாரென்று நினைத்தான். அவன் பயத்தினால் கூப்பாடுபோட்டு அந்த நெருப்பை அணைக்கிறதற்கு ஒருதொட்டிதண்ணீர் கொண்டுவர ஓடிப்போனான். ஸர்வால்ட்டர் என்பவர் உண்மையாகவே அவர் செய்தது என்னவென்று விவரித்துச் சொல்லுகிறதற்குமுன்னமேஜலத்தால்மூழ்கப்பெற்றார்.

ஆனால் அந்தப்பழைய வேலைக்காரன் வெகு சீக்கிரத்தில் ஜனங்களுடைய வாயிலில்இருந்து புகைவந்துகொண்டிருப்பதைப்பார்ப்பதுவழக்கமாய்விட்டது. அந்த நியாயஸ்தலத்திலுள்ள பிரபுக்கள் எல்லாரும் புகைகுடிக்க ஆரம்பித்தார்கள். ஏனென்றால் ஸர்வால்ட்டர் என்பவர் அப்படி செய்தார் என்று சொன்னார்கள்.

* * *

முதலில் ஜனங்கள் உருளைக்கிழங்கை முற்றிலும் விரும்பவில்லை. அதை ஒருவரும்உண்கவும் இல்லை. என்றாலும் ஸர்வால்ட்டர் என்பவர் அது எவ்வளவு உபயோகமுள்ளது என்பதை அவர்களிடத்தில் சொன்னார். அவர் சொன்னதாவது: 'உருளைக்கிழங்கை இங்கிலாந்தில் வளரச்செய்யக்கூடும். அடிக்கடி வழக்கமாய் உண்டாகிறதுபோலவே தானிய அறுவடை தவறிப்போனபொழுது ஜனங்களிடத்தில்ஏராளமான உருளைக்கிழங்கு இருந்தால் அவர்கள் பட்டினியாய் இருக்கவேண்டியது அவசியமில்லையென்று சொன்னார்.

மிகவும் கெட்டிக்காரத்தனமுள்ள எலிஸபத்மஹாராணி ஆனவள் ஸர்வால்ட்டர் என்பவர் சொல்வதைக்கேட்டு அவளுடைய சொந்த மேசையின்மேல் உருளைக்கிழங்கை பரிமாரச்செய்தாள். அவளோடுசாப்பிடவந்த ராஜாக்கள் உருளைக்கிழங்கைச் சாப்பிட உபசரிக்கப்பட்டார்கள். உருளைக்கிழங்கு விஷமென்றார்கள். ஏனென்றால் உயிரைக்கொல்கிற மற்ற அனேக செடிகள் எந்த இனத்தில் சேர்ந்ததோ அதே இனத்தில் சேர்ந்ததுஎன்று ஒரு வதந்தி உண்டாயிற்று. ஆகையால் மஹாராணியவர்கள் எவ்வளவுசொல்லியும் உருளைக்கிழங்கை ஒருவரும் சாப்பிடவில்லை. ஆகையால் அவைகளைப் பன்றிகளுக்கு ஆகாரமாகப் போட்டார்கள்.

வெகுகாலம் வரையில் ஜனங்கள் அவர்களுடைய தப்பிதத்தைக்கண்டுபிடிக்கவில்லை. அக்காலத்தில் பதினாறுவது லூயி (Lewis XVI) என்பவன் பிரான்சுதேசத்து அரசனாக இருந்தான். அப்பொழுது ஆகாரத்திற்காக வளர்கிற செடிகளைப்பற்றி வாசித்திருந்த ஒரு பிரான்சு மனிதன் (French man) அங்கே வசித்திருந்தான். உருளைக்கிழங்கை ஜனங்களுக்கு அதிகஉபயோகம் செய்யக்கூடுமென்று அவன் நிச்சயமாயிருந்தான். அவன் உடனே பரிசோதிக்கதொடங்கினான்.

மிகுந்த வருத்தத்தின்பேரில் அவன் ஜெயம் கொண்டான். ஜனங்கள் முதலில் அவனைப் பார்த்து சிரித்தார்கள் அவன் சொன்னதைப் பற்றி கேட்கிறதுகிடையாது. ஆனால் அதை பூராப்பயிர் செய்கிறவரைக்கும் அவன் உருளைக்கிழங்கை வளர்த்துக்கொண்டே வந்தான்.



அப்பொழுதுகூட ராஜா அதில் கொஞ்சம் எடுக்காத விஷயத்தில் ஒருவரும் தின்றிருக்க மாட்டார்கள். உருளைக்கிழங்கு பயிர்செய்ய ஒரு பெருந்தோட்டம் போட்டிருந்தான். அவனுடைய பொத்தான் (Button) துவாரத்தில் உருளைக்கிழங்குப்பூவை வைத்துக்கொண்டு அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தான்.

ராஜாவைப்பார்த்து சிரிக்க ஒருவரும் துணியவில்லை. உருளைக்கிழங்கை உண்கவேணுமென்று சொன்னபொழுது அது எவ்வளவு நல்லதாயும் சுகமாயுமிருக்கிறதென்று அறிய ஆரம்பித்தார்கள். வரவர உருளைக்கிழங்கானது அதிகமாக உபயோகமாயிற்று. இப்பொழுது உருளைக்கிழங்கைப் பார்க்கிலும் அதிகமாய் விலைமதிக்கப்பட்டபொருள் ஒன்றுமில்லை.

எம். பி. எம். இராமலிங்கம்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## Don't be too Sure.

## அவ்வளவு நிச்சயமாயிராதே.

வில்லி என்பவன் ஒரு நாள் தன் தகப்பனாரிடத்தில் சொன்னதாவது "ஐயா நீர் என்னைக் கெட்டிக்காரனாகவும் சிறந்தவனாகவும் இருக்க விரும்பவில்லையா?" என, அவர் "என் பையனே உன்னைக் கடவுள் எதில் இருக்க சந்தோஷப்படுகிறாரோ அது எப்பேர்ப்பட்டதானாலும் உன்னுடைய கடமைகளைச் செய்யவும் கேவலம் லோகவிஷயமான ஏதாவது ஒரு ஜெயத்தின்பேரில் உன்னுடைய மனசை செலுத்தாமல் இருக்கவும் அல்லது ஒன்றிலும் அவ்வளவு நிச்சயமில்லாமல் இருக்கவும் நான் உன்னை விரும்புகிறேன். ஜனங்கள் "முட்டைகள் பொறிக்கும் முன்னமே கோழிக்குஞ்சுகளை எண்ணுகிறதை" நாம் பார்க்கும்போது மஹாகீர்த்தி பெற்ற நெப்போலியன் போனபார்ட்டைப்பற்றி நான் கொஞ்ச காலத்திற்குமுன் வாசித்ததானது எனக்கு ஞாபகத்திற்குவருகிறது." என்றார். "ஐயா நான் அவனைப்பற்றி கேட்க விரும்புகிறேன்." போனபார்ட் என்பவன் பிரான்சு (France) தேசத்தை ஆண்டுகொண்டிருக்கையில் பழைய இங்கிலாந்தையும்கூட ஆளவேண்டுமென்று விரும்பங்கொண்டான். ஆகையினாலே ஜெயமடைவது நிச்சயமாகையால் அவன் இங்கேவந்து படை எடுக்கவேண்டியதற்கு அதே நேரத்தில் புறப்பட்டான். அவனுடைய போர்ச்சேவர்களை ஒன்றாய்ச்சேர்த்து அவர்களைக் கொண்டுபோவதற்கு கப்பலையும் தயார் பண்ணினான். இங்கிலீஷ் கால்வாயிலுள்ள நீலவர்ணமான அலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவன் நினைத்ததாவது, நான் சீக்கிரம் இங்கிலாந்து (England) போய்ச்சேர்ந்து அங்கிருந்து லண்டனுக்கு (London) நடந்துபோய் அதைத் தாக்குவேன்" என்பதே.

அவன் அளவுக்குமிஞ்சி நிச்சயமாயிருந்தான் என்பதைப்பற்றி வில்லி என்பவன் சிரித்தான். அவன் அவ்வளவு நிச்சயமாயிருந்தான் என்று தகப்பன் சொல்லிபின்னும் அவன் இங்கிலாந்தை படை எடுத்ததை பிரசித்தப்படுத்தும்படி அவன் ஒரு கீர்த்தி முத்திரைசெய்தான் என்றும் சொன்னார்.

ஆனால் அதை ஒருபொழுதும் படை எடுக்கவில்லை என்று வில்லி என்பவன் தடுத்துச்சொன்னான். அந்த கீர்த்தி முத்திரையில் "லண்டனில் பதிப்பிக்கப்பட்டது" என்று பிரஞ்சு (French) பாஷையில் முத்திரை அடித்திருக்கிறது என்று தகப்பன் சொன்னான்.

ஆனால் அவன் ஒருபொழுதும் லண்டனிற்குள் பிரவேசிக்கவேயில்லை என்று வில்லி என்பவ[illegible] உரக்கச்சொன்னான். தாம் ஒருபொழுதும் கா[illegible] அதிகமாக எடுத்துவைத்திராத ஒரு நகரத்[illegible] ஜெயித்ததற்கு அடையாளமாக ஒரு கீர்த்தி

திரை தயார்செய்யும்படியாக ஜெயத்தைப்பற்றி அவ்வளவு நிச்சயமாயிருந்தான் என்று தகப்பனார் சொன்னான்.

நல்லது "குஞ்சுபொரிப்பதற்கு முன்னமே தன் கோழிக்குஞ்சுகளை எண்ணுதல்" அதுதான் என்று அந்தபையன் உரக்கச்சொன்னான். அதுதான் அளவுக்குமிஞ்சி நிச்சயமாயிருத்தல். நெப்போலியன் போனபார்ட் என்பவன் அந்த கீர்த்தி முத்திரையைப்பற்றி அவன் நினைத்தபோதெல்லாம் நிரம்பவும் வெட்கம் அடைந்திருக்கவேண்டும். ஐயா எனக்கு சொல்லுகிறதற்கு ஏதாவது அதிக கதைகள் இருக்கிறதா என்றான்.

நான் கொஞ்சகாலத்திற்குமுன் நான் வாசித்த மற்றொரு கதை எனக்கு ஞாபகத்துக்கு வருகிறதென்று தகப்பனார் சொன்னார். அது கீர்த்தி முத்திரை அடித்த மனுஷனுடைய கதை அல்லாமல் மிகவும் வித்தியாசமான ஒரு மனிதனைப்பற்றியது. அதாவது வெல்லிங்டன் (Wellington) பிரபுவைப் பற்றியது. வாட்டர்லோ யுத்தத்தில் (Battle of Waterloo) நெப்போலியன் போனபார்ட்டை தோற்கடித்தவர்களாய் அவர் முன்னமே கீர்த்தி முத்திரையை தயார் செய்துகொள்ளவில்லையென்று நான் நம்புகிறேன் என்று வில்லி என்பவன் சொன்னான்.

"பையா! பிரஞ்சுக்காரருக்கு விரோதமாய் சண்டைசெய்துகொண்டிருந்த ஏழை ஜனங்களுக்கு உதவிசெய்கிறதற்காக வெல்லிங்டன் என்பவர் போர்ச்சுகல் (Portugal) தேசத்திற்கு அனுப்பப்படுவார் என்று உனக்குத்தெரியும் அல்லது ஒருவேளை தெரிந்திருக்கமாட்டாது. நம் தேசத்து மஹா வீரனுக்கு கடவுள் ஞானத்தைக் கொடுத்தார். நல்ல காரணத்திற்காக ஜெயத்தையும் கொடுத்தார். ஆகையால் எதிரியினுடைய சேவகர்கள் முடுக்கப்பட்டார்கள். போர்ச்சுகல் தேசம் சுயாதீனமாய் விட்டது.

போர்ச்சுகேசியர்கள் (Portuguese) எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கவேண்டும். அவர்கள் நம்முடைய பிரபுவை எவ்வளவு மேன்மைப்படுத்தியிருக்கவேண்டும். சண்டைநடந்து ஜெயித்தபொழுது தான் கீர்த்தி முத்திரை அடிக்கிறதற்கு காலம் என்று வில்லி சொன்னான்.

கீர்த்தி முத்திரை அடிக்கப்பட்டது என்பது உனக்குத் தெரியாது. ஆனால் போர்ச்சுக்கேசியர் என்ன செய்தார் என்பதை நான் உனக்குச்சொல்வேன் என்று தகப்பன் சொன்னான். அவர்கள் அந்த ஜெனராலுடைய படம்செய்து அதன் கீழ் லாட்டின் பாஷையில் "இன்வின்ஸி வெல்லிங்டன் ப்ரம்கிரேட்டில் போர்ட்டுக்கல்" என்று இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் எழுதி இருந்தன. நன்றி அறிதலுள்ள போர்ச்சுகல் தேசத்திலிருந்துவந்த ஜெயிக்கமுடியாத "வெல்லிங்டன்."

"ஆ அது அளவுக்குமிஞ்சி அதிக நிச்சயமாயிருத்தல். அப்பிரபு நூறு யுத்தங்களில் ஜெயித்திருக்கலாம். ஆனால் அவர் ஜீவனோடு இருந்தகாலத்தில் அவர் கடைசியாக தோற்கடிக்கபட்டிராரென்று ஒருவரும் சொல்லமாட்டார்."

என்பையனே என் கதையின் முடிவைமாத்திரம் கேள். அப்பிரபு அந்த விஷயத்தில் உன்னுடைய மனசை முற்றிலும் ஒத்திருந்தாரென்று நீ அறிவாய். ஒரு சிநேகிதன் ஒருவன் தனக்கு அந்த படத்தை அனுப்பும்படி வெல்லிங்டன் இடத்தில் கேட்டான். அப்படியே வெல்லிங்டன் ஒருநகல் எடுத்து அதை அனுப்பினார். ஆனால் அவர் நிச்சயமாய் ஜெயம் கிடைக்குமென்று எண்ணினாற்போல் தன்னுடைய படத்தின் அடியில் அப்பெருமையான வார்த்தை இருக்கிறதற்கு சம்மதிக்கவில்லை. தன்னுடைய பேனாவினால் ஒரு சிகப்பு கோடு இழுத்து "இன்ஸ்வன்ஸிபில்" என்ற வார்த்தையை அடித்துவிட்டு அதன்கீழ் எழுதினதாவது "காட்டில் நின்று வெளியாகும்வரை சந்தோஷக் கூச்சல்போடாதே."

அதாவது அப்பிரபுவினுடைய நல்ல புத்தியை காண்பிவித்தது என்று வில்லி என்பவன் சந்தோஷத்துடன் சொன்னான். ஆ என்பையனே அது நல்ல எண்ணமும் கூடத்தான்; அவன் பெருமைக்குணம் உள்ளவன் அல்லனென்றும் "யானைக்கும் அடி சறுக்கும்" என்று அறிந்தார் என்றும் காண்பிவித்தது. வில்லியே நாளைக்காரியத்தைப் பற்றி அளவுக்குமிஞ்சி நிச்சயமாயிருக்கும்படி நீ தூண்டப்படும்போது போனபார்ட்டையும் அவனுடைய கீர்த்தி முத்திரையையும் வெல்லிங்டனையும் அவர் படத்தையும் மனதில் நினைத்துக்கொள்.

எம். பி. எஸ். ராமா

The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: Om.

ஸத்யமே ஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 12.] 1903ஆ மேமீ. [இலக்கம் 1.

161184

## The True Basis of Morals.

## "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை."

"கண்காணியில்லென் றுகள்ளம்பலசெய்வார்
கண்காணியில்லையிடமில்லைகாணுங்கால்
கண்காணியாகக்கலந்தெங்கு நின்றானைக்
கண்காணிகண்டார் களவொழிந்தாரே."—திருமந்திரம்.

"சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை." சத்தியம்—அழியாதது; எப்பொழுதும் உள்ளது: மாறாதது: எல்லையற்றது: இரண்டற்றது. இவை சத்தியத்தின் ஸ்வபாவங்களாம். இந்தப் பஞ்சலக்ஷணங்களு மமைந்துள்ளதெதுவோ அதுவே சத்தியமாம். இவ்வைந்தில் ஒன்று குறையினும் மற்றவை பொருந்தாதொழியும். அழியாத்தன்மையில்லாவிடத்து மற்றனாலும் பொருந்தியிருத்தல் கூடாமை. அழியும்வஸ்து எப்பொழுதும் உள்ளதாகாது; மாறாத் தன்மையதற்கில்லை; எல்லையற்றதென்று அதைச் சொல்லுவதற்கில்லை; இரண்டற்றதென்றும் சொல்லக்கூடாது: ஏனெனில் எப்பொழுது அழிவுண்டோ அப்பொழுதே அதற்கு உற்பத்தியுமுண்டு என்று ஏற்படுகிறது. இப்படியே நித்யத்துவமும் மற்றவையுமில்லையாம்; மற்றவையுமிப்படியே. சன்மார்க்கம்—அழியாதமார்க்கம்: நன்மார்க்கம்; நன்னடத்தை. உலகத்தார் நன்னடத்தை யவசியமென்று கொண்டாடுகிறார்கள். ஆனால் நன்னடத்தை போதிக்கும்வழியென்னவென்று விசாரிக்குமிடத்துத் தடுமாறித்தத்தளிக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு ஜனசமூகத்தாரும் அவரவர்கள் பொதுக்ஷேமத்துக் கேற்றதென்று அவர்க

ளில் மேலோர் மதிப்பதை ஓர் தர்மநூலாகக்கொண்டு வழிபடுகிறார்கள். ஹிந்துக்களுக்கு மனுதர்மசாஸ்திரம், பராசரஸ்மிருதி முதலிய நூல்கள் தர்மவிதியுரைக்கும் நூல்களாகின்றன. யூதர்களுக்கு **மோசே** யென்பவரும் மற்ற தீர்க்கதரிசிகளும் குறிப்பிட்டுவைத்தவிதிகள் நன்னடத்தைக்குரிய நல்வழிகாட்டும் தர்மசாஸ்திரங்களாகின்றன. தற்காலத்தில் புத்திவன்மையால் பிரகிருதி விதிகளாம் தத்துவங்கள் பலவற்றைக் கண்டுபிடித்த மேற்றிசை நாகரிகர்களான ஐரோப்பியர்கள் முதலானோர் சென்ற இருநூற்றாண்டுகளில் தலைப்பட்டு விளங்கிய தத்துவசாஸ்திரிகளியற்றிய சன்மார்க்கநூல்களைப் பூர்வீக தர்மசாஸ்திரங்களுக்குச் சமானமாக மதிப்பவர்களாக விருக்கிறார்கள். ஆதியில் மதக்குரவர்களாயிருந்து தர்மசாஸ்திரங்களேற்படுத்தினவர்கள் தீர்க்கதரிசிகளாக விளங்கினரென்பது பிரசித்தம். அப்படியே இக்காலத்து மேற்றிசைத் தத்துவசாஸ்திரிகள் தங்களுடையபுத்திவன்மையால் ஆராய்ந்து கண்டுகொண்ட அளவே உண்மையென்றும், மனிதன் தன் புத்திவன்மையால் பிரகிருதி தத்துவங்களை யறியக்கூடியது இவ்வளவேயென்றும் வரையறுத்து; இதற்குமேல் பூர்வத்தில் தீர்க்கதரிசிகள் கண்டதாகச்சொல்வதெல்லாம் ஜனங்களை மயக்கிக் கட்டுப்படுத்துவதற்காகச்செய்தசூழ்ச்சியேயன்றி அதில் உண்மை யெவ்வளவு மில்லையென்பது தங்கள் சித்தாந்தமாக ஸ்தாபித்து; அதைப் பரவச்செய்யுமாறு வேதங்களில் தீர்க்கதரிசிகளும், கிறிஸ்து, ஸ்ரீகிருஷ்ணன் முதலான தெய்வத்தன்மை வாய்ந்தவர்களும் சொல்லியவற்றில் அவர்கள் புத்திக்குச்சரியென்று பட்ட அளவுக்கு அங்கீகரித்து மற்றவற்றை நிராகரித்துத் தள்ளி; மதாசார அனுஷ்டானங்களாகப் பண்டைக்காலமுதலேற்பட்டு வழங்கிவந்தவைகளைக் கண்மூடித்தனமாயனுசரிப்பது மனுஷனுடைய புத்திக்கும் சத்திக்கும் குறைவுண்டு பண்ணுவதாயும் அவனுடைய பெருமையையும் சுதந்தரத்தையும் குறைப்பதாயும் சொல்லிப் பிரபல புத்தகங்கள் எழுதி அவர்களது புதுமையான எண்ணங்களைப் பரவச்செய்து வந்தார்கள். இவர்கள் முயற்சிபலிக்கவும், ஆதியில் தெய்வபக்தி யுண்மையில் இல்லாதவர்களுங் கூட அதைவெளிப்படுத்தினால் ஜனங்கள் தங்களை மதியார்களென்று தெய்வபக்தியுள்ளவர்களாக நடித்து வந்ததுபோல், இக்காலத்தில் பள்ளிப் பிள்ளைகளும் "தெய்வமுமில்லை ஒன்றுமில்லை; தெய்வமுண்டானால் அதைக்கண்டவர்யார்? முக்காலத்தில் தெய்வத்தை நேர் நேராகக்கண்டதாகச் சொல்லிய ஞானிகளெல்லாம் பகற்கனா கண்டு தலைதடுமாறிப் பிதற்றிய பேதைகள்: இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பூதபௌதிக சாஸ்திர உண்மைகள் அவர்களுக்குத்தெரியா."— என்று வாய்மதம்பேசி தெய்வத்தையிகழ்ந்து, உண்டுடுத்துறங்குவதும், இத்தேகமுள்ளமட்டும் புலன் பொறிவழிகளால் அனுபவிக்கத்தக்க சுக மனைத்தையு மனுபவித்து ஆசை தீர்ப்பதுமே கருமமொழிய வேறு தேடத்தக்கதொன்றில்லையென்று வம்புதும்புபேசி வாதாடிப் பெரியோரை மதிக்காமல் சத்தியத்துக்குக் கட்டுப்படாமல் "கண்டதேகாக்ஷி கொண்டதே கோலம்" என்று காலந்தள்ளி வரத்தலைப்பட்டார்கள். இவ்வகையார் கொட்டம் இந்தியாவில் இங்கிலீஷ்படிப்பு விர்த்தியாக ஆக அதிகரித்து தெய்வத்தை யிகழ்வதும் தான்தோன்றித்தனமாய்ப் பேசுவதும் ஏதோ புத்திவன்மையைக் காட்டும் குறிகளாக மதித்துப் புன்சொல் சொல்லிப் புத்திகெட்டலையத் தொடங்கினார்கள். இப்படி ஒரு தலைமுறை இரண்டு தலைமுறையாகவும் )தனால் பொதுவில் ஜனசமூகத்துக்கு விளையுங்கேடு எல்லாருக்கும் நன்றாகப் புலப்பட



லாயிற்று. கவர்னர்களும், கவர்னர்-ஜெனரல்களும், இங்கிலீஷ் படித்தவர்களிடத்தில் இக்குறைகளைக்கண்டு இதற்குக் காரணம் காணத்தேடினார்கள். ஆங்கிலேயஉத்யோகஸ்தர்களும் பத்திராசிரியர்களும் முதலில், ஹிந்துக்களுடைய சுபாவமே கெட்டது: அவர்களைப் படிப்பிப்பதினால் அவர்களுடைய கெட்ட சுபாவங்களே தலையெடுத்துவிளங்குகின்றன: இது ஜாதிசுபாவம், எளிதில் நீங்காத்தன்மையது: இவர்களுக்கு அதிகமாய்ப் படிப்புப் போதித்தல் கூடாதென்று முறையிட்டுக் கூறினார்கள். பிறகு இது வீண்அபவாதமென்று கண்டு போதனாமுறையில்குற்றமிருக்கலாமென்று நினைத்து அதைச்சீர்திருத்தவேண்டுமென்று முயற்சித்தார்கள். பள்ளிப்பிள்ளைகளுக்குச் சன்மார்க்க விர்த்தியுண்டாக நீதிசாஸ்திரங்களும், நன்னெறி போதிக்கும் கட்டுரைகள், மூதுரைகள், நீதிக்கதைகள் முதலியவும் போதிக்கவேண்டுமென்று இந்தியாகவர்ன்மெண்டார் தீர்மானம்செய்து அந்தப்படியேநடந்துவர உத்தரவும் பிறப்பித்தார்கள். சீக்கிரத்தில்தானே இது பிரயோசனப்படாதென்று கண்டு கொண்டார்கள்.

சென்ற சிலவருஷங்களாகப் பள்ளிப்பிள்ளைகளுக்குச் **சன்மார்க்கபோதம்** செய்ய வேண்டியதவசியமென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும், சன்மார்க்க போதமில்லாக் குறை பெருங்குறையென்று எல்லாரும் குறைகூறி முறையிட்டும், அக்குறையை நிவர்த்திக்க வழியறியாது திகைத்து வார்த்தைமட்டோடு விட்டுவருகிறார்கள். 1901-௵த்தில் இந்தியாமுழுமைக்கும் 'பிஷப்பாக' நியமிக்கப்பட்டுவந்த டாக்டர் **வெல்டன்** போதனாமுறையிலுள்ள குறையைக்கண்டு இதைநிவர்த்திக்க வழியில்லையென்று சும்மாவிடாமல், தனக்கு யுக்தமாய்த்தோன்றினதைத் தைரியமாய் வெளியிட்டுப் பேசினார். அதாவது மேற்றிசைக் கிரந்தங்களெல்லாவற்றிலும் பைபிலுக்கு மிஞ்சிய சன்மார்க்க நூல் வேறில்லையால் எல்லாப்பாடசாலைகளிலும் அதைக் கட்டாயமாய்ப் போதித்துவருவது நலமென்றார். உடனே யெல்லாரும் அவரைத்தூற்றி அவர் இந்தியர்களை யெல்லாம் கிறிஸ்தவராக்கவெண்ணி சர்க்காரைக்கொண்டு தன்காரியத்தை முடித்துக்கொள்ளப்பார்க்கிறாரென்று இந்தியாமுழுதும் ஒரே கூக்குரலாகக்கிளம்பிற்று. மற்ற பிஷப்புகளும் கவர்னர்களும் கவர்னர் ஜெனரலும்கூட சன்மார்க்க போதனையில்லாக் குறையைப் பெருங்குறையாக மதித்து அதை நிவர்த்திக்கவேண்டிய தவசியமென்று ஒப்புக்கொண்டும், மதவிஷயத்தில் பிரவேசிக்க வேண்டுமென்கிற எண்ணம் தங்களுக்கில்லையென்றுகாட்ட டாக்டர் **வெல்டன்** பேசியது பிசகென்றும், சர்க்காருக்கு அவ்வித எண்ணமொன்றுமில்லை யென்றும் பிரசித்தப்படுத்தி அக்கூக்குரலை யடக்கினார்கள். இதைப்பற்றி சென்னையில் வித்யாபிவிர்த்தியிலாகாத் தலைவராயிருந்த டாக்டர் **டங்கன்** லண்டனில் ஒரு பிரபந்தமெழுதி வாசித்ததில், சன்மார்க்க போதனையவசியமானாலும் இந்தியாவிலுள்ள மதபேதங்களின் காரணத்தால் சர்க்கார் பாடசாலைகளில் இப்பொழுதைப்போல உலகஞான மட்டுமே கற்பித்து வருவது சரியென்றும், சன்மார்க்க விர்த்திக்கு தெய்வசிந்தனையே வேண்டியதில்லையென்றும் வாதித்தார். அப்பொழுது இதுவிஷயமாய்நாம் எழுதிய ஒரு பிரபந்தத்தில்* சன்மார்க்கத்துக்கு ஆதாரமாயுள்ளது தெய்வஞானமென்றும், ஆகையால்அந்த ஞானத்துக்கு ஏதுவான மதபோதனை எல்லாமதத்துக்கும் பொதுவாகவுள்ள

* *Vide* the paper on '*Religion and Ethics*' in the Madras Review for February, 1902.

வுண்மைகளைக்கொண்டு எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் பால்யவயது முதல் போதிக்கப்பட்டுவரவேண்டுமென் றும் வற்புறுத்திக்கூறினார். அதை வாசித்துப் பார்த்தபின் அவர் சன்மார்க்கத்திற்கும் கடவுளுக்கும் சம்பந்தமேயில்லையென்பது தமது சித்தாந்த மென நமக்கெழுதி நமதுகருத்தைமுற்றும் விளங்கவைக்கப் பின்னும் விஸ்தாரமாயெழுதும்படி கேட்டுக்கொண்டார். "தெய்வம் ஒன்றே: உண்மை ஒன்றே" என்பது எல்லாமதத்திலும் பொதிந்துகிடக்கும் உண்மையென்பதைநாமுணர்ந்துள்ளபோதும் அதை சித்தாந்தப்படுத்திக்காட்டவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகையால் மேற்றிசையார் எல்லோரும் அநுஷ்டிக்கும் கிறிஸ்துமதத்தின் உண்மையையும், வேதாந்த சித்தாந்த உண்மையையும், தனித்தனியாராய்ந்து அநுபவரீதியாயவற்றையுணர்ந்து, கிறிஸ்து போதித்ததும், கிருஷ்ணபகவான் போதித்ததும் அநுபவரீதியாய்ப் பார்க்கில் ஒன்றே—ஒரு உண்மையே—வழியும் உண்மையில் ஒன்றேயென்று பிரத்தியக்ஷமாயெடுத்துக்காட்டி ஆருத்ரா தரிசனத்தன்று அதைப்பற்றி விசேஷமாக வெடுத்தெழுதிப்பிரசுரிக்கலானோம். இவ்வுண்மையை டாக்டர் டங்கனும் விவேகசிந்தாமணியைப்பார்த்துணர்ந்தபின் உண்மையில் நம்கொள்கைக்கும் அவர்கொள்கைக்கும் வித்தியாசமில்லையென்று காண்பதாக வெழுதியிருக்கிறார். சென்னையில் தற்காலம் ரஜாவிலிருக்கும் இந்தியா சிவில் ஸர்விஸைச்சேர்ந்தவரும், தமிழறிந்தவரும் ஆதிமுதல் விவேகசிந்தாமணியை ஆதரித்து வருபவருமான ஒரு ஆங்கிலேய நண்பரும் நாம் வேதாந்த சித்தாந்த முடிவாகவெடுத்துக்காட்டிய உண்மைகளும், கிறிஸ்துபோதித்த உண்மைகளும் ஒன்றேயென்று கிறிஸ்துமதபக்தரும் ஒப்புக்கொள்ளச் சரிப்பட்டதாகவும், அவ் வெல்லாமதங்களின் உண்மையும் ஒன்றேயாக, வித்யாசங்கள் உண்டானதெல்லாம் மனிதன் தன் பேதபுத்தியால் ஏற்படுத்தியதன்றி உண்மையில் காணவில்லையென்று காண்பதாகவுமெழுதியிருக்கிறார். இப்படியே வேதாந்த சித்தாந்த யோகிகளும் ஞானிகளும் கிறிஸ்து போதித்தஉண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக அநுபவரீதியாகப் பார்க்குமிடத்து உண்மையெல்லாம் ஒன்றே; ஆத்மவித்தை எல்லாருக்கும் பொதுவானதே; ஸ்வாநுபவமட்டுமிருந்தால் எம்மதத்தை யநுசரித்துமுண்மையையுள்ளபடி போதிக்கலாமென்பது ஸ்பஷ்டமாக வேற்பட்டது. இதை மேன்மேலும் இப்பத்திரிகை மூலமாக நிரூபித்துக்காட்டி வருவோம்.

**சன்மார்க்கம்** சன்மார்க்கமென்று எல்லாரும் சன்மார்க்கத்தை விரும்பிப் பேசுகிறார்கள். புறக்காரணங்களை முன்னிட்டு சன்மார்க்கவழியை யநுசரிக்கச் செய்வது ஒரு நூற்றாண்டு முழுவதுமுழைத்தபின் கூடாத காரியமென்றேற்பட்டுவிட்டது மற்றோரிடத்தில் "பாலபோதம்" என்னும் தலைப்பின்கீழ் விவரமாய்க் கண்டெழுதியிருப்பதால் விளங்கும். ஆகவே சன்மார்க்கத்தை யநுசரிக்க ஆதாரமான சாதகங்கள் மனிதன் உள்ளத்திலுள்ளேயேயிருத்தல் வேண்டும். உள்ளத்தை யொட்டியுள்ள காரணங்களேற்படில் மனிதன் தானாகவே யந்தவழியில் நடப்பது சகஜமாகும். அதற்கு மனிதன் தன்னைப்பற்றிய உண்மையை உள்ளபடி யறியவேண்டும். "**தன்னையறிந்தவன் தலைவனாவான்:**" தன்னையறிய ஆத்மவித்யாபோதமவசியம். ஆத்மவித்யாபோதமே மதசித்தாந்தங்களின் நோக்கமும்முடிவுமாம். மூடர்கள் கெட்டுப்போகாதபடி முன்னோர் ஸ்வர்க்கநரகாநுபவங்களைவர்ணித்தெழுதி வினையின் பயனைவிளக்கியிருந்தார்



ள். இப்பொழுதுவரவர புத்திவிர்த்தியதிகமானதால்அந்த சூக்ஷ்மம் பலிக்கத்தக்கதாயில்லையாகையால்உண்மையையுள்ளபடியெடுத்துப்போதிப்பதேமேலான மார்க்கமாம். உண்மையாவது சத்தியம். சத்தியமாவது "ஓம். தத்ஸத்" என்னும்வாக்கியத்திலடங்கியுள்ளது: "ஓம்—அதுவுள்ளது." **அது** வென்றாலென்ன? இக்கேள்விக்குச்சரியான உத்தரம்கண்டுபிடிப்பதே சத்தியத்தையறிவதாம். அதுவே "ஏகம் ஸத்யம் ப்ரம்ம" என்னும் சுருதிவாக்கியத்தின் பொருளாம். "God is the spirit of truth" என்று யேசு கிறிஸ்து சொல்லியதும் அதையே

"அதுவென்றா லெதுவென வொன்றடுக்குஞ் சங்கை யாதலினா லதுவெனவு மறவேவிட்டு
மதுவுண்டவண்டெனவுஞ் சனகனாதி-மன்னவர்கள் சுகர் முதலோர் வாழ்ந்தாரொன்றும்
பதியிந்தநிலை யெனவு மென்னையாண்ட படிக்கு நிரு விகற்பத்தாற் பரமானந்த
சுதிகண்டு கொள்ளவுநின் னருள்கூர் இந்தக் கதியின்றியுறங்கேன்மேற் கருமம் பாரேன்."

என்று உள்ளமுருகப்பாடியுள்ளார் தாயுமானசுவாமிகள். ஆதலால் சங்கையற அதையறிவது மஹாகஷ்டம். ஆனால் ஹிருதய சுத்தியும், காருண்யமும், அன்பும் நிறைந்துள்ளவனுக்கு அதையறிவது சுலபம். சிந்தையைத்தூய வழியிற் செலுத்திக் கொண்டேபோனால் அது முடிவில் சத்தியத்திற் கொண்டுவிடும். தெய்வமுண்டென்றாலும் சரி, இல்லையென்றாலும் சரி,—தூயநெறிசெல்வார் கடவுளை யடைவார்—சித்தந்தெளியில் சிவனைக்காணலாம்; சத்தியத்தையறியலாம்; அகத்தூய்மையொன்றே முக்கியம். அதுவும் "வாய்மையால் அகம் தூய்மையாம்:"—என்றபடி வாய்மை (உண்மை) யால் சித்திக்கத்தக்கதாம்.

"செல்லுமளவும் செலுத்துமின் சிந்தையை
வல்லபரிசாலுரைமின்கள் வாய்மையை
யில்லையெனினும் பெரிதுளதெனம்மிறை
நல்லவரனெறி நாடுமினீரே."

"ஒன்றேகுலமொருவனேதேவனும்
நன்றேநினைமின னமனில்லை நாணுமே
சென்றேபுகுங்கதியில்லை நுஞ்சித்தத்து
நின்றேநிலைபெறநீர்நினைந்துய்மினே."—**திருமந்திரம்.**

என்றார் திருமூலநாயனாரும். கிறிஸ்துவும் "Love is the fulfilment of all laws." "அன்பிலமர்ந்துறைய எல்லா தர்மங்களும் நிறைவெய்தும்" என்றார். "God is love" "அன்பே அவன்" என்றதனாலும், அன்பின்வழியே சத்தியத்தைக் காணலாம், "அல்லது அன்பு பரிபூரணமானவிடத்தே சத்தியம்" என்றதனாலும் எல்லார் போதனையும் ஒன்றேயென்பது ஸ்பஷ்டமா யேற்படுகிறது. ஆகையால் சத்தியத்தில் பற்றில்லையேல் சன்மார்க்கத்திலும் பற்றில்லாதொழியும். சத்தியத்தை நேசித்தார் சன்மார்க்கத்தைத் தாமே நேசிப்பார். அவருக்கு சத்தியநேசம் தவிர வேறு தூண்டுகோல் வேண்டியதில்லை. சத்தியத்திலுள்ள நேசம் சன்மார்க்கத்தை விர்த்திசெய்யும்; சன்மார்க்கவிர்த்தி சத்தியத்தை அதிகமாக நேசிக்கச்செய்யும். இப்படி ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருந்து ஒன்றையொன்று வளரச்செய்யும். ஆகையால் "**சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை**" யென்பதினுண்மையை யாவராலும் மறுக்கவொண்ணாது. ஆத்மாவின்றித்தேகமில்லை; தேகமென்பது கருவிகரணங்களமைந்த ஒரு ஆயுதம்போலாம்; அதையுபயோகிப்பவன் ஆத்மா. அவன் அநாதியாயுள்ளவன். பிறப்பிறப்பற்றவன். ஆகையால் தேகமனோதத்துவங்களோடு ஆத்மதத்துவங்களையு மறியவேண்டியதவசியம். கருவி கரணங்களின் விர்த்தியெல்லாம் ஆத்மவிலாசம் வெளிப்பட்டு விளங்குவதற்காகவே அதை மறந்து விட்டால் பயிற்றும் வித்தை பயனற்றதாகிறது.

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, 00.*

*(With the First Dawn of the 20th Century.)*

# ஆனந்தத்தாய்மொழி.

அவள் தன் திருவருட் குழவிக்கோதிய மந்திரம்.

"அன்னைசொன்மிக்க மந்திரமில்லை."

## 5-வது: மத்திமப்பருவம்—சித்திப்படலம்.

" ஆள்வன் குருவாய் வந்தாங்காரம் போக்குவிப்பன்
மாள்வன வெல்லாமயக்க மறக்காட்டுவிப்பன்
தாள் தந்தருளீவன் தாகவிடாய் தீர்த்து வைப்பன்
ஆளாவானைக்காட்டி மாளா வரமளிப்பன். "

### ஆனந்தானுபவக் காட்சி.

ஆனந்தத்தாயாரோ டைக்கியமேயானபின்பு
நான் கண்ட கண்ட காட்சி யென்ன!
கனவுநன வழிந்ததென்ன!
நிஷ்டையுண்டு நித்திரை போச்சு,
நான்முகனும் ஓடிப்போனன்;
இந்திரனும் யாரோ எச்சிற் கலைதின்னியவன்
கண்டறியேன் கேட்டறியேன் காண நினைத்தறியேன்;
46சிவனாரோ வாசற்காப்பான் விஷ்ணுவுமொரு வேலைக்காரன்;
இந்தவேலைக்காரப் பசல்களோடே வேலை யென்ன எனக்குச் சொல்லேன்!
47என் ஆனந்தத்தாயாரே எனக்குப் பெரியவள் காண்.
தாய்பிள்ளை யென்று சொல்லும் தடையு மறந்து விட்டேன்;

46. "சிவனாரோவாசற்காப்பான்" c. f.

சிவனைவழிபட்டாரெண்ணிலிதேவ
ரவனைவழிபட்டாங்காமாறொன்றில்லை
யவனைவழிபட்டங்காமாறுகாட்டுங்
குருவைவழிபடிற்கூடலுமாமே.

47. "என்ஆனந்தத்தாயாரேனக்குப்பெரியவள்காண"
c. f.

குருவேசிவமெனக்கூறினனந்தி
குருவேசிவமென்பதுகுறித்தோரார்
குருவேசிவனுமாய்கோனுமாய்நிற்குங்
குருவேயுரையுணர்வற்றதோர்கோவே.



48அவளே நான் நானேயவள் அப்புறம் தான் வழக்கேது?
வழக்கில்லை யானாலும் வழிதேடவேணும்நான்.
அவளாரோ நானாரோ அவளுமில்லை நானுமில்லை:
அப்படியிருக்க, ஆசை யென்ன என்கிறையோ?
அன்பேயவளாகி அன்புருவாயவதரித்தாள்:
அன்புருவாயவதரித்தாள் அவளருங்கருணை மிகுதியினால்.
49கருணை மிகுதியினால் கடைந்திட்ட பாலமுதம்
உண்டுகளிப்பது நானுண்மையே யானாலும்
உண்மையதுவல்ல உள்ளதுவு மதுவல்ல.
உள்ளதையுள்ளபடி யுள்ளாய்ந்து பார்த்தாக்கால்,
இன்னுமிருக்குதுபார் எனக்கு வழிதேட.
வழிதேடி யலையாமல் வழிகாட்டி யழைத்ததனால்,
காட்டிய வழியதனைக் கனவுநனவழிந்து
பக்தியுடனாராய்ந்து புத்தியினாலறிந்து கொண்டேன்;
ஆராய்ந்தறிந்து கொண்டு அறிந்தவழியே நடந்தேன்
நெருப்பாறு கடந்தேன்நான் நடந்தேன் மயிர்ப்பாலமதில்
நெருப்பாறு மயிர்ப்பாலம் நான்கடந்த வகையதனை
50உரைத்திட்டாலுணர்வீரோ உண்மைகெட்டமானிடரே!

ஓம்

மானிடவுருவானாலு மதிலெத்தனை ஜனமமமமா:
காண்டாமிருக முதலாகக் காக்கைகழுவீறாக
எண்ணித் தொலையாத எத்தனையோ ஜன்மங்கள்!
சொல்லித்தொலையாத சேதன சேதனங்கள்!
இத்தனையுமாராய்ந்து இழவெடுத்துக் கொண்டிருந்தால்,
நான் வழிதேடிப் பிழைப்பதெப்போ வகையறிந்து பிழைப்பதெப்போ!

ஓம்

உரைத்ததையுணரார் ஊனர்களேயானாலும்
என்னைப்போலலைந்திடுவோர் ஏங்கித்தியங்கிடாமல்
* உள்ளத்தையுள்ளபடி யுரைத்திடுவேனாசிமுனை வாயாலே:

* "உரையற்ற தொன்றையுரை செய்யுமூமர்காள்"—திருமூலர்.

48. "அவளேநான்நானேயவள்அப்புறம்தான்வழக்கேது"
c. f.

தானவனாகிச்சொருபத்துவந்திட்டு
வானசொருபங்கணன்குமகற்றின
வேனையமுத்திரையீந்தாண்டநன்னந்தி
தானடிமுற்சூட்டித்தாபித்ததுண்மையே.

49. "கருணைமிகுதியினால்கடைந்திட்டபாலமுதம்உண்டு
களிப்பது" c. f.

இசைந்தெழுமன்பிலெழுந்தபடியே
பசைந்தெழுமீசரைப்பாசத்துளேகச்
சிவந்தகுருவந்துசென்னிகைவைக்க
வுவந்தகுருபதமுள்ளத்துவந்ததே.

50. "உரைத்திட்டாலுணர்வீரோ" c. f.

இதயத்துநாட்டத்துமென்றன்சிரத்துப்
பதிவித்தபாதம்பராபரநந்தி
கதிவைத்தவாறுமெய்காட்டியவாறும்
விதிவைத்தவாறும்விளம்பவொண்ணாதே.

51 அம்மாளை வழிபட்டு நெருப்பாறு தாண்டினேன் நான்
அவளுக்கு விட்ட வழி யெனக்குமேயாச்சு துகாண்.
மயிர்ப்பாலம் தாண்டிய மர்மத்தைச் சொல்லிடுவேன்
அன்புடனேகேட்டு அன்புள்ளே வைத்திடுவீர் :
அம்மாளே யுண்மையென்றேன்
அவளே நானாய்விட்டேன்.
52 அவளே நானானபோது அப்புறம் நானென்சொல்வேன் !
கடத்தல் கனகஷ்டமையா
இத்தடைகளிரண்டனையும் :
கண்கள் தானும் குருடாகும்—
கால்களுமே யுதவாது.
கண்கள் கேட்டுக் குருடானேன்—
குருடாய்த்தான் வழிகண்டேன்.
கால்களின்றி முடமானேன்—
முடமாகியே வழிநடந்தேன்.
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டால் கிட்டாதோ ?
ஆசைப்பட்டதுண்மையானால் அவசியம் கிடைத்திடுமே.
குருடனுமே வழியறிதல் கூடாதகாரியமோ ?
53 கண்கெட்ட குருடனுக்குக் கோலேகாண் அவன் கண்கள் :
கோலதுமே கண்களானால் அவனைக் குருடனென்பதெப்படிச் சொல் ?
இரண்டு கண்கள் தானிருந்தும் இருட்டில் வழிநடப்பாரோ ?
கண்கெட்ட குருடனோ கைவீசி நடந்திடுவான் :
இப்படியிருக்கையிலேயேனுங்கட் ககம்பாவம் !
அகம்பாவம் பிடித்தையா நீங்கள் அழிந்தேதான் போகிறீர்கள்.

⁂

அகங்காரத்தை விட்டொழித்தால் அறிவீர் நீர்அதிசயத்தை
அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்படுவீர் நீர்
ஆச்சரியப்பட்டு அகமகிழ்ந்து சிரித்திடுவீர் ;

51. "அம்மாளைவழிபட்டுநெருப்பாறுதாண்டினேன்நான்." c. f'
வைத்தேனடிக்கண்மனத்தினுள்ளேநான்
பொய்த்தேயெரியும்புலன்வழியேகாம
லெய்த்தேனுழலுமிருவினைமாற்றிட்டு
மெய்த்தேனறிந்தேனவ்வேதத்தினந்தமே.

52. "அவளேநானானபோதுஅப்புறம்நானென்சொல்வேன்" c. f
வரும்வழிபோம்வழிமாயாவழியைக்
கருவழிகண்டவர்காணுவழியைப்
பெரும்வழியாநந்திபேசும்வழியைக்
குருவழியேசென்றுகூடலுமாமே.

53. "கண்கெட்ட குருடனுக்குக்கோலேகாண் அவன்கண்கள்" c. f.
மேவியவந்தகன் விழிகட்குருடனை
மாவையின்முன்னடிக் காணுமதுகண்டு
மேவுந்தடிகொண்டு சொல்லும்விழிபெற
மூவையினுன்மாமுயலுங்கருமமே.



சிரித்திட்டு நீங்கள் சீர்பாதம் பெற்றிடுவீர் ;
சீர்பாதத்திருந்தால் சின்மயத்தை யுணர்வீர் நீர் ;
சின்மயத்தை யுணர்ந்தக்கால் அதையறிய மிக ஆசைகொள்வீர் ;
அறிவுமோகமுண்டானால் முகதரிசன மாகுமையா ;
முகதரிசனமானால் மோகம் பிறந்திடுமே ;
மோகம் பிறந்திட்டால் உருவமது அமர்ந்துவிடும் ;
அமர்ந்துவிடு முருவமானால் அன்பு நிலையறிந்திடுவீர் ;
அன்பு நிலையறிந்தாக்கால் ஆசைவருமனுபவிக்க ;
அனுபவிக்கப் புறப்பட்டால்,
அங்கம் புலர்ந்து அகமகிழ்வு கொள்வீரே.
அகமகிழ்வு கொண்டபின்னும் அடங்கவில்லை யுன் மோகம் !
ஏனென்று ஆராய்ந்தால் இன்ப சுகம் கிட்டவில்லை.
இன்பசுகம் கிட்டவே யந்தரங்கமறியவரும் ;
அந்தரங்கமறிந்து விட்டால்—
அப்புறம் சுகமே தான்.

⁂

சுகமே தானானாலும் சுகமென்றால் தித்திக்குமோ ?
தின்னறிய வேண்டியது இன்பசுகரசமதனை.*
இன்பசுகரசமதனைத் தின்னுருசியறிந்தாலும்
**அறிந்த அறிவழிய வேண்டும்—**
அப்புறந்தானையா சுகம்.
அந்தசுகமதனை யறிந்துசொல்வதெப்படிச் சொல் !†
அறிவழிந்த சுகமதனை யனுபவித்தேயறிய வேண்டும்.

⁂

அனுபவம் சித்தித்தால் அப்புறமே யொன்றுமில்லை ;
ஒன்றுமில்லையானாலும் ஆனந்தக் கொழுப்பேறும் ;
கொழுப்பேறி யடங்கிவிட்டால்—
மத்தித்து இருந்திடலாம்.
மத்தித்திருப்பதுவே மஹாதீத நிலையம்மா.
மத்தித்திருக்குமிந்த மஹாதீத நிலையெனக்கு
எப்போது சித்திக்குமென் றென்மாதாவை நான்கேட்டேன்.

* C. F. "Verily, Verily, I say unto you, Except ye eat of the flesh of the Son of man, and drink his blood, ye have no life in you." "He that eateth of this bread (the bread of life) shall live fer ever"—*Jesus Christ*. John VI, 53, 58.

† Cf. *Socrates'*: "What God is, I know not, what he is not, I know." And **நேதிவாக்கியம்** in *Sruti*

ஃ

"மோகமடங்கவேணும் மெய்புருவங்காணவேணும்
"மெய்புருவங்கண்டு அன்பு நிலையறியவேண்டும்
"அன்பு நிலையறிந்து அந்தரங்கமாகவேண்டும்
"அந்தரங்கமாய்விட்டால் அநுபவமே சித்திக்கும்;
"சித்திக்கும் மெய்சொன்னேன் சித்தங்கலங் காதே" யென்றாள்—

ஃ

"சித்தந்தானழிந்ததுவே யதைப்பற்றி யேன்விசாரம்?"
என்று நானறைந்ததற்கு என் தாயார் என் சொன்னாள்:
புன்சிரிப்புத் தவழுமவள் இன்பமுகம்மலர
**"போக போகப் பொன்னம்பலமாம்"** என்றாள்.

**ஓம்தத்ஸத். சத்குருவேநம:**

---

PRIMARY EDUCATION.

## பாலபோதம்.

பிரதமவித்யாபாடசாலைகளில் சிறுவர்களுக்கு வித்தை போதிக்கப்படும் முறையைச்சீர்திருத்தவேண்டியதைப் பற்றி மிஸ்ஸஸ் **கோர்ட்னாட்** விடாது தொடர்ந்தெழுதிவருவதைப் பார்க்கச் சந்தோஷப்படுகிறோம். அதிகாரிகள் இங்கிலீஷில் எழுதுவதையே நேரில் வாசித்துக் கவனிப்பது அவர்களுக்கு இலகுவாயிருக்குமாதலால்இத்துரைசானிஅமெரிக்காவின் மேலான அநுபவத்தை மேற்கொண்டு, பொட்டைப் பாடமாக நெட்டுருப்போட்டுவைக்கும் கெட்ட வழக்கத்தைவிட்டு, குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு வித்தைபோதிப்பதிலும் அவர்களுடைய ஆத்மவிலாசம் விளங்கும்படி முறையறிந்து நடந்துகொள்வதேஉண்மையானபோதனாமுறையாமென்று வற்புறுத்தி இம்முறையை முதல் முதல் மேற்றிசையில் கண்டுபிடித்துத்தாபித்தவரான **ப்ரெடரிக்ப்ரோபேல்**அவர்களுடைய உண்மையான சித்தாந்தங்களைஉள்ளபடி யெடுத்துரைத்துவருவதில் வெகு சிரத்தையெடுத்துக்கொண்டு அதியுற்சாகத்தோடுழைத்துவருகிறார். சென்ற ஏப்பிரல் மாசம்வெளியான (Indian Journal of Education) என்னும் பத்திரிகையில் பாலபோத முறையையும் அதன் அவசியத்தையும் பற்றி இரண்டுநூற்றாண்டுகளின் அநுபவத்தை யாராய்ந்து உண்மையை யுணர்த்திப்பேசுகிறார். அமெரிக்காவில் வித்யாபோதனாவிஷயமாய்ச்செய்தமுயற்சிகளின் பயனை டாக்டர்ஹிர்ஸ்ச்என்னும் வித்யாவிற்பன்னர் ஒருவர் உள்ளாராய்ந்துஉண்மையைவெளியிட்டிருப்பதை யங்கீகரித்துஎடுத்துக்காட்டுகிறார். சுருங்கச்சொல்லில் அதன் கருத்து: 18-ம் நூற்றாண்டில், மன்பதையில் குற்றங்களும் குறைகளும் மலிந்து நிறைந்துகிடப்பதற்குப்பரிகாரம் படிப்பு ஒன்றே என்று நம்பினார்கள். வித்தைப்பயிற்சியினால் எல்லாக்குறைகளும் குற்றங்களும் நீங்கிவிடும் என்று அக்காலத்திலுள்ளபிரதம வித்வான்களும் விற்பன்னர்களும் நம்பினார்கள். ஆகவே அவர்கள் எண்ணம் பரவிப்பலன் படலாயிற்று. 19-ம் நூற்றாண்டில் அவர்களுடையஎண்ணங்களெல்லாம்நிறைவெய்தலாயிற்று. எல்லாரும் எழுதிப்படிக்கக்கற்றால் மன்பதையிலுள்ள குறைகளெல்லாம்நீங்கிவிடுமென்று அவர்கள் எண்ணியெண்ணியேங்கிய ஏக்கம் 19-ம் நூற்றாண்டின் முடிவில் காரியசித்தியானதினால் நீங்கியது. அமெரிக்கா யுனைடெட்ஸ்டேட்ஸில் எழுதப்படிக்கத்தெரியாதவர்கள்வெகுஅபூர்வம். சகலருக்கும்அக்ஷராப்பியாசம் செய்வித்து எழுதப்படிக்கப்போதிக்கவேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டது நிறைவேறியது. ஹைஸ்கூல்,யூனிவர்ஸிடி வித்தைகள் அதாவது பிரதம வித்தையும்மத்ய உயர்தரப்படிப்பும் அதிகமாய்ப் பரவவேண்டுமென்றுஅவர்கள் கொண்டநோக்கமும் நிறைவேறியது. ஆனால்,இவைகளினாலுண்டாகுமென்றுஅவர்கள் திண்ணமாய் எதிர்பார்த்த சுகிர்தங்கள் மட்டும் உண்டாகவில்லை. மன்பதையிலுள்ளகுற்றங்குறைகளும் குறையவில்லை. புத்திகூர்மைப்படக்கூர்மைப்பட, பொய், களவு, மோசம், முதலானபாதகஞ்செய்யும் குற்றவாளிகளும் அவர்கள் தொழிலை முன்னினும் அதிக புத்திகூர்மையோடுசெய்து வந்தார்களேயன்றி அவர்கள் குற்றத்தைவிட்டுச் சீர்திருந்தினாரில்லை. ஆகவே 19-வது நூற்றாண்டின் முடிவில் படிப்பினால் மட்டும் மனிதன் சீர்திருந்துவான் என்று எண்ணினது பொய்யென்று ஸ்பஷ்டமாகப்பட்டது. இப்பொழுது நடக்கும் 20-வது நூற்றாண்டில்அமெரிக்காவில் பொதுஜனவித்யாபோதனைப் பொறுப்புள்ளவர்கள் இதுவரையில்நடத்தப்பட்ட வித்யாபோதனா முறையில் உள்ள குற்றத்தைக்கண்டு ஒப்புக்கொண்டு, இந்த நூற்றாண்டு முதல் அக்குற்றத்தை நீக்கி உண்மையான வழியை அநுசரிக்க முயலுகிறார்கள். 19-வது நூற்றாண்டில் கற்றுக்கொண்டஉண்மை யென்னவெனில், ஆத்மவிர்த்தியைக்கவனிக்காது,மனதையும் புத்தியையும் மட்டும் படிப்பினால்கூர்மைப்படுத்தி வருவதினால் பிரயோசனமில்லை. மனிதன் அதனால் சீர்ப்பட்டு உயர் நிலையடையாமல், முனனிருந்த நிலையிலேயேயிருந்து முன்செய்த குற்றங்குறைகளை இன்னும்சாமர்த்தியமாகச்செய்துவருகிறான். ஆகையால் இளங்குழந்தைகளுக்கு வித்யாபோதனை செய்வதில்அவர்களுக்கு விஷய ஞானமுண்டாக்குவதையே பெரிதாகவெண்ணாமல் விஷயானுபவத்தால்அவர்களுடைய ஆத்மவிலாசம் வெளிப்பட்டுப்பிரகாசிக்கும்படிச்செய்யவேண்டு மென்பதேயாம். இதை நமது பூர்வீக ரிஷிகள் வாக்கில் சொன்னால், தெய்வசிந்தையின்றி சுத்தநாஸ்திகப் படிப்பு பொதுவாய் ஜனங்களுக்கு நன்மையைப்பயக்காது என்பதாம். இதை கிண்டர்கார்டன் முறையையநுசரிப்போர்வாக்குப்பிரகாரம் செப்பின், விஷய ஞானத்தினும் ஸத்வகுணவிர்த்தியே விசேஷப்பயன்தந்து மனிதனைமேலே தூக்கிவிடும்தன்மையதாகும். இந்த உண்மையை தேசப்பொதுவிலநுபவரீதியாயுணர இரண்டு நூற்றாண்டுகள் அல்லது 200-வருஷங்கள் சென்றன. இப்படியே மனிதர்கள் பிரத்தியேகமாகவும் பிழைசெய்ததின் பயனையநுபவித்து உண்மையை யுணர்கிறார்கள். உண்மையை யுணரவும் அவர்கள் வாழ்க்கையுடனே மாறிவிடுகிறது. இந்த இருநூறுவருஷ அநுபவத்திற் கண்டவுண்மையையே ஒருவர் ஸ்வாநுபவத்திற்கண்டு பின்வரும் மூன்று வரிகளில் அழகாய்த் தீட்டியிருக்கிறார்:—

**"நேற்றுத்திருவருள் வாக்கை நான் நோக்காவிட்டேன்**
**"பரம்பொருளதனைப்பாரக்காய் விட்டான்**
**"பெற்றேன் பிழைத்தேன் பரம் பொருளை யினித்தானுமசட்டை செய்வேனோ நான்."**

அமெரிக்காவில் வித்யாபோதனா விஷயத்தில் முதன்மையாயுள்ளவர் எண்ணமும் கொள்கையும் இதற்கொத்ததாகவேயிருக்கிறது.

இன்றைக்கவர்கள் மனோபாவம் என்னவெ

னில், நேற்று (போனகாலத்தில்) ஆத்மக்ஷேம விர்த்தியைநாடாது தேகமனோவிர்த்தியையே நாடியுழைத்தோம்; அது உத்தேசித்த பலனைக் கொடுக்காது தவறிப்போய்விட்டது: போனது போயிற்று; இனிக்கருவிகரணங்களைக்கொண்டு ஆத்மவிர்த்தியையே முதல் நோக்காக்கொண்டுழைப்போம்: இனி ஆத்மாவை அசட்டை செய்யவொண்ணாது. நாம் ஆத்மவிர்த்தியென்றுசொல்வதை அவர்கள் "Character building" என்கிறார்கள்: இதை ஸத்வகுணவிர்த்தியென்று சொல்லலாம். எப்படிச்சொன்னாலென்ன. அனுபவத்தில் எல்லாமொன்றையே குறிக்கிறது. ஏட்டுச்சுரைக்காயாகவிருக்குமட்டுந் தான் இல்லாத வில்லங்கங்களெல்லாம். ஏட்டுச்சுரைக்காயைக்கறிசெய்ய யோசிப்பவர் எப்போதும் தாறுமாறாகவே யோசனைசெய்து ஒருவரையொருவர் தூற்றித்திரிவர். கொடியில் காய்த்தசுரையானால்சமைக்கச்சமைக்கப்பக்குவபாகம் இன்னதென்று தானேதெரியவரும்.

அமெரிக்காவில் இந்த உண்மையை என்னமாகக் கண்டு பிடித்தார்களென்றால், போலிஸ், ஜெயில் முதலான குற்றவாளிகளைத் திருத்துவதற்கான இலாகாக்கள்என்னமாயுண்டாயினவென்று தீர ஆலோசித்து, காரணத்திலிருந்து காரியமுண்டானது நிச்சயமாதலால், காரியத்திலிருந்து காரணத்தை விசாரித்துக் கண்டு, காரியத்துக்குக் காரணமும், அந்தக் காரணத்தைக் காரியமாக்கி அதற்குக் காரணமுமாக இப்படியே ஒன்றைத் தொட்டொன்றாகத் தொடர்ந்து பிடித்து விசாரித்துச் சென்றார்கள். இப்படி விசாரித்துச் சென்றதில் பாலப்பருவம், வளரும் பருவத்தில் சிறுவர்களுக்குச் சரியானபடி வித்தை போதித்தல், அதாவது அவர்கள் உள்ளம் உண்மையான வழியைப்பற்றிச் செல்லும்படிச் செய்யல்—இதெல்லாம் ஆத்ம விர்த்தியையே காட்டும்—இராஜ்ஜிய க்ஷேமத்துக்கு மிகவும் அவசியமென்று கண்டார்கள். காணவும், உடனே அதை யூர்ஜிதத்துக்குக் கொண்டுவரத் துவக்கினார்கள். இப்படி எண்ணித் துணியும் ஆற்றலும் துணிந்ததைத் தொடுபிடியாய்த் தொட்டுச் செய்யும் சக்தியும் வாய்ந்த அமெரிக்கர்கள் பொதுஜன வித்யா போதனா விஷயத்தில் இம்மேலான குணங்களமைந்திருப்பது பற்றி உலகில் தலைமை வாய்ந்து உண்மை நெறியில் வழிகாட்டிச் செல்லும் சிலாக்கியம் பெற்று விளங்குகிறாரென்று மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் துரைசானி உள்ளத்திற்பட உண்மை விளங்க எடுத்துரைத் தெழுதியிருக்கிறார். அமெரிக்கா இதரதேசத்தாருக்கு இது விஷயத்தில் போதிக்கும் நீதி யென்னவெனில், வித்யா விஷயத்தில் செய்யப்படும் எல்லா முயற்சியும் ஸத்குண விர்த்திக்கு அனுகூலமாக விருக்க வேண்டியது. * அதாவது வித்யா இலாகா விதிகளுக்குத் தக்கபடி பிள்ளைகளைப் பழக்காமல், பிள்ளைகளின் ஜீவபாவத்திற்குத் தக்கபடி அவர்களின் ஆத்மவிலாசம் வெளிப்படுவதற்கு அனுகூலமானவிதமாக முறையறிந்து அவர்களைப் பழக்கவேண்டும்.

உயர்தர (கலாசாலைப்) படிப்பைவிட, குழந்தைப் பிராயத்திலும் வளர் பிராயத்திலும் சிறுவர்களை முறையறிந்து பழக்கி அவர்களிடத்துப் பூர்வ வாசனையாலுண்டான குணக்கேடுகளை யறிந்து அவைகளைக் கூடியவரையில்

* The most essential principle...is that of making other instruction subservient to the training which makes for character in the individual. This means that the child is no longer to be bent to the unyielding code, but that the method is to be adapted to meet the demands of the developing soul. (Mrs. Courtright in I. J. Edn: p. 194).



ஆத்ம க்ஷேம விர்த்திக்கனுகூலமான வழியையனுசரித்துத் திருத்தி அவர்களை சன்மார்க்கத்தில் திருப்புவது இராஜ்ஜியப் பொதுவிற்கு அதிக நன்மைபயக்குவதாயும் அதிகப்பிரயோசனமுள்ளதாயுமிருக்கிறதென்பதை அமெரிக்கர்கள் உண்மையிலுள்ளபடி கண்டு பிடித்தனுசரிக்கத் துவக்கியிருக்கிறார்களென்கிறார். பாலப்பருவத்தில் சிறுவர்களைச் சீர்திருத்தாது விட்டு அவர்கள்வளர்ந்தபின் அவர்களிடத்துள்ள குணக்கேடுகளைத் திருத்த போலீஸாம், மாஜிஸ்திரேட்டும், ஜெயிலும் ஏற்படுத்துவது, முளையில் கையால் கிள்ளக்கூடியதை முதிரவிட்டு அனேக ஆள்களைவிட்டுக் கோடரி கொண்டு தரிப்பதுபோலாகிறது. தரித்தும் பயனென்ன? மரம் விழுந்தாலும் வேருள்ள மட்டும் அது மேலும் மேலும் கிளைத்து முளைத்துக் கொண்டேயிருக்கும். ஆகையால் இளம்பிராயத்தில் சிறுவர்களைத் தேற்றுவது பின்னால் போலீஸாம், நியாயஸ்தலங்களும், ஜெயில், கொட்டடிகளும் ஏற்படுத்தி அவர்களால் இராஜ்ஜியத்துக்குத் தீங்கு நேராதபடி காப்பதிலும் மேலான காரியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதல்லவா! மேற்றிசையில் இந்த உண்மையை யுணர்ந்தவர்களில் முதன்மையானவர் ப்ரெடரிக் ப்ரோபல். இவர் "செத்தபின் சுடுகாடு சென்று சடங்குகள் செய்து ஒருவனைக் கரை யேற்றுவதிலும், பிறந்தவுடன் தொட்டிலையண்டி நின்று அக்குழந்தை தன்னுணர்வுண்டாகி வளர்ந்து தன்மயத்துவம் பெற வுழைப்பது மேல்" என்றுணர்ந்து அவருடைய வாழ்நாள் முழுவதையும் குழந்தைகளை வளர்க்கும் வழியைக் கண்டு பிடித்து அதன் முறையை விளக்குவதில் கழித்தார். அப்படியே பருவமேறவேற மனிதனாகும் வரையில் அதை யனுசரித்துப் போதிக்கு முறை கண்டுபிடிக்கவேண்டு மென்பது இவர் கருத்து. ஆனால் இவருடைய வாழ்நாள் அதற்குப் போதவில்லை. இவர் அரைகுறையாக விட்டதை நமது ஆரிய ரிஷிகள் இவருக்கு முன்னேயே பூர்த்தி செய்துவைத்திருந்தார்கள். ஆனால் அம்முறைகள் அவர்களுடைய சந்ததியார்களின் ஆண்மைக் குறைவாலும் தாழ்மைநிலையாலும் எவ்வளவு பிரசித்தி பெற்று விளங்கவேண்டுமோ அவ்வளவு விளங்கவில்லை. விளங்கவில்லையானாலும் அவையழிந்துபோகவில்லை. ஏனெனில்அவையென்றைக்குமழியா உண்மைகள். உலகழிந்தாலும் உண்மை அழிவதில்லை. "பூமியும் ஸ்வர்க்கமுமழிந்தாலும் என்சொல்மட்டும் அழியாது." அதாவது மாறாது என்றார் யேசுகிறிஸ்து. இவர் மனிதனுடைய உண்மையை உள்ளபடி முற்றுமறிந்து போதித்திருந்தும் இவர்போதனை, புத்திவிர்த்தியினால் அகங்காரம் துளிர்த்த மேற்றிசையாருக்கு உள்ளத்திலுறைக்கவில்லை. தேகத்தை யொட்டி மனிதனைப் பாலன், சிறுவன், பெரியவன் என்று வகுத்தல் தகுதியல்ல. உள்ளத்தின் விர்த்திக்குத் தக்கபடியே அவன் மதிக்கப்படவேண்டும். உண்மையான முறைப்படி வளர்க்கப்பட்ட ஒருவன் உள்ளும் புறமும் ஒத்து விளங்குவான். அறிவென்பதே அனுபவம். ஆகையால் உலகானுபவத்துக் காதாரமாகவே யிருக்கவேண்டும் எல்லாப்போதனையும் படிப்பும். பள்ளியிற் போதனை வெளியனுபவத்தை விளங்கச்செய்வதாகவிருக்கவேண்டும். விளங்கச்செய்யுமளவுக்கே அது உண்மையான போதனையாகும். குழந்தை பிறந்தால் அது குடும்பத்துக்குள்ளிருந்து வளர்கிறது. அதன் உலகமெல்லாம அதற்கு குடும்பத்துக்குள்ளாகவே: அப்படி வரையறுத்துச் சுருங்கப்பெற்ற சுற்றுப்புற ஞானத்தால் அதன் ஆத்மபுத்தியும் சுருங்கிப் போகாமல், வெளியுலகத்தை வியந்தறிந்து

ஆத்மசுத்தி அகன்று வளர்ந்து உலகானுபவ முற்றி அதையுங்கடந்து "உலகெலாமுணர்ந் தோதற்கரியனை உண்மையனைக்" காணற்கருகனாய் அவனாத்மா வரையற்று விளங்கவேண்டும். இதுதான் உண்மையானவித்தை. இதைபடையப்பெறுவதுதான் உயிர்நலம் பயக்கும். இதைக்கொண்டே மனிதன் இகம்பரம் இரண்டிலும் தேறிப்பிழைக்கவேண்டும்—இதை ஆத்மவித்தையென்று சொல்லுவர் நம்மில் மூதறிஞர். குழந்தைகளுக்கு சுபாவமாகவுள்ள ஆத்மசுத்தியும், அவர்களைப் பழக்கும் முறை தப்பாக விருத்தலால் வயதுசெல்லச் செல்ல விர்த்தியாய் பிரகாசிக்காது, ஒடுங்கிமழுங்கி இருந்தவிடம் தெரியாமற் போகிறது—இந்த உண்மையை உள்ளத்தில் வைத்துழைப்பதே உண்மையான வித்யாபோதனா முறையாம்—இந்த உண்மையை உள்ளபடி கிரகித்தவராகலால் ப்ரோபல் கண்டுப்பிடித்த கிண்டர்கார்ன்முறை வரவரப் பரவிவருகிறது. அவர் முறைக்குயிராயுள்ளது இந்தவுண்மையே. இந்த உண்மையை யறிந்து பற்றினவர் அவர் முறையை யெளிதிலுணர்வார். மற்றவர்கள் என்னதான் எட்டிப்பிடித்துப் படித்தவர்களானாலும் அவர் முறையை உண்மையிலுணரார் என்றாரே.

C. V. S.

---

# HOMER'S ILIAD.

## ஹோமர் என்னும் கிரேக்க மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

**ஹோமர்** என்பவர் பூர்வீக கிரேக்க மஹா கவிகள் எல்லோரினும் சிறந்து சிரோரத்நம்போல விளங்கினவர். வடமொழியில் வால்மீகி முனிவரும், தென்மொழியிற் கம்பநாடரும் போலச் சிறப்பு வாய்ந்தவர். ஐரோப்பியர்கள் இவருக்கு மேலான இதிஹாஸ மகாகவிகள் இல்லையென்று இவரை வெகுவாக மெச்சிக்கொள்வார்கள். இப்புலவர் பெருமான் இயற்றியருளிய இணையிலாக் காவியங்கள் இரண்டு. அவ்விரண்டிலும் முதன்மையானது **இலிய யுத்தம்** என்னும் இக்காவியம். இவ்வரிய காவியம் ஐரோப்பிய பாஷைகள் பலவற்றினும் பற்பல பெரும்புலவர்களாலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இதனை எனது சிற்றறிவுக் கெட்டியவளவில் தமிழில் செய்யுளாக எழுதக் கருதினேன். செய்யுள் நடை எவ்வளவு தெளிவாக விருப்பினும் அதில் பழக்க முள்ளவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தெற்றெனப் பொருள் விளங்காதாதலின் ஒவ்வொரு செய்யுளுக்கும் பொழிப்புரையும் எழுதக் கருதினேன். இதனைப்படிப்போர்கள் இதனுள் நிறைந்துள்ள குற்றங்களைப் பாராட்டாமல் மறைந்துள்ள குணங்களைக் கிரகித்தல் வேண்டுமென்று அவர்களை மிகநயந்து கேட்டுக் கொள்ளுகின்றேன்.



இந்நூலை ஆதிபாஷையாகிய கிரீக்கினின்று மொழிபெயர்த்ததற்கு அப்பாஷை எனக்குச் சுத்தமாகத் தெரியாமையினாலும், அங்கிலேயபாஷையில் மொழி பெயர்த்துள்ள புலவர்கள் முதனூலை அவ்வளவு பொருள் பிறழாமல் ஒட்டிச் செல்லாமையினாலும், யானும் கதையை மாத்திரம் பற்றிக்கொண்டு மற்ற விஷயங்களில் நமது பாஷாரீதிக்குத் தக்கபடிக் கூறியிருக்கின்றேன். உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர்களாகிய இடுகுறி காரணப் பெயர்களைத் தமிழ்ப் படுத்துங்கால் அவை செய்யுளில் எளிதில் அமையும்படி சிறிது மாற்றி யிருக்கின்றேன். வடமொழியில் ராம:, க்ருஷ்ண: என்று முடியும் பெயர்களைத் தமிழில் இராமன் கிருட்டினன் என்று மாற்றியிருத்தல் போல் கிரீக்கு பாஷையில் 'ஸ்' என்று முடியும் பெயர்களை 'ன்' என்றும் 'க்ர' 'க்ரி' முதலானவற்றை, கர, கிரி முதலிய வாகவும், வேறும் கற்றோர்கள் பிழைகூறா ரென்று கருதி மாற்றி யிருக்கின்றேன். இவ்வரியதோர் பெரியநூலை நிர்விக்கினமாக நிறைவேற்றுவிக்கப் பரங்கருணைப் பெருங்கடலாகிய இறைவனையே நம்பித் தொடங்கியுள்ளேன். அவர் திருவருள் புரிவாராக.

இந்நூலின் விஷயம் பின்வருமாறு அதிசங்கிரகமாகச் சொல்லப்படும்:—

இது **தராய் (Troy)** என்னும் நகரின் முற்றுகையைப்பற்றி விவரிக்கும் ஓர்கதை. **ஸ்பார்டா (Sparta)** தேசத்துக்கதிபதியாகிய **மெனிலேயன் (Menelaos)** என்பவன் தராய் தேசாதிபதியாகிய ப்ரையம் **(Priam)** என்பவனுடைய மகனாகிய **பாரின் (Paris)** என்பவனை ஒருகாலத்தில் அதிதியாக வரித்து உபசரித்து வெகுமானித்தான். அத்தீயவன் பாம்புக்குப் பால்வார்த்தால் அது விஷத்தையேகொடுக்கும் என்பதுபோல தனக்குச்செய்த நன்றிக்குமாறாக அவ்வரசன் மனைவியாகிய **எலன் (Helen)** என்பவளை அபகரித்துக் கொண்டு ஓடிப்போய்விட்டான். அதனால் மெனிலேயன், தனக்குச்செய்த துரோகத்துக்காகப்பழிவாங்கும் பொருட்டுத் **தராய்** நகரை முற்றுகை செய்யும்படி கிரேக்கர்களுக்குப் போதனைசெய்து அவர்களோடும் சென்று முற்றுகையிட்டான். அம்முற்றுகை பத்துவருடகாலம் நடந்தது. **இலியயுத்தம்** என்னும் இக்காப்பியத்தில் பத்தாம் வருடம் முதல் நடந்தவிருத்தாந்தங்கள் மாத்திரமே கூறப்படுகின்றன. துணைவர்களாகத் தொடர்ந்து வந்த பற்பலகிரேக்க சேனைகளுக்கும் மகாசேனாபதியாயிருந்த அகமம்னனுக்கும், மகாவீரனாகிய அக்கிலனுக்கும் **(Achilles)** உண்டான வாக்குவாதமும் பிணக்கமும் தொட்டுத் தொடங்குகின்றது. அந்தப்பிணக்கத்தால் அவ்வக்கிலன் கோபங்கொண்டு சைனியத்தைத் துறந்து போய்விடுகின்றான். அதனால் அதுவரையில் அபஜயப்பட்டுவந்த தராய் நகரத்தார் வெற்றி கொள்ளுகின்றார்கள். பின்பு அக்கிலன் சிறிது சாந்தமாகித்தன் சிநேகிதனாகிய பத்திரக்கலன் **(Patroclos)** என்பவனை அப்பகைவரோடு எதிர்த்துப்போர் செய்யும்படி அனுப்புகின்றான். அவனும் சென்றுபோரில் மாள்கின்றான். அதனால் அக்கிலன் பெருங்கோபங்கொண்டு யுத்தபூமிக்கு விரைந்தோடிப்பகைவர் சேனாபதியாகிய எத்தர் **(Hector)** என்பவனைக் கொல்லுகின்றான். இக்காவியம் எத்தரின் சமரக்கிரியைகளோடு முடிகின்றது. இக்கதையைப் புலவர் பெருமான் பதினேழாயிரம் பாடல்களால் விவரித்திருக்கிறார்.

### விநாயகர் துதி.

ஈவனருள் வலத்தால் யார்க்கு மியன்று செய் கருமமெல்லாம்
அவமறவினிதின் முற்றுமன்னவன் பாதமென்பூ
நவமுறத் தொடங்குமிந் நானவையற முடியுமாறு
உவகையின் முடியிற்சூடி யுள்ளிடையிருத்துவாமே.

### அவையடக்கம்.

சிற்றில் கட்டிக்களிக்குஞ் சிறுவனோ
பெற்றிசேர் பெருமாளிகை யாக்குதற்
குற்ற பான்மையிஃதோதத் துணிந்தது
கற்றுளார் நகல் காரணமாகுமே.

## ஹோமர் என்னும் கிரேக்க மகாகவிபாடிய இலியயுத்தம்.

---

### பாயிரம்.

1. கலையெலாந் தெரிக்கு மாதே கழறுக வெனது நாவின்
தலையிருந்தமுத மென்னச் சுவைமலி தருதீம் பாவால்
அலகறு துயர்கிரேக்க ரடைதலுக் கேது வான
உலைவறு வீர னுமக் கிலன்சின முவப்பி னீங்கே.

(இ-ள்) கலைஞானங்கள் எல்லாவற்றையும் வேண்டுவோர்களுக்கு உபதேசித்தருள்கின்ற அணங்கே, நீயென் நாவின்கண் வீற்றிருந்து கிரேக்கர்களுக்கு யுத்தத்துக்குச் சென்ற காலையில் எண்ணிறந்த துன்பங்கள் உண்டாதற்குக் காரணமாகிய அக்கிலன் (Achilles) என்னும் மகாவீரன் கோபத்தை விவரித்து அமுதம்போலச் சுவைமிகுந்த இனியபாடல்களாற் சொல்லியருள்வாயாக.

2. விதித்தநாள் நிரம்பு முன்னர் வீரர்வெங் களத்து நாயும்
கொதித்தெழும் பசியா லுற்ற கழுகின்வெங் குழுவு மன்னூர்
கதித்திடு முடலங் கீண்டு காதலின் விழுங்க வாவி
குதித்தெம னூரிற் செல்லக் கூட்டுமம் முனிவைக் கூறாய்.

(இ-ள்.) தமக்குக் கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட ஆயுள் இன்னம் பூர்த்தியாகுமுன்னேதானே, கொடிய போர்க்களத்தில் தமது உடலை நாயும் கழுகும் கிழித்துக் கொத்தியுண்டு பசியாற்றிக் கொள்ள, எண்ணிறந்த வீரர்களுயிரைக் காலனூருக் கேற்றுதற்குக் காரணமாகிய அவ்வக்கிலன் கோபத்தை விவரித்துக் கூறல் வேண்டும்.



3. தெரிதாக்கிலத்துவா பக்கிலனும் வெந்திறை யாற்றும்
உரிமை கொள்வேந்தனு மத்திரிதனு முருத்தலாலே
பொருவரும் யோவினுள்ள மிருந்தவா போரிற் சாய்ந்தாங்
கரிய வெந்திறலார் வீரா ருயிரிழந்த தன்றே.

(இ-ள்) மகாவீரனாகிய அக்கிலனும் அவனுக்குக் கொடிய குற்றங்களைச் செய்த அஜாதி ராஜனாகிய அத்திரிதனும் (Atredes) ஒருவரோடொருவர் கோபித்தலாலே, ஒப்பில்லாத முதற் கடவுளாகிய யோவின் (Jove) திருவுள்ளப்படியே யுத்தத்தில் அநேக வீரர்கள் தமது ஆவியையிழந்த விருத்தாந்தத்தை உலகிலுள்ளோர் உணரும்படிச் சொல்லியருளல் வேண்டும்.

எஸ். முத்து ஐயர், பி.ஏ.

---

## சுகுணசுந்தரம்.

### VIII.

ஹேமாபுரி பட்டணத்தில் சுலோசனையின் கலியாணத்திற்காக பறைசாற்றும் ஒலிகேட்ட மைந்தருமகளிரும் மேக முழக்கத்தைக் கேட்ட மயில்கள் போல குதூகலத்துடன் தங்கடங்கள் வீடுகளில் நடக்கின்ற கலியாணத்தைப்போல ஆசையுடன் நகரத்தையும், மாளிகைகளையும் அலங்கரிக்கப் புகுந்தார்கள். தெருக்களி னிரண்டுபக்கங்களிலும் உள்ள சுவர்களும் திண்ணைகளும் சுண்ணச் சாந்துபூசி பலவகைப்பட்ட சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டன; வாசல்களில் புஷ்பங்களாலும், நவமணிகளாலும் அமைக்கப்பட்ட மாலைகள் தொங்கிக்கொண்டிருக்கிற முத்துப் பந்தல்களில் வாழை, கமுகு முதலிய மரங்களாலும், பலவர்க்கங்களாலும் அலங்கரிக்கப்பட்டன; இடைக்கிடை முத்து மாலைகளும், பலவித வண்ணமுள்ள துகில்களும் தொங்கும்படி கட்டப்பட்டிருக்கிற பச்சிலைத் தோரணங்கள், ஆகாயத்தை யளாவும்படி கட்டப்பட்டன; மகளிர்கள் தங்கள் தங்கள் வீடுகளை மெழுக்கினாலும் கோலங்களாலும் அலங்கரித்துத் தாங்களும் வஸ்திராபரணபூஷிதர்களாய் சித்திரப் பதுமைகட்கும் தங்கட்கும் வேற்றுமை தோன்றும்படி இங்குமங்கும் உலாவுவார்கள்; மைந்தர்கள் தத்தம் கிரகங்கட்கு வருகின்ற அதிதிகள், பந்துக்கள் முதலியவர்களை அறுசுவையுண்டியாதிகளால் உபசரித்து இன்னும் வருபவர்களுண்டோவென்று தெருக்களில் போகின்றவர்களை போஜனத்திற்கு வழிமறித்தழைப்பார்கள்; சில பெண்கள் மேன்மாடிகளிலுள்ள பலகணியின் வழியாய் சந்திரோதயம்போல் விளங்குகின்ற முகத்தைக் காட்டிக்கொண்டு சுலோசனையின் கலியாணத்திற்கு வருகின்ற அன்னிய தேயத்து அரசகுமாரர்களாகிய சகோரங்கள் கண்டு களிக்கும்படி பந்துமுதலியன விளையாடுவார்கள். தெருக்கள்தோறும் சதுரங்க சைன்னியங்களுடன் வருகின்ற அரசர்களின் நெருக்கத்தால் இடைவெளி காணப்படாமலிருந்தன. அவ்வரசர்களை நான்கு கோட்டைவாயில் முகப்பிலும் அமைச்சர்கள் எதிர்கொண்டழைத்து, இராஜ கிரகத்திலுள்ள சர்வ சாமக்கிரியைகளால் நிறைந்த விடுதிகளில் சேர்ப்பித்தார். தேவாலயங்களில் நைமித்திகங்களை விசேஷமாய் நடத்தினார்கள். உப்பரிகைகளில் மங்கையர்கள் பாடுகின்ற மங்கள வாழ்த்தொலியைக் கூந்தலிலணிந்த மலர்மாலைகளில் மொய்க்கின்ற வண்டுகளினிசைகளடக்கின.

"கொண்டேகுந்தன் மேள கொள்கைபோற்
பேசுமுகில்
உண்டோவிலையோவென் றெட்டக மண்
ணுந்துவர."

என்றபடி, ஒட்டகங்கள் யானைகள் குதிரைகளின் மீது ஏற்றப்பட்டு அடித்துவருகிற முரசமுதலிய வாத்தியங்களின் முழக்கங்கள் திக்குகளெங்கும் வியாபித்து, தேவர்களையும், திக்பாலகர்களையும், விவா

கத்திற்கழைக்கப் புகுவனபோல் சென்றன; யானைகளும், குதிரைகளும் அரச குமாரர்களும் சஞ்சரிக்கின்ற தெருக்கள், மத ஜலத்தினாலும், வாயி நீரினாலும், சந்தனக் கலவைகளினாலும், நதிகள் போற் காணப்பட்டன; அவற்றில் ஓடுகின்ற இரதங்கள் படவுகள் போன்றிருந்தன. வீடுகள்தோறும் எழுதப்பட்டிருக்கின்ற சித்திரத்திலுள்ள சுலோசனையை அரசகுமாரர்கள் கண்ணுற்று இப்பெண்மணி நம்மில் யாருக்குக் கிடைக்க சுகிர்தஞ்செய்திருக்கின்றோமோ என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வார்கள். இன்னும் முகூர்த்தகாலம் வருவதற்கு எத்தனை நாழிகையிருக்கின்றன என வினவ, நான்கு நாழிகை உளதெனக் கூறுவார்கள்; இவ்வண்ணமாய் அளவிடற்கரிய விநோதத்துடன் கூடிய இந்நகர வாஸிகள் முதலினோர் கலியாண வைபவத்தைக் காணுமாறு சுறுசுறுப்பாய் அவா மேற்கொண்டு திரிந்தவர்களாயிருந்தார்கள்.

இஃதிங்ஙனமிருக்க, சாருதத்த மகாராஜன் தனதரண்மனையை நவமணிகளாலும், புஷ்பங்களாலும், தீபம், பூர்ணகும்பம் கண்ணாடி, யுக்மசாமர முதலிய அஷ்டமங்கலங்களாலும், இளநீர்குலை, பழக்குலைகள் முதலியவைகளால் பந்தல்களலங்கரித்து திருமண மண்டபத்தை இந்திரசபையும் அழகு குன்றும்படி சுவர்ணத் தகடுகளாலிணக்கி, இரத்ந ஸ்தம்பங்கள் நாட்டி, கமகமவென்று பரிமளிக்கின்ற நறுமலர் மாலைகளாலும், பொம்மை விளக்குகளாலும் அலங்கரித்து சுற்றுப்பக்கங்களில் அரசகுமாரர்களும், அந்தணர்களும், முனிவர்களும் வீற்றிருக்குமாறு நவமணிகளாலிழைத்த பொற்பீடங்களைப் போடுவித்து மத்தியில் திருமணவினைக்குரிய வேதிகையில் ஆஸநங்களும், ஹோம திரவியங்களும் அமைத்து இளஞ்சூரியனைப் போல் ஒளி வீசுகின்ற பட்டுவிதானங்களால் இந்திர விமானம்போலலங்கரித்து விவாகத்திற்குரிய காரியங்களை யத்தனிப்பதற்கு எல்லாத் தேயத்தரசர்களும் வந்துவிட்டார்களாவென்று விசாரிக்கும்பொருட்டு, கொலுமண்டபத்திற்குவந்து வீற்றிருக்குஞ் சமயத்தில், மதிவிலாஸன் அத்தருணத்தில் வந்து அரசனுக்கு வந்தனஞ்செய்து, "ஹே இராஜ சேகரா! தங்களாக்கினைப்படி நமது பட்டணம் இந்திரன் முதலிய தேவர்களுங்கண்டு அதிசயிக்கும்படி மிகவும் ரமணீயமாய் அலங்கரித்தாயிற்று. எல்லாத்தேசத்தரசர்களும் அவரவர்கள் சேனைகளுடன் நமது நகரம் இடஞ்சிறிது என்னும்படி நெருக்குற்றிருக்கின்றார்கள்; அவ்வரசர்களை எதிர்கொண்டழைத்து ஒவ்வொருவருக்கும் தகுதியான விடுதிகளில் சேர்ப்பிவித்தேன்; இன்னுஞ் சுசீலசக்கிரவர்த்தியும் அவர் புதல்வர் சுந்தரமகாராஜனும், இரத்நபுரிக்கதிபனாகிய காமபாலனென்னுமரசனும் வந்துற்றிலர். புரோகிதர் முதலிய சகலமான பிராமணர்களும் நமது அரண்மனைவாயிலில் நிரம்பி யிருக்கின்றனர்; முகூர்த்தகாலஞ்சமீபித்து விட்டதென்றும் இப்பொழுதே சடங்குகட்கு ஆரம்பிவித்தால் சரியாயிருக்குமென்றும் சமுகத்தில் தெரிவிக்குமாறு நமதுபுரோகிதர் விசுவரூபர் நியமனஞ்செய்தமையால் இவண் விண்ணப்பஞ்செய்துகொள்ளலாயினேன்," எனக்கேட்டு மந்திரியைநோக்கி, "முகூர்த்தகாலமோ சமீபித்து விட்டது; சுந்தரராஜனோவந்திலன்; நமது திருமணப்பத்திரிகை வரப்பெற்ற மற்றைய அரசர்கள் யாவரும் வந்திருப்பதால், நாம் உத்தேசித்தவண்ணம் சுவயம்வரம் நடத்தப்புகுந்தால் நமது சுலோசனைக்கு விரதபங்கம் உண்டாம்; வேறு முகூர்த்தத்தில் மணவினை செய்யலாமெனின் இவண் வந்திருக்கும் அரசர்கள், இவன் நமக்கு எழுதியதொன்று செய்வதொன்றாகயிருத்தலால் இவனோடு போர்புரிந்து வென்று சுலோசனையைக்கவர்ந்து செல்வோமென எண்ணிக் கலகத்திற்கு யத்தனிப்பார்கள். அருமருந்தன்ன ஒரு பெண்ணைப் பெற்றயான் இந்தக்கஷ்டத்திற்குப் பாத்திரனாகும்படி கொடிய பாவம் என்ன செய்தேனோ?" என்றுகிலேசித்திருக்குமளவில் ஓர் தூதுவன் வந்து தண்டஞ்சமர்ப்பித்தெழுந்துநின்று, "தான் மாயாபுரிக்குச்சென்றது முதல் கிருபாகடாக்ஷ முநிவ ராச்ரமத்தினின்றும் சுசீலசக்ரவர்த்தி முதலினோர் புறப்பட்டு இந்நகரத்துக் கணித்தாய் வருகிற வரையிலுள்ள சங்கதிகளைச் சொல்லக்கேட்டு, மிகவுமகிழ்ந்து அன்னோரை எதிர் கொண்டழைத்து வருமாறு மந்திரிகட்குக் கட்டளையிட்டு அரசர்களையும் பிராமணர்களையும் அழைத்துக்கொண்டு கலியாணமண்டபம் வந்து சேர்ந்து அவர்கள் தத்தமக்கியன்ற ஆசனங்களில் வீற்றிருக்கும்படி தானும் ஓர் திவ்வியாஸனத்தில் வீற்றிருந்தான்.



அத்தருணத்தில் கிருபாகடாக்ஷ மாமுநிவரும் சுசீலசக்ரவர்த்தி முதலினோரும் குடை கொடி முதலிய பிருதுகளுடன் சைந்யங்கள் சூழ திக்குகளும் செவிடுபடும்படியான சகலவாத்தியமுழக்கத்துடன் அரண்மனைவாயிலில் தங்கள் தங்கள் இரதங்களினின்றுமிழிந்து விவாகமண்டபத்தில் பிரவேசித்தார்கள்.

அதுகண்ட சாருதத்தன் எல்லா அரசர்களுடன் சிம்மாஸனம் விட்டெழுந்து சென்று, முனிவனையும் சக்ரவர்த்தியையும் நமஸ்கரித்து அஞ்சலியஸ்தனாய் நல்வரவு கூறி சுந்தரன் சுகுணன் முதலினோரையும் தழுவிப் பொற்பீடத்தின்கண் ணெழுந்தருளுவித்து அவர்கள் அனுமதியால் தானுமோர் பீடத்தில் வீற்றிருந்தனன்.

அவ்வேளையில் சாருமதி, சம்பகாவதி, சித்திராங்கி முதலிய மங்கையர்கள் அந்தப்புறத்தையடைந்து மனோரமை நன்குமதித்து உபசரிக்கும்படி தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட மாளிகைகளில் தங்கியிருந்தார்கள்.

இங்ஙனங் கல்யாணமண்டபத்தில் கடககுண்டல ஹாரகேயூர மகுடமுதலிய திவ்வியாபரணங்களினால் அலங்கிருதர்களாய் காந்தியை வீசிக்கொண்டிருக்கின்ற இரண்டு இளஞ் சூரியர்கள் போன்று விளங்குகின்ற சுந்தரசுகுணர்களைக்கண்ட அரசகுமாரர்கள் அவ்விருவர்களில் சுந்தரனதுபுன்னகையோடு விளங்குகின்ற முககமலத்தையும், மேருமலையைப்போல் பருத்துயர்ந்த இரண்டு புயங்களையும், அம்மலையினின்று மிறங்கியோடுகின்ற அருவிகளைப் போல் வெண்பட்டுத்தரீயம் தாழ்ந்துகிடக்கின்ற அழகியமார்பு திருமகளுக்கு நர்த்தனச் சபைபோல் தோன்றுவதையும், கண்டு வியந்து இவனது உருவத்தைக் கண்ட நமதுமனது இவனோடுசிநேகித்துச் சல்லாபமாயிருக்கக் கருதிச்செல்கின்றமையால் இந்திராணிமுதலிய தேவஸ்திரீகளும் இவனைக் கண்ட தக்ஷணம் மோகிப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் சுலோசனை அவளழகுக்கிசைந்த இவனுக்கன்றி நமக்கப்பெண்மணி கிடைப்பது துர்லபந்தான்;" என்னு மேக்கத்துடன், கடைக்கண்களால் அச்சுந்தரனை அடிக்கடி பார்த்தும், பாராதவர்களைப் போல் இறுமாப்புடனிருந்தார்கள்.

பின்னர் சாருதத்த மகாராஜன் சிம்மாசனத்தினின்று மெழுந்து நின்று சொல்வானாயினான்.

"ஓய் இராஜகுமாரர்காள்! உங்களுக்கு யான் தெரிவித்துக் கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுளது. அஃதென்னையெனின் எனதருமைப் புதல்வியாகிய சுலோசனைக்கு சுயம்வரப்பத்திரிகை எல்லாதேயத்தரசர்களுக்கும் அனுப்பி யிருப்பதை யுணர்ந்த மங்கை நேற்றுக்காலையில் சிங்காரத் தோட்டத்தில் தனதிஷ்டதேவதையாகிய லோகமாதாவை யருச்சித்துத் துதிபுரிந்து சகலகலைகளில் வல்லவனும், சக்ரவர்த்தியுமான ஓர்கொழுநனை யான் மணம் புரியத்தந்தருளுமாறு இதுகாறும் பிரார்த்தித்துவந்தும் அருள் புரிந்திலையாதலின் பங்கேருகத்தைப் பழிக்கும் நின்சிற்றடிகளில் என்னைச் சேர்த்தருள்வாயாக வென்று உயிர்துறக்கப் போந்தருவாயில், அம்பாள், அம்மாது கனவிற் றோன்றி யருளிய வண்ணம் சுசீலசக்ரவர்த்தியின் குமாரனாகிய இச்சுந்தரமகாராஜன் முதலில் தன் கண்களுக்குப் புலப்பட்டுத் தோன்றிக் காத்தருளினமையால் தனக்கிசைந்தகணவனாக இம்மகானுபாவனை சுவயமாக வரித்துக் கொண்டிருப்பதுதான்" என்று சொல்லி சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

இவ்வசனங்களைக் கேட்டவரசர்கள் மிக அதிசயித்து, நாம் கருதியது சரியாய் முடிந்ததுபோலுமிருக்கிறதென்று தங்களுக்குள் வியந்து கொண்டிருக்கும் பொழுது அவ்வரசர்களைப்பார்த்து, கிருபாகடாக்ஷ மகாமுநிவர், "கேளுங்கள், மண்டலாதிபர்களே! இந்தசுலோசனையின் சரித்திரத்திற்குச் சாட்சியாக இன்னொரு விசித்திரமிருக்கின்றது. அதாவது இக்காமபால ராஜகுமாரியாகிய சண்பகாவதியை ஊழ்வினைப்படி துர்முகனென்னுமரக்கன் எடுத்துக் கொண்டுபோய் பிலத்வாரத்துக்குள்ளிருந்த தனது கோட்டையில் காவலாக வைத்திருந்தான். அந்நாளில் இக்கன்னிகை ஓர்வித தந்திரமாய் அவ்வரக்கன் அனுமதியின்படி அந்நகரத்துக் காளி கோயிலையடைந்து அகோரதவம் புரிந்தாள். அத்தவத்திற்கு மெச்சியதேவி அவள் கருதியவண்ணம் துர்முகனை

யழிக்கவும் ஓர் சத்புருஷனை அவள்பால் சேர்ப்பிக்கவும் கருதி சுலோசனையின் உத்யானவனத்திலிருந்த சுகுணசுந்தரர்களுக்கு மாலையும் செண்டுமாக விழ, அதனையேற்ற அவர்கள் செண்டில் வைக்கப்பட்டிருந்த பொற் சுருளால் இவ்வரலாற்றை யுணர்ந்து உடனே அவண் சென்று தூர்முகனைக் கொன்று சண்பகாவதியும் அவள் கோரிக்கையின்படி சுகுணனால் அங்கீகரிக்கப்பட்டு இச்சங்கதிகளை இக்காமபாலனுக்கு கிங்கரனாற்றெரிவித்து எல்லோருமாய் இதே காலத்தில் சுகுணனுக்குச் சம்பகாவதியைத் திருமணஞ்செய்விக்க உத்தேசித்து வந்திருக்கின்றார்கள். ஆகையால் இச்சுகுணனைப்பற்றிய விஷயங்கள் காமபாலனுக்கும் சம்பகாவதிக்கும் தெரிந்திலவாயினும் கடவுளின் அமைப்பின்படி தம்பதிகளாக சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். அதுபோலவே சுந்தரனுக்கும் சுலோசனைக்கும் மணம்புரிவிக்கக் கடவுள் எண்ணியிருந்தால் யார் என்ன செய்யலாம்." என்றார்.

(இன்னும்வரும்.)

டி. எஸ். சுப்பராமையர்.

REVIEWS

## நமதுபார்வைக்குவந்த புஸ்தகங்கள்.

### 1. காந்திமதி.

இது "விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்" என்னும் தலைப்பின் கீழ் சென்னை அறிவைப் பரவச் செய்யும் ஏஜன்ஸியார் வெளியிட்டுவரும் உத்தம கிரந்தங்களில் கடைசியாய் வெளியான ஓர் அற்புதமான நவபவக்கதை. இது இங்கிலீஷில் இவ்விதக்கதைகள் சொல்வதில் மகாவிற்பன்னராக விளங்கிய ஸர் வால்டர் ஸ்காட் என்னும் கதாசிரேஷ்டர் "டாலிஸ்மான்" என்னும் பெயராலியற்றிய கதையின் உட்கருத்தை மேற்கொண்டு இந்தியாவில் இந்திய சரித்திரத்திற்குப் பொருந்த அமைத்து அதிசாதுர்யமாய் கே. வி. சுப்பய்யா ஐயர் அவர்களாலியற்றப் பட்டது. இது விவேகசிந்தாமணியிலிருந்தெடுத்துப் பதிப்பிக்கப் பட்டதால் இக்கதையை விவேகசிந்தாமணியை யொழுங்காய்வாங்கி வாசித்துவருவோர் நன்றாயறிவார்கள். அறியாதவர்களுக்கு இக்கதையின் நீதிசாரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி விளங்கவைப்போம். விஜயநகர் மகாராஜ்யம் உந்நதபதவியிலிருந்து தென்னிந்தியாவுக்கெல்லாம் தலைமை பூண்டராஜ்யமாக விளங்குகையில் அக்பர் சக்ரவர்த்தி அதன்மீது படையெடுத்து வந்து போருக்குச் சித்தமாய்ப் பாளயமிறங்கியிருக்கிறார். விஜயநகர் மகாராஜா கிஷ்ணராயர் தம்முடைய சிற்றரசர்கள் சேனைகளோடு அவரை யெதிர்த்துப் போர் செய்யத் தயாராய் போர்க்களம் வந்து சேர்ந்து விட்டார். சோழராஜனைத் தவிர மற்றத் தென்னிந்தியா சிற்றரசர்களெல்லாம் விஜயநகருக்குக் கப்பங்கட்டு மரசர்களாதலால் போர்க் கோலங்கொண்டு விஜயநகர் வந்து சண்டைக்கு முஸ்திப்பாகப் பாளயமிறங்கியிருந்தார்கள். சோழதேசத்தரசனுடைய ஏகபுத்திரனும் சுத்தவீரனுமாகிய இளவல் போர் முகத்துத் தன் வல்லமையைக் காட்டிப் பிரதாபம் பெற நினைத்துக் கோலமாறி தான் இராஜகுமாரனென்பதைத் தெரிவிக்காமல் சாதாரணமான படைவீரன் போல் சென்று கிஷ்ணராயர் சேவகத்திற் புகுந்து தன்னுடைய புத்தியுத்தி சாமர்த்தியத்தாலும் யுத்தத்திற்காட்டிய வீரத்தன்மையாலும் பேரும் புகழும் பெற்றதன்றி கிஷ்ணராயரால் மெச்சிக்கொண்டாடப் பெற்று அவருடைய சைனியத்தில் முக்கியமானதளபதி யந்தஸ்தும் பெற்று அவருடையமனதுக் குகந்தவனும் அவர் நம்பிக்கைக்குத் தகுந்த பாத்திரனுமாய் விளங்கினான். இப்படியிருக்கையில் கிஷ்ணராயருக்கு திடீரென்று சுரம்வந்து பிழைக்கரியஸ்திதியிலிருந்தமையால் மஹாவீரனும் சத்ருஹ்ருதயனுமாகிய அக்பர் அவரைத் திடீரென்று பிடித்தபிணி நீங்குமட்டும் சமாதானமாயிருக்க உடன்பட்டான். அப்பொழுது கிஷ்ணராயரின் குலகுருவாகிய மகரிஷியாச்ரமத்தில் அவருடைய பூஜைகாலத்தில் தீபாராதனை தரிசனம் செய்து பிரசாதம் வாங்கிச் செல்ல மஹாராணியும் அவள் குமாரத்தியாகிய காந்திமதியும் வர, அம்மகரிஷியின் கருணைக்குப் பாத்திரனான போர்வீரன் அவருடைய ஆச்ரமத்திலுள்ள வில்வ மரத்தடியில் நிஷ்டையிலிருந்தான். அப்பொழுது அவன் காந்திமதியைக்காண, காந்திமதியும் அவனைக்காண இருவர் நயனங்களும்



சந்தித்தன. அவர்களிருவர் கண்களும் கண்டு கலந்ததில், அவர்கள் கருத்தும் கலந்து, மனோலயப்பட்டுக் காதல் பிறந்தது. உண்மையான காதலின் வன்மையை உரைக்க யாராலாகும். அதுவரம்பிலா வன்மையுடையது. சூதிலாச் சூக்ஷ்மமுடையது. எதையும் வெல்லும். எதையும் பொறுக்கும். அன்பிற்கன்பே யீடன்றி வேறெதுவு மீடாகாதல்லவா! தேகம், மனம், உயிர், உலகம் எல்லாம் உண்மையன்பின் அனுபவத்திற்காக உண்டான கருவிகரணங்களேயன்றி இவைகளால் அதற்கு வேறு பிரயோசனமில்லை. இப்பொய்யுலகம் உள்ளன்பின் உண்மையுணராது பேரென்றும் புகழென்றும் கீர்த்தியென்றும் நாமரூபகர்மாதி பேதங்களாலுண்டாகும் வேற்றுமைகளை சதமென்று நம்பி அன்பின் வழியறியாது அதற்கு மாறாய் நடப்பதே வழக்கமாயனுசரித்து வருகிறது. அன்பின்வழி சத்தியவழியென்றும் அன்பின் நிறைவே எங்கும் பரிபூரணமான சத்திய நித்தியப் பொருளென்றும் மாயைவசப்பட்ட மானிடர் அறிகிலார்; ஆகையால் அவர்கள் எப்பொழுதும் உண்மையான அன்புக்கு உள்ளபடியிடரே விளைத்து வருவார். ஆனால் அவர்கள் இடர் விளைப்பதாகத் தொடர்ந்து செய்வதெல்லாம் அக்னியில் ஆகுதி செய்தவிக்க யத்தனிப்பது போல் அன்பை யடக்குவதற்கு பதிலாக அதை வளர்ப்பதாயிருக்கிறதென்னு முண்மையை அவர் உணர்கிலார். ஆகையால் உள்ளன்புக்கு எப்போது மிப்பொய்யுலகில் இடர் மிகுதியேயாயினும் கடைசியில் அது தன்வலியினால் ஜயிப்பதுமட்டும் நிச்சயம். அப்படி இவ்விருவர்க்கு முண்டான உண்மைக் காதலைத்தடுக்க என்னென்னவோ பிரம்மப்பிரயத்தனங்கள் செய்தும் எல்லாம் மேலுக்குப் பங்கம் விளைப்பதுபோல் தோன்றி உண்மையில் உள்ளன்பின் வன்மையை விளங்கச் செய்வதாகவே முடிந்தன. உள்ளன்பின் சக்தியையும் உண்மையின் மகிமையையும் உள்ளபடியுணர விரும்புவோர் இக்கதையின் முதலதிகாரத்தில் முளைத்த இவ்வதிசய அன்பு வரவரவளர்ந்து எத்தனையோவில்லங்கங்களைவென்று இரும்பைப்பொன்னாக்கும் பரிசவேதியைப் போல் அதைத் தொடர்ந்துற்ற இடர்களை யெல்லாம் அதன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள வழிகாட்டும் சுடர் விளக்குகளாக மாற்றிக் கடைசியில் அசத்தியமும் அக்கிரமமும் "தன்வினைதன்னைச்சுடு"மென்ற மூதுரைப்படி அகஸ்மாத்தாக நேர்ந்த சம்பவங்களால் அடியோடு அழிந்துபோக, அன்பும் சத்தியமும் அதற்குற்ற துன்பங்களையெல்லாம் பொறுத்துவென்று; புடம் போட்டதங்கம் அக்னியினின்றும் பொன்னாய் வெளிவந்து உலையில் காய்ச்சி சுத்தியாலடித்ததெல்லாம் அதிலுள்ள கலவைகளைமட்டு மொழிக்கு சாதனமாகிக் கடைசியில் பழுக்கக் காய்ச்சிய பொன்னை பத்தரைமாத்துப் பழுதிலாத்தங்கமாக விளங்கவைப்பதுபோல: இவர்கள் அன்பும் குமாரனுக்கும், குமரிக்கும் காமவேட்கையாலுண்டான சிற்றின்ப மளிப்பதாகமட்டுமின்றி "ப்ரக்ஞானம் பிரம்மம்" என்று சொல்லிய மகாவாக்கியத்திற் கிலக்ஷியமான பிரம்மானந்தம் விளைக்கும் பேரன்பாகமாறி விளங்கலாயிற்று. இப்படி அதியற்புதமாய் வளர்ந்து முதிர்ந்த இவ்வன்பின் சரிதையை சாங்கோபாங்கமாயுணர விரும்புவோர் இப்புஸ்தகத்தை வாங்கி அடிமுதல் முடிவுவரையில் வாசித்துக் கடைசியதிகாரத்தில் கண்ட "அதிசயத்தின் மேல் அதிசயம்" விளைந்ததையுணர்ந்து அதிசயித்து எல்லாம் "ஸர்வமங்கள சம்பூரணம்" ஆகவே முடிந்தது கதையின் விசேஷம் என்றுமட்டு முன்னுமல் உண்மை விதியை உள்ளபடி யெடுத்து தகரிப்ப தாயிருப்பதால் அதுவே இக்கதையின்சிறப்புமாமென்று நம்மோடு ஒருமனப்பட்டுகப்பார்களென்பது நிச்சயம். நம்வார்த்தையை நம்பி இப்புஸ்தகத்தை வாங்கி வாசிப்போர் அடிமுதல்கடைவரையில் அதிரசமான இன்பம் பயக்கும், தெவிட்டாத் தெள்ளமுதுக் கொப்பான கதாமிர்தபானம் செய்வார்கள். ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பெயரும் போகப் போகப் படிப்பவர் மனதை வசீகரப்படுத்துமியல்புடையதாயிருக்கும்.

### 2. திருவாவடுதுறைக் கோவை.

இது திருவாவடுதுறை யாதீனத்துத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரியற்றியது. ஷை ஆதீனகர்த்தர் விருப்பத்தின்படி கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய உத்தமதானபுரம் பிரம்மஸ்ரீ

வே. சாமிநாதையரவர்களால் பலபிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து, முகவுரை நூலாசிரியர் வரலாறு, நூலாராய்ச்சி, அரும்பதவுரை முதலிய விசேஷ அமைப்புகளோடு வைஜயந்தி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இப்புத்தகத்தையும் இதை ஆராய்ந்துப் பதிப்பித்தவர்சிறப்பையும், இந்நூலாசிரியர் மேன்மையையும், முன்னிவ்வாதீனமிருந்த மேன்மையையும் இப்பொழுது அதிருக்கும் தாழ்மையையும் உள்ளாயுங்கால் நம்மனத்தில் பலவிதமான எண்ணங்களுதித்து மறைந்து, சொல்லொணாச்சுற்றுச்சுழற்சி யுண்டுபண்ணுகிறது. இப்புத்தகத்தின் பதிப்பாசிரியர் எழுதியிருக்கும் முகவுரையில் இந்நூலைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:— "கோவை யென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றியாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று: காட்சி முதலிய துறைகள் முறையே கோக்கப்பட்ட நூலென்பது இம்மொழியின் பொருள்; இந்து ஐந்திலக்கணங்களுள் பொருளின் பகுதியாகிய அகப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது; குறிஞ்சித்திணை முதலிய ஐந்திற்கும் உரியனவாக முன்னோர்கள் விதித்தமுதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்கள் முகமகாத் தலைவன் தலைவிகளுடைய ஒழுக்கங்களை, உலகவழக்கம், செய்யுள் வழக்கமென்னுமிரண்டிற்கும் ஒப்ப நன்கு தெரிவிப்பது; இதனால் இந்நூல் **ஐந்திணைக்கோவை** யென்றும் பெயர் பெறும்."

இத்திருவாவடுதுறைக் கோவையென்பது திருவாவடுதுறையிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமாசிலாமணியீசர்மீது ஷெ யாதீனத்துச் சுப்பிரமணிய முனிவரியற்றியது. இவர் இற்றைக்குச்சுமார் 113-வருஷங்களுக்கு முன்னிருந்தவராகத் தெரியவருகிறது. இவருக்கு வித்தியாகுரு சிவஞானபோதத்தின் திராவிட மகாபாஷ்யகர்த்தராகிய ஸ்ரீசிவஞான முனிவர். இவருடைய ஞானகுரு திருவாவடுதுறை யாதீனத்தில 13-ம் பட்டத்திருந்த அம்பலவாண தேசிகரெனத் தெரியவருகிறது. இவருடையவரலாறு எழுதிய பதிப்பாசிரியர் பின்வரும் விசேஷகுணங்கள் இவரிடத்தமைந்திருந்தனவாகத் தீட்டியிருக்கிறார்:—"வித்தியாகுருவினிடத்தும், ஞானகுருவினிடத்தும் இடைவிடாத மெய்யன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, கல்வியான்களை ஆதரித்தல் நன்றிமறவாமை, மேன்மேலும் நூல்களையாராய்தல், அழுக்காறின்மை, பிறர்பாலுள்ள குணங்களைப்பாராட்டல், ஸ்தல யாத்திரை செய்தல் விருப்பம்; யாவர்க்கும் பொருள் விளங்க எளிய நடையாக விரைவில் எவ்வகையான செய்யுட்களையும் செய்யும் வன்மை, ஸங்கீதப்பயிற்சி ஆகிய இவைகள் இவர்பால் அமைந்திருந்த விசேஷகுணங்கள்." இவர் தொட்டிக்கலையென்னுமூரில் ஆசாரிய பதவியும் பெற்று விளங்கினரென்று தெரியவருகிறது. இவருடைய கிரந்தத்திலமைந்துள்ள அருமை பெருமைகளையும், இவர் பாடிய பாடல்களில் பொதிந்துள்ள அதிமேலான உண்மைப் பொருளையும் சிந்திக்குமிடத்து மெய்ஞ்ஞானசித்திபெற்ற மாதவரேயென்று நினைக்கத்தடையில்லை. இவர் இப்படியாயின் இவருடைய ஞானகுருவாகிய 13-ம் பட்டத்திருந்த அம்பலவாண தேசிகரின் மெய்க்கீர்த்தி யெப்படிப்பட்டதாயிருக்கவேண்டுமென்பது சொல்லாமேயமையும். ஆதியில் திருமூல நாயனார் தங்கியிருந்து திருமந்திரம் இயற்றிய இத்தல மகிமை எப்படிப்பட்டதென்று நாம் வர்ணிக்கத் தேவையில்லை. அப்படிப்பட்ட அபூர்வ மகிமை வாய்ந்த தலத்தின் மேன்மையைக் கோவையாக வியற்றி மெய்யன்பர் மனமகிழச் செய்ததும், அதை யாவரும் படித்து மகிழும்படி பதிப்பித்ததும் மிகச்சிலாகிக்கத் தக்கதே. இதைப்பதிப்பித்தமஹாவித்வானின் வல்லமையைப்பற்றிப் புகழ்வது நமக்கு முறையன்று. ஏனெனில் அவரைப்புகழ அவரிலும் மேலான சக்தி வாய்ந்திருத்தல் வேண்டும். அது நம்மிடத்தில்லையாம். அவர் வழக்கம் போல் சிரமத்தைப் பாராட்டாது வித்தையிடத்து அவருக்குண்டான உள்ளன்புகாரணமாக ஊக்கமேற்கொண்டு, 'செய்வன திருந்தச் செய்' என்னும் அவர் கொள்கைக்கிணங்க அவர் தொட்ட காரியத்தை முட்டறச்செய்து முடித்துளார். தமிழ்ப்பாஷையை அலக்ஷியம் செய்து அதைக் கற்பதினால் பயனில்லை யென்போர் பிரம்மஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்த கிரந்தங்களை ஆராய்ந்து பார்க்கும் சக்திவாய்ந்து அப்படிச் செய்தாலும் சரி, அல்லது அவருடன் நேரிற் பழகி, சம்பாஷித்து அவரிடத்து விளங்கும் குணமகிமைகளையும் அறிவின் பெருமையையும் அறிந்தாலும்சரி [illegible] உடனே



தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிவிடுவார்களென்பது திண்ணம். ஆகையால் அவரது அருமை பெருமையை உள்ளபடி யுணர்ந்து கொண்டாடக்கூடியவர் அவரிடத்து அளவிலாமதிப்புவைத்துச்சிறப்புச்செய்து பாராட்டத்தக்கதேயன்றி மற்றப்படி அவரை ஆதரித்துப் பேசுவதாக நடிப்பது அபசாரமாகும். உண்மையில் அவர் அபார உழைப்பையும், வித்வத் சாமர்த்தியத்தையும், பொறுமையையும், பூர்ண குணத்தையும் மெச்சிப் பேச யோக்கியதையுள்ளார் நம்முள் வெகு அபூர்வமாயுள்ளார். அவருடையதற்காலநிலை மனிதருடைய புகழ்ச்சி யிகழ்ச்சிக்கு மேற்பட்டதாகப் போய்விட்டது. அவர் ஊருக்குழைக்கவில்லை உலகுக் குழைக்கவில்லை, பேருக்குக் கீர்த்திக்கு முழைக்கவில்லை. தமிழனிடத்து அவர் வைத்த அன்பு அவரை அதில் லயிக்கச்செய்துவிட்டது. அன்பில் லயித்து அன்பிற்குழைப்போர் அன்பு பெருகி அன்பேயாவர். அதுவே யவர்களுக்கு எல்லாப்பயனுமளிக்கும்பாக்கியமாம்: பேரருள் நல்கும் புண்ணியமாம்.

"முத்தி யென்னப்படும் மங்கையைச் சேரமுயல் [பவருஞ்
சத்தியென்னப் படுமீசனருளன்றிச் சார்தலுண் [டோ"

என்றபடி, அன்பிலுழைத்து அன்புவளர்த்து அன்பில் லயிக்கப் பெற்றவர்களீசனருள் பெற்றபாக்கியவான்களாதலால், அவர்கள் எல்லாச் செல்வங்களிலும் அழியாச் செல்வமான பேரின்பம் பயக்கும் "முத்தி யென்னப்படும் மங்கையை" ச்சேரவரும் மணாளராவார்கள். அவர்களுக்கு உலகத்தார் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றே.

அது அப்படியாயினும், உலகத்தாருய்ய அவர்கள் தம்கடமையைக்குறைவறச்செய்து தீர்த்தல் வேண்டுமே. இதை நினைக்கும்போதுதான் நம் எண்ணம் ஸ்வர்க்கமத்தியபாதாளமூன்றும் ஒருங்கே சுற்றிவரவேண்டியதாயிருக்கிறது. குருவைப் போலிருப்பான் சிஷ்யன். இப்பொழுது குருவிருக்கும் நிலைமையோ சொல்லற்பாலதாயில்லை. ஆதியில் மஹாத்மாக்களிருந்த குருபீடங்கள் துராத்மாக்களால் வகிக்கப்பட்டு, சத்தியமும், சிவபக்தியும், மெய்ஞ்ஞானமும், அடியார் குழாமும், விளங்கிய தலங்கள், அசத்தியமும், ஆபாசமும், கழுத்தில் தாவடமும் மனதில் அவகடமும் நிறைந்த ஆஷாடபூதிகள் கும்பலும் நிறைந்து, மெய்ஞ்ஞானத்திற்குப் பதிலாகப்பொய்ச்சாக்ஷியும், தத்துவாராய்ச்சிக்குப் பதிலாக, சட்ட ஆராய்ச்சியும், காமநுகர்ச்சியும், இவற்றின் பரிவாரத்தில் வரும் அடிதடி சண்டை, மண்டை யுடைதலும், அடிவாரண்டு பிடிவாரண்டுக்குப் பயப்பட்டு ஒளிந்து திரியும் தம்பிரான் சாமிகளால் எம்பிரான் கோயிலும் தலமும் குறைவெய்தி ஜனங்களுக்குள் ளெல்லாமேச்சுப் பேச்சாய் விளங்குகிறது. இராஜாங்கத்தார் மதவிஷயத்தில் பிரவேசிக்கிறதில்லையென்றது பசுத்தோல் போற்றியபுலிகளுக் கொப்பான துறவிவேடம் பூண்ட பிறவிக் குருடராம் பாதகர்களுக்குத் தற்காலம் பெருநலம் விளைப்பதாக முடிந்திருக்கிறது. பூர்வத்தில் சத்தியம் பரவி சாத்விகம் மேலிடுப்பதற் கென்றேற்பட்ட ஸ்தாபனங்களும் அவைகளைச் சேர்ந்த அளவற்ற திரவியங்களும், தேசத்துக்கும், ஜனங்களுக்கும், இராஜ்ஜியத்துக்கும் கேடுவிளைக்கத்தக்கதாக பொய்ச்சாக்ஷி, பொய்வழக்கு, அடிதடிசண்டைகளில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மடத்தலைவர் அக்கிரமஞ் செய்து காராக்கிரகவாசம் புகுந்தார். ஒருவர் கொலையாளிகைக்கிரையானார். ஒருவர் ஊரை விட்டோடி ஒண்டி யொளித்து இரவைப்பகலாக்கி, பகலை இரவாக்கிக் கொண்டு, அநியாய அக்கிரமங்களில் மூழ்கித்திரிகிறார். மற்றொருவர் காமத்தில் மூழ்கிக் கண்பஞ்சடைந்து கிடக்கிறார். இப்படி யின்னுமெத்தனையோ பேர் துறவு பூண்டு மறைவில் தாசியுறவு தேடித்திரிகிறார். இவர்கள் கெடுவதில் இவர்கள் மட்டுமழிந்து போவதாயிருந்தால் நாம் அவ்வளவு வருத்தப்படவேண்டியதில்லை. இவர்கள் துறவுவேஷம் பூண்டதினாலும், மடாதிபதிகள், மதாசாரியர்கள், என்று பட்டங்கட்டிக் கொண்டு பெருமிதமா யேற்பட்ட தர்மநிதிகளைத் துர்விநியோகப்படுத்தி வருவதாலும், தேசம், மதம், ஜனம், இராஜ்ஜியம், எல்லாவற்றிற்கும் உண்மையில் அளவிடக்கூடாத தீங்கு விளைத்து வருகிறார்கள். இவர்கள் மென்மேலும் அக்கிரமத்தில் மூழ்கி வருவதில் ஒரு ஆறுதலுண்டு. இரவில் நிசியதிகரிக்க அதிகரிக்க இருட்படலம் அதிகமாயுலகை மூடிக்கொள்வ துண்மையாயினும், பகல்பொழுதும் சமீபித்துக் கொண்டு வருவது நிச்சயம். இருட்டு அதிக

ரிக்க அதிகரிக்க விடியற்காலம் கிட்டி விட்டதென்கிற நம்பிக்கை யுண்டாவதுபோல் இவர்கள் அக்கிரமம் அதிகரிக்க அதிகரிக்க விமோசனகாலம் கிட்டி வருகிறதென்கிற எண்ணம் சாதுக்கள் மனதுக்கு ஆறுதலைக்கொடுத்து சாந்த விருத்தி செய்து வருகிறது. பகவான், உலகத்தில் அக்கிரமங்களதிகரித்துத் தலையெடுத்த போதெல்லாம் தான் அவதாரமாகித் தர்மத்தை நிலை நிறுத்துவதாகச் சொல்லியது பொய்யல்ல: மெய்யே. உளக்கண் பெற்றோர் உண்மையைக்கண்டு களிப்பார்.

"ஞானமிலாரவேடம்பூண் டிந்தநாட்டிடை
யீனமதேசெய்திரந் துண்டிருப்பினு
மானநலங்கெடுமப் புவியாதலா
லீனவர்வேடங்கழிப்பித்தலின்பமே."

—**திருமந்திரம்.**

இவ் "ஈனவர் வேடங்கழிப்பித்தல்" இராஜாங்கத்தார்கடமையாம். இக்காலத்தில் நமது இராஜாங்கத்தார் தாங்கள் அந்நிய மதஸ்தர் என்கிற காரணம் பற்றி இதுவிஷயங்களில் ஒதுங்கிநிற்க உடன்பட்டிருப்பதால், அக்கடனை நம்மளவிற்கு நாம் தீர்த்துக் கொள்ளவேண்டியதாயிற்று.

## சஞ்சோக்தை சுயம்வரம்

அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### *XIX ஒரு பாரதியும் அவர் பரிவாரங்களும்.

ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

"மண்கண்ட வெண்குடைக் கீழாமேற்பட்டமன் [னருமென்
பண்கண்டளவில் பணியச்செய்வாய் படைப்போ [ன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் [விளம்பிலுன் போல்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலா வல்லியே."

காஞேஜில் இப்படி உத்ஸவாரம்பம் நடந்து வருகையில், டில்லியி ல்ப்ரித்விராஜா செய்தி யென்னவென்றுபார்த்து வருவோம். அவன் காஞேஜாக்கு வந்துதங்க விக்ரஹத்தை யபகரித்துப் போனது முதல் மறுபடியும் காஞேஜாக்கு வந்து ஜயசந்தராஜன் செய்யும் யாகத்தைக் கலைத்துஅவர் புத்திரியை பலாத்காரமாக வெடுத்துக் கொண்டு போய்க் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் சதா அவனுள்ளத்திலிருந்து உறுத்திவந்தது. அவன் தன்னுடைய இராணிகள் ஒவ்வொருவரிடத்தும் காஞேஜாக்குப் போகவேண்டுமென்று சொல்லிவர அவர்கள் அவனை விட்டுப்பிரிய மனமற்றவர்களாய காலத்துக்கேற்றபடி சாக்குப் போக்குச சொல்லி அவனை முறையே ஒவ்வொருவரும் தத்தம்மிடம் இருத்திக் கொண்டு விட்டார்கள். இப்படி கிட்டத்தட்ட ஒரு வருஷமும் கழிந்து, வசந்தகாலம் மறுபடியும் சுற்றிக் கொண்டு வந்தது. ஒருநாள் அவன் உத்யானவனத்தில் தனியாகவிருக்கும் பொழுது குறத்தி ஒருத்தி பக்ஷி விற்கிறதாகச் சொல்லி, அதிசயமான ஒரு புறாவையும் கிளியையும் கூண்டிலடைத்து அவனிடம் கொடுத்து வெகுமதி பெறவந்திருக்கிறதாகச சொல்ல, அவைகளைப் பெற்றுக் கொண்டு அவளுக்கு கனத்த வெகுமதி கொடுத்து அனுப்பி விட்டான். அப்புறாவின் கண்டசரம் அதிவிநோதமாக விருக்கக்கண்டு அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில் அதில் ஒரு ஸ்லோகம் அதிசயமாக அமைக்கப் பட்டிருப்பதைக்கண்டு வாசித்து உடனே அப்புறாவைக்கால் விலங்குதரித்துப் பறந்துபோக விட்டுக் கிளியை மட்டும் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான். **ப்ரித்விராஜா** அக்கிளியைத்தன் மஞ்சத்தருகே கட்டித் தொங்க விடச்சொல்லி நித்திரை செய்கையில் நடுச்சாமத்தில் ஒரு இனிய குரலோசைகாதில் விழக்கேட்டு விழித்துக்கொண்டு பின்னுமதை உற்றுக்கேட்டான். அப்பொழுது அக்கிளி இனியகுரலில் ஒரு பதம்பாட அதைக்கேட்டுத் தூக்கம் நீங்கி, உடனேதான் காஞேஜாக்குப் புறப்படவேண்டுமென்று தீர்மானித்தான். தீர்மானிக்கவும் தனது குருவுக்கு அதுசெய்தியைத்தெரிவித்து, தன்னுடைய **சாமந்த**வீரர்களெல்லாம் அவனோடு புறப்பட உடனே தயாராகவேண்டுமென்று சொல்லியனுப்பினான்.

சைத்ர மீ 3௳ ஆதிவாரம் ப்ரித்விராஜா டில்லியைவிட்டுப் புறப்பட்டான். அவன் தன்னோடு 100 சாமந்த வீரர்களையும் ஒவ்வொரு சாமந்தருடனும் 10-க்குதிரைவீரர்களையும் பொறுக்கியெடுத்துக்கொண்டு "**அந்தர்வேதி**" க்கு யாத்திரை போவதாகச சொல்லிப்புறப் பட்டான்.

* Continued from Vol. VIII, NO. 12, P. 358.



ப்ரித்விராஜா தன்னிடம் பிரதானியாயிருந்த **கைமாஸ்** என்பவனை அந்தப்புரத்துப் பெண்களில் ஒருத்தியான கர்ணாவதியோடு காமவேட்கை கொண்டானென்று அவன் தலையை வாங்கி விட்டான். காலியாயிருந்த அவனுடைய ஸ்தானத்தில் அபூ அரசனை **சுலக்ஷண ஸிம்மனை** இப்பொழுது முதல் மந்திரியாக நியமிக்கலானான். மந்திரியினுடைய இலக்ஷணங்களைச் சொல்லுங்கால், **சந்துபாரதி**, அமைச்சன் ஆற்றல் நிறைந்தவனாகவும், சிற்றரசர்கள் மதிக்கத்தக்கவனாகவும், லஞ்ச பரிதானங்களால் அசைக்கப்படக்கூடாத இழுக்கற்ற சத்வகுணமுடையவனாகவும், ஆகிருதியில் உயர்ந்தவனாகவும், பகைவரை வெல்லும் சக்திவாய்ந்தவனாகவும், பரிசுத்த வம்சத்தி லுதித்தவனாகவும், ராஜதந்திரங்களில் தேர்ந்தவனாகவும், ஸ்திரீகள் மயலில் சிக்காத சாந்தகுண சீலனாகவும், துராகிருதமாக அரசன் செல்வத்தை யதிகரிக்கச்செய்ய விரும்பாதவனாகவு மிருக்கவேண்டுமென்கிறார். இக்குணங்களெல்லாம் யாரிடத்தொருங்கமைந்துள்ளனவோ அவனே பிரதானியாக விருக்க யோக்கியன். இக்குணங்களெல்லாம் இந்த சுலக்ஷணனிடத்தில் பொருந்தியிருந்தன. அன்றியும் ப்ரித்விராஜாவின் இராணிகளில் ஒருத்தியான 'இஞ்சினி' தேவிக்குத் தகப்பனுமாயிருந்தான். இவனுடைய பேரை டில்லியிலுள்ள ஜயஸ்தம்பத்தில் இன்றைக்கும் காணலாம். இவனை மந்திரி ஸ்தானத்திலும் சித்தூர்வம்சத்து இரகுவம்ஸியைத் தானில்லாதகாலத்து டில்லியைக்காத்துவர ஸ்தானாதிபதியாகவும் நியமித்து **சந்துபாரதி**யோடும், 100–சாமந்தர்களோடும் சூரர்களோடும் பிரயாணத்துக்குப் புறப்பட்டான். ப்ரித்விராஜா தன்னுடைய 12 இராணிகளிடமும் சென்று ஒவ்வொருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு இராத்திரி 2-முகூர்த்தமானதும் மூன்று முகூர்த்தத்தில் யாத்திரைகிளம்பினான். இரவிலே வெகுதூரம் நடந்து நடுநிசியில் ஒரு தோப்பிலிறங்கி யிளப்பாறத் தங்கினான். இராத்திரியோ மையிருட்டாயிருந்தது. இடையிடையே மின்னல் தோன்றி மறைந்து அந்நள்ளிருளின் கோரத்தை யதிகமாகத் தோன்றச்செய்தது. ப்ரித்விராஜா தன்னுடைய கூடாரத்தில் தனியாகப் படுத்து ஆயாசந்தீர இளைப்பாற நினைத்தான். அப்பொழுது ஒரு கூகை அவன் தலைக்கு மேலுள்ள ஒரு மரக்கிளையிலிருந்து 'கூ, கூ,' வென்று கத்தின சப்தம் அவன் காதில் விழுந்தது. அதைக்கேட்டான். இந்த அபசகுனத்தைக்கண்டு சிறிது சிந்தையுற்றான். மறுபடியும் உற்றுக்கேட்டான். உடனே அம்பையும் வில்லையுமெடுத்தான். "கூ, கூ" வென்ற சப்தம் காதில் விழுந்தது. அதைக்கொண்டு அந்த சப்தம் வந்த இடத்தை மனோசக்தியாலுணர்ந்து குறிவைத்து அந்த நள்ளிருளில் பாணத்தை விட்டான். 'கூ, என்கிற அடுத்த சப்தத்தோடு அக்கூகையின் உயிரும் அதை விட்டுப்போய்விட்டது. அவனுடைய சிரவண சக்தி அவ்வளவு நுட்பமானது. சப்தம் வந்தவழியை மனதால் குறிப்பிட்டுக்கொண்டு அக்குறி தப்பாமல் அம்பை யெய்ய அது அந்த சப்தம் வந்தவிடம் தப்பாமல் பட்டு அக்கூகையின் உயிரைக் கொள்ளைகொண்டது. அஸ்திரவித்தையில் அவ்வளவு தேர்ச்சிபெற்றவன். வானவித்தையிலும் மற்றப் போர்வகையிலும் இப்படியே அற்புதத்தேர்ச்சி பெற்றிருந்தான் அவன். பரதக்கண்ட முழுமையிலும் அவனிலும் மேலான யுத்தவீரன் வேறுயாருமில்லையெனப் புகழ்பெற்று விளங்கினான்.

முதலில் நேர்ந்த துர்ச் சகுனத்தை அவன் சாமர்த்தியத்தால் இவ்வாறு நீக்கிவிட்டு ப்ரித்வி ராஜாவும் அவன் சாமந்த ராஜாக்களும் மற்ற வீரர்களும் குதிரையேறிப் பிரயாணத்தை நடத்தினார்கள். அந்த **சாமந்த வீரர்கள்** ஒவ்வொருவரும் ஆயிரம் வீரர்களுக்குச் சமானமாகச் சொல்லலாம். பாரத யுத்தத்தில் போர் செய்த வீரர்களைப்போல் அவ்வளவு மேலான மஹாவீரர்கள். வெகுவேகங்கொண்டு வழி நடந்து காளிந்தி (யமுனை) நதிக்கரையில் வந்து மறுபடியும் இளைப்பாறத் தங்கினார்கள். காளிந்தியைக்கடந்து செல்லுகையில் இன்னும் சில துர்ச்சகுனங்கள் நேர்ந்தன. இந்த யுத்தத்தில் தான் வீழ்ந்து மடிவது திண்ணமென்று ப்ரித்விராஜாவுக்கு உள்ளத்தில் பட்டது. பட்டும் அவன் அஞ்சவில்லை. உற்சாக மேலிட்டு அவனுடைய சாமந்தர்களைச் சந்தோஷப்படுத்தி, "உதரம் பெருகும் யுத்த களத்தில் கங்கைக்கரை கண்களுக்குத் தோற்ற யுத்தமுனையில் வீழ்ந்து மடியக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்! அவர்களுக்குத்தான் இந்த மேலான கதிகிடைக்கும்: எல்லாருக்கும் கிடைக்குமா

"என்ன?" என்று சந்தோஷமாகப் பேசிக்கொண்டு சென்றான்.

* * *

வசந்தகாலத்தில் அரும்புவிட்டுள்ள மொட்டுகள் விடியற்காலையில் வாசனைவிட்டு மலருந்தருவாயிலிருந்தன. இளங்கொடிகள் அழகாய் மரத்தில் படர்ந்து விளங்கின. சாமந்தர்கள் அவைகளைப் பார்த்து ஆடவன் தோளைத்தழுவிய அணங்கைப்போல இவை விளங்குகின்றன பார் என்று சொல்லிச்சிரித்தார்கள். இந்த மொட்டுகளெல்லாம் நம்மைக்கண்டு முறுவலித்து மந்தகாசம் செய்து நம்மேல் மகரந்தப் பொடியைத் தூவித் திருவிழாக் கொண்டாடுகின்றதைப்பார் என்று சொல்லிச் சிரித்தார் சிலர். இப்படி வழியிற் கண்ட காட்சிகளைப் பார்த்து மனமகிழ்ந்து உல்லாசமாய்ப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் வழி நடந்து டில்லியிலிருந்து 32 கோசதூரமுள்ள 'யூஷான்' என்னும் ஒரு கிராமத்தில் தங்கி ஒரு முகூர்த்தம் இளைப்பாறி மறுபடியும் சவாரி புறப்பட்டார்கள். அது திங்கட்கிழமை விடியற்காலம்; கொஞ்சதூரம் வழிநடந்து செல்லவும் அவர்கள் ஒரு கிராமத்தைத் தாண்டிப் போக நேரிட்டது. அங்கே தொம்பங் கூத்தாடிகள் அறுபத்திநாலடிக் கம்பம்நட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். அக்கம்பத்தினுச்சியில் எழுவேல்கள் கட்டி அவ்வேல்முனைகளின் மேல் ஒருதொம்பச் சிறுக்கியேறி விழாமற் படுத்திருந்தாள். இப்படி வித்தையாடிக் கொண்டிருக்கையில், கீழேயிருந்தெல்லாரும் கண்ணும் கருத்தும் அவள்மேல் செல்ல நிசப்தமாய் நின்று அண்ணாந்த கழுத்துக் கோணமல் தலை அசையாமல் கண் கொட்டாமல் பார்த்து வந்தார்கள். மேலேயுள்ள தொம்பச்சி கையை விரித்து "ஹா! ஹா! ஜே! ஜே" என்று கத்தின குரல் கேட்டது. உடனே அவள் நிலைதவறிப் போக, தலைவேறு கைவேறாகக் கீழே விழுந்து கடைசியில் அவள் உடலும் அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்து சிதறி இரத்த வெள்ளம் பரவத் தரையில் கிடந்தது. இதைக்கண்ட சாமந்தர்கள் பேச்சற்றுப் பிரமை கொண்டு ஒருவரையொருவர் ஊமைபோல் பார்த்துத் திகைத்து நின்றார்கள். இவ்வளவு துர்ச்சகுனங்களைக் கண்டும் அவர்களில் எவரும் தம்மரசனை நோக்கி என்னகாரியமாக எங்கே யாத்திரை புறப்பட்டுப் போகிறீரென்று கேட்கத்துணியவில்லை.

"அவர் எண்ணத்தைக்கேட்பானேன். அவரைச் சேவித்து அவருக்காக நம்பிராணனை விடுவது நமது கடமையேயன்றி மற்ற விசாரமெல்லாம் நமக்கேன்?" என்பார் ஒரு சாமந்தர்.

"விதித்த விதியை விலக்கவுமாமோ?....ஊழ்வினையுள்ளபடி வந்தே திரும்" என்பான் இன்னொரு சாமந்தராஜன்.

"பாரதியொருவரே அவரெண்ணத்தை யறிவார் போலும். ஸ்ரீ குருராஜ் அவர்களுக்குக்கூட அவர் தம் கருத்தைச் சொல்லவில்லை" யென்பார் இன்னொரு சாமந்தர்.

ப்ரித்விராஜனோ ஒன்றுக்கு மஞ்சவில்லை. அவன் புறப்பட்ட காரியம் எதுவோ அதை நிறைவேற்றியே தீரவேண்டும். அந்தப் பிரயத்தனத்தில் உயிர் மாண்டால் ஸர்வோத்தமம்: பெறற்கரிய பெரும்பதவி சித்திப்பது நிச்சயம். ஆதலால் சஞ்சலமேன்? வழி நடவுங்கள்!

பொழுது புலர்ந்தது: இரவும் வந்தது. ப்ரித்விராஜாவும் அவனுடைய சாமந்த சீமந்தர்களும் பரிவாரங்களும் ஒன்றுக்குமஞ்சாது ஒரு கவலையுங் கொள்ளாது சூரிய சந்திரர்கள் விண்ணில் வழிநடப்பதுபோலவர்கள் மண்ணில் வழிநடந்து சென்றார்கள். அவர்களுடைய யாத்திரைமுடிவு கிட்டிவிட்டது. அவர்களரசன் உத்தேசித்துச் செல்லுமிடம் நெருங்கிவிட்டது. ப்ரித்விராஜாவின் சேனையைக் கணக்கிட்டுப்பார்க்க இதுதான் சமயம். அவர்களெல்லாரும் அதோ அணிவகுத்து நிற்கிறார்கள். ப்ரித்விராஜா சந்திரனைப்போல் நடுநாயகமாக விளங்க அவரைச் சுற்றி 100 சாமந்தர்கள் நக்ஷத்திரங்களைப்போல் அசைவற்று நிற்கிறார்கள். ஒவ்வொரு சாமந்தராஜாவுக்கும் 10-ப் பேர் குதிரைவீரர்கள்: இந்த துரகவீரர்கள் ஒவ்வொருவருக்கும் 5 படையாட்கள் இப்படியாக இவர்கள் தொகை மொத்தம் 100 சாமந்தர்கள்: 1000 குதிரை வீரர்கள்: 5000 போர் வீரர்கள்: இவ்வளவு சைனியத்தோடே ப்ரித்விராஜாவும் இருளைவெல்லவரும் சூரியனைப்போல் டில்லியிலிருந்து கானோஜுக்கு சமீபத்தில் வந்து



விட்டான். அவன் கானோஜை நெருங்கவும் பொழுது விடியக்கண்டு ப்ரித்விராஜாவை சூரியனாகவும், அவனுடைய சேனைகளையெல்லாம் கிரணங்களாகவும் உவமித்து பகை நகரையும் அங்குள்ள சேனைகளையும் இருட் படலத்துக்கு ஒப்பிட்டு **சந்துபாரதி** வர்ணித்து பாடுகிறார். இவ்வீரர்கள் ஒவ்வொருவரும் புகழுடம்பே பெரிதென்று நினைக்கும் புண்ணியர்கள். பிராணனுள்ளமட்டும் தங்கள் அரசனைவிட்டுப் பிரிய ஒருவரும் நினையார்கள். தடாகத்தில் முளைத்த தாமரைகள் நீர் பெருகப் பெருகத் தாமும் தலையெடுத்துயர்வதுபோல, அபாயம் நெருங்க நெருங்க அவர்கள் உள்ளம் பூரித்தெழுந்தது.

* * *

கன்யாகுப்ஜத்தில் சஞ்சோக்தை சுயம்வரம் நடப்பதற்காகக் குறிக்கப்பட்ட நாள் நெருங்கிவிட்டது. அன்றையதினத்தில் அந்நகரின் கீழ்த்திசையில் சூரியனுதயமானதோடு, மேற்றிசையில் ப்ரித்விராஜன் தோன்றினான். உதயகிரியிலிருந்தெழுந்த சூரியன் அஸ்தகிரிப்பக்கத்தில் தோன்றிய சூரியனைப்பார்த்தான். இன்றைச் சூரியோதயம் தொடங்கியதோடு ஹிந்துஸ்தான ராஜமகிமையாம் சூரியாஸ்தானமும் தொடங்கிற்று என்று காட்டியதுபோல் விளங்கிற்று.

அவர்கள் டில்லியைவிட்டுப் புறப்பட்டு 5-நாளாய் விட்டது. 4-ம்நாளிரவு **தௌஹல்பூர்**, சேர்ந்து விடியற்காலையில் '**சங்காபுரம்**' வந்து சேர்ந்தார்கள். கன்யாகுப்ஜம். (கானோஜ்) இன்னும் 2-யோஜனை தூரம் தானுள்ளது. இன்றைக்கு வியாழக்கிழமை, குருவாரம். ஆதிவாரம் டில்லியைவிட்டுப் புறப்பட்டவர்கள் குருவாரம் கானோஜுக்கு 2-யோஜனை தூரத்தில்வந்து பாளயமிறங்கி விட்டார்கள்.

இங்கே ப்ரித்விராஜாவும், சந்துபாரதியும் இன்றைக்கு நடக்கப்போகிற விஷயங்களைப் பற்றித் தனித்துப்பேசிக்கொண்டார்கள். சந்துபாரதி ப்ரித்விராஜாவின் அரண்மனை வித்வானதலாலும் கவிராஜன் என்று பேர்பெற்றவராதலாலும் அவர் ராஜவிருதுகளோடு சஞ்சோக்தை சுயம்வரத்துக்காக கானோஜில் பிரவேசித்து ஜயசந்திரன் அரண்மனையில் விருந்தாளியாக விருக்கவேண்டுமென்றும், ப்ரித்விராஜா அவருடன் கூடவரும்அடைப்பைக் காரனாக வேஷம் போட்டுக்கொண்டு அவரைத்தொடர்ந்து செல்ல வேண்டியதென்றும் சைனியங்களெல்லாம் சங்கரபுரத்திலே யுத்தத்துக்கு சித்தமாகத்தங்கியிருக்கவேண்டியதென்றும் அவர்களுக்குள் ஏற்பாடு செய்துகொண்டாய்விட்டது. "வெண்கொற்றக்கொடை பாரதிக்கு எவ்வளவு நன்றாகப் பொருந்துகிறது பார்" என்று ப்ரித்விராஜா சொல்ல, "அடைப்பைக்காரன் வேஷமும் உங்களுக்கு நன்றாகப் பொருந்தியிருக்கிறது!" என்று பாரதிபதில்சொல்ல அவர்களிருவரும் சிரித்துக் கொள்வார்கள். இந்தப் பேச்சுகளை எட்டியிருந்து கேட்டுக்கொண்டிருந்த சாமந்தர்களில் ப்ரித்விராஜனுடைய சிற்றப்பனாகிய **கிருஷ்ணராயருக்கு** இந்த பாரதியின் செய்கையும் பேச்சும் கர்ணகடூரமாயிருந்தது. "இந்த நாசமாய்ப்போகிற பாரதி குசுகுசு என்று பேசிப்பேசி அரசனைத்தன் வலையில் சிக்கச்செய்து வருகிறான். இதெல்லாம் கடைசியில் நம் தலைபோகிற காரியமாகமுடியும். இவன் தொழில் இவனைக்காப்பாற்றுகிறது. நமக்கல்லவோ தலைபோகிறது! இவனுக்கென்ன!" வென்று சீறினான் கிருஷ்ணராஜன்.

**கோவிந்தராய** என்னும் இன்னொரு சாமந்தராஜன் அவர் கையைப் பிடித்துத்தன் கையில் கோர்த்துக் கட்டிக்கொண்டு அவரைச் சாந்தப்படுத்திக் கோபத்தைத்தணித்து பாரதி பேரில் அவருக்குள்ள சீற்றத்தையுமாற்றினார்.

ப்ரித்விராஜா பாரதியோடிப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே, மனதிலுள்ள பாரம் தீர்ந்த காரணத்தினாலோ, பிரயாணத்தின் முடிவுகண்ட சந்தோஷத்தினாலோ அவர் ஆயாசமேலிட்டு அயர்ந்து போனவர் போல் காணப்பட்டார். கைகள் சோர்ந்து வீழ்ந்தன. கண்ணிமைகள் மூடின. நித்ராதேவி பிரசன்னமாகி விளங்கினாள். உட்கார்ந்தபடி அவர் ஒரு ஆசனத்திற் சாய்ந்து நித்ரைபோனார். களைதீரத் தூங்கட்டுமென்று பாரதியும் அவரை யாரும் எழுப்பாதபடி கிட்டவிருந்து பார்த்து வந்தார். அப்பொழுது ப்ரித்விராஜா உளக்கண்முன் மின்னற்கொடியிலிருந்திழிந்த மாதரசிபோல் ஒரு பெண்ணுருவம் தோன்றிற்று. அதன் அழகைக்கண்டு மகிழ்ந்து மோகித்து "அன்புருவே! நீயார்!" என்றுவினவினார்."

"நான்தான் சஞ்சோக்தை: நான் சத்தியவதாரம். ஸத்யயுகத்தில் என் தந்தை திரிபுராசுரனையெதிர்த்து நாசம் செய்யக்கண்டேன். திரேதாயுகத்தில் ஸ்ரீராமச்சந்திரர் அவதாரமாகி இராவண சம்ஹாரம் செய்ததைக் கண்டேன். துவாபரயுகத்தில் அர்ச்சுனன் தன் வம்சத்தாரையும் குருவம்சத்தாரையும் வேரோடறுத்து நாசம் செய்து பூபாரம் தீர்த்ததைக் காணலுற்றேன். இப்பொழுது கலியுகத்தில் சஞ்சோக்தையாக அவதரித்து றந்தகுலம் புகுந்தகுலம் இரண்டு மழியக் காணவருக்கிறேன். இதை உனக்கு முன்னுணர்த்தந்தேன். எச்சரிக்கை!" என்று சொல்லி மறைந்துட்டது. இந்த ஸ்வப்பனங் கண்ட ப்ரித்விராஜா தன்ண்முன்னின்ற உருமறைந்ததும் விழித்துக் கொாடு, தான் கண்ட கனவை பாரதிக்குச் சொல்லி, தன் பொருள் விளங்கச் சொல்லும்படி கேட்ான். பாரதியும் முகத்தைத் திருத்திக் கொண்டுண்டையைச் சொரிந்து கிலேசபாவனை காட்டி, இதனால் யுத்தம் பிரமாதமாக விளைந்து அதனாலுண்டாகும் இப்பூமியதிர்ச்சியைத் தாங்க முடியாது திசேஷன் தத்தளிக்கப் போகிறான்" என்று சொலிப் பேச்சை மாற்றினான்.

சர்மந்தராஜர்களுக்கெல்லாம் விருந்தளித்துபசரித்து ப்ரித்விராஜாஅவர்களைப் பார்த்து "நாம் எத்தனை போர்க்களங்களில் சேர்ந்து நின்று சண்டைபோட்டுயித்திருக்கிறோம். இப்பொழுது நான் இந்தமது பாரதியாரோடு அவர் அடைப்பையேந்தியசந்தன் அரண்மனைக்குள் போகவிருக்கிறேன். த்தம் எப்படிச் சம்பவிக்குமோ, தெரியாது. இந்தநேரம்வந்தால் நீங்களெல்லோரும் அதற்குத் தயாராகவிருக்கவேண்டியது. இம்முறை சண்டையில் முன்னிற்க வேண்டியவேலை உங்களதாக விட்டிருக்கிறேன். உங்களுடைய ஒத்தாசையையே நம்பியிருக்கிறேன். இங்கிருந்து கானோஜ் 2-கோசதூரமிருக்கிறது. காமத்வஜன் அரண்மனை அதோ தெரிகிறது பாருங்கள். அங்கே போய் நான் அவனைக் காணப்போகிறேன்! ஜாக்கிரதை!" என்று சொன்னான். அதற்கு அவர்களெல்லாரும் ஒரு மனதாய்ச் சொன்னதாவது:

"அடைப்பைக்காரன் வேஷம் போட்டீராலும், உமது ராஜ லக்ஷணமும் முகவிலாசமும் அதனால் மறைந்து போமா? விலைமாதொருத்தி தன் ஒயிலை மறைக்க யத்தனித்தால் மறைக்கமுடியுமா? சுசீலன் ஒருவன் தன் சுகுணத்தை மறைக்க முடியுமா? அப்படியே போர் வீரனும் தன் தீரத்தை ஒளிக்க முடியுமா?" என்றார்கள்.

அதற்குள் சிலுகசாமந்தர்:—"பாவாஜி! பாரதியின் அடைப்பை உங்கள் தேஜஸையும் இலக்ஷணத்தையும் அவ்வளவு நன்றாக மறைத்து விடுமென்று நினைக்கிறீர்களா?" என்று கேட்க, மற்ற சாமந்தர்களெல்லாம் ஒரே குரலாய் "வேஷம், வேஷந்தான்! நன்றாகப் பொருந்தியிருக்கிறது. தேவதைகள்கூட இவ்வேஷத்தைக்கண்டு மெச்சுவார்களென்றால், கேட்பானேன்?" என்றார்கள்.

"மோசமின்றி எந்த தேசத்தை யாளலாம்? ராஜ்யபாரமே தந்திரமும் மோசமும் செய்வதுதானே" யென்றார் பின்னும் சிலர். இந்தவேடிக்கை வார்த்தைகளெல்லாம் நிற்க, ப்ரித்விராஜா தன்னுடையபிரதம சாமந்தர்களைக் கூட்டி ஆலோசனை செய்யலானான்.

ஆலோசனை முடிந்ததும், எல்லாரும் கங்கைக் கரையடைந்து கங்கையில் ஸ்நானம்செய்து நகர்க்குள் பிரவேசிக்கலானார்கள். கங்கையிலிருந்து சிலபெண்கள் தீர்த்தம் கொண்டுபோவதைப் பார்த்து சந்து பாரதி "காமதீர்த்தம் பாருங்கள்" என்றார். அதைக் கேட்டு ப்ரித்விராஜா சிரித்தான்.

ப்ரித்விராஜா தன்னுடைய சாமந்த ராஜாக்களில் கோவிந்தாராய், நரஸிங் தஹியா, சந்த்பண்டீர், ஸோலங்கி ஸாரங், கூர்மா பஜூன், பக்ரிராய், கிருஷ்ணராய் இன்னும் சிலரைத் தன்னுடன்கூட வழைத்துக்கொண்டு பாரதியைத் தலைவனாகவும், தான் அவருக்கு அடைப்பைக்காரனாகவும், மற்றவர்கள் அவர் பரிவாரங்களாகவும் சேர்ந்து நகர்க்குள் பிரவேசித்தார். பிரவேசிக்கையில் ப்ரித்விராஜா கிஷ்ணராயனைப்பார்த்து அவர் நெற்றிக்கட்டை* யவிழ்க்கச்சொல்லி

* ஆலோசனைச் சபையில் கிருஷ்ணராய் ஒருகால் அவசரப்பட்டு கோபத்தை வெளியிட்டதனால் அது முதல் அவர் நெற்றிக்கட்டு தரித்திருக்கும்படி அரசன் அவருக்கு விதித்தார். இதைக்கொண்டு எதிரிகள் அடையாளங் கண்டுகொள்வார்களென்று அதை அவிழ்க்கச்சொன்னார்.



தான் கானோஜுக்கு வந்ததற்கு பாரதிதான் காரணமென்று இரகசியமாகச் செப்பினர். இப்பொழுது இவர்கள் நகருள் நுழைந்து விட்டார்கள். சூரியன் ஆகாசத்தில் எறவும் அரண்மனையில் கோபுரகலசங்களில் சூரிய கிரணங்கள் பட்டுப் பிரதிபிம்பித்ததனால், அந்தப் பிரதிபிம்பத்தைக்கண்டு பாரதி ஆகாசத்திலுள்ள சூரியன் அதுவோ இதுவோ வென்று மயங்கி அதனால் திசைதப்பி வழிதப்பிப்போயினராம். அவ்வளவு பிரகாசம்! அவ்வளவு ஒளி! அந்நகரின் கூடகோபுரங்களையும் மாடமாளிகைகளையும் பற்றி வர்ணிக்க சாத்தியமில்லை. அவை குபேரன் பட்டணத்தைத் தோற்கடிக்கத் தக்கவாயிருந்தன என்றுமட்டும் சொல்லுவோம். இந்தவெளியாடம்பரங்களை யெல்லாம் விட்டு, யாகசாலையில் நுழைந்து பார்ப்போம். யாகசாலை ஸ்வர்ணமயமாகவிளங்கியது. கொடை, கொடி, சாமரம் முதலிய ராஜவிருதுகளும் விமானங்களும் மற்ற அலங்காரங்களும் கண்ணைப்பறித்துக்கொண்டு மனதைக்கவர்ந்திழுக்கும் சக்திவாய்ந்து விளங்கின. இங்கே தேவதைகளைத் தொழுது நிற்பார் அனந்தம்பேர்; தேவதுந்துமிமுழங்க வாத்தியம் கேட்டானந்திப்பார் அனந்தம் பேர்; தேவகன்னிகைகள் போல் நிருத்தமாதர்கள் நர்த்தனம் பார்த்து மகிழ்வார் அனந்தம் பேர்கள்; கத்திகேடயங்களோடு யுத்த விளையாட்டுகள் விளையாடுவார் பலர்; இதை யெல்லாம்பார்த்த பாரதி "இதென்ன பாரதப்போருக்கு ஆயத்தமா என்ன?" என்று மெதுவாய்ச்செப்பினர். ப்ரித்விராஜாவை அக்கூட்டத்தில் கண்ட ஒரு யோகினி ஆச்சரியத்தால் வீரிட்டுக்கத்தினள்— சந்துபாரதி அம்பிகையைத் தோத்திரம்செய்து அவள் வாயை மூடினர். ஹரசித்தர் கோயிலில் தன்னுடன் வந்தவீரர்களைவிட்டு, பாரதியும் அடைப்பைக்காரனுமட்டு ஜயசந்தராஜன் அரண்மனையைப்போய்ப் பார்த்துவரப் புறப்பட்டார்கள். அபசகுனங்கள் நேரிட மறுபடியும் திரும்பிவந்து இரண்டாந்தரம் புறப்பட்டுச் சென்றார்கள்.

யர்க்சாலையிலே யாகம் நடந்து வருகிறது. ஆண்டிகள், பரதேசிகள் ஆயிரம் பேர்கள் கூடியிருந்தார்கள். சூதாடுவோர் எண்ணிலர் சண்டையிட்டுக்கொண்டு சூது விளையாடுவதைக் கேட்டார்கள். விட புருஷர் ஒருபக்கத்தில் விலைமாதர்களைக்கண்டு கண்பூத்து நிற்கப் பார்த்தார்கள். இப்படி இன்னும் அங்குள்ள காக்ஷிகளையெல்லாம் கண்டு கவனிக்க நேரமின்றி அவசரமாய் அரண்மனை வாசலைக்கிட்டிச் சென்றார்கள்.

எண்ணிறந்த கொடிகள் காற்றில் பறந்துகொண்டு கருடன்கள் கூட்டமாய் வட்டமிடுவதுபோல் விளங்கின. அழகு மிகுந்த மாதர்கள் பலகணிவாயில்கள் வழியாக சந்திர பிம்பம்போன்ற தங்கள் முகம் விளங்க மேலே நடமாடிக்கொண்டிருந்தார்கள். இக்காட்சிகளைக் கண்டும் காணாதவர்கள் போல் அரண்மனை வாசலுள் நுழைந்தார்கள். இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்துவந்த போர்வீரர்கள் அங்கே ஏகமாய் நிறைந்திருந்தார்கள். பரதகண்டத்தில் பேசப்படும் பல பாஷைகளும் அங்கு பேசப்பட அபபேச்சரவம் அவர்கள் காதில் விழுந்தது. அரண்மனையின் உள் முற்றத்தில் வைராகிகள் எண்ணிறந்தோர்கூடி சங்குநாதம் ஒலித்துக் கொண்டிருந்தார்கள். ஆயிரம் இராஜபுத்திர வீரர்கள் தங்கள் அரசனுக்கு மெய்க்காவலர்களாக விருந்தார்கள்.—இவர்கள் ஆயுதசாலையில் பலவித வித்தைகள் செய்து தங்கள் சாமர்த்தியத்தைக்காட்டி வந்தார்கள். இவர்களைப்பார்க்கவும் ப்ரித்விராஜாவுக்கு ரோசம் பிறந்தது. பாரதி அர்ச்சுனுக்குண்டான எரிச்சலை அங்கு காட்டாதபடி அவனைச் சாந்தப்படுத்தி யழைத்துக்கொண்டு போனார்.

உள்வாசலண்டை வந்து சந்துபாரதி தான் டில்லி ராஜ கவியென்று சொல்லி, ராஜ பேட்டிக்கு வந்திருக்கிறதாக ஜயசந்தராஜனிடம் தெரிவிக்கும்படி ஹரிக்காரனுக்குத் தெரிவித்தார். அவன் ஓடோடியும் சென்று அரசனுக்குத்தெரிவிக்க, அவன் தனது அரண்மனைக்கவியையும் குருவையுமழைத்து டில்லி ராஜகவி வந்திருக்கிறாராம், அவர் சந்துபாரதியாவென்றறிந்து உபசரித்தழைத்து வாருங்களென்று அனுப்பினான்.

பாரதியும் பாரதியும் கண்டு குசலப்பிரசனம் செய்து ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு யோகக்ஷேமம் விசாரித்துப் பேசியானபின் ஜயசந்தராஜன் பாரதி, புதிதாய் வந்தவரைப் பார்த்து தாங்கள் என் டில்லியரசனைவிட்டு வந்து விட்டீர்களென்று வினவ, அவர் உலகத்தைச் சுற்றிப்பார்க்கவிரும்பி வந்ததாகச் செப்பினர். ப்ரித்விராஜாவின் யோகக்ஷேமம் விசாரித்தபின், கானோஜில் வந்திருக்கும் அரசர்கள்

பேரையெல்லாம் சொல்லக்கேட்க, அவர் அப்படியே சொல்ல, "ஓ, இவர் திரிகாலஞானியாகிய சந்துபாரதியே" யென்று மனதுள் தீர்மானித்துக்கொண்டு முன்னிலும் அதிக உபசாரஞ்செய்து அரசன் சமுகத்துக்கிட்டுக்கொண்டு போனார்.

ஜயசந்தராஜனைக் கண்டு ஆசீர்வாதம் கூறினர்: அரசன்கையைத்தூக்கி சிரம்வணங்கி அதை யேற்றுக் கொண்டனன். "இராஜாதிராஜ ராஜகம்பீர இராஜமார்த்தாண்ட," வென்று ஜயசந்தராஜனைப் புகழ்ந்ததில், **சௌஹானவனைத்** தவிர மற்ற எல்லாராலும் அங்கீகரிக்கப் பட்டவனென்று பச்சைப்புண்ணில் கோலிட்டுப் பார்ப்பதுபோல் அவனை ஸ்தோத்திரம் பண்ண, அரசன் தன் எதிரிபேரைக் கேட்டதும் பல்லைக்கடித்து "இந்தக் கவிகளிடத்தில் தரித்திரம் குடிகொண்டு விட்டது; பிரம்மா விதித்ததை யாரால் மாற்றமுடியும்?" என்று மொழிந்தனன்.

"அரசே! உண்மையுரைத்தீர்! இந்திரனைப் போல் நீர் பொன்னும் மணியும் பூணும் குதிரையும் மழைமாரி பொழிவது போல் பொழிந்தாலும், தரித்திர சின்னமாகிய இந்த வித்வத்கொடை இவையெல்லா வற்றினாலும் என்தலை திரும்பாதபடி என்னைக் காப்பாற்றும்" என்றார் பாரதி.

"உமது முகத்தில் தரித்திரகளை குடிகொண்டிருந்தாலும், தேகமும் ஒட்டிப் போயிருக்கிறதே யேன்? ஐங்கள தேசத்தில் (டில்லியரசன்நாடு) புல்லுக்குக் குறைவில்லையே!" என்று அரசன் சொல்ல, பாரதியார்: "என்தேகம் ஒட்டியிருந்தால், அது என்னரசனோடு மற்ற அரசர்களை வெல்லச் சென்றதனாலிருக்கவேண்டும்!" என்று எரிகிற நெருப்பில் ஆகுதி செய்வதுபோல் அவர் வயிற்றெரிச்சலைப் பின்னும் கிளப்பி விட்டார்.

தன்னெதிரியைப் பின்னும் ஸ்தோத்திரம் செய்ததைக் கேட்டு ஜயசந்தராஜன் உதட்டைக் கடித்துப் பல்லை நெறித்தான். ஆனாலும் என் செய்வது! வித்வானை யென் செய்யக்கூடும் அவன்? "தேசத்திலுள்ள மன்னர்களெல்லாம் வந்து மரியாதை செய்கையில் உமதரசன் மட்டும் ஏன் வரவில்லை? அவப்பன சோமேசர்கூட கானௌஜிலிருந்து கடன் வாங்கித்தானே கலியாணம் செய்து கொண்டார்." என்று கேட்டான். (ப்ரித்விராஜாவின் தாய் கமலாதேவி, ஜயசந்தன்மனைவி ரூபசுந்தரிக்கு உடன் பிறந்த சகோதரி). அதற்கு பாரதியார், "ஆனால் ஒன்று மறந்து விட்டீர்கள், தாங்கள் தெற்கே யுத்தத்துக்குப் போயிருக்கையில் வடக்கே யிருந்து துருக்கர்நும் தேசத்தைக் கொள்ளையிட்டார்களே, அப்போதென்னரசன் அவனை யெதிர்த்துத் துரத்தியிராவிடில் கானௌஜின் கதியென்னாயிருக்கும்? என்னரசனிவில் இன்னும் வளைத்தபடியிருக்க ராஜசூயயாகம் செய்து ஷம்ராட் பட்டம் கட்டிக் கொள்ளத் துணிபவன் யார்? என்னரசன் கீர்த்தி யெங்கும் பரவியுள்ளது. என்னரசனானையினால், இங்கு நீர் செய்யும் இந்த யாகத்தினழகைப் பார்க்கிறதற்காக நான் வந்திருக்கிறேன்," என்று அரசன் வாயை அடக்கினார்.

வாயடங்கியும் கர்வம் தணியவில்லை. ஆகவே அரசன் பின்னும் விஷயத்தைமாற்றி, "இங்கே சூழ்ந்துள்ள அரசர்களெல்லாரிலும் உம்மரசனை யொத்திருப்பவர் யார்?" என்று வினவினார்.

"ஒருவர் கூடஇல்லை!" என்று உடனே பாரதி உத்தரஞ்சொன்னார். "ப்ரித்விராஜா கோகுலத்தில் கண்ணன் அவதரித்ததுபோல் இம்மேதினியில் ஒப்புயர்வற்று விளங்குகிறார். ப்ரித்விராஜா பாரதவீரனாகிய அர்ச்சுனனைப்போல் விளங்குகிறார். அவர்தான் இக்காலத்துக்கு இராமாவதாரம். ஆறுறு வருஷமும் அநுமதியுமான ஆண்சிங்கம். அப்படிப்பட்டவராக்கும் ப்ரித்விராஜா!" என்று சொல்லி தன்பக்கத்தில் நின்ற அடைப்பைக்காரனுக்கு வணங்குகிறயாதிரியாகக் கையைத்தூக்கி அவன் புகழைப் பாடத்துவக்கினார்.

" வண்மையாற்கல்வியால்மற்பலத்தாலாள்வினையால்
உண்மையாற் பாரானுரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர்வானேறத்தெள்ளாற்றில் *வென்றுரு [ளேடு
யார்வேந்தரேந் பாரேதிர்

ஜயசந்தராஜனுக்குஆத்திரம்பொறுக்கக்கூடவில்லை.

"திண்ணிய நெஞ்சினனை | பாரதியும் தன்னெஞ்சிற்றீங்கு தோன்ற
எண்ணிய மன்பேரவையிலியம்பியபுன் சொற்களெல்லா மெண்ணி யெண்ணி"

* தெளிவான போர்முறைமை வழியால்.



இப்பாரதிகள் துணிவுக்கும் அக்கிரமத்துக்கு மளவில்லை யென்று தூஷித்தார். இதுதான் சமயம்: இதற்குத்தான் காத்திருந்தார் பாரதியார். "உமக்கேன் கேடுகாலம்! முன் ஸத்ய யுகத்திலே பலி சக்ரவர்த்தி கர்வம் தலைக்கேறி இந்த யாகம் செய்யத் தலைப்பட்டான். அதற்குப் பலனாக அவனுக்கு நரகம் வாய்த்தது. திரேதாயுகத்திலே ஸ்ரீ இராமச்சந்திரர் இந்த யாகம்செய்தார். துவாபரயுகத்தில் கிருஷ்ணன் தயவால் தருமபுத்திரர் இதைச்செய்தார். இந்தக் கலிகாலத்திலே இராஜசூயயாகம் செய்யத் துணிபவன் யார்? நீர் என்னவோ தலை தெரியாமற் துவக்கி விட்டீர். முடிவு என்னாகிறது பாரும்!" என்று தைரியமாய்ச் சொன்னார்.

ஜயசந்தன்:—"இவை யெல்லாம் கெட்டன: நாம் தொட்டதை நிறைவேற்றியே தீருவோம்பார்!" என்று கர்வம் தலைக்கேறச் சொல்லி, சிம்மாசனத்தை விட்டிறங்கி பாரதியாரை யழைத்துக் கொண்டு அந்தப்புரம் சென்றான். உள்ளே செல்லுகையில் கர்ணவதியைக் கண்ணுற்றார்கள். இவளோடு பிசகி நடந்ததற்காகவே ப்ரித்விராஜா கைமாஸ் என்னும் தன் மந்திரியைச் சிரச்சேதம் செய்வித்தான். அவள் டில்லியை விட்டோடி ஜயசந்தன் அரண்மனையில் அடைக்கலம் பெற்று தற்காலம் சஞ்சோக்தைக்கு உயிர்ப்பாங்கியாக அமர்ந்துள்ளாளென்று நாம் அறிவோம். இவள் ப்ரித்விராஜாவுக்கன்றி மற்றவர்க்குத் தன்முகம் திறக்காள். ப்ரித்விராஜா ஒருவனே "ஆணழகன்" என்பது அவள் எண்ணம். அவளை அரண்மனையினுள் காணவும் அவள் தன் முகத்தை யிழுத்துப் போர்த்துக் கொண்டு புருவத்தை நெறித்தாள். ப்ரித்விராஜாவும் அவளைப்பார்த்து நகைத்தான். ஓஹோ! ஆபத்து வந்ததே யென்று கண்ட பாரதி ஒரு கவிதை பாடினார். அதன் மறைபொருள் என்னவெனில், "பாவி! உன் ஏயிலினால் ஒருவீரன் மாண்டான் இப்பொழுது அரசனையும் ஆபத்துக்குள்ளாக்க விருக்கிறாயா?" என்பதே. இதைக் கேட்ட அவள் மறைந்துவிட்டாள்.

நகரின் மேற்புறத்தில் அவருக்கு ஜாகையமர்த்தி வைக்கப்பட்டது. அங்கே இராணி ரூபசுந்தரியவர்களுக்கு வேண்டிய மரியாதை செய்து பழவர்க்கங்கள் பட்டுப் பீதாம்பரங்கள் எல்லாம் வைத்து அனுப்பினாள். ஸரஸ்வதி யுபாசகராகிய சந்து பாரதிக்கு வேண்டிய மரியாதைகளெல்லாம் அரசனிடத்திருந்தும் அந்தப் புரத்திலிருந்தும் வந்ததன்றி அவருக்கும் அவருடைய பரிவாரங்களுக்கும் வேண்டியவைகளெல்லாம் வெகுசம்பிரமமாகக் கொடுத்துவர ஏற்பாடுசெய்தார்கள். இப்படி அரசன் அரண்மனையில் அத்தனை சைனியங்களுக்கும் வீரர்களுக்கும் நடுவே சந்துபாரதியோடு அவருடைய அடைப்பைக்காரனும் பரிவாரங்களும் தங்கியிருந்தார்கள். இவர்களை யிங்குவிட்டு சஞ்சோக்தை கதியென்ன வாயிற்றென்று யாருமறியாமல் அந்தப்புரத்தில் புகுந்து பார்த்து வருவோம்.

C. V. S.

## To Our Subscribers.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

**நமது சந்தாதாரர்களுக்கு.**

*நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வால்யமுக்குரிய சந்தாவைச் செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வால்யத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பவேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தா தொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

**D. K. Agency.**

*20th May*, 1903. அ. ட. ஏஜன்ஸி.

## "ANANDA MISSION"

### For the Propogation of Truth and Knowledge.

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control and Self-Culture.**

***"EKAM SATYAM BRAHMA."—SRUTIVAK.***

"Seek Truth wherever you can find it."
"But Make your Choice and Stick to it"
till you reach the end.

"*Truth is hard Finding!*" **Yes,** "*Uncompromising too*" **when** *whole*: **Yet Try!** "*Awake, Arise and Stop not till you reach the Goal.*"—*Sruti.*

'And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion, caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligence, development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

**Hail! Ananda Natesa!**

*Sri Akandananda Satgurure Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People :—

**Subscrn. Price: Yealy Rs. 4; Half-yearly Rs. 2-2.**

**Sincle copy, current No. 5½ As.; Back Nos. 6 As. Each.**

**English & Foreign Subscription 5s. 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As, off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

☞ In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

**விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.**

**கனமான காகிதப்பதிப்பு:—** அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு:**—:சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சாந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவுக்குமிடமிராது.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] உ [God is Love : Knowledge is Power : *Om.*

ஸத்யமேவஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம் 12.] **1903ஞ ஜூன்மீ.** [இலக்கம் 2.

THE WAY TO GODLINESS IS THROUGH PURITY OF HEART.

## "அத்தனருள்வேண்டில் அகம்தூயவேண்டும்"

"Our theism is the purification of the human mind"—Emerson.

"அருட்செல்வம் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்
* பூரியார் கண்ணுமுள "—**திருக்குறள்.**

"**அத்தனருள்வேண்டில் அகம்தூயவேண்டும்.**" கடவுள் கிருபைமட்டு முண்டானால் பிறகு இகபர மிரண்டிலும் யாதொரு குறைவுமில்லை. அத்தனருள்பெற்றால் அதன் பயனைச் செத்தபின்னே காணலாமென்பது உலகத்தார் கொண்டுள்ள தப்பெண்ணம். "செத் துப்பிழை" யென்ற அருந்தத்தில் "செத்தபின்னே" யென்பதை யுபயோகித்தால் அப் பொழுது சரிதான். ஆனால் உலகத்தார் கருத்து அதுவல்ல. இந்த உடலைவிட்டு 'உயிர் போனபின்பே அவனருளின் பயனைக் காணலாமென்பது அவர்களெண்ணம். இது முற்று ஆம் தப்பெண்ணம். பரலோகம் என்றால் எங்கோ மேகங்களுக்கப்பாலிருக்குமிடமென் றா த்தமல்ல. மேலான பதவிக்குப் பரலோகம் என்று பேர். "The Kingdom of God is within you"—பரலோகம் உனக்குள்ளேயேயிருக்கிறது என்றார் யேசுகிறஸ்துவும். "மனத் துறைமாகடலேழுங்கைகீர்த்தி" யென்றதனாலும், "மனத்திடை நின்ற மதிவாளுருவி" யென் றதனாலும், எல்லாம் மனத்துளிருப்பதையே பற்றிச் சொல்லியது விளங்கும். மனிதன்

* பூரியார்-இழிந்தோர், கீழோர்.

தன் சிந்தையிலுள்ளதையே வெளியிலும் காண்கிறான். மனிதன் சிந்தையில் இல்லாததை அவன் வெளியிலும் காணான். ஆகையால் மனப்பயிற்சியாலேயே எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்கவேண்டியவனாயிருக்கிறான் மனிதன். ஆகையால் மனத்தை நல்வழியில் பயிற்றுவித்தலால் அவன் எல்லா நன்மைகளையும் அனுபவிக்க யோக்கியனாகிறான். நல்வழியிற் செல்லலாவது, பிரகிருதி விதியை யொட்டி நடப்பதாம். மற்றப்படியுள்ள, ஊர்வன, பக்ஷி, மிருகங்களெல்லாம் பிறக்கும்பொழுதே பிரகிருதி விதியை யனுசரித்து நடக்கும் சக்தி இயல்பாக அமைப்பெற்றுப் பிறக்கின்றன. மனிதனோ அவைகளினும் மேலான சக்தி வாய்ந்தவனாகப் பிறக்கிறான். இந்த மேலான சக்தி அவனுள்ளத்தில் ஒடுங்கிக்கிடப்பது விரிந்து வெளிப்பட்டு வளரக் காலம் செல்கிறது. இந்த வளருங்காலத்தை நன்றாக உபயோகித்தால் மனிதனுடைய மனோதத்துவங்கள் நன்றாக வெளிப்பட்டுச் சோபிக்கின்றன. தாறுமாறாக உபயோகித்தால் அவன் மனோதத்துவங்கள் சோபிக்காது மங்கி மழுங்கி மாண்டுபோகின்றன. அல்லது துர்வழியிற் பிரவிர்த்தித்து ஜன சமூகத்துக்குத் தீங்கிழைப்பதாய் முடிகிறது. ஆகையால் மனிதனுக்கு பால்யப் பிராயத்திலும் வளரும் பிராயத்திலும் அவன் மனதில் என்னென்ன எண்ணங்கள் பதிகின்றனவோ அவைகளே பின்னால்வரும் அவன் மத்திமப்பருவத்திலும் முதிர்பருவத்திலும் வளர்ந்து விர்த்தியாகிப் பலனைக் கொடுக்கின்றன. அத்தனருள் பெறுவதாவது, உலகத்தோடொத்துவாழ்வதாம்; அதாவது பிரகிருதிதர்மத்துக்கு விரோதமின்றி அதை யனுசரித்து இசையும் குரலும்போல், பண்ணும் பாட்டும்போல், பழமும் ரசமும்போல் ஒத்து வாழ்தலாம். "உலகத்தோடொத்துவாழ்" என்று ஒளவை சொன்ன வாக்கியத்துக்கு அருத்தம் இதுவேயன்றி "உலகத்தார் மடமையினை யனுசரிக்கும் பழக்க வழக்கங்களுக் கடிமையாயிருந்து வாழ்" என்பது அதன் உண்மையான கருத்தல்ல. பொறுத்தார் பூமியாள்வார்; அடக்கமுடையோர் ஆக்கமுடையார்; தானடங்க உலகடங்கும்; தன்னைவென்றார் உலகைவென்றார்;—என்று சொல்லும் பழமொழிகளுக்கெல்லாம் பொதுவாயுள்ள உண்மை யென்னவெனில், பிரகிருதி தத்துவத்தை யுணர்ந்து அதை அனுசரித்து நடப்பார், எல்லா இடையூறுகளையும் வென்றவராவார் என்பதாம். பிண்டத்திலுள்ளதே அண்டத்திலுமிருப்பதால், பிண்டத்தில் பிரகிருதி தத்துவத்தை யுணர்ந்தவன் அந்தப் பிரகிருதி தத்துவம் எங்கிருப்பினும் அதை வென்றவனாவான் என்பது கருத்து. கடிகாரயந்திரம் ஓடும் சூக்ஷமத்தை யுணர்ந்தவன், ஒரு சிறிய கடிகாரத்தைப் பிரித்துணர்ந்தாலும், அதே ஒழுங்கை யனுசரித்தோடும் மற்றெல்லாக் கடிகார யந்திரங்களின் சூக்ஷமத்தையு முணர்ந்தவனாவானல்லவா? அதுபோலவே, பிரகிருதி தத்துவங்களை யொட்டி நடக்க வுணர்ந்தவன் ஒருபொழுதும் அவைகளுக்கு மாறாக நடக்கமாட்டானாதலால், அவற்றாலவனுக்கு இடர்நேரக் காரணமில்லை. பிரகிருதி தத்துவங்களை யனுசரித்து நடப்பவன் பிரகிருதியோடொன்றாக ஆய்விடுகிறான்; அப்பொழுது பிரகிருதியினால் அவனுக்குத் தீங்கெப்படி நேரிடும்? நேரிடாதல்லவா! இதுமட்டுமல்ல; பிரகிருதியோடொன்றானவன் அதற்கும் மேலுள்ள ஆத்மதத்துவங்களை யுணரவல்லவனாகிறான். அதை யுணரும்பொழுது, பிரகிருதியைவிட்டுத் தாண்டி அதற்கும் மேலானதும், பிரகிருதிதத்துவங்களை நடத்துவதுமான அவ்வாத்மதத்துவங்களையொட்டி நடக்கிறான். அரசன் சந்நிதி சேர்ந்து அவனால் அங்கீகரிக்கப்படும் வரையில் காவல்காரன் தட்டுக்கொத்துப்போனால் அரசன் சமூகத்திற் சென்ற



பின் காவற்காரனையு மேவலாமல்லவா? அப்பொழுது காவற்காரனுடைய தயவாவது, தாக்ஷிணியமாவது வேண்டியதில்லையே!

அதுபோல நாம் பிரகிருதி மறைப்பட்டையைப் பார்க்குநல் ஒடுங்கியிருக்கும் தெய்வத் தன்மையை நாமே யுணர்ந்து வெளிப்படுத்தக் கூடுமவரையில், பிரகிருதி தர்மத்துக்கொத்து நடந்தால், பிரகிருதி முடிவில் பிரான் சமூகத்துக்கு வருவோம். அவர் சந்நிதியில் வந்த மாத்திரத்தில் அவருடைய கடாக்ஷவீக்ஷணியத்தினால் அவருடைய திருவருளுக்குப் பாத்திராகிவிடுகிறோம். அப்புறம் நமக்கென்னகுறை! இதையே திருமூலர் பின்வரும் பாவில் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்:—

"பிரானரு ளுண்டெனி லுண்டு நற்செல்வம்
பிரானரு ளுண்டெனி லுண்டு நன்ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையு முண்டு
பிரானரு ளாற்பெருந் தெய்வமு மாமே."

பிரானருளின் மகிமை இத்தன்மைத்தாக அதைப்பெறும் வழிதேடல் அத்துடன் எல்லாச்சிறப்பும் செல்வமும் தன்னாலே கூடவரும். "Seek first the Kingdom of God and its righteousness and all things will be added unto you" என்றதனால் இதே உண்மையைக் கூறியுள்ளார் யேசுகிறிஸ்துவும். "அத்தனருளையும் அவன் சன்மார்க்கத்தையும் முன்னே தேடு, அதோடு மற்றவையெல்லாம் தாமே சேர்ந்துவரும்." என்பது அவ்வாக்கியத்தின் பொருள். ஆகையால் உலகில் எப்பொருளைநாடுவாரும் ஈசன் திருவருளை முன்னாலே நாடக்கடவர்களாயிருக்கிறார்கள். அத்தனருள் உண்டானால், அனைத்துச் செல்வமும் சிறப்பும் உண்டாமாதலால், அது கிடைக்கும் வழியைத் தேடுவதே முக்கியவித்தையாம். மேற்றிசையார் கொண்டாடும் கிண்டர்கார்டன் போதனாமுறையின் மூலக்கொள்கையும் இதுவேயாம். * இது ப்ரேபெல் என்பவர் ஆராய்ந்து அனுபவத்திற்கண்டு நிரூபித்த வித்யா தத்துவ முறையின் உள்ளுண்மையை உள்ளபடி யறிந்தார்க்குத் தெள்ளெனப்புலப்படும்.

வித்யா போதனையின் நோக்கமே பிரகிருதி தத்துவங்களை யுணர்ந்தனுசரிக்கும் "உலகத்தோடொத்து வாழ்தலாம்" உண்மையை யுணர்ந்தனுஷ்டித்தல்—இதையே வேதாந்த சித்தாந்த வார்த்தையில், "**திருவருட்பேறு**" என்பார்—என்றேற்படவும், அவ்வருட்பேறு பெறும் உபாயத்தை நாடி யாராய்வது 5-வயது முதல் 50-வயது வரையிலுள்ள (வயதினாலும் புத்தியினாலும் சிறிய) மானிடக் குழந்தைகள் எல்லாருக்கும் ஸ்ரீவித்தை போதிக்கப்பயன்படும் பண்புடையதாகுமென்று நினைக்கிறோம். இக்காலத்தில் சொற்றுப்படிப்பே பெரிதாய்ப் பாராட்டப்பட்டு வருகிறது. வயிற்றுப்பிழைப்பை யனுசரிப்ப மாகச்சொல்ல வரவில்லை: ஆனால் அது பெரிதும் பாராட்டப்பட்டுவருவது உண்மையை உள்ளபடி யாராய்ந்து நோக்குவோருக்கு முறைகேடா

* c. f. Mrs. Courtright, who after a careful exposition of the "essential ideals of the noble educational philosophy of Frederick Froebel"—so widely known by the name "kindergarten"—apologetically addresses the audience as follows:—"If you do not plainly discern its underlying principle, that of "*inner connection*," complete unity and perfect harmony which should prevail to make life seem to the child a perfect whole (not disjointed parts) as it seeks to adjust itself to the world about it, to nature and more especially *to God*, the fault is entirely my own."

கப்படுகிறதென்றுமட்டும் சொல்லவந்தோம். வயிற்றுப்பாடே பெரும்பாடென்று வயிற்றுப் படிப்பை ஆத்மவித்தையிலும் பெரிதாகக்கொண்டாடினால், தவசிப்பிள்ளையை தர்மாதிகாரி ஸ்தானத்தில் வைத்துக்கொண்டாடுவதுபோலிருக்கிறது. சமையல்காரன் படித்துக்கொண்டால் தர்மாதிகாரி வயிறுகாய நியாயாதிகாரம் செலுத்துவது கூடாதுதான். ஆனால் அதன் பொருட்டு அவனை தர்மாதிகாரி ஸ்தானத்தில் வைத்துக்கொண்டாடுவாரில்லை யென்றாலும். அதுபோலிருக்கிறது இக்காலத்துப் படிப்பு வைபவம். இதனுண்மையை மேற்றிசையாரிப்பொழுது தானுணர்ந்து கிண்டர்கார்டன் முறையை மேன்மேலு மனுசரித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இதனால் வருங்கேட்டை இந்தியாவில் அதிகாரிகளும் ஜனங்களும் உணர்ந்து முணராது போல் நடந்து வருகிறார்கள். ஜனங்கள் சுதந்திரமற்று சுயசிந்தனையற்று அதிகாரிகளிழுத்த வழியில் செல்கிறவர்களா யிருக்கிறார்கள். இப்படி சோற்றுப் படிப்பைக் கொண்டாடி ஆத்மவித்தையை அலக்ஷியம் செய்துவரும் குருட்டுமார்க்கத்தார் கொள்கையைத் திருமூலர் நன்றாகச் சொல்லிக் கண்டித்திருக்கிறார்.

> "ஆற்றிற் கிடந்த முதலை கண்டஞ்சிப்போய்
> ஈற்றுக் கரடிக்கெதிர்ப்பட்ட தன்னொக்கும்
> சோற்றுத்தவஞ் செய்வார் நாலறியாதவர்
> சோற்றுக்கு நின்று சுழல் கின்றவாறே."

வயிற்றுப்பாட்டை நினைந்து வன்கொடுமைக்குட்பட்டு ஆத்மவித்தையை அலக்ஷியம் செய்துழல்வோர், ஆற்றில் கிடக்கிற முதலையைக் கண்டஞ்சியோடிக் கடைசியில் கரடிக்கெதிர் போய் நின்றது போலாகுமென்கிறார் திருமூலதேவர். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்: இத்தேகமுள்ளமட்டும் உண்டுடுத்துறங்கிப் புலன் பொறிகளுக்கெட்டின மட்டில் சந்தோஷத்தைத் தேடிக்காலத்தைத் தள்ளினால், பிந்தி வருவது வந்து விட்டுப்போகிறது" என்று இக்காலத்து நாஸ்திகவாதிகள் கொண்டகொள்கையை அறியாத் தன்மையால் அங்கீகரித்து விபரீதவலையில் சிக்கியகொடுமையால், சத்தியங்குறைந்து சன்மார்க்கம் குறைந்து, உள்மதங் குறைந்து, புறமதச்சண்டைகள் வலுத்துச் சனசமூகம் அலங்கோலப்பட்டு ஆயாசமடைந்து உள்ளமுகி உடம்பு வெளுத்து எத்தனையோ பொல்லாத பவரோகங்களுக்காளாகிக் கிடக்கிறது. இதை அந்நியர் அறிந்திலர். நம்மவர் நினைந்திலர். உண்மையுணர்ந்தோர் ஊன்றித்துணர்ந்தாராயினும் 'ஆண்டிசொல் அம்பலமேறா' தென்று சொல்கிற வழக்கப்படி, அவர் வாக்கைப் பரிபாலனம் செய்வோர் அதிகமாயின்மையால் அவர்கள் முயற்சி பலிக்கப் பல்லாண்டு செல்லுமெனத் தோற்றுகிறது. எறும்பூரக்கல்லுந் தேயுமாதலால் இக்குறையை விடாது சொல்லி வற்புறுத்தி வந்தால் சிறுகச் சிறுக ஜனங்கள் மனதும் மாறுமென்பது நம்துணிபு. ஆகையால் இது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளும் ஒவ்வொருவரும் இப்பெரிய காரியத்திற் கொத்தாசை செய்தவர்களாவார்கள். முக்கியமாய் இது நமது பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் மனதிலும் பெற்றோர் மனதிலும் பட்டு வேரூன்றிவிருமேல், நமது தேசத்துக்கு க்ஷேமகாலம் சீக்கிரம் வருமென்று எதிர்பார்க்கலாம். இது நிற்க.

"அத்தனருள்பெற" ஆகவேண்டியதென்ன? பலர் பலவித உபாயம் சொல்வார்கள். சிலர் சிவனைத்தொழு என்பார்கள். வேறுசிலர் விஷ்ணுவைப்போற்று என்பார்கள். மற்றும்



சிலர் காளி பூசை செய்யென்பார்கள். இன்னும் சிலர் சத்திபூசை செய்வதே சாதனமென்பார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து மெய்யென்றுவது பொய்யென்றுவது புகல நினைந்தோமில்லை. "எண்ணினர்க்கெண்ணினவண்ணமிருந்தருள்புரியுமென்னீசன்" மாயாலீலையை யெடுத்துரைக்க வல்லோமல்லோம். எந்தவழியுரைக்கினும் அது சிந்தைவழி செல்வதே யன்றிவேறில்லை. "சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" யென்றதனாலன் "உள்ளத்துளுள்வான்" என்பதுண்மையே. ஆகவே சிந்தையை விளக்கின் சிவனைக் காணலாம். "சிந்தையதென்னச் சிவனென்ன வேறில்லை" ஆகையால்,

> "அகம்படிகின்ற நம்மையனைபோரும்
> அகம்படிகண்டவ ரல்லலிற்சேரார்
> அகம்படியுள்புக் கறிகின்றநெஞ்சம்
> அகம்படிகண்டார் அழிக்கலுமிட்டே."

என்றபடி அகத்துளிருக்கும் நம்மையனை ஆராய்ந்து பாருங்கள். பார்த்தும் விளங்கவில்லையா? ஏன்! அகத்திலுள்ள அழுக்கினால் அறியக்கூடவில்லை. அழுக்கு நீங்கினால் அகம் ஸ்படிகம்போல் விளங்கும். ஆதலால் அகம்தூயப்பாருங்கள். அகத்தூய்மை சித்திப்பதெப்படி? "வாய்மையால் அகந்தூய்மையாம்:" சத்தியவிரத மனுசரித்துவந்தால் அகந்தூய்மையாய்விடும். சத்தியவிரத மனுசரிக்க சத்தியத்தைக் கண்டாரார்? என்பீர்களேல், நம் கருத்தை விரித்துரைப்போம். நாதாந்த, வேதாந்த, போதாந்தமாய் விளங்கும் பரம்பொருளாம் சத்தியத்தை அறிந்திலீராயினும் அந்த சத்தியத்திற் கொண்டுவிடும் வழியைக்காட்டும் நூல் நம் கையிலிருக்கிறது. அந்நூலைக் கைப்பற்றி விடாமலிருப்பதே சத்தியவிரதமாம். அதாவது ஈ யெறும்புமுதல் அண்டபிண்ட ஆகாசங்களெல்லாம், ஜடஜீவனுள்பட அந்த சத்தியத்தினால் கட்டப்பட்டு நிற்கிறது. மணிமாலையில் பல மணிகளையும் ஒன்றுசேர்த்து ஒரு வரிசைக் கிரமமாக நிற்கத் தாங்கிநிற்கும் நூல்போல், இந்த ஜெகமெல்லாம் ஒழுங்குபட நிற்பது அந்த சத்தியத்தினால். அந்த சத்தியத்தை யனுபவத்தாலுணரலாமே யன்றி மற்றப்படி யுரைக்கப்போகாது. அது உரையற்றது; வரையற்றது; பேரற்றது; ஊரற்றது; ரூபமுமற்றது; அதன் பெருமையைக் கூறப்போகாது.

> "பெண்ணல்ல வாணல்ல பேடல்ல மூடத்து
> ளுண்ணின்ற சோதி யொருவர்க் கறியொண்ணுக்
> கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
> அண்ணற் பெருமையை ஆய்ந்தது மூப்பே."

ஆதலால் மனவாக்குக்கெட்டா இச்சத்தியத்தை யுணர வழி, மனவாக்குக்கெட்டின அளவில் உண்மையை அனுசரித்து அதற்கு விருத்தமாய் நடவாமலிருப்பதாம். மனோவாக்குக் காயமாகிற திரிகரணங்களும் பொருந்தத் தாம் சத்தியமென்றுணர்ந்ததை யொட்டி நடப்பவர் மேன்மேலும் சத்தியத்தை யறிந்துய்வார். சத்தியத்தின் பெருமையை நிலை நாட்டுவதற் கென்றேயவதரித்த அரிச்சந்திரன் சத்தியவிரதமிருந்ததை யறியாதார் ஒருவருமில்லை. விசுவாமித்திரர் அவரை ஒரு சிறு பொய்தான் சொல்லச்சொன்னார்; தான் சொல்லிய வாக்கை

து ஒரு வார்த்தை சொல்லச் சொல்லி வருத்தினர்; அதற்காக அவரது திரிகரணங்களையும் போட்டு வதைத்தார். அப்பொழுது சத்தியத்தின் மகிமையை யறிந்த அம்மகான் அந்தரிஷிக்கு என்ன சொன்னார்!

"பதியிழந்தனம் பாலனையிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலேமென்றார்
மதியிழந்து தன்வாயுமிழந்த மாதவன் மறைந்தான்."

மோக்ஷத்தை யிழந்தாலு மிழப்போம் சத்தியத்தை யிழக்கமாட்டோமென்றார். சிம்மாசனாதிபதியாக விருந்து சகலபோகங்களையு மனுபவித்துவந்த அரசன் சத்திய விரதத்தைக் காப்பாற்றும் பொருட்டு, நாடிழந்து நகரிழந்து, பெண்டாட்டியைவிற்றுப் பிள்ளையை விற்றுத், தானும் சுடலைகாக்கும் பறையனுக்கடிமையாகி, இத்தனை துன்பங்களும் போதாதென்று தன் குழந்தையின் பிரேதத்தைத் தகனம் செய்யவந்த தன் தர்மபத்தினியைக் கொலைக்குற்றத் துக்காளாக்கித் தன்கையாலே அவளைக்கொலைசெய்யும்படி வந்துநேர்ந்தும், இவ்வளவுக்கு மந்தரா தெந்தனை சுத்தவீரனும் அரிச்சந்திரன் ஒரு சிறு பொய் சொல்ல அஞ்சினர். அவர் சத்தியம் கடைசியில் அவரைக்காத்தது. அவரைப்பரிசோதிக்க விசுவாமித்திர ரிஷி தன் தபமிழந்து தவமிழந்து அவமானப்பட்டார். சத்தியத்தின் மகிமை யப்பேர்ப்பட்டது! சத்தியத்தைவிட்டு ஏன் இப்படி சிறிதும் விலகாது நிற்கவேண்டுமென்றால், சொல்கிறோம் கேண்மின். சத்தியமாவது காரண காரியமிரண்டையும் பிணைக்கும் நூலாம்; இதை விதியெனினும்சரி, தர்மம் எனினும்சரி, வேறென்ன பெயரிட்டழைப்பினும்சரி. சத்தியவிரதமிருப்பதாவது காரணகாரியங்கள் சம்பவிக்கும் தர்மத்தை விட்டு விலகாது நடப்பதாம். இந்த தர்மம் பிசகினால் நூலில் சிக்கல் விழுந்துபோம்; சிக்கல் விழுந்தால் நாம் வழிதப்பி மயங்கி சுற்றுச்சுழற்சியிலகப்பட்டுத் தடுமாறித்திண்டாட வேண்டும். ஒரு சிறுபொய் சொன்னால் அதை ஸ்தாபிக்க ஆயிரம் பொய் சொல்லவேண்டும். சத்திய வழியில் மனஞ்சென்று சத்தியத்தைக் காண விரும்புவோர் சுற்றுச்சுழற்சியிலகப்பட்டுழல மனந்தாளார். அன்றி அசத்தியம் விஷத்துக்குச் சமானம். ஒரு பொய் சொன்னால் அது, ஒரு குடம் பாலை ஒரு சொட்டு விஷம் கெடுத்துவிடுவதுபோல், உள்ளத்திலூறி உடம்பெல்லாம்பரவி ஆத்மதரிசனத்தைக்காணாதபடி மறைத்துவிடும். ஆகையால் பூர்வத்தில் வித்யாபோதனையின் முக்கியாம்சங்களாகக் கொண்டாடப்பட்டுவந்தகொள்கைகள் முக்கியமாய் மூன்று தலைப்பிலடங்கும். அதாவது: (1) கடமையைக் கழித்தல், (2) தைரியத்தைக் கைவிடாமை, (3) உண்மையையுரைத்தல். இந்த மூன்றும் திரிகரண சுத்திக்காஸ்பதமானவைகளாம். கடனைக்கழித்தல் தேகதர்மம், தேகத்துக்குத் திடனைக் கொடுக்கும்; தைரியத்தைக் கைவிடாமை மனோதர்மம், இது மனதைத் திடப்படுத்தும்; உண்மையுரைத்தல் வாக்குதர்மம், இதனால் வாக்குப் பலிக்கும்; சித்த சுத்தியுண்டாம். இந்த மூன்று விரதங்களும் ஒன்றுக்கொன்றாதாரமா யிருந்துதவும். இம்மூன்று மூலக்கொள்கைகளையும் நன்றாகவுணர்ந் தனுஷ்டிக்கப் பழகினவன் வித்யாதர்மங்களை யறிந்தவனாவான். மற்ற விவரங்களெல்லாம் இந்த மூன்று தர்மங்களை யனுஷ்டிப்பதிலடங்கிவிடும். இந்த மூன்றுந்தான் இகபரமிரண்டிற்கும் ஜீவாதாரமான மூலக்கொள்கைகள். மஹாபாரதத்தில்விளங்கும்வித்யா



தர்ம முறையை ஆராயினும் சரி, புத்தர் பகவான் போதித்த வித்யாமுறையை ஆராயினும் சரி, அவையெல்லாம் இம்மூன்று மூலக்கொள்கைகளையே வற்புறுத்திக்கூறும். இதையுணராமல் நமது சென்னை பிஷப்பவர்கள் பூர்விகபோதனா முறையை யிகழ்ந்து இக்காலத்துப் பூத பௌதிகசாஸ்திர விஷய ஞானங்கள் பூர்விக முறைகளில் காணப்படாததைப் பற்றிக் குறைகூறிச் செப்பியுளார். மூலக்கொள்கையைப் பிடித்துச் செல்லுகையில் விஷய விவரங்களை நுழைத்துஇரண்டையும் ஒப்பிட்டுப்பார்ப்பது உண்மை விளங்குவதற்குச் சாதகமாகாது. ஆகையால் பிரதமாதாரமான கொள்கைகளை (underlying principles) யெடுத்தாராயுங்கால் விஷய விர்த்தி ஞானங்களையெல்லாம் அக்கொள்கையிலடக்கிப் பார்க்க வேண்டும். யேசுகிறிஸ்துவானவர் "Love is the fulfilment of all laws" "அன்பிலடங்குமைய எல்லாதர்மங்களும் நிறைவெய்தும்" என்றதனால் அதற்கு முன்னுள்ள தர்மங்களையெல்லாம் நிராகரித்ததாகச் சொல்லலாமா! அப்படியல்ல. ஞானநிர்ஷ்டையுள்ளவர்கள் எதையும் நீரவாராய்ந்து, ஆணிவேர் பட்டுயாழவறிந்து பேசுவார்கள். மரத்திற் காதாரமான வேர் மண்ணுள் மறைந்திருக்கிற தென்பதை யுணராதவர்கள் அவர்கள் கருத்தை யுணர்வது கஷ்டந்தான். அதனால் ஞானிகள் வாக்காவது அவர்கள் வாக்கானுரை செய்த உண்மையாவது பொய்யாகாது: காரியத்திலும் உண்மை அவர்கள் சொன்னதற்கு வேறுபட்டிராது.

ஓம் சத்குருவே நம;
ஓம் தத்ஸத்.

## SOME LATEST DISCOVERIES OF SCIENCE.

### I. The Response of Matter.

## சடத்திற் சீவன்.

இவ்வுலகிலுள்ள பொருள்களையெல்லாம் பொதுப்பட நோக்கி இரண்டாகப் பிரித்துரைப்பர். அதாவது தாவரப்பொருள், சங்கமப்பொருள்; தாவரம்—அசைவற்றது; சங்கமம் அசைவுள்ளது. இதை ஓரிடத்து நிலையாயுள்ள பொருளென்றும், நிலைபெயரத்தக்க பொருளென்றும் புறப்பொருளர்த்தத்தில் பூமியோடொப்பிட்டுக் கூறுவர். அப்படிக்கின்றி இவைகளைப் பிரத்தியேகமாக அவ்வப்பொருள் மட்டில் கவனித்துப் பார்க்கின், அசையும் பொருள் உயிருள்ள பொருளென்றும், அசையாப் பொருள் உயிரற்ற பொருளென்றும் சொல்வர். உயிருள்ள பொருளை சீவன் என்றும், உயிரற்றதை சடமென்றும் சொல்வர். உயிருள்ள பொருள் அசையுந்தன்மையும் வளருந்தன்மையும் வாய்ந்துள்ளது. உயிரற்ற பொருளுக்கு இவையிரண்டுமில்லை. இதையே மேற்றிசைப் பூதபௌதிக சாஸ்திரிகள் organic substance, inorganic substance என்று சொல்லி வகுத்துக் கூறுவர். மேற்றிசையார் பகிர்முக விசாரணையே செய்து உண்மையைக் காண முயல்கிறார்கள். அந்தர்முகமாக விசாரணை செய்து உண்மையுணரும் சக்தி அவர்களுக்கு அவ்வளவாக இல்லை. அந்த வழியாகக் கண்ட உண்மைகளில் அவர்களுக்கு நம்பிக்கையுமில்லை. கருவிகரணங்களால் காணக்கூடிய தெதுவோ அதையே அவர்கள் நம்புவார்கள். ஆனால் நமதுமுந்தோ

திரியங்களின் கிரகிக்கும் சக்தி மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளதாததால் அவைகளை நம்பியவர்களுக்கு அவ்வெல்லையை மறிப்போவது மிகவும் கஷ்டமென்பதை நோக்காது, மனிதனால் அறியக்கூடியதெல்லாம் அவன் புலன் பொறி யறிவுக்கெட்டிய அளவேயென்று, ஸர்வக்ஞ சக்தி வாய்ந்த ஆத்மாவைத் தள்ளி, கிஞ்சிக்ஞத்துவனை ஜீவனையே பெரிதும் பாராட்டிவந்தார்கள். ஆனால் சத்தியம் எப்படியும் சத்தியமேயாதலால், மனிதன் அதை யுணர்ந்தாலும் உணராவிட்டாலும், அது ஏதோ உள்ளது உள்ளபடியே இருந்துவருகிறது. மனிதனும் உண்மையில் ஸர்வக்ஞத்துவம் வாய்ந்தவனாதலால் உண்மையை உள்ளபடி உணர அவனுள்ளத்தில் அவனால் அடக்கக்கூடாத ஆசையொன்றிருந்து அவனைத் தூண்டிக் கொண்டேயிருக்கிறது. இந்தத் தூண்டுதலிற்குட்பட்ட மனிதன் எப்போதும் தன் புலனிற்படுங் காரியங்களுக்குக் காரணம் என்னவென விசாரித்துக்கொண்டேயிருக்கிறான். இப்படி ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் என்னவென்று விசாரிக்க, விசாரிக்க, காரணம் காரியமாக மாறி, காரணத்துக்குக் காரணம், அதற்கும் காரணம், என்று படிப் படியாய் ஏறி ஆதிகாரணத்தை அறியும் வழியில் அவன் அறியாமலே செல்லுகிறான். காரணமின்றிக் காரியமில்லை. காரியமுண்டானால் அதற்குக் காரணமுண்டு. *காரணத்திற்கும் காரியத்திற்குமுள்ள சம்பந்தமே சத்தியமார்க்கமாம். இது படிப்படியாக ஏறி எல்லாக் காரணங்களுக்கும் காரணமாயும் அதற்குமேல் காரணமின்றி தானே தானாய் விளங்கும் வஸ்து ஒன்று எது உண்டோ அதில் போய் முடியும்; அதுவே பூர்ண சத்தியமாம்; பிரமம் என்பதும் அதையே. சமயவழி பற்றிச் செல்வோர் **தெய்வம்** என்றும் **கடவுள்** என்றும் சொல்வர் இதையே.

இப்படி இப்பிரபஞ்சத்தில் தோற்றும் தோற்றங்களுக்கெல்லாம் காரணம் விசாரித்துக் கொண்டுபோனால் அது ஆதிகாரணமாகிய கடவுளின் பாதார விந்தத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். இதைத் தத்துவ விசாரமென்பர். தத்துவம்—நூலில் கோர்த்த பவழம்போல காரண காரியங்களைக் கோர்வையாக விளங்கச் செய்யும் உண்மை. இதை விதி யென்பர்; மேற்றிசைப்பாஷைகளில் இதை "the Law" என்பர். மேற்றிசைத் தத்துவசாஸ்திரிகள் பேதபுத்தி கொண்டு எதையும் வேறுபடுத்தி யாராய்ந்து வந்ததால் உண்மையையுள்ளபடி யுணராமல் வேற்றுமையாகவுணர்ந்து தப்புவழியிற் சென்றார்கள். அவர்களும் இப்பொழுது தாங்கள் செய்த தப்புகளை யெல்லாம் திருத்திக்கொண்டு உண்மையான வழிக்குத் திரும்புகிறார்கள். முதலில், சக்தி வேறு, உஷ்ணம் வேறு, மின்சாரம்வேறு என்று தீர்மானித்திருந்தவர்கள் இப்பொழுது அவையெல்லாம் ஒன்றேயென்று கண்டுணர்ந்து அதைக்காரியத்திலு முபயோகப்படுத்தி வருகிறார்கள். அசைவற்ற நீர் நிலையில் ஒரு கல்விழுந்தால் அசைவுண்டாகி அலைகள் தோன்றுவது போல் சிதாகாசத்தில் (Subtle Ether) உண்டாகும் கண்ணுக்குப் புலப்படாத மின்னொளி அலைகளால் ஒளி, சப்தம், அசைவு முதலிய உண்டாகின்றன வென்றும், உஷ்ணம், சக்தி, மின்சாரம்

* *Cf.* Emerson who says "We are natural believers. Truth or the connection between cause and effect alone interests us." "We hearken to the man of science because we anticipate the sequence in Natural phenomena which he uncovers."



இவையெல்லாம் அவ் அலைகளின் வேகத்தினுடைய வேற்றுமையாலுண்டாகும் தோற்றங்களேயன்றி வேறல்லவென்றும் கண்டறிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த சிதாகாச அலைகளின் உண்மையை உணரக் காரணமாயிருந்தவர் ஜர்மனியிலுள்ள (Hertz) ஹெர்ட்ஸ் என்னும் சாஸ்திரஞர், இவர்தான் (eletric waves) மின்சார அலைகளிருப்பதைக் கண்டுபிடித்து, அவை கண்களுக்குப் புலப்படாவிட்டாலும், அவைகளுக்கேற்ற சூக்ஷ்ம யந்திரங்களால் அவைகளின் உண்மையை நிரூபிக்கலாமென்று கண்டு அப்படியே நிரூபித்துங் காட்டினர். இங்கிலாந்தில் இந்த உண்மையைக் கண்டுபிடித்தவர் ஸர் ஆலிவர் லாட்ஜ் என்னும் பௌதிக சாஸ்திர விற்பன்னர். இந்த உண்மையின் ஆதாரத்தைக் கொண்டே இப்பொழுது தந்திக் கம்பியின்றி மின் சமாசாரம் அனுப்பும் சூக்ஷ்மம் (wireless telegraphy) கண்டு பிடிக்கப்பட்டு (Marconi) என்பவரால் அனுஷ்டானத்திற் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

உலகத்திலுள்ள பௌதிகப் பொருள்களை யெல்லாம் அணுமாத்திரமாக மாற்றலாம் (molecule); அப்புறம் அவைகளை அதிலும் சூக்ஷ்மப் பொருளாக மாற்ற முடியாமையால் இந்தப் பிரபஞ்சமெல்லாம் அணுமாத்திரமானதே யென்று (Atomic theory) ஒரு கொள்கை ஏற்பட்டிருந்தது. இப்பொழுது மின்சார சக்தியால் அணுவையும் பிரித்தால் அது சுற்றிச் சுழலும் ஒரு சக்தியாக மாறுகிறதென்று ப்ரோபெஸர் க்ருக்ஸ் என்னும் தற்கால பிரபல சாஸ்திர விற்பன்னர் நிரூபிக்க, அதுவும் தப்பென்று நீங்கொழிந்தது, நிகோலா டெஸ்லா (Nicola Tesla) என்னும் அமெரிக்காவிலுள்ள மின்சாரதத்துவ சாஸ்திரி, இந்தப் பிரபஞ்ச மெல்லாம் பம்பரம்போல் சுற்றிச் சுழன்று வரும் சுழற்சி சக்தியினாலுண்டாயிருக்கிறதென்றும், அந்தச் சுழற்சியைமுற்றும் நிறுத்தினால், பிரபஞ்சப் பொருளெல்லா மழிந்து அறிவுக்கெட்டாத சத்திய நித்தியப் பொருளாக மாறிவிடுமென்றும், இந்தச் சுழற்சிவன்மையாலே ஆகாசத்திலிருந்து எல்லாப் பொருளையும் சிஷ்டிக்கலாமென்று நிச்சயமாய் ஊகித்துரைக் கூடியதாயிருக்கிறதென்றும், இதைச் செய்யும் வகை இன்னும் தெரியாமையால் இது பொய்யென்று சொல்வதற்கில்லையென்றும், பூர்வத்தில் தீர்க்கதரிசிகள் கண்டுள்ளதாக வேதங்களில் காணும் தத்துவக் கொள்கைகள் உண்மையே யென்று அவர் உணர்வதாகவும் சொல்லியிருக்கிறார். வித்தில் மரம்போல், மனிதனுக்குள் தெய்வம் ஒடுங்கியிருக்கிறதென்று தற்கால சாஸ்திர வழியாய் சாதித்துக் கூறியெழுதியிருக்கிறார். "Man is potential God" என்றார் இவர்.

இப்பொழுது கல்கத்தா ப்ரெஸிடென்ஸி காலேஜில் பூத தத்துவ சாஸ்திரத்தில் ப்ரொபெஸராக அமர்ந்துள்ள ஜகதீச சந்திர போஸ் என்பவர் நூதனமாய்க் கண்டுபிடித்து நிரூபித்துள்ள ஒரு உண்மையால், இதுவரையில் ஜடபதார்த்தமென்று (Dead matter) சொல்லி[illegible] லோகங்கள், மனிதன், மிருகம், செடிகளைப்போலவே ஜீவசக்தி வாய்ந்ததென்றேற்பட்டு [illegible]சுவாய்விட்டது. இதனால் இன்னொருதப்புத் திருத்தப்படலாயிற்று. இவர் உலோகங்கள் மனிதனைப்போலவே ஜீவசக்தி வாய்ந்தவையென்று ஸ்தாபித்த முறை மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஜீவனென்றாலென்ன? உயிருள்ளது என்பார்கள். உயிர் இருப்பதற்கு அடையாளமென்ன? தானாக அசையும் சக்தியுள்ளது. ஒரு புழுவைக் கண்டு அதில் ஜீவனிருக்கிறதா இல்லையாவென்று பார்க்க நாமென்ன செய்கிறோம்? ஒரு குச்சியைக்கொண்டு

அலைதத் தூண்டுகிறோம். அது நெளிந்தால், அதாவது அசைந்தால், உயிரிருக்கிறதென்கிறோம். இல்லையேல் செத்துவிட்டது என்கிறோம். இதிலிருந்து நாம் அறியத்தக்கதென்ன? வெளியிலிருந்து வரும் தூண்டுதலுக்கு மாறுத்தரமாக அதனுள்ளிருந்து அசைவுண்டானால் அது உயிரிருப்பதற்கடையாளம். இத்தூண்டுதலையும், இதற்கு மாறுத்தரமாக உள்ளிருந்துண்டாகும் அசைவையும் எவ்வளவு அதிசூக்ஷ்மமாகவிருக்கினும், கண்டுபிடிக்கும் அதிநுட்பமான கருவி ஒன்று வேண்டும். நமது கண்கள், காதுகள் ஆகாசத்தில் உண்டாகும் அலைகளினசைவை ஏதோ ஒரு அளவுக்குள்பட்டவரையில்தான் உணரக்கூடும். அந்த அளவுக்குக் குறைந்தாலும் அதிகப்பட்டாலும் காணச் சக்தியில்லை. ஆகவே அதிநுட்பமாகவுண்டாகும் அசைவுகளைத் தவறாது குறித்துக்காட்டும் சூக்ஷ்ம யந்திரமொன்று (Galvanometer) புதிதாய் நிருமித்து அதிலுள்ள குறைகள் நீங்க அக்கருவியைப் பூரணப்படுத்திவருகையில் மிஸ்டர் போஸ் இப்புதுமையைக் கண்டார். இந்த (Galvanometer) என்னும் மின் அலையசைவு குறிக்கும் யந்திரம் எவ்வளவு நுட்பமான அசைவையும் அதனூடே செல்லும் ஒரு காகிதத்தில் விரிவு சுருங்கலுக் கேற்பக் கோடு கிழித்துக்காட்டும். அசைவுள்ளவளையில் கோடு மேலும் கீழுமாக அசைந்து செல்லும். அசைவற்றால் கோணலுமற்று நேராகவோடும். இந்த யந்திரத்தை மனிதனுடைய மாம்ச நரம்பில் (muscle) பிணைத்து மின்சார அதிர்ச்சியால் அத்தசை நரம்பைத்தூண்ட அத்தூண்டுதலுக்கு மாறுத்தரமாக அம்மாம்ச நரம்பு சுருங்கி விரிவது அதிலுள்ள சிவசக்திக்குத் தக்கபடி ஏற்றலும் குறைச்சலுமாக அவ்யந்திரத்தினூடே செல்லும் காகிதத்தில் கோடுகளின் ஏற்ற இரக்க விசேஷத்தால் விளங்கும். அந்நரம்பு அலுத்துக் களைத்துப் போனால் அதற்குத் தக்கபடி கோடுகளும் வித்தியாசப்பட்டுக் காட்டும்; அந்நரம்பிலுயிரற்றுப் போய் அது செத்துப்போனால் அப்பொழுது கோடு அசைவற்றுக் காணப்படும். இந்த அதியற்புத யந்திரத்தை ஒரு உலோகத்துண்டுடன் சேர்த்து, அந்த உலோகத் துண்டை மின்சார அதிர்ச்சியால் தூண்ட, அது காரணமாக அந்த உலோகத்திலிருந்துண்டான இயக்கத்தால் காகிதத்தில் விழுந்த கோட்டுக் குறிகளையெடுத்து மாம்ச நரம்பின் இயக்கத்தாலுண்டான கோட்டுக் குறிகளோடு ஒத்துப் பார்க்க இரண்டும் சிறிதும் வித்தியாசமின்றிப் பொருந்தியிருக்கக் கண்டார். இதைக் கண்டு அதிசயத்து, உயிருள்ளவரையில் சாவுமுண்டாதலால், அந்தப் பரீக்ஷைக்கு ஒத்து வருகிறதாவென்று பார்க்கத்தீர்மானித்தார். மாம்சநரம்பும், சிவ சக்தியுள்ளவர்க்கத்தைச் சேர்ந்த செடி கொடிகளும், விஷத்தினால் செத்துப்போய் வெளித் தூண்டுதலுக்குத் தக்கபடி உள்ளிருந்து வரும் அசைவற்றுப் போவதால், உலோகங்களின் செய்தி எப்படியென்றறிய, அந்த உலோகத்துண்டை விஷத்திராவகத்திலமுத்தி, கால்வானோமிடர், என்னும் அவர் யந்திரத்தில் சேர்த்து, மின்சார அதிர்ச்சியால் அவ்வுலோகத்துண்டைத் தூண்டினார். அப்பொழுது அது செத்துப்போன மாம்சநரம்புபோலவே அசைவற்றிருக்கக் காணப்பட்டது. அந்த விஷத்தைத் தீர்க்க வேறு திராவகம் விட்டு அப்பொழுது பார்த்தார். முன்போல் உயிர் பெற்றுள்ளதென அசைவுகாட்டியது. இப்படி உயிர்ப்பிராணியின் ஒரு மாம்ச நரம்பைப் போலவே களைப்பு, இளைப்பு, சாவு, உயிர்ப்பு எல்லாம் காட்டிய உலோகத்தில் சிவ சக்தியில்லையென்று இனி என்னமாய்ச் சொல்கிறது. இந்த அதிசயத்தைப் பார்த்த ஐரோப்பிய சாஸ்திர விற்பன்னர்களெல்லாரும்,



இதுகாறும் சீவவர்க்கமென்று கருதிவந்த பொருள்களிலுள்ள சீவனே, சடவர்க்கமென்று கருதப்பட்ட உலோகங்களிலுமிருப்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுவதால் அவைகளைச் சடப்பொருள் என்று சொல்வது இனித்தகாது என்று ஒப்புக்கொண்டு, இன்னும் என்ன என்ன அதிசயங்கள் வெளியாகவிருக்கின்றனவோ வென்று ஆச்சரியப் பட்டார்கள். இந்த உண்மையை முதல் முதலறிந்த மிஸ்டர் ஜகதீச சந்திர போஸ் அவர்கள் இதைக்கண்டு அடங்கா அதிசயப்பட்டு ஆச்சரியத்தில் மூழ்கிச் சிந்தையிலாழ்ந்து புத்தி தெளியவும் 'கங்கைக்கரையிலுள்ள நம்முன்னோர்கள், "இப்பிரபஞ்சத்தில் தோற்றும் எண்ணிலாத் தோற்றங்களிலும் ஏகமாயுள்ள தொன்றையே எவன் காண்கிறானோ அவனே நித்தியமாயுள்ள சத்தியத்திற்குப் பாத்திரன், வேறெவர்க்கும் அது விளங்காது, விளங்காது," என்று உபநிஷத்திற் கூறியுள்ளதினுண்மை இத்தன்மையதாயிருக்குமென்று அப்பொழுது தான் எனக்குச் சிறிதுபட்டது' என்று வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்.

இப்படி இக்காலத்துச் சாஸ்திர ஆராய்ச்சிசெய்பவரும் துணிந்து மேற்போகப் போகப் பூர்வத்தில் தீர்க்கதரிசிகள் கண்டவுண்மைகளையே சிறிது சிறிதாக உணர்ந்து வருகிறார்கள். எத்தனையோ நூற்றாண்டுகளாக உழைத்து எவ்வளவோ தப்புகள் தவறுகள் செய்து தட்டுத் தடவித் தடுமாறிக் கடைசியாக தற்செயலாய்க் கண்டுபிடித்த இந்த உண்மையை, நமது ரிஷிகள், அவர்கள் மனதை பகிர்முகப் பார்வையினின்று அந்தர்முகமாகத்திருப்பித் தத்துவாராய்ச்சி செய்ததால் வெகுசுலுவில் பிரத்தியட்சமாக அறிந்து சாக்ஷாத்காரமாகப் போதித்துளார். இக்காலத்துத் தத்துவ ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரிகளுடைய யந்திர தந்திர உபாயங்களெல்லாம் அவர்கள் தேடுவதில்லை. பகிர் முகமாகப் பரீக்ஷை செய்துண்மையை யூகித்தறியும் இவர்கள் பிடிகை வேறு, அவர்கள் பிடிகை வேறு. மிஸ்டர் போஸ் அதியாடம்பர ஆப்பாடங்களோடு உலகெலாம் கண்டதிசயிக்க ஓதிய இவ்வுண்மையை அடுத்த தலைமுறையில் பிறக்கும் குழந்தைகள் அவர்கள் தாய்மடியிலிருந்து தாங்கள் பேசும் மழலைச் சொல்லோடு கற்றுக் கொள்வார்போல், ஞானிகள், குழந்தைகளாகிக் கடவுள் மடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் சக்தியால் இவ்வுண்மைகளையெல்லாம் ஸ்வானுபவத்திற் கண்டு சாதாரணமாக உரைப்பார்கள். உதாரணமாக ஸ்ரீ மாணிக்கவாசகர் பிரபஞ் சோற்பத்தியாம், "சிவபுராணத்தைச்" சொல்லப்புகுமுன் அவர் முகவுரையாகக் கூறியுள்ள வார்த்தையைக் கேளுங்கள். அவருடைய யந்திர தந்திர சாதகங்களெல்லாம் ஈசன் திருவருளையன்றி வேறில்லை.

"சிவனவனென் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தைமகிழச் **சிவபுராணந்** தன்னை
முந்தைவினை முழுதுமோய உரைப்பனியான்"

இம்முகவுரைக்குப் பின் இப்பொழுது பிரமாதமாகக் கொண்டாடப்படும் இதே உண்மையைக் குழவியின் மழலை வார்த்தை போலுங் காதுக்கினிய அதிமதுர வார்த்தைகளால் ஸ்வானுபவத்திலிருந்து அவர் பிறப்புகள் வரலாற்றை புனைசெய்யக் கேளுங்கள் :—

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
* பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!"

இவ்வுண்மையைக் கண்டு அவர் வியந்திலர், உவந்திலர், உலகெலாந் தொப்ப ஓடிலர். பின்னை! இதையெல்லாந்தள்ளி, இதினும் மேலாய் என்று மழியாததாயுள்ள மெய்ஞ்ஞான ஸ்வரூபமாகிய கடவுளைக்காண ஆசைப்பட்டு "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!" "எஞ்ஞான மில்லாதேன்" அஞ்ஞானந்தன்னை அகல்விக்கவேண்டி, "உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற" மெய்யனைப் புகழ்ந்து வணங்கி அவரை ஞானகுருவாகப் பெற்றுத் தான் கடைத்தேறியதை **"மெய்யே, உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"** என்று **வாய்விட்டுச்** சொல்லி சத்தியமுடிவெய்திச் சாந்தமெய்தியதையே பெரிதாகக் கருதிப் புகழலானர். இதுவல்லவோ எல்லா அறிவுக்கும் அந்தமாம் **வேதாந்தம்.** எல்லா சாஸ்திரங்களும் வந்து முடியுமிடம் இதுவே. இதையடையும்வரையில் எவரும் இடையில் தங்கி நிரந்தர நிச்சயம் பாராட்டி நிற்றல் கூடாது என்பதை வற்புறுத்தவே கதோபநிஷத்தில் குரு சிஷ்யனைப்பார்த்து உனக்கண்ணைத் திறந்துபார்க்கச்சொல்லி, "அப்பா அந்தம் சேரும் வரையில் இடையில் நில்லாதே, நில்லாதே!" யென்று வற்புறுத்திக் கூறுகிறார். ஓம் தத்ஸத்.

C. V. S.

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, OO.*
*(With the First Dawn of the 20th Century)*

# ஆனந்தத்தாய்மொழி.

### 6-வது: கூடல் பருவம்——ஊடல் படலம்.

"போகப்போகவா," போவேன்கடுகவென்று,
கடுகவழிகடந்தேன் கரைதுறைகள்கடந்துவிட்டேன்
கடந்துவிட்டபின்புநான் கண்டதையென்சொல்வேன்
விடியற்காலையிலே வெளிச்சம்வரும்வேளையிலே
ஊனஉடல்தான் உள்மலங்கழித்திடவே

* பல விருக்ஷங்களாகி.



54 அண்டம் பிளந்ததுகாண்அடிவானம்வெளுத்ததுகாண்
வெளுத்த அடிவானத்தில்விண்மீனுதித்ததுகாண்
உதித்த அந்தவிண்மீனும்பொன்மயமாயிருந்ததுவே:
பொன்மயமானதுவைப் பிடித்துவிடநான்பார்த்தேன்
பார்த்தும்பலிக்கவில்லை பரதேசியானேன்நான்
பரதேசியானபின்பு பார்த்துக்கொண்டேன் ஆராய்ந்து;
ஆராய்ந்துபார்க்கையிலே அம்மாள்கையைக்கண்டேனையா
கையதனைக்கண்டுவிட்டேன் கஷ்டமதுமிகவாச்சு
அபராதம்செய்தேனென்று அன்புருகிநொந்தேனையா
தாழவேகையைவைத்தென்னைத் தாலாட்டிவந்ததாயார்
கையெடுத்துமேலாகக் காட்டினதைக்கண்டுவிட்டேன்
கண்டிடவேதானுமெத்தக் கருத்தழிந்துஉருகியது
கருத்தழிந்துபோகவுந்தான் கண்டேன்செட்குற்றத்தை
"காண்டாமிருகமதனை நான்கசக்கிப்பிழிந்தே"னென்று
அகங்காரவாடை யடித்ததையானன்பேலே;
அந்தவாடையதுமெய்யுறாமல் தடுக்கவந்தாளென்தாயார்;
வாடையைத்தடுத்துஅவள் முகவாட்டமாயிருந்தாள்.

ஃ

இன்னுமென்னகுற்றமென்று ஆராய்ந்தேன்மிகநனிவாய்:
காண்டாமிருகமதனைக் கசக்கிப்பிழிந்ததனால்
அழித்தழித்துப்பிழிந்து அம்மணியாயாக்கிவைத்தேன்;
அந்தமட்டுநான்தானு முண்மையாகவேயிருந்தும்
ஆத்திரப்பட்டுநான் அமுதமளிக்கப்போனேன்:
அதிகப்பிரசங்கியவன், அவன்கெட்டான்போவென்று
அம்மாள்வந்தம்மணியை யழைத்துக்கொண்டுபோய்விட்டாள்:
அந்தஉளவறியாமல் அகப்பாவக்கழுதையது
"காண்டாமிருகவாசனை" யென்றுகத்திற்றுவாய்விட்டு;
இத்தனைநாள்தவமிருந்து எத்தனையோபடியேறி
கழுதையதாவேனனே கனகுற்றம்செய்ததனால்!
கனகுற்றம்செய்தாலும் கண்டறிந்துசெய்தேனோ?

54. "வெளுத்தஅடிவானத்தில்விண்மீனுதித்ததுகாண்." c. f.
என்னையறியவிசைவித்தவென்னந்தி
யென்னையறிந்தறியாதவிடத்துய்த்துப்
பின்னையொளியிற்சொருகிப்புறப்பட்டுத்
தன்னையளித்தான்தற்பரமாகவே.

கடுகவழிநடந்ததனால் களைமீறிச்செய்தேனம்மா
அறியாக்குழந்தைநான் தெரியாமற்செய்ததுவை
அன்பேநீதாயாரே ஆரமுதேசகியுமம்மா:
மடியில்வளர்த்தென்னைத் தரையில்விட்டுப்பார்த்தனையே!
தரையில்விட்டேபார்த்தாலும் தயவுகுறையவில்லை;
தயவுமிகவிருந்தாக்கால் தப்பிநான்பிழைத்திடுவேன்;
ஆத்திரக்காரனம்பா என்னையடக்கியேயாளுமம்மா
அடக்கிநீராண்டாக்கால் ஆகாதோ அம்மாவே!

ஃ

[55]அம்மா அம்மாவென்றழுகிறேன் ஓலமிட்டு
ஓலமிட்டழுதுமின்னம் கண்திறக்கவில்லையே
கண்திறக்கமாட்டீரோ கதிதானெனக்கிலையோ!
ஏறியிறங்கினதாய் ஓதினர்யாரோகாண்:
உன்வயிற்றிற்பிறந்தும் நான்ஏறியிறங்குவனோ!
ஏறியிறங்கவிட்டால் ஏச்சுப்பேச்சாகாதோ!
ஏச்சென்றும்பேச்சென்றும் பிதற்றுகிறேன்பாரம்மா:
ஏச்சுப்பேச்சழிந்து எத்தனைகாலமாச்சு!
இறக்கமதுகண்டதனாலிவ்வார்த்தைநானுரைத்தேன்.
ஏற்றியிறக்கி இளைக்காரம்காண்பாயோ!
கடுகவழிநடந்தேனென்று கண்தோஷம்பட்டதென்று
கழுதையேதானுக்கி கண்திர்ஷ்டிகழித்தனைகாண்.
என்னஎன்னசூக்ஷ்மமடி என்தாயேஉன்றனக்கு!

ஃ

உன்சூக்ஷ்மமறிந்தல்லோ பிழைத்திடவேணும்நான்:
ஆத்திரக்காரனென்று அனுபவந்தான்முதிரவிட்டாய்;
காண்டாமிருகமதனைக் கசக்கிப்பிழியென்றாய்;
இட்டவேலைதட்டாது செய்திட்டகாலையிலே
தெரியாதுசெய்தபிழைக் கென்னைக்கழுதையாயாக்கிவிட்டாய்.

---

55. "அம்மாஅம்மாவென்றழுகிறேனைஓலமிட்டு." c. f.

சீர்நந்திகொண்டுதிருமுகமாய்விட்ட
பேர்நந்தியென்னும்பிறங்குசடையனை
நாஞெந்துநொந்துவருமளவுஞ்சொல்லப்
பேர்நந்தியென்னும்பிதற்றொழியேனே.



ஆத்திரம்நீங்கிற்றம்பா அவசரமும்தொலைந்ததம்மா.
போதும்போதுமிந்தப் பொய்க்கூத்தாடினது!
மெய்வழியேசெல்வேன் விட்டவிடம்தானேனுவேன்;
விட்டவிடம்தானேறி வேணமட்டும்காத்திருப்பேன்:
அவசரப்பட்டு ஆவதொன்றுமில்லையே!
அவசரக்காரனென்று என்னையழுங்கழுதையாக்கினையே:
கழுதையின்பொறுமைதான் இனிஎன்னைவிட்டுப்பிரிந்திடுமோ!
பொறுமையதுவந்ததம்மா, போயிற்றுக்கழுதைஜன்மம்:
கழுதைஜன்மம்போயிற்றுக் கிடைத்ததுவேமுன்கதிதான்.

ஃ

அம்மாள்அருளாலே அழைக்கிறாள்குழந்தைவந்து
அமுதுண்ணஅன்பாக அழைக்கிறாள்குழந்தையவள்;
அழைக்கிறகுழந்தையை அரைநிமிஷம்காக்கவைத்தேன்:
காக்கவைத்ததேனென்றால் கழுதையின்பொறுமையினால்,
கண்ணாரக்கண்டிருந்து காதாரக்கேட்டவர்கள்
உண்மையைச்சொன்னேனென்று உளமகிழ்ந்துமெய்ம்மறப்பர்.

ஓம்தத்ஸத்.

## THE ILIAD OF HOMER.

### ஹோமர் என்னும் மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

### முதற்காண்டம்.

அக்கிலவனுக்கும் அகமம்னனுக்கும் பிணக்கம்.

**இக்காண்டத்தின் கதாசங்கிரகம்.**

**தராய்** உயுத்தத்தில் கிரேக்கர்கள் சமீபத்திலுள்ள சில நகரங்களைக் கொள்ளையிட்டு அவற்றினின்று கிரிசை, பிரிசை (Chryseis and Briseis) என்று அதிரூபவதிகளாகிய இரண்டு பெண்களைச் சிறைப்பிடித்தார்கள், அவர்களில் முன்னவள் அகமம்னனுக்கும் பின்னவள் அக்கிலனுக்கும் உரியராயினர். கிரிசையின் தந்தையாகிய கிரிசன் என்பவன் அவளை மீட்கும்பொருட்டு கிரேக்கர் படையிறங்கிய தானத்தில் வந்து அகமம்னனை வேண்டிக்கொள்ள, அவன் அவனை அவமதித்துத் துரத்திவிட்டான். அக்கிரிசன் மிகவும் விசனமடைந்து தனது இஷ்ட தேவதையாகிய கதிர்க்கடவுளிடம் முறையிட அக்கடவுள் கிரேக்கர் படைக்குள் ஓர்

கொடிய வெப்பு நோயைப் பரவச்செய்தான். அப்பொழுது அக்கிலன் அந்நோய் நிவர்த்தியை ஆலோசிக்க ஓர் சபை கூட்டி அச்சபையில், கால்கன் (Chalcas) என்னும் ஆருடக்காரனால் அந்நோய்க்குக் காரணம் கிரிசை யென்னும் மடந்தையை விடாமையே யென்று உணர்த்துவித்தான். அதனால் அரசனாகிய அகமம்னனுக்கு அப்பெண்ணை அனுப்பிவிடவேண்டி வந்ததனால் அக்கிலனோடு மகா மூர்க்கமாகச் சச்சரவிட்டுப் பின்பு நெந்தர் (Nestor) என்பவனால் சாந்தமாயினான். ஆயினும் தான் சைனியத்தில் சர்வாதிகாரம் பெற்றிருந்ததனால் தானிழந்த நங்கைக்கு மாறாக பிரிசை யென்பவளை பலாத்காரமாகக் கவர்ந்துகொண்டான். அதனால் அக்கிலன் அதிருப்தியடைந்து தானும் தன் படையுமாக மற்ற கிரேக்கர்களை விட்டு விலகிப்போய் தன் தாயாகிய தேதி (Thetis) என்பவளோடு முறையிட அவள் தராயர்களுக்கு ஜயத்தை யளித்து அதனால் தன் மகனுக்குத் தாங்கள் செய்த அநீதத்தின்பயனைக் கிரேக்கரை உணரச் செய்யவேண்டுமென்று யூபிதர் என்னும் கடவுளை வேண்டிக்கொண்டாள். யூபிதர் அவ்வேண்டுகோளுக் கிணங்கலாலே யூனோவென்னும் தன் தேவிக்குக் கோபமூட்டினான். அதனால் அவர்களிருவருக்கும் கொடிய சச்சரவுண்டாகிக் கடைசியில் வல்கன் என்பவனால் சமாதானப் படுத்தப் பட்டார்கள்.

1. இலத்தனை மைந்தனை விரவிமா வெகுளிபூண்டு
குலைத்திடுங் கொடிய நோயாற் குவித்தனன் பிணத்தின் குன்றால்
நலத்தகு வீரர்தங்கு மிடனெலா நராதிபன்றான்
நிலைத்த தன் னன்பன்றன்னை நிந்தை செய்ததனான் மன்னோ.

(இ-ள்.) இலத்தனாவின் (Latona) புத்திரனாகிய கதிர்க்கடவுள் அரசன் தன்னுடைய மாறா நேயம்பெற்ற அன்பனாகிய கிரிசனை (Chryses) அவமதித்துச் செய்த குற்றத்தாலே மகா கோபங்கொண்டு கிரேக்க வீரர் தங்கியிருந்த விடங்களிலெல்லாம் ஓர் கொடியவெப்பு நோயையுண்டுபண்ணி அவர்களைக் கணக்கில்லாமல் மாளச்செய்து பிணங்களைக் குன்று குன்றாகக் குவியச்செய்தான்.

2. என்னெனி லிரவிக்கான்ற வன்பனாங் கிரிசனென்பான்
தன்னருந் தோகை தன்னைச் சிறையினிற் றவிர்க்கவெண்ணிப்
பொன்னொடு பொருள்கள் யாவும் பொருவறக் கொணர்ந்து கிரேக்கர்
துன்னு பேரவையிற் போந்து துனியொடு மிரந்து நின்றான்.

(இ-ள்.) அவ்விவரம் யாதென்னில் சொல்லுவேன் கேட்பீராக. கதிர்க்கடவுளுக்கு மிக்க அன்பனாகிய கிரிசன் என்பவன் தன்னுடைய புத்திரியைக் கிரேக்கராஜன் சிறைப்பிடித்து வைத்ததினாலே அவளை மீட்கும்பொருட்டு அநேக திரவியங்களோடு இராஜ சபையில் வந்து நின்று சொல்வானாயினான்.

3. கரத்துறு தண்டுந்தூய கானமர் தொடையு நீட்டிப்
பெருத்த வவ்வவையுத் துள்ளார் யாரையும் வேண்டிப் பின்னர்
செருத்தலை வீரர்க்கெல்லாந் தலைவராய் வதிந்ததிண்டோட்
டிருத்தகு வேந்தரான விருவரைச் செறிந்து சொல்வான்.

(இ-ள்.) கையிலேந்திய தண்டையும் வாசனை வீசுகின்ற புஷ்ப மாலையையும் நீட்டி அந்தப் பேரவையிலுள்ளோர் அனைவர்க்கும் பொதுவாகத் தன் குறையைச் சொல்லி வேண்டிக்கொண்டு பின்பு



யுத்தகளத்தில் அநேக வீரர்களுக் கதிபதிகளாய்ப் போர் நடத்தும் பெருமையைப்பெற்ற புஜபராக்கிரமமுடையராய் செல்வம் நிறைந்த இராஜாதி ராஜர்களாகிய இருவரையும் நோக்கிச் சொல்வானாயினான்.

4. தராய் நகர்ப்புரிசை யாவும் தரையொடுந்தாழவென்று
பராவிய செல்வமெல்லாம் பான்மையினும்மவாக்கி
விராவிய விழைவு முற்றி மீண்டுநுந்தேய மேவித்
தராதலம் புரந்து வாழ்வீர் தற்பரனருளான் மாதோ.

(இ-ள்.) சத்துருஸ்தானமாகிய தராய்ப் பட்டணத்தின் (Troy) கோட்டையைத் தரையோடு தரையாய் மறிந்து வீழும்படித் தகர்த்துச் செயித்து அப்பதியிலுள்ள அளவற்ற செல்வங்களையெல்லாம் சுவாதீனப்படுத்தி நீங்கள் கோரிவந்த காரியம் நிறைவேறி மீண்டும் உங்கள் நாட்டுக்குச் சென்று ராஜ்யத்தை யாண்டுகொண்டு தற்பரன் அருளால் நெடுநாள் சுகமாக வாழ்ந்திருப்பீர்கள்.

5. அருந்தவமனைத்து மாற்றி யரிதுறு மகவை நீங்கி
இருந்துயர் மூழ்கிநின்ற வேழையேற் கிரங்கி யென்றன்
முருந்திள முலராளை முனிவுறா தருள்வீர் யான்கொள்
வருந்துறல் காணீரேனும் வழங்கு மிப்பொருள்கள் கண்டே.

(இ-ள்.) செய்தற்கரிய அநேக தவங்களைச் செய்து அருமையாகப் பெற்றெடுத்த என் குழந்தையை நீங்கி ஆற்றற்கரிய கொடுந்துயரில் மூழ்கியிருக்கும் எளியேனுக்கிரங்கி என் அரும் புதல்வியைச் சிறையினின்றும் விடுத்துக்கொடுத்தல் வேண்டும். என்னுடைய துக்கத்தைக் கண்டு உங்களுக்கு மனமிரங்காவிடினும் யான் உமக்குக் கொடுக்க நின்ற பெருந் திரவியத்துக்காகவாயினும் இவ்வுதவி நீர் செய்யவேண்டும்.

6. உறுகணேன் றும்மைச் சாரா தும்பரானுவந்து காப்பன்
மறுவி லென்மகளை யீந்தென் மனத்துயர் மாற்றுவீரேல்,
முறையல முயல்வீராயின் முன்னவன் முனிவுக்காளாய்
அறவுநீர் வருந்திமுற்று மழிவது திண்ணமாமே.

(இ-ள்) நீங்கள் என் குற்றமற்ற புதல்வியை விடுவித்துத் தந்து என் விசனத்தை நீக்குவீர்களானால் உங்களுக்கு யாதொரு தீங்கும் வராமல் தற்பரன் உங்களைக் காத்தருளுவார். அப்படிக் கன்றி அநியாயமான காரியங்களைச் செய்வீரானால் அக்கடவுளுடைய கோபத்துக்குப் பாத்திரராகி அழிந்து போவது நிச்சயம் என்று கூறினான்.

வேறு.

7. என்னுமாற்ற மிருசெவி யேற்றலும்
துன்னிநின்ற துணைவர்கள் யாவரும்
அன்னதாகு மவனுளத் தேமுறக்
கன்னிதன்னை விடுத்தல் கடனென்றார்.

(இ-ள்) இவ்வாறு கிரிசன் கூறிய வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் அரசனைச் சூழ்ந்து நின்ற வீரர்களெல்லோரும் அவன் சொல்லியது நியாயமேயாகும்; அவன் களிக்கும்படி அவன் புத்திரியை அவனோடு கூட்டியனுப்புதலே முறைமையாகும் என்றார்கள்.

8. வேந்தனு மத்திரிதன் வெகுண்டனன்
ஏந்த மந்திரரின்னுரை யேற்கலான்
போந்த பூசகன்றன்முகநோக்கியே
காந்தியின்ன கழறலுற் றனரோ.

(இ-ள்) அவ்வார்த்தைகளைக் கேட்டபோது அரசனாகிய அத்திரிதன் (Atrides) கடுங்கோபங் கொண்டு தன் மந்திரிகள் கூறிய ஹிதவசனங்களைக் கேளானாகி அந்தப் பூசகனைப் பார்த்து சினத்தோடும் பின் வருமாறு கூறலாயினன்.

9. எண்ணலாதிவ ணேழை மதியினாய்
நண்ணியாது நவின்றனை நீயினி
யுண்ணிலாவு முயிரொடு போகியேல்
வண்ண மேகலை யாளைமறந்தியால்.

(இ-ள்) ஏபேதாய் என் முன்னே வந்து ஆலோசியாது, யாது கூறினாய்? உனக்கு உயிர் பிழைத்துப் போக எண்ண முண்டானால் கன்னிகையை மீண்டும் பெறவேண்டு மென்னும் ஆசையை முற்றும் விட்டு விடுவாயாக.

10. மன்னையந்நல னீதொழுந் தெய்வதம்
தன்னை யஞ்சலன் றன்குழலாளினி
என்னையன்றொடு ருந்திடலேயலால்
உன்னொடேகவு முய்த்திடேன் கொலோ.

(இ-ள்) உனக்கும் அஞ்சேன் நீ உபாசிக்கும் தெய்வமாகிய கதிர்க்கடவுளுக்கும் அஞ்சமாட்டேன். உன்மகள் இனிமேல் எனக்கே உரியவளாவாள். ஆதலின் அவளை என்னோடு வைத்திருந்து கொள்ளாமல் உன்னோடு கூட்டியனுப்புவேனோ, நான்?

11. எழிலுமார்ந்த விளமையு மேய்ந்துள
பொழுதுன் பாவையைப் போகவிடுவனோ
முழுதுமாங்கவ ளப்பினிற் றிரிகுவாள்
தொழுதெழுந்த ளேவலைச் றன்ன மைப் பேணலோ.

(இ-ள்) அழகும் இளமையும் ஒருங்கே பெற்றுள்ள காலத்தில் உன்மகளை அநுபவியாமல் விட்டு விடுவேனோ? அவள் கிழத்தன்மையையடைந்து தன் அழகு முழுதும் இழக்க வந்த காலத்தும் அவளை எனக்குப் பணிவிடை செய்திருக்கும்படி அமர்த்திக் கொள்வேனேயன்றி அப்போதும் நான் விடப் போவதில்லை.

12. அழுதென் னைதிங் கரவலித் தாவதென்
தொழுதென் னைது தூற்றி யென்னதால்



இழுதை நெஞ்சினை யென்னொடு மேயந்திழை
பழுதிலாது பாலது நின்னமால்.

(இ-ள்) நீ இப்போது அழுதும் பயனில்லை. ஆற்றியும் பயனில்லை; என்னை வணங்கித் துதித்தும் பயனில்லை. இகழ்ந்து தூற்றியும் பயனில்லை. ஏபேதாய் உன் மகளை நான் என்னோடு கூட்டிச் செல்லுதல் நிச்சயம் என்றான்.

13. மாற்ற மன்னது கேட்டலும் வெவ்வெரிந்
தோற்றமிக்க சுடரவன் பூசகன்
ஆற்றகில்ல னருந்துயரேகியே
போற்றும் வெய்யவன் பூவடி தேடினன்.

(இ-ள்) அவ்வார்த்தைகளைக் கேட்டபோது சுதிரவன் பூசகனாகிய அக்கிரிசன் அளவற்ற அச்சமும் துயரமுமடைந்து தன்னிஷ்ட தேவதையாகிய கதிர்க்கடவுளின் சந்நிதியிற் சென்று தன் குறைகளைச் சொல்லி வேண்டலுற்றான்.

14. உலகினிரு ளோட்டியொளி செயும்
அலகில் சோதிக் கமர்ந்தே பாயினாய்
இலகலாதுன் விளங்குறு கோயிலில்
இலகுபூந் தொடையின்புற நாற்றியே.

(இ-ள்) உலகின் கண்ணே நிறைந்துள்ள இருளை நீக்கிப் பிரகாசிக்கச்செய்யும் எல்லையில்லாத பேரொளிக் கிருப்பிடமான என் இஷ்ட தெய்வமே, நான் உன்னைவிட்டுப் பிரியாமல் சதாகாலமும் உன் கோயிலில் பூமாலைகளால் அலங்கரித்து,

15. பூசையாவும் பொருந்துறச் செய்துனக்
காசிலேற்றை யயர்ந்தவி நல்குவேன்
தேசினாய செயலை யுவந்தியேல்
காசிலா தென்னைக் காத்திடற்பாலதே.

(இ-ள்) செய்தற்குரிய பூசனையெல்லாம் விதிப்படிச்செய்து குற்றமற்ற காளைக்கன்றுகளைப் பலியிட்டு நிவேதிப்பேனன்றோ. ஆதலின் நான் செய்யும் வந்தனை வழிபாடுகளுக்கு நீ மகிழ்ச்சியடைவது உண்மையேயானால் என்னுடைய துயரத்தை நீக்கி என்னை ரக்ஷித்தல் உனக்கு முறைமையாகும்.

16. அடிமைபூண்ட வெனக்கிடராற்றிய
கொடுமைமேய கிரேக்கர் குலத்தொடும்
மடியுமாறு வருத்திடல் வேண்டினேன்
முடியுமாவருள் முற்றிடுவாயரோ.

(இ-ள்) நின்னடியேனாகிய எனக்குக் கெடுதி செய்த கொடியோர்களாகிய கிரேக்கர்கள் நிர்மூலமாகும்படிச் செய்தாலொழிய என் துயரம் ஆறாதாதலின் அவ்வாறு செய்ய வேண்டினேன் என் வேண்டுகோளுக் கிரங்கியருளல் வேண்டும் என்றனன்.

17. அன்னவாசகங் கேட்டது மாதவன்
உன்னதுள்ளத் துயரொழிப் பேனெனப்
பொன்னினோங்கு பொருப்பொலிம்பா வெரீஇத்
துன்னலாருறு சூழல் புக்கானரோ.

(இ-ள்!) அவ்வார்த்தைகளைக் கேட்டபோது கதிர்க்கடவுளும் அவனை நோக்கி நீ வருந்தவேண்டாம், உன் மனத்துயரை நான் நீக்குகின்றேன் என்று அருளிச்செய்து தன்னிருப்பிடமாகிய ஒலிம்பா மலையைவிட்டுக் கிரேக்கர்தங்கிய இடத்தை நோக்கிச் சென்றனன்.

18. ஏய்ந்த நாண்டது வேற்றினனேதிலர்க்
காய்ந்திடுஞ் சினத்தாற் செலுங்காலையில்
வாய்ந்தவெள்ளிவடிச்சரந் தூணியில்
தேய்ந்து மோதிப் பெருந்தொனி செய்தவே.

(இ-ள்.) தனது கையிலேந்திய வில்லில் நாணேற்றிக் குணத்தொனி செய்து பகைவர் குலத்தைக் கொல்லவேண்டி அதிகோபம் கொண்டு மகா வேகமாகச் செல்லுங்காலையில் அம்புறை தூணியில் அணிந்திருந்த கூரிய வெள்ளிப்பாணங்கள் ஒன்றோடொன்று உரைந்து தாக்கிப் பேரொலியைச் செய்தன.

19. உருத்திராவென வோங்கிருண் மூடிவண்
சரத்தின்மாரி யுலப்பில தாக்கலும்
எரித்ததாரழலாய தொர் வெம்பிணி
வருத்தமீறிப் பகைக்குல மாய்ந்ததே.

(இ-ள்.) கோபம்கொண்டு இரவைப்போல எங்கும் நிறைந்த இருளைப் பரப்பி சரங்களை மழைபோலப் பொழிந்து பகைவரை அடர்த்த காலத்தில் அக்கி ரூபமாகிய ஓர் கொடிய வெப்பு நோயில் வருந்திப் பகைவர் கூட்டங்கள் கணக்கில்லாமல் மடிந்தன.

20. அழன்ற வெம்பிணி யாற்பக லொன்பதாங்
குழன்ற தாலவ் வெவனர்த மொண்படை
கழன்ற தாவி யக்காலனும் சோர்ந்தனன்
சுழன்று யாருந் துயரிடை மூழ்கினர்.

(இ-ள்.) இவ்வாறு கொளுத்திய வெப்பு நோயினால் ஒன்பதுநாள் கிரேக்க சைனியங்கள் வருந்தின. காலனும் வாங்கி வாங்கி யுண்டுக் கைசலித்தனன். இன்னது செய்வதென்றறியாமல் கலங்கி அனைவரும் துயர்க்கடலில் மூழ்கினார்கள்.

(தொடரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.



## SOME PRINCIPLES BEARING ON "SCHOOL DISCIPLINE."

## *பாடசாலை ஒழுங்கைப்பற்றிய சில விஷயங்கள்.

"சீர்கெட்ட செய்கை சிதைவுறும்" என்றவாறு எவ்வகைக்காரியங்களாயினும் அவற்றை ஒரு சீராய் அல்லது ஒழுங்காய்ச்செய்யின் ஏனையோர்க்கன்றி தனக்கும் ஓர் பேரானந்தத்தை விளைவிக்குமென்பது சந்தேகமின்றி அறியக்கூடியதாக விருக்கின்றது. பாடசாலையில் ஓர் ஆசிரியன் இவ்வித ஒழுங்கை அனுசரிக்கத்தவறினால் அவன் பாடுபட்டு கற்றுக் கொடுத்த விஷயங்கள் எல்லாம் அந்தோபயனற்றவையே ஆகும். ஆகவேபாடசாலைக்கு 'ஒழுங்கு' (discipline) என்பது முக்கிய சாதனமாயும், இன்றியமையாததாயு மிருக்கின்றது. ஒருமாணாக்கனது பக்குவமற்ற மனதைத்திருத்தி ஞானமாம் பயிரை நட்டு சன்மார்க்கமாம் நீரைப்பாய்ச்சி நல்லபயனைப் பெற ஒரு ஆசிரியன் முயலவேண்டும். பிள்ளைகளை ஒழுங்காய் இருக்கச்செய்தால்தான் தனக்கு இவை யெல்லாம் கைகூடும். ஆகவே ஒழுங்கைப் பற்றி களிக்கவேண்டியது அதிக அவசியமென ஏற்படுகின்றது. ஒரு ஆசிரியன் முக்கியமாய் பிள்ளைகளின் 1. கவனம், 2. கீழ்ப்படியுந்தன்மை, 3. சுறுசுறுப்பு, 4. வாய்மையுடைமை, 5. சன்மார்க்கம், 6. வேலையில் அபிமானம், இவ்வித சிறந்த குணங்களை விளக்கிக்காட்டி விருத்திசெய்யவேண்டும். பாடசாலையின் ஒழுங்கு ஒரு ஆசிரியனது நடவடிக்கையை ஒத்தேயிருக்கின்றது. "கலைமகன் எவ்வாறோ அவ்வாறே கலாசாலை" என்று Guizot (கூஜாட்) சொல்லியுளர். ஒரு ஆசிரியரின் குணாதிசயம், மாணாக்கரை யடக்கி யாளும் திறமை, அவர்களுக்கு போதிக்கும் முக்கிய குணங்கள் ஆகிய இவற்றைக் கொண்டே 'ஒழுங்கு' இத்தன்மையதென நிதானிக்கலாம். மேலும் இதைக்குறித்தே ஒரு அமெரிக்கா வித்வான் சொல்லுகிறதாவது: "ஒரு மாணாக்கன் தன் ஆசிரியரின் குறல், நடவடிக்கை,பார்வை, இவைகளை எல்லாம் கவனித்துவருகிறதால் அவரது போதனை விஷயங்களை யன்றி மேற்கண்டவைகளையும் பார்த்து அனுஷ்டிக்கத் தொடங்குகிறான். தன் ஆசிரியன் திடசித்த முள்ளவனென்பதை அவருடையபார்வையாலும், குரலாலும், இன்னும் வேறே எவ்வகையானும் தெரிந்துகொள்ளுகிறான். ஆனது பற்றி அவர் திட சித்தமுள்ளவராய் இருக்கவேண்டியது அவசியம், ஏனெனில் அது தான் பள்ளிக்கூடத்திற்கு உயிரென விளங்குகின்றது. திடசித்தமும், அடக்கமுந்தான் ஆசிரியனது அணிகலம். ஏனெனில் இவற்றைக்கொண்டுதான் ஜனங்கள் பள்ளிக்கூடத்தின் தன்மையை அறிந்துகொள்ளுகிறார்கள். ஒரு ஆசிரியன் திடசித்தமும், அடக்கமு முள்ளவனாக இருந்தால் பிள்ளைகள் சுறுசுறுப்புள்ளவர்களென்றும், நல்ல நடவடிக்கை யுள்ளவர்களென்றும் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவ்வாறு இல்லாமற் போனால் பள்ளிக்கூடம் க்ஷீணதிசையில் இருக்கிறதென எண்ணுகிறார்கள். இந்த திட சித்தத்தைப்பெறவேண்டுமெனின் ஒரு ஆசிரியன் தன்னாலியன்ற அளவு மனப்பூர்த்தியாய் உழைக்கிறேனென்று சங்கற்பித்துக்கொள்ளவேண்டும். அடக்கமென்னும் சிறந்த குணத்தை கைக்கொள்ளவேண்டுமெனின் மேலான குணங்களையே உன்னி பொறுமையுடன் உழைத்துவந்தால் அது தானாகவே அமையுமென்பதில் ஐயமில்லை. இவ்விதகுணங்களெல்லாம் நாளாவர்த்தியில் பிள்ளைகளையும் அடையும். பிள்ளைகளுக்கு ஒன்றைப்பார்த்து நடக்கும் சக்தி விசேஷமாயிருப்பதால் உபாத்தியாயர் சன்மார்க்கத்தையே போதித்து அதைத்தன் நடவடிக்கையிலும் காட்டவேண்டும். அப்போது தான் அவர்கள் மனப்பயிற்சியடைந்து எல்லா நற்குணங்களையும் கண்டுணர்ந்து அனுஷ்டிப்பார்கள். ஒரு ஆசிரியர் சொல்வதொன்று செய்வதொன்றாய் இருக்கக்கூடாது. பிள்ளைகள் சரியான காலத்தில் பள்ளிக்குவரவேண்டுமென்று சொல்லிவிட்டு தான் நேரம் கழித்துப்போதலும், சாந்தமாயிருக்கவேண்டுமென்று தான் கோபித்துரைத்தலும், அடக்கம் அவசியமென்று தான் ஆத்திரப்படுவதும் கூடாது. பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டாமென்று எண்ணங்கொண்டவைகளை ஒரு போதும் அவ

* An essay read by A.K. Sivarama Aiyar before the Teachers' Association, Karur. கரூர் உபாத்தியாயர் சங்கத்தின்முன் படித்த ஒருவியாசம்.

ர்கள் முன்னிலையில் வெளியிடக்கூடாது. பக்குவமற்ற பாலர்களின் மனதைத்திருத்தி நற்போதனைகளைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பெற்றோர்கள் ஆசிரியர்பால் எதிர்பார்க்கிறதினுல் அவர் வெகு ஜாக்கிரதையாய் தாம் எடுத்துக்கொண்ட வேலையை திருப்திகரமாய்ச்செய்ய முயலவேண்டும். பிள்ளைகள் ஆசிரியரை தந்தைபோல மதித்து அவர் சொற்படிகேட்டு நடக்கவேண்டுமென்ற ஆசைமேலிட்டும் இருப்பார்கள். அவர்களை சுறுசுறுப்பும், உபயோகமும், சந்தோஷமும் உள்ளவர்களாகச்செய்வதும் அல்லது சோம்பேறியும், அறிவீனர்களுமாகச் செய்வதும் ஓராசிரியன் திறத்தை ஒத்திருக்கின்றது. அவர் நியாயமாயும், பட்சமுள்ளவராயுமிருந்தால் தம் மாணுக்கனும் அவ்வாறே இருப்பான். ஆகையால் அவர் தம் நடத்தையையும், போதனுமுறைகளையும்பற்றி விசேஷ கவலை எடுத்துக்கொண்டு போதிக்கவேண்டும். மேற்கண்ட அறுவகைக் குணங்களிற், '**கவனம்**' என்பதைப்பற்றி சற்று விளக்குவோம். ஒருவன் தான் துவக்கும் வேலையில் தன் முழு மனதையும் செலுத்தி எவ்வளவேனும் வேறெவ்வித விஷயங்களிலும் தன் மனதைப் பலிகொடாமலிருத்தலே 'கவனம்' என்று கூறத்தக்கது. பள்ளியிற் சத்தமில்லாமலும், சில்லரை விஷயங்களிற் புத்தி செலுத்தாமலும், உபாத்தியாயரைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாலும் பிள்ளைகள் கவனித்துவருகிறுர்கள் என ஊகிக்க இடமில்லை. ஏனெனில் அவர்கள் மனது புறம்போந்து சஞ்சரித்துக்கொண்டிருக்கலாம். வேறேதாவது தம் கண்களுக்குத் தோற்றப்பட்ட வஸ்துக்களின்மேல் மனதைச் செலுத்தி இருக்கலாம். முழுகவனத்தையின்றி பாதிகவனத்தை செலுத்தி இருக்கலாம். ஆகையால் விருத்தியடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் வேறொருவருடைய நிர்ப்பந்தமின்றி தாங்களே மனதை ஒரே நிலையில் நிறுத்தி ஆசிரியர் போதிக்கும் எவற்றையும் கிரகித்து வருவதுதான் சரியான கவனமெனக் கொள்ளற்பாலது. இவ்வகையான கவனத்தைத்தேடுவது அவரது முக்கியகருத்தாயிருக்கவேண்டும். தம் தொழிலுக்குப் பிள்ளைகளின் கவனம் இன்றியமையாதது. கவனம் அரை குறையாயிருந்தால் போதனையும் அவ்வாறேதான். கவனம்என்பது இலையாயின் போதனையும் இல்லையென்றே கொள்ளல்வேண்டும். அவர் பாடுபட்டு போதித்தவை எல்லாம் பயனற்றனவெனவே கொள்ளல்வேண்டும். கவனம் பிள்ளைகளின் மனதையும், தேகஸ்திதியையும் ஒத்ததாக விருக்கின்றது. எங்ஙனமெனின் வேனிற்காலத்தில் விசேஷ தாபத்தால் களைப்படைந்தபோதும், ஒரே தன்மையான வேலையை குறிப்பிட்டகாலத்திற்கு மேலே செய்யச்சொன்னபோதும், இடம் மாற்ருமல் ஒரே இடத்தில் உட்கார வைத்திருந்தபோதும் ஒரு வகுப்பு கவனமாயிருக்குமென்று நினைக்க சற்றேனுமிடமில்லை. போதித்த விஷயங்களைப் பிள்ளைகள் கிரகிக்க சிரமப்படுவதாயிருந்தால் கவனம் என்பது சூன்யமென்றே கொள்ளவேண்டும். (*Vide* Currie on Education) பிள்ளைகளுக்குக் காலத்திற்கு ஏற்றவண்ணம் வேலையைக்கொடுத்துக் கொண்டுவந்தால் அவர்களின் கவனத்தை எளிதிற் பெறலாம். இதுவுமன்றி இடமாற்றுதல், கைதுக்கும்படிசெய்தல் என்ற இவ்வகைச் செயல்களாலும் அவர்களின் மனதைக் கைவசப்படுத்தலாம். வகுப்பில் பிள்ளைகள் ஏராளமாயிருப்பின் அப்போது முழுகவனம் பெறவேண்டின் அதிக சாமர்த்தியம், யுக்தி, புத்தியையும் ஓராசிரியர் உடைத்தாயிருக்கவேண்டும். ஒருவன் தன்னைப்பார்த்துக் கொண்டே இருக்கலாம்; ஒருவன் கவனிக்கிறதாய் பாவனை செய்துகொண்டு வேறொன்றைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கலாம். ஒருவன் முன் பின் யோசனையில்லாமல் விடை பகரலாம். இங்ஙனம் பிள்ளைகள் வழிபிசகி நடக்கக்கூடும். அடிக்கடி இடம் மாற்றிக்கொண்டுவந்தால் அவர்கள் உற்சாகத்தோடு கவனம்செலுத்திவருவார்கள். இப்படிசெய்தால் காலதாமதம் ஆகுமென்று சிலர் எண்ணுகிறுர்கள். வகுப்பில் அவர்களை சரியாக உட்காரவைத்திருந்தால் சொற்பகாலத்திலேயே இதைச் செய்துமுடிக்கலாம். வகுப்பைப் பார்த்து கேள்விகேட்டு விடைபகரக் கூடியவர்களைக் கைதூக்கச்செய்து தான் குறிப்பிட்டவனைக் கேட்கவேண்டும். இவ்வாறு செய்வதால் அவர்கள் ஒவ்வொருவரும் தன்னைக் கேட்பார், தன்னைக் கேட்பார், என்ற எண்ணத்துடன் கவனமாயிருப்பார்கள். ஆனதுபற்றி இதை அடிக்கடி செய்துவரவேண்டும். ஆனல் இவ்வாறு முக்கியமாய் சோம்பேறிகளையும், கவனிக்காதவர்களையும் பார்த்துக் கேள்வி கேட்கவேண்டும்.



**கீழ்ப்படியுந்தன்மை:**—பிள்ளைகளைக் கீழ்ப்படியும்படி செய்வது உபாத்தியாயரின் கடன். அவரால் முடியாவிட்டால் அவருடைய தேகஸ்திதி, குணம், சுகம், இவைகளெல்லாம் வீணுய்க்கெட்டு அவலமாய்ப் போம். இதைப்பற்றி Fitch என்பவர் சொல்லுகிறதாவது "ஒருவர் தமது கம்பீர தோற்றத்தினுலும், அல்லது கட்டாயப்படுத்தியாகிலும் கீழ்ப்படியும்படி செய்யவேண்டும். இவற்றுள் முற்கூறியபடி செய்யத் தவறினுலும் கட்டாயப் படுத்தியாவது பிள்ளைகளைக் கீழ்ப்படும்படி செய்யவேண்டும். இவ்வாறு செய்யத்தவறினுல் ஒரு வேலையும் செய்யமுடியாமற் போவதுமன்றி பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பும் நோக்கமும் ஈடேருமற் போய்விடும்." கீழமைவு முற்றும் பிரயோசனமாயிருக்கவேண்டுமெனின் பிள்ளைகள் அதை உற்சாகமாயும் மனப்பூர்த்தியாயும் செய்துவரவேண்டும். தண்டித்து அல்லது மருட்டி கீழ்ப்படியும்படி செய்தால் மனப்பூர்த்தியாயும், உற்சாகத்தோடும் செய்ததாக ஏற்படாது. நல்ல வார்த்தையாலும், நியாயமெடுத்துரைப்பதாலும் இவ்வாறு செய்யலாம். ஆனல் இது யுக்தமல்லவெனத்தோற்றுகின்றது. ஏனெனில் பிள்ளைகளுக்கு ஆசரியர் பால் உளமதிப்புக் குன்றிப் போகவே அடக்கமென்பது இல்லாமற் போய்விடும். ஒரு மாணுக்கன் முன்பின் யோசனையின்றி திடீரெனவும், சுறு சுறுப்பாயும், தாமதமின்றியும் கீழ்ப்படியவேண்டும். தன்னை மிரட்டின அல்லது தண்டித்தபிறகுதான் செய்யவேண்டுமென்றிராமல் தானுகவே கீழ்ப்படியவேண்டுமென்ற எண்ணம் உதித்து பெரியோர் சொற்படி நடக்கவேண்டுமென்று நிச்சயப்படுத்திக் கொள்வதுதான் ஒரு நல்ல மாணுக்கனின் இலட்சணம். ஏனெனின் விஷயங்களை ஆராயும் சக்தி பிள்ளைகட்குப் போதாததாலும் அவர்கட்கு எடுத்துச்சொன்னுலும் தாரதம்மியம் தெரிந்துகொள்ளக் கூடாதானவர்களாதலாலும் அவர்களிடத்தில் காரணத்தைச் சொல்லாமலிருப்பதே நலமெனவிளங்கும்." என்று Robinson என்பவர் கூறுகிறுர். கட்டளைகள் சொற்பமாயிருத்தல் வேண்டும். எதையும் இருமுறைசொல்லலாகாது. கூடுமான வரையில் சுருக்கமாயும், அதிகாரமான தொனியுடனும் கட்டளை யிடவேண்டும். பாலர்கள் செய்யும் அற்புதப் பதங்களாகிய விளையாடல், பேசிக்கொண்டிருத்தல், முதலிய வைகளைப்பற்றி அதிகமாய் கவனித்து அவர்களை வருத்தப்படுத்தக்கூடாது. மேலும் அற்பவேலைகளையும் ஒழுங்காய்ச் செய்யும்படி கற்பிக்கவேண்டும். புஸ்தகம், கற்பலகை இவைகளைப் பிடித்துக் கொள்ளும் விதமும் உட்காரும் போதும், நிற்கும் போதும் உள்ளவிதமும் வகுப்பில் பிரவேசிக்கும் போதும், வெளியே போகும் போதும், உள்ளவிதமும் ஆகிய இவற்றை எல்லாம் ஒரு ஆசிரியர் கவனிக்கவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் அவர்கட்கு அநேக நல்ல வழக்கங்கள் பிடிபட்டு நலமடைவார்கள்.

**சுறுசுறுப்பு:**—காரியசித்தி பெறும் வண்ணம் எப்போதும் மெய்வருந்திக்கொண்டிருத்தலே "சுறுசுறுப்பு" என்ற பதப்பொருள். ஒரு காரியம் கைகூடவேண்டுமெனின் விசேஷ புத்தி கூர்மைவேண்டுமென்றே இல்லை. "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்று ஔவையார் சொன்னபடி முயற்சி ஒன்று இருந்தால் போதும். அது இல்லையெனின் எவ்வகை புத்தியும் பயனற்றதேயாம். இதைப்பற்றி Aesop சொன்ன முயலும் ஆமையும் என்ற கதையால் நன்கு விளங்கும். Solomon என்பவர் "முயற்சியுடையோன் செல்வமுடையோன்" என்று சொல்லியுளர். மேலும் "மெய்வருந்தி உழைப்போன் உலகை ஆள்வான்" என்றும், சுறுசுறுப்புள்ள மனிதனைப்பார்! அவன் மன்னன் முன்னிலையில் வீற்றிருப்பான். கீழ்மக்களோடு கலந்திரான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (Vide Prov. X. 4, XII. 24 and XXII. 9.) சரித்திரங்களிலும் அநேக உதாரணங்களைக்காணலாம். குவாலியர் இராஜவம்சத்தை ஸ்தாபித்த சிந்தியாவென்பவர் ஆதியில் ஒரு யஜமானனிடம் அடிமையாயிருந்து குற்றேவல் செய்து பிறகு தமது விடாமுயற்சியால் உயர்ந்த பதவிக்கு வந்தாரென சரித்திரத்தால் விளங்குகிறன்து. இம்முயற்சியின் சிறப்பைக் குறித்து திருவள்ளுவர்,

"அருமை யுடைத் தென்றசாவாமை வேண்டும் பெருமை முயற்சிதரும்" என்று கூறியுளர். இன்னும் இவை போன்ற பல திருஷ்டாந்தங்கள் உள.

* * * *

* * * *

**வாய்மையுடைமை**:—இதைப்பற்றித் திருவள்ளுவர்,

"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமையிலாத சொலல்."

என்று சொல்லியுளர். அதாவது நாம் செய்ய அல்லது சொல்ல நினைக்கிற ஒவ்வொரு விஷயமும் பிறர்க்குத் தீங்கு விளைக்காதபடி உண்மையாகவிருக்கவேண்டும். இக்குணத்தின் மேன்மை சிறுவர்களுக்கு விளங்குவது அரிதாதலின் இதில் விசேட பற்றுடையவராகக் காணப்படுகிறதில்லை. என்றாலும் அஃது சரியான வழி என்று மாத்திரம் உணருகிறான். எங்ஙனமெனின் தான் உண்மையை மறைத்து ஏதாவதொன்றைச்சொல்லி அதைப் பிறர் கண்டுபிடித்தால் தன் முகக்குறியால் தன் வெறுப்பை வெளியிடுகிறான். அல்லது தன்னிடத்தில் யாராவது உள்ளபடி சொல்லாமல் மறைத்துச் சொன்னால் கோபக்குறியைக் காட்டுகிறான். உண்மையை மறைத்துப் பொய் புகலும் மார்க்கங்கள் பல உள. அவையாவன: 1. தான் செய்யத்தகாத காரியத்தை செய்துவிட்டு செய்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதல். 2. உள்ளவற்றைப் பதின் மடங்கு அதிகமாகச் சிறப்பித்துக்கூறல். 3. பல பொருள்படக் கூறி உண்மை விளங்காமற் போகச்செய்தல். 4. தெரிந்தவன் போல் பாசாங்கு செய்து பிறர் உண்மையெனக் கொள்ளும்படி சும்மாவிருத்தல். 5. முன்பின் யோசனை செய்யாமல் வாக்களித்த பிறகு அதைப்போற்றத் தவறிப்போதல். 6. வாக்குக் கொடுத்தபடி நடக்கத் திறமையுளதேனும் அவ்வாறு செய்யத்துணியாமல் அசட்டையாயிருத்தல்: இங்ஙனம் பிள்ளைகள் பலவகைகளிலும் தவறிப்போக இடமிருத்தலால் அவர்களுக்கு உண்மையென்றசிறந்த குணத்தைச் சிறுவயதிலேயே மனத்தில் வேரூன்றி வழக்கத்தில் அனுசரிக்கும்படி செய்வது ஆசானது முக்கிய கடமை. (Vide Currie, P. 44). ஆழ்ந்து நோக்கின் ஊக்கமின்மையே பொய் சொல்வதற்குக் காரணமாம். மேலும் இஃதே புறங்கூறல், கையொப்ப மற்றபத்திரங்கள் வரைதல், முதலிய கெட்டகுணங்களுக்கும் காரணமாம். ஆனதுபற்றி ஊக்கத்தையும், உண்மையையும் ஒரு மாணாக்கன் கைசோரவிடாது அவற்றை முக்கிய சாதனமாகக் கொள்ளல்வேண்டும்.

ஏ. கே. சிவராம ஐயர்.

(இன்னும் வரும்.)

## Selection.

## A GLANCE AT SRI KRISHNA.

## ஸ்ரீகிருஷ்ணப்பிரபாவம்.

"மாணிக்கத் தோற்றமும் ஜோதி
ப்ரவாஹமும்."*

நல்லவர்க்கெல்லாம் நடுநாயகமான வல்லவனொருவ னிருக்கின்றனன்! அவன் ஆளுக் கேற்றது போலும் வேளைக் கிசைந்தது போலும் வேடம் போடும் நாடகக்காரனாயினும், கெட்ட தொன்றும்பொட்டென விளைப்பதில்லை. ஆன்மாக்கள் உய்ந்து ஆனந்தமடைவதே, என்றும் அவனுக்கு நன்றாகிறது. அவர்கள் நிலைமைக் கேற்கத் தலைமை பூண்டு, அற்புதம் புரியும் பொற்பினன், அவன். மீனாய்த்தோன்றி மிடுக்கொழித்தா னொருதரம்! கூர்மமாகி ஆர்வம் விளைத்தான் ஒருதரம்! பன்றியாய்ப் பாரிடந்து நன்றே விளைத்தான் பிறிதொருதடவை! பின்னர் அவனே மன்னிய சிங்கமும் மனிதனுமாகி, சிறியனைக் காத்துக்கொடியனைக் கொன்றான்! வாமனனாகிப் பூமியும் வானும் புகழ்பெற அளந்தான்! பாசுராமனாய்ப் பிறகு அரசராமனாயினன்!

### ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம்.

இப்பொழுது ஒருநாள் அர்த்த ராத்திரியாய்விட்டது! இரவினா லுண்டாகும் இருள் போதாது, மருளும் இணையாய்த் தோன்றின, இவ் அகாத வேளையில் தகாத கோலம் பூண்டு, சுத்த சத்துவராகும் நற்றவரொருவர், சற்று முன் சனித்த சித்திரக் குழந்தை யொன்றைக் கைத்தலத்தேந்தி அயலார்க்குத் தெரியாமல் வெளியே செல்ல முயலாது முயலுகின்றார்! அவரிருந்த இடமோ, அரணும் அரங்கமும் கோட்டையும் கொத்தளமும் காவலாளரும் ஏவலாளரும் சுற்றிலும் நின்று முற்றிலும் காத்த கொற்றவர் மாளிகையா யிருந்தது! இவைகளைக் கடந்து எப்படி செல்வ தென்று இல்லாததெல்லாம் எண்ணி யெண்ணி இப்பெரியவர் ஏங்குகின்றார்! வாட்ட மென்பதே இவர் நாட்டந் தன்னில் ஒட்டம் பெற்றிருந்தது! தேகம் வன்மை யுற்ற தாயினும், தாகம் ஏதோ இவர் மனதைத் தவிக்கச்செய்ததால் ஏகமாய் இளைத்துக் காட்டிற்று! காலிலே விலங்கும், கதவிலே தாழும்! சுற்றியும் காவல் மெத்தவும் தொந்தரை! இத்தனையும் தாண்டி எப்படிச் செல்வார் வெளியில்? இவ்வண்ணம் எண்ணியும் எண்ணுததற்குமுன், காலின் விலங்கும் நாலாய் ஒடிந்தது! கதவின் தாளும் அதமாய்ப் போயிற்று! ஊக்கங் கொண்ட காவலாளர் ஏக்கம் பெரிதாய் நோக்கம் நீங்கித் தூக்கம் தாங்கினார்! இது தான் சமயமென்று, மெல்லப் புறப்பட்டார் நல்லவரும்! வெளியில் வந்தார், ஒளியும் கண்டார்! இருட்டையும் நோக்காது, பயமுங்கொள்ளாது, குழந்தையைத் தாங்கிச் செல்கிறார்! அந்தக் குழந்தையோ வெகு சுந்தரமானது! அதன் நிறம் நீல நிறமாயினும் ஒளியோ மெத்தவும் சுத்தமாய் விளங்கிற்று! அதனுடன் ஆகாயத்திற்குப் போட்டி போட முடியாது. மேகமாகிற போர்வை போட்டுக் கொண்டது! அப்பொழுதே இருந்து இருந்து கையையும் காலையும் அசக்குவதாலும் ஆட்டுவதாலும், மெய்யாக அக்குழந்தை செய்யாத துடுக்குகள் செய்யுமென்பது நன்றாய் விளங்கிற்று! அது சிறிது அயர்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்ததாயினும், நல்ல தூக்கமில்லையென்று சொல்லலாகும்! ஆயினும் அப்பெரியவர் அருமைக் குழந்தையை அங்கையிற்றாங்கிச் சென்றுகொண்டிருக்கிறார்! இரவும் முற்றிக் கொண்டே வர, இருளும் மிகுத்துக் கொண்டே வந்தது! உள்ள தொந்தரை போதாதென்று, ஊருக் கருகிலுள்ள ஆறு ஒன்றிலும் பூரணப் பிரவாகம் கோரமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இதை யெண்ணி அதிகம் வருந்தின ராயினும், ஓயாத அவர் நடைவேகம் சாயவில்லை! * * என்ன ஆச்சரியம்! ஐயன் செல்வதற்கு ஆறும் வழிவிட்டது! அவ்வழியாகவே போய், ஆயர்பாடி யடைந்தார்! அசோதையின் பிரசவக் கிரஹத்திற் பிரவேசித்து இக் குழந்தையை ஆங்கே வைத்தனர்; யார்க்கும் தெரியாது திரும்பினர். இந்த சந்திரப் பிரகாச சுந்தர வடிவினனே, ஸ்ரீ கிருஷ்ணன்!

### கம்ஸன்சூழ்ச்சி.

என் இவ்வாறு நடக்கவேண்டும்? மேற்சொன்னவைகளில் எத்தனை மயக்கங்கள், எத்தனை தியக்கங்கள்! இவ்வாறு நடப்பதற்கு யாது காரணம்? சொல்லுமின் சொல்லுமின் என்று மெத்த அவசரம் எத்திசையிலும் காண்கின்றது.

அரக்கர் அம்சமுடையவனும், நல்லவருக்கு ஹிம்சை விளைப்பவனும், எல்லாரையும் தொம்ஸம் செய்பவனு மிருந்த பொல்லாத கம்ஸன் என்பவன் கண்ணனுக்கு மாமன். கண்ணனால் தனக்குத் துன்பம் உண்டாகுமென்றும் உயிருக்கே ஆபத்து உண்டாகுமென்றும் அவன் முன்னமே அறிந்திருந்ததால், எப்படி யாயினும் அக்குழந்தை பிறந்தவுடனே அதைக் கொன்றுவிடல் வேண்டு மென்று இரவும் பகலும் ஓயாக் கவலை கொண்டிருந்தான். இதனாலேயே தான் கிருஷ்ணன் தந்தை தாயாகிய தேவகீ வசுதேவர் தங்கியிருந்த அறையைச் சுற்றிக்காவல் வைத்திருந்தும் இவன் செய்த இந்திர சாலத்தைத் தந்திரமாய் மாய்த்துவிட மஹேந்திரசாலம் புரிந்து மாயவனும் வேறிடம் போய்ச்சேர்ந்தான். * *

கம்ஸனோ பொல்லாத காதகன், பழிபாவத்திற் கஞ்சாத பாதகன், தூயரஞ்செய்து தொல்லை விளைக்கும் தோதகன்! இவன் விழிகள் மிகச் சிவந்திருப்பவை, இவனுடைய கோரத் தொழிலைக் குறிப்பாய்க் காட்டுகின்றன. இவன் தடித்த உடலும், கறுத்தமேனியும், பருத்த உதடும், இவன் பயங்கரத்தை விளக்குகின்றன. மலைபோல் மூக்கு உயர்ந்திருக்கிறது; எந்நேரமும் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டிருப்பான். இச்சண்டாள மிண்டாளன், பிறந்த குழந்தை மறைந்து போயிற்று என்றறிந்தவுடனே, துடித்தான் பதைத்தான், இரைந்தான் எழுந்தான்! கோபம் மீறித் தாபங்கொண்டான்! கோபாவேசம் கொழுந்துவிட் டெரிவதால், வாய்பேச வகையற்று நின்றான், திகைப்புற்றான், அலக்கணுற்றான்; உள்ள மெரிகின்றது; உதடு துடிக்கின்றது; சற்றுப் பொறுத்தான்: பூதகி சகடாசூரன் அகாசூரன் பகாசூரன் முதலானவர்களை யேவி அக்குழந்தையைக் கொல்ல வகைதே

* ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சரித்திரம் எழுதிய தி. பக்தவத்ஸலம் பிள்ளை யவர்கள் இயற்றிய பாயிரத்திலிருந்தெடுக்கப்பட்டது.

டினான். இதனால் இவர்களெல்லோரும் நாசமாயினரே யன்றி, குழந்தைக் கொன்றும் குறையில்லை.

கிருஷ்ணன் வளர்ச்சி.

இவ்விதமாய் எவ்வித அபாயத்திற்கும் உட்படாமல், சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல், ஸ்ரீ கிருஷ்ணன் அதிசுந்தர லாவண்யத்துடன் வளர்ந்து வருகிறான்! இவன் சுந்தரமுகமும் சுயம்பிரகாசமும், முல்லையைப்பழித்த பல்லழகும், முத்தை யிகழ்ந்த முறுவலின் வனப்பும், ஒவ்வொருவரையும் மயக்கிவிட்டது. இவனை விட்டுப் பிரிவதென்றால், எவருக்கும் வருத்தமாயே யிருந்தது. இப்பொழுது கிருஷ்ணனுக்கு வயது பதினொன்றானது. ஆயினும் தந்தை தாயாரும் ஐந்து வயது தான் மைந்தனுக்கென்று அவனிடம் இடைவிடா நேசம் பாராட்டி வந்தார்கள். அவன் சிறிது வெளியே செல்வதென்றாலும், அவர்கள் பெரிதும் வருந்தி யுருகிவிடுவார்கள். அவனுடைய நண்பரோ, தம் வயதுக்கிசைந்த இயைபினனென்று அவனை எண்ணுவார்கள். பாலயஸ்திரீகள் தம் அழகுக்கிசைந்த வெகு சுந்தர சுகுமார யௌவன லாவண்ய மன்மதனென்று அவனிடம் மயக்கம் கொள்ளுவார்கள். ஞானிகள் அவனை ஞான ஸ்வரூபியென்று நவிலுவார்கள். துஷ்டர்கள் தம் 'வள்ளல்' வெளியாகுமே யென்ற கஷ்டங் கொள்ளுவார்கள்.

சீதகாதம்—குழலூதும் மகிமை.

ஆரியனைக் காணச் சூரியன் புறப்படுகின்றனன்: ஸ்ரீ கிருஷ்ணனுடைய கமல முகத்தின் விமலத்தையும் விலக்ஷணத்தையும் மலர்ச்சியையும் மகிமையையும் நோக்கி நோக்கி, தாமரையும் எவ்வளவுதான் மலர்ந்தபோதினும், அதன் ஆயிரத்தி லொருபங்கும் அமையவில்லை. உதய வேளையில் எல்லோரிதயமும் மகிழும்படி அதியற்புத திவ்ய தேஜோமயானந்தத்துடன், கிருஷ்ணன் வெளிப்புறப்படுகிற துண்டு. இவன் புறப்படுகிறானென்று மற்ற ஆயர் சிறுவர்கள் மாடுகளை யோட்டிக்கொண்டு தெருவில் தயாராய்க் காத்துக்கொண்டிருப்பார்கள். தம் அருமைப் புதல்வனை யெப்படி பிரிந்திருக்கின்றதென்று அசோதை அன்பாய்க் கொடுக்கும் முத்தம் பெற்றுப் பகவான் வெளிப்புறப்பட்டு விடுவார். ஸ்வாமிகளும் ஆயர் சிறுவர்களும் பகற்பொழுதெல்லாம் வனத்திலேயே ஆடுவதும் பாடுவதுமாக விளையாடிக்கொண் டிருப்பார்கள். பொழுது போனதும் ஸ்ரீ கிருஷ்ணன் ஓரிடத்தில் வெகு ஒய்யாரமாய் நின்று கொண்டு தன் முகத்தின் அழகுக் கொத்த இசையின் இனிமையை வெளிக்காட்ட மூங்கிற் புள்ளாங் குழலெடுத்தூதித் தம் அதரமாகிய மதுரக் கனியிடம் பொருத்திக் கீதமாகிற போதத்தை அனைவர் காதிலும் ஏகத்தலைப்படுவார்! ஹா ஹா என்ன சுகம்! என்ன மதுரம்! ஸ்வாமிகள் புள்ளாங்குழல் ஊத ஆரம்பித்ததும், எங்கெங்கும் நிசப்தமே குடிகொண்டு விட்டது! நாலு பக்கங்களிலும் மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் கிருஷ்ணனைச் சுற்றி நின்றுவிடும்! புதர்களில் வசிக்கும் பாம்புகளும், மரங்களில் வசிக்கும் பறவைகளும், நீரில் வசிக்கும் மீன்களும், செடிகளும் கொடிகளும், சோலைகளும் சாலைகளும், எல்லாம் ஆனந்தமயமாய் சற்று முன் வதங்கியிருந்த பூக்களும் பொலிவு பெற்றுக் காண்கின்றன; நெருப்பு வீசிய காற்றும் குளிர்ந்து வீசுகின்றது! மாடே மயங்கிவிட்டதென்றால் மனிதர் மகிழ்வைக் கூற வேண்டுமோ! கோடைகாலம் நீங்கி மாரிகாலம் முடிவில் குளங்களும் ஏரிகளும் பூக்களும் இலைகளும் வெகு நன்னயத்துடனே உன்னதமடைந் திருப்பக் காண்பது இயற்கையே. கீதமாகிய நாத சுகத்தினால், குளத்தின் நீர் குளிர்ந்தும் பூவின் பொலிவு மிகுந்தும் இலைகள் பசுமையடைந்தும் விளங்குவது இன்றுதான் கண்டோம் என்று தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மனதிற் கிசைந்த மணமகனைக் கண்ட அனமெனு நடையாள் அகங்குளிர்வதுபோல், இயற்கை மாதின் இதயம் குளிரப் புயல்நிறப் புனிதன் தோன்றினதால் அவள் மகிழ்ச்சிமீறி செகிழ்ச்சி விளைத்தனள்! * * உடனே வத்ஸங்களையும் கோக்களையும் அழைத்துக் கொண்டு அனைவரும் வீடு சேருவார்கள்.

பிருந்தாவனம்.

எல்லாத் தலங்களிலும் உல்லாசமமைந்த பிருந்தாவனத் தருகில் நதிகட்கெல்லாம் பதியாகிய யமுனையாறு இருக்கின்றது! அது அதிபுண்யநதி; பக்தியே உருவங்கொண்ட சக்தி யுடையது. அனை



வோர் தாபத்தையும் பாபத்தையும் ஓர் கணத்தில் வேரறுத்துவிடும்! இந்த தீர்த்தத்தில் ஓர் நாள் நீராடி, சரச சல்லாபங்கொண்ட அரசிளங் குமரிபோல் ஒரு சுந்தரவதி சொகுசாய் நடக்கின்றனள். இவள் அழகை வர்ணிக்க யாவராலும் முடியாது! அதுகாறும் வானோருலகம் உள்ளதோ இல்லதோ என்று ஐயம் பூண்ட அனைவரும், தத்தம் சந்தேகங்களையொழித்து இவள் தேவலோகத்துப் பாவையே பூமியில் வந்து புதுமை விளைக்கின்றனள் என்னும்படி அழகும் அந்தமும் பொற்பும் புகழும் வாய்ந்திருந்தனள்! மின்னலைப் போன்ற நன்னிறம் பெற்றவள்; மேகம் போன்ற கூந்தலுடையவள்! பங்கயத்தைப் பழித்த இங்கித முகமும், தூநிலாப் பழித்த பூநிலா முறுவலும், மானை யிகழ்ந்த மருண்ட பார்வையும், கோட்டையை நகைக்கும் குணம் பெறு நாசியும், வள்ளையை யேசிய ஒள்ளிய காதும், முத்தே வந்து முத்து முத்தாடும் ஒத்த பற்களின் உன்னத வரிசையும், கொவ்வையைக் கோபித்துக் கோலங்காட்டும் செவ்விய இதழின் சிறப்பும், காந்தளாகும் கரதலப் பெருமையும்—பார்த்து மகிழாதவர் அங்கொருவரு மிலர். இவள் நடையைப் பார்த்து அன்னம் அடங்கியது; பேச்சைக் கேட்டுக் கிள்ளையும் நாணியது; இசையைக் கேட்கின், நாமும் என்னவோ என்று குயிலும் ஏங்கியது. இவ்வளவு அந்த சந்தத்துடன் இவள் தோன்றிய போதிலும், இவள் முகத்தின் மோகனம் தெய்வீக மோகனமா யிருந்ததே யன்றி மனிதர்க் கொத்ததாய் இனிமை பயக்கவில்லை. இப்படி இவள் வந்துகொண் டிருக்கும் போது ஓர் விநோதங் கண்டாள்.

ராதா—கிருஷ்ணன்.

கடம்பமரமொன்றின்கீழ் அடங்கா ஆச்சரியம் விளைத்துக்கொண்டுநீலநிறம்பொருந்தியகோலந்தாங்கி, மாதர் மனதை மையலால் கொளுத்தும் வண்ணம், அதி சுந்தர மனோரஞ்சித மனமோஹன திவ்ய பால ஸ்வரூபம் ஒன்று, பால் வடிந்த முகத்தில் நகை யரும்பவும், மல்லிகை மலர்மாலை யணிந்த சிரத்தில் மயிர்கள் நீண்டு சுருண்டு மணங்கமழத் தொங்கவும், கல்லினும் வலிய நெஞ்சத்தைக் கணப்போதி லுருக்கும் கடைக்கண் பார்வை விளங்கவும், அழகுக்கு அழகு செய்யும் அமைதி யடைந்தும், அஞ்சா நெஞ்சர்களையும் வஞ்சனை செய்து வம்புக் கழைக்கும் பஞ்ச பாணங்களுடன் மன்மத னேவல் புரியவும் தட்டுக் கெட்டுத் தடுமாறிக் கடலில் விழுந்து கலக்கங்கொள்ளும் முட்டாள்களையும் கரைசேர்த்துக் கடைத்தேற்றற் கென்று, அவ் வுருவம் அலையின் கண் வலை வீசுவதுபோல் ஒய்யார சுகுமார உன்னதங் காண அந்த மரத்தின்மீது ஒயிலாய்ச் சாய்ந்திருந்தது. இவ்விதம் நின்ற கண்ணபிரானை ராதையும்கண்ணுற்றாள்; அன்பனும் அவளை யின்புற நோக்கினான். உடனே இருவர் மனதும் ஒருமைவிளைந்தது; அன்பு பெருகி ஆனந்தமாகியது; காதல் மிகுத்துக் கண்ணீர் ததும்பிற்று; நேசம் பொங்கிப் பாசமாகியது. வீடு சேர்ந்தாள் ராதை; கண்ணன்மீதே காதலாகினாள்; எண்ணமெல்லாம் அவனிடமே யிருத்தினாள்; பக்தியடைந்தாள்; பரவசமாகினாள்; ஊணும் உறக்கமுந் தவிர்ந்தாள்; பாயும் படுக்கையுமானாள், மெய்யும் மெலிந்தது; கையும் துவண்டது; கலையும் நெகிழ்ந்தது; வளையும் போயது: தியக்கங்கொண்டாள்; மயக்கமாகினாள்.

சீவ—பரமாத்ம நேசம்.

இரவானதும் கண்ணன் குழல்கொண் டூதினான்! அவ்வினிய ஓசை "ராதா! இங்கு வருவாய் எனக்குக் கிருபை தருவாய்" என்பது போல் அவளுக்கு மாத்திரம் கேட்டது. அனைத்தையும் துறந்து, கணவனாதி யாவரையும் மறந்து, ராதா தன்தோழிகளுடன் குழலோசை வரும் வழியே சென்றனள்; யமுனைக் கரையில் ஜன சஞ்சாரமில்லாத ஓரிடத்தில் காதல் செய்த கண்ணன் ஆதரத்தோடு நின்றுகொண்டிருப்பதைக் கண்ணுற்றாள். அவ்விடம் மிக்கவும் மனோகரமா யிருந்தது. சல்லாபஞ் செய்யும் பெர்லீச மல்லிகையும், அல்லல் நீக்கித் தொல்லை போக்கும் முல்லை மலர்களும், நண்பர்க் குகந்த சண்பகப் பூவும், ராசாக்கள் மெச்சும் ரோசாக்களும், துன்மதியாளர்க்கும் நன்மதி கூறும் மன்மதபாணமும், அமுதமுந் தோற்கும் அருமையுற்ற குமுதப்பூவும் எங்கெங்கும் விளங்குகின்றன. இளைப்புற்று வந்தோரின் களைப்பை நீக்க அளிக்குலம் பாடுகின்றன; ஒலியுடன் மயில்கள் ஆடுகின்றன; கிள்ளைகள் சபாஷ் என்று புகழ்மாற்றம் கூறுகின்றன. "நெல்லிற் குவ கண்[illegible] நீரிற் குமுதம் [illegible] அல்லிக்

முகங்காட்டும்” கழனிகளுக்கு அவ்விடம் சிறந்தாயினும் தோற்றிருக்கவில்லை. இவ்வித அழகும் அலங்காரமும் அரசாளும் அருமையான இடத்தில் ஆத்துமாவும் பரமாத்துமாவும் ஒன்றுவ தான உண்மைக்கு ஒரு சிறிதும் ஊனம் வாராதபடி கண்ணனும் ராதாவும் களிப்புறக் கண்டனர். இவர்கள் வருகைக்கென்றே பலவித பூக்களால் இசைத்த பொற்புள்ள விமானத்தில் இருவோரும் இருத்தலும், இயற்கைமாதின் இலகிய முகத்திற்குத் திலதமிட்டதுபோலாகியது. மன்னவரிருக்கும் மஹா மண்டபத்தில், எத்தனை விநோதம் எழிலுடன் காண்கினும், மன்னவர் வந்த பின்னரே மாட்சி யுண்டாவது போலவும் இங்கிதங்கள் தோன்றி இதயங்களிக்கத் திங்கள் எழுந்து திருத்தம் செய்வது போலவும், ஒவ்வொரு அழகும் ஒப்பற்றதே யென்ன உறுதி கூறிய, சுந்தரம் பெற்ற சந்திரரிருவரும், ஒரே ஆஸனத்தில் வீற்றிருக்கக் கண்டு தேவர்களும் மூவர்களும் அளவில்லாக்களிப்பெய்தி, தேவகானஞ் செய்து பூமாரி பொழிந்தார்கள்.

ஆத்மார்ப்பணம்: ஹர்ஷம் சோகம்.

இந்த சிறப்பைக் கண்ட ராதாவின் தோழியர்கள், ராதா கிருஷ்ணருக்கு மங்களம் பாடினர். கடைசியாய், ராதாவும், கண்ணனுக் கெதிரில் வணங்கி நின்றுகொண்டு, “என் இஷ்டத்திற் குகந்த ஸ்ரீகிருஷ்ணா! உனக்கு யான் கொடுக்கும் பரிசு யாதொன்று மில்லை; நீயே யென் பொருளாயினை; உன்னை யன்றி உற்றபொருள் வேறொன்றும் ஏழையாகிய எனக்குக் கிடையாது, ஆகையால் என்னையே உனக்குச் சமர்ப்பிக்கிறேன். நீ என் பொருளாயினை; நான் உன் பொருளாயினன்! உனக்கோ, என்னைப்போல் பலரிருக்கக் கூடும்; எனக்கு உன்னைத் தவிர உற்றதுணை கிடையாது” என்று தன் அடங்காத அன்பையும், ஒப்பற்ற நேசத்தையும் இனிது விளக்கினாள். பகவானிடத்தில் சேதனர்கள் எப்படி பக்தியையும் ப்ரேமையையுமே பரம சாதனமாய்க் கொண்டு முக்தியடைவது என்பதைத் தெளிவாய் விளக்குவதற்கே, பரத்துவப் பொருளின் இருவகைத் தத்துவங்களாய் கண்ணனும் ராதாவும் காசினியில் அவதரித்தனர் என்று கற்றோர் யாவரும் மெத்தப் புகழ்கின்றனர். அன்றியும், ஒரு நாள் ராதா தன் தோழியர்களுடன் ரமணீயமாய் பிருந்தாவனத்திற் போகுங்கால் ஸ்ரீகிருஷ்ணன் அதி யுன்னத ஸ்ருங்காரத்துடன் எதிர் நின்று, பிருந்தாவனத்திற் பிரவேசிப்போர் கப்பணங் கொடுத்தே செல்லல் வேண்டும் என்று மறுக்க, ராதா தன் கையிலொன்று மில்லை என்பதை விநயமாய்த் தெரிவித்துக்கொண்டாள். “கைப்பணமொன்று மில்லாவிடின், ராதா, உன்னையே அர்ப்பணஞ் செய்வது தானே, உன் உடல் பொருளாவியனைத்தையும் எனக்கே தத்தஞ் செய்துவிடு” என்று கண்ணன் திருவாய் மலர்ந்தருளினன். இதனால் கடவுளை நேசித்துக் கடைத்தேற விரும்புவோர் உடல் பொருளாவியையும் முற்றத் துறந்து முதல்வனாகிற தலைவன் தாளிலே சமர்ப்பித்து விடுதல் வேண்டுமென்பது இனிது விளங்குகின்றது.

(இன்னும்வரும்.)

## REVIEW.

## “மதிகெட்டமனைவி.” *

“அன்பொன்றுண்டானு லார்தான்பிழைக்கமாட்டார்!

“உள்பர்மமதெனுளவு தெரியாமலுய்யு வகையிழந்துழல் கிறோமடிதோழி!”

மதிகெட்டமனைவி! கண்கெட்ட காமம்! மாயையில் வீழ்ந்த மானிடர்! அருளொளாச்சிவன்!! மருளொழிந்த மனிதன்! எப்படிச் சொன்னாலும் சரியே! உள்ளதை யுள்ளபடி யாராய்ந்து பார்த்தால் எல்லாம் பகவத்லீலை! குற்றமாய்ப் பார்க்கில் எல்லாங் குற்றமே! உண்மையாய் நோக்கில் எதுவும் உண்மைவழியுணர்த்துவோர் சின்னமாக விளங்கும். சாலையில் நடப்பவனுக்கு மைல்கல்லும் கைகாட்டி மரமும் வழிகாட்டி நிற்பதுபோல், சத்தியவழியாராய்ந்து செல்வோர்க்கு எதுவும் சத்திய வழியைக் காட்டும் அறிகுறியாகும். இங்கே ஒன்று இவ்வழி போகாதேயென்று எச்சரிக்கும்; அங்கே யொன்று இந்நுழைவழி யுனக்கேயென்று இயம்புவதுபோல் நிற்கும். சத்தியத்தின்மேலே கண்ணுயுள்ளவனுக்கு எதுவும் நல்வழி காட்டுவதாகும். சத்தியத்தை மறந்து மத, மோக, மாச்சரியாதிகளின் வசப்பட்டவனை

* “A Wife Condoned,” by S. M. NATESA SASTRY, B.A., M. F. L. S.



இவை கொள்ளிவாய்ப் பிசாசுபோல் சதுப்பிலும், சேற்றிலும் கல்லிலும் முள்ளிலு மிழுத்துப்போய் நடுக்காட்டில் திசைதப்பித் திகைக்கும்படி விட்டுவிடும். ஐயோவென்றழுதாலு மிரங்காது! அப்பப்பாவென்றரற்றினு மசையாது, கைகூப்பித் தொழுதாலுங் கேளாது!

கற்பகம் என்னும் ஒருமாது தனவான் வயிற்றிற்பிறந்து எல்லாப்படிப்பும் கற்று அழகில்இரதிதேவியையொத்து விளங்கினாள். செல்வம் சகடக்கால்போல் சுழன்று வருவது இயல்பாதலால், இவள் பிறந்த பொழுது அதி சீமானாகவிருந்த இவள் தகப்பன் இவளுக்கு 17-வயதாகிக் கலியாணகாலம் நேர்ந்த பொழுது கைசளைத்து தன் அந்தஸ்துக்குத் தக்க கைப்பொருளின்றி மேல் வேஷமட்டும் குறைவறப்போட்டு வரத்தக்கவனா யிருந்தான். இவன் ஸ்திதியையுணர்ந்த இவனுடைய ஏக புத்திரியாகிய கற்பகம் பணச்செருக்கற்றும் மனச் செருக்குக் குறையாதவளா யிருந்ததால் கைசளைத்த வேளையில் காரியத்தின்மேல் கண்ணாயிருப்பது புத்திசாலிக் கடையாளமென்று “கைநிறைந்த பணத்திலும் கண் நிறைந்த கணவனே மேல்” என்கிற பழமொழிக்கு மாறாக, அழகிலும் தனமேவிசேஷம்; அதுவும் புத்தியோடு சேர்ந்திருந்தால் அதிலும் விசேஷம் என்று யோசித்து, தன் தகப்பனுடைய தோல்கிடங்கில் மானேஜராயிருந்து அவரிலும் மேலான செல்வாக்கும் பதவியும் பெறும் பாக்கியம் பெற்ற ஒரு வாலிபனை மணம் புரிந்துகொள்ள இசைந்து அப்படியே மணமுடிப்பிக்கத் தன்பிதாவை வேண்டினாள். அன்பில்லாவிவாகம் துன்பத்துக் கேதுவென்கிற உண்மையை மறந்து தனக்குள்ள அழகு படிப்பு இளமை இந்தச் செருக்கினால் தன் கணவனை எப்போதும் அடிமை கொண் டாளலாமென்று இவள் அவனை விவாகம் செய்துகொண்டாள். அவனோ உண்மையான உத்தமன், சத்குண சம்பன்னன். தன்னுடைய உழைப்பாலும் அபார புத்தியுத்தியாலும், தான் சொப்பனத்திலும் எண்ணாதபடி தனவந்தனானான். தோல்கிடங்கு முழுவதும் அவனுக்குச் சொந்தமாய் விட்டது. கோடீசுரனாய் விட்டான். ஸ்ரீதேவி அவன் கைவசமானாள். அவன் தன் தேவியாம் கற்பகத்துக்குக் கையாளானான். அவள் ஏன் என்று சொல்லுமுன் எண்ணெய் என்று முன் நிற்பான். அவள் இவனிடத்தில் அன்பில்லாமையால் என்னதான் செருக்காய் நடந்துகொண்டாலும், இவனுக்கு அவளிடத்து உண்மையான உள்ளன்பிருந்தபடியால், இவன் அதை யெல்லாம் அவள் சுபாவமென்று பாராட்டாது தள்ளிக்கொண்டு போனான். அவளிடத்தி லிவனுக்கிருந்த உள்ளன்பின் மகிமையால் அவளுடைய ஏடாகோடத்தனங்களெல்லாம், இவனுக்கு ஏதோ குற்றமற்ற கோணற்றனமாகப்பட்டது. அவளுக்கு இவனிடத்திலுள்ளன்பின்மையால் இவன் உத்தமகுணங்களும் பாவனைகளும் அவளுக்கு அருவருக்கத்தக்க அடிமைக்குணங்களாகப் பட்டன. இப்படிப்பட்ட தாம்பத்யம் வாய்ந்த இல்லறதர்மம் எத்தனை நாளைக்கு இழுக்கின்றி நடக்கும்? 15, 16-வருஷங்களாய் விட்டன. இவன் தோல்கிடங்கு வேலையில் முற்றும் தன் மனத்தைச் செலுத்தி குவியல் குவியலாகப்பணத்தைத்தேடினான். அவள் குடி கெடுக்கும் கோமாளிப்பேயன் எவனையோகண்டு அவன் வெளிப்பகட்டில் அகப்பட்டு மயங்கி மானிடப்பதராம் அவனை மன்மதாவதாரமாக எண்ணி தற்காப்பை விட்டு அவன் கைப்பட்டு கற்பையிழந்து காமப்பேய் பிடித்து, மானாவமானத்துக்கு மிஞ்சி அதில் தலைகால் தெரியாமலிழிந்து வந்தாள்.

இந்த அக்கிரமம் எத்தனை நாளைக்கு நடக்கும். சிறுகச்சிறுக இது வெளியாயிற்று. ஆனால் அவளழகில் விழுந்து மயங்கிய அவள் புருஷனுக்கு இவள் செய்கை யொன்றும் தெரியவில்லை. தெரியக் காரணமான சந்தேகங்களுதித்தும் அதை யெல்லாம் அவன் மனோதர்மம் நல்லதாயிருந்ததால் தப்பொன்றும் நினைக்க அவனால் சாத்தியமில்லை. கொலையும் வியபசாரமும் என்ன மூடி மூடி வைத்தாலும் கடைசியில் அவை வெளியாகாமற் போவதில்லை. தெய்வத்திற்கே யிது பொறுக்காததுபோல், அவள் ஒரு நாள் தன் கணவனுக்கும் காமத்தலைவனுக்கும் கடிதமெழுதவுட்கார, அவளை யறியாது புத்தி மயங்கி, மறதியால் காமத்தலைவனுக் கெழுதிய கடிதத்தை கணவனுடைய விலாச மெழுதிய லகோடாவிலும், கணவனுக் கெழுதியதை காமத்தலைவன் விலாசத்துக்குமாகத்தடுமாறிப் போட்டனுப்பி விட்டா ள். இக்கடிதத்தைப் பார்த்தான் கணவன்! “என் அ பின் களஞ்சியமே!” என்று தன் காதல்மனை

தன்னை யொருநாளு மழைத்திலனாயினும், யாரோ அந்நியனை அப்பெயராலழைத்து அவன் குடியிலிருந்து அவன் கைப்பணத்தைச் செலவிட்டுக் கொண்டே அவன் பேர், புகழ், மானம் உயிர் எல்லாவற்றையும் ஒருங்கே கெடுத்து வருகிற சங்கதி தெரிந்தது. துடித்தான்! திகைத்தான்! பிரமித்தான். உள்ளுக்குள் அழுதான், தன்னை வெறுத்தான், அச்சதிகாரியை விட்டேனு பாரென்று கருவினான். கொல்லவும் நினைத்துத் தன் மாளிகை திரும்பினான். அவளைக் கண்டான்! கடிதத்தைக் காட்டினான்? வெருட்டினான், உருட்டினான், குரவளையைப் பிடித்து நெறித்தான். "உன் காதற்களஞ்சியம் யார்?" என்று அதட்டினான், ஒன்றும் பலிக்கவில்லை. காரியம் மிஞ்சிப்போய்விட்டது. கொலை விழுந்தாலும் விழுமேயன்றி இவன் குலத்தைக் கெடுத்தவன் பேர் வெளியாகிற வழியைக்காணோம்! இச்சமயத்தில் இவன் தன்னுயிரிலும் மேலாக மதித்த இவன் செல்வப்புத்திரிவர அக்குழந்தையின் பொருட்டு இப்பாதகியைக்கொன்று ஸ்ரீஹத்தி தோஷமும் வாங்கிக்கட்டிக்கொள்வதில் பயனென்ன வென்று தன்னெண்ணத்தை மாற்றினான். உற்றவிடத்துதவுவான் நேசனாதலால், தன்னுயிர்த் தோழனை நாடிச்சென்றான். இருவரும் சேர்ந்து தங்கள் உயிர்க்குயிராம் தோழனும் வேதாந்தியும் மஹாத்மாவுமாகிய ஜீவசித்தியிடம்சென்றார்கள். அவரோடு ஆலோசனை செய்யவே, புத்தி சமரசப்பட்டு, வீண்பழிப்பாவங்களுக் காளாவதில் பிரயோசன மில்லையென்று தீர்மானித்து, அவளை மனதாலொதுக்கி குழந்தையின் விவாகக்காலம் வரையில் மேலுக்கு அவள் குற்றத்தை மூடிவைத்து ஆதரித்து வரத் தீர்மானித்து வீடுசென்றான். அதற்கும் அவள் உடன்பட்டாளில்லை. காமம் தலைக்கேறி அவள் தன் குழந்தையையும் மறந்து தன் "காதற்களஞ்சியமே" தனக்குத் தஞ்சமென்று அவனிடம் போகப் புறப்பட்டாள். நடுநிசியென்றும் பார்க்காமல் அவள் தன்னந்தனியே தனிவழி நடந்து தன் காமத்தலைவனை யடைந்துவிட்டாள். காமத்தலைவன் வந்தான். நடந்ததைக்கண்டான். காரியங்கெட்ட தென்று ஆலோசித்தான். இவளைக்கட்டிக்கொண்டு அழுவதுயாதொன்று நினைத்தான். நினைத்ததும் அவளுக்கு உதோபதேசம் சொல்லத்தலைப்பட்டான். சன்மார்க்கம் பேசினான்: துன்மார்க்கம் இரகசிய மாயுள்ளமட்டுமே செல்லும், இரகசியப்போர்வை கிழிந்துபோனால் துன்மார்க்கம் பலிக்காது என்றான். அவளைக் கடிந்து கொண்டான். அவளிடத்தில் தனக்கன்பில்லை யென்பதை நன்றாகக்காட்டினான். தன்னை நம்பி அவள் கணவனைவிட்டு வந்ததற்காக அவளை ஏசினான். இவன் சுபாவத்தை இப்பொழுது அவள் உள்ள துள்ளபடியறிந்து கொண்டாள். இந்த மானிடப் பதரை மன்மதாவதாரமாக எண்ணி எல்லாவற்றையும் இவனுக்காக விட்டொழித்தோமே, நம் புத்தி யென்ன புத்தி யென்று கற்பகம் தன்னைத் தானேயிகழ்ந்து கொண்டாள். இகழ்ந்துகொண்டு இப்பாதகன் மாளிகையில் இனி ஒருக்ஷணந் தங்கினாலும் இவன் பாவம் நம்மையும் பீடிக்குமென்று அவனோடு சொல்லாமல் அவன் விடுதியை விட்டுச்சென்றாள்.

(இன்னும்வரும்.)

C. V. S.

---

## THE BELL OF THE TOWER OF JUSTICE.

## ஆலாசமணி.

ஒரு காலத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் உண்மையாகவே மிகவும் அசாதாரணமான அரசனாக இருந்தான். அவன் பெருமை உள்ளவனும் சுயகயம் பாராட்டுகிறவனும், அநீதிமானாகவும் இருந்தவனல்ல. மற்ற அரசர்கள் அப்படியிருக்க விரும்புகிறார்கள். தன் குடிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு மாத்திரம் அவன் ஜீவித்திருந்தான்.

இந்த அரசன் ஒரு பெரிய தர்மாலயம் கட்டி வைத்து அதற்கு டவர் ஆப் ஜஸ்டஸ் (Tower of Justice) என்று பெயரிட்டான். பிற்பாடு அவன் தன் முக்கிய மந்திரியினிடத்தில் (Prime-minister) சொன்னதாவது அந்தச் சிறைச்சாலையில் ஒரு மணியைத் தொங்கவிட்டு அங்கே கேடிழைக்கப் பெற்றவனாவது நியாயம் வேண்டியவனாவது வந்து அந்தமணியை அடிக்கவேண்டும். ஏனென்றால் நம்முடைய ராஜ்யத்தில் அவன் எவ்வளவு கொடிய பாதகனாயிருந்தபோதிலும் அவனுடைய குறையைக் கேட்டு அவனுக்கு நியாய மளிக்கவேண்டும்!! என்றான்.

அவர் சொன்னது போலவே அந்த மந்திரியும் செய்தான். பிறகு மற்றவர்களினாலாவது அல்லது சட்டங்களினாலாவது ஏதாவது மனிதன் கெடுக்கப்பட்ட பொழுது அவன் வந்து தர்மாலயத்தில் (Tower of Justice) கட்டித் தொங்குகிற மணியை அடிப்பான். பிறகு அந்த அரசன் தன் வித்வான்களோடு கூடி அவனுடைய குறையைக் கேட்டு அவனுக்கு நீதியளிப்பான். அநேகம்நாள் உபயோகித்ததினாலே அந்த மணியின் நாவில் கட்டித்தொங்கிய கயிறினுடைய அடி துணியானது தேய்ந்து அறுந்து போயிற்று. அதை நிவர்த்திசெய்கிறதற்கு காட்டு மிந்திரியினுடைய ஒரு துண்டை அந்த துணியில் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. நீடித்த நாளாகவும் நன்றாயும் உழைத்த ஒரு குதிரையை அந்த மந்திரி வைத்திருந்தார். ஆனால் அது கிழடாயும் உபயோகம் இல்லாததாயும் போனதினால் அதைப்பற்றிக் கவலை யெடுத்துக் கொள்வதற்கில்லை; ஒரு தரிசுநிலத்தில், (Barren land) அதை ஓட்டிவிட்டுச் சும்மா இருந்துவிட்டார். அங்கே அதன் வயிற்றுக்கு புல் அகப்படாமல் அது ஒருநாள் பசி முற்ற கயிற்றிலிருந்து மிந்திரிக்கொடி தொங்குகிறதைக் கண்டு தன் தலையை உயர்த்தி நீட்டி அதைக் கடித்திழுத்தது. உடனே மணி ஓசை கேட்டது: அரசன் ஜனங்களுடைய சௌகரியத்திற்கு என்னகுறை நேர்ந்ததோ என்று நினைத்துக்கொண்டு அந்த தர்மாலயத்தைச் சேர்ந்து உடனே தன் மந்திரிக்கு ஆள் அனுப்பி வித்வான்களையும் அழைத்து மணி அடித்ததின் காரணத்தை அறிய அந்த ந்யாயஸ்தலத்தில் எல்லாரும் கூடியிருந்தார்கள். அந்த முதல் மந்திரியினுடைய பசிமிகுந்த குதிரை காட்டு மிந்திரிக் கொடியை இழுத்ததனாற்றான் அம்மணியோசை கேட்டது என்று தெரியவரவும், எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். முக்கிய மந்திரி வெட்க மடைந்தான், அந்த அரசன் சொன்னதாவது அந்த வாயிலாச்சீவனுங் கூட நியாயத்திற்கு என்னிடத்தில் வந்திருக்கிறது. அதற்கு நியாயம் கிடைக்க வேண்டும்! என்ன சொல்லுகிறீர்! என்று வினவினான். சற்று தன்னுள் ஆலோசனை செய்தபின் பார்த்துத் திரும்பி அவர் சொன்னதாவது: அதனுடைய இளம்வயதில் உமக்கு அன்பாய் உழைத்த ஒரு சிறந்த பிராணியை அதனுடைய கிழட்டு வயதில் அசட்டை செய்த நீர் என்னுடைய ராஜ்யத்தில் ந்யாய பரிபாலனம் பண்ணிவர நான் எப்படி உம்மை நம்பக்கூடும்? என்றான். அதற்கு அந்த மந்திரி மறுமொழி சொன்னதாவது: "நியாயம் செய்யும்படி மற்றவர்களை நான் வைராக்கியமாய் கட்டாயப்படுத்தி வருகையில் நானே அநீதியா நடந்துவிட்டேன்; ஆதலால் என் எஜமானாகிய ராஜாவுக்கு ஊழியம் செய்ய அபாத்திரனா யிருக்கிறேன் என்றான்.

அதை யொப்புக்கொண்டு அரசன் பின்னும் சொன்னதாவது: "உன் இளமைப் பருவத்தில் நீயும் கூட நன்றாய் ஊழியம் செய்திருக்கிறாய்: உன்னுடைய வயது காலத்தில் என்னுடைய வேலையில் இருந்து நீ தள்ளப் படமாட்டாய். அப்படியானால் நானும் கூட அநீதியாய் நடந்து விடுவேன். யார் ஒருவன் ஜீவகாலமுழுதும் நன்றி அறிதலாய் இருக்கிறானோ அவன் ஒரு தப்பிதத்திற்காக தள்ளப்படமாட்டான்."

ஆதலால் அந்த ஞானமுள்ள ராஜன் தன் முதல் மந்திரியை மறுபடியும் வேலையில் வைத்துக்கொண்டான். நியாய ஸ்தலத்தில் மணி அடித்த குதிரை அது முதல் தன் பழைய எஜமானால் பட்சமாய் காப்பாற்றப்பட்டது.

மே. ப. ம. இராமலிங்கம்.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

**நமது சந்தாதாரர்களுக்கு.**

நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வாலியத்துக்குரிய சந்தாவைச்செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வாலியத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பல்வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தா தொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**D. K. Agency.**

*20th May*, 1903. **அ. ட. ஏஜன்ஸ்.**

## For the Propogation of Truth and Knowledge.

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control and Self-Culture.**

***"EKAM SATYAM BRAHMA."—SRUTIVAK.***

" Seek Truth wherever you can find it,"
" But Make your Choice and Stick to it "
till you reach the end.

" *Truth is hard Finding !*" **Yes,** " *Uncompromising too*" **when** *whole;* **Yet Try !** " *Awake, Arise and Stop not till you reach the Goal.*"—*Sruti.*

' And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion, caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligence, development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

**Hail! Ananda Natesa!**

*Sri Akandananda Satguruve Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People :—

**Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.**

**Single copy, current No. 5½ As.; Back Nos. 6 As. Each.**

**English & Foreign Subscription 5s. 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞To regular annual subscribers 2 months grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume,* though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

**விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.**

**தளமான காகிதப்பதிப்பு:—** அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு:—**சாதாரணமாய்எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சாந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும் போதெல்லாம் அவர்கள் ரிஜ்ஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவுக்கு மிடமிராது.




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Om.*

ஸத்யமேஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம் 12.] 1903-ம்வருஷ ஜூலைமீ [இலக்கம் 3.

Speak the Truth and Purify the Heart.

"Do the truth you know and yon will learn the truth you need to know"—Geo. Macdonald.

## "வாய்மையாலகந் தூய்மையாம்"

"சத்யம்வத"—வேதவாக்.

"சேய்மையண்மையி லுயிர்க்கொருதுணை யெனச்சிறந்த
வாய்மையா லகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற்சொல்லின் வேறுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக்கறிதி."

**ஸத்யவிரதம்** எல்லாவற்றிலும் பெரியநோன்பு. ஸ்திரீகளுக்குப் **பதிவிரதம்** எப்படியோ அப்படிப் புருஷர்களுக்கு ஸத்யவிரதம் எல்லா நன்மையையும் பயக்கும்.

"தெய்வந்தொழா அள் கொழுநனைத்தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை"

யென்று செப்பிய திருவள்ளுவ நாயனாரே

"பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" என்றார்.

பொய் சொல்லாமையையே விரதமாகக்கொண்டு சதாநடக்கச் சக்தியிருக்குமானால் வேறுதருமங்களெதுவுஞ் செய்யாமையே நல்லது. ஏனெனில், மனம் பொருந்த உண்மை

சொல்பவன் தவத்துடனே தான தர்மங்கள் செய்பவரினும் மேலாவன் என்பது நிதரிசனமாவது பற்றி அப்படிச்சொன்னார்.

"மனத்தொடுவாய்மை மொழியில் தவத்தொடு
தானஞ்செய்வாரிற்றலை."

இகபரசுகமிரண்டு மெளிதில் அடைவதற்கு சத்திய விரதத்தைப்போல் அதி சுலுவான வழி வேறில்லை. ஆனால் இந்த விரதமிருந் தனுஷ்டிப்பது மகாகஷ்டம். இது ஊருக்கு ஒப்புக் குப் பொய் சொல்லாமையன்று. அல்லது சுயநயம் பாராட்டி வியாபார நாணயம்பற்றிப் பொய் சொல்லாது வாக்குப் பரிபாலனம் செய்வதுமன்று. இவையெல்லாம் கொடுக்கல் வாங்கல் வியாபார நாணயமாம். காசுபண மதிப்பின்மேல் காரியார்த்தம் பொய்சொல்லாமலிருப்பது சத்தியவிரதமாகாது. இக்காலத்திலுள்ள சத்தியமெல்லாம் இப்படிப்பட்டதாகவே யிருக்கிறது. சத்தியவிரதத்தின் தத்துவமென்னவெனில் கறந்தபால் கறந்தபடி யுண்மையுரைப்பதேயாம். கறந்தபால் கறந்தபடி யுண்மை பேசுவதென்றால் உண்மையைச்சொல்கிறேனென்று எல்லார் மனதையும் நோக வைப்பதல்ல. மனநோவ மெய்யுரைப்பான் உண்மை யுரைப்பினும் அது சத்தியவிரத அனுஷ்டானமாகாது. மனம்நோவ மெய்யுரைக்கின் விரதபங்கம்வரும். இதைவற்புறுத்தவே திருவள்ளுவநாயனார் எடுத்ததும்,

"வாய்மையெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாத சொலல்"

என்று சொன்னார். பிறிதோருயிருக்குச் சிறிதேனும் தீமையைத்தராத சொல்லே வாய்மை யெனப்படுமென்றார். சத்தியம் அழிவற்றது. அதை நாம் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அது மாறுவதில்லை. ஆனால் வாய்மைபேசல் வியவகார தசையில் அனுஷ்டிக்கத்தக்கது. உண்மையைச்சொல்ல உள்ளபடி யிருவர்வேண்டும். சொல்கிறவனுண்டான விடத்துக் கேட்கிறவனொருவ னிருக்கவேண்டு மென்பது தானே யமையும். சொல்கிறவன் கேட்கிறவன் என்றேற்பட்டபொழுது, சொல்கிறவன் கேட்கிறவனுக்கு வருத்தமுண்டாகாதபடிச் சொல்லவேண்டிய தவசியம். கேட்கிறவனுக்கு வருத்தமுண்டுபண்ணினால் அவன் மனம் வருத்தத்தி லீடுபட்டுக் கேட்கும் சக்தியற்றதாய் விடுகிறது. அப்பொழுது முதல்வன் பேசுமுண்மை கேட்பவன் மனதிலேறாமற் போய்விடுகிறது. அப்பொழுது முதல்வன் உண்மைபேசியும் பேசாதவனேயாகிறான். எப்பொழுது இவன் பேச்சு ஏறவில்லையோ அப்பொழுது அது பிரயோஜனமற்றதாகப்போகிறது. போகவே சத்தியவிரதம் தவறிப்போகிறது. நோன்பு தவறாதிருக்க, கேட்பவன் மனநோகாதபடி உண்மையை ஹிதோபதேசமாகச்சொல்லல்வேண்டும். அப்படிச் சொல்லாதுபோனால் அது உண்மை பேசியதாகாது. ஆனால் பிறர் மனம் நோவாமலிருக்கப் பொய் சொல்லலாமோ வெனின், அதுவும் கூடாது. மனதறிந்து பொய்சொன்னால் தன்மனமே தன்னைச்சுடும்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்."

மெய்யைப் பேசவும் வேண்டும். பிறர்மனம்நோவப் பேசுதலும் கூடாது. மனதறியப் பொய்சொல்லலும் ஆகாது. இந்த நோன்பில் எவ்வளவு கஷ்டமிருக்கிறது பாருங்கள். அகத்



தூய்மையின்றி ஆராயின் எல்லாம் அசாத்தியமாகவே படும். நோன்பெடுத்து அனுஷ்டித்து வந்தால் எல்லாக்கஷ்டங்களும் சிறுகச்சிறுகப் பறந்துபோம். தன்னுள்ளஞ் சாக்ஷியாக வுண்மை பேசுகிறவன் உலகத்தா ரெல்லாராலும் கொண்டாடப்படுவான். ஏனெனில் அவன் சத்யவிரதத்தின் அருமை நோக்கி அவனையே உயர்ந்தோரெல்லோரும் மேலாகக்கொண்டாடுவார்கள். எல்லோருள்ளத்திலும் அவன் வாசஞ் செய்பவனாவன். அரிச்சந்திரனைக் கொண்டாடாதார் யார்? அவனைப்போல், சத்யவிரதன் உலகுய்ய அவதாரமான சத்புருஷனாகக்கொண்டாடப் படுவான்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்"

சத்யவிரத மனுஷ்டிப்பவன் கஷ்டங்களை யெல்லாம்வென்று நோன்பு தப்பாமல் நடந்து வருவானானால் அவன் மனத்திலுள்ள அழுக்காறு நீங்கி உள்ளம் பிரகாசிக்கும். இதை அருட் பிரகாசமென்பர் மதநூல் பற்றிப்பேசுவோர். எப்படி யுரைக்கினுமென்? உள்ளொளி விளங்க விளங்க உண்மையை மேலு மேலு முணர்ந்து சன்மார்க்க வழியில் அவன் முன்னிட்டுச் செல்பவனாவன். இப்படிப்பட்டவர் சான்றோராகி சாயுஜ்ய சாம்ப்ராஜ்ய பதவிக் கருகராவர். இகபர சுக மிரண்டிற்கும் இது காரணமானதுபற்றி இந்த சத்திய விரதத்தை இளமைப் பருவமுதற் கொண்டே குழந்தைக ளனுஷ்டித்துவரப் பழக்கவேண்டும். இதற்கு வாக்குமாத்திரத்தில் உபதேசித்தால் போதாது. பெரியவர்கள், அதாவது பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் மற்றப்படி குழந்தைகள் நடத்தைக்குக் காரணபூதராகவிருக்கும் பெரியவர்களும் சத்தியந் தவறாது நடந்துகாட்டல் வேண்டும்.

"எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யாவிளக்கே விளக்கு."

என்றதனால் இந்த சத்தியவிரத அனுஷ்டானத்தால், அதாவது பொய் சொல்லாமையாலுண்டாகும் விளக்கே ஆத்மா உத்ஜீவித்துய்ய வழிகாட்டும் பேரொளி விளக்காயிருப்பதால் இந்தவெளிச்சம் குழந்தைகளுக்கு பாலப்பிராய முதலமைய அவர்களை வெகு ஜாக்கிரதையாக மெய்வழிப்பட்டு நடக்கப் பழக்கல்வேண்டும். உலகத்தில் உடலைவளர்ப்பதற் கவசியமான சீவனார்த்தகாலக்ஷேபமுதல் மோக்ஷசாம்பிராஜ்யம் வரையில் எல்லா இஷ்டசித்திகளையும் கொடுப்பது இந்த வாய்மை யொன்றே யாதலால் இதை நம்மவர் நித்யவிரதமாக அனுஷ்டித்துவரல் வேண்டும். தானம், தவம், மதம் முதலான மன்னுயிர்க் கின்றியமையாத ஆசாரானுஷ்டான ரதங்களெல்லாவற்றிலும் புருஷார்த்த நான்கையும் பயக்கும் பெருமை வாய்ந்த சத்யவிரதம் இந்த வாய்மையின் மிக்கது வேறொன்றில்லையால் இதையே யெல்லாரும் அனுஷ்டித்துவரல் வேண்டும்.

"யாமெய்யாகக் கண்டவற்று ளில்லையெனைத்தொன்றும்
வாய்மையி னல்லபிற"

என்றார் பிறவி ஞானியாகிய திருவள்ளுவரும். ஆகையால் நம்மில் எல்லவரும் இந்த ஸத்ய விரதத்தைக் கைவிடாது அனுஷ்டித்து வரல்வேண்டும். "வாய்மையா லகந்தூய்மையாம்.

அகந்தாயின் அருளுதயமாம். அருளுதயமாக ஞானசித்தி கைகூடும். ஞானசித்தி கைகூட எல்லா சம்பத்தும், இகபரசுகமும் கிடைக்கும்.

ஓம் தத் ஸத்.

ஸத்யானந்தஃ

---

WORSHIP OF THE WIFE IDEAL.

# சுமங்கலிப் பிரார்த்தனை.

"பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்"—திருக்குறள்.

கற்பென்னும் கலங்கா நிலைமை யுண்டாயிருக்கப் பெற்றால் ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனையாளினும் உயர்வான பொருள் வேறில்லையென்றார் பெரியோர். இது உலகானுபவத்தில் யாருமறிந்த உண்மை. "மங்கல மென்ப மனைமாட்சி:" மனையாளது நற்குண நற்செய்கைகளே **மங்கலம்**—நன்மையென்று சொல்லப்படுவதாம். இந்த மங்கலத்துக்கு நன்மக்கட்பேறு ஆபரணமாமென்று சொல்லியுளார். ஆகவே **சுமங்கலி** யென்னும் பேர் அம்மி மிதித்து அருந்ததிபார்த்துப் பதிவிரதாதருமம் பூண்டபெண், அவ்வருமை விரதத்துக்குப் பங்கம் வராது நடந்து வருவாளாயின் அவளுக்கே யுரித்தாம். மனோவாக்குக் காயங்களாகிய திரிகரண சுத்தியோடும் பதிவிரதாபங்கம் வராது கத்தி முனையில் நடப்பவள்போல் நல்லொழுக்கம் பற்றி நடக்கும் உத்தம ஸ்திரீகளாம் இல்லறக் கிழத்திகளே அருந்ததிமரபி லவதரித்த **சுமங்கலி**களாவர். பதிவிரதமாவது புருஷனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடியுபாசித்து உத்தமவழியிற் பழகி உய்யும் வழிதேடுதலாம். நம்முன்னோராகிய இருஷிகள் இதை அவ்வளவு உத்தமோத்தமமான வழியாகச் சிறப்பித்துக் கூறுவானேனெனில், இந்தப் பதிவிரதா தர்மத்தால், பத்னி அன்பு பெருக ஆர்வநிறைந்து ஆருயிர்க் காதலனை அன்போடு பணிந்து அவன் எக்குற்றமுள்ளவனாயினும் தன் அன்பு நிறைந்த கண்ணால் அவனைப்பார்க்கும்பொழுது அவன் குற்றங்களையெல்லாம் குணங்களாகமாற்றி, குறைகளை யெல்லாம் நிறைவெய்தச் செய்து, பரிசவேதி தான் தொட்டதையெல்லாம் பொன்னாகச் செய்யுமாபோல், உள்ளன்பு நிறைந்த உண்மையளாமிவள் பூர்ண அன்பினால் அவன் குற்றங்களையெல்லாம் குணங்களாக மாற்றி அவனைப்பூஜித்துத் தான் கடைத்தேறுவதன்றி தன்னுடைய பூஜாவிசேஷத்தாலும், பதிவிரதமகிமையினாலும் அவனையும் கடைத்தேறச்செய்யும் சக்திவாய்ந்தவளாகிறாள். இவ்வளவு சக்தியுமவளுக்குண்டாவது எதனாலென்றால் அவளுடைய **பூரண அன்பின்** மகிமையால். **பூரண அன்பின் சக்திக்கு அளவில்லை.** அன்பின் மகிமையை அளவிட்டுச்சொல்ல முடியாது. "அன்பொன்றுண்டானா லார்தான் பிழைக்கமாட்டார்!" என்று சொன்னது ஒப்புக்குச் சொன்ன வார்த்தையல்ல. உண்மையில் உள்ளபடி ஸ்வானுபவத்தில் கண்டதை வெளியிட்டதன்றிவேறில்லை. ஆகையால் பதிவிரதாதருமம் ஏற்படுத்தினது ஸ்திரீகள் இல்லறத்திலிருந்து இகபரசுகமெய்தி மோக்ஷ சாம்பிராஜ்ய மடைவதற்காக அதிசூக்ஷ்மமாக அமைந்த சுலபவழி



சாதனமுறையவசியம்பற்றியென்று அறியவேண்டியது. இக்காலத்தில் இங்கிலீஷ் படிப்புப் படித்தவர்கள் ஸ்திரீ புருஷர் சமத்வத்வம் பொருந்தப்பெறவேண்டுமென்று முன்னோர் ஏற்படுத்திய உத்தம வழிகளைப் பழித்து பாதகம் செய்கிறார்கள். முன்னோர் கருத்தறிந்து நடக்காது கண் மூடித்தனமாய் நடக்கும் மாமூல்வழக்கத்தால் கெடுதலையன்றி நன்மை சிறிதும் விளைவதில்லை யென்பதுதிண்ணம். ஆனால் அதைச்சீர்திருத்த முயலுவோர் தற்காலத்தில் நடக்கும் அக்கிரம வழக்கங்களைப் பழித்து நீக்காமல், முக்காலத்துப் பெரியோர்கள் சத்யநிலையறிந்து தீர்க்கதரிசனவிசேஷத்தோடு ஏற்படுத்திய சம்பூரண சாக்ஷாத்கார சாதனமுறைகளாம். உத்தம எண்ணங்களை யுண்மையறியாமல் உதாசினமாகப்பேசி அவைகளை மண்ணில் போட்டிழுத்து உண்மையாளர் மனமறுகச்செய்வது தேசக்ஷேமத்திற்காவது ஜனக்ஷேமத்திற்காவது உண்மைக்காவது ஒத்ததாகவில்லை. இப்படிப்பட்ட உத்தமக்கொள்கைகளை யனுசரித்து வாழ்ந்து வானுலகம் சென்ற புண்யவதிகள் தேவலோகத்தில் பெருஞ்சிறப்புப்பெற்றுய்ந்து வாழ்வார்களென்பது தீர்க்கதரிசிகள் சாக்ஷாத்காரமாய்க் கண்டவுண்மை.

"பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு."—திருக்குறள்.

தம் கணவர்களைத் தெய்வமாக வணங்கும் பெண்களைத் தேவர்கள் தொழுவார் என்று திருவள்ளுவர் உண்மையை உள்ளபடி செப்பியுள்ளார்.—இப்படிப்பட்ட உத்தமிகள் தேகம் விட்டுத்தேகிகளானால் அவர்கள் தேவர்களும் வணங்கும் தேவதாம்சமாவதுபற்றி இல்லறத்தார் அவரவர் குலத்தில் உண்மையாகவிருந்த உத்தமஸ்திரீகளாம் சுமங்கலிகளை விசேஷகாலங்களிலும், வருஷத் திதிக்குப் பின்னிட்டும் தெய்வமாகக்கொண்டாடிப் பூஜித்துப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியுள்ளார்.—இது நாளது வரையிலும் எல்லாக்குடும்பங்களிலும் வழங்கி வருகிறது. இப்படிப் பதிவிரதா சிரோமணிகளாயிருந்து மாங்கல்யத்தோடு மாக்ஷி பெற்றுய்ந்த மஹாத்மாக்களைப் பூஜித்துப் பிரார்த்தித்தலுக்கே **சுமங்கலிப் பிரார்த்தனை** யென்றுபேர். 'எப்போதும் நன்மையே செய்யும் தேவதாம்சமானவர்களைப் பூஜித்துப் பிரார்த்திக்கொள்ளல் தகுமென்பது இதன் உட்கருத்தாம். மேற்றிசையார் நம் ஆர்யானுஷ்டானங்களை யிகழ்ந்து பேசுவது வழக்கமாக விருக்கிறது. நம்மவர்கள், உயர்நிலை தவறி உத்தமவழிதப்பி, இருளும் மருளும் நிறைந்து, உண்மைவழிதப்பி உய்யும்வழியறியாது அல்லாடி வருவதால் அவர்கள் நம்மவரைப் பார்த்து இப்படி நையாண்டி செய்து பழித்துப் பேச நேரிடுகிறது.—இதற்கு அவர்கள் பேரில் குற்றஞ் சொல்லக் காரணமில்லை. நம்மவர்கள் மடைமையே காரணமாயிருக்க அவர்களை வீணில் நொந்து கொள்வதில் பயனென்ன? மேற்றிசையில் உண்மை வழிபற்றி உய்ய விரும்புகிறவர்கள் அங்கு வழங்கும் உத்தம எண்ணங்கள் அவர்கள் ஆத்ம தாபத்தைத் தணிக்கத்தக்க பெருமை பொருந்தியதில்லாமை கண்டு, கீழ்த்திசை நோக்கி வந்து சத்தியத்தை நாடி சாத்விகமேற்பூண்டுழைத்து வருகிறார்கள். அவர்கள் பூர்வத்தில் ஏற்பட்ட ஆர்ய உண்மைகளின் மேன்மையையும் அதை அனுபவத்தில் கண்டுய்ய நம்முளேற்பட்டுள்ள உண்மையான உயர்வாழ்வையுங் கண்டும் கேட்டும் ஆனந்தித்து அந்த நிலையடைய உண்மையிலுழைத்து வருகிறார்கள். நம்மவர்களில் இங்கிலீஷ் படிப்புப்படித்து

சந்தியாவந்தனத்தையும் கைவிட்டு சாஸ்திர உண்மையை யனுசரித்து நடப்பதாகச் சொல்லி போம்வழி வரும்வழி தெரியாமல் "குருடனும் குருடனும் குருட்டாட்டமாடிக்குழியில் விழுந்த" கதையாக மேற்றிசையார் பின்பற்றிச் செல்வதே பெருமையாக மதிக்கும் புன்மதிகள் இந்த மேற்றிசைச் சற்சீஷரைத் தமக்கு சற்குருவாகக்கொண்டு பணிந்து அவர்கள் இழுத்தவழிகளிலெல்லாம் போயலைந்து புனிதமான ஜன்மத்தைப் பாழாக்குகிறார்கள். இதுவுமவர் விதிவசமேயன்றி வேறல்ல. இவ்வசைமொழிகளை நாமே பகர்ந்தோமென்று எவரும் நம்மீது பகைபாராட்டத் தேவையில்லை. அவர்கள் கொண்டாடும் குருகுலதிலகர்கள் உள்ளத்தில் உள்ளபடி உண்மையாக நினைக்குமெண்ணத்தை நாம் நம்மவர்கள் நன்மையைக் கருதி வெளியிட்டதன்றி வேறல்ல. பகைத்தும் நிகைத்தும் பிரயோசனமில்லை. போனதைப் போகவிட்டு, இனி வீண்காலம் போக்காது உள்ளதை புணர்ந்து உண்மை வழிநடக்க இதைப் பார்த்தவுடன் சங்கற்பித்துக் கொண்டு முன்வைத்தகால் பின் வாங்காது முயலுவதே ஆண்மைக் கடையாளமாம். உண்மைக்கும் அது அனுகூலமாம். ஆகையால் பதிவிரதாதர்மம் இப்பரதகண்டத்தில் வளர்ந்துவர யாவரும் முயலவேண்டும். சுமங்கலிகளைப் போல சுபம்விளைப்போர் யாருமில்லை. ஆகையால் இப்பரதகண்டத்தில் மட்டுமன்றி, கீழ்லோகம் மேல்லோகமிரண்டிலும் பதிவிரதா தர்மம் பூண்டொழுகும் பத்னிகளுக்கும் அவர்களைக் கொண்டாடும் சிஷ்யவர்க்கங்களுக்கும் நித்ய மங்கலம் கூறி இதை முடிப்போம். ஜகத்திலவதரித்த சுமங்கலிகளுக் கெல்லாம் மங்கலம். பாரிலவதரித்த பதிவிரதைகளுக்கெல்லாம் மங்கலம். பூவிலவதரித்த புண்யவதிகளுக் கெல்லாம் மங்கலம். ஊரிலவதரித்த உத்தமிகளுக் கெல்லாம் மங்கலம். நாட்டிலவதரித்த நன்மக்களுக் கெல்லாம் மங்கலம். என்னிருதயத் திருந்தாளு மின்னுயிர் நாயகிக்கு மங்கலம்: ஜயமங்கலம்.

விண்ணிலொளியே விழுமியதேனே
மண்ணின்மதிபோல் மனைக்கோர்விளக்காய்
எண்ணிலொளியாய் ஹ்ருதயத்தன்பாய்
கண்ணிற்பாவைபோல் கணவற்கிசைந்த பாவாய்போற்றி.

"அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே."—திருமந்திரம்.

சுபமஸ்து. ஓம்.

சுமங்கலிவிரதன்.



# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit. OO.*
*(With the First Dawn of the 20th Century)*

# ஆனந்தத்தாய்மொழி.

### 7-வது: காதலிற்கலவி—கண்டணைப் படலம்.

அந்தரங்கமான ஆனந்தத்தாயவளுக்
கன்போடொருரகசியம் அனுப்பவுந்தான்விரும்புகிறேன் :—

நீ காட்டுவதுசுலபவழி இருத்துவது கஷ்டநிலை;
மற்றோர்காட்டும் வழி கஷ்டமதே யானாலும்
அவர் இருத்துமந்நிலை மிகவுந்தான் இலகுவான தென்தாயே.
தாயே தயாபரமே தஞ்சமென்று அடைந்தேனை
சாட்டிவிட்டபம்பரம்போல் ஆட்டிவிட்டே பார்த்திருந்தாய்:
ஆட்டிவிட்டபம்பரமும் அசைவோய்ந்து நின்றபின்பு
சூக்ஷமமாய் எடுத்தாய் நீ சூன்யத்தைக் கட்டைவிட்டு*
சூன்யத்தை யெடுத்து நீ சூக்ஷமமாய் வைத்துக்கொண்டு
ஆகாயக் கூண்டதனில் அடைத்துவிட்டாய் நீயதனை;
சூன்யமடைத்த கூண்டு சூக்ஷமமாயெழுந்ததுகாண்:
வேகுவேகென்று உயர்ந்ததம்மா அக்கூண்டு;
உச்சத்தில் உயர்வற்று சுற்றியே நின்றதம்மா!†
"சுற்றின சுற்றதுதான் சுழன்றுநேர் எழுந்ததனால்"
என்றுசொல்லி நீயுமென் கைப்பிடித்து மத்திழுத்தாய்!
கைபிடித்து மத்திழுத்துச் சூக்ஷமத்தைக் காட்டிவிட்டாய்:
மத்திழுத்த மயக்கத்தில் மர்மத்தைநானறியவில்லை;
அறியவில்லையானாலும் அறிந்திடுவே னென்றுணர்ந்து,
கைபிடித்து நீயுமே மெதுவாய்த்தான் சுற்றுவித்தாய்.
"சுற்றிச் சுழன்றனுத்தாய் சூக்ஷமத்தை யுணர்ந்தி" டென்று
கைபிடித்தென்னை நீ கட்டிலிலே யுட்கார வைத்தாய்
அலுத்தேன் நான் படிப்பேனென்றேன்; அது கூடாதென்றாய் நீ:

* The Spirit alone-become or Seperated from sense and thought perceptions in which it was enmeshed
† Refers to the *turya* state.

"உட்கார்ந்திரு" வென்று உளங்கனிந்து நீ சொல்ல;
சொன்னபடியிருந்தேன் நிஷ்டையது கண்டதுகாண்;
நிஷ்டையது காணவும் துரியமும் வந்ததம்மா:
துரியம் வந்தவேளையிலே துணிந்து நானுறாய்ந்தேன்:
சூக்ஷ்மத்தை புணர்ந்து கொண்டேன் சூன்யவழி கண்டுகொண்டேன்:
சூன்யவழி செங்குத்தா யேறினதொரு காரணத்தால்,
செங்குத்து நேராய்ச் செல்ல சுழற்சிமிக வேண்டியதால்,
சுழன்று மிகநேராய்ச் சூன்யவழி யேறினதால்,
வந்தது கனமயக்கமென்று கண்டு கொண்டேனப்போ:
கண்டு கொண்டேன் கண்டபடியிருந்ததுகாண் அனுபவத்தில்;
துரிதமாக மேலேறித் துரியாதீத நிலையடைந்தேன்:
அந்நிலையமிழ்ந்த காலையிலே நேர்ந்ததொரு அதிசயங்கேள்:—

வெள்ளிக்கிழமையது கிழ்வெளுக்கும் நேரமது
வெள்ளிவெளுக்கையிலே மூடினகண் விழிக்கையிலே
விழித்தகண் விழித்திருந்தேன் உன் மகிமையைக் கண்டதிசயித்தேன்.
அதிசயித்து அழுதேனம்மா உன்கழுத்தைக் கட்டிக்கொண்டு;
கட்டிக்கொண்டு அழுகையிலே கண்டேனம்மா அதிசயத்தை;
வெட்டவெளியைக் கண்டேன்: கட்டுவிட்டுக் கரைந்தழுதேன்:
கரைந்தழுத கண்களுந்தான் வெட்டவெளிகண்டதம்மா!
58 அரஹர அரஹர அரஹர அரஹர
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ
அரஹர சிவசிவ, அரஹர சிவசிவ
அரஹர சிவசிவ, சிவசிவ அரஹர
சிவசிவ அரஹர, அரஹர சிவசிவ
ஹரா, ஹரா! ஹரா, ஹரா! ஹரா, ஹரா!
ஹரஹராவென்றும், சிவசிவாவென்றும்
பன்முறை சொல்லிப் பணுவினேனம்மா!
ஆனந்தம் நிறைந்தழுதேன் ஆட்டங் கூத்து ஆடவில்லை:
அங்கஜேஷ்டைசெய்துநான் ஆடவில்லையானாலும்
உள்ளேயது குதித்ததம்மா, உள்ளன்பு ஆடித்தம்மா!
அது ஆடிக்கூத்தாடினதை அறியாயோ நீதானும்?
கூத்தாடிக்குதித்ததம்மா, குதித்துக்குதித்து ஆடினபின்,
ஆடிய ர்ந்ததம்மா, அங்கங்குளிர்ந்ததம்மா,

58. c. f. "அரஹரவென்ன வரியதொன்றில்லை, அரஹரவென்ன வறிகிலர்மாந்தர்,
அரஹரவென்ன வமரருமாவர், அரஹரவென்ன வறும்பிறப்பன்றே."—திருமந்திரம்.



மூளையுந்தான் குளிர்ந்ததம்மா மண்டைவலிதீர்ந்ததம்மா!
மண்டைவலி தீர்ந்ததென்று மலங்கழித்து நீராடி,
சிவனைத் தரிசித்ததால் சிவவேடம் பூண்டேனம்மா!
விபூதி நீரிட்டேன் விமலசரிரியானேன்?
பரிபக்குவகாலமது கிட்டிவிடுமென்றெண்ணி
குருவைப் பணிந்துநான் குருதக்ஷிணை சமர்ப்பித்தேன்.
குருதக்ஷிணைசமர்ப்பிக்கக் கொடுக்கவேண்டும் சொந்தப்பொருள்:
எனக்கொன்றுமில்லாமல் என்னைப்பரதேசி யாக்கிவிட்டாய்!
ஆக்கிவிட்டாயானாலும் அறிந்தேன்நான் ஒரு சூக்ஷ்மம்
தேவடியாளென்றுநான் தேடியலைந்ததுபோக
குருவென்று உபதேசம் நான் குணமாகக்கேட்டிடுங்கால்,
மனமென்னும் மானொன்றை நான் வேட்டையாடிச் சுட்டுவந்தேன்;
வேட்டையாடிச் சுட்டுவிட்டே புத்தியுடன் வந்தேன்நான்:
குருபாதம் சேருமுன்னே குருவுபதேசிக்கும் முன்
குருவுதவியின்றியே நான் சுட்டுவிட்ட மானதனை
தோலுரித்துவைத்திருந்தேன் வெகுநாளாயிதற்காக:
"காலமது கிட்டியது கலக்கும் காலமும் கிட்டியது"
கிட்டியது கிட்டியதென்று கடவாத்தியம் முழங்கியது!
முழங்கியவாத்யத்தை நான் முழிவிழித்துக் கேட்டிருந்தேன்:
முழக்கம் முழங்குதையா: முடிவுநேரம்வந்ததையா!
வந்ததையா தாமதித்தால் வகைமோசம் வந்துவிடும்!

## குருதரிசனம்.

வந்து விடுமென்று சொல்லி வழிநடந்தேன் கடுகவேநான்,
குருபாதம் தேடிச் சென்றேன் குருவிருந்த இடமடைந்தேன்,
இடமடைந்து குருவைக்கண்டேன்—
அவர் வெட்டவெளியாய் விளங்கக்கண்டேன்;
வெட்டவெளி யொழிய வேறொன்றையு மங்குகாணேன்!

## குருபாதம்.

கண்டேன் குருபாதம் கண்டவரைப் பணிந்திட்டேன்.
பணிந்துமேயவருக்கு ஓர் ஆசனமுமிட்டேன் நான்;
அமர்ந்திருந்தார் அவரதில்காண் வெட்டவெளியதுவாய்;
வெட்டவெளியதுவாய் அமர்ந்திருந்த அவரைக்கண்டு,
அன்புருகநான் தொழுதேன்—

## திருவடி சரணம்

தொழுதுநின்றேன் அழுதிருந்தேன், அவர்பாதமதே சரணமென்று;
சரணம், சரணமென்று சரணம் செய்தேன் அவர்பாதத்தில்;
குஞ்சித பாதமென்பார் குணங்கள் பல சொல்லிடுவார்:
வெட்ட வெளியாய் நின்றஅவர்க்குப் பாதமில்லை சிரமில்லை,
கண்ணுமில்லை காதுமில்லை யொன்றுமில்லை யவர்க்கே காண்;
ஒன்றுமில்லையானாலும் எங்குமவர் நிறைந்தவர்காண்;
எங்கும் நிறைந்தவர்காண்—
ஏற்றத்தாழ்ச்சி யற்றவர்காண்;
காதின்றிக் கேட்பாரவர்—
கண்ணின்றிப் பார்ப்பாரவர் ;
காலின்றி உதைப்பாரவர்—
ஒன்றுமின்றி எல்லாம் செய்வார் !

## திருவடி நாட்டல்.

உதைபட்ட சரணையினால் அவர்பாதம் தொழுதேன் நான்:
நான்காணும்பாதத்தை நவின்றெழுதமாட்டுவேனோ!
உதைபட்ட உணர்ச்சியினா லறிந்து கொண்டேனவர்பாதம்:
அப்பாதமதையறியவேண்டின் உதைபடணுமதனாலே ;
உதைபட்டால் தெரியவரும் உளவறிவாயிருந்தவர்க்கு;

## திருவடி மகிமை.

அறிவறிந்த பெரியோர்கள் அதைமுடிவணங்கித் தொழுதிடுவர் ;
பெத்தப்பெரியவர்கள் பெருநிதியம் பெற்றவர்கள்
அன்பாலே தூக்கியவர் சென்னிதனில் வைத்துத்தொழும்,
வைத்துத்தொழும் சீர்பாதம் வணங்கப்பெற்றேன் நானம்மா.

## தாள் தந்தாளல்.

வணங்கினனடியனென்று ஆட்கொண்டாரென்னையவர்,
ஆட்கொண்ட அன்பரவர் அரியோபதேசம் செய்தார்.

## மோன முத்திரை.

உபதேசம் செய்தேதான் உச்சத்தில் வருகையிலே
மௌனமது சாதித்து மறைந்துவிட்டார் அவரே காண்.
மறைந்துவிட்டார் அவர் தானும் மௌனம் தான் சாதித்தென்று
அழுதுவிட்டேன் என்புருகி அன்பவர்மேல் வைத்தவன் நான்.
அன்புருகியழுததனால் அவர் அன்புநிறைந்தருள்சுரந்து



சூக்ஷமமாய்த் தெரிவித்தார் அவர் சாதித்த மௌனக் குறிப்பதனை;
மௌனக்குறிப்பதனை வாய்விட்டுச் சொல்வாரோ!
எழுதத்தான் முடியுமோ ஏட்டிலுந்தானடங்குமோ!
குறிப்பாலேயல்லவோ குறியறிந்து கொள்ளவேணும்!
"**மௌனகுரு**" வென்றுரைப்பார் மறைவழிப் பெரியோர்கள்;
அப்பேர்ப்பட்ட அவர் அபூர்வ இரகசியத்தை
யார்தானுரைத்திடுவார், அறிவதும்தான் எளிதோசொல்!

## 8-வது: தோத்திரம்—அவள் பேரன்புப் புகழ்.

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
'பித்தனிவன்' எனஎன்னை ஆக்குவித்துப் போமே
சித்தம்எனுந்திண் கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே"—திருவாசகம்.

அன்பேயருளே இன்பே கனியே இன்னமுதேயுன்
கண்ணிற்பிறந்த கண்மணிகளெத்தனைபேர்
உள்ளங்கனிந்தாரை யுள்ளபடி போற்றுவாயே
உளங்கனிந்தேதான்வீழ்ந்தால் உவகையுடனேந்திடுவாய்
மண்ணில்வீழ்ந்ததானால் மாயைவந்துதொத்துமென்று,
மார்பிலே தாங்கியம்மா மடியில்வைத்து வளர்ப்பாயே!
நீ ஆகாச கங்கையென்று நின்னையள்ளிக் குடிக்கவெண்ணி
அடுத்தடுத்து வருவாரம்மா அனந்தனந்தம் பேர்களுமே,
நீகைக்கெட்டாக் கங்கையல்லோ வாய்க்கெட்டாவிண்ணமுதே!

உள்ளதுணர்ந்து உளவறிந் துனைக்கண்டு
ஹிருதயமாம்கலசமதை யழுக்கறவேதான்விளக்கி
அன்பாங்கைநீட்டி யாதரவாயுனையேந்தி
ஆருமறியாத அம்பரத்தே தனியிருந்து
தன்னைத்தானறியத் தபித்தவர்கள் தான்குடிப்பார்!
தபித்துக் குடித்தார்க்குத் தாகமது அற்றுப்போம்:
உண்டுகளித்தார் உளம்பெருகிப் பூரிப்பார்.
இத்தனையும் சொல்லி எத்தனையோ எண்ணினேன்நான் :
எத்தனைதான் சொன்னாலு மேற்குமம்மா உன்றனுக்கு!

## 9-வது : அனுபவானந்தம்—* அணைந்துறியுணர்ச்சியுளொடுங்கல்.

"செம்மைநலமறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே!"—திருவாசகம்.

அன்னைதனைக்கண்டேன் அருள்பெற்றேன் மயல்தீர்ந்தேன்
அருள்கூடத்தரிசித்தேன் அம்பலத்தாடும் அழகன்திருப்பாதம்
அன்புநிறைந்தென்புருக அவளையறிந்தேத்தினேன் தொழுதேன்.
59 அதிசயமாயவள்செய்த அற்புதலீலைகளை யுள்ளூற்றுணர்ந்தேன் ;
அற்பனேயானாலும் அருள்பெற்றபாக்கியத்தால்
அலைகடல்தாண்டியே ஆனந்தித்தாடினேன் அருள்பாடினேன் ;
அலர்ந்தேன் அமர்ந்தேன் அடைந்தேன் குருபாதம் ;
அல்லலறுத்தாட்கொண்ட அம்பிகையைப் புல்லிப்புணர்ந்தேன்—
60 புலனற்றுப்பொறியிழந்தேன் பொன்னம்பலத்துட் போனேன் போனேனே.

ஸத்யமேஜெயம். ஓம் தத்ஸத். ஓம்.

அம்பரம் வாழ்க, ஆனந்தம் வாழ்க.

ஸ்ரீ அகண்டானந்த ஸத்குருவேநம:

" அபிவாதயே ஸாத்விக ரஜோ தம : த்ரிகுணாதீத ப்ரவராந்வித - அவதூதகோத்ர : ஆபஸ்தம்பஸூத்ர :
சதுர்வேத ஸத்புருஷ : ஸத்யானந்த : சாந்த சர்மாநாமாஹமஸ்மிபோ."

சுபமஸ்து.

ஓம்.

---

* c. f. " முத்தியென்னப்படும்மங்கையைச்சேரமுயல்பவருஞ்
சத்தியென்னப்படுமீசனருளன்றிச்சார்தலுண்டோ."

59. அதிசயமாயவள்செய்த .... உள்ளூற்றுணர்ந்தேன் c. f.

" உற்றுநின்றாரொடுமத்தகுசோதியைச்
சித்தர்களென்றுந்தெரிந்தறிவாரில்லை
பத்திமையாலேபணிந்தடியார்தொழ
முத்திகொடுத்தவர்முன்புநின்றானே."

60. புலனற்றுப்பொறியிழந்தேன்பொன்னம்பலத்துட்போனேன்போனேனே. c. f.

" புணர்ச்சியுளாயிழைமேலன்புபோல
வுணர்ச்சியுளாங்கேயொடுங்கவல்லார்க்குக்
குணர்ச்சியில்லாதுகுலாவியுலாவி
யணைத்தணைத்தின்பமதுவிதுவாமே"—திருமூலர் திருமந்திரம்.



# THE ILIAD OF HOMER.

## ஹோமர் என்னும் மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

(152-வது பக்கத் தொடர்ச்சி.)

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

வேறு,

21. இன்னணம் யவனர்சேனை யிறத்தல்கண் டிறங்கியூனோ
என்னும்வா னிறைவி யக்கிலிகல் வலி வீரற்கன்று
தன்னுளக்குறிப்புத் தோன்ற வுணர்த்தலுந் தபரைக்கூவி
அன்னவனவர்களோடு மாய்ந்திடன் மேயினனால்.

(இ-ள்.) இவ்வாறு யவன சேனைகள் இறந்ததுகண்டு வருத்தமுற்று யூனோ என்னும் தேவராணி அக்கிலனையடுத்துத் தன் உளக்கருத்தை அவனுக்குத் தெரிவித்தபோது அவனும் கிரேக்கத்தலைவர்களை அழைத்து அவர்களோடும் ஆலோசிக்கலாயினன்.

22. வரன்முறை வழாதுமன்னர் வந்தவண் வதிந்தபின்னர்
முரண்மலி தடந்தோளக்கின் மொய்ம்புடை வீரனுண்டு
பெருந்தகை மன்னர்மன்னன் றன்முகம் பெட்பினோக்கி
உரந்தரு மொழிகளின்ன வுணர்வுற வுரைத்தா னன்றே.

(இ-ள்.) தலைவர்கள் எல்லாரும் அவரவர் வரவேண்டிய முறைமைப்படி வந்து சேர்ந்து அவரவர்க்குரிய தானங்களில் இருந்தபின்பு வலிமைமிக்க தடந்தோள்களையுடைய மகாபராக்கிரம சாலியாகிய அக்கிலன் சபையோர் முன்னெழுந்து நின்று அங்கு இராஜாதி ராஜனாய் வீற்றிருக்கும் அகமம்னனை நோக்கிப் பின் வருமாறு கூறலாயினன்.

23. நோயினா னமர்கள்யாரு நலிந்துயிர் நுடங்கயாமித்
தீயவெந்நிலத்தைத் தீர்ந்து சென்றிடா திருத்தல் யாதோ
மேயவெம் முனையின்வாளால் வீந்தவ ரொழியமுற்றும்
மாயுமுன் மீண்டுநந்த நாட்டினை மருவனன்றே.

(இ-ள்.) வேந்தனே, நமது சேனைகள் யாவும் கொடிய நோயினால் எண்ணில்லாமல் மாண்டு போகவும் நாமிந்தக் கொடிய பிரதேசத்தை விட்டுப்போகாமல் இன்னமும் இங்குத்தானே இருத்தலின் காரணம் தெரிந்ததில்லை. போர்க்களத்தில் பகைவர் படைகளால் மாய்ந்தவர்போக எஞ்சி நிற்பவரும் இந்நோயால் மடிந்து போகுமுன், போதும் போர்செய்தது, நமது தேசத்துக்கு மீளவும் திரும்பிச் செல்லுதலே நன்மையாகும்.

(இ-ள்.) இக்கொடிய வெப்புநோயால் கதிர்க்கடவுள் நமது சேனைகளை யிவ்வாறு அழிக்கும்படி அக்கடவுளுக்குக் கோபமூளக்காரணம் யாதோ? இவ்வுண்மையை அறிந்து சொல்லவல்லவர் ஒருவரும் இல்லையோ? இதற்கு நிவிர்த்தியேனும் இன்னதென்று தெரிந்துரைக்க வல்லவரும் நம்முள் ஒருவரு மில்லையோ!

25. வேண்டுறு முறையாலேற்றைப் பலியிடாவிதத்தால் வெய்யோன்
மூண்டெழு முனிவுகூர்ந்து நமைத்தெற முன்னலாலே
ஈண்டிது விளைந்ததாமே யின்னையே முனிவுதீரக்
காண்டகு பூசையாற்றிப் பலியிடக் கடவே மின்றே.

(இ-ள்.) செய்யத்தக்க விதிப்படியே அக்கதிர்க் கடவுளுக்குக் காளைக் கன்றுகளைப் பலியிடாமையினாலே அக்கடவுள் கோபங்கொண்டு நம்மவர்களைக் கொல்ல நினைந்ததனாலே இந்நோய் உண்டானதாமென்னில், இப்போதே அவன் கோபந்தீர்ந்து சந்துஷ்டி யடையும்படி உரியபூசைகளைச் செய்து பலிகளும் இடக்கடவோம் என்றான்.

26. இன்னணமெழுந்துகூறி யிருந்தபின் **காற்க** **னென்னும்**
துன்னருமறிவு முள்ளத் தூய்மையுஞ் செறிந்ததோன்றல்
மன்னிய யவனர்க்கெல்லாங் குரவனாய் வதிந்தோன் செவ்வே
உன்னிய மூன்றுகாலத் துணர்வுளா னெழுந்து சொல்வான்.

(இ-ள்.) இவ்வாறு அக்கிலன் எழுந்துநின்று கூறி முடித்தபின் காற்கன் (Chalcas) என்னும் பெயருடையவனும், அடைதற்கரிய ஞானமும், மனத்தூய்மையும் பெற்றவனும், கிரேக்கர்கள் எல்லாருக்கும் குருஸ்தானத்தைப் பெற்றவனும் திரிகால ஞானியுமான பெருமையையுடைய ஒருவன் எழுந்து சொல்வானாயினான்.

27. யோவினுக்கன்பனாகி யுயர்வலி யுடையவீர
மேவுமிவ் விளைவுதேர விழைந்திடு வாயே யென்னைத்
தாவறக் காப்பதாகத் தனிமொழி யளிப்பாயாகில்
யாவருமறியவீண்டு தெரிப்பனா னிமைப்பின் மாதோ.

(இ-ள்.) யோவென்னும் தேவர் பெருமானுக்கு உரிய பக்தனாகி ஒப்பற்ற பராக்கிரமத்தைப் பெற்றிருக்கும் மகாவீரனாகிய அக்கிலனே, நீ இந்நோயின் காரணத்தை அறிய விரும்பும் பக்ஷத்தில், நான் அதைத் தெரிந்து சொல்லவல்லேன். ஆயினும், நீ எனக்கு யாதொரு தீங்கும் வராமல் காப்பாயென்று அபயமொழி யொன்று உறுதியாகத் தருவாயாயின் அவ்வுண்மையை யாவரும் தெரியும்படி தெரிவிப்பேன்.

28. வேந்தர்செய் பிழைகடம்மை வெளிப்பட விளம்பி யன்னார்க்
காந்துணை யினிமைசெய்யக் கருதுத லெளிதன்றம்ம



ஏய்ந்திவர் பகர்தனந்தந் திருவினுக் கென்னவுன்னார்
சாந்துணை யொறுப்பர்சற்றுந் தயையறக் கொடியரன்றே.

(இ-ள்.) அரசர்கள் செய்யும் குற்றங்களை வெளியிட்டுச்சொல்லி அவர்களுக்கு ஒருவரால் ஆனவளவில் நன்மையைச் செய்யவெண்ணுதல் எளிதானகாரியமன்று: அதிப்பிரயாசமாகும். ஏனெனில் அவ்வரசர்கள் அவ்வாறு கருதுகின்றவர்களை இவர்கள் நமக்கு வேண்டினவர்; இவர்கள் சொல்லும் புத்திமதிகள் நமது நன்மைக்கும் லாபத்துக்குமே யாகுமென்றெண்ணாமல், அவை தம்கருத்துக் கிசையாவாயின் அவர்களைப் பகைவர்களாக வெண்ணி அவர்மேல் மாற்சரியம் கொண்டு அவர்கள் ஜீவனுள்ளவரையில் அவர்களை வருத்தப்படுத்துவார்கள். ஆதலின் அஞ்சுகின்றேன் என்றனன்.

29. என்றலுமக்கில் சொல்வா னியம்புக வேதுமஞ்சேல்
லொன்றெனு மொளியே யுன்னைக் காப்பதென்கடனதாகும்
நன்றுல கனைத்துமென்றும் விளக்கு மங்கெடிய சோதி
துன்றிய சுடரோனாணை சொல்லினே னினியுங்கேட்டி.

(இ-ள்.) அப்போது அக்கிலன் சொல்லுகின்றான். ஓ காற்கனே, நீ யொன்றுக்கும் பயப்படாமல் உண்மையை வெளியிட்டுச் சொல்லுக. உனக்குத் தீங்குவாராமற்காப்பது என்னுடைய கடமையாகும். உலகமெங்கும் ஒளிவீசிப் பிரகாசிக்கும் கதிர்க்கடவுளாணை நான் இது கூறினேன். அன்றியும் இன்னும் கேட்பாயாக.

30. அக்கிலென் றொருவன்ஞாலத் தாவியோ டுறையுங்காறும்
புக்குனக் கிடுக்கண்செய்வார் புவியிலர் புலந்துனையேல்
தொக்கநம் படைகட்கெல்லாந் தலைவனாய்த் தோற்றஞ்சான்ற
மிக்கவிவ் வேந்தன்றானுந் துணிகலன் விளைக்கவூறு.

(இ-ள்.) அக்கிலனென்னும் ஒரு மகாவீரன் இவ்வுலகிலுள்ளவரையில் உன்னை இதன் பொருட்டுத் துன்பப்படுத்துபவர் உலகில் இல்லை. ஆதலால் நீ வருந்தி வாடவேண்டாம். நம்முடைய சேனைகளுக்கெல்லாம் மகாசேனாபதியாய்ப் பெருமை பெற்றிருக்கும் வலிமிகுந்திருக்கும் இவ்வரசனும் கூட என் துணையிருக்க உனக்கு இடர்விளைக்கமாட்டான். என்றான்.

31. அளித்தவிவ் வபயமேற்றுள் ளணைந்ததோர் துணுக்கநீங்கிக்
களித்தசிந்தையனாய்ச் சொல்வான் காற்கனுங் கேட்பிர்வெய்யோன்
சுளித்தது துலங்கச்செய்யும் பூசனைக் குறைவானன்று
விளைத்தவித் துயரமற்று வெறிசெயாப் பிழையுமன்றால்.

(இ-ள்.) இவ்வாறு அக்கிலன் தனக்குக் கொடுத்த அபயமொழியைப் பெற்றுத் தைரியம் கொண்டு கவலையற்றுக் களித்தவனாகிஅந்தக் **காற்கன்** சொல்லுகின்றான்: கேளுங்கள் சபையோர்களே. கதிர்க்கடவுள் நம்மேற் கோபித்ததற்குக் காரணம் அவற்குச் செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளைச் சரிவரச் செய்யாமையினாலுமன்று;. இக்கொடிய நோயை உண்டுபண்ணி நமக்குத் துயர்விளைத்தது நாம் அக்கடவுளுக்குத் தக்கபடி பலிகள் கொடாமையினாலுமன்று. பின்னை எதனாலென்னில்,

32. வன்பினால் வேந்தன்றன்னை வழிபடுந்தூய நெஞ்சத்
தன்பினான் மகளைக் கொண்டங் கவற்கவ னிழைத்ததாய

துன்பிறைற் சுடரோனுய்த்த துயரிது தோகைதன்னை
இன்பினைல் விடுக்கினல்லாற் சமித்திடாதிறையு மென்றான்.

(இ-ள்.) தன்னை அன்போடும் வழிபடும் பூசகனாகிய கீரனது புதல்வியாகிய கீரவை யென்பவளை அரசன் வலாத்காரமாகக் கொண்டு அக்கிரிசனுக்குச் செய்த கொடுமையினாலே கதிர்க்கடவுள் கோபித்துச்செய்த தண்டனையாகும். அக்கன்னிகையைத் திரும்பவும் அவள் தந்தையிடம் செல்லும்படி விட்டுவிட்டாலன்றி இப்பிணி எள்ளளவும் நீங்கமாட்டாது.—என்றான்.

வேறு.

33. மாற்றமன்னது கேட்டலு மன்னவன் பெரிதுஞ்
சீற்றமேயின னிருவிழிச் செழுங்கனல் சிதறி
வீற்றிருந்த சிங்காதனம் விடுத்தனன் குதித்துத்
தோற்றுங்காற்கனைக் குறித்திவை சுடுமொழி புகல்வான்.

(இ-ள்.) இவ்வாறு காற்கன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் அரசன் பெருங்கோபங்கொண்டு இரண்டு கண்களினின்றும் தீப்பொறி சிதற இருந்த சிங்காதனத்திலிருந்து குதித்திறங்கி எதிரே நின்ற காற்கனை நோக்கி இவ்வாறு கடுமையான வார்த்தைகளைச் சொல்வா னாயினான்.

34. காலஞானியென் றொருபெயர் கவினுற வடைந்தாய்
ஆலமேயெனுங் கொடியன வறைகுவ தல்லால்
ஏலவொன்றெனு மியம்பலை யெனக்கிகல் விளைத்துச்
சீலமல்லன செய்தியே செயிர்மலி மனத்தாய்.

(இ-ள்.) திரிகாலக்ஞானி நானென்று பெருமையாகப் பெயர் வைத்துக் கொண்டு கொடிய விஷம்போலும் வெறுப்பான வார்த்தைகளைச் சொல்லுதலே யல்லாமல் இதவசனங்கள் சொல்லும் சுபாவமே உன்னிடத்திலில்லை. ஓ துர்ப்புத்தி யுடையோனே எனக்குப் பகையுண்டுபண்ணி ஆகாத காரியங்களைச் செய்வாயோ? இஃது உனக்கு அடுக்குமா?

35. எனக்குமென்னருங் குடிகட்கு மிகல்விளைத் திடற்கோ
உனக்கு ஞானியென் றொருபெயரீந்துனைக் கேட்டேம்
மனக்கு நேர்ந்தன வழுத்தினை வாய்மையைத் துறந்தென்
தனக்கொர் கேடுசூழ்ந் தனையலாற் சாற்றின்மற் றுளதோ.

(இ-ள்.) எனக்கும் என் குடிகளுக்கும் பரஸ்பரம் கோளும் குண்டியமும் சொல்லிப் பகை மூட்டுதற்கோ உனக்கு திரிகாலஞானி யென்று பெயரளித்து உன்னைக் கேட்டோம். உண்மையைக் கைவிட்டு உன்னிஷ்டப்படி நேர்ந்ததைச் சொல்லி எனக்குக் கெடுதி செய்ய நினைத்ததேயல்லாமல் வேறில்லை.

(இன்னும் வரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

துன்பிறுற் சுடரோனுய்த்த துயரிது தோகைதன்னை
இன்பிறுல் விடுக்கினல்லாற் சமித்திடாதிறையு மென்றுன்.

(இ-ள்.) தன்னை அன்போடும் வழிபடும் பூசகனுகிய கிரீசனது புதல்வியாகிய கிரிஜை யென்பவளை அரசன் வலாத்காரமாகக் கொண்டு அக்கிரிசனுக்குச் செய்த கொடுமையினுலே கதிர்க்கடவுள் கோபித்துச்செய்த தண்டனையாகும். அக்கன்னிகையைத் திரும்பவும் அவள் தந்தையிடம் செல்லும்படி விட்டுவிட்டாலன்றி இப்பிணி எள்ளளவும் நீங்கமாட்டாது.—என்றுன்.

வேறு.

33. மாற்றமன்னது கேட்டலு மன்னவன் பெரிதுஞ்
சீற்றமேயின னிருவிழிச் செழுங்கனல் சிதறி
வீற்றிருந்த சிங்காதனம் விடுத்தனன் குதித்துத்
தோற்றுங்காற்கனைக் குறித்திவை சுடுமொழி புகல்வான்.

(இ-ள்.) இவ்வாறு காற்கன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் அரசன் பெருங்கோபங் கொண்டு இரண்டு கண்களினின்றும் தீப்பொறி சிதற இருந்த சிங்காதனத்திலிருந்து குதித்திறங்கி எதிரே நின்ற காற்கனை நோக்கி இவ்வாறு கடுமையான வார்த்தைகளைச் சொல்வா னாயினுன்.

34. காலஞானியென் றொருபெயர் கவினுற வடைந்தாய்
ஆலமேயெனுங் கொடியன வறைகுவ தல்லால்
ஏலவொன்றெனு மியம்பலை யெனக்கிகல் விளைத்துச்
சீலமல்லன செய்தியே செயிர்மலி மனத்தாய்.

(இ-ள்.) திரிகாலக்ஞானி நானென்று பெருமையாகப் பெயர் வைத்துக் கொண்டு கொடிய விஷம்போலும் வெறுப்பான வார்த்தைகளைச் சொல்லுதலே யல்லாமல் இதவசனங்கள் சொல்லும் சுபாவமே உன்னிடத்திலில்லை. ஓ துர்ப்புத்தி யுடையோனே எனக்குப் பகையுண்டுபண்ணி ஆகாத காரியங்களைச் செய்வாயோ? இஃது உனக்கு அடுக்குமா?

35. எனக்குமென்னருங் குடிகட்கு மிகல்விளைக் திடற்கோ
உனக்கு ஞானியென் றொருபெயரீந்துனைக் கேட்டேம்
மனக்கு நேர்ந்தன வழுத்தினை வாய்மையைத் துறந்தேன்
தனக்கொர் கேடுசூழ்ந் தனையலாற் சாற்றின்மற்றுளதோ.

(இ-ள்.) எனக்கும் என் குடிகளுக்கும் பரஸ்பரம் கோளும் குண்டியமும் சொல்லிப் பகை மூட்டுதற்கோ உனக்கு திரிகாலஞானி யென்று பெயரளித்து உன்னைக் கேட்டோம். உண்மையைக் கைவிட்டு உன்னிஷ்டப்படி நேர்ந்ததைச் சொல்லி எனக்குக் கெடுதி செய்ய நினைத்ததேயல்லாமல் வேறில்லை.

(இன்னும் வரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.



SOME PRINCIPLES BEARING ON "SCHOOL DISCIPLINE".

## * பாடசாலை ஒழுங்கைப்பற்றிய சில விஷயங்கள்.

"நல்லொழுக்கம்":—தற்காலத்துப் படிப்பினுல் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் பிடிபடுகிறதில்லை என்று சிலர் குற்றம் கூறுவதாகவும், ஏனெனில் அவர்கள் பெரியோரிடத்தும், உபாத்தியாயரிடத்தும் மிக்க மரியாதை காட்டுகிறதில்லை என்றும் மதுராஸ் கல்வி நிரூபண சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நன்றுய் ஆராயுங்கால் நமது பாடசாலைகளிலும் நல்லொழுக்க மென்பது குறைந்து கொண்டே வருகின்றது. ஒருமாணுக்கன் அடுத்த பையனிடமிருந்து புஸ்தகம், எழுதுகோல் அல்லது இன்னும் வேறேதாவது வாங்கவேண்டி யிருந்தால் மரியாதையாய் கேட்டு வாங்கிக்கொள்ளாமல் அவன் கையிலிருந்து அவனைக் கேட்காமலே பிடுங்கிக் கொள்ளுகிறுன். இடம் மாற்றிக் கொள்ளும்போது ஒருவர் மேல் ஒருவர் விழுந்து இடித்துக்கொள்ளுகிறுர்கள். பேசிக் கொள்ளும்போது அவமானமான சொற்களையும் கெட்டவார்த்தைகளையும் உபயோகிக்கிறுர்கள். வகுப்பைப்பார்க்க யாராவது வந்து நுழைந்தால் அவர்களைப் பார்த்து பல்லைக் காட்டுவதும், பரிகாசமாய்ப் பேசுவதும் வழக்கம். இவற்றை யெல்லாம் ஒரு ஆசிரியர் அப்போதைக் கப்போது திருத்தாவிட்டால் பிள்ளைகளுக்குக் கெட்டவழக்கம் பிடிபட்டு பெரியோரை வணங்கவேண்டு மென்பதை முற்றிலும் மறந்து விடுவார்[illegible] அவர்களை நன்னெறியில் நடக்கும்படி செய்வது [illegible]ந்த மெனினும் தம்மாலியன்றளவு மெய்வருந்[illegible] ற்போதனைகளைச் செய்து திருத்தவேண்டும். சன்[illegible]ர்க்கம் புஸ்தகப் படிப்பினுல் ஏற்படாது. வழக்கத்தில் சிறுகச் சிறுக அனுசரிக்கும்படி பழக்கவேண்டும். "நெறியால் நல்லவனென்றறி" என்று William of Wykeham சொன்ன கட்டுரையை ஒரு ஆசிரியர் என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வாராக.

'பரிசுத்தம்':—இது நல்லொழுக்கத்தின் ஒரு அம்சம் ஆதல் பற்றி சிறிது கூறுவாம். உடலும், உடையும் சுத்தமாயிருத்தல் வேண்டும். நமது இந்தியா தேசமும் உஷ்ண பிரதேச மாதலால் அசுத்தமாயிருந்தால் அளவற்ற நோய்கட்கு இடமாகும். அவற்றுள் சில தொடரக் கூடியவையாயும், வெறுக்கக் கூடியவையாயுமிருக்கும். ஆனதுபற்றி பிள்ளைகளை தினந்தோறும் அழுக்கு வஸ்திரங்களை துவைத்துக் கட்டிக்கொள்ளும்படி செய்யவேண்டும். எவ்வளவு ஏழையாயினும் கந்தைத்துணிகளையும், தான் கட்டிக் கொள்ள ஒவ்வாத உத்திரியங்களையும் உபயோகிக்க விடப்படாது. "ஆடை ஆடவனை அறிவிக்கும்" என்றிருத்தலால் ஒரு ஆசிரியர்தான் முதலில் சுத்தமாயிருந்து கொண்டு பிறகு தம்மாணுக்கருக்கு அவ்வாறிருக்க போதித்தல் வேண்டும்:

"Regularity (ஒழுங்காய் வரும் தன்மை) and Punctuality (நேரம் தப்பி வாராமை)":—இவற்றின் உபயோகத்தைப்பற்றி Mr. Fowler என்பவர் தமது நூலில் 71-76 பக்கங்களில் விரிவாய் கூறியுளர். ஒரு ஆசிரியர் பாடசாலை வேலையை துவக்குவதும், முடிப்பதும் குறிப்பிட்ட காலத்திலேயே செய்து விடுவதும் தவிர Attendance Register (ஆஜர்பட்டி) யை தினந்தோறும் சரிபார்க்க வேண்டும். இவற்றை செய்யப் பிசகினுல் பிள்ளைகள் கிரமம்தப்பி நடக்க இடமுண்டாகும். 'ஒழுங்கு' என்ற சிறந்த குணத்திற்குப் பேர்போன அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் சிலகாலம் உபாத்தியாயர் தொழிலை மேற்கொண்டு பிறகு அந்நாடுகளுக்கே பிரசிடெண்டாக (President) நியமனம் பெற்ற Garfield என்பவரைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இவர் ஆசிரியராய் இருக்கும் நாளிற் பள்ளிக்கு வரும் நேரத்தைப் பற்றி பிள்ளைகள் வெகு விந்தையாய் பேசிக் கொள்வார்கள். இவர் பள்ளியில் நுழைந்ததும் மணியும் அடித்து ஓயுமாம். இவ்வாறுவர ஒரு திவசமாவது தவறுவதில்லை. தேவாலயம், கல்விச் சங்கம், இன்னும் வேறெந்த இடத்திற்காவது போக நேரிட்டால் பிள்ளைகளை சரியான காலத்தில் போய் ஆஜராகும்படி செய்வார். இதை அவர் முதற்கடமையாக போதித்து வந்தார். இவற்றுல் உண்டாகும் நன்மையும் எடுத்து விளக்கினுர். தான் அனுஷ்டிக்காத எதை

* An essay read by A. K. Sivarama Aiyar before the Teachers' Association Karur. கரூர் உபாத்தியாயர் சங்கத்தின்முன் படித்த ஒரு வியாசம்.

யும் பிள்ளைகளுக்குச் சொல்வதில்லை. "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்ற திருவள்ளுவனார் திருமொழி இவரிடம் மேன்மையாக விளங்கிற்று. ஒவ்வொரு நாளும் தான் கற்பித்ததை தான் முதலில் அனுஷ்டித்துக் காட்டி தம்மாணாக்கரை அபிவிருத்தியடையச் செய்தார்.

"வேலையில் அபிமானம்":—பிள்ளைகளை என்றும் யோக்கியமும், சரியான காரியங்களையே செய்யச் சொல்லித் தூண்டவேண்டும். இவ்வாறு செய்யின் அவர்களே அவற்றின் நன்மையை உணர்ந்து கொள்வார்கள். ஒரு வேலையைச் செய்வதில் பல இடுக்கண்கள் நேரிடினும் அவற்றை ஓராமலும் தன் சொந்த சுகத்தையே பேணி இராமலும் அதைச் செய்துமுடிக்க ஆவலாய் இருக்கவேண்டும். இக்கருத்துக்கிசைய,

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி அன்மையும்பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்" என்று குமர குருபரஸ்வாமிகள் சொல்லியுளார். வேலையைப் பிரதானமாகக் கொண்டு அதை முடித்து பேர் பெற்றவர்களின் சரித்திரங்கள் இருந்தால் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டியும், அவ்வாறு வேலையை சிரத்தையாய் செய்யாதவர்கள் பட்ட அவஸ்தையையும், சேட்டையும் எடுத்துக் கூறவேண்டும்.

இது நிற்க. இனி "இனாம் கொடுத்தல்" "தண்டித்தல்" இவற்றைப்பற்றி சிறிது கவனிப்போம்:

Fitch என்பவர் சொல்லுகிறதாவது "வேலையில் பிரியமுள்ளவனாக ஒரு மாணாக்கனைச் செய்ய வேண்டின் பல வழிகள் உள: (1) புஸ்தகம், அல்லது பணம் கொடுப்பதாகச் சொல்லி படிக்கும்படி செய்தல், (2) மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் உயர்வாக மதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் உதிக்கும்படி செய்தல், (3) பெற்றோரும், ஆசிரியரும் புகழ்ந்து பேசும் வண்ணம் நடந்து கொள்ளும்படி செய்தல், (4) அபிவிர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உதிக்கும்படி செய்தல்." இனாம் கொடுக்கும் ஆங்கில வழக்கம் கெட்டதென ஜர்மனி தேசத் துவித்வான் Dr. Wiese என்பவர் கூறியுளார். மேலும் அவர் இந்தியாவில் இவ்வழக்கம் ஏற்படாமலிருக்க வேண்டுமெனவும் சொல்லியுளார். இனாம் கொடுப்பதனால் உண்டாகும் தீமைகளாவன: 1. 'பரிசு கொடுத்தல்' பிள்ளைகளின் மனசாக்ஷியையும், கல்வியின் கண் இயற்கையாய் உண்டாக வேண்டிய அபிமானத்தையும் இழக்கும்படி செய்கிறது. 2. இது அவர்களுள் ஒரு போட்டியுண்டாகும்படி செய்து மனதைக் கெடுக்கின்றது. 3. பரிசு கிடைக்குமென்ற உறுதியுள்ளவர்கள் தான் மெய்வருந்தி பயிலுவர். ஏனையோர் கவலையற்று தேம்பித்திரிவர். 4. சிற்சிலவேளைகளில் இன்னானுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்றறிவது வருத்தமாயுமிருக்கும். 5. காரியசித்தி பெற்றவனுக்குத்தான் வெகுமதி ஏற்படுகின்றது. ஆனால் அது சுறுசுறுப் புள்ளவர்களுக்கும் மதிப்புள்ளவர்களுக்கும் கிடைக்கிறதில்லை. 6. வெகுமதிக்காக படிக்க எண்ணம் கொண்டவர்கள் அது இல்லையெனின் கல்விகற்ப தரிதாகும். பரிசளித்தலைப் பற்றி மேற்சொன்ன ஆக்ஷேபங்கள் இருந்தபோதிலும் அதனால் நன்மையும் சிற்றளவு உளதெனப் புலப்படுகின்றது.

"ஒரு பாடசாலை தக்க நிலைமையிலிருந்தால் ஒரு ஆசிரியன் முகமலர்ச்சியோடு சொல்லும் ஒரு வார்த்தையே பிள்ளைகளுக்கு ஓர் பெரிய வெகுமதியாகும். பிள்ளைகள் மெய்வருந்தி சிரத்தையுடன் உழைத்து வருகிறார்களா அல்லது சோம்பேறிகளாய் இருக்கிறார்களாவெனத்தெரிந்து கொள்ள இந்தவெகுமதியால் முடியாது. படிப்பில் சிரத்தை வரும்படி செய்ய இவ்வழி சிறந்ததல்லவேனும் வெகுமதி கொடுப்பது ஒரு விஷயத்தில் சிறந்ததென சொல்லவும் வேண்டும். ஒருவன் தன் பாடசாலையை விட்டு வெகுகாலமாயினும் தான் பால்யத்தில் பெற்ற பரிசுகளைப் பார்க்க நேரிட்டால் தான் ஒரு காலத்தில் அடைந்த கீர்த்தி ஞாபகத்தில்வரவே தான் துவக்கின எந்த வேலையையும் விசேஷ சிரத்தையுடன் செய்ய வேண்டுமென்ற நோக்கம் பிறக்க முக்கிய காரணமாயிருக்கிறது." என்று Mr. Fowler என்பவர் கூறியுளார்.

"Certificates" (யோக்யதாபத்திரங்கள்):—இவற்றின் உபயோகத்தைப் பற்றி Mr. Currie என்பவர் பின்வருமாறு கூறுகின்றனர். "இப்பத்திரங்கள் கொடுக்கும் ஏற்பாடு எவற்றினும் சிறந்தது. மற்றெவ்வித சாமர்த்தியம் இல்லையெனினும் சுறுசுறுப்பு, நன்



னடக்கை ஒரு மாணாக்கனிடத்தில் இருந்தால் இப்பத்திரம் பெற உரித்தானவனாகின்றான். இதை உடைத்தானவனுக்கன்றி ஏனையோருக்கும் உபயோகப்படுகின்றது. எங்ஙனமெனின் இதை பிறர் கண்ணுற்று ஏதேனும் ஒரு வேலையைக் கொடுக்க தகுந்தவனென்றும் அவனுடைய நடை உடைபாவனைகள், குணங்கள், இத்தன்மையதென தெரிந்து கொள்ளவும் காரணமாயிருக்கிறது. இதை யோக்யமான பிள்ளைகள் எல்லாரும் பெறலாம். தங்களுக்கு யாதொரு வெகுமதியும் கிடைக்கவில்லையே என்ற எண்ணம் கொண்டிருப்பவர்களுக்கும் பிரயோசனமாகின்றது. விசேஷகுணம் சில மாணாக்கரிடத்து இருப்பின் அதை எடுத்துரைக்கவும் உதவுகின்றது."

"தண்டனை":—ஒருஆசிரியன் தனக்கடங்கிய பையனைசீர்திருத்தவாவது, அல்லதுமற்றப்பிள்ளைகளும் குற்றஞ் செய்யாமலிருக்கும் படியாவது அவன் மனதையாவது அல்லது தேகத்தையாவது வருந்தும்படி செய்வதுதான் "தண்டனை" என்று சொல்லத்தக்கது. 'தண்டனையானது செய்த குற்றத்தைக் கண்டித்து ஏனையோர் குற்றஞ் செய்யாமலிருக்கும்படி செய்யத்தக்கதாக விருக்கவேண்டும். 'என்று Mr. Fowler கூறியுளார். முக்கியமாய் வழங்கக்கூடிய தண்டனைகளாவன: (1) உள்ள இடத்தைவிட்டு கீழே போகும்படி செய்தல். (2) வகுப்பைவிட்டு வெளியே நிற்கச் செய்தல், (3) பாடத்தையாவது இன்னும் வேறேதாவதை வரைந்து வரும்படி செய்தல். (4) விளையாட்டுக்குப் போகாமலிருக்கும்படி செய்தல். (5) ஏகாந்தமாயாவது, வகுப்பின் முன்பாவது, பாடசாலைப் பிள்ளைகளின் முன்னிலையிலாவது அதட்டி புத்தி கூறல். (6) பிரம்பாலடித்தல், (7) பள்ளியினின்றும் நீக்கி விடுதல். இதுநிற்க இனி விதிக்கக்கூடாத தண்டனைகளின் சிலவற்றைப்பற்றிக் கூறுவாம்:

1. பிள்ளைகள் அவமான மெனக்கருதும் தண்டனைகளாகிய காதைத்திருகுவதும், நகங்களால்கிள்ளுவதும் கூடாது. கடுமையான தண்டனை விதிக்க வேண்டு மென்ற எண்ணங்கொண்டு வெயிலில் நிறுத்துவதும், கால்கடுப்ப குனியவைப்பதும், இன்னும் இவைபோன்ற கிராமபாடசாலைகளில் உபயோகித்து வரும் தண்டனைகளை விதிக்கக்கூடாது. "பரிகாசம்' செய்யக்கூடாது. இதைப்பற்றி Professor Page கூறுகிறதாவது." 'பரிகாசம்' செய்வது ஆசிரியன் நினைப்பதைக்காட்டிலும் பதின் மடங்கு வருத்தத்தை உண்டாக்குகின்றது. இதை சோம்பேறிகளும், கெட்டபிள்ளைகளும் மதிக்கிறதில்லை. ஆனால் யோக்யர்களையும், அடக்க முடையோர்களையும் வருத்துதல் பற்றி இதை ஒருபோதும் செய்யாமலிருப்பாராக." மேற்குறித்த தண்டனைகளைப்பற்றி சிறிது விளக்குவோம்: பாடம் ஒப்புவிக்க வில்லையென்று மறுநாள் அதை எழுதிவரும்படி சொல்லுதலும் (impositions) வீட்டிற்கனுப்பாமல் நிறுத்தி வைப்பதுவும் நன்மை பயப்பதில்லை. அதிக நுண்ணறிவோடும், ஜாக்கிரதையோடும் இவற்றை விதித்தாலன்றி அதிக கேட்டை யுண்டாக்கும். "அற்பகுற்றத்திற்குக்கூட ஆசிரியர் கோபமாயிருக்கும்போது இவ்வகை தண்டனையை விதித்து வருகிறார். ஒரு நல்ல ஆசிரியர் இவற்றை ஒருபோதும் செய்யத்துணியார். அவர் அதிக கண்டிப்புள்ளவரென தெரிந்தால் பாடங்களைப்படித்தே செல்ல வேண்டும். இல்லையெனின் தண்டிப்பார் என்று பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். அப்போது தண்டனை செய்ய இடமே இராது. எவ்வளவுக் கெவ்வளவு தண்டனை செய்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவுபோதனா சக்திகுறைந்ததெனக் கொள்ளத்தக்கது" என்று Canon Farar கூறியுளார். மேலும் பாடம் வீட்டில் வரையச் செய்வது பையன் மனதிற்கு உற்சாகமின்மையும், களைப்பையும் தருகின்றது. காலத்தை வீணாக்குகிறதும் தவிற கையெழுத்தையும் கெடுக்கின்றது. ஆனால் இதனால் வாத்தியாருக்கு அந்தப் பையனால் வருத்தமிராது என்ற ஒரு விஷயம் தான் ஏற்படும். வீட்டிற்கனுப்பாமல் பிள்ளைகளை நிறுத்திவைத்தால் அவர்களுடைய தேகசௌக்கியம் கெட்டு ஆசிரியரும் பள்ளியில் இருக்க வேண்டி நேரிடும்.

"பிரம்பாலடித்தல்":—விசேஷ குற்றஞ் செய்தவர்களையும், பொய் சொன்னவர்களையும், கெட்ட வார்த்தை பேசினவர்களையும், கட்டுக்கடங்காதவர்களையும் உள்ளங்கையில் பிரம்பால் சில அடிகள் அடிக்கலாமென்று இவ்விராஜதானியின் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தலைமை உபாத்தியாயர்தான் பிரம்பை உபயோகிக்கலாமென்றும் அவரும் தன்னால் கூடியவரையில் அரி

தாய் இந்த சிட்சை செய்யவேண்டுமென்றும் இருந்தது. இதைக்குறித்து Thring என்பவர் கூறுகிறார். "பாடசாலை ஒழுங்கு மீறி நடந்தவர்களையும், நேரம்தப்பி தினமும் வருபவர்களையும், சொற்படி கேட்காதவர்களையும் இன்னும் இவை போன்றகுற்றஞ்செய்தவர்களையும் பிரம்பாலடித்தல்வேண்டும்.*

முற்காலத்தில் இங்கிலாந்தில் பள்ளிக்கூடங்களிற் பிரம்பாலடிப்பது சாதாரணமாயிருந்தது. ஒவ்வொரு அற்பகுற்றத்திற்கும் பிரம்பை உபயோகித்தார்கள். தற்காலத்திலேயோ அது நின்று போய்விட்டது. 'நான் சிறுவனாய் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது சுறு சுறுப்புள்ளவனாயும், அவ்வளவு மந்தபுத்தி இல்லாதவனாயுமிருந்தேன். என்றாலும் வாய்ப்பாடு ஒப்புவிக்கும்போதும், லத்தீன் இலக்கண பாடத்தில் ஏதேனும் ஒருவரிதவறிப்போனாலும், ஒருவார்த்தைக்கு சொல் இலக்கணம் சொல்லத் தப்பிபோனாலும் என் வாத்தியார் என்னை கைநீட்டச்சொல்லி என் பூபோன்ற உள்ளங்கையிற் பொறுக்க முடியாதபடி பிரம்பாலடிப்பது வழக்கம். என் தோழர்களின் முதுகு தடித்துப்போய் இரத்தம் பீறிடுவதையும் கண்ணுற்றிருக்கிறேன். அங்ஙனம் இக்காலத்தில் நிகழ் உழி அவர் தண்டனைக்கு உள்ளாவார் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய பள்ளியின் கொடுங் கோன்மை முற்றிலும் நின்று விட்டது." என்று Canon Farar சொல்லியுளர். Lawrence பிரபுவைப் பற்றி எழுதிய Bosworth Smith என்பவர் அந்தப் பிரபுவைப்பார்த்து அவர் காலத்து படிப்பு எவ்வாறென சிலர் கேட்டதற்கு தான் அடிபடாத நாள் இல்லை என்றும் தற்செயலாய் எதாவதொரு நாளில் அடியில்லாமற்போனால் மறுநாள் இரட்டிப்பாய் அடிபட்டிருப்பதாகவும் கூறியுள்ளார் என்பதை வெளியிட்டு இருக்கின்றனர்.

"பள்ளியைவிட்டு அகற்றல்";—இதைச்செய்ய ஆசிரியர் ஒருபோதும் துணியக்கூடாது. தன்னாலியன்றளவு நற்போதனைகளால் மாணாக்கனை சீர்திருத்தமுயலவேண்டும். எவ்வகையிலும் தன்னால் முடியவில்லை என்று கண்டபிறகு தான் இவ்வாறு செய்யவேண்டும்.

"பாடசாலையின் விதியாலும், வாத்தியாயராலும் ஒரு பையனை சீர் திருத்த முடியவில்லை என்று கண்டுகொண்டாலன்றி அவனை நீக்கக்கூடாது. ஏனெனில் பயிற்சிசெய்யும் வண்ணம் பாடசாலைகள் ஏற்பட்டது. நல்லவர்களும், கெட்டவர்களும் வருவார்கள். ஒவ்வொருவரையும் நல்லவழியில் திருப்பி அதனால் உண்டாகும் மேன்மையை போதித்து கெட்ட வழிகளை அனுசரிப்பதால் வரும்கேட்டையும் எடுத்துக்காட்டவேண்டும். இவ்வாறின்றி பையனை நீக்கிவிட்டால் ஆசிரியரின்பால் உள்ள பயிற்சி சக்தியை கெடுத்து விடுகிறதுமன்றி வழிபிசகிப்போனால் பள்ளிக்கூடத்தை விட்டுப்போகிறதைத்தவிற வேறுகதி இல்லை என்றும் நினைக்கும்படி செய்யும். சுலுவாய் இருக்கிறதெனநினைத்து இங்ஙனஞ் செய்தல் எலாது" என்று Mr. Thring என்பவர் சொல்லியுளர்.

"உபாத்தியாயர் கண்டிப்பாய் இருந்தால் அதுவே போதும். மற்றெவ்வித தண்டனைகளும் அவசியமில்லை. ஒழுங்கு (Discipline) கெடாமலிருந்தால் இதுவே முக்கிய சாதனமாகக் கொள்ளலாம். சிட்சை குன்றிய கலாசாலையின் சீர் சிறந்தது." என்று 'Fitch' என்பவர் கூறுகிறார்.

இதுநிற்க, இனிப் பாடசாலை ஒழுங்கிற்கு இன்றியமையா "விளையாட்டு" என்பதைப்பற்றி சற்றுகவனிப்போம். "இந்து பிள்ளைகள் ஒருபோதும் விளையாடுவதில்லை" என்று சிலவருடங்களுக்கு முன்பு மதிராஸ் இராஜதானி கல்விஇலாகா தலைவர் Director of Public Instruction, Madras Presidency தமது வருஷாந்தர ரிபோர்ட்டில் சொல்லியுளர். அக்காலத்தில் இவர் புகன்றது மெய்ம்மையே. ஏனெனில் தேக அப்பியாசத்தைப்பற்றி கவனிக்கிறதில்லை. பள்ளிக்குப் போகையிலும், வருகையிலும் ஏதோ உயிருள்ள ஜந்துக்கள் உலாவுவதாக இருந்ததே ஒழிய உற்சாகமும், தேக சவுக்கியமும் உள்ளவர்களாக இருந்ததாகக்காணோம். ஆனால் இப்பொழுதோ அவ்வாறின்றி சிறிது தேகாப்பியாசம் பயிலும் வழிகள் ஏற்படவே அவற்றில் ஆவலாய் இருக்கிறார்கள். சுத்தகாற்றில்லாமலும், தேகாப்பியசமில்லாமலும் சரீரம் ஆரோக்கியமாயிராது. தேகாப்பியாசம் இப்போது பாடத்தின் ஒரு அம்சமாய் சேர்த்திருக்கிறார்கள். பிள்ளைகளை விளையாடச்செய்து அவர்களை உற்சாகப்

* Vide Tower P. 25 Fitch P. 120. Bain on Education as science P. 114—117.



படுத்திக்கொண்டு இருக்கவேண்டியது அவசியமென ஏற்பட்டுபோயிற்று. வயதுக்கும் திறத்திற்கும் தக்கவாறு பயிலச் சொல்லவேண்டும். சிறிது அசட்டையாயிருந்தால் பிள்ளைகள் கைகால் முறித்துக்கொள்ளும்படி நேரிடும். பள்ளிக்கூடத்து அப்பியாசத்தைத்தவிற வெளியே மைதானங்களிற் பலவித விளையாட்டுகளாகிய (Foot-Ball, Badminton, Lawn Tennis, Cricket, &c.) முதலியவைகளை ஆடச்சொல்லி தானும் அவர்களோடு கலந்திருக்கவும் வேண்டும். விளையாடும் மைதானத்தில் பிள்ளைகளுக்கு பொறுமை, அடக்கம், பரஸ்பரநேசம், தயாளம், உண்மை, முதலிய சிறந்த குணங்களைப் போதிக்க பல சமயங்கள் நேரும். பிள்ளைகளின் குணாகுணங்களையறிய 'விளையாடுமிடம்' தான் உரித்தானதென்று Mr. Stow என்பவர் உணர்ந்து அதை ஓர் "கட்டடமில்லா கலாசாலை" என்று வற்புறுத்திக் கூறியுளர். விளையாட்டால் வீண்காலம் போயிற்றென்று ஒரு ஆசரியர் நினைக்கக்கூடாது. ஏனெனில் இதனால் அவர்கள் பலசாலிகளாகி, தேகசவுக்கிய மடைந்து பள்ளிக்குச் சரியாய்வரவும் சொற்படி கேட்கவும் பாடத்தில் சிரத்தை உண்டாகவும் ஏற்படுகின்றது. பாடசாலையின் சீரும் பொலிவுற்றுவிளங்குமென்க.

ஏ. கே. சிவராமஅய்யர்.

## * "Human Personality & its Survival after Bodily Death."

## "தேகவியோகத்துக்குப் பின்னும் மனுஷஜீவன் நசியாமல் ஜீவித்திருக்கிறது" என்னும் உண்மை.

இதுவிஷயமாக மிஸ்டர் எப். டப்ளியூ. எச். மையர்ஸ் என்பவர் 700–பக்கங்கள்கொண்ட இரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இதை யெழுதினவர் இங்கிலாந்தில் பேர்போன கிரந்தகர்த்தா. அனேக உயர்ந்த கிரந்தங்கள்எழுதி வித்யா விற்பன்ன சிரோமணியெனப் பெயர்வாங்கியிருக்கிறார். இவருக்கு புத்திவன்மை ஜாஸ்தி. காலநோக்கத்துக்குத் தக்கபடி தத்துவ ஆராய்ச்சிசெய்யும் சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் எழுதிய இக்கிரந்தம் இவருடைய மற்ற கிரந்தங்களெல்லாவற்றிலும் மேலானது. இதில் இவர் விசாரிக்கப் புகுந்தவிஷயமென்னவெனில் மனிதனுடையதேகம் விழுந்தவுடனே அவன் நசித்துப் போகிறானா அல்லது தேகவியோகத்துக்குப் பின்னும் மனுஷஜீவன் நசியாமலிருக்கிறதா? என்பதே. இந்த விஷயத்தை ஆராயப் புகுந்ததில் இவர் இதைப்பற்றி முன்னோர் அபிப்பிராயத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை. மத கிரந்தங்களிலுள்ள உண்மைகளையாவது மதக்குரவர்கள் அபிப்பிராயத்தையாவது இவர் லக்ஷியம் செய்யவேயில்லை. ஆனால் இவர் எப்படி இதை ஆராயப் புகுந்தார் எனிலோ? இக்காலத்தில் பூத, பௌதிக, தத்துவ, வானசாஸ்திரங்கள் எப்படி மனிதன் புத்திக்குப் புலப்பட்ட விஷயங்களைக்கொண்டே ஆராய்ந்து அவ்விஷயங்களிற் பொதிந்துகிடக்கும் உண்மையைக் கண்டுபிடித்து, விஷயஞானத்தைக் கொண்டு தத்துவஞானம் இன்னதென்று அறிந்து கொண்டார்களோ அப்படியே இதையாராய்வதிலும் மதக்கொள்கைகளைவிட்டு, உண்மையாக வெளிவந்துள்ள விஷயங்களையே ஆதாரமாகக்கொண்டு அவ்விஷயங்களிற் பொதிந்துகிடக்கும் தத்துவத்தை யாராய்ந்து தீர்மானித்திருக்கிறார்.

இந்நூலாரம்பத்தில் இந்த விஷயத்தின் உண்மையை, புலனறிவைக்கொண்டும், பரீக்ஷைகள்செய்தும் ஆராய்ந்து அறியச்செய்த பிரயத்தனங்களின் வரலாறுகூறி, மனுஷஜீவன் ஏகனேயாயினும் அதிலடங்கிய அகங்காரதத்துவம் ஜீவ அஹங்காரம், பரம அஹங்காரம் (Lower and Higher Self) என இருவகைப்படுமென்று வாதித்து அதனுண்மையை ஸ்தாபிக்கிறார். பிறகு தேகமழிந்த பின்னும் மனுஷன் அழியாமைக்கு சாக்கிர ஸ்வப்னாவஸ்தைகளில் உயிரோடிருப்பவர்க்குத் தோற்றியிருக்கிற கேஸ்களையெடுத்து ஆராய்ந்து தேகவியோகமான பின்னும் ஜீவன் உயிரோடிருக்கிற உண்மையை ஸ்தாபிக்கிறார். இத்தலைப்பில் இவர் ஆராயும் ஜீவத்தோற்றங்கள் "ஆகாயவாசிகள், பூதகணங்கள், தேவகணங்கள், சித்தகணங்கள்" என்று ஹிந்துக்கள் வகுத்துள்ள அசரீராத்மாக்களிலடங்கும். தேகத்தையொட்டி, தேக

*By Frederic W. H. Myers, 2. Vols. 42 s, Longmans Green & Co.

மே பிரதானம், மனம் தேகத்திலிருந்துண்டானது என்று தர்க்கித்து (Anthropologists) தேகமே யான்மாவென்றுவாதிக்கும் நியாயவாதிகள், மனிதர்க்குள்ள அபூர்வமான அபாரமனோசக்தி (Genius) அவன் மூளையிலுண்டான கோளாறு காரணமாக உண்டானதென்று சொல்வதையாராய்ந்து அது பிசகென்றும், மனிதனிடத்து அபூர்வமாகத்தோற்றும் அபாரமனோசக்திஎல்லாரிடத்துமுள்ளதேயென்றும், அதைமற்றவர் பயிற்சி செய்யாமல் பாழாகப் போட்டிருக்க, அபூர்வமாகச் சிலரிடத்து அது பயிற்சி பெற்று விளங்குவதால் அவர்களிடத்து அச்சக்தி பிரசன்னமாகவும், மற்றவரிடத்து பொதிந்தும் விளங்குகிறதென்று ஸ்தாபித்து, இந்த அபார மனோசக்தியானது மற்றவர்களைவிட தூரதிர்ஷ்டியோடு எட்டிப்பார்க்கும் சக்தியே யன்றிவேறல்ல. நம்மவர்கள் இதை ஞானதிர்ஷ்டியென்பார்கள். தூக்கத்தில், அன்பிலீடுபட்டவிடத்தில், வசீகர சக்தியில், நேரும் விஷயங்களைக்கொண்டு, மனிதனிடம் ஜீவ அஹங்காரமன்றி பரம அஹங்காரமும் ஒன்றிருக்கிறது என்று நிரூபித்துக் காட்டுகிறார். கடைசியில், உருவெளித்தோற்றம், ஞான தரிசனம், பாவஸம்யோகம் (Telepathy) என்னும் சம்பவங்களின் உண்மையையும் உள்விதியையும் இந்த பரமஅஹங்கார விசேஷத்தைக்கொண்டு விளக்கிக்காட்டுகிறார்.

இரண்டாவது புத்தகத்தில்மாண்டவர்கள் "ஆவேசரூபமாக" த்தோற்றும் தோற்றங்கள் முதலான சம்பவங்களைக்கொண்டு உண்மை ஆராய்ந்து, தேகம் விட்டு இறந்த பின்னும் மனுஷஜீவன் நசியாமலிருக்கிறது என்னும் உண்மைக்கு ஆதார நியாயங்கள் கூறி ஸ்தாபிக்கிறார். இதிலே அசரீரிவாக்கு, ஆகாசவாக்கு இவைகளின் உண்மையும் ஆராய்ந்து கூறப்படுகிறது. கடைசியில், **சமாதி**, **பரவசம்**, வசியம் இவைகளுடைய உண்மையை விஷயானுபவத்திலிருந்து எடுத்துரைத்துக் கடைசியில் அவருடைய ஆதாரநியாயங்களையெல்லாமெடுத்துக்கூறிஆராய்ச்சி முடிவில் அறியத்தக்க தென்னவெனில் மனிதனை இப்படி ஊகித்து ஆராய்ந்து பார்த்தால் அவன் **தேகம் தேகி**யென்றிவ்வகையாகச் சேர்ந்துள்ளனென்றும், தேகம் விழுந்தபின்னும் அவன் தேகியாக, ஆத்மாவாக விளங்குகிறானென்றும் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமாகிறதென்று முடிக்கிறார். இவருடைய ஆராய்ச்சியினால் இன்னும் ஒரு நூற்றாண்டில், புத்தியுள்ள மனிதர் எல்லாரும் **ஆத்மா**வில் நம்பிக்கைவைக்கவேண்டியவர்களாவரென்றும், கிறிஸ்து மரித்தெழுந்தார் என்றால் இப்போது நம்பாமல் தலையையசைப்பது முற்றும்போய், அது உண்மையேயென்று எல்லாரும் நம்பவேண்டிவருமென்றும் உறுதி கூறி இந்த உண்மையின்மேல் இனி ஒரு மதமேற்படுமென்று சொல்கிறார். அனாதிகாலமாயுள்ள உண்மையை இப்படி ஒவ்வொருவரும் ஒருவழியாகச் சென்று நான் கண்டதுண்மை நீகண்டதுண்மையென்று யானை கண்ட குருடர்போல் பிரமாதமாக வாதப் பிரதிவாதம்செய்தெழுதிவருகிறார்கள். கடைசியில் உண்மையை உள்ளபடி ஸ்வானுபவத்திற் கண்டவர் இவர்கள் சண்டப் பிரசண்டமாய்ச் சொல்வதெல்லாம் ஒரு உண்மையையேயென்று உள்ளங்கை நெல்லிக்கனி போலுணர்வார். ஏசுகிறிஸ்து "It is the letter that killeth, but the Spirit saves" என்றது உண்மை. பதார்த்தத்தை நாடியலைந்தால் பேதபுத்தியும் வீண்வாதமும் தான் லாபம். பதார்த்தத்தைத்தள்ளி உள்ளதையுள்ளபடி யாராய்ந்தறிந்தால், ஆத்ம தரிசனமாய் ஆத்மஞானம் பெற்று அகண்டானந்தப் பெருங்கடலிலமிழ்ந்து விளையாடலாம். இவ்வுண்மையையுணர்ந்தாரேஉயர்ந்தார். மற்றவர், பாவனாரூபமான பிறவிக் கடலினின்றும் கரையேறிப் பரமானந்த மனுபவிப்பதில்லை. ஓம் தத் ஸத்.

C. V. S.

---

## * "NOW," A Journal of Affirmation.

## சங்கல்பசாதனா முறையுரைக்கும் "நௌ" என்னும் அமெரிக்கா பத்திரிகை.

"**நௌ**" என்றால் "இப்போ," "தற்காலம்" என்று சாதாரண அருத்தம். **நித்யம்** என்பது பரமார்த்தம்.

* Devoted to the education of man in the use of his Spiritual faculties, the unfoldment of Psychic Power and the development of Self-control. Monthly1 $/. Henry-Harrison Brown, Editor. "Now Folk," 1437, Market street, San Francisco. cal.



"போனகாலம், வருங்காலம் இரண்டும் ஒன்றே: அவ்விரண்டையும் தற்காலத்தில் காணலாம்" என்று ஒரு அமெரிக்கா கவிசொல்லியதின் உண்மையை அனுசரித்து திரிகாலமும் தற்காலத்திலடங்கும் ஏககாலமாம் என்பதை சித்தாந்தமாகக்கொண்டு இப்பத்திரிகை யேற்பட்டுள்ளதால் இதற்கு "Now" என்றுபேர் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது இன்றைக்கு 100 வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் ஜனித்த **எமர்ஸன்** என்னும் மஹானுடைய சித்தாந்தத்தை யனுசரித்து அவர் வழிப்பட்ட அவருடைய சிஷ்யவர்க்கங்களில் ஒருவரால் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பத்திரிகையின் நோக்கம் **எமர்ஸன்** போதித்த உண்மையை அனுபவத்தில் எல்லாரும் அனுஷ்டித்து அதனால் வரும் ஆனந்தத்தையடையச் செய்யவேண்டுமென்பதே. **எமர்ஸன்** என்பவர் சுத்தாத்வைத சித்தாந்த மஹானுபவர். இவர் பகவத் கீதையின் உண்மையைக் கிரகித்து அத்வைதபாவத்தின் மேன்மையையுணர்ந்து ஆத்மஞானமே எல்லாவற்றிலும் மேலானஞானமென்றுகண்டு அந்தப்படிதான் வசித்ததன்றி உலகவிஷயங்களையும் ஆத்மார்த்தமாகவுணர்ந்துநடத்தலே உண்மையான உயிர்வாழ்க்கையாமென்றும் மற்றதெல்லாம் பொய் வாழ்க்கையாமென்றும் போதித்துவந்தார். இவர் எந்த ஜாதி மதக் கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டவராகவின்றி எல்லாவற்றிலுமுள்ள உண்மையை உளக்கண் கொண்டாராய்ந்து விளக்கிவந்தார். இவர் மனுஷன் கடைத்தேறுவதற்கு சத்தியவிரதமும் அன்பு நோன்புமே இன்றியமையாச் சாதனங்களாமென்று கண்டு அப்படியே அவைஇரண்டையும் உபாசித்து அதிமேலான ஆத்மஞானம் பெற்று விளங்கினார். இவருடைய மதம் சத்தியமதம். "சத்தியமே விதி, சத்தியமே கதி, சத்தியமே ஜயம்" என்ற உண்மையை மேற்கோளாகக்கொண்டுநடந்துவந்தவர். அனுபவரீதியாய் அவ்வுண்மையை உலகத்தில் எல்லாவிஷயங்களுக்கும் பொருந்த அமைத்துப் போதித்துவந்தவர். மனிதன் தன்னில் ஜகத்தையும் ஜகத்தில் தன்னையும் காணவேண்டுமென்றும் காணுமுபாயம் இன்னதென்றும் காட்டியவர் இவர். அகத்தூய்மையே **ஆஸ்திகமத**மென்னுங் கொள்கையை உண்மையாகக்கொண்டு அனுசரித்தவர். மேற்றிசையாரில் சத்தியத்தைக்கண்டு உபதேசித்தவர் இவரைப்போல் உண்மையானவர் வேறு எவருமில்லை. வேதாந்த உண்மைகளையெல்லாம் ஸ்வானுபவத்தில் கண்டு உலக வாழ்க்கையில் அவ்வுண்மையை யனுசரித்து வாழும் வகையுணர்த்திய உத்தமர். இவர் 1803-ம் ௵ பிறந்து 70 வருஷங்களுக்கு மேல் ஜீவித்திருந்தார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இவருடைய தத்துவோபதேசங்களை மதிக்காதவர் இல்லை. எந்த ஜாதி மதஸ்தராயினும் இவர் போதித்த உண்மையை உண்மையென்றே ஏற்றுக்கொள்வர். அவ்வளவு நளினமாகவும் சாமர்த்தியமாகவும் பிறர் மனதுக்கும் கொள்கைக்கும் விரோதமின்றியும் உண்மையை யுள்ளபடி யுரைப்பார். இவர் சாதாரணமாக வழங்கும் கிறிஸ்துமதத்தின் அனுஷ்டானங்களில் சிலவற்றை உண்மைக் கொவ்வாதனவென்று நிராகரிக்க, இவரை அம்மதக்குரவர் வேலையினின்றும் நீக்கினர். இவர்சத்தியத்தைக் கைப்பிடித்து உறுதியா யுழைத்துவந்ததால் கடைசியில் எல்லாரும் இவரை மேலான ஞானியாக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்கள். சும்மா வளர்த்திஎன்? இவர் ஒரு பெரிய வேதாந்த ஞானி. மகானுபவி. உளக்கண் திறக்கப்பெற்றவர். சத்தியத்தை யெம்மதத்தில் கண்டாலும்சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாடும் தர்ம சிந்தையுள்ளவர். பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்துள்ள உண்மைகளை யுள்ளபடி யுணர்ந்து மகிழ்ந்தவர். இவர் எழுதியுள்ள பிரபந்தங்களில், பகவத்கீதை, ஸ்ரீ கிருஷ்ணன், விஷ்ணுபுராணம், உபநிஷத் இவைகளின் உண்மையை உணர்ந்து இவைகளைத் தான் ஸ்தாபிக்க முயலும் உண்மைகளுக்கு மேலான அத்தாக்ஷிகளாக எடுத்துச் சொல்லியிருப்பதைப் பரக்கக் காணலாம். இப்படிப்பட்ட மஹான் பிறந்து இன்றைக்குச் சரியாக 100 வருஷங்களாகின்றன. இவருடைய சிஷயர்களில் ஒருவர் தான் இப்பத்திரிகையை நடத்தும் ஹென்றி ஹாரிஸன் ப்ரௌன் என்பவர். இவருடைய கொள்கை யென்னவெனில்: இதுவரையில் துவைத பாவத்தை யனுசரித்து உலகம் உண்மையுணராது தடுமாறலாயிற்று. அத்வைத பாவத்

தையனுசரித்துப் பார்த்தால் இதுவரையில் மனுஷன் புத்திக்கெட்டாது மயக்கம் விளைத்த விஷயங்களெல்லாம் உண்மையாக உள்ளபடி விளங்கக் காணலாமென்பதே. இவருடைய பத்திரிகையின் முக்கிய பாவம் என்னவெனில்: **நான்** என்பது இந்ததேகமல்ல மனதல்ல, புத்தியல்ல: ஆனால் வளர்பிறைச் சந்திரனைப்போல் விர்த்தியாய் விளங்கும் **ஆத்மா**. இந்த உண்மையை யுணர்வதெப்படியெனில்: அதற்கு ஒரு மாறாவிதியுண்டு. பூமியின் ஆகர்ஷண சக்தியைப் போல் அது ஒரு மாறாதவிதி. மனிதன் அதை அறிந்துணர்ந்தாலும் சரி உணராவிட்டாலும் சரி; அது மாறுவதில்லை. ஆகாயத்திலெறிந்த கல் எப்படி பூமியில் வந்து விழுகிறதன்றி வேறெங்கும் போவதற்கு சாத்தியமில்லையோ அப்படி பாவதத்துவத்தில் அதாவது எண்ணங்களைப்பற்றிய உண்மையில் மனிதன் தன்னை என்னமாக நினைக்கிறானோ அப்படியே ஆகிறான். இந்த உண்மையை சாஸ்திராராய்ச்சி முறையிலுழைப்போர் ஐயந்திரிபற ஆராய்ந்து நிரூபித்திருக்கிறார்கள். மனிதன் தன் உயிர்வாழ்க்கையை நடத்த எண்ணங்களையே கருவிகளாக உபயோகிக்கிறான். ஒரு காரியத்தைச் செய்ய மனிதன் உறுதியாக நினைக்கிறான்- அவன் உறுதியாய் நினைக்கும் நினைவு மேகத்திலிருந்து மழை, பனியும், அவை மூலமாக ஆறு, குளங்களில் ஜலமும், அவை மூலமாக பயிர் பச்சைகள் விர்த்தியும், அவை மூலமாக ஜீவஜந்துக்களுக்கு போஷணையும் விர்த்தியுமுண்டாவது போல், மனிதன் உறுதியாய் நினைக்கும் நினைவினால் அவன் தேகம் முதல் மற்றப்படி உலகிலுண்டாகுமெல்லாம் விளைகின்றன. இந்த உண்மையை நம்முன்னோர் உணர்ந்தே எந்தக்காரியத்திற்கும் சங்கற்பத்தை முதலாரம்பமாக ஏற்படுத்தியுளார். "சங்கற்பம் வீண்போகாது" என்பது ஒரு பெரிய உண்மை. அந்த உண்மையை நாம் அறிந்தாலும்சரி அறியாவிட்டாலும் சரி அது பலித்தே தீரும். ஆகாயத்திலெறிந்த கல், கீழே விழுவதை ஒருவன் பார்த்தாலும் பாராவிட்டாலும் அது மறுபடியும் பூமியிலேயேதான்வந்து விழுமென்பது எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதியாய் நீ நினைக்கும் நினைவுகளும் எண்ணங்களும் திரும்பி வந்து உனக்கே பலனைக்கொடுக்கும். எண்ணம், அல்லதுநினைவு, (பவம்), மின்சாரத்தைப்போல்அபாரசக்திவாய்ந்துள்ள ஒரு வஸ்து. அதை நீ கண்ணால் காணக்கூடாவிட்டாலும் அதன் சக்தி குறைகிறதில்லை. சித்த புருஷர்கள் சக்தியெல்லாம், இந்த நினைவின் சக்தியையும் அதன் விதியையும் உணர்ந்து அனுசரிப்பதனால் வருவதன்றி அதில் வேறு அதிசயம் ஒன்றுமில்லை. சாதாரண ஜனங்கள் இந்த உண்மையுணராது எதையும் உறுதியாய் ஏகாக்கிராந்த சித்தராய் நினையாமல், மணல் வீடு கட்டி விளையாடும் குழந்தைகள் ஒருபக்கத்தில் அவர் அமைத்த அமைப்பை இன்னொருபக்கம் அமைக்கையில் காலால் மிதித்தும் கையால் கலைத்தும் அழித்தழித்துக்கட்டி முடிவில் கட்டமுடியாது கைசலித்துத் தூங்கிவிடுவதுபோல் அறியா ஜனங்கள் தாங்கள் நினைக்கும் நினைவை தாங்களே அதற்கு எதிர் விரோதமான நினைவுகளால் அழித்து உருவெடுக்க விடாமற்செய்து நினைப்பது மழிப்பதுமாய்த் தங்கள் காலத்தையும் சக்தியையும் அவமே கழித்து அந்தியம் வந்த காலத்தில் இத்தேகத்தைவிட்டு மறுதேகமெடுத்துப்பின்னும் பின்னும் இப் பவக்கடலில் விழுந்துழல்கிறார்கள். எந்த அனுபவமும் முதலில் அவசியம். ஏனெனில் அனுபவிக்காமல் ஒன்றையும் உணரமுடியாது. அனுபவமே அறிவுக்குக் காரணமாம். அனுபவித்தறிந்தபின் அந்த அனுபவத்தையே திரும்பித் திரும்பி யனுபவித்து வருவதால் நாம் நூதனமாயறிவ தொன்றுமில்லையால் அந்த அனுபவம் நமக்கு சுகத்தைக் கொடுக்காது துன்பத்தைக் கொடுக்கிறது. இது நித்தியப்படி யனுபவத்தில் எவருக்கும் பிரத்தியக்ஷமாம். இப்படி இந்த ஜகமே மனிதசங்கல்பத்தால் உண்டானதாயிருப்பதால், அந்த சங்கல்ப விதியை யனுசரித்து மனிதன் எதையும் தனக்கிதமாகச்செய்து கொள்ளலாமே. இந்த மர்மத்தை பிரத்தியக்ஷப்பிரமாணங்களாலும் அனுபவரீதியாகவு மெடுத்துக்காட்டுவது இப்பத்திரிகையின் நோக்கமாம். இதன் நோக்கத்தை யனுசரித்து மனுஷன் நித்யசுகமனுபவிக்க ஒரே வழியுண்டாதலால், அவ்வழியிற் செல்லலவசியமென்பதும் அவ்வழியிற்செல்வோர் எல்லா இடர்களையும் வென்று துன்பங்களைந்து துக்கம் நீங்கிச் சுகவாழ்வு வாழலாமென்பதுமே இப்பத்திரிகாசிரியரின் கருத்து.



இதை யவர் தம் சொந்த அனுபவத்தில் அனுஷ்டித்துக் காரியசித்திபெற்றதால், இதை யெல்லோருக்கும் போதிக்கக்கருதி இதையே அவர் பெருங்கடமையாகக்கொண் டுழைக்கத் தலைப்பட்டிருக்கிறார். இதற்கு மருந்து "நான் ஸர்வவல்லமையுள்ள ஆத்மா." என்று சங்கல்பித்துக்கொண்டு அந்த சங்கல்பந் தவறாது நடப்பதேயாம். இதையே வேதாந்தபாஷையில் சொன்னால் "அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்னும் மகாவாக்கியத்தை சிரவணமனன நிதித்தியாசங்களால் இடையறாது சிந்திக்க இஷ்ட சித்திகளும் நித்ய சுகமும் பெருவாழ்வும் பெற்றுய்யலாமென்று சொல்லலாகும். இப்படி பாவனையால் எதையும் வெல்லலாமென்பது ரிபுகீதையில் வெகு நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது "Now" என்ற பதத்துக்கு "இப்போ" அல்லது 'தற்காலம்' என்கிற பத அர்த்தம் செய்வதைவிட்டு "நித்யம்" என்று இலக்ஷியார்த்தம் செய்துகொண்டு இப்பத்திரிகையைப் பாவித்தலே பொருந்து மென்பது இதை வாசிப்போருக்குத் தெள்ளென விளங்கும். நித்யத்துவத்தைப் போதிக்கக் கருதியதால் அந்த எண்ணம் விளங்க அதன் கருப்பொருள் விளங்கும் வார்த்தையாம். "நித்யம்" என்பதற்கேற்ற இங்கிலீஷ் வார்த்தையை இதற்குக் காரணப் பேராக வாண்டது முற்றும் பொருந்துமென்பது இனிச் சொல்லாமே விளங்கும்.

இப்பத்திரிகையின் முடிவுநோக்கம் சித்த ஜெயோபாய முரைப்பதேயாம். இதன் கொள்கை முற்றும் ரிபுகீதையில் "சித்த ஜெயோபாய முரைக்குமத்தி யாயத்தில் நன்றாக விளக்கியிருக்கக் காணலாம். சித்தஜெயத்துக் குபாயமும் சித்தஜெயமே எல்லா சித்தி முத்தி யோக ஞானமுமாமென்பதும் பின்வரும் இருபாக்களில் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது:—

சித்தமெனவொரு பொரு ளிங்குள்ள தென்று
 சிறிதேனுஞ் சிந்தித்தா லுடனேசித்தே
சித்தமதாய்த் தோற்றியிடு மதுவே சீவ
 செகபரமாய்த் தோற்றுமதாற் றுன்பமுண்டாம்
புத்திரனே யாதலினாற் சித்தமென்றோர் [னும்
 பொருளொன்றுமில்லை யெலாஞ் சித்தே யென்
இத்திறமா முறுதியினான் சித்தந்தன்னை
 யெளிதாகச் செயிதெதென்று மின்பஞ்சார்வாய்.

சித்தசெய மாத்திரமே மகத்தாம் வெற்றி
 சித்தசெய மாத்திரமே மகத்தாஞ் சித்தி
சித்தசெய மாத்திரமே மகத்தாம் யோகஞ்
 சித்தசெய மாத்திரமே மகத்தாம் ஞானஞ்
சித்தசெய மாத்திரமே மகத்தாஞ் சுத்தி
 சித்தசெய மாத்திரமே மகத்தாம் முத்தி
சித்தசெய மாத்திரமே துன்ப நீக்கஞ்
 சித்தசெய மாத்திரமே சிறந்த வின்பம்.

ஓம் தத் ஸத்.

ஸத்யானந்தஃ

---

**Seleotion.**

## A GLANCE AT SRI KRISHNA.

## ஸ்ரீகிருஷ்ணப்பிரபாவம்.

### "மாணிக்கத் தோற்றமும் ஜோதீ ப்ரவாஹமும்." *

(முன்தொடர்ச்சி.)

ஒருநாள் மாலை சூரியன் தன் கிரணங்க ளாகிற குடையை மடித்து தான் வந்த வேலை தீர்ந்ததேயென்று மெள்ள வீட்டிற்குச் செல்வான் போன்று குடகடல் மூழ்கி மறைந்தனன்! ரஸிக சிகாமணிகளுடைய மனதை ரமிக்கச் செய்யும் சந்திரனும் அனைவர்க்கும் வந்தனை செய்து நடன வரங்கத்தில் தோன்றுவது போல் வான முகட்டில் புறப்பட்டனன். அன்றோ அவன் மறைந்தும் குறைந்தும் மழுங்கிக் கிடக்கவில்லை. பூரண வடிவமும் பூரண ஒளியும் பெற்று, மேகமாகிற பாவிகளால் மாசுபடாது அதி சுந்தரமாய் வெகு கம்பீரமாய்த் தோன்றினன். தன் அரசாட்சிக் குறிப்பாகிய வெண்கொற்றக் குடைக்குள் மனமோகன சர்வாலங்கிருதர்கள் அனைவரும் சுகசந்தோஷத்துடன் விளங்கலா மென்று தன்னுடைய கருணையாகிய கிரணங்களால் முரசறைந்த

* ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சரித்திரம் எழுதிய தி. பக்தவத்ஸலம் பிள்ளை யவர்கள் இயற்றிய பாயிரத்திலிருந்தெடுக்கப்பட்டது.

னன். பழுதற்ற அழகுடைய பாவையர்களும் பர்த்தாக்களுமாய்க் களிப்புற்றோர்க்கு, திருஷ்டி சுழற்றுவது போன்று ஆகாயவாணியின் அருமைக் கரத்திலேந்திய பொன்வட்ட மின்னிலவே இன்னவகை நன்னய முற்றது என்று ஒவ்வொருவரும் மகிழும்படி யிருந்தது. பால்போல் நிலாக்காய்வதால் மல்லிகை முல்லை யாதி மலர்களும் தடங்களும் எல்லா இடங்களும் வெகு சோபிதமாய் விளங்கிற்று. இந்த சுந்தர சந்தர்ப்பத்தில், நந்தபாலன் குழலெடுத்து நன்றாய் இசைபாடினன்! இதைக் கேட்ட கோபியரனைவரும் உற்றாரையும் பெற்றாரையும் பர்த்தாவையும் துறந்து எல்லாவற்றையும் மறந்து, குழலோசை வழியேசென்று கோவிந்தனிடம் அடைந்தனர். இரும்பை இழுக்கும் காந்தமும் சுரும்பை யிழுக்கும் மலருமோ அவன்! இப்படியோடும் கோபியர்களிலொருவர் இருவரை, ஓடாது தடுக்கத் தூணில் பிணித்துச் துயருறுத்தியக்கால், அவர்கள் உடலம் அங்கிருந்ததே யன்றி ஆத்துமா ஐயனிடமே நாடிற்று! இதென்ன அபார நேசம்; ஒப்புயர்வற்ற உளமகிழ்வு; களங்க நீக்கிய காதற் கடல்!

கிருஷ்ணன்: ''நீவிர் யாவர்? கண்மணிகளாகும் பெண்மணிகாள்! இரவில் நீவிர் உறவினரின்றி ஏனோ இங்கு நானாவிதமாய் அலைகின்றீர்?

கோபிகள்: "கீதம் கேட்டுப் போதம் பெற்று நாதனிடம் வந்தால்—" **கிருஷ்ணன்:** நன்று! நன்று அடாத வார்த்தை விடாது பேசுகின்றீரே! நாலுபேர் கண்டு நகையார்களா? அழியாத பழிக்கும் அடங்காத பசைக்கும் ஒழியாத நகரத்திற்கும் உறுதி தேடிக் கொள்ளுகிறீர்களே! இது உமக்குச் சரியன்று! சொன்னேன்! சொன்னேன்! முக்காலும் சொன்னேன்! கொண்ட கணவனை விண்டு வந்தால் எண்டிசையும் எளனம் புரியுமே! அது பெரிய அதர்மமாகும்! சாஸ்திரத்திற்கும் சர்வ விரோதம்! சங்கடம் வரும்! வீடு போய்ச் சேருங்கள்.

**கோபிகள்:** கிருஷ்ணா! நீ யிவ்வாறு சொல்வது சரியன்று: ஏழைகள் மனதைப் பாழ்படுத்தி இப்போது ஆழ்ந்த யோசனை கூறுகிறாயே! உனக்கிது தர்மமன்று. எமக்கு இன்பந் தந்து துன்பங் கூறும் அன்பா கேள்! மனதைக் கவர்ந்து மாயம் விளைக்கும் மன்னா கேள்: உற்றார் பெற்றார் என்று உளறுகின்றனை! உற்றார்யாவர்? பெற்றார்யாவர்? கணவன் என்று கதறுகின்றனை! கணவன் யாவன்? மனைவி யாவள்? இஃதெல்லாம் வெறும் பேச்சு! உலகத்துக் கெல்லாம் அலகற்ற முதல்வனாய் திலதம் போன்ற உன்னைப் பெற்ற யாம் உன்னுடைய அதிரேகமாயையான தோற்றங்களிடம் ஏற்றங்கூற மனஞ்சகியோம். உன் மகிமையாகிற ஜோதிப்ரவாஹம் எங்கெங்கும் விளங்கும்போது, அடுப்புத்தீயும் விளக்கினொளியும் தனித்துக்காட்டுமோ? கடலின் பெருக்கால் காசினியெங்கணும் நீர்மய மாகும்போது, கிணற்றுத் தண்ணீரும் குடத்து வெந்நீரும் கிளர்த்து நிற்குமோ! நன்று, நன்று, நீ கூறிய மாற்றம்! உள்ள புருஷன் ஒருவனே யாதலால், உன்னைப் புருஷோத்தமனென்று, உலக மெங்கும் பிரபலமாய் அழைக்கிறார்கள்! உன்னைத்தவிர மற்றையோ ரெல்லாரும் ஸ்திரீகளே! மாயாப் பிரபஞ்சத்தில் கணவனாய்த் தோன்றுவோருக்கும், உண்மைக்கணவன் நீ யாகலின், உன்னை யடுத்த கன்னியர்க்கு ஊனம் எவ்வகை நேரும்?

**கிருஷ்ணன்:** 'உலகத்தோ டொத்துவாழ்' என்னும் பழமொழிக் கிணங்க, மெய்யே யாயினும் பொய்யே யாயினும், நடந்து கொள்வ தல்லவோ நல்லவர்க் கடையாளம்? அதைவிட்டு நால்வர் நகைக்கத் தக்க வழிகளிற் பிரவேசித்து, கெட்ட பேரும் அபகீர்த்தியும் ஆஸ்தியாகச் சம்பாதித்து தட்டுக் கெட்டுத் தடுமாறி போவதேன்?

**கோபிகள்:** நேயம் விளைத்து மாயஞ்செய்யும் தீயா கேள்! ஆசையாகிற பாசத்தால் அனைவரையும் கட்டிப் பின்னர் மோசஞ் செய்து நாசம் விளைக்கும் நேசாகேள்! நாங்கள் ஏழைப்பெண்கள்! மோழைத்தனத்தில் முதன்மையானவர்கள்! எதையும் மறந்தோம், அனைத்தையும் துறந்தோம்! உன்னிடமே மனது லயித்தது! எம் கண்ணுக்கு எங்கு பார்க்கினும் கண்ணனைக் காண்கின்றதன்றி, வேற்றுப் பொருளின் தோற்றமே கிடைக்கவில்லை! உன் முகத்தைப் பழித்த முறுவலில் பத்திரசத்தைப் பொருத்தினோம்; உன் கண்ணகத்தில் எம் எண்ணமெல்லாம் குடிகொண்டது; உன் பரந்த நெற்றியில் எமது விரிந்த அறிவும் அடங்கி விட்டது; உன் சுந்தரத்தில் எமது தோத்திர மந்திரங்கள், நேத்திரோத்ஸவமாய்த் தந்திரத்துடன் தங்கி விட்டன! உன்னைவிட்டு யாம் பிரியோம்! நீயே எமக்கு மோக்ஷவீடு! உன்னோடு நரகத்திலிருந்தாலும் இருப்போமே யன்றி, நீ யில்லாத மோக்ஷம் நிக்குச்சமானம்தான்! எதுவரினும் வரட்டும்; உன்னையாம் விடோம். எமக்கு மானமும் இல்லை, அவமானமும் இல்லை; புகழ்ச்சியும் தோன்றாது, இகழ்ச்சியும் தோன்றாது; நல்லது மில்லை, பொல்லாதது மில்லை; உன்னைவிட்டு நீங்குதலினும் வேறாகிய துன்பமும் கிடையாது; உன்னுடன் ஒத்திருத்தலினும் பிறிதாகிய சுகமுங்கிடையாது. ஆதலால் எம்மிடம் நீ வஞ்சம் விளைக்கின் உண்மையில் உயிர் விடுவோம். ஹா! சுந்தரரூபா! சுயம் பிரகாசா! எம்மைக் கட்டியணைத்துக் கடைத்தேற்றுவது உனதுகடன்.



**கிருஷ்ணன்:** ஏ! புனித சித்தங்கொண்ட வனிதாரத்நங்காள்! ரதியைப் பழித்த அதிமோகனமும், கலைமதி யென்ன நிலாப்பெறு வதனமும், உங்கள் சித்த சுத்தியும், உத்தம பக்தியும் மெத்த வியந்தேன்! நான் இனி உங்கட்கு அடிமை! "பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" என்று உங்கள் கருணையாலேயே, ஒரு தன்னியர் என்னைப் பாடப்பெற்றேன்! என் உடல் பொருளாவியும் உமக்கே தந்தேன், மனமகிழ்ந்தேன், அகங்குளிர்ந்தேன், அல்லல் களைந்தேன், இன்று நல்ல நாளாய் விட்டது! இன்று யான் பெற்ற பாக்கியம் போலும் என்பால் உற்ற அன்பினர் போலும் என்றுங் கிடையார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் அத்யந்த ஆனந்தானுபவத்தில் அழுந்தி, சிரமம் நீங்கிய பரமபதத்தின் நித்யர்களும் முக்தர்களும் அத்தனோடு இத்தலத்தில் உற்றனரோ என்னும்படி பரந்தாமனும் பக்தர்களும், பூவும் மணமும் போன்றும், ஊசியும் சரடும் போன்றும் பிருந்தாவனத்தில் உல்லாசமாய் உலாவிக் கொண்டிருந்தனர்.

சிறிது நாளாயிற்று! கோபியர் மனதில் கொஞ்சம் அகந்தை விளைந்தது. 'கண்ணபிரானே நமக்குக் கண்ணாளனாக, மண்ணுலகில் யாவரே நாம் மதிக்கற்பாலர்! எவரும் நமக்குச் சமமில்லை' என்று பலவாறு அவர்கள் தம்மைப் புகழ்ந்தும் பிறரை யிகழ்ந்தும் நடக்க நேர்ந்தது * .* நேயம் புரிந்த மாயவன் ஓர் நாள் தேய மெங்குங் காணாது மாயமாய் மறைந்தான். இதனால் அம் மாதர்கள் தம் அறிவு கைவரப் பெற்று, அவர்கள் உயிர் ஊசலாடத் தொடங்கிற்று. உள்ளம் பதைத்தது, உடலம் துடித்தது, எங்கெங்கும் நங்கைகளனைவோரும் நாயகனைத் தேடிக்காணாது, நடுக்கம் பூண்டனர். அவ்வேளை கோபியர் கொண்ட குறையையும் அடைந்த மனவருத்தத்தையும் கூற யாராலும் முடியாது. "மயிலே! மாயவனைக் கண்டாயோ?" என்பர். "குயிலே! கோபாலன் குழலிசையைக் கேட்டாயோ?" என்பர்; "மாமே! எம் மன்னவன் சேதி சொல்லாயோ?" என்பர்; கிருஷ்ணன் மீது கொண்ட காதற் பெருக்கத்தால், அவனைப் போன்றே அவர்கள் நடித்துக் காட்டுவர். இவ்வாறு பலவிதமாய்ப் பித்துப் பிடித்தும் புத்தி நீங்கியும் சொல் குழறியும் உடல் மெலிந்தும் கோபியர்கள் வருந்திக்கொண்டிருக்கும் சமயத்தில், முன்னினும் பதின் மடங்கு சுந்தரமாய் இன்பம் விளைக்கும் இசையூதி,கொஞ்சிக் குலாவிக் கோபாலன் வந்து சேர்ந்தான். கைப்பொருளை யிழந்தோர் மீண்டும் அதைக் கண்டதுபோல் ஆனந்தக்கடல் மூழ்கி அளவு கடந்த புளகமெய்தி அம்புஜாக்ஷிகள் யாவரும் நம்பனைக் கட்டி யணைந்து விடமாட்டோம் என்றனர். "கிருஷ்ணா, நீ யிவ்வாறு ஏழைகளாகிய எங்களைக் கைவிடல் தருமமோ? உனக்காகவே, உன்னை நேசித்த எங்களுக்கு ஒருபோதும் ஊனம் விளைக்காய் என்றல்லவோ நம்பியிருந்தோம்" என்று கோபிகள் கெஞ்சிக் கேட்க, "எனக்காகவே, என்னை நேசித்த எவர்க்கும் நான் இடையூறு புரிவதே யில்லை! சிலகாலம் என்னைப் பிரிந் திருந்ததினாலே, உங்களுடைய பத்தியும் ப்ரேமையும் முற்றிலும் உத்தம மடையவில்லையா?"! காதலர் பிரிந்தால் ஆதரம் அதிகமாகும் என்பதே நீவிர் கேட்டதில்லையா?" என்று பகவான் பதில்கூறி அவர்களை மகிழ்வித்தனர்.

இஃதன்றியும், ஒவ்வொரு கோபிஸ்த்ரீக்கும் ஒவ்வொரு கோபாலனாக ஸ்வாமிகள் பிரசன்னமாகி, அனைவரும் மண்டலாகாரமாய் நிற்க, இடையிடையில், மின்னற்கொடிகள் பக்கத்தில் நீருண்ட மேகம் நிலைத்துக் காண்பதுபோல், தாமும் விளங்கி ராஸக்கிரீடை யியற்றி யருளினர். இந்த ராஸக்கிரீடை ஜல

க்கிரீடை முதலியவைகளால், கோபி ஜனங்களுடைய மனங்குளிர்ந்து, பரம பக்த சிகாமணிகளாய் பிரகாசித்தனர். ஸ்ரீகிருஷ்ணனும் ஒவ்வொரு கோபிகா ஸ்திரீயினிடமும் எக்காலத்தும் தனித்தனியிருந்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியமாகும்படி சம்பாஷித்துக் கொண்டிருப்பார். சங்கீதத்தில் பிரியமுடையவளிடம், சங்கீதம் பாடிக்கொண்டும், தத்துவ விஷயத்தில் ஊற்றமுடையவளோடு தத்துவங்கள் பேசிக்கொண்டும், இப்படி பலவிதமாய் பகவான் தோன்றும் அற்புத மகாத்மியத்தை வியந்து மண்ணவரும் விண்ணவரும் பக்தி மிகுந்து பரவசமாகினர்.

III

ஹிம்சை செய்ய எண்ணியிருந்த கம்ஸனுக்கு, கடைசியாக, கண்ணனே தனக்கு நண்ணிய விரோதியென்று புலப்பட்டது. இதனால் அவன் மல்லயுத்த விளையாட்டு என்று ஒரு சிலம்பம் ஏற்படுத்தி ஸ்ரீகிருஷ்ணனை வரவழைத்தனன். ஸ்ரீகிருஷ்ணன் அங்கு வந்த போர்வீரரனைவரையும் தொம்சம் செய்து, கம்சனையும் சம்ஹாரம் புரிந்து, உக்ர சேனனை அரசனாக நியமித்தனன். என்றாலும், எல்லா அதிகாரங்களையும் பகவான் தம்மிடமே வைத்துக் கொண்டனர்.

பிருந்தாவனத்தை விட்டுப் பெருமானார், மதுராபுரிக்குச் சென்றதும், பிருந்தாவனத்தில் ஒவ்வொருவரும் அடங்கா விசனம் பூண்டார்கள். அங்கே எங்கு பார்த்தாலும் துக்கக் குறிப்பாகவே யிருந்தது. ஏனென்றால் அவ்விடத்தில் கண்ணபிரானை ஒவ்வொருவரும் கண்ணுக்குக் கண்ணாய் நேசித்தனர். இவர்களுக்குள் ராதா துக்க சமுத்திரத்தில் மூழ்கி, பிராணன் போகும் நிலைமை யடைந்தனள். கண்ணன் மீது உண்மையாய்க் காதல் கொண்டோர், இவளைப்போலொருவரு மிலரென்று காசினி யெங்கும் முழக்கமாகியது. பகவானைச் சாஸ்திர வழியாய் உபாசித்து, பக்தி மாத்திரம் போதாதென்று பிருந்தா வனத்தோரை மனதில் இகழ்ந்து கொண்டிருந்த **உத்தவ**ரென்பவரை ஸ்வாமிகள் தமது க்ஷேம சமாசாரம் சொல்லி வரும்படி பிருந்தைக்கு அனுப்பினர். அவர் பிருந்தாவனம் வந்து பார்த்ததும் கிருஷ்ணன் பிரிவாற்றாமையால், விளைந்துள்ள கோலாகலத்தைக் கண்டு, அவர்கள் பக்தியை வியந்து, இதனாலன்றோ ஸ்ரீகிருஷ்ணன் இவர்களுக்கு வசமாயினர் என்று தம் மெண்ணத்தை மாற்றி, ஸ்ரீராதையின் பாத கமலங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

கண்ணபிரான் இப்பொழுது மதுராபுரியில் மன்னவராய் விளங்கிக் கொண்டிருக்கிறார்! எல்லோரும் அவருக்கு மரியாதை செய்யினும் அதுவெளிவேடம் மாத்திரமாய் நின்றதால் அவர்க்கு மகிழ்ச்சி விளையவில்லை. ஏழைகளாகிய பிருந்தாவனத்தோர் பக்தியே ஏற்ற முள்ளதாய் அவர்க்குத் தோன்றியது.

சிலநாள் பொறுத்து, கிருஷ்ண ப்ரேமை யாகிற தீ ராதாவைக் கொளுத்துதலால், ராதா உயிர்விடும் நிலைமையி லிருக்கிறாளென்று தோழி கிருஷ்ணனிடம் முறையிட, அவர் மனம் நொந்து உடனே உண்மை அன்பினளை உபசரிக்கப் புறப்பட்டனர். பிருந்தாவனம் வந்ததும், தாமிருக்கும் அரச அலங்காரத்துடன், கிருஷ்ணன் ராதாவுக்கு காட்சி கொடுக்க, ராதா, அவ்வுடையைக் கழற்றி யெறிந்து, முன்போலவே தன்னொத்த நிலையினனாய் காதற் கண்ணனாய் விளங்கினா லொழிய, அவரைத் தான் ஏறிட்டுப் பாரேனென்று கூறினாள். ஸ்வாமிகள் அவ்வாறே ராதாவின் அபீஷ்டத்தை நிறைவேற்றினர். ராதாவின் அபூர்வ நேசத்தின் மேன்மைக்கு அஞ்சிப் பெருமானார் அவள் காலில் விழுவதுமுண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய கதைச் சுருக்கத்தால் ஏற்படும் உண்மைகளைச் சின்னாட்களுக்கு முன்னர் நடாத்திக்காட்டினார், முக்கியமாய் ஸ்ரீசைதன்ய ஸ்சுமிகளாவார். கண்ணன் வழிபிடித்துக் காசினியிலவதரித்த கடவுள் தன்மையுடையோரைப் பற்றி வெகு சிறிது கூறி முடிப்பது அவசியமாயிருக்கின்றது. * * * புது மலர்களாக இவர்க ளவதரித்து வெகு மணம் வீசும் வண்ணம் பக்தி நெறிக்குச் சக்தி யளித்தது பரம ஸ்ரேஷ்ட மென்று பலராலும் கொண்டாடப் படுகிறது.

---



## REVIEW.

## "மதிகெட்டமனைவி."*

(முன் தொடர்ச்சி.)

வீட்டைத்துறந்து நாட்டைத்துறந்து, மானம் விட்டு, மரியாதைவிட்டு, காமந்தலைக்கேறி, காமத்தலைவனே யெல்லாமென்று நம்பி வந்தவள் அவன் மாயாபுருஷன் நம்பத்தக்கவனல்லவென்று கண்டால் என் செய்வாள்? இப்படி மானங் கெட்டபின் இந்த உயிரை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது என்று தன்னுயிரைத்தானே மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்து ஆற்றையண்டி ஆருயிரைப் போக்கிக்கொள்ளச் சமயம் பார்த்து நின்றாள். அத்தருணத்தில் கருணாநிதியாகிய கடவுள் தன் குற்றங் கண்டு வருந்தினாரை தயாமிகுதியால் காப்பாற்றுவ துண்மை யென நிரூபிக்க வந்ததுபோல் **ஜீவசித்தி** அங்கு தோன்றி அவளைத் தன்னிருப் பிடத்துக் கழைத்துக் கொண்டு போய் அவளெண்ணத்தை யாற்றி, அவள் செய்த பாபம் பெரிதும் பொல்லாததுமாயினும் அதிலும் பெரிதான 'தற்கொலை' செய்து கொள்வதால் அதிலிருந்து தப்பிக் கொள்ளலாமென்று அவள் நினைத்தது பிசகென்று அவளுக்கு உள்ளத்தில் பட உபதேசித்து உண்மையுணரச் செய்து, தயா நிதியாம் அவள் கணவனிடம் அவளைத்தாமே கூட்டிக் கொண்டு போய்விட்டு, அவளுக்குப் புகலிடம் கொடுக்கவும், உலகத்தார்க்கொப்ப அவளை மேலுக்கு மட்டும் தன் மனைவிபோலவே பாராட்டி வரவும் ஏற்பாடு செய்து வந்தார். அவள் கணவன் தன் குழந்தையின் மேலுள்ள வாஞ்சையால், தன் மட்டில் விரக்திபூண்டு, தன் குழந்தையினிமித்தம் அவளை அவளுடையதாய் என்கிற காரணத்தால் கௌரவமாகவே நடத்திவர உடன்பட்டான். குழந்தைக்கு விவாகமானதும் அவள் உடனே அவன் வீட்டை விட்டு வெளியே போய்விடவேண்டியதென்று கண்டிப்பாய்ச் சொல்லி அப்படியே நடந்து வந்தான். காலமும் கழிந்தது, காமவெறி விட்டகலவும் சற்பகத்துக்குப் புத்தி தெளிந்தது. தன் புத்தி கெட்டதைப்பற்றி தானே தன்னை நொந்து கொண்டாள். தன் கணவன் மகிமையைக்கண்டு தினந் தினம் வியந்தாள். தன் குழந்தையின் மேலான புத்தியைக் கண்டு நம் வயிற்றி லுதித்த இக்குழந்தைக்கிருக்கும் புத்தி தனக்கில்லாமற் போயிற்றே யென்று மனமுருகினாள். தன்கணவன் தன்னை யடக்கி யாளாமல் தன் மனம்போனபடி விட்டுக்கொடுத்து "என்னென்பதற்குமுன் எண்ணெய் என்று முன் வந்து" என் செருக்கை வளர்த்து என்னைப்பாழாக்கினானே யென்று வருந்தினாள். மனைவியாக நாம் செய்ய வேண்டிய கடமையில் தவறிப்போய், இனி அந்தப் பாக்கியம் நமக்கில்லையென அதை யிழந்து விட்டாலும், தாயாராகச்செய்யவேண்டியகடமைக்குக்குறைவின்றிச் செய்யவேண்டுமென்று, தன் அன்பை யெல்லாம் தன் ஏகபுத்திரியிடம் வைத்து அவளைக் கண்ணை யிமைகாப்பதுபோல் காத்து வந்தாள். சத்தியம்பிறழாமல் உத்தம வழிபற்றி உண்மையாய் நடந்துகொண்டு வந்தாள். தன் கணவனுடைய மேலான குணங்களை மதிக்க தனக்குப் புத்தியில்லாமற்போக தன் குழந்தை தனக்கு அப்பாவைப்போல் யுக்தியும் புத்தியும் உழைப்பும் உண்மையுமுள்ள புருஷன் வேண்டுமென்று சொன்னதைக்கேட்டு உளம் பூரித்துத் தன் புத்திமட்டும் எங்கேயோ போயிற்றேயென்று உள்ளமுருக உடல் நெக்குவிட வருந்தி வருந்தி வாடினாள். இவ்வளவு வருந்தியும் தன் குணமாவது தனக்கும் தன் கணவனுக்கு முள்ள வித்யாசமாவது தன் குழந்தைக்குத் தெரியாதபடி வெகு ஜாக்கிரதையாக நடந்து கொண்டு வந்தாள். இவ்வளவு கேடும் விளைந்ததற்குக் காரணம் தான் தன் செருக்கு மிகுதியினால் தன் கணவனிடத்து உள்ளன்பு வையாமலும் அவனை மதியாமலும் இருந்ததே காரணமென்று கண்டு கொண்டாள். குணமில்லாப்பெண்டீர் கூத்தெனத் தகுமென்று சொல்லும் உலகவழக்கு தன் விஷயத்தில் நிதர்சனமாயிற்றே யென்று வருந்தினாள்.

* * * *

இப்படி இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. அப்பெண்ணின் அன்பில் தாயும் தகப்பனும் ஈடுபட்டிருந்தமையால் தங்களிருவருக்குமுள்ள வேற்றுமை கூட விளங்காதபடி அக்குழந்தையின் க்ஷேமத்தைத் தேடுவதிலேயே இருவரும் ஒருமனப்பட்டவர்களாயுழைத்து வந்தார்கள். இன்னுமக்குடும்பத்தில்

* "A Wife Condoned," by S, M, Natesa Sastry, B, A., M. F. L. S.

எத்தனையோ சம்பவங்கள் நேரிடுகின்றன. எல்லாவற்றிலும் கற்பகம் "சத்தியமே கதி"யென்று சத்தியத்தைப் பற்றி நின்று தனக்குப் பின்கதி யெப்படி நேரிட்டாலும் தற்காலம் சத்தியத்திற்கிணங்கி சத்தியவழி நடப்பதேதனக்குத் தகுந்ததும் ஒத்ததுயாயுள்ளதென்று தாயன்பு பெருகி, தன் கற்பையிழந்ததற்காக உள்ளமுருக உருக மனம்வருந்தி தனக்கு எவ்வளவு வருத்தமிருந்தாலும் அதைத் தன் குழந்தைக்குக் காட்டக்கூடாதென்று பெருந்தன்மையாக நடந்துகொண்டாள். "உள்ள முருக உருகக் கள்ளம் கருகக் கருக" வென்று சொல்லும் மூத்தோர் வாக்குப்படி அவள் உள்ளம் கரைந்துருகவுருக அவள் கள்ளமும் கரைந்து போய்விட்டது. ஜீவசித்தி கடைசியில் இவளைப் பார்த்த பொழுது அவள் கள்ளம் கரைந்ததை அவள் முகக்களையாலுணர்ந்து அவள் தன் குழந்தையின் கலியாணத்திற்குப்பின் தான் அதோகதியாகப் போகவேண்டுமே இப்படிப்பட்ட சத்புருஷரை பாலையிட்டும் அவருக்குச் சொல்லிமுடியாத தீங்கிழைத்த பாவியானேனே! யென்று வருந்தின போதெல்லாம், "அன்பின் சக்தி அபாரமானது: உன்னைக் காக்கவென்றே அன்புருவாயவதரித்த குழந்தை யதோவருகிறாள் பார்" என்று சொல்லித் தைரியம் கூறினார். அப்படியே அக்குழந்தையின் விவாககாலம் கிட்டி முகூர்த்தம் நெருங்கவும், அக்குழந்தை அம்மாள் சங்கடப்படுகிறாளென்று தானும் சங்கடப்பட, அதையறிந்த அவள் தகப்பனார் அச்சங்கடம் பொறுக்கமுடியாது அக்குழந்தையினிமித்தம் அவள் தாயை "'இனி அழவேண்டாமென்று அப்பா சொன்னார் என்று சொல்லு, அவள் அழமாட்டாள்" என்று சொல்லித் தேற்ற வேண்டி நேரிட்டது. அப்படித் தேற்றினதில் அவருக்கு மனவருத்தமொன்றுமில்லை. அக்குழந்தையின் அன்பாகிய பரிசவேதி தாயின் குற்றமுள்ள மனதையும், தகப்பன் சீற்றமுள்ள மனதையும் தொட்டு இரண்டையும் தன்மயமாக மாற்றிவிட்டது. குற்றமுள்ள விடத்தில் குற்ற மொழிந்தது. சீற்றமுள்ளவிடத்தில் சீற்ற மொழிந்தது. விகாரங்களற்ற மனது தன்மயமாய் ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும் அன்பின் ஒளிபட்டு அன்புருவாக மாறியது. எல்லாம் அன்புமயமாக மாறினவிடத்தில் துன்பம் எங்கே யிருக்கும்? ஆசையால் அது எடுத்தது ஓட்டம்!

"இவ்வுலகில் எவனும் எக்குற்றத்தைச் செய்தாலும் முதல் முதல் தெரியாத்தனத்தால் செய்த குற்றமாயிருந்தால் அதையவன் சீர்திருத்திக் கொள்ள முடியாதென்பதில்லை. சீர்திருத்திக்கொள்ளும் வகை அவனிடத்தே சித்தமாக விருக்கின்றது. உன்னிடமிருக்கும் தாயென்ற தர்மம் உன்னிடம் முதலில்லாமலிருந்த மனைவியின் தர்மத்தை உனக்குத் திரும்பக் கொடுத்தது" என்று இக்கதா நாயகர் கற்பிழந்த தன்மனைவியை மன்னித்தேற்றுக்கொண்டபொழுது சொன்னவார்த்தை உண்மையில் "பாபமன்னிப்பு" என்னும் மேலான உள்மதக் கொள்கையை யுணர்த்தும் உத்தம வாக்கென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். மதிகெட்ட மனைவியே பாபாத்மாக்களாகிய சீவன்கள். அவள் கணவனும் 'பயோநிதியே' கருணை நிதியாம் **கடவுள்**. அவளைக் கெடுத்த பாதகனே **மாயை**. அவர்கள் குழந்தையே **அன்பு**. ஜீவசித்தியே **தர்மாவதார** மூர்த்தியாகிய வேதாந்த சித்தாந்த சமரச சாந்தக்களஞ்சியம், ஓம் தத் ஸத்.

சாந்தசர்மா.

---

## சுகுணசுந்தரம். IX

ஏதோ உரத்த பேச்சுக் கேட்கின்றதே, அஃ தென்னையோ?' என்றொருவன் கேட்க, மற்றவன் 'தோழ! நம்தந்தையர், நம்முடைய கல்யாணத்திற் முதன்மையாகச் செய்யவேண்டிய சாந்திகளைச் செ துமுடித்து, அந்தணர்கட்குப் பல்வகைத் தான த மங்களைச்செய்தும் ஏராளமான பொருள்களைத்த ராளமாய் வாரிவாரிப் பூரி கொடுத்தும் வந்தனரா என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, அவ "தோழ! விதிப்படி செய்யவேண்டிய கருமங்களை தானே செய்தனர் பூபதி. அதற்கேன் இந்த இரை சல்?" "சுகுண! சுலோசனையைக் கவர்ந்து செல் யாவரேனும் எத்தனித்தனரோ? இதோ சென் போர் தொடுத்து அக்கொடியோனை இச்சக்தியா கொல்லுகின்றேன். பார்!" என வீராவேசங்கொ ண்டெழ, சுகுணன், 'அன்ப! அவ்வாறு எவனுங்



ணிந்தானில்: திக்விஜயகாலத்தில் நம்முடைய பராக்கிரமத்தைக்கண்டும் கேட்டும் எவன் நம்மை எதிர்த்துப்போர் புரியவருவன்? சாருதத்த மகாராஜன், சுவயம்வரத்துக்கென வந்திருக்கும் இராஜமைந்தர்களை நோக்கி நந்தவனத்தில் நேற்று நிகழ்ந்தவற்றை விண்ணப்பஞ்செய்து கொள்ளலும், கிருபாகடாக்ஷ முனிவர் அவர்களை நோக்கி சம்பகாவதியின் சரித்திரத்தைச் சாட்சியாகக்கொண்டு, கடவுளை முன்னிட்டு உன்னை, சுலோசனை மணம் புரிய விருக்கின்றாள் என்று பகிரங்கமாய்ச்சொன்ன மாத்திரத்தில் எல்லா இராஜகுமாரர்களும் எங்குந் திகைத்து, சுலோசனை நமக்குக் கிடைக்கமாட்டாள் என்று தமக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு மௌடனீபூதர்களாக தலைகுனிந்த வண்ணமன்றோ இருந்தனர்? நீ கொண்டவாறு போர்புரிய எவனும் நினைத்தானில்லை. நான் சொல்வதைச் சற்று சாவதானமாய்க்கேள்— அப்பொழுது ஓர் அந்தணர், சக்கிரவர்த்தியாம், உன் பிதா சுசீலரிடம்வந்து, 'நீவீர் நன்கொடையாளர் என்னும் பிருதுடன் பல்வகைத் தான தருமங்களை இச்சுபகாலத்திலியற்றுவது தெரிந்து யான்வந்திருக்கின்றேன்;' என, 'மகாராஜா அவரை வணங்கி, 'அந்தணச்சிரேஷ்ட! நும் கருத்தின்படி யான் நடக்கமாட்டுவேன். அதை இக்கணமே அடியேன் அறிய விருப்பமுற்றுளேன்.' என்றும், அந்தணர், 'ஏ, ராஜ! நீவிர் என் மனப்படி நன் கொடையளிக்க வல்லவர் அல்லீர்.' என்று நன்மொழி கூறலும், அரசன் (தனக்குள்) 'இவர் ஈசுவரசிருஷ்டியில் அடங்கிய பொருள்களையன்றி வேறுயாது கேட்கப்போகின்றனர்? சிருஷ்டி வர்க்கங்களுள் எப்பொருளையும் கொணர்ந்து கொடுக்கவல்லேமன்றோ? இம்முனிவரைக்களிக்கச் செய்யாத நன்கொடைகளா லாயபயன்தான் என்னே?' என்றுசிந்தித்து, 'பிரபோ' முனிவர! நும் கருத்துத்தான்யாதோ? விளக்குவீர்,' என அவர்: "ராஜ! நம் கருத்தை விளக்கிய பின்னர், அதை யளிக்கமாட்டுவேனில்லன் என்ற விடைவருமோ வென்றே அஞ்சாநிற்கின்றேன். எம்மனக்கோரிக்கை யாதாயினும் அதை யளித்தலே சத்தியம் என்பீரேல், யாம் பகருவேம், என்றவுடன், இராஜன் சற்றும் தயங்காது, 'விப்ரோத்தம! நும்மனக் கோரிக்கை யாதாமாயினும் அதை இக்கணமே நுமக்களித்தலே சத்தியம், சத்தியம், சத்தியம் என்று மும்முறை கூறலும், அட, ராஜ! உனது மொழிபொய்க்காமல், உன் அருந்தவப் புத்திரனும், சுந்தரரூபனும், சுகுணசீலனும், சுந்தர இளவலது சிரத்தை இதோ இருக்கிற உன் மனைவியும் நீயுஞ் சேர்ந்து மனமகிழ்ச்சியுடன் ஓர் வாளினல் கொய்து, எமக்கு மனப்பூர்த்தியாய், கண்ணீர் சிந்தாதளிப் பையேல் உன்மொழி உஜ்ஜீவித்தல் ஆகும். என்ன சொல்லுகின்றனை? சீக்கிரம், சீக்கிரம்," என்று கடிந்துரைத்தலும், நம் பிதா மூர்ச்சித்தனர்.' என்றான் சுகுணன். உடனே சுந்தரன், 'மித்ர! நான் தன்யனாயினேன். இப்பிறப்பினாலாய பயனை யானடையப் பெற்றேன்; தந்தையாரின் மொழியை சத்திய மொழியாக்குவேன்- வா, செல்வோம், நம் தந்தையர் பக்கல்.'

**சுகுணன்:**—'மித்ர! என் சிரத்தைக் கொய்து விப்ரருக்குத் தானஞ்செய்து, மித்ரபாவம் இத்தன்மைத்தென உலகினருக்கு விளக்கிக்காட்ட சுமந்திரராம் என் தந்தையர் முயலுவதாகவும் வதந்தி. அத்தகைய கீர்த்தியை என் பிதாவகிக்குமாறு நானேயென் சிரத்தைத் தந்து இச்சன்ம சாபல்யமாகும் வழியைத் தேடா நிற்கின்றேன்.'

**சுந்தரன்:**—விப்ரர்தம் மெண்ண மவ்வாறன்றேல்? '

**சுகுணன்:**—'அவருக்கு வேண்டுவது சிரமேயன்றோ?'

**சுந்தரன்:**—'சுகுண! அந்தணர் என் சிரத்தையன்றி மற்றொன்றையுங் கொள்ள விருப்பமுறார் எனத்தோற்றுகின்றது. சற்றுமுன் நீ மொழிந்தது மஃதேயன்றோ?'

**சுகுணன்:**—'சுந்தர! அங்ஙனம் நிகழுமேல் யான் உயிர் துறக்க நேரிடும், திண்ணம், திண்ணம்.'

**சுந்தரன்:**—'தோ! படாதபாடும் பட்டுக் கொணர்ந்த சம்பகத்தின் கதிதான் என்னையோ?'

**சுகுணன்:**—'சுந்தரானந்த! தன்னருந்தவப் பேற்றால் நின்னைக்காணலும் மெய்மறந்து உன்னைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு அணைவதெக்காலமோ? என்று பெருமூச்சு விட்டனளே, அந்த சுலோசனையம்மை என் செய்கிற்பாள்?'

**சுந்தரன்:**—'இறைவன் அருள் யாதோ! வா, போவோம், நம் தந்தையர் பக்கல்' என்று சுகுண சுந்தரரிருவரும் போந்தனர்.

டி. எஸ். சுப்பராமையர்.

## To Our Subscribers.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

**நமது சந்தாதாரர்களுக்கு.**

*நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வாலியத்துக்குரிய சந்தாவைச்செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வாலியத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பல்வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தாதொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

**D. K. Agency.**

*20th May,* 1903. **தி. க. ஏஜன்ஸி.**

# "ANANDA MISSION"

## For the Propogation of Truth and Knowledge.

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control and Self-Culture.**

***"EKAM SATYAM BRAHMA."—SRUTIVAK.***

"Seek Truth wherever you can find it."
"But Make your Choice and Stick to it"
till you reach the end.

"*Truth is hard Finding!*" **Yes,** "*Uncompromising too* **when** *whole;* **Yet Try!**" "*Awake, Arise and Stop not till you reach the Goal.*"—*Sruti.*

'And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion, caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligence, development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

## Hail! Ananda Natesa!

*Sri Akandananda Satguruve Namaha.*

---

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thi ck aper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People:—

**Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.**

**Single copy, current No. $5\frac{1}{2}$ As.; Back Nos. 6 As. Each.**

**English & Foreign Subscription 5s 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.,* in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As, off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume,* though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

**விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.**

**தளமான காகிதப்பதிப்பு:—** *அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது.* ☞ *வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.*

**லேசான காகிதப்பதிப்பு:—** *சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.*

*வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.*
*தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.*

**வருஷாரம்பத்திலே** *(அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.*

*ஏப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.*

*வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.*

*பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.*

*கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும் போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவுக்குமிடமிராது.*

---

ஸத்யம்வத.—**Speak the Truth.**

**Hitch your Wagon to a Star."** **"To Thine own Self be True."**




**அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.]** [God is Love ; Knowledge is Power : *Om.*

ஸத்யமேஜெயம்—**Satyameva Jayati.**


புத்தகம் 12.] **1903-ம்ஹ ஆகஸ்டுமீ** [இலக்கம் 4.


# The Gospel of the Holy Mother,

## As presented by Her to Her Blessed Child and Son

***On the Day of the Cleansing of the Spirit, OO.***
*(With the First Dawn of the 20th Century)*

# ஆனந்தத்தாய்மொழி.


161184


குறிப்பு.—சுத்தாத்வைத சித்தாந்த ஸாத்விக சிரோமணியாகிய எமர்ஸன் பிறந்து
இன்றைக்குச் சரியாக நூறு வருஷங்களாகின்றன. இவருடைய உண்மைப் பிரபாவத்தை
ஜூலை மாசத்து விவேகசிந்தாமணியில் 87-வது பக்கத்தில் காணலாம். அமெரிக்காவில் எல்
லாரும் இவர் பிறந்த நூற்றாண்டைக் கொண்டாடி வருகிறார்கள். இவருடைய ஆத்மப் பிரீதி
யார்த்தம் நாம் விவேகசிந்தாமணியில் பிரசுரித்து வரும் **ஆனந்தத்தாய்மொழி**யைத்
திரட்டித் தனிப்பிரசுரமாக அர்ப்பணம் செய்து வெளியிடல். இதை யோதிய எம்தாயின்
சர்வமத சமரசக் கொள்கைக் கொத்ததாயிருக்குமென்று திருவருட் பிரகாசத்தாற் றெள்ளென
விளங்கியதால், அவ்வருட்சோதியை வணங்கி அப்படியே அர்ப்பணஞ் செய்து மேற்றிசை
யாரை விரும்பி இங்கிலீஷில் ஒரு விஜ்ஞாபனமும் தொடுக்கலாயிற்று. ஓம் தத்ஸத்.

(பலர் கோரிக்கைக்கிணங்க **ஆனந்தத்தாய்மொழி** மட்டும், மேலே வரைந்துள்ள முகவுரையை முதலாக வைத்து சீக்கிரத்தில் தனிப்பிரசுரமாக வெளியிடப்படும்.)

# "OVERCOMING THE WORLD"

## Or, The Great Vow of Renunciation.

## * வயிற்றொடுகிளத்தல்.

### உலகைவிட்டொழித்தல் அல்லது மஹாபிநிஷ்க்ரமணம்.

I.

Man the Microcosm—Analysis of His Physical Body.

மண்ணிற்பிறந்து மண்ணாகு மிவ்வுடலம்
மாயைவலைப்பட்டு மாசுபெற்ற தென்னேடி!
எண்சாணுடலுக்கும் ஒருசாண் வயிறேதான்:
சாண்வயிற்றுக்குள்ளே சமைந்ததுநீ னுடலம்மா!
ஆகாரப்பையொன்று அதன்மேலே வீற்றிருக்கும்;
பைக்குள்ளே செல்லும்வாய் தானாக அசையுமடி;
அசையும்வாய் கொண்டதெல்லாம் ஆமாத்துள்ளே செல்லவிடும்;
உட்செல்வதாகாரம் அதுவுடன்படுதல் ஜீரணமாம்;
ஜீரணமாம் சக்தியினால் சித்திப்ப தென்னேடி?

II.

His Subtle Bodies or Discrimination of The Natural from Real Man i. e. Jiva and Atman.

சித்திப்ப தன்னமய மதுவேதா னுடலங்காண்!
அன்னமயத்துள்ளே அமைந்துளது பிராணமயம்:
பார்த்தாலதுவாயு: பிராண[illegible]
பிராணமயம்போக மூன்றுமயம் மேலுண்டு:
மனோமயமதுகாண் "நான்" "என" தென்றடிவரும்.
விஞ்ஞான மயமென்பார் கூர்புத்தி யதுவேகாண்;
ஆனந்த மயமதுவோ சுத்தமனச் சாக்ஷியம்மா;
இத்தனைக்கு மேலுள்ளான் பரமனவனொருவன்
அவனே நானன்றி அயல்வேறு அல்லன்காண்!

III.

The Pratyagatman or Adam before the Fall.

பசிதாக மெனக்கில்லை பாந்தவியந் தானில்லை!
சுகதுக்க மெனக்கில்லை சுற்றமுமே தானில்லை!
எங்கும் நிறைந்திருந்தும் ஏகாங்கியாயிருப்பேன்:
எனக் கங்கமில்லை பங்கமில்லை இங்கிதசங் கேதமில்லை:
மானமில்லை ஈனமில்லை மாயை மயக்கமில்லை:
ஊணுறக்கந் தானில்லை ஊனமொன்று மெனக்கில்லை:
மனைவிமக்க ளெனக்கில்லை மாதிலத்தார் யாருமில்லை.
இப்படியிருக்கு‡மெனக்கோர் குறைசொல்லி
1 மாயக்காரியவள் †பத்தினியிடம் முறையிட்டாள்.

IV.

The Evolution of Natural Man or creation of EVE and MAN's fall.

முறையிட்ட சப்தமது முழங்கியதே யம்பரத்தில்§
அம்பரத்தாடு மழகனது கண்டுகொண்டே
† ஆடாடென் றடிஞன் ஆட்டிவிட்ட பம்பரம்போல்
2 தேவியவளொருத்தி தேவடியாள்போற் குதித்தாள்.
ஆட்டமுங்குதிப்பு மதிசயமா யிருக்குதென்று
ஆனந்த மயங்கடந்து அகண்டவெளியாயிருந்த
3 ஆதியவள் என்னையின்றாள் [illegible] யோடிவந்தாள்:
4 மாயப்புலைச்சியவள் மகிழ்ந்துசில வார்த்தைசொல்ல
5 மாயவுருவானேனான் மனமறுகப் [illegible]றேன்.

V

Natural Man and His bitter Experience of the World i.e. After 'Paradise Lost.

பேசினபேச் சென்ன வாதிட்ட வார்த்தையென்ன
6 மாயைவந்து ஜாலஞ்செய்ய மல்லுக்குநான் நின்றதென்ன
சொல்லச்சொல்ல வளருமம்மா சூதுவாது தொடருமம்மா.
சுருங்கச்சொல்லி விளங்கவைப்பேன் சின்மயமே சாக்ஷிநிற்பாய்.
மாயையவள் கையாலே மதனன்7பட்ட அவஸ்தையெல்லாம்
சொல்லத்தான் ஏறாது சொல்வன்மை போதாது:

* A talk with the Belly as representing the 'World' within.
What external Nature is in the Cosmic World, So is the Belly in the Microcosm of Man.

1. Maya or Avidya symbolised by the Serpent in the Bible.

‡ Perfect Man or Adam before his Fall.

† Vidya or true knowledge - EVE before the fall:—Perfect Womanhood—the Crowning Glory of God's creation.

§ The Voice reached the Throne of God *i.e.* The Self-luminous plane or The highest plane transcending thought where the *light* of all lights shineth in Glory.

† Set the Great Law of Evolution to work.

2 The Divine Energy called the Word or the Holy Ghost.—The whole line means: The Law of Evolution began to work with the utmost speed.

3 Suddhamaya *at one* with God, variously called Parasakti, Ambika and other names all connoting the same stat of consciousness known as the Turya state or Paramahamsa—pure Satva.

4 Asuddhamaya *i e.* impure or tainted by a slight admixture of Rajas and Tamas or subject to Gunas *i. e.* to passion and ignorance *i. e.* Nature in the Eve that yielded to Temptation.

5 Denotes the fall of Man from his perfect State: Describes Jivotpathi, or birth of Natural Man.

6 The Differentiating Spirit called the World or Worldly Spirit.

7 The real man *i. e.* the Soul of man or Atman that knows and wills.

8 வயிற்றையவன் நொந்துகொண்டான் வாயால்மிகப்பிதற்றலுற்றான்;
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிமிக நொந்துபோனான்.
பாழ்வயிறே பழங்கிணறே பழிபாவ முனக்கிலையே!

## VI.

His disgust of the world and turning away from its vanities.

"இதோ ஹிதம்பாராயே 'இடும்பை கூர் என்வயிறே!'
உன்னைத் தூர்த்தாலும் தூர்வதில்லை தூரெடுத்தாலும் தெளிவதில்லை
துறந்தாலும் விடுவதில்லை துதித்தாலுங் கேட்பதில்லை
உறைத்தால் உபாதிகொள்வாய் புளிப்பானால் போகாதென்பாய்
மிகுந்து போட்டால் வருந்திடுவாய் குறைந்து போட்டால் எரிந்திடுவாய்
மட்டுமிதம் தப்பாமல் மணிசிறிதும் பிசகாமல்
சுசிருசியோ டென்றனுக்கு சமைத்துச் சுடப்படைக்கவேண்டும்.
வேண்டியதை வேண்டியபடி வேணமட்டும் படைத்தேனே!
படைத்ததற்குப் பயனென்சொல் பாழ்வயிறே பெருச்சாளியே."9

## VII.

His thirsting to attain his former state of Bliss or endeavour to regain Paradise.

"உண்டுடுத் துறங்கியுனக் குழைத்ததெல்லாம் போதுமென்றே
ஓய்ந்தொழிந் துட்கார வுன்னினே னுள்ளத்தே.
நீ ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடினேன் வெகுகாலம்
ஆடியலுத்ததன்றி ஆனதொன்று கண்டதில்லை.
பண்டைபோ லுன்றனுக்குப் படைக்க இப்போ ஆளில்லை;
ஆளில்லா வேளையிலே நீ யடுத்தல்லோ பிழைக்கவேண்டும்!
சுசியென்ன உருசியென்ன சொகுசு தானுனக்கென்ன!
அடைகாய் கனிகிழங்கு அகப்பட்டதைப்புசிக்கும்—
பெரியதொரு வீடுதனில் பெருமை யுனக்குண்டோ சொல்வாய்!"

## VIII.

Rising of the Christ in Man: Takes the Great Vow of Renunciation and thus "Overcomes the World."

"உன்னோடு வாழ்தலரி" துணர்ந்தே யுனையொழித்தார் பெரியோர்கள்;
உனையொழிக்காக் காரணத்தா லுழலுகிறேன் மிகநொந்து;
உன்னோடு ஒத்துவாழ உபாயமொன்று சொல்லுவன்கேள்,
என்சொற்படியே நீநடந்தால் எக்காலும் சுகித்திடலாம்:
"கண்டது கிடைத்ததுவைக் கனிவுடனே பரிந்தளிப்பேன்;

8 Belly the Symbolical representation of the Cosmic World or external Nature in the Microcosm of Man.

9 The fabled Vehicle of Ganesa or Vigneswara, the Lord of Nature and Natural or Psychic Powers which are the greatest obstacles to realisation by man of his own true Self.

10. Aiming to lead the original Blissful Life of undifferentiating knowledge which is Life Eternal.



அளித்ததைப் புசித்து நீ யடங்கியே யிருந்தையானால்,
அகிலமுழு துனதாகு மதிலேதும் சங்கையில்லை;
சற்றேனு மேறுமாறாக விருந்தாயே யாமாகில்,
கூறுமனுனை யொழித்துக் குந்திடுவேன் சும்மாகாண்."

ஓம் தத் ஸத்.

## ஜீவயாத்திரை.—LIFE'S PILGRIMAGE.

1.

அருளெனப்படுவது மருளற்ற சிந்தை
மருளே யிருளில் மயக்க மச்சமுமாம்
மயக்கந்தானறும் மாசற்ற சிந்தையில்
சிந்தை தெளியத் தெளியச் சிவமதுவாமே.

2.

சிந்தைய தென்னச் சித்தென்ன வேறில்லை
சிந்தை தெளிந்திடச் சித்ததுவாமே
சித்தது வாவது முள்ளொளி தானே
உள்ளொளி விளங்கிடும் சித்சபையாமே.

3.

உள்ளொளியாவ துள்ளுணர்ச் சோதியே
உள்ளுணர்ச் சோதியு மூனுணர் வழிந்தது
ஊனுணர் வாவது முலகறி ஞானமே
உலகறிஞான முடலுண்மை யென்றிடும்.

4.

உடலுண்மை யென்றே யுலகை யாய்ந்திடும்
உடலுக்கின்ப முலகிலே யென்றிடும்.
உலகெலாந்தேடி யலுத்தது போனபின்
உடலைவிட் டுயிரிலே யின்பத்தைத் தேடிடும்.

5.

இன்பத்தைத்தேடி யிகசுக நாடிடும்
இன்பமிகத்திற்கண்டத னுண்மையுணர்ந்தபின்
மின்னற்போலது மறைவதென் றெறுக்கும்
ஒறுத்தபி னுண்மையை யுலகிலே தேடிடும்.

6.

உலகமோ கானற்சலமாம் கடுவெளித்தோற்றம்
உலகமே சதமெனி லுண்மைய துபோற்படும்
மலமிகு சிந்தையை மாயையீ லாட்டிடும்
மாலுமியில்லா மரக்கலமாக்கிக் கடுவெளி
தன்னிற் கரைந்திடுமதுவே.

7. கடுவெளிபோலக் கரைந்திடு மது காற்றுமல்ல
சுடுவெளிபோலச் சுட்டிடுமது நெருப்புமல்ல
நடுவெளியாக நின்றிடுமது ஆகாசமல்ல
நீர்நிலைபோலத் தோற்றிடுமது சலமுமல்ல.

8. சலமுமல்லவது பிருதிவியெனப் பேர்கொண்ட பூதமுமல்ல;
மலமான நெஞ்சின் தோற்றமே யல்லா லதிலொரு பேதமுமில்லை:
பேதத்தை நீக்கியே பேதமறக் காண்பார்க்கது கடுவெளித்தோற்றமாம்:
கடுவெளியாவதும் சுடரொளியாவதும் கடவுளேயன்றி வேறொன்றல்ல.

## "As We Think So We Are"

# "மனம்போலிருக்கும் மாங்கல்யம்"

"மனம்போலிருக்கும் மாங்கல்யம்." இந்தப் பழமொழியை நம்மிந்துக்களில்பெண்டீர்கள் வெகு சாதாரணமாய் வழங்கி வருகிறார்கள். ஒரு ஸ்திரீ மற்றொருவளைப் பார்த்து அவளுக்குண்டான மேன்மையையோ தாழ்மையையோ சிந்தித்து அதற்காஸ்பதமான காரணமுமவளிடத்திருக்கக் கண்டபொழுது "மனம்போலிருந்தது மாங்கல்யம்; அதற்கு யார் என்ன செய்யலாம்" என்று சொல்வது வழக்கம். சிறு பெண்களுக்குப் புத்தி சொல்லும் பொழுதும், 'அம்மா நீ யாரையும்பற்றிக் கெடுதல் நினையாதே: நம் மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்று சொல்வதுண்டு. இந்த அதி சாதாரணமான வசனத்தில் அதிமேலான உண்மையொன்று பொதிந்துகிடக்கிறது. அதை மேற்றிசையாரில் அதி மேலான விஜ்ஞான சிரேஷ்டர் இப்பொழுது தான் கண்டுபிடித்து நூதனமாக ஒருவாறு அநுஷ்டிக்கத் தொடங்குகிறார்கள். மேற்றிசையாருக்கு நூதனமாகப்படும் அதிமேலான வுண்மை, நம்மவர்க்குள் அதி சாதாரணமாக வழங்கிவரும் பழமொழியாம் பண்டைச்சொல்லாக விருக்கிறது. இதனால் வேதபூமியாம் இப்பரதகண்டத்தில் ஸத்யம் வெகு காலமாகத் தழைத்து விளங்கியதென்பது விளங்குகிறதல்லவா? இப்பழமொழியிற் பொதிந்து கிடக்கு முண்மை யென்னவெனில், நம்மனம் எப்படியிருக்கிறதோ, அப்படியே இருக்கும் நமக்கு வரும் நன்மையும் என்பதாம். மேற்றிசையார் கண்டுபிடித்திருக்கு முண்மையாவது: "நாமெப்படி நினைக்கிறோமோ அப்படியே எல்லாம் நமக்கு லபிக்கிறது"—என்பதாம். **எண்ணம்** மின்சாரத்திலும் அதி சூக்ஷ்மமான சக்தி வாய்ந்த ஒரு தத்துவப்பொருள் என்பது அவர்களுக்கு இப்பொழுது தான் உள்ளத்தில் உதித்து அதை பலமுறைகாராய்ச்சி வழியாக அவர்கள் சங்கையற வுணர்ந்து உண்மை யென்று ஒப்புக்கொள்கிறார்கள். இந்த வுண்மை அநாதிகாலந்தொட்டு இந்தியாவிலுள்ள பக்தர்கள், முத்தர்கள், யோகிகள், ஞானிகள் எல்லாராலும் ஸத்யவழியிற் செல்வதற்கு முதலுண்மையாகக் கொண்டு அநுஷ்டித்து வரப்பட்டிருக்கிறது. தாயுமானவர்,—

> "சந்ததமும்வேதமொழி யாதொன்றுபற்றினது தான்வந்துமுற்றுமெனலாற்
> சகமீதிருந்தாலு மரணமுண்டென்பது சதாநிஷ்டர் நினைவதில்லை
> சிந்தையறியார்க்கிது போதிப்பதல்லவே செப்பினும்வெகுதர்க்கமாம்"

—என்று வெகு அழகாக இந்த வுண்மையை யெடுத்துச் சொல்லியிருக்கிறார். நாம் உண்மையாக எண்ணும் எண்ணம்போல் எல்லாம் நமக்கு லபிக்கிறதாயிருந்தால், அப்பொழுது நமக்கு நேரிடும் இன்பதுன்பாதிவிஷயங்களுக்கெல்லாம் நாமே யல்லவோ காரணமாகிறோம். 'மனம்போலிருக்கும் மாங்கல்யம்". "மங்கல்யம்" இகபரசுக மெல்லாவற்றையும் அளிக்கக் காரணமாயிருக்கும் சுமங்கலித்வமாம். அதாவது பத்னித்துவம். ஒரு ஸ்திரீ அடையக்கூடிய எல்லாப் பேறுகளிலும் மேலானபேறு மாங்கலியப்பேறும். "தாயே, ஈசுவரி, என்னை என்ன செய்தாலுஞ் செய், மாங்கலியப் பிச்சைமட்டும் குறைவின்றிக் கொடுத்தரக்ஷி" யென்னும் இந்த ஒருவரனே தர்மபத்னிகளெல்லாரும் கோரும் வரனும். நாமறிந்த உத்தமபத்னியாம்



ஒரு இளமாது அவள் சிறு பெண்ணாயிருந்த காலத்தில் கணவனோடு வாழவந்த புதிதில் தன் குற்றங்குறைகளைத் திருத்திக்கொள்ளும் பொருட்டு, அவைகளைக் குறிப்பிட்டு வைத்து வந்த தினசரிக்குறிப்பில், அன்றன்றுடம் நடந்த சம்பவங்களையும் அதன்மேல் அவள் மனதுக்குப்பட்ட எண்ணங்களையும் குறிப்பிட்டபின், 'ஸ்வாமி, நல்லபுத்தியைக் கொடுக்கவேண்டும்; மங்கிலியத்தோடு போகவேண்டும்' என்ற பிரார்த்தனை தினப்பிரதிகுறிப்பின் கடைசியிலும் எழுதியிருந்தது. இப்பெண்மணி இந்த இடையறாச் சிந்தனையால் மிகவும் மேலான நல்வழியடைந்ததன்றி, சாவித்திரி சத்தியவான் உயிரைக் காத்தது போல், தன் பர்த்தாவுக்கு நேர்ந்த மரணாபத்தையும் தன் பக்தி வலிமையினால் நீக்கி, அவருக்கு உய்யும்வழிகாட்டி தானும் மாங்கல்யத்தோடு நல்ல பதவி யடைந்தார். இப்படிப்பட்ட புண்ணியவதிகள் இப்புவியில் எத்தனையோ பேர்களிருப்பதினால் தான் தர்மம் தலைகவிழ்ந்து போகாது எப்போதும்போல் நாலுகாலால் நடந்து தவழ்ந்து வருகிறது. ஆகையால் இதைவாசிக்கும் நண்பர்களே "நம்மனம் போலிருக்கும் மாங்கல்யம்" என்பதை உறுதியாய்க் கொள்ளுங்கள். உறுதியாய் நம்பி உண்மை வழிப்பட்டு நடவுங்கள். ஊருக்கு முலகுக்கு மொப்ப நடித்து உள்ளத்தில் கள்ளம் பாராட்டுவதை விட்டொழியுங்கள். ஏனென்றால் உங்கள் எண்ணமறிந்து உள்ளபடி உங்கள் எண்ணமிருந்தவாறு படியளிக்கும் **பரமன்** உங்கள் உள்ளத்திலேயே நீங்களறியாது வாசஞ் செய்து வருகிறான். உங்கள் **உள்ளமுடையானை** ஏமாற்ற உங்களால் முடியாது. தேகத்தில் உருவத்தில் ஸ்திரீ புருஷ வித்யாசமெப்படியிருந்த போதிலும், தேகம் விட்டு தேகியாம் ஜீவனுக்கு **அகமுடையான்** அவன் ஒருவனே. எல்லாவுயிர்களுக்கும் புருஷனாயிருத்தலால் அவனைப் புருஷோத்தமனென்று வேதங்கள் சிலாகித்துக் கூறுகின்றன. இந்தப்பரமபுருஷனுக்கு ஸ்திரீ புருஷரூபமான நாமெல்லாரும் ஸ்திரீகளே யாவோம்: இவன் கையால் தொட்டுக் கட்டிய தாலி நம்கழுத்திலிருந்தால் தான் நமக்கு எல்லா சுபமும் சுகிர்தமுமுண்டு. புருஷார்த்தம் நான்கும் இந்த மாங்கல்யப்பிச்சை யொன்றினாலேயே நாம் அடையப் பெறுவோம். நாம் நமது ஆண்பிள்ளைகளுக்குக்கால்கட்டுக் கட்டுவதாகச் சொல்லி ஒரு பெண்ணைப்பிடித்து அவள் கழுத்தில் மூன்று முடிச்சும் முற்றப்போட்டு இருவரு மினிப் பிரிவின்றி சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் கட்டின கட்டுக்குப் பங்கமின்றி யிழுத்துக் கொண்டு உண்மை வழிப்பட்டுய்யுங்கள் என்று வாழ்த்துகிறது போலவே, எல்லாம்வல்ல கடவுள் ஜீவகோடிகளை யெல்லாம் சிருஷ்டித்து மானுடசீவன்களை யெல்லாம் தனக்கு ஒரு கால்கட்டாகக் கட்டிப்போட்டுக்கொண்டு, நாம் உய்யும்படி நம்மோடு கூட விருந்து மன்றாடி வருகிறார். இந்த உண்மையை யறிந்தே ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்,

> "சித்தமெனும் திண்கயிற்றாற் றிருப்பாதம் கட்டுவித்த
> வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே."

யென்று செப்பியுளார். அற்பஜீவனாகிய நாம் ஒரு பெண்ணை மனைவியாகக் கொண்டு அதனால் வரும் ஸம்ஸாரபலத்தைத் தாங்கமாட்டாது தவிக்கிறோம். எல்லா ஜீவன்களையும் மனைவியாகக்கொண்ட பரமாத்மா, பற்றற்று விளங்கும் பரஞ்சோதியாதலையால், சம்ஸாரபெந்தமென்பது சிறிதுமின்றி ஆக்கல் முதல் அழித்துக்காத்த லீறாகவுள்ள ஐந்தொழில்களையும் ஒரு லீலா விநோதமாக நடத்திவருகிறார். அவருக்கு விளையாட்டு நமக்கு வினையாகமுடிகிறது. ஏன்? ஸ்ரீகிருஷ்ணபகவான் சொன்னதைக் கேளுங்கள்: "நான் எல்லாவற்றையும் சிருஷ்டித்துக் காப்

பவனுயிருந்தும் நான் பற்றற்று விளங்குவதால் அக்கர்மங்கள் என்னைப் பாதிப்பதில்லை" ஆகையால் கர்மபலத் தியாகமாம், உண்மையான அகத்துறவுபூண்டொழுகிவருவோமானால், நாமும் கர்மபந்தமின்றி, பரமபுருஷனுக்கு மனதொத்த தர்மபத்னிகளாகவிருந்து அவரோடு விளையாடிவரலாம், இதற்குவேண்டியது பற்றற்ற தன்மையும் பக்தியுமே. பற்றற்றுப்போனால் பக்திதானே யுண்டாகும். காய் பழுத்து வீழ்ந்தால், வித்துதானே முளைக்குமல்லவா? இந்த வுண்மையை யுணர்த்தவே "விட்டுப்பிடி" யென்னும் திருவார்த்தையைத் திருவாய்மலர்ந்தருளியது— இந்த சூக்ஷ்மவிதி யுணர்ந்தே மணிவாசகப் பெருமானும் அவர் "திருப்புலம்பலில்,"

"உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்;
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா! உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

—என்று மனதுருக வெகு அழகாகப் பாடியுள்ளார். இப்படிக் கன்றையீன்ற தாய்போல் மனங் கசிந்து அவர் திருவடிக் கமலத்தையே நினைந் துருகிய பக்தராம் அன்பரைக்காப்பாற்ற அவரை ஆட்கொண்ட பரமசிவன் என்ன என்ன அதிசயங்களெல்லாஞ் செய்து விளையாட்டுக் காட்டினார்! குதிரை வாங்கக் கொடுத்த பொன்னை அவர் சிவனடியார்க்கு வழங்கிவிட்டு குருபாதம் கிடைத்ததென்று மகிழ்ந்து தேனுண்ட வண்டுபோல் ரீங்காரம் செய்துகொண்டு பக்திவெறி மேலிட்டுத்தடுமாறித் திரும்ப, குதிரைகளெங்கே, குதிரை வாங்கக் கொடுத்த பொன்னெங்கே யென்றுசாவி, வருத்திய அரசனுக்குக் குதிரை வருமென்று சாக்குச் சொல்லுவித்து, பக்தன் வாக்குப்பொய்யாகாது காக்க, ஊரிலுள்ள நரிகளை யெல்லாம் பிடித்துப் பரிகளாக்கித் தானும் "துரியப்பரி" யிலேறி ஒப்புயர்வற்ற குதிரை வியாபாரியாக வந்து காட்டினார்.—தான் வந்த உண்மையைத் தனது பக்தன் ஒருவனன்றி மற்றப்படியுள்ள மன்னனும் மகா ஜனங்களு மறியாமையால், பிந்தி பரிகளை யெல்லாம் நரிகளாக்கி அவை ஊளையிட்டுக் கொண்டு ஊரைப் பாழாக்கும்படிச் செய்தார். இன்னமும் அரசனுக்குப் புத்தி வராமை கண்டு வைகயில் வெள்ளத்தை வரவிட்டு, உடைப்படைக்க ஊரெல்லாங் கூடி உக்கிரமா யுழைக்கையில், தான் அங்கு பிட்டு வித்த அநாதைக் கிழவியாம் வந்தியம்மை யென்பவளுக்கு, பிட்டுக்கு மண் சுமப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டு, பிட்டை வாங்கித் தின்றுவிட்டு, வேலை யொன்றுஞ் செய்யாது, மரத்து நிழலில் பள்ளிகொண்டிருந்து, கடைசியில் அரசன் விசாரணை செய்து, வேலை செய்யாமைக்காகப்பிரம்பா லடிக்க, அந்த அடி அண்டசராசரங்களிலெல்லாம் பட்டு உறைக்கும்படிச்செய்து ஒருகூடை மண்ணைக் கொட்டி யுடைப்பை யடைத்துவிட்டுத், திடீரென மறைந்து அசரீரியாய் ஆகாசத்திற் றோன்றி தான் செய்த திருவிளையாட்டுகளின் மர்மத்தை யுணர்த்தி, தன் பக்தனை இனி வருத்தாதபடி, அரசனுக்குப் புத்திசொல்லி ஆசீர்வதித்து அந்தர்த்தானமாயினர் என்பது ஐதிகம். இந்தத் திருவிளையாட்டை யின்றைக்கும் மதுரையில் ஆவணிமூலத்தன்று பிட்டுத்தோப்பில் ஸ்வாமி எழுந்தருளிப் பல்லாயிரம் ஜனங்கள் தரிசிக்கப் பெரிய உற்சவமாக நடத்தி வருகிறார்கள். ஆனால் இத் திருவிளையாட்டின் மர்மத்தை யுணர்வார் அபூர்வமாகவே யிருப்பார். ஐதிகமாக நடக்கும் திருவிளையாட்டுகளத்தனையும் அத்வைதமாகப் பார்க்கில் நம் முள்ளத்துக்குள்ளே யுண்மையாகப்படும். இந்த ஆவணிமூலத் திருவிழாச்சிறப்பை ஐதிக பாவனைக்கும் அத்வைத பாவத்துக்கும் பொருந்த நவமணி மாலை



யாகத் "திருவிளையாட்டுச் சிறப்பு" என்னும் தலைப்பெயரிட்டு ஆனந்தத்தாய்மொழிக்கு முன்னுரையாக்கிச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை யிதன்கீழே பார்த்தறிந்து கொள்க. இங்கே "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்னும் பெண்டிர் வசனத்திற் பொதிந்துள்ள பெரியதோர் உண்மையை விளக்கி வற்புறுத்திக் காட்டுவதே நம் கருத்தாய் இதைத் தொடங்கியதால் அந்த மட்டோடு இதை முடிப்போம்.

ஸத்யானந்த:

"THE SACRED SPORTS—THEIR INNER MEANING."

(Avani-moolam festival)

## "திருவிளையாட்டுச் சிறப்பு"

### (ஆவணி மூலம்)

உந்திக் கமலத்துறையுமவன் சிரங்கொய்தான்
பெந்தமறுத்தாள்வான் பாரினில் வந்தவதரித்தான்
முந்தியவன்தாள்கொடுத்து முழுதுமடிமைகொண்டான்
பிந்தியவனிடர்தீர்ப்பான் பரியாக்கிநரியாக்கிப் பாரில்மிக விந்தைசெய்தான்.

புந்திநதி வைகைவெள்ளம் புலன்பொறியிற் பாயவிட்டு
மந்தமதிபாண்டியனார் மனச்செறுக்கடக்கவெண்ணி
வந்தியம்மை கூலியாளாய் வந்துவிளையாட்டுக்காட்டி
சந்ததமுமுண்மைதனை யுலகறியச்சாற்றுவித்தான்
விந்தைமிகுசுந்தரனார் விளையாட்டையென்சொல்வேன்!

அகங்கரித்த பிரம்மாவின் ஐந்து சிரசுகளில் ஒன்றைக்கொய்த பரமசிவனானவர், தன்னையே சரணமென்றடைந்த பரிபக்குவம் நிறைந்த பக்தனது துக்கத்தைப் போக்குவான், பிறப்பிறப்பென்னும் நிராச்சுற்றுச்சுழற்சியிற் பட்டுழலும் அவன் பெந்தங்களையறுத்து அவனை யாட்கொள்ளவேண்டி கருணைமிகுதியால், இப்புவியில் வந்து 'மான்காட்டி மான்பிடிப்பான்' செய்கைபோல், மானிட ரூபமெடுத் தவதரித்தான். அவதரித்த பரமசிவன் குருவாகத் தோன்றி தாள்கொடுத்து அப் பக்தன்மனதை முற்றுங் கொள்ளைகொண்டு, உடல் பொருளாவியுமொருங்கே தன்னதாக வேற்றுக்கொண்டு அவன் திரிகரணங்களையும் தனக்கடிமையாக்கி, பிந்தி அதுபற்றி அப்பக்தனுக்கு நேர்ந்த துன்பங்களைத்துடைக்குமாறு, நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும் பலவிதமாக ஜாலவித்தைகள்செய்து உலகத்தார் அதிசயிக்கும்படி செய்தான். இவ்வளவும்செய்த எம்பிரான் இம்மட்டோடு நில்லாது அறிவு நதியாகிய வைகையில் பிரவாக முண்டாகச்செய்து, அதை நகர்ப்புறங்களிலெல்லாம் பாயவிட்டு, மந்தமதியுள்ளவனான பாண்டிய ராஜன் மனச்செறுக்கை யடக்கவெண்ணி, அநாதையாம் புட்டுவிற்று ஜீவிக்கும் ஏழைக்கிழவி வந்தியம்மைக்குக் கூலியாளாகவந்து அவள் பங்குக்குள்ள கரையைக் கட்டவுடன்பட்டும் அப்படிச் செய்யாது ஹடம் பண்ணி விளையாட்டுக்காட்டிப் பிரம்படிபட்டு

வேலையை முடித்துப் பிந்தியெக்காலமும் உலகத்தார் உண்மையை யறியும்படி ஆகாசவாணியின் அசரீரிவாக்கினால் உள்ளதை யுள்ளபடி விளங்கவைத்தான். இப்படி மிகுதியும் வேடிக்கைகள் செய்யும் அழகனும் என் நாதன் விளையாட்டுச்சிறப்பை யான் என்னென்று செப்புவேன், எதென்றியம்புவேன்! ஒன்றுஞ்சொல்லவறியாது அவன் திருவிளையாட்டி லீடுபட்டுப் புருஷனை யடைந்த புண்யவதிபோல் மௌனஞ் சாதித்து நிற்கிறேன் என்றபடி. இற்றைக்குச் சுமார் எண்ணூறு வருஷங்களுக்குமுன் எம்பெருமானார் அவர் பக்தசிகாமணியாம் திருவாதவூரடிகளுக்குச் செய்த லீலைகளை வருஷப் பிரதிவருஷமும் பக்தஜனப்பிரீதியார்த்தம் மதுரையம்பதியில் வைகைக்கரையில் ஆவணிமூலத் திருவிழாவை முன்னிட்டு ஐதிகபாவனையாகச்செய்து காட்டுகிறார்கள். கோயிலில் இவ்வுத்ஸவம் வருஷத்துக்கொரு முறையே நேர்வதானாலும், எம்பெருமான் திருப்பாதத்தைச் சிந்தையில் வைத்து "கற்றாவின் மனம்போலக் கசிந்துருகும்" பக்த சிரேஷ்டர்களுக்குக் கடிகைதோறும் இத்திருவிளையாட்டைச் செய்துகாட்டுகிறார். ஆனாலதை சாதாரணஜனங்கள் உணர்வதற்கில்லை. வைகையிற் பிரவாகம் வந்தும், மந்திரிமார், வந்தியம்மை கூலியாளாய் வந்தவர் திருமேனியின் காந்திகண்டு அவரைத்தீண்ட அஞ்சியும், மந்தமதியாம் அரிமருத்தன பாண்டியன் மனச்செருக்கால் அவரைப் பிரம்புகொண்டடித்துப் பிரமித்து நின்றதுபோல், புத்திமான்களென்றும், படித்தவர்களென்றும் பேர்கொண்டு விளங்கும் உளக்கண் மழுங்கிய உன்னதஸ்தானத்திலுள்ளார் எத்தனையோ பேர்கள், எம்பெருமானைப் பொற்பிரம்புகொண்டு அடிக்காது அதிலும் சூக்ஷ்மமானதும், வடுமாறாத்தன்மைபற்றி அதிலுங்கொடுமை புரியத்தக்கதுமான வாக்கென்னும் நாப்பிரம்பாலடித்து எம்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள "ஏழைமனம்" நோகச்செய்கிறார்கள். இவர்கள் வன்மையிலும் புன்மை பெரிதாயுளதுகண்டு அடியார் உள்ளம்புழுங்கி உடம்புவெதும்பி, வன்னெஞ்சராம் இவர் உள்ளமுருகச் செய்தொழிலறியாது பரிதவிக்கின்றார்கள். தஞ்சமென்றடைந்தார்க்கஞ்சே லென்று பயங்கொடுக்கும் ஆண்டவனையன்றி இவ்வடிமைகளுக்கு ஆக்கமுஞ் செல்வமும் வேறொன்றிலாதால், விரும்பியதைப்பெறாத இளங்குழவி விம்மி விம்மியழுவதுபோல், தவித்தார் துன்பந்துடைக்குந் தயாநிதியாம் பரமதயாளுவின் பாதத்தையே சிந்தித்துப் பரிதவித் தழுவதன்றி இவர்கள் வேறொன்றறியார். இப்படிப்பட்டதோர் சமயத்தில் வெளிவந்தது இத் "திருவிண்ணப்பம்." அதை யிங்கு தீட்டிவைப்பாம்:—

"பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்ட நீ
மட்டுக்குமிஞ்சி மனங்கல்லாச் சமையலுற்றால்
எட்டுக்கு முள்ளே யிருந்தவரை யாட்டுவித்து
அட்டுண்டு வாழ்வார்க் கதிதியா வந்தாளாயோ!"

—பிட்டுக் காரியாம் †வந்தியம்மை சுட்டபிட்டுகள் எம்பிரான்வரவும் எல்லாம் உதிர்ந்து உதிர்ந்து போயின. இக்கன்னெஞ்சர் வித்யாகர்வம் மேற்கொண்டு சுடும்பிட்டுகள் எல்லாம் கல்லாகப் போகின்றன. இவருடைய எண்ணங்களும் பாவனைகளும் மனதுருகும் சுபாவமுள்ளதாக

† 'வந்தி' யென்பதற்கு வாயு, மலடு என்றிரு அருத்தங்களுண்டு. வாயுவம்மை யென்பதை மனதுக்குக் காரணமாம் அந்தக்கரணத்துக்கு உவமையாகக்கொள்ளலாம. விவாகமாகிப் பிள்ளைபெறாதவர்களை மலடியாதலால், பகவானைச்சிந்தையிலே வைத்துப்பூஜித்தும் அவன் திருவட்பிரசாதமாம் கருத்தாங்கி கோடிசூரியோதயமானாற்போலும் பிரகாசிக்கும் ஞானபாஸ்கரனும் குழவியைப்பெறாத சீவன்கள் மலடிகளுக் கொப்பாவார்களென்பதிற்சந்தேகமில்லையே. பக்குவனும் முமுக்ஷுவுக்கு இப்பேர்பொருந்தும்.



வின்றி, மனதைக் கல்லாக்கும் சுபாவமானவையாக விருக்கின்றன என்றபடி. இவர்கள் மனதையுருக்குவான் பரமசிவனே பிக்ஷாடனராகவந்து கபாலத்தை பிச்சையோடாகக் கொண்டு இவர்களிடத்து உயிர்ப்பிச்சை யிரந்து குடித்தாலன்றி யிவர்களுக்குப் பக்தியும் சிரத்தையு மெங்கிருந்து வரும்! அடியார் கிருபையும் அன்பும் இவர்கள் மிடிதீர்க்கப் போதாவாமென்பது கூறப்பட்டது. பகவான் நேரில்வந்து லீலைசெய்தால், "வை-கை" வழியாக, (ஆசீர்வசனார்த்தம் இவர்கள் தலையில் கைவைப்பதால் என்றபடி,) "புந்திநதி" யென்னும் மேலறிவாகிய வெள்ளம் கரைபுரண்டுவந்து, அவர்கள் புலன் பொறிகளிற் பாய்ந்து அவைகளை அப்பிரவாகத்தில் மூழ்கச்செய்து, துரியாவஸ்தை யுண்டுபண்ணி, ஸாத்விகமனச்செறுக்குக்குக் காரணமாகிய ரஜோதமக் கலப்புகளை யொழித்து சித்தி சக்திகளிலும், பக்தியே அவருள்ளத்தைக் கவரத்தக்க உசித வலையாமென்றுகாட்டி, அகங்கார மமகாரங்களை யறப்போக்கி, ஜாக்கிர, ஸ்வப்பன, சுழுத்தி, துரியாவஸ்தைகள் எல்லாவற்றிலும் (சந்ததமும்) பேதமறச்சத்தியத்தையே கண்டு களித்தநுபவிக்கும், சகஜசமாதியாம், திராப் பெரும்பறை சாற்றுவிப்பார், (நாதத்தைக் கிளப்பி நாதாந்தத்தில் சேர்த்து வைப்பார்) என்றுணர்க. இப்படி நிமிஷந்தோறும் சொல்லமுடியாத விளையாட்டுகள் செய்துகொண்டிருக்கும் அழகுசுந்தரராம் என் பிராணநாதர் பண்டைக்காலத்து அவர் அடியார் குழாத்தோடு வந்து அடிமைகொண்ட மணிவாசகப் பெருமானும் குருமணியை உலகறிய ஆட்கொண்டதுபோல், நாயினும் கடையேனாகிய ஏழைமீ திரக்கங்கொண்டு அவரது அருட்பிரவாக வெள்ளத்தில் மூழ்கச்செய்து புலையனும் பொய்யனைப் புனிதனாக்கி அவர் திருவடிக்கண் நீங்காதிருக்கத் திருவருள்சாதித்துச் சர்வசாம்பிராஜ்யமு மளிக்கப்பெற்ற யான் அவர் திருவிளையாட்டுச் சிறப்பைக் கேட்டும் சிந்தித்தும் மனமுருகாதிருப்ப தெவ்வாறென்பது, எல்லா உண்மைப் பக்தர்களுள்ளத்திலும் இந்த ஆவணி மூலத்தன்று உதித்தெழும் உத்தம சிந்தையாயிருக்கு மென்பது சத்தியம்.

"செம்மைநல மறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கிநாய்சிவிகை யேற்றுவித்த
அம்மை யெனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே!!."—திருவாசகம்

---

THE ILIAD OF HOMER.

## ஹோமர் என்னும் மகாகவி பாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

152-வது பக்கத் தொடர்ச்சி.

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

36. சிறைகொள் சுந்தரச் சேயிழைதனையவ னலத்தில்
நிறையுமாசையா னீட்டிய நிதியையு நினையா

துறைய வென்னிடத் திருத்தலா லும்பருக் கென்மேற்
செறியும் வெஞ்சின மூண்டதோ சிரிதுமொழிந்தாய்.

(இ-ள்.) சிறைப்பிடித்துக்கொண்ட அழகிய மடந்தையை அவள் மேல்வைத்த மோகத்தினாலே அவள் தந்தை கொடுப்பதாகச்சொல்லிய திரவியங்கள் ஒன்றையும் கருதாமல் என்னிடத்தே இருத்திக் கொண்டதனாலேதேவர்களுக்கென்பேரில் ஆற்றற்கரிய கொடுஞ்சினம்மூண்டதோ? நல்லசெய்திசொன்னாய்!

37. அழகிலுங்குணத் தகவிலுமறிவிலு மாக்கும்
எழில்கொண்மா வினைத்திறத்தினு மிணையிலா துயர்ந்து
மழைமதர்க்கணென் கிளிதினிவனப்பினுஞ் சிறந்த
குழைகிழித்தவேல் விழியினைமுகத்தலுங் கொடிதோ.

(இ-ள்) அழகிலும், நற்குணங்களிலும், அறிவிலும், காரியத்திலும் தனக்கொருவர் சமானமில்லாதபடிச்சிறந்து குளிர்ந்து மதர்த்த கண்களையுடைய என் பட்டமகிஷியாகிய கிளிதினியிலும் அழகிற் சிறந்த மடந்தையை நான் விரும்புதல் கொடிய செய்கையாகுமோ? அதற்குக் கதிர்க்கடவு ளிவ்வாறு கோபிக்கவேண்டுமோ?

38. கருணையார்தருங் கடவுளர் கன்னியைத் துறக்கென்
றருள்செய்வாரெனி லின்னே யனுப்புவ லெனக்கோர்
வெருவுவெங்குறை நேரினும்விரும்பு மென்குடிகட்
கொருவெந்தீமையு முறுவகையளித்தலெற் குரித்தே.

(இ-ள்.) அருள்நிறைந்த தெய்வங்கள் நீ அக்கன்னிகையைச் சிறைவிடுத்தனுப்ப வேண்டு மென்று எனக்குக்கட்டளை யிடுவாராயின் நானிந்த க்ஷணத்திலே அவர்கள் ஆக்கினைப் பிரகாரம் அனுப்பி விடுவதில் ஆக்ஷேபனையில்லை. எனக்கு எவ்வளவு கோரமான விபத்துக்கள் வந்தபோதிலும் குற்றமில்லை நான் விரும்பும் என்குடிகளுக்கு யாதோர் இடுக்கணும் வாராதபடிக் காத்தலே எனக்குரிய கடமையாகும்.

39. கோதுறுவகை குடிகளைப்புரந்திடற் பொருட்டு
மாதைநீக்குவன் மற்றிதை மனத்து நீருணர்ந்து
தீதுறமலென் குறைகளைத் தீர்த்தலுங்கடனால்
ஏதிலாமென வெனைவிடலழகன்று நுமக்கே.

(இ-ள்) என் பிரஜைகளுக் கொருகெடுதி யுண்டாகாதபடிக் காக்கவேண்டி நான் விரும்பிய நங் கையை விட்டுவிடுகின்றேன். இச்செய்கையை நீங்கள் மனத்தில் வைத்து எனக்கோர் குறையும் உண்டா காதபடிப் பார்த்துக்கொள்ளுதல் உங்களுக்குக்கடமையாகும். வறியவர்போல நான் வருந்தும்படி நீங்கள் என்னைக் கைவிடுதல் உங்களுக்கு முறைமையன்று அந்த இளைப்பம் உங்களையேசேரும்.

40. போரின்வென்றநம் மெயவரிலெவர்களும் பொருந்தச்
சீரும்செல்வமுந் தேரலர் பாற்பறித் தடைய
வீரனாகியவேந்தனை வெறுங்கைய னென்னப்
பாருளார்பகர்ந் திகழ்ந்திடா திடற்றலும் பாரமே.

(இ-ள்.) உயுத்தத்தில் வெற்றிபெற்ற நம்வீரர்களில் ஒவ்வொருவரும் அவரவர்க்குத் தக்கபடி அனேக செல்வமும் சிறந்த பொருள்களும் பகைவரிடத்திலிருந்து கவர்ந்து கொள்ள, அவர்களெல்லா ருக்கும் தலைமை பூண்டிருக்கும் வேந்தனுக்கு மாத்திரம் ஒன்றும் கிடைக்கவில்லையென்று என்னைக் கைகொட்டி நகைத்திகழா வண்ணம்செய்தல் உம்முடைய பாரமாகும் என்றான்.



41. அரசனித்திற மறைதலு மக்கிலன் கேட்டுப்
புரசைமால்களிற்றி யானையிற் பொங்கினேன் சீற்றம்
வரிசைமாறிய மாற்றநீ வழுத்தினை யாங்கள்
பரிசதாப்பெறு மொண்பொருள் பறித்திடக் குறித்தே.

(இ-ள்.) இவ்வாறு அகமம்னன் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு அக்கிலன் பெருமதங் கொண்ட யானைபோலக் கோபாவேசனாகி அரசனைநோக்கி, "நீ நாங்கள் பரிசாகப்பெற்ற பொருள்களை அபக ரித்தல் குறித்து இப்படிப்பட்ட முறைபிறழ்ந்த வார்த்தைகளைக் கூறினாய். அதை நானறியேனோ".

42. வெய்யபோரினில் வீரரை யெதிர்த்தனம் விளித்துச்
செய்யபேரர ணழித்துவண் ணகர்பரி சிதைத்துப்
பெய்யுநீணிதி யனைத்தையும் பெய்துநின் கையில்
ஐயகோவெனவறிதி யாமகலவோ வறைந்தாய்.

(இ-ள்.) கொடிய போரினில் அநேக வீரர்களை எதிர்த்துக்கொன்று, அநேக சிறந்த கோட்டை களை யழித்து, வளம் பொருந்திய நகரங்களைச் சிதைத்துப் பெற்ற பெருஞ்செல்வ மெல்லாவற்றையும் உன் கையில் கொட்டிக்கொடுத்துவிட்டு, நாங்கள் ஐயோ வென்று வெறுங் கையராய்ச் செல்லவோ நீ இவ்வாறு கூறினாய்?

43. நன்றுகூறினை நலந்தரு புகழினை யிகழ்ந்து
துன்றுகொள்ளையை விரும்புதி யாமெனிற் றன்னர்
வென்றிமாபுரம் வீழ்ந்தபின் விறுப்புறப்பெறுதி
அன்றியெம் பரிசிழக்கலே மறிதியென் றறைந்தான்.

(இ-ள்.) நீ கூறினது நன்றாயிருக்கின்றது. பெருமையும் புகழும் விட்டுப்பொருளொன்றையே மேலாகக்கருதிக் கொள்ளை கொள்ளுதலை இச்சிப்பாயானால், பகைவர் நகராகிய தராய் நகரை வென்ற பின்பு வேண்டியபடிப் பெற்றுக்கொள்வாயாக அல்லாமல், யாங்கள் பெற்ற பொருள்களைப்பிடுங்கிக் கொள் ளச்சம்மதிக்கமாட்டோம். அறிவாய் என்றான்.

44. கேட்டுவேந்தனுங் கிளத்தின னீபெறக்கிடைத்த
நாட்டமாரெழி னறுநுதலனையுண் டுவக்கப்
பூட்டுவாரிளம் புணர்முலைப் பூங்கொடி யெனக்கிங்
கூட்டுமின்பினைத் துறப்பனோ வொள்ளிதிங் குரைத்தாய்.

(இ-ள்.) அதுகேட்டு அகமம்னன் சொல்லுகின்றான்; உனக்குக்கிடைத்ததோர் மாதோடும் நீ சுகித்திருப்ப நான்மாத்திரம் எனக்குக்கிடைத்த மங்கையை விட்டுவிடுவேனோ? நன்றாகச் சொன்னாய்!

45. வலியைநீவயப் போரினில்வானவன் போலப்
பொலிவையாயினும் யான்பெறும் பொற்கொடி தன்னைச்
சிலைவலாய்விடுத் திடுகெனச்செப்புநின் மொழியால்
அலைபுநெஞ்சனாய் விடுத்திடற் கமைவனோவறைதி.

(இ-ள்.) நீ மகாபராக்கிரமசாலிதான், ஒப்புக்கொண்டேன்; உயுத்தத்தில் தேவனைப்போலச் சௌரியத்தால் விளங்குவாய். ஆயினும், உன் சொற்படி யெல்லாம் நான் கேட்பேனென்றெண்ணி விட்டா யோ? நீ என்னை இப்பெண்ணை விட்டுவிடு என்று சொன்னமாத்திரத்திற்றானே எனக்கோர் நிச்சயபுத்தி யில்லாமல் உன்சொற்படியே விட்டு விடுதற்குச் சம்மதிப்பேனோ? இப்பேதை யெண்ணம் ஏன் கொண்டாய் சொல்வாய்.?

46. பீடுமேவிய பிறைநுதற் பெண்ணமு திவட்கிங்
கீடதாம்பெரும் பொருளெனக் கீகுகவன்றேற்
கூடும்வன்சிறைப் படும்பிறகோற் றொடிதன்னை
நாடியே வலைத்துடனிவன்பற்றுவ னவின்றேன்.

(இ-ள்.) என்னை அனுப்பிவிடச்சொல்லும் இந்த அமுதம் போன்ற அரிய பெண்ணுக்கீடாகப் பெரும்பொருள் எனக்குத்தருக; இல்லாவிடில், உன்னிடத்திற் சிறைப்பட்டிருக்கின்றபெண்ணினை வலைத் தாரமாகக்கொள்வேன்; இது உனக்குத்தெரியத்தக்கது.

47 ஆடலேறிய வாசகன் பொருள்கொலோவல்லால்
தேடருந்திறல் யூலிசன்றிருக்கொலோ நினது
நீடுசெல்வமோ வொன்றனை நேர்ந்ததையுறுவேன்
பீடுநுஞ்சினப் பெருமையும் பிழைப்பதென் னெனையே.

(இ-ள்.) வலிமைமிக்க ஆசகனது பொருளோ, அல்லது பராக்கிரமசாலியாகிய யூலிசன் செல்வமோ, அல்லது உன்னுடை நெடிய செல்வமோ, யாதேனுமொன்றை எனக்கு இஷ்டமானதைக் கவர்ந்து கொள்வேன். உங்கள் பெருமையும் கோபமும் என்னை என்னசெய்யக்கிடக்கிறது?

48 ஆகபின்னிதின் றரிவையை யருங்கலத்தேற்றி
ஓகையோடுவெங் கதிரவன் பூசனைக்குரிய
சேகில்செம்பொருள் திரண்டிடநும்மிலோர் செம்மல்
ஏகவென்பொருட் டெழின்மலி கிரிசயாநகர்க்கே.

(இ-ள்.) இவ்விஷயம் பின்பு யோசித்துக்கொள்வோம். இப்போது கிரிசையைக் கப்பலேற்றிக் கதிரவன் பூசைக்கு வேண்டிய சாமக்கிரியைகளுடனே, நான் நேரிட்டுச் செல்லுதற்கில்லாமையாலே, உங்களில் யாராயினும் ஒருவர் கிரிசமாநகருக்குச் செல்லக்கடவர்.

49 கிரிதைவேந்தனோ வாசகனோ மதிக்கிளர்வாற்
பெரிதுமோங்கிய பெயர்மலி யூலிசன்றானோ
அரியவாற்றலா ரக்கிலனவன்கொலோ வனைந்தாங்
குரியபூசனை புரிந்திடுக கதிரவனுவக்க.

(இ-ள்.) கிரிதைநாட்டுக் கதிபதியோ, அல்லது ஆசகனோ, அல்லது மதியில் வல்ல பெருமை பெற்ற யூலிசனோ, அல்லது அதிபராக்கிரமசாலியாகிய அக்கிலன்தானோ சென்று சூரியதேவன் மனங் களிக்கும்படி அத்தேவனுக்குரிய பூசனைகளைச் செய்துவருக. என்றான்.

வேறு.

50. ஆங்கது கேட்டலு மக்கிலனென்பான்
ஓங்குருமேற்றி லுருத்துரை செய்வான்
தீங்குறுசிந்தை செருக்கு மிகுந்தாய்
பாங்கலயாது பகர்ந்தனை யின்றே.

(இ-ள்.) அதனைக்கேட்டமாத்திரத்தில் அக்கிலன்இடிபோலக் குமுறிக்கோபித்துச்சொல்லுகின்றான். தீங்கிழைக்கும் சிந்தையில் கர்வாதீதனாகிச் சொல்லத்தகாதவார்த்தைகளை என்னே எண்ணமற் கூறினாய்?



51 வேந்த னெனும்பெயர் மேயினையல்லால்
ஏந்தியவுள்ளி லிருந்ததை யில்லாய்
ஆந்துணை நின்னல ணைந்திட லல்லால்
போந்தவர் நன்மை புரிந்திடலில்லாய்.

(இ-ள்.) வேந்தனென்று பெரிய பெயரைப் பெற்றாயே யல்லாமல் வேந்தருக்குரிய பெருமைக் குணங்கள் உன்னிடத்தில் யாதுள்ளது? சுயகாரியப்புலியாய் உன் சுயநன்மையை ஆராய்தலல்லாமல் உன்னை நம்பி உனக்குத் துணையாக வந்தவர்கள் எக்கேடுகெட்டாலும் உனக்காவதொன்றில்லை. அவர்கள் நன்மையைநீ எவ்வளவேனும் விரும்பினாயில்லை.

52 மாற்றமி வண்ணம் வழங்கியபின்னர்
ஏற்றுன தாணை யியற்றுநர் யாரே
சீற்றமுறும்பகை மீதெவர் செல்வார்
ஊற்றமு மொண்மையு முற்றவர்தாமே.

(இ-ள்.) இவ்வாறு அவமதிப்பான கொடிய வார்த்தைகளை நீ சொல்லியபின்பு உன் ஆக்கினையை யேற்று உன் சொற்படிநடக்க எவர்தாமுடன்படுவார்கள்? வலிமையையும் மானமும் பெற்ற வீரர்களில் எவர் உன்னை வேண்டிப்பகைவர்மேற் பொருதற்கெழுவார்கள்?

எஸ். முத்து ஐயர்.

## ஸ்ரீ சைலம்.

**தலமகிமை** :—இத்திருப்பதி, திருப்பருப்பதம், சீபர்ப்பதம், மல்லிகார்ச்சுனம், என்ற பெயர்களாலும் வழங்குகிறது. நித்தியஸ்மரணத்தால் அதிபாவங்களையும் நசிக்கவல்லனவாய்க் கூறப்படும் பஞ்ச சைலங்களில் இஃதொன்று; இதன் சிகரதரிசனமே மறுபிறப்பின்றி மோக்ஷத்தைத்தரும் என்பது மற்றோர் பழையவாக்கு. வடநாட்டிலே, அடைதற்கு மிகவும் அருமையான மலைப்பாங்கிலே உள்ளதாயினும், இப்பதி, தேவார கர்த்தர் மூவராலும் சென்று தரிசிக்கப்பட்டு, அவர்கள் திருவாக்கால் பாடல் பெற்றிருக்கின்றது. "பார்கெழு புகழோ வாப்பருப்பதம்." என்று ஞானசம்பந்தரும், "செல்லலுறலரிய சிவன் சீபர்ப்பத மலையை அல்லலவைதீரச் சொன்ன தமிழ் மாலை" களால் சுந்தரரும், "அங்கண் மாலுடைய ராய ஐவரால் ஆட்டுணாதே உங்கள் மால்தீர வேண்டின் உள்ளத்தால் உள்கியேத்தும்" என்று அப்பரும், இதைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். சிலாதிமுனிவரது கடைசிக் குமாரராகிய பர்வதேசுர முனிவரின் கடுந்தவத்துக் கிரங்கி, அம்முனிவர் தவமியற்றிய இம்மலைச் சார்பிலே சிருஷ்டியிலுள்ள சராசரப்பொருள்கள் அனைத்தும் உளவாமாறும், அவற்றைக் காத்தற்கு வீரபத்திரரும் பைரவரும் அம்பிகையும் ஆங்கெழுந்தருளி யிருக்குமாறும், சிவபெருமான் அம்முனிவருக்கு வரமளித்ததுமன்றி, மூன்றாவது வரமாக, அம்முனிவர் சிரமீது தமது திருவடிகளைப் புனைந்து ஜோதிலிங்கஸ்வரூபமாகத் தாமும் ஆங்கெழுந்தருளியிருப்பதாகக் கூறப்படுகின்றது. திருக்கைலாயத்தினும் ஸ்ரீசைலமே தம்மனத்துக் கிசைந்த ஸ்தலமென்று பார்வதி தேவிக்கு ஒரு காலத்திற் சிவபெருமான் சொல்லுவதாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

**இருப்பிடம்**:—தெலுங்கு பாஷை வழங்கும் கர்நூல் ஜில்லாவிலே, நந்திக் கோட்கூர்த் தாலூக்காவிலே நல்ல மலைத்தொடரின் மத்தியிலே, இத்தலம் இருக்கின்றது. இப்பதிக்கு, மார்க்கபுரம் தாலூகாவிலிருந்து இரண்டு வழிகளும், நந்திக்கோட்கூர்த் தாலூகாவிலிருந்து ஒரு பாதையும், ஹைதராபாது சீமையிலிருந்து ஒரு மார்க்கமும் உள. செஞ்சுக்கள் என்று வழங்கும் மலைக்குறவரும், லம்பாடிகள் என்று வழங்கும் மலை இடையரும் வசிக்கும் குடிசைகளை த

தவிர, சாதாரண மனிதர் வசிக்கும் எவ்வூரும் இப்பதிக்குச் சுமார் நாற்பது மைல் தூரத்துள்ளில்லை. கிருஷ்ணாநதி, இத்தலத்தின் அடிவாரத்தில், இரண்டு மைல் தூரத்துக்குள், பாதாளகங்கை யென்ற பெயருடன் ஓடுகின்றது.

**வழிப்பாதை**:—மேற்கூறிய நான்கு நெறிகளில், ஒவ்வொன்றும் நாற்பது மைல் தூரமென்றே சொல்லப் படுகின்றது. அவற்றுள், நந்திக்கோட் கூர்த்தாலூகாவிலிருந்து வரும்பாதையே மிகச் சௌகரியமானது. அவ்வழியே, பல்லக்குக்களும், பச்சைக் கம்புகளாற் சமயத்துக் கேற்பக் கட்டப்படும் "சவாரி" களும், பொதிக் குதிரை மாடு கழுதைகளும், சுலபமாய்ச் செல்லும். மார்க்கபுரம் தாலூகாவிலிருந்து செல்லும் இரண்டு பாதைகளில் பொம்மலாபுரம் பாதை சௌகரியமானது. வழிநெடுக இடையிடையே கிணறுகளிருக்கின்றன. மிகச் செங்குத்தான ஏற்றங்களில் கற்படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இக்கிணறுகளும் படிக்கட்டுகளும் இப்பொழுது சிலமடைந்து வருகின்றன. விரைவிற் செப்பனிடப் பட்டாலன்றி முற்று மழிந்துபோம் என்பது திண்ணம். வழிப்பாதையின் கஷ்டத்தை நோக்கின், வேண்டிய சாமான்களைக் கூலியாட்கள் தலையிலேற்றிக் கொண்டு, கால் நடையாய்ச் செல்வதே உத்தமமென்று தோன்றும். பொம்மலாபுரம் பாதையிலே, ஸ்ரீசைலத்துக்கு ஐந்து மைலுக்கிப்பால், சிகரேசுவரம் இருக்கின்றது. இங்கே ஒரு சிறு சிவன்கோயிலும், இப்பொழுது இடிந்து கிடக்கும் மண்டபங்களாற் சூழப்பட்ட ஒரு திருக்குளமும் இருக்கின்றன. அக்கோயிலின் மோட்டில் நின்று பார்த்தால், ஸ்ரீசைலம் கோபுரமும், கிருஷ்ணாநதியும் நன்கு புலப்படுவது மன்றி, நாற்புறமும் மலைக்காட்சி மிகவும் அற்புதமாயிருக்கின்றது. நாடகசாலையில் ஒன்றின்பின் னொன்றாகத் தொங்கவிடப்பட்டிருக்கும் திரைகளைப் போல, மலைகள் ஒன்றின் பின்னொன்றாக நாற்புறமும் வானவிளிம்புவரையும் காணப்படுகின்றன. சிகரத்தை தரிசித்து பழைய வாக்குப்படி தாங்கள் பிறப்பற்றவரானதற்குச் சான்றாக, இச்சிகரத்தினின்றும் திருக்கோயில் வரையும் உள்ளவழி நெடுக, பிரயாணிகள் இரண்டு மூன்று கற்களை ஒரு சிறு கோயிற் போலச் சேர்த்தடுக்கி வைத்திருப்பதைக் காணலாம். மற்றையபாதைகளிலும் இவ்விதச்சாக்ஷிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதுவுமன்றி, பாதையிற்கற்களின் மீதெல்லாம் பிரயாணிகளின் பெயர்கள் வெட்டப் பட்டிருக்கின்றன.

**திருக்கோயில்**:—முற்றும் கல்லாலாகிய இதன் வெளிமதில், 660 அடி நீளமும் 510 அடி அகலமும் இருக்கின்றது. இம்மதில் 20 அடி முதல் 26 அடி வரையும் உயரமாயிருக்கின்றது. நான்கு சுவர்களின் வெளிப்புறமும், யானை குதிரை புலி முதலியவற்றின் சிலைகளாலும், புராணக்கதைகளை விளக்கும் சிலைகளாலும், முழுக்க நிரப்பப்பட்டிருக்கின்றது. நாற்புறமும் கோபுரங்களிருந்ததாகத் தெரியவருகின்றன. இப்பொழுது, பிரதானவாயிலாகிய கீழ்பாலும், வடபாலுமே கோபுரங்களிருக்கின்றன. இவற்றுள் வடபுறக்கோபுரமே உயர்ந்தது; அதற்கு ஏழுமாடிகளுள; இரண்டுகோபுரங்களும் நாளுக்குநாள் பாழடைந்து வருகின்றன. வடபுறக்கோபுரவாசல் செங்கற்களாலடைக்கப் பட்டிருக்கின்றது. கீழ்க்கோபுரவாயில் வழியாக உட்சென்றோமாக. கோவிலின் நாற்புறமும் தங்க முலாம் பூசிய துவஜ ஸ்தம்பங்களிருக்கின்றன. கீழ்புறக் கம்பத்துக்குப்பின் ஒரு பெரிய கல்மண்டபமிருக்கின்றது. இம்மண்டபத்தில் ஒரே பெரிய கல்லாலாகிய நந்தியொன்றிருக்கின்றது. இதற்குப்பின் மற்றொரு கல்மண்டபமிருக்கின்றது. இதன்மத்தியில் நவக்கிரகசக்கரமிருந்தது போலும். இம்மண்டபத்துக்குப் பின்பே திருக்கோயில். அதன் மூன்று புறமும் சிறிய முகப்புமண்டபங்களும் வாயில்களுமிருக்கின்றன. இம் மூன்று வாயில்களின் கதவுநிலை படிகளெல்லாம் தங்கமுலாம் பூசிய செப்புத்தகடுகளால் மூடப்பட்டிருக்கின்றன. கோயிற்குள், முதலில் ஒருபெரியமண்டபமும், பின்போர் சிறிய அறையு மிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் அப்பாலே மூலஸ்தானமாகிய கர்ப்பக்கிரகம். இக்கர்ப்பக்கிரகத்தின்மேல், சுமார் 45 அடி உயரமுள்ள ஒரு கோபுரமிருக்கின்றது. இக்கோபுரமும், கர்ப்பக்கிரக வெளிப்புறமும், முற்கூறிய முகப்புமண்டபங்களின்மேல் முகப்பும், ஒவ்வோர் மூக்கிலும் உள் மண்டபத்தின்மேல் கோபுரத்துக் கெதிராக மதிலிலும் நிருமிக்கப் பட்டிருக்கும் நந்திகளும், முழுதும் சுவர்ணமுலாம் பூசிய தகடுகளாற் பொதியப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தங்கமுலாம் பூசிய தகட்டாற் பொதியப்பட்டிருக்கும் பரப்பு, சற்றேறக்குறைய * 50 சதுரங்களுக்குக் குறைவில்லை. இக்கோவிலுக்குப் பின்புறத்தில், அம்பாள் கோயிலிருக்கின்றது. கோயிலைச்சுற்றி அனேக கல் மண்டபங்களும், ஆலயங்களும், தீர்த்தங்களும் இருக்கின்றன.

**பூஜை**:—நித்திய பூசை, சுவாமிக்கு ஓர் சங்கமாண்டியாலும், அம்பாளுக்கு ஒரு கோமுட்டிச் செட்டியாலும் நடத்தப்படுகின்றது. சுவாமி பூசாரி, காலை பத்து மணிக்கு முகங்கூடக் கழுவாமல் செம்பில் நீரை யெடுத்துக் கொண்டு திருமதிலுக்குள்ளேயே அவசியகருமத்துக்குச்சென்றதையும், அம்பாள் பூசாரிக்கு அர்ச்சனையின் பெயரே தெரியா தென்பதையும் கூறிவிட்டால், பூஜைவிசேஷத்தை வேறு எடுத்துரைக்க வேண்டுவதில்லை. ஆனால், தென்னாடுகளிலில்லாத ஒரு சௌகரியம் இங்கே உண்டு: யாரும் லிங்கத்தைத் தொட்டு அபிஷேகம் பூஜை நைவேத்திய முதலியவை செய்து கொள்ளலாம். சிவராத்திரி மகோச்சவத்தில் சுவாமி தரிசனம் செய்ய, நபருக்கு $1\frac{1}{4}$ ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. ஒரே லிங்கத்தின் மேல் ஆயிரம் சிறிய லிங்கங்கள் செதுக்கப்பட்டுக் கோடி லிங்கமென்று பெயர் பெற்று விளங்கும் இரண்டு லிங்கங்கள் இக்கோவிலிலிருக்கின்றன. இவற்றுளொன்று, ஸ்ரீ ராமரால் பூஜிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

**புறக்காட்சி**:—கோயிலுக்கு வெளியே, சாரங்கதர மடம், சித்தமடம், விபூதி மடம், முதலிய மடங்கள் ஐந்துள. இவற்றுள் ஒன்றைத் தவிர, மிகுந்த நான்கும் பாழாய்க் கிடக்கின்றன. பாதாள கங்கைக்குச் செல்லும் வழியிலே சில கோயில்களும் மடங்களும் இருக்கின்றன. இவற்றுள் நதிக்கரையிலுள்ள கோயிலில் வெகு நேர்த்தியான சிற்பவேலையைக் காணலாம். ஆனால் எல்லாம் பாழடைந்து வருகின்றது. கோயில் திருமதிலைச் சுற்றி நாற்புறமும் சிறுசிறு கோவில்களில் 1008 லிங்கங்களும் முன் மண்டப வரிசைகளும் இருந்தன போலும். இப்பொழுது கீழ்பால் மட்டும் சில சின்னங்களுள. கோயிலுக்கு வடகிழக்கா யோடும் ஒரு மலையாறு, சிறிது தூரத்தில், ஒரு செங்குத்தான பாறையினின்றும் ஒரு பாழ்ம் பள்ளத்தில் விழுகின்றது. மேல் நின்று நோக்கின் தலையைக் கிறுக்கு மளவு ஆழமானது அக்கிடங்கு. இவ்விடம், 'பாபஹாரஸரி' 'கருமாலஸரி' என்ற பெயர்களால் வழங்குகிறது. மேற்பாறையில் இரண்டு அடித்தடங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மூடபக்தியும் விதியும் முற்றிய சிலர், அப்பாதத் தடங்களின் மீது நின்று கீழே கிடங்கிற் குதித்து உயிர் துறப்பதாகச் சொல்லப்படுகிறது.

**புராண, சரித்திர, சாசன விஷயங்கள்**:—க்ஷேத்திர ஆரம்பத்தைக் குறித்த பர்வதேசுர முனிவர் கதையை முன்பே கூறினோம்; மிகுந்த சிலவற்றைச் சுருக்கிக் கூறுவோம். பாதாள கங்கைக்கு அப்புறத்துள்ள மலைக்கு, சந்திரகுப்தமலை என்று பெயர். முற்காலத்தில் அம்மலைமீது பெரியதோர் பட்டணமிருந்ததாம். சந்திரகுப்தன் என்றோர் அரசன் அதை ஆண்டுவந்தானாம். [இப்பொழுதும்,கோட்டைச்சுவர், அகிழ், முதலிய நகரச்சின்னங்கள் அம்மலைமீது காணப்படுகின்றன.] இக்கரைவந்து மேயும் அவன் பசுக்களில், ஒன்று மட்டும் மாலையில் பாலில்லாமலிருப்பதைக் கவனித்துப்பரிசோதிக்க, அப்பசு, இக்கரையிலுள்ள ஓர் புற்றில் தன்பாலைச்சென்று சொரிவதாகத் தெரியவந்ததாம். அப்புற்றைப் பரிசோதிக்க, அதற்குள், 'சிவயோகி மல்லரசு' என்ற பெரியவர் ஒருவர் இருந்தனராம். அவர் ஆக்ஞைப்படி, அரசன், அவ்விடத்தே லிங்கப்பிரதிஷ்டை செய்து, திருக்கோயிலும் கட்டினனாம். கோயிற் பணியின் பொருட்டு இக்கரையிலேயே பத்துப்பன்னிரண்டு வருஷங்கள் தங்கியிருந்த அரசன், திருப்பணி முடிந்து தன்னகர்க்குச் சென்றவுடன், அரமனையிற் கண்டதோர் பெண்மணியின் மீது ஆசையுற்றனனாம்: அவன் வெளிப்போந்த பொழுது சிறு குழந்தையாயிருந்த பிரமராவதி யென்ற தங்கள் மகளே அம்மாதென்று, அவன் மனைவி வற்புறுத்திக் கூறியும், மோகவயப்பட்ட அரசன் அதை நம்பாது மீறியொழுகத் தொடங்கவே, அப்பெண், அவனைக் கல்லாகும்படி சபித்துவிட்டுப் பாதாளகங்கையில் வீழ்ந்திறந்தனளாம்.

ஸ்ரீசைலசிகரதரிசனத்தால்பிறப்பற்றுப்போம்என்றவாக்கியத்தைப்பற்றி ஒருகதை சொல்லப்படுகின்

* ஒரு சதுரம், ஜாதியடியில் பத்தடி நீளமும் பத்தடி அகலமும் கொண்டபரப்பு.

றது. ஒரு சிவராத்திரி புண்ணிய காலத்திலே பல்லாயிரம் பேர்கள் சுவாமி தரிசனத்தை வேண்டிவருவதைக் கண்ணுற்ற பார்வதிதேவி, ஆண்டாண்டுதோறும் பல்லாயிரம் ஆத்மாக்கள், பிறப்பற்று மோக்ஷத்தையடையின் பிரபஞ்சம் பிரஜாவிருத்தியின்றிப் பாழாய்விடும் என்று பயந்தவளாய், தன்னாதரை வினவினளாம். அச்சந்தேகத்தை நீக்குமாறு, சிவபெருமான், ஒருவிருத்தவேதியர் வடிவுபூண்டு, தம்மனைவியுடன், சிகரத்தருகேயுள்ள திருக்குளத்தையடைந்து, கால் தடுமாறி அதற்குள்விழுந்து, சாந்தருணத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தனராம். அவர்மனைவி கரையிலிருந்து கொய்யோமுறையோ என்றோலமிட்டு, வழிச்செல்லும் பக்தர்களின் உதவியை வேண்டினளாம்; ஆயின், கிழவரைக் கரைக்கிழுக்க எவராவது வந்து கைநீட்டியபொழுது, பாவிகள் கையைத் தொட்ட நிமிஷமே அவர் பிராணன் நீங்கிவிடுமென்று அவள்எச்சரித்ததால்,ஒவ்வொருவரும் பிரமஹத்தி தோஷத்துக்கஞ்சி, உதவிசெய்யாது வழிச்சென்றனராம். கடைசியில் ஒருவேசைமட்டும் சிகரதரிசனத்தால் தன் பாவங்கள் முற்றும் நீங்கிவிட்டதாகச் சொல்லிக்கொண்டே கிழவரை யிழுத்துக் கரையேற்ற, உடனே காணாக்காட்சியைக்கண்டு சிவலோகஞ் சென்றனளாம். வாக்கியத்தை எல்லோரும் அறிந்திருந்தும், பல்லாயிரம் பக்தர்களில் ஒரு வேசைக்குமட்டுமே அதில் முழுநம்பிக்கை இருந்ததை அறிந்து, தன் கவலை யொழிந்து, லோகமாதா கயிலை சென்றளாம்.

சாரங்கதரன் கதை யாவர்க்கும் தெரிந்த விஷயமே. நடுக்காட்டில் அவனைச் சித்திரவதை செய்த இடம், அவன் பெயரால் வழங்கும் மடத்தருகே காட்டபடுகிறது. சாசானங்களை ஆராயுமிடத்துப் புலப்படும் விஷயங்களைச் சுருக்கியுரைப்போம், கர்ணபரம்பரையான கதைகளும், இப்பொழுதுள்ள அடையாளங்களும், முற்காலத்தில் இம்மலைப்பக்கம் செழித்த நகரங்களால் விளங்கியதென்பதைத் துலக்குகின்றன. கர்ப்பக்கிரகத்தையும் முகப்பு மண்டபங்களையும் தங்கமுலாம் பூசிய செப்போடுகளால் வேய்ந்து புனைந்தவர், சாலி வாகனசகாப்தம் 1435ல் (கி. பி. 1513) விஜயநகர வேந்தர் கிருஷ்ணதேவராயர் என்று தெரியவருகின்றது. கி. பி. 1058-ம் ஆண்டில் சாலுக்கிய வேந்தன் த்ரைலோக்யன் என்பவன் இத்தலத்தைத் தரிசித்ததாக ஒருசாசனமிருக்கிறது. தமிழ்நாட்டாருக்குப் பெருமையான சாசனங்களும் சிலவுள. இத்தலத்துக்கு மானியங்களாக அநேக அரசர்கள் அநேக கிராமங்களை விட்டதைக் குறிக்கும் சாசனங்களுள், சித்தேசுவரம் என்றகிராமத்தை, குலோத்துங்கச்சோழனும் விக்கிரமசோழனும் (கி. பி. 1108-1123) விட்டதாக ஒரு சாசனமிருக்கின்றது. அன்றியும், வடபுறமுள்ள 'பொற்கம்பம்' மற்றொரு சோழனால் நாட்டப்பட்டதென்று அக்கம்பத்தின்மீது, தமிழிலும் கிரந்தத்திலும் தெலுங்கிலும் வரையப்பட்டிருக்கிறது. தமிழ்ச் சாசனத்தை உள்ளபடி கீழே வரைவாம்:—

சகாப்தம் ௲௩௱
எழ்அன மெற செ
சலலாநினற தா
துவருசம மாசி
மாதம சிவராததி
ரி புணணியகாலத
திலெ சொழமண
டலம கொபபரா
சாவினகுமாராசா
ளுவத திருமலயய
தெவமஹா இராசா ஸ்ரீப
றுவத நாதன சனனதி
யிலனாட்டிந பொறகமபம

[இதன்பொருள்:—(சாலிவாசன) சதாப்தம் 1378-ன் மேற்செல்லாநின்ற தாது வருஷம் மாசி மாதம் சிவராத்திரி புண்ணிய காலத்திலே, சோழமண்டலம் கோபய ராஜாவின் குமாரர் சாளுவதிருமலைய தேவமஹாராஜா, ஸ்ரீ பர்வதநாதன் சந்நிதியில் நாட்டின பொற்கம்பம்.]

சோழனால் நாட்டப்பட்ட இப்பொற்கம்பம், எழுபத்தினாலு வருஷங்களுக்குப்பின்பு, ஸ்ரீ சைலத்தை ஆண்டுவந்த சந்திரசேகரன் என்பவனால் ஒரு முறையும்; சென்ற தலைமுறையில் பொம்மலாபுரம் சுப்பையாநாயுடு அவர்களால் ஒருமுறையும், புனர் பிரதிஷ்டைசெய்யப்பட்டதாக, அதன்மேல் எழுதப்பட்டிருக்கிறது.



சுவாமி சந்நிதியிற் கீழ்பாலுள்ள பொற்கம்பம், சாலிவாகன சகாப்தம்-1458 மன்மதவருஷத்திலே, ஸ்ரீமன் மகாமண்டலேசுவர்களுக்கு அரசனான திருமலய்ய தேவமஹா ராஜாவின் காரியகர்த்தரான பச்சினையநாரையவாருவால், தமக்குப் புண்ணியத்துக்காக, எக்ஞசாலை மண்டபத்துடன் சமர்ப்பிக்கப்பட்டதாம்.

கர்ப்பக்கிரகத்தின் பின்புறத்திலே மேல்பாலுள்ள பொற்கம்பம், சாலிவாகன சகாப்தம்—1556-ஸ்ரீமுகவருஷத்திலே, யசுசாகா அத்தியாயகரும் ஆபஸ்தம்பஸூத்திரரும் போத்க ஸல்லிய கோத்திரியுமான பாலுட்ல அன்னமராஜூ என்பவரால், சாம்ப சதாசிவப் பிரீதியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவர் வம்சஸ்தர் இன்றும் உளர். வடபுறப் பொற்கம்பம், சாலிவன சகாப்தம்-1516-விஜயவருஷத்திலே, வான்மீகி கோத்திரியாகிய மாசர்லசிதாபகாநுகிகாருஎன்பவர் நாட்டியது.

இத்திருக்கோயிலைச், சிலதுருக்க வேந்தரும், நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன் 'ரோஹிலர்' என்ற வடநாட்டுத் திருடரும், சூறையாடினதாகவும் சொல்லப்படுகின்றது.

கோயிலிலிருந்து பாதாளகங்கை வரையுமுள்ள சுமார் இரண்டுமைல் தூரமும், வழிநெடுக ஒருகல்லேனும் தவிராது, பிராயாணிகளின் ஊர் பெயர் முதலியவை வெட்டப்பட்டிருக்கின்றன. கோயிலிலும் கீழ்த்தலம், திண்ணைகள், தூண்கள், எங்கே பார்த்தாலும் இம்மாதிரியான சிலாசாசனங்கள் நிறைந்திருக்கின்றன. இச்சாசனங்கள், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், மகாராஷ்டிரம், கன்னடம், தமிழ், ஹிந்துஸ்தானி, இங்கிலீஷ் முதலிய பல பாஷைகளிலும் இருக்கின்றன. இன்னும் வருஷம்தோறும் பிராயாணிகளால் புதியசாசனங்கள் வரையப்படுகின்றன.

**தற்காலநிலைமை:—** எப்பொழுதுமே செல்லுதற்கு அருமையான மலைப்பாதையிலுள்ள படிக்கட்டுக்களும் நிலவான கிணறுகளும் பாழடைவதைப் பற்றி முன்பே கூறினோம். சீக்கிரம் செப்பனிடப்படாவிடின் இத்திருப்பதிக்குச்செல்வது முற்றும் அசாத்தியமாய்விடும். தெய்வபக்தியே இன்றி, புராதனசிற்பசாஸ்திர அபிமானத்தோடு மட்டுமே நோக்குபவருங்கூட, இக்கோயிலின் தற்கால நிலைமையைக் காணமிகவும் மனம்வருந்துவார்களெனின், அதைப் பற்றி அதிகம் சொல்லவேண்டுவதில்லை. தங்கமுலாப்பூச்சைக் கத்தியாற் சுறண்டியெடுத்து, செஞ்சுக்கள் எவ்வளவோ வேலையைக் கெடுத்துவருகிறார்கள். கோயிற்கு வெளியேயுள்ள ஒரு பாழ் மண்டபத்தில், இவ்வாறு சுறண்டியபின் எறியப்பட்ட ஆறுசெப்புத் தகடுகளை யாம் பார்த்தோம். கோபுரங்களும் மண்டபங்களும் இடிந்து பாழாய்க்கிடப்பதுமன்றி, கோயிலெங்குமே புல்முளைத்து முட்செடிகள் செழித்து வளருகின்றன. நித்திய பூஜையின் விசேஷத்தைப் பற்றி முன்பே கூறினோம். கனகசபைபோல் விளங்கும் கர்ப்பக்கிரகதுக்குள், இரண்டு பழைய இருப்புத் தகளிகளைத்தவிர வேறு ஒன்றுமில்லை; இவ்விளக்குகளும், யாராயினும் தரிசனத்துக்கு வரும்பொழுது மட்டும் ஏற்றப்படுகின்றன. காசி, சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சமானமான இந்த திவ்ய க்ஷேத்திரத்தின் தற்கால நிலைமை, அம்மம்ம! மிகப் பரிதாபமானதே.

**சீர்திருத்தும் வழி:—** முற்காலத்தரசர்கள்விட்ட மானியங்கள் போனவழி தெரியவில்லை. ஆனால், இப்பொழுதும், சிவராத்திரி காலத்திலே, வருஷந்தோறும் ரூபாய் 5000 க்கு மேல் 8000 வரை வசூலாகின்றது. இப்பணத்தை மட்டுமே கிரமமாகச் செலவழித்தால், முன்னிலும் நல்ல நிலைமைக்குச் சில வருஷங்களில் கொண்டு வந்து விடலாமென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது அறுபது வருஷகாலமாக, இவ்வாலயம், கடப்பை ஜில்லா புஷ்பகிரி ஆசாரிய சுவாமிகளின் பாராமரிப்பில் இருந்துவருகிறது. நமது தற்கால மடாதிபதிகளின் குணாதிசயங்களோ பேர்போனவிஷயமே. குக்கிராமங்களில் குளம்பாசியைக் குத்தகைக்கு விடுவதுபோல், கோயிலின் வருஷவருமானத்தைக் குத்தகைக் கடைத்துத் தம்மிஷ்டப்படி அநுபவிப்பதைத்தவிர, சுவாமிகள், கோயிற்பணியில் சிறிதும் கவலையுள்ளவராகத்தோன்றவில்லை; அவர்பராமரிப்பினின்னும் கோயிலை நீக்குமாறு நான்கு வருஷங்களுக்குமுன் 'சிவில்' வியாச்சியஞ் செய்யத்தலைப்பட்டசிலர், கோயிலின் பதினாலு வருஷவருமானத்தை மொத்தம் பதினாயிர ரூபாவுக்கு மடத்தாரிடம் குத்தகைக்கு வாங்கிக் கொண்டு, வியாச்சியத்தை நிறுத்திவிட்டனராம். குத்தகைதொடங்கிய இந்நான்கு வருஷங்களு

குள், குத்தகைக்காரர் 25,000 ரூபாய்க்குமேல் அடைந்திருப்பதாக வதந்தி. சிவராத்திரிகாலத்திலே பணவசூலுக்கு வருவதன்றிப், பின்பு கோயிலைப் பற்றிச் சிறிதும் ஞாபகமிருப்பதாகத் தெரியவில்லை. சர்க்கார் 'அதிகாரிகளும், அக்காலத்தில் மட்டும் பந்தோபஸ்துக்காக வருகிறார்கள். அந்நியமதஸ்தர் ஆட்சியில், இராஜாங்கத்தார் கவலையுற்று இவ்விஷயத்தில் வலிந்து தலையிடமாட்டார்கள். 'சிவில்' வியாச்சியம் செய்து கோயிற் பராமரிப்பை மேற்கொண்டேனும், அல்லது கீழ்க் குத்தகையாகக் கைப்பற்றியேனும், தேசாபிமானமும் மதாபிமானமுள்ள கனவான்கள் யாரேனும் இவ்வாலயத்தைச் சீர்ப்படுத்தினாலன்றி, இப்புராதன க்ஷேத்திரம் விரைவில் அழிந்துவிடும். மூடத்தனமும் தரித்திரமுமே நிறைந்துள்ள இந்தக்கர்நூல் ஜில்லாவிலே அதற்கேற்ற கனவான்கள் இல்லையென்பது, கோயிலின் தற்கால நிலைமையால் நன்கு விளங்கும். தமிழ்நாட்டிலே, திருப்பாடல் பெற்ற அற்ப க்ஷேத்திரங்களையும் லக்ஷக்கணக்காகப் பணத்தைச் செலவிட்டுப் புதுக்கிக்கொண்டுவரும் சிவபக்தர்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டிமார், இக்கோயிற்பணியைத்தம்மேற்கொண்டாலன்றி, மல்லிகார்ச்சுனருக்கு விடியுமென்று தோன்றவில்லை. க்ஷேத்திரமோ, மஹாபுராதனமானது; மஹாபுனிதமானது; மூவராலும் பாடப்பெற்றது;| ஒப்புயர்வற்றது; திருப்பணிக்குவேண்டிய பணமோ, ஏராளமாய் வருகின்றது; பக்தியும், சிரத்தையும், முதலில் சிறிது கைப்பொருளுமே தேவை. இவ்வளவு சிறப்புற்ற திவ்யக்ஷேத்திரம் இப்பாழ்நிலையிலிருப்பது தமிழ்நாட்டில் தெரியாமையே, இதுகாறும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் இதில் தலையிடாமைக்குக் காரணமென்று நம்பி, இவ்வளவு விபரமாய் இதைப்பற்றி எழுதலானோம். எந்த மஹானுக்கு இப்புண்ணியம் சித்திக்கக் காத்திருக்கின்றதோ, மல்லிகார்ச்சுனரே அறிவார்.

அ. மாதவையர்.

---

## சுகுணசுந்தரம்.

### X

சுகுணசுந்தரிருவரும் இளங் காளையர்களென
இருமாந்து, களங்கமற்ற சந்திரனைப்போன்ற முக
தினராய் அவணுற்று, முன் அந்தணரையும், பின்
தம் பெற்றோரையும் நமஸ்கரித்து கைகூப்பி நின்
னர். புத்திரர்களைக் காண்டலும் சாருமதி தேவியா
ரும், அமைச்சன் மனைவியாராம் சுநீதி தேவியாரு
கண்ணீர் பெருக்கத் தலைப்பட்டனர். அப்பொழுத
சுசீல சக்கிரவர்த்தியாரும் கலக்கமுற்று நின்றனர்
விப்ரரோ, 'அடராஜ! என்ன அழுகின்றனை? இந்
நாரீ மணிகள் ஏன் துன்புறுதல் வேண்டும்? எனது
கோரிக்கையை நீ செய்ய வல்லவனல்லை என்று முன்
னமேயேதெரியும்; நான் என்னசொல்லியுங்கேளாது
மும்முறை சத்தியங் கூறினாய். அது அசத்திய
ன்று யாவருமறியச் சொல்லுவையேல், யான் எ
திருப்பிடமிதோ செல்லுகின்றேன். சீக்கிரம்; சீ
கிரம்; சீக்கிரம்! என்றதட்டி உருட்டிக் கேட்டன
சுமந்தரரோ, மகாராஜ! துன்புறுதீர். மித்ர காரி
த்தைச் சாதிக்க யானிருக்கின்றேன். இவ்வற்பக
ரியத்தைச்செய்ய யானே முன்னிற்பேன். 'கல
மணி சுகுண! ஓடிவா இங்ஙனம், இவ்வந்தணர் பெ
மானுக்கு உனது உத்தமாங்கமாகிய சிரசைக் கொய்
தானமாகக் கொடுக்கத் தீர்மானித் திருக்கின்றேன்
நான் செய்ய விரும்புவது கொடுஞ்செய்கையே யா
னும் எனதுள்ளங் களிக்குமாறு நீ அதற் குடன்பட்
என்னைகிருதார்த்தனுக்குவாய்.' என்றுதன்பத்நியா
சுநீதியை நோக்கி, 'அடி, பிராணசகி! ஏன் நீயுங் கல
ங்குகின்றனை? கடவுள் செயல்படி எல்லாம் நன்றாய்
முடியும். மனதைச்சஞ்சலத்தில் விடாது இங்ஙனம்
கடுகவருவாய். நாமிருவரும் நம்மரும் புதல்வனு
சுகுணனுடைய உத்தமாங்கமாகிய சிரசை திருப்தி
யாய் இவ்வாளால் கொய்து இம்மறையோனுக்களி
தல் வேண்டும்.' எனலும், சுகுணன் தந்தை பக்க
னுகி, யானே தன்யன்: என்று மழியுமிக்காயம்
இதை மெய்யென்று நம்பற் பாலதன்று: நரியென
கென்னும், புழுவெனக் கென்னும், இந்த மண்ணு
மெனக் கென்னும், பருந்தோ வெனக்கென்னும்
நரியோ எனக்கென்று புசிக்கும்; நாயோ எனக்கெ
ன்று பிடுங்கித்தின்னும்; இவ்வுடலைப் பிரியமுடன



வளர்த்தென் செய்வது? பூர்வவாசனையாற் கொண்ட இக்காயம் நிலையன்று; என்றிருந்தாலும் இறப்பது மெய்; ஆகலின் என்சிரத்தை என்னுடைய மித்ரசிரேஷ்டனான கண்மணியா மிச்சுந்தரனுடைய சிரத்திற்குப் பதிலாக இவ்வந்தணர் அங்கீகரிப்பரேல், என் சிரமே புண்ணியஞ் செய்ததாகும்;' என்று சுமந்தரர் பக்கல் தன்தலையைக் குனிந்து காட்டி நின்றனன். அப்பொழுது சுநீதி ஒருபக்கலும், சுமந்தரர் ஒருபக்கலும் நின்று வாளைப் பிடித்துக்கொண்டு சுகுணனது கழுத்தை யறுக்க எத்தனித்தனர்.

அக்காலத்தில் அந்தணர் இவர்களுடைய மனவன்மையைக்கண்டு உளமகிழ்ந்தவராயினும், கண்களில் நெருப்புப் பொறிபறக்க சுசீலனை விழித்து நோக்கி, 'ஏ, இராஜ! என்ன சாகசம்புரிகின்றனன் இச்சுமந்தரன்? இவனுடைய புதல்வனுமிந்த சுகுணனும் என்ன வேதாந்தம் படிக்கின்றனன். இந்நன்கொடையை யான் கொள்வேனல்லேன். உனது தவபுத்திரனது சிரத்தையே கொய்துதரல்வேண்டும். அல்லையேல் உன்மொழி பொய்மொழியேயாகும். சௌரியமிழந்து ஏன் வருந்துகின்றனை? இப்பொழுதாவது முடியாதென்று மொழிவையேல், நான் எனதிருப்பிடம் போகத்தடையிராது. என்னசொல்லுகின்றனை? இதோ பார் யான் செல்கின்றேன்.' என்று கோபித்துச் செல்லலும் சுந்தரராஜன் அவ்வந்தணரைத் தொடர்ந்து சென்று வழி மறித்து அவர்கையைப்பிடித்தழைக்க அவர் கொஞ்சஞ் சிறுகை செய்துஞ் சற்றுக் கோபித்தும், 'அடசிறுவ! நீயேன் வீணில் வருந்துகின்றனை? உன்னுடைய தந்தை உன் சிரத்தைத் தானஞ்செய்வதாய்ச் சொன்னமொழி பொய்க்கிறது. யான் செல்லுகின்றேன்; என்று பின்னு மிரண்டடி செல்ல, சுந்தரன் அவரதடி பணிந்து, நல்வார்த்தைகளாடி அழைத்துவந்து தன் பெற்றோரைநோக்கி, ஏதோசொல்ல வா யெடுக்கையில், சுகுணன் சிரமறுபட்டுக் கீழேவிழ, அதைக் கீழேவிழவொட்டாமல் சுநீதி கையிற்றாங்கி சுமந்தரரிடம் கொடுக்க, அதை அவர் மகிழ்ச்சியுடன் தன் கையில் வாங்கி மந்திர புரஸ்ஸரமாய் தனதில்லாள் சுநீதி தன் மைந்தனது உத்தமாங்கமாகிய சிரசின் பேரில் ஓர் உத்தரணி தீர்த்தம் விடலும், அமைச்சனும் அவ்வந்தணருக்குத் தானஞ்செய்தனர்.

அந்தணரோ அவர்கொடுத்த கொடையை ஏற்றுக்கொள்ளாது தம்கையாற்றட்டி உயரச்செல்ல எறிந்தனர். பின்பு அந்தணர் அமைச்சனை நோக்கி, சுமந்தரா! நீ அடாத காரியஞ்செய்தனை. நானிதை ஏற்றுக்கொள்ளேன். உன் தந்த்ரமென்னிடம் நடவாது. இராஜன் மொழிந்த மொழி சத்திய மொழி யாகுமா? ஆகாதா?' என்ற கடிந்த பாஷைகளுடன் தனது சடாபாரங்கள் கீழே விழுந்து பிரழ, பற்களை நற நற வென்று கடித்துக்கொண்டு 'சுசீல! யான் செல்கின்றேன்.' என, சாருமதிதேவியாரும் அந்தணர் பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தங்கள் கோரிக்கைப்படி க்ஷமிக்க வேண்டும்; நாங்கள் செய்யும் கொடையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். ப்ரபோ என்று இரந்தனள். சுந்தரனும் அந்தணரைப்போகவிடாமற்றடுத்து, தந்தையின் களையை யாற்றி 'பிதா! ஏன் மயங்குகின்றீர்கள்? சொன்ன மொழிப்படி நன்கொடை யளித்தலன்றோ அறனாகும்: இது மாயா பிரபஞ்சமென்று நீவிர் அறியாததோ? அந்தணர் மனங்களிக்கச்செய்தலன்றோ அழகாகும்

"முன்பு நின்றிசை நிறீஇ முடிவு முற்றிய
பின்பு நின்று றுதியைப் பயக்கும் பேறற
மின்பம் வந்துறு மெனி னிய தாயிடைத்
துன்பம் வந்துறு மெனிற் றுறக்கலாகுமோ?"

"தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
முதியோ ரென்னு னிளையோ ரென்னுன்
கொடுந் தொழிலாளன்கொன்றனன்குவிப்பவில்
வழல்வாய்ச் சுடலை தின்னக்கண்டும்
கழி பெருஞ் செல்வக் கள்ளாட்டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோருண்டோ
விளமையு நில்லா யாக்கையுநில்லா
புத்தேளுலகம் புதல்வருந்தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது."

என்றறியாதோ? சாதுசங்கத்தினாலும், ஜன்மாந்த்ர சத்சங்க சுகிருத விசேஷத்தாலும், காகதாளீய நியாயமாய் அரிய இந்த பூமியானது கிடைத்ததே விதையாமென, தேவர்கள், ரிஷிகள் முதலாயினோரும் ஜகத்காரணனான பரமனை பூஜ்ஜியரென்று ஸ்தோத்திரஞ்செய்வதாக சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. முமுக்ஷு வானவன் சம்சார துக்கத்திலகப்பட்டு

வெகுகஷ்டத்துடன் வலையிலகப்பட்ட மான்தெரித்தோடுவதுபோலும், இஷ்டமித்ர களத்திராதியர்களுடன், கிரகத்திலிருக்கையில், அந்தக்ரகமக்நிதக்தமாகிப்பற்றி எரியும்போது தெய்வகதியால் வெளிப்பட்டு எரிச்சல்தாளமாட்டாமல் குளிர்ந்ததண்ணீரை விரும்புவதுபோல் ஓர் சத்குருவைத்தேடிச்சென்று நயவிநயங்களுடன் அவர்தாள்பணிந்து, 'ஏ' குரோ! பற்பல வேத இதிகாஸ ஸ்மிருதி சாஸ்திர ஸ்வானுபவங்களினால் **ஜீவத்வம்**போய் ப்ரமத்திலயமானாலன்றி **ஜீவத்வம்** நீங்கி மோக்ஷமடையலாகாதென்று வேதாந்தசாஸ்திரப்ரமாணமென்று கூறுவதையறிந்தும் உபநிடதங்களின் பொருளை சாதுக்களுடன் கூடிவிசாரிக்கும்போது சூரியமண்டலத்தின்வழியே ப்ரமலோகமடைந்து, ப்ரமத்திலயப்படவேண்டுமென்றும், அதற்குமுக்கியமா யாகவேண்டிய சாதனசதுஷ்டயத்துடன்கூடி சந்நியாஸமடைந்து, சிரத்தா பக்தித்யானயோகாதிகளால் ப்ரமலோகமடைந்து ப்ரமாவினால் ஞானோதயமாகி மோக்ஷம் பெறவேண்டுமென்று தெரிந்தாலும் வெகுகாலம்வரையில் ஜீவத்வம் போகாமல் ஜீவனாகவேயிருக்கும்படி நேரிடுகிறது. ஜீவனுள்ளவரையில் போகாதிகள் சம்பாவிதமே. அப்போதும் மோக்ஷாதிகாரி யாகாமல் லோகாந்தரங்களில் வசிக்கும்படியல்லவா நேரிடுகிறது. அதனால் ஜீவத்வம் நிவர்த்தியாகாமல் ஜன்மத்திற்கே காரணமாகிறது என்ற சுருதிகளின் உட்கருத்தை ஆராய்ந்து பார்க்கும்போது இந்ததேகத்திலிருந்தே ப்ரமத்தில் மோக்ஷமடைவதேசத்யம் என்கிற சுருதியின் நிச்சயமான கொள்கையால், என்னை இந்த தேகத்ரய அவஸ்தாத்ரய பஞ்சகோசத்திற்கு வேறுபட்டவனாகவும் சாக்ஷியாயுமுள்ள துரியகூடஸ்த ப்ரத்யகாத்மாவான அவனே யான்என்னும் ஜீவசப்தத்திற்கு முக்கிய அர்த்தமென்கிற சுருதிவாக்கியத்தின்படி நான் ஸ்தூல சூக்ஷ்ம காரணதேகங்களையும் லக்ஷணமாக வறிந்து இதற்கு விலக்ஷணமாக நாமிருக்கிறோம் என்ற குரு சிஷ்யவாதத்தினின்றும் நான் அறிந்திருக்கிறேன். இத்யாதிகாரணங்களினால் உங்களுக்குமெனக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. ஆனால் பூர்வகர்ம வாஸனைக் கனுகுணமாய் உங்களுக்கு நான் புத்திரனாய்ப்பிறந்திருந்தாலும் மேற்கூறிய காரணங்களால் தத்வம் வேறாகலின் என்னைப்பற்றி நீங்களிருவரும் மற்றவர்களும் இனி சிந்திப்பதிலும், வருந்துவதிலும் யாதும் பயன்படாது. இவ்வேதியர்க்குறைத்தவாறு ஏ, தந்தையே! அன்னாய்! நீவிர் இருவரும் மனமகிழ்ச்சியுடன் என்சிரத்தைக்கொய்து நன்கொடையாக அளிக்கக்கடவீர்கள். சற்றும் தாமதஞ்செய்யலாகாது.

"ஊருஞ்சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேயத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதங் கச்சி யேகம்பனே!"

என்றபடி, நிலையில்லா இவ்வாழ்வைச் சதமென்றெண்ணற் பாலதோ? சொன்னசொற்றவறாது சத்தியத்தை நிலைநாட்டுவதேயன்றோ புகழாகும். எனது மித்ர ரத்னமா மிச்சுகுணன் சென்றவழியே யான் செல்லல்வேண்டும். தயரையொழித்து என் சிரத்தைத் தாமதியாது துணித்து இவ்வேதியர்க்களிமின். அப்பொழுதே யான் தந்தைக்குகந்த புத்திரனுமன்றி இப்பிறவியினாலாய பயனை எளிதிலடைந்தீசுவரசாயுஜ்யத்தை அடையமாட்டுவேன். நீவிரிருவரும் இத்தகைய கொடையை யளித்து சத்தியத்தை நிலைக்கப்பண்ணுவீரேல் யீசுவரப்ரசாதத்துக்குப் பாத்திரராவது திண்ணமேயாம்." என்று சுந்தரன் மொழியவும், சுசீலபூபதியும், சாருமதிதேவியும் தம்புதல்வனுடைய அமிர்தம் போன்றவார்த்தைகளைகிரகித்து, மனந்தேறினவர்களாய் தமக்குத் தவப் புத்திரனாய்ப் பரமனுடைய அருளால் கிடைக்கப்பெற்ற, சுந்தரனை சிரசைத் துணிக்கத்தீர்மானித்து வாளை யிருவருங்கையிற்றாங்கி, அவனுடைய சங்கைப்பழிக்கும் கழுத்தை அறுக்க ஆரம்பித்தனர். அப்பொழுது சுந்தரன், 'ஏ, ப்ரபோ ! இதுவுமோர் திருவிளையாடலோ உனக்கு' என்று நகைத்து

"தந்தைதாய் தயர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேகமில்லைமணி மாடமாளிகையேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ர ஜாலக்கோலம்
வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்த மலபாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே
யெந்நாளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லைவிடத்



தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான்றெளியாதுசுழலும்வகையென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே"

இப்பாடலைப் பாடியபடியே தலைகுனிந்து நின்றனன். அவன் சிரம் அறுபட்டதும் சாருமதி தேவியாரும் அதைக் கீழே விழவொட்டாமல் தன்கையிற்றாங்கினள். உடனே வேதியர் மறைந்தனர். வேதியர் மறையவே அங்குள்ளோர் கண்களைப் பறித்துச் செல்லுமாறு ஓர் ஜோதிஸ் தோன்றி எல்லாரையும் பிரமிக்கச்செய்தது. பளிச்சென மின்னலைப்போன்ற அந்த ஜோதிஸுடன் கூடவே சுகுண சுந்தரர்களுடைய சிரங்களும், உடல்களும் மறைந்தனவோ என்னும்படி அங்குள்ளவர்கள் அவைகளைக் காணமற் றிகைத்தனர். இனி சம்பவிப்பது யாதோவென ஏங்கினர்! சிலர் இதுதானோ கல்யாணக்கோலமென வருந்திக் கண்ணீர் பொழிந்தனர். இதுவுமீசன்செயலென்று வியந்தனர் சிலர். சுகுண சுந்தரர்களே தீரரெனப் புகழ்ந்தனர் பலர்.

டி. எஸ். சுப்பராமய்யர்.

---

## நமது பார்வைக்கு வந்த புத்தகங்கள்.

---

### விஜயமார்த்தாண்டம்.

இது அ. மாதவையர் அவர்களால் இயற்றப்பட்ட ஓர் "செந்தமிழ் நாவல்." இது பாண்டிய நாட்டின் கண்ணுள்ள மறவகுல திலகர்களாகிய ஜமீன்தார்களைப் பற்றியகதை. ஜமீன் வழக்கும் விவாதமும் ஊழல்களும், சண்டைசச்சரவுகளும், திரிசமங்களும், காமாதுயக்காரியங்களும், களவு, கொலை, காமத்தொழில்களும் இன்னுமுள்ள இதர அக்கிரமங்களும் இதில் நன்றாக விளங்கத் தீட்டப்பட்டிருக்கின்றன. ஜமீன்தார்கள் க்ஷயதசை யடைந்துவருவதற்குக்காரணம் இக்கதையை வாசிப்போருக்கு நன்றாக விளங்கும். இது புலிமலை ஜமீனைப்பற்றிய கதை. வழக்கம்போல் ஜமீன்தார் சந்ததியின்றி மாண்டுபோக அவர் பத்னியும் அவரைப் பின்பற்றிப் பரலோகம்செல்ல, சர்க்கார் ஜமீனைக்கைப்பற்றிக் கொண்டு பாத்தியஸ்தர்களை நியாயஸ்தலம் போய்வர உத்தரவு கொடுத்து விட்டார்கள். அசல், அப்பீல் வழக்குகள் முறைப்படி நடந்து தீர்ப்பானபின், சீமையிலுள்ள "அந்தரங்கசபைக்கு" அப்பீல் போயிற்று—கோர்ட்டுவக்கீல், குண்டுணிச் சாக்ஷிகள் எல்லாரும் வழக்கம் போல் வேண்டியபடி வாங்கி வயிறு நிறையத் தின்னபின் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் உதவியால் வழக்கிட்டுவந்த விஜயமார்த்தாண்டத்தேவர், வீரசங்கிலித்தேவர், இவர்களில் முன்னவர் பக்ஷம் கீழ்க்கோர்ட்டுகளில் தீர்ப்பானதை சீமையிலுள்ள அந்தரங்க சபையார் மாற்றிப் பின்னவர் பக்ஷம் தீர்ப்பளித்தார்கள். இத்தீர்ப்பான சங்கதி தந்திமூலமாய் வந்ததுமுதல் கதையாரம்பிக்கிறது. இக்கதைக்கு நாயகராகிய விஜயமார்த்தாண்டத் தேவர் கல்வியறிவு கேள்விகளிலும் சன்மார்க்கத்திலும் தேறியவாலிபர். உத்தம சிந்தையும் உயர்ந்த எண்ணங்களுமுடையவர். பரோபகார குணம் மிகுந்தவர். வீரசங்கலித்தேவர் எல்லாவற்றிலும் இவருக்கு நேர் எதிர்மறையாயுள்ளவர். விஜயமார்த்தாண்டர் ஜமீன் போனால் போகிறதென்று தன்படிப்பைக் கொண்டு பிழைக்க உத்தேசித்து கவர்னரைக்கண்டு டிப்டி கலெக்டர் உத்யோகம் தருவதாக அவர் கொடுத்தவாக்கைக்கொண்டு சந்தோஷமடைந்து, பால்ய வயது முதல் தன்னோடுபடித்து விளையாட்டுத் தோழியாயிருந்த சிவகாமி யென்னும் சௌந்தரவதியை பரஸ்பரம் உள்ளன்பு கொண்டு தான்நேசித்துவந்ததால், இருவரும் விவாகம் செய்துகொண்டு சுகமாய் வாழலாமென்று தீர்மானித்து அவள் தகப்பனாகிய திரக்ஷாகுக்ஷிக்குக் கடிதமெழுத, புலிமலையில் போஸ்ட் மாஸ்டர் வேலையிலிருந்த போக்கிரி சுப்பையர், தந்நயம் கருதி, அக்கடிதத்தைத்தானே யுடைத்துப்பார்த்து, புதிதாய் பட்டத்துக்குவந்த வீரசங்கிலித்தேவர் தயவை சம்பாதிக்க விரும்பி அவருக்கு இப்பெண்ணைக்காட்டி இவளை மணம்செய்வித்துதான் ஜமீன்தாருக்கு வேண்டியவனாகி அகப்பட்டதைப் பறிக்கலாமென்றுசெய்த சூழ்ச்சியால் இக்கதை விர்த்தாந்தங்கள் அவ்வளவும் வளருகின்றன.

இக்கிராதகப்பிராமணன் செய்த சூழ்ச்சி சகுனிக்கும் தோன்றியிராது. சிவகாமியோ 16-வயதாகாப்

பெண்மணியானாலும் முதிர்ந்த விவேகமும் உள்ளன்பும் உயர்பாவமுமுள்ளவளாய் தான் அன்புவைத் தங்கீகரித்த காதலனையேயன்றி வேறுயாரையும் மணம் புரிவதில்லையென்று திடசித்தமுடையவளாய் தன் காதலன் அன்புக்குரிய உத்தமபாத்திரமாய் நடந்துகொண்டாள். இவர்களிருவருக்கு முண்டான காதல் முதிர்ந்து வழக்கம்போல் அல்லல்விளைக்க, அவற்றையெல்லாம் நமது கிரந்தாசிரியர், "காதற்பத்து—கற்புப்பத்து" எனப் பல்வத்ததிகாரங்களில் பிரித்துசல்லிக் கடைசியில் காதலனும் காதலியும் சொல்லொணாக் கஷ்டங்களுற்றுப் பொறுத்துப் பிராணனையும் கொடுத்து கற்பைக்காத்து வருநாளில் பிராணனுக்கோ அல்லது கற்புக்கோ வந்தது அழிவு என்று சொல்லும் படியான ஆபத்தில் சிவகாமி மூர்ச்சித்துக் கிடக்கையில் அகஸ்மாத்தாய் அவள் காதலன் ஜெயிலினின்றும் விடுபட்டு அவளைக் காப்பாற்றக் கடைசி நிமிஷத்தில் வந்துசேருகிறான். அவள் கற்பையழிக்கயத்தனித்த ஜமீன்தார் வீரசங்கிலித்தேவரும் அவருடைய மந்திரியாகிய போ. சுப்பையரும் அவர்கள் துர்க்கிருத்தியத்துக்கு காராக்கிரகம்புகுந்து அங்கேயே தங்கள் வீணை வாணாளைக் கழித்துத் தீர்த்தார்கள். காதலனும் காதலியுமொன்றுபட்டு உத்தமமான இல்வாழ்க்கைநடத்தி வாழ்ந்தார்கள். இவர்கள் காதல் வளர்ந்ததையும் அதுமூலமா யிவர்களுக்குநேர்ந்த வில்லங்கங்களையும் இதை வாசிப்போர் தாங்களே படித்துக் களிப்பதின் ரசம் குறையக்கூடாதென்று இங்கு சொல்லவில்லை. ஆனால் சிவகாமிபட்ட கஷ்டங்களை நினைத்து நமக்குள் ஸ்திரீ புருஷ சகவாச விசேஷத்தைப்பற்றி நமது கிரந்தகர்த்தாவெடுத்துக்காட்டும் ஒரு உண்மையான குறையை மட்டும் எல்லாரும் கவனிக்கவேண்டி இங்கெடுத்துக் காட்டாது முடிக்க நமக்கு இஷ்டமில்லை. இதைப்பற்றி நமது கிரந்தாசிரியர் எழுதியிருப்பது எல்லாரும் கவனிக்கத் தக்கதாயிருப்பதால் அவருடைய ஆழ்ந்த ஆலோசனைகளையும் கருத்துகளையும் அவரெழுதியபடியே இங்கெடுத்துப் பிரசுரிக்க விரும்புகிறோம். இப்படி நாமெடுத்துக்கூற வேண்டியபாகம் நமதுத்தேசத்துக்கு மிஞ்சி நீண்டிருப்பினும்நமது ஜாதியாசாரத்திலுள் ளமர்ந்து நம் ஜனசமூக க்ஷேமத்தைக் கெடுத்துவரும் 'நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தது' போலுமுள்ள இப்பெருங்கேடு நீங்க அதை (வளர்ந்திருப்பினும்) அப்படியே எடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்.

கதா நாயகியாகிய சிவகாமி தன் கற்பைக் காத்துக்கொள்வான் அதைக்கெடுக்கச் சூழ்ச்சிதேடிய தன் தாய் தகப்பனாரையும், வீட்டையும், புலிமலைஜமீன் நாட்டையும் விட்டு, சமீபத்திலுள்ள பட்டணவாசம் சென்று, அங்கும் படாதபாடுகளெல்லாம் பட்டு, ஊரிலுள்ள போக்கிரிகள், வீட்டிலுள்ள போக்கிரிகள், மனைவாழும் பெண்டீராம் பாதகிகள் இவர் கொடுமைக்கெல்லாம்தப்பிக் கடைசியில், கலெக்டர் தயவால் ஒரு உபாத்திச்சி வேலைபெற்றுத் தனிமையிலமர்ந்தாள். இப்படி அவள் அமரும்வரை அவள் பட்டபாடுகளையெல்லாம் கூடவிருந் தனுபவித்தவர்போல் கேட்போர் மனம் கரைந்துருகும்படி எழுதிவந்த நம் கிரந்தாசிரியர், அவள் தன்னில்லத்தமரவும் "நம் கதாநாயகியுற்ற விபத்துகளுக்குக் காரணம் என்னவென்று ஆராய்வோமாக" வென்று சங்கற்பித்துக்கொண்டு மேலெழுதுகிறார்:—

"யௌவனமும் அழகும் ஒருங்குவாய்த்த பெண் ஒருத்தி தனித்தேனும் தன்னாயகனல்லாத யௌவன புருஷனை ஒருவனோடேனும் சஞ்சாரஞ்செய்யின், எத்தேசத்திலும் சில அசந்தர்ப்பங்களும் அசௌகரியங்களும் நேரிடவே செய்யும்; ஆயினும், நாகரிகமுற்ற நாடுகளில், இந்நாட்டைத் தவிர வேறெந்நாட்டினும், ஒன்றின்பின்னொன்றாக இத்தனை உபத்திரவங்கள் நேர்ந்திருக்கமாட்டாவென்று நாம் உறுதியாய்க் கூறலாம்: ஏனெனின், இங்குள்ளாரினும் துடுக்கான துஷ்டரும், தூர்த்தரும், பெண்களைக் கெடுத்துப் பிழைப்பதே பிரவர்த்தியாகக்கொண்ட குடிகேடரும், பிறநாடுகளிற் பெருகியுளாரெனினும், அந்நாடுகளில் நடைபெறும் ஓர் வழக்கத்தால் இவ்வாறு நிகழ்ந்திராது: ஸ்திரீகள் சுயாதீனமா யுலாவித் திரிவதும், தம்மினராயினும் அந்நியராயினும் சிறுவராயினும் பெரியவராயினும் புருஷர்களுடன் சாதாரணமாய்ப்பேசுவதும், இப்புண்ணிய பூமியைத்தவிர, மற்றெங்கும் குலாசாரமாய் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது; ஆகவே, இவ்வுலகில் அயோக்கியர்களினும் யோக்கியர்களே மிகப் பெரும்பாலாராக இன்னும் எங்குமிருத்தலின், தனியே சஞ்சரிக்கும் ஒருஸ்திரீ, தான்சந்திக்கும் ஒரு அயோக்கியனுக்குப் பலயோக்கியர்களைச் சந்தித்து, அவனாலுண்டாகக்கூடும் இடுக்கணினின்றும் அவர்கள் மரியாதையுடன் வலிந்து செய்யும் உதவிகளினால் தப்பித்துக்கொள்வாள். அதிசுந்தர ரூபவதியாகிய இராணியொருத்தியைப்பற்றி ஆங்கிலவித்துவான் ஒருவர்எழுதும்பொழுது, அவள் நாட்டில், (பிரஞ்சுதேசம்) எவனாயினும் ஒருவன் அவமரியாதையாக அவளை ஏறிட்டுநோக்கின், அப்பாவையைத் தண்டித்து அவன்மேற் பழிவாங்க, பல்லாயிரம் வாள்கள் தம் உறைகளினின்றும் திடீரென்று ஒருங்குகுதித்தெழுந்து கிளம்பியிருக்கும் என்று கூறியிருக்கிறார். அவ்விதமாக, சிறிதும் தன்னயங்கருதாது, அழகை அழகின் நிமித்தமே மனங்குளிரக் கண்டு, மாசுமறுவில்லா மகிழ்ச்சியிலாழ்ந்து, கண்யதை செய்யுங்குணம், நம்மவருக்குள் மிகக்குறையென்பது கேவலம் உண்மையே. அக்குறைக்குக் காரணம், நம்மாதரை, நாம் பெரும்பாலும் சிறைக்காப்பில் வைத்திருப்பதும், ஒரு ஸ்திரீ அந்நிய புருஷன் ஒருவனோடு பேசுதல் மகாபாதகமென்று மதித்திருப்பதுமே. கவனியுங்கள்! செஞ்சாலியிலைப் பட்டணத்தில் யோக்கியர்களே இல்லையென்பதில்லை; ஒரு தூர்த்தனுக்கு நூறுயோக்கியர்கள் இருக்கலாம்; ஆனால், சிவகாமியைப்போன்ற ஒருபெண், அந்நிய புருஷன் ஒருவனுடன் "வழியெது?" என்று கேட்கவேணும் பேசுவதும், புருஷர், எவ்வளவு யோக்கியர்களாயினும், அவளைப்போன்ற ஒருபெண்ணுடன் தாமாகப் பேசுவதும், இல்லை, முகமெடுத்துப் பார்ப்பதுங்கூட, அக்கிரமமென்று ஏற்பட்டுவிட்டால், பின்பு, அவள் உதவிபெறுவதெப்படி? துடுக்கான தூர்த்தரால் துன்புறுதொழிவது எங்ஙனமாகும்? இத்தூர்த்தர்கூட அவளிடத்துத் துணிந்து பேசுவதற்குக் காரணம் என்னவெனின், அவளைப்போன்ற பெண்கள், கற்பிழந்தாராய் இருந்தாலன்றி, ஏற்றதுணையில்லாமற் சாதாரணமாய் வெளிப்புறப்படுவது வழக்கவிரோதமாயிருத்தலே; கற்பிழந்தமாதரே தக்கதுணையின்றிவெளிவந்துலாவுதலும் புருஷரோடு பேசுதலும் வழக்கமாயிருத்தலின், கற்பரசியொருத்தி அவ்வாறு வெளிவந்துபேசவிதிவசத்தால்நேரின், அவளையும் தூர்த்தையாகவே மதித்தொழுகுகின்றோம். ஆதி ஆரியர்காலத்தில் இவ்வழக்கம் இல்லையென்றும், துருக்கர் ஆட்சியிலேயே இது பரவிற்றென்றும் கூறுவார்சிலர்; எங்ஙனமாயினும், நம்மவரிற் பெரும்பாலாரால் இது புராதன ஆசாரமாக அநுஷ்டிக்கப்பட்டுவருதுமன்றி, அதையிகழ்ந்தொழுகுவார்நிந்தனைக்கும் உள்ளாகிறார்கள். ஸ்திரீபுருஷர் ஒரேசாதி மிருகங்களைப்போற் கூடிப்பழகுதல், தீங்கையே விளைக்கும்; ஆனால், பூனையையும் எலியையும்போல் விலகியொழுகுவதும், தீங்கையே விளைக்கும்; தக்கமட்டு மரியாதையோடு பழகுதலேசரி: அங்ஙனம் ஒழுகாத நாம், இருபாலாரும் குற்றமற்ற மனத்தொடு இசைந்து பழகுவதால் விளையும் இணையிலா இன்பத்தையும், அறிவுப்பேற்றையும், ஒருவர் குறையை ஒருவர் நிரப்பி உதவக்கூடிய உதவிப்பேற்றையும் ஒருங்கிழந்து, விரைவில் விருத்தியடையாது வீழ்ந்து கிடக்கின்றோம். கற்பரசியாகிய அந்நியஸ்திரீயொருத்தி நம்மை முகமெடுத்துப் பார்த்துச் சல்லாபமாய் நம்முடன் சம்பாஷிப்பது, முடியாததாய்விட்டது: அவ்வாறு ஒரு ஸ்திரீ இப்பொழுது செய்யின், அவள் நம்மேற் காதல்கொண்டு, நம்மை விரும்புபவளாக அவளை மதிக்கும் ஈனஸ்திதிக்கு, நாம் வந்துவிட்டோம். மாதம் முந்நூறு ரூபாவுக்கு மேலான சம்பளமுள்ளவரும், நாலைந்து தாலூக்காக்களுக்கு அதிகாரியுமான ஒரு பிராமண உத்தியோகஸ்தரின் வாலிபமனைவி, தன்கணவர்கீழுள்ள சேவகர்களில் ஒருவனும், மாதம் ஆறுரூபா சம்பளமுள்ளவனுமான ஒரு துருக்கனே துணையாக, ஒரு பூந்தோட்டத்தைப்பார்க்கச் சென்றதைக் கண்ணுற்று, கற்றறிந்து பட்டமும்பெற்றகனவான்கள் சிலர், அந்த அம்மாளைக் கற்பிழந்தவளாக அவதூறுகூறியதை யாம்கேட்டுளோம். அவ்வாறு அவளைச் சந்தேகித்ததற்கு முக்கிய காரணம், அவள் கணவர் அவளைவிட்டுப்பிரியச் சகியாது எப்பொழுதும் அவளுடன் சல்லாபமாயிருப்பதும்: அவர் நண்பரிற் சிலரைக்கண்டபொழுது, அவள், தான் வீற்றிருக்கும் நாற்காலியினின்றும் எழுந்து போகாதிருப்பதுமே! இம்மட்டோ, ஸ்திரீபுருஷர் சாதாரணமாய்க் கலந்து பழகும் ஆசாரத்தையுடைய பிறநாட்டாரில், தீயொழுக்கமுள்ளார் சிலர் கிடக்க, அனைவரும் அத்தகையரென்றும், கற்பே கிடையாதென்றும், அந்நிய புருஷனோடு சல்லாபமாய்ப்பேசி அவன் கையைப்பிடித்து உபசாரமாய்க்குலுக்கும்ஒரு ஸ்திரீ அவனுடன் கற்பிழந்தவளாகவே இருக்கவேண்டுமென்றும், பெரும்பாலும் நம்புகின்றோம்! நெடுநாளைத் தூர்ப்பழக்கத்தால், பிறர்கற்பைக் கண்டுமதிப்பதே நமக்கு அரிதாய்விட்டது."

## "உண்மைக் கணிகல மூக்கமுடைமை"

### ஸ்வாமி உபாத்தியாயர் சாதனை.

வேதாந்த வழிபற்றி யுண்மையை நாடியுழைத்து காரியசித்தி பெறுவோர் மண்பாவைபோலும் மரப்பாவைபோலும் உலகுக்கு உபயோகமற்றவராய், மூக்கைப்பிடித்துக்கொண்டு, காட்டிலும் குகையிலும் வசிக்கிறவர்களா யிருக்கிறார்கள் என்றுசொல்லி, அனேகர் அவர்களுடைய உண்மையறியாமல் சத்தியத்தை யிகழ்ந்து சாதனைவழிகளைத் தூஷிக்கிறார்கள். இது அறியாமையினாலுண்டான குற்றமென்பதிற் சந்தேகமில்லை. ஸ்வாமி விவேகானந்தர் இத்தப் பெண்ணத்தை நன்றாக வெடுத்துக்காட்டிப் போதித்ததன்றி தம்மட்டில் அதற் குதாரணமாக வுழைத்தும் பொய்யென்று காட்டி நிரூபித்தார். உண்மையில் ஸ்வானுபவம் பெற்ற எல்லாரும் இப்படியே சொல்கிறார்கள். அரைகுறையாகப் படித்துவிட்டு அற்பபுத்தியோடும் அகந்தைமேலிட்டுத் தானறியா விஷயங்களைப் பற்றித் தன்னறிவின்றிப் பேசியும் வாதுசெய்தும் வரும் புன்மதியோர் பேசசுப் பொய்யுலகில் பரவி இத்தப் பபிப்பிராயத்தை யுண்டுபண்ணி வருகிறது. இதைப் போக்கக்காலம் வந்துவிட்டது. அசத்தியத்துக்கு ஆயுள் நூறானாலும் அது அழிந்து போவதேயன்றி சாசுவதமாய் நிலைத்திருப்பதல்ல. ஆகையால் அதன் சுபாவப்படி அதற்குக் காலம் வந்துவிட்டது. "உண்மைக் கணிகல மூக்கமுடைமை" யென்பதை விளக்க நிதர்சனமாக வுழைத்துவரும் அனேக ஸத்யவான்களில் ஸ்வாமி உபாத்யாயர் என்பவர் இங்கிலாந்தில் செய்தவேலை மிகச்சிறப்புற்று விளங்குகிறது. இதைப்பற்றி "ரிவியூஆவ்ரிவியூஸ்" என்னும் பேர்போன ஆங்கிலேய மாதாந்தரப்பத்திரிகையின் ஆசிரியர் அவருடைய பத்திரிகையில் எழுதியிருப்பதை இங்குவரைதலே போதுமானது. நம் கிறிஸ்தவ சகோதரர் பிரசுரிக்கும் திராவிட வர்த்தமானியில் அதைக்காண நாம் மிகச் சந்தோஷமுற்றோம். மிஸ்டர் ஸ்டெட் எழுதியிருப்பதாவது:—

"ஒரேயொரு மனுஷன் தன் சொந்த முயற்சியினால், சாதாரணமாய் சாதிக்க முடியாத ஒரு பெருங்காரியத்தைச் செய்துமுடிப்பதைக் கண்டால் அவனைப் புகழாதிருப்பது அரிது. சென்ற வருஷம் சுவாமி உபாத்தியாய என்னும் பெயருடைய ஒரு எழைப் பிராமணன் சீமைக்கு வந்திருந்தான். அவன் சீமைச் சருவகலாசாலைகளில் ஹிந்து தத்துவங்களைப் போதிக்க ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டால் பெரு நன்மையுண்டென்னும் நம்பிக்கையுடையவனாய் வந்தான். கிறிஸ்துநாதரின் ஆதிச் சீஷர்களைப்போல் கையில் தடியும் உடுத்த துணியுமன்றி வேறொன்று மில்லாதாய் வந்த அந்தப் பிராமணன் ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் கலாசாலைகளின் போதகாசிரியர்களையும், நிபுணர்களையும் தன்னபிப்பிராயத்துக்கிசையச் செய்யலாமென்று வந்தான். அவனை ஆக்ஸ்போர்ட்டில் சந்தோஷத்துடன் அங்கீகரித்தார்கள். கேம்பிரிட்ஜ் நகரத்திலும் அவனது நோக்கம் ஈடேற அநுகூலங்கள் கிடைத்தன. அங்கு ஒரு செல்வாக்குள்ள கமிட்டி யேற்படப் பிரயத்தனஞ்செய்தான். அந்தக் கமிட்டியார், இந்து தத்துவங்களைப்பற்றிப் போதிக்க ஏற்ற திறமையும் கல்வியும் வாய்ந்த போதகர் கிடைத்தால் மூன்றுவருஷகாலம், கேம்பிரிட்ஜ் கலாசாலையில் ஹிந்து தத்துவமுறை போதிக்க ஏற்பாடுகள் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். அங்கிருந்து சென்ற ஜூன்மாதம் அந்த சுவாமி உபாத்தியாய என்பவர் இந்தியாவுக்குத் திரும்பினார். அங்கே சுமார் 15,000 ரூபாய்போல் சேகரித்துக்கொண்டு, ஹிந்து தத்துவ முறையைப் போதிக்கும் காரியத்திற்காய்ச் சிறந்த பண்டிதர் ஒருவரையுமழைத்துக் கொண்டு சீமைக்குத் திரும்புவார். பணஞ்சம்பாதிப்பது சுலபந்தான். பண்டிதன் கிடைப்பதுதான் கஷ்டம் என்னவேண்டும். ஆக்ஸ்போர்டிலும், எடின்பரோவிலுள்ள கலாசாலைகளிலும் இவ்வித போதகமுறைகள் ஏற்படும் என்று அந்தப் பிராமணர் உறுதியாய் நம்பிக்கொண்டிருக்கிறார்"

இதை திராவிட வர்த்தமானிக்கு மொழி பெயர்த்தவர் ஸ்வாமி உபாத்யாயரை முதலில் ஏகவசனமாகக் கூறியிருப்பதை வித்தியாசமாக நினைக்கத் தேவையில்லை. அற்பமாகத் தோற்றுவோரும் ஆகாத காரியங்களைச் சாதிப்பார் என்பதை விளக்கக் கருதினதாகக் கொள்வது உத்தமம்.



## சிறுவர்க்கானபக்கம்.

### வாக்கு சாதுரியம்.

(விவேகசிந்தாமணியை வாசிக்கும் ஓர்பெண்மணிஎழுதியது)

நித்திய தரித்திரனாகவும் பிறவிக்குருடனாகவும் கலியாணமில்லாதவனாகவுமிருந்த ஒரு கோமுட்டியானவன் சுவாமியைக் குறித்து அனேகநாள் தபசுசெய்தான். சுவாமியானவர் அவனுக்குப் பிரத்யக்ஷமாய் வந்து, இவன் கோமுட்டியாதலால் எத்தனைவரம் கேட்பானோ என்று சந்தேகித்து பின்வருமாறு அவனைப்பார்த்து யுக்தியாய்க்கேட்டார். "ஓ! கோமுட்டி! நீ செய்த தபசுக்காக மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்குத் தேவையான ஏதாவது ஒருவரம் கேள், அதிகமாய்க் கேட்டாயானால் ஒன்றும் கொடுக்காமல் மறைந்துபோவேன்," என்றார். இதைக்கேட்ட கோமுட்டி மிகவும் கிலேசித்து, நான் அனேகவரங்களைக் கேட்கலாம் என்றிருந்தேனே! சுவாமி இப்படிச்சொல்லிவிட்டாரே! இதற்கென்ன செய்வதென்றாலோசித்து சுவாமியைநோக்கி, "என்னாண்டவனே உம்முடைய திருவுளத்தின்படியே கேட்கின்றேன். என்னவென்றால், என் பேரனுக்குப் பேரன் ஏழுமாலை மாடத்திலிருந்து பொன்னுலகத்திலே பாலும் அன்னமுமாகச் சாப்பிட என் கண்களிக்கப்பார்த்துவிட்டுச்சாகும்படியாக இந்த ஒருவரம் மாத்திரம் அனுக்கிரகம் செய்தால் போதும்" என்று கேட்டான். இப்படி இவன் கேட்டதிலே திரவியமும், புத்திரபௌத்திர பாக்கியங்களும், நேர்த்தியான வீடும், கண்களும், என்கிற எல்லாவரங்களும் அடங்கியிருத்தலால் சுவாமியானவர் அவனுடைய யுக்திவார்த்தைக்காக மகிழ்வடைந்து அவனுடைய இஷ்டப்படிக்கே வரத்தையளித்து மறைந்துபோனார். இது கட்டுக்கதையானாலும் புத்திசாலித்தனமாகவும் யோசித்து யுக்தியாகவும், ஒவ்வொருவரும் பேச அறிந்திருக்கவேண்டியது என்பதை எவ்வளவு நன்றாக விளக்கிக்காட்டுகிறது. பதட்டத்தினாலும் மூடத்தனத்தினாலும் ஒருவன் அடைந்த நஷ்டத்தை அடியில்வரும் விஷயம் கூறுகின்றது. என்னவெனில்: இராவணனையும் அவன் தம்பி கும்பகர்ணனையும் பற்றி இதைப் படிக்கும் சிறுவர் சிறுமிகளுக்குத் தெரிந்திருக்கலாம். கும்பகர்ணனானவன் நெடுநாள் பிரமனைக்குறித்து ஊசிமுனையிலும் ஒற்றைக்காலிலுமாய்க் கண்டோர்கள் அதிசயிக்கத் தவமிருந்தான். பிரமதேவனும் அவன் செய்யும் தவத்திற்கு ஈடுபட்டவனாகி அன்னவாகனத்தின் மீதிலேறிக்கொண்டு அவன் முன் தோன்றி "கும்பகர்ணனே! இனி உடலைவருத்தும் தபசை விட்டொழிவாய் நீ இச்சித்த வரத்தைக்கொடுக்கிறேன் கேள்" என்றனர். அனேகநாட்களாய் நித்தியதத்துவம் கேட்கவேண்டுமென்று எண்ணியிருந்த கும்பகர்ணன், ஆத்திரத்தினாலும் செருக்கினாலும் தன்னெண்ணத்தைமறந்து, தபசைவிட்டெழுந்து வாய் குழறி "ஸ்வாமி! எனக்கு நித்திரைதத்துவத்தை கிருபைசெய்து கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பிரமதேவரும் அந்தப்படியே வரத்தைக்கொடுத்துவிட்டுத் தன்னிருப்பிடம் சென்றார். அதன்பிறகு கும்பகர்ணன் தான் கேட்டவரத்தை நினைத்து தன் மூடத்தனத்தாலுண்டான பிசகை எண்ணி வருத்தப்பட்டான். என்னபிரயோசனம்! ஆயுள் காலம் வரையில் தூங்கியே காலத்தைக் கழித்தான். இதைப்படிக்கும் சிறுவர் சிறுமிகளே! உங்களுக்குப் பதட்டமும் ஆத்திரமும் வந்த சமயத்தில் இந்தக்கதைகளை நினைத்துக்கொள்ளுங்கள். மூடக் குப்பகர்ணனைப்போலிராமல் கோமுட்டியைப்போல் பேச முயலுங்கள்.

சிங்காரம்மாள்.

## To Our Subscribers.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

### நமது சந்தாதாரர்களுக்கு.

*நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வாலியத்துக்குரிய சந்தாவைச்செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வாலியத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பல்வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தாதொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

**D. K. Agency.**

20*th May*, 1903. **அ. ப. ஏஜன்ஸி.**

# "ANANDA MISSION"

## For the Propogation of Truth and Knowledge.

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control and Self-Culture.**

*"EKAM SATYAM BRAHMA."—SRUTIVAK.*

" Seek Truth wherever you can find it,"
" But Make your Choice and Stick to it "
till you reach the end.

"*Truth is hard Finding !*" **Yes,** " *Uncompromising too,* **when** *whole*; **Yet Try !** " *Awake, Arise and Stop not till you reach the Goal.*"—*Sruti.*

'And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligenc, development and selfless state

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

**Hail! Ananda Natesa!**

*Sri Akandananda Satguruve Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People :—

**Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.**

**Single copy, current No. 5½ As.; Back Nos. 6 As. Each.**

**English & Foreign Subscription 5s 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As, off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each yea Enrolled Subscribers may not withdraw except at the end of the year

To regular annual subscribers 2 months grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention, and avoid vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**கனமான காகிதப்பதிப்பு:—** அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசான காகிதப்பதிப்பு:**—:சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது: நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவுக்கும் இடமிராது.

" Seek Truth wherever you can find it," But, " Make your choice and stick to it till you reach the End."

ஸத்யம்வத.—Speak the Truth.

Hitch your Wagon to a Star. " To Thine own Self be True.




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] God is Love : Knowledge is Power : *Om.*

ஸத்யமேஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 12.] 1903-ம்ஞு செப்டெம்பர்மீ [இலக்கம் 5.

# "THROUGH NATURE TO GOD."

## A Kindergarten Sermon on Nature Study.

" CONSIDER THE LILIES OF THE FIELD, HOW THEY GROW "—*Christ.*

"THE ELEMENTS OF NATURE are THE MODE OF THE WILL OF GOD"—*Hermes Trismegitus.*

## பிரகிருதியினுண்மையிற் பரமவனைக் காணலாம்.

"தத்துவமேங்குண்டு தத்துவனங்குண்டு"—திருமூலர்.

*"பள்ளத்தில் நீர்தங்கும் பான்மைபோ லுளவீச*
*னுள்ளத் துனையெனையு மொருங்கமர்த்திக் கொண்டானே."—காதற்செல்வி.*

"பள்ளமுள்ள விடத்தில் நீர்தங்கும்" என்பது சகஜமாய் எல்லாருமறிந்த உண்மை. பிரகிருதியிலுள்ள ஒவ்வொரு தத்துவப் பொருளும் ஈசன் தன்மையை ஒவ்வொருவிதத்தில் விளக்குவனவாயிருக்கின்றன வென்பதும் உற்று நோக்கில் இதுபோல் உண்மையெனப்படும். உதாரணமாக, மலையினுச்சியில் விழுந்த நீர் "பள்ளத்தில் நீர் தங்கும் பான்மைபோலுளவீசன்" நித்ய விதியை யனுசரித்து பள்ளமுள்ள விடந்தேடி அதை நிரப்பச் செல்கிறது. அதன் முயற்சி யெல்லாம் பள்ளமுள்ள விடத்தில் தங்கவேண்டுமென்கிற ஒரு நோக்கங்கொண்டேயன்றி வேறல்ல. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவான் அது இடைவிடா தெடுக்கும் முயற்சியினாலேயே அருவிகளும், நீரோட்டங்களும், நீர் வீழ்ச்சிகளும், நதிப்பிரவாகங்

களும் இன்னுமுள்ள உடைப்பு, ஓடை, பயிருக்கு நீர்ப்பாய்ச்சல், ஏரி குளங்களுக்கு நீர் கட்டல்
முதலிய பற்பல நாமரூபங்களால் வழங்கும் தோற்றங்களும், தொழில்களும் உண்டாகின்றன.
இவ்வளவுக்கும் காரணமாயிருப்பது என்னவென்று ஆழ்ந்து விசாரித்தால் "பள்ளத்தில் நீர்
தங்கும் பான்மை" யாயுள்ள ஈசன் செயலுக்குட்பட்டு மலையுச்சியில் விழ்ந்த நீர் இடைவிடாது
அவர் தன்மையைக் காட்டியனுசரிக்க முயன்று வருவதேயாம். இதை மறந்ததோ வந்தது
மோசம்! ஆறில்லை, குளமில்லை, வாய்க்காலில்லை, வரப்பில்லை, பயிரில்லை, பச்சையில்லை, அன்ன
மில்லை, ஆகாரமில்லை, அவற்றால் சீவிக்கும் ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய ஜந்துக்களில்லை,
மனிதனுமில்லை, உலகமுமில்லை யொன்றுமில்லை யென்பதில் வந்து முடியும். ஆகையால் ஈசனு
டைய சிருஷ்டிகளெல்லாம் இப்படியே அதனதன் இயற்கைக்கேற்க ஒருவிதத்தில் ஈசன் தன்
மையைக் காட்டிவருகின்றன. அதனின்றும் எதுவும் சிறிதும் பிசகுவதில்லை. பிசகினால் வந்
ததுமோசம். உலகமே தடைப்பட்டு நின்று போய்விடும். இதை மந்தமதியாம் ஊனர்கள் ஊன்
றிப் பார்க்காத்தோஷத்தால் உண்மையில் உள்ளபடி யுணர்வதில்லை. உற்றுப்பார்த் துணர்ந்தால்
உண்மை மேன்மேலும் உள்ளபடி விளங்கும். ஒரு உண்மையை யுள்ளபடி ஆய்ந்துணர்ந்
பற்றினால், அதிலிருந்து இன்னொரு உண்மை நிர்மலமான ஆகாசத்தில் நூதனமாய் ஒரு நக்ஷத்
திரம் தோன்றினாலெப்படியோ அப்படி யுளக்கண்ணுக்குப் புலப்படும். இப்படி பிரகிருதியில்
நம்கண்ணுக்குப்படும் தத்துவப் பொருள்கள் எதையும்பற்றி அதனதனுண்மையை முற்றுமறிய
முயன்று, அத்தத்துவப் பொருளோ டைக்கியமாகி அதன் இரகசியத்தை முற்றும் பற்றினோ
மானால், ஒவ்வொன்றும் நம்மை அதனதன் உற்பத்தி மூலத்திற் கொண்டு போய்ச் சேர்த்து,
சம்பூரணமாயுள்ள பராபரன் தன்மையை ஒவ்வொன்றும் அதன் ஸ்வபாவத்திற்கேற்பச் சக்கர
வட்டமாய்ச் சிறிதும் பிசகாமல் வெகு அழகாய் ஓய்வொழிவின்றி யுழைத்துப் பிரகாசிக்கச்
செய்வது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதாய் விளங்கும். அதிரகசியமாம் இவ்வுண்மையை
இப்பொழுது எடுத்துக்கொண்டு மலையுச்சியில் விழுந்த நீரைக்கொண்டு அறிந்து கொள்வான்,
அஃதோடு ஐக்கியப்பட்டு மனோலயமடைந்து, அதுபோம்வழி வரும்வழியென்னவென்று அறி
ந்து கொள்வோம்.

### உண்மையுறவு முறைவு—The Principle of "Inner connection."

இதை வாசிக்கும் அன்பர்களே, இப்பொழுது நீங்களுமில்லை, நானுமில்லை; இருவரு
மற்று எங்கே போனோமென்றால், நாமெல்லாரும் தண்ணீர்த் திவலைகளாக மாறிப்போய் விட்
டோம். எனப்படி மாறவேண்டு மென்றால், எந்த இரகசியத்தையுமறிய இது ஒன்றே யுண்மை
யானவழி. இரகசியமென்பது இரண்டாம் பேரறியக்கூடாத உண்மை. இரண்டாம் பேரறியக்
கூடாத உண்மையை துவைதமாக (அதாவது சொல்கிறவன் கேட்கிறவன் என இரண்டாக)
விருந்து அறிவது எப்படி சாத்தியமாகும்? அசாத்தியமே! யாராவது ஒரு இரகசியத்தைச் சொல்
லக்கேட்டுத் தெரிந்ததாகச் சொன்னால், அதை நம்பவே நம்பாதேயுங்கள். அது சுத்தப்
பொய். வாக் ஜாலமன்றியதில் வேறில்லையென்று நான் சத்தியமாகச் சொல்வேன். முதலாவது,
ஒருவன் சொல்லி மற்றொருவன் கேட்கக்கூடியவஸ்து "இரகஸியம்" அல்ல. இரண்டாவது,
சொல்கிறவன், கேட்கிறவன் என்கிற பேதபுத்தியோடு சொல்லப்பட்ட "இரகசியம்" வார்த்தை
மட்டிலுண்மையா யிருந்தாலும் அது உண்மையில் உள்ளத்திலேறாது. ஆதலால் தான் வஸ்த்



யம் அல்லது ப்ரஹ்மஞானம் "குப்தவித்தை" யென்றும், "பரமரகசியம், சொன்னால் தலைவெ
டித்துப்போ" மென்றும், சற்சீஷனால் சத்குருமுகமாகவின்றி மற்றப்படி கேட்கத் தக்கதல்ல
வென்றும் இப்படிப் பலவிதமாக மேலோர் அதனுண்மையை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.
மனோலயமானாலன்றி * "உண்மையான இரகசியம்" உள்ளத்திலேறாது. எல்லா இரகசியங்
களிலும் மேலானபரமரகசியம் "ப்ரஹ்மஞானம்". இந்த இரகசியம் சிருஷ்டிவர்க்கங்கள் எல்லா
வற்றினிடத்தும் அடக்கமாயிருக்கின்றது. இதைப்பற்றிப் பறிக்கும் வகையறியாது கோடானு
கோடி ஜனங்கள் போம்வழி வரும்வழி தெரியாது, பிறப்பதும் உண்டுடுத்துறங்கி, வளர்ந்து
தேய்ந்து இறப்பதும், மறுபடியும் மற்றொரு தேகமெடுத்துப் பிறப்பது மிறப்பதுமாக, சுற்றுச்
சுழலி லகப்பட்ட துரும்புபோல் உழன்று சுழன்று கீழேபோவதும், பிறகு மேலே வருவதும்,
மறுபடியும் இன்னுமோர் சுழியி லகப்பட்டுச் சுற்றுவதுமாகச் சுழன்றலுத்துழன்று வருகிறார்
கள். இது நிற்க.

### ஐக்கிய தத்துவம்—The Principle of Unity.

இப்போ நீர்த்திவலைகளாய் விட்ட நாம் (இதை வாசிக்கும் நீங்களும் நானும்) மழைத்
தாரைகள் வழியாக ஆகாசத்திலிருந்து இமயமலைச் சிகரத்திலிறங்கி விட்டதாக நினைத்துக்
கொள்வோம். "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை" நம்முடையது. பள்ளமுள்ள விடத்தில் நீர்
தங்கவேண்டும்; ஏனென்றால் அது நம்முடைய தன்மை. நாம் வானின்றும் விழ்ந்து உலகத்தில்
வந்து அவதரித்தது அதற்காகவே யன்றி வேறொன்றுக்குமல்ல. "பள்ளமுள்ள இடத்தில்
நீர்தங்கும்"; ஆகையால் நம்மைச்சுற்றி யெங்கேபள்ளமிருக்கிறதென்று பார்ப்பது நம்தொழில்;
அதுவே நமக்கு ஜீவியம். நாம் ஜீவனெடுத்ததற்குப் பலன் பள்ளமுள்ள இடத்தில் போய்த்தங்
குவது. இது நம்மை யெங்கு கொண்டுபோய் விடுமோ அதைப்பற்றி விசாரமில்லை. நம்மிடத்தில்
வேற்றுமையின்றி ஒற்றுமை மட்டுமிருந்தால் இந்த ஒரு செயலே நம்மை உற்பத்தி ஸ்தான
மாம் மூலகாரணப் பொருளினிடம் கொண்டுபோய்ச் சேர்க்கு மென்பது சத்தியம்.

### ஸ்வபாவ கிருத்தியம் லீலாவினோதம்—Nature needs no effort.

பள்ளமுள்ளவிடத்தில் போய்த்தங்குவது நமக்கு ஸ்வபாவமாய் அமைந்த தொழி
லாதலால், அதில் நமக்கு சிரமமில்லை; வருத்தமில்லை; வேலையில்லை. அத்தொழில் நமக்கு ஸ்வபா
வமாக அமைந்துள்ள காரணத்தால் அது நமக்கு ஒரு நிருத்தமாம்: கூத்தும் குதிப்புமேயன்றி
யதில் நமக்கு வேலையொன்றுமில்லை. எல்லாம் விளையாட்டு. ஸ்வபாவமா யமைந்துள்ள அத்
தொழிலில் பிரவர்த்திப்பதால், நமக்குள்ளடங்கியுள்ள சக்திகளெல்லாம் வெளியாகித் துலங்கு
கின்றன. ஆகையால் அதைப்பற்றி நீர்த்திவலைகளாகிய நாம் சிறிதும் கவலைப்படவேண்டிய
தில்லை. கவனிக்கவுங்கூட வேண்டியதில்லை. ஏனெனில் அதை மாற்ற நம்மைப்படைத்த ஈசனாலு
மில்லை. ஈசனுடைய தன்மையே நம்முடையதாயிருப்பதால், ஈசன் தான்மாறாது நம்முடைய
ஸ்வபாவத்தை மாற்றமுடியாது. ஆகையால் அதை யுணர்ந்தமட்டில் உள்ளத் திருக்கவிட்டுப்
பின்னை நாம் கவனிக்கவேண்டிய தென்னவென்று விசாரிப்போம். பள்ளமுள்ள விடத்தில்
நாமேன் தங்கவேண்டு மென்று ஊன்றி நின்று ஊகித்து ஆராய்ந்து பார்த்தால், நம்மை நமக்கு

* c. f. Froebel's great word "inner connection" & its meaning.

மூலகாரணமாம் பொருளினின்றும் பிரித்துச் சிருஷ்டித்த கடவுள், அந்த மூலகாரணப் பொருளைத் திரும்பியும் நாம் போயடைவதற்கு இவ்விதியைச் சர்வசாதகமாயிருக்க நம்முள்ளத் தழைத்து "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்கிற உண்மை ரகஸியத்தையும் உபதேசித்து நம்மை யுலகி லனுப்பியுளார் என்பது நன்றாகப் புலப்படும். இரண்டு சொட்டுத் தண்ணீரை, சமயான கண்ணாடித் தரையில் ஒன்றின்மேலொன்றுபடாது அருகிலிருக்க அமைத்தால் அவையிரண்டும் ஆணோடு பெண்சேருவதுபோல் ஒன்றையொன்று தழுவிச் சேர்ந்து கலந்து ஐக்கியமாவதைக் காணலாம். இதை ஆகர்ஷண சக்தியென்பார்கள் சாஸ்திரவிற்பன்னர். தண்ணீர்த்திவலைகளாகிய நாமே, மனுஷசீவன்களாகி அப்பொழுது நமக்குரிய சுயவுருவெடுத்தோமாகில், இதே ஆகர்ஷண சக்தியை அன்பு என்று சொல்வார்கள். பேர் வித்தியாசத்தினால் நாம் மயங்கத் தேவையில்லை. தொழிலொன்றாயிருக்க, ரூபத்துக்குத் தக்கவாறு நாமம் வேறுபட்டால் அதில் மயக்கமென்ன நமக்கு? சக்தி யொன்றானால் சாஸ்திரம் அதைப் பலவிதமாகப் பேரிட்டழைக்கட்டுமே. அதனால் அதன் தன்மை மாறுவதில்லையால், நாம் நமக்குள் அதைப் பற்றித் தர்க்கித்துச் சண்டைபோடத் தேவையில்லை. ஆகையால் தண்ணீர்த் திவலைகளாகிய நாம்மட்டும் ஒன்றுபட்டு ஒரு திரளாயிருந்தால் நம் ஸ்வபாவத்தினாலேயே நாம் ஆதியில் எந்தப் பொருளினின்றும் வந்தோமோ அந்தப் பொருளைச் சென்றடைந்து அஃதோடைக்கியமாகி, **அனேகம்** என்கிற இப்பொழுதுள்ள தீராவேற்றுமை யொழிந்து **ஏகம்** என்கிற சமரஸ பாவமடைந்து நாம் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்கிற கவலையுமழிந்து ஆனந்தமாய் அழிவற்றிருக்கலாம்.

### தன்மய தத்துவம்—The principle of like to like.

இப்படி ஹிமோத பருவதத்தின் உச்சியில், ஹிமவான் தன்மகளாக அங்கீகரித்தேற்றுத் தன்னுதரவில் வைத்து வளர்த்த உமையவளுக் கொப்பான **உறைபனி** யென்னும் தண்ணீர்த் திவலைநாயகி உற்சாகம் பொங்கிப் பிரசங்கித்து நிற்க, உதராக்னிக் கொப்பான அவளுள்ளத்திருந்த வெப்பம் வெளிப்பட்டுத் தன்னை யொத்துத் தன்மயமாய் விளங்கிய சூரிய வெப்பத்தோடு கலந்துறைந்து ஐக்கியப்பட்டு நின்றது. இதை யெல்லாம் கண்டு கேட்டுக் களித்திருந்த பர்வதராஜன் "எதுவும் தன்னொத்ததைக் கூடுவான் தன்மயமாகித் தானே தானாய் விளங்கப்படும் பாடும், அவசரமும் அப்பப்ப! அதிசயம், அதிசயம்!" என்று அதிசயித்து ஆனந்தம் பொங்க, அதிசயானந்தம் அழிவுள்ள தென்று கண்டு, நிரதிசயானந்த மெய்துவான், மனதையொழிக்க மௌனஞ்சாதித்து சதாநிஷ்டையி லமர்ந்து அசைவற்றிருந்தான்.

### நாம ரூபோற்பத்தி—The Law of Manifestation

மலைமகளொத்த உறைபனியி னுள்வெப்பமும் அவள்தலைமகனும் பரஞ்சுடரொத்த பாஸ்கரன் கதிரொளிவெப்பமும் ஒன்றுபட் டென்றும் நீங்காக்கலவியிலிருக்க, இந்தவுண்மையாம் ஸம்யோகத்தின் காரணமாக, மலைமகள் நெற்றி முத்து முத்தாய் வேர்த்துக் கொட்டுவது போல், உறைபனியினின்றும் நீர்த்திவலைகள் தோன்றின. இவை தன்னொத்துத் தன்மயமாயிருந்த மழைத்தாரைகளின்வழி யிழிந்த நீர்த்திவலைகளோடுகலந்து கூடி யுறவாடி ஒன்றுபட்டு ஒருதன்மையாகி, மலைச்சரிவிலெங்கு மோரேபள்ளமாயிருக்க, அதன் வழியிறங்கிக்



கடுகவேநடந்து, பள்ளங்கண்டவிடத்தில் தங்குவதே நோக்கமாய்ப் பாய்ந்து பாய்ந்து ஓட்டமும் குதிப்புமாய் ஓடிவந்தன. மலைச்சாரலில் தபசுசெய்து கொண்டிருந்த அருந்தவ முனிவர்கள் இந்நீரோட்டத்தை **அருவி** யெனப் பெயரிட்டு அவர்கள் தாகசாந்திக் குபயோகித்தார்கள். அவர்கள் தங்கள்கமண்டலத் தெடுத்தருந்திய நீர்த்திவலைகள்போக, மற்றவை "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை எங்களது" என்று முணுமுணு வென்று ஜபித்துக்கொண்டு, ஓங்காரசப்தம் ஆங்காரமானாற்போல், அதிவேகமான மலையருவியாக வோடிப்பாய்ந்தன. இப்படிக் கொஞ்சதூரம் செல்லவும் அங்கேயொருபக்கத்தில் ஓர் பெரியமலைப்பிளவுகண்டு அதனுண்டான செங்குத்தான பள்ளத்தில் தொப்பென்று குதித்துப் பேரிரைச்சலிட்டுக்கொண்டு அப்பள்ளத்தை நிரப்பப் பாடுபட்டுழைக்கலாயின. சுமார் 100 அடி உயரத்திலிருந்து தண்ணீர்த்திவலைகள் ஒன்றுசேர்ந்து அங்கம்பெருத்து ஆகிருதி பலப்பட்டு, மலைமகள் தன்முந்தாணியை முன்னேமடித்துச் சொருகாதுபின்னே தொங்கவிட்டு, அது காற்றிற்பறக்க அவள் ஒய்யாரமாய், பாதச்சிலம் பொலிக்க மெட்டிகள் தாளம்போட, தன்காதற்றலைவனை நினைத்து அதிவேகமாய் மலையிலேறிச்செல்லமுயன்று முயன்றும், அடிசறுக்கி அகழில்விழுந்து சங்கடப்பட, தன் முயற்சியில் சிறிதும் குன்றாதுழைத்துவருவாள் போல் அக்காட்சி கண்ணுக்கு ரமணீயமாகவும், மனதுக்கு கம்பீரமாகவும், உள்ளத்துக்குண்மையாகவும் தோற்றிற்று. அப்பேரிரைச்சல்கேட்டோடிவந்த வேடர்கள் அதைப்பார்த்து இது "நீர்வீழ்ச்சி" அல்லது 'மலையருவி' யென்று பேசிக்கொண்டார்கள். யார் என்ன பேசிக்கொண்டாலென்ன? நீர்த்திவலைகளின் எண்ணமும் நோக்கமும் தொழிலும் சிறிதும் மாறவில்லை.

### எப்படியும் தத்துவம் மாறுவதில்லை—Inner Principle ever true.

பள்ளமுள்ளவிடத்தில் தங்கவேண்டியது ஒன்றே அவைகளின் நோக்கம். மேடுபள்ளத்தின் வித்தியாசம் அதிகம் ஆக ஆக அந்த வித்தியாசத்தைப்போக்கிச் சமநிலையடைய வேண்டியது நீர்த்திவலைகளின்கடன். ஆகையால் அவை பெரும்பள்ளமுள்ளவிடத்தில் உல்லாசமாய் நடந்துகொண்டிருந்த புருஷனைச் செந்தேள்கள் பத்துக், கருந்தேள்கள் பத்துப், பவ்வத்து இடங்களில் கொட்டிவிட்டால், அவன் எப்படித் துடித்துத் துடித்துக்கொண்டு தலைகால் தெரியாமல் குதித்தோடிக் குப்புற விழுவானோ அப்படி, சமசார்புள்ளவிடத்தில் ஒய்யாரமாய் ஓடிவந்த நீரோட்டம், பெரும்பள்ளங் கண்டவிடத்து ஆத்திரமும் அவஸரமுமாய் ஓடிவீழ்ந்து தலைகால் தெரியாமல் தத்தளித்து ஆவேசங் கொண்ட ஸ்திரீபோல் அலங்கோலப்பட்டுத் தவிக்கிறது. இவ்வளவு தாபமும் தவிப்பும் ஏன்? என்னத்திற்கடா அப்பாவென்றால்? ஒன்றுக்குமில்லை: சமநிலையடைவதற்கன்றி வேறில்லை. பள்ளம் நிறைந்து நீர் நிலை சமரசப்பட்டுப்போனால், இந்தத் தவிப்பு உதைப்பு எல்லாம் தானாக நின்றுபோய்விடும். ஏனெனில் அதன் நோக்கம் நிறைவேறிப் போய் விட்டது. தண்ணீர் இப்பள்ளத்தில் விழும்வேகத்தின் சக்தியைக்கண்டு, அடுத்தவூரிலுள்ள வெள்ளைக்காரன்வந்து அதைத்திருப்பித் தன்வசப்படுத்தி அந்நகரிலுள்ள யந்திரங்களை யெல்லாம் இயற்றுவிக்கவும் இரவில் நகரையெல்லாம் பிரகாசிக்கச்செய்யவும் மின்சார சக்தியாக மாற்றியுபயோகித்தான். உபயோகிக்கட்டும்: அதனால் தண்ணீர்த்திவலைகளுக்கு வந்தலாபமாவது நஷ்டமாவது ஒன்றுமில்லை: அவைகளின் நோக்கம் மாறினதில்லை, பள்ள

முள்ளவிடத்தில் போய்த் தங்கவேண்டியதொன்றே அவைகளின் நோக்கம். அதுவொன்றே அவைகளின்செய்கை. மேடுபள்ளமில்லாமல் சமநிலைப்பட்ட விடத்து அசைவற்று அமர்ந்திருப்பதே அவைகளுக்குத் திர்ப்தி. "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை" யொன்றே நீர்த்திவலைகளுக்கு சத்தியம்—யாருமதுள்ளது. அவைகளுக்கு அதுவே விதி: அதுவே கதி: அதுவே அந்தமுமாம். அந்த உண்மையான உள்ளத் தன்மையைப்பற்றி யனுஷ்டித்தலே அவைகளுக்கு சக்தி முக்தியெல்லாம் கொடுக்கும். மின்சாரமுண்டுபண்ணும் சக்தி நீர்த்திவலைகளுக்கு எப்படியுண்டாயிற்று? "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மையால்." இப்படியே ஒவ்வொரு கேள்விக்கும் இந்த ஒரு உத்தரமே பொருந்தும். இது பிசகினால் எல்லாம் பிசகிப்போம். இந்த ஒரு விதிக்குண்மையாக விருந்தால் எல்லாமகிமையும் அதற்குத் தானாக சித்திக்கும். இது நிற்க.

தத்துவனையடையும்வரையில் தத்துவத்துக்கொழிவில்லை.—The inner principle works through to the end.

அந்த நீர் வீழ்ச்சியில் தண்ணீர் பல்லாயிரம் வருஷங்களாக இன்னும் வீழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பேரிரைச்சலும், கொதிப்பும், கொந்தளிப்பும், நுரையும், சப்தமும் இன்னமும் ஓய்ந்தொழிந்தபாடில்லை. இல்லாவிட்டாலுமென்ன! நீர்த்திவலைகளாகிய நமக்கு அதைப்பற்றிய விசாரம் வேண்டியதில்லை.

விதிக்குமாறாகத் தோற்றியபோதும் விதிமாறுவதில்லை—Apparent change involves no real contradiction of principles.

பள்ளமுள்ளவிடத்தில் போய்த்தங்கவேண்டியது நம்முடையகடமை. பகவான் நம்மைச்சிருஷ்டித்ததே இதுவொன்றுக்காகவே: இந்த விதியை விளக்கவே நமக்குச்சிவநோக்கமாக விருக்கவேண்டி நம்மைச் சிருஷ்டித்தார். அதைச்செய்து முடிப்பதே நம்கடன். இதற்கு இடையூறுகள் எத்தனையோ நேரிடலாம். காசிப்பட்டணம் போனால் ஜனங்களுக்கு குடிதண்ணீர் வேண்டியதினிமித்தம் வெள்ளைக்காரன்வந்து நம்மை யந்திரங்களால் கீழேயிருந்து மேலோடும் படியாகச்செய்வான். செய்தாலுமென்? நம்முடைய குணமறிந்தே யவன் அவ்வளவு பாடுபட்டு நம்மை பார்ப்போர் அதிசயிக்க நம்விதிக்கு மாறாகச் செல்லவைக்கிறான். உயரத்தில் தூக்கிவிட்டால் பள்ளத்தில் நாமே பாய்வோம் என்கிற நம்பிக்கையவனுக்கில்லாவிட்டால், அவன் ஆற்றுப்பள்ளத்திலிருந்து நம்மை ஆகாயத்தொட்டியில் ஏற்றிவிடப்படாதபாடும் பட்டுழைக்கமாட்டான். அப்படிக் கீழேயிருந்து மேலேசெல்லும் பொழுதும், நீர்த்திவலைகளாகிய நாம் நமதுவிதிக்கும் சுபாவத்திற்கும் விரோதமாக நடப்பதில்லை. சூக்ஷ்மபுத்தியில்லாதவர்கள் வித்தியாஸமாய் நினைக்கலாம். ஆனால் இந்தத்தந்திரம் செய்யும் யந்திரம் நிர்மித்தவன், நம்முடைய குணமறிந்து நம்வழியறிந்து நம்விதியை யனுசரித்தே நம்மிடத்தில் வேலைவாங்குகிறான். அவன் வேலை வாங்குவதென்ன? நாம் நம் ஸ்வபாவப்படியே நடக்கிறோம். அவன் நம்விதியையுள்ளபடி யுண்மையாயுணர்ந்து தன் சூக்ஷ்மபுத்தியால் ஏதோ நம்மை வென்றுவிட்டதுபோல் மந்தமதிகளான ஜனங்களுக்கு ஜாலம் செய்து காட்டுகிறான். உண்மையில் தண்ணீரிறைக்கும் யந்திரத்தின் குழாய் வழியாக நீர் வீழ்ச்சியில் விழும்வேகத்தோடு நாம்மேல்நோக்கிச் செல்வதிலும் நமக்கியல்பான "பள்ளத்தில் நீர் தங்கும் பான்மை"யை யனுசரித்தே நடக்கிறோம். குழாயிலுள்ள வாயுவை வெளிப்போக்கி, வெளிப்போந்த வாயுவின் ஸ்தானத்தில் வேறுவாயுவையும்



புகவிடாமல், சூன்யமாக்கப்பார்ப்பதால், சூன்யத்துக்கிடங் கொடா சூக்ஷ்ம விதிப்படி தண்ணீர் அக்குழாயில் பாய்கிறதென்பார்கள். ஆனால் நீர்த்திவலைகளாகிய நமக்கு சூன்யத்தை நிரப்ப யாராவது மான்யம் விட்டிருக்கிறார்களாவென்ன? அதொன்றுமில்லை. பள்ளமுள்ளவிடத்தில் போய்த்தங்குவது நமதுஸ்வபாவம். வெள்ளைக்காரன் குழாயை நீரில் மூழ்கவைத்து மேலேயுள்ளவாயுவை வெளியில் போக்குவதினால் நம்தலைக்குமேலே பள்ளம் பறிக்கிறான். பள்ளமுள்ளவிடத்தில் பாயவேண்டியது நம்கடமை.

செயற்கை வித்தியாசம் இயற்கையிலில்லை—Man-made differences make no differance in Nature.

ஆனால் பள்ளமென்கிற வார்த்தை சம்பந்தமாய் "மேல்" என்றும் "கீழ்" என்றும் சுட்டிச்சொல்லும் வித்தியாசம் நமக்கில்லை. அது இயற்கையிலுள்ளதில்லை. மனிதன் தனக்குப்பொருந்த, தன்னோத்தவர்களோடு பேசிப்புழங்க ஏற்படுத்திக்கொண்ட செயற்கை வித்தியாசம் 'கீழ்' 'மேல்' என்பனவெல்லாம். உண்மையில் கீழுமில்லை, மேலுமில்லை. ஆகையால் மனிதன் "ஊணப்பன் விட்டுக்கோழி தானாக விலங்கிட்டுக் கொண்டதுபோல்," உண்மையில் இல்லாத வித்தியாசங்களையுண்டாகக் கற்பித்துக்கொண்டு, தன்னுடைய கற்பனையாகிய மாயாவலையிற்பட்டுமயங்கினால், கற்பனாசக்தியில்லாமல், உண்மைக்கு உதாரணமாக மட்டுமிருக்கச்சிருஷ்டிக்கப்பட்ட நீர்த்திவலைகளாம் நமக்கு மனிதன் மயக்கைப்பற்றியேன்விசாரம்! நாம் உண்மை வழிப்பட்டு விலகாதிருக்கவேண்டியது நமது கடமை. மனிதன் சங்கற்ப விகற்பசக்திகளைக் கொண்டு தன்னோடு தானே மல்லுக்குநின்று மஹாயுத்தம் செய்யட்டும். அதைப்பார்த்து நிற்கவும் நமக்குப் பொருந்தாது.

இயற்கை விதி என்றும் மாறாது—Nature works by Universal Law

"பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை"யே நம்மது. அதுவொன்றே நமக்குசத்தியம். அதுவொன்றே விதி, அது ஒன்றே கதி: அது ஒன்றை யனுஷ்டித்து, அவசர அவசரமாய் ஆத்திரமும், காத்திரமுமாய், நம்நிலைகண்டு நாம் தங்குவதே நமக்கு எல்லாம். ஆகையால் நமக்குப் பொருந்தாத—பொருந்தாமைகாரணமாக நமக்கு இல்லாத, அதாவது நீர்த்திவலைகளாகிய நமக்கு அசத்தியமான—விஷயங்களைப்பற்றி வியவகரிக்க நமக்குப் பாத்தியமில்லை. அது உண்மையில் சாத்தியமுமில்லை. ஆகையால் பள்ளமுள்ளவிடத்தில் போய்த்தங்குவோம். சமநிலை பெற்றவிடத்திலன்றி வேறுவிதமாக நமக்கு க்ஷணப்பொழுது தங்குவதற்கில்லை: அந்த சமநிலை பெறும்வரையில் நமக்குச்சலனமேயன்றிச் சாந்தநிலை—அசைவற்றுத்தங்கும்நிலை, கிடைக்காது. ஆகையால், இந்த நீர் வீழ்ச்சியில் நின்று இந்த மேடுபள்ளத்தை நிரவிப்பார்க்கவும் நமக்குத் தரிக்கவொண்ணாது. ஆகையால் பள்ளமுள்ளவிடத்தில் ஓடிப்பாய்வோம்— நம்மோட்டத்தில் நிறைந்த பள்ளம் நிறையட்டும், குறைந்த பள்ளம் குறையட்டும்.

பிரகிருதிவிதிக்குப் பற்றில்லை—Detachment from results, another characteristic of Nature.

உலகிலுள்ள பள்ளங்களைத் தூர்ப்பது நம்வேலையல்ல, பள்ளமுள்ளவிடத்தில் போய்த் தங்க வேண்டியது நம் நோக்கம். ஓய்வு எப்போ உண்டாகும்? ஒழிவு எப்போ உண்டாகும்? சலனமற்று எப்போ விருக்கலாம்? பிறந்தவிடம் போய்ப்பொருந்துவது எப்போ? எப்போ, எப்போவென்று எப்போதும் ஏக்கப்பிடித்தலையும் நமக்கு இங்கேயெல்லாம் தங்கி

யிளைப்பாறப் பொறுக்காது. ஆகையால் நடுமையத்தில் ஒருகடுவழி செய்துகொண்டு ஓடுவோம். இடைபிங்கலையென்னு மிருகரையிலும் சென்றால் போக்கும் வரத்துமே யொழியக் கதிமோக்ஷம்கிட்டாது. வாய்க்கால் ஓடைகளில் புகுந்தால் வல்லடிவழக்கேயன்றி வேறொன்றுமில்லை. நடுவழியிலெங்களை யெடுத்து உபயோகிப்பவர் உபயோகிக்கட்டும். பலனடைபவர் அடையட்டும். எங்களால் நஷ்டப்படுவோர் படட்டும். யார் வாழ்ந்தாலும், யார் ஆழ்ந்தாலும், "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை" ஒன்றே யெங்களுக்குரியது: அதற்கு விரோதமாக நடக்கமுடியாது. அப்படி நடக்கும் சக்தி யெங்களுக்கில்லை: அது கொடுத்தாலும் வேண்டாம். வேகுவேகென்று வழிநடப்பதே யெங்களுக்குத் தொழில். எங்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்கிற எண்ணமுமில்லை. அபகாரம் செய்யவேண்டுமென்கிற எண்ணமுமில்லை. எங்கள் எண்ணமெல்லாம் ஒன்றே—"பள்ளத்தில் நீர் தங்கும் பான்மை" யெங்களது. அதற்கு உண்மையாயிருந்து, சேரிடம் சேர்ந்து தங்கவேண்டும்: இது ஒன்றுதான் எங்கள் எண்ணமெல்லாம்.

"வரும்வழி, போம்வழி, மாயாவழி" யறியவே ஆத்திரம்:—The eternal "Whence I came, Whither I go"

இந்த ஒரு எண்ணத்தைப்பற்றி, எங்களுக்குரிமையான ஒரு தத்துவத்தை யனுசரித்து நாங்கள் ஈடேறவேண்டும்—அதாவது, ஆதியில் எங்கிருந்து வந்தோமோ அங்குபோய்ச் சேரவேண்டியது. இந்த ஒரு நோக்கத்தோடு இந்த ஒரு எண்ணத்தையே மூலமந்திரமாக ஜபித்துக்கொண்டு நீர்த்திவலைகள் தன்னினத்தாரிடத்து குணமென்றும் குற்றமென்றும் பாராமல், "நீர்த்திவலைகளெல்லாமொன்றே" யென்கிற சமரஸபாவனையோடு, தங்களுக்கு வழியில் நேர்ந்த இடர்களையெல்லாம் இலக்ஷியம் செய்யாது, "என்னையனைச்சேர்ந்து சுகிப்பது எப்போ, எப்போ?" என்று சோகமும் தாபமும், துரிதமும் சேர்ந்தகுரலோடு வேகுவேகென்று வழிநடந்து சென்றன. மலைகளை விட்டு மைதானத்தையடைந்தன. நாட்டில் நகரிலுள்ள புண்ணியர்களெல்லாம், அதை யெதிர்கொண்டழைத்து, தங்களைக்காத்துப் போஷிக்கவந்த தர்மதேவதையென்று பூஜித்து "கங்கை" யென்று பேரிட்டுத் துதித்தார்கள். இப்படிப் பலதுறையாக வந்த நீரோட்டங்கள் ஒன்றொன்றாக வந்துசேர, தாயைவிட்டுப்பிரிந்த தனயர்கள், சகோதரவாஞ்சையோடு ஒன்றுகூடி ஒருமைபாராட்டுவதுபோல் பஞ்சகங்கைகளும் ஒன்றுகூடி ஒருபெருநதியாயிற்று. பாரிலுள்ள ஜனங்களெல்லாம் புண்ணியநதியென்று பேரிட்டுப் பூஜித்தார்கள். பிச்சோலை வளையலோடு பூவையும், பழங்களையும் ஆற்றிற்போட்டு அருச்சித்தார்கள். பிணங்களையும் சவங்களையும் புண்ணியநதியென்று அதில்போட்டு இறந்தார்க்கிருந்தார் புனிதம்தேடினார்கள். பலர் துன்பம் பொறுக்காது துக்கமேலீட்டால், தள்ளையைத்தேடும் தனையர் தள்ளாடிக் குழியில் விழுவதுபோல், உண்மையாம் உலகமாதாவை யுணரமாட்டாமல், கங்கையை நம்பி ஆற்றில் வீழ்ந்து ஆருயிர் துறந்தார்கள். ஆனால் கங்கையோ ஒன்றுக்கும் கவலைப்படவில்லை. சுத்தமென்றும் பார்க்கவில்லை. அசுத்தமென்றும் பார்க்கவில்லை. உபகாரமென்றும் உன்னவில்லை. அபகாரமென்றும் அடங்கவில்லை. உலகெலாம்போற்றும் உத்தம நதியாகியும், நீர்த்திவலைகளின் நோக்கம்மாறவில்லை: எண்ணம்மாறவில்லை: அவைகளின் விதியும் மாறவில்லை. "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மையே" யெங்களது என்கிற மந்திரகோஷத்தைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை.



இகழ்ச்சி புகழ்ச்சி பார்ப்பதில்லை—Indifferent to praise or blame.

தன்னைத்துதித்தார், மதித்தார், இகழ்ந்தார், புகழ்ந்தார் யாரையும்இலக்ஷியம் செய்துநிற்கவில்லை. தன்னைக்கொண்டு பல்லாயிரம்ஜனம்பிழைப்பதையும்பார்த்துநிற்கவில்லை. பல்லாயிரம்ஜனம்தங்கள் நாடுநத்தமெல்லாம் வெள்ளப்பாழாகித் தவிப்பதையும் பார்த்துஇரங்கவில்லை. "பள்ளத்தில்நீர்தங்கும் பான்மையேபான்மை" யென்றுபள்ளமுள்ள இடமெல்லாம்வெள்ளம்நிறைய வேகு வேகென்று வேகமாய் ஓடியது. அது என்ன ஆத்திரமோ, என்ன அவசரமோ! அந்த ஆத்திரத்தையும் அவசரத்தையும் அதோடு ஒன்றுபட்டுப்பார்த்தால் தெரியுமேயன்றி வார்த்தையால் சொல்ல வன்மையில்லை யெனக்கு. என் தாய் "பத்துத்தேள் பத்துநண்டுகள் ஏககாலத்தில் கடித்துவிட்டால் எப்படி பறப்போமோ அப்படிப்பறக்கவேண்டும்" என்றாள்: "நாலுபக்கங்களிலுமுள்ள வீடு நெருப்புப்பற்றிக்கொண்டால், இருந்த இடத்தைவிட்டோட எப்படி அவசரப்படுவோமோ அப்படி யவசரப்படவேண்டு" மென்றாள்.—ஸத்யத்தையடைய.

ஆத்திர அவசரமும் ஐக்கிய சாம்ராஜ்யமும்—Impatience and Ineffable Desire to reach the Goal in sight.

மலையுச்சியில் கண்டு பரிச்சயம் செய்துகொண்ட இந்த நீர்த்திவலைகள் "கங்காநதி" யென்னும் பேர்பெற்று ஓடுகிற ஓட்டத்தையும் வேகத்தையும், அதன் ஆத்திர அவசரத்தையும் ஆடம்பரத்தையும் பார்த்தால் என் தாயின் உவமையிற்சொன்ன மனிதர்கள் ஆத்திர அவசரமும் இதற்கு ஈடாகாதென்று நன்றாகத்தெரிகிறது. அது என்ன வேகமோ, என்ன அவசரமோ, மனோவாக்குக்கெட்டாத வேகமும் அவசரமும் எப்படியிருக்குமோ! அதையனுபவத்திற் கண்டறிந்து கொள்ளவேண்டுமேயல்லாது, வாக்கால் எழுத்தால் விளக்கமுடியாது. பட்டவனுக்கேதெரியும்பாடு: கெட்டவனுக்கேதெரியும்கேடு: உண்டவனுக்கேதெரியும் உணவு: விண்டவனுக்கே தெரியும்வார்த்தை. எதுவும் அனுபவித்தாலன்றி யுள்ளபடிவிளங்காது. சமுத்திரசங்கமுகத்தினருகில் நின்றுகொண்டிருந்த என் காதில் இரண்டேசப்தங்கள் கேட்டன. ஒருபுறத்தில் கங்கைப்பிரவாகமாகவோடும் நீர்த்திவலைகளின் ரீங்காரசப்தம் "எப்போ? எப்போ?" என்று இடையறாது ஒலிக்கும் ஓசையின் தொடரொலியாகிய "ஓ" என்னும் ஈற்றொலி இடையறாதுதொடர்ந்துவரும் ஓங்கார சப்தம் வண்டின் ரீங்காரம்போல் காதுக்கினிமையாய்ப் பட்டது. மற்றொருபக்கத்தில் சமுத்திரராஜன் தன்னையடையவிரும்பி அவசர அவசரமாய் உள்ளங்குதிப்பினும் அமர்ந்த நடையும் குனிந்ததலையுமாய் வரும் தன் காதலியாம் கங்கையைத் தன் அலைகளாகிய கைகளைநீட்டி, குதூஹலமிகுதியாலெழும் கொண்டாட்டத்தின் ப்ரதிபொலியாகிய ஓங்காரம், கங்கையின் ரீங்காரத் தோடுகலந்து நாதகீதமுண்டாக, மங்கலவாத்யமுழங்க மணவறைபுகுந்த நாயகனாயகிபோல் அவளையாலிங்கனம்செய்து, இருவரு மேகமாகி, நாமரூபமற்று, பேதாபேதமற்று, எங்கும் நிறைந்து, ஏகரஸமாய், நிலையறிந்து நின்ற நிர்மலவஸ்துவாய் ஆனதைக்கண்டு நான்சிந்தையிலாழ்ந்து சிந்தனையிழந்து கருணையங்கடலாம் கடவுளை நினைந்து நினைந்து நைந்துருகி, நான் என்னும் பாவமழிந்து, நானுண்டென்கிற நினைவுங்கெட்டு, தானே தானாய்த் தன்மயமாய், தத்துவ வழிப்பட்டுத் தத்துவனையடைந்து புலன்பொறியழிந்த புனிதனாகி, சமுத்திரத்தைச்சேர்ந்த நீர்த்திவலைகள், பலநாமரூபங்கள் பெற்றுக் கடைசியில் சமுத்திரத்தைச்சேர்ந்து நாமரூபங்களெல்லாமற்றுத் தங்கினதுபோல், இந்திரியவியாபாரங்

களாம் நீரோட்டங்களும், சங்கற்பவிகற்பமாம் த்வந்தங்களுமற்று, நாமரூபமில்லாதேசனை, அருந்தேசனை நாடி, அவனோடும் நிரதிசயானந்தமென்கிற கைவல்ய ஸம்யோகத்தில் இடையறாதிருந்தேன். ஓம்தத்ஸத்.

ஸத்யானந்த:

ஓம் ஸ்ரீ அகண்டானந்த சத்குருவே நம:

* "That Intensest of realities, the Human Soul."

# ஆத்மதத்துவம்.

அறியாமையிலிருந்து ஆசையுண்டாகிறது. † "ஆசையுண்டானால் அனுபவித்தே தீர வேண்டும்" என்பது ஒரு மாறுவிதி. **ஆசை** யென்றால் விருப்பு; **வேண்டும்** என்று உள்ளத்திலுதிக்கும் எண்ணம்; குறையுள்ள விடத்துதிக்கும் **தேவை** யென்னும் எண்ணம்.

"Nature abhors vacuum"—"பிரகிருதி சுத்த சூன்யத்திற்கு இடங்கொடுப்பதில்லை" என்பது எப்படி பௌதிக தத்துவத்தில் உண்மையோ, அப்படி, ஆத்ம தத்துவத்தில், எங்கும் நிறைந்து ஏற்றத் தாழ்ச்சியற்ற பரிபூரண வஸ்துவாம் கடவுளின் அம்சமாகிய **ஆத்மா**

* "There is no ghostly universe, but all intensely real as it exists in that intensest of realities, the Human Soul"—*John Fiske in "Through Nature to God"* quoted by "Now". Compare also the following excerpts from Froebel's *Education of Man*:—

"Parents should view their child in his necessary connection, in his obvious and living relations to the present, past and future development of humanity, in order to bring the education of the child into harmony with the past, present and future requirements of humanity and of the race. For *man*, as such, gifted with divine earthly and human attributes, should be viewed and *treated as related to God, to nature, and to humanity*; as *comprehending within himself unity* (God), *diversity* (nature), *and individuality* (humanity), *as well as also the present, past and future.*"

"Every individual being if it would attain its destiny—in necessary and indispensabie obediencə to its nature, must manifest and reveal itself in this triune way—*in and as unity, in and as individuality, in and as manifoldness in ever continuing diversity.*"

"The truth of this conviction is the sole foundation of all insight and knowledge. It is the only test of our conduct. It is the foundation of all religious *instruction*. The knowledge and application of this truth enables us to recognise nature in its true character, as the writing and book of God, as the revelation of God."

"The knowledge of this truth gives a language to things human as well as to things natural, and imparts true significance and true life to all teaching and learning, to all knowing and doing."

"Only through this conviction life becomes in all its phases and manifestations a self-contained whole, a unit. This knowledge and conviction alone render genuine human education truly possible."

"The knowledge of this truth, the insight into its nature, brings light and life, and, if need be, consolation and support in all circumstances; it alone gives a meaning and a purpose to life."

"Therefore, the truth of the threefold manifestation and revelation of the One God is the corner-stone of the religion which suffices all men in all Zones, and which they have felt, however eagerly, and sought, however unconsciously, for it leads man in the spirit and in truth, in insight and life, to God and in God"—Froebel's *Education of Man*.

"Every human being, as a being proceeding from God, existing through God and living in God" should raise himself to a consciousness of his oneness with God, which *Jesus* attained when he declared "I and My Father are One" and which the *Vedas* teach by the great sayings" "*Aham Brahmasari*", "*Tattvamasi*" &c.

† **True Desire leads to its own fulfilment.**



நிறைபொருளாந் தன்னில் குறையிருக்க இடங் கொடுப்பதில்லை. மனிதன் எப்போதும் பூரணனாக வேண்டியே, இடைவிடாது முயற்சித்து வருகிறான். இப்படி முயற்சித்துவர, **ஆசை** யென்பது அவன் உள்ளத்திலமைந்த ஒருதீராத் தூண்டுகோலாயிருக்கிறது. அனுபவமுதிர்ந்த விடத்து ஆசை யொழியும். ஆசை பொழிந்த விடத்து அனுபவம் விளங்கும். ஆத்ம தத்துவத்தையுள்ளபடி விசாரிக்க மனுஷன் உடலுயிர்ச் சேர்க்கையில் அனேக தத்துவங்கள் கூடிச் சிக்கு முக்கலாய்ப் பிணைபட்டொழுகுவதால் அவைகளை முறையே பிரித்துத் தனித் தனியாயவ்வவற்றினுண்மையை யுணர்வது அந்த வழியில் குருவழிப்பட்டு அப்பியாசித்துத் தேறுதவர்களுக்குக் கஷ்ட சாத்தியமாம். ஆகையால் பிரகிருதியிலுள்ள ஒரு வஸ்துவைக் கொண்டு அதனுண்மையறிந்து தெளிந்தாக்கால், அதைக் கொண்டு (தத்துவம் எல்லாவற்றிலுமொன்றுதலின்,) மனிதனது ஆத்மதத்துவத்தையு மெளிதிலுணரலாம். இப்பொழுது நீர்த்திவலைகளின் தத்துவத்தை ஆதியோடந்தமாய் ஆராய்ந்துணர்ந்த நாம் அவைகள் செய்யும் தத்துவோபதேசத்தால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய தென்னவெனில்:—இவ்வுலகில் பிறந்துள்ள ஜீவன்களாகிய நாமெல்லோரும் நீர்த்திவலைகளுக் கொப்பானவர்கள். நமது இந்திரிய வியாபாரங்களெல்லாம் நீர்த்திவலைகளாலுண்டாகும் காரியா காரியங்கள். அவை நம்மாலுண்டானாலும், அவற்றிற்கு நாம் அதிகாரியல்ல. "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மை" போல் ஸத்தியத்தைக் கண்டுய்யும் சுத்தமாம், ஸாத்விகம் நம்முள் நமக்குரிய தத்துவப்பொருளாக அமைந்துள்ளது. இந்த ஸாத்விகத்தைவிட்டு நாம்வேறு எதைப்பற்றினாலும் அது நமக்குப் புறம்பானதேயாம். பள்ளமுள்ளவிடத்தில்போய்த் தங்கவேண்டியது எப்படி நீரின்தொழிலோ அப்படி ஸத்யமுள்ளவிடத்தில்போய்ச்சேரவேண்டியது நம்முளுள்ள ஸாத்விகத்தின் தொழில். ஸத்யமாவது அழியாதது, அசைவற்றது, எங்கும் நிறைந்துள்ளது. ஏற்றத்தாழ்ச்சியற்றது. த்வந்தங்கள் அற்றது. ஏகமாயுள்ளது. நாம ரூபங்களில்லாதது. அதுவே பிரவிர்த்தித்துப் பிரபஞ்சமாய்த் தோற்றும்போது, மூன்றிலொன்றும், ஒன்றில் மூன்றுமாய்த் தோற்றும். அதைப் பொதுப்படச் சொல்லில், **ஏகம், பிரத்யேகம், அனேகம்** என மூன்று வகையாகச் சொல்லலாம். ஏகமாய்த் தோற்றுங்கால் அது கடவுள். பிரத்யேகமாய்த் தோற்றுங்கால் அது சீவன். அனேகமாயத் தோற்றுங்கால் அது பிரகிருதி மயமாய்த் தோன்றும் வைசுவானரா அல்லது விராட். சீவனாகிய நாம் கடவுளிடத்திருந்து வந்ததால் அங்கேபோய்ச் சேர்ந்தாலே நமக்கு ஓய்வு ஒழிவுண்டாம். சலனமற்றதன்மை அங்கேயேயுண்டாம். வேறு எந்த நிலையிலிருந்தாலும் நித்யத்வமில்லை. கடவுள் நம்மை தன்னை விட்டுப் பிரிக்காமற்பிரித்தனுப்பியதால் பிரத்யேகனாகிய நாம் அவனையே போயடைய, நம்முள் **ஆசை** அல்லது **விருப்பம்** அல்லது **தேவை** யென்கிற ஒரு குறையை யுண்டுபண்ணி யனுப்பியிருக்கிறார். நாம் நிறைவெய்தும் வரையில் இந்தக்குறை பலவிதமாக மாறிமாறித்தோன்றி பள்ளம் ஜலத்தை யிழுப்பதுபோல் நம்மை அதனிடம் இழுத்துக்கொண்டேயிருக்கும். ஆசையை யொழிப்பதாவது பள்ளத்தை நிரப்புவதேயாம். பள்ளம் நிரம்பிப்போனால் நீர் அங்கு தங்காது. ஆசை பூர்த்தியானால் அங்கே நாம் நிமிஷமும் தங்கமாட்டோம். ஆசையொழிந்தால் ஆத்மா ப்ரஹ்ம்ஸ்வரூபனாம். ஆசையையொழிக்க வழியென்னவென்றால், ஆசையைப் பூர்த்தி செய்வதேயாம். ஆசையைப் பூர்த்திசெய்தலாவது அனுபவித்துத் தீர்த்தலேயாம். பள்ளமுள்ளவிடத்து நீர்தங்குவது எப்படி சகஜமோ, அப்படி ஆசையுள்ளவிடத்து ஆத்மா தங்குவது

சகஜம். ஆசை பூர்த்தியானல், அனுபவம் என்கிற நிறைவு உண்டாய் விட்டது. ஆகையால்
ஆசையையொழிக்க மருந்து அனுபவஞானமாம். அனுபவ முதிர முதிர ஆத்மாவுக்கு விர்த்தி ‡
ஜாஸ்தி. அதாவது சமுத்திரத்தில் போய்த்தங்கவேண்டுமென்கிற ஆசைஜாஸ்தி. இப்படியாக
விர்த்தியும் ஒரு ஆசையேயென்று விளங்குகிறதல்லவா? ஆகையால் வீணுக நாம் த்வந்தங்களைக்
கட்டிக்கொண் டழவேண்டாம். விருப்பு, வெறுப்பு என்றுலென்ன? விருப்பே வெறுப்பாகமா
றும்; வெறுப்பும் விருப்பாக மாறும், பள்ளமுண்டானல் நீர்தங்கும்: ஒருவிஷயம் மனிதனது
புலன்பொறியினுல் அவன் ஆத்மாவிற்கெட்ட அதனுடைய உண்மை யவனுக்கு ஸ்வானுபவத்
தில் தெரிந்திருந்தால், அதில் ஆசையுண்டாக மாட்டாது. அந்த ஆத்மாவுக்கு அங்கேபள்ளமி
ல்லை. அனுபவஞான மில்லாவிட்டால் அதை யறிந்துகொள்ள ஆசையுண்டாகும். அதாவது
அதையறியாமை ஒருகுறையாகப்படும். ஆசையல்லது குறையுள்ள இடத்தில் பள்ளமுண்டு.
பள்ளமுள்ள இடத்தில் நீர்தங்கும். அதாவது ஆசையினுல் ஆத்மா இழுக்கப்படும்: பெந்தமுண்
டாகும். இந்த ஆசையை வாசா வேதாந்திகள் நல்லதென்றும் கெட்டதென்றும் த்வந்தப்படுத்தி
வீண் தர்க்கம் விளைக்கிறுர்கள். நீருக்குத் தத்துவம் "பள்ளத்தில் தங்குதல்" போல, ஆத்மாவுக்
குத் தத்துவம் "ஆசையுள்ளவிடத்தில் அனுபவம்தேடல்." இந்த அனுபவம் பூர்வத்திலுண்டாய்
வாசனையாக அடங்கிக் கிடக்கலாம்.§ அப்படியிருந்தால் அந்த ஆசாவிஷயத்தைப்பற்றிச் சிந்
திக்க நேர்ந்தால் அங்கு வாசனு ரூபமாயடங்கியுள்ள அனுபவம் சிந்தையிற் கிளம்பி அந்த விஷ
யத்தின் தத்துவத்தை யுணர்த்தும். தத்துவ முணர்ந்துழி ஆசைவிட்டுப்போம். ஏனெனில்
எல்லா அனுபவமும் தத்துவத்தை யுணர்வதற்கே. தத்துவத்தை யுணர்ந்துவிட்டால் அதை
யுணரக்காரணமாயிருந்த அனுபவம் காரியமற்று (அதாவது தொழிலற்று) அழிந்துபோகிறது.
எழுதப் பேனு அவசியமானுலும் எழுதி முடிந்தால் பேனுவினுல் பிரயோஜனமில்லை. விஷயானு
பவங்களெல்லாம், விஷயரூபமாகத் தென்படும் ஆத்மதத்துவங்களை யுணர்ந்து கொள்வதற்கான
வழிவகைகளன்றி வேறல்ல. விஷயங்களின் தத்துவத்தையுணர்தல் **விவேகம்** எனப்படும்.
விவேகமுண்டானுல் விஷயவாசனை யற்றுப்போம். ¶ விஷயானுபவமின்றி அறிவுண்டாவதில்லை
யாலும், அறிவின்றி விவேகமில்லையாலும், ஆசையுண்டானவிடத்து அனுபவக்குறைவு தானு
கவே யேற்படும். அனுபவக்குறைவு அனுபவித்தாலன்றி நிறைவெய்துவதில்லை. அனுபவமெ
ன்றுல் ஸ்துலமாக அனுபவிப்பதையே சொல்கிறுர்கள். உண்மையில் தேகம் அனுபவிப்பதி
ல்லை: அது ஜீவனின்றித் தானுயிருக்கும் வஸ்துவல்ல. ஜீவனுக்கு அனுபவந் தேடுவதற் கேற்ற
கருவியாயமைந்ததன்றிவேறல்ல. ஆகையால் ஆசையும், அறிவும், அனுபவமும் ஜீவனுக்கே
யன்றி (அதாவது கருவிகரணங்களோடு கூடிய ஆத்மனுக்கேயன்றி) கருவிகரணங்களுக்கல்ல.
ஒரு கருவியினுலாகவேண்டிய கர்மம் கைகூடி விட்டால் அப்புறம் அக்கருவியினுதவி வேண்டிய
தில்லையே. அப்படியே திரிகரணங்களுக்கும் பொருந்தும். ஆகையால் கருவிகரணங்களோடு
கூடிய ஆத்மாவாம் ஜீவன் மோக்ஷ சாம்பிராஜ்யமெய்த வழியென்னவென்றுல் "பள்ளத்தில்
நீர்தங்கும் பான்மைபோல்" "உள்ளத்தில் உண்மையையுணர விரும்பும் ஆசையாம்" அழியாத்

‡ ஆத்ம விர்த்தியே பிரபஞ்ச விரக்தியாம்.

§ Stored as tendencies or the essence of past experience in the Sub-conscious mind.

¶ விஷயானுபவம் is what Pestaloazzi calls "immediate perception" or Sense perception which is the basis of all true Knowledge of the world. Without experience there can be no Knowledge.



த்துவத்தைக் கைப்பற்றி இடையே என்ன நேர்ந்தாலும் என்ன நடந்தாலும், யார் வாழ்ந்
தாலும், யார் தாழ்ந்தாலும், "உள்ளத்திலுண்மையை உள்ளபடி யுணரவேண்டும் " என்கிற
ஆசையை உறுதியாய்ப்பற்றி "பள்ளத்தில் நீர்தங்கும் பான்மைபோல்" இந்த அழியாத ஆசை
யிழுத்தவிடத்துத் துணிந்து தைரியமாய்ச் செல்வதே சீக்கிரத்தில் மோக்ஷசாம்பிராஜ்யத்துக்
கின்றியமையாச் சாதனமாம். இந்த ஆசையை உண்மையாக ஒருவன் உள்ளத்திற்பற்றி சதா
அதே நினைவாக, அதே தனக்குள்ள ஆத்மதத்துவமாக வெண்ணி, அதன் வழிப்பட்டு நடப்பா
னுனல், அது அவனை எப்படியும் அதிசீக்கிரத்தில் என்று மழியாத வஸ்துவாம் ஸத்யத்திற்
கொண்டுபோய்ச்சேர்க்க தத்துவஞானமென்கிற ஆற்றுப்போக்கை யுண்டாக்கிவிடும். அவனு
டைய ஆசையதிகரிப்பதற்குத் தக்கபடி துரிதமும், துரித மதிகரிப்பதற்குத் தக்கபடி துணி
வும் தைரியமும், தைரியமிகுதிக்குத் தக்கபடி இடரை வெல்லும் சக்தியும், சக்திமிகுதிக்குத்
தக்கபடி வேகமாம் தூய்மையும் வாய்மையும், வாய்மை மிகுதிக்குத் தக்கபடி தீவிரமும் பரி
பக்குவமும், பரிபக்குவ மிகுதிக்குத் தக்கபடி துரியநிலை சித்தியும், துரியத்திலிருந்தபடி
அதையும் கடந்து ஐக்கியமாம் $நித்யசுகசாம்பிராஜ்யமும் கிடைக்கும். இதைவிட்டு அறத்
தைக் கூறுபடுத்தி இல்லறம் துறவறமென்று வாதாடிக் கொண்டிருப்பதாற் பயனில்லை.

### பின்னுரை.

" சந்ததமும்வேதமொழியாதொன்றுபற்றினது தான்வந்துமுற்றுமெனலால்
சகமீதிருந்தாலுமரணமுண்டென்பது சதாநிஷ்டர்நினைவதில்லை
சிந்தையறியார்க்கிதுபோதிப்பதல்லவே செப்பினும்வெகுதர்க்கமாம்"

————ஆதலால் சின்னுள்முன் **கைவல்யஸ்வாமியாம்** பரதேசியொருவர், **முத்தி
வேண்டிடில் முன்னே துறதுற** வென்று, வெளித்துறவை முதலாக வற்புறுத்தியபொ
ழுது, என்தாய் "எல்லாம் பொய், நீயேசத்தியம், நீயேஉண்மை; அகண்டாகாரமாய், ஆநந்த
மாய், அழிவற்றதாய், எங்கும் நிறைந்ததாய், ஏற்றத்தாழ்ச்சியற்றதாய், தானே தானுய், நித்திய
மாய், நிர்மலமாய், நிராதாரமாய், ஏகமாய் மனோவாக்குக்கெட்டாததாய், மாசற்றபரஞ்சோதி
யாய் விளங்கும் அத்வைத வஸ்துநீயே! இதில்சந்தேகமில்லை, சத்தியம், சத்தியம்" என்று
தாயன்புமேலிட்டு, உள்ளன்பு நிறைய உளம்பூரித்துக் கருணையங்கண்ணுல் கார்முகிலொப்பக்
கனமழைபொழிந்து சொல்லிய வாக்கை, உள்ளங்குழைந்து, உளம் நெக்குவிட்டுருக, அன்பு
நிறைந்தென்புருகி, உடல் பொருளாவியையும் ஒருங்கே தத்தம்செய்து உள்ளத்திற் பதிய
வைத்துக் கொண்டுய்யமாட்டாது, "செம்மைநலமறியாச் சிதடரொடுங்"கூடிப்

" புறமேதிரிந்தேனைப் பொற்கழல்சூட்டி
நிறமேபுகுந்தென்னை நின்மலனுக்கி
யறமேபுகுந்தெனக் காரமுதீந்த
திறமேதென்றெண்ணித்திகைத்திருந்தேனே. "

$ இதையே, சாயுஜ்யம், கைவல்யம், முத்தி, யெனப் பலவிதமாய்ச் சொல்வார்கள்: ஜீவன் தேகத்தி
லிருக்கையிலேயே இந்நிலையடைந்தோர் 'ஜீவன் முத்தர்' எனப்படுவார்கள்.

" திருவடிஞானம்சிவமாக்குவிக்கும்
திருவடிஞானம்சிவலோகம் சேர்க்கும்
திருவடிஞானம்சிறைமலமீட்கும்
திருவடிஞானமேதிண்சித்திமுத்தியே"—திருமந்திரம்

## TRUTH OFTEN UNWELCOME AT FIRST.

[ A Translation of the Extract in the August No. of the Vivekachintamani. ]

# உண்மை முதலில் ஒருவர்க்கும் பிடியாது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

1. மருவிய வயாவிற் கால மிடையற வருந்தா நிற்கும்,
ஒருவறக் கடிகை தோறு முதித்தலா லொவ்வோ ருண்மை;
தருமதி நிறைபு முன்னந் தாய்வயிற் றுதித்த சேய்போல்,
உருவது குறைந்து தோன்று முதித்தவவ் வுண்மை மாதோ.

(இ-ள்.) ஒவ்வொரு நாழிகையும் யாதேனும் ஒருண்மை உலகில் தோன்றிக்கொண்டே யிருத்த லினாலே, அது தோன்றுதற்கிடனாகிய காலமென்னும் நங்கைக்குப் பிரசவ வேதனை நீங்குவதேயில்லை. அவ்வுண்மையானது பிறக்கும்போது எவ்வாறு தோன்றுமென்னில், பத்துமாதமும் பூர்த்தியாகிக் கருப் பம் பரிபூரணமாகு முன்னமே குறைமாதத்தில் பிறந்த குழந்தைபோல, மகா அவலட்சணமாகத் தோன்று மேயன்றி, இனிமையாகத் தோன்றுவதில்லை.

2. தாய்மடிச் சுருண்டு தங்குஞ் சருப்பமொன் றதனை யேய்ப்பத்,
தீயவவ் வுருவங் கண்டு, சிந்தையி லயர்ந்து, மற்றீ
தேயநங் குலத்துக் கீன மிழைக்கவந் துற்ற தாய
மாயமொன் றென்ன வஞ்சி மாழ்குவர் மனத்து மாதோ.

(இ-ள்). அன்றியும், ஒருவர்க்கு நல்லவடிவுடையகுழந்தைபிறத்தற்கு மாறாகச், சர்ப்பம்போலக் கோரரூபமொன்று பிறந்து தாயின்மடியிற் சுருண்டுகிடக்கக்காணின், அஞ்சி, உறவினர்யாரும், ஐயோ நம் குலத்துக்குத் தீராக்குறையும் அவமானமும் உண்டுபண்ண இந்தக்கோரம் என்வந்து பிறந்ததென்று, மனம் வருந்துதல்போல, இவ்வுண்மையைக்கண்டு அஞ்சி வருந்துவார்கள்.

3. சிலரதைக் கழுத்து நையத் திருகுமினென்பர், சில்லோர்
சூலைவுற வுணவிடாது கொல்லுமி னென்ப ரேனும்,
நலிவற வுயிர்த்து நின்று, நவில்பல கரத்து மாறி,
முலைபல செவிலி யூட்ட முசிப்பற வளருமன்றே.

(இ-ள்). சிலர் அதனைக்கழுத்தைத் திருகிக்கொன்று விடுங்கள் என்பார்கள். வேறு சிலர் ஆகா ரம்போடாமல் பட்டினி போட்டுக் கொல்லுங்கள் என்பார்கள். ஆயினும், அவ்வுண்மையென்னும் குழந்தை யானது, வல்லுயிர் பெறுதலின், இத்தனைக்கும் மடியாமல், உயிர்பெற்றிருந்து, பல கை மாறி, அநேக செவி லித்தாய்களின் முலைப்பாலுண்டு, சிறிதும் தளர்ச்சியில்லாமல் வளர்ந்துவரும்.



4. வரவர வளர்ந்து மேனி வடிவுற நிறைந்த தாகி,
வெருவுறு முடல மெல்ல விளங்கிநல் லழகு தோன்ற,
மருவிய பாந்தண் மேனி மறைந்துநல் வனப்புவாய்ந்து,
திருமலி தெய்வ மென்னத் திகழ்ந்திடுஞ் சிறப்பி னன்றே.

(இ-ள்). அவ்வாறு நாளுக்குநாள் வளர்ந்து, உருவத்திலும் வடிவத்திலும் நிறைவடைந்து, முன் கண்டோர் அஞ்சிய அருவெறுப்பான தேகமானது விளக்கமுற்று அழகுதோன்ற, முன்னிருந்த பாம்பைப் போன்ற கொடிய மேனியானது மாறிமறைந்து அழகு வாய்ந்து, தெய்வமேனிபெற்று, ஓர் அழகிய தெய் வம்போல விளங்காநிற்கும் அவ்வுண்மை.

5. பற்றநாட் பிறந்த காலை வைதறப் பழித்தோர் யாரும்,
முற்றிய மகிழ்ச்சி யோடு முனிவற வெதிர்கொண் டேகிப்,
பற்றரும் பாந்த ளென்னப் பயந்தெறிந் ததறுங் கையால்
உற்றுறத் தழுவி யோம்ப வுயருமவ் வுண்மை தானே.

(இ-ள்.) அப்போது, முன்தான் பிறந்த காலைத்துத் தன்னை வைது நிந்தித்தோர் யாரும் மிகுந்த மகிழ்ச்சியோடும் எதிர்கொண்டழைத்து, முன்னம் பாம்பென்று நடுங்கித் தொட்டவுடனே எறிந் துதறிய கைகளால் உடல் புளகிக்கத்தழுவி உபசரிக்க, பெருஞ்சிறப்படையும் அந்த உண்மை.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## THE ILIAD OF HOMER.

ஹோமர் என்னும் மகாகவி பாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

(115-வது பக்கத் தொடர்ச்சி.)

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

53. நின்பணி கேட்கவு நேர்ந்த தெனக்கென்
துன்பு தராய ரெனக்கெது சூழ்ந்தார்
என்பதிமேற் பொர வெய்தில ரன்னோர்
இன்பி னிருந்தனன் யானவ னன்றே.

(இ-ள்.) உன் சொற்படிகேட்டு உனக்குத்தொண்டு செய்திருக்க எனக்குவந்த நிர்ப்பந்த மென்ன? தராயரோடு இங்குவந்து யுத்தஞ்செய்ய அவர்கள் எனக்குச்செய்த தீங்கொன்றும் இல்லை. அவர் கள் என்னாட்டின் மேற் படையெடுத்து என்னோடு சண்டைக்குவந்ததில்லை. நான்பகைவர்பயமின்றி நிர்ப் பயனாகச்சுகித்து வாழ்ந்திருந்தேன். இவ்வளவுபாடும் உன்பொருட்டேயன்றி வேறில்லை.

54. வார்கடலும் வரையும்மரணாகி
நீர்வளமல்கு மெனாட்டி னெருங்கும்
சீர்மலி செல்வ முவந்து நுகர்ந்து
போர்வலியேங்களி பொங்கி யிருந்தேம்.

(இ-ள்.) கடலையும் மலையையும் காவலாகப்பெற்றுச் சத்துருபயமில்லாதாகி நீர்வளம் நிறைந்து செழித்த என் ராஜ்யத்தில் அநேக சிறந்த செல்வங்களைப்பெற்றுச் சுகித்து எங்களை வெல்லவல்லார் ஒருவருமில்லாத பராக்கிரமத்தைப்பெற்று மகிழ்ந்திருந்தோம்.

55. ஈங்குறவெம் மொடு மேனை நிலத்தார்
தேங்குதண்வேலை திரண்டென மொய்த்த
தோங்கலிலுன்ற னெடும்பி தனக்கும்
ஆங்குறுதீங்கை யகற்றிடவன்றோ.

(இ-ள்.) நாங்களும் எங்களோடு மற்றத்தேயத்தார்களும் இத்தாய் நகருக்குத்தத்தம் சேனைகளோடு கடல்போலத் திரண்டுவந்துகூடியது உயர்ச்சியில்லாத சிறுமைக்குணங்களையுடைய உனக்கும் உன் தம்பி மெனிலயனிக்கும் நேர்ந்த பழியை நீக்குதற்கன்றோ.?

56. நன்றியிலாயுனை நாநெடு நாளா
ஒன்றிவருந்தி யுழன்றுறு போரிற்
சென்றுடல் செம்புனல் சிந்திய தெல்லாம்
இன்றிவணிங்ஙணிகழ்வுறு தற்கோ.

(இ-ள்.) செய்ந்நன்றி யுணராத சிறுமதியுடையோனே, உன்னை நாங்களெல்லாம் நெடுநாளாசத் தொடர்ந்து அநேகவருத்தங்களில் அடிபட்டுப் போர்க்களத்தும் புகுந்து பொருது வெட்டுண்டு உதிரம் சிந்திப் பட்ட பாடுகள் அனைத்தும் இப்போது உன்னால் இவ்வாறு அவமதிக்கப்படுதற்கோ? நாங்கள் அடைந்த பிரதி பிரயோசனம் நன்றாயிருக்கின்றது.!

57. உற்றதுயர்க்கள வின்றுரி மைத்தாய்ப்
பெற்றறு பேசுகி னெட்டுணையில்லை
மற்றது வுங்கொள வன்புசெய்வாயோ
எற்றிது சொற்றனை யேதமிகுந்தாய்.

(இ-ள்.) நாங்கள் உன்னையண்டி அடைந்ததுன்பங்களுக் கெல்லையில்லை. அவற்றிற்குமாறாகப் பெற்றபயனோ எள்ளினும் அற்பமாகும். அவ்வற்பத்தையும் நீ பறித்துக்கொள்ள வன்புசெய்கின்றாய் கெடுமதியுடையோனே என்னவார்த்தைகளைச் சொன்னாய் நீ!

58. பட்டபல்பாடு முழற்சியும் யானே
முட்டவரும் பயன் முற்றினை நீயே
கெட்டது போது மினித்தொடர் கில்லேன்
விட்டினி மீளுவ னென் னகருக்கே.

(இ-ள்.) அநேகபாடுபட்டுப் பகைவரோடு பொருதுழன்றவன்நான். அதன்பிரயோசனங்கள் யாவும் பெற்றவன் நீ. போதும் போதும் இந்தக் கூட்டு வியாபாரம். இனி உன்னை ஒருநாளும் தொடமாட்டேன். என்பாட்டுக்கு என்னகரை நோக்கித்திரும்பிச் செல்லுகின்றேன்.



வேறு.

59. இனையன வுரைத்தல்கேட்ட விறைமகன் முனிந்து சொல்வான்
வனைகழல் வீரவின்னே யேகுக வழங்கு நின்றன்
தனிநெடுந்துணையும் வேண்டேன் சாற்றிய வுரையுமஞ்சேன்
நனியெனைத்தொடர்ந்து வன்போர் நயந்திடப் பலருமுண்டே.

(இ-ள்.) இவ்வாறு கூறிய அக்கிலன் வார்த்தைகளைக்கேட்டு அகமம்னன் கோபாதீதனாய்க்கூறுகின்றான். ஓவீரனே! வேண்டுமாயின் இந்தக்ஷணமேசெல்லுக. அதிகமாகப்பயமுறுத்தாதே. உன்னுடைய உதவியும் வேண்டாமெனக்கு. உன்பயமுறுத்தலுக்கும் பயப்படேன். நீயொருவன் போய்விட்டதனாலே என் காரியம் குறைவுறாது எனக்காகப்போர்செய்ய வுடன்படும்வீரர்கள் இன்னம் அநேகர் இருக்கின்றார்கள்.

60. வேந்தனுமெனக்குநேர்ந்த வெம்பகை வென்றுமாற்றிப்
போந்ததோர்பழியை நீக்கப் புனிதனும் யோவும் போதும்
தேந்தொடை யரசர்கூட்டத் துன்னைநேர் செருக்குமேவி
ஏந்தலா மென்னையிங்ஙன் வெறுப்பவரில்லை மாதோ.

(இ-ள்.) சார்வபௌமனாகிய எனக்கு விளைந்த பகைவர்களைச்செயித்து நிக்கிரகித்து என் குறையை நீக்குதற்கு முதற்கடவுளாகிய யோவும் துணைநிற்பன். நீயொருவன் என்னைக்கைவிட்டதனால் எனக்கோர் குறைவும் உண்டாகாது. அன்றியும் எனக்குத் துணைவந்திருக்கும் அரசர் கூட்டத்தில் உன்னைப்போலக் கருவபுஞ்சராய் என்னை இவ்வாறு வெறுப்பவரும் ஒருவரும் இரார். நீ செல்லுதலால் எனக்குச் சிறிதும் விசனமில்லை.

61. பகையொடு குதர்க்கமல்லாற் பார்த்திலேன் பிறிதொன்றுன்பால்
தகையறக்கொலைசெய் வெய்ய சமரலால் விழைந்தாயில்லை
மிகைபடுவலியுமேனை வீண நீ படைத்தயாவும்
அகமகிழ்ந்தமலன்றன்பா லருளென லயிர்த்தாய் போலும்.

(இ-ள்.) உன்னிடத்தில் சதா விரோதமும் விதண்டாவாதமும் அல்லாமல் வேறொன்றும் நான் கண்டதில்லை. உனக்குச் சதா சண்டையும் கொலையுமன்றி வேறே இச்சையுமில்லை. வீணர்க்கெல்லாம் வீணனே நீ படைத்திருக்கும் வலியும் பெருமையும் யாவும் தற்பரன் அருளால் தந்தவைகளேயன்றி நீயாகப் பெற்றவைகளல்ல வென்பதையும் முற்றும் மறந்து விட்டாய்போலும். பேதாய் நீயோ நன்றிகெட்டவன் நானோ நன்றிகெட்டவன்?

62. இறக்குக கலங்களாழி யேகுக வின்னையேநீ
பெறற்குறு புவியைச்செங்கோல் பிழைத்திடப் புரந்துவாழ்நின்
உறத்தரு முதவிவேண்டேன் உரைதரு நிமித்தமில்லா
வெறுப்புநன்னிலையில் கேண்மை விளைவுமொன்றென்ன வோர்ந்தேன்!

(இ-ள்.) நீ யுன்கப்பல்களைக்கடலில் இறக்கி உன்தமர்களோடும் இந்தக்கணமே செல்லுக. உன் னாட்டிற்சென்று கொடுங்கோல் செலுத்திச் சனங்களையொறுத்து ஆண்டுகொண்டிருப்பாயாக. உன்னுடைய உதவி எனக்குச் சர்வதாவேண்டாம். ஒருகாரணமுமில்லாமல் நீ என்னை வெறுக்கும் வெறுப்பும், க்ஷணச்சித்தம் க்ஷணப்பித்தம் என்றபடி நிலையில்லாத உன்சிநேகமும் இரண்டும் ஒருப்போலப் பயனற்றதேயென்றுணர்ந்தேன்.

63. வெருட்டுக நினைத்தாழ்ந்துள்ள வென்றியில் வீரர் தம்மை
இருட்டுறுமதியாயென்முன் வெருளனின் கடனதாகும்
அருட்டிருக் கடவுள்யான்சொல் வரிவையை யனுப்பவேண்டின்
பொருட்டிணிகலத்தினேற்றிப் போக்குவன் புந்திகூர்ந்தே.

(இ-ள்.) உன்னடியில் வீழ்ந்துன் பணிவிடையில் நிற்கின்ற வெற்றியில்லாது வீரரென்று வெ வைத்துக் கொண்டிருப்பவர்களை வேண்டியபடிவெருட்டுவதேயன்றி, புத்திகெட்டமூடா, எனக்கு முன் நீயன்றோ அஞ்சியிருத்தல் முறைமையாகும். அருள் நிரம்பிய கதிர்க்கடவுள் நான் சிறைப்படுத்திய கன் கையைத்திரும்ப அனுப்ப ஆக்ஞாபித்தால் அப்படியே அவளை அநேகம் பொருள்களோடு கப்பலேற்றி ம மகிழ்ந்து அனுப்பாநிற்பேன்.

64. தெரிந்திடுபின்னர் நீகொள் சேயிழை பிரசை யென்னும்
முருந்திளமூரலாளை மொய்ம்பிறுத் கொள்வேனீயே
தருந்திறனிலையே யாகிற் றுனைவேன் மானவேந்தெகன்
அருந்திறல் சிறிது நீயு மறிந்திடக் காட்டுவேனே.

(இ-ள்.) பின்பு நீவைத்துக் கொண்டிருக்கும் பிரசையென்னும் பெண்ணை நீயாகத் தந்தா யிற்று; இல்லாவிடில் உன்னிடத்திலிருந்து கவர்ந்து கொள்ளுதற்கு எனக்குச் சத்தியுண்டு. மகாசே களுக்கெல்லாம் அதிபதியாகப்பெற்ற பெருமைமிக்க அரசனாகிய எனதுபராக்கிரமத்தை நீயும் தெ தெரிந்துகொள்ளும்படிக்காட்டுவேன். இதை நீ அறிவாயாக.

65. நாணமுந் துயருங்கொண்டு நவையுறத் தோற்று நீயும்
ஏனுறு தோளினேனை யெதிர்த்ததை நினைந்துபிழை
பூணவும் புடைசூழ்ந்தோர்கள் புரவலர் தேவர்க்கல்லால்
மாணுறு மொய்ம்பு சாயா வண்ணமு மறிபவன்றே.

(இ-ள்.) நீ என்னோடெதிர்த்துத் தோல்வியடைந்து அதனால் வெட்கமும் துக்கமுமடை ஐயோ இவன் பெருமையும் வலிமையும் கருதாமல் எனிவனை எதிர்த்தோமென்று பச்சாத்தாபப்ப நம்மைச்சூழ்ந்து நின்றவர்கள் அனைவரும், என்போலும் சார்வபௌமர்களாகிய வேந்தர்கள் தேவர்களு ஒருவேளை வலி சாய்வார்களேயன்றி மற்றவர்களுக்குத் தோல்வியடையார்களென்னும் உண்மையை அ வும் என் பராகிரமத்தைக் காட்டுவேன்பார் என்றனன்.

(தொடரும்)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.



## KINDERGARTEN PRINCIPLES.

## கிண்டர்கார்டன் போதனமுறைக் கொள்கைகள்.

நாளது செப்டெம்பர்மீ 12வ. சனிக்கிழமையன்று சாயங்காலம் 3-மணி முதல் 6-மணிவரையில் சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜில், கிண்டர்கார்டன் போதனமுறையை யனுசரித்துச் சிறுவர்க்குப் போதிக்கும் முறை விளக்கிக் காட்டப்பட்டது. மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் என்னும் அமெரிக்கா தேசத்து வித்யாபோதகர் மேற்பார்வையில் பழக்கப்பட்ட சிறுவர்கள் சிறுமிகள் அன்று டீச்சர்ஸ் காலேஜிற்குக் கொண்டு வரப்பட்டு, அவர்கள் கற்ற வித்தைகளைக் காட்டினார்கள். இவர்களெல்லாரும் சென்னையில் கர்னல் ஆல்காட் ஸ்தாபித்த பஞ்சம தர்மபாடசாலைகளில் படிக்கும் குழந்தைகள். இவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயர்களும் அக்குலத்தவர்களே. சொற்பப் படிப்புப்படித்து அற்பசம்பளத்துக்குழைப்பவர்கள். இவர்கள் ப்ரைமெரிபரீக்ஷை கொடுத்தவர்கள்: அதற்குமேல் படிப்பு இல்லை. இவ்வளவு சொற்பப்படிப்புள்ள உபாத்திமார்களைக் கொண்டு ஸ்வபாவமாகப் புத்தி விசேஷத்துக்குப் பேர் போனவர்களல்லாத கீழ்ச்சாதிப்பிள்ளைகளுக்கு ப்ரோபெல் என்னும் பேர்போன வித்யா போதனாசிரியருடைய அதிமேலான கொள்கைகளை யனுசரித்து வித்யாப்பியாசம்செய்து வைத்தது மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் துரைசானியின் உழைப்பையும், விடாமுயற்சியையும் தீரத்தையும் நன்கு விளக்குவதாயிருந்தது. உபாத்தியாயர்களுக்கு இங்கிலீஷ் நன்றாகத்தெரியாது. சுபரின்டெண்டெண்டு துரைசானிக்கோ தமிழ் ஒருவார்த்தையும் தெரியாது. இப்படி யிருக்கையில், அந்த உபாத்தியாயர்களுக்கு கிண்டர்கார்டன் முறையையனுசரித்துக் குழந்தைகளுக்குப் போதிக்கும் முறையைக்கற்பித்து அவர்களைக் கொண்டு அச்சிறுவர் சிறுமிகளை அவ்வளவு நன்றாகப் பழக்குவித்தது மிகவும் கொண்டாடப் படத்தக்கதே. அத்தருணம் அக்கிராசனாதிபதியாயிருந்த மிஸ்டர் ஜெ. எச். ஸ்டோன் அவர்கள் இதை நன்குமதித்து அவர்கள் முயற்சியைச் சிலாகித்துப் பேசினது மிகவும் சரியானதே. சிறுவர்கள், கும்மி கோலாட்டம், அபிநயம், ஆட்டபாட்டம் முதலிய விளையாட்டுகளில் நன்கு பழகினவர்களாகக் காட்டினார்கள். அன்றி போதனமுறையும் விஷயஞானமின்றி வார்த்தைகளைமட்டும் பொட்டைப்பாடம் செய்யும் குருட்டு மார்க்கத்தைக் கைப்பற்றாமல், குழந்தைகள் உச்சரிக்கும் சப்தத்துக்குரிய பொருள்களை யுணர்ந்து, விஷயங்களுக்கும் வார்த்தைகளுக்கு முரிய சம்பந்தத்தை நன்றாயறிந்தவர்களாகக் காட்டினார்கள், ஓலையினால் கூந்தல், கிளி, தாமரைப்பூ, தட்டுபொட்டி, கிலுகிலுப்பை, கிறுச்சட்டி, ஊதுகுழல், முதலிய அனேக வேடிக்கை விளையாட்டு வஸ்துக்களும் அச்சிறுவர்கள் தாமே செய்து காட்டினார்கள். இப்பேர்ப்பட்ட விளையாட்டு வஸ்துக்களைச் செய்ததற்காக இதை யெழுதுபவரும் அவரையொத்த குழந்தைகளும் 30-வருஷங்களுக்கு முன்பெற்றோரால் கண்டனை தண்டனைக்குள்ளானது இன்னும் அவர் ஞாபகத்திலிருக்கிறது. குழந்தைகள் ஸ்வபாவமாய் உபாத்தியாயர் உதவியின்றி தன்முயற்சியாய்க் கற்று விளையாடிய விளையாட்டுகளை விஷயங்களாகப் பாவித்துக் கண்டனை தண்டனைகள் செய்து அவ்வழக்கம் அனேகமாக அற்றுப்போனபின், இப்பொழுது அவ்வழக்கங்களையே உன்னதமான வித்யா போதன முறைப்படி சிறுவர்க்கு உண்மையில் நன்மை பயக்கும் வித்யாப்பியாசங்களாக அமெரிக்கா தேசத்திலிருந்துவந்த உண்மையான ஒரு கிண்டர்கார்டன் போதனாசிரியரின் அபார முயற்சியால் வித்யா அதிகாரிகள் ஒப்புக்கொள்ளும் படியான காலம் வந்திருக்கிறது. இதனால் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமுள்ள வித்யாசத்தால் உண்டாகும் தீங்கு நன்கு புலப்படும். இது நிற்க.

இப்பொழுது கிண்டர்கார்டன் போதனமுறையென்றாலென்னவென்று சற்றுவிசாரிப்போம். நம்மையாளும் அங்கிலேயருக்கு நமது ஆசார அனுஷ்டானங்களும், நமது முன்னோர்களது ஆத்ம வித்யா முறையும் உண்மையில் ஒன்றுந் தெரியாமையால் அவர்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து ஊன்றிப் பார்க்காமல், மேற்பார்வையாகப்பார்த்து அவைகளிலுள்ள குற்றங்களையே கிரகித்துக் குணங்களையறியாமல் கண்டிக்க நேரிட்டிருக்கிறது. நம்மவர்களும், அவர்கள் வழிப்பட்டு நமது பழக்க வழக்கங்களின் உண்மையையுள்ளபடி யாய்ந்துணராமல், நமது முன்னோர்

ஏற்படுத்திய மேலான உண்மைக் கொள்கைகளை மறந்து அவற்றின் அனுசரணையை அடியோடு விட்டுவிட்டார்கள். இப்பொழுது "கிண்டர்கார்டன் போதனாமுறை" அதிமேலானது என்று மேற்குத்திசையார் சொல்வதைக்கேட்டு, அதை யனுசரிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். அனேகர் "கிண்டர்கார்டன் முறை" யென்றால் என்னவோ அது புதுச்சரக்கு கப்பலிலிருந்து இறக்கப்பட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரர்கள், நமது ஆரியமதக் கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும் அறியாமல், கிண்டர்கார்டன் முறையைக் கொண்டாடுவது சகஜம். ஆனால் உண்மையில் கற்றுத்தேறிய ஹிந்துக்கள் அப்படி மயங்கக்காரணமில்லை. ஏனெனில் ப்ரோபெல் என்பவர் கண்டுபிடித்த இப்போதனாமுறை உண்மையில் தத்துவசாஸ்திரத்தை யொட்டினதாயிருப்பதால், தத்துவஞானத்தில் பேர்போன நம் பூர்வீக இருடிகள் ஆத்மவித்யாபோதமாகச் சொல்லியுள்ள தத்துவங்களையே அவரும் கண்டு அதனுண்மையை விளக்கியிருக்கிறார்.

தத்துவ வழிப்பட்டுக் குழந்தைகளுக்குக்கருவிகரணங்கள் விர்த்தியாகவும் ஆத்ம விலாசம் விளங்கவும் வித்யாபோதனை செய்வதே, கிண்டர்கார்டன் முறையாம். மனிதன் (Màu) என்கிற பதத்துக்கு ப்ரோபெல் தத்துவக்கொள்கைப்படி ஆத்மன் என்கிற வார்த்தையினால் நம்முன்னோர் தெரிவித்த கருத்தே பொருந்துவதாயிருக்கிறது. "ஒரு குழந்தையினிடத்தில் திரிகாலஞானமும் திரிவிதத்தோற்றமும் பொருந்தியிருப்பதால், அம்மூன்றும் விர்த்தியாய் விளங்கும்படி பெற்றோர் அக்குழந்தையை வளர்த்துவரல்வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறுகிறார். மனிதனிடத்தில் தெய்வீகம், மானுஷீகம், பௌதீகம் என்கிற மூன்றுதத்துவங்களும் ஒருங்கு பொருந்தியிருப்பதால் இம்மூன்றும் பூரணமாய் விளங்க அவனை விர்த்திக்குக் கொண்டுவரவேண்டுவது வித்யாபோதனையின் நோக்கமாகவிருக்கவேண்டுமென்று சொல்கிறார். உலகத்திலுள்ள பிரத்யேகஜீவன் ஒவ்வொன்றும் அதன் ஸ்வபாவப்படி விர்த்தியடைந்து பூரணமாய் விளங்கவேண்டுமானால், எல்லா வஸ்துக்களுக்கு மியல்பாயுள்ள, திரிவிதகுணங்களையும் அது பூர்த்தியாக அமையப் பெற்றிருக்கவேண்டுமென்கிறார். அந்த த்ரிவிதகுணங்களும் த்ரிவிதத்தோற்றமாக விளங்கும். அது எப்படி யென்றால், எதுவும் "மூன்றிலொன்றும் ஒன்றில் மூன்றுமாக" விளங்கவேண்டும். உதாரணமாக மனிதனிடத்தில் தெய்வீக, மானுஷீக, பௌதிக தத்துவங்கள் மூன்றும், ஏகம், பிர்த்யேகம், அனேகம் என்கிற மூன்றுவிதத்தில் விளங்கவேண்டும்; ஏகமாய் விளங்கும் பொருள் கடவுள்: பிரத்யேகமாக விளங்குங்கால் அது மனுஷஜீவன்; அனேகமாய் விளங்குங்கால் அது ப்ரகிருதி யென்று சொல்லப்படும். இவர் ஏகதத்துவமாகச் சொல்வதை நம்மவர் ப்ரஹ்மம், ஏகன், கடவுள், என்று பலநாமங்களால் சொல்லியிருக்கிறார்கள். நாமரூபமில்லாத அகண்டமான ஏகவஸ்துவை எத்தனை பேரிட்டழைத்தாலும், ஊன்றிப்பார்க்குங்கால் அது அந்த ஒன்றையே விளக்கும்; பிரத்யேகமாக விளங்கும் மானுஷீக தத்துவத்தை நமது முன்னோர் பிர்த்யகாத்மன் என்றும் வேறுவிதமாகவும் சொல்லியிருக்கிறார்கள். அனேகமாக விளங்கும் பிரகிருதி தத்துவத்தை, விராட் என்றும், வைசுவானரா என்றும் ஸ்தூலசூக்ஷ்மார்த்தம்பற்றி வெவ்வேறு பேர்களால் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மூன்றையும் ஒன்றாகவறிந்து; ஒன்றாக வறிந்ததையே பிந்தி மூன்றாக விளங்கப்பார்ப்பது உண்மையான வித்தையின் முடிவு நோக்கமாம் என்று ப்ரோபெல் சொல்லியிருக்கிறார். அதாவது, மனுஷன் சீவனாகக் கருவி கரணங்களை விர்த்திசெய்து, ஆத்மனாக ஈசுவரதத்துவத்தோ டைக்கியமாகி, அதையுங்கடந்து ப்ரஹ்ம ஸ்வரூபமாகி தானே தானாய் விளங்கி, மறுபடியும் அந்த ப்ரஹ்மஸ்வரூபமே, ஈசுவரதத்துவமாய் ப்ரகிருதியாக விளங்குகிறதென்றும், அந்தப் பிரகிருதியினுட்பட்டதே மனுஷதத்துவமாம் சீவனென்றும் அறியவேண்டுமென்றாகிறது. ஸ்ரீமத் இராமகிர்ஷ்ணபரமஹம்ஸர், மனுஷன் தான் வந்தவழியே பின்வாங்கி ப்ரஹ்மத்தில் ஐக்கியமாகிப், பிறகு ப்ரஹ்மஸ்வரூபத்திலிருந்து வெளியாகி மனுஷனாய் இருந்தவிடம் வந்து சேருவது ஆத்மானுபவப் பூர்த்தியாமென்று செப்பியுளார். இரண்டுக்குமுள்ள வித்யாசம் ஒன்றுமில்லை. உண்மையனுபவமின்றி வார்த்தை மட்டில்வாசித்து, வாசாஞானம் பேசுகிறவர்கள், ஒன்றை யொன்றாக மருளினால்கொண்டு மனங்குழம்பி வீண் தர்க்கம் விளைத்து விதண்டாவாதம்



செய்வார்கள், உண்மையில் ஸ்வானுபவ முள்ளவர் தத்துவஞானம் எப்படிச்செப்பினும் உண்மையே யென்று உள்ளபடி யறிந்துகொள்வார்கள்.

இப்பொழுது இந்தமுறைப்படி குழந்தைகளுக்குப் போதிக்க முதலில் இன்றியமையாதவசியமானது—விஷயஞானமாம். இதை பெஸ்டலோஜி யென்னும் இன்னொருபேர்போன வித்யாபோதகாசிரியர் "immediate perception" என்று சொல்லி, இதுவே எல்லா அறிவுக்கும் ஆதாரம் என்று வற்புறுத்தியிருக்கிறார். ப்ரோபெல் இதையொப்புக்கொண்டு விஷயஞானத்தால் அறிவுண்டாவது உண்மையாயினும், இந்த அறிவுக்குமேலான உள்ளறிவு ஒன்றிருக்கிறதென்றும், அதுவிர்த்தியாய் விளங்கினால்தான் ஆத்ம ஞானமுண்டாமென்றும் சொல்லி, விஷயஞானத்தி லாரம்பித்து அதனாலுண்டான அறிவு முதிர தத்துவஞானமும் விர்த்தியாய்வரவேண்டுமென்றும், தத்துவஞானமின்றி ஆத்மஞானமும், ஏகமாயுள்ள அத்வைத வஸ்துவையுணரும் சக்தியுமுண்டாகாதென்றும், ஆகையால், பொறிபுலன்களின், அதாவது கருவிகரணங்களின் விர்த்தியோடு இவைகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் உள்ளத்துணர்வாம் ஆத்ம சக்தியும் விர்த்தியாக வேண்டுமென்று சொல்கிறார். இதுசத்தியமே. இப்படிப் புலன்பொறியுணர்வும் உள்ளத்துணர்வும் விர்த்தியாக, பிரகிருதி வஸ்துக்கள் எதையும், புலன்பொறி, கருவிகரணங்களால் தீண்டிப்பழகி யறிந்துகொள்வதோடு, அவையொவ்வொன்றிலும் மறைந்து கிடந்து எங்கும் வியாபியாகின்ற ஈசுவர சக்தியை விளக்கும் தத்துவத்தையு முணரவேண்டு மென்றும், இந்த உணர்ச்சி, உள்ளத்துணர்வால் உண்டாகவேண்டுமேயன்றி, புலன்பொறி கருவிகரணங்களால் சித்திப்பதல்லவென்றும் சொல்கிறார். இப்படியறியவேண்டிய அறிவு எல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ள ஒரு உண்மைத்தத்துவத்தை அவர்நன்றாக வெடுத்து வற்புறுத்தியிருக்கிறார். அவருடைய மஹாவாக்கியம் என்னவென்றால் "inner connection" அதாவது "உள்ளறிவு." "உள்ளறிவு" உண்டாக மனோலயம் அவசியம்; இதை ஆத்மவித்தையில் லயயோகம் என்று சொல்வார்கள். அதாவது ஒருபொருளை லக்ஷியமாகக் கொண்டு, மனது அது ஒன்றையேபற்றி அதோடு ஒன்றுபட்டு நசித்துப்போவதாம். இப்படி மனோலயமானால்தான் "உள்ளறிவு" உண்டாகும். இப்படி உண்டாகும் உள்ளறிவுக்கு அழிவில்லை. மற்ற அறிவு எல்லாம் நிலைத்திருக்காது. இந்தவுண்மையையறிந்து நடப்பது கஷ்டமாயிருந்தாலும் சுபாவத்தில் அறிவுவிர்த்தியாவது இதனாலேயே. ஒரு வஸ்துவை நாம் உட்கொண்டு சீரணம் செய்யும் முறையையறிவது கஷ்டமாயிருக்கலாம். ஆனால் அவ்வஸ்துவையுட்கொண்டு ஜீரணிப்பதோ வெகு சகஜமாய் ஒவ்வொருவரும் செய்யக் கூடியதாயிருக்கும். அதுபோல, அறிவு விர்த்தியாகும் முறையறிந்து, அறிவூட்டி வளர்ப்பது கஷ்டமாயிருக்கலாம். ஆனால் அறிவு விர்த்தியாகும் வழி ஸ்வபாவமாக எல்லாரிடத்தும் அமைந்திருக்கிறதும் அது அவ்விதிப்படி நடப்பதும் சகஜமாயிருக்கிறது. ஒருதாய் குழந்தை வளர்க்க பக்குவமறிந்து பாலூட்டி வளர்க்க எவ்வளவு அறிவும் அனுபவமும் வேண்டுமோ அவ்வளவு அறிவும் அனுபவமும் வேண்டும், குழந்தைகளுக்கு வித்யாப்பியாசம் செய்விக்கவும்; ஏனென்றால் பக்குவமறியாது குழந்தைகள் மனதை விர்த்திசெய்யப்பாடுபடும் உபாத்யாயர், அதற்குச்சொல்ல முடியாததீங்கிழைப்பது நிச்சயம். ஆனால் குழந்தை வளர்வது எப்படி ஊட்டம் கிடைத்தமட்டில் தானாகவளருகிறதோ, அப்படியே குழந்தைகளின் மனோவிர்த்தியும், சகவாசத்தை யொட்டி அது தானாக விர்த்தியாகும். இந்த சகவாசம் நல்லதாகவும், குழந்தைகளின் இயற்கை ஸ்வபாவத்துக்குப் பொருந்தினதாகவும் இருக்கும்படிச்செய்வதே பெற்றோர், உபாத்யாயர்களின் பெருங்கடமையாம். இதுசெய்ய சூக்ஷ்மபுத்தியும், தத்துவஞானமும் வேண்டும். நமது பிரதம பாடசாலை உபாத்தியாயர்கள் படிப்பிலும், உலகானுபவத்திலும் குறைந்தவர்களாகவிருப்பதால், இந்த உண்மையை உள்ளபடியுணர்வது அவர்களுக்கு எளிதில் சாத்தியமாகாது. ஆகையால், தத்துவஞானம் விளங்க அவர்களுக்கு நமது ஆத்மவித்யா சாஸ்திர முறையை அனுசரித்து ப்ரோபெல் 'கிண்டர்கார்டன்' முறையென்று சொல்லி யேற்படுத்திய போதனாமுறைக்கு ஆதாரமான மூலக்கொள்கைகளை யவருக்கு சுயபாஷையில் பிரசங்கமூலமாகவும் மதபோதனையாகவும் விளக்கவேண்டும். இப்படி விளக்குவான், "பிரகிருதி

யினுண்மையிற் பரமனைக்காணலாம்" என்னும் தலைப்பின் கீழ் "தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு" என்னும் திருமூலர் திருமந்திரத்திற் செப்பிய ஒரு மேலான தத்துவக்கொள்கையை விளக்கிக்காட்டி மதபோதனாரூபமாக இச்சஞ்சிகையின் முதல் விஷயத்தையும், அதையொட்டி ஆத்மதத்துவத்தை விளக்க, இரண்டாவது விஷயத்தையும் எழுதிப் பிரசுரித்திருக்கிறோம். பிரகிருதி தத்துவமுணராது ஆத்மதத்துவமுணர லரிதாகையால், முன்னே அதைவிளக்கிப் பின்னர் ஆத்மதத்துவத்தை விளக்கியிருக்கிறோம். கிண்டர்கார்டன் போதனா முறைக் கொள்கைகள் உண்மையில் நம்முன்னோர் போதித்த ஆத்மவித்தையேயன்றி வேறல்ல வென்பது ஊன்றிப்பார்க்கில் ஸ்பஷ்டமாய் விளங்கும்.

C. V. S.

## A short History of Japan.

## ஜப்பான் சரித்திரச் சுருக்கம்.

இது 'சுதேசமித்திரன்' பத்திராசிரியர் ம-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணியஐயர் அவர்களாலியற்றப்பட்டது. "இந்தியாவைப்போல் ஜப்பானும் ஏஷியா கண்டத்துக் கீழ் நாடாயிருந்தும், இந்தியாவைப் போலவே அதுவும் சமீபகாலம் வரையில் அறியாமையாகிய இருள்மூட்டம் படரப்பெற்றிருந்தும், அது அன்னியர்கள் மேலதிகாரத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளும்போலிருந்த சமயத்தில், தலைவர்கள் தேசாபிமானத்தைப்பாராட்டி, தீர்க்க புத்தியுடனும் தைரியத்துடனும் தேசத்து நன்மைக்கவசியமான புதுமைகளையங்கீகரித்துப் பயப்படாமல் முன்னின்று முனைந்து சீர்பெற்றதாகையால்" இத்தேச சரித்திரத்தைத் தமிழோர் சாரமறிந்துபடித்துப் பயன்படுவதற்கு ஹேதுவுண்டென் றெண்ணி முதல் முதல் இந்த ஜப்பான் தேசசரித்திரத்தைப்பற்றி யெழுதி இது நன்றாக அங்கீகரிக்கப்பெற்றால், இந்தியா, இங்கிலாண்ட், பிரான்சு, ஜர்மனி, இடலி, ருஷியா, அமெரிக்கா முதலிய தேசங்களின் சரித்திரங்களையும் இவ்வாறே சுருக்கமாய்த் திரட்டித் தமிழில் எழுத உத்தேசித்தவராய் நமது கிரந்தாசிரியர் இதைப் பிரசுரித்திருக்கிறார் என்று தெரியவருகிறது. இதை யெழுதியவர் அவருடைய புத்திசாமர்த்தியத்தாலும் இந்தியாவில் பல்லாண்டு தேச க்ஷேமத்தை நாடியுழைத்துவந்த காரணத்தாலும், தேசங்களின் சுக சௌக்கியத்துக்கு வேண்டியவிஷயங்களை அகன்றுவிரிந்த மனது கொண்டு சாங்கோபாங்கமாய் அறிந்துணரும் சக்திவாய்ந்த தன்மையினாலும் இவ்வித சரித்திரங்களினால் இதரதேசங்களையும் இத்தேசத்தையும்பற்றி நமது தேசத்தார் அறிந்துகோள்ளவேண்டியவிஷயங்களைத் திரட்டி யெடுத்துப்போதிக்க அருகராமென்பதில் சந்தேகமில்லை. தேசவிர்த்தாந்தங்களை யறிந்துகொள்வதிலும், அவைகளின் நோக்குப் போக்குகளையும், அவைகளில் பொதிந்துகிடக்கும் தத்துவங்களையும் உள்ளபடி யறிந்துபற்றுவது ஒரு தேசசரித்திரத்தைப்பற்றிப் படித்துப்பயன்படுவதற்கு இன்றியமையாத சாதனமாம். ஆகையால் இத்தனை தேசங்களின் சரித்திரத்தையும் வாசித்து அவைகளின் சாராம்சத்தை நம் தேசத்தவர்களுக்குப் போடக்கருதிய இவருடைய தத்துவக்கொள்கைகள் எப்படி யிருக்கின்றன வென்று சற்று ஆராய்தல் வீணாகாது.

முகவுரையில் நம் தேசத்தாரிடத்துள்ள குணங்களை யெடுத்துச்சொல்வதில் தேசாபிமானமும் ஐக்கியமும் இல்லாக்குறையாலே நாம் வீணாகக்கெட்டுப்போகிறோமென்று சொல்கிறார். நாம் சோம்பித்திரிவதற்குக்காரணம் நமது பூர்வீக மதக்கொள்கைகளென்றும், மூக்கைப்பிடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டிருந்தால் காரியமாகாதென்றும், ஊக்கமும்உழைப்பும் பிறரைப்பார்த்துப் பயன்படும் தன்மையும் நமக்கு வேண்டுமென்கிறார். பூர்வீகமதக்கொள்கைகளா லுண்டான ஸ்வபாவகுணத்தை யுடனே மாற்றுதல் கூடாமையே. ஆனால் அதைவிட்டுப் பிறதேசத்தாரைப்பார்த்து நடிப்பதால் ஏதோ வாரிக்கட்டிவிடலாமென்று இவர் நினைப்பது சுத்தப்பிசகு. எதுவும் ஸ்வபாவத்தை யொட்டிச்செய்யும் முயற்சி பயன்படுவதுபோல்பிறரைப்பார்த்து அவரைப்போல் நாமும் ஆகவேண்டுமென்று செய்யும் வெளிமுயற்சி பலித்துப்பயனைத்தராது. பயனீந்தாலும் அப்பயன் நிரந்தரமானதாகவிராது. ஒரு மனிதனுக்காகட்டும், ஒரு ஜாதிக்காகட்டும் ஸ்வபாவமாக ஏற்பட்ட குணம் திடீரென்று மாற்றத்தக்கதல்ல. அது வெகுகாலம் பழக்கத்தால் வாசனையாக நமது உள்ளத்தில் ஒடுங்கிக்கிடக்கிறது. அதை மாற்றவேண்டுமென்றால், பலவருஷகாலங்கள் தலைமுறை தலைமுறையாகவுழைத்துமாறவேண்டும். ஐரோப்பியர்களும் மற்றப்படியுள்ள தற்கால நாகரிக முதிர்ந்த தேசத்தார்களும், புஜபலபராக்ரமத்திலும், பொருளீட்டல், தொழில் முயற்சி செய்யல் வியாபாரம் இவைகளிலும் மேலாய் விளங்குவது வாஸ்தவமே. ஸிம்மம் காட்டில் மிருகராஜனாக எல்லாமிருகங்களும் நடுங்கவாழ்வதால், நாமும் காட்டுக்குப்போய் ஸிம்மத்தோடுவாழ்ந்தால் அதன் தைரிய பராக்ரமம் நமக்கு வருமா? நாம் அதைக்கொல்ல முடியாவிட்டால் அது நம்மைக்கொன்றுதின்றுவிடுவதுநிச்சயம். ஆனால் ஸிம்மத்துக்குள்ள தைரியம் நமக்கிருந்தால் நாம் நமது நாட்டிலேயிருந்து ஸிம்மத்துக்கும்மேலாகவாழலாம். அதுபோல ஐரோப்பியர்கள் இகசுகவிர்த்தியில் சிறந்தவர்களாயிருக்கிறார்களென்று நாம் அவர் தேசத்துக்குச்சென்று அவர் வழிவகைகளைக்கண்டு அதை யனுஷ்டிக்க முயன்றோமானால் அதுவிளங்காது. ஆனால் நாம் செய்யவேண்டியதென்னவென்றால் அவர்கள் எடுத்த காரியத்தைத் தொடுபிடியாகத்தொட்டு எத்தனைதரம் அதில் தோல்வி யடைந்துபோனாலும், தோல்வியைத் தோல்வியாகக் கருதாமல், பிடித்தபிடியில் ஜயமடையும்வரையில் உழைக்கும் ஊக்கமும் விடாமுயற்சியும் நம்மிடத்திருந்தால் நாமும் அவரைப்போல் வியாபாரத்திலன்று, நமது ஸ்வபாவத்துக்கும் தேசவிசேஷத்துக்கும் பொருந்திய விஷயங்களில் அவரைவிட மேலாகவிளங்குவோம். இந்தியாவிலிருந்த அதி மேலான கைத்தொழில்களெல்லாம், அங்கிலேயரைப் பின்பற்றி நடக்க முயன்றகாரணத்தினாலேயே இப்பொழுது நிலைகுலைந்து நசிந்துபோகும்ஸ்திதியிலிருக்கின்றன. இப்பொழுது ஆங்கிலேயரில் மேலானோரே ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றி இந்தியா இதுவரையில் கெட்டதுபோதும், இனியும் கெடாதபடி பாதுகாத்த லவசியமென்று சொல்கிறார்கள். மிஸ்டர் 'ஹாவல்' இது விஷயமாய் அடிக்கடி வற்புறுத்தியெழுதிவருகிறார். மற்றவர்களும் அப்படியே சொல்லி அப்போதப்போது முயற்சித்து வந்திருக்கிறார்கள்.



துரைத்தனத்திலும், நடையுடைபாவனைகளிலும், நன்றாகச்சிந்தித்துநிதானித்து உண்மைக்கு உதாரணமாகவிருக்கநடந்துகொள்ளாமல், ஆங்கிலேயர் புகழ்ச்சியை நாடி, அவர்களில் சிறந்தோர் சொல்வதையே வேதவாக்காகக்கொண்டு நடப்பதால் நமக்கு வரும் கேடு இவ்வளவவ்வளவில்லை. அவர்களில் தக்கவர்களே இந்த எளிய குணத்தைக்கண்டு நம்மை ஏளனமாக நினைக்கிறார்கள். மேற்றிசையார் கிறிஸ்துமதஸ்தர்களென்று பேருக்குச் சொல்லிக்கொண்டாலும், அவருடைய மேலான கொள்கைகள் அவர் உள்ளத்தில் நன்றாக ஏறவில்லை. இந்தியாவிலே ஆத்மார்த்தமாக எதையுமுணர்ந்து ஆத்மவிர்த்திக்கு அனுகூலமாக எதையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவில் ஜீவன் முடிவுநோக்கைக்கண்டு உளக்கண்ணொளியால் எதையம் நிர்ணயித்துள்ளார்கள். அந்தவுண்மையை யுணரமாட்டாமல் வெள்ளைக்காரரைப் பின்பற்றி அவர்கள் எண்ணங்களையும் கிரந்தங்களையும் இரவல்வாங்கின தாங்களே மேதாவிகளென்றும் தாங்கள் போகும்வழியே சரியானவழியென்றும் குதிக்கிறார்கள். இவர்களுக்கு நமது முன்னோருடைய கருத்தை அவர்களுடைய நிலையிலிருந்து அறிந்துகொள்ளும் திறமையில்லை. ஆகையால் அகக்கண்ணின்றி "முகத்திற் கண் கொண்டுபார்க்கின்ற மூடர்"களாய்த் தாறுமாறாகப் பேசிப்பிதற்றுகிறார்கள். இவர்கள் ஏதோவயிற்றுப்பாட்டையுன்னிவெள்ளைக்காரன் துரைத்தனவேலைக்கு இராயஸக்காரர்களில்லையென்று, தன் வியாபாரசிந்தையே மேலாகக்கொண்டு, சுதேசிகளைப் படிப்பிக்கச்செய்த ஏற்பாட்டில் அரைகுறைப்படிப்புப்படித்து ஆத்மஞானமின்றி கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்று வெள்ளைக்காரன் சொல்லும் பௌதிக தத்துவ வுண்மைகளை வாயால்மட்டும் சொல்லிப் பிதற்றிக்கொண்டு, நானும் இந்தியாவுக்குத் தலைவனாயிருப்பேனென்று வந்தால், பூர்வீக இருஷிகள், தீர்க்கதரிசிகளாய் ஏற்படுத்திய பழக்கவழக்கங்களே புருஷார்த்தம் நான்கும் கொடுக்கும் என்று நம்பியிருக்கும் சாதாரண ஜனங்கள் இவர்களைப் பின்பற்றிநடக்கக் கூசிப் பின்வாங்குகிறார்கள். ஆகையால் இந்தியாவிற்குத் தலைவர்கள் வேண்டும், தலைவர்கள்வேண்டும் என்று, தலைமை நடாத்துவதற்கு வேண்டிய யோக்கியதையின்றிப் பிதற்றினால் அவர்கள் தலைவர்களாவது எப்படி? ஒருதேசத்துக்குத் தலைவனாயிருப்பவன் அத்தேச ஜனங்கள் நம்பும் மூலக்கொள்கைகளெல்லாம் தன்னிடத்துப் பொருந்தி விளங்குபவனாக விருக்கவேண்டும். தேசா

பிமானம், ஸ்வபாபிமானத்தின் விர்த்தியேயன்றி வேறல்ல. ஸ்வபாபிமானி, ஒரு படியேறினால் குடும்பாபிமானியாகிறான். குடும்பாபிமானி யொருபடியேறினால் குலாபிமானியாகிறான். குலாபிமானி யொருபடியேறினால் ஜாதியபிமானியாகிறான். ஜாதியபிமானி ஒருபடியேறினால், மதாபிமானியாகிறான். மதாபிமானி யொருபடி யேறினால், தேசாபிமானியாகிறான். தேசாபிமானி ஒருபடியேறினால் உலகாபிமானியாகிறான். உலகாபிமானி ஒருபடியேறினால், மோக்ஷாபிமானியாம் முமுக்ஷுவாகிறான். இவன் இந்த மோக்ஷாபிமானத்தையும் விட்டு இதற்கு மேலேற வேண்டுமானால் தத்துவ ஞானியாகவேண்டும். இந்த தத்துவஞானமே எல்லாப் பொதுநன்மைக்கும் மூலாதாரமாயிருப்பது. தத்துவ ஞானமுள்ளவன் இகம் பரமிரண்டிலும் தான் செலுத்தவேண்டிய கடமைகளை அபிமானமின்றி ஈசுவரப்பிரீதியாகச் செய்கிறான். இப்படிச் செய்வதே இகபரசுகம் எல்லாவற்றையும் கொடுக்கும். இதுவே பூர்வத்தில் நமது ஆரிய மதசிரேஷ்டர்கள் எல்லா நன்மைக்கும் காரணமாக வுணர்ந்து எதையும் இவ்விதிகொண் டேற்படுத்தியுள்ளார். இந்த உண்மையை யுணரமாட்டாது நம்மில் இங்கிலீஷ் படித்தவர்க ளனேகர் வெள்ளைக்காரர்கள் அபிப்பிராயங்களைப் பின்பற்றி அவர்கள் கொண்டாடுவதையே தாங்களும் மேலாகக்கொண்டாடி அதனால் தங்களுக்கு ஏதோ சந்தர்ப்ப விசேஷத்தால் ஒருவித பலனுண்டானதுபற்றி எல்லாரையும் அது வழிபற்றி யொழுகச் சொல்கிறார்கள். இவர்கள் பரோபகாரமாகச்சொன்னாலும், சாதாரண ஜனங்கள் இவர்கள் வார்த்தையைக்கொண்டு மதிக்காமல், நடத்தையைக்கொண்டு மதித்து இக்காலத்துப் படிப்பு சோற்றுக்கு வழியாக வயிற்றுப் பிழைப்புக்கு உதவுமேயன்றி 'உயிர்பிழைக்க' இதனால் பிரயோஜனமில்லையென்று நன்றாக அறிந்துகொண்டு விடுகிறார்கள். அதற்கேற்ப, நூதன நாகரிகர்களும், மூக்கைப்பிடி, நாக்கைப்பிடியென்று பூர்வ மதக்கொள்கைகளைப்பழிக்க மட்டுமறிந்தார்களேயன்றி, அதெல்லாம் தப்பு ஆத்மக்ஷேமத்துக்கு அவசியமானது இன்னதென்று சொல்லச் சக்தியற்றவராய், துரைத்தனச் சீர்திருத்தமே மேலானதென்று சொல்லி, வெள்ளைக்காரர்கள் செய்யும் அக்கிரமங்களைக் கண்டித்து, "அவன் கிடக்கிறான் குடிகாரன், எனக்கிரண்டு என்று சொல்கிற பழமொழிப்படி, அதிகா தர்ப்பமும் கிடைத்தால் அவர்களிலும் மேல கிரமங்கள் செய்கிறார்கள்.

நம் முன்னோர் எதையும் பாத்தை யுத் நல்லவழியில் நடக்க வழி யேற்படுத்தினார்கள். பொழுது வெள்ளைக்காரன் வியாபாரப் பெரு வியாபாரக் கொள்கையையே முக்கியமாயனு செய்துவரும் துரைத்தனத்தில் எதுவும் காரணமாகவே உழைக்கவேண்டுமென்று ஏ விட்டான். மனிதன் முயற்சிக்குக் காரணஹே யமாக ஏற்படவே, பரசுகம் காரணமாகவே யு வந்தார்க்கு உழைக்கவும் ஊக்கம் பிறக்கவும் மான ஹேதுவின்றிப் போய்விட்டது. சுயநய னத்தனம். அது சிலருக்குமட்டும் உழைப் தாண்டுகோலாகவிருக்குமேயன்றி எல்லாரு ருக்கமாட்டாது. ஆனால் ஆங்கிலேயர் அ றித்தானே முன்னுக்கு வந்திருக்கிறார்களெ ஸிம்மம் மிருகராஜனாயிருப்பதால் மனுஷனும் மத்தைப்போலாகவேண்டு மென்றால் சாத்யம ஆங்கிலேயர் சிறப் புக்குக் காரணம் சுயநயம் டும் தன்மையுமல்ல பொருளாசையுமல்ல: என்னவெனில், அவர்கள் பிடித்தபிடி வெ னும் அதுவே மேலானது; அதை நிறைவேற் அவர்கள் கடன்: அவர்கள் மனம்வைத்த அவர்களால் நிறைவேற்ற சாத்தியமானதே தங்களால் சாத்தியமாகாத காரிய மொன்று என்கிற சுயநம்பிக்கையும், தாங்களறிந்தமட்டி லெண்ணம் உத்தமமானதே யென்கிற உள்ள வும், என்று நமது இராஜப் பிரதிநிதி லார்ட் க டில்லி தர்பார் நடந்தகாலையில் செய்த பிரசங் இந்த உள்மர்மத்தை வெளியிட்டுப்பேசினார். Reliance"- தன்னில் நம்பிக்கையுள்ள எவனும் உண்மையாக நம்பினதை யுள்ளபடி முடித் சக்திவாய்ந்தவனா யிருக்கிறான். முதலாவது பிக்கைவேண்டும். இரண்டாவது தான் பிடி சுயநயம்பற்றியன்று, சத்தியமாய் அதை நிறை றினால்தான் நமக்கு கதிமோக்ஷமுண்டு என்கி ளத்துணர்வு வேண்டும். இந்த இரண்டுமுள்ள த்தில் ஜயமும் காரியசித்தியும் கட்டாயம் உ



கும். இவ்விரண்டு மில்லாதவிடத்து யானை பலமிருப்பினும், அது ஸிம்மத்தின் தைரியத்துமுன் பிரயோஜனப்படாததுபோல், இந்த உள்வலி யுள்ளார்முன் அது பலிக்காதுபோம்.

எந்ததேசம் முன்னுக்குவந்தாலும் எப்பொழுதும் மாறாத இந்த உண்மைவிதிபற்றி முன்னுக்கு வரவேண்டுமேயன்றி இதற்கு மாறாக வரமுடியாது. வந்தாலும் அந்நிலை வெகுகாலம் நீடித்திருக்காது. ஜப்பான் தேசசரித்திரத்திலும் இந்த சூக்ஷ்மவிதியையனுசரித்தே அவர்கள் முன்னுக்கு வந்துள்ளாரென்பது நமது கொள்கை. எல்லாவிர்த்தாந்தங்களும் இதை விளக்குமளவுக்கே சரித்திரசாரமாக நமக்குப் பிரயோஜனப்படத்தக்கவையாம். இல்லாவிடில் அவைகளுக்குத் தத்துவ மதிப்புஇல்லை. ஒரு மனுஷனாகட்டும், ஜாதியாகட்டும், தேசயாகட்டும், உண்மையான ஒருதத்துவத்தை உட்கொண்டு அதற்காகத் தன்னை மறந்து உழைக்குமளவுக்கே அது முன்னுக்கு வரும். ஜப்பான் தேசத்தின் வியாபாரச்சிறப்பை மெச்சுகிறோம். ஆனால் அது எப்படியுண்டாயிற்று? காங்ரெஸ் மேடையிலிருந்தும் சட்டநிரூபண சபையிலிருந்தும் பிரசங்கித்ததனால், ஜனங்கள் அதைக் கேட்டு முன்னுக்கு வந்தார்களென்பதற்கில்லை. துரைத்தனாதிகாரத்தில்அதியுன்னத பதவியடைந்து அரசன் கையிலுள்ள அதிகாரமெல்லாம் கிடைக்கப்பெற்ற ஒரு இராஜதந்திரநிபுணர், தேசக்ஷேமத்துக்கு வியாபார விர்த்தி யவசியமென்று உள்ளத்திற் பட, உடனே அவ்வுன்னத பதவியையும் அதிகாரத்தையும் சிறப்பையும் தானாக விட்டுவிட்டு, வியாபாரத்தில் தலையிட்டுக்கொண்டு, வியாபாரம் செய்தல் கனவான்களுக்கும் பிரபுக்களுக்கும் மகா ஈனமாக மதிக்கப்பட்டகாலத்தில் ஜாதிப்பிரஷ்டனாகி, வியாபாரத்தைக் கைக்கொண்டு அதில் தன்னுடைய மேலான திறமையையும் புத்திவன்மையையும் காட்டி அரசனும் வியாபாரிகளை மதித்து அவர்களை வலுவில் தம்முடைய ஆலோசனை சபைக்கழைத்து அவர்கள் உதவியை நாடும்படி வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டுவந்தார். இவர்தான் உண்மையான தலைவர். வியாபாரத்தலைவரில் இவரே அத்தேசத்துக்கு இன்னும் முதன்மையாயிருக்கிறார். ஜனங்கள் ஒருவரைத் தலைவராகமதித்து அவர்வழிபட்டு நடப்பது அவருக்குள்ள ஆஸ்திபாஸ்தி அதிகாரங்களினாலல்ல. தான் மேற்பூண்ட விஷயத்தில், உடல்பொருளாவியையும் கொடுத்துழைப்பார் யாரோ அவரே உண்மையில் தலைவராவார். அவருடைய செல்வாக்கு "பள்ளத்தில் நீர்தங்குவதுபோல்" அவருடைய உண்மையாம் உயர்ந்த நிலையிலிருந்து தானாகவோடிப்பரவுகிறது. அந்தச் செல்வாக்கே அழியாத்தன்மையுள்ளது. ஜனங்கள் எப்பொழுதும் மனிதரை நிரந்தரமாகமதிக்கார். ஆனால் மூலக்கொள்கைகளை மதிக்கப்பழகின ஜனங்கள் தாங்கள் கொண்டாடும் கொள்கைகள் யாரிடத்து விளங்குகிறதோ அவரைத் தெய்வமாகக் கொண்டாடுவர். கொள்கையை மதிக்கப் பழகாத ஜனங்கள் எப்பொழுதும் நெல்லிக்காய் மூட்டைகளே. மனிதரை ஒன்றாகக்கட்டி ஒருமைப்படுத்துவது உள்மதம் அதாவது ஸச்யம். மதங்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது கொள்கைகள். கொள்கைகள் எப்போதும் தத்துவவழிப்பட்டு நடப்பன வாதலால், தத்துவஞானம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாம். இதைப் பஹிரங்கமாகச் சொல்லி யேற்படுத்தினாலும் சரி, தந்திரமாக மதச்சடங்குகளிலும், கொள்கைகளிலும் பொதிந்து கிடக்கச்செய்து போதித்தாலும்சரி, உண்மையில் இத்தத்துவஞானம் ஜனங்கள் மனதில் வேரூன்றுவதற்குத்தக்கபடியே அவர்களிடத்தில் ஒற்றுமையும் ஐக்கியமு முண்டாகும். இதைமேலோர் உள்ளாராய்ந்து சிந்தித்து உண்மையுணர்ந்துகையாடினால் ஜனங்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம். இதற்கு சாத்தியமில்லா,தவர்கள் என்ன ஆத்திரப்பட்டெழுதினாலும் அவர்கள் முயற்சி விழலுக்கிறைத்த நீர்போல் வீணிலே கழியுமென்பது நமது உள்ளத்திற்படும் உண்மையாயிருக்கிறது. உள்ளத்திற் பட்டதை யொளிக்காது உள்ளபடி சொன்னோம். இதனால் யாரிடத்திலும் வைஷம்யம் அல்லது அசூயைபாராட்டி யெழுதினதாக நினைக்கத்தேவையில்லை.

---

## "The Autobiography of a Brahmin Girl."

## "முத்துமீனாக்ஷி."

---

"முத்துமீனாக்ஷி." இது என்னபேர்! யாருடையது? இப்பேருள்ளார் குணமென்ன, குலமென்ன, கோத்திரமென்ன, நடையென்ன, நாகரிகமென்ன? இப்பேரைச் சொன்னமாத்திரத்தில் இவை யறிந்து

கொள்ளவேண்டிய தவசியமென்று இதை வாசிப்போர் மனதில் தானேபடும். இப்பேரைப் பார்த்த மாத்திரத்தில் நமக்கும் அப்படித்தான்பட்டது. நமது ஆசைதீர எல்லாவற்றையுமறிந்து கொண்டோம். முதலில் பிரியமாயிருந்தது; பிறகு ரஸமாயிருந்தது; பிந்தி யனுதாபமும் பச்சாதாபமுமுண்டாயிற்று; அப்பால் அது துயரமும் துக்கமுமாய் முடிந்தது. இத்தருவாயில் அகஸ்மாத்தாய் நேர்ந்த ஒரு சந்தர்ப்பத்தால், இதெல்லாம் மாறிவிட்டது. இதுகாறும் உடனிருந்தொத்து நின்றாடிவந்த மனம் இப்பொழுது தனியிருந்து மேல் நடப்பதென்னமோவென்று ஏக்கம் பிடித்துத் தபிக்கத் தலைப்பட்டது. தாபமடங்க எல்லாமுணர்ந்து ஏக்கமும் தீர்ந்தது: கதையும் முடிந்தது. ஆனால் நம்மனதிற் குண்டான சஞ்சலம் தீரவில்லை. இந்த வரலாற்றை யெல்லாமெழுதி வெளியிட்டாரைக் கண்டிப்போமென்றால், அவர் "கெட்டிக்காரர்" தான் நேரில் வெளிவராமல் தன்பொறுப்பின்றிப் பதுங்கிவிட்டார். "இது அ. மாதவையர், பி. ஏ., இயற்றியது" என்று முகப்பேட்டில் வரையப் பட்டிருந்தாலும், உள்ளேதிறந்து ஆதிமுதல் அந்தம் வரையில் படித்துப் பார்த்தபின் இவர் "இயற்றியது" என்னவென்று நமக்கு விளங்கவில்லை. "முத்துமீனாக்ஷி"யையே இவர் இயற்றினார் போலும். பெண்ணைப்பெற்றுப் பிறனுக்குத் தத்தம் செய்தாற்போல், பெற்றபாக்கியம் இவரதாயிருந்தாலும், முத்துமீனாக்ஷிக்கு உற்ற பாக்கியத்தில் எள்ளளவும் இவருக்குப் பங்காவது பாத்யதையாவது இல்லாமற் போய்விட்டது. "வாழ்வு வந்தாலும் தாழ்வு வந்தாலும் வாழ்க்கைப்பட்டவனோடே" என்கிற வசனப்படி எல்லாம் முத்துமீனாக்ஷி தன்னோடேயென்று தன்னையீன்ற பிதாவை முகப்பேட்டோடு முழுதும் ஒதுக்கிவிட்டாள். இது நிற்க.

"முத்துமீனாக்ஷி" யார், என்ன? இதை வாசிப்போர் ஆவல்தீர, நாம் முகப்பேட்டில் கண்டதை இங்கே வரைகிறோம்: "முத்துமீனாக்ஷி: ஒரு பிராமணப்பெண் சுவசரிதை." இவ்வளவோடு இதன் கருத்தையறியச் சூக்ஷ்மபுத்தி யுள்ளவர்களுக்கு முகப்பேட்டிலுள்ள பின்வரும் மேற்கோளுதவி புரிவதாகும்.

"தொன்முறைமாறித் துலங்கும்புதுமுறை;
நன்முறையொன்றினே ஞாலம் அழுங்காமே,
பன்முறையின் ஆளும் பரன்."

இதோடு நிறுத்திவிட்டால் இதைப் பார்வையிட்டெழுதப் புகுந்த நம் பாடு சுகமாகப் போய்விடும். ஆனால் அப்பொழுது நம்கடமையைச் செய்ய நாம் பின்வாங்கினவ ராவோமென்னு மெண்ணம் நம்முள்ளத்தை வாதிக்கும். நம்மைப்போல் ஸத்யவிரதம் பூண்ட முத்துமீனாக்ஷியின் காமிய சரீரம் நம்மனக்கண்ணுக்கெதிர்ப்பட்டு "ஹே பிராதா, இவ்வளவு தானா உன் தைரியம்!" என்று துக்கம் விசாரிக்க வந்துவிடுமென்பதும் நிச்சயம். ஏனென்றால் முத்துமீனாக்ஷியின் மனோசக்திக்கு இது சாத்தியமே யென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் எதற்கும் பயப்படாமல், வேறெதையும் பற்றிச் சிந்திக்காமல், "ஸத்யமே கதி" யென்று ஸத்யத்தை நம்பி, உண்மைக்கு ஒத்தவாறு நமதுள்ளத்திற் பட்டதை உள்ளபடி யெழுதிவிடுவதே உத்தமமென்று தீர்மானித்துத் துணிந்துவிட்டோம் உண்மையைப்பேச உடன்பட்டபின் முத்துமீனாக்ஷியின் புன்சிரிப்பும் பயனிலதாம்; அவள் மாமியாராம் கொடியவள் கோரப்பார்வையும், விஷம் கலந்தவார்த்தைகளும் நமக்கு லெக்ஷியமில்லை.

முத்துமீனாக்ஷியின் சுவசரிதையை, அழகு பொருந்திய அவள் வாக்கால்கேட்டு மகிழவிருப்பமுள்ளவர் அவள் புஸ்தகத்தை வாங்கி வாசிக்கட்டும். அவள் சரிதையே நமக்கு முக்கியம். ஆகையால் அதைச் சுருக்கமாகச் சிலவார்த்தைகளிற் சொல்லி முடிப்போம். முத்துமீனாக்ஷி "பாண்டிநாட்டிலே, இராமாபுரமென்னும் கிராமத்திலே சங்கரையருக்கும் பார்வதியம்மாளுக்கும் இரண்டாவது பெண்ணாகவும் மூன்றாவது குழந்தையாகவும் நான் பிறந்தேன்" என்று அவள் சுவசரிதையைச் சொல்லத் துவக்குகிறாள். இவள் தாயார் இவள் 4-வயசுக் குழந்தையாயிருக்கையில் இவளையும் இவளுக்கு எட்டுவயசு மூத்தவனான சுப்பிரமணியன் என்னும் இவள் தமயனையும்,50 வயதான தன் பர்த்தாவையும் விட்டுவிட்டுப் பரலோகம்போய்விட்டாள். அவள்போனபின் முத்துமீனாக்ஷியின் அத்தை யொருத்தி விட்டோடிருந்து குழந்தையையும் குடித்தனத்தையும் பார்த்து வந்தாள். சங்கரையர் மனைவியின் பிரிவாற்றாமல் தன்பிள்ளை சுப்பிரமணியனுக்குப்பார்த்து நிச்சயம் பண்ணியிருந்த ஒரு தஞ்சாவூர்ப்பெண்ணைக் கூட ஆயிரம் கொடுத்து தனக்குள்ள 2-வேலி நிலத்தையும் அப்பெண்பேருக்கு எழுதிவைத்துத் தானே லிகயாணம் செய்துகொண்டு ஆறுதலடைந்தார். கலியாணம் செய்த 2-வருஷங்களுக்கெல்லாம் சங்கரையருக்குப் பெண்டாட்டி வீட்டுக்குவர மறுபடியும் புதுமாப்பிள்ளையாய் விட்டார். ஆனால் பழையதுக்கம் அவரை வெகுநாளைக்கு விட்டு விலகியிருக்கவில்லை. புதுப்பெண்டாட்டி, புருஷனுக்குத் தன்னிடத்திலிருக்கும் காதல் எப்படியிருப்பினும், அவன் குடுமி தன்கையில் நன்றாகச் சிக்கிபிருப்பதை யுணர்ந்து மெதுவாக அன்புமேலிட்டால்தானே ஐயருக்குத் தலையணை மந்திரோபதேசம் செய்யத்தலைப்பட்டாள். மந்திரசித்தி சீக்கிரத்தில் தானே கைகூடிவர, அத்தையம்மாள் அழ அழ முத்துமீனாக்ஷியையும் தன் உடன்பிறந்தானையும் விட்டு விட்டு தன்னூர் போய்ச்சேர்ந்தாள். இது முதல் முத்து மீனாக்ஷிக்கு குட்டுக்கும், வசைமொழி, அடி, உதை இவைகளுக்கும் குறைவில்லை: அத்தையோடு போன அப்பம் கொழுக்கட்டை அவளுக்கு இப்படி உருமாறிக்கிடைத்து வந்தன. அத்தையம்மாள் தன்னிடத்தைக் காலிசெய்யவே, சங்கரையருக்கு மாமியாரும், மைத்துனியுமாக வீடுகொள்ளாதபடி விருந்தினர் வந்து விட்டார்கள். ஒருநாள் படுக்கையுள்ளே சங்கரையர் தன் பெண்டாட்டி தன் கட்டளைமீறி அந்யபுருஷனோடு பேசினதற்காக அவளைக் கண்டனை தண்டனைசெய்யத்துணிந்து விட்டார். நாலு நாள் கழிக்கவும் நல்ல மாமியார் தன் கண்ணான குழந்தைக்குக் காசிமாலை போட்டுப் பாராமல் தனக்குக் கண் பூத்துப்போகிறதென்பதைச் சாக்கிட்டு மாப்பிள்ளையைச் சண்டைக்கிழுத்தாள். மாப்பிள்ளை எவ்வளவு அடக்க ஒடுக்கமாயும் நியாய நிதானமாயும் பதில் சொல்லியும் மாமியாரம்மாளுக்குப் பொறுக்கவில்லை. கோபம் கிளம்பிவிட்டது. அம்மாள் அறிவுகெட்டு தான் அருமையாய்ப்பெற்ற பெண்ணை பாழுங்கிணற்றில் கொண்டுபோய்த் தள்ளுவதுபோல் ஆயிர ரூபாயை வாங்கித் தன்மடி நிறையக் கட்டிக்கொண்டது போதாதென்று சங்கரையர் நிலத்தையுந் தன் பெண்பேரால் எழுதிவாங்கிக்கொண்டு வீணாகக்கொடுத்துவிட்டாள்.



சங்கரையரிடத்தில் அந்தம்மாள் தயைபூரித்து அவரையோட்டாண்டியாக்கித்தன் பெண்ணைக் கொடுத்தது போதாதென்று அவரிடத்தில் கருணை மிகுதியால் அவருடைய உள்ளப் பற்றையுமறுக்க நினைத்து ஸந்யாசம் கொடுத்தால் வாங்கமாட்டாரென்று தன் பெண்பேரிலிருந்த நிலத்தை விற்றுப்பணத்தையெடுத்துக்கொண்டு தன் அருமைப்பெண் அம்மிமிதித்து அருந்ததி பார்த்து அக்னிசாக்ஷியாய்ச் சங்கரையரைக் கைப்பிடித்தகாரியம் கைகூடி விட்டதென்று அவளையு மழைத்துக்கொண்டு வெற்றிக்கொடி பறக்கத் தன்னூர் போய்ச்சேர்ந்து விட்டாள். இதோடு இவள் சரிதைமுடிந்தது. நமக்குள் அக்னிசாக்ஷியாகச் செய்யும் ஆத்மவிவாகம் கொள்வினை கொடுப்பினை வியாபாரமாக மாறினதின் முடிவு இதுவே. இப்படி முடிந்தும் இதன் கொடுமையை யுணர்ந்தாரில்லை. ஜாதியாசாரமும் மதாசாரமும் இதற்கொன்றும் வாய்திறக்கவழியின்றி 'கலியின் கொடுமை' யென்றும் 'வெள்ளைக்காரன் ராஜ்யம்' என்றும் சொல்லி தன்தலைக்குவரும் கேட்டையுன்னாது, அந்நியர்மேல் பழிபோட்டு, ஊமைகண்ட கனவுபோல், வாய்பேசாதிருந்து மறந்துவிடுகிறார்கள். தீமையோ மேன்மேலும் வளர்ந்து வருகிறது. சீக்கிரத்தில் தானே ஆத்மவிவாகமாக வேற்பட்டது, அடிமை வியாபாரமாக முடிந்து பொறுக்கக்கூடாத பொல்லாங்கு விளைவிக்கும் போலிருக்கிறது. இருந்தாலுமென்ன? ஹிந்துக்களிற்குள் கண்ணுள்ளார் ஒருவருமில்லை: எல்லாரும் அகக்கண்கெட்ட குருடர்களாக விருக்கிறார்கள். ஜனங்கள் இடையனில்லா ஆடுகள் போல் ஓடித்திரிந்து பிரிந்து பாழாகப் போகிறார்கள். இவர்களுக்கும் ஓர் கதிமோக்ஷமில்லையோ நாதாவென்று சிற்சிலர் ஏங்கித் தியங்குகிறார்கள், ஆனால் செய்வதொன்றறியாது சிந்தனையில் மூழ்கிச் சும்மா விருக்கிறார்கள். கெடுவது கெட்டுத் தீர்ந்தால், பிழைப்பது தானே பிழைக்கும். இது நிற்க.

சங்கரையர் தன் மாமியார் தனக்கு ஸந்யாசங் கொடுக்கப் பின்வாங்கி, கையில் பிச்சையோடு மட்டும் கொடுத்துப்போனதை வாங்கிக் கொண்டு பிச்சையெடுக்க மனம்வாராமல் அதைத்தான் தொட்டுத் தாலிகட்டியவளுக்குச் செய்யவேண்டிய கருமாந்திரக்

கடனுக்கு பதிலாகக் கடமுடைக்க உபயோகித்து தன் வீடுவாசல்களை விற்று அத்தையம்மாளையும் குழந்தையையும் சுப்பிரமணியனையும் வரியூரில் இருத்திவிட்டு, தான் திருவாங்கூர் சென்று வியாபாரம் செய்து பிழைக்கப் போனார். அங்குபோய் இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் அவருமிறந்துவிட்டார். சுப்பிரமணியனும் முத்துமீனாக்ஷியும் அத்தையம்மாளும் வரியூரில் தங்கியிருந்தார்கள். அங்கேயவர்களோடு சுந்தரேசன் என்னும் ஒரு பையனும் கூடச்சேர்ந்து பழகிவந்தான். இவனும் சுப்பிரமணியனும் பள்ளித்தோழர்கள். ஒரே வகுப்பில் வாசித்து வந்தவர்கள். பரஸ்பரம் அந்யோந்ய ஸ்நேகிதர். சுந்தரேசனும் தாயில்லாப்பிள்ளையானாலும், அவன் தமயன் 100 ரூபாய் சம்பளத்தி லிருந்ததனால் அவனுக்கு வறுமையுபத்திரவமில்லை. ஆனால் மற்றத் துன்பங்களுக்கெல்லாம் குறைவில்லை. சுந்தரேசனும் சுப்பிரமணியனும் இரவும் பகலும் ஒன்றாயிருந்து சேர்ந்து படித்தார்கள். முத்துமீனாக்ஷியும் படிக்கத் தொடங்கினாள். அத்தையம்மாள் விளையாட்டாக அறிந்து வழக்கப்படி சுந்தரேசனை முத்துமீனாக்ஷிக்கு ஏற்ற புருஷனாகப் பாவித்து அப்படியே தன் மனோபாவம் சிறிதும் நிறைவேறா தென்று தெரிந்தும் அதை வெளியிட்டும் இருவரும் ஒருவருக்கொருவர் எர்வையாக விருக்கிறதைப் பார்த்தும் மனமகிழ்ந்தாள். சுந்தரேசனும் அவளைப் பெண்டாட்டி யென்று விளையாட்டுக் கழைத்து, அவளுக்கு அதிக சிரத்தையாகப் படிப்புச் சொல்லிக் கொடுத்தான். எல்லாரும் ஒன்றாகவிருந்து சந்தோஷமும் குதிப்புமாய்ப் படித்து வந்தார்கள். முத்துமீனாக்ஷிக்கு (9-வயதுக்குட்டியவள் இப்போ) மாப்பிள்ளை வந்தாற்கூட அவ்வளவு சந்தோஷமாயிராது. தாயின்றிக் கஷ்டப்பட்ட சிறுவர்களெல்லாம் இப்படி சந்தோஷமாக விருப்பதைப் பார்க்க யாருக்குத்தான் ஆனந்தம் பொங்காது! அத்தையம்மாள் தன் துக்கங்களை யெல்லாம் மறந்து சிறிது காலத்துக்கு இக்குழந்தைகளின் நிர்மலமான மனோவிலாசத்தைக் கண்டு ஆனந்தித்திருந்தாள். நாளும், வாரமும், மாதமும், வருஷமும் ஒன்றின்பின்னொன்றாகச் சென்றன. முத்துமீனாக்ஷிக்குக் கலியாணகாலம் கிட்டிவிட்டது. சங்கரையரோ இறந்து போய்விட்டார். என்ன செய்வாள். மூத்தாள் குழந்தைகளிருக்கும் 30 வயது மாப்பிள்ளைக்கு 700 ரூபாய் வாங்கிக் கொண்டு முத்துமீனாக்ஷியை துவிதீயமாக விவாகம் செய்து கொடுத்தாள். முத்து மீனாக்ஷியின் துரதிர்ஷ்டம் கஷ்டப்படவேண்டியதே. தன் தகப்பனாருக்கு இளையாள் வந்தபோது இவள் கஷ்டப்பட்டாளே. இவள் இளையாளாக வாழ்க்கைப்பட்டபோது இளையாளுக்குள்ள அதிகாரம் இவளுக்குக் கிடைத்ததா? இல்லை. வியாதிப்பட்டு பிழைப்பதரிதாயிருந்த காலத்தில், புருஷன்வீட்டுக்காரர் வந்து அழைத்துக் கொண்டு போனார்கள். மருந்தும் மாயமும் பத்தியமும் பட்டினியும் கிடந்து எப்படியோ தலைவிதி பலமாயிருக்கப் பிழைத்தாள். பிழைத்தும் உடனே பெரிய மனுஷியாகவில்லை யென்று அவள் இலங்கணிமாமியாருக்கு வருத்தம். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் பொறுக்கவில்லை. நாட்டுப்புறத்திலுள்ள மூட வழக்கப்படி, பெண்ணையும் மாப்பிள்ளையும் சேர்த்துவிட்டுச் சாந்தி செய்து விட்டால், நாட்டுப்பெண் சீக்கிரத்தில் ருதுவாய் விடுவாளென்று, காட்டு ராஜாவுக்குக் கேள்வியில்லை யென்கிறபடி, தான் அப்படி நினைக்கவும் நினைத்தபடி நிறைவேற்றி விட்டாள். திரளைவைக்கிற சம்பிரதாயங்கூட வீண்வழக்க மென்று நிறுத்திவிட்டாள். இல்லாத கஷ்டங்களெல்லாம் பட்டு பெண் பெரியவளாய்ப் புருஷனோடு கலந்திருக்கும் காலம் வந்த பொழுது புருஷன்முகம் பெண்டாட்டி பாராதபடி வெகுஜாக்கிரதையாகப் பார்த்து வந்தாள். பிள்ளையில்லை யென்று பேயோட்ட ஆரம்பித்தாள். முத்துமீனாக்ஷிக்கு உண்மையாகப் புருஷனிடத்தில் அன்பில்லை யென்று அவளே சொல்கிறாள். காரணம் எப்படியாயினும் அன்பில்லாப் பெண்டீர்க்கு மங்கிலியத்தோடிருப்பினும் அவர்களுக்கு புத்திர பாக்கிய மில்லை யென்பது இயற்கைவிதி யல்லவா? யாரை யேமாற்றினாலும் பிரகிருதி தேவியாம் ஈசுவரியை யொற்ற யாராலும் முடியாது. முத்துமீனாக்ஷிக்குப் புருஷனை வெறுக்கக் காரணமிருக்கலாம். இருந்ததாக அவளே சொல்கிறாள். ஆனால் அன்பிலாக்கலவி அவிசாரித்தொழிலே யன்றி வேறல்லவென்று அப்பொழுது அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் புத்திசாலியான அவள் அப்படியிருந்திருக்கமாட்டாள். அன்பிலாக் கொடுமை யாரை விட்டது? அவள் மாமியார் தன் அருமைப் பிள்ளைக்குப் பேரன் பிறக்கவில்லை யென்று குறைப் பட்டிருந்தாள். பெண்ணும் கருத்



தரிக்காமற் போகவே, அவளுக்கு மலட்டுப் பட்டமும் கட்டி, மந்திரவாதியை யழைத்துப்பேயோட்டச் சொன்னாள். சிவசிவா, இந்த ஆஷாடபூதிகள் செய்யும் கொடுமை இவர்களை நம்பி இவர்கள் உதவியை நாடும் கொடும்பாவிகளாம் மூடமதிகளின் கொடுமைக்கே ஈடாகச் சொல்லவேண்டும். பிரம்படி யெத்தனையோ, செருப்படி யெத்தனையோ அவன் கையால் பட்டு பெண்ணாகப் பிறந்து பட்ட அவதியெல்லாம் போதாதென்று பேயாட்டமுமாடிப் படாதபாடுகளெல்லாம் பட்டாள் நம் முத்துமீனாக்ஷி. மந்திரவாதி இரக்ஷாபந்தனம் செய்து காசும் அரிசியுமாகக் கிடைத்ததைப் பறித்துக் கொண்டு சென்றான். முத்துமீனாக்ஷிக்குப் பட்டினிகிடந்து அவன் கையால் பிரம்படி செருப்படி பட்டதே லாபம். மாமியாரம்மாளுக்குப் பேரன் உற்பத்தியாகவில்லை. இந்த வைபவத்தில் திடீரென்று பேதிகண்டு முத்துமீனாக்ஷி கணவன் போய்விட, மஞ்சள் குங்கும மிட்டுக்கொண்டு தலையில் மயிர் வைத்துக் கொண்டிருக்கும் பாக்கியமும் போய்விட்டது. சுமங்கிலித்தனம் போய்விட்டதென்று சொல்ல இடமில்லை. ஏனென்றால் புருஷனிடத்தில் அவளுக்கு அன்பு விட்டபோதே சுமங்கிலித்தனம் போய் விட்டது. அன்பேயுதிக்க வில்லையால் சுமங்கிலித்தனமே யவளுக்குமில்லை. அப்படியிருக்க சுமங்கிலித்தனம் போயிற்றென்று சொன்னால் ஸத்யமாகவே பதிவிரதம் அனுஷ்டித்து வரும் பெண்டிருக்குள்ள பேருக்கு அபவாதம் வரும். ஆகையால், சுமங்கிலிச் சின்னங்கள் போய்விட்டன. போகவும் கஷ்டம் முன்னிலும் அதிகரித்தது. கணவனிருந்தபோது அவன் கொடுமையை மன்னித்து அன்புபாராட்டத் தரமில்லாத பெண்டாட்டிக்கு அவன் போனதும் மாங்கிலியம் போனது பெருங்குறையாகப் போய்விட்டது. "அகமுடையான் செத்தபின் அறுதலிக்குப் புத்தி வந்தது" என்று பெண்டீர் சொல்லும் வசனம் உண்மை யென்று விளங்கச் செய்தாள். விதிவந்தபின் என்னசெய்வது. துணிந்தனுபவிக்கத் தீர்மானித்தாள். எவ்வளவு பொறுமையிருந்தாலும் தாலியிழந்தபின் வயிற்றுச் சோற்றுக்காக, ஐந்தாள் வேலையையும் செய்துவிட்டு, தன்னைப்போலறுத்து நிற்கும் மாமியார் நாத்தியாரிடம் கர்ணகடூரமான வார்த்தைகளும் கேட்க யார்தான் சம்மதிப்பார்கள்? முத்துமீனாக்ஷி யெதிர்த்துப் பேசினாள். அவளுடைய இலங்கிணிமாமியார் அவளை அடித்துதைத்து வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள். சுப்பிரமணியன் வந்து தங்கையை யழைத்துக் கொண்டு போய்விட்டான். தொட்டசனி விட்டது என்று முத்துமீனாக்ஷியும் அலுப்பாற உடன்பிறந்தான் வீடுபோய்ச் சேர்ந்து, அங்கு அவள் மன்னிக்கு ஊழியம் செய்து கொண்டு கைம்பெண்ணுக்குள்ள சந்தோஷத்தோடு சுகமாயிருந்தாள். அவள் இலங்கணிமாமியார், நாத்திகள் மூவர்கள் கவலையும் நமக்கொழிந்தது. ஆனால் இடையில் ஒன்று சொல்லத் தவறிவிட்டோம். நமது முத்துமீனாக்ஷி வெகு தைரியசாலி. இயற்கையாகவே கட்டழகுள்ளவள். அவள் அறுத்துக் குளித்தும் அவள் கட்டழகு மட்டும் முற்றும் போய் விடவில்லை. புக்ககத்தில் தன் மாமிநாத்திகள் தன்னைப் படுத்தி தன் மூத்தாள் பெண்ணும் கரிக்கட்டை யொருத்தியையும் அவள் புருஷனையும் தலையில் வைத்துக் கொண்டாடின காலத்து, அந்த மாப்பிள்ளை முத்தம்மாள் கட்டழகைக் கண்டு மோகித்து விட்டபொழுது, தன் மாமி நாத்தி பேரிலுள்ள க்ஷாத்திரந் தீரப் பழிவாங்க நினைத்து, அவனை யிழுத்துக் கொண்டோடி விடலாமா வென்றும் நினைத்தாளாம். ஆனால் இது நினைத்தது மட்டுமேயன்றி நடந்தது ஒன்றுமில்லை. ஏனெனில் அவனிடத்தில் அவளுக்குக் காதல் பிறக்கவில்லை. தன் சக்தியைக் கொஞ்சம் கட்டலாமாவென்று பார்த்தாள். பிந்தியது சரியல்லவென்று சும்மாவிருந்து விட்டாள். முத்துமீனாக்ஷி படித்த புஸ்தகங்களில் பதிவிரதா தர்மம் சேரவில்லை. சேர்ந்திருந்தாலும் அதை யவள் உணரவில்லை. தாயில்லாக் கொடுமையால் அதையறிய வழியுமில்லை. ஆனால் இவள் இளையதாயாருக்குத் தாயிருந்தாளே அவளென்னத்தை யறிந்தாளென்று கேட்கலாம். அவளுக்கும் முத்துமீனாக்ஷிக்கும் எவ்வளவோ வித்யாசமுண்டு. முத்துமீனாக்ஷி கெட்டவளல்ல. உள்ளபடி உத்தமகுணமுள்ளவள். மற்ற சந்தர்ப்பங்களும் சகவாசமும் சரியாகச் சேரவில்லை. "நிறைகாக்கும் காப்பேதலை" யென்பதை யறிந்தவளானாலும் பதிவிரதா தர்மத்தின் பாங்கை யுள்ளபடி யறிந்தவளில்லை. இது இங்கிலீஷில் சகலகலாவல்லவர்களான சுந்தரேசன், சுப்பிரமணியனுடைய போதனையோ, அல்லது சகவாச

விசேஷமோ, அல்லது அவள் இயற்கை சுபாவமோ தெரியவகையில்லை. எப்படியிருந்தாலும் அருந்ததி மரபில் அவதரித்தவளில்லை. அவளை யிப்படிச் சொல்வதால் மற்றப் பெண்டீர்களெல்லாம் தாங்கள் அருந்ததிகளே யென்று நினைத்து மனப்பால் குடிக்க வேண்டாம். அவளைப்போல் உண்மையை ஒளிக்காமல் உள்ளபடி தங்கள் ஹிருதயத்தை யாராய்ந்து பார்த்தால், அப்பொழுது தெரியும் அங்கிருந்து கிளம்பும் கும்பிநாற்றம். ஆனால் முத்துமீனாக்ஷிக்காகவாவது அவள் உரிமையிரையிற் கூறும் "வாயில்லாச் சீவன்களாகிய அவள் "பல்லாயிரம்சகோதரிக"ளுக்காகவாவது "இப்புண்ணிய பூமியிலே" யுண்டான அதியுன்னதமான சுத்தபதிவிரதாதர்மத்தின் உள்மதக் கொள்கைகளைச் சிறிதும் குறைக்க ஸத்துக்களான ஸ்திரீ புருஷர் யாரும் இணங்கார்கள். ஆனால், அப்படிப்பட்ட அதியுன்னதமான பதிவிரதாதர்மத்தைப் பூஜிக்கும் சான்றோர், முத்துமீனாக்ஷியைப் போல் அம்மலைச் சிகரத்துக் கியல்பாகவுள்ள வன்மையால் ஏறமாட்டாது தாழ்ந்தமட்டங்களில் தங்கி உண்மைக்குப் பங்கம்வாராமல், உள்ளபடி நல்வழியைநாடி நடப்போர்களைப் பழிக்கமாட்டார்களென்பதும் திண்ணம். ஏனெனில் அவ்வுன்னத பதவியை யடைவதின்கஷ்டம் அவர்களுக்குத் தெரியும். இடையே கைநழுவி, கால்நழுவி, மனநழுவி விழுந்தோர் எண்ணிலர். ஆயினும் அவ்வுண்மையாம் உத்தம நோக்கின் உந்நத உயரத்தில் ஒரு சிறிதும் குறைக்க உடன்படார். ஏனெனில் அதைக்குறைப்பதால் வருங்கேடு சொல்லற்கரியது. விளக்குக்கூண்டு உயரமாயிருப்பதால் அனேகர் வெகுதூரத்திலிருந்து அதன் அடையாளத்தையுள்ளபடி யுணர்ந்து வழிதப்பித் துறைசோரத் தவறிப் போகிறார்களென்று விளக்குக் கூண்டின் உயரத்தைக் குறைத்தால் எவ்வளவு கேடுவருமோ அதிலும் பன்மடங்கு அதிகமாகவிளையும் அதியுந்நதமும் உத்தமுமான பதிவிரதா தர்மத்துக்குப் பங்கம்வர அதன் உள்நோக்கை (ideal)ச் சிறிதும் குறைப்பது. அதைக் குறைத்தால் எத்தனையோ ஆத்மாக்கள் ஈடேறத் தடை செய்வதாகும். ஆகையால் யார் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் "சனாதனதர்மம்" அப்படியேதானிருக்கவேண்டும். அது அப்படியே தானிருக்கும்.

முத்துமீனாக்ஷியின் சரித்திரம் இத்தோடு முடிந்துவிட்டதென்று நினைப்பார்கள் இதைவாசிப்போர். இல்லை—இனிமேல்தான் அவள்சரித்திரம் உண்மையாக ஆரம்பிக்கப்போகிறது. இதுவரையில் நடந்ததெல்லாம் அவள் சரித்திராரம்பத்திற்குக் காரணபூதமாயிருந்த சந்தர்ப்பங்களேயன்றி வேறல்ல—உண்மையில் முத்துமீனாக்ஷி வாழ்வுமில்லை—அழுக்கவுமில்லை. அவளுக்குள்ள வாழ்வோ தாழ்வோ அது இனிமேற்றான் வரப்போகிறது. அதற்குக்காரணமாகவும், காரியமாகவும், காரிய காரணமாகவுமிருந்த தர்மாதர்ம பழக்க வழக்க பைசாசங்கள், சாதகபாதகங்களைச் சிக்கறுத்துச் சிந்தித்தெழுதல் தான் கஷ்டசாத்தியமான வேலையாகவிருக்கிறது. இருந்தாலும் இதில் நமக்குத்தோன்றியதைத் தோன்றியபடி உண்மைக்குப்பங்கம் வாராதெழுத "எண்ணித்துணிந்தபின்" இனிப் பின்வாங்குவதிற்பயனில்லை. ஆகையால், இம்முறை இது மிகவும் வளர்ந்து போனதைப் பற்றி இங்கு நிறுத்தி அடுத்தமாசத்துச் சஞ்சிகையில் இதைத் தொடர்ந்தெழுதுவோம்—முத்து மீனாக்ஷியும் தன் தமயன் குழந்தையைத் தொடவுங் கூடாதென்று அவள்மதினி தடுத்ததாலுண்டான வருத்தம் நீங்க, முகத்தில் பால்வடியத்தொட்டிலில் தூங்கி விழித்தழும் அவள் மருமானைத்தாலாட்டித் தூங்கவைக்கட்டும்—அவள் பாட்டைக்கேட்க விருப்பமுள்ளார் கேட்டானந்தமடைய அதைக் கீழேதீட்டுகிறோம்:—

"ஆராரோ ஆராரோ ஆராரடித்தாரோ?
ஆரடித்து நீ அழுறாய் அஞ்சனக்கண் மைகரைய? [-என்

கண்ணான கண்ணே! என்கண் குழிந்த மாம்பழமே!
தின்னாப்பழமே! திகட்டாதசெந்தேனே!—என்
ஈச்சம்பழமே! இனித்திருக்கும் திங்கனியே!
வாழைக்கனியே! வரிக்கண்பலாச்சுளையே!-என்
அடிக்கரும்பே! செந்நெல்லே! ஆடையின்கீழ் [நற்பாலே
குடிக்குநல்ல குஞ்சரமே! கோதண்டபாணியனே [-என்
கண்ணான கண்ணாற்குக் கண்ணூறுவாராதே



சுண்ணாம்புமஞ்சளுமாய்ச் சுற்றியெறிகண்ணாற்கு!
விபூதி வேப்பிலையும் வீசியெறிகண்ணாற்கு-என்
கண்ணையடித்தவர்யார், கற்பகத்தைத்தொட்டவர் [யார்?
பொன்னையடித்தவர்யார், பூங்கிளியைத் தொட்ட [வர்யார்?
ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ?
ஆரடித்து நீயழுறாய், அடித்தாரைச் சொல்லியழு"

(இன்னும் வரும்)

## சிறுவர்க்கான பக்கம்.

### கங்காதரன் கதை.

(விவேகசிந்தாமணியை வாசிக்கும் ஓர் சிறுமி எழுதியது)

ஒரூரில் கங்காதரனென்று ஒருவனிருந்தான். அவன் எப்பொழுதும் பொய் பேசுவான். அவ்வூரி லொருவீட்டிற்களவு போயிற்று. அக்கள்வனவன் வீட்டிற் போனவுடனே அவனைப் பிடித்துவிட்டார்கள். அவன் கங்காதரனிடத்தில் வந்து அவன் தனக்கென்று பொய்ச்சாக்ஷி கூறினால் அவனுக்கைம்பது ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தான். பணத்தாசை பிடித்த அவனும், அப்படியே ஒத்துக்கொண்டான். களவு கொடுத்தவன் பெயர் கிருஷ்ணன். பிறகு இரண்டு நாட்கழித்து விசாரணை தொடங்கிற்று. அப்பொழுது கங்காதரன் நியாயாதிபதியை நோக்கிப் பெட்டியிவனுடையதிவனைக் கள்வனென்று அநியாயமாய்ப் பிடித்தடைத்தீர்களென்றான். கள்வனும் "அவன் சொல்வதுசரி; பெட்டி யென்னுடையதே" என்றான். இவை யெல்லாங் கேட்ட கிருஷ்ணன், நியாயாதிபதியை நோக்கி, இப்பெட்டியிலெத்தனை அறைகளிருக்கின்றனவென்றும், எவ்வளவு ரூபாய்களிருக்கின்றனவென்றும், கேட்கும்படிச் சொன்னான். நியாயாதிபதியும் அப்படியே கேட்டார். அதில் இரண்டறைகளும் ஐம்பது ரூபாய்களும் இருக்கின்றனவென்று கள்வன் சொன்னான். கிருஷ்ணனோ, மூன்றறைகளும் நூறுரூபாய்களுமிருக்கின்றனவென்றுசொன்னான். நியாயாதிபதியும் கிருஷ்ணனிடமிருந்து சாவியை வாங்கித் திறந்து பார்த்துக் கிருஷ்ணன் சொன்னபடியே யிருக்கக்கண்டு, கள்வனுக்கு மூன்றுமாதம் கடுஞ்சிறையும், கங்காதரனுக்கு எழுபது ரூபாய் அபராதமும், விதித்தார். ஆகையினால், ஒருபொழுதும் திருடுதலும் பொய் சொல்லுதலும் கூடாது.

மீனாம்பாள்

## ஒளவை தனிப்பாடல்.

### இனிது.

இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே.

### அரிது.

அரிதரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

## To Our Subscribers.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

### நமது சந்தாதாரர்களுக்கு.

நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வாலியத்துக்குரிய சந்தாவைச்செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வாலியத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பல்வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தா தொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**D. K. Agency.**

20*th May*, 1903. அ. ப. ஏஜன்ஸி.

## "ANANDA MISSION"

### For the Propogation of Truth and Knowledge.

**As the Way to Health, Happiness and Life, Through Self-Help, Self-Control and Self-Culture.**

***"EKAM SATYAM BRAHMA."—SRUTIVAK.***

"Seek Truth wherever you can find it,"
"But Make your Choice and Stick to it"
till you reach the end.

"*Truth is hard Finding!*" **Yes,** "*Uncompromising too*" **when** *whole*; **Yet Try!** "*Awake, Arise and Stop not till you reach the Goal,*"—*Sruti.*

"And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are willing to show good-will towards All, regardless of race, creed, religion caste or color, will be eligible to become members, helpers or sympathisers of the Mission as it may suit their intelligence development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential and unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

**Hail! Ananda Natesa!**

*Sri Akandananda Satguruve Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.
Minimum Subscription Rs. 5 per annum.
Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.
**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People:—
**Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.**
**Single copy, current No. 5½ As.; Back Nos. 6 As. Each.**
**English & Foreign Subscription 5s 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.,* in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As, off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume,* though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு:—** அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசான காகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினுல் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்ரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினுல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும் போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவுக்கு

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்யம்வத.—**Speak the Truth.**

**'Hitch your Wagon to a Star."** **"To Thine own Self be True."**




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] உ God is Love: Knowledge is Power: *Om.*

ஸத்யமேஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம் 12.] 1903-ம்வருஷ அக்டோபர்மீ [இலக்கம் 6.

"THROUGH NATURE TO GOD"

A RAY OF LIGHT.

# கதிரொளி.

**கதிரவன்** என்பது சூரியனுக்குரிய பேர்களில் ஒன்று. கதிர் கதிராகக் கிரணங்களை உதிர்க்கிறதனுல் அவனுக்குக் கதிரவன் என்று பேர்வந்தது. சூரிய கிரணங்களில் ஒன்றுக்கு கதிரொளி யென்றுபேர்: அதாவது ஒளித்திரள் அல்லது ஒளிக்கூட்டம்: ஒருமைப் பெயராம் கிரணத்திற்கு கூட்டப்பெயராம் **கதிர்** என்பது என்னமாகப் பொருந்துமென்று கேட்கலாம். உண்மையில் ஒரு கிரணத்தை யெடுத்துப் பார்த்து ஆராய்ந்தால் முகக்கண்ணுக்கு வெண்மையாகப்படும் ஒளி உண்மையில் ஏழு வர்ணங்கள் ஒன்று சேர்ந்தனவாகவிருப்பது விளங்கும். இதைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்க வேண்டின் ஒரு இருட்டறையின் கூரையில் சிறு துவாரம் செய்து சூரியகிரணம் ஒன்றை உள்ளே நுழையவிட்டு அது தரையில் விழுமுன் திரிகோண வடிவமான ஸ்படிகமொன்றை ஒரு கோணம் கீழ்நோக்கப் பிடித்து அந்த சூரியகிரணம் அந்த ஸ்படிகத்தின் மேற்புறத்தில் விழும்படிச்செய்தால் ஒரு அதிசயம் காணலாம். உள்ளே நுழைந்து தரையை நோக்கிச் சென்ற கதிரொளி ஸ்படிகத்தின்மேல் விழவும் அது முன்போல் நேரச்செல்லாது குறுக்குப்பட்டுத் திரும்பிக் கோணுகாரமாய்ப் பக்கத்திலுள்ள சுவற்றின்மேல் ஏழுவர்ணக் கலைகளாக விரிந்து விளங்கும். இந்த ஸ்படிகத்துக்கு இங்கிலீஷில் (prism) என்று பேர். ஏழு வருணங்களாகப் பிரிபட்டு விளங்கும் ஒரு கிரணத்தின் கலைகளுக்கு இங்கிலீஷில் "Spectrum"

என்றுபேர். இந்த ஏழு வர்ணங்களும் கீழிருந்து பின்வரும் வரிசைக் கிரமம் தவறாது துலங்கும். அதாவது:— (Red) சிவப்பு, (Orange) கிச்சிலிப் பச்சை யல்லது மரகதம், (Yellow) மஞ்சள், (Green) பச்சை, (Blue) நீலம், (Indigo) அவுரி நீலம் அல்லது கருநீலம், (Violet) ஊதா. இந்த ஏழு வர்ணங்களும் இவ்வரிசைக் கிரமம் தப்பாது ஒழுங்காகத் தோன்றும். ஒன்றாகத்தோன்றிய வெண்மைநிறமான கதிரொளியை திரிகோண ஸ்படிகத்தின் வழியாகச் செல்லவிட்டதால் அது தன்னுள்ளடங்கிய ஸப்தவர்ணமான ஏழு கலைகளையும் விரித்துக் காட்டும்படியான அதிசயத்தைக் கண்டோம். இப்பொழுது இந்த ஏழுவர்ணக் கலைகளையும் ஒன்றாக அறிவது எப்படி? எனெனில் அத்வைத சாஸ்திரப்படி எல்லாம் ஒன்றேயாதலால், ஒன்றைப் பலவாகவறிந்த நாம், அனேகமாம் பலவற்றை அதிலும் சூக்ஷ்மமான ஏகவஸ்துவாகக் காணல்வேண்டும். இல்லாவிட்டால் நாம் வழியில் தடைபட்டு நின்று சாஸ்திரப்படி அத்வைத நிலைபெறுவது கூடாமை யென்று நினைக்கவரும். இந்த ஏழையும் ஒன்றாகக் கூட்டினால் வெள்ளை நிறமாம் கதிரொளியாகும். அது எப்படியென்றால் சுவற்றில் இந்த ஏழுவர்ணக்கலைகளும் எங்கே விழுகின்றனவோ அங்கே தனித்தனி ஒரு சிறுகண்ணாடியை வைத்து இந்தவர்ணக்கலைகளெல்லாம் கூரையில் ஒரேயிடத்தில் விழும்படிச் செய்தால் ஏழும் ஒன்றாகி வெண்மைநிறமான ஒளியாகத்தோன்றும். ஆனால் நாம் ஏகபாவம் அடைய ஏழையும் ஒன்றாகப் பார்க்கும் விதி யிதல்ல. இப்படிப் பார்த்தால் செக்கில் கட்டின மாடுபோல் சுற்றிச் சுற்றி ஒரேவழியில் வளைய வந்து கொண்டிருக்கவேண்டும். இதனால் அத்வைத பாவம் கிட்டாது. ஆனால் உண்மை வழிப்பட்டு உளக்கண்ணால் பார்த்தால் நம்கண்ணுக்கு சிவப்பாகவும், மரகதமாகவும், மஞ்சள், பச்சை முதலான நிறங்களாகவும் புலப்படுவதெல்லாம் உண்மையில் நிறமற்ற பூதாகாசத்தின் அலைகளாம். அசைவுகளின் உணர்ச்சியே யன்றி வேறொன்றல்லவென்று விளங்கும். இதை ஆங்கிலேய பௌதிக சாஸ்திர விற்பன்னர் "Spectroscope" என்னும் ஒரு அற்புத யந்திரத்தாலும் (Telescope) என்னும் யந்திரத்தின் உதவியாலும் பகிர்முகமாகப் பார்த்தாராய்ந்து தெளிந்திருக்கிறார்கள். இப்படி ஆராய்ந்து தெளிந்ததின் பயனாக, இந்த ஏழுவர்ண வெளிச்சங்களும், உண்மையில் (ether) என்னும் சூக்ஷ்மாகாசத்தில் அதிவேகமாயுண்டாகும் அலையொத்த அசைவுகளின் புலனுணர்ச்சியே யன்றி வேறல்லவென்று கண்டுணர்ந்திருக்கிறார்கள். உதாரணமாக சிவப்பு நிற ஒளி குறித்த அளவுள்ள அலைகள் ஒரு (Second) விநாடியில் 3950 கோடி விகிதம் அசைவதனால் உண்டாகிறதென்றும், ஊதா ஒளி இதைப்போல இரண்டு பங்கு அதிகமாக ஒரு விநாடியில் அசைவதால் புலப்படுகிறதென்றும், அதிசூக்ஷ்மயந்திரங்களாலும் கணிதசாஸ்திர உதவியாலும் கணக்கிட்டுக்கண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு நிறத்துக்கும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் நாம் அறிய வேண்டியதென்னவென்றால், கதிரொளியாகவும், அதன் ஸப்தநிறக்கலைகளாகவும் தோற்றும் ஒளியாம்புலனுணர்ச்சி சூக்ஷ்மாகாசத்தில் ஒரு அளவு தொட்டொரு அளவு வரையில் உண்டாகும் அலைகளின் வேகத்துக்குத் தக்கபடி வித்தியாசமாகத் தோற்றுகிறதன்றி, ஊன்றிப்பார்க்கப்போனால் எல்லாம் சூக்ஷ்மாகாசத்தில் அலைரூபமாக வுண்டாகும் (Vibrations) அசைவுகளேயன்றி வேறல்லவென்பது விளங்கும். எல்லாமே சூக்ஷ்மாகாசத்திலுண்டாகும் அசைவுகளிலிருந்துண்டாம் பொழுது, தோற்றும் வித்தியாசங்கள் அலைகளினுடையவும், அசைவுகளினுடையவும் நீளம், வேகம் இவற்றின் வித்தியாசத்தினால் தோற்றுவதேயன்றி வேறு உண்மையில் வித்தி



யாசமில்லையென்று ஊகித்துப் பார்க்க உண்மையாகப்படும். இப்பொழுது ஒன்றாய்த் தோற்றிய கதிரொளியை, ஸப்த கலைகளாகப் பிரித்து, அந்த ஸப்தகலைகளின் தோற்றங்களாகிய ஏழு வர்ணங்களும் சூக்ஷ்மாகாசத்திலுண்டாகும் (Vibrations) அசைவுகளின் வெவ்வேறு கதிக்கேற்ற தோற்றமேயன்றி உண்மையில் வித்தியாசமில்லையென்று கண்டோம். இப்படியாக ஒன்றையேழாகப்பிரித்து, ஏழையும் ஒன்றாக அறிந்தோம். இப்படியே எதையும் புத்தி நுட்பத்தோடும் சூக்ஷ்ம அறிவோடும் ஆராய்ந்து பார்ப்போமானால், இந்தப் பிரபஞ்சத் தோற்றங்களெல்லாம் சூக்ஷ்மாகாசத்தில் அலைகளாகத் தோன்றும் அசைவுகளின் கதிவித்தியாசமேயன்றி வேறு உண்மையான வித்தியாசமில்லை யென்று விளங்கும். இப்படி யெல்லாவற்றையும் பிரித்துப் பார்த்து ஆராய்ந்து பகுத்துணர்ந்து உண்மையை யுள்ளபடி பற்றிச் சென்றால், எல்லாம் **ஆகாசம், அசைவு, ஆட்டுவோன்** என்று இந்த மூன்றில் வந்துமுடியும். ஆகாசத்தைப் பகுத்துப் பகுத்துத் தொகுத்துக்கொண்டுபோனால் அது ஸ்தூலாகாசம், சூக்ஷ்மாகாசம், என்று ஒன்றொன்றாக வொடுங்கிக் கடைசியில் சிதாகாசத்தில் போய் முடியும்.

அலைகளெல்லாம், அசைவாகமாறி, அந்த அசைவும் சக்தியிலொடுங்கி, இந்த சக்தி ஸ்தூலசக்தி, சூக்ஷ்மசக்தி, மூலசக்தி யென்று ஒன்றொன்றாக வொடுங்கிக் கடைசியில் சித்சக்தியில் போய் முடியும். ஆட்டுவோன் எப்போதும் அசைவற்று நிற்கும் ஆதிகாரணமாம் **முதற்பொருளாக** விளங்குவன். அவன் அசைவற்றிருப்பினும் "**அவனன்றியோரணுவு மசையாது**" என்று மூத்தோர் சொல்லியபடி **அவன்** அசையாவிட்டால் எல்லாம் அசைவற்றுப்போம். எல்லாவற்றிற்கும் ஆதிகாரணன் **அவனே** யாவன். இப்படி எதையும் ஒன்றாக்கிக் கொண்டு அத்வைதமலை யேறி அதன் உச்சியில் வந்தால் **சிதாகாசம், சித்சக்தி**, சத்தாகவிருக்கும் **அவன்** என்கிற இந்த மூன்றில் வந்து சேருவோம். இந்த நிலையடைந்து பார்த்தால் இம் மூன்றும் ஒன்றேயெனக் கரதலாமலகம்போல் ஞானதிருஷ்டிக்குத் தானே புலப்படும். இதை விளக்கவே ஏகமாயுள்ள அத்வைத வஸ்துவை சச்சிதானந்தம் என்று சொல்லி சத், சித், ஆனந்தம் என்கிற மூன்றும் சேர்ந்து ஒன்றாயிருப்பதாகச் சுருதிகள் முறையிடுகின்றன. இப்படியாக கதிரொளியைப்பற்றிச் சூரியகிரணங்களின் வழியே ஆராய்ந்துசென்றால் அத்வைத வஸ்து விளங்கும் மேருமலையுச்சியில் அது நம்மைக் கொண்டு போய் விடுகிறதைக் காணலாம். ஆகையால் திருமூலர் திருமந்திரத்தில் "**தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு**" என்று சொல்லியதினுண்மை கதிரொளி யுதாரணத்திலும் உள்ளபடி விளங்குவதைக் கண்டு கிரகித்து **உண்மை கடைப்பிடித்து** உய்வோமாக.

ஓம் தத் ஸத்.

ஸத்யானந்த:

## X Rays; or, Rontgen Rays.

## "உள்ளொளி."

"உள்ளொளி" என்பது அகத்தொளியாம் ஆன்மப்பிரகாசத்தினுள் விளங்கும் பரஞ்சோதியாம் கடவுளுக்குப்பேர். ஆனால் இங்கே அந்த அர்த்தத்தில் உபயோகிக்கவில்லை. அகத்தொளியாம் ஆன்மப்பிரகாசத்துக்கே "ஜோதியுள் ஜோதியுள் ஜோதி" யென்றுபேர். இந்த ஜோதியையே "பாரொடு விண்ணுய்ப் பரந்ததோர் ஜோதி" யென்று வருணித்திருக்கிறார்கள். கதிரொளியைப் பிரித்தபொழுது அதன் எழுகலைகள் ஏழுவர்ணங்களாக விளங்கினதைக்குறித்துச் சொல்லுங்கால், இவையெல்லாம் சூக்ஷ்மாகாசத்திலுண்டாகும் அலைகளின் அசைவினாலுண்டாவதேயன்றி வேறல்லவென்று சொன்னோம். இதில் நம்கண்ணுக்குப்புலப்பட்ட இந்த ஏழுவர்ணமான கலைகள்போக இன்னுமெத்தனையோ வகையான ஒளிகளிருக்கின்றன. அவை நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லையால் அவைகளைப்பற்றி அறியவகையின்றி யிருக்கிறோம். அவை இயற்கையில் நம் கண்ணுக்குப் புலப்படா; அவ்வளவு சூக்ஷ்மமாகவிருப்பினும் சிலசந்தர்ப்பங்களில் புலப்படத்தக்கவையாயிருக்கின்றன. பூதாகாசத்தில் கண்ணுக்குப் புலப்படாத ஒளியலைகள், சூக்ஷ்மாகாசத்தில் புலப்படுவனவாயிருக்கும். இதைப் பகிர்முகமாகப் பரீக்ஷித்துப்பார்க்க வேண்டில் 12 அங்குல நீளமும் இரண்டங்குல குறுக்களவுமுள்ள ஒரு கண்ணாடிக் குழாயின் இருபக்கத்தையுமடைத்து அதிலுள்ள வாயுவை அனேகமாக எல்லாம்போக வெளியாக்கிவிட்டால் மிகவும் சிறுபான்மையானவாயு அதனுள்ளிருக்கும். இதனுள் ஒரு பக்கத்திலிருந்து ஒருமெல்லிய கம்பியும் மற்றொருபக்கத்திலிருந்து மற்றொரு கம்பியும் குழாய்க்குள் செல்லும்படியாகவும், ஆனால் வாயுவுள்ளே புகாதபடி கண்ணாடியோடு சேர்த்து அமைத்துமிருக்கும். இக்கண்ணாடிக் குழாயினுள்ளேயுள்ள வாயுவை வெளிப்போக்கியபின் ஒரு பக்கத்திலுள்ள கம்பியின் வழியாக மின்சாரத்தை யேற்றினால் அது குழாயுட்புகுந்து மற்றொருபக்கத்திலிருக்கும் கம்பியில்பாய்ந்து அதன்வழியே வெளியேபோகும். மின்சாரம் ஏற்றினகம்பிக்கு (Anode) ஆண்கம்பியென்றும், மின்சாரத்தைவாங்கி வெளியேவிடும் கம்பிக்கு (Kathode) பெண்கம்பியென்றும் பேர். இந்த ஆண்கம்பியிலிருந்து மின்சாரம் பெண்கம்பியில் பாயும்பொழுது கண்ணாடிக் குழாய்க்குள்ளே யிருக்கும் ஆகாசத்தில் உண்டாகும் ஒளி யலைகளினால், அக்கண்ணாடிக்குழாய் பொன்மயமான பச்சைநிறவொளியிலங்கக் காணலாம். இந்தப் பொன்னிறமான மரகதவொளி பெண்கம்பியின் நுனியிலிருந்துண்டாகும் ஒளிப்பிரகாசமாயிருப்பதைக்கண்டு, இதைக்கண்டுபிடித்த ஸர் உவில்லியம் க்ரூக்ஸ் என்னும் பௌதிகசாஸ்திர விற்பன்னர் இந்த ஒளியை "காதோட் ரேஸ்" (Kathode Rays)—அதாவது "பெண்தந்தியொளி" அல்லது தமிழில் அதற்கு சரியான ஒருபேரளிக்க சக்தியொளி யென்று சொல்லத்தக்க பேர் கொடுத்தார். இந்த ஒளியைக்கண்டுபிடித்து 25 வருஷங்களாயின. 1895-ம் வருஷத்தில் ராண்ட்ஜென் என்னும் ஜெர்மானிய சாஸ்திரபண்டிதர் ஒருவர், இந்த ஒளியைப் பரீக்ஷித்துப்பார்த்து வருகையில் இதிலிருந்து இன்னொரு ஒளியுண்டாகக்கண்டார். இந்த "காதோட் ரேஸ்" என்னும் "பெண்தந்தியொளி" கண்ணாடிக்குழாய்க்கு வெளியில் அதை யூடுருவிச்செல்லச் சக்தியற்றதாயிருந்தது.



இந்தக்கண்ணாடிக்குழாயைச்சுற்றி காகித அட்டையினாலான ஒரு மூடிபோட்டு, வெளி வெளிச்சம் அக்கண்ணாடியில் படாதபடி மூடினால் அந்தக் காகித அட்டை வழியாக ஒருவகை யொளி வெளியாவதைக் கண்டார். இந்த ஒளி சிலவஸ்துக்களின் மேற்பட்டபொழுது அவை பிரகாசித்து விளங்கவும் கண்டார். இப்படி இந்த ஒளியினால் பிரகாசிக்கும் வஸ்துக்களில் "platino-cyanide of barium" என்னும் ரஸாயனப்பொருள் ஒன்று. இன்னொரு ரஸாயனப்பொருளும் இவ்வொளியை விளங்கவைக்கிறது. அதன்பேர் முழ நீளமிருப்பதோடு இங்கிலீஷிலும் அதை உச்சரிப்பது கஷ்டமாயிருக்கிறது. அது மெழுகுபோலுள்ள ஒருவஸ்துவாம். அதன்பேரை இங்கிலீஷில் வரைந்துள்ளபடி வரைகிறோம். உச்சரிப்புமட்டும் கஷ்டந்தான். அதன்பேர் என்னவென்றால்,pentadecylparatolylketone. பஞ்சதுவி தசாக்ஷராமுள்ள இந்த ரஸாயனவஸ்துவாவது, platino—cyanide என்னும் மற்றொருவஸ்து வாவதுபூசிய ஒருகடிதாசியில் இந்த ஒளி விழுந்தால் அது மிகுந்த பிரகாசத்தோடு இலங்குகிறதைக் காணலாம். இந்த கடிதாசியட்டையால் மறைக்கப்பட்ட கண்ணாடிக்குழாய்க்கும், அதிலிருந்துவெளியாகும் இந்த நூதன ஒளி விழும் கடிதாசிக்கும் இடையே ஒரு வெறுங்கடிதத்தைப்பிடித்தால், அதனால் அந்த ஒளி தடுக்கப்படாமல் முன்போலவே ஒளிவிளங்கக் காணலாம். சிறிது மங்கியிருக்கும்: ஆனால் நிழல்படுவதில்லை. ஒரு புத்தகத்தைப் பிடித்தாலும் அப்படியே, ஒரு மரத்துண்டைப் பிடித்தாலும் அப்படியே—நிழல் வெகுலேசாகத் தெரிகிறது. இதனால் இந்த அற்புத ஒளி, மரத்தையும் புத்தகத்தையும் ஊடுருவிச்செல்லும் சக்தியுள்ளதென்று தெரிகிறது. புஸ்தகத்துக்குள் ஒரு இரும்புத்துண்டையாவது வெள்ளி செம்பு நாணயத்தையாவது வைத்துப்பிடித்தால் புஸ்தகத்துக்குள்ளேயிருக்கும் இரும்புத்துண்டு, அல்லது நாணயத்துண்டு நிழல்காட்டித்தெரிகிறது. இந்த வெளிச்சத்தில் கையைப் பிடித்தால் தசைநரம்புகளெல்லாம் லேசான சாயல் காட்ட, உள்ளேயிருக்கும் எலும்பின் நிழல் நன்றாகத் தெரிகிறது. ஒரு குழந்தை ஒரு காசை விழுங்கி விட்டதானால் அதைவைத்து இந்த ஒளியினால் பரிசோதித்தால் உள்ளே விழுங்கியகாசு தங்கியிருக்குமிடம் நிழலில் நன்றாகத் தெரியும். இந்த ஒளியைக்கொண்டு படம் பிடிக்கும் சூக்ஷ்மமும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு மரப்பெட்டியில் நகை நட்டுகளை வைத்து இந்த ஒளியினால் பரிசோதித்தால், உள்ளேயிருக்கும் நகை நட்டுகள் படம்பிடித்தாற்போல் நன்றாகத் துலங்கக் காட்டும். இந்த அற்புதமான ஒளியைக் கண்டுபிடித்த ராண்ட்ஜன் என்னும் சாஸ்திர பண்டிதர், இதற்கு "X Rays' என்று பேரிட்டார். இதை யறிந்த சாஸ்திர விற்பன்னர்கள், இதைக் கண்டு பிடித்தவர் கீர்த்தி விளங்க, இதை அவர் பேரால் 'ராண்ட்ஜன் ரோஸ்" என்று வழங்கி வருகிறார்கள். இப்படி இன்னும் எத்தனையோ ஒளிகளிருக்கின்றன. இந்த அதிசயத்திலும் அதிசயமென்ன வெனில் இந்த ஒளிகளெல்லாம் அண்டத்தில் பகிர்முகமாக விளங்குவதுபோல், பிண்டத்தில் அகமுகமாக விளங்குகின்றன. இதை யோக முறைப்படி யனுஷ்டித்துப் பார்த்தால் விளங்கும். இதை குருமுகமாக விருந்துகேட்டுப் பழகவேண்டுமேயன்றி "ஏட்டின் புறத்தில் எழுதிவைப்பதனால்" பயனில்லை.

இப்படி எண்ணிறந்திலங்கும் எவ்வகைப்பிரகாசங்களுக்கும் பிரகாசமளிக்கும் பரஞ்சோதி கடவுள் ஒருவரே. இந்த கடவுட்பிரகாசம் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நான்கிடத்திலுள்ளது. இந்த நாலிடம் அண்டத்திலுள்ளதுபோல் பிண்டத்திலுமுண்டு. இவைகளையறிந்து பாவனானுஷ்டான விதிப்படி நிஷ்டை கூடியிருந்து படிப்படியாக நிலையேறி

ஆன்மதரிசனம் பெற்றுப் பிறகு கடவுள் தரிசனமும் பெறுவர் மஹாயோகிகள். மானுட மாம் பிண்டத்தில் கடவுளின் பிரகாசம் விளங்கும் நான்கு இடங்களாவன:—(1) பிண்டத் அகம் ஆன்மா. ஒரு பொருளின் உண்மையை அறிதல் ஆன்ம அறிவு—இது பிரக் எனவும்படும் (2) பிண்டத்தில் அகப்புறம்—ஜீவன். ஒரு வஸ்துவின் பிரயோசனத்தை யறி அறிவே ஜீவ அறிவு—இது கிஞ்சிக்ஞத்துவம் எனவும் படும். (3) பிண்டத்தில் புறம்— ணம் அல்லது மனசு. ஒருவஸ்துவின் நாமரூபத்தையும், குணகுற்றங்களையும் விசாரித்தறி கரணமாகிய மன அறிவு (4) பிண்டத்தில் புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள். ஒரு ருளினது நாம ரூபகுணகுற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்தி காக்ஷி, இந்திரிய அறிவு, புலனறிவு. இதுபோலவே கரணக்காக்ஷி, ஜீவக்காக்ஷி, ஆன் காக்ஷியுமுண்டு. இது போலவே,

(1) அண்டத்தில் அகம்—அக்னி.
(2) அண்டத்தில் அகப்புறம்—சூரியன்.
(3) அண்டத்தில் புறம்—சந்திரன்.
(4) அண்டத்தில் புறப்புறம்—நக்ஷத்திரங்

இப்படி அண்டத்தில் நாலிடம், பிண்டத்தில் நாலிடம், ஆக எட்டிடங்களிலும் க வுள் பிரகாசம் காரியத்தாலுள்ளது. அதாவது பயனைக்கொண்டு அறிந்து கொள்ளத் தாய் விளங்கும். நிழலைக்கொண்டு பிரகாசம் இருப்பதை யுணர்வதுபோல உணரத்தக்கத விளங்கும்.

காரணமாயுள்ள இடம், { பிண்டத்தில்—புருவமத்தி,
அண்டத்தில்—பரமாகாசம்.

காரியகாரணமாயுள்ள விடம்,—ஸர்வஜீவன்களிடத்தும், விந்துவின் விளக்கமாகிய மின் லிடத்தும், நாதத்தின் விளக்கமாகிய இடியினிடத்தும், "பாரொடு விண்ணாய்ப் பரந்தே ஜோதி" யென்றும் "ஜோதியுள் ஜோதியுள் ஜோதி" யென்றும் சொல்லியபடி எல்லாவஸ்து களிடத்தும் அந்தர்யாமியாய் விளங்கும். மேற்குறித்த அகமாகிய (உள்ளம்) ஆன்மப் பிரகாசமே "ஞானசபை" யென்றும் சிற்சபை யென்றும் சொல்லப்படுவது. அந்த ஞான சபையாம் பிரகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவு "நடனம்." இதுதான் ஞானாகாச நடனமென்றும், அசைவற்றதே நடராஜரென்றும், ஆன ந்த நடனமென்றும் சொல்லுகின்றது"—என்று விளக்கி யிருக்கிறார் அருட்பிரகாசவள்ளல ராக விளங்கிய சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்கஸ்வாமிகள். இப்படியாக எதைத்தொட்டுப்பரிசோதித் தாலும் உள்ளபடிபார்த்தால் கடவுளின் மகிமையே விளங்கும். இதையுள்ளபடி யறிந்துய்வதே இந்த மானிட ஜன்மமெடுத்ததற்குப் பயனும். இதையறிந்தவரே பூரணமெய்தியவராம். மற்ற வர்களெல்லாம் குறைமக்களாய்ப் பிறந்திறந்து பின்னும் பின்னும் இந்த பவசாகரத்திலுழன்று படிப்படியாகமேலேறிப் பூரணமெய்துவர், பூரணமெய்துவதே மோக்ஷசாம்பிராஜ்யமாம். "கட வுளு நானுமொன்றானேன்" என்று உள்ளத்துணர்ந்தனுபவிக்கும் அனுபவமே ஸ்வானுபவமாம். எல்லாச்செல்வங்களிலும் இந்த ஸ்வானுபூதிச்செல்வமே என்றுங் குறையா நிறை செல்வமாம். இச்செல்வம் பெற்றாரே உண்மைச்செல்வம் பெற்றவர்கள். மற்றவர்களெல்லாம் உருவெளி



தோற்றத்தைக் கண்டு தன் காதலனென்று கட்டியணைக்கச்செல்லும் காமநோய் பிடித்த கன்னி பரைப்போல் இவ்வுலகில் சொல்லொணு விரகதாபத்தால் வருந்தியுழலுவர்: அவர்களை வெண் ணிலாச் சுட்டெரிக்கும், குளிர்சந்தனம் கொப்பளிக்கச்செய்யும். இன்னும் இதுபோன்ற மாயா வீலையி லீடுபட்டு மருள் நீங்காதுழலுவர். ஆகையால் உண்மையாம் "உள்ளொளி" தவிரமற்ற எல்லா ஒளியும் மயக்கந்தருவதாகவே யிருக்கும். இந்த உண்மையுணர்ந்துய்வாரே மேலோராவர்.

"அன்னையே குருவே அருளொளிக்கண்ணே!
உன்னையே நம்பியானுள்ளொளி கண்டேன்
என்னையே கருவாய்க்கண்ணுளேவைத்து
முன்னையே யருவாய்ப் பெற்றாய் போற்றி!"

"அருளெனப்படுவது மருளற்றசிந்தை
மருளே யிருளில் மயக்கமச்சமுமாம்
மயக்கந்தானும் மாசற்றசிந்தையில்
சிந்தைதெளியத் தெளியச் சிவமதுவாமே."

"சிந்தைய தென்னச் சித்தென்ன வேறில்லை
சிந்தை தெளிந்திடச் சித்ததுவாமே
சித்தது வாவது முள்ளொளி தானே
உள்ளொளி விளங்கிடும் சித்சபையாமே."

ஓம் தத் ஸத்.

## "The Autobiography of a Brahmin Girl"

## "முத்துமீனாக்ஷி."

(153-வது பக்கத்தொடர்ச்சி.)

பத்துவயதிலே வாழ்க்கைப்பட்டு, நாய் படாதபா டெல்லாம்பட்டுப் பிள்ளையில்லையென்று பேயாட்டம் ஆடிப் பின்பு கணவனையுமிழந்து கைம்பெண்ணாகிக் கடைசியாகப் பிறந்தவீடுவந்துசேர்ந்த முத்தமீனா க்ஷிக்கு உண்மைக் காதல் என்னவென்பது இன்னும் தெரியாது. ஏதோ தன் மூத்தாள் பெண்ணுக்கு வந்த மாப்பிள்ளை தன்னைப்பார்த்து மோகித்ததைக் கண்டு தன்னிடத்திலுள்ள வசியசக்தியின்னதென்று ஒருவாறுணர்ந்தாலும், உண்மையில் "காதல்" என் பது இன்னதென்பதை யின்னுமறியாமலே யிருந் தாள். தன் தமய்னுக்குக் குழந்தை பிறந்ததும் தன் அன்பையெல்லாம் அக்குழந்தை மேற்செலுத்தி இது காறும் வெளிப்போக்கின்றி உள்ளத்தமர்ந்து கிடந்த அன்புக்கு ஒருபோக்குண்டாக்கப் பார்த்தாள். அவள் 'மதினியும் அவள் சித்தியும்' அக்குழந்தையை அவள் தொட்டால் அதற்குத் தோஷம்வந்து விடுமென்று சொல்லித் தடுக்கவே மனமருகி அதையும் தொட அஞ்சினாள். அவர்களில்லாத பொழுது அக்குழந் தை யழுதபோதும் அதைத் தொடாமற்றானே தொட்டிலையாட்டிப் பாடினாளே யன்றி, அழுகிறகுழந் தையை வாரியெடுத்து மாரோடணைத்து மடியில் வைத்துத் தாலாட்டும் பாக்கியம் அவள் கொடுத்து வைக்கவில்லை. இப்படி அவள் மனம் தாமரையிலை யிற்றண்ணீர்போல் எதிலும் ஒட்டாது தத்தளித் துக்கொண்டிருக்க, 'உள்ளன்பு' என்னும் உண்மை யான கற்பகச்செடி, கொழுக்கொம்பில்லாக் கொடி போல், எதைப்பற்றிக்கொண்டு வளருவோமென்று தபித்துக்கொண்டிருந்தது. அவள் உள்ளத்தின் உண்மை நிலையை உள்ளபடியறிந்து அவள் நிலையி லிருந்து பார்க்குங்கால், அவள் பட்ட கஷ்டங்களெல் லாவற்றிலும் அவள் தொட்டிலைப் பிடித்து தாலாட்டிக் கொண்டிருந்தபொழுது அவள் உள்ளம் உள்ளன்பு பூரித்துத்தவித்ததவிப்பு கல்லையும் கரையச்செய்யும் சக்திவாய்ந்ததாயிருந்தது: இதுசத்தியமென்று அந் நிலையிலிருந் துன்னிப் பார்த்த நான் என் உள்ளத் துணர்வைக்கொண்டு உண்மையாகச் சொல்லுவேன். முத்து மீனாக்ஷி யிதுவரையிற் பட்ட கஷ்டங்களெல்

லாம் சகிக்கரியதேயாயினும் உள்ளன்பில்லா அவ
ளுக்கு எல்லாமுரியதேயென்று அவளிலு முயர்ந்த
படியிலிருந்து பற்றறப் பார்ப்போர் நினைக்கத்தக்கதா
யிருந்தது. ஆனால் இத்தருணத்திலோ தேவரும் மூவ
ரும் அவள் நிலையையறிந்து நெஞ்சுருகிவருந்தாதி
ரார். இதுகாறும் அவளிடத்தில் உண்மையான உள்
ளன்பு உதிக்கவில்லை. ஆனால் அக்குழந்தையி னிடத்
திலுண்டான உள்ளன்பு உண்மையானதே. அதைத்
தடுக்கவும், அவள் உத்தம நெஞ்சம் தவித்ததவிப்பு
அவளை யொரு தபஸ்வினியாக மாற்றிவிட்டது. அச்
சமயத்தில் அவள் தன் மதினியைச் சபித்திருப்
பாளானால் அது கட்டாயம் பலித்திருக்கும். ஆனால்
உண்மையான உள்ளன்பு பிறரிடத்துக் குறைகூறு
வதில்லை. அது எல்லாம் பொறுக்கும் வன்மையுடை
யது. யாரிடத்தும் தீங்கு நினையாதது: தன்னைக்
கொடுத்துப் பிறரை இரக்ஷிக்கும் சக்தியுள்ளது.
குழந்தையைத் தொட்டால் அதற்கும் கேடு வரு
மென்று அவர்கள் சொன்னதைக்கேட்கவே, முத்து
மீனாக்ஷி அவர்கள்மேல் குற்றங்கூறாது, தான் அவ்
வளவு பாபியோ என்னவோ, நம்மால் அக்குழந்தைக்கு
ஒரு தீங்கு வரவேண்டாமென்று தன் உள்ளன்பை
யடக்கி, அக்குழந்தையின் தாயில்லாக் காலத்திலும்
அதைத் தொடாமலே தொட்டிலைமட்டும் ஆட்டி
வந்தாள். அவள் உள்ள மிருந்த உத்தமமானஉண்மை
நிலையை "அன்பின் வலையிற் பட்டோன் காண்க'
என்றபடி ஜகதீசனே யறிவான். "அன்பர்க்கன்பான
மெய்ய"னும் தயாபரக்கடவுள் இப்பொழுதே அவள்
நிலையையறிந்து கடைக்கண் பார்க்கத் திருவுள்ளம்
வைத்தானென்று சொல்லல்வேண்டும். முத்துமீனா
க்ஷியின்எண்ணம்பிரபஞ்சப்பற்றுவிட்டமோக்ஷகாமிய
மானதாயிருந்தால் அத்தருணத்தில் பரமேசுவரனே
சத்குருவாக வந்து அவளை யாண்டுகொண்டிருப்பார்.
ஆனால், "எண்ணினார்க் கெண்ணினவண்ண மிருந்
தருள்புரியும்" ஈசன் செயலை யாரறிவார். காரணமறி
யக் கொடுத்து வைக்காத நாம் காரியத்தைக்கொண்டு
தான் காரணத்தை யூகிக்கவேண்டும். காதல், என்ப
தை யுள்ளபடி யுணராமலே கணவனோடிருந்து
வாழ்ந்து அந்தப் பொய் வாழ்க்கையுமிழந்து பரித
விக்கும் அப்பெண்மணியின் உள்ளத்தை எல்லார்க்
கும் அவரவர் எண்ணமிருந்தவாறுண்மையி லுணர்
ந்து படியளக்கும் ஈசனல்லவோ அறிவான். அவன்

செயலைத்தடுக்க வல்லார்யார்? வீணாக இந்
யுலகம் "எல்லாம் நான், நான்" என்று வி
லெடுத்துப் போட்டுக்கொண்டு வீண்வாதனை
கிறது. அவரவர் "மனம்போலிருக்கும் மாங்க
ஆகையால் அதைத் தடுக்கவல்லார் யாரு
இப்படியவள் உள்ளமுருகித் தவிக்க, அன்பு நி
அகங்குழைய நின்றபோது நடந்ததை முத்துமீ
தானே சொல்லக்கேட்போம்:—

"நான் பாட்டுப்பாடித் தொட்டிலையாட்டிக்கொ
டிருந்தபொழுது, திடீரென்று வீட்டுவாச
யொருவண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு
சுந்தர ரூபனான யௌவன புருஷன் வெ
குதித்து, விரைவாய், "சுப்பிரமணியம்" என்று
பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.
குரலைக் கேட்ட மாத்திரத்திலேயே எனக்கு ம
கூர்ச்சுண்டாயிற்று. ஒன்றுந் தெரியாமல்
பித்து அங்கேயே நின்று விட்டேன். உள்ளே
வர் என்னை ஒரு நிமிஷம் திகைத்து நோக்கி,
என் பெண்ட,—முத்துமீனாக்ஷியா?" என்றார்.
முக்காட்டை யிழுத்து முகத்தை மறைத்து, "ஐ
என்றலறிக்கொண்டு வீட்டுட்போய் விட்டேன்

இப்படி அகஸ்மாத்தாய் ஆகாசத்திலிருந்து
தது போல் இந்தச் சமயத்தில் வந்துதித்த
சுந்தரரூபன்" யாரெனில், இவளோடு குழ
பருவத்திற் பழகிய இவள் தமயனுடைய உயிர்
ழனான சுந்தரேசனே யன்றி வேறொருவரும்
சுப்பிரமணியம் வந்தான். வரவும் தோழரிருவ
டித்தழுவிச் சந்தோஷித்த பின் பரஸ்பரயோக
களை விசாரிக்கத் தலைப்பட்டார்கள். சுப்பிரம
உள்ளே போய் தன் "பெண்டாட்டிகையைப்
காரா வென்றிழுத்துவந்து சுந்தரேசன் மு
நிறுத்தி இவள்தான் என் பெண்டாட்டி" எ
பெருமையாய்ச் சொல்லி, அதிலும் பெருமை
தொட்டிலில்கிடக்கும் குழந்தையைக்காட்டி "
பயல் தான் எங்கள் சீமந்த புத்திரன்" என்
சிநேகிதனுக்கு அவனை விட்டுப் பிரி
தனக்குக் கிடைத்த பாக்கியங்களைத் தெரி
அவனுக்குக் குழந்தைகளெத்தனையென்று
தான். சுந்தரேசன் தனக்குத்தானே
தையாக விருப்பதைச் சம்த்காரமாகத் தெ
இல்லறத்தைப் பழித்து ஸம்ஸாரதுக்கம்



தென்று வேதாந்தப் பாட்டுகள்பாட ஆரம்பித்தான்.பொழுது
சுந்தரேசன் கலியாணமாகாக் காளையென்று சுப்பிர
மணியன் அறிந்துகொண்டான். அவனுடையமதினி
வெகுநாளாக அவளுக்குத்திட்டம் செய்து வைதித்
ருந்த அவளுடைய அம்மங்காரை, அவன் கலியா
ணம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை யென்று
அவனுடைய தமயனார் பெண்டாட்டி பேச்சுக்கிண
ங்கி அவன் பாகத்துக்குள்ள பிதிரார்ச்சித்சொத்
தைப் பாகித்துக் கொடுத்து வீட்டை விட்டுப்போம்
படி மரியாதையாக அனுப்பிவிட்டார். அவன்
பி. ஏ. பரீக்ஷை கொடுத்து பி. எல். பரீக்ஷையில் தவ
றிப்போய் விட்டானும். கலியாணம் வேண்டாமெ
ன்று தேசயாத்திரை செய்யப்புறப்பட்டு வந்ததாகத்
தெரியவந்தது. முத்துமீனாக்ஷியைக்காணவும் அவன்
வைராக்கியம் விரக்தியெல்லாம் பறந்தோடி விட்டது
போலும். முத்துமீனாக்ஷியே யென்னசொல்கிறாள்
கேட்போம். அவள் யதார்த்தவாதி யாதலால் உண்
மையை ஒளிக்காமற் சொல்வாள். அவள் சொல்
வதைக்கேட்போம்:—

"அந்தோ! ஒருவரை யொருவர் பார்த்ததுமுதல்
எங்களிருவருக்கும் மெய்க் காதல் பிறந்து விட்டது.
நான் அவருடன் பேசுவதில்லை. என் தமையன் எவ்
வளவு சொல்லியும், பழையநாள் பரிகாசங்களையும்
பழக்கத்தையும் நினைப்பூட்டியும், என்மொட்டைத்
தலையுடன் அவர் எதிரே நிற்கவும் என்மனம் இணங்க
வில்லை." அவர்களிருவருக்கும் பேச்சுவார்த்தை
சிறிது மில்லாவிட்டாலும், முத்துமீனாக்ஷியே அவ
ரைக்காணவும் பேசவும் பின் வாங்கினாலும், அவர்கள்
கண்கள் "எவ்விதமாயினும் தெரிந்தோ, தெரியாம
லோ, தினம் ஒரு முறையாவது, ஒரு நொடிப்பொ
ழுதாவது சந்திக்கும்: அந்த வினாடியில் மனத்தில்
நடக்கும் குழப்பமெல்லாம் ஒருவருக் கொருவர் பகி
ரங்கமாய் விடும்; எவ்வளவு திடப்படுத்திக் கொண்
டாலும் மறைக்கமுடியாமற் போய்விடும். 'கண்
ணொடு கண்ணினை நோக்கொக்கில் வாய்ச்சொற்கல்
என்ன பயனுமில' என்றார் மனதின் இரகசியங்களை
நன்கறிந்த மஹான்— என்கிறாள் முத்துமீனாக்ஷி.
கதையை வீணாகவளர்த்துவானேன். கண்ணொத்
தது; கருத்தொத்தது; மனமொத்தது; மண்டை
விதியுமொத்தது. சுந்தரேசன் இருந்திருந்து போகும்

தன் மனக்கருத்தை சுப்பிரமணியனுக்
குத் தெரிவித்து ஒரு கடிதமெழுதி, தன் கருத்து
அவனுடைய மனதுக் கிசைந்திருந்தால் அதற்குள்
ளடக்கம் செய்த கடிதத்தை முத்துமீனாக்ஷியிடங்
கொடுத்து அவள் பதிலை அவனே வாங்கித்தனக்கு
நேரிலனுப்பும்படி யெழுதிக் கொடுத்துவிட்டுப்போ
ய்விட்டான். சுப்பிரமணியனும் தங்கையையழை
த்து, கடிதத்தைக் கொடுத்து அதனுள்ளே யிருப்
பது அவள் மனதுக் கிசைந்திருந்தால் அவனுக்கும்
அது ஸர்வசமம்தாமே யென்றும், எப்படியாவது
அவள் சந்தோஷமாயிருக்கப் பார்க்கவேண்டியது
அவன் கடமையென்றும் சொல்லி அவளைமட்டும்தன்
னறையில்விட்டு தான் கதவைப்பூட்டிக் கொண்டு
வெளியே போய்விட்டான். முத்துமீனாக்ஷியும் தன்
னிஷ்டத்தைத் தெரிவித்துக் கடிதமெழுதிக் கொடு
த்தாள். சுந்தரேசன் தமையன் முதலானோர் இச்சம்
பந்தத்துக் கிணங்கவில்லை. சுப்பிரமணியனும் அவன்
மனைவியின் உள்ளக்கருத்தையறிந்து கொண்டு அவர்
கள் யாரோடும் இது சங்கதியைச் சொல்லாமல்,
தன் தங்கையை நகையின் பொருட்டு நடக்கும் வியா
ச்சியத்துக்காக அவள் புக்ககத்துக்கழைத்துக்கொ
ண்டு போகிறதாகச் சாக்குச்சொல்லி, வடக்கேயுள்ள
ஒரு பட்டணத்திற் கொண்டுபோய் புனர் விவாகம்
செய்து கொடுத்துவிட்டான். சுந்தரேசனும் முத்து
மீனாக்ஷியும் புனர் விவாகமான புருஷனும் மனைவியு
மாய் பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களைச் சுற்
றிப் பார்த்துக்கொண்டு கடைசியில் பம்பாயில் தங்கி
வசிக்கத் தீர்மானித்தார்கள். பிராம்மணர்கள் அவர்
களை வழக்கம்போல் ஒதுக்கிவைத்து ஆபத்து சமய
த்துக்குதவாமல் ஜாதிப்பிஷ்டர்களாய் நடத்தினார்
கள். சுந்தரேசன் ஒன்றுக்கு மஞ்சாமல், அன்பின்
வலையிலீடுபட்டு எல்லாத்துன்பங்களையும் சகித்துக்
கொண்டு, என்னைப்போல் சந்தோஷமுள்ளவர்கள்
இவ்வுலகி லார் இருக்கிறார்களென்று சொல்கிறான்.
கணவனும் மனைவியும் "காதலிருவர் கருத்தொத்து
ஆதரவுப்பட்டதே யின்பம்" என்று உண்மையான
சிற்றின்பசுக மனுபவித்து குஞ்சுகுழந்தைகளோடும்
வாழ்ந்து வருகிறார்கள். கரைகடந்த வெள்ளம் அணை
யொன்றையும் பாராது என்கிற வசனப்படி, ஜாதிக்
கட்டு திட்ட மெல்லாம் கடந்து உள்ளன்பு மிகுதி
யால் உண்மையான புருஷன் மனைவியான இருவ

ரும் மனமொத்து சந்தோஷமாக வாழ்ந்து வருவதன்றி இங்கிலீஷ் மோஸ்தரில் பிரியம் வைத்த சுந்தரேசன் குணக்குக்கிசைந்து முத்துமீனாக்ஷி தன் கணவனை ஏகவசனமாகவும், "வாடா, போடா" என்றும் கூப்பிட இசைந்து விட்டாள். அன்பின் கூத்தை யாரறிவார். ஜாதிக் கட்டுப்பாடுமட்டும் இவர்கள் நிமித்தம் சிறிதும் குறையவில்லை. குழந்தைகளுக்கு விவாகமாக வேண்டுமே, கடைசி வரையில் ஜாதியார் விட்டுக் கொடுக்காமலிருந்தாலென்ன செய்கிறதென்று முத்துமீனாக்ஷி கேட்டதற்கு, மிஸ்டர்சுந்தரேசய்யர் கிறிஸ்து மதமிருக்கு: அதில் சேர்ந்துவிட்டால் அப்பொழுது என்னசெய்வார்கள் என்று அலக்ஷியமாகச் சொல்லி தன் சந்தோஷத்திலே மூழ்கிக்கிடக்கிறான். இவர்கள் ஆனந்தம் இடையறாது தொடர்ந்து பேரானந்தத்தில் முடியப் பிரார்த்திக்கிறோம்

இப்படிப்பட்ட தீரர்கள் இருவரும், இவ்வளவு உண்மைக்காதற் புணர்ச்சியால் பிறந்த குழந்தைகளும் கிறிஸ்துமதத்திற் போகவிட்டு, கலியாணம் செய்து கொள்ளாத கைம்பெண்களும், புருஷனை வைத்துக் கொண்டே வியபசாரம் போன ஸ்திரீகளும் பெற்ற குழந்தைகளையும் அவர்களைப் பெற்ற தாய் தந்தையர்களையும் ஹிந்துக்களாகவைத்துக் கொண்டாடுவதில் ஹிந்து சமூகத்திற்கு என்ன லாபமோ, இவர்களையும் அவர்களோடொத்தவர்களாகவாவது ஹிந்து சமூகத்திலிருக்க விடுவதினால் வரும் நஷ்டமென்னவோ அறிகிலேமென்பது இதைப் பிரசுரித்த கிரந்தாசிரியரின் உள்ளக் கருத்தாயிருக்க வேண்டுமென்று ஸ்பஷ்டமாய்ப் படுகின்றது. இது உண்மையான ஒரு சம்பவமாக விருத்தலால் இப்படிப்பட்டது எத்தனையோ நேரிடலாமதலாலும் இதைப்பற்றி ஹிந்துக்களாயுள்ளோர் யாவரும் சிந்திக்கவேண்டியது அவர்கள் கடமையாம். உண்மையை ஒளிப்பதனாலும், அக்கிரமத்தை யடக்கி மூடிவைப்பதினாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. உண்மை யெப்படியும் வெளியாகிவிடும். அக்கிரமம் எவ்வளவு பத்திரமாக மூடிவைத்தாலும் அழுகினபிணம் தன்னிருப்பைத் தெரிவிப்பதுபோல், அதன் துர்நாற்றம் எப்படியும் மேல் கிளம்பி, முன்னிலும் பன்மடங்கு அதிகமாக வீசி, வியாதி வெக்கைகளையும் கொணர்ந்து விடும். இது மட்டும் சத்தியம். பொய் சொல்லி வாழ்ந்தாரில்லை. மெய் சொல்லிக் கெட்டாரில்லை. இந்த உண்மையனுபவத்தைக் கிரகிக்காதவரையில் யாரும் உருப்படார்.

C. V. S.

# அறிவுறுத்தல்.

ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுரராலே சார்வானே.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகியானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.—திருவாசகம்.



## MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION' BY SANKARA.

ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள்
உபதேசித்தருளிய

# முமுக்ஷுதாரகம் அல்லது, "பஜகோவிந்தம்"

என்னும்

## ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

ஆசார்ய ஸ்வாமிகள் உபதேசித்தருளிய இச்சிறிய நூலிற் கூறியவிஷயம் யாதென்னில், இவ்வுலக வாழ்க்கையானது தாமரையிலையிற் றங்கிய நீர்போல அதி சஞ்சலமானதென்றும், இதில் அடையும் சுகம் சிறிதேனும் இல்லையென்றும், இதில் தேடும் பொருளும் சுற்றமும் துன்பத்துக்கே ஏதுவாதலன்றிப் பாத் துக்கு எத்துணையும் பயன்படாவென்றும், பிறப்பு நீங்கி முத்தியடைதற்கு மார்க்கம் ஆசையை ஒழித்து அமலன் அடியில் இடையறா நேசம்பூணுதலே யென்றும் ஆம். சுருங்கச் சொல்லுமிடத்துப் பத்தி ஞான வைராக்கியமே மோட்சத்துக்குச் சாதனமாகுமென்பது இந்நூலின் கருத்து.

இனி இந்நூலின் விஷயத்தை விரிவாக ஆராய்வோமாக. முதற் செய்யுளில், கோவிந்தனையே சர்வகாலமும் நேசித்துப் பூசித்துத் தியானித்தலே முத்திக்கு மார்க்கமென்று கூறி, இதனைப் பின்வரும், செய்யுள் ஒவ்வொன்றுக்கும் இறுதியில் * பல்லவியாகக் கொள்ள வைத்தலின், இந்த ஈச்வரபஜனமே முத்திக்கு இன்றியமையாத முதற் சாதனமாகக் கூறியதாயிற்று. அது எப்படி யென்னில்—

1. "கோவிந்தனையே குறியாய் குறியாய்
கோவிந்தனையே குணனின்மதியாய்!
சாவந்தணைநாள் 'டுக்ருங்கரணே'
ஆவந்துனையன்பினளித் திடுமோ?"

அதாவது, அடா! நற்குணமில்லாத மூடான்மாவே, உனக்கு மரணகாலம் சமீபிக்கும்போது 'டுக்ருங்கரணே 'டுக்ருங்கரணே' என்று ஜபிக்கும் இந்த ஜபமானது அந்தோ! உன்னை அன்போடுவந்து ரக்ஷிக்கவல்லதோ? என் வீணாக அதைச் செபித்துக்கொண்டு காலத்தைப் போக்குகின்றாய்? பிறவிக்கடலில் நின்று எடுத்துயர்த்தி உஜ்ஜீவிப்பிக்கும் தாரக மந்திரமாயுள்ள கோவிந்தநாமத்தைச் செபித்துப் பகவான் திருவடிகளைத் தியானிப்பாயாக. இதுவே உனக்கு உறுதியானது என்றபடி. இவ்வுபதேசம், கங்காதீரத்தில் ஒருவன் சப்த சாஸ்திரம் ஒன்றையே கற்றுப், பவசாகரோத்தாரகமாகிய தாரகமந்திரத்தை அறியாமல், தான் கற்றிருந்த டுக்ருங்கரணே' என்னும் சமஸ்கிருத தாதுவையே அடிக்கடி உருவிட்டுக் கொண்டிருக்கக் கண்டு, ஸ்வாமிகள், அவன் பேதைமைக்கிரங்கிக் கருணைகூர்ந்து அம்மூடபண்டிதனுக்கு ஓதியருளியதென்பர். ஆயினும் இவ்வுபதேசம் யாவர்க்கும் பொதுவானதேயாம்.

முதற் செய்யுளில் ஈச்வரபஜனமே முத்திக்குச் சாதனமென்று பத்தியின் விசேஷத்தைக் கூறி, பத்தியைச் செய்யுங்கால் ஆசைகளை யொழித்துச் செய்தல் வேண்டுமென்பதை உணர்த்தும் பொருட்டு அவ்விஷயத்தை அடுத்த செய்யுளிலே கூறுகின்றார். 'ஆசாசாத்பரமம் துக்கம் நிராசாத்பரமம் சுகம்' என்றபடி, ஜனனமரணாதி துக்கங்கள் யாவும் மனிதர்க்கு ஆசாதிக்கியத்தினாலே உண்டாதல் பற்றி, அவ்வாசையையறுத்தலும் மோக்ஷத்துக்கு இன்றியமையாத ஓர் சாதனமாகும் என்னும் உண்மைப் பன்முறையும்

* இது முதல் நூலில், "பஜகோவிந்தம், பஜகோவிந்தம், பஜகோவிந்தம் மூடமதே" யென்று வெகு அழகாகவும், உருக்கமாகவும், கம்பீரமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

வற்புறுத்துகின்றார். ஆசையானது எந்தெந்தப் பொருள்களின்மேற் செல்லுகின்றதோ அந்தந்தப் பொருள்களைப்பற்றிப் பற்பலவிதமாகும். இவற்றுள், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றும் முக்கியமானவை. மண்ணாசையானது பொருளாசையுள்ளே அடங்குமாதலின் அதனை வேறு பிரித்துக் கூறாமல், மற்றிருவகை ஆசைகளையும் துறக்க வேண்டுமென்று கூறுகின்றார். அவ்விருவகை ஆசையினும் பொருளாசை பொருள் சேரச்சேரக் குறைவுறாமல் வர்த்திக்குமாதலின் மிகக்கொடியது என்பதை யுணர்த்த அதனை முதலில் வேருடன் களைய வேண்டுமென்று முதற்கண்கூறி, இதன்பின் மூன்றாவது செய்யுளில் பெண்ணாசையைத் துறத்தலைக் கூறுகின்றார். இவ்விருவகை ஆசையையும் துறக்கவேண்டுமென்று கூறியவாற்றானே அவற்றைத் துறத்தற்குரிய உபாயமும் உடனே கூறுகின்றார். பொருளாசையைத் துறத்தற்குபாயம் அடிக்கடி அவ்வாசை எழுந்தோறும் அதனை எழவொட்டாமல் அடக்கும் நற்புத்தியை அப்பியாசத்தினால் ஸ்திரப்படுத்திக் கொள்ளலும், நல்வழியாற் பெற்றபொருள் சிறிதாயினும் அதனால் திருப்தியடைந்திருத்தலுமாம் என்றும், மற்றைப் பெண்ணாசையைத் துறத்தற் குபாயம் காமத்தை விளைக்கும் அவ்வாது அவயவங்களைப் பகுத்து நோக்கி அவை அருவெறுப்பான மாம்சம் கொழுப்பு முதலியவற்றின் விகாரமேயென்று கருதுதலுமாம் என்றும் காட்டுகின்றார். எப்படி யென்னில்:—

2. "துறவாய் பொருளாசையினைத் துணிவா
உறுவாய் நசை தீரொரு நன்மதியை
நெறிவாய் வருமோர் நிதியாலுவகை
பெறுவாய் நிறை பேதைமையாய் பெரிதே."

3. "மடவார் வளர் மென்றனமும் வடிவும்
கடுமோகமனத் துறனீ கனுறீஇ
முடையார் தசையின்றிரி பென்று முனை
விடுவாய விடுவாயதன்மேல் விழைவே."

அதாவது, பொருளை நிலையாகவெண்ணிப் பொருண்மேல் வைத்திருக்கும் உன் ஆசையை நீ முற்றிலும் விட்டொழிந்து ஆசாபாசங்களை யகன்று ஸ்வஸ்தமாயிருக்கும் உத்தமமாகிய உயர்ந்த புத்தியை உறுதியாகப் பெற்றுக்கொள்வாயாக. நல்லொழுக்கத்தில் நின்று முறை பிறழாமல் சம்பாதிக்கும் திரவியம் சொற்பமாயினும் அதனால் மிகவும் மனச்சந்துஷ்டி யடைவாயாக. அன்றியும், பெண்களுடைய வடிவையும் அழகையும் கண்டு காமப்பேய்பிடித்து நிறையழிந்து மனமயங்குதலொழிவாக. அவற்றைக் காணுந்தோறும் அவை அருவெறுப்பான மாம்ச விகாரமென்று அறிவால் நிச்சயித்து அவற்றின்மேல் ஆசைவையாமல் அவ்வாசையை நீக்குவாயாக என்றபடி.

பின்பு, இவ்வாசைக்குக் காரணமாயிருப்பது நீர்மேலெழுத்துப்போலும் இச்சரீரத்தின் நிலையாமையை அறியாது நாம் நெடுங்காலம் கற்கோட்டைபோல் அழியாமல் சீவித்திருக்கப் போகிறோமென்னும் பேதைமையாலே நமக்கு மாடுவேண்டும் மனைவேண்டும் என்று எண்ணுவதாதலின், அப்பேதைமை மாறும் பொருட்டு, இவ்வாழ்க்கையானது தாமரையிலையில் நீர்போல அதி சஞ்சலமானதென்றும், இன்னபோதென் றறியமுடியாமல் எந்தக்கணத்திலாயினும் பங்கமாகக் கூடியதென்றும் நான்காவது செய்யுளிற் கூறுகின்றார். அன்றியும், இவ்வநித்தமாகிய வாழ்வுதானும் சுகமுள்ளதோ வென்னில் அதுவுமில்லை. எத்தனையோ வியாதிகளுக்கு ஆஸ்பதமாய் அகங்காரத்தால் விளைவனவாகிய அனேக துன்பங்களுக்கு மிடமானது. ஆதலின் இவ்வநித்தியமான துக்கரூபமான வாழ்க்கையை நம்பி மாடு மனைகளைத் தேடி ஆசையைப் பெருக்குவது அவிவேகமென்று அதே செய்யுளிற் போதிக்கின்றார். எப்படி யென்னில்—



4. "மரைவாளிலை மேன் மணிபோன் மிளிரும்
ஒரு நீருறழுஞ் சிறுவாழ்வுதுதான்
பெருநோயொடுகாதல்பிடித்துலையத்
தருசோக மதிற்றளரும்முலகே."

தாமரையிலைமேற் றளும்பித் தத்தளிக்கும்
அதாவது, மனிதருடைய அற்பமான உயிர்வாழ்க்கையானது
நீர்த்துளிபோலச் சற்றும் நிலையில்லாததாகும். அந்நிலையற்ற சிறுவாழ்வுதானும் இன்பத்தைத் தருவதோ
வென்னில் அதுவுமன்று: உலகிலுள்ள ஜனங்கள் கொடிய வியாதிகளால் பற்றப்பட்டு அபிமானம் மேற்
கொண்டு மிகவும் துயரமுற்றுவருந்துவார்கள் என்றபடி.

நமதுயாக்கை நிலையில்லாததேயாயினும், மனைவி மக்கள் முதலான சுற்றத்தார் நமக்கு உயிர்போல
விரும்பத் தக்கவரன்றோ? அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் அவர்கள் நமக்குப் பிற்காலம் அநுபவித்
துச் சுகிக்கும் பொருட்டும் ஆஸ்தியைத் தேடிவைக்க வேண்டாமோ வென்னில், அம்மனைவி மக்கள் முத
லான சுற்றத்தாருடைய தன்மை நீ அறியாய்போலும் என்று அவருடைய சுபாவத்தை யெடுத்து ஐந்தா
வது செய்யுளிற் கூறுகின்றார். எப்படி யென்னில்—

5. "தேடுந்திறனுள்ளளவுஞ்செறிவார்
கூடும்பிரிவாற்றமர்பின்கொடுநோய்
நீடுந்தனுவள்ளுயிர்நின்றுழியும்
கேடின்றுளையோ வெனவுங்கிளவார்."

அவர்களைப் போற்
அதாவது, மனைவிமக்கள் முதலான பந்து வர்க்கங்கள், உனக்குப் பொருள் சம்பாதித்து
உனக்குச் சம்பாதிக்கத்திறமை
றத் திறமையுள்ளமட்டுமே, மிக்க அன்போடும் உன்னைச்சூழ்ந்து நிற்பார்கள்.
தப்பியபின், கொடிய நோயினால் அடிபட்டு வருந்தி மெலிந்த உன்தேகத்தில் உயிர் இன்னமும் விட்டு
நீங்காமல் இருப்பினும்கூட உன்னை உயிருள்ள மனுஷ்யனாகப்பாவித்து லக்ஷ்யம்பண்ணி 'என்ன, இருக்கி
றாயா க்ஷேமமா' என்று ஒருவார்த்தைகூடப் பேசமாட்டார்கள் என்றபடி.

ஆதலின் மனைவிமக்கள் முதலான சுற்றத்தாருக்காகப் பாடுபட் டுழைத்து உன்னுடைய ஆன்மலாபத்தை
யிழந்து பிறவிக்கு வித்தாகிய வினையைத் தேடிக்கொள்வதுபோல அறிவீனம் வேறில்லை என்றனர்.

பின்னும், அப்படிக்கன்றி ஒருவேளை உன்னிடத்தில் அவர்கள் விசுவாசமாயிருப்பினும் எத்தனை
நாளைக்கு அவர்கள் விசுவாசம் நிலைநிற்கப்போகிறது? உன்னுயுள்மட்டும் தானே, அதற்கு மேலும் உண்டோ?
உடலைவிட்டு உயிர் குதித்ததானால் உன்னைப் பிணமென்று கைவிட்டுத் தூர விலகுவார்களே யன்றிக் கிட்ட
நெருங்குவார்களா? உன்னையுயிர்போல நேசித்த மனையாள்கூட உன்சவ சரீரத்தைக்கிட்ட அஞ்சுவாளன்றோ
என்று ஆறாவது செய்யுளில் கூறுகின்றார். எப்படி யென்னில்—

6. "எந்நாள்வரையெய்திடுமாவியுடல்
அந்நாள்வரையாவருமன்புறுவார்
உன்னாருயிர்போயுடல்பங்கமுறின்
துன்னாளதையஞ்சுவள் தாரமுமே."

அதாவது, ஆவியானது உடலினுள்ளே எத்தனைகாலம் தங்கியிருக்குமோ அத்தனைகாலமும் மனைவிமக்கள்
முதலான உறவினரெல்லாரும் உன்னிடத்தில் அன்பு பாராட்டி உன் யோகக்ஷேமங்களை விசாரிப்பார்கள்.
அவ்வுயிர் தேகத்தினின்று நீங்கித் தேகத்துக்கு அபாயம் வந்தகாலத்தில், உன்மனைவிதானும் அச்சவசரீ
ரத்தை அடுக்க அச்சமடைவாள் என்றபடி.

நிற்க, நீ தேடும் பொருளினால் உனக்கு ஆயுள்பரியந்தமேனும் எதாவது குணமுள்ளதோவென்னில், சிறிதும் இல்லை. நீ சம்பாதிக்கும் அர்த்தம் உனக்கே அநர்த்தமாக முடியும். பொருள் தேடிவைத்த பேர்களுக்குக் கள்வர் தாயத்தார் முதலானவர்களாலுண்டாகும் கெடுதிகளேயன்றித் தாம் விரும்பிப் பெற்றுவளர்த்த பிள்ளைகளாலும் அநேகம் கெடுதிகளுண்டாகுமென்று அடுத்த செய்யுளிற் கூறுகின்றார். எப்படி யென்னில்;—

7. "பொருள்கேடுதுநீயறிவாய்புகல்வேன்
வருமோர்சுகமொன்றிலதான்மதியாய்
இருமாநிதிதேடியவர்க்கனிய
அருமாமகராலுமணங்குறுமே."

அதாவது, செல்வமானது எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகும். இதனை நீ தெரிந்து கொள்வாயாக. அச்செல்வத்தினால் நமக்குண்டாகும் சுகம் சிறிதும் இல்லை. பெருஞ் செல்வத்தை வருந்திச்சம்பாதித்தவர்களுக்கு அவரது இனியபுத்திரர்களாலும் அநேக துன்பங்களுண்டாகும் என்றபடி.

இவ்வாறு மாதர்மீதும் மனைவி மக்கண்மீதும் வைத்த மயலும் காதலுமே பாத்தியானத்துக்கு மூன்றும் இடையூறாயிருப்பனவாதலின் முமுக்ஷுவானவன் அவற்றை விட்டொழிதல் வேண்டுமென்று இதுகாலும் விவரித்துக்கூறிய விஷயத்தையே முடிவாகத் தொடுத்துக்கூறி மேலே பிறவிஷயங்களை உணர்த்தப் போகின்றார். ஆதலின். அவ்வாசைகள் தோன்றுதற்குரிய பருவங்களையும் எட்டாவது செய்யுளில் எடுத்துக்கூறுகின்றனர். ஒருவனுக்கு ஸ்த்ரீ சித்தனாக உழலுகின்ற யௌனகாலத்திலும், தாராபுத்திராதிகளில் மனஞ்சென்றுழலும் வார்த்தக்கிய காலத்திலும் தான் பாத்தியானத்துக்கு இடமில்லாமற் போகிறது. அவ்வாசைகள் பற்றாத பால்யப் பருவத்திலாவது பாத்தியானத்துக் கிடமுண்டோ வென்னில், அப்போதும் அந்தத்தியானம் செய்தற்குரிய அறிவும் திறமையும் இல்லாமையினாலும், அப்பருவத்துக்கேற்ற விளையாட்டின் மேல் மனம் செல்லுதலாலும், அது சாத்தியப்படுவதில்லை. ஆதலின், அறியாதகாலமாகிய பால்யத்தில் பாத்தியானம் கைகூடாமையின் அறிவு தோன்றிய பிற்காலங்களிலேனும் அத்தியானத்துக் கிடையூறாயிருக்கும் ஆசைகளை யகற்றி மனத்தைப்பரத்தில் செலுத்தவேண்டுமென்று போதிக்கின்றனர். எப்படி யென்னில்—

8. "மழவாய்விளையாடலின்மேன்மனமாம்
உழைநேர்விழிமீதுறுகாளையினே
கிழமாய்மனைமக்களின்மீதுகெழும்
விழையார்பரமாவிமலன்கழலே."

அதாவது, மனிதர்கள் பால்யராயிருக்கும்போது விளையாட்டில் தமது கருத்தைச் செலுத்துவார்கள். யௌவனதசையில் யுவதிகளாகிய ஸ்த்ரீகளின்மேல் தங்கள் மனசைச் செலுத்துவார்கள். கிழத்தன்மையில் மனைவி மக்கள்மேல் மனம் பதிந்தவர்களாயிருப்பார்கள். ஆதலின் ஒருநாளும் சர்வோத்தமனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் திருவடிகளைத் தியானிக்கமாட்டார்கள்—என்றபடி.

பின்பு, பொருளாசையையும் பெண்ணாசையையும் ஒழித்தற்குத் தான் மார்க்கம் போதிக்கப்பட்டது. மனைவிமக்கள் முதலான சுற்றங்களிடத்தில் வைத்த காதலை எவ்வாறு நீக்கிக்கொள்வதென்னில் அதற்கு மார்க்கமும் ஒன்பதாவது செய்யுளில் கூறுகின்றார். அதுவும் அவர்களுக்கும் உனக்குமுள்ள உண்மையான சம்பந்தத்தைப் பகுத்து நோக்கித் துணியின் நீங்கு மென்கின்றார். இச்சுற்றத்தார் எல்லாம் நமக்கு இப்போது இவ்வுடலின்கண்ணே இடையில் தோன்றிய சம்பந்திகளேயன்றி அநாதியாயுள்ள ஆன்மாவுக்கு எவ்வளவும் சம்பந்தமாகமாட்டார்கள் என்றும், இடையில் தோன்றியவாறே பிரிந்து போவார்களென்றும் ஊகித்தறிந்து அவர்கள் பொருட்டுச் சஞ்சலமடைந்து வருந்துதல் அறிவீன மென்றுணர வேண்டுமென்று கூறுகின்றனர். எப்படி யென்னில்—



9. "மனையாளெவணின்மகர்தாமெவர்காண்
நினைநல்குமுனம்மெவணின்றனைநீ
புனைவாழ்விதுதான்புதுமைத்ததுவால்
இனியுண்மையறிந் தெறிவாய்மயலே."

அதாவது, இப்போது உனக்குமனைவியாக வாய்த்திருப்பவள் அதற்குமுன் யாவளாயிருந்தனள்? உனக்குப் புத்திரராயுற்பவித் திருப்பவர் உன்வயிற்றிற் பிறப்பதற்கு முன்யாவராயிருந்தனர்? உன்னை உன் மாதாபிதாக்கள் புத்திரனாகப்பெறுவதற்குமுன் நீதான் எங்கிருந்தாய்? இவற்றை யெல்லாம் உட்புகுந்து ஆலோசிக்கின் இப்பிரபஞ்சவாழ்க்கையானது அதிவிசித்திரமாகத் தோன்றும். ஆதலின், இனியேனும் வேதாந்த விசாரணைசெய்து உண்மையை யுணர்ந்து அம்மனைவிமக்கள்முதலான சம்சாரத்தில் வைத்துள்ள பிராந்தியை ஒழிப்பாயாக. என்றபடி.

பின்பு இவ்வாசாபாசங்கள் எல்லாம் ஒருங்கே நீங்கி முத்தியடைதற்கு மார்க்கம் சத்ஜன சங்கமே யென்று பத்தாவது செய்யுளில் கூறுகின்றார். எப்படியென்னில்

10. "மேலோருறவாலறும்வேறுறவே
மாலேயறுமவ்வுறவின்மையினால்
தோலாவுணர்வாமயல்சோர்கையினால்
மேலாமுணர்வால் வரும்வீடதுவே."

அதாவது, வேதாந்த சிரவண மனனாதிகளாலே பரிசுத்தமடைந்த உள்ளத்தையுடைய மகாத்துமாக்களின் சகவாசத்தைப் பெறுதலினாலே மற்றப் புத்திர மித்திரகளத்திராதிகளில் வைத்த பற்று நீங்கும். அப்பற்று நீங்கலாலே தனாதிகளில் வைத்த மோகம் நீங்கும். அவ்வாறு தனாதிகளில் வைத்த மோகம் நீங்குதலாலே நிச்சலமான நிர்மலஞானமுண்டாகும். அந்த நிர்மலஞானத்தைப் பெறுதலினாலே ஜீவன்முத்தியுண்டாகும் என்றபடி.

இவ்வாறு சத்சகவாசம்பண்ணி மெய்யுணர்வைச் சாதித்துக்கொள்ளின், கயிற்றிற்றோன்றிய அரவம்போலவும், கானலிற்றோன்றிய ஜலம்போலவும் அறிவின்கட்டோன்றிய இந்தப்பிரபஞ்ச மயக்கம் தீருமென்பதை கக-வது செய்யுளில் வற்புறுத்துகின்றனர். இளமையுள்ளமட்டுமே காமவிகாரமும், நீருள்ள மட்டுமே மடுவும், கைப்பொருளுள்ளமட்டுமே சுற்றத்தார் முதலானபரிவாரங்களும் உள்ளவாய் அவை போனபின் எவ்வாறு நீங்கிவிடுகின்றனவோ அவ்வாறே அஞ்ஞான முள்ளமட்டுமே அதன்காரியமாகிய பிரபஞ்ச முன்னின்று ஞானமுதித்தவுடனே பிரபஞ்சமயக்கம் தீர்ந்து முத்தி யுண்டாகும் என்று. போதிக்கின்றனர். எப்படி யென்னில்—

11. கடிகாமமெனுமிளமைக்கழிவில்
மடுவேதுளதாம்புனல்வற்றியகால்
உடனார்பவர்கைப் பொருளோயினெவண்
நெடுமெய்யுணர்நெஞ் சுறினெங்குலகே.

அதாவது, இளமைப்பருவம் நீங்கிய பின்பு காமவிகாரங்கள் ஒருவரைப்பாதிக்கவல்லவாமோ? தண்ணீர் வற்றிப் போனபின்பு தடாகமென்பதுண்டாகுமோ? உருவழிந்து போகுமன்றோ? கைப்பொருளிழந்து வலுமையடைந்த காலத்தில் புத்திர மித்திரகளத்திர தாசீ தாசாதி பரிசனங்கள் உன்னைத் தொடர்ந்து நிற்பார்களா? நிற்கமாட்டார்களன்றோ? அதுபோலவே பரமாத்ம பரிஜ்ஞானமானது ஒருவர்க்குச் சற்குருபதேசத்தாலே

உண்டான காலத்தில் அகங்காராதிப் பிரபஞ்சங்கள் நிலைநிற்குமோ? மூத்தனுதலினுலே சம்சாரநாசமுண்டா கும்—என்றபடி.

இவ்வாறு இவ்வான்மஞானத்தைச் சிறப்பித்துப்பின்னர் அதனாலடையக் கூடிய ஆன்மானந்தத் தின் பெருமையை உணர்த்து கின்றார். இளமையும் செல்வமும் பந்துவர்க்கங்களும் நிலையில்லாமல் மின் னலைப் போலத்தோன்றி யழிந்து போவன. ஆன்மானந்தமோ அழிவில்லாமல் நித்தியமாயிருப்பது ஆதலின் இப்படி அநித்தியமாய் அழிந்து போகக்கூடிய பேறுகளைப் பெற்றுள்ளோமென்று அவிவேகத்தினால் அகங் கரியாமல் நித்தியமாய் அசஞ்சலமாயுள்ள மோக்ஷானந்தத்தை மெய்யறிவினாலே பெற்றுக்கொள்கவென்று அடுத்தசெய்யுளில் போதிக்கின்றார். அது எப்படி யென்னில்,—

12. திருவாலுறவாலெழிலான்மகிழேல்
வருகாலமயின்றிடும்யாவையுமே
உருமாயையினுமூலமிதொருவா
அருமாபதமேயறிவாலுறவே.

அதாவது, செல்வத்தாலாயினும், புத்திரமித்திரகளத்திராதி பரிவாரஜனங்களாலாயினும், இளமையினாலாயி னும் கர்வமடையாதே. அவை யொன்றேனும் நிலையுள்ளனவல்ல. அவையனைத்தையும் காலமானது விழுங்கிவிடும். அதாவது காலவசத்தாலே அனைத்தும் அழிந்து போகும். ஆதலால், மாயாகாரியமாகிய இந்தப் பிரபஞ்சத்தை விவேகத்தினால் தெரிந்து நீக்கிச் சர்வ வியாபகமாகிய பரமாத்மஸ்வரூபத்தை விசா ரத்தினாலே யுணர்ந்து மோட்சானந்தத்தை யடைவாயாக.—என்றபடி.

கடைசியாக, ஆயுளானது வரவரக் குறுகின்றது. ஆசையானது நம்மை ஒருநாளும் அதற்கிணங்கும் வரையில் விடுவதில்லை. ஆதலின் இந்தச் சின்னாட் பலபிணிக்கிடனாகிய சிறுவாழ்வை வீணேபோக்கிக்கொள் ளாமல் ஆசைவேரகழ்ந்து பகவத் பத்திபண்ணி மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்கவென்று கூறுகின்றனர் அதெப்படி யென்னில்,—

13. "பகலாயிரவாய்ப்பனியாய்வெயிலாய்
வகையாவருமால்விளையாடிடல்போல்
நகுபோழ்ததுதானமதாயுள்செலும்
அகலாதொரவா வெனுமாசுகமே."

அதாவது, காலமானது பகலென்றும் இரவென்றும் பனியென்றும் வெயிலென்றும் பலபிரகாரமாகக் குழந் தைகள் விநோதமாக ராஜா மந்திரி முதலான வெறும் பெயர்களை வைத்துக்கொண்டு விளையாடுதல் போல மாறிமாறிவந்து விளையாடுகின்றது. ஆயுள் நாளுக்குநாள் செல்லுகின்றது. மேலேசொல்லிய காலஸ்வரூ பங்களைச் செவ்வையாக ஆராய்ந்து தெரிந்துகொண்டபோதிலும் காற்றைப்போல ஸ்வரூபமில்லாமல் எங் கும் வியாபிக்கும் துராசையானது மனிதர்களைவிட்டு ஒருநாளும் நீங்காது என்றபடி

ஆதலால், கோவிந்த நாமத்தையே பஜித்துக் கரையேறுவாய்:

"பஜகோவிந்தம், பஜகோவிந்தம், பஜகோவிந்தம் மூடமதே"
கோவிந்தனையே குறியாய் குறியாய்
கோவிந்தனையே குணனின்மதியாய்!

* * *

என்று ஸ்ரீமத் ஸங்கராசாரிய ஸ்வாமிகள் கருணை மிகுதியால் உய்யும்வழி உபதேசித்தருளினர்.

எஸ். முத்து ஐயர், பி. எ.



உ

ஸரஸ்வத்யை நம: சாரதாம்பாள் துணை.

# GODWARD HO!

'Follow me"—Christ. "Dare to be wise"—Socrates. "Dare, and the world always yields"—Thackery.

## கடவுளை வழிபடுமின்!

" ஞானங்கடந்தகடவுளைநாடுமின் "—திருமூலதேவர்.

### திருப்படை யெழுச்சி—THE SACRED MARCH.

பிரபஞ்சப்போர்—The Holy War.

(திருவாசகம்.)

I

ஞானவாளேந்துமையர் நாதப்பறைஅறைமின்;
[1]மானமாஏறுமையர் மதிவெண்குடைகவிமின்;
ஆனநீற்றுக்கவசம் அடையப்புகுமின்கள்;
வானவூர்கொள்வோ'நா' மாயப்படைவாராமே!

II

தொண்டர்கா[2]டுசிசெல்லீர்; பத்தர்காள் சூழப்போகீர்;
ஒண்டிறல் யோகிகளே, [3]பேரணி உந்தீர்கள்;
திண்டிறல் சித்தர்களே, [4]கடைக்கூழை சென்மின்கள்;
அண்டர்நாடாள்வோ'நாம்,அல்லற்படைவாராமே!

இந்தத் 'திருப்படை யெழுச்சி' யில் ஸ்ரீ. மணிவாசகப்பெருமானார் 'பிரபஞ்சப் போர்' புரியும் வகையைச் சொல்லி வற்புறுத்துகிறார். கடவுளைவழிபடப் பிரபஞ்சத்தோடு போர்புரிய வேண்டியதவசியமாதலின்,ஸ்வானுபவச் செல்வரும், ஆசாரியசிரேஷ்டருமாக விளங் கும் அவர் வார்த்தைகளையே இவ் 'ஆனந்தத்தாய்மொழி'க்கு முன்னுரையாக விளங்க எடுத் துக்கொண்டோம். மேற்கூறிய இருபாக்களின் கருத்து என்னவெனில்:—ஞானமாகிய வாளே ந்தி விளங்கும் குருநாதரின் கிருபாகடாக்ஷ சின்னமாகிய 'நாதத்தை'ப் பரிசுத்த ஹிருதயத்வாரா கிளப்புங்கள். இதுவே நாதப்பறை யறைவித்தலாம். பிரபஞ்சப்போர் புரிவதற்கு வேண்டிய முதல் முஸ்தீபு இது: குருகடாக்ஷமின்றி பிரபஞ்சத்தை யெதிர்த்து வெல்லல் முடியாது. 2-வது, 'மானமா' அதாவது 'வான்புரவி' அல்லது 'துரியப்பரி' யேறும் (துரியத்தில் தோன்றும்) பரமகுருவை யறியும் 'வெண்மதி' யாகிய (சுத்த ஸாத்விகக்) குடை நிழற்றுங்கள். இந்த "வெண்கொற்றக் குடை நீழ"லிலன்றி இறைவனும் அவர் வெளித்தோன்றார். (சுத்த ஸாத்விக மாம்) நல்லறிவு இன்றி உலகத்தை யெதிர்த்து வெல்லல் கூடாதானபடியால், 'வெண்குடை கவிக் கும்' இந்தச் சின்னமும் அவசியமாம். 3-வது, 'ஆனநீற்றுக்கவசம்'—அதாவது, இந்திரியங்களால்

1. மானமா—the same as 'வான்புரவி'—'துரியப்பரி'
2. தூசி—முன்னணிப்படை.
3. பெரும்படை வகுப்பைச் செலுத்துங்கள்.
4. பின்னணிப் படையாக.

போஷிக்கப்படும் காமக் குரோத லோப மோக மத மாச்சரியம்—ஆகிய, உட்பகைகள் ஆறையும், *ஷட்விகார, †ஷட்கோசங்களையும் ஞானத்தீயினால் பொசுக்கி நீறாக்கி, இப்படியான திருவெண்ணீற்றுப் பூச்சையே 'கவசமாக'—போர்க்களத்தில் வந்தெய்தும் ஆயுதங்களால் ஆபத் நேராதபடி காக்கும் வலிமைவாய்ந்த போர்வையாகக்கொண்டு, அதனால் உடம்பு முழுமையும் போர்த்துக்கொள்ளுங்கள். (சாம்பலாண்டி வெளி வேஷத்தினால் மட்டும் பிரயோஜனமில்லை.) இவ்வித முஸ்தீபுக்களோடு போர்புரியத் 'திருப்படையெழுச்சி' செய்வோமாயின், மாயமாகிய படைகள் வந்து நலியாமல் (மாரணையும்) வென்று, 'வானவூர்'—அதாவது தொகாயமாகிய முத்தியுலகைக் கைக்கொள்வோம்—இது திண்ணம். இப்படியாக, முத்தியுலகைக் கைக்கொள்ள, ஆயத்தமாய் நிற்கும் பக்தி வைராகிகளாம் போர்வீரர்களை இரண்டாவது பாட்டில் அணிவகுத்துச் செலுத்து முறை காட்டுகிறார்.

“மந்திரத்தில் மாங்காய்விழாது” என்று சொல்லும் உலகவழக்கைப்போல் 'தந்தனப் பாட்டினாலும் அஞ்சனக் கூத்தினாலும்' முத்திவீடு கிட்டாதாகையால், நமது சேனைகளை வெகு உஷாரோடும் பாரதூர யோசனையோடும் அணிவகுத்து முன்பின் ஒழுங்கு தவறித் தடுமாறாமலும், சைன்யபலம் வீணாகச் சிதைவுறாமலும், முறைப்படி சேனைகளைப்பழக்கிச் சரியாக அணிவகுத்துச் செலுத்தவேண்டும். அது எப்படியென்றால், சொல்கிறார் கேளுங்கள்:—'தொண்டர்காள் தூசி செல்லீர்'—தொண்டர்களே நீங்கள் முன்னணிப் படையாகச் செல்லுங்கள்.—அதாவது, தொண்டுசெய்தல், பரோபகாரம் செய்தல் (ஊருக்குழைத்தல்) முன்னணியாகச் செல்லல்வேண்டும்: தொண்டு செய்வாரைப்போல் தீரர்கள் வேறு யாருமில்லை. நிஷ்காம்யகர்மமே மோக்ஷசாதனங்கள் எல்லாவற்றிலும் தலையான முதற்படையாம். (நிஷ்காம்யகர்மம் செய்யாது 'முத்திநெறி யறியாத மூர்க்கர்' சொல்லுமாறு 'மூக்கைப்பிடித்து, நாக்கைப் பிடிங்கிக்கொண்டு' பிராணனை வதைப்பதால் பிரயோஜனம் இல்லை.) ஆகையால் இதையே உருவகப்படுத்தி, நிஷ்காம்ய கர்மிகளாம் தொண்டர்களை முன்னணியாகச் செல்ல வைத்தார். இப்பிரபஞ்சத்தில் நன்மையிலும் தீமையே மலிந்துகிடப்பதால் நிஷ்காம்யகர்மசிந்தை தன்மட்டில் உலக வாஞ்சையை யெதிர்த்து வெல்ல ஆற்றலாது. ஆகையால் அதற்குஉபபலமாக பக்தி வேண்டும். பகவானிடத்தில் பக்தியில்லாவிடில் எவ்வளவு தர்மசிந்தையுள்ளவர்களும் ஒவ்வோர் சமயத்தில் தம் நிலைகுலைந்து தடுமாறிப் போவார்கள். ஆகையால் பக்திநிறைந்த சிந்தை இந்த தர்மசிந்தைக்குப் பக்கபலமாக இருத்தல்வேண்டும். இதையுருவகப்படுத்தியே 'பத்தர்காள் சூழப்போகீர்' அதாவது சூழச்செல்லுங்கள் என்றார். இப்படி பக்திசிரத்தையால் வலுவேறின தர்மசிந்தையினால் செய்யப்பட்ட நிஷ்காம்ய கர்மங்களினால் உண்டாகித் திரண்டு நிறைந்தமனோசக்திகளைச் செலுத்தப் படைத்தலைவர் வேண்டும். இல்லையேல் சைனியம் சிதறுண்டு சின்னபின்னம் விளைக்கும். ஆகையால், ஏகாக்கிராந்த சக்தியால் ஒளிவிட்டுப்பிரகாசிக்கச் செய்யும் யோகசாதனங்களால் இவைகளையடக்கி ஒருவழிப்படுத்தப்பழக்கி நடத்தவேண்டுவதினவசியம்பற்றி “ஒண்டி

* ஆறுவிகாரங்கள்: இவை—பிறத்தல், இருத்தல், வளர்தல், திரிதல், குறுகுதல், நசித்தல்.—கருப்போபநிஷத்தும் வராகோபநிஷத் முதலத்தியாயமும்பார்க்க.

† ஆறுகோசங்கள்: இவை—தோல், உதிரம், மாம்சம், கொழுப்பு, ஊன், எலும்பு.—வராகோபநிஷத் முதலத்தியாயம் பார்க்க.



றல் யோகிகளே பேரணியுந்தீர்கள்”—அதாவது, ஒளிவலிபெற்ற யோகசாதன முறைகளால் பல்கிப்பெருகிய இம்மனோசக்திகளை ஒருவழிப் படுத்துங்கள், என்று சொல்லாமற் சொல்லுவான், 'யோகிகளே, இப்பெரும்படைவகுப்பைச் செலுத்துங்கள்' என்று உருவகமாக்க் கூறினார். இதனால் கைகூடும் சித்திகளைக் கண்டு மயங்கி, பிரபஞ்சப்போரில் இடையே கைசளைத்து நில்லாதபடி, பின்புறமாய் ஒருவரும் திருப்படையைத்தாக்காதபடி, அதாவது, வென்று விட்ட பகைவர்களால் இடையே சரீரத்துக்காவது மனதுக்காவது இடையூறு விளைந்து 'வெண்ணெய் திரண்டுவருகையில் தாழியுடைந்தாற்போல்' முத்தியுலகு சித்திக்குமுன்னே சரீரம் விழுந்து போகாமற் காத்துக்கொள்ள, இந்த சித்திகளைப் பின்னணிப்படையாகச் செல்லவைத்து, “திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்” என்றார். அதாவது சரீரமனோதிடன்களையளிக்கும் யோகசித்திகள் முத்திபெறுமுன் தேகம் விழுந்து போகாதபடி காப்பதற்குப் பினனணிப்படையாக, (ஜயித்தவிட்டநாடுகளிற் கலகம்நேராதபடி பார்த்துவர) “கடைக்கூழை சென்மின்கள்” என்று உருவகமரபால் மொழிந்தார்.

“தேகம் நானல்ல, மனம்நானல்ல” என்று துணிந்து விட்டவனுக்கு இவைகளைப்பாதுகாக்க சித்திகள் வேண்டுவதேன் என்றால், முத்திபெற்றுய்யும் வரையில் பரிசுத்தமான தேகமனோசாதனம் அவசியமாம். “பண்டுமுளைப்பதரிசியே யானாலும் விண்டுமி போனால் முளையாதாம்” என்றார்; அதுபோல், ஆத்மா தன்னாலேயே தன்னையறிந்துய்வது நிஜமானாலும், மனதாலுண்டான பிரபஞ்சத்தை மனதைக்கொண்டேதான் நீக்கிவெல்லுதல்வேண்டும். தேகதிடனில்லாவிட்டால் மனோதிடனில்லையாலும், மனோதிடனில்லாவிடத்து தேகதிடனில்லையாலும், மனதும் தேகமும் இரண்டாகவின்றி ஒளியும் விளக்கும்போல் ஒன்றுபட்டிருப்பதாலும் அவற்றை முறையே பரிசுத்தமாகவைத்துக்காப்பாற்ற வேண்டியதவசியமே. “ஜீவன்முத்திபெற்றுச் சகத்தோடிருந்தாலும்” விதேகமுத்தியடையும் வரையில் தேகமனோபரிசுத்தம் அவசியமே. அப்படிக்கின்றி ஏதேனும் மாசுமறுவுண்டானால், ஆத்மப்பிரகாசம் மங்கிவிடும். ஆத்மதரிசனமுண்டாகி ஸ்வரூபானந்தப்ராப்தி பெற்றவர்கள், இமைப்பொழுதும் அவ்வாத்மப்பிரகாசங் குறையக்காணப் பொறுக்கார். ஜாக்ர, ஸ்வப்ன, சுழுத்தியாதியெல்லா அவஸ்தைகளிலும் அவர் 'தெரியவரிய பரஞ்சோதி' வெளியிலே தங்கியிருக்க விரும்புவார். இதற்கு உதாரணமாக, நம் கண்ணின் கருமணியிலும் மேலான குருமணியாம் ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் தாம் தடுத்தாட்கொள்ளப்பட்டுத் திருத்தொண்டராய் வெகுகாலம் உழைத்துத்தில்லையடைந்து ஓய்ந்தொழிந்துட்கார்ந்து கனகசபைமுன் நடராஜாதரிசனமும், அவர் துதியும், தியானமும், சதாநிஷ்டையுமன்றி வேறு சிந்தனையின்றியிருந்தபோதுங்கூட 'விதேகமுத்தி'யை விரும்பிப் பின்வருமாறு அழுதரற்றி “ஆனந்தமாலை”பாடி என்னையனுக்கு, அத்தனுக்கு அண்ணனுக்கு, 'தாயாய்வந்து முலையைத்தந்து' தாரமாய்வந்தெனையன்பாலாண்டு, தரையில்விட்டு விளையாட்டுக்காட்டித் தனையராய்நின்று வேடிக்கை பார்க்குமென் கண்மணிக்குக், காதலிக்கு ஆர்வ நிறைந்த அன்பளுக்கு, ஆதித்தாயாம் ஆனந்தவல்லிக்கு,—தர்மாம்பிகை, தர்மஸம்வர்த்தனி, திரிபுரசுந்தரி, லோகநாயகியெனப் பலநாமங்களா லென்னுள்ளத்துறைந்து விளங்குப் பரதேவதைக்கு, என்னம்மணிக்கு, ஈசுவரிக்கு,—அடியேன் படுந்துயர்பொறுக்காது ஏழைக்கிரங்கி தேசிக மூர்த்தியாய்வந்தாறுதல் ஏழைமுகம்பார்த்தெனையழைத்து ஸ்ரீ அகண்டானந்தவெலக்கூறிய

கூறி, யோகமுறையோதி நாதமுடிவெய்தச்செய்த, நாதாந்த வேதாந்த போதாந்தப்பரம் பொருளுக்கர்ப்பணஞ் செய்தார். அதையுமிதன்பின்னே வரைந்துளோம். ஆகையால், உலகத்தார் பேய்வாழ்வைநம்பிப் பெருவாழ்வையிழந்துபழிக்காது இல்லறத்திருந்தபடிநல்லறஞ்செய்து அகத்தூய்மையெய்தி, ஆர்வநிறைந்து, உண்மைவழிப்பட்டு உலகுக்குபகாரஞ்செய்துய்யுமாறு

கடவுளை வழிபடுமின்! கடவுளை வழிபடுமின்! கடவுளை வழிபடுமின்!

—என்றென்றுய்த் திருவருள் நோக்கால் அவள் நாதப்பறை யறைந்ததைக்கேட்டு, உலகுக் கிதைவெளியிட்டேன், வெளியிட்டேன்! ஈதவளாணை! வேறொருநோக்கமுங் கொண்டிலேன். இது ஸத்யம், ஸத்யம், முக்காலும் எக்காலும் ஸத்யம். ஓம் தத்ஸத்.

"பால்நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினையுருக்கி உள்ளொளிபெருக்கி
[1]உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே."

"புன்புலால்யாக்கை புரைபுரைகனியப்
பொன்னெடுங் கோயிலாப்புகுந்தென்
என்பெலாமுருக்கி எளியையாய்ஆண்ட
ஈசனே மாசிலாமணியே
துன்பமேபிறப்பே இறப்பொடுமயக்காம்
[3]தொடக்கெலா மறுத்தநற்சோதி
இன்பமேயுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே."

1. கெடுதலில்லாத.

2. உட்டுளைகள் தோறும் கனிய.
3. பற்றுக்களெல்லாவற்றையும் அறுத்தருளின.

"ஸத்யம்வத."

# சத்தியானந்த சபை.

ஓம் தத் ஸத்.

ஆனந்த நடேசாய நமஃ

நடேச, நடேசா னந்தநடேச!
அநாதரக்ஷக, ஆபத்பாந்தவ!
இன்னுயிர்த்தோழ, இன்பருள்நாத!
சின்மயானந்த, சிவகாமிநேச!
குருமூர்த்தசுந்தர, குஞ்சிதபாத!
சடைவிரிகோல, சாம்பவிநாத!
அம்பிகைபங்க, அன்பர்க்கன்ப!
என்பேயுருக, அன்பருள்நாத!
அன்பேயளித் தெனையாட்கொள்ளீச!
அபயம், அபயம்! ஆண்டவ அபயம்!
தாண்டவ அபயம்! தனிமுதல் அபயம்!
தயாநிதி அபயம்! தாயுமே அபயம்!
ஜயஜய அபயம்!அபயம் ஜயஜய!



# ஜயபேரிகை முழக்கம்.

## சபாபதி நடனம்.

"இதந்தருமடந்தை யொடிசைந்து யிருடம்புபோல்
விதம்படுலகங்களின் விரிந்தொளிரி விளங்குவார்
மதங்கமொடுதுந்துமி விளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழலிறைஞ்சுவாம்."
(தத்துவராயர்பாடல்துறை.)

### காளம்.

1. அன்னியமில்லையென் றூதேடாகாளம்
ஆனந்தமானேமென் றூதேடாகாளம்
தன்னுசுடரேயென் றூதேடாகாளம்
சோதியுட்சோதியென் றூதேடாகாளம்.

2. பிறவிகழிந்ததென் றூதேடாகாளம்
பேதைமைதீர்ந்ததென் றூதேடாகாளம்
அறிவேவடிவென் றூதேடாகாளம்
அறியாமைபோனதென் றூதேடாகாளம்.

3. கோசங்குலைந்ததென் றூதேடாகாளம்
கூறறிவானதென் றூதேடாகாளம்
பாசம்பறந்ததென் றூதேடாகாளம்
பரமேபரமமென் றூதேடாகாளம்.

4. பற்றற்றுநின்றேமென் றூதேடாகாளம்
பார்ப்பறப்பார்த்தோமென் றூதேடாகாளம்
முற்றவுணர்வென் றூதேடாகாளம்
உள்ளொளியானேமென் றூதேடாகாளம்.

5. உள்ளதுபோதமென் றூதேடாகாளம்
உலகம்ஒக்காளமென் றூதேடாகாளம்
வெள்ளவெளியீதென் றூதேடாகாளம்
வேதஞ்சொன்னவண்ண மூதேடாகாளம்.

6. ஊனேமறிவதென் றூதேடாகாளம்
உணர்வேபிரமமென் றூதேடாகாளம்
நானேயவனுமென் றூதேடாகாளம்
நானுவதில்லையென் றூதேடாகாளம்.

7. உண்மைவடிவேயென் றூதேடாகாளம்
உட்புறம்பில்லையென் றூதேடாகாளம்
திண்மையறிவேயென் றூதேடாகாளம்
திசைதிசைதோறுநின் றூதேடாகாளம்.

8. சாதிகழிந்ததென் றூதேடாகாளம்
சங்கைதவிர்ந்ததென் றூதேடாகாளம்
சோதிசுகமேயென் றூதேடாகாளம்
சொல்லவொண்ணாததென் றூதேடாகாளம்.

### ஊர்.

1. நான்முகனுக் கிடமானவூர் எங்களூர்
நான்மறையுந்துதி செய்யுமூர் எங்களூர்
தேவுக்குந்தேவாய் இருக்குமூர் எங்களூர்
தேவர்களன்றித் திரியுமூர் எங்களூர்.

2. தோற்றரவாகத் துணிந்தவூர் எங்களூர்
சோகமோகங்கள் துறந்தவூர் எங்களூர்
ஆற்றலுடையார்க் கடைந்தவூர் எங்களூர்
ஆனந்தமாயே இருக்குமூர் எங்களூர்.

3. காமக்குரோதங் கழிந்தவூர் எங்களூர்
கல்விக்கடலைக் கழிந்தவூர் எங்களூர்
நாமரூபங்கள் தவிர்ந்தவூர் எங்களூர்
ஞானமேயாக நவின்றவூர் எங்களூர்.

4. அறிவிட்டறியாமை போக்குமூர் எங்களூர்
அன்னியமொன்று மிலாதவூர் எங்களூர்
குறியிட்டிதென்ன வொண்ணாதவூர் எங்களூர்
கோசங்களைந்துங் குலைந்தவூர் எங்களூர்.

5. புத்திவிகற்ப மறுக்குமூர் எங்களூர்
பூரணபோதமே யானவூர் எங்களூர்
வித்தும்விளைவு மிலாதவூர் எங்களூர்
விண்முதற்பூதம் விளைந்தவூர் எங்களூர்.

6. எட்டுத்திசையு நிறைந்தவூர் எங்களூர்
ஏகாந்தமாகி யிருக்குமூர் எங்களூர்
தட்டற்றயோகிகள் தங்குமூர் எங்களூர்
தன்மபாவங்கள் தவிர்ந்தவூர் எங்களூர்.

7. உலகத்தையெல்லா மொறுக்குமூர் எங்களூர்
உண்மையொன்றாகி யொன்றானவூர் எங்களூர்
சிலுகற்ற சிற்பரமானவூர் எங்களூர்
சிந்தனைவிட்டுத் தெளிந்தவூர் எங்களூர்.

8. உன்னப்படாவுணர்வானவூர் எங்களூர்
உள்ளொளியாகியிருக்குமூர் எங்களூர்
கண்ணுக்கணித்தாயிருக்குமூர் எங்களூர்
கள்ளப்புலனைக்கழித்தவூர் எங்களூர்.

9. கத்தஞ்சிலுகு மிலாதவூர் எங்களூர்
காண்டாலுங்காட்சியுமற்றவூர் எங்களூர்
சுத்தவெளியிலே தோன்றுமூர் எங்களூர்
சோம்பர்சுகமென் றுணர்ந்தவூர் எங்களூர்.

ஓம் தத் ஸத்.

உ

கடவுளை வழிபடுமின்!

## ஆனந்தமாலை—THE GARLAND OF RAPTURE.

(திருவாசகம்)

என்னாலறியாப் பதந்தந்தாய்,
யான் அதறியா தேகெட்டேன்;
உன்னாலொன்றுங் குறைவில்லை,
உடையாய், அடிமைக் காரென்பேன்.
பன்னாளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தெந்நாயகமே! பிற்பட்டிங்
கிருந்தேன்நோய்க்கு விருந்தாயே!

சீலமின்றி நோன்பின்றிச்
செறிவேயின்றி அறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்றுவிழுந்து கிடப்பேனை
* மாலுங்காட்டி வழிகாட்டி
† வாராஉலக நெறியேற
கோலங்காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே!

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்,
கேடிலாதாய் பழிகொண்டாய்;
படுவேன் படுவதெல்லாநான்
பட்டாற் பின்னைப் பயனென்னே?
கொடுமா நரகத்தழுந்தாமே
காத்தாட்கொள்ளுங் குருமணியே!
நடுவாய்நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கணாயகமே?

தாயாய் முலையைத் தருவானே!
தாராதொழிந்தாற் சவலையாய்
நாயேன்கழிந்து போவேனோ?
நம்பி! இனித்தானல்குதியே.
தாயே என்றுன்றாள் அடைந்தேன்
தயாநீ என்பாலில்லையே
‡ நாயேனடிமை யுடனாக
ஆண்டாய் நான்றான் வேண்டாவோ?

கோவே! அருள வேண்டாவோ?
கொடியேன் கெடவே அமையுமே,
ஆவா என்னாவிடில் என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்?
சாவார் எல்லாம் என்னளவோ?
தக்க வாறன் றென்னாரோ?
தேவே! தில்லை நடமாடீ!
திகைத்தேன் இனித்தான்தேற்றாயே!

நரியைக் குதிரைப் பரியாக்கி,
ஞாலமெல்லா நிகழ்வித்து,
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
§ பிச்சதேற்றும் பெருந்துறையாய்!
அரியபொருளே! அவநாசி
அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரியவரிய பரஞ்சோதி!
செய்வதொன்றும் அறியேனே!

### அத்தனருள்—The Father's Converting Grace

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம் $
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே!—திருவாசகம்.

* மால்—பெருமை, விருப்பம். † மீளாவுலகில் முறையே ஏற.

‡ நாயேன் அடிமைத்திறம் உடனே நிகழும்படி ஆண்டருளினை, அடிமைத்திறமேயன்றி அடி[யேன்] வேண்டாவோ? § பித்தேறச் செய்யும். $ விட்டோடும்படி.



# FORE-WORD.

IN one of the numerous clusters of villages that go to make up this straggling city of Madras, there lived a remarkable lady, one of that rare and ancient type of Aryan womanhood, who by her own efforts had lifted herself up above the troubles and turmoils of this mundane life. Twenty years ago when the present writer first came to Madras fresh from college full of faith and hope, his mind cherishing high ideals of life, he felt a natural attraction which has continued to the last, for this great lady, now of blessed memory, who by her calmness, intelligence and unlimited capacity for happiness under all and every circumstance of life, not excepting death itself, has shed a lustre on his life and silently influenced it to an extent, little known or suspected by the world. Long and various were the the discussions the writer held with her on diverse topics—from female education to widow-marriage and the philosophy of sex to the *summum bonum* of life itself. On all these subjects she was ready to speak, to discuss, to persuade if need be, but her talks were more oracular than argumentative; she seemed to look at things direct and speak, as if she has seen them through to the end. She spoke the truth always and at any cost and had in her the artlessness and simplicity of a child; so that it was always a pleasure to sit by and hear her talk on things mundane and celestial or the problems concerning the life beyond.

At that stage of development of the writer it was impossible for him to understand fully the noble and perfect character of her unique personality: but later on he had the rare good fortune to sit at her feet as a true disciple and imbibe spiritual truths from her, which as they were truly received and assimilated began to fructify and produce results that wholly changed his life, and opened before his wondering gaze, scenes and visions of a noble and perfect life that our ancient Rishis have rapturously sung in so many rhapsodies which we call *Upanishads.*

At this crisis in our national career, at a time when the contending forces of two great civilizations seem to rend asunder all old ideals and established ways of social and religious progress, She that "long ago reconciled the two worlds and has made them one" seemed to have come (to him) as an *avatar* of the great and all existing One in female form clothed, to set at rest the contending forces by setting them in *right* relationship to each other, and make them work in harmony as complements of one another,—working together for the strengthening of each other and uplifting of humanity as a whole;—instead of each striving against and weakening the other and destroying the eternal spiritual ideal, by clinging to which alone can humanity ever hope to rise to its destined goal—the ultimate realisation of the Universal Principle and oneness of life, which is *Life Eternal.*

In the language of "New Science"* this great soul that has realised the eternal Oneness of all that exist as "*Akhandakaram*" was, as it were, an embodiment of "the anabolic or constructive element" as the old "feminine creative maternal principle" is called. Her mission in life seemed to be to construct, to unify, to harmonise. And this she had done splendidly in her own life; and by her simple yet grand teaching of Truth Absolute in such a way as to make it a living reality to herself and to those who sat at her feet as *true chelas,* she has helped others to reconstruct their life in complete harmony with the Universe and so revivify it with the *light* of Truth as to attain for themselves that great spiritual blessing which is beautifully called "Re-birth" or "Regeneration."

Her teachings partook more of the nature of effusions than studied sermons. She was truly and in every sense a Mother, a divine and holy Mother to those who sat at her feet with pure hearts and parched up souls that panted after the holy river of Truth. And her method of teaching the Truth, Oh! it was simply perfect and natural. Her language and illustrations were simple and homely, though necessarily symbolical. Mystery and mysteriousness she ever denounced, and freely and openly spoke the truth to all that came to her, so much so that her frank & open nature combined with the sublime truths that fell from her lips, made her liable to be easily misunderstood by many; and as she ever dwelt on her own high altitude of spiritual perfection caring nought for praise or blame of men, except to help seekers after Truth and that only those who sought it in right earnest, she had more than her share of obloquy, ridicule and what not, and enjoyed the reputation of being the best abused and most misunderstood person of her time. But these were nothing to her. She was *ever at one* with her Maker—"*Akhandakaram*" as she would say; and the "Bliss of indivisible Union"—"*Akhandanandam*"—was hers to the last. She used often to say that the Vedanta

* *Vide* article on "The Eternal Motherhood" by Mrs Frances Swiney, published in the "East & West" for November 1902, (Bombay.) Also, *The Evolution of Sex,* Geddes & Thomson, p. 26.

philosophy had come to be in bad repute with many good souls, because its teachers adopted the old harsh method of trying the young and inexperienced soul that came seeking after Truth, with a stern, severe, and ascetic discipline, from which all but the most hardened souls cannot but shrink away as impossible to bear; thus spreading the false notion that Truth is unreachable by the ordinary man who has perforce to live in the world and follow some profession for his livelihood, though he has cut himself off from the shackles of the world in his heart of hearts. She preached "purity of heart" and nobility of aspiration to reach the highest truth,—nothing short of Truth absolute,—as the two essential requisites for realising the higher life; and provided a man or woman has in his or her evolution of life attained to this stage, he or she need not give up family life or following a profession merely as a means of livelihood. On the other hand, a truly aspiring soul and reflecting mind will make use of these experiences of every day life to build up a true and noble character based on the essential truth of things and not their apparent reality. She used often to insist on the necessity of stricter observance of the great and universal principle of teaching, *viz.*,—"that children should be taught by love and kindness and not by fear and rudeness." And she regularly followed it in teaching the highest truth to *her* children, who though they were men of note and official or social position in the world—some of them being distinguished University graduates of standing—were yet to her but *children*; and a happy *Kindergarten* it was where these learned to imbibe gradually the highest truth, by living the life, under the watchful guidance of a true Mother's loving care. It was indeed a life of paradise to the few that were intimately attached to her—not as '*Guru-Shishya*', she ever discarded this idea as smelling of old-world harshness and wanton asceticism;—but as—Mother and child—a true spiritual bond, that her dropping the flesh has only strengthened the more.

An exposition or effusion as you please, of Her teachings to one of Her children, as realised by him in actual experience, is now presented to all ripe souls and real lovers of Truth, with the thrilling *Voice* that suddenly broke on his ears and made his heartstrings vibrate, still ringing within him—"GODWARD HO!"

In the title chosen to designate this effusion of grace,—"The Gospel of the Holy Mother",—"the Holy Mother" represents more "the anabolic principle" of Eternal Motherhood than anything of It in name or form. Of the nine sections into which the book is divided, all but the last were read to and approved of by Her while She was still in the flesh; and the last bears the *imprimatur* of Her divine grace and blessing to Her child, which however it may appear to the worldly-minded, is intensely real to the spiritually "thirsty and hungry" soul that panteth after God, "as the hart panteth after the brook." The universality of this spirtual experiece will be evident from what Professor James of the Harvard University quotes in his masterly volume of Gifford Lectures on Natural Religion entitled "The Varieties of Religious Experience:"—* "The influence of the Holy Spirit exquisitely called the Comforter, is a matter of actual experience, as solid a reality as that of electro-magnetism." †—adding his own opinion that it "*is literally and objectively true as far as it goes.*"

ANANDA MISSION,
Anandashrama, Triplicane,
*Vijayadasami*, 1st *Octr.*, 1903.

S. S.

* See p. 515, and footnote. † W. C. Brownell in *Scribner's Magazine.*, vol. xxx. p. 112.

## திருமூலதேவர் திருமந்திரம்.

"அஞ்சுமடக்கடக் கென்பாறிவிலார்
அஞ்சுமடக்கு மமாருமங்கில்லை
அஞ்சுமடக்கி லசேதனமாமென்றிட்
டஞ்சுமடக்கா அறிவறிந்தேனே."

"பெருக்கப்பிதற்றிலென்பேய்த்தேர்நினைந்தென்
விரித்தபொருட்கெல்லாம்வித்தாவதுள்ளம்
பெருக்கிற்பெருக்குஞ் சுருக்கிற்சுருக்கு
த்தமு மத்தனை யாய்ந்துகொள்வார்க்கே."

"கைவிடலாவ தொன்றில்லை கருத்தினு
ளெய்தியவனை யிசையினுலேத்துமின்
ஐவருடைய அவாவினிற் றூன்றியே
பொய்வருடைய புலன்களுமைந்தே."

"ஆனசமயமதுவிது நன்றெனு
மாயமனிதர் மயக்கமது வொழி
கானங்கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த உருவது வாமே."



## *விவேகரஸத்தாலாட்டு.

### சங்கராபரணம். ஆதிதாளம்.

1. வாவாவென் வாழ்வரசே
மங்களமாய் வாவாவா
தேவாதி தேவனருள்
செய்திடுவார் வாவாவா.

2. மாலாம் வறுமையினுல்
வருத்தம்வந்த நாளையிலே
பாலோடு தேனமுதம்
பருகவைத்த பாக்கியமோ.

3. செய்யாத் தபசுசெய்து
தீர்த்தமெதுஞ் சென்றுடிக்
கையேந்தி நின்றதற்குக்
கடவுள்தந்த கற்பகமோ.

4. சிறந்ததொரு வானதிலே
தேசளிக்குஞ் சந்திரனே
பிறந்தகுடி காத்தெனக்குப்
பேறளித்த நாயகமோ.

5. வண்டாடும் பூவோ
மலரிலுள்ள வாசனையோ
கொண்டாடும் பூவரும்போ
கோலமிகும் நற்கரும்போ.

6. தேனே திரவியமோ
தெள்ளமுதச் செஞ்சுவையோ
வானுகி யென்றனக்கு
வாழ்வளித்த மாதவமோ.

7. கற்றகல்வி யன்புருவாய்க்
கனிந்துநின்ற காட்சியிலே
பெற்றதொரு பூங்குருந்தோ
பிணியறுக்கும் நன்மருந்தோ.

8. அள்ளியிட்ட பொன்னினுக்கும்
அடியிலிட்ட பூவினுக்கும்
பிள்ளைமிடி தீர்க்கவந்த
பேரின்ப நாயகமோ.

9. பாலாறுந் தேனாறும்
பாய்ந்தொழுகும் வேளையிலே
மேலான சீனியது
மிகக்கலந்த நல்ரஸமோ.

10. மதியூக மந்திரியாய்
வல்லவர்க்கும் வல்லவராய்
அதிகுண சுந்தரராய்
ஆளவந்தார் பேரரசோ.

11. பொற்றென்ற அன்பினிலே
பூட்டியென்னை மாலையிட்டுக்
கற்பினொடு கன்னிமையுங்
கையேற்றூர் பேரரசோ.

12. அறங்கிடந்த தொட்டிலிலே
ஆய்ந்தறிந்து காணீட்டி
உறங்கியிடும் முன்னுலே
ஓர்வசனஞ் சொல்வதுகேள்.

13. முன்னடையைச் சொல்வதுகேண்
முறையாக நீநடக்க
என்னடையைச் சொல்வதுகேள்
இசைவாக நீநடக்க

14. மாமதுரைப் பட்டணத்தே
மாட்சியுள்ளா ளுன்பாட்டி
நாமமுடன் பெண்களிலே
நாயகமாய் வாழ்ந்திருந்தாள்.

15. வன்பான மார்க்கமெதும்
மனம்பதிய வொட்டாமல்
அன்பா யெனைவளர்த்தாள்
ஆதரவா யுன்பாட்டி.

* Reprinted from the *Vivekachintamani*, Vol III No. 1, for may 1894

16. கூட்டிவைத்து நற்குணமாய்க்
கொண்டாடி யாசையொடு
பாட்டும் படிப்புகளும்
பலகுணமுஞ் சொல்லிவைத்தாள்.

17. பொய்களவு நானறியேன்
பொல்லாப்பு நானறியேன்
மெய்குளிரும் வார்த்தையெல்லால்
வேறறியே னென்னரசே.

18. பாலோடு தேனாய்ப்
பரந்தினிக்கு மென்வார்த்தை
மேலோர்சொல் வார்த்தையெல்லாம்
வேதமென்று கொண்டேனான்.

19. தப்பின்றி யாவருக்குந்
தாபரமாய் நானடந்தேன்
உப்பிட்டா ரானாலும்
உள்ளளவும் நான்மறக்கேன்.

20. குதிரைக் கொருகாதம்
கொம்பினத்துக் கைங்காதம்
எதிர்பேசும் பெண்களுக்கோ
எட்டுலக்ஷங் காதமம்மா.

21. நற்குணரைக் கண்டாக்கால்
நமஸ்காரஞ் செய்திடுவேன்
துற்குணரைக் கண்டாக்கால்
தூரப்போ மென்கால்கள்.

22. உலகமெல்லா மென்வீடாம்
உடன்பிறப்போ வெவ்வெவரும்
கலகநிலை யேதுமில்லை
கருணைநிலை யென்றனிலே.

23. கண்போ லெனைவளர்த்துக்
காதல்வைத்த நாளையிலே
பெண்பேச வந்தார்கள்
பிரியமுட னுன்றனையா.

24. ஊரெல்லாஞ் சம்மதிக்கும்
உத்தமியாள் வேணுமென்றார்
பாரெல்லாஞ் சம்மதிக்கும்
பதிவிரதை வேணுமென்றார்.

25. சத்தியத்தி னாயகமாய்க்
தயவுதனிற் சாகரமாய்ப்
புத்தியுத்தி யுள்ளதொரு [றார்.
பொற்கொடியாள் வேணுமென்

26. வீட்டினுக்கு நல்விளக்கு
வெளிதனக்கு மாபரணம்
நாட்டிலுள்ள பெண்களுக்கு
நாயகந்தான் வேணுமென்றார்.

27. பொற்பிருந்தும் பூணிருந்தும்
போற்றுசுகந் தானிருந்தும்
கற்புநல மில்லாப்பெண்
காட்டுப்பே யாகுமென்றார்.

28. காட்டுக் குடித்தனமாய்க்
கனவறுமைப் பட்டாலும்
பாட்டும் படிப்புகளும்
பலகுணமும் வேணுமென்றார்.

29. ஆட்சியில்லை யானாலும்
அழகில்லை யானாலும்
மாட்சிபெற்ற வார்த்தையொடு
மதியூகம் வேணுமென்றார்.

30. வட்டிவட்டி யாய்ப்பொருள்தான்
வளம்பெருகி வந்தாலும்
செட்டுமட்டு மாய்த்தனத்தைச்
செலவுசெய்ய வேணுமென்றார்.

31. வையகத்திற் கேவலமாய்
மாட்சியற்று நின்றாலும்
கையிறுக்க மாதுசொர்ணக்
களஞ்சியந்தா னென்றுரைத்தார்

32. வரிசையொடு தன்வீட்டில்
வாழ்ந்திடும்பெண் ணானாலும்
புருஷனே தெய்வமென்றார்
போற்றியிடும் பெண்மணிக்கு.

33. கொள்ளைகொள்ளை யாய்க்கொணரக்
குவியலில்லை யானாலும்
பிள்ளைகளைத் தான்வளர்க்கும்
பேரறிவு போதுமென்றார்.



34. மதலைகளைப் பார்க்கவைத்து
வன்புதுன்பு சொன்னாக்கால்
பதங்குலைந்து பின்வாழ்வு
பாழாகு மென்றறிந்து,

35. வாக்கடக்கிச் செய்கையொடு
மனசினையுந் தானடக்கித்
தாக்கியிடும் நற்கவனந்
தாபரிக்க வேணுமென்றார்.

36. வாலிபமுங் காயிதமும்
வாய்ந்தவுருக் காட்டுமென்று
மேலறிவாய்த் தான்வளர்க்க
வேணுமிக்க கல்வியென்றார்.

37. பணிவாகத் தெண்டனிட்டுப்
பர்த்தாவைப் பேணுமுறை
அணியாகக் கொண்டபெண்ணே
ஆசையென்றார் வேணுமென்றார்.

38. அளிகொண்ட மாலையிட்ட
அன்புடைய நாயகனார்
வெளிவேலை தீர்ந்தபின்பு
வீட்டில்வரும் வேளையிலே,

39. மதியிலே மந்திரியும்
மனத்தயவில் மாதாவும்
மதிபோற் குளிர்முகமும்
வார்த்தையிலே சீனியுமாய்,

40. வணங்கியுப சாரமுடன்
வந்தேற்றுக் கைகொடுத்தும்
இணங்கியிடும் வார்த்தைகளால்
இயல்புகளைத் தானறிந்தும்,

41. மாறாத் துயரமெல்லாம்
மாற்றிமண வாளனவன்
ஆறாத் துக்கமெல்லாம்
ஆற்றுமின்னாள் வேணுமென்றார்.

42. வெறிகொள்ள வீட்டினிலே
விபரீதம் மெத்தவரும்
பொறுமைநிலை பெண்மணிக்குப்
போற்றிய சிங்காசனமாம்,

43. பானைசுசி சட்டிசுசி
பாத்திரங்கள் வீடுசுசி
ஆனதொரு தன்றேகம்
அளவில்லா நல்லசுசி,

44. அத்தையார் பெற்றதள்ளை
அம்மானார் தன்றகப்பன்
பர்த்தாவி னுற்றோர்தன்
பந்துவென வெண்ணுமனம்,

45. உள்ளதொரு பெண்வேணும்
உள்ளதெல்லாந் தோற்றாலும்
கொள்ளுவது மேலுரைத்த [ர்.
குலக்கொடியே யென்றுரைத்தா

46. காட்டிற் பிணம்பிடுங்கிக்
கவளமிடும் பேய்களிலும்
வீட்டிலே சிற்சிலபேய்
வீம்பதிகஞ் செய்யுமென்றார்.

47. மறுநாட்டங் கொண்டுழைத்து
மாப்பிள்ளையை மாறடிச்
சிறுதேட்டந் தேடுகின்ற
ஜெகவஞ்சப் பேய்கள்சில.

48. அண்டையயற் சண்டைகளை
யாதரித்து மூட்டிவிட்டுக்
கொண்டைபிடி பார்த்துநிற்கும்
குண்டுணிப்பேய் சிற்சிலவே.

49. பானாற்றம் மாறாப்
பசலைகட்கு முன்னிருந்து
கானீட்டி வண்புதுன்பு
கற்கவைக்கும் பேய்கள்சில.

50. வக்கீல்கள் தோற்றிடவே
வாதமிட்டு மாப்பிள்ளையைச்
சக்கிலியக் கூத்தாட்டுஞ்
சகசண்டிப் பேய்கள்சில.

51. பூபார மாயிருந்து
பொன்பூட்டச் சண்டையிடும்
ஆபரணப் பேய்கள்சில
அதிமோசப் பேய்களிவை.

52. தாபரித்துப் பேய்களெல்லாம்
சார்ந்துமணஞ் செய்தாலும்
ஆபரணப் பேய்வேண்டாம்
அதுவேண்டாமென் றுரைத்தார்.

53. கடியநடை தானடந்துங்
கால்வலித்தும் வேறெவரும்
பிடியாம லென்னைவந்து
பேசிமணஞ் செய்தார்கள்.

54. நடையுடையும் பார்த்தார்கள்
நன்மதியும் பார்த்தார்கள்
தடையுண்டோ வென்றெனது
சகவாசம் பார்த்தார்கள்.

55. எல்லா மிசைவா
யிருக்குதென்று சம்மதமாய்
உல்லாச நெஞ்சுடனே
உன்றனையா கொண்டார்கள்.

56. என்குணத்தை நான்றுதித்தால்
இசைவா யிருக்காது
தன்குணத்தி னற்சாக்ஷி
ஜெகத்திலுள்ள மெய்க்கீர்த்தி.

57. ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண்மணியே
நீதியொடு நற்குணமும்
நீபெரிதா யெண்ணிநிற்பாய்.

58. இணையில்லா விவ்வுயிர்தான்
இவ்வுடலை விட்டாலும்
குணமே பெரியதென்று
கொண்டுநீ வாழ்ந்திடுவாய்.

59. தள்ளைநடை போனடப்பாய்
தக்கபேர் நீயெடுப்பாய்
பிள்ளையென்னும் பக்குவத்தே
பெருங்கீர்த்தி நீபடைப்பாய்.

60. வாலிபந்தா னென்றுசொல்லி
மாசுமறு செய்யாதே
பாலியந்தா னென்றுசொல்லிப்
பழிபழுது செய்யாதே.

61. பிஞ்சில் விளைவதுவே
பெரியமர மானபின்பும்
மிஞ்சிநிற்கும் வாசனையை
வேறுக்கக் கூடியதோ.

62. மட்டில்லா வுண்மையிது
மனதுதனில் நீதரிப்பாய்
தொட்டிற் பழக்கமதே
சுடுகாடு மட்டுமம்மா.

63. இதற்கோர் கதையுரைப்பேன்
இன்பமொடு கேட்டிடுவாய்:
பதியொன்று, பெண்ணொருத்தி,
பாங்காங் குழந்தையொன்று;

64. பழுதகன்ற வவ்வூரிற்
பாங்கான தோட்டமொன்று;
வழுதுணங்காய்த் தோட்டமதில்
வாலிபனும் போயிருப்பான்.

65. ஓயாத வாசையினால்
ஒருகாய் களவுசெய்தான்
தாயாரிடங் கொடுத்தான்
தன்செயலுந் தானுரைத்தான்.

66. பிள்ளைதிற முள்ளதென்று
பெருமகிழ்ச்சி கொண்டனைத்தா[ள்]
தள்ளைமதி கேடலவோ
தன்சிசுவைக் கொல்லுவதும்.

67. இரண்டுகா யாச்சுபின்னும்
எட்டுபத்து நூறுச்சு
மருண்டுநிற்குந் தீக்குணத்தை
மாற்றியிடக் கூடியதோ.

68. தள்ளை யிதுவிதமாய்த்
தன்மகனைத் தான்வளர்த்துப்
பள்ளியினில் வைத்திடவே
பாலன் படித்துவந்தான்.

69. கற்றான் பலதுறையுங்
கணக்குதனிற் றேர்ச்சிமிகப்
பெற்றா னரண்மனையில்
பெருங்கணக்கன் றன்னலுவல்.



70. பெருமை யருமைமிகப்[illegible]
பிரதாபந் தானுமிக,
அரியதொரு சங்கதிதான்
அங்கே நடந்ததப்போ.

71. ராஜாத்தி, யாபேர்க்கும்
ஏற்றமுற்ற ராமாபாய்,
தேசார்ந்த பூங்கொடியாள்,
தேன்பழித்த நன்மொழியாள்,

72. நாளொன்றி னீராடி
நன்று யலங்கரித்து
மாளிகைக்குத் தான்றிரும்பி
வந்தாள் மனஞ்சலித்தாள்.

73. உத்தமியும் நீராட
வுத்தேச மாய்மறந்து
வைத்துவிட்டுப் போனாள்தன்
மதிப்பரிய தாழ்க்கோலை.

74. ஆணிகொண்ட கள்ளமதே
அரசன்முடி கொள்வதற்கும்
காணிகொண்ட கள்ளமதே
கனகோடிப் பொன்னினுக்கும்.

75. பழிபழுது வாலிபத்தே
பதிந்தா லிவிர்த்தியுண்டோ
வழுதுணங்காய்க் கள்ளமது
மாறவில்லை நாளாயும்.

76. கணக்கன் களவுசெய்தான்
கணிப்பரிய சொர்ணமெல்லாம்,
இணக்கியிடக் கூடியதோ
ராஜாத்திபொன்னலவோ.

77. சாக்ஷிகளை விஸ்தரித்தார்
தடவுதனி லேயடைத்தார்
மூட்சிகனங் குன்றியது
மகிமையெல்லாங் குன்றியது.

78. விரித்துநின்ற குற்றமிதை
மேலாக நிர்ணயித்துத்
துரைத்தனத்தா ரந்நாளில்
தூக்கிலிடச் சொன்னார்கள்.

80. [illegible]சயய எத்தனித்தோர்
குறிப்பாகக் கேட்டார்கள்:
'மலைத்துநிற்கும் பாலகனே
மனதிலுனக் கிஷ்டமெது?'

81. தருவதெது நீங்களிப்போ
தாயாரை யிங்கழைத்து
ஒருவார்த்தை பேசியிட
உத்தரவு தாருமென்றான்.

82. அப்படியே சம்மதித்தார்
அம்மைவந்தாளண்டையிலே
செப்பியிடுஞ் சங்கதிக்குச்
சென்றானே பாலகனும்.

83. தாயார்தன் காதிரண்டும்
சார்பாய்க் கடித்திழுத்தான்
பாயாத ரத்தநதி
பாய்ந்ததைப் பார்த்தோர்கள்,

84. உன்கருத்தி லிவ்வா
றுதித்ததென்ன சொல்லெனவே
முன்களவைத் தட்டாமல்
மோசமிவள் செய்தாள்காண்.

85 மதிப்பாய்ப் புகழ்ந்துநின்றாள்
வழுதுணங்காய்க் கள்ளமதைத்
துதிப்பும் புகழுமப்போ
தூக்குங் கயிறுமிப்போ.

86. என்றுசொல்லி நொந்தழுதான்
ஏக்கமிகக் கொண்டழுதான்:
நின்றவர்கள் பார்த்தார்கள்
நெஞ்சயர்ந்து நின்றார்கள்.

87. தூக்குக் கயிறுகண்டான்
துக்கமெத்த மெத்தமெத்தத்
தாக்கியது நெஞ்சினிலே
சாற்றுவான் பாலகனும்.

88. சிறிய வழுதுணங்காய்
திறமென்றீர் தாயாரே
பெரிய வழுதுணங்காய்
பிடாரியிலே யென்றழுதான்.

89. ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண்மணியே
காதலித்த கற்பகமே
கள்ளமெதுஞ் செய்யாதே.

90. கள்ளமெதுஞ் செய்யாதே
கபடேதுந் தீண்டாதே
எள்ளளவும் வஞ்சகத்தே
இச்சைவைத்துச் செல்லாதே,

91. களவுசெய்த கைகளுக்குக்
கைவிலங்கு பூட்டிடுவார்,
அளவில்லாத் துன்பமுண்டாம்
ஆற்றுதற்கு மாளாது.

92. பொய்சொன்ன வாயிற்
புழுப்புழுக்கு மென்னரசே
மெய்சொன்ன வாயில்
விளம்புவதுஞ் சீனியம்மா.

93. மதிகேடு செய்தாலும்
மார்க்கமுண்டு தப்பியிடச்
சதிகேடு செய்யாதே
தங்கள்கண்ணி தங்களுக்கே.

94. வஞ்சித்தார் வாழார்
வழிப்பறித்தார் பாழாவார்.
பஞ்சான தேகமிது
பகவா னொருவனுண்டு.

95. கச்சைகட்டிக் கூத்தாடிக்
கடைத்தெருவி லோடேந்திப்
பிச்சையெடுத் துண்டாலும்
பிறர்துயரஞ் செய்யாதே.

96. தணியாத கோபமுள்ளார்
தயக்கம்வந்து தாழ்வார்கள்
பணிவாய் நடப்பவர்க்கோ
பாரெல்லாங் கையாட்சி.

97. மூலந் தனத்தினுக்கு
முயற்சியென்பார் சிற்சிலபேர்
காலந் திரவியமாம்
கருத்துடையார் காட்சியிலே.

98. உடலம் பிணிநீங்கி
உள்ளமது நேற்றெளிவாய்த்
திடம்பெற் றிருப்பதுவே
சேரரிய பாக்கியமாம்.

99. அகலாரு வாசனைதான்
அகிலமிதி லெல்லோர்க்கும்
சகவாசம் போனடக்கை
சத்தியந்தான் சத்தியந்தான்.

100. மாறுக்க லகமதை
மாற்றுவது நன்மௌனம்
ஆறாத் துயரமெல்லாம்
ஆற்றுவதோ வீசனருள்.

101. சத்தியமே நன்மார்க்கந்
தவறுவரு மற்றெதிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த.

102. பூட்டியிட்ட தேகமிது
போயழியு மெந்நாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு
நற்பெயரே கண்டபலன்.

103. வாலியந்தா னானாலும்
மாசுமறு சம்மதியேன்
பாலியந்தா னானாலும்
பழிபழுது சம்மதியேன்.

104. சித்தம்மொழி தான்றிருந்திச்
செயல்திருந்தி நீநடப்பாய்
உத்தமியான் பெற்றெடுத்தேன்
ஒருகுறையுஞ் செய்யாதே.

105. உள்ளபல பூமியெல்லாம்
ஓர்குடைக்கீ ழாண்டாலும்
பிள்ளையை வளர்க்கும் வித்தை
பிரயாச மானவித்தை.

106. ஆராய்ந் துலகனைத்தும்
ஆண்டாலும் பிள்ளையொன்றை
நேராக்க மாளாது
நிச்சயந்தா னிச்சயந்தான்.

107. கண்ணே யுறங்குறங்கு
கற்பகமே நித்திரைபோ
மண்ணிலுள்ள யாபேரும்
வாழியென்று நித்திரைபோ.

108. பிள்ளையை வளர்ப்பதிலே
பேரறிவு பெற்றுநின்ற
தள்ளையெல்லாம் வாழியென்று
கண்ணுமுதே நித்திரைபோ.

ஓத் தத் ஸத்.

தே. பாலசுப்பிரமணிய பிள்ளை.

---



The MADRAS MAIL of the 20th October says:—

THE "VIVEKA CHINTAMANI."

"This high-class Tamil periodical entered upon the twelth year of its existence a few months ago, and it has done much good work during this period to deserve the support of the Indian community. Mr. C. V. Swaminatha Iyer, its editor, has, through his unaided exertions, brought the magazine to a high degree of literary merit. During the last year he has made religious philosophy a special feature of the journal and has contributed to its pages devotional writings particularly interesting to Hindu ladies. He is about to issue a collection of philosophic poems in easy Tamil, popularising the teachings of the Advaita school."

## 'ஹிந்து'ப் பத்திரிகை.

சென்னையில் பிரசுரமாகும் ஹிந்து என்னும் இங்கிலீஷ் தினவர்த்தமானப் பத்திரிகை யேற்பட்டு சென்ற செப்டெம்பர்மீ 20உக்கு 25-வருஷங்களாயின. இப்படி 25 வருஷமாகி அப்பத்திரிகைக்கு 26-வது வயதுபிறந்த சுபதினத்தைக் கொண்டாட ஸெப்டம்பர் மாசம் 21-உயன்று அப்பத்திரிகைக்குச் சொந்தக்காரரான ம-ா-ா-ஸ்ரீ மு. விராகவாசாரியார் அவர்கள் அப்பத்திரிகா நேசர்களையழைத்து பாட்டுக் கச்சேரிவைத்து உத்ஸவங் கொண்டாடினார். இப்பத்திரிகை 25-வருஷங்களுக்கு முன் ஏற்பட்டபொழுதுசென்னையில் சுதேசிகள் பொருட்டுநடத்தப்படும் சரியான இங்கிலீஷ் பத்திரிகை யில்லாமலிருந்தது. அக்குறையை நிறப்ப, யூனிவர்ஸிடி வித்யாபட்டம் பெற்றவாலிபர்களில் 6-பேர்கள் சேர்ந்து இப்பத்திரிகையை வாராந்தரம் பிரசுரிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரும், மு. வீரராகவாசாரியரும் மட்டும் இது விஷயத்தில் முற்றுமுடன்பட்டு வேறுவேலை யின்றித்தங்கள் காலத்தையும் கருத்தையும் இப்பத்திரிகை நடத்துவதிலே செலவிட்டு வருபவர்களாய் முயன்று வந்தமையால், அப்பத்திரிகை இவர்களிருவருக்கும் சொந்தமாயிற்று. ஜி, சுப்பிரமணிய ஐயர் பிரிந்துபோக நேரிட்டதின் மேல், மு. வீரராகவாசாரியார் ஒருவரே இப்பத்திரிகைக்குச் சொந்தக்காரராய்த்தங்கினார். "காலத்துக் கேற்ற கோலம்" என்றபடி, பிரிடிஷ் இராஜ்யம் இந்தியாவில் நிலைபெறவும், அவ்விராஜ்ய ஒழுங்கின் கீழ் பிரஜைகள் முன்னுக்கு வருவதற்கு இன்றியமையாச் சாதனமாகவுள்ள வழிகளில் பத்திரிகையொன்று என்பதை யுணர்ந்து, அவர்களுணர்ந்ததை உள்ளபடி யனுஷ்டித்து பிரத்தியக்ஷானுபவமாக விளங்கவைத்தவர்கள் இப்பத்திரிகை யோங்கிவளருவதற்கு ஆதிகாரணமாயிருந்த சுப்பிரமணிய ஐயரும், வீரராகவாசாரியருமேயாயினும், இது அவர்களாலே தான் முன்னுக்குவந்தது என்று சொல்லுவதுதகாது ஏனெனில், ஒரு ஜனசமூகத்தில் புதிய எண்ணங்களும் அபிப்பிராயங்களும் உதித்துவளர்ந்துவரத்தொடங்கினால், சீக்கிரத்தில் தானே அவ்வெண்ணங்களும் அபிப்பிராயங்களும் உருவெடுத்து விளங்கப் பார்க்கின்றன. இது ஓர் தத்துவ சாஸ்திரவுண்மை. இங்கிலீஷ்படித்த விவேகிகளின் எண்ணங்கள் உருவெடுக்குங்காலம் நேர்ந்தபொழுது, அவ்வெண்ணங்களே யுருவெடுத்தவதாரமாவதற் கிசைந்த பாத்திரங்களாக இவர்களிருவரும் நேர்ந்தார்கள். அப்படி நேர்ந்ததினாலே சற்பாத்திரர்களானார்கள். இவர்கள் இருவர் கூட்டுறவினால் எல்லாப்பொதுவிஷயங்களையும் ஒழுங்குபட நெறியறிந்து நடத்துங்கடன் இவர்களதே யாகவும், அதை நிர்வகிப்பதற்கு வேண்டிய சக்தி சமயோசிதசாமர்த்தியமும், படித்தவர்களாதரவும் ஹிந்துவுக்கு நன்றாக அமைந்திருந்தது ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் விலகவும் இதற்குக் குறைவு வருமோவென்று சிலர் அஞ்சினதும் பொய்யாக அவருக்குப்பின் வந்தவரும் அவர் கீழிருந்து பழகினவருமான ம-ா-ா-ஸ்ரீ கருணாகரமேனன் இப்பத்திரிகையை அதன்திறங் குறையாது நன்கு நடாத்தி வந்தார், வருகிறார்; இன்னும் வெகுகாலத்துக்கு இப்படியே நடத்திவருவாரென்றுநம்புகிறோம். இதன் சொந்தக்காரராகிய ம-ா-ா-ஸ்ரீ மு. வீரராகவாசாரியரும் இப்பொழுதுள்ள கடனுடன் சால்ஜாப் சல்லியங்களெல்லாம் தீர்ந்து, பொதுஜனக்ஷேமத்துக்கும், பொதுப்பிரயோஜனத்துக்கும் காரணமாகவிருக்கும்படி ஹிந்துப்பத்திரிகையை அதன் பேருக்கும் கீர்த்திக்கும் குறைவுவாராது வெகு காலத்துக்கு நடத்திவருவாரென்று கோருகிறோம்.

**Some of our subscribers are still in arrears for Vol. X. These and others will please remit their arrears for Vols. X and XI at once with their advance for the current volume or receive the next number by V. P. P. for the arrears due.**

நமது சந்தாதாரர்களுக்கு.

நமது சந்தாதாரர்களிற்சிலர் இன்னும் 10-வது வாலியத்துக்குரிய சந்தாவைச்செலுத்தவில்லை. இவர்களும் மற்றவர்களும் 10, 11-வது வருஷப்புத்தகங்களுக்குரிய சந்தாவையும் 12-வது வாலியத்துக்குள்ள சந்தாவையும் உடனே அனுப்பல்வேண்டும். அல்லது அடுத்த சஞ்சிகையை பாக்கி யுள்ள சந்தா தொகைக்கு V. P. P. மூலமாக அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**D. K. Agency.**

20*th May*, 1903. அ. ப. ஏஜன்ஸி.

**...ANANDA ...**
**For the Propogation of Tr...**
**and Knowledge.**

**As the Way to Health, Happiness and Life, T... Self-Help, Self-Control and Self-Cultur...**

***"EKAM SATYAM BRAHMA."—SRUTIV...***

" Seek Truth wherever you can find it,"
" But Make your Choice and Stick to it "
till you reach the end.

" *Truth is hard Finding !*" **Yes,** " *Uncompromising* **when** *whole*; **Yet Try !** " *Awake, Arise and St... not till you reach the Goal.*"—*Sruti.*

" And Ye shall Know the Truth and the Truth shall make you Free"—Christ.

All persons who love Truth for its own sake and are w... to show good-will towards All, regardless of race, creed, reli... caste or color, will be eligible to become members, help... sympathisers of the Mission as it may suit their intelli... development and selfless state.

Sincerity in thought, word and deed, an essential unfailing condition to be scrupulously fulfilled by all.

***Satyameva Jayati.***

**Hail! Ananda Natesa!**

*Sri Akhandananda Satguruve Namaha.*

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.
Minimum Subscription Rs. 5 per annum.
Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.
**English & Foreign Subscription 7s. 6d. net per annum.**

**Thin Paper Edition** for the People :—
**Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.**
**Single copy, current No. 5½ As.; Back Nos. 6 As. Each.**
**English & Foreign Subscription 5s 6d. net per annum.**

**If strictly Prepaid** at the commencement of the term, (*i.e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As, off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and avoid vexatious delay and needless correspondence

விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

டி தனமான காதப்கிபதிப்பு:— அத்தியக்ஷர்கள் ங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபன ளுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா கு ந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பி 8 அணா.

லேசான காகிதப்பதிப்பு:-சாதாரணமாய் எல் ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2. தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அண

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில் வருமல் கட்டினல் வருஷசந்தாவில் 8 அணாவும், மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்ப

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தா ணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தா தாரர் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்து கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெ திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவரு வர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்க டும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செ துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செ கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூட நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோ டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி, மத்தி நிறுத்தினல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந் வைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழு போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறி ட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதோ அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்கு வரவு மிடமிராது.


ஸத்யம்வத.—**Speak the Truth.**

**" Hitch your Wag... to a Star."** **" To Thine o... Self be True."**






அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] ௨ God is Love : Knowledge is Power : *Om.*

ஸத்யமேஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம் 12.] 1903-ம் வருஷம் நவம்பர்மீ [இலக்கம் 7.


# Godward Ho! A symposium

## Or, Atmavidyamanjari.

## ஆத்மவித்யாமஞ்சரி.

ஆத்மவித்தையாவது ஆத்மஞானமேயாம். ஆத்மவித்யாமஞ்சரியென்றால்ஆத்மஞானத் தைத்தரும் பூங்கொத்துக் கொப்பான நூற்றிரட்டு என்னப் பொருள்படா நிற்கும். ஆத்மானு பவத்தைப் பற்றிச் சொல்லும் ஞானநூல் என்று கொள்ளினும் பொருந்தும். இதுகாறும் விவேக சிந்தாமணியில் அப்போதப்போது வெளியாய் வந்த ஆத்மவித்யா சம்பந்தமான பாகங்களைத் திரட்டித் தனியாகச்சேர்த்து வெளியிட்ட புஸ்தகமொன்று "ஸத்யானந்த சபையின்" நோக்கம் நிறைவெய்துமாறு ஆனந்தகைங்கரியமாக மேற்படிசபைக்காக "ஸத்யானந்த சாந்தசர்மா" அவர் களால் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டு நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதில் அடங்கிய ஒவ்வொரு பக்கமும் விவேகசிந்தாமணியில் வெளியானதே. அதைப்பற்றி நாமே மறுபடியும் அபிப்பிராயம் சொல்லப்புகுவது சரியல்லவென்று தோன்றும். ஆனல் நாம் இங்கு அதைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் சொல்ல நினைக்கவில்லை. அது விவேகசிந்தாமணியில் வெளியா... யாகிலும் விவேகசிந்தாமணியில் வெளியிட வேண்டுமென்று எழுதப்பட்டதல்ல. உலகவாசனையி ழுழன்று ஆடியலுத்துச் சலித்த ஒரு ஜீவாத்மா, வியவகாரதசையில் சுற்றிச் சுழன்றலைந்த் துத் தன் மனோரதமெல்லாமீடேறியும் வெகு காலமாகப் பலதுறையிலும் தேடித்திரிந்து பிடிக்

கப்பார்த்த ஆனந்தம் "கொள்ளிவாய்ப் பிசாசு" என்று சாதாரண ஜனங்கள் சொல்லும் மாய
வெளிச்சம்போல் தோன்றித் தோன்றி மறைவதும், இதோ கைக்கெட்டிவிட்டதுபோ
தோன்றி தொலைதூரத்தில் எட்டாக்கையிலிருப்பதாகக் காட்டுவதுமாக இப்படி ஆளைப்போ
டலைக்கவிழுத்து வதைப்பதைக் கண்டு "ஓஹோ! இது பொய்த்தோற்றம். இந்த வெளிச்சத்தை
நம்பினது மோசமே!" யென்று ஸ்வானுபவரீதியாக உள்ளத்தில் தோன்றின உண்மையை
உறுதியாகக்கொண்டு, "அடடா! இதுகாறும் உழைத்துப்பாடுபட்டதெல்லாம் விழலுக்கிறை
நீர்போல்நமது ஆயுள் வீணில் கழியக் காரணமாயிற்றேயன்றி வேறு சாசுவதமான பிரயோஜ
மொன்றையுங் கண்டிலேம். சீ! சீ! இந்த ஜன்மம் பாழ்த்தது! இனியும் அரை நிமிஷமேனு
இப்படி நமது காலத்தை முன்போல் வீணிற்கழிப்பதில்லை. சாசுவதமாகவுள்ளவஸ்து இவ்வுலகி
ஏதோ ஒன்று உண்டானால், அதைத்தேடி யலைந்தால் நித்யமான ஆனந்தம் கிடைக்குமென்ப
உண்மையாயிருந்தால், இந்த நிமிஷம் முதல் அதைத்தேடி யலைந்து பிராணனைக் கொடுத்தாவ
லும் அதைப் பெற்று அழியாத ஆனந்தமனுபவிப்பேன். இல்லாவிடில் அம்முயற்சியில் இவ்வா
ருயிரை ஆசையற்று விட்டுத் தீர்ப்பேன். இஃதன்றி வேறொரு கருமம் பாரேன், உறக்கமும்
கொள்ளேன். எனக்குள்ள தெல்லாம், 'நான்' 'எனது' என்று சொல்லும் எல்லாம் இதற்கனுகூல
மாகவும் சாதகமாகவுமுள்ள மட்டுமே எனக்குரிமையுள்ளனவாம். இந்தத் தீர்மானத்துக் கிடை
யூறாக நிற்பது எதுவாயினும் அது எனதாகமாட்டாது. அதை விட்டொழித்து என் உண்மை
விரதத்தை யெப்படியும் நிறைவேற்றுவேன்."—என்று தீரங்கொண்டு தீரா வைராக்கியமேற்
கொண்டது.

அந்த ஜீவன் அவ்வழியில் துணிந்து செல்லும்பொழுது அதற்கு நேர்ந்த சாதகபாதகங்
களையும், சாதகங்களை மேற்கொண்டு பாதகங்களைவென்று அச்சீவன் கானற்சலம்போல் தோன்றி
மறையும் இவ்வுலகமே சதமென்று இருந்த நிலையிலிருந்து அதுகளுக்கண்டு விழித்தவன்போல்,
உலகநிலையாமையை யுணர்ந்து, "ஐயோ! நான் என் செய்வேன்! எதைத்தான் நம்புவேன்!
எதைச் சதமென்று நம்பினாலும் கானற்சலம்போல, என் வருத்தத்தைத் தீர்ப்பதுபோல் ஆசை
காட்டிக் கடைசியில், என் தாபத்தை யதிகப்படுத்திப், 'பொய்யான என்னை மெய்யென்று
நம்பின உனக்கு இதோ ஒரு சொட்டு' என்று தாயிலாக் குழந்தையைத் தலையிலடிப்பதுபோல்
என் தலையிலடித்தடித்து என்னைத் தவிக்க விட்டதன்றி வேறு குணமொன்றையும் கண்டி
லேனே! ஈசுவரா, தெய்வமே! நீயும் தான் இருக்கிறையோ? அல்லது நீயும் பொய்யேதானோ?
நான் ஏதுமறிகிலாது ஏங்கித் தவிக்கிறேனே! "ஏழைக்கிரங்கி" யென்றும் "கருணாசமுத்திரம்"
"அன்னை" யென்றும் "அய்யன்" என்றும் "தோழன்" என்றும் பலவாறு மெய்புணர்ந்த பெரி
யோர்கள் உன்னைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்களே! உலகத்தாரைப்போல் அவர்களும் உலகி
லுழன்று அடிபட்ட ஜீவனை ஆற்றித் தேற்றுவதற்காகப் பொய்யும்புளுகுமாக வீண் வர்ணனை
செய்து ஒன்றுமில்லாச் சூன்னியத்தை எல்லாமாகச் சொல்லிப் புகழ்ந்து பேசி ஏழை ம
...ளை யேமாற்றிப் போனார்களோவென்னவோ அதுவுமறிகிலேனே! ஆ! தெய்வமே!—
தெய்வமேயென்றுசொல்லியரற்றுகிறேன். தெய்வமொன்றிருப்பதே மெய்யா பொய்யாவென்ற
...க்கும் என் மனதுக்கு "தெய்வமே!" யென்று சொல்லி யரற்றுவதால் என்ன ஆ
...ப்போகிறது—தெய்வமிருக்கிறதோ இல்லையோ;—அது ஒன்றோ இரண்டோ;—இத

வெல்லாம் எனக்குத் தெரியாது. நான் குழந்தையாயிருந்ததுமுதல் ஸத்யம் என்பது ஒன்
றுண்டென்பது தெரியும். அந்த ஸத்யத்தையே நம்பி இப்பொழுது உண்மை யெதுவோ
அதை யான் அறியவேண்டும்: "அதுவென்று லெதுவென வொன்றடுக்குஞ் சங்கை"
யென்று மெய்யறிவுணர்ந்த மாதவர்களும் சொல்லியிருப்பதால் "அதையும் விட்டு" உண்மை
யெதுவோ, உள்ளதெதுவோ, அழியாத தெதுவோ, எதையறிந்தால் என் துக்கமெல்லாந்
தீருமோ; என்மனது இச்சித்ததையெல்லாம், வெகு பாடுபட்டுத்தேடி யனுபவித்தும் எதை
விரும்பிப் பின்னும் சோகமுற்று என்னைக் குரங்காட்டம் ஆட்டுவிக்கிறதோ, எதை யறிந்தால்
என் தாபங்களெல்லாம் தீர்ந்து என்றும் அழியாச் சந்தோஷமும் சாந்தமும் துக்கநிவர்த்தி
யும் உண்டாகுமோ அதை நானறியவேண்டும். அதற்காக நான் என்னுயிரையும் கொடுக்கச்
சித்தமாயிருக்கிறேன். உடல் பொருளாவியையும் ஒருங்கே சமர்ப்பிக்க வகையறியேனாகை
யால், அதை நானாகக்கொடுக்கச் சாமர்த்திய மற்றவனாக விருக்கிறேன். எந்த மஹானாவது
இந்த சமயத்தில் என்னை அஞ்சேல் என்றுசொல்லி அபயங்கொடுத்திரக்ஷிக்காவிடிலினி யெதி
லும் நம்பிக்கையற்று "இந்த உலகம் பொய்யுலகம், இந்த உயிர் வாழ்க்கையும் பொய்வாழ்க்கை;
உலகத்தார் மெச்சி மெச்சிக்கொண்டாடுவதெல்லாம் பெரும் புளுகு, எதையும் நம்பாதீர்கள்",
என்று நாப்பறைபறைந்து இந்தப்பெருமோசத்தை உலகப்பிரசித்தி செய்வதே யென் தொழி
லாய்க்கொள்வேன்! ஆ! கஷ்டம்! மஹாகஷ்டம்!"—என்று சோகமேலிட்டு ஸ்மரணையற்றுக்
கிடந்தனன்.

அப்பொழுது, அந்தஜீவன் தன்னை மறந்து ஆழ்ந்த நித்திரையில் வீழ்ந்து, "அப்பாடா"
வென்று உள்ளத்திற்களைதீர விழிக்கப்போகுந் தருணத்தில் ஏதோ ஒரு ஸ்வப்பனம் கண்டான்.
கண்டஸ்வப்பனம் இன்னதென்று கண்விழித்து சாக்கிரத்திலிருந்து பார்க்கையில் ஒன்றுந்
தோன்றவில்லை—ஏதோ மனதில் ஒருவிதத்தேறுதலும் ஆறுதலுமுண்டாயிருப்பதுபோல் மட்
டும் பட்டது. ஆனால் அது எப்படி யுண்டாயிற்றென்று விளங்கவில்லை. தான் கண்ட ஸ்வப்
பனத்தில் யாரோ வந்து தன்னைத் தேற்றியாறுதல் கூறினதாக நினைத்து அதை மேன்மேலும்
ஊகித்துப் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் ஒரு புதுமையை மட்டும் கண்
டான். உலகத்தில் எல்லாம் பொய், பொய் என்று பலுவம் பாடினதுபோக, இவன் உள்ளத்
தில் "தோற்றுவதெல்லாம் பொய்யானாலும் ஏதோ இதற்கெல்லாம் பின்னால் மெய்யாக வொன்
றிருக்கிறது. அதை நாமறிந்து கொள்ளமுடியா விட்டாலும் 'எல்லாம் பொய்' என்று
சொன்னதுமட்டும் சரியல்ல; இந்தப் பொய்களுக்கெல்லாம் பின்னால், மறைபொருளாய் ஏதோ
மெய்யொன்று இருக்கிறது: இது சத்தியம், சத்தியம் என்று யாரோ தன்தலையிலறைந்து
சொல்லி யாணையிட்டுப் போனதுபோல், ஒரு காரணமும் சொல்லத் தெரியாமல் உள்ளத்தில்
மட்டும் நம்பினான். இந்த நம்பிக்கையை, ஏதோ பொய்க்கனாவென்று சொல்லித்தள்ள ஆனமட்
டும் தனக்குள்ளேயே ஆய்ந்தாய்ந்து சொல்லிப் பார்த்தான். இவன் நியாயம், நிதானமெல்
லாம் இவன் என்னதான் தீர்மானித்தும் நிலை நிற்காமல் மாறிப்போக, ஏதோ சத்தியம்
ஒன்று மறைபொருளாயிருக்கிறது என்னும் துணிபுமட்டும் வரவர இவனை யறியாமல் இவன்
உள்ளத்தில் உரம்பெற்று வளர்ந்து உறுதியாக நின்றது. இதைப் பொய்யென்று தள்ளச் செய்த

முயற்சியெல்லாம் பலிக்காது போகவே, "இந்த மெய்தான் என்னவோ! அதைக்கண்டு பிடி
காது விடுவதில்லை" யென்று உள்ளத்துட் துணிந்து பிராணனை விடுகிறதுதான் விடுகிறோமோ
இந்த வுண்மை யென்னவென்று இதைத்தேடிப் பிடித்தறிய முயற்சிப்பதில் அந்தப் பிராணனை
விடுவோமேயென்று மனந்தேறி அதுமுதல் சத்தியத்தையறியத் தீர்மானித்தான். இப்ப
டித் தீர்மானித்த ஜீவன், "நதியாழம் பாராமல் அதை நீந்தத்துணிந்தோமே: பிராணன்
போவதைப்பற்றி விசாரமில்லா விட்டாலும், ஆற்றைக் கடக்கத் துணிந்தபின் ஆழந்தெரியாது
ஆற்றிலிறங்கிப் பிராணனை விடுவதுதானா பெரியகாரியம்! சை! என்ன அற்பப்புத்தியார் நம்
புத்தி!" யென்று தன்னையே வெறுத்து "ஆற்றின் ஆழம் அறிய நமக்கு வகை தெரியாவிட்டா
லும், மூரட்டுத்துணிச்சலாகத் துணிந்து வீணே பிராணனை விடாமல், அதற்கு வேண்டிய
உபாயந்தேடி நம்மாலான சாமர்த்தியத்தையெல்லாம் உபயோகித்து ஆற்றைக்கடப்பதே
ஜயம் என்று துணிந்து, அதற்காக ஒரு தெப்பம் இருந்தால் அதன்துணையைக்கொண்டு
தன்னாலான முயற்சியும் செய்து ஏதோ ஒருகை பார்த்து விடலாமென்று தீர்மானித்தான்.
அப்படியே தெப்பமும் ஒன்று அவனுக்கு 'தற்செயலாகவோ' 'தெய்வச் செயலாகவோ' அகப்
பட்டது. இப்படிக்கிடைத்த தெப்பத்தைக்கொண்டு அந்த ஜீவன் ஆற்றைக்கடந்து அக்கரை
சேரச்செய்த முயற்சியையும் அம்முயற்சியின் வரலாற்றையும் முடிவையும் பற்றிச்சொல்லும்
"நவபவபவ ரஸாமிர்த ஸாகரமாம்" நம்முன்னிருக்கும் "ஆத்மவித்யாமஞ்சரி"
யென்னும் இந்நூற்றிரட்டு. அவ்வாற்றைக்கடந்து கரையேறிப் பிழைத்தது புனர்ஜனனமாக
முடிந்ததால், அந்த நூதனப்பிறப்பின் மகிமைப் பிரபாவமாகிய "ரஸாமிர்தத்தை" அது அள
வற்று விளங்குவதுபற்றி "ஸாகரம்" என்று சமுத்திரத்துக்குவமையாகச் சொல்லி வர்ணிக்க
லாயிற்று. அச்சீவன் துணிந்து கடந்த ஆற்றைச் "சமுசார ஸாகரம்" என்பார்கள். ஏனெ
னில் மேலோர் "ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்" என்று சொல்லியிருப்பதனால் எனக்கொள்க.
அதைக் கடப்பதற்கு உதவியாயிருந்த "தெப்பத்தை" 'குருமூர்த்தம்' என்றும் 'சத்குரு' வென்
றும் சொல்வார்கள் மேலோர்.

இப்படியே ஒவ்வொரு சீவனும் நன்மைக்கடைப்பிடித்து தர்மவழியிற் செல்லும்
பொழுது ஒரு ஆபத்காலத்தில் எந்த வழிபற்றிச் சென்றாலும் தர்ம சங்கடம் நேருவதைக்கண்டு
உள்ளந்தடுமாறி உளம் நெக்கு விட்டுருக மெய்சோர்ந்து நாவரண்டு நலந்தீதின்ன தென்றறிய
மாட்டாமல் தர்ம சங்கட மேலிட்டு, உயிரையும் உலக வாழ்க்கையையும் வெறுத்து "அப்பா!
போதும், போதும்! இந்தப் பொய்புலகிலிருந்து புண்யந் தேடினது! இதை விட்டொழித்துத்
தீர்ப்பதே நலம். தன்னந்தனியனாய்த்திரிந்து வருந்தினாலும் வருந்துவேன். இந்தப் பொய்
வாழ்வு வேண்டேன், விரும்பேன்" என்று விரக்தி மேலிட்டு வைராக்கிய வசனாய், உடல் பொரு
ளாவியையு மொருங்கே வெறுத்து பற்றெலாம் விட்டும் பற்றுக்கோடு வேண்டிக் கொழுக் கொ
ம்பில்லாக் கொடிபோல் மனந்தடுமாறித் தத்தளிக்கும் காலம்வரும். அப்பொழுது ஸர்வதயாப
ரக்கடவுள் துன்புற்றவர் துக்கந்துடைக்கச் சமயம் எங்கே யெங்கேயென்று எதிர்பார்த்திருந்த
நல்ல சமயத்தில் நறுக்கென்று குதித்து வந்தவர்போல் 'குருமூர்த்த'மாக வந்து ஆதரவுகூறி
உண்மையுபதேசஞ்செய்து ஆத்மரக்ஷணை யளித்துக் காப்பாற்றுவார். இது ஒரு மாறுவிதி

அர்ச்சுனன் இப்படி துன்புற்றுத் தவித்து மூர்ச்சித்து விழுந்த காலத்தையே ஸ்ரீ கிருஷ்ணபக
வான் பரமசாதகமாகக் கொண்டு அவனுக்கு உண்மையுபதேசஞ் செய்வான் 'ஸாங்கிய யோகம்'
முதலாக ஸத்யத்தை யெல்லாவிதத்தாலும் 15-வித 'யோக'ங்களில் பரமார்த்தமாக வுபதேசஞ்
செய்தார். அர்ச்சுனன் சகிக்க முடியாத துக்கமேலிட்டுத் துன்பசாகரத்தில் மூழ்கியதையே
'அர்ச்சுன விஷாதயோகம்' என்று பகவத் கீதையின் முதலதிகாரம் விவரிக்கின்றது. இரண்டா
வது அதிகாரத்தில் 'ஸாங்கியயோகத்தை' யெடுத்து ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு
உபதேசிக்கிறார்.

MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION' BY THE DISCIPLES OF SANKARA.

ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளின் சிஷ்யர்கள்

உபதேசித்தருளிய

# முமுக்ஷுதாரகம் அல்லது, "பஜகோவிந்தம்"

என்னும்

## ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

### குருவணக்கம்.

நேரிசை வெண்பா.

1. பத்திக்குச்சான்றாயப் பரஞானப்பேரொளியாய்
முத்திக்குவித்தாய் முளைத்தவொரு—நித்தன்
திருவடியேயன்றி வணங்காதென் சென்னி
உருவமலாதுள்ளா தென்னுள்.

2. வேதாந்தமென்னுங் கடலைவியன் மதியால்
தீதீர்ந்திடக்கடைந்த தெள்ளமுதாம்—போதத்
திருநூறனையளித்த தேசிகர்க்குக்கைம்மா
றொருநூறினுமிலையே யுற்று.

சென்ற சஞ்சிகையில் ஆசார்ய ஸ்வாமிகள் ஞானசூனியனாகிய ஓர் வையாகரணிக்கும் அவ
மூலமாக உலகத்தாரெல்லாருக்கும் அஞ்ஞானவிருள் நீங்கி, ஞானப்பிரகாச முண்டாகும்படி உபதேசித்த
ளிய பாமார்த்தத்தை விவரித்துக் கூறினோம். இங்கு, அவரது கட்டளையாலே அவருடைய சிஷ்யவர்க்க
ளில் முதன்மைபெற்ற பத்மபாதர்முதலான பதினால்வரும் அப்பண்டிதனுக்கு ஆசிரியர் உபதேசத்தை
தொடர்ந்து உபதேசித்தருளிய பரமார்த்தத்தையும் எடுத்துக் கூறுவோம். 'ஆசானெவ்வழி மாணாக்கரு
அவ்வழி' என்னும் நியாயப்படி இவர்களுடைய உபதேசமும் சங்கரர் உபதேசத்தை அநுசரித்திருக்குமே
யது கூறாமலே அமையும். அவ்வுபதேசம் பின்வருமாறு:—

## பத்மபாதர்.

1. பொருண்மீதுறு சிந்தைபொருவந்துதென்
தெருண்மாறுரை செப்புநர்தாமிலரோ
அருண்மேலவர் நட்பெனுமம்பியலால்
இருண்மாபிறவிக் கடலேறரிதே.

(இ-ள்.) பொருள் சம்பாதிக்கவேண்டும் என்னும் இச்சையினால் உன் கருத்தைப் பொருள் மேலேயே எப்போதும் செலுத்துவதென்னை? பொருளால் கவலையேயன்றிச் சுகமுள்ளதோ? ஆதலால் அப் பொருளாசையை யொழிக்குமாறு நல்லுபதேசம் செய்து உன்னைச் சிட்சிப்பவரில்லையோ? சத்புருஷர்களுடைய சகவாசமொன்றே இவ்விருள் நிறைந்த சம்சார சாகரத்தைக் கடத்தற்குரிய மரக்கலமாகும், என்றபடி.

கருத்து—சத்புருஷ சகவாசத்தாலன்றி முத்தியடைதல் கூடாது.

## தந்த்ரோடகர்.

2. சடைபூணுகி லென்தலை முண்டிதனாய்
விடிலென்னுடை காவிகொள் வேடமுளான்
மடநெஞ்சொடு காணுநர்வாய்கிலரால்
வடிவங்கள் வயிற்றினிமித்தமரோ.

(இ-ள்.) காவிவஸ்திரம் தரித்துக் தவவேடம்பூண்டுள்ள சந்நியாசி சடைமுடி தரித்தால்தானென்ன, அல்லது தலையை முண்டனம் செய்து கொண்டால் தானென்ன? எவனொருவன் குருவினால் உபதேசிக்கப்பட்ட மார்க்கத்தில் சிரத்தை யில்லாமல் சந்தேகமடைகின்றானோ அவன் ஒருநாளும் பிரமஸ்வரூபத்தைப் பெறமாட்டான். ஆதலால், மேலே சொல்லிய தவவேடங்கள் எல்லாம் அப்படிப்பட்டவனுக்கு வயிற்றுவளர்ப்புக்குப் பயன்படலன்றி வேறேபயன் படமாட்டா, என்றபடி.

கருத்து—குருபதேச மார்க்கத்தில் நிற்றலே முத்தியைப் பெறுவிக்கும் சாதனமாகும்.

## ஹஸ்தாமலகர்.

3. மெலியாவுட லம்விளராமுடிபல்
பலவும்வழுவா பதியாவொருகோல்
வலிபோய்முதுமை மருவும்பொழுதும்
தொலையாதுடலைத் தொடருந்நசையே.

(இ-ள்.) சரீரம் மெலிந்து பலவீனப்பட்டுத், தலைமயிர் முழுதும் பூசினிக்காய்போல் நரைத்து வாயிற் பற்களெல்லாம் ஒன்றில்லாமல் விழுந்துபோய்க், கையில் தடிபிடித்துத் தள்ளாடித் தத்தளித்து நடந்து, உடல் திரைத்துத் தளர்ந்து, மூப்பு மேலிட்டுக், காடு வாவென்றழைக்க வீடு போவென்றுதள்ள வருந்தும் காலத்தும், புத்திர வித்தகளத்திரங்களில்வைத்த ஆசையானது உடலைவிட்டு நீங்கமாட்டாது, என்றபடி.

கருத்து—ஆசா பரித்தியாகமே மோக்ஷத்தைப் பெறுதற்கு முக்கிய சாதனமாகும்.

## சுபோதர்.

4. எரிமுன்னிடம் வெங்கதிர்பின்னிடமா
இருசானுவிரா சுபுகத்தியையத்
தருவாய்க்கரப்பிட்சைகொள்ளாவுறினும்
ஒருவாதொருவா துறுகாதலரோ.

(இ-ள்.) எரிகிற நெருப்பு முன்பக்கத்திலும், சூரியன் பின் பக்கத்திலுமாகப் பகற் பொழுதிருந்து, இரவில் இரண்டு முழங்கால்களும் மோவாய்க்கட்டையிற் பொருந்தக் குளிரில் விடவிடவென்று நடுங்கி யொடுங்கி வருந்தி, மரத்தடியிற் படுத்துக் கையிற் பிச்சை வாங்கியுண்டு காலம் கழிக்கும் சர்வசங்க பரித்தியாகியையும் கூட ஆசாபாசமானது முற்றிலும் விட்டு நீங்காது, என்றபடி.

கருத்து—எப்படிப்பட்டவர்களுக்கும் ஆசை நீங்குவதில்லை. இவ்வாசை நீங்குமாயின் முத்தி கையிற் கிடைத்தது.

## வார்த்திகக்காரர்.

5. திரையார்கடல் கங்கைசெலாவிரதம்
மவரூபலதானம்வழங்குகினும்
பரஞானமிலாதவர் நீள்பிறவி
ஒருநூறினும் வீடுறுதற்கரிதே.

(இ-ள்.) சேது யாத்திரை கங்காயாத்திரை முதலான தீர்த்தயாத்திரை செய்தபோதிலும், நித்திய நைமித்திகங்களான விரதங்களை விதிப்படி அநுஷ்டித்து வந்தபோதிலும், பாவங்களைப் போக்கி சுவர்க்கத்தைக் கொடுக்கவல்ல அநேகதானங்களைச் செய்தபோதிலும், ஒருவர்க்குப் பரமார்த்த பரிஜ்ஞான மில்லையாயின், நூறு ஜன்மங்களில் கூட முத்தியை அடைதற்கொண்ணாது, என்றபடி.

கருத்து—ஞானமே முத்திக்குச் சாதனமாகும்.

## நித்யானந்தர்.

6. வானோர்தருவின் னடியேமனையா
பூநீளணையாப்புனை தோலுடையா
நானுலமுந் தவிருந் துறவால்
ஏனோவொழியா மகிழ்வெய்தலதே.

(இ-ள்.) சுவர்க்கம்போன்ற ரமணீயமான மரத்தினடியே தனக்கு வாசஸ்தானமாகவும், பூமியே படுக்கையாகவும், மான்றோலே உடையாகவும் பெற்று, மாலை சாந்தம் மகளிர் முதலானவைகளால் உண்டாகும் பலவிதமான விஷய சௌக்கியங்களை மனோவாக் காயங்களால் நீக்கி அடையும் விரக்தியினால், ஒருவனுக்கு நிரந்தரானந்தம் என் உண்டாகமாட்டாது? என்றபடி.

கருத்து—சர்வவிஷயேச்சாபரித்யாகமே நித்யானந்த ரூபமான மோக்ஷ சாதனமாகும்.

## ஆனந்தகிரி.

7. ஓகேயுறினும் முலகின்புறினும்
ஏகாதனியே யினமேயுறினும்
வாகாவெவனுள் வதியும்பரமேல்
ஆகாவவனே மகிழ்வார்பவனே.

(இ-ள்.) மந்திரயோகம் முதலான யோகமார்க்கங்களில் நின்றாலும் சரி; மாலை சாந்தம் வனிதை முதலான போகானுபவங்களில் இச்சை கொள்ளினும் சரி; புத்திரமித்திராதி ஜனங்களின் மத்தியிலிருந்தாலும் சரி; அவர்கள் அனைவரையும் ஒழித்துச்சென்று தனியே வாசம் பண்ணினாலும் சரி; எவனுடைய மனம் அவஸ்தாத்ரய சாட்சியாயிருக்கும் சர்வ பரிபூரண வஸ்துவினிடத்தில் ஐக்கியமாய் ஆனந்தமடைகின்றதோ அவனே எப்போதும் இடைவிடாத ஆனந்தத்தை அடைபவனாவான், என்றபடி.

கருத்து—மனோலயமே மோட்சம்; மனோவிகாரமே பிரபஞ்சம்.

## த்ருடபக்தர்.

8. கீதைப்பொருள் கிஞ்சிலெனுந்தெரியா
ஏதத்தகல்கங்கையி னொட்பருகா
ஓதித்திருமா லொருகாலுணர்வாற்
சோதிக்கலனே யமனுந் துணிவே.

(இ-ள்.) எவனொருவன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக் குபதேசித்தருளிய பரமார்த்தப் பிரதி பாதகமான கிரந்தத்தைக் கொஞ்சமாவது சத்குருபதேச மூலமாகத் தெரிந்துகொள்கின்றனோ, எவனொருவன் கங்காதீர்த்தத்தில் எள்ளளவாவது அதன் மகிமையையறிந்து அந்த்யகாலத்தில் பானம் செய்கின்றனோ, எவனொருவன் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் ஆராதனம் எப்போதாயினும் ஒருகாலத்தில் அசஞ்சல பக்தியோடு யதாவிதிப்படிச் செய்கின்றனோ அவனது பாபபுண்யங்களைப்பற்றி யமதர்மராசன்கூட ஆராய மாட்டான் நிச்சயம், என்றபடி.

கருத்து—வேதாந்தவிசாரமும், மகாநதிஸ்நானமும், அசஞ்சலபக்தியோடு செய்யும் பகவதாராதனமும் மோக்ஷாவாப்திக்குச் சாதனங்களாம்.

## நித்யநாதர்.

9. பிறவாவிறவா பிணிமோரணைசூல்
உறலாய்வரலா யுலகிற்குழன்மால்
நெறியாலெனையாளிறை பேரருளால்
கறைவான்முரனைத் தெறுகாவலனே.

(இ-ள்.) பலவிதமான துன்பங்களுக்கிடனாய் கடைத்தேறுதற் கரிதாய்க் குலால சக்கிரம்போல ஜனனமரணாதிகளினால் இடைவிடாமல் சுழல்வதாகிய இந்த சம்சாரத்தில் உயிர்கள் கர்மானுசாரமாகப் பிறப்பதும் இறப்பதும் மறுபடியும் ஓர் தாய்வயிற்றில் கிடந்து பிறப்பதும் இவ்வாறாக உழல்வனவாகும். ஆதலால், முராசனனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தி! அடியார்களிடத்தில் வைத்தகருணையினாலே என்னை நீ காத்தருள்வாயாக, என்றபடி.

கருத்து—சம்சார நிவிர்த்திக்கும் மோக்ஷாவாப்திக்கும் பக்திமார்க்கமே உத்தமமானது.

## யோகாநந்தர்.

10. வழியிற்கழிகந்தல் வனைந்தவனாய்
பழிகற்செயல்சார் வழிபற்றலனாய்
மழலைச்சிறுபித்தரை யொத்தவனாய்
விழுமப்பொருண் மேயவன்யோகினனே.

(இ-ள்.) வழியிற் கழித் தெறிந்துகிடக்கும் கந்தையையே வஸ்திரமாகத் தரித்து, புண்ணியபாபத்தினின்று (அதாவது விதி நிஷேதத்தினின்று) விடுபட்ட மார்க்கத்தில் நின்று, ஐந்துவயதுக்குட்பட்ட குழந்தையையும் பித்தனையும் ஒத்துப், பிரமஸ்வரூபானு சந்தானத்தில் பதிந்த மனமுள்ளவனாய் ஆனந்தத்தையடைபவனே யோக நிஷ்டனாவான், என்றபடி.

கருத்து—விதிநிஷேதங்களில்லாமல் பித்தனைப்போலத்திரிந்து சர்வசங்கரகிதனாய் பிரமானுசந்தானஞ் செய்கின்றவனே யோகநிஷ்டன்.

## சுரேந்திரர்.

11. எவனீயவென்யா னெவனின்றாறுவேம்
எவளன்னையெனக் கெவர்தாதையெனா
இவையுள்ளுணரா வுறவிற்கெறியின்
புவனம்புகலோர் கனவாகுமரோ.

(இ-ள்.) என்னிலும் வேறாகிய நீ எவன்; உன்னிலும் வேறாகிய நான் யாவன்; எங்கு நின்று நாம் வந்தோம்; என் தாய் எவள்; என் தகப்பன் யாவன்; என்று இவ்வாறு மூலவிசாரம் செய்து ஆராய்ந்து தெளிந்து அவ்வாறு தெளியப்பட்ட தனது சுற்றங்கள் எல்லாவற்றையும் துறந்து ஒருவன் இருப்பானாயின் கனவிற்கண்டபொருள் போலவே இவ்வுலகமெல்லாம் மித்தையாவது என்னும் மெய்யுணர்வுண்டாகும், என்றபடி.

கருத்து—மூலத்தை ஆராயின் தாய் முதலான எல்லாரும் மித்தியாபூதர் ஆவார்கள்.

## மேதாதி.

12. என்பாலினுநின்னினு மெங்கணுமால்
அன்பானுளனாக வழுக்குறலென்
இன்பானிறைவா யெனினெங்கணுநீ
வன்பாலறவோர் நிலையாமதியே.

(இ-ள்.) எதிரிலிருக்கும் உன்னிடத்திலும், உன்னை நோக்கிச்சொல்லும் என்னிடத்திலும் எல்லாவிடங்களிலும் சர்வவியாபகனான பரமாத்மா ஒருவனே தங்கியிருக்க, உன்னிலும் என்னை வேறாக எண்ணுதலாலே என்விஷயமாய் வீணாக அசூயாதி துர்க்குணங்களாலே பொறுமையடைகின்றாய். விரைவில் சர்வவியாபகனான பரமாத்ம ஸ்வரூபத்தைப்பெற்று முத்தியடையவிரும்புவாயானால் சமஸ்த ஜீவகோடிகளிலும் சமானபுத்தி யுடையவனாவாயாக, என்றபடி.

சகருத்து—சர்வபூதங்களிலும் சமபுத்தி வைத்துப் பிரமவிசாரம் செய்தலே மோக்ஷ சாதனமாகும்

## பாரதிவம்சர்.

13. துறவாவுறுகாம முதற்றுகள்சேர்
இறவாவிருள்தீர் பரமேயுணர்வாய்
உறவார்பர ஞானமுறாதவரைத்
தெறுவார்நரகே யமசேவகரே.

(இ-ள்.) காமக்ரோத லோபமோகங்களை விட்டொழித்து பெருமைபெற்ற அஞ்ஞானரகிதனான பரமாத்மாவை அறிவாயாக. ஆத்மபரிஜ்ஞான மில்லாத மூடஜனங்களை நரகில் வீழ்த்தி தூதர்கள் உபாத்திரவிப்பார்கள், என்றபடி.

கருத்து—கயிற்றில் தோன்றும் அரவமயக்கம் போல பரமாத்மாவிடத்தில் தோன்றும் ஜீவமயக்கம் தீராத பக்ஷத்தில் மோக்ஷம் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட மோட்சசாதனமான ஆத்மானாத்ம விவேகமில்லாதவர்களுக்கு ஜன்ம பரம்பரை நீங்காமையினாலே நிரந்தரம் நரகப்பிராப்தியே உண்டாகும்.

## சுமதி.

14. நற்கீதையுமாயிர நாமமுமோ
திக்கார்வணன் மேனிநினைத்திடுவீர்

எக்காலமுநல்லவ ரோடியையீர்
புக்கார்வறிஞர்க் கருள்வீர்பொருளே.

(இ-ள்.) பகவத்கீதையும் பரமேச்வரன் பார்வதீ தேவிக் குபதேசித்தருளிய ஸ்ரீவிஷ்ணு சகஸ்ர
நாமத்தையும் சத்குரு மூலமாய் நன்றாகப் பொருளுணர்ந்து பாராயணஞ்செய்து, இலக்ஷ்மீபதியான ஸ்ரீமந்
நாராயண மூர்த்தியின் திவ்யஸ்வரூபத்தை ஆசார்யோபதேசானுசாரமாக இருதயத்தில் தியானஞ் செய்வீர்
கள். சத்புருஷ சகவாசமே எப்போதும் செய்வீர்கள். ஏழைகளுக்கு திரவியத்தைக் கொடுப்பீர்கள்
என்றபடி.

கருத்து—வேதாந்தார்த்த விசாரமும், ஆத்மஸ்வரூபானுசந்தானமும் சர்வபூதங்களிடத்தும் சமபுத்தியு
டைமையும் மோக்ஷசாதனமாகும்.

"பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் மூடமதே."
கோவிந்தனையே குழியாய் குறியாய்
கோவிந்தனையே குறியாய் குறியாய்.

* * *

பத்மபாதர் முதலான பதினால்வர் உபதேசித்தருளிய
சதுர்தச மஞ்சரி முற்றும்.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## * "The Varieties Of Relegious Exprience."
## "A Study in Human Nature."

# "சிவனருள் பல பல சீவனுமாகும்."

"அன்கரூர் வழிமுதலாதிப் பிரானும்
இவன்றானென நின்றெளியனு மல்லன்
சிவனருள் பலபல சீவனுமாகும்
நயன்றான் வரும்வழி நாமறியோமே"—திருமந்திரம்.

திருமூலதேவர் இப்பாட்டில் வெகு அழகாயும் சுருக்கமாயும் சொல்லியிருக்கிறபடி
ஆதிமுதலாகிய கடவுள், "அகன்றார்",—அதாவது 'தன்னைக்கொடுத்துத் தான் இந்த அநித்திய
மான தேகமனோதத்துவங்கள் அல்லவென்று உறுதிமேற்கொண்டு, "தேகம் நான், மனது
நான், புத்தி நான், கண்ணுக்குப்புலப்படாத பிராகிருத சக்தி ஸ்வரூபமாயிருக்கிற அவ்யக்தம்
நான்" என்று மயக்கத்தால் அவைகளுக்கியல்பாயுண்டாம் சுகதுக்க உபாதிகளைத் தன்னதாகப்

* Being the Gifford Lectures on Natural Religion delivered at Eidniburgh in 1901-1902, by Professor ... sity, 1903, Longmans, Green & Co.

பாவிக்கும் பாவனையை விட்டகன்றார்' வழியிலே முதலாகவுள்ளவன்—ஆதிப்பிரானும் கடவுள்.
அவனை இவன்தானென்று குறிப்பிட்டுச்சொல்லி நிர்மாணித்துக் கூறுவதும் சாத்தியமில்லை.
நன்மையே ஸ்வரூபமெடுத்தெதன்ன நித்தியமங்களாவதாரமாக விருக்கும் அவன் (சிவன் என்
றால் இதுவன்றி வேறொன்றுமில்லை) அருட்பிரவாகம் சீவகோடிகளில் பல பல வாகத்தோற்
றும். "நயன்றான்" (நயன்=இன்பம், நன்மை, பயன்)—நித்யமங்கள ஸ்வரூபனும், இன்ப
வடிவாகவும், உயிர்வாழ்க்கைக் குறுபயனுமிருக்கும் அவன் "வரும்வழி நாம் அறியோமே"
என்றார். இது ஸ்வானுபவதிடன் பற்றி உண்மையில் ஓதின நுண்ணிய பொருள்மிகு இன்
னருள் வாக்காம். (Rationalism) புலனறிவாய்க் கண்டதே காட்சியென்றும் மற்றதெல்லாம்
மனிதனுக்கெட்டாத இரகசியங்களென்றும் நம்பியிருக்கும் மேற்றிசையில் அனேகர் புலன்
பொறியனுபவங்களால் எட்டக்கூடியமட்டும் ஆராய்ந்து சென்றும் முடிவுகாணாது மனத் திருப்
தியுமடையாது மேன்மேலும் உண்மையை உள்ளபடி கண்டுபிடிக்க ஊக்கமேற்கொண்டுழைத்து
வருகிறார்கள். இவர்களில் தலைமை வாய்ந்த சிரேஷ்டர்கள் சிறுகச்சிறுக ஆத்ம
தத்துவங்களை அரைகுறையாகக்கண்டு அவற்றை முற்றுமறிய முயற்சித்து வருகிறார்கள். இவர்
கள் "பகிர்முகப்பார்வை"யிலேயே ஆதிதொட்டுப் பழகினவர்களாதலாலே, அந்தவழியில் செ
ன்று அதற்கியல்பாயுள்ள தத்துவசாஸ்திர முறைப்படி நிச்சயமாயறியக்கூடியதையே உண்மை
யென்று அங்கீகரித்து மற்றவற்றை 'அறியக்கூடாதவை' யென்னும் வகுப்பில் சேர்த்து ஒவ்
வொரு சாஸ்திரவிற்பன்னரும் தான் சென்றளவே மனிதன் தன்னறிவால் அறியக்கூடிய அறி
வின் எல்லை'யென்றும் அதற்கப்பால் மனிதன் அறிவுக்கெட்டாத இராஜ்யமிருக்கிறது,
அதைப்பற்றி யொன்றும் தெரியாதென்றும் சொல்லிவந்தார்கள். அதைக்கேட்டு அவ்வக்கால
த்துக் குட்டிவித்வான்களும் சாஸ்திரக்ஞர்களும் 'சரிசரி' யென்று கூத்தாடினார்கள். அவர்
கள் கூத்தாடினதைப் பார்த்து இந்தியாவில் இங்கிலீஷ்படிப்புப் படித்துப் பட்டம் பெற்ற
மேதாவிகளும் உண்மையுணரமாட்டாத கிறிஸ்தவபாதிரிகள் வார்த்தைகளைக் கேட்டு அறிந்
தும் அறியாமலும் ஆத்மவித்தையையிழந்து, பூத, பௌதிகசாஸ்திரங்களையும், தேகமனோ
தத்துவ சில்லரை யுண்மைகளையும் பெரிதாகப்பாராட்டி ஆர்ய மதத்தை அவமதித்து உண்மை
யறியமாட்டாமல் உதாசினமாகப்பிதற்றி வந்தார்கள். அப்படிக் குதித்த 'மூர்க்கரொடு' இ
தை எழுதுபவரும் ஒரு காலத்துச் சேர்ந்து கூத்தாடியவரேயென்பது சொல்லாமே யமையும்.
ஆனால் உண்மையில் நாட்டம் வைத்துழைத்தால் உளக்கண் திறவாமற் போவதில்லையாதலால்
அந்தக்காலம் போய் உண்மையை உணரும்படியான உளக்கண் திறக்கப்பெற்ற பாக்கியத்து
க்காகப் பரமதயாளுவாம் பராபரக்கடவுளைத் திரிகரணசுத்தியாய் வணங்கிச் சதாகாலமும் துதி
செய்து வருகிறார். கிழக்கு வெளுத்துக் காணும் வெளிச்சம் உச்சிகால சூரியன்போல் விளங்
குங்காலம் எப்போ, எப்போ வென்று ஏங்கிநின்றாலும், உண்மையையுணர்ந்தபடியோதத் தடை
யில்லையால் ஆத்மார்த்தமாக யார் எவ்வகையிற் சொல்லினும் அதையுள்ளபடியுணர்ந்து கொண்
டாடுவதில் அவருக்குள்ள பெருமகிழ்ச்சியை வெளியிடாதிருக்க சாத்தியமில்லை.

தலைப்பில் இங்கிலீஷில் குறிக்கப்பட்ட பெயருள்ள புஸ்தகம் அமெரிக்காவிலுள்ள
பேர்போன ஹார்வார்ட் யூனிவர்ஸிடியில், தத்துவபோதகாசிரியராயிருக்கும், மனோதத்துவா
ராய்ச்சியில் சிரேஷ்டரெனப் பேர்பெற்றப் ப்ரொபெஸ்ஸர் உவில்லியம் ஜேம்ஸ் அவர்களால்

எடின்பரோ நகரில் அவ்விடத்து யூனிவர்ஸிடியார் ஆதீனத்தில் "Natural Religion" பிராகிருத மத சம்பந்தமாக, லார்ட் கிப்போர்ட் என்பவர், அவ்வக்காலத்துப் பிரதமஸ்தாக விளங்கும் தத்துவராய்ச்சி வல்லோர், அவர்கள் கருத்தை வெளியிட்டுப் பிரசங்கம் செய்யவேண்டுமென்று, பொருநிதி வைத்துப் பரோபகாரமாகச் செய்துள்ள ஒருபண்டைய ஏற்பாட்டின்படி சென்ற வருஷத்தில் செய்த பிரசங்கங்களின் திரட்டாம். இதில் 20 பிரசங்கங்களின் விஷயம் சேர்ந்திருக்கிறது. இவர் பிரசங்கிக்க எடுத்துக்கொண்ட விஷயம், 'பிராகிருத ரீதியாகப் பார்க்கில், ஆத்மானுபவமென்று மதப்பற்றுள்ளோர் சொல்லும் பலபல அனுபவங்கள் எம்மதத்தினாலும் கட்டுப்படாத உண்மையொன்றுக்கே கட்டுப்பட்டுநிற்கும் தத்துவாராய்ச்சி விற்பன்னர் கண்ணுக்கு என்னமாகத் தோற்றுகின்றன' வென்று ஆராய்ந்து அவர் அபிப்பிராயத்தை யாவருமறியத் தெளியக் கூறுவதாகவிருந்தது. இவர் செய்து கொண்ட இந்த சங்கல்பத்துக் கிசைய, தான் மேற்போட்டுக் கொண்ட கடமையை வெகு நன்றாகவும், சாமர்த்தியமாகவும், அதிநுட்ப புத்தியோடும், ஆத்மவுணர்ச்சியோடும் இவர் செய்துமுடித்து, அப்பிரசங்கங்களிற் செப்பியவை உலகிலுள்ளார் யாவருக்கும் பயன்படப் புஸ்தகரூபமாகவும் பிரசுரித்துளார். இப்புஸ்தகம் 20-வது நூற்றாண்டின் துவக்கமாம் இக்காலத்தில் அதிமேலான அற்புத புஸ்தகமாகக் கொண்டாடப்படத்தக்கது. ஏனெனில், இவர் தம்முடைய நுண்ணறிவாலும், ஆத்மவுணர்ச்சியாலும், நடுநிலைதவறாது நிற்கும் நிதானபுத்தி விசேஷத்தாலும், சொல்வன்மை புத்திவன்மையாலும், சமயோசித சாமர்த்திய விசேஷத்தாலும், தற்காலத்தில் புராதனமாயுள்ள உண்மையான மதக் கோட்பாடுகளுக்கும் நூதனமாய்க் கிளம்பியுள்ள நவீனசாஸ்திரக் கொள்கைகளுக்கும் நீராவியாஜமாயிருந்த தொல்லையைத் தீர்க்க உண்மையில் வழிகாட்டி, மதசித்தாந்தமும், சாஸ்திர சித்தாந்தமும் ஒன்றோடொன்றொவ்வாது முரண்படவே யுதித்தனவென்று கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தைப் போக்கி; உண்மையாக உள்ளபடி, அனுபவரீதியாகப் பார்க்கில், உண்மை எல்லாவிதத்திலும் ஒன்றே; நவீன சாஸ்திரமுறை பற்றிச் செல்வோர், ஒருவிதமாக அவர்கள் அனுபவத்தையுரைக்க, புராதனமாயுள்ள மதவழிபற்றிச் சென்றோர் வேறொரு விதமாக அதேயனுபவத்தை வெளியிடுகிறார்கள்; அனுபவரீதியாக ஆராயின், உண்மையெல்லாவற்றிலும் ஒன்றே: ஆனால் ஆராய்ச்சிமுறை பற்றியும், ஆராய்ந்தறிந்தோர் தேகமனோபாவ ஸ்வபாவம் பற்றியும், ஒரே உண்மை, அனுபவத்தில் பலபல விதமாகப் பிரபலப்பட்டு விளங்குகிறது; இவற்றில் அவரவர் தேகமனோபாவ ஸ்வபாவங்களுக்குரிய குணக்குப் பிணக்குகளை நீக்கிப்பார்க்கில் ஆத்மானுபவம் அதிசயமான விதமாக அதன் உண்மையான தத்துவத்தையனுசரித்து விளங்குகிறது என்று நன்றாகக் காட்டியிருக்கிறார்.

527-பக்கங்களடங்கிய 20-பிரசங்கங்களில், 19-பிரசங்கங்கள் (484-பக்கங்கள்) மதக் கொள்கை பற்றியும் பற்றாமலும் **ஆத்மானுபவம்** என்று சொல்லத்தக்க உண்மையான மேலோர் ஸ்வானுபவங்களை யெடுத்துச்சொல்லி, மனோதத்துவாராய்ச்சி முறைப்படி அவைகளின் ஒற்றுமை வேறுபாடுகளை விளக்கிக் காட்டி, 20-வது பிரசங்கத்தில் தம்முடைய முடிவான அபிப்பிராயத்தைக் கூறுகிறார். மதப்பற்றுள்ளோர் அனுபவங்களை மனோதத்துவாராய்ச்சி முறைபற்றியும், சாஸ்திர உண்மைபற்றியும் அனுபவரீதியாக ஆராய்ந்து பார்த்துப் பிரசங்கித்து வந்ததின் முடிவாக அவர் பின்வரும் உண்மைகள் நம்பத்தக்கனவாக விருக்கின்றனவென்று கூறுகிறார். அவை:—

"1. புலனறிவுக்குப் படும் இகலோகம், ஆத்மார்த்தமாயுள்ள ('ஆத்மலோகம்'என்கிறார்) பரலோகத்தின் ஒரு பாகம்; அதுவின்றி இதுவில்லை. (இதையே **இகம் பரம்** என்பார் நம்மனோர்.)

"2. பரலோகத் தோடொக்க இகலோகம் பொருந்த வாழ்வதே நாம் ஜன்மமெடுத்ததற்குப் பலனும் முடிவுமாம்.

"3. பரலோகாதிபதியாம் ஆத்மாவோடு (இதை கடவுள் என்றாலும் சரி, விதியென்றாலும் சரி) உள்ளமொன்றுபடக்கூடியிருப்பதாகிய 'பிரார்த்தனை' யென்பது உள்ளத்து நிகழும் ஒருவிதப் போக்கு. இந்தப் போக்கில் போவதினால் உண்மையாகவே காரியம் நடக்கிறது; ஆத்மசக்தி பாய்வதனால் கண்கூடாக் காணக்கூடிய பயன்கள் உண்டாகின்றன. இவை மனோதத்துவங்களால் மனதையும், பௌதிகதத்துவங்களால் பூதலோகத்தையும் பாதிப்பனவாயிருக்கின்றன. 'Religion' சமயம், மதம், மார்க்கம், பக்தி யென்று பலபெயர்களால் வழங்கும் பதத்துக்குரிய பொருளில் மனோதத்துவ சம்பந்தமான பின்வரும் குணவிசேஷம் சேர்ந்திருக்கிறது.

"4. உயிர் வாழ்க்கையில் நூதனமாக ஒரு ருசி அல்லது சுவையுண்டாகிறது; இது உயிருக்குக் கிடைத்த ஒரு நூதன சித்திபோல் விளங்கி உயிர்வாழ்வு வீணாகானம்போல் இனிமையாகவாவது, உண்மையும் ஆண்மையும் அல்லது உறுதியும் பராக்கிரமு மளிப்பதாகவாவது முடிகிறது.

"5. இனிப்பயமில்லை யென்று ஒரு உறுதியும், எதனாலும் குலையாத சாந்தகுணமும் பிறரிடத்தில் அன்பும் தயவும் ஆதரிப்பும் காட்டுகிற சத்குணசம்பத்தும் கிடைக்கிறது."

"இவைகளுக்கு உதாரணங்கள் எடுத்துக்காட்டி நிரூபிப்பதில் பிறர் அனுபவங்களை யெடுத்துச் சொல்கையிலேயே நமக்கு மனங்குழைந்து போய்விட்டது. இனி மனதைக் குழையவிடாது திடமாய்நின்று தீரமாய் விசாரிப்போ"மென்று அவருடைய அபிப்பிராயத்தைச் சொல்லத்துவக்குகிறார். முதலாவது, 'ஆத்மானுபவம் எல்லாரிடத்திலும் ஒரேவிதமாய் இருக்கவேண்டுமென்று நினைப்பது சுத்தப்பிசகு: சாஸ்திரரீதியாகவும் உண்மைக்கு ஒத்ததாகவுமிருக்க அப்படியிருக்கவேண்டு மென்கிற அவசியமுமில்லை' யென்கிறார். எனக்கு குருமணியாய் வந்தவதரித்த பெண்மணி இந்த வுண்மையை வெகுநன்றாகவெடுத்துச் சொன்னாள். "ஞானிகள் எப்படியிருப்பார்கள்? என்றால், எப்படி வேண்டுமோ அப்படியிருப்பார்கள். அவர்கள் நடத்தையை ஒருவிதமாக வரையறுத்துச் சொல்ல முடியாது"என்றார்.

'மதவிஷயமாகக் கற்றும் கேட்டும் அறிவது பிரயோஜனமில்லை; உண்மை வழியில் நடந்துய்யவேண்டும்' என்கிறார். இதுவும் ஒரு மேலான உண்மையே. 'வாசாஞானம் உபயோகமில்லை'யென்றும் சொல்கிறார். அனுபவத்திலறிந்ததே உண்மையாதலால் "Science of religions may not be equivalent for living religion", 'வேதாந்த ஞானம் அனுபவஞானத்துக்கீடாகாது', என்கிறார்.

* "பார்வையிரண்டுண்டு பகிரகமுக மென்பர்" என்றதன் கருத்தை விரித்துரைத்து
பகிர்முகப் பார்வையில் நாம் எவ்வளவு நினைத்தாலும், அறிந்தாலும், பேசினாலும்; உள்ளத்
திலும் (அந்தர்முகப்பார்வையிலும்) அவை தோன்றல்வேண்டும்: இல்லாவிடில் பகிர்முகஞா
னம் பிரயோஜனப்படாது! அதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை யென்று காட்டுகிறார். "உள்ளம்
பெருகி உளம்பூரிக்கவேண்டும்" என்பாள் என்தாய். அது எப்படியென்றால் "உள்ளம் உருக்
உருகக் கள்ளம் கருகக்கருக" உளம்பூரிக்குமென்பாள். இவர் உள்ளனுபவத்தின் உண்மை
யை மனோதத்துவங்களை யொட்டி நன்றாக விளக்கிக் காட்டுகிறார்: இதைவிளக்கிக்காட்டி, உண்
மையில் கடைத்தேறவேண்டுமானால் அவனவன் அவன் மட்டிலுழைத்துக் கடைத்தேற வேண்
டுமேயன்றி பிறர்கொடுத்து வாரிக்கட்டிக்கொள்ளலாமென்று நினைப்பது சுத்தப்பிசகென்று
மனோதத்துவ முறைப்படி நிரூபித்துக் காட்டுகிறார்.

"தானேயுழைத்துத் தானவ னானற்கு வானவர்
கோன்குழைந் தாழியஞ் செய்வனே."—என்பது இவ்வுண்மையை விளக்கும் தூமொழி.

பக்தர்கள் முத்தர்கள் எண்ணங்கள், அவர்கள் அநுசரித்த மார்க்கங்கள், செய்த
பூஜைகள், மந்திர தந்திரங்கள், கடைசியில் அவர்கள் சித்தி பெற்றபின் அவர்களுடைய நடத்
தைகள், இவைகளை நுட்பமாக அனுதாபமின்றி ஆராய்ந்து பார்த்ததில், எல்லாரிடத்திலும்
ஏற்றத் தாழ்ச்சியின்றி ஓரே ரீதியாக உண்மையாய் விளங்குவது இரண்டு,—ஒரு தலைப்பில் அவர்
கள் எண்ணங்களும், மறுதலைப்பில் நடத்தைகளும் பொருந்தியிருப்பது, ஸ்பஷ்டமாய் விளங்கு
கிறது: எண்ணம் போலிருக்கும் நடத்தை யென்பது ஒரு மாறுவிதியாக விருக்கிறது—என்
வெகு பாடுபட்டு ஆராய்ந்து இந்த உண்மையை வற்புறுத்துகிறார். இந்த மகா உண்மை
"மனம் போலிருக்கும் மாங்கல்யம்" என்னும் அழகான பழமொழியில் அமர்ந்து கிடக்க
காணலாம். இதன் தத்துவத்தை ஏற்கனவே **விவேகசிந்தாமணி**யில் விளக்கிக் காட்டு
யெழுதியிருப்பதால் விரிவஞ்சி இம்மட்டு நிறுத்துவோம்.

மற்றொரு பெரிய உண்மையையும் கண்டு வற்புறுத்துகிறார். அது என்னவெனில்
"பக்தி"; இதை "faith-state" என்று சொல்கிறார். 'பக்தியில்லாத ஜன்மம் பாழ்' என்று
'கௌண்ட் லியோ டால்ஸ்டாய்' † சொல்லியிருப்பது வாஸ்தவமென்றும், எந்த விதத்தில்
பார்த்தாலும் அது உண்மையென்றும் வற்புறுத்திக் கூறுகிறார். பக்திரஸத்தைப் பற்றிச்
சிறிது விரித்து, பக்தியுண்டானால் சிரத்தையும் தானே யுண்டாகிறது என்கிறார். நம்மவர்
கள் இதனுண்மையறிந்தே 'பக்தி சிரத்தை' யென்று இரண்டையும் இணைபிரியாது கூட்டிச்
சொல்வது வழக்கம். இதனுண்மையறிந்த ஸ்வானுபவச் செல்வியாம் என்தாய் பக்திக்கும்
சிரத்தைக்கு முள்ள உறவை வெகு அழகாக வெடுத்துச் செப்பினாள்: "அப்பா குழந்தாய்,
பக்தியும் சிரத்தையும் மனிதருக்குள்ள இரண்டு கால்கள் போல், கடவுளைத் தேடிச்
செல்வோர் கடவுளை வழிபட்டு நடக்கும் இரண்டு அற்புதக்கால்களாம். கால்கள் எப்படி ஒன்று
முந்தினால் மற்றொன்று அதற்கு முன்னால் முந்தி, பின்னொன்று அதற்கும் முன்னால் முந்தி,
கால்களுடையவனை வழிதொலையச் சீக்கிரம் நடத்திக் கொண்டு போகின்றனவோ; அப்படியே

* See At mavidya manyari, அகண்டானந்தம்;
† Count Lss Tolstoy.

போல, பக்தியுள்ள மனதில் சிரத்தை யதிகரித்து, சிரத்தைக்குமேல் பக்தியதிகரித்து, இப்படி
ஒன்றின்மேல் ஒன்றாகப் பெருகி பக்தியும் சிரத்தையும் முமுக்ஷுவை வெகு சீக்கிரத்தில் முத்தி
வீடு கொண்டு போய்ச் சேர்க்குமப்பா" என்று அருட்சுவை மிக அமிர்த வருஷம் பொழிந்து
செப்பினள். என்னை யருமையாய்ப் பெற்றெடுத்த ஆனந்தத்தாயை "அம்மா, ஸ்வாமி யிருக்
கிறார் என்கிறீர்களே, அவரைப் பார்த்தீர்களா? அறிந்தீர்களா? அறியச் சொல்வீர்களா?"
என்று வினவியபொழுது, "அப்பா, ஸர்வஜீவதயாபரனான கடவுள் ஒருவர் இருக்கிறார். இது
சத்தியம். ஆனால் அவரைப் பற்றிச் சொல்லத் தெரியாது; அறியவும் முடியாது; ஆனால் அனுப
விக்கத் தெரியும்; நான் அவரை யனுபவித்துக் கொண்டு ஆனந்தமாயிருக்கிறேன். நீயும் அனு
பவித்துப் பார்த்தால் அப்போ தெரியும் அவருடைய ருசி. கல்கண்டு தித்திக்கிறது என்று
கற்கண்டைத் தின்னறியாதவனுக்குச் சொல்லி யென்னபயன். நான் வாயில் கற்கண்டைப்
போட்டுக்கொண்டு, வாயில் ஜலமூற நாவைநப்புக் கொட்டிக் காட்டினால் அவனுக்கு என்ன
தெரியும்; நப்புக்கொட்டுகிற சப்தம் கேட்குமேயன்றி யதன்சுவை யறியான். கற்கண்டை அவன்
வாயில் போட்டு எப்படி யிருக்கிறதென்று கேட்டால் நப்புக்கொட்டிக் காட்டுவான்" என்பாள்.
இப்படி "பால்நினைந்தூட்டுந் தாயினும் பரிந்து" "பாவியேனுடைய ஊனினையுருக்கி உள்ளொளி
பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து" என்தாய் அடிக்கடித் தூட்டி என்னை
யாளாக்கி விட்டது ஞாபகத்திற்கு வருகிறது. அதைநினைக்குந்தோறும் அவளன்பு இப்"புன்
புலால் யாக்கை புரைபுரைகனிய"ப்புகுந்திட, என் "என்பெலாமுருக்கி எளியையாய் ஆண்ட"
"நற்சோதி"யைச் "சிக்கெனப்பிடிக்க" யான் பட்டபாடுகள் மனக்கண்முன்தோன்ற இப்புன்மை
யனுக்கும் இப்பாக்கியம் கிடைத்ததேயென்றதிசயம் மேலெழுந்து பொங்குகிறது. இந்த அனு
பவ சிலாக்கியத்தை இங்கிவர் இப்படிச் சொல்கிறார்: "*God is not known, he is not under*
*stood; he is used.*" "If he makes himself useful, the religious consciousness asks for
no more than that" என்கிறார். இரண்டுக்கும் வித்யாசமில்லை. கடவுளோடைக்கியமாயனு
பவிக்கும் சுகத்தை என்தாய் போதித்த வண்ணம் **ஆனந்தத்தாய்மொழி**யிலிருந்து எடுத்
துக் கீழேவரைகிறேன்:—

"சுகமேதானாலும் சுகமென்றால் தித்திக்குமோ?
தின்னறியவேண்டியது இன்பசுகாசமதனை
இன்பசுகாசமதனைத் தின்னுருசியறிந்தாலும்
அறிந்த அறிவழிய வேண்டும்—
அப்புறந்தானேயார சுகம்
அந்த சுகமதனையறிந்துசொல்வ தெப்படிச்சொல்!
அறிவழிந்தசுகமதனை யனுபவித்தேயறியவேண்டும்."

இது விஷயமாக ப்ரொபெஸ்ஸர் ஜேம்ஸ் வற்புறுத்திக் கூறுவது மிகவும் நன்றாயி
ருக்கிறது. கடவுள் ஒருவர் இருக்கிறாரா இல்லையாவென்பது கேள்வியில்லை. "கடவுளு நானு
மொன்றானேன்" என்று பெரியோர் கூறியநிலை யனுபவிக்கக் கூடியதா இல்லையா? அது கூடிய
தானகாலத்தில் மற்றக் கேள்விகளுக் கிடமெங்கே.* இதைப்பற்றி அவர் முடிவாகச் சொல்
லும் அபிப்பிராயம் என்னவெனில், "Religion must be conisidered vindicated in a cer-
tain way from the attaek of her critics." "மதம் அனாவசியமென்று சொல்லக்கூடாது:
அது அவசியமானதே" யென்பதாம்.

* "Not God, but life, more life, a larger, richer, more satisfying life, is in the last analysis the end of religion. The love of life at any and every level of development is the religious impulse."—See p. 507, of his book.

ஓம். ஸ்ரீ.

திருமயிலையில்

# 'திருவள்ளுவர் சமாதி தரிசனம்.'*

## துதி.

சிந்தனையுனக்குத்தந்தேன் திருவருளெனக்குத்தந்தாய்
வந்தனையுனக்குத்தந்தேன் மலரடியெனக்குத்தந்தாய்
பைந்துணருனக்குத்தந்தேன் பரகதியெனக்குத்தந்தாய்
கந்தனைப்பயந்தமாதே கருத்தினிலிருக்குந்தேவே.—*Adapted.*

INTERNAL OR TRUE SPIRITUAL WORSHIP. †

## உட்சமய ஆராதனை.

வாயுதாரணை.

‡ "கும்பகத்தி னுள்ளே குறித்தானைத் தானோக்கில்
தும்பிபோ னிற்குந் தொடர்ந்து."

(அர்ச்சனமுறை.)

1. மண்டலங்கள் மூன்று மருவ வுடனிருத்தி
அண்டானை யர்ச்சிக்கு மாறு.

2. ஆசனத்தைக் கட்டி யரன்றன்னை யர்ச்சித்து
பூசனைசெய் துள்ளே புணர்.

3. உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு.

4. ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவை
பேதமற வர்ச்சிக்கு மாறு.

5. பூரித் திருந்து புணர்ந்து சிவனுருவை
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

6. விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு
[1] துளக்கற வர்ச்சிக்கு மாறு.

7. பிண்டத்தி னுள்ளே போரா திறைவனைக்
கண்டுதா னர்ச்சிக்கு மாறு.

8. மந்திரங்க ளெல்லா மயங்காம லுண்ணினைந்து
முந்தானை யர்ச்சிக்கு மாறு.

9. போரக் கருத்தினுற் பிண்டத்தி னுண்ணினைந்து
ஆராதனை செய்யு மாறு.

10. உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்சு
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு. [டை

* 'சமாதிதரிசனம்'-இப்பதத்தை ஆத்மார்த்தமாக வுணரவேண்டியது. இந்த தரிசன மகத்தவத்தை வார்த்தைகளால் விளக்குவது கூடாதாயினும் ஒரு உதாரணத்தால் விளக்குவோம். சநகாதி நால்வர் பரமசிவனிடத்தில் உபதேசம் பெறச்சென்றபோது அவர் கல்லால நீழலில் தக்ஷிணாமூர்த்தி ரூபமாயிருந்து சின்முத்திரைகாட்டி மனதையடக்கவழி 'இப்படியிரு'வென்று சமாதியிலிருந்து காட்டின காக்ஷியை சநகாதி நால்வரும் கண்டுயந்ததே 'சமாதிதரிசனமாம்.'

(சின்முத்திரையென்பது ஆட்காட்டி விரலையும் கட்டைவிரலையும் ஒன்றுசேர்த்து சீவனும் பரனுமொன்று எனச்சொல்லாமற் சொல்லும் குறியாம். இதை சற்குரு விளக்கிக்காட்டினாலன்றி உண்மை விளங்காது.)

† *cf* "God is Spirit and they that worship Him must worship in spirt and truth."

‡ இக்குறியிட்டதும் பின்வரும் 1-45 இலக்கமிட்ட ஈரடிகளும் ஔவையார் அருளிச்செய்தவை.

1. துளக்கம்—அச்சம். ஒளி இங்கு 'அச்சமற' எனக் கொள்ளல் பொருந்தும்.

(பக்திபூசனை.)

11. பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவ சிந்தையால்.

12. அன்பா லழுது மலறியும் ஆள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

13. கண்ணா லுறப்பார்த்துக் காதலாற் றானோக்கில்
உண்ணுமே யீச னொளி.

4. அடியார்க் கடியா யன்புருகித் தம்முள்
படியொன்றிப் பார்த்துக் கொளல்.

ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள்.

. மெய்ம்மயிர் கூர விதிர்ப்புற்று வேர்த்தெழுந்து
பொய்ம்மையி லீசனைப் போற்று.

. செறிந்தறிந்து நாடிச் செவ்விதா யுள்ளே
அறிந்தானை யாய்ந்து கொளல்.

(நினைப்புறுதல்.)

19. கருத்துறப் பார்த்துக் கலங்காம லுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

19. குண்டலியி னுள்ளே குறித்தானைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார்.

0. மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம்.

1. வேண்டுவார் வேண்டும் வகைதான் விரித்தெங்
காண்டற் கரிதாஞ் சிவம். [குங்

(அபயஸ்தம்.)

22. நெஞ்சகத் துனோக்கி நினைப்பவர்க் கல்லால்
அஞ்ச லென்னாது சிவம்.

23. பற்றலா தொன்றைப் பற்றினு லல்லது
கற்றதனா லென்ன பயன்.

24. தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை யறிவரோ தான்.

(ஆனந்தம்.)

25. இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்த மாம்.

(முத்தி.)

26. சூரியன் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.

(மௌனம்.)

27. சாகா திருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக விரு.

(மௌனகுரு.)

28. வெளியில் விளைந்த வெளியின் கனிதான்
ஒளியி லொளியா யுறும்.

(குருதரிசனம்.)

29. உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

30. புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு.

31. அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

32. பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு.

(ஐக்கியநிலை-ஞானம் பிரியாமை.)

33. குருவாம் பரனந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.

34. சுந்தரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

35. தாராதி தாரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார்.

36. ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை.

37. அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர்.

(குருமொழி.)

38. இதுமுத்தி சாதனமென் றேட்டில் வரைந்து
பதிவைத்தனன் குரு பார்.

(குருவழி.)

39. குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

40. தலைப்பட்ட சற்குருவின் சன்னிதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

41. நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிவற் றிருக்குஞ் சிவம்.

42. ஒன்றி லொன்றாத மனமுடையா ருடல்
என்று மொன்றாது சிவம்.

43. நாட்டமில்லாத விடம் நாட்ட மறிந்தபின்
மீட்டு விடாது சிவம்.

44. பஞ்சமா சத்த மறுப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னாது சிவம்.

(அவன் துணை.)

45. தோன்றாத தூயவெளி தோன்றியக்கா லுன்
தோன்றாமற் காப்ப தறிவு. [னைத்

(துறவியல்.)

அறிவே குருவாய்நின் றாங்காரம் போக்குவிக்கச்
செறிவே துறவாமென் றறி.

(என்தாய்.)

தன்னையவள் தான் வெள்ளையுருவினள் தயவு மிகு
பிள்ளையுருவினைப் பெருவெளி யாக்கினள். [யாற்

(முடிவுரை.)

ஆக்கினளென்று யாயினனே யுள்ளுற நோக்கிடில்
ஆக்கினளாயின னிருவரு மொன்றே.

ஓம் தத் ஸத்.

சிவோஹம்.

THE ILIAD OF HOMER.

# ஹோமர் என்னும் மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

(115-வது பக்கத் தொடர்ச்சி.)

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

வேறு.

66. அறைந்த சொற்கடன் செவிப்புக வக்கிலனென்பான்
நிறைந்த சிந்தையுஞ் சீற்றமு நெஞ்சிடைமிர
மறந்தவா நெடுவாளுறை கழித்தனன் மன்னை
இறந்து வீழவின் றெறிவனென் றுடன்றன னெழுந்தான்.

(இ-ள்) இவ்வாறு கூறியவார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் அக்கிலனுக்குக் கோபமும் விய சனமும் மேலிட்டுத் தனது கூரியவாளையுருவிக்கொண்டு அகமம்னனை ஒரேவெட்டாய் வெட்டித் துணிக் கின்றேனென்று கோபித்தெழுந்தான்.

67. எழுந்த வெஞ்சினப் பெருங்கன லியல்பினிலவிய
அழுந்து நெஞ்சினிலறிவெனுங் குளிர்புனல் பெருகக்
கழுந்தர் செய்செயல் கருதுகனெறியல வெனக்கொண்
டொழிந்துமேவின னொன்றேடொன்று றழ்வுறு முளத்தான்.

(இ-ன்.) பொங்கி யெழுந்த கோபத்தீயானது அவிந்து போகும்படி அக்கோபம் அழுந்திய நெஞ்சில் அறிவென்னும் குளிர்ந்த ஜலம் பெருக்கம் கொள்ள அக்கோபம் நீங்கி அறிவாலாலோசித்து அறி வில்லாத மூடர்கள் செய்யும் காரியத்தை நாம் செய்தல் முறையன்றென்று கருதி ஒன்றேடொன்று விகற் பப் படுகின்ற பல வெண்ணங்கள் மாறிமாறித் தோன்றும் உள்ளத்தனாகிய அவ்வக்கிலன் அரசனைக்கொல்ல வெண்ணிய எண்ணத்தை மாற்றினான்.

68. யாதுசெய்வ தென்றறிந்தில னிலங்கு தன்வடிவாள்
பாதிவள்ளுறை யுறைந்திடப் பற்றினனிருப்ப
ஓதும்விண்ணினின் றிழிந்தனள் யூனோவின் பணியாற்
போதமேவிய மினரவைப் பொலங்கொடிமாதோ.

(இ-ள்.) இன்னது செய்வதென்றறியானாகித் தான் உருவியவாளைப்பாதி யுறையிற்செருகிய வண்ணம் பிடித்திருப்ப அச்சமயத்தில் யூனோவென்னும் தேவராணியின் கட்டளையாலே மினரவையென் னும் தெய்வப்பெண் ஒருவள் வானுலகில் நின்று இறங்கி வந்தனள்.

69. போந்தவவ்வணங் கக்கிலன் பின்புறத்திருந்து
சேந்தவன் முடிபற்றின ளீர்த்தலுந்திரும்பி
ஏந்தல்யாவ ரென்றாங்கனநோக்கலுமிலங்கிக்
காந்தி வீசுறுங்கண்களாலினைய ளென்றறிந்தான்.

(இ-ள்.) அவ்வாறு வந்த அவ்வணங்கு அக்கிலன் பின்புறத்தில் நின்று அவன் முடியைப்பற்றி யிழுக்க அவன் யாவரென்று திரும்பிப் பார்த்தவுடனே அவளது கண்களினின்று வீசிய ஒளியினால் அவளை இன்னாளென்று தெரிந்துகொண்டான்.

70. வனப்பு மேவுரு மற்றவர்க் கறிவற மறைத்துத்
தனக்கு மாத்திரந் தெரிவுறத் தகையினில்விளக்கி
இனிக்கவே முன்னெழுந்திடு மியலுறுமணங்கைக்
கனக்க நோக்கின னின்னணங்கழ றின்னவனே.

(இ-ள்.) அழகு பொருந்திய தனது ரூபத்தை மற்றவர்களுக்குச் சிறிதும் காணக்கூடாதபடி மறைத்துத் தனக்கு மாத்திரம் தெரியும்படிக் காட்டி இனிமையாகத் தோன்றிய அவ்வழகிய தெய்வகன் னிகையை அக்கிலன் கவுரவப்படுத்தும் பாவனையாகப்பார்த்து அவளுடன் பின்வருமாறு கூறலாயினான்.

71. அன்பினாலெனை யளித்திடு மாசையாலீங்கு
வன்புறசெய்யு மிவ்வகமனன் கொடுமையால் வருகும்
துன்பியாவையுங் காணுமாச் சுடரு நீள்விண்ணின்
றிம்பரேகினை போலுநீ யெம்மையாளிறைவி.

(இ-ள்.) என்னை அடிமை கொள்ளும் தெய்வமே, என்னிடத்தில் வைத்த பிரீதியினாலும் என் னை ரக்ஷிக்கும் ஆசையினாலும், எனக்கு அக்கிரமங்களைச் செய்யும் இந்த அகமம்னனாலுண்டாகும் துன்பங்க ளெல்லாவற்றையும் கண்ணாரக்காணவந்தாய்போலும்.

72. துணிந்து செய்கொடும்பிழைகளைத் துன்னினை நோக்கும்
அணங்கினாரசே யினியப்பிழையிழைத்த
குணங்கெடுங்கொடுங் கொற்றவனுயிர் தனைக்குடித்துத்
திணிந்த வெம்பகை தீர்த்திடுந் திறனையுங்காண்டி.

(இ-ள்.) அரசன் எனக்குத் துணிந்து செய்த கொடிய குற்றங்களைப் பிரத்தியக்ஷமாக இங்கு வந்து பார்த்த தேவீ இனிமேல் நான் அக்குற்றங்களைச்செய்த நற்குணமில்லாத கொடிய அரசனைக்கொன்று என்பகையைத்தீர்த்துக்கொள்ளும் சாமர்த்தியத்தையும் உனக்குக்காட்டித் தருகிறேன்பார்—என்று கூறினான்.

73. விளம்பு மவ்வுரை செவியுற மினரவை யுரைப்பாள்
உளம்புழுங்கிடேலுன் சினமொழித்திடற் பொருட்டே
வளம்பிறங்கு நீள் வானகந் துறந்தனன் வந்தேன்
தளம்புமாரருள் யூனோவின் பணிதலை தாங்கி.

(இ-ள்.) இவ்வாறு கூறிய வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் மினரவை சொல்லுகின்றாள்: நீகோபியாதே. உன் கோபத்தை ஆற்றிடற் பொருட்டே அருள் நிறைந்த யூனோவின் கட்டளையால் வானகத்தைவிட்டு இங்கு நான் வரலானேன்.

74. வானநாயகி கட்டளை யிதனை நீ மறுக்கேல்
ஊனை நீங்கிய மனத்தினையுணர் வினுக்களித்து
மானவாளுறை செறிக்குக மன்னனைச்சிந்தை
ஈனமாம்வசை யெனுந்தழ லெரித்திடவிடுத்தே.

(இ-ள்.) வானநாயகியாகிய யூனோவின் கட்டளையாகியவிதனை நீ மறுத்திடாதே. குற்றமற்ற உன்மனத்தில் அறிவை ஓங்குவித்து உருவியகத்தியை உறையில் இடுக. அரசனை அவன் செய்த தீய செய்கையே தழல்போலச் சுட்டெரிக்கும்.

75. உரைக்கு மென்னுரையோருதி யுனக்குறு மிகழ்வைக்
கரைக்கவோக பகல்கணித்துளதன்று வெங்கதிர் வேல்
பரிக்கு மன்னவன் படைத்துணை வேண்டி நின்னுறுவன்
புரக்க வென்று பல்பொருள் கொடுபுகழ்ந்துனைப் புரிந்தே.

(இ-ள்) நான் சொல்லும் வார்த்தையை நினைவில் வைத்துக்கொள். உனக்கு அகமம்னனால் நேர்ந்த அபமானம் நீங்க ஒரு நாள் வருதற்குள்ளது. அப்போது அரசன் உன்னை வந்தடுத்து அநேக பொருள்களை உனக்குக் காணிக்கைவைத்து உன்னை விரும்பித் தோத்திரம் செய்து உன்னைப்படைத் துணையாக வரவேண்டுமென்று வருந்திவேண்டிக்கொள்வான்.

(இன்னும் வரும்)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## OBITUARY.

## மரணங்கள்.

சென்ற மாதத்திலும் இந்த மாதத்திலும் இவ்விராஜதானியில் பல துறையிலும் பேர்பெற்று விளங்கிய பலர் காலஞ்சென்றுபோனார்கள்.

(1) பல்லாரியில் பாரிவர்த்தகராயிருந்தவரும், பரோபகாரியும், சிலகாலம் சட்ட நிரூபணசபை மெம்பராயிருந்தவருமான **ராவ் பஹதூர் ஏ. சபாபதி முதலியார்** அவர்கள் சென்றமாசம் சென்னையில் காலஞ் சென்றார். இவர் தர்மிஷ்டர். ஜனங்களுக்கு உபகாரமாக எவ்வளவோ உதவி செய்தார். வியாபார விஷயங்களில் துணிந்து இந்தியா முழுமையிலும், இங்கிலாந்திலும்கூட இவர்பேர் பரவ வியாபாரஞ் செய்துவந்தார். கிருஷி விஷயமாக அநேக சீர்திருத்தங்கள் செய்ய ஒத்தாசை செய்தார். வியாபாரத்தில் நஷ்டம் வரவே, இவர் முன்போல் வெளியரங்கத்திலுழைக்காது அந்தரங்கத்திலுழைத்து வந்தார். இவருடைய மரணம் இவரை யறிந்த பலராலும் விசனிக்கத்தக்கது. இவருடைய ஞாபகார்த்தம் பெல்லாரியில் இவர் உருவத்தைச் சிலையிலடித்து வைக்க இவருடைய நேசர்கள் தீர்மானித் திருக்கிறார்கள்.

(2) **ஸர். அமராவதி சேஷய்ய சாஸ்திரியார்** அவர்களும் கும்பகோணத்தில் காலஞ்சென்றுவிட்டார். இவர் பௌவல் துரையின் கீழ் இங்கிலீஷ் படித்துப் பிரபலரான வாலிபர்களில் ஒருவர். பிரிடிஷ் துரைத்தனத்தார் சேவகத்தில் முதலிலமர்ந்து சீக்கிரத்தில்தானே தாசில்தார் வேலைக்கு வந்து படிப்படியாக மேலேறிக் கடைசியில் ரெவினியூ போர்டு சிரஸ்தேதார் பதவிக்கு வந்தார். அந்த வேலையிலிருக்கும்பொழுது ரெவினியூ போர்டு மெம்பர்கள் இவருடைய திறமையையும் உத்தியோக சாமர்த்தியத்தையும் நன்கு மதித்து இவருடைய ஆலோசனையை மிகவும் நாடி வந்தார்கள். அங்கிருந்து ஸர். டி. மாதவராயருக்குப் பின் திருவாங்கூர் திவானாகச் சென்று அங்கே நல்ல பேரெடுத்து, பிறகு பலவருஷங்கள் புதுக்கோட்டையில் திவானாகவும், திவான் ரிஜெண்டாகவுமிருந்து அச்சிறு ஸமஸ்தானம் நிலைகுலைந்திருந்ததைச் சீர்திருத்தி அதை நல்ல பதவிக்குக் கொண்டுவந்தார். இவருடைய புத்தித் தெளிவும், சாமர்த்தியமும் இராஜ்ய தந்திர நிபுணத்துவமும் இந்தியாவுக்கு வந்த கவர்னர்கள், கவர்னர்-ஜெனரல்கள் எல்லாராலும் மிகமதித்துக் கொண்டாடப்பட்டு வந்தன. ஸ்தூலம் பெருத்து, வயோதிக திசையில் வெளியேற சாத்தியமில்லாதிருந்தாலும் இவர் மாளிகையின் மேல்மெத்தையிலிருந்தபடி உலகில் நடக்கும் விஷயங்களையெல்லாம் உள்ளபடி யறிந்துணர்ந்து அவைகளில் சிரத்தையெடுத்துக் கொண்டுவந்தார். கவர்னர்கள் இவரைத்தேடி இவர் வீடுசென்று பேட்டியளித்து வருவார்கள். ஸர் ஆர்தர் ஹாவ்லக்கு கவர்னராயிருந்தபொழுது இராஜதந்திரத்தில் தான் இவருக்கு சிஷ்யராயிருக்கவே யோக்கியதை யென்றுசொன்னார். இவர் புதுக்கோட்டையி லிருந்தபொழுது விவேகசிந்தாமணியின் உபயோகத்தை யறிந்து அதை அந்தச் சமஸ்தானத்திலுள்ள எல்லாபள்ளிகளிலும் படிக்க உபயோகப்படும்படி துரைத்தனச் செலவில் வாங்கியளித்தார். இவரை நாம் நேரில் பார்க்க நேர்ந்தபொழுது தாம் விவேகசிந்தாமணியை இடைவிடாது வாசித்து வருவதாகவும், தமிழ்ப்பத்திரிகைகளில் அதுமிகவும் சிறந்ததாயிருக்கக் காண்பதாகவும், அது பொருள்வகையில் போதுமான உதவியின்றி வருந்துவதைக் கேட்கத் தான் விசனிப்பதாகவும் சொல்லி, இவ்விராஜதானியிலுள்ள பிரதமவித்தியாதர பாடசாலைகளெல்லாவற்றிலும் உயர்ந்த பாடசாலைகளிலும் கலாசாலைகளிலுங்கூட அதை யெல்லாரும் வாசித்து வருதல் மிக நன்மை பயக்குமென்றும் சொல்லி இப்பத்திரிகையினிடத்தில் மிக மதிப்புவைத்துள்ளவராகக் காட்டினார். இவருடைய சரித்திரமொன்று இங்கிலீஷில் புதுக்கோட்டை காலேஜ் ப்ரொபெஸ்ஸர் ம-ா-ா- காமேசுவரய்யர் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவர் காலஞ் சென்றதால் இந்தியாவில் மகிமை பெற்றுவிளங்கிய முன் காலத்திய பிரபல மஹான்களில் கடைசியாயிருந்த ஒருவர் மறைந்தார்.

(3) கனம் மிஸ்டர் ஜீ. எச். ஸடுவேர்ட்.—வித்யா இலாகாத்தலைவராயிருந்த கனம் மிஸ்டர் ஜீ. எச். ஸ்டுவேர்ட் அவர்கள் சில நாள் தேக அசௌக்கிய

மாயிருந்து நாளது நவம்பர்மீ 8உ ஞாயிற்றுக் கிழ
மையன்று இரவு சென்னையில் காலஞ்சென்றார்.
இவருக்கு வந்த வியாதி குணப்படும் போல்காட்டியும்
அது பிந்தி அதிகமாகி அவரை மாய்த்துவிட்டது.
1832-ம் வருஷம் போர்ட்டர்துரை ஸ்தானத்தில்
கும்பகோணம் காலேஜ் தலைமை வகிக்குமாறு சீமை
யிலிருந்து வரவழைக்கப்பட்டார். கேம்ப்ரிட்ஜ் யூனி
வர்ஸிடியில் இவர் படித்துத்தேறினவர். கணித
சாஸ்த்திரத்தில் மஹா நிபுணரென்று பேர்பெற்றுத்
தேறியவர். அது விஷயமாக நடக்கும் கடின
மான பரீக்ஷையில் முதல்தரமாகத் தேறின "Wr-
angler" என்று சொல்லும் உயர்ந்த கீர்த்திபெற்
றவர். இவருடைய புத்திவன்மை யெல்லாராலும்
கொண்டாடப்பட்டுவந்தது. மூனறுவருஷம் கும்ப
கோணத்திலிருந்து, பிறகு சென்னை பிரெஸி
டென்ஸி காலேஜுக்கு வந்தார். அங்கே சில
வருஷங்கள் ப்ரொபெஸ்ஸராயிருந்த பின் டாக்
டர் டங்கனுடைய ஸ்தானத்தில் இவர் காலேஜ் தலை
மையதிகாரம் வகிக்கலானார். இவரைப்போல் அபா
ரசாமர்த்தியமுள்ளவர்கள் சாதாரணமாக இப்பொ
ழுது சென்னை வித்யா இலாகாவுக்கு வருகிறதில்லை.
பூனாவில் ஸ்ரீ புருஷோத்தம பரஞ்சபே ஒருவரே இவ
ரைப்போல் கீர்த்திபெற்று இத்தேசத்தில் வித்யாவி
ஷயமாக உழைத்துவருகிறார். இவருடைய புத்திசா
மர்த்தியத்தைக்கண்டு எல்லாரும் இவரை நன்கு மதி
த்தார்கள். புத்திவன்மை மிகுதியுமுண்டானாலும்
அஃதோடு தான் போனதே போக்காய்ப் போகும்
குணமுமிருந்ததால் பொதுவிஷயங்களிலேனும்
மற்ற விஷயங்களிலேனும் வித்யா இலகா சம்பந்த
மாய் இவரை பொதுப் பிரயோஜனமான ஒருவழியில்
திருப்புவது சாத்தியமாகவில்லை. சுதேச பாஷைக
ளால் கெடுதலே யன்றி நன்மை யில்லையென்கிற
பாவம் இவருக்கு எப்படியோ மனதிற்பட்டுவிட்டது.
சுதேச பாஷாஞானம் இவருக்கு அதிகமாகவில்லை
யாதலால் அப்பாஷைகளின் குணமறிந்துகொண்ட
அபிப்பிராயம் என்று சொல்வதற்கில்லை. அப்பாஷை
யனாவசியமென்று தனக்குப்படவே அதை யெப்ப
டியும் தொலைத்துவிடுவதே சரியென்று நினைத்து
நடந்து வந்தார். இது இவர்மட்டில் சொந்தமாய்க்
கொண்ட அபிப்பிராயமா யுள்ளவரையில் இவர்மேல்
ல்வதற்கில்லாமலிருந்தது. வித்யா இலா
காத் தலைவராய் வந்தபின்னும் இவர் இந்த அபிப்
பிராயத்தையே உத்தியோகமுறையிலும் தழுவி
யனுசரிக்கத் தலைப்பட்டது சுதேச பாஷா
பிமானிகள் எல்லாருக்கும் பெரும்பீதி விளைப்
பதாயிற்று. யூனிவர்ஸிடி கமிஷன்முன் யூனி
வர்ஸிடி பரீக்ஷை சம்பந்தமாக சுதேசபாஷை
களை அறநீக்கிவிடுவதே நலமென்று சொன்னதை
யவர்களும் அங்கீகரித்துச் சிடார்சுசெய்ய அது
பெரு வில்லங்கமாக முடிந்தது. இது விஷயமாகப்
பிந்தி பொதுஜன அபிப்பிராயம் பிரத்யக்ஷமாக வெளி
யிடப்பட்டதைக் கொண்டும், யூனிவர்ஸிடி ஸெனேட்
சபையிலே இந்தச் சிபார்சு அங்கீகார மானதல்ல
வென்று தள்ளப்பட்டதிலிருந்தும் இவர் தம்முடைய
சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தாரென்றும்
தன் உத்யோகப் பொறுப்பையும் வித்யா இலாகா
வின் உட்கருத்தையும் ஜனங்களின் க்ஷேமத்தையும்
கருதித் தம்அபிப்பிராயத்தை யாதரித்து பொதுஜன
அபிப்பிராயத்தையும் க்ஷேமத்தையும்நாடி இச்சிபார்சு
செய்தவராகத் தெரியவில்லை. சமீபகாலத்தில் பிர
தம வித்யாவிஷயமாகச் சிறிது சிரத்தை யெடுத்துக்
கொண்டு ஏதோ பிரதமபாடசாலைகளையும் அங்கு
போதிக்கப்படும் வித்யாமுறையையும் விர்த்திசெய்
வார்போல் தோற்றியது. அதுவும் ஒன்று மில்லா
மற்போயிற்று. இவர் வித்யா இலாகாத்தலைமை வகி
த்த நாலு வருஷகாலத்தில் வித்யாவிஷயமாக இவர்
செய்த சீர்திருத்தங்கள் ஒன்றும்விசேஷமாகச்சொல்
வதற்கில்லையாயினும், இவர்மட்டில் புத்தி வன்மையி
லும் சாமர்த்தியத்திலும் மிகச் சிறந்தவரென்பதிலும்
இவரைப்போல் மேதாவி வித்யா இலாகாவுக்கு இல
குவில்கிடைக்கமாட்டாரென்பதிலும் சந்தேகமில்லை.
இவர் இத்தேசத்திற்கு உத்யோகமாக வந்து 20-வரு
ஷங்களுக்குமேலாகின்றன. இன்னு மிரண்டொரு
வருஷங்களில் இவர் பென்ஷன் பெற்றுக்கொள்ளும்
படியான காலம் கிட்டி விடும். இந்த சமயத்தில்
இவர்தம் மனைவியையும் புத்திர மித்திரர்களையும் உத்
யோகத்தையும்விட்டுப் பிரிந்து போகும்படி இவருக்கு
மரணதிசை நேர்ந்தது மிகவும் விசனிக்கத் தக்கதே.
இவருடைய மனைவி மக்கள் மித்திரரோடும் இவரு
டைய சகோதரர் மிஸ்டர் எச். ஏ. ஸ்டுவேர்ட்டோடும்
இது விஷயத்தில் எல்லாரும் அனுதாயப்படுவார்கள்.
நாமும் அனுதாபப்படுகிறோம்.



(4) **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்,—**
கிறிஸ்தியன் காலேஜில் பிரதமதமிழ்ப் பண்டிதராயி
ருந்தம-ா-ா-ஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி
யவர்கள், சிலவருஷங்களாக க்ஷயரோகத்தால் பிடிக்
கப்பட்டிருந்து இந்தமாச முதலில் காலஞ்சென்றது
மிகவும் விசனிக்கத் தக்கது. இவருக்கு வயசு 33-க்கு
மேலாகவில்லை. இவ்வளவு இளவயதில் இப்படி
அகால மரணமடைந்தது மிகவும் பரிதாபத்தைக்
கிளப்புவதாயிருக்கிறது. இவருக்குப் பாலப்பருவ
முதற்கொண்டு தமிழில் அபிமானம் அதிகம். இவ்
விவேகசிந்தாமணியாரம்பிக்கப்பட்ட காலத்தில்இவர்
சென்னை கிறிஸ்தியன் காலேஜில் பி. ஏ. பரீட்சைக்
குப்படிக்கும் மாணவர்களில் ஒருவராயிருந்தார். அப்
பொழுது விவேகசிந்தாமணிக்கு எழுதிவந்த செந்த
மிழ்ப்பயிற்சி பெற்ற வாலிபசிகாமணிகளில் இவர் ஒரு
வராய்விளங்கினார். பி. ஏ. பரீக்ஷையிற்றேறினபின்
கிறிஸ்தியன் காலேஜிலேயே ஹைஸ்கூல் தமிழ்ப்
பண்டிதராக உத்யோகம் பெற, அதுமுதல் இவ
ருக்கு இயற்கையாகத் தமிழிலுள்ள அபிமானம்
மிகப்பெருகி, மேன்மேலும் தமிழ்ப் பாண்டித்தி
யம் பெற இவரைத் தூண்டியது. பிரதம தமிழ்ப்
பண்டிதர் காலஞ் சென்றபின் இவருக்கு அந்த
ஸ்தானம் கிடைக்கவே, காலேஜ் வகுப்பு மாணாக்கர்
களுக்குத் தமிழ் போதிக்கவும், தமிழில் தனக்
குள்ள அவாவினால், தம் மாணவருள்ளத்திலும்
அது விஷயமாய் அவாவெழச் செய்யத்தூண்ட
சந்தர்ப்பமும் கிடைத்தது. இந்த அருமையான
சந்தர்ப்பங்களை இவர் நன்குபயோகிக்காது கை
நழுவவிட்டார் என்று சொல்வதற்கில்லை. ஏனெ
னில் இவர் தாமே பல கிரந்தங்களியற்றினதன்றி
இவர் மாணாக்கர்களில் தமிழ் வன்மை வாய்ந்தவர்
களைத் தூண்டிவிட்டு அவர் மனம் உற்சாகப்படும்
படிசெய்து அவர்களையும் பல கிரந்தங்கள் எழுதும்
படிசெய்து அவைகளைத் தாமே பார்வையிட்டுத்
தொகுத்துப் பதிப்பிக்க வித்யாசாதகமும் செய்
தார். இவர் பண்டிதரான பிறகு சாமான்யஜன
ருமுணரும்படி எளிய நடையிலெழுதுவதைவிட
உயர் நடைபற்றி பண்டிதர் களிக்கவே யெழுதித்
தம் பாண்டித்தியத்தைக் காட்டி வந்தாராயினும்,
இவர் முயற்சியால் தமிழ் நூல்கள் விர்த்தியடைய
நேர்ந்ததும், இவர் செல்வாக்குக்குட்பட்ட மாணவர்
கள் வழக்கம்போல் தமிழை யசட்டைசெய்து தள்
ளாது அதிலபிமானம் வைத்து ஆதரவாய்ப்போற்றிய
தும் தமிழுக்குப் பெரிதும் கிடைத்த ஒரு பாக்கி
யமே யென்று சொல்லல்வேண்டும். இவர் தம்மாண
வர்களால் மட்டுமன்றி இவருடைய காலேஜ் ப்ரொ
பெஸ்ஸர்களாலும், மற்ற பண்டிதர்களாலும் நன்கு
மதிக்கப்பட்டுவந்தார். இவருடைய நண்பர்கள் பல
ரில் இவரைப்போல் பாண்டித்தியம்பெற்ற "அசலாம்
பிகையம்மை" யென்னும் பிரம்மகுல வித்யாரத்
னம் இவர் பிரிவாற்றாது பாடியது இரக்கமும் உருக்க
முமாயுள்ளதுபற்றி அவர் பாடிய இரங்கற் பாக்களில்
முதலிரண்டையும் ஹிந்துநேசன் பத்திரிகையிலிருந்
தெடுத்து இங்கு பிரசுரிக்கிறோம். அவை பின் வரு
மாறு:—

"சீரியர்தஞ் சிரமணியாஞ் சிவநேயக்
கோவிந்த சிவனா ரென்னும்
பேரியைந்த தவமலையிற் பிறந்ததமிழ்
மதக்களிறே பீடார் நந்தம்
ஆரியநற் குலவிளக்கே யருந்தமிழ்ப்பெண்
விழிமணியே யமுதே தேசார்
சூரியநா ராயணப்பேர் புனையருமைச்
சோதரமே சுகுண மாலே."

"உலகிருளைப் புறத்தோட்டு மொருகடவுட்
டிருநாம முடைமைக் கேற்ப
அலகில்பல மாணவர்த மகவிருளைப்
புறத்தோட்டி யகிலந் தோன்ற
விலகொளியை மிகவிருக்கு மப்பரிதி
யெனமேதை விளக்கங் காட்டிப்
பலகலையு மூலந்தேரப் பண்ணியநின்
பெருங்கருணைப் பகரற் பாற்றே."

இவர் அகாலமரணமாகப் போனதைப்பற்றி இவர்
பிரிவாற்றாது வருந்தும் வித்யாசோதரியாம் "அச
லாம்பிகையம்மை" யோடும், வயது சென்ற பெரிய
வரான அவர் தாய்தந்தையரோடும், நேரக்கூடாத
விபத்து நேர்ந்துவிட்டதால் உள்ளம் நொந்து புண்
பட்டுழலும் அவர் தர்மபத்தினியோடும், இளவய
திலே தந்தையாதரவிழந்த அவர் அருமைக்குழ
ந்தைகளோடும் நாம் மனங்கலந்து உள்ளமுருகி
வருந்துகிறோம். ஆனைமுதல் எறும்பீறாக அண்ட

சராசரங்களையும் ஆட்டுவித்து லீலா விநோதமாக
ஆக்கியழித்துக் காத்தருள் செய்யுமீசன், இவர்களு
ள்ள மறிந்து உண்மை விளங்கக் கருணைமிகுந்து
இவர்களது துன்பந்துடைத்துத் தூய்நெறிகாட்டுவா
னென்று திருவருட்சோதியை நினைந்து பிரார்த்திக்
கிறோம். இவர்களுக்கு நாரூபமான நாம் என்ன
ஆறுதலைச்சொல்வோம். "ஆறாத்துயரமெல்லாம்
ஆற்றுவது ஈசன் அருள்," "மாறாக்கலக்கமெல்லாம்
மாற்றிவிடும் மனோமௌனம்."

"பூட்டியிட்ட தேகமிது-போயழியு மெந்நாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு-நற்பெயரே கண்ட
[பலன்."
"சத்தியமேநன் மார்க்கம்-தவறுவருமற்றெதிலும்
வித்தையிதில்லாபமெத்த-விசுவாசம்மெத்த
[மெத்த."

---

* SHORT SAYINGS ON GREAT SUBJECTS.

*(By a Wandering Ascetic)*

## பேராற்றலைக் குறித்து

ஒரு பரதேசி சொல்லிய

## சிறுமாற்றங்கள்.

---

### தைரியம்.

இவ்வுலக வாழ்க்கையில் மேன்மை யடைவிப்
பது தைரியமே. புகழிற்கு மூலகாரணமும் அதுவே.
மேற்கொண்ட தொழிலிற்கேற்ற தைரியமிருத்தல்
வேண்டும். தமக்கு நேரிடக்கூடும் தீங்கைச்சிறிதும்
ஆலோசியாமல் தம் பக்தியிலுறுதியுற்ற சத்தியக்
கொள்கைகளைத் தைரியமாய்ச் சனசமூகத்திற்கு
எடுத்துரைத்தல் மேற்கூரிய தைரியத்தினாலேற்
படும். நம்கொள்கைகளைக் குறித்துப் பழித்து நகை
யாடுவார்களே என்ற அச்சம் சிறிது மில்லாமல் நம்
நம்பிக்கைகளை எடுத்துக் கூறல்வேண்டும். ஒருவ
னுக்கு ஒரு காரியத்தைச்செய்து முடிக்கத் திறமை
யிருக்கலாம். ஆனால் அவன் அதைச்செய்யும்பொ
ழுது அச்சமடையில் யாதுபயன்? ஒரு விஷயத்தைப்
பற்றித் தெரிந்தவர் அதையே எடுத்துச் சொல்லத்
திறமையில்லாதவராகின்றனர். சொல்ல முடியாமை
தைரிய மின்மையாற்றான், என்று ஏற்படுகின்றது.
தைரியமுடைமையே தீங்கினின்றும் ஒருவனைக்
காப்பாற்றுவிக்கும். தைரியமே, மேலும் மேலும்
எத்தொழிலையுஞ் செய்தற்கேற்ற ஊக்கத்தைத்
தருகின்றது. கம்பர் சிறப்புப் பாயிரம் வாங்கவந்த
தைரியத்தை விடாததால் கம்பராமாயணமும்
கம்பரும் இருக்கிறார்கள். புகழுறுவதற்கே தை
ரியத்தை மேற்கொள்ளுகின்றனர் அநேகர்.
மனசாக்ஷிக்கு நேர்மையானவற்றையும் கடமை
யாற்செய்ய வேண்டியதையும் பயன்றருவன
வற்றையும் தைரியமாய்ச் சிலர் செய்து முடிக்கின்ற
னர். குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கத்தின்
பெருமை சிறிதேனும் குறையாதவாறுபோல் எப்
பயனை எதிர்பார்த்துத் தைரிய முற்றாலும் அக்
குணமுடைமை மேன்மையே. தைரியம் புருஷ
லக்ஷணம். பலவித இல்லாத காரணங்களைக் கருதி
பிறர் ஊக்கத்தையும் கெடுத்து தானும் கெடுகி
றவனே ஆண்ரூபம். 'செய்யாத காரியம் செய்யத்து
ணிவதும்'† தைரியம் தானே. பொருள் கவர்
வதும் தைரியம் தானே. 'தைரியமாவது ஒன்
றுவது, எல்லாம் காலத்தைப்போல நடக்க
வேண்டு'மென்பார் பலர். அவர்களே உலகத்திற்கு
சுவை, இனி காலத்தைப்பற்றிக் கவனிப்போம்.

### காலம்.

உலகத்திலடையக் கூடிய எல்லா நன்மைகளும்
காலத்தைப் பற்றியவே. அநுபவிப்பதற்குக் காலம்
மில்லாவிடின் சிநேகிதத்தாலேனும் புத்தகங்களா
லேனும் சௌக்கியத்தாலேனும் தேசசஞ்சாரஞ்செய்
பத்தினாலேனும் என்ன பயனையடையவரும். காலத்
த்தை பணத்திற் கொப்பிடுவது வழக்கம். உயிருக்
ஒப்பிடுவதே மேன்மை. நாம் பயனின்றிக்
கழிக்கும் விநாடிகள் யுகங்கள் புரளினும் மறுபடியும்
அடையலாகுமா? சிலருக்கு இன்பமும், சிலருக்குத்
துக்கமும் விளைதல், ஒரே காலவளவையைச்
சிலர்க்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும்
காட்டுதல், குற்றத்தைச்செய்து அதனை வெளியிடு
தல் ஆகிய இத்தகைய மாறுதலையுடைய குணங்களுக்
கெல்லாந் தலைவன் காலம். காலம் மனிதர்க
ளுக்குகந்தாற் போலவும் நடக்கின்றது. சிலரி
டத்து அது மெதுவாகப் பேசுகின்றது; சிலரிடத்து
தவழ்கின்றது; கல்லாத மூடனிடத்து நடிக்கின்
றது. காதலால் வருந்துபவரிடத்து மிகவும் மெது
வாகப் போகின்றது. விடுமுறைகாலங்களில்
கியாயவாதிகளுடன் தாழ்கின்றது. சோம்பேரிகளே
ஒரு காரியத்தைச் செய்யக்காலமில்லை யென்பார்கள்.
வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய்போல் நூற்
கலாம். இன்ப மிருந்தால் எதுவும் செய்யலாம்.
முயற்சி செய்யாமலே காலத்தின்மேல் பழி போடு
வார் அநேகர். காலத்தை வீணே கழிக்காமல் வாழும்
வாழ்க்கையே மேலானதெனப் புகழலாம். ஒரு
காரியத்தை இன்றைக்குச் செய்யலாம் நாளைக்குச்
செய்யலாம் என்று நினைத்து நீடித்தல் மடமை. செய்
யவேண்டியதை உடனே செய்யவேண்டும். கால
மாகிய செம்படவன் மனிதர்களாகிய மீன்களை
அவரவர்களுக்குப் பிரியமான உணவைத் தூண்டி
யில் வைத்துப் பிடிக்க முயலுகின்றான். சீக்கிரத்
தில் அவன் தூண்டிலில் சிக்கிக்கொள்ளுகிறார்கள்.
காலம் பறப்பதாகப் பலர்கூறுவார்கள். காலத்தை
வீணேகழிக்கும் நம்மினும் அது ஓடவில்லை. ஆத
லால் நம்மால் இயன்ற உதவி செய்யவே காலம் ஏற்
பட்டது. மேல்விசாரணை ஒன்று செய்யவேண்டும்.
அது,

### தன்முயற்சி.

நாம் அடைய விரும்பும் எப்பொருளையும் முயற்சி
யின்றி எய்துதலரிது. முயற்சிசெய்தால் எதுவும்
முடியும். முடியாத காரியம் இவ்வுலகிலில்லை. மூ
டரே ஒருசெயலைச் செய்தல் முடியாது என்பர். நம்
மவர்களும் விதிக்கொள்கை முயற்சியைப் பெரிதும்
தடைசெய்கின்றது. "ஊழிருந்தால் எதுவும் நாம்
முயலாமலே வந்துறும்" என்னுங்கூற்று அடிக்கடி
கேள்விப் பட்டிருக்கிறோம். மேலும் சோதிடர்
வாய்மொழியில் நம்பிக்கையுள்ளவர் அதிகமாக முய
ற்சி செய்வதில்லை. ஒரு நோயுற்றான் பிழைத்திருக்க
வேண்டுமென்று மருந்து கொடுக்கவேண்டுவது அவ
சியம். அவ்வாறிருப்ப அநேகர் 'பிழைத்திருக்க
வேண்டுமென்று பிரமன் விதித்தனனாயின் மருந்
தின்றியே நோய் தீரும், இல்லையேல் எப்படியும் இற
ப்பான்' என்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் அன்னார்

> தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருந்தக் கூலிதரும்.

(என்பதனுண்மையை யுணர்வதில்லை. தானே
முயற்சிசெய்யாமற் பிறர்மேற் பழியிருத்தலொண்
ணாது. காலமறிந்தும் இடமறிந்தும் முயற்சி செய்தல்
வேண்டும். தன்முயற்சியின்றிக் கடவுள் கொடுப்பார்
என்று நம்பினால் செல்வனாதல்கூடுமோ? அருங்கலத்
திட்டபாலடிசிலைக் கையாலுண்ணாமற் போனால் எவ்
வாறு பசி தீரும். தெய்வம்காட்டுமேயன்றி வாயிலூட்
டாது என்று பழமொழி வழங்குகிறது. முயன்றும்
ஒரு பொருள் கிட்டாவிடின் மனத்தளர்ச்சியடைதல்
கூடாது. நமது ஊக்கத்தை மேன்மேலும் எழச்
செய்தல் வேண்டும்: இப்பொழுது அடையும் துன்ப
ங்களினும் இனி அடையும் இன்பத்திற்கு ஒரு அறி
குறி யென்று அதைநினைக்க வேண்டும். ஒருதொழி
லைச்செய்யப் புகுந்தாற் பெரியதடைகள் வராமலிரா.
இடையில் வருங்கஷ்டங்களை நினைத்து வருந்துதல்,
மடமை. தைரியமாய் முயற்சியாகிய துணைவலி
கொண்டெதிர்த்தலே மேன்மைக்குணம். ஆற்றாத்
தைப் போரில் வீழ்த்தலே மேன்மை. வீரனோடு
போர்புரிந்து வெல்லுதலே நலம். இறைவனளித்த
திறமையைக்கொண்டு தம்தம் தொழில்களை முற்று
விக்கின்றவனே வாழ்க்கைப் போரில் துன்பத்தீயரை
க்கடிந்து இன்பவெற்றிக்கொடி நாட்டுவோனாவான்.

---

EXTRACT.

## RAINBOW.—வானவில்.

---

வானவில்லையறியாதார் இவ்வுலகத்தில் ஒரு
வருமிலர். இதனையே இந்திரதனுசு என்றும் சொல்
லுவார்கள். சூரியனுக்கு எதிரில் மழை பெய்யுங்
காலத்தில் சூரியரஸ்மிகள் ஜலத்துளிகளின்மீதுவிழு
அதிக அற்புதமானதும் மனதுக்கு ரம்மியமானதும்

* We make a present of these stray thoughts of a youthful ascetic (not yet 23 years old) who, attracted by the religious ideal,' has left home & parents to wander in quest of Truth or attain *Kaivalyam* (perfection), to those who would lightly lay their iconoclastic hands on the 'Religious Ideal' hallowed by traditions of ages & instructed in words & deeds of every day life. He is not 'educated' in the sense in which it is now generally used. Of English he knows not a word & in Tamil his spelling is "awful bad" as the Inspecting School-master would remark. We have corrected his spelling but have left his sentences untouched. Ed. V. C.)

† We have generalised in these words the 'particular' statement of the author.

சப்தவர்ணங்களுடன் கூடினவில்போன்ற ஓர் உருவம் ஆகாசத்தில் அடிவானத்துக்குச்சமீபத்தில் தோன்றும். உற்றுநோக்குங்கால் ஒன்றன்மேலொன்றாக இரண்டுவானவில் தோன்றும். உள்வானவில்லின் வர்ணரேகைகளின் அமைப்பானது தெளிவாயும் பிரகாசமாயுமிருக்கும். அதற்கு மேல்சொற்பம் இடைவிட்டுத்தோன்றும். மற்றொன்றின் வர்ணரேகையின் அமைப்பானது வர்ணங்களின் நிலைமை முறைமாறி அவ்வளவு பிரகாசமின்றி மங்கின நிறமுள்ளதாய்த் தோன்றும். சூரியன் அடிவானத்திலிருந்து நாற்பத்தைந்து டிக்கிரிக்கு மேல் உயர்ந்திருந்தால் வானவில் கண்ணுக்குத் தோன்றாது. அதாவது கண்ணுக்குத் தோன்றும் ஆகாசவளைவை நான்கு பாகமாகச்செய்யுங்கால் அடிவானத்திலிருந்து மேற்கிலும் கிழக்கிலும் கால்பாகம் இருக்குமிடத்திற்குள் சூரியன் இருந்தால் இந்திர தனுசுவின் தோற்றம் நம் கண்களுக்குத்தோற்றும். இதற்குக் காரணமென்ன? சூரியனிடமிருந்து பார்க்கிற மனிதனுடைய கண்ணுக்கு நேர்கோடு இழுத்து அந்தக்கண்ணினிடமிருந்து சூரியனுக்கு எதிர்ப்புறமாக 45 டிக்கிரியுள்ள ஒருகோணத்தை ஏற்படுத்தினால் அந்தக் கோணத்தின் மேற்கோட்டின் எல்லைக்குள் பிரகாசமான வானவில்லானது தோன்றும். ஆகவே எல்லா மனிதர்களும் ஒரு உயரமுள்ளவர்களாகவும் ஒரே இடத்திலிருந்து பார்க்கக்கூடாத வர்களாயு மிருப்பதால் உண்மையில் 45 டிக்கிரியுள்ள கோணங்கள் பல உண்டாகின்றன. அதனால் யதார்த்தத்தில் பார்க்கிற பேர்கள் எத்தனைபேர்களோ அத்தனை வானவில் ஆகாசத்தில் ஏற்படும். அவனவன் பார்ப்பது ஒரு வானவில்லாயினும் அவனுடைய உயரத்துக்குத்தக்கபடி அவன் ஒன்றைப் பார்க்கிறான். மற்றொருவன் தானிருக்கிற இடத்திலிருந்து பார்க்கையில் மற்றொன்றைப்பார்க்கிறான். ஆகவே எல்லோரும் உண்மையில் ஒரே வானவில்லைப்பார்க்கவில்லை. ஆனால் பலபேர்கள் வானவில்லைப்பார்க்குங்காலத்தில் ஏறக்குறைய ஒரேயிடத்தில் ஒரே வானவில்லைப் பார்ப்பது போலவே நினைக்கிறார்கள். எல்லோரும் ஒரே குறிப்பிட்ட இடத்தை நோக்கி இதோ வானவில் தோற்றுகிறதென்று சுட்டிக்காட்டுகிறார்கள். இதற்குக்காரணம் என்னெனில் சூரியன் மிக்க தூரத்திலிருக்கிறபடியாலும் (9,20,00,000 மைல் தூரம்) பற்பல ம[illegible]தர்களுடைய உயரத்தின் அளவுமிகச்சொற்ப[illegible]யிருப்பதாலும் அல்லது அடிக்கணக்குகளாயிரு[illegible]தாலும் மேற்கூறிய வித்தியாசங்களிருந்தும் தோ[illegible]றத்தில் இல்லாமல் பொய்த்துப்போகின்றன. இ[illegible]னும் ஆராயின் சூரியனுடைய ரஸ்மிகள் ஒன்றன்பி[illegible] ஒன்றாய்வருகின்ற ஜலத்துளிகளின் பிரவாகத்தின் மேல் பட்ட ஒவ்வொரு ஜலத்துளியும் ரஸ்மிகளைப் பிரித்துச் சித்திரம் எழுதினாற்போல் ஆகாசத்தில் தோற்றத்தையுண்டுபண்ணுகின்றது. ஒரு விநாடியில் பார்த்த ஜலத்துளிகள் கீழே விழுந்து ஜலத்துளி பிரவாகங்கள் வந்து கொண்டே இருக்க வான வில்லில் யாதொரு கீற்று அல்லது பிளப்பு இல்லாமல் சித்திரப்படம்போல் கோணாமற் குறுகாமல் இடைவிடாமல் வானவில்லின் தோற்றத்தைப்பார்க்கிறோம் இதற்குக்காரணமென்ன வெனில் பார்க்கிற நம் கண்ணில் உண்டாகும் பிம்பம் ஒவ்வொன்றும் அரைக்கால் விநாடி கால அளவு தங்கிப்பின் மறைகிறது. ஒரு பிம்பம் கண்ணில் பதிந்து அதுமறைகிறகாலத்துக்குள் அதேமாதிரியான மற்றொரு பிம்பம் ஒன்றன்பின் ஒன்றாய்த்தொடரும் பக்ஷத்தில் ஒரே பிம்பத்தைப் பார்க்கிறதுபோலவே நமக்குத்தோன்றும்.

இதைச் சிறுஉதாரணங்களால் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம். புஸ்தகம் வாசிக்கும்பொழுது கண் கொட்டினபோதிலும் எழுத்துக்கள் ஒரே வரிசையாய்த் தோற்றுகின்றன. கொள்ளிக் கட்டையைச் சுற்றுங்கால் ஒரே கொள்ளிவட்டம் தோன்றுவது யாவரும் அறிந்ததே. வாயில் ஜலம் விட்டு சூரியனுக்கு எதிரே துப்பும் பக்ஷத்தில் வானவில்கள் போன்ற உருவங்கள் தோன்றுவது பிரத்தியக்ஷம். நாம் வஸ்திரம் சுத்திபண்ணுங்காலத்தில் கல்லில் ஓங்கி அடிக்கையில் ஜலத்துளிகள் சிதறுங்காலத்தில் வானவில்லுகள் தோன்றுவதும் சகசம். சினிமிடோகிராப் காட்சியில் (அதாவது வஸ்துக்கள் உண்மையில் யியங்குவனபோல் உயிர்ப்பித்துக்காட்டும் படங்களைக்கொண்டு காட்டும் காட்சி) கண்ணின் ஆதாரமாகக்கொண்டு நடமாடும் வஸ்துக்களின் பல நிலைமைகளின் புகைப்படமெடுத்து அவைகளைச்சக்கிரத்தில் வைத்து விரைவாக அதனைச்சுற்றி, ஒருதுவாரத்தின் வழி பார்த்தால் பின்னம் பின்னமாய்ப் புகைப்படங்கள் ஏற்பட்டிருக்கின்ற ஒரு வஸ்துவின் பல அவயவங்கள் கண்ணின் சக்தியால் ஒன்று சேர்க்கப்பட்டும் பலவிதமாயும் இயங்கும் வண்ணம் நாம் பார்க்கிறோம். இன்னும் அநேக வித்தைகளில் மை கண்ணின் சக்தியைப் பிரயோகித்து விசித்திரமான வேடிக்கைகள் செய்கிறார்கள். இந்த வானவில்லின் தோற்றத்தைக் காசிமாநகரில் வேணுகாவனத்தில் பகவான் கௌதமபுத்தர் சில சிஷ்யர்களுடன் சம்பாஷணை பண்ணுங்கால் "சம்சாரமென்று ஒரு பிரவாகம் இந்த வானவில் தோற்றத்தைப்போல" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஜலத்துளிகளின் பிரவாகம் ஓடிக்கொண்டிருக்க வானவில்லினது நிலைமை சத்தியம்போல் எப்படித்தோன்றுகிறதோ அப்படியேபிரபஞ்சம் என்ற பிரவாகமானது தோன்றியும் மறைந்தும் தோன்றியும்மறைந்தும் ஓடிக்கொண்டிருக்க நிலைத்திருக்கிறதுபோல் நாமும் எண்ணுகிறோம்.—விவேகபாநு.

## சுகுணசுந்தரம்.

### XI.

தானம் வாங்கவந்த அந்தணர் காணாமற்போகவே சுந்தர சுகுணர்களுடைய சிரங்களும், உடல்களும் ஜ்யோதிஸ்ஸுடன் ஐக்கியமாய்ப்போனதைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னர்களும், அரசிளங்குமார்களும், மற்றுமுள்ளவர்களும் அத்யாச்சரிய முற்றவர்களாய் மயங்கித் திகைத்தனர். சுந்தர ராஜனுடைய பித்ரு பக்தியையும், மனஉறுதியையும் அளவிடற்பால தன்றெனக்கண்டு வியப்படைந்தனர். அவ்விளவரசன் இவ்வுலக வின்பங்களை யெல்லாந் துறந்து, தன்னைமறந்து, ஆசாபாசங்களை யொழித்துக், கட்டழகியாம் பிராணநாயகி சுலோசனையையுங் கொஞ்சமு நினையாமல், பிதாவின் மொழியை சத்திய மொழியாக்குதலே சிறந்த கருமமெனவும்; சிநேகதர்மத்தை மெய்ப்பிப்பான் கருதி சிரத்தைக் கொடுத்து ஆன்மாவைத் தன்னுடலத்தினின்று மோட்சஞ்செய்து உத்தமகுணம் வாய்க்கப் பெற்றவனும், தோழனுமான சுகுணன் சென்றவழியே தானுஞ் செல்வான் கருதி, உடன்கையிற்றானே தன் சிரத்தையும் அந்தணர் விருப்பத்தின்படி கொய்து கொடுக்குமாறு தன் பெற்றோர்களைவேண்டிக்கொண்டபடி வானுலகடைந்ததற்குச் சாதுக்கள் அவனது மனவன்மைக்குக் களித்தனர். மற்றோர் மனமுருகித் தவித்தனர். அந்நகரவாசிகளோ மிகவுந் துயருற்றனர்.

அமைச்சராம் சுமந்தருடைய இராஜவிசுவாஸத்தையும், சுகுணசுந்தரர்களுடைய சிநேக தர்மத்தையும், பரஸ்பரவாற்சல்யத்தையும் பலவாறு புகழ்ந்து கொண்டாடினர். சுசீல சக்கரவர்த்தியின் புத்ரவாஞ்சையையும், மன உருக்கத்தையும், சத்தியந்தவறாமையையும் சாருமதி தேவியாரின் பதிபக்தியையும் மெச்சினர். இனி நிகழ்வதென்கொலோ வென்றுவருந்தினர்.

மங்கையர்க் கரசியாம் சுலோசனை இச்சம்பவங்களைக் கேட்டும், தன்னாசைக்குகந்த நேசனான கண்ணாளனைத்துறந்தும், இவ்வுலகவாழ்க்கையை வெறுக்காதென் செய்கிற்பாள்? உருர்மாய்ப்பள்; திண்ணம் திண்ணம்!! என்றோலமிட்டனர் அந்நகரிலுள்ள பெண்பாலோர்கள் பலர். அந்த காந்தாமணியானவள் தினந்தோறும் பூசித்துவந்த அம்பாள் கிருபை புரியாதிராள் என்று தேறினர் சிலர்; சாருதத்த மகாராஜா தன்னருந்தவச் செல்வியை வேறு இளம் இராஜகுமாரனுக்கு பாணிக்கிரகணஞ் செய்யத்துணிந்தயத்தனிப்பானாயினும் அந்தக் கன்னிகாமணியானவள் மாரசுகுமாரனான சுந்தரஇளவலையின்றி இதரபுமானைக் கண்ணெடுத்தும்பாராளே! உத்தமி!! என்றிவ்வாறாகப் பலவிதமாய்க் கதறிப் பரிதபித்தனர்.

சுசீலபூபதியோ அந்தணர் மனோரதத்தை நிறைவேற்றுவதற்கில்லாமல் போனதைப்பற்றி மனம் வருந்தி யேங்கித்திகைத்து சுந்தர சுகுணர்களைக் காணாமற் பதைபதைத்து மெய்மறந்தன ராயினர். உத்தமியாம் அவருடைய பத்நியோ, அவரைத் தன்மீது சாத்திக்கொண்டு சைத்யோபசாரங்கள் பல புரிந்தனராயினர். சுமந்தரர் ஞானியாதலால், மனவன்மையைக் கைவிடாது இஃதோ ஈசுவர சோதனையாமென சக்கிரவர்த்தியைப் பலவிதங்களிற் றேற்றினராயினர். ஹேமாபுரிக் கதிபனோ இக்கோரங்களைக் கண்ணாற் பார்க்கச் சகியாதவனாய் அந்தப் புறஞ்சென்று தேவிமனோரமையுடன் நிகழ்ந்தனவற்றைச் சொல்லிச்சொல்லி இருவருமிக்க துன்பக்கடலி லாழ்ந்தனராயினர். இது நிற்க.

மதனாவஸ்தையினால் ஒவ்வொரு விநாடியையும் ஒவ்வொரு யுகமாய்க்கழித்து வந்த இராஜபுத்திரியான சுலோசனாதேவியானவள் சுகுணசுந்தரர்களுடைய வரவைக்கேட்டொரும் ஆனந்தங்கொண்டாலும், கொஞ்ச மனம் வருந்தினவள்போல் காணப்பட்டாள்; ஆயினும் அவள் அன்றையதினமும், தான் தினம் பூசித்துவந்த அம்பாளை யுபாசிக்கக் கருதினவளாய்த் தன்றோழி மரகதம், காமபாலனுடைய குமாரியும் சுகுணனுடைய பிரிய நாயகியுமான சம்பகாவதி, இவ்விருவரையு மழைத்துக்கொண்டு நந்தவனஞ்சென்றனள்; பராசக்தியின் அருளால் தனக்கு பர்த்தாவாகக்கிடைக்கப்பெற்ற சுந்தரனை இராஜசபையில் பயிரங்கமாய் மாலையிடுவதற்கு முன்னமேயே பராசக்தியை யுபாசித்துத்திரும்பிவர எண்ணி அவள் சென்றனள். சுலோசனையின் குறிப்பையறிந்த சம்பகாவதியும் ஸ்ரீவித்யா உபாஸனை செய்பவளாதலால் தானும் அவ்வாறு செய்ய இராஜ கன்னிகையுடன் சென்றனள். செல்லும்போதே சம்பகாவதி தன்னுடைய வலதுகண் துடிப்பதைக்கண்டு திடுக்கிட்டு "அடி சுந்தரி, சுலோசனே! என்றுமில்லாமல் இன்று ஏதோ என்னுடைய வலதுகண் துடிக்கிறதே! இதுவரையில் எனக்குற்ற இடுக்கண்கள் போதாதென்று இன்னு மெனக்குச் சம்பவிக்கப்போகும் துர்க்குறிக்கு இது ஓர் அறிகுறிபோலும்" என்றாள். சுலோசனையும் அப்போது 'அடி, கண்ணே சம்பகம்! எனக்கு இரவில் உறக்கமில்லாமல் பஞ்சணையில் புரண்டுகொண்டே யிருந்தேன்; சிற்சிலநேரம் கண்களை மாத்திரம் மூடிக்கொண்டிருந்திருக்கலாம்; சுகுணசுந்தரர்களிருவரும் தைலாப்பியஞ்ஞனம் பண்ணிக்கொண்டு நின்றதாய்க்கண்டேன்; உடனே கண்களை விழித்துக்கொண்டு திடுக்கிட்டேன். விழித்ததும் அவ்விருவரையுங் கண்டேனில்லை. இஃது ஓர் துர்க்குறியை முந்தியே தெரிவிக்கும் கெட்ட கனவல்லவோடி?" என, சம்பகாவதி, "அடி நீ உறக்கங் கொள்ளாமல் கனவுகண்டதாய்ச் சொல்லுவ தென்னையோ?"

மரகதம்:—"அடி அம்மா சம்பகம்! சுலோசனைக்கிரவில் உறக்கமில்லை; அருணோதயகாலத்தில் கொ[illegible]ண்ணயர்ந்தனளென்றே சொல்லலாம்."

சுலோசனை:—"நான்தான் சொன்னேனே, சரியா[illegible] நித்திரையில்லை, விடியலில் கொஞ்சங் கண்[illegible]யர்ந்தேன் என்று; அக்காலத்தில்தான் கன[illegible] கண்டிருக்கலாம்."

சம்பகாவதி:—அடி அம்மா சுலோசனே! இராத்திரி நான்காம் ஜாமத்தில் காணும் கனவுகள் உடனுக்குடனே பலிப்பதாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறேன்; நீ கண்ட கனவு கெடுதலே."

மரகதம்:—நந்தோழி சுலோசனை கனவு கண்டதாகவே தீர்மானித்தனையோடி சம்பகம்! அவள் கனவுகண்டதாய்ச் சொல்வது பிசகு; ஏனெனில், நான் சொல்வதை நிதானித்துக்கேள். நம்ம சுலோசனைக்கு சுந்தரராஜன் மீதுள்ள ஆசை மிகுதியால் இரவெல்லாம் அவரையே நினைத்துப் பிதற்றிக் கொண்டிருந்தனள்; அந்நினைவால்————" என்று குறையுஞ் சொல்வதற்குள் சுலோசனை கொஞ்சம் வெட்கி, அவளைக் கடிந்து, "அடி மரகதம்! அது உன்னினைவு. இதுதானா பரிகசிக்குஞ் சமயம்;" என்று படபடத்து மொழிந்தனள்.

மரகதம்:—"நான் ஒன்றும் பரிகசிக்கவில்லையடியம்மா! உள்ளதைச்சொல்லி உங்களுடைய மனதிலுற்ற சந்தேகத்தை நிவர்த்திசெய்யத் துணிந்தேன். நீ கடிந்து மொழிவையேல் நான் ஒன்றுஞ் சொல்லவில்லை."

சம்பகாவதி:—"அடி, அம்மா தோழி சுலோசனே! மரகதம் குறையுஞ் சொல்லட்டுமே. அதற்குள் நீ ஏன் கடிந்து மொழிகிறாய்?" என்று மரகதத்தைப்பார்த்து, "அடி சகி! நீ குறையுஞ் சொல்லடி கண்ணே!" என்றதும், மரகதம், இராகுவினால் பீடிக்கப்பட்ட சந்திரனைப் போன்ற ஒளி குன்றிய சுலோசனையின் முகத்தைப் பார்த்தனள். இராஜபுத்திரியோ, சம்பகாவதியின் மொழியைக்கேட்டும் மௌனமாய் நிலத்தைப் பார்த்தவண்ணம் தலை குனிந்தபடி நின்றனள். அப்போது மரகதம், தான் முன் சொல்லவந்ததைக் குறையுஞ் சொல்லுவாளாயினள். "அடி சம்பகாவதி!—அந்நினைவால் ஏதோ அவர்கள் (சுகுண சுந்தரகள்) அப்பியஞ்ஞனஸ்நா[illegible] வதுபோல் இவளுக்கு (சுலோசனை[illegible]டிக் காட்டிக்கொண்டே) மனப்பிராந்தியேதவிர வேறில்லை. சரியான நித்திரையில்லாமல் சுவப்பனாவஸ்தை யுறுவதெப்படி? ஆதலின் இதுமனப்பிராந்தியேயாம். இதைக் கனவென நம்பி மனம் வருந்துவானேன்? என்றுதானடியம்மா சொல்லவந்தேன்; முழுவதுங்கேளாமல் அவசரப்பட்டு என்னைக் கடிந்து மொழிவது என்னையோ? சுலோசனா!"

சம்பகாவதி:—"அடி கண்ணே மரகதம்! எவருக்கும் மனம் வருந்துங்காலையில் பிறர் கூறு மொழியைக்கேட்கப் பொறுமையுண்டாவதில்லை என்பது இயல்பேயன்றோ; அதற்காக இச்சமயத்தில் புண்ணிற் கோலிட்டதுபோல் நீயுங் கோபிக்கலாகாது. நான் சொல்வதைக்கேள். நித்திரை என்பது நாம் ஆராதித்து அழைக்கப்படாத ஓர் அவஸ்தை, அதுவரும் வேளையை நாமறிவது கூடாது; நாம் சயனிக்குங் காலத்தைமட்டில் அறிந்துசொல்லலாமேயன்றி நித்திராரம்ப காலத்தையாவது, நிவர்த்தியான காலத்தையாவது அறிவதுங்கூடாத காரியமேயாம். ஆதலால் மனவேதனையுற்று இரவெல்லாம் உறக்கங்கொள்ளாத இவள் (சுலோசனையைச் சுட்டிக்காட்டி) விடியற்காலத்தில் நித்திராவஸ்தையு முற்றிருக்கலாம். மேற்கூறியபடி சுவப்பனத்தைக்காண்டாலும் திடுக்கிட்டு நித்திரை நீங்கி ஜாக்கிரதவஸ்தையுமுற்றிருக்கலாம். ஆதலால் கனவுகண்ட துண்மையே."

சுலோசனை:—அடி என் தித்திக்குஞ் செந்தேனே, சண்பகம்! உனது வலது கண் துடித்ததையும், நான் துர்ச்சொப்பனங்கண்டதையும் உற்றுணருங்கால், இன்று ஏதோ விபரீதம் நிகழும் போலும்; பராசக்தியின் செயலை யறிந்தவரார்? தேவியின் திருவுள்ளப்படி எல்லாம் நடக்கும்" என்று சம்பாஷித்துக்கொண்டே சென்றனர்.

(இன்னும்வரும்)

டி. எஸ். சுப்பராமய்யா.

## Children's Page.

### சிறுவர்க்கான பக்கம்.

## கற்புள்ள ஸ்திரீயின் கதை.

(ஒரு பெண்மணி யெழுதியது.)

ஓரூரில் கௌசிகனென்னும் பிராமணனொருவன் பிரமசரியாச்சிரமத்திலிருந்து வேதசாஸ்திரங்களை நன்றாய்க்கற்று வந்தான். அதன் பிறகு வசிஷ்டரிடத்திலும் சென்று பாடம் ஓதி வருகையில், ஒரு நாள் வெயில் மிகவும் தாபமாக இருந்தமையால் ஓர் மரத்தின் நிழலில் தங்கினான். அச்சமயத்தில் அம்மரத்தின் மீதிருந்த ஒரு கொக்கு எச்சமிட அது அவ்வேதியன் மீது விழுந்தது. அது கண்டு அந்தணன் மிகச்சினந்து விழித்து மேல் நோக்கினான். அவ்வேதியனது கோபாக்கினி பட்டமாத்திரத்தில் அவ்வற்பப் பிராணி வெந்து சாம்பராகப் போயிற்று. அதைப் பார்த்த வேதியன் ஐயோ! பாவம் வீணாக ஒரு அற்ப ஜந்துவை அழித்தேனே என்று இரக்கப்பட்டான். இருந்தாலும் நமக்கு எவ்வளவு அபாரமான சக்தியிருக்கிறது பார்த்தாயா! என்று தன்னைத்தானே புகழ்ந்து, தனக்கு மேலான பெரியவர்களுண்டோ என்று அகம்பாவமடைந்து, வழக்கப்படி பிட்சையெடுப்பதற்காக ஒரு ஊரில் சென்றான். அங்கு அந்தணர் வீதியில் ஒரு வீட்டில் நுழைந்து "பவதி பிட்சாந்தேகி" என்று பிட்சை கேட்டான். வீட்டிலிருக்கும் ஸ்திரீயானவள் "ஐயா சற்று இரும்" என்று சொல்லி அன்னமெடுத்துவரச் சென்றாள். அப்பொழுது அவள் புருஷன் வெயிலில் அலைந்து

வேர்த்துவிடாய்த்து வீட்டுக்கு வந்தான். தன் கணவனைக் கண்டதும் அவருக்கு உபசாரம் செய்வதே இப்பெண்மணிக்குச் சந்தோஷம். தான் செய்யப் புகுந்த வேலையை மறந்து கணவனுக்கு ஜலம் கொடுத்து கால் கரம் சுத்தி செய்து குளிக்கச் செய்து ஆகாரம் கொடுத்து மற்றும் செய்ய வேண்டிய பணிவிடைகளெல்லாம் செய்யப் புகுந்தாள். இனிய பண்டங்கள் செய்து வாய்க்கு ருசியாய் போஜன மளிப்பதும் அவருக்கு அடைக்காயுதவி விசிறிபோட்டு அவர் படுத்து சிரமபரிகாரம் செய்யும் பொழுது கால் கை வருடிக்கொண்டிருந்துவிட்டு பிறகு அவர் தின்று மிகுந்ததை தான் சாப்பிடுவாள். தன் கணவனும் தானும் ஒருயிரும் ஈருடலுமாக நினைத்தாளே யல்லது வேருக அவள் மனம் நினைக்கவேயில்லை. இப்படியாக இந்த ஸ்திரீயானவள் வழக்கம்போல் பர்த்தாவுக்கு பணிவிடை செய்யப் புகுந்தாள்? செய்து கொண்டிருக்கும் பொழுது தான் வாயிலில் நிற்கவைத்து வந்த பிராமணனை நினைத்துக் கொண்டாள். "ஆ! என்ன அபசாரம் செய்தோம். அவ்வேதியரை இவ்வளவு நாழி கார்க்கவைத்து விட்டோமே!" என்று நினைத்து உடனே பரபரப்புடன் அன்னமெடுத்து வந்தாள். அவளைப் பார்த்து அந்த பிராமணன், "இவ்வளவு நாழி கார்க்கவைத்து விட்டாயே! அன்னமில்லை போவென்று முன்னமேயே சொல்லியிருந்தால் வேறிடத்திற்காவது போயிருப்பேன். இப்பொழுது அதற்கு மில்லாமல் நாழிகையாய் விட்டதே" என்று கோபித்துச் சொல்ல, அந்தப்பெண்மணி "ஐயா சீக்கிரம் வந்திருப்பேன். அதற்குள் கணவர் பசித்து வீட்டுக்கு வந்தார். அவருக்கு உபசாரம் செய்யப் புகுந்தேன், 'குலமகட்குக் கொழுநனே தெய்வம்' என்றிருக்கிறதல்லவா? அப்பொழுது உமது ஞாபகமும் இல்லாமல் போயிற்று. இந்தத் தப்பிதத்தை மன்னித்துபிட்சையை வற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அதுகேட்டு அந்தணர் கடுங்கோபங் கொண்டு "ஆகா அதிதிகளைவிட கணவனே அதிகமென்று இருந்தாயல்லவா? இல்லறத்திலிருந்தும் இப்படி யதிதிகளை அவமானம் செய்யலாமா? உனக்கு ஒன்றும் தெரியாது. பெரியவர்களிடத்தில் தருமம் கேட்டதில்லை. பிராமணர்கள் அக்கினிக் கொப்பானவர்களும் மகா பரிசுத்தவான்களு மாகையால் அவர்கள் மனம் நொந்தால், எதையும் நீராக்கி விடுவார்களே" என்று கூறி விழித்து நோக்க அதற்கு அப்பதிவிரதா சிரோன்மணி, "ஏ பிராமணு கொக்கென்று நினைத்து விழித்துப் பார்க்கிருற் போல் இருக்கிறதே! உமது கோபத்திற்கு கொக்கு பயப்படுமேயல்லது நான் பயப்படேன். இப்படி நீர் விழித்து நோக்குவதிஞல் கொக்கை நீராக்கினதுபோல் என்னையும் நீறு செய்ய முடியுமோ? வாஸ்தவத்தில் நான் அந்தணர்களை அவமானம் செய்யவில்லை. அவர்கள் மகா பரிசுத்தவான்களென்றும் அவர்கள் சாபம் அனுக்கிரகம் இரண்டும் பயன்படக் கூடியவை யென்றும் எனக்கு நன்ருய்த் தெரியும். அந்தணர்களை அவமதித்தவர்கள் அழிவது நிச்சயமென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். புத்திரர்கள் தாய்தந்தையர்களை அன்புடன் பாதுகாத்து அதிதிகளை உபசரித்து இல்லறத்தை நேராக நடத்துவது தான் உத்தமமான தருமமென்றும், அதுபோலவே ஸ்திரீகளும் கணவன் மனம் கோணுமல் நடப்பதுவே பெரிதென்றும் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒவ்வொருவனும் கோபத்தை யடக்கி சகல இந்திரியங்களையும் வென்று தனக்கு சம்பந்தப்பட்ட யாவரையும் அன்போடு பாதுகாக்க வேண்டியது. கோபம் குடியைக் கெடுக்கும். அதோடு சுயநயம் என்னும் கொடும்புலியும் சேர்ந்தால் மனிதன் முன்னுக்கு வருவது வெகு கஷ்டம். ஆனல் இவைகளை அன்பு தயை பொறுமை யென்னும் கூரிய கத்தியினுல் வெட்டித் தள்ளிவிட்டு வெளியில் வரவேண்டும். தன் இல்லாளை கண்ணை இமை காப்பது போல அன்போடு வைத்திருக்கவேண்டும். வாழ்நாள் என்னும் ஊரைக் கடப்பதற்கு ஸமுஸாரமென்னும் வண்டியைக் கொண்டு அகமுடையான் பெண்சாதி யென்னும் இரண்டு எருதுகள் இழுத்துச் செல்லுகின்றன, அவைகளிரண்டும் நேசத்துடனிழுத்துச் சென்ருல் சுகமாய் ஊர் போய்ச்சேரும். அப்படிக்கின்றி ஒன்று தெற்கே போனல் ஒன்று வடக்கே சென்று ஒன்றை மற்ருென்று விரோதித்து இளைத்ததை பலத்தது முட்டி மோதி சாயப்படுத்தி இரண்டும் உருண்டு புரண்டு அருகிலிருக்கும் சாக்கடையில் விழுமாகில் அதன் கதியென்ன? தன்னையும் நாசப்படுத்தி வண்டியையும் உடைத்து வண்டியிலிருக்கும் பதார்த்தங்களையும் சேதமாக்குமல்லவா? அதுபோலவே தான் சமுசாரம், அன்பொன்றில்லாவிடில் ஒன்றும் நடக்காது. ஓ வேதியரே தருமத்தின் நுட்பம் உமக்குத் தெரியவில்லை. உமக்கு விஸ்தாரமாய்த் தெரிய வேண்டுமானல், மிதுலாபுரியில் தருமவியாதரென்னும் வேடரொருவர் இருக்கின்ருர். அவரிடம் சென்று வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாமென்று சொல்லி தான் காக்கவைத்த தப்பிதத்தையும் பொறுக்கும்படி வேண்டிக் கொண்டாள். இவைகளை யெல்லாம் அவ்வந்தணன் கேட்டு பிரமித்து நின்று நாம் வனத்தில் கொக்கை நீராக்கினதையும் அறிந்திருக்கிருளே இவளல்லவோ பதிவிரதை யென்று மனதில் மதித்து அவளைப் பார்த்து 'அம்மணீ! நான் அறியாமையினுல் சொன்ன வார்த்தைகளைப் பொருத்தருளல் வேண்டு'மென்று சொல்லி மிதிலாபுரம் நோக்கிச் சென்ருர். அவ்வூரில் அப்பெண்மணி சொன்னதைப் போலவே ஒரு ஞானியான வேடனிருக்கக் கண்டு அவனிடம் உபதேசமடைந்து தன்னை யனுப்பிய ஸ்திரீயின் பதிவிரதா தர்மத்தின் மகிமையைப் புகழ்ந்து இவளைப்போல் விரதசீலிகள் யாரிருக்கிருர்களென்று மதித்து, ஊருக்கு வந்து நற்குலத்துப் பெண்ணை விவாகம் செய்து கொண்டு தாய்தந்தையர்களை உபசரித்து கிரகஸ்தாச்சிரம தர்மத்தை வழுவிலாமல் நிறைவேற்றி வந்தார்.

INTERESTING TAMIL BOOKS. INTERESTING TAMIL BOOKS.

BY PANDIT S. M. NATESA SASTRI, B. A., M. F. L. S.

**DINADAYALU—As. 12.**

*SECOND EDITION.*

**Select Press Opinions.**

The *Madras Mail*:—Will prove entertaining reading and a source of enlightenment to Hindu households in the Tamil country.

The *Hindu*:—We recommend the neat interesting volume to every one of our countrymen, women and children. The great charm of the book is, in the first place, its thoroughly bright and healthy tone, and in the second, the excellence of the dialogue, which brings out the characters capitally as dialogue ought to do.

The *Madras Standard*:—A wonderfully interesting and ripe piece of work written in a pleasant, clear and easy style.

The *Indian Review*:—We have no doubt that the book will be read with a great deal of interest by men and women alike.

**THE REJUVENATION OF KOMALM—As. 12.**

**Select Press Opinions.**

The *Madras Mail*:—A Farcical romance of 14 lively-written and thoroughly amusing chapters. The story which is of absorbing interest, is a pleasant one, charmingly told and bristles with poetic sentiments and epigrammatic expressions, wonderfully fresh description and good dialogue, the tone of the romance being high. Popular the novel is sure to be and that not undeservedly, for there is not a single dull page in the 170 which comprise the book.

The *Hindu*:—We unhesitatingly recommend this charming book to our Tamil readers. The novel, which is undeniably interesting, abounds in quaint humour, in beautiful little, tender passages, and in exquisite bits of description. Nobody who once begins it will lay it down until the end has been reached.

The *Arya*:—Old men and women generally have a desire to enjoy the pleasures of youth once more if that were possible. To such this novel points out the evils of trying to realise such a desire. The two books are valuable additions to the Tamil literature and ought to command a large sale.

**THE TWO ORPHANS—Re. 1-4.**

**Select Press Opinions.**

The *Madras Mail*:—It is a clever story written in a talking style, and in construction of plot it is far and way the best of the stories that have appeared from the author's facile pen.

The *Hindu*:—This novel exhibits all the writer's well-known characteristics and in full worthy of his reputation. There is plenty of incident and the interest of the reader is sustained throughout the 420 pages which go to make up the volume; but it is of course in the portraiture of the characters that the Pandit's best quality is dispyed, while the whole tone is refreshingly pure and natural.

The Mother-in-law in Council—As. 8.

**G. A. NATESAN & Co., Esplanade, Madras.**

ஸத்யம்வத.—Speak the Truth.

"Hitch yourWagon to a Star."　　"To Thine own Self be True."




அன்பேசிவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.]　　God is Love : Knowledge is Power : Om.

ஸத்யமேஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 12.]　　1903-ம் ௵ டிசம்பர் ௴　　[இலக்கம் 8.

# Godward Ho! A Symposium.

## ii Anandattaimozhi, or,

## THE SACRED EFFUSIONS OF THE HOLY MOTHER.

## ஆனந்தத்தாய்மொழி.

"Man's extremity is God's opportunity"—சாதாரண மனிதன் ஆபத்காலத்திலேயே கடவுளை நினைக்கிறானாதலால் அவனுக்கு ஆபத்து விளையுங்காலத்திலேயே பகவான் உற்றவிடத்துதவியாக நின்று அவனை ஆற்றித்தேற்றிக் காப்பாற்றுகிறார்—ஆதலால்தான் அவருக்கு **ஆபத்பாந்தவன்** என்கிற பேர்கிடைத்தது. அர்ச்சுனன் தர்மசங்கடத்திலகப்பட்டுக்கொண்டு நிலைதடுமாறித் துக்கமேலிட்டுப் போர்க்களமத்தியில் தன் கடமையை மறந்து துறவியாகப்போகிறேன் என்று சொன்னசமயத்திலேயே, தேர்ப்பாகனாயிருந்த கிருஷ்ணமூர்த்தியானவர் அவனுக்கு **அஞ்சேல்** என்று அபயங்கொடுத்து ஆத்மோபதேசம் செய்யலானார். பாரதயுத்தத்தில் போர்நடத்தும் அர்ச்சுனனுக்கு சாரதியாய்க் கிருஷ்ணன் தேர் நடத்தும் தொழில்பூண்டு அவனுக்கு ஆபத்பாந்தவனாயிருந்துதவி போர்முகத்துப் பின்வாங்காது தன் கடமையை நடத்தக் காரணனாயிருந்ததுபோல், ஒவ்வொரு சீவனும் பிரபஞ்சத்தில் உயிர்வாழ்வினிமித்தம் செய்யவேண்டிய பிரபஞ்சப்போரில், அந்தக் கிருஷ்ண பரமாத்மாவே மேலறிவாகவிருந்து வழிகாட்டி, உள்ளத்திருந்து உண்மையை புணரச்செய்து, ஒவ்வொரு சீவனும்

தத்தம் கடமையை வழுவறச் செலுத்திப் பெருவாழ்வுற வழிகாட்டிப் பெருந்துணையா
இருந்துதவுகிறார். எப்போது சீவனுக்குத்தாளமாட்டாத துக்கப்ராப்தி நேரிட்டதோ அப்
பொழுதே கருணைசமுத்திரமாகிய கடவுள் அவனிடத்துக் கிருபைகூர்ந்து உண்மையுணர அவ
னுளக்கண்ணைத் திறக்கச் சமயம் எங்கே யெங்கே யென்று எதிர்பார்த்துக்கொண்டு காத்துக்
கொண்டிருக்கிறார் என்பது நிச்சயம். இதனுண்மையையுணர மனுஷனுக்கு முக்கியமாக
வேண்டியது பக்தி. பக்தியின்றி துரியோதனாதியரைப்போல் அகம்பாவ மேலிட்டு அகச்
செருக்கில் மூழ்கிக்கிடந்தால், அந்தச் சீவன் அத்துரியோதனாதியரைப் போலவே அடி
யோடும் அழிந்து போவது நிச்சயம். பாண்டவரைப்போல் பக்தி மேலிட்டு தைரியத்தையும்
தர்மத்தையும் கைவிடாது பற்றிநின்றால், ஈசுவரகிருபையானது, தர்மசாஸ்திரங்களுக்கெல்லாம்
எட்டாது அவைகளுக்கு மூலமாயிருக்கும் ஆத்மவுணர்ச்சியை யுண்டுபண்ணி, ஆத்மப் பிரகா
சமாம் அறிவு முதிர்ச்சியால் என்றும் அழியாத ஆத்மானந்தத்தை யுண்டுபண்ணிவிடும்.
ஆகையால் உலகவழியை யனுசரித்துழலும் சீவன் ஆபத்சம்பவத்தால் துக்கப்பிராப்தி யெய்
தினபோது அதைப் போக்குவான் ஈசுவரகிருபையால் அவனுக்கு சற்குருவாப்தி யுண்டாகி
றது. பகிர்முகப்பார்வையும் பரதரிசனப் பக்திப் பழக்கமுமுள்ளவருக்கு அவரெண்ண
மிருந்தவாறு புறப்புறமாக சற்குருவாப்தி கிடைக்கும். அந்தர்முகப்பார்வையும் உள்ளூற
வுணர்ந்து ஆராயுந்தன்மையும் வாய்ந்த புத்திசாலிகளுக்கு அறிவேகுருவாய் நின்று அந்தர்முக
தரிசனந்தந்து உள்ளத்துத் தோற்றமே புறத்திலும் வெளிப்பட்டு நிற்கும். இப்படி பகிர்முகமா
கவோ அந்தர்முகமாகவோ சற்குருவாப்தி பெற்ற பரிபக்குவ சீவனை சற்சீஷனென்று வேதாகம
முறைபற்றிச்செல்வோர் தம் பரிபாஷையில்கூறுவர்—இவனே உண்மைமாணாக்கனும். இவன்
அறியப்போகும் அறிவே உண்மையான அறிவாம். இதுகாறும் இந்தச் சீவன் கற்றுங்கேட்
டும் கலைபயின்றும் தேறித்தெளிந்தன வெல்லாமும், உலகிலுழன்று பட்ட அனுபவமெல்லா
மும் இந்த உண்மைமாணாக்கனும் 'சற்சீஷன்' பதவிகிடைக்கப் பட்டபாடேயன்றி வேறுபயன்
விளைப்பதில்லை. இப்படிப்பட்ட சற்சீஷனுக்குப் போதிக்கப்படும் உண்மையறிவே ஆத்ம
வித்தை யென்றுசொல்லும் அழியாத அறிவு ஆம். இந்த அறிவுடையாரையே, பிறவிஞானி
யாகிய திருவள்ளுவர்,

> "அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
> ரென்னுடைய ரேனு மிலர்."

என்று பெருமையாய்த் தம் திருக்குறளிற் செப்பியுள்ளார்.

அர்ச்சுனன் பாரதப் போர்செய்யக் கடமைப்பட்டவனா யிருந்ததுபோல் பிரபஞ்சப்
போர்புரியக் கடமைப்பட்ட சற்சீஷனும் பரிபக்குவசீவன், உலகவின்பங்களை வெறுத்துக் காட்ட
கத்தேசென்று கடுந்தவம் செய்தலே மேலென்று எண்ணியகாலத்தில், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியான
வர் அர்ச்சுனனுக்குப் புத்திசொல்லித் தேற்றியதுபோலவே, அச்சீவனின் பூர்வபுண்யவாசனையே
யுருவெடுத்து அன்புமிகும் அன்னையுருவாகவந்து "அப்பா! உண்மைத்துறவு பெண்டுபிள்ளை
களையும் உத்யோகத்தையும் விட்டு, செய்கடன்களைச் செய்யாது தவிர்த்து, கானகத்தே சென்று
விலங்குகளோடிருந்து பழகிப் பிராணனை வீணில்வதைப்பதல்ல: உன்னகத்தேயிருந்து உன
ர்ணைப் பெந்தப்படுத்தி 'வலைப்பட்ட மான்'போல் உன்னை யாட்டுவிக்கும் கருவி



கரணங்களாம் இந்திரியக் கூட்டங்களன்றி யுனக்கு வேறொரு ஸம்ஸாரமுமில்லை.—இவைகளால்
வரும் துக்கமின்றி வேறு துக்கமுமில்லை"யென்று அருள்மிகுதியால் அன்புநிறைந்து, "அகம்
பழுத்தால் எதுவும் தானாய் விழுந்துபோம்; அதுவன்றி நாமாக விட்டோடினால் எங்கு போனா
லும் அவை நம் கூடவேவரும்" என்று சொல்லி புறத்துறவினால் ஆவதொன்றில்லை யென வற்பு
றுத்தி அகத்துறவின் மர்மத்தை யுபதேசித்து, ஆத்மஞானம் உதிக்கில் எல்லா பெந்தங்களும்
தாமாகக் கட்டுவிட்டுப்போம், கர்மங்களெல்லாம் நசித்துப்போம்; துக்கங்களெல்லாம் சூரியனைக்
கண்ட பனிபோல் நீங்கிப்போம்—"ஒரு பயமுமில்லை. ஆனந்தமாயிருக்கலாம். அசைவற்றி
ருக்கலாம். தானேதானாயிருக்கலாம்" என்று சொல்லிய ஆறுதல்வார்த்தைகளைக்கேட்டு தெ
ளிந்துந்தெளியாது மயக்கமுற்று மேல்விசாரணை செய்யத் துணிந்தகாலத்தில் சற்குருவின்
பெருங்கருணை விசேஷத்தினா லுள்ளத்திலுண்டான ஒரு ஆறுதலை யுணர்ந்து ஒருவிதத்தில்
தேறித் திடனுற்று வைராக்கிய சித்தனாய் பக்திபூரக சிந்தையனாய் சற்குரு வார்த்தையை பக்தி
சிரத்தையோடும் சிரவணஞ்செய்யத் துவக்கின கட்டத்தில் ஆரம்பிக்கிறது "ஆனந்தத் தாய்
மொழி" யென்னும் அருள்வாக்காம் பிரபந்தம். வைராக்கிய சித்தனாகி உலகை விட்டொழித்து
உண்மைத்துறவு பூண்டதின் உண்மை "வயிறொடு கிளத்தல்" என்னும் முற்பாகத்தில் நன்
றாக விளக்கப்பட்டிருக்கிறது. அதிலே சற்குருசெய்த ஆத்மோபதேசங்கேட்டு அதில் மோகி
த்து மனதிடுபட்டுப்போக உண்மைவைராக்கியம் பூண்டு, தன்னுடையஸ்வரூப மின்னதென்று
தானே கண்டுகொண்டதைச் சொல்லி, பூர்வமான உலக வாசனைகளெல்லாம் ஓரிடத்து உருவெ
டுத்து நின்றதுபோல் சீவபாவத்துக்கு முக்கியாதாரமும் மூலஸ்தானமுமான வயிற்றை உரு
வகப்படுத்தி அதனோடு பேசி யொரு ஒப்பந்தம் செய்து கொண்ட பாவனையாக சீவாத்ம தத்
துவ பாவங்களனைத்தும் இத்தலைப்பின்கீழ் அதிசுருக்கமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.
பிறகு ஜீவயாத்திரையின் இயல்புகூறி, 'வாய்மை விரதம்', 'சுமங்கலி விரதம்' இவைகளின் உண்
மைகூறி, கடவுளின் திருவிளையாட்டு மகிமையையும் அவர் தம்மைச் சரணடைந்தாரோடு நேர்
நேராக நின்று பேசுந்தன்மையையும் விளக்கி 'பிரார்த்தனைப்பத்துக்' கூட்டி அருட்பிரசாதம்
பெற்ற வைபவம்கூறி "ஆனந்தத்தாய்மொழி"யால் ஆத்மானுபவம்பெற்ற சற்சீஷர் தனக்குக்
கடவுள் "தாயாய்வந்து முலையைதந்து" ஞானப்பாலூட்டி வளர்த்த வைபவத்தைத் தான்
கேட்டது கேட்டபடிக்கும், கிரகித்தது கிரகித்தபடிக்கும், உள்ளனுபவமிருந்ததை யுணர்ந்த
துணர்ந்தவாறும் செப்பத்துவக்கி 'தாய்-குழந்தை' பாவனையிலேயே முற்றும் நின்று பண்டிதர்
பாஷாவிற்பன்னர் உலகஞானிகள் எல்லாரையும் மறந்து சத்தியவழியில் நின்று, சாதனசதுஷ்டய
சம்பன்னர்களான சற்சீஷர்கள் செவிமடுத்துண்டு இன்பம்சுவைக்கும் இனியமொழிகள் ஆனந்
தத் தாயின் அருட்சுவைபொழிய பொருட்சுவை நிறைந்து பொலியும் சாமான்ய பாஷையில்
உண்மையுணர்ந்தோதியதை யுள்ளபடி சொல்லிப்போகிறார். "காட்டுக்குறியுங் கடந்தவர்காரண
மேட்டின் புறத்திலெழுதி வைத்தென் பயன்" என்பதனுண்மையை யுணர்ந்தும் தான் வழி
பற்றிச்சென்றபோது உடனனுபவக்குறிப்பறிய வகையின்றித் தவித்துத்தியங்கினதை நினைத்து
அத்துன்பம் மற்றொருவருறாதபடி நீக்குவான் கருதி மனோவாக்குக்கெட்டாத வுண்மையனுபவத்தை
"உரையற்ற தொன்மையுரைசெய்யுமூமர்களை" யொத்துச் சொல்லாது சொன்னபடி யெழு
திவைத்ததாக விளங்குகின்றது.

"உரைத்ததையுணரார் ஊனர் நீயாவனெனும்
என்னைப்போலெல்லாம் நிற்போர் எங்கிருந்தியங்கிடாமல்
உன்னைநான்பாடியுரைத்திடவே அரியுனைவாயாலே."

என்னும் அவர் வாக்கினாலேயும் இது உறுதிப்படுகின்றது. இந்த 'ஆனந்தத்தாய்மொழி' ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதலாவது பாலப்பருவம்—வித்தைப்பட்டத்தில் குருகடாக்ஷம் பெற்றதை மழலைச்சொல்லால் திருவருட் குழவியாயிருந்து செப்புகிறார். இந்த மழலைச் சொல்லின் கருத்து ஆத்துமா நிருபாதிகன், "பாலினுள் நெய்யும் பழத்துளிரசமும்" போலப் பரவியிருக்கிறான் என்பதாம்.

இந்த உண்மையையே ஸ்ரீகிருஷ்ணபகவான் சோகத்தில் மூழ்கியிருந்த அர்ச்சுனனைப்பார்த்துப் 'புன்சிரிப்புத்தவழுமவர் இன்பமுகமலர' முதலில் சாங்கியமுறைபற்றியும், பிறகு யோகமுறைபற்றியும் முறையே தெளியச்சொல்லி யுபதேசிக்கிறார். சாங்கியமாகிய "ஆத்மதத்துவம்" பற்றி "ஆத்மானுத்ம ஞானிகள், சுகதுக்காதிகள் அந்தக்கரண தருமமேயன்றி, ஆத்மதருமமல்லவென்றறிகிறார்கள். அவர்களை துக்க சுகாதிகள் பாதிக்கமாட்டா. அவர்கள் தான் மோக்ஷயோக்யர்கள்" என்று சொல்கிறார். (பகவத்கீதை 2-வது அத்யாயம் 12-முதல் 30-வரையிலுள்ள சுலோகங்களில் பகவானுடைய தத்துவோபதேசத்தை விரிவாய்க் கண்டுகொள்க.) பகவான் ஆத்மதத்துவத்தை யுபதேசித்தபின் அந்தத் தத்துவோபதேசத்தை யனுசரித்து நடக்கக் கூடியதாக அதைக் கிரகிக்கும் சக்தியின்மித்தியங்கின அர்ச்சுனனைப் பார்த்து பகவான் 31-38 சுலோகங்களில் உலகவிஷயமான ஞானத்தைச்சொல்லித் தாம் போதித்த ஆத்மதத்துவத்தை யனுசரித்து நடக்கும் வழியைக் (கரும) யோகமுறைப்படி பின்னுஞ்சொல்லுகிறார்—(40—51 சுலோகங்கள் பார்க்கவும்.) அப்பப்பா! இந்த உண்மையை அறிவது மஹாகஷ்டம்! எவ்வளவுதான் தெளிவாக வெடுத்துச்சொன்னாலும் உண்மை குருவாக்கினின்றும் வெளிவருங்காலத்தில் அவர் கிருபா நோக்கினாலும் சற்சிஷ்யனுடைய பக்திவிசேஷத்தாலும் ஒரு க்ஷணமாத்திரத்துக்கு அவர் சொல்வதெல்லாம் சரிபோல்படும். உடனே அவித்யாவாசனையான அஞ்ஞான இருள் வடிவமாக வந்து மூடிக்கொள்ளும். சிந்தைகலங்கிப் போம். புத்திதடுமாறிப்போம். தந்தித்தபொறிக்களைத்து அகம்பாவமழிந்து குழந்தை போலாகி குருவை யடைந்து சிந்தைநொந்து வருந்தியழுங்கால் அவர் கருணாகடாக்ஷத்தால் ஆறுதல் தோன்றும். அக்காலம் கடுமியாலத்தில் ஆதாரமாகக் குறித்தேற்றி உனக்குத் திடன் அளிப்பார். உண்மை வழிகாட்டி, ஒருகவிழியொன்றும் செய்யாது நீயே தெரிந்துணிந்து செல் என்பார். துணிந்து முயன்று ஊக்கங் குறையாதுழைத்தால், பக்கத்தில் நின்று உள்ளும் புறமும் ஒருங்கே நிறைந்தவராய், ஸ்ரீகிருஷ்ணபகவான் சாரத்தியஞ்செய்த சிறப்புவிளங்க நல்வழிகாட்டி சுயம்பலமொய்து உற்றவிடத்துதவியாயிருந்து ஆதரிப்பார். இந்த உள்ளனுபவங்களெல்லாம் தெள்ளிதாகவிளங்க, இந்த 'பாலப்பருவத்தில்' அனுபவரீதியாக 'ஆனந்தத்தாய்மொழி'யிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மவித்யாபோதத்தில் முதல் முதல் அப்பியாசம் பெறுகிறவர்களுக்கு குருவினுடைய வாக்கியார்த்தம் "தாராதிதாரம் சொல்லத்தொலையாது" ஏற்படும்: சிறு குழந்தைகள் பெரியோர் சொல்லிப்பிரியமின்றி தன்னொத்த குழந்தைக



ளோடு மனங்கலந்து உற்சாகமாக விளையாடுவது போல், தன்னொத்த சற்சிஷன் உள்ளனுபவரீதியாக குருவின் வாக்கைக்கிரகித்துச் சொல்லும் சொல் குருவாக்கினும் சுலபமாக மனதிற் பதியும். இதனாலேயே குருமுகோபதேசரீதியாக உண்மையை விளக்கல் சிலாக்கியமாகப் பெரியோரெல்லாராலும் கொண்டாடப்படுகின்றது. வேதங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றின் சாராம்சத்தையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணபகவான் தன் தோழனாகிய அர்ச்சுனனுக்கு ஓய்ந்தொழிந்துள்ள காலங்களில் சொல்லாது போர்முகத்தில் அவன் துக்கப்ராப்தியடைந்த சமயம் பார்த்துச் சொல்லலுற்றார். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை போனபோது கூடவேசென்ற கிருஷ்ணமூர்த்தி அப்பொழுதெல்லாம் அவனுக்கு போகசகாவாகவிருந்து எத்தனையோ கிடைத்தற்கரிய பெண்களையெல்லாம் அவனுக்குக்கிடைக்கும்படி உபாயங்கள் செய்துதவி, அவன் போர்முகத்தில் சித்தங்கலங்கி தர்மசங்கடமேலிட்டு "எனக்கு போக போக்கியங்கள் ஒன்றும்வேண்டாம்: நான் காட்டுக்குப்போய்க் காலத்தைக்கழிக்கிறேன்" என்று சொன்னபோது அவனுக்கு தத்துவோபதேசம்செய்து உலகஞானமும் போதித்து "வந்தசண்டையை விட்டுப்போனால் உனக்கு அபவாதமும் அபகீர்த்தியும், உலகத்தில் அக்கிரமுந்தான்மிஞ்சும்: நீ பலனையுத்தேசித்துச் சஞ்சலப்படாமல், ஆத்மானாத்மவிவேகனாய்த் திடசித்தத்தோடு உன் கடமையைக் குறைவின்றிச் செய்துமுடி" யென்று வற்புறுத்தி அவனைச் சண்டைபோடத் தூண்டிவிட்டார். இப்படியேதான், இங்குப் 'ஆனந்தத்தாய்மொழி'க்குக் காரணமாயிருந்த குருசிஷ்ய பாவனமூர்த்தாத்மகராக விருக்குமிருவரில், தாயுருவாய் நின்ற சற்குருமூர்த்தி, சற்சிஷனாகவமைந்த சிவனைச் சுமார் 20-வருஷகாலங்களாக நன்றாக வுணர்ந்தும் அப்பொழுதெல்லாம் உலகஞான சம்பந்தமான பிரவிருத்தி விஷயங்களைப்பற்றி உடனிருந்துபேசி உபகரித்துப், பரிபக்குவம் மிகுந்து பிரபஞ்ச வெறுப்புற்றகாலத்தில், புறத்துறவாகிய பொய்வேடம் உனக்குப் பயன்படாதென்று அவன் உள்ளொளிப் பிரகாசத்தாலறிந்த வுண்மையை உறுதிபயக்க வற்புறுத்தி உண்மையான தத்துவோபதேசஞ் செய்யலானாரென்பது 'ஆத்மவித்யாமஞ்சரி'யில் 'ஆனந்தத் தாய்மொழிக்கு முன்னுரையாக (Fore-word) இங்கிலீஷில் எழுதிச்சேர்த்துள்ள வார்த்தைகளினால் விளங்குகின்றது. இவ்வாறு சந்தர்ப்ப சமயோசித விசேஷங்களை நன்றாக ஆய்ந்தறிந்து கவனித்துக் கருத்திருத்தி 'ஆனந்தத்தாய்மொழி'யை வாசிப்போருக்கு அதில் பொதிந்து கிடக்கும் உண்மை யுள்ளபடி விளங்கும். விரிவஞ்சிக் குறிப்பாக இக்கிரந்தத்தைப் பயன்பட ஓதுமுறையின்னதென்று ஒருவாறு காட்டிநிறுத்தலானோம்.

ஓம் தத் ஸத்.

## Revelations of the 'Radium'

# ஓர் அற்புத 'சூடாமணி.'

'Rontgen Rays' அல்லது 'X Rays' என்னும் அதிசயமான உள்ளொளிப் பிரகாசமொன்று புதிதாய்க்கண்டு பிடித்திருப்பதையும் அதன் ஒளி மண், கல், மரம் முதலியவற்

றைக்கண்ணாடிபோல் ஊடுருவிச்சென்று விளக்கும் தன்மையுடையதையும் பற்றி அக்டோபர்
மாசத்து விவேகசிந்தாமணியில் சொன்னோம். இன்னுமொரு அதிசயவஸ்து அதிநூதனமாகக்
கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்குப்பேர் 'Radium' என்று சொல்கிறார்கள். ஏனென்றால்
அது தன் ஆகிருதியிலாவது கனத்திலாவது குறையாமல் சதா ஒளியும் உஷ்ணமும் கொடுத்
துக்கொண்டிருக்கின்றது. அது ஒரு அதிசயப்பொருளே: ஏனெனில் இதுவரையில் கண்ட
பொருள்களெல்லாம் உருமாறுதலும் தேய்வுகுறைவின்றியும் உஷ்ணமாவது ஒளியாவது கொ
டுத்ததில்லை. இக்காலத்துப் பூதபௌதிக சாஸ்திரிகள் சூரியன்கூட ஓயாது ஒளிவீசுவதால்
தேய்ந்து கொண்டுவருகிறதாகவும், பலகோடிவருஷங்கள் போனால் சூரியனும் தேய்ந்தழிந்து
உலகமேநாசமாகப்போய் விடுமென்றும் வெகுசட்டதிட்டமாய் அது இருக்கக்கூடிய காலத்தை
வரையறுத்துச்சொல்லிவந்தார்கள். இப்பொழுது இந்த Radium என்னும் நூதனலோகம்,
இதுவரையில் பூதபௌதிக சாஸ்திரிகள் நம்பியிருந்த மாறுவிதிகளையெல்லாம் மாற்றி விட்
டது. இந்த அவ்வற்புதப்பொருளைத் தமிழில் குறிப்பிடச் 'சூடாமணி'யென்று அதற்கு நாம்
பேரிட்டோம். ஏனெனில், இது ஒரு அற்புதலோகமே. இது தானாக ஓயாதொழியாது மாறு
தமங்காது ஒளி வீசுந்தன்மையுடையதாயும் உஷ்ணமுண்டுபண்ணுந்தன்மை யுடையதாயுமிருக்
கிறது. எவ்வளவு உஷ்ணம் அளித்தாலும் அதனிடை குறைவதில்லை: உருமாறுவதில்லை:
அதில் எவ்வித மாறுபாடுமுண்டாவதில்லை. இதன் ஒளியைப் பிரத்தியக்ஷத்திற் காட்ட
ஸர் உவில்லியம் க்ருக்ஸ் என்பவர் 'Royal Society' என்னும் சாஸ்திர விற்பன்ன
சபைகூடிய மீட்டிங்கில் ஒரு உபாயம்செய்து விளக்கினார். 'X Rays' என்னும் நூத
னமான 'உள்ளொளி' விழுந்திலங்கத்தக்க ஒரு 'Sensitive screen' சூக்ஷமத்திரையில்
இந்த நூதனப்பொருளின் ஒளி விழும்படி செய்து காட்டினார். இந்த ஒளியின் சக்தியால்
தேகத்திலுள்ள இரணங்கள் புண்கள் சீக்கிரத்தில் குணப்பட்டு சொஸ்தமாகின்றனவாம்.
அன்றி இது நித்தியமாக குறைவுமறைவின்றி உஷ்ணமளித்துக் கொண்டிருக்கின்றது. ஐரோப்
பிய சாஸ்திர விற்பன்னர்களெல்லாம் இந்தப்பொருளின் குணங்களைக்கண்டு தியங்கி மயங்கி
அதிசயித்த வண்ணமாயிருக்கிறார்கள். இது ஒரு வகை உப்பு என்று சொல்கிறார்கள்.
எதுவானாலும் அநித்தியமான இவ்வுலகில் இது ஒரு நித்தியமானவஸ்துவென விளங்குகிறது.
அந்தலோகம் மட்டும் ஏராளமாகக்கிடைத்து விட்டால் உஷ்ணம், வெளிச்சம் இரண்டிற்கும்
வரவு செலவு கணக்கின்றி வேண்டிய அளவுக்கு யாதொரு நஷ்டமுமின்றி உபயோகிக்கலாம்.
விறகு விளக்கு இரண்டிற்கும் செலவில்லை. நாம் படித்த இரண்டாம் பாடப்புத்தகத்தில் விளக்கு
வெளிச்சத்தைக் கண்டறியாத ஒரு பட்டிக்காட்டு மூடன் பட்டணம் பார்க்கப்போனபோது
அவன் விருந்தினனா யிறங்கியிருந்த உறமுறையான் வீட்டில் விளக்கு வெளிச்சத்தைக்கண்டு
அதை 'சூரியன் குஞ்சு' என்றெண்ணி கூரையில் அதையெடுத்தொளித்து வைப்பதாகவெண்ணி
வீட்டைக் கொளுத்தி விட்டானென்றும், வீடுபற்றி யெறிந்து சாம்பலாய்ப்போனபின் எல்
லாரும் மிஞ்சி மிகுந்த சாமான்களைத்தேட, இவன் மிகவும் விசனக்குறியோடு கூடியவனாய்
தான் அருமையாய் எடுத்தொளித்துவைத்த "சூரியன் குஞ்சைத்" தேடிக் கொண்டிருந்து தன்
னையு வெளியிட இவன்தான் வீட்டைக்கொளுத்திய மூடன் என்று எல்லாரும் கண்டு
அவனை உதைத்து வெருட்டிவிட்டார்களென்றும் ஒரு கதைபடித்ததுண்டு. இப்பொ

ழுது மேற்றிசையிலுள்ள மஹாவித்வான்களெல்லாம் இந்த 'Radium' என்னும் நூதன
'சூடாமணி'யை "சூரியன் குஞ்சு" என்றே மதித்து அதிசயப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
மனிதன் முற்காலத்துக்கிப்போ கல்வி நாகரிகத்தில் மிகமுந்தினவனாய்விட்டான் என்றுசொல்லக்
கேட்பதுண்டு. கிஞ்சிக்ஞன சீவன் என்னதான் அவன் புத்திவன்மையால் பிரகிருதி தத்து
வங்களையுணர்ந்து உள்ரகசியங்களை வெளிக்கிழுத்தாலும் மாயாசக்தியான பிரகிருதியானவள்
அதிமேதாவியான புத்திமானையும் அறியாக் குழந்தைபோல் நடத்தி அவன் காணப்பொருளைக்
காட்டி ஆசையூட்டி அலைக்கழித்து மனிதன் அவளை நெருங்கநெருங்க, அவள் இருந்த
விடத்திலிருந்துகொண்டே வெகு தூரத்திற் போய்விடுகிறாள். இந்த ஜாலவித்தையின் இரகசி
யத்தை ஆத்மதத்துவ முணர்ந்து ஐம்புலன் பொறிகளையும்வென்ற மெய்ஞ்ஞானிகளன்றி மற்ற
வர்கள் எளிதில் கண்டறிந்துய்வது கஷ்டசாத்தியமேயாம். ஆனாலும் பகிர்முகப்பார்வையிலே
பக்திமிகவைத்துள்ள மேற்றிசையார் சளைக்காது இளைக்காது பிரகிருதியின் மூடுதிரைகளை யொ
ன்றொன்றாகப்புகுந்து பார்த்துவருகிறார்கள். வெங்காயத் தோலையுரித்து வித்தைக்காண்பான்
முயற்சிபோல் இவர்கள் கடைசியில் உண்மையை ஒரு விதத்திலுணர்வார்களென்றே யெண்ணு
கிறோம். ஆனால் இவர்கள் உண்மைபுணர்வு ஊகை அநுமானப்பிரமாணீயகமாயிருக்குமேயன்றி
பிரத்தியக்ஷ (சாக்ஷாத்கார) ஆத்மதரிசனம் இவ்வழியால் இவர்களுக்குக் கிட்டுவது அருமை.
"தன்னையறிந்தவனே தலைவனாவான்." உலகெலாமறிந்தும் தன்னையறியாதவன் "உலகெலா
முணர்ந்தோதற்கரியவனைக்" கண்டுய்தல் எப்படியாகும். 'Radium' என்னும் நூதனப்பொரு
ளின் தன்மை யெப்படிப்பட்டதோ அப்படிப்பட்டதே அந்தர்யாமியாயிருக்கும் ஆத்மப்பிரகாசம்.
இந்த ஆத்மப்பிரகாசத்தையே ஐந்துதலை நாகத்தின் தலையிலிருக்கும் ஓர் ஒளி வீசும் மணியா
கச்சொல்லி அதை நாகரத்னம் என்பார். சூடாமணி யென்றும் சொல்லுவார். ஔவையார்
அருளிச்செய்த குறளடியொன்று நாடிகளின் தன்மையை விளக்குங்கால் அவை யெங்கும்
"தாமரை நூல்போலு" நுழைந்து நிற்குமென்று கூறி,

> "ஆதித்தன் தன்கதிர் போலவந் நாடிகள்
> பேதித்துத் தாம்பரந்த வாறு"

என்று சொல்கிறார். சூரியகிரணங்கள்போல வந்நாடிகள் பிரிந்து பரந்து நிற்கும் என்று
செப்புகிறார். யோகமார்க்கத்தில் முயன்று யோகசித்தியினால் இதனுண்மையையுணர்ந்த
வர்கள் இந்த அபூர்வமானதும் அதிசயம் விளைப்பதுமான Radium என்னும் வஸ்துவின்
குணமுள்ள அதிசயமான ஒளியொத்த நுட்பப் பொருளினா லமைந்துள்ள நாடிகளில்
இவ்விதசக்தி யடங்கிக் கிடக்கிறதென்றும், அதை முறைப்படிசெய்யும் யோகாப்பியாசத்தால்
சித்தர்கள் விளங்கச் செய்திருக்கிறார்களென்றும், இன்றைக்கும் நாளைக்கும் தக்கவர் தக்கபடி
முயற்சித்தால் அப்படியே விளங்கச் செய்யலாமென்றும் இலகுவிலறிவார்கள். இதை பகிர்
முகப்பார்வையுள்ளோருக்கு விளக்கிக் காட்டுவது அசாத்தியமாம். ஆனால் அதற்கும் ஒரு
காலம் வந்தாலும் வரலாம். அது எப்போவருமென்று சொல்வதுமட்டும்தான் சாத்தியமாக
வில்லை. யேசுகிறிஸ்துவைப்போன்ற யோகசித்தர்கள் தங்கள் உள்ளொளியால் தேகத்தை
மறைத்துக்கொண்டு பிறர்காணாதபடி ஜனங்கள் மத்தியில் நடந்ததாகச் சொல்கிறார்கள். அணி
மாசித்திகளில் இது ஒன்றாம். இதையப்பியசித்து சித்திபெற்றவர்களன்றி மற்றவர்கள்
இதைப்பற்றிப்பேசிப்பயனில்லை.

ஹோமர் என்னும் பகாகவி பாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

(212-வது பக்கத் தொடர்ச்சி.)

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

வேறு.

76. ஆதலாலினி யகமமனோடுரும் பகைகொண்
டேதமார் பழிகொளு நினைப்பகற்றுதி யெழுந்த
தீதுகூர்தருசினத்தினைத் தவிருதி தேவர்
ஓது நல்லுரை கடந்திடேலென வினிதுரைத்தாள்.

(இ-ள்.) ஆகையினாலே இனிமேல் அகமம்னனோடு அரியபகைகொண்டு அவனைக்கொன்று பழ்
வாங்குமெண்ணத்தை நீக்குவாயாக. அவன் மேலுண்டாகிய கொடிய கோபத்தை விட்டுவிடு. தேவர்கள்
சொல்லுகின்ற நல்லுபதேசத்தை அலக்ஷியம் செய்யாதே யென்று இனிமையாகக் கூறினாள்.

77. உரைத்த மாற்றமுட்கொண்டன னக்கிலனுரைக்கும்
வருத்துமாயினு மாதராய் நின்னுரை மறுத்தல்
பொருத்தமன்றதாற் பொருசின மொருவினன் புரைதீர்
திருத்தவிர்ந்திடாரன்றுகொல் தேவரைப்பணிந்தோர்.

(இ-ள்.) இவ்வாறு தேவமாது கூறியவார்த்தைகளைக் கேட்டபோது அக்கிலன் சொல்லுகி
றான். என்னன்னாய்! நீ சொல்லிய வார்த்தைகளால் எனக்குத் துன்பமுண்டாவதாயினும் அவற்றை ம
த்துரைத்தல் நியாயமன்றாதலின் உன்சித்தப்படியே என்கோபத்தை நீக்கினேன். தேவதைகளைப்பண
ந்து அவர்கள் சொல்லியவண்மை நடந்து கொள்பவர்களுக்கு குற்றமற்ற சமஸ்தமான சௌபாக்கியங்களு
உண்டாகுமன்றோ?

78. வான் மடந்தையுண் மகிழவிவ்வுரையினை வழங்கி
ஊன் மணந்த விராதவாளுறையினுட் செறித்தான்
தேன்மிடைந்திமிர் செறிகுழற்றேவியு முடனே
தான்மடங்கினள் வானவர் சபையினைச் சார்ந்தாள்.

(இ-ள்.) மினாவா என்னும் அத்தெய்வ மங்கை மனங்களிக்கும்படி இவ்வார்த்தைகளைச் சொல்
அக்கிலன் தன்வாளாயுதத்தை உறையிலிட்டான். உடனே அத்தெய்வநங்கையும் திரும்பி வானவர் சபை
யை அடைந்தாள்.

79. பின்னு மக்கிலன்றன் சினந்தவிர் கலன் பிறங்க
மன்னி வீற்றிரு மன்னனை நோக்கினன் வழுத்தும்
என்னையே யிழிசுணங்கனி லெரிசிடு முகத்தாய்
உன்னதுள்ளினி லாண்மையென்பது சிறிதுளதோ.

(இ-ள்.) இவ்வாறு கோபம் நீங்கிவிடுவதாகச் சொல்லியும் தன்கோபம் தணியானாகி அக்கில
ங்கு சபையின் கண்ணே வீற்றிருக்கும் அரசனைநோக்கி, இழிந்த நாய்போலக் கடுகடுத்த முகத்தையு
ய் உன்னெஞ்சில் ஆண்மையென்பது சிறிதேனு முள்ளதோ?



80. மறைந்து வன்மையின் வதைத்திடு மறவிடையேனும்
நிறந்திறந்து முன்னின்றிடு நெடுங்களத்தேனும்
சிறந்தபோரை நீ யென்றெனுஞ் செய்வது முளதோ
இறந்து வீரர்கள் படுதல் கண்டிருப்பதை யலதே.

(இ-ள்.) பதிவிருந்து பகைவர்களைச் சடிதியிற்றாக்கிக் கொல்லும் சண்டையிலேனும், பகிரங்க
மாகப் போர்க்களத்தில் ஆயுதங்கள் மாற்பிற்றாக்கச் செய்யும் சண்டையிலேனும் நீஎப்போதாவது எதிர்த்து
நின்று தைரியமாகப் போர்செய்தலும் உண்டோ. வீரர்களைச் சண்டைசெய்யவிட்டு அவர்கள் போராடி மடி
தலைப்பார்த் திருத்தலேயல்லாமல் நீ ஆண்மையோடு போர்செய்வது முண்டோ.

81. வென்றிவீரரைச் சமரினிலெதிர்த்து நீள்விறலால்
கொன்று வீழ்த்துநேரலர் பொருள்கொள்ளுதறனினும்
இன்றிருந்தவர் தமரினி லொருவனெண் பொருளை
நன்றுகொள்ளுதலெளி தெனநயந்தனைபோலும்.

(இ-ள்.) வெற்றி கொள்ளும் பராக்கிரம சாலிகளாகிய வீரர்களை எதிர்த்து யுத்தஞ்செய்து வலி
யினால் அவர்களைக்கொன்று வீழ்த்துச் சத்துருக்களிடத்திலிருந்து பொருள்கவர்தல் நிரம்பக்கஷ்டமாத
லின் அதனைவிட்டு இருந்தவிடத்தில் இருந்தவண்ணமே உன்னினத்தார்களிலொருவன் பொருள்களைப்
பறித்த லெளியதாதலின் அவ்வாறு செய்ய எண்ணினால் போலும். இது மெத்தவும் நன்றாயிருந்தது!

82. வன்புமீனமு மருவி நின்றமர்களை வருத்த
அன்பிலாதயோ வனுப்ப வெம்விதிவச மனைந்தாய்
இன்பமார் சுதந்தரமிழந்தடி பணிந்தீங்கெம்
மொய்ம்புகாட்டியே முனிகலே மாதலிற் பிழைத்தாய்.

(இ-ள்.) மேன்மையும் தயையும் இல்லாமல் கிராதனாய்க்குடிகளை வருத்தும் பொருட்டு நாங்கள்
செய்தபாவத்தால் கடவுள் எங்களை வெறுத்து எங்கட்கு அரசனாய் வந்தனையே யன்றிவேறில்லை. நீசெய்
யும் துராகிருதங்களுக்கு உன்னை யாங்கள் கொல்லுதல் நீதியேயாயினும் எங்கள் சுதந்திரத்தை யிழந்து
உன் ஏவலில் நிற்க உடன்பட்டிருத்தலின் எமது வலிமையை உன்னிடத்திற் காட்டி உன்னைச் சிக்ஷிக்க
எண்ணேம். ஆதலால் நீ உயிரோடு பிழைத்திருக்கலானாய்.

83. காண்டி யென்னெடுங் காத்துறுக வினுடைத்தண்டம்
ஆண்ட மன்னராலமைவுறு நீதியுநலனும்
மாண்டயோ வினதருள் வழிமண்ணிடைச் செலுத்தப்
பூண்டதோர் குறியாமிது புகலுவன் கேளாய்.

(இ-ள்.) இதோபார் என்கையிலே நதியிருப்பதாகிய தண்டத்தை. இஃது அரசர்கள் தமக்
குரிய நீதியைச்செலுத்தி நன்மையாகப் பிரஜைகளைக் காப்பதற்கு ஓர் அறிகுறியாக யோவினால் அருளப்
பட்டதன்றோ? இன்னம் சொல்லுவேன் கேள்.

84. தூயதரந் திருக்கோலி தனணையாற் சொற்றேன்
மேயசூளிது மறுக்கலர் வேந்தரென்றறிதி
ஏயநின்னையும் யவனர்தங்குலத்தையுந் துறந்தேன்
பாயபோரினிற் படைத்துணைவருகலனினியே.

(இ-ள்.) இந்தப்பரிசுத்தமாகிய தண்டத்தின்மேலாணை வைத்துச்சொன்னேன். இந்தச்சப
[illegible] ர்கள் ஒரு நாளும் லங்கனம் செய்யமாட்டார்கள் என்று நீயறிவாயன்றோ. இந்தத்தண்டின்

மேலாணை! உன்னையும் யவனரையும் இன்றோடுவிட்டு நீங்கினேன். இனியுங்களுக்கு மெனக்கும்யாதும் சம்பந்தமில்லை. இனிமேல் யுத்தத்தில் என்றும் படைத்துணையாக வரமாட்டேன்.

85. எத்தராமுரட் பகைஞன் பல்வீரும் படையெறிந்து
யுத்தபூமியி னுதிர வெம்புன லுறத் தேக்கிச்
சுத்தவீரர் தம்பிணக்குவை மலையினிற் றோன்ற
வைத்த காலையிலறிகுவை வலியவென் பகையே.

(இ-ள்.) எத்தர் என்னும் மகாபலசாலியாகிய பகைவன் அநேக சிறந்த ஆயுதங்களைப் பிரயோகித்து அநேகவீரர்களைக்கொன்று யோர்க்களத்தில் இரத்தவெள்ளந்தேக்கிப் பிணங்களை மலைமலையாகக் குவித்தபோது நீயறிவாய் என்னைப்பகைத்துக் கொண்டதன் பயனை.

86. காத்திடுந்திற மின்மையாற் காக்கவல்லாரை
நீத்தநின்னுணர் வின்மையை நினைந்துளம்வருந்தி
ஆத்திரத்தினு லயருவையாரினும் வலிமை
பூத்தவீரனைப் பகைத்த நின்புன்மையை வெறுத்தே.

(இ-ள்.) அப்போது உன்னையுன் வலிமையினாலே காப்பாற்றும் சாமர்த்திய மில்லாமையாலே, காக்கவல்லவீரர்களைத் துறந்த பேதைமையை நினைந்து வருந்துவாய். ஐயோ வீரர்களுக்கெல்லாம் வீரனாகிய அக்கிலனை நாமேன் பகைத்துக் கொண்டோமென்று உன்னுடைய அற்பத்தனத்தை நினைத்து உன்னை வெறுத்துக்கொள்வாய். என்று கூறினான்.

87. இன்னணம் புகன்றெறிந்தனனிலங் கொளியுடுப்போற்
பொன்னம்புள்ளியிற் புனைந்திடும் கோலினைப்புவியிற்
பின்னரோருரையாட லின் றிருந்தனன் பெரிதும்
துன்னும் வெஞ்சினத்திறைவனும் துளங்கிலன் மனமே.

(இ-ள்.) இவ்வாறு கோபத்தாற் கூறிப்பொற்றகட்டுக்களால் நக்ஷத்திரங்கள் போல அலங்கரித்த தன்தண்டத்தை அக்கிலன் தரையில் எறிந்துவிட்டு ஒன்றும் உரையாடாமல் மௌனமாயிருந்தான். அதுகண்டு அகமம்னனும் யாதும் மனத்துணுக்கம் அடையாமல் இருந்தனன்.

(இன்னும் வரும்)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## THE MADRAS EDUCATIONAL CONFERENCE.

### THE DUTIES AND RESPONSIBILITIES OF THE TEACHER.

## வித்யா விஷயமாய்க் கூடிய மஹாசபை.

### உபாத்தியாயர் தொழிலின் மகிமையும் அவர் கடமையும்,

சென்னை 'டீச்சர்ஸ் கில்ட்' என்னும் வித்யாசங்கத்தின் ஆதரணையின்கீழ் இந்த மீ-21 22-ந்தேதிகளில் சென்னை வாலிபகிறிஸ்தவசங்கத்தார்க் குரித்தான பெரியகட்டடத்தில் ஒரு



மஹாசபை கூடியது. அதற்குச் சென்னையிலிருந்தும் வெளியிலிருந்தும் அனேக உபாத்தியா
யர்கள் வந்திருந்தார்கள். முதல் நாள் ரெவரெண்ட் எப். டப்ளியூ. கெல்லெட் அவர்கள்
சபையங்கத்தினர்க்கு நல்வரவுகூறிப் பிரசங்கத்தார். அப்பிரசங்கத்தில் வித்யா இலாகாவில்
சென்றவருஷம் உண்டான மாறுதல்களைக் குறித்துச்செப்பியபின் சென்னையில் வெகுநாளாய்
வித்யா விஷயமாயுழைத்துவந்தவர்கள் பலர் அவ்வேலையை விட்டுநீங்கிப்போக நூதன உபாத்தி
யாயர்கள் அம்மேலான தொழிலில் பிரவேசித்து வருகிறார்களென்றுசொல்லி, உபாத்தியாயர்க
ளின் மேலான கடமையைச் சற்று நன்றாக விளக்கிக்காட்டினார். "பழையன கழிதலும் புதி
யன புகுதலும் வழுவலகாலமுறையினானே," யென்றுள்ளபழைய சூத்திரத்தின் உண்மை எவ்வ
கையிலும் எல்லாவற்றிற்கும் பொதுவாகப் பொருந்தும் உண்மை. பழையன கழிந்து
கொண்டேவருகின்றன. புதியனவும் புகுந்துகொண்டேவருகின்றன. பழையன புதியன
இரண்டையும் பொருந்த இசைப்பது உபாத்தியாயர் தொழில். உபாத்தியாயர் இல்லாவிட்டால்,
இவையிரண்டும் பொருந்தாது முரண்பட்டுத் தனிநின்று தத்தளிக்கும். சென்றதோடுவரு
வதை யிசைப்பதான நிகழ்காலவேலை உபாத்தியாயர்களுடையதேயாம். உபாத்தியாயர் வேலை
யில் ஊதியம் மிகப்பெரிதாயில்லாவிடினும், அவர்கள் பொறுப்பும், கடமையும் வரையற்று விள
ங்குகின்றன. ஏனெனில் அவர்கள் இளகினமண்ணை அழகிய பாண்டமாய் வனையும் குயவனைப்
போல், காலசக்கரத்தின் உதவிகொண்டு சிறுவர்களின் இளமனதைப் பின்னால் வரும் புகழ்
மிகும் புண்ணியர்கள், கண்ணியர்கள், வித்வான்கள், விற்பன்னர்கள், வீரர்கள், தீரர்கள், வியா
பாரிகள் தொழிலாளிகளெனப் பல பல விதமாகவிளங்கும் உண்மைமிகு முத்தம பாத்திரங்க
ளாகச்செய்ய அடிப்போட்டு அழகிய உருவமைத்து வைப்பவர்களாக விருக்கிறார்கள். இனி
வருங்காலத்தில் இத்தேசத்தின் நிலைமையே இவர்கள் தலைப்பொறுப்பாக நிற்கின்றது. இவர்
களுடைய தொழிலின் பொறுப்பு உண்மையில் உள்ளாய்ந்து நோக்கில் தாய்மார்களின் பேரன்பு
நிறைந்துள்ள புண்ணியத்தொழிலுக்கிரண்டாவதாய், அதற்கு அடுத்து நிற்கும் ஆதரவுபெற்ற
தாய்இருக்கின்றது. தாய்மார்கள் தங்களுடைய சுத்தஹிருதயம் சுசீலநடத்தை பேரன்பு புண்
ணியசிந்தை இவை போலின்னுமுள்ள அரும்பெருங்குண விசேஷங்களால் புண்யாத்மாக்கள்
ஜன்மமெடுக்கப் புனிதக்ஷேத்திரமாக விளங்குகிறார்கள். அப்படி அவர்கள் வயிற்றில்
அவதரித்துப் பிறந்துவளர்ந்த புண்யசீவன்கள் தங்களில் உள்ளொடுங்கியிருக்கும் பூர்ணசக்
தியை வளர்த்து வெளியாகச் சாதன சாதக சாத்திய வள்ளலாயிருந்துதவி அவர்களைத்தாயன்
போடுபோற்றி வளர்பிறை போலுமவர்கள் இளமனதைத் தினேதினே கலைசேர்ந்து வளரச்
செய்து பூரணசந்திரன் போல் அவர்கள் மனம் மதியொளி விளங்கப் பிரகாசிக்கச் செய்வோர்
உபாத்தியாயர்கள். ஆகையால் இவ்விதபுண்ணியகடன் செலுத்தும் புமான்கள் புனிதாத்மாக்க
ளாக விருக்கவேண்டியதவசியம். ஆதியில் அகத்தூய்மையால் ஆத்மவித்யாசம்பன்னராய் விள
ங்கிய ஆரியபுருஷர்களே அரசிளங் குமாரர்முதல், அடிசிற்பிச்சையெடுத்துண்ணும் வித்யாவித்
துக்களாகிய பிராமணச்சிறுவர் தலையாக, வைசியகுலதிலகர்களான ஐசுவரியவான்களின் புத்தி
ரர்களீறாக எல்லாருக்கும் அவரவர் ஸ்திதிமதிவிசேஷங்களுக்குத் தக்கவாறு வித்யாப்பியாசம்
செய்விக்கும் மாக்ஷிமை பெற்றுள்ளாராய் விளங்கினார்கள். ஆங்கிலேய அரசாக்ஷி இந்தியாவில்
ஸ்திரப்பட்டு இங்கிலீஷ்படிப்பு தலையெடுக்கக்கிளம்பிய காலத்தும் இவ்விராஜதானியில் இள

ம்பப்பருவமுள்ள வாலிபர்களுக்கு வித்யாப்பியாசம் செய்யும் கடமைபூண்டு விளங்கியவர்கள
கண்ணியம் நிறைந்த புண்யாத்மாக்களாகவே யிருந்தனர்கள். மிஸ்டர் பௌவல் என்ன
மிஸ்டர் போர்ட்டர் என்ன, நம்மவரெல்லாங் கொண்டாடும்நலமிகு புண்ணியராம் ஸ்ரீகோபா
லராயரென்ன, தற்காலத்தில் தன்னந்தனியராய் பூரணசந்திரன்போல் புகழ்பிரகாசிக்க விளங்
கும் டாக்டர் மில்லர் என்ன, இவர்கள் எல்லாரும் உள்ளப்பெருமை நிறைந்து உத்தம வித்யா
சம்பன்னர்களாகிய புண்ணிய புருஷர்களே யல்லவோ? இவர்கள் உத்தமசிந்தையும் உந்நத எண்
ணங்களும் உள்ளத்தெளிவும் இவர்களையடுத்து வித்யாப்பியாசஞ்செய்து விற்பன்னர்களான
வாலிபர்கள் இப்பொழுது பெரும்புகழும்பெற்று பிரதமஸ்தானங்களில் பிரபலர்களாகவும்
புனிதகுண சீலர்களாகவும் விளங்குவதால் பிரத்தியக்ஷமாகத் துலங்கவில்லையா? இப்படிப்பட்ட
உத்தம குணசீலர்களை உதாரணமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு உபாத்தியாயரும் இவர்கள்
வழிபற்றிச்செல்லவிரும்பி உண்மையினுழைக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்களென்று
மிஸ்டர் கெல்லட் அவர்கள் ஆத்மசிந்தை நிறைய ஆர்வமிகுந்து உள்ளங்குழைந்து உண்மை
பெருகக்கேட்டோர் மனதைக்கவரும் மதிநிறைந்த வார்த்தைகளால் பிரசங்கமாரி பொழிந்து
பேசினர். இப்படி பொதுவாய்ச் சொல்லவேண்டியதைச் சொல்லிப், பிரத்தியேகமாகச் சொல்ல
வேண்டியதைக்குறித்துப் பேசுகையில், சென்றவருஷத்தில் எல்லாரும் அவரவர் துறையில்
அதிசிரத்தையோடுழைத்து விருத்திவிளங்க வுழைத்து வந்தார்கள் என்றுசொல்வது எல்லா
ரும் ஏற்றுக்கொள்ளத்தக்க தாயிருக்குமென்று சென்றார்.

"அடுத்தவருஷத்தில் கவனிக்கத்தக்க வித்யா விஷயங்கள் என்னமாயிருக்குமோ
எதாயிருக்குமோ சொல்லச்சாத்தியமில்லை. ஆனால் ஒரு விஷயம் மட்டும் மிகமுக்கியமாய் கவ
னிக்கப்பட்டு வருகிறது, அது இன்னும் விசேஷமாய் கவனிக்கப்படவேண்டியதா யிருத்தலால்
எல்லா உபாத்தியாயர்களும் இவ்விஷயமாய்க் கவனமெடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் பிரத்
தியேகமாகப் பாடுபட்டுழைக்கவேண்டு"மென்று வற்புறுத்திக் கூறினர். வித்யாவிஷயத்தில்
மதசம்பந்தமானதும் நன்னடத்தையை விர்த்திசெய்வதுமான அம்சம் மிகவும் கவனிக்கப்பட்
டுவருகிறது என்று சொன்னர். "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை"யால் இதனுண்மையை
யுணர்ந்தோர் யாவரும் மதம்வேறு நடத்தைவேறு என்று ஒன்றைவிட்டொன்று பிரிக்கத்தக்க
தாகப்பேதித்துப் பேசார்கள். மதம் என்றால் என்ன? எண்ணம், உள்ளுணர்வு, மார்க்கம்.
இவை யெல்லாம் ஆத்மதத்துவத்தை யுணரும் வழியையே குறிக்கும் ஒருபொருள் பலசொற்
கிளவிகளாம். நடத்தை யென்றாலும் ஒழுகும்வழி, செயல்களினால் விளங்கும மார்க்கம்
என்பதே பொருளாம். இதையே சன்மார்க்கம் என்பார்கள். உற்று நோக்கி உள்ளாராய்ந்
தால் மனிதனுக்கு நற்கதியளிக்கும் செயல்கள் எவையோ அவையே நன்னடத்தை, நன்
மார்க்கம், சன்மார்க்கம் என்று சொல்லப்படவுரியதாம். மனிதனுக்குக் கடையியாகவுள்ளது
கதி-மோக்ஷமே. "கதி-மோக்ஷம்" இல்லாதவன் கடையரினும் கடையனவன். மதம் என்
பது உள்நிலையை யுணர்த்துவதானால் நடத்தை புறநிலையை யுணர்த்துவதாம். இதையே
அகச்சமயம், புறச்சமயம் என்று சொல்வர். இக்காலத்து மனோதத்துவ சாஸ்திரிகளும் உள்
ளத்துணர்வாம் எண்ணம் எப்படியிருக்கிறதோ அப்படியேயிருக்கிறது நடத்தையும் என்

ஆராய்ச்சி முறையால் அறிந்துணர்ந்து தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் தெய்வசிந்தனை
யின்றி நன்னடத்தை யுண்டாகச்செய்யலாமென்று சொல்லுவோர் உண்மையறியாது உளரு
கிறவர்களாவார்கள். தெய்வமென்றால் காட்டேறி, கருப்பண்ணன், கற்சிலை, மரச்சிலை
யென்று நினைக்கிறார்கள் இவர்கள். அப்படியல்ல. உண்மையாகவுள்ள தெய்வம் ஒன்றே.
அதுவே ஆத்மா. பரமாத்மாவென்றும் ஜீவாத்மாவென்றும் சொல்வதெல்லாம் தோற்றம்
பற்றிச் சொல்லியவார்த்தைகளாம். விக்ரகங்களில் ஆவாகனம் செய்யப்பட்டுள்ள ஆத்மசக்தி
தெய்வமேயன்றி அதைத்தள்ளிப்பார்க்கும் ஸ்தூலவிக்ரகம் தெய்வமாகமாட்டாது. சூக்ஷமப்
பார்வை யில்லாதவர்கள் உளக்கண்திறக்கப்பெறும் வரையில் உண்மையாக ஆத்மசிந்தனை
செய்ய அசக்தர்களாயிருப்பதால் அவர்கள் ஸ்தூலபாவனையால் சிந்தித்து உள்ளன்பு நிறை
ந்து உளம்பெருகி மனங்கரைந்து உளக்கண்திறக்கப் பெறுவதற்குச் சாதனமாக வேற்பட்ட
வையே கோயில், குளம், தீர்த்தம், க்ஷேத்திரம், திருநாள், மந்திரம், தந்திரம் முதலிய எல்
லா உபாயங்களும். கடவுள் எல்லாம் கடந்தவராகையால், அவரைக்கண்டு தரிசிக்க விரும்பும்
சற்சனர் தத்துவங்களையெல்லாம் அநுபவத்தால் கண்டுகடந்து செல்லல்வேண்டும். அப்படிக்
கடந்து செல்வதற்காக ஏற்பட்ட மார்க்கங்களே எல்லாமதங்களும். மதங்களெல்லாம் சாதன
வழிகளேயன்றிவேறல்ல. ஆனால் சித்திகிடைக்கும் வரையில் சாதனமே சித்தியாகபாவிக்க
வேண்டிய தவசியமாதலால், சாதனத்தைப் பழிப்பார்க்கு சித்திகிட்டாது. இது ஒரு உண்மை
யான மனோதத்துவம். விளையாட்டில் உண்மையாக மனம் பதிந்து விளையாட்டையே விளை
யாக நினைந்து நடக்காத குழந்தை விளையாட்டுப்பருவம் நீங்கியபின் வினையாகவரும் உயிர்
வாழ்க்கையை உள்ளபடியனுபவிக்கத் தெரியாதுழலும். விளையாட்டும் வினையும் கருவிகளாம்
சொப்புமரப்பாய்ச்சிகளில் இல்லை. அவைகளை யுபயோகிக்கும் சீவன்களுடைய அறிவு முதிர்ச்
சியையும் அநுபவ விசேஷத்தையும் பொறுத்ததாம். அறிவு பிறக்காத அநுபவமற்ற சிறுவர்
களுக்கு உண்மையில் குழந்தையாகவும், வீடாகவும், வாசலாகவும் படும் மரப்பாய்ச்சி, மணல்
வீடு முதலியவை அறிவுபிறந்து அவைகளின் உண்மையான அநுபவம் சித்திக்கப்பெற்ற
பெரியவர்களுக்கு விளையாட்டுக் கருவிகளாம். அப்படிப் போலவே கோயில் குளம், தீர்த்தம்
க்ஷேத்திரம், வேதம் சாஸ்திரம், மந்திரம் தந்திரம் முதலியவை ஆத்மஞானமுதித்து ஆத்மா
னுபவ சித்திபெற்றவர்களுக்கு உண்மைக்குச் சின்னமாயுதவும் விளையாட்டுக்கருவிகளாம்
ஆத்மானுபம் பெற்றபெரியோர், யேசுகிறிஸ்துவைப்போலவும், திருமூலர், மாணிக்கவாசகர்
அப்பர், சுந்தரர் முதலான சைவசமயாசாரியர்களைப்போலவும், வேதமோதிய விப்ரசிகாமணிக
ளாம் பூர்விக ருஷிகளைப் போலவும் "கடவுளும் நானுமொன்றானேன்" என்று கடவுளோடு ஐக்
கியப்பட்டு நின்று இப்பிரபஞ்ச வாழ்வனைத்தையும் ஓர் விளையாட்டாகப் பார்த்துநிற்பார்கள்
அவர்கள் வழிபட்டு நாம் அந்த கதியடையும் வரையில் அதற்குச் சாதனமாக வேற்படுத்தி
யுள்ளமார்க்கங்களாம் அவரவர்கள் மதத்தையே பெரிதாகவும் பூர்ணமானதாகவும் நம்பி
நடக்கவேண்டும். இந்த மட்டிற்கு எல்லாரும் தத்தம் மதமேபெரிதென்று கொண்டாடுவது
இயல்பும் அவசியமுமாயினும் பிறர் மதத்தை யிகழ்ந்து புன்மொழிகள் பேசி அம்மதப்பற்றுள்
ளோர் மனநோவச்செய்வது மஹாபாதகமாம். ஆகையால், கிறிஸ்துமதப்பற்றுள்ளவர்கள்
அவர்கள் மதத்தைப்பற்றிச் சிலாகித்துப்பேசும்பொழுது அப்படிப் பேசுவதினாலேயே நம்

மதத்தை யவர்களிகழ்ந்ததாக நினைக்கலாகாது; அவர்களுக்குத் தம்மதம் எப்படியோ அப்படியே நம்மதம் நமக்கு அருமையானதாம். தம்மதத்திற்குமிஞ்சி வேறில்லையென்று நினைப்பர் உண்மையான மதப்பற்றுள்ளோர். இந்த உள்மர்மத்தை யுணர்ந்தோர் கனம்பொருந்திய கவர்னர் லார்ட் அம்தில் அவர்கள் இராஜமகேந்திரத்தில் மதக்கல்வி சம்பந்தமாகப் பேசினபோது தம்மதத்தைச் சிலாகித்துப் பேசினதை யொருகுற்றமாக வெண்ணமாட்டார்கள். மதப்பற்றே யில்லாதவர்களா யிருத்தலைவிட ஏதோ தெய்வமொன்றிருக்கிற தென்று நம்பியிருக்கிறவர்களை உண்மையான மதவழியில் திருப்புவது எளிதுதானே. அவருக்கு உண்மையான மதம், அவர் பிறந்து வளர்ந்து, உள்ளத்திற் சிந்தித் துபாசித்து வரும் கிறிஸ்து மதமேயாகையால் அதையே உண்மைமதமாகச் செப்பினர். அப்படிச் சொன்னதினால் அவர் உண்மையான மதசிந்தனை யுள்ளவர் என்று மட்டும் வெளியானது சரியாகச் சொல்லலாமேயன்றி, அவர் தம்மதிகாரமுறையில் தம் செல்வாக்கை துர்விநியோகப்படுத்தி ஹிந்துக்களை யெல்லாம் கிறிஸ்தவர்களாக்க எண்ணியிருக்கிறாரென்று நினைப்பது சுத்த மௌடீகமே. இப்படியே ஹிந்துக்கள் நினைப்பார்களென்று கல்கத்தாவில் பிரசுரமாகும் இங்கிலீஷ்மான் பத்திரிகை விஸ்தரித்து எழுதியது சுத்தப்பிசகு. அதை ஹிந்துப் பத்திராசிரியர், உண்மையை விளக்க ஒரு பிரயத்தனமும் செய்யாது ஹிந்துவின் ஒரு பக்கத்தில் அப்படியே யெடுத்தச்சிட்டு வாளாவிருந்ததும், இங்கிலீஷ்மான் பத்திராசிரியர் ஹிந்துக்களை உண்மையறியும் உள்மதப் பற்றற்ற மூடசிகாமணிகள் என்று நினைந்தெழுதியதை ஒருவாறு உறுதிப்படுத்தினது போலுமாயிற்று.* இந்தத் தப்பெண்ணத்தை நிவர்த்திக்க ஆரிய மதசிகாமணியாகிய நமது திவான் பஹதூர் ஆர். இரகுநாத ராயரவர்கள், எல்லாப் பத்திரிகைகளிலும் நமது கவர்னர் செய்வது சரியென்றும் அவ்வார்த்தைகளினால் அவரைப் பற்றித் தப்பெண்ணங் கொள்ள இடமில்லை யென்றும், நம்மவர்களில் இங்கிலீஷ் படித்த மேதாவிகளாய் விளங்குமவர் தாம் பிரத்தியேகமாக நியமித்துள்ள பாடசாலைகளிலும் ஹிந்து மதக்கல்வி போதிக்காதிருப்பது அவர்களுக்கு உண்மையான உள்மதப்பற்றில்லை யென்று லார்ட் அம்தில் சொன்ன வார்த்தை சரியென்று சொல்லத் தக்கதாயிருக்கிறதென்றும் எழுதியிருக்கிறார். இதற்காக உண்மையான உள்மதப் பற்றுள்ளவரெல்லாரும் இவருக்கு மிகவும் கடமைப் பட்டவர்களாக விருக்கிறார்களென்பது நாம் சொல்லாமே யமையும்.

மிஸ்டர் கெல்லெட் அவர்கள் அவர் செய்த பிரசங்கத்தில் இந்த மத விஷயத்தைப் பற்றிப் பிரமாதமாகச் செய்த பிரசங்கமானது வித்யா விஷயமாய்க் கூடிய கூட்டத்திற்கு அவர் தம் கோயிலிற் செய்யும் மதப்பிரசங்கம் செய்தது போலிருந்த தென்று ஹிந்துப் பத்திரிகை யெழுதி யிருத்தலால் அவருடைய உள்ளத்தையறிய உண்மையை யுள்ளவாறு சிந்தித்துணர்தல வசியமா மென்று இது விஷயமாய் இவ்வளவு விவரித்தெழுதலானோம். நமது கிறிஸ்தவ பாதி

* இந்தக் குறையைப்பிந்தி 'டைம்ஸ் ஆவ் இந்தியா' பத்திரிகை 'இங்கிலீஷ்மான்' பத்திராசிரியர் தம்மபிப்பிராயத்தைக் கண்டித்து கவர்னர் செய்கையைச்சரியென்று கூறியதைப் பிரதமஸ்தானத்தில் பதிப்பித்துத் தீர்த்துக்கொண்ட ஹிந்து பத்திராசிரியர்க்கு வந்தனம் சொல்லவேண்டியவர்களா யிருக்கிறோம்.



வையாக விருப்பினும் பிற ரிகள் அவர்கள் மதத்தைப் பற்றிச் சொல்ல தெல்லாம் குற்றமற்ற மதங்களினுண்மையுணராது அந்நிய மதங்களை யிகழ்வதே தங்கள் மதத்துக்கு ஒரு புகழ்ச்சியாக நினைப்பது சுத்தப் பிசகு. அது அவர்கள் அறியாமையால் செய்யும் காரியமாதலால் அதை நாம் நிராகரித்துத் தள்ளவேண்டிய தொழிய மற்றப்படி பாராட்டத் தக்கதல்ல. "மனக் கடல் ஏழு" என்று குறிக்கப்பட்ட 'ஸப்தஸமுத்திரத்தை' ஸ்தூலார்த்தம் செய்து கொண்டு டாக்டர் மர்டாக் ஒரு புஸ்தகத்தில் உளறியிருந்ததையே, பண்டிதை இராமாபாய் பெங்களூரில் செய்த ஒரு பிரசங்கத்தில் ஹிந்துமத சிரேஷ்டர் நடுவில், ஹிந்து கனவான் ஒருவர் அக்கிராசனாதிபதியாயிருக்க எடுத்துச்சொல்லி ஏளனமாய்ப் பேசிப் பிதற்றினதாகப் பத்திரிகைகளால் தெரியவருகிறது. இதனால் இந்தப் "பண்டிதை"யினுடைய சம்ஸ்கிருத வித்தையின் வெள்ளல் வெளியாயிற்றேயன்றி ஹிந்து மதத்துக்கு ஒரு குறைவும் வரவில்லை. கிறிஸ்து மதத்துக்கும் இதனால் வந்த சிறப்பு ஒன்றுமில்லை. ஆனால் இவர் கிறிஸ்துமதப்பற்றுள்ளவரேயன்றி கிறிஸ்து வழிபற்றி அவர் பெற்ற பெருங்கதியடைந்திலர் என்று ஸ்பஷ்டமாய் வெளியாகிறது. இப்படி அரைகுறையாகக் கற்றும் கேட்டும் ஸ்வானுபவமின்றிப் பிதற்றுமிவர் வார்த்தைகளைக் கேட்கும்போது உண்மையான உள்மத சிந்தனையும் ஆத்மானுபூதியுமுள்ள பெரியோர் அவர்கள் மொழியை நினைந்து குற்றம் பாராட்டாது, தானீன்ற குழந்தை தன் இன்னமுதவாய்திறந்து தேனொழுகும் மழலைச்செல்லால் தன் தாயையே நிந்தித்தால், அவள் எப்படி அச்சொல்லிலுள்ள குற்றத்தைச் சிறிதும் பாராட்டாது,

"குழலினிது யாழினி தென்பர் தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று சொல்லியவாறு அக்குழந்தையின் மழலைச் சொல்லில் செறிந்து கிடக்கும் இன்னமுதரசத்தைமட்டும், நீரினின்று பாலைப்பிரித்துப் பருகும் அன்னத்தைபோல், கிரகித்து மகிழ்வளோ அப்படி மகிழ்வார்கள். இவர்கள் மௌனத்தின் தன்மையறியாத அகம்பாவ சிந்தையர் அடங்காக் குழந்தை இடுக்கண் விளைத்துக் கெடுவதுபோல் கெட்டுப்போவார்கள். உத்தம பாவமுள்ளவர்கள் உண்மையறிந்து உய்வார்கள்.

இது விஷயம் மிக வளர்ந்து விட்டதால், இனி, உபாத்யாயர்கள் கையாளவேண்டிய கடமைகளையெல்லாம் முத்திறமாக்கி மூதறிவோடும் மிஸ்டர் கெல்லெட் சொல்லிய வசனங்களைமட்டு மெடுத்துச் சொல்லி இதை முடிப்போம். அவர் முத்திறப் படுத்திச் சொல்லிய உபாத்யாயரின் மூவகைச் சிறப்பு மென்னவெனில்:—

(1) பழையன புதியன விரண்டையும் பொருந்த வமைக்கும் புண்ணியத்தொழில் அவர்களுடையது. இவைகள் வேறுபட்டு விளங்குவது "வெறிவெய்விதாலு" என்று பலவிதப் பயித்தியங்களுக் கிடமாகும்.

(2) இரண்டாவது, இந்தியாவில், மிக வித்தியாசப்பட்டு விளங்கும் பலஜாதிகளை நடுவிலிருந்து பொருந்த வைக்கிற தொழில் உபாத்யாயருடையதாயிருக்கிறது. கீழ்த்திசை நாகரிகமும் மேற்றிசை நாகரிகமும் உபாத்யாயர் மத்யஸ்தமும் ஊக்கமும் உழைப்புமின்றி ஒன்றோ

டொன்று பொருந்தா. பிரிடன் தேசத்து ஆங்கிலேயரையும் இந்துதேசவாசியாகிய ஹிந்து யும் பொருந்த இசைப்பதும் இவருதவியின்றி யாகாது.

(3) கடைசியாக, உபாத்யாயர் உண்மையாகவே உயிர்வாழ்க்கைக்கு வழி விட் காட்டும் வாழ்க்கை யுபகாரிகளாக விருக்கிறார்.

மூன்று விதமாய்ப் பிரித்துச் சொல்லிய இந்த முக்கடனையும் செலுத்த உபாத்யா புனிதசீலராக விருக்கவேண்டிய தவசியமாதலால் முதலாவது உபாத்யாயர்கள் தங்களைப் புனி ராக்கிக் கொள்ளப் பாடுபட வேண்டுமென்று மிகவும் வற்புறுத்திக் கூறினார். இந்தப் புண் காரியத்தில் மேற்றிசையில் பிரதமஸ்தர்களாக விளங்கிய ப்ரோபெல், பெஸ்டலோ இவர்களை, மேற்றிசை நாகரிகத்தார் மனமொப்பவேண்டிப், பின்பற்றி, இவர்கள் போதித்த தியமாய் விளங்கும் உண்மைக் கொள்கைகளை அநாதிதொட்டு விளங்கும் ஆர்யமதக் கொள் பற்றி ஹிந்துக்கள் எளிதி லுணருமாறு இத்தேச வழக்கங்கள் பழக்கங்களைக் கொ "எம்மதமும் சம்மதமாய்க்" கொள்ளும் ஸத்யம் விளங்கத் தெளியக்காட்டும் உதவி ய்வதே தன் தலைமேல் விழுந்த பாரமாகக்கொண்டு சென்ற ஒருவருஷகாலமாக இ விவேகசிந்தாமணி இது விஷயத்தில் முனைந்து நின்று கடவுள் கிருபைகொண்டு நட வருகிறோம். இப்படி நாம் செய்துவரும் முயற்சியே வித்யாவிஷயத்தில் போதனாசக்தி மிகு வரும் வித்யா இலாகாதாரர் உண்மை யறிந்தொழுகுபவரும், வித்யா விற்பன்னராலும் வி யார்த்திகளாலும் ஒருங்குகொண்டாடப்படும் உத்தமகுணம் வாய்த்தவருமான ஒரு சிற உபாத்யாயரால், வித்யாவிஷயமாய்க்கூடிய மஹாசபைமுன், அவர் உடன்உபாத்யாயர்க குப் பெரிதானதாகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டதால் நமது உண்ணோக்கம் உள்ளபடி த வர்களால் அங்கீகாரம் பெற்று நிகழநேரிட்டது நமக்கு உளமகிழ்ச்சியை யுண்டுபண்ணி சாக மூட்டுவதாயிருக்கிறது. அடுத்தநாள் கூடிய சபையில் நமது நூதன வித்யா இலாகா லைவரான டாக்டர் போர்ன் அவர்கள் அக்கிராசனாதிபதி யாயிருந்துசெய்த பிரசங்கத்தி மதக்கல்வியின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்திக் கூறினார். கனம்பொருந்திய கவர்னர் அ களும் இது விஷயமாய் நெல்லூரிலும் இராஜமகேந்திரத்திலும் அவர் உள்ளக்கருத்தை ஒளி காது வெளியிட்டுப்பேசி, மதக்கல்வியினவசியத்தை வற்புறுத்தினதன்றி இதைப்பற்றி அ உண்மையில் அதிக சிரத்தை பூண்டவராக விருக்கிறாரென்றும் காட்டியுளார். 'மதக்கல் யென்றால் "எம்மதம் உம்மதம்" என்று ஒவ்வொரு சமயத்தாரும் சண்டைபோட்டுக்கொள் தால் இவ்வித்யாசத்துக்கும் அதனால் விளையும் விலலங்கத்துக்கு மிடமின்றி எல்லாமதங்க கும் பொதுவாயுள்ள உண்மையான உட்சமயக்கொள்கைகளை விளக்கும் ஆத்மவித்தை 'எம்மதமும் சம்மத'மென்று கொண்டுள்ள கவர்ன்மெண்டு கொள்கைக்கு ஒத்ததாய் பக்ஷமும் சாராது உண்மைநிலை நின்று பரங்கருணையே துணையாக்கொண்டு பல பல வித வுமெடுத்து பகிரங்கமாக விளக்கி வருவோம். ஸத்யமேவிதி, ஸத்யமேகதி, ஸத்யமே ஜெ

ஓம். தத். ஸத்.

---

* "NEW THOUGHT PRIMER."

## நவீனமத சித்தாந்த ஸங்கிரகம்.

"பழையனகழிதலும் புதியனபுகுதலும்
வழுவலகால முறையினானே."

ஆதலால் நித்திய முக்த பரிபூர்ண சச்சிதானந்தப்பழம்பொருளாகிய ஸத்யம் ஒன்று தவிர மற்றப்படிக்குள்ள கால தேச வஸ்து பரிச்சேதங்களுக்குட்பட்ட எல்லாப்பொருள்களும் பரிணாமவிதிப்படி சதா தோன்றுவதும், வளர்வதும், மாறுவதும், தேய்வதும், அழிவதுமாகிப் பின்னும் பின்னும் இம்முறைபற்றியே தோன்றி மறையுந் தன்மை வாய்ந்தனவாக விருக்கின்றன. இது பிரகிருதி ஸ்வபாவம். இதை ஸம்ஸ்கிருதத்தில் பரிணாமம், 'பரிணாமவிதி' என்று சொல்கிறார்கள். இங்கிலீஷில் 'Evolution' என்றும் 'Law of Evolution' என்றும் சொல்கிறார்கள். இந்த விதி இப்பரதகண்டத்தில் அநாதிதொட்டு வேதமுண்டானது முதல் சித்தர் முத்தர்களாலும் ஆத்ம தரிசனம் கிடைக்கப்பெற்ற இருஷிகளாலும் பிரத்தியக்ஷானுபவ ரீதியாக வுணர்ந்து குருபரம்பரையாக முறைதவறாது உபதேசித்தாளப்பட்டு வந்திருக்கிறது. பண்டிதர்கள் இதை நான்முகமாக அறிந்தாலும் இவ்வுண்மை யெல்லாம் அந்தர்முகதரிசனத்தாலும் உள்ளனுபவ உணர்வினாலுமே யறியக்கூடியதாகையால், ஆத்மஞானமுதித்து ஆத்மானுபவசித்தி பெற்றவரன்றி மற்றவர்கள் இதை முற்றும் கற்றும், கற்றபடி நின்று பார்க்கத்திறமில்லாக்காரணத்தால் உள்ளபடி யுணரமாட்டாது சற்றேறக்குறைய இட்டுக்கட்டிச் சட்டமிட்டமாய் ஒருவாறு சொல்லிக்கொண்டு திரிவர். முற்றுமுணர்ந்த மூதறிஞர்களோ, இவ்வுண்மைவிதிமுற்றும் ஸ்வானுபவ ரீதியாக அறியக் கூடியதாயிருப்பதுணர்ந்து, அடையாளத்துக்கு அங்குமிங்குமாகச் சிலவற்றைக் குறித்துவைத்து மற்றதைக் குருமுகமாகக் கேட்டுக்கொள்கவென்று சொல்லிவிட்டனர். இது காரணம்பற்றியே வேதங்களை குருமுகமாகப் பயின்றாலன்றிப் பிரயோஜன மில்லையென்று சொல்லுவர்.

மேற்றிசையில் இந்தவுண்மை யேசுகிறிஸ்து போன்ற தீர்க்கதரிசிகளுக்குத் தெரிந்ததாயிருப்பினும் அவர்கள் அநுபவரீதியாக பரிபக்குவ ஜீவன்களுக்குப் போதித்தார்களேயன்றி இக்காலத்துப் புத்தகமெழுதும் கிரந்தகர்த்தர்களைப்போல் வளர்த்தி வளர்த்தி நியாயாநியாய விதண்டாவாதங்களுக்கு ஆக்ஷேபசமாதானஞ்சொல்லி யெழுதி வைத்தார்களில்லை. ஆதலால் அவர்கள் வார்த்தைகளும் அவர்கள் சொற்கேட்டு உபதேசபலன் பெற்றவர்களால் உலகோபகாரார்த்தம் எழுதிவைத்த வர்கள் கைப்படக்கிடைத்தவையன்றிமற்றவை யொன்றுமில்லை. இப்படி அவருடைய சீட களில் நால்வர் குறித்துவைத்ததையே கிறிஸ் வர்கள் சத்தியவேதமென்று கொண்டாடுகிறா கள். சத்தியத்தைவிளக்குவதெல்லாம் ச தியவேதமாதலால் அவர்கள் கிறிஸ்துவி போதனைகளை அப்படிக் கொண்டாடுவ சரியே.

"எழுதாப்பொத்தகத் தேட்டின்பொருளை
தெருளாதகன்னி தெளிந்திருந்தோத"

என்றபடி அகம்பாவமழிந்து ஆத்மாவிலொ ங்கியமனதினாலேஉள்ளறிவாயிருந்துணர்ந்து ப்பியசித்து, அப்பியாச முதிர்ச்சியினால் அப் "அறிந்த அறிவும் அழிய" ஸ்வானுபவ இத்த 'நிலைகளெல்லாங் கடந்த நிலையில்' இ

* Origin, History & Principles of the Movement known as New Thought by Henry Harrison Brown, Now, Folk [illegible]cisco, U. S. A pp 84. Price 25 cents.

உண்மையில் ஒன்றுபட்டு நிற்பதே இதையோதும் வழியாம். "எழுதாத பொது அகமாகிய" ஹிருதயமத்தியாம் சிதாகாசம் என்னும் ஏட்டில் எழுதாமலெழுதி வைத்திருக்கும் சூக்ஷ்மாதிசூக்ஷ்மமான சூக்ஷ்மப்பொருளை புலனறிவுக்கெட்டாத புனிதவடிவின் சின்னமாம் "கன்னி" யாயிருந்துதெளிவுற்றுஓத, சற்சிஷன் சூக்ஷ்மாதிசூக்ஷ்மத்திலும் சூக்ஷ்மமாயிருந்து நுண்ணறிவா லுணர வேண்டும். குருபரம்பரையாகவே இந்தவுண்மை எப்போதும் வெளியாகிப் பரவி வரத்தக்கது. அப்படியே அநாதி காலந்தொட்டுப் பரவிவந்தது இன்றைக்கும் பரவி வருவதாயிருக்கிறது. இதைப்பற்றி "ஏட்டின் புறத்தில் எழுதிவைத்தென்பயன்!" ஆதலால் இம்மட்டு நிறுத்தி மேற்றிசையார் புத்தி விசேஷத்தாலுண்டான விஜ்ஞானசக்தியால்பகிர்முக ஆராய்ச்சி செய்து இவ்விதியைக் கண்டு பிடித்ததே வித்வான்களுக்கும் கல்விமான்களுக்கும் உலகத்தாருக்கும் ஒப்பாயுள்ளதால் இந்தவிதியினுண்மையை ஒருவாறு விஸ்தாரமாய் ஆராய்ந்தறிந்து கண்டு விளக்கிய டார்வின் என்பவர் காலமுதலே இப்பரிணாம விதி உலகசம்மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது. டார்வின் இதை பகிர்முகமாகக்கண்டு பிடிக்கக்காரண பூதராயிருந்தாராயினும் அவர்கண்டுபிடித்த வுண்மைகள் சென்ற 40 அல்லது 50 வருஷகாலத்தில் அதிகமாக மேன்மேலும் திருத்தி வளர்த்தி அவர்வழிபற்றிச்சென்ற சாஸ்திரவிற்பன்னர்களால் விர்த்திக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேகமேயெல்லாம், புலனறிவே அறிவு என்று நம்பியிருக்கும் (Materiatistic school) லோகாயத மதப்பற்றே மிகுதியுமுள்ள மேற்றிசையார் சிறுகச்சிறு அதிலிருந்தும் மேற்கிளம்பி இப்பொழுது "மனதே [illegible] தேகம் மனதின் விகாரமேயன்றி வேறல்ல" என்கிற உத்தமசித்தாந்தத்துக்கு வந்திருக்கிறார்கள்.

இந்தசித்தாந்தம் இந்தியாவில் புராதனமானதேயாயினும், மேற்றிசையார் மிலேச்சர்களா யிருந்ததுபோய் நாகரிகர்களாயிருக்கத் தலைப்பட்ட பிறகு இவ்வித சித்தாந்தங் கொள்ளத் தலைப்பட்டது புதுமை யாதலால் இதை "நவீனமதம்" அல்லது நூதன சித்தாந்தம் என்றுபொருள்படும் "New Thought" என்னும் பேரால் வழங்குகிறார்கள். இந்த சித்தாந்தம் இங்கிலாந்து முதலான ஐரோப்பிய தேசங்களில் விசேஷமாக ஜெர்மனியில் தலைக்கிளம்பித்தளிர்விட்டு இளங்கொழுந்தாய் விளங்கி வளர்ந்தது. இப்பொழுது இந்த எண்ணம் அமெரிக்காவில் பலநாமங்களால் விளங்கும் பலபகுதியாரால் "New Thought Movement"—நவீனமதக்கொள்கை விலாஸம் என்று பொருள்படும் பெயர் கொடுத்துக் கொண்டாடப்படுகிறது. இந்த நவீனமதக் கொள்கையுள்ளோர்களில் மிகவும் மேலாய் விளங்குவோர் பெரும்பாலும் நமது வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளின் உள்தத்துவத்தையே உண்மையென்று கொண்டாடுகிறவர்களா யிருக்கிறார்கள். ரால்ப் வால்டோ எமர்ஸன் (R. W. Emerson) என்னும் மஹான் சுத்தாத்வைத சித்தாந்த சிரேஷ்டர். விஷ்ணு புராணம் பக்வத்கீதை இவற்றின் உட்கருப்பொருளை மேற்றிசையார்புத்திக்கும் வித்தைக்கும் கொள்கைக்கு மிணங்க உண்மைக்குப்பங்கம் வராது வெகு அழகாக எடுத்துச்சொல்லி யிருக்கிறார். இவருடைய வார்த்தைகளையும் கருத்துகளையும் ஸத்யமாக நம்பி அதனால் உண்மையுணர்ச்சி யுண்டாகப்பெற்ற இவருடைய சற்சிஷர்கள் அநேகரில் (Henry Harrison Brown) 'ஹென்றி ஹாரிஸன் ப்ரௌன்' என்பவர் ஒருவர். இவர் "Now"



என்னும் நித்திய தத்துவங்களை விளக்கும் மாதாந்தரப்பத்திரிகை யொன்றுக்கு ஆசிரியராகவிருக்கிறார். இவருக்கு இப்பொழுது 63-வயது ஆகிறது. 30-வருஷகாலமாக உண்மைக்குழைத்து இப்பொழுது அத்வைதபாவம் முதிர்ந்து, அப்பியாசித்தனுபவிக்காத அறிவு அறிவோடு சேர்த்தியில்லை யென்றுணர்ந்து, தானுணர்ந்த உண்மைகளை யனுஷ்டித்து நித்திய ஜீவனம் நடத்தி வருவதன்றி உண்மையை யெல்லவருமுணரப் போதிக்கவேணுமென்கிற அவா மிகுதியால், அநேக சிறு புத்தகங்களெழுதியும் பிரசுரித்தும் பிரசங்கங்கள் செய்தும், மாணவர்களுக்குப் பாடங்கள் சொல்லியும் சத்காலக்ஷேபம்செய்தும் அதையேஜீவனோபாயமாகவும்கொண்டு நடந்துவருகிறதாகத் தெரிகிறது. இவருடைய பத்திரிகையை நாம் சென்ற ஏப்பிரல் மாசம் முதல் இடைவிடாது நன்றாகக் கவனித்துப் பார்த்துவருகிறோம். மேற்றிசைமுறைபற்றிச் சொல்லு முண்மையை இந்தியாவில் வழங்கும் உருவகமொழியில் (symbolical language) வரைந்தால் கிரகித்துக்கொள்வாரோ என்றுணர ஆனந்தத்தாய் மொழியில் சேர்த்துள்ள அர்ப்பணலிகிதம் இவருக்கு வரையப்பட்டது. அதன்கருத்தையே எமர்ஸனைக்கொண்டாடும் சிஷ்யக் கூட்டத்தாருக்கு ஆத்ம சோதரபாவனார்த்தமாய் அன்பு நிறைந்த ஆப்தவசனமாக எழுதப்பட்டது. இவைகளின் உண்மைகளை இவர் உள்ளபடி கிரகித்துக்கொண்ட விசேஷத்தாலும் இவரதுபத்திரிகையில் இவர் அத்வைத போதம் செய்யும் சாமர்த்தியத்தாலும் இவர் உண்மையான ஓர் உத்தமசித்தம் பெற்ற அத்வைதவாதியும் அப்பியாசியு மென்றுணர்ந்து இவரிடத்து 'ஆத்ம சோதர வாஞ்சை வைத்துள்ளோம். இவர் "நவீனமதம்" என்று சொல்லும்மதத்தின் உச்சியில் அதற்குச் சிகரமாய் விளங்கும் உந்நதகொடுமுடி சுத்தாத்வைத சித்தாந்தமாகும். இந்த நவீனமதமுண்டான விதத்தையும் இதன் பூர்வ சரித்திரத்தையும், இதற்கு ஆதாரமாயிருந்த தத்துவஞானிகள், மஹாகவிகள், உத்தமசித்தர்கள், உயர்பாவனசிரேஷ்டர்கள் இவர்களையும் வெகு தோரணையாய் ஆதியோடந்தம் எளிய நடையில் தெளிவான இங்கிலீஷ் பாஷையில் சிறு புஸ்தகம் ஒன்று எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இப்புத்தகத்தின் 57-வது பக்கத்தில் இந்த 'நவீனமதம்' வெளித்தேசங்களிலும் பரவி வருவதைப்பற்றிச் சொல்லுகையில் இதரதேசங்களிலிருந்து வரும் "நவீனமதக் கொள்கைகள் நிறைந்த பத்திரிகைகளில் இவ் விவேகசிந்தாமணியும் ஒன்று என்றுசொல்லி இதன்பேரை வரைந்து அதைக் குறிப்பிட்டு நமக்கு அப்புஸ்தகத்தில் ஒரு பிரதியனுப்பியிருக்கிறார்.

"எம்மதமும் சம்மதமே" யென்று சொல்லிய என் தாய்மொழி விளங்க ஸர்வமதசாகரமாகிய **அத்வைத** சித்தாந்தத்தை உண்மையில் **ஸத்யத்தை** நாடிச் செல்லும் யார்தான் தம்மதம் என்று உரிமை பாராட்டிக் கொண்டாடமாட்டார். இப்பொழுது வெளியாயிருக்கும் **ஆத்மவித்யாமஞ்சரியி** லடங்கிய **ஆனந்தத்தாய்மொழியின்** சாராம்ஸத்தை உலகோபகாரமாக வெளியிடுமுன் அந்தரங்கத்தில் அவரவர் எண்ணங்களும் பாவனைகளு மிருப்பதற்கிணங்க இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதித் தெரிவித்துவந்த பொழுது, இங்கிலாந்தில் 'டெவன்ஷயர்' மாகாணத்தில் வசிக்கும் கிறிஸ்து பக்தசிகாமணியாகிய ஒரு துரைசானி நாம் நமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திற் கண்ட நம் சித்தாந்தங்களை வாசித்துப்பார்த்துவிட்டு "ஏன்! இவையெல்லாம்கிறிஸ்துநாதர் போதித்த உண்

ணமகளேயன்றி வேறல்லவே!" யென்றார்.
ஒரு ஸம்ஸ்கிருதவித்யாபண்டிதரும் அப்படியே
விவேகசிந்தாமணியில் தாம் வாசித்ததைக்கொ
ண்டு இதில் அன்புரஸம், சோகரஸம், பக்திரஸம்
முதலான ஆத்மானுபவசித்திக் கனுகுணமான
ஸ்வரஸபாவங்களும் செறிந்திருக்கக்கண்டுகளித்
ததாக உளம்பூரித்து உற்சாகம்பொங்க வெழுதி
னர். ஸ்ரீங்கேரியிலிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ
ஸ்தானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் சத்சங்ககால
க்ஷேபத்துக்கு விவேகசிந்தாமணியில் வெளியா
கும் விஷயங்கள் பரமசாதகமாகவிருப்பதை
உளங்கனிந்து உண்மை நிறைந்து ஸ்ரீ நாரா
யண ஸ்மரண பூர்வகமாக அவர் ஆசீர்வாதங்க
ளோடு ஆனந்தம்பொங்க அகமகிழ்ந்து அடிக்
கடி ஆதரவு கூறிக் கடிதம் வரையலானார்.
ப்ரோபெல் என்னும் மஹானை வித்யாபோ
தக சிரேஷ்டர் முறையாம் கிண்டர்கார்டன்
போதனமுறையைக் கசடறக் கற்றுப் பழகி
யநுஷ்டித்துவரும் ஒரு வித்யாரத்னமாம் ம
னோன்மணி அதிலடங்கிய உண்மைகளைச் சாங்
கோபாங்கமாகச் சொல்லக்கேட்டுச் செவிமடுத்
துண்டு அத்வைத சித்தாந்தத்தில் அதிமோகங்
கொண்டு ஆனந்த பரவசராய் அதைக்கொண்
டாடலானார். இன்னும் இந்தியாவில் அதி
கவிமானும் நட்பபுத்தி மிகுந்தவரும் உய
ருத்தியோகத்திலிருப்பவருமான ஒரு துரை
மகனும் உருவகபாவனையிலாவது ஆத்மபாவனை
யிலாவது சொல்லும்மொழிகளைக் கிரகித்துக்
கொள்ளாவிட்டாலும், உண்மையான உட்க

ருத்துகளை மனோதத்துவ ரீதியாகச் சொல்லி
அங்கீகரிக்கலானார். இப்படி இன்னும் பல
ரும் இதனுண்மையை யுணர்ந்து ஆனந்தித்து
மகிழ்ந்தனராயினும், அவரவர்கள் எண்ண
மிருந்தவாறு வார்த்தைகளையும் வசனங்களை
யும் மாற்றி யுரைக்காமைக்காக வருந்தினர்.
இக்குற்றம் எப்போதும் நீங்காக்குற்றமே.
ஏனெனில் இதிலுள்ள குறை அவரவர் மனத்
தகத்தே இராகத்துவேஷபாவன ரூபமாகப்
பொதிந்து கிடத்தலால் அதை நீக்கிப்பார்க்கத்
தெரியாத தோஷத்தால் உண்டாவதாம்.
இதையவர்கள் அந்தர்முக விசாரணைசெய்து
அகத்தூய்மையினால் நீக்கிக்கொள்ளல் வேண்
டும். அல்லது குருவையடுத்து வழிபடல்
வேண்டும். இப்படியாக, உண்மை ஒருவரு
க்கு முரித்தானதன்று: ஆனால், எல்லவரும்
உண்மைக்குரியவர்கள். ஆகையால் அவர்கள்
உரிமை பாராட்டுதல் அந்தர்முக சிந்தனைத்
தோற்றமென்னும் மனோதத்துவவிதி பற்றி
சரியும் சகஜமு மேயாம். மேற்றிசைப்படிப்
பையே, பெரிதுங் கொண்டாடும் இங்கிலீஷ்
படித்த நம்மவர்கள் இப்புத்தகத்தை வாங்கி
வாசித்தால் ஒருவாறு உண்மையுணர அவர்
களுக்கு இதுமிகவும் சாதனமாகவிருக்கு
மென்று நினைக்கிறோம். 25-ஸெண்ட் என்
பது ஒருஷில்லிங் அல்லது 12-அணா. யாரா
வது 10-ப்பேர் சேர்ந்து 8 ரூபா அனுப்பினால்
10-ப்புஸ்தகங்கள் அமெரிக்காவிலிருந்து வர
வழைத்துக் கொள்ளலாம் போலும்.

## Contemporary Opinion.

### H. E. The Governor on Religious Education.

## நமது கவர்னரும் மதக்கல்வியும்.

நமது கவர்னர் லார்ட் ஆம்தில் கோதாவரி இந்து
[illegible]த்தார் சபை முன்பாக இந்துமதக்கல்வியைப்
[illegible]தோர் பிரசங்கஞ் செய்தாரென மிக்க
அன்புடன் நம்மித்திரன்பத்திராதிபர் தம் பத்தி
கைப்பத்தியில் வரைந்து யாவரும் அறிந்தானந்த
படும்படி விடுத்தது மெத்தவும் மெச்சத்தக்கதே.
கவர்னர் இதுவிஷயத்தைப்பற்றிப்பேச இடம்கொ
த்ததையும் அவர் தமது உள்ளத்துள்ள அபிப்பிரா
யத்தையும் ஒருங்கே வெளியிட்டிருப்பதை

[illegible]யோசிக்குங்கால், அவர் இந்துமதத்தார் தம் மதக்கல்
வியை முழுதும் வெறுத்துப் புறமத நடை, உடை,
பாவனை, ஆசார அனுஷ்டானங்களையே பெரிதாய்க்
கடைப்பிடித்து காலங்கழிக்கின்றதை நன்றாய்க்
கண்டறிந்தே பேசியதாக வெட்டவெளியாகின்றது.
ஆனால் அந்தப்பேச்சின் நடுவிலேயே கிறிஸ்துமதத்
தைப்பற்றிப் பேசினவிஷயம் அவரை ஒட்டினமட்
டில் சரியெனவே கூறலாம். ஏனெனில் அவர் அம்
மதத்தில் ஜனித்து தம்மதக்கல்வியைக்கற்று தம்ம
தாசாரங்களையே, அனுஷ்டித்துவரும்போது தம்
மதத்தில் அபிமானமிருப்பதும் அதைப்பற்றிப்
பெரிதாகப் பேசுவதும் சகஜம்தானே. அவர்
சொன்ன வண்ணம் ஆங்கிலேயர் வேறு பாஷைகள்
கற்பதில்லையா? இதரமதக்கல்வி கற்பதில்லையா?
உதாரணமாக ப்ரொபஸர் மாக்ஸ்-மூல்லர் டாக்டர்
டியூஸன் இன்னும் அநேகர் ஸமஸ்கிருதபாஷை
கற்று இந்துமத ஆராய்ச்சி செய்யவில்லையா? மற்றும்
அநேகர் ஸமஸ்கிருத புரொபஸர்களாய் ஆக்ஸ்பர்டு,
கேம்பிரிட்ஜ்முதலான கலாசாலைகளில் ஆங்கிலேயரே
இருக்கின்றார்களல்லவா? இவர்கள் புறமதக் கல்வி
யைக் கற்றபோதிலும் தம்மதக் கல்வியையும் ஆசாரத்
தையும் விடுத்தனரா? தவிர மிஸஸ் அனி பெஸண்டு,
ஸிஸ்டர் நிவேதிதா, மிஸ் லிலியன் எட்கர், ஸ்வாமி
அபயானந்தா முதலியபெண்மணிகள் இந்து மதக்
கல்வியைக்கற்கவில்லையா? தவிர மிஸஸ் அனிபெ
ஸண்டு இந்துமதத்தின் உண்மையை ஆரத்தீரக்கற்று
அதனையே பரவச்செய்யும் எண்ணத்துடன் தேசங்க
டோறும் சென்று நீண்ட பிரசங்கங்கள் செய்து ஆங்
காங்கு இந்துமத சங்கங்கள் ஏற்படுத்தி யிருப்ப
தோடும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பா
தித்து காசியில் இந்து கலாசாலை ஒன்று ஏற்படுத்தி
அதனில் இந்துமதத்தைப்பற்றிய கல்வி யனைத்தை
யும் கற்றுக்கொடுத்து வருகிறார்களல்லவா? தவிர
இந்து சாஸ்திரப்படி கல்விக்கு ஆதாரமாகிய சரஸ்வதி
தேவியை பாடசாலை முன்பாக ஸ்தாபிக்கவேண்டி
பாடசாலை வாயிலில் ஒரு சரஸ்வதி ஆலயமும் கட்ட
ஆரம்பித்திருக்கிறார்களல்லவா? இம்மாதிரி அநேகர்
புறமதக்கல்வியை செவ்வனே கற்றும் தம்மதத்தினி
[illegible]துள்ள அபிமானத்தையும் ஆசாரத்தையும்
[illegible]விடாது தம்மதத்தையே பெரிதாகப் பேசிவருப
[illegible] இருக்கின்றார்களல்லவா? சர்வகலா சங்கப்

படிப்பே மதக்கல்விக்கு விரோதமெனச் சொல்வது
நம்மவர்க்கு முற்றும் சரியெனச்சொல்ல இடம்
தராது. ஏனெனில் சர்வகலா சங்கப்படிப்பு கற்றா
லன்றி நம்மாங்கிலேய துரைத்தனத்தார்கீழ் ஜீவித்
திருப்பது சாத்தியமாகாது. ஆங்கிலபாஷைகற்று
உயர்பதவி பட்டங்கள்பெற்று துரைத்தனக்கச்சேரி
களில் உத்தியோகத்தில் அமர்ந்தே பெரும்பான்மை
யோர் ஜீவிக்கின்றனர். தவிர எந்தவிஷயத்திற்கும்
இக்காலத்தில் ஆங்கிலப்படிப்பே வேண்டியிருக்கின்
றது. எந்தத் தொழிலாளிக்கும் கொஞ்சமாவது
ஆங்கிலபாஷை தெரிந்திருந்தால்தான் அனுகூல
மாக இருக்கின்றது. ஆங்கிலபாஷை கற்றதினா
லேயே நம்மதக்கல்வியையும் மத ஆசார அனுஷ்டா
னங்களையும் கற்காமலும் அனுஷ்டிக்காமலும் இருக்
கவேண்டுமென்று ஏதாவது நிபந்தனைகளுண்டா?
ஆதிமுதல் ஆங்கில துரைத்தனத்தார்கீழ உயர்பதவி
உத்தியோகங்களைவகித்துவந்த ஸர் சேஷய்யசாஸ்
திரி, ஸர் டி. முத்துசாமி அய்யர், ரங்காசார்லு, ஸர்
மாதவராவ், புரொபஸர் ரங்கனாதமுதலியார் முதலா
யினோர் ஆங்கிலம் கற்று B. A., M. A, முதலிய உயர்
தரப்பட்டங்கள் பெற்றும் மதக்கல்வியையும் ஒருங்கே
கற்று தம் மதத்தை விடாது பற்றி உத்தியோகம்
செய்யவில்லையா? இப்பொழுதுள்ள புரொபஸர் ரங்
காசாரியார், ஸர், S. சுப்பிரமணிய அய்யர், ஸர் பாஷ்
யம் அய்யங்கார் இன்னும் ஆங்காங்குள்ள அநேகம்
உயர்தர உத்தியோகங்களை வகித்துவரும் ஏனைய
ஆங்கிலங்கற்ற உயர்தரப் பட்டங்கள் பெற்றவர்க
ளும் தம்மதக்கல்வியையும் செவ்வனே கற்று முறை
வழுவாது நடக்கின்றார்களல்லவா? இப்பேர்ப்பட்ட
பலபெரியமனிதர்கள் நம் கண்முன்பாகவே நம்மிந்து
மதத்தின் விருத்தியைக் கருதியே எவ்வளவோபடா
தபாடும் படுகின்றனர். இதனைத்தையும் விடுத்து
இற்றைநாள் மாணவர்களுக்கு வித்தியாப்பியாசம்
கற்றுக்கொடுக்க எண்ணும்போதே பிள்ளைகளின்
பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு (முன்னோர்கள்
வழக்கமாகிய "ஹரி ஓம் நமோ நாராயணாய சித்தம்"
என்னும் இத்தியாதி முறையை விடுத்து) A. B.
C. D. எனவே கற்பலகையிலும், அரிசியிலும்
எழுதிக்காட்டி ஆங்கிலமே கற்றுக்கொடுக்கும்படி
யாய் உபாத்தியாயருக்குச் சொல்லி அதனையே கவ
னித்து வருகின்றனர். தவிர பிள்ளைகளும் தமக்குக்

கொஞ்சம் கூட்டிப் படிக்குபடியான சக்தி வந்துவிட்டால் அதனிலேயே அதிகமான ஊக்கத்தையும் வைத்து இரண்டொருவகுப்பு மேலேறிவிட்டால் தகப்பனை "நான்ஸென்ஸ்" "ஓல்ட் மான்" "பூல்" என்னும் இத்தியாதி வார்த்தைகளை மட்டுமரியாதையின்றிஉபயோகிக்கின்றனர். பிள்ளையினால் பெருத்த புண்ணியத்தையும், பொருளையும் அடையலாமென்னும் எண்ணத்துடன் கூடிய தகப்பன்மார், இந்த மாதிரியான மரியாதைக் குறைவான வார்த்தைகளைச்சொன்னால், ஒகோ நம்குழந்தைக்கு இங்லீஷ் நன்றாக வந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டுக்கொண்டு இனி அதிகம் கற்றுக்கொண்டு விடுவான் என்ற எண்ணத்தால் சதா சர்வகாலமும் சகல ஆகாரங்களையும் கொடுத்து அதனையே நன்றாய்க் கற்றுக்கொள் எனச்சொல்லி உற்சாகப்படுத்துகின்றனர். இதனால் பையனது தீக்குணம் மேலிடவும் படிப்பும் சேர்க்கையும் ஏற ஏற எண்ணம் முற்றிலும் மாறுபடுகின்றது. இப்படி இவன் மாணவனாயிருக்குங்காலத்தில் மதக்கல்வி சிறிதும் இல்லாமல் பாதிரிமார் பள்ளிக்கூடங்களில் ஏழையாயுள்ள இந்துக்கள் பொருளுதவியின்றி கஷ்டப்படுவதைக்கருதி அங்கு சென்று கல்வி கற்பதோடும் அவர்களால் கற்றுக்கொடுக்கப்படும் மதபோதனைகளையும் நயபயமான வார்த்தைகளையும் கேட்டு ஆனந்தித்து அவர்களது வலையில் சிக்கி மதாசாரங்களை முழுதும் துறந்து வாரிக்கட்ட கனக்கண்டு கொண்டிருந்த பெற்றோர் வாயில் மண்ணைத் தெள்ளிப் போட்டுவிட்டு மதிமயங்கிப் போய்விடுகின்றனர். இன்னும் சிலர் இந்து மத ஆசார அனுஷ்டானங்கள் முற்றும் வேஷம் என எண்ணி 'ஹாட்டும் பூட்டும்' (Hat and Boot) போட்டுக்கொண்டு 'ரிப்ரெஷ்மெண்டு ரூம்களில்' காப்பியும் டீயும் நின்ற நிலையில் குடித்துக்கொண்டும் சிலர் ஒயினும் ஜின்னும் குடித்துக்கொண்டும் தீக்ஷிதர், சாஸ்திரி, ஜடாவல்லபர், ஐயர், அய்யங்கார் என்னும் குலப்பேரையும் விடுத்து அகம்பாவிகளாய் திரிகின்றனர். இம்மாதிரியாய் பெற்றோர்களது மதியீனத்தால் சகல அநர்த்தமும் மதக்கல்விக்குறைவும் நேருகின்றதே தவிர சர்வகலாசங்கப்படிப்பினால் நேருகின்றதெனச்சொல்ல இடமில்லை. சிறுவயதிலேயே சர்வகலாசங்கப் படிப்போடு கூட மதக்கல்வியும் ஒருங்கே கற்றுக் கொடுத்துக்கொண்டுவந்தால் நம் இளம்பிள்ளைகள் ஏன் தம்மதத்தையும் ஆசாரத்தையும் விடுத்து புறமதங்களைத் தழுவி பிரஷ்டர்களாய்ப்போகின்றனர். இதனை உணராமல் ஆனை மேலிட்டால் தம்பிள்ளைகள் ஆங்கிலமே கற்று உத்தியோகம்செய்து மெத்தப் பொருள் சம்பாதித்து கண்ணியமாய் இருக்க எண்ணி ஆசாரத்தோடு இருப்பாரையும் பார்த்து பரிகாசம் செய்தும் இகழ்ந்தும் பேசித்திரியும் நம் பெற்றோர்களே காரணமாயிருக்க, சர்வகலாசங்கப்படிப்பும், புறமதக்கல்வியும் காரணமெனச்சொல்லச் சிறிதும் இடமில்லை யெனவே கூறலாம். ஆனது பற்றி இனிமேலாவது நம்மிந்து மதத்தி லுற்பவித்த ஒவ்வொருவனும் ஆங்கிலம் கற்பதோடு ஒருங்கே தத்தம் மதக்கல்வியையும் கற்று நிபுணர்களாயிருந்து அந்த மதத்தைவிட்டுப் புறமதம் போகாமல் மதத்தி லபிமானம் வைத்து வாழ்வார்களென நம்புகிறோம்.

சு—மி.

## சுகுண சுந்தரம்.

### XII

அப்பூஞ்சோலையில் வழக்கப்படி நீராடுந் தடாகத்தில் சுலோசனை சம்பகாவதியுடன் நீராடி, அவ்விடத்திலுள்ள மண்டபத்தில் தேவியைப்பார்த்துக் கன்னியாமாடம் நோக்கித் திரும்பி வருங்கால், ஒருவன் அதிவேகமாய் வருவதைக்கண்டாள். கண்டதும் அவள், அவன் வருமாதிரியைக் குறிப்பினாலுணர்ந்து, தன் பிதாவினிடமிருந்து ஏதோவிபரீதசமாசாரங்கொண்டுவருவதாய்த் தீர்மானித்துப் பதை பதைத்தனள் தான்கண்ட துற்கனவையும், சம்பகத்தின் வலதுகண் துடித்ததையுமெண்ணி யெண்ணி இனி நிகழ்வதென்னையோ வெனப் பதறினள். அப்பொழுது, சம்பகாவதி, "அடி, சுலோசனே ! கௌரி பூஜைக்கு நாமிருவரும் வரும்போதே நமக்குற்ற துற்குறிகளை நாமறிந்து மனநொந்தாலும், இதோ நம்மை நோக்கி வரும் மானிடரைப் பார்த்ததும் நீ மனம் வலியற்றுக் காணுகின்றனை; அவர் யாவர்? அடி! நம்மை எத்துயாணுகினும் மனவலியை நாம் கைவிடலாகுமோ, அஃது நீயறியாததோ?" என, சுலோசனை, "அடி பிராணசகி! நம்மை நோக்கி வருபவர் சுமுகர், தேவ ழிகனகத்தின் கொழுநர், அமைச்சராம் மதிவிலாசர்



கடுத்தவர், என் பிதாவின் அந்தரங்கநேசர்; என் னைத்தேடி அழைத்துவர என் பிதா அனுப்பியதாக எண்ணுகிறேன்." என்றாள்.

சம்பகாவதி:—"அடி, பிராணசகி! ஸ்வயம்வரக்காலம் கிட்டியதென்று அழைக்கவருகின்றார் போலு" மென, அவள், "அங்ஙனமாயின் உனக்கு மங்களமுண்டாகக் கடவது. அவர் முகவாட்டத்துடன் தள்ளாடித் தள்ளாடி நம்மை நோக்கிவரக்காரணமில்லை: ஏதோ பார்ப்போம், பராசக்தியின் அருள் யாதோ? அதன்படி எல்லாம் நடக்கும்;" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே சுமுகர், இராஜகன்னிகைகள் பக்கலணுகி, தான் வந்த காரியத்தைச் சடுதியில் சொல்ல வாயெழாமல், குழறிப்பதறி, மனம் வருந்திக் கண்ணீர் பெருக்கத் தலைப்பட்டனர். அச்சமயத்தில் சுலோசனை திடுக்கிட்டு ஒன்றுந் தோன்றாதவளாய் நின்றாள். சம்பகாவதியோ, மனத்தைக் கொஞ்சந் தேற்றிக்கொண்டு சுமு[கரை] நோக்கி, "ஐயா! என்ன விசேஷம்? நீவிரிங்[ஙனம் வருந்தக்] காரணம் யாது? ஏன் எங்களைக்கண்டு க[ண்ணீர்] பெருக்குதல் வேண்டும்? நாங்கள் ப[ெறுதற்குரியது தீவி]னைப்பாக்கியந்தான் என்னே? நிகழ்ந்த[தை] ஒளியாமற் சொல்லி யருள்வீர்." என்[று வேண்]டினளாயினள். உடனே சுலோசனை, "சுமுகரே! என் கண்ணனைராம் சுந்தரராஜனும், அவர் நேசராம் சுகுண சீலரும் குசலமோ?" என்று மாத்திரங் கேட்டனள். சுமுகர் சுலோசனைக்கு விடையளிக்க மனந்துணியாமல், கடைசியில், "பாவைகாள்! சுகுண சுந்தரர்கள் இவ்வுலக வின்பங்களைத்துறந்து சென்றனராயினர்;" என்று நா தழதழத்துச் சொல்லினர். உடனே அப்பெண்மணிக ளிருவரும், "ஹே, நாத! நாங்கள் கண்ட துற்குறியின் பல னிதுதானா!" என்று சோகமுற்றுக் கீழே விழுந்தனர்.

சுமுகனுக்கு இந்த இராஜ குமாரிகளைத்தேற்றி அரண்மனைக்கிட்டுப்போவது அசாத்தியமாயிற்று.

பிறகு சுலோசனையும், சம்பகாவதியும் சோகந்தெளிந்து, தரையில் விழுந்து புரண்டும், தலையில் தத்தங் கரங்களினால் அடித்துக் கொண்டும், அங்குள்ள மரங்களில் முட்டிக் கொண்டும், "ஹே, நாத! ஹே, சுகுணசீல! ஹே, சுந்தரானந்த! அபலையான என்னைப் பிரிந்தேகுதல் நீதியோ?" என்று இருவரும் ஏக காலத்தில் தனித்தனியே சொல்லிக் கதறத் தலைப்பட்டனர்.

சுலோசனை:—"ஹே, சுந்தரரூப! ஈசுவரியின் கிருபையினால் உம்மை நாயகனாக அடையப் பெற்றேனென்றிறுமாந்திருந்தேனே! ஐயோ! இதே உபவனத்தில் நான் சாகசஞ் செய்யத் துணிந்த காலத்திலேயே என் உயிரைப்போக்கி யிருந்தால், இத்துன்பம் என்னை யணுகாதே! 'சுலோசனே! என்ன சாகசஞ் செய்யத் துணிந்தனை, உன்னை யாள யானிப்பூவுலகினிருக்கையில்; சுகுணா! இவள் கழுத்திலணிந் திருக்கும் கொடியை உன்வாளினாலறுத்தெறி சீக்கிரம்' என்ற தீரமொழியைக் கேட்டு, அம்பாள் அனுக்கிரகப்படிக்குள்ள பர்த்தா நீரே என்று எந்த நிமிஷத்தில் என் மனதில் தீர்மானித்தேனோ, அதுமுதலிதுவரையில் உம்மைப் பயிரங்கமாய் மாலையிடுங்காலம் எக்காலமோ என் றெதிர்பார்த்திருக்கும் என்னை தெய்வம் சோதிக்கலாச்சுதே! இப்போது நான் செய்யப்போகுஞ் சாகசத்தைத் தடுப்பவர் யாவரோ? பிராணேச! "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் வசனம் பொய்க்கலாச்சுதே! சுகுண சுந்தரர்களென்றால் உலகமே நடுங்குகின்றதே! இப்பூவுலகில் திக்விஜயஞ் செய்தது போதாதென்று வானுலகஞ் சென்று உங்களிருவருடைய பராக்கிரமத்தை வானவர்கட்குக் காட்ட வெண்ணிச் சென்றீர்களோ? ஒருவரைவிட் டொருவர்பிரிந்து செல்வது தோழமைக் கழகல்ல வென்று இருவருஞ் சேர்ந்து இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தீர்களோ? ஐயோ! சுகுண! 'ஈசுவரகிருபையால் நிகழ்ந்த இந்த திருக்கல்யாணத்திற்கு எதுவு...ாகாது, தம்பதிகள் இருவரும் தத்தம் மாலை...ச்சுப வேளையிலேயே ஒருவருக்கொரு...க்கொள்ள வேண்டுகின்றேன்' என்ற...கையைக் கேட்டு, உலகம் பழிக்குமென்று...க்ஷபித்த தற்குத் தக்கவிடையளித்தனையே; ...உன் சுந்தரமான மொழிக்குடன்பட்டன்றோ, உலகப் பழிப்புக்கு மஞ்சாது, தந்தையர்களுடன்பாட்டின் பேரில்,

நிகழப்போகும் விவாகத்தில் பயிரங்கமாய் என் பிராண காந்தனை மாலையிட எண்ணினும், அக்காலத்தில் உன் தோழனான சுந்தர வள்ளலை மாலையிட்டேன்; அப்பொழுது வானவர்களுமல்லவோ பூமாரி பொழிந்தனர்? அஃது பொய்க்கலாகுமோ? இவ்வாறு மோசம் வருமென்று தெரிந்தால்சாவித்திரி தேவியானவள், தன்கொழுநனுடைய ஆன்மாவையபகரித்துச் சென்றதென்றிசைக்கோனுடன் கூடச்சென்றுவாதாடி, மாங்கல்ய பிட்சை வாங்கிச் சவமாய்ப்போன கொழுநனை மறுபடியும் உயிர்ப்பித்தமாதிரி, ஹே, சுந்தராங்கனே! உம்மைப்பிரியாமலிருந்து நானும் பாதுகாக்க மாட்டுவனே! ஹே, பிராண காந்த! உங்களிருவருடைய தோழமையை என்னென்று சொல்லுவேன்! பொற்சுருளில் வரையப்பட்டிருந்தனவற்றை ஈசுவராஞ்ஞை என்று சிரசால்வகித்து மித்திரகாரியத்தைச் சாதிக்கவன்றோ, புதுமணவாட்டியாமென்னைப் பிரியலாயிற்று; உலகோபகாரமாய் துஷ்ட இராக்கதர்களைக் கொன்றாலும், இச்சுந்தரவதியான சண்பகத்தையும் இக்கொடுந்துன்பத்திற்காளாக்கினீர். நாத! இதோ உபவனத்தில் என்னைப்பிரிந்து செல்லுங்கால், அவ்வளவு வன்னெஞ்சமுடையவனல்லேன் என்று சொன்ன மொழிதவறுகின்றதே! அந்த நிமிஷமுதல் இந்த நிமிஷம் வரையில், உம்மைக் கண்ணாரக்கூடப் பார்ப்பதற்கில்லாமற்போய்விட்டதே; என் பிராணேசா! என்னைத்தனியே இவண் தவிக்கவிட்டு வானவருலகு செல்ல வழகாகுமோ? நான் உம்முடைய பிராணசகியல்லவோ? ஹே, பராசக்தி! உன்னை நான் தினம் பூசித்ததின் பலன் இதுதானோ? ஐயோ, நான்நாதனற்றவளாயினேனே! என்செய்வேன்!" என்று பிரலாபித்தனள்.

சம்பகாவதியோ துர்முகனா லபகரிக்கப்பட்டு, [illegible]த்துன்பத்தினின்றும் ஈசுவரியின் அனுக்ரக விசே[illegible]த்தினால் நேற்று சாயரக்ஷை சுகுணசுந்தரர்களால் [illegible]பட்டுவந்தவளான படியால், வருவது வந்தேயாகு[illegible]று மனவன்மை கொண்டிருந்தாலும், சுலோசனையின் கதறலைக்கேட்டு மனநொந்து தானும் புலம்[illegible].

சண்பகாவதி:—"ஐயோ, நான் கீழே நேற்றுவரையில் பட்ட அவதிகள் போதாவா? இன்னும் என்ன என்ன துன்பங்கள் சம்பவிக்க இருக்கின்றனவோ! பிலத்தில் காட்டின பராக்கிரமத்தைக் கண்டு மனம் பூரித்ததே! ஜயப்பிரதாபர்களான நீங்கள் உயிரிழக்கக்காரணமென்னையோ? ஹே நாத! பிராணகாந்த! சுகுணசீல! உன்னை எங்கே காண்பேனோ? நீங்களிருவருஞ்சேர்ந்து 'எத்தகைய காரியத்தையும் முடிக்கும் தீரர்களன்றோ' இளஞ்சிங்கங்களுக் கொப்பான சுகுணசுந்தரர்கள், குஞ்சரங்களுக் கொப்பான, இராக்கத கூட்டங்களை யெல்லாம் க்ஷணிகநேரத்தில் த்வம்சஞ்செய்துகர்ஜித்ததைக்கண்டு மனம்பூரித்து இறுமாந்தேன். அடி, சுலோசனே! அவர்களென் கண்களுக் கெதிரில் நிற்கிறாப்போல் தோற்றுகிறார்களே!"—

"ஐயோ, சுகுண! நேற்று உன்னை தரிசித்தது முதல் உன்னைஸ்பரிசிப்பது எந்நாளோ எந்நாளோ எந்நாளோ என்று ஏங்கி வருந்தா நிற்கின்றேனே. நேற்றிரவில், அடி, என்கண்மணி சுலோசனே! உனக்கு இவ்வுபவனத்தில் நிகழ்ந்த அற்புத லீலாவினோதமும், தெய்வசம்மதமுமான திருமணத்தைப்பற்றி சுந்தரராஜன் அழகாய்ச் சொல்லிமுடித்ததைக் கேட்டு நான்கொண்ட சந்தோஷமெல்லாம் அதிசீக்கிரத்தில் துக்கமாக மாறி மனம் வருந்தச் செய்ததே அடி! நம்முடைய தீனமான இக்கூக்குரலைக் கேட்டு தேவி யருள்புரியாளோ? ஹே, ஜகதம்பிகே உன்மனமும் கல்லோ? உன்னுடைய அருள்பூர்ணமாயிருக்கிறதென்று நம்பினேனே! இக்கொடுங்கேட்டை நாங்கள் சகிக்கவல்லேம் அல்லேம்; நாதனற்றவர்களாய் இவ்வுலகில் இனி அரைக்ஷணம் இருக்க வசமோ; அடி, நம் கொழுநருக்குற்ற துன்பந்தானென்னையோ வென்றுசுமுகரைக் கேட்டறிந்து கொள்வோம், ஒன்றுந்தெரியாதவர்கள் போல் நாமிப்படி புலம்பலாகாது. அடி, காந்தாமணி! கொஞ்சம் உன் மனதைத்தேற்றிக்கொள். நிகழ்ந்தனவெல்லாற்றை உள்ளபடி யறிந்து, அதற்குப் பரிகாரத்தைத் தேடுவோம் கீழே நிகழ்ந்தனவற்றை பரியாலோசிக்குங்கால், பராசக்தி நமக்கு கிருபை புரிவாள் என்பதில் ஐயமில்லை." என்றுபலவித சமாதான மொழிகள் பகர்ந்து தானும் மனந்தேறி சுலோசனையையும் தேற்றினள்.

(இன்னும் வரும்.)

## OBITUARY.

## மரணங்கள்.

1. Herbert Spencer.—இங்கிலாந்தில் சென்ற நூற்றாண்டில் அதிமேலான மதியூகியாகவும் தத்துவ சாஸ்திர விற்பன்னராகவும் விளங்கிய மிஸ்டர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் சென்றமாசம் அவருடைய 83-வது வயதில் காலஞ்சென்றதைக் குறிப்பிட விசனிக்கிறோம். இவர் மனோதத்துவசாஸ்திரங்களில் மிகவல்லவராய், மனோதத்துவங்களை யாராய்ந்து உண்மையான மூலக்கொள்கைகள் (First Principles) என்னும் பேர்கொண்டு நன்றாக விளக்கிக் காட்டியுள்ளார். அங்கிலேய மதியூகிகளில் அத்வைதசித்தாந்தத்துக்குக் கிட்டத்தட்ட வந்த பிரபல தத்துவ சாஸ்திரி இவர் ஒருவரேயென்று சொல்லலாம். அங்கிலேயர்களுக்குள் மதியூகத்தில் முதன்மைபெற்று விளங்கியவர் இவர் என்பதிற் சந்தேகமில்லை. இவர் தத்துவ சாஸ்திரத்தில் ஆராய்ச்சிசெய்து எழுதிய புஸ்தகங்கள் அனேகம். அவையெல்லாம் சென்ற நூற்றாண்டில் முதன்மைபெற்று விளங்கினவாயினும் அவற்றில் பெரும்பான்மை இந்த நூற்றாண்டு செல்லச்செல்லப் பழமைப்பட்டுக் கழிவனவாமென்று நினைக்கத் தக்கதாயிருக்கிறது. இந்த மீ-14உ இவருடைய பிரேதம், இவர் விருப்பத்தின்படி தகனஸம்ஸ்காரம்செய்து நீறாக்கப்பட்டது அப்பொழுது வழக்கமாய்ச்செய்யும் பிரசங்கம் லியனார்ட் கோர்ட்னி யவர்களால் செய்யப்பட்டது. அச்சமயம் அங்கிருந்த இந்தியரொருவர் இவருடைய ஞாபகசின்னார்த்தம் ஆக்ஸ்போர்டில் ஒரு தத்துவப்பிரசங்க ஏற்பாடு செய்ய 1000 பவுன் அளிப்பதாகச்சொன்னார்.

2. திவான் பஹதூர் எஸ். ஸ்ரீனிவாஸராகவையங்காரவர்கள் ஸி. ஐ. இ.—இவர் நாளது டிசெம்பர்மீ 11உயன்று காலகதி யடைந்தார். தற்காலத்து இந்தியர்களில் கல்வியிலும் வித்தையிலும் மதியூகத்திலும், இராஜகாரிய நிர்வாகத்திலும், இராஜ்ஜிய [illegible]யிலும் இவர் நிகரற்று விளங்கியர். [illegible] உபாத்தியாயராயிருந்து பிறகு [illegible] ராபீஸில் வேலையாக அமர்ந்து அவருடைய [illegible] ஸெக்டராயிருந்த மிஸ்டர் ஜி. எச். ஸ்டோக்ஸ் துரையின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்று ரெவினியூ போர்டாபீஸிற்கு வேலையாகவந்து அங்கிருந்து செக்ரிடேரியட் ஆபீஸுக்கு மாற்றப்பட்டுச் சென்றார். அங்கேயவர் காட்டிய வேலைத்திறத்துக் குளமகிழ்ந்து கவர்ன்மெண்டார் இவரை மிஸ்டர் ஹாம்நெட்டுக்குப்பின் ரிஜிஸ்திரேஷன் இலாகாத் தலைவராக நியமித்தார்கள். அவ்வேலை வகித்துவருகையில் இந்தியர்களின் யோக க்ஷேம நிலையுணர தேசவளம் குடிவளத்தின் உண்மை நிலைமையை உள்ளபடி யறிய முயற்சி செய்ததையுணர்ந்து லார்ட் கன்னிமாரா கவர்னராயிருந்தகாலத்தில் பிரிடிஷ் ஆளுகையின்கீழ் சென்ற 40-வருஷங்களில் சென்னை இராஜதானி யடைந்த விர்த்தியைப்பற்றி விசாரித்து ரிபோர்ட்டு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவ்வேலையை அவர் வெகு நன்றாகச்செய்து முடித்து எழுதிய புஸ்தகம் எல்லாராலும் கொண்டாடப்படத்தக்க திறமை வாய்ந்ததாகவிருந்தது. இப்புஸ்தகத்தினால் அவருடையபேரும் கீர்த்தியும் இந்தியாவில்மட்டுமன்றி இங்கிலாந்திலும் பரவலாயிற்று, பிறகு பரோடா மஹாராஜா இவரைத் தம் இராஜ்யத்திற்கு திவானாக நியமித்தார். அங்கு போகுமுன்னும் பின்னும் விவசாயபாங்கி விஷயமாய் மிஸ்டர் நிக்கல்ஸன் செய்து வந்த விசாரணையில் மிகசிரத்தை பூண்டவராய் பயிரிடுங்குடிகளின் நிலைமையைப்பற்றி மிகவூன்றி விசாரித்துவந்தார். இது விஷயமாய் விவேகசிந்தாமணியில் வெளியான தொடர்பிடியான விஷயங்கள் இவருடைய உதவிகொண்டும் ஒத்தாசைகொண்டுமே எழுதப்பட்டுவந்தன. அவைகளையெல்லாம் அதிக பொறுமையோடும் சிரத்தையோடும் 'புரூப்' காபியிலே பார்வையிட்டுத் தம்மபிப்பிராயத்தைச் சொல்லியதன்றி நெடுநேரம் அவ்விஷயங்களைப்பற்றிப் பேசி மிகவும் சிலாக்கியமான எண்ணங்களை [illegible]திக்க அதியுக்தியோடு ஆலோசனை சொல்லித் தேற்றிவந்தார். பரோடாவிலிருந்து வந்தபின் [illegible]வர்ஸிடி கான்வோகேஷன் சபையில் பிரசங்கம் செய்ய நியமிக்கப்பட்ட பொழுதும், ஹிந்து [illegible]கூல் வருஷோற்சவகாலத்தில் அக்கிராசனாதிபதியாகவிருந்து பேசியகாலத்தும் இப்பொழுது [illegible] வித்யாமுறையில் 'மதக்கல்வி' யில்லாத குறையை நிவர்த்திக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி வற்[illegible]

புகழ்த்திக் கூறியப் பிரசங்கித்தார். எல்லா ஹிந்து பாடசாலைகளிலும் பகவத்கீதைபோன்ற எல்லாருக்கும் பொதுவான மதகிரந்தமொன்றையாதாரவாகக் கொண்டு மதபோதனை செய்வது அசாத்தியமான காரியமல்லவென்று சொன்னார். 1902-ம் வருஷம் இதுவிஷயமாய் இவரோடு கலந்துபேச நேரிட்டதில் இதன் அவசியத்தைப் பற்றி இவர் ஆழ்ந்த அபிப்பிராயங்கொண்டவராயிருந்தது தெரியவந்தது, இவரைத்திருவாங்கூருக்கு திவானாக நியமிக்கக் கருதியிருந்தார்கள். அதற்குள் அகாலமரணமாகப்போய்விட்டார். இவரையிழந்ததில் இந்தியாவிற்குண்டானகுறை வெளியில் நிவர்த்திக்கத்தக்கதாயில்லை. இவருடைய பெருமையையும் திறமையையும் குறித்து லார்ட் அம்தில் அவர்களும், ஸர் அண்ட்ரூ ப்ரேஸர் அவர்களும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து இவர் மரணத்துக்குத் துக்கித்து இவருடைய ஜேஷ்ட குமாரருக்குக் கடிதமெழுதியிருக்கிறார்கள். இவர் போலீஸ் கமிஷனுக்கு மெம்பராய் நியமிக்கப்பட்டபொழுது இவருக்கு நேர்ந்த அசௌக்கியம் முற்றி உயிருக்கு ஆபத்துவிளைத்ததாகத்தெரிகிறது. இவர் காலஞ்சென்றதைப்பற்றி நாம் உண்மையாகவே மிகவும் துக்கித்து வருந்துகிறோம். இவர் குடும்பத்தாருக்கு நேரிட்ட நஷ்டத்துக்கும் இவ்விராஜதானிக்கே நேரிட்ட நஷ்டத்துக்கும் மிகவருந்துகிறோம்.

3. இராமநாதபுரம் இராஜா பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள்.—இவர் தம் 35-வது பிராயத்தில் திருநெல்வேலிக்குப் போயிருந்தபோது ஏதோ சத்திர சிகிச்சை செய்யநேரிட்டு அதனால் கள்ளிடைக்குறிச்சியில் திடீரென்று மாண்டதாகக்கேட்டு ஆறாத் துயரத்திலாழ்ந்தினோம். இவர் தம் சமஸ்தானகாரியங்களைப் பார்ப்பதில் எவ்வளவோ ஊழலாகவிருந்தாலும், உண்மையில் தங்கமான மனிதர். நல்ல சிந்தையும், தூயஹிருதயமும், பகவத் பக்தியும், ஆத்மசிந்தனையும் அனுதாபநிறைவும் பொருந்தியவர். கல்வியிலும், விசேஷமாய்த் தமிழிலும் மிகத்தேர்ந்தவர். இவருடைய மேலான சற்குணங்களே, உலகவிஷயங்களில் இவருடைய பிரயத்தனங்கள் உள்ளபடி சிறக்காமற் போனதற்குக்காரணமாயிருந்ததாகச் சொல்லலாம். இவருடைய தர்மசிந்தையே அதர்மமலிந்த இக்காலத்தில் இவரையுலகத்திற்கேற்றவராகவின்றிச் செய்ததுபோலும். இந்த உள்மர்மத்தை யுணர்ந்தே யிவர் தம் மதிகாரத்தையும் இகலோக வியாபாரங்களையும் பிறரிடம் ஒப்புவித்துவிட்டுத் தாம் மனதை தெய்வ சிந்தனையிலும், க்ஷேத்திரயாத்திரையிலும் செலுத்திவந்தார். இகத்திலுள்ளகுறை யென்னவாயினும் பரத்திற்கு இவர் எப்போதும் பாத்திரராகவே இருந்தார். இவர் அகாலமரணத்தைக்குறித்து நாம் மிகவும் மனம் வருந்திச் சிந்திக்கலானோம். பரமேசுவரன் இவர் ஆத்மாவைத் தம் பாதாரவிந்தத்தில் சேர்த்து ஐக்கியமாக்கிக் கொள்வாரென ஹிருதய பூர்வகமாகச் சிந்தித் துப் பிரார்த்திக்கிறோம். சிவோஹம்.

---

## THE STRESS AND STORM OF THE LAST WEEK IN MADRAS.

## சென்னையிற் கூடிய மஹாசபைகளும் மழை காற்று வெள்ளமும்.

---

இந்த டிசம்பர்மாசம் கடைசிவாரத்தில் சென்னையிற் கூடிய மஹாசபைகள் அனந்தம். இவ்விராஜதானியினின்றும் இந்தியாவின் மற்றெல்லாப்பாகங்களினின்றும் மஹாஜனங்கள் சென்னைக்கு ஏராளமாக வந்திருந்தார்கள். காங்ரெஸ் மஹாசபைக் கூட்டம் ஒரு பக்கம், பொருட்காக்ஷி வைபவம் ஒரு பக்கம்; ஆசாரச் சீர்திருத்த சபையார் கூட்டங்கள் ஒருபக்கம்; அதற்கு மாறாகவுள்ள ஹிந்துமதப் பற்றுள்ள சீர்திருத்தக்காரர்கள் கூட்டம் ஒருபக்கம், தியசாபிகல் சங்கத்தார் கூட்டம் ஒருபக்கம்: இப்படியாக எங்குபார்த்தாலும் மஹா சபைகளும் கூட்டமும் பிரசங்கமாரியும் மிகுதியாகவிருந்தது. இதில் மழை மாரியும் சேர்ந்துகொண்டது. 29-உ முதல் நாலு தினங்களாக மழையும் காற்றும் பலமாயிருந்ததில், கூவமாறும் அடையாறும் பெருகி வெள்ளம் கரைபுரண்டு சென்னையில் அனேக இடங்களை நாசம் செய்துவிட்டன. தெருக்களிலெல்லாம் கணுக்கால் முழங்கால் முதல் மாரளவு ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. ரோட்டுகளையெல்லாம் பாழாக்கிவிட்டன. டிராம்வண்டிகளும் இரண்டு மூன்று நாள்கள்



நின்றுபோக நேரிட்டன. பறைச்சேரிகளனேகம் முழுகிப்பாழாய்ப்போயின. மழை காற்றினாலும் வெள்ளத்தினாலுமுண்டான சேதம் அபரிமிதம்.

தென்னிந்தியா ரயில்வேயில் விழுப்புரத்துக்கு அப்பாலும் இப்பாலும் அனேகம் இடங்களில் வெள்ளப்பெருக்கினால் இருப்புப்பாதை அடியோடு சேதமாய்விட்டது. பெண்ணாற்று வெள்ளத்தால் சுமார் 5. மைல் தூரத்துக்கு இருப்புப்பாதை யடியோடு போய்விட்டது. அரக்கோணம் கிளைப்பாதையிலும் மற்றகிளைவழிகளிலும் அனேக இடங்களில் சேதங்கள் நேர்ந்திருக்கின்றன. சென்னை வடகிழக்கு இருப்புப்பாதையிலும் வெள்ளத்தால் சேதம் நேர்ந்து போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கிறது. தென்னிந்தியா ரயில்வே செப்பனிட்டாவதற்கு ஒருமாதம் செல்லுமாம்.

---

## SOME SOCIAL PROBLEMS.

### Local Endeavours and Activities.

## ஆசாரச் சீர்திருத்தம்.

---

### சென்னையிலுண்டான ஊக்கமும் முயற்சியும்.

இது விஷயமாக வருஷா வருஷம் காங்ரெஸுக்குப்பின் கூடிவரும் மஹாசபை இம்முறை சென்னையில் 31-உ யன்று 17-வது முறை கூடியது. அதற்கு முதனாள் சென்னை ஹிந்து ஜனாசாரச் சீர்திருத்த சபையாரின் வருஷாந்தக் கூட்டம் கூடியது. அப்பொழுது மைசூர் ஸீனியர் கௌன்ஸிலர் ம-ா-ா-ஸ்ரீ வி. பி. மாதவராயர் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, கனம். மிஸ்டர் ஜஸ்டிஸ் சந்தாவர்க்கர் அவர்கள் ஓர் பிரசங்கம் செய்தார். அதில் ஜனாசாரச் சீர்திருத்தம் சென்ற வருஷத்தில் விர்த்தியடைந்து வந்த விர்த்தாந்தத்தைச் சொல்லி மேற்கத்தியார் நாகரிகம்பற்றி நவீன சீர்திருத்தம் செய்யமுயலும் சீர்திருத்தக்காரர்களை, அது சரியல்லவென்று ஹிந்துமதப்பற்றைக் கைவிடாமலே ஜனாசார சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று சொன்னவர்கள் நியாயத்தைக் கண்டித்து தாங்கள் போகும்வழியே சரியான வழியென்று சாதித்தார். இங்கு ஒரு விஷயம் விபரமாயெடுத்துச் சொல்லத்தக்கது. இப்பொழுதுள்ள ஜனாசாரச் சீர்திருத்த சபைகளும் அவற்றிலிருந்துண்டான வருஷாந்த மஹாசபையும் ஹிந்துஸ்திரீ புனர்விவாக நிமித்தியமாயேற்பட்டுள்ள சபைகளின் முயற்சியிலிருந்துண்டாயின. இப்பொழுது இந்தப் புனர்விவாக சீர்திருத்த விஷயமாய் ஏற்கனவேயுள்ள வித்தியாசம் பலப்பட்டு வெளிவந்திருக்கிறது. பாலவிதந்துக்கள் புனர்விவாகம்செய்து கொள்ளவிரும்பின் அப்படியே அவர்களுக்கிடங்கொடுக்க வேண்டியதினவசியத்தைப்பற்றியாரும் ஆக்ஷேபிக்கவில்லை, ஆனால் இந்த விஷயம் ஆத்ம விவாஹமாகிய ஹிந்து விவாகக் கொள்கையைப் பாதிப்பதாயிருக்கிறது. எல்லா விவாகங்களிலும் ஆத்ம விவாஹமே மிகமேலானது: இகபரசுகமிரண்டிற்கும் ஆஸ்பதமானதும் சாதகமளிப்பதுமாயிருக்கிறது. இந்த உண்மையான உத்தமக்கொள்கை ஹிந்துக்கள் மனதில் நன்றாக வேரூன்றிக்கிடக்கிறது. இதற்குச் சரியாக அவர்கள் நடக்கிறதில்லையென்ற காரணத்தால் அந்த உத்தமக் கொள்கையை மாற்றுதல் சரியன்றென்பது எதிர்க்கக்ஷியார் சித்தாந்தம். ஜனாசாரத்திற்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லை: சாஸ்திராதாரம்பற்றி எங்கள் வழிக்கு வந்தவர் வரட்டும்; சௌகரியவழிபட்டு வந்தவர்கள் வரட்டும்; பாலவிதந்துக்கள் இருக்கிறவரையில் புனர்விவாகம் இருந்தேதீரவேண்டியது என்பது சீர்திருத்தக்கக்ஷியார் சித்தாந்தம். மதப்பற்றின்றிச் செய்யும் சீர்திருத்தம் எதுவும் நிலைக்காதென்று எதிர்க்கக்ஷியார்சொல்ல, உங்கள் மதாசாரங்களை யனுசரிப்பதால் மனுஷனுக்கு பெந்தமேயன்றி மோக்ஷமுண்டாவதில்லையென்று சாதிக்கிறார்கள் சீர்திருத்தக்காரர். இவர்களுக்குள்ளிருக்கும் வித்யாசத்தையெடுத்துச்சொல்லவும் கிரகிக்கவும் ஆழ்ந்த சிந்தையும் ஆத்மபுத்தியும் அபார அனுபவமும் வேண்டும். சீர்திருத்தக்காரர்கள் முயற்சி மெச்சத்தக்கதாயினும் அவர்கள் எல்லா விர்த்திக்கும் ஆதாரமாயுள்ள பரிணமவிதியின் மூலக்கொள்கையைத்தள்ளி, ஜனாசாரத்துக்கும் பிரதி ஜன நடத்தைக்கும் மனுஷன் புத்திக்கேற்ற நியாய அங்கீகாரம் இருக்கவேண்டுமென்று சொல்லி (Reason) பகுத்தறிவையே முடிவான சித்தாந்தஸ்தானீகராகச் செய்யப்பார்ப்பது உண்மைக்கும் ஆத்மதத்துவத்துக்கும் ஒவ்வாததாக விருக்கிறது. (Reason) பகுத்தறிவு எப்போதும் பிரத்யேகக்ஷேமத்தை நாடும்

ரவமானது. ஜனசாரமோ மேலறிவின் ஆதரவு
காண்டு ஏற்பட்டது. பிரத்யேகக்ஷேமமும் ஜன
மூகவிர்த்தியும் பொருந்தவேண்டுமென்பது ஒரு
ாரார் சாதிக்கும் சித்தாந்தம். ஆனால் இது உண்
மையில் உள்ளபடியில்லை. பொதுக்ஷேமம் எப்
பாதும் பிரத்தியேக க்ஷேமத்துக்கு விரோதமாக
ருக்கிறதேயன்றி அனுகுணமாயிருப்பதில்லை.
பாதுநயம் பாராட்டும் சிலர் சுயநயம் பாராட்டுவ
ில்லை. "அன்புடையார் என்புமுடையர் பிறர்க்கு"
ன்று பிறவி ஞானியாகிய திருவள்ளுவர் சொன்
திலுண்மையிதுவே. நமது இருஷிகள் ஞான
ர்ஷ்டியினால் இவ்வுண்மையையுணர்ந்து வெகு திட்
தட்பானுபவத்தோடும் சூக்ஷ்மபுத்தியோடும் நமது
ஜனசார சம்பிரதாயங்களை யேற்படுத்தி யிருக்கிறார்
ள். இக்காலத்தவர் அவற்றின் உண்மையுணர
ாட்டாமல் அவர்கள் உட்கருத்தைவிட்டு மேலாடம்
ரங்களை மட்டும் பேருக்கு அனுசரித்து வருகிறார்
ள். இதனால் பிரயோசனம் ஒன்றுமில்லை. கெடு
யுமுண்டு. ஆனால், இப்படி அப்பிரயோஜனமா
ள்ள ஜனசார சம்பிரதாயங்களைச் சீர்திருத்த
வண்டியதவசியமென்பதை எல்லாரும் ஒப்புக்
காண்டாலும், சீர்திருத்தும் வகையைப்பற்றி வித்
ியாசப்படுகிறார்கள். ஹிந்துமத தர்ம சாஸ்திரத்
ில் எல்லாவித நடத்தைகளுக்கும் ஆதாரமிருக்கி
து. அந்த சாஸ்திரங்களேற்பட்டதின் கருத்தே
ன்னைத்தானடக்கச் சக்தியில்லாதவர்களுக்குத்
ன்னடக்கமுண்டாக ஒரு உபாயமிருக்கவேண்டு
மென்பதே. இதுவே எல்லா சாஸ்திரங்களின் நோக்
மும். அந்த உபாயம் அனாதிதொட்டு இல்லா
ிட்டாலும், மனுஷன் ஞாபகத்துக் கெட்டாத
ாலம் முதல் அனுஷ்டானத்திலிருந்த காரணத்தி
னால் ஜனசம்மதம்பெற்று, எப்படிப்பட்ட அடங்
ாத் துஷ்டரும் அதற்கு அடங்கி நடக்கும்படி செய்
த்தக்க வன்மைபெற்றதாய் விட்டது. இப்பொ
து இவ்வனுஷ்டானங்களின் அதிகாரித்தை
ஒடுகளைந்துவிட்டால், சாதாரண ஜனங்கள்
[illegible] நடக்க ஒரு கட்டுக் காபந்துவேண்டுமே! அது
[illegible]தவரால் ஏற்படுத்தமுடியாது. முடிந்தா
[illegible]களால் ஏகோபித்து மதிக்கப்படமாட்
[illegible]. பூர்வீகமான மதக்கொள்கை
[illegible]க்கும் ஒரு கெடுதிவராமல்

வைதிகர்களுக்கு உண்மையான சாஸ்திர
முண்டாகச்செய்து அவர்களை அனுசரணீ
மேலுயர்த்தி இப்பொழுதுள்ள ஊழல்களை
வேண்டுமென்பது மற்றொரு சாரார் சித்தாந்
இப்படி இருவகையாரும் அவர்கள் நம்பியனு
கும் மூலக்கொள்கையில் வேறுபட்டு நிற்றலால்,
சித்தாந்திகள் தங்கள் முறைப்படி ஜனக்ஷே
துக்குழைக்கக் கருதி 1904-ஆ ஜனவரிமீ 1-
யன்று "ஹிந்துமஹாசங்கம்" (Hindu Association)
என்று ஒரு நூதன சங்கமேற்படுத்தி யூக்கமுட
ழைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.
இந்த சங்கம் விக்டோரியா ஹாலில் ஜஸ்டிஸ் ஸர்
எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அக்கிராசனா
பதியாக வீற்றிருக்க, ப்ரொபெஸ்ஸர் ரெங்காசா
ரியார் அவர்கள் பிரதமஸ்தராக நின்றுபேச, மிஸ்
ஸஸ் அனி பெஸன்ட் அவர்களால் கல்லுங் கரை
யும்படி உள்ள முருகச் செய்த ஒரு திவ்ய உப
யாசத்தால் ஜாதககர்மம் செய்யப் பெற்றவதரித்
தது. இதை ஆசாரச்சீர்திருத்தக்காரர் தங்கள்
ஊக்கத்தினாற் பிறந்ததாகக் கொண்டாடுகிறார்கள்.
கொண்டாடுவதினால் குற்றமொன்றுமில்லை. அகம்
பாவத்தை நீக்கி 'அவனன்றியோரணுவமசையாது'
என்பதை நினைத்து மேன்மேலும் பொதுக்ஷேமத்
துக் குழைக்க வழிதேடி தன்னடக்கத்தைக் கை
விடாது ஒழுகுதலே சத்துக்களுக்கு அடையா
ளம். "அகம்பாவத்தாலே அழிந்தான் துரியோ
தனன்" என்று நமது பெண்டுகள் சொல்லும் வா
க்கை பொய்யல்ல. அகங்கரித்தால் அழிவது நி
சயம். இங்கே மிஸ்டர் ஜஸ்டிஸ் ரானடே ய
கள் இதை யெழுதுபவருக்குச் சொல்லிய புத்திம
யொன்றையெடுத்துச் சொல்வது ஒக்கும். செ
னையில் சுதேசபாஷைக் கல்வியைப்பற்றி 1898-
வருஷத்தில் நடந்த அமளியில் இங்கிலீஷ் படித்
வர்கள் சுதேசபாஷையை அநாதரவு செய்வதை
பற்றி உள்ளம் பொங்க உண்மையையுள்ளபடி ஒ
காது தானாக மேலெழுந்து கிளம்பிய சொல்வ
ன்மையைச் சாந்தப்படுத்தாது அவர்கள் குறைகளை
பற்றிக் கடிந்தெழுதிய பிரபந்த மொன்றை (Verna
cular Studies in Madras) அவருக்கு அனுப்ப
[illegible]



ஷகாலமாய் அவர் உழைத்து வந்ததின் அனுபவத்
தைச்சொல்லி ஆதரவுகூறி, இதை யெழுதுபவர்
கைப்பற்றியுழைக்கும் முறை உத்தமமும் உண்மையு
மானதென்றும் ஆனால் அது வழிபற்றி நடவாதவரை
ப்பற்றிக் கடுமையாகச் சொல்லி அவர்கள் குறைகளை
யெடுத்துக்காட்டுவதால் உண்டாகும் சாதகம் ஒன்று
மில்லையென்றும், ஊக்கத்தைக் கைவிடாது உண்மை
யில்நம்பிக்கைவைத்து உழைத்துவருகையில், பிறரை
ப்பற்றி யெழுதுவதில் சாந்தமாகவேயிருந்து பேசு
வது எப்போதும் எண்ணரிய நன்மைபயப்பதா
யிருக்குமென்றும் இந்த உண்மையின் மர்மத்தை
பொதுவிஷயத்துக் குழைக்குமெவரும் உள்ளாய்ந்
துணர்ந்து உண்மையாக நம்பி யுழைக்கவேண்டுமென்
றும், ஒரு ஆயுசுகாலமாக அவர் பொதுநன்மைக்
குழைத்துவந்ததிலுணர்ந்த மேலான தத்துவ ரஹசி
யம் இதென்றும், இதை நாம் மனதில்வைத்து நடக்க
வேண்டுமென்றும், தாய் பிள்ளைக்குச் சொல்லுவது
போல் அன்புநிறைந்த ஆப்த வசனங்களால் சொல்லி
யுபதேசித்தார். அந்த உபதேசத்தை இன்னம் மறக்
கக்கூடவில்லை. மனம் பதறி யேதாவது கடுமை
யாக வெழுதிவிட்டால், பிறகு அதை வாசிக்கும்பொ
ழுது அவர் அன்பு நிறைந்த ஆர்வமொழிகள் உள்
ளிருந்து கிளம்பி இனிய நாதகீதத்தோடு சப்தித்
துக்காட்டுகின்றன. அப்பொழுது 'ஐயோ!' இந்த
சந்தோபசாந்தம் எப்போது நமக்கு சித்திக்கும்!
எவ்வளவு அடக்கினாலும் நாமறியாமல் இந்த ரௌத்
ராகாரம் லக்ஷம் கோடி விதமாக உருமாறி வேஷம்
மாறி வெளியே வந்து வில்லங்கம் விளைக்கின்றதே!"
யென்று உள்ளத்தில் தோன்றி நம்மனதை ஆழ்ந்த
சிந்தையிலமுக்கிவிட்டுப்போகும். அவர் வழிபற்றி
யுழைக்கிறதாகச் சொல்லும் எல்லாரும் இந்தப் பரம
ரகசியத்தை அவரிடமறிந்து அவருக்கிருந்தசாந்தோ
பசாந்தம் தங்களுக்குக் கைவல்யமாக சித்திக்கப்பாடு
பட்டுழைக்கவேண்டும். "கஞ்சிவரதப்பா!" என்ற
தும் "எங்கு வரதப்பா?" என்றவன் கதையாக அவ
ருடைய வார்த்தைகளைமட்டும் சொல்லி, நம்மனம்
போனபடி யதற்கு அர்த்தம் செய்துகொண்டு 'நானு
மவர் வழிபற்றித்தான் செல்கிறேன்' என்று பிருது
[illegible]வதினால் எவரும் அவரைப்போல் ஆய்
[illegible]. அவர் புத்திவன்மையில் அவ்
[illegible] விளங்கினாலும் அவருடைய புத்தி

யெப்போதும் பத்திக்கு அடங்கியேயிருந்தது என்ப
தையுணரவேண்டும். அவர் பக்தர்கள் செயலைக்குறி
த்துப் பிரஸ்தாபிக்கையில் தன்னைமறந்து தன்னறி
வழிந்து அவர் மனது அந்தப்பக்தர்களோடு லயப்
பட்டு நிற்க அவரைக்காண்பதும் கேட்பதும் ஆச்சரிய
மாயிருக்குமென்று அவருடைய சிஷ்யர்களில் ஒருவர்
அவரைப்பற்றிய விர்த்தாந்தங்கள் பலவற்றில் இதை
யொன்றாகச்சொல்லி யுள்ளார். இதன் உள்ளனு
பவத்தை யுணர்ந்தோரே இவரை யறிந்தவராவார்.
பக்திக் கடங்கினபுத்தியே எப்போதும் சோபிக்கும்;
நல்வழியும் காட்டும். பக்திக்கு மிஞ்சியபுத்தி புருஷ
னுக்கடங்காப் பெண்டீரைப்போல் மணமிழந்து கண்
மழிந்து மங்கலமு மிழந்துநிற்கும். இங்கேபுருஷன்
என்றது மூடப்புருஷனையல்ல. பரமபுருஷனுக்கொப்
பான சத்புருஷனைக்குறித்துச் சொன்னதாகக்கொ
ள்ளவேண்டியது. மேற்றிசையாரும் புத்தியிலும் பக்
தியே பெரிது என்னு முண்மையை யுணர்ந்து
கொள்ளத் துவக்கியிருக்கிறார். "பக்தியில்லாத
ஜன்மம் பாழ்" என்று கௌன்ட் லியோ டால்ஸ்
டாய் சொன்னது சத்தியமென்று ப்ரொபெஸ்
ஸர் ஜேம்ஸ் அவருடைய (Gifford Lectures)
பிரசங்கத்தில் மெய்ப்பித்து வற்புறுத்திக்காட்டி
தாகச்சென்ற சஞ்சிகையில் அவருடைய புஸ்தகத்
தைப்பார்வையிட்டெழுதிய "சிவனருள்புலபவிசே
னுமாகும்" என்னும் தலைப்பின்கீழ்க்கண்ட விஷயத்
தில் கூறியிருப்பதைக்கொண்டு தெரிந்து கொள்
லாம். பரிணமவாதிகள் (Evolutionists)
பலக்க பலக்க இத்தேசத்துப் பூர்வீக ஆர்யமதவுண்
மைகள் மேற்றிசையில் ஒன்றொன்றாகப் பிரபல
பட்டுவருமென்று நினைக்க எது வுண்டாயிருக்கிறது
அதைப்பற்றி விஸ்தரிக்கில் வளருமென்று
தோடு நிறுத்தலானோம். இவ்வகையில் மிஸ்
பெஸன்ட் ஹிந்துக்களுக்குத் தம்மதத்திற்பற்று
டாகும்படி அவருடைய பிரசங்கங்களால் பேருத
செய்துழைத்துவருகிறார். இம்முறை அடையா
றில் அவர் செய்த நான்கு பிரசங்கங்களும் இவ்வ
கையில் பெரும்பயன் விளைப்பனவாம். கீழ்த்திசை
ஞானமும், மேற்றிசை யூக்கமும் சாமர்த்தியமும்
சேர்ந்து விளங்குவதே இக்காலத்துக்கேற்ற [illegible]
லக்ஷணமாம். இதை யெல்லாருங் கவனி[illegible]
யிருக்கவேண்டும்.

சிறுவர்க்கானபக்கம்.

## ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.

---

ஒரு காலத்தில் லுவெலின் என்னும் வேடனொருவனிருந்தான். அவன் அனேக வேடர்களுக்குத் தலைவனாயிருந்தான். அவனிடத்தில் மிகுந்த விசுவாசமுள்ள கெல்லர்ட் என்னும் ஒரு நாயிருந்தது. அவன் வேட்டைக்குப் புறப்படும்பொழுது வேடர்களும் நாய்களும் வந்துசேரும்பொருட்டு கொம்பூதுவது வழக்கம். ஒருநாட் காலையில் வழக்கப்படி கொம்பு ஊதினான். எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். கெல்லெர்ட் என்னும் நாய் மட்டும் வரவில்லை. அது வராத காரணத்தை ஆராயாமலே வேட்டைக்குப்போய்விட்டான். அவனுக்கு இரண்டு மூன்று வயதில் ஒரு பெண் குழந்தையுண்டு. அக்குழந்தை வீட்டில் கட்டிலின்மேல் படுத்து தூங்கிக்கொண்டிருந்தது. வேட்டைக்குப்போன லுவெலினுக்கு தன்னுடைய சாமர்த்தியமான கெல்லெர்ட் வாராததினால் விசேஷமாக ஒன்றும் கிடைக்கவில்லை. வீட்டுக்குத் திரும்பிவந்தான். வீட்டு வாயலில் தேக முழுவதும் இரத்தம் வடிய லுவெலினது வருகையை கெல்லர்ட் எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தது. லுவெலின் பார்த்தான். திடுக்கிட்டு நின்றான். இந்த நாய் ஏதோ விபரீதம் செய்துவிட்டது என்று நினைத்து தன் பெண் தூங்குகிற அறையில் போய்ப்பார்த்தான். பெண்ணைக் காணோம். பெண்ணின் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டுப்பார்த்தான். அதற்கும் பதிலில்லை. உள்ளெல்லாம் இரத்தமாயிருந்தது. கெல்லெர்ட் தான் தன் பெண்ணைக் கொன்று தின்றுவிட்டதென்று தீர்மானித்த, 'பாழும் நாயே! என் குழந்தையைத் தின்றபிறகு நீ இருக்கவேண்டுமோ!' என்று சொல்லித் தன் கையிலிருந்த கத்தியை அதன் கழுத்துக்கு நேராக வீசினான். பரிதாபமுள்ள அவ்வற்பப் பிராணியானது பெருங் கூச்சலிட்டுக்கொண்டு தன் பிராணனை இழந்தது. கெல்லெர்ட் போட்ட கூச்சலால் படுக்கையின் ஒரு மூலையில் சுருட்டிக்கொண்டிருந்த பெண் எழுந்து அழவாரம்பித்தது. லுவெலின் ஐயோ! நம் பெண் உயிரோடிருக்கிறதே கீழே இரத்தமிருக்கக் காரணமென்ன என்று நாற்புறமும் நன்றாய்ப் பார்த்தான். கட்டிலுக் கடியில் ஒரு பெரிய ஓநாயைக் கடித்து சிதைத்துக் கொன்றுபோட்டிருந்தது. 'ஆ! எனக்கு உதவிசெய்த உபகாரியைக் கொன்றேனே!! என் குழந்தையைக் கொன்று தின்கவந்த கொடிய ஜந்துவை வதைத்து குழந்தையின் உயிரை ரக்ஷித்த நன்றியறிவுள்ள பிராணியைக் கொன்றுவிட்டேனே.' என்று விசனித்தான். ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு. 'ஆராய்ந்தறியாமல் நியாயம் வெளிப்படாது.' என்னும் பழமொழி இக்கதைக்கு மிகவும் பொருந்தியிருக்கிறது. இதைப் படிக்கும் சிறுவர்களே உங்களுக்கு ஆத்திரம்வரும் தருணத்தில் இக்கதையை நினைத்துக்கொள்ளுங்கள்.

---

Resourceful men.

## உபாயஸ்தர்கள்.

---

ஒரூரில் ஒருகோமுட்டி இருந்தான். ஒருநாள் இராத்திரி ஒரு திருடன் அவன் வீட்டுப்பரணையின்மேல் ஒளித்துக் கொண்டிருந்தான். அவ்வீட்டில் செட்டி படுத்துக்கொள்ளப்போனான் அப்போது அங்கு திருடன் இருக்கிற அரவம் கண்டு செட்டி ஓர் உபாயம் செய்தான். அதாவது தன்பெட்டிகள் எல்லாம் பூட்டியிருக்கின்றனவாவென்று பார்ப்பதுபோல் தொட்டு தொட்டு பார்த்தான் உடனே உண்மையாய்



தேள் கொட்டினவனைப்போல் ஐயையோ கையில் தேள் கொட்டி விட்டதே என்று உரக்கக்கூவி அழுதான். அவன் அழுகிறகுரலைக் கேட்டு அயல் வீட்டுக்காரரெல்லாம் ஓடிவந்து பார்த்து மந்திரித்து விஷமிறங்கிற்றா வென்றார்கள். அதற்கு செட்டி விஷமிறங்கிற்று அந்த புண்ணியவான் மாத்திரம் இன்னும் பரணையைவிட்டு இறங்கவில்லையே யென்று பரணையிலிருக்கிறவனை அவர்களுக்குக் காட்டினான். உடனே அவர்கள் திருடனைப் பிடித்துக்கொண்டு கோமுட்டியின் உபாயத்தை மெச்சினார்கள். அடுத்த வீட்டில் அவனுடைய தம்பி ஒருவன் இருந்தான். அவனுக்கு ஆப்தனான சிநேகிதனொருவன் ஒருநாள் இராத்திரி தன் வீட்டிற்கு வந்தபோது செட்டி தன் காசுப்பையை கொட்டி எண்ணிக்கொண்டிருக்கையில் விளக்கு நின்றுவிட்டது. உடனே சிநேகிதன் பணத்தை எடுத்துக்கொள்ளப் போகிறானென்று கோமுட்டி சந்தேகித்து ஓர் உபாயம் செய்தான். அதாவது தன் சிநேகிதன் கைகளிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நான் ஒருவாக்குகேட்கிறேன், அதென்னவென்றால்: இதுவரையில் நீ என்னிடத்தில் அதிக விசுவாசமுடையவனாகவிருந்தது போல் உன் ஆயுசுவரையில் இருக்கிறதாக இதோ தீபம்வருகிறது அத்தீப மறியக் கைபோட்டுக் கொடென்று தன் பெண்சாதியை சீக்கிரம் தீபம் கொண்டுவரச்சொல்லி தீபம்வருகிறவரையில் கைகளைவிடாமல் கெட்டியாய்ப் பிடித்திருந்து தீபம் வந்தவுடனே அதறியக் கைபோட்டுக் கொடென்று கைகளைவிட்டுவிட்டான்.

எம். பி. எம். ராமலிங்கம்.

ஸத்யம்வத.—Speak the Truth.

"To Thine own Self be True."

"Hitch your Wagon to a Star."




God is Love : Knowledge is Power : Om.

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.]

ஸத்யமேஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 12.] 1904-ம் ௵ ஜனவரி ௴ [இலக்கம் 9.

# A New Year's Greeting.

## (FROM DR. G. U. POPE, M. A., D. D., OF OXFORD.)

## "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்."

### * ஞானிகள்.

யாதும் ஊரே;—யாவருங் கேளிர்;—
தீது' நன்றும் பிறர்தர வாரா;—
நோதலுந் தணிதலும் அவற்றோர் அன்ன;—
சாதலும் புதுவ தன்றே;—வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே;—முனிவின்
இன்னா தென்றலும் இலமே;—மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம்;—ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;—
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

'ஜி. யூ. போப்' ஆப்த பூர்வகமாய்
ஸர்வமங்கள ஸித்தியார்த்தம் அனுப்பியது.

### THE SAGES.

To us all towns are one, all men our kin.
Life's good comes not from other's gift, nor ill;
Man's pains and pains' relief are from within.
Death's no new thing; nor do our bosoms thrill
When joyous life seems like a luscious draught.
When grieved, we patient suffer; for we deem
This much-prized life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream
That o'er huge boulders roaring seeks the plain,
Tho' storms with lightnings' flash from darken'd skies
Descend, the raft goes on as fates ordain.
Thus have we seen in visions of the wise!—
We marvel not at greatness of the great;
Still less despise we men of low estate.

G. U. POPE,
With all kindest good wishes.

OXFORD, *Jan.* 1, 1904.

* This Agaval is by a minstrel, known to us as Kanyan (or 'Singer') of the flowery hill, who was a court poet and friend of Kö Perum Coran of Urraiyūr,—a little, it may be, before the date of the *Kurral*. See *Purra Nonnuru*, 67, 191, 192, 212. Compare, Kurral 397, பழமொழி, 116.

# Arudradarisaṇam, 1904.

# ஆருத்ராதரிசனம், 1904.

சென்ற வருஷம் ஆருத்ராதரிசனத்துக்கு முன் நேர்ந்த 'கிறிஸ்த்மஸ்' என்று சொல்லும் கிறிஸ்து ஜனனநாளன்றி (டிசம்பர்மீ 25உ.) நடராஜ மூர்த்தியை தியானித்துக்கொண்டிருக்கும்பொழுது, மாதங்களிலெல்லாம் ஸர்வோத்க்ருஷ்டமான மார்கழிமாசம் பகவானுக்குப் பிரீதியான மாதமென்றும் அந்த மாதத்திலேயே அவர் தம் பக்தர்களுக்குக் கடாக்ஷவீக்ஷணமளித்து அவர்களைக் கரையேற்றக் கிருபை கூர்ந்த மாதமென்றும், அந்த மாதத்தில் எவனொருவன் பகவானை சுத்த ஹிருதயத்தோடு பஜிக்கிறானோ அவன் அதிசீக்கிரத்தில் ஆத்மதரிசன பாக்கியம் பெறுகிறானென்றும் பெரியோர் சொல்லியவை பிரத்தியக்ஷானுபவமாக நமக்கு விளங்கியது. மார்கழிமாசம் திருவாதிரை நக்ஷத்திரத்தன்று கொண்டாடப்படும் 'ஆருத்ராதரிசன' மஹோற்சவம் இந்த உண்மையையே ஐதிகமாகக் கோயில்களில் திருவிழாவாகக் கொண்டாடப்படுவதன்றி வேறல்ல. இது சிதம்பரத்தில் மிகவிலாக்கியமாகக் கொண்டாடப்படுகிறது. நடராஜமூர்த்தி தேரை விட்டிறங்கி, ராஜசபையில் ஆடம்பரமாய்க் கொலுவிருந்து அதை விட்டுப் புறப்பட்டு நடனம்செய்துகொண்டு கனகசபைக்குள் பிரவேசிக்கத் திரும்புகையில் அவர் தரிசனசேவையே ஆருத்ராதரிசனமாம். இது ஐதிகமுறை. ஆத்மார்த்தமாகப் பார்க்கில் பிரபஞ்சத்தில் பாசபெந்தங்களால் கட்டப்பட்டுழன்ற ஜீவன், சற்குருவையடைந்து அவர் கடாக்ஷவீக்ஷணம் பெற்று அந்த பாக்யத்தில் திரிபுரமாகிய தேகத்திரியங்களையும் அதற்கொப்பான திரிகுணங்களையும் எரித்து, அதாவது அறநீக்கி, ஸ்வயம்பிரகாசமாயுள்ள பிரத்யகாத்மன் தானே தானாய்த், தன்மயமாய்த், தனித்திருந்து, நிர்மலனாய், நிராலம்பனாய், நிர்விகாரியாய், 'நெற்றிக்கண்' என்று சொல்லும் 'பிரக்ஞானசட்சு'ப் பெற்றவனாய், அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் காட்டிய 'விசுவரூபதரிசனம்' போல் இந்த அண்டபிண்ட சராசரங்கள் அனைவற்றையும் தன்னுளொடுக்கி யிருக்கும் பகவானை அவரது உண்மை விளங்க உள்ளபடி பார்க்கப்பெற்று ஐயந்திரிபற அவர் மகிமையை உள்ளபடி உண்ணோக்கி யறிவதாம் 'ஆத்மதரிசனம்' என்னும் தத்ஸ்வரூபதரிசனமே ஆருத்ராதரிசனமாம். திருவாதிரையன்று பரமசிவன் தூயஹிருதயமுள்ள பக்தர்கள் ஒவ்வொருவர் ஹிருதயத்திலும் பிறந்து 'புனர்ஜன்மம்' என்று சொல்லும் பெறலரும் பெரும்பாக்கியத்தை யவர்களுக்கு அளிக்கிறார். "Unless you be born again, you cannot enter the Kingdom of heaven" என்று யேசு கிறிஸ்து இந்த உண்மையையே யெடுத்துச் சொல்லியிருக்கிறார். செத்துப் பிழைத்தாலன்றி சாவுக்குத் 'தப்புவதில்லை. இந்த 'செத்துப் பிழைத்த'லாம் 'சூக்ஷ்ம அனுபவத்தையே 'புனர்ஜன்மம்' என்றும் 'பிராம்மணத்துவம்' என்றும் 'Re-birth,' 'Resurrection,' 'Birth of the Christ child' 'Conversion' என்று பலவிதமாகச் சொல்லிக் கொண்டாடுகிறார்கள்.

தென்னிந்தியாவில் 'திருவாதிரைக்களி' யென்று களிகிண்டி பகவானுக்கு நைவேத்யம் செய்து, பிரசாதமாக அதைப் புசிப்பது வழக்கமாய் நடந்து வருகிறது. இதன் ஐதிகம் என்னவென்றால்: மார்கழிமாசக்குளிரில் ஒரு ஏழைப் பிச்சைக்காரன் குளிரில் விறைக்கக் களிகிண்டி அதைத்தான் உண்ணுமுன் பரனுக்கு ஒரு கவளமாவது அளித்து மிஞ்சியதையே உண்கிறதென்னும் நியமம் பூண்டவனாதலால் அந்தக் களியையளிக்க யாரும் அகப்படாமல் அதைத் தானும் புசிக்கக்கூடாமல், 'சோவென்று கொட்டும் இந்த அடை மழையில் நான் யாரை யழைப்பேன், அழைத்தாலும் இந்தக் களியைப் புசிக்கயார்வருவார்க'ளென்று மனம்புழுங்கி உள்ளமுருக, உடம்பெலாம் வியர்க்க, அந்த அடைமழைக் குளிரில் அழுதுகொண்டிருந்தான்.

"ஈசனறியுமிராப் பகலுந்தன்னைப்
பாசத்துள்வைத்துப் பரிசுசெய்வார்களை"

என்றபடி, பரமசிவன் இந்த ஏழை நெஞ்சன் உள்ளங்குழைந்துருகுவதைக் கண்டு அவன் அவஸ்தை பொறுக்காதவராக ஒரு பரதேசியைப் போல் வேஷம் போட்டுவந்து அவன் கொடுத்த களியை வாங்கிப்புசித்து அதனால் அவனுக்குத் தமது ஒப்புயர்வற்ற வரப்பிரசாதமளித்துச் சென்றாரென்பது ஐதிகம். இந்த ஐதிகத்தை யனுசரித்தே இன்றைக்கும் 'திருவாதிரை நாளில் எவ்வளவு பணக்காரர்களும் ஏழைக்கெளியவனான பரமேசுவரன் ஸ்வபாவத்தையறிந்து 'களி' கிண்டி நைவேத்யம் செய்து அதை ஈசுவரப் பிரசாதமாகப் புசிக்கிறார்கள். இப்படி ஏழைக்கிரங்கியாகிய ஈசன், தாருகாவனத்திலுள்ள இருஷிகள் தாங்கள் தபசு, யக்ஞங்களில் சிறந்தவர்களென்றும் தங்களுக்குமிஞ்சி யொருவருமில்லை யென்றும் உள்ளே கருவித்திருக்க, அவர்கள் உள்நிலையையுணர்ந்த ஈசுவரன் பிக்ஷாடன மூர்த்தியாக வேஷம் போட்டுக்கொண்டு, விஷ்ணுவம்சத்தை மோஹினிரூபமாக்கி, அத்தவவேடர் சிரைக்குலைத்து அவர்கள் கர்வத்தையெல்லாம் அடக்கியாண்டார். தேவர்களுமிப்படி கருவிக்க அவர்கள் உதவியெல்லாம் பயன்படாமற்செய்து, பக்கத்திலிருந்த உமையவளைப் பார்த்து அவள் புன்சிரிப்புமாத்திரத்தால் உண்டான தீயினால் திரிபுரசம்ஹாரம்செய்து தாம் ஏறியிருந்ததேரை விட்டிறங்கி திரிபுர தகன நீற்றுச் சாம்பலில் ஆனந்த நிர்த்தனம் செய்துகொண்டு பக்தர்களைப் பரிபாலிக்க ஒத்தைக்கால் தூக்கி அம்பலத்தாடி பொன்னம்பலம் சேர்ந்து அசைவற்று ஆடி அமர்ந்தார். இதைச் சென்றவருஷம் பிரசுரித்த ஆருத்ராதரிசனப் பத்திரத்தில் "மார்கழி மாசம் பாடும் ஆண்டிப்பாட்டு" என்னும் தலைப்பின்கீழ் பிரசுரித்த "மாயாண்டிச்சித்தன் ஞானப் பாட்டின்" கடைசியில் ஆகாசத்திலுண்டான அசரீரிவாக்கில் விளங்கினதாகச் சொல்லியிருப்பதிற் கணலாம்:—

"மார்கழிமாசந்திருவாதிரையும்-வரலாயிற்றையே
கார்குழலாள்மோகினியும்காரணப்பே-யாண்டியுமே கரைந்தவுருமாறிநின்று
பாரிலுள்ளபக்தர்கள்பரிபக்குவர்-பலருமுய்யப் பரங்கருணைமிகுதியாலே
திரிபுரமெரித்ததேஜோமயானந்தனைத்-தாள்கொடுத்தாள்வன், தரிசிக்கவாரீர்,
[வாரீரே."

என்னும் வாக்கில் இதனுண்மையை யுள்ளபடியுணர்த்தி யிருக்கிறது.

அவதார புருஷர்களில் ஒருவராகிய யேசுகிறிஸ்துவும் அவர் தம் சிஷ்யர்களுக்கு மலையுச்சியில் செய்த உத்தம உபதேசத்தில் "Blessed are the poor in spirit: for their's is the Kingdom of heaven" என்று துவக்கி முமுக்ஷு லக்ஷணங்களை வெகு நன்றாகச்

சொல்லிக் காட்டியிருக்கிறார். அவர் உபதேசப்படி மோக்ஷகைவல்யத்துக்குப் பாத்திரமா...
குணங்கள் பின்வருவனவாம்:—

(1) 'The poor in spirit'—(உலகப்பற்றற்ற) ஏழைபரதேசிகள் c. f. 'ஏழைக்கெளியன்.'

(2) 'They that mourn'—துன்புற்றோர். c. f. "தொழுதகை துன்பந்துடைப்பாய், போற்றி

"அளிபவர் உள்ளத்தமுதே போற்றி."—திருவாசகம்.

(3) 'The meek'—பொறுமை, அடக்கம் உடையோர். c. f. 'பொறுத்தார் பூமியாள்வா...
'தானடங்க ஊரடங்கும்' 'அடக்கமுடையார் ஆக்கமுடையார்.'

(4) 'They which do hunger & thirst after righteousness'—c. f. 'தன்னைத்தான...
தபித்தவர்கள் தான் குடிப்பார்.' 'தபித்துக்குடித்தார்க்குத் தாகமது அற்றுப்போம்...
ஆனந்தத்தாய்மொழி.

(5) 'The merciful'—கருணையுள்ளார்—c. f. 'உள்ளங்கனிந்தாரை யுள்ளபடி போற்றுவாரே...
ஆனந்தத்தாய்மொழி.

(6) 'The pure in heart'—அகத்தூய்மையுள்ளார். c. f. 'அத்தனருள்வேண்டில் அக...
வேண்டும்.'—ஆனந்தத்தாய்மொழி.

(7) 'The peacemakers'—சாந்த ஸ்வரூபிகளான ஸாத்விகர்.

(8) 'They which are persecuted for righteousness' sake'—'சத்யந்துக்காகத் து...
படுத்தப்படுவோர்' c. f. பிரகலாதன், அரிச்சந்திரன்.

இப்படி அவர் சொல்லும் ஒவ்வொரு குணத்துக்கும் நம் சாஸ்திரங்களிலும் ...ணங்களிலும் ஐதிகபாவமான கதைகள் அனேகமிருக்கின்றன. இக்கதைகளின் உட்கரு... யுணரமாட்டாதவர்கள் இவைகளை யிகழ்ந்து பேசுவார்கள். உண்மையறியவல்லோர் இ... களையியற்றிய பெரியோர்களின் நுண்ணபுத்தியைக்கண்டு வியப்பார்கள். இப்படியாக ஸத்... ஒன்றாகவிருக்க, அதைக் காலதேச வர்த்தமானங்களுக்கிசையவும் அவரவர் மனோ நிலைக்... கவும் இசைத்துச் சொல்லப்புகும்போது பலபல விதமாகத் தோற்றுகின்றது. ஆனால் ... வித்யாசமெல்லாம் தோற்றமாத்திரமேயன்றி உள்ளாய்ந்து பார்த்தால் எல்லாம் ஒரே... வத்தை விளக்குவதாயிருக்கும். தத்வங்களெல்லாங் கடந்துள்ள ஸத்யமாம் கடவுளை ... களையுணர்ந்து அவைகளையெல்லாம் தள்ளிப்பார்க்கும் சித்திபெற்ற உத்தம புருஷர்களே... யறப்பாலராம். அறிவுக்கெட்டாததொன்றை அறிவது எப்படியென்றால், 'உளவறிவா... தறிந்து' 'அறிந்த அறிவும் அழிய' அனுபவித்துக்கொண்டிருக்கும் தன்மையில் சா... ஸ்வரூபமாக விருந்தபிறகே அறிவாம். இதை வாக்கால் மனதால் சொல்லத்தரமன்று. ...அனுபவத்தாலே யுணரல் வேண்டும். இப்படி யுணர்ந்தனுபவித்துக் கொண்டிருக்கையில் ... நிலையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. சமாதி கலைந்து ஜாக்ரத்திருந்து அதையுள்ளே



...கீழ்வரும் சுந்திரவசனம் திவ்யமந்திரமாக இலங்கக்கண்டோம்.* கண்டு களித்தோம். ...த்தத்துண்மையையுணர்ந்து சிந்திக்கத் தியானங் கைகூடிச், "கடவுளுநானுமொன்றானேன்" ... சொல்லிய அந்த திவ்யமங்கள ஸ்வரூபியின் தேஜோமயானந்த நிலையையுணர்ந்து ...த்திற்றெரிசித்தோம். தெரிசித்ததின் பலனும் உள்மலங்கழியப்,

"புன்புலால்யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாமுருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமேபிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலா மறுத்தநற் சோதி
இன்பமேயுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே."

முத்திக்கலப்புரைத்துக்காட்டிய 'பரசுகம்' ...ன்னும் திருப்பாவினால் ஸ்ரீ மணிவாசகப்பெருமானார் இருந்தவாறு விளங்கலாயிற்று. 'எனையாளு... ...த்தகைத்தாமென அவர் 'திருவுள்ளக்கிடை' 'ஆருத்ராதரிசனம்' தந்தருளினர். கண்டேன்! ...சன்' இவ்வாறாக இவ்வேழையேனுக்கிரங்கி யானந்தத்தாழ்ந்தி யயர்ந்தேன்! அமர்ந்தேன்! அடைந் ...களித்தேன்! குதித்தேன்! அழுதரற்றி அம்பிகையைக் கண்டேன்! கைகுவித்துத் ...தேன் அவர் பாதம்! அல்லலறுத் தாட்கொண்ட பெருநிதியம் பெற்றேன்! கார்முகிலொப்பக் கனமழை தொழுதேன்! பேச்சற்றுநின்றேன்! வீழ்ந்தேன்! அற்றேன், பெற்றேன், பிழைத்தேன்! பொழியும் அவன் கருணைவெள்ளத்தில் வேலவனோடும் பேயனுமென்றன் பிழை பேரருள் சுரக்கும் பிஞ்ஞகன் மதலை நீண்முகன் தம்பி தெரிசனமளித்து "நிர்வாண" நிலைதனில் நிதர் யெலாம் பொறுத்துத் தேவர்க்குமரிதாம் ...சன்மாயினன்.

"பண்டேபயில்தொறும் இன்றேபயில்தொறும்
ஒளிக்குஞ்சோரனைக் கண்டனம்.
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்பிணையலில்
தாள்தளையிடுமின்

* He came Meek and Lowly in Heart, and full of Infinite Pity, for all those who call upon Him for aid.
Wishing you
all the Blessings
of the
Manger Throne,
With Love,
(I hope to write at length)
என்றைக்கும் வாழ்க!
G., U, Pope

* பொறுமையும் தாழ்மையும் பூததயைநிறைப் புனிதமாம் ஹிருதயமும் பொருந்தத், தஞ்சமென் றடைந்தார்க்கஞ்சலென்றுற்றுவான் தோன்றினன் அருள்நிறை வள்ளலே. †

தொட்டியிற் பிறந்த தொன்மறை பூரணன் அன்பர்க்களிக்கும். ஆனந்தம் பொங்குக.

'G. U. Pope' அன்போடனுப்பியது.
'என்றைக்கும் வாழ்க!'

† Comp. "அறிவிலாச் சிவனையருளொடுகாத்திட, அறிவிலாதுலகம் அழியாதருள்செய, அறிவிலாஞானர்கள் அறிவறிந்துய்ய, அறிவிலருளாயவனுதித்தானே."
Godward Ho! ஜகத்- சிவ்ஷடி, 16.

திருத்திக் கொள்ளவேண்டிய தவசியமாகச் செய்துவிட்டது. பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களெல்லாம் அணுப்பிரமாணமானவையே யென்றும் இந்த அணுக்கூட்டங்கள் மாறுகிறதில்லையென்றும் சாதித்து வந்தது போய் இப்பொழுது ஒவ்வொரு அணுவும் மின்னல்போல் பிரகாசிக்கும் லெக்ஷம் கோடிக்கணக்கான ரேணுக்கள் சேர்ந்துள்ள கூட்டம் போலிருக்கிறதென்றும்; இந்த மின்னொளிக் கூட்டத்திலிருந்து ஒவ்வொரு ரேணுபிரிந்து கதிரொளிபோல் ஒளிவீசிப் பிரகாசித்துக்கொண்டு போகிறதென்றும் அப்பொழுது பூர்வ அணு பெரிதும், சிறிதுமான இரண்டு பாகமாகப் பிரிகிறதென்றும், இந்த அணுவிலுள்ள ரேணுக்களுக்கு 'Electrons' என்று பேர் எனவும் கண்டு பிடித்திருக்கிறார்கள். 50-வருஷங்களுக்குமுன் ஜீவரூபங்களெல்லாம் இனம் விட்டு இனம் மாறுகிறதில்லையென்று நம்பியிருந்தது போய் 'டார்வின்'காலம் முதல் எல்லா ஜீவதேகங்களும் Protoplasm என்னும் மூலப்பிரமாணமான ஜீவ அணுவினின்று பரிணாம விதிப்படி விர்த்தியானவையே யன்றி வேறல்லவென்று கண்டு நிச்சயித்திருக்கிறார்கள். 'X Rays' என்னும் சூக்ஷ்மப்பிரகாசம் என்ன, 'Radium' என்னும் அற்புத சூடாமணியாம் ஆதன வஸ்துவென்ன, இதுகாறும் உயிரற்றவை யென்று தீர்மானித்திருந்த உலோகங்கள் (inorganic matter) முதலானவைகளில் உயிர்ச்சின்னமிருப்பதாக மிஸ்டர் 'போஸ்' கண்டுபிடித்த ஆதன உண்மையென்ன, இவையெல்லாம் இப்பொழுது இதுகாறும் கலைக்கியானிகள் உறுதியாய் நம்பியிருந்த உண்மைகளை யெல்லாம் பார்றுப்படி செய்துவிட்டன. பிரகிருதி வஸ்துக்கள் எல்லாவற்றையும் 66 (elements) பிரதமப்பொருள்களாகப் பிரித்து இவைகளின் அணுக்கள் ஒன்று மற்றொன்றாக மாறுவதில்லை யென்று சாதித்துப் போதித்து வந்தார்கள். இப்பொழுது 'Radium' என்னும் வஸ்துவிலிருந்து 'Helium' என்னும் அதற்கு வேறான மற்றொரு வஸ்து உண்டாகக் கண்கூடாகப் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்ப் பார்த்தபின் அந்தப் பழையவிதி நம்பத்தக்கதில்லை யென்று கண்டுவிட்டார்கள். ஈயத்திலிருந்து செம்பு உண்டாகமாட்டாது என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை யென்று தியங்குகிறார்கள். சிலவஸ்துக்களை அணுப்பிரமாணமாகப் பிரிக்குங்கால் ஸ்தூலப்பிரமாணமான ரூபமுமின்றி ஸ்தூலரூபத்தின் ஆவியென்று சொல்லத்தக்க (Electricity) எனும் மின்சாரரூபமாகத் தோற்றுகின்றது. இப்படியெல்லாம் மேற்றிசைக்கலைக்கியானியர் இவ்வித அனேக நூதனதத்துவங்களை ஐயமற உணர்ந்த காரணத்தால் அவர்களுடைய பழைய சித்தாந்தங்களெல்லாம் நிலைதடுமாறி அவர்களும் தலைதடுமாறித் தியங்கி மயங்கினவர்களா யிருக்கிறார்கள். இப்பொழுது "எல்லாம் அறிந்தாய்விட்டது" "இனி அறியக்கூடியதில்லை" என்று ஆகடியம் பேசுவது யாருக்கும் தகாது என்று கண்டு, அகம்பாவங்குறைந்தவர்களாய் உண்மையை உள்ளபடி யறிவதில் சிரத்தையுள்ளவர்களாக வுழைத்து வருகிறார்கள். இதெல்லாம் அவர்களில் பிரதமஸ்தர்களாயுள்ளோர் நிலை. மற்றப்படியுள்ள குட்டி வித்வான்களும் சாஸ்திரக்காரர்களும் தாங்கள் பிடித்தமுயலுக்கு மூன்றேகால்கள் தானென்று வன்பேச்சுப்பேசி வழக்கம்போல் வீண்படாடோபங்கள்செய்து வருகிறார்கள்.

ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் மேற்றிசைக் கலைக்கியானிகளில் அதிக மேன்மைபெற்ற பிரதமஸ்தர்களுள் ஒருவராய் விளங்குபவர். இவர் மேலே வரைந்த விவரங்களை யென்னினும் விஸ்தாரமாக வெடுத்துச் சொல்லி, "உயிர், என்றால் என்ன?" என்கிற கேள்

விக்கு இன்னும் பதில் சொல்ல அறியாதவர்களாகவே யிருக்கிறோமென்று ஒப்புக்கொள் மிஸ்டர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் இறந்தபோது அவருடைய மேலான சித்தாந்தங்களைப் பிரசங்கித்த மிஸ்டர் லியோனார்ட் கோர்ட்னியவர்கள் 'இந்த தேகத்தில் புகுந்து இதை வைக்கும் சீவன் அழிவற்றதென்றால் அது ஆதியிலென்னமாயிருந்தது? இத்தேகத்தை டுப்பிரிந்தபின் அதன் கதியென்னவாகிறது?' என்னும் கேள்விகளுக்கு உத்தரம் கண்டு சொ நம் ஆசிரியரா லாகவில்லையென்று சிஷ்யபாவம் பாராட்டிச் சொன்னார். அப்படியே ஸர் வர் லாட்ஜ் அவர்களும் இந்தப் பிரபஞ்சத்தின் உண்மை யென்னவென்று உணரமாட்ட ராய், இது மாயாரூபமென்பதை மட்டும் ஊகமாய் எடுத்துச் சொல்லுகிறார். மாயை என் அநிர்வாச்சியம்; அதாவது இருக்கு என்றும் இல்லையென்றும் சொல்லக்கூடாததாயிருப் தோன்றிமறைதலே ஸ்வபாவமாக வுள்ளவொன்றை இருக்கென்றாவது இல்லையென்றா எப்படிச்சொல்லுகிறது. இப்பிரபஞ்சம் நிலையற்றது; அதாவது சதா உருமாறிக் கொண் யிருக்குந்தன்மையது. இப்படி மாறுதலையே தன்னிருப்புக்கு ஆதாரமாகவுள்ளது எது அது மாயை. இந்த மாயாரூபமானது இப்பிரபஞ்சம் என்பது நமது தத்துவஞானிகள் அ பவசித்தாந்தம். இந்த உண்மையையே ஸர் ஆலிவர் லாட்ஜ் அவர்கள் ஊகையினால் ஒரு த்திலுணர்ந்து, உணர்ந்ததை சாஸ்திர உண்மைகளுக்கு ஒப்பச்சொல்கிறார். அவர் சொல் என்னவென்றால்:— * "ஜீவதேகமுள்ள எதற்கும் ஓயாமாறுதல் இன்றியமையா தமைந்துள் ஸ்வபாவமாக விருக்கிறது. இந்த ஸ்வபாவம் வெளிப்படையாகவாவது, உள்ளடக்கமாகவாவ இருந்து தன்தொழிலை ஓயாது நடத்திவருகிறது. ஜீவதேகங்களுக் குண்மையான இந்த இப்பிரபஞ்ச முழுவதும் எங்கே பார்த்தாலும் வியாபித்து நிற்கிறது பிரத்தியக்ஷம்."

இந்த உண்மையை உள்ளதாக ஒத்துக்கொண்டபின் இப்படியிருப்பதின் அர்த்த என்ன? இதிலிருந்து நாமுணருவதென்ன? என்று கேட்கிறார். இதற்குமேல் துணிந் ஊகிக்க அவருக்குமனந்துணியவில்லை. ஆகையால் 'இதற்குமேல் ஊகிக்க இன்னும் காலம் வரவில்லை' யென்று தம்மட்டிற்கு இக்கேள்விக்கு சரியான உத்தரமின்றி விட்டு, இவரினு துணிந்து முன்சென்ற வேறுசிலர் ஊகித்திருப்பதைத் தாம் அங்கீகரித்தெடுத்துக் கூறுகிறார்.

'சடம், சிவன்' 'வஸ்து, மனது' 'தேகம், ஆத்மா' என்றுசொல்லும் இவைகளின் சம் பந்தா சம்பந்தத்தை உள்ளபடி உணர்ந்தார் இவர்களில் யாருமில்லை. இவர்கள் பரிணாமவிதிப றிக்கோர்வையாய்க்கண்டுபிடித்தறிந்துவந்த உண்மை இங்கு தடைபட்டு நின்றுபோகிறது இகம் பரம் இரண்டிற்கும் மத்தியிலுள்ள காரிருள் நிறைந்த இந்த இடைவெளியைத் தாண் டத் துணிவாரில்லை. இவ்விருகரையையும் சேர்க்கப்பாலங்கட்டி முடிப்பாருமில்லை. இங்கே வந்ததும் சங்கிலி பூட்டுவிட்டுப்போகிறது. 'Missing link' ஐயுமிதைக்கண்டுபிடித்துச்சேர்ப் தற்கு வேண்டியசக்திதான் நம்மேற்றிசைக் கலைக்கியானிகளிடமில்லை. விக்ஞானிகளும் துணி தில்லை. அகன்றிருண்டுபரந்த † இவ்விடைவெளியைத் தாண்டுமுயற்சி மிகப்பிரயாசமான

* "The potentiality or the actuality of constant change is at least a concomitant of every form of life; an now this same condition is found to be running through the whole material universe." Sir Oliver Lodge's own wor

† இதை 'Great chasm' என்றும் 'Yawning Gulf' என்றும் உருவகமாய்க்கூறுவர்.

இதை மதவழிபற்றிச்செல்வோர் 'நெருப்பாறு மயிர்ப்பாலம் தாண்டுவதாக'ச் சொல்வர். கிறிஸ் துவும் அவரை நம்பி அவர்வழிபற்றிச் சென்ற மதசிரேஷ்டர்களும் இவ்விடைவெளியைத் தாண்டிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் நமது கலைக்கியான சிரேஷ்டர்கள் பகிர்முக தரிசனத் தாலே எல்லாவற்றையும் பரீக்ஷித்தறியவேண்டுமென்கிறபிடிவாதம் கைப்பற்றினவர்கள். இதை த்தாண்ட 'பக்தி' யென்னும் சக்திவேண்டும். (Faith) என்று சொல்லும் இந்த சக்தியின்றி இதைத்தாண்ட முடியாது. இஃதிருந்தால் இதற்கின்றியமையாத இன்னொரு சாதனமாம் 'குருகடாக்ஷம்' என்றுசொல்லும் ஈசுவரகிருபையும் கிடைக்கும். புத்திவன்மையும் துணிவும் ஹிருதயசுத்தியு முள்ளவர்களுக்கு இவை தம்மாலே கிடைக்கும். இதையவர்கள் அறிந்து ஒப் புக்கொண்டாலும் சரி ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி. குருபக்தி யில்லாதவர்களுக்கு இது பிரத்தியக்ஷமாவது துர்லபம். யோகசித்திகள் பெற்றமஹான்களாகிய பதஞ்சலி, சுகர், முத லானவர்களுக்கும் சந்தேகங்கள் வந்து மூண்டுகொண்டனவென்றால் மற்றவர்களுக்குக் கேட் பானேன். ஊகையால் உண்மையை ஒருவிதத்திலறிந்தாலும் அறிந்ததை யநுபவிக்க முத லில் ஹிருதயசுத்தியும் பூர்ணநம்பிக்கையும் வேண்டும். அன்றி சடஜீவ பேதாபேதங்களை யுள்ளபடி யறிந்தவனுக்கு ப்ரம்ம முடிச்சாம் இந்தப் பிரபஞ்சமாயை (Mystery of Life) தானே அவிழ்பட்டுப்போம். அதுவரையில் மனுஷன் தன்னுடைய கிஞ்சிக்ஞசக்தியினால் துணிவுற்று ஊகிக்கத்தான் ஊகிக்கலாம். எவனும் ஸ்வானுபவத்தி லறியக்கூடிய உண்மையை, அதற்கு அந் நியமாயிருந்து நிரூபிக்கவாவது உணரவாவது எவருக்கும் அசாத்தியமாம். இந்தவியாக்கியானத் தோடு இனி ஸர் ஆலிவர் லாட்ஜ் அவர்கள் சொல்வதை யெடுத்துக் கூறுவோம். அவர் சொல் கிறார்:—"உடலுக்கு முயிருக்குமுள்ள சம்பந்தத்தை யுள்ளபடி யுணரத் தற்காலம் துணிந்து சொல்ல மனமெழாவிட்டாலும்; வேறுசிலர் துணிந்து, உள்ளமர்மத்தை ஒருவாறு ஊகித் தறி திருக்கிறார்கள். இவர்கள் சுற்றிச் சுற்றியாராய்ந்தாலும் (Matter) சடரூபமான எதுவும் மன துக்கு வாகனமாம் கருவியாகவுள்ளதே யன்றிவேறல்ல; புலன் பொறியறிவுகளால் நமது அறிவுக்குப்படும் விஷயங்களால் அந்தர்யாமியிருக்கும் அழிவற்ற வஸ்துவின் தன்மையின்ன தென்றுணர்ந்துகொள்ள உளவு ஒன்றும் கிடைப்பதில்லை. அந்தர்யாமியாயிருக்கும் ஆதி மூலப்பொருள் எதுவோ அதை நாமறியோம். ஆனால் அதில் ஒரு அம்சமின்றி நம்தேகங்கள் உண்டாக வில்லையென்பது மட்டும் நிச்சயம். ("அவனன்றியோரணுவு மசையாது" என்பதி னுண்மையை இங்கே அறிந்து கிரகிக்கவேண்டியது.) நாம் எண்ணும் எண்ணங்கள் நமது மூளையின் உருவத்தில் பதிந்து அந்த மூளையினணுக்களுருவத்தில் எண்ணத்துக்குத்தக்க மாறு தலுண்டுபண்ணுவது வாஸ்தவமென்று நம்பக்கூடியதாயிருக்கிறது. இப்படியே உலகத்திலுண் டாகும் எப்பொருளின் அசைவும் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருக்கும் ஒரு பர பொருளின் எண்ணத்தால் பாதிக்கப்படுகிறதென்று சடப்பொருள்களென்று சொல்லுமவ றிலும் தோன்றக் கூடியதாயிருக்கிறது. இது உண்மையென்று ஏற்படுமாயின் அப்பொ ழுது இதற்கெல்லாம் காரணமான ஸர்வக்ஞ புருஷன் யார் என்று விசாரிக்கப் புகுவோம் (லோகாயதமத சித்தாந்தத்தையே சத்தியமாகக்கொண்டு புறப்பட்டவர்கள் ஈசுவரன் ஒருவ னிருக்கிறான் என்று தீராப்பொழியாக விசாரிக்கும்படியான ஸ்திதிக்கு பலாத்காரமாகத் தள் ளிக்கொண்டு போகப்படுகிறார்கள்.) இந்த நிலைக்கு வந்தவர் இனிஜாக்கிரதையாக விரு

வேண்டுமென்று எச்சரிக்கிறார். பூர்வமதங்களை யெல்லாம் பொய்யென்று கண்டித்துபிருதுகட் சத்தியக்கொடிநாட்ட யத்தனித்த மேற்றிசையாராய்ச்சி முறைபற்றிய "சாஸ்திரம்" அனேக நூற்றாண்டுகளாக கைக்குழந்தைபோல் துணியில்சுற்றிக் கைகால் அசைக்கமுடியாமல் கிடந் தப்பட்டு வந்ததென்றும்; நியூடன், காலிலியோ இவர்கள் கையைக்காலை யுதறிக்கொண் படாதபாடுபட்டு மேல்துணியை ஒதுக்கித் தள்ளிவிட்டார்களென்றும்; இன்னும் 50-வருஷ காலத்தில் எவ்வளவோ அதிசயமான நூதன உண்மைகள் வெளியாகப் போகின்றனவென் றும் சொல்கிறார். மேற்றிசையார் இப்பொழுதுதான் சிசுத்தன்மை நீங்கி குழந்தைப்பருவ மடைந்து தொட்டிலிலிருந்து விளும்புக்கப்பால் எட்டிப்பார்த்து வருகிறார்களென்றும், இப்படிப் பார்க்கும்குழந்தை முதலில் தன்கண்ணுக்குப் படுவதைக்கண்டுப்பயப்படுவது சகஜந்தானேயென் றும், அவர்கள் பயந்தெளியக் காலமும் வயதும் செல்லவேண்டுமென்றும் சொல்கிறார். அடுத்த நூற்றாண்டில் மனுஷஜாதியார் மொத்தத்தில் இப்பொழுதைவிட எவ்வளவோ மேலாய்விளங்கு வார்களென்றும், இக்காலத்து தத்துவசாஸ்திரிகளுக்குள்ள அறிவு அக்காலத்து சாதாரண மனுஷர்களுக்கிருக்குமென்றும், மனுஷன் என்னதான் முன்னடைந்து விர்த்திக்குவந்தாலும் அவனுக்கும் அறிவுக் கெட்டாத கடவுளினுண்மைக்கும் "தூராதிதூரம் சொல்லத்தொலை யாது" என்று ஔவையார் சொன்னபடி வெகுதூரமாகவே யிருக்குமென்றும் சொல்கிறார். இது உண்மை. எக்காலத்திலும் கடவுளின் உண்மையை உள்ளபடியறிந்தவர்கள் சொற்பமாகவே யிருப்பார்கள். ஆயினும் அவன் 'ஏழைக்கெளியவன்' என்பது மட்டும் பொய்யாகாது. ஆகை யால் பகவானை ஹிருதய சுத்தியோடு பக்திசெய்து பஜித்து வருகிறவர்கள் எப்போதும் அவன் திருவருட் பிரகாசத்துக்குப் பாத்திரராகவே யிருப்பார்கள் என்பது திண்ணம்.

## "பகவத்கீதை வசனம்."—முகவுரை.

ஸ்வானுபவச் செல்வியாம்

### செங்கோட்டை ஆவிடையாரம்மாள்.

இதற்கு இரண்டு மூன்று தலைமுறைகளுக்குமுன் திருநெல்வேலி ஜில்லாப்பக்கத்தி லுள்ள செங்கோட்டையிலுதித்த பெண்மணி யொருவளிருந்தாள். இவள் பிராம்மணகுலத் திலவதரித்தவராதலால் இந்நாட்டு வழக்கம்போல் பாலப்பருவத்திலேயே பாணிக்ரகணம் செய்துகொடுக்கப்பெற்றுப் பத்து வயதாகுமுன்னரே பர்த்தாவையிழந்து *'பாலவிதந்து' என்றுசொல்லும் அக்ஞானபரம்பரையாய் அவதரித்து 'வேதபூமி'யென்று பேர்பெற்ற இப்பர தக்கண்டத்திற்கே அற்புதமாயுள்ள அனர்த்தகோஷ்டியில் சேர்ந்தவரானார். தன்னறிவு, தன் னிச்சை, தன்சம்மதி யென்றுசொல்லும் ஸ்வயேச்சை மனிதர்க்குரிய ஒரு சுதந்தரமுமின்றி 'தன்விதி' யென்று வழங்கும் கொடிய வல்விலங்குவாய்ப்பட்டு, தானறியாப்பருவத்தே தர்ம தர்ம விசாரமின்றி பலாத்காரமாய்த்தானே 'பாலவிதந்து' கோஷ்டியில் கொண்டுபோய்ச் சேர்

* 'பாலபிரமசாரிணி' யெனும் பேர் இவர்களிருக்கவேண்டிய நேர்மைக்கும் தூய்மைக்கு உண்மையில் உள்ளபடி பொருந்தும்.

கப்பட்டபின், உத்தமசித்தம் வாய்ந்த விப்ரசிகாமணியாம் இப்பெண்ணரசி "கேள்விமுறை யில்லையோநாதா" வென்று யாரை நொந்து வருந்தினளோ! எத்துயர்ப்பட்டழுதனளோ! தெரிய வகையில்லை. தெய்வமேயறியும். இப்படியிருந்து வளர்ந்து வருங்காலத்தில் ஒருநாள் பாக வதசிரேஷ்டரொருவர் தெருவோடு பகவத்கீர்த்தனைசெய்து கொண்டு தெருவுமத்தியில் நின்று அமுதுபடியளிப்பார்க்கு ஆசீர்வசனம் சொல்லி முகத்தில் பிரம்மதேஜஸ் விளங்க உள்ளங்கனிய உடல் நெக்குவிட்டுருக பகவானைப்பற்றித் தோத்திரங்கள் பாடிக்கொண்டுபோனார். அவரைப் பார்க்கவும் அவர் திருவடியில் விழுந்து பணிந்து அமுதுபடியளந்தால் தனக்கு அமிர்தபிச்சை கிடைக்குமென்று உள்ளத்தில் தோன்ற, கைம்பெண் வெளிவரக்கூடாதென்கிற கட்டுக்குட் பட்டு தன் தாயாரை விளித்து "அம்மா அப்பெரியவரைப் பணிந்து சற்று இங்குவந்து திரு வருள் சாதித்துப்போகப் பிரார்த்திக்கிறேன் என்று சொல்லேன்" என்று கேட்டுக்கொண்டார். அவ்வன்னையவளும் அப்படியேசெய்ய, அவருக்குத் தன்கையால் திருவமுதுபடியிட்டு, மனங் குழைய அவரைப் பிரதக்ஷணம்செய்து காலில்விழுந்து கண்கலங்க பக்தி நிறைந்து தலைகுனிந்து நின்றார். பாகவதரும் கைநீட்டி ஆசீர்வசனம்கூறிப் போய்விட்டார். பின்னொருநாள் ஆற்றங் கரையில் ஸ்நானத்துக்குப் போனபொழுது அந்த பாகவதர் பல்விளக்கி விட்டெறிந்த மாவிலைப் பிச்சத்தை அன்போடெடுத்து ஆதரவோடு வாயில் வைத்துக்கொண்டாள். இதைப்பார்த்த பெரியவர், அவளை நெருங்கி "அம்மா, அது எச்சிலாயிற்றே, குலாசார ஜனாசாரத்துக்கு விருத் தமாய் அதையெடுத்து வாயில் வைத்துக்கொள்வதேன்?" என்று உளங்கனிந்துகேட்டார். அதற்கு அப்பெண்மணி "ஸ்வாமி, பெரியவாள் உச்சிஷ்டம் உட்கொண்டால் உத்தம பக்தியும் கடவுள் கிருபையும் கிடைக்குமென்று சொல்வார்களாதலால், அந்தவசனம் இவ்வேழையே னுக்குப் பலிக்காதாவென்று நினைத்து, அப்படிச் செய்தேன்" என்று சொல்லிச்சும்மாவிருந் தாள். ஸ்வானுபவச் செல்வராகிய அந்த பாகவதசிரேஷ்டர் "அப்படியா அம்மா, பரம சிலாக்கி யம்: பக்தியினாலாகாத தொன்றில்லை" யென்று விட்டு, "ஸ்நானம்செய், பகவத் சங்கல்பம் எப் படியோ பார்ப்போம்" என்று சொல்லி, தானும் ஸ்நானம்செய்து ஜபதபகர்மங்களைச் செய்யத்து வக்கினார். அப்பெண்மணி ஸ்நானம் செய்துமுடித்தும் அவருடைய அனுமதியின்றி வீடு போக மனம் வராமல் அவர் ஜபதபம் செய்து கொண்டிருந்த அசுவத விருக்ஷத்தின் மேடைக் கருகேயே, குனிந்த தலையோடு கட்டைவிரலைப் பார்த்தகண்களும் அவரிடத்தில் பக்தி பூர்வ மாய்ப் பதிந்த சிந்தையுமாய் நின்று கொண்டிருக்க, தியான சமாதியிலிருந்து கண்விழித்த ஸ்வானுபவச்செல்வராம் பாகவதசிரேஷ்டர் "ஏனம்மா ஈரப்புடைவையோடு இத்தனை நேர மாக நின்றுகொண்டிருக்கிறாயே" என்று அன்புகூர்ந்து கேட்க, "என்னவோ இவ்விடத்தை விட்டுப் போக மனம் வரவில்லை: பகவத்கடாக்ஷம் தங்கள் மூலமாகவே கிடைக்கப் போகிற தென்று காத்திருக்கிறேன்" என்று செப்பினார். சமாதிநிலையில் அப்பெண்ணின் உள்நிலையை யும் அவளுடைய பக்தி முதிர்ச்சியினால் அவளுக்கு பரிபாககாலம் கிட்டியதையும் உணர்ந்த பாக வதோத்தமர் "அப்படியா அம்மா! ஆனால் இந்த அசுவத விருக்ஷத்தினடியில் வந்துட் கார்" என்றுசொல்லி அவள் காதில் அப்பொழுதே "ஆத்மோபதேசம்" செய்யலானார். அந்த உபதேசம் அவருடைய பரிபக்குவ விசேஷத்தினால் அதிதீவிரமாகவே பலித்து அந்தக்ஷணம் முதல் "ஆத்மநிஷ்டை" கைகூடப்பெற்று, வெகு சீக்கிரத்தில்தானே ஆத்மானந்த ஸ்வானு

பவம்பெற்று அத்வைத சிகாமணியாய் வாயைத்திறந்த மாத்திரத்தில் வரகவிபாடும் சித்தி பெற்று எல்லாருக்கும் சத்தியத்தைப் போதித்து, திருவாங்கூர் சமஸ்தானத்திலும் திருநெல்வேலியிலும் பண்டித பாமரர்களெல்லாராலும் கொண்டாடப் பெற்று வெகு பிரபலமாயிருந்து விளங்கினரென்று தெரியவருகிறது. இந்த அம்மாள் தம்மனுபவங்களையும் உபநிஷத்துக்களின் சாராம்சத்தையும ஸ்வயமாக வரகவிபாடி விளங்கவைத்திருப்பதோடு இந்த பகவத் கீதாசார சங்கிரகத்தையும் திருவாய்மலர்ந்தருளினரென்று தெரிகிறது. இவருடைய பாடல்கள் திருநெல்வேலிப் பக்கங்களில் வீடுகள் தோறும் பெண்பாலரால் கர்ணபரம்பரையாகக்கேட்டுப் பாடம்பண்ணி காலாகாலங்களில் மனதைக் களிக்கச்செய்யும் பாட்டுகளாகவும், பூஜாகாலங்களில் பாராயணமாகவும், ஓதப்பட்டுவருகின்றன. இவையன்றி 'வேதாந்தவித்யா சோபனம்,' என்றும் 'வேதாந்தப்பள்ளு' என்றும் 'அன்னே பின்னே' யென்றும் பலவித பரிகாசப்பாட்டுகளும் அத்வைத சித்தாந்த உண்மைவிளங்க இவரால் பாடப்பட்டிருக்கின்றன. இந்தபகவத்கீதா சாரசங்கிரகம், 'பகவத்கீதை வசனம்' என்று தென்தேசத்துப் பெண்பெண்டீர்கள்ால் நித்யபாராயண யோக்கியமாக அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது. இதை அப்படிப்பாராயணம் செய்யும் ஒருவர் வாய்ப்பிறப்பாகவே கேட்டுத் திருத்திச் சீர்ப்படுத்திப் பிரசுரிக்கலானேம். இதை முதல்முதல் இம்முகவுரை யெழுதுவோர் புத்திரசோகத்தால் வருந்தியகாலத்தில் தன் தர்மபத்னி வாயிலிருந்து வரக்கேட்டு ஆறுதலடைந்து அது முதல் ஆத்மஞானம் தேடுவதில் புத்திபாய்ந்தவராய்ப் பல வருஷங்கள் அத்தர்மபத்நீசமேதராகவே யுழைத்து ஈசுவரானுக்ரகம் பெற்றகாலத்தில் அப்பதிவிரதாசிகாமணி விதேகமுக்தி பெறப், பின்னே விடப்பட்ட தம்காலம் ஸத்காரியத்தில் கழியவேண்டுமென்று சிந்தித்து அவ்வுத்தமியின் பக்திவிசேஷத்தால் தானடைந்த பெரும்பாக்கியத்தை உலகறியவெளியிட்டால் உத்தமபத்நீ தர்மமும் உண்மையிபிரியமும் புண்யபூமியாம் இப்பரதகண்டத்தில் முன்போல் விர்த்தியாகித்தழைக்குமென ஹிருதய பூர்ணமாய் நம்பி அவ்வுத்தமியின் ஞாபகார்த்தமாக ஆத்மவித்தையாம் நல்வித்தைச் சிறுவசிறுமிகளாம் பாலரது தூய ஹிருதயத்தில் இளம்பிராயத்தில்தானே விதைத்து, அதிலிருந்து பக்தி யென்னும் முளைகிளம்பி, சிரத்தை யென்னும் வேர்விட்டு, தர்மம் என்னும் தழைதழைத்து, புநிதம் என்னும் பூப் பூத்துப், புண்யம் என்னும் பிஞ்சுவிட்டு, பரிபக்குவகாலத்தில் அது முத்திப்பழ மீன்றருள அதிலிருந்து வரும் அழியாத இன்பரஸத்தைப்பருகி உண்மையான ஆனந்தானுபவமாம் இகபராபேத நித்யசுகத்தை இப்பிறவியிலேயே அனுபவிக்கச் சாதகமாகும்படி இதை இரண்டரை வருஷகாலமாகப் பல அன்பர்களுதவிகொண்டுழைத்துச்சேர்த்துத் திருத்திச்சீர்ப்படுத்தி யச்சிட்டு பிர்ம்மார்ப்பணமாக சமர்ப்பித்து வெளியிடலானர்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

குறிப்பு.—இதை வெளியிட உதவியாயிருந்த பல நண்பர்களில் விதேகமுத்தியடைந்த அம்மணியின் உயிர்த்தோழியும் ஆத்மபந்துவுமான ஸ்ரீகர்மாக்ஷியம்மையும் இதை யெழுதுபவருக்கு ஆப்தநேசரான பிரம்மஸ்ரீமுத்துவையர் அவர்களும் தேவதாவிசுவாசமபாராட்டிச் செய்த உதவி மறக்கற்பாலதன்று. எல்லாக் கர்மங்களுக்கும் கர்த்தாவும், போகங்களுக்கு போக்தாவு...

...கவிருந்து கர்த்திருத்வ போக்திருத்வங்களினல் கட்டுப்படாத 'சந்நியாச சமுசாரி'யாகிய ...ன் திருவடியில் இதை சமர்ப்பித்தபின் இவருக்கு வந்தனமளிக்கவும் நமக்குவாயில்லை ...ம்பவது. ஓம் ஸ்ரீகிருஷ்ணயநம:

'வாசுதேவா! உன்னையேநம்பினேன்: உன் பாதாரவிந்தமேசரணம்"—ஸ்ரீலோகநாயகிவசன

உ

*Om! Adorations to the Supreme Sri Krishna.*

# THE WORD OF THE LORD

## BEING AN EPITOME OF THE BHAGAVAT-GITA

As Revealed to the World by a Self-Realised Soul

(Known as Avadaiyarammal.)

A Godly Woman's Gift to the Faithful and True of Her Sex and Her Children.

ஸ்ரீகிருஷ்ணய பரப்ரஹ்மணேநம:

# பகவத்கீதை வசனம்

என்னும்

## ஸ்ரீ பகவத்கீதா ஸார ஸங்கிரஹம்.

பாயிரம்

தெய்வ வணக்கம்

### உமாதேவியார் துதி.

குலதே வதையே, குருவேயென் ஞண்டவரே
(உம்) வடிவே சரணமம்மா வந்தெனக்கு முன்னடைவீர்.
மலமாயை தீர்த்தவளே, மாஹேசுவரீ சரணமம்மா!
பூரண ஸ்வரூபியே புவனேசுவரீ சரணமம்மா!
தர்மாம் பிகையே தாயே சரணமம்மா!
தாயே, தயாநிதியே, சங்கரியே, ஐங்கரனைச்
சேயாகப் பெற்ற திருவே, முன் வந்தருள்வாய்;
முத்திதரு நாயகியே, முன்னைவினை தீர்த்தவளே,
பத்திரசம் தந்து பவபயத்தை வேரறுத்துச்
சித்தம் துலக்கிச் சிவத்வ மாற்றிவைத்துப்
பித்துறவு தீர்த்தெனக்குப் பேரறிவு தானளித்து

எப்போதும் ப்ரஹ்மரஸம் என்றனக்குத் தந்தவளே,
கற்பிதத்தை வேரறுக்கும் காந்திமதி காமாட்சி,
ஒப்புயர் வற்றவளே, உத்தமியே, உன்கிருபையால்,
மைப்புயல் வண்ணன் வசனித்த கீதையதைப்
பத்தியுடனேயின்று பாங்காக நானுரைக்கப்
புத்தியுடன் வாக்குப் பொருந்த அளித்தருளித்
தட்டுவா ராமற் சாங்கமாக் கூட்டம்மா,
சற்குருவாய் வந்தென் ஜனனபயம் தீர்த்தவளே,
எப்போதும் எம்மை இரட்சிக்கும் ஈசுவரியே,
அற்புதமாம் பாதத் தனந்தநமஸ் காரமம்மா.

## சரஸ்வதி துதி.

சரஸ்வதியே யுன்றனையும் சரணமென்று வந்தடைந்தேன்,
நிரந்தரமா முன்வந்து நீயுமென்னைக் காத்தருள்வாய்;
பரமஹம்ஸர், பத்தர், பழுதற்ற ஞானியர்கள்,
திடமாக வேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியன்று,
பகவான்றம் வாக்காற் பதினெட்டு அத்தியாயம்
உபதேசம் பண்ணினதை உற்றவுயிர்த் தோழனுக்கு,
உலகளந்த மாயவனார் உரைத்தவதன் ஸாரத்தைத்
தமிழாலே விஸ்தரிக்கத் தாயே அருள்புரிவாய்.
கருணையுள்ள ஸ்ரீகிருஷ்ணர் கண்ணான மைத்துனர்க்குத்
தெயவுடனே பார்த்துத் திருவுள்ளம் பற்றினதை
நயமா வுரைப்பதற்கு நாவிருந்து நீயருள்வாய்.

## தேவர் முனிவர் ஆசாரியர் முதலானோர் துதி.

மகிமையுள்ள ஈச்வரரே, மாதவரே, வேலவரே,
அகிலவுல கும்துதிக்கும் ஆதி விநாயகரே,
ஞானத்தை நல்கி நலமாக வாண்டருள்வீர்;
ஊனத்தை நீக்கி யுயர்வாக வாண்டருள்வீர்;
திங்களொடு கங்கை சிரசிற் றரித்துமலை
மங்கையொரு பாகம் மருவும் பரஞ்சுடரை
அண்டமெல்லா முண்டு அடியளந்த மாதவரை
எண்டிசையும் காத்தளிக்கும் ஏற்றமுள்ள தேவர்களை,
எட்டுதிக்கும் கீர்த்தி யேறும் எதீச்வரரைச்,
சட்டமுடனே படிக்கும் சாஸ்திரிகள் பாகவதர்,
சங்கரா சாரியரைச், சமயகுரு நால்வர்தமை,
அங்கமறை வேதியரை, அரியபல தேசிகரை,



வேத வியாசரை, விமல முனீச்வரரை,
நம்பியவர் பாதம் நமஸ்கரித்து நான்பணிந்தேன்.
அன்புடனே யென்னை யாளுமென்று தோத்தரித்தேன்.
எல்லாரும் என்னிடத்தில் இரங்கி அருள்சுரந்து,
அஞ்சாதே யென்று அபயஸ்தம் தந்தருள்வீர்.
நெஞ்சிலுள்ள கிலேசமெல்லாம் நீக்கி யருள்புரிவீர்.
அத்துவிதம் சொல்ல அருள்செய்து முன்னடைவீர்.

## ஸ்ரீ கிருஷ்ணபகவான் துதி.

கிருஷ்ணா கிருபாநிதியே கிருபைசெய்து முன்னடைவீர்;
விருத்தாந்த மாயிருக்கும் வேதாந்த ஞானிகட்கு,
விருப்பமெலாம் விட்டொழிந்து மெய்ப்பொருளைக் கண்டோர்க்குத்,
திருப்பதத்தை நல்கியருள் தேவர்குலச் சிங்கமே,
ஜகத்தை விளக்கும் செழுஞ்சுடரே ஆண்டவரே,
அனர்த்தம் தவிர்த்தென் அபீஷ்டம்நிறை வேற்றிவைத்து,
அருச்சுனனுக் குஸ்வாமி அநுக்கிரகங்கள் பண்ணினதை
எப்படியோ நானறியேன் இதமாக வேயுரைக்க
ஒத்தாசை பண்ணி உறுதிப் படவெனக்குப்
புத்திக்குள் ளேயிருந்து புருஷோத் தமராயா,
அடியேனுக் காதரவாய் அநுக்கிரகிக்க வேண்டினேன்.

(தெய்வவணக்கம் முற்றிற்று.)

## அவையடக்கம்.

பேதையேன் சொல்லுமிதைப் பெரியோர்க ளெல்லாரும்
ஆதரவாய்க் கொள்ளுகைக்கு அவரருளை வேண்டினேன்.
இலக்கியமும் நானறியேன், இலக்கணமும் நானறியேன்,
கலைக்ஞானம் தானறியேன், கல்வியில்லேன். ஆனாலும்,
சித்திரம்போற் பெற்ற சிறுகுழந்தைப் பாலன்சொல்
புத்தமுதம் போலுவந்து பூரித்துக் கேட்பாள்தாய்,
அப்படிப்போல் என்னிடத்தில் ஆதரவுண் டாமானால்,
எப்படிநான் சொன்னாலும் இதமாக வேயிருக்கும்.

(அவையடக்கம் முற்றிற்று.)

பாயிரம் முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நமஃ

உ

ஸ்ரீகிருஷ்ணாயநம:

# பகவத்கீதை வசனம்

என்னும்

# ஸ்ரீ பகவத்கீதா ஸார ஸங்கிரகம்.

## 1. ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் உத்தேசம்.

கனப்பொருளாய்க் காரிய காரண வஸ்துவாய்,
நிருபாதியாய், எங்கும் நிறைகின்ற பூரணமாய்,
நாரா யணராய், நடுக்கடலிற் பள்ளிகொண்டு
அனவரதம் கண்வளரும் ஆதியந்த மற்றவராய்,
சகலஜக மத்தனைக்கும் ஸ்தாபக ராயிருந்து
சச்சிதா னந்தவஸ்து தாமா யிருந்தவொரு
பச்சைமுகில் மேனிப் பரமரொரு காலத்தில்,
தர்மமொ டதர்மம் சதுர்வேத ஞானமெல்லாம்
மெய்மறந்து கெட்டு விழுமதனைத் தாம்கண்டு,
நன்மையொடு தர்மத்தை ஞானத்தை ஸ்தாபிக்க
மகிமையுடன் வந்துதித்தார் வசுதேவர் தம்மனைக்கே.
வந்துதித்தார் பக்தர் மனக்குறைகள் தீர்க்கவென்றே,
அண்டவொண்ணாத் துஷ்ட அசுரர்களைச் சம்ஹரிக்க,
துண்டரிக்க மானபல துஷ்டர்களைச் சிட்சிக்கப்,
பொற்கொடியாள் பூமியுடை பாரமெல்லாம் தீர்க்கவென்று,
சற்புருடர் தம்மைத் தயவாரட் சிக்கவென்று,
அவதாரம் அன்றுசெய்தார் அகிலாண்ட நாயகரே.

## 2. ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களுக்குச் செய்த பேரருட்டிறமை

அவதரித்து வந்த அகிலாண்ட நாயகனார்,
மற்றுமந்த நாளையிலே மலரடிக்கே அன்புசெய்யும்
வெற்றியுள்ள பாண்டவர்க்குச் செய்த பெருங்கருணை
தன்னையிங்கு சொல்லத் தரமோ எனக்கதுதான்,
சொன்னமுனி வியாசர்க்கும் துணிவில்லை யேயுரைக்கச்;
செங்கமலை நாயகனார் சிறுயரும் பாண்டவர்க்குத்
தாதருமாய்ச், சாரதியாய்த், தோழருமாய்ப் பந்துவாய்,

ஆசா ரியராய், அதிஷ்டான தேவதையாய்ப்,
பாவனை பண்ணும் பரிபூர்ண வஸ்துவாய்,
மாளாப் பதம்கொடுக்கும் மாசற்ற ஜோதியுமாய்,
பல்விதமாய்ப் பாண்டவர்க்குப் பகர்கருணை செய்திட்டார்.

## 3. பாண்டவர்கள் பாரதயுத்தம் தொடங்குதல்.

வைகுண்டம் வாழ்பதியை மைத்துனரா கப்படைத்து
ஆரும் எதிரற்ற அறிவுடைய பாண்டவர்கள்
முன்னை வினைப்பயனால் முழுமாயச் சூதாடி
மன்னன் துரியோ தனன்தனக்கு வாரியிட்டு,
நாடுநகர் ராச்சியங்கள் நண்ணினதெல் லாம்இகழ்ந்து,
காடு தலையெழுக்கக் கன்னிதுகில் முள்ளிழுக்கச்
சென்று திரிந்து சிறுமைபல பட்டதன்பின்,
அக்ஞாத வாசமும் அடைவாகச் செய்துபின்பு,
தாமிழந்த நாடும் தகையும் பெறவேண்டிப்,
பாரதப்போர் தன்னைப் பாங்காக மேற்கொண்டு,
சேனை புடைசூழச் சின்னங்கள் தாமுழங்க,
ஆனையொடு தேர்கள் அணியா நெருங்கிவர,
மாரதரின் வெள்ளம் மலைபோல் திரண்டுவரச்,
சூரர்தொகை எங்கும் கடல்போலச் சூழ்ந்துவர,
வந்தெதிர்த்து யுத்தம் மலையும் களந்தனிலே,
சுந்தரமாய்ச் சோடணிந்து தொப்பாரம் தானிணக்கிக்,
கண்டவிர்கள் கொண்டாடக் கச்சை வரிந்துடுத்து,
அம்புறாத் தூணிகட்டி ஆயுதமும் கைப்பிடித்துச்,
சண்டைப் புசத்தில் தனுவெடுத்து நாணேற்றிச்,
செங்கமலை நாயகனார் தேருகைக்க மைத்துனர்க்கு,
நந்தர்மகன் தேர்விடவே வந்து நடுப்படையில்
விண்டமலர்க் கண்ணால் விஜயனெங்கும் பார்த்தளவில்,
கண்டு நடுங்கிக் கருத்தழிந்து வீரியனும்
சிந்தை மிகக்கலங்கி ஸ்ரீகிருஷ்ண ரைநோக்கி,
அங்கம் பதறி அருச்சுனனும் என்னசொல்வான்:

## 4. அருச்சுனன் சோகித்தல்.

பொங்குகடல் மேனியரே, புண்ணியரே, கேட்டருள்வீர்:
இங்கிவரைக் கொன்று இரத்தவெள்ளம் சேறாக்கிச்,
சம்ஹரித்தி ராச்சியத்தைத் தாமாளத் தேவையில்லை;
[illegible] மலத்தமர்தக் கானகத்தே,

எங்கும் திரிந்து இரந்துபிக்ஷை தானெடுத்து,
உண்டுதிரிந் தாற்போதும் உலகளந்த மாதவரே.
எங்கும் படர்ந்து எதிரிதன்னைக் கொல்வெனென்று
சிங்கம்போல வீரர் திணியும் செருக்களத்தில்
வந்தெதிர்த்திப் போது மனஞ்சலித்த காரணத்தைக்
கண்டித்துக் கேட்டால் கழறுவேன் கேளுமையா:
அஞ்சலிகள் பண்ணி அடக்கமுடன் கிட்டிநின்று
கொண்டாடிப் பூசிக்கும் குருவும் பிதாமகரும்,
தந்தை சகோதரரும் தன்னுடைய உற்றாரும்,
சுந்தர மாயிருக்கும் தோழரும் பந்துவும்,
மாமனும் மைத்துனரும், வாஞ்சையுயிர்த் தோழர்களும்,
பேரரும் பிள்ளைகளும் பிரியமுள்ள பந்துவும்,
வந்து நெருங்கி மறங்கொண் டெதிர்த்துநிற்க
மற்றவரைக் கொன்றுநான் வாழ்வடைதல் நீதியோ?
ஏழுகடல் போலுமிந்த எண்ணமற்ற சேனையெல்லாம்,
சேனையினைச் சம்ஹரித்துச் சீமைகட்டி ஆள்வதனால்,
ஏது பலனெனக்கு எழுதரிய மேனியரே.
தேவையில்லை தேவையில்லை சீமைகட்டி ஆளுகைக்கு;
தேவரீர் சித்தம் திருவுளத்துக் கொத்தபடி.
(என்று) ஆயுதமும் நீப்பிபோட்டு அர்ச்சுனன் சேவடிக்கே
சோகமு டன்விழுந்தான் சூரனென்னும் வீரியவான்.

## 5. ஸ்ரீபகவான் அர்ச்சுனன் சோகத்தை நீக்குதல்.

ஓதும்உரை யும்விஜயன் உற்றதுவும் தான்கண்டு,
மாதுவளர் மார்பர் மந்தஹாச த்துடனே,
சீர்படிந்த கண்ணால் தெயவுடனே தான்பார்த்து,
ஆதரவாய் மைத்துனனை அன்போ டெடுத்தணைத்துக்,
குன்று குடைபிடித்த கோபால மூர்த்தியரும்,
சகலமும் தானறிந்த சர்வஞ்ஞ மூர்த்தியரும்,
அறிந்தெம் பெருமான் அருச்சுனனைத் தான்பார்த்துச்,
சிறந்தசில வார்த்தை திகழ எடுத்துரைப்பார்.
எங்கிருந்து வந்ததுனக் கேனழமதி தானின்று,
புங்கவர்கள் கொள்ளாப் பொருமல் புகழ்சிதைய?
அறியாயோ நீயெம் அருந்திறமும் ஆற்றலும்,
தெரியாயோ எந்திறங்கள் தேசுடைய வீரனே?
பண்ணுவோம் நாம்யுத்தம் படைபிரிந்து போனாலும்
மாயையினாலே மனசைக் கலக்கிவைப்போம்!
ஆங்காரத் தாலே ஆதிக்கியம் பண்ணிடுவோம்!
கோபத்தை யேவிக் கொல்லுவிப்போம் சேனையெல்லாம்!
மோகத்தை யேவி மோதுவிப்போம் சேனையெல்லாம்!
ஆன கொரோத்தால் அருஞ்செயல்கள் செய்திடுவோம்!
எமக்குத் துணையொருவர் இவ்வுலகில் வேண்டாதில்லை!
(எம்) தமக்குத் துணையொருவர் தாரணியில் வேண்டோமே!
ஆனாலும், உன்னை அகன்றுவிடல் நீதியன்று,
வாள்வேந்தே உன்னாலே வன்போர் முடிக்கவுள்ளம்
சங்கற்பம் செய்ததுதான் தவறல் முறையன்று,
கேளா யருச்சுனனே கிலேசமறச் சொல்லுவதை.
அறிவுடையா யானாலும் அந்தோ மறந்துவிட்டாய்,
ஆத்ம விசாரத்தை அத்தனையும் கைவிட்டாய்.
ஆத்மாவின் தன்மை அறியச்சொல் வென்கேளாய்,
மயக்கம் ஒழிய வருத்தங்கள் தீர்ந்திடவே;
(என்று,) ஆதரவாய் மைத்துனர்க்கு ஆத்மஞா னம்உரைப்பார்.

## 6. அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் ஆத்மோபதேசம் செய்தல்.

அழியாத வஸ்துவது, ஆனந்த ரூபமது,
சச்சிதா னந்தத் தனிப்பொருளாய் மேவுவது,
ஆதியந்த மில்லாத அற்புதமாம் வஸ்துவது,
பிறவாது மண்ணிற் பெயராது மண்ணைவிட்டு,
வானதனைத் தீண்டாது, வாயு அசைக்காது,
ஆன நெருப்பதனை அண்டியே காயாது,
நீரால் நனையாது நிலத்தால் இறுகாது,
சேரும் விகாரமற்ற தேஜோ மயமதுகாண்.
இறப்பும் பிறப்பும் இன்பமொடு துன்பமும்
தொந்தங்க ளெல்லாம் சூக்ஷ்மத்தை ஆராயின்,
எடுத்த உடலுக்கன்றி ஏதுமதற் கில்லையே.
இந்தஉடல் போனால் எடுக்குமற்று மோருடலம்,
கந்தையாய்ப் போனவஸ்த்ரம் கழித்தொன்று நூதனமாய்
அந்தமுடன் நீர்முடிக்கும் அப்பரிசு போலவே.
கொல்வாரும் இல்லையதைக் கொல்விப்பார் தாமில்லை,
வெல்வாரு மில்லையதை வேறுசெய்வார் தாமில்லை.
காணும் பொருளெல்லாம் கானற் சலம்போலே,
வீணா யொழிந்து வேறாகிப் போய்விடுமே.
மாயா வடிவம் மயக்குமவை யிவ்வுலகை

நீயுற்றுப் பார்த்தாயேல் நீங்கிவிடு மக்கணமே.
அழியாத வஸ்துவந்த ஆத்மாவொன் றேனான
விழியாலே பார்த்திந்த மெய்மை யறிந்துகொள்ளே.
மண்ணுலகி லுள்ள மனுஷ்யாதி யெவ்வுயிர்க்கும்,
நீர்க்குமிழி வாழ்வு நிலையில்லை நீகண்டாய்.
தலையி லெழுத்தைத் தவிர்க்குகைக்குத் தான்வசமோ?
த்ரணியிலே வாழ்வொழிந்து சாங்காலம் வந்துவிட்டால்,
வாதமென்றும் பித்தமென்றும் வலிப்புநொடு மூர்ச்சையென்றும்,
வெதுப்பென்றும் வேறுசில வேதுக்கள் வேண்டிடல்போல்,
இகல்விசயர் கொன்றார் என்றுன்னைச் சாக்கிடலால்,
நாம்தானே கொல்லுகிறோம் என்றுநீ நம்பாதே,
எம்மாயம் காணாய் இதுவிஜயா நீயறிவாய்.
ஆதலினா லுட்கவலை யாவும் அறவிடுத்துக்
காதலொடு போருக்குக் காண்டீபம் கையெடுப்பாய்.

## 7. பகவான் அருச்சுனன் கலக்கம்தீர வேறு காரணங்கள் கூறிப் போருக்குப் பிரேரேபித்தல்.

பின்னுமொரு செய்தியுண்டு பேசுவது நீகேளாய்;
இன்னமொரு ஏது இசைப்பதையும் கேளாய்நீ.
போர்க்களத்தில் வந்து புறம்வாங்கி னானுன்னைப்
பார்க்குமந்த மன்னவர்கள் எல்லோரும் ஏசாரோ?
ஏற்குமந்த மன்னவர்கள் எல்லோரும் ஏசாரோ?
வானுலகம் சென்று வாஞ்சையுள்ள தாதைக்கு
ஆனதுணை யாகி அரசர்குலம் வேரறுத்துக்,
காண்டவத்தைத் தீக்கடவுள் கருதியுண்ண வேகொடுத்து,
ஆண்டகைமை யாற்பெற்ற அரிய புகழ்யாவும்,
கானகத்தே வேடுருவம் காட்டி யமர்விளைத்த
மானையிடம் வைத்த மகாதேவ ரைப்பொருத
பேரும் பிரதிஷ்டையும் பிழையாத வீரியமும்,
சீரும் சிறப்பும் திகழநீ பெற்றதெல்லாம்,
கமரிலிட்ட நெய்போற் களையவோ நீநினைந்தாய்,
அவமதிப்புக் கொள்ளவோ அர்ச்சுனா நீநினைந்தாய்?
மானமே யன்றோ மாந்தருக்கு மேலானத்
ஊனமதற் குண்டானால் உயிர்வாழ்த லாகுமோ?
நால்வருணத் தாருக்கும் நல்மாக வேயமைத்த
சீலமுறு தர்மங்கள் செய்யாது கைவிடுதல்
நீதியோ நன்மையோ நேரும் அறிவாமோ?
ஓதுகின்ற மன்னவருக் குற்ற பகைவென்று,
தம்முரிமை கொண்டு தரணிதனைப் பாலித்து,
செம்மையுறு செங்கோல் செலுத்தல் கடனன்றோ?
படைமுகத்தி லொப்பாரி பார்க்கிறபேர் தாமுண்டோ?
தழுதழுப்பு விட்டுச் சமர்க்குப் புறப்படுவாய்.

II.

## 8. அர்ச்சுனன் ஸ்ரீபகவான் பெருமைகளைத்தெரிவிக்க வேண்டிக்கொள்ளுத

என்றுபல தர்மங்கள் எம்பெருமான் போதிக்க,
அன்றறிவு வந்து அருச்சுனனு மேதுசொல்வான்.
அநாதிபர மாத்மாவே, ஆளவந்த நாயகமே,
உனதமுதச் சொல்லாலே யுள்ளறிவு பெற்றேனான்.
தேவரீர் மேன்மைதனைச் செப்பியென்றன் சந்தேகம்
யாவையும் போக்கியென்னை யீடேற்ற வேண்டினேன்.
பரமாத்மா வுன்னைப் பிதையாமல் நானறிய
உரமான ஞானத்தை யோதி யுணர்த்திடுவாய்
வைபவத்தைச் சொல்லி மனத்துயரை மாற்றிடுவாய்.
மெய்யுணர்ச்சி தோன்றும் விதம்நீ யுரைத்திடுவாய்.
மாயனே செய்ய மலர்க்கண்ணா செம்பவள
வாயனே மேலான வானோர் சிகாமணியே.
காயாம்பூ மேனிக் கருணா மிர்தக்கடலே!
தாயாகி யெவ்வுயிர்க்கும் தத்தளிப்புத் தீர்ப்பவனே!
ஸ்ரீவத்ச மார்பா ஜகத்துக் கதிபதியே!
பூவுற்ற பாவை பொருந்துமணி மார்பனே!

## 9. ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்குத் தமதுவிபூதிமகிமையைத்தெரிவித்த

(என்று) ஏத்தித் துதித்து இதயம் அனல்மெழுகாய்ப்
பிரார்த்தித்த போது பகவானு மேதுசொல்வார்.
அண்டையிலே கிட்டவந்து அருச்சுனனைத் தான்பார்த்து,
செய்யகனி வாய்திறந்து ஸ்ரீகிருஷ்ண ரென்னசொல்வார்.
விபூதி மகிமைதனை விஸ்தரித்துச் சொல்லுகிறோம்;
ஜீவப் பிரகாசம் ஜகத்தெல்லாம் தோற்றுதல்போல்
ஆத்மப் பிரகாசம் ஆத்தனையும் காமேயாம்.
அண்டபிண்ட லோகம் அநேககோடி பிர்ம்மாண்டம்,

அந்தரட்சம் ஸ்வர்க்கம் அகிலஜக மத்தனையும்,
ஸர்வதேவ பூத ப்ரபஞ்சங்க ளத்தனையும்,
அண்டபிண்ட லோகங்க ளத்தனையும் நாமேயாம்.
பலநதியும் ஓடைகளும் பர்வதமும் ஆறுகளும்,
கெங்கை சமுத்திரம் கீழ்லோகம் மேல்லோகம்,
சப்த சமுத்திரம் சாகரமும் நாமேயாம்,
அச்வமொடு யானை அடல்சேர் மிருகேந்திரனும்,
உச்ரயிஸ்ஸா மந்த வுயர்பரியும் நாமாமே
ஐராவதமா மடகளிறும் அஷ்டதிக்கும்
இதர்ப்யர் தி திரங்கிநிற்கும் தோற்றமுள்ள யானைகளும்,
பாரிஜாத விருக்ஷமும் பார்வையுள்ள பனமரமும்,
கற்பக விருக்ஷம் கர்மதே னுமுதலாய்
அசுவத்த விருக்ஷம் அடங்கலும் நாமாமே.
அண்டத்திலுண்டான அநேகவித பக்ஷிகளும்,
சக்கிரவா கங்கள் சதிரான ஹம்சங்கள்,
கோகிலங்க ளாதி கூறுகின்ற பல்பறவைப்,
பட்சிகளுக் குள்ளே பகர்கருடன் நாமாமே,
அந்தரங்க பக்தர் அநேகவித ராஜரிஷி
பராசரர் பீஷ்மர் பத்தியுள்ள ருக்மாங்கர்,
மேலான ஞானம் விளங்குசுகப் பிரமரிஷி,
அம்பரிஷி விபீஷணர் அதிகபலி சக்கிரவர்த்தி,
தும்புரு நாரதரும் தோன்றுநல்ல யோகிகளும்,
சனகாதி யானஉப சாந்தியுள்ள பத்தர்பலர்,
பக்தர்களுக் குள்ளே ப்ரஹலாத னர்நாமே.
வேத வியாசர் விளங்குங் கபிலரிஷி,
வசிஷ்டரொடு மாக்கண்டர் மற்றுமுள்ள மாரிஷிகள்,
அகஸ்த்ய மகாமுனியு மந்தணரும் நாமாமே.
கின்னரர் கிம்புருடர் கீர்த்தியுள்ள சித்தர்கணம்,
வித்யா தரராய் விளங்குவதும் நாமாமே.
வேதத்து ளேசாம வேதமும் நாமாமே,
அட்சரத்துக் குள்ளே அகாரமும் நாமாமே,
கானல் ஜலம்போலே காண்பதுவும் நாமாமே,
சுத்த ஜலம்போலே தோற்றுவதும் நாமாமே,
அக்கினி மண்டலமும் ஆதித்ய மண்டலமும்,
சூரிய மண்டலமாய்த் தோற்றுவதும் நாமாமே,

மேனகையு மாரழகில் மிக்க திலோத்தமையும்,
ரம்பைமுத லான அப்ச ரஸ்த்ரீகள் நாமாமே.
மீனுகி ஆமையுமாய் மிக்க வராகமுமாய்,
தூணில்நர சிங்கமுமாய்த் தோற்றுவதும் நாமாமே.
காச்யபர்க்குப் புத்திரராய்க் கல்யாண சுந்தரராய்,
மாபலிதன் சாலையிலே மண்அளந்தோர் நாமாமே.
சத்ய ப்ரதிக்ஞைபண்ணி க்ஷத்ரியரை வேர்களைய,
பாரத்வா சர்குலத்திற் பார்காக வேயுதித்த
ஞாலம் புகழ்பரசு ராமரும் நாமாமே.
தெசரதர்க்குப் புத்திரராய் ஸ்ரீநக ரயோத்தியிலே,
மனுஷ்யாவ தாரமாய் வந்துதித்தோர் நாமாமே.
வசுதேவர் தேவகிக்கு மைந்தராய் எதுகுலத்தில்,
த்வாரகைக்கே கிருஷ்ணனுமாய்த் தோற்றினதும் நாமாமே.
கைத்தலத்து நீயேந்தும் காண்டீப முமநாமே,
யுத்தத்துக் குள்ளே ஜொலிக்கிறதும் நாமாமே.
பூதஇந்திரி யங்களுக்கும் புத்திக்கும் சாட்சியதாய்
அந்தக் கரணவிர்த்திக் கநுபூத சாட்சியுமாய்,
அகமாத்மா வென்று அறிகிறதும் நாமாமே.
பரமாத்மா வென்று பார்க்கிறதும் நாமாமே.
சத்தியம் அசத்தியம் தர்மமும் நாமாமே.
சத்துசித் தானந்தம் தாமாய் நிறைந்துகொண்டு
ஆனந்தம் தன்னை அடைகிறதும் நாமாமே.
சப்த ஸ்பரிச ரூபரஸ கந்தமுடன்
பஞ்சேந்திரி யங்களுமாய்ப் பார்க்கிறதும் நாமாமே.
அறிவுக் கறிவாக ஆராயும் பேர்களுக்கு
அறிவுக் கறிவா அமர்ந்திருக்கு மாத்மாநான்,
காணப் படுவதெல்லாம் கற்பித மாயைகண்டாய்,
தோன்றப் படுவதெல்லாம் துச்சமென்று நீயறிவாய்.

## 10. ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனருக்கு விசுவரூபதரிசனம் கொடுத்தருளல்.

(என்று) இவ்வாறு பூதியெலாம் இயலாக வேயெடுத்து,
பார்த்தனுக்குச் சொன்ன பரம கிருபையாளர்
நிர்மல மான விசுவ ரூபத்தைக் காட்டினன்றுர்.
திரும்பாமற் பாரென்று திவ்வியசட்சு தான்கொடுத்தார்.
ப்ரக்ஞான சட்சுவினுற் பார்த்தான் தனஞ்சயனும்,
பூலோகம் பாதாளம் புவனம் பதினன்கும்.

தானாகக் கண்டான் தனஞ்சயனும் அப்போது.
தானாகக் கண்ட தனிப் ப்ரபஞ்ச மத்தனையும்
அண்டபிண்ட மெல்லாம் அடங்கிற் றவரடிக்கே.
உருத்திரரும் கந்தரும் உமையாள் திருமகளும்
சித்தி விநாயகரும் தாமாய்ச் சிறந்திருந்து;
வருணனும் குபேரனும் வாயுவும் அக்கினியும்,
எமனுடனே இந்திரனும் ஏற்றமுள்ள தேவர்களும்,
அஷ்டதிக்கு பாலர் அடங்கவுள்ள தேவர்களும்,
அரக்கரோடு சூரியனும் ஆகாச சந்திரனும்,
நக்ஷத்திரங்கள் நவக்கிரகங்கள் உள்ளதெல்லாம்,
ஏகா தசருத்ரர் எண்ணமற்ற தேவர்களும்,
அண்டமெல்லாம் இந்திரனும் அர்ச்சுனனும் சாத்விகனும்,
பரவாசு தேவருமாய்ப் பரிபூரணர் நின்றார்.
சல்லியனும் பீஷ்மரும் துரோண கிருபா சாரியரும்,
அச்வத்தா மாவோ டடங்கவுள்ள பேர்களொடு,
ஆசாரியர் சேனை யெல்லாம் அணியணியாய்க்
கௌரவர்கள் சேனைகளும் காவலர்கள் சேனைகளும்,
துரியோ தனனும் சோதரர்கள் நூற்றுவரும்,
அண்டபிண்ட மெல்லாம் அசோதை மகன் வாய்தனிலே,
கண்டதுண்ட மாகவிழக் கண்டான் அருச்சுனனும்.
தேசதே சத்துள்ள ராஜரா ஜாக்களெல்லாம்
பட்சிகளைப் போலப் பறந்துபறந் தேதிரிந்து,
விளக்கில் விட்டிற் போலே விழக்கண்டான் அர்ச்சுனனும்;
வெய்யமிருத்யுப் போலே விழுங்குவதைப் பார்த்திருந்தான்;
பிரளயகால ருத்திரரோ (என்று) பார்த்தே திகைத்திருந்தான்
பார்த்தால் தெவிட்டாது (சுவாமி) பாதாம் புஜத்தழகு,
மார்க்கங்கள் காட்டும் மலரடியும் பொற்சிலம்பும்,
செம்பவள வாயொளியும் திவ்ய ரத்ந காந்தியும்,
கண்டவர்கள் கண்களுக்குக் கல்யாண சுந்தரமாம்.
பாதாள லோகத்துட் பாய்ந்த மலரடிக்குச்
சங்கர்ஷ ப்ரத்யும்னர் தாம்வந் தெதிர்கொண்டு,
படமாயி ரங்கள் தன்னாற் பாதமலர் தாங்கிவைத்து,
சுற்றும் விளக்கேற்றித் தூபதீ பங்காட்ட,
அந்த மகிமைகண்டு ஆச்சரியப் பட்டிருந்தான்.
அர்த்த சரீரமும் ஆகாயத் தேபரவ,
ஈமற்ற லோகத்தில் நாதர் முடிதோற்ற,
சிவனும் அயனும் திருமாலு மிந்திரனும்,
மும்மூர்த்தி தேவர்களும் மூர்த்தி கரித்துவரச்,
செம்பொன் மணிமகுடம் திவ்யமல ராய்ச்சொரிய,
அந்த மகிமைகண்டு ஆச்சரியப் பட்டிருந்தான்.

### i. மச்சாவதாரம்.

வைவஸ் வதமநுவை மாண்பாக ரட்சிக்க
ஊழி முடிவில் உகப் பிரளயந் தன்னிலே,
ஜீவஜந்துக ளெல்லாம் ஓடத்திலேற்றி வைத்து,
ப்ரளய ஜலத்திற் படர்ந்துவிளை யாடுமந்த
மத்ஸ்யாவ தாரத்தைக் கண்டு மகிழ்ந்திருந்தான்.

### ii. கூர்மாவதாரம்.

பாற்கடலை யச்சான் பரிவாக வேயடைந்து
தேவா சுரர்கடைந்து தெள்ளமுதம் கொள்ளுகைக்கு
மந்தர பர்வதத்தை மத்தாக வேநட்டு
வாசுகியை நல்ல மணிக்கயிறுப் பூட்டியதில்
வலித்துக் கடைகையிலே மண்ணின் புறங்குழிந்து
உள்ளமுங்கிப் போக அந்த ஓங்குமலை மேலுயர்த்தி
வன்முதுகில் தாங்கி வளமா நிறுத்துமந்தக்
கூர்மாவ தாரமும் கண்டு குளிர்ந்திருந்தான்.

### iii. வராகாவதாரம்.

பாதாள லோகத்துள் பார்முழுகிப் போகவன்று
கொம்பினா லேயுயர்த்திக் கொண்டுவந்து சூத்திரமாய்
தளர்வொழியப் பூமியினைத் தாபித்து லோகமெங்கும்
நடுக்கங்கள் தீர்த்து நலமாக ரட்சித்த
(அந்த) வராகாவ தாரமதும் கண்டு மகிழ்ந்திருந்தான்.

### iv. நரசிம்ஹாவதாரம்.

திருப்பாற் கடல்நடுவில் சேஷன்மேற் பள்ளிகொள்ளும்
ஸ்ரீஹரியைத்தேடித் தேவரெல்லாம் போற்றிசிற்க,
அப்போ தவதரித்து அசுரர்குலம் வேரறுக்கத்
தூண்பிளந்து தோன்றித் துஷ்ட இரணியனை
மார்பைக் கிழித்து மாலையிட்டு வீற்றிருந்த
(அந்த) சிம்ஹரூ பங்கண்டு திகைத்தான் தனஞ்சயனும்.

## v. வாமனாவதாரம்.

வாமன மூர்த்தியாய் வையமெலாம் கொள்ளவென்று
பூமிபதி யானபலி சக்கரவர்த்தி யைப்பொருந்தி
மாமகஞ்செய் சாலையிலே வந்துநின்று மற்றவனைத்
தாமனக்கு மூவடிமண் தாவென் றிரந்திடலும்,
அத்யந்த பக்தியோ டன்று மகாபலியும்,
தானமது பண்ணுத லாகா தெனத்தடுத்த
குலகுருவாம் சுக்கிரன்சொல் கொள்ளாம லன்புடனே
ஓமென்று சொல்லி ஒப்பிக் கொடுத்தபின்பு,
பாசாங்கு பண்ணும் பரிவுடைய வாமனரும்,
ஓங்கி யுயர்ந்து ஒன்று வளர்ந்துநின்று,
உலகமெல்லாம் தம்முடைய ஓரடியால் தாமளந்து,
ஈரடியை வைத்திடலும் எவ்வுலகு முட்டியது;
மூவடிக்கெங் கேயென்று முகில்வண்ணர் கேட்டிடலும்,
சிரசிலே வையுமெனச் செப்பினார் மாபலியும்.
செப்பியவா றேயவர்தம் சென்னியிலே தாள்வைத்து,
பாதாள லோகத்திற் பதிந்துவிழத் தள்ளிவிட்டார்.
(அந்த) வாமன மூர்த்தியின் மகிமைகண்டான் அர்ச்சுனனும்.

## vi. பாற்கடல் கடையும்போதெடுத்த ஐந்தவதாரங்கள்.

அமிர்தம் கடைகிறபோ தாச்சரிய ரூபமதாய்த்
தாம்வந்து கிட்டிச் சகாயமது பண்ணுவர்போல்,
ஆமையாய் வந்து அலைகடலைத் தானேற்றி,
ஹம்ஸமாய் வந்து அலைகடலைத் தானமர்த்தி,
கூர்மாவ தாரமாய்க் கூடக் கடைந்தெடுத்து,
தன்வந் தரியாகத் தனியமிர்தம் தானெடுத்து,
அமரர்களுக் கெல்லாம் அமிர்தம் படைத்தபின்பு,
அசுரர்களுக் கெல்லாம் அதிரூப மோகினியாய்,
கலகம் விளைத்தன்று காட்டிநின்ற தாமிந்த
ஐந்துருவம் கண்டு ஆச்சரியப் பட்டிருந்தான்.

## vii. பரசுராமாவதாரம்.

சூர பராக்கிரமத் தோடுஜம தக்கினிக்குச்
சீருடைய மைந்தராய்த் தேசோ டவதரித்துப்,
பாருலகி லேபரசு ராமனென்று கீர்த்தி பெற்றுத்,
தனுசதனைக் கையெடுத்து க்ஷத்திரியரை [illegible]
கார்த்தவீர் யார்ச்சுனனைக் கண்டதுண்ட மாய்த்தறித்த
(அந்தப்) பரசுராமர் மகிமை பார்த்தான் தனஞ்சயனும்.

## viii. ஸ்ரீராமாவதாரம்.

விச்வபதி யாக விளங்கும் தசரதர்க்கு
உச்சமுறும் மைந்தராய் உலகில் அவதரித்து,
த்ரைலோக்ய அதிபதியாய்த் தாசரதி யாயுதித்துத்,
தவமுனிவர் பின்சென்று தாடகையைச் சங்கரித்து,
அகலிகைசா பம் தீர்த்து, அரனுடைய வில்முறித்து,
ஜானகிக்கு மாலையிட்டு, ஜமதக் கினிகுமரன்
பரசுரா மன்தன் பராக்கிரமம் தானடக்கி,
அன்புடனே தந்தை அபிஷேகம் சூட்டுதற்கு
ஆயத்தம் செய்திருக்கும் அப்போது துர்ப்புத்தித்
தாய்சொல்லைக் கேட்டு வனவாசம் போம்போது,
பரதர்வந்து பின்தொடரப் பாதுகை யும்கொடுத்து,
மகரிஷிகள் ஆசிரமங்கள் மாண்பாய்க் கடந்துபோய்ப்,
பஞ்சவடி ஆச்சிரமம் வந்து பரிவுடனே,
சூர்ப்பனகை மூக்கரிந்து (கர) தூஷணரை யும்வதைத்து,
மாயமான் பின்சென்று மைதிலியைத் தானிழந்து,
கண்டு ஜடாயுவுக்குக் கைவல்ய முங்கொடுத்து,
கவந்தவதம் பண்ணிக் கானகமெல் லாம்திரிந்து,
சவரிகண்டு பூசைபண்ணச் சந்தோஷ மாய்ப்புசித்து,
அஞ்சனாதேவி மைந்தர் அப்போ தடிபணியக்
கவியரச ரோடு கலந்துசக்கி யம்பண்ணி,
வாலிவதம் பண்ணி, வந்து கடலடைத்துக்,
கும்பகர்ணன் இந்த்ரசித்தைக் கூடமடி யக்கொன்று,
சேனைசமு கத்தோடு தசமுகனைச் சம்ஹரித்துப்,
பரிவால் விபீஷணர்க்குப் பட்டமது கட்டிவைத்து,
ஜனகர்மகள் மைதிலியும் செந்தழலிற் பாய அன்று
சீதையரை அக்கினியும் ஸ்ரீராமர் முன்பில்வைக்கக்
கொம்பனையாள் ஜானகியைக் கொண்டுசென்று புஷ்பகத்தில்,
லிங்கப் பிரதிஷ்டைபண்ணி நிர்மலமாய்ச் சேதுவிலே,
பரத்துவாசர் ஆச்சிரமம் வந்து பரிவுடனே,
தம்பிபர தர்வந்து தாள்பணிந்து கீழ்ப்படிய
அன்புடனே தம்பியரை அடிமடியிற் கொண்டுசென்றார்.
வசிஷ்டர் சுமந்திரரை மாதாக்களைப்பணிந்தார்.
திரும்பி அயோத்திவந்து செம்பொன்முடி சூடிநின்றார்.
(அந்தப்) பட்டாபி ராமர் மகிமைகண்டான் பார்த்தனும்.

### ix. ஸ்ரீகிருஷ்ணாவதாரம்.

வசுதேவ ருக்கினிய மைந்தராய் எதுகுலத்தில்
தேவகியார் தன்வயிற்றிற் செல்வக் குமாரராய்,
கம்சனென்னும் அம்மானைக் காணாதே யண்ணருடன்
கோகுலத்திற் போயொளித்துக், கொன்றொழித்துப் பூதனையை,
வந்தசக டாசுரனை வதைத்தே உதைத்தெறிந்து,
கேசிவிருஷ பாசுரனைக் கிட்டிப்புள் ளாயெறிந்து,
பகாசுரன்றன் மூக்கதனைப் பற்றிக் கிழித்தெறிந்து,
இடைச்சேரி தன்னில்வந்து எடுத்துவெண்ணெய் பால்குடித்து,
கோபால ரோடே கூடி விளையாடி,
பிருந்தா வனத்தில் பெருமான் பசுமேய்க்க,
நான்முகரும் கொண்டொளிக்க நன்றாகச் சிருஷ்டித்து,
மடுவில்வந்து தோழருடன் வான்பசுக்கள் மேய்க்கையிலே
விஷஜலங்க ளான்புசித்து விண்ணுலகம் போய்ச்சேர,
காளியனைச் சம்ஹரிக்கக் கடுகிநடந் தோடிவந்து,
படமா யிரஞ்சிரசையப் பாதம் மிதித்தேறிக்
கூத்தாடி வால்மிதித்துக், கோவர்த் தனமெடுத்து
பத்தினிமா ரன்னம் புசித்துப் பரிவுடனே,
பிருந்தா வனத்தில்வந்து வேணுகா னம்பண்ணி
கோபிமா ரெல்லாரும் கோரணிகள் கொள்ளவென்று,
கோபிமா ரெல்லாரும் கூட்டமதா யோடிவரக்
காணாமற் போயொளித்துக் கண்கலக்கம் பண்ணிவைத்து,
ஜலக்ரீடை பண்ணுகையிற் சேலையெல்லாம் தானொளித்து,
வந்து பணிந்து நிற்க வஸ்திரங்க ளைக்கொடுத்து,
அண்ணர்பல ராமருடன் அன்று மதுரை வந்து,
குவலயா பீடத்தைக் கொன்றொழித்து லீலைபண்ணி,
சாணூர முஷ்டிகரைச் சாடி விழவடித்து,
கம்சனுடை வீரியத்தைக் காசினியிற் கண்டதில்லை!
ஈரேழு லோகம் இடிந்துவிழ மேற்குதித்த
மாமனையும் கொன்று வன்கொடுமை நீக்கிநின்றார்.
(அந்தக்) கிருஷ்ணாவ தாரத்தைக் கண்டே மகிழ்ந்திருந்தான்.

### x. பௌத்தாவதாரம்.

அந்தந்தப் பூமி அசுரர் மலிந்திடலால்,
அந்தந்தப் பூமி அதிபார மாகிவிடப்,
பொற்கொடியாள் பூமி பொறுக்கமாட் டாதயரப்
புபாரம் தீர்த்துப் புண்ணியரை ஓங்குவித்துத்



தர்மத்தை ரக்ஷித்து ஸ்தாபிக்க வேண்டுமென்று,
பூர்ண ஸ்வரூபமாய்ப் புவனமெல் லாம்நிறைந்து,
பூததயை யாவருக்கும் பொற்புடனே போதித்த
பௌத்தாவ தாரத்தைப் பார்த்தே மகிழ்ந்திருந்தான்.

### xi. கற்கி அவதாரம்.

விசுவபரி பாலகராய் விளையாடி லீலைபண்ணிச்
சிருஷ்டி ஸ்திதிலயஞ்செய் சின்மயா னந்தவஸ்து
காரணத்து மெய்ப்பொருளாய்க் கற்கி ஸ்வரூபருமாய்
அயக்ரீவ மூர்த்தி அவதார மாகிவந்து,
வேதசா ஸ்திரங்களெல்லாம் வேண்டியவ ரைத்துதிக்க
ஆகம வேதம் அறுபத்து நான்குகலை
அஷ்டா தசபுராணம் அத்வைத சாஸ்திரங்கள்
எல்லாம் விளங்கவைத்து எற்றபடி ரக்ஷிக்கும்
(அந்தக்) கற்கியவ தாரத்தைக் கண்டே மகிழ்ந்திருந்தான்.

### xii. இன்னம் அநேகரூபங்கள்.

பிரகிருதி புருஷருமாய், பிரபஞ்ச சிருஷ்டி காரணராய்,
திருபதபதி சேதனராய், ஜகத்துக்கு ரட்சகராய்,
விசுவரூ பத்தாலே விளங்கப் பிரபஞ்ச மெல்லாம்,
பரப்பிரம மூர்த்தியின் மகிமைகண்டான் பார்த்தனன்று.
பாண்டவர்க்குத் தூதருமாய்ப் பார்த்தனுக்குச் சாரதியாய்த்,
தேர்த்தட்டில் நின்று சேனையெல்லாம் தான்பார்த்து,
பல்லடிச்சு மார்தட்டிப் பாரியுத்தம் பண்ணுதற்குக்
கல்லைகள் கட்டிக் கடிவாளம் கைப்பிடித்து,
தொப்பாரம் கட்டிச் சொரிபணிதி காதிவிட்டு,
இட்டதொரு நாமம் எழுலகும் சோதிவிட,
(சுவாமி) சாரத்தியம் பண்ணலையும், தான்செயித்து நிற்பதையும்,
பார்த்தான் மகிமைதன்னைப் பார்த்துநின்ற அர்ச்சுனனும்,
முன்னே யுலகளந்து முத்துச் சிலம்பணிந்த
ஸ்ரீபாத மாயிரமாய்ச், சென்று மலையெடுத்துக்
கால்மிதித் தாடிநின்ற கைத்தலங்க ளாயிரமாய்,
செங்கமலக் கண்ணிணைகள் திகழ்நாசி யாயிரமாய்,
பொற்குழைகள் பூண்டு பொலிசெவிக ளாயிரமாய்க்,
காட்டியதோர் விசுவ ரூபமது கண்டஞ்சி
பாதம் பணிந்திறைஞ்சிப் பார்த்தன் துதிக்கலுற்றான்.

## 11. விசுவரூப தரிசனம்பெற்ற அர்ச்சுனன் பகவானைத்துதித்தல்.

நாரணரே யென்றன் நன்மாமன் சீர்மகனே,
குந்தி மருமகனே, கோவர்த் தனமெடுத்து
மழைகாத்த வள்ளலே, மாலே, மலர்ப்பதத்தால்
எவ்வுலகும் ஈரடியா லெளிதே யளந்துகொண்டு
மாபலியைப் பாதலத்தில் வன்சிறையில் வைத்தவரே,
மைத்துனரே, மண்ணளந்தீர், அச்சம் தவிர்த்தருள்வீர்,
விண்டுவே யும்முடைய விசுவரூ பம்கண்டு,
ஜனன மரணமற்றேன்; தேகபந்தம் தானொழிந்தேன்;
முக்திசித்த ஞானேன்; மோக்ஷ பதம் அடைந்தேன்;
அத்தை மகனென்று ஆகடியம் பேசிவிட்டேன்;
அம்மான்சே யென்று ஆகடியம் பேசிவிட்டேன்;
மைத்துனமை யாலே வளம்பேசி நானுரைத்தேன்;
இவ்வளவு போதுமையா எங்கள்குல மீடேற,
(என்று) பட்டாடை தாழப் பணிந்து நமஸ்கரித்தான்:
அட்டாங்கமாகப் பணிந்தான் அருச்சுனனும்,
பார்த்தன் பணிந்திடலும் பரம தயாளருமே
எடுத்தவிச்வ ரூபம் எல்லாம் அடக்கியப்போ,
தெப்போதும் போல இலங்கினுர் கிருஷ்ணராய்.
(விஜயன்) பொற்கடகக் கைகூப்பிப் பூந்தேரில் சேர்ந்திருக்க,
அப்பரிசு கண்டு அடக்கி வடிவமெல்லாம்
பெருமா னருச்சுனனைப் பிரியமுட னேநோக்கித்
தெருமரலைப் போக்கிச் செப்புவா ரப்போது.

## 12. பகவான் அர்ச்சுனனுக்கு விசுவரூப மேன்மையை அருளிச்செய்தல்

சோதி மயமாய்த் துலங்குகின்ற என்னுருவை
முதற்பொருளாய் யாவுமாய் முன்னின்ற என்வடிவை
காணவல்லா ரிந்தக் காசினியினில் தாமுண்டோ?
பார்க்கவல் லாரிந்த ப்ரபஞ்சத்தி லேயுண்டோ?
வேதமெல்லா மோதி வேள்வியெல்லாம் செய்தாலும்
மாதவங்கள் செய்து மகாதான மீந்தாலும்
காணமுடி யாத என்வடிவை நீகண்டாய்.
குற்றமில்லா யோகத்தின் கொள்கையினுல் நீகண்டாய்.
கண்டாய் என் மெய்வடிவம் கலங்காதே நீயுமினி
கொண்டாடக் காண்டீபம் கூசாது நாணேற்று.
நாணேற்றி யுத்தம் நடத்துக நீ என்றுரைத்தார்.



## 13. ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு சம்சாரரூபத்தை எடுத்துவிளக்கல்.

என்றுரைத்து மேலும் எடுத்துரைப்பார் ஸ்ரீகிருஷ்ணர்
மைத்துனனே, என்றன் வாஞ்சையுயிர்த் தோழனே,
(ஒரு) விருத்தாந்தம் சொல்லுகிறேன் விருப்பமுட னேகேளாய்,
விஷமமாம் சம்சார விருட்சமொன்று கேளாய்நீ,
மேல்நோக்கி வேரிருக்கும் விசுவமெல்லாம் வியாபிக்கும்,
அசுவத்த மாகி அசையாம லேயிருக்கும்,
புத்தி யென்னும் கப்புப் பெரிதாக வேயிருக்கும்,
பஞ்சபூதக் கப்புப் பார்க்கச் சிறுத்திருக்கும்,
சப்தாதி விஷயங்க ளான சிறுகப்பு
சுற்றெங்கும் சூழ்ந்துகொண்டு சோலையுட னேயிருக்கும்,
வேதங்க ளாமிலைகள் வெகுவாக வேதழையும்,
விஷயபோ கங்களெனும் மென்றளிர்கள் மிக்கிருக்கும்,
தர்மாதர் மங்களெனும் தன்மையுள பூப்பூக்கும்,
மானுபி மானமெனும் வடுக்க ளதுவடுக்கும்,
காமக்ரோ தங்களெனும் காய்க ளதுகாய்க்கும்,
சுகதுக்க மானபழம் சோலையுட னேபழுக்கும்.
வெகுவாக வேபருத்து மேல்லோகம் கீழ்லோகம்
சேர வளர்ந்து சிறுகொப்பும் சாகையுமாய்
குணங்களினுல் வர்த்தித்துக் கொள்ளும்வெள்ளம் போலே
திரும்பி விஷயச் சிறுதளிர்கள் தான்தளிர்க்கும்.
இப்படிக் கொத்தவிருக்ஷம் இருக்க ஸ்திரங்களற்று
அசுவத்த மாமை அரைக்ஷணத்தில் போய்விடுங்காண்;
நாளைக் கிருக் கிறதும் நம்பிக்கை யில்லையே,
போனதது மீண்டும் புனைகத் திரும்பிவரும்.
ஜனனமரண மெடுத்துத் திரியுமிந்த ஜீவாத்மா
அநாதியி லுண்டான அவிவேக மாயிருக்கும்.
(அது) அசத்தென்று தானறிந்து ஆசத்தி வையாதே
மித்தையென்று காணுமவன் வேதவித்தென்றறிவாய்.
ஜகந்தனிலே மானிடர்கள் செய்துவரும் கர்மமெல்லாம்
ஈரேழு லோகம் எங்கெங்கும் வியாபிக்கும்.
துக்கசுக மாகிச் சூழ்ந்துவரும் மற்றதுதான்
திக்குவிஜ யம்பண்ணும் ஜயவிஜயா நீகேளாய்.
(அதற்கு) ஆதியந்த மில்லை அளவில்லை ரூபமில்லை.

வெகுஜன்ம வாசனையாய் வெகுவாக வேரோடி
வைரமது பாய்ந்து யாளா தொருக்காலும்.

### 14. சம்சார நிவர்த்தியாகி முத்தியடையும் மார்க்கமீதெனல்.

மகத்சேவை யாலே மனம்துலங்கி நன்மையுண்டாய்,
ஆசாரி யர்கிருபையால் அந்தரங்க நிஷ்டைவந்து,
சந்ததமும் சிந்தித்து சதாவிசார ணைபண்ணி,
விஷயத்தி லேமனதை விட்டுவிடா மல்நிறுத்தி,
வேதாந்த சித்தாந்தம் விசாரித்து எப்போதும்,
கோச விலக்ஷணராய்க் குணத்துக் கதீதராய்,
சரீரத்திற் பின்னருமாய், சச்சிதா னந்தருமாய்,
அவஸ்தைக்குச் சாட்சியுமாய், அப்புறப் பட்டவராய்,
இந்திரிய கோசராய், எத்திசையும் தான்விளங்கிப்
பிரகாசிக்கும் வஸ்துவாய்ப் பரிபூர்ண நீர்மையராய்,
உள்ள வொரு பொருளை ஒப்புயர்வில் லாதவரை
விசாரித் தறிந்து விபரீத மில்லாமல்,
அசங்கதமாம் ஆசைகளை யடியோடே வேரறுத்தால்,
அனர்த்தம் நிவிர்த்தியதாம் ஆனந்த வியாப்தியுண்டாம்.

### 15. முமுட்சுலக்ஷணம் கூறுதல்.

மானாபி மானமற்று, மண்ணுலகத் தாசையற்று,
துர்ச்சன சங்கமற்றுச், சொல்லரிய அத்வைதம்
நித்தியமும் பண்ணி, நிஷ்கா மனாயிருந்து,
பந்தமற்ற முத்தனுமாய்ச் சுகதுக்கப் பற்றின்றி,
ஆசாபா சங்களற்று, அடரும் மவுட்டியம்போய்,
அயனுலகம் தேவுலகம் அவனி பதினான்கும்
திரணமாக எண்ணித் திடமான சித்தத்தால்,
இகபர மிரண்டிலும் எள்ளளவும் ஆசையற்று,
இருதய மன மிந்திரியங்கள் எப்போதும் தான்திருத்திச்,
சகலகர்ம மும்வெறுத்துச் சீதோஷ்ண மும்சகித்துப்,
(பல) தூஷணங்கள் சொன்னாலும் சித்தத்திற் காணாதே,
சற்குருவின் பாதத்தைச் சந்ததமும் சிந்தித்து,
மோக்ஷ இச்சை ஆவார்கள் மூந்துமொன்றை யெண்ணார்கள்,
ஈஷணைகள் ராகத்து வேஷங்க ளில்லாமல்,
காமக்ரோ தங்களற்றுக் காண்பதெல்லாம் மித்தையென்று,
தேகத்ரயங்களற்றுச் சரீராபி மானமற்று,
லோபமொடு மோகம் நுவலுமத மாற்சரியம்,

ஜாதிவகை வேறென்றும், தானிதுவாய்க் கற்பித்துக்,
தன்கழுத்தி லாபரணம் தான்தேடும் பிராந்தனைப்போல்,
சத்சங்கம் பண்ணாமல் சம்சாரத் தில்உழன்று,
நித்தியமென் றெண்ணி நிலைகெட்ட மூடருக்கு
அறிவற்ற அஞ்ஞருக்கு அநேகவித மாய்த்தோன்றும்.
நேசமுள்ள தோழனே, நிகரற்ற மைத்துனனே,
ஏதுசொன்னே னென்று இதயத்திற் காணாதே
ஆதரவாய்க் கொள்ளென் றநுக்ரகித்தார் அச்சுதனார்.

### 17. ஜீவாத்மாவின் தன்மை கூறுதல்.

சத்தாகிச் சர்வேச் வரராகித் தானிருந்தும்,
ஜீவனறி யாமல் தேகமே நானென்று,
கர்த்தாபோக் தாவென்று கண்டதெல்லாம் மேற்போட்டுக்,
கர்மத்தைப் பண்ணிக் களித்துவெகு வாய்த்திரிந்து,
சரீரம் விழும்போது சாணளப்பான் பூச்சியைப்போல்,
திரும்பியொரு தேகத்திற் சென்றுவிழும் ஜீவாத்மா.
தேகமும் போகமும் சேரவிங் கோயிருக்க,
அகலாத இந்த்ரியமும், அதிஷ்டான தேவதையும்,
கொண்டு சுழன்று கூறுகின்ற தன்னிலைமை
இன்னவித மென்று, எண்ணத் தெரியாது.
புஷ்ப மிருக்க மணம் கிரகிக்கும் வாயுவைப்போல்
அற்புத மாகி அதிசூக்ஷ்ம மாயிருக்கும்.

### 18. அஞ்ஞானமே பிறவிக்குக் காரணம் என்றல்.

(என்று,) பேரருளா லோதிப் பெருமான் மனமகிழ்ந்து
மற்றும் சிலவிஷயம் மைத்துனர்க்குக் கூறுகின்றார்:
பஞ்சேந்திரி யங்களினால் ஆதரித்த சித்தத்தால்
அனர்த்தமாம் சம்சார அல்லல் விஷயத்தழுந்தி
வாழுமிந்த மாய வாழ்வதனைக் கைவிட்டுப்
பொருக்கென வேவிழுந்து போகிறது கண்டிருந்தும்,
மித்தையை நம்பி விஷயபோ கம்புசித்துச்,
சத்துருக்கள் சித்தம் தவிடுபொடி யாக்குவித்து,
அஞ்ஞானத் தாலே அறிவிழப்பர் மானிடர்கள்.
சட்டமுடனெண்டிசையும் தன் பெருமை தான்முழங்கச்
சஞ்சரித்து வந்தாலும் தான்கிரியைகள் செய்தாலும்,
உண்டா யிருந்தாலும் உபக்கிரமித்துப் போனாலும்,
சண்டையிடு முக்குணங்கள் சரீரமொடு ஈஷணைகள்,
சப்தத்தோ டாறு ஒத்த விஷயமெல்லாம்,
க்ஷணத்தில் க்ஷயித்துவிடும் தான்பொய்யாய்ப் போய்விடும்காண்.
வளைத்து வளைத்துவரும் மானா தொருக்காலும்,
இலக்கமற்ற ஜன்மத்தை எண்ணத் தொலையாது.
மயித்துமிங்கு ஓடிவரும் மாயமிது ஏதென்றால்,
(அதை) அறிந்து விசாரிக்கின் ஆத்மாவே நாமென்னும்:
தேகமொடு போகம் ஸ்திரமென் றிருக்கிறவன்
மூடர்களில் மூடன் முழுதுமஞ் ஞானியவன்,
ஞானசக்ஷு தான் விளங்கி நன்றாக வேஅறிந்தால்
தோன்றுவது கானல்ஜலம் சிப்பியதில் வெள்ளியேபோல்,
மோகம்விட்டுப் பார்க்கிறவன் மோக்ஷ ஸ்வரூபிகண்டாய்.
(என்று) தாமரையாள் மார்பர் தனஞ்சயற்குச் சொல்லிநின்றார்.

### 19. குருவருளாலன்றி ஆத்மாவை அறியவொண்ணாதெனல்.

சமர்த்தனுமாய் அத்வைத தன்னியனுமாய், உன்னரிய
சாதனமும் சாத்விகமும் சற்குருவும் சார்ந்தவனாய்,
சந்தேக நீங்க (வேதாந்த) சாத்திரங்க ளாராய்ந்து,
ஆரும் அதிரக்த குருவின் அநுக்கிரகத்தால்,
அந்தக்க ரணம்துலங்க ஆத்மாவைப் போயடைவாய்.
இவையொன்று மன்றியே என்முயற்சி தன்னாலே,
சாதனமும் சாத்விகமும் சற்குரும் தேவயில்லை,
சாத்திரத்தை அப்பியசித்துத் தன்னுடைய எத்தனத்தால்,
அறிவேன்நான் ஆத்மாவை என்கிறதும் ஆகடியம்.
(அதற்கு) இதிகாசம் என்னவென்றால் இப்படிப்போ லேயிருக்கும்:—
சக்ஷுவில்லா னுக்குச் சகம்விளங்கும் தன்மைபோல்,
காதம்வழி சப்பாணி கடுகுநடந் தோடுதல்போல்,
ஊமைபல வார்த்தைகளும் உண்மையுடன் றுரைத்தல்போல்,
செவிடனுக்குக் கானவித்தை தெரியுமென்று கேட்பதுபோல்,
வருமெனக்கு என்றுசொல்லி வாயடியா லேஅடித்துத்,
திரிகிறது மாத்திரமே, திடனாக ஆத்மாவை
அறியப்போ காதுகண்டாய் ஆசாரியர் அன்றியிலே,
வந்தாலும் நில்லாது மரணஜன்மம் போகாது.
சிரவண பலத்தாலே சற்றாண்டு புண்ணியங்கள்
(என்று) உலகளந்த மாதவனார் உண்மையாய்ச் சொல்லிநின்றார்.

### 20. பரமாத்மாவை அறிந்தவனே ஞானி எனல்.

சகல்வஸ்துக்களும் தாக்குடனே மிஞ்சிநிற்கும்.
அறிவற்ற பிரமம் ஆவதுவும் நாம்தானே.

புவனத்தை ஆளும் புருஷோத்தமர் நாமே.
இந்தப் படியெம்மை ஏகமாம் வஸ்துவாய்,
அந்தமோ டாதியில்லா அழியாத் திரவியமாய்,
புருஷோத் தமராய்ப் பெரிதான வஸ்துவாய்,
அறிவாலே எம்மை அறிந்து அடைந்தார்க்கு
சரீரத்தி னாலும் தசேந்த்ரியங்கள் தம்மாலும்,
செப்பு மனத் தாலுமவர் செய்துவரும் கர்மமெலாம்
நடுவிற் குறையாதே நம்மைவந்து தாமடைவார்.
கிருதகிருத்திய ரென்றுசொல்லிக் கீர்த்திசெய்வர் மஹாத்துக்கள்,
அவருக் கெதிராவார் ஆருமில்லை யென்றறிவாய்.
(என்று) கடல்போல ருள்கொண்டு கண்ணன் அநுக்கிரகித்தார்.

## 21. அவனன்றி யோரணுவு மசையாது என்றல்.

மகிமையுடன் பூமியிலே வந்து பிரவேசித்து,
அதிக பலத்தாலே அவனிபதி னென்கினையும்
சகல பிரபஞ்சத்தைத் தாங்குவதும் நாம்தானே.
சங்கதரா ராயிருந்து தாபங்கள் தீர்த்துவைத்து,
வனப்பாரு மோஷதிகள் வர்த்திக்கப் பண்ணிவைத்து,
அமிர்தத்தி னாலே அனைவர்க்கும் திருப்திபண்ணி,
சதுர்விதமாம் அன்னங்கள் ஷட்ரச போஜனங்கள்
உருசியறிந் துண்ணும் உள்ளிருக்கும் சூக்ஷமமும் நாம்.
பசிதாகம் உண்டாக்கும் பண்புள்ள பிராணனும் நாம்.
நடுவிருந்து தான்புசிக்கும் நாலுவித அன்னத்தை
அவையவங்க ளுக்கு அதிகக் குறைவின்றி,
சமான ரூபியாய் ஜரிக்கப் பண்ணிவைத்து,
ஜாடராக் கினியாய் தகிக்கிறதும் நாம்தானே.
சகலப் பிராணிகளும் தங்கள் தங்கள் தானத்தில்
இருக்க நடக்க எழுந்திருக்கத் தானுடைக்
கருத்தில் இருக்கிறதும் நாமென்ற றிந்துகொள்வாய்.
(என்று) மதிக்க உபதேசம் மாதவனார் பண்ணிவந்தார்.
பூரணமாயெங்கும் பொருந்தி யிருப்பதும் நாம்.
தாரணியும் தண்கடலும் சகலர்க்கும் கர்த்தரும்நாம்.
அறிவுடனே சாட்சியும்நாம், அஞ்ஞான மூலமும்நாம்.
சகலகுண வேதாந்தம் சத்கர்ம சாஸ்திரங்கள்
மகிமையுடன் பண்ணிவரும் ஏகருமாவும் நாம்தானே.
(என்று) உத்தம பார்த்தனுக்கு உபதேசம் பண்ணிவந்தார்.

## 22. நித்தியமின்னது அநித்தியமின்னது என்று தெரிவித்தல்.

பார்த்தனை லேயொருவர் பார்த்திபுடனேகூடி
நித்தியம் அநித்தியமா ரேறும் பொருளிரண்டில்
நித்தியம் அநித்தியமா ரேனவென்றால் அடைவாகச் சொல்லுகிறேன்:
அநித்தியவஸ்து என்னவென்றால் அடைவாகச் சொல்லுகிறேன்:
அநித்தியவஸ்து என்னவென்றால் திரியக்குப் பசுவாதி
தேவதைகள் மனுஷியர் திரியக்குப் பசுவாதி
பரமே மூலகிற் பண்ணப் படுவதெல்லாம்
பஞ்சபூதத்தாலே பண்ணப்பட் டேயிருக்கும்.
பண்ணப் படுவதெல்லாம் பார்த்திருக்கவே நசிக்கும்.
மாயையென்னும் இந்த வஞ்சனோதா லேயென்றும்
பலவான நாமமுடன் ஒருநாளும் மாளாது.
மாளாது என்றாலும் மனந்தனிலே எண்ணாதே.
பிரமத்தியா னம்வந்தால் பின்பு ஒரு நாசமுண்டு.
நாசமுள்ள வஸ்துவிலும் நாசமிலா வஸ்துவிலும்
அகண்டவெளி யானவராய் ஆத்ம ஸ்வரூபராய்,
இரக்ஷிக்கும் கர்த்தருமாய் எல்லார்க்கும் ஈச்வரராய்,
பற்றற் றிருக்கும் பலஜந்து சாக்ஷியுமாய்,
எங்கும் நிறைந்திருந்து எவ்வுயிர்க்கும் தாரகமாய்
தற்பிதத்தை வோராக்கும் காரணம்நா னென்றறிவாய்.
(என்று) கட்டமுடன் பார்த்தனுக்கு ஸ்வாமி அநுக்ரகித்தார்.
பதினெட்டு அத்தியாயம் பழுதுரைகள் வாராதே
திருமறையில் கொண்டிருந்து சுவாமி அநுக்ரகித்தார்.

## 23. அருச்சுனன் பத்திக்குவந்து ஸ்வாமி இவ்வுபதேசம் அநுக்கிரகித்ததாகக் கூறுதல்.

மகிமை பெரிதுடைய வாழ் விஜயா நீகேளாய்.
மனுவுக்கு நான் பயந்து வந்துனக்குச் சொன்னதில்லை.
மாலையொடு மாணிக்கம் மட்டற்ற ஆபரணம்
ஐசுவரிய முள்ளதெல்லாம் அடையவேண்டுமென்றும்
இச்சையினா லேவந்து ஈங்குனக்குச் சொன்னதில்லை.
உலகாளும் பாண்டவர்க்கு உபதேசம் பண்ணிவந்தால்,
அதினாலே கீர்த்திநமக் குண்டாக வேண்டுமென்று
அதினாலே கீர்த்திநமக் குண்டாக வேண்டுமென்று
வர்ஜுனக்கு நானிந்த மாற்றம் உரைக்கவில்லை.
வெகுதூரம் போய்நடந்து மெய்வருந்தக் கால்கடுக்கத்
துரியோ தனனிடத்தில் தூதுரைக்கக் காரியமேன்?
வன்ற ெருறில்செய்து எதும் மீயர்தவர்போல்
[illegible] கொச்சைகளைப் போலவே

செருவி லினையாதே தேர்செலுத்தக் காரியமேன்?
(இது) பரியாசமாகப் பார்த்தென்னைக் கேட்டக்கால்,
உள்ளவிவ ரந்தன்னை உற்றுரைப்பேன் நீகேளாய்.
பலகாலம் வேண்டிநின்ற பக்தர்களுக் காகஇங்கே
அவதார லீலைகள் அற்புதமாய்ப் பண்ணிவந்தோம்.
கதிதானே நாமென்று கருதி யடைந்தார்க்கு
அருமைசெய்து ரக்ஷித்து அபீஷ்டமெல் லாம்கொடுத்து
பரிவாக மோக்ஷமும் பண்பாக வேகொடுப்போம்.
அத்யந்த பக்தனுமாய் அங்கத்தில் பாதியுமாய்,
அத்தையுடை பிள்ளையுமாய் அந்தரங்க மைத்துனனாய்,
சித்தசுத்தி பக்தி தெசேந்திரிய நித்யகர்மம்
தப்பாமல் பண்ணிவரும் சற்குணன்நீ ஆகையினால்,
உற்றதனி யேகாந்த உண்மை ரகஸியங்கள்
உற்றதெல்லாம் போதிக்க உமக்கே தகுமென்று,
வெட்டவெளி யாக விவரித்து நாமுரைத்தோம்,
சித்தத்திற் கொண்டு த்வைதங்கள் வாராதே,
சத்துருவைத் தான்ஜயித்து சாமர்த்திய வீரியனாய்,
உன்னுரிமை பெற்று உகந்திருப்பாய் நீயென்று,
நிச்சயமாய்ப் பார்த்தனுக்கு நீலமேக வர்ணர்சொன்னார்.

## 24 இந்நூலைப் படித்தலின் பயன்.

பகவானுபதேசம் பண்ணுமிந்தக் கீதையினைப்
பத்தியுட னேஜபித்துப் போஜனங்கள் பண்ணிவந்தால்,
சற்றுமந்த அன்னத்தால் தோஷங்கள் வாராதே
பட்டினி உபவாசம் உபவாச பலன்கொடுப்பார்.
சத்தியமே சத்தியமே சந்தேகம் கொள்ளாதிர்.
அச்சுதா னந்தர் அநுக்ரகித்த வாக்கியத்தை
பச்சையுமை பார்வதியும் பங்கயத்தன் நாயகியும்
லக்ஷ்மியும் கூட இருதயம் குளிர்ந்திடலால்,
சட்டமுடன் நான்உரைத்த சாராம்ச மாலைதன்னை
அப்பியசிக்க வல்லவரும், ஆதரவாய்க் கேட்பவரும்,
அர்த்தம் அறிந்து அநுபவிக்க வல்லவரும்,
கிருஷ்ண ப்ரதாபம் கிருபையுடனே முக்தியுண்டாய்,
சத்தமய மான சொரூபத்தி லேலயிப்பார்.

**பகவத்கீதை வசனம் என்னும் ஸ்ரீபகவத்கீதா சாரசங்கிரகம்**
முற்றிற்று.

**ஸ்ரீகண்ணபிரான் திருவடித் தாமரைகளே சிரணம்.**

[illegible]குழந்தை நீ" "உன்னைப் பெற்ற பாக்கியமே பெரும்பாக்கியம்" என்றார். செல்லக்கேசவராயர் [illegible] நிறைந்து பதில் சொல்லமாட்டாமல் மறுபடியும் கண்ணீர் வடித்தார். இவ்வாறு நித்யானந்தர் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தன. இதுமுதல் இருவரும் தாய் பிள்ளையாகி விட்டார்கள். தாயைவிட்டுப் பிள்ளை ஒருதினமும் பிரியப்பொறுக்கார். நித்யானந்தரும் [illegible] மற்ற துறவியானாலும் அவர் "செல்வக்குழந்தை"யை விட்டுப் பிரிய மனம் [illegible]. இப்படித் தாய் பிள்ளை பாவமாகவேயிருந்து வேடிக்கை விளையாட்டிலே அவருக்கு [illegible] இத்தையவ்வளவும் உள்ளத்திற் பட்டுறைக்கப் போதித்து ஸ்வானுபவோதயம் எப்போ எப்போ [illegible] இருவரும் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"செல்வக்குழந்தை"யாம் இராயருக்கு வேதாந்த விசாரஞ்செய்து [illegible] நன்றாகப் பலித்துவிட்டது. அதிற்றுறை அப்பியாசித்து அனுபவம் [illegible] வேண்டியதொன்றேயாக்கி, கர்மம் தொலைய மலம் நீங்கி ஆத்மானுபவ [illegible] காலம் எப்போ எப்போவென்று இருவரும் காத்துக்கொண்டிருந்தார்கள். நித்யானந்தருக்கு எப்படியாவது தன் செல்வக்குழந்தையை ஸ்வானுபவ நிலையில் நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணம். செல்வக்கேசவராயர் தாய்க்கு "செல்வக்குழந்தை"யாய் [illegible] அவருக்கு விளையாட்டிப்புத்தி யதிகம். 'பக்தியொன்றிருந்தாலும் முத்தியனுபவிக்க [illegible] வேண்டும்; [illegible] பெற்ற முத்தியைப் பின் விரும்பாது விடவும் வேண்டு'மென்ற [illegible] புணர்ந்து [illegible] தவராய், தாய்பிள்ளை யென்கிற விளையாட்டில் இருவரும் [illegible] அவை [illegible] யிலிருந்து விளையாடிக்கொண்டிருந்துவிட்டார். "விக்ஞானமென்[illegible] [illegible] விருத்தி" யென்றிருப்பதால், தனக்குள்ள விக்ஞான சக்தியினால் நித்யானந்தர் [illegible] வேதாந்த விசாரஞ்செய்து கற்கதியடையவரும் நானாவித சிஷர்களையும் தந்திரமாய் [illegible] அனுபவங்களும் தத்துவங்களும் விளங்கத் தெண்டிவிட்டு வேடிக்கைபார்ப்பதும், [illegible] ஸர்வசாதகங்களும்செய்து ஸத்ஸங்க விர்த்திக்கனுகுணமாயிருப்பதுமாக, இப்படி [illegible] செய்துவந்தார். இப்படி யிவர் விளையாடிவருவதைப்பார்த்த நித்யானந்தர் [illegible] பரிபூர்ணகாலம் கிட்டியதையுணர்ந்து தம் "செல்வக்குழந்தையை" தம்முடைய [illegible] நிலையிலேயே கடைசிப்படியும் தாண்டத் தூக்கிவிட்டு ஸ்வானுபவநிலையில் [illegible] வேண்டுமென்று பிரயத்தனம் செய்யநினைத்தார். இதையறிந்த பக்தர்கள் [illegible] அவர்கள் மனசில் படித்துகிடக்கும் பூர்வவாசனைகளைக் கிளப்பி [illegible] [illegible] தொழிலாயுள்ள நாரதர் அவருக் கியல்பாயுள்ள விக்ஞான சக்தியை [illegible] [illegible] அதனால் ஒருவிதபங்கமுண்டாக நினைந்திருந்து வேடிக்கை [illegible] [illegible] "செல்வக்குழந்தைக்குத்" தம்மிடத்திலிருந்த பக்தியே [illegible] [illegible] தம்முடைய தபோமகிமையினால் யுக்தியாய் அவரை விக்ஞானமய [illegible] ஆனந்தமயத்துக் கப்பாலும் கொண்டுபோய் முதலாவது மாயையில் "முத்தியென்[illegible] [illegible]சேர" அவருக்குத் தம்முடைய "சக்தியென்னப்படும் ஈசன்" [illegible] [illegible] விக்ஞானசக்தி யதிட்டபடவும், இதுவரையில் தாயென்று [illegible] [illegible] "செல்வக்குழந்தை" பிள்ளைப்பருக்க [illegible] [illegible] நீயேன்பல் உனக்கு இது தெரியு [illegible]

[illegible] வாசாஞானம் பேசத்துவக்கியர். இதையறிந்த நித்யானந்தர் "ஓஹோ, இ[illegible] [illegible] கொடுத்துச் சீரழிய விட்டுவிட்டோம். இவனை அன்பாலாண்டாலன்றி வேறு வ[illegible] [illegible] "பெண்பால்" என்று தன்னிடத்து பால்வேற்றுமை பாராட்டு[illegible] [illegible] "சரி, அப்படியேயிருந்து 'பெற்றமனம் பித்து' என்பதை ரூபித்து இவளைவ[illegible] [illegible]வோ" மென்று உள்ளத்தில் நினைத்து ஏதோ ஒருசந்தர்ப்பத்தைச் சாக்கிட்டு, "நீயெ[illegible] [illegible] பிரிந்து போய்விடப்போகிறாயென்று எனக்குப்படுகிறது" எனச்சொல்லி தாரை தா[illegible] கண்ணீர்விட்டழுதார். தாயழப் பிள்ளையழக், கூட இருந்தவர்கள் இவர்கள் படும் [illegible] [illegible]தைக்கண்டழ, பெரிய கோலாகலமாயிற்று. "செல்வக்குழந்தை"யைப் பிடிக்கப்போ[illegible] [illegible] முன்னில் அந்த மச்சம் சிக்கிக்கொள்ளவில்லை. பார்த்தார் உண்மை யென்னவென்[illegible] [illegible] செய்வதைக் கண்டார் தம் ஞானதிருஷ்டியால்: இனி இவ்வுருவோடிருந் தாகவே[illegible] [illegible]தொன்றில்லை யென்றெண்ணினார். ஆசைவிட்டார். எல்லாப் பாசங்களிலும் வன்[illegible] [illegible] ஆத்மபாசபெந்தமாம் குருசிஷ்யபாவனையையுமறுத்தார். ஆசிவசனங்கூறி தான் அரு[illegible] [illegible] வளர்த்த ஆத்மபுத்திரர்களை 'திருபுரைநகர்' அம்மன் சந்நிதியிலிருந்து திரிபுரசுந்தரியி[illegible] [illegible] திரும்பவும் ஒப்புவித்தார். ஒன்றுமறியாத சாமானியர்போலிருந்து எல்லாரையுமேமாற்[illegible] [illegible]ரத்தில், சட்டபடம்போலிருந்த தேகத்திரியங்களையும் ஒரு நிமிஷத்தில் நீறாக்கி வெ[illegible] [illegible] மறைந்து அகண்டாகாரமாய் சுத்தமான பரவெளியில் அந்தர்த்தானமாயினா[illegible] [illegible] குழந்தைகளெல்லாம் கண்கலங்கி மனம்புழுங்கி ஓஹோ மோசம் போனோ[illegible] [illegible] வருந்தினார்கள். திரிபுரையை நம்பியிருந்தவர்கள் திரிபுராதேவி சந்[illegible] [illegible]யடைந்தும் அவர்கள் மனக்கிலேசம் நீங்கப் பெற்றார்கள். ஜோதியுருவாய் மனனஞ்செய்[illegible] யோகநிஷ்டைபெற்று நிர்க்குணோபாசனைசெய்து பரிபக்குவ மடைந்தவர்களுக்குப் பரவெ[illegible] தெரிசனமுண்டாகி ஆத்மத்தியானம் நிலைத்தது. நித்யானந்தரையே மூர்த்தமாகவைத்து இ[illegible] [illegible]த்து வந்தவர்கள் மூர்த்திதெரிசனம்பெற்று ஸ்பரிச சோதனைகாட்டி அபயஸ்தமளித்து [illegible] [illegible] கூறப்பெற்றனர். இப்படி அவரவர் பக்திக்கும் தியானத்துக்கும் அப்பியாசத்துக்கும் [illegible] [illegible] அவரை யண்டி ஆத்மவிசாரம் செய்தவர்களும் ஆத்மானுபவம் தேடினவர்களும் அவர[illegible] பரிபக்குவ விசேஷத்துக்குத் தக்கபடி அவரவர் மனோரதம் ஈடேறப்பெற்றனர். அனுபவத்[illegible] [illegible] அப்பியாசத்திலும் இவர்கள் என்ன வேறுபட்டிருப்பினும் 'நித்யானந்தர் இன்னுமிருக்கிறா[illegible] [illegible] மட்டும் இவர்களெல்லாரும் ஒருமனதாய்ச்சொல்லிச்சாதிக்குமுண்மையாயிருக்கிறது.

இப்படி இவரிடம் அனுக்கிரகம் பெற்றவர்களில் சிலர் அப்பியாசிகளாயிருந்து [illegible] [illegible], இவர்களது விக்ஞானசக்தி முற்று மடங்காதது கண்டு நாரதர் பின்னும் கலகஞ்செ[illegible] [illegible]த்தார்; நித்யானந்தர் தம் சிஷ்யர்களுடைய ஆத்மானுபவம் முற்றுமுன் அவர் தேக[illegible] [illegible]விட்டபடியால் அவர் முன்போல் மறுபடியும் தேகத்திரியங்களோடு தோன்றி [illegible] [illegible] பூர்ணானுபவம் சித்திக்கச் செய்யவேண்டுமென்று ஒரு ஆசையையுண்டுபண்ணி உ[illegible] [illegible] விரும்பினால் விரும்பியது சித்திக்காதாவென்று அவர்கள் பக்தியின் பெருமையை [illegible] [illegible] அவர்கள் சத்குருவைத் தேடி யலையும்படிச்செய்தார். இப்படி தேடி யலைந்த ப[illegible] [illegible] மனோரதத்துக் கிசைந்தபடி சிலர் ஈசுவரிதான் குருவென்றும், சிலர் அம்பிகை [illegible] [illegible], சிலர் அந்த மஹான் வாக்குத்தான் எனக்கு குருவென்றும், சிலர் இந்த அம்ப[illegible]

*Published, 21st Feb. 1904, to celebrate.*

### THE 76th BIRTHDAY ANNIVERSARY OF

# BHAGAVAN SRI RAMAKRISHNA PARAMAHAMSA.

## OM.

### NAMO BHAGAVATE SRI RAMAKRISHNAYA OM!

**My Soul's Prayer and Dedication to the Lord.** *

(*From the Original Tamil in* 'GODWARD HO!')

LOVE, GRACE, ETERNAL FIRST,
BLISS, ESSENCE, HARMONY IN SONG,
Not thinking, *not* knowing Thy Infinite Glory,
Not melting in love for Thee, do I live distraught.

O' Lord, I live a life bereft of Thy Grace divine,
Truth Supreme, Thy lover, I live sunk in Darkness,
'Fire Divine', the white moon-beam of Thy cooling grace
May it fill the heart of one distraught as *I*.

My Father in Heaven, myself I dedicate to Thee,
May Thy Glory shine for ever within me that am of earth, earthy;
As the lids with care do guard the eyes for ever,
May'st Thou guard and make me worthy of Thy heavenly love.

Guard me so, that the scales of Darkness may fall off my eyes,
Guard me well, who dwell in this evanescent abode,
Guard me so, that all idea of self may fall,
Guard me Lord, through the grace of Thy enfolding Love.

Naught else of wealth exists but what Thy grace allows;
So in ignorance and conceit would I nothing do;
Nothing in fact could one do but by Grace divine
Of Thee, that mak'st the heart pure (like crystal) with Thy light.

Existence there is none beyond Thy Self;
As Thy Kingdom is in Heaven without limit,
So on Earth may Thy rule prevail,
And Thy Grace Infinite reign in my heart.

* "பிரார்த்தனைப்பத்து" என்னும் ஆத்மார்ப்பணஸ்துதி.

Reign Thou in my heart and feed it with the Bread of Life;
Behold! I am poor: And wouldst Thou the cause inquire,
I want Thy grace, none else my heart desireth:
Oft defeated still I long for Thee! O' Lord, satisfy my longing and make
[me Thine own.

Let Thy Mother-Love rule my heart and fill it with grace divine,
Rituals none I know my Lord! Rectify the wrong I have done! *
Let my mortal mind's confusion cease and vain illusions fall to the ground
Sruti-lore have I none, Wisdom's Lord, yet wilt Thou not desert me.

Would it befit Thee, Lord of heaven and earth, to desert me?
Oh Lord of Word, nought there is beyond Thy Power,
Immanent Lord, how can I with mortal mind comprehend Thy truth
Therefore save me, Lord Almighty! granting me grace for the sake of 'I

The Lord be Praised! Hail to Thee my King!
Hail to the faultless Gem, the emerald Light!
Hail to the Lord that prayers grant to them that ask in faultless wor
Bless me Lofty one! I dedicate myself to Thee, and in sure conviction
hold to Thy feet as the "Secret of Success."

Om Tatsat.

## THANKSLIVING THOUGHT.

Oh Mother Divine, Teacher and Light of Grace that to my heart is dear,
By unswerving faith in Thy grace divine did I see the Light that lighteth
[every heart;
Praise to Thee that from Life Eternal hast borne me in thy womb,
And begot me ever before Time was, in the formless form *I AM*.

## OM NAMO NAMAH.

Anandashrama,
Triplicane,
*15th June, 1903.*

SATYANANDA S. SARMA.

* The life out of harmony I have lived hitherto. † Date of first Dedication.

## ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்.*

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரது 76-வது ஜன்மதினமஹோற்சவம் இந்தமீ 21-உ கடற்கரையோரத்தில் ஐஸ்மெத்தையிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்தில் வெகு வைபவமாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை பூஜையும், பிற்பகலில் ஹரிகதையும் ஆனபின்பு சாயந்திரம் 5-மணிக்கு ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க ப்ரொபெஸ்ஸர் கெ. சுந்தரராமய்யர், எம். ஏ. அவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஜீவியசரிதையையும் அதிலிருந்து நாமறியவேண்டிய உண்மைகளையும் பற்றி வெகுநேரம் உற்சாகத்தோடு பிரசங்கம் செய்தனர். பிறகு மங்களஹாரதிசெய்து உள்ளமுருக ஸ்ரீ இராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள் பகவானைத் துதித்துத் தொழுதபின் பிரசாதம் வழங்கினார்கள். அப்பொழுது ஸ்ரீ இராமகிருஷ்ணபகவான் பாதபத்மங்களில் என் ஆத்மாவை அர்ப்பணஞ்செய்து அவரது அருட்பிரசாதத்துக்கு எதிர்பார்த்துநின்ற என்னிடத்தில் ஒரு நண்பர் "மஹேச குமாரசர்மா" இயற்றிய ஸ்ரீ இராமகிருஷ்ணவிஜயம் எனும் அரும்பெரும் பொருள் நிறைந்த சிறிய புஸ்தகத்தைப் புன்னகைதவழ எனக்கு அளித்தார். அதையுவந்து பெற்று, உள்ளங்கனியச் சிந்தனையிலாழ்ந்துகிடந்து தற்போதையிழந்து தடுமாறி வீடுவந்து, ஸ்ரீ இராமகிருஷ்ணர் திருவருட் பிரஸாதத்துக்குத் தபித்த மனத்தனாயிருக்கையில், அவரது திவ்ய சரித்திரத்தில் பலபாகங்கள் உள்ளத்திருந்த உண்மையான அத்யாத்மதாபத்தைத் தணிக்கச் செய்யும் தேவாமிருதத்துக்கொப்பாக விருந்தவியது. நம் உள்ளனுபவத்தை வெளியிடுவதில் இங்கு பயனில்லை. அதனால் நாமடைந்த பயனைமட்டும் சொன்னோம். இவ்வித இன்பத்தை இன்னுமெத்தனையோ பேர்களனுபவித்திருப்பார்கள், அனுபவிக்கக் காத்திருப்பார்கள். நம்மொழில் உள்ளத்திற்பட்டதை யொளிக்காது சொல்ல நம்மைக் கடமைப் படுத்துவதாயிருப்பதால் உண்மையை உள்[illegible]னோம். இக்காலத்திற் சிலர், மதபக்தி வாய்ந்தவர்களாயினும் தம் மதத்தைச் சிலாகித்தும் பிறமதத்தையிகழ்ந்தும்பேசுவதுசிலாக்கியமாகநினைத்திருக்கிறார்கள். இதில் முன்கண்டது கொள்ளத்தக்கதாயும் பின்கண்டது தள்ளத்தக்கதாயுமிருக்கிறது. பக்திக்கு லெக்ஷணம் தன் மனது பற்றிய விடத்தில் அன்புமிகுந்து அதை பரமசிலாக்கியமாக ஏற்றித் தூக்கிக்காட்டுவதாம்: ஆனாலது பிறமதத்தை தூஷிக்காது. பக்தியென்பதே உண்மையான உள்ளன்பு பற்றும் பற்றுதலுக்குச் சொல்லும் பெயராயிருக்கிறது.

இந்த அன்பு பூரணமெய்தப்பெறின் அது பற்றற்றுப்பற்றின பற்றொன்றையும்விட்டு அகண்டாகாரமாய் ஆனந்தவெளியாகத் தோற்றும். இப்படிப்பட்ட அன்பு நிறைந்த பரிபூரணவஸ்து எதுவுண்டோ அதுவே தெய்வம், அதுவே ப்ரஹ்மம், அதுவே கடவுள்; "ஏகமே வாத்விதியம்" என்னும் சுருதி வசனத்துக்கு இலக்காயுள்ளது அதுவே. அதை நாமரூபத்தால் வர்ணிக்கமுடியாது. ஆயினும் அதையே ஆயிரம்பேர்கள் சொல்லி வாழ்த்துவார்கள். நாமமேயில்லாத வஸ்துவுக்கு ஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் எதுக்கென்றால், பக்தனுடைய மனம்விரிந்துமலர்ந்து பக்குவமிகுதியால் அதைப் பண்பாயுரைப் பழகும் பொருட்டேயாம். "பற்றற்றவிடமேபரம்" என்றோதியள் என் இன்னருட்தாய். "பற்றற்றார் பற்றுகப்பற்றி நிற்குமவன்" என்றார் எம்பெருமானு ஸ்ரீமணிவாசகப் பரமாசாரியரும்—"அவான்புக்கோளவில்லை, அருளுக்கோர் குறைவில்லை" யென்றார் இன்னொரு பக்தரும். ஹென்ரி ட்ரம்மண்ட் என்னும் அங்கிலேயமஹானும் அப்படியே செப்பியுள்ளார். தாயுமானஸ்வாமிகள் இன்னும் ரஸமாகச் சொல்லியிருக்கிறார்:—

"இனிய கருணைமுகி லெம்பிரான்
முக்கட் கனியமிர்தவாரி யின்பக்கட்டி
தனிமுதல்வன் நித்தன் பரமன் நிமலன் நிறை
வாய்நிறைந்த சுத்தன் நமக்கென்றுந்துணை"

—என்று வாயில் தேனொழுக வன்னெஞ்சும் மெ[illegible]காக, உள்ளமுருகிப் பாடியுள்ளார். பிறவிஞானியா[illegible] [illegible]ராயனார், [illegible]

By Mahesh Kumar Sharma, Madras Ripon Press, [illegible]

"அன்பகத்தில்லா வுயிர்வாழ்க்கை
வன்பாற்கண் வற்றன்மரந்தளிர்த் தற்று"

என்று அன்பின் சிறப்பையெடுத்துச்செப்பியுள்ளார்.

ஸேண்ட் பால் என்பவர் இந்த விஷயத்தைப் பற்றியுபதேசிக்கையில் அன்பின் பெருமையையெடுத்துப்பின்வருமாறு செப்பியுள்ளார். கனம் பொருந்திய கவர்னர் இந்த வாக்கியத்தையே யெடுத்தோதி "அன்னதான ஸமாஜத்தார்" கூடிய பெருங்கூட்டத்துமுன் "சமய ஒருமை"யைப்பற்றி வற்புறுத்திப் பேசினாதலால், 1900ஆ ஸெப்டெம்பர்மாசத்து விவேகசிந்தாமணியில் அவர் திருவாக்கை மொழிபெயர்த்துப் பிரசுரித்தபடி யதை இங்கு மறுபடியும் பிரசுரிக்கிறோம்; அவர் சொன்னதாவது (1 cor. xiii):—"மனுஷர் தேவர்களுக்குச் சரியாக எனக்கு நாவிருந்து அவர்களுக்கீடாகப் பேசும் வல்லமை யிருந்தும் **அன்பு** ஒன்றில்லாவிடத்து நான் தட்டினால் சப்தம் கேட்கும் செம்பு தவிர அல்லது சேமக்கலத்துக்கு ஒப்பாகிறேனேயன்றி வேறல்ல; நான் திரிகால ஞானியாகவிருந்து வேதமெல்லாமோதியுணர்ந்து, மந்திர, தந்திர, யந்திர சக்திகளெல்லாம் எனக்கிருந்தாலும், மலையையும் பிடுங்கிவிடும்படியான மகாசக்தியளிக்கும் நம்பிக்கை அவ்வளவு மெனக்கிருந்தாலும் **அன்பு** ஒன்றில்லாவிடத்து நான் பூஜ்ஜியனாகிறேன். நானெனக்குள்ள பொருள்களையெல்லாம் செலவிட்டு ஏழைகளுக்கன்னமிட்டு தர்மஞ் செய்தாலும், என்னுடலையே தத்தம்செய்து அதை எரித்துவிடச் சம்மதித்தாலும், **அன்பு** ஒன்று மட்டுமில்லாமற் போனால் அதனால் எனக்குப்பிரயோஜன மொன்றுமில்லை.

பின்னும் அச்சஞ்சிகையில் இதைக்குறித்தெழுதியது பின்வருமாறு: இதுவும் கவர்னர் பேசிய கருத்தையே வெளியிடுவதால் அப்படியே மொழிபெயர்த்து கீழே பிரசுரிக்கிறோம்:—

"இதனால் கடவுள் புராணங்களிலும் இதிகாசங்களிலும்சொல்லு முண்மைகளையே இதர மதஸ்தர்களில் ஞானிகளானோர் உள்ளபடியுணர்ந்து ஓதியிருக்கிறார்களென்பது ஸ்பஷ்டமாகும்."

"ஸத்தியம் ஜகமெல்லாவற்றிற்கு மொன்றே. பல ஜாதி மதஸ்தர்களும் மேலான உண்மையைப் பற்றிச் சொல்கையில் அவர்கள் வாக்கு சத்தியத்திற் பொருந்தியிருப்பது ஒன்றே நாமெல்லாரும் எங்கும் நிறைந்து ஏகமாயிருக்கும் கடவுளின் மைந்தர்களேயன்றி ஜாதி மதபேதத்தால் வேறுபட்டவர்களல்ல வென்பதை வற்புறுத்திக் காட்டப் போதுமானதாயிருக்க, அதையோராது, உணராது, மூடமதிகள் 'என்மதம்,' 'உன்மதம்' என்று சொல்லி சண்டைபோட்டு மண்டையுடைத்துக்கொள்வது என்ன பரிதாபம்."

"பேதித்த சமயமெலா மொன்று சொன்னபடி யொன்றுமேசாது"

"ஆகையால் "அன்பின்வழியறியாதவன்லோ" ஆட்கொண்டு ஈடேற்ற வேண்டுமென்பதே எம்மதத்திலும் உண்மையான பக்தர்கள் உள்ளத்தினின்றெழும் பேரொலியும் பிரார்த்தனையுமாக யிருக்கிறது. "அன்பின்வழி யறிந்தோர் அருள்பெறுவர், அருள் பெற்றோர் தாம்பெறுவர் பேரின்பசுகமதனை," என்பது அநுபவேசிதயாய் மற்பலர் சொல்லிய பெரு வாக்கியங்களின் சாரமேயன்றி வேறல்ல." (இதன் தொடர்ச்சியை வி. சி, 9-வது வால்யம் 131-முதலுள்ள பக்கங்களில் கண்டுகொள்க, செப்டம்பர் மாசத்து சஞ்சிகை.)

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் என்னசெய்தனர்? யோகவழிபற்றி அவர் சாதமுடிவெய்தியபின் அவர்செய்ததை "ஸ்ரீராம கிருஷ்ணவிஜயம்" என்னும் சிறுபுத்தகத்தினின்றும் எடுத்தாளுகின்றோம் கேளுங்கள்:—

"அநந்தரம் இராமகிருஷ்ணர் கிறிஸ்துமத சித்தாந்தத்தையுணர்ந்து பக்தி யோகத்தில் ஞானநிஷ்டையில் உள்ளபொழுதெல்லாம் கிறிஸ்துவையே கண்ணாறக் கண்டு வாயாற வாழ்த்தி வந்தார். அவர் பக்தியோகத்தினால் எந்த தெய்வத்தை யாராதித்தாலும் அந்தத் தெய்வம் அவருக்குப் பிரத்தியக்ஷமாகிறது வழக்கம். அவர் தமக்கும் அத்தெய்வத்துக்கும் ஐக்கிய முண்டாவதைக்கண்டு பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் பேதமில்லை யென பக்தி யோகத்தாலும் தெரிந்துகொண்டார். * அவர் இவ்வாறு எல்லா மத ஸம்பிரதாய ரஹஸ்யங்களையும் ஸம்பூரணமாய்த் தெரிந்துகொண்டு 'ஏகமேவாத்வதீயம்' என்னும் உபநிஷத்வாக்கியத்தின்படி அகண்ட ஸச்சிதாநந்த பரப்ரஹ்மமொன்றே யென்றும், இவ்வகண்ட ஸச்சிதாநந்த பரப்ரஹ்மத்தையே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு வடிவமாக ஆராதிக்கின்றார்களென்றும், பரஸ்பரவிரோதமாய்க் காணப்படும் இம்மதங்களெல்லாம் அப்பரப்ரஹ்மத்தை யடைவதற்காக வுண்டான பலவகை மார்க்கங்களேயென்றும் ஸித்தாந்தப்படுத்தினார்."

* "ஆருத்ரா தரிசனம்—1904." என்றதலைப்பின் கீழ் சென்ற மாசத்துச் சஞ்சிகையில் இந்த உண்மை விளக்கப்பட்டிருப்பதைக் கண்டு தெளிந்துக்கொள்க.



* * * *

"இவர் ஸாதாரண விவகார நிலையில் ஸர்வஸமத்தாவத்தோடு விளங்கிய தாம் அனைவருக்கும் தாஸனென்றுகூறி அகம்பாவத்தை யொழித்திருந்தார். பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் பாரமார்த்திகத்தில் பேதமில்லையென்று பூர்ணமாயறிந்து ஜனங்களனைவரையும் ஈசுவரஸ்வரூபங்களாக மதித்துத்தாம் உபதேசியென்றும் குருவென்றும் மற்றையோர் மொழிவதைக்கூட அங்கீகரியாதவராகி, தாம் ஒரு ஸாமாந்ய மனிதனென்றும் அனைவர்க்கும் தாஸாநுதாஸன் என்றும் கூறித் தமது சிஷ்யர்களுடையவும் மற்றையோர்களுடையவும் பாததூளியைத் தம் தலைமேற்கொள்வார். † ஆனால் அவருக்கு ஸமாதியில் ப்ரஹ்மஸாக்ஷாத்காரமாகும்பொழுது தமக்கும் பரமாத்வுக்கும் பேதமில்லையெனவுணர்ந்து தாமே பரப்ரஹ்மமென்றும் தாமேஸர்வக்ஞரென்றும் ஸ்ரீராம ஸ்ரீகிருஷ்ண புத்த கிறிஸ்து முதலிய மஹாபுருஷர்களது அம்சமே தமது அம்சமென்றும் அவர்களுக்கும் தமக்கும் பேதமில்லையென்றும் பிரசங்கிப்பார். இராமகிருஷ்ணரது பெருமையை ஜனங்கள் அறிந்ததற்கு முன்னமேயே அவர் தமக்கு அநேக சிஷ்யர்கள் உளர் என்றும், அவர்களையெல்லாம் இன்னார் இன்னாரென்றும் அப்பொழுதே தமக்குத் தெரியுமென்றும், தாம் ஜன்மகர்மங்க ளற்றவரென்றும், கேவலம் பரப்ரஹ்மமேயென்றும், தாம் செய்துகொண்டுவரும் கர்மங்களனைத்தும் பாமரர்களை மகிழ்வித்து அவர்களுக்கு பக்தி மார்க்கத்தைக் காட்டும்பொருட்டு உதவும் ஸாதனங்களேயென்றும், தாம் நித்யமுக்தரென்றும் இதற்கு முன்னரே ‡மதுரா நாதனுடன் சொல்லியிருந்தனராம். கூஷ்மாண்டத்து (பூஷணிக்காய்)க்கு முதலில் பிஞ்சுவிட்டு பின்னர் பூக்கள் அரும்புவதுபோல நித்திய முக்தனுக்கு முதலில் பிரஹ்மஞானோதயமாகி பின்னர் பிறர்க்குபதேசம் செய்யும்பொருட்டு சாதனங்கள் கைகூடுமென்றும் இராமகிருஷ்ணர் தம் சிஷ்யர்களுக்குச் சொல்லுவதுண்டு."

* * *

இவர் திவ்யசரித்திரத்தினின்றும் கடைசியாக ஒரு சிறு குறிப்பு எடுத்துக்கொண்டு இதைப் பூர்த்தி செய்து முடிப்போம்:— "ஸ்ரீ இராமகிருஷ்ணர் கல்வியிற் றேர்ந்தவர் அல்லர். அவருக்கு வடமொழிப்பயிற்சி சிறிதேனும் கிடையாது. தமது தாய்மொழியாகிய வங்கபாஷையிலும் அவர் போதுமான பாண்டித்திய மடையவில்லை. ஆயினும் அவர் மஹாத்மாவென்று சொல்வதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. கல்விமணம் இல்லாதவர்களுக்குக்கூட பூர்வஜன்ம சுகிர்தத்தாலும் ஈசன் திருவருளாலும் ஸம்பூர்ணப் பிரஹ்மஞானம் உண்டாவதுதிண்ணம்.

* * * *

"பகவான் எவனுக்கருள்புரியவேண்டுமென்று ஸங்கற்பிக்கின்றாரோ அவன்தான் அவரை அடைவன். அவனுக்குத் தான் தம் ஸ்வரூபத்தைக் காட்டுகின்றார்" என்னும் கடவல்லி யுபநிஷத் வாக்கியத்தோடு இதை முடிக்கிறோம்.

குருவருளின்றி உண்மையை உணர்ந்துவிடுவோமென்பார் வீணே மோசம்போவர்.

"கூனரும் கூனரும் குனிந்தபடி வாளேனக்கக் கூடினதொக்குமே
ஊனரு மூனரு மொன்றுபட்டுலகறியா மாயனைக் காண்டிடு மென்னலும்."

† கிறிஸ்துவும் இப்படியே அவருடைய சிஷ்யர்களுடைய பாதங்களைக் கழுவி உங்களுக்குள் மேலானவர் என்னைப்போலும் தாஸானுதாஸனென்று பிரத்தியக்ஷமாகப் போதித்தார்.

‡ தக்ஷிணேசுவராலயம் கட்டுவித்த ராணி ராஸமணியின் மருகரும் அளவற்ற தனவந்தருமான ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் ஆதிமுதல் பக்திவாய்ந்தவருமாவார் இவர்.

"உய்யாரே யவருள்ளன்புண்மையில் வையாரேல்
உய்யாரே யவருள்ளுணர்தேசிகனுளக்கண் ணளியானேல்
உய்யாரே யவருள்மலம்நீங்கியுள்ளத் தமராரேல்
உய்யாரே யவருள்ளத்தமர்ந்துள்ளுணர்ச்சோதியை ஓராரேல்."

"ஓராரே யவருடல்பெருளாவியினைசை யொழியாரே,
ஓராரே யவருனுணர்வொழியா திருவினையறுத்திடு மர்மம்
ஓராரே யவர்சத்தியாசத்தியநிலையறி சாதனமின்றி
ஓராரே யவருனுணர்வற்றவுத்தமசித்தர்தம் வாசனையின்றியே."

—ஆத்ம வித்யாமஞ்சரி. (Godward Ho!)

## மதவொருமையைப்பற்றி கனம் கவர்னர் பேசியது.

சென்னை அன்னதான ஸமாஜத்தர் வருஷோற்சவம் பிப்ரவரிமீ 17உ பச்சையப்பன் மாளிகையில் மிக்க வைபவமாக நடந்தேறியது. கனம்பொருந்திய கவர்னர் லார்ட் ஆம்தில் பிரபு அவர்கள் அவர் பத்னியாரோடு வந்திருந்து அக்கிராசனம் வகித்து வழக்கப்படி முடிவில் ஒரு உபந்நியாசமும் செய்தார். இவர் சாதாரணமாய் கவர்னர் பதவியிலுள்ளவர்கள் அவர்கள் அந்தஸ்து முறையில் இப்படிபட்ட பொதுவிஷயங்களில் சிரத்தை யெடுத்துகொள்வதுபோலின்றி ஹிருதயபூர்வகமாய் தர்ம சிந்தையோடு இந்த தர்ம கைங்கிரியத்தில் மனப்பற்றுடையவராகத் தெரிய வருகிறது. இவர் காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியவர்கள் விஷயத்தில் பூர்ணமான பக்தி சிரத்தையுடையவர். அவருடைய ஜன்மதினமாகிய மேமீ 24உ யன்று வருஷப்பிரதி வருஷம் ஏழைகளுக்கு அன்னமிட நிரந்தர ஏற்பாடுசெய்வதாகவாக்களித்து* அன்னதான ஸமாஜத்தில் தன்னையும் ஒரு அங்கியாகச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். இதிலும் விசேஷமென்னவென்றால் இவர் தாயஹிருதயமும் உண்மையானமனப்பற்று முடையவரென்று தெரியவருகிறது. அன்னதானம் எல்லா தர்மத்திலும் சிறந்ததென்று ஒப்புக்கொண்டு ஏழைகளுக்கு அன்னமிட்டு இரக்ஷிப்பதில் கீழ்த்தேசத்துக்கும் மேற்றேசத்துக்குமுள்ள வித்தியாசத்தை யெடுத்துக்காட்டி, மேற்றேசத்தார் தர்மம் கொடுத்தால் அதற்குப் பிரதியாக அவர்களிடமிருந்து ஏதாவது வேலை வாங்க வேண்டுமென்கிற கொள்கை யுள்ளவர்களாயிருக்கிறார்களென்றும், ஹிந்துக்கள் பிரதிகோராமல் பிச்சையென்று வந்தவர்களுக்கெல்லாம் பாத்திரமறியாது தானங் கொடுப்பதால், பிச்சைவாங்கலையே தொழிலாகவுடைய சோம்பேரிகள் அதிகரித்துப்போகிறார்களென்றுமகாட்டி, காரியத்தில் என்னகுறையிருந்தாலும், தர்மத்தின் உத்தேசம் ஹிந்துசாஸ்திரப்படிக்கும் கிறிஸ்துவேதபடிக்கும் ஒன்றேயாக விருக்கிறதென்றும், ஆகையால் ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும் புற மதசம்பிரதாயத்தில் வேறுபட்டவர்களாயிருந்தாலும் உள்மத வுண்மையில் ஒன்றுபட்டவர்களாகவே யிருக்கிறார்களென்று ஸெண்ட் பால் என்பவர் அன்பின் சிறப்பை மெச்சி அதற்குமிஞ்சி யொன்றுமில்லையென்று உபதேசித்துள்ள பாகத்தை யெடுத்துக் கூறினார். இதை 1904ஹு ஸெப்டம்பர்மீ [illegible] விவேகசிந்தாமணியில் சவிஸ்தாரமாக வி[illegible] வெடுத்துக் கூறியிருப்பதோடு, "புத்திக்கெட்டா[illegible] பக்திக்கெட்டும்" என்னும் இச்சஞ்சிகையின் மு[illegible] விஷயத்துக்கு மேற்கோளாகவும் எடுத்தாண்டோம். இதை இங்கிலீஷில் முதற்பக்கத்தில் அச்சிட்டிருக்கக் காணலாம்.

* இவ்வாக்குப்படி 300-ரூபா மேற்படி சமாஜத்துக்கு நன்கொடை யளித்திருக்கிறார்.

## ருஷியா-ஜப்பான்யுத்தம்.

ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் சண்டையுண்டாய் [பிப்]ரவரிமீ 8உ திங்கட்கிழமை இராத்திரி முதல் [யு]த்தம் நடந்து வருகிறது. இதற்கு முன் 6-மாசகாலமாக ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் 'மஞ்சூரியா'வில் ருஷியர்கள் பிரவேசிக்கக் கூடாதென்கிற விஷயமாய் தகரார் உண்டாகி வாதமும் சமாதானமும் நடந்துவந்தது. மஞ்சூரியாவில் ருஷியர் பிரவேசிக்கக் கூடாதென்பது ஜப்பான் தேசத்தார் தீர்மானம். அதற்குமுற்றும் இணங்காமல், சாமர்த்திய மத்காரமாய் அவர்களை யேமாற்றிவிட்டு தங்கள் [illegible]க்கைய அந்தப் பிரதேசத்தில் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது ருஷியர்களுடைய உத்தேசம். இப்படி இருதேசத்தாரும்வாக்கு விவாதம் செய்துவருகையில் ஒருவருக்கொருவர் மனதொத்து வாராமையால் இருதேசத்தாரும் சண்டைக்கு முஸ்தீப்பு [illegible]தார்கள். ஜப்பான் தேசத்தார் கண்டிப்பாய் எழுதிய கடிதத்துக்கு ருஷிய கவர்ன்மெண்டார் சரியான ஜவாப்புக் கொடுக்காமல் காலதாமதம் செய்து சண்டை முஸ்தீப்புகளைமட்டும் முனைந்து நடத்திவந்ததால், ஜப்பான் கவர்ன்மெண்டார் அவர்களுடைய சிநேகத்தை யறுத்துவிட்டு பேச்சுவார்த்தை சமாதான நடவடிக்கைகளையெல்லாம் கைவிட்டு, சண்டைக்குத் தீர்மானமாயிருந்தார்கள். அப்பொழுது ருஷியர்கள் கொரியாவின் வடமேற்கு எல்லையிலுள்ள யாலு நதிக்கரையில் ருஷிய பட்டாளமொன்றைக் கப்பலினின்றும் இறக்க, ஜப்பானியர் உடனே போர்ட் ஆர்தர் துறைமுகத்துக்குச் சமீபத்திலிருந்த மூன்று போர்க் கப்பல்களைத் தாக்கி அவைகளில் இரண்டைச் சேதம்செய்து மூன்றாவதையுடைத்து சமுத்திரத்தில் மூழ்கடித்து விட்டார்கள். இது 9உ யன்று நடந்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து பின்னும் பல கப்பல்களையும் தாக்கி, ஒரு வியாபாரக் கப்பலையும் பிடித்துக்கொண்டு, போர்ட் ஆர்தர் துறைமுகத்துக் கெதிரிலேயே ருஷியகப்பற்படையை [illegible] அடித்து வெற்றி வீரர்களாகச் சென்றார்கள்.

[illegible]மணி நேரத்திற்குள் ஜப்பானியர் ஒரு ருஷிய [illegible]கப்பலை அமிழ்த்தி மூன்று பெரும் போர்க்கலங்களையும் மூன்று சிறு தீவிரக்கல்விகளையும் நன்றாய்ச் சேதப்படுத்தி, இரண்டு போர்க்கப்பல்களைச் சிறைப்படுத்தி, ஒரு தபால் கப்பலையும் கைக்கொண்டு, 5 ருஷிய வர்த்தகக் கப்பல்களையும் பிடித்துக் கொண்டார்கள். பின்னும் அவர்கள் சில போர்க்கலங்களுடன், ருஷியா கப்பல்கள் முன்வந்து அவைகளை வெளிக்கிழுத்துப் பின் சேதப்படுத்திச் சந்தோஷத்துடன் ஜப்பானியர்சென்றுவிட்டார்கள். ருஷியர் தங்கள் துறைமுகத்திற் கருகிலேயே தோல்வியடைய சீனாவில் வியாபாரநிமித்தம் அவர்கள் வசப்படுத்தியிருந்த 'சின்வான்டாவோ' என்னும் அவர்கள் படையிருப்புப் பட்டணத்தைக் காலிசெய்த ஸ்தானத்தை ப்ரெஞ்சுக்காரார் அவர்களுக்கு நேசர்களாக விருந்து கைப்பற்றிக் கார்க்க உத்தேசிக்கிறார்கள். அது கூடாதென்று அங்கேயுள்ள இங்கிலீஷ்தளபதி ஆக்ஷேபித்திருக்கிறார். ருஷியாவுக்கும் பிரான்சுக்கும் சிநேக உடன்படிக்கை யுண்டாயிருக்கிறது. ஜப்பானுக்கும் இங்கிலாந்துக்கும் சிநேக உடன்படிக்கை யேற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த யுத்தத்தில் அவர்கள் யாரும் தலையிட்டுக்கொள்ள நிமித்தமில்லை. ருஷியாவும் ஜப்பானும் மட்டும் யுத்தம் செய்தால் மற்ற ஐரோப்பிய அமெரிக்க இராஜாங்கத்தார் ஒருதாப்பிலும் சேராது விலகியிருந்து பார்த்துநிற்பார்கள். பிரான்சுதேசத்தார் ருஷியரோடு சேர்ந்துகொண்டால், அங்கிலேய கவர்ன்மெண்டார் ஜப்பான் பக்ஷம் சேருவார்கள். அமெரிக்கர்களும் ஜப்பானுக்கு ஒத்தாசையாகவேயிருப்பார்கள். ருஷியாதேசம் ஜனத்தொகையிலும் விஸ்தீரணத்திலும் மிகப்பெரியது. ஆனால் ருஷிய ராஜதந்திரிகள் உண்மைக்கும் சத்தியத்துக்கும் அவ்வளவாகக் கட்டுப்பட்டவர்களல்லவென்று காட்டியிருக்கிறார்கள். ஜப்பான்தேசம் உருவத்திலும்விஸ்தீரணத்திலும்சிறியதாயினும், அத்தேசத்தார் மனோதைரியத்திலும் உண்மைக்கொத்து நடப்பதிலும் சத்தியமே ஜயமென்னும் உறுதியிலும் சிறந்தவர்கள். போர்வன்மையில் ருஷியருக்குப் பின்னடைந்தவர்களல்ல, கப்பற்படையில் மிகச்சிறந்தவர்கள். ருஷியர்களுக்குக் கப்பற்படை வன்மையும் சாமர்த்தியமும் போதாது. 1894-95-ம் வருஷத்தில் ஜப்பான் சீனதேசத்தோடு யுத்தம் செய்து வெற்றிபெற்று கொரியாவைத் த[illegible]

மானல் அது ஏன் பேசக்கூடாதோ தெரியவில்லை! ஆகையால் அதைப் பரீக்ஷித்துப் பார்ப்பேன்" என்று பரீக்ஷைசெய்ய ஆரம்பித்தார். ஒரு தந்தித் தபால்காகிதத்தில் அந்த முள்ளின் அசைவுபடும்படி யமைத்து "Halloa" என்கிற சப்தத்தை உறத்துப்பேசினார். பிறகு அந்தக் காகிதத்தைப் பின்வாங்கி முன்போல் அந்த முள் அசையும்படி செய்தார். அந்த யந்திரத்திலிருந்து "Halloa, halloa" என்கிற சப்தம் அதி மிருதுவாக வந்தது. இதிலிருந்து பேசும் யந்திரம் ஒன்று செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். இந்த எண்ணம் உதித்தவுடன் இதை நிறைவேற்றுவதில் அவர் சிந்தைமுழுவதுங் கவிந்துநின்றது. எத்தனையோநாள் இராத்தூக்கம் பகல்தூக்கமின்றி இதில் சிந்தைகவிழ்ந்துழைத்தார். அவர் இதற்கென்று புதிதாய் நிர்மித்த ஒரு யந்திரத்தில் "Spezia" என்கிற வார்த்தையைத் திருப்பித்திருப்பிச்சொல்ல அது ஒவ்வொருமுறையும் "Pezia" என்று சொல்லியது. முதலெழுத்தின் சப்தம் விட்டுப்போய்விட்டது. 6-மாதம் தினம் 15-மணி நேரம் இந்த பிசகைத்திருத்த ஊக்கமுடன் விடாமுயற்சி செய்துழைத்தார். கடைசியில் அவர் பொறுமையும் விடாமுயற்சியும் பலித்தது "Spezia" என்கிற ஸப்தம் சரியாகவந்தது. இப்படியாக ஒவ்வொரு எழுத்துக்களும் அக்ஷர ஸப்தங்களும் அந்த யந்திரம் சரியாக உச்சரிக்கும்படிசெய்ய அனேககாலம் தினம் பல மணிநேரம் பாடுபட்டுழைத்தார். கடைசியில் காரியசித்தியடைந்து லண்டனிலுள்ள பளிங்குமாளிகையில் கூடிய ராஜசபையார் 4000-மைலுக்கப்பாலுள்ள எடிஸன் குரலை ஒரு யந்திரத்தில் கேட்டதிசயித்தார்கள். இப்பொழுது இந்த யந்திரம் கடைத்தெருவில் உத்ஸவகாலங்களில் ஓரணா காசுக்கு உலகிலுள்ள ஸங்கீதஸாஹித்திய மஹான்களுடையபாட்டுகளையும், அரசர்கள் இராஜதந்திரிகள் முதலானோருடையபேச்சுகளையும்பாடியும் பேசியும்காட்டி, சாமான்யஜனங்களையும்மகிழ்விக்கிறது.

மிஸ்டர் எடிஸன் ஒன்றுக்கு ஆதாரம் கண்டுபிடித்து அஸ்திபாரம்போட்டுவிட்டால் அப்புறம் அதை முடியாதென்று விடுகிறதில்லை. 20-வருஷங்களுக்குமுன் பார்லிமெந்துசபைக் கமிட்டியார் தீர விசாரித்து மின்சார வொளியைப் பிரிக்கமுடியாது என்று தீர்மானித்தார்கள். பின்னுமொருவருஷத்திற்கெல்லாம் மிஸ்டர் எடிஸன் அதைப்பிரித்துக்காட்ட ஒரு ஸூக்ஷ்மயந்திரமேற்படுத்தி காரியத்தில் அப்படியேசெய்து காட்டிவிட்டார்.

மிஸ்டர் எடிஸன் ஒரு காரியத்தைச்செய்ய ஸங்கற்பித்துக்கொண்டுவிட்டால், அதில் என்ன செலவு நேர்ந்தாலும் சரி, என்னகஷ்டம் நேர்ந்தாலும் சரி, பின்வாங்குவதில்லை. ஒருமுறை ஏதோ ஒரு அபூர்வமான நார் வேண்டியிருக்கிறதென்று அதற்காகத் தகுந்தவர் ஒருவரை இவ்வுலகமுழுவதும் சென்று தேடி எப்படியும் அதைக்கொண்டுவரும்படி செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். தகுந்த மனுஷன் ஒருவர் அகப்படவே அவருக்குவேண்டிய செலவைக்கொடுத்து உடனே பிரயாணப்படும்படி யனுப்பினார். 12-மாசம் அலைந்து திரிந்து அந்த நார் தேடப்போனவர் திரும்பிவந்தார். "அந்த நார் அகப்பட்டதா?" என்று மிஸ்டர் எடிஸன் கேட்டுவிட்டு பதில் கூறுவதைக்கேட்க நிற்காமல் போய்விட்டார். அவர் அந்த நார் தேடிக்கொண்டு போயிருந்தகாலத்தில் அந்த ஜாலவித்தைக்காரர் அதற்கு பதிலாக ஒன்றைக்கண்டுபிடித்துக் காரியத்தை முடித்துவிட்டாரென்று இன்னொருவர் அவருக்கு விவரந்தெரிவித்தார். அவ்வளவு ஸூக்ஷ்மபுத்தியும் சுறுசுறுப்புமுள்ளவர் அவர்.



மிஸ்டர் எடிஸன், பணம், பேர், புகழ், கீர்த்தி இவைகளில் குறைவின்றி உலகப்பிரசித்தராய் விளங்கினாலும், அவர் நடத்தையில் மிகவும் அடக்கமுள்ளவர். ஆர்ப்பாட்டங்களும் ஆடம்பரங்களும் அவரிடத்தில் சுத்தமாகக்கிடையாது. மகாகீர்த்திமானாகியும், தான் ஆதியில் ஏழைப்பையனாயிருந்து சமாசாரப்பத்திரிகை விற்று கஷ்டஜீவனம் செய்ததை ஒருபோதும் மறக்காது நினைத்துவருகிறார். நியூயார்க் நகருக்கருகில் க்ளென்மான்ட் (Glenmont) என்னும் அவருடைய வாசஸ்தலம் மிகநேர்த்தியானதாயினும் அங்கு அவர் அதிகமாய் வசிப்பதில்லை. வேலைச்சாலையிலேயேயிருந்து வேலைசெய்வதிலேயே தம் காலத்தைப்போக்கிவருகிறார். அவர் இருமுறை விவாகம் செய்துகொண்டார். உலகத்துக்கு அவரைப்போல உபகாரம் செய்தவர் வேறுயாருமில்லை. ஆயினும் அவர் பூர்வகாலத்து இருஷிகளைப்போல கர்மயோகியாய் அவருடைய வேலையாச்சிரமத்திலே வசித்துவருகிறார். ஏழைஜனங்களும் அதிகச்செலவின்றி மின்சார வெளிச்சம் அவரவர் வீடுகளிலுபயோகித்து வரத்தக்கதாக ஒரு ஸாதன யந்திரம் கற்பிதம்செய்யக் கருதியிருக்கிறாரென்று தெரியவருகிறது. அவரைப்போலொத்த மகான்கள் உலகத்துக்குபகாரிகளாக அவதரித்து ஜனங்களுடைய க்ஷேமவிர்த்தியைநாடியுழைப்பதே நோன்பாகக்கொண்டு உண்மையான கர்மயோகத்திலிருந்து காலந்தள்ளி தங்களுடைய அவதார மகிமையினால் உலகத்தை முன்னிலுமதிகமாக விர்த்தியடையச்செய்து பூஜிதர்களாகப் போகிறார்கள். இவர்கள் புண்யாத்மாக்களே யென்பதிற் சந்தேகமில்லை.

## THE ILIAD OF HOMER.

### ஹோமர் என்னும் மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

### முதற்காண்டம்.

(234-வது பக்கத் தொடர்ச்சி.)

அகமம்னனுக்கும் அக்கிலனுக்கும் பிணக்கம்.

வேறு.

88. ஆண்டவர் சினத்தைத்தீப்பா னறிவினு லனுபோகத்தால்
மாண்டநற் குணத்தால்வாக்கின் வலிமையால் வலியனாகி
நீண்டபல் பகல்கள்கண்ட நெத்தரென்ப வனெழுந்து
வேண்டுறு மொழிகளாற்றேன் பொழிந்தென விளம்பலுற்றான்.

(இ-ள்.) அப்போது அவ்விருவருடைய கோபத்தையும் தணிக்கும்பொருட்டு, அறிவாலும் அனுபவத்தாலும், சிறந்த குணங்களாலும் வாக்சாலகத்தினாலும் மிக்க சிறப்புடையோனாகி மிக்க வயோதிகனாகிய நெத்தர் என்பவன் அவர்களை நோக்கித் தேன்பொழிந்ததுபோலும் இனிய வசனங்களால் சொல்லத்தொடங்கினான்.

89. உறற்குள கேடியாதோ வொன்னவ ருவகையெய்தச்
சிறப்புறு திறல்சேர்வென்றி வேந்தர்காள் சினக்கொண்டிங்஗ன்
வெறுப்புறப் படுவதான பகைவினை விளைத்திரந்தோ
மறுக்கலி சென்றன்மாற்றம் மாற்றாலி ரிகளாயின்றே.

(இ-ள்.) நமக்கு யாது கேடுவருதற்குள்ளதோ? உங்களுக்கு இவ்வாறு புத்திகெட்டுப்போயிற்று. நம் பகைவர் சந்தோஷிக்க நீங்கள் இவ்வாறு ஒருவரையொருவர் கோபங்கொண்டு பகைக்கின்றீர்கள். இனிமேலாயினும் என்சொல்லைத் தட்டாமல் உங்கள் பகையை விட்டுவிடுங்கள்.

90. வானவர் தமையேமானும் வலிகெழு வீரர்தம்மை
யானறிந் துவ்ளேன்மேனு ளெறழ்வலி யவர்க்குநேராம்
மானவேல் வீரர்தம்மை மகிழ்வுறக் காண்பதுண்டோ
நானினி யிருகண்ணார நளிர்கட லுலகின்கண்ணே.

(இ-ள்.) தேவர்களுக்குச்சமானமான பராக்கிரமத்தையுடைய வீரர்களை என் கண்ணார எத்தனை பேர்களையோ பார்த்திருக்கிறேன். அவர்களுக்கொப்பானவர் இனி இவ்வுலகத்தில் உண்டாகப்போகிறதே யில்லை நான் காணப்போகிறதும் மில்லை.

91. புகழ்மலி பிருதனென்மைப் பொருவில்சீ தரையனென்றும்
நெகிழ்தலில் பெருமைவாய்ந்த செனியனின் வலியிற்குன்றாத்
தகையுறு தசியனேங்கு பொலிவிமன் சாற்றுமேனைத்
தொகையுறு வீரர்க்கொப்பாச் சொல்லவின் றுலகிலுண்டோ.

(இ-ள்.) புகழ்மிகுந்த பிருதனென்ன, பராக்கிரமத்தில் தனக்கொப்பில்லாத சிறப்புடைய தரைய னென்ன, எந்நாளும் குறையாத பெருமையையுடைய செனியனென்ன, வலிமிகுந்த தசியனென்ன, மேன்மைபெற்ற பொலிவிமன் என்ன, இன்னம் இவர்களைப்போன்ற எண்ணிறந்த வீரர்களை யான் கண்டிருக்கிறேன். அவர்களுக்கொப்பான வீரர்கள் இக்காலத்தில் உலகில் இல்லையேயில்லை.

92. இனையராம வீரரோடி யானிளமையிலினிதுகூடி
முனைவரு தொழில்பயின்று முபனுறு நலத்தால்வெல்ல
நினைவுறு நெஞ்சம்தூண்ட நிகரறு புகழ்ச்சிறல்கும்
வினையினில் விழைவுணர்ந்து மிகவுமுட் களித்துளேனல்.

(இ-ள்.) இப்படிப்பட்ட அநேக வீரரோடு சேர்ந்து நானென் பாலியகாலத்தில் போர்த்தொழில் பயின்று ஒருவரையொருவர் சற்காரியங்களில் வெல்லவேண்டி நெஞ்சில் ஆசைகூர்ந்து ஒப்பற்ற புகழைத் தருவனவான காரியங்களை விரும்பிச் செய்திருக்கின்றேன்.

93. குன்றிடைத் திரிந்துங்கானிற் கொடியவல் விலங்கைக்கொன்றும்
பன்றியைச் செகுத்துச்செந்நீர் கானெலாம் பாயச்செய்தும்
சென்றுகை செரிந்தவெய்ய நரப்பரி சிதைத் தும்வேறும்
வென்றிசேர் வீரச்செய்கை யெத்தனை விளைத்துளேமால்.

(இ-ள்.) மலைகளில் திரிந்தும், அநேக கொடிய விலங்குகளைக்கொன்றும், பன்றிகளைக்கொன்று அவற்றின் உதிரத்தாற் கானமெல்லாம் செவக்கச்செய்தும், பிடரிமயிர் நெருங்கிய கொடிய நரப்பரிகளைக் கொன்றும் இன்னமும் இவ்விதமான விளையாட்டுச் செய்கைகள் எவ்வளவோ செய்திருக்கிறோம்.



94. இத்தகை விறல்சேர்வீர ராயினு மியம்புமென்றன்
புத்தியை யினிதுபோற்றிப் புகழுறப் புரிவாரன்றி
எத்திறத் தானுமென்சொற் கடப்பரோ கடவார்யானும்
வைத்தவென் மதிவலத்தா லென்வழிப் படுப்பேன்மாதோ.

(இ-ள்.) இவ்வளவு பராக்கிரமசாலிகளாயினும் அவ்வீரர்கள் நான் சொல்லும் புத்திமதிகளை யன்போடேற்றுப் புகழ்ச்செய்கைகளைச் செய்வார்களேயன்றி எவ்வாற்றானும் நான்சொல்லும் வார்த்தைகளை மீறுவார்களோ ஒருபோதும் மீறவேமாட்டார்கள். நானும் என்னுடைய புத்தி சாமர்த்தியத்தாலே அவர்களை என்னிச்சைப்படி இணங்கி நடக்கச்செய்வேன்.

95. இளமையிற் றுனுமென்னை யினையவ ரறிவின்றாய
வளமையிற் சிறந்தானென்று மதித்தன ராயின்வாலைத்
தளர்வறு பருவத்துற்ற வீரர்காள் தள்ளலாமோ
விளையுமென்முதுமைதன்னில் விருப்பினுற்றநுசமன்சொல்லை.

(இ-ள்.) என்னுடைய பாலியகாலத்திலும்கூட இவ்வீரர்கள் இவ்வாறு என் புத்திசாதுர்யத்தைக் கண்டு என்னைக் கௌரவிப்பார்களாயின், பாலியர்களாகிய நீங்கள் இப்போது என் முதுமைப்பருவத்தில் தருகின்ற புத்திமதிகளை யேற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுதல் உங்களுக்கு நியாயமாகுமா.

(இன்னும் வரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

* The Madras Hindu Association.

## சென்னை ஹிந்து ஸமாஜம்.

இந்த வருஷம் முதல்-தேதியன்று பிரபலமாய்க் கூட்டங் கூடிக்கொண்டாடப்பட்ட சென்னை ஹிந்து ஸமாஜத்தின் நோக்கங்கள் விதிகளும் அதைக் கொண்டாடக்கூடிய முதற் கூட்டத்தில் ஜஸ்டிஸ் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், ராவ்பஹதூர் எம். இரங்காசாரியர், மிஸ்ஸஸ் அன்னிபெஸன்ட் அம்மாள், இவர்கள் செய்த பிரசங்கங்களின் ரிபோர்ட்டடங்கிய சிறு புஸ்தகமொன்றும், ஹிந்துதர்மவழிபற்றி ஹிந்து ஜனாசார சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதைக் குறித்து ராவ்பஹதூர் எம். இரங்காசாரியர் எழுதிய சிறு புஸ்தகமொன்றும் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இவ்விரு சிறு புஸ்தகங்களிலடங்கிய விஷயங்களைப்பற்றி நாம் பல தடவைகளிலும் பன்னிப் பன்னி யெழுதியிருக்கிறோம். இப்பொழுது முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய தென்னவெனில் "சென்னை ஹிந்து ஸமாஜ"த்தின் நோக்கத்துக்கும் ஊக்கத்துக்குமுள்ள தாரதம்மியமேயாம். நோக்கம் மிகப் பெரிதாகவும், ஊக்கம் மிகச் சிறிதாகவுமிருக்கிறதென்று எதிர்க்கக்ஷியார் முறையிடுகிறார்கள். முதல் முதல் எந்த [illegible]யல்லது ஸ்தாபன மேற்பட்டாலும் நோக்கத்துக்குத்தக்க ஊக்கமிருப்பதாகப் பார்ப்போருக்குப் படாது. ஆனால் ஊக்கத்தின் அளவும் ஆடம்பரத்தை யொட்டியதாக மட்டுமில்லை. ஊக்கமின்றி யாடம்பரங்களிருக்கலாம். அப்படியே ஆடம்பரமின்றி ஊக்கமுமிருக்கலாம். இரண்டும் சமனும், ஊக்கத்துக்குத்தக்க ஆடம்பரமும், ஆடம்பரத்துக்குத் தக்க ஊக்கமுமிருப்பது விசேஷமாம். ஆனால் இத்தொல்லுலகில் எதுவும் எடுத்ததும் பூரணமாக விளங்குவதில்லை. எல்லா விர்த்தியும் சிறுகச்சிறுகவேதோன்றும் வளர்ச்சி கிளர்ச்சியின்பலனும். ஆகையால் எம்முயற்சியையும் அவசரப்பட்டு இரு

* 1. The Madras Hindu Association, its aims & objects & an account of its inaugural meeting. 2. Hindu Social Reform on National lines, by Rao Bahadoor M. Rangachariar, M. A. G. A, Natesan & Co, Printers, Esplanade.

பயன்படா முயற்சியென்று பகர்தலாகாது. உள்ளம் உண்மையிற்பற்றி நின்றால் எவ்வகையாலும் "முயற்சி திருவினையாக்கும்" என்பது சத்தியம். உள்ளம் உண்மையிற்பற்றாது வெளியாடம்பரத்தில் மட்டும் பற்றுவைத்து பகட்டுக் குழைப்பதாயின், அம்முயற்சி விழலுக்கிறைத்த நீர்போல் வீணில் கழியும். ஆகையால் ஹிந்து ஸமாஜத்தின் பலா பலன்களைப் பற்றிச் சிந்தித்துத்தீர்மானம் சொல்ல இன்னம் காலம் முந்தவில்லை யென்பதை அதைப்பழிப்பவர்கள் மனதில் வைக்கவேண்டும்.

இந்த ஸமாஜத்தின் நோக்கங்கள் நாலு: இவைகள் சித்திக்க இவர்கள் அனுஷ்டிக்கக் கருதும் மார்க்கங்கள் பதினொன்று. இவைகளைச் சுருக்கமாய் இங்கு வரைவோம்:—

நோக்கங்கள்:—

i. பூர்வந்தொட்டுள்ள புராதமான ஹிந்து நாகரிகவுண்மைக்கு ஒத்தவிதமாக ஹிந்து ஜனமதாசாரங்கள் விர்த்தியடைந்துவர ஆதாரமாயிருத்தல்.

ii. ஹிந்து ஜன ஸ்வதர்ம பரிபூரணத்துக் குதவியாக அந்நிய நாகரிகங்களில் மேலாகவுள்ளவற்றையெல்லாம் ஹிந்து ஜனங்கள் ஸ்வீகரித்து ஸ்வதர்மானுஷ்டான ரீதியாக அவைகளைக்கையாண்டு பழகிக் கடைத்தேறும் பொருட்டு பல பாகங்களும் பொருந்த வமைக்கப்பெற்ற கருவிகரண ஆத்மக விர்த்தியக்கும் வித்யாமுறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருதல்.

iii. ஹிந்துஜன மதஸ்தாபனங்கள் சம்பந்தமாய் காலதேச வர்த்தமானங்களுக்கிசைய வேண்டிய மாறுதல்கள்செய்து விர்த்திக்கு அஸ்பதமான வழி தேடல்.

iv. ஹிந்துஜன ஐக்கியத்துக்கு விரோதம் விளைக்கும் விர்த்திகள் எதுவாயினும் அதை யெதிர்த்து நின்று ஹிந்துஜன ஐக்கியத்துக்கும் ஒருமைக்கும் பங்கம் வாராது காப்பாற்றலும், ஹிந்துஜனப் பிரிவுகளுக்குள் உள்மானமும் உண்மைப் பிரகாசமும் விளங்கச்செய்து ஹிந்துஜன ஐக்கியத்தையும் ஒருமையையும் ஸ்திரப்படுத்தலுமாம்.

இதற்கு வழிவகைகள்:—

1. 'Hindu ideals of life and conduct'— ஹிந்துக்கள் தங்களுக்கே சொந்தமெனக் கொண்டாடும் பூரணமான 'ஸத்யம் ஸன்மார்க்கம்,' இவைகளைப்பற்றி ஜனங்கள் சரியான எண்ணங்கள் கொள்ளும்படி அவைகளைப்பற்றி யெழுதியும், போதித்தும், பிரசங்கித்தும் இன்னும் பலவகைகளாலும் நல்லறிவு பரவச்செய்து ஜனசமூக விர்த்தியை நாடியுழைத்தல்.

2. ஹிந்துக்களுடைய பரதனமான பூரணக் கொள்கைகளுக் கிசையவும் இக்காலத்துக்குப் பொருந்தவும் ஹிந்துப்பெண்களையும் ஸ்திரீகளையும் வித்யாமுறையில் பழக்குதல்.

3. (a) பண்டிதர் புரோஹிதர்களை இக்காலத்துக்கேற்றபடி பழக்குதலும், (b) பண்டிதர்களும் இங்கிலிஷ் கற்றவர்களும் சேர்ந்த சபைகூட்டி இந்த ஸமாஜத்தின் நோக்கத்தை முன்னுக்குக்கொண்டு வருவதும்.

4. ஹிந்துஜன சமூகத்தில் கடையோர் கீழோராயுள்ளவகுப்பாரை தர்மகைங்கரியார்த்தம் அவர்களுக்குழைத்து முன்னுக்குக் கொண்டுவர முயற்சித்தல்.

5. ஹிந்துக்களால் ஏற்படுத்தப்பட்ட கல்லாகலாசாலைகள் ஸ்கூல்களிலும், கவர்ன்மெண்டாரால் ஏற்பட்டுள்ளவைகளிலுங்கூட மதக்கல்வி பயிற்றுவிக்கச்செய்யவேண்டியது.

6. ஹிந்துமதப் பிரஷ்டர்கள் தங்கள் பிசகையறிந்துவருந்தி திரும்பவும் ஹிந்துஜன சமூகத்துக்குத் திரும்பவேண்டில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளவும், அதற்குவேண்டிய மதக்குரவர் அனுமதிபெறவும் முயற்சித்தல்.

7. அநாதைகளாகவிடப்பட்ட ஹிந்துக்குழந்தைகளை ஹிந்துக்கள் கொண்டாடும் பூரணமான ஸத்ய ஸன்மார்க்கக் கொள்கைகளுக் கிசைய அவர்களைப் போஷித்து வளர்த்துவர வழிதேடல்.

8. விவாகச்சீர்திருத்தம்.— ஹிந்துக்கள் இது விஷயத்தில் கொண்டாடும் பூர்ணக்கொள்கையாம் ஆத்மவிவாஹ, ஸம்ஸ்கார தர்மத்துக்குப் பங்கம் வாரமலும், விவாகசம்பந்தத்தாலேற்படும் தடுக்கக்கூடிய துன்பங்கள் துக்கங்கள் இவற்றைக் கூடியவரையில் குறைக்கவும் வழிதேடியுழைக்கவேண்டும். ஹிந்து ஸ்திரீ புனர் விவாகத்தைப்பற்றி இந்த ஸமாஜத்தார் பலகாரணங்கள் நிமித்தம் ஸமாஜமுறையில் எதும் சொல்ல சாத்தியமில்லாதவர்களா யிருக்கிறார்கள். ஆனால்,

(a) பாலப்பிராயத்திலே ஹிந்துப்பெண்களுக்கு வைதவ்யம் நேரிடுவதைத் தடுக்கும்படியாக விவாக வயதையும் பாணிக்கிரஹணகாலத்தையும் சிறுகச்சிறுக உயர்த்த முயற்சிக்கப்படும்.

(b) வதூவரஸொல்கம் கொடுப்பது கூடாதென்று தடுக்க முயற்சிக்கப்படும்.

(c) விவாகச் செலவுகளைக் குறைத்து விவாக சடங்குகளை சுலபமாகச் செய்யவேண்டும்.

9. ஹிந்துவிதவைகளுக்கு வித்யாப்பியாசம் செய்வித்து பரோபகாரவழிகளில் அவர்கள் ஸ்வதர்ம வழி விலகாது ஜன க்ஷேமத்துக்குழைத்துவரப் பழக்குவதற்குவேண்டிய ஸ்தாபனங்களேற்படுத்தல்.

10. மதவழி ஜீவனவழியில் பிரஷ்டர்களாகாது அந்நியதேசங்களுக்குப் போய் வந்த ஹிந்துக்களை ஹிந்து ஜனசமூகத்தில் சேர்த்துக்கொள்ள உதவிபுரிதல்.

11. சதுர்வர்ணத் தாரிலுமுள்ள உட்பிரிவு வகுப்பார்கள் ஒருவரோடொருவர் பந்திபோஜனம்செய்து, கொண்டு கொடுத்து விவாகம் செய்துகொள்ளல் சாத்தியமாகச்செய்வது.

இந்நோக்கங்களையும் வழிவகைகளையும் வாசித்துச் சிந்திப்போர் மனதில் ஒரு உண்மை உள்ளபடி விளங்கல் வேண்டுமென்று கருதுகிறோம்.

இச்சஞ்சிகையின் இரண்டாவது விஷயத்தின் தலைப்பெயரை யொட்டி அவ்வுண்மையை உள்ளபடி அடிக்குறிப்பில் இங்கிலீஷில் வரைந்திருக்கிறோம்.* அது என்ன வெனில்,—சென்ற 19-ம் நூற்றாண்டில் ஐரோப்பியரது மனோவிர்த்தியை ஆராய்ந்தெழுதிய ஒருவர் 'அதற்குமுன் நூற்றாண்டின் மத்தியில் நேர்ந்த 'Revolution' என்னும் பெரிய மாறுதல் நேர்ந்தது முதல், பக்திவிர்த்தியே பிரதானமாக நடைப்பட்டுவந்தது. அதனாலுண்டான மனக்கலக்கமும் அது காரணமாயுண்டான ஜனக்குழப்பமும் நீங்க, சென்றநூற்றாண்டில் இரண்டு நூதன வழிகள் ஏற்பட்டுவிர்த்தியாய்வருவதுஸ்பஷ்டமாய் விளங்குகிறது' என்று சரித்திர பூர்வகமாயாராய்ந்துணர்ந்து வரைந்திருக்கிறார். 'நாஸ்திகமாம்' விஞ்ஞான விர்த்தியிலுண்டாகும் கெடுதலையாற்ற, ஆதாரப்பற்று, ஆத்மானுபவப்பற்று என்று இருவித நூதனப்பற்றுகளுண்டாய் விர்த்தியாய் வருவதாகச் சொல்லியிருக்கிறார். ஆதாரப்பற்று இங்கு சாஸ்திரப்பற்றாக விளங்குகிறது. ஹிந்துஜனசமாஜம் போன்றவை இதற்கு உதாரணமாம். ஆத்மானுபவப்பற்றுக்கு உண்மையான உதாரணம் ராமகிருஷ்ணமிஷன் போன்றவையாம். பிரார்த்தனை ஸமாஜம், பிரம்ம ஸமாஜம் போன்ற இவையெல்லாம் ஆத்மானுபவ வழிபற்றிச்செல்ல முயன்று பாதிவழியில் 'கரைதட்டி நின்ற கப்பல் போல்' தடைப்பட்டுப் போனவைகளாம். ஆரிய தர்ம மஹாமண்டலி, ஹிந்து ஸமாஜம் போன்ற (revivalist movements) பூர்வாதாரப்பற்றுக்கொண்டுழைக்கும் ஸ்தாபனங்களும், மடங்கள், மதக்குரவர்கள் போன்ற பூர்வஸ்தாபனங்களும் ஆதாரப்பற்று என்னும் கொள்கை வழிபற்றி யுழைப்பனவாம். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஆதரவாக விருந்துழைத்துவருவது தேச க்ஷேமத்துக்கும் ஜன க்ஷேமத்துக்கும் சுகிர்தமாம். இந்த உண்மைபற்றியே ஸர். எஸ். சுப்பிரமணியஐயர், மிஸ்ஸஸ் பெஸன்ட் முதலானவர்கள் ஹிந்து ஸமாஜத்துக்கும் ஆசாரச்சீர்திருத்த சபைக்கும் போட்டியில்லையென்று செ[illegible]பியர். இந்நோக்கங்கொண்டே 1903-ம் வருஷம் ஜனுவரி மீ 1௳ யன்று 'ஆனந்தாமிஷன்' என்னும் 'ஸத்[illegible]னந்த சபை'யேற்படலாயிற்று. அது ஆத்மானுபவ வழி பற்றியுழைக்கக்கருதியதால் வெளியாடம்பரங்கள் வேண்டாமென்று உண்மைக்கு உதார[illegible] விருந்துழைத்துவரத் திருவருட்பிரகாசத்தைத் பிரா[illegible] தீர்மானிக்கலாயிற்று. இந்த நம் நோக்கத்தை யெண்ணத்திறமல் ஹிந்துஸமாஜத்தார் நம்மை ஆசாரச்சீர்திருத்துவதாயிரு கக்ஷியைச் சேர்ந்தவரென்றும், ஆசார்ச்சி கக்ஷியார் பூர்வஹிந்து (Revivalists)

* Vide, Footnote p. 321.

வைத்துழைப்பார். கக்ஷியைச் சேர்ந்தவரென்றும் கிராகரித்து நம்மிடத்தில் குற்றங் கூறுகிறார்கள். நாம் ஒரு கக்ஷியையும் சேர்ந்தாவது சேராவாவது இல்லை. ஸத்தியம் ஒன்றே கதியென்று நம்பியுள்ளோம். நமக்கு ஸத்யமேகதி, ஸத்யமேவிதி, ஸத்யமேவழி. "ஸத்யமேவஜயதி" என்பது நமது உண்மையான உள்மதக்கொள்கை. இதையே பிடியாகப் பிடித்து ஸத்குருவாம் நடராஜ மூர்த்தியைத்தியானித்து இந்த 15- மாதங்களாக வுழைத்து வருகிறோம். நமது கொள்கையையும் நோக்கத்தையும் இச்சஞ்சிகையின் முதலில் "தன்னை வென்றவன் தலைவனாவான்" என்னும் தலைப்பின் கீழ் கவர்னர், கவர்னர்-ஜனரல், வித்யா இலாகாத்தலைவர் இவர்கள் மனோவர்க்குக்குப் பொருந்தப் பின்னுமெடுத்து விளக்கியிருக்கிறோம். அதை யெல்லா ஹிந்துக்களும் கவனித்துப் படிப்பதோடு இதரர்களுக்கும் எடுத்துக்காட்டி வற்புறுத்தக்கோருகிறோம்.

---

## ருஷியா—ஜப்பான்யுத்தம்.

---

ருஷியா-ஜப்பான் யுத்தம் இன்னும் நடந்து வருகிறது. ஆனால் இருதாத்தாருக்கும் சென்ற மாசம் குறித்ததைவிட பலமானசண்டை தரையிலாகிலும் சமுத்திரத்திலாகிலும் இன்னும் நடக்கவில்லை. இருதாத்தாரும் சண்டைக்கு வேண்டிய முஸ்தீப்புகள் செய்து சைனியங்களை அங்கங்கேயனுப்பிவந்தாலும் விவரம் வெளிவாாதபடி இரகஸியமாகக் காப்பாற்றி வருகிறார்கள். ஜப்பானியர் சமுத்திரத்தில் வலுத்தகையாகவேயிருக்கிறார்கள். ருஷியர்களுக்கு அங் [illegible]ப் பக்கத்தில் இரண்டு முக்கிய துறைமுகங்களிருக்[illegible]ன்றன. ஒன்று போர்ட் ஆர்தர், மற்றொன்று [illegible]லாடிவோஸ்டக்' என்னும் பேருடையது: வடக்கே[illegible]க்கிறது. அங்கே சமுத்திரம் பனியாலுறைந்து [illegible] கப்பல்கள் போகக்கூடாதபடி சில மாதங்கள் [illegible]மாம். இப்பொழுது அங்கே உறைபனிநாளாம். [illegible]ஆரிதலுள்ள 13-ருஷியப் போர்க்கப்பல்க[illegible] சேதமடைந்து துறைமுகத்துக்குள் சண்[illegible]வாமல் தங்கிக்கிடக்கின்றன. இன்னம் 5-[illegible]ருப்பதில் இரண்டொன்று ஒருவாறுசேதப்பட்டிருப்பதாக வதந்தி. இப்படியாக ருஷியர்களுடைய கப்பல்சைனியம் மிகவும் பலங்குறைந்துபோயிருக்கிறது. வடக்கேயுள்ள 'வ்லாடிவோஸ்டக்' என்னும் துறைமுகத்தில் 5-ருஷியக் கப்பல்களிருப்பதாகவும் அதில் இரண்டு சேதப்பட்டு முழுகிப்போனதாகவும் சொல்லப்படுகிறது. மார்ச்சு௴ 6௳ ஞாயிற்றுக்கிழமையன்று ஜப்பானியர் கப்பற் படைகள் 'வ்லாடிவோஸ்டக்' துறைமுகத்துக்கு 5-மைல் தூரத்தில் நெருங்கி துறைமுகப் பட்டணத்தைத் தகர்க்க உத்தேசித்து 200-குண்டுவெடிகள் தீர்த்தார்களாம். ஆனால் இவைகளொன்றும் பட்டணத்தில் விழுந்து வெடிக்கவில்லையாம். கோட்டை கொத்தளங்களுக்காவது ஜனங்களுக்காவது விசேஷ சேதம் ஒன்றும் நேரிடவில்லை. அப்போது ருஷிய கப்பல்கள் அங்கே துறைமுகத்திலில்லையாம். பிறகு அவைகளோடு சண்டை நேரிட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் சமாசாரம் ஒன்றும் கிட்டவில்லை. ஜப்பானியர் போர்ட் ஆர்தர் துறைமுகப் பட்டணத்தையும் தாக்கினார்களென்றும் ஆனால் அதனால் ஒரு சேதமும் விளையவில்லையென்றும் தெரிகிறது. 'வ்லாடிவோஸ்டக்' துறைமுகப்பட்டணத்திலுள்ள ஜனங்கள் அத்துறைமுகப்பட்டணத்தைவிட்டு உள்நாட்டுக்குள் தங்கள் குடும்பசகிதம் ஏராளமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அங்கே குழப்பம் மிகுதியாகி ஜனங்கள் இருக்க சம்மதிக்காமல் ஓடிப் பிழைக்க யத்தனிக்கிறார்கள். இருப்பவர்களுக்கும் அகவிலை அநியாயமாக உயர்ந்துவிட்டபடியால் ஜீவனத்துக்குக் கஷ்டம் அதிகமென்று தெரிகிறது. சீக்கிரத்தில் அப்பட்டணம் காலிசெய்யப்படுமென்று தெரியவருகிறது. போர்ட் ஆர்தர் துறைமுகத்திலுள்ள ருஷிய படைகளும் ஜீவனத்துக்கு வழியின்றித் தவிக்க நேரிடுமென்றுதோன்றுகிறது. கடல்வழியாக எதும் சாமான்கள் அவர்களுக்குக் கிடைக்காதபடி ஜப்பானியர் காவல்வைத்து பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள். பட்டணவாசிகள் பயந்தோடுவதாக சமாசாரம். ருஷியாவிலிருந்து மஞ்சூரியா ரயில்மார்க்கமாய்த்தான் அவர்களுக்கு ஆகாரமும் சைனியஉதவியும் கிடைக்கவேண்டும். ஆனால் ருஷிய கவர்ன்மெண்டு ஏற்பாடுகள் ஊழல்பட்டுக்கிடப்பதால் கவர்ன்மெண்டார் செய்யுமுயற்சி சரியாகப் பலிப்பதில்லை.



ருஷிய கவர்ன்மெண்டார் லக்ஷம்பவுண்டு நிலக்கரிவாங்க உத்தரவுசெய்து அதற்கு வேண்டிய பணமும் கொடுத்திருக்க 40-ஆயிரம் பவுண்டு நிலக்கரிதான் வந்ததாம். பாக்கி போனவழி வந்தவழி யொன்றும் தெரியவில்லை. ருஷியாவிலிருந்து ஸைபேரியன் ரயில்வேமார்க்கமாய் போர்முகத்துக்கு தளவாடங்களும் சாமான்களுமனுப்பியவை போனவிடம் வந்தவிடம் தெரியாமல் குழம்பிக்கொண்டு கிடக்கிறார்கள். கவர்ன்மெண்டுத்தியோகஸ்தர்கள் 'எரிகிறவீட்டில் பிடுங்கினது லாபம்' என்று சண்டைக்குழப்பத்தை சாக்கிட்டு வேண்டியமட்டும் சுயலாபத்தை நாடி அட்டூழியம் செய்துவருகிறார்களென்று தெரியவருகிறது. மஞ்சூரியாவழியாக வரும் ரயில்வே முற்றும் பந்தோபஸ்துக் குறைவாயிருப்பதாகவும், வழியில் அனேக இடங்களில் அந்த ரயில்வேய்க்கு ஆபத்து நேரிடுவதாயிருப்பதைத் தடுத்துவருவது ருஷிய அதிகாரிகளுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறதென்றும் தெரியவருகிறது. ருஷியர்கள் இப்படி தட்டுத்தடுமாறிக் குழம்பிக்கொண்டிருக்க ஜப்பானியர் அதிசாமர்த்தியத்தோடு சேனைகளை முக்கியமான இடங்களில் கொண்டுபோய் இரகஸியமாய்ச் சேர்த்து சண்டைக்கு வேண்டிய முயற்சிகளெல்லாம் வெகு மும்முரமாகவும், சுமுக்கமாகவும் நேர்மையாகவும், சட்டதிட்டமாகவும் செய்துவருகிறார்கள்.

ருஷியாவுக்குள்பட்ட இராணுவ உத்தியோகஸ்தர்கள் 'எரிகிறவீட்டில் பிடுங்கினதுலாபம்' என்று நினைக்கிறவர்களாகவிருக்க, ஜப்பானியர்கள் தேசாபிமானம் நிறைந்து, இராஜவிசுவாஸம் பொங்க அதியுற்சாகத்தோடு தங்கள் உடல் பொருளாவியையும் திரணமாயெண்ணி தங்கள் தேசத்தின் கௌரவத்துக்காக பிராணனை விடுவது பெருங் கீர்த்தியென்று நம்பி, சாவுக்கு அஞ்சாமல், அதிக துணிச்சலோடும், சாந்தம், சாமர்த்தியம், திடம், வைராக்கியம் முதலிய சற்குணங்கள் மேலிட்டவர்களாய் வெகு திடமாகவும் புத்தியுத்தியோடும், பகைவர்களை மடக்கி யடிப்பதற்கு வேண்டிய உபாயங்களெல்லாம் தேடி வெற்றிக்குவேண்டிய வழிகளில் ஒன்றும்விடாது பார்த்துக்கொண்டு போரை நடத்திவருகிறார்கள். ஜப்பானியர்கள் மஹா புத்திசாலிகள். இயற்கையாகவே திடமும் தைரியமும் வாய்க்கப்பெற்றவர்கள். அவர்கள் தேசத்தில் எரிமலைகளும் பூமியதிர்ச்சியும் அடிக்கடி யுண்டாகி ஊர்கள், மலைகள், ஒருநாளில் நிலம் வெடிக்க அதில் காணாமல் மறைந்துபோவது சகஜமாதலால், அவர்கள் சாவுக்குத் துணிந்தவர்களாயிருக்கிறார்கள். உயிரைத் திரணமாக நினைக்கப்பட்டவர்கள். இராஜவிசுவாசமும் தேசவிசுவாசமும் பெரிய பூஷணமாகப் பாராட்டப் பழகியவர்கள். அவர்களுடைய நற்குணங்களெல்லாம் இந்த யுத்தசமயத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. அவர்கள் 1868-ம் வருஷம் முதல்தான் சீர்திருத்த ஆரம்பித்தார்கள். ஐரோப்பிய அமெரிக்காதேசத்து நாகரிகங்களைப்பார்த்துப்பழகி அனுஷ்டிக்கக் கற்றவர்களானதால், அவர்கள் இந்த 35-வருஷகாலத்தில், அதுவும் விசேஷமாகச்சென்ற 12-வருஷங்களுக்குள், ஐரோப்பிய அமெரிக்காதேசத்தார்க்கிணையானவர்களாகத் தங்களைச் சீர்திருத்திக்கொண்டுவிட்டார்கள். 1890-ம் வருஷத்தில் ஜப்பானுக்கு பார்லிமெந்துசபை யேற்பட்டது. அங்கிலேய பார்லிமெந்து சபையைப்போல் ஜனப்பிரதிநிதி துரைத்தனம் அத்தேசத்தில் இப்பொழுது வெகு நேர்மையாக ஏற்பட்டுவிட்டது. ருஷியாவோடு சண்டை யாரம்பித்து, யுத்தச்செலவுக்குப் பணம் வேண்டுமென்று தெரிந்ததும் ஜப்பானிய ஸ்திரீகள் தாங்களாக தங்கள் நகைகளையெல்லாம் கவர்ன்மெண்டு யுத்தநிதிக்குபயோகப்பட அனுப்பிவிட்டார்களாம். பிரபுக்கள் தனவந்தர்கள் தங்கள் நிதிக்குவியல்களையெல்லாம் திறந்து கவர்ன்மெண்டுக்கு நிதிசேகரமாகக் கொடுத்துவருகிறார்களாம். இந்த யுத்தத்தில் ருஷியர்கள் தோல்வியடைந்தால், சீக்கிரத்தில் அவர் இராஜ்ஜியம் நிலைக்காது விழுந்துபோமென்று நம்பக்கூடியதாயிருக்கிறது. ஆனால் இந்த ருஷியர்களோ ஐரோப்பாவிலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் அதிகாரத்திலும் வலுத்தவர்கள். ஜப்பானியர்களோ அவர்களோடொப்ப பார்க்குமிடத்தில் ஒரு சிறுதேசத்தார். ஆனால் இவர்கள் அதிகாரபலம் ஜனங்கள் ஹிருதயத்தில் வேரூன்றி நிற்க, ருஷியர்களுடைய அதிகாரம் குடிகளை வதைக்கும் ஏகாதிபத்தியத்தைச்சார்ந்ததாயிருக்கிறது. பிரஜைகளினுடைய அன்பின்றி அரசன் பலம் என்னத்திற்காகுமென்பது இதனால் நன்றாக விளங்குவதாயிருக்-

கிறது. எப்போதும் கொடுங்கோலரசு குடிகளுக்குக் கேடேயாகும். குடிகள் வருந்த அரசன் சுகிப்பது எப்படி? இப்பொழுது எங்கும் ஜனப்பிரீதியைநாடி யுழைக்கும் துரைத்தனமே வலுத்துவர, ருஷியாவில் மட்டும் ஏகாதிபத்தியமும், கொடுங்கோலுமே அரசனுக்காதாரமாகவிருந்துவருகிறது. கொடுங்கோலதிகாரத்தின் கீழுண்டாகும் குழப்பமும் கலகமும் இப்பேர்ப்பட்ட ஆபத்காலத்தில்தான் தலையெடுக்கும். அப்படியே ருஷியாவிலெங்கும் உள்கலகமும், குடிபயமும், தலைகாட்டிவருகிறதாகத் தெரிகிறது. இந்த யுத்தம் இன்னும் மும்முரமாகநடக்கவில்லை. எல்லாம் உள்ளூர எரிந்துகொண்டு வருகிறது. எந்த சமயத்தில் குபீரென்று கிளம்பி காட்டுத்தீபோல் இந்த யுத்தம் எங்கும் பரவுமோ என்று எல்லாரும் ஆவலாயெதிர்பார்த்திருக்கிறார்கள். மார்ச்சுமீ 10உ ஜப்பானியர் போர்ட் ஆர்தர் பட்டணத்தையும் துறைமுகத்தையும் தாக்கி மிகச் சேதப்படுத்தி விட்டதாக தந்தி சமாசாரம் வந்திருக்கிறது. இது இன்னும் உறுதியாக ஏற்படவில்லை.

---

## சுகுணசுந்தரம்.

---

### XIII.

சண்பகாவதி சுமுகரைப் பார்த்து "சுமுகரே! சுகுணசுந்தரர்கள், 'இவ்வுலகவின்பங்களைத் துறந்து சென்றனராயினர்' என்று மாத்திரஞ் சொல்லினீரே; அவர்கள் எவ்வாறு சென்றனர், அவர்கள் வானுலகு செல்லக் காரணமென்னையோ? ஒளியாமல் உள்ளது உள்ளபடி அறிவிக்க வேண்டுகின்றோம்" என, சுமுகர், "பெண்காள்! சாருதத்த மகாராஜா உங்களிருவரையும் தம்மிடம் இப்போதே அழைத்துவரச்சொல்லினர். அங்குவந்தால் எல்லாம் வெளியாகும்" என்றார்.

**சண்பகாவதி:** "நாங்கள் அவண் வருவதில் ஆக்ஷேபணையொன்றுமில்லை. அச்சுந்தர புருஷர்கட்குற்ற விபத்தை முதலில் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்."

**சுமுகர்:** "கன்னிகாமணிகாள்!" என்று சுசீலபூபதி விவாகத்திற்குப் பூர்வாங்கமாய்ச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தது முதலான எல்லாவற்றையுஞ் சூக்ஷ்மமாய்ச் சொல்லிமுடித்தனர். சுமுகருடைய மொழியை உற்றுக் கவனமாய்க்கேட்ட சுலோசனையும் சண்பகமும், "சுகுண சுந்தரர்கள் தத்தம் உயிரை ஈசுவரார்ப்பணஞ் செய்திருக்கிறார்கள் போலும்" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பளிச்சென ஓர் ஜோதிஸ் தோன்றி, அதில் இவ்விரு பெண்களும் மறைந்தனர். சுமுகர் ஒன்றுந்தோன்றாமல் திப்பிரமைகொண்டு, இதுவும் ஈசன் திருவிளையாடல்களிலொன்றுமென மனதிலெண்ணி, அரண்மனை நோக்கிச்சென்று தான் வார்த்தையாடிக்கொண்டிருக்கையிலேயே இராஜ கன்னிகைகள் காணாமற் போனதைச் சொல்லிவியந்தனர்.

இவ்வளவையும் அறிந்த கிருபாகடாக்ஷ முனிவர் சுசீல மகாராஜனையும், சுமந்தரனையும் சமாதானஞ் சொல்லி அவரவர்கள் பத்னிகளுடன் தம் ஆச்சிரமத்திற்கு இட்டுச் சென்றனர். காமபாலனும் சாருதத்தராஜனும் கிருபாகடாக்ஷரைப் பின்சென்று அம்மகாமுனிவர் உரைத்த தைரியமொழியினால் ஒருவாறு மனந்தேறி தத்தம் பதியை யடைந்தனர்.

இந்த அற்புத லீலா விநோதங்களை எல்லாம் பார்த்தும் கேட்டும் அறிந்த மற்ற இராஜாக்களெல்லாம் தாம் வந்தவழியே நோக்கிச் சென்றனராயினர். சாருதத்தனும் மனோரமையும் துக்க சாகரத்தில் மூழ்கித் தவித்துக்கொண்டிருந்தனர்.

மதிவிலாஸனும், சுமுகனும் அவர்களைத் தேற்றிக்கொண்டு இராஜகாரியங்களைச் சரியாய்ப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். சுலோசனையின் இன்னுயிர்த் தோழிகளான கனகம், மரகதம் இருவரும் பட்ட துக்கத்தை இங்கே யெழுதிமுடியாது. இவ்வாறு ஹேமாபுரியில் மங்களம் அமங்களமானதைக் கண்டு சகியாதவனாய் தினகரன் அஸ்தகிரியில் போய் மறைந்தனன்.

* * * *

### XIV.

இப்பொழுது இராக்காலம். எங்கு பார்த்தாலும் நிசப்தமாயிருந்தது. அழகில் இரதிதேவியை ஒத்து விளங்கும் ஓர் மாது வீதிவழியாகச் சென்றனள். அந்த வீதியின் இருமருங்கிலும், வீடுகள் வரிசைவரிசையாக எழுடுக்குள்ள உப்பரிகைகளுடன், அதியுன்



னதமாகப் பார்ப்பவர்களுக்கு விந்தையைப் பயக்கும் வண்ணம், சந்திரகாந்தம் முதலான கற்கள் வைத்துப் பதித்துச் சமைக்கப்பட்ட சிறந்த மாளிகைகளாகத் தோன்றின. அந்த வீதியின் வழியேசென்ற மாது, அரசன் வயிற்றிற் பிறந்து எல்லாக் கலைகளையுங் கற்றுத்தேர்ந்தவளாகத் தோன்றினள். வயதோ 16,17 இருக்கலாம். கலியாணம் ஆனவளாகத்தோன்றவில்லை. ஆனால் தன் காதலனைப்பற்றியே சிந்தித்து வருத்தமுற்றவளாக அவள் முகக்குறியைப் பார்ப்போர்கள் எளிதில் உணர்வார்கள். இவள் சிறுமியான பெண்மணியேயானாலும் முதிர்ந்தவிவேகமும், உள்ளன்பும், தான் நேசித்த காதலனையன்றி வேறு யாரையும் மணம்புரிவதில்லை என்ற நோக்கமுடையவளாகவும் காணப்பட்டனள். "நான் எங்கிருந்தேன்! இங்குவரக் காரணமென்னவோ! உன்னத மேடைகளுடன் கட்டிய அழகிய இந்நகரம் எந்த மகானுடையதோ!! இந்நகரின் பெயர் தான் என்னோ? இந்நகரத்திற்கு எப்படிவந்தேன்!!! என்ன ஆழ்ந்து யோசித்தாலும் ஒன்றும் தோன்றவில்லையே; இதுகனவோ, நினைவோ? இந்நிசிவேளையில் நான் இவ்வீதியில் ஒண்டியாய் நடந்து போவதை ஓர் ஆடவன் பார்க்க நேரிடில் என் கதி என்னவாகுமோ" என்று புலம்பிக்கொண்டே அம்மாது சிரோமணி, மெள்ளமெள்ள அவ்வீதிவழியேசென்றுகொண்டிருந்தனள்.

அப்போது அதே வீதிவழியாய் ஓர்ஆடவன் தனக்கெதிரில் வரக்கண்டனள். அவனைக்கண்டு திடுக்கிட்டனள். "அழகும், யௌவனமும் ஒருங்குவாய்ந்த பெண் ஒருத்தி தனித்து வழிநடக்க நேரிடுங்கால், தன்னாயகனல்லாத யௌவன புருஷன் ஒருவன் கூட சஞ்சாரஞ்செய்ய நேரிடின், சில அசந்தர்ப்பங்கள் சம்பவிப்பதுண்டு; ஆனால் எனக்கு ஒன்றின்பின் ஒன்றாய் சம்பாவிதமாகும் விபத்துகள் மாதிரி இவ்வுலகைத்தவிர வேறு உலகங்களில் என்னைப் போன்ற யுவதிகட்குச் சம்பவித்திருக்கமாட்டாது" என்று எண்ணி மனநொந்தனள்.

மேற்கூறிய சுந்தரபுருஷன் இந்தக் காந்தமணியைக் கண்டதும் சற்று மயங்கி, அவள் பக்கலணுகி அவளது இளந்தளிர்க்கொப்பான கரத்தைப்பற்றத் துணிந்தனனாயினும், அவ்வநிதாரத்னம் அவனுடைய உள்ளத்தை அறிந்து, அதற்கிடங்கொடாது, விலகிச்சென்றனளாயினள். அவ்வாடவன் அவளை நோக்கி "அடி! என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட கள்ளச்சிறுமி! இந்நிசியில் இங்கு தனித்திருப்பதேன். இதோ என் அழகிய வீடு. அதற்குள் செல்வோம் வா" என்றவுடன், தனக்கு அவனை மீறித் தப்பிப்போக வேறுமார்க்க மின்மையால், அம்மாது அவ்வீட்டிற்குள் செல்லவேண்டியதாயிற்று.

அச்சுந்தரவதி முன்னும் அந்த ஆடவன் பின்னுமாகப் போகும்போது, மேனிலைக்குச் செல்லும்வழி காணப்பட்டது. அதுபற்பல நிறமுள்ள கற்களின் ஒளியைப் பிரகாசிக்கச் செய்ததுமல்லாமல், அந்த கற்களின் ஒன்றின்மேலொன்றாய் மாறிமாறிச் சுற்றிச்சுற்றி மேலே ஏறும்படி கட்டப்பட்டிருந்த சோபனவரிசைகளின் வழியே சென்று பார்க்கையில், ஓர் பெரிய மாளிகை காணப்பட்டது. அம்மாளிகையில் விதம்விதமான கண்ணாடி விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அம்மாளிகையோ, திருப்பாற்கடலின் தோற்றம்போலவும், அதில் பிரகாசித்துக்கொண்டிருந்த விதம்விதமான விளக்குகள், க்ஷீராப்தி மத்தியில் தங்கிய ஆதிசேஷனது பணாமணிகளைப்போல கிரணங்களையுமிழ்ந்தனவோ என்று சொல்லும்படிக்கு மிருந்தது. அங்கே நடுவில் போடப்பட்டிருந்த சுவர்ணத் தகட்டாற் பொதித்த கால்களுடன் கூடிய ஹம்ஸதூளிகா சயனதல்பம் ஒன்று இருந்தது. அதின் நாற்பக்கங்களிலும் நவரத்தினங்களாலிழைத்த கால்களாலும் விளிம்பில் சுவர்ணத்தகடுகள் அழுத்தியும் அதன் கீழ் தொங்கும்படி செம்பட்டு ஜாலர்களும், மணிக்கோவைகளும் கட்டிய அசுமானகிரியின் விசித்திரத்தையும்; அதற்கடுத்த இருபுறத்திலும் பொன்னினாற் செய்த பன்னீர்ச்செம்புகளும். சந்தனப்பியாலாக்களும், அதன் மத்தியில் ஆகாய கங்கையில் மலர்ந்த பொற்றாமரை மலர்போன்ற சுவர்ணத்தட்டில் மரகதத் தகடுபோன்ற மெல்லிலைத் தளிர்களும், அவர்க்காய்ப்பிளவுகளும், முகவாச திரவியக்குப்பிகளும், அதன்மேல் ரோஜாமலரால் குச்சுகட்டிய ஜாதி மல்லிகை, முல்லை முதலான புஷ்ப ஹாரங்களும், வைக்கப்பட்டிருந்த விமரிசையையும், அந்த சயனத்தின் பக்கலில், அதிரிப்பந்தத்திலகப்பட்ட, மான்போல

த்தது. பசுமாட்டைப் பக்கத்திலின்ற மரத்தில் கட்டி தன் தோல் குல்லாவிற் பால்கறக்க ஆரம்பித்தான். ஒரு சொட்டுப்பால் கூடவரவில்லை. அவனும் முன்பின் கறந்தறியாதவனாதலின் அதன் முலைக்காம்புகளை முறைதவறிப் பிடித்திழுக்கவே பசுவும் பொறுக்கமாட்டாமல் விண்ணென்றுதைத்தது. இவனுடைய நல்லதிர்ஷ்டத்தால் ஒரொற்றைச் சக்கரவண்டியில் ஒரு பன்றியைக் கட்டியிழுத்துக்கொண்டு ஒரு கசாப்புக்காரன் அவ்வழியே வந்தான். "என்ன ஐயா சமாசாரம்" என்று அக்கசாப்புக்காரன் இவனைத் தூக்கிவிட்டான். பேதைமதி யுற்றதையெல்லாம் முற்றப்பகர்ந்தான். "இதோ! இதைக் குடித்துக் களைதீர்த்துக்கொள்," என்று ஒரு புட்டில் கள்ளைக்கொடுத்து "இந்தமாடு கசாப்புக்கடைக்குதவுமேயல்லாது வேறொன்றிற்கும் பயன்படாது. கிழப்பட்டுவிட்டது" என்று சொன்னான். "ஐயோ! இம்மாதிரியாகும் என்று யார் எண்ணியிருப்பார்? நான் இதைக்கொன்றால் என்னத்துக்காகும்? எனக்கு மாட்டிறைச்சியே பிடியாது: பன்றியிறைச்சியாயின் குழம்புபண்ணலாம். ரஸம்பண்ணலாம்" என்று பேதைமதி சொன்னான். "நல்லது உன் திருப்திக்காக நான் வேண்டுமானால் பசுவைக்கொண்டு பன்றியைக் கொடுக்கிறேன்" என்றான் கசாப்புக்காரன். "ஈசுவரனுன்னைக் கடாக்ஷிப்பாராக என்று சொல்லித் தன் பசுவை யவனிடத்தே கொடுத்து, பன்றியின் கட்டை அவிழ்த்து அதன் ஒருகாலில் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்து விரட்டிக்கொண்டுபோனான்.

5. இப்படிக் கொஞ்சதூரம் சந்தோஷத்தோடு போகாமுன்னர், தன்கையில் ஓரழகிய வெள்ளை வாத்தைத்தூக்கிக் கொண்டுபோன ஓர்பட்டிக்காட்டானைச் சந்தித்தான். அவன் இவனண்டை மணி கேட்க வந்தபோது, இவன் தன்னதிர்ஷ்டங்களை யெல்லாஞ்சொல்லிக் குதூகலித்ததுமன்றி, தனக்கு அவ்வித அதிர்ஷ்டமிருக்கையெல்லாம்போய், சாதுவான பன்றிகிட்டிற்றே என்று மெச்சிக்களி கொண்டான். பட்டிக்காட்டானும் தான் அவ்வாத்துக்கு ஞானஸ்நானங்கொடுக்கக்கொண்டு போவதாகவும், பிறந்து எட்டுவாரமேயாயினும் எவ்வளவு பாரமாயிருக்கிறது பாரென்றும் கூறி, அதைப்பொரித்து புசிப்பவனுக்கு அதிகம் கொழுப்பு எடுக்கக்கூடுமென்றான். உடனே பேதைமதி அதைத் தூக்கிப் பார்த்து "நீ சொல்வதுசரி. ஆனால் என் பன்றி உன் வாத்துக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததில்லை" என்றான். இவ்வார்த்தையைக் கேட்டதும் திகைத்துத் தலையசக்கிப் பின்வருமாறு கூறலுற்றனன்:—

"என் நண்பரே! சற்றே செவிகொடுத்து யான் சொல்வதைக்கேளும். இந்தப் பன்றி உம்மைச் சங்கடத்தில் இழுத்துவிடும். நான்வருகிற ஊரின் பெரிய தனக்காரன் பன்றி இதுபோல ஒன்று கொட்டிலினின்றும் திருட்டுப்போயிற்று. உன்னைக் கண்டவுடன் அந்தப் பன்றியை நீதான் திருடிவந்தவனென்றெண்ணினேன். அவர்கள் உன்னைக் கண்டு பிடித்துக்கொண்டால், உடனே உன்னை பிடித்துக் குதிரைக் கொட்டகையில் அடைத்து விடுவார்கள்."

6. இதைக்கேட்டவுடன் பேதைமதி நடுநடுங்கி உடல் வியர்த்து, வாய்குழறி "அப்பா! இந்த விபத்தினின்றும் எப்படியாவது தப்புவித்துவிடு: இந்தப் பக்கங்களைப்பற்றி என்னைவிட உனக்கு நன்றாகத் தெரியும். என் பன்றியை யெடுத்துக்கொண்டு உன் வாத்தைக்கொடு" என்றான். அதற்கு அப்பட்டிக்காட்டான் "இந்த விஷயத்தில் நீ இன்னும் விசேஷ திரவியமூலமான உதவிசெய்யவேண்டும். நீ கேட்கும்போது ஆபத்தில் அகப்பட்டுத் தவிக்கிறபடியால் உன்னை அதிகம் தொந்தரிப்பது சரியன்று. உன் பன்றியைமாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி பன்றியைவாங்கிக்கொண்டு, ஒரு குறுக்கு வழியா யோடிவிட்டான். பேதைமதியும் பயம் நீங்கிக் கவலையொழிந்து தன்னிச்சையே சென்றான். கடைசியாக இப்போது கிடைத்த லாபம் முன் எந்த வியாபாரத்திலும் கிடைக்கவில்லை: முதலில் நல்ல பொரியல்கிட்டும். பிறகு அதன் சதையில் ஆறுமாதத்துக்கு ஏற்கும் நெய்கிடைக்கும் அப்புறம் வெள்ளைத்தூவிகள் ஏராளமாகக்கிடைக்கிறது. என் தலையணைக்குள் வைத்துத் தைத்துத் தலைக்குவைத்துப் படுத்தால் நல்ல தூக்கம் வரும். உறுத்தாது கொள்ளாது. இதைப்பார்த்து அம்மாளுக்கெவ்வளவு சந்தோஷம் உண்டாகும்" என்று தன்னுள் ஆலோசித்தேகினான்.



கடைசியூருக்கு அவன் வந்தபோது

7. "மலையெனவில்லை வெள்ளியெனவில்லை
சண்டவிடமெல்லாம் களிப்புடனுலவுவேன்
பனியும் மிலகு பயனும் மெத்த
ஊரகமெல்லா மெய்யாகமே!
என்போற் சுகிப்பே ரிருப்பரோவ்வுருசு."

என்று பாடிக்கொண்டு கையில் ஓர்சாணைக்கல்லைத் தாக்கித்திரியும் ஒரு சாணைபிடிக்கிறவனைக் கண்டான். "நீ சுகிபோல் தோற்றுகிறாய் ஏனெனில் உன் வேலையினிடத்தில் நீ ஊக்கத்தோடும் உற்சாகத்தோடு மிருக்கிறாய்" என்று அவனை நோக்கிச்சொன்னான். "ஆம். என்னது உத்தமமானவேலை. என் சட்டைப்பையில் காசில்லாத நேரங்கிடையாது. அதிருக்கட்டும்; உனக்கு அந்த அழகியவாத்து எங்கேகிடைத்தது சொல்" என்றான். பின்னவன் "நான் இவ்வாத்து விலைகொடுத்து வாங்கவில்லை. பன்றிக்கு மாற்றினேன்" என்று விடையிறுத்தான் பேதைமதி. "பன்றி எங்கே கிடைத்தது? அதற்காக ஓர்பசுமாடாகக் கொடுத்தேன்" "பசுவோ?" "குதிரைக்கீடாக வாங்கினேன்" "குதிரையோ?" "என் தலையத்தனை பெரியவெள்ளிக்கட்டி கொடுத்து வாங்கினேன்" "வெள்ளிக்கட்டியோ" "ஏழுவருஷம் சிரமப்பட்டு உழைத்தேன்." "இதுவரையில் நீ உலகத்தில் மெத்தச்சிரமப்பட்டிருக்கிறாய். இப்போது நீ உன் சட்டைப்பையில் கையைப்போட்டவுடன் பணமும் காசுங்கிடைக்குமானால் நீ அதிர்ஷ்டசாலிதான். பணக்காரனுங்கூட ஆவாய்" என்று சாணைபிடிக்கிறவன் சொன்னான். "மிகவும் உண்மைதான். அதெப்படிச்செய்து கொள்ளுகிறது? "நீயும் என்னைப்போல் ஒரு சாணைபிடிக்கிறவனாகவேண்டும். ஆனால் அதற்கு உனக்கு ஒரு சாணைக்கல் மாத்திரம் தான்வேண்டும் மற்றதெல்லாம் தானேவந்துவிடும். இதோ கொஞ்சம் காடுமுரடான ஒரு கல் இருக்கிறது. இதை அந்தவாத்துக்குக் கொடுத்துவிடுகிறேன். நீ வாங்கிக்கொள்வையா? என்று கேட்டான் "நீ என்ன அப்படிக் கேட்கிறாய்? என் சட்டைப்பையில் எப்போதும் பணம் கிடைக்குமென்றால் நானே இவ்வுலகில் சுகவான். அதைவிட வேறு என்னவேணும் இந்தவாத்து எடுத்துக்கொள்" என்று சொல்லிக் கொடுத்தான். சாணைபிடிக்கிறவன் அதை வாங்கிக் கொண்டு தன் பக்கத்தில் கிடந்த ஒரு சாமான்யக் கல்லை யெடுத்துக்கொடுத்து, "இதுமிகச் சிறந்த கொஞ்சங்கெட்டிக்காரத்தனமாய் இதை உபயோகித்து ஆணியெடுத்து இந்த மேடு பள்ளங்களை யெல்லாம் சமப்படுத்திவிடலாம்" என்றனன்.

8. பேதைமதி அக்கல்லை யெடுத்துக்கொண்டு மிக்கக் குஷாலோடும்போனான். அவன் கண்களில் மிக்கசந்தோஷத்தால் ஆனந்தபாஷ்பம் பெருகியது "நான் எவையெல்லாம் விரும்புகிறேனோ அவை தாமாய்க் கிடைக்கின்றன" என்று மனதில் நினைத்தான்.

9. இதற்கிடையில், அவன் காலைமுதல் பிரயாணம் பண்ணிக்கொண்டு வந்தவனாதலால் மெத்தக் களைத்துப்போனான். தனக்குக் காயமேற்று வந்துவிட்டதென்ற உற்சாகத்தில் கையிலிருந்த கடைசிச் சல்லியையும் செலவழித்துவிட்டான். அதற்குமேல் அவனால் நடக்கமுடியவில்லை. கல்லோ மெத்தக்கனத்தது. என் செய்வான் பாவம்! மெள்ள அருகிலிருந்த ஒரு குளத்தண்டை தண்ணீர் குடித்துக் களைப்பாறலாமென்று நகர்ந்து சென்றான். சென்று அந்தக் கல்லைச் சாக்கிரதையாய்க் கரையோரத்தில் வைத்தான். தண்ணீர் குடிக்கக் குனிந்தபோது, கல்லைமறந்து அதைக் கையால் எத்திவிட்டான். அது 'லுளக்' என்று தண்ணீருக்குள் மூழ்கிவிட்டது. தண்ணீர் மிகத்தெள்ளியதாயிருந்தபடியால் அக்கல் அடியில்போகும்வரையில் நன்றாகத் தெரிந்தது. அடியிற்சேருங்காலும் பார்த்து நோக்கியிருந்து ஒரு தரம் துள்ளிக்குதித்து, "எனக்குக் கோமாரி பற்றியது போல் என்னைப் பற்றிக்கொண்டிருந்த அந்தக்கல்லை என்னின்றும் பிரித்த தேவனுக்கு அனந்தகோடி நமஸ்காரம். இப்போது என் மடியில் கனமுமில்லை வழியில் பயமுமில்லை, என் சுகமேசுகம்." என்று சொல்லி முழங்காலிட்டு விண்ணைப் பார்த்தான். அவன் நிர்மலமாய் நித்தமாய் சுத்தமாய் எங்கும் நிறைந்த தோர் வஸ்துமாய் விளங்காநின்ற அதி விடுபட்டவனாய்த் தன்னை மறந்து தனிமுதல்வன் சிந்தையேயன்றி வேறு சிந்தையில்லாதவனாய் நின்றான். நிர்மல ஆகாயத்தில் பளீரென்று ஒரு ஜோதிப்பிரகாசம் கண்டு பாலோடு பால் கலந்ததுபோலும் அதினொன்றுபட்டு ஐக்கியமானான். பிறகு 'தேகஸ்மரணை' வந்தபோது

போல்

சத்தோ அந்த சோதிவடிவிற் கலந்த காரணத்தால் பசி தா இபட்ட செம்பு தங்கமாக மாறி விளங்குவது வா ால தான் முற்றும் மாறியிருக்கக் கண்டான். வன் உலக வியவகாரங்களை யொன்றும் தெரியாத ஆமூமூடனுனும், இருதயம் மாசுமறுபடியாது நிர் மலமாயிருந்தபடியால் ஆசைகளெல்லாம் விட்டொ ழியவும் பற்றுதலெல்லாம் விட்டகாரணத்தால் பற்ற ற்றவிடயாம் பாத்திலபோய் அவன் மனம் லயித்தது. அவன் கடவுளைத் துதித்தது உண்மையான பிரா ர்த்தனையாதலால் அவன் உடனே மனோலயமடைந்து "உலகெலா மறிந்தோதற்கரியானை" ஒரு நொடியில் கண்டு களித்தான். சிவமும் தன் ஸ்வரூபத்தைத் தானே யுணர்ந்தவனுனன். இப்படிப்பட்ட மூடனுக் கும் இவ்விதமோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டுமோ என்று சந்தேகிப்பார்க்கு, கடவுள் மனிதனை ஹிருதயத்தைக் கண்டு சோதித்துப் படியளக்கிறுரேயன்றி அவன் உலக சாமர்த்தியத்தைக் கொண்டல்ல. இதனுல் ஹிருதய சுத்தியே எல்லாவற்றிலும் பெரிது என்பது விளங்கும்.

"அறிவறியாமையைநீவியவனே
பொறிவாயொழிந்தெங்குந்தானுனபோது
வறிவாயவற்றினுட்டானுயறிவின்
செறிவாகிநின்றவன்சிவனுமாமே,"—திருமந்திரம்.

இப்படிப் பொலரும் பெரும்பாக்கியம் பெற்ற பிறகு அவன் கவலையெல்லாம் நீங்கினவனுய் வீடுபோய்ச் சேர்ந்தான்.

ட. வ. வெசுப்ரமணிய ஐயர்.

## THE "VIVEKACHINTAMANI."

We have received the Arudradarisanam special number of this useful magazine for January 1904. It opens with a message of love from the Far West from Dr. Cuthbert Hall, whose visit in India last winter, he says, "filled my heart with affectionate regard for Indians. I long to revisit your country and come into closer fellowship with your people." A new year's greeting from Dr. G. U. Pope gives a description of the characteristics of "the sages" from an ancient Tamil classic. "The Arudradarisanam 1904," "Sir Oliver Lodge on the position of science to-day" and a brief sketch entitled "Saved by Faith – A Godly woman's story of her salvation" are other articles of interest. The rest of the number to the extent of nearly 30 pages is taken with the text of "The Word of the Lord - Being an epitome of the Bhagavatgita: A Godly woman's gift to the faithful and true of her sex and her children." This version of the 'song celestial' is in simple and popular language adopted to the intelligence of women and children. We learn that it is already being used for recitation at home by Brahmin ladies of the South, both young and old during prayer hours. The author known as Avudayarammal was a saintly lady who attained self-realisation by her immense Bhakti. Her name appears in the "Philosophical Songs of the Indian Beggar" a lecture delivered by the late Mr. Ratnaswami Aiyar under the auspices of the Public Lecture Committee, Trivandram, which was published and dedicated "by kind permission" to His Excellency Sir Arthur Havelock. The keynote of all her philosophic and religious songs as well as those of others who have attained 'self-realisation' by their faith is "Universal sympathy." We feel sure that this great work of hers now first published will meet with universal appreciation from the Hindus, who have in it a popular version of their great religious book for the early grounding of women children in their Faith.—*The Hindu.*

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளயான காகிதப்பதிப்பு:—** அத்தியக்ஷர்கள், மடங்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணு. பழைய பிரதி 8 அணு.

**லேசான காகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி 5½ அணு. பழைய பிரதி 6 அணு.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினுல் வருஷசந்தாவில் 8 அணுவும், 6-மாச சந்தாவில் 4 அணுவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாசம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தான சந்தா தாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்தி வருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினுல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவை செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும் போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கு மிடமிராது.



"Seek Truth wherever you can find it,' But, "Make your choice and stick to it till you reach the End.

ஸத்யம்வத.—Speak the Truth.

"Hitch your Wagon to a Star." "To Thine own Self be True.



அன்பேபவன் : அறிவேசக்தி : ஓம்தத்ஸத்.] God is Love : Knowledge is Power : O...

ஸத்யமேவஜயதே—Satyameva Jayati.

புத்தகம் 12.] 1904-ம்வருஷ எப்பிரல்மீ [இலக்கம் 12.

## CULTIVATE FAITH WITHOUT CREDULITY, INDEPENDENCE WITHOUT ISOLATION AND TOLERANCE WITHOUT INDIFFERENCE.

"The heathen who bows in apprehension or awe before the image of an unknown god may be rendering all the worship he knows; but the soul that finds its divinity by knowledge and love has communion of another kind..........To know that the greatest men of earth are men who think as I do, but deeper, and see the real as I do, but clearer, who work to the goal that I do, but faster, and serve humanity as I do, but better, that may be an inducement to my humility, but it is also an inspiration to my life"—*The Story of the Mind.* (*Baldwin*).

"It is easy in the world to live after the world's opinion; it is easy in solitude to live after one's own; but the great man is he who in the midst of the crowd keeps with perfectness the independence of solitude."—*Emerson.*

"I understand that by churning the shastras the Pandits get the whey only while the devotees get the butter."—*Swami Dayananda Saraswati to Sri Ramakrishna Paramahamsa.*

"Tolerance means reverence for all the possibilities of truth; it means acknowledgment that she dwells in diverse mansions, and wears vesture of many colours and speaks in strange tongues; it means frank respect for freedom of indwelling conscience against mechanic forms, official conventions, social force; it means the *charity* that is greater than even faith and hope."—*John Morley.*

## "ஆரியக்கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிரு."

"என்னையறிந்திலே னித்தனை காலமும்
என்னையறிந்தபி னேதுமறிந்திலேன்
என்னையறிந்திட் டிருந்துங்கைவிடா
தென்னையிட்டென்னைபுசாவுகின் றுனே."—திருமந்திரம்.

"புத்திக்கெட்டாதது பத்திக்கெட்டும்" என்றும், "விக்ஞானமென்பது வியவகாரவிர்த்தி" யென்றும் பக்தியைப் பெரிதும் தூக்கிப் புத்தியைத் தாழ்த்தி யெழுதினதினுல், புத்தி

...றிப் பக்தி செய்யலாமென்று ஆழ்ந்து சிந்திக்கச் சக்தியில்லாதார் எளிதில் நம்பி மோசம்போ...கலாம். ஆகையால் அவர்கள் இத் தப்பெண்ணங் கொள்ளாதபடி "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" என்னும் வசனத்தைக்கொண்டு அவர்களுக்கு மிகவும் அவசியமான சில நற்போதனைகள் செய்ய உத்தேசங்கொண்டோம். இங்கே அவர்கள் கவனிக்கவேண்டிய மூன்று பெரிய விஷயங்களை யெடுத்து விவரித்துக் கூறுவோம்.

முதலாவது: பேதைமையின்றி பக்தியிற் பழகு.

இரண்டாவது: எல்லாருக்கும்மத்தியில் ஏகாந்தமாயிரு: அதாவது; புறத்துறவின்றி அகத்துறவு பூண்.

மூன்றாவது: உபேக்ஷையின்றி உள்ளம் பொறு.

பக்தி, பக்தி யென்றால் என்ன? பக்தி யென்னும் ஸம்ஸ்கிருத பதத்துக்கு உண்மையான உள்ளன்பு பாராட்டுதலே சரியான பொருளாம். இந்த அன்பு எப்படிப்பட்டது? 'அன்புடையார் என்புமுடையர் பிறர்க்கு' என்றதினாலும்,

"அன்பீனுமார்வ முடைமையதுவீனு
நண்பென்னு நாடாச்சிறப்பு,"

என்றதினாலும் அன்பினுடைய இலக்ஷணங்கள் ஒருவாறு குறிக்கப்பட்டன. இன்னும் திருவள்ளுவர்,

"அறத்திற்கேயன்பு சார்பென்பவறியார்
மறத்திற்கு மஃதே துணை."

என்றதனாலும் அதன் இலக்ஷணம் குறிக்கப்பட்டுள்ளது. அன்பிலிருந்து ஆசையுண்டாகும்; அதிலிருந்து அளவற்ற சிறப்பமைந்த சிநேகமுண்டாகும். உள்ளன்பு கசிந்துண்டாகும் நேசத்திலும் மேலானது இவ்வுலகில் என்னுளது? ஏதுமில்லை யென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? இப்படி இவ்வுலகில் மற்றெல்லாவற்றிலும் மேலான சிறப்புள்ளதாகிய நேசத்தால் வரும் இன்பத்தை யனுபவிப்பவர் அதன்பயனாக கடவுளிடத்தில் உள்ளன்பு வைக்கவறிந்து என்றுமழியாப் பேரின்ப சுகத்தை யனுபவிப்பர் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அன்பானது தர்ம சித்திக்கேயன்றி பகைமையை நீக்குதற்கும் அவ்வன்பே துணையென்றார். ஸேண்ட் பால் அன்பின் இலக்ஷணங்களை வெகு நன்றாக வெடுத்துக் கூறுகிறார். அதாவது:—

"அன்பு எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளும், அது பக்ஷம் பாராட்டும்.
"அன்பு தன்னை மெச்சிக் கொள்வதில்லை, தன்னைப் புகழ்ந்தாலும் லக்ஷியம் செய்வதில்லை,
"அது கோணலாய் நடந்துகொள்வதில்லை,
"தன்னலம் பாராட்டுவதில்லை,
"எளிதில் கோபம் கொள்வதில்லை,
"கெடுதி நினைப்பதில்லை,
"அநீதியில் மகிழ்ச்சியின்றி சத்தியத்தைக் கண்டுமகிழும்,



"எல்லாம் பொறுக்கும், எல்லாவற்றையும் நம்பும்,
"எல்லாம் கூடுமென்றெண்ணும், எல்லாவற்றையும் சகித்துக்கொள்,

பக்தி முதிர்ந்தால் முத்தி சித்தியாம் என்பது

"முத்திக்குவித்து முதல்வன்தன் ஞானம்
பத்திக்குவித்துப் பணிந்துற்றுப்பற்றலே"

என்ற திருமூலர் திருமந்திரத்தினால் விளங்கும். "பக்தி எல்லாவற்றையும் நம்பும்" என்று ஆத்ம சொல்லியதின் பூரணக் கருத்தை வெளியிடவேண்டில் "அது எதையும் நம்பி மோசம்போகின்றது" என்பதை வருவித்துக்கொள்ளவும். ஏனெனில் உண்மையாக உள்ளபடி நம்பினால் அந்த நம்பிக்கை பலித்தேதீரும். "நம்பிக்கெட்டாரில்லை" என்பது ஸத்தியம். ஏனெனில், உண்மைப் பக்தி தன்னளவாகவே நிற்கும்.

"தானே தனக்குப் பகைவனுநட்டானும்
தானேதனக்கு மறுமையுமிம்மையும்
தானேதான்செய்த வினைப்பயன்றுய்ப்பானும்
தானேதனக்குத் தலைவனுமாமே"—திருமந்திரம்.

ஆகையால், உண்மைப் பக்திக்கு ஒருபோதும் கேடுவிளைவதில்லை. அது எப்போதும் நன்மையே பயக்கும்.

"தன்னையறியத் தனக்கொருகேடில்லை
தன்னையறியாமற் றானேகெடுகின்றான்
தன்னையறியு மறிவையறிந்தபின்
தன்னையேயர்ச்சிக்கத் தானிருந்தானே."

தன்னைத்தானறியாத குறையால்தான் எல்லாக் கேடுகளும் வருகின்றன. இதற்குத்தான் குரு வேண்டுமென்று சொல்கிறது.

"அறிவுவடிவென் றறியாதவென்னை
அறிவுவடிவென் றருள்செய்தான்நந்தி
அறிவுவடிவென் றருளாலறிந்தே
அறிவுவடிவென் றறிந்திருந்தேனே."

யென்றார் திருமூலதேவர். 'இந்த வுண்மையை யறியத்தானா குருவருள் வேண்டுமென்று சொல்கிறது!' என்று உண்மையறியாதவர்கள் இதை யற்பமாக நினைப்பார்கள். உண்மையை உள்ளபடியறிந்தால் அவர்கள் அப்படி நினையார்கள். ஒருவன்வீட்டுக் கொட்டகையிலே பெருந் திரவியம் மண்ணின்கீழ் புதைபட்டுக்கிடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இது தெரியாமல் அவன் அஷ்டதரித்திரனாய் அவதிப்படுகிறான். ஒரு கவளம் சோற்றுக்கு ஒன்பது வீடுபோய் பிச்சையெடுக்கு மிவன் வீட்டுக்கொல்லையில் பெருநிதியம் புதைபட்டுக்கிடக்கிறதென்று ஒருவன் குறி சொன்னால் அதைக்கேட்ட தரித்திரன் அதை அடைய எவ்வளவு ஆசைப்படான். ஆசைப்பட்டுப் பயனென்ன? புதையலெடுக்கும் சாஸ்திர முணர்ந்த புண்ணியனொருவன் உதவி

[Vol. XII. No.

தத் தன்னாலடையமுடியாது. இப்படி மண்ணில் புதைந்துகிடக்கும் புதையலை
பிரயத்தனப்பட்டோர் எத்தனைபேர் ஆஷாடபூதிகள் வசம் சிக்கி கைப்பொருளையு
கஷ்டங்களும்பட்டு, நரபலி முதலான கொடும்பாவச் செய்கைகளுக்கும் உள்ளாகிக்
ல் ஒன்றுமின்றி அதோகதியாகப்போகிறார்கள். மண்ணில் மறைந்துள்ள இப்புதை
வசாயமென்னும் சூக்ஷ்மாயுதத்தால் வெட்டிப்பறித்து வித்தென்னும் பலியிட்டு நீர்வார்
ன்னும் பூஜைசெய்து, ஓம்பலென்னும் தபசிருந்து, பொறுமையென்னும் பக்திசெய்து
ல்' என்னும் பிரசாதம்பெற்று, வியாபாரமென்னும் புனர்பூஜைசெய்து அதன் பின்னரே
லாமென்று யாராவதுசொல்லிப்பினால் அவனைநம்பாது 'போபோ நீ பைத்தியம், இதுவெல்லாம்
க்குத்தெரியாதா'? என்பார்கள். ஒரு ஆஷாடபூதிவந்து, ஆடு கோழி பலிகொடுத்து அர்த்த
ிரியில்நான் பூஜைசெய்யவேண்டும், அப்பொழுதுதான் பொக்கிஷத்தைக்காக்கும் பூதங்கள்
துமென்று சொல்லி அவனை இல்லாதபடி யெல்லாம் ஆட்டிவைத்தால் அப்போது எல்லாக்
ட்டங்களையும் சந்தோஷமாகப்படுவான். கடைசியில் மோசம்போயுமழுவான். இந்த ஸ்தூல
பாக்கிஷத்தேட இத்தனை பாடென்றால், சரீரமூலதையு மொருங்கே கொடுத்தாலும் கடாகாத
நுறைநிறைபற்ற அளவிலாப் பொருளாம் ஆத்ம சுகத்தைப்பெற எவ்வளவு கஷ்டம் நேரிடும்.
ஆகையால் உண்மையை யுள்ளபடி யுரைப்போர் பூரணானுபவிகளாக விருந்தாலன்றி அவர்களால்
நீங்கேயன்றி நன்மை பயக்கமுடியாது. தனக்கு அந்நியமான ஒருவரை நம்பும் நம்பிக்கை
யெப்போதும் பேதைமையேயாம். இந்தப் பேதைமையகற்றக் கூர்புத்தி யென்னும் † மந்திர
வாளின்றி நம்மாலொன்றும் செய்யமுடியாது. இத்தேசத்தில் வாசாவேதாந்தம் பேசி அரை
குறையாக உண்மையைக் கண்டு பூரணானுபவம் சித்திக்குமுன் குருபீடத்துக் காசைப்பட்டுக்
குறும்புகளியற்றி ஏழைமதிகளை மோசஞ்செய்து மஹாபாபங்களுக்குள்ளாகித் தாங்களுங் கெட்
டுத் தங்களை யடுத்தவர்களையும் கெடச்செய்யும் ஆஷாடபூதிகளெத்தனையோபேர்கள் துறவி
வேடம் பூண்டு தூய்மையின்றித் தாழ்மையியற்றி வாழ்விழந்து வன்கொடுமைசெய்து திரிகி
றார்கள். இவர்கள் தவவேடத்தை நம்பி அவாந்தரமாகப் போகாமலிருக்க புத்தியின் சாதக
மின்றி நம்மாலொன்றும் செய்யமுடியாது. புத்தியென்பது கூறியவளாயுதமொக்கும். அதை
நாம் கைப்பிடித்தாலும் சக்தியுள்ளவர்களானால் அது நமக்குப் பரமசாதகமாகும். ஆளும் வன்
மையில்லாவிடில் அது நம்மைப் பெருமைப்படுத்துவதுபோல்காட்டிக் கடைசியிற் படுகுழியிற்
றள்ளிவிடும். 'Intellect' என்று சொல்லும் விக்ஞான சக்தியாம் கூர்புத்திக்கு யஜமானத்துவம்
பொருந்தாது. அதற்குரிமையான சேவகத்துவம் அதற்கமைந்திருந்தால் அதைப்போல் இன்
னுயிர்க்குற்றதுணை வேறில்லை. 'புத்தியிலும் பக்திபெரிது' என்றதனால் புத்திக்கெட்டாத அதி
சூக்ஷ்மப்பொருளை யறியும் சக்தி பக்திக்குண்டாதலால் அந்த அர்த்தத்தில் அது பெரிதென்று
கொள்ளலாமேயன்றி பக்தியிருந்தால் புத்தி வேண்டியதில்லையென்று அர்த்தங்கொள்ளக்
கூடாது. புத்தியில்லாத பக்தி 'மூடபக்தி'யாம். இதையே பேதைமை யென்பர், ஆகையால்
பேதைமையகற்றிப் பக்தியிற் பழகுதல் வேண்டும். இதற்கு எல்லாவற்றையும்புத்தியினாலாராய்
ந்து புத்திக்கொப்பானமட்டிலே பக்தி செலுத்திவந்தால், பக்தியினால் புத்தி பிரகாசிக்க, புத்தியி

† 'மனம் ஒருவழிப்பட்டது மந்திரம்'



னால் பக்தியேவிட ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருந்து பக்தி சிரத்தை புண்டாகி வளர்ந் கடைசியில்
இகபரமிரண்டிற்கும்சாதகமாம்முத்திபெற்றுய்யலாம். இதத்தில்புத்திக்கெட்டாததொன்றில்லை.

நித்தியமுத்தசுத்தப்பொருளாம் ஸத்யம் ஒன்றே புத்திக்கெட்டாதது. அதுவும், ஆத்மப்
பிரகாசத்தில் அடங்கி விளங்கப்பழகிய புத்திக்குப் போதாரமாயிருந்துதவி அந்த புத்தியின் சக்
தியை மிகவும் விர்த்திசெய்து விளங்கச்செய்யும் பரமசாதகமாயுதவும். பிரம்ம ஞானமெய்தி பூர
ணமடைந்தவர்கள் உலகத்திற்குபகாரஞ்செய்யக் கருதி உலகதருமங்களையே யனுசரித்து நாம்
அரைகுறையாகச்செய்யும் கடமைகளை அவர்கள் தங்கள் தீர்க்கதரிசன விசேஷத்தால் குற்றங்
குறையின்றி பூர்ணமாகச் செய்து முடிப்பர். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உலகவழிபட்டுப் உலகதர்
மங்களை யனுஷ்டித்தே அர்ச்சுனனுக்கு ஆத்மஞான முபதேசித்தாரன்றி, 'எனக்காகவேண்டிய
தொன்றுமில்லை, நான் சொல்கிறபடிகேள், என் செய்கையைப்பார்க்காதே'யென்று சொல்லவில்லை.
ஜனகமகாராஜாவின் உதாரணத்தைச் சொல்லி அர்ச்சுனனை நிஷ்காம்ய கருமஞ்செய்ய வற்புறுத்
தினதன்றி, 'தனக்குச்செய்யவேண்டியது, மூன்றுலோகங்களிலும் அடையாதது அடையவேண்
டியது, ஒன்றுமில்லாவிட்டாலும் தான் கருமத்தில் பிரவிருத்தித்திருக்கிறதை யெடுத்துக்காட்டி,
"நான் ஒரு காலத்திலாவது ஜாக்கிரதையாய் கருமஞ் செய்வதில் பிரவிருத்திக்காமல் போவே
னேயானால் மனிதர்கள் என்னைப்பார்த்து கெட்டுப்போவார்கள்" ' என்று வற்புறுத்திக் கூறியி
ருக்கிறார். (பகவத்கீதை, அத்-3, சுலோகம் 22, 23, 24-ல் பார்க்க.) ஆகையால் எப்படிப்பட்ட
ஞானியானாலும் செய்கைக்கும் கொள்கைக்கும் வேற்றுமையிருந்தால் அவர் ஒருபோதும் உல
குக்கு உபகாரியாகமாட்டார். ஞானிகள் இப்படித் தனிருப்பார்களென்று சொல்வதற்கில்லை.
ஆனால் அவர்கள் கொள்கைக்கும் செய்கைக்கும் உண்மையில் ஒருபோதும் வேற்றுமை இருக்க
மாட்டாது. அப்படி வேற்றுமையிருந்தால் அவர்கள் ஞானிகளாகார். ஏனெனில் அவர்கள்
எப்போதும் ஸத்யத்தைவிட்டுப் பிறழார். திரிகரண சுத்தியாக அவர்கள் எப்பொழுதும் ஸத்
யத்தையே ஒட்டி நிற்பார்கள். பூர்ணானுபவம் பெற்றவர்கள் ஸத்பஸ்வரூபிகளே யாவார்கள்.
தேகத்திரியங்களிலும் பற்றற்றவையார். உடலையும் உயிரையும் திரணமாக நினைத்து ஸத்யத்
தையே ஸ்தாபிக்க முயலுவார்கள். அவருடைய உள்ளத்தில் எப்போதும் கடவுள் திருக்
கோயில் கொண்டு விளங்குவார்.

" அறிவுடையார்நெஞ் சகலிடமாவ
தறிவுடையார்நெஞ் சருந்தவமாவ
தறிவுடையார்நெஞ் சொடாதிப்பிரானும்
அறிவுடையார்நெஞ்சத் தங்குநின்றானே "

புத்திவிவேகமுள்ள பக்தன் இப்படிப்பட்ட ஞானசிரேஷ்டர்களைக் கண்டு வணங்குவதெப்படி
யிருக்குமென்றால்:—எட்டாப்பழத்துக்குக்கொட்டாவிவிடும் நரிப்பேரியைப்போலாவது, ஏதோ
தலைக்கன்னியமாய்த் தானறியக்கூடாத தெய்வத்தின் பிரதிமையைக்கண்டு அஞ்சிக் கெஞ்சி
நடுக்கும் பேதையின் பூசனைபோலாவது இன்றி, தன்னைப்போலவேயிருந்து தன்னிலும் மேலாய்
ன்னிடத்துள்ள சக்திகள் பூரணமாய் விளங்கப்பெறும் பூரணனுகத் தன்குருவையறிந்து, அவ
ருடைய மேன்மைக்குத் தாழ்ந்து, 'அவரைப்போல் நானுமாவேன்' என்று முற்றிலெடுக்க

டுழைக்க அவர் தனக்குக் காரணபூதராய் விளங்கக்காண்பான். இப்படி நம்முள்ளிருக்கும் சக்தியை, நம் உண்மையை, நமக்குப்பிரத்தியக்ஷமாகவிளங்கச்செய்யும்பொருட்டு தன்உள்பாவங்களையெல்லாம் உள்ளபடி விளங்கச்செய்துபூரண அன்பே உருவெடுத்தவதரித்ததுபோல் எவரொருவர் விளங்குகிறாரோ அவரே 'குரு' வென்னும் உத்தம நாமத்துக்குரியவராவர். 'ஸத்குரு' எப்போதும் ஏகனே: ஒருவனே: தேவன், கடவுள், சிவன், சத்தியம் என்று பல நாமங்களாலும் வழங்கும் உண்மைப்பொருள் ஒன்றே: அவன் போதிக்கும் முறை எப்போதும் 'நான், நீ யென்கிற வேற்றுமையில்லை' யென்னும் உண்மையே.

"நானென்றும் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லையென்பது
நானென்றஞானமுதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந்தேனே."—திருமூலர்.

கடவுளே என்னைப்போல் வந்து எனக்கு ஆத்மபோதம் செய்யும்போது சிறிதும் எனக்கு அந்நியமாயிருந்து என்னைக் கைதூக்கிவிடப் பார்க்கிறவர்களை நான் எப்படி நம்புவது; ஞானிகள் ஏதோ விடுவாசல் நாடு நகரங்களைவிட்டு காட்டில் வசிப்பார்கள்; நகருள் வசியார்கள்; ஜனசமூகத்தில் சேரார்களென்பதெல்லாம் தப்பெண்ணம். 'நாட்டிலிருந்து நாட்டுக்கொப்ப நடப்பதும் சுலபம்; காட்டில் தனியிருந்து தன்னிஷ்டம்போல் நடப்பதும் சுலபம், ஆனால் நாட்டில் ஜனக்கூட்டத்தி னடுவேயிருந்து ஏகாந்தமாய்வசிப்பனது சுவதந்திரத்தைக் கைவிடாமலனுசரித்து எவனொருவன் சுவேச்சையாய் நடந்து வருகிறானோ அவனே மஹாத்மாவாவன்' என்று எமர்ஸன் கூறியிருப்பது முற்றும் உண்மையே. பின்னும் சிலர் "சாஸ்திரம்! சாஸ்திரம்" என்று சொல்லி பண்டிதர்களைப் பெருமிதம் பாராட்டி பாண்டித்தியத்தை சிறப்பித்து பாண்டித்தியமின்றி ஞானம் கிட்டாதென்று நினைக்கிறார்கள். இதுவும் தப்பெண்ணமே. மஹாபண்டிதரான ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரோடு பேசி அவர் வாய்ப்பிறப்பாய் வந்த அருள்வாக்குகளைச் செவிமடுத்தானந்தித்து அவரைப் பார்த்துப் பின்வருமாறு செப்பினர்:—"சாஸ்திரங்களைக் கடைவதினால் பண்டிதர்களுக்குக் கிடைப்பது தயிரும் மோருமே; பக்தர்களோ வெண்ணெயெடுத்துண்கிறார்கள் என்று அறிந்து கொண்டேன்"—என்றார். பின்னும் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. பொறுமை, சமத்துவம் என்கிற பதங்களுக்கு 'இராமனுண்டாலென்ன இராவணனுண்டாலென்ன' வென்று உபேக்ஷையினால் இரண்டையும் சரியாக பாவிக்கும் பாவனையை அர்த்தமாகக்கொள்கிறார்கள். அது பொறுமையாவது சமத்துவமாவது ஆகாது. தனக்கு சாதகபாதக மிரண்டிற்கு மிடமில்லாதபோது அதைப்பற்றி உபேக்ஷையாயிருப்பது எல்லாருக்குஞ்சகஜமே. உண்மையறிந்த ஞானியின்பொறுமை யல்லது சமத்துவம் எப்படிப்பட்டதென்றால், நல்லது கெட்டது என்று பலவேறாகத் தோற்றும் தோற்றங்களினும், தோற்றத்திற்குப் பின்னால் உண்மை ஒன்றாயிருந்து விளங்குவதை யுணர்ந்து, வெளித்தோற்றத்தினுட்புகுந்து பார்க்கும் பார்வை விசேஷத்தால் பலபேதத் தோற்றத்திலும் காணும் உண்மைக்கு உகந்து உள்ளன்பு பாராட்டும்பேரன்பே 'பொறுமை' யென்றும் 'சமத்துவ'மென்றும் சொல்லத்தக்கதாம். ஆகையால் ஆஷாடபூதிகளாம் கபடநாடக



வேஷதாரிகளை நம்பி மோசம்போகாமலிருக்க எல்லாரும் புத்தியைக் கூர்மைப்படுத்தி அப்பியாசித்துவரல்வேண்டும். கூர்புத்தியுள்ளவன் ஸத்தியத்தில்மட்டும் பற்றுள்ளவனாகவிருந்து நிச்சய புத்தியுடையவனானால் காரியத்தில் மோசம்போகக் காரணமேயில்லை. இந்த உண்மையை வற்புறுத்தவே "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு"என்னும் உண்மை வசனத்தை உள்ளபடி பெரித்துவிரித்தோதினேம். என் தாய் "வேதாந்தவிசாரம் செய்கிறேன் என்று இல்லறக் கடன்களைவிட்டு மோசம்போகாதே! ஜாக்ரதை! ஜாக்ரதை!!" யென்று பலகாலும் சொல்லி அவள் பிள்ளைகளுக்கு எச்சரிப்பாள். அவள் 'புன்சிரிப்புத் தவழுமின்ப முகமலர்' இன்னருள் சுரந்து பன்னிப் பன்னிப் பலகாலும் சொல்லி ஹிருதயத்தழுந்திய வார்த்தைகள் இன்றைக்கும் என்றைக்கும் எவராலும் மறக்கற்பாலதன்றாம். ஆகையால் அவள் தன் இன்னருட்குழவிக்கோதிய மந்திரமாம் சுந்திர வசனத்தை யப்படியே இங்கு கிழே வரைகிறேன்.

"நீ விண்டுகெதுவானாலும் வெட்டவெளியானாலும்
குடியிருந்த விடதனைப் பாழதனாக்காதே:
பிச்சைக்குப்பைக்காரன் எச்சில்தின்னி யென்றிராமல்
எல்லாரையுங் கவனித்து எவரெவர்க்கு முரியதையீய்."

உத்தமோத்தமமான இந்த உண்மைப் போதனையை உள்ளபடி யுணர்ந்து கொண்டாடி அமெரிக்கா தேசத்தில் பிரசுரமாகும் ஒரு மாதாந்தரப் பத்திரிகையில் எமர்ஸன் சிஷ்யர்களில் ஒருவரான அப்பத்திராசிரியர் விஸ்தாரமா யெழுதியிருக்கிறார். *

ஸத்யானந்த நந்தசர்மா.

* "The idea is prevalent in many circles and is taught by many teachers, especially those of Oriental philosophy, that would we unfold and live the spiritual life, we need to isolate ourselves; give up business and social duties: that some peculiar and esoteric teaching and methods are necessary for the development of the Higher Life. 'Now' has never so taught. Soul Culture teaches that one can attend to the duties of, and enjoy, the objective life and thus make it the means of unfoldment and for the enjoyment of the spiritual life. A philosophy that does not fit one for this life, and especially that esoteric philosophy which unfits him for the daily life of parent, producer and friend, is not that which the 20th Century needs. By Soul Culture man is made more expressive in this objective world: better fitted to manifest that which he is in the real *Soul-life*,......Esoteric teahings that render this present life of less worth, of less enjoyment, of less expression, are productive of one sided and abnormal Soul growth and *are not my* idea of Soul Cutture. "I am in the world, but not of it" said the One who was the Flower of manhood. Live in the world! Help the world! Be not subject to the world."

* * *

"I am glad to find that this is in harmony with an intelligent and rational interpretation of the Hindu Philosophy. In the October number of the Viveka Chintamani, a Tamil journal published at Madras, India, I find an account of a "Great Teacher of Vedanta Philosophy." This is told of her teaching: "She said that it was a false notion that Truth is unreachable by the ordinary man who has perforce to live in the world and follow some profession for a livelihood, though he has cut himself off from the world in his heart of hearts. She preached *purity of heart and nobility of aspiration to reach the highest truth*,—nothing short of Truth absolute,—as the two essential requisites for realizing the higher life; and provided a person has attained to this stage of aspiration, he, or she, need not give up family or profession. On the other hand a truly aspiring soul and reflective mind will make use of the experiences of every day to build up a true and noble character, based on the essential truth of things and not on their apparent reality."—Mr. *Henry Harrison Brown* in 'Now.'

# EXTERNAL WORSHIP.

## திருவள்ளுவர் சிவபூசை செய்த விவரம்.

பூசைகள்செய்தேன்காண்—சிவக்கியான
பூசைகள்செய்தேன்காண்.

1. வாசிக்குதிரைமேலேறிக்கேசரியின் வழியேயோடிசென்றுச்சுழியறியாமலும் - வெசிக்குளாகை விரசத்துடனேயரன்-வெறும்பூசையணியாட்டிவீணுக்சேயான் - ஆசிர்ஙசற்குருதெய்வமிதுவென்று - அர்ச்சித்து ஆத்துமந்தன்னையறியாமல் - நேசித்துப்பூசை நிலைமையறியாமலும் நின்றேநிமித்தமாய்கண்டு செய்தேன்யான்—பூசைகள்செய்தேன்காண்.

2. கோலமறியாமல் காலையில் வில்வக்-கொழுந்தைமுறித்தினி கூடைகள் போலவும் - சாலவுந் தேவாரமோதித்துதித்துடன் - சங்கையறியாமல் பஞ்சப்பட்டேயினி - சாலைதனிலெழுந்தாலயஞ்சுற்றிக்-கருத்தினில் வாசியைக்கண்டு துதியாமல் - சிலமலரையுமிதென்றறியாமல் - சென்று பறித்துநான், கொண்டு வந்தர்ச்சனை—பூசைகள்செய்தேன்காண்.

3. வானத்திலெழுந்த வாலாம்பிகையை மதியாலறிந்து கெதியடையாமலும் - எனக்குள்ளிலே முளைத்தெழுந்த கொழுந்தை - யிறுக்கி நானினி முறுக்கிக் கிள்ளியே - ஞானப்பிரகாச மெய்ஞ்ஞான விந்தாகையால் - நாடிக்கருவூரில் நாதத்துடன்கூடி - மீனமேஷமறியாமல் குருவந்து - வீணதாம்பூசை விருதாவிற் செய்யவும்—பூசைகள்செய்தேன்காண்.

4. ஆத்துமலிங்கத் தமுரியைக்கொண்டு - அறிவினு லர்ச்சனை யான்றுதியாமலும் - பார்த்திப லிங்கம் பிடித்துருமண்தனைப் - பாலித்துப் பூசித்துக் கங்கையைத் தூற்றினேன் - பூத்தமலர் கொண்டுழுத்து ஆவிடைமேல் - பொழிந்து அர்ச்சனை வழிந்து பாய்ந்துமே - வேற்றுமை யென்றறியாமலுங்காமிவீணர் சொற்படியேயானும் பூசித்தேனே—பூசைகள்செய்தேன்காண்.

5. தில்லைக்குளத்தின்கரைநந்தவனத்தில் முல்லையிதழ்கொண்டு அர்ச்சனைசெய்யாமல் - கல்லைத் தெய்வமென்று சொல்லறியாமலும் - வில்வமலரை வெடுக்கென்று போட்டுயான் - அல்லலல்லோ இதுயானுமறியாமல் - அம்பரபூசையடுத்துங் கிடையாமல் - வெல்லு நீரிறைத்துப்புவிக்குள்ளாக - வெகுவுயிர்கொன்று வதைத்துப் பெலிசெய்து—பூசைகள்செய்தேன்காண்.

6. தெண்டிரைக்குள்ளே செழித்தமலர்க்குள்ளே - சிவனிருப்பது பாவமென்றுஞ்சற்றே - கண்டறியாமல் கருத்தால் பறித்துக் - கடைத்தேற பூசைநடத்தினேனிப்படி - அண்டர்கள் போற்றுமுடலுக்குள்ளாத்துமம் - அங்கிருப்பதென்றறியாமல் யானுமே - வண்டக்குருக்கள் மொழிதவறாமல் - மனனத்துறைலே வலுவாயுருச்செய்து—பூசைகள்செய்தேன்காண்.

7. காரணசற்குரு பாதமே நம்பியே - பூரணத்தைப்பார்த்துப் பூசைகள்செய்தேன்காண் - தாரணையென்றறியாமலுநேமகந் - தான்செய்து ஆத்துமலிங்கமறியாதே - வாரணியாமலர் பாலாம்பிகைப்தம் - வாருங்கருவூரில் வாழ்ந்திடும்போதிலே - பூரணையாகிய வாசியைவாவென்றுபாலித்து அன்னையின் பாதம்பணிந்தேனே—பூசைகள் செய்தேன்காண்.

8. விந்துநாதத்தொனியந்தம்பொருந்திய - சுந்தரஞானச் சுகாநிதம் பெற்றுமே-இந்திரியசுக இன்பசுழிமுனை-சந்தனகுங்கும கந்தபரிமளத்தத்துவக்கியானந்தவமறியாமலும் - உத்தமஞான உபதேசங்காண்கிலார் - வித்துவித்துநாத சத்தறியாலும் பெற்றபேரிப்படி சித்தர் சொல்வாக்கியம் - பூசைகள்செய்தேன்காண்



## SCINTILLATIONS FROM MY SCHOOL LIFE OF A KINDERGARTEN CHILD. SCHOOL EXPERIENCE.

"The whole duty of parent, teacher, preacher, author, orator, actor, is done, when they have caused their children to think. The whole duty of Man is done when he thinks. Thought does all the rest, when the dynamo is all ready and the wires all laid, the whole duty of the operator is done when he turns on the current and keeps every thing so that current can have unobstructed flow. Since THOUGHT IS POWER, all one's duty is done when he turns on the Thought current. After that he has only "to trust the current that knows its way" as Emerson says....... TO KNOW, HOW *to think and* WHAT *to think, is the sum total of Knowledge*: To THINK what you choose *is the sum total of duty.* This is the Human side of Life. The rest is the Divine side, and that Divine side through Infinite power of thought, does the work"—Mr. Henry Harrison Brown in NOW.

"Whatsoever things are true, whatsoever things are honest, whatsoever things are pure, whatsoever things are lovely, whatsoever things are of good report, THINK ON THESE THINGS."—*St. Paul.*

## பாலபோதமுறையும் பள்ளிப்படிப்பும்.

நான் ஒரு சிறுமி. இங்குள்ள பெண்கள் பாடசாலையில் படித்து வருகிறேன். இதுவரையில் எங்களுக்கு ஒரு கிழவர் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். இப்பொழுது ஒரு வாத்தியாரம்மாள் வந்து பாடஞ்சொல்கிறார்கள். அந்தம்மாள் புதிசு. போகப்போகத்தான் அவாள் குணமும் திறமும் தெரியவரணும். இதுவரையில் எங்கள் பள்ளிக்கூடம் கேட்பாரற்றுக்கிடந்தது. மாட்டைக்கொண்டுபோய் மந்தையிலடைத்துக் காலாற விட்டுக் கோட்டிவந்துவிடுவதுபோல், "நாங்களும் பள்ளிக்குப்போகிறோம்" என்று பேருக்குப் போய்க்கொண்டு வந்தோம். இப்போது வீட்டுக்குவீடு சென்று பணம் சேர்த்து ஆரரோ பெரிய மனுஷாளெல்லாம் வந்து பள்ளிக்கூடத்தைச் சீர்ப்படுத்தப்பார்க்கிறார்கள். "கேள்விமுறை" யேற்பட்டிருக்கும் இக்காலத்திலாவது எனது குறையைச் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாமென்று என் சின்னப்புத்திக்குத் தோணினதை எங்கப்பாவிடம் சொன்னேன். அவர் "ஆண்டிசொல் அம்பலமேறாது" என்று சொல்லிவிட்டார். என்குறையை அடக்கியடக்கிப் பார்த்தும் அடங்குவதாகவில்லை. என் குறையை வெளியிட்டால்தான் தீருமென்று சொன்னேன். அப்படியானால் 'பேபருக்கு' எழுதுஎன்று சொன்னார். நான் சின்னஞ்சிறுமி எனக்கு வக்கணையாக எழுதத் தெரியாது. ஆகையால் நானும் என் தமக்கையுமாகச் சேர்ந்து இதை யெழுதி யுங்களுக்கு அனுப்புகிறோம். எங்கள் பெயரை வெளியிடாமல் என் குறையைமட்டும் வெளியிடக்கேட்டுக் கொள்கிறேன். குற்றங்குறையைப் பொறுத்துத் திருத்தியச்சிடப் பிரார்த்திக்கிறேன்.

என்னுடைய முதல் குறையென்ன வென்றால்:—எங்கள் பள்ளிக்கூடத்திலே வாத்தியார் குழந்தைகளைக் குழந்தைகளென்று பாராமல், பிரம்பால் "சுள்ளு, சுள்ளு" என்று அடிக்கிறார். இரண்டு மாசத்துக்குமுன் என்னை வாத்தியார் பளிரென்று பிரம்பால் அடித்துவிட்டார்.

கை கொப்புளிச்சுப் போய்விட்டது. மத்தியானம் சாப்பிடப்போனபோது அந்தக்கையால் சாப்பிடமுடியவில்லை. என்ன செய்கிறது! அப்பாவோடு சொல்ல வெட்கமாயிருந்தது. கொப்புளிச்சுப் போயிருந்ததால் மருந்து போடணுமோ என்னமோ வென்று அப்பாவிடம் சொன்னேன். அவர் ஈரத்துணியைச் சுற்றிவைத்து 'இதை அவிழ்க்காமல், இன்னொரு கையால் சாப்பிடு, வீக்கம் வடிந்துபோம்' என்று சொன்னார். சாப்பிட்டுவிட்டு வருகையிலே ஒரு கடிதத்தை யெழுதிக்கொடுத்து "இதைப் பெரிய வாத்தியாரிடம் கொண்டுபோய்க்கொடு" என்று அப்பா சொன்னார். அதில் என்ன எழுதியிருக்கிறீர்களென்று கேட்டேன். இதைக் கொடுத்தால் உபாத்தியாயர் இனி யாரையும் அடிக்கமாட்டார். உன்னை அடித்த வாத்தியாருக்கு அபராதம் விழும்; அல்லது இன்னும் பெரிய தண்டனை கிடைக்குமென்று சொன்னார். "குருத்துரோகம் மஹாபாபம்" என்று அம்மாள் சொல்லக் கேட்டது எனக்கு அப்போ ஞாபகம் வந்தது. வாத்தியாருக்குக் கெடுதல்செய்து விட்டோமே யென்று எனக்கு துக்கம் வந்தடைத்துக் கொண்டு விட்டது. அந்தக் காகிதத்தைக் கிழித்துவிடும்படி அப்பாவைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டழுதேன். அப்போ என் வலியெல்லாம் 'எங்கேயோ போய் விட்டது.' வாத்தியாரைக் காட்டிக் கொடுக்காமல் தப்பித்துக் கொண்டால்போதுமென்றாய்விட்டது. நல்லவேளையாக அப்பாவும் என் வேண்டுகோளுக் கிணங்கினார். அதுமுதல் வாத்தியார் என்னை அடிப்பதில்லை. ஆனால் என்னைப்போலொத்த சிறுமிகளையும் என்னிலும் சிறு குழந்தைகளையும் வாத்தியார் சுள்ளு, சுள்ளென்று அடிக்கும்போது அந்த அடியெல்லாம் என்மேல் விழுகிறாப்போலிருக்கிறது. அப்பாவோடு சொன்னால் அனர்த்தம் விளையுமேயென்று பயமாயிருக்கிறது. சும்மாவிருப்போமென்றாலும் குழந்தைகளை யடிக்கிறபோது நான் படும் சங்கடம் எனக்குப் பெரிதாயிருக்கிறது. எனக்கே யப்படியிருக்கும்போது அடிபடுகிற குழந்தைகளுக்கு எப்படியிருக்குமோ! வெளியில் சொன்னால் வாத்தியாருக்கு அவதி! சும்மாவிருந்தால் சிறுகுழந்தைகளுக்கு அவதி! இந்த தர்மசங்கடத்துக் கென்னசெய்கிறதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கேன். என்னை யறியாமல் இதை யெழுதிவிட்டேன். எனக்கு தோஷம் நேரிடாமல் இதற்கு வழிபிறக்க வேண்டுமென்று ஸ்வாமியை வேண்டிக்கொண்டே யிருக்கிறேன். புருஷவாத்தியாரே யில்லாமல் எல்லாரும் பெண்வாத்தியார்களாக விருந்தால் இப்படி அடிபட வேண்டியிருக்காது என்று நினைக்கிறேன். அது எப்படியாமோ யார் கண்டார்கள்?

நான் பள்ளிக்கூடம் போனதுமுதல் துரைசானி வந்து பரீக்ஷிப்பதுண்டு. இப்போ புதிதாய் துரைசானி வந்து 'ப்ரைஸ்' கொடுக்கப்போகிறாளாம். பள்ளியில் தடபுடல் செய்கிறார்கள். 'ப்ரைஸ்' என்றால் என்னவென்று நான் அப்பாவைக் கேட்டேன். துரைசானி வந்து கெட்டிக்காரக்குட்டிகளுக்கு என்னென்னவோ 'வெகுமதி' கொடுப்பாளென்று சொன்னார். 'வெகுமதி' என்றால் கெட்டிக்காரியாயிருப்பதற்காக இனாம் கொடுக்கிறதாம். எல்லாம் சரிதான். எங்களில் கெட்டிக்காரி யாரென்று என்னமாய்க் கண்டுபிடிக்கிறது? நாளைக்கு துரைசானி வரப்போகிறாளென்று இரண்டு நாளாக தினம் பள்ளிக்கூடத்தில் குட்டிகளைப் பொறுக்கிப் பாட்டும் ஆட்டமும் சொல்லிக்கொடுத்துப் பழக்குகிறார்கள். துரைசானி வந்தால் எல்லாருக்கும் சொல்லிக்கொடுத்ததை யல்லவோ பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்? சிலபேரைமட்டும் பொறுக்கி அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொடுத்து எங்களையெல்லாம் உம்மணாமூஞ்சிபோல் உட்கார்த்தி



வைத்து வாயைத்திறக்கவிடாமல் கையைக்காலை யாட்டவிடாமல் "பேசாதே பேசாதே, விஷமம் பண்ணாதே!" என்று வாத்தியார் சட்டதிட்டம் பண்ணிக்கொண்டு நவராத்திரி பொம்மைகளைப் போல் உட்கார்ந்திருக்கப் பழக்கினால் இது சரியா? எல்லாருக்கும் வாசிக்கவேண்டுமென்றும், பாட்டுப்படிப்புச் சொல்லிக்கவேண்டுமென்றும்தான் ஆசையாயிருக்கு. எல்லாருக்கும் சமமாகச் சொல்லிக்கொடுத்தால் அப்போ சரிதான். சிலருக்கு உயர்த்தியாகவும் சிலருக்குத் தாழ்ச்சியாகவும் சொல்லிக் கொடுத்தால் அது சரியா? இப்படி ஏற்றத்தாழ்ச்சி பாராட்டி எங்களைத்தான் சிறுகுட்டிகளென்று ஏச்சப்போடப் பார்க்கிறார்கள். அப்படியே துரைசானியையும் ஏய்க்கப் பார்க்கிறார்களே. நாளைக்கு வரப்போகிற துரைசானிக்குக் கண்குருடா! இவர்கள் வேஷத்தைக் கண்டு பிடிக்க அவளுக்குத் தெரியாதா? நாலுகுட்டிகள் ஆடிப்பாடி அழகாய் நடித்தால் அவர்களுக்குப் பின்னால் நாற்பது குட்டிகள் மூஞ்சியிறங்கி யுட்கார்ந்திருக்கிற போது முகப்பார்வையினால் இவாளுடைய பள்ளிக்கூடத்தின் வள்ளல் வெளியாகி விடாதே? துரைசானிகளெல்லாம் ரொம்ப கூர்புத்தியுள்ளவர்கள், நன்றாகப்படித்தவர்கள், உள்ளத்தை உள்ளபடி யறியும் சக்தி அவர்களுக்கு அதிகம் என்று எங்கம்மாள் எனக்கு அடிக்கடிச் சொல்லியிருக்கிறாளே. நாங்கள், (சிறு குழந்தைகள்,) யாரையும் ஏமாற்றப் பார்க்கக் கூடாதென்றும், பொய்சொல்லக் கூடாதென்றும், ஓரவஞ்சனை செய்யக்கூடாதென்றும், நான் மழலைச்சொல் மாறாத குழந்தையாயிருந்ததுமுதல் என் தாயார் எனக்கு அடிக்கடி சொல்லி வந்திருக்கிறாள். ஆகையால் இப்படியெல்லாம் செய்கிறது பிசகு என்று எனக்கு நன்றாக மனதில் பட்டிருக்கிறது. ஆனால், பெரியவாளெல்லாம் நாங்கள் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்ட காரியத்தை எங்கள் கண்முன்னேயே செய்கிறார்களே! அதுமட்டும் குற்றமில்லையோ வென்று எனக்குப்
[illegible]ட்டது. நாமும் பெரியவர்களாகப் போனால் இப்படியெல்லாம் செய்யலாமோ வென்று
[illegible]த்தேன். உடனே எங்காத்துக்கு எங்கம்மாளைப் பார்க்கவந்த இரண்டு துரைசா
[illegible]பகம் எனக்கு வந்தது. அவர்களில் ஒரு துரைசானி சீமையிலேயிருந்து பெண்கள்
[illegible]தப் பார்க்கவேண்டுமென்று தள்ளாத வயசிலே கப்பலேறி இங்கே
[illegible]ன்று அம்மாவும் அப்பாவும் அடிக்கடி சொல்லக்கேள்வி. இன்னொரு து
[illegible]பண்கள் பள்ளிக்கூடங்களை யெல்லாம் பரீக்ஷிப்பவர். இவாளிரண்டுபேரையும்
[illegible]ன்றாகத்தெரியும். பெரிய துரைசானியும், சின்னதுரைசானியும் அடிக்கடி கடி[illegible]
[illegible]யென்னைப்பற்றி, விசாரிக்கிறதுண்டு. ஒருதரம் பெரியதுரைசானி இங்கே [illegible]
[illegible]கவும் அழகான வாடாத பூ ஒன்று சீமையிலிருந்தனுப்பி அதை [illegible]
[illegible]டுத்து, துரைசானி என்னை சமர்த்தாகவிருக்கச் சொன்னாளென்று சொல்ல[illegible]
[illegible]பாவுக்கு எழுதியிருந்தது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அப்பா அந்த[illegible]
[illegible]டித்து துரைசானி "சமர்த்தாகவிருக்கச்சொன்னாள். பொய்சொல்லப்படாது
[illegible]ன்னாள். புரட்டுக்கூடாது என்று சொன்னாள். எல்லாருக்கும் நல்லவளாய்,
[illegible]வளா யிருக்க வேண்டுமென்று சொன்னாள்'—என்று படித்துப் படித்துச் [illegible]
[illegible]க்கு நன்றாக ஞாபகத்திலிருக்கிறது. சின்ன துரைசானியும் அடிக்கடி எனக்கு புத்தி[illegible]
[illegible]லுவள். இப்படியெல்லாம் சொன்னது பொய்யா—எல்லாரும் நம்மை ஏமாற்ற[illegible]
[illegible]கள்? என்று நினைக்கும்பொழுது எனக்கு மனதில் சொல்லத்தெரியாத ஒருவிதசங்க[illegible]

மும் துக்கமுமுண்டாயிற்று. அப்பாவிடம் என்குறையை வெளியிட்டுச் சொன்னேன். அவர் அம்மாள் சொன்னதும் துரைசானிகள் சொன்னதும்தான் நிஜம் என்றும், அதற்குச்சரியாக நடந்து கொள்வதுதான்நல்லது என்றும் சொன்னார். ஆனால் நான் பள்ளிக்கூடத்தில் பார்த்தது அதற்குச் சரியாகவில்லையே! அவ்வளவு பெரியவாளெல்லாம் தப்புச்செய்கிறார்களே! இப்போநடக்கிற கெடுபிடியெல்லாம் நாளைக்குவருகிற துரைசானியை ஏமாற்றச் செய்வதாகத்தானே யிருக்கிறது! என்றேன். அப்பா அதற்கு ஒன்றும்சொல்லவில்லை. எனக்கென்னமோ பள்ளிக்கூடத்துக்குப் போவதுகூடப் பிடிக்காமலிருந்தது. அதையெல்லாம்பற்றிச்சொல்கிறது சரியாகவிராது. இப்படி பள்ளிக்கூடத்திற்குப் போய் மொந்தைபோல் உட்கார்ந்துவருவதைவிட, வீட்டிலிருந்து பாட்டும்படிப்பும் செல்லிக்கலாமேயென்றுஎனக்குப் பட்டது. அகத்திலே அப்பா அடிக்கடி "எதையும் நன்றாகப்பார்! பார்த்துப்பார்த்து பார்த்ததையெல்லாம் அடிக்கடிநினைத்து யோஜிக்கக்கற்றுக்கொள்!" என்கிறார். எனக்குஅம்மாள் சொல்லி மனதிற்பட்டதையும்பள்ளிக்கூடத்தில் நான் பார்த்ததையும் யோஜித்துப்பார்க்க "பொய்சொல்லக்கூடாது" என்று சொல்வதுமெய்யானாலும், "இந்தக்காலத்தில் பொய்சொல்லாமல் ஆர் இருக்கிறார்கள்!" என்று அத்தையும் பாட்டியும் அடிக்கடி முணுமுணுத்துச் சொல்லிவந்தது சரிதானென்று நினைக்கும்படியாயிருந்தது. "பொய்சொல்லிவாழலாமா?" என்று முன்காலத்துப்பாட்டி சொல்லியிருக்க, "பொய்சொல்லாமல் வாழலாமா?" என்று இக்காலத்துப்பாட்டி சொல்கிறாளே. அம்மா அப்பா கேட்க அவள் அதைச்சொல்லப் பயந்துவந்ததால் அது சுத்தப்பொய் யென்றே யெண்ணியிருந்தேன். இப்போ பள்ளிக்குப்போய் வருவதில் நான் பார்த்தமட்டில் 'பொய்யும்புளுகும் வேண்டுந்தானோ'வென்று நினைக்கும்படியாயிற்று. இந்த எண்ணம் கொஞ்சகாலந்தான் என் மனதிலிருந்தது. ஏனென்றால் என் தாயார் "ஸத்யமேஜயம்" என்று அடிக்கடி சொல்லிவந்ததும் பாட்டி சொல்கிற பொய்யெல்லாம் வெளிப்பட்டு எம்மம்மாள் ஸத்யம் அவளைத்தலைக எனக்கு நன்றாய் ஞாபகத்தில் வந்தது. மேலும், இந்தப்பொய் வேஷங்களையெல்ல ...ல் காட்டிவிடவேண்டுமென்று எனக்குத்தோன்றிற்று. துரைசானிக்கே இதையெல்ல ...ப்படுத்திவிடவேண்டுமென்று பார்த்தேன். வாத்தியார் அடிப்பாரேயென்று பயமா ...அப்பாவும் அதுகூடாதகாரியமென்று சொன்னார். இரகசியமாகச்சொன்னால் "புறங்கூற ...மென்றார். பகிரங்கமாக வெளிப்பட்டால் குற்றமில்லையாம். ஆனால் சின்னக்குட்டியாச்சே ...மல் எழுதவராதேயென்று பார்த்தேன். என் தமக்கையும் நானும் பேசிக்கொண்டிரு... நான் என் குறையையெல்லாம் சொன்னால் இருவருமாகச்சேர்ந்தெழுதலாம் என்றாள் ...ருவருங்கூடி எவ்வளவோயோசனைபண்ணி எத்தனையோதரம் எழுதிக்கலைத்து கடை... ...ன்றுபார்த்து இதைசரிப்படுத்தியெழுதிக்கொடுத்தான். இவ்வளவு நன்றாக எனக்கு ...னதால் இதையெல்லாம் கண்டெழுதினால்தான் என்போரால் இதை பேபருக்குஅனுப் ...ன். இதற்கு அண்ணாவும் அக்காவும் சரியென்று சம்மதித்தார்கள். நானும் இதன் ...அண்ணா கொடுத்த கள்ளப்பேரைக்கொண்டு கைபெழுத்துப் போடச்சம்மதித்தே...

இப்படிக்கு,

உண்மையுள்ள உற்பாதபிண்டி.



## THE ILIAD OF HOMER.

### ஹோமர் என்னும் மகாகவிபாடிய

# இலியயுத்தம்.

## முதற்காண்டம்.

(335-வது பக்கத் தொடர்ச்சி.)

96. வேந்தநீ யடைந்ததன்னை விடுக்குக யாங்கள்யாரும்
நந்திடற் கொத்தவாற்று லிபம்பின னுனக்குமக்கில்
வந்தலோ டிகல்கொளேனி ரிருவருமியைந்து நிற்க
வாய்ந்தபூ முலகமன்னன் கோல்வழிமகிழ்ந்து யாதோ.

(இ-ள்.) அரசனே, நாங்கள் எல்லோரும் கிரிசையென்னும் பெண்ணை அவள்தந்தையிடத்து அனுப்பிவிடுதல் முறைமையாமென்று எண்ணுதலாலே நீ அவ்வாறே அவளை யனுப்பிவிடுக. அக்கிலனே நீயும் அரசனேடினிமேல் பகைகொள்ளாதே; நீங்களிருவரும் சிநேகப்பட்டு நடப்பீராயின் உலகமெல்லாம் அரசன் ஆணையில் அடங்கி நிற்குமென்பதிற் சந்தேகமில்லை.

97. வானவர் போலுமாண்பார் வலியுளாய் வானமாதின்
தானயத் தனயனானு யாதலாற் சமரினெய்தும்
மேனிமிர் வரிசையெல்லாம் வீரநிற்குரியதாமேற்
கானமர் தெரியல்வேந்தும் காசினிக் கிறைவனன்றோ.

(இ-ள்.) உண்மையே, அக்கிலனே நீ தேவர்கள் போலப் பெருமைபெற்ற சத்தியையுடையாய். தெய்வமங்கையின் வயிற்றிற் பிறந்தவனாகின்றாய். ஆதலால் யுத்தத்திற் பெறக்கூடிய உயர்ந்த பெருமைகளெல்லாம் உன்னையே சேரவேண்டியவைதாம். ஆயினும் அரசனானவன் உனக்குக் குறைந்தவனன்றே; உலகத்தையெல்லாம் ஒருகுடைக்கீழாளும் ஒப்பற்ற அரசனல்லவா?

98. ஆதலாலிருவர்தாமு மகமகிழ்ந் தொருமைப்பட்டுத்
தீதறு முரிமையோடு வலிமையுந் சேரவாழ்க
பூதலம் புரக்குமன்ன நின்னைநீ தடுத்துக்கொள்க
ஓதருமக்கிலன்ற னுருசினந் தவிர்ப்பன்யானே.

(இ-ள்.) ஆகையினாலே நீங்களிருவரும் ஒருமனப்பட்டு நேசித்துச் சந்தோஷத்துடன் உரிமையும் அக்கிலன் வலிமையும் ஒன்றாய்க்கொண்டு துணையாகப் பொருந்தும்படி வாழ்வீராக. உன் கோபத்தை நீ ஆற்றிக் கொள்வாயாக. அக்கிலன் கோபத்தை நான் ஆற்றி விடு...

99. மருவுநம் படைக்குக்காப்பாய் மன்னிநங் குலத்துக்கெல்லாம்
ஒருவலில் பெருமைகல்கு மொப்பிலாவீரனாகும்
இருமையக் கிலனையாமும் மிழந்திடத் தகுவதாமோ
அரியவக் கேடுவாரா தமரர்கள் காக்கவன்றே.

(இ-ள்.) நம்முடைய சேனைகளுக்கெல்லாம் ஆதாரமாகி நிலைக்கவென்றும் நம்முடைய குலம் முழுதும் நீங்காத பெருமையைத்தரும் ஒப்பில்லாத மகாவீரனாகிய மேன்மை பெற்ற எம் முத்து... நாம் இழத்தலாகுமோ? ஒருபோதும் ஆகாது. ஆதலால் அப்படிப்பட்ட கெடுதி நமக்கு வாராமல் நம்மைக் காப்பாற்றுவாராக. என்றுகூறினான்.

வேறு.

100. என்றுகூறி யிருந்தன னெத்தர்தான்
வென்றிமன்னும் விளம்புவ னையகேள்
நின்றன்மூப்பி னெடுமைகண் டஞ்சலும்
ஒன்றும் வாக்குமிக் கொள்ளியதாகுமே.

(இ-ள்.) இவ்வாறு நெத்சர் சொல்லியிருத்தலும். அரசனாகிய அகமன்னன் சொல்லுகின்றான். ஐயா, உம்முடைய வயோதிகம் மிகவும் கௌரவிக்கத்தக்கதே. நீர்சொல்லிய வார்த்தைகளும் நியாயமானவைகளே.

101. ஆயினென்னை யவனகங் காரமும்
மேயவிம்மையும் வீட்டுவ தில்லையே
எயவன்ன னிலையில் செருக்கின்முன்
காயும் வேந்தருங் கைதொழல் வேண்டுமோ.

(இ-ள்.) ஆயினும் என்ன. அவனது அகங்காரத்தையும் முரட்டுப் பிடியையும் மாய்க்கவல்ல தோன்றில்லையோ? அவனுடைய மகாகர்வத்தைக்கண்டு எவ்வகைப்பட்டவர்களையும் சிக்ஷிக்கவல்ல அரசர்கூடக் கைகூப்பி வணங்கவேண்டுமோ?

102 அவனையெம்மத னிகழும் வீரரும்
கவினயாமுங் கழல்தொழல் வேண்டுமே
நவமதாக நவின்றனை நானிலத்
தெவர்கொல் வேந்த ரிதற்குடனாவரே.

(இ-ள்.) அக்கர்வபுஞ்சனாகிய அக்கிலனை எம்முடைய சேனைகளும் வீரர்களும் அன்றியாமும் கூடக்காலில்வீழ்ந்து பணிதல்வேண்டுமோ? நீ சொல்வது மிகப் புதுமையாயிருக்கின்றது. இம்மானவீனமான செய்கைக்கு அரசனென்னும்பேர் வைத்திருப்பவர்களெவரேனும் உடன்படுவார்களோ?

103. இலையின்மாவலி யிந்துளர்வானவர்
அலையவன்னவற் கென்னினுமாண்டைமைத்
துணிவினான்மதி யாதிகழ்சொல்லவும்
பணிகொடேவர் பணித்துள ராங்கொலோ.

(இ-ள்.) உள்ளது, அவனுக்குத்தேவர்கள் இணையில்லாத மகாபலத்தை அருளியிருக்கின்றனர். …தனுடைய மதியாமல் துணிகரமாக அவமதிக்கவும் அத்தேவர்கள் கூறியிருக்கின்றார்களோ …பித்துக் கூறுகிறேன்.

104. என்னுமாற்ற மிசைக்குமுன் னக்கிலன்
முன்னின் வெஞ்சின மூண்டுமொழிகுவான்
மன்னுநீதி யிலாத வசையினாய்
உன்னை யித்துணை யுற்றதுபோதுமால்.

(இ-ள்.) இவ்வார்த்தைகளைச் சொல்லுமுன்னமே அக்கிலன் முன்னினும் அதிககோபச்கொ…ல்லுகின்றான். ஓ நீதிகெட்டுப் பழிச்செய்கைகளைச் செய்யும் வேந்தனே இத்தனை நாளாய் உன் …தொடர்ந்து சேவித்தது போதும் போதும்.



105. புத்திகெட்டுன் னடிமையிற் போந்ததால்
இத்துணைப்பக லெய்ந்துழன் றேனினிப்
பொருந்திவாயுனைப் போற்றுந ரேவல்கொள்
பித்தநின்பணி பேணநினைப்பனே.

(இ-ள்.) புத்தி கெட்டுப்போய் உனக்கு அடிமையாகி உன்னைப் பின்தொடர்ந்துவந்ததனாலே இத்தனைநாளாய் மிகவருந்தினேன் இனிமேல் உனக்கெதிரே வாய்புதைத்துக் கைகட்டிநின்று சேவகம் செய்ய உடன்படுவார்களிடத்தே உனது ஆணையைச் செலுத்தி அவர்பணிவிடைகளைக் கொள்ளுக. பித்தனே இனிமேல் நீ எனக்குக் கோடிகொடுத்தாலும் உன்னேவல் செய்திருக்கக் கருதுவேனோ? ஒருநாளும் கருதேன்.

106. எனக்குநல்கு மிளங்கொடி தன்னை நீ
உனக்குவேண்டிக் கவர்ந்திடி னேதினேன்
இனிக்கொல்போரினி லக்கில னேழைநின்
றனக்குவேண்டித் தனிபடை யேற்பனே.

(இ-ள்.) எனக்கு உரிமையாகக் கொடுக்கப்பட்ட மடந்தையை நீ பலாத்காரமாகக் கவர்கொள்வாயாயின் இனிமேல் உன்பொருட்டுயுத்தத்தில் ஆயுதமென்பதுதொடேன். நான்சொன்னேன்

107. சென்றதிமை பொறுத்திடத் தேவர்தாம்
இன்றெனக்குப் பணித்தலி னெண்ணிலேன்
நன்றுகேளித் திறநடந் தாலினி
உன்றனாவியென் வாட்கிரையூட்டுவேன்.

(இ-ள்.) நீ இதுகாறும் செய்தகுற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளும்படி எனக்குக் கட்டளையிடுதலின் நான் அவ்வாறே அவற்றைச் சிந்தியாமல் பொறுத்துக் கொண்டேன் … மேல் நீ என்னை இவ்வாறு அவமதிப்பாயானால் உன்னுயிரை என்வாளாயுதத்துக்கு இரையாக … நிச்சயம் என்றனன்.

108. இனையகூறி யிருவரு நின்றனர்
அனையவாத மதனொடு நிர்ந்ததால்
புனையும் பூந்தொடை வீரரும்போயினார்
நினையுந் தாழ்ந்திடுஞ் சிந்தையில்லாரரோ.

(இ-ள்.) இவ்வாறு இருவரும் சொல்லி யோய்ந்தார்கள். அவர்களுடைய விவாதமு…னோடு முடிந்தது. பின்பு அவ்வீரர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் எள்ளளவேனும் … மில்லாதவர்களாய் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

## சுகுணா சுந்தரம்.

XV.

உலகில் ஸ்த்ரீ சாபல்யம் கொடிது. அஃதில்லாவர் அரிது. அரிய இம்மானிடப்பிறவியை யடைந்த நாம் நம்முடைய யௌவனபருவத்தை வீணில் பல வழிகளிற் போக்காமல் ஜிதேந்திரியராய்ச் சத்திய நெறி தவறாதிருப்போமானால், இம்மையிலும், மறுமையிலுமழியாத கீர்த்தியை யடையலாம். அப்படியல்லாமல் காமசமுத்திரத்தில் மூழ்குவோர்களிடம் பாவமும், பழியும் நல்கும்; பல்வகைத்தான புகழறங்கள் யாவுமழியும்; எய்துமின்பமும், அதனுலெய்து நோவுன்மரபும், செய்யுநோன்பும் நல்லொழுக்கு மேன்மசாவு மெண்ணுருமனிற்கும்; மண்மீதிற் பிறந்து னியேகுடிகொண்டு பேரின்பத்தைமறந்து சிற்றின்பின்மேல் மையலாகிப் புன்மாதருடன் பொருந்து தடுமாறித்திரிதலோ ஜன்மசார்த்தகம்! உள்ள மாந்தரையெல்லாம் யோக்கியரென்று சாலதன்று. ஆதலின், பெண்கள் எப்போதும் நடத்தல் கூடாது. அப்படிச்செல்லும் யுவ[illegible]னுமொருவன் சாபல்லியங் கொள்ளாமல் [illegible]டகனுவது மிக்கப்பிரயாசமான காரியம். [illegible]ற்புடைமகளிர் தங்களுக்கு எத்தகைய [illegible]ரினும், துர்த்தனை மானிடனொருவன் [illegible]ர் தம்மை வலியத்தழுவ மேல் விழுந் [illegible]திவிரதமகிமையால் தங்கள் மானத்தைக் [illegible]க்கொள்வார்கள். நளன் பத்நியான தமயந்[illegible]னவள் ஊழ்வினையால் அகோரமான காட்[illegible]டு நடந்தபோது, ஓர் வேடுவனு லிச்சிக்கப் [illegible]னுடைய பதிவிரதாக்கினியால் அவனை [illegible]ரிக்கினள். சீதாதேவியானவள் தன் [illegible]பதமையால் (ஸ்த்ரீகட்குப் பேதமையென் [illegible]வகுணங்களுளொன்றும்,) இளைய பெரு[illegible]கடுமொழிபகர்ந்தோட்டிவிட்டுத் தனித்[illegible]ல், துஷ்ட இராவணன்கையிற் சிக்கிப் [illegible]ப்பட்டுக், கடைசியில் தன்னுடைய பதி[illegible]டத்தால் க்ஷேமமடைந்தனள். இன்னு[illegible]கற்பரசிகளின் சரித்திரத்தைக் கேட்டிருக்[illegible]ஆகவே, பெண்கள் சுவாதந்திரியமாக எப்[illegible]ந்த யோக்கியர்களல்லர். அப்படி இருக்க நேரிடின் மானஹானிக்கான அபாயத்துக் குள்ளாவார்கள் என்பது தெரிந்த விஷயமே.

மேற்கூறிய மாளிகையில் நம்சுலோசனை யொன்றுந் தோன்றாமல் மயங்கினதாகச் சொன்னோமே. அந்த உத்தமி எவ்வாறு ஆயினள் என்று விசாரிப்பாம்:—

**சுநடபன்:** (தனக்குள்ளாகவே) "நாம்மொழிந்த நயமய வார்த்தைகளொன்றும் பயன்படவில்லை; பேசாமடந்தையாக இருக்கின்றனள்; மறுபடியும் நயமான வார்த்தை பேசியே இவளை வஞ்சிக்க வேண்டும்." என்று சுலோசனையைப்பார்த்து, "அடி, தித்திக்குஞ் செந்தேனே! நந்தவனத்தில் நீ உலாவுகையில் உன்னைக்கண்டது முதல் நான் மதனபிடிதனுகிப் படுங்கஷ்டத்திற்கோர் அளவில்லை. நீ கோரிய சுந்தர இராஜன் வீரசுவர்க்கத்தை அடைந்துவிட்டபடியால், இனி அவனைப்பற்றி நினைப்பதில் யாதும் பயனில்லை. இந்த என்னொருமாளிகையே இவ்வளவு விசித்திரமாயிருக்கும்போது, எனக்கு ஐசுவரியம் அளவிடப்படாது என்று நான் சொல்லாமலே நீ அறிந்து கொள்ளலாம். அடி கண்மணி! என்னுடைய பாக்கியமெல்லாம் உனக்கே தத்தஞ்செய்கிறேன். சுகுணசுந்தரர்கள் வானேயுந்தைக் கேட்டுப் பரிதபித்துக்கொண்டிருந்த உன்னையும், சண்பகத்தையும் வேறு துஷ்ட அரசர்கள் கைப்பற்றுதபடி, நானும், சுவதனனும் மகா மாயாவியான சக்தியை ஏவித் தந்திரமாய் நீங்களுமறியாதவண்ணம் இங்கு கொண்டு சேர்க்கும்படி வேண்டிக்கொள்ள, அவளு மவ்வாறு செய்தனள். நான் உன்னையும் என் றோழனை சுவதனனுக் குன்றோழியான சண்பகத்தையும் நாளையுதயத்தில் கல்லியாணஞ் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். அப்படிச் செய்வதினால் உங்களிருவருக்கும் யாதொரு கஷ்டமும், நஷ்டமுமில்லை. நித்யயுவதிகளாய்ச் சுகமடையலா மென்பதிலையமில்லை. சுந்தர இராஜன் மீதுள்ள ஆவலைத்தவிர்ப்பாய். என்னையே உனது நாயகனுக அடைவாய். நான் உன்னுடைய விசுவாசத்துக்குப் பாத்திரனுக நடந்து



கொள்ள மாட்டுவேன். நான் சாமான்ய புருஷனென்றெண்ணதே. இந்தக் கனகபுரிக்கு நானேயதிபன். எனக் கிந்திரன், குபேரன் முதலானவர்களும் நிகரில்லை. வயதினுலும், ரூபத்தினுலு முனக்குத் தகுந்தவன் நானே! உன்னுடைய பிதா சாருதத்தன் முதலாக எல்லா ராஜர்களும் என் பெயரைக் கேட்டாலே நடுநடுங்குவார்கள். அடி, என் மனதையே கொள்ளை கொண்ட கள்வி! நவரத்னாபரணங்களும், உயர்ந்த பட்டாடைகளும், பொற்பாத்திரங்களும், திவ்வியாஸநங்களும் நானுவிதமான மலறமல் படுக்கைகளும், இன்னுஞ்சகல போக்கியங்களையும் நீயே யதேச்சையாயனுபவிக்கலாம்; என்னை உன்னிஷ்டப்படி ஆண்டு கொள்ளலாம். நானே உனக்கடிமை. அடிபொற்கொடியே! உன்னுடைய தேக காந்தியே இம்மாளிகையை அலங்கரிக்கச் செய்கின்றதே, என்னை மாரனிடத்தினின்று விடுவித்து இரக்ஷிக்க வேண்டிக்கொள்ளுகிறேன். அனங்கனுடைய ஐங்கணைகளுஞ் சுறுக் சுறுக்கென்று [illegible]ய்ந்து என் மார்பைச் சல்லடைக் கண்களாகத் [illegible]கின்றனவே; மனம் பதைக்கின்றதே; மெய்சோருகின்றதே; பொறிகள் கலங்குகின்றனவே; இவ்விபத்திலிருந்து என்னைக்காக்குங் கடமையுனதேயாம். அடி! பிராணசகி! உனக்கு மிகுந்த புண்ணியம் உண்டடி!" என்று [illegible]வாறு வேண்டினன்.

இந்[illegible]க் கர்ணகடூரமான வார்த்தைகளைக் கேட்டதும் சு[illegible]லாசனைக்கு வந்த கோபத்திற்கெல்லையில்லை. ஆயினு[illegible] அவள் கோபத்தை வெளிக்குக்காட்டாமற் சாந்தமா[illegible]கவே அவனுக்குத்தக்கபடி ஹிதோபதேசஞ் செய்வாளாயினள்:—

"மாதார! பாபபுண்ணியங்களைப் பகுத்தறியும்படியாய்க் கடவுள் நமக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார். உன்னைப் பார்க்கும்போது நீ கூறியவண்ணம் இளம் ராஜகுமாரனுகவே காணப்படுகிறாய். தர்மாதர்மங்களையறிந்து இராச்சியமாளுமரசன் அந்நியஸ்த்ரீகளை இச்சிக்கலாகாது. ஆனல் என்னை விவாகமில்லாக் கன்னிகையாக எண்ணி இங்கு கொடுவந்திருப்பதாய் உன் மொழியினுல் தெரிந்துகொண்டேன். அவ்வாறு என்னை விவாகமில்லாத பெண்ணென்று நினைத்து மணம்புரிய ஆவல் கொண்டிருந்தாலும், என் பெற்றோர்களின் சம்மதத்தைப் பெறாமல் எவ்வாறு மணம்புரியலாகும்? என்னை விவாகமில்லாப் பெண்ணென்றெண்ணவேண்டாம்; மண்டலாதிபனும், மாயாபுரியரசன் புதல்வனும், திக்விஜயஞ்செய்தவனுமான சுந்தர மகாராஜனை நான் என்னுடைய உத்தியான வனத்தில் முதல் முதலில் கண்டவுடன் காவிலேயே, எங்களிருவருக்கும் அற்புத விவாசம் தெய்வசங்கல்பத்தினுல் நடந்தது. ஆதலால் நான் கன்னிப் பெண்ணல்ல. இப்பூமண்டலாதிபதியின் பத்நி என்று அறியக்கடவாய். பேதைகளான என்னையும், என் தோழியையும் வஞ்சக்கவா[illegible] வந்தது ராஜநீதியல்ல. இஃது பஞ்ச மகாபாதகத்து[illegible] ஒன்றாகும். ஓர் அழகிய பெண்ணைக்கண்டு இச்[illegible] கொள்வது உலகில் மாந்தர்க்கியல்பே: ஆயினும்[illegible] மங்கையை முதல் முதலில் கண்டு காதல்கொ[illegible] போதே, அவள் தனக்குகந்த நாயகியாவளா, [illegible]கத் தகுந்தவள்தானு என்று உத்தமபுருஷன் [illegible] கொள்ளுவான். சந்திரவமிசத்தோன்றலா[illegible]ய்ந்த மகாராஜன் முதல் முதலில் சகுந்த[illegible] ஜுவரிஷியினுடைய ஆசிரமத்தில் [illegible] மேற்கூறியவண்ணம் அவளைத் தனக்[illegible] என்று கண்டுகொண்டதின்மேல் காந்[illegible] செய்துகொண்டு அவ்வுத்தமியைத் தன்[illegible] கிக் கொண்டனன். பெரியோர்களறியாம[illegible] வரும் ஏகாந்தமாய் மணமிசைந்து செய்[illegible] மணமேயாயினும், அதை ஆகாயவாணி[illegible] சாட்சியாக உலகத்தார் அங்கீகரித்தனர்[illegible] மாகவே சுந்தர பூபதி என்னைத் தன்[illegible] அங்கீகரித்திருக்கின்றனர். நீ என்மீதிலு[illegible] இக்கணமே வெறுக்கவேண்டும். [illegible] வாய்த்த சுந்தரராஜன் தன்னுடைய பி[illegible] யத்தை நிலைநிறுத்தவன்றோ தன் [illegible] தனர்! அவ்வாறே அமைச்சர்புதல்வனு[illegible] மித்திர காரியத்தைச் சாதிக்குமென்[illegible] யைக் களிக்கச் செய்யவன்றோ உயிர் [illegible] ஆயினும் புண்ணியபுருஷர்களாம் சுகு[illegible] இறந்தவர்களாக எண்ணாதே. உன்னுடைய [illegible] தனனுடையவும் துற்செயல்களை எங்[illegible]

அவர்கள் கண்ணேட்டமிட்டுக் கொண்டேயிருப்பார்
கள். ஈசுவரபக்தர்களும், சத்திய சந்தர்களுமான
தவ்விரசிரோமணிகள், நீங்கள் எங்கள் மாட்டுச்செய்
யும் அபராதத்தைக் கண்டு சகியார்கள். பிரகிருதத்
தில் ஓர் காரணத்தை முன்னிட்டு மறைந்திருந்தாலும்
கடிய சீக்கிரத்தில் வெளிவருவார்கள். அவர்கள்
கைலாயத்தில் என்னன்னை பார்வதியை வாமபாகத்
தில் கொண்ட பரமசிவனுடைய அடியிணையில் வினை
யாடிக்கொண்டிருந்தாலும் இருப்பார்கள். வீணில்
அவர்களுடைய கைவாளுக் கிரையாகாதீர்கள். என்
னையும், என்தோழியையும் இக்கணமே ஹேமாபுரியி
லிருக்கும் என்தந்தைபக்கல் கொண்டுசேர்த்து மன்
னிக்குமாறு வேண்டிக்கொண்டாலன்றி உங்களிரு
வருடைய உயிரும் யமனுலகுசேரும். மேலும்,
சண்டாளன் குரூபியேயானாலும், தரித்திரனே
யானாலும், பண்டுதான் செய்தபலனெனவே கண்டு
மன்று, மனங்கோணுது பதிதவன் பணியைச
தியமிழ்வார்கள் உத்தமிகள். தமயந்தி, சந்திர
மதி, சாவித்திரிமுதலான உத்தமஸ்திரீகளைப்பற்றி நீ
கேட்டதில்லைபோலும். உன்னுடைய சம்பத்தினு
லும் ஒன்றுமாவதில்லை. இதைப்போன்ற சம்
பத்துகள் தேவையானது என்கண்மணியாம் சுந்தர
னிடத்திலிருக்கின்றன. என்னையும் என்தோழி
யையும் வஞ்சகமாய் களவாடிவந்த உங்களிருவரைக்
காட்டிலும் கொடியவர்கள் வேறுயாவர் இவ்வுலகி
லுள்ளனர்! எங்களிருவருக்கும் இன்னுமெவ்வித
மான பயங்கள்சேரினும், நாங்கள் எங்கள் நாயக
ராகிய சுந்தர சுகுணர்களையன்றி வேறெவரையும்
கண்ணெடுத்தும் பாரோம். ஈசுவரியின் கிருபையால்
அவர்கள் எங்கிருந்தாலும் வந்துசேருவார்கள். அப
்பொழுது உன்னுடைய பெருமைகளைச்
சொல்லுவதில் பயன் யாதுமில்லை. உன்
னைப்போன்ற கொடியவர்கள் வஞ்சகமாய்க் களவாடி வந்தது
விளங்குகின்றதே! அட, பாவி! என்
னைக் கடினமான வார்த்தைகளாட வனுவில்
…ில் என் கட்டிக்கொள்ளுகி
…இராவணன் சமூலமா யழிந்
…ழினமடைந்ததையும், சந்தி
…ழ்ந்து யோசித்துப்பார்.
…ரக்கேன். பிறன் மனை

வியை இச்சித்து அவர்களை வலிமை செய்வதனுல்
பகை, பழி, பாவம், பயமாகிய நான்கும் சேரும்; தனக்
கிருக்கும் பெருமையெல்லாம் போகும்; இறுதியில்
நாசமுண்டாகும். கொலை, களவுமுதலான மகாபா
தகங்கட்குங் காரணமாய்க் காமக் கடலிலாழ்ந்து
என்மனம் வருந்துகிறாய்? பாஞ்சால ராஜனுடைய
தவப்புத்திரியும், அக்கினிசம்பவையும், பஞ்சபாண்டவ
ர்களுடைய பத்நியும், பதிபக்தி யுடையவளுமான
திரௌபதாதேவின் நிமித்தமாக கீசக உபகீசகர்கள
ழிந்ததைக் கேட்டிலையோ? நீ அறியாச்சிறுவனென்றி
ரங்கி இங்கனம் புத்திகூறலாயிற்று. என்னுடைய
சற்புத்தியே உன்னை எரிக்கும். ஆனால் எனது நாய
கமணியின் வரவை எதிர்பார்த்துக் கொஞ்சம் பொறு
மையையும் வகிக்கலாயிற்று.'' என்றிவ்விதமாக
சுலோசனை சொல்லி முடிந்ததும், சுரூபன் "அடிகட்
டழகி! என் உபயோகமற்ற வார்த்தைகளாடவேண்
டும்? நான் உன்னைவிடப் போகிறதில்லை. சுந்தரனு
வது சுகுணனுவது இனிவருவார்கள் என்றவீணுன
எண்ணத்தை விட்டொழித்துவிடு'' என்று சொல்
லிக்கொண்டே அவள்கையைப்பற்ற பக்கலிலணுகி
ஞன். உடனே சுலோசனை தான் பூசித்துவந்த பரா
சக்தியை மனதில் தியானித்துகொண்டு, ஏ, ஜகதம்
பிகே! நான்பதிவிரதை என்பது உண்மையானுல்
எனதுநாயகனன்றி இதரபுமான் என்னைத்தொடுவ
னேல், அவன் என்னுடைய கற்புத்தீயால் எரிக்கப்
பட்டு சாம்பலாகக் கடவன்'' என்று உறுத்த சப்தத்
துடன் கூவிச் சித்திரப்பாவையைப்போல் அசை
வற்றுத் தனது கண்மூடியவண்ணமே தேவியைக்கு
றித்து நிஷ்டை புரிந்தனளாயினள்.

* * * *

XVI

"உனக்குத் தெரிந்த ஹிதோபதேசத்தையே இன்
னுஞ் செய்வையேல் நீ உண்மையின் வழி சாரு
வாய். உனக்கு மேன்மேலும் மங்களமாகவே முடி
யும்'' என்று ஓர் அசரீரிவாக்குத் தொனித்தது.
இந்த வாக்கைக் கேட்டதும் சுலோசனை திடுக்கிட்டு
தேகஞ்சிலிர்த்து, மூடிய கண்களைத் திறந்து நாலா
பக்கத்திலும் நோக்குகையில், தன்னை வலிமைசெய்
யத் துணிந்து நிற்கும் ஆடவனையன்றி வேறு ஒருவரு
மின்மையால், சற்றே மனந்தளர்ச்சி யடைந்தாலும்,



…இது…
…ஞ்சமி…
…கிருனை…
…பனைப் ப…
…ரும்பயும் சொல்

லில்லாதவனே! நான் சொன்ன வார்த்
தைகளைக் கொஞ்சமேனு மறியாமல் அசத்தியமான
வார்த்தைகளைத் தொடர்ந்தொழுக முயலுகிறாய். உலகில்
…ந் சத்திய விரதமும், பெண்களுக்கு
மற்ற எல்லா விரதங்களைக்காட்டிலும்
…மாகும்; இகபர சுகங்களிரண்டையு
மடைதற்கு ஆடவரும், பெண்டிரும் மேற்கொண்டனு
ஷ்டிக்கவேண்டிய சிறந்த விரதங்க
ளாகும். சத்திய விரதமென்றால் பொய்
…ம மாத்திரமன்று; பிறிதோருயிருக்கு
…வேணும் துன்பம் கொடாத வார்த்தை
…லயாகும். நீ கீழே மொழிந்த வார்த்தை
…னை நோவச்செய்யும் வார்த்தைகள். என்
…பவனத்தில் தேவியின் அனுக்கிரகத்தால்
…டித்தில் சுந்தரபூபதி என் கையைப்பற்றி
அந்த நிமிஷமுதல் நான் பெண்களுக்குரிய
…ம என்ற சிறந்த நோன்பைக் கைக்கொண்டி
…றேன். என் மனஉறுதியையும், நான் பிறன்
…என்பதையும் கீழே நான் பகர்ந்த மொழி
…னக்கு நன்குணர்த்தும். அப்படியிருக்க, நீ
…ப் பின்னும் வலிமை செய்ய வருவது தகாத
அதனுலுன்னுடைய சத்திய விரதங்கெட்டு
…ல் வீழ்ந்தழிவாய். சத்திய விரதத்தையே
…கொண்டவர்கள் சுந்தர சுகுணர்கள் என்பதை,
…க்கேட்ட அந்தணனுக்கு அவர்கள் சாதாரண
…த்தம் சிரத்தை யளிக்குமாறு கொய்யும்படி
…தே அறிவிக்கும். "சத்தியம் தலைகாத்…''
…மொழியை சுந்தர சுகுணர்கள்
…பிரத்தியக்ஷத்தில் நீகாணப்போகிறாய். சத்தியத்தின்
…மையை உலகில் நிலைநிறுத்துதலுக்கென்றே
…ஜகுலத்தில் அவதரித்த மன்னனுன அரிச்சந்தி
…, ஒரே ஒரு சிறு பொய்யைத் தானே சொல்
…படி விசுவாமித்திரர் படாதபாடும் படுத்தினுர்?
…ற்கு அவர் கொஞ்சமேனுந் தளரா மனத்தின
…தன் நாடு நகரிழந்து, கொண்ட மனையாளையும்,
…யையும் அந்தணனுக்கு விற்றுத் துறந்து,

தாலும் பிறையனுக் கடிமையாகிச் சுடலை…
துக்கொண்டிருக்கும்போது, தன் குமாரனுடைய
பிரேதத்தை எரிக்கவந்த தன்னில்லவளையுங் கொலை
குற்றத்துக் காளாக்கித் தன் கைவாளோச்சி…
கொல்லநேர்ந்த காலத்தும், அஞ்சாத சுத்தவீரனுகி…
அம்மன்னவன் ஓர் சிறு பொய்யைச் சொல்லவன்…
அஞ்சினுர்! அந்த சத்தியம் அவரைக் காத்ததுபோ…
தந்தையின் மொழியைச் சத்தியமொழியாகத் த…
னுயிரை வெறுத்துத் தலையைக்கொடுத்த மகா…
ராய் சுந்தரிதோ வருவார். உனது துற்செய…
யைக் கண்டுன் மண்டையைப் பிளப்பார். மேலு…
நான் அவரைக் கண்டதுமுதல் தெய்வமாகக் கொ…
டாடி யுபாசித்து உத்தமமான வழியைச் சார்ந்து…
யும் வழியைத்தேடா நிற்கின்றேன். மனோவாக்…
காயங்களாகிற திரிகரண சுத்தியோடு பதிவிர…
திற்குப் பங்கம் வராமல் ஊசியின் முனை
பவன் போல் நல்லொழுக்கத்தில் நட
மிகளின் மனந் தாங்கச்செய்வையேல், …
குலமேயழியும். ஆகலின் உத்தமமான
கத்தைச் சார்ந்தொழுகல் சாலவும்
தரும்'' என்றுள். உடனே சுரூபன்,
மணி! பேதைமை வாய்ந்த நீபோ…
கூறுவது? நானே புன்னை நானேயுதய…
புரிகின்றேன். அதற்குள் உன் மன…
கொண்டு உடன்படுதல்வேண்டும், அல்…
வாளினுல் உனது சிரத்தை ஒரே வீ…
வேன்;'' என்று சொல்லி அம்மாளி…
…டகன்றனன்.

அப்பொழுது அம்மாளிகையில், "…
…ண்டும் நீண்டும் மின்னாசகுண்டும்
…ந்த'' கூந்தலும், வில்லையொத்…
வேலைப்போன்ற நீண்டவிழியும், முல்…
பல்வரிசையும், பவளத்தைப் பழித்த…
டவர் மனமுங் கண்ணுங் கவர்ந்…
வாய்ந்த ஓர் மனோகரியானவள், கடல்
போல் பாதசரங்கள் கலீர், கலீர்
தோன்றினள். அவளையுற்று நோக்…
சனையானவள், இன்னாரெனத் திரி…
என்றறிந்து ஒருவாறு மனம்
சுந்தரி, சுலோசனே! கவலை…

...வாட்டமுறக் காரணமேன்?" என்றனள் சித்திராங்கி.

"நானும் சண்பகமும் சிக்கிக்கொண்டது போதாதென்று, நீயும் இங்கு தனித்து வருகின்றனையே!" என்று வெருண்டு மறுமொழி கூறினள் சுலோசனை.

"என், அடி, கண்ணே! உனக்கிக்குற்ற இடுக்கண் யாதோ?" என்று சித்திராங்கி வினவ, சுலோசனை, சுருபனும், சுவதனனும், இளைஞரிருவர், என்னையும் சண்பகத்தையும் இம்மாளிகையில் சிறைப்படுத்தி நாலையுதயத்துக்குள் நாங்கள் அவர்களை மணம்புரிய இணங்காவிடில் வாளுக்கிரையாக்குவார்களாம். உன்வரலாறு யாதோ?" என, "ஆனல் சண்பகம் எங்கே!"? என்று சித்திராங்கி கேட்கையிலேயே, "அந்த நிர்ப்பாக்கியவதி இதோ இருக்கிறாள், அவள் உன்மாட்டு பிலத்தில் செய்த உப...ண்ணி, இங்கு வேடனும் சுவதனனிடம் ...த்துக்கொண்டிருக்கும் ஓர் மான்பேடாம் ...உன்னைக்கண்டதும் தஞ்சமடைகின் ...ன்று மருளமருள அங்குமிங்கும் விளித் ...ட வந்தனள். "சகிகாள்! உங்களிரு ...துலையில் நிகழ்ந்ததுன்பம் இனி இன்ப ...டியும்! இது கின்னரர்கள் வசிக்கும் ...நகரியைக் கனகபுரி என்று சொல்லு ...ந்தரசுகுணர்களால் பரம உபகாரத்தைப் ..., எனது பர்த்தாவுமான இரத்தின ...வர்தான் இந்நகரத்தரசன்! இந்து நம் ...ரிகையே, பராசக்தியின் அனுக்கிரகத் ...ர சுந்தரர்கள் சுகமே இருக்கிறார்கள். ...லாகயில் கின்னரராஜனுடன் வார்த்தை ...ாடிருக்கின்றனர். உங்களிருவரையும் ...கொண்டிருக்கின்றனர். அவர்களிடம் ...ட்டுச்செல்வதற்காகவே யான் இங்குற் ...று சித்திராங்கி மொழிகையிலேயே ...சித்திராங்கி, தாமதம்! சீக்கிரயப்பென் ...ட்டுக்கொண்டுவா! என்று சொல்லிக் ...ரத்தினகேதுவும் வந்தனன். பிறகுஎல் ...ர சுந்தரர்களிருக்குமிடம் சென்றனர்.

...சண்பகாவதி தனித்து, சுலோசனை ...வாய் "அடிதோழி! சுருபனை சுந்தரராஜனைக் கொன்றேன்" ...என்று ...றனை என்று ...

சண்பகாவதி: "... காதலு நான் அநேக நீதிகள் எடுத்துரைத்து என்னை பலவந்தமாய்த்தொட நெருங்க இவ்விபத்துக்கு வேறுகதி யோசுமில் பராசக்தியைத் தியானித்தவண்ணம், "உன் கணவனல்லாமல் வேற்றுபுருஷன் தொடுவனேல், அவன் உனது கற்புத் தழிவான்; நீ அஞ்சவேண்டாம்!" என்று ...குண்டாக, நான் கொஞ்சம் மனம் ...டிருக்கையில், அவ்வாடவன் என் கையை இழுத்தனன். அப்பொழுது அசரீரி அவன் எரிந்து போகாமையைக்கண்டு, இச்சையுமுற்று, சுகுணசுந்தர் எனக்கிட்டி கைகண்டுவிரலில் அணிந்திருந்ததாய்த் தி... கணையாழியை வெடுக்கெனப் பிடுங்கி, ...யைத்திமிறிக்கொண்டு, இவன் ஓடிவருங்கால் ...ரும் எனது முன்றானையைப்பற்றிக்கொண்டு ...யைக் கொடுக்கும்படி வேண்ட, நான் வார்த்தையாடாமல், ஆழியையுங்கொடாமல் போது, சித்திராங்கியைக் கண்டதும், அவர் விட்டு வேற்றிடம் புக்கினர். "இதோபார் மோதிரம்! சுகுணர் என்ற அக்ஷரம் வரைந்திருக்கின்றது!! இதைப்பார்த்தது முதல் தாபமொழிந்தது," என்று இரகசியமாய்ப் பேசினமே, அடிமேல் அடிவைத்துக்கொண்டே நடனாயினர்.

இவர்கள் வருவதைச் சுகுண சுந்தரர்கட்கு விக்குமாறு இரத்தினகேது முந்திச்சென்றன். சித்திராங்கியோ தன் கொழுநனைப் பின்பற்றிச் சற்றுமுந்திச் சென்றவள் திரும்பிப்பார்த்து, "தோழிகாள்! என் இன்னம் தாமதிக்கிறீர்கள்" என, அதற்குச்சுலோசனை "உன் மாளிகை விசித்திரங்களைக் காணக்காண அதியற்புதமாக இருக்கின்றன, ஆதலின் அவைகள் ஒவ்வொன்றையும் கண்டுகளித்துக்கொண்டே வருகின்றனம்;" என... தாங்கள் பேசுவதை அவள் கண்டுகொள்ளாத சாதுர்யமாய்ப் பேசியவண்ணம் சென்றனர்.

(இன்னும் வரும்.)

டி. எஸ். சுப்பராம...

# 'அநாதைப்பிள்ளை ஓலம்.'

[1]அநாதைப்பிள்ளை யானேனென்றுயே [2]என் - [3]கண்ணுறுமோ - அதனை என்செய்கேனடி! [4]—தாயே.

## I. உள்ளகம்.

1. விவாதசம்வாதம் விட்டுப்போச்சு
மதவாதமெல்லா மாய்ந்துபோச்சு
ஜீவாதசித்தி நிலைத்துப்போச்சு
ரசவாதஆசையும் விட்டுப்போச்சு.
(அநாதைப் பிள்ளையானேனென்று

* The word ஓலம் ordinarily means an articulate sound, a *cry*. But it has al...
...ystic significance which is too deep for comprehension except to the adept and ...ghly initiated few. It means the manife...tion of "the Word" in the plane of ... is the symbol for "the Word" or "Spirit" and is called *Pranavasabdham*. ... ...bolical letter that stands for *prithivi* or the *earth element*. Every one of the 51 letters ...krit is an evolute of Om, and can be traced to its source. The various stages of evolut... ...e Word that was in the beginning" are described in books on Indian Mysticis... ...no use entering into them as they can be learned only by an initiate through t... adept. The various evolutionary stages of the Pranava Sabdha—the "Wor... the beginning" of St. John,—are known as 1 சூக்குமைவாக்கு, 2 பைசந்திவாக்கு ...க்கு, and 4 வைகரிவாக்கு or articulate sound, which is the Word manifest ...th element, which is *Akas* or what the scientists call *ether*. A Russian ...cently made "*an attempt towards a chemical conception of the ether*" ...l by Longmans) with the following result, *viz*. "The properties of ether ...imilar to helium, argon, &c., that is, the ether must be regarded as ... incapable of entering into combination or reaction with other ...unds, although capable of penetrating their substance." ஓம் - பிரணவசப்தம் லயில் பிரவேசித்து விளங்க ஓலம் என்றும் வை... ...செய்வர் தத்துவஞானிகள்.

...தைமயல்கொண்ட...

...தைமயல்கொண்ட...

...தை மயல்கொண்ட...

...பாகவிடுகள் மாயலோகங்கள் நகைத்திப்பட்டவை ...

...போகபோக்கியங்கள் புன்சொன்மொழிகள் புணர்ந்தமாதோ ... விழுந்து

...யோகலோபமொடு க்ரோதமாச்சரியம், கூட்டோடுகழன்று விட்டோடிப்போச்சு.

போக்குவரவுக் கிடமில்லாமல் புண்ணியபாபங்கள்...

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

அறுவிகாரங்களு மற்றுப்போச்சு

மறுமைபோடிம்மையு மொன்றுப்போச்சு

வறுமைபெருமையெனும் வாய்ப்பேச்சுப்போச்சு

அறுகுணாபூரணசகுணவடிவமு வெட்டவெளியாய் விட்டுப்போச்சு.

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

உள்விகாரமற்றுது மூருக் கிளப்பமேயாச்சு

கன்குடியனென் றுகண்டோர் மத்திமையில்மறைபேசலுமாச்சு

என்னுக்குளெண்ணெய்போலிருந்த தும்போச்சு

கள்ளுக்குக்காசுபணமேவேணுமேயெனத் தேடிநின்றவந்தக் காணமும்போச்சு.

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

## II. ஒளியகம்.

6. அகத்தில்விகாரங்காணுன் முகத்தில்விகாரம்பார்த்தான்
மகத்தின்விகாரமெத்த மாய்கையின்செய்கையதப்பா
இகத்தின்விகாரமெல்லாமுன்னகத்தில்காணுதுபோல
முகத்தின்விகாரமெல்லாம் அகத்தில்காணுதுகண்ணே.

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

7. பழுதுள்ளபாண்டத்திலுள்ளே பொன்னைவைத்திருக்கிறாய்
பழுதுள்ளபாண்டத்தின்மேற்று உருகினபொன்னதிலொட்டா
தழுதுள்ளசுக்கரைந்தபின்னர் பழுததிலொட்டாதப்பாமே
தொழுதுள்ளேபணியுங்கள்ளன் வெளியிற்போடும்வேஷமே

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

8. அடித்துப்பட்டுப்போட்ட பொன்னை
எடுத்துப்பாரேப்படியிருக்கு?
எடுத்ததைப்பார்க்கவறியார் செம்பென்றிகழ்ந்ததைத்
எடுத்ததைப்பார்க்கவறிவார் உறைத்ததைதமாத்திட்டு

(அநாதைப் பிள்ளையானே...

...கலாசனே "உன் மாளிகை இன்
...சிங்களைக் காணக்காண அதியற்புதமாக சாரு
கின்றன, ஆதலின் அவைகள் ஒவ்வொன்றை முடி
கண்டுகளித்துக்கொண்டே வருகின்றனம்;" ...த்தது.
தாங்கள் பேசுவதை அவன் கண்டுகொள்ளாதகிட்டு
சாதுர்யமாய்ப் பேசியவண்ணம் சென்றனர்.

...வர்தனன். பிறகுஎல்
...சுந்தரர்களிருக்குமிடம் சென்றனர்.
...சண்பகாவதி தனித்து, கலோசனை
...வாய் "அடிதோழி! சுரூபனை சுந்

(இன்னும் வரும்.)

டி. எஸ். சுப்பராய

...ஒருவரு
...டந்தாலும்,



9. ...டம்போட்டபொன்னுமதுவே பழுதில்லாத்தங்கமாமப்பா
அடம்பேசிமடம்பேசி ... ரோடழியாதே கண்ணே!
விடமுண்டசிவநீ ... கண்டங்கறுத்தது காணே:
படம்போட்ட... ...ளைப்புளியுப்பால்விளக்கி மெருகிட்டுவைபாட்டார்
[...ரத்தகதற்கில்லையோ க...

(அநாதைப் பிள்ளையானே னென்...

## II? வெளியகம்.

0. உப்புப் ...போட்டு விளக்கித்துலக்கவும் வேணுமேபளிங்கு ...ரைமங்கை
உப்புப்புளியாங்காரசாரமதுகூட்டி மண்ணையும்பொன்னுக்கி வைப்பினெவர்;
உப்புமேபப்புப்புளியுமகன்ரச மதுவூட்டிக்கூட்டிக் கனகம்செய்வதுவாதம்
அப்பிணப்பைப்போ லமர்ந்திருந்தாலுண்டாமமுரி † உப்பிலப்பைக்கட்டிய
[துறைபச் செய்தாலுன்தேகம் வச்சி

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

1. உப்புக்கட்டுவித்தைதன்னை புளவுமர்மமாயறியவேண்டும்
அப்புவதையுப்பிற்கட்ட வதினம்மாறிச் சுன்னமாகும்
உப்புக்கட்டாதுகன்னமதில் மதிப்பாவூட்டிச் செயநீராகும்;
உப்புக்கட்டென்பதிலுள்மர்மந்தன்னையே 'கட்டாடம்போலென்று'
[ருசித்தாலென்கா

(அநாதைப் பிள்ளையானே னென்றுமே.)

2. அமுரிசெயநீரிவை யதிர்சயவஸ்துக்காண்: அதுவேகாரசாரமதுவுமாம்:
அமுரிசெயநீர்கைம்முறையானல் அதுகொண்டுவாத மியற்றுதலாகும்
அமுரியுண்டாலப்பாமரணம்போச்சு அத்தொடுகாலனுமோடிப்போவான்
அமுரிசெயநீர்கைவசமானல்கண்ணே அனந்தம்சித்திகளுடனாம்பார்
[பொன்...

(அநாதைப் பிள்ளையானே னென்று...

ஓம் ஸ்ரீமாதுர்பூதேசாய நம:
ஸ்ரீ அகண்டானந்த ஸத்குருவே நம:

---

அமுரி, 'அமிர்தம்' என்னும் சம்ஸ்கிருதபதத்தின் திரிபு.
அக்னியைச் செயித்துவந்த அப்புவுக்கு "செயநீர்" என்றுபேர்.

1. அநாதைப்பிள்ளை—'அகதிக்குத்தெய்வந்துணை'—'திக்கற்றவர்க்குத் தெய்வ...
...டவுளையறிந்து அடியார்க்கடியனும் ஈசுவரனுக்கடிமை பூண்டவர்கள் இகத்தில் ...
...ன்னாதலால் அவர்களை உலகில் 'அநாதைப்பிள்ளை'களுக்கு ஒப்பிட்டுச் சொ...
...ப்படி உற்றார் பெற்றாரின்றி அன்புவைத்தாரிடமொட்டி யுறவாடியிருக்...
...பந்துக்களையும் மற்ற உலகப் பற்றுகளையும் விட்டு நீக்கி உள்ளன்...
...யோகாடி அந்தவழியில் அவர்களை யிட்டுப்போகக்காரணமா...
... Father's will, he is my mother and ...
...வர்க்கே... ...மையான அ...

2. தாயே—This word stands for the Motherhood in God. இது மாதாபூ— "தாயுமானேர்" என்றும், "தாயாய்வந்து முலையைத் தருவானே" யென்று மணிவா ஞல் வானுபவசித்தியாகச் செப்பியுள்ளார். இந்த தாய்பாவத்தைச்சிறந்து விளங்கச்செ னான் தற்காலத்தில் வடக்கே யவதரித்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸராம். இ வ இந்த தாய்பாவத்தைப் பிரத்தியக்ஷப்படுத்திக்காட்ட வந்தவர் போல் ஸ்ரீ அவதாரம் ா ஒருவர் இத்தென்னிந்தியாவிலுமிருந்து விளங்கி நித்யசமாதி பெய்தினர். இப்படிய ாடத்திலிருக்கிறார்கள். முமுக்ஷுக்கள் அவர்களைத்தேடி யடைந்து வினைப்பயன்தீ ர்கள்.

3. கண்ணே—என்னும் ஸப்தம் கண்ணப்பனைப்போலும் பூர்ணபக்திவாய்ந்த உத்தமச ன்னான சிவனடியாரைக் குறிப்பதாம். ஆக்கிஞைசக்கரவாசியென்றும் அர்த்தம் செய்வாய்

4. என்செய்கோஓம்!—என்பதை என்செய்க + ஒ, ஓம் என்று பிரித்துக்கொள்க ந்துண்டான பிரணவசப்தம் திரும்பியும் அங்கேபோயொடுங்குவதைக்குறிக்க இப்படி ஒ த்திரையளவு நீட்டிச் சொன்னதாகக்கொள்ளவேண்டியது. ஓம் என்னும் சப்தம் எழரை ய ளதாகவும் அதில் அகாரம் நாலுமாத்திரை யளவினதென்றும் உகாரம் இரண்டுமாத்திரையின றும் மகாரத்துக்கு ஒருமாத்திரை யென்றும் அதற்குமப்பால் அர்த்த மாத்திரை அரை யென்று லாராய்ந்தோர் சொல்வர். Evolution always takes longer time, while the process of inv more quickly accomplished. The transformation is quicker still, while the indi pirit that quickens into life and starts all these processes according to unchanging ernal. This is the lesson to be learnt, but the teaching of it is involved in mysticis ould be learnt and fully grasped only by an initiate through the teaching of an ad piritual Guru.'

1. வாதம்—This word in its original conception stands for the principle of tra mation, from which it connotes by application the *process* of transformation வாதம் in its comprehensive sense applies to all from the chemical change to transformation of Jesus into Christ or of man into spirit.

ஜீவாதம்—ஸத்தியவாதம். Applies to the great Power of Truth and the trans mation it effects step by step to the ultimate realisation of the Spirit in Man or வதி —ஒருவஸ்துவை மற்றொன்றாகமாற்றும் வித்தை. சாதாரணமாக தாதுவைப்பொருள் ன் மாகச் செய்யும் வித்தை. *Alchemy.*

பசித்தி—The achievement of the end for which the soul incarnated in this tainment of Self-Realisation or knowledge of God and the helping struggling humanity, which includes the several so-called 'super- nts and perfection of Powers.

the sciences from chemistry to biology. It includes in Natural science in its several departments—and of the course of evolution, with no ... many 'maste... ...ence ir...



called SIDDHAS. The head of this school is the great and immortal S hoolar. He mentions seven others who attained to Masterhood with him. Th great names including the four greatest of all Rishis (1) அகஸ்தியர், (2) (3) சனகர், (4) சனற்குமாரர், (5) சிவயோகமாமுனி, (6) பதஞ்சலி, and (7) வியா who with himself form eight in all.

பாதகீடுகள்—refers to ஆறுதாரங்கள். The six main nervous centres according to a Hindu Psychology, by learning to concentrate in and control each of which, st step, and all in the end, one attains to complete control over the self and is by will power to be at-one-with-God or enter into *Samadhi* which is a sation of the merging of the human will in the divine will. This and the next stanzas describe the effect of that supreme consummation which is the *Sum bonum* of Human Existence.

லாகங்கள்—Refers to the seven mental states in the upward and downward c of evolution with man as the starting point; they include all grade heavens or hells. What we call *objective* life is psychologically only a *subjecti state*, if one could see sufficiently deep into it.

தீ—Allusion to திரிபுர ஸம்ஹாரம், திரிபுரையின் நகைத்தீயால் திரிபுரங்களுமெரிபட்டதைக் ( க்கிறது. The Smile of God is the heavenly fire that has the power of burning the m subtle mental attachment to the things of the three worlds. Body is but a ma festation of mind, as mind is a mainfestation of the spiritual body, which is on reflection of God in a pure and stainless mind.

ர்ந்தமாது—an expression of லயயோகம், *cf.* "முத்தியென்னப்படு மங்கையைச்சேர முடல்பக சத்தியென்னப்படு மீசனருளின்றிச்சார்தலுண்டோ". With the transcending of the *Pers* சகுணப்ரஹ்மம், which is often worshipped as *Sakti* in various forms, you enter "the Peace that passeth all understanding" or நிர்க்குணசமாதி the highest sta unity with Godhead, where all traces of individuality fall to the ground, an soul completely loses bodily conciousness. Some adepts who have devoted selves entirely to the practice of this *Nirguna Samadhi*, are so over-powere unutterable feeling of bliss and peace they have entered into, that they im return to it, by their own will power, in which by constant practice th to remain for months and sometimes very rarely for years together. As will not fall off unless they *will* it, (they having conquered Death,) th what *apparently* is a state of suspended animation, but *really* their b were, a spiritual Dynamo and storage Battery which is fully charged magnetism and Power. With them really *to say* is *to do*. "Let He said, "and there was light," is a saying literally true with th entirely at-one-with-Him in that state; and their flesh by the wo

விவேகசிந்தாமணி.



ple of God, the abode of the spirit in man.* By a series of transfor ng on for how many years, we know not, (and it need excite no wonder o ism in us if the tale tells them in hundreds or even in thousands of years, ese Great Ones have in every sense conquered time by extreme adaptability thr here reflex action to all and every state of environment), their body and all onstitute it have become so very powerful Chemical Agents and Magnetic Cent that they can work wonders in the Chemical, Physical and Spiritual world and they be siddhas they resort to mechanical methods also In all that they do there nothing *super-natural*, though to our extremely limited vision, it may appear to l so. We are pushing apace no doubt, but the distance is still very very long for human mortals, to reach the goal. They have already discovered radium and heli and more recently "argon and its associates" which Professor D. Mendele mentions as "the recently discovered constituents of the atmosphere." We a approaching the time when the wisest and greatest amongst the scientific discovere and investigators will dimly perceive that "வெள்ளியம்பலம்" and "பொன்னம்பலம்" are not mere myths and imaginations of fancy but as real as the solid earth and th expansive ocean or the all-covering atmosphere and the all-pervading ether amid which we live. But the "argon of atmosphere" is not the "வெள்ளியம்பலம்". The Scientist must mount higher and still higher before he reaches the plane, wherefrom these great perfect Souls or *Siddha Purushas*, as we call them, handle these subtle, invisible substances to build up what they want, just as we handle bricks and stone and mortar for the purposes of our earthly architecture. We lag behind, no doubt, but our watchword and battle-cry is "Excelsior!" Mankind *must* progress and success is theirs in the end if they but faithfully march under this Banner and fail or falter not. Many may and will fall in the way, but their places will never for long be vacant and the spirit of Progress must and will go on and on, further and still further on until they enter the "Wicket-gate" and "Narrow-way", whence the march is to be resumed in single file.† "Each man for himself and God for all" is a otto which can be rightly interpreted and applied to them only there, *i.e.* on that er side, beyond the wicket-gate, where man has become transformed into Spirit affirms of himself truly "I am Spirit" as *Jesus* did, which is but an echo of from Eternity is vibrating unceasingly in the Orient, "*Aham Brahmasmi.*"



# The †Secret of Thought-Power.

"Thought-Power is not the intellectual power manifested in thinking thing, but the psychic power which is generated by *Thinking it.*"—*Richard Ha* r PSYCHOLOGY.

The Science and art of generating, conserving, and using Thought-Powe eans to an end—that end being no less than the realisation of God and attainment o ortality in the flesh " is called the *Yoga* system. It springs from and stands rooted ea of Evolution, which to the Hindu as to its 'science' devotees in the West is " nse generalisation which embraces all existence."

"Yoga from the root *yug*—'to join,' 'to yoke together' (derivative Eng. Jugum.) is a system of psycho-physical culture highly esteemed in India. Di two methods :—(i) Hatha Yoga, which aims at the subjugation of the mental pro by control of the senses. (ii) Raja Yoga which seeks to establish entire self-control xercise of the will The two schools established on these principles are at variance. oth however recognise the sigular fact of the interaction between brain and lung pro s—the systole and diastole of the lungs and brain lobes being synchronous and comn ate with one another. But whereas the Hatha Yoga seeks to control the mind thro the brain by regulating the breath, the Raja Yogi effects both mental and physical cor by the exercise of the will power. The Hatha system is called "Lopping the Branc and the Raja system is called "Feeding the Roots." The physiological facts at the of this system of psycho-physical culture are of surpassing interest. It has been that the slower and deeper the breath may be, the slower and steadier is the action brain, and the less is the combustion of tissue throughout the system—all of wl conducive to placidity of thought and feeling and thus to longevity. Passion which e the brain also renders the breathing short and rapid, and largely increases the was tissue, leaving its crevices and scars in the face—(often referred to as கோ இரை ஜ The deep thinker breathes deeply and slowly: the fearful man breathes with difficulty. experiences a tightness in the chest; a man in doubt will momentarily hold his bre A difference of the length of breath may even be observed when thinking of diff colours. The Yoga system generally may be called a process of co-ordination of facul'

"* *An English friend who has made a lifelong study of the literature of the East.*"

[We will take up the study of this question from a practical point of view, proceed.]

இச்சாசக்தி.

"பாவனுமாத்ர சந்துஷ்டியை நம:"

(உண்மைவிளங்க ஓர் திவ்யபுருஷர் சொல்லியகதை)

## I. The Prelude.—முற்கூறு

"அப்பா குழந்தாய்! நீயேன் மனமுடைந்துமயங்குகிறாய்? காலொடிந்த முட
ம், ஊசிமுனையில் நின்று தவஞ்செய்பவன்போல் ஏனிப்படி தவித்துத்துடிக்கிறாய்.
யலைக்கும் சங்கடமென்ன சொல்லு! இதோ நிவர்த்தித்துப் போடுகிறேன்!"

இப்படி சொன்னவர் ஒரு திவ்யபுருஷர். அவருடைய முகவிலாசத்தையும்
யையும் வர்ணிப்பது சாத்தியமாகவில்லை. அவருடைய திருமுகமண்டலம் அமிர்த
டு ஆனந்த சமுத்திரமாம் திருப்பாற்கடலிற் பிறந்த அமிர்தகலைபொழியும் பூர
ன்போல் தண்ணளிபொழியும் விண்ணொளி மிகுந்து பிரகாசித்தது. அவரது சுந்தர
மேனி சித்தொளி விளங்கும் சத்சொருப விலாசமாகத்தோன்றியது. இவர் விளி
ய புருஷனோ அலங்கோலமுற்ற வொரு அநாதைப்பிள்ளை வடிவமாய் விளங்கி
இல்லாமல் நான் காதவழி யோடுவேன்" என்ற முடவன் சொல்லுக்கிசைய இந்த அ
ப்பிள்ளை அந்த திவ்ய புருஷரையும் லக்ஷியம் செய்யாது தன் சிந்தனையேதனக்குப் பெ
 மோனசமாதியில் இருப்பவன்போல் சும்மா இருந்தான்.

"அப்பா குழந்தாய்! அடே கண்ணே! என் கண்மணி! உன்னைத்தானடா அப்ப
ழைக்கிறேன்! என்னையறியாயா நீ! ஏனிந்த மௌனம்!" என்று தோளில்தட்டி அன்
ணைத்து உச்சிமுகர்ந்து உடம்பெல்லாந் தடவிக்கொடுத்து, கண்ணில் தண்ணீர்மல்க அம்
 அவ்வநாதைக்குழந்தையை, தான் பெற்றெடுத்துப் பறிகொடுத்த பிள்ளையை மீட்டும்
றதாய் எப்படி அன்புருகி அதை யணைத்துத் தழுவி யுச்சிமுகர்ந்து கட்டிக்கொண்டாடி
கமிட்டு முத்தமுத்தாய்க் கண்ணீர்விட்டுக் கரைந்த முகங்காட்டி நிற்பளோ அப்படி அந்த
யபுருஷர் மேனுக்கு விகாரமாய்த்தோற்றிய அவ்வநாதைக்குழந்தையை அழுக்கென்றும்
க்கென்றும் பாராமல் கட்டியணைத்துக்கரைந்துருகி கிருபாநோக்கமுற்று அவனைக்கவிந்து
டு ன்றார். அப்பொழுது ஐந்து வயதாகாத அரும்பாலன் ஒருவன் ஓடிவந்து அவனைக்
து கொண்டிருந்த தேஜோமயமான திவ்யபுருஷரையும் லக்ஷியம் செய்யாது அவன் கழுத்
கட்டிக்கொண்டு தொங்கி அவன் காதில் "அப்பா ஆரோ வந்திருக்கா" என்று மழலை
துகலைமொழியால் கனிந்துரைத்து அவனை விழிப்பிக்கச்செய்தான். அவன் கண்விழி
க்கத்தெளியாமல் "யார்? என்னசெய்தி? ஏன் எழுப்பினீர்கள்?" என்று விசாரிக்க,
றி திவ்யதேஜோமயமாய்க் கவிந்து நின்ற ஜோதிஸானது, இருளில் உருக்கொண்டு
டைபோல், அருள்வடிவுகொண்டு, தான் "பக்திவலையில் பட்டோன்" என்பது
டரிகபக்தன் வலையில்சிக்கி இன்றைக்கும் பண்டரீபுரத்தில் சிலையாய் நின்று
காண்டு பக்தர்களுக்குத் தரி னமளிக்கும் பாண்டுரங்கன் வேஷங்கொண்ட வைஷ்
மாய், தானிருப்பது 'திருவே... ...ங்கத் திருநாமம்பூண்டு அ
ாய்ச் சிலவார்த்தைகள்
...றையில்



து நிற்கையில், திடீரென்று புற்றிலிருந்து பாம்பு கிளம்புவதுபோல் ஒருவர்
ாத்துதிக்க, உற்றாக்கவனித்த பாத்திரத்தில் மகுடிஊதும் சப்தம்போல் மனதை
ாதித்தம் செவியிற்பட்டு அதில்பட்டு மயங்கிநிற்கலானான். எதிரே நின்ற பக்த
ந்து பரஞ்சோதிவடிவாய் அருவுருக்காட்டி ஒருகண்ணிமைப்பொழுதில் மின்
போற்றோன்றி கண்ணிலொளியாய்க் கரைந்துநின்றார். இந்த அதிசயந் தோற்ற
ி மயிர்க்கூச்செடுக்க உள்ளஞ்சிலிர்த்து கனவுகண்டவன்போல் ஒன்றும் சொல்ல
ந, கண்டகாவிலிசிபட்டுமுயங்கியமயக்கந்தீராது போதைமேலிட்டுப் புரண்டுகிட
ரேலென்று ஒரு நல்லபாம்பு வந்து தன் முதுகோடொட்டிய சிறுதண்டத்தைமுட்ட
ரையில் உயரக்கிளம்பி யதன் விரித்தபடம் முடிமேல்விளங்க வாசிவாங்கி ஊதிபோலசையா
றது. வெண்சாரை யொன்று விரைவாய்வந்து மடியிலிருந்தேறி மதிப்பாரூண்டு முடி
ந்த பாம்போடு முட்டிக்கலந்தது. சாரையும் பாம்புஞ்சேர்ந் தொன்றாயிழைய தரை
டு திரை ஐரை நமனுக்கானுதேடிக் கரைந்தனவொளிதனில். உண்மையிது கண்டிவர்.
லகேழுங் கைவசமாமென்று ஜயபேரிகையடித்ததுபோல் ஒருவித முழக்கங்கேட்டது. இ
ப்தங்கேட்டு விழித்துப்பார்க்க ஒன்றுந்தோன்றாது, குருபதம்நாடிக் குனக்குறி கேட்க, "ச
து கனவு, விண்டது வம்பு, தோன்றியதொன்றும் நரியவடிவின் திருவடி நிழற்சேறற்
பல்லால் வேறொன்றில்லை" யென இன்னருள்சுரந்து தண்ணளிகூர்ந்து தயவுடன் பார்
தேற்றின சப்தமொன்று அசரீரியாய்ப் பிறந்தது.

* * * * * *

இப்படி தனக்குள் தானே பேசிக்கொண்டு "என்னைவிட்டென்னை புசாவுகின்ற
யென்ற திருமந்திரத்துக் கொத்த உதாரணமாயிருந்த அநாதைப்பிள்ளையைப் பார்த்து
முதலிற் குறித்த திவ்யபுருஷர், அருகிலடைந்து அவனையன்போடு தழுவி முகத்தொ
டியச்சேர்த்து முத்தமிட்டு, "ஏனடியம்மா இப்படி அநாதைபோலிருந் தழுதுகொ
கிறாயே" யென்று கேட்க,—

"என்தாய் என்னைப் பெற்றவுடனே விட்டுப் போய்விட்டாள். நான் எடுப்
பிள்ளையாய் அடுத்தாரை யண்டிப்பிழைத்து ஆளானேனானாலும், காலொடிந்த முடவ
என்னைக் காரணத்தா லேசுகிறார்கள். என்தாயைப் பார்க்கவொண்ணுமென்ன பு
நேர்ந்தால் நடந்துவா என்று என்னை யிப்படித் தள்ளிவிட்டுப் போய் விட்ட
மட்டில்லை"—என்று இயம்பினான் பாலன். அதற்கு திவ்யபுருஷர்:—"அப்பா
உயிரோடுகூடி? ஊனக் காலுள்ளவர்க்கு வானில் நடக்க வழியுண்டோ செப்
சொல்லும் பேர்வ... ...டின் தலையாலே யல்லவோ நடக்கவேண்டும்? க
பலவாறாக ஜனங்க... ...ா? ஔவையார் கைலைக்குச் சென்ற அ
...க்கு காலாலோ ... ...டு —

விவேகசிந்தாமணி

வேகசிந்தாமணி.

...த்தகாலத்தில் கிடைத்தேதீரும்: கிடைத்திருக்கு! கிடைக்கும்!! [illegible]
...தாவுகூடித் தேற்றி யுடனே யந்தர்த்தானமாயினர். இவர்களுக்கு மெய்யாகப் [illegible]
...பேசினால் இப்பொய்யுலகம் பறக்கணித்திருந்தன்றும். [illegible]
...த்தையை கட்டிக்கொண்டபும் மத்தமதிகளுக்கு பாவனு சக்தியின் மகிமை...
...சொல்வது வம்பாகவே முடியும். ஆனால் இவர்கள் பெருமிதமாய்க் கொண்டா[illegible]
[illegible]
[illegible]
...தூலத்திலும் [illegible] அதிக சக்திவாய்ந்தது. சூக்ஷ்மத்திலும் [illegible]
காரணத்திற்கெல்லாம் காரணமாகிய ஞானகுருவாம் "இச்சாசக்தி" எல்லாவற்றிற்கும்
சக்தி வாய்ந்தது. அப்படிப்பட்ட சக்தியை உபாசித்துப் பெறும்வழியாம் [illegible]
...முறையானவை யோகமார்க்கம் [illegible].

* "கொட்டிக்குத்தா[illegible]
கொட்டிக்குத்தாலிக்கும் பாரைவலிதென்பர்
கொட்டிக்குத்தாலிக்கும் பாரைக்குமூன்றிற்கும்
இட்டம்வலிதென்ப ரிசனகுமே."—திருமந்திரம்.

## II. The [S] Sequel.—பிற்கூறு.

...he outward man is *animal*, and yet he ...ue image of God. If, therefore, God ...hrough a hint or a word, *Man must to do the same*, if he be God's true ... This original power must, therefore, ... to this inner man, if he will repre... ...e spirit of God, and not of a frivolous ... And if we call this a magic power, ...structed only can be terrified by the ...n. But if you prefer it you can ...piritual power. About the name I ...ouble myself; but I am accustomed ...plate the thing itself as near as I ...is, therefore, such a magic power ...man. But as there exists a cer... ...ship between the inner and outer ...ngth must be diffused through ... only that it is more active in the soul than in the body... It sleeps and acts without being awakened, like one drunk... en in us daily. This magical wisdom and strength thus sleeps, but by a mere suggestion is roused into activity, and becomes more living, the more the outer man of the flesh & darkness is repressed." —*Van Helmont.*

The object of all *yoga practice* is to awaken this sleeping power within. *Yoga* is only a means to an end. "Awake, arise and stop not till the goal is reached"—is an exhortation addressed to this sleeping power within which is called *Kundalini* meaning *the coiled up energy*. It is also ... Iswari and by several other na... which represent the Cosmic ... in the soul of man.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*



அன்பேயமர் : அறிவேசக்தி : ஒம்தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : Om.

ஸத்யமேவ ஜயம்—*Satyameva Jayati.*

புத்தகம் 11.] 1903ஞு மார்ச்சுமீ. [இலக்கம் 11.

THE DOCTRINE OF "RENUNCIATION, RE-BIRTH, AND LOVE."

# "விட்டுப்பிடி, செத்துப்பிழை, நேசித்திரு."

## ii. "செத்துப்பிழை."

"செத்துப்பிழை." இதன்கருத்தை யுள்ளபடியுணரல்வேண்டும்: நுனிப்புல்மேயும் இளங்கன்றுபோல் மேல்வாரியாக மனதிற்பட்டதை நினைத்து அருத்தம் செய்துகொண்டுபோனால் அனர்த்தம் விளைவிக்கும். இந்த இரண்டுவார்த்தைகளிலும் மனிதனுக்கு உயிர்வாழ்க்கையில் நேரிடும் அதிமேலான இரண்டு அநுபவங்கள் அடங்கியிருக்கின்றன. அதாவது (i) சாதல், (ii) பிழைத்தல். செத்துப்போதல் - சரீரத்தை விட்டுப்போதல், சாதல். உயிரோடிருத்தல், பிழைத்தல். இதனாலேயே சரீரத்தில் ஏதோ ஒன்று அழிவற்றதாக விருக்கின்றது: அது சரீரமன்று: ஆனால் சரீரத்தில் வாசமாயிருக்கிறது—என்று ஊகிக்கத்தக்தாயிருக்கிறது. உயிரோடு கூடியிருத்தல் - வசித்தல், பிழைத்தல் என்று சொல்லப்படுகிறது. இங்கும் உயிரோடு என்னும் பதத்தினால் உயிருக்கு அந்நியமாக உயிரோடு சேர்ந்து இருக்கிற வஸ்து ஒன்றிருக்கிறதென்று ஊகிக்கத்தக்கதா யிருக்கிறது. இவ்விரண்டு வார்த்தைகளின் அருத்தத்தை ஆய்ந்தமட்டில் உடலுக்கும் உயிருக்கும் அந்நியமான அழியாதவஸ்து ஒன்றிருக்கிறதென்றும் அது உயிரோடுகூடி உடலில் வசித்தால் சாதாரணமாக நாம் சாத்தன், மூக்கன், இராமன் என்று சொல்லும் பேர்வாய்ந்த உருவாம் மனிதனாகிறதும், அதுவிகாரங்களுக்குள்பட்ட அவனுடல் பலவாறாக ஜனங்கள் கொண்டாடுவதும்; உயிர் பிரிந்தால், (யும்)

"ஊரெலாங்கூடி ஒலிக்கவழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமெனப்பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச்சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தார்களே" என்றபடி

ஒரு தலைமுழுக்கோடு அவன் போனானென்று அவனைப்பற்றி நினைப்பதையும் விட்டொழிப்பதும் உலகவழக்கமாயிருக்கிறது. ஸ்தூலதேகமாம் உடலினுடையகதி இதுவானால், உடலைவிட்டுப்பிரிந்த உயிரின் கதியென்ன? கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் கடவுள்வந்து கடைசித்தினத்தில் இறந்தவனையெழுப்பி அவன் பாபபுண்ணியத்துக்குத் தக்கபடி அவனுக்குப் படியளப்பாரென்று நம்பி பிரேதத்தைத் தகனம் செய்யாது புதைத்து, இறந்தவன் பிரேதத்தைச் சமாதியில் வைத்திருக்கிறதாகச் சொல்கிறார்கள். ஹிந்துக்கள் அதைத் தகனம்செய்து மூன்றுகல் ஊன்றி 10-நாளும் "தாக, தாப, உபசமனார்த்தம்" "திலோதகம் தர்ப்பயாமி" யென்று அதற்கு எள்ளுந்தண்ணீரும் விட்டுப் பிண்டமும் வைத்து, கடைசிநாள் நிரம்பப் பிண்டங்கொட்டிக் கல்லெடுத்துக் காவேரியிலோ நதிகுளங்களிலோ கொண்டுபோய்ப்போட்டு யமத்வாரத்தையடைத்து அவனாத்மாவைக் "கரையேற்றுவதற்காகப்" பலசடங்குகள் செய்கிறார்கள். இதனால் நாம் சாதாரணமாகச் "சாவு" என்று சொல்லும் விஷயம் நேர்ந்தபின்னும் உடலின்றி (பூதாகாரமாய்) ச்சீவன் ஒருநிலையிலிருக்கிறதென்பதும், அந்நிலையிலிருந்து கடவுள் வந்து விடுவிக்கிறவரையில் அதற்கு கதிமோக்ஷமில்லையென்றும், அப்படி விடுவிக்கப்பட்டு கடவுளின் பாதாரவிந்தத்தைச்சேருவதே (கடவுளோடு ஐக்கியமாவதே) மோக்ஷமென்றும் ஒருவித நம்பிக்கையெல்லாருள்ளத்திலும் பொதுவாய் வேரூன்றியிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

இப்பொழுது "செத்துப்பிழை" யென்றதனால் "சாகாமற்பிழைத்திருப்பது" ஒன்றுண்டென்று ஊகிக்கத்தக்கதாயிருக்கிறதே அது என்னவென்று சிலர் கேட்கலாம். செத்துப்பிழைத்தால் சாவில்லை. சாகாமற்பிழைத்திருப்பவனுக்குச் சாவுண்டு. இங்கே சாவு (மரணம்) என்பதற்கு என்ன அர்த்தம்? ஆத்மா ஒன்று அழியாததாக வுண்டு என்பதை யேற்றுக்கொண்டால், மரணம் என்பது ஒரு நிலைமாறுதலேயன்றி வேறல்ல. மனிதன் என்னும் ஜீவாத்மாவுக்கு மூன்றுவித தேகங்களுண்டு. அவை ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்கள் என்பார்கள். இந்த உடல்தான் ஸ்தூலதேகம். இந்த உடலைப்போலவே யெல்லா அவயவங்களும் இந்திரியங்களும் அமையப்பெற்று கண்ணுக்கு விளங்காமல் நாம் ஸ்வப்னம் காணும்போது வேலை செய்யும் தேகம் சூக்ஷ்மதேகமாம். இதை மனசு என்றும் சொல்வார்கள். இதிலும் சூக்ஷ்மமாய் நம் எண்ணத்துக்கெல்லாம் காரணமாயிருக்கும் (அந்தக்கரணம்) சிந்தா சக்தியுடையது காரணதேகம் என்பார்கள். சூக்ஷ்ம காரணதேகங்கள் இரண்டையும் ஒன்றாகப்பாவித்து, சூக்ஷ்மதேகமென்றும், சிந்தையென்றும் பொதுவாகச் சொல்வாருமுளர். இந்த மூன்று தேகங்களும் ஆத்மாவுக்கு உலகானுபவார்த்த முண்டான கருவிகள். யுத்தத்துக்குப் போகிறவன் கவசமணிந்துகொண்டு போவதுபோல், உலகவியவகாரங்களில் பிரவர்த்திக்க இச்சைகொண்ட ஆத்மா இந்த மூன்றுதேகங்களையும் தனக்குக் கவசமாகவும் கருவியாகவும்கொண்டு உலகில் அவதரித்தான். உலகானுபவமெல்லாம் இன்பதுன்பம், சுகதுக்கம், பிறப்பிறப்பு, பாபபுண்ணியம் எனப் பகுபட்டு நேரெதிராய் இரட்டைப்பட்டு நிற்கும். இதையனுபவிப்பதில் ஆத்மா தன்னைமறந்து சகவாசதோஷத்தால் தன்னிலையில் நில்லாமல் மனசு புத்தி தேகம் இவைகளி



தன்னை ஆரோபித்துப்பார்க்கிறான். அது எப்படியென்றால் ஒரு இராஜகுமாரனான சிறுவன் உலகானுபவம் அடையும்பொருட்டு ஸிம்மாசனாதிபதியாகிய அரசனைவிட்டுப்பிரிந்து வேலைக்காரர்களோடு ஊர்சுற்றப் புறப்படுகிறான். புறப்பட்டவன் வெகுநாள் சுற்றித்திரிந்து சுகதுக்கங்களையெல்லாம் வேலைக்காரர்களோடு சேர்ந்தனுபவித்துவந்ததால், தன்பிறப்புவளர்ப்பை மறந்து அவர்களைப்போலவே தானுமென்று மயங்கி விடுகிறான். அப்பொழுது அவர்கள் தங்கள் நிலையிலிருந்துபடும் சுகதுக்கங்களை யெல்லாம் தன்னைமறந்த மயக்கத்தால் தன்னதென்று தானும் பாவித்து அவர்களோடு வருந்துகிறான். அவர்களுக்கு வருத்தம் பொறுக்கக் கூடாதபோதும் வேறுவிதியின்றி வேலைசெய்துவருகிறார்கள். ஆனால் அரசிளங்குமாரனோ எல்லா போகபாக்கியங்களும் தன்னளவாகவிருக்க அவைகளையெல்லாம் தானே முதலில் விரும்பாதுவிட்டு, உலகத்திலடிபட்டு அனுபவம் தேடவேண்டுமென்று வந்தான். இவனுக்கு உலகத்திலடிபட்டு அனுபவந்தேடினது போதுமென்று எந்த நிமிஷத்தில்படுகிறதோ அந்த நிமிஷத்தில் இவன் அரண்மனைக்குத் திரும்பிவிட்டால் இவன் தகப்பனுடையசந்நிதியில் வந்தமட்டில் அவன் இவனையறிந்து அங்கீகரிக்க, அத்தேசமுழுவதும் இவன் அரசன் போரால் இட்டகட்டளையைச் செய்யும். அப்படிக்கின்றி சகவாசதோஷத்தால், தான் ராசபுத்திரனென்பதை மறந்து, தன்வேலைக்காரர்களாகத் தன்னோடுகூடவந்தவர்களுக்கு இடங்கொடுத்து அவர்கள் கைவலுக்கவிட்டுவந்தானால், அவர்கள் இவன் பேரைச்சொல்லித் தின்றுகொழுத்து, இவனை அவர்களுடைய ஒத்தாசைக்குவேண்டிய அளவுக்குமட்டிலே லக்ஷியஞ்செய்து மற்றப்படி அலக்ஷியமாய் நடத்தி, இவன் இராஜசமுகத்திற்குத் திரும்பாதபடி வேண்டிய உபாயங்களும் தேடுவார்களல்லவா? அப்படியே ஆத்மா உலகானுபவந் தேடியனுபவிக்க இச்சைகொண்டு ஜீவனாகஉற்பவித்தும், வெகுகால வாசனாதோஷத்தால், தன்ஸ்வரூபத்தைமறந்து தன்னை யண்டிப்பிழைக்கிறவர்களோடு தானும் ஒருவனாய் மயங்கித்தியங்குகிறான். அரசசின்னத்தோடுவந்தால் உலகானுபவம் சித்திக்காதென்று தன்னுருமறைத்து உலகானுபவத்துக்கு வேண்டிய உபகரணங்களோடு வெளிப்பட ஆத்மா தானாக மறைத்துவைத்த ஸ்வரூபத்தைமறந்து வந்தவழியேதிரும்பத் தெரியாது திசைதப்பி திக்பிரமைகொண்டு விழிக்கிறான். இப்படிவிழிக்கிற சீவன் உலகஞானியாம் மனிதன். இந்த ஆத்மா தனது ஆதிநிலைக்குத் திரும்ப இதற்கு உபகரணங்களாக வமைந்த தேகங்களே இடையூறாகவிருத்தலால் "அவை நானல்ல; எனக்கு ஊழியம் செய்யவந்த உபகரணங்களை நானென்றுமயங்கி அவைகளையெனக்குச் சமமாக்கிக்கொண்டது பிசகு." அவைகள் "நானல்ல" என்று விட்டுவிடுவேன் என்னும் உறுதி உள்ளத்திற்பட உணர்வதுதான் அவைகளை "விட்டுவிடுதல்" "துறவு" "ஸந்நியாசம்" "உலகையொழித்தல்" என்று பலவிதமாக தத்துவார்த்தத்தில் சொல்வது. அப்படி விட்டவைகள் வெகுகாலப்பழக்கத்தால், (வெண்ணெய் வைத்திருந்த பாண்டத்திலிருந்து அந்த எண்ணெயைக் கொட்டிவிட்டுத் தேய்த்தலம்பின பின்னும் வாசனையதை விட்டுப்போகாததுபோல்) ஒட்டின வாசனைவிடாது ஆத்மாவை யொட்டிநிற்கும். வெண்ணெயில்லாவிட்டாலும், அதன்வாசனை யெப்படி அது வைத்திருந்த பாண்டத்தையொட்டிக்கொண்டு, கண்ணுக்குத் தெரியாமலும், கழுவியும் போகாமலு மிருக்கிறதோ, அப்படிப்போல ஆத்மா, தேகேந்திரியங்கள் கரணங்களாகிய இவை "நானல்ல" வென்று உணர்ந்து விட்டுவிட்டாலும், ஆத்மா அவைகளை "நானல்ல" வென்று விட்டுவிட்டதினால் அவைகள் கொட்டம் அடங்கி ஒடுங்கிவிட்டாலும் (விஷய சுகானுபவம் விட்டுப்போனாலும்)

விஷயவாசனை விட்டுப்போகாது அதற்குப் பிந்தியும் கொஞ்சகாலம் நிற்கும். இந்த வாசனையழியப் பாண்டத்தை நெருப்பிலிட்டு எரிப்பதுபோல், தேகேந்திரியங்கள் "நானல்ல," அசங்கேதனும், அழியாதவனும், ஆனந்தஸ்வரூபியாயுள்ள தெதுவோ "அதுவேநான்" என்றும் உள்ளத்திற்படவுணர்ந்த உணர்வாம் ஞானத்தீயால் அவைகளைத் தகித்து அறவொழிப்பது தகனமாம். இப்படி விஷயவாசனைகள் ஒழிவுபடும்பொழுது எற்கனவே ஒடுங்கியிருந்த இந்திரியங்களும் மற்றக் கருவி காரணங்களும் விஷயவிர்த்தியை நாடாது சூரியன்முகங்காணுத் தாமரைபோல் குவிந்து பிரிவினல் சோர்வுற்று ஒய்ந்து உட்கார்ந்துபோவதுண்டு. அப்பொழுது தேகேந்திரியங்கள் பிராணன்களெல்லாம் அடங்கி ஒடுங்கிப்போவதால் அவைகளெல்லாம் செத்ததுபோலவே ஆய்விடும். இப்படியிருந்து உலகப்பிரவிர்த்தியில் தங்கள் எஜமானுன ஆத்மாவுக்கு நாட்டமில்லையென்று கண்டுகொண்டபின் அத்யாபோன வழியிற் திரும்பி அதை யடைக்கலம் புகும்பொழுது மறுபடியும் அவைகளுக்குச் சலனமுண்டாகி, சூரியனைக் கண்ட தாமரைபோல் அவைவிரிந்து மலர்ந்து விளங்கும். ஆனல் இப்படி க்ஷணநேரம் செத்துக் கிடந்து மறுபடியும் அவை யுயிர்பெற்றுப் பிழைத்ததனுல் உண்டான மாறுபாடு சொல்லத்தரமல்ல. செத்துப்பிழைத்தால் அம்மாட்சியைச் செப்புதலாமோ! சொல்லுக்கெட்டாத ஒரு அனுபவத்தைச் சொல்லுவதெப்படி. இதை யனுபவத்தா லுணரவேண்டுமேயன்றி வாக்காலுரைப்பது சாத்தியமல்ல. அப்பொழுது எண்சாணுடம்பில் ஒரு அங்குஷ்டப் பிரமாணத்துக்குள்ளிருக்கும் ஹிருதயகமலத்தியில் இருந்த விடந்தெரியாது வாசஞ்செய்த ஆத்மா எங்கும் நிறைந்து ஏகவெளியாகி கரைதுறையற்றுக், காண்பான் காட்சியற்று, காணப்படும்வஸ்துவுமற்றுத், தானேதானுய் விளங்கும் தன்மையைச்சொல்வதெப்படி? சுட்டுவதுந்தான் எப்படி? இந்த உண்மையையே திருமூலநாயனுர்,

"உரையற்றதொன்றையுரைசெய்யுமூமர்காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ?
திரையற்றநீர்போல்சிந்தைதெளிவார்க்குப்
புரையற்றிருந்தான்புரிசடையோனே" யென்றும்,

"தான்வரைவற்றபின்னுரைவரைவது
தானவனுனபின்னுரைநினைவது
காமனைவென்றகணுரையுகப்பது
தூமொழிவாசகஞ்சொல்லுமினீரே" யென்றும்

செப்பியுள்ளார். இதுதான் சாகாப்பிழைப்பு. சாயுஜ்ஜியம். சிவபரமாத்ம ஐக்கியம். "I and My Father are one—எந்தையு நானுமொன்று" "என்னில் எந்தையும், எந்தையில் யானுமாயுளோம்—I am in my Father and My Father is in me" "அஹம்ப்ரஹ்மாஸ்மி" 'தத்துவமஸி,' "ப்ரக்ஞானம்ப்ரஹ்மம்" என்று பலபலவிதமாய்ச் சொல்வதெல்லாம் இதையே. மறுபிறப்பு (Re-birth or Resurrection or Regeneration), உலகைவென்றேன் (overcoming of the world), ஊனொழிந்தேன் (overcome the flesh, attain perfection,) மன்மதனை யெரித்தேன் (Burning of Cupid-or Desire) ஞானசூரியன் உதயமாயினுன் (the awakening of the Spirit, coming of Christ, Rising of the Spirit,) தானேதானுதல் (alone-becoming) மரணவெல்லல், செத்துப்பிழைத்தல் (Victory over the Grave, conquering death) தூயனுதல், சாந்தமெய்தல் (Sanctification of Spirit) முத்தி, மோக்ஷம் (Salvation, freedom) என்று இன்னும்பலவாருகக் கிறிஸ்து, ஸேன்ட்பால் முதலானவர்களும் நம்முள்முத்திபெற்ற இருஷிகளும் ஞானிகளும் சொல்லி யிருக்கிருர்கள். இவ்வளவு சொல்லியும் இந்த அனுபவத்தை யுள்ளதுள்ளபடி உண்மையி லனுபவித்தவர்களன்றி மற்றவர்கள் சிறிதுமுணரார். அனுபவித்தவர்களும் சொல்லவறியார். இதனுலேயே கடவுளைக் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்னுமேதக்கவாக்கியம் வழக்கத்தில் வந்தது. இந்த ஒருக்ஷணத்தில் உண்டாகும் மாறுதலை, "செத்துப்பிழைத்தேன்" என்னு மிரண்டு வார்த்தைகளிலடங்கிய அனுபவத்தை எடுத்துரைப்பதெப்படி? உண்மையைச்சொல்லு, சொல்லு, என்றால் சொல்வது எப்படி? கடவுளைக்கண்டவர் யார், யார், என்றால் அவர் எங்கேயிருந்து வருவார்? உன்னுள்ளேயிருப்பானை யுணரவல்லமையில்லாத உனக்கு அந்நியமான ஒருவன் எங்கிருந்து எப்படிக் காட்டுவான்? "உண்மையாவது யாது?" என்று கேட்டால் "உள்ளே பார்த்துணர் உண்மையை" என்றுதான் சொல்லலாம். வேறுசொல்வதற் கிடமில்லை. உன்னை நீயேயறியாமற்போனுல் பிறன்வந்து காட்டியா உணரப்போகிறுய். திருமூலநாயனுர் "செத்துப்பிழைத்த"லாம் இந்த அனுபவத்தைச் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்:—



"தானுமழிந்து தனமுமழிந்துநீ
டூனுமழிந்துவுயிருமழிந்துடன்
வானுமழிந்துமனமுமழிந்துபின்
நானுமழிந்தமைநானறியேனே."

"ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்பராபரம்
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேன்சிவகதி
ஒன்றிநின்றுள்ளேயுணர்ந்தேனுணர்வினை
ஒன்றிநின்றேபலவூழி *கண்டேனே."

விஷயவாசனையை அகத்து நீக்கியிருத்தலே (being dead unto the world) செத்திருத்தலாம். "நான் செத்துச் சிவனேயென்றுகிடக்கிறேன்" என்று பெண்டிர் சொல்லும் பழமொழியின் உண்மையான ஆத்மார்த்தம் இதுவே. அப்படியென்றால், நான் உலகவாசனையை விட்டு (ஊர்ஜோலிக்குப்போகாமல்) சிவனைத் தியானஞ்செய்துக்கொண்டிருக்கிறேன் என்பதுகருத்து. அதாவது தான் "பரமசாது" என்று சொல்லிக்கொண்டபடியாகும்.

ஆத்மா உலகானுபவந்தேடும்பொருட்டு உலகில் அவதரிக்கலாயிற்று. உலகானுபவத்தைத் தேடும்வரையில் அது பிரவர்த்தி மார்க்கத்திலிருப்பதாகச் சொல்வார்கள் (in the worldly way). விஷயசுக அனுபவத்திலாசைதீர்ந்து அலுத்தால் அருவந்தவழி திரும்பும். இதற்கு நிவர்த்திமார்க்கமென்று சொல்வார்கள். பாம்பு தோலுரிப்பதுபோல் உடல், உயிர், உலகிலுள்ள அபிமானம், எல்லாம் அப்போது தானுக விட்டுப்போம். இதுதான் இயல்பாக நேரிடுவது. ஆனல் பெரும்பாலாரும் வழிவகைதெரியாதுழல்கிறர்களாதலால், முன்சென்றவர்கள் பின்வருவார்க்கு வழிகாட்டிகளா இருக்கும்படி கடவுள் நிர்ணயித்திருக்கிறுர். ஞானிகளாக விரும்புவோர் உலகப்பற்றுகளை யொழித்து மோக்ஷவழி தேடுதலால் அவர்கள் சுயநயப்பிரியர்களென்று சொல்கிறுர்கள். சுயநயவாசனையிருந்தாலும் தத்துவஞானம் கிட்டாதாதலால், உண்மையான முமுக்ஷுக்கள் அப்படிப்பட்டவர்களாகமாட்டார்கள். ஜீவன்முக்தர்களுக்கு உலகுக்குழைப்பதன்றி வேறுவேலையில்லை. தான்மட்டும் தனியாக மோக்ஷவழி தேடுகிறுனென்று குற்றங்கூறுவோர் உண்மை யறியாதவரே. தானறிந்த சக்திகொண்டல்லவோ பிறரைக் கரையேற்றல்வேண்டும். எல்லாரும் சேர்ந்தாப்போல் நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று எவனுவது இருகைகளிலும் இருவரைப் பிடித்துக்கொண்டு ஆற்றிலிறங்குவானு? இறங்கினுலவன்கதி யென்னுகுமென்று தெரியுமே. ஆகையால் செத்துப் பிழைத்தவர்களே சாகாவரம் பெற்றவர்க

*பலவூழி—Eternity.

ளாவர்கள்.* சாகப்பயப்பட்டால் சாவுவருவது நிச்சயம். சாகத்துணிந்து செத்துப்பிழைத்தால் நித்யவாழ்வு கிட்டுவது சத்தியம்.—“He that loveth his life shall lose it; and he that hateth his life in this world, shall keep it unto life eternal” என்றார் ஏசுகிறிஸ்துவும். உயிரிலாசைவைத்து இகவாழ்வை விரும்பினால் அது அழிவுள்ளதாகையால் அதை யிழப்பது நிச்சயம்; இகத்தில் உயிர்வாழ்க்கை அநித்யார்த்தம் விரும்பத்தக்கதல்லவென்று கண்டு வெறுப்பவன், அதில் சாக்கிரதையாயிருந்து நித்யவாழ் வெய்துவன் என்றார். இங்கே சாக்கிரதையாக விருப்பதென்றால் இரவும்பகலும் நித்யவாழ்விலே நோக்கங்கொண்டிருத்தல். இகவாழ்க்கையை விரும்புகிறவர்கள் தூக்கம் வந்த காலத்து இருளில் விழுந்து தன்னை மறந்து தூங்குவர். இகத்தை வெறுத்துப் பரத்தையே நாடியுள்ளவர்கள், தூக்கத்திலும் சாக்கிரதையாயிருப்பார். முதலிற் சொல்லிய ‘இருளில் தூக்கம்’ சுழுப்தி யென்பார். இரண்டாவது சொல்லிய ‘தூக்கத்தில் விழிப்பு’ துரிய மென்பார். கடவுள் தரிசினம் எப்போ கிடைக்கும் கிடைக்குமென்று யோகநித்ரை செய்வார், அத்தரிசனம் கிட்டியகாலத்து அந்த நிலையினின்று மேலேறி அவரோடு கலந்திடுவர். அந்நிலைக்குத் துரியாதீதம் என்றுசொல்வர். துரியம்-‘தூக்கத்தில் (உளக்கண்) விழிப்பு.’ சாக்கிரம் - விழிப்பு. “கடவுளும் நானுமொன்றானேன்” என்னுமுணர்வே துரியாதீதமாம் - சாக்கிராதீதமென்றும் சொல்வர். இதுதான் சாயுஜ்ஜியம்.

“சாயுச்சியம் சாக்கிராதீதஞ்சாருதல்
சாயுச்சியம் உபசாந்தத்துத்தங்குதல்
சாயுச்சியஞ்சிவமாதல்முடிவிலாச்
சாயுச்சியமனத்தானந்தசத்தியே” யென்றதாலு முணர்க.

இதனால் துரியாதீதம் அல்லது சாக்கிராதீதம் சாருதல், உபசாந்தத்திருத்தல், சிவமாதல், என்று சொல்வதெல்லாம் சாயுஜ்ஜியம் ஒன்றையே குறித்தமையுணர்க. “முடிவிலாச் சாயுச்சியமனத்து”—கலந்துபிரியாது ஏகரசமாய்க் கடவுளோடு ஐக்கியப்பட்ட மனத்திலேயுள்ளது ஆனந்தசத்தி (Bliss eternal, or the Peace that passeth all understanding.) இந்த உண்மையையுள்ளபடி யோர்ந்துணரமாட்டாது சிவன் கெட்டவன், கிறிஸ்து நல்லவன், சிவன் துன்மார்க்கன், கிறிஸ்து சன்மார்க்கன் என்று பிதற்றிப் பேசுவோர் அறியாதார். அருவுக்கு உருவமைத்துத்தத்தம் எண்ணங்களை அதிலாரோபிக்கச்செய்து “தந்தெய்வம் எந்தெய்வமென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும்” எல்லாவற்றிற்கும் சாக்ஷிமாத்திரமாய் நின்றதெதுவுண்டோ அதுவே சத்தியம், உண்மை, சிவம். சாந்தம், கடவுள், தெய்வம், ஸ்வரூபம், சச்சிதானந்தம், இன்னும் என்னபேரிட்டழைத்தாலும் சரியே. ஏனெனில் உண்மையில் அது நாமரூபமற்றது; நித்ய, நிர்மல, நிராமய, நிராலம்ப, சத்திய, சாசுவத, சாந்த, ஆனந்த, ஸ்வரூப, ஸ்வயம்பிரகாசமாய், ஸர்வக்ஞராய், ஸர்வவியாபியாகி, எங்கும் ஸம்பூரணமாய் நிறைந்துள்ள பரிபூரணவஸ்து அது ஒன்றே. ஓம்தத்சத். அய்யனே யென்றாலும் சரி, அன்னையே என்றாலும் சரி, கிர்ஷ்ணு, இராமா, கிறிஸ்து என்று வேறு என்னபேரிட்டழைத்துப்பிரார்த்தித்தாலும் சரி, உண்மையிலுள்ளதும், இரந்தார்க்கருளிவதும் அது ஒன்றே.

* c. f. “Verigy, verily, I say unto you, the hour is coming, and now is, when the dead shall hear the voice of the Son of God: and they that hear shall live.” John V-25. Also ib. 24. “He that heareth my word......hath passed from death unto life.” St. Paul said. “He that has died away is freed from sin”—(Rom. vi-7.)



“அவளன்புக்கோரளவில்லை
அருளுக்கோர்குறைவில்லை
அடுத்தாற்கெடுப்பதில்லை
அவமதித்தாற் றொடுவதில்லை
அன்பர்க்கன்பானமெய்யளவள் செய்யும்
அற்புதலீலைகளை யென்சொல்வேன் தோழி!”

“உள்ளத்துமுள்ளன்புறத்துள்ளனென்பவர்க்
குள்ளத்துமுள்ளன்புறத்துள்ளனெம்மிறை;
உள்ளத்துமில்லைபுறத்தில்லையென்பவர்க்
குள்ளத்துமில்லைபுறத்தில்லைதானே”

யென்றார் திருமூலநாயனாரும்.

கிறிஸ்துவும் அநேக விடங்களில் இப்படியே சொல்லியிருக்கிறார். சமயக்கொள்கைகளால் மனப்பழக்க மேற்படுவதன்றி வேறு முத்திப்பயனில்லை. கற்றதை மறந்த பின்னே கடவுளைக்காண்பதும். “மதமாறும் ஆறாக அங்கையின் விலாழியாக்கி” என்றார் தாயுமானவரும். விலாழி யென்றால், உட்கொண்டுமிழ்நீர். அறுமதங்களையும் அனுசரித்து இவற்றால் பயனில்லையென்று நீக்குவதே அவற்றை “உமிழ்நீருக்கு” ஒப்பிட்டதற்கு அருத்தமாம். திருமூலநாயனார் சொல்வதையும் கேளுங்கள்:—

“ஆறுசமயமுங்கண்டவர்கண்டிலர்
ஆறுசமயப்பொருளும் பயனில்லை
தேறுமின்தேறித்தெளிந்தபின்
மாறுதலின்றி *மனைபுகலாமே.”

ஓம் சத்குருவேநம:

“அபிவாதயே......ஸத்யானந்த: சாந்தசர்மாநாமாஹமஸ்மிபோ.”

உ

ஓம்

# The Gospel of the Holy Mother.

## As presented by Her to Her Blessed Child and Son.

*On the Day of the Cleansing of the Spirit, OO.*

(With the First Dawn of the 20th Century.)

# ஆனந்தத்தாய்மொழி.

“அன்னைசொன்மிக்கமந்திரமில்லை.”

(290 - வது பக்கத்தொடர்ச்சி.)

15. உள்ளத்தமர்தல்—Making of Peace. † Inward Rest.

ஆனந்தத்தோட்டத்தில் பேரின்பக்கனிதேடி
அடியலைந்து அலுத்துக் களைத்திட்டேன்

*மனை - வீடு - மோக்ஷம்.
†In this state thoughts run down to a calm.